ஸ்ரீ

கம்பராமாயணம்

முதலாவது

பாலகாண்டம்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர்

இயற்றிய உரையுடன்

வை. மு. நரசிம்மன்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி,

சென்னை-5

ஏழாம் பதிப்பு
குரோதிஸ ஆனிமீ } 1964 [விலை ரூபா. 9—00

இப்புத்தகத்தில் அடங்கியவை

நூன்முகம்.

"கற்பாரிராமபிரானையல்லான்மற்றுங்கற்பரோ
புற்பாமுதலாப்புல்லெறும்பாதியொன்றின்றியே
நற்பாலயோத்தியில்வாழுஞ்சராசரம் முற்றவும்
நற்பாலுக்குய்த்தனனுன்முகனூர்பெற்றநாட்டுளே."

"இலைமலி பள்ளி யெய்தி யிதுமாயமென்ன
வினமாயமான்பி னெழில்சேர்
அலைமலிவேற்கணளை யகல்விப்பதற்கொ
ருருவாயமானையமையாக்
கொலைமலியெய்துவித்த கொடியோனிலங்கை
பொடியாகவென்றியமருட்
சிலைமலிசெஞ்சரங்கள் செலவுய்த்தநங்கள்
திருமான மக்கொரரணே."

திருமகள்கொழுநனும் நற்குணவடிவனு மாகிய முழுமுதற்கடவுள், ஸ்ரீவைகுண்டமென்கிற திவ்வியலோகத்திலே திருமாமணி மண்டபத்திற் சீரியசிங்காதனத்திலே திருமகள்மண்மகள் முதலிய தேவிமாரோடு வீற்றிருந்துநித்தியமுக்தர்களால் நிரந்தரம்தொண்டு பூண்டொழுகப் பெற்றிருப்பினும், அந்தப் பரமபதத்திலுள்ளார் எப்போதும் பேரின்பத்தை நுகர்ந்துவருதல்போல . இவ்வுலகிலுள்ள உயிர்களும் பேரின்பத்தைப்பெற்றுப் பெருங்களிப்புக் கடலில் மூழ்கவேண்டியிருக்க, அங்ஙனம் பெருமல்உரைமெழுக்கிற் பொன்போல மூலப்பிரகிருதியில் அழுந்திக்கிடந்திருத்தலைக்கண்டு மிகவும் வருத்தமுற்று, தனக்கு இயற்கையாயுள்ள பேரருளினால் அவ்வுயிர்களைப்படைக்கத் திருவுளங்கொண்டு, மகான் அஹங்காரம் முதலிய 24 தத்துவங்களைப் படைத்து, தன்னைத்தரிசித்தல் தொழுதல் முதலியன செய்து உய்வு பெறும்படி அவ்வுயிர்கட்குக் கண் கை கால் முதலிய உறுப்புகளையும் உடலையும் தந்து, தனது கட்டளைவடிவான வேதநூலையும் வெளிப்படுத்தித் தந்தான்; தரவும், அவ்வுயிர்கள் அந்நூலினிடத்து மதிப்புக்கொள்ளாமல் அவமதிப்பும் அவிசுவாசமும் பூண்டு யாற்றைக் கடக்கக் கொடுத்த புணையைக்கொண்டு யாற்றுப்பெருக்குவழியே கடலிடைப்புகுவாரைப்போல அந்தக் கண் கை கால் முதலிய உறுப்புகளைக் கொண்டு சுவை ஒளி முதலிய ஐம்புலன்களிற் சென்று உழல்வனவாயின.

தமதுகட்டளைசெல்லாத நாட்டில் தாமே சென்று தண்டம் நடத்தும் அரசர்போல அத்திருமால் தனதுஒழுக்கவகையாலேனும் அவ்வுயிர்கட்கு நல்லறிவுகொளுத்தவேணுமென்று திருவுள்ளங்கொண்டு, திசைமுகன் முதலிய தேவகணங்களின் வேண்டுகோளையும் தன்னைப் புதல்வனாகப்பெறுமாறுநோற்றிருந்த தசரதனது

கருத்தையும் முற்றுவித்தற்காக இராமன்முதலிய நான்குவடிவு களுடன் இம்மண்ணுலகில் தசரதகுமாரராகத் திருவவதரித்தான்.

அவர்களுள் அடைக்கலம்பூண்டாரை யாதரிப்பதையே நோன் பாகக்கொண்டு இராவணசங்காரஞ்செய்த ஸ்ரீராமன் பெற்றோரின் சொல்லைக் கடவாது சிரமேற்கொண்டு நடக்கையாகிற சாதாரண தருமத்தையும், இலட்சுமணன் பகவானுக்கு அடிமைபூண்டொழு குகையாகிற விசேடதருமத்தையும், பரதன் அஃறிணைப்பொருள் போல எம்பெருமானுக்குப் பரதந்திரனாயிருக்கையாகிற விசேட தருமத்தையும், சத்துருக்கினன் எம்பெருமானுடைய அடியார்க ளிடத்து அடிமை பூண்டொழுகுகையாகிற விசேடதருமத்தையும் காட்டியதோடு, சகோதரவாஞ்சையையும் இவ்வுலகத்தார்க்குத் தம் முடைய ஒழுக்கத்தால் வெளியிட்டுக்காட்டினர். அன்றியும், மூத்தோர்சொல்லை அமுதமாகக்கொள்ள வேண்டுமென்பதும், எத்துணைப் பெருஞ்சிறப்புப்படைத்தோராயினும் பெரியோரிடத்து அடங்கி ஒழுக வேண்டுமென்பதும், பெரியோர் கட்டளையை ஆராய்ச்சியில்லாமலே செய்யவேண்டுமென்பதும், தீ யொழுக்கந் தீமையைத்தரு மென்பதும், செருக்குக் கொண்டவர் தாழ்மை யடைவ ரென்பதும், ஒருவரை ஏளனஞ் செய்வது தீமைக்கு மூலமா மென்பதும், எந்நிலையிலும் கணவனைப்பிரியாதிருத்தலே கற்புடையமாதர்க்கு ஒழுக்கமென்பதும், தனக்கு முறையின்றிக் கிடைக்கும் மேன்மையும் பாராட்டற்கு உரியதன் றென்பதும், தான் மேற்கொண்ட நோன்பை எந்தக்காரணத்தினாலுங் கைவிடலாகா தென்பதும், தந்நலங்கருதாது பிறர்குறைநீக்க முயலுதலேபெரியோர் தன்மை யென்பதும், காமம் நலத்தைக் குலைக்குமென்பதும், தீக் குணத்தோர்க்குப் பரிந்து உதவுதல் விநாசத்தைத் தருமென்பதும், எவரையும் ஆராயாது தெளியலாகா தென்பதும், ஒருவர்க்கு ஒரு நன்மை செய்தால் அது பின்பு தானே பயனைத்தரு மென்பதும், நன் னெறியில் செல்வோர்க்கு விலங்கும் பணிசெய்யு மென்பதும், அடைக்கலமடைந்தோர்க்கு ஆவனசெய்தல் அறிஞர் கடனென்ப தும், பிறர்மனைநயத்தல் பீழைதரு மென்பதும், எப்படிப்பட்டவரும் உலகப்பழிக்கு அஞ்சவேண்டுமென்பதும் முதலிய நீதிகளும் இந்த இராமாயணசரிதத்தில் வெளியாதலைக் காணலாம்.

இங்ஙனம் இராமாயணபுருஷர்கள் தம்முடைய ஒழுக்கத்தால் உலகோர்க்கு உணர்த்திய நீதிகள் பிற்காலத்தார்க்கும் உதவ வேண்டுமென்று, பிதாமகக்கடவுள், நூறுகோடியளவினதாக அந்த இராமசரிதத்தைச்செய்து நாரதாதி முனிவர்க்குத் தேவ லோகத்தி லுபதேசித்தார். அந்நாரதமுனிவனை இராமநாமத் தையே செபிப்பவனான வால்மீகிமுனிவனிடத்து அனுப்பி, அவ் விராமசரிதத்தை உபதேசித்துத் தானும் அம்முனிவனுக்குக் காட்சி தந்து இராமகதையையியற்றுமாறு கட்டளையுமிட்டார். நாரதமுனி வனால் உபதேசிக்கப்பெற்றுத் திசைமுகக்கடவுளால் இராமசரிதத் திலேஒன்றுவிடாமல் எல்லாம் ஞானக்கண்ணுக்குப் புலனாவதோடு பிரபந்தத்தைச்செய்தற்கு ஏற்ற ஆற்றலும் அருளப்பெற்ற அந்த

வான்மீகிமுனிவன், வேதோபப்பிரம்மணமான இவ்விதிகாசத்தைக் *காந்தாசம்மிதமெனப்படுகிற காப்பியமாகச் செய்தனன்.

இங்ஙனந் தோன்றிய இவ்விராமாயணத்தின் சிறப்பையேனும் இதனை யோதுவதாற் பெறத்தக்க பயனையேனும் ஆஸ்திகத் தன்மை கொண்ட சிறுவர் முதல் முதியோர்வரையிலுமுள்ள யாவரும் நன்குணர்வ ராதலால் ஈண்டுக் கூறுவது மிகையேயாம்.

வடமொழியிற்செய்த அந்த இராமசரிதத்தைத் தமிழ்மக்களும் அறிந்துஉய்வுபெறுமாறு விருப்பங்கொண்டு, 'கல்வியிற் பெரியர் கம்பர்', 'கவிச்சக்கரவர்த்தி', 'கம்பர்வீட்டுக் கட்டுத்தறியும் கவி சொல்லும்' ''விருத்தமென்னு மொண்பாவி லுயர்கம்பன்' என்றுபிரசித்திபெற்ற கம்பரென்னும் பெரும்புலவர், தமிழில் விருத்தப்பாக்களாற் பாடிவெளியிட்டார். (சங்ககாலத்தில் இராமாயணம் பாடப்பட்டிருப்பினும் பழையவுரைகளில் அந்நூலின் சில செய்யுள்கள் காணப்படுவதன்றி நூல்முழுதும் கிடைப்பதில்லை; கம்பர்காலத்துக்கு முந்தியே இறந்ததுபோலும்.)

தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்ச் சீவகசிந்தாமணி போற் செந்தமிழ்நடையிற்சிறந்து பெருங்காப்பியவிலக்கணம் முழுதும் நிரம்பப்பெற்ற இந்தக் கம்பர்செய்த இராமாயணமானது, பிற காலத்துக்கவிஞர்க்கு இன்ன இன்னவற்றை இன்னவாறு பாட வேண்டுமென்று உணர்தற்கேற்ற வழிகாட்டியாகவுள்ளது; அவ்வக் கதைப்போக்கிற்கு ஏற்ப மாறிமாறி வரும் விருத்தங்கள் அமைந்தது; இன்பம் வீரம் முதலிய சுவைகள் ஆங்காங்குத் திகழ்ந்து தோன்றுவது; கற்கக்கற்க இன்பம் பயப்பது; ஆழ்ந்து நோக்க நோக்கத் தொனிப்பொருள்கள் ஊற்றுப்போற் சுரக்குந் தன்மையது. பலசொல்லி என்? இந்நூலைப்போல் கற்போரதுமனத்தை

---

*மாந்தர்க்கு உறுதிபயப்பனவாகிய நூல்களை வடமொழியாளர், பிரபுசம்மிதம், சுகிருத்சம்மிதம், காந்தாசம்மிதம் என மூவகையாகப் பகுத்துள்ளனர்; அவற்றுள், வேதம்போல்வன-அரசன் கட்டளையிடுவதுபோல, ''ஸத்யம்வத, தர்மம் சர'' என்று கட்டளையிட்டு, அக்கட்டளைக்கு உட்பட்டு நடப்பார்க்கு நன்மையும் நடவாதவர்க்குத் தீமையும் விளைத்தலால் ப்ரபுஸம்மித மெனப்படும். புராணங்கள் - முன்னையோரின்சரிதங்களைக் கூறுமிடத்து இன்சொற்களால் நல்வழியிற்செலுத்தும் நண்பன்போல அவர்களின் நன்னடக்கையைப் புகழ்ந்தும் தீயொழுக்கங்களை இகழ்ந்துங்கூறி நல்வினை தீவினைகளில் விருப்பு வெறுப்புகளைப் படிப்போர்க்கு உண்டாக்குவதால் ஸுஹ்ருத்ஸம்மித மெனப்படும். காப்பியமோ 'இதைச் செய், இதைச் செய்யாதே' என்று வாய்திறந்து சொல்லாமல், தன் கடைக்கண்குறிப்பினாலேயே காதலனைத் தனது விருப்புவெறுப்புகளிற் செலுத்துங் காதலிபோல, ராம்ராவணாதியரின் சரிதத்தைக் கூறுகையில் 'இராமாதியரைப்போல இருக்க வேண்டும்; இராவணாதியரைப்போல இருத்தலாகாது' என்பதைக் குறிப்புப்பொருளாலேயே மனத்திற் பதியும்படி செய்வதனாற் காந்தாஸம்மித மெனப்படும்.

மகிழ்விக்கும் நூல் வேறொன்றுமில்லை யென்பது திண்ணம். இந் நூலில், *கதலீபாகம் திராட்சாபாகம் நாரிகேளபாகம் என்னும் மூவகைநடையும் அமைந்துள்ளன: இதுபற்றி, இந்நூலைக் கூறுமிடத்துக் கற்றறிந்த பெரியோர் 'நெல்நாலாயிரம், புல் நாலாயிரம், கல் நாலாயிரம்' எனக் கூறுவர். இந்நூலில் திரிபுமடக்கு முதலிய சொல்லணிகளும், உவமை உருவகம் தற்குறிப்பேற்றம் உயர்வுநவிற்சி வேற்றுப்பொருள்வைப்புதொடர்நிலைச்செய்யுட்குறி முதலிய பொருளணிகளும் நிறைந்து கிடப்பதை ஆங்காங்குக் காணலாம்.

வான்மீகிமுனிவர் கூறியதைத் தாம் இயற்றும் நூலுக்கு ஆதாரமாகக் கொண்டாராயினும், இந்நூலாசிரியர், தமிழ்க்காப்பிய விலக்கணத்துக்கும் தமிழ் நாட்டில் வழங்கி வந்த முறைமைக்கும் தமது மனோபாவத்துக்கும் ஏற்ப வருணனைப்பகுதியிலன்றிக் கதைப்பகுதியிலும் முதனூலோடு மிக்க முரண்பாடு இல்லாமல் புதுமை பெறக்கூறுதலையும் மிதிலைக்காட்சிப்படலம் வரைக்காட்சிப்படலம் பூக்கொய்ப்படலம் புனல்விளையாட்டுப்படலம் முதலிய படலங்களிற் காணலாம். இங்ஙனம் இந்நூலாசிரியர் புதுமைபெற அமைத்துக் கூறுவதுபற்றியே இந்நூல் 'கம்ப நாடகம்' எனவும் படுகின்றது. 'இங்ஙன் கூறலாமோ? என்று சிலர்க்கு ஐயந்தோன்றலாம்: இவ்வாறு கூறுவதுஅமைவுறு மென்பதையே "முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி, அழியாமரபினது வழிநூலாகும்" என்ற சூத்திரம் தெரிவிக்கின்றது. வடமொழியிலே த்வந்யாலோகமென்ற அணிநூலில் "இராமாயணாதிகளை வான்மீகிமுதலியோர் கூறியதை அவ்வாறே தான் கூறவேண்டுமென்ற கடமையைக் கொள்ளின்; இராமாயணாதி சரித்திரத்தைப் பலகவிஞர் நாடகமாகவும் காவியமாகவும் சுவை பெறப் பலபடியாக இயற்றியது எவ்வாறு இயலும்? ஆகவே, முன்னோர் நூலின் முடிபுக்கு முரண்படாமல் சுவைபெறத் தக்கவாறு

---

* நெல்லென்பது-கதலீபாகத்தையும், புல்லென்பது-திராட்சாபாகத்தையும், கல்லென்பது - நாரிகேளபாகத்தையும் குறிக்கும். கதலீபாகமாவது-வாழைப்பழம் தோலையுரித்துச் சுவைக்கப் பின்பு சுவை தருவதுபோலச் செய்யுளைப் படிப்போர்க்குச் சிறிது ஆராய்ச்சியிற் சுவைதருவது. திராட்சாபாகமாவது-திராட்சைப்பழம்சுவைத்த மாத்திரத்தில் உள்ளும்புறம்புஞ் சுவைமயமாக விளங்குவது போலச் செய்யுளைப் படிக்கும்போதே படிப்போர்க்குச் சுவை ததும்பித் தோன்றுவது. நாரிகேளபாகமாவது - தெங்கம்பழம் உள்ளிடத்திருப்பதை வருந்திப்பெற்றுச் சுவைக்கச் சுவைதருவது போலச் செய்யுளை ஆழ்ந்துநோக்கிப் படித்தோர்க்குப் பின்பு சுவை தருவது. கம்ப சூத்திரமென்று கூறப்படுவன, நாரிகேளபாகமான செய்யுட்களே. (ஒரு சாரார்—கம்பராமாயணத்திற் சொருகுகவிகள் மிகவுள்ளன என்று அறிஞர் யாவரும் கூறுவதாலும், எல்லாக்கவிகளும் ஒரு நிகராக இல்லாமையாலும், தான்தோன்றியாகப் பலசெய்யுள்களைக் கம்பர் செய்ததல்ல என்று தள்ளிவிடுகின்றனர்: இதுவும் காலத்துக்கேற்ற கோலமே.)

விகற்பமுற மரபுபிறழாமற் கூறுதல் ஏற்றதே'' என்று கூறியிருப்பதும் இங்குக் காணத்தக்கது.

இந்நூலாசிரியர் இராமகதையைக் கூறுவதற்கும் வான்மீகி மூனிவர் கூறுவதற்கும் வேறுபாடு மிகவுள்ளது. அவ்வேறுபாடுகளை உரையிற் காண்க. அன்றியும், கதைப்போக்கினால் ''ஸ்ரீராமன் திருமாலின் திருவவதாரம்' என்பது பெறப்படினும், வான்மீகி முனிவர் இராமபிரானது சரிதத்தைக்கூறுமிடத்து ஓர் உத்தமபுருடனது வரலாற்றைக் கூறுவதுபோற் கூறி, இராமன் பரம்பொருளென்பதை வெளிப்படையாகக் கூறும் நோக்கத்தினைக்கொண்டவராய் 'திருமால் மாயாமாநுடவேடம் பூண்டதற்கு ஏற்றபடி நடிக்கின்றான்' என்ற பொருள்பட வுரைப்பர்.

இந்தக் கம்பராமாயணத்தை யான் படிக்கத்தொடங்கிய காலந்தொட்டு அவ்வப்போது கிடைத்த பிரதிகளைக் கொண்டுமூலபாடத்தைத் திருத்தி வைத்திருந்தது தவிர, பின்னும் மூலபாடம் சீர்திருத்தம் பெறவேணு மென்று நாடியபோது, முதன்முதலில் சேதுசமஸ்தான மகாவித்துவான் பாஷாகவிசேகரர் ஸ்ரீ. உ. வே. ரா. ராகவையங்கார் ஸ்வாமிகள் 'கம்பராமாயண வேடுகளுக்குள் இது மிகவும் சிறந்தது' என்று பாலகாண்டவேட்டுப்பிரதியொன்றை அடியேனுக்கு அன்போடு உதவினார்கள்: அதுகொண்டு இக்காண்டம் முழுவதையும் மிக்க கருத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து முதற் பதிப்பிலேயே அமைத்துக்கொண்டேன். இந்த ஸ்வாமி காலத்தினாற்செய்த மாறில்லாத இவ்வுதவிக்குத் தலையல்லாற் கைம்மாறிலேன்.

இரண்டாம்பதிப்புப் பதிப்பிக்க நேர்ந்தபோது முதற்பதிப்புப் பதிப்பித்தபின்னர் அவ்வப்போது கிடைத்த பாடபேதங்களுள் குறித்துவைத்திருந்தனவற்றோடு, தமிழ்லெக்சிகன் ஆபீஸ் தலைமைப்பதிப்பாளரான திருவாளர் ராவ்ஸாஹெப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A. B.L., அன்போடுகொடுத்துஉதவிய ஏட்டுப்பிரதிகளை வைத்து ஒப்புநோக்கியதாற் கிடைத்தவற்றையும் சேர்த்தேன்.

மீண்டும் இரண்டுபதிப்புக்கள் நேர்ந்தன: 3-ஆம் பதிப்பில் திருவாளர் ராவ்ஸாஹெப் S. வையாபுரிப்பிள்ளையவர்களும், சென்னை அட்வொகேட் ஸ்ரீ பி. என். அப்புஸ்வாமி ஐயரவர்களும் பரிசோதித்துப் பாடபேதங்களுடன் முதல் ஏழு படலங்களை மாத்திரம் வெளியிட்ட பிரதியும், ஸ்ரீ உ. வே. ராவ்ஸாஹெப், மு. ராகவய்யங்கார் ஸ்வாமிகளால் பரிசோதிக்கப்பெற்று, ஸ்ரீ. உ. வே. பெரியன், வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார் (ஆழ்வார் திருநகரி) ஸ்வாமியால் பிரசுரிக்கப்பட்ட பாலகாண்ட பிரதியும், மற்றும் கிடைத்த பிரதிகளும்கொண்டு நோக்கியதாற் கிடைத்த பாடபேதம் முதலியவைகளைச் சேர்த்துள்ளேன். இப்பதிப்பிற் பலவகைத் திருத்தங்கள் அமைந்துள்ளனவென்பது முன்பதிப்புக்களோடு இதையும் வைத்து ஒப்புநோக்குவார்க்கு நன்கு புலனாகும். இன்னும் பலபிரதிகள்கொண்டு சோதித்தாற் சிறந்த பாடங்கள் கிடைக்கும். அன்றியும், பரிசோதித்தற்கு ஏற்றதுணைக் கருவிகளும் நிரம்ப இல்லாமையால் பூர்ணதிருத்தி

யுண்டாகுமாறு பாடபேதங்களைக் குறிக்க இயலவில்லை. மூன்றும் பதிப்புக்கு ஒப்பு நோக்குதல் முதலிய உதவிபுரிந்தவர் (இப்போது ஜைன்காலேஜில் தலைமைத் தமிழ் விரிவுரையாளராக இருக்கும்) S. V. வரதராஜஐயங்கார் M. A. B. O. L. என்பவர் ஆவர். நான்காம் பதிப்புக்கு ஸ்ரீராமனே துணை. இந்த ஐந்தாம்பதிப்புக்கு, தமக்கு உள்ள பலவகை வேலைகளுக்கிடையே அச்சுப்பிழை பார்த்தல், தமக்குத்தோன்றிய நுண்ணிய பொருள் முதலிய தெரிவித்தல் என்ற வகையால் முற்றிலும் உதவியவர் விவேகாநந்தா காலேஜில் தலைமைத் தமிழ் விரிவுரையாளரான வித்துவான் ஜகந்நாதாசாரியர் ஸ்வாமி யம். ஏ. என்பவர்.

எனக்குத் தமிழாசிரியரும் தமையன் முறையானவரும் உரையெழுதுவதில் மிக்க கீர்த்திபெற்றவரும் கும்பகோணம் கவர்ன்மெண்ட்காலேஜில் தமிழ்ப்பண்டிதராக விளங்கி எம்மனோரது தீப்பேற்றால் இளம்பிராயத்திற்றனே பரமபதித்தவருமான ஸ்ரீ.உ.வே. வை. மு. சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகள் கம்பராமாயணத்து ஆரணிய காண்டம் முழுவதுக்கும், மற்றைக் காண்டங்களுள் ஒவ்வொரு காண்டத்திலும் ஆங்காங்குச் சிற்சிலபடலங்கட்கும் உரையெழுதி வெளியிட்டிருந்தமை, கம்பராமாயணம் முழுதுக்கும் உரையெழுதி வெளியிடவேண்டுமென்னும் அவாவை எனக்குத் தூண்டிற்று. சொற்செறிவும் பொருட்பொலிவும் பெற்றுத் திகழுங் காப்பியவரதனமாகிய இந்தக்கம்பராமாயணத்திற்கு உரைகாண்பது நிரம்பிய கல்வியும் கூர்ந்தறியும் நுண்ணுணர்வும் உடையார்க்குஅன்றி அற்பக்கல்வியும் சிற்றறிவுமுடைய என்போலியர்க்கு இயலாதாயினும் இந்நூலினிடமுள்ள விருப்பத்தால் அடியேன் இராமபிரானது திருவருளை முன்னிட்டு இப்பெருந்தொழிலில் தலையிட்டேன்; கடவுள் திருவருளால் அவ்வெண்ணம் இருபத்தைந்து யாண்டுகட்கு முன்பே நிறைவேறியது: இது நிற்க.

ஸ்ரீராமாயணத்திற் பிரதானமாகக் கூறப்படும்பொருள், இராவணவதம்; இதனை, வான்மீகிமகரிஷியே 'பௌலஸ்த்ய வதமித்யேவ சகாரசரிதவ்ரத: [விரதாநுஷ்டானமுள்ளவரான வால்மீகி, புலஸ்த்யவமிசத்தவனை ராவணவதத்தைக்குறித்த நூல் என்றே (ராமாயணத்தைச்) செய்தார்]' என்று பேசியுள்ளார். ஸ்ரீராமன் சீதையுடன் காட்டுக்குச் செல்வதே அந்த இராவணவதம் நிகழ்வதற்குக் காரணம்: எனவே, இராமாயணத்துப் பிரதானசரித்திரம் தொடங்குவது அயோத்தியாகாண்டத்தி லென்னலாம். ஸீதாராமர்கள் வெவ்வேறுதலத்தில் தோன்றி, ஸ்ரீராமன் சீதையை மணந்துகொண்ட காரணத்தால் மிதிலாநகரத்தில் ஒன்றுசேர்ந்து அயோத்தியை யடைந்ததைக் கூறுவதான பாலகாண்டமோ,அந்த இராமாயணத்துக்கு முகவுரை யென்னத்தக்கது. முகவுரையான இந்தப் பாலகாண்டத்திற் சிறந்த கூறுகள் இரண்டு: அவை இராமபிரானது தோற்றமும், சீதையின் திருமணமும். இப்பொருளை அணிபெறச் செய்வதற்கே, நமது கவிச்சக்கரவர்த்தியான கம்பர் முதனூலையொட்டியும் தமது கற்பனாசக்திகொண்டு தமிழ்க்காப்பிய

இலக்கணத்தைப்பொருத்தியும் மிகவும் அழகுபெற இந்தப் பால காண்டத்தை அமைத்துள்ளார்: இவ்வாறு இனிதுபெற அமைந்த முகவுரையை வேறு எங்கும் காணுதல் அரியதொன்றே.

இவ்வர்ருன பாலகாண்டத்துக்கு முதன்முதலில் யான் உரை யெழுதத்தொடங்கியபோது இக்காண்டத்திற் பல படலங்கட்கு ஸ்ரீ. உ. வே. வை. மு. சடகோபராமாநுஜாசார்யஸ்வாமிகள் எழுதி வெளியிட்டிருந்த உரை பெருந்துணையாக நின்றது. அன்றியும், திருவாளர். அ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் மூலமும்குறிப்புரையு மாக எழுதி வெளியிட்டிருந்த பதிப்பும் காண நேர்ந்தது. இரண் டாம்முறைபதிப்பித்தபோது அடியேனுக்குத்தோன்றிய சிலதிருத் தங்களே சேர்ந்தன. 3-ஆம் பதிப்புப் பதிப்பிக்க நேர்ந்தபோது, கி. பி. 1861-இல், சேலம் ஜில்லாத் துரைத்தனப்பாடசாலைத் தமிழ்த்தலைமைப் புலமை நடாத்திய மாடம்பாக்கம் சு. கிருஷ்ண சாமிமுதலியாரவர்கள் இருபெரும் புலவரினுதவிகொண்டியற்றி முத்தமிழ்விளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளிப்படுத்திய பாலகாண்ட உரைப்பாடமும், திருவாளர் ராவ்ஸாகிப் வெ. ப. சுப்பிரமணியமுதலியார் அவர்கள் G. B. V. C. இயற்றிய "கம்பரா மாயணசாரம்" என்ற நூலும் கிடைக்கப்பெற்றேன். இவையன்றி யும், ஸ்ரீமாந் பி- ஸ்ரீ. ஆசார்யா அவர்களது "கம்பசித்திரம்" என்ற புத்தகமும் கிடைத்தது. 4-ஆம் பதிப்புப் பதிப்பிக்கையில் மகா மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்ய ரவர்கள் தொகுத்த குறிப்புரை முதலியவற்றுடன்கூடியதான அடையாற்றுக் கலாக்ஷேத்திரப்பதிப்பு திருவவதாரப்படலம் வரை யுள்ளது காணப்பெற்றேன். ஏற்கவே, கம்பராமாயணத்துப் பழக்கத் தாலும் பிறநூற்பயிற்சியாலும்அடியேனுக்குத் தோன்றிய திருத் தங்களோடு, கீழ்க்குறித்த பதிப்புக்களைப் பார்த்ததால் தோன்றிய திருத்தங்களையும் சேர்த்து என்னாலியன்றவரையிலும் மிக்க திருத் தமபெற வெளியிட்டேன். இந்த ஐந்தாம்பதிப்பில் புதியதாகப் பிரதியொன்றும் காணுதற்கு இயலவில்லையாயினும் ஆராய்ச்சியால் சிற்சில திருத்தங்கள் சேர்ந்தன.

எமது கம்பராமாயணப்பதிப்பில், சீர்பிரித்த செய்யுளும் பதப் பொருளும் என்பவற்றோடு, பாடலிற்கூறியுள்ள விடயம் விளங்கு மாறு எல்லாச்செய்யுட்கும் தலைப்பும், கருத்து பதசாரம் தொனிப் பொருள் மற்றுங் கூறற்குஉரிய உரைகள் இலக்கணக்குறிப்புக்கள் அணிகள் ஒத்தபகுதிகள் மேற்கோள்கள் புராணகதைகள் முதனூ லுக்கும் இந்நூலுக்கு முள்ள வேறுபாடுகள் பிரதிபேதங்கள் என்ப னவும் காட்டப்பட்டுள்ளன. அன்றியும், அரும்பதவகராதி முதலியன என்பதும், செய்யுண்முதற்குறிப்பகராதி என்பதும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த உரையிற் சிறப்புக்கள் காணப்படின், அவை, எனது ஆசிரியர் முதலியோருடையன வென்றும், குற்றங்காணப்படின் அவை என்னுடையன வென்றுங் கருதுக. என்னுடைய திரி புணர்வு சோர்வு அறியாமை முதலியவற்றால் இவ்வுரையிற் காணக்

கூடிய குற்றங்குறைகளை விவேகிகள் பொறுத்து ஆதரிப்பதோடு அடியேனுக்கு அறிவுறுத்துவராயின், அவர்களிடத்து நன்றி பாராட்டுதலோடு அவற்றை யேற்று, இனி வெளிவருவனவற்றில் அவ்வகைக்குற்றங்கள் நேராவண்ணம் இயன்றவரை முயல்வதோடு, அமையம்வாய்க்கும்போது திருத்தி யச்சிடவும் கருதியுள்ளேன். இந்தப் பதிப்பில் அச்சகத்தாருடைய அஜாக்கிரதையாலும் என்னுடைய சோர்விலுைம் சிலபெரும்பிழைகள் நேர்ந்துள்ளன: என்னாலியன்ற வரையில் முயன்று அவற்றைக் காட்டியுள்ளேன். பல இடங்களில் புள்ளியிருக்கவேண்டிய எழுத்துக்கள் புள்ளிபெறுமலும் காற்புள்ளி அரைப்புள்ளி முற்றுப்புள்ளி முதலியன தவறியும், பாடபேதங்கட்காக இட்டுள்ள எண்கள் தவறியும், உள்ளன; இப்பிழைகளை யெல்லாம் கவனித்துத் திருத்திக்கொண்டு படிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்."

கம்பராமாயணம் முழுவதுக்கும் உரையெழுதி முற்றுப்பெற்று வெளியிடுமாறு சிற்றறிவுடைய சிறியேனுக்கு விருப்பையுண்டாக்கி அங்கனமே பூர்த்தி செய்வித்து, இந்தப் பாலகாண்டத்துக்கு ஐந்தாம்பதிப்பும் வெளிவருமாறு தோன்றுத்துணையாய்நின்று திருவருள்புரிந்த ஸ்ரீராமபிரானது திருவடித்தாமரைகளை யென்றும் கருத்திற் கொண்டு வழுத்துவேன்.

இங்ஙனம்

விதேயன்

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யுன்.

ஆறும் பதிப்பு:—துன்முகி௵ பங்குனி௴ (1957) வெளியிடப்பட்டது.

ஏழாம் பதிப்பு:—இந்தப் பதிப்பு ஆறும் பதிப்பையொட்டியே அமைந்துள்ளது. இந்தப் பதிப்பு அச்சாகுங் காலத்தும் அச்சுத்தாளைத் திருத்தல் முதலியவகையால் முற்றிலும் பெரிதும் உதவியவர் விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியரான வித்வான் C. ஜெகந்நாதாசாரியர்,எம். ஏ., எல். டி. அவர்கள். இவர் திறத்து நன்றியறிதலுடையேன்.

குரோதி, ஆனி, 1964

வை. மு. நரசிம்மன்.

நூலாசிரியர் வரலாறு

நூலாசிரியர் பெயர்:—கம்பர் என்பது.

பிறந்த ஊர்:—கம்பர் சோழநாட்டிலே திருவழுந்தூரிற் பிறந்தவர். இதனை "பெற்று வளர்த்தும்" என்று தொடங்குஞ் சோழ மண்டலசதகச் செய்யுளில் "திருவழுந்தூர்க்கம்பன் றனையக் கருணைசெய்தோர், மற்றும் புலவோரையும் வாழவைத்தார் சோழ மண்டலமே" என்று கூறுவதாலும், "கம்பன்பிறந்தவூர் ...வாழு மழுந்தூர்" என்ற தமிழ் நாவலர்சரிதையாலும் உணரலாம்.

சாதி:—இவர் உவச்ச சாதியினர்: இது "நாரணன் விளையாட் டெல்லாம்'! என்று தொடங்கும் பாடலின் மூன்ருமடியில் "சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூருவச்சன்" என்று காணப்படுவதனு லும், "கைம்மணிச் சீரன் றிச் சீரறியாக் கம்ப நாடன்" என்ற தமிழ் நாவலர் சரிதைப் பாடலாலும் விளங்கும்.

இவரது தந்தையின் பெயர்:—ஆதித்தனென்பது, "ஆவின் கொடைச்*சகரராயிரத்து நூறொழித்துத், தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு-மூவலூர்ச், சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான், காரார் காகுத்தன் கதை", "தராதலத்தினுள்ள தமிழ்க் குற்ற மெல்லா, மராவு மரமாயிற் றன்றே-யிராவணன்மே, லம்புநாட் டாழ்வா னடிபணியு மாதித்தன், கம்பநாட்டாழ்வான் கவி," "ஆத வன் புதல்வன் முத்தியறிவினை யளிக்குமண்ணல், போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேற்......மாதவன் கம்பன் செம் பொன் மலரடி தொழுதுவாழ்வாம்" என்பவை முதலியவற்ருற் பெறப்படும்.

பெயர்க்குக்காரணம்:—இவர்க்குக் கம்பரென்பது பெற்ரேரா லிடப்பட்ட பெயரென்பது ஒருசாரார் கொள்கை: மற்ருெருசாரார் கம்பநாடு என்ற பெயர் பெற்ற நாட்டை உடையவராதல் பற்றி இவர்க்கு இப்பெயர் வந்ததென்ப. புலவர்புராணமுடையார், கம்பத்தினடியிற்கிடந்த இப்பிள்ளையை உவச்சனொருத்தன் கண் டெடுத்ததனால் இவர்க்கு இப்பெயர் வந்ததென்பர். சோழவரசன் முன் இவர் கம்பைத் தாங்கிநிற்க, அவன் 'இக்கம்பனா? என்று வினா வியதனால் வந்ததென்று ஒருசாரார் கூறுவர். (காரணம் எவ்வாறு கூறப்படினும் இவர்க்குப் பெயர் கம்பரென்பது என்ற விஷயத்தில் மாறுபாடு இல்லை.)

இவரை ஆதரித்தவர்:—இவர் இளமையில் தந்தை இறந்த தனால், போஷகரில்லாமல் திருவெண்ணெய்நல்லூரிற் சடையப்ப வள்ளலிடம் போய்ச் சேர்ந்து, அவரால் ஆதரிக்கப்பெற்றுக் கல்வி யிற் சிறந்தவராயினர்; இதனை "பெற்று வளர்த்தும் வித்தைதனைப் பேணிக் கொடுத்தும் பெயர் கொடுத்தும், பற்றவரும் பாலமுதளித் தும் பகைத்த வறுமைப் பயந்தீர்த்துங், கற்ற முதனூற் றிருவழுந் தூர்க் கம்பன் றனையக் கருணை செய்தோர், மற்றும் புலவோரையும் வாழ வைத்தார் சோழமண்டலமே"என்ற செய்யுளால் அறியலாகும்.

---

*சகரரென்பது - சகவருஷத்தை.

கம்பர் இராமாயணம் பாடிய காரணம்:—வடமொழியிலே வால்மீகி முனிவர்செய்துள்ள ராமாயணம் அக்காலத்தில் அறிவுடையோர் பலராலும் மதித்துப் பாராட்டப்படுவது கண்ட கம்பர்க்கு அவ்வாறுன சரிதை நம் தமிழ்மொழியிலும் வேண்டுமென்று எழுந்த பேரவாவேயாகும்; இதனை "ஆசைபற்றி யறைய லுற்றேன் மற்றிக், காசில் கொற்றத்திராமன்கதை யரோ," "ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனு நறவமாந்தி, மூங்கையான் பேசலுற்ருனென்ன யான் மொழியலுற்றேன்" என்ற பாயிரச்செய்யுட்களால் அறியலாம்.

இவர் தாம் பாடிய ராமாயணத்துக்கு இட்ட பெயர்:—இராமாவதாரம் என்பதாகும்: இதை "நடையினின் றுயர் நாயகன் தோற்றத்தி, னிடை நிகழ்ந்த விராமாவதாரப் பேர்த், தொடைநிரம்பிய தோமறுமாக் கதை," "இத்தலத்துமிராமாவதாரமே, பத்திசெய்து பரிவுடன் கேட்பவர், புத்திமிக்க அரும்புண்ணியமுந்தரு, மெத்தலத்து மவனடி யெய்துவார்" என்பவற்ருல் அறியலாம்.

இந்நூலைச் செய்த இடமும் பாடியவகையும்:—இவர் இந்நூலைப் பெரும்பாலும் திருவெண்ணெய்நல்லூரிலும் சிறுபான்மை திருவொற்றியூரிலும் பாடினுரென்பதும், இரவெல்லாம் வடமொழிப் புலவர்களைக்கொண்டு அம்மொழியில் இராமபிரான் விஷயமாகக் கூறிய சரிதத்தை யாராய்ந்து பகற்பொழுதில் *ஒருநாளைக்கு எழுநூறு பாடல்கள்வீதம் பாடினுரென்பதும், ஒற்றியூரில் பாடியபோது இரவிலே மாணுக்கர் இவர்பாடுகின்ற இராமாயணத்தைப் பிந்தாமலெழுதுவதற்கு அவ்வூர்க்காளியைத் தீப்பந்தம்பிடிக்கப் பாடினுரென்பதும், "தொடைநிரம்பிய தோமறுமாக்கதை, சடையன் வெண்ணெய் நல்லூர்வயிற் றந்ததே" என்ற பாயிரத்தாலும், "கவிநாதன், விழுந்த நாயிறெழுவதன்முன் மறைவேதியருடனுராய்ந், தெழுந்தநாயிறு விழுவதன்முன் கவிபாடிய தெழுநூறே" என்ற கம்பர் தனியனுலும், "ஒற்றியூர்க்காக்க வுறைகின்ற காளியே, வெற்றியூர்காகுத்தன் மெய்ச்சரிதை - பற்றியே, நந்தாதெழுதற்கு நல்லிரவின் மாணுக்கர், பிந்தாமற் பந்தம் பிடி" என்ற தமிழ்நாவலர் சரிதைப்பாடலாலும் தெளியப்படும்.

இவர் பாடிய நூலளவும் இராமாயணத்தின் உத்தரகாண்டத்தைப் பாடியவரும்:—இவர் பாடியது பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் ஈருகவுள்ள ஆறுகாண்டங்களை யென்பது, "பூணிலாவுங் கம்ப னலம் பொலியுந் தமிழாற் புகழெய்தக், காணுமாறுகாண்டமுறுங்கதையிற் பெரியகதையென்னுந், தாணிலாவுங் கழலபயன் சபையிற்பயி லுத்தரகாண்டம், ×வாணிதாதனரங்கேற்றவைத்தார்

---

*ஒருநாள் என்பது தேவமானத்தாற்கூறிய தாகையால், முந்நூற்றறுபத்தைந்துநாள்கொண்ட ஒருவருஷகாலத்தையாமென்ப.

×கம்பரோடு மாறுபாடுகொண்ட வாணியன் தாதனையே இங்கு வாணிதாதனென்றது என ஒருசாராரும், 'ஒட்டக்கூத்தர் சரசுவதி தம்பலங்கொடுக்க அதனுல் கவித்திறமை அடைந்தவ ராதலால், அவரையே வாணிதாதனென்றது' என மற்ருெருசாரரும் கூறுகின்றனர்.

சோழமண்டலமே" என்னுஞ் சோழமண்டலச்சதகத்தாலும், "பொற்றாமரை மானொழியாதுபொலியுமார்பு, வெற்றுங்கு மேனிரகுராமசரிதையாவுங், கற்றூர் கலியிற்பெரிதாந்தமிழ்க் கம்பநாட, னுற்றுங்குரைத்தானுரையாதன வோதுகிற்பாம்" என்னும் இரகுவமிசத்தாலுந் தெளியப்படும். ஆகவே, "கரை செறிகாண்டமேழு" என்று தொடங்குவதானசெய்யுளில் ஏழுகாண்டங்களையும் கம்பர் இயற்றினரெனக் கூறுவது, உண்மையறியாத பிற்காலத்தவரொருவர் கூற்றென்னவேண்டும்.

இந்நூற்பிரதிகளிற் பிறசெய்யுட் கலப்பும், உள்ளன விடுபடலும்:—கம்பரியற்றிய இவ்விராமாயணத்தில் பிறர்பாடியன சில இடையிடையேசேர்க்கப்பட்டும் கம்பர் பாடிய பாடல் சில விடப்பட்டும் உள்ளன வென்பது, பல ஏட்டுப்பிரதிகளை வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப்பார்ப்போர்க்கு எளிதில் விளங்கும். பிற்காலத்து வெள்ளியம்பலத்தம்பிரானென்பவரொருவர் இவ்விராமாயணத்தில் தம்செய்யுட்கள் சிலவற்றை இடைமடுத்துப் போயின ரெனவும் அவை வெள்ளிபாட லென்னும் பெயரான் வழங்கு மெனவும் கூறுவர்.

கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றியது:—இராம்பிரானிடத்து அன்பின் மிகுதியால் கம்பர் இந்நூலைச் செய்தனராதலால், இந்நூலை அரச சபையில் அரங்கேற்ற விருப்பங்கொள்ளாமல் படிகொண்டகீர்த்தி யிராமாயணமென்னும் பத்திவெள்ளம்குடிகொண்ட நெஞ்சத்தவர்பலர் நெருங்கியுள்ள ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றுமாறு கருதி அங்குச்சென்று ஆங்குள்ள பெருநாவலர்கட்குத் தாம் இயற்றிய நூலைப் படித்துக் காட்ட, அவர்கள் இவர்க்கு ஆழ்வார்சம்பந்தமில்லாமைபற்றி இவர் நூலினிடத்துப் பலகுற்றங்கண்டனர்; இவ்விஷயம் "பாவைத் திருவாய்மொழிப்பழத்தைப்பசுங் கற்பகத்தின், பூவைப் பொருகடற்போதாவமுதைப் பொருள் சுரக்குங், கோவைப் பணித்த வெங்கோவை யல்லாவென்னைக் குற்றங்கண்டென், ஞவைப் பழிப்பினு நல்லோரன்றே மற்றைநாவலரே" என்ற சடகோபரந்தாதிச்செய்யுளா லூகிக்கப்படும். பிறகு பிரணவாகார விமானத்தில் அராவணையில் அறிதுயில்கொள்ளும் அமலனை ஸ்ரீரங்கநாதனை இந்தக்கம்பர் சேவித்துநிற்க, அப்பெருமான் இவரைத் தன்னடியாருக்கு ஆட்படுத்தக் கருதி அர்ச்சகமுகமாக ஆவிர்ப்பவித்து 'நம்சடகோபனைப் பாடினையோ? பாடினால் தான் நாம் நீ பாடிய ராமாயணத்தைத் திருவுள்ளம்பற்றுவோம்; இல்லாவிடில் நமக்கு அங்கீகாரமாகாது' என்று அருளிச்செய்ய, இவர் ஆழ்வாரது கருணைக்கு இலக்காகி நம்மாழ்வார்விஷயமாகச் சடகோபரந்தாதி யென்ற நூறு கட்டளைக்கலித்துறையுள்ள நூலைப் பாடினர். இவ்விஷயம் "நஞ் சடகோபனைப் பாடினையோவென்று நம்பெருமாள், விஞ்சியவாதரத்தாற் கேட்பக் கம்பன் விரித்துரைத்த, செஞ்சொலந்தாதிக்கலித்துறை நூறும்" என்ற சடகோபரந்தாதியின்பாயிரத்தா லறியலாகும்; பின்பு இராமாயணம் திருவரங்கத்துப் பெரியோர் கூடிய சபையில் மேட்டழகியசிங்கர் சிரக்கம்பஞ்செய்யுமாறு அரங்கேற்றப்பட்டதென்ப.

கம்பர்காலம்:—நம்மவர் இன்னகாலத்தில் தோன்றியது என்பதையறிதலால் விசேடமான பயன் இன்று என்ற கருத்தினராயிருந்ததாலும், சரித்திரங்களை ஒழுங்காக எழுதிவைப்பது என்ற பழக்கத்தைக் கொள்ளாமையாலும், நூலின்சிறப்புக்கருதிப் பாராட்டுவதன்றித் தொன்மைபற்றிப் பாராட்டுவதென்று கொள்ளாமையாலும், இவர்காலத்தைக் குறித்துத் திட்டமாய்ச்சொல்ல இயலவில்லை. ஆயினும், ஒருசாரார் இராமாயணத்தை அரங்கேற்றியதைத் தெரிவிக்கின்ற

"எண்ணிசகாத்தமெண்ணூற்றேழின்மேற் சடையன் வாழ்வு
புண்ணியவெண்ணெய்நல்லூர்தன்னிலேகம்பநாடன்
பண்ணியவிராமகாதை * பங்குனியுத்தரத்திற்
கண்ணியவரங்கர்முன்னே கவியரங்கேற்றினானே"

என்ற பாடலில் 'எண்ணூற்றேழின்மேற் சடையன்வாழ்வு' என்று கூறிய சாலிவாகனசகாப்தம் 807 என்பது கி. பி. 885 ஆவது வருஷம் ஆதலால், கம்பர்காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்று திண்ணமாக ஏற்படுமென்பர். மற்றொருசாரார் கலிங்கத்துப்பரணிக்குக் கதாநாயகனாகிய முதற்குலோத்துங்கசோழனதுபேரனும் அகளங்கனென்று ஒருபேரையுடைய விக்கிரம சோழனுக்கு மகனுமான இரண்டாவது குலோத்துங்கனையும், அவனது மகனான இராசராசசோழனையும், "புவிபுகழ் சென்னிபேரமலன் றோள்புகழ், கவிகடம் மனையென", "சென்னிநாட்டெரியல்வீரன்***பொன்னிநாடு", என்று 'சென்னி, வீரன்' என்ற சொற்களால் தமது நூலிற் கம்பர் குறித்திருத்தலாலும், "சென்னி திருமகன் சீராசராசன்" எனவும் "நெடுஞ்சிலையை நாணெறிந்த வீரதர வீரோதயா", எனவும் ஒட்டக்கூத்தர் தாம் உலாவில் முறையே இரண்டாவது குலோத்துங்கனையும் அவன் மகனான இராசராசனையும் 'சென்னி, வீரன்' என்று கூறியிருத்தலாலும், தாம் அரசரையும் குற்றேவல்கொள்ளும் வல்லமையுடையவரென்பதைக் கம்பர் சோழனுக்குக் காட்டுமாறு ஓரங்கல் அதிபதியாய்க் காகதீயகணபதி யரசருள் ஒருவனாகிய பிரதாபருத்திரனைத் தமக்கு அடைப்பைகட்டிவரப் பாடியதாகத் தமிழ்நாவலர் சரிதையில் வருதலாலும், முறையே இரண்டாவது குலோத்துங்கன் கி. பி. 1132 முதல் 1162-வரைக்கும் அதற்குமேல் அவனது மகனான

---

*'திண்மையேறுங் கம்பனிடஞ் செய்யத் தகும்பல்சிறப் பயர்ந்து, நன்மையேறு மிராமகதை நற்பேர் புவியிற் றழைத்தேற, வுண்மையேறுந் திருவரங்கத் தொருவன் சபையிலுத்தரநாள், வண்மையேற வரங்கேற்றிவைத்தார் சோழமண்டலமே" என்று சோழமண்டல சதகத்திற் கூறி, அதற்கு மேற்கோளாக "பண்ணியவிராமகாதை பங்குனியுத்தரத்திற், கண்ணியவரங்கர் முன்னே கவியரங்கேற்றினானே" என்று எடுத்திருத்தலாலும், அந்தப் பங்குனி யுத்தரமே ஸ்ரீரங்கத்தில் பெரியதிருவிழாநாளாகி அறிஞர்பலரும் திரளுதற்கு ஏற்ற நாளாதலாலும், இராமபிரானது திருக்கலியாண தினமாகிச் சிறந்த நாளாதலாலும் "பங்குனியத்தநாளில்" என்ற பாடம் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்றென்ப.

இராசராசன் கி. பி. 1200-வருஷங்கட்குமேல் சிலவருஷங்கள் வரைக்கும் அரசாண்டனரெனவும், ஓரங்கற்பிரதாபருத்திரன் கி. பி. 1162-க்குச் சிறிது முற்காலந் தொடங்கி, கி. பி. 1197-க்குச் சிறிது பின்வரையில் அரசாட்சிபுரிந்தனனெனவும் சிலாசாஸநங்களால் ஏற்படுவதாலும், கம்பர்காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியென ஏற்படுகின்றதென்பர். இங்கன் கம்பர்காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டென்றுகொள்வது "எண்ணிய சகாத்தம்" என்று வழங்குஞ் செய்யுளோடு மாறுபடுகின்றதேயெனின்?—காலத்தால் முற்பட்டதாக ஒரு நூலைக் கூறின் அது நூலுக்குச் சிறப்பாகுமென்ற கருத்துக்கொண்ட ஒருவரால் இச்செய்யுள் அமைக்கப்பட்டதென்றாவது, முன் வழங்கிய வேறுவகைப்பாடம் இங்ஙனம் மாற்றிவழங்கப்பட்டதென்றாவது கொள்ளவேண்டும் என்ப. இனி, "எண்ணிய சகாத்த முன்னூற்றேழின்மேல்" என்று காணப்படும் பாடம், ஆயிரத்து நூற்றேழின்மேல் என்றுபொருள்பட்டுப் பன்னிரண்டாம் நூற்றாண்டென்ற கொள்கைக்குச் சாதகமாம் என்ப. கம்பருடைய காலம் எதுவாகஇருப்பினும், இந்தக் கம்பராமாயணம் வைஷ்ணவ ஆசார்யர்களாகியபெரியவாச்சான்பிள்ளையாலும் நம்பிள்ளையின் உபந்யாசத்தைப் பட்டோலைகொண்டருளிய வடக்குத்திருவீதிப்பிள்ளையாலும் ஆதரிக்கப்பெற்று நாலாயிரதிவ்யப்ரபந்த வ்யாக்யானங்களில் மேற்கோளாகக்காட்டப்பட்டிருத்தலால், பதின்மூன்றாம் நூற்றாண்டில் மிகவும் பிரசாரம் பெற்றுவிட்டதென்பது தெற்றென விளங்கும்.

மதம்:—இவர் பிறப்பினால் எந்தக்கொள்கையினராயிருந்திருப்பினும், இவ்விராமாயணத்தைப் பாடத்தொடங்கும்முன்னரே திருமண்காப்புத்தரிக்கும்வைஷ்ணவராகிவிட்டனரென்பது, திண்ணம். ஏனெனில்,—ஸ்ரீவான்மீகிமுனிவர் இராமன் முதலியோரைப்பற்றி வருணித்துக் கூறுமிடத்து எங்கும் நெற்றியில் இன்னவாறு தரித்திருந்தா ரென்று ஒன்றும் கூறாதிருக்கையில், "என்று நான்முகன் முதலியாரும் யாவையும், நின்ற பேரருளினை நீக்கி நீணெறி, சென்று மீளாக்குறிசேரச் சேர்த்திடு, தன்றிரு நாமத்தைத் தானும் சாத்தியே"* என்று பாலகாண்டத்துக் கடிமணப்படலத்தும், "அய்யனுமமைந்து நின்றாணாழியானளவினும, நெய்சுடர்விளக்கிற்றோன்று நெற்றியே நெற்றியாக, மொய்ம்மயிர்ச்சேனைபொங்க முரணயிலுகிர்வாண் மொய்த்த, கைகளே கைகளாகக் கடைக்கூழை திருவராலாக" என்று சுந்தரகாண்டத்துச் சம்புமாலிவதைப்படலத்தும் கூறுமாறு காண்க.

கம்பரின் நன்றியறிவு:—இவர் தாம்பாடிய இராமாயணத்தில் தம்மை ஆதரித்த சடையப்பவள்ளலை நன்றியறிவு காரணமாக ஒரு பத்துக் கவிகளிற் பாராட்டிக்கூறியுள்ளார்; இவ்விஷயம் சோழமண்டலசதகத்திலும் "சயராம கதையிலொன்பான் கவிமுழுதும், வெண்ணெய்ச் சடையன் சடையனென விறலார் கம்பன் விளங்க

---

*இந்தச் செய்யுளில் பிரதிபேதமாகக்காட்டியுள்ள பாடமே ஏற்குமென்று உரையிற் காட்டியுள்ளோம்: ஆகவே பிரதிபேதமாக வுள்ள பாடமே முக்கிய பாடமாகக் கொள்ளத் தகும்.

வைத்த, வண்ணத் துறைவேளாண் பெருமான்'' என்று குறிக்கப் பட்டுள்ளது.

அந்தப் பத்துச்செய்யுள்கள் இவை யென்பதைக் கற்போர் உணருமாறு தருகின்றோம்: அவற்றுள்பாயிரத்தில் வருவது ஒன்று. பாலகாண்டத்தில் வருவதுமூன்று: யுத்தகாண்டத்தில் வருவது ஆறு: அவை வருமாறு: - பாயிரத்தில் ''நடையினின்றுயர்'' என்று தொடங்கும்பாடல் முதலது; பாலகாண்டத்தில் வேள்விப்படலத்தில் ''விண்ணவர்போயபின்னை (1)'' என்று தொடங்குவது இரண்டாவது: மூன்றாவது அகலிகைப்படலத்தில் ''அரமடந்தையர்* (18),'' என்று தொடங்குவது; நான்காவது மிதிலைக்காட்சிப்படலத்தில் ''வண்ணமாலைக் கைபரப்பி (73) என்று தொடங்குவது. இனி, யுத்தகாண்டத்தில் சேதுபந்தனப்படலத்தில் ''மஞ்சினிற்றிகழ்தரு (9)'' என்று தொடங்குவது ஐந்தாவது. நாகபாசப்படலத்தில் ''வாசங்கலந்த'' (23) என்று தொடங்குவது ஆறுவது. மருத்துமலைப்படலத்தில் *''வன்னி நாட்டிய பொன்மௌலி'' (58) என்று தொடங்குவது ஏழாவது. திருமுடி சூட்டு படலத்தில் 32-ஆஞ் செய்யுளுக்குப்பின ''அந்தணர்வணிகர்'' என்று தொடங்குவது எட்டாவது. அந்தப்படலத்திலேயே ''அரியணையனுமன் தாங்க (36) என்று தொடங்குவது, ஒன்பதாவது. விடைகொடுத்த படலத்தில் 42-ஆஞ் செய்யுளுக்குப்பின் காணப்படும் ''மறையவர் வாழி'' என்று தொடங்குவது பத்தாவது.

இவர்க்கு அம்பிகாபதியென்று ஒருமகன் பிறந்து அவனும் சிறந்த வித்துவானாகி இவரொடு ராஜசபைக்கு நாடோறும்போய்ப் பெருமைபெற்று வந்தன னென்பர்.

இவர் செய்த நூல்கள் - இராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம், சரசுவதியந்தாதி முதலியன என்ப.

இவர்காலத்து வித்துவான்கள் - புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவை முதலியோர் என்ப.

இவர் சரித்திரவிவரத்தைத் தொண்டைமண்டலசதகம், தமிழ் நாவலர்சரிதை, பாண்டிமண்டல சதகம் முதலிய நூல்களிற் காணலாம்.

''வெண்பாவிற் புகழேந்திபரணிக்கோர்சயங்கொண்டான் விருத்தமென்னு,மொண்பாவிலுயர்கம்பன் கோவையுலாவந்தாதிக் கொட்டக்கூத்தன், கண்பாயகலம்பகத்திற்கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம், பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலாலொருவர் பகரொணாதே'' என்பதனால், இவர் விருத்தம்பாடுதலில் மிகச்சிறந்தவரென்பது விளங்கும்.

---

*இச்செய்யுளில் 'கண்ணன்' என்று வருவது, சடையப்ப வள்ளலைக் காட்டுமென்ப.

ஆனந்த பார்வதி பிரஸ், 30, இடைப்பாளையம் தெரு, சென்னை-3.

கம்பராமாயணத்தைப் பாராயணஞ்செய்வோர் அநுசந்திக்கும் காப்பு முதலியன :—

கடவுள் துதி.

* ஒன்ரு யிரண்டு சுடரா யொருமூன் று மாகிப்
பொன்ரு த வேத மொருநான்கொ டைம்பூத மாகி
அன்ருகி யண்டத் தகத்தா கியப்பு றத்து மாகி
நின்ரு ஞெருவ னவனீள்கழ னெஞ்சில் வைப்பாம்.

மா துளங் கனியைச் சோதி வயங்கிரு நிதியை வாசத்
தா துகு ந்றுமென் செய்ய தாமரைத் துணைமென் போதை
மோ துபாற் கடலின் முன்னுள் முளைத்துநற் கரத்தி லேந்தும்
போ துதா யாகத் தோன் றும்†பொன்னடி போற்றி செய்வாம்.

1.—நம்மாழ்வார் துதி.

தருகை நீண்ட தயரதன் ருன்றரும்
இருகை வேழத் திராகவன் றன்கதை
[1] திரிகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.

(இ - ள்.) தருகை நீண்ட - கொடுக்குந்தொழில் மிக்குள்ள, தயரதன் - தசரதசக்கரவர்த்தி, தரும் - பெற்ற, இரு கை வேழத்து -இரண்டு கையையுடைய யானையைப்போன்ற, இராகவன் தன் - இராமபிரானது, கதை - சரித்திரத்தை, திரிகை வேலை தரைமிசை செப்பிட - வட்டவடிவமாகிய சமுத்திரத்தாற் சூழப்பட்ட இந்தப் பூலோகத்திலே சொல்லுதற்கு, காப்பது - காப்பாக இருப்பது, குருகை நாதன் குரை கழல் - திருக்குருகூரில் திருவவதரித்த தலைவராகிய நம்மாழ்வாரது ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளே யாகும்; (என்றவாறு.) இது - கலிவிருத்தம்.

இராமபிரானது சரித்திரத்தைத் தொடங்கிய நாம் இந்நூல் இனிது முடியும்பொருட்டு நம்மாழ்வாரது திருவடிகளைச் சரணமாகப்பற்றுவோமென்றவாறு. விக்நேசுவரருடைய ஸ்தாநத்தில் விஷ்வக்ஸேநரை வணங்குவது ஸ்ரீவைஷ்ணவர்களின் மரபு ஆதலாலும், நம்மாழ்வாரென்பவர் விஷ்வக்ஸேநருடைய அமிசமாகையாலும், நம்மாழ்வாரை இந்நூலைத் தொடங்கும்போது வணங்குவதாகச் செய்யப்பட்டது, இந்தப்பாடல். அரக்கரால் உலகிற்கு நேர்ந்திருந்த துன்பங்களைப் போக்குமாறு ஸாக்ஷாத்தர்ம்மான பகவானைப் புதல்வனுகப்பெற்றுத் தந்தவ னுதலின், தசரதனை 'தருகை நீண்ட தயரதன்' என்ருர். தயரதன் = தசரதன்: பத்துத் திசைகளிலும் தடையின்றிச் செல்லவல்ல தேரையுடையவனென்று பொருள்படும். உலகத்துள்ள வேழங்களைவிட வேறுபாடுதோன்ற ''இருகைவேழத்து'' என்ருர். இராகவன் - இரகுவின் வமிசத்திற்பிறந்தவன். இரகு - உலகமுழுவதையும் தன் வல்லமையால்வென்று சருவசொத்தையும் தட்சிணையாகவுடைய 'விசுவ

*இந்த உடுக்குறியுள்ளன, பல பிரதிகளில் காணப்படாதன: ஆதலால், அவற்றிற்கு உரை எழுதப்படவில்லை. †பொன் என்றது, இலக்குமியை.

ஜித்' என்றயாகத்தைச்செய்து பெரும்புகழ்படைத்த ஒரு சூரிய குலத்தரசன். எதுகைநோக்கி '[1] திருகை' என்றோதுவாருமுளர்.

விநாயகர் துதி.

*தழைசெவி சிறுகட் டாழ்கைத் தந்தசிந் துரமுந் தாரை
மழைமதத் தறுகட் சித்ர வாரண முகத்து வாழ்வை
இழையிடைக் கலசக் கொங்கை யிம்கிரி மடந்தை யீன்ற
குழவியைத் தொழுவ னென்பாற் குறைவற நிறைக வென்றே.

2.—அநுமான் துதி.

அஞ்சிலே யொன்று பெற்ற னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா ருக[1]வாரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற [2]வணங்குகண் டயலா ரூரில்
அஞ்சிலே [3]யொன்றை வைத்தா [4]னவனெம்மையளித்துக் [5]காப்பான்.

(இ - ள்.) அஞ்சிலே ஒன்று பெற்றான்-பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய வாயுதேவனாற் பெறப்பட்டு,—அஞ்சிலே ஒன்று ஆறு ஆக - பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய ஆகாயத்தின்வழியாக, அஞ்சிலே ஒன்றை தாவி-பஞ்பூதங்களுள் ஒன்றாகிய அப்பை [சமுத்திரத்தைக்] கடந்து, ஆரியற்கு ஆக ஏகி - இராமபிரான்பொருட்டு (ஒற்றனாக இலங்கைக்கு)ப் போய்,—அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கு கண்டு-பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய பூமிதேவி பெற்ற தெய்வப் பெண்ணாகிய சீதாபிரர்ட்டியைச் சேவித்து(ச் செய்தி சொல்லி விட்டு), அயலார் ஊரில் அஞ்சிலே ஒன்றை வைத்தான்-சத்துருக்களான அரக்கருடைய ஊராகிய இலங்கையிலே பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய நெருப்பை வைத்துவந்தவனான, அவன் - அப்படிப்பட்ட [மிக்க] மேன்மையுடைய அநுமான், எம்மை—, அளித்து - கருணை செய்து, காப்பான் - (யாம் தொடங்கிய நூலுக்கு ஓரிடையூறும் வராதபடி) பாதுகாப்பான்; (எ - று.)—ஆதலால் அந்தப் பெருமானை வணங்குவோமென்பது, குறிப்பு.

*'எங்கெங்கு இராமபிரானது கீர்த்தனம் நிகழ்கின்றதோ, அங்கங்கெல்லாம் சிரத்தின்மேற்குவித்த கையனாய், ஆனந்தக் கண்ணீர் நிரம்பிய கண்ணனாய் அநுமான் நிற்பன்' என்பவாதலால், இராமசரித்திரத்தைச் சொல்லும்போது அநுமானைக் காப்பாகக் கொண்டனர். இராமபிரானுடைய தேவியைக் கவர்ந்த இராவணனும் அவனைச்சேர்ந்த அரக்கரும் வசிக்கின்ற இடம், இராமனையே தெய்வமாகக்கொண்ட அநுமானுக்கு அயலாரூராகும். [2] அணங்கைக்கண்டு என்றபாடம், ஓசைக்கு சிறவாது.

அஞ்சிலேயொன்று என்ற ஒரு பொருளைக்கொண்ட தொடர் பலமுறை வந்தது-சொற்பொருட்பின் வருநிலையணி. வந்தசொல்லே மிக்குவருதலை, தொல்காப்பியனார் ஏந்தல்வண்ணம் என்பர். அஞ்சு - ஐந்து என்பதன்போலி. அஞ்சு என்ற எண்ணுப்பெயர்கள்-குறிப்பால், மண் நீர் முதலிய பஞ்சபூதங்களை யுணர்த்தின. ஏகாரங்கள்-அசை. பெற்றான்-முற்றெச்சம்.பிரதிபேதம்:—[1] ஆரியர்க்

*யத்ரயத்ர ரகுநாத கீர்த்தநம், தத்ரதத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் |
பாஷ்பவாரிபரிபூர்ணலோசநம், மாருதிம் பஜதராக்ஷஸாந்தகம்.

காக, ஆருயிர்காக்க. [3]ஒன்று. [4]அவனன்மை, அவனம்மை. [5]உகப்பான். இதுவும், அடுத்த கவியும் - அறுசீராசிரிய விருத்தம். (2)

3.—சரசுவதி துதி.

[1]புத்தகம் [2]படிக மாலை குண்டிகை [3]பொருள்சேர் ஞான
வித்தகந் [4]தரித்த செங்கை விமலையை யமலை தன்னை
மொய்த்தகொந் தளக பார முகிழ்முலை தவள மேனி
மைத்தகு கருங்கட் செவ்வா யணங்கினை வணங்கல் செய்வாம்.

(இ - ள்.) புத்தகம் - புத்தகத்தையும், படிகம் மாலை - ஸ்படிக மணியினாலியன்ற மணிவடத்தையும், குண்டிகை - கரகத்தையும், ஞானம் பொருள் சேர் வித்தகம்-ஞானம் புகட்டுதலைப்பொருளாகக் கொண்ட சின்முத்திரையையும், தரித்த—, செம் கை - அழகிய (நான்கு) கைகளையுடைய, விமலையை - (உடற்) குற்றமற்றவளும், அமலை தன்னை - (மன) மாசு இல்லாதவளும், மொய்த்த கொந்து அளகம் பாரம் - நெருங்கிய பூங்கொத்துக்களையணிந்த கூந்தல் தொகுதியையும், முகிழ் முலை - (தாமரை) அரும்புபோன்ற ஸ்தநங்களையும், தவளம் மேனி - வெண்ணிறமான திருமேனியையும், மை தகு கரு கண் - மையினால் விளங்குகிற கருநிறமுள்ள கண்களையும், செவ்வாய்-செந்நிறமுள்ளவாயையுமுடைய, அணங்கினை - தெய்வப் பெண்ணுமான சரசுவதியை, வணங்கல்செய்வாம் - வணங்குவோம்;

சரசுவதீதேவி வாக்குக்கு உரியதேவதை யர்தலாலும், பிரமதேவனருளினாற் சரசுவதீதேவி ஸ்ரீவால்மீகிமுனிவனது வாக்கில் ஆவிர்ப்பவித்ததனாலேயே ஸ்ரீராமாயணம் என்ற இந்த மஹாகாவியம் தோன்றியதனாலும், இராமாயணத்தைப் பாடத்தொடங்கிய கம்பநாட்டாழ்வார்க்கும் காளிகாதேவியினருளினாற் சரசுவதீதேவி பிரதியட்சமாகி யிருத்தலாலும், இவ்விராமாயணத்தைத் தொடங்கும்போது சரசுவதீதேவியின் வணக்கமும்செய்யவேண்டுவதாயிற்று. புத்தகத்தை இடப்பால் கீழ்க்கரத்திலும், படிக மாலையை வலப்பால் மேல்கரத்திலும், குண்டிகையை இடப்பால் மேற்கரத்திலும், சின்முத்திரையை வலப்பால் கீழ்க்கரத்திலும் சரசுவதீதேவி கொண்டுள்ளனளென அறிக. கல்வித்தெய்வமென்பது விளங்கப் புத்தகமும், ஜபமந்திரத்தைத்தொகையிடப் படிகமாலையும், ஆசாரமாயிருக்கக் கமண்டலமும், ஞானத்தைப் பலருக்கும் உபதேசிக்குந் தன்மை விளங்க ஞானமுத்திரையும் கொண்டுள்ளனள், சரசுவதீதேவி. ஞானமுத்திரையாவது - கட்டைவிரல் நுனியையும் சுட்டுவிரல் நுனியையும் ஒன்று சேர்த்து மற்றை மூன்று விரல்களும் நேர்நிற்க வைக்கும் நிலையாம். விமலையயமலை தன்னையென்ற தொடரில், 'விமலை - தான் பரிசுத்தமானவள், அமலை - தன்னையடைந்தாரைப் பரிசுத்தஞ்செய்பவள்' என்றுமாம்: இனி ஒரு பொருட்பன்மொழியெனக்கொண்டு-மிகவும் பரிசுத்தமானவள் எனினுமாம். கொந்து - மெலித்தல்.

பிரசித்தனென்ற பொருளுள்ள 'வித்த' என்ற வடமொழி'க' ப்ரத்யயம் பெற்று, அஃறிணையின்பொருட்டு, 'வித்தகம்' என்றாய், அறிவுஎன்ற பொருளையுணர்த்தும்; அச்சொல் - இலக்கணையால் ஞானமுத்திரை யென்றபொருளில் வந்தது. பி - ம்:—[1]பொத்தகம். [2]படிகை. [3]பொருளேபுகழ்சேர். [4]தெரித்த. (3)

4.—இனி, பதினோராம் பாடல்வரை கம்பர் தனியன்கள்.

தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவு மரமாயிற் றன்றே—இராவணன்மேல்
[1] அம்புநாட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
[2] கம்பநாட் டாழ்வான் கவி.

(இ - ள்.) இராவணன்மேல் - (தன் மனைவியாகிய சீதாபிராட்டியைக் கவர்ந்த) இராவணனென்பவன்மீது, அம்பு - பாணத்தை, நாட்டு - பிரயோகித்து (அவ்வரக்கனை)க் கொன்றொழித்த, ஆழ்வான் - (நம்மை) ஆள்பவனாகிய இராமபிரானுடைய, அடி - திருவடிகளையே, பணியும் - (எப்போதும்) வணங்குந்தன்மையுள்ள ஆதித்தன்-சூரியன்போன்ற, கம்பநாட்டாழ்வான்-கம்பநாட்டில் தோன்றிய பக்தராகிய கம்பரென்பவரது, கவி—,—தராதலத்தின் உள்ள-பூமியிலுள்ள, தமிழ் குற்றம் எல்லாம் - தமிழ்க்குற்றங்களை யெல்லாம், அராவும் - அராவிப்போக்குகின்ற, அரம் ஆயிற்று - அரம்போலாயிற்று; (எ-று.)—அன்றே - தேற்றம்: அசையுமாம்.

நூலுள் அடங்காது தனியே பாயிரமாய் நிற்றல்பற்றி, இப்பாடல் ஒவ்வொன்றும் தனியன் என்று பெயர்பெறும்: 'அன்'விகுதி-உயர்வுப்பொருளது.

கம்பர் அருளிச்செய்த இராமாயணத்தைக் கற்ற நுண்ணுணர்வினர், பிறர்செய்த குற்றமுள்ள பாடலைப் படிக்கையில் 'கம்பர் இவ்விஷயத்தை இங்கன் சுவை முதலியன குறைவுபடக் கூறுர்; இன்னவகையாகப் பல்வகையணியும் வனப்பும் பொருந்தக் கூறுவர்'என்று அறிதற்குக் கருவியாயிருத்தலால், 'கம்பநாட்டாழ்வான்கவி-தமிழ்க்குற்றமெல்லாம் அராவும் அரமாயிற்று' என்றார்; இனி, கம்பர் செய்த கவியைப் படித்துப் புலமைபெற்ற புலவர்கள் பாடுங் கவிகளும் குற்றமின்றி விளங்குமென்பார், இங்ஙன் கூறினருமாம். இதனால் கம்பருடையபாடல்கள் குற்றமொன்றும் சேரப்பெறுமல் விளங்குமென்றவாருயிற்று. சூரியன் தான் சோதியுடையவனாயிருந்து தன்னுடைய கிரணங்கள் மூலமாக இருளைப் போக்கிப் பொருளை விளங்கச் செய்தல்போல, கவிஞரில் தலைவராகிய கம்பர் தமது கவிகளின் மூலமாக உலகத்தாரது அஜ்ஞாநவிருளைப்போக்கிப் பரம்பொருளை விளக்குவதனால், அக் கம்பரை ஆதித்தனாக உருவகஞ் செய்தது. ஆதித்தன் கம்பநாட்டாழ்வான்-ஆதித்தன் புதல்வனாகிய கம்பன் என்றலும் ஒன்று.

மூன்றுமடி - முற்றுமோனை. கவி - சாதியொருமை. 'அம்புநாட்டாழ்வான்' என்ற தொடரில், ஆள்வான் என்பது ளகரத்துக்கு ழகரத்தைப் போலியாகப் பெற்றுவந்தது. எம்பெருமானது குணக்கடலில் ஆழ்ந்து ஈடுபடுபவரென்ற காரணம்பற்றி, கம்பரை 'ஆழ்வார்' என்றார். ஆதித்தன்-ஆதித்யன்: காசியபமுனிவனுக்கு அதிதிதேவியினிடம் பிறந்த புதல்வன். பி -ம்:—[1] அம்பினால் வீழ்த்தான். [2] கம்பநாடாள்வான். இது - நேரிசைவெண்பா. (4)

5. வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துபெறத்
தாழ்வா ருயரப் புலவோ ரகவிரு டானகலப்

போழ்வார் கதிரி னுதித்ததெய் வப்புல மைக்கம்பநாட்டு
ஆழ்வார் பதத்தைச்சிந் திப்பவர்க்கி யாது மரியதன்றே.

(இ - ள்.) வாழ்வு ஆர் - வளங்கள் நிரம்பிய. திருவெண்ணெய் நல்லூர்-திருவெண்ணெய்நல்லூரிற் பிறந்த,சடையப்பன்-சடையப்ப வள்ளல், வாழ்த்து பெற - (கம்பராமாயணத்துள் ஆங்காங்குப்) புகழப்படவும்,—தாழ்வார் உயர - தாழ்குலத்தவரும் மேன்மையடையவும், புலவோர் அகம் இருள் தான் அகல - வித்துவான்களுடைய மனத்திலிருந்த (அஜ்ஞாநமாகிய) இருள் அடியோடு நீங்கவும்,— போழ் - (இருளைப்) பிளக்கின்ற, வார் கதிரின் - நீண்டகிரணங்களையுடைய சூரியனைப்போல உதித்த, தெய்வம் புலமை கம்பநாட்டாழ்வார் பதத்தை-தெய்விகமான புலமைநிரம்பிய கம்பநாட்டில் தோன்றிய கம்பரது பாதங்களை,சிந்திபபவர்க்கு - (எப்போதும்) தியானிப்பவர்க்கு, யாதுஉம் - (இம்மை மறுமை யின்பங்களில்) எதுவும், அரியது அன்று—; (எ - று.)

இம்மை மறுமை யின்பங்களை யெல்லாம் வேண்டுவார்வேண்டியபடி தரவல்ல கடவுளான ஸ்ரீராமபிரானது சரித்திரத்தை விரித்துரைத்து அப்பரமனது திருவருளைப் பெற்ற கம்பரது திருவடிகளைத் தியானிப்பவரும், இஷ்டசித்திபெறுவ ரென்பதாம். கம்பர் திருவவதரித்து இராமாயணம் பாடியதனால் அவரை யாதரித்த சடையப்ப முதலியார் அக்கம்பராமாயணத்தில் ஆங்காங்குப் புகழப்பெறுவதும், கம்பராமாயணத்தில் வல்லவரான இழிகுலத்தவரும் அவ்விராமாயணத்தைப் பிரசங்கஞ்செய்து சபையில் நன்குமதிப்புப்பெறுவதும், சாதாரணமான தமிழ்ப்புலவர் இக்கம்பரது ராமாயணத்திற் பயின்று தேர்ச்சிபெற்றுத் தமது அறியாமை நீங்கப்பெறுவதும் காண்க. இனி, சடையப்பன் வாழ்த்துபெற - (கம்பரை ஆதரித்து இராமாயணத்தைத் தமிழ்ப்பாவினாற் பாடுமாறு செய்ததனாற்)சடையப்பமுதலியார் (உலகத்தவராற்) புகழ்ச்சிபெறவும், தாழ்வார் உயர- நான்காம் வருணத்தவர் (தங்கள்சாதியில் மகாகவியாகிய கம்பர் பிறந்ததனால்) மேன்மை பெறவும், புலவோர் அகவிருள்தான் அகல - பெரும் புலவரும் (இவ்விராமாயணத்தை வாசித்து 'நமது கல்வியறிவு எம்மாத்திரம்?' என்று கருதி இதற்கு முன் தமது) மனத்துக்கொண்டிருந்த செருக்காகிய இருள் நீங்கவும் என்றும் உரைக்கலாம். சரசுவதிகடாட்சம் பெற்றவ ராதலால், கம்பரை 'தெய்வப் புலமைக் கம்பநாட்டாழ்வார்' என்றார். கட்டளைக்கலித்துறை. (5)

6. அம்பரா வணிசடை யரன யன்முதல்
உம்பரான் முனிவரால் யோக ராலுயர்
இம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பராம் புலவரைக் கருத்தி ருத்துவாம்.

(இ - ள்.) அம்பு - (கங்காநதியின்) நீரையும், அரா - சர்ப்பங்களையும், அணி - தரித்திருக்கின்ற, சடை - (கபர்த்தமென்னும்) ஜடையையுடைய, அரன் - சிவபிரானும், அயன் - பிரமதேவனும், முதல் - முதலாகிய, உம்பரால் - தேவர்களாலும், முனிவரால் - தேவருஷிகளாலும், யோகரால் - (அணிமா முதலிய அஷ்டசித்தி

களைப்பெற்ற) சித்தர்களாலும், உயர் இம்பரால் - சிறந்தஇவ்வுலகத்தவர்களாலும், பிணிக்க அரு - கட்டுதற்கு அரியதான, இராமவேழம் - இராமனாகிய யானையை, சேர் - (தம்மனமாகிய கட்டுத்தறியிற்) சேர்த்துக் கட்டிய, கம்பர் ஆம் புலவரை - கம்பரென்று பெயர்பெற்ற மகாவித்துவானை, கருத்து இருத்துவாம் - மனத்திற்கொண்டு தியானிக்கக்கடவோம், (யாம்); (எ - று.)

ஒருவராலும் கட்டுதற்கு அரிய ஸ்ரீராமனென்னும் மத்தகஜத்தைத் தமதுமனத்தறியிற்பக்தியாகிய கயிற்றினாற் கட்டிய கம்பரை நாம், எப்போதும் மனத்திற்கொள்வோமென்பதாம். "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்றபடி எம்பெருமான் பக்திமான்கட்கு அன்றி மற்றையோர் எத்துணைச் சிறப்புடையோராயினும் அவர்களால் அறிதற்கு அருமையனாதல்பற்றி, 'அரனயன்முதல் உம்பரால்...உயர் இம்பரால் பிணிக்கரும் இராமவேழம்' என்றார். யானையானது - ஒருநாள் கண்டோமென்று திருப்தியாயிருக்கவொண்ணாதபடி தினந்தோறுங் காணவேண்டுமென்னும் விருப்பத்தை யுண்டாக்குவதும், மிக்கசெருக்கையுடையதும், கைக்கெட்டினாரை நினைத்தபோது எடுத்துக் கழுத்திலே வைத்துக்கொள்வதும், தன்மீதுஏறநினைப்பார்க்குத் தன்னைப் பணிந்து கொடுப்பதும், உகவாதாரை ஆராயாதுகிழித்துப்போகடுவதும், தன்னைக்கட்டுமாறு தானே கயிற்றையெடுத்துக்கொடுப்பதுமாக விருக்கும்; அவ்வாறே, எம்பெருமான் தினந்தோறும் காணத்தக்க வடிவழகும், எப்பொருட்கும் இறைவனாயிருக்குந்தன்மை தோன்றக் கொண்டிருக்குஞ் செருக்கும், நித்திய சம்சாரியொருவன் தன்னைச்சரணமடைந்ததே காரணமாக அவனுயை குற்றங்களைப் போக்கியமாகக்கொண்டு தன்னைக்கொடுத்தால் கேட்பாரில்லாத சுவாதந்திரியமும், கர்மம் ஜ்ஞாநம் முதலிய உபாயங்களால் தன்னை அடைய விரும்பினவர்க்குத் தன்னைக் கொடுக்கும் நல்லொழுக்கமும், தனது அடியார்களின் விரோதிகளை ஆராயாது அழிக்கின்ற பகையழிக்குந் தன்மையும், தன்னைக் கட்டுப்படுத்துமாறு பக்தியைத் தானே தருகிற சுவை பிறப்பிக்குங் குணமும் உடையவனவன்; ஆதலால், இராமபிரானை முற்றுவமை பற்றி வேழமாக உருவகஞ் செய்தார். இது கலிவிருத்தம். (6)

7. சம்ப நாடன் னுமைசெவி சாற்றுபூங்
கொம்ப நாடன் கொழுந னிராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன் கழறலை யிற்கொள்வாம்.

(இ - ள்.) சம்பு - சிவபிரான், அ நாள் - முற்காலத்தில், தன் உமை - தனதுதேவியான பார்வதியினது, செவி - காதில், சாற்று - உபதேசித்த, பூ கொம்பு அனாள் கொழுநன் இராமன் பேர் - பூங்கொம்பு போன்றவளான சீதாதேவியினது கணவனாகிய ஸ்ரீராமபிரானுடைய திருநாமம், பம்ப - பரவும்படி, நாடு அழைக்கும் - தேசத்திலுள்ளாரெல்லாரும் விரும்பிப்படிக்கின்ற, கதை - ராமகதையை, பா செய்த - தமிழ்ப்பாடல்களாகச் செய்தருளிய, கம்பநாடன் - கம்பநாட்டாழ்வாரது, கழல் - திருவடித்தாமரைகளை, தலையில் கொள்வாம் - தலைக்கு அணியாகச் சூடுவோம், (யாம்);

முன்னொருகாலத்திற் பார்வதி பரமசிவனை நோக்கி, 'எம்பெருமானது ஆயிரந்திருநாமங்களையும் எளிதாகக் கூறும் உபாயம் யாது?' என்று வினவ, பரமசிவன் 'ராம என்னும் திருநாமத்தை உச்சரித்தால் அது ஆயிரந்திருநாமங்களையும் சொல்லியதற்கு ஈடாகும்' என்று உபதேசித்தன னென்பதை, "பார்வத்யுவாச— "கேநோபாயேந லகுநா, விஷ்ணோர்நாமஸஹஸ்ரகம் | பட்யதே பண்டிதைர்நித்யம், ச்ரோதும் இச்சாம்யஹம்ப்ரபோ||ஈச்வரஉவாச— ஸ்ரீராமராமராமேதி, ரமேராமேமநோரமே | ஸஹஸ்ரநாமதஸ் துல்யம், ராமநாம வராநநே||" என்பதனு லறிக.

இச்செய்யுளில் திரிபு என்னுஞ் சொல்லணி காண்க. பொது நகரத்துக்கும் சிறப்புனகரத்துக்கும் வரிவடிவில் மிக்க வேறுபாடு இருப்பினும், ஒலிவடிவில் மிக்க வேறுபாடு இல்லாமைபற்றி, யமகம், திரிபு, சிலேடை இவற்றில் நகரனகரங்களை அபேதமாகக் கொண்டு அமைத்தல்மரபு ஆதலால், 'கொம்பனாள்' என்று இருக்க வேண்டிய இடத்து, 'கொம்பநாள்' எனப்பட்டது. இளமையில் பார்வதீதேவி சிவபிரானைநோக்கித் தவஞ்செய்யச் சென்றபோது, பெற்றோர் 'அம்ம! வேண்டா' என்றுதடுத்ததுபற்றி, உமை [உ - அம்ம! மா - வேண்டா] என்று பெயராயிற்று. இது - முன்னையதினும் வேறுபட்டுவந்த கலிவிருத்தம். (7)

* இம்பரு மும்பர் தாமு மேத்திய விராம காதை
தம்பமா முத்தி சேர்தல் சத்தியஞ் சத்தி யம்மே
அம்பரந் தன்னில் மேவு மாதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன்செங் கமல பர்தங் கருத்துற விருத்து வாமே.

* ஆதவன் முதல்வன் முத்தி யறிவினை யளிக்கு மண்ணல்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவஞ்சிறிதுமில்லான்கொண்டன்மால் தன்னையொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்.

8. இம்பர் நாட்டிற் செல்வமெலா மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் [1]கற்பகக்கா வோங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத் திறல்சே ரிராமன் றிருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயங் களியாதே.

(இ - ள்.) இம்பர் நாட்டில் - இந்நிலவுலகத்தில், செல்வம் எலாம் எய்தி - எல்லாச் செல்வங்களையும் அடைந்து, அரசு ஆண்டு இருந்தால்உம் - அரசாட்சிசெய்து கொண்டிருந்தாலும், உம்பர் நாட்டில்-மேலுலகத்தில், ஓங்கு கற்பகம் கா நீழல் இருந்தால்உம் - உயர்ந்துவளர்ந்த கற்பகமரச்சோலையினது நிழலில் வசித்தாலும், —செம் பொன்மேரு அனைய-சிவந்த பொன்மயமான மேருபர்வதத்தைப்போன்ற, புயம் - தோள்களில், திறல் சேர் - வலிமையமைந்த, இராமன் - ஸ்ரீராமபிரானது, திருக்கதையில் - திவ்யசரித்திரத்தைக் கூறுகின்ற நூல்களுள், கம்பநாடன் கவிதையில்போல் - கம்பராமாயணப்பாடல்களிற்போல, (வேறொன்றில்), கற்றோர்க்கு—,இதயம் களியாது - மனம் திருப்தி யாகாது; (எ - று)—பி-ம்:—[1]கற்பகத்தின். அறுசீராசிரியவிருத்தம். (8)

9. கழுந்த ரா[1]யுன கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே
அழுந்த வாளிக டொடுசிலை ராகவ வபிநவ கவிநாதன்
விழுந்த [2]நாயிற தெழுவதன் முன்மறை வேதிய ருடனாராய்ந்து
எழுந்த நாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே.

(இ - ள்.) கழுந்தர் ஆய் - வில்லின் தடியைப் போன்றவர்களாய் [நெறிப்புக்கொண்டு], உன கழல் - உன்னுடைய திருவடிகளில், பணியாதவர்-வணங்காத ராக்ஷஸர்களுடைய, கதிர் மணி முடிமீது - ஒளியைவீசுகின்ற இரத்தினங்களையிழைத்துச்செய்யப்பெற்ற கிரீடங்களையணிந்த தலைகளின்மேல், அழுந்த - நன்றாகப் பதியும்படி, வாளிகள் தொடு - அம்புகளைப் பிரயோகித்த, சிலை - (கோதண்டமென்னும்) வில்லை யேந்திய, ராகவ - இராமபிரானே! —அபிநவ கவிநாதன் - (உன்விஷயத்தில்) புதுமையாகக் கவிபாடித் துதித்த கம்பன்,—விழுந்த நாயிறு அது எழுவதன் முன் - அஸ்தமித்த சூரியன் உதிப்பதற்குமுன் [இராத்திரிவேளையில்],மறை வேதியருடன்-வேதம் வல்ல அந்தணர்களுடன், ஆராய்ந்து - (ஸ்ரீராம சரித்திரத்தைக் கூறும் வடமொழிநூலை) ஆராய்ச்சிசெய்து, எழுந்த நாயிறு விழுவதன்முன் - உதயமான சூரியன் அஸ்தமிப்பதற்குள் [பகற்பொழுதில்], பாடினது கவி - பாடியபாடல்கள், எழுநூறு—; (எ - று.)—இது - நூலியற்றிய முறை.

கவிபாடினது எழுநூறு - ஒருமைப்பன்மை மயக்கம். கம்பர் இராப்பொழுதில் வடமொழியில் வல்லவர்களை உதவியாகக் கொண்டு ஸ்ரீராமசரித்திரத்தை ஆராய்ச்சி செய்து, பகற்பொழுதில் நாளொன்றுக்கு எழுநூறு பாடல் வீதம் ஆறுகாண்டங்களையும் பதினைந்துநாளிற் பதினாயிரத்து ஐந்நூறு செய்யுள்களாற் பாடி முடித்தன ரென்பதாம். தேவர்கட்கு உத்தராயணகாலமெல்லாம் பகற்பொழுதென்பதும், தக்ஷிணாயன காலமெல்லாம் இராப்பொழுதென்பதும் நூற்கொள்கை யாதலால், இச்செய்யுளில் 'இரவு பகல் என்பன-தேவமானத்தின்படியான அவ்வாறு மாதங்களைக் காட்டும்' என்பர் ஒரு சாரார். பி-ம்:—[1]உள. [2]ஞாயிறுவெழுவ்தன். இதுவும்—ஒருவகை அறுசீராசிரியவிருத்தம். (9)

10. நாரணன் விளையாட் டெல்லா நாரத முனிவன் [1]கூற
ஆரணக் [2]கவிதை செய்தா [3]னறிந்தவான் மீகி யென்பான்
சீரணி [4]சோழ [5]நாட்டுத் திரு [6]வழுந் தூருள் வாழ்வோன்
[7]காரணக் கொடையான் கம்பன் றமிழினாற் [8]கவிசெய் தானே.

(இ - ள்.) நாரதமுனிவன் - நாரதமஹர்ஷி, நாரணன் விளையாட்டு எல்லாம் - திருமாலினது அமிசமான ஸ்ரீராமபிரானது சரித்திரம்முழுவதையும், கூற - உபதேசிக்க, அறிந்த - (அதனைக் கேட்டு) உணர்ந்த, வான்மீகி என்பான் - வால்மீகியென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட முனிவன், ஆரணம் கவிதை செய்தான் - (அதனை) வேதத்தோடொத்த [மிகச்சிறந்த] வடமொழிச் சுலோகரூபமாகச் செய்தான்; (பிறகு அந்த ராமசரித்திரத்தை), சீர் அணி சோழநாட்டு திருவழுந்தூருள் வாழ்வோன் - சிறப்புப்பெற்ற சோழநாட்டில் திருவழுந்தூரில் வாழ்பவனும்,

காரணம் கொண்டையான் - (புகழ்க்குக்) காரணமான ஈகைக் குணமுடையவனுமாகிய, கம்பன்—, தமிழினால் கவி செய்தான்—;

ஸ்ரீநாரதபகவான் உபதேசித்த ராமசரித்திரத்தை வால்மீகி முனிவன் ஸ்ரீராமாயணமென்ற ஆதிகாவியமாக வடமொழியில் இயற்ற, கம்பர் அம்முதனூலையே துணையாகக்கொண்டு, தமிழ்ப் பாஷையிலும் ராமசரித்திரத்தை அதன் வழிநூலாகப் பாடினரென்பதாம். வால்மீகிமுனிவன், வேதத்தில்மாத்திரம் வழங்கி வந்த சந்தசைக் கொண்டு முதலில் வடமொழியில் ஸ்ரீராமாயணத்தைச் செய்தனனாதலால், 'ஆரணக்கவிதை செய்தான்' என்றார்: முனிவன் ராமாயணத்தைச் செய்தபின்புதான் லோகத்திலே வடமொழியிற் சுலோகங்கள் தோன்றின வென்ப.

நாரணன் = நாராயணன்: வடமொழியின்திரிபு: பிரளயப் பெருங்கடலை இருப்பிடமாகக் கொண்டவ னென்றும், எல்லாப் பொருள்கட்கும் இருப்பிடமானவ னென்றும், எல்லாப்பொருள் களிலும் தான் இருப்பவ னென்றும், மற்றும் பலவாறும் இச் சொற்குக் காரணப்பொருள் உரைக்கப்படும். காத்தற்றொழிற் கடவுளாகிய திருமால் தருமத்தை நிலைநிறுத்த ஸ்ரீராமனாகத் திருவவதரித்தனனாதலின், அப்பிரானை 'நாரணன்' என்றே கூறினார். நாரதன் - தத்துவஞானத்தை உபதேசிப்பவனென்றும், உலகத்தாரது அஜ்ஞானத்தைப் போக்குபவனென்றும் பொருள் படும்; உலகத்தாரது ஒற்றுமையைக் கெடுப்பவனென்றும் சிலர் கூறுவர். காரணக்கொடையான், கார் அண் அ கொடையான் என்று பிரித்து - மேகத்தையொத்த கைம்மாறு கருதாத கொடையையுடையவனென்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]சொல்ல, செப்ப. [2]கவிகள். [3]அறிந்து. [4]பொன்னி. [5]நாட்டில். [6]அழுந்தூருவச்சன், அழுந்தூரோச்சன், அழுந்தூரான்வாழ்வோன். [7]காரணி, தாரணி. [8]கவிதை செய்தான். இனி மூன்றுசெய்யுள்கள் - முன்னினும் வேறுபடவந்த அறுசீராசிரியவிருத்தங்கள். (10)

11. அம்பிலே சிலையை நாட்டி யமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானுந் தமிழிலே [1]தாலை நாட்டிக்
கம்பநா டுடைய [2]வள்ளல் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே [3]நரருக்கின் றமுத மீந்தான்.

(இ - ள்.) அன்று - முற்காலத்தில் [தேவர்கள் தமது செல்வத்தை யிழந்தகாலத்தில்], அம்பிலே - திருப்பாற்கடலிலே, சிலையை - மந்தரமலையை, நாட்டி - (மத்தாக) நிறுத்தி(க் கடைந்து), அமரர்க்கு - தேவர்கட்கு, அமுதம் - அமிருதத்தை, ஈந்த - கொடுத்தருளிய, தம் பிரான் என்ன - தமது தலைவனை திருமாலைப் போலவே,—கவிச் சக்ரவர்த்தி - கவிகளுட்சிறந்தவனும், கம்ப நாடு உடைய வள்ளல் தான்உம் - கம்பநாட்டுக்குத் தலைமைபூண்ட வரையாது கொடுப்பவனுமாகிய கம்பனும், இன்று - இக்காலத்தில், தமிழில் - தமிழ்ப்பாஷையாகிற திருப்பாற்கடலில், தாலை நாட்டி - (தனது) நாவாகிய மந்தரமலையை நிறுத்தி(க் கடைந்து), நம்பு பாமாலையால் - (யாவரும்) விரும்புகின்ற பாக்களின், தொகுதியினால், பார்மேல் - இந்நிலவுலகத்தில், நரருக்கு - மனிதருக்கு,

அமுதம் ஈந்தான் - (ராமசரித்திரமாகிய) அமிருதத்தை யுண்டாக்கிக்கொடுத்தான்; (எ - று.)—இது - கவிச்சிறப்பு.

முற்காலத்தில் திருமால் மந்தரமலையைக்கொண்டு திருப்பாற்கடலைக்கடைந்து விண்ணுலகத்தவரான தேவர்கட்கு அமிருதத்தைக்கொடுத்ததுபோல, இக்காலத்தில் கம்பரும் தம்துநாவினுல் தமிழ்க்கடலைத் துழாவிக்கடைந்து ஸ்ரீராமசரித்திரமாகிய அமிருதத்தை மண்ணுலகத்தவரான மனிதர்கட்குத் தந்தருளினரென்பதாம்: உவமையணி. "மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற்கடைந்து, துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமுதம், கறைப்பாம்பணைப்பள்ளியானன்பரீட்டங்களித்தருந்த, நிறைப்பான்" என்றதனோடு இதனை ஒருசார் ஒப்பிடுக.

அம்பு - நீர்: இலக்கணையால், கடலை யுணர்த்தும்; இங்குச் சிறப்பாய், திருப்பாற்கடலைக் குறித்தது. சிலை - கல்லினாலாகிய மலைக்கு ஆகுபெயர். தாலை - தாலுவை. "நம்பும் மேவும் நசையாகும்மே" என்பவாதலால், நம்புஎன்பதற்கு-விரும்புகின்றஎனப் பொருளுரைக்கப்பட்டது. நம்பு பாமாலை - வினைத்தொகை. பி-ம்:—[1] தன்னை, அவனே. [2] கோமான். [3] நரர்க்குமின்று, நரர்க்குமின்னமுதம்.

நூலிற்கூறும் விஷயம்.

* பரர்வரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தணை வகுத்துப் பின்னும்
இராவணன் குலமும் பொன்ற வெய்துடனயோத்தி வந்தான்.

12.—அரங்கேற்றின காலம் இடம் முதலியவை.

எண்ணியசகாத்த[1]மெண்ணூற்[2]றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி [3]யுத்த ரத்தில்
க்ண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னனே.

(இ - ள்.) எண்ணிய - கணக்கிடப்பட்ட, சகாத்தம் எண்ணூற்றேழின் மேல் - சாலிவாகநசகாப்தம் எண்ணூற்றேழாவது வருஷத்திற்குமேல், சடையன் வாழ்வு நண்ணிய - சடையப்பமுதலியார் வாழ்தல்பொருந்திய, வெண்ணெய்நல்லூர் தன்னில் - திருவெண்ணெய்நல்லூரிலே, கம்பநாடன் - கம்பன்,—பண்ணிய-(தான்) இயற்றிய, இராம காதை - ஸ்ரீராமசரித்திரமாகிய ராமாயணத்தை,—பங்குனி உத்தரத்தில் - பங்குனிமாதத்து உத்தர நக்ஷத்திரத்திலே, கண்ணிய அரங்கர்முன்ன-(யாவராலும்)தியானிக்கப்படுகின்ற ஸ்ரீரங்கநாதனது சந்நிதியில், கவி - (தன்) கவியை, அரங்கு ஏற்றினான் - சபையிலே அங்கீகரிக்கும்படி செய்தான்; (எ-று.)

கண்ணிய அரங்கர் - மாலையைச்சூடிய திருவரங்கநாதருமாம். அரங்கேற்றுதலாவது - கவி தான்செய்த பிரபந்தத்தை வித்துவான்கள் பலரும் திரண்டுள்ள சபையிற் கொணர்ந்து படித்துக் காட்டி அவரவர்கள் கேட்கின்ற ஆட்சேபங்கட்கெல்லாம் தக்க சமாதானங்கூறி, அப்புலவர்களால் குற்றமில்லாததென்று அங்கீகரிக்குமாறு செய்தல். காதை=கதை: நீட்டல்; காதை - பாடலுமாம். பி-ம்:—[1] முந்நூற்று. [2] ஆறின்மேல். [3] அத்தநாளில். (12)

இதுவும் அது.

* ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறெழித்துத்
தேவன் றிருவழுந்தூர் நன்னாட்டு-மூவலூர்ச்
சீரார் குணுதித்தன் சேயமையப் பாடினான்
காரார் காகுத்தன் கதை.

13.—இதுமுதல் இருபதாம்பாடல்வரையில் நூற்பயன்.

நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் [1]சிதைந்து [2]தேயுமே
சென்மமு மரணமு மின்றித் [3]தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்.

(இ - ள்.) ராம என்ற இரண்டு எழுத்தினால் - 'ராம' என்கிற இரண்டெழுத்துக்களை யுச்சரிப்பதனால், (அதற்கு உரியவனான ஸ்ரீராமன்), இம்மைஏ - இந்தப் பிறவியில்தானே, நாள்உம் - எப்போதும், நன்மைஉம் - (எல்லா) நன்மைகளையும், செல்வம்உம் - (அவற்றிற்குக் காரணமான) செல்வத்தையும், நல்கும் - கொடுத்தருள்வான்; (அன்றியும் அவ்வாறு உச்சரிப்பவர்க்கு), தின்மை உம் - தீயசெயலும், பாவம்உம் - (அதன் பயனான) தீவினையும், சிதைந்து தேயும் - அழிந்து கெடும்; சென்மம்உம் மரணம்உம் இன்றி தீரும் - பிறப்பு இறப்புக்கள் இனி நேராமல் தீர்ந்துவிடும்;

ராமநாமோச்சாரணஞ்செய்பவர், இம்மையில் தீச்செயலும் தீவினைவிளைவுமின்றி எல்லாவைசுவரியங்களும் நிரம்பி மிக்கநன்மைகளை யெல்லாம் அடைந்து இனிது வாழ்ந்து, பிறகு பிறப்பு இறப்புக்களில்லாத மோக்ஷத்தைப் பெறுவ ரென்பதாம். பி-ம்:—[1]தேய்ந்து. [2]தீருமே, தீயுமே. [3]செய்யுமே. (13)

*ஓராயிரம் மகம்புரி பயனை யுய்க்குமே
நராதிபர் செல்வமும் புகழு நல்குமே
விராயெனும் பவங்களை வேர றுக்குமே
இராமவென் றொருமொழி யியம்புங் காலையே.

14. வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள [1]பாடையா தொன்றி னாயினும்
திடமுள ரகுகுலத் திராமன் தன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே.

(இ - ள்.) வடகலை - ஸம்ஸ்க்ருதமோ, தென்கலை - தமிழோ, வடுகு - வடுகுபாஷையோ, கன்னடம் - கன்னடபாஷையோ, இடம் உள - இவ்வுலகத்திலுள்ள, பாடை யாது ஒன்றின் ஆயின்உம் - எந்தப் பாஷையிலாயினுஞ்சரி, திடம் உள ரகு குலத்து இராமன் தன் கதை அடைவுடன் கேட்பவர் - வலிமைபொருந்திய இரகுகுலத்திலே அவதரித்த ஸ்ரீராமனது சரித்திரத்தைமுறைப்படிகேட்பவர், அமரர் ஆவர் - (என்றும் மரித்தலில்லாத) நித்தியசூரிகளாய்விடுவார்கள்;

எந்தப்பாஷையிலிருந்தாலுஞ்சரி, இராமசரிதத்தைப் பய பக்தி விசுவாசங்களுடன் கேட்பவர்க்கு மோட்சம் சித்திப்பது திண்ணமென்பதாம். வடுகும் தெலுங்கும் வெவ்வேறு என்பா

ரும், இரண்டும்ஒன்று என்றே கொள்வாரும் உளர். பரதகண்டத்தின் வடதிசையில் ஆதிகாலத்தில் மிகவும்பரவியிருந்ததுபற்றி, ஸம்ஸ்க்ருதபாஷை, 'வடமொழி, வடகலை' என்றும், தென்திசையில் மிகவும் பரவியிருத்தல்பற்றி, தமிழ்மொழி 'தென்மொழி, தென்கலை' என்றும் வழங்கப்படும். பி-ம்:—[1]பாடைகள்யாதொன்று.

* மற்றொரு தவமும் [1]வேண்டா மணிமதி லிலங்கைமூ தூர்ச்
செற்றவன் விசயப்[2]பாடல் [3]தெளிந்ததி லொன்று தன்னைக்
கற்றவர்[4]கேட்போர் [5]நெஞ்சங்கருதுவோ[6]ரிவர்கள் பார்மேல்
[7]உற்றர சாள்வர் [8]பின்னு[9]மும்பரால்[10]வீட்டிற்[11]சேர்வார்.

பி-ம்;—[1]வேண்டேன். [2]பாவில். [3]தெரிந்ததில். [4]கேட்டோர். [5]நெஞ்சிற், உள்ளங். [6]யாவரேனும், இவர்களன்பாம். [7]உற்றுலகாண்டு. [8]பின்னர். [9]உம்பர்வாழ். [10]உலகில். [11]செல்வார்.

15\. வென்றிசே ரிலங்கை யானை வென்றமால் வீர [1]மோத
[2]நின்றரா மாயணத்தி னிகழ்ந்திடு கதைக டம்மில் [தாமும்
[3]ஒன்றினைப் படித்தோர் தாமு முரைத்திடக் கேட்டோர்
நன்றிது வென்றோர் தாமு நரகம தெய்தி டாரே.

(இ - ள்.) வென்றிசேர்-வெற்றி பொருந்தியிருந்த, இலங்கையானை-இலங்கைக்கு அதிபனான இராவணனை, வென்ற - வெற்றி கொண்ட, மால் - திருமாலின், வீரம்-வீரகுணத்தை, ஓத நின்ற-சொல்லும்படி செய்யப்பெற்றுள்ள, ராமாயணத்தின்-இராமாயணமென்ற காவியத்தில், நிகழ்ந்திடு - வந்துவழங்குகின்ற, கதைகள் தம்மில் - கதைகளுக்குள், ஒன்றினை - ஒரு கதையை, படித்தோர் தாம்உம் - (தாமே) படித்தவர்களும், உரைத்திட கேட்டோர் தாம் உம்-பிறர்சொல்லத் தாம் கேட்டவர்களும், இது நன்று என்றோர் தாம்உம் - இது நன்றாயுள்ளதென்று கொண்டாடினவர்களும், நரகம் அதுஎய்திடார்ஏ-நரகத்தையடையவேமாட்டார்கள்; (எ - று.)

இராமாயணத்துள் வழங்குவதான சரித்திரங்களுள் ஏதேனும் ஒன்றைப் படித்தவர்களும், பிறர் சொல்லக்கேட்டவர்களுமேயன்றி, பெரியோர் சொல்லப் பலமுறைகேட்டுள்ளதனால் ராமசரித்திரம் நன்றென்று சொன்னவர்களும் நரகத்தை யடையா ரென்க. பி-ம்:—[1]ஓதும். [2]இன்றிராமாயணத்தை யியல்புட னுலகினிற்போர். [3]ஒன்றதை. இது—அறுசீராசிரியவிருத்தம். *(15)*

16\. இராகவன் கதையி லொரு[1]கவி தன்னி னேகபா தத்தினை [2]யுரைப்போர், பராவரு மலரோ னுலகினி [3]லவனும் பன்முறை வழுத்தவீற் றிருந்து, புராதன மறையு மண்டர்பொற் பதமும்[4]பொன்றுநா ளதனினும் [5]பொன்ரு, அராவணை யமல[6]னுலகெனும் பரம பதத்தினை [7]யணுகுவ ரன்றே.

(இ - ள்.) இராகவன் கதையில் - இராமாயணத்திலுள்ள, ஒரு கவி தன்னின் - ஒரு பாடலினது, ஏக பாதத்தினை - ஓரடியை மாத்திரமும், உரைப்போர் - சொல்பவர்களும்,—(தாம் மரணமடைந்தபின்பு பிரமலோகத்தை யடைந்து), பராவு அரு மலரோன் உலகினில் - புகழ்வதற்கு அரிய [மேன்மை தங்கிய] (அந்தப்)

பிரம்னது லோகத்தில், (தமது மகிமையை), அவன்உம் பல்முறை வழுத்த - அந்தப்பிரமதேவனும் பலமுறை எடுத்துப் புகழ்ந்து சொல்ல, வீற்றிருந்து - (அவ்வுலகத்தில் கற்பம்முடியும்வரை) மிகச் சிறப்போடு தங்கியிருந்து, (பிறகு)—புராதனம் மறைஉம் அண்டர் பொன் பதம்உம் பொன்றும் நாள் அதனின்உம்-மிகப் பழமையான வேதங்களும் தேவர்களின் பொன்னுலகும் அழிகின்ற (கற்பாந்த) காலத்திலும், பொன்ரு - அழியாததான, அரவு அணை அமலன் உலகு எனும் பரமபதத்தினை - அநந்தசயநனுகிய விமலனது உலகமாகிய பரமபதத்தை, அணுகுவர் - சேர்வர்; (எ - று.)

இராமாயணகவியில் ஒருபாதத்தைச் சொல்லுவோரும், இஹ லோக ஐசுவரியங்களை யெல்லாம் அநுபவித்து, இறுதியில் அந்தமிலின்பத்து மோட்சத்தையும் பெறுவ ரென்க; இந்தலீலாவிபூதிக்குள் உத்தமமான இன்பம் பிரமலோகத்துப் பெறும் இன்பமேயாதலால், பரமபதத்தைப் பெறுவதற்குமுன் அதனையும் பெற்றுப் பிறகு பரமபதத்தையும் பெறுவரென்றார். பி-ம்:—[1] விருத்தத்தில். [2] உணர்வோர், கேட்போர். [3] அவனல். [4] பொன்றிலு மவற்றொடும். [5] பொன்றுது. [6] உலகினலாய, உலகினினலாம். [7] அடைகுவர். இது-எழுசீராசிரியவிருத்தம். (16)

17. இறுவ ரப்பி [1]லிராம[2]வென்[3]ரே ரும்பர்
நிறுவ ரென்பது நிச்சய மாதலான்
மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பெறுவ ரென்பது [4]பேசவும் [5]வேண்டுமோ.

(இ - ள்.) 'இறு வரம்பில்-இறக்கின்ற காலத்தில், இராம என்ரோர்-இராமவென்று (அவனது திருநாமத்தை ஒருமுறை) சொன்னவர், (எந்தச் சாதியிற் பிறந்தவராயினும் எத்துணைப் பாவஞ் செய்தவராயினும்), உம்பர் - தேவலோகத்தில், நிறுவர் - நிற்பார்கள்', என்பது-, நிச்சயம்-: ஆதலால்-, மறுஇல் மா கதை கேட்பவர்-குற்றமற்ற இராமாயணமென்ற மகாகதையைக் கேட்பவர்கள், வைகுந்தம் பெறுவர் - வைகுண்டத்தை யடைவார்கள், என்பது - என்பதைப் பற்றி, பேசஉம் வேண்டுமோ—? (எ-று.)

சரியானநிலையிலிருக்கையில் எம்பெருமானை நினைத்தலுஞ் செய்யாத பெரும்பாவிகளும் தாம் இறக்கின்ற தருணத்தில் தற்செயலாகவேனும் ராம என்று அப்பரமனது திருநாமத்தைச் சொன்னால், அம்மாத்திரத்தில் எம்பெருமானருளால் தீவினைகளெல்லாமொழிந்து முத்தியையடைவரென்ருல், அப்பரமனது பரமபாவனமான பெருஞ்சரிதத்தை விவரித்துக்கூறும் ஸ்ரீராமாயணம் முழுவதையும் பக்தியோடு கேட்பவர் பரமபதத்தையடைவரென்பதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? சொல்லாமலே யமையுமென்பது, கருத்து. இச்செய்யுளில், கைமுதிகநியாயம்படக் கூறியிருப்பது - தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணியாம். நிறுவர் = நிறுவுவர்: நிற்பர்: தன்வினைப்பொருளில் வந்தபிறவினை. ரகரத்தை உச்சரித்தமாத்திரத்தில் திறந்த வாய்வழியாகப் பாவம்யாவும் நீங்க, மகரம் உச்சரித்த மாத்திரத்தில் பாவம் புகாதபடி அவ்வழியையடைக்குமென்ப. பி - ம்:—[1] இராமன். [2] என்பார், என்ருர், என்று. [3] ஓதினல். [4] பேசுதல். [5] வேண்டுமே. (17)

18. அன்ன தான மகிலநற் [1]ருனங்கள்
கன்னி தானங் [2]கபிலையின் [1]ருனமே
சொன்ன [3]தானப் பயனெனச் சொல்லுவர்
மன்னி ராம கதைமற வார்க்கரோ.

(இ - ள்.) மன்-நிலைபெற்ற, இராம கதை-இராமசரித்திரத்தை, மறவார்க்கு - மறவாமல் எப்போதும் பாராயணஞ்செய்வார்க்கு,—அன்னதானம் - அன்னதானத்தின்பயனும், நல் அகிலம் தானங்கள்-சிறந்த பூதானங்களின் பயனும், கன்னி தானம்-கன்னிகா தானப் பயனும், கபிலையின் தானம் - கோ தானத்தின் பயனும், (என்று இவ்வாறு), சொன்ன - (நூல்களிற்) கூறியுள்ள, தானம் பயன் - தானங்களின்பயன், (சித்திக்கும்), என - என்று, சொல்லுவர் - (அறிஞர்) சொல்வார்கள்; (எ-று.)—அரோ-ஈற்றசை.

இராமாயணபாராயணஞ் செய்வோர்க்கு எல்லாத் தானப் பயன்களுஞ் சித்திக்குமென்க. அகிலம் - பழி. அகிலநல்தானம் என்ற தொடரை 'கபிலையின்ருனம்' என்பதன் பின்வைத்து-மற்றும்கூறப்படாத சிறந்த எல்லாத்தானங்களும் என்றுமாம். கன்னி = கந்யா: வடசொல். சொன்னதானம் = ஸ்வர்ணதாநமுமாம். கபிலை - பொன்னிறப்பசு: இது, மற்றைப்பசுக்களுக்கும் உபலக்ஷணம்: கீழதும் இதுவும்-கலிவிருத்தம்.பி-ம்:—[1] தானமும். [2] கபிலைநற். [3] தானபலன்.

19. ஆதியரி யோநமந ராயணர் திருக்கதை யறிந்தனு தினம் பரவுவோர்,நீதியனு போகநெறி நின்றுநெடு நாளதி னிறந்துசக தண்ட முழுதுக்கு, ஆதிபர்க ளாயரசு செய்துள நினைத்ததுகி டைத்தருள் பொறுத்து முடிவிற், சோதிவடி வாயழிவில் முத்திபெறு வாரெனவுரைத்தசுருதித்தொகைகளே.

(இ - ள்.) ஆதி - தொடங்கும்போது, அரி ஓ நம - 'ஹரி: ஓம் நம:' என்றுசொல்லி வணங்கி, நராயணர் திருக்கதை - ஸ்ரீமந்நாராயணனது திருவவதாரமூர்த்தியாகிய ஸ்ரீராமபிரானது சிறந்த சரிதத்தை, அறிந்து-உண்மையறிவுகொண்டு, அனுதினம்-நாளதோறும், பரவுவோர்-துதிப்பவர்;—நீதி-முறைமையாக,(இவ்வுலகத்தில்),நெடுநாள்-நெடுங்காலம், அனுபோகம் நெறி நின்று-சுகத்தையனுபவித்தலாகிய வழியிலே நிலைத்துநின்று, (பின்பு),அதின் இறந்து-அதனைக் கடந்து, சகத் அண்டம் முழுதுக்கு ஆதிபர்கள் ஆய்-இந்தப் பிரமாண்டம் முழுதுக்கும் தலைவர்களாயிருந்து, அரசு செய்து-ராஜாங்கங் செலுத்தி, உளம் நினைத்தது கிடைத்தது-(தாம்) மனத்தினால் நினைத்தவெல்லாம் கிடைக்கப்பெற்று (இவ்வாறு இம்மையிற் பெறக்கூடிய ஐச்வரியங்களைப்பரிபூர்ணமாக அநுபவித்தபின்பு), அருள் பொறுத்து - (பகவானுடைய) திருவருளையும்பெற்று (அதனால்), முடிவில்-இறுதியில்,சோதிவடிவு ஆய் அழிவு இல் முத்தி-பேரொளிவடிவாகி என்றும் அழியாது நிற்பதாகிய மோட்சத்தை, பெறுவார்-அடைவார்கள்,என-என்று, (இவ்வாறு), சுருதி தொகைகள்-பெருந்தொகுதியாயுள்ள வேதங்கள், உரைத்த-சொல்லியுள்ளன; (எ-று.)

ஸ்ரீராமாயணத்தைப் பாராயணஞ் செய்வோர்க்கு இகலோக ஐசுவரியத்தோடு பாரலௌகிகமான மோட்சவின்பமும் கிடைக்கு

மென்பது, பல கிளைகளாகவுள்ள வேதங்களிலும் ஏற்பட்டுள்ள பொருளாகுமென்பதாம். இது—எழுசீராசிரியவிருத்தம். (19)

* இத்தலத்தி னிராமாவ தாரமே
பத்தி செய்து பரிவுடன் கேட்பவர்
புத்தி மிக்கவரும் புண்ணியமுந் தரும்
எத்தலத்து மவனடி [1]யெய்துவார். பி-ம்:—[1]எய்துமால்.

20. இனையநற் காதை முற்று மெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க் கரும்பொருள் கொடுத்துக் [கேட்போர்
கனைகடற் புடவி மீதே காவலர்க் கரசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலாம் விண்ணவன் பதத்திற் சேர்வார்.

(இ - ள்.) இனைய நல் காதை முற்றும் - இப்படிப்பட்ட சிறந்த இராமசரித்திரம் முழுவதையும், எழுதினோர் - எழுதினவர்களும், வியந்தோர் - கொண்டாடினவர்களும், கற்றோர் - படித்தவர்களும், அனையது தன்னை சொல்வோர்க்கு அரும் பொருள் கொடுத்து கேட்போர்-அந்த இராமசரித்திரத்தைச் சொல்பவர்க்கு அருமையான பொருளைக் கொடுத்துக் கேட்பவர்களும்,—கனை கடல் புடவிமீது - ஒலிக்கின்ற கடலாற்சூழப்பட்ட இந்தப் பூமியின் மீது, காவலர்க்கு அரசு ஆய் - அரசர்க்கரசராகுஞ் சக்கரவர்த்திகளாகி, வாழ்ந்து - (பெருஞ்சிறப்புடன்) வாழ்ச்சி பெற்று, வினையம் அது அறுத்து - (மோட்சத்தைப் பெறுதற்குத் தடையாகுந்) தீவினையையும் ஒழித்து, மேல் ஆம் விண்ணவன் பதத்தில் - (எல்லாப்பதவியினும்) உயர்ந்ததான திருமாலின் ஸ்தானமாகிய பரமபதத்தில், சேர்வார்—; (எ-று)

இராமாயணசரித்திரத்தை எழுதுதல் முதலிய செய்தோரும், இம்மை மறுமைப்பயன்களை முற்றிலும் பெறுவரென்பதாம். இச்செய்யுள் சிலபிரதிகளில் உத்தரகாண்டத்திறுதியிலும்காணப் படுகிறது. இது—அறுசீராசிரியவிருத்தம். (20)

இராமாயணத்தில் உத்தரகாண்டத்திற்குமுட்படக்காண்டம் படலம் முதலியவற்றைக் குறிக்கும் பாடலொன்று சிலபிரதியிற் காணப்படுகின்றது; அது வருமாறு:—

கரை[1]செறி காண்ட[2]மேழு கதைகளா யிரத்[3]தெண் ணூறு
[4]பரவுறு சமரம் பத்துப் படலநூற் [5]றிருபத் தெட்டே
[6]உரை [7]செயும் விருத்தம் பன்னீ ராயிரத் [8]தொருபத்தாறு
[9]வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் [10]தொண்ணூற்றுறே.

பி-ம்:—[1]பொரு, உரு. [2]ஆறும், எழும். [3]ஐந்நூறும், எண்ணூற்றோடு. [4]பரவுறுமமரீரேழும், பரவமர்பத்துநாலு, பரிவுறுபாக மூன்று, ஒருவரை பத்துநாலு, பரவமர்பாடைபத்து. [5]அறுபத்தெட்டும், இருபத்தெட்டும். [6]விரை. [7]தரு, செறி. [8]ஒருபத்தாறும், ஒருபத்தாறில். [9]வரைசெறி. [10]எண்பத்தேழே. இச்செய்யுளின் பின்மூன்றடிகள் சிலபிரதிகளில் மாறிக்கிடக்கின்றன.

கம்பராமாயணம்

கம்பர் செய்த ராமாயணம் என விரியும். ராமாயணம் என்ற வடசொல் - ராம அயந என்ற இரண்டுமொழி சேர்ந்த தீர்க்கசந்தி: இஃது ஒன்றற்கு இயற்பெயராதலால், வடநூல்விதிப்படி வருமொழியின் நகாரம் ணகாரமாயிற்று. தனது நற்குண நற்செய்கைகளினாலும் திருமேனியழகினாலும் எல்லாரையும்மகிழ்விப்பவன் என்பது, 'ராம' என்பதன்பொருள்; அயநம் - அறிவிப்பது: ஆகவே இராமகதையைத் தெரிவிக்கும் நூல் என்க. அயநம்-இடம், அல்லது விஷயம் எனப்பொருள்கொண்டு, இராமனை விஷயமாகவுடைய நூலென்று கூறுதலும் உண்டு. ராமா அயநம் என்றுபிரித்து, சீதையை அறிவிக்கும் பிரபந்த மென்றும் சிலர் பொருளுரைத்திருக்கின்றனர்; [ராமா-சீதை.] ராமாயணம் என்பது - முதலில்வால்மீகிமுனிவர் செய்த நூலுக்கு இயற்பெயராய்ப் பின்பு அதன்வழிநூலாகிய இத்தமிழ்நூலுக்கும் பெயராகி, அதனினும் வேறுபாடுவிளங்கக் கம்பராமாயண மென்று வழங்குவதாயிற்று. கம்பர் 'இராமாவதாரம்' எனப் பெயரிட்டன ரென்ப.

இந்நூல், பெருங்காப்பியமாம்; பெருங்காப்பிய விலக்கணத்தை, "பெருங்காப்பியநிலைபேசுங்காலை, வாழ்த்துவணக்கம்வருபொருளிவற்றினொன்று, ஏற்புடைத்தாகி முன்வரவியன்று, நாற்பொருள் பயக்குநடைநெறித்தாகித், தன்னிகரில்லாத்தலைவனையுடைத்தாய், மலைகடனாடு வளநகர்பருவம், இருசுடர்த்தோற்ற மென்றினையன புனைந்து, நன்மணம்புணர்தல் பொன்முடிகவித்தல், பூம்பொழினுகர்தல்புனல்விளையாடல், தேம்பிழிமதுக்களிசிறுவரைப் பெறுதல் புலவியிற்புலத்தல்கலவியிற் களித்தலென்று, இன்னன புனைந்த நன்னடைத்தாகி, மந்திரந்தூதுசெலவிகல்வென்றி, சந்தியிற்றொடர்ந்து சருக்கமிலம்பகம், பரிச்சேதமென்னும் பான்மையின் விளங்கி, நெருங்கியசுவையும் பாவமும் விரும்பக், கற்றோர்புனையும்பெற்றியதென்ப" என்பதனா லறிக. தொல்காப்பியனார் "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்தமொழியா னடிநிமிர்ந்தொழுகினும், தோலெனமொழிப தொன்மொழிப்புலவர்" என்னுஞ் சூத்திரத்தால், 'அறம்பொருள் இன்பம்வீடு என்னும் விழுமிய பொருள் பயப்பப் பழையதோர் கதைமேற்கூறின் அதுதோலாம்' என்று கூறினமையால், இத்தொடர்நிலைச்செய்யுள் அங்ஙனம்வந்த தோலாமென வுணர்க.

இராமாயணம் இதிகாசமாம்; மகாபாரதமும் அப்படியே. உபதேசபரம்பரையில்வந்த ஒருவருடைய பழையசரித்திரத்தைப்பிரதானமாக எடுத்துப் பலகிளைக்கதைகளோடு புணர்த்துவிரித்துக் கூறும்நூல் இதிகாசமாம். [புராணமென்பது-உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள் அரசர்கள் மரபு, அவர்கள் சரித்திரங்கள், மநுவந்தரம் என்னும் ஐந்துவிஷயங்களை விரவிக்கூறும் நூலாம்.]

முதனூலாகிய வால்மீகிராமாயணத்தோடு, அதன் வழி நூலாகிய இத்தமிழிராமாயணம் சிற்சிலவிடத்துச் சிறிது சிறிது

வேறுபடுதலும் உண்டு; அது, வழிநூலிலக்கண விதிபற்றிப் பிறநூல் மேற்கோள்கொண்டதாதல்வேண்டும்.

இராமாயணத்தை முதலில் வடமொழியிற் செய்தவர், வால்மீகி மகாமுனிவர். இவர் ஸ்ரீராமபிரான் பூலோகத்திலெழுந் தருளியிருக்கையிலேயே இராமாயணம்முழுவதையுஞ் செய்தருளி, அவர் அசுவமேதயாகஞ்செய்யத் தொடங்கிய சந்தர்ப்பத்தில் அவர் சந்நிதியிலே அவர் குமாரர்களான குசலவர்களைக்கொண்டு அந்நூலை அரங்கேற்றினர். ஆனால், பாலகாண்டம்முதல் உத்தர காண்டத்து அசுவமேதமளவுந்தான் இராமபிரான் சபையிற்கேட்டனர். எதிர்கால வரலாற்றை முனிவர் ஞானக்கண்ணினால் முந்தியறிந்து கூறியதான மற்றைப்பகுதியை, அப்பெருமான் பிரமதேவன் சொன்னபடி ஏகாந்தத்திற் கேட்டனரென்பர்.

தற்சிறப்புப்பாயிரம்.

"தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளும், எய்தவுரைப்பது தற்சிறப்பாகும்" "ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை, நூற்பெயர்யாப்பே நுதலிய பொருளே, கேட்போர்பயனோடா யெண்பொருளும், வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே; காலங்களனே காரணமென்றிம், மூவகையேற்றி மொழிநருமுளரே" என்ப ஆதலால், கவி, தெய்வவணக்கம் முதலியவற்றுட் சிலவற்றை வெளிப்படையாகவும், மற்றவற்றைக் குறிப்பாகவும் கூறுவர். (கீழ்வந்த காப்புமுதலியன, பிறர்செய்தன; இவை கம்பர் செய்தன).

1.—இதுமுதல் மூன்றுகவிகள்—கடவுள்வணக்கம்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலு [1] நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யா [3] ரவர்
தலைவ [3] ரன்னவர்க் கேசர ணுங்களே.

(இ - ள்.) உலகம் யாவைஉம் - எல்லா வுலகங்களையும், தாம் - தானே, உள ஆக்கல் உம் - படைத்தலும், நிலைபெறுத்தல்உம் - காத்தலும், நீக்கல்உம் - அழித்தலும், (ஆகிய மூன்றையும்), நீங்கலா - நீங்காத, அலகு இலா விளையாட்டு - முடிவில்லாத விளையாட்டுக்களாக, உடையார் - உடையவரான, அவர் - அகரத்தின் பொருளாமவரே, தலைவர் - (இவ்வுலகங்கட் கெல்லாம்) தலைவரான கடவுளாவர்; அன்னவர்க்குஏ - அப்படிப்பட்ட கடவுட்கே, நாங்கள் சரண் - நாங்கள் அடைக்கலம்; (எ - று.)

இதனால், கவி, தாம் எடுத்துக்கொண்ட நூல் இனிது முடிதற்காகப் பெரியோர்மரபின்படி முதலில் மங்களாசரணையை விரும்பி, வணக்கமாகிய மங்களத்தைச் செய்கின்றார். முதல் கருவி நிமித்தம் என்ற இவற்றை வேறே வேண்டாதே தானே மூவகைக் காரணமுமாகி, படைப்புக் காப்பு அழிப்பு என்னும் முத்தொழில் கட்கும் முதற்காரணமான கடவுளை யடைவோ மென்றவாறு. சாரீரகமீமாம்சையில் வியாசபகவான் கூறியதை யொட்டி முதல் மூன்றடிகளால் பரம்பொருளி னிலக்கணங் கூறி, "உனக்கேநாமாட்

செய்வோம்'' என்று ஆண்டாளருளிச்செய்ததுபோல உனக்கே சரண் நாங்கள் என்கிறார். உளவாக்கல் - சூட்சும வடிவினதைத் தூலவடிவின தாகச்செய்தல்: இல்லாததையுண்டாக்குவது அன்று. முத்தொழில்களை விளையாட்டு என்றது - இவை அக்கடவுட்குச் சிறிதும் சிரமமில்லாமல் மிகஎளியவாகச் செய்யுமாறு இருத்தலினால். இத்தொழில்கள் நித்தியமாக நிகழ்வன வாத லால், 'அலகிலா' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது; இதற்கு-எண்ணிக்கையி லடங்காத என்றல் சிறப்பன்று. எம்பெருமானாரின் ஸ்ரீபாஷ்யத்து முதலில் மங்களச்லோகத்தின் ''அகில புவநஜந்மஸ்தேமபங்காதிலீலே'' என்ற முதலடி இச்செய்யுளின் முதல் மூன்றடிகளின் பொருளோடு ஒத்துள்ளது. இச்செய்யுள், பிரணவத்தின் பொருள்.

சரண் - இலக்கணையால், சரணை நாடியடையும் அடைக்கலப் பொருளைக் காட்டிற்று. இனி, அன்னவர்க்கே சரண் ஆங்கள் என்று பிரித்து, ஆகுங்கள் என்பது திரிந்ததாக்கொண்டு, அப்படிப்பட்டவரையே சரணமாக [ரட்சகமாக]ப் பற்றுங்கோ ளென்று உலகத்தாரை நோக்கி உபதேசிப்பதாகக்கொள்வாரு முளர். எந்நூற்கும் மங்கலமொழி முதலில் வகுத்துக்கூறவேண்டுமென்பது இலக்கணமாதலால், 'உலகம்' என்று தொடங்கினார். பி - ம்:—[1]நீக்கிலா, நீங்கிலா, நீங்கிடார். [2]எவர். [3]ஆனவர்க்கே. (1)

2. [1]சிற்கு ணத்தர் [2]தெரிவரு [3]நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
[4]முற்கு ணத்தவ னேமுத லோனவன்
நற்கு ணக்கட [5]லாடுத னன்றரோ.

(இ - ள்.) சித்குணத்தர் - அறிவாகிய குணத்தைப்பெற்றவர்களும் [ஞானவான்களும்], தெரிவு அரு - அறிந்துசொல்லமுடியாத, நல் நிலை-சிறந்த (அக்கடவுளினது) தன்மையை, உணர்த்த-(பிறரறியும்படி) சொல்லுவது, எற்கு அரிது - எனக்கு முடியாததாகும்: (ஆயினும்), எண்ணிய மூன்றனுள்-(சாஸ்திரங்கள்) மதித்துக்கூறுகின்ற (சத்துவம் இரசசு தமசு என்ற) மூன்று குணங்களுள், முன் குணத்தவன்ஏ-சிறந்தகுணமாகியசத்துவகுணத்தையுடைய திருமாலே, முதலோன் - (மும்மூர்த்திகளுள்ளும்) முதல் மூர்த்தியாவன்: அவன் - அக்கடவுளுடைய, நல் குணம் கடல் - மங்கள குணங்களாகிய கடலிலே, ஆடுதல் - மூழ்குதல், நன்று-, (எ - று.)

முத்தொழில்களைப் புரியுமாறு சத்துவம் இரசசு தமசு என்னும் மூன்றுகுணங்களையும் முறையேகொண்டு, திருமால் பிரமன் சிவன் என்னும் பெயர்சூடிய பரம்பொருளின் மும்மூர்த்தங்களுள் சத்துவகுணமூர்த்தமாகிய திருமாலின் நிலைமையை அறிந்து சொல்லுதல் பேரறிஞர்க்கும் இயலா தாதலால் அற்பவறிவினனாகிய என்னால் அறிந்து சொல்லுதல் இயலுமோ? இயலாது. ஆயினும், அம்மூர்த்தியின் மங்களகுணங்களை இடைவிடாது அனுபவித்தல், செய்யவேண்டிய செயலாகும்என்க. சிற்குணத்தர்—ஆன்மாவின் சொரூபமாகிய கடவுட்கடிமை [கைங்கர்யம்] அறிவு என்ற இப்பண்பைப் பெற்றவர்க்கு, தெரி(ய) - உணருமாறு, வரு-

(அவர்களின் முயற்சியின்றித் தாமே தம்மருளால்) வருகின்ற, நல்நிலை—, எற்கு-(அடிமை அறிவு என்ற இவ்விரண்டுமில்லாத) எனக்கு எனினுமாம். நற்குணம்-தீமைகலவாதகுணம். கடலாடுதல் நன்று என்னும் உலகத்தாரைநோக்கி, முதலோன்நற்குணக் கடலாடுதல் நன்று என்றார். அரோ-ஈற்றசை. பி-ம்:—[1] சிற்குணத்தின், சிற்குணத்தன். [2] தெரிதரு, திரிதரு, தெரிவரும். [3] முன்நிலே. [4] முற்குணத்தவரே முதலோரவர். [5] ஆடுதும், ஆடுகை. (2)

3. ஆதி யந்த [1] மரியென யாவையும்
ஓதி ஞ [2] ரல கில்லன [3] வுள்ளன
வேத [4] மென்பன மெய்ந்நெறி [5] நன்மையன்
பாத மல்லது [6] பற்றிலர் [7] பற்றிலார்.

(இ - ள்.) அலகு இல்லன - அளவில்லாதனவும், உள்ளன - என்றும் அழியாது நிற்பனவுமான, வேதம் என்பன யாவைஉம் - வேதமென்று சொல்லப்பட்ட எல்லாவற்றையும், (தாம் ஓதுகையில்), ஆதி அந்தம் - (ஓதத்) தொடங்கும்போதும் (ஓதி) முடிக்கும்போதும், அரி என - 'ஹரி: ஓம்' என்றுசொல்லி, ஓதினர்-ஓதி (அவ்வேதத்தின்பொருளை)யறிந்தவரும், பற்று இலர் - வைராக்கியமுள்ளவர்களுமான பெரியோர்கள்,—மெய் நெறி நன்மையன் - உண்மைப் பொருளாய் (உபாயமாகப் பற்றினார்க்கு) நன்மை தருபவனாகிய அக்கடவுளினது, பாதம் அல்லது - திருவடியையேயன்றி, பற்றுஇலார்-(வேறொன்றிலும்) ஆசைகொண்டவராகார்; (எ - று.) —அவர்போலவே, பற்றுக்களை ஒழித்து அப்பரமனது திருவடிகளைப்பற்றுவோமாக என்பது இசையெச்சம்.

வேதத்தை ஓதத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் ஒவ்வொரு வேளையிலும் 'ஹரி: ஓம்' என்றுசொல்லவேண்டுமென்பது நூற்கொள்கை. வேதம் அலகற்றனவாயிருக்க 'யாவையுமோதினர்' என்றது, இவ்வுலகத்தில் வழங்குகின்ற வேதமுழுவதையும் பயின்றுரென்ற கருத்தினால். இனி, அறியவேண்டுவன எல்லாம் ஓதியுணர்ந்தவர்,உலகிற்கு ஆதியாவானும் அந்தமாவானும் அரியேயென்பதற்கு, அலகில்லனவான வேதமென்பன (சாட்சியாக) வுள்ளன என்றுமாம். அலகில்லன (அலகு) உள்ளன-அளவிடமுடியாதபடி பலசாகைகளையுடையனவும், இருக்குயஜுஸ்ஸாமம் அதர்வணம் என்று நான்குவகையானவுமான வேதங்கள் எனினுமாம். எம்பெருமானை அடைவதற்கு, கர்மம் ஞானம் பக்தி ப்ரபத்தி முதலியவாகப் பல உபாயங்களிருப்பினும், அவையாவும் எம்பெருமானது திருவருளில்லாவிடின் பயன் தாராவாதலாலும், "மாம்ஏகம் சரணம் வ்ரஜ [கர்மம் முதலியவற்றைப் பற்றாமல் என்னொருவனையே உபாயமாகப்பற்று]" என்று பகவான் தானே அருளிச்செய்திருத்தலாலும், கடவுளை 'மெய்ந்நெறி' என்றார். பி-ம்:— [1] அரியன, அறிவன, அரீயென. [2] அலதில்லன. [3] உள்ளென. [4] நான்கினும். [5] நோன்மையன். [6] பற்றலர். [7] பற்றரோ. (3)

4.—இதுமுதல் – ஆறுகவிகள் - அவையடக்கம்.

அவையடக்கமென்பது, அவையத்தாரை யடங்குமாற்றால் இனிய சொல்லிப் புகழ்வது; அவைக்கு அடங்குவதுமாம்.

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்[1] மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

(இ - ள்.) ஒரு பூசை - ஒரு பூனையானது, ஓசை பெற்று- ஒலியைப்பெற்று, உயர் - (அலைகள்) ஓங்கியுள்ள, பாற்கடல்-திருப் பாற்கடலை, (உண்பதில்விருப்பால் அச்சமின்றி),உற்று-அடைந்து, முற்றஉம் - (அக்கடலிலுள்ள) பால் முழுவதையும், நக்குபு-நக்கிப் பருகுவதற்கு, புக்குஎன-புகுந்தாற்போல, காசு இல் கொற்றத்து இராமன் - குற்றமற்ற வெற்றியையுடைய இராமபிரானது, இ கதை - இந்தக்கதையை [ராமாயணத்தை], ஆசைபற்றி-ஆசையி ளுல், அறையல் உற்றேன்-சொல்லத் தொடங்கினேன்; (எ - று)

பாற்கடல் முழுவதையும் நக்கிப் பருகுதல் ஒருபூனைக்கு முடியாதவாறுபோல இவ்விராமாயணம் முழுவதையும் பாடுதல் எனக்கு முடியாத செயல்: ஆயினும், 'பிறர் என்னைப்பார்த்து ஏள னம் செய்யப்போகிறார்களே!' என்பதையும் கருதாது, பரிகாசத்துக் கும் பரிதாபத்துக்குமே பாத்திரமாகுமாறு, ஆசை வெட்கமறியா தென்பதற் கேற்ப, இதனைப் பாடத்துணிந்திட்டே னென்றவாறு. கம்பர் இராமாயணத்தைப் பாற்கடலாகவும் தம்மை அதனைப் பருக நிற்கும்பூனையாகவும் அமைத்தமை, பாராட்டுதற்குரியது. நக்குபு -செய்பு என்னும் வினையெச்சம், செயவெனெச்சப் பொருளது. ஓசை = ஓஜஸ்: ஒளி எனினுமாம்.பி-ம்:-[1] மற்றவ் வேசில், தகுகாசில்.

5. நொய்தி ஞெய்யசொ ணூற்கலுற் றேனெனை
[1]வைத வைவின் மராமர மேழ்[2] தொளை
எய்த [3]வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.

(இ - ள்.) வைத வைவின் - (பெரியோர்கள்) சபித்த சாப வார்த்தைபோல, (தப்பாமல்), மராமரம் ஏழ்-ஏழுமராமரங்களும், தொளை எய்த -தொளையாகும்படி, எய்தவற்கு - (அம்பைத்) தொடுத்துவிட்ட இராமன்பொருட்டு, எய்திய - (தெய்விகமாகத்) தோன்றிய, மா கதை-சிறந்த சரித்திரத்தை, செய்த-(இராமாயண காவியமாக வடமொழியிற்) செய்துமுடித்த, செய் தவன் - செய்து முடிந்த தவத்தையுடைய வால்மீகிமுனிவனது, சொல் - வாக்கு, நின்ற - (வழங்கி) நிலைபெற்றுள்ள, தேயத்து - தேசத்தில்தானே, —நொய்தின் நொய்ய-எளியவற்றினும் எளியவான [பொருட்பொ லிவு இல்லாத], சொல்-சொற்களைக்கொண்டு, நூற்கல் உற்றேன் - நூல் செய்யத் தொடங்கினேன்; எனை - (இது) என்னபேதைமை!

தவச்சித்தியடைந்த வான்மீகிமுனிவன் தெய்வாநுக்கிரகம் பெற்று இராமன் விஷயமாக மிக்க பொருட்பொலிவுள்ள ஸ்ரீராமா யணகாவியத்தைச் செய்து பரவச்செய்துள்ளதனுல், அவ்வி ராமாயணம் வழங்கும் இடத்தில், சிறிதும் பொருட்சிறப்பில்லாத சொற்களைக்கொண்டு நான் கவிபாடுதல் என்னபேதைமை! என்று தமது செயலைக் கவி தாமே மிகவும் இழித்துக்கூறுகின்றனர்.

"வைவனமுனிவர்சொல் லணையவாளிகள்" என்பர், அதிகாயன் வதைப்படலத்தும். எனை வைத-என்னை வைதுகொண்ட எனினு மாம்.

மராமரம்ஏழ்தொளை எய்த எய்தவற்கு வைத வைவின் எய்திய என்று இயைத்து-வைத வசவினாலே [வசவே வியாஜமாக] இராம பிரான்பொருட்டுத் தோன்றிய என்று உரைத்தலும் சிறக்கும்; தம் மிடத்துக்குவந்த நாரதமுனிவன் இராமபிரானது சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறக் கேட்டறிந்த வான்மீகி, அந்நாரத முனிவன் சென்றதும் மாத்தியான்னிகத்தின்பொருட்டுக் கங்கையைச் சார்ந்த தமசைநதியைச் சேர்கையில், அங்கே அப்போது ஆணும் பெண்ணு மாகிக் கூடியிருந்த கிரௌஞ்சப்பறவை யிரண்டனுள் ஆண்பறவை யைக் கொன்று பேடையைக் கதறச் செய்த வேடனைநோக்கி "மாநி ஷாத! ப்ரதிஷ்டாந் த்வம், அகம: சாச்வதீஸ் ஸமா:-யத் க்ரௌஞ்சமி துநா தேகம், அவதீ: காமமோஹிதம் [வேடனே! நீ க்ரௌஞ்சமிது னத்தினுள் காமமயக்கங்கொண்ட ஆண்பறவையைக்கொன்றதனால் என்றும் நற்கதியையடைய மாட்டாய்]" என்று கூறியவாக்கியமே சுலோகமாய்நிற்க,பிறகு முனிவன் அதனையே சிந்தித்துக்கொண்டிரு க்கையில், பிரமதேவன் தோன்றி, 'எம்முடைய கட்டளையினால் சரசு வதி உமதுநாவிலிருக்கவேதான் இந்தச் சுலோகம் வந்தது:இதையே முக்கியமாகக்கொண்டு இராமாயணத்தைச்செய்யும்' என்று அநுக் கிரகித்துக் கட்டளையிட்டுச்செல்ல, அந்த வால்மீகிமுனிவன் இராமா யணத்தைச் சுலோகங்களினாற் பாடி முடித்தா னென்பது வரலாறு. வேடனை வைதலைத் தெரிவிக்கும் "மாநிஷாத!" என்று தொடங்கும் இந்தச் சுலோகம் "இலக்குமியை மார்பிற்கொண்டிருப்பவனே! க்ரௌஞ்சமிதுனம்போன்ற ராவணன் மண்டோதரி என்ற இருவருக் குள் காமமோஹிதனை ஒருத்தனை [இராவணனை]க் கொன்றாயாத லால், நீ பல்லாண்டுகளில் பெரும்புகழ் பெறுவாய்" என்று இராம பிரானை வாழ்த்தியதாக ஒரு பொருளையும் கொண்டதாதல் காண்க. சொல்-காவியத்துக்குக் கருவியாகுபெயர். பி - ம்:—[1] வைதவைக. [2] புன்மை. [3] எய்தவர்க்கு. இதுமுதல் 10-ஆம் பாடல்வரையில் பாடல் முறை, ஒருபடியாக இல்லை. (5)

6. வைய மென்னை யிகழவு மாசெனக்கு
எய்த வும்மி [1] தியம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் [2] புலமையி னேன் [3] புகல்
தெய்வ மாக் [4] கவி மாட்சி தெரிக்கவே.

(இ - ள்.) வையம் - கற்றறிந்த பெரியோர், என்னை இகழஉம்- (இந்த அற்பபுத்தியான் இராமாயணத்தைப் பாடத்தொடங்கி னனே! என்று) என்னை ஏளனஞ் செய்யவும், மாசு எனக்கு எய்த உம் - (எனக்குக்) குற்றம் நேரவும், இது - இந்த ராமசரித்திரத்தை, இயம்புவது - (யான்) சொல்வதற்குக்காரணம், யாது எனில்—, பொய் இல் கேள்வி புலமையினேன்-குற்றமற்ற நூற்கேள்விகளும் பாண்டித்தியமு முடையவன், புகல் - (இராமபிரான் விடயமாகச்) சொல்லிய, தெய்வம் மா கவி-தெய்வத்தன்மையுள்ள சிறந்த பாடல் களின், மாட்சி-பெருமையை, தெரிக்கவே—; (எ - று.)

பிறர் ஏளனஞ்செய்யவும், எனக்குக்குற்றம் உண்டாகவும் நான் இந்த இராமாயணம்பாடியது, நிழலினருமை வெயிலிலிருந்தோர்க்கே நன்கு தெரிதல்போலக் கல்விகேள்விகளில் நிறைந்து தெய்வாநுக்கிரகம்பெற்ற பெரியோரது பாடலின் மேன்மையைத் தெரியும்படி செய்தற்பொருட்டே யென்பதாம். சொல்லானந்தம் பொருளானந்தம் என்ற குற்றம்படக் காவியம் இயற்றின், செய்தவற்கே தீங்குபயக்கு மென்பது, நூற்கொள்கை. பொய்யில்கேள்விப் புலமையினேன் என்ற தொடர், வான்மீகியைக் குறிக்குமென்க. [2] புலமையினோர் என்ற பாடம், இராமபிரான்விஷயமாகக் காவியஞ்செய்துள்ள பெரும்புலவரெல்லாரையுங் காட்டும். எய்தவும் மிது - விரித்தல். பி - ம்:—[1] இயம்பியது. [3] புகழ். [4] கதை. (6)

7\. துறை[1]ய டுத்த [2]விருத்தத் தொகைக்[3] கவிக்கு
உறைய டுத்த செவிகளுக் [4]கோதில்யாழ்
நறை[5]ய டுத்த [6]வசுண நன் மாச்செவிப்
பறை[7]ப டுத்தது போலுமென் பாவரோ.

(இ - ள்.) ஓதில் - ஆராய்ந்துசொல்லுமிடத்து,— துறை அடுத்த-பல விகற்பங்களைக்கொண்ட, விருத்தம் தொகை - பாக்களின் கூட்டங்களினாலியன்ற, கவிக்கு - பாடல்களுக்கு, " உறை அடுத்த-உறைவிடமாகப்பொருந்திய, செவிகளுக்கு - (அறிஞருடைய) காதுகளுக்கு, என் பா - என்னுடைய பாடலானது,—யாழ் நறை அடுத்த அசுணம் நல் மா செவி - யாழிசையாகிய தேனைப் பருகுகின்ற அசுணமென்ற சிறந்த விலங்கின் செவிக்கு,பறை படுத்தது-பறையொலிகேட்டதை, போலும்-; (எ-று.)—அரோ-ஈற்றசை.

பேரறிஞரின் பலதிறப்பட்ட இனிய கவிகளைக் கேட்டு இன்புறும் பெரியோருடைய செவிகளில் என்னுடைய புன்கவி விழுந்தால், அசுணமாவின் செவியில் பறையொலி வீழ்வதை யொத்து வெறுப்பையும் வருத்தத்தையும் உண்டாக்குமென்பதாம். துறை -அகப்பொருள் புறப்பொருள் துறைகள் எனினுமாம். அசுணம் - இசையறிவிலங்கு; இது இனிய யாழோசைகேட்டு இன்புறுதலும் பறையொலிகேட்டு உயிர்நீப்பதுமான தன்மையுள்ளதென்பதை, "இன்னளிக் குரல்கேட்ட அசுணமா, வன்னளாய்,'' "பறைபட வாழாவசுணமா" என்பவற்றா லறிக. மலைவிடரளையுறைவதாகித் தீங்கிழைக்கும் வலிபெற்று அதனால் அஞ்சத்தக்கதாகிய அசுணத்தை 'நன்மா' என்றது, இசைகேட்டு இனபுறுந்தன்மைபற்றி. வ்ருத்தம் என்ற வடசொல், பாக்கட்குப் பொதுப்பெயராக வழங்கும். துறை- நூல் அல்லது கூறும்பொருளொன்றுமாம். நறை-இன்னிசைக்கு இலக்கணையுமாம். பி - ம்:—[1] எடுத்த. [2] விருத்தந். [3] கதைக்கு. [4] ஓசை. [5] எடுத்த, மடுத்த [6] அசுணன்றன். [7] அடுத்தது, மடுத்தது, மடித்தது, அடித்தது. (7)

8\. முத்த மிழ்த்துறை யின்முறை [1]போகிய
உத்த மக்[2]கவி கட்கொன் றுணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் [3]பெறுபவோ.

(இ - ள்.) முத்தமிழ் துறையில் - (இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படும்) மூவகைத் தமிழ்நூல்களிலும், முறை

போகிய-கிரமமாகக் கற்று நன்கு தேர்ந்த, உத்தமர் கவிகட்கு - சிறந்தவரான வித்துவான்கட்கு, ஒன்று உணர்த்துவென்-ஒன்று சொல்லுவேன்; (அது யாதெனில்), பித்தர் சொன்னஉம் - பைத்தியம்பிடித்தவர் சொன்னவைகளும், பேதையர்சொன்னஉம் - மூடர் சொன்னவைகளும், பத்தர் சொன்னஉம் - பக்தியுடையவர் சொன்னவைகளும், பன்ன பெறுபஓ - ஆராய்தற்கு உரியனவோ?

பித்தர் மனத்தெளிவில்லாதவ ராதலாலும், பேதையர் பகுத்தறிவில்லாதவ ராதலாலும், பக்தர் பரவசராக இருப்பவராதலாலும் அவர்கள் சொல்லியவற்றில் குற்றநற்றங்களையாராய்தல் மணற்சோற்றில் கல்லாராய்தலோ டொக்குமாதலால், இராமகதையைக் கூறவேணு மென்ற பித்தும் இயற்கையான பேதைமையும் அவ்விராமபிரான்திறத்துப் பக்தியும் கொண்டுள்ள என் சொல்லிலும் குணதோடங்களையாராய்தல் தகுதியன் றென்க. பின்னிரண்டடிகள் - பிறிதுமொழிதலணி. பி - ம்:—[1]நோக்கிய, ஓகிய, போக்கிய. [2]கவிஞர்க்கு. [3]படுபவோ, பெறுவரோ, படுமதோ. (8)

9. அறையு மாடரங் கும் [1]படப் பிள்ளைகள்
தறையிற் [2]கீறிடில் தச்சருங் காய்வரோ
[3]இறையு [4]ஞானமி லாதவென் புன்கவி
[5]முறையி னூ[6]லுணர்ந் தாரு முனிவரோ.

(இ - ள்.) அறைஉம் - அறைகளும், ஆடு அரங்குஉம் - ஆடுதற்கு உரிய நர்த்தன சாலைகளும், (முதலியவற்றின் உருவம்), பட - தோன்ற, பிள்ளைகள்—, தறையில் - நிலத்திலே, கீறிடில் - கீற்றால் வரைந்தால், (அவற்றைக் கண்டு), தச்சர்உம்-(சிற்ப நூலில் வல்லவரான) சிற்பிகளும், காய்வர்ஓ-(இவை சிற்ப சாஸ்திரத்துக்குப் பொருத்தமாக இல்லை என்று) கோபித்துக்கொள்வார்களோ? [கோபித்துக்கொள்ளார்]: (அதுபோலவே), இறைஉம் ஞானம் இலாத-சொற்பமேனும் நூலுணர்ச்சியில்லாத, என் புன்கவி-என்னுடைய இழிவான பாடல்களைக்கண்டு, முறையில் நூல்உணர்ந்தார்உம் - முறைபிறழாது நூல்களை யோதியுணர்ந்தபெரியோர்களும், முனிவர்ஓ-சினங்கொள்வரோ? [கொள்ளார்]; (எ-று.)

சிறுபிள்ளைகள் அறை முதலியவற்றைக்கீறக்கண்டு சிற்பிகள் இவை நூல்முறைக்கு ஒத்தனவல்ல என்று சினவாது சிறுபிள்ளைகள் கீறியவையென்று உபேட்சித்திருப்பதுபோல, என்னுடைய கவிகளைக்காணும் பெரியோரும் உபேட்சையாக இருப்பரேயன்றிக் காவியவிலக்கணத்திற்கு ஏற்ப அமையவில்லை யென்று சினங்கொள்ளா ரென்பதாம். எடுத்துக்காட்டுவமையணி. பி-ம்:—[1]மடப். [2]கீறிட. [3]பொறையில். [4]கேள்வியிலாத, நூலுணராத, நூலறியாத. [5]முறைமை. [6]அறிவாரும், அறிந்தாரும். (9)

* எறிகட லுலகந் தன்னு ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லாம்
முறுவலுக் குரிய தாக மொழிந்தனன் மொழிந்த வென்சொற்
சிறுமையும் சிலையி ராமன் கதைவழிச் செறித றன்னால்
அறிவுடை மாந்தர்க் கெல்லா மமிழ்தமொத் திருக்கு மன்றே.

10.—இதுவும், அடுத்த கவியும் - நூல்வரலாறு.

[1]தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ [2]ரானவர் [3]தம்முளு [4]முந்திய
[5]நாவி னுரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னுலிது ணர்த்திய பண்பரோ.

(இ - ள்.) நான்—, தமிழ் பாவினுல் - தமிழ்ப்பாடலினுல், இது உணர்த்திய - இவ்விராமாயணத்தைச்செய்த, பண்பு - தன்மை, —தேவபாடையின்-வடமொழியிலே, இ கதை செய்தவர் - இந்த இராமாயணத்தை அருளிச்செய்தவர்கள், மூவரானவர் தம்முள் உம் - மூன்றுபேர்களிலும், முந்திய நாவினுன் - முதன்மையான நாவல்லமையையுடையரான வால்மீகிமுனிவன், உரையின்படி - உரைத்துள்ள வகையாகவேயாம்; (எ - று.)—இது - நூல்வந்தவழி.

வடமொழியில் இராமாயணஞ்செய்தவர் மூவருள் வான்மீகி செய்தபடியே யான் இந்நூல் செய்தேனென்றவாறு. பிரமதேவன் ஞானக்கண்ணை இவர்க்கு அளித்ததனுலும், நாமகள் நாவிலிருந்து முதன்முதல் சுலோகத்தைச் சொல்வித்ததனுலும், வான்மீகி - மூவரானவர்தம்முளும் முந்திய நாவினுராவர். ராமகதை 'செய்த மூவர் - வான்மீகி வசிட்டர் போதாயனர். வசிட்டர்க்குப்பதிலாக வியாசர் என்றுகூறி, வியாசர்செய்தது அத்யாத்மராமாயணம் என்ப. மூவரானவர் தம்முளும் முந்தியநாவினுர்-ஆழ்வார்களென் பாருமுளர். பி-ம்:—[1]தேவர். [2]ஆமவர், அன்னவர். [3]தம்முளம். [4]முந்தியல். [5]நாவினுல், நாவினுள், நாவினுர். (10)

11. நடையி னின்றுயர் நாயகன் [1]ருேற்றத்தி
னிடைநி கழ்ந்தவி ராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய [2]தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் [3]றந்ததே.

(இ - ள்.) நடையில் நின்று - நல்லொழுக்கத்தில் நிலைபெற்றிருந்து [நல்லொழுக்கத்தைத் தாபித்து], உயர்-மேன்மைபெற்ற, நாயகன்-கடவுளாகிய திருமாலின், தோற்றத்தினிடை-அவதாரங்களுள், நிகழ்ந்த - (ஒன்ருக) நிகழ்ந்த, இராமாவதாரம் - இராமாவதாரத்தைக்குறித்த, பேர்-புகழ்பெற்ற, தொடை நிரம்பிய-செய்யுள் நிரம்பப்பெற்ற, தோம் அறு மா கதை - குற்றமற்ற சிறந்த கதை, சடையன் வெண்ணெய்நல்லூர்வயின் - சடையப்பவள்ளலின் திருவெண்ணெய்நல்லூரில், தந்தது - செய்யப்பட்டது; (எ - று.)— இது—நூல் செய்த இடத்தைக் குறிக்கும்.

இராமாவதாரப்பேர்-இராமாவதாரமென்று பேர்பெற்ற, நாயகன்தோற்றத்தி னிடை நிகழ்ந்த கதையென்றுமாம். பி-ம்:— [1]தோற்றத்தவ். [2]தொன்மரு, தொல்லைநன். [3]தந்தவே. (11)

12.—நூற்பயன்.

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
[1]வீடியல் [2]வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் [3]டழிய வாகை
சூடிய சிலையி ராமன் ருேள்வலி கூறு வோர்க்கே.

(இ - ள்.) நீடிய அரக்கர் சேனை - அழிவில்லாத இராட்சச சேனை, நீறு பட்டு அழிய - சாம்பராய்நசித்துப்போக, வாகை சூடிய- வெற்றிமாலையை யணிந்த, சிலை - வில்லையேந்திய, இராமன் - இராம பிரானது, தோள் வலி - புயவலிமையை, கூறுவோர்க்கு - பாரா ட்டியெடுத்துச் சொல்பவர்கட்கு,—நாடிய - (அவர்கள்) வேண்டிய, பொருள் - (சகலமான) பொருள்களும், கைகூடும் - கைவசமாகும்; ஞானம்உம் - மனத்தெளிவும், புகழ்உம் - கீர்த்தியும், உண்டாம்—; (அவர்கட்கு), வீடுஇயல் - மோட்சத்தை யடைவதற்கு ஏற்ற, வழி யது - வழியை, ஆக்கும் - (புருஷகாரஞ் செய்து) உண்டாக்குகின்ற, வேரி அம் கமலை - நறுமணமுள்ள அழகிய தாமரையில் வாழும் இலக்குமியும், நோக்கும் - அருட்பார்வை புரிவாள்; (எ - று.)

இராமபிரானது சரித்திரத்தைப் பாராட்டி யுரைப்போர்க்கு, பொருள் முதலிய இம்மைப்பயனோடு இலக்குமியின் அருட்பார்வை யாலே மறுமைப்பயனாகிய மோட்சமும் கைகூடுமென்க. 'நாடிய பொருள்' என்றதனால் - பொருளின்பங்களும், 'ஞானமும் புகழும்' என்றதனால்-அறமும், 'வீடியல் வழியதாக்கும்' என்றதனால்-மோட் சமும் ஆகிய நால்வகைப் பேறும் கைகூடுமென்று பயன் கூறிய வாறு. சேதநனுடைய் குற்றத்தைக்கண்டு எம்பெருமான் சீற்றங் கொண்டு நின்றநிலையில் அச்சேதனனது குற்றத்தைக் குணமாக ஏற்பித்தல் முதலிய வகைகளால் எம்பெருமானுடைய திருவுள்ள த்தை இரங்கப்பண்ணுகின்ற தன்மையளாதலால், பிராட்டியை 'வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை' என்றார்.

இனி, நாடிய பொருள் என்பது - கல்விப்பொருளும் செல்வப் பொருளும்; அவைகள் கைகூடியதால், முறையே, ஞானமும் புகழும் உண்டாம். அன்றியும், வேரியங்கமலை நோக்கு வீடியல் வழியது ஆக்குமென உரைகூறினுமாம். வீடியல் நெறி-பக்தி. அடியவன் பாராட்டி யடைதற்கு உரியன எம்பெருமானது திருவடிகளே யாயி னும் தாடகைவதம்தொடங்கி இராவணன்வதை யளவும் ஸ்ரீராம பிரானது தோள்வலியே இவ்விராமாயணகாப்பியம் முழுவதிலும் கூறப்படுவதாலும், அத்தோள்வலி நம்முடைய இடையூறுகளை யெல்லாம் போக்குமென்ற கருத்தாலும், 'தோள்வலிகூறுவோர்க்குப் பொருள் முதலியன கைகூடும்' என்றார். அரக்கரை அழித்தற்குத் திருமாலின் சிலையே யமையுமென்பார், 'நீறுபட்டழிய வாகை சூடிய சிலை' என்றார். "அப்பன் நீறுபட இலங்கை செற்ற நேரா" என்ற அருளிச்செயலுக்கு ஏற்ப, 'நீறுபட்டழிய' என்றது. வாகையென் பது - பகைமேற்சென்று வென்றவர் அணியும் மாலை; ஆதலால், வாகைசூடிய என்பதற்கு - வெற்றிமாலையைப் புனைந்த எனப்பட் டது. நீடிய - மிக்க எனினுமாம். இச்செய்யுளை இங்குப்படியாமல் கீழே காப்பில் நூற்பயன்கூறிய இடத்துப் படிப்பாரும் உளர்.பி-ம்:—

[1] வீடுயர். [2] வழியும். [3] ஒழிய. (12)

தற்சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

———

முதலாவது

பால காண்டம்.

இராமாயணம், அந்தந்தப் பகுதிச் சரித்திரத்தின் இன்றியமையாப் பொருளைக் குறிக்குஞ் சொற்களால், பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் எனப் பெயர் பெற்ற ஏழுகாண்டங்களையுடையது. பாலகாண்டம் என்ற வடமொழித் தொடர்க்கு-(சரிதத்தலைவனான இராமபிரானுடைய) இளம்பிராயத்தில் நடந்த சரித்திரத்தை யுணர்த்தும் பகுதி என்பது பொருள். பாலனது சம்பந்தமான காண்டம் என விரிந்து, ஆறும் வேற்றுமைத் தொகையாம். பாலன் - பதினாறுபிராயத்துக்கு உட்பட்ட இளம்பருவத்தினன். காண்டம்-கூட்டம்; இப்பொதுப்பெயர்-இங்கு, செய்யுட்களின் கூட்டமென்று சிறப்பாகக் கொள்ளப்பட்டு, ஒரு பெரும்பிரிவுக்குப் பெயராக வழங்கியது.

இக்காண்டம், 22-படலங்களை யுடையது. அவற்றுள்,

1.—ஆவது ஆற்றுப்படலம்

ஆற்றைப்பற்றியபடலம் எனவிரியும். காண்டம் என்றதற்குப் போலவே படலம் என்ற வடசொல்லுக்கும் கூட்டமென்றே பொருளாயினும், இது - சங்கேதத்தால், இந்நூலுள் ஒரு பெரிய வகுப்பினுட்பட்ட சிறிய பகுதியைக் குறிக்கும்.

1.—கவிக்கூற்று.

ஆச லம்புரி யைம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச லம்[1] புனை யாற்றணி கூறுவாம்.

(இ - ள்.) ஆசு அலம் புரி - மிகவும் குற்றத்தைச் செய்கின்ற, ஐம்பொறிவாளிஉம் - (ஆடவர்களுடைய) பஞ்சேந்திரியங்களாகும் பாணங்களும், காசு அலம்பு முலையவர் கண் எனும் - இரத்தின வாரங்கள் (ஒன்றோடொன்று தாக்குண்டு) ஒலித்தற்கு இடனான தனங்களை யுடையரான மகளிரின்கண்ணென்கிற, பூசல் அம்புஉம் -போர்த்தொழிலமைந்த அம்பும், நெறியின் புறம்செலா-சன்மார்க்கத்திற்குப் புறம்பே [துன்மார்க்கத்திற்] செல்லாத, கோசலம் - கோசலநாட்டை, புனை - அலங்கரிக்கின்ற, ஆறு - சரயூநதியின், அணி-வர்ணனையை, கூறுவாம்—; (எ-று.)

நாட்டின்வளத்துக்கு இன்றியமையாதது மிக்கபுனலே யாதலாலும், அப்புனலைக் குறைவறத்தரக்கூடியது யாறே யாதலாலும் நாட்டின் சிறப்பைக் கூறுதற்குமுன்னர், கவி, யாற்றின் சிறப்பைக் கூறுகின்றார். கந்தபுராணத்தும் இங்கனமே கூறியுள்ளது.

தமக்குத் தோன்றிய இடங்களிலெல்லாஞ்சென்று தீவினையைவிளைத்துக்கொள்ளுந் தன்மையவாதலால், 'ஆசலம்புரி ஐம்பொறி' என்றார். குறித்த இலக்கிற் செல்லுந் தன்மையவாதலால், ஐம்பொறி, வாளியாகஉருவகிக்கப்பட்டன. மேல், 'முலைய

வர்கண்ணெனும் பூசலம்பும்' என வருதலால், ஐம்பொறி ஆடவருடையன என்பது பெறப்படும். 'ஆடவரின் ஐம்பொறிகள் நெறியின்புறஞ் செலாத கோசலம்' என்றது - தன்னிடத்து வாழும் ஆடவரும்மகளிரும் அக்கினிசாட்சியாக மணந்த தத்தமதுமனைவி கணவன்மாரிடத்தே தாம் அன்பு செலுத்தி இன்பம் அனுபவிப்பதன்றி, பிறர் மனைநயத்தல் பிற ஆடவரைச்சேர்த லென்ற தீச்செயலிற் செல்லாதிருக்குமாறு செய்யுந்தன்மையது, அந்நாடு என்றவாறு. நிலத்தின் தன்மை நல்லொழுக்கத்திற்கும் தீயொழுக்கத்திற்கும் காரணமா மென்ற நூற்கொள்கை, இங்கு அறியத்தக்கது. கோசலம்-பிரமனை மகிழ்விப்பதென்று அவயவப் பொருள். அலம்-மிகுதி. இனி, ஆசு - குற்றத்தில், அலம்புரி-சுழல்விக்கின்ற என்றும், ஆசலம் என்று எடுத்து, ''அந்தக ராசலம்வந்தால்'' என்ற இடத்துப்போல மிக்க சஞ்சலமென்றும் ஆம். நெறியின் புறம் - நன்னெறிக்குப் புறமாயிருப்பது: ''அறன்கடை'' என்றது போல. பி - ம்:—[1]புனையாறது, புனலாற்றணி, புனலுடைது, புனலுட்டணி. இது நாட்டுப் படலத்தின் முதற்செய்யுளாகச் சிலபிரதிகளில். (13)

2.—மேகம் சென்று கடலிற்படிந்து மீளுதல்.

நீற ணிந்த கடவு [1]ணிறத்தவான்
ஆற ணிந்துசென் றூர்கலி மேய்ந்தகிற்
[2]சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் [3]மீண்டதே.

(இ - ள்.) நீறு அணிந்த கடவுள் நிறத்த - விபூதியைத் தரித்துள்ள கடவுளாகிய சிவபிரானது வெண்ணிறத்தையுடைய, வான் - மேகமானது,—ஆறு அணிந்து சென்று-(தான் செல்லும்) வானவழியை யணிந்து போய், ஆர்கலி மேய்ந்து-கடலின்நீரைப்பருகி, அகில் சேறு அணிந்த முலை திரு மங்கை - அகிற்குழம்பையணிந்த தனங்களையுடைய திருமகளை,- தன் வீறு அணிந்தவன்-தனக்கு வேறொருவர்க்கில்லாத சிறப்பு உண்டாகுமாறு (மார்பில்) அணியாகக் கொண்டுள்ள திருமாலின், மேனியின் - திருமேனியைப் போல, [கருநிறத்துடன்], மீண்டது—; (எ - று.)

முதலில் ஆறுகள் தோன்றுவதற்குக் காரணமான வானத்தைப்பற்றிக் கூறுகின்றாரென்க. நீரின்மையால் வெண்மை நிறங்கொண்ட மேகம் கடலிற்படிந்து நீரை முகந்து கருநிறத்துடன் மீண்டதென்பதாம். ''ஊழிமுதல்வ னுருவம்போல்மெய் கறுத்து'' என்றார், ஸ்ரீ ஆண்டாளும். சிவபிரானுக்கு வெண்ணிறங் கூற வேண்டி, 'நீறணிந்த' என்று விசேடித்தார். ''எம் மகோததியும் மாயமேய்மேகம்'' என்றாற்போல், 'ஆர்கலிமேய்ந்து' என்றார். வீறு-இன்பமுமாம். பி-ம்:—[1]நிறத்தவாய். [2]சேறிணிந்த. [3]மீண்டவே.(14)

3.—இமயமலைமீது அந்தமேகம் படிதல்.

பம்பி மேகம் [1]பரந்தது [2]பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பி [3]னூற்றுது மென்றகன் குன்றின்மேல்
[4]இம்பர் வாரி [5]யெழுந்தது [6]போன்றதே.

(இ - ள்.) மேகம்—, பம்பி-எழுந்து, பரந்தது - (இமயமலேயிற்) படிந்த தன்மை,—இம்பர் வாரி - இவ்வுலகத்துள்ள கடல், 'நம்பன் மாதுலன் - சிவபிரானது மாமனர், பானுவால் - சூரியனால், வெம்மையை-வெப்பத்தை, நண்ணினான் - அடைந்திட்டான்: (ஆதலால்), அம்பின் - நீரினால், ஆற்றுதும்-(அவ்வெப்பத்தைத்) தணிப்போம்,' என்று—, அகல்குன்றின்மேல் எழுந்தது - பரந்த இமயமலையின்மீது எழுந்துள்ளதை, போன்றது—; (எ-று.)

கார்காலத்து மழை பெய்யுமாறு வானம் இமயமலேமீது எழுந்து படிந்ததை, கவி, கோடையினால் சிவபிரானது, மாமன் அடைந்த வெம்மையைத் தணிக்கவேண்டுமென்று, கடல், அங்குப்படிந்தது போலும் எனக் குறித்தார். தன்மைத்தற்குறிப்பேற்றவணி. சிவபிரானது பத்தினியாகிய உமையைப் பயந்ததனால் இமயவரசன் சிவபிரானுக்கு மாமனவன். இனி, கடலுக்கு மனைவியரெனக் கூறப்படுகின்ற கங்கைமுதலிய நதிகள் பலவற்றைத்தன்னிடத்தினின்று தோற்றுவித்தலால், கடல் 'நம்பன் மாதுலன்-நம்முடைய சிறப்பித்துக் கூறத்தக்க மாமன்' என்று இமயமலேயைக்கொண்டதாகக் கூறல் ஏற்கும். நம்பன் - விரும்புதலையுடைய, மாமன் என்றும் உரைப்பர். கடலுக்கு மனைவியராகிய நதிகள் பிறந்தகஞ்செல்லாப் பெருங்கற்புடைய பெண்டிர்போலும். பம்புதல்-எழுதலாதலேச் சூடாமணியா லறிக. பம்பி - ஒலித்து என்பாருமுளர்; வாரி-நீர்;கடலுக்கு, இலக்கணை. மாதுலன் - தாயுடன் பிறந்தவன். இது, மாமன்மகளை மணக்கும் வழக்குப்பற்றி, மனைவியின் தகப்பனைக் காட்டும். பானு-(கிரணங்களால்) விளங்குபவன். பி -ம்:—[1] பரந்தன, பரந்துவெம். [2] பானுவின். [3] ஆட்டுதி, ஆட்டுதும். [4] இன்பமாக. [5] இழிந்தன, இழிந்தது, எழுந்தன, இழிவது, எழுவன, எழுவது. [6] போன்றவே, போலுமே. (15)

4.—வானம் மழை பொழிதல்.

[1] புள்ளி மால்வரை [2] பொன்னென நோக்கிவான்
வெள்ளி [3] வீழிடை [4] வீழ்த்தெனத் [5] தாரைகள்
[6] உள்ளி [7] யுள்ளவெ லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின [8] மேகமே.

(இ - ள்.) புள்ளி மால் வரை - பெருமையுடைய பெரிய அவ்விமயமலே, பொன் எனல் நோக்கி - பொன்மயமா யிருத்தலேப் பார்த்து,—வான் - ஆகாயமானது, (அந்தப்பொன்னைக்கல்லியெடுக்கும்படி), வெள்ளி வீழ் - வெள்ளிமயமான தோண்டுங்கருவியை, இடை-(அதன்) நடுவில், வீழ்த்(த)து என-வீழ்த்தினாற்போல(த் தோன்றும்படி),—உள்ளி-(கொடுக்குமாறு நமது பொருள் என்ன எங்கு உள்ளது என்று) ஆராய்ந்து, உள்ள எலாம்-(தம்மிடத்து) உள்ள பொருள்களையெல்லாம், உவந்து ஈயும் - மனமுவந்து தருகின்ற, அ வள்ளியோரின் - வண்மைக்குணமுடைய மிகச்சிறந்த வள்ளல்களைப் போல, மேகம்—, தாரைகள் - மழைத்தாரைகளை, வழங்கின—; (எ - று.)

பொன்மயமான இமயமலேமீது மேகம்வெண்ணிறத்தாரைகள் வீழ்த்தியதை, அம்மலே பொன்மயமாயிருத்தலால் அப்பொன்

னைத் தோண்டி யெடுத்துக்கொள்ளக்கருதி வெள்ளிமயமான தோண்டு கருவியை வானம் வீழ்த்ததுபோலு மென்றார்: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இமயமும் மேருவும் ஒற்றுமைப்படக் கூறப்படுவதும் இமயமலையே பொன்மயமான மலையாகக் கூறப்படுவதும் உள்ளதனால், 'புள்ளிமால்வரை பொன்னெனநோக்கி' என்றார். தம்மிடத்துள்ள நீரையெல்லாம் பொழியும் மேகத்துக்கு, வரையாது கொடுக்கும் வள்ளியோர் உவமை. உள்ளி என்பதற்கு - (பயனைக்) கருதி என்று பொருள் கூறின், அந்தக்கொடை வாணிகம்போலுதலால், அதனை மேற்கொள்பவர் வள்ளலாகாரென்க. உள்ளி - செல்வ நிலையாமையை நினைத்து எனினுமாம்; "நில்லா வுலகத்து நிலைமை தூக்கி" என்பது, பொருநராற்றுப்படை. தாரை - ஒழுகும்நீர்த்தொடர்ச்சி. மழைத்தாரைக்கு, வெள்ளிக்கோல் உவமை. பி - ம்:—[1]புள்ளின். [2]பொன்னென, பொய்மென, பொள்ளென. [3]வீழிட. [4]வீழெனத், வீழ்வன, வீழ்ந்தன, வீழ்த்தன. [5]தாரைய, ஆதரை. [6]உள்ளின். [7]உள்ளது. [8]வானமே. (16)

5.—மழைபெய்ததனாற் பெருக்கெடுத்தல்.

மான [1]நேர்ந்தற நோக்கி மனுநெறி
போன தண் [2]குடை [3]வேந்தன் புகழென
[4]ஞான [5]முன்னிய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் [6]தழைத்தது நீத்தமே.

(இ - ள்.) மானம் நேர்ந்து - மானத்தைப் பொருந்தி, அறம் நோக்கி - தருமத்தைக் (கருத்துடன்) கவனித்துப்பார்த்து, மனு நெறி போன - மநு தருமசாஸ்திரத்தின் வழியே நடக்கின்ற, தண் குடை வேந்தன் - குளிர்ந்த குடையையுடைய [நல்லரசாட்சியையுடைய] அரசனது, புகழ் என - கீர்த்திபோலவும்,—ஞானம் உன்னிய - ஞான வழியையே நாடுகின்ற, நான்மறையாளர் - நான்கு வேதங்கட்கும் உரிமைபூண்ட அந்தணர்களுடைய, கை - கையிற் கொடுத்த, தானம் என்ன - தானம்போலவும், நீத்தம் - (அந்த மழைத்தாரை) வெள்ளம், தழைத்தது - பெருகிற்று; (எ - று.)

நீதிதவறாத வேந்தன்புகழ் தழைப்பதுபோலவும், நான்மறையாளர் கைத்தானம் தழைப்பது போலவும் நீர்வெள்ளம் தழைத்த தென்க. உயர்ந்தோர்க்கு உதவிய தானம் தழைக்கு மென்பதை, "தானம், தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்துவிடும்" என்பதனாலுமறிக. வேந்த னென்றது - தயரதனைக் காட்டு மென்க; 'பாரின் முகந்து தானக்கையார்புனலானனையாதன கையுமில்லை" என்று அம்மன்னவனது கொடை புகழப்படுதல் காண்க. பி-ம்:—[1]நந்தலனகி, முந்துற நோக்கி, தேர்ந்தனனகி, நேர்ந்தவனக, நேர்ந்தறநோக்கும். [2]கொடை. [3]வேந்தர். [4]நானம். [5]முந்திய, முந்தற. [6]தழைத்தன.

6.—இதுமுதல் ஆறுகவிகள் - வெள்ளத்தின் வருணனை.

தலையு மாகமுந் தாளுந் [1]தழீஇயதன்
நிலை[2]நி லாதிறை நின்றது [3]போலவே
மலையி [4]னுள்ளவெ லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை [5]யொத்ததவ் வெள்ளமே.

(இ - ள்.) தலைஉம் - (மலையின்) உச்சியையும், [தம்மிடத்து வந்த காமுகரது தலையையும்], ஆகம்உம் - நடுவிடத்தையும், [மார்பினையும்], தாள்உம் - தாழ்வரையையும், [பாதத்தையும்], தழீஇ - தழுவி, அதன்நிலை - அம்மலையினளவில், [வெளிக்குக்காட்டும் அவ்விருப்பத்தினளவில்], நிலாது - நிலைத்திராமல், இறை நின்றதுபோல - கணமென்னும்பொழுது நிகழ்ந்து நின்றதுபோல (ச் சற்று நேரம் மலையிலிருந்து), [சற்றுநேரமே விருப்பங்கொண்டு நின்று], மலையின் உள்ள எலாம் கொண்டு - மலையிலுண்டாகின்ற பொருள்களை யெல்லாம் வாரிக்கொண்டு, [மலைபோலப்பெருந்திரளாக (அந்தக் காமுகரிடத்து) உள்ள பொருள்களையெல்லாம் (தாம்) பெற்றுக்கொண்டு], மண்டலால் - வேகமாக அப்பாற்செல்லுதலால்,—அவெள்ளம்—, விலையின் மாதரை - வேசியரை, ஒத்தது—; (எ - று.)

மலையின் உச்சி இடை அடி என்ற இடங்களைத் தழுவி அம்மட்டோடு நிலைத்திராமல் மலையிலுள்ள பண்டங்களையெல்லாங் கொண்டு அப்பாற் செல்லும் வெள்ளம் - காமுகரின் உச்சிமுதலிய உறுப்புக்களைத் தழுவித் தம்விருப்பத்தை வெளிக்குக்காட்டி மலைபோற் பெருந்திரளான பொருள்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு பிறகு அக்காமுகரை விட்டிட்டுச் செல்லும் வேசியரை யொக்கும்: மலையிலே சற்று வெள்ளமிருப்பதுபோல வேசியர் சற்று விருப்ப முடையர்போலக் காட்டுதலால், 'இறைநின்றது போல' என்றார். மலையில் தோன்றுவன "தக்கோலந் தீம்பூத்தகை சா லிலவங்கம் கற்பூரஞ் சாதியோடைந்து." இனி, அடுத்தகவியிற் கூறும் மணி முதலியனவுமாம். சிலேடையுவமை. பி - ம்:—
[1] தழீஇயதின். [2] நிலாநிறை, இலாநிறை. [3] போலவும். [4] உள்ளது.
[5] ஒத்ததுவெள்ளமே. (18)

7. மணியும் பொன்னு மயில் தழைப் பீலியும்
[1] அணியு மானைவெண் கோடு மகிலுந் [2] தன்
இணையி லாரமு மின்னகொண் டேகலான்
[3] வணிக மாக்களை [4] யொத்ததவ் வாரியே.

(இ - ள்.) அ வாரி - அந்த வெள்ளமானது,—மணிஉம் - முத்துக்களும், பொன்உம் - சுவர்ணமும், மயில் தழை பீலிஉம் - மயிலினிறகாகிய பீலியும், அணியும் ஆனை வெள் கோடுஉம் - நிரைத்த யானைகளினுடைய வெண்தந்தமும், அகில்உம் - அகிற் கட்டையும், தன் இணை இல் ஆரம்உம் - தனக்கு ஒப்பில்லாத சந்தனக் கட்டையும், (ஆகிய), இன்ன - இத்தன்மையான பொருள்களை, கொண்டு - வாரிக்கொண்டு, ஏகலான் - போவதனால், - வணிகமாக்களை - வர்த்தகர்களை, ஒத்தது—; (எ - று.)

மணி முதலியவற்றை யடித்துக்கொண்டு செல்லுகின்றவெள்ளம், மணிமுதலியவற்றை வாணிகத்தின்பொருட்டுக் கொண்டு செல்லும் வணிகமாக்களை யொத்திருக்கு மென்றார். மணி - மூங்கில் முதலியவற்றில் தோன்றும் முத்து: இனி, கனிகளில் தோன்றும் அரதனங்களெனின், ஆரம் - முத்து என்க. பி-ம்:—[1] அணியுமாலை. [2] நல், ஆகும், தண். [3] வணிகர். [4] ஒத்தது, ஒத்தன. (19)

8. பூ[1]நி ரைத்து மென் ருது பொருந்தியும்
தே[2]ன ளாவியுஞ் செம்பொன் [3]விராவியும்
[4]ஆனை மாமத வாற்றெ டளாவியும்
வான வில்லை [5]நிகர்த்ததவ் வாரியே.

(இ - ள்.) அ வாரி - அந்த வெள்ளமானது,—பூ நிரைத்துஉம் - மலர்களை வரிசையாகப்பொருந்தியும், மெல் தாது - மிருதுவான மகரந்தங்களை, பொருந்தியும்-, தேன் அளாவிஉம்-தேனோடு கலந்தும், செம்பொன் விராவிஉம்-செம்பொன்னைச் சேர்ந்தும், ஆனை மா மதம் ஆற்றொடு அளாவிஉம் - ஆனைகளின் மிக்கமத நீர்ப் பெருக்கோடு சேர்ந்தும் (பலநிறங்களைப்பெற்றதனால்), வானம் வில்லை-வானத்தில் (சில காலங்களில்) தோன்றும் இந்திரவில்லை, நிகர்த்தது - ஒத்தது; (எ - று.)

அந்த வெள்ளம் - பூ முதலியவற்றோடு சேர்ந்து பலநிறத்தைப் பெற்றதனால், பலநிறங்களைப் பெற்ற வானவில்லைப் போன்றதென்றார்; தற்குறிப்பேற்றவுவமையணி, ஆனைமதம், கருநிறமுடையது. வானவில் ஐவண்ணமுடைமையால், பூ முதலிய ஐந்துபண்டங்கள் கூறப்பட்டன என்பர். பி - ம்:—[1]நிரைத்த, நிரந்து, நிரைந்தும். [2]வளாவியும். [3]அளாவியும். [4]மானமாமணியும் வகிர்ந்தேகலால், ஏனமாமணியும் வரன்றேகலால், மானமாமணிதான் வகிர்ந்தேகலால், ஆனைமாய்தரவானினளாவியும், ஆனேமாய்தரவாற்றினளாவியும். [5]நிகர்த்தது, நிகர்த்தன. (20)

9. மலையெ டுத்து மரங்கள் [1]பறித்துமாடு
இலைமு தற்பொருள் யாவையு மேந்தலான்
அலைக டற்றலை [2]யன்றணை வேண்டிய
நிலையு டைக்கவி [3]நீத்தமந் நீத்தமே.

(இ - ள்.) மலை எடுத்துஉம்-(வேரோடு) மலைகளைப் பறித்துக் கொண்டும், மரங்கள் பறித்துஉம்-மரங்களைப் பறித்துக்கொண்டும், மாடு - (தன்) பக்கத்திலேயுள்ள, இலை முதல் பொருள் யாவைஉம் -இலை முதலாகிய பொருள்களெல்லாவற்றையும், ஏந்தலான் - ஏந்தி வருதலால்:—அ நீத்தம்-அந்த நீர்ப்பெருக்கானது,—அலை கடல் தலை - (அலைகள்) அலைந்துவீசுந்தன்மையுள்ள சமுத்திரத்தில், அன்று-இராமபிரான் கடலைக்கடந்து இலங்கைக்குச்செல்லக் கருதியகாலத்தில், அணைவேண்டிய-அணைகட்டவிரும்பிய, நிலை உடை -மனநிலைமையையுடைய, கவி நீத்தம்-வானர வெள்ளமே; (எ-று.)

இலைமுதற்பொருள் - கரும்பு, வாழை போன்றன என்ப ஒரு சாரார். மலையெடுத்தல் முதலிய செயல்களை மேற்கொண்டதனால், அந்தவெள்ளம், கடலில் அணைகட்டவேண்டி மலைபறித்தெடுத்தல் முதலிய செயல்களைக் கொண்ட வானரவெள்ளமேயென உருவக வணிபடக்கூறினர். நீர்வெள்ளத்துக்கு அடைமொழியாகும்போது அலைகடல்தலை அன்று அணைவேண்டிய-அலைகடலில் அப்போது சேர்தலை [போய்விழுதலை]விரும்பிய நீர்வெள்ளமென்க: இந்தச்சிலேடை, உருவகத்திற்கு அங்கமாக வந்தது. கவி பிற்பட்டவராதலால், பின் நிகழ்ச்சிகளையும் முன்நிகழ்ச்சிகட்கு உவமையாக்குவர். பி-ம்:- [1]தரித்தும், முறித்தும். [2]ஆண்டகை. [3]ஒத்ததந், ஒத்தது. (21)

10. ஈக்கள் வண்டொடு [1]மொய்ப்ப வரம் [2]பிகந்து
ஊக்க மே[3]மிகுந் துட்டெளி வின்றியே
தேக்கெ றிந்து வருதலிற் றீம்புனல்
[4]வாக்கு தேனுகர் [5]மாக்களை [6]மானுமே.

(இ - ள்.) தீம் புனல் - இன்சுவையுள்ள நீரையுடைய அவ் வெள்ளமானது,—ஈக்கள் வண்டொடு மொய்ப்ப-ஈக்களும் வண்டுகளும் மொய்க்க, வரம்பு இகந்து-எல்லைகடந்து, ஊக்கம் மிகுந்து—, உள் தெளிவு இன்றி - உள்ளே தெளிவுஇல்லாமல், தேக்குஎறிந்து -தேக்கை வீசிக்கொண்டு, வருதலின்-, வாக்கும்-வார்க்கின்ற, தேன் -கள்ளை, நுகர் - குடிக்கின்ற, மாக்களை - மனிதர்களை, மானும்-ஒத்திருக்கும்; (எ - று.)

கட்குடியரைக் கூறுமிடத்து, ஈக்கள்வண்டொடு மொய்த்தல் - அவரிடத்துள்ள கள்நாற்றத்துக்காக ஈக்களும் வண்டுகளும்மொய்த்தலும், வரம்பு இகத்தல் - தமது குலம் குடிப்பிறப்பு என்ற இவற்றுக்கு ஏற்ற ஒழுக்கத்தைக்கைவிடுதலும், ஊக்கம் மிகுதல்-உற்சாகம் மிகுதலும், உள் தெளிவு இன்மை-மனம் தெளிவுபெருமையும், தேக்குஎறிதல்-ஏப்பம்விடுதலு மென்றும்; ஆற்றுவெள்ளத்தைக் கூறுமிடத்து, ஈக்கள் வண்டொடுமொய்த்தல்-அடித்துக் கொண்டு செல்லும் பலவகை மலர்கள் தேன் முதலியவற்றிற்காக ஈக்களும் வண்டுகளும் மொய்த்தலும், வரம்பு இகத்தல்-கரைகடந்து செல்லுதலும், ஊக்கம் மிகுதல்-வலிமை மிகுதலும், உள் தெளிவு இன்மை -தன்னுள்ளே யிருக்கின்ற நீர் கலங்கலாயிருத்தலும், தேக்கு எறிதல் - அடித்துக்கொண்டுவரும் தேக்குமரங்களை வீசுதலுமென்க. தேக்கு எறிதல் - தேக்கமரங்களை முறித்தலுமாம். கட்குடியர் விலங்குபோல்வ ரென்று அவரை 'தேனுகர்மாக்கள்' என்றார். இப்பாடலின் முதலடி, பெரியவாச்சான்பிள்ளையால், "மஞ்சுலாஞ் சோலை" என்ற பெரியதிருமொழிப் பாசுரத்து வ்யாக்யானத்தில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. பி-ம்:—[1]மோப்ப. [2]இகழ்ந்து. [3]மிக. [4]வாக்குந் தேன். [5]மக்களை. [6]மானுமால். (22)

11. பணைமு கக்[1]களி யானைபன் மாக்களோடு
அணி[2]வ குத்தென வீர்த்திரைத் தார்த்தலின்
மணி[3]யு டைக்கொடி [4]முந்தவந் தூன்றலால்
புணரி மேற்பொரப் [5]போவது போன்றதே.

(இ - ள்.) (அந்தவெள்ளம்),—பல் மாக்களோடு-பல மிருகங்களோடு [பல்வேறு தேயத்த குதிரைகளோடும் பதாதிகளோடும்], பணை முகம் களி யானை - பருத்த முகத்தையும் களிப்பையுமுடைய யானைகளையும், அணி வகுத்து என - வியூகமாகப் பிரித்தாற்போல (ஒரு ஒழுங்குபட), ஈர்த்து - இழுத்துக்கொண்டு, இரைத்து ஆர்த்தலின்-பேராரவாரஞ்செய்தலாலும், மணி உடை கொடி தோன்ற வந்து ஊன்றலால் - அழகையுடைய கொடிகள் தோன்றவந்து தங்குதலாலும், புணரிமேல் - சமுத்திரத்தின்மீது, பொர போவது -போர்செய்யப்போவதை, போன்றது—; (எ - று.)

போர்க்குச் செல்லுபவர் - யானை குதிரைமுதலியவற்றை அணி வகுத்து எதிரிகளுள்ள இடத்துக்குப் பேராரவாரத்தோடுசெல்லு தலும், தமக்கு உரிய கொடிகள் தோன்றவந்து தங்குதலும் இயற்கை; வெள்ளமும் - யானை குதிரை முதலியவற்றை யிழுத்துக் கொண்டு பேராரவாரத்துடன் செல்லுதலும் காட்டில் முளைக் கின்ற பலவகைக்கொடிகளும் தோன்றுமாறு புணரியில் தங்குத லும் உடையதென்க. புணரி - பலநதிகளும் வந்துசேரப்பெறுவது: கடல். ஊன்றுதல் - தங்குதலாதலை "அகலிருவிசும்பினூன்றும்" என்பதனாலும் அறிக. ஊன்றுதல் - நாட்டுதலுமாம். பி-ம்:—[1]கரி. [2]வகுத்தெனவீர்த்திரைத் தார்த்தள்ளி, வகுத்தன...ஆர்த்தன, வகுத்தென...ஆர்த்துவெண். [3]நிரை, கொடி. [4]வந்துமுந்து. [5]போதுவ, பொருவது, போவதும். (23)

12.—சரயூநதியின் சிறப்பு.

இரவி தன்குலத் தெண்ணில்பல் [1]வேந்தர்தம்
[2]புரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை [3]யன்னதிவ்
வுரவு [4]நீர்நிலத் [5]தோங்கு முயிர்க்கெலாம்.

(இ - ள்.) இரவிதன் குலத்து - சூரியகுலத்திற்பிறந்த, பல் வேந்தர்தம் - பல அரசர்களுடைய, எண் இல் - (பிறரால்)எண்ணு தற்கும் முடியாத [மிகச்சிறந்த], புரவு - (பலநாளாகப்) பாதுகாத்து வந்த, நல் ஒழுக்கின் படி - நல்லொழுக்கத்தின் தன்மையை, பூண்டது - மேற்கொண்டதாகி (முற்கூறிய மழைவெள்ளத்தால்) தோன்றிய, சரயு என்பது—, உரவு நீர் இ நிலத்து - உலாவுந் தன்மையுள்ள நீரையுடையகடலினாற் சூழப்பட்ட இந்நிலவுலகத் தில், ஓங்கும் - வளர்கின்ற, உயிர்க்கு எலாம் - பிராணிகட்கெல்லாம், தாய் முலை அன்னது - (குழந்தைக்குத்) தாய்முலைபோலப் பயன் படுந்தன்மையுள்ளது; (எ-று.)

இதுவரையில் இமயமலையில் மழைபெய்ததனால் தோன்றிய வெள்ளத்தை வருணித்த கவி, அங்ஙனம் தோன்றிய வெள்ள நீராகிய சரயுவைப்பற்றி இனிக்கூறுகின்றார். சரயு - (கைலாசகிரியி லுள்ள) மானசமடுவில் தோன்றியது என்று காரணப்பொருள் படும். கைலாசமும் இமயமலையின் ஒருபகுதியே யென்றுகொண்டு கவி, இரண்டனையும் அபேதமாகக் கூறியுள்ளார். தாயின் முலைப் பால் குழந்தைக்கு உணவாகி வளர்த்தல்போல, சரயு, தன்நீரை இவ்வுலகத்தாரை யுண்பித்தும் உணவுப் பொருளை யுண்டாக்கி யும் வளர்க்கும். சூரியகுலத்துமன்னவரின் தொன்றுதொட்டு வந்த நல்லொழுக்கம் என்றும்ஒருபடிப்பட்டிருப்பதுபோல, இந்தச் சரயூநதியின் ஒழுக்கும் [நீர்ப்பெருக்கும்] என்றும் ஒருபடியாக வோடும்: இவ்வுவமை தாய்மைபற்றியும் வந்ததென்பர். யாற் றுக்குத் தாய்முலை உவமை யாதலை "புனிறுதீர் குழவிக்கிலிற்று முலைபோலச், சுரந்த காவிரி" என்ற இடத்துங் காண்க. உரவுநீர் நிலம் - கோசலநாடு. பி - ம்:—[1]வேந்தரும். [2]பரவு. [3]அந்நதி, இன்ன திவ். [4]நீள், நல். [5]ஒல்கும். (24)

பா—5

வேறு.

13.—அந்நதிவெள்ளம் நான்குநிலத்திலும் செல்லுதலின் வருணனை, இதுமுதல் ஐந்துகவிகளாற் கூறப்படும்.

கொடிச்சிய ரிடித்த சுண்ணங் குங்குமங் கோட்ட மேலம்
நடுக்குறு சாந்தஞ்சிந்து ரத்தொடு [1] நரந்த நாகம்
[2] கடுக்கைநாள் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய்
அடுக்கலி [3] னடுத்த [4] தீந்தே னகிலொடு நாறு மன்றே.

(இ - ள்.) (அந்தச் சரயுநதியின் வெள்ளமானது),—கொடிச்சியர் - குறிஞ்சிநிலத்துமகளிர், இடித்த - இடித்துச்செய்த, சுண்ணம் - வாசனைப் பொடியும், குங்குமம் - குங்குமப்பூவும், கோட்டம்- கோஷ்ட மென்னும் வாசனைப் பண்டமும், ஏலம் - ஏலக்காயும், நடுக்கு உறு - (குளிர்ச்சியினால்) உடலை நடுங்கும்படி செய்கின்ற, சாந்தம் - சந்தநமும், சிந்தூரத்தொடு - வெட்சிப்பூவும், நரந்தம்-நரந்தப்புல்லும், நாகம்-சுரபுன்னைப்பூவும், கடுக்கை - கொன்றைப்பூவும், நாள் வேங்கை - காலைமலர்கின்ற வேங்கைப்பூவும், கோங்கு - கோங்கிலவமும், பச்சிலை - பச்சிலையும், கண்டில்வெண்ணெய் - கண்டில் வெண்ணெயென்னும்பூண்டும், அடுக்கலின் அடுத்த தீ தேன் - மலையிற்கட்டப்பட்ட இனிய தேன் கூடும், அகிலொடு - அகிற்கட்டையும், (என்ற இவற்றோடு கூடி), நாறும் - மணம் வீசும்; (எ-று.) —அன்றுஏ - ஈற்றசை.

சரயுவெள்ளம் குறிஞ்சிநிலத்திற் சென்றமையை, இதனாற் கூறுகின்றார். அந்தச் சரயூநதியின் வெள்ளம், சுண்ணம் முதலியவற்றை அடித்துக் கொண்டுவருதலால் நறுமணங் கமழுமென்க. 'நரந்தம் - ஒருவகைநறுமணப்புல்: கஸ்தூரி' என்பாருமுளர். நடுகுறுசாந்தம் என்று பிரித்து - நடுவில் குறியதாகத் தறிக்கப்பட்ட சந்தனக்கட்டை யெனினுமாம். சிந்தாமணியிலும் "நாள்வேங்கை" என்று உள்ளது. கண்டில்வெண்ணெய் - ஓமாலிகை முப்பத்திரண்டனுளொன்று: இதனை, மரமென்றும், காய்ந்தபால் திரளை யென்றுங் கொள்ளுவாருமுளர்; இதற்கு - யானைக்கன்றுபிறந்தவுடன் பால் அருந்துமுன் கழித்தமலம் என்றும், கரிகூதம் என்பது இதன்வடமொழிப்பெயரென்றும் ஒருசாரார் கூறுப.

பி - ம்:—[1] நரந்தை. [2] கடுக்கையார். [3] அழிந்த, இசைந்த. [4] செந். (25)

14. [1] எயினர்வாழ் சீறூ ரப்பு மாரியி னிரியல் [2] போக்கி
வயின்வயி [3] னெயிற்றி மாதர் வயிறலைத் தோட [4] வோட்டி
அயின்முகக் கணையும் வில்லும் [5] வாரிகொண் டலைக்கு நீரால்
[6] செயிர்தருங் கொற்ற மன்னர் [7] சேனையை மானு மன்றே.

(இ - ள்.) வாரி - சரயுவெள்ளம்,—எயினர் வாழ் சிறுஊர் - வேடர்கள் வாழ்கின்ற சிறிய ஊர்கள், அம்பு மாரியின் - அம்புமழையால் [அம்புமழை - நீர் மிகுதியும் பாணமழையும்], இரியல் போக்கி- நிலைகெடச்செய்தும், வயின் வயின் - (தான் போகின்ற) அவ்வவ்விடங்களில், எயிற்றிமாதர் - வேடப்பெண்கள், வயிறு அலைத்து ஓட - வயிற்றிலடித்துக்கொண்டு ஓட, ஓட்டி - செலுத்தியும்,-அயில் முகம் கணை உம் வில் உம்-கூரிய முனையுள்ள அம்புகளையும் விற்களையு, கொண்டு - (தன்னிடம்) கொண்டு, அலைக்கும் - (உலகத்தாரை)

அலையச்செய்கின்ற, நீரால்-தன்மையினால், செயிர் தரும்-(பிறர்க்கு) வருத்தத்தை விளைக்கின்ற, கொற்றம் மன்னர் சேனையை - வெற்றியையுடைய அரசர் சேனையை, மானும்-ஒத்திருக்கும்; (எ - று.)

அந்தச் சரயுவின் வெள்ளம், எயினரின் சிற்றூர்களைத் தன் அம்புமழையால் நிலைகெடவும் அங்கங்கே எயிற்றிமாதரைவயிற்றிலடித்துக்கொண்டு ஓடவுஞ் செய்து, அவ்வெயினர் வைத்துள்ள கணையையும் வில்லையும் அடித்துக்கொண்டுசெல்வதால், பகையரசர்சேனையை யொக்கு மென்க. சேனை ஆடவரை நிலைகெடச் செய்கையில் அவ்விடத்துள்ள மகளிர் வயிற்றிலடித்துக்கொண்டு அச்சத்தால் ஓடுதல், இயற்கை. கீழ்க்கவியிற் குறிஞ்சியில்யாற்று வெள்ளம் சென்றதனைக் கூறிய கவி, மேற்கவியில் முல்லையிற் செல்வதனைக் கூறப்போவதால், அவ்விரண்டு நிலமும் திரிந்த பாலை நிலச்சிற்றூர்களையடுத்து அந்நதிவெள்ளஞ் செல்வதனை இதனாற் கூறுகின்றாரென்க. குறிஞ்சிமுல்லைகளே தம்நிலையில் திரிந்து பாலையாகுமென்ப: இதனை "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற்றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுயருறுத்துப், பாலையென்பதோர் படிவங் கொள்ளும்" என்றதனாலும் அறியலாம். அப்புமாரி, அலைக்கும் நீர் -செம்மொழிச்சிலேடை. பி:ம்:—[1] எயினர்தம். [2] போக,போக்க. [3] எயிற்றிமார்தம்,எற்றிமாதர், ஏறிதாமர். [4] வேண்டி. [5] வாரிக். [6] செயம்வரும், செயமரும், செயல்தரும் செயவரும், செயிரறு. [7] சேனையும். (26)

15. செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுந் [1] தெளிந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருத முந்தி
[2] மறிவிழி யாயர் மாதர் [3] வணைதுகில் [4] வாரு நீரால்
பொறிவரி யரவி னாடும் [5] புனிதனும் [6] போலு மன்றே.

(இ - ள்.) செறி நறு தயிர்உம்-உறைந்தநன்மணமுள்ள தயிரும், பால்உம்—, வெண்ணெய்உம்—, தெளிந்த நெய்உம்-(காய்ச்சி வடித்ததனால்) தெளிந்துள்ள நெய்யும், (ஆகிய இவற்றை),உறியொடு வாரி உண்டு - உறியுடனே வாரியெடுத்து உட்கொண்டும், குருந்தொடு மருதம் உந்தி-குருந்தமரத்தையும் மருதமரத்தையும் முறித்துத்தள்ளியும், (இவற்றோடு நில்லாமல்), மறி விழி ஆயர் மாதர் - மான்குட்டிபோல் மருண்ட பார்வையுடைய இடைச்சிகள், வணை-அணிந்த, துகில்-ஆடையை, வாரும்-கவர்ந்துசெல்லுகின்ற, நீரால்-தன்மையால், பொறி வரி அரவின் ஆடும்-படப்புள்ளியையும் உடல் வரிகளையுமுடைய காளியனென்னும்பாம்பின்மீது ஆடுகின்ற, புனிதன்உம் - பரிசுத்தமூர்த்தியாகிய க்ருஷ்ணனையும், போலும்-ஒத்தது, (அந்த நீர்வெள்ளம்); (எ - று.)

இதனால் அந்நதிவெள்ளம் முல்லைநிலத்துச் சென்றமைகூறப்படுகின்றது. பால்முதலியவற்றை வாரித்தன்னுட்கொள்ளுதல், குருந்தமருதமரங்களை முறித்தல், ஆயர்மாதருடையைக்கவர்தல் என்பவை - கிருஷ்ணபகவானுக்கும் வெள்ளத்துக்குமுள்ள பொதுத்தன்மைகள்.

"குருந்த மொன்றொசித்தானொடுஞ்சென்று", "உயர்கொள் சோலைக்குருந் தொசித்ததும்" என்பனமுதலாக ஆழ்வார்பாசுரங்களில் ஸ்ரீக்ருஷ்ணபகவான் குருந்தொசித்தசெய்தி வருகின்றது:

அங்கு வியாக்கியானஞ் செய்தவர்கள், அரக்கரால் ஆவேசிக்கப்
பட்டுத் தன்மீது வீழ்ந்துகொல்லவேணுமென்று இருந்த குருந்த
மரத்தை ஸ்ரீக்ருஷ்ணன் தானேமுறித்தெறிந்தன னென்பர். குருந்த
மரத்தையொசித்ததுகுறித்துச் சைனர்கூறும் வரலாறு:—ஒருநாள்
கிருஷ்ணன் யமுனாநதியில் கோவியரோடு விளையாடிக்கொண்டிருக்
கையில் கோவியருடைய துகில்களையெல்லாம் கவர்ந்துகொண்டு
அவ்யாற்றங்கரையிலுள்ள குருந்தமரத்திலேறிநிற்க, அவன் தமைய
னை பலராமன் அங்குவர, அதனையறிந்த க்ருஷ்ணன் தன்னுடைய
செயலை அண்ணனறிந்தால் தன்னை மிகவும்பழிப்பனென்று நினைத்து
யமுனையாற்றில் விழுமாறு அக்குருந்தமரத்தை முறித்துத்தள்ளித்
துகிலையமுனைநதியிலிருந்த கோவியர் எளிதிற் பெறுமாறுசெய்து
தானும் அந் நீரிற்குதித்து நீந்தி வேற்றிடஞ் சென்றா னென்பது.
மருதமொசித்த வரலாறு:—க்ருஷ்ணன் குழந்தையாயிருந்தபோது
அவனது துன்பப்படுத்துகின்ற சேஷ்டைகளைக்கண்டு கோபித்த
வளர்த்த தாயாகிய யசோதை ஒருநாள் திருவயிற்றிற் கயிற்றினாற்
கட்டி ஓருரலிலே பிணித்துவிட்டாள். க்ருஷ்ணன் அவ்வுரலை
யிழுத்துக்கொண்டு அங்கிருந்த இரட்டைமருதமரங்களின்நடுவிலே
யெழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய்நின்று இழுக்கப்
படவே அம்மரங்களிரண்டும் முறிந்துவிழுந்தன; அவ்வளவிலே,
முன்பு, மதுபான மயக்கத்தால் ஆடையின்றித் தம்மெதிரே ஜலக்
கிரீடைசெய்து கொண்டிருந்தது கண்ட நாரதமுனிவரது சாபத்தி
னால் அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்கிரீவனென்னும்
குபேரபுத்திரரிருவரும் சாபந்தீர்ந்து சென்றன ரென்பது.

கிருஷ்ணன் ஆயமாதராடையைக் கவர்ந்த வரலாறு:—ஒருகால்
கோவியர்பலர் ஸ்ரீக்ருஷ்ணனுக்குத் தெரியாது ஒரு பொய்கைக்கு
வந்து தமது துகில்களைக் களைந்து கரையில் வைத்திட்டு நீராடுகை
யில் அதனையுணர்ந்த அப்பிரான் அங்குவந்து அத்துகில்களைக்கவர்
ந்து குருந்தமரத்தின்மீது ஏறிக் கட்டிவைத்திருந்தானென்பதை,
நாச்சியார் திருமொழியில் "கோழியழைப்பதன் முன்னம்" என்னும்
பதிகத்தில் "இதுவென் புகுந்ததிங்கந்தோ இப்பொய்கைக்கெவ்
வாறுவந்தாய், மதுவின் துழாய்முடிமாலே மாயனே யெங்கள
முதே!..., குதிகொண்டரவில் நடித்தாய் குருந்திடைக் கூறைபணி
யாய்" என்பது முதலான பாசுரங்களாலறிக. இடைக்கன்னிமார்
மகாகாளியைக் குறித்து நோன்பு நோற்பவராகி யமுனையில் நீராடு
மாறு தமது ஆடைகளைக் கரைமேல் வைத்துச் செல்ல அதனை
யுணர்ந்த ஸ்ரீக்ருஷ்ணபகவான் அத்துகில்களையெல்லாம் வாரி
யெடுத்துக்கடம்பமரத்தின்மேலேறியிருந்து, நிர்வாணமாக நதியில்
நீராடிய அன்னார் பாவத்தையொழிக்க இருகையாலும் தொழு
மாறு கூறி அவர்கள் அங்ஙனஞ் செய்ய, அன்னாரதுசேலையைக்
கொடுத்தனனென்று ஸ்ரீபாகவதத்திலுள்ளது. அரவினாடியகதை:—
யமுனாநதியில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடுமுழுவதை
யும் தன் விஷாக்கினியாற் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பானத்
துக்குத் தக்கதாகாதபடி செய்த காளிய னென்னும் ஐந்தலைநாகத்
தைக் கிருஷ்ணன் தண்டிக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு
அம்மடுவிற் குதித்து, அந்நாகத்தின் படங்களின்மேல் ஏறித்

துவைத்துநர்த்தனஞ்செய்து நசுக்கிவலியடக்குகையில், மாங்கலிய பிக்ஷையிட்டருளவேண்டுமென்று தன்னை வணங்கிப்பிரார்த்தித்த நாககன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி அந்தக்காளியனை உயிரோடு கடலிற்சென்று வாழும்படி விட்டருளின னென்பது. இச்செய்யுளிலும், வாரி-வெள்ளநீர் எனின், எழுவாய் வருவிக்கவேண்டியதில்லை. பி-ம்:—[1]சேந்த, சேர்ந்த. [2]மறியிடை, மறியுடை.[3]வளை. [4]கவரும். [5]புனிதனை. [6]பொருவும், மானும், போன்றது. (27)

16. கதவினை முட்டி மள்ளர் கையெடுத் தார்ப்ப[1]வெய்தி
நுதலணி யோடை பொங்க [2]நுகர்வரி வண்டு [3]கிண்டத்
ததைமணி [4]சிந்த வுந்தித் தறியிறத் தடக்கை சாய்த்து
மத[5]மழை யானை யென்ன மருதஞ்சென் [6]றடைந்த தன்றே.

(இ - ள்.) (பின்னும் அவ்வெள்ளமானது), கதவினை முட்டி - (ஆங்காங்குள்ள மதகின்) கதவுகளை முட்டி, மள்ளர் கை எடுத்து ஆர்ப்ப எய்தி-உழவர்கள் (மகிழ்ச்சியினாற்) கைகளை உயரவெடுத்து ஆரவாரிக்கப்பொருந்தி, நுதல் அணி ஓடை பொங்க - முற்பக்கத்துள்ள நீண்ட நீர்நிலை நிரம்பி வழியவும், நுகர் வரிவண்டு கிண்ட - (தமது உணவை நாடி) உண்ணுந்தன்மையுள்ள உடல்வரியமைந்த வண்டுகள் குடையவும், ததைமணி சிந்த - நெருங்கக்கட்டிய மணிகள் சிந்தவும், உந்தி - (நீரைத்) தள்ளிக்கொண்டுபோய், தறி இற - (வெள்ளம் கரையையறுத்துக்கொண்டு போகாதபடி அங்கு நாட்டிய) முளை முறியும்படி, தட கை சாய்த்து-(அலையென்னும்) பெரிய கைகளால் வீழ்த்தி, மதம் மழை யானை என்ன - மதமழையை யுடைய யானைபோல, மருதம் - மருதநிலத்தில், சென்று அடைந்தது - போய்ச்சேர்ந்தது; (எ-று.)

மதயானைகள் தாம் அடைக்கப்பட்டுள்ள இடத்தின் கதவுகளை முட்டுதலும், மக்கள் விலகும்படி யானைப்பாகர் கையெடுத்து ஆரவாரஞ்செய்யப் போதலும், நெற்றியிலணிந்த பட்டம் விளங்கவும், மதநீரையுண்ணும் இசைப்பாட்டையுடைய வண்டுகள்கிண்டவும், நெருங்கக் கட்டிய மணிகள் சிதறவும் நீரைத்தள்ளிச்செல்லுதலும், தாம் கட்டியிருக்குங் கட்டுத்தறியைமுறித்துத் தள்ளுதலுமுடையன: நீர்வெள்ளம் வண்டுகளினுணவானமலர்கள் முதலியவற்றை யடித்துக்கொண்டு செல்லும்போது ஆங்கு வண்டுகள் கிண்டுமென்க. நுதல் - முற்புறம், நெற்றி. ஓடை - நீர்நிலை, நெற்றிப்பட்டம். மணி - இரத்தினம், அடிக்கும்மணி. இதனால், அந்நதிவெள்ளம் மருதநிலத்தை யடைந்தமை கூறப்பட்டது. தறி-வெள்ளத்தின் வேகத்தைத் தடுக்க நாட்டப்பட்டகுதிரை மரமெனலாம். ஆறுகளிற்பள்ளம் வீழ்ந்த இடங்கள் முதலியவற்றை யுணருமாறு தறிநடுதலும் உண்டு. பி-ம்:—[1]ஓடி, ஏகி. [2]புகர்முக. [3]பாடத், தீண்டத். [4]சிதறி, சிந்தி. [5]மலை. [6]அடைந்தமாதோ. (28)

17. முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவறு மருத மாக்கி
எல்லையில் பொருள்க ளெல்லா மிடைதடு மாறு நீரால்
[1]செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் [2]சென்ற தன்றே.

(இ - ள்.) முல்லையை குறிஞ்சி ஆக்கி-முல்லைநிலத்தைக் குறிஞ்சி நிலமாகச் செய்தும், மருதத்தை முல்லை ஆக்கி-மருதநிலத்தை முல்லைநிலமாகச் செய்தும், புல்லிய நெய்தல் தன்னை - அற்பப் பயனைத் தருகிற நெய்தனிலத்தை, பொரு அறு மருதம் ஆக்கி-(தனக்கு) நிகரில்லாததான மருதநிலமாகச்செய்தும், (இங்ஙனம்), எல்லையில் பொருள்கள் எல்லாம் - அவ்வந்நிலங்களிலுள்ள திரவியங்களெல்லாம், இடை தடுமாறும் நீரால்-(தம்தம்) இடத்தை விட்டு வேறுநிலத்திற் செல்லுதற்குக் காரணமாகுந் தன்மையினால், செல் உறு - (உயிர்கள் பிறக்குமாறு) செல்லுகின்ற, கதியில் -(நால்வகைக்) கதியினில், செல்லும் - (அவ்வுயிர்களைவிடாது பின்பற்றிச்) செல்லுகின்ற, வினை என - (புண்ணியம் பாவம் என்னப்படும் இரு)வினைகளைப்போல, சென்றது-(அவ்வெள்ளம்) போயிற்று; (எ-று)—அன்றே-ஈற்றசை.

ஒருநிலத்தை மற்றொரு நிலமாகச்செய்யும் வெள்ளத்திற்கு, தேவரை மனிதராக்கியும் மனிதரைத் தேவராக்கியும் தாவரங்களை விலங்குகளாக்கியும் இங்ஙனம் ஒருகதியிற் பிறந்த உயிர்களை மற்றொருகதியிற் பிறக்குமாறு செய்யும் இருவினை ஒப்பாகும். சரயு வெள்ளம் குறிஞ்சியினின்று முல்லைக்கும் அங்குநின்று மருதத்திற்கும் அங்குநின்று நெய்தற்கும் சென்று கடலிற் சேர்ந்ததாதலால், 'முல்லையைக் குறிஞ்சியாக்கி...நெய்தல்தன்னைப் பொருவறு மருதமாக்கி' எனக் கூறினர். முல்லையைக்குறிஞ்சியாக்கி - குறிஞ்சி நிலப்பொருள்களைக் கொண்டுவந்து நிறைத்தலாலே முல்லைநிலத்தைக் குறிஞ்சிநிலமாக்கியென்க: இங்ஙனமே மேலுங்காண்க. உயிர் பிறக்கும் நாற்கதிகள் - தேவகதி மக்கட்கதி விலங்குக்கதி தாவர கதியென்பன. பி - ம்:—[1] செல்லிய. [2] செல்லுமன்றே. (29)

18.—வெள்ளம் பல வாய்க்கால்களிற் பிரிதல்.

காத்தகான் மள்ளர் [1] வெள்ளக் கலிப்பறை [2] கறங்கக் கைபோய்ச்
[3] சேர்த்தநீர்த் திவலை பொன்னு [4] முத்தமுந் திரையின் [5] வீசி
நீத்த [6] மாந் தலைய தாகி [7] நிமிர்ந்து [8] பார் [9] கிழிய [10] நீண்டு
[11] கோத்தகா [12] லொன்றி னொன்று குலமெனப் [13] பிரிந்த தன்றே.

(இ - ள்.) மள்ளர் - உழவர், காத்த-காத்துநின்ற, கால்-வாய்க்காலில், வெள்ளம் கலி பறை கறங்க - வெள்ளம் வருதலைக் குறிப்பிக்கும் ஆரவாரத்தையுடைய பறை ஒலிக்க, கைபோய் - விரைந்து சென்று, சேர்த்த நீர் திவலை - திரண்ட நீர்த்திவலையும், பொன்னும்—, முத்தம்உம்-முத்தும், (ஆகிய இவற்றை), திரையின் வீசி - அலைகளாலெறிந்தும், ஆம் தலையது ஆகி நிமிர்ந்து - பொருந்திய தலைமையுடையதாயோங்கி, பார்கிழிய நீண்டு-பூமியினிடம் கிழியும்படி நீளச்சென்று, கோத்த-(முறையாகத்) தொடர்ந்துள்ள, கால் ஒன்றின் ஒன்று - ஒரு கால்வாயிலிருந்து மற்றொரு கால்வாயாக, குலம் என-குலம் பிரிவதுபோல, நீத்தம்-வெள்ளம்,—பிரிந்தது—;

வெள்ளம் மருதப்பறையாகிய கிணையொலிக்க, மிக்க தலைமையுடனே பூமிகிழியுமாறு வெகுதூரஞ்சென்று தன்னில்தொடர்ந்த பலவாய்க்கால்களிலும் பிரிந்து சென்றதென்பதாம். கால்ஒன்றின் ஒன்று பிரிதல்-ஒரு பெருவாய்க்காலிலிருந்து பலசிறுகால்பிரிதல்.

குலமும் பலகிளைகளாகப்பிரிதலால், காலொன்றினென்று பிரிதற்குக்குலம்பிரிதல் உவமையாயிற்று. கரைகாக்கும் மள்ளர்புதுவெள்ளம் வரும்போது பறைசாற்றுதலை "காப்பவர் செவ்வனுருயிரஞ்சிலைக்கும் பம்பையும்" என்றதனாலுமறிக. பி-ம்:—[1]வெள்ளங்.[2]தூங்கச். [3]சேத்த. [4]முத்தொடு. [5]வீச. [6]வரன்றலையவாகி. மாந்தலையவாகி, ஆன்றலையதாகி. [7]கிமிர்ந்த.[8]கார். [9]கிழித்து,நிரம்ப.[10]மீண்டு. [11]கோத்ததால். [12]ஒன்ருேடொன்றில். [13]பிரிந்தமாதோ. (30)

19.—சரயுவெள்ளம் பலநிலையை யடைதல்.

கல்லிடைப் [1]பிறந்து போந்து கடலிடைக் [2]கலந்த நீத்தம்
எல்லையின் [3]மறைக ளாலு மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி லொன்றே [4]யாகித் துறைதொறும் [5]பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே.

(இ - ள்) கல் இடை பிறந்து - இமயமலையிலுற்பத்தியாகி, போந்து-(அங்குநின்று) வெளிப்பட்டுவந்து, கடலிடை கலந்த-சமுத்திரத்திலே சேர்ந்திட்ட, நீத்தம் - (அந்தச்சரயுநதியின்) வெள்ளம்,—எல்லை இல் மறைகளால்உம் - அளவிடமுடியாத [அனந்தங்களான] வேதங்களாலும், இயம்ப அரு - (இப்படிப்பட்டதென்று அளவிட்டுச்) சொல்லுதற்கு அருமையான, பொருள் ஈது என்ன -பரம்பொருள்போலும் இது என்று சொல்லும்படி, தொல்லையில் ஒன்று ஏ ஆகி - ஆதிகாலத்தில் ஒன்ருகவேயிருந்து [சரயுவெள்ளமென்று ஒருபெயருடனிருந்து], துறை தொறுஉம் - (ஏரி குளம் முதலிய) இடங்களிலெல்லாம்,—பரந்த சூழ்ச்சி பல் பெரு சமயம் சொல்லும் பொருள்போல்உம் - பரந்த ஆராய்ச்சியையுடைய பல பெருஞ்சமயத்தவர் (அந்தப்பரம்பொருளைச்) சொல்லும்பொருள் (பலபடிப்பட்டிருப்பது) போலவும், பரந்தது - (பலபடியாகப்) பரவியிருந்தது: (எ-று.)

பரம்பொருள் ஒன்றேயாயிருப்பதுபோலச் சரயுநீர்வெள்ளம் ஒன்றேயாயிருந்தும், பல சமயத்தவர் சூழ்ச்சிக்கு உட்பட்டு அப்பரம்பொருள் பலபடியாகச் சொல்லப்படுவதுபோல ஏரி தடாகம் முதலிய பல இடங்களிற் பொருந்திப் பலபெயருடனே வழங்கலாயிற்றென்க; உவமையணி. பெருஞ் சமயமென்ருர், வாதிக்கும்நூல்கள் பலவற்றைக்கொண்டமையால். பி-ம்:—[1]கிடந்து. [2]கலந்து, [3]மறைகளெல்லாம். [4]ஆகத். [5]விரிந்த, விரித்த. (31)

20.—பிரிந்த அவ்வெள்ளம் பலவிடத்தும் பாய்தல்.

தாதுகு சோலை தோறுஞ் [1]சண்பகக் [2]காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புது[3]மணத் தடங்க டோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே.

(இ - ள்.) தாதுஉகு சோலைதோறுஉம் - மகரந்தங்கள் சிந்துகின்ற சோலைகள்தோறும், சண்பகம் காடுதோறுஉம் - காடுபோல் மிகுந்திருக்கின்ற சண்பகச் சோலைதோறும்,போது அவிழ்பொய்கை தோறுஉம் - அரும்புமலரப்பெற்ற பொய்கைகள்தோறும், புது

மணம் தடங்கள் தோறுஉம் - புதுமணத்தைக்கொண்ட தடாகங்கள் தோறும், மாதவி வேலி பூகம் வனம் தொறுஉம் - குருக்கத்திக் கொடிகளை வேலியாகக்கொண்ட கமுகந்தோட்டந்தோறும், வயல்கள் தோறுஉம்—, ஓதிய உடம்பு தோறுஉம் உயிர் என - (நாற்கதியாகவுள்ளனஎன்று நூல்களிற்) கூறப்பட்ட உடம்புகள்தோறும் உயிர்சென்றுபுகுதல்போல, உலாயது-(அவ்வெள்ளம்) உலாவிற்று;

உயிர் நாற்கதிகளிலுமுள்ளஉடம்புகளிற் புகுந்து செல்லுதல் போல, அந்த வெள்ளமும் சோலைமுதலிய இடங்களிற் புகுந்து சென்றதென்றவாறு. உடலில் உயிர்புகுவதால் அவ்வுடல்செழித்துக்காட்டுவதுபோல, சரயு வெள்ளம் உலாவுவதால் சோலை முதலியன செழித்துக் காட்டுமென்க. கீழே சரயுவுக்குப் பரம்பொருளையொப்பிட்ட கவி, இங்கும் உயிர்க்குயிரான அப்பொருளேயே உயிரென்றாரென்றல் ஏற்கும். பி - ம்:—[1] சந்தனக். [2] காவு. [3] மணற்றடங்கடோறும். (32)

ஆற்றுப்படலம் முற்றிற்று.

---

2 - ஆவது நாட்டுப்படலம்.

கோசலநாட்டின் வளப்பத்தைக் கூறும்படலமென்க. நாடு - நாட்டுவளப்பத்துக்கு ஆகுபெயர். நகரப்படலமென்பதற்கும் இவ்வாறே.

1.—கவிக்கூற்று.

வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்றா னென்னயான் மொழிய லுற்றேன்.

(இ - ள்.) வாங்க அரு பாதம் நான்குஉம் வகுத்த - (எவராலும்) எடுத்துவிட்டு (ஏற்குமாறு வேறு) வைக்கமுடியாத நான்கு பாதங்களையுடைய சுலோகங்களைச் செய்த, வான்மீகி என்பான் - வால்மீகியென்னும் முனிவன்,—செவிகள் ஆர தேவர்உம் பருக - (இந்த நிலவுலகத்தவரேயன்றித் தமது) காதுகள் நிரம்புமாறு வானுலகத்தவரும் பருகும்படி, தீம் கவி - இனிய கவிகளைக் கொண்டு, செய்தான் - (இராமசரித்திரத்தை இராமாயண காவியமாகச்) செய்தான்: ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை - அந்தராமாயணத்தில் அவ்வால்மீகி முனிவன் புகழ்ந்துகூறிய கோசலநாட்டை, யான்—, அன்பு எனும் நறவம் மாந்தி - அன்புஎனப்படுகிற மதுவைப்பருகி, மூங்கையான் பேசல்உற்றான் என்ன-ஊமன்பேசத்தொடங்கினான்போல, மொழியல் உற்றேன் - புகழ்ந்து பேசலானேன்; (எ - று.)

நிலவுலகத்தாரேயன்றி வானுலகத்தவரும் இராமசரிதத்தைக் கேட்டு மகிழ்ந்து திருத்தியடையும்படி வால்மீகிமுனிவன் ஸ்ரீராமாயணத்திற் புகழ்ந்து கூறியகோசலநாட்டைச் சிற்றறிவினனாகிய யான் புகழ்ந்துகூறுதல், மூங்கையான் பேசத்தொடங்குவது போலப் பிறர் நகைப்பதற்குக் காரணமாகும்: முறைப்படி செய்கின்றதாகாது என்று அவையடக்கங் கூறுகின்றன ரென்க.

இங்ஙன் சிற்றறிவினராகிய தாம் புகழத்தொடங்கியது, மதுவைப் பருகியவர் 'தாம் செய்வது முறையோ? அன்றோ?' என்று ஆராயாது செய்யுஞ் செயலைப்போலு மென்பார், 'அன்பெனும் நறவமாந்தி' என்றார்; இதனால், இவர் கோசலநாட்டைப் புகழத்தொடங்கியதும் இராமாயணத்தைப்பாடத்தொடங்கியதுபோல் அன்பின் செயலேயாமென்றவாறு. அன்பெனும் நறவம்-உருவகம். வான்மீகி முனிவர்பாடிய ஸ்ரீராமாயணத்தில் எந்தக் கவியிலேனும் ஒரு பாதத்தை யெடுத்துவிட்டு வேறு ஒருபாதம் செய்து பொருந்துமாறு அமைத்தல் எவ்வளவு சிறந்த கவிஞர்க்கும் இயலாதென்பார், 'வாங்கரும் பாத நான்கும் வகுத்தவால்மீகி' என்றார். வேதத்தில்மாத்திரமே இருந்த சந்தசுகளை [பாக்களை]க் கொண்டு இந்த வான்மீகியே முதலில் ஸ்ரீராமாயணகாவியத்தைச் செய்து உலகத்தார்க்குத் தந்தனனாதலால், 'பாதநான்கும் வகுத்த வான்மீகியென்பான் தீங்கவிசெய்தான்' என்றார்; இதுபற்றியே இவர்க்கு 'ஆதிகவி' என்று ஒரு பெயர் வழங்கும். வகுத்த அ வான்மீகி என்று பிரிப்பாருமுளர். பாதம்-கவிதையின் ஓர் அடி. வடமொழியிற்செய்ததனால், 'தேவரும்பருக' என்றார். வால்மீகி-வல்மீகத்தினின்று பிறந்தவர்: வல்மீகம் - புற்று. பிருகுமுனிவரின் வமிசத்தவராய் ருக்ஷனென்றுபெயர்கொண்ட இம்முனிவர் சலியாது ஓரிடத்திருந்து கடுந்தவம் புரிந்தனராக, இவரைப் புற்று மூடிக்கொண்டிட, வருணன் மழை பெய்து அப்புற்றைக் கரைக்க, அதினின்று வெளிப்பட்டதனால், இம்முனிவர்க்கு இப்பெயர்வந்தது: இதனால், இவர் மஹாஞானியென்பது போதரும். பி - ம்:—[1]வான்மீகன். [2]பகரச், தீங்கறச். [3]நறவை. [4]மூங்கையர். [5]பேசலுற்றால், பேசலுற்றார். (33)

2.—நாட்டின் பலவளம்.

வரம்பெலா முத்தந் தத்து மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேதிக் குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலிப் பரப்பெலா மன்னம் பாங்கர்க்
[1]கரும்பெலாஞ் செந்தேன் சந்தக் காவெலாங் களிவண் டீட்டம்.

(இ - ள்.) வரம்பு எலாம் முத்தம் - (கழனிகளின்) வரம்புகளிலெல்லாம் முத்துக்களும், தத்தும் மடை எலாம் பணிலம் - (நீர்) தாவிப்பாயுந் தன்மையுள்ள மதகுகளிலெல்லாம் சங்குகளும், மா நீர் குரம்பு எலாம் செம்பொன் - பெரிய நீர்ப்பெருக்கையுடைய (வாய்க்கால்களின்) செய்கரைகளி லெல்லாம் செவ்விய பொற்கட்டிகளும், மேதி குழி எலாம் கழுநீர் கொள்ளை-எருமை வீழ்ந்து உழக்குகின்ற நீர்க்குழிகளிலெல்லாம் செங்கழுநீர்மலர்க்குவியலும், பரம்பு எலாம் பவளம்-பரம்படித்துச் சமமாக்கிய இடங்களிலெல்லாம் பவழங்களும், சாலி பரப்பு எலாம் அன்னம்-செந்நெற்பயிருள்ள பரந்த இடங்களி லெல்லாம் அன்னப்பறவைகளும், பாங்கர் கரும்பு எலாம் செந் தேன் - பக்கங்களிலுள்ள கரும்புகளிலெல்லாம் செந்நிறத்தேன்பெருக்கும், சந்தம் கா எலாம் களிவண்டு ஈட்டம் - அழகிய சோலைகளிலெல்லாம் மதுமயக்கங்கொண்ட வண்டுகளின் கூட்டங்களும், (அந்தக் கோசலநாட்டிலுள்ளன); (எ - று)

அந்தக் கோசலநாட்டின் வளத்தை முற்றக் கூற முடியாமை யால், 'காவெலாங்களிவண்டீட்டம்' என்று முற்றுக்கோடாமல் வாளாவிட்டன ரென்பர். நாடுஎன்பது மனிதர்க்கு இன்றியமையா உணவைக் கொண்டிருந்தால்தான் சிறக்கு மாதலால், அங்ஙன் உணவைத் தன்னிடத்துக்கொண்ட மருதநிலவளனை இதனாற் கூறுகின்றனர். அந்நாட்டைச்சார்ந்த மருதநிலத்தில் முத்தம் முதலி யவையும் நிரம்பியிருக்கின்றனவென்க. வரம்புகளில் முத்துக்கள் நிறைந்திருத்தலைக் கூறி, அம்முத்துக்கட்குக் காரணத்தை 'மடை யெலாம் பணிலம்' என்றார். கரும்பில் தேன்கூடு கட்டப்படுதலை ''தீங்கரும்பெருத்திற்றூங்கி யீயின்றியிருந்த தீந்தேன்'' என்ற இடத்துங் காண்க. பி-ம்:—[1] கரம்பெலாம். (34)

3.—பலவகையொலி.

ஆறுபா யரவ மள்ள [1] ராலைபா யமலை யாலைச்
சாறுபா [2] யோதை வேலைச் [3] சங்கின்வாய்ப் பொங்கு [4] மோதை
ஏறுபாய் தமர நீரி லெருமைபாய் துழனி யின்ன
மாறு [5] மா ருகித் [6] தம்மின் [7] மயங்குமா மருத வேலி.

(இ - ள்.) மா மருதம் வேலி - (அந்தக் கோசலநாட்டின்) மருத நிலத்தெல்லை,—ஆறு பாய் அரவம் - ஆற்றுநீர் பாய்வதனாலான ஓசையும், மள்ளர் ஆலைபாய் அமலை-உழவர் கரும்பாலையிற் பாய்ந்து (அதனைச் செலுத்துவதனாலுண்டான) ஓசையும், ஆலை சாறு பாய் ஓதை-கரும்பாலையிலிருந்து கருப்பஞ்சாறு பாய்வதனாலான ஓசை யும், வேலைசங்கின் வாய்பொங்கும் ஓதை-நீர்க்கரைகளிற் சஞ்சரிக் கின்ற சங்குப்பூச்சிகளின் வாயிலிருந்து மிகுதியாகத் தோன்றுகிற ஓசையும், ஏறு பாய் தமரம்-எருதுகள் (பொருகையில் ஒன்றன்மீது ஒன்று) பாய்ந்து தாக்குதலாலுண்டாகும் ஓசையும், நீரில் எருமை பாய் துழனி-நீரினிடத்து எருமைகள் விழுதலினாலுண்டாகிய ஓசை யும், (ஆகிய) இன்ன - இவைபோன்ற ஓசைகள், மாறுமாறு ஆகி -(தமக்குள் ஒன்றோடொன்று) மாறுபட்டனவாகி, தம்மின் மயங்கும்- ஒன்றோடொன்று கலந்திருப்பதற்கு இடனாகும்; (எ-று.)

நாட்டிற் பலவகையோசை நிரம்பியிருப்பதாகக் கூறும் கவிஞர் மரபின்படி அந்நாட்டு மருதவெல்லையில் பலவகை ஓசை உண்டாந் தன்மையைக்கூறுகின்றார். ஒலியென்ற பொருளுள்ள 'அரவம், அமலை' முதலிய பல சொற்கள் வந்தது-பொருட்பின்வரு நிலையணியாம். வேலைச்சங்கு - கடலிலிருந்து (புதுநீரிலேறி) வந்த சங்குப்பூச்சிகளெனினுமாம். மருதவேலி - எழுவாய். இனி, மருத வேலியில் ஆறுபாயரவம் முதலிய ஒலிகள் தம்முள் மயங்கும் எனக் கூறலுமாம். பி-ம்:—[1] ஆலைவாய். [2] ஓசை. [3] சங்குவாய். [4] ஓசை. [5] மாறுடி. [6] பாடை, பாடல், பாடில். [7] மயங்குமால், வயங்குமா. (35)

4.—மருதநிலத்தின் சிறப்பு.

தண்டலை மயில்க [1] ளாடத் தாமரை [2] விளக்கந் தாங்கக் [கத்
[3] கொண்டல்கண் முழவி [4] னேங்கக் [5] குவளைகண் விழித்து நோக்
தெண்டிரை யெழினி காட்டத் [6] தேம்பிழி [7] மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம் [5] வீற் றிருக்கும் மாதோ.

(இ - ள்.) மருதம்-மருதமென்ற அரசன்,—தண்டலை மயில்கள் ஆட-சோலை (யாகிய நர்த்தனசாலை) களில் மயில்(களாகிய நாட்டியப் பெண்)கள் நடனஞ் செய்யவும், தாமரை விளக்கம் தாங்க-தாமரைக் கொடி(களாகிய மகளிர் மலர்களாகிய) விளக்குகளை(த் தமது கை யில்) ஏந்தி நிற்கவும், கொண்டல்கள் முழவின் ஏங்க-மேகங்கள் மத் தளம்போலொலிக்கவும், தெள் திரைஎழினி காட்ட-தெளிந்த (நீர் நிலையில் தோன்றுகின்ற) அலைகள் திரைச்சீலையின் தன்மையைக் காட்டவும், தேம் பிழி மகரம் யாழின் வண்டுகள் இனிது பாட-இனிய தேனையொத்த மகரயாழினிசைகளை யொத்து வண்டுகள் இனிமையாகப் பாடவும், குவளை கண்விழித்து நோக்க-கருங்குவளை (மலர்களாகிய தனது) கண்களால் மலரவிழித்துப் பார்க்குமாறு, வீற்றிருக்கும்-பெருஞ்சிறப்போடு தங்கிநிற்பான்; (எ - று)

முழவம் கொட்டவும் யாழ் இசைசெய்யவும் எழினியினின்று வெளிப்பட்டு நாட்டியப்பெண்கள் ஆடுகையில் மகளிர் விளக்குக் களையேந்திநிற்க அந்தநாட்டியத்தை ஓரரசன் காணுமாறு வீற்றி ருத்தல்போல, கொண்டல்கள் ஒலிக்க வண்டுகள் ரீங்காரஞ்செய்ய மயில்களாடத் தாமரைக்கொடிகள் செந்தாமரைமலரை யேந்தி நிற்கக் குவளை கண்போலவிளங்க, மருதநிலம் சிறந்திருக்குமென்ற வாறு. மருதத்தினிடத்து ஓரரசனது தன்மையை யேறிட்டுக் கூறி யது; சுருங்கச்சொல்லலணி: ஸமாஸோக்தியலங்காரம் என்ப. இதற்கு, 'விளக்கந்தாங்க' 'கொண்டல்கள் முழவினேங்க,' 'குவளை கண்விழித்து நோக்க,' 'தெண்டிரையெழினிகாட்ட' முதலியவற்றி லுள்ள உவமை உருவகம் காட்சி என்னும் அணிகள் உபகாரப்பட் டன. 'குவளைக்கண்' என்னவரவேண்டியது செய்யுளோசையின் பொருட்டு இயல்பாய் வந்தது. மகரயாழ்-பத்தொன்பதுநரம்புகட்டிய வீணை: இங்கே இசைக்கு ஆகுபெயர். எழினி தன்னுள்ளேயிருப் பவராகிய கூத்தியரை மறைத்துப் பிறகு வெளிக்காட்டுதல்போலத் திரைகள் மயில்களை மறைத்து மறைத்துக்காட்டுதலால், 'தெண் டிரை யெழினி காட்ட' என்றது. தண்தலை - குளிர்ந்த இடத்தை யுடையது: சோலை: அன்மொழித்தொகை. பிழி - பிழியப்படுவது: தேன். மாதுஓ-ஈற்றசை. பி - ம்:—[1] ஆலத். [2] விளக்கதாக, விளக்க மேந்த. [3] கொண்டலை. [4] ஓங்க. [5] குவளைகள். [6] தேம்பின, தேம்பொழி, தேன்பொழி. [7] மதுர. [8] வீற்றிருந்தமன்னே. (36)

5.—வண்டுமுதலியவை தாமரைமுதலிய இடத்துத்தங்குகை.

தாமரைப் படுவ வண்டுந் [1] தகைவரு திருவுந் தண்டார்க்
காமுகர்ப் படுவ மாதர் கண்களுங் காம னம்பும்
மாமுகிற் படுவ வாரிப் பவளமும் வயங்கு முத்தும்
நாமுதற் படுவ மெய்யு [2] நாமநூற் பொருளு மன்னே.

(இ - ள்.) வண்டும்,—தகை வரு திருஉம் - அழகு வளர்கின்ற இலக்குமியும்,—தாமரை படுவ-தாமரைமலர்களில் தங்குவன; மாதர் கண்கள்உம்-மகளிருடைய கண்களும், காமன் அம்புஉம் - மன்மத னுடைய அம்புகளும்,—தண் தார் காமுகர் படுவ-குளிர்ந்தமாலையை யணிந்த காமுகரைத் தாக்குவன;வாரி பவளம்உம்-கடலில் தோன்று கின்ற பவழங்களும், வயங்கு முத்துஉம் - விளங்குகின்ற முத்துக்

களும், மா முகில் படுவ - பெரிய மேகங்களினு லுண்டாகின்றன; மெய்உம்-உண்மையும், நாமம் நூல் பொருள்உம் - பிரசித்தமான சாஸ்திரங்களின் பொருளும், நா முதல் படுவ - (அந்நிலத்தில் வாழ் கின்ற மக்களின்) நாவிலே தங்குவன; (எ - று.)

அந்நாட்டு நிலத்தின் வளத்தால் எங்கும் செந்தாமரை மலர்ந் திருப்ப அவற்றில் வண்டுகளும் திருவும் வந்து தங்கும்: அந்நிலத் தவரான மைந்தர் யாவரும் யாதொருகுறையுமின்றிக் களிப்புட னிருத்தலால் அவர்கள்மீது மகளிரின் பார்வை தாக்க, அந்தச் சமயம் நோக்கிக் காமனது மலர்க்கணையும் அவர்கள்மீது தாக்கும்; அரசன் தீநெறிச்செல்வாரை யொறுத்துத் தருமமே நடக்குமாறு செங்கோல்செலுத்துவதுபற்றித் தவறாது மழை பொழிவதனால் கடலிலே பவழம் முத்தும் மிகுதியாக உண்டாகும்; அந்நாட்டவர் மெய்ம்மொழியேயுரைப்பவராக இருத்தலோடு எப்போதும் சிறந்த நூற்பொருள்களைப் பயின்றவண்ணமாகவே யிருப்ப ரென்பதாம். கடலில் பவழமும் முத்து முதலியன மழையால் தோன்றுமென்ப. மூன்றாமடிக்கு-மேகங்கள் நீரைப்பொழிவதோடு நில்லாமல் பவழம் முத்து என்ற இவற்றையும், பொழிகின்றன என்பாரு முளர்: ப்ரஸ் துதங்களாகிய இவ்விரண்டுகளைச் சேர்த்து ஒவ்வொரு பொதுத் தன்மையில் அமைத்துக் கூறியது, ஒப்புமைக் கூட்டவணி. இரண் டாமடியில், படுவ=படுத்துவ: தன்வினை பிறவினைப்பொருளைக் காட்டிற்று. பி - ம்:—[1] தகைபெரும், தைதவரும். [2] நாமனும். இது முதற் பதினோராம் பாடல்வரை பாடல்களின்முறை வெவ்வேறு வகையாக உள்ளன. (37)

6.—சங்குமுதலியவை நீர்முதலியவற்றில் இனிதுதங்குகை.

நீரிடை யுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்கும் மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை யுறங்குந் [1]தோகை.

(இ - ள்.) சங்கம்-சங்குகள், நீரிடை உறங்கும்-ஜலத்தில் இனி தாகக் கிடக்கும்; மேதி-எருமைகள், நிழலிடை-(மரத்தின்) நீழலில், உறங்கும்-இனிது தூங்கும்; வண்டு-வண்டுகள், தாரிடை உறங்கும்- (மகளிரும் ஆடவரும் அணிந்த) பூமாலைகளில் இனிதாகக்கிடக்கும்; செய்யாள் - அழகியவளான இலக்குமி, தாமரை உறங்கும்-தாமரை மலரில் இனிது அமர்ந்திருப்பாள்; ஆமை - ஆமைகள், தூரிடை உறங்கும்-சேறுகளில் இனிது அமர்ந்திருக்கும்; இப்பி-முத்துச் சிப் பிகள், துறையிடை உறங்கும் - நீர்த்துறைகளில் இனிது அமர்ந் திருக்கும்; அன்னம்-அன்னப்பறவைகள், போரிடை உறங்கும்-நெற் போரில் இனிது தங்கும்; தோகை-மயிற்பறவைகள், பொழிலிடை உறங்கும் - சோலைகளில் இனிது தங்கி நிற்கும்; (எ - று.)

நீரிடைப் பாய்ந்து உழக்காமல் நிழலிடை மேதியுறங்குவ தனால், சங்கம் நீரிடையுறங்கும்; செய்யாள் தாமரையிலுறங்குவ தால் வண்டுகள் தாமரையை விட்டுத் தாரிடையுறங்கும்; தூரிடை ஆமை உறங்குவதனால், துறையிடை இப்பிஉறங்கும்; நெல்லைக்

கொறித்துக்கொண்டிராமல் பொழிலில் தோகை யுறங்குவதால், அன்னம் நெற்போரிடை யுறங்கு மென்க. சங்கம் முதலியவை நீர்முதலியவற்றில் இனிதுதங்கு மென்க. இதனாலும், வளனுடைமை பெறப்படும். போர்களில் அன்னப்பறவையுறங்குமென்பதை "சூட்டிற்குருகுறங்கும்" என்ற இடத்துங் காண்க. பி-ம்:—[1]மேகம்.

7.—அந்நாட்டில் விளங்குபவை.

படையுழ வெழுந்த பொன்னும் பணிலங்க [1]ளுயிர்த்த முத்தும்
[2]இடறிய [3]பரம்பிற் காந்து மினமணித் [4]தொகையு [5]நெல்லின்
மிடைபசுங் [6]கதிரு [7]மீனு [8]மென்றழைக் கரும்பும் வண்டும்
கடைசியர் முகமும் போதுங் கண்மலர்ந் தொளிரு [9]மாதோ.

(இ - ள்.) படைஉழஎழுந்த பொன்உம்-கலப்பைகளுழுதலால் (பூமியிலிருந்து) மேலேயெழுந்த பொன்னும், பணிலங்கள் உயிர்த்த முத்துஉம்-சங்குப்பூச்சிகள் வெளிவிட்ட முத்துக்களும், இடறிய பரம்பில் காந்தும் பரம்படித்த நிலங்களில் ஒளிர்கின்ற, இனம் மணி தொகைஉம்-பலவகையாயுள்ள இரத்தினங்களின் தொகுதியும், நெல்லின் மிடை பசுங் கதிர்உம் - நெற்களின் நிறைந்த பசியகதிர்களும், மீன்உம்—, மெல் தழை கரும்புஉம்-மெல்லிய இலைகளையுடைய கரும்பும், வண்டுஉம்—, கடைசியர் முகம்உம்-உழத்தியருடைய முகமும், போதுஉம்-தாமரைமலர்களும், கண்மலர்ந்து—, ஒளிரும் - விளங்கும்; (எ - று.)

பொன் முத்து மணித்தொகை இவைகட்குக் கண்மலர்தல் - ஒளியினால் விளங்குதல்; (கண் - உபசர்க்கம்.) நெல்லு மிடைந்த கதிருக்குக் கண்மலர்தல் - அவ்வவ்விடந்தோறும் பரவியிருத்தல்; (கண் - இடம்.) மீனுக்கும் வண்டுக்கும் கண்மலர்தல் - கண்கள் போலத் தோன்றிநிற்றல்; கரும்புக்குக் கண்மலர்தல் - கணுக்கள் பெற்று விளங்குதல்; (கண் - கணு.) கடைசியர்முகத்துக்குக் கண் மலர்தல் - தாம்இட்ட பயிர் செழித்துவிளைதலாலான மகிழ்ச்சியாற் கண்கள் மலர்ந்துநிற்றல்; போதுக்குக் கண்மலர்தல் [கள்மலர்தல்] - தேனோடு விகசித்து விளங்குதல். இந்தச்செய்யுளில், வருணிக்கத்தக்க பலபொருள்களைச் சேர்த்து, கண்மலர்ந்தொளிர்தலாகிய ஒரு பொதுத்தன்மையைப் பெற்றுள்ளனவாக்கூறியது - ஒப்புமைக்கூட்டவணி. 'கண்மலர்தல்' என்ற தொடர், சிலேடை. இறுதியிலுள்ள 'கண்மலர்ந்தொளிரும்' என்பது எங்கும் இயைவது, கடைநிலைத்தீவகம். ஈனும் மெல் தழை கரும்புஎன்று பிரித்து, மெல்தழை ஈனும்-மெல்லிய இலைகளை மிகுதியாகத் தோற்றுவிக்கின்ற கரும்புமாம். பி - ம்:—[1]உகுத்த, உதிர்த்த. [2]இடையிடை. [3]வரம்பிற். [4]தொகையின். [5]நெல்லு. [6]கதிர்கள். [7]ஈன்ற. [8]மென் கழைக். [9]மன்னோ. (39)

8.—பாணரின் பாடல்.

தெள்விளிச் சீறியாழ்ப் பாணர் தேம்பிழி [1]நறவ மாந்தி
வள்விசிக் கருவி பம்ப வயின்வயின் [2]வழங்கு பாடல்
வெள்ளிவெண் மாடத்[3]தும்பர் வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கட் டோகை யின்றுயி லெழுப்பு மன்றே.

(இ - ள்.) தெள் விளி சிறு யாழ் பாணர் - தெளிவான இசையையுடைய இசைப்பாட்டைப் பாடுதற்கு உரிய சிறிய யாழைக் கொண்ட பாணர்கள், தேம் பிழி நறவம் மாந்தி - இனிய வடித்த கள்ளைக் குடித்து, வள் விசி கருவி பம்ப வாரினாற் கட்டுதலமைந்த முழவம் (யாழினிசைக்குப் பொருந்த) ஒலிக்க, வயின் வயின்வழங்கு பாடல்-அவ்வவ்விடங்களிற்பாடுகின்ற பாடல்கள், வெள்ளிவெள் மாடத்து உம்பர் - வெள்ளிபோல் வெண்ணிறமான மாடங்களின் மேலிடங்களில், வெயில் விரி பசும் பொன் பள்ளி - வெயில்போன்ற ஒளியை வீசுகின்ற பசும்பொன்னாற் செய்யப்பட்ட கட்டிலிலுறங்குகின்ற, எள்ள அரு கருங் கண் தோகை - பழித்தற்கு அரிய கரிய கண்களைப் படைத்த தோகைபோலுஞ் சாயலுள்ள மகளிரை, இன் துயில் எழுப்பும்-இனிய உறக்கத்திலிருந்து எழச்செய்யும்; (எ-று.) —அன்று ஏ - ஈற்றசை.

பாணர்களின் பாடல், மாடத்தின் மேலுறங்கும் மகளிரையெழுப்பு மென்க. பாண்சாதி, சிறுபாண் பெரும்பாண் என இரு வகைப்படுமென்ப. தெள்விளி - அன்மொழி: இசைப்பாடல்: ''வீணைத்தெள்விளி யெடுப்பி'' என்றார், சிந்தாமணியிலும். பி-ம்:- [1]நறவை. [2]வயங்கு. [3]உச்சி. (40)

9.—தேனின் மிகுதி.

[1]ஆலைவாய்க் கரும்பின் றேனு மரிதலைப் பாளைத் தேனும்
[2]சோலைவாய்[3]கனியின் றேனுந் தொடை[4]யிழி யிருலின் றேனும்
மாலைவா யுகுத்த தேனும் வரம் [5]பிகந் தோடி [6]வங்க
வேலைவாய் மடுப்ப [7]வுண்டு மீனெலாங் [8]களிக்கு [9]மாதோ.

(இ - ள்.) ஆலைவாய் கரும்பின் தேன்உம் - கரும்பாலைகளிற் (சிதைந்த) கரும்பினின்று வெளிவந்த தேன்போலினிய சாறும், அரி தலை பாளை தேன்உம் - அரிந்த நுனிகளையுடைய (தெங்கு முதலியவற்றின்) பாளையினின்று தோன்றியகள்ளும், சோலைவாய் கனியின் தேன்உம் - சோலைகளிற் பழுத்த பழங்களின் சாறும், தொடை இழி இருலின் தேன்உம் - ஒழுங்காக இழிகின்ற தேன் கூட்டின் தேனும், மாலைவாய் உகுத்த தேன்உம் - பூமாலைகள் தம்மிடத்து வெளியிட்ட தேனும், வரம்பு இகந்து ஓடி-எல்லையில்லாமற் பெருகிச்சென்று, வங்கம் வேலை வாய்மடுப்ப-அலைகளையுடைய கடலினிடத்துப் போய்ச் சேர, மீன் எலாம் உண்டு களிக்கும்-(அக்கடலில் வாழும்) மீன்களெல்லாம் (அத்தேன்களை) உட்கொண்டு களிப்படையும்; (எ-று.)

அந்நாட்டு நிலத்திலிருந்து பெருகிச்சென்ற தேன்கள் கடலிற்போய் விழ, அதனால் உவர்க்கடல் தேன்கடலாக, அத்தேன்களை அக்கடலில்வாழும் மீன்கள் உண்டு களிப்புக்கொள்ளுமென்க. இதனால், அந்நாட்டவர் உதவுந் தன்மையரென்ற பொருளும் தொனிக்கும். இச்செய்யுளில் தேன்மிகுதி பெறப்பட்டது - வீறுகோளணி. வரம்புஇகந்து - கழனி குளம் ஏரி முதலியவற்றையெல்லாம் அழித்துக்கொண்டு என்றபடி. உண்டு - பருகி: பொதுவினை. பி - ம்:—[1]ஆலைவாய். [2]சோலைவீழ். [3]மலரின். [4]அழி, அளி. [5]இகழ்ந்து. [6]ஏங்க. [7]வேலை, நுங்கி. [8]களிப்ப. [9]அன்றே. (41)

10.—நீர்மலர்கள்.

பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
[1]கண்கைகான் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்[2]வார் கடைவாய் மள்ளர் [3]களைகிலா [4]துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் [5]பெற்றால்.

(இ - ள்.) உண் கள் வார் கடைவாய் மள்ளர் - குடிக்கின்ற கள் ஒழுகாநிற்கும் வாயோரங்களையுடைய உழவர்,— பண்கள் வாய் மிழற்றும் இன்சொல் கடைசியர் - பண்கள்போல (இனிமையாக) வாயினாற் பேசுகின்ற இன்சொற்களையுடைய உழத்தியரின், பரந்து நீண்ட கண் கை கால் முகம் வாய் - அகன்று நீண்டுள்ள கண் கை கால் முதலியஉறுப்புக்களை, ஒக்கும் - ஒத்திருக்கின்ற, களை அலால் - (கருங்குவளைமலர் தாமரைமலர் செவ்வாம்பன்மலர் என்ற மலர்களாகிய) களைகளல்லாமல், களை இலாமை - (பயிருக்குக்) களையாகத்தோன்றியவை (வேறொன்று) இல்லாமையால், களைகிலாது - (அந்தக்களைகளைக்) களைய மனம்வராமல், உலாவி நிற்பார் - (களைபறிக்கவேண்டிய காலங்களில்) உலாவிக்கொண்டிருப்பார்கள்; (இது தக்கதே: எப்படியென்றால்),—சிறியோர் - கீழோர், பெண்கள் பால்வைத்த நேயம் பெற்றால் - பெண்களிடத்துவைத்த அன்பை [தாம் அன்புவைத்தலை]ப் பொருந்தினால், பிழைப்பரோ - (பின் அதனினின்று) தவறுவாரோ? (எ - று.)

சிறியோர் பெண்கள்பால் தாம் அன்பு வைத்தாராயின் அதனைத் தவிரவேண்டியகாலத்தும் தவிரமாட்டார்களென்ற பொதுப்பொருளை, உழவர் களைபறிக்கவேண்டிய காலத்தும் களையாயிருப்பவைகள் தாம் அன்புவைத்த மகளிரின் கண் கால் முதலிய உறுப்புக்களைப் போன்றிருத்தலிற் களைபறியாது உலாவித் திரியலாயின ரென்ற சிறப்புப்பொருள்கொண்டு விளக்கினார்; வேற்றுப்பொருள்வைப்பணி. கண் - கருங்குவளையையும், வாய்- செவ்வாம்பலையும், கை கால் முகங்கள் - தாமரைமலரையும் ஒக்கும். [4]உலோபிநிற்பார் என்ற பாடத்திற்கு - விருப்பங்கொண்டு வாளர் விருப்பரென்க. [5]பேற்றால்என்று பாடமாயின், வேறொருபயனால் என்க. பி-ம்:—[1]கண்கள். [2]வாய். [3]களைகலாது. [4]உலோவுகிற்பார். (42)

11.—மங்கையரின் மிகுதி.

புதுப்புனல் குடையு மாதர் [1]பூவொடு நாவி பூத்த
[2]கதுப்புறு வெறியே நாறுங் கருங்கடற் றரங்க மென்றால்
[3]மதுப்பொதி மழலைச் செவ்வாய் [4]வாட்கடைக் கண்ணின் மைந்தர்
[5]விதுப்புற [6]நோக்கு [7]மின்னார் மிகுதியை விளம்ப லாமோ.

(இ - ள்.) கருங் கடல் தரங்கம் - கருநிறமாகத்தோன்றுகின்ற சமுத்திரத்தினுடைய அலைகள்,—புது புனல் குடையும் மாதர் - புதுவெள்ளத்தின் நீரில் நீராடுகின்ற மகளிருடைய, பூவொடு நாவி பூத்த கதுப்பு - மலர்களும் கஸ்தூரிக்குழம்பும்பொருந்தியகூந்தலில், உறு-மிக்கிருக்கிற, வெறியே -மணமே, நாறும்-வீசும்,என்றால்-, மைந்தர் விதுப்பு உற - ஆடவர் விருப்பம் மிக, வாள் கடைக் கண்ணின் நோக்கும் - வாட்படைபோன்றகூரியகடைக்கண்ணினாற்

(காதற்குறிப்புடன்) பார்க்கின்ற, மது பொதி மழலை செவ்வாய் மின்னார் - தேனினிமை நிரம்பிய குதலைச்சொற்களைச்சொல்லுகின்ற செந்நிறவாயையுடைய மின்னலையொத்த மகளிரின், மிகுதியை—, விளம்பல் ஆம்ஓ - சொல்லமுடியுமோ? (எ - று.)

நீராடும் யாற்றுவெள்ளத்தின் நீர், மலரையும் நாவியையும் அணிந்த அந்நாட்டுமகளிருடைய கூந்தலின் நறுமணங் கலக்கப் பெற்றுக் கடலிற் பாய்ந்து அதன் புலால்நாற்றத்தையும்நீக்கி நீரையும் நறுமணம் பொருந்தச் செய்யுமென்பது, முன்னிரண்டடிகளிற் கூறிய விஷயம்; வீறுகோளணி; இங்ஙனம் கடல்நீரும் நறுமணங் கமழுமாறு நீராடுதலால், அங்ஙனம் நீராடும் மகளிர் மிகப்பல ரென்று உய்த்துணரவைத்தது - அநுமானலங்காரமாம். "குரும்பை வெம் முலையாராடக் கூந்தலி னறவந்தோய்ந்த, இரும் புனலாறு பாய வெறிதிரை சுருட்டுந் தெண்ணீர்க், கருங்கடல் புலவுநீங்கி நறுமணங் கமழுமென்றால், முருந்துறழ்மூரலார்தம் மிகுதியை மொழியலாமோ" என்ற நைடதச் செய்யுளைக் காண்க. பி-ம்:—[1]போதொடு. [2]கதுப்புற, கதுப்பொடு. [3]மதுப்பொழி, மதுப்பொலி. [4]வாட்படைக். [5]விதிப்புற, விதிர்ப்புற, விதிப்புறு, வெதுப்புற. [6]நோக்க. [7]அன்னார். (43)

12.—ஆடவரின்மிகுதி.

வெண்டளக் கலவைச் சேறுங் குங்கும விரைமென் சாந்தும்
குண்டலக் [1]கோல மைந்தர்[2] குடைந்த நீர்க் [3]கொள்ளை சாற்
தண்டலைப் பரப்புஞ் சாலி [5]வேலியுந் [6]தழீஇய வைப்பும் [றின்
வண்டலிட் [7]டோட மண்ணும் மதுகர மொய்க்கு மாதோ.

(இ - ள்.) சாற்றின் - சொல்லுமிடத்து,—குண்டலம் கோலம் மைந்தர்குடைந்த-குண்டலத்தையணிந்த அழகிய ஆடவர் மூழ்கின, நீர் கொள்ளை - நீரின்மிகுதி,—(அந்நீர் பாயப்பெற்ற), தண்தலை பரப்புஉம் - சோலைப்பரப்புக்களும், சாலிவேலிஉம்-நெற்பயிர்களுண்டாகுமிடமும், தழீஇய-பொருந்திய, வைப்புஉம்-மருதநிலம் முழுவதிலும், வெண் தளம் கலவை சேறுஉம் - வெண்ணிறமாகி அழுத்தமாகவுள்ள (பச்சைக்கருப்பூரம் முதலிய) கூட்டுவர்க்கத்தோடுகூடிய சந்தனக்குழம்பையும், குங்குமம் விரை மெல் சாந்துஉம்-குங்குமப்பூ சேர்ந்த பரிமளமுள்ள மெல்லிய செஞ்சந்தனக்குழம்பையும், வண்டல் இட்டு-வண்டலாகப்படியுமாறு செய்து, ஓட - ஓடாநிற்க,—மண்உம் - (அவ்வண்டல்படிந்த) மண்ணிலும், மதுகரம் மொய்க்கும் - (மணத்தைநாடி) வண்டுகள் மொய்யாநிற்கும்; (எ - று.)—மாதுஓ - ஈற்றசை.

மைந்தர் நீராடின நீர்க்கொள்ளை-அம்மைந்தர்களின்கலவைச்சேற்றையும் குங்குமச்சாந்தையும் தாம் கொண்டு, சோலைப்பரப்பு சாலிவேலி இவைகளையுடைய மருதவைப்பு எங்கும் வண்டலாகச் செய்து ஓடும்: அதனால் மருதநிலமெங்கும் மணத்தை நாடி வண்டுகள் மொய்க்கு மென்பதாம். ஆடவராடும் நீர்மிகுதியைக் கூறினாரேனும், கீழ்ச்செய்யுளில் மகளிர்மிகுதியைப் பெறவைத்த நூலாசிரியர்க்கு, மிக்க நீரில் ஆடும் ஆடவர்மிகுதியைக் கூறுதலே கருத்தாகும். சாற்றின் என்றதை 'என்று சொல்க' என்று வருவித்து முடிக்க. பரப்புக்களிலும் மருதவேலிகளிலும்

தழீஇய வைப்புக்களிலும் நீர்கொள்ளை வண்டலிட்டு ஓடவெனினு மாம். சாற்றில்-விழவில் என்றலும் உண்டு. பி - ம்:—[1]கோதை மாதர். [2]அடைந்த. [3]கொள்ளைச், கொள்ளச். [4]சாற்றிற், சேற்றிற். [5]வேலியின். [6]தரளக்கொத்தின், தரளக்கொத்தும், தழீஇயவைப் பின். [7]ஓடும், ஆட, ஆடு. (44)

13.—பண்ணையின் வருணனை.

சேலுண்ட [1]வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட [2]சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் [3]சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரை[4]தா லாட்டும் பண்ணை.

(இ - ள்.) பண்ணை - வயல்களில்,—சேல் உண்ட ஒண் கணாரில் - சேலென்னும் மீனையொத்த விளக்கமாகிய கண்களையுடைய ரான மகளிரிடத்து, (அவர்நடைகற்கவேண்டி), திரிகின்ற—, செங் கால் அன்னம்-செந்நிறமுள்ள பாதங்களையுடைய பெண்ணன்னப் பறவை, மால் உண்ட நளினம் பள்ளி-பெருமைபொருந்திய தாமரை மலராகிய படுக்கையில், வளர்த்திய-கிடத்தின, மழலை பிள்ளை - இளங்குஞ்சு,—கால் உண்ட சேறு மேதி - (மேயச்செல்லும்போது தமது) காலிற்பட்ட சேற்றையுடைய எருமைகள், கன்று உள்ளி கனைப்ப - (ஊரில்விட்டுவந்த தமது) கன்றை நினைத்துக்கனைப்பத னால், சோர்ந்த-(அவற்றின் முலையினின்று தானே) பெருகிய, பால் உண்டு - பாலைக் குடிக்க, (பிறகு), துயில - இனிது உறங்குமாறு, பச்சை தேரை-பசுநிறமுள்ள தவளை,—தாலாட்டும்-. (எ - று.)

அன்னப்பறவைகள் தமதுகுஞ்சுகளை மலர்ப்படுக்கையிற் கிடத்திவிட்டு ஒண்கணாரிடத்துச்சென்றனவாக, எருமைகள் தமது கன்றுக்கு இரங்கித் தமதுமுலைவழியே பெருக்கிய பால் அக்குஞ்சு கட்கு உணவாக, பிறகு அவை இனிது துயிலுமாறு தாலாட்டுப் போலத் தேரைகள் ஒலிசெய்யுமென்க. எருமைகள் தமதுகன்றின் மீது அன்பினால் பால் சுரக்குந்தன்மையன என்பதை "கனைத் திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி, நினைத்து முலைவழியே நின்று பால்சோர" என்ற பாசுரத்திலுங் காண்க. "ஊரினின்ற கன்றுள் ளிட மென்முலைத், தாரைகொள்ளத் தழைப்பனசாலி" என்பர், மேலும். திருமகள் தங்குஞ் சிறப்புவாய்ந்ததாதலால், 'மாலுண்ட நளினம்' என்றார். மாலுண்ட பிள்ளை - (தாம்)அன்பு பூண்ட இளங் குஞ்சு எனினுமாம். மழலை - இளமைக்கு இலக்கணை. [4]தாராட்டு மென்றபாடத்துக்கும் தாலாட்டும் என்றேபொருள்: இனி, அந்தப் பூவினைத் தொட்டிலையாட்டுவதுபோலஆட்டு மென்றுமாம். பி-ம்:—[1]உண். [2]சேற்றின். [3]சேர்ந்த. [4]பாராட்டும். (45)

14.—சோலைவருணனை.

குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் [1]குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடு மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம் பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை.

(இ - ள்.) சோலை - சோலைகளில், குயில் இனம் - சேவலும் பேடையுமாகிய குயில்கள், வதுவைசெய்ய-மணஞ்செய்ய,—கொம்பு இடை - மரக்கிளைகளில், குனிக்கும் மஞ்ஞை - ஆடுந்தன்மையுள்ள மயில்கள், அயில் விழி மகளிர் ஆடும் அரங்கினுக்கு - வேற்படை போன்ற கண்களையுடைய மகளிராடுகின்ற நர்த்தன சாலையினும், அழகுசெய்ய - (அச்சோலைக்கு மிக்க) அழகை யுண்டாக்க,—பயில் சிறை அரச அன்னம் - நெருங்கிய சிறகையுடைய அரசவன்னப் பறவைகள், பல் மலர் பள்ளி நின்றும் - பலவாகிய தாமரைமலர் களாகிய படுக்கையினின்றும், துயில்எழ- துயில் நீங்குமாறு, தும்பி- வண்டுகள், காலை - காலையில், செவ்வழி - செவ்வழிப்பண்ணை, முரல்வ - பாடுவன; (எ - று.)

சோலைகளில் ஒருபால் குயிலினம் கிளைகளில் வதுவைசெய்யா நிற்க, ஒருபால் மயிற்குலம் கூத்தாடி அந்தச்சோலையை நர்த்தன சாலைகளினும் அழகு மிகச்செய்ய, ஒருபால் அரசவன்னம் துயிலெழுமாறு வண்டுகள் செவ்வழிப்பண்ணைக் காலையிற் பாடுமென்க. அரசவன்னம்-ராஜஹம்ஸம்; இதற்கு, தாள் முதலிய உறுப்புக்கள் செந்நிறமாக இருக்குமென்ப. செவ்வழி-மாலையில்பாடும் பண். தும்பி காலையில் மாலைச்செவ்வழியைப்பாடியது, மதுவுண்ட மயக்கத்தாலாகும். பி - ம்:—[1] குதிக்கும். இதன்பின் சிலபிரதிகளில் "முந்து" (22) என்ற பாடலுள்ளது. ஐயரவர்கள்பதிப்பில் இங்கே ஒருபாடல் காண்கின்றது வருமாறு:—

காளையர் சேறு தன்னைக் கலந்துடன் மிதித்து நட்ட
தாள்களுங் கழுநீர் நாறுந் தடக்கையு மதுவே நாறும்
ஆளையுஞ் சீறிப் பீறி யணிமலர்க் கமுகிற் பாய்ந்த
வாளையும் பாளை நாறும் வயல்களு மதுவே நாறும். (46)

15.—இதுமுதல் நான்கு கவிகள்—குளகம்: பலரும் பலபடி இனிது போதுபோக்குதலைத் தெரிவிக்கும்.

பொருந்திய மகளி [1]ரோடு [2]வதுவையிற் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றென்ன வியலிசைப் பயன்றுய்ப் பாரும்
மருந்தினு மினிய கேள்வி செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகங்கண் [3]டன்ன விழாவணி விரும்பு வாரும்.

(இ - ள்.) பொருந்திய மகளிரோடு - (பருவம் வடிவம் குலன் செல்வம் முதலியவை) ஒத்துள்ள மகளிருடனே, வதுவையில் பொருந்துவார்உம் - விவாகச் சடங்கிற்பொருந்தியிருப்பவர்களும், பருந்தொடு நிழல் சென்று என்ன இயல் இசை பயன் துய்ப்பார் உம் - பருந்தோடு அதன் நிழலும் தொடர்ந்து செல்லுதல்போல இயலையொத்துச் செல்லுகின்ற இராகத்தின் இனிமையை யனுபவிப்பவரும்,—மருந்தின்உம் இனிய கேள்வி செவிஉற மாந்துவார் உம்-(நாவுக்கு இனிமையைத் தருகின்ற) தேவாமிருதத்தைக் காட்டிலும் (செவிக்கு) மிக்க இனிமையைத்தருகின்ற நூற்கேள்விகளை(த் தமது) செவிகளாகிற வாயாற் பொருந்த உட்கொள்வாரும், விருந்தினர் முகம் கண்டு - விருந்தினருடைய முகத்தைக் கண்டு, அன்ன விழா அணி விரும்புவார்உம்-(அவர்கட்கு) அன்னமளித்தலாகிய விழாவின் சிறப்பை விரும்புபவர்களும்,—(எ - று.)

சிலர் புதிதாய் மணந்தமகளிரோடு இன்பந் துய்த்தும், சிலர் இயலிசைப் பயன் துய்த்தும், சிலர் இன்கேள்விகளை நுகர்ந்தும், சிலர் விருந்தினர்க்கு உபசரித்தும் போதுபோக்குவ ரென்க. இயல் - பாடுதற்கு உரிய பாடல். பாட்டிற்கும் அதையொட்டிவரும் இசைக்கும் முறையே பருந்தையும் அது பறந்து செல்லுகையில் அதனையொட்டிச் செல்லும் நிழலையும் உவமை கூறினர்; "பருந்து நிழலும்போற் பாட்டு மெழாலும்" என்ற சிந்தாமணியும், அதன் உரையும் இங்கு நோக்கத்தக்கன. பொருந்திய என்பதற்கு - விவாகத்திற்குப் பார்க்கவேண்டிய பத்துவகைப் பொருத்தங்களும் சரியாக அமைந்துள்ள எனினுமாம். மூன்றாமடியில் "செவியுணவிற் கேள்வியுடையாரவியுணவின், ஆன்றாரோடொப்பர்நிலத்து" என்ற திருக்குறள் காண்க. ஈற்றடிக்கு - விருந்தினர் முகத்தைப் பார்த்து அப்படிப்பட்ட [மிகச்சிறந்த] திருவிழாவைக் கண்டாற்போல இனிது விரும்புபவரும் என்றுமாம். பி - ம்:—[1] ஆடும். [2] வதுவையுட். [3] என்ன. (47)

16\. கறுப்[1]புறு மனமுங் கண்ணிற் [2]சிவப்புறு சூட்டுங் காட்டி
உறுப் [1]புறு [3]படையிற் றுக்கி யுறுபகை யின்றிச் சீறி
வெறுப்பில களிப்பின் வெம்போர் [4]மதுகைய வீர [5]வாழ்க்கை
[6]மறுப்பட வாவி பேணு வாரணம் பொருத்து வாரும்.

(இ - ள்.) உறு பகை இன்றி சீறி - (முன்பு ஒன்றோடொன்று) பொருந்திய பகையில்லாமலே சீற்றங்கொண்டு, கறுப்பு உறு மனம்உம் கண்ணில் சிவப்பு உறு சூட்டுஉம் காட்டி - சினம் பொருந்திய மனத்தையும் கண்ணைக்காட்டிலும் செந்நிறம் பொருந்திய உச்சிக்கொண்டையையும் தோற்றுவித்து, உறுப்பு உறு படையில் தாக்கி - (தாளாகிய) உறுப்பிற் கட்டப்பட்டுள்ள வாட்படைகளினால் (எதிர்த்தகோழிகளைத்) தாக்கி, வெறுப்பு இல- (போர்செய்தலில்) வெறுப்பில்லாதனவாகி, களிப்பின் வெம் போர் மதுகைய—மனச்செருக்கோடு கொடிய போரைச்செய்யும் வலிமையையுடையனவும், வீரம் வாழ்க்கை மறு பட ஆவி பேணு - (தாம்) வீரத்தோடு வாழ்வதற்கு ஒருகுறையுண்டாகும்வண்ணம் (உயிர் தப்புமாறு ஓடிப்போகாமல் தமது) உயிரையும் ஒருபொருட்டாக மதியாதனவுமான, வாரணம் - கோழிகளை, பொருத்துவார்உம் - (போர்செய்யுமாறு) ஏவுபவர்களும்,—(எ-று.)

சிலர் கோழிப்போரினாற் பொழுதுபோக்குவதை இதனாற் கூறுகின்றனரென்க. இங்குக் கோழிப்போரை இயற்கையழகுபட வருணித்துக் கூறியது, தன்மைநவிற்சியணி. சினக்குறிப்பாகக் கண்சிவந்திருத்தலால், 'கண்ணிற் சிவப்புறு' எனப்பட்டது. கோழியைப் போர்க்கு விடுபவர் அதன்தாளிற் கத்தியைக் கட்டி விடுதல் இயல்பு ஆதலால்,'உறுப்புறுபடையில் தாக்கி' என்றார்: இனி, உறுப்பாகப் பொருந்திய படையினால் தாக்கி என்றுமாம். உறுபகையின்றிச் சீறி - "காரணமின்றிச் சீறி" என்றார் பிறரும். புறத்திணையில் 'கோழிவென்றி' என்று ஒரு துறையுண்டு. பி-ம்:— [1] உடை. [2] சிவப்பொடு. [3] படையிற்றுகி. [4] மதுகையர். [5] ஆக்கை. [6] மறுப்படா. (48)

17. எருமைநா கீன்ற செங்க [1]ணேற்றையோ [2]டேற்றை சீற்றத்து
உருமிவை யென்னத் தாக்கி [3]யூழுற நெருக்கி யொன்ருய்
விரியிரு ளிரண்டு கூருய் [4]வெகுண்டன [5]வணைய நோக்கி
அரியினங் குஞ்சி யார்ப்ப [6]மஞ்சுற வார்க்கின் ருரும்.

(இ - ள்.) எருமை நாகு - எருமைகள், ஈன்ற - பெற்ற, செம் கண் - செந்நிறக்கண்களையுடைய, ஏற்றையோடு - எருமைக்கடாவுடனே, ஏற்றை - மற்ருெரு எருமைக்கடா, இவை சீற்றத்து உரும் என்ன-'இவை கோபத்தையுடைய இடியாகும்' என்று சொல்லும்படி, தாக்கி - முட்டி, ஊழ் உற நெருக்கி - முறைமையாகநெருக்க, ஒன்று ஆய் விரி இருள் இரண்டு கூறு ஆய் வெகுண்டன அணைய - ஒருபொருளாக உலகம் முழுவதும் பரவுகின்ற இருள் இரண்டுபகுதியாகி (ஒன்ருேடொன்று) சினந்து பொருகின்றனவற்றையொத்தனவாகிய அந்தக்கடாக்களை, நோக்கி - வேடிக்கை பார்த்து, (அவற்றுள் ஒவ்வொன்றும் தன்தன்திறமையைக் காட்டும்போது), அரி இனம் குஞ்சி ஆர்ப்ப - (தமது சிரத்தையசைத்தலால் தாம்சூடிய மலர்களில்மொய்த்துள்ள) வண்டுகளின் கூட்டம் மயிர்முடியினின்று எழுந்து ஆரவாரஞ்செய்ய, (தாம்), மஞ்சு உற ஆர்க்கின்றார்உம் - மேகமண்டலம்வரையில் (தமதுகுரலொலி) செல்லுமாறு முழங்குபவர்களும்,... (எ-று.)

சிலர் எருமைக்கடாக்களைப் பொரவிட்டுப் போதுபோக்குதலை, இதனாற் கூறுகின்றனர். இருள் பிரிந்து இருபகுதியாகி ஒன்ருேடொன்று முட்டி நெருக்கிப் பொருவதுபோல எருமை ஒன்ருேடொன்று தாக்கிப் போர்செய்வது கண்டு, சிலர், தமதுகொண்டாட்டத்தைத் தெரிவிக்குமாறு தலைதுளுக்கி ஆரவாரஞ்செய்வரென்க. மூன்ருமடி - இல்பொருளுவமை. எருமை நாகு - இருபெயரொட்டு: "எருமையும் மரையும்பெற்றமு நாகே" என்பது, தொல்காப்பியம். பி - ம்:—[1]ஏற்றினேடு, ஏற்றினேர். [2]ஏற்ற, ஏறு. [3]ஊடுற, ஊழற. [4]வெகுண்டெனா. [5]அதனை. [6]அஞ்சுற,மைந்துற. (49)

18. முள்ளரை முளரி [1]வெள்ளி [2]முளையிற முத்தும் பொன்னும்
தள்ளுற மணிகள் [3]சிந்தச் சலஞ்சலம் புலம்பச் சாலில்
துள்ளிமீன் றுடிப்ப வாமை தலைபுடை சுரிப்பத் தூம்பி
னுள்வரா லொளிப்ப மள்ள ருழுபக [4]டுரப்பு வாரும்.

(இ - ள்.) முள் அரை முளரி - முள்ளரையையுடைய தாமரையின், வெள்ளி முளை-வெண்ணிறமான முளை-இற-ஒடியவும், முத்து உம் பொன் உம் தள்ளுஉற - (நிலத்திற் கிடக்கின்ற) முத்தமும் சுவர்ணமும் (அப்பால்) தள்ளப் படவும், மணிகள் சிந்த - இரத்தினங்கள் சிதறவும், சலஞ்சலம் புலம்ப - சலஞ்சலமென்னுஞ் சங்குகள் வாய்விட்டு அழவும், சாலில் மீன் துள்ளி துடிப்ப - உழுபடைச்சால்களில் மீன்கள் துள்ளித்துடிக்கவும், ஆமை தலை புடை சுரிப்ப - ஆமைகள் (தமது) தலையையும் பக்கத்துள்ள நான்கு கால்களையும் (தமது உடம்புகளில்) அடக்கிக்கொள்ளவும், தூம்பினுள் வரால் ஒளிப்ப - மதகுகளிற் சென்று வரால்மீன்கள் ஒளித்துக்கொள்ளவும், மள்ளர் உழு பகடு உரப்புவார்உம் - உழுகின்ற கடாக்களை அதட்டிச் செலுத்துகின்றவரானஉழவர்களும்,—(எ-று.)

'அங்குஉள்ளார்' என வருவித்து முடிக்க, இனி [4]உரப்புவாரால் என்ற பாடங்கொள்ளின், கீழ்ச்செய்யுளில், அங்குள்ளார் என்று முடிக்க. மள்ளர் உழுபடைகொண்டு நிலத்தை உழும்போது கழனிகளில் உழுபகட்டைஉரப்பியதனால் முளைத்திருக்குந் தாமரையின் முளை இறுதல் முதலியன நிகழ்ந்தன வென்க. சலஞ்சலம் - சங்கின் சாதிபேதம். ஏதேனும் ஒன்று தம்மீது படும்போது ஆமை தனது உறுப்புக்களை உடலில் அடக்கிக்கொள்ளுதல், இயல்பு. பி - ம்:—[1]வெள்ளை. [2]முளையினில். [3]சிந்தி. இந்தச் செய்யுளின்பின் "முந்து" (22) என்ற பாடல் சிலபிரதிகளிலும், சிலபிரதிகளில் "சேலுண்ட" (13) என்ற பாடலும் காணப்படுகின்றன. (50)

19.—விளைபொருள்களின் ஏற்றுமதி.

முறையறிந் தவாவை [1]நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கு மிசை[2]கெழு வேந்தன் காக்கப்
பொறை[3]தவிர்ந் துயிர்க்குந் தெய்வப்[4]பூதலந் தன்னிற் பொன்
நிறைபரஞ் [5]சொரிந்து வங்க நெடுமுது காற்று [6]நெய்தல். [னின்

(இ - ள்.) முறை அறிந்து - மநுநீதியை யறிந்து, அவாவை நீக்கி - (குடிகளிடத்தினின்று பணத்தைக்கொள்ளவேணுமென்ற) ஆசை சிறிதுமில்லாமல், முனிவுஉழி முனிந்து - சினங்கொள்ள வேண்டியவிடத்துச் சினங்கொண்டு தண்டித்து, வெஃகும் இறை அறிந்து-(தான்) விரும்பத்தக்க கடமைப்பொருளை யறிந்து பெற்று, உயிர்க்கு நல்கும்-(தன் செங்கோலின்கீழ் வாழும்) பிராணிகளிடத்து இரக்கங்கொள்கின்ற, இசை கெழு வேந்தன் - புகழ்விளங்குகின்ற அரசன், காக்க - பாதுகாத்தலினால், பொறை தவிர்ந்து - (பாவம் நிரம்புதலினாலாகிய) சுமை நீங்கி, உயிர்க்கும் - இளைப்பாறுகின்ற, தெய்வம் பூதலந்தன்னின்-பூமிதேவியைப் போல, வங்கம் - கப்பல்கள், பொன்னின் நிறை பரம் சொரிந்து - அருமையான பொருள்களின் நிறைந்த பாரத்தை (இந்நாட்டினின்று ஏற்றிக்கொண்டு சென்று) இறக்கிவிட்டு, நெய்தல் - நெய்தல்நிலத்தில், நெடு முதுகு ஆற்றும் - (தன்) நீண்டமுதுகை(ப் பாரத்தைச் சுமந்ததனாலான வருத்தத்தை) யாற்றிக்கொள்ளும்; (எ - று.)

இந்தநாட்டில் அருமையான பலபொருள்கள் மிகுதியாகவிளைதலால் அவற்றில் வேண்டியனபோக எஞ்சியவற்றை வேற்றுநாட்டிற்கு மரக்கலங்கள் ஏற்றிச்சென்று இறக்குதலைக் கூறுகின்றார். இங்ஙனம் பலபொருள்களை யேற்றிக்கொண்டு சென்று இறக்கிய பிறகு அந்தமரக்கலம் முதுகாற்றிநிற்பதற்கு, செங்கோல் மன்னன் அரசுசெய்வதாற் பாரமற்று இளைப்பாறி நிற்கும்பூமியை உவமை கூறினார். வேந்தன் - தயரதனென்னலாம். 'முனிவுழி முனிதல்- அறத்திற்கு மாறான செயலைப் புரிபவரைக் கடிந்து தண்டித்தல். வெஃகும் இறை-ஆறிலொன்றாகிய கடமை.இறையறிந்து உயிர்க்கு நல்கும் - மரணபாயம் நேர்வதையறிந்து அதுநேரவொட்டாது கருணைபுரிகின்ற என்றும், [4]பூதலமதனின்-பாரம் நீங்கிய பூமியிலே, வங்கம்பாரத்தைத்தரும் என்றும் கூறுப. பி - ம்:—[1]நீங்கி. [2]எழு. [3]அறிந்து, இரந்து. [5]சொரிந்த. [6]அன்றே. (51)

20.—அறுத்த நெல்லைப் பண்டியினாற் கொண்டுசேர்த்தல்.

எறிதரு மரியின் சும்மை [1]யெடுத்துவா னிட்ட போர்கள் [வார்
குறிகொளும்போத்திற்[2] கொல்வார் கொன்றநெற் குவைகள் செய்
வறியவர்க் குதவி மிக்க விருந்துண மனையி [3]லுய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி [4]நிறைத்துமண் ணெளிய வூர்வார்.

(இ - ள்.) (மள்ளர்),—எறிதரும்-(வாள்கொண்டு) அரியப்பட்ட, அரியின் சும்மை - நெல்லரிகளின் தொகுதிகளை, எடுத்து—, வான் இட்ட-ஆகாயமளாவப் போகட்ட, போர்கள் - நெற்போர்களை, குறிகொளும் போத்தில் கொல்வார்-(தம்மைச்செலுத்துவோரின்) கருத்தின்படி செல்கின்ற கடாக்களைக்கொண்டு துவைப்பிப்பார்; கொன்ற நெல்-(அங்ஙனம்) மிதிப்பித்ததனாற் (கதிரினின்று) கீழ் வீழ்வித்த நெற்களை, குவைகள் செய்வார் - குவித்து, - வறியவர்க்கு உதவி - ஏழைகட்குக் கொடுத்து, மிக்க - எஞ்சிய தானியங்களை, விருந்து உண-விருந்தோடு உண்ணுமாறு, மனையில் - (தமது) வீடுகளில், உய்ப்பான் - கொண்டுபோய்ச் செலுத்தற்காக, நெறிகளும் புதைய-(செல்லுகின்ற) வழிகளும் குழிந்து போம்படி, பண்டி நிறைத்து - வண்டிகளில் நிறைத்து, மண் நெளிய-(பாரமிகுதியைத் தாங்கமாட்டாது) நிலமும் முதுகு நெளியும்படி, ஊர்வார்-செலுத்துவார்கள்;

மள்ளர்கள் நெற்கதிர்களை யறுத்துக் கடாக்களைக்கொண்டு துவைப்பித்து நெற்களைக் குவித்துக் களப்பிச்சைமுதலியவற்றை யீந்திட்டுத் தமக்கு உரிய பகுதியை வண்டிகளில் நிறையவேற்றித் தமதுமனையிற் சேர்ப்பரென்க; எழுவாய் வருவிக்க. விருந்தைக் கூறினது, தென்புலத்தார்முதலிய மற்றையோர்க்கும் உபலட்சணம். குறிகொளும்போத்து-''விளைஞர்தங் குறிப்பிற் செல்லுவ'' என்றார், பிறரும். ''ஈடு சால் போரழித் தெருமைப்போத்தினன், மாடுறத் தெழித்துவைகளைந்துகாலுறீஇச், சேடுறக்கூப்பிய செந்நெற்குப்பைகள்'' என்றது முதலிரண்டடியோடு ஒப்பிடத்தக்கது. 'குறிகளும் போற்றிக்கொள்வார்' என்றபாடம் - போகட்டபோரில் அடையாள முத்திரைகளையும் வைத்துக்கொள்வார்கள் என்று பொருள் கூறப்படும்: ஆயினும், சிறவாமை காண்க. பி - ம்:—[1]எடுத்துள்ளார். [2]கொள்வார்கொண்ட. [3]உய்ப்பார். [4]நிரைத்து. (52)

21.—மள்ளர் பலபொருள்களையும் மெல்லக் கொள்ளுதல்.

கதிர்படு வயலி னுள்ள கடிகமழ் பொழிலி னுள்ள
முதிர்[1] பல மரத்தி னுள்ள [2]முதிரைகள் புறவி னுள்ள
பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள
மது[3] வள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்.

(இ - ள்.) கதிர் படு வயலின் உள்ள - கதிராக விளைகின்ற வயலிலுள்ள தானியங்களையும், கடிகமழ் பொழிலின் உள்ள முதிர் பல மரத்தின் உள்ள - நறுமணம்வீசுகின்ற பொழிலிலிருக்கும் முதிர்ந்த பலமரங்களிலுள்ள பழங்களையும், புறவின் உள்ள முதிரைகள்-கொல்லையில் விளைவனவான (துவரை முதலிய) பருப்பு வகைகளையும், பதி படு கொடியின் உள்ள - (பூமியிற்) பதிக்கப்பட்ட

கொடியிலுண்டாகும் பொருள்களையும், படி வளர் குழியின் உள்ள-பூமியில்வளர்கின்ற குழிதோண்டிப் பெயர்த்தெடுக்கவேண்டிய மஞ்சள் இஞ்சி போன்ற பொருள்களையும்,—மள்ளர் - உழவர்,—வளம் மலரின் - வளப்பமுள்ளமலர்களினின்று, மது கொள்ளும்-தேனைக் கொள்கின்ற, வண்டு என-வண்டுகளைப்போல, கொள்வார் - (மெல்ல மெல்ல) எடுத்துக்கொள்வார்கள்; (எ - று.)

வண்டுகள் பலமலர்களிடத்துஞ்சென்று தேனைக்கொணர்ந்து ஓரிடத்திற் சேர்ப்பதுபோல மள்ளர் எல்லாவிடத்துஞ்சென்று அவ்வவ்விடத்துப்பொருள்களை அந்நாட்டிற் கொண்டுவந்துசேர்ப்பரென்பதாம். உவமையால், சாரமான பொருளைத் தயங்காமற் கொள்ளும் மள்ளரது தன்மை பெறப்படும். படிவளர் குழியினுள்ள -பாத்திகளில் வளருங் கீரைமுதலியன என்பாருமுளர். பொழிலினுள்ள, 'உள்ள'-குறிப்புப்பெயரெச்சம்; மற்றவை - வினையாலணையும் பெயர்கள். [3]வனமலர் - வனப்புமலரென்பதன் விகாரம்: வனம் மலர் என்றுபிரித்து-வனத்திலுள்ளமலரென்று உரைப்பாருமுளர். பி-ம்:—[1]பயமரத்தின். [2]முதிரைகொள். சிலபிரதிகளில் இதன்பின் "பருவமங்கையர் (23)" என்ற பாடல் உள்ளது. (53)

22.—மள்ளர், அந்தணர் முதலியோர்க்குத் தந்து விருந்தோடுஉண்டல்.

முந்துமுக் [1]கனியி [2]ஞானு முதிரையின் முழுத்த [3]நெய்யின்
[4]செந்தயிர்க் கண்டங் கண்ட மிடையிடை செறிந்த சோற்றின்
தந்தமி லிருந்து தாமும் [5]விருந்தொடுந் தமரி ேனாடும்
[6]அந்தண ரமுத ருத்தி யயிலுறு மமலைத் தெங்கும்.

(இ - ள்.) எங்கும்-(அந்தநாட்டின்) எவ்விடமும்,—அந்தணர் பிராமணரை, அமுது அருத்தி - உணவுண்ணச்செய்து, (பிறகு), தம் தம் இல்- தம்தம்முடைய வீட்டிலே, விருந்தொடுஉம் தமரினோடுஉம் தாம்உம் இருந்து-விருந்தினரோடும் பந்துக்களோடும் தாமும் இருந்து,—முந்து முக்கனியின் - (எல்லாக்கனிகளினுஞ்) சிறந்த (மா வாழை பலா என்ற) முப்பழங்களினாலும், நானு முதிரையின்- பலவகைப்பருப்புக்களினாலும், முழுத்து அ நெய்யின் - (அந்தப் பருப்புக்களை) முழுத்துகின்ற அப்படிப்பட்ட (மிக்க) நெய்யினாலும், செம் தயிர் கண்டம்-செந்நிறமுள்ள தயிர்க்கட்டிகளினாலும், கண்டம் -கண்டசர்க்கரைகளினாலும், இடை இடை செறிந்த சோற்றின் - (இவற்றிற்கு) நடுநடுவே நெருங்கிய சோற்றினாலும், அயில் உறும்-உண்கிற, அமலைத்து - ஆரவாரத்தையுடையது; (எ - று.)

மள்ளர் பலபொருள்களையும் விளைவித்துத் தாம் கொள்வதைக் கூறிய கவி, இதனால், அவ்விளைபொருள்களை அம்மள்ளர் எல்லாவருணத்தார்க்கும் பயன்படுமாறு ஏற்ற பெற்றி செய்வரென்பதைத் தெரிவிக்கக் கருதி, முதல்வருணத்தவரான அந்தணர்க்கு அவை பயன்படுவதைக் கூறி; மற்றையோர்க்குப் பயன்படுவதை உபலட்சணத்தாற் பெறவைத்தனரென்க. [6]அந்தணர்முதலோருண்டி என்றும் பாடமுண்டு: இனி, அந்தணரமுதவுண்டி என்ற பாடத்துக்கு,—அந்தணர்,—அமுதர்உண்டி - தேவருணவாகிய அவிசுகளை, அயில்உறும் - (தாம் செய்யும்

வேள்விகளில்) உண்ணச்செய்கின்ற, அமலைத்து என்க. முழுத்து என்பது இப்பொருளதாதலை "துதிக்கை முழுத்திற்று" என்ற (திருவாய்மொழி 3-1-1) ஈட்டிலும் காண்க. பி-ம்:—[1]கனியும். [2]ஆறு முதிரையும். [3]நெய்யும். [4]செந்தயிரொடுதேன்கண்டமுதலிய. [5]விருந்து நல்லமுதுண்டென்ன, விருந்தொடுமமுதுண்டென்ன, சிலபிரதிகளில் "முறையறிந்து (19)" என்றபாடல் இதன்பின். (54)

வேறு.

23.—மகளிர் கண்ணைப் பெண்வண்டென ஆண்வண்டு மயங்குதல்.

பருவ மங்கையர் பங்கய வாண்முகத்து
உருவ [1]வுண்கணை யொண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு [2]காமுற்று வைகலும்
மருத வேலியின் வைகின [3]வண்டரோ.

(இ - ள்.) வண்டு - (ஆண்) வண்டுகள்,—பருவம் மங்கையர்-இளம்பருவத்தையுடையமங்கைமார்களின், பங்கயம் வாள் முகத்து -தாமரைமலர்போன்ற ஒளிபொருந்திய முகத்திலுள்ள, உருவம் உண் கணை - அழகிய மையுண்ட கண்ணை, ஒள் பெடை ஆம் என கருதி - அழகிய பெண்வண்டாகுமென நினைத்து, அன்பொடு காமுற்று-அன்போடு ஆசைப்பட்டு, வைகலும்-நாடோறும், மருதம் வேலியின்-மருதநிலத்தில், வைகின-தங்கின; (எ - று.)

ஆண்வண்டுகள் மருதநிலத்திலுள்ள மங்கையருடைய கண்களைப் பெண்வண்டென்று மயங்கி, தமது பேடைகளிடத்துச் செய்யும் அன்பைக்கொண்டு தங்குவதற்கு இடனாவது, அந்நாட்டு மருதநிலமென்க. மங்கையர் கண்களைப் பெண்வண்டென்று கருதியதாக வந்தது, மயக்கவணியாம். கணை-கண்ணை: தொகுத்தல். காமுற்று - 'காமுறு' என்பதன் செய்தெனெச்சம். பி - ம்:—[1]ஒண், வேல். [2]காமுகர். [3]வண்டெலாம். (55)

24.—மகளிரும் வாளைமீனும்.

வேளை வென்ற [1]விழிச்சியர் வெம்முலை
ஆளை [2]நின்று முனிந்திடு [3]மங்கொர்பால்
பாளை தந்த மதுப்பரு கிப்பரு
வாளை நின்று மதர்க்கு மருங்கெலாம்.

(இ - ள்.) அங்கு ஓர்பால் - அந்த மருதநிலத்தினொருபக்கத்தில்,—வேளை வென்ற விழிச்சியர்-மன்மதனையும் (தமதுகண்விழிகளால்) வென்ற மங்கையரின், வெம் முலை-விருப்பத்தையுண்டாக்குகின்ற முலைகள், ஆளைநின்று முனிந்திடும்-வேலையாட்களை எதிராக நின்று கோபித்து வணங்கச்செய்யும்; மருங்கு எலாம்-(அந்த மருத நிலத்துப்) பக்கங்களிலெல்லாம், நின்று—, பாளை தந்த மது பருகி - (தென்னம்) பாளையினின்று உண்டான கள்ளைக் குடித்து, பருவாளை-பருத்த வாளைமீன்கள், மதர்க்கும் - மதங்கொள்ளும்;

மன்மதன் கணைகளால் வசப்படுத்தமுடியாத புருடனையும் மகளிரது விழிகள் வசப்படுத்துதலால், 'வேளைவென்றவிழிச்சியர்' என்றார்; வேள்-விருப்பத்தை யுண்டாக்குங் கடவுள். வேலை யென்பது வேளையென்று எதுகைநோக்கி வந்ததுமாம். வேளை வென்ற[1]முகத்தியர் - காமவிருப்பத்தைத்தருதலில் மன்மதனை

வென்ற முகத்தினழகை யுடையவர்: "காமனேர்வயங்குமுகத்தியர்" என்றார், வில்லிபுத்தூரார். மூன்றாமடியில் "பழனவாளை பாளை யுண்டென" என்ற பரிபாடல் காணத்தக்கது. பி - ம்:—[1]உழத்தியர். [2]வென்று. [3]ஆங்கு. (56)

25.—எருமைகளின் பாலால் செந்நெல் வளர்தல்.

ஈர நீர்படிந் திந்நிலத் தே[1]சில
கார்க ளென்ன வருங்கரு மேதிகள்
ஊரி னின்றகன் [2]றுள்ளிட [3]மென்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே.

(இ - ள்.) ஈரம் நீர் படிந்து - குளிர்ச்சியுள்ள நீரில் மூழ்கிக் கிடந்து, இ நிலத்து - (வானத்திலன்றி) இந்த நிலவுலகத்திலும், சில கார்கள் என்ன - சிலமேகத்துண்டங்கள் (சஞ்சரிப்பன)போல, வரும் - (வயல்களிற்) சஞ்சரிக்கின்ற, கரு மேதிகள் - கருநிறமுள்ள எருமைகள், ஊரில் நின்ற - ஊரிலே தங்கிவிட்ட, கன்று - (தமது) கன்றுகளை, உள்ளிட - நினைத்தலால், (அவற்றிற்குக்கன்றினிடத்துள்ள அன்பின்மிகுதியாற் சுரப்பெடுத்த), மெல் முலை - மெல்லிய முலைகள், தாரை கொள்ள - (பாலைத்) தாரையாகச் சொரிய, (அதனால்), சாலி - செந்நெற்பயிர்கள், தழைப்பன—;

எருமைகள் ஊரில்நின்றகன்றை நினைந்து தாம் பாலைச்சுரந்து பெருக்க, அந்தப்பால் ஒருவெள்ளம்போல் பாய்வதனால்செந்நெற் பயிர் தழைக்குமென்க; வீறுகோளணி. மேதிகளுக்கு 'கார்களென்ன வரும்' என்ற அடைமொழி கொடுத்த கவி, அந்தமேதிகளும் வெள்ளிய தாரைகளால் சாலியைத் தழைக்கச்செய்யும் என்று கூறிய நயம் காண்க. பி-ம்:—[1]செலக். [2]உன்னிட. [3]உண்,ஒண். (57)

26.—அரிசியைக் கழுவிய நீர் செந்நெலை வளர்த்தல்.

முட்டி லட்டின் [1]முழங்குற வாக்கிய
[2]நெட்டு லைக்[3]கழு நீர்நெடு [4]நீத்தந்தான்
பட்ட மென்கமு கோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலி னாறு வளர்க்குமே.

(இ - ள்.) முட்டு இல் - (வேண்டும்பொருளிற்) குறைபாடில்லாத, அட்டில் - சமையல்வீட்டிலே, முழங்குற வாக்கிய - ஒலிக்குமாறு கீழேவார்க்கப்பட்ட, நெடு உலை கழு நீர் - பெரிய உலையிற் சேர்ப்பதற்காக (அரிசி) கழுவிய கழுநீரினுடைய, நெடு நீத்தம் - மிக்கவெள்ளமானது,—பட்டம் மெல் கமுகு ஓங்கு - நீர்க்கரைகளில் முளைத்துள்ள மெல்லியகமுகினுடைய ஓங்கிவளர்ந்துள்ள, படப்பை - சோலைகளின் மூலமாக, போய்—,நட்ட செந்நெலின்நாறு - நடப்பட்ட செந்நெல் நாற்றுக்களை, வளர்க்கும்—; (எ - று.)

கீழேவார்த்தகழுநீர் கமுகந்தோட்டத்தின் மூலமாகப்பாய்ந்து செந்நெலையும் வளர்க்குமென்ற இதில், இந்நாட்டில் வந்த விருந்தினரெல்லாம் உண்ணும்படிஅன்னசாலை பலவுள்ளன வென்பது, தொனிக்கும். [3]கழுநீர் நெடுநீத்தம் என்ற பாடத்திற்கு - உலை வடித்த கஞ்சியென்க. பி - ம்:—[1]முழக்குறவாக்கிய. [2]நெட்டிலைக். [3]கழுநீரோடு, கழுநீர் நிறை. [4]நீத்தம்போய், நீர்த்ததான். (58)

27.—கோசலநாட்டுக் குப்பைமேடு.

சூட்டு டைத்[1] தலைச் [2]செந்நிற [3]வாரணம்
[4]தாட்டு ணைக்குடை யத்[5]தகை சான்மணி
மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்
கூட்டி னுய்க்குங் [6]குரீஇயின் குழாமரோ.

(இ - ள்.) சூட்டு உடை தலை - உச்சிக்கொண்டையைக் கொண்ட தலையையும், செம் நிறம் - செந்நிறத்தையுமுடைய- வாரணம் - கோழிகள், தாள் துணை - (தமது) காலிரண்டினாலும், குடைய - (குப்பைகளைச்) சீய்த்தலால், மேடு இமைப்பன - குப்பை மேடுகளில் விளங்குவனவான, தகை சால் மணி - தகுதி மிக்க இரத்தினங்களை, குரீஇயின் குழாம் - குருவிக்கூட்டங்கள், மின் மினி ஆம் என—மின்மினிப்பூச்சியென்று கருதி, கூட்டின் உய்க் கும் - கூட்டிற்கொண்டுபோய்ச் செலுத்தும்; (எ - று.)

கோழிகள் குப்பையைத் தமது கால்களாலே சீய்க்கையில் ஆங்குக்கிடந்து ஒளிவீசுகின்ற மணிகளை மின்மினியென்றுகருதிக் குருவிகள் தமது கூட்டிற் சேர்க்குமென்பதாம். குப்பைகளைச் சீய்த்தல், கோழிகட்கு இயல்பு. மணிகளைக் குருவி மின்மினி யென்று கருதியதாகக் கூறியது - மயக்கவணி. தம்குஞ்சுகளின் உணவுக்காகவோ, ஒளிவிளக்குக்காகவோ தம்கூட்டில் குருவிகள் மின்மினியைக் கொள்ளுமென்ப. பி-ம்:—[1]துணைத். [2]தாநிற. [3]வாரணத். [4]தாட்டனிற்குடையுந், தாட்டுணைக்குழையத், தாட் டுணைக்கடையத், தாட்டுடைக்குடையும். [5]ததை. [6]குரீஇயின்குழா மெலாம், குருவிக்குழாமரோ. (59)

28.—ஆய்ச்சியர் தயிர்கடைதல்.

தோயும் வெண்டயிர் [1]மத்தொலி [2]துள்ளவும்
மாய வெள்வளை வாய்விட் [3]டரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று [4]வணங்கவும்
[5]ஆயர் மங்கைய ரங்கை [6]வருந்துவார்.

(இ - ள்.) ஆயர் மங்கையர் - (அந்நாட்டிலுள்ள) இடைப் பெண்கள்,—தோயும் - (பாறைபோல்) தோய்ந்துள்ள, வெள் தயிர் - வெண்ணிறத் தயிரை(க் கடைகின்ற), மத்து ஒலி - மத்தினோசை, துள்ளஉம் - விட்டுவிட்டுமிகுந்தொலிக்கவும்,—மாயம் வெள் வளை - (தாம் கையிலணிந்துள்ள) விசித்திரத்தொழிலமைந்த வெண் ணிறமானசங்குவளையல்கள், வாய்விட்டு அரற்றஉம் - வாய்விட்டுக் கத்துவதுபோலப்பேரொலிசெய்யவும், தேயும் நுண் இடைசென்று வணங்கஉம் - மெலிந்த நுட்பமான (தமது) இடைகள் முன்னே போய்ப்போய் வளையவும், அம் கை வருந்துவார் - (தமது) அழகிய கைகளினால் வருந்திக் கடைவார்கள்; (எ - று.)

அந்நாட்டு இடைப்பெண்கள், கடையும் மத்தினொலியும் அப்போது கைவளைகள் குலுங்குவதனாலான ஒலியும் மிகுதி யாகத் தோன்றவும், தம் மெல்லிய இடை தள்ளாடி வணங் கவும், கைகளிரண்டும் வருந்தவும், தாம்புகொண்டு மாற்றி மாற்றி யிழுத்துத் தயிர் கடையலாயின ரென்க: இது தன்மை நவிற்சியணி. ஆயவெள்வளையென்றும் பிரிக்கலாம். [2]துள்ளல்

போய் மாய என்ற பாடத்துக்கு - மத்தின் துள்ளலொலி மறையும்படி அவர்களணிந்துள்ள வெள்வளை யரற்றுமென்க. வெள்வளையொலிப்பதை, 'தயிர்கடையுந்தொழில் இவர்மென்மைத் தன்மைக்கு ஏலா' எனக் கதறுவது போலுமென்ற குறிப்புத்தோன்றுமாறு கூறிய நயங் காண்க. பி-ம்:—[1]மத்தடு. [2]துள்ளலே. [3]அழைப்பவும். [4]வருந்தவும். [5]ஆயமங்கையர். [6]வருத்துவார். (60)

29.—தினைமுதலியவற்றில் கிளிமுதலியன சிலம்புதல்.

திணைச்[1]சி லம்புவ தீஞ்சொ லிளங்கிளி
நணைச்சி லம்புவ நாகிள [2]வண்டுபூம்
[3]புணைச்சி லம்புவ புள்ளினம் வள்ளியோர்
மணைச்சி லம்புவ மங்கல வள்ளையோ.

(இ - ள்.) தினை - தினைப்புனங்களில், தீம்சொல் இளங் கிளி-மதுரமாகிய சொற்களையுடைய இளங்கிளிகள், சிலம்புவ - ஒலிப்பன; பூ நணை-பூவரும்புகளில், நாகு இள வண்டு மிக்க இளமையுள்ள வண்டுகள், சிலம்புவ—; புணை-நீர்நிலைகளில், புள் இனம் - பறவைகளின் கூட்டம், சிலம்புவ—; வள்ளியோர் மணை - கொடையாளிகளின் வீடுகளில், மங்கலம் வள்ளை-உலக்கைப் பாட்டுக்கள், சிலம்புவ—; (எ-று.)

வள்ளை-நெற்குத்தும் மகளிர் உலக்கையோச்சுகையில் மனைக்கு உரிய தலைவனுடைய வளத்தைப் பாடும் பாட்டு. மனைத்தலைவர் தாம் அன்னதானஞ் செய்யும்படி பெருந்தொகையரிசியைக்குற்றுவிப்பர்: அவற்றைக் குற்றுபவர் தாம் குற்றும்போது வள்ளைப் பாட்டைப் பாடுதலால், வள்ளியோர் மனையில் வள்ளைப்பாட்டு ஒலிக்குமென்க. நாகுஇள - ஒருபொருட்பன்மொழி. எதுகைக்கு ஏற்ப, புனலென்பது புனையென்றாயிற்று; "புனைவரவுயிர் வருமுலவை" என்பர், ஆரணியகாண்டத்தும். சொற்பொருட்பின்வருநிலையணி. பி - ம்:—[1]சிலம்புறு. [2]வண்டுகள். [3]புனற். (61)

30.—இதுமுதல் ஆறுகவிகள் - திணைமயக்கம்கூறுவன.

[1]குற்ற பாகு [2]கொழிப்பவர் கோணெறி
[3]கற்றி லாத கருங்க [4]ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலில்
சிற்றில் [5]கோலிச் சிதறிய முத்தமே.

(இ - ள்.) (அந்நாட்டில்), குற்ற பாகு கொழிப்பவர் (கொழிப்பன)-பறிக்கப்பட்ட பாக்கைக் கொழிப்பவர் குப்பையென எடுக்கும் பொருள்,—கோள் நெறி கற்று இலாத கருங் கண் - களவுநெறியைக் கற்றிராதனவான [காமக்குறிப்புள்ள பார்வையைக் கொள்ளாத] கரிய கண்களையுடைய, நுளைச்சியர் - நெய்தல்நிலத்துப் பெண்கள், முற்றில் ஆர முகந்து - சிறுசுளகுநிறைய(க் கடலிலிருந்து) வாரிவந்து, தம் முன்றிலில் சிறு இல் கோலி - தமது வீட்டின் முன்புறத்திலே (விளையாட்டாகச்) சிறுவீடு கட்டி, சிதறிய-சிந்திய, முத்தம் ஏ-முத்துக்களையேயாகும்; (எ - று.)

'கொழிப்பன' என்பது வருவிக்கப்பட்டது. கொழித்தல்-ஒரு பொருளைச் சுத்தஞ் செய்கையில் செற்றை குப்பைமுதலியன கலவாதபடி அவற்றை நீக்குதல். பாக்கைக் கொழிப்பவர் அந்தப்பாக்கு

களோடு கலந்திருந்த முத்துக்களைச் செற்றை குப்பைகள்போல நீக்குவரென்க. மருதநிலத்துப்பொருளாகிய பாக்குகளோடு நெய்தனிலப் பொருளாகிய முத்தம் கலந்திட, அதனைப் பிரித்தெடுப்பரென்று திணைமயக்கங்கூறியவாறு. இத்திணைமயக்கத்தால் நிலங்கள் மிக அடுத்திருக்குமென்பது பெறப்பட்டு, நாட்டின்சிறப்பை வலியுறுத்துமென்ப. குற்றபாகு கொழிப்பவர் - தறிக்கப்பட்ட பாக்கைக்கொழிக்கும் மருதநிலப் பெண்கள், கோள் - (அப்பாக்குக் கொழியலினின்று அசாரமானவையென்று நீக்குமாறு) கொண்ட பொருள், நுளைச்சியர் சிந்திய முத்தமே யென்றும் கூறலாம். 'கோணெறிகற்றிலாத கருங்கண்' என்ற அடைமொழியால் அந் நுளைச்சியர் சிறுபருவமுள்ள சிறுமியரென்க. இனி, முத்தமே-முத்தங்களே, குற்றபாகு கொழிப்பவர் - குறுதலையுடைய சருக்கரைப் பாகைப் பனையோலையிற் சேர்த்துவிற்பவர், கோள் - கொள்ளும் பொருள்களாமென்று உரைத்து, பனையோலையிற் காய்ச்சிவிடுத்த சருக்கரைப்பாகை, நுளைச்சியர் சிற்றில்கட்டி விளையாடிச் சிதறிவிட்ட முத்துக்களைக் கொடுத்து வாங்குவரென்றுமாம். பி - ம்:— [1]குற்றப்பாகு, குற்றமாகுங். [2]கொழிப்பது, கொழிப்பென. [3]கற்றிலாரக். [4]உழத்தியர். [5]கோலச். (62)

31\. துருவை மென்பிணை யீன்ற துளக்கிலா
[1]வரிம ருப்பிணை வன்றலை [2]யேற்றைவான்
உருமி டித்தெனத் தாக்குறு [3]மோதையின்
வெருவி [4]மால்வரைச் [5]சூன்மழை [6]மின்னுமே.

(இ - ள்.) துருவை மெல் பிணை - செம்மறியாட்டின் மென்மைக்குணமுள்ள பேடுகள், ஈன்ற - பெற்ற, துளக்கு இலா - அஞ்சுதலில்லாத, வரி மருப்பு - வரிகளமைந்தகொம்புகளையுடைய, வல் தலை - வலிய தலைகளைக் கொண்ட, இணை - (ஒன்றோடொன்று) ஒத்த, ஏற்றை - கடாக்கள், வான் உரும் இடித்து என தாக்குறும் ஓதையின் - மேகத்தில்தோன்றுகிற இடி யிடித்தாற்போலப் பேரொலியுண்டாகுமாறு (ஒன்றையொன்று) மோதுதலாலுண்டாகின்ற பேரொலியினால், வெருவி - அஞ்சி, மால் வரை சூல் மழை - பெரியமலைகளில் தங்கியுள்ள நீர்கொண்ட மேகம், (வாய்திறக்க, அதனால்), மின்னும்-மின்னலுண்டாகும்; (எ - று.)

செம்மறியாட்டுக்கடாக்கள் ஒன்றையொன்று எதிர்த்துத் தாக்கும்போது பேரொலி யுண்டாக, அவ்வொலி கேட்டு அஞ்சிய நீருண்ட மேகம் வாய்விட்டுக் கதற, அதனால் மின்னலுண்டாகுமென்க. நீருண்டமேகம் சூல் முதிருமளவும் மலைமேற்படிந்து பின் வானிலேறி மழைபெய்தல், இயல்பு. இயற்கையில் நீருண்டமேகம் இடித்து மின்னுதலை, இந்நாட்டின் ஆட்டுக்கடாப்போரில் தோன்றும் ஒலிக்கு அஞ்சி மேகம் வாய்விடுவதால் தோன்றுவதாகக் கற்பித்தார். அயர்ந்திருக்கையில் பேரொலி செவியிற்பட்டவர், அச்சத்தினால் வாய்விட்டுக் கதறுதல், இயல்பு. மேகம் வாய்திறத்தலால் மின்னல் தோன்றுவதாகக் கூறுவதை, "கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல்" என்ற இடத்துங் காண்க. இதனால், முல்லைக்கும் குறிஞ்சிக்கும் மயக்கம் கூறப்பட்டமை காண்க. பி-ம்:—[1]வரிமருப்பினவன், வருமருப்பினவன், வரி

மருப்புயர்வன, வரிமருப்பினகன். [2]ஏறுவான், ஏற்றுவான். [3]ஒல்லொலி. [4]மாமலே. [5]சூழ். [6]துன்னுமால். (63)

32. [1]கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம்
வன்றொ டர்ப்படுக் கும்[2]வன வாரிசூழ்
குன்று டைக்[3]குல மள்ளர் குழூஉக்குரல்
இன்[4]று ணைக்களி யன்ன மிரிக்குமே.

(இ - ள்.) கன்று உடை பிடி-கன்றுகளேயுடைய பெண் யானேகளே, நீக்கி-நீக்கிவிட்டு, களிறு இனம் - ஆண்யானேகளின் கூட்டங்களே, வல் தொடர் படுக்கும் - வலிய சங்கிலிகளினுற் கட்டுகின்ற, வனம் வாரி-காடுகளிலுள்ள யானேயகப்படுத்துமிடங்களினுல், சூழ்-நிறையப்பெற்றுள்ள, குன்று - மலேகளே, உடை - (தமதிடமாகக்) கொண்டுள்ள, குலம் மள்ளர் குழூஉ-சிறந்த வீரர்களின் கூட்டங்களினின்று தோன்றுகின்ற, குரல் - பேரொலி, இன் துணே களி அன்னம்-இனிய பெட்டைகளுடன் கூடிக் களிக்கின்ற ஆண் அன்னங்களே, இரிக்கும்-(அச்சத்தினுல்) நிலேகெட்டு ஓடச்செய்யும்; (எ-று.)

குன்றுகளில் திரியும் களிற்றினங்களேப் பிடிகளேக்கொண்டு பிடித்துக் கட்டுவிக்கும் மள்ளரின் குரல், மருதநிலத்துள்ள அன்னங்களே நிலேகெடச் செய்யுமென்பதாம். இதனுல், குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் திணேமயக்கங் கூறியவாறு. காட்டிற் சஞ்சரிக்கும் ஆண்யானேகளேப் பெண்யானேகளின் மூலமாகப் பிடித்துக் கட்டிவைத்தல், மரபு. வாரி-யானேகட்டுமிடம்: இங்கு, அகப்படுத்துமிடத்தைக் காட்டிற்று: இது இப்பொருளில் வருதலே "வாரி கொள்ளாவரைமருள்வேழம்" என்ற இடத்துங் காண்க. மள்ளர்-யானேயையகப்படுத்தும் வீரர். பி-ம்:—[1]கன்றொடப். [2]வள. [3]குரல். [4]தொடர்களி, துணேக்கழி, துடைக்களி. (64)

33. வள்ளி கொள்பவர் கொள்வன மாமணித்
துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி
[1]புள்ளி கொள்வன பொன்விரி [2]புன்னேயிற்
பள்ளி கொள்வன பங்கயத் தன்னமே.

(இ - ள்.) வள்ளி கொள்பவர் - வள்ளிக்கிழங்கைத்தோண்டியெடுப்பவர்கள், கொள்வன - (மண்ணிற் கலந்திருத்தலால் வள்ளிக்கிழங்கை யெடுக்கும்போது உடன்) எடுக்கப்படுவனவாகிய, மா மணி-சிறந்த இரத்தினங்களால் [சிறந்த இரத்தினங்களே யெறிந்து விடுவதனுல்], தூங்கிய மாங் கனி - (மாமரங்களில்) தொங்குகின்ற மாம்பழங்கள், துள்ளி கொள்வன - தேன்துளியைச் சிந்துவனவாயின: புள்ளி கொள்வன பொன் விரி புன்னேயில் - புள்ளியின் வடிவத்தைக் கொண்டனவான தாதுக்கள் பொன்போற் பரவியிருக்கப் பெற்ற புன்னேமலர்க்கொத்துக்களில், பங்கயத்து அன்னம் - தாமரை மலரில் தங்கும் அன்னம், பள்ளிகொள்வன - படுத்துக்கொள்வன; (எ-று.)

குறிஞ்சிநிலப்பொருளாகிய வள்ளிக்கிழங்கைக் கிண்டி யெடுப்பவர் தம்கையிலகப்பட்ட இரத்தினங்களே யெறிய, அவை அருகே தொங்குகின்ற மருதநிலப்பொருளாகிய மாங்கனியின்மேற் பட்டு

அவற்றினின்று தேன்றுளியைச் சிந்து மென்று-குறிஞ்சியும் மருதமும் மயங்கியமையும், பொன்போன்ற தாதுக்கள் விரிந்த புன்னை மலர்க்கொத்துக்களிற் பங்கயத்தில்தங்கும் அன்னம் பள்ளிகொள்ளு மென்று - நெய்தலும் மருதமும் மயங்கியமையும் கூறியவாறு. பள்ளி -பெருமையுமாம். துள்ளி-துளியென்பதன் விரித்தல். இனி, ஒரு சாரார் நான்கடியையும் தனியேமுடிப்பவராய், துள்ளி கொள்வன தூங்கியமாங்கனி - தூங்கியகனியை, துள்ளி-ஆமை, கொள்வன-நுகர்வன என்பர்: துள்ளியென்பதற்கு யாமையென்ற பொருள் பிங்கலந்தையிலும் கூறியுள்ளது:இது, டுலீ என்ற வடசொல்லின்திரிபு. மூன்றாமடியில் [2]புன்னைகள் என்ற பாடம், திணைமயக்கங் கூறும் சந்தர்ப்பத்துக்கு ஏற்குமா என்பது ஆராய்தற்குஉரியது. பி - ம்:— [1]வெள்ளி. (65)

64. கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலில்
கன்[1]று றக்குங் [2]குரவை கடைசியர்
புன்றலைப்புனங் [3]காப்புடை [4]போதரச்
சென்[5]றி சைக்கு நுளைச்சியர் செவ்வழி.

(இ - ள்.) கடைசியர் - மருதநிலப்பெண்களின், குரவை - குரவைக்கூத்து ஆடுகையிற்பாடுகின்றபண், கொன்றை வேய் குழல் கோவலர் முன்றிலில் கன்று - கொன்றைக்குழலையும் வேய்ங் குழலையுமுடைய இடையர்களின் முற்றத்திலிருக்கின்ற கன்றுகளை, உறக்கும் - தூங்கச்செய்யும்; நுளைச்சியர் செவ்வழி - நெய்தனிலத்துமகளிர் பாடுகின்ற செவ்வழிப்பண், புல் தலை-புன்செய்ப் பயிர் விளையுமிடமான, புனம்-புனங்களில், காப்பு உடை போதர - காக்கின்ற காவல் சோர்வுபடும்படி, சென்று-போய், இசைக்கும் - ஒலிக்கும்; (எ-று.)

கடைசியரின் குரவைக் கூத்துப்பாடல் ஆயர்முன்றிலிற் கன்றை யுறக்கு மென்று மருதத்தோடு முல்லைநிலம் மயங்கியமையும், நுளைச்சியர் செவ்வழிப்பண் புனங்காப்பு உடைதரச்சென்று இசைக்குமென்று - குறிஞ்சியோடு நெய்தனிலம் மயங்கியமையும் கூறியவாறு. கொன்றைப்பழத்தைக்கொண்டு குழலமைத்தலை, "ஒழுகிய கொன்றைத் தீங்குழல்", "கொன்றையந் தீங்குழல்" முதலிய இடத்துங் கூறியிருத்தல் காண்க. நுளைச்சியர் செவ்வழிப்பண்ணைப் பாடும்போது புனங்காக்கும் மகளிர் அந்தப் பண்ணைக் கேட்டலிலுள்ளவிருப்பத்தினால் தாம் மேற்கொண்ட புனக் காவலிற் சோர்வுபடுவ ரென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து. இனி, "ஆயோவெனுங்குரலையோ புனத்தை யழிக்கின்றதே" என்றாற்போல நுளைச்சியர் பாடுஞ் செவ்வழிப்பண் மிக அருகிலுள்ள தினைப்புனத்திலே கிளிமுதலியவற்றைவருவித்து அத்தினைக்காவலைக் கெடச்செய்யு மென்று கருத்துக்கூறுவாருமுளர். 'புனம் காப்புடைப் போதர' என்று பாடங்கொண்டு - புனத்திலுள்ள பறவைகள் சோலையின்பக்கத்திற் செல்லும்படி என்று உரை கூறினாருமுளர்; அங்ஙன் கொள்ளின் முல்லையும் மருதமும் மயங்கியமை கூறியன, பின்னடிகள். பி - ம்:—[1]உவக்கும், உரப்பும், உரக்கும். [2]குரவைக். [3]காப்பிடை, காப்பிசை. [4]பேர்தரச். [5]இழைக்கும், உழைக்கும். (66)

35. சேம்பு [1]காலிறச் செங்கழு நீர்க்[2]குளத்
தூம்பு காலச் சுரிவளை மேய்வன
காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு [3]நான்றெனப் பாய்பசுந் தேறலே.

(இ - ள்.) காம்பு - மூங்கில்கள், கால்-காற்றினால், பொர-மோதுவதனால், (மலைப்பாறைகளின்மீது கட்டிய தேன் கூடுகள் உடைய), கண் அகல் மால்வரை - இடமகன்ற பெரிய அம் மலைகளிலிருந்து, பாம்பு நான்று என பாய்-பாம்பு தொங்குவதுபோன்ற தோற்றத்துடன் பாய்கின்ற, பசுந் தேறல்-புதிய தேனொழுக்கை,-சேம்பு கால் இற-சேம்புகள் (தமது) மடல் இற்றுப்போம்படி, செங்கழுநீர் குளம்-செங்கழுநீர்க்கொடிகளைக்கொண்ட குளங்களின், தூம்பு - மதகுகள், கால-கக்க,—சுரி வளை - முகஞ்சுரிந்த சங்குகள், மேய்வன - (அத்தேனை) உண்பன; (எ - று.)

மூங்கில்கள் அசைந்து தேன்கூட்டின்மீது பட, அவையுடைந்து, அத்தேன்கூடுகளைக்கொண்ட பாறைகளினின்று தேன் பெருகிச் செங்கழுநீர்க் குளத்தை நிறைத்து அக்குளத்தின் மதகுகளின் வழியாகப்புறம்பேயுள்ள சேம்பு காலிறும்படி விசையாகப் பாய, அத்தேனைச் சங்குகள் உண்ணுமென்க. குறிஞ்சியும் மருதமும் மயங்கியவாறு. மூங்கில்களைக் காற்றுமோத அம்மூங்கில்களிற் கட்டிய தேறல்பாயுமெனினுமாம். தேனொழுக்கிற்குப் பாம்பு உவமையாதலை 'பொதிக்கணிரு அற் பூம்புறம்புதைஇ, மதிக்கண் மறைந்த மாசுணமான'' என்ற இடத்துங் காண்க. பி - ம்:—[1]கால்பொரச், கால்பெறச், கால்பொரு. [2]குளம். [3]ஞான்றெனப், நான்றன. (67)

36.—விருந்தோம்பலும், ஈகையும்.

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் [1]கல்வியும் [2]பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி [3]விளைவன [4]யாவையே.

(இ-ள்.) பெருந் தட கண்-மிகப்பெரிய கண்களையுடைய, பிறை நுதலார்க்கு எலாம்-பிறைச்சந்திரன் போன்ற நெற்றியைக்கொண்ட மகளிர்கட்கெல்லாம், பொருந்து செல்வம்உம்-நிலைபெற்ற செல்வமும், கல்விஉம்-கல்வியறிவும், பூத்தலால்-உண்டாயிருத்தலால்,—வருந்தி வந்தவர்க்கு ஈதல்உம்-(வறுமையால்) வருத்தமடைந்துவந்தவர்க்கு (அவர்வேண்டியவற்றை)க்கொடுத்தலும், விருந்துஉம் - (வந்த) விருந்தினரை உபசரித்தலும், அன்றி-அல்லாமல், வைகல் உம்-தினந்தோறும், விளைவன - (அம்மகளிரிடத்து) நேர்கின்ற செயல்கள், யாவை-எவை? (எ - று.)

குறிப்பறிந்து விருந்தினரை உபசரித்தல், ஈகை என்ற இச்செயல்கட்கு இன்றியமையாதனவான கல்வியும் செல்வமும் அந்நாட்டு மகளிர்க்கு நிரம்பியிருத்தலால், அம்மகளிர் ஈகை விருந்தோம்பல் என்ற இத்தொழில்களை எப்போதும் மேற்கொண்டுள்ளன ரென்பதாம். கம்பர்காலத்துப் பெண்கல்வி பரவியிருந்த தென்பது, இதனாற் பெறப்படும். பெருந்தட - ஒருபொருட்பன்மொழி; நீண்டு அகன்ற எனினுமாம். விருந்து - ஆகுபெயரால்,

விருந்தினர்க்குச்செய்யும் உபசாரத்தை யுணர்த்திற்று. பி-ம்:—[1]கல்வியிற். [2]பூத்தலும், பூத்ததாய். [3]விழைவன. [4]யானையோ.(68)

37.—அன்னசாலை.

பிறைமு கத்தலைப் பெட்பி னிரும்புபோழ்
குறை[1]க றித்திரள் குப்பை பருப்பொடு
நிறைவெண் [2]முத்தி [3]னிறத்தரி சிக்குவை
[4]உறைவ [5]கோட்டமி [6]லூட்டிடந் [7]தோறுமே.

(இ - ள்.) கோட்டம் இல் ஊட்டு இடம் தோறுஉம் - வஞ்சகமில்லாத [ஏற்றத்தாழ்வுபாராது யாவர்க்கும் ஒருவகையாக உணவளிக்கின்ற] அன்னசாலையின் எல்லாவிடங்களிலும்,—பிறைமுகம் தலை இரும்பு-பிறைமுகத்தைத் தலையிலேயுடைய இரும்பாகிய அரிவாளால், பெட்பின் - விருப்பத்தோடு, போழ் குறை-பிளந்து திருத்திய, கறி திரள்-கறிகளின் திரளும், பருப்பு குப்பையொடு-பருப்புக் குவியலோடு, நிறை வெள் முத்தின் நிறத்து அரிசி குவை- நிறைந்த வெண்மையாகிய முத்தினிறத்தையுடைய அரிசிக் குவியல்களும், உறைவ - கிடப்பன; (எ - று)

அன்னசாலைகளில் விருந்தினர்க்குச் சமைத்துப் பரிமாறும்படி கறிக்குவைமுதலியன எப்போதும் உள்ளனவென்பதாம். சிந்தாமணியாரும், அரிவாளை "தேய்பிறையிரும்பு" என்று கூறியுள்ளார்: பிறைமுகத்தலையிரும்பு என்பதற்கு - துருவலரிவாள்மணை யெனக் கூறலு மொன்று. போழ் - வினைப்பகுதி, எச்சப்பொருளில்வந்தது. பி-ம்:—[1]நறைக்கறித். [2]முத்தம். [3]நிகர், நிறைத்து. [4]உறைவை, உறுவ, உறையில். [5]கொட்டின, கொட்பினின், கோட்டனம். [6]ஊட்டுவ. [7]தூறெலாம், தோறெலாம். (69)

38.—குடிகட்கு உள்ள நிதியம் முதலியன.

கலஞ்[1]சு ரக்கு நிதியங் கணக்கிலா
நிலஞ்சு ரக்கு [2]நிறைவள [3]நன்மணி
[4]பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதம்
குலஞ்சு ரக்கு மொழுக்கங் குடிக்கெலாம்.

(இ - ள்.) குடிக்கு எலாம் - (அந்நாட்டிலுள்ள) குடிகட்கெல்லாம்,—நிதியம் - திரவியங்களை, கலம்-(வர்த்தகத்துக்குச்செல்லும்) மரக்கலங்கள், கணக்கு இலா - கணக்கில்லாதனவாக, சுரக்கும் - (எப்போதும்) கொடுக்கும்; நிலம்-பூமியானது, நிறை வளம்-மிகுந்த (விளையுளாகிய) வளத்தை, சுரக்கும்—; பிலம்-கனிகள், நல்மணி - சிறந்த இரத்தினங்களை, சுரக்கும்—; தம் குலம் - அவரவர்கள் பிறந்த குலமானது,பெறுதற்கு அரிய ஒழுக்கம் - அடையமுடியாத நல்லொழுக்கத்தை, சுரக்கும்—; (எ-று.)

பிலம் - இரத்தினங்கள் தோன்றும்ஆகரம். "ஒழுக்கமுடைமை குடிமை" என்றபடி குடிப்பிறப்புடைமைக்கு அடையாளம் ஒழுக்கமுடைமையாதலால் 'தம்குலஞ் சுரக்கும் ஒழுக்கம்' என்றார். பி-ம்:—[1]சுரக்க. [2]நிறைவளம், நிறைவளர், நிறையன. [3]நீண்மணி, மாமணி, நன்மணிப். [4]பெலஞ். (70)

39.—அந்நாட்டிற் கூற்றம் முதலியன இல்லாமை.

கூற்ற மில்லையொர் குற்றமி லாமையால்
சீற்ற மில்லை[1] தஞ் சிந்தையிற் [2]செம்மையால்
[3]ஆற்ற நல்லற மல்ல திலாமையால்
ஏற்ற [4]மன்றி [5]யிழித்தக [6]வில்லையே.

(இ - ள்.) ஓர் குற்றம் இலாமையால் - (எவரிடத்தும்) தீவினைச் செயலில்லாமையால், கூற்றம் இல்லை - அகாலமிருத்தியு (அந்நாட்டில்) உண்டாவதில்லை; தம் சிந்தையில் செம்மையால் - தமது மனத்தில் (அந்நாட்டவர்க்கு) நேர்மைக்குணமே யிருத்தலால், சீற்றம் இல்லை - சினம் விளைவதில்லை; (அந்நாட்டவரிடத்து), ஆற்ற-மிகவும், நல் அறம் அல்லது இலாமையால் - சிறந்த தருமச் செயலேயல்லாமல் (வேறொன்றாகிய தீமைச்செயல்) இல்லாமையால், ஏற்றம் அன்றி இழித்தகவு இல்லை-(அந்நாட்டவர்) நற்கதியிற் சேர்தலன்றித் தீக்கதியிற் சேர்வதில்லை; (எ-று.)

நாட்டில் தீச்செயல் நிகழ்தலால்தான் அகாலமிருத்தியு தோன்றுகின்றதென்பது, நூற்கொள்கை. (அவ்விஷயத்தை உத்தரகாண்டத்தில் சம்பூகனுடைய வரலாற்றாலும் அறியலாம்.) இனி, முதலடிக்கு, அந்நாட்டிலேகொலை களவு முதலிய எக்குற்றமுமில்லாமையால் யமனுடைய ஆணை செல்வதில்லை யென்றுமாம்; "கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற், செல்லாதுஉயிருண்ணுங் கூற்று" என்றதுங் காண்க. மறுமைக்கு வேண்டுவன செய்துகொள்ளாமையாகிய குற்ற மில்லாமையால், அந்நாட்டவர்க்கு யமபயமில்லை யென்றுமாம். மனத்திற் சத்துவ குணமே மிகுந்திருக்கப்பெற்றோர்க்குத் தமோகுணத்தின்காரியமாகிய சீற்றம் தோன்றா தாதலால், 'சீற்றமில்லை தஞ்சிந்தையிற் செம்மையால்' என்றார். ஏற்றம்-நற்கதி, இழித்தகவு-தீக்கதி: ஆகுபெயர்கள். ஏற்றம்-உயர்ந்த புகழ்: இழித்தகவு-தாழ்மையாகியபழிப்பு எனினுமாம். [3]ஆற்றநல்லறம் என்ற பாடத்திற்கு, ஆற்றல்-அந்நாட்டவர் மேற்கொண்டுசெய்வது என்க. பி-ம்:—[1]தன்சிந்தைநற், தஞ்சிந்தைநற். [2]செவ்வியால், செய்கையால். [3]ஆற்றுநல். [4]அல்லது. [5]இழிதகவு, இழிதக்க. [6]வல்லதோ, இல்லரோ. (71)

40.—அந்நாட்டவரின் நன்னெறிச்செல்கை முதலியன.

நெறி[1]க டந்து [2]பரந்தன நீத்தமே
குறி[3]ய ழிந்தன குங்குமத் [4]தோள்களே
சிறிய [5]மங்கையர் தேயு மருங்குலே
[6]வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே.

(இ - ள்.) நெறி கடந்து - செல்லவேண்டிய வழியைவிட்டு, [சன்மார்க்கத்தைவிட்டு], பரந்தன-பரந்துசெல்வனவும், நீத்தமே -வெள்ளங்களே, [அந்நாட்டிலுள்ள சனங்களல்ல]; குறி அழிந்தன -(தமக்கு உரிய) குறியழிந்தனவும், [செய்த அடையாளம் அழிந்தவையும்], குங்குமம் தோள்களே - குங்குமத்தொய்யிலையணிந்த மகளிர் தோள்களே: [நெற்கதிர்ப்போர்முதலியன வல்ல]; சிறிய -

சிறியனவாயிருப்பனவும், மங்கையர் தேயும் மருங்குல்ஏ - மகளிரின் மெலிந்த இடைகளே, [அந்நாட்டிற் சிறுமைபெற்றபொருள்வேறு எதுவுமில்லை]; வெறியஉம்-வாசனையுள்ளனவும், [வெறிபிடித்திருப்பனவும்], அவர் மெல் மலர் கூந்தல்ஏ-அம்மடந்தைமாரின் மெல்லியமலரை யணிந்த கூந்தலே, [வெறிபிடித்தவர் வேறு இல்லை];

நெறிகடத்தல்முதலியன நீத்தம்முதலியவற்றின் தொழில்களே யென்றமையால், அந்நாட்டில் நெறிகடப்பவையும் தமக்குரிய குறியழிந்தனவும் சிறுமையுடையனவும் வெறியுடையனவும் வேறில்லை யென்றவாறும். குறி - செய்த அடையாளமும், தொய்யிற்குறியும். வெறி - நறுமணமும், குடிமயக்கமும். இனி, நான்காமடிக்கு - கூந்தல் வெறியவேயன்றி, வேறே வெறியவில்லையென்க; வெறிய-வெறியை [வாசனையை] யுடையன, வெறுமையை [ஒன்றுமில்லாமை] யுடையன என்க: சிலேடை மூலமாகவந்த ஒழிப்பணி. நாட்டவர் அறச்செயலிலேயே ஈடுபட்டிருத்தலால், அறமூர்த்தி திருவவதரிக்குமாறு அந்நாடு முன்னேற்றமடைந்துவருகின்றதென்பது, கருத்து. மாதரார் தோள்களில் குங்குமக்குழம்பால் எழுதப்பெற்ற கோலக்குறிகள் மைந்தர் தழுவுதலால் அழியுமென்றூர். தானியக்குவியல் திரவியசாலை முதலியவற்றிலே, தெரியும்படி முத்திரைக்குறி இடப்படும். பி - ம்:—[1] பரந்து, இறந்து. [2] கடந்தன, படர்ந்தன, படர்ந்தது. [3] அழிந்தது. [4] கொங்கையே. [5] நங்கையர். [6] வெறியுமேயவர். (72)

41.—பல்வகைப் புகைகள்.

[1] அகிலி டும்புகை யட்டி[2] லிடும்புகை
[3] நகலி ஞலை நறும்புகை [4] நான்மறை
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் [5] விம்மி [6] முயங்கின [7] வெங்கணும்.

(இ - ள்.) அகில் இடும் புகை-அகிலையிடுவதனலுண்டாகும் புகையும், அட்டில் இடும் புகை - சமையல் வீடுகளிலுண்டாகும் புகையும், நகலின் ஆலை நறும் புகை - (கருப்பஞ்சாற்றைக்காய்ச்சுவதற்காக நெருப்பு) விளங்குதலையுடைய கரும்பாலையில்தோன்றும் புகையும், நால் மறை புகலும்வேள்வியில் பூம்புகையோடு - (பிராமணர்கள்) வேதங்களையுச்சரிக்கின்ற யாகத்தில்தோன்றும் அழகிய புகையுடனே, அளாய்-கலந்து, முகிலின் விம்மி - மேகங்கள்போலமிகுந்து, எங்கண்உம் முயங்கின - எங்கும் வியாபித்தன;

இதனல், அந்நாட்டவர் அறம்பொருளின்பங்களைப் பெறுபவ ரென்பது, பெறப்படும். [6] முழங்கின என்றபாடத்துக்கு-"புன்கணீர் பூசல்தரும்" என்ற இடத்துப்போல, இலக்கணையால், பலரையும் அறியச்செய்தனஎன்க. பி - ம்:—[1] அகலிடும், அகினெடும். [2] அடும். [3] நகரிலாலை, நகிலினுரை, நகரினுரை. [4] நாவலர். [5] மின்னி. [6] முழங்குவ. [7] எங்குமே. (73)

42.—மயில் முதலியன அந்நாட்டுமகளிரின் சாயல் முதலியவற்றையொத்தல்.

[1] இயல்புடை பெயர்வன [2] மயின்மணி யிழையின்
[3] வெயில்புடை பெயர்வன [4] மிளிர்முலை [5] குழலின்

புயல்புடை பெயர்வன [6]பொழிலவர் [7]விழியின்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி.

(இ - ள்.) மயில் - மயில்கள், இயல் - (அந்நாட்டுமகளிரின்) சாயலைப்போன்றசாயலைப்பெற்று, புடைபெயர்வன - சஞ்சரிப்பன; மிளிர் முலை - (அந்நாட்டுமகளிரின்) விளங்குகின்ற தனங்களிற் பூண்ட, மணி இழையின் - அரதனமிழைத்துச்செய்யப்பட்ட அணி கலன்களினொளியைப்போல, வெயில்—,புடை பெயர்வன - அந்நா டெங்கும் வீசுவன; குழலின் - (அம்மகளிரின்) கூந்தல்போல, பொழில் - (அந்நாட்டுச்) சோலைகளில், புயல் - மேகங்கள், புடை பெயர்வன - சஞ்சரிப்பன; அவர் விழியின் - அம்மகளிரின் கண் களைப்போல, கயல் - கயல்மீன்கள், கடி கமழ் கழனி - நறுமணம் வீசு கின்ற கழனிகளில், புடைபெயர்வன - பிறழ்வன; (எ - று.)

மகளிரின் சாயலுக்கு உவமையாகி மயிற்புறவைகளும், அவர் களின் அரதனவணிச்சுடர்களுக்கு ஒப்பாகி வெயிலும், கூந்தலுக் குப்போலியாகி மேகங்களும், கண்களுக்கு நிகராகிச் சேல்மீன்களும் அந்நாட்டிற் புடைபெயரு மென்றவாறு. உபமேயங்களாகியமகளி ரின்சாயல்முதலியவற்றை, (பிரசித்தஉபமானங்களாகிய) மயில்முத லியவற்றிற்கு உவமையாக மாற்றிக்கூறியது - எதிர்நிலையணி. இடங் களின் பன்மைபற்றி 'வெயில் புடைபெயர்வன' எனப் பன்மையாற் கூறினர். முதலடிக்கு - மகளிரின் சாயலுக்குத் தோற்று மயில்கள் அப்பாற்செல்வன என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]எயில். [2]வயின்மணி, மயின்மணி, இனமணி. [3]குயில். [4]இளமுலை, முலைய வர், முலைவிரி, விளர்முலை. [5]குழல்போல். [6]பொருமிரு. [7]விழிபோல். இரண்டாமடியினீற்றுச் சீர்தொடங்கி, 'விழிபோற், கயல்புடை பெயர்வனகழனிகள் குழல்போற், புயல்புடைபெயர்வன கடிகமழ் பொழில்கள்' என்று சிலபிரதிகள். சிலபிரதியில் இதன்பின் "பகலி னொடு" (45) என்ற பாடல். (74)

43.—மகளிரின் வாயிதழும் முகமும்.

இடை[1]யிற மகளிர்க ளெறிபுனன் மறுகக்
குடைபவர் துவரித [2]ழலர்வன குமுதம்
[3]மடைபெய ரனமென [4]மடநடை யிளகக்
கடைசியர் முகமென மலர்வன கமலம்.

(இ - ள்.) இடை இற - (தமது) இடை ஒடிவதுபோலத் தோன்றவும், எறி புனல் மறுக - (அலை) வீசுகின்ற நீர் கலங்கவும், குடைபவர் - நீராடுபவர்களாகிய, மகளிர்கள்-மகளிரின், துவர் இதழ் (என) - செந்நிறமூட்டிய வாயிதழ்கள்போல, குமுதம்-செவ்வாம்பல் மலர்கள், அலர்வன - மலர்வன:மடை பெயர் அனம் என - நீர்மடை களிற் சஞ்சரிக்கின்ற அன்னப் பறவைபோல, மடம் நடை இளகு - மெல்லியநடையோடு மெல்லச் செல்கின்ற, அ கடைசியர்-அந் நாட்டு உழவர்மகளிரின், முகம் என - முகம்போல, கமலம் - தாமரை மலர்கள், மலர்வன—;(எ - று.)

குமுதம் மகளிரின் துவரிதழ்போல அலர்வன; கமலம் முக மென அலர்வன என்று உபமானப்பொருள்களை உபமேயங்களாக

மாற்றிக்கூறினர்; எதிர்நிலையணி. பி-ம்:—[1] இள. [2] மலர்வன. [3] மடைசெறி, மடைபெடை, மடமுறும், மடைநடை, மடநடை. [4] மடநடையளகக், நடைபயிலளகக், மடநடைபயிலுங்,மடநடையிளகுங். (75)

44.—மகளிரின் விழி முதலியன.

[1] விதியினை நகுவன வயில்விழி பிடியின்
கதியினை நகுவன வவர்நடை கமலப்
பொதியினை நகுவன புணர்முலை கலை[2] வாழ்
மதியினை நகுவன வனிதையர் வதனம்.

(இ - ள்.) வனிதையர் - (அந்நாட்டு) மகளிரின், அயில் விழி- கூரியவிழிகள், விதியினை - (தமக்கு) உவமையாக ஏற்பட்டுள்ள பொருள்களை,நகுவன - (தமக்கு உவமையாகா என்ற காரணத்தால்) இகழ்வனவாயின; அவர்நடை - அம்மங்கையரின்நடை, பிடியின் கதியினை - பெண்யானையின் நடையினை, நகுவன—; புணர் முலை - (அம்மங்கையரின் ஒன்றோடொன்று) இணைந்துள்ள முலைகள், கமலம் பொதியினை - தாமரையரும்புகளை, நகுவன—; வதனம் - (அந்தவனிதையரின்) முகங்கள், கலை வாழ் மதியினை - பதினாறு கலைகளுடனும் வாழ்கின்ற சந்திரனை, நகுவன—; (எ-று.)

மகளிரின் விழிக்கு வேற்படை முதலியனவும், நடைக்குப் பெண்யானை நடையும், தனங்கட்குத் தாமரையரும்பும், முகத்துக்கு முழுமதியும் உவமையாகச் சொல்லப்படுதல் மரபாயினும், இந்நாட்டு மங்கையரது விழிமுதலியன - வேற்படை முதலியவற்றினும் விஞ்சியிருத்தலால், அவைகளை நகுவனவாயின என்றார்; எதிர்நிலையணி. விதி - உவமையாகக் கவிஞரால் நியமிக்கப்பட்டுள்ள பொருள்கள். இனி, விதியினை நகுவன [மிகக்கொடுந்தொழிலையுடையன] பெண்களுடைய கூரிய கண்கள் என்றுகூறி, "கதமுங் கொடுந்தொழிலும்மன்பின், கணமுங் குடியிருப்பாக்காட்டும்" என்ற இரத்தினச்சுருக்கத்தை மேற்கோள்காட்டுவாரும், பெண்களின் விழிகள் முனிவர்களின் நியமத்தைப் பழிப்பன[கெடுப்பன]என்றும், படைத்தற்கடவுள் ஆடவர்க்கு விதித்த ஆயுள்வரையறையைக் குறைத்தலால் பிரமனையே பரிகசிப்பன என்றும் கூறுவாரும் உளர்: இப்பொருள்கள் மற்றையடிகளிற்கூறும்முறைக்கு ஒவ்வா. என்றும் ஒரு தன்மையனவான முலைகள், மலர்தலும் குவிதலும் உள்ளனவாதலால் கமலப்பொதியினை நகுவன என்றும், தேய்தலும் களங்கம்பெறுதலுமாகிய குற்றங்களைக் கொண்டிருத்தலால், மதியினை வதனம் நகுவன என்றும் விரித்துக் கருத்துக் காண்ப. பி-ம்:- விழியினை. [2] வாள், வாய், வான். சிலபிரதிகளில் இதன்பின் "காரொடு" (46) என்ற பாடல். (76)

45.—மணி இளநீர் வெண்பட்டு மணமுரசு இவற்றின் வருணனை.

பகலினொ டிகலுவ படர்மணி மடவார்
நகிலினொ டிகலுவ [1] நளிவள ரிளநீர்
துகிலினொ டிகலுவ [2] சுதை [3] புரை [4] நுரைகார்
முகிலினொ டிகலுவ கடி [5] மண முரசம்.

(இ - ள்.) படர் மணி-(அந்நாட்டில் எங்கும்) பரவிக்கிடக்கின்ற மணிகள், பகலினொடு-சூரியனுடைய ஒளியோடு, இகலுவ - மாறுபட்டு ஒளிவிடுகின்றன; நளி வளர் இள நீர்-குளிர்ச்சி மிகுந்த (அந்நாட்டு) இளநீர்கள், மடவார் நகிலினொடு இகலுவ-(அந்நாட்டு) மகளிரின் தனங்களுடனே மாறுபடுவன; சுதை புரை நுரையினொடு - பாலின் மேற்புறத்தே தோன்றுகின்ற நுரையோடு, துகில் இகலுவ -(மகளிரணியும்) வெண்பட்டுக்கள் மாறுபடுவன; கடி மணம் முரசம் -கலியாணத்திலடிக்கப்படுகின்ற பேரிகைகள், கார்முகிலினொடு - கருநிறமுள்ள [நீர்கொண்ட] மேகத்தோடு, இகலுவ - மாறுபட்டொலிப்பன; (எ-று.)

மணிமுதலியவை பகல்முதலியவற்றினும் விஞ்சித்தோன்றுகின்றன என்பது கருத்து. படர்மணி, மடவாரின் அணிகளிலுள்ளனவாகக் கொள்ளலுமாம். பாலின்மேல் தோன்றுகின்ற வெண்ணுரை வெண்பட்டுக்கு உவமையாதலை "தீம்பா னுரைபோற்றிகழ் வெண்பட்டு" என்ற இடத்துங் காண்க. சுதை புரை நுரை - அமுதத்தையொத்தநுரையுமாம். நகிலை உபமேயமாகக்கொள்ளவுமாம். கார்முகில்-கார்காலத்து முகிலுமாம். பி-ம்:—[1]நணி, நளிர். [2]சுரை. [3]பொரு, வரு, பொழி. [4]துயில்கார், நுரைகள், நிரைகார். [5]மணி, கமழ். (77)

46.—சோலை நெற்போர் நீர்நிலைகள் ஊர் என்ற இவற்றின்வருணனை.

காரொடு நிகர்வன [1]கடிபொழில் கழனிப்
போரொடு நிகர்வன [2]பொலன்வரை [3]யணைசூழ்
நீரொடு நிகர்வன நிறைகட னிதிசால்
ஊரொடு நிகர்வன விமையவ ருலகம்.

(இ - ள்.) கார்-மேகங்கள், கடி பொழிலொடு-(அந்நாட்டிலுள்ள) விளக்கமுள்ள சோலைகளோடு, நிகர்வன-ஒப்பன; பொலன்வரை - பொன்மயமான மேருமலை,கழனிபோரொடு-கழனியிலிருந்து அரிந்து போக்கப்பட்ட நெற்போர்களோடு, நிகர்வன—; நிறைகடல் - (எப்போதும் நீர்வற்றுமல்) நிரம்பியிருக்கப்பெற்ற சமுத்திரம், அணை சூழ் நீரொடு - கரையோடு கூடிய (அந்நாட்டு) நீர்நிலைகளுடனே, நிகர்வன—; இமையவர் உலகம்-தேவலோகங்கள், நிதி சால்ஊரொடு -செல்வம்மிகுந்த அந்தக்கோசலதேசத்துடனே, நிகர்வன—;

உபமானங்களாகக் கூறப்படும் கார் முதலியவை, அந்நாட்டுச் சோலை முதலியவற்றைத் தாம் நிகர்வன என்றார்; எதிர்நிலையணி. அந்நாட்டுச்சோலைமுதலியவை கார்முதலியவற்றிற்குத் தாம் உவமையாகுமாறு சிறந்துள்ளன என்றபடி. மற்றைமூன்றடிகளுக்கு ஏற்பக் கடிபொழிலொடு கார் நிகர்வன என மாற்றி உரைக்கப்பட்டது. "நெற்குப்பைகள், கோடுயர் கொழும்பொனின் குன்றமொத்தவே" என்றவாறு நெற்போர்க்குப் பொன்மலையை உவமைகூறுவதன்றி மலையை ஒப்புமைகூறுதல் கவிமரபு அன்று ஆதலால், [2]புணர்மலை என்றபாடம் கொள்ளத்தக்கதல்ல; உறுப்புபன்மை பற்றி, 'கார்முதலியன நிகர்வன' என்று பன்மைமுற்று. 'நிகர்வது' என்றே பாடமிருப்பின் நலம். பி - ம்:—[1]கமழ். [2]பணை. (78)

47.—நென்மலை முதலிய பல் வளங்கள்.

நென்மலை யல்லன [1]நிரைவரு [2]தரளம்
[3]சொன்மலை யல்லன தொடுகட [4]லமிர்தம்
நன்மலை யல்லன [5]நதிதரு [6]நிதியம்
பொன்மலை யல்லன மணிபடு புளினம்.

(இ - ள்.) நெல்மலை அல்லன-நெற்குவியலல்லாதன, நிரைவரு தரளம்-வரிசையாகக் குவிந்துள்ளமுத்துக்களும், சொல் மலை அல்லன - சொல்லப்பட்ட (அந்தமுத்துக்)குவியல் அல்லாதவை, தொடு கடல் அமிர்தம்-தோண்டப்பட்டகடலிலிருந்து உண்டாகிய உப்புக்களும்,- நல் மலை அல்லன - சிறந்த அந்த உப்புக்குவியல் அல்லாதவை, நதி தரு நிதியம் - நதிகளாற்கொணர்ந்துகுவிக்கப்பட்ட (பொன் முதலிய) நிதிகளின் தொகுதிகளும்,—பொன் மலை அல்லன-அந்தப்பொற்குவியல் முதலிய நிதிகளல்லாதன,—மணிபடு புளினம்-இரத்தினங்கள் பொருந்திய மணல்மேடுகளுமாம்;

நெற்குவியல் தரளக்குவியல் முதலியன ஒன்றேடொன்று மாறுபட்டுத்தோன்றுமென்றவாறு. இனி, நெற்குவியல் இல்லாத இடங்களில் முத்துக்குவியல்களும், அவையில்லாத இடங்களில் உப்புக்குவியல்களும்,அவையும் இல்லாத இடங்களில் பொன் முதலிய நிதிகளும், அந்நிதிக்குவையும் இல்லாத இடங்களில் இரத்தினங்கள்பொருந்திய மணல்மேடுகளுமாக, அந்நாட்டில் எங்கும் பல்வகைவளனே நிரம்பியுள்ளன வென்க. குவிந்து உயர்ந்து தோன்றுதல்பற்றி 'மலை' என்றார். இப்பாடலுக்கு வெவ்வேறு உரை கூறுவர். இச்செய்யுளில் இரண்டாமடிக்கு-சொல்லின் தொகுதியல்லாதவைதேவாமிருதம் என்று உரைத்து, யாவரும்தேவாமிருதம்போல இனிமையாக வசனிப்பாரென்றுகருத்துவிரிப்பர் ஒருசாரார். பி-ம்:—[1]நிறைவரு, நிறமுறு, நிறைதகு, நிரைதகு. [2]தரளச், தரளந், தரளத். [3]தொன்மலை. [4]அமுதின். [5]நளி. [6]நிதியப். (79)

48.—இளையவர் பந்துபயிலிடமும், ஆடவர் கலைதெரிகழகமும்.

[1]பந்தினை யிளையவர் [2]பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன [3]வனமல சண்பக வனமாம்
நந்தன [3]வனமல [4]நறைவிரி புறவம்.

(இ - ள்.) இளையவர் - இளையமங்கையர், பந்தினை பயில் - பந்தினை விளையாடுகின்ற, இடம் - இடங்கள், சந்தனம் வனம் அல- சந்தனச்சோலைகளல்ல, சண்பகம் வனம் ஆம்-சண்பகச்சோலைகள் போலும்; மயில் ஊர் கந்தனை அனையவர் - மயிலை வாகனமாகக் கொண்டு செல்லுகின்ற சுப்பிரமணியக்கடவுளை யொத்த ஆடவர், கலை தெரி கழகம் - (வில்வித்தை முதலிய) கலைகளை ஆராய்கின்ற சாலைகள், நந்தனவனம் அல - நந்தவனமல்ல, நறை விரி புறவம்- தேன் விரியப்பெற்ற முல்லைவனம்போலும்; (எ-று.)

மகளிர்கள் பந்தடிக்குமிடம் சந்தனச்சோலைகளே யாயினும் அம்மகளிரின் மேனிமணத்தால் சண்பகச்சோலையையொத்திருக்க,

ஆடவர் வில்வித்தைபயிலுமிடம் நந்தனவனங்களேயாயினும் அவர்களது மேனிமணத்தால் முல்லைவனம்போலும் என்றவாறு. ஆடவர் மேனி முல்லைமணம் வீசு மென்பதை "மட்டம்பெய்த" என்று தொடங்கும் குறுந்தொகைப்பாடலில் "மன்னெடுந்தோளே முல்லை முகைநாறுமே" என்பதனாலும் அறிக. இனி, இளையவர் பந்தடிக்குமிடம் அவர்களின் இயற்கைமேனிமணத்தாற் சந்தனச்சோலை போலத் தோன்றினும், அம்மங்கையரின் மேனிநிறத்தாலும் பந்தடித்தல் பற்றி வண்டுகள் பயிலாமையாலும் சண்பகவனம்போன்றன; அங்ஙனமே, ஆடவர் கலைதெரிகழகம் பரிசுத்தமுடைமையால் நந்தனவனம்போலும் ஆயினும், மனித சஞ்சாரமில்லாமையாற் காடு போலு மென்று உரைத்தலும், இன்னும் வேறுவகையாகக் கருத்துரைத்தலும் உண்டு. கலை-வில்வித்தை முதலியன. இச்செய்யுள் -அபநுதியணி. பி - ம்:—[1]பந்தணை விரலியர். [2]பயில்விடம், பயினடம். [3]வனமலர். [4]நறவிரி. (80)

49.—மடவாரின் சொல் முதலியவை.

கோகில [1]நவில்வன விளையவர் குதலைப்
பாகியல் கிளவிக [2]ளவர்பயி [3]னடமே
கேகய நவில்வன [4]கிளரிள [5]வளையின்
நாகுக [6]ளுமிழ்வன நகை[7]புரை தரளம்.

(இ - ள்.) கோகிலம் - குயில்கள்,—இளையவர் குதலை - இளமங்கையரின் குதலைச்சொற்களாகிய, பாகு இயல் கிளவிகள்-பாகின் தன்மையைக் கொண்ட (இன்) சொற்களை, நவில்வன - கற்றுக்கொள்வன; கேகயம் - மயில்கள், அவர் பயில் நடம் - அம்மங்கையர் பழகின நடனத்தை(ப் பார்த்து), நவில்வன - (தாம்) பழகுவன; கிளர் இள வளையின் நாகுகள் - விளங்குகின்ற இளமையுள்ள பெண் சங்குகள், நகை புரை தரளம்-(அம்மங்கையரின்) பற்களை யொத்த முத்துக்களை, உமிழ்வன - கக்குவன; (எ-று.)

இளையவர் கிளவிகளைப்போலக் குயில்கள் பேசும்; அவர் நடனத்தைப்போல மயில்கள் நடிக்கு மென்றுமாம்: எதிர்நிலையணி. பி-ம்:—[1]நகுவன, நலிவன. [2]பயிலிய, பயில்வன. [3]நடமென், நடைமென், நடனே, இயமென். [4]கிளரொளி. [5]முதுசூல். [6]நகுவன. [7]நகு, புரி. (81)

50.—நறைமுதலியன பழையர் முதலியோரிடத்திருத்தல்.

[1]பழையர்த [2]மனையன [3]பழநறை [4]நுகரும்
உழவர்த [2]மனையன வுழுதொழில் [5]புரியும்
மழவர்த [2]மனையன [6]மணவொலி யிசையின்
கிழவர்த [2]மனையன கிளைபயில் வளையாழ்.

(இ - ள்.) பழ நறை - பழகிய கள், பழையர் தம் மனையன - கள்விற்போரின் வீடுகளி லுள்ளன; உழு தொழில் - உழவுத் தொழிலுக்கு ஆன கருவிகள், நுகரும் உழவர் தம் மனையன-(அந்தக்கள்ளைப்) பருகும் உழவருடைய வீடுகளி லுள்ளன; மணம் ஒலி- மணத்துக்குஉரிய வாச்சியங்களின் ஒலி, புரியும் மழவர் தம் மனையன -(மணமகளிரால்) வரிக்கப்பட்ட இளைஞரின் வீடுகளிலுள்ளன; கிளை

பயில் வளை யாழ் - கிளையென்னும் நரம்பு பொருந்திய வளைந்த வீணைகள், இசையின் கிழவர்தம் மனையன - இசைபாட வல்ல பாணர்களின் மனையிலுள்ளன; (எ - று.)

இதனால், அவ்வச்சாதியார் தத்தமக்கு உரிய தொழிலைச் செய்வ ரென்று கூறியவாறு; அன்றியும், யாவரும் குறைவின்றி இனிதிருக்கின்றன ரென்பதும் பெறப்படும். மனையன என்பதற்கு மனையிலுள்ள குழந்தைகள் என்று கொண்டு, பழையர் குழந்தைகளும் மதுவை நுகரும்; உழவர் குழந்தைகளும் உழுதொழிலைப் புரியும்; பறைகொட்டும் இளைஞரின் குழந்தைகளும் மணவொலியைச் செய்யும்: பாணர்குழந்தைகளும் யாழ்வாசிக்கும் எனப் பின்னிரண்டடிகளிற் பயனிலைகள் வருவித்து முடித்தலுமாம்; இனி இச்செய்யுளை, நிரனிறைப்பொருள்கோளாகக்கொண்டு, பழையர் மனையனவாகிய, கிளை - கிள்ளைகள், நறை நுகரும்; உழவர் மனையனவாகிய பயில் - நத்துக்கள், உழுதொழில்புரியும்; மழவர் மனையனவாகிய வளை மணவொலி பயிலும்; இசைக்கிழவர் மனையனவாகிய யாழ் இசைபயிலும் என்றுஉரைப்பாருமுளர். பி-ம்:— [1]பழையவர். [2]மனையென. [3]பனிநறை, பகர்நறை. [4]பயிலும். [5]உரிய, புரையும். [6]வனவொலி. (82)

51.-கோதை முதலியன நறவம் முதலியவற்றைச் சொரிதல்.

கோதைகள் சொரிவன [1]குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன [2]வுயிருறு மமுதம்
காதைகள் சொரிவன செவி [3]நுகர் [4]கனிகள்.

(இ-ள்.) கோதைகள்-பூமாலைகள், குளிர் இள நறவம்-குளிர்ந்த இளந்தேனை, சொரிவன—; பாதைகள் - மரக்கலங்கள், பரு மணி - பருத்த இரத்தினங்களையும், கனகம் - பொன்னையும், சொரிவன—; ஊதைகள்-காற்றுக்கள், உயிர் உறும் அமுதம்-உயிரைப்பொருந்து மாறுசெய்கிற அமுதத்தை, சொரிவன—; காதைகள் - (கவிஞரின்) பாடல்கள், செவி நுகர் கனிகள் - செவிகளால் நுகரப்படும் இனிய சுவைகளை, சொரிவன—; (எ - று.)

கோதை - மகளிர் கூந்தலுமாம். பாதை - நீ ரென்ற பொருளுள்ள 'பாத:' என்ற வடசொல் - இலக்கணையால், மரக்கலமென்ற பொருளைத் தந்தது. பாதைகள் - செல்லும் மார்க்கங்கள் என்று கூறி, அந்தக் கோசலநாட்டிற் சிந்தின இரத்தின கனகங்கள் எடுப்பாரின்றிக் கிடத்தலால், பாதைகள் பரு மணி கனகம் சொரிவன என்கு ரெனலுமாம். குளிர்காற்று ஆவியை உயிர்ப்பிக்க வல்ல தாதலால், 'ஊதைகள்சொரிவன உயிருறுமமுதம்' என்றது: "ஆவி தீரினு முதவற்கொத்த தென்றல்", "அமுதளாவிய சீதம்" என்பன காண்க. கனி - சாரமென்னும் பொருளதாதலை, சிந்தாமணியில் "களிகொள்காமக் கொழுங்கனி" என்ற இடத்துக்கு நச்சினார்க்கினியர்கூறிய உரையாலும் அறிக. [4]கவிகள் என்ற பாடத்துக்கு, காதைகள் - பழைய சரித்திரங்கள், செவி நுகர் கவிகளைச் சொரிவன என்று கூறி, பழஞ்சரித்திரங்கள் கவிஞரால் இனியசுவையமைந்த கவிகளாகப் பாடப்படுகின்றன என்று பொருள் கூறுவர். பி-ம்:-[1]குளிரியல். [2]உறையுறும், உறையறு. [3]உறு.

52.—ஆண்மயில்கள் பேடையின் சாயலைக் கண்டு மகளிரைத் தொடரல்.

இடங்கொள் சாயல்கண் டிளைஞர் சிந்தைபோல்
[1]தடங்கொள் [2]சோலைவாய் மலர்பெய் [3]தாழ்குழல்
வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடும்
தொடர்ந்து [4]போவன தோகை [5]மஞ்ஞைகள்.

(இ - ள்.) தோகை மஞ்ஞைகள் - கலாபத்தையுடைய ஆண் மயில்கள்,—தட கொள் சோலைவாய் - பரப்பைக் கொண்டுள்ள சோலையிலே, (வந்த மகளிரிடத்து), இடம் கொள் சாயல் கண்டு - (தமது பேடைகளின்) பெருமையைக்கொண்ட சாயலைக் கண்டு, (அவர்களைப் பெண்மயிலென்று மயங்கி), இளைஞர் சிந்தை போல் - காளைப்பருவமுள்ள ஆடவரின் மனம்போல, மலர் பெய் தாழ் குழல்-மலரை யணிந்த தொங்குகின்ற கூந்தலையும், வடம் கொள் பூண் முலை - முத்துவடங்களை யணிந்த (கச்சைப்) பூண்ட தனங்களையு முடைய, மடந்தைமாரொடுஉம் - (அம்) மகளிருடனே, தொடர்ந்து போவன—; (எ - று.)

ஆண்மயில்கள் சோலையிலே வந்த மகளிரிடத்துத் தமது பேடைகளின் சாயலைக் கண்டு பெண்மயிலென்று மயங்கி, ஆடவர் சிந்தை தொடர்ந்து செல்வதுபோல அம்மகளிரைத் தொடர்ந்து சென்றன வென்க;மயக்கவணியோடு உவமையணி சேர்ந்து வந்தது. சாயல் - மென்மையுமாம். தடம்- தடாகமெனலுமாம். பி-ம்:—[1]தடங்கள். [2]சோலையின்ருர்பெய், சோலைவாய்மலர்செய். [3]தார். [4]செல்வன. [5]மஞ்ஞையே. (84)

53.—அந்நாட்டில் வறுமை முதலியன இல்லாமைக்குக் காரணம்.

வண்மை [1]யில்லையோர் [2]வறுமை யின்மையால்
திண்மை [3]யில்லைநேர் செறுந [4]ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
[5]ஒண்மை யில்லைபல் கேள்வி யோங்கலால்.

(இ - ள்.) (அந்தக் கோசல நாட்டில்), ஓர் வறுமை இன்மையால் - சிறிது தரித்திரமு மில்லாமையால், வண்மை இல்லை- கொடைச்சிறப்புத் தெரிவதில்லை; நேர் செறுநர் இன்மையால் - போர் செய்பவ ரில்லாமையால், திண்மை இல்லை - பராக்கிரமச் சிறப்புத் தெரிவதில்லை; பொய் உரை இலாமையால் - பொய்பேசுத லில்லாமையால், உண்மை இல்லை-உண்மையின் சிறப்புத் தெரிவதில்லை; பல் கேள்வி ஓங்கலால்-பல பெரியோரையடுத்துக் கேட்டல் (அந்நாட்டவரிடம்)மிக்கிருத்தலால், ஒண்மை இல்லை-அறிவுடைமை யென்பது (அங்குச்) சிறந்து தோன்றுவதில்லை; (எ - று.)

வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்-"கொள்வாரிலாமைக்கொடுப்பார்களுமில்லைமாதோ". யாவரிடமும்கல்வியறிவோடு கேள்வியறிவும் மிக்கிருத்தலால் 'இவன் படித்தவன்' என்று அறிவுடைமை குறித்து ஒருவனை மேம்படுத்துக் கூறுதலியலாது என்பது ஈற்றடியின் கருத்து. [5]வெண்மையில்லை பல்கேள்விமேவலால்"

என்ற பாடத்தில், தீப்பொருளில்லாமைக்கு நற்பொருளுண்மையையேதுவாக்கிக் கூறியது எடுப்பழிவு என்னுங் குற்றமாம். இக்குற்றம்போக்க, வெண்மையில்லாமையால் பலகேள்விகளின் சிறப்புத் தெரிவதில்லை யெனக் கூறியதாகக் கருத்துக் காண்ப. கல்வி தறுகண்மை இசை கொடை யென்று பெருமிதத்திற்குக் காரணம் நான்கு என்பர், ஆசிரியர் தொல்காப்பியனார்; அந்த நால்வகைப் பெருமிதம் இந்நாட்டவர்க்கு இல்லை யென்பதை இச்செய்யுள் கூறுவது என்பார், ஒன்று இரண்டு நான்காமடிகள் முறையே கொடை தறுகண்மை கல்வி இவற்றாலாய பெருமிதமின்மையைத் தெரிவித்தலால், மூன்றாமடி சத்தியவிரதத்தினாலாகிய இசைப் பெருமிதமில்லாமையைத் தெரிவிக்குமென்ப. பி-ம்:—[1] இல்லதோர், இன்மையோர். [2] வறிஞர். [3] இல்லையோர். [4] இல்லையால். இதன்பின் சிலபிரதிகளில் "மூக்கிற்றாக்குறும்" (57) என்ற பாடல்: இது, 59-ஆம் பாடலின் பின். (85)

54.—எள்ளு முதலியன கொணரும் பண்டிகள் தலைமயங்குதல்.

எள்ளு மேனலு மிறுங்குஞ் சாமையும்
கொள்ளுங் [1]கொள்ளையிற் கொணரும் பண்டியும்
அள்ள [2]லோங்களத் [3]தமுதின் பண்டியும்
[4]தள்ளு [5]நீர்மையிற் [6]றலைம யங்குமே.

(இ - ள்.) எள்உம் - எள்ளையும், ஏனல்உம்-செந்தினையையும், இறுங்குஉம் - சோளத்தையும், சாமைஉம் - சாமையையும், கொள்ளுஉம் - கொள்ளையும், கொள்ளையில் கொணரும் - மிகுதியாகக் கொண்டுவருகின்ற, பண்டிஉம் - பண்டிகளும், அள்ளல் ஓங்கு அளத்து அமுதின் பண்டிஉம் - குழைசேறு மிக்கிருந்துள்ள உப்பளத்தினின்று உப்பைக் கொணரும் பண்டிகளும், தளளும் நீர்மையில் - ஓட்டிக்கொண்டு போகப்படுந் தன்மையோடு, தலைமயங்கும் - ஒன்றோடொன்று கலக்கும்; (எ - று.)

குறிஞ்சி நிலத்தின் விளைபொருளாகிய ஏனல் முதலியனவும், நெய்தனிலவிளைபொருளாகிய உப்பும் மிகுதியாக வண்டிகளிலேற்றப்பட்டு இந்நாட்டுக்குக் கொணரப்படுகையில், ஒன்றோடொன்று அவ்வண்டிகள் மயங்கு மென்க. தலைமயங்கும் - இடம்மாறுமெனப் பொருள்கூறி, அந்நாட்டில் ஓரிடத்துத் தோன்றிய எள்ளுமுதலியவை அவைவிளையாதமற்றையிடங்கட்குக் கொண்டுபோகப்படுமெனினுமாம். பி-ம்:—[1] கொள்பவர். [2] ஆங்கு, அங்கு, ஒண். [3] அருத்தும். [4] தள்ள. [5] நீர்வயிற். [6] தரை. (86)

55.—அயிர் முதலிய பொருள்கள் தலைமயங்குதல்.

உயருஞ் [1]சார்விலா [2]வுயிர்கள் செய்வினைப்
பெயரும் [3]பல்கதிப் பிறக்கு மாறுபோல்
[4]அயிருந் [5]தேனு[6]மின் பாகு [7]மாயரூர்த்
தயிரும் வேரியுந் தலைம யங்குமே.

(இ - ள்.) உயரும் - உயர்கதியை [மோட்சத்தை] யடைவதற்கு உரிய, சார்வு - பற்றுக்கோட்டை [உபாயத்தை], இலா- உடையனவாகாத, உயிர்கள்-ஆன்மாக்கள், செய்வினை - (தாம்)

செய்த வினைப்பயனை (நுகர), பெயரும் - மாறிமாறிவருகிற, பல் கதி - (மக்கள் தேவர் நரகர் விலங்குகள் என்ற) நால்வகைக் கதிக ளில், பிறக்கும் ஆறுபோல் - பிறக்கின்ற விதம்போல,—அயிர்உம்- கண்டசர்க்கரையும், தேன்உம்—, இன் பாகுஉம் - இனிய வெல்லப் பாகும், ஆயர் ஊர் தயிர்உம் - இடையருடைய ஊரிலுண்டாகின்ற தயிரும், வேரிஉம்-கள்ளும், தலைமயங்கும் - இடம்மாறும்; (எ-று.)

ஓர்நிலத்தில் தோன்றும் அயிர்முதலியவை மற்றை நிலங் களிற் செல்வதற்கு, நால்வகைக் கதிகளுள் ஏதேனும் ஒருகதியிற் பிறந்த ஆன்மாக்கள் மற்றைக்கதிகளிற் செல்வது, உவமை. முத லிரண்டடிகள் - கடவுளை ஏதேனும் உபாயத்தாற்பற்றி நாற்கதித் துன்பத்தினின்று ஈடேறுவதே உயிர்கள் கைக்கொள்ள வேண்டி டிய கடமையென்ற பொருளைக் குறிப்பிக்கும். உயருஞ்சார்வு - மெய்ஞ்ஞான மெனினுமாம். பி - ம்:—[1]சோர்வு. [2]உயிரின். [3]செல் கதி. [4]அயருந். [5]தேறும். [6]மென்பாகும், நற்பாலும், இன்னமுதும். [7]ஆயிடை, ஆயர்தம். சிலபிரதிகளில் இச்செய்யுளில்லை; சிலபிரதி களில் இச்செய்யுளின்பின்"தாலியைம்படை"(58)என்றபாடல். (87)

56.—திருவிழாவும் வேள்வியும் தலைமயங்குதல்.

[1]கூறு பாடலுங் குழலின் பாடலும்
வேறு வேறுநின் றிசைக்கும் [2]வீதிவாய்
ஆறு மாறும்வந் [3]தெதிர்ந்த வாமெனச்
சாறும் வேள்வியுந் தலைம யங்குமே.

(இ - ள்.) கூறு பாடல்உம் - (மிடற்றுக்கருவியாற்) பாடப் படுகின்ற வாய்ப்பாடலும், குழலின் பாடல்உம் - வேய்ங்குழலி னிசையும், வேறு வேறு நின்று - தனித்தனியாக, இசைக்கும்- ஒலிப்பதற்கு இடமாகிய, வீதிவாய் - வீதிகளில்,—ஆறுஉம் ஆறு உம் வந்து - நதியும் நதியும் வந்து, எதிர்ந்து ஆம் என - (ஒன்றோ டொன்று) எதிர்ப்பட்டனவென்று உவமைசொல்லுமாறு, சாறு உம் வேளவிஉம் - திருவிழாவின்பொருட்டும் வேள்வியின்பொருட் டும் வருகின்ற சனத்திரள், தலைமயங்கும் - கலக்கும்; (எ - று.)

அந்நாட்டில் ஆங்காங்குத் தேவாலயங்களில் நடக்கின்ற திரு விழாவைக் காணும்பொருட்டும், ஆங்காங்கு நிகழ்த்தும் பல்வகை யாகங்களைக் காணும் பொருட்டும் திரண்டுவருகின்ற சனங்களின் திரள் ஆறும் ஆறும் ஒன்றையொன்று எதிர்வதுபோல ஒன்றோ டொன்று மயங்கு மென்பதாம். இனி, விழா - திருவிழாக்கள்; வேள்வி - கலியாணங்கள் என்று உரைத்து, அவற்றில் நிகழும் ஊர்வலத்தில் திரளுஞ்சனங்கள் தலைமயங்கு மென்றலுமொன்று. பி-ம்:—[1]கூறும். [2]வேதி. [3]எதிர்ந்தது, எதிர்த்த, அடுத்த, ஒத்த.

57.—சங்கு பறை முதலியவற்றின் ஓசையினும் உழவர் உரப்போசை மிகுதல்.

மூக்கிற் [1]றுக்குறு [2]மூரி நந்துநேர்
[3]தாக்கிற் றுக்குறும் [4]பறையுந் தண்ணுமை
[5]வீக்கிற் றுக்குறும் விளியு மள்ளர்[6]தம்
வாக்கிற் றுக்குறு [7]மொலியின் [8]மாயுமே.

(இ - ள்.) மூக்கில் தாக்குறும் மூரி நந்துஉம்-மூக்குப்போன்ற இடத்திலே (வாய்வைத்து) நெருக்கி யூதப்படுகின்ற வலிய சங்க

வாச்சியத்திஞேசையும், நேர் தாக்கின் தாக்குறும் - நேரிதான குறுந்தடியால் தாக்கப்படுகின்ற, பறைஉம் - பறையோசையும், வீக்கில் தாக்குறும் தண்ணுமை விளிஉம் - (வார்கொண்டு) இறுகக்கட்டுதலிஞல் தட்டும்போது அதிர்தல்பொருந்திய மத்தளத்திஞேசையும், மள்ளர் - உழவர்கள், தம் வாக்கில் தாக்குஉறும் - (தமது) வாயிஞலே (உழவு மாடுகளை) யதட்டுகின்ற, ஒலியின் - ஒலிக்குள்ளே, மாயும் - அடங்கிவிடும்; (எ - று.)

சங்கு பறை தண்ணுமை என்ற இவைகளிஞேசை யடங்கி விடும்படி மள்ளர் உழவுகுண்டைகளை யதட்டும் ஓசை ஓங்கிநிற்கு மென்க. வலிமை பெற்ற ஒன்றஞல் மற்றையவை யடங்குதலைக் கூறியது,மறைவணி. பி-ம்:—[1] தாக்குற. [2] முரிந்தகோதை. [3] தாக்கித். [4] பறையின். [5] வீக்கித். [6] கை. [7] ஒலியும். [8] மானுமே. (89)

58.—குழந்தைகட்குப் பாற்சோற்றை ஊட்டுதலின் வருணனை.

தாலி யைம்படை [1] தழுவு மார்பிடை
[2] மாலை வாயமு [3] தொழுகு மக்களைப்
பாலி னூட்டுவார் [4] செங்கை பங்கயம்
[5] வானி லாவுறக் [6] குவிவ மானுமே.

(இ - ள்.) தாலி ஐம்படை தழுவும் மார்பிடை - ஐம்படைத் தாலிபூண்ட மார்பிலே, மாலை - ஒழுங்காக, வாய் அமுது ஒழுகும் - வாயிலிருந்து சொள்ளுநீர் வடியப்பெற்ற, மக்களை - மக்களுக்கு, பாலின் ஊட்டுவார் - பாற்சோற்றையூட்டுகின்றமகளிரின், செங்கை - செந்நிறமுள்ள கைகள், வால் நிலாஉற பங்கயம் குவிவ - வெண்ணிறமுள்ள நிலாப்படுதலால் தாமரைமலர் குவிவதை, மானும் - ஒத்திருக்கும்; (எ - று.)

ஐமபடைத்தாலி - காத்தற்கடவுளான திருமாலின் சங்கம் சக்கரம் தண்டு வில் வாள் என்னும் பஞ்சாயுதங்களின்வடிவமாகப் பொன்கொண்டு அமைப்பது; இதனை, பிள்ளைகளுக்குஅனுக்கம் நேராமலிருத்தற்பொருட்டுக் காப்பாக ஐந்தாவது மாதத்திற்பூணுவித்தல் மரபென்பர். இது - தாலியென்றும், தாலியைம்படையென்றும், ஐம்படையெனறும் வழங்கும். இந்த ஐம்படைத்தாலி, இருபாற்குழந்தைக்கும் ஏற்கும். பாலன்னத்தை யூட்டும்போது கை குவிவதால், இங்ஙன் வருணித்தார்; இனி, மாலைவாயமுதுக்கு நிலாவை உவமைகூறியதாக்கொண்டு, அந்த மக்களின் முகம் சந்திரன்போலுமென்பது தொனிக்குமென்பாரு முண்டு. பால் - பாலன்னத்திற்கு இலக்கணை. பாலிஞூட்டுவார் - பாலுடனே சோற்றையுண்பிப்பவ ரென்றுமாம். பி-ம:—[1] தவழும். [2] ஆலை. [3] ஊறும். [4] செங்கைப். [5] வாணிலா. [6] குவிதல். (90)

59.—ஆடவர் மகளிர் என்பவரின் பொலிவுமுதலியன.

[1] பொற்பி னின்றன பொலிவு [2] பொய்யிலா
நிற்பி னின்றன [3] நீதி மாதரார்
அற்பி னின்றன வறங்க ளன்னவர்
கற்பி [4] னின்றன கால மாரியே.

(இ - ள்.) பொலிவு - அழகுகள், பொற்பின் - (அவரவர்களுடைய) நல்ல குணங்களால், நின்றன - நிலைபெற்றிருந்தன;

நீதி - நியாயங்கள், பொய் இலா நிற்பின் - பொய்மையில்லாத நிலைமையால் [உண்மைநிலையால்], நின்றன - ; மாதரார் - மகளிருடைய, அற்பின் - அன்பினால், அறங்கள் - தருமங்கள், நின்றன —; அன்னவர் - அம்மகளிருடைய, கற்பின் - கற்பினால், காலம் மாரி - பருவ மழைகள், நின்றன —; (எ - று.)—சொற்பொருட்பின்வருநிலை.

பின்னிரண்டடி மடவாரைப்பற்றிவருதலால், முன்னிரண்டடி ஆடவரைப்பற்றியனவென்னலாம்; அந்நாட்டு ஆடவர் அழகாகக் கருதுவது - நற்குணமுடைமையையே: அன்னார் உண்மை தவறாதிருக்கவேணுமெனனும் உறுதியை யுடையராதலால், அவரிடத்து நீதி பிறழாதிருந்தன வென்க. "அறத்திற்கேயனபுசார் பென்ப" என்றவாறு, "அற்பினின்றன வறங்கள்" என்றார். "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப பெய்யு மழை" என்றவாறு தேவரும் கற்புடைமகளிர்க்குக் குற்றேவல் புரிவராதலால், 'கற்பினின்றன காலமாரி' என்றார். இப்பாடல் முழுவதும் மகளிரைப் பற்றியனவெனக்கொள்ளினுமாம். பி - ம்:—[1] பொறபு. [2] பொய்யிலார். [3] நீதம். [4] நின்றவண். (91)

60.—கோசலதேசத்தின் பரப்பு.

சோலை மாநிலந் [1] துருவி யாவரே
வேலை கண்டுதா மீள [2] வல்லவர்
சாலும் வார்புனற் சரயு வும்பல
காலி னோடியுங் கண்ட தில்லையே.

(இ - ள்.) சோலை - சோலைகளாற் சூழப்பட்ட, மா நிலம் - பெருமை பொருந்திய அந்தக்கோசல தேசத்தை, துருவி - தேடி, வேலை - எல்லையை, தாம் —, கண்டு - பார்த்தறிந்து, மீள வல்லவர் - மீண்டு வந்துசொல்லும் வல்லமையுடையவர், யாவரே —? [எவருமில்லை]; சாலும் வார் புனல் சரயுஉம் - மிகுந்து பெருகுகின்ற நீரையுடைய சரயுநதியும், பல காலின் ஓடிஉம் - பல வாய்க்கால்களால் ஓடிச்சென்றும் [பலகால்களைக்கொண்டு நடந்துபார்த்தும்], கண்டது இல்லை - (அத்தேசத்தினெல்லையைக்) கண்டதில்லை; (எ - று.)

பலகால்களால் ஓடிச்சென்றும் காணமுடியாத கோசலதேசத்தினெல்லை இரண்டே கால்களையுடைய மானுடரால் எங்ஙனம் காண முடியும்? காணமுடியாதென்க: தொடர்நிலைச் செய்யுட்பொருட் பேறணி. 'பலகாலினோடியும்' என்ற சிலேடை, இவ்வணிக்கு உபகாரப்பட்டது. பி-ம்:—[1] துன்னும், துன்னி. [2] வல்லரே, வல்லரோ. ()

61.—நாட்டின் சிறப்பும் மேற்படலத்தின் தோற்றுவாயும்.

வீடு [1] சேரநீர் வேலை [2] கான்மடுத்து
ஊடு பேரினு முலைவி லாநலம்
கூடு கோசல மென்னுங் [3] கோதிலா
நாடு [4] கூறினு நகரங் கூறுவாம்.

(இ - ள்.) வீடு சேர - (பூமிமுழுவதும்) அழிதலைப் பொருந்த, நீர் வேலை - நீரையுடைய கடல், கால் மடுத்து - கடுங்காற்றினால் மோதப்பட்டு, ஊடு பேரின்உம் - அந்தப் பூமியினிடையிலே பேர்ந்து வந்தாலும், உலைவு இலா - அழிதலில்லாத [அழியாத], நலம் - தன்மை, கூடு - பொருந்திய, கோசலம் என்னும் - கோசலமென்கிற,

கோது இலர் நாடு - குற்றமில்லாத நாட்டின் சிறப்பை, கூறினும்- (இதுவரையில்) சொன்னோம்; (இனி), நகரம்-(அந்தக் கோசலநாட்டிலுள்ள) அயோத்திமாநகரின் சிறப்பை, கூறுவாம்-; (எ - று.)

கோசலநாடு பிரளயத்திலும் அழியாத தென்க. வீடு-தொழிற் பெயர். இது, நகரப்படலத்தின் முதற்செய்யுளாகச் சிலபிரதிகளில். பி-ம்:—[1]சேரும். [2]தான். [3]கோதிலார். [4]கூறிப்பின், கூறிநாம். (93)

நாட்டுப்படலம் முற்றிற்று.

3-ஆவது நகரப்படலம்.

நகரத்தினது சிறப்புகளைச் சொல்லும் பாகமென்க. இதனால், காப்பியத் தலைவனான இராமபிரானது திருவவதாரத்திற்கிடமான அயோத்தியாநகரத்தைக் கவி வருணிக்கின்றனர்.

1.—இதுமுதல் ஏழுகவிகள்—அயோத்திமாநகரத்தின் சிறப்பைக் கூறும்.

[1]செவ்விய மதுரஞ் [2]சேர்ந்தநற் பொருளிற் சீரிய [3]கூரிய [4]தீஞ்சொல், வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன் முனிவரும் [5]புகழ்ந்தது [6]வரம்பில், எவ்வுல கத்தோ ரியாவருந் தவஞ்செய் தேறுவா னாதரிக்கின்ற, அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி [7]புரிகின்ற தயோத்திமா நகரம்.

(இ - ள்.) அயோத்திமாநகரம்-அயோத்தியென்னுஞ் சிறந்த பட்டணமானது,-செவ்விய-அழகையுடையனவும், மதுரம் சேர்ந்த-சுவை பொருந்தியனவும், நல் பொருளின் சீரிய - சிறந்த பொருளாற் சிறப்புடையனவும், கூரிய-நுட்பமாயுள்ளனவும், தீம்சொல் -இனிமையைத் தருவனவுமாகிய சொற்களை, வவ்விய - கொள்ளை கொண்டவரான, கவிஞர் அனைவர்உம்-புலவர்களெல்லோராலும், வடநூல் முனிவர்உம்-வடநூலில்வல்ல முனிவர்களாலும், புகழ்ந்தது - புகழப்பட்டுள்ளது; (அன்றியும்), வரம்பு இல் எ உலகத்தோர் யாவர்உம் - அளவில்லாத எல்லாவுலகங்களிலுமுள்ளவர்களெல்லோராலும், தவம் செய்து-தவத்தைச் செய்து, ஏறுவான் -பெறும்பொருட்டு, ஆதரிக்கின்ற-விரும்பப்படுகின்ற, அ உலகத்தோர் - அந்த மோட்சலோகத்திலிருப்பவர்களும், இழிவதற்கு - (அங்கு நின்றும்) இறங்கி வந்து அடைவதற்கு, அருத்தி புரிகின்றது - ஆசையைச் செய்யுந் தன்மையுடையது; (எ - று.)

இங்ஙனம் அயோத்திமாநகரம் யாவராலும் புகழப்படுவதற்கும் விரும்பப்படுவதற்கும் காரணம், ஸ்ரீராமனது திருவவதாரத்தலமாதலால். கவிக்குச் செவ்வி—மடக்கு முதலிய சொல்லணிகளாலும், மோனை எதுகை முரண் முதலிய தொடைகளாலும் வரும் அழகாம்: இதற்கு - நேர்மையாக [ஐயமின்றி]ப் பொருளைப் பயப்பது என்றும் உரைக்கலாம். மதுரம் என்றது - சிருங்காரம் வீரம் கருணை அற்புதம் நகை பயம் பீபற்சம் ரௌத்ரம் சமநிலை என்னும் நவரசங்களை. நற்பொருளிற் சீரிய என்றது - உவமை முதலிய பொருளணிகளால் வரும் அழகைக் கருதி. இனி, சீரிய தீஞ்சொல் என்பது - கிராமியவழக்குச்சொற்கள்போலன்றி, அறிஞர் பயிலும்

விழுப்பமுடைய சொற்கள் என்க.கூரிய-தொனி எனப்படுகிற குறிப்புப் பொருளையுடைய என்றபடி. 'கவிஞரனைவரும்' பதினெட்டுத் தேச பாஷைகளிலும் மற்றைப் பாஷைகளிலும் இராமகதையைப் பாடிய புலவர்யாவரும். வடநூல்முனிவர் என்றது - ராமகதையைக் கூறியவர்களான வான்மீகி வசிட்டர் போதாயனர் முதலியோரை.

வரம்பில் எவ்வுலகத்தோர் என்றது - மிக்க பரப்பையுடைய பூலோகம் முதலிய மேலேழுலகங்களிலும் அதலம் முதலிய கீழேழுலகங்களிலும் உள்ளவர்களே. பின்னிரண்டடி, பேரின்பத்தை நுகர்பவரான முத்தியுலகத்தவர்களும் அதனைவிட்டுவர விரும்பும்படி பலவகை இன்பங்களையும் தருந் தன்மையது இந்நகரமென்பது கூறும்: "மாண்டு பிறக்குந் துயர்போய் வைகுந்தம் புக்கவரும், மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடம்" என்றார், பிள்ளைப் பெருமாளையங்கார். பரமபதநாதன் ஸ்ரீராமனுகத் திருவவதரித்ததனால், அப்பரமனது சௌசீலிய சௌலப்பிய குணங்களைக் காண வைகுந்த வாசிகளும் இந்த அயோத்திக்கு வர விரும்புகின்றன ரென்றார்; வீட்டுலகததிலுள்ளவரும் வர விரும்புகின்றன ரென்றதனால், பிறவுலகத்தவர் வர விரும்புதல் கூருமையே பெறப்படும். அந்நகரத்தினது சிறப்பு முக்காலத்தினும் ஒரு தன்மைத்தாக விருப்ப தென்பது தோன்ற, 'புரிகின்றது' என நிகழ்காலத்தாற் கூறினர். அயோத்தி - (அகழி ஆயுதம் சேனை முதலியவற்றால்) எவராலும்பொரமுடியாது மிக்ககாவலுடையது. பரமபதத்திறகும் அயோத்தி என்ற பெயருண்டு. பி - ம்:—[1]திவ்விய. [2]சேர்ந்தன. [3]கூறிய, கூரியல். [4]இன். [5]புகழ்ந்தன. [6]வரம்பின். [7]புரிகின்ற. (94)

2. நிலமகண் முகமோ திலதமோ கண்ணோ நிறைநெடு மங்கல [1]நாணோ, இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி னிருக்கையோ திருமகட் கினிய, மலர் கொலோ [2]மாயோன் [3]மார்பினன் மணிகள் வைத்தபொற் பெட்டியோ [4]வானோர், உலகின்மே லுலகோ வூழியி னிறுதி யுறையுளோ யாதென வுரைப்பாம்.

(இ - ள்.) (அவ்வயோத்திமாநகரமானது)—நிலம் மகள் முகம் ஓ-பூமிதேவியினது திருமுகமோ? திலதம் ஓ-(அம்முகத்திலணியும்) திலகமோ? கண் ஓ-(அவளது) கண்தானோ? நிறை நெடு மங்கலம் நாண் ஓ-நிறைந்த நீண்டமங்கலசூத்திரமோ? முலைமேல் இலகுபூண் ஆரம் ஓ - தனங்களின்மேல் தரிக்கப்பட்டுவிளங்குகிற இரத்தின மாலையோ? உயிரின் இருக்கைஓ-(அந்நிலமகளின்) உயிர் இருக்குமிடமோ? திருமகட்கு இனிய மலர்ஓ - இலக்குமிக்கு வசித்தற்கு இனியதான தாமரைமலரோ? மாயோன் மார்பில் நல்மணிகள் வைத்த பொன் பெட்டிஓ-திருமாலின் திருமார்பி லணியப்பட்ட சிறந்த கௌஸ்துபவிரத்தினம்போன்ற இரத்தினங்கள் வைத்துள்ள பொன்னாற்செய்த பெட்டிதானோ? வானோர் உலகின்மேல் உலகுஓ-தேவலோகத்தினும் மேலாகவுள்ள ஸ்ரீவைகுண்டலோகமோ? ஊழியின் இறுதி உறையுள் ஓ-யுகாந்தகாலத்தில் எல்லாப் பொருள்களுந் தங்குமிடமான திருமாலின் திருவயிறோ? யாதுஎன உரைப்பாம்-(இவற்றுள்) எது என்று சொல்லுவோம்? (எ-று.)

அங்கங்களுட் சிறந்து மேன்மை பெற்றிருத்தலால் 'முகமோ' என்றும், திலகம் அம்முகத்திற்குச் செயற்கையழகுசெய்தலால் 'திலதமோ' என்றும், அம்முகத்திற்கு இயற்கையாகவே அழகு செய்வதாகி எல்லாவுறுப்புக்களினும் சிறந்ததாயுமிருத்தலால், 'கண்ணோ' என்றும், மகளிர்க்குச் சிறந்த அணியாதலால் 'மங்கல நாணோ' என்றும், கணவர்கண்ணுக்குக் களிப்பைக் கொடுத்த லால் 'முலைமேலாரமோ' என்றும், எல்லாவுயிர்க்குமுயிராகிய திரு மால் திருவவதரித்த தல மாதலால் 'உயிரினிருக்கையோ' என் றும், அளவிறந்த அருஞ்செல்வத்தை அகலாமல் அமையப்பெறுத லோடு இலக்குமியமிசமாகிய சீதாபிராட்டியாருக்கு அவதரித்த தலமாகிய மிதிலாபுரியினும் மிகஇனியவாசத்தல மாதலால் 'திரு மகட்கினியமலர்கொலோ' என்றும், சிறந்த பொருள்களையுள்ளே யுடைமையால் 'மாயோன்மார்பினன்மணிகள் வைத்தபொற் பெட்டியோ' என்றும், எல்லாவுலகத்தினும் சிறந்திருத்தலால் 'வானேருலகின்மேலுலகோ' என்றும், எல்லாப்பொருள்களுமுடை மையால் 'ஊழியினிறுதியுறையுளோ' என்றும் கூறினர்; இங்ஙனம் ஒருபொருளைப் பலபடக்கூறியது, பலபடப்புனைவணியாம். மகளிர் க்கு மங்கலநாண் இல்லையாயின் இயற்கை செயற்கையழகுகள் அனைத்தும் பயன்படாவாதலால், 'நிறைநெடுமங்கலநாண்' என் றது. 'திருமகட்கு உயிரினிருக்கையோ' என இயைத்தலுமாம் பி-ம்:—[1] தானோ. [2] நெடியோன். [3] மார்பத்துமாலை, மார்பின்மன் மணிகள், மார்பத்துமணித்தார், மார்பத்துமாலை, மார்பினன்மாலை, மார்பத்துமழுத்தி. [4] மலரோன். (95)

3. உமைக்கொருபாகத் தொருவனுமிருவர்க்கொருதனிக்கொ ழுநனுமலர்மேல், கமைப்[1] பெருஞ்செல்வக்[2] கடவுளு[3] முவமை[4] கண் டில[5] ரங்கது காண்பான், [6] அமைப்பருங் காத [7] லதுபிடித் துந்த வந் தரஞ் சந்திரா தித்தர், இமைப்பிலர் திரிவ[8] ரதுவலா[9] லிதனுக் கியம் பலா [10] மேதுமற்[11] றியாதோ.

(இ - ள்.) உமைக்கு - உமாதேவியை, ஒரு பாகத்து - ஒரு பக்கத்திலே கொண்ட, ஒருவன்உம்-ஒப்பற்றவனான பரமசிவனும், இருவர்க்கு - (ஸ்ரீதேவி பூதேவி என்னும்) இரண்டுமகளிர்க்கும், தனி ஒரு கொழுநன்உம் - ஒப்பற்ற ஒரு கணவனாகிய திருமாலும், மலர்மேல்-(அததிருமாலின் நாபீ) கமலமலரில் (தோன்றிய), கமை பெரு செல்வம்-பொறுமையையே பெருஞ் செல்வமாகக்கொண்ட, கடவுள்உம் - பிரமதேவனும், உவமை-(இவ்வயோத்திக்கு) உவமை யானதொருபட்டணத்தை, கண்டிலர்—; அது-அங்ஙன் ஒப்பான வேறொருபட்டணத்தை, காண்பான் - பார்க்கும்பொருட்டு, அமை ப்பு அரு காதல் அது - தடுத்தற்குக்கூடாத ஆசை, பிடித்துஉந்த- (தம்மைப்) பிடித்துத்தள்ளுதலினால், அந்தரம் - ஆகாயத்தில், சந்திர ஆதித்தர் - சந்திரனும சூரியனும், இமைப்பு இலர் திரிவர் - இமைகொட்டாதவராய் இன்னமும் அலைகின்றனர்; அது அலால் - அதுவல்லாமல், இதனுக்கு-இவ்வாறு அன்னார் திரிதற்கு, இயம் பல் ஆம் - சொல்லக்கூடிய, ஏது-காரணம், மற்றுயாதுஓ-?

திரிமூர்த்திகளுமே இந்நகர்க்குச் சமானமானதொரு நகரத் தை எங்குங் கண்டதில்லையென்று முதலிரண்டடிகளினாற் கூறி

ஞர்: சந்திரசூரியர்கள் நாடோறும் ஆகாயத்தில் திரிவதற்குக் காரணம், 'இந் நகரத்தைப் போன்ற வேறுநகரம் எவ்விடத்திலேனும் காணக்கிடைக்குமோ ?' என்று தேடிப்பார்த்தற்கேயாமென்றார்: இது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இதனால், அந்நகரத்தின் ஒப்பில்லாத் தன்மை விளங்கும். திரிமூர்த்தியர்தாமே இந்நகரத்திற்கு ஒப்பான நகரம்ஒன்று காணதிருக்க, அம்மூர்த்தியருள்ஒரு மூர்த்தியின் கண்ணிலும் மனத்திலும் தோன்றிய சூரியசந்திரர் எங்ஙனங்காணுவ ரென்ற கருத்து இங்குத் தொனிக்கும். 'இமைப்பிலர்' என்றதனால், சந்திரசூரியர்கள் சாக்கிரதையோடு காண்கின்றனரென்பது பெறப்படும். 'இருவர்க்குஒருதனிக்கொழுநன்' என்பதற்கு - வள்ளி தேவயானை என்கிற இருவர்க்கும் ஒப்பற்ற கணவனாகிய சுப்பிரமணியக்கடவுள் என்றல் அத்துணையாச் சிறவாது. 'ஒருபாகம்' என்பது - வாமபாகத்தை. ஆதித்தன் = ஆதித்யன்: (காசியபமுனிவரதுமனைவியருள்) அதிதியென்பவளது மகன்; இச்சொல்-சூரியனுக்குச் சிறப்பாகவழங்கும். பி-ம்:—[1]பருஞ். [2]கடவுளே. [3]முதலோர், உலகர். [4]கண்டிலா. [5]நகரிது, நகரது. [6]அமைப்பெருங். [7]முன், இது. [8]ஈதலால், இதுவலால், இதுவலாது. [9]அதனுக்கு. [10]உவமைவேறு, ஏதுவேறு. [11]யாதே. (96)

4. அயின்முகக் குலிசத் தமரர்கோ னகரு மளகையு [1]மென்றிவை[2] யயனார், [3]பயிலுற வுற்ற[4]படிபெரும் பான்மை[5]பகர்திரு நகரிது [6]படைப்பான்,மயன்முதற் றெய்வத் தச்சருந் தத்த மனத்தொழி[7] ணாணினர் மறந்தார், புயறொடு குடுமி [8]நெடுநிலை மாடத் [9]திந்நகர் புகலுமா றெவனோ.

(இ - ள்.) அயனார் - பிரமதேவன், பெரு பான்மை பகர் திரு நகர் இது - மிக்க சிறப்பாகக் கூறப்படுகிற அழகிய இந்த அயோத்தியாநகரத்தை, படைப்பான் - படைக்கும்பொருட்டு, அயில் முகம் - கூர்மையை முகத்திலேகொண்ட, குலிசத்து-வச்சிராயுதத்தையுடைய, அமரர் கோன் - தேவர்களுக்கு அரசனான இந்திரனது, நகர்உம் - இராசதானியாகிய அமராவதிபட்டணமும், அளகைஉம் - (குபேரனது இராசதானியாகிய) அளகாபுரியும்,என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவ்விரண்டு நகரங்களையும், (முன்னர்ப்படைத்தது), பயில் உறவு உற்ற படி - (படைத்துப்) பயிற்சிசெய்தபடியாகும்: மயன் முதல் தெய்வம் தச்சர்உம் - மயன் முதலாகியதேவசிற்பியர்களும், (இந்நகரத்தின் சிறப்பைக்கண்டு), நாணினர் - (இவ்வாறு தங்களால்நிருமிக்கமுடியாமையால்) வெட்கங்கொண்டவர்களாய், தம் தம் மனம் தொழில் மறந்தார் - தங்கள் தங்களுடைய சங்கற்பத்தினாற் படைக்குந் தொழிலை மறந்துவிட்டார்கள்; (என்றால்), புயல் தொடு குடுமி நெடு நிலை மாடத்து அ நகர் - (மிக்கஉயர்ச்சியால்) மேகங்களையளாவுகின்ற சிகரங்களையுடைய நீண்ட மேல்நிலையைக்கொண்ட உபரிகை வீடுகளையுடைய இவ்வயோத்தியாபுரியை, புகலும் ஆறு - வருணித்துச் சொல்லும்வகை, எவன்ஓ - எவ்வாறோ? (எ - று.)ஆயினும், மனத்துக்கு எட்டியமட்டிற்சிறிதுசொல்வேனென அவையடக்கங் கூறியவாறும்.

அழகு, செல்வவளம் முதலியவற்றில் மிக்கவையென்று எல்லோராலும்உயர்த்துச்சொல்லப்படுகிற அமராவதியும் அளகா புரியும் என்ற இத்தேவநகரங்களே அயோத்தியாநகரைப் படைத் தற்குப் பழகும்பொருட்டுப் பிரமன் சிருட்டித்தன என்றால், இவ் வயோத்திமாநகரின் சிறப்பு அமராவதிமுதலியதேவநகரங்களி னும் விஞ்சியிருக்குமன்றோ? 'இவ்வயோத்திநகரை யொத்தவேறு நகரம் நம்மாற் படைக்கமுடியுமா?' என்று ஆராயாமலே இது போன்றதொருநகரத்தை நிருமிக்கமுயன்று மயன்முதலான தெய்வத்தன்மையுள்ள தச்சர்களும் முடியாது மிக்க நாணங் கொண்டு தந்தம் மனத்தொழிலையும் மறந்துவிட்டனர்; ஆதலால், இவ்வளவு சிறப்புடைய இந்நகரை வருணித்தல் எம்போலியர்க்கு அரிதென்பதாம். அமராவதி அளகைஎன்றஇவற்றைப்படைத்த பின்பு அயோத்திமாநகரத்தைப் பிரமன் படைத்ததற்குக் காரணம் - கைதேர்ந்தபின்பே இந்நகரைப் படைக்கவேண்டுமென்ற எண்ணமே எனக் காரணமல்லாததைக் காரணமாகக்கற்பித்துக் கூறியது-ஏதுத்தற்குறிப்பேற்றவணி. புயல்தொடு குடுமி - தொடர் புயர்வுநவிற்சியணி. இதனால், அந்நகர மாளிகைகளின் மிகவோங் கிய தன்மை தொனிக்கும். அமராவதி - தேவேந்திரனது இராச தானி; வானுலகத்துஉள்ளது. அளகை - குபேரனதுபட்டணம்: கைலாசத்திலுள்ளது. பி - ம்:—[1] எண்ணிய, எண்ணில. [2] அயனால். [3] பயில்வுறல், பயனுற. [4] பொருட்பெரும்பாலும், படிபெரும்பாலும், படிபெரும்பகலும். [5] அப்பெருந், இப்பெருந், பலபெருந், பலபகர். [6] படைப்பார். [7] காணினன். [8] நெடுநிலம், நீணிலை. [9] திருநகர். (97)

5. புண்ணியம் புரிந்தோர் புகுவது [1] துறக்க [2] மென்னுமீ தரு மறைப் [3] பொருளே, [4] மண்ணிடை [5] யாவ ரிராகவ னன்றி மாதவ மறத் தொடும் வளர்த்தார், எண்ணருங் [6] குணத்தி [7] னவனினி திருந்திவ் வேழுல [8] காளிட மென்றால், [9] ஒண்ணுமோ [10] விதனின் வேறொரு [11] போக வுறைவிட முண்டென வுரைத்தல்.

(இ - ள்.) 'புண்ணியம் புரிந்தோர் - (இம்மையில்) நல்வினை களைச் செய்தவர்கள், புகுவது - (மறுமையிற்) சேர்ந்து இன்ப மனுபவிக்குமிடம், துறக்கம்-சுவர்க்கலோகமாம்,' என்னும் ஈது- என்கிற இவ்விஷயம், அரு மறை பொருள் ஏ - (அறிவதற்கு) அருமையான வேதங்களிற் கூறிய சித்தாந்தமான அருத்தமே யாகும்; அறத்தொடுஉம் - (அத்தன்மைய சிறப்புடைய) தருமத் துடனே, மா தவம் - பெரிய தவத்தையும், மண்ணிடை-(இந்த)நில வுலகத்திலே, வளர்த்தார்-நன்கு செழிக்கச்செய்தவர், இராகவன் அன்றி - ஸ்ரீராமபிரானே யல்லாமல், யாவர் - வேறு எவரிருக் கின்றனர்? (அங்ஙனம் அறத்தை நிலைநாட்டிய), எண் அருங் குணத்தின் அவன்-நினைத்தற்கும் அருமையாகிய [மிகப்பலவாகிய] திருக்கலியாணகுணங்களையுடைய அந்த ஸ்ரீராமன், இனிது - இனிமையாக, இருந்து - (பலகாலம்) எழுந்தருளியிருந்து, இ ஏழ் உலகு - இந்த ஏழுலோகங்களையும், ஆள் - ஆள்கின்ற, இடம் -ஸ்தானமாகும், (இந்நகரம்), என்றால்—, இதனின் - இவ் வயோத்திமாநகரத்தினும் மேம்பட்டதாகிய, போக(ம்) உறைவு -

(பலவகைச்) சுகாநுபவங்களுக்கும் இருப்பிடமான, வேறு ஒரு இடம்-வேறொரு உலகம், உண்டுஎன-உள்ளதென்று, உரைத்தல்-சொல்லுதல், ஒண்ணும்ஓ-பொருந்துமோ? (எ - று.)

தீவினைநீக்கி நல்வினையைச்செய்தவர் இறந்தபின்பு போய்ச் சேர்ந்து இன்பம் நுகருமிடம் தேவலோகமேயா மென்றல், வேதப் பொருளாகுமென்பது திண்ணம்: அவ்வேத முதல்வனே அவ் வறத்தை நிலைநிறுத்தும்பொருட்டுத் தசரதசக்கரவர்த்தியின் திரு மகனாய்த் தோன்றி அனைத்துலகத்தையும் அரசாண்டுகொண் டிருந்த இடம் இவ்வயோத்தி யென்றால், இதனினும் மேலான வேறு ஒரு போகஸ்தானம் உண்டென்று நாக்கூசாமற் சொல்ல முடியாதன்றோ! எனவே, கருமபூமியும் புண்ணிய பூமியுமாகிய எல்லா வுலகங்களிலுமுள்ள நகரங்களனைத்தினுஞ் சிறந்தது அயோத்தி யென்றவாறும். எல்லாவுலகங்களுக்குந் தலைவனாக உள்ளவனொரு வன் அவ்வுலகங்களுள் ஒன்றிலேஓரிடத்தில்வாழ்ந்திருப்பானாயின் அவ்விடம் மற்றை யெல்லாவிடங்களினுஞ் சிறப்புற்றே யிருத்தல் வேண்டு மென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமே யென்க. 'இராகவனன்றி' என்பதை இரண்டாம் வேற்றுமைத் தொகையாக வைத்து, உலகத்தில் இராமனைக் குறித்தல்லாமல் வேறொருவரைக்குறித்துத் தவமுந் தருமமும் யார் செய்கின்றனர்? எவருமில்லை; அங்ஙனம் யாவராலுந் தியானஞ் செய்யப்படும் பொருளாகிய ஸ்ரீராமன் அரசுவீற்றிருக்குமிடம் என்றுமுரைப்பர். இனி, சரணாகதியாகிய நற்செய்கையைச் செய்தவர்கள் புகுமிடம் வீட்டுலகமென்பது, ஸகலவேதாந்தஸாரார்த்தமே: அச்சரணாகதி யாகிய பெருந்தவத்தைத் தத்தம் வருணாச்சிரமங்களுக்குரிய தரு மங்களுடனே இராமபிரானைக் குறித்தல்லாமல் வேறு எவரைக் குறித்து உலகத்திற் செய்வார்கள்? அங்ஙனம் ஸர்வசரண்யனான எம்பெருமான் தனது வீட்டுலகத்தை விட்டு இங்கு அரசு ஆண்டு இருந்தனனென்றால், இந்நகரம்போல் வேறொரு பெரும்போகம் நுகரிடம் உண்டோ என்றுமாம். பி - ம்:—[1] சுவர்க்கம். [2] எண்ணும். [3] பொருளேல். [4] மண்மிசை. [5] யாரே. [6] குணத்தன். [7] இவன். [8] ஆள் விடம். [9] ஒண்ணுமே. [10] அதனின். [11] போம். (98)

6. [1] தங்குபே ரருளுந் தருமமுந் துணையாத் [2] தம்பகைப் [3] புலன் களைந் தவிக்கும், பொங்குமா தவமு ஞானமும் [4] புணர்ந்தோ ரியாவர்க் கும் புகலிட மான, செங்கண்மால் [5] பிறந்தாண் டளப்பருங் காலந் திருவின் [6] வீற் றிருந்தன [7] னென்றால், அங்கண்மா ஞாலத் [8] திந்நக ரொக்கும் [9] பொன்னக ரமரர்நாட் டியாதோ.

(இ - ள்.) 'தங்கு - (தம்மிடத்துப்) பொருந்திய, பேர் அருள் உம் - மிக்க கருணையையும், தருமம்உம் - தருமத்தையும், துணை ஆ-துணையாகக்கொண்டு, தம் பகை புலன்கள் ஐந்து அவிக்கும்-(தமது) பஞ்சேந்திரியங்களையும் (ஐம்புலன்களிற்போகவொட்டா மல்) அடக்குபவர்களாகி, பொங்கு மா தவம்உம் ஞானம்உம் புணர்ந் தோர் யாவர்க்குஉம்-மேன்மேல்வளர்கின்ற தவத்தையும் தத்துவ ஞானத்தையும் பெற்றிருப்பவர்களாகிய (இல்லறத்தார் துறவறத் தாராகிய பெரியோர்) யாவர்க்கும், புகல் இடம் ஆன - சரணமாக

அடைதற்குரிய இடமான, செங்கண் மால் - சிவந்த திருக்கண்களையுடைய திருமால், பிறந்து - திருவவதரித்து, ஆண்டு-அவ்வயோத்தியாநகரத்தில், அளப்ப அரு காலம் - அளவிடுதற்கு முடியாத [மிகப்பல] காலம், திருவின் - ஸ்ரீமகாலட்சுமியினது அவதாரமாகிய சீதாபிராட்டியுடனே, வீற்றிருந்தனன் - மிக்க சிறப்புடனே தங்கியிருந்தான்,' என்றால்—, அம் கண் மா ஞாலத்து - அழகிய இடத்தையுடைய பெரியபூமியில், இ நகர்-இவ்வயோத்தியாபுரியை, ஒக்கும்-ஒத்திருக்கின்ற, பொன் நகர் - பொன்போலருமையான நகரம், அமரர் நாட்டு - தேவலோகத்தில்தாம், யாதுஓ - எது உள்ளதோ? (எ - று.)

துறவறத்தார் இல்லறத்தார் என்ற இவ்வுலகத்திலுள்ள யாவர்க்கும் புகலிடமான ஸ்ரீராமபிரானே இந்நகரத்தினினிமையைக் கண்டு இங்கே திருவவதரித்துப் பல்லாயிரமாண்டு அரசுபுரிந்து இனிது வாழ்ந்தனனாதலால், தேவலோகத்திலும் இந்நகரத்தையொத்த நகரம் வேறொன்றில்லையென்று, கீழ்ச்செய்யுளிற் கூறிய கருத்தையே கவி இங்கு வேறுவகையாகக் கூறினர். இதனால், இவ்வுலகத்திலில்லையென்பது தானே பெறப்படும். அருளால் தருமமும், தருமத்தால் தவமும், தவத்தால் ஞானமும், ஞானத்தால் கடவுளும் கைகூடுதலால், 'தங்குபேரருளும்...ஞானமும் புணர்ந்தோரியாவர்க்கும் புகலிடமான செங்கண்மால்' என்றார். 'அளப்பருங்காலம்' என்றது, சற்றேறக்குறையப் பதினோராயிரம் வருடம்: இதில், சீதாபிராட்டியுடன் ஸ்ரீராமன்கூடியிருந்தது, ஆயிரம் வருடமே. ஞானத்திற்கு விரோதம் விளைத்தலின் 'பகைப்புலன்கள்' என்றார். பி - ம்:—[1] தங்குமாபொருளும், தங்கியபொருளும். [2] தகும். [3] புலன்களைத்தவிர்க்கும், புலன்களைந்தவர்க்கும், புலன்களைத்தவிர்த்து, புலன்களைத்தவிர்த்தும். [4] புரிந்தோர், உணர்ந்தோர். [5] இருந்து. [6] வீற்றிருந்தமை. [7] தெளிந்தால், தெரிந்தால். [8] அந்நகர். [9] நன்னகர். (99)

7. அரசெலா மவண வணியெலா மவண வரும்[1]பெறன் மணியெலா மவண, [2]புரசை[3]மால் களிறும் [4]புரவியுந் தேரும் பூதலத்தியாவையு மவண, [5]விரசுவார் முனிவர் விண்ணவ [6]ரியக்கர் விஞ்சையர் [7]முதலினோ [8]ரென்றால், உரை [9]செய்வேன் யானே [10]யானபோ ததனுக் குவமைதா [11]னரிதரோ வுளதோ.

(இ - ள்.) 'அரசு எலாம் - எந்நகரத்தரசர்களும், அவண - அவ்விடத்திலிருக்கின்றனர்; அணி எலாம் - சிறந்த ஆபரணங்கள் யாவும், அவண - அவ்விடத்திலிருக்கின்றன; பெறல் அரு மணி எலாம் - கிடைப்பதற்கு அருமையான இரத்தினங்களெல்லாம், அவண—; புரசை மால் களிறுஉம் - கழுத்திடுகயிற்றையுடைய பெரிய மதயானைகளும், புரவிஉம்-குதிரைகளும், தேர்உம்-இரதங்களும், பூதலத்து யாவைஉம் - இந்நிலவுலகத்திலுள்ள மற்றையெல்லாப பொருள்களும், அவண—; (அன்றியும்), முனிவர் - இருடியரும், விண்ணவர் - தேவர்களும், இயக்கர் - யட்சர்களும், விஞ்சையர் - வித்தியாதரர்களும், முதலினோர் - முதலியவர்கள், விரசுவார்-(அந்நகரத்தில்) வந்துகூடுவார்கள்,' என்றால்—, ஆன

போது - இப்படியானபோது, அதனுக்கு உவமை - அதற்கு உபமானமாயிருப்பதொருநகரம், உளதுஓ - இருக்கின்றதோ? அரிது-; (இப்படிச் சிறப்புற்ற நகரின் தன்மையை), யான்ஏ உரைசெய்வேன் - சிற்றுணர்வுடையனான யானா சொல்லுதற்கு உரியேன்?

எல்லாவுலகத்தும் சுற்றிப்பார்க்கத்திறனுள்ளமுனிவர் முதலியோர் இந்நகரத்தை யொப்பதொரு நகரம் கிடையாமையால் இந்தச் சிறந்த நகரத்தைக் காண வந்துகூடுகின்றன ரென்றால், எல்லாவளங்களும் நிரம்பிய இந்நகரத்துக்கு உவமானமான வேறொரு சிறந்த நகரம் கிடைப்பது அரிதன்றோ? இவ்வாறுள்ள நகரின் சிறப்பைச் சிற்றுணர்வினனான என்னாற் கூறமுடியுமோ? முடியாதென்றவாறு. இனி, உவமை அரிதரோ உளதோ - உவமை இலதோ உளதோ சொல்வீரென்று, இலதென்னுங்கருத்தால் உலகத்தாரை வினவியதாக உரைத்தலும் ஒன்று. அவண - டல வின்பாற்குறிப்பு வினைமுற்று. பி - ம்:—[1]பொலமணி. [2]புரைசெய். [3]மாகளிறும், மாகரியும். [4]புரவியங். [5]விரைசெயா. [6]நாசர். [7]முதலினர். [8]அல்லால், எனவும், எவரும். [9]செய்வாரானர், செய்வாரானல். [10]அதுவலால். [11]அறிதரவுளதே, உளதெனற்கரிதே. (100)

8.—இது முதல் ஆறுபாடல்கள் - அந்நகரத்து மதிலின் வருணனை.

நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி நனி[1]தவ[2] வுயர்ந்தன பனிதோய், மால்வரைக் [3]குலத்தி னியாவையு மில்லை யாதலா லுவமைமற் றில்லை, நூல்[4]வரைத் தொடர்ந்து பயத்தொடு பழகி நுணங்கிய [5]நூலவ ருணர்வே, போல்[6]வகைத் தல்லா [7]லுயர்வினே [8]டுயர்ந்த தென்னலாம் பொன்மதி னிலையே.

(இ - ள்.) நால்வகை சதுரம் - நாற்சதுரமாக, விதி முறை - சிற்பசாஸ்திர விதிப்படியே, நாட்டி - ஏற்படுத்தப்பட்டு, நனி தவ உயர்ந்தன - மிகவும் அதிகமாக உயர்ந்துள்ளவை, பனி தோய் மால் வரை குலத்தின் - குளிர்ச்சி மிகுந்த பெரிய மலைக்கூட்டத்துள், யாவைஉம் - எவையும், இல்லை—:ஆதலால் - ஆகையினால், மற்று உவமை - (அம்மதிலுக்கு அதுவே உவமையாவதன்றி) வேறு உவமையாவதற்கு உரிய பொருள், இல்லை—; (ஆயினும் உவமைசொல்லத் தொடங்குவோமேயானால்),—பொன் மதில்நிலை - பொன்னினாலாகிய (அந்நகரத்து) மதில்களின் நிலைமை,—நூல் வரை தொடர்ந்து - சாஸ்திரங்களின் அளவு எவ்வளவோ அது வரையிற் சென்று, பயத்தொடு பழகி - பிரயோசனத்தோடே கூடியதாகி, நுணங்கிய - சூட்சுமமாகிய, நூலவர் - நூற்கேள்வியையுடையவரின், உணர்வுஏபோல் - பேரறிவைப்போன்று (உயர்ந்து) உள்ள, வகைத்து - தன்மையையுடையது; அல்லால் - அல்லாமலும், உயர்வினோடு உயர்ந்தது என்னல்ஆம் - உயரமுள்ள பொருள்களெல்லாவற்றைக்காட்டிலும் உயர்ந்துள்ளதென்று சொல்லலாம்; (எ-று.)

அழித்தற்குஅருமை பெருமை வலிமை உயர்வுகளால் மலைகளை மதிலுக்கு உவமைசொல்லவேண்டுமென்றால், மலைகள் சதுரமாக இல்லை யாதலாலும் மலைகளினும் உயர்ந்துள்ளமையாலும் பொருந்தாதென்பது முன்னிரண்டடியின் கருத்து. சதுரம் - அக

லமும் நீளமும் ஒத்த நாற்கோணம்; திரிகோணத்தை முச்சதுர மென வழங்குவது உண்டாகலின், 'நால்வகை' என்ற அடைமொழி கொடுத்தார். வரைக்குலம் என்பதை குலவரையென்றுமாற்றி - அஷ்டகுலபருவத மெனினுமமையும். பயம் என்றது - சொற்பயன் பொருட்பயன்களோடு அறம்பொருளின்பம் வீடுஅடைதலாகிய நூற்பயனையும் காட்டும். மதிலைச்சேரும்போது, நூல் - கயிறு, பயம் - நீர் எனக்கொண்டு, சிற்பிகள் கையிலுள்ள எற்றுநூலின்படி கோணமலுயர்ந்து கீழே ஆழ்ந்து சென்று அகழிநீரோடும்பழகி நுட்பமாக நோக்கத்தக்கதும் சொல்லக்கூடாத சிறப்புள்ளதுமான மதிலென்னலாம். "கற்ற, நூலளவே யாகுமா நுண்ணறிவு" என்ப வாகலின், 'நூல் வரைத்தொடர்ந்து நுணங்கிய நூலவருணர்வு' என்றார். உயர்வு-உயரமுள்ள பொருளுக்கு, ஆகுபெயர். உயர்வினோடு - எல்லைப்பொருளில் வந்ததனுல், உருபுமயக்கம். உயர்வினோடுயர்ந்தது - உயர்ச்சியென்னும் பண்பின்பொருளையொத்து உயர்ந்ததென்றலும் ஒன்று. உயர்வினோடு உயர்ந்தது என்பதற்கு - (வேறுஉவமையில்லாமல்) தன்னுயர்ச்சியோ டொப்பவுயர்ந்ததென்றும் உரைகூறுவர். நூல்வரைத்தொடர்ந்து - சிற்பநூலின்வரம்பைக் கடவாமலெனினுமாம் உணர்வெனபது - மிகவும் மேம்பட்ட பரம்பொருளையும் எட்டிப்பிடிக்குந் தன்மையதாதலால், உயர்ச்சிக்கு அதனை உவமை கூறினார். உயர்வுநவிற்சியணியும் சிலேடையணியும் கலந்துவந்த கலவையணி. பி-ம்:—[1] தக. [2] முயன்றன. [3] குலங்களனைத்தினும். [4] வகைத். [5] நுவலரும், உணர்வினோர். [6] வரைத்து. [7] உணர்வினோடு. [8] உயர்ந்த.

9. [1] மேவரு முணர்வின் முடிவிலாமையினால் [2] வேதமுமொக்கும்விண்புகலால், தேவரு மொக்கு முனிவரு மொக்குந் திண்பொறியடக்கிய செயலால், காவலிற் கலையூர் கன்னியை யொக்குஞ் சூலத்தாற் காளியை யொக்கும், [2] யாவையு மொக்கும் பெருமையாலெய்தற் கருமையாலீசனையொக்கும்.

(இ - ள்.) (அந்த மதில்), மேவரும் உணர்வின் முடிவுஇலாமையினால் - பொருந்திய அறிவினால் முடிவுகாணவொண்ணாதபடியிருத்தலினால், வேதம்உம் - வேதத்தையும், ஒக்கும் - ஒத்திருக்கும்; விண் புகலால் - மேலுலகத்தை யடைதலால், தேவர்உம் - தேவர்களையும், ஒக்கும்—; திண் பொறி அடக்கிய செயலால் - வலிய பஞ்சேந்திரியங்களையும் அடக்குஞ் செய்கையினால், [வலிய பல யந்திரங்களையும் தன்னுள் மறைத்து வைத்திருக்குந் தொழிலால்], முனிவர்உம் - இருடியரையும், ஒக்கும்—; காவலின் - காத்தல் தொழிலால், கலை ஊர் கன்னியை - கலைமானை (வாகனமாகக் கொண்டு) ஏறிநடத்துகின்ற துர்க்காதேவியை, ஒக்கும்—; சூலத்தால் - சூலாயுதமேந்துதலால், காளியை - காளிகாதேவியை, ஒக்கும்—; பெருமையால் - பெருந்தன்மையால், யாவைஉம்-பெருந்தன்மையுடைய எல்லாப்பொருள்களையும், ஒக்கும்—: எய்தற்கு அருமையால் - (எவராலும் எளிதில்) அடையக்கூடாத தன்மையால், ஈசனை - கடவுளை, ஒக்கும் - ஒத்திருக்கும; (எ - று.)

வேதம் மிகப்பரந்து நுண்பொருள்களை யுள்ளடக்கி முடிவு காணமுடியாதிருத்தல்போல, இம்மதிலும் மிகப்பரந்து நுண்ணிய

வேலைப்பாடுகளைக்கொண்டு முடிவுகாண முடியாதிருக்கின்றதென்றும், தேவர் விண்ணுலகத்தையடைந்திருத்தல்போல இதுவும் உயர்ச்சியால்விண்ணுலகத்தையடைந்திருக்கின்றதென்றும், முனிவர் ஐம்பொறிகளையடக்கி நிற்பதுபோல இதுவும் பல்பொறிகளை [யந்திரங்களை]த் தன்னுளடக்கிக்கொண்டிருக்கின்றதென்றும், துர்க்கை நகரதேவதையாய்நின்று காத்தல்போல இதுவும்பிறர்படையெடுத்து வரவொட்டாது காவலாயிருக்கின்றதென்றும், காளி சூலத்தைத்தாங்கி நிற்றல்போல இதுவும் இடிதாங்கியாகிய சூலத்தைத் தாங்கி நிற்கின்றதென்றும், பத்துடையடியவர்க்கன்றிப் பிறர்க்கு ஸ்ரீமந்நாராயணன் அடைதற்கரியனாயிருத்தல்போல இதுவும் நண்பினரான அரசர்க்கன்றி மாற்றரசர்க்கு அடைதற்கு அரியதாயிருக்கின்றதென்றும், இப்படி இந்நகரத்துமதில் பல்வகைப் பெருமைகளைப் படைத்திருத்தலால் பெருமை பெற்ற பொருள்கள் எல்லாம் இம்மதிலுக்கு உவமையாதற்கு ஏற்குமென்றும் கூறியவாறாயிற்று. சிலேடையை யங்கமாகக் கொண்டுவந்த உவமையணி. தேவர்க்கு விண்புகுதல் - வானுலகத்தில் வாழ்தல்: மதிலுக்கு விண்புகுதல் - வானத்தளவு மோங்கிநிற்றல். முனிவர்க்குத் திண்பொறியடக்குதல் - பஞ்சேந்திரியங்களையும் ஐம்புலன்களிற் செல்லவொட்டாது தடுத்தல்: மதிலுக்குப் பொறிகளையடக்குதல் - நூற்றுவரைக்கொல்லி முதலியன கொண்டிருத்தல். ''உயர்வகலந்திண்மையருமையிந்நான்கி, னமைவரண்'' என்றபடி ஏணிக்கெட்டாத உயர்வும் அகலமும் குத்தக்கூடாததிண்மையும் யந்திரங்களினாற் சேர்தற்குஅருமையும் அமைந்திருப்பது மதிலுக்கு இலக்கண மாதலால், 'மேவருமுணர்வின் முடிவிலாமையினால்—விண்புகலால்......' என்பதனால் உயர்வையும், 'காவலிற் கலையூர் கன்னியை யொக்கும்' என்பதனால் திண்மையையும், 'முனிவருமொக்குந் திண்பொறியடக்கிய செயலால்' 'எய்தற்கருமையாலீசனை யொக்கும்' என்பவற்றால் அருமையையும், 'யாவையுமொக்கும் பெருமையால்' என்பதனால் அகலத்தையும் குறிப்பித்தாரென்னலாம். இச்செய்யுள் சில பிரதிகளில் ''கோலிடை'' (11) என்பதன் பின் உளளது. பி-ம்:—[1]மேவரவுணர,மேவுறவுணர,மேவருமுணர்வு. [2]வேதமேயொக்கும் விண்புகலால், வேதமும் பொருள்களும்ஒக்கும். [3]யாவருந்தன்னையெய்துதற்கரிய தன்மையால். (102)

10. [1]பஞ்சின் [2]வான் மதியை [3]யூட்டிய வணைய படருகிர்ப் பங்கயச்செங்கால், வஞ்சிபோன் மருங்குற் குரும்பைபோற் கொங்கை [4]வாங்குவேய் [5]வைத்தமென் பணைத்தோள், அஞ்சொலார் பயிலுமயோத்திமா [6]நகரி [7]னழகுடைத் தோவென வறிவான், இஞ்சிவானோங்கி யிமையவ ருலகங் காணிய [8]வெழுந்ததொத் [9]துளதே.

(இ - ள்.) இஞ்சி-(அந்த நகரத்தின் மிக்குயர்ந்த) மதில்,—பஞ்சின் வால் மதியை ஊட்டிய அணைய படர் உகிர் - செம்பஞ்சுக்குழம்புகொண்டு வெண்ணிறமுள்ள சந்திரரைஊட்டி வரிசையாக வைத்தவற்றை யொத்த (ஒளி) வீசுகின்ற நகங்களைக்கொண்ட, பங்கயம் செம் கால் - செந்தாமரைமலர்போன்ற பாதங்களையும், வஞ்சிபோல் மருங்குல் - நீர்வஞ்சிக்கொடிபோன்ற [மிக நுண்ணிய]

இடையையும், குரும்பை போல் கொங்கை - தெங்கினிளங்காய் போன்ற தனங்களையும், வாங்கு வேய் வைத்த மெல்பணை தோள்-வளைகின்ற இளமூங்கிலையொத்த மென்மையான பருத்த தோள்களையுமுடைய, அம் சொலார் - அழகிய சொற்களையுடைய மகளிர், பயிலும் - நிரம்பியிருக்கின்ற, அயோத்திமா நகரின் - அயோத்தி யென்னும் பெருமைபெற்ற நகரத்தைக் காட்டிலும், இமையவர் உலகம் - தேவர்கள் வாழ்கின்ற சுவர்க்கலோகம், அழகு உடைத்துஓ-அழகு உடையதோ? (அழகு உடையதன்றோ?), என - என்று, அறிவான் - அறியும்பொருட்டு, வான் ஓங்கி காணிய-ஆகாயத்தி லுயர்ந்துசென்று (அந்தச் சுவர்க்கலோகத்தைக்) காண்பதற்காக, எழுந்தது - எழுந்ததை, ஒத்துஉளது - ஒத்திருக்கின்றது; (எ-று.)

இது, வானுறவோங்கிய அந்நகரத்து மதிலைப்பற்றிய பயன்தற் குறிப்பேற்றவணி. மதில் வானுறவோங்குதற்குப் பயன், வானுலகத்தைக்காணுதலென்பதாகாமலிருக்கையிலும் அதனைப் பயனாகக் கூறியமை காண்க. 'அஞ்சொலார் பயிலும் அயோத்தி' என்றதனால், நம்மிடத்து மகளிரினும் அமரலோகத்துமகளிர் அழகுஉடையவரோ அல்லரோ? என அறியவேண்டி மதில் ஓங்கிற்றென்க. ஊட்டிய - பெயர். பி - ம்:—[1]பஞ்சி. [2]வாள். [3]ஊட்டியது. [4]வயங்கு. [5]அமைத்த. [6]நகரம். [7]அழகுடைத்தன்றென. [8]எழுவவொத்து, எழுவதொத்து. [9]உளதால். (103)

11. கோலிடை யுலக மளத்தலிற் பகைஞர் முடித்தலை கோடலின் மனுவின், [1]நூனெறிநடக்குஞ் [2]செவ்வையி னியார்க்கு நோக்கருங் காவலின் வலியின், வேலொடு வாள்விற் பயிற்றலின் வெய்ய சூழ்ச்சியின் வெலற்கரு[3]வலத்தின், [4]சால்புடை[5]யுயர்விற் சக்கர நடாத்துந் தன்மையின் றலைவரொத் துளதே.

(இ - ள்.) கோல் இடை உலகம் அளத்தலின் - செங்கோலினால் உலகத்தவரை அளவளாவிப் பாதுகாத்தலாலும், [அளவுகோலைக்கொண்டுஉலகத்தவரால் அளக்கப்படுதலாலும்], பகைஞர் முடி தலை கோடலின - பகையரசரது கிரீடமணிந்த தலைகளை(ப் போரில் ஆயுதங்களால்) அழித்தலாலும், [பகைவர்களது முடித் தலைகளை(த் தன்னிடத்துள்ள யந்திரங்களினால்) துணித்தலாலும்], மனுவின் நூல் நெறி நடக்கும் செவ்வையின் - மனுவினாற் செய்யப்பட்ட தருமசாஸ்திரத்தின்வழியே நடக்கின்ற நேர்மைக் குணத்தாலும், [(சிற்பநூலில் வல்ல) மனிதரது எற்றுநூலின் வழியே அமைந்துகோணுதுநேர்மையா யிருத்தலினாலும்], யார்க்கு உம் நோக்க அரும் காவலின் - எவர்க்கும் பார்த்தற்கும் அரிய காக்குந்தன்மையையுடைமையாலும், வலியின் - மிக்க பலமுடைமையினாலும், வேலோடு வாள் வில் பயிற்றலின் வேல் வாள் வில் முதலிய படைக்கலங்களைப் பழக்குதலாலும், வெய்ய சூழ்ச்சியின் - கொடிய தந்திரங்களையுடைமையாலும், வெலற்கு அரு வலத்தின் - (பிறரால்) வெல்லுதற்கு அரிய வெற்றியையுடைமையாலும், சால்பு உடை உயர்வின் - சிறப்புப்பெற்ற உயர்ச்சியினாலும், சக்கரம் நடாத்தும் தன்மையின் - ஆஜ்ஞாசக்கரத்தைச்செலுத்துகின்ற தன்மையினாலும், [சக்கரப்பொறி இடைவிடாமற் சுழலுதற்கு இடங்

கொடுக்குந் தன்மையினாலும்], தலைவர் ஒத்து உளது - (அந்நகரத்தின்) தலைவர்களை யொத்திருக்கின்றது, (அந்த மதில்); (எ - று.)

சூரியகுலத்துத் தலைவர்க்கும் மதிலுக்குஞ் சிலேடை மூலமாக உவமை கூறப்பட்டதனால், சிலேடையுவமையணி. உலகத்தில் வெளிநாட்டுநகரங்களில் மதிலெடுக்க விரும்பியவர்கள் இம்மதிலினிடம் வந்து அளவையெடுத்துக்கொண்டுபோகிறார்க ளென்று இம்மதிலின் சிறப்பை விளக்க, 'கோலிடையுலக மளத்தலின்' என்றார். பகைஞர் - மதிலினுள்ளே வஞ்சனையாக நுழையப்புகுகிற சத்துருக்களும் கள்ளரும். மதிலுக்குச் சூழ்ச்சி - புறத்தோர் வரவுபோக்குக்கள் செய்யாமையமைந்திருப்பதோடு, அகத்தோர் அவற்றைச் செய்யும்படி நுழைவாயில் முதலியவற்றைக் கொண்டிருத்தல். மனு - ஸ்மிருதிநூல்செய்த மனுவும், மநுஷ்யரும். மனு என்று ஒருவர் சிற்பநூல் செய்துள்ளாரெனக் கூறுதலுமுண்டு. மதிலும், பொறியாக அமைந்த வேல் வில் வாள்களைத் தொழிற்படுத்துமென்க. 'சால்பு உடை உயர்வு' என்றது - உயர்ச்சிக்கு எல்லை இனியில்லையென்னுமாறு உயர்தல். பி-ம்:—[1] நூலிடை. [2] செவ்வியின். [3] நலத்திற். [4] சாலுடை. [5] மரபிற். (104)

12. சினத்தயில் கொலைவாள் [1] சக்கரந் தண்டு சிலைமழுத் தோமர முலக்கை, கனத்திடை [2] யுருமின் வெருவருங் கவண்க லென்றிவை கணிப்பில கொதுகின், இனத்தையு [3] முவணத் திறையையு மியங்குங் காலையு மிதமல நினைவார், மனத்தையு மெறியும் பொறியுள வென்றான் மற்றினி [4] யுணர்த்துவ தெவனோ.

(இ - ள்.) சினத்து - (பகைவரையழித்தலிற்) கோபத்தையுடைய, அயில் - வேலும், கொலை வாள் - (பகைவரைக்) கொல்லுதலையுடைய வாளும், சிலை - வில்லும், மழு - மழுவும், தண்டு-கதையும், சக்கரம் - சக்கரமும், தோமரம் - தோமரமும், உலக்கை-உலக்கையும், கனத்திடை உருமின் வெருவரும் கவண்கல்-மேகத்திலே தோன்றுகின்ற இடிபோல அச்சத்தைக்கொடுக்கின்ற கவண்கல்லும், என்ற - என்று சொல்லப்படுகின்ற, கொதுகின் இனத்தை உம் உவணத்து இறையைஉம் இயங்கும் காலைஉம் இதம் அல நினைவார் மனத்தைஉம் எறியும்-கொசுகின் கூட்டத்தையும் பட்சிகளுக்கு அரசனாகிய கருடனையும் விரைந்துசெல்லுந்தன்மையுள்ள காற்றையும் நன்மையல்லாத (தீய)வற்றைச் சிந்திப்பவரதுமனத்தையும் துணிக்கவல்ல, கணிப்பு இல பெற்றி இவை - அளவிடமுடியாத [மிகப்பலவான] இவ்வகையந்திரங்கள், உள - (அந்தமதிலில்) அமைந்துள்ளன, என்றால்—, இனி உணர்த்துவது - (அம்மதிற்காவலைப்பற்றி) இனிவிரித்துச்சொல்லவேண்டுவது, எவன் -யாது உள்ளது? (எ-று.)—மற்று, ஓ - அசை.

அந்நகரத்துமதில் திண்ணியபொறிகளை யடக்கிக் காவலாயிருப்பதை, இதனால் விளக்கினர். அம்மதிலில் அமைந்துள்ள பொறிகள், நுண்ணுருவமுடைய பொருள்களையும் துண்டித்துவிடு மென்றற்கு - கொதுகினினத்தையும், மிகஉயர்ந்து செல்வனவற்றையும் துணிக்கு மென்றற்கு - கருடனையும், விரைந்துசெல்

வனவற்றையும் பரிசமாத்திரமுடையனவாய் அருவமானபொருள்களையுந்துணிக்குமென்றற்கு-இயங்குங்காற்றையும், மிக்கவிரைந்து செல்லுந்தன்மையோடு பரிசமுமில்லாது அணுவளவான அருவப்பொருள்களையும் துணித்துவிடுமென்றற்கு மனத்தையும் எறியும் என்று கூறினார். இதமலநினைவார்மனத்தையுமெறியும் என்றற்கு -இங்ஙனம் பல பொறிகளையுடைமையைப்பார்த்துப் பகைவர் மனமழிவரென்றும் கருத்துக் காணலாம். வீரன் சினத்தைப் படையின்மேலேற்றி, 'சினத்தயில்' என்றார். தோமரம்-இருப்புலக்கையும் கைவேலும் பேரீட்டியுமாம். இதமலநினைத்தல் - மதிலையழித்தல், மதிலினுள்ளே வஞ்சனையாக நுழைதல் முதலியன. பி - ம்:—[1]சிலை மழுத்தண்டு சக்கரந்தோமரம்வலயம், சிலைமழுத்தண்டு செம்புருக்காக்கெணெய்சிவணி. [2]உருமும். [3]உலங்கினினத்தையுமுவணக். [4]உரைக்குவது. (105)

13. பூணினும் புகழே யமையுமென் றினையபொற்பினின் றுயிர் நனிபுரக்கும், யாணரெண் டிசைக்கு மிருளற விமைக்கு மிரவிதன் குலமுத னிருபர், சேணையுங் கடந்து திசையையுங் கடந்து திகிரியுஞ் செந்தனிக் கோலும், ஆணையுங் [1]காக்கு [2]மாயினந் நகருக் கணி யென வியற்றிய தன்றே.

(இ - ள்.) பூணின்உம் புகழ்ஏ அமையும் என்று - (பொன் இரத்தினம் முதலியவற்றாலாகிய) ஆபரணங்களைக்காட்டிலும் கீர்த்தியே (நமக்குச் சிறந்த ஆபரணமாகப்) பொருந்துமென்று நினைத்து, இனைய பொற்பில்நின்று உயிர் நனி புரக்கும் - இத்தன்மையனவான சிறந்த நல்லொழுக்கத்தோடுபொருந்தி உலகத்துயிர்களைப் பாதுகாப்பவரான, யாணர் எண் திசைக்குஉம் இருள் அற இமைக்கும் - அழகிய எட்டுத்திக்குக்களினிடத்துமுள்ள இருள் நீங்கும்படி விளங்குகின்ற, இரவி தன் - சூரியபகவானது, குலம் முதல் - குலத்தில் தோன்றிய, நிருபர்-அரசர்களின், திகிரிஉம்- ஆஜ்ஞாசக்கரமும், செந் தனி கோல்உம் - ஒப்பில்லாதசெங்கோலும், ஆணைஉம்-கட்டளையும் (என்ற இவைகளே), சேணைஉம்கடந்து திசையைஉம் கடந்து - மேலுலகத்தையும் இவ்வெட்டுத் திக்குக்களையும் வியாபித்து, காக்கும்—; ஆயின் - அவ்வாறானாலும், (மதில்),—அ நகருக்கு அணி என இயற்றியது அன்றுஏ-அந்நகரத்துக்குஓரலங்காரமாக அமைக்கப்பட்டதேயாகும்; (எ-று.)

'பகைவர்களால் யாதோரிடையூறும் உண்டாகாமலிருத்தற்கன்றோ மதிள் வேண்டுவது; இந்நகரத்தரசர்களானசூரியகுலத்து மன்னவரது செங்கோல் முதலியனவே பிறரால் இந்நகரத்தார்க்கு எவ்வகைத்துன்பமும் இல்லாமற் காப்பனவாக இருக்கையில், இம்மதிலாற் பயன் யாதோ?' என்று ஓர் ஐயத்தை யெழுப்பி, 'பிற நகரத்துக்குப்போல இந்நகரத்துக்கு மதிள், காவலுக்காக அமையவில்லை; அழகுக்காகவே அமைந்தது' எனக் கூறியவாறு; இதனால், இந்நகரத்து மன்னவரது பேராற்றலும் செங்கோலும் இத்தன்மைய வென்பது பெறப்படும். நிலையில்லாத உடம்புக்கே அழகைச்செய்து அழியுந் தன்மையனவான ஆபரணங்களினும் நிலையுடைய உயிர்க்கு அழகுசெய்வதாய் என்றும் அழியாததான

புகழ் மிகச்சிறந்ததெனக்கொண்டு காக்கின்றனர் மன்னரென்பது, 'பூணினும் புகழேயமையுமென்றுபுரக்கும்' என்பதன்கருத்து. குல முதல், முதல்-ஏழனுருபு. பி-ம்:—[1]நடாத்து, கடக்கும். [2]ஆயினும்.

14.—இது-கவிக்கூற்று: இனி, அகழியைப்பற்றிச் சொல்வோமெனல்.

அன்னமா மதிலுக் காழிமால் வரையை யலைகடல் சூழ்ந்தென வகழி, பொன்விலை மகளிர் மனமெனக்கீழ்போய்ப்புன் கவியெனத்தெ ளிவின்றிக், கன்னிய ரல்குற் றடமென யார்க்கும் [1]படிவருங் காப்பின தாகி, நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங் [2]கராத்தது நவில லுற் றதுநாம்.

(இ - ள்.) நாம் நவிலல் உற்றது - நாம் இப்போது சொல்லத் தொடங்கியதான, அகழி-அகழியானது,—அன்ன - அப்படிப்பட்ட, மா மதிலுக்கு - பெரிய மதிலை, மால் ஆழி வரையை அலை கடல் சூழ்ந்(த)து என - பெரியசக்கரவாளகிரியை அலையும் நீரையுடைய பெரும்புறக்கடல் சூழ்ந்திருத்தலையொப்பச் சூழ்ந்துள்ளதாகி),— பொன் விலை மகளிர் மனம் என கீழ் போய் - பொன்னை (த் தமது இன்பத்திற்கு) விலைப்பொருளாகப்பெறுகின்ற வேசையரது உள்ளம் போல மிகக்கீழேபோய், புன் கவி என தெளிவு இன்றி - (நன்றாகக் கற்காதவன் பாடின) இழிவாகிய பாடல்போலத் தெளிவில்லாமல், கன்னியர் அல்குல் தடம் என யார்க்குஉம் படிவு அரு காப்பினது ஆகி-கலியாணமாகாத குலப்பெண்களது அல்குலினிடம்போல எவர்க்கும் தோய்வதற்கு இயலாத காவலையுடையதாய், நல் நெறி விலக்கும் பொறி என - சன்மார்க்கத்திற் செல்லவொட்டாமல் விலக்கித் துன்மார்க்கத்திற்செலுத்துகின்ற இந்திரியங்கள்போல, எறியும்-பாய்கின்ற, கராத்தது - முதலைகளையுடையது; (எ - று.)

இதுவரையில் மதிலின்சிறப்பைக் கூறிவந்த கவி, இச்செய்யுளால், இனி அம்மதிலைச்சூழ்ந்துள்ள அகழியின்சிறப்பைக் கூற எடுத்துக்கொண்டார். மிகவும் ஓங்கிவளைந்துள்ள மதிளுக்கு—சக்கரவாளகிரியும், அம்மதிளை வளைந்துள்ள அகழிக்கு - அந்தச் சக்கரவாளகிரியைச் சூழ்ந்துள்ள பெரும்புறக்கடலும் ஏற்ற உவமையாம். "நகரியினைச், சூழுமதிலு மம்மதிலைச் சூழ்ந்த கிடங்கும் புவிசூழ்ந்த, ஆழிவரையும் அவ்வரைசூ ழகல்வேலையையுமொத்துளதால்" என்றார், பிறரும். ஏழுதீவுகளையும் சூழ்ந்துள்ள ஏழு கடல்களுக்கும் அப்பால் கோட்டைமதில்போலச் சக்கரவாளகிரி சூழ்ந்திருக்கின்றதென்பதும், அந்தச் சக்கரவாளகிரியையுஞ் சூழ்ந்திருப்பது பெரும்புறக்கடலென்பதும் புராணக்கொள்கை. கீழ்ப்போதலால் விலைமாதர் மனமும், தெளிவில்லாமையாற்புல்லறிவாளர்கவியும், காவலுடைமையாற்கன்னியரல்குல்தடமும், அகப்பட்ட பொருளைப் பற்றிக்கொண்டு வருத்தும்முதலையையுடைமையால் ஐம்பொறிகளும் அகழிக்கு உவமையாம். அகழிக்குக் கீழ்ப்போதல் - இவ்வளவினதென்று அறியப்படாமல் மிகவும் ஆழ்ந்திருத்தல்; விலைமாதரின் மனத்திற்குக் கீழ்ப்போதல் - இத்தன்மைத்தென்று அளவிடமுடியாமலாழ்ந்திருத்தல்: இனி, கீழ்மக்களிடத்துச்செல்லுதலென்றும், இழிவானவழியிலொழுகுதலென்றுங் கொள்ளலுமாம். புன்கவிக்

குத் தெளிவின்மை - கருதிய பொருளை விளங்கத் தொடுப்பதாகிய அழகைப்பெருமை; அகழிக்குத் தெளிவின்மை - முதலைமுதலிய கொடும்பிராணிகள் திரிதலால் நீர்கலங்கியிருத்தல். அகழப்பட்டது, அகழி: காரணப்பெயர். பி - ம்:—[1] கடப்பரும். [2] கராமது. (107)

வேறு.

15.—இதுமுதல் ஆறுகவிகள்—அகழியின்சிறப்பைத் தெரிவிப்பன.

ஏகுகின்ற [1] தன்கணங்க ளோடுமெல்லை [2] காண்கிலா
நாகமொன் றகன்கிடங்கை நாமவேலை யாமெனு
மேகமொண்டு கொண்டெழுந்து விண்டொடர்ந்த குன்றமென்று
ஆகநொந்து நின்றுதாரை யம்மதிற்கண் வீசுமே.

(இ - ள்.) ஏகுகின்ற-(வானத்திற்) சஞ்சரிக்கின்றனவான, தன் கணங்களோடுஉம்-தனது கூட்டத்துடனிருக்கின்ற, மேகம்-பிரதான மான மேகம்,—எல்லை காண்கிலா - (இவ்வளவுபரப்புள்ளதென்று) வரையறைசெய்யமுடியாத [மிகப்பரந்த], நாகம் ஒன்று அகல் கிடங்கை-பாதாளலோகம்வரையில் ஆழ்ந்துள்ள விசாலமான அகழியை, நாம வேலை ஆம் எனு-'(இது காண்பதற்கு) அச்சத்தைத்தருகின்ற கடலாகும்' என்று கருதி, மொண்டு கொண்டு-(அதில் இறங்கி அந் நீரை) உட்கொண்டு, எழுந்து-(அங்குநின்றும்) மேலெழுந்துவந்து,-(அவ்வகழியாற் சூழப்பட்டுள்ளமதிலை), விண் தொடர்ந்தகுன்றம் என்று-ஆகாயத்தையளாவிய [மிகவுயர்ந்த] மலையென்று நினைத்து, ஆகம் நொந்து - உடம்பு வருந்தி, (அதன்மேலேறி), நின்று - (கருமுதிர்கின்ற வரையில் அம்மதிலிற்) படிந்திருந்து, (பின்பு), தாரை - மழைநீர்த்துளிகளை, அ மதிற்கண் - அந்தமதிலினிடத்தே, வீசும் - பொழியும்; (எ - று.)

இச்செய்யுளில், மேகம் அகழியைக் கடலென்றுமயங்கி அதிற் படிந்து நீரைமொண்டுகொண்டு, பின்பு அவ்வகழியை அடுத்தாற் போன்றுள்ள மதிலை மலையென மயங்கி அதன்மீது ஏறித்தங்கிக் கருமுதிர்ந்தவுடனே நீர்த்தாரையைப் பொழிவதாகக் கூறினர்; மயக்கவணி. இதனால், அவ்வகழியின் அகற்சியும் ஆழமும்பெறப் படுவதோடு, மதிலினுயர்ச்சியும் பெறப்படும். மேகங்கள் கடலிற் படிந்து நீரைமொண்டு மலைமீதுசென்று கருமுதிர்கின்ற நிலையில் மழையாகப்பொழியுமென்றல் கவிமரபு. நாம் - அச்சப்பொருளைத் தரும் உரிச்சொல்: அ-சாரியை. நாமம் என்றுஎடுத்தால் - பிரசித்த மானஎன்க. எழுசீராசிரியவிருத்தமாகவும் இந்தப்பாடல்களை அலகிடலாம். பி - ம்:—[1] தம். [2] காணலா. (108)

16. அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் [1] தலர்ந்தநீள்
கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார்
முந்துவாண் முகங்களுக் குடைந்துபோன மொய்ம்பெலாம்
வந்துபோர் [2] மலைக்கமா மதில் [3] வளைத்த மானுமே.

(இ - ள்.) அந்த மா மதில் புறத்து - அந்தப்பெரியமதிலின் வெளிப்பக்கத்திலேயுள்ள, அகத்து - அகழியினிடத்து, எழுந்து-தோன்றி, அலர்ந்த - மலர்ந்த, நீள் கந்தம் நாறும் - மிக்கமணம் வீசுகின்ற, பங்கயத்த கானம் - தாமரைமலர்மயமான காடு [தாமரை மலர்த்தொகுதி],—மானம் மாதரார் - பெருமைபெற்ற (அந்நகரத்து)

மகளிருடைய, வாள் முகங்களுக்கு - ஒளியையுடைய முகங்களுக்கு, முந்து உடைந்து போன - முன்னாளில் தோற்றுப்போன தாமரை மலர்கள், மொய்ம்பு எலாம் - வலிமையெல்லாம், வந்து - சேரப் பெற்று மீண்டுவந்து, போர் மலைக்க-(அம்முகங்களுடனே) போர் செய்தற்கு, மா மதில் வளைத்த(து) - அந்தப்பெரியமதிலை வளைத் திருப்பதை, மானும் - ஒத்திருக்கும்; (எ-று.)

அயோத்திமாநகரின் மதிலைச் சூழ்ந்திருக்கும் அகழியிலே முளைத்துள்ள தாமரையின் மலர்களை நோக்கி, அந்நகரில்வாழ் கின்ற மகளிரது முகத்திற்கு முன்னே நிற்கமாட்டாமல் தோற்று ஓடிப்போன தாமரைமலர்களெல்லாம் ஒருங்குதிரண்டு தமதுமுழு வலிமைகொண்டு அம்மகளிரின் முகங்களோடு பொரக்கருதி அந் நகரத்துமதிலை முற்றுகைசெய்தாற்போல விளங்குமென வருணித் தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி, இதனால், அந்த நகரத்து மாத ராரின் அழகு தொனிக்கும். தாமரை மலர் சிலவாயிருந்தபோது தாம் தோற்றுவிட்டமையால் முழுவலிமையைப்பெறப் பெருந் தொகுதியாகத் திரண்டனவென்றார். போன-பெயர்: பெயரெச்ச மாகக்கொண்டு, 'மொய்ம்பு' என்பதனோடு இயைத்து உரைகூறு வதுமுண்டு. வருதல் - சேரப்பெறுதலும் மீளவருதலும்: இரட்டுற மொழிதல். பி-ம்:—[1] அலர்ந்துநீள், அலர்ந்தபூ. [2] விளைக்கவான். [3] வளைத்தன்மானுமே, வளைந்தபோன்றவே. (109)

17. சூழ்ந்தநாஞ்சில் சூழ்ந்தவாரை சுற்றுமுற்று பாரெலாம்
போழ்ந்தமா கிடங்கிடைக் கிடந்துபொங் கிடங்கர்மா
தாழ்ந்தவங்க வாரியிற் [1] றடுப்பொணு [2] மதத்தினால்
ஆழ்ந்தயானை [3] மீதெழுந் தழுந்துகின்ற [4] போலுமே.

(இ - ள்.) சூழ்ந்த - (பகைவர் கிட்டவொண்ணாதபடி) ஆலோ சித்துச்செய்த, நாஞ்சில்-நாஞ்சிலென்னுமுறுப்புக்களோடு, சூழ்ந்த- (நகரத்தைச்) சுற்றிலுமுள்ள, ஆரை-மதிலின், சுற்றும் - சுற்றுப் பக்கங்களில், முற்று - நிறைந்துள்ள, பார் எலாம்-பாறை முழுவதை யும், போழ்ந்த-பிளந்து அமைக்கப்பட்ட, மா கிடங்கிடை-பெரிய அகழியிலே, கிடந்து - உள்ளே தங்கி, பொங்கு - மேலேயெழுகின்ற, இடங்கர் மா - முதலைகளாகிய நீர்வாழுயிர்கள்,—தாழ்ந்த - ஆழமாக வுள்ள, வங்கம் வாரியில்-மரக்கலங்களையுடைய கடலிலே, தடுப்பு ஒணு மதத்தினால் ஆழ்ந்த - தடுக்கவொண்ணாத மதமயக்கத்தினாலே யமிழ்ந்த, யானை - யானைகள், மீது எழுந்து அழுந்துகின்ற [அழுந்தி மீது எழுகின்ற] - உள்ளே யமிழ்ந்து மேலேயெழுவனவற்றை, போலும் - ஒத்திருக்கும்; (எ - று.)

கடலிலே முதலைகள் ஆழ்ந்தெழுவதற்கு, யானைகள் அமிழ் ந்து எழுவதை உவமங்கூறினார்; வலிமையும், பருமையும் கருமை யும் பற்றிய உவமம். நாஞ்சில்-மதிலின் ஒருறுப்பு: ஏப்புழையென் பர். முற்றுதல் - வளைத்தலுமாம். பார்-பாறையானநிலம்: புற நானூற்றில் "பாருடைத்தகுண்டகழி" என வருவதையும், அங்கு வலியநிலத்தைக் குந்தாலியாலிடித்துச் செய்த கிடங்கு என்று உரைகூறியிருப்பதையும் காண்க. மா என்பது மிருகங்கட்கேயன் றிப் பறவைகள் நீர்வாழ்வன இவற்றிற்கும் வழங்கும் பெயராகும்.

போழ்ந்து அ மாகிடங்கு என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1] தடுக்கொணு. [2] மதத்தின்வீழ்ந்து. [3] மீள்கிலாது. [4] போன்றதே. (110)

18. ஈரும்வாளின் வால்விதிர்த் தெயிற்றிளம் பிறைக்குலம்
பேரமின்னி [1] வாய்விரித் [2] தெரிந்தகட் பிறங்குதீச்
சோரவொன்றை யொன்றுமுன் ருெடர்ந்துசீ றிடங்கர்மா
[3] போரில்வந்து சீறுகின்ற போரரக்கர் போலுமே.

(இ - ள்.) ஈரும் வாளின் - (அகப்பட்டவற்றை) அறுக்கின்ற வாளாயுதம்போல, வால் விதிர்த்து-வாலை யசைத்துக்கொண்டு, எயிறு இளம் பிறை குலம் மின்னி பேர வாய்விரித்து - கோரதந்தங்களாகிய இளஞ்சந்திரர்களின் கூட்டம் ஒளிவிட்டுவிளங்க வாயைத் திறந்துகொண்டு, எரிந்த கண்பிறங்கு தீ சோர-சொலிக்கின்ற கண்களினின்று (கோபத்தால்) விளங்குகின்ற தீப்பொறிகள் சிந்த, ஒன்றை ஒன்று முன்தொடர்ந்து - ஒன்றன்மீதொன்று முன்னுக எதிரிட்டுப் போய், சீறு - சீறுகின்ற, இடங்கர்மா - முதலைகள்,-போரில் வந்து சீறுகின்ற போர் அரக்கர் போலும் - போர்க்களத்திலே வந்து (ஒருவரையொருவர்) கோபித்துப் போர் செய்தலையுடைய இராக்கதரை யொத்திருக்கும்; (எ-று.)

முதலைகள் முருட்டுத்தனமாக ஒன்ருேடொன்றுபொருதல், அவ்வாறு அரக்கர் போர்புரிவதை யொக்குமென்க; கொண்டது விடாது முரண்கொண்டுபொருதல், பொதுத்தன்மையாம். பற்கள் பலவாதற்கு ஏற்பப் பிறைக்குலம் உவமையாயிற்று. வாலுக்கு, ஈர்வாள் உவமை. எயிற்றுக்குப் பிறை, வளைவு வெண்மை ஒளிகளில் உவமையாம். பி-ம்:—[1] நாகிமிர்த்து. [2] எதிர்ந்த. [3] போருவந்து. (111)

19. ஆளுமன்னம் வெண்குடைக் குலங்களா வருங்கராக்
கோளெலா முலாவுகின்ற குன்றமன்ன யானையாத்
தாளுலாவு பங்கயத் [1] தரங்கமே துரங்கமா
வாளும்வேலு [2] மீனமாக மன்னர்சேனை மானுமே.

(இ - ள்.) ஆளும் அன்னம் வெள் குடை குலங்கள் ஆ-(அவ்விடத்திற்) பயிலுகின்ற அன்னப்பறவைகள் வெண்கொற்றக்குடைகளின் கூட்டங்களாகவும்,—அரு கரா - (வேருேரிடத்திலே கிடைத்தற்கு) அரிய [மிகப்பெரிய] முதலைகள், கோள் எலாம் உலாவுகின்ற குன்றம் அன்ன யானை ஆ - (சூரியன் முதலிய) கிரகங்கள்யாவும் (தன்னைச்சுற்றிச்) சஞ்சரிக்கப்பெற்ற (மேரு) மலையை யொத்த யானைகளாகவும்,—தாள் உலாவு பங்கயம் தரங்கம்ஏ - நாளத்தோடு அசைகின்ற தாமரைமலர்களையுடைய அலைகள், துரங்கம்ஆ - குதிரைகளாகவும்,—மீனம் - மீன்கள், வாள்உம் வேல்உம் ஆக - வாளும் வேலுமாகவும் (அமைய),—மன்னர் சேனை மானும்-அரசரின் சேனைகளை யொக்கும், (அவ்வகழி); (எ-று.)

அகழியானது அன்னங்களாகிய வெண்கொற்றக்குடை முதலியவற்றைக் கொண்டிருத்தலால், மன்னர் சேனையை யொக்குமென்ருர்; உருவகவணியை அங்கமாகக்கொண்டுவந்த உவமையணி. வருங் கரா என்று பிரிப்பாருமுளர். வாளைமீனை வாளாகவும், கெண்டைமீனை வேலாகவும் கொள். "வாளைபிறழுங் கயல்கடுப்ப ...வெள்வாள்விதிர்த்து", "வயற்கெண்டையின் வேல்பிறழ

னும்'' என்பன காண்க. துரங்கம்-வேகமாகச்செல்வது; பங்கஜம்-சேற்றில் தோன்றுவது; கராம்=க்ராஹம் (அகப்பட்ட பிராணிகளைக்) கொள்ளும் வல்லமையுள்ளது என்று காரணப்பெயர்கள். பி - ம்:—[1] தரங்கமும். [2] மீனதாக. (112)

20. விளிம்பு [1] தெற்றி முற்றுவித்து வெள்ளிகட்டி யுள்ளுறப்
பளிங்கு [2] பொற்ற கத்தகட் டடுத்துறப் படுத்தலின்
தளிந்தகற் றலத்தொடச் சலத்தினைத் [3] தனித்துறத்
தெளிந்துணர்த்து கிற்றுமென்றல் தேவராலு [4] மாவதே.

(இ - ள்.) விளிம்பு-(அவ்வகழியின்) ஓரத்திலே, தெற்றி-திண்ணையை, வெள்ளி கட்டி முற்றுவித்து - வெள்ளியினாலேயமைத்து முடித்து, உள்உற-(அந்தத்திண்ணையின் சந்துக்குச்சந்துள்ள) உள்ளிடம் முழுதும்பொருந்தும்படி, பொன் தகடு - பொன்தகட்டினாலே, அடுத்துஉற-(குந்தளம்) அடுத்துப் பொருந்த, பளிங்கு-ஸ்படிகக்கற்களை, தலம் படுத்தலின் - தளவரிசையாப் பதித்திருத்தலினால்—'தளிந்த கல் தலத்தொடு - தெளிந்தபளிங்குக் கல்மயமான நிலத்துடனே, அ சலத்தினை-அவ்வகழியின்நீரை, தனித்து உற தெளிந்து-வேறுபிரித்து (இது பளிங்கு, இது அகழிநீர் என்று) நன்கு உணர்ந்து, உணர்த்துகிற்றும்-(காரணங்காட்டி இந்தவேறுபாட்டை அயலார்க்கும்) தெரிவிக்கவல்லமை யுடையோம், (நாம்)', என்றல்-என்பது, தேவரால்உம் ஆவதுஏ - தேவர்களால்தான் செய்யக்கூடியதோ? (எ - று.)

அகழியின்ஓரத்திலேவெள்ளியினால் திண்ணையாயமையுமாறு தட்டையாகச்சுவரெழுப்பி, அந்தத்திண்ணையின்சந்திடமெல்லாம் பொற்றகட்டினாலிழைத்துப் பளிங்குக்கற்களைத் தளவரிசையாகப் பதித்திருத்தலால், 'இது, அகழிநீர், இது பளிங்குத்தலம்' என்று அறியமுடியாமற் போயிற்றென்பதாம்: இங்ஙனம் ஒற்றுமைநயத்தால் வேறுபாடு உணராமற்போவது, பொதுவணியாம்; இவ்வருணனையால், அகழியின்நீர் மிகத் தெளிவாயுள்ளதென்பதுதோன்றும். தேவராலும் உணர்த்த முடியாதென்றமையால், அத்தேவர்களினும் குறைந்த அறிவினரான மனிதரால் உணர்த்தமுடியாதென்பது, தானே பெறப்படும். வெள்ளிகட்டி என்பதற்கு-(ஓரத்திற்கு) வெள்ளியைக்கட்டி என்று உரைப்பாருமுளர். தளிதல்-தெளிதல்: 'ஆதிப்பிரானைத் தளிந்தவர்க்கல்லது தாங்கவொண்ணாதே' (திருமந். 527) பி - ம்:—[1] சுற்று. [2] பொற்றகட்டகத்தடுத்து. [3] கணித்துறத். [4] ஆவதோ. (113)

21.—அகழியைச்சூழ்ந்த சோலையின் வருணனை.

அன்ன [1] நீளகன்கிடங்கு சூழ்கிடந்த வாழியைத்
துன்னிவேறு சூழ்கிடந்த தூங்குவீங் கிருட்பிழம்பு
என்னலா மிறும்புசூழ் கிடந்தசோலை யெண்ணிலப்
பொன்னின்மா [2] மதிட்குடுத்த நீலவாடை போலுமே.

(இ - ள்.) எண்ணில் - ஆலோசிக்குமிடத்து,—அன்ன நீள் அகல் கிடங்கு சூழ் கிடந்த ஆழியை - அப்படிப்பட்ட மிகப்பரந்து நீண்ட அகழியாகிய (பூமண்டலத்தைச்) சுற்றிக்கிடந்த கடலை, துன்னி - நெருங்கி, இறும்பு சூழ்கிடந்த - காடுபோன்று சூழ்ந்து

கொண்டிருந்த, சோலை - சோலையை,—வேறுசூழ்கிடந்த - (அந்தப் பெரும்புறக்கடலை) அடுத்துத் தனியேசூழ்ந்துகொண்டிருக்கின்ற, தூங்குவீங்கு இருள் பிழம்பு என்னல்ஆம் - அசையாதுமிக்குள்ள பேரிருளின் தொகுதி யென்னலாம்; (அன்றியும் அச்சோலை), அ பொன்னின் மா மதிட்குஉடுத்த நீலம் ஆடைபோலும்-பொன்னினு லான பெரிய அம்மதிளுக்குஉடுத்தின நீலஆடையையும்ஒக்கும்;

இந்தப் பூமண்டலத்தைச்சுற்றிச் சக்கரவாளமலை யொன்று உள்ளதென்றும், அதனைச்சுற்றிப் பெரும்புறக்கடலென்று வழங்கும் மகாசமுத்திரம் இருக்கின்றதென்றும், அந்தக்கடலையடுத்துப் பேரிருள்சூழ்ந்துள்ளதென்றும் புராணங்கள் கூறும்: மதில்சூழ்ந்த அயோத்திமாநகரே ஒருபூமண்டலத்தைப்போற் பரந்திருக்க, அதனைச்சுற்றியிருக்கின்றமதிள் சக்கரவாளமலையையும், அதனைச் சுற்றியுள்ள அகழி சக்கரவாளமலையைச்சுற்றியுள்ள பெரும்புறக்கடலையும், அதனைச்சூழ்ந்த சோலை அந்தப் பெரும்புறக்கடலைச் சுற்றியுள்ள பேரிருளையும் ஒக்குமென்றார்; இது தன்மைத்தற்குறிப்பேற்ற வணி. அன்றியும், தூரத்திலிருந்து காண்பார்க்குக் கருநிறமாகி மதிலையடுத்துத் தோன்றுகின்ற சோலை, பொன்மதிலுக்குக் கண்ணெச்சிலை [திருஷ்டி தோஷத்தை]ப் பரிகரிக்கும் பொருட்டு நீல ஆடையை யுடுத்தியது போலுமென்பது, ஈற்றடியின்கருத்து. தற்குறிப்பேற்றவணி, கறுப்பு உடை யுடுப்பது திருஷ்டிதோஷத்தைப் போக்குவதன்பொருட்டென்ப. பி - ம்:—[1]நீர். [2]நகர்க்கு. (114)

22.—அந்நகரத்துக் கோபுரவாயில்களின் வருணனை.

எல்லைநின்ற வென்றியானை யென்ன[1] நின்ற [2]முன்னமால்
ஒல்லையும்பர் நாடளந்த தாளின்மீ [3]துயர்ந்தவான்
மல்லன்ஞாலம் [4]யாவுநீதி மாறுரு வழக்கினுல்
நல்லவாறு சொல்லும்வேத [5]நான்குமன்ன வாயிலே.

(இ - ள்.) வாயில் - அந்நகரத்துக் கோபுரத்துவாரங்கள் (நான்கும்), (நான்குதிக்கிலும் நேராக நிற்றலால்), எல்லை நின்ற வென்றி யானை என்ன நின்ற-(நான்குதிக்குக்களிலும்தமக்கென்று ஏற்பட்ட) இடத்திலே நிலையாக நிற்கின்ற வெற்றியையுடைய நான்குதிக்கஜங்கள்போல நின்றன; (அன்றியும் அவை), - மால் முன்னம் ஒல்லை உம்பர் நாடு அளந்த தாளின்-திருமால் முன்னே திரிவிக்கிரமாவதார காலத்திலே விரைவாக மேலுலகத்தை யளவிட்ட திருவடியினும், மீது உயர்ந்த - மேலாகவுயர்ந்தனவாகி, மல்லல்ஞாலம் யாஉம் நீதி மாறு உரு வழக்கினுல்-பலவளங்களும் நிரம்பிய நிலவுலகத்துள்ள எல்லாப்பிராணிகளும் (தத்தமக்கு உரிய) ஒழுக்க முறைமையினின்று தவருதபடி நடத்தலால், நல்ல ஆறு சொல்லும் வேதம் நான்கும் அன்ன - நல்லொழுக்கங்களை யுபதேசிக்கும் நான்குவேதங்களையும் ஒத்திருந்தன; (எ - று.)

திக்கஜங்கள் தமதுஎல்லையில் தவருது நிலையாகநிற்றல் போல, இந்நகரத்துக் கோபுரவாயிலும் கிழக்குமுதலிய நான்கு எல்லையிலும் கோணுமல் நேராக அமைந்துள்ளன வென்க; அவ்வாறு அமைந்துள்ள வாயில்கள் மிகவும் ஓங்கியவையென்பதை விளக்குதற்குத் தொடர்புயர்வுநவிற்சியணி வகையால், 'மாலொல்லை

யும்பர்நாடளந்ததாளின்மீ துயர்ந்த' என்றார். நிலத்தன்மையாலும் இந்நகரத்தையாள்கின்ற அரசரின் செங்கோலினாலும், இந்நகரவாயிலிற்புகும்போதே அந்தப் பிராணிகள் தீயொழுக்கம் நீங்கி நல்லொழுக்கத்திற் செல்லுதலால், நல்லவாறுசொல்லும் வேதத்தை அவ்வாயிலுக்கு உவமையாக்கினார். திக்கஜங்களை உவமைகூறியதனால் எட்டுவாயில்களுள்ளனவோ என்று தோன்றுகின்ற ஐயத்தை 'வேதநான்கு மன்ன' என்ற தொடர் போக்கும். “தன்மதவாரணம் திசைதொறு நிறுவிய திறல்” என்றவாறு அரசர் தாம் திசைமுழுவதையும் வென்று திக்கஜங்களை யெல்லாம் வசப்படுத்தி அவற்றைத் தமது வெற்றிக்கு அறிகுறியாகத் தமது யானையாக எல்லாத்திக்கிலும் நிறுத்துவரெனக் கூறுவதுமுளதாதலால், எல்லைநின்ற வென்றியானை என்பதற்கு-எல்லையில் (தமது யானையாக நிறுத்தப்பட்டு) நிற்கின்ற திக்கஜங்களென்றும், தமது எல்லையில் வெற்றிக்கு அறிகுறியாக நிறுத்தப்பட்டு நின்ற தம்மத யானைகள் என்றும் உரைப்பினுமாம். ஆல் - ஈற்றசை: வான் என்று பிரிப்பாருமுளர். மல்லல் - வளம். ஒல்லை-விரைவு. பி-ம்:—[1]வெற்றி. [2]முன்னர், முன்னை. [3]உயர்ந்துபோய், உயர்ந்ததால். [4]ஏழும். [5]நாலும்.

23.—அவ்வாயிலி லமைந்துள்ள சித்திரம்.

தாவில்பொற் [1]றலத்தினற் றவத்தினோர்க டங்கு[2]தாள்
பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர்புக் [3]கொதுங்குமால்
ஆவியொத்த [4]சேவல்கூவ வன்பின்வந் [5]தணைந்திடாது
ஓவியப் புருவின்மா டிருக்கவூடு பேடையே.

(இ - ள்.) கூவ - (தன்புணர்ச்சி விருப்பம் தோன்றுமாறு பெண்புரு) அழைக்கவும், ஆவி ஒத்த - (தனது) உயிரையொத்த, சேவல் - ஆண்புருவானது, அன்பின் வந்து அணைந்திடாது-அன்போடுவந்து (தன்னைத்) தழுவாமல், ஓவியம் புருவின் மாடு-(அவ்வாயிலின் புறத்திலே) சித்திரத்தி லமைந்துள்ள பெண்புருவினருகிலே, இருக்க - (தன்பேடையென்று) மயங்கியிருக்க, ஊடு-(அதுகண்டு வேறுபேடையினிடத்து விருப்பங்கொண்டதென்று தன் சேவலினிடத்துச்) சிறிது கோபங்கொண்ட, பேடை - பெண்புருவானது,—தா இல் பொன் தலத்தில்-குற்றமில்லாத பொன்மயமான தேவலோகத்திலே, நல் தவத்தினோர்கள் தங்கு - (முற்பிறப்பிலே) நல்ல தவஞ்செய்துள்ள புண்ணியவான்கள்வசிக்கின்ற, தாள்-தாளையுடைய, பூ உயிர்த்த - மலர்களைப் பூக்கின்ற, கற்பகம் பொதும்பர் - கற்பகச்சோலையில், புக்கு ஒதுங்கும்-போய்மறையும்; (எ-று.)

கோபுரவாயிலின்மீது வசிப்பதான ஆண்புரு, அருகே சித்திரிக்கப்பட்டுள்ள பெண்புருவைக்கண்டு அதனைத் தன்பெட்டைப்புருஎன்று மயங்கியதனால், உண்மையான தன்பெட்டைப்புரு தன்னைக் கூவியழைக்கவும் கவனியாமல் அந்தச் சித்திரப்புருவினிடம் போய்விட, தன்சேவல் வேறொரு பெண்புருவை விரும்பியதென்று பெட்டைப்புரு ஊடல்கொண்டு கற்பகச்சோலையில் ஒதுங்குமென்க; மயக்கவணி. இந்த வருணனையால், கோபுரவாயிலிலமைந்துள்ள சித்திரங்கள் தத்ரூபமாகவே இருக்கின்றன என்பதும், கோபுர

வாயில்கள் மிகவும் ஓங்கியுள்ளன என்பதும் தொனிக்கும். கற்பகப் பொதும்பர் - சந்தானம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம், அரிசந்தனம் என்ற ஐந்தருக்களின் செறிவு. கற்பகம்=கல்பகம்: நினைத்தவற்றைத் தருவது. அங்குப்போய்த்தங்குதல், நல்வினையுடையோர்க்கேயன்றி மற்றையோர்க்கு இயலாதென்பார் 'நல்தவத்தினோர்கள் தங்குதாள் கற்பகம்' எனப்பட்டது. தாள்-அடி:நாளம் என்பாருமுளர். பி-ம்:—[1] தலத்துநற், தலத்தினர். [2] நாட். [3] ஒதுங்கலால். [4] சேவல் கூவவருகு, அன்பின்சேவல்கூவ. [5] அடைத்திடாது, அடைந்திடாது.

24, 25, 26.—மூன்றுகவிகள் – குளகம்; நகரகோபுர வருணனையைத் தெரிவிக்கும்.

24\. [1] கல்லடித் தடுக்கி [2] வாய் பளிங்கரிந்து கட்டி [3] மீது
எல்லிடப் பசும்பொன்வைத் திலங்குபன் மணிக்குலம்
வில்லிடக் குயிற்றிவாள் விரிக்கும்வெள்ளி மாமரம்
புல்லிடக் கிடத்திவச் சிரத்தகால் பொருத்தியே.

25\. மரகதத் திலங்குபோதி கைத்தலத்து வச்சிரம்
புரை [1] தபுத் தடுக்கிமீது பொன்குயிற்றி [2] மின்குலாம்
நிரைமணிக் [3] குலத்தினுளி நீள்வகுத்த [4] வோளிமேல்
விரவுகைத் தலத்தினுய்த்த மேதகத்தின் [5] மீதரோ.

26\. ஏழ்பொழிற்கு மேழ்நிலத் தலஞ்சமைத்த [1] தென்னநூல்
ஊழுறக் [2] குறித்தமைத்த வும்பர்செம்பொன் [3] வேய்ந்துமீச்
சூழ்சுடர்ச் சிரத்துநன் மணித்தசும்பு [4] தோன்றலால்
[5] வாழ் *நிலக் குலக்கொழுந்தை மௌலிசூட்டி யன்னவே.

(இ - ள்.) (24) கல் அடித்து அடுக்கி - மணிக்கற்களைச்செவ்வைசெய்து ஒன்றன்மேலொன்றாகப்பொருத்தி [சுவரெழுப்பி], வாய் பளிங்கு அரிந்துகட்டி - (அதன்) முற்புறத்திலே பளிங்குக்கற்களையறுத்து அவற்றாற் கட்டி, மீது - மேலே, எல் இட பசும்பொன் வைத்து - ஒளிவீசும்படி பசும்பொன் தகட்டைப் பதித்து, இலங்கு பல் மணி குலம் வில் இட குயிற்றி - விளங்குகின்ற பல்வகை யிரத்தினங்களின் கூட்டத்தை ஒளிவீசும்படி (அப்பொற்றகட்டிலே) யிழைத்து, வாள் விரிக்கும்-ஒளி வீசுகின்ற, வெள்ளி மா மரம் - வெள்ளியினாலாகிய பெரிய கைம்மரங்களை, புல்லிட கிடத்தி-மேலே பொருந்தும்படி யிருக்கவைத்து, (தளப் படுத்தி), வச்சிரத்த கால் பொருத்தி-வச்சிர ரத்தினமயமான தூண்களை அதன் மேலே நாட்டி,

---

* எமது இடத்துப் பேரன்பினரான திருவாளர் கோ. வன்மீகநாதன் (G. V. Pillai, Under-Secretary to the Government of India) என்பவர், இந்த மூன்று பாடல்களால் கவிச்சக்கரவர்த்தி நிலமகளுக்கு முடி சூட்டும் பணியை மேற்கொள்வதென்ற வியாஜத்தால் கிரீடத்தின் உறுப்புகளையெல்லாம் ஓவியக்கலையின் இலக்கணமாகச் சித்திரித்துக் காட்டியுள்ளாரென்று உரை வகுத்து, ஓர் கட்டுரை எழுதியுள்ளார்: அப்பொருளை வாசகர்கள் ஊன்றிக் கவனிக்குமாறு இந்தப் பாலகாண்டத்து உரை முற்றியதும் அநுபந்தமாகக் காட்டுவோம்.

(25) (அந்தத்தூணங்களின் மேலிடத்திலே), மரகதத்து இலங்கு போதிகை தலத்து - பச்சையிரத்தினங்களினுற் செய்யப் பட்டுவிளங்குகின்றபோதிகைக்கட்டைகளில், வச்சிரம்புரைதபுத்து அடுக்கி - வைரக்கற்களைக் குற்றம் நீக்கி ஒன்றன்மேலொன்று வைத்து, மீது பொன் குயிற்றி - மேலே பொன் தகட்டைவைத்து, (மேல்) - (அவற்றின்) மேலே, மின் குலாம் நிரை மணி குலத்தின் வகுத்த நீள் ஆளி ஒளிமேல் - மின்னல்போல விளங்குகின்ற ஒழுங் காகிய இரத்தினங்களின் கூட்டத்தாலியன்ற நீண்ட சிங்க வடிவத் தின் வரிசைமேல், விரவு கைத்தலத்தின் உய்த்த மேதகத்தின்மீது- (கோணலில்லாமல்) நேரொழுங்காகப் பொருந்திய கைம்மரமாக வைக்கப்பட்ட கோமேதகத்தின் மேலே,

(26) ஏழ் பொழிற்கும் - மேலேழுலகத்தவர் யாவர்க்கும், (தனித்தனி தங்குதற்கு) ஏழ்நிலம் தலம்-ஏழுவிசாலமான இடங்களை, சமைத்தது என்ன - ஏற்படுத்தியதுபோல [ஏழுநிலைகள் அமைய], நூல்ஊழ்உற குறித்து அமைத்த - சிற்பசாஸ்திரங்களின் முறை மைக்குப்பொருந்த ஆலோசித்துக் கட்டிய கோபுரங்கள்,—உம்பர் செம்பொன் வேய்ந்து - மேலேசிவந்த பொன்னின் தகட்டால்முழுவ தும்மூடப்பட்டு, மீ சூழ்சுடர் சிரத்து-மேலுலகத்திலே சென்றுசூழ் கின்ற ஒளியையுடைய சிகரத்திலே, நல்மணி தசும்பு தோன்றலால்- சிறந்த மாணிக்கத்தாலாகிய கலசம் விளங்கப்பெறுதலால், வாழ் நிலம் குலம் கொழுந்தை மௌலி சூட்டி அன்ன - வாழ்கின்றபூமியா கிய இளம்பெண்ணை முடிசூட்டியலங்கரித்தாற்போன்றது; (எ - று.)

அயோத்திமாநகரின் மதிலையும் அகழியையும் வருணித்தபின், கவிஞர்பிரான், அந்நகரத்துக் கோபுரத்துக்குச் செல்கின்றார். சென் றவர் அந்தக் கோபுரத்தைக் கட்டிடமாக மாத்திரம் காணுமல் பூமி தேவிக்கு அமைத்த கிரீடமாகவும் காண்கின்றார்.

குளமாகியுள்ள மூன்று செய்யுள்களில், முதற்செய்யுள்-அடியி லிருந்துசுவரெழுப்பி அச்சுவரின்மேல் வெள்ளிக்கைகள் பொருத்தித் தளப்படுத்தி, அதன்மேல் முதல்நிலையமைப்பதற்காக வச்சிரத் தூண்கள் நிறுத்தியதையும், இரண்டாவதுசெய்யுள் - அங்ஙனம் நிறுத்திய தூண்களில் மரகதத்தாற்செய்த போதிகைகள அமை த்து, வச்சிரக்கற்களை வரிசையாகவைத்துப் பதித்ததன் மேலே பல வகைமணிகளையழுத்திச் செய்த சிங்கவடிவங்களை அலங்காரமாக வைத்து அதன்மேல் முதல்நிலை முற்றுப்பெறுவதற்காகக் கோமேத கக்கைகளையமைத்து மூடித் தளப்படுத்தி இங்ஙனம் முதல்நிலை முற் றுப்பெற இரண்டாம் நிலைதொடங்கியதையும், மூன்றுஞ்செய்யுள்- அங்ஙனமே ஏழுநிலையமைந்து முற்றிய கோபுரங்கள் கலசம் நாட்டப் பட்டு விளங்குவதையும் கூறும்.

(24):—வாய் பளிங்கு அரிந்துகட்டி மீப்பொன்வைத்து மணிக் குலம் குயிற்றி வாள்விரிக்கும் வெள்ளிமரம் என்க. இவை ஜனங்கள் புகுங்கோபுரவாசலுக்குமேலே முதல்நிலை அமைவதற்காகத் தளமிடு வதற்குப் பரப்பிய கைகளைக் காட்டும். வச்சிரக்கால் என்பது - அங் ஙனம் கைபரப்பித் தளமாகச் செய்தபிறகு அத்தளத்தின்மேல்

நாட்டிய வயிரத்தூண்களை. வெள்ளிமா மரம் புல்லிடக்கிடத்தி என்பதற்கு - வெள்ளித்தகட்டை ஆதாரச்சிலையாகக் கீழேபரப்பிஎன்று ஓர்உரை. பி - ம்:—[1]கல்லிடித்து. [2]நற். [3]மீயெல்லுடை, மீயெல்லிடை.

(25):—அங்ஙனம் 'நாட்டியவயிரக்கம்பங்களின்மேற்புறத்திலே முதல்நிலையைமூடுமாறு தளம் பரப்புதற்பொருட்டு மரகதப்போதிகையோடுஒட்ட வச்சிரக்கற்கள்பதித்ததன்மேல் தளத்தைத்தாங்குவனபோலச் சிங்கவடிவுகள் அமையவைத்ததை முதல்மூன்றடிகள் காட்டும். அச்சிங்கவரிசைகளின்மேல் கோமேதகச்சட்டங்களைப்பரப்பியதை ஈற்றடிவிளக்கும். மேதகம் = கோமேதகம்: முதற்குறை. ஒளிவிரவு-ஒளிபொருந்திய எனினுமாம்: ஓளி-ஒளியென்பதன் நீட்டல். மணிக்குலத்தினொளி நீள் வகுத்த வோளிமேல் - இரத்தினங்களாற் சிங்கவடிவங்களை நீளவகுத்த கால்வரிசைகளின்மேல் என்று கூறுதலுமுண்டு. ஆளி நீள் வகுத்த ஒளி என்பதற்கு - சிங்கத்தின்வடிவங்களமைந்த தூணொழுங்கு என்றுமாம். இச்செய்யுளுக்கு—'மரகதப் போதிகைவைத்துச் சுமைதாங்கும்படி அதன்மேல் வச்சிரத்தாலே உத்தரங்களும் பாவுசிலையும் பாய்ச்சிச் சந்துகட்கெல்லாம் சுண்ணம்புபோல் பொன்னைக் காய்ச்சிவிட்டுச் செங்கற்பொடிபோல் மாணிக்கங்களைப் பருக்கைதட்டிக் கோமேதகத்தாலே கொடுங்கையை ஒழுங்காய்வைத்து என்றும் உரைவகுத்துள்ளனர். பி - ம்:—[1] தவிர்த்து.[2]மீன்.[3] தலத்தின். [4]ஒளியின், வெள்ளிமேல். [5]மேலரோ.

(26) முதலடி - நிலைகள் மிகவும் விசாலமானவை யென்பதைக் காட்டும். கீழ் இந்நகரத்தை "நிலமகள் முகமோ" என்றதற்கு ஏற்ப, இங்குக்கோபுரத்தை மௌலியாகக் கூறினர். நிலத்தலம் - தங்குமிடம். அமைத்த - பெயர்; இது - ஏழ்நிலைகளைக்காட்டுமென்பாருமுளர். நான்குவாயில்கட்குமாக நான்குகோபுரங்களாதலால் பன்மையாற் கூறினர். தசும்பு மௌலிசூட்டியன்ன(து) என்று எழுவாய்பயனிலையாக உரைப்பர் ஒருசாரார். பி - ம்:—[1]என்னலால், என்னவே. [2]குவித்து. [3]வேய்ந்தயிற்.[4]தோன்றுமால். [5]வாழ்நகர்.(117,118,119)

27.—இனி, ஒன்பதுகவிகள் - அந்நகரத்து மாளிகைகளின் வருணனை.

திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதை [1]யுடைத் தவள மாளிகை
வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடற் றரங்கம் போலுமே.

(இ - ள்.) திங்கள்உம் கரிது என -(வெண்ணிறமுடைய) சந்திரமண்டலமும் (இதன் முன்னே) கருநிறமுடையதாகத் தோன்றுமென்று சொல்லுமாறு,வெண்மை தீற்றிய-வெண்மைநிறம்பொருந்தும்படிபூசிய, வெண் சங்கச் சுதை உடை-வெண்சங்குகளைச்சுட்டுச்செய்த சுண்ணம்புச் சாந்தையுடைய, தவளம் மாளிகை-வெண்ணிறமுள்ள வீடுகள்,—வெம் கடு கால் பொர - பயங்கரமாகிய பெருங்காற்று வீசுதலால், மேக்குநோக்கிய-மேல்நோக்கியெழுந்த, பொங்கு

இரும் பாற்கடல் - மேலேபொங்கியெழுகின்ற பெரிய பாற்கடலின், தரங்கம்-அலைகளை, போலும்—ஒத்திருக்கும்; (எ - று.)

ஓங்கியுயர்ந்த வெண்ணிறமாளிகைகள், கடுங்காற்று வீசுதலால் மேலெழுந்த பாற்கடலலைகளை யொக்கும்; நிறமும் உயர்ச்சியும்பற்றி வந்த தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1] புரை, புரி. (120)

28. புள்ளியம் புறவிறை பொருந்து மாளிகை
தள்ளருந் தமனியத் தகடு வேய்ந்தன
எள்ளருங் கதிரவ னிளவெ யிற்குழாம்
வெள்ளி[1]யங் [2]கிரிமிசை விரிந்த போலுமே.

(இ - ள்.) தள்ள அரு தமனியம் தகடு - நீக்குவதற்கு அருமையான பொற்றகடுகள், வேய்ந்தன - மேலேவேயப்பட்டனவாகிய, புள்ளி அம் புறவு இறை - உடற்புள்ளிகளையுடைய அழகிய மாடப்புறுத் தங்குதற்குரிய இடத்துடன், பொருந்தும் - பொருந்தப்பெற்ற, மாளிகை - மாளிகைகள்,—வெள்ளி கிரிமிசை - வெள்ளிமலைமேலே, எள்ள அரு கதிரவன்-இகழ்ச்சியில்லாத சூரியபகவானது, இள வெயில் குழாம் - இளையகிரணங்களின் தொகுதிகள், விரிந்த(து)-பரவி விழுந்திருத்தலை, போலும்—; (எ - று.)

சங்கவெண்சுதை தீற்றிய தவளமாளிகைமீது பொற்றகடு வேய்ந்தது, வெள்ளிக்கிரியின்மீது கதிரவனின் இளவெயிற்குழாம் விழுவது போலு மென்றார்: இதுவும் - தற்குறிப்பேற்றவணியே. வெள்ளியங்கிரி, அம் - சாரியை. 'புள்ளியம் புறவிறைபொருந்தும்' என்பது, மாளிகைக்கு இயற்கை யடைமொழி: ஒப்புமையின் பொருட்டு வந்ததன்று. இறை - இறுத்தல்: தங்குதல்: தங்குதற்கு உரிய இடம். "மாடத்திறையுறைபுறவின்" எனப்பெரும்பாணாற்றுப்படையில் வருவது காண்க. மாடத்தில் புறுக்கள் தங்க வகுக்கப்பட்ட இடம் 'கபோதகம்' எனப்படும். தமனியம் = தபநீயம்; (நெருப்பினால்) தபிக்கப்பட்டு விளங்குவ தென்று காரணப்பொருள்படும்: வடசொல். பி-ம்:—[1] வெண். [2] கிரியிடை. (121)

29. வயிரநற் கான்மிசை மரக தத்துலாம்
செயிரறப் போதிகைக் கிடத்திச் சித்திரம்
உயிர்பெறக் [1]குயிற்றிய வுப்பர் நாட்டவர்
[2]அயிருற விமைப்பன வளவில் [3]கோடியே.

(இ - ள்.) வயிரம் நல் கால் மிசை - வச்சிரத்தினாலாகிய அழகிய தூண்களின் மேலே, மரகதம் துலாம் - மரகத ரத்தினத்தாலாகிய உத்தரத்தை, செயிர் அற - குற்றம் நீங்க [நன்கு பதியுமாறு], போதிகை கிடத்தி - போதிகைக் கட்டையின் மேலேபொருத்தி, சித்திரம் உயிர் பெற குயிற்றிய - (அந்தத் துலாத்தில்) உயிர்பெற்றிருப்பனபோலத் தோன்றும்படி சித்திரங்கள் இயற்றியனவும், உம்பர் நாட்டவர் அயிர் உற இமைப்பன - தேவலோகத்தவர்களும் ('தமதுவிமானமோ?') என்று ஐயங்கொள்ளும்படி விளங்குவனவுமாகிய மாளிகைகள், அளவு இல் கோடி - அளவிறந்த பலகோடிக் கணக்கினவாம்; (எ- று.)

உயிர்பெற்றிருப்பதுபோலத் தோன்றுமாறு அமைவனவே சிறந்த சித்திரங்களா மாதலால், 'சித்திர முயிர்பெறக் குயிற்றிய' என்றார். இலக்கணம் வழுவாது வரையப்படின் சித்திரங்கள் உயிர் பெறுமென்ற கொள்கைபற்றி இவ்வாறு கூறியதெனினுமாம். துலாம் - தூலமென்று வழங்குகின்ற தென்ப. போதிகை - தூண் மேல்வைக்குந் தாங்குகட்டை. துலாம்-போதிகையின் இருபக்கத்தும் கீழே வாழைப்பூவடிவமாகக்கிடத்தி அமைக்கப்படும் உறுப்பு என்ற னர் ஒருசாரார். பி-ம்:—[1]குறித்தன. [2]அயர்வுற, அயிர்வுற. [3]காட் சியே. (122)

30. சந்திர [1]காந்தத்தின் [2]றலத்த சந்தனப்
பந்திசெய் தூணின்மேற் பவளப் போதிகைச்
[3]செந்தனி மணித்துலாஞ் செறிந்த திண்சுவர்
இந்திர நீலத்த [4]வெண்ணில் கோடியே.

(இ - ள்.) சந்திரகாந்தத்தின் தலத்த - சந்திரகாந்தக்கற்கள் படுத்திய தரையையுடையனவும், சந்தனம் பந்தி செய்-சந்தன மரங் களினால் வரிசையாகச்செய்து நிறுத்தின, தூணின்மேல் - தூண் களின்மேலே, பவளம் போதிகை - பவழத்தாலாகியபோதிகைக்கட் டையில், செம் தனி மணி துலாம்-செந்நிறமுள்ள ஒப்பற்ற மாணிக் கத்தாலாகிய உத்தரம், செறிந்த - பொருந்தினவையும், திண் சுவர் இந்திரநீலத்த - வலியசுவர்கள் இந்திரநீலவிரத்தினத்தா லியன்றன வுமாகிய மாளிகைகள், எண் இல் கோடி—; (எ-று.)

சந்திரகாந்தம் - சந்திரனைக் கண்டவளவில் நீரைக் கக்குவ தாகியதொரு கல். தலத்த, செறிந்த - பெயர்கள். பி-ம்:—[1]காந்தத் தில். [2]தரளம்வேய்ந்தன, அலத்தஞ்சேர்ந்தன. [3]செந்தழன்மணித், செந்தமனியத். [4]எண்ணிலாதன. சிலபிரதிகளில் இச்செய்யுள் அடுத்த செய்யுளின்பின் உள்ளது. (123)

31. பாடகக் [1]காலடி பதுமத் [2]தொப்பன
சேடரைத் தழீஇயின செய்ய [3]வாயின
நாடகத் [4]தொழிலன நடுவு [5]துய்யன
[6]ஆடகத் தோற்றத்த மகளிர் போன்றன.

(இ - ள்.) பாடு அகம் - வேலைப்பாடு தம்மிடத்து அமைந்த' கால் அடி- தூண்களின் அடிப்பகுதிகள், பதுமத்து ஒப்பன-தாமரை வடிவாக அமைந்தனவும், சேடரை தழீஇயன - (அஸ்திவாரத்தின் ஆழத்தால்) நாகலோகத்தாரைச் சேர்ந்துள்ளனவும், செய்ய ஆயின -(வேலைத்திறத்தாற்) செப்பமுள்ளனவும், நாடு அகம் தொழிலன - (யாவரும்) விரும்பிக்காணும் உள்வேலையையுடையனவும், நடுவு துய்யன - நடுவிடமெல்லாம் சுத்தவெளியாயுள்ளனவும், ஆடகம் தோற்றத்த - பொன்னினாலாகிய வெளியமைப்பை யுடையனவுமான மாளிகைகள்,—மகளிர் போன்றன - விலைமகளிரையொத்தன;(எ-று.)

விலை மகளிர்கள் = பாடகமென்னும் ஆபரணத்தை யணிந்த காலென்னும் அடித்தாமரையைப் பெற்றிருத்தலும், சேடரை [யௌவன புருடர்களை]த் தழுவுதலும், செந்நிற வாயுடனிருத்த

லும், நாடக மாடுந்தொழிலிற் பயின்றிருத்தலும், தம்முடைய இடை சிறுத்திருத்தலாற் பஞ்சின்தொடர்நுனியை யொத்திருத்தலும், பொன்போ லொளிர்கின்ற மேனியை யுடையவராதலும் காண்க. சிலேடையுவமை. [6]ஆடகத் தோற்றத்த வளவிலாதன என்றும் பாடமுண்டு; இப்பாடத்தில், அடைமொழிகளின் ஒற்றுமையால், ஒருவிஷயத்தை வருணிக்கையில் அப்ரஸ்துதமாகிய விலைமகளிரைக் குறிக்கும் மற்றொருபொருள் தொனிப்பதாகிய சுருங்கச்சொல்லலணி யென்க. சேடர் - விடரெனினுமாம், ஆடகம்-ஹாடகம்: பொன்னின்வகை. மாளிகையைக் கூறுமிடத்து —பாடு அகம் கால் - பக்கங்களிலும் அகத்திலும் நாட்டப்பட்ட தூண், பதுமத்து ஒப்பன-பதுமத்தின் வடிவை யொப்பன; சேடரை தழீஇயின - பெரியோரை(த் தம்மிடத்து)ப் பொருந்தியன; செய்ய வாயின-நேர்மையான வாயிலினை யுடையன; நாடு அகம் தொழிலன-(மனத்தினாற்) கருதிச் செய்யப்படுஞ் சித்திரத் தொழிலைத் தம்மிடத்தே கொண்டன, என்றுமாம். பாடு அகம் காலடி என்பதற்கு - வேலைப்பாடு தன்னிடம் அமைந்த அடிப்படை என்றுருமுளர். பி - ம்:—[1]காலன. [2]ஏய்ப்பன. [3]வாயன, செய்வன. [4]தொழிலின. [5]தூயன. [6]......மகளிரல்லன. *(124)*

32. புக்கவர் [1]கண்ணிமை பொருந்து ருதொளி
[2]தொக்குடன் [3]றயங்கிவிண் ணவரிற் றோன்றலால்
திக்குற நினைப்பினிற் செல்லுந் தெய்வவீடு
ஒக்கநின் றிமைப்பன வும்பர் நாட்டினும்.

(இ - ள்.) புக்கவர் - (அம்மாளிகையைப்பார்த்தற்கு) உட்புகுந்தவர், கண் இமை பொருந்த உறுது-(மிக்கவேலைப்பாடு அமைந்திருத்தல்பற்றிப் பெருவியப்போடு அவற்றைக் கவனித்துப் பார்த்தலால்) கண்கள் இமைபொருந்தாமல், ஒளி தொக்குடன் தயங்கி - (அம்மாளிகைகளினுடைய) ஒளி (தம்) உடம்போடு பொருந்தப்பெற்று, விண்ணவரின் தோன்றலால் - தேவர்கள்போல விளங்குதலால், (அம்மாளிகைகள்),—நினைப்பினில் - நினைத்தமாத்திரத்தில், திக்கு உற-(பத்துத்) திக்குக்களிலும் பொருந்த, செல்லும்-செல்லுதற்குஉரிய,தெய்வம் வீடு ஒக்க நின்று-தெய்வத்தன்மையையுடைய விமானங்களோடு ஒப்ப நின்று, (உயர்ச்சியாலும் ஒளிமிகுதியாலும்), உம்பர் நாட்டின்உம் - தேவலோகத்திலும், இமைப்பன - சென்று விளங்குவன; (எ - று.)

இந்நகரத்து மாளிகையினுள்ளே புகுந்தவர்கள் மாளிகைகளின் வேலைப்பாட்டைக் காண்கையிலுள்ள பெருவிருப்பால் இமையாக் கண்ணராகி அவற்றினொளி தம்மீதுபாயத் தேஜோமயமான திவ்வியசரீரத்தைப் பெற்றுத் தேவர்கள்போல விளங்குதலாலும் ஓங்கியிருத்தலாலும் அம்மாளிகைகள் தேவவிமானங்களை யொத்தன வென்க. தொக்கு—த்வக்: தோல், உடம்பு. மூன்றாம் அடிக்கு-திக்கு -எத்திசையிலுமுள்ள உயிர்களும், (இங்குவந்தால்), உற நினைப்பினில் - (நன்மை) பொருந்தத் தருமசிந்தனையைக்கொள்ளுதலாலும், செல்லும் - (தாம்) பெறுகின்ற, தெய்வவீடு - தேவர்களின்வாழி

டத்தை என்று உரைகூறுதலும் ஒன்று. பி - ம்:—[1] கண்ணிணை. [2] தொக்குடல். [3] தயங்க. (125)

33. [1] அணியிழை மகளிரு மலங்கல் வீரரும்
தணிவன வறநெறி தணிவி லாதன
மணியினும் பொன்னினும் வனைந்த வல்லது
பணி[2] பிறி தியன்றில பகலை வென்றன.

(இ - ள்.) அணி இழை மகளிர்உம் - அழகிய ஆபரணங்களை யணிந்த மாதர்களும், அலங்கல் வீரர்உம் - மாலையைத்தரித்த வீரத்தன்மையுள்ள வீரர்களும், தணிவன - ஒருவரோடு (ஒருவர் கூடித் தமது) விரகதாபம் ஆறப்பெற்றனவும், அறம்நெறி தணிவு இலாதன - தருமமார்க்கத்தினின்றும் தவறாது (நல்லொழுக்கத்தோடு) வாழப்பெற்றனவுமாகிய மாளிகைகள் யாவும்,—மணியின் உம் பொன்னின்உம் வனைந்த அல்லது - இரத்தினங்களினாலும் பொன்னினாலுஞ்செய்யப்பட்டனவேயன்றி, பிறிதுபணி இயன்றில- (மண்முதலிய) வேறு எந்தப் பொருளினாலும் வேலை செய்யப்பட்டனவல்ல; (ஆகையால், அம்மாளிகைகள்),—பகலை வென்றன - சூரியனையும் (தமது ஒளியால்) வென்று விளங்குவன; (எ - று.)

பொன்மணிகளால் இயன்றன வாதலால், அந்நகரத்துமாளிகைகள் சூரியனைவிட மிக்குவிளங்குகின்றன வென்க. தணிவன... தணிவிலாதன-முரண்டொடை. மணியினும்பொன்னினும் வனைந்த -மணிகளினாலும் பொன்னினாலும் இயன்ற மாலை முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்றன என்பாரு முளர். பி - ம்:—[1] மணி. [2] பிறிதியன்றனபாங்குமில்லையே. (126)

34. வானுற [1] நிமிர்ந்தன வரம்பில் [2] செல்வத்த
தானுயர் [3] புகழன தயங்கு சோதிய
[4] ஊனமி லறநெறி யுற்ற [5] வெண்ணிலாக்
[6] கோனிகர் [7] குடிகடங் கொள்கை சான்றன.

(இ - ள்.) வான் உற நிமிர்ந்தன - ஆகாயத்தையளாவ உயர்ந்தனவும், வரம்பு இல் செல்வத்த - அளவில்லாத செல்வ முடையனவும், உயர் புகழன - மிக்க பிரசித்தி பெற்றனவும், தயங்கு சோதிய- விளங்குகின்ற ஒளியுடையனவுமாகிய மாளிகைகள்,—ஊனம் இல் அறம் நெறி உற்ற - குற்றமற்ற தருமமார்க்கத்திற் செல்வனவாய், எண் இலா-வரம்பில்லாத, கோன் நிகர் குடிகள் தம்-அரசனைப்போற் பெருஞ்சிறப்புடன் வாழ்கின்ற ஜனங்களின், கொள்கை - தன்மை, சான்றன-மிகுந்துள்ளன; (எ - று.

அந்நகரத்துச்சனங்களும் மேலான ஒழுக்கநெறியிற் செல்வதால் மிகமேம்பட்டு, செல்வத்தோடு பெரும்புகழும்படைத்துப் பேரொளியுடன் விளங்குவ ரென்க. [5] எண்ணிலாகோனிகர்குடிகடங் கொள்ளை சான்றன என்றபாடத்திற்கு - குடிகள்தம்கொள்ளை [மிகுதி] நிறைந்தனவுமாகிய மாளிகைகள், எண்ணிலா - அளவிறந்தன என்க. 'கோனிகர் குடிகள்' - "வீறுசான்மன்னர் விழையுங்

குடியுள" என்ப. பி-ம்:—[1] நிவந்தன. [2] செல்வத்தோர். [3] புகழெனத். [4] ஈனம். [5] எண்ணில. [6] கோநகர். [7] குடிபல. (127)

35. அருவியிற் [1] ருழ்ந்துமுத் [2] தலங்கு [3] தாமத்த
விரிமுகிற் குலமெனக் கொடி [4] வி ராயின
பருமணிக் [5] குவையன பசும்பொற் கோடிய
[6] பொருமயிற் [7] கணத்தன மலையும் [8] போன்றன.

(இ - ள்.) அருவியின் தாழ்ந்து - நீரருவிபோல (வெண்மை நிறமுடையனவாகத்) தொங்கி, அலங்கு - அசைகின்ற, முத்து தாமத்த - முத்துமாலைகளையுடையனவும், விரி முகில் குலம் என கொடி விராயின - பரவிய மேகக்கூட்டம்போலத் துவசங்கள் மேலே பரவப்பெற்றனவும், பரு மணி குவையன - பருத்த இரத்தினங் களின் தொகுதியை யுடையனவும், பசும் பொன் கோடிய - பசும் பொன்னின் திரளுள்ளனவும், பொரு மயில் கணத்தன - (ஒன்றோ டொன்று) ஒத்த மயிற்பறவைகளின் குழாத்தை யுடையனவுமாகிய (அந்நகரத்து) மாளிகைகள்,—மலைஉம் போன்றன - மலையையும் ஒத்தன; (எ - று.)

அருவி முகில் மணி பொன் மயில் இவை, மலையி லுள்ளன. அருவி போன்ற முத்துத்தாமமும் கொடியும் மணிமுதலியனவும், இந்நகரத்து மாளிகைகளி லுள்ளன; ஆகையால், மிகவோங்கிய அம்மாளிகைகள் மலையையும் ஒத்தன வென்றார். பலநிறமுள்ள துவசங்கள் பலநிறமுள்ள மேகம்போலும்; இனி, கொடி என்பதற்கு - மின்னற்கொடி துவசம் என இருபொருள் கொள்ளுதலு மாம். கோடி - திரளுக்கு, இலக்கணை. பொரும் அயில் என்றும் பிரிக்கலாம்; இடிதாங்கியாகிய அயிலை மாளிகையின்மேல் நாட்டுப. பி-ம்:—[1] தாழ்ந்த. [2] இலங்கு. [3] சோதிய. [4] விராவின, விராயன. [5] குவையின, குவையென. [6] வரு. [7] கனத்தன. [8] அல்லன, போல்வன. (128)

36.—இது முதல் மூன்றுகவிகள்—கொடிகளின் சிறப்பைத் தெரிவிக்கும்.

அகிலிடு [1] கொழும்புகை யளாய்ம யங்கின
முகிலொடு வேற்றுமை [2] தெரிக்கி லாமுழுத்
துகிலொடு நெடுங்கொடிச் [3] சூல [4] மின்னுவ
[5] பகலிடு [6] மின்னணிப் [7] பரப்புப் போன்றவே.

(இ - ள்.) அகில் இடு கொழும் புகை - அகிற்கட்டையினாலிடப் படுகின்ற மிக்கபுகையுடனே, அளாய் மயங்கின - நன்றாகக்கலந்தன வாய், (அதனால்), முகிலொடு வேற்றுமை தெரிக்கிலா-(வடிவத்தில்) மேகங்களோடு வேற்றுமையறிவிக்கமுடியாத [மேகங்களையொத்த], முழு துகிலொடு - பெரிய கொடிச்சீலைகளுடனே, நெடு கொடி சூலம் -நீண்ட துவசதண்டங்களின் நுனியில் நாட்டப்பட்டுள்ள சூலங் கள், மின்னுவ - விளங்குபவை,—பகல் இடு மின் அணி பரப்பு-பகற் பொழுதில் மின்னுகின்ற மின்னல்களின் வரிசையின் விரிவை, போன்ற - ஒத்தன; (எ-று.)

புகையோடு கலந்த துவசபடங்கள் முகிற்குலத்தைப் போன்றனவாக, அவைகட்டப்பட்டுள்ள துவசதண்டங்களின்மீது விளங்குகின்ற சூலங்கள் அம்முகிற்குலத்தில் தோன்றும் மின்னலினணிகளையொத்தனவென்றார்; தற்குறிப்பேற்றவணி. பகற்காலத்தில் மின்னுகின்ற தன்மைபற்றி 'பகலிடு' என்று அடைமொழிகொடுத்தது. அளாய்மயங்குதல்-ஒருபொருட்பன்மொழி. பி-ம்:—[1]கொடும். [2]தெரிகிலா. [3]சூழல், சூழ. [4]மின்னிட. [5]பகலிடை. [6]மின்மினி. [7]பறப்பபோன்றவே, பறப்பதொன்றுமே, பறப்பத்தோன்றுமே, பரப்பபோன்றன. சில பிரதிகளில் 'பகலிடுவின்மணிப்பரப்புத்தோன்றுமே' என்று நான்காமடி: பகற்காலத்து இடுகின்ற இந்திரதனுசுபோல மணியொளிகளின்பரப்புத் தோன்றும் என்க. சில பிரதிகளில் இச்செய்யுள் "பொன்றிணி" (39) என்றதன்பின்னும், சிலபிரதிகளில் "எழுமிடத்து" (41) என்றதன்பின்னும். (129)

37. துடியிடைப் பணைமுலைத் தோகை யன்னவர்
அடியிணைச் சிலம்புபூண் டரற்று மாளிகைக்
கொடி [1]யிடைத் தரளவெண் கோவை சூழ்வன
கடியுடைக் கற்பகங் கான்ற [2]மாலையே.

(இ - ள்.) துடி இடை - உடுக்கைபோல நடுச்சிறுத்த இடையையும், பணை முலை - பருத்த தனங்களையுடைய, தோகை அன்னவர் - (சாயலால்) மயிலையொத்த மகளிர், அடி இணை - (தமது) காலிரண்டிலும், சிலம்பு பூண்டு - சிலம்பென்னுங்காலணியையணிந்து, அரற்றும் - (அவை) ஒலிக்கும்படி நடக்கப்பெற்ற, மாளிகை - பெருவீடுகளில், கொடியிடை - துவசங்களிலே, தரளம் வெண் கோவை - வெண்ணிறமான முத்துச்சரங்கள், சூழ்வன - தொங்கவிடப்பட்டுள்ளவை,—கடி உடை கற்பகம் கான்ற - நறுமணமுள்ள கற்பகமரங்கள் (பூத்து) வெளிவிட்ட, மாலை ஏ—;(எ-று.)

அந்நகரத்து மாளிகைத்துவசங்களிலே தொங்கவிடப்பட்ட முத்துமாலைகள், கற்பகத்தின் பூமாலைகளை யொக்குமென்றார்; இதனால், துவசங்களின் மிகவோங்கியுள்ள தன்மை பெறப்படும். தரளவெண்கோவை கற்பகமாலை - காட்சியணி. அரற்றும் - அரற்றுமாறு நடக்கின்ற. காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. இனி, கொடியிடை - கொடியினிடங்கள், தரளக்கோவையோடு, கற்பகங்கான்றமாலை சூழ்வன என்றும், கொடியிலே தரளக்கோவையாகச் சூழ்பவை கற்பகங்கான்ற மாலையாகும் என்றும், கொடியிடைத் தரளவெண்கோவை (மாளிகைகளினுயரமிகுதியால்) கற்பகங்கான்ற மாலையைச் சூழ்வன என்றும் உரைப்பர். பி-ம்:—[1]உடைத், உடன். [2]போன்றவே. (130)

38. காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போற்
[1]கோணிமிர் பதாகையின் குழாந்[2]த ழைத்தன
[3]வாணனி மழுங்கிட [4]மடங்கி வைகலும்
சேண்மதி தேய்வதக் கொடிக டேய்க்கவே.

(இ - ள்.) நெடு வரை - பெரிய மலைகளினிடத்து, காண்வரு - காணப்படுகின்ற, கதலி கானம் போல் - வாழைமரக்காடுபோல,

கோள் நிமிர் - நவக்கிரகமண்டலம் வரையிலுயர்ந்துள்ள, பதாகையின் குழாம் - பெருங்கொடிகளின் கூட்டம், தழைத்தன - மிகுந்துள்ளன; சேண் மதி-ஆகாயத்திற் செல்லுகின்ற சந்திரன், வாள் நனி மழுங்கிட - (தனதுஒளி) மிகவுங்குறைவுபடும்படி, மடங்கி-வடிவம் வளைந்து, வைகல்உம் - (கிருஷ்ணபட்சத்தின்) நாள்தோறும், தேய்வது - தேய்ந்துவருவது, அ கொடிகள் தேய்க்க ஏ - அந்தத் துவசங்கள் தேய்ப்பதினுலேயே யாகும்; (எ - று.)

அந்த நகரத்துத் துவசங்கள் நவக்கிரகமண்டலம் வரையில் ஓங்கியிருத்தலாலும் அவ்வழியே சந்திரன் செல்வதாலும் அந்தச்சந்திரனது உடம்பு துவசங்களால் தேய்க்கப்பட்டு நாடோறும் சிறிது சிறிதாகத் தேய்ந்துவிடுகின்றதென்று, கவி, சந்திரன் கிருஷ்ணபட்சத்தில் தேய்வதற்கு ஒருகாரணங் கற்பித்துக்கூறினர்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. ஓங்கிய மாளிகைகளின்மீது பதாகைக் குழாம் நாட்டப்பட்டிருப்பதற்கு, மலைகளின்மீது வாழை மரக்காடு இருப்பது உவமை. பி - ம்:—[1] தாணிமிர். [2] தகைத்தன. [3] மானணி. [4] மயங்கி. (131)

39.-இதுமுதல் படலம் முடியுமளவும் முப்பத்தேழுகவிகள்- அந்நகரத்தின் பலவகைவளங்களை விரவிக்கூறுவன.

பொன்[1]றிணி மண்டப மல்ல பூத்தொடர்
மன்றுக ளல்லன மாட மாளிகை
குன்றுக ளல்லன [2]மணிசெய் [3]குட்டிமம்
முன்றில்க ளல்லன முத்தின் பந்தரே.

(இ - ள்.) பொன் திணி மண்டபம் அல்ல-சுவர்ணத்தால் வலிமையாகக் கட்டிய மண்டபம் அல்லாதன, பூ தொடர்-மலர்த்தொகுதியாற்சமைந்த மண்டபங்களாம்; மன்றுகள் அல்லன-(பலர்கூடுமாறு சமைக்கப்பட்டுள்ள) சபைகளல்லாதவை, மாடம் மாளிகை-உபரிகைகளோடுகூடிய மாளிகைகளாம்; குன்றுகள் அல்லன-செய்குன்றுகள் அல்லாதவை, மணி செய் குட்டிமம் - இரத்தினக்கற்கள் படுத்துச் செய்த தலங்களாம்; முன்றில்கள் அல்லன - (வீட்டின்) முற்றங்களல்லாதவை, முத்தின் பந்தரே—; (எ-று.)

இச்செய்யுளால் அந்த அயோத்திமாநகரத்தில், எங்குப் பார்த்தாலும், பொன்மண்டபங்களும் அவைகளைப்போலமலர்கள் நிறையப்பூத்துப்படர்ந்த மலர்க்கொடி மண்டபங்களும், பெரிய மன்றுகளும் அவைகளைப்போன்ற மாடமாளிகைகளும், செய் குன்றுகளும் அவைகளைப்போன்ற மணிக்குட்டிமங்களும், முன்றில்களும் அவைகளைப்போன்ற முத்துப்பந்தரும் உள்ளன என்றவாறு. இனி, பூத்தொடர்முதலியவை மண்டபம்முதலியன போன்றிருத்தலால், அப் பூத்தொடர்முதலியவை பொன்றிணிமண்டபம் முதலியன அல்ல எனக் கூறினருமாம்:சாதிசம்பங்கிமுதலிய பூங்கொடிகள் உத்தியானவனத்திற் பந்தரிட்டு வளைத்துப்படரவைத்தவை, பொன்னினற் கட்டி இடையில் நானவகை இரத்தினம்பதித்த மண்டபம்முதலிய போலுமென்பது கருத்து. இனி இச்செய்யுட்கு வெவ்வேறுவகை

யாகப்பொருள் கூறினருமுளர்: அவைவருமாறு-பொன் திணிமண்டபங்களும், அல்ல - அவையல்லாதன, பூத்தொடர் மன்றுகள்-பொலிவுபொருந்திய சபைகளும், அல்லன-அவையல்லாதன, மாடம் மாளிகைக்குன்றுகள் - மலைகள்போன்ற உபரிகைவீடுகளும், அல்லன-அவையல்லாதன, மணி செய் குட்டிமம் முன்றில்கள் - இரத்தினக்கற்களைப் பதித்துச்செய்த கட்டிடத்தையுடைய முற்றங்களும், அல்லன - அவையல்லாதன, முத்தின் பந்தரே - முத்துக்களினல் வேயப்பட்ட பந்தர்களுமாம் என்பது ஒன்று: அந்நகரத்திலே பொன் மண்டபம் முதலாக முத்துப்பந்தரிறுதியாகக் கூறப்பட்ட இவைகள்தாம் எங்கும் நிறைந்திருந்தனவேயல்லாமல் வெற்றிடமென்பது சிறிதுமில்லை யென்றவாறு. இனி, பொன்திணி மண்டபம் அல்ல முத்தின் பந்தர், பூத்தொடர் மன்றுகள் அல்லன முத்தின்பந்தர்என இவ்வாருக முன்றில்கள் வரையிலும் இயைத்து, பொன்மண்டபம் முதல் மணிமுன்றி லீருக வுள்ளவை யாவும் முத்துக்கோவைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன என்றுமாம். பி-ம்:—[1] தொடர். [2] மணிகள். [3] கூட்டிய, கூடிய. இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. *(132)*

40. மின்னென விளக்கென வெயிற்பி ழம்பெனத்
துன்னிய தமனியத் தொழிற ழைத்தவக்
கன்னிநன் னகர்நிழல் கதுவ லாலரோ
பொன்[1]னுல [2]காயதப் புலவர் வானமே.

(இ - ள்.) துன்னிய - (ஒளி)மிகுந்த [மாற்றுயர்ந்த], தமனியம்-பொன்னினற்செய்யப்பட்டு, தொழில் தழைத்த - வேலைப்பாடுகள் நிறைந்த, அ கன்னி நல் நகர்-அந்த அழிவில்லாத சிறந்த அயோத்தியாபுரியின், மின் என - மின்னல்போலவும், விளக்குஎன - தீபச்சுடர்போலவும், வெயில் பிழம்பு என - சூரியகிரணத்தின் தொகுதி போலவும், (உள்ள), நிழல் - ஒளி, கதுவலால் - (தன்மீது) மிகப் படுதலால், அ புலவர் வானம் - அந்தத்தேவலோகம், பொன் உலகு ஆயது-பொன்னுலகாயிற்று; (எ - று.)—அரோ - ஈற்றசை.

தேவலோகம் பொன்னுலகா யிருப்பதற்குக் காரணம் இந்த நகரம் பொன்னினலியன்ற வேலைப்பாடுகள் நிரம்பி மின்னல் முதலியனபோன்ற பேரொளிகளை வீசுகையில் அந்தப்பேரொளியால் அத்தேவலோகம் மூடப்பட்டிருப்பதேயாமென்று, கற்பனையாற் கூறினர். ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இதனல், அயோத்திமாநகரின் பொன்னின்மிகுதியும் விளக்கமும் பெறப்படும். கன்னியின் நலம் பிறராற் கவரப்படாதிருத்தல்போல அந்நகரின் வளம் பிறராற் கவரப்படாதிருத்தலால், 'கன்னிநன்னகர்' என்றனர். 'அப்புலவர்' என்ற சுட்டு - தேவலோகத்தினது பிரசித்தியையும் தெரிவிக்கும். புலம் - இயற்கையான தோந்த அறிவு: அதனையுடையவர்-புலவர்: விபுதர். பி - ம்:—[1] நகர். [2] ஆனது, ஆயது, ஆவது. *(133)*

41. எழுமிடத் தகன்றிடை [1]யொன்றி யெற்படு
பொழுதிடைப் [2]போதலிற் புரிசைப் [3]பொன்மதில்
அழன்மணி திருத்திய வயோத்தி யாளுடை
நிழலெனப் பொலியுமால் [4]நேமி வான்சுடர்.

(இ - ள்.) வான் - ஆகாயத்தில் விளங்குகின்ற, நேமி சுடர் - வட்டவடிவமான ஒளிமயமாகிய சூரியன், எழும்இடத்து - உதயமாகின்ற காலத்தில், அகன்று - மிகநீளமாகக் காணப்பட்டு, இடை - நடுப்பகலிலே, ஒன்றி - உருவத்தினளவாகப் பொருந்தி, எல் படு பொழுதிடை - சூரியாஸ்தமனகாலத்தில், போதலின் - (மீளவும்) நீண்டுபோதலால், - (அந்தச்சூரியமண்டலம்),-புரிசை பொன்மதில்- வட்டவடிவுள்ள பொன்மயமான மதிள்கள், அழல் மணி திருத்திய- நெருப்புப்போலச் செந்நிறமுள்ள மாணிக்கங்களைக்கொண்டு ஒழுங்காகப்பதிக்கப்பெற்றுள்ள, அயோத்தியாள் உடை-அயோத்தியாபுரியாகிற பெண்ணினது, நிழல் என-சாயைபோல, பொலியும் - விளங்கும்; (எ-று.)—ஆல் - அசை.

காலையில் மிகநீண்டிருந்து நண்பகலில் உருவத்தினளவாகி மாலையில் மீண்டும் நீண்டுசெல்லுதல், நிழலுக்கு இயற்கை: சூரியமண்டலமும் அங்ஙனமே காலையிற் பெரிதாகத்தோன்றி நண்பகலிற் சிறிது சுருங்கியவளவினதாகக் காணப்பட்டு மாலையில் மீண்டும் பெரிதாகத் தோன்றுவது பற்றி, அதனை, அயோத்தியாபுரியின் நிழல்போலு மென்றார். தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இந்த வருணனையால், அயோத்தியானது சூரியனைவிடப் பன்மடங்கு சுடர் பெற்று விளங்குமென்பது, பெறப்படும். இனி, இக்கவிக்கு-சூரியன் காலையிற்பேரொளியின்றியிருந்து நடுப்பகலில் ஒளிமிக்கு மீண்டும் மாலையில் ஒளிகுறைதலால், அயோத்தியாபுரியினொளியால் ஒளி பெறுவனென விளங்கு மென்றுமாம்; சூரியனுக்கு இயற்கையிற் பேரொளி யுண்டானால், எப்பொழுதும் ஒருபடிப்பட விளங்கவேண்டுமன்றோ? அங்ஙனம் விளங்காமல் இந்நகரத்துக்கு நேரேவருகின்ற நடுப்பகலில்மாத்திரம் ஒளிவிஞ்சி மற்றை வேளைகளில் அத்துணை ஒளியைப் பெறுதிருத்தலால் இந்நகரத்தினொளியினாலேயே சூரியனுக்குப் பேரொளி யுண்டாகின்ற தென்னவேண்டு மென்பது கருத்து. அயோத்தியா என்பது பெண்பாற்சொல்லாதலால், 'அயோத்தியாள்' எனக் கூறினார். அழல்மணி - சூரியகாந்தக்கல் என்பத் சிறவாது. சிலபிரதிகளில் இச்செய்யுள் ''ஆய்ந்த'' (42) என்றதன்பின் உள்ளது. பி-ம்:—[1] ஏறி, ஏற்றி. [2] நீட்டிய. [3] பொன்னகர், மானகர். [4] நேமியான். (134)

42. ஆய்ந்தமே கலையவ ரம்பொன் மாளிகை
வேய்ந்த[1] கா ரகிற்புகை யுண்ட மேகம்போய்த்
தோய்ந்தமாக் கடனறுந் [2] தூப நாறுமேல்
பாய்ந்ததா ரையினிலை [3] பகர வேண்டுமோ.

(இ - ள்.) ஆய்ந்த - ஆராய்ந்து திருத்தமாகச் செய்யப்பட்ட, மேகலையவர் - மேகலையென்ற எண்கோவையணியையணிந்த மகளிர், அம் பொன் மாளிகை வேய்ந்த-(தமது கூந்தல் ஆடை மாலை முதலியவற்றிற்கு நறுநாற்றம் ஊட்டும்பொருட்டு) அழகிய பொன்னாலாகிய மேன்மாடங்களிலே யெழுப்பிய, கார் அகில் புகை - கரிய அகிற்கட்டையின் புகையை, உண்ட-உட்கொண்ட, மேகம்-மேகங்கள், போய் - (நீருண்ணும்பொருட்டுச்) சென்று, தோய்ந்த-படியப் பெற்ற, மா கடல் - பெரிய சமுத்திரமும், நறு தூபம் நாறும்-நறு

மணமுள்ள அவ்வகிற்புகையின் வாசனை வீசப்பெறும், ஏல் - என்றால்,—பாய்ந்த-(அம்மேகங்களினின்று) கீழ்விழுந்த, தாரையின் - மழைத்தாரையின், நிலை - தன்மையை, பகர வேண்டும்ஓ - (அகிற்புகைவாசனை வீசுகின்றதென்று) சொல்லவேண்டுமோ? (எ - று.)

மகளிரெழுப்பிய அகிற்புகையையுண்ட மேகங்கள் படிந்த மாத்திரத்தால் புலால்நாற்றமுள்ள கடலும் அந்தத் தீநாற்றம் நீங்கி நறுமணங் கமழு மென்றால், அம்மேகத்திலிருந்து சொரிந்த மழைத்தாரை மணங்கமழு மென்பது, தானே விளங்குமென்றவாறு: தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. இதனால், அந்நகரத்தவரின் செல்வச் சிறப்புத் தொனிக்கும். "நின்றுபுயல் வானம் பொழிந்த நெடுந்தாரை, என்றுமகில்கமழுமென்பரா -தென்றல், அலர்த்துங் கொடிமாடத் தாயிழையாரைம்பால், புலர்த்தும்புகைவான் புகுந்து" என்ற புகழேந்தியார்வாக்கு ஒப்புநோக்கத்தக்கது. பி-ம்:—[1] காழில். [2] தோயம். [3] பகரல். (135)

43. குழலிசை மடந்தையர் குதலை [1] கோதையர்
மழலை[2] யங் குழலிசை மகர யாழிசை
எழிலிசை [3] மடந்தைய ரின்சொ [4] லின்னிசை
பழையர்தஞ் சேரியிற் பொருநர் பாட்டிசை.

(இ - ள்.) குழல் இசை மடந்தையர் - (அப்பொழுதுதான்) மயிர்முடி கூடப்பெறுகிற இளம்பெண்களின், குதலை - குதலைச் சொற்கள்,—அம் குழல் இசை - அழகிய வேய்ங்குழலின் பாட்டிசையை யொக்கும்; கோதையர்-கடைகூடியமயிர் முடியையுடைய மங்கைப்பருவத்து மகளிரது, மழலை - மழலைச்சொற்கள்,—மகரம் யாழ் இசை - மகரவீணையின் கீதம்போலும்; எழில் இசை மடந்தையர் - வளர்ச்சி பொருந்திய [பருவம் முதிர்ந்த] மகளிரது, இன் சொல் இன் இசை - இனிய சொற்களோடுகூடிய இனிய கண்டத்தொனியானது —பழையர் தம் சேரியில் - கள்விற்பவர்களதுசேரியிலேயுள்ள, பொருநர் - கூத்தர்களது, பாட்டு இசை-கானத்தின் தொனியை யொத்திருக்கும்; (எ - று.)

'போலும்' என வினைவருவித்தாவது, ஆகும் என வருவித்தாவது தனித்தனி வாக்கியத்தை முடிக்க. பருவம் முதிரப்பெறாதவர் பருவம்பெற்றவர் பருவம்முதிர்ந்தவர்என மகளிரை மூன்று கூறுகப்பிரித்து, அம்மகளிரின் பேச்சுக்கு உவமை கூறினார். குதலை மழலையென்பன பரியாயமாகப் பலவிடங்களில் வழங்கப்படினும், குதலை - எழுத்துவடிவங்கூடாத இளஞ்சொல் என்றும், மழலை - எழுத்துவடிவுபெற்றுச் சொல்நிரம்பாதது என்றும் வேறுபாட்டை இங்கே கொள்ளலாம். முன்னிரண்டடி - முறைநிரனிறைப்பொருள்கோள். மகரயாழ் - 19-நரம்புகட்டின வீணையெனவும், மகர மீன் முகம்போலும் யாழ் என்றும் கூறுவர். பி - ம்:—[1] கோதையாழ். [2] அங்குரலியர்...யாழிசை, செய்மகரயாழ் மயங்கும் அல்லது மயங்கி, அன்றி வயங்கி எங்கணும். [3] ஏழையர். [4] அவ்விசை. (136)

44. கண்ணிடைக் கனல்சொரி களிறு கால்கொடு
மண்ணிடை வெட்டுவ [1] வேட்கு [2] மைந்தர்கள்

பண்ணைகள் பயிலிடங் குழிப டைப்பன
சுண்ணமக் குழிகளைத் தொடர்ந்து [3]தூர்ப்பன.

(இ - ள்.) (மதமிகுதியாலாகிய பெருங்கோபத்தால்), கண் இடை கனல் சொரி - கண்களின்வழியாக நெருப்பைச்சிந்துகின்ற, களிறு - ஆண்யானைகள், கால்கொடு - (தமது) கால்களால், மண்ணிடை - பூமியிலே, வெட்டுவ - வெட்டுவனவாயின; (அதனால்), வேட்கும் மைந்தர்கள்-(கண்டோரால்) விரும்பப்படுகின்ற அழகிய பிள்ளைகள், பண்ணைகள் பயில் - விளையாட்டுக்களைப் பழகுகின்ற, இடம் - இடங்கள், குழி படைப்பன - குழிகளைப்பெறுவன; அ குழிகளை - அந்தக் குழிகளை, சுண்ணம் - (அந்தமைந்தர்கள் தமது உடம்பிலணிந்துள்ள) வாசனைப் பொடிகள், தொடர்ந்து - (விளையாடும்பொழுது) இடையறுதுவிழுந்து, தூர்ப்பன - நிறைப்பன;

அரசச்சிறுவர் யானைகளைத் தம்முடன்கொண்டு விளையாடும் பொழுது அவ்யானைகள் தமது தாள்களாலே அம்மைந்தர்கள் விளையாடுமிடங்களிலே பள்ளங்களை யுண்டாக்க, அந்தப்பள்ளங்களை அம்மைந்தர் தமதுமேனியிலேயணிந்துள்ள வாசனைப் பொடிகள் தூர்க்குமென்க: இதனால், அந்த நகரத்துமாந்தரது செல்வச்சிறப்பும், வீரமும் தொனிக்கும். [1]வாய்க்கை என்றுபாடங்கொண்டு, வாள்வீரரின் பண்ணைகள் [விளையாட்டுப் பயிலிடம்] குழிபடைப்பனவாகக் களிறுகள் கால்கொடுவெட்டுவன என்றலும் உண்டு. மண்ணைக் காலால் வெட்டுதல், களிறுக்கு இயற்கை. பி - ம்:—[1]வேட்ட. [2]மைந்தர்தம். [3]தூர்க்குமே. (137)

45. பந்துகண் மடந்தையர் பயிற்று வாரிடைச்
[1]சிந்துவ முத்தின மவைதி ரட்டுவார்
அந்தமில் சிலதிய [2]ராற்று குப்பைகள்
சந்திர னொளிகெடத் [3]தழைப்ப தண்ணிலா.

(இ - ள்.) பந்துகள் - பந்துகளை, மடந்தையர்-பெண்கள், பயிற்றுவார்-ஆடுவார்கள்; இடை-(அவர்கள்) நடுவிலே, (அவர்களுடைய ஆபரணங்களினின்று), முத்து இனம் - முத்துக்கூட்டங்கள், சிந்துவ-சிதறுவன: அவை-அந்தமுத்துக்களை, திரட்டுவார் - (ஓரிடத்திலே) சேர்ப்பவராகிய, அந்தம் இல் சிலதியர்-அளவில்லாத [மிகப் பலரான] ஏவல்செய்கின்ற மகளிர், ஆற்று - குவித்த, குப்பைகள் - குவியல்கள், சந்திரன் ஒளி-, கெட-மழுங்கும்படி, தண்நிலா-குளிர்ந்த வெள்ளொளி, தழைப்ப-மிகுவன; (எ - று.)

மகளிர் பந்தாடும்பொழுது அதிர்ச்சியால் முத்துக்கள்சிந்த, ஏவல்மகளிரால் குப்பைகளாகக்குவிக்கப்பட்ட அம்முத்துக்கள் வெள்ளொளிவீசு மென்க. பயிற்றுவார்=பயில்வார்: தன்வினைப் பொருளில்வந்த பிறவினை. பி - ம்:—[1]சிந்தின. [2]அகற்று, ஆர்த்த, அற்ற. [3]நிலாத்தழைக்குமே, நிலாத்தழைப்பன. (138)

46. அரங்கிடை மடந்தைய ராடு வாரவர்
கருங்கடைக் [1]கண்ணயில் காமர் நெஞ்சினை
[2]உருங்குவ மற்றவ ருயிர்க ளன்னவர்
மருங்குல்போற் றேய்வன வளர்வ தாசையே.

(இ - ள்.) அரங்கிடை - நடனசாலையில், மடந்தையர் - மகளிர், ஆடுவார்-நர்த்தனஞ்செய்வார்கள்; அவர் கரு கடைக்கண் அயில் - அவர்களது கருமையான கடைக்கண்களாகிய வேலாயுதங்கள், காமர் நெஞ்சினை - வேட்கையையுடைய (மைந்தர்களின்) மனத்தை, உருங்குவ-உண்ணுவன: மற்று-பின்பு, அவர் உயிர்கள்-அம்மைந்தரது ஆவிகள், அன்னவர் மருங்குல் போல் - அம்மகளிரது இடை போல, தேய்வன-மெலிவன: ஆசை - (அவ்வாடவர்க்கு அம்மகளிர் மீது) வேட்கை, வளர்வது - (வரவர) வளர்ச்சி பெறுவதாகும்;

நடனசாலையில் நடிக்கின்ற மகளிரின் நோக்கு, தமக்கு இலக்காகிய ஆடவரின் மனத்தைத் தம்முட்கொள்ள, அதனால் அவ்வாடவர் ஆவி மெலிவாராயின ரென்க. உருங்குதல் - உண்ணுதலாதலை "அரவினுடலுயி ருருங்குவணம்" எனப் பரிபாடலிலுங் காண்க. இனி, உருங்குவ - உருக்குவ என்பதன்மெலித்தல் எனக் கொண்டு உரைப்பினுமாம். 'அவருயிர்கள் அன்னவர் மருங்குல் போல் தேய்வன' என்றதற்கு ஏற்ப, அவ்வாடவரது ஆசைஅன்னவர்நகில்போல் வளர்வது எனக் கொள்க. [2]ஒருங்குவ என்றபாடத்திற்கு-ஒருக்குவ என்பதன் மெலித்தலெனக்கொண்டு அழிப்பன என்க. பி-ம்:—[1]கண்ணிணை, கண்மலர். (139)

47. பொழிவன சோலைகள் புதிய தேன்சில
விழைவன தென்றலு [1]மிஞிறு [2]மெல்லென
நுழைவன வன்னவை நுழைய [3]நோவொடு
குழைவன [4]தணந்தவர் கொதிக்குங் கொங்கையே.

(இ - ள்.) சில சோலைகள்—, புதிய தேன்-அன்று அலர்ந்த மலர்களின் மதுவை, பொழிவன - சொரிவன; (அவற்றை), விழைவன - விரும்புவனவாகிய, தென்றல்உம் - தெற்கிலிருந்துவரும் இளங்காற்றும், மிஞிறுஉம் - வண்டும், மெல்லென - மந்தகதியாக, நுழைவன - (அச்சோலைகளிற்) புகுவன; அன்னவை நுழைய - அவை யுட்புகவே, தணந்தவர் கொதிக்கும் கொங்கை-(தலைவரைப்) பிரிந்த மகளிரது (விரகதாபத்தினாலே) வெதும்புகின்ற தனங்கள், நோவொடு குழைவன-வருத்தத்தோடு மெலிவன; (எ - று.)

சோலைகள் தேனைப் பொழியவே அதனைநாடி வண்டுகளும் தென்றலும் செல்ல, அதுகண்ட கணவரைப்பிரிந்த மகளிர் தமது முலைகள்வெதும்பி மெலிந்துகுழைய வருந்துவாராயின ரென்க. தென்றலும் வண்டும்-காமோத்தீபகப்பொருள்கள். தென்றற்காற்றுத் தேன்சொரிகின்ற சோலையிற் புகுவது, அதனைநாடிச்செல்வது போன்றிருத்தலால், வண்டு சோலையில் நுழைவதைக் கூறுமிடத்து அதனையுமுடன்கூறினார். மிஞிறு-உயர்ந்த மணத்தேசெல்லும்

வண்டின் சாதிபேதம். பி-ம்:—[1] ஞிமிறு. [2] இல்லென, [3] நேர்பொடும். [4] பிரிந்தவர். (140)

48. [1] இறங்குவ மகரயா ழெடுத்த வின்னிசை
நிறங்கிளர் [2] பாடலா [3] னிமிர்வ வவ்வழி
கறங்குவ வள்விசி கருவி [4] கண்முகிழ்த்து
உறங்குவ மகளிரோ [5] டோதுங் கிள்ளையே.

(இ - ள்.) இறங்குவ - (நுனி) வளைந்துள்ளனவாகிய, மகரம் யாழ்-மகரவீணைகளினின்று, எடுத்த-(விரல்களைக்கொண்டு தடவுதலால்) எழுப்பின, இன் இசை - இனியசுரங்கள், நிறம் கிளர் பாடலான் - (மகளிர்பாடுகின்ற) வண்ணம் விளங்குகின்ற வாய்ப்பாட்டுடனே, நிமிர்வ-எடுப்பாகஒலிப்பன; அ வழி - அவ்வழியே [அவ்விசைக்கு ஏற்ப], வள் விசி கருவி - தோலாற்கட்டப்பட்டுள்ளமத்தளங்கள், கறங்குவ-ஒலிப்பன: (அவ்விசையைக்கேட்டு), மகளிரோடு ஓதும் கிள்ளை - மகளிருடனே கொஞ்சிப்பேசுவதிற் பழகியுள்ள கிளிகள், கண்முகிழ்த்துஉறங்குவ-கண்களை மூடிக்கொண்டு தூங்குவன;

இதனால், கண்டத்தொனியும் கருவியிசைகளும் ஒத்து, பகுத்தறிவில்லாத பறவைகளையும் பரவசப்படுத்துமென்று, அந்நகரத்து இசையொலியின் சிறப்பைக் கூறினர். பாடலான் - பாடலோடு, மகர யாழ் எடுத்த இன்னிசை இறங்குவ நிமிர்வ என்று இயைத்துக் கூறினுமாம். அவ்வழி - அவ்விடத்தில் எனினுமாம். பி-ம்:—[1] இரங்குவ, இரங்குறு. [2] பாடல்போய், பாடலின், பாடலார். [3] நிமிர்ந்தது. [4] கண்ணிமிழ்த்து. [5] ஒதுங்கு. (141)

49. குதைவரிச் சிலைநுதற் கொவ்வை வாய்ச்சியர்
[1] பதவுகைத் தொழில்கொடு பழிப்பி லாதன
ததைமலர்த் தாமரை யன்ன தாளினால்
உதைபடச் [2] சிவப்பன வுரவுத் தோள்களே.

(இ - ள்.) குதை வரி சிலை - குதையையுடைய கட்டமைந்த வில்லை [புருவத்தை] யுடைய, நுதல்-நெற்றியையும், கொவ்வை வாய்ச்சியர் - கொவ்வைப்பழம்போற் சிவந்த வாயையுமுடைய மகளிரது, பதவு கைத்தொழில் கொடு-மிருதுவான கைத்தொழிலை[செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுதலை]ப் பெற்று, பழிப்பு இலாதன - குற்றமற்றனவாகிய, ததை மலர் தாமரை அன்ன தாளினால்-(இதழ்கள்) நெருங்கிய செந்தாமரை மலரைப்போன்ற பாதங்களினால், உதைபட - (ஊடலைத் தீர்க்கத் தொடங்கியபொழுது) உதைபட்டதனால், உரவு தோள்கள் - (ஆடவர்களது) வலிமையுள்ள தோள்கள், சிவப்பன - செந்நிறமடைவன; (எ-று.)

புருவமென்று கூறாமல் உருவகவகையால், 'சிலை' என்றார். தலைமகனும் தலைமகளும் ஓரிடத்து இருக்கையில் அத்தலைவன் மீது சினங்கொள்ளுதற்குக் காரணம் இல்லாதிருக்கவும் காதல் கைம்மிகுதலால் நுண்ணியதோர் காரணத்தைக் கற்பித்துத் தலைவி யூடுதலும், அவ்வண்ணம் தலைவி ஊடல்கொண்டபொழுது அதனைத் தணிக்கும்பொருட்டுத் தலைமகன் வணங்கி நிற்றலும், அக்

காலை தலைவி தான் கொண்ட ஊடலால் அத்தலைமகனைத் தாளாலுதைத்தலும் இயல்பு. இது, அங்ஙனம் ஊடல்கொண்ட மனைவியினுடைய ஊடலைக் கணவன் தீர்க்கத்தொடங்கிய காலத்தில் நிகழ்ந்த செயலைக் கூறுவதென்க. பதவு - மென்மை; இனி, பதவு - பக்குவமான (செம்பஞ்சுக்குழம்பினாற்செய்யப்படுகின்ற), கைத்தொழில் எனினுமாம். [1]பதயுகத்தொழில் கொடு என்ற பாடத்துக்கு - இரண்டு கால்களுக்கும் செய்யப்படுகின்ற செம்பஞ்சூட்டுதலாகிய தொழிலைக் கொண்டு என்றும், இரண்டுகால்களாலும் செய்யப்படுங் கூத்தைக்கொண்டு என்றுமாம். பரதயுகம் என்பது பதயுகமென விகாரப்பட்டதாக்கி, பரதத்துக்குரியனவான சாந்திக்கூத்து விநோதக்கூத்து என்னும் இருவகை நாட்டியத்தொழிலையும் பயின்று என்று உரைப்பினுமாம். பதை யகத்தொழில் என்ற பாடத்துக்கு - ஊடலிற்பதைத்த மனத்தொழிலென்க. பி - ம்:— [2]சிவந்தன. (142)

50. பொழுதுணர் வரியவப் பொருவின் மாநகர்த்
தொழுதகை மடந்தையர் சுடர்வி ளக்கெனப்
[1]பழுதறு மேனியைப் பார்க்கு [2]மாசைகொல்
எழுதுசித் திரங்களு மிமைப்[3]பி லாதவே.

(இ - ள்.) பொழுது உணர்வு அரிய - (பொன்மணிகளின் ஒளி மிகுதியால் 'இது, பகற்பொழுது, இது இராப்பொழுது' என்று) காலத்தை அறிதற்கு அருமையாயுள்ள, அ பொருவு இல் மா நகர் - அந்த ஒப்பில்லாத பெரிய நகரத்திலேயுள்ள, தொழு தகை மடந்தையர் - (கற்பினால் யாவரும் கைகூப்பி) வணங்குதற்குஉரிய தன்மையுள்ள பெண்களின், சுடர் விளக்கு என பழுது அறுமேனியை - ஒளியையுடையவிளக்கைப்போலக் குற்றமற்றுவிளங்குகின்ற உடம்பை, பார்க்கும் ஆசை கொல் - பார்க்கவேண்டுமென்கிற விருப்பத்தினால்தானோ, எழுது சித்திரங்கள்உம் - சித்திரத்திலெழுதிய பிரதிமைகளும், இமைப்பு இலாத - கண்ணிமைத்த லில்லாதனவாயின; (எ - று.)

பொழுதுணர்வரிய-"நல்லாரணிகலம் பகலைச்செய்ய" என்றார், சிந்தாமணியாரும். சித்திரவுருவங்கள் கண்ணிமைத்தலில்லாமலிருத்தற்கு, அயோத்திமாநகரிலுள்ள மாதரின் பழுதறுமேனியைப் பார்க்குமாசைபோலுமென ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறியது - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. மாதரின் வனப்பு நோக்கிக் கண்ணிமையாமையை "மாதர் தன் வனப்புநோக்கி மகிழ்ந்து கண்ணிமைத்தல்செய்யான்" என்ற இடத்துங் காண்க. பி-ம்:—[1]பழுதற. [2]ஆசையால். [3]இலாதன. (143)

51. தணிமலர்த் திருமக [1]டயங்கு மாளிகை
இணரொளி பரப்பிநின் றிருடு ரப்பன
திணிசுடர் நெய்யுடைத் தீவி ளக்கமோ
மணிவிளக் கல்லன மகளிர் மேனியே.

(இ - ள்.) தணி மலர் திரு மகள்-குளிர்ந்த செந்தாமரைப்பூவில் வாழ்கின்ற இலக்குமி, தயங்கும்-விளங்கப்பெற்ற, மாளிகை-(அவ்

வயோத்திமாநகரத்து)வீடுகளில் இணர் ஒளி பரப்பிநின்று-தொகுதி யாகிய ஒளியை வீசிக்கொண்டு, இருள் துரப்பன - இருளையோட்டு பவை,—திணி சுடர் நெய் உடை தீ விளக்கம்ஓ - செறிந்த சுவாலை யையுடைய நெய்யினுலெரிக்கப்படுகின்ற விளக்கின் ஒளிகளோ, மணிவிளக்கு(ஓ) - இரத்தினதீபங்களோ (எனின்),—அல்லன-இவ் விரண்டுமல்ல: (பின்னையாவையெனின்), மகளிர் மேனிஏ - (அந் நகரத்துவாழும்) பெண்களின் உடம்பினுெளியேயாம்; (எ-று.)

50-ஆஞ் செய்யுளில் சுடர்விளக்கை மகளிர்மேனிக்கு உவமை யாக்கூறியவர் சற்று ஆலோசனை நிகழ்ந்த பிறகு அது உவமை யாகாதெனக்கொண்டு கூறுகிருரென்க. இந்நகரத்தில் நெய் விளக்கினுெளியும் மணிவிளக்கினுெளியும் கீழ்ப்படும்படி மாதர் களின்மேனியினுெளி விளங்குமென்பது, கருத்து. இருள் துரக்குந் தன்மையைத் தீவிளக்கு மணிவிளக்கு இவைகளினின்று விலக்கி, மாதர்மேனியினிடத்து ஏற்றிக்கூறியது-அவநுதியணியாம். இனி, ஐயப்பொருளதாகிய ஓகாரததை, மணிவிளக்கு மகளிர்மேனி என் பவற்ருேடுங்கூட்டி, அந்நகரத்து மாளிகைகளிற் பொருந்திய மாணிக்கங்களும் மாதர்மேனிகளும் விளக்கொளிபோல விளங்கி இருளையொழிக்கு மெனக் கூறினுமாம். அன்றி, இருள்துரப்பன, நெய்யுடைத்தீவிளக்கமோ? [அன்று]: பின்னை எவை? மணிவிளக் கும் அவையல்லனவாகிய மகளிர்மேனியுமே யென்றுமாம். பி - ம்:— [1] தங்கு. (144)

52. பதங்களிற் றண்ணுமை பாணி பண்ணுற
விதங்களின் விதிமுறை சதிமி திப்பவர்
மதங்கிய ரச்சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைக ளல்லன புரவித் [1] தாள்களே.

(இ - ள்.) தண்ணுமை-மத்தளவொலிக்கும், பாணி-தாளத்துக் கும், பண்-பாட்டுக்கும், உற-பொருத்தமாக, விதி முறை-பரத சாஸ் திரமுறைப்படி, விதங்களின்-பலவிதமாக, பதங்களில்-கால்களால், சதி மிதிப்பவர் - சதிபெற அடிவைத்து நர்த்தனஞ்செய்பவர்கள்,— மதங்கியர்-ஆடல்பாடலில் வல்ல (யுவதிகளான) பெண்கள்: அ சதி- அந்தச்சதியை, வகுத்துக் காட்டுவ - (பிறர்க்கு) விவரித்துக் காட்டு வன,—சதங்கைகள் - (அவர்கள் கால்களிற் பூண்ட) சதங்கைகளும், அல்லன - அவைகளல்லாதன, புரவி தாள்கள் - (அங்ஙனம் ஆடு கின்ற) குதிரைகளின் கால்களுமாகும்; (எ - று.)

இதனுல், அந்நகரத்துமகளிரது நாட்டியச்சிறப்பும், குதிரை களின் ஆட்டநடையின் சிறப்பும் கூறப்படுகின்றன; பெண்கள் ஆடும்பொழுது அதற்கேற்ப ஒலிக்கின்ற அவர்கள் காற்சதங்கைகள் அந்நடனத்தின் தன்மையை விளக்குதலாலும், குதிரைகளின் ஆட் டம் மகளிராட்டத்தை யொத்திருத்தலாலும், இங்ஙனம் கூறினுர். பரி தாளவொத்துக்கு ஏற்ப ஆடுமென்பதை "மெத்துந்தகவும் வித மும் படவே, தித்தொந் தொந்தொந்தித்தீயென்றென், ருெத்துத் தாளத் தொக்கத் தத்தித், தத்தும் பரிதன் தாளொத்ததுவே" என்று கூறியிருத்தலுங் காண்க. சதி-தாளவொத்து. பி - ம்:— [1] தார்களே. (145)

53. முளைப்பன முறுவலம் முறுவல் வெந்துயர்
விளைப்பன வன்றியு மெலிந்து நாடொறும்
இளைப்பன நுண்ணிடை யிளைப்ப மென்முலை
திளைப்பன முத்தொடு செம்பொ னாரமே.

(இ - ள்.) முறுவல்-புன்சிரிப்புக்கள், முளைப்பன - (அந்நகரத்து மதங்கியராகிய மகளிர் முகத்தினிடத்து எப்பொழுதும்) தோன்றுவன; அ முறுவல்-அந்தப்புன்சிரிப்புக்கள்,-(அவற்றைக் காண்கின்ற காமுகர்க்கு), வெம் துயர் விளைப்பன - கொடிய காம வேதனையையுண்டாக்குகின்றன; அன்றிஉம்-அவையல்லாமலும், நுண் இடை-(அம்மகளிரது இயற்கையிற்) சிறிய இடைகள், நாள்தொறுஉம் - பிரதிதினமும், மெலிந்து இளைப்பன - (முலைப்பாரத்தால்) வருந்தியிளைத்துவருவன; இளைப்ப - (அவை) நன்கு மெலியும்படி, மெல் முலை - (அம்மாதரது) மென்மையான தனங்களிலே, முத்தொடு - முத்துவடங்களும், செம்பொன் ஆரம் - சிவந்தபொன்னினாலாகிய ஆரங்களும், திளைப்பன - இடையறாது பொருந்துவன; (எ - று.)

மாதர்களின் முறுவலைக்கண்டு ஆடவர் காமவேதனைமிகுகின்றனரென்றும், மாதர்களின் இடை மெலிவதுகண்டு அவர்களது கொங்கைகள் பருத்துப் பின்னும் அவ்விடை மெலியும் வண்ணம் முத்தாரம் முதலியவற்றைப் பூண்டுநிற்கின்றன என்றும் கூறிய இவற்றில், ஒருவர் வருந்த மற்றொருவர் உற்சாகங்கொண்டு நிற்ப ரென்ற இவ்வுலகவியற்கை தோன்றுதல் காண்க. (146)

54. இடையிடை யெங்கணுங் களிய றுதன
நடையிள வன்னங்க ணளின [1]நீர்க்கயல்
பெடையிள வண்டுகள் பிரச [2]மாந்திடுங்
கடகரி யல்லன மகளிர் கண்களே.

(இ - ள்.) இடை இடை - (முறையே அவ்வவற்றிற்கு உரிய) இடந்தோறும், எங்கண்உம்-எப்பொழுதும், களி அறுதன-களிப்பு நீங்காமலுள்ளவை,—நடை இள அன்னங்கள் - (அழகிய) நடையையுடைய இளமையான அன்னப்பறவைகளும், நளினம் - தாமரை மலர்களும், நீர் கயல் - நீர்நிலையிலே வாழ்கின்ற கயல்மீன்களும், பெடை இள வண்டுகள் - (தம்) பெடையோடு கூடிய இளைய ஆண் வண்டுகளும், பிரசம் மாந்திடும் கடம் கரி-பிரசத்தை யுண்கின்ற மத யானைகளும், அல்லன-இவையல்லாதனவாகிய, மகளிர் கண்களே - பெண்களுடைய கண்களுமே; (எ - று.)

களிஎன்பது - மகிழ்ச்சி தேன் களிமண் கள் மதம் அஞ்சனக் குழம்பு என்ற பொருள்களை யுடையது: அன்னம் மகிழ்ச்சியறுதன: தாமரை தேன் அறுதன: கயல் களிமண் அறுதன: வண்டுகள் அறுதன [கள்ளை விட்டுநீங்காதன]: கரி மதம் அறுதன: மகளிர் கண்கள் அஞ்சனக்களி யறுதன என்க: சிலேடை: அந்நகரில் அன்னப்பறவை முதல் கடகரி ஈறாகவுள்ளன களியறுதன என்று ஒரு பொதுத்தன்மையைக் கூறியது, ஒப்புமைக்கூட்டவணி. கயல் மேலெழுந்து துள்ளிக்குதிக்கும்போது களிமண் அவற்றின்மீது

ஒட்டிக் கொள்ளு மென்க. இனி, அன்னப்பறவைகள் தாமரை மலர் களிலும், கயல்மீன் நளினநீர்நிலைகளிலும், பெடையிளவண்டுகள் மலர்களிலும் கடகரிகள் ஆனைக் கூடங்களிலும்,மகளிர் கண்கள் வீடு களிலும் களிப்போடிருக்கின்றன வென்றலுமொன்று. யானை பிரசம் மாந்துமென்பதை "மாரியங்கள்ளின் போர்வல்யானை" என்ற பதிற் றுப்பத்திலுங் காண்க. வண்டுகள் பிரசத்தைமாந்திடுகின்ற மதகரி யுமாம்: பிரசம் - யானைமதம்: யானையின் மதத்தை வண்டு உண்ணு மென்பதை "மதங்கவ்வியுண்ணவண்டாதரிக்கத் திரிமா மதயானை" என்றுகூறுவதாலும் உணர்க. பி - ம்:—[1] நீத்தன, நற்கயல். [2] மாக் கடங், ஆர்த்திடுங், வாக்கிடங், மாலைகள். (147)

55. [1] தழல்விழி யாளியுந் துணையுந் தாள்வரை
முழை[2] விழ கிரிநிகர் களிற்றின் மும்மத
மழைவிழும் விழுந்தொறு மண்ணுங் கீழுறக்
குழைவிழு [3] மதில்விழுங் கொடித்திண் டேர்களே.

(இ - ள்.) தழல் விழி ஆளிஉம் - (கோபத்தால்) நெருப்பைச் சொரிகின்ற கண்களையுடைய சிங்கங்களும், துணை உம்-(அவற்றின்) பெட்டைகளும், தாள் வரை முழை விழ - (தாம்) தாள்வரைகளின் குகையில்கிடக்குமாறு, கிரி - மலைகளை, நிகர் - ஒத்த, களிற்றின் - ஆண்யானைகளின், மும் மதம் மழை-மூன்றுவகைப்பட்ட மதநீர்ப் பெருக்கம், விழும் - சொரியும்; விழும் தொறுஉம்-(அது) பெருகுந் தோறும், மண்உம் கீழ்உற-பூமியும் ஆழம் ஆகுமாறு, குழைவிழும் -குழைசேறுஉண்டாகும்; அதில் - அந்தச்சேற்றில், கொடிதிண் தேர்கள் - துவசங்களையுடைய வலியஇரதங்கள், விழும்-புதையும்;

இதனால், யானைகளின் மதமிகுதி கூறப்பட்டது. விழும் என்ற ஒரு சொல் வெவ்வேறு பொருளிற் பன்முறை வந்தது - சொற்பின் வருநிலையணியாம். [2] விழைஎன்ற பாடத்திற்கு - (தாம் வாழுமாறு) முழையை விரும்பப்பெற்ற என்று பொருளாகி, 'தழல்...முழை விழை'. என்னுந் தொடர்-கிரிக்கு அடைமொழியாம்: இது, கிரியின் பெருமையை விளக்கும். கிரி, களிற்றுக்கு உவமையென்க. ஆணும் பெண்ணும் ஒன்றற்குஒன்று துணையாதலால், இங்கே பெண் யாளி 'துணை' எனப்பட்டது. தாள்வரை-பாதசைலம் எனப்படும். மும்ம தம் - கன்னமிரண்டு, ஆண்குறி ஒன்று, ஆக மூன்றிடத்தினின்று பெருகுபவை. [3] அவில் என்ற பாடத்துக்கு, அகரச்சுட்டினடியாப் பிறந்த 'அவ்' என்ற பலவின்பாற்பெயர் அற்றுச்சாரியை விகாரத் தால்தொக, ஏழனுருபுபெற்று வந்ததாமென்க; (சாரியைபெறின் 'அவற்றில்' என நிற்கும்): அச் சேறுகளி லென்றபடி. அவல் என்ற பாடத்துக்கு-பள்ளமென்க. பி-ம்:—[1] சுழல். [2] தாழ்ந்தவம். ()

56. [1] ஆடுவார் பொருவினூ புரத்தை யார்ப்பன
சூடுவா [2] ரிகந்தவத் தொங்கன் மாலைகள்
ஓடுவா [3] ரிழுக்குவ வூட லூடுறக்
கூடுவார் வனமுலை [4] கொழித்த சாந்தமே.

(இ - ள்.) சூடுவார் - (புதுப்பூச்) சூடிக்கொள்பவர், இகந்த - எடுத்து வீசியெறிந்த, அ தொங்கல் மாலைகள்-தொங்குந்தன்மை

யுள்ள அந்தப் (பழைய) பூமாலைகள்,—ஆடுவார் பொரு இல் நூபுரத்தை - நர்த்தனஞ்செய்கின்ற மகளிரின ஒப்பில்லாத சிலம்புகளை, ஆர்ப்பன - (ஒலிக்கவிடாமற்) கட்டுவனவாம்; ஊடல் ஊடுஉற - புலவி இடையிலே பொருந்த, கூடுவார் - (பின்பு ஆடவரோடு) கூடுந் தன்மையுள்ள மகளிர்கள், வன முலை - அழகிய (தமது) தனங்களினின்று, கொழித்த-(வீதியில் வழித்து) எறிந்த, சாந்தம்-சந்தனக்கலவைகள், ஓடுவார் - (வீதியில்) ஓடுபவர்களை, இழுக்குவ - வழுக்கிவீழச் செய்வன; (எ - று.)

இதனால், செல்வச்சிறப்புக் கூறப்பட்டது. அந்நகரத்து மகளிர் தாம் சூடிய பூமாலைகள் சிறிது பழகினமாத்திரத்தில் அவற்றைக் கழற்றி யெறிந்து புதுப்பூமாலைகளைச் சூடிக்கொள்ளுதலால், அங்ஙனம் எறிந்த பூமாலைகள் நர்த்தனஞ்செய்கின்ற மகளிரின் காற்சிலம்புகளில் மாட்டிக்கொண்டு பந்தப்படுத்தி அந்தச்சிலம்புகளை இலயத்திற்கு ஏற்ப ஒலிக்கவொட்டாது தகைய, அங்ஙனமே ஓடுகின்ற மானிடரை மகளிரெறிந்த கொங்கைச்சந்தனம் ஓடவொட்டாது வழுக்கி வீழச்செய்யு மென்பதாம். ஊடல் ஊடுறக் கூடுவாரென்றது - காமநூலின் நுட்பமறிந்தவ ரென்றபடி. காதல் கைம்மிகுதலால் ஊடல்கொண்ட தலைவி பின்னர்த் தலைவனது வேண்டுகோளால் அந்தப்பிரணயகலகம் தணிந்து அத்தலைமகனைக் கூடுதலும் இன்பமிகுதிக்குக் காரணமாதலால்,இங்ஙனங் கூறினர்: இதனை "ஊடுதல் காமத்திற்கின்ப மதற்கின்பங், கூடிமுயங்கப்பெறின்" என்னுந் திருக்குறளினாலும் அறியலாம். இனி, ஊடல் ஊடுற என்பதற்கு ஊடுதல் ஊடுதலையடைய அதாவது ஊடல் தணிவுபெற என்று உரைப்பாருமுளர். கணவர் தமது தனங்களிலே அப்பிய சந்தனங்களை ஊடலினால் மகளிர் வழித் தெறிந்தன ரென்க. அன்றி, ஊடல் தீர்ந்த பின்பு, தமது கணவரோடு கூடுதற்கு விரும்பிய மகளிர் தமது தனங்களில் அணிந்திருந்த சந்தனமும் தம்கணவரை நேரே முயங்குதற்கு இடையீடு செய்வதென்று கருதி அதனை வழித்தெறிவ ரென்றேனும், மகளிர்க்கு அலங்காரஞ் செய்யுமென்று அம்மகளிரின் கொங்கையில் சந்தனக்குழம்பை அப்பிய ஆடவர் பிறகு அம்மகளிரின் இயற்கையழகைக் குறைப்பதென்று கருதித் தாம் அப்பிய சந்தனத்தைத் தாமே வழித்தெறிவ ரென்றேனும் கூறலுமாம். வனப்பு முலையென்பது, வனமுலையென விகாரப்பட்டது. [1] ஆடுவாம் புரவியின் குரத்தை யாப்பன என்ற பாடத்திற்கு - ஆடுகின்ற தாவும் குதிரையின்குளம்பை, சூடுவாரி கந்ததொங்கல்மாலைகள் யாப்பன [கட்டுவன] என்க. பி - ம்:—
[2] இகழ்ந்த. [3] இழுக்குவது. [4] கொதித்த. (149)

57. இளைப்பருங் குரங்களா லிவுளி [1] பாரினைக்
கிளைப்பன வவ்வழி [2] கிளர்ந்த தூளியின்
ஒளிப்பன மணியவை யொளிர மீதுதேன்
துளிப்பன குமரர்தந் [3] தோளின் மாலையே.

(இ - ள்.) இவுளி - குதிரைகள், (வீதிகளிலேலோடும்பொழுது), இளைப்பு அரு குரங்களால்-(நடத்தலில்) இளைத்தலில்லாத (தமது)

குளம்புகளினால், பாரினை-பூமியை, கிளைப்பன - கிண்டுகின்றன: அவழி-அவ்விடத்தினின்று, கிளர்ந்த-மேலெழுந்த, தூளியின்-புழுதிகளினால், மணி-(அக்குதிரைகளின் மேலேறிய மைந்தர் பூண்டுள்ள அணிகளிற் பதிக்கப்பெற்ற) இரத்தினங்கள், ஒளிப்பண - மறைவனவாயின; அவை-அங்ஙனம் மறைந்த இரத்தினங்கள், ஒளிர - (மீண்டும் முன்போல்) விளங்கும்படி, குமரர்தம் தோளின் மாலை-அம்மைந்தர்களது தோள்களிலணிந்துள்ள பூமாலைகள், மீது - (மணிகளை மறைத்துள்ள புழுதியின்)மேல், தேன் துளிப்பன - தேனைச்சிந்துவன; (எ - று.)

குதிரையின்மீது ஏறிச் சவாரிபேர்வாரது அணிகலங்களின் மணியை அக்குதிரைகள் குளம்புகளினாற் கிண்டியெழுப்பிய தூளி மறைக்க, அந்தத் தூளியை அவர்கள் தோளிலணிந்துள்ள மாலைகளினின்று பெருகிய தேன் பேர்க்குமென்க; தொல்லுருப்பெறலணி. பி - ம்:—[1] தாரணி, தாதினை. [2] கிளைத்த, கிளர்த்த. [3] தொய்யல், தொய்யில். (150)

58. விலக்கருங் கரிமதம் வேங்கை நாறுவ
குலக்கொடி மாதர்வாய் குமுத நாறுவ
கலக்கடைக் கணிப்பருங் கதிர்க ணாறுவ
மலர்க்[1] கடி நாறுவ[2] மகளிர் கூந்தலே.

(இ - ள்.) விலக்க அரு - தவிர்க்கமுடியாத, கரி மதம் - யானைகளின் மதநீர்கள், - வேங்கை நாறுவ - வேங்கைமலர்போல வாசனை வீசுவன;குலம் கொடி மாதர் வாய்-உயர்குலத்திற்பிறந்தவராய்ப் பூங்கொடிபோன்றுள்ள மகளிரின் வாய்கள், குமுதம் நாறுவ - ஆம்பல் மலர்போல விளங்குவன; கலக்கடை - (அந்நகரத்தவர் பூண்டுள்ள) ஆபரணங்களினிடத்து, கணிப்பு அரு கதிர்கள் - அளவிடுதற்கு அருமையான ஒளிகள், நாறுவ - தோன்றுவன; மகளிர் கூந்தல் - (அந்நகரத்து) மாதர்களின் தலைமயிர்கள், மலர்கடி நாறுவ - (சூடியுள்ள)•புஷ்பங்களின் வாசனை வீசுவன; (எ - று.)

யானைமதம் வேங்கைமலர்போல மணம்வீச, மகளிர்வாய் குமுத மலரைப்போன்று செந்நிறமும் அழகும் வாய்ந்துவிளங்குமென்க. முதலடிக்கு - வேங்கைமரம் பூத்திருக்கையில் அது புலிபோலத் தோன்ற, அதுகண்ட யானைகள் அம்மரத்தைச்சார்ந்து முறித்தலின் யானைகளின்மதம் அம்மலரிற்படிந்து அம்மலர் யானையின்மதமணம் கமழு மெனினுமாம். கலக்கடை கணிப்பரும் என்ற இயல்பான பாடத்துக்கு, கலக்கடை-ஆபரணங்கள் விற்கும் அங்காடிகள், கதிர்கள் நாறுவ-பலவகையிரத்தினங்களினொளிகள் விளங்கப்பெறுவன என்று உரைகாண்க. கலக்கடை - ஆபரணங்களின் கடைப்புணர்வுமாம். சில பிரதிகளில் இரண்டு மூன்றுமடிகள்-மூன்று இரண்டாமடிகளாயின. பி - ம்:—[1] கடை. [2] மாதர், மடந்தை. (151)

59. கோவையிந்[1] நகரொடெண் குறிக்க லாதவத்
தேவர்தந் நகரியைச் செப்பு கின்றதென்
யாவையும்[2] வழங்கிடத் திகலி யிந்நகர்
ஆவணங் கண்டபி னளகை தோற்றதே.

(இ - ள்.) அளகை - (செல்வச்சிறப்போடு கூடிய) அளகாபுரியானது, யாவைஉம் வழங்கு இடத்து இகலி - (தன்னிடத்துக் கொடைத்தொழிலில்லாமையால்) எல்லாவற்றையும் கொடுக்கின்ற விஷயத்தில் (இந்நகரத்தோடு) வேறுபட்டு, (மற்றைத்தன்மைகளிலாவது ஒப்பாகலாமென்று கருதி), (பின்பு), இ நகர் ஆவணம் கண்ட பின் - இப்பட்டணத்தின் கடைவீதியைக் கண்டபின்பு, தோற்றதுஎ - தோல்வியையேயடைந்திட்டது: (இங்ஙன் இந்நகருக்கு எவ்வகையிலும் அவ்வளகாபுரி ஒப்பாகாது என்றால்), கோவை - நகரவரிசையிலே, இ நகரொடு - இவ்வயோத்தியாபுரியுடனே, எண் குறிக்கலாத - ஒன்றாகக்குறித்து எண்ணப்படாத, அ தேவர் தம் நகரியை - அந்தத் தேவநகரமாகிய அமராவதியைத்தான், செப்புகின்றது - (இந்நகரமுழுவதுக்கும் ஒப்பாகுமா ஆகாதா என்று) எடுத்துச்சொல்லுவது, என் - எதற்காக? (எ - று.)

அழகில் அமராவதிக்கு ஒப்பாகிச் செல்வவளம்பெற்றதான அளகாபுரி கொடைத்தொழிலில் வேறுபாடு உடையதாயினும் மற்றைய விஷயங்களில் அயோத்தியாபுரியோடு ஒற்றுமையுடையதாக முதலில் தன்னை நினைத்துப் பிறகு இவ்வயோத்தியாபுரியின் கடைவீதி யொன்றற்கே ஒப்பாகாமல் தோற்றுவிட்ட தென்றால், அயோத்திமுழுவதுக்கும் அமராவதி ஒப்பாகாதென்பதுதானே பெறப்படு மென்பதாம். தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. கோவை-அயோத்தி மதுரை மாயை காசி காஞ்சி அவந்தி துவாரகை என முத்திதரும் நகரம் ஏழு எனப்படும். இதில், அமராவதி நகரத்தைச் சேர்த்துச் சொல்லாமையால் 'கோவையிந்நகரொடெண் குறிக்கலாத வத்தேவர்நகர்' எனப்பட்டது: இத்தொடரை அளகைக்குங் கூட்டிப் பொருளுரைக்க. யாவையும் வழங்கிடத்து இகலி என்பதற்கு - எல்லாவற்றையும் கொடுக்கின்ற தன்மையில் இந்நகரத்தோடு மாறுபட்டு என்று உரைப்பாரு முளர்; ஆவணம் = ஆபணம்; வடசொல். சிலபிரதிகளில் இச்செய்யுள், அடுத்த செய்யுளின்பின்: சிலபிரதிகளில் "அதிர்கழல்" (60) "வளையொலி" (61) என்ற இவ்விரண்டுக்குப்பின். பி - ம்:—[1]கோவையினிதனொடு, கோதையிந் நகர்தனொடு. [2]விளங்கிடத்திகலினன்னகர். (152)

60 அதிர்கழ லொலிப்பன வயிலி மைப்பன
கதிர்மணி [1]யணிவெயில் கால்வ மான்மதம்
முதிர்வுறக் கமழ்வன முத்த மின்னுவ
மதுகர [2]மிசைப்பன மைந்த ரீட்டமே.

(இ-ள்.) (அந்நகரியில்), மைந்தர் ஈட்டம் - ஆடவர்களின் கூட்டத்தினிடத்து, அதிர் கழல் - அசைகின்ற வீரக்கழல்கள், ஒலிப்பன - ஆரவாரஞ்செய்வன; அயில் - வேற்படைகள், இமைப்பன - விளங்குவன; கதிர் மணி அணி - ஒளியையுடைய இரத்தினாபரணங்கள், வெயில் கால்வ - வெயிலினொளி வீசுவன; மான்மதம் - கஸ்தூரிப் புழுகுகள், முதிர்வு உற - மிகுதிபொருந்த, கமழ்வன - வாசனை வீசுவன; முத்தம் - முத்தாபரணங்கள், மின்னுவ - விளங்குவன; மதுகரம் - வண்டுகள், இசைப்பன - கீதம்பாடுவன; (எ - று.)

அதிர்கழலொலித்தல் முதலியன, மைந்தரீட்டங்களிலென்க. மான்மதம் - கஸ்தூரியென்னும் மானின் கொழுப்பு. மதுகரம் - தேனைச்சேர்ப்பது. பி - ம்:—[1] இளவெயில். [2] இரைப்பன. (153)

61. வளையொலி வயிரொலி மகர வீணையின்
கிளையொலி [1] முழவொலி கின்ன ரத்தொலி
துளையொலி பல்லியந் துவைக்குஞ் [2] சும்மையின்
விளையொலி கடலொலி மெலிய விம்முமே.

(இ - ள்.) (அந்நகரத்தில்), வளை ஒலி - சங்கங்களினோசையும், வயிர் ஒலி - ஊதுகொம்புகளின் ஓசையும், மகரம் வீணையின் கிளை ஒலி - மகரயாழியின் இனங்களின் ஓசையும், முழவு ஒலி - மத்தளங் களின் ஓசையும், கின்னரத்து ஒலி - கின்னரமென்னும் வாச்சியத் தின் ஓசையும், துளை ஒலி - (சின்னம் முதலிய) துளைக்கருவியி னோசையும், பல் இயம் துவைக்கும் சும்மையின் விளை ஒலி-மற்றும் பலவகை வாத்தியங்கள் முழங்கின்ற ஆரவாரத்தினாலுண்டாகிய ஓசையும்; கடல் ஒலி மெலிய - சமுத்திரகோஷமும் கீழ்ப்படும்படி, விம்மும் - மேற்பட்டு ஒலிக்கும்; (எ - று.)

சங்கு - வெற்றிச்சங்கு மங்கலச்சங்கு கொடைச்சங்கு என மூவகைப்படும். கிளையொலி - கிளையென்னும்பண்ணின் இசை செழிக்கின்ற ஓசையுமாம். கின்னரம் - வீணையின் இனமானதொரு வாச்சியம். பலவகையொலிகள் அந்நகரத்தில் நிரம்பியிருந்தன என்று கூறிய இதில், அந்நகரத்து மாந்தர்யாவரும் யாதொரு துயரமு மின்றி, மனமகிழ்ந்து மங்களங்கள்மிக வாழ்கின்றன ரென்பது விளங் கும்: கின்னரம் - ஒருவகைப் பறவை. கிளை - வீணையினோர்நரம்பு, துளை - துளைக்கருவியாகிய குழல் என்னலுமாம். பி - ம்:—[1] குழ லொலி. [2] தோலிடை. (154)

62. மன்னவர் [1] தருதிறை யளக்கு மண்டபம்
அன்னமென் னடையவ ராடு மண்டபம்
முன்னரு மருமறை [2] யோது மண்டபம்
பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்.

(இ - ள்.) மன்னவர் - (வேறுதேயங்களின்) அரசர்கள், தரு - (கொண்டு வந்து) கொடுக்கின்ற, திறை-அரசிறைப் பொருள்களை, அளக்கும்-அளந்து கொள்ளுதற்கு இடமான, மண்டபம்-மண்டபங் களும்,—அன்னம் மெல்நடையவர் - அன்னத்தின் நடைபோன்ற மெல்லிய நடையையுடைய மகளிர், ஆடும்-நர்த்தனஞ் செய்கின்ற, மண்டபம்-மண்டபங்களும், உன்ன அரு-ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதற்கு அருமையாகி, அரு-(ஓதுதற்கும்) அருமையாயுள்ள, மறை - வேதங்களை, ஓது - (ஓதுதற்கு) இடமான, மண்டபம்-மண் டபங்களும், பன்ன அரு-ஆராய்ச்சிசெய்வதற்கு அருமையாயுள்ள [வருத்தமாயுள்ள], கலை - (வேதத்தின் அங்கங்களாகிய) சாஸ்தி ரங்களை, தெரி - ஆராய்ச்சிசெய்வதற்கு இடமான, பட்டி மண்டபம் -கல்வி மண்டபங்களும், (அந்நகரத்தில் எங்கும் உள்ளன); (எ-று.)

இதனால், செல்வம் கல்வி இவற்றிற்கு இடனாயிருப்பது, அவ்வயோத்தி என்று கூறியவாறு. மண்டபங்கள் கூறிமுடிக்க முடியாதபடி மிகப்பலவாகவுள்ளன என விளக்குமாறு வினைமுற்று இன்றி உரைத்தனரென்ப: வினை வருவிக்கப்பட்டது. கலை-சீட்சை வியாகரணம் சந்தசு நிருக்தம் சோதிடம் கற்பம் என்னும் ஆறங்கங்கள்; அறுபத்துநான்கு கலைகளைக் காட்டு மென்பாரு முளர். "ஒட்டிய சமயத்துறுபொருள் வாதிகள், பட்டிமண்டபத்துப் பாங்கறிந்தேறுமின்" என மணிமேகலையிலும், "பகைப்புறத்துக்கொடுத்த பட்டிமண்டபமும்" எனச் சிலப்பதிகாரத்திலும், "பட்டிமண்டப மேற்றினை யேற்றினை" எனத் திருவாசகத்திலும் 'பட்டிமண்டபம்' என்பது, வந்துள்ளது. "பட்டி மண்டபம் - வித்தியா மண்டபம்; ஓலக்க மண்டபமுமெனப" என்பர், அடியார்க்குநல்லார். சிலபிரதிகளில் மூன்று நான்காமடிகள் மாறிக்காண்கின்றன. பி-ம்:—[1]அருந், வரு, தருந். [2]முழக்கு. (155)

63. இரவியிற் சுடர்மணி யிமைக்குந் [1]தோரணத்
தெருவினிற் சிறியன திசைகள் சேண்விளங்கு
அருவியிற் பெரியன வானைத் தானங்கள்
பரவையிற் பெரியன புரவிப் பந்தியே.

(இ - ள்.) சுடர் மணி - ஒளியுள்ள மணிகள், இரவியின்-சூரியனைப்போல, இமைக்கும்-ஒளிவீசுகிற, தோரணம் - தோரணங்களையுடைய, தெருவினில்-வீதிகளைவிட, திசைகள் - திக்குக்கள், சிறியன -சிறுமையுடையனவாம்; ஆனை தானங்கள் - யானையின் மதப்பெருக்குக்கள்,—சேண் விளங்கு அருவியின் - வெகுதூரம் விளங்குகின்ற மலைநீர்ப் பெருக்குக்களினும், பெரியன-மிக்கவையாம்; புரவி பந்தி- குதிரையின் வரிசைகள்,—பரவையின் பெரியன-கடலினும் பெரியனவாம்; (எ - று.)

தெருக்கள் விரிவாக இருத்தலும், யானைகுதிரைகள் மிகுதியாகத் திரண்டிருத்தலும் இதிற் கூறப்பட்டன. 'தெருவினிற்சிறியன திசைகள்' என்று கூறினாரேனும், பின்னிரண்டடிகட்கு ஏற்ப, திசைகளின் தெரு பெரியன என்று கருத்துக்கொள்க. தோரணம் - கட்டுவாயில். பி - ம்:—[1]தோரணந். (156)

64. சூளிகை மழைமுகிற் றொடக்குந் தோரணம்
மாளிகை மலர்வன [1]மகளிர் வாண்முகம்
வாளிக [2]ளன்னவை [3]மலர்வ மற்றவை
[4]யாளிக ளன்னவர் நிறத்தி னாழ்பவே.

(இ - ள்.) சூளிகை - (தமது) சிகரங்களினால், மழை முகில் தொடக்கும் - மழைபொழியுந்தன்மையுள்ள மேகங்களைப் பிணிக்கின்ற, தோரணம் மாளிகை - தோரணங்களையுடைய வீடுகளில், மகளிர் வாள் முகம் - பெண்களுடைய ஒளியுள்ள முகங்கள், மலர்வன - விளங்குவன; அன்னவை - அம்முகங்களில், வாளிகள்-(பார்வைகளாகிய) அம்புகள், மலர்வ - விளங்குவன; அவை - அந்த அம்புகள், யாளிகள் அன்னவர் நிறத்தின்-ஆண்சிங்கத்தையொத்த ஆடவர்களின் மார்பிலே, ஆழ்ப-தைத்து அழுந்துவன; (எ - று.)

மகளிர்கண்களாகிய அம்புகள் ஆடவர்மார்பில் அழுந்துவன என்றது, மாதராரின்கண்பார்வைகள் ஆடவர்க்கு ஆசைநோயை விளைத்து வருத்தத்தைத் தருவன என்றவாறு. தோரணம் - வெளிவாயில்: இனி, மாவிலை முதலியவற்றாற் கட்டப்படுந்தோரணங்கள் என்றுரைப்பாருமுளர். சிங்கம்-நடை. வலிமை நோக்குத்தைரிய காம்பீரியங்களில், உவமை. ஆழ்ப-பலவின்பால்முற்று; "அஆவ எனவரூஉமிறுதி, யப்பான் மூன்றே பலவறிசொல்லே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தில் "உண்பஎன்பது பகரவீற்றுப்பலரறிசொல்லன்றே, அஃறிணைக்கு ஆயினவாறு என்னையெனின்,—பகரவிறுதியாயி னன்றே உயர்திணைக்காவது; ஈண்டுக்காட்டப்பட்டது எதிர்காலத்துவரும் பகரமூர்ந்துநின்ற அகரவீறுதலின் அஃறிணைச்சொல்லேயாமென்பது" என்று ஆசிரியர்சேனாவரையர் கூறியிருப்பது காண்க. இது-ஏகாவளியணி. சூளிகை - உச்சியறையென்பாருமுளர். பி-ம்:—[1]மாதர். [2]எனவரை. [3]மலர. [4]ஆளியை.

65. மன்னவர் கழலொடு மாறு கொள்வன
பொன்னணித் தேரொலி புரவித் தாரொலி
இன்னகை யவர்சிலம் பேங்க வேங்குவ
கன்னியர் குடைதுறைக் [1]கமல வன்னமே.

(இ - ள்.) பொன் அணி தேர் ஒலி - பொன்னினாலியன்ற அலங்காரத்தைக்கொண்ட தேர்களினோசையும், புரவி தார் ஒலி - குதிரைகள்பூண்ட கிங்கிணிமாலையினோசையும், மன்னவர் கழலொடு- அரசர்கள்காலிலணிந்த வீரக்கழல்களினொலியோடு, மாறு கொள்வன-; இன் நகையவர் சிலம்பு ஏங்க - இனியசிரிப்பையுடைய மகளிரணிந்துள்ள சிலம்பென்னுங்காலணிகள் ஒலிக்க,(அந்தச்சிலம்போடு மாறுகொண்டு), கன்னியர் குடை துறை கமலம் அன்னம் - இளம் பெண்கள்நீராடுகின்ற நீர்த்துறையில் தாமரைமலரில் வாழ்கின்ற அன்னப்பறவைகள், ஏங்குவ-(தாமும்) ஒலிப்பன; (எ - று.)

மன்னவர்வீரக்கழல் ஒலிப்ப அவ்வொலியோடு மாறுபடப் புரவித்தாரும் தேரும் ஒலிக்கின்றன; அங்ஙனமே, மாதர்சிலம்பு ஒலிக்க, அதனோடுமாறுகொண்டு அன்னப்பறவைகள் ஒலிக்கின்றன என்க. பின்வாக்கியத்திலும் 'மாறுகொண்டு' என்று வருவிக்கப்பட்டது. பின்னிரண்டடிகளில் "மின்னார்சிலம்பிற் சிலம்புங் குரலன்னம்" என்றது காண்க. பி-ம்:—[1]களக. (158)

66. ஊடவுங் கூடவு முயிரி னின்னிசை
பாடவும் விறலியர் பாடல் கேட்கவும்
ஆடவு மகன்புன லாடி யம்மலர்
சூடவும் பொழுதுபோஞ் [1]சிலர்க்கத் தொன்னகர்.

(இ - ள்.) அ தொல் நகர் - அந்தப்பழமையான நகரத்தில், சிலர்க்கு-சிலமகளிர்க்கு,—ஊடஉம் - (தம்தம் கணவரோடு) புலத்தலாலும், கூடஉம்-(உடனே அப்புலவிதீர்ந்து அவர்களோடு) கலத்தலாலும், உயிரின் இன் இசை பாடஉம்-உயிர்போலருமையான இனிய கானத்தைப் பாடுதலாலும், விறலியர் பாடல் கேட்கஉம் - பாடும்மக

ளிரது பாட்டுக்களைக்கேட்டலாலும், அகல் புனல் ஆடஉம் - பரந்த நீரிலே குடைந்து விளையாடுவதாலும், ஆடி அம் மலர் சூடஉம்- (அங்ஙனம்) நீராடியபின்பு பறித்த அழகியமலர்களைச் சூடுவதாலும், பொழுது போம் - காலங்கழியும்; (எ-று.)

இதனால், அந்நகரத்து மகளிர்கவலைசிறிதுமில்லாது சுகமாகக் காலங்கழித்தலைக் கூறுகின்றார். ஊடிக்கூடுதல் காமத்துக்கு இன்ப மாதலால், ஊடலைக் கூறிப் பிறகு கூடலைக் கூறினார். விறலி-விறல் படப்பாடியாடும் மகள்: விறல் - மெய்ப்பாடு. பி - ம்:—[1] சிலர்க்கு. சிலபிரதியில் இதன்பின் "கரியொடு" (68) என்ற பாடல். *(159)*

67. முழங்குதிண் கடகரி [1] மொய்ம்பி னூரவும்
எழுங்குரத் திவுளியொ டிரத மேறவும்
பழங்கணோ டிரந்தவர் பரிவு தீர்தர
வழங்கவும் பொழுதுபோஞ் சிலர்க்கம் மாநகர்.

(இ - ள்.) அ மா நகர்-அந்தப் பெரிய பட்டணத்தில், சிலர்க்கு- சில ஆடவர்கட்கு, முழங்கு திண் கடம் கரி மொய்ம்பின் ஊரஉம் - பிளிறுகின்ற வலிய மதயானைகளை வலிமையோடு ஏறிச் செலுத்துத லாலும், எழும் குரத்து இவுளியொடு-மேலெழுகின்ற குளம்புகளை யுடைய குதிரைகளையும், இரதம்-தேர்களையும், ஏறஉம்-ஏறி நடத்து தலாலும், பழங்கணொடு இரந்தவர் பரிவு தீர்தர வழங்கஉம் - தரித் திரத்தினால் இரக்கின்றவருடைய வருத்தந் தீரும்படி கொடுத்தலி னாலும், பொழுதுபோம்—; (எ - று.)

இரண்டுகவிகளினால் ஆடவர் இனிது காலங்கழித்தலைக் கூறு கின்றார். [1] முன்பினூரவும் என்பதற்குமுன்னும் பின்னுமாக உலாவும் படி ஏறிச்செலுத்தலாலும் என்பாருமுளர். பழங்கண் - வறுமைநோ யால் வாடியகண். இந்தக்காரியச்சொல் காரணமாகிய வறுமையைக் காட்டிற்று; உபசாரவழக்கு. பி - ம்:—[1] முன்பின். இச்செய்யுள் சில பிரதிகளி லில்லை. *(160)*

68. [1] கரியொடு கரியெதிர் பொருத்திக் கைப்படை
வரிசிலை [2] முதலிய வழங்கி வாலுளைப்
புரவியிற் பொருவில்செண் டாடிப் [3] போர்க்கலை
தெரிதலிற் பொழுபோஞ் சிலர்க்கச் சேணகர்.

(இ - ள்.) சேண் அ நகர் - பரந்த அந்தநகரத்திலே, சிலர்க்கு- சிலஆடவர்க்கு,—கரியொடு கரி எதிர் பொருத்தி - யானைகளோடு யானைகளை எதிரெதிராகப் போர்செய்தற்கு முட்டவிடுதலாலும், வரி சிலை முதலிய கை படை வழங்கி - கட்டமைந்த வில்முதலிய கையி லுள்ள ஆயுதங்களைப் பிரயோகித்துப் பழகுவதாலும், வால் உளை புரவியில் பொரு இல் செண்டு ஆடி - நீண்ட பிடரிமயிர்களையுடைய குதிரையின்மீதேறி ஒப்பற்ற வீதிகளில் வையாளி வருதலாலும், போர் கலை தெரிதலின் - போர் செய்தற்குரிய படைக்கல நூல்களை ஆராய்ச்சிசெய்தலாலும், பொழுதுபோம்—; (எ-று.)

யானைகளை ஒன்றோடொன்று பொருத்துதல், சிலைமுதலிய படைக்கலங்களை வழங்குதல்,குதிரைகளிலேறி வையாளிசெல்லுதல்

என்ற இங்ஙனமான போர்க்கலைகளைப் பழகுவதால், சிலர்க்கு அந் நகரிற் போதுபோமென்று உரைப்பினுமாம். முதலிய - பெயர். எய்வன குத்துவன எறிவன முதலிய எல்லாத்தொழில்களையும் குறிக்குமாறு 'வழங்கி' என்றார். வாலுளை - வெண்ணிற முள்ள பிடரிமயி ரென்பாரு முளர். செண்டு - குதிரைநடத்தும் வீதி: குதிரை மீது ஏறி ஆடும் ஒருவகைப்பந்து என்பாரு முளர். பி-ம்:— [1]கரியொரு. [2]நுதலியர்வழங்குவானுளைப். [3]பொற். (161)

69\. நந்தன வனத்தலர் கொய்து நவ்விபோல்
வந்திளை யவரொடு வாவி யாடிவாய்ச்
செந்துவ ரழிதரத் தேறல் [1]மாந்தித்தூது
உந்தலிற் பொழுதுபோஞ் சிலர்க்கவ் வொண்ணகர்.

(இ-ள்.) அ ஒள் நகர்-அந்த விளங்குகின்ற நகரத்திலே,சிலர்க்கு -சிலமங்கையர்க்கு,-நந்தனவனத்து அலர் கொய்து - சிங்காரப் பூஞ் சோலைகளிலே சென்று மலர்களைப் பறித்தலாலும், நவ்விபோல் வந்து-(பார்வையால்) மான்களையொத்து அருகில்வந்து, இளையவரொடு வாவி ஆடி-யௌவனப்பருவமுடைய (தமது) கணவருடனே தடாகங்களில் நீர்விளையாடுதலாலும், வாய் செம் துவர் அழிதர தேறல் மாந்தி - (தமது) வாயினிடத்து இயற்கையாகவுள்ள மிக்க செம்மைநிறம் அழிவுபெற மதுவைப் பருகுவதாலும், தூது உந்தலின்-(தம்கணவரிடத்துத்) தூதினைச்செலுத்துவதாலும், பொழுது போம்—; (எ - று.)

சிலமகளிர்க்குப் பூக்கொய்தல் புனல்விளையாடல் உண்டாட்டு தூதுவிடல் என்ற இவ்வழியால் இனிதுகாலங்கழியுமென்பதாம். மகிழ்ச்சியுண்டாக்குவதென்று பொருளுள்ள 'நந்தனம்' என்ற சொல், இந்திரன்பூந்தோட்டத்தை யுணர்த்தும்; அது - இங்கு உவமையாகுபெயராய், அழகிய பூஞ்சோலையை யுணர்த்திற்று. செம்துவர் - ஒருபொருட்பன்மொழி. தேறல்-தெளிதல்; தெளிந்த கள்ளுக்குத் தொழிலாகுபெயர். 'வாய்ச்செந்துவரழிதர' என்பதை மத்திமதீபமாக, வாவியாடி என்பதனோடுங் கூட்டலாம். பி - ம்:— [1]மாந்திச்சூது, மாந்திரத்து. (162)

வேறு.

70\. நானா [1]விதமா [2]நளிமாதிர வீதி யோடி
மீனாறு வேலைப் புனல்வெண்முகி லுண்ணுமா போல்
ஆனாத மாடத் திடையாடு கொடிக்கண் மீப்போய்
வானாறு நண்ணிப் புனல்வற்றிட நக்கு [3]மன்னோ.

(இ - ள்.) வெள் முகில் - வெண்ணிறமுள்ள மேகங்கள், நளி மாதிரம் வீதி நானாவிதம் ஆ ஓடி-பெரிய ஆகாயமார்க்கத்திலேபல வகைகளாக விரைந்து சென்று, மீன் நாறு வேலை புனல்-மீன்கள் விளங்குகின்ற கடலின் நீரை, உண்ணும் ஆ போல்-பருகும் விதம் போல,—ஆனாத மாடத்திடை ஆடுகொடிக்கள் - அழிவில்லாத (அந்நகரத்து) மாளிகைகளின்மேலசைகின்ற துகிற்கொடிகள், மீ

போய் - மேலே சென்று, வான் ஆறு நண்ணி - ஆகாசகங்காநதியைப் பொருந்தி, புனல் வற்றிட - (அதன்) நீர் வரளும்படி, நக்கும் -(தமது சீலையின் நுனியாகிய நாவினால் நீரை) நக்கியுட்கொள்ளும்;

அந்நகரத்து மாடங்களின்மீது கட்டப்பட்டுள்ள துவசபடங்கள் காற்றில் அசைந்தாடி ஆகாயகங்காநதியில் தோய்வதை, கவி, வெயிலிற் காயும் வெப்பத்தினால் நீர்வேட்கைகொண்டு அந்தத் துவசங்கள் ஆகாயகங்காநதியின் நீரை நக்குவதுபோலு மென்றார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி; துவசங்கள் வானாற்றுப் புனலை நக்கு மெனக் கூறியது - தொடர்புயர்வுநவிற்சியணி. வெண்ணிறக்கொடிகள் வானாற்றுப்புனலிற் படிதலை வெண்ணிற மேகங்கள் கடலிற்படிதல்போலு மென்றார். கொடிகண் என்று பிரித்து-துவசங்கட்டப்பட்டுள்ள மூங்கில் என்பாரு முளர்; இப்பொருளில், கணுவென்ற பொருளுள்ள கண்என்பது மூங்கிலையுணர்த்திய்து-சினையாகுபெயர். விதமா, உண்ணுமா—ஆ-முறையே, ஆக, ஆறு என்பவற்றின் விகாரம். இதுமுதல் அடுத்தபடலத்தின் முதலைந்து செய்யுள்வரையுள்ள பாடல்களை நாற்சீராகவும் அலகிடலாம். பி-ம்:—[1]விதமாய். [2]நளிர். [3]அன்றே. *(163)*

71. [1]வன்றோ ரணங்கள் புணர்வாயிலும் [2]வானி னும்பர்
[3]சென்றோங்கி மேலோ ரிட[4]மில்லெனச் [5]செம்பொ னிஞ்சி
குன்றோங்கு[6]தோளார் குணங்கூட் டிசைக்குப்பை யென்ன
ஒன்றோ டிரண்டும் முயர்ந்தோங்கின [7]வும்பர் நாண.

(இ - ள்.) வல் தோரணங்கள் புணர் வாயில்உம் - வலிய தோரணங்கள் பொருந்தப்பெற்ற கோபுரவாசலும்,—செம்பொன் -செம்பொன்னாலாகிய, இஞ்சி ஒன்றோடுஇரண்டுஉம்-மூன்று மதில்களும்,—வானின் உம்பர் சென்று ஓங்கி - தேவலோகத்தினும் மேலாகப்போய் உயர்ந்து, மேல் ஓர் இடம் இல் என - இன்னும்மேலே ஓங்கிச்செல்வதற்கு வேறே இடமில்லை யென்று சொல்லும்படி [அவ்வளவு உயர்வாக], குன்று ஓங்கு தோளார் குணம் கூட்டு இசை குப்பை என்ன - மலைபோலுயர்ந்த தோள்களையுடையரான (அவ்வயோத்திமாநகரின்) அரசர்கள் (தமது) நற்குணங்களாற் சம்பாதித்த புகழின் திரள்போல, உம்பர் நாண உயர்ந்து ஓங்கின - தேவலோகமும் வெள்கும்படி மிகவும் உயர்ந்து விளங்கின; (எ-று.)

அயோத்திநகரத்து வாயிலும், மதில்களும், அதனையாண்ட அரசர்களின் புகழ்த்திரள்போல இனிச் செல்லுதற்கு மேலே யிடமில்லையென்னும்படி உயர்ந்தோங்கின வென்பதாம். உள்மதில் இடைமதில் புறமதில் என மும்மதில்கூறும் மரபுபற்றி, 'இஞ்சி ஒன்றோடிரண்டு' என்றார்: "கோடுறழ்ந்தெடுத்த" என்று தொடங்கும் பதிற்றுப்பத்துப் பாடலையும், அதன் உரையையும் நோக்குக. உம்பர்-இடவாகுபெயரால், தேவலோகத்தைக் காட்டும். பி - ம்:— [1]வன்றோல் புணர்ந்தமணி, வன்றோல்புணர்ந்தமுனி, வன்றோள் புணர்ந்தமணி. [2]வானினூடு, வானினும்போய். [3]சென்றாங்கு, சென்றோங்கு. [4]இன்றெனா. [5]செய். [6]தோளான். [7]ஓங்கல். *(164)*

72. காடும் புனமுங் கடலன்ன கிடங்கு மாதர்
ஆடுங் குளனும் மருவிச்சுனைக் குன்று மும்பர்
வீடும் விரவும் [1]மணிப்பந்தரும் வீணை வண்டு
பாடும் பொழிலும் [2]மலர்ப்பல்லவப் பள்ளி மன்னோ.

(இ - ள்.) காடுஉம் - (அவ்வயோத்திநகரைச் சூழ்ந்துள்ள அரணாகவுள்ள) காடுகளிலும், புனம்உம் - விளைநிலங்களிலும், கடல் அன்ன கிடங்குஉம் - கடல்போன்ற அகழிகளிலும், மாதர் ஆடும் குளன்உம் - பெண்கள் நீராடுகின்ற குளங்களிலும், அருவிசுனை குன்றுஉம் - அருவிகளையும் சுனைகளையுமுடைய (அரணாகவுள்ள) மலைகளிலும், உம்பர் வீடுஉம் - மேல்நிலை மாடங்களிலும், மணி விரவும் பந்தர்உம் - முத்துக்களினாலமைந்துள்ள பந்தல்களிலும், வீணை வண்டு பாடும் பொழில்உம்-யாழிசைபோல வண்டுகள் இசைபாடுகின்ற சோலைகளிலும், மலர் பல்லவம் பள்ளி - மலர்களாலும் தளிர்களாலும் படுக்கைகள் (அமைக்கப்பட்டுள்ளன); (எ-று.)

வினை வருவிக்க. காடுமுதலிய இடங்கள் வாய்ப்பாக இருத்தலால், அவற்றிற்படுக்குமிடம் அமைப்பாராயின ரென்க. குளன் என்றது - அதனிடையிலுள்ள மண்டபங்களையும், கரைகளையும். கிடங்கு என்றது-அதனைச்சார்ந்துள்ள இடத்தை. அருவி - மலை நீர்ப்பெருக்கு; சுனை-நீரூற்றுள்ள மலைக்குளம். உம்பர் வீடு - செய்குன்றின்மீதுள்ள வீடுஎன்பாருமுளர். உம்பர் வீடும் விரவு மணிப்பந்தர் என எடுத்து-(உயர்ச்சியால்) தேவர்களின் வாழுமிடமாகிய தேவலோகத்தையும் அளாவுகின்ற அழகிய கொடிவீட்டை [லதாகிருகத்தை] க்குறிக்குமெனக்கொண்டு, காடு முதலியவற்றில் மலர்களும் தளிர்களும் மிகுந்துள்ளவற்றையே இங்ஙனங் கூறினரெனினுமாம். அன்றி, காடும் புனமும் கிடங்கும்குளனும் குன்றும், மலர் பல்லவம்-மலரும்பல்லவமுஞ் செறிந்த, பள்ளி-இடங்களாயுள்ளன; உம்பர் வீடும் பந்தரும்பொழிலும், மலர்பல்லவம் பள்ளி-மலராலும் தளிராலுமாகிய படுக்கைகளையுடையன என்று பிரித்து உரைத்தலும் ஒன்று. இச்செய்யுள் சிலபிரதிகளில் 73-ஆம் பாடலுக்குப் பின். [2]அலநல்லறப்பள்ளிமன்னோ என்ற பாடத்திற்கு - காடுமுதல் பொழிலிறுதியாக அந்நகரத்து உள்ளன: அல்லாதவை, அறப்பள்ளிஎன்க. பி - ம்:—[1]மணப். (165)

73. தெள்வார் மழையுந் திரையாழியு முட்க நாளும்
வள்வார் முரசம் மதிர்மாநகர் வாழு மாக்கள்
கள்வா [1]ரிலாமைப் பொருட்[2]காவலு மில்லை[3]யாதும்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை [4]மாதோ.

(இ - ள்.) தெள் வார் மழைஉம்-தெளிவான நீரைச்சொரிகின்ற மேகங்களும், திரை ஆழிஉம் - அலைகளையுடைய கடலும், உட்க - (ஓசையைக்கேட்டு) அஞ்சும்படி, நாள்உம்-தினந்தோறும், வள் வார் முரசம் அதிர் - தோற்கயிற்றாற்கட்டிய நீண்ட பேரிகைகளொலிக்கின்ற, மா நகர் - பெரிய அந்நகரத்தில், வாழும்-வாழ்கின்ற, மாக்கள்-மனிதர்களில், கள்வார் இலாமை-களவு செய்பவரெவரும் இல்லாமையால், பொருள் காவல்உம் இல்லை-பணத்தை முயற்சி கொண்டு காப்

பதும் இல்லை; யாதுஉம் கொள்வார் இலாமை-எப்பொருளையும் வாங்கிக்கொள்பவ ரில்லாமையால், கொடுப்பார்கள்உம்இல்லை - கொடுப்பவர்களும் இலராயினர்; (எ - று.)

காவற்சிறப்பிற்கும் கொடைச்சிறப்பிற்கும் குறைகூறும் முகத்தால், அவ்வயோத்திமாநகரில் இருப்பவரது தீயொழுக்க மின்மையையும் பெருஞ் செல்வமுடைமையையும் பெறவைத்தார். இடிகளினாலும் அலைகளினாலும் பேரொலிபடைத்த மேகமும் கடலும் உட்குமாறு முரசுபேரொலிபட ஒலிக்குமென்க; உட்குதல்-நாணுதலுமாம், அவிவேகிகளுள்ளும் கள்வரும் இரப்பவரும் இல்லை யென்பார் 'மாநகர்வாழும்மாக்கள்' என்றார்: 'மக்கள்' என்றே பாடங்கொள்ளுதலும் ஒன்று. பி - ம்:—[1] இலாமல். [2]காவல் செய்வாருமில்லை. [3]யாரும். [4]மன்னோ. (166)

74. கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி [1]முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லரல் லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை [2]மாதோ.

(இ - ள்.) (அந்நகரத்தில்),—கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் - (படித்தற்கு உரிய நூல்களைப்) படியாமல் (வீணாகப்பொழுது போக்கிக் கொண்டு) நிற்பவர்கள் வேறுசிலரில்லாமையால், கல்வி முற்ற வல்லார்உம் இல்லை - படிப்பில் முழுவதும் வல்லவர்களும் இல்லை; அவை வல்லர் அல்லார்உம் இல்லை-அக்கல்விகளில் வல்லவரல்லாதவர்களும்இல்லை; எல்லாரும் பெரு செல்வம் எல்லாம்உம் எய்தலால் ஏ-எல்லோரும் எல்லாவகைப்பட்ட பெருஞ்செல்வத்தையும் நிரம்பப்பெற்றிருத்தலாலே,இல்லார்உம் இல்லை-வறியவர்களும் இல்லை; உடையார்கள்உம் இல்லை - செல்வர்களென்று தனியே எடுத்துச் சொல்லத்தக்கவர்களும் இல்லை; (எ-று.)

'நிழலினருமை வெயிலில் அடிபட்டவர்க்கே தெரியும்' என்றபடி கல்வி பொருள் என்றஇவை இல்லாதவ ரிருந்தால், அந்தக் கல்வி செல்வம் என்றவற்றைப்பெற்றவர்களின் அருமைதெரியும். இந்நகரத்திலோ யாவரும் கல்விசெல்வங்களைப்பெற்று உயர்ந்திருத்தலால், 'இவர் முற்றக்கற்ற கல்வியாளர், இவர் செல்வர்' என்று உயர்த்தி ஒருவரைச் சொல்லமுடியாதென்க. முரண்விளைந்தழிவணியோடு ஏதுவணியும் உள்ளது. பி - ம்:—[1] முற்றி. [2]மன்னோ. (167)

75. ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
[1]ஆகம் முதற்றிண் பணை[2]போக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் [3]தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று [4]பழுத்தது [5]போலு மன்றே.

(இ - ள்.) (அந்நகரம்), கல்வி-படிப்பென்கிற, ஏகம் முதல் - ஒரு வித்தானது, முளைத்து—, எழுந்து - மேலெழுந்து, எண் இல் கேள்வி ஆகு-அளவிறந்த கேள்விகளாகிய, அம்முதல் திண்பணை-அழகிய சிறந்த வலிய கிளைகளை, போக்கி - வளரவிட்டு, அரு தவத்தின் சாகம் தழைத்து - (செய்தற்கு) அரிய தவமாகிய இலைகள் தழைத்து, அன்பு அரும்பி - அன்பாகிய அரும்பு தோன்றி, தருமம்

மலர்ந்து-தருமமாகியமலர் மலர்ந்து, போகம் கனி ஒன்று பழுத்தது போலும் - இன்பமாகிய பழமொன்றைப் பழுக்கஇடனாயிருத்தல் போலும்; (எ - று.)

அயோத்திமாநகரம் கல்விகேள்விகட்குத்தான் இருப்பிடமாகி அந்தக்கல்வி முதலியவற்றைப் படைத்தார் தவம் அன்பு தருமம் பேரின்பம் இவற்றைப் பெறுதற்கு இடனாகின்றதென்பதாம். கேள்வியானது கல்வியை வளர்த்தலால், 'பணை' எனப்பட்டது. தவம் முதல் போகம் ஈருகவுள்ளன நான்கும், கல்வியின் காரியமாய் முறையே ஒன்றற்கொன்று காரணமாதலால், இங்ஙனங் கூறினார்: உருவகவணியை யங்கமாகக்கொண்டுவந்த தன்மைத்தற்குறிப்பேற்ற வணி. இனி, இச்செய்யுட்கு -அந்த அயோத்தியிலே கல்விகேள்விகளானமைந்து, தவமும் தருமமும் மிகுந்து, அன்பும் போகமும் நிறைந்து ஒருவனுளனென்றுமேற்படலத்திற்குத்தோற்றுவாய் செய்வதாக உரைகொள்வாருமுளர். இவ்வுரையில் ஏகம் முதலென்றது-இக்ஷ்வாகு வமிசத்தை யென்க. சாகம்-கிளையுமாம். இங்கு, போகம் என்பது-பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், நறுமணப்பொருள், பாட்டு, பூம்படுக்கை என்னும் அஷ்டபோகங்களையும் குறிக்குமென்பர். பி-ம்:—[1] யாகம்முரட்டிண், ஆகும் முதற்றண், ஆகும்மதர்த்திண், ஆகும் முதற்பல். [2] ஓக்கி. [3] தருங்காமலர்ந்து. [4] பகுத்தது. [5] போன்றது.

அடையாற்றுப்பதிப்பில் நகரப்படலத்தினிறுதியிலுள்ளனவெனக் காட்டப்பெற்றுள்ள இரண்டுபாடல்கள் வருமாறு:-எங்கும் பொலியும் பரஞ்சுடராகி யெவ்வுயிரும், மங்கும் பிறவித்துயரற மாற்றுநேசம், தங்குந் தருமத்துருவாகித் தரணிமீது, பொங்கும் கருணை or புத்தேள் கருத்தி யாமெவன்புகல்வோம். வேதமதனுள் விளைபொருள் விகற்பத்துளடங்காச், சோதிமயமாய்த் துலங்கித் தொல்லுயிர்த் தொகைபலவாய், ஓது புவன முதரத்துளொடுக்கிய பூக்கும், ஆதிமுதல்வ னமரிட மயோத்திமா நகரம். (168)

நகரப்படலம் முற்றிற்று.

4—ஆவது அரசியற்படலம்

அயோத்திநகரத் தரசனது அரசாட்சி முறையைக் கூறும் பாகம்.

1.—அந்நகர்க்கு அரசன் ஒருவன் உளனென்பது.

*அம்[1]மா ணகருக் [2]கரசன் [3]னரசர்க் கரசன்
செம்மாண் டனிக்கோ லுலகேழினுஞ் செல்லநின்றான்
[4]இம்மாண் கதைக்கோ ரிறையாய விராம னென்னும்
மொய்ம்மாண் கழலோற் றருநல்லற மூர்த்தி யன்னான்.

---

*சிலபிரதிகளில் அரசியற்படலம் தனித்துக் காணப்படவில்லை: "தாயொக்கும்" (4) என்ற பாடலோடு நகரப்படலம் முடிய, "ஈந்தே" (5) என்ற பாடலிலும், சிலபிரதிகளில் இச்செய்யுளிலும் திருவவதாரப்படலம் தொடங்குகின்றது.

(இ-ள்.) மாண் அ நகருக்கு - மாட்சிமைப்பட்ட அந்த அயோத்தியாபுரிக்கு, அரசன்-அரசனாவான், (எத்தன்மையனென்றால்),—அரசர்க்கு அரசன்—சக்ரவர்த்தி: மாண் தனி செங்கோல்-மாட்சிமையுள்ள ஒப்பில்லாத (தனது) நீதிதவறாத அரசாட்சி, உலகு ஏழின் உம் செல்ல-ஏழுலகங்களிலும் தடையில்லாமல் நடக்கும்படி, நின்றான்-சிறந்து நின்றவன்; இ மாண் கதைக்கு-இந்த (ராமாயணமென்ற) பெரிய சரித்திரத்துக்கு, ஓர் இறை ஆய-ஒப்பற்ற தலைவனாகிய, இராமன் என்னும் மொய்மாண் கழலோன் - ஸ்ரீராமனென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற வலிய பெரிய வீரக்கழலையணிந்த குமாரனை, தரு-பெற்ற, நல் அறம் மூர்த்தி அன்னான்-நல்ல தருமத்தின் வடிவத்தை யொத்தவன்; (எ-று.)

செவ்வியகோல்போலுதலால், அரசாட்சியை 'செங்கோல்' என்றார். கதைக்கு மாண்பு - தன்னைப்படித்தல் முதலிய செய்தோர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை யுறுதிப்பொருள்களையும் தரவல்லதாதல். உலகு-இங்கே தீவுஎன, உலகத்தின் ஏகதேசத்தைக் காட்டிற்று: "மாயோன் மேய காடுறையுலகமும்" என்றவிடத்து 'உலகம்' என்பதுபோல. ஏழு தீவுகளாவன-நாவல் இறலி குசை கிரவுஞ்சம் புட்கரம் தெங்குகமுகு என்பன. அறமூர்த்தியன்னான்-தருமமே ஒரு வடிவமெடுத்து வந்தாற்போன்றவன். பி-ம்:—[1]மா. [2]இறைவன். [3]அரசர்க்கரைசன், அரசர்க்கிராசன், அரசாகிநின்றான். [4]இம்மாநகர்க்கு. (169)

2.—இதுமுதல்நான்குகவிகள்-அவனுடைய சிறப்புக்களைக் கூறும்.

ஆதிம் [1]மதியும் மருளும்மற னும்ம மைவும்
[2]ஏதின் மிடல்வீ ரமுமீகையு [3]மெண்ணில் [4]யாவும்
நீதிந் [5]நிலையும்மிவை [6]நேமியி னோர்க்கு நின்ற
பாதிம் முழுதும்மிவற் கேபணி [7]கேட்ப மன்னோ.

(இ-ள்.)—ஆதி மதி உம்-முதன்மையான உண்மையறிவும், அருள் உம் - இரக்கமும், அறன் உம் - தருமமும், அமைவு உம்-சாந்தகுணமும், ஏது இல் மிடல் வீரம் உம்-குற்றமற்ற வலிமையுடன் கூடிய பராக்கிரமமும், ஈகை உம் - தானமும், நீதி நிலை உம்-நீதிமார்க்கத்திற் சலியாமல் நிற்றலுமாகிய, யா உம் இவை-(அரசர்க்கு வேண்டிய) இக்குணங்களெல்லாம், எண்ணில் - ஆலோசித்துச் சொல்லுமிடத்து, நேமியினோர்க்கு - மற்றைச் சக்கரவர்த்திகளுக்கு, பாதி நின்ற-பப்பாதியேயிருந்தன; இவற்கு ஏ இந்தத் தசரத சக்கரவர்த்திக்குத்தான், முழுது உம்-எல்லாக்குணங்களும், பணிகேட்ப-ஏவல் கேட்பன; (எ-று.)

மற்றைச்சக்கரவர்த்திகளிடத்திலுள்ள நற்குணங்களெல்லாங் கூடினாலும், தசரதசக்கரவர்த்தியினிடத்துள்ள சற்குணங்களுட் பாதிக்கும் ஈடாகாவென்பதாம். அமைவு-நிறைவுமாம். ஏது-ஏதமென்பதன் கடைக்குறை. யாவும் என்பதனால் - உயர்குடிப்பிறப்பு சதுரப்பாடுடைமை ஆழ்கருத்துடைமை முதலியனகொள்க. எண்

இல் என்று பிரிப்பினுமாம். முதலிரண்டடிகளில் எண்ணும்மை மிக்கு வந்தது-எண்ணுவண்ணம். பி-ம்:—[1] மறையும். [2] ஏதில்லடல், ஏதிவ்விறல், ஏதம்மில. [3] எண்ணி. [4] ஆய்வும், யாப்பும். [5] நெறியும். [6] நேமியினேற்கு. [7] கேட்கும். *(170)*

3. மொய்[1] யார் கலிசூழ் முதுபாரின்[2] முகந்து [3] தானக்
கையார் புனலா னனையாதன கையு மில்லை
மெய்யாய [4] வேதத் துறைவேந்தருக் கேய்ந்த [5] யாரும்
செய்யாத யாகம் [6] மிவன்செய்து [7] முடித்த மாதோ.

(இ - ள்.) மொய் ஆர்கலி சூழ்-வலிமைபொருந்திய சமுத்திரஞ் சூழ்ந்த, முது பாரில்-பழமையாகிய பூலோகத்தில்,—(தசரதசக்கரவர்த்தி), கை முகந்து ஆர் தானம் புனலால்-கையினாலெடுத்து(த் தாரை வார்த்து)க் கொடுத்த தானஜலத்தினால், நனையாதன - ஈரமாகாதனவாகிய, கைஉம்-(அந்தணரது) கைகளும், இல்லை—; மெய் ஆய வேதம் துறை வேந்தருக்கு-உண்மைப்பொருளையே உணர்த்துவதாகிய வேதத்தின் வழியிலே நடக்கின்ற அரசர்கட்கு, ஏய்ந்த-(செய்தற்கு உரியனவாகப்) பொருந்தியனவும், யாரும் செய்யாத-(மற்றை வேந்தர்களில்) எவருஞ் செய்து முடிக்காதனவு மாகிய, யாகம்-யாகங்களெல்லாம், இவன் செய்து முடித்த-இவன் செய்து முடித்தனவே; (எ-று.)

இவனிடத்துத் தானம் வாங்காத அந்தணரும், இவனாற் செய்யப்படாத யாகங்களும் இல்லையென்பதாம். 'கையார் தானப் புனலால் நனையாதன கையுமில்லை' என்று வேறுவகையாகக் கூறியது-பிறிதினவிற்சியணி. தானம் வாங்கக்கூடியவர் அந்தணரேயாதலால், கையும் என்பதற்கு - அந்தணர்கையும் எனப்பட்டது. தானஞ்செய்யும்போது, தாரைவார்த்துக் கொடுத்தல், மரபு. வேந்தருக்கேய்ந்தயாகம் - இராசசூயம் அசுவமேதம் முதலியன. [7] மறந்த மாதோ என்ற பாடத்துக்கு - இளமையிலேயே செய்துவிட்டன என்று கருத்துக்காண்க. பி - ம்:-[1] ஆர்கலியின். [2] முகந்த. [3] தானங். [4] வேதம்முறை. [5] யாதும், யாவும். [6] அவன். [7] மகிழ்ந்த, சிறந்த. *(171)*

4. தாயொக்கு மன்பிற் றவமொக்கு [1] நலம்ப யப்பின்
சேயொக்கு முன்னின் [2] றொருசெல்கதி யுய்க்கு நீரால்
நோ [3] யொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு [4] மன்னன்.

(இ - ள்.)—அன்னன்-அந்தத் தசரதசக்கரவர்த்தி,—எவர்க்கு உம்-எல்லோருக்கும், அன்பின்-மிக்க அன்புஉடைமையால், தாய் ஒக்கும்-பெற்றதாயை யொத்திருப்பான்; நலம் பயப்பின்-(வேண்டிய) நன்மைகளையெல்லாம் செய்து தருதலால், தவம் ஒக்கும்-தவத்தை யொத்திருப்பான்: முன் நின்று ஒரு செல் கதி உய்க்கும் நீரால்-முக்கியனாய்நின்று ஒப்பில்லாத செல்லுதற்குஉரிய நற்கதியிற் செலுத்துதலால், சேய் ஒக்கும்-புத்திரனையொப்பான்; நோய் ஒக்கும் என்னின் -(தீயவழியிற்சென்றோரைத் தண்டித்து வருத்துதலால்) நோயை யொப்பானாயினும், மருந்து ஒக்கும்-(தண்ணளிசெய்தலால்) மருந்

தையும் ஒப்பான்; நுணங்கு கேள்வி ஆய புகுங்கால்-சூக்குமமான நூற்பொருள்களை ஆராயப்புகுமிடத்து, அறிவு ஒக்கும்-(ஐயந் திரிபுகளையகற்றித் தெரிவித்தலால்) அறிவை யொப்பான்; (எ - று.)

தாயினும்மிக்க அன்புடையா ரில்லை யாதலால், 'தாயொக்குமன்பின்' என்றார். தவம் வேண்டிய நன்மைகளெல்லாந் தரவல்லதென்பதனை "வேண்டியவேண்டியாங்கெய்தலாற்செய்தவ, மீண்டு முயலப்படும்" என்பதனாலும் அறிக. கதியென்பது-சிலேடையால், மறுமை உயர்ந்தஒழுக்கம் என்ற இருபொருளைத் தந்தது. புத்திரன் தான் செய்யுங் கிரியைகளினால் தந்தை தாயர்களை உயர்கதி பெறுவித்தலாலும், மக்களில்லாதவர் புத்என்னும் நரகத்தையடைவ ரென்பவாதலாலும், 'சேயொக்கு முன்னின்று செல்கதியுய்க்குநீரால்' என்றார். இதனால், நாட்டில் தீக்கருமங்களையொழித்து நற்கருமங்களை நடக்கச்செய்து உயிர்களை உயர்பதமுறுவிக்கின்றனன் தசரத னென்க. மூன்றாமடியினால், அரசர்க்குஉரிய தெறல் தண்ணளி என்பன உடைமையைக் கூறினர். இனி, இவ்வடிக்கு-(எவனாயினும் ஒருவன் பிறர்க்குத் துன்பத்தைச்செய்து) வியாதியை ஒப்பானாயின் (அவனுக்கு உடனே அழிவைச் செய்தலால்) மருந்தையொப்பானென்றும், (எந்தப்பிராணிக்கு ஆயினும்) வியாதிவந்து கூடுமாயின் (உடனே அதனை ஒழிக்க முயலுதலால் சக்கரவர்த்தி தானே) மருந்தொப்பானென்றும் உரைக்கலாம். கேள்வி - நூல்; இங்கு, நூற்பொருளுக்கு ஆகுபெயர். சேய் என்பது - செந்நிறமுள்ள முருகக்கடவுளை யுணர்த்தி, அழகு முதலியவற்றைக்கொண்ட புத்திரனை உவமையாகுபெயராற் காட்டும். அன்னான் - கீழ்ச்செய்யுள்களிற்கூறிய தன்மைகளையுடையவன். பி - ம்:- [1]நயம். [2]அருஞ். [3]உற்றது. [4]மன்னோ. *(172)*

5\. ஈந்தே கடந்தா னிரப்போர்கட லெண்ணி [1]னன்னூல்
ஆய்ந்தே கடந்தான் கலையென்னு மளக்கர் வாளாற்
காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் [2]றிருவின்றொடர் போக பௌவம்.

(இ - ள்.) (அவ்வரசன்), இரப்போர் கடல் - யாசகர்களாகிய சமுத்திரத்தை, ஈந்து ஏ கடந்தான் - தானஞ்செய்தலாகிய புணையையடைந்தே தாண்டினான்; கலை என்னும் அளக்கர் - சாஸ்திரங்களென்னுங்கடலுள், எண் இல் - அளவிடமுடியாத, நல் நூல் - (அந்தந்தச்சாஸ்திரங்களைப்பற்றிய) சிறந்தநூல்களை, ஆய்ந்து ஏ - ஆராய்தலாகியபுணையைக்கொண்டே, கடந்தான்—; பகை வேலை - பகைவராகிய சமுத்திரத்தை, வாளால் காய்ந்து ஏ - ஆயுதத்தாலழித்தலாகிய புணையைக் கொண்டே, கடந்தான்—: திருவின் தொடர் போகம் பௌவம் - செல்வத்தினோடு தொடர்ந்துள்ள இவ்வுலகவின்பமாகிய சமுத்திரத்தை, கருத்து முற்ற - மனம் திருத்தியடையும்படி, தோய்ந்து ஏ - அநுபவித்தலாகிய புணையைக் கொண்டே, கடந்தான்—; (எ - று)

இரப்போர் முதலியவர்களைக் கடல் என்றதற்கு ஏற்ப, ஈதல் முதலியவற்றைப் புணையென்று கூறாமையால், இஃது-ஏகதேசவுரு

வகவணி. 'கடந்தான்' என்ற சொல் பன்முறைவந்ததும், கடலின்பரி யாயச் சொற்கள் பன்முறை வந்ததும், முறையே, சொற்பொருட்பின் வருநிலையும், பொருட்பின்வருநிலையுமாம். கடல்போற் கலைகள் பரந் திருத்தலால் அவ்வக்கலைகளைப் பற்றிய நூல்களை யாராய்ந்து ஒவ் வொரு கலையையும் கரைகண்டானென்பது, இரண்டாம்வாக்கியத் தின் பொருள். இனி, [1] நுண்ணூலாய்ந்தேகடந்தானறிவென்னும் அளக்கர் என்ற பாடத்திற்கு, நுண்ணூலென்னுமளக்கர் என்று கூட்டி, நுண் நூலாகிய அளக்கரை [கடலை] அறிவாலாராய்தலா கிய புணையைக்கொண்டே கடந்தானென்க. நூற்பொருளின் நுண் மையை நூலின்மேலேற்றிக்கூறியது - உபசாரவழக்கு. வாள் -ஆயுதப்பொது. அளக்கர் - அளத்தற்கு அருமையானது என்பது பற்றிய பெயர். பி - ம்:—[2] திருவிற்றொடர். (173)

இப்பாடலுக்குப்பின் அடையாற்றுப்பிரதியிற்காணப்படும் பாடல்:-

விரிகதிர் பரப்பிமெய்ப் புவன மீதிருள்
பருகுறும் பரிதியங் குலத்திற் பார்த்திவன்
இரகுமற் றவன்மக னயனென் பானவன்
பெருகு மாதவத்தினிற் பிறந்த தோன்றலே.

வேறு.

6.—அந்த அரசன் பெயர் தசரதனென்பது.

வெள்ளமும் பறவையும் விலங்கும் [1] வேசையர்
உள்ளமு மொருவழி யோட [2] நின்றவன்
தள்ளரும் [3] பெரும்புகழ்த் [4] தயர தப்பெயர்
வள்ளல்வள் ளுறையயின் மன்னர் மன்னனே.

(இ-ள்.) (அம்மன்னவன்),—வெள்ளம்உம்-யாற்றுநீர்ப் பெருக் கும், பறவைஉம் - பட்சிகளும், விலங்குஉம் - மிருகங்களும், வேசையர் உள்ளம்உம் - விலைமகளிரது மனமும், ஒரு வழி ஓட-ஒரு வழியிலேயே செல்லும்படி, நின்றவன்-(செங்கோல் செலுத்தி)நின்ற வன்; (அவன் யாவனெனில்), தள்ள அரு பெரு புகழ்-நீக்குதற்கு அரிய பெருங்கீர்த்தியோடுகூடிய, தயரதன் பெயர் - தசரதனென்று பேர்படைத்த, வள்ளல்-வரையாதுகொடுக்குந் தன்மைவாய்ந்த, வள் உறை அயில் மன்னர் மன்னன்-தோலினலமைந்த உறையிற் பொருந்தியவேற்படையையுடைய சக்கரவர்த்தி: (எ-று.)

இந்தக் கதாநாயகனுக்குத் தந்தையின் பெயர், தசரதசக்கர வர்த்தி யென்றவாறு. முதலிரண்டடிகள் - அம்மன்னனது ஆட்சிச்சிறப்பை விளக்கும். வெள்ளம் ஒருவழியோடுதல் - மாதம் மும்மாரிபெய்தலால், ஆற்றொழுக்கு, மிகுவதும் குறைவதுமாகாமல் என்றும் ஒருபடிப்பட இடையறாது ஓடுதல்: "இயல்புளிக்கோ லோச்சுமன்னவனாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" என்பவாத லால், தவறாதுமழைபெய்தற்குச் செங்கோல்ஏதுவாதலறிக. விலங் கும்பறவையும் ஒருவழியோடுதல் - ஒன்றற்கொன்று பகைமையுடை யனவான விலங்குகளும் பறவைகளும் தம்முட்பகையில்லாது செல்

லு தல்;வேசையருள்ளம் ஒருவழியோடு தல்-தமக்கு முதலிற்கிடைத்த நாயகனே பெருஞ் செல்வமும் மிக்ககொடையும் கட்டழகும் இன்பச் சிறப்பும் உடைமையாலென்க. அயிலையெடுக்காமலே பகையை யடக்கினு னென்பது, ஏற்றடியின் கருத்து. தயரதன் = தசரதன்.சில பிரதிகளில் இதுமுதல் "எய்யென" என்ற 12-ஆம் பாட்டல் முடிவு வரையில் அரசியற்படலம் என்று உள்ளது. பி-ம்:—[1]வேசியர். [2]நின்றன, நின்றவால். [3]பெருங்குணத். [4]தசரதப். (174)

7.—உலகம் முழுவதையும் அந்தச் சக்கரவர்த்தி எளிதி லாளுதல்.

நேமிமால் வரை[1]மதி லாக நீள்[2]புறப்
[3]பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியு[4]மயோத்திமா நகரம்[5]போலுமே.

(இ-ள்.) மால் நேமி வரை - பெரிய சக்கரவாளகிரியானது, மதில்ஆக-மதிலாகவும், நீள் பாமம் மா புறம் கடல் - நீண்ட பரவிய பெரும்புறக் கடலானது, கிடங்கு ஆக-அகழியாகவும், மலை - (பூமியி னிடையிலுள்ள குல) பர்வதங்கள், பல் மணி வாமம் மாளிகை ஆக-பலவகை யிரத்தினங்களையுங் கொண்ட அழகிய வீடுகளாகவும், மன்னற்கு - அந்தத்தசரதசக்கரவர்த்திக்கு, பூமிஉம் - பூமிமுழுவதும், அயோத்திமாநகரம் போலும்—; (எ-று.)

ஒரு நகரத்தை யாளுதல்போலத் தசரதன் பூமி முழுவதையும் எளிதாக அரசு ஆண்டனனென்பதாம்: உருவகத்தை யங்கமாகக் கொண்டுவந்த உவமையணி. பாமம்-பரப்பு: ஆழமென்பாருமுளர். சிலபிரதிகளில் இச்செய்யுள் "ஆவரும்" (8)என்றதன்பின் உள்ளது. பி-ம்:—[1]எயில். [2]புறம். [3]பாமமார். [4]அயோத்தியும். [5]போலுமால், போன்றதே. (175)

8.—சக்கரவர்த்தியின் பகையின்மையும், யாவருந் தாளில் விழும் வெற்றியும்.

[1]ஆவரும் [2]வன்மைநே [3]ரறிந்து தீட்டலால்
மேவருங் [4]கையடை வேலுந் தேயுமால்
கோவுடை நெடுமணி மகுட கோடியால்
சேவடி [5]யணிந்தபொற் கழலும் தேயுமால்.

(இ-ள்.) ஆவரும் வல் மை நேர் அறிந்து தீட்டலால்-உண்டாகின்ற வலிய அழுக்கை[துருவை] நன்கு அறிந்து (அந்தத் துரு நீங்கும்படி) தீட்டுதலால், மேவரும் கை அடை வேல்உம்-விரும்பத்தக்க கையிலுள்ள வேற்படையும், தேயும் - தேயாநிற்கும்; கோ உடை நெடு மணி மகுடம் கோடியால் - (வந்துபணிகின்ற) அரசரது நீண்ட இரத்தினமயமானகிரீடங்களின் நுனிபடுதலால், சே அடி அணிந்த பொன்கழல்உம் தேயும் - (அவ்வரசனது) சிவந்த பாதத்திற் பூண்ட பொன்னாலாகிய வீரக்கழலும் தேய்வடையும்; (எ-று.)

வேற்படையைத் தாங்கிய இவ்வரசன் பகைவர் வலிமையை யறிந்து தன்வேற்படையைஒருமுறைதீட்டினுனுக, அதனையறிந்த

பகையரசர் இவனது பாதங்களில் வந்து விழுகின்றன ரென்று கருத்து. வேலும் கழலுந் தேயும் என்றதனால், இவனுடைய புகழும் செல்வமும் தேயாது மேன்மேல் வளருமென்பது தொனிக்கும். [1]யாவரும் என்ற பாடத்துக்கு, வரும் யா வன்மைஉம் நேர் அறிந்து தீட்டலால் என்று கூட்டி உரைக்க. மேவு அரு என்று பிரித்துக் கூறுவாரு முளர். இனி, ஆயுதசாலையிலே சென்றவர்கள் அந்த வேலின் வலிமையை யறிய அதனைத் தொட்டுப்பார்த்தலினால் அவ்வேலாயுதம் தேய்வடையுமென்று பொருள்கூறி,பிற அரசர்களால் இவனை எதிர்க்கமுடியாமையால் அன்னார்நட்புக் கொண்டுவந்து ஆயுதசாலையைக் காட்சிசெய்து செல்கின்றன ரென்று உரைத்தாருமுளர் ஆவரும் - 'ஆ' என்ற வினைமுதனிலை 'வா' என்னுந் துணைவினைபெற்று வந்தது. பி-ம்:—[1]யாவதும், ஏவரும். [2]வன்மம், வண்மை. [3]எறிந்து. [4]கையிடை, கரத்திடை. [5]அடைந்த, அடைந்து. (176)

9.—தசரத சக்கரவர்த்தியின் வெண்கொற்றக்குடை.

மண்ணிடை யுயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றித்
தண்ணிழல் பரப்பவு மிருளைத் தள்ளவும்
அண்ணறன் [1]குடைமதி யமையு மாதலான்
விண்ணிடை [2]மதியினை மிகையி [3]தென்னவே.

(இ - ள்.) வளர்ந்து-(தான்) வளர்ச்சிபொருந்தி, தேய்வு இன்றி-(நாளுக்குநாள்) குறைவதென்பது இல்லாமல், மண்ணிடை-இந்தப் பூலோகத்தில், உயிர் தொறுஉம் தண் நிழல் பரப்பஉம்-பிராணிகளிடத்துக் குளிர்ந்த நிழலைப் பரவச்செய்யவும், இருளை தள்ளஉம்-இருளையொழிக்கவும், அண்ணல் தன் குடை மதி அமையும் ஆதலான் - அவ்வரசனது குடையாகிய சந்திரனே போதுமாகையினால், விண்ணிடை மதியினை - ஆகாயத்தினிடத்துள்ள சந்திரனை, இது மிகை என்ன-இது அதிகப்படியானதென்று கழித்துவிடுக; (எ-று.)

தேய்வதென்ற குறையைக்கொண்ட வானத்துச் சந்திரனைப் போல அல்லாமல், இந்தப்பூலோகத்திலேயே வளர்ச்சியையேயுடைய தசரதசக்கரவர்த்தியினது குடைமதி, சந்திரனது தொழிலாகிய நிழலைப்பரப்புதல் இருளையொழித்தல்என்றதொழில்களைச் செய்துவிடுவதால், அந்தவிண்மதி வேண்டா வென்க. ஆளுகையைக் குடையென்றலும், மரபு. மதிநிழல்பரப்புதல் - நிலவொளியை வீசுதல். குடை நிழல்பரப்புதல் - எல்லாவுயிர்க்கும் இன்பஞ்செய்தல்; இருளைத்தள்ளுதல் - துன்பமொழித்தல். என்ன - வியங்கோள். குடைமதி-உருவகம்: குடைமதிக்குத் தேய்வின்மை மண்ணிடையிருத்தல் என்ற தன்மைகளைக்கூறியது - வேற்றுமையணி. பி-ம்:—[1]மதிக்குடை, குடையதன். [2]மதியினும். [3]என்பவே. (177)

10.—தசரதசக்கரவர்த்தியின் பாதுகாத்தற் சிறப்பு.

வயிரவான் [1]பூணணி மடங்கன் மொய்ம்பினான்
உயிரெலாந் தன்னுயி [2]ரொப்ப வோம்பலால்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா [3]முறைவதோ ருடம்பு மாயினான்.

(இ - ள்.) வயிரம் வான் பூண் அணி - வச்சிரத்தாலியன்ற சிறந்த ஆபரணங்களை யணிந்தவனை, மடங்கல் மொய்ம்பினன் - சிங்கம்போன்ற வலிமையையுடைய அவ்வரசன்.—உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால் - (உலகத்திலுள்ள) பிராணிகளை யெல்லாம் தன்னுயிர்போல (எண்ணிப்) பாதுகாத்தலால், செயிர் இலா உலகினில் - குற்றமற்ற இந்த நிலவுலகத்திலே, சென்று நின்று வாழ் உயிர் எலாம் - சரமாகவும் அசரமாகவும் வாழ்கின்ற எல்லாவுயிர் வர்க்கங்களிலும், உறைவது - (ஒருங்கே) தங்குதலையுடைய, ஓர் உடம்பும் ஆயினன் - உடம்பையும் போன்றான்; (எ - று.)

உலகத்துஉயிர்களெல்லாந் தங்குகின்ற உடம்பு ஒன்று இல்லாமையால், இஃது - இல்பொருளுவமையணி: இனி, பிரளயகாலத்தில் எல்லாவுயிர்களையும் தன்வயிற்றிற்கொண்டு பாதுகாக்கின்ற திருமாலின் திருமேனிபோன்றானெனினுமாம். உடலினும்உயிரை அரியபொருளாகக்கருதி அன்புபாராட்டித் தாங்குதல்போல், எல்லாவுயிர்கள்மீதும் அருமையோடு அன்புபாராட்டித் தாங்குந் தன்மையன் தசரத னென்பது, இரண்டாமடியின் கருத்து. சென்று வாழுயிர் - சரம்; நின்றுவாழுயிர் - அசரமான மரம் புல்முதலியன. பூண் - வலயமுமாம். பி-ம்:—[1] பூணினன். [2] ஒக்க. [3] உறுவது. (178)

11.—தசரதசக்கரவர்த்தியின் ஆஜ்ஞாசக்கரம்.

குன்றென வுயரிய குவவுத் தோளினன்
வென்றி [1] யந் திகிரிவெம் [2] பருதி யாமென
[3] ஒன்றென [4] வுலகிடை யுலாவி மீமிசை
நின்று [5] நின் றுயிர்தொறு நெடிது காக்குமே.

(இ - ள்.) குன்று என உயரிய - மலைபோல வுயர்ந்த, குவவு தோளினன் - திரட்சியையுடைய தோள்களையுடைய அந்தத் தசரத சக்கரவர்த்தியினது, வென்றி அம் திகிரி - ஜயத்தையுடைய அழகிய ஆஜ்ஞாசக்கரமானது, வெம் பருதி ஆம் என - உஷ்ண கிரணங்களையுடைய சூரியமண்டலம்போல, மீமிசை நின்று நின்று - மிக்க மேலிடத்திலே நின்றுகொண்டு, ஒன்று என உலகிடை உலாவி - இணையற்றதென்னும்படி உலகமுழுவதுஞ் சஞ்சரித்து, உயிர்தொறு உம் - எல்லாவுயிர்களிடத்தும், நெடிது - மிகுதியாக, காக்கும் - காத்தல் தொழிலைச் செய்யும்; (எ - று.)

உலகமுழுவதுக்கும் சூரியன் ஒருவனேயிருத்தல்போல, தசரதனுடைய ஆஜ்ஞாசக்கரமும் உலகமுழுவதுக்கும் தானொன்றேநின்று காப்பதாயிற்றென்றவாறு. மேல்நிற்றல் உலகம்முழுவதுஞ் சஞ்சரித்தல் உயிர்களைப்பாதுகாத்தல் என்ற தன்மைகளில் சூரியன் திகிரிக்கு உவமை. ஒன்று என உயிர்தொறும் நின்று நின்று நெடிது காக்கும்என இயைத்து - ஏகமாய் [தனித்து] நிற்கும் பரப்பிரமம் போல உயிர்தோறும்நின்று மிகவும்காக்கும் எனக் கூறலுமாம்; இப்பொருளில், உயிர்தொறும் நின்றுநின்று காத்தலிற் பரப்பிரமமும் திகிரிக்குஉவமை. பி-ம்:—[1] வெந்திகிரியம. [2] பரிதி. [3] ஒன்றிய. [4] உலகிசையுலாவும், உணரினுமுலாவி. [5] பல். (179)

12.—தசரதன் உலகமுழுவதையும் கருத்தோடு பாதுகாத்தல்.

எய்யென [1]வெழுபகை யெங்கு மின்மையான்
மொய்[2]பெருத் தினவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் [3]வறிஞ னோம்புமோர்
செய்யெனக் [4]காத்தினி தரசு [5]செய்கின்றான்.

(இ - ள்.) எய்என-(என்மேல் அம்பை) எறி என்று வீரவாதஞ் செய்துகொண்டு, எழு-(தன்மேல்) வருகின்ற, பகை-பகைவர்கள், எங்கும்-எவ்விடத்தும், இன்மையான்-இல்லாமையினால், மொய் பெரு - போரைப் பெறாமல், தினவுஉறு - தினவு மிகுந்த, முழவு தோளினன்-மத்தளம்போலத்திரண்டு உருண்டதோள்களையுடையவனான தசரதன்,—வையகம் முழுவதுஉம் - பூலோகமுழுவதையும், வறிஞன் ஓம்பும் ஓர்செய் என - தரித்திரனாயிருப்பவன் காக்கின்ற சிறுகழனியைப்போல, காத்து - பாதுகாத்து, இனிது அரசு செய்கின்றான்-நன்றாக அரசாட்சி செய்பவனானான்; (எ - று.)

பொருளில்லாத ஒருவன் தனக்கு உள்ள சிறுகழனியை எங்ஙனம் மிக்க கருத்தோடு காத்திடுவனோ, அங்ஙனம் உலகம் முழுவதையும் காத்தனன் தசரதசக்கரவர்த்தியென்பதாம். 'ஒருசெய்' என்ற தொடரால், உலகமுழுவதையும்காக்கையில் சக்கரவர்த்திக்குச் சிறிதும் சிரமமில்லையென்பது தொனிக்கும். தசரதனது அரசாட்சி நம் கண்முன்னே நிகழ்வதுபோல அரசுசெய்கின்றான் எனக் காட்டுகிறார். பி-ம்:—[1]எழும். [2]பொருந்தின, பெருதென. [3]வறியன். [4]காத்தினி. [5]செய்யுமால். (180)

அரசியற்படலம் முற்றிற்று.

---

5 - ஆவது திருவவதாரப்படலம்.

(இராமன் முதலிய நான்குதிருமேனியுடன் தசரதசக்கரவர்த்திக்குப் புதல்வனாகத் திருமால்) திருவவதரித்ததைக் கூறும் பகுதி.

1.—நான்குகவிகள்-குளகம்; தசரதன் தனக்குப்பின் அரசுபுரியப் புத்திரர் பிறவாக் குறையை வசிட்டனிடஞ் சொல்லுதல்.

ஆயவ னொருபக லயனே யேநிகர்
தூயமா [1]முனிவரற் றொழுது தொல்[2]குலத்
தாயருந் தந்தையுந் தவமு மன்பினன்
[3]மேயவான் கடவுளும் பிறவும் வேறுநீ.

(இ - ள்.) ஆயவன் - அப்படிப் பெருமை பெற்றவனாகிய தசரதன்,—ஒருபகல் - ஒருநாள், அயனே ஏ நிகர் - பிரமதேவனேயே யொத்த, தூய - பரிசுத்தியையுடைய, மாமுனிவரன் - சிறந்த இருடிசிரேட்டனான வசிட்டமுனிவனை, தொழுது - வணங்கி,—தொல்

குலம் தாயர்உம்-தொன்றுதொட்டுவருகிற உயர்குலத்திற் பிறந்த தாய்மார்களும், தந்தைஉம்—, தவம்உம்—, அன்பினன் மேய வான் கடவுள்உம் - பக்தியோடு விரும்பியடையப்படுகின்ற சிறந்த தெய்வமும், பிறஉம் - மற்றும் இம்மைக்கு உறுதிதரும்பொருள்களும், வேறுஉம் - மறுமைக்கு உறுதிதரும்பொருள்களும், நீ - (எனக்கு) நீயேயாவாய்; (எ-று.)—இச்செய்யுளிலுள்ள 'தொழுது' என்பது, மேல் (4) 'என்றனன்' என்பதனோடு முடியும்.

தசரதன் தன்குறையை யொழிக்கவேணு மென்று வசிட்ட முனிவனை வேண்டிக்கொள்ளப்போவதால், முதலில் அம்முனிவனை வணங்கித் துதிக்கின்றன னென்க. தாய் - பிரியத்தை நாடுபவள்: தந்தை - இதத்தை நாடுபவன்: தவம் - இம்மை மறுமைப்பயன் களை நாடுவதற்குச் சாதனமாவது. கடவுள் - தவத்தைச் செய்யும் பிராணிக்குப் பயனையளிப்பவன்: இந்நான்கும் உன்னாலேயே எனக்கு விளைவன என்று முனிவனை மன்னவன் துதிக்கின்றான். தாயரும் தந்தையும் தவமும் கடவுளும் பிறவும், (பிறர்க்கு), வேறு - தனித் தனியேயிருக்கும்: (எனக்கோ), நீ-(யாவும்) நீதான் எனினுமாம். வசிஷ்டன் - சூரியகுலத்தரசர்க்குக் குருவும் மந்திரியுமாகுபவன்; பிரமபுத்திரன்; இச்சொல்-இந்திரியங்களைவென்றவனென்று பொருள்படும். சிறப்புப்பற்றியேனும்,ஈன்ற தாய் முதலாகத் தாய்மார் ஐவராதலாலேனும் 'தாயர்' எனப்பன்மையாற் கூறியது. "முனிவரற்றொழுது" - இயல்பின் விகாரம். இதுமுதல் "என்னமாமுனிவன்" (30) என்றசெய்யுள்முடிய திருவாக்குரைத்தபடலம் என்று ஒருபிரதியில். பி-ம்:—[1] முனிவனை. [2] குணத். [3] மேயவன். (181)

2. எங்[1]குலத் தலைவர்க ளிரவி தன்னினும்
தங்குலம் [2] விளங்குறத் தரணி தாங்கினர்
மங்குந [3] ரில்லென [4] வரம்பில் வையகம்
[5] இங்குன தருளினு லினிதி னோம்பினேன்.

(இ-ள்.) எம் குலம் தலைவர்கள் - எமது குலத்து முன்னரசர்கள், இரவி தன்னின்உம் தம்குலம்விளங்குற-சூரியனைக்காட்டிலும் (மிகுதியாகத்) தங்கள்குலம் (புகழால்) விளங்கும்படி, மங்குநர் இல் என-(ஒளி) மழுங்கினவர்கள் எவருமில்லை யென்றுசொல்ல, தரணி தாங்கினர் - இவ்வுலகத்தைப் பாதுகாத்தார்கள்: வரம்பு இல் வையகம் - எல்லையில்லாத நிலவுலகத்தை, இங்கு-இக்காலத்தில், (யானும்), உனது அருளினால்—, இனிதின் ஓம்பினேன் - இனிமையாகப் பாதுகாத்தேன்; (எ-று.)

'உனதருளினால்' என்பதை முன்வாக்கியத்தோடுங் கூட்டி, என்முன்னோர்களும் யானும் இவ்வுலகத்தை மிக்கபுகழுடன் ஆட்சி புரிவது உனது திருவருளினாலேயே யென்று வசிட்டனைப் புகழ்கின்றனன் தசரதனென்க. மங்குநர்-(சந்ததியில்லாமல்) அழிந்திட்டவரென்று கூறுவாருமுளர். பி - ம்:—[1] குலத்திறைவர்கள். [2] விளங்கிட. [3] இலரென. [4] வரம்பின். [5] இங்குநின், எங்குநின். (182)

3. அறுபதி [1] னயிர மாண்டு மாண்டுற
உறுபகை [2] யொடுக்கியிவ் [3] வுலகை [4] யோம்பினேன்

[5]பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
[6]மறுகுறு [7]மென்பதோர் [8]மறுக்க முண்டரோ.

(இ - ள்.) அறுபதினாயிரம் ஆண்டு - அறுபதினாயிர வருஷம், மாண்டு உற - கழிந்துவிட, உறு பகை ஒடுக்கி-மிக்க பகைவர்களை யடக்கி, இ உலகை ஓம்பினேன் - இந்தலோகத்தைக் காத்தேன்; 'என் பின்-எனது காலத்திற்குப் பிறகு, வையகம் - பூலோகம், மறுகுறும்-(காப்பவரில்லாமையாற்) கலங்கி விடுமே', என்பது-என்பதாகிய, ஓர் மறுக்கம்-மனக்கலக்கம் மாத்திரம், உண்டு - (எனக்கு) உள்ளது; (இதனைத்தவிர்த்து),பிறிது ஒருகுறை—, இலை—இல்லை;

அறுபதினாயிரவருஷகாலம் யாதொருகுறையுமின்றி யான் அரசாண்டும், என் காலத்திற்குப் பிறகு இந்த இராச்சியத்தை ஆளுதற்குச் சந்ததியில்லையேயென்ற ஒருகுறைமாத்திரம் எனக்கு உண்டாயிருக்கின்றதென்பதாம்; தான் அரசுபுரிந்தது உலகோர் யாதோரிடையூறுமின்றி வாழவேண்டுமென்ற கருத்தினாலன்றி, இராச்சியத்தையாளவேணுமென்ற ஆசையினாலன்று என்றபடி. உறுபகை-காமம் குரோதம் முதலிய உட்பகை எனவும் கொள்க. இரண்டாமடி-முற்றுமோனை. ஆண்டும் என்றும் பிரிக்கலாம். மகா சக்கரவர்த்திகட்கு அறுபதினாயிரம் ஆண்டு கணக்கு என்ப. தசரதன் ஏறக்குறைய அறுபதினாயிரமாண்டு ஆண்டானென்பது ஸ்ரீவான்மீகத்திலும் பெறப்படும். எற்பின்வையகம் மறுகுறும் எனக் கூறியதற்கு ஏற்ப, 78-ஆங் கவியில்''நின்னருளிற்பூத்தஎன், ஆன்ற தொல் குல மினியரசின்வைகும்'' என்பர். பி - ம்:—[1]ஆயிரத்து. [2]அடக்கியே. [3]உலகம். [4]காத்தனன். [5]இறை. [6]மறுகுவது, மறுகுவள். [7]உண்டெனும். [8]மயக்கம். *(183)*

4. [1]அருந்தவ முனிவரு [2]மந்த ணாளரும்
[3]வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்
[4]இருந்துய [5]ருழக்குவ ரெற்பி னென்பதோர்
அருந்துயர் [6]வருத்துமென் னகத்தை யென்றனன்.

(இ - ள்.) அரு தவம் முனிவர்உம்-(பிறராற்செய்தற்கு) அரிய தவத்தையுடைய முனிவர்களும், அந்தணாளர்உம் - அழகிய குளிர்ந்த அருளையுடைய பிராமணர்களும், வருந்துதல் இன்றிஏ - துன்பப்படுதலில்லாமல், வாழ்வின் வைகினர்-நல்வாழ்வில் (இதுவரையில்) தங்கியிருந்தார்கள்; (அப்படியிருந்தவர்கள்), என்பின் - என் காலத்துக்குப் பின்பு, இருதுயர் உழக்குவர்-(காப்பவரில்லாமையால்) மிக்க துன்பத்தை அனுபவிப்பார்களே, என்பது - என்பதாகிய, ஓர் அருதுயர்-(நீக்குதற்கு) அரியதுன்பமொன்றே, என் அகத்தை - என் மனத்தை, வருத்தும் என்றனன்—; (எ - று.)

தனக்குச் சந்ததியில்லாமையால் 'எற்பின் வையகம் மறுகுறுமே' என்று பொதுவாகக் கூறிய அரசன், புதல்வனை விரும்புவது முனிவர் முதலியோரைக் காத்தற்பொருட்டேயன்றித் தன் நன்மையைக் கருதியன்றென்று தன்குறையை வற்புறுத்த இங்கு விரித்துக்கூறுகிறான். பி-ம்:—[1]இருந். [2]ஏனையோர்களும். [3]வருந்துயர். [4]பெருந்துயர். [5]உழக்குநர். [6]வருத்தவென். *(184)*

இங்கே சிலபிரதியில் காணப்படும் அதிகப்பாடல் வருமாறு:— "பொறையிலாவறிவு போகப்புணர்ப்பிலாவிளமை மேவத், துறையிலாவனசவாரி தூசிலர்போலத்தூய்மை, நறையிலாமலருங்கல்வி நலமிலாப்புலமை நன்னீர்ச், சிறையிலா நகரும்போலச் சேயிலாச் செல்வமென்றான்".

5.—இதுவும், அடுத்த கவியும்—குளகம்; அமரர்க்குத் திருமால் கூறியருளிய வார்த்தையை வசிட்டன் நினைத்தலைத் தெரிவிக்கும்.

[1]முரசறை செழுங்கடை [2]முத்த மாமுடி
அரசர்தங் கோமக [3]னனைய கூறலும்
விரைசெறி கமலமென் [4]பொகுட்டு மேவிய
வரசரோ ருகன்[5]மகன் மனத்தி னெண்ணினான்.

6. அலைகட னடுவணோ [6]ரனந்தன் மீமிசை
மலையென விழிதுயில் வளரு மாமுகில்
கொலைதொழி லரக்கர்தங் கொடுமை [7]தீர்ப்பனென்று
உலைவுறு மமரருக் குரைத்த [8]வாய்மையை.

(இ - ள்.) (5) முரசு அறை-பேரிகைகளொலிக்கின்ற, செழு கடை-பெரிய அரண்மனைவாயிலையுடைய, முத்தம் மா முடி-முத்துக்களைப்பதித்த பெரிய கிரீடத்தையணிந்த, அரசர்தம் கோமகன்-தசரதசக்கரவர்த்தி, அனைய-அவ்வார்த்தைகளை, கூறலும்—, விரை செறி மென் கமலம் பொகுடு-வாசனைமிகுந்த மென்மையான தாமரை மலரின் கொட்டையிலே, மேவிய-தங்கிய, வரம் சரோருகன்-சிறந்த பிரமதேவனது, மகன்-புத்திரனான வசிட்டன்,—மனத்தின்-(தன்) மனத்திலே, எண்ணினான்—; (6) (அந்த வசிஷ்டன் மனத்திலெண்ணியது எதை என்னில்?),—அலை கடல் நடுவண்-அலையுந்தன்மையுள்ள திருப்பாற்கடலினது நடுவிலே, ஓர் அனந்தன் மீமிசை-ஒப்பற்ற திருவனந்தாழ்வான் மேலே, மலை என-(நீல) மலைபோல, விழி துயில் வளரும்-கண்களால் (அறி) துயி லமர்கின்ற, மா முகில்-கரிய மேகம்போன்ற திருமால், கொலை தொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பன் என்று - (நல்லோரைக்) கொல்லுந்தொழிலையுடைய (இராவணன் முதலிய) அரக்கரது உபத்திரவத்தை ஒழிப்பேனென்று, உலைவு உறும் அமரருக்கு உரைத்த-வருத்தம் மிக்க தேவர்கட்கு (அபயமளித்து)ச் சொன்ன, வாய்மையை-சொல்லை, (ஆகும்); (எ - று.)—(6) வாய்மையை (5) எண்ணினான் என்க.

தசரதனது குறையைத் தீர்ப்பதற்கு என்ன செய்யலாமென்று வசிட்டமுனிவன் நினைக்கையில், தேவர்கட்குத் திருமால் அபயமளித்தது அம்முனிவனது நினைவிற்குவந்ததென்பதாம். பொகுடு-தாமரைக்கொட்டை. சரோருகம்-பொய்கைநீரில் முளைப்பதென்று தாமரைக்குக் காரணக்குறி. சரோருகன்-திருமாலினது நாபிக்கமலத்தில் வாழ்பவன்: 'கமல மென்பொகுட்டு மேவிய' என்று வந்ததனால், 'சரோருகன்'என்ற சொல்-பிரமனென்ற மாத்திரமாய் நின்றது. பிள்ளையில்லாக் குறையைப் போக்க மந்திரிமாரோடு தசரதன் ஆலோ

சித்து அசுவமேதயாகம்புரியத் தீர்மானித்து, வசிட்டர்முதலிய குருமார்களை வரவழைத்துத்தன்விருப்பத்தைத் தெரிவிக்க, வசிஷ்டராதியர் வேள்விக்குவேண்டியன செய்யுமாறு பணித்தனரென்று வான்மீகம்கூறும். சந்தவின்பப்நோக்கி 'கொலை தொழில்' என இயல்பாயிற்று. பி-ம்:—[1] முரசெறி, முரசநற். [2] முற்ற. [3] நினைந்து. [4] பொருட்டின். [5] தன. [6] அமளி. [7] தீர்ப்பல். [8] வாய்மையே. 'உரைசெறி சராசரமனைத்து முந்திய' என்று சில பிரதிகளில் 5-ஆம் செய்யுளின் மூன்ருமடி. (185, 186.)

7.—இனி இருபத்திரண்டு கவிகளால் திருமால்அரக்கர் கொடுமை தீர்ப்பேனென்று கூறிய வாய்மையினை விவரிக்கின்றனர்:—

தேவர்கள் சிவபிரானிடத்தே தம்குறை கூற, அவன்தன்ஞலாகா தென்று பிரமனை நாடிச் செல்லுதல்.

சுடுதொழி லரக்கராற் றொலைந்து வானுளோர்
கடுவமர் கள[1]னடி கலந்து கூறலும்
படுபொரு [2]ளுணர்ந்தவப் பரமன் [3]யானினி
[4]அடுகில னெனமறுத் தவரொ டேகினுன்.

(இ-ள்.) வான் உளோர்-மேலுலகத்திலுள்ள இந்திரன் முதலிய தேவர்கள், சுடு தொழில் அரக்கரால் தொலைந்து-(பிறரை) வருத்துந் தொழிலையுடைய அரக்கர்களால் மிகவும் வருந்தி, கடு அமர் களன் அடி கலந்து-(பாற்கடலில்தோன்றிய ஆலாகலமென்னும்) விஷம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபிரானது திருவடிகளையடைந்து, கூறலும்-(அரக்கரால் தமக்கு உண்டாயிருக்குந் துன்பத்தைச்) சொன்னவளவில்,—படு பொருள் உணர்ந்த அ பரமன்-நடந்த செய்தியை(த் தேவர்களால்) அறிந்த மேலான அக்கடவுள், 'யான்—இனி அடுகிலன்-இனிமேல் (அரக்கரை) அழிக்குஞ் செயலில் வல்லேனல்லேன்,' என-என்று, மறுத்து - தடுத்துச்சொல்லி, அவரொடு-அத்தேவர்களுடனே, ஏகினுன்-(தானுஞ்) சென்ருன்; (எ-று.)

தேவர்கள் சிவபெருமானையடைந்து கூறுதலும், தேவர்கள் இராவணுதியரான அரக்கரால் அலைக்கப்படுவதையறிந்து அக்கடவுள் 'நான் வரங்கொடுத்திருத்தலால், அவ்வரக்கரை யழித்தலாகாது' என்று சொல்லி, அத்தேவர்களுடனே பிரமனுள்ள இடத்துக்குச் சென்றன னென்க. சுடு தொழில்-(நினைக்கும்மனத்தையும்) சுடுகின்ற (அத்துணைக் கொடுந்) தொழில் என்றும், படு பொருள்

---

* இந்தப்பாட்டின் பின் "கறைமிடற்[1]றண்ணலுங் கடவுளோர்களு, மறைமுதற் கிழவனை வந்து[2]நண்ணலு, முறைமையிற் கடன்முறை [3]முற்றி முண்டகத், திறைவனு [4]மவரொடு [5]மினிதினேகினுன்" என்று ஒரு பாடல் சிலபிரதிகளிற் காணப்படினும், கதைத் தொடர்ச்சிக்கு வேண்டாமையால் உரையெழுதப்படவில்லை. பி-ம்:- [1] இறைவனும். [2] நண்ணினுர். [3] முடித்து. [4] அவருடன். [5] இனிதிருந்தனன்.

உணர்ந்த-(இனிமேல்) நடக்கப்போகின்ற செயலை(த் தன் ஞானக் கண்ணினால்) உணர்ந்த என்றும் கூறலாம். பி-ம்:-[1]அடிக். [2]உணர்த் தவப். [3]யாம். [4]அடுவதில், அடுகிலம். (187)

8.—சிவபிரான் பிரமனையடைந்து தேவர்களின் குறையைக் கூறுதல்.

வடவரைக் குடுமியி [1]னடுவண் மாசறு
சுடர்மணி மண்டபந் துன்னி நான்முகக்
கடவுளை யடிதொழு [2]தமர கண்டகர்
[3]இடிநிகர் வினையம தியம்பி னனரோ.

(இ-ள்.) வட வரை குடுமியின் நடுவண்-வடக்கிலிருக்கும் மேருமலையின் சிகரத்தின் நடுவிலேயுள்ள, மாசு அறு சுடர் மணி மண்டபம் துன்னி-குற்றமற்ற ஒளியையுடைய அரதனமயமான மண்டபத்தை(த் தேவர்களுடனே சிவபிரான்)அடைந்து,நான் முகன் கடவுளை அடி தொழுது-நான்கு திசைகளையும் நோக்கிய நான்கு முகங்களையுடையவனான பிரமதேவனைத் திருவடிவணங்கி, அமர கண்டகர் இடி நிகர் வினையம் அது-தேவர்கட்கு விரோதிகளான அசுரர்களுடைய இடிபோலக்கொடிய அச்செயலை, இயம்பினன்-சொன்னான்; (எ - று.) அரோ-ஈற்றசை.

மகாமேருமலையின் நடுவுச்சிச் சிகரத்தில் மனோவதியென்பது பிரமனுறைகின்ற இடமாதலால், அங்குத் தேவர்களுடனே சிவபிரான் சென்று, பிரமனை யடிதொழுது தேவர்கட்கு அரக்கரால் நேர்ந்துள்ள துன்பத்தைக் கூறினனென்க. கண்டகம்-முள்: அது போல வருத்துபவர்-கண்டகர். வினையம்-சூழ்ச்சியுமாம். பி-ம்:— [1]நடுவுள். [2]அமரர்...இயம்பினரரோ. [3]இடர்நிகழ், இடினிகழ்.

இச்செய்யுளின்பின் சிலபிரதியில், "[1]என்றினையனபலவியம்பி யெங்கணுங், கன்றிய [2]வ் வரக்கரை யழித்துக் காத்தியேல், ஒன்றிய [3]வுயிர்களுமுலகியாவையும், இன்று நீ [4]படைத்தியென் [5]றிசைத் துப்பின்னரும்" என்ற செய்யுள் காணப்படுகின்றது. சில பிரதிகளில் அடுத்தபாடலின்பின் சிறிது பாடபேதத்துடன் இச்செய்யுள் காணப்படுகின்றது. அப்பாடபேதங்கள் வருமாறு:—[1]என்றுவர் தம்மிடர்முழுது, என்றவரினிமைகள். [2]நிருதரை. [3]உலக முமுயிர் கள். [4]படைத்ததென்று. [5]இயம்பினரரோ. (188)

9.—தன்னாலியன்ற உதவியைத் தான் செய்துள்ளதாகப் பிரமன் கூறுதல்.

பாகசா தனன்றனைப் பாசத் தார்த்தடல்
மேகநா தன்புகுந் திலங்கை [1]மேயநாள்
போகமா மலருறை புனிதன் [2]மீட்டமை
தோகைபா கற்குறச் [3]சொல்லி னனரோ.

(இ-ள்.) அடல் மேகநாதன்-வலிமையையுடைய மேகநாதனென்னும் இராவணன்மகன், பாகசாதனன் தனை-தேவேந்திரனை,

பாசத்து-கயிற்று வடிவமானதொரு படைக்கலத்தால், ஆர்த்து-கட்டி, இலங்கை புகுந்து மேயநாள்-இலங்காபுரியிற்புகுந்து இருந்த காலத்தில்,மீட்டமை-(தான் அவ்விந்திரனை) மீட்டுவந்த செய்தியை, போகம் மா மலர் உறை புனிதன்-இனிய சிறந்த தாமரைமலரிலே வாழ்கின்ற பிரமன், தோகை பாகற்கு-மயில்போலுஞ் சாயலை யுடைய உமாதேவியை(த் தன்னிடப்) பக்கத்திற்கொண்டுள்ள சிவ பிரானுக்கு, உற-பெரிதாக, சொல்லினன் —; (எ-று.)

இனித் தன்னாற் செய்யலாவதில்லை யென்பதைக் குறிப்பித் தற்கு, பிரமதேவன் தான் இந்திரனைச் சிறைமீட்ட செய்தியை உரு த்திரமூர்த்தியினிடஞ் சொன்னானென்க. இராவணன் தன் பரி வாரத்தோடுசென்று திக்குவிசயஞ்செய்த காலத்தில் வானுலகத் துச்சென்று தேவர்களோடு பொருகையில் இராவணன்மகனான மேக நாதன் இந்திரனைக்கட்டி இலங்கையிற் சிறைவைக்க, அதனை யுணர்ந்தபிரமதேவன் 'இந்திரனைவென்றதனால் உனக்கு இந்திரசித் தென்று பேராக' என்று வரமளித்து அவ்விந்திரனைச் சிறைமீட்ட செய்தியை உத்தரராமாயணத்திற்காண்க. பிறந்தபொழுது அழுத குரல் மேகத்தொனிபோன்றிருந்ததனால், இவனுக்கு 'மேகநாதன்' என்று பெயரிடப்பட்டது. பாகசாஸநன்-பாகனென்னும் அசுரனைக் கொன்றவன். பின்னிரண்டடிகளில்,-'போகமாமலருறைபுனிதவொல் லையி, னேகிநீ மீட்டமை யியம்பவேண்டுமோ' என்ற பாடத்திற்கு-இப்போதும் எம் குறையைத்தீர்த்து உதவவேணுமென்று தேவர் கள் பிரமனைத் துதித்தன ரென்க. பி - ம்:—[1]மேவுநாட், ஏகுநாட், மேவினன். [2]மீண்டமை. [3]சொல்லினரரோ. (189)

10.—பிரமவுருத்திரர் திருமாலினால்தான் அரக்கரிடர்தீரவேணு மென்று நினைத்தல்.

இருபது கரந்தலை யீரைந் தென்னுமத்
திருவிலி வலிக்கொரு செயலின் றெங்களால்
கருமுகி லெனவளர் கருணை யங்கடல்
பொருதிடர் [1]தணிக்கினுண் டெனும்[2]பு ணர்ப்பினர்.

(இ - ள்.) 'கரம் இருபது தலை ஈர்ஐந்துஎன்னும்-கைகள் இரு பதும் தலைகள் பத்துமென்று சொல்லப்படுகிற,அ திருஇலி-நல்லறி வாகிய செம்மையற்றவனான அந்த இராவணனது,வலிக்கு-பலத்தை யொழிப்பதற்கு, எங்களால் ஒரு செயல் இன்று - எம்மிருவராலுஞ் செய்யகூடியதொரு பரிகாரம் இல்லை; கரு முகில் எனவளர் கருணை கடல்-காளமேகம்போல(க் கருந்தோற்றத்துடனே) திருக்கண்வளர்ந் தருளுகிற கிருபாசமுத்திரமாகிய திருமால், பொருது-(அவனுடன்) போர்செய்து, இடர் தணிக்கின்-(அரக்கரால் தோன்றுந் துன்பத் தைத்) தணித்தால், உண்டு-(உய்வு) உண்டாம்,' எனும்-என்கின்ற, புணர்ப்பினர்-ஆலோசனையுடையவர்களாய்,—(பிரமனும் உருத்திர னும்),—(எ-று.) 'நெஞ்சினால்வழுத்தி' என அடுத்த கவியோடு தொடரும்.

'இராவணனை யொழிப்பது, நம்மால் முடியாத காரியம்; திரு மால் தனதுகருணையால் அவ்வரக்கனை யொழித்தால்தான்

அரக்கரால் நேருந் துயர் நீங்கத் தேவர்கட்கு உய்வு உண்டாகும்' என்று அந்தப்பிரமனும் உருத்திரனும் ஆலோசித்தன ரென்ப தாம். புணர்ப்பினர்-தேவர்கள் இவ்வாறு ஆலோசித்தனரென்று மாம். திரு-இலக்குமிகடாட்சமெனினும், அருளாகிய செல்வமெனி னும் பொருந்தும். பி-ர்:—[1] தணிக்குவன். [2] புணர்ப்பினல், புணர்ப் பினன். இதன்பின் ஒருபிரதியில் "கர்த்தியே [1] யின்றெமைக்காக்க லார்தமை, யேத்தியேயிளைத்தன [2] மெழுகநான்மறைப், பாத்தியே திருப்பாற்கடலின் மேவிய, மூர்த்தியே [3] முதலவ முகிலின் மேனி யாய்" என்ற பாடல் காணப்படுகின்றது. பி-ம்:—[1] என்று. [2] எழிலி, எண்ணில். [3] முகினிறமுதல்வனேயென. அடையாற்றுப்பிரதியில் இதற்குமுன் 'ஆயவரயன் முதலமரரீறிலா, நாயகனிருபத நயந்து சிந்தைமீ, தோய்விலாதவனரு மறைகளோதியே, நேயமோடிருந் திவை நிகழ்த்தன் மேயினர்' என்ற பாடலும், இதற்குப்பின் 'அந்த காரத்தரக்கர்செய் தீமையால், நொந்துளோமிறைவா நொடிப்போதி னில், வந்துமாற்றிடும் வண்ணமெமக்கருள், உந்தையே கருணா கர னேயென" என்ற பாடலும் உள்ளன. (190)

11.—பிரமனும் உருத்திரனும் திருமாலை மனத்தினுல் தியானித்தல்.

திரைகெழு [1] பயோததித் துயிலுந் தெய்வவான்
மரகத மலையினை [2] வழுத்தி [3] நெஞ்சினுல்
கரகம லங்குவித் [4] திருந்த காலையில்
பரகதி யுணர்ந்தவர்க் [5] குதவு பண்ணவன்.

(இ - ள்.) திரை கெழு பயோததி துயிலும் - அலைகள் மிக்க திருப்பாற்கடலிலே யோகநித்திரைசெய்கின்ற, தெய்வம் வான் மரகதம் மலையினை-தெய்வத்தன்மையுள்ள பெரிய மரகதத்தின் மயமான மலையைப்போன்ற திருமாலை, நெஞ்சினுல் வழுத்தி-மனத் தினுல் தியானித்தலோடு (வாயினுல்) துதித்து,கர கமலம் குவித்து இருந்த காலையில்-செந்தாமரை மலர்போலும் (தமது) கைகளைக் கூப்பிக்கொண்டு இருந்தகாலத்தில்,—உணர்ந்தவர்க்கு பரகதி உதவு பண்ணவன் - (தனது சொரூபத்தை யுள்ளபடி) அறிந்தவ ரான தத்துவஞானிகட்குப் பரமபதத்தைக் கொடுக்குங் கடவுளான அத்திருமால்,—(எ - று.)—'கலுழன்மேல்வந்து தோன்றினன்' என அடுத்த செய்யுளில் முடியும்.

தேவர்கள் திரிகரணங்களாலும் திருமாலை வழிபட்டனரென்க. நெஞ்சினுல் வழுத்தி - மனத்தினுல் தியானித்து என்பாரு முளர். பரகதி-எல்லாப்பதவிகளினும் மேலான பரமபதம். பயஸ் - பால்; உததி-சமுத்திரம்: தமிழில் பயோததிஎன விகாரப்பட்டுவந்தது. பி-ம்:—[1] பாற்கடல்...தேவனை. [2] வழுத்து. [3] நெஞ்சினர், நெஞ்சுறக். [4] இருக்கும். [5] உதவும், உணரும். (191)

இப்பாடலின்பின் அடையாற்றுப்பிரதியிற்காணப்படும்பாடல்- "அறிதுயிலெழுந்தன னமரர்கூப்பிடு, மறைமொழித்துதியொலி வந்திசைக்கவே, நிறைகுணத்தமரர்கள் நினைத்தழைப்பதை, இறைவனுந்திருவுளத்தறிந்தங்கெய்தவே" என்பது.

12.—திருமால் கருடன்மேல் தோன்றிக் காட்சிதருதல்.

கருமுகி ருமரைக் காடு பூத்துநீடு
இருசுட ரிருபுறத் தேந்தி [1]யேந்தலர்த்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்[2]மேல்
வருவபோற் [3]கலுழன்மேல் வந்து தோன்றினன்.

(இ - ள்.) கரு முகில் - நீலமேகமானது, தாமரை காடு பூத்து -(தன்னிடத்தே) செந்தாமரைமலர்த்தொகுதி மலரப்பெற்று, நீடு இரு சுடர் இருபுறத்து ஏந்தி - நெடுந்தூரம் விளங்குகின்ற சூரிய சந்திரராகிய இரண்டு சோதிகளையும் (தன்) இரண்டுபக்கங்களிலே தரித்துக்கொண்டு, அலர் ஏந்து திருவொடுஉம் - தாமரைமலரால் தாங்கப்பெறுகின்ற இலக்குமியுடனே, பொலிய - விளங்க, ஓர் செம் பொன் குன்றின்மேல் வருவ(து) போல் - ஒருசெம்பொன்மலைமீது (ஏறி) வருவதுபோல, கலுழன்மேல் வந்து-கருடாழ்வான்மேல் (ஏறி) வந்து, தோன்றினன்-(அந்தத்தேவர்கட்குமுன்னே) காட்சிதந்தான்;

இல்பொருளுவமை. கருமுகில் - நீலமேனிக்கும், தாமரைக்காடு - வாய் கண் கை உந்தி பாதம் என்னும் அவயவங்கட்கும், சந்திர சூரியர் - சங்கசக்கரங்கட்கும், பொன்மலை - கருடனுக்கும் உவமை. "பொன்மலை மேலெழுந்த மாமுகில்போன்றுளர் வந்துகாணீர், அஞ் சிறைப்புள்ளு மொன்றேறிவந்தார்" என்றார், திருமங்கையாழ்வாரும். காடு - திரள். நம்கண்ணுக்குமுன்னே கடவுள் வந்து நிற்பது போலத் தோன்றுமாறு இச்செய்யுள் அமைந்துள்ளது. [1]ஏடவிழ் என்ற பாடத்தில் அவிழ் ஏடு - மலர்ந்த மலர் என்க. பி - ம்:—[1]ஏந் திய. [2]மீ. [3]கருடன். (192)

13.—திருமாலைத் தேவர்கள் வணங்குதல்.

[1]எழுந்தனர் [2]கறைமிடற்[3]றிறையுந் தாமரைச்
செழுந்தவி[4]சுவந்தவத் தேவுஞ் சென்றெதிர்
[5]விழுந்தன [6]ரடிமிசை [7]விண்ணு ளோரொடும்
தொழுந்தொறுந் தொழுந்தொறுங் களி[8]து ளங்குவார்.

(இ - ள்.) (அப்பொழுது), கறை மிடறு இறைஉம்-விஷக்கறை கொண்ட கண்டத்தையுடைய சிவனும், தாமரை செழு தவிசு உவந்த அ தேஉம் - தாமரைமலராகிய செழிப்பான ஆசனத்திலே விருப்பங்கொண்டு வாழ்கின்ற அந்தப்பிரமனும், விண்உளோரொடுஉம் - (மற்றை) இந்திராதிதேவர்களுடனே, எழுந்தனர் - எழுந்து,எதிர் சென்று-எதிர்கொண்டு, தொழும் தொறும் தொழும் தொறும் - துதிக்கும்பொழுதெல்லாம், களி துளங்குவார்-மகிழ்ச்சி மிகுபவர்களாய், அடிமிசை விழுந்தனர் - (அந்தத்திருமாலின்) திருவடிகளில் வணங்கினார்கள்; (எ - று.)

பலமுறை வணங்குதல் நமஸ்காரமென்றும், அருள்புரியுமளவும் எழுந்திராது வணங்கியபடியே கிடத்தல் பிரணிபாதமென்றும் சொல்லப்படும். அடிமிசை விழுந்தனர்-தண்டனிட்டு, தொழுந் தொறும் தொழுந்தொறும், களிதுளங்குவார் - மகிழ்ச்சி மிகலாயி

ஞர் என்று முடிப்பினுமாம். துளங்குவார்-ஆடுபவராயினரென்பாரு முளர். பி-ம்:—[1] எழுந்தனன், எழுந்திலன். [2] கடவுளர்க்கு, கடகளிற்று, கறையடி. [3] இறைவன். [4] ஏடவிழ், இருந்தவத், உகந்தவத். [5] விழுந்தனன். [6] அவனடி. [7] விண்ணுளோரெலாம், விண்ணுளோர்களும். [8] துலங்குவார், துடங்குவார். (193)

14.—தேவர்களின் மகிழ்ச்சி.

ஆடினர் பாடின ரங்கு மிங்கு[1] மா
ஓடின ருவகை[2] மா நறவுண் டோர்கிலார்
[3] வீடின ரரக்கரென் றுவக்கும் [4] விம்மலால்
சூடினர் [5] முறைமுறை [6] துளவத் தாண்மலர்.

(இ - ள்.) (அங்ஙனம் வணங்கிய),—துளவம் தாள் மலர் - திருத்துழாயையணிந்த (திருமாலின்) திருவடித்தாமரைமலர்களை, மூறை முறை-(இன்னவர் முதலில், பிறகு இன்னார் என்ற) முறைப்படியே, சூடினர் - (தமது) சிரசிலணிந்துகொண்ட தேவர்கள்,— அரக்கர் வீடினர் என்று - அரக்கர் அப்பொழுதே ஒழிந்துபோய் விட்டனரென்று நினைத்து, உவக்கும் - மகிழ்வதனாலாகிய, விம்மலால்-பூரிப்பினால், உவகை நறவு உண்டு - களிப்பாகிய மிக்கமதுவை யுட்கொண்டு, ஓர்கிலார் - இன்னது (செய்வதென்று) தெரியாதவர்களாய், ஆடினர் - ஆனந்தக்கூத்தாடினார்கள்: பாடினர் - கீதம்பாடினார்கள்; அங்கும் இங்கும்ஆ ஓடினர் - பலவிடங்களிலும்ஓடினார்கள்;

தாம் தியானித்தபொழுது திருமால் சேவைசாதித்ததனால், அப்பெருமானால் தமதுகுறை விரைவில் நீங்குமென்று தேவர்கள் பெருமகிழ்ச்சிகொண்டு ஆடுதல் முதலியன புரிந்தன ரென்க. பி-ம்:- [1] ஆய. [2] ஆம். [3] வீடினனரக்கன். [4] விம்மலார். [5] வானவர். [6] துளவன்.

15.—திருமால் கருடனினின்று இறங்கி மண்டபத்து ஓராசனத்திலமர்தல்.

பொன் [1] வரை [2] யிழிவதோர் [3] புயலின் பொற்புற
என்னையா ளுடையவன் [4] றோளி னின்றெம்பிரான்
சென்னிவான் றடவு[5] மண் டபத்துச் சேர்ந்தரி
துன்னுபொற் பீடமேற் பொலிந்து தோன்றினன்.

(இ - ள்.) பொன் வரை இழிவது - பொன்மயமானமலையினின்றுங் கீழிறங்குவதாகிய, ஓர் புயலின் - ஒருமேகத்தினது, பொற்பு- அழகு, உற - பொருந்த, எம்பிரான் - எமதுசுவாமியாகிய திருமால், என்னை ஆள் உடையவன் தோள் நின்று-என்னை அடிமையாகவுடைய கருடாழ்வானது திருத்தோள்களினின்றும் (இறங்கி), சென்னி வான் தடவு-(தன்) சிகரத்தால் ஆகாயத்தையளாவுகின்ற, மண்டபத்து சேர்ந்து - மண்டபத்திலெழுந்தருளி, அரி துன்னு பொன் பீடம் மேல்-சிங்கத்தின் வடிவந்தோன்றச் சித்திரிக்கப்பட்டதொரு பொன்மயமான ஆசனத்தின்மேல், பொலிந்து தோன்றினன் - விளங்கிவீற்றிருந்தருளினன்; (எ-று.)

தேவர்களிருந்த இடத்தில்வந்து அங்ஙனம் காட்சிதந்த திருமால் கருடனது தோளினின்று இறங்கி அம்மண்டபத்தே இடப்பட்ட செம்பொற் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தனனென்பதாம். எம்பெருமானது அடியார்க்கு அடிமையாயிருப்பதே திருத்தொண்டுக்குச்சிறப்பு ஆதலால், கருடனை 'என்னையாளுடையவன்' என்றார்; இனி, எம்பெருமானை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்த உபகாரத்தைத் தமக்குச்செய்த உதவியாக நினைத்து இங்ஙனங் கூறினருமாம். அரி - எல்லாமிருகங்களையும் அழிக்கவல்லது; சிங்கம். அரி - செந்நிறவொளியுமாம். தோள் - பிடர்.

தசரதன் வேள்விபுரிகையில் அவிர்ப்பாகம்பெறவந்த தேவர்கள் யாவரும் கூடியகாலத்து அத்தேவர்களின் சபையில் பிரமனை நோக்கித் தேவர்கள் தம்குறையைச்சொல்ல, பிரமன், 'மானிடரைக்கொண்டே இராவணனைக் கொல்லவேணும்' என்று தீர்மானிக்கையில், திருமால், இரட்சிக்குங்காலம் வாய்த்ததற்கு மகிழ்ந்து அங்குத் தோன்றினனென்றும், மேல்வருபவை அங்கு நிகழ்ந்தன என்றும் முதனூலிற் காணப்படுகின்றன. பி - ம்:—[1] மலை. [2] அழிவது. [3] புயற்புள்ளின். [4] தொழ. [5] மண்டபத்திற். (195)

16.—திருமாலினிடத்து அரக்கர் கொடுமையைத் தேவர்கள் கூறலுறல்.

விதியொடு முனிவரும் விண்ணு ளோர்களும்
மதி[1] வளர் சடைமுடி மழுவ லாளனும்
அதிசய முடனுவந் தய [2]லி ருந்துழி
கொதிகொள்வே லரக்கர்தங் கொடுமை [3]கூறுவார்.

(இ-ள்.) விதியொடு - பிரமதேவனுடன், முனிவர்உம்-தேவவிருடியரும், விண் உளோர்கள்உம் - வானுலகத்திலுள்ளவரான (இந்திரன்முதலிய) தேவர்களும், மதி வளர் சடைமுடி மழுவலாளன்உம்-பிறைச்சந்திரன் வளர்தற்கு இடமானசடைமுடியையுடைய மழுவென்னும் ஆயுதத்தைக்கொண்ட சிவனும்,—அதிசயமுடன்-ஆச்சரியத்தோடு, உவந்து - மகிழ்ச்சிகொண்டு, அயல் இருந்தஉழி - அருகிலிருந்தபோது, கொதிகொள்வேல் அரக்கர்தம்-சினத்தைக் கொண்ட வேற்படையையுடைய அரக்கரின், கொடுமை - கொடிய செய்கையை, கூறுவார்-(பின்வருமாறு) சொல்லலானார்கள்; (எ-று.)—அதனை அடுத்த கவியிற் காண்க.

எல்லாத்தேவரும், அதிசயமும் மகிழ்ச்சியுமடைந்து திருமாலினருகிலிருந்து அரக்கரால் நேர்ந்துள்ள கொடுமையைக் கூறுவாராயின ரென்க. விதி—படைத்தற்கடவுள். வீரரின்கொதிப்பை வேலின்மீது ஏற்றி, 'கொதிகொள்வேல்' என்றார். கொதிகொள் அரக்க ரெனக் கூட்டவுமாம். பி - ம்:—[1] தவழ், வரு. [2] இருந்தனர். [3] கூறினர். (196)

17.-அரக்கர்கொடுமையைப்பற்றிய தேவர்களின்முறையீடு.

ஐயிரு தலையினே [1]னனுச ராதியாம்
மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
செய்தவ[2]மிழந்தன திருவி னுயக
உய்திற னில்லையென் றுயிர்ப்பு வீங்கினர்.

(இ - ள்.) 'திருவின் நாயக - இலக்குமிக்குக்கொழுநனே! ஐஇரு தலையினேன்-பத்துத்தலைகளையுடைய இராவணனும், அனுசர் - (அவன்) தம்பிமாரும், ஆதி ஆம்-முதலான, மெய்வலி அரக்கரால் - உடல்வலிமையுடைய அரக்கரால், விண் உம் மண் உம்-விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும், செய் தவம் இழந்தன - தாம் செய்தற்கு உரிய தவத்தைச் செய்ய முடியாது இழந்திட்டனர்: உய்திறன் இல்லை-(இனிப்) பிழைக்கும்வழி யில்லை' என்று-என்று (அரக்கர் தீமையைச்) சொல்லி, (அப்போதுமனத்தில் தோன்றியுள்ள பெருந்துயரத்தால்), உயிர்ப்பு வீங்கினர் - பெருமூச்சுவிட்டார்; (எ-று.)

'விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் செய்கின்ற நற்கருமங்கட்கெல்லாம் அரக்கர் பேரிடையூறு இழைக்கின்றாராதலால், நீ அவர்களை யொழிக்காவிட்டால் எங்களாற்பிழைத்திருக்கமுடியாது' என்று தேவர்கள் முறையிட்டன ரென்க. அனுசர் = அநுஜர்: பின் பிறந்தவர்: என்றது - இராவணனது சகோதரரிருவருள் விபீடணனொழிந்த கும்பகர்ணனையும், அவனுடைய பெரியதாய் சிறியதாய் மார்களின் மக்களாய் உடன்பிறந்த முறையுடையரான கரன்முதலிய அரக்கரையும். தவம்-நற்காரியம். 'திருவினாயக' என்ற விளியால், கருணாரூபிணியாகிய இலக்குமி உன்னையகலாது இருத்தலால், எங்கள்திறத்து உனக்குக் கருணை தவறாதுவிளையு மென்ற குறிப்பு. பி - ம்:—[1] அனுசன். [2] இழந்தனம். (197)

இங்கே சிலபிரதிகளிற் காணப்படும் பாடலொன்று வருமாறு: "வானவ[1]ரவ்வுரை வழங்க மாமதித், தேனுறு மிதழியந் தெரியல் வேணியா, னவர் தமைக்கர மமைத்தங் கையனைத், தான்முக நோக்கியே சாற்றன் மேயினன்." பி-ம்:—[1] அம்முறை.

18.—தேவர்கள் திருமாலை நோக்கிக் கூறுவன.

எங்க[1]ணீள் வரங்களா லரக்க ரென்றுளார்
பொங்குமூ வுலகையும் புடைத்[2]த ழித்தனர்
செங்கணா யக[3]விது தீர்த்த லில்லையேல்
நுங்குவ[4]ருலகையோர் நொடியி[5]னென்றனர்.

(இ - ள்.) 'செங் கண் நாயக - சிவந்ததிருக்கண்களையுடையவனான (யாவர்க்குந்) தலைவனே! அரக்கர் என்று உளார் - அரக்கரென்பவர், எங்கள் நீள் வரங்களால் - எங்களாற் கொடுக்கப்பட்ட பெரிய வரபலத்தினால், பொங்கு மூ உலகைஉம் - செழிக்கின்ற மூன்று உலகங்களையும், புடைத்து - அடித்து, அழித்தனர் - நாசஞ் செய்திருக்கின்றார்கள்: இது - இக்கொடுமையை, தீர்த்தல் இல்லை ஏல் - (நீ அவர்களைச் சங்காரஞ் செய்து) ஒழிக்காவிட்டால், (அவர்கள்), ஓர் நொடியின் - மிகவிரைவில், உலகை-மூவுலகங்களையும், நுங்குவர்- அழித்து விடுவார்கள்' என்றனர்-என்று (தேவர்கள்) கூறினார்கள்; (எ - று.)—பிரமனே சிவபிரானே பிரதானராக இருந்து கூறுகின்றனரென்க.

நாங்கள் அறியாது அரக்கர்க்கு வரங்கொடுத்ததனால் உலகங்கட்கெல்லாம் தீம்பு உண்டாயிற்று; இவ்வுலகங்கட்கெல்லாம் தலை

வன் நீயே யாதலால், அதனைத் தீர்த்து உலகத்தைக் காக்கவேண்டுவது உனதுகடன். சற்று உபேட்சித்தாலும் அவர்களால் உலகமெல்லாம் அழிந்துவிடுமென்றனர் தேவர்களென்க. [5]'என்றனன்' என்றபாடம், ''வானவரவ்வுரை'' என்ற பாடலுள்ள பிரதிக்கு மிகவும் ஏற்கும்: இராவணன் தன்தலையையறுத்து ஓமஞ்செய்தபோது தேவர்முதலியோரால் அழிக்கமுடியாமை முதலிய வரங்களைச் சிவன் தானே தந்ததனால், தான் முன்செய்த பிழையைக் கூறிக் காக்கவேண்டுமென்று தனியே கூறலாயினனென்க. பி - ம்:—[1]நல். [2]அழித்துளார். [3]இனித். [4]உலகெலாம். (198)

19.—திருமால் தேவர்கட்கு அபயமளித்து ஒன்று கூறத்தொடங்குதல்.

[1]என்றன ரிடருழந் திறைஞ்சி யேத்தலும்
[2]மன்றலந் துளவினன் வருந்தல் [3]வஞ்சகன்
[4]தன்றலை யறுத்திடர் தணிப்பன் றாரணிக்கு
ஒன்றுநீர் [5]கேண்மென [6]வுரைத்தன் மேயினன்.

(இ - ள்.) இடர்உழந்து-துன்பத்தினால் மிகவருந்தி, என்றனர்-என்று கூறினவரான தேவர்கள், இறைஞ்சி ஏத்தலும்-வணங்கி(த்தன்னை)த்துதித்தவளவில்,—மன்றல்அம் துளவினன்-பெருமணத்தையுடைய அழகியதிருத்துழாய் மாலையைத் தரித்தவனான திருமால், - (தேவர்களை நோக்கி), 'வருந்தல்-(நீங்கள்) வருந்தாதிருக்கக் கடவீர்: (யாம்), தாரணிக்கு-பூமியில் (மானுடனாகத் தோன்றி), வஞ்சகன்தன் தலை அறுத்து - வஞ்சனைக்குணமுடைய இராவணனுடைய சிரங்களைத் துணித்துத்தள்ளி, இடர் - (நும்)துன்பத்தை, தணிப்பன்-போக்குவேன்; நீர்-நீங்கள், ஒன்று-(யான சொல்லுகின்ற) ஒருபொருளை, கேண்ம்-கேளுங்கள்,' என-என்று சொல்லி, உரைத்தல்மேயினன்-சொல்லலானான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

த்ரணிக்கு - தரணிக்கு என்பதன் நீட்டல். தாரணிக்கு-உருபுமயக்கம். 'வருந்தல், வஞ்சகன் தன்றலையறுத்திடர்தணிப்பன் றாரணிக்கு' என்று இங்குக் கூறியதை 21, 22 - ஆவது கவிகளால் விரித்துஉரைத்தல் காண்க. வஞ்சகன் - இராவணன்: பிரதானமானவனைக் கூறவே, அவனுடைய பரிவாரங்களான மற்றையவர் தலையறுத்தல் தானே பெறப்படும். தாரணிக்கு இடர்தணிப்பனென்றுமாம். வருந்தல் - எதிர்மறைவியங்கோள். கேண்ம்-விகாரம். பி - ம்:—[1]என்றபினமரர்கள். [2]மன்றலர். [3]வஞ்சகர். [4]தந்தலை. [5]கேண்மினென்று. [6]உணர்த்தல். (199)

20.—திருமால் தேவர்களைப் பூமியில் வானரங்களாகப் பிறக்குமாறு கூறுதல்.

வானுளோ ரனைவரும் வான ரங்க[1]ளாக்
கானினும் [2]வரையினுங் [3]கடித டத்தினும்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென
ஆனன மலர்ந்தன னருளி னாழியான்.

(இ - ள்.) 'வான் உளோர் அனைவர்உம்-தேவர்களாகிய நீங்கள் யாவிரும், வானரங்கள் ஆ-குரங்குகளாக, கானின்உம்-காடுகளிலும், வரையின்உம் - மலைகளிலும், கடி தடத்தின்உம் - நறுமணமுள்ள இடங்களிலும் [சோலைகளிலும்], சேனையோடு - கூட்டங்களுடனே, சென்று-போய், அவதரித்திடுமின்-பிறவுங்கள்,' என-என்றுகூறி,- ஆழியான்-பாற்கடலிற்பள்ளிகொண்டிருப்பவனாகிய திருமால், அருளின்-கருணையினால், ஆனனம்மலர்ந்தனன்-(பின்னும்) வாய்திறந்து கூறலானான்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

சிவபெருமானோடு பார்வதிதேவி இன்பமனுபவிக்கையில் தேவர்கள் தவிருமாறு வேண்ட, தனக்குப் புத்திரன்தோன்றுமுன் தேவர்கள் அதனைத் தடுத்ததனால், 'இனி, மனைவியரிடத்து நுமக்குச் சந்ததி தோன்றாதொழிக' என்று அந்தப்பார்வதி சபித்தாள்: அதனால் தேவர்கட்குத் தமது மனைவிமாரிடத்துச் சந்ததியுண்டாகாவாகையாலும், இராவணன் நந்திதேவரையிகழ அத்தேவன் முகவிகாரமுள்ளசாதிகளால் அரக்கர்நாசம் நேரிடுமென்று சாபங் கொடுத்ததனாலும் தேவர்கள் வானரராயினரென்று அறிக. வானரம்-மனிதரினும் சிறிது வேறுபட்ட வடிவமுடையதென்பது பற்றிய பெயர். கடிதடம்-அச்சமுள்ள மலைப்பக்கமென்பாருமுளர். அவதரித்தல்-மேலிருந்துகீழிறங்குதல்; தேவர்கள் வானரங்களாதல் மேல்நிலையிலிருந்து கீழ்க்குவருவதாதல் காண்க. சேனை-அவரவர்களைச் சேர்ந்த கூட்டம். ஆழியான்-நீர்நிறைந்த கடல்போலக் கருணை மிகுந்திருப்பவனென்றும், சக்கரப்படையுடையவனென்றும், கடல் போன்றதிருவுருவமுடையவனென்றுமாம். வானுளோரனைவரும்- இடவழுவமைதி. பி-ம்:—[1] ஆய். [2] மலையினும். [3] கடித். (200)

21.—இதுவும் அடுத்த கவியும்-குளகம்: திருமால் பரிவாரத்தோடு தசரதனுக்குப் புதல்வனாய்வருவோமென்றதைத் தெரிவிக்கும்.

[1] மசரத மனையவர் [2] வரமும் வாழ்வுமோர்
[3] நிசரத கணைகளா னீறு செய்ய [4] யாம்
[5] கசரத துரக [6] மாக் கடல்கொள் காவலன்
[7] தசரதன் மதலையாய் வருதுந் தாரணி.

22. வளையொடு திகிரியும் வடவை [8] தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
[9] இளைஞர்க ளெனவடி பரவ [10] வேகிநாம்
வளைமதி லயோத்தியில் வருது மென்றனன்.

(இ - ள்.) (21) 'மசரதம் அனையவர்-பேய்த்தேரையொத்த [மாயத்தன்மையுள்ள] அரக்கரின், வரம் உம்-வரத்தையும், வாழ்வு உம்-வாழ்வையும், ஓர் நிசம் ரதம் கணைகளால்-ஒப்பற்றசொந்தமான சாரமுள்ள பாணங்களினால், நீறு செய்ய-பொடிபடுத்தும்படி, கசம் ரதம் துரகம் மா கடல் கொள் காவலன் தசரதன்-யானை தேர் குதிரைகளாகிய பெரிய சமுத்திரத்தை [சேனையை]க் கொண்டுள்ள

அரசனாகிய தசரதனுக்கு, மதலை ஆய்-புத்திரனாய், தாரணி வருதும் -பூமியில் பிறப்போம்; (22) வளையொடு-சங்கமும், திகிரி உம்-சக்கரமும், வடவை தீ தர-படபாமுகாக்கினியுங் கரிந்துபோகும்படி, விளை தரு-பொங்குகின்ற, கடு உடை-விஷத்தையுடைய, விரிகொள்பாயல் உம்-விரிக்கப்படும் பாயாகியுள்ள ஆதிசேஷனும், இளைஞர்கள் என-(எனது) தம்பிமார்களாக (வந்து), அடி பரவ-(எம்)பாதங்களை வணங்க, நாம்-, ஏகி-போய், வளைமதில் அயோத்தியில்-வளைந்தமதிலையுடைய அயோத்தியாபுரியிலே, வருதும்-அவதரிப்போம்' என்றனன்-என்று (தேவர்களை நோக்கித் திருமால்) கூறி முடித்தனன்;

நமதுசங்கசக்கரங்களும் திருவனந்தாழ்வானும் நமக்குத் தம்பியராயமைய, நாம் அயோத்தியில் தசரதசக்கரவர்த்திக்குப் புத்திரனாய்ப்பிறந்து, அரக்கரது வரத்தையும் வாழ்வையும் நமது கணையா லொழிப்போமென்று கூறினனென்பதாம். (21) மசரதம்-பேய்த்தேர்: மயல்என்றசொல் மசஎன்று திரிந்தது; மயல்-பேய். இனி, மசரதம்-கொசுகின் கூட்டமுமாம்: இப்பொருளில், மசம் - மசகம்என்பதன் விகாரம்; ரதம்-கூட்டம்: மசரதமனையவர் - அற்பரென்றபடி. திரிபென்னுஞ்சொல்லணி காண்க. நிசரதம் என்பதற்கு - இலக்குத்தவறாத கணை யென்றலு முண்டு; நி - மிகவும், சரதம்-நிச்சயமான, கணையென்க: நிசம்-சத்தியம்: உலகவழக்கு.

(22) வடவை=படபா:வடசொல்; இச்சொல் - மழை முதலியவற்றால் கடலில் நீர்வெள்ளம்மிகாதபடி அதனிடையே நின்று அதன் நீரைப் பருகும் அக்கினியை முகத்திலேயுடைய பெண் குதிரையைக் காட்டும். பரதன்-சக்கரமும், இலக்குமணன்-ஆதிசேஷனும், சத்துருக்கனன் - சங்கமு மென்பர். திருமாலே நான்கு வடிவங்கொண்டுவந்ததாக முதனூல் கூறும். பி - ம்:—[1] மயரதம். [2] வாழும். [3] நிய. [4] வாய். [5] கய. [6] ஆட்கடல். [7] தயரதன். [8] த்தீத்தர, தீர்தர. தீய்தர, த்தீயென, த்தீத்தரு. [9] இளையர்கள், இளையவர். [10] ஏகியாம், எய்தியாம், ஏகினும். (201, 202)

23.—திருமாலின் சொல்லைக்கேட்ட தேவர்களின் மகிழ்ச்சி.

என்றவ னுரைத்தபோ தெழுந்து துள்ளினர்
நன்றிகொண் மங்கல [1] நாதம் பாடினர்
[2] மன்றலர் [3] செழுந்துள வணியு [4] மாயனார்
இன்றெமை [5] யளித்தன ரென்னு மேம்பலால்.

(இ - ள்.) என்று—, அவன் - அந்தத் திருமால், உரைத்த போது-சொல்லியருளிய பொழுது,—(தேவர்கள்), 'மன்று அலர் செழு துளவு அணியும் மாயனார் - பெருமணம் வீசுகின்ற செழிப்புள்ள திருத்துழாய்மாலையையணிந்த திருமால், இன்று எமை அளித்தனர்-இப்பொழுது எம்மைக் காத்தருளினர்,' என்னும் - என்பதனாலாகிய, ஏம்பலால்-மகிழ்ச்சியினால், எழுந்து துள்ளினர்-; நன்றி கொள் மங்கலம் நாதம் பாடினர் - நற்பொருளைக்கொண்ட மங்களகரமான இசைகளைப் பாடினார்கள்; (எ - று.)

மாயை - விசித்திரசக்தி; அதனையுடையவன் - மாயன்: ஆர் - சிறப்புப்பொருளது. பி-ம்:—[1] நாமம். [2] மன்றலந். [3] துளவினன். [4] மார்பினர், மாயவன். [5] அளித்தனன். (203)

வேறு.

24.—தேவர்கள் மகிழ்ந்திருக்க, திருமால் கருடன் மேல் ஏறுதல்.

போயதெம் பொருமலென்ன விந்திர னுவகை பூத்தான்
தூய[1] மா மலரு ளோனுஞ் [2] சுடர்மதி சூடி னேனும்
[3] சேயுயர்[4] விசும்புளோருந் [5] தீர்ந்ததெஞ் சிறுமை யென்றார்
மாயிரு ஞால முண்டோன் கலுழன்மேற் சரணம் வைத்தான்.

(இ - ள்.) (அப்பொழுது), எம் பொருமல் போயது என்ன - எமது துன்பம் போய்விட்டதென்று எண்ணியும் சொல்லியும், இந்திரன்—, உவகை பூத்தான்-மகிழ்ச்சி மிகுந்தான்; தூய மா மலர் உளோன்உம்-பரிசுத்தியையுடையசிறந்ததாமரைமலரில் வாழ்கின்ற பிரமதேவனும், சுடர்மதி சூடினோன்உம் - விளங்குகின்ற சந்திரனைச்சூடிய சிவனும், சேய் உயர் விசும்பு உளோர்உம்-மிகவுயர்ந்த வானுலகத்திலுள்ள தேவர்களும், எம் சிறுமை தீர்ந்தது என்றார் - எங்கள் கீழ்மை(இன்றோடு) ஒழிந்ததென்றார்; மா இரு ஞாலம் உண்டோன் - மிகவும் பெரியஉலகத்தை யுட்கொண்டருளிய திருமால், கலுழன்மேல்-கருடாழ்வான்மேல், சரணம்வைத்தான் - அடிகளை வைத்து ஏறினான்; (எ-று.)

திருமால் அபயபிரதானஞ்செய்து தசரதபுத்திரனாகத் திருவவதாரஞ் செய்வோமென்று வாக்களித்ததுபற்றி, தேவர்கள் 'போயதெம்பொருமல்' என்றார். சேயுயர், மாயிரு - ஒருபொருட்பன்மொழிகள். பி-ம்:—[1] மான். [2] துறவுரைமுனிவர்தாமும். [3] சேயிரு. [4] விசும்பினோரும். [5] தீர்ந்தது. (204)

25.—திருமால் சென்றபின்பு, ஜாம்பவான் என் அமிசமேயென்று கூறி, நீவிர்பலவானரங்களாகப் பிறவுங்களென்று பிரமன் தேவர்கட்குக் கூறல்.

என்னையா ளுடைய வையன் கலுழன்[1] மீ தெழுந்து போய
[2] பின்னர்வா னவரை நோக்கிப் பிதாமகன் பேசு கின்றான்
[3] முன்னரே யெண்கின் வேந்தன் யானென[4] மொழிகின் றான்மற்று
[5] அன்னவா றெவரு நீர்போ யவதரித் திடுமி னென்றான்.

(இ - ள்.) என்னை ஆள்உடைய ஐயன் - என்னை அடிமையாகவுடைய தலைவனாகிய திருமால், கலுழன் மீது எழுந்து போய பின்னர் - பெரிய திருவடியின்மேலே எழுந்தருளிப் போய்விட்ட பின்பு,—பிதாமகன் - பிரமன், வானவரை நோக்கி - தேவர்களைப் பார்த்து, பேசுகின்றான் - சொல்பவனாய்,—'முன்னர் ஏய் எண்கின் வேந்தன் - முன்னரே பிறந்துள்ள கரடிகளிற்சிறந்த ஜாம்பவான்,— யான் - என்னுடைய அமிசமே,' என - என்று, மொழிகின்றான் -

சொல்லி, மற்று-பின்பு, 'அன்ன ஆறு - (திருமால் நியமித்துள்ள) அந்த வகையே, நீர் எவரும்-(தேவர்களாகிய) நீங்கள், எல்லீரும், போய் அவதரித்திடுமின்-போய் அவதரியுங்கள்,' என்றான்-என்று சொன்னான்; (எ - று.)

முழுமுதற்கடவுள்சென்றபின்பு மற்றைத்தேவர்களுள் முதன்மைபெற்ற பிரமன் கூறலாயின னென்க. ஒருகால் பிரமன் தன் வாயை யங்காந்து கொட்டாவி விட்டபோது அதினின்று ஜாம்பவான் தோன்றினா னென்பது சரித்திரம். பிதாமஹன் - தந்தையாவார் யாவர்க்குந் தந்தையாகுபவன். பி - ம்:—[1]மேல். [2]பின்னை. [3]முன்னமே. [4]முடுகினேன், முடுகினான். [5]அன்னவா. (205)

26.—இந்திரன் சூரியன் அக்கினி என்பவர் தமது அமிசம் இன்னாரெனத் தெரிவித்தல்.

[1]தருவுடைக் [2]கடவுள் வேந்தன் [3]சாற்றுவா னெனது கூறு
மருவலர்க் கசனி [4]யன்ன வாலியு மகனு [5]மென்ன
இரவிமற் றெனது [6]கூறங் [7]கவற்[8]கிளை யவனென் றோத
[9]அரியுமற் றெனது கூறு நீலனென் றறைந்திட் டானால்.

(இ - ள்.) தரு உடை கடவுள் வேந்தன் - கற்பகவிருட்சங்களையுடைய தேவர்தேவனான இந்திரன், சாற்றுவான்-சொல்லத்தொடங்கியவனாய், 'எனது கூறு-எனது அமிசம், மருவலர்க்கு அசனி அன்ன-பகைவர்க்கு இடிபோன்ற, வாலியும்—, மகன்உம்-(அவன்) மகனான அங்கதனும்,' என்ன - என்றுகூற,—இரவி-சூரியன், 'அங்கு அவற்கு இளையவன் எனது கூறு என்று ஓத-அங்கே குறிக்கப்பட்ட அந்தவாலிக்குத் தம்பியாகிய சுக்கிரீவன் எனது அமிசம்' என்று கூற,-அரிஉம்-அக்கினிதேவனும், 'நீலன் எனது கூறு-நீலனென்னும் வானரன் எனது அமிசம்,' என்று—, அறைந்திட்டான்-சொன்னான்; (எ - று.)—மற்று, ஆல்-அசைகள்.

அச்சத்தையுண்டாக்கி அழித்தலில், இடி உவமை. வாலி - வாலில் வலிமையையுடையவன்: இதனை, இராவணனை வாலிற் கட்டிச் சென்றதனாலும் அறியலாம். 'இங்குவந்தார் யாவரும் பெண்வடிவமடையக்கடவர்' என்ற பார்வதிதேவியின் சாபத்தாற் பெண்வடிவம் அடைந்த ருக்ஷரஜஸென்கிறவானரராசனது வாலின் அழகைக்கண்டு காதல்கொண்ட தேவேந்திரனுக்கு அப்பெண் குரங்கினிடம் பிறந்தவன் வாலியென்றும், அவ்வாறே அதன் கழுத்தழகைக்கண்டு காமுற்ற சூரியனுக்கு அதனிடத்துத் தோன்றியவன் சுக்கிரீவ னென்றும் உணர்க: பிறவாறு முரைப்ப. அங்கதன் - வாலிக்குத் தாரையினிடம் பிறந்தவன். நீலன் - நிறம் பற்றியபெயர். பி - ம்:—[1]தருபுடை, திருவுடை. [2]கடல்கொள் வேந்தன், கடவுளோனும். [3]செப்புவான். [4]என்ன. [5]என்றான், என்ன. [6]கூறுங்கு, கூறும். [7]இவற்கு. [8]இளையான். [9]எரியும், இரவி சுக்கிரீவன்யானே யென்றெதிர் நின்றேயோத என்று சிலபிரதிகளில் மூன்றாமடி. (206)

27.—வாயுவும் ருத்திரனும் தமது அமிசத்தைக் கூற, மற்றைத் தேவர்யாவரும் வானரர்களாகப் பிறக்கச்செல்லுதல்.

வாயுமற் றெனது கூறு மாருதி [1]யெனலு மற்றோர்
காயுமர்க் கடங்க ளாகிக் காசினி யதனின் [2]மீது
போயிடத் [3]துணிந்தோ மென்றார் [4]புராரிமற்[5]றியானே [6]வாத
சேயெனப் புகன்றான் மற்றைத் திசையுளோர்க் கவதியுண்டோ.

(இ - ள்.) வாயு - வாயுபகவான், எனது கூறு - எனது அமிசம், மாருதி எனலும் - அநுமானென்று சொன்னவளவில், மற்றோர் - மற்றைத்தேவர்கள், 'காயும் மர்க்கடங்கள் ஆகி - (அரக்கரை) அழிக்கவல்ல குரங்குகளின் வடிவமாகி, காசினியதனின் மீது-பூமியிலே, போயிட - போவதற்கு, துணிந்தோம்-மனவுறுதி கொண்டோம்,' என்றார்-; புர அரி-திரிபுரசங்காரஞ் செய்தவனாகிய சிவன், யானே வாதன் சேய் என புகன்றான் - எனது அமிசமும் வாயுகுமாரனான அநுமானே யென்று சொன்னான்; மற்றை திசை உளோர்க்கு-மற்றைத் திக்குக்களிலுள்ள தேவர்கள் தனித்தனிக் கூறிப் பிறந்ததற்கு-அவதி உண்டோ-ஒரெல்லையுண்டோ? (எ-று.)

பிரமன் முதலியோர் பூமியில் தமது அமிசங்களாற் சாம்பவான்முதலாக ஆகியிருப்பதைத்தெரித்தபின், மற்றைத்தேவர்கள் தாமும் வானரங்களாகப் பிறத்தற்குத் துணிந்து சென்றார்; இங்ஙனம் தேவர்கள் வானரர்களாகப்பிறக்க ஒருப்பட்ட பின்பு, இந்தத்தேவன் இந்தவானரனானனென்று தனித்தனி ஒவ்வொருவரையும்பற்றிச் சொல்லுதல் இயலாதென்பது கருத்து. வாயு, உருத்திரமூர்த்தி என்ற இருவரது அமிசமானவன், அநுமானென்க. அநுமான் உருத்திராமிசமென்பது வான்மீகத்திலில்லை. மாருதி - மாருதனது [வாயுதேவனது] புத்திரனாதல்பற்றி, அநுமானுக்கு இப்பெயர்: இச்சொல் - இங்கே காரணங்கருதாது நின்றது. கேசரியென்னும் வானரவீரனது மனைவியாகிய அஞ்சனையென்பவளைக்கண்டு காமுற்ற வாயுபகவானது அநுக்கிரகத்தால் அவளிடம் பிறந்தவன் அநுமானென்று அறிக. பி-ம்:—[1]என்ன. [2]மீதே. [3]துணிதும். [4]புராரியும். [5]யானும். [6]யார்க்குந் தாயெனவருள்வனென்றான் சார்ந்துளோர்க்கு, வாத...திசையிலோர்க்கு. (207)

28.—பின்பு தேவர்கள் தம்மிடஞ் சேர்தல்.

[1]அருடரு கமலக் கண்ண [2]னருண்முறை யலரு ளோனும்
[3]இருடரு [4]மிடற்றி னோனு [5]மமரரு [6]மிணைய ராகி
[7]மருடரு [8]வனத்தின் மண்ணின் [9]வானர ராகி வந்தார்
[10]பொருடரு [11]மிறைவர் தத்த முறைவிடஞ் சென்று புக்கார்.

(இ - ள்.) அருள் தரு கமலம் கண்ணன் - கருணைபொழிகின்ற தாமரைமலர்போலுந் திருக்கண்களையுடைய திருமால், அருள் முறை - நியமித்தருளியபடியே, அலர் உளோன்உம் - தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவனும், இருள் தரு மிடற்றினோன்உம்-கரு

நிறம்பொருந்திய கண்டத்தையுடையனான சிவனும், அமரர்உம் - மற்றைத்தேவர்களும், இனையர் ஆகி-இத்தன்மையராய் [தத்தம் அமிசமாகுபவரதுபெயர்களைச் சொல்லிக்கொண்டு], மருள் தரு வனத்தின் - (காண்போர்க்கு அச்சத்தாலாகிற) மயக்கத்தைத் தருகின்ற காடுகளிலும், மண்ணின் -(மற்றை மலை முதலிய) நிலப்பகுதிகளிலும், வானரர் ஆகி—, வந்தார்-பிறந்தார்கள்; பொருள் தரும் இறைவர்-(தம் தம் அமிசத்தால் வானரவடிவான) புத்திரர்களைத் (தருமாறு உறுதிகொண்டு அங்ஙனமே) தருபவரான தேவர்கள், தம் தம் உறைவு இடம் சென்று புக்கார்-தத்தம் வாழிடத்தைப் போய்ச்சேர்ந்தார்கள்; (எ - று.)

முதல் மூன்றடிகளால், கவி, திருமால் நியமித்தபடியே தேவர்கள் தம்அமிசங்களாற் பல வானரவடிவத்தை யெடுத்துக்கொண்டு பிறந்தார்க ளென்று கூறிக் கதையை ஒருவாறு முடித்து, அங்ஙனம் வானரங்களாகத் தோன்றுமாறு மேரு நடுச்சிகரத்தில் தீர்மானித்த தேவர் தத்தம் இருப்பிடத்துக்குப்போயின ரென்பதை ஈற்றடியாற் கூறுகின்றார். "பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்" என்ற தொல்காப்பியப்பகுதியின் உரையாலும், "தம்பொருளென்ப தம் மக்கள்" என்ற குறளாலும், பொருள் மக்களைக் காட்டுதல் உணர்க.
பி - ம்:-[1] அருட்பெறு. [2] அரனுறை முறையிலாரும், அருண்...மலருளோனும். [3] இருட்டரு. [4] அளைமேலோனும். [5] இனையரும். [6] அனையர், எனையர். [7] மருட்டளி. [8] மனத்தின். [9] வானரம். [10] பொருட்டரும். [11] எவரும், இருவர், உருவர், இவர்கள், அவர்கள், யாரும், இவரும்.

29.—வசிட்டன் முன்னைய நிகழ்ச்சியை மனத்தில்நினைந்து தசரதனைநோக்கி யாகஞ்செய்யின் குறைதீருமெனல்.

ஈதுமுன் னிகழ்ந்த வண்ண மெனமுனி யிதயத் தெண்ணி
மாதிரம் [1] பொருத திண்டோண் மன்ன நீ வருந்த லேழ்
பூதல முழுதுங் [2] காக்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி
தீதற [3] முயலி [4] னைய சிந்தைநோய் தீரு மென்றான்.

(இ - ள்.)—'ஈது-இது, முன் நிகழ்ந்த வண்ணம் - முன்னமே நடந்த செய்தி,' என-, முனி-வசிட்டமுனிவன், இதயத்து எண்ணி -மனத்திலே நினைத்து,—(தசரதனை நோக்கி), 'மாதிரம் பொருத திண் தோள் மன்ன-மலைகளையொத்த வலிய தோள்களையுடைய அரசனே! ஐய-! நீ வருந்தல்—; ஏழ் ஏழ் பூதலம்முழுதும் காக்கும் புதல்வரை - (இந்த ஏழுதீவுகளையுடைய பூலோக மாத்திரத்தையன்றிக்) கீழ்ஏழ் மேல்ஏழ்என்ற பதினான்கு லோகத்தைக்கொண்ட இந்த அண்டமுழுவதையும் காக்கவல்ல புத்திரரை, அளிக்கும் - கொடுக்கவல்ல, வேள்வி-யாகத்தை, தீது அற முயலின்-குற்றமில்லாமல் செய்து முடித்தால், சிந்தை நோய்-(நின்) மனத்துயரம், தீரும்-நீங்கும்,' என்றான்—; (எ - று.

5, 6-ஆஞ்செய்யுட்களில் 'வாய்மையை...எண்ணினன்' என்ற கவி, 7-ஆஞ் செய்யுள்முதல், (29) "ஈதுமுன்னிகழ்ந்தவண்ணம்" என்பது வரையில், முனிவன் மனத்திலெண்ணியவகையை விவ

ரித்து, பிறகு அம்முனிவன் தசரதனிடம் கூறியதை 'மாதிரம் பொருத...தீரும்' என்பதனால் தெரிவிக்கின்றானென்க.

முன்நிகழ்ந்த நிகழ்ச்சியை மனத்திலெண்ணிய வசிட்டமுனிவன், 'தேவர்களின் குறைதீரத் தசரதன்குறை தீரவேண்டும்; தசரதன் குறைதீர்ந்தால் தேவர்கள் குறை தீரும்' என்று தீர்மானித்ததனால், யாகஞ்செய்வதால் அந்தவியாஜத்தினால் திருமால் திருவவதரிப்பனென்று உறுதிகொண்டு, தசரதனை நோக்கி 'நீ வேள்வி முடித்தால் உன்மனக்குறை நீங்கப் புத்திரர் உதிப்பர்' என்றனனென்க. வேள்வியின் சிறப்பை யுணர்த்துவான்போல், நீ தொடங்கும் வேள்வி ஏழேழ்பூதலம் காக்கும் புதல்வரையளிக்கு மென்பதைக் குறிப்பித்தது, கருதத்தக்கது. புதல்வரையளிக்கும் வேள்வி, புத்திரகாமேஷ்டி எனப்படும். பூதலம்-உலகமென்ற பொருளைத் தந்தது. மாதிரம் பொருத - எல்லாத்திக்கிலுள்ளாரையும் பொருதுவென்ற எனினுமாம். தீது - திரவியலோபம் கிரியாலோபம் நியமலோபம் முதலியன. பி - ம்:—[1]பொருந்து, பொருதுங். [2]தாங்கும், ஆளும். [3]முயற்றில். [4]உன்றன். (209)

30.—மன்னவன் அதுகேட்டு மகிழ்ந்து, 'யாகத்திற்குத் தான் செய்யவேண்டுவதென்?' என வினாவல்.

என்னமா [1]முனிவன் கூற [2]வெழுந்தபே ருவகை [3]பொங்க
மன்னவர் மன்ன [4]னந்த மாமுனி சரணஞ் சூடி
உன்னையே [5]புகல்புக் கேனுக் [6]குறுகண்வந் தடைவ துண்டோ
[7]அன்னதற் கடியேன் செய்யும் [8]பணியினி [9]தளித்தி யென்றான்.

(இ - ள்.)—என்ன-என்று, மா முனிவன்-வசிட்டமகாமுனிவன், கூற-சொல்லியருள,—மன்னவர் மன்னன் - தசரதசக்கரவர்த்தி,—எழுந்த பேர் உவகை பொங்க-(அதுகேட்டு) உண்டான பெருங்களிப்பு மிக, அந்த மா முனி சரணம் சூடி - அந்தச் சிறந்த முனிவனது திருவடிகளை முடிமேலணிந்து [சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து] 'உன்னை ஏ புகல் புக்கேனுக்கு-உன்னையே சரணமாக அடைந்த எனக்கு, உறுகண் வந்து அடைவது உண்டு ஓ-துன்பமொன்று வந்து சேருவது உள்ளதோ? [இல்லையென்றபடி]; அன்னதற்கு-அவ்யாகத்தின்பொருட்டு, அடியேன் செய்யும் பணி-யான் செய்ய வேண்டுந் தொழிலை, இனிது அளித்தி-இனிமையாகக் கூறியருளுவாயாக,' என்றான்-என்று வினவினான்; (எ-று.)

முனிவனிடத்துத் தனக்குள்ள நம்பிக்கையைத் தெரிவித்து, தான் இப்போது செய்யவேண்டிய பணியை மொழிந்தருளுமாறு வேண்டுகின்றனன் தசரதன். இச்செய்யுளோடு திருவாக்குரைத்த படலம் என்றொருபிரதி. [1]பி-ம்:—வசிட்டன். [2]எழுந்துபேர், எழு பெரும். [3]பொங்கி, எய்தி. [4]மிக்க. [5]புகலப் புக்கேன். [6]துயரமது, உறுதுயர். [7]இன்றைக்கு. [8]பணியினை, பணிவிடை, பணியினி, பணியென்கொல். [9]அருளுக, இயம்புக. (210)

31-33.—இதுமுதல் மூன்றுகவிகள்-குளகம்: அப்போது வசிட்டமுனிவன் தசரதனைநோக்கிக் கூறும் உத்தரம்.

31. மாசறு [1]சுரர்க ளோடு மற்றுளோர் தமையு மீன்ற
காசிப னருளு மைந்தன் [2]விபண்டகன் கங்கை சூடும்
ஈசனும் [3]புகழ்தற் கொத்தோ னிருங்கலை [4]பிறவு [5]மெண்ணில்
தேசுடைத் தந்தை யொப்பான் றிருவருள் [6]புனைந்த மைந்தன்.

32. வருகலை பிறவு நீதி மனுநெறி [7]வரம்பில் வாய்மை
[8]தருகலை [9]மறையு மெண்ணிற் சதுமுகற் குவமை சான்றோன்
திருகலை யுடைய விந்தச் செகத்துளோர் தன்மை தேரா
ஒருகலை [10]முகச்சி ருங்க [11]வுயர்தவன் வருதல் வேண்டும்.

33. பாந்தளின் மகுடகோடி பரித்த[12]பா ரதனில் வைகும்
[13]மாந்தரை விலங்கென் றுன்னு [14]மனத்தன்[15]மா தவத்தனெண்
பூந்தவி [16]சுகந்து ளோனும் புராரியும் புகழ்தற்கொத்த [ணின்
சாந்தனல் வேள்வி முற்றின் தனயர்களுளரா[17]மென்றான்.

(இ - ள்.)—(31) (அப்போது வசிட்டமுனிவன் தசரதனை நோக்கி), கங்கைசூடும்ஈசன்உம் புகழ்தற்குஒத்தோன்-கங்கா நதியை முடியில்தரித்த சிவபிரானும் புகழ்தற்கு உரியவனும், இரு கலை பிற உம் எண்ணில் தேசு உடை தந்தை ஒப்பான்-பெரிய வேதம் முதலிய நூல்களிலும் மற்றை அறிவு ஒழுக்கம் அடக்கம் முதலியவற்றிலும் ஆலோசிக்குமிடத்து ஒளியையுடைய தன் பிதாவாகிய காசியபமுனிவனை யொப்பவனுமான, மாசு அறு சுரர்களோடு மற்றுளோர் தமை உம் ஈன்ற காசிபன் அருளும்-குற்றமற்ற தேவர்களுடனே மற்றுமுள்ள அசுரர்முதலியோரையும் பெற்ற காசியபமகாமுனிவன் பெற்றருளின, மைந்தன்-குமரன், விபண்டகன் - விபண்டகனென்று பேருள்ளவன்: (அவனுடைய), திருவருள் - மேலான கருணையை, புனைந்த-பெற்ற, மைந்தன் - குமாரனும், (32) வரு கலை பிறஉம்-வழங்கி வருகிற மற்றைச்சாஸ்திரங்களிலும், நீதிமனுநெறி-(மனிதர்க்குஏற்ற) நீதியைத் தெரிவிக்கும் மனுதருமசாஸ்திரத்திலும், வரம்பு இல் வாய்மை தரு கலை மறைஉம்-அளவில்லாத [அனந்தங்களாயிருக்கின்ற] உண்மைப்பொருளையே கூறுகின்ற சாஸ்திரமாகிய வகுப்புக்களையுடைய வேதத்திலும், எண்ணில் - ஆலோசிக்குமிடத்து, சதுமுகற்கு-நான்முகனாகிய பிரமதேவனுக்கு, உவமை சான்றோன்-உவமைப் பொருளாகச் சிறந்தவனுமாகிய, திருகு அலை உடைய இந்த செகத்து உளோர்தன்மை தேரா ஒருகலை சிருங்கம் முகம் உயர் தவன் - மாறுபடுந்தன்மையுடையவரான கடலாற் சூழப்பட்ட இங்கிலவுலகத்திலுள்ளவர்களின் தன்மைகளை அறியாதவனாகி ஒருமான்கொம்பை முகத்திலேயுடையவனான சிறந்த தவத்தை யுடையவன் [ருசியசிருங்கமுனிவன்], வருதல் வேண்டும்—; (33) பாந்தளின் மகுடம் கோடி பரித்த பார் அதனின்-ஆதிசேஷனுடைய (அனேக) முடிகளின் நுனிகளினாற் சுமக்கப்பட்ட பூமியில், வைகும்-தங்குகின்ற, மாந்தரை-மனிதர்களை, விலங்கு என்றுஉன்னும்-மிருகங்களென்று நினைக்கிற, மனத்தன் - மனத்தையுடையவனும், மாதவத்தன்-பெருந்தவத்தையுடையவனும், எண்ணில் பூதவிசுஉகந்து

ளோன்உம் புராரிஉம் புகழ்தற்குஒத்த சாந்தனல் - ஆலோசிக்கு மிடத்துத் தாமரைமலரை ஆசனமாக விரும்பிக்கொண்டுள்ளவனுன பிரமதேவனும் திரிபுரதகனஞ் செய்தவனுன சிவனும் புகழ்தற்கு ஏற்ற சாந்தகுணத்தையுடையவனுமான அந்தருசியசிருங்கமுனிவனுல், வேள்வி - (இப்பொழுது நீ செய்யக்கருதியுள்ள) யாகத்தை, முற்றின்-செய்துமுடித்தால், தனயர்கள்-புத்திரர்கள், உளர்-தோன்றுவர், என்ருன்-என்று (மறுமொழி) கூறினுன்; (எ - று.) ஆம்-அசை.

காசியபனுக்குப் புதல்வன், விபண்டகனென்னும் முனிவன்; அவனுக்குப்புதல்வன் ருசியசிருங்கனென்று பேர்பெற்றவன்; மனிதர்களையேபாராமல் தபோவனத்திலேயே தன் தந்தைக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்து விட்டதனுல், நாடுநகரங்களில் வாழ்கின்ற மானுடரை விலங்குகள்போலுமென்று நினைப்பவன்; சகல சாஸ்திரங்களிலும் வல்லவன்; மகாதபஸ்வி; பிரமருத்திரரும் புகழும்படி பொறுமைவாய்ந்தவன். அந்த முனிவன் வந்து யாகத்தை முற்றுவித்தால், நீ கருதியபடி புத்திரர் பிறப்பரென்று வசிட்டன் தசரதனுக்கு மறுமொழி கூறின னென்க.

தசரதன் புத்திரனில்லாக் குறையைப் போக்கிக்கொள்ளும் பொருட்டு அசுவமேதயாகஞ் செய்யுமாறு வசிட்டன் முதலிய அமைச்சர்களோடு ஆலோசித்து உறுதிசெய்து கொண்டபின்பு, ஏகாந்தத்தில் சுமந்திரன் தசரதனைச் சார்ந்து, 'ருசியசிருங்கமுனிவனை ருத்விக்காகக்கொண்டு யாகஞ்செய்யத் தசரதனுக்குப் புத்திரர் தோன்றுவரென்று இருடியரின் முன்னிலையில் ஸநத்குமாரபகவான் முன்பு சொல்லியுள்ளார்' என்று தெரிவிக்க, பின்பு தசரதன் சுமந்திரனைக்கொண்டு வசிட்டனிடத்து அந்தச்செய்தியைத் தெரிவித்து, ருசியசிருங்கரை வரவழைக்க அனுமதிபெற்று அழைத்து வந்தனனென்று முதனூலிற் கூறியுள்ளது.

31.—காசியபபிரமாவானவன் தக்ஷபிரமாவின் பெண்களுள் அதிதி முதலாகிய பதின்மூவரைமணந்து,தேவர்தைத்தியர் தானவர் மனிதர் மிருகங்கள் பறவைகள் செடிகொடிவர்க்கங்கள் ஊர்வன நீர்வாழ்வன என்னும் இவற்றைப் பெற்றனனென்பதை, ஆரணிய காண்டத்திற் சடாயுகாண்படலத்தி லுள்ள கவிகளாலு மறிக. "சங்காரத் ஜ்ஞாநம் அந்விச்சேத் [சங்கரக்கடவுளிடத்தினின்று ஞானத்தை (ப்பெற) விரும்பக்கடவன்]" என்றவாறு பெருஞானம் படைத்தவனுதலால், அந்தச் சிவனும் புகழுமாறு ஞானத்தைப் பெற்றவனென்று விபண்டக முனிவரைக் கூறினுர். பி - ம்:—[1] சுரரினேடு,சூரினேடு. [2] விபாண்டகன். [3] புகழற்கு. [4] பலவும். [5] எண்ணித். [6] பெற்ற. இதுமுதல் "உலப்பில" (*81*) என்பது வரையில் கலைக்கோட்டுமுனிபடலம் என்று ஒருபிரதி.

32.—ஒருகலைமுகச் சிருங்க வுயர் தவன்-ருசியசிருங்கன்: தமிழில் 'கலைக்கோட்டு முனிவன்' எனப்படுவன்: கலைமானினிடமாகப் பிறந்ததனுல், இம்முனிவன் முகத்தில் ஒற்றைக்கலைமான் கொம்பை

யுடையவ ஞனன்: மான் முகமுடையவ னல்லன். இந்த முனிவனைப் பற்றியே 'நெற்றியிற்கொம்பு முளைத்தவனே?' என்றபேச்சு நிகழ்வதாயிற்று. திருகு என்பதை அலைக்கு அடைமொழியாக்கி, திருகலையென்பது-கட்லுக்கு அன்மொழி யென்றேனும், திருகலையென்றே இரண்டாம் வேற்றுமையுருபு ஏற்ற தொழிற்பெயரென்றேனும் கொள்ளினுமாம். செகத்துளோர் தன்மை-ஆண்பெண்ணாக இருக்கும் தன்மை. சிருங்கம் - கொம்பு. திரிபு என்னுஞ்சொல்லணி காண்க. பி - ம்:—[7] யாவும், வரம்பும், மரபும், வாய்ப்பு, வரவும். [8] உரு. [9] பிறவும். [10] முகத்துச்சிருங்க, முகத்துச் சிங்கத்து. [11] உயர்த்தவன்.

33.—ஒருகலைமுகச்சிருங்க வுயர்தவன் வந்துசெய்யவேண்டுவது வேள்வியை முற்றுவித்த லென்று வசிட்டமுனிவன் இச்செய்யுளால் தெரிவிக்கின்றான். சிலபிரதிகளில், 'மாந்தரை ...உன்னு மனத்தமர்தவத்தெதன்றெண்ணி' என்று இரண்டாமடி. பி - ம்:—[12] பாரிதனின், பார்தன்னில், [13] மாந்தர்கள். [14] மனத்த. [15] மாதவத்தினெண்ணில், மாதவத்தையெண்ணில், மாதவத்தினெண்ணிப். [16] இருந்து, உவந்து. [17] அன்றே. *(211, 212, 213)*

34.—தான் செய்யவேண்டுவதைக்கூறுமாறு தசரதன் வசிட்டனை வினவல்.

[1] ஆங்குரை [2] யினைய கூறு [3] மருந்தவர்க் கரசன் செய்ய
பூங்கழ றெழுது வாழ்த்திப் பூதல மன்னர் மன்னன்
தீங்கறு குணத்தான் மிக்க செழுந்தவன் யாண்டை யுள்ளான்
ஈங்கியான் [4] புரியுந் தன்மை [5] யியம்புதி [6] யிறைவ வென்றான்.

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது, இனைய உரை - இத்தன்மையனவான வார்த்தைகளை, கூறும்-சொல்லுகின்ற, அருதவர்க்கு அரசன்-அருமையான தவத்தைக்கொண்ட முனிவர்களுட் சிறந்தவனை வசிட்டனுடைய, செய்ய பூ கழல் தொழுது - அழகிய தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்கி, வாழ்த்தி - துதித்து, பூதலம் மன்னர் மன்னன் - நிலவுலகத்திலுள்ள அரசர்க்கு அரசனான தசரத சக்கரவர்த்தி,—(அம்முனிவனை நோக்கி), 'இறைவ - தலைவனே! தீங்கு அறு குணத்தால் மிக்க செழுதவன்-குற்றமற்ற (நற்) குணங்களாற் சிறந்த மிக்கதவத்தையுடைய அந்த ருசியசிருங்கன், யாண்டை உள்ளான் - எங்கேயிருக்கிறான்? ஈங்கு - இப்போது, யான்—, புரியும்-செய்யவேண்டிய, தன்மை - செயல், (இன்னதென்பதை), இயம்புதி-சொல்லியருள்வாய்,' என்றான்-என்று வினவினான்;

புத்திரகாமயாகத்தை இருசியசிருங்க முனிவனைக்கொண்டு முற்றுவிக்கவேணு மென்று வசிட்டன் தெரிவித்ததனால், அம்முனிவனுள்ள இடத்தையும், அவனை வருவிக்கும் வகையையும் மன்னன் வினவினா னென்க. தீங்கு - காமவெகுளிமயக்கங்கள். பி - ம்:—[1] ஆங்கவன். [2] அனைய. [3] அருந்தவத்தரசன், அருந்தவ வசிட்டன். [4] கொணருந்தன்மை. [5] அருளுதி. [6] விரைவின். *(214)*

35.—இருபத்தொருகவிகள் - வசிட்டன் வார்த்தை: இருசியசிருங்கமுனிவன் வரலாறு:—

வேறு.

உரோமபாதனென்று ஒருவன் உளனென்பது.

புத்தான கொடுவினையோ[1] டருந்துயரம்போ[2] யொளிப்பப்புவனந் தாங்குஞ், சத்தான குணமுடையோன் [3]தயாவோடு தண்ணளியின் சாலைபோல்வான், [4]எத்தாலும் [5]வெலற்கரியான் மனுகுலத்தே வந்துதித்தோ[6]னிலங்கு[7]மௌலி, உத்தான பாதனரு ளுரோமபத னென்றுளனிவ் வுலகை யாள்வோன்.

(இ - ள்.) (வசிட்டமுனிவன் தசரதமன்னனைநோக்கிக் கூறு வான்:—) புவனம் தாங்கும் - நிலவுலகத்தைக் காக்கின்ற, சத்து ஆன குணம் உடையோன்-நல்லனவான குணங்களை யுடையவனும், தயாவோடு தண் அளியின் சாலை போல்வான்-அன்புக்கும் குளிர்ந்த அருளுக்கும் உறைவிடம்போல்பவனும், எத்தால்உம் வெலற்கு அரியான் - (பகைவர்செய்கின்ற) எந்த உபாயத்தினாலும் வெல்ல முடியாதவனும், மனு குலத்துஏ வந்து உதித்தோன் - சுவாயம்புவ மனுவின்குலத்திலே வந்து பிறந்தவனும், இலங்கு மௌலி - விளங்குகின்ற கிரீடத்தையணிந்தவனுமான, உத்தானபாதன் - உத்தானபாதனென்னு மரசன்,—புத்து ஆன கொடுவினை யோடு அரு துயரம் போய் ஒளிப்ப - புத்தென்று சொல்லப்படுகிற கொடியநரகமும் (நீக்குதற்கு) அரிய மற்றைத்துன்பங்களும் சென்று ஒளிக்கும்படி, அருள்-பெற்ற, உரோமபதன்என்று - ரோமபாத னென்று சொல்லப்பட்டு, இ உலகை ஆள்வோன்-இப்பூலோகத்தை யரசாள்வானொருமன்னன், உளன்—; (எ - று.)

இருசியசிருங்கன் உரோமபாதனென்ற மன்னவனிடத்து இருத் தலாலும், அம்மன்னவன் தான் வளர்த்த தசரதன்புதல்வியான சாந்தையென்ற மகளை அம்முனிவனுக்கு மணஞ்செய்து தந்ததனா லும், 'முனிவனையழைத்துவரலாம்' என்று சொல்லி, தசரத மன்ன வன் மனத்திற் படுமாறு அந்த ருசியசிருங்கமுனிவனது வரலாற் றைக் கூறுகின்றனன் வசிட்ட னென்க.

சுவயம்புவென்று பேர்கொண்ட பிரமனுக்கு மனுஎன்று ஒரு குமாரன் தோன்றினான்; அவன் சுவாயம்புவமனுவெனப்படுவான்; அவன்மகன், உத்தானபாதன்; அவனுக்குஉரோமபாதனென்று ஒரு மகன் தோன்றினானென்க. உரோமபதன் = ரோமபாதன்: காலில் மயிருள்ளவனென்று பொருள்: இவன், அங்கதேசத்திற்கு அரசனாக இருந்தான். நரகத்தை வினையென்றது-காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. மகன் புத்தென்னும் நரகத்தை யடைய வொட்டாது பெற்றோரைக் காப்பனென்பது நூற்கொள்கை யாத லால், 'புத்தானகொடுவினைபோயொளிப்ப' என்றார். தயை-அன்பு: அளி - அருள். அன்பின் பயன் அருள்: "அருளென்னுமன்பீன் குழவி" என்றார், வள்ளுவரும். எத்தாலும் - சாமம் பேதம் தானம் தண்டம் என்னும் உபாயங்களுள் எதனாலு மென்க.

பி-ம்:—[1] இருந். [2] ஒழியப். [3] தயையினெடு [4] எத்தானும். [5] விலக்கரியான். [6] இலகு. [7] மோலி. (215)

36.-உரோமபாதமன்னவனது நாட்டில் மழைபெய்யாதாக, முனிவர்கள் இருசியசிருங்கன் வந்தால் மழையுண்டாகு மெனல்.

அன்னவன்ருன் [1]புரந்தளிக்குந் [2]திருநாட்டி னெடுங்[3]கால [4]மளவதாக, மின்னியெழு [5]முகிலின்றி வெந்துயரம் [6]பெருகுதலும் [7]வேந்தன் நன்னூன், மன்னுமுனி வரையழைத்து [8]மாதானங் [9]கொடுக்கினும்வான் வழங்கா [10]தாகப், பின்னு [11]முனி வரர்க் கேட்பக் கலைக்கோட்டு முனிவரின்வான் பிலிற்று [12]மென்ருர்.

(இ - ள்.) அன்னவன் புரந்து அளிக்கும் திரு நாட்டில் - அவ்வுரோமபாத மன்னவன் காத்தருள்கின்ற அழகிய (அங்க) தேசத்திலே, நெடு காலம் அளவு அது ஆக - வெகுகாலமளவாக, மின்னி எழு முகில் இன்றி - மின்னல் மின்னிக்கொண்டு மேலெழுகின்ற மேகங்கள் (வந்து மழைபெய்தல்) இல்லாமல், வெம் துயரம் பெருகுதலும் - கொடிய பஞ்சத்துயர் மிக்க வளவில்,—வேந்தன் - அவ்வுரோமபாத மன்னவன், நல் நூல் மன்னும்முனிவரை அழைத்து - (வேதங்கள் முதலிய) சிறந்த நூல்களையறிதல் பொருந்திய முனிவர்களை வரவழைத்து, மா தானம் கொடுக்கின்உம்-பெரிய தானங்களைக் கொடுத்தபின்னும், வான் வழங்காது ஆக - மேகம் மழை பொழியாதாக, பின்உம்-அதன்பின்பும், (அரசன்), முனிவரர் கேட்ப - இருடிசிரேட்டர்களை ('என் செய்வது?' என்று)வினவ,—(அவர்கள்),கலைக்கோட்டு முனி வரின் வான் பிலிற்றும் என்ருர்-இருசியசிருங்க முனிவன் (இந்நாட்டில்) வந்தால் மழைபெய்யுமென்று சொன்னுர்கள்; (எ-று.) பி - ம்:—[1] புரிந்து. [2] திருநாட்டுள். [3] கால. [4] அழலது. [5] புயல். [6] பருகுதலும். [7] வேதநன்னூல், வேதநீதி. [8] மாதனங், வரதானங். [9] கொடுத்தலும், கொடுத்தும். [10] ஆகிப். [11] மறையவர்க், முனிவரை, முனியவற், முனிவரற். [12] என்ருன். (216)

37.—'இருசியசிருங்கமுனிவனை யழைத்துவருவது எங்ஙனம்?' என்று உரோமபாதன் சிந்திக்க, சிலவிலைமகளிர் தாம் அழைத்துவருவதாகக்கூறல்.

ஓதநெடுங் கட[1]லாடை யுலகினில்வாழ் மனிதர்விலங் கெனவே [2]யுன்னுங், கோதில்குணத் தருந்தவனைக் கொணரும் [3]வகை [4]யாவதெனக் [5]குணிக்கும் வேலைச், சோதி[6]நுதற் [7]கருநெடுங்கட் டுவரிதழ்வாய்த் தரளநகைத் துணைமென் கொங்கை, மாதரெழுந் தியா [8]மேகி யருந்தவனைக் கொணர்துமென வணக்கஞ் செய்தார்.

(இ - ள்.) (அதுகேட்டு அரசன்), 'ஓதம் நெடு கடல் ஆடை உலகினில் வாழ் மனிதர் விலங்கு எனவே உன்னும் - அலைகளைக் கொண்ட பெரியகடலை ஆடையாகவுடைய [கடலாற் சூழப்பெற்ற] பூலோகத்திலே வாழ்கின்ற மனிதர்களை மிருகங்களென்றே யெண்ணுகின்ற, கோது இல் குணத்து - குற்றமற்ற குணத்தையுடைய

அரு தவனை - (பிறரால்) செய்வதற்கு அரிய தவத்தையுடைய அந்த இருசியசிருங்கமுனிவனை, கொணரும்-(இந்த அங்க தேசத்துக்கு) அழைத்துக்கொண்டு வருதற்குஉரிய, வகை-உபாயம், யாவது - ஏது?' என - என்று, குணிக்கும் - சிந்தைகொள்கின்ற, வேலை - பொழுதில்,—சோதி நுதல் - ஒளிபொருந்திய நெற்றியையும், கரு நெடு கண்-கறுத்து நீண்ட கண்களையும், துவர் இதழ் வாய்-சிவந்த அதரத்தோடுகூடிய வாயையும், தரளம் நகை - முத்துப்போன்ற [வெள்ளிய] பற்களையும், துணை மெல் கொங்கை - இரட்டையாக வுள்ள மெல்லிய தனங்களையுமுடைய, மாதர் - விலைமகளிர் சிலர், எழுந்து—, 'யாம் ஏகி - நாங்கள்போய், அருதவனை - அந்த இருசிய சிருங்கமுனிவனை, கொணர்தும் - (இந்நகரத்துக்கு) அழைத்துக் கொண்டு வருவோம்,' என-என்று சொல்லி, வணக்கம் செய்தார்—:

கடலைப் பூமிதேவிக்கு ஆடையாகக் கூறுதல், கவிமரபு. முதலடியால், அந்த இருசியசிருங்கன் உலகத்தாரை இலட்சியஞ்செய்யாதவனென்று கூறியவாறு. துவர் இதழ் - பவழம்போன்ற இதழுமாம், மாதர் - விலைமகளிர். பி - ம்:-[1]சூழ்ந்த. [2]எண்ணும். [3]நெறி. [4]எங்ஙன். [5]குனிக்கும், கூறும், குறிக்கும். [6]முகக். [7]கருங்கயற். [8]எய்தி. (217)

38.—அரசன் அநுமதி தர, இருசியசிருங்கமுனிவனை யழைத்துவருமாறு சிலவிலைமகளி ரேகுதல்.

ஆங்கவ[1]ரம் மொழியுரைப்ப வரசன்[2]மகிழ்ந் தவர்க்கணிதூ சாதி[3]யாய, [4]பாங்குள [5]மற் றவை [6]யருளிப் பனிப்பிறையைப் பழித்தநுதல் பணைத்தவேய்த்தோள், ஏங்கு[7]மிடை[8]தடித்தமுலை யிருண்டகுழன் மருண்ட விழி யிலவச் செவ்வாய், பூங்கொடியீ ரேகுமெனத் தொழுதிறைஞ்சி யிரத மிசைப் [9]போயினரே.

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது [அல்லது அவ்விடத்தில்], அவர் - அவ்வேசையர், அ மொழிஉரைப்ப - அந்தவார்த்தையைச் சொல்ல,—அரசன் - உரோமபாதன், மகிழ்ந்து—, அவர்க்கு - அவ் விலைமகளிர்க்கு, அணி தூசு ஆதி ஆய - ஆபரணங்கள் சேலைகள் முதலியவற்றையும், பாங்கு உள மற்றவை - நன்மையுள்ள மற்றைச் செல்வம் முதலியவற்றையும், அருளி - கொடுத்து, 'பனிபிறையை பழித்த நுதல் - குளிர்ந்த இளஞ்சந்திரனை யிகழ்ந்த நெற்றியையும், பணைத்த வேய் தோள் - பருத்த மூங்கில்போன்ற தோள்களையும், ஏங்கும் இடை - வாடிய இடையையும், தடித்த முலை-பருத்த தனங்களையும், இருண்ட குழல் - கறுத்த கூந்தலையும், மருண்ட விழி - மருட்சியுள்ள பார்வையையுடைய கண்களையும்,இலவம் செவ் வாய்- இலவம்பூப்போலச் சிவந்த வாயையுமுடைய, பூங்கொடியீர் - பூங் கொடிபோன்றவர்களே! ஏகும்-செல்லுங்கள்,' என-என்று சொல்லி விடைகொடுக்க, (அம்மங்கையர்), தொழுது இறைஞ்சி - (அரசனை) மிகவணங்கி, இரதம்மிசை போயினர்-(அரசன் கொடுத்த)தேரின்மே லேறிச்சென்றார்கள்; (எ - று.)

பூ - அவர்களுடைய ஆபரணங்களுக்கும் அவயவங்களுக்கும் உவமை. பி-ம்:—[1]தம். [2]மொழிந்தவர்க்கு. [3]ஆகப். [4]பாங்குடன்.

[5]மற்றவர்க்கு. [6]அளித்து. [7]முலை. [8]தடிக்குழலை, துடிக்குமிடை.
[9]போயினர்கள், போயினரால். (218)

வேறு.

39.—சென்ற வேசையர் இருசியசிருங்கனாச்சிரமத்தருகு தங்குதல்.

ஓசனை பலகடந் தினியொ ரோசனை
ஏசறு [1]தவனுறை [2]யிடமி தென்[3]றுழிப்
பாசிழை மடந்தையர் பன்ன சாலைசெய்து
ஆசறு மருந்தவத் தவரின் வைகினர்.

(இ - ள்.) பாசு இழை மடந்தையர் - பசுமையான [பைம்பொன்னினாலாகிய] ஆபரணங்களையணிந்த அவ்விலைமகளிர், ஓசனை பல கடந்து-பல யோசனை தூரவழியைக் கடந்துசென்று, ஏசு அறு தவன் உறை இடம் இது இனி ஓர் ஓசனை என்ற உழி - குற்றமில்லாத தவத்தையுடைய இருசியசிருங்கமுனிவன் வசிக்கின்ற இடமாகிய இது இனி ஒருயோசனை தூரத்திலுள்ளது என்று சொல்லும்படியான இடத்தில், பன்னசாலை செய்து - பன்னசாலை யொன்றையமைத்துக்கொண்டு, (அதில்), ஆசு அறும் அரு தவத்தவரின் - குற்றமில்லாத அருமையான தவத்தையுடைய முனிவர்கள்போல, வைகினர் - தங்கியிருந்தார்கள்; (எ - று.)

சென்றவேசையர் இருசியசிருங்கமுனிவனது ஆச்சிரமத்தைக் கிட்டுதற்கு ஒருயோசனை தூரம் இருக்குமிடத்தில், முனிவர்வேடத்துடன் ஒருபன்னசாலை யமைத்துக்கொண்டு அதில் தங்கினரென்க. பன்னசாலை - இலையால் வேயப்பட்ட குடிசை. பி - ம்:—
[1]தவனுறு, தவனுடை. [2]இடமது. [3]உழீஇப், இழீஇப். (219)

40.—இருசியசிருங்கமுனிவனை அவன் தந்தையில்லாத சமயத்து இம்மாதர் அடைய, அம்முனிவன் இவரை முனிவராகவே கருதுதல்.

அருந்தவன் [1]றந்தையை [2]யற்ற [3]நோக்கியே
கருந்தடங் கண்ணியர் கலைவ லாளனிற்
பொருந்தினர் [4]பொருந்துபு விலங்[5]கெ னுப்[6]புரிந்து
இருந்தவ ரிவ[7]ரென வினைய [8]செய்தனன்.

(இ - ள்.) கரு - கரிய, தட - பெரிய, கண்ணியர் - கண்களையுடைய வேசையர்,—அரு தவன் - அரிய தவத்தையுடையவனான அம்முனிவனுடைய, தந்தையை அற்றம்நோக்கி - தந்தையாகிய விபண்டகமுனிவனில்லாத சமயம்பார்த்து, கலைவலாளனின்- நூல்களில்வல்ல அவ்விருசியசிருங்கமுனிவனிடத்தில், பொருந்தினர் - சென்றனர்; பொருந்துபு - (அங்ஙனம்) சென்றுசேர, (அந்த ருசியசிருங்கன்), இவர் விலங்கு எனு புரிந்து இருந்தவர் என - இவர்கள் (நம்மைப்போலவே உலகத்தாரை) மிருகமெனக்கருதியிருந்த முனிவரென்று, இனைய செய்தனன் - இத்தன்மைய உபசாரங்களைச் செய்தான்; (எ - று.)—உபசாரஞ்செய்த வகையை மேற்கவியிற் காண்க.

விபண்டகமுனிவன் ஆச்சிரமத்திலிருந்தானாயின் தங்கள்வஞ்சனையை யுணர்ந்து சபித்துவிடுவானென்று, வேசையர் அவனில்லாத சமயத்தை யெதிர்பார்த்தனர். "ஆத்மவத் ஸர்வபூதாநி, ய: பச்யதி ஸ பண்டித:" என்றவாறு தன்னைப்போலவே பிறரையும் தகுதியுடையவரென்று கருதும் நல்லியற்கையுடையவனாதலால், இருசியசிருங்கன், வேசையரை 'விலங்கெனப்புரிந்திருந்தவரிவர்' என்று கருதினான். "மார்பினிற் கோடுபூத்த, செறிதவ முனிவரென்ன முனிவனை மயக்கஞ்செய்து" என்பது, கூர்மபுராணம். உலகத்தாரைத் தபஸ்விகள் விலங்கென்று நினைக்கக்காரணம், உலகத்தார்க்குத் தத்துவஞானமில்லாமையாம்: "ஜ்ஞாநேநஹீந: பசுபிஸ்: ஸமாந: [தத்துவஞானமில்லாதவன் விலங்கோடொப்பான்]" என்ப. இனி, பொருந்துபு - (மாதர்கள்) அம்முனிவன் ஆச்சிரமஞ் சேர்ந்து, விலங்கு என புரிந்தவர் இவர் என - மனிதரை விலங்கு என்று எண்ணியிருந்தவராவர் இந்த முனிவரென்று நினைக்கையில் என்றும் உரைக்கலாம். கலைவலாளன் இல் என்று பிரித்து - கலைவலாளனுடைய இல்லத்தில் [ஆச்சிரமத்தில்] என்றும் உரைப்பர். அற்றம் - இல்லாத சமயம். தந்தையை அற்றத்தை என்றேனும், தந்தையினுடைய அற்றத்தை என்று வேற்றுமைமயக்கமாகவேனும் உரைக்க. பி - ம்:—[1] தனைவரும், அகன்றதை, தகைமையை, தன்னையே. [2] ஆர, அறத்தின். [3] நோக்கிய. [4] பொருந்தவும், பொருந்துழி, பொருந்துவ. [5] எனப். [6] புகுந்து, பரிந்து. [7] என. [8] செய்தனர்.

41.—வந்த வேசையர் இருசியசிருங்கனிடம் உபசாரம் பெற்றுத் தம் பன்னசாலை யடைதல்.

அருக்கிய [1] முதலினோ டாச னங்கொடுத்து
இருக்கென [2] விருந்தபி னினிய [3] கூறலும்
முருக்கிதழ் மடந்தையர் முனிவ னைத் [4] தொழாப்
பொருக்கென [5] வெழுந்து [6] போய்ப் [7] புரையுட் புக்கனர்.

(இ - ள்.) (முனிவன் அவர்களுக்கு), அருக்கியம் முதலினோடு -அருக்கியம் முதலியவற்றோடு, ஆசனம் - ஆசனத்தையும், கொடுத்து—, இருக்க என - '(இவ்வாசனங்களில்) வீற்றிருப்பீர்களாக' என்று சொல்ல, இருந்தபின்-(அவர்கள்)வீற்றிருந்தபின்பு, இனிய கூறலும்-நல்ல உபசாரமொழிகளைச் சொன்னவளவிலே,—முருக்கு இதழ் மடந்தையர் - பலாசம்பூப்போற் சிவந்த அதரத்தையுடைய அவ்விலைமகளிர், முனிவனை தொழா - அம்முனிவனை வணங்கி, (விடைபெற்றுக்கொண்டு), பொருக்கென எழுந்து போய் - விரைவாக எழுந்துசென்று, புரையுள் (தமது) ஆச்சிரமத்துள், புக்கனர்-;

'இருசியசிருங்கமுனிவனுடைய தந்தை வந்துவிடக்கூடும்' என்றும், 'ஒருகால் இம்முனிவன் தானும் நம்மை யுணர்ந்துவிடக்கூடும்' என்றும் அஞ்சியதனால், விரைவில் விடைபெற்றுச் சென்றனர், விலைமகளி ரென்க. ஷோடச [பதினாறு] உபசாரங்களுள் கைகழுவநீர்தரல் தவிசளித்தல் என்னுமிரண்டையும், 'அருக்கியம் ஆசனம்' என்பவற்றாற் கூறி, மற்றவற்றை 'முதலினோடு' என்றதனாற் பெறவைத்தார். பி - ம்:—[1] முதலிய. [2] இருத்தினன்,

இருந்துபின். [3]கூறியம், கூறிய. [4]தொழப். [5]இரிந்து. [6]தம். [7]புரையிற், உறையுட். (221)

42.—சிலநாள் கழிய, இருசியசிருங்கனுக்கு விலைமகளிர் அருந்துமாறு கனி கொணர்ந்து தருதல்.

திருந்திழை யவர்[1] சில தினங்கள் [2]தீர்ந்துழி
மருந்தினு மினியன வருக்கை [3]வாழைமாத்
தருந் [4]தருங் கனியொடு தாழை யின்[5]பலம்
அருந்தவ வருந்தென [6]வருளி னாரரோ.

(இ - ள்.) திருந்து இழையவர் - திருத்தமான வேலைப்பாட்டையுடைய ஆபரணங்களை யணிந்த அவ்விலைமகளிர், சில தினங்கள் தீர்ந்த உழி - சிலநாள் கழிந்த பிறகு, மருந்தினும் இனியன - தேவாமிருதத்தைவிட மிக்க இன்சுவையுடையனவாகிய, வருக்கை வாழை மா தரு தரும் கனியொடு - பலாமரங்களும் வாழைமரங்களும் மாமரங்களும் தந்த பழங்களுடனே, இன் தாழை பலம்-இனிய தேங்காய்களையும், (கொணர்ந்து), 'அரு தவ அருந்து - அரிய தவத்தையுடைய முனிவனே! (நீ)அமுது செய்தருள்வாயாக',என-என்று சொல்லி, அருளினர் - அன்புடன் கொடுத்தார்கள்; (எ - று.)

சிலதினம் கழிந்தபிறகு தங்களிடம் இருசியசிருங்கனுக்கு விசுவாசம்மிகும்பொருட்டுவேசையர் பலவகைக்கனிகளைக்கொணர்ந்து கொடுத்தன ரென்க. இனியன - இனியசிற்றுண்டிகளையெனினுமாம். தருத்தரும்என்பது, எதுகைநோக்கி மெலிந்தது. இனி, தரும்தரும் என்று அடுக்குத்தொடராக எடுத்து - மேன்மேலுந் தருகின்ற என்பாரு முளர். தாழையின்பலம்-"தெங்கம்பழம்." அரோ - ஈற்றசை. பி - ம்:—[1]பல. [2]தந்துழி, தீர்ந்துழீஇ. [3]வான்முதல். [4]பெருங்கனியொடு, கனியதனொடு, பலகனியொடு. கனிபலவொடு, கனியொடுபல. [5]கனி. [6]அருத்தினர், அருந்தினன். (222)

43.—மகளிர் வேண்ட இருசியசிருங்கன் அவருறைவிடம் சேறல்.

[1]இன்னன பல்பக லிறந்த பின்றிரு
நன்னுதன் மடந்தையர் நவையின் மாதவன்
தன்னையெம் மிடத்தினுஞ் [2]சார்தல் வேண்டுமென்று
[3]அன்னவற் றெழுதலும் அவரொ டேகினன்.

(இ - ள்.) இன்னன பல் பகல் - இத்தன்மையனவாகிய [இனியன கொடுத்தலையுடைய] அநேகநாட்கள், இறந்த பின் - கழிந்த பிறகு, திரு - அழகிய, நல் நுதல் - ஒளியுள்ள நெற்றியையுடைய, மடந்தையர் - அந்த விலைமகளிர், நவை இல் மாதவன் தன்னை - குற்றமற்ற சிறந்த தவத்தையுடைய அம்முனிவனைநோக்கி, எம் இடத்தின்உம் சார்தல் வேண்டும் - '(நாங்கள் உமது ஆச்சிரமத்திற்கு வருவதுபோலவே தேவரீரும்) எங்களாச்சிரமத்திற்கு எழுந்தருளுதல் வேண்டும்', என்று-என்றுசொல்லி, அனனவன் தொழுதலும் - அந்த இருசியசிருங்கமுனிவனை வணங்கினவளவில்,—

(அம்முனிவனும்), அவரொடு ஏகினன் - அவ்விலைமகளிரோடு சென்றான்; (எ-று.)—பி-ம்:—[1] இன்னணம். [2] சாரல். [3] அன்னவர்தொழுதலும், அன்னவரடிதொழ. (223)

44.—விலைமகளிர் முனிவனை யழைத்துக்கொண்டு அங்கதேசத்துக்குப் போகும் வழியிற் செல்லுதல்.

விம்முறு [1] முவகையர் [2] வியந்த நெஞ்சினர்
அம்ம [3] வீ [4] திதுவென வகலு நீணெறி
[5] செம்மையின் முனிவரன் றொடரச் சென்றனர்
தம்மன மெனமருள் தைய லார்களே.

(இ-ள்.) தம் மனம் என மருள் - தங்கள் நெஞ்சம்போல(ப் பிறரை) மயக்கவல்ல, தையலார்கள் - அந்த விலைமகளிர்,—விம்முறும் உவகையர் - (தமது எண்ணம் நிறைவேறியதனால்) மிகுகின்ற மகிழ்ச்சியுடையவர்களும், வியந்த நெஞ்சினர் - ஆச்சரியமடைந்த மனத்தை யுடையவர்களுமாய், 'அம்ம-(முனிவனே!) கேட்பாயாக: (எங்கள் ஆச்சிரமம்), ஈது இது - இதோ! இதோ', என - என்று (தமது ஆச்சிரமம் அருகிலுள்ளதாகச் சுட்டிக்) காட்டிக்கொண்டு, செம்மையின்முனிவரன் தொடர-எல்லாநற்குணங்களையுமுடைய அந்தச்சிறந்த முனிவன் (தம்முடன்) தொடர்ந்துவர, அகலும் நீள்நெறி-பரந்த நீண்ட (அங்கதேசத்துக்குச் செல்லும்) வழியிலே, சென்றனர் - போனார்கள்; (எ-று.)

விலைமகளிர் தமது கருத்து முற்றுவதனால் மனமகிழ்ந்து தம்முடைய ஆச்சிரமம் மிக அருகிலுள்ளதாகச் சொல்லிக்கொண்டு, அம்முனிவன் தம்மைப் பின்பற்றிவர அங்கதேசத்துவழியிற்சென்றார்களென்பதாம். அம்ம - கேள் என்னும் பொருளைக்குறிக்கும் முன்னிலையசைச்சொல்; இனி, வேசையரது திறமையைநோக்கிக் கவி வியந்துகூறிய வியப்பிடைச்சொல் எனினுமாம். ஈது இது-அடுக்கு, தேற்றம். செம்மையின் - நேர்மையுள்ள [கபடமில்லாத] என்றுமாம். மருள் - மருட்டுகின்ற. இனி, இச்செய்யுளுக்கு—மருள் -(முனிவனை வஞ்சகமாக அழைத்துப்போவதால் என்ன தீங்கு நேருமோ? என்று ஒருபால்) அச்சங்கொண்ட, தையலார்கள், (மற்றொருபால் தாம் வந்த காரியம் நிறைவேறுவதுபற்றி), உவகையரும் நெஞ்சினருமாய், இதுஇது என்றுசொல்லி, நீணெறிக்கண் முனிவரன் தம்மனமெனத்தொடரச்சென்றனர் என்று உரைப்பினுமாம். பி-ம்:—[1] உவமையால். [2] வீந்த. [3] இது. [4] எது. [5] செம்மைசேர், செம்மைய, செம்மையன். (224)

45.—முனிவன் வருகையில் உரோமபாதன் நகரில் பெருமழை பெய்தல்.

[1] வளநகர் முனிவரன் [2] வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான் [3] முகில்
சளசள [4] வெனமழைத் தாரை கான்றன
குளனொடு [5] நதிகள்தங் [6] குறைகள் [7] தீரவே.

(இ - ள்.) முனிவரன் - அந்த இருடியர் தலைவன், வளம் நகர் வரும் முன்-எல்லாவளங்களையுமுடைய அவ்வுரோமபாதனது நகரத்துக்கு எழுந்தருளியமாத்திரத்தில், வான்முகில் - வானத்து மேகங்கள்,—வானவன - சிறந்த தேவனாகிய சிவனது, களன் அமர் கடு என - கண்டத்திற் பொருந்திய விஷம்போல, கருகி-கருநிறமுள்ளனவாய், குளனொடு நதிகள் தம் குறைகள் தீர - குளங்கள் ஆறுகள் என்னும் நீர்நிலைகள் (அதுகாறும் நீரில்லாதிருந்த) குறைவுகள் நீங்கும்படி, சள சள என - சள சளவென்னும் ஓசை யுண்டாக, மழை தாரை-மழை நீர்ப்பெருக்கை, கான்றன - சொரிந்தன; (எ-று.)

சளசள - ஈரடுக்கொலிக்குறிப்பு. வானவன் - பொதுப்பெயர், சிறப்புப்பொருளுணர்த்திற்று. பி - ம்:—[1]வளர். [2]வர. [3]மிசை. [4]எனும். [5]நதிதடம், நெடுநதி, நதிகளும். [6]குறைவு. [7]தீர்ந்தவே. ()

46.—மழை பொழிந்ததுகண்டு அரசன் அனுமானித்தல்.

பெரும்[1]புனல் நதிகளுங் குளனும்[2]பெட்பறக்
கரும்பொடு செந்நெலுங் கவின்கொண் டோங்கிட
இரும்[3]புயல் ககனமீ திடைவி டாதெழுந்து
அரும் புனல்[4]சொரிந்தபோ தரசு ணர்ந்தனன்.

(இ - ள்.) நதிகள்உம்-ஆறுகளும், குளன்உம் - தடாகங்களும், பெரு புனல் பெட்பு அற - மிக்கநீரினிடத்துக் கொண்டுள்ள ஆசை நீங்கவும்,—கரும்பொடு - கரும்புகளும், செந்நெல்உம் - செந்நெற்பயிர்களும், கவின்கொண்டு ஓங்கிட-அழகுபெற்றுச் செழித்து வளரவும் —இருபுயல் - கரிய மேகங்கள், ககனம்மீது - ஆகாயத்தின் மேலே, இடைவிடாது - இடைவிடாமல், எழுந்து - பரவி நின்று, அரு புனல் சொரிந்த - (வெகுநாளாய்) அருமையாக இருந்த நீரைப் பொழிந்த, போது - சமயத்தில், அரசு - உரோமபாதமகாராசன், உணர்ந்தனன்-(அநுமானப் பிரமாணத்தால்) ஆலோசித்தறிவானனன்; (எ - று.)—அதனை, மேலே காண்க.

முதலடிக்கு - மிக்கநீரைக் கொள்ளுமியல்புள்ள ஆறுகளும் குளங்களும் பெருமை யொழியும்படி என்றும் உரைக்கலாம்: பெருமழைப்பெருக்கைத் தம்முட்கொள்ளமுடியாதவாறு ஆறுகளும் குளங்களும் சிறியவாயின வென்பது கருத்து. [2]பெட்புற என்ற பாடத்திற்கு - பெரும்புனலால் நதிகளும் குளங்களும் (மக்கள்) விரும்புந்தன்மையையடைய வென்க. செந்நெல் - நீர்வளமிகுந்த இடத்துவளரும் நெற்பயிர். இரும்புயல்-பெரியமேகமுமாம். பி-ம்:—[1]புனநதிகளும். [3]புனல். [4]சொரிதர. (226)

47-48.—இவ்விரண்டு கவிகள் - இருசியசிருங்கன் வருகையை உரோமபாதன் ஊகித்துச் சேனையோடு அவனை யெதிர்கொளச் செல்லல்.

47. காமமும் வெகுளியுங் களிப்புங்[1]கைத்தவக்
கோமுனி[2]யிவணடைந் தனன்கொல் கொவ்வைவாய்த்
தாமரை மலர்முகத் தரள வாணகைத்
தூம[3]மென் குழலியர்[4]புணர்த்த சூழ்ச்சியால்.

48. என்றெழுந் தருமறை முனிவர் யாரொடுஞ்
சென்றிரண் [5]டியோசனை சேனை சூழ்தர
[6]மன்றலங் [7]குழலியர் [8]நடுவண் மாதவக்
குன்றினை யெதிர்ந்தனன் குவவுத் தோளினன்.

(இ - ள்.) (47) கொவ்வை வாய் - கொவ்வைப்பழம்போற் சிவந்த வாயையும், தாமரை மலர் முகம்-செந்தாமரைமலர்போன்ற முகத்தையும், தரளம் வாள் நகை - முத்துப்போன்ற வெள்ளொளியையுடைய பற்களையும், தூமம் மெல் குழலியர் - புகைபோலக்கரிய மென்மையான கூந்தலையுமுடைய விலைமாதர், புணர்த்த - ஆலோசித்துச்செய்த, சூழ்ச்சியால் - தந்திரத்தினால், காமம்உம் வெகுளிஉம் களிப்புஉம் கைத்த - காமம் வெகுளி மயக்கம்என்னும் முக்குற்றங்களையும் வெறுத்த, அ கோ முனி - அந்த இருசியசிருங்க முனிவன், இவண் - இந்நகரத்தில், அடைந்தனன்கொல் - வந்து சேர்ந்தானோ? (48) என்று - என்றுநினைத்து,—குவவு தோளினன் - திரட்சியைக்கொண்ட தோளையுடைய உரோமபாதன்,—அருமறை முனிவர் யாரொடுஉம்-(அறிதற்கு) அரிய வேதம்வல்ல முனிவர்களெல்லோருடனே, சேனை சூழ்தர - (தன்னுடைய) சேனையும் சுற்றிலும் வாரா நிற்க, எழுந்து - புறப்பட்டு, இரண்டு யோசனை சென்று - இரண்டு யோசனை தூரம் போய், மன்றல் அம் குழலியர் நடுவண்-வாசனையையுடைய அழகிய கூந்தலையுடையரான அவ்விலைமகளிரின் நடுவில், மாதவம் குன்றினை-பெரிய தவமயமானதொரு மலைபோன்ற இருசிய சிருங்கமுனிவனை, எதிர்ந்தனன்-எதிர்கொண்டான்; (எ - று.)

47.—தூமமென்குழலியர் - அகிற்புகையூட்டப்பெற்றமெல்லிய கூந்தலையுடையவரெனினுமாம்; "தேக்கணின்னகிலினுவி தேக்கிருங் குழலினாள்" என்றதுங் காண்க. "காமம் வெகுளிமயக்கமிவைமூன்ற, னாமங்கெடக்கெடுநோய்" என்றார், திருவள்ளுவனாரும். பி - ம்:—[1]கைத்தெழு, கைதொழக். [2]அடைந்தனன்கொவ்வைச் செவ்வை வாய்த். [3]உண். [4]புரிந்த, புனைந்த, கொணர்ந்த, புணர்ந்த.

48.—"இருக்கையெழலும் எதிர் செலவும்.....குடிப்பிறந்தார் குன்றாவொழுக்கமாக் கொண்டார்" என்றவாறு வந்தவரை எதிர்கொள்ளுதல்மரபு ஆதலால், உரோமபாதன் முனிவனைஎதிர்கொள்ளச்சென்றனனென்க. சலியாமையும் பெருமையும் திரண்டுருண்டு நீண்டிருத்தலும் முதலியன பற்றி, குன்று தோளுக்கு உவமை. பி-ம்:—[5]ஓசனை. [6]நன்றலங். [7]கோதையர். [8]நடுவுள். (227, 228.)

49.—எதிர்கொண்ட மன்னன் முனிவனை வணங்கி விலைமகளிரைப் புகழ்தல்.

வீழ்ந்தன னடிமிசை விழிக ணீர்[1]தர
[2]வாழ்ந்தன [3]னினியென மகிழுஞ் சிந்தையான்
தாழ்ந்தெழு மாதரார் தம்மை நோக்கிநீர்
போழ்ந்தனி ரெனதிடர் [4]புணர்ப்பி னாலென்றான்.

(இ - ள்.) (அரசன்), இனி வாழ்ந்தனன் என மகிழும் சிந்தையான் - இனி (எல்லா) வாழ்வுகளையும் பெற்றேனென்று களிக்கின்ற மனத்தையுடையவனாய், விழிகள் நீர்தர - கண்கள் உவகைக்

கண்ணீர் சொரிய, அடிமிசை வீழ்ந்தனன் (முனிவனது) திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்தான்; (பின்பு), தாழ்ந்து எழும் மாதரார் தம்மை நோக்கி - (தன்னை) வணங்கியெழுந்த விலைமகளிர்களைப் பார்த்து, 'நீர்—, எனது இடர் - என்னுடையதுன்பத்தை, புணர்ப்பினால்-உபாயத்தால், போழ்ந்தனிர் - தீர்த்துவிட்டீர்,' என்றான்-என்றுசொல்லிப் புகழ்ந்தான்; (எ-று.)

இரண்டாமடி - மத்திமதீபமாகி, முன்வாக்கியத்தோடும் பின்வாக்கியத்தோடும் இயையும். இடர்-மழையின்மைக்குறை. பி - ம்:- [1]வர, விழ. [2]வாழ்ந்தனம். [3]யான். [4]புணர்ப்பையென்றனன். (229)

50.—விலைமகளிரின் வஞ்சனையை யுணர்ந்த இருசிய சிருங்க முனிவனதுசினத்தை அரசன் தணித்தல்.

[1]அரசனு முனிவரு [2]மடைந்த வாயிடை
[3]வரமுனி வஞ்சமென் றுணர்ந்த [4]மாலைவாய்
வெருவினர் விண்ணவர் வேந்தன் வேண்டலாற்
கரை [5]யெறி யாதலை கடலும் [6]போன்றதே.

(இ - ள்.) அரசன்உம் - உரோம்பாத மன்னவனும், முனிவர் உம் - பலமுனிவர்களும், அடைந்த ஆயிடை - (தன்னை) வந்து சேர்ந்த காலத்தில், வரன் முனி - சிறந்த இருசியசிருங்கமுனிவன், வஞ்சம் என்று உணர்ந்த மாலைவாய்-(நம்மை இவர்கள் அழைத்து வந்த இது) வஞ்சனை என்று தெளிந்த சமயத்தில்,—விண்ணவர் - தேவர்களும், வெருவினர் - (இருசியசிருங்கமுனிவனது பெருஞ் சினத்தைக்கண்டு) அஞ்சினார்கள்; வேந்தன் வேண்டலால் - உரோமபாத மன்னவனது பிரார்த்தனையால், (இருசியசிருங்கமுனிவனது சினம்), கரை எறியாது அலை - கரையைக்கடந்து மேல்வராமல் அலையெறியுமியல்புள்ள, கடல்உம்-கடலையும், போன்றது-;

கடலிற்பொங்கியெழுகின்ற அலை கடவுளாணையாற் கடலிலேயே அடங்குதல்போல, இருசியசிருங்க முனிவனது மனத்தினுட்பொங்கியெழுந்த சினம் பலமுனிவருடன் வந்த உரோமபாத மன்னனது வேண்டுகோளால் அவன்மனத்துள்ளேயே அடங்கிற்றென்க. [1]அரசரும் என்றபாடத்திற்கு - அரசகுலத்தாரும் என்றும், [3]வருமுனி என்ற பாடத்திற்கு-(மாதரைத்தொடர்ந்து) வந்த முனி யென்றும் பொருள்காண்க. மாலை-சிறப்புப்பெயர், பொதுப்பொருளது.பி-ம்:—[2]அமைந்த. [3]வரன்முனி. [4]வேலை. [5]அறியாதலை, கடவாவலை, எறியலர்தலைக். [6]போன்றனன். (230)

51.—இதுவும் அது.

[1]வள்ளுறு வயிரவாண் மன்னன் [2]பன்முறை
எள்ளரு [3]முனிவனை யிறைஞ்சி [4]யாரினும்
தள்ளருந் துயரமுஞ் சமைவுஞ் சாற்றலும்
[5]உள்ளுறு வெகுளிபோ [6]யொளித்த தாமரோ.

(இ - ள்.) வள் உறு - கூர்மைபொருந்திய, வயிரம் வாள்-வச்சிராயுதம்போன்ற வாட்படையையுடைய,மன்னன்-உரோமபாதராசன்,

எள்ள அரு முனிவனை-பழிப்பில்லாத இருசியசிருங்கமுனிவனை, பல் முறை இறைஞ்சி - அநேகதரம் வணங்கி, யாரின்உம் தள்ள அரு துயரம்உம் - எவராலும் நீக்குதற்குக்கூடாத (மழைபெய்யாமையால் தன்னாட்டுக்குஉண்டான) துன்பத்தையும், சமைவுஉம் - (அம்முனிவன் வந்ததனால் அத்துன்பம்) தணிந்ததையும், சாற்றலும் - சொல்லிக் (கோபந் தணியுமாறுவேண்டிக்) கொண்டவளவில்,—உள் உறு வெகுளி - (அம்முனிவனது) மனத்தில் மிகுதியாய்ப்பொருந்திய சினம், போய் ஒளித்தது - நீங்கிற்றென்றபடி; (எ-று.)—ஆம், அரோ - ஈற்றசைகள்.

தன்னைப் பர்ணசாலைக்கு இட்டுக்கொண்டுபோவதாகச்சொல்லி மாதர் வஞ்சித்ததைத் தெளிந்த இருசியசிருங்கன் பெருஞ்சினங் கொண்டானாக, அப்போது உரோமபாதமன்னவன் அவனது தாளில் விழுந்து, தனதுநாட்டிற் பெரும்பஞ்சம் நேர்ந்ததையும், தனதுபுரோகிதரான முனிவர்கள் 'ருசியசிருங்கமுனிவன் இந்நாட்டில் வந்தால்தான் மழைபொழிந்து பஞ்சம்நீங்கும்' என்று கூறியதையும், அதனால் தான் விலைமகளிரையனுப்பி அழைத்துவருமாறு செய்ததையும், முனிவன் வந்தவுடன் பெருமழைபெய்து பஞ்சம் நீங்கித் தன்னாட்டிலுள்ளார் சுகமடைந்ததையும் எடுத்துச்சொல்லி, 'நாட்டின் பெருநன்மைக்குக் காரணமாயிருந்த நீர், நாட்டின்நன்மைக்காகச் செய்தஎன் குற்றத்தைப்பொறுத்துச் சினந்தணிக' என்று, வேண்ட, அம்முனிவனும் சினந்தணிந்தனனென்க. கீழ்ச்செய்யுளிற் கூறியதையே இச்செய்யுளில் விரித்துக் கூறி விளக்கினார். சமைவு - தணிவு, ஒழிவு. பி - ம்:—[1]வள்ளுறை. [2]வரன்முறை. [3]மொழிகளுமியம்பி. [4]யாவரும். [5]உள்ளரும், உள்ளுற, உள்ளுறும், உள்ளுறை. [6]ஒளித்த. (231)

52.—இருசியசிருங்கன் உரோமபாதனது நகர்க்குச் செல்லுதல்.

அருள்சுரந் தரசனுக் காசி யுங்கொடுத்து
உருடரு [1]தேரின்மீ தொல்லை [2]யேறிநற்
[3]பொருடரு முனிவருந் [4]தொடரப் [5]போயினன்
[6]மருளொழி யுணர்வுடை வரத மாதவன்.

(இ - ள்.) மருள் ஒழி உணர்வுஉடை - மயக்கம் நீங்கிய அறிவையுடைய, வரதன் - (தன்னைச் சார்ந்தவர் கேட்ட) வரங்களைக் கொடுக்கவல்லவனாகிய, மா தவன் - மிக்கதவத்தையுடைய அந்த இருசியசிருங்கமுனிவன்,—அருள் சுரந்து - கருணை மிகுந்து, அரசனுக்கு ஆசிஉம் கொடுத்து-உரோமபாதமன்னனுக்கு ஆசீர்வாதத்தையுஞ் செய்து, நல் பொருள் தரு முனிவர்உம் தொடர - சிறந்த விஷயங்களை யுபதேசிக்கவல்ல முனிவர்களும் உடன் வர, உருள் தரு தேரின்மீது ஏறி ஒல்லை போயினன் - சக்கரங்களைப்பொருந்திய (அரசன் தந்த) இரதத்தின்மேல் ஏறிக்கொண்டு விரைவாக (அம்மன்னவனது நகரத்துக்குச்) சென்றான்; (எ - று.)—வரதமாதவன் - உயர்திணையீறுகெட்டது. மருள்-விபரீதஞானம். பி - ம்:—[1]தேரின்

மேல். [2]ஏறினன், ஏகினன், ஏறியே. [3]பொருவரு. [4]தொடர்ந்து. [5]போயினர். [6]மருமொழி. (232)

53.—உரோமபாதன் முனிவனைச் சிங்காதனத்து அமர்த்துதல்.

அடைந்தனன் [1]வளநக ரலங்க ரித்தெதிர்
மிடைந்திட முனியொடு வேந்தன் கோயில்புக்கு
ஒடுங்கலில் பொற்குழாத் துறையு ளெய்தியோர்
மடங்க[2]லா தனத்திடை முனியை வைத்தனன்.

(இ - ள்.) (நகரத்திலிருந்தவர்கள்), வளம் நகர் அலங்கரித்து- வளப்பமுள்ள அந்தநகரத்தை அலங்காரஞ்செய்து, எதிர் மிடைந்திட - எதிர்கொண்டு நெருங்க, - வேந்தன் - உரோமபாதன், முனியொடு - அம்முனிவனுடனே, அடைந்தனன் - (நகரத்தை) அடைந்து, கோயில் புக்கு - அரண்மனையைச் சேர்ந்து, ஒடுங்கல் இல் பொன் குழாத்து உறையுள் எய்தி - ஒடுங்குதலில்லாத [விசாலமான] பொன்னாற்செய்யப்பட்ட திரட்சியையுடைய மாளிகையை யடைந்து, ஓர் மடங்கல் ஆதனத்திடை - ஒப்பற்ற சிங்காசனத்தில், முனியை-முனிவனை, வைத்தனன்-வீற்றிருக்கச் செய்தான்; (எ - று.)

அரசன் ஏவலாளரை முன்னேவிடுத்து அலங்கரிக்குமாறு நகரத்தவர்க்குச் செய்தியனுப்ப, அவரும் அங்ஙனமே நகரையலங்கரித்து எதிர்கொள்ள, அவ்வுரோமபாதமன்னன் முனிவனுடனே நகரத்தை யடைந்து அரண்மனையினுள் ஒருமாளிகையிற் செம்பொற்சிங்காசனத்து அம்முனிவனை வீற்றிருக்க வைத்தனனென்க. பொற்குழாத்துறையுள்—"குழுவின்மாடம்" என்றார், சிந்தாமணியாரும். பி - ம்:—[1]வளர். [2]ஆசனத்தின்மேல், ஆசனத்திலும், ஆசனத்தினில்.

இங்கே ஒருபாடல் சிலபிரதியிற் காணப்படுவது வருமாறு:— வைத்தபின் மாமறை மகிழ [1]மாதவன், சித்தமதோங்கிடத் தேவர் [2]செய்தன, புத்தியின்[3]சாந்தையைப் புகன்று நல்கினன், வித்தக [4]முனிவனும் விருப்பமெய்தவே. பி-ம்:—[1]மாதவர். [2]செய்கையை. [3]காந்தையைப், சிந்தையைப். [4]மாமுனி. (233)

54.—மன்னவன் சாந்தையை இருசியசிருங்க முனிவனுக்கு ஈதல்.

அருக்கிய முதலிய கடன்க ளாற்றிவேறு
உரைக்குவ [1]திலதென வுவந்து தானருள்
முருக்கித [2]ழிளமுலை [3]முகந லாடனை
இருக்கொடு விதிமுறை யினிதி னீந்தனன்.

(இ - ள்.) (உரோமபாதன்),—(இப்போது அந்த இருசிய சிருங்கமுனிவனுக்கு),—உரைக்குவது வேறு இலது என-(அதிதிகட்குச் செய்யவேண்டிய உபசாரங்களில் இன்னது செய்யப்பட

வில்லையென்று)சொல்லத்தக்கது வேறென்றுமில்லை யென்னும்படி, அருக்கியம் முதலியகடன்கள்-அருக்கியம் முதலிய எல்லாவுபசாரங்களையும், ஆற்றி-செய்து, உவந்து - மகிழ்ந்து, தான் அருள் - தான்பெற்ற, முருக்கு இதழ்-பலாசமலர்போன்ற அதரத்தையும், இளமுலை-இளமையான தனங்களையுமுடைய, முகம் நலாள்தனை - சாந்தையென்னும் மகளை, விதிமுறை—(நூல்களில்)விதித்துள்ள முறைப்படி, இருக்கொடு - வேதமந்திரத்துடனே, இனிதின் ஈந்தனன் - அன்போடு கன்னிகாதானஞ் செய்தனன்; (எ-று.)

அருக்கியம் முதலிய உபசாரஞ்செய்து, மன்னவன், இருசியசிருங்கமுனிவனுக்குச் சாந்தையென்பவளை விவாகஞ்செய்து கொடுத்தனனென்க. அர்க்யம்-அதிதிகட்குத்தீர்த்தம் முதலியன கொண்டுசெய்யும் உபசாரவகை. சாந்தையென்ற இவள் தசரதமன்னவனது மகளென்றும், அம்மன்னவனால் உரோமபாதமன்னனுக்குத் தத்தபுத்திரியாகத் தரப்பட்டவ ளென்றும் அறிக. 'சாந்தா' என்னும் வடமொழிப்பெயரை மொழிபெயர்த்து, 'முகம் நலாள்' என்றார். பி-ம்:—[1] இல்லென, இலவென. [2] சாந்தையாம், மடந்தையாம், முழுமதி. [3] முகநற்சாந்தையை. (234)

55.—இருசியசிருங்கமுனிவன் அவ்வுரோமபாத நகரத்துள்ளானென்று வசிட்டன் கூறி முடித்தல்

வறுமைநோய் [1] தணிதர வான் வழங்கவே
உறுதுயர்[2] தணிந்ததவ் [3] வுலகம் வேந்தருள்
செறி [4] குழல் போற்றிடத் திருந்து மாதவத்து
அறிஞ[5] னாண் [6] டிருக்குந னரச வென்றனன்.

(இ-ள்.) (மழையில்லாமையால் நேர்ந்த), வறுமை நோய் - பஞ்சமாகிய நோய், தணிதர - தீரும்படி, வான் வழங்கவு - மேகம் மழையைப் பொழியவே, அ உலகம் - அந்த அங்கதேசம், உறு துயர் தணிந்தது - மிக்கதுன்பம் நீங்கப்பெற்றது; திருந்து மா தவத்து - திருத்தமான மிக்கதவத்தையுடைய, அறிஞன்-தத்துவ ஞானியான அம்முனிவன், வேந்து அருள்-உரோமபாதமன்னவனளித்த, செறி குழல்-நெருங்கிய கூந்தலையுடைய சாந்தை, போற்றிட-உபசரிக்க, ஆண்டு இருக்குநன்-(அதுமுதல்) அவ்விடத்தில் தானே இருக்கின்றான்: அரச - தசரதமன்னவனே! என்றனன் - என்று (வசிட்டமுனிவன்) சொல்லி முடித்தான்; (எ-று.)

வறுமை - இங்கே, பஞ்சத்தைக் காட்டிற்று; அதனை நோய் என்றது, துன்பந்தருதலால். உலகின் கூறுகளையும் உலகமென்றல் மரபு; ஆதலால், அங்கநாட்டை 'அவ்வுலகம்' என்றார். செறி குழல் - அன்மொழித்தொகை. இருக்குநன் - குறிப்புவினைமுற்று. பி-ம்:—[1] அழிதர, நலிதர. [2] தவிர்ந்தது, தணித்தது, தணிந்ததிவ். [3] உலகும், உலகு. [4] கழல். [5] உண்டு. [6] இருந்தனன், இருக்குவன். (235)

வேறு.

56.—வசிட்டனிடத்து விடைபெற்று இருசியசிருங்கனை அழைத்துவருமாறு தசரதன் செல்ல, வானவர் மலர்மழை பொழிதல்.

என்றலுமே [1]முனிவரன்ற னடியிறைஞ்சி யீண்[2]டேகிக் கொணர்வெ[3]னென்னுத், துன்று[4]கழன் [5]முடிவேந்த [6]ரடிபோற்றச் சுமந்திரனே [7]முதல்வ ராய, வன்றிறல்சே [8]ரமைச்சர்தொழ மாமணித்தேரேறுதலும் வானோர் வாழ்த்தி, இன்றெமது வினை[9]முடிந்த தெனச் சொரிந்தார் மலர்மாரி யிடைவி டாமல்.

(இ - ள்.) என்றலும்ஏ - என்று (வசிட்டன்) சொன்னவளவிலே,—(தசரதன்),—முனிவரன் தன் - அவ்வசிட்டமுனிவனது, அடி - திருவடிகளில், இறைஞ்சி - வணங்கி, ஈண்டு ஏகி கொணர்வென் என்னு - 'இப்பொழுதேபோய் (அம்முனிவனை) அழைத்து வருவேன்' என்றுசொல்லி,—துன்று கழல்-நெருங்கியவீரக்கழலையும், முடி-கிரீடத்தையுமுடைய, வேந்தர்-அரசர்கள், அடிபோற்ற-(தன்) பாதத்தை வணங்க, சுமந்திரன்ஏ முதல்வர் ஆய - சுமந்திரன் முதலான, வன் திறல் சேர் - மிக்க புத்திபலம்பொருந்திய, அமைச்சர் - மந்திரிமார்கள், தொழ - வணங்கிநிற்க,—மணி - இரத்தினங்களிழைத்த, மா தேர்-பெரியதேரின்மேல், ஏறுதலும் - ஏறினவளவிலே,—வானோர் - தேவர்கள், வாழ்த்தி - (சக்கரவர்த்திக்கு) ஆசிகூறி, 'எமது வினை இன்று முடிந்தது' என - 'நமது துன்பம் இன்றைக்கே யொழிந்தது' என்று கருதி (மகிழ்ந்து), மலர் மாரி - புஷ்பவர்ஷத்தை, இடைவிடாமல்—, சொரிந்தார் - பொழிந்தார்;

இருசியசிருங்கமுனிவனை அழைத்துவருமாறு தசரதன் செல்வதாலும், அவனையழைத்து வருவது இராமாவதாரத்திற்குக் காரணமாகின்ற யாகத்தைச் செய்வதற்காக ஆதலாலும், வானோர் 'இன்று எமதுவினை முடிந்தது' என்று மகிழ்ந்து மலர்மழை பொழிந்தனர். ஈண்டுக்கொணர்வென் என்றுமாம். அமைச்சர்-(அரசனது) அருகிலிருப்பவரென்று காரணப்பொருள். பி - ம்:—[1]முனிவன்றன். [2]எய்தி. [3]என்னத். [4]மணி, குழல். [5]அடி. [6]முடி. [7]முதலாவுள்ள. [8]அமைச்சரொடு. [9]முடித்தேம். (236)

57.—தசரதன் அங்கநாட்டை யடைதல்.

காகளமும் பல்லியமுங் [1]கனைகடலின் மேன்முழங்கக் கானம் பாட, மாகதர்க ளருமறைநூல் [2]வேதியர்கள் வாழ்த்தெடுப்ப மதுரச் செவ்வாய், தோகையர்பல் லாண்டிசைப்பக் கடற்றானை புடைசூழச் [3]சுடரோ னென்ன, ஏகி[4]யரு [5]நெறிநீங்கி யுரோமபதன் திருநாட்டை [6]யெதிர்ந்தா னன்றே.

(இ - ள்.) காகளம்உம் - காகளமென்னும் வாத்தியமும், - பல் இயம்உம் - (மற்றும்) பல வாத்தியங்களும், கனை கடலின் மேல் - ஒலிக்கின்றகடலினும் அதிகமாக, முழங்க-முழங்கவும், மாகதர்கள்-, கானம் பாட-பாட்டுப்பாடவும், அருமறை நூல் வேதியர்கள் - அரு

மையான வேதசாத்திரங்களை யறிந்த அந்தணர்கள், வாழ்த்து எடுப்ப - ஆசிர்வாதங்களை யெடுத்துச் சொல்லவும், மதுரம் செம் வாய் தோகையர் - இனிப்பான சிவந்த அதரத்தையுடைய மாதர்கள், பல்லாண்டு இசைப்ப - பல்லாண்டுபாடவும், கடல் தானை புடை சூழ - சமுத்திரம்போன்ற சேனை பக்கங்களிற் சுற்றி வரவும்,—சுடரோன் என்ன - சூரியன்போல், ஏகி - சென்று, அருநெறி நீங்கி - (கடப்பதற்கு) அரிய வழியைக் கடந்து, உரோமபதன் திருநாட்டை - உரோமபாதராசனது அழகிய (அங்க) தேசத்தை, எதிர்ந்தான் - சார்ந்தான், (தசரதன்); (எ - று.)

எழுவாய் வருவிக்க. முழங்க பாட எடுப்ப இசைப்ப சூழ ஏகி எதிர்ந்தானென்க. காகளம் - சிறுசின்னம்; இது காளமென்றும் வழங்கும். மாகதர் - வைசியனுக்கு க்ஷத்திரியஜாதிஸ்திரீயிடம் பிறந்த ஸங்கரஜாதியார்; இவர்கள் - அரசர்களின் வீரம் முதலியவற்றைப்புகழ்ந்து ஜீவிப்பவர்: இச்சொல்லுக்கு 'இருந்தேத்துவார்' என்று பொருள் கூறுவர், நச்சினார்க்கினியர். வேதியர் - காரணங் கருதாது நின்றது. பல்லாண்டு - பல ஆண்டு வாழ்க என்று வாழ்த்தும் பாடல். கடல் - சேனைக்கு, ஆரவாரமும் அளவிறந்த பரப்பும் அணியணியாகவருதலும் பற்றிய உவமை. ஒளிமிகுதியாலும் தேரின்மீது விரைந்து செல்வதனாலும், தசரதனுக்குச் சூரியன் உவமை. பி-ம்:—[1]கருங்கடலின்மிக, கனைகடலாமென, கனைகடலின் மிக. [2]வேதியரும். [3]கதிரோன். [4]அருந். [5]தவரொடும்போய், நெறி நீந்தி. [6]உற்றான், அடைந்தான். (237)

58.—தசரதனது வருகையையுணர்ந்த உரோமபாதன் அவனை யெதிர்கொள்ளச் செல்லுதல்.

கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்த னடைந்தமைசென் றொற்றர்கூறக், கழுந்தோடும் வரிசிலைக்கைக் கடற்றானை புடைசூழக் கழற்கால் வேந்தன், செழுந்தோடும் பல்கலனும் [1]வில்வீச மாகதர்கள் திரண்டு[2]வாழ்த்த, எழுந்தோடு[3]முவகையுடன் யோசனை [4]சென் றனனரசை யெதிர்கோ[5]ளெண்ணி.

(இ - ள்.) கொழுந்து ஓடி - கொழுந்துவிட்டு, படர் - பரவுகின்ற, கீர்த்தி - புகழையுடைய, கோவேந்தன் - தசரதசக்கரவர்த்தி, அடைந்தமை - அருகு வந்துள்ளதை, ஒற்றர் -, சென்று கூற - போய்ச் சொல்ல, (உடனே), கழல் கால் வேந்தன் - வீரக்கழலை யணிந்த பாதத்தையுடைய உரோமபாதன்,—கழுந்து ஓடும் வரி சிலை கை - உறுதிமிக்க கட்டமைந்தவில்லைக் கையிலுடைய, கடல்தானை - சமுத்திரம்போன்ற (தனது) சேனை, புடைசூழ - பக்கங்களிலே சூழ்ந்து வரவும், செழு தோடுஉம் - அழகிய தோடென்னுங் காதணியும், பல் கலன்உம் - (மற்றும்) பல ஆபரணங்களும், வில்வீச - ஒளியை வீசவும், மாகதர்கள் - ஸ்துதிபாடகர்கள், திரண்டு வாழ்த்த - கூட்டமாகக் கூடி(த்தன்னை)ப் புகழ்ந்து பாடவும், எழுந்து ஓடும் உவகையுடன் - பொங்கி மிகுகின்ற மகிழ்ச்சியுடனே, அரசை எதிர்கோள் எண்ணி - சக்கரவர்த்தியை யெதிர்கொள்ள நினைத்து, யோசனை சென்றனன் - யோசனை தூரம் புறப்பட்டுப் போனான்; (எ - று.)

தசரதன் சக்கரவர்த்தியாதலாலும், தன்பெண்ணைத் தத்த புத்திரியாக வளர்த்துக்கொள்ளும்படி கொடுக்குமாறு பெருநண்பனு தலாலும் உரோமபாதன் அவனை யெதிர்கொண்டு உபசரிப்பானயி னன். கொழுந்தோடிப் படர்கீர்த்தி - மேன்மேல் படர்கின்ற புகழ். கீர்த்தியைக் கொடியாக உருவகித்துக்கூறினர். ஒற்றர்-ஆங்காங்கு நிகழுஞ் செய்தியை யுணர்ந்துவந்து தம்மரசனுக்குச் சொல்பவர். கழுந்தோடும் என்பதற்கு-தனுர்த்தண்டம் நீண்டிருக்கப்பெற்ற என் றும் பொருள் கூறுவர். எழுந்து சென்றனனெனினுமாம். தோடு- ஆடவரின் காதணி: "தோடுடைய செவியன்" என்றது காண்க. பி - ம்:—[1]வெயில்வீச. [2]பாட. [3]உவகையொடும். [4]சென்ருன். [5]நண்ணி. (238)

59.—எதிர்கொண்டு வணங்கிய மன்னவனைத் தசரதன் தழுவுதல்.

[1]எதிர்கொள்வான் வருகின்ற வயவேந்தன் றனைக்கண்ணுற்
றெழிலி [2]நாண, அதிர்கின்ற பொலந்தேர்நின் றரசர்பிரா [3]னிழிந்துழிச்
சென் றடியின் வீழ, முதிர்கின்ற பெருங்காதல் தழைத்தோங்க எடுத்
திறுக [4]முயங்க லோடும், கதிர்[5]கொண்ட சுடர்[6]வேலான் றனைநோ
க்கி யிவையுரைத்தான் களிப்பின் மிக்கான்.

(இ - ள்.) எதிர்கொள்வான் வருகின்ற - (தன்னை) எதிர் கொண்டு அழைத்துப்போவதற்கு வருகின்ற, வய வேந்தன் தனை - வலிமையையுடைய உரோமபாதனை, கண்ணுற்று - பார்த்து,— அரசர்பிரான் - தசரதசக்கரவர்த்தி, எழிலி நாண அதிர்கின்ற பொலம் தேர்நின்று இழிந்த உழி - மேகமும் (ஒப்பாகாமல்) வெள்கும்படி யொலிக்கின்ற பொன்மயமான இரதத்தினின்று இறங்கியபொழுது,- சென்று - (உரோமபாதன்) போய், அடியின் வீழ-(அந்தச்சக்கரவர்த் தியின்) பாதங்களில் விழுந்துவணங்க,—(தசரதன்), முதிர்கின்ற பெரு காதல் தழைத்து ஓங்க - விருத்தியடைகின்ற மிக்க அன்பா னது செழித்துவளர, எடுத்து-(உரோமபாத மன்னனைக் கைகளால்) எடுத்து, இறுக முயங்கலோடுஉம்-அழுந்தத் தழுவினவளவில்,— களிப்பின் மிக்கான் - ஆனந்தத்தால் மிகுந்தவனாகிய அந்த உரோம பாதன், கதிர்கொண்ட - கூர் நுனியைக்கொண்ட, சுடர் - விளங்கு கின்ற, வேலான் தனை - வேலாயுதத்தையுடைய சக்கரவர்த்தியை, நோக்கி-பார்த்து, இவை உரைத்தான்-இவ்வார்த்தைகளைச் சொல்லு வானானான்; (எ-று.) அவற்றை, மேற்கவியிற் கூறுகிறார்.

சக்கரவர்த்தியாதலோடு பிராயத்தால் மூத்தவனுமாதலால் தசரதனை உரோமபாதன் வணங்க, அவ்வரசனைச் சக்கரவர்த்தி தழுவ, உரோமபாதன் முகமன் கூறலானான். கதிர்கொண்ட சுடர் - ஒளியைக்கொண்ட சூரியன் போன்ற எனினுமாம். எழிலி - எழுச்சி யையுடையது: மேகம். பி - ம்:—[1]எதிர்கொள்ள. [2]காண. [3]இருந்து ழிச். [4]முயங்கப்புல்லி. [5]நின்ற. [6]எல்லோன். (239)

60.—உரோமபாதன் முகமன்கூறித் தசரதனைத் தன்னகர்க்கு அழைத்துவருதல்.

யான்செய்த மாதவமோ விவ்வுலகஞ் செய்தவமோ யாதோ [1]விங்கண், வான்செய்த சுடர்வேலோ [2]யடைந்ததென மனமகிழா மணித்தே [3]ரேற்றித், தேன்செய்த தார்[4]மௌலித் தேர்வேந்தைச் செழுநகரிற் கொணர்ந்தான் றெவ்வர், ஊன்செய்த [5]சுடர்வடிவே லுரோமபத [6]னென்றுரைக்கு [7]முரவுத் தோளான்.

(இ - ள்.) தெவ்வர் - பகைவர்களை, ஊன் செய்த - (உயிர் நீங்கின) தசைமாத்திரமாம்படி செய்த, சுடர்-விளங்குகின்ற, வடிவேல்-கூர்மையான வேலையுடைய, உரோமபதன் என்று உரைக்கும் - உரோமபாதனென்று சொல்லப்படுகிற, உரவு தோளான்-வலிமையையுடைய தோள்களையுடைய அரசன்,—(தசரதனை நோக்கி),—'வான் செய்த சுடர் வேலோய் - தேவலோகத்தை நிலைபெறச் செய்த விளங்குகின்ற வேலையுடையவனே! இங்கண் அடைந்தது - (நீ) இவ்விடத்தில் வந்தது, யான் செய்த மா தவமோ - நான் செய்துள்ள தவத்தின் பயனோ? இ உலகம் செய் தவமோ - இந்த இராச்சியத்தவர்செய்துள்ள தவத்தின் பயனோ? யாதுஓ - (இவ்விரண்டனுள்) எதுவோ?' என - என்று (முகமன்) கூறி, மனம் மகிழா - மனங்களித்து, தேன் செய்த தார் மௌலி - தேனைப்பெருக்குகின்ற பூமாலையைச் சூடிய முடியையுடைய, தேர்வேந்தை-தசரத சக்கரவர்த்தியை, மணி தேர் ஏற்றி - இரத்தினங்கள் பதித்துள்ள தேரில் ஏறிவீற்றிருக்கச் செய்து, செழு நகரில் கொணர்ந்தான் - செழிப்பான (தனது) நகரத்திற்கு அழைத்து வந்தான்; (எ-று.)

அழிக்கமுடியாத சம்பரன் முதலிய அசுரர்களைத் தேவேந்திரனது வேண்டுகோளினால் வென்று தேவலோகத்தைப் பாதுகாத்ததனால், தசரதனை 'வான்செய்த சுடர்வேலோய்' என்றான். ஊன் செய்த சுடர்வடிவேல் என்பதற்கு - பகைவருடைய ஊனினாற் செய்ததென்று கண்டோர் சொல்லுவதாய் (ஆகாயத்தில் விளங்குஞ்) சூரியனையொத்துப் பெருமைபொருந்திய வேல்என்று உரைப்பினுமாம். கொடியவரை யழித்தலிற் சிறந்த சிவபிரான் சுப்பிரமணியக்கடவுள் யமன் என்னும் இவர்கட்கு வேல் ஆயுதமாதலால், அதனைத் தலைமையாக எடுத்துக்கூறுதல், ஓர் வகை மரபு. இவ்வுலகம் - அங்கதேசம். பி - ம்:—[1] இங்கன். [2] நீயிவண்வந்தடைந்ததென, அடைந்ததெனமனமகிழ்ந்து, அடைந்ததெனமனமகிழ, இவணடைந்ததெனமகிழா, அடைந்ததென மிகமகிழ, அடைந்ததென மிகமகிழ்ந்து. [3] ஏறி. [4] மவுலி. [5] வடியிலை. [6] என. [7] உவகைத். (240)

61.—உரோமபாதன் உபசரிக்கத் தசரதன் மகிழ்தல்.

ஆடகப்பொற் சுடரிமைக்கு மணிமாடத் திடையொரு [1]மண்டபத்தை [2]யண்மிப், பாடகச்செம் பதுமமலர்ப் பாவையர்பல் லாண்டிசைப்பப் பைம்பொற் பீடத்து, ஏடு[3]துற்ற [4]வடிவேலோன் றனை [5]யிருத்திக் [6]கடன்முறைகள் [7]யாவு[8]நேர்ந்து, தோடுதுற்ற மலர்த்தாரான் விருந்தளிப்ப வினிதுவந்தான் சுரர்நா டந்தான்.

(இ - ள்.) தோடு துற்ற மலர் தாரான் - இதழ்கள் நெருங்கிய பூவினாலாகிய மாலையையுடைய உரோமபாதன்,—ஆடகம் பொன் சுடர் இமைக்கும் அணி மாடத்திடை-ஆடகமென்னும் (உயர்ந்த) பொன்னாலாகிய ஒளிவீசுகின்ற அழகிய (தனது) அரண்மனையிலே, ஒரு மண்டபத்தை அண்மி-மண்டபமொன்றைச் சேர்ந்து, பாடகம் செம்பதுமம் மலர் பாவையர் - பாடகத்தையணிந்த செந்தாமரைமலர்போன்ற பாதங்களை யுடைய சித்திரப்பாவைபோலழகிய மகளிர், பல்லாண்டு இசைப்ப - பல்லாண்டுபாட, பைம்பொன் பீடத்து - பசும்பொன்னாலாகிய சிங்காதனத்திலே, ஏடு துற்ற வடி வேலோன்தனை - வெற்றிமாலை பொருந்திய கூரிய வேலையுடைய சக்கரவர்த்தியை, இருத்தி - வீற்றிருக்கச் செய்து, கடன் முறைகள் யாஉம் நேர்ந்து - செய்யத்தக்க கடமைகளாகிய [கிரமமான] உபசாரங்களெல்லாவற்றையும் தந்து, விருந்து அளிப்ப -விருந்துணவு இட,—சுரர் நாடு ஈந்தான்-தேவலோகத்தை (இந்திரனுக்கு மீட்டு)க்கொடுத்தவனாகிய தசரதன், இனிது உவந்தான் - இனிமையாக விருப்பத்தோடு அமுதுசெய்தான்; (எ - று.)

செம்பதுமமலர்ப் பாவையர் - தாமரையில்வாழும் இலக்குமியைப்போன்ற மகளிரெனினுமாம். ஏடு - மாலைக்கு, இருமடியாகு பெயர். ஏடுதுற்ற வடிவேல் - மலரிதழின் வடிவமான வேல்எனினுமாம். பி-ம்:—[1]மண்டபத்தே. [2]ஆக்கி, அண்ணிப். [3]துற்று. [4]மலர்த்தாரான். [5]நோக்கி. [6]கடைமுறைகள். [7]யாதும். [8]ஈந்து. (241)

62.—தசரதன் வந்த காரியத்தைக்கூற, உரோமபாதன் இருசியசிருங்கனை அயோத்தியில் அழைத்துவருவதாகச் சொல்ல, தசரதன் நகர்க்கு மீளல்.

செவ்விநறுஞ் சாந்தளித்துத் தேர்வேந்தன் றனைநோக்கி யிவணீ
சேர்ந்த, கவ்வை[1]யுரைத்தருளுகென நிகழ்ந்த[2]பரிசரசர்பிரான் கழற
லோடும்,அவ்விய[3]நீத் துயர்ந்தமனத் தருந்தவனைக் கொணர்ந்[4]தாங்
கண் [5]விடுப்பெனுன்ற, செவ்விமுடி யோயெனலுந் தேரேறிச்[6]சேனை
யொடு மயோத்தி சேர்ந்தான்.

(இ - ள்.) செவ்வி நறு சாந்து அளித்து - அழகையும் நல் வாசனையையுமுடைய சந்தனத்தையுந் தந்து, தேர் வேந்தன்தனை நோக்கி - தசரதனைப்பார்த்து, 'இவண் நீ சேர்ந்த கவ்வை - இவ்விடத்தில் நீ வந்த காரியம், உரைத்தருளுக - (இன்னதென்று) சொல்லியருள்வாயாக', என - என்று வினவ,—அரசர்பிரான்-சக்கரவர்த்தி, நிகழ்ந்த பரிசு - நடந்த செய்கையை, கழறலோடுஉம்- சொன்னவளவில்,—(உரோமபாதவரசன் தசரதனை நோக்கி),'ஆன்ற செவ்வி முடியோய் - சிறந்த அழகுள்ள கிரீடத்தையுடையவனே! அவ்வியம் நீத்து உயர்ந்த மனத்து அரு தவனை - பொறாமையையொழித்துச் சிறந்த மனத்தையுடைய அரிய தவமுள்ள இருசிய சிருங்கமுனிவனை, ஆங்கண் கொணர்ந்து விடுப்பென்-அவ்விடத்திற் கொண்டுவந்து விடுவேன்', எனலும் - என்று சொன்னவுடன், (சக்கரவர்த்தி), தேர் ஏறி - தேரின்மேலேறி, சேனையொடும்—, அயோத்தி சேர்ந்தான்-; (எ-று.)

உண்டபின் சந்தனமளித்தல் மரபு ஆதலின், கீழ்க்கவியில் விருந்திட்டதைக் கூறி, இங்குச் சாந்த மளித்ததைக் கூறினர். அழுக்காறு, பிற தீக்குணங்கட்கும் உபலட்சணம்: துர்க்குணங்களுள் முதன்மைபெறுதலால், அழுக்காற்றைக் கூறினர். பி-ம்:—[1]உரைத்தருடி, உரைத்தருள்க, உரைத்திடுக. [2]படி. [3]தீர்ந்து, தீர்த்து. [4]ஆங்கு. [5]விடுவன். [6]சேனையுடன். (242)

63.—உரோமபாதன் இருசியசிருங்கனை யணுகி ஒருவரம் தரவேணுமென, அம்முனிவன் யாதென வினவுதல்.

மன்னர்பிரா னகன்றதற்பின் வயவேந்த னருமறைநூல் [1]வடிவங் [2]கொண்ட, தன்னமுனி வரனுறையுள் [3]தனையணுகி [4]யிணையடித்தா மரைக [5]ளம்பொன், மன்னு [6]மணி முடியணிந்து வரன்முறைசெய் திடவிவணீ வருதற் கொத்த, [7]தென்னையென வடியேற்கோர் வர [8]மருளு மடிகளென யாவ தென்ருன்.

(இ - ள்.) மன்னர்பிரான் - சக்கரவர்த்தி, அகன்றதன் பின்-(அயோத்திநகர்க்கு) மீண்டபின்பு,—வய வேந்தன் - வலிமையையுடைய உரோமபாதன், அரு மறை நூல் வடிவம் கொண்டது அன்ன-அருமையான வேதசாஸ்திரம் ஒருபுருஷரூபத்தை யெடுத்தாற்போன்றுள்ள, முனிவரன் - இருடிச்சிரேட்டனது, உறையுள் தனை அணுகி - இருப்பிடத்தைச் சேர்ந்து, இணை அடி தாமரைகள்-(அம்முனிவனுடைய) உபய திருவடித்தாமரைமலர்களை,அம் பொன் மன்னும் மணி முடி அணிந்து-அழகியபொன் மயமாகப் பொருந்திய இரத்தினங்களைப் பதித்த (தனது) கிரீடத்தின்மேலே தரித்து [சாஷ்டாங்கமாகத்தண்டனிட்டு], வரன்முறை செய்திட-முறைமைப் படியே (உபசாரங்களைச்) செய்ய,—இவண் நீ வருதற்கு ஒத்தது என்னை என-(முனிவன் அரசனைநோக்கி) 'இவ்விடம் நீ வருதற்குப் பொருந்திய காரணம் என்ன?' என்று வினவ,—(அரசன்), 'அடிகள் - சுவாமிகளே! அடியேற்கு ஓர் வரம் அருளும்-(உமது) அடியவனுன எனக்கு ஒருவரத்தைக் கொடுத்தருள்வீராக', என-என்றுவேண்ட, யாவது என்ருன் - (முனிவன் 'அவ்வரம்) யாது?' என்று வினவினன்; (எ - று.)

யாவது - விரித்தல். பி - ம்:—[1]வடிவு. [2]கொண்ட. [3]அதனையடைந்து. [4]அவனடி, அடியிணை. [5]செம்பொன், சூடி. [6]முடிபணிந்தேத்தி, மணிமுடிபணிந்து. [7]என்ன. [8]அருள, அருள்க, அருளெம்.

64.-தசரதசக்கரவர்த்தியின் நகரத்துக்குச் சென்றுவருமாறு உரோமபாதன் முனிவனை வரம் வேண்டுதல்.

புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை[1]தன் புகழிற் பூத்த, அற[2]ஞென்று திருமனத்தா னமரர்களுக் கிட[3]ரிழைக்கு [4]மவுணா ராயோர், திற[5]லுண்ட வடிவேலான் றெசரதனென் றுயர் கீர்த்திச் செங்கோல் வேந்தன், விறல்கொண்ட [6]மணிமாட [7]வயோத்திநக ரடைந்திவணீ [8]மீட [9]லென்ருன்.

(இ - ள்.) 'புறவு ஒன்றின் பொருட்டு ஆக - ஒருபுருவின் நிமித்தமாக, துலை புக்க - தராசுதட்டிலேறிய, பெருந்தகைதன் - பெரு

மைக் குணமுள்ள சிபிசக்கரவர்த்தியினது, புகழில் - கீர்த்தியைக் கொண்டுள்ள குலத்திலே, பூத்த-பிறந்த, அறன் ஒன்று திரு மனத்தான் - தருமம்நிலைபெற்ற சிறந்த மனத்தையுடையவனும், அமரர்களுக்கு இடர் இழைக்கும் அவுணர் ஆயோர் - தேவர்களுக்குத் துன்பங்களைச் செய்கின்ற அசுரரானவர்களது, திறல் உண்ட வடிவேலான் - வலிமையை யழித்த கூர்மையுள்ள வேலையுடையவனுமாகிய, தெசரதன் என்ற-தசரதனென்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, உயர் கீர்த்தி செங்கோல் வேந்தன் - சிறந்தபுகழும் நீதிதவறாத அரசாட்சியையுமுடைய சக்கரவர்த்தியினது, விறல் கொண்ட மணி மாடம் அயோத்தி நகர் - பெருமையைக் கொண்ட இரத்தினகசிதமான மாளிகைகளையுடைய அயோத்தியா பட்டணத்தை, அடைந்து - சேர்ந்து, (பின்பு), இவண் நீ மீடல் - இங்கே நீ திரும்பி வருவாயாக,' என்றான்-என்று (முனிவனை நோக்கி) வரம் வேண்டினான், (உரோமபாதன்); (எ - று.)

'புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை' என்பதில் அடங்கிய கதை:—சிபியென்னுஞ் சக்கரவர்த்தி அரசுபுரிகையில் அவன் மேன்மையைப் பரிசோதித்தற்காகத் தேவேந்திரன் பெரும்பருந்தாகவும் யமன் சிறுபுறுவாகவும் வடிவமெடுத்தனர்;புறுவைப் பருந்து துரத்திவர, அந்தப்புறு சக்கரவர்த்தியைச் சரணமடைந்தது. அரசன் அந்தப்புறுவுக்கு அபயமளித்தான். பின்னே வந்த பருந்து 'என் இரையைக் கொடுத்துவிடு' என்று சிபியைக் கேட்டது. சிபிசக்கரவர்த்தி 'அடைக்கலம்புகுந்தபொருளை ஆதரியாது கைவிடுதல் அதிபாதகமாதலால், இதையன்றி எதைக் கேட்டாலும் கொடுப்பேன்' என்றான். பருந்து 'ஆயின், இந்தப் புறுவினெடையளவு தசைஉன்னுடம்பில் அரிந்துகொடு' என்றது. சக்கரவர்த்தி உடன்பட்டு, உடனே தன்னுடம்பிலுள்ள உறுப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றாக அறுத்துவைத்தும் எடைகுறைந்தமையால் முடிவில் தானே தராசுதட்டிலேறி எடையை நிறைத்தான். உடனே அவ்விருதேவர்களும் நிசவடிவத்துடன் வெளிப்பட்டுச் சிபி சக்கரவர்த்தியைக் கொண்டாடி அவன் வேண்டினவரங்களை அளித்துப்போயினரென்பது. சிபியின் புகழிற்பூத்தவன் என்று தசரதனைக் கூறியது - இந்தக்குலத்தவர் செயலெல்லாம் பிறர்க்கு உதவிசெய்தற்பொருட்டாகவே யிருக்கு மென்றற்கு: ஆகவே, இப்படிப்பட்டவர்களின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுவது நமக்குக்கடமையாகுமென்று குறிப்பித்தவாறு. மீடல்-வியங்கோள். புகழ் இல்-புகழையுடைய குடியென்றுமாம். மோனைபற்றி, 'தெசரதன்' எனநின்றது. பி-ம்:—[1] நின். [2] ஒன்றும். [3] விளக்கும், உழைக்கும். [4] அசுரராவோர், அவுணரானோர். [5] கொண்ட. [6] மணிமாடத்து. [7] அயோத்திதனின். [8] மீள்க. [9] வேண்டும். (244)

65.—அரசனது வேண்டுகோட்கு இணங்கி, முனிவன் மனைவியுடன் பயணத்துக்கு வந்த தேரின்மீது ஏறிச்சிறத்தல்.

அவ்வரந்தந் தன[1]மினித்தேர் [2]கொணர்தியென வருந்தவத்தோனறைதலோடும், வெவ்வரந்தின் றயில்படைக்குஞ் சுடர்வேலோ

னடி [3]யிறைஞ்சி [4]வேந்தர் வேந்தன், கவ்வை[5]யொழிந் துயர்ந்தன னென் றதிர்குரற்றேர் [6]கொணர்ந்திதனிற் கலைவ லாளன், செவ்வி நுதற் றிருவினொடும் [7]போந்தேறு கெனவேறிச் சிறந்தான் மன்னோ.

(இ - ள்.) 'அ வரம் தந்தனம்-அந்த வரத்தைக் கொடுத்தோம்; இனி தேர் கொணர்தி-இப்பொழுது தேரைக் கொணர்வாயாக', என-என்று, அரு தவத்தோன்-அரிய தவத்தையுடையமுனிவன், அறைதலோடுஉம்-சொன்னவளவில்,—வெம் அரம் தின்று-கொடிய அரத்தால் அராவப்பட்டு, அயில் படைக்கும்-கூர்மையைப்பெற்ற, சுடர் வேலோன்-ஒளியையுடைய வேலையுடைய அரசன், அடி இறைஞ்சி-(முனிவனது)திருவடிகளை வணங்கி, 'வேந்தர் வேந்தன் கவ்வை ஒழிந்து உயர்ந்தனன் என்று-சக்கரவர்த்தி துன்பம்நீங்கிச் சிறப்புற்றவனாயினன்' என்றுசொல்லி, அதிர் குரல் தேர் கொணர்ந்து-முழங்குகின்ற ஓசையையுடைய இரதத்தைக் கொண்டுவந்து, 'இதனில் - இந்தத் தேரிலே, கலைவலாளன் - நூல்களில்வல்ல இருசியசிருங்க முனிவனே! செவ்வி நுதல் திருவினொடுஉம் - அழகைக்கொண்ட நெற்றியையுடைய இலக்குமிபோன்ற சாந்தையுடனே, போந்து ஏறுக-வந்துஏறியருள்', என - என்று (உரோமபாதன்) சொல்ல,— ஏறி சிறந்தான்-(இருசியசிருங்கமுனிவன்)அதிலேறிச் சிறப்புற்றான்;

தசரதன் ருசியசிருங்கனைத் தன் நகர்க்குவரவேண்டுமென்று உரோமபாதன் மூலமாக வேண்டியது புத்திரகாமயாகம் நிறைவேற்ற ஆதலாலும், அதனால் புதல்வர் தோன்றத் தசரதன் குறை நீங்குமாதலாலும், ருசியசிருங்கன் அயோத்திசெல்ல உடன்படலும், 'வேந்தன் கவ்வையொழிந்துயர்ந்தனன்' என்று சொல்லி, உரோமபாதன், தேரையமைத்து அதில் ஏறுமாறு வேண்ட, முனிவன் மனைவியுடன் ஏறிச்சிறந்தன னென்பதாம். சாந்தையை 'முகநலாள்' என்றதுபோல, இங்கு 'செவ்வி நுதற்றிரு' என்றார். அரந்தின்னுதலென்பது - அரத்தினாலராவப்படுதலென்னும்பொருளில் வருதலை, "அரந்தினப்பிறந்த பைம்பொன்" என்ற சிந்தாமணியிலுங் காண்க. கலைவலாளன் - அண்மைவிளி. பி-ம்:—[1]மணித், இனத். [2]கொணர்க. [3]இறைஞ்சா, வணங்கி. [4]எந்தாய். [5]ஒழித்துயர்ந்தனனென்றதிர், ஒழிந்தனனென்றுவதிர். [6]கொணர்ந்ததனில், கொணர்ந்தனனிக். [7]தேரேறுக,பெயர்ந்தேறுக. (245)

வேறு.

66.—இருசியசிருங்கமுனிவன் அயோத்திநோக்கிச் செல்லுதல்.

குனிசிலை [1]வயவனுங் கரங்கள் கூப்பிடத்
துனியறு [2]முனிவரர் தொடர்ந்து [3]சூழ்வர
வனிதையு மருமறை [4]வடிவம் போன்றொளிர்
முனிவனும் [5]பொறிமிசை நெறியை [6]முன்னினர்,

(இ - ள்.) குனி சிலை வயவன் - வளைத்த வில்லையுடைய வீரனாகிய உரோமபாதன், கரங்கள் கூப்பிடஉம் - கைகளைக்குவித்து

வணங்கவும், துனி அறு முனிவரர் - கோபமில்லாத [சாந்தகுண முடைய] இருடிச்சிரேட்டர்கள், தொடர்ந்து சூழ்வர (உம்) - (தன்னைத்) தொடர்ந்து சுற்றிவரவும்,—அரு மறை வடிவம் போன்று ஒளிர் முனிவன்உம் - அருமையான வேதத்தின் சொரூபத்தை யொத்து [குற்றமற்று] விளங்குகின்ற இருசியசிருங்கமுனிவனும், வனிதைஉம் - (அவனது) மனைவியாகிய சாந்தையும், பொறிமிசை -தேரின்மீது (ஏறி), நெறியைமுன்னினர்-(அயோத்திக்குச்செல்லும்) வழியை நோக்கிச் சென்றார்கள்; (எ - று.)

உரோமபாதமன்னவன் கைகூப்பி வணங்கி வழிவிட, தேரிலேறிய ருசியசிருங்கன் முனிவர் சூழ்ந்துவரத் தன் மனைவியுடன் அயோத்திக்குச் செல்லலாயின னென்பதாம். வயவன்-'வயம்' அல்லது வய' என்பதனடியாகப் பிறந்த பெயர். வயம்-வெற்றி, வய - வலி. தேரின் பரியாயங்களுள் யந்திரமென்பது ஒன்றாகையால், இங்குத் தேரை 'பொறி' என்றார். வயவனும், உம்மையை மாற்றியுரைக்காமல், கதைப்போக்குப் பற்றிவந்த தெனினுமாம். பி-ம்:—[1] அரசனும். [2] முனிவர்கள். [3] சூழ்தர. [4] வடிவு. [5] தேர்மிசை. [6] முன்னின்றான், முன்னினான். (246)

67.—அப்போது தேவதைகளின் மகிழ்ச்சி.

அந்தர [1] துந்துமி [2] முழக்கி யாய்மலர்
சிந்தினர் களித்தன [3] ரறமுந் தேவரும்
வெந்[4]தெழு [5] கொடுவினை [6] வீட்டும் [7] மெய்ம்முதல்
[8] வந்தெழ வருடரு வானென் றெண்ணியே.

(இ - ள்.) (அம்முனிவன் தேரேறி அயோத்திநோக்கிச் சென்ற மாத்திரத்தில்), அறம்உம்-தருமதேவதையும், தேவர்உம்- இந்திராதிதேவர்களும்,—'வெந்து எழு கொடு வினை வீட்டும் மெய் முதல் வந்து எழ - (நெருப்புப்போல) எரிந்தெழுகிற கொடிய (இராக்கதர்களாகிற) தீவினைகளை யழிக்கப்போகின்ற உண்மையான முழுமுதற்கடவுள் [திருமால்] (இவ்வுலகில்) வந்து திருவவதரிக்கும்படி, அருள் தருவான் - (இம்முனிவன்) கருணை செய்வான்,' என்று எண்ணி—, களித்தனர் - பெருமகிழ்ச்சி யடைந்தவர்களாகி, அந்தரம் துந்துமி முழக்கி - வானத்திலுள்ள பேரிகையை யடித்து (ஆரவாரத்தையுண்டாக்கி), ஆய் மலர் சிந்தினர்-ஆராய்ந்தெடுத்த [சிறந்த] (கற்பகவிருட்சத்தின்) மலர்களை (மழைபோல அம்முனிவன்மேற்) சொரிந்தனர்; (எ - று.)

இனி, ஸ்ரீராமன் தசரதபுத்திரனாகத் திருவவதரித்துத் தம் பகையான அரக்கரை யொழித்து அறத்தை நிலைநிறுத்துவ னென்று கருதியதனால் தேவர்கள் அந்தரதுந்துபி முழக்கி மலர் மழை பொழிந்து களிப்ப, அறமும் களித்த தென்பதாம். பி-ம்:— [1] துந்துபி. [2] முழங்கி, வழங்க. [3] அறத்தில், திறத்தின், வரமும். [4] எம. [5] கொடும்பிணி. [6] வீய்க்கும், வீழ்க்கும், வீழ. [7] எம். [8] வந்தென, வந்தெழுந்து, வந்தெழும். (247)

68.—தூதர் ருசியசிருங்கன் வருஞ் செய்தி தெரிவிக்க, தசரதன் மகிழ்தல்.

தூதுவ ரவ்வழி யயோத்தி துன்னினர்
மாதிரம் [1]பொருததோண் மன்னர் மன்னன்முன்
ஓதினர் [2]முனிவர [3]வோத வேந்தனும்
காதலென் [4]றளவறு கடலு ளாழ்ந்தனன்.

(இ - ள்.) அ வழி - அப்பொழுது, தூதுவர் - தூதர்கள், அயோத்தி துன்னினர் - அயோத்திநகரத்தை யடைந்து, மாதிரம் பொருத தோள் மன்னர் மன்னன் முன் - மலைகளையொத்ததோள் களையுடைய தசரதசக்கரவர்த்தியின் முன்னிலையில், முனி வரவு ஓதினர் - (இருசியசிருங்க) முனிவனது வருகையைச் சொன்னார் கள்; ஓத - சொல்ல, வேந்தன்உம்- தசரதசக்கரவர்த்தியும், காதல் என்ற அளவு அறு கடலுள் ஆழ்ந்தனன் - மகிழ்ச்சியென்கிற அள வில்லாத கடலிலே முழுகினான்; (எ-று.)

மாதிரம் பொருத - திக்விசயஞ்செய்த என்றும், காதல் - முனி வனிடத்துள்ள அன்பு என்றும் கூறலாம். காதலென்றளவறுகடல் -“அன்பெனுமளக்கர்”. பி-ம்:—[1]பொருந்து. [2]முனிவரர். [3]உவந்து. [4]அளவறும், அளப்பிலாக். (248)

69.—முனிவனை எதிர்கொள்ளத் தசரதன் தேரேறிப் புறப்படுதல்.

எழுந்தனன் பொருக்கென விரத மேறினன்
[1]பொழிந்தன மலர்மழை யாசி [2]பூத்தன
[3]மொழிந்தன [4]பல்லிய முரச மார்த்தன
விழுந்தன தீவினை வேரி னோடுமே.

(இ - ள்.) (உடனே சக்கரவர்த்தி),—பொருக்கென எழுந்த னன் - (முனிவனை எதிர்கொள்ளும்பொருட்டு) விரைவாக எழுந்து, இரதம் ஏறினன் - தேரின்மேலேறினான்; (அப்பொழுது), மலர் மழை பொழிந்தன-(தேவர்களது) புஷ்பவருஷங்கள் பொழிந்தன; ஆசி பூத்தன - முனிவர்களது ஆசீர்வாதங்கள் உண்டாயின; முரசம் ஆர்த்தன - பேரிகைகள் முழங்கின; பல் இயம் மொழிந்தன- மற்றும் பலவாத்தியங்கள் ஒலித்தன: தீவினை வேரினோடுஉம் விழுந்தன - பாபங்கள் வேரோடு அழிந்துவிழுந்தன; (எ - று.)

சொல்லுதலென்ற பொருளுள்ள சொற்கள் ஒலித்தலென் னும் பொருளில்வருதல், இயல்பு; ஆதலால்,‘மொழிந்தனபல்லியம்’ என்றார்; “புகன்ற தீங்குழல்” என்றார், சிந்தாமணியாரும். நற் செயலைத்தடுத்து தீச்செயலையே புரியும் அரக்கராதியோர் அடி யோடு ஒழிவரென்ற தேற்றம்பற்றி, ‘தீவினை வேரினோடும் விழுந் தன’ என்றார். பி - ம்:—[1]பொழிந்தனர். [2]பூத்தென, பூத்தனர். [3]மொழிந்தனர். [4]முனிவர்கள். (249)

70.—72.—இதுமுதல் மூன்றுகவிகள்-குளகம்: இருசியசிருங்கமுனிவனைத் தசரதசக்கரவர்த்தி காணுதலைக் கூறும்.

70. [1]பிதிர்ந்ததெம் மனத்துயர்ப் பிறங்க [2]லென்றுகொண்டு
[3]அதிர்ந்தெழு [4]முரசுடை யரசர் கோமகன்
முதிர்ந்தமா [5]தவமுடை முனியைக் [6]கண்களால்
எதிர்ந்தனன் யோசனை யிரண்டொ டொன்றினே.

71. நற்றவ மனைத்துமோர் நவையி லாவுருப்
பெற்[7]றிவ [8]ணடைந்தெனப் பிறங்கு வான்றனைச்
சுற்றிய [9]சீரையும் உழையின் தோற்றமும்
முற்றுறப் பொலிதரு மூர்த்தி யான்றனை.

72. அண்டர்[10]கள் துயரமு மரக்க ராற்றலும்
விண்டிட[11]ப் பொலிதரும் வினை[12]வ லாளனைக்
குண்டிகை குடையொடு குலவு [13]நூன்முறைத்
[14]தண்டொடு பொலிதரு தடக்கை [15]யான்றனை.

(இ - ள்.) (70) அதிர்ந்து எழு முரசு உடை - அதிர்ச்சி பெற்று மிகுதியாகவொலிக்கின்ற பேரிகைகளையுடைய, அரசர்கோமகன் - தசரதசக்கரவர்த்தி,—'எம் மனம் துயர்பிறங்கல் பிதிர்ந்தது என்றுகொண்டு-எமது மனத்திலுள்ள துன்பமாகிய மலை பொடியாகி நீங்கிவிட்டது' என்று எண்ணி,—(71) நல் தவம் அனைத்தும் ஓர் நவை இலா உரு பெற்று இவண் அடைந்(த)து என பிறங்குவான்தனை - சிறந்த தவங்களெல்லாம் குற்றமில்லாத வடிவத்தை யடைந்து இங்கே வந்துள்ளதென்று (கண்டோர்) கருதும்படி விளங்குபவனும், சுற்றிய சீரைஉம் உழையின் தோற்றம்உம் முற்று உற பொலிதரு மூர்த்தியான்தனை - (அரையில்) உடுத்த மரவுரியும் (மேலே) தரித்த மான்தோலும் நிரம்ப விளங்குகின்ற உடம்பையுடையவனும், (72) அண்டர்கள் துயரம்உம் அரக்கர் ஆற்றல்உம் விண்டிட பொலிதரும் வினைவலாளனை-தேவர்களது துன்பமும் இராக்கதர்களது வலிமையும் நீங்கும்படி விளங்குகின்ற (யாகத்)தொழிலில் வல்லவனும், குடையொடு தண்டொடு குண்டிகை-குடையும் பிரமதண்டமும் என்றவற்றுடனே கமண்டலமும், குலவு நூல் முறை - சிறந்த சாத்திரமுறைப்படியே, பொலிதரு - விளங்குகின்ற, தட கையான்தனை - பெரிய கைகளையுடையவனுமான, (70) முதிர்ந்த மா தவம் உடை முனியை - முற்றின பெருந்தவத்தையுடைய இருசியசிருங்கமுனிவனை, யோசனை இரண்டொடு ஒன்றின் - மூன்றுயோசனை தூரம் (எதிர்சென்று), கண்களால் எதிர்ந்தனன் - (தனது) கண்களாற் கண்டான்; (எ-று.)

முனிவனது வருகையை யறிந்த தசரதன் 'இனி, நமக்குப் புத்திரருதித்தல் திண்ணம்' என்று மனமகிழ்ந்து, அம் முனிவனை யெதிர்கொண்டு சென்றன னென்க. 71 - ஆம் பாடலிலுள்ள 'பிறங்குவான்றனே', 'மூர்த்தியான்றனே' என்பனவும், 72 - ஆம் பாடலிலுள்ள 'வினைவலாளனே', 'தடக்கையான்றனே' என்பனவும், 70 - ஆங்கவியிலுள்ள 'தவமுடையமுனியை' என்பதற்கு

விசேடணங்களாக இயையும்: இங்ஙனம் விசேடியத்தை முதலிற் கூறிப் பிறகு அடைமொழிகளைக்கூறியது, வடமொழிநடை. 70:—பிறங்கல் - நெடுந்தூரத்திலுள்ளார்க்கும் விளங்குவதென்ற காரணம்பற்றி மலைக்குப் பெயராகும். பி-ம்:—[1]பிதிர்ந்தது. [2]ஒன்று. [3]அதிர்ந்தது. [4]களிப்புடை, களியுடை, கடலுடை. [5]தவமுறை, தவத்திரு. [6]அன்பினோடு. 71:—தோற்றம் தோன்றுவது; தோலுக்கு, இலக்கணை. இம்முனிவர் நெற்றியில்மான்கொம்பையுடையவராதலால், உமையின் தோற்றமும்-மானையொத்த காட்சியுமென்று உரைப்பினுமாம். பி - ம்:—[7]அவண். [8]அடைந்தனி. [9]சீரமும், சீரையின். 72:—"நூலேகரகம்... ஆயுங்காலை யந்தணர்க்குஉரிய" என்ற தொல்காப்பியச்சூத்திரத்தால், கமண்டலமும், "ஆயுங்காலை" என்றதனால், குடையும் ஏகதண்டமும் முனிவர்க்கு உரியனவாதலறிக. தண்டு என்பதற்கு - திரிதண்டமென்று பொருளுரைத்தலாகாது; அது, துறவிகட்கேயுரியதாதலால். கமண்டலம் - நீர்கொள்ளும் பாத்திரம். பி - ம்:—[10]தம். [11]வியந்தெழுவிதி. [12]வல்லாளனை. [13]நான்மறை. [14]தண்டமும். [15]ஆளனை. (250,251,252.)

73.—தசரதன் முனிவனை வணங்க, அவன் ஆசி கூறல்.

இழிந்துபோ [1]யிரதமாண் டிணைகொள் [2]தாண்மலர்
விழுந்தனன் வேந்தர்தம் [3]வேந்தன் [4]மெய்ம்மையான்
மொழிந்தன ளுசிகண் முதிய நான்மறைக்
[5]கொழுந்துமேற் [6]படர்தரக் [7]கொழுகொம் பாயினன்.

(இ - ள்.) (இருசியசிருங்கமுனிவனைக் கண்டவளவில்), வேந்தர்தம் வேந்தன் - தசரதசக்கரவர்த்தி, ஆண்டு-அவ்விடத்தில், இரதம் இழிந்துபோய்-(தனது) தேரினின்று இறங்கி (அருகிற்) சென்று, இணை கொள் தாள் மலர் - (அம்முனிவனது) உபயதிருவடிவத்தாமரைமலர்களிலே, விழுந்தனன் - வீழ்ந்துவணங்கினன்; (வணங்கவும்), முதிய நால் மறை கொழுந்து மேல் படர்தர கொழுகொம்பு ஆயினன்-பழமையான [நித்தியமான] நான்கு வகைப்பட்ட வேதமாகிய கொடிகள் மேலேறிப்படர்தற்குக் கொள்கொம்பாயுள்ள அம்முனிவன், மெய்ம்மையால்-பொருள்நிரம்பிய மொழிகளால், ஆசிகள் மொழிந்தனன் - ஆசீர்வாதங்களைச் செய்தான்; (எ - று.)

வேதங்களும் அவற்றிற்கூறிய நல்லொழுக்கங்களும்உலகங்களிலெங்குஞ் செழித்துவளர்தற்குக்காரணமானவனென்பது, 'நான்மறைக்கொழுந்துமேற்படர்தரக் கொழுகொம்பாயினன்' என்றதன் கருத்து. பி-ம்:—[1]இரதமாடு. [2]தாமரை. [3]வேத. [4]நீர்மையான், மெய்ம்மையாய், நீதியான். [5]கொழுந்தின். [6]படர்தரு, படர்வதோர், படர்வன. [7]கொளுகொம்பு, கொள்கொம்பு. (253)

74.—தசரதன் முனிவனைத் தன்நகரத்துக்கு அழைத்துப்போதல்.

அயல்வரு முனிவரும் ஆசி கூறிடப்
புயல்[1]பொழி தடக்[2]கையால் தொழுது [3]பொங்குநீர்க்
கயல்பொரு விழியொடு கலைவ லாளனை
[4]இயல்பொடு [5]கொணர்ந்தன னிரத [6]மேற்றியே.

(இ-ள்.) (தசரதன்),—அயல் வரும் முனிவர்உம் ஆசிகூறிட - (இருசியசிருங்கமுனிவனது) அருகில் வருகின்ற முனிவர்களும் (தனக்கு) வாழ்த்துக்கூறுமாறு, புயல் பொழி தடகையால் - மேகம் நீரைப்பொழிவதுபோல (யாசகர்க்குத் திரவியங்களை)ப் பொழிகின்ற கையினாலே, தொழுது—,(பின்பு), பொங்கு நீர் கயல் பொரு விழியொடு-மிக்கநீரில் வாழ்கின்ற கயல்மீனையொத்த கருவிழியையுடைய சாந்தையுடனே, கலை வலாளனை - நூல்களில்வல்லவனான கலைக்கோட்டுமுனிவனை, இரதம் ஏற்றி - தேரின்மேலேற்றிக் கொண்டு, இயல்பொடு-முறைமைப்படியே, கொணர்ந்தனன்-(தனது நகர்க்கு) அழைத்துக்கொண்டுவந்தான்; (எ-று.)

மற்றைமுனிவரையும் அஞ்சலிசெய்து அவர்களிடம் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டு, தசரதன், இருசியசிருங்கமுனிவனை அவன்மனைவியுடனே தன்நகர்க்கு அழைத்துவந்தனனென்க. மிகவும் மதர்த்துத் தோன்றுமென்பதற்காக, 'பொங்குநீர்க்கயல்' என்றார். கயல்பொருவிழி - அன்மொழித்தொகை. பி - ம்:—[1]பொருதட, பொழிதர. [2]நதிபெருகப், நதிபெருகு. [3]பொங்கி. [4]இயலொடு. [5]கொணர்ந்தனர். [6]ஏறியே. (254)

75.—முனிவனோடும் மன்னவன் நகரமடைதல்.

[1]அடிகுரன் முரசதி ரயோத்தி மாநகர்
முடியுடை வேந்தன்அம் முனிவ னோடு[2]மோர்
கடிகையி னடைந்தனன் கமல வாண்முக
வடிவுடை [3]மடந்தையர் [4]வாழ்த்தெ டுப்பவே.

(இ - ள்.) முடி உடை வேந்தன் - கிரீடத்தையுடைய சக்கரவர்த்தி, கமலம் வாள் முகம் - தாமரைமலர்போன்ற ஒளியையுடைய முகத்தையும், வடிவு உடை-அழகையுமுடைய, மடந்தையர்-மகளிர், வாழ்த்து எடுப்ப-பல்லாண்டு பாட, அ முனிவனோடுஉம் - அந்த இருசியசிருங்கமுனிவனுடனே, ஓர் கடிகையின்-ஒருநாழிகைப்பொழுதினுள்ளே, அடி குரல் முரசு அதிர் அயோத்தி மா நகர்-அடிக்கப்படுகின்ற ஒலியையுடைய பேரிகைகள் முழங்குகின்ற அயோத்தியர்புரியை, அடைந்தனன்—; (எ - று.)

அயோத்திமாநகர்—'மா' - இசைநிறையாகவந்தது. பி - ம்:—[1]இடி. [2]போய். [3]மங்கையர். [4]வாழ்த்தி யேத்தவே. (255)

76.—வசிட்டனும் இருசியசிருங்கமுனிவனும் அரசவையிற் சேர்தல்.

[1]கசட்டுறு வினைத்தொழிற் கள்வ ராயுழல்
அசட்டர்க ளைவரை [2]யறுவ ராக்கிய
வசிட்டனு மருமறை [3]வடிவு [4]போன்றொளிர்
[5]விசிட்டனும் [6]வேத்தவை [7]பொலிய [8]மேவினர்.

(இ - ள்.) (பின்பு), கசடு உறு வினை தொழில் - குற்றம்மிச்க தீவினைக்கு ஏதுவாகிய செய்கைகளையுடைய, கள்வர் ஆய் - கள்வர்

களையொத்து, உழல் - திரிகின்ற, அசட்டர்கள் ஐவரை - நல்லறிவில்லாத ஐவர்களை,[பஞ்சேந்திரியங்களை], அறுவர் ஆக்கிய-அறுவர்களாகச்செய்த [அழிந்துபோகுபவர்களாகச்செய்த]. வசிட்டன்உம்-வசிட்ட முனிவனும்,அரு மறை வடிவுபோன்று ஒளிர்-(உணர்தற்கு) அரிய வேதமே ஒருவடிவமெடுத்து வந்தாற்போல் விளங்குகின்ற, விசிட்டன்உம்-சிறந்தவனான இருசியசிருங்க முனிவனும், வேந்து அவை பொலிய-இராசசபை விளக்கம்பெற, மேவினர்-சேர்ந்தார்கள்;

வசிட்டனும் கலைக்கோட்டு முனிவனும் ஒருங்கு வந்ததனால், இராசசபை முன்னிலும் விளக்கம்பெற்றதென்க. 'ஐவர்' என்பது பஞ்சேந்திரியங்களை; தொகைக்குறிப்பு: இகழ்ச்சிபற்றிவந்த திணைவழுவமைதி. 'அசட்டர்கள் - எதுகைநோக்கியவிகாரம். 'அசடு-திறமையற்றவன்: சடு-திறமையுள்ளவன்: வடசொல். ஐவரை அறுவராக்கிய என்பது - ஐம்பொறிகளை வலிமையற்றனவாக அடக்கிய என்றவாறு. அறுவர் = அறுபவர்: அழிந்துபோகுபவர்; வினையாலணையும் பெயர்; இதில் ஐந்துபேர்களை ஆறுபேர்களாக்கிய என்ற பொருளும் பட்டு, முரண்விளைந்தழிவணி இருத்தல் காண்க. ஐம்பொறிகளை 'கள்வர்' என்றது-தீநெறிச்செலுத்தி ஆன்மாவின் நல்லறிவைக் கொள்ளைகொள்ளுதலால். விசிட்டன் = விசிஷ்டன்:விசேஷசிஷ்டன்; மிக்க நல்லொழுக்கமுடையவன். பி - ம்:—[1] கசட்டறு. [2] அகத்தடைத்துள, அகத்தடக்கிய. [3] வழக்கு, வழக்கை, வழக்கம். [4] நீங்கலா. [5] விசிட்டரும். [6] வேந்தரும், வேந்தவை. [7] விதியின். [8] ஏறினன், மேவினன். (256)

77.—சக்கரவர்த்தி இருசியசிருங்கமுனிவனை ஆசனத்திலமர்த்தி உபசரித்தல்.

மாமணி மண்டப மன்னி மாசறு
தூமணித் தவிசிடைச் சுருதி யேநிகர்
கோ[1] முனிக் கரசனை யிருத்திக் கொள்கடன்
ஏமுறத் திருத்திவே றினைய செப்பினான்.

(இ - ள்.) (சக்கரவர்த்தி), மா மணி மண்டபம் மன்னி-சிறந்த இரத்தினங்கள் பதித்துள்ள அச் சபாமண்டபத்தை(த் தான்) அடைந்து, சுருதிஏ நிகர் - வேதத்தையொத்த, கோ - மேன்மை பொருந்திய, முனிக்கு அரசனை - இருடிச்சிரேட்டனாகிய இருசிய சிருங்கனை, மாசு அறு தூ மணி தவிசு இடை இருத்தி - குற்றமற்ற சுத்தமான இரத்தினங்களிழைத்துச் செய்யப்பட்ட ஆசனத்திலெழுந்தருளப்பண்ணி, கொள் கடன் ஏமுற திருத்தி - (அம் முனிவன்) ஏற்றுக்கொள்ளுதற்குரிய உபசாரங்களை (அம்முனிவன்) மகிழ்ச்சியடையும்படி திருத்தமாய்ச்செய்து, வேறு - வேறாக [பின்பு என்றபடி], இனைய செப்பினான்-இவ்வார்த்தைகளைச் சொல்வானானான்; (எ-று.)—அவை, மேற் கூறுகின்றார்.

ஏம் - ஏமம் என்பதன் கடைக்குறை. மாமணிமண்டபம் - வேத்தவை. கோஎன்பதைத் தனியேபிரித்து, தசரதசக்கரவர்த்தியென்பாருமுளர். பி - ம்:—[1] முனியரசனை, முனிக்கரசென. (257)

78.—சக்கரவர்த்தி இருசியசிருங்க முனிவனைத் துதித்தல்.

[1]சான்றவர் [2]சான்றவ தரும மாதவம்
போன்றொளிர் [3]புனிதநின் னருளிற் பூத்தஎன்
ஆன்றதொல் குல[4]மினி [5]யரசின் வைகுமால்
யான்[6]றவ முடைமையு [7]மிழப்பின் று[8]மரோ.

இதுமுதல் மூன்று கவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) சான்றவர் சான்றவ - (கேள்வி அறிவு ஒழுக்கம் என்ற இவற்றால் நிறைந்த) மேலோர்க்கும் மேலோனே! தருமம் மாதவம் போன்று ஒளிர் புனித - தருமசொரூபத்தையும் சிறந்த தவத்தின் வடிவத்தையும் போன்று விளங்குகின்ற பரிசுத்த குண முடையவனே! நின் அருளின் பூத்த-உனது கருணையைப் பெற்றதனாற் பொலிவடைந்த, என் ஆன்ற தொல்குலம் - எனது பெரிய தொன்றுதொட்டு வருகின்றவமிசமானது, இனி-,அரசின் வைகும்-(தொடர்ச்சியறுமல்) அரசாட்சியில் நிலைபெறும்; யான்தவம் உடைமையும்—, இழப்பு இன்று ஆம்-பயனறுதலில்லையாம்; (எ - று.)

உனது பேரருளால் எனதுமரபு அற்றுப்போகாமல் வளர்ச்சியுற்று நிலைபெறுமென்பதாம். தவமுடைமையையும் யான் இழப்பின்று என்று இயைத்து-தவமுடையவனுன தன்மையையும் யான் இழப்பதில்லை யென்பாருமுளர். பி - ம்:—[1]சான்றவச். [2]சான்றவர், சாற்றநற். [3]புனிதனின். [4]அணி. [5]இனிது, அரசு. [6]தவ. [7]தவ விரும்பயன். [8]என்றார், அன்றே. (258)

79.—இரண்டுகவிகள்—இருசியசிருங்கன் வார்த்தை: முனிவன் மன்னனுக்கு முகமன் கூறி, தன்னையழைப்பித்த காரணம் வினுதல்.

என்னலும் முனிவர [1]னினிதி [2]னேக்குரு
மன்னவர் [3]மன்னகேள் வசிட்ட [4]னென்னுமோர்
நன்னெடுந் தவன்றுணை நவை[5]யில் செய்கைநீ
நின்னையிவ் [6]வுலகினில் நிருபர் நேர்வரோ.

(இ - ள்.) என்னலும்-என்று (தசரதன்) சொன்னவளவில்,—, முனிவரன் - இருசியசிருங்கன்,—இனிதின் நோக்குரு-(தசரதனைக்) குளிரப்பார்த்து, 'மன்னவர்மன்ன-இராசாதிராசனே! கேள்-; நீ—, வசிட்டன் என்னும் ஓர் நல் நெடும் தவன் துணை - வசிட்டனென்று சிறப்பித்துச் சொல்லுகின்ற நல்ல பெருந்தவமுடைய ஒருமுனிவனை உதவியாகப் பெற்றிருக்கின்றாய்; (அன்றியும்), நவை இல் செய்கை-குற்றமற்ற செய்கையுடையாய்; (ஆதலால்), நின்னை-உன்னை, இ உலகினில் —, நிருபர் - ஓர் அரசர், நேர்வரோ - ஒப்பரோ? [ஒவ்வார்];

வசிட்டமுனிவனையே புரோகிதனுகப் பெற்றிருத்தலோடுகுற்றமற்றசெய்கையையுமுடைய உனக்கு, இவ்வுலகத்து எந்த மன்னவரும் நிகரல்லரென்றவாறு. துணை, செய்கை என்பவற்றின்பின் ஏற்ற சொல் வருவிக்கப்பட்டன. துணை-துணைவனுக்கு, பண்பாகு

பெயர். பி - ம்:-[1] இனிது. [2] நோக்கியே. [3] மன்னவ. [4] ஏயெனும், என்றெரு, என்னுமிங், என்றென்னும், நானெனும். [5] இல்லாதன, இவ்செய்கையால், இல்செய்கைய. [6] உலகிடை. (259)

80. [1] என்றன [2] பற்பல [3] வினிமை [4] கூறிநல்
குன்றுறழ் வரிசிலைக் குவவுத் தோளினய்
நன்றுகொ [5] ளரிமக நடத்த [6] வெண்ணியோ
இன்[7] றெனை யழைத்த[8] திங் கியம்பு வா[9] யென்றான்.

(இ - ள்.) என்றன பற்பல இனிமை கூறி - என்று சொல்லப்பட்டனவும் மற்றும் பலவகைப்பட்டனவுமாகிய இன்சொற்களைச் சொல்லி, (பின்பு), 'நல் குன்று உறழ் - அழகிய [பெரிய] மலையையொத்தனவும், வரி சிலை-கட்டமைந்த வில்லையேந்தினவுமான, குவவு தோளினய் - திரட்சியையுடைய தோள்களையுடைய தசரதனே! இன்று—, எனை—, இங்கு—, அழைத்தது-(நீ) வரவழைத்தது, நன்றி கொள் அரி மகம் நடத்த எண்ணிஓ-பலநன்மைகளை(த் தன்னிடத்தே) கொண்ட அசுவமேதயாகத்தை (என்னைக்கொண்டு) நடப்பிக்கக் கருதியோ? இயம்புவாய் - சொல்வாய்', என்றான்-என்று விணவினன்; (எ - று.)

'என்றான்' என்பதற்குக் கீழ்க்கவியிலுள்ள 'முனிவரன்' என்பது, எழுவாய். இனிமை - இனியவார்த்தைகளுக்குப் பண்பாகு பெயர். அரி = ஹரி: குதிரை. பி-ம்:—[1] என்றிவை, என்றனன்.[2] பலப்பல. [3] இனிது, இனிய, இனைய. [4] கூறினன், கூறிப்பின், கூறநற். [5] அருமகம். [6] நாடியோ. [7] எமை. [8] ஈங்கு. [9] எனு.

இங்கு, "எனக்கலைமாமுகச் சிருங்க னிவ்வுரை, தனைச்சொலத் தரணிபர்க்கரசன் றன்மகிழ்ந்து, அனைத்துல குயிரொடு மறங்களுய்யத்தம், மனத்துய ரகன்றிட வணங்கிக் கூறுவான்" என்ற ஒருபாடல் சிலபிரதிகளில் காண்கின்றதென்பர். (260)

81.—தசரதன் புதல்வனில்லாக்குறையை நீக்குமாறு முனிவனை வேண்டுதல்.

[1] உலப்பில்பல் [2] லாண்டெலாம் உறுக ணின்றியே
[3] தலப்பொறை யாற்றினென் தனயர் வந்திலர்
[4] அலப்புநீ [5] ருடுத்தபா ரளிக்கு மைந்தரை
நலப்புகழ்[6] பெறவினி நல்க வேண்டுமால்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) உலப்புஇல் பல் ஆண்டு எலாம் - முடிவில்லாத அநேகவருஷகாலம், உறுகண் இன்றி-யாதொருதுன்பமும் உண்டாகாமல், தலம் பொறை ஆற்றினென்-பூமிபாரத்தைத் தாங்கினேன்; தனயர் வந்திலர்-(என்காலத்துக்குப்பிறகு அங்ஙனம் பூமிபாரத்தைத் தாங்கும்படி) புத்திரர் பிறந்தாரில்லை: (ஆதலால்), இனி—, அலம்பு நீர் உடுத்த பார் அளிக்கும் மைந்தரை-கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தைக் காக்குந் தன்மையுள்ள புதல்வரை,

நலம் புகழ் பெற - சிறந்த கீர்த்தியை (நான்) அடையும்படி, நல்க வேண்டும் - (எனக்குப் பிறக்குமாறு) அருள் புரிதல் வேண்டும்;

'அசுவமேதயாகம் புரியவா என்னை வரவழைத்தது?' என்று வினவிய முனிவனுக்கு, தசரதன், 'யாகஞ்செய்வதுபிரதானமன்று: உலகம்புரக்கும் மைந்தரைப் பெறவேண்டுமென்பதே எனது நோக்கம்' என்று தன் உள்ளக்கிடையைத் தெரிவித்தனனென்க. 'தனி மரந் தோப்பாகாது', 'தனிப்பிள்ளை பிள்ளையாகாது' என்பவாதலால், 'தனயர்' எனப் பன்மையாற் கூறினன். உலப்பு-(காலம்) வற்றுதல்: எல்லையென்றபடி. அலப்புநீர் - கடலுக்கு, வினைத்தொகையன் மொழி; அலையலைக்குந் தன்மையுள்ள நீரை யுடையதென்க; இனி, எதுகைநோக்கி அலம்பு என்பது அலப்பு என வலித்தலாக வந்ததெனக்கொண்டால், ஒலிக்கின்றநீரையுடையது எனப் பொருள் காணலாம். பி - ம்:—[1] உலைப்பில். [2] யாண்டு. [3] தலைப். [4] அலைப்பு. [5] வையகம். [6] பெறக்களி, பெறக்கனி, மகத்தினில். ஒருபிரதியி ் இதுமுதல் திருவவதாரப்படலம். (261)

82.—முனிவன் 'புத்திரனை யளிக்கும் யாகத்தைச் செய்யவெழுக' எனல்.

என்றலு மரசநீ[1] யிரங்க லிவ்வுலகு
ஒன்றுமோ வுலகமீ ரேழு மோம்பிடும்
வன்றிறன் மைந்தரை [2] யளிக்கு மாமகம்
இன்றுநீ யியற்றுதற் கெழுக வீண்டென்றான்.

(இ - ள்.) என்றலும்-என்று (சக்கரவர்த்தி) சொன்ன வளவில், (கலைக்கோட்டுமுனிவன் தசரதனை நோக்கி),—'அரச - அரசனே, நீ—, இரங்கல்-மனவருத்தப்படாதே; இ உலகு ஒன்றும் ஓ - இந்தப்பூலோகமொன்றைமாத்திரமோ, உலகம் ஈர் ஏழ்உம்-பதினான்கு உலகங்களையும், ஓம்பிடும்-காப்பதற்கு உரிய, வல்திறல் மைந்தரை -மிக்கவல்லமையையுடைய குமாரர்களை, அளிக்கும்-கொடுக்கவல்ல, மா மகம் - அசுவமேதயாகத்தை, இன்று - இப்பொழுது, ஈண்டு- இவ்விடத்தில், இயற்றுதற்கு - செய்தற்கு, நீ—, எழுக - முயல்வாயாக', என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

முதலில், அசுவமேதஞ்செய்து அதன்பின் புத்திரகாமம்செய்த்தாக மேற்கூறுவதனாலும், கீழ் ''அரிமக நடத்த வெண்ணியோ, இன்றெனை யழைத்ததிங்கு'' என்றதனாலும், மாமகமென்றது, அசுவமேதத்தையென்க. மா - குதிரை. பி-ம்:—[1] இரங்கில். [2] வழங்கும்.

83.—கட்டளைப்படி வேள்விக்கு வேண்டிய யாவுஞ் சித்தமாக, தசரதன் வேள்விச்சாலையிற் புகுதல்.

ஆயதற் குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் [1] கொணர்ந்தனர் நிருபர்க் [2] கேந்தலும்
தூயநற் புனல்படீஇச் சுருதி நூன் [3] முறை
[4] சாய்வறத் [5] திருத்திய சாலை [6] புக்கனன்,

(இ - ள்.) ஆயதற்கு உரியன - அவ்யாகத்துக்குரியனவான, கலப்பை யாவைஉம் - கருவிகளெல்லாவற்றையும், ஏயென - விரைவாக, கொணர்ந்தனர் - (அரசன்கட்டளையால் ஏவலாளர்) கொண்டுவந்தார்கள்: நிருபர்க்கு ஏந்தல்உம் - தசரதசக்கரவர்த்தியும், தூய நல் புனல் படிஇ-பரிசுத்தியையுடைய நல்ல (சரயூநதியின்) தீர்த்தத்திலே நீராடி, சுருதி நூல் முறை-வேதசாஸ்திரங்களின் முறைமைப்படியே, சாய்வு அற திருத்திய - குற்றமில்லாதபடி திருத்தமாக அமைக்கப்பட்டுள்ள, சாலை-யாகசாலையில், புக்கனன்—;(எ-று.)

கலப்பை-உபகரணம்; இனி, வேள்விச்சாலையமைத்தற்குநிலம் உழுதற்பொருட்டு உழுபடை வேண்டுவதால், கலப்பை யாவையும் என்பதற்கு - உழுபடை முதலிய எல்லாக்கருவிகளையும் என்றும் உரைக்கலாம். ஏந்தல் - சிறந்து விளங்குபவன். சாய்வு-குறைவுமாம். பி - ம்:—[1] கொணர்ந்தனன், கொணர்தலும், கொணர்தலின். [2] ஏந்தலே. [3] மறை. [4] சாய்வுற, சாய்வறல். [5] திருத்திநற், திருத்தியே. [6] துன்னினன், சார்ந்தனன், புக்கனர். (263)

84.—ஒருவருடகாலம் அசுவமேதயாகம் நடத்தல்.

[1] முழங்கழன் மும்மையு முடுகி யாகுதி
வழங்கியே யீரறு திங்கள் [2] வாய்த்தபின்
[3] தழங்கின துந்துமி [4] தாவில் வானகம்
[5] விழுங்கினர் [6] விண்ணவர் வெளியின் றென்னவே.

(இ - ள்.) (கலைக்கோட்டு முனிவன்),—முழங்கு அழல் மும்மை உம்-ஆரவாரித்து எழுகின்ற மூன்றுவகை அக்கினியையும், முடுகி-விரைவாக வளர்த்து, ஆகுதி வழங்கி - ஆகுதிகளை ஓமஞ்செய்ததால், ஈர் அறு திங்கள் வாய்த்தபின்-(இங்ஙன்) பன்னிரண்டுமாதஞ் சென்றபின்பு,—துந்துமி - தேவவாத்தியங்கள், தழங்கின - ஒலித்தன; விண்ணவர் - தேவர்கள், வெளி இன்று என்ன - வெற்றிடம் சிறிதுமில்லையென்னும்படி, தா இல் வானகம் - கெடுதலில்லாத வானத்தை, விழுங்கினர்-மறைத்துக்கொண்டு நெருங்கினர்;(எ-று.)

அழல் மும்மை - ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்பன. இப்பகுப்பு-இடவேறுபாடும், மந்திரபேதமும், செயல்வேற்றுமையும் பற்றியது. மும்மைஎன்பது-எண்ணின் தன்மையைக்குறியாமல், மூன்று என எண்ணின்கண் நின்றது. திங்கள் - சந்திரன்; இது-மாதத்துக்கு, ஆகுபெயர்; அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதமெனக் கொண்டு சந்திரசம்பந்தத்தாற் காலத்தைவரையறுக்கின்ற சாந்திரமானபக்ஷம்பற்றி, மாதத்துக்குத் திங்களென்றும், மதியென்றும் பெயர்வழங்கும். தேவர்கள் பூர்ணாகுதியைப் பார்க்கும்பொருட்டும், ஆகுதிகளை நேரிற் பெறும்பொருட்டும் வானத்தில் வந்து நிறைந்தனர். அசுவமேதயாகம் ஓரியாண்டு நிகழ்த்த வேண்டிய வேள்வி யென்ப. பி - ம்:—[1] முழங்கனல். [2] மாய்ந்தபின், வாய்ந்தபின். [3] தழங்கிய. [4] முழங்கத்தாவில்வான். [5] விளங்கின, விளங்கினர், விழுங்கின. [6] விண்ணகம். (264)

85.—ருசியசிருங்கன் அந்தயாககுண்டத்தில் புத்திரகாமேஷ்டி செய்தல்.

முகமல [1]ரொளிர்தர [2]மொய்த்து வானுளோர்
[3]அகவிரை [4]நறுமலர் தூவி [5]யார்த்தெழத்
தகவுடை முனியுமத் தழலி னுப்பணே
மகவரு ளாகுதி வழங்கி னனரோ.

(இ - ள்.) வான் உளோர் - மேலுலகத்திலுள்ள தேவர்கள், முகம் மலர் ஒளிர் தர - (திருமாலின் அவதாரம் சமீபித்ததென்று மகிழ்ச்சியால் தமது) தாமரைமலர்போன்ற முகம் விளக்கம்பெற, மொய்த்து -நெருங்கி, விரை அகம் நறு மலர் தூவி-வாசனையைத் தம்மிடத்தேயுடைய நல்ல கற்பகமலர்களைப்பொழிந்து, ஆர்த்து எழ-பேரொலி செய்து துள்ள,—தகவு உடை முனிஉம் - தகுந்த நற்குணங்களையுடைய இருசியசிருங்கமுனிவனும், அ தழலின் நாப்பண் - அந்த அக்கினியினிடையிலே, மகவு அருள் ஆகுதி-புத்திரரைக் கொடுத்தற்குரிய ஆகுதிகளை, வழங்கினன் - ஓமஞ்செய்தான்; (எ - று.

அசுவமேதயாகத்தைச் செய்துமுடித்தபின் தசரதன் இருசியசிருங்கமுனிவனை வணங்கி, 'எனதுவமிசம் விருத்தியாகுந்தொழிலைச் செய்யவேணும்' என்றுவேண்ட, முனிவன் சக்கரவர்த்தியை அனுக்கிரகித்துப் பிறகு புத்திரகாமேஷ்டியைச் செய்வித்தானென்று முதனூலால் விளங்கும். அசுவமேதயாகத்தால் புத்திரோற்பத்திக்குத் தடையாயிருந்த பாவங்களைப் போக்கிக்கொண்டு பிறகு புத்திரகாமேஷ்டியால் புதல்வரைப் பெறலாயினனென்று வடமொழி ஸ்ரீராமாயணவியாக்கியானங்களிற் கூறப்பட்டுள்ளது. [3]அகவினர் என்ற பாடத்துக்கு - கூத்தாடினராய் என்று உரைக்க. பி-ம்:—[1]ஒளி. [2]மொய்த்த. [3]தொகைவிரை, தொகைவிரசு, தொகைவிரி, அகவிதழ், அகமகிழ். [4]உறு. [5]ஆர்த்திட. (265)

86.—ஓமாக்கினியினின்று பூதமொன்று சுதைப்பிண்டமேந்தி யெழுதல்.

ஆயிடைக் [1]கனலினின் றம்பொற் [2]றட்டமீத்
[3]தூயநற் சுதைநிகர் [4]பிண்ட [5]மொன்றுசூழ்
[6]தீயெரிப் பங்கியுஞ் சிவந்த கண்ணுமாய்
[7]ஏயெனப் பூதமொன் [8]றெழுந்த தேந்தியே.

(இ - ள்.) அ இடை - அந்தச்சமயத்தில், சூழ் தீ எரி பங்கிஉம் -சூழ்ந்தெரிகிற அக்கினிபோலச் சிவந்து விளங்குந் தலைமயிரையும், சிவந்த கண்உம் ஆய்-செந்நிறமுடைய கண்களையுமுடையதாக, பூதம் ஒன்று - ஒருபூதமானது, அம் பொன் தட்டம் மீ - அழகிய பொன்மயமான தட்டின்மேலே, தூய நல் சுதை நிகர் பிண்டம் ஒன்று -பரிசுத்தத்தையுடைய இனிய அமிர்தத்தையொத்த ஒரு பிண்டத்தை, ஏந்தி-(கையினால்) தாங்கிக்கொண்டு, கனலில்நின்று-ஓமாக்கினியிலிருந்து, ஏயென-விரைவாக, எழுந்தது-; (எ - று.)

வேள்விக்குண்டத்தினின்று அமிர்தபிண்டத்தைத் தட்டி லேந்திக்கொண்டு ஒருபூதம் வந்ததென்க. வெள்ளிமூடியையுடையதாகித் திவ்விய பாயசத்தால் நிறைந்த ஸ்வர்ணபாத்திரத்தைக் கொணர்ந்துவந்து ப்ராஜாபத்யபுருஷன் கொடுத்ததாக முதனூலில் கூறியிருக்கின்றது. தீயெரிஎன்பதற்கு - (தன்னிடத்தகப்பட்ட பொருளைத்) திக்குமியல்புள்ள எரி யென்க. பிண்டம் - சோற்றுத் திரளை. பி-ம்:—[1]கனலிடை. [2]தட்டினில், தட்டமேல், தட்டின்மீத். [3]தூய்நிறச். [4]நறிய. [5]போனகம், என்றுசூழ். [6]தீயெரி. [7]ஏயநற், நாயகப். [8]ஏந்தி நண்ணிற்றே. (266)

87.—முனிவன் அச்சுதையைப் பட்டமகிஷியர்க்குத் தருமாறு கூறுதல்.

[1]வைத்தது [2]தரைமிசை மறித்து மவ்வழித்
தைத்தது பூத[4]மத் தவ்னும் [5]வேந்தனை
[6]உய்த்தநல் லமிர்தினை யுரிய மாதர்கட்கு
[7]அத்தகு [8]மரபினு லளித்தி யாலென்ருன்.

(இ - ள்.) பூதம் - அந்தப் பூதமானது, தரைமிசை வைத்தது- (தான் கொணர்ந்த அமுதத்தட்டினைப்) பூமியிலே வைத்துவிட்டு, மறித்துஉம் - மீண்டும், அ வழி தைத்தது - அவ்வோமாக்கினியினிடத்திலேதானே பாய்ந்து சென்றது; (உடனே), அ தவன்உம்- தவத்தையுடைய் அந்த இருசியசிருங்க முனிவனும், வேந்தனை - தசரதனைநோக்கி, ‘உய்த்தநல் அமிர்தினை-(பூதத்தாற்) கொணர்ந்து கொடுக்கப்பட்ட நல்ல அமிர்தம்போலினிய உணவை, உரியமாதர்கட்கு-(உனக்கு)உரிய மனைவிமார்கட்கு, அ தகு மரபினுல் - தகுதியான அம்முறைப்படியே, அளித்தி - கொடுப்பாயாக,’ என்ருன்—;

வந்த பூதம் தான் வந்தவழியே மீள, ருசியசிருங்கன், முறைப்படி அந்தச்சுதையைப் பட்டமகிஷியர்க்குத் தருமாறு தசரதனிடம் கூறினு னென்க. தைத்தல்-இங்கு, உட்புகுதல். அக்கினியினின்று எழுந்த பூதமே மனைவிமார்க்கு அந்தப் பாயசத்தைத் தருமாறு கூறித் தசரதனிடம் கொடுத்ததாக முதனூலி லுள்ளது. உரிய மாதர் - பட்டமகிஷிகளாய்ச் சிறந்த கௌசலை சுமித்திரை கைகேயி என்னும் மூவர். மரபு-முறைமை: மூத்தவளுக்கு முதலிலும் இளையவளுக்குப் பிறகும் என்ற இந்தவரிசை. பி-ம்:—[1]வைத்தலும்.[2]முனிவன்முன். [3]மறுத்தும். [4]மற்றவனும். [5]அண்ணிய, வேந்தன்கை. [6]உய்த்து. [7]அத்தக, அத்தகு. [8]மரபினின்று, மரபினின். (267)

88.-மன்னவன் கௌசலைக்கு முதலில் அந்தச் சுதையைத் தருதல்.

மாமுனி [1]யருள்வழி மன்னர் மன்னவன்
[2]தூமமென் சுரிகுழல் தொண்டைத் [3]தூயவாய்க்
[4]காமரொண் [5]கௌசலை கரத்தி னேர்பகிர்
[6]தாமுற வளித்தனன் சங்க [7]மார்த்தெழ.

(இ - ள்.) மாமுனி - சிறந்த அந்த இருசியசிருங்க முனிவன், அருள் வழி-கட்டளையிட்டருளியபடியே, மன்னர்மன்னவன் - தசரத

சக்கரவர்த்தி, தூமம் மென்சுரி குழல் தொண்டை தூயவாய் - புகை போற்கரிய மெல்லிய கடைகுழன்ற கூந்தலையும் கொவ்வைப்பழம் போற் சிவந்த தூய்மையுள்ள வாயையுமுடைய, காமர்-அழகிய, ஒள் கௌசலை - ஒளியைக் கொண்ட கௌசல்யாதேவியின், கரத்தின்-கையில், ஓர் பகிர் - ஒரு பாகத்தை, சங்கம் தாம் உற ஆர்த்து எழ - சங்கவாத்தியங்கள் தாம்மிகுதியாக வொலிக்க, அளித்தனன் - கொடுத்தான்; (எ-று.)

முறைப்படி அவ்வமுதத்தை யளிக்குமாறு முனிவன் கட்டளை யிட்டதனால், மூத்தவளான கௌசலைக்கு முதலிற் கொடுத்தன னென்க. ஓர்பகிர் - பாதிப்பகுதி; மூன்றில் ஒருபகுதி யென்பாரு முளர். கௌசலை = கௌஸல்யா: தட்சிணகோசல தேசத்தரசன் மகள். பி - ம்:—[1]பணித்திட, உரைத்திட, அருளலும். [2]தூய. [3]செய்யவாய்க். [4]காமரு, காமறு. [5]கோசலை. [6]தாமுறை. [7]ஆர்ப் பவே, ஆர்க்கவே. (268)

89.—கைகேயிக்குச் சுதையளித்தல்.

[1]கைகயன் றனயைதன் கரத்தும் அம்முறைச்
செய்கையி னளித்தனன் தேவ ரார்த்தெழப்
[2]பொய்கையும் நதிகளும் பொழிலு மோதிமம்
[3]வைகுறு கோசல மன்னர் மன்னனே.

(இ - ள்.) (பின்பு), பொய்கைஉம் நதிகள்உம் பொழில்உம் - குளங்களிலும் ஆறுகளிலும் சோலைகளிலும், ஓதிமம் வைகுறு- அன்னப்பறவைகள் தங்கப்பெற்ற, கோசலம் - (உத்தர) கோசல நாட்டையாளுகின்ற, மன்னர் மன்னன் - தசரதசக்கரவர்த்தி,— கைகயன் தனயை தன் கரத்துஉம்-கேகய தேசத்தரசனது மகளாகிய கைகேயியின் கையிலும், அ முறை செய்கையின்-அந்தமுறைமை யாகிய செய்கையின்படியே [கௌசலைக்குக்கொடுத்த அப்படியே கையிலுள்ளதை இரண்டாகப்பகிர்ந்து ஒரு பாதியை], தேவர் ஆர்த்து எழ - தேவர்கள் (மகிழ்ச்சியால்) ஆரவாரஞ்செய்யும்படி, அளித்தனன்-; (எ - று.)

தசரதன் கைகேயிக்கும் அந்தச் சுதையில் கையில் மிச்சமாக உள்ளதில் பாதியை அளித்தன னென்க. கீழ்ச்செய்யுளில் மூன்றி லொருபகுதியைக் கௌசலைக்குக் கொடுத்ததாக உரைகூறுபவர், அம்முறைச் செய்கையின் என்பதற்கு - கௌசலைக்குக்கொடுத்த அவ்வளவே [மூன்றிலொருபகுதியை] யளித்தன னென்பர். கேக யன் - கேகயநாட்டரசன். கௌசலைக்குப் பாயசத்திற் பாதியைக் கொடுத்ததும், மிச்சமானபாயசத்திற் பாதியை [அதாவதுநான்கி லொருபங்கை]ச் சுமித்திராதேவிக்குக் கொடுத்துப் பின்பு மிச்சமா யுள்ளதிற் பாதிப்பகுதியை [எட்டிலொரு பகுதியைக்] கைகேயிக் குக்கொடுத்து மற்றும் மிச்சமானபகுதி [எட்டிலொருபகுதியைச்] சுமித்திரைக்குத் தசரதன் கொடுத்தா னென்று முதனூலில்கூறி யுள்ளது. அம்முறைப்படியே கூறுவதாயின், கைகேயிக்குக் கொடுத் ததை மூன்றுவதுகூறி, மற்றும் சுமித்திரைக்குக் கொடுத்ததைக் கூறவேண்டும். பி-ம்:—[1]கைகயப் பிராட்டிதன், கைகயன் தனயடன், கைகயன்றனயள்செங்.[2]பொய்கையினதிவயிற் பொழிலின்.[3]வைகிய.

90.—சுமித்திரைக்குச் சுதை யளித்தல்.

நமித்திரர் [1]நடுக்குறு நலங்கொண் [2]மொய்ம்புடை
நிமித்திரு மரபுளான் [3]முன்னர் [4]நீர்மையின்
சுமித்திரைக் களித்தனன் [5]சுரர்க்கு [6]வேந்தினிச்
[7]சமித்ததென் பகையென[8]த் தமரொ [9]டார்ப்பவே.

(இ - ள்.) நமித்திரர் நடுக்குறு - பகைவர்கள் (அச்சத்தால்) நடுக்கமடைதற்குக்காரணமான, நலம் கொள் மொய்ம்பு உடை - நன்மையைக்கொண்ட வலிமையையுடைய, நிமி திருமரபு உளான்-நிமியென்னுஞ் சக்கரவர்த்தியின் சிறந்தவமிசத்திலே பிறந்துள்ளவனை தசரதன்,—சுரர்க்கு வேந்து - தேவர்கட்கரசனை இந்திரன், இனி என் பகை சமித்தது என தமரொடு ஆர்ப்ப - இனி எனது பகையொழிந்ததென்று (மகிழ்ச்சிகொண்டு) தன்னினத்தவருடனே ஆரவாரிக்கும்படி, முன்னர்நீர்மையின்-முன் (இரண்டு பட்ட மகிஷியர்க்கும்) கொடுத்தமுறைப்படியே [கையிலிருந்ததிற் பாதிச் சுதையை], சுமித்திரைக்கு-, அளித்தனன்—; (எ - று.)

சக்கரவர்த்தி முன்னிருவர்க்கும்போலவே சுமித்திரைக்கும் அவ்வமுதத்தை யளித்தன னென்க. முன்னவர் நீர்மையின் என்பதற்கு - கீழ்க்கவிகளிற்போலவே மூன றிலொருபகுதியை என்று உரைப்பாரு முளர். சுமித்திரைக்குக்கொடுத்த இந்த அமுதம் இந்திரசித்தைக்கொல்லப்போகின்ற இளையபெருமாளின் திருவவதாரத்துக்கு ஏது வாதலால், இந்திரன் இனத்தோடு களிப்பானாயினன். சத்துருக்களையடக்குவதல்லது மற்றையோர்க்குத் தீமைசெய்யாததெனபார், 'நமித்திரர் நடுக்குறு நலங்கொள் மொய்ம்பு' என்றார். நிமி - சூரியகுலத்தரசன்; இட்சுவாகுமகாராசனுக்குப் பன்னிரண்டாந் தலைமுறையான்: இட்சுவாகுவின் புதல்வனென்று சிலநூல் கூறும். நமித்திரன் = நமித்திரர்: ந என்னும் எதிர்மறை குறிக்கும் இடைச்சொல் தொடர்ந்த தொடர்மொழி, அமித்திரரென்று திரிந்து வராமல் இயல்பாய் நின்றது. பி-ம்:—[1]நடுக்குற, நறுக்குறு. [2]மொய்ம்புடன், மொய்ம்படை. [3]முன்ன. [4]நீர்வரச். [5]சுரர்கள். [6]வேந்தனிச், வேந்தனும். [7]சமித்திரென், சமித்தனன், சமித்ததெம். [8]அமரர். [9]சாற்றினர், ஆர்க்கவே. 'நிமித்தருதசரதனுடைய நேரிழை' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி. (270)

91.—சுமித்திரைக்குப் பின்னும் எஞ்சியதை யளித்தல்.

[1]பின்னுமப் [2]பெருந்தகை பிதிர்ந்து [3]வீழ்ந்தது
தன்னையுஞ் சுமித்திரை தனக்கு நல்கினன்
ஒன்னலர்க் கிடமும்வே றுலகி னோங்கிய
[4]மன்னுயிர் [5]தமக்குநீள் வலமுந் துள்ளவே.

(இ - ள்.) பின்னும்—,அ பெரு தகை-பெருமைக்குணமுடைய அந்தச் சக்கரவர்த்தி,—ஒன்னலர்க்கு-பகைவர்க்கு, இடம்உம்-இடப்புறமும், வேறு உலகின் ஓங்கிய மன் உயிர் தமக்கு-(அவர்களினும்) வேறாகி [பகைவர்களாக இராமல்] உலகமெங்குஞ் சிறந்துள்ள நிலை

பெற்ற பிராணிகட்கு, நீள் வலம்உம் - சிறந்த வலப்புறமும், துள்ள -துடிக்கும்படி, பிதிர்ந்து வீழ்ந்தது தன்னைஉம்-(பகுத்துக் கொடுக்கும்போது தட்டிலே) சிந்திவீழ்ந்தவற்றையும், சுமித்திரை தனக்கு-சுமித்திராதேவிக்கு, நல்கினான் - கொடுத்தான்; (எ-று.)

பகுத்துக்கொடுத்தபோது தட்டில் சிந்திக்கிடந்த எஞ்சிய சுதையைப் பின்னும் சுமித்திரைக்குத் தசரதன் அளித்தனனென்க. ஆடவர்க்கு வலந்துடித்தல் நன்னிமித்தமும இடந்துடித்தல் தீநிமித்தமுமாம். ஓங்கிய உயிர் - மக்களுயிர். இரண்டாகபபகிர்ந்து ஒரு பகுதியைக் கொடுத்ததைக் கீழ்ச்செய்யுள் உணர்த்தியதாகக் கொள்ளின், மற்றைப்பகுதியைக் கொடுத்ததை இச்செய்யுள் கூறுமெனக் கொள்க. லவணன் முதலிய சத்துருக்களை யொழிக்கப்போகின்ற சத்துருக்கினனது திருவவதாரத்துக்குஇந்த அமுதம் காரணமாதலால், அதனை யளிக்கும்போது ஒன்னலார்க்கு இடம் துடித்ததென்க. நாலுவடிவுடன் அவதரிக்கத் திருமால் சங்கற்பித்துள்ளதனால், இரண்டாம்முறை சுமித்திரைக்குச் சுதையை அளிக்குமாறு அரசனுக்கு எண்ணமுண்டாயிற்று. பி-ம்:—[1]பின்னர்ப், பின்னரும், பின்னுமற்று. [2]அமுதினில். [3]வீழ்ந்தவை தம்மையும். [4]மன்னுளோர். [5]தனக்கு. (271)

92.—வேள்வி முடிந்திட, தசரதன் யாகசாலையினின்று எழுதல்.

வாம்பரி [1]வேள்வியு [2]மகாரை நல்குவ
தாம் [3]புரை [4]யாவுதி பிறவு மந்தணன்
ஓம்பிட [5]முடிந்தபி னுலகு காவலன்
ஏம்பலோ டெழுந்தன னியாரு மேத்தவே.

(இ - ள்.) வாம் பரி வேள்விஉம் - தாவுகின்ற குதிரையைக் கொண்டு செய்கின்ற அசுவமேதத்தையும், மகாரை நல்குவது ஆம் புரை ஆவுதி பிறஉம் - புத்திரரைத்தருவதற்கு இடமாகிய [புத்திரகாமயாகத்துக்கு உரிய] ஓமங்கள் பிறவற்றையும், அந்தணன் - (இருசியசிருங்க) முனிவன், ஓம்பிட-நன்கு செய்ய,—முடிந்த பின் - (அவயாகங்கள்) முடிந்தபின்பு, உலகு காவலன் - உலகமுழுவதையும் காப்பவனான தசரதசக்கரவர்த்தி,—யாரும் ஏத்த - யாவரும் துதிக்க, ஏம்பலோடு - மகிழ்ச்சியுடனே, எழுந்தனன்-(யாகசாலையை விட்டுப்) புறப்பட்டனன்; (எ-று.)

இருசியசிருங்கமுனிவன் யாகவோமம் முடித்ததும், யசமானனாயிருந்த தசரதன் யாகசாலையைவிட்டுப் புறப்பட்டனனென்க. பி-ம்:—[1]வேள்வியில். [2]மகவை. [3]பரி. [4]ஆகுதி. [5]முடித்த. (272)

93.—தசரதன் சபாமண்டபத்தை யடைதல்.

[1]முருடரு பல்லிய [2]முழங்கி [3]யார்த்தன
இருடரு முலகமு [4]மிடரி னீங்கின
தெருடரு [5]வேள்வியின் கடன்க டீர்ந்துழி
அருடரு மவையின்வந் தரச னெய்தினான்.

(இ-ள்.) தெருள் தரு - (வேதங்களால்) தெரிவிக்கப்பட்டுள்ள, வேள்வியின் கடன்கள் - யாகத்திற்குஉரிய கடமைகள், தீர்ந்த உழி -நிறைவேறினபொழுது,—முருடு அரு பல்இயம் முழங்கி ஆர்த்தன- மத்தளமும் அருமையான வேறுபலவாச்சியங்களும் மிகவும் பேரொலி செய்தன; இருள் தரும் உலகம் - (அரக்கர்கொடுமையால்) துன்பமடைந்துகிடக்கிற உலகத்தார் யாவரும், இடரின் நீங்கின - (தமது) துன்பத்தினின்றுநீங்கப் பெற்றனர்; அரசன் - தசரதன், அருள் தரும் அவையின் வந்து - (யாவர்க்கும்) கருணைசெய்தற்கு இடமான சபாமண்டபத்தைச் சேர்ந்து, எய்தினன் - தங்கினன்;

பூர்ணாகுதி முடிந்ததும், பூரி கொடுக்குமாறு தசரதசக்கரவர்த்தி ஓலக்க மண்டபத்தை யடைந்தன னென்பதாம். முருடு- மத்தளம்: பத்தலென்று முரைப்ப. பி - :ம்—[1]முருடொடும், முருடகு. [2]முழக்கி. [3]ஆர்த்தெழ, ஆர்த்தென. [4]இடரும், இடருள், இருளும், இருளின். [5]கடன்முறை சிறப்பினோடுவந்து. [6]அவையினில், அவையின்வாய், அவையில்வந்து. (273)

94.—மன்னவன் அந்தணர்க்குத் தட்சிணை கொடுத்தல்.

செய்ம்முறை [1]கடன்முறை திறம்ப லின்றியே
[2]மெய்ம்[3]முறைக் [4]கடவுளுக் [5]கீந்து விண்ணுளோர்க்கு
அம்முறை [6]யளித்துநீ டந்த ணாளர்க்கும்
கைம்முறை [7]யளித்தனன் கனக மாரியே.

(இ - ள்.) (சக்கரவர்த்தி), செய் முறை - செய்யவேண்டிய கடமைகளை, கடன் முறை திறம்பல் இன்றி - அக்கடமைகளைக்கூறும் நூலுக்கு மாறுபாடில்லாமல், மெய் முறை கடவுளுக்கு ஈந்து - உண்மையான (தனது) குலத்துக்குத் தெய்வமாகிய திருமாலுக்கு ஈந்து, விண் உளோர்க்கு - மற்றைத்தேவர்களுக்கும், அ முறை அளித்து- அந்நூலிற் கூறியபடியே கொடுக்கவேண்டிய ஹவிர்ப்பாகத்தைக் கொடுத்து, (இங்ஙன் யாகம்முடிந்தவுடன்), நீடு அந்தணாளர்க்கு உம்- பெருமை பொருந்திய பிராமணர்கட்கும், கை - கைகளால், முறை- முறைப்படி, கனகம் மாரி-பொன்மழையை, அளித்தனன்-; (எ-று.)

அந்தணர்க்குத் தட்சிணையீந்தபிறகே வேள்வி முற்றுப்பெறு மாகையால், திருமாலுக்கும் மற்றைத்தேவர்க்கும் ஆகுதி வழங்கி ஓமம் முடித்தபின்பு, அந்தணாளர்க்குத் தட்சிணை கொடுத்த னென்க. இக்ஷ்வாகு மன்னவன் பிரமனைநோக்கித் தவம்புரிந்து திருமாலைப் பெற, அதுமுதல் அக்குலத்து மன்னவர் அப்பரமனைப் பூஜித்துவர, அக்கடவுளே விபீஷணனுக்கு இராமபிரானால் தரப்பட்டுத் திருவரங்கத்தி லெழுந்தருளினனென்பது பிரசித்தமாதலால், தசரதனுக் குத் திருமால் முறைக்கடவு ளாவன. இனி, இரண்டாமடியில் தேவ விருடியரைப்பூஜித்ததை 'விண்ணுளோர்க்கு அம்முறை வழங்கி' என்பதனுல் கூறினரென்ப. பி-ம்:—[1]கடனவை, கடைமுறை. [2]எம். [3]மறை. [4]கடவுளர்க்கு. [5]இயைந்து. [6]வழங்கினன், வழங்கிநீடு. [7]பொழிந்தனன். (274)

95.—மன்னவன் அவபிருதஸ்நாநஞ் செய்தல்.

[1]வேந்தர்கட் [2]கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநற் [3]றுகிலொடு வரிசைக் கேற்பன
ஈந்தனன் பல்லியந் [4]துவைப்ப [5]வேகிநீர்
தோய்ந்தனன் [6]சரயுநற் றுறைக்க ணெய்தியே.

(இ - ள்.) வேந்தர்கட்கு - அரசர்கட்கு,—அரசொடு-அரசாட்சி யுடனே, வெறுக்கை-செல்வமும், தேர்-இரதங்களும், பரி - குதிரை களும், வாய்ந்த நல் துகிலொடு - அழகியனவாக அமைந்துள்ள சிறந்த ஆடைகளும் (என்னும் இவற்றுள்), வரிசைக்கு ஏற்பன- (அவரவர்) தகுதிககுத் தக்கனவற்றை, ஈந்தனன் - கொடுத்து,— பல் இயம் துவைப்ப - பலவகை வாச்சியங்களும் ஒலிப்ப, ஏகி- சென்று, சரயு நல் துறைக்கண் எய்தி-சரயூநதியினது நல்ல துறை யிலே சேர்ந்து, நீர் தோய்ந்தனன்-நீராடினன்; (தசரதன்); (எ-று.)

தசரதன் அந்தணர்க்குத் தட்சிணைகொடுத்தபின் அரசர்கட்கும் ஏற்றவாறு மரியாதைகள்செய்து சரயூநதியில் நீராடினனென்க. யாகம் முடிவடைகையில் நீராடுவது, அவபிரதஸ்நாந மெனப்படும். பி - ம்:—[1]வேந்தருக்கு. [2]அருளொடு. [3]துகிலொடவ், தூசொடு, துகில்கொடு. [4]இசைப்ப. [5]எய்தி. [6]சரயுவின். (275)

96.—அவபிரதம்முடிந்தபிறகு அரசவையடைந்து வசிட்டனைத் தசரதன் வணங்குதல்.

[1]முரசினங் [2]கறங்கிட முத்த வெண்குடை
[3]விரசிமே னிழற்றிட வேந்தர் [4]சூழ்தர
அரசவை யடைந்துழி யயனு நாணுற
[5]உரைசெறி [6]முனிவன்தாள் [7]வணங்கி யோங்கினன்.

(இ - ள்.) (சக்கரவர்த்தி), முரசு இனம் கறங்கிட - பேரிகை களின்தொகுதி ஒலிக்கவும்,முத்தம் வெண் குடை மேல் விரசி நிழற் றிட - முத்துக்களினாலாகிய வெள்ளைக்குடை மேலேநெருங்கி நிழ லைச்செய்யவும், வேந்தர் சூழ்தர - அரசர் பலரும் (தன்னைச்) சூழ்ந்து வரவும்,—அரசு அவை அடைந்த உழி - இராசசபையிற்சேர்ந்த இடத்து, அயன்உம் நாண்உற - பிரமதேவனும் வெட்கமடையும் படி, உரை செறி முனிவன் - (வேத) வாக்கியங்கள் நிறைந்த வசிட்ட முனிவனது, தாள் - திருவடிகளை, வணங்கி—,ஓங்கினன்-(அம்முனி வனது) ஆசிபெற்றெழுந்தான்; (எ - று.)

அவபிரதம்முடிந்திட்டதும் மீண்டும் சபையையடைந்த தசர தன் தன் குலகுருவைவணங்கி அவனிடத்து ஆசிபெற்றுச் சிறந்தா னென்க. [6]முனிவர் தாள் என்றபாடம், மேல் 'வசிட்டனுணையால் இருசியசிருங்கனை வணங்கினன்' என்பதை நோக்குமிடத்துப் பொரு த்தமுள்ளதாகத் தோன்றவில்லை. உரைசெறி-சாபானுக்கிரகமொழி மிகுந்தஎன்றும், கீர்த்திமிகுந்த என்றும் உரைக்கலாம. பி-ம்:—[1]முர சொலி. [2]தழங்கிட. விரசிடுநிழறர. [4]சூழ்வர, மேவிட. [5]உரைசெய. [7]இறைஞ்சி. (276)

97.—தசரதன் இருசியசிருங்கனை வணங்கி முகமன் கூறுதல்.

அரியநல் [1]தவமுடை [2]வசிட்ட னாணையால்
இரலைநற் [3]சிருங்கமா விறைவன் றுடொழா
உரிய[4]பற் பலவுரை [5]பயிற்றி யுய்ந்தனன்
பெரியநற் [6]றவவினிப் பெறுவ தியாதென்றான்.

(இ - ள்.) (பின்பு தசரதன்),—அரிய நல் தவம் உடை வசிட்டன் - (பிறர்க்கு) அரிய சிறந்த தவத்தையுடைய வசிட்டமுனிவனது, ஆணையால்-கட்டளையினால், இரலை நல் சிருங்கம் மா இறைவன்-கலைமானின் அழகியகொம்பை(த் தலையிலே) யுடைய சிறந்த முனிவரனான இருசியசிருங்கனுடைய, தாள்-பாதங்களில், தொழா-வீழ்ந்துவணங்கி, உரிய பல்பல உரை பயிற்றி - (சொல்லுதற்கு) உரிய மிகப்பலவான இன்சொற்களைச் சொல்லி, 'பெரிய நல் தவ - சிறந்த நல்ல தவத்தையுடையவனே! உய்ந்தனன் - (அடியனேன் உமது கருணையினால்) ஈடேறினேன்: இனி பெறுவது யாது - (இதைக்காட்டிலும யான்)இனிமேல்பெறத்தக்கபேறு யாதுஉளது?' என்றான் - என்று கூறினான்; (எ - று.)

இரலை = கலைமான். சிருங்கம் = கொம்பு. தசரதன் வசிட்டன் மொழிப்படி இருசியசிருங்கனை வணங்கி 'புதல்வனில்லாமையால் நரகத்தழுந்துவதாக இருந்த யான் உனது திருவருளால் அக்குறையும் நீங்கப்பெற்றதனால், இனி எனக்கு யாதொருகுறையுமில்லை' என்றானென்க. பி-ம்:—[1]தவமிகு. [2]முனிவன். [3]சிருங்கனை. [4]நற்பல. [5]பயிற்ற. [6]தவமினிப். (277)

98.—இருசியசிருங்கன் உடன்வந்த முனிவரோடு ஏகுதல்.

எந்தைநின் னருளினா [1]லிடரி னீங்கியே
உய்ந்தன [2]னடியனே னென்ன வொண்டவன்
[3]சிந்தையுண் மகிழ்ச்சியால் வாழ்த்தித் தேர்மிசை
வந்தமா தவரொடும் வழிக்கொண் டேகினான்.

(இ - ள்.) (சக்கரவர்த்தி), 'எந்தை - எமது தலைவனே! அடியனேன் - நான், நின் அருளினால்—, இடரின் நீங்கி - துன்பத்தினின்று நீங்கி, உய்ந்தனன்-ஈடேறினேன்,' என்ன-என்றுசொல்ல, —ஒள் தவன் - சிறந்ததவத்தையுடைய இருசியசிருங்கன், சிந்தையுள் மகிழ்ச்சியால் வாழ்த்தி - மனத்திலுள்ள களிப்புடனே (தசரதனை) ஆசீர்வதித்து, வந்த மா தவரொடுஉம்-(தன்னுடன்) வந்த மிக்க தவமுள்ள முனிவர்களுடனே, தேர்மிசை - தேரின்மீது (ஏறி), வழிக்கொண்டு-பிரயாணப்பட்டு, ஏகினான்-(உரோமபாதனது நகரஞ்) சென்றான்; (எ - று.)

'எந்தை ... என்ன' என்பது - முன்னைய செய்யுளின் பொருள் அநுவாதம். இச்செய்யுள் சில ஏட்டுப்பிரதிகளி லில்லை. - பி-ம்:—[1]இடரும், இடருள். [2]அடியனென் றுரைப்ப. [3]சிந்தையின். (278)

99.—மற்றை முனிவரும் அரசனை ஆசீர்வதித்துச் செல்லுதல்.

வாங்கிய [1]துயருடை மன்னன் பின்னரும்
[2]பாங்குடை [3]முனிவர்தாள் பழிச்சி யேத்தல்கொண்டு
ஓங்கிய [4]வுவகைய ராசி யோடெழா
[5]நீங்கின ரிருந்தன [6]னேமி வேந்தனே.

(இ-ள்.) வாங்கிய துயர் உடை மன்னன்-நீங்கிய துயரையுடைய [துயரம் நீங்கிய] தசரதன், பின்னர்உம்—, பாங்கு உடை முனிவர் தாள் பழிச்சி - நல்லொழுக்கமுள்ள இருடியரின் பாதங்களை (வணங்கிப்) புகழ்ந்து,—ஏத்தல்கொண்டு ஓங்கிய உவகையர் - (அரசன் தம்மைக் கொண்டாடிய) கொண்டாட்டத்தைப் பெற்றதனால் மிக்க மகிழ்ச்சியையடைந்த அம்முனிவர்கள், ஆசியோடு எழா-(அரசனை) வாழ்த்துதலுடனே யெழுந்து, நீங்கினர்-போயினராக,—நேமி வேந்தன்-அத்தசரதசக்கரவர்த்தி, இருந்தனன் - (சுகமாக) இருந்தான்;

அரசன் தம்மை வணங்கி முகமன்கூறி உபசரித்துக் கொண்டாடியதனால் மற்றை முனிவர்களும் மகிழ்ந்து ஆசீர்வதித்துச் சென்றாராக, அரசன் இனிதாக இருந்தனனென்பதாம். இச்செய்யுள் சிலபிரதிகளி லில்லை. பழிச்சியேத்தல் - மிகுதியாக ஏத்துதலுமாம். பி-ம்:—[1]துயரினன். [2]பாங்குறு, பாங்குறை. [3]கடன்முறைபல பயிற்றல் கொண்டு, கடன்முறைபலபயிற்றலால். [4]உவகையின், உவகையன். [5]நீங்கினன். [6]நின்ற, நிருபர். (279)

100.—தேவிமார் மூவரும் கருவுறுதல்.

தெரிவையர் [1]மூவருஞ் சிறிது நாட்[2]செலீஇ
மருவிய [3]வயாவொடு வருத்தந் [4]துய்த்தலால்
பொருவரு திருமுக மன்றிப் பொற்பு நீடு
உருவமு மதியமோ [5]டொப்பத் தோன்றினர்.

(இ - ள்.) தெரிவையர் மூவர்உம் - சக்கரவர்த்தியின் தேவிமார் மூன்று பேரும், சிறிது நாள் செலீஇ - சிலநாள் கழித்து, மருவிய வயாவொடு வருத்தம்துய்த்தலால்-பொருந்தியவயாவுடனே கருப்பத்தைத் தாங்குவதனாலான வருத்தத்தையும் அனுபவித்ததனால், பொருவு அறு திருமுகம் அன்றி-ஒபபில்லாத அழகிய முகம்மாத்திரமேயல்லாமல், பொற்பு நீடு உருவம்உம் - அழகுமிக்க உடம்புமுழுவதும், மதியமோடு ஒப்ப - சந்திரனோடு ஒக்கும்படி, தோன்றினர் - (வெளுத்துக்) காணப்பட்டார்கள்; (எ - று.)

இது, கருவுறுதற்குறிகளிற் சேர்ந்த மயற்கை [மசக்கை] நோயையும் உடல்வெளுத்தலையும் கூறிற்று. மசக்கைநோய், உடல் வெளுத்தல், வயிறு பருத்தல், முலைக்கண்கறுத்தல், கண்குழிதல் முதலியன கருப்பக்குறியாத லறிக. முகம் மதியமோடொத்தல் - ஒளியும் அழகும் குளிர்ச்சியும்பற்றி. உருவம் மதியமோடொத்தல், வெளுத்த நிறத்தால். முகத்திலிருந்த வெண்மை உருவமெங்கும் பரவியதாகக் கூறியது - முறையிற்படர்ச்சியணி. வயா - கருப்பவதி

கட்குச் சிற்சில பொருள்கள்மேல் தோன்றும் விருப்பம். பி - ம்:— [1]அனைவரும். [2]செல. [3]துயரொடுவயவொடு. [4]துய்த்தபின். [5]ஒத்த வாமரோ. (280)

101—103.—இம் மூன்று கவிகள்-குளகம்; ஸ்ரீராமபிரான் திருவவதரித்ததைக் கூறும்.

101. ஆயிடைப் பருவம்வந் [1]தடைந்த [2]வெல்லையின்
மாயிரு [3]புவிமகண் [4]மகிழ்வி னோங்கிட
[5]வேய்புனர் [6]பூசமும் [7]விண்ணு ளோர்புகழ்
[8]தூயகர்க் கடகமு [9]மெழுந்து துள்ளவே.

102. சித்தரு மியக்கருந் தெரிவை மார்களும்
[10]வித்தக முனிவரும் விண்ணு ளோர்களும்
நித்தரு முறைமுறை நெருங்கி [11]யார்ப்புறத்
தத்துற லொழிந்துநீள் தரும மோங்கவே.

103. ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்து
அரு[12]மறைக் குணர்வரு [13]மவனை யஞ்சனக்
கருமுகிற் [14]கொழுந்தெழில் [15]காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை.

(இ - ள்.) (101) அ இடை - அவ்விடத்து [தேவிமார்கட்கு], பருவம் வந்து அடைந்த எல்லையில் - பிரசவகாலம் வந்தடைந்தபொழுது, மா இரு புவி மகள் மகிழ்வின் ஓங்கிட - மிகப்பெரிய பூமிதேவி மகிழ்ச்சியாற் பூரிக்கவும், வேய் புனர்பூசம்உம் விண்ணுளோர் புகழ் தூய கர்க்கடகம்உம் எழுந்து துள்ள - வேயென்று ஒருபெயரையுடைய புனர்வசு நட்சத்திரமும் தேவர்கள் புகழ்கின்ற பரிசுத்தமான கர்க்கடலக்கினமும் குதித்துத் துள்ளவும்,—(102) சித்தர்உம் இயக்கர்உம் தெரிவைமார்கள்உம் வித்தகம் முனிவர்உம் விண்ணுளோர்கள்உம் நித்தர்உம் - சித்தர்களும் இயக்கர்களும் (அவருடைய) மனைவிமார்களும் தத்துவஞானமுடைய முனிவர்களும் தேவர்களும் நித்தியசூரிகளும், முறைமுறை நெருங்கி - வரிசைவரிசையாய் நெருங்கி, ஆர்ப்புஉற - மகிழ்ச்சியினா லாரவாரிக்கவும், நீள் தருமம் தத்துறல் ஒழிந்து ஓங்க - சிறந்த தருமதேவதை மனத்தடுமாற்றம்நீங்கி மகிழ்ச்சி மிகவும்,—(103) திறம் கொள் கோசலை - நற்குணங்களைக்கொண்ட கௌசல்யா தேவியானவள்,— ஒருபகல் - ஒருகாலத்தில் [பிரளயத்தில்], உலகுஎலாம் - எல்லாவுலகங்களையும், உதரத்துள் பொதிந்து - (தனது) திருவயிற்றினுள்ளே மறைத்துவைத்து, அரு மறைக்கு - அருமையான வேதங்கட்கும், உணர்வு அரும் அவனை - அறிதற்கு அருமையானவனும், அஞ்சனம் கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதியை - மையும் புதிய கருமேகமும் என்னும இவற்றின் அழகை(த் தன்னிடத்தே)காட்டுகின்ற தேஜோரூபியுமான திருமாலை, திரு உற - (உலகத்திலுள்ளவர் யாவர்க்கும் இக பர) செல்வங்கள் மிகும்படி, பயந்தனள் - பெற்றாள்;

கௌசல்யாதேவி பருவம்வந்தவுடன் புனர்பூசத்தில் கர்க்கடக லக்கினத்தில் திருமாலைப் புதல்வனாகப் பெற்றனளென்க.

இவனே ஸ்ரீராமனெனப்படுவான். 101.—வேய்என்பது - புனர்பூசத்துக்கு ஒருபெயர்; வேய் புனர்பூசம் - இருபெயரொட்டு; எதுகை நோக்கியியல்பாயிற்று; இனி 'வேய்' என்று மூங்கிற்குப் பெயராதலால், மூங்கிலினாலியன்ற வில்லின் வடிவத்தைக்கொண்ட புனர்பூசமென்றுமாம்; அன்றி; வினைத்தொகையாக, அழகுபெற்ற புனர்பூச மென்பாருமுளர். நண்டுக்குப் பெயராகிய கர்க்கடகமென்பது - அதன்வடிவத்தைக்கொண்ட இலக்கினத்தைக் குறிக்கும். திருமால் திருவவதரிப்பதற்குத் தாம் இடனாயிருந்தமையால், புனர்பூசமும் கர்க்கடகமும் எழுந்து துள்ளின வென்க. [7]விண்ணுளோர்களும் என்ற பாடம், கூறியது கூறலாம்; அடுத்தபாடலில் "விண்ணுளோர்களும்" என்றுவருதல் காண்க. பி-ம்:—[1]ஆயிடையையிருதிங்க ளார்ந்தபின்' என்று சிலபிரதிகளில் முதலடி. [1]அமைந்த, அடைய. [2]மேடமும், வேலையின். [3]மண்மகள், புவிகளும். [4]மாதும் மாமதி, மகிழ்வொடோங்கிட. [5]வேய்புணர், மேய்புணர், வேயநற். [6]புணர்தமும். [8]தூயநற். [9]மொழிந்துள்ளவே. 102.—சித்தர், இயக்கர் - தேவகணத்துட்பட்டவர். தெரிவை பருவப்பெயராகாமல், பெண்ணென்ற மாத்திரமாய் நின்றது. நித்தியர் - பிறப்பு இறப்பு இல்லாமல் என்றும் ஒருபடிப்படப் பரமபதத்தில் வாழ்பவர். நித்தியரைக் கூறியது, முக்தர்க்கும் உபலட்சணம். "நசபுநராவர்த்ததே [மோட்சலோகத்தவன் மீண்டும் இங்குத் திரும்புவதில்லை]" என்பதற்கு மாறாக, 'நித்தர்நெருங்கி ஆர்த்தனர்' என்றது பொருந்துமோ எனின்? கன்மத்தினால் திரும்பிப்பிறப்பதில்லையென அந்தச் சுருதி வாக்கியத்திற் கூறியதேயன்றிக் கருமத்தொடர்பின்றி விருப்பத்தினால் இங்கு முக்தியுலகத்தவர் வருவதை மறுக்கவில்லையென்க. எம்பெருமானது கருணைப்பெருக்கத்தைக் கண்டு, சித்தர் முதலியோர் களிப்புற்றனரென்றவாறு. சிலபிரதிகளில் இச்செய்யுள் 111 - இன் பின் உள்ளது. பி - ம்:—[10]வித்தரு. [11]ஆர்த்தெழ. 103:—இவ்வுலகங்களையெல்லாம் தன்னுட் கொண்டகடவுளை இவ்வுலகத்தின் ஏகதேசத்தின் ஓரிடத்திலிருப்பவளாகிய கௌசலை தன்வயிற்றிக் கொண்டு பெற்றனளென்ற இதில், ஆதாரத்திலும் ஆதேயம் மிக்கதாக வந்ததனால், பெருமையணியாம். [ஆதாரம் - தாங்குவது, ஆதேயம் - தாங்கப்படுவது.] திருவுற - மங்கலம்பொருந்த எனினுமாம். முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[12]மறைகொணர்வரும். [13]அனையவஞ்சனக். [14]கொழுந்தொளி, கொழுந்தொழில். [15]சிறந்த.

104.—கைகேயி பரதனைப் பெறுதல்.

ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய [1]நல்கினாள்
மாசறு [2]கேகயன் மாது மைந்தனை.

(இ - ள்.) ஆசைஉம் - எல்லாத்திக்குக்களிலும், விசும்புஉம் - ஆகாயத்திலும், நின்று - வந்துநின்று, அமரர்-தேவர்கள், ஆர்த்து எழ-ஆரவாரித்துப் பொங்கவும், வாசவன் முதலினோர் - இந்திரன் முதலான தலைமைத்தேவர்கள், வணங்கி-தொழுது, வாழ்த்துஉற-வாழ்த்தலைப் பொருந்தவும், பூசம்உம் மீனம்உம் பொலிய - புஷ்யநட்

சத்திரமும் மீனலக்கினமும் விளங்கவும், மாறு அறு கேகயன் மாது-குற்றமில்லாத கேகயராசனது மகளான கைகேயி, மைந்தனை நல்கினுள்-புத்திரனைப்பெற்றுள்; (எ - று.)

வாசவன் முதலினராகிய அமரர்கள் வாழ்த்துற, எட்டுத் திக்குக்களிலுள்ளாரும் மற்றும் விசும்பிலுள்ளாரும் வந்து நின்று ஆர்த்தெழ, கைகேயி பூசத்தில் மீனலக்கினத்தில் ஒரு புதல்வனைப் பெற்றனள்; இவனே பரதனெனப் படுவான்; இவன், சுதரிசனமென்ற சக்கராயுதத்தின் அமிசமாவான். வாசவன் - அஷ்டவசுக்களுக்குத் தலைவன்: அல்லது, மிக்க செல்வமுள்ளவன் என்பது பற்றிய பெயர். பி-ம்:—[1] ஈன்றனள். [2] கைகயன்மாதுமைந்தனை, மைந்தனைக் கேகயன் மகள். (284)

105.—சுமித்திரை இலக்குவனைப் பெறுதல்.

தளையவிழ் தரு[1]வுடைச் சயில கோபனும்
கிளையுமந் தரமிசைக் கெழுமி [2]யார்த்தெழ
அளைபுகு மரவினே டலவன் வாழ்வுற
[3]இளையவற் பயந்தன ளிளைய [4]மென்கொடி.

(இ - ள்.) தளை அவிழ் தரு உடை - (அரும்புகள்) முறுக்கு விரிந்துமலர்கின்ற (கற்பக) விருட்சங்களையுடைய, சயிலகோபன் உம் - மலைகளைக்கோபித்துச் சிறகறுத்தவனான இந்திரனும், கிளை உம் - (அவனது) சுற்றமான மற்றைத் தேவர்களும், அந்தரமிசை கெழுமி - ஆகாயத்திலே நெருங்கி, ஆர்த்து எழ - ஆரவாரித்துக் குதிக்கவும்,—அளை புகும் அரவினோடு-புற்றிலே நுழையுந்தன்மையுள்ள பாம்புடனே[ஆயிலியநட்சத்திரத்துடனே], அலவன்-நண்டும் [கர்க்கடகலக்கினமும்], வாழ்வுஉற - வாழ்வையடையவும், இளைய மென்கொடி - (பட்டமகிஷியரில்) இளையவளான மெல்லிய பூங்கொடி போன்ற சுமித்திரை, இளையவன் பயந்தனள் - இளையபெருமாளைப் பெற்றுள்; (எ - று.)

சுமித்திராதேவி ஆயிலியநட்சத்திரத்தில் கடகலக்கினத்தில் ஒருபுதல்வனைப் பெற்றனள்; இவன் லக்ஷ்மணனென்று பெயர் பெறுவன். இவன் ஆதிசேஷாமிசமாதலால், ஆதிசேஷனுக்கு உரிய ஆயிலியம் இவன் உதித்தற்கு ஏற்றது. முற்காலத்தில் மலைகள் சிறகுடையனவாயிருந்து கண்டஇடமெங்கும் திரிந்து உலகத்தைப் பாழாக்கிவருகையில் உலகத்தவர் முறையிட, அவற்றின் சிறகுகளைச் சினங்கொண்டு வெட்டி வீழ்த்தியதனுல், இந்திரனை 'சயில கோபன்' என்றுர். சயிலம் - சைலம்: கல்மயமான தென்பதுபற்றி, மலைக்குக் காரணப்பெயர். கிளை - உவமையாகுபெயர். மூன்றும்டியில், வளைபுகும் என்றும் பிரிக்கலாம். தசரதன் சுதையைக் கொடுக்கையிலும் கைகேயிக்குக்கொடுத்தபின்பே சுமித்திரைக்குக் கொடுத்ததாக வருவதாலும், இங்கும் 'இளையமென்கொடி' என்பதனுலும், சுமித்திராதேவியைப் பட்டமகிஷியர் மூவரில் இளையவளென்று கம்பர் கருதுகின்றனரோ என்று தோன்றுகின்றது. இளையவர்ப்பயந்தனள் என்ற பாடத்திற்கு, அடுத்தசெய்யுள் வேண்டுவதில்லை. பி - ம்;—[1] புடைச். [2] ஆர்ப்புற. [3] இளையவள். [4] வீரனை. (285)

106.—சுமித்திரை சத்துருக்கினனைப் பெறுதல்.

படங்[1]கிளர் பஃறலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் [2]தரமறை [3]நவில நாடகம்
மடங்கலு [4]மகமுமே வாழ்வி னோங்கிட
விடங்கிளர் [5]விழியினாண் [6]மீட்டு மீன்றனள்.

(இ - ள்.) படம் கிளர்-படம் விளங்குகின்ற, பல் தலை-அனேகந் தலைகளையுடைய, பாந்தள் - ஆதிசேஷன், ஏந்து - தரிக்கின்ற, பார்-பூமிதேவியானவள், நடம் கிளர் தர-ஆனந்தக்கூத்தாடி விளங்கவும், மறை-வேதங்கள், நாடகம் நவில-நடனஞ்செய்யவும், - மடங்கல்உம்-சிங்கராசியும், - மகம்உம் - மகநட்சத்திரமும், வாழ்வின் ஓங்கிட-(உயர்ந்து) வாழ்வுபெறவும், விடம் கிளர் விழியினாள்-விஷம்போல(க் கருமையாய்) விளங்குகின்ற கண்களையுடைய சுமித்திரை,மீட்டும்-மறுபடியும், (ஒருபுத்திரனை), ஈன்றனள்-; (எ - று.)

சுமித்திரை மகநட்சத்திரத்திற் சிங்கராசியில் மீண்டும் ஒரு புதல்வனைப்பெற்றனளென்க: இவன் சத்துருக்கினனெனப்படுவன்: பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கத்தின் அமிசமானவன். பல் + தலை = பஃறலை. நாடகம்-நடனம். "பின்பு, சுமித்திரை விஷ்ணுவினதுநாலிலோர்பாகமும் எட்டிலோர் பாகமுமாகிய லக்ஷ்மணன் சத்துருக்நன் என்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றனள்," "சுமித்திரையின் புத்திரர்களாகிய லக்ஷ்மணனும் சத்ருக்நனும் ஆச்லேஷாநட்சத்திரத்தில் மத்யாஹ்நத்தில் கடகலக்நத்திற் பிறந்தனர்" என்று வால்மீகத்திற் கூறியுள்ளது. பாயசத்தைக் கௌசலைக்குப்பின் ஒருமுறை பெற்றனளாயினும், சுமித்திராதேவி, கைகேயிக்குப் பின்னும் இன்னொருமுறை பெற்றது காரணமாக இருவரைப் பெற்றதால், சற்று அருமைப்பட்டு, கைகேயி புதல்வனைப் பெற்ற பின்பே புதல்வரைப்பெறலாயின ளென்பர். இனி கைகேயி பாயசத்தை யுண்ட பின்னரே சுமித்திரை பாயசத்தை யுண்டனளென்றும் காரணங் காண்பர்.

ஜநகராசன் முதலிய ஜ்ஞானவான்களிருக்க அவர்கள் வம்சத்திலவதரிக்காமல் இக்ஷ்வாகுவம்சத்தில் திருமால் அவதரித்ததற்குக் காரணம்,—"வைஷ்ணவோந: குலேஜாத:, ஸநஸ்ஸந்தாரயிஷ்யதி [வைஷ்ணவனாயிருப்பானொருவன் பிறந்தால், அக்குலத்திற் பிறந்தாரனைவரையும் ஈடேறச்செய்வான்]" என்பது சாஸ்திரங்களின் கொள்கை யாதலாலும், வெகுகாலம் ஸ்ரீமஹாவிஷ்ணுவை உபாசித்து அவனுடைய மூர்த்திவிசேஷமாகிய ஸ்ரீரங்கநாதனை இக்ஷ்வாகுமன்னவன் பெற, அம்மன்னவன் தொடங்கித் தசரதமன்னவன்வரையிலுள்ள அரசர்கள் யாவரும் அந்த ஸ்ரீரங்கநாதனை யாராதித்துவந்த வைஷ்ணவோத்தமர்களாகையாலும், அந்த வமிசத்திற் பகவானுக்கு உள்ள உவப்பினாலென்பர். திருமால் இராமன் முதலிய நான்கு திருவுருவத்துடனே திருவவதரித்தது—இராவணாதியரைச் சங்கரித்தற்காகவும் பித்ருவசனபரிபாலனம் முதலியசாமானியதருமமும்,தலைவனுக்கு அடியவன் குற்றேவல்செய்கையாகிற விசேஷ தருமமும், தான் மேல் வீழ்ந்து சேஷி [தலைவன்]

யின் குற்றேவலில் மூளாமல் சேஷி உவந்த அடிமையைச் செய்த லாகிய விசேஷதரதருமமும், பகவானது அடிமையைக்காட்டிலும் அவனது அடியார்கட்குக் குற்றேவல் செய்கையாகிற விசேஷதமதரு மமுமாகிற நால்வகைத் தருமங்களையும் தமதுஒழுக்கத்தினுற் காட்டி உலகத்தார்க்கு நன்ஞானத்தையுண்டாக்குவதற்காகவு மென்பர், பெரியோர். பி-ம்:—[1] கிளை. [2] அருமறை, தாமரை, தரவுரை. [3] நவிலு நாவலர், நனிமகிழ்ந்திட. [4] அமுதமே. [5] கண்ணினுள். [6] மீண்டும். ()

107.—அரம்பையர் முதலியோர் கொண்ட மகிழ்ச்சி.

ஆடின ரரம்பைய ரமுத வேழிசை
பாடினர் கின்னரர் [1] துவைத்த பல்லியம்
[2] வீடின [3] ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
ஓடின [4] ருலவின ரும்பர் முற்றுமே.

(இ - ள்.) (அப்போது), அரக்கர் வீடினர் என்று உவக்கும் விம்மலால் - 'அரக்கர்கள் அழிந்தார்கள்' என்று மகிழ்கிற பூரிப் பினுல், அரம்பையர்-தேவமாதர்கள், ஆடினர் - (வானத்திற்) கூத் தாடினுர்கள்; கின்னரர்-கின்னரர்கள், அமுதம் ஏழ் இசை - அமிர் தம்போலினிய சப்தசுரங்களை, பாடினர்-பாடினுர்கள்; பல்இயம் - அனேக வாத்தியங்கள், துவைத்த-ஒலித்தன; உம்பர்-தேவர்கள், முற்றும் ஓடினர் உலவினர் - எங்கும் ஓடியுலாவினுர்கள்; (எ-று.)

இது, மேலுலகத்தவர் மகிழ்ந்தமையைத் தெரிவிக்கும். ஏழி சை-குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன; இவை-வடமொழியில், ஷட்ஜம் ரிஷபம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் எனப்படும், உம்பர் முற்றும் - தேவர்க ளெல்லாரு மெனினுமாம். பி - ம்:—[1] துவைப்ப. [2] வீடினது. [3] அரக் கர்களென்னும், அரக்கரோடென்னும், வகை. [4] உலாவினர். (287)

108.—புத்திரர் பிறந்ததைப் பாங்கிமார் அரசனுக்குத் தெரிவிக்க, சோதிடர் நாள் முதலியவை நன்றெனல்.

ஓடின ரரசன்மாட் டுவகை [1] கூறிநின்று
ஆடினர் சிலதிய ரந்த ணாளர்கள்
[2] கூடினர் நாளொடு கோளு நின்றமை
நாடின [3] ருலகினி நவை [4] யின் றென்றனர்.

(இ - ள்.) சிலதியர் - (சக்கரவர்த்தியினது தேவியரின்) வேலைக் காரிகள், அரசன்மாட்டு - தசரதனிடத்து, ஓடினர் - (உடனே) விரைந்துசென்று, உவகை கூறி - (புத்திரர்பிறந்த) சந்தோஷ சமா சாரத்தைச் சொல்லி, நின்று ஆடினர்-ஆனந்தக் கூத்தாடிநின்றுர் கள்; அந்தணாளர்கள் - (சோதிடம்வல்ல) பிராமணர்கள், கூடினர் - வந்து சேர்ந்து, நாளொடு - (திருவவதார) நட்சத்திரங்களும், கோள் உம் - (தத்காலத்துக்) கிரகங்களும், நின்றமை - நின்ற நிலைமை களை, நாடினர் - ஆராய்ந்து பார்த்து, இனி உலகு நவை இன்று என்றனர் - 'இனிமேல் உலகம் தீமையில்லாததாம்' என்று சொன் ஞர்கள்; (எ-று.)

தேவிமார்களின் பாங்கியர் அரசனிடத்துச் சென்று புதல்வர் பிறந்த செய்தி தெரிவிக்க, அப்போது அரசன் பணியாளரை யேவிச் சோதிடம்வல்லாரை வருவிக்க, வந்த அந்த அந்தணர்கள் பிறந்த நாள் தத்காலகிரகம் முதலியவற்றை யாராய்ந்து 'உலகத்துக்கு நேர்ந்துள்ள வருத்தம்யாவும் அப்புதல்வர்களால் நீங்கும்', என்று புதல்வர்பிறந்த வேளையைப் பாராட்டிக்கூறினரென்க.
பி-ம்:—[1] கூர. [2] கூடிய. [3] உலகினின், உலகிடை. [4] இற்று. (288)

109.—இராமபிரானது ஜாதகம்.

*மேடமா மதிதிதி [1] நவமி மீன்கழை
[2] நீடுறு [3] மாலைகர்க் கடக [4] நீதிசேர்
[5] ஓடைமா களிறனு னுதய [6] ராசிகோள்
நாடி [7] னே காதசர் [8] நால்வ ருச்சரே.

இதுவும் அடுத்த கவியும்-ஒருதொடர்.

(இ-ள்.) நீதி சேர் - நியாயம் பொருந்திய, ஓடை மா களிறு அனன் - நெற்றிப்பட்டத்தையுடைய ஆண்யானையைப்போன்ற (காம்பீரியத்தையுடைய) ஸ்ரீராமபிரானது, உதயராசி - திருவவதாரகாலத்தில், மதி-மாசம், மேடம்ஆம்-மேஷமாகும்; திதி - திதியானது, நவமி - நவமியென்பதாம்; மீன் - நட்சத்திரம், கழை-புனர்பூசமாம்; நீடுறு மாலை - சிறந்த லக்கினம், கர்க்கடகம் - கடகமாம்; கோள் நாடின்-கிரகசம்பத்தியை ஆராயுமிடத்து, ஏகாதசர் நால்வர் உச்சர்-பதினோராமிடங்களுக்கு உடையவர்களாகியநான்கு பேர் உச்சஸ்தானத்தவர்; (எ-று.)

மேஷம்-சித்திரைமாதம். பிரதமை முதலிய பதினைந்தும் திதியெனப்படும். நவமியெனப் பொதுப்படக் கூறினரேனும், அது சுக்கிலபட்சத்ததென்பதை யறிக. சுபானுவருஷத்து மேஷமாசத்துப் பூர்வபட்சத்து நவமிதிதியில் புனர்வசுநட்சத்திரத்தின் நான்காம்பாதத்தில் புதன்கிழமையில் கடகலக்கினத்தில் ஸ்ரீராமஜநநமென்க. கடகலக்நமென்றதனால், பிறந்த வேளை பகற்பொழுதில் பதினான்குநாழிகைக்குமே லிருக்கலாமென்பது பெறப்படும். ஏகாதசர் - பதினோராமிடத்திற்கு உரியவர்; இங்கு இராமபிரான் பிறந்த லக்னஸ்தானமாகிய கடகத்திற்குப் பதினோராமிடமாகிய விருஷபத்திற்கு உரிய சுக்கிரனும், அவ்விடபத்திற்குப் பதினோராமிடமாகிய மீனத்திற்கு உரிய வியாழனும், அம்மீனத்திற்குப் பதினோராமிடமாகிய மகரத்திற்குரிய சனியும், அம்மகரத்திற்குப் பதினோராமிடமாகிய விருச்சிகத்திற்கு உரிய செவ்வாயும் என்ற இவர். மேடமாதி என்றதனால், சூரியனுச்சனென்பது பெறப்படும். ஆகவே, ஸ்ரீவான்மீகிராமாயணம் முதலியவற்றிற் கூறியவாறு ஐவருச்சரென்பது, பெறப்பட்டது. சூரியனுக்குச் சிங்கமும், சந்திரனுக்குக் கடகமும், செவ்வாய்க்கு மேஷவிருச்சிகங்களும், புதனுக்கு மிதுன கன்னிகளும், சனிக்கு மகரகும்பங்களும் உரியஸ்தா

*இதுவும் அடுத்த கவியும், சிலபிரதிகளிலில்லை: ஆயினும் இராமஜாதகத்தைக்குறித்திருத்தலால் இவற்றுக்கு உரை எழுதியிருக்கிறோம்.

னங்களாமென்பதும், மேஷம் விருஷபம் மகரம் கன்னி கடகம் மீனம் துலாம் என்பன, சூரியன் முதலிய ஏழுகோள்கட்கும் முறையே உச்சஸ்தானங்களாமென்பதும் சோதிட நூல்களாற் காணத்தக்கன. இந்த ஜாதகத்தை இங்ஙனம் அறிக:—

சுக்	சூரி. புத		கேது
	இராசி சக்கரம்		ல / குரு-சந்
செவ்			
ராகு		சனி	

ஐந்து கிரகங்கள் உச்சத்திருந்தால் ஜாதகமுடையவன் லோக நாயகனென்பதை "உள்ளதொருகிரகமுச்சமேவிற் கிராமணியா முபயமுச்சம்பெறிற் பலவூர்க்கிராமணியுமாவான், தெள்ளியதோரொருமூன்று கிரகமுச்சமானாற் கோன்மன்னவனாகிச் சிறிதவனி புரப்பன், நள்ளியதோரீரிரண்டு கிரக முச்சமானனவிலொருமண்டலந்தனக்கு நாயகனேயாவன், புள்ளி செறி யோரைந்துகிரகமுச்சமானாற் பூலோகநாயகனுமெனப்பலன்கள் புகல்வார்" என்றது முதலான சோதிட நூல்மேற்கோள் கொண்டறிக. மேடமாசம் நவமிதிதி புனர்வசுநட்சத்திரம் அதன் நான்காம்பாதம் லக்கின குருசந்திரயோகம் ரவிபுதயோகம் சூரியன் முதலியோர் தனித்தனி யுச்சமாயிருத்தல் கடகலக்கினம் முதலியவற்றின் விசேஷபலன்களை விரித்துக் கூறிற் பெருகுமாதலால் விடப்பட்டன: சோதிடம் வல்லார்வாய்க்கேட்டுணர்க. பி - ம்:—[1] விளங்கு பஞ்சமி, நவமிமேதகு, நவமியொன்பதந். [2] நீடு நாள். [3] புணர்தங்கற். [4] நீதிகொள். [5] ஆடவர்திலகனது, ஆடவர்களிற்றினது. [6] ராசிக்கோர். [7] ஏகாதச. [8] உச்சர்நால்வரே, நாலொன்றென்னவே. 'நாடிலேகாதசத்துச்சர்நால்வரே' என்று சிலபிரதிகளில் நான்காமடி.

110.—சோதிடர் மற்றைப் புதல்வருக்கும் ஜாதகமெழுதித் தருதல்.

என்றனர் சாதக [1] மீசற் கேனையர்
[2] தந்தமக் குந்தகு [3] முறையிற் றுந்தெரிந்து
ஒன்றிய தமனியத் தெழுதி யோதினர்
வன்றிறற் [4] சுரர்குரு வாழ்த்தெ டுப்பவே.

(இ - ள்.) ஈசற்கு - ஸ்ரீராமனுக்கு, தாம்—, சாதகம் - ஜாதகத்தை, என்றனர் - என்றுசொல்லி எழுதித்தந்த சோதிடர்கள்,

ஏனையர் தம் தமக்கும்-மற்றைப்பரதன் முதலிய புதல்வர்க்கும், தகும் முறையில் தெரிந்து - ஆராய வேண்டிய முறைப்படியே (எல்லாவற்றையும்) ஆராய்ந்து, ஒன்றிய தமனியத்து எழுதி - பொருந்திய பொன்னோலையிலே யெழுதி, வல் திறல் சுரர் குரு வாழ்த்து எடுப்ப - மிக்கசாமர்த்தியத்தையுடைய தேவகுருவாகிய பிருகஸ்பதியும் வாழ்த்துக்கூற, ஓதினர் - படித்துக்காட்டினர்கள்;

அச்சோதிடர்களின் ஆராய்ச்சிவன்மையைக் கண்டு தேவ குருவும் வாழ்த்தலாயின னென்க. பி - ம்:—[1] இறைவற்கு. [2] தன் தனக்கும். [3] முறையினுற், முறையிற்றுன். [4] சுரகுரு. (290)

111.—அரசன் புனல்படிந்து தானஞ்செய்திட்டுக் குழந்தைகளைப் பார்த்தல்.

மாமுனி தன்னொடு மன்னர் மன்னவன்
[1] ஏமுறப் புனல்படீஇ [2] வித்தொ [3] டின்பொருள்
தாமுற வழங்கிவெண் சங்க மார்ப்புறக்
கோமகார் திருமுகங் குறுகி நோக்கினன்.

(இ - ள்.) (குமாரர்கள் தோன்றிய செய்தி கேட்டவுடனே), மன்னர் மன்னவன் - தசரதசக்கரவர்த்தி,—ஏம்உற புனல் படீஇ - இன்பம்மிக(ச் சரயூ நதியின்) தீர்த்தத்திலே ஸ்நாநஞ்செய்து, வித்தொடு இன் பொருள் உற வழங்கி - விதைகளையும் இனிய செல்வத்தையும் மிகுதியாகத்தானஞ்செய்து, வெண் சங்கம் ஆர்ப்பு உற மாமுனி தன்னொடு குறுகி - வெண்மையான மங்கலச் சங்கங்கள் முழக்கத்தைச் செய்ய வசிட்டமுனிவனுடனே யருகிற் போய், கோமகார் திருமுகம் நோக்கினன் - சிறந்த குமாரர்களது அழகிய முகத்தைப் பார்த்தான்; (எ-று.)—தாம் - அசை.

பிள்ளை பிறந்தவுடனே மகிழ்ச்சியாற் குதித்துத் தந்தை நீராடுகிற நீர் தெறிக்கின்ற திவலைகளாற் பித்ருக்கள் தாகம் தணிந்து மகிழ்கின்றன ரென்பதும், பிறந்த குழந்தையின் முகத்தைத் தந்தை பார்த்து மகிழவேண்டு மென்பதும் நூல்துணிபு. வித்து வழங்குதல்—'பீஜதானம்' எனப்படும்; இது சாதகருமங்கூறிற்று. பி-ம்:— [1] ஏமுறு. [2] இனத்தொடு. [3] எண்பொருள். (291)

இதன்பின் அதிகப்பாடல் ஒன்று காண்பது வருமாறு:—நோக்கினன் களிப்பெழ நுணங்கு கேள்வி நூல், ஆக்கியமுனிவனை வணங்கி யையவென், பாக்கியம் பலித்ததிப் பாலரென்றுபார், காக்குறு மரசனுங் கழறன்மேயினன்.

112.—114—இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்; தசரதன் தனக்குப் புத்திரர் பிறந்த மகிழ்ச்சியினுற் செய்த தியாகங்களைக் கூறும்.

112. இறை [1] தவிர்ந் திடுக [2] பா ரியாண்டோ ரேழ்நிதி
நிறை [3] தரு [4] சாலைதா ணீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து [5] கொள்கென
அறைபறை யென்றன னரசர் கோமகன்.

113\. படையொழிந் திடுக[1] தம் [2]பதிக ளேயினி
விடைபெறு குகமுடி வேந்தர் வேதியர்
நடையுறு [3]நியமமு [4]நவையின் றுகுக
[5]கடவுளர் விழாவொடு [6]களிக்க வெங்கணும்.

114\. ஆலயம் புதுக்குக வந்த ணாளர்தம்
சாலையுஞ் சதுக்கமுஞ் [1]சமைக்க சந்தியும்
காலையு [2]மாலையுங் கடவு ளர்க்கணி
மாலையுந் [3]தீபமும் [4]வழங்கு [5]கென்றனன்.

(இ - ள்.) (113) 'படை ஒழிந்திடுக - போர்த்தொழில் (எங்கும்) ஒழிவதாக: முடி வேந்தர் இனி தம் பதிகள் ஏ விடை பெறுகுக-(சிறைப்பட்ட) கிரீடமணிந்த அரசர் இனிமேல் தந்தமது தேசங்கட்கே விடைபெற்றுச் செல்லுக; வேதியர் நடைஉறு நியமம்உம் நவை இன்று ஆகுக-அந்தணர்களால் (குழந்தைகட்கு அரிஷ்டம் ஒன்றும் நிகழாவண்ணம்) நடத்தப்படும் நியமங்களும் குறைவின்றி நிகழ்க; எங்கண்உம்-எவ்விடத்தும், கடவுளர்-(ஆலயங்களிற் பிரதிட்டைசெய்துவைக்கப்பட்டுள்ள) தெய்வங்கள், விழாவொடு களிக்க - விசேடமாகச் செய்யும் உத்ஸவங்களால் மகிழ்வடையட்டும்; (114) ஆலயம் புதுக்குக - தேவாலயங்களைப் புதுப்பிக்க; அந்தணாளர்தம் சாலைஉம் - பிராமணர்களது அக்கிரகாரங்களையும், சதுக்கம்உம் சந்திஉம்-நாற்றெருக் கூடுமிடங்களையும் முத்தெருக்கூடுமிடங்களையும், சமைக்க-ஏற்படுத்துக; காலைஉம் மாலைஉம்-காலைவேளையிலும்மாலைவேளையிலும், கடவுளர்க்கு-(தேவாலயங்களிலுள்ள)தெய்வங்கட்கு, அணி மாலைஉம் தீபம்உம்-அழகிய மாலைகளையும் திருவிளக்குக்களையும்,வழங்குக-சமர்ப்பிக்க,' என்றனன்-என்று கட்டளையிட்டவனை, (112) அரசர் கோமகன் - தசரதசக்கரவர்த்தி,—'பார் - இராச்சியம் முழுதும், யாண்டு ஓர் ஏழ் இறை தவிர்ந்திடுக-ஒரு ஏழு வருஷகாலமளவும் வரி நீங்குவதாக; நிதி நிறைதரு சாலை தாள் நீக்கி யாவைஉம் வறியவர் முறை கெட முகந்து கொள்க-திரவியம் நிறைந்துள்ள பொக்கசங்களில் (கதவின்) தாழ்களைத்திறந்து எல்லாப்பொருள்களையும் ஏழைகள் முறைமையில்லாமல் [அவரவர் வேண்டியபடி] கவர்ந்துகொள்வாராக,' என-என்று, பறை அறை (க) என்றனன-(வள்ளுவர்) பறையறைந்திடுக என்றுங் கட்டளையிட்டான்; (எ-று.)

சிறைப்பட்ட அரசரை விட்டிடவும், அந்தணர்கள்விரதங்களைக் குறைவில்லாமல் நடத்தவும், ஆலயங்களைப் புதுப்பித்து ஆங்காங்குள்ள தெய்வங்கட்கு நாடோறும் இருகாலமும் தீபங்களும் மாலைகளும் சமர்ப்பிக்கவும், விசேட உத்ஸவங்கள புரியவும் அந்தணர்கட்கு அக்கிரகாரங்கள் கட்டித் தானஞ்செய்யவும்,முச்சந்தி நாற்சந்திகளை ஆங்காங்குத் தக்க இடங்களில் ஏற்படுத்தவும் கட்டளையிட்டு, 'ஏழுவருஷம் வரி தவிர்க' என்றும், 'பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டு வறிஞர் ஆங்குள்ள செல்வத்தையெல்லாம் முகந்துகொள்க' என்றும், வள்ளுவர் பறையறைந்து செய்தி தெரிவிக்குமாறும் கட்டளையிட்டன னென்பதாம்.ஒருபிரதியில்''இறை தவிர்ந்திடுக''(112)

என்ற பாடல் "ஆலயம் புதுக்குக" (114) என்று தொடங்கும் பாடலின்பின் காண்கின்றது.

112.—எழுபிறப்புத்தீவினையும் ஒழியும்பொருட்டு 'ஏழியாண்டு இறைதவிர்க' என்ருன். அறை-அறைக. பி - ம்:—[1] தவிர்த்திடுக. [2] யாண்டேழொரேழொடேழ், யாண்டேழொடேழென, பார்யாண் டொரேழொடேழ், யாண்டொரேழொடேழ். [3] நிதிச. [4] சாலைதான், சாலைகள். [5] கொள்கென.

113.—படை-படுக்கும் [அழிக்கும்] தொழில்: அதாவது-போர். தம் பதிகள் விடைபெறுக வேந்தர்-(பகைவராயிருந்ததனுற் கவரப் பட்ட) தமது நாடுகளை மீண்டும் அவர்களே ஆட்சிபுரியுமாறு விடப் படட்டும் என்றுமாம். பி-ம்:—[1] நம். [2] பதியுளேயிடை, மதியுளே யினி. [3] நிதியமும். [4] நடையின்று, நவையிற்று. [5] புடைகெழு. [6] பொலிக, களிப்ப.

114.—புதுக்குதல் - ஜீர்ணோத்தாரணஞ்செய்தல்: சதுக்கம்— சதுஷ்கம். சந்தி-முச்சந்தி: ஐஞ்சந்தியும் கொள்ளலாம். காலைமாலை களைக்கூறியது,மத்தியானத்திற்கும் உபலட்சணம்.பி-ம்:—[1] சமைக. [2] அருள்புரிகடவுளோர். [3] தூபமும். [4] வழங்க. [5] என்னவே. (*293-294*)

115.—வள்ளுவர் பறையறைந்து செய்திதெரிவிக்க, நகரமாந்தர் மகிழ்தல்.

என்புழி [1] வள்ளுவ ரியானை மீமிசை
[2] நன்பறை [3] யறைந்தனர் நகர [4] மாந்தரும்
மின் [5] பிறழ் [6] நுசுப்பினர் தாமும் [7] விம்மலால்
இன்பமென் [8] றளக்கரு மளக்க ரெய்தினர்.

(இ - ள்.) என்புழி-என்று (அரசன்) கட்டளையிட்டபொழுது, வள்ளுவர்-வள்ளுவர்கள், யானைமீமிசை-யானைகளின்மேல், நல்பறை அறைந்தனர்-நல்ல பறைகளை முழக்கிச் செய்தி தெரிவித்தார்கள்; நகரம் மாந்தர்உம் மின்பிறழ்நுசுப்பினர் தாம்உம்-பட்டணத்துஆண் மக்களும் மின்னலையொத்து விளங்குகின்ற இடையையுடையமகளிர் களும், விம்மலால்-மகிழ்ச்சியினுல், இன்பம் என்ற அளக்க அரும் அளக்கர் எய்தினர்-ஆனந்தமென்று சொல்லப்பட்ட அளவிடுதற்கு அருமையான கடலில் மூழ்கினர்கள்; (எ - று.)

வள்ளுவர் - முரசறைவோர்; சாதிப் பெயருமாம். மின்பிறழ் நுசுப்பினர் என வருதலால், மாந்தர் ஆடவரை யுணர்த்திற்று. என்றளக்கரும்-இரண்டு தொகுத்தல்விகாரம். பி-ம்:—[1] வள்ளுவன். [2] வண்பறை, வன்பறை. [3] அறைதர. [4] மைந்தரும். [5] புரை, புகழ். [6] நுசுப்பினர். [7] விம்மலோடு. [8] அளப்பரும். (*295*)

116.—நகரமாந்தர்களின் களிப்புச்செயல்.

ஆர்த்தனர் முறைமுறை யன்பி னுடல்
[1] போர்த்தன [2] புளகம்வேர் [3] பொடித்த நீணிதி
தூர்த்தன [4] ரெதிரெதிர் சொல்லி னுர்க்கெலாம்
தீர்த்தனென் [5] றறிந்ததோ வவர்தஞ் [6] சிந்தையே.

(இ - ள்.) (சக்கரவர்த்திக்குப் புதல்வர்பிறந்த செய்தியுணர்ந்த நகரத்துச் சனங்களெல்லோரும்), முறைமுறை - வரிசைவரிசையாக, அன்பினன் - அன்பின்மிகுதியால், ஆர்த்தனர்-ஆரவாரித்தார்கள்; உடல் - அவர்களுடம்பை, புளகம் போர்த்தன-புளகங்கள் மறைத்தன; வேர் பொடித்த - வியர்வைநீர்த்துளிகள் அரும்பின: எதிர் எதிர்- எதிரிலே எதிரிலே (வந்து), சொல்லினர்க்கு எலாம் - (இச்சுபசெய்தியைச்) சொன்னவர்களுக்கெல்லாம், நீள்நிதி தூர்த்தனர் -மிகுந்ததிரவியத்தைச் சொரிந்தார்கள்; (இங்ஙனஞ்செய்தற்குக் காரணம்), அவர்தம் சிந்தை-அவர்களது மனம், தீர்த்தன் என்று அறிந்ததுஓ - பரிசுத்தனை திருமால் (தானே இங்ஙனம் அவதரித்தான்) என்று அறிந்துகொண்டமைபோலும்; (எ-று.)

சாமானியமாக உண்டாகும் மகிழ்ச்சிபோலன்றி அப்போது அயோத்திமாநகரத்துச்சனங்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர்; அங்ஙனம் அவர்கள் மனம் மகிழக்காரணம், திருமாலே திருவவதரித்தானென்பதை அவர்கள்மனம் அறிந்ததுபோலுமென்கிறார் கவி: ஆர்த்தனரென்றமையால் வாக்கும், அன்பினனென்றமையால் மனமும், உடல்புளகம் போர்த்தன வேர்பொடித்த என்றமையால் காயமும், மகிழ்ச்சி யடைந்தமை கூறப்பட்டன. வேர் = வியர்வை. ஓ-ஐயவினா.

பி-ம்:—[1]போர்த்தனர். [2]புளகவேர். [3]பொழிந்த, பொழிந்து, பொழியும், பொழிந்த. [4]ஏத்தினர். [5]அறிந்தகொல், அறிந்தவோ, அறிந்ததால். [6]சிந்தைகள், சிந்தனை. (296)

117.—இதுவும் அது.

பண்ணையு [1]மாயமுந் திரளும் பாங்கரும்
கண்ணகன் [2]திருநகர் [3]களிப்புக் [4]கைமிகுந்து
எண்ணெயுங் களபமு மிழுதும் நானமும்
சுண்ணமுந் [5]தூவின வீதி தோறுமே.

(இ - ள்.) கண் அகல் திரு நகர் - இடம்பரந்த அழகிய அயோத்தியா பட்டணத்திலே, பண்ணைஉம - மகளிர்கூட்டமும், ஆயம்உம் - தோழிமார்கூட்டமும், திரள்உம் - ஆடவர்கூட்டமும், பாங்கர்உம் - தோழர்கூட்டமும், களிப்பு கைம்மிகுந்து - மகிழ்ச்சி எல்லைகடக்கப்பெற்று, எண்ணெய்உம் - எண்ணெயையும், களபம் உம்-கலவைச்சந்தனக்குழம்பையும், இழுதுஉம் - நெய்யையும், நானம்உம் - கஸ்தூரிப்புழுகையும், சுண்ணம்உம்-வாசனைப்பொடியையும், வீதிதோறும் - தெருக்களிலெல்லாம், தூவின - மிகச்சிந்தின; (எ - று.)

"கண்ணன் கேசவன் நம்பிபிறந்தினி, லெண்ணெய்சுண்ணமெதிரெதிர் தூவிடக், கண்ணன்முற்றங் கலந்தளறாயிற்றே" என்றது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அஃறிணையும் உயர்திணையும் விரவி, மிகுதியினால் 'தூவின' என்னும் அஃறிணை முடிபேற்றது.

பி - ம்:—[1]ஆரமுந். [2]திருநகர்க். [3]களிப்புங். [4]மைம்மிகு. [5]தூவினர்.

இச்செய்யுளின்பின் "[1]சுந்தரப்பொடிகளும் செம்பொற்சுண்ணமும், சந்தன [2]நீரொடுங்கலந்துதையலார், பந்தியிற்சிவிறியாற் [3]சிதறப்பார்மிசை, இந்திரவில்லெனக் கிடந்ததெங்குமே" என்று

ஒருபாடல், சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. பி - ம்:—[1]சிந்துரப். [2]கீரொடு. [3]சிதறிப். (297)

118.—வசிட்டன் நாமகரணஞ் செய்ய நினைத்தல்.

இத்தகை மாநக ரீரறு நாளும்
சித்த முறுங்களி யோடு [1]சிறந்தே
[2]தத்தமை யொன்று [3]முணர்ந்தில [4]தாவா
மெய்த்தவ னுமம் [5]விதிப்ப [6]மதித்தான்.

(இ - ள்.) இ தகை - இவ்வாறு, மா நகர் - பெரிய அப்பட்டணத்துச் சனங்கள், ஈர் அறு நாள் உம்-பன்னிரண்டுநாளளவும், சித்தம் உறும் களியோடு-மனத்தில் மிக்க ஆனந்தத்துடனே, சிறந்து-சிறப்புற்று, தத்தமை ஒன்றுஉம் உணர்ந்தில-(பரவசப்பட்டதனால்) தங்கள் தங்களைச் சிறிதும் அறிந்தனவில்லை; (பிறகு பதின்மூன்ரும் நாளில்), தாவா மெய் தவன் - அழியாத உண்மையான தவத்தை யுடைய வசிட்டன், நாமம் விதிப்ப - (அக்குமாரர்களுக்குப்) பேரிடுதற்கு, மதித்தான் - ஆலோசித்தான்; (எ-று.)

பிறந்த குமாரர்கட்குப் பதின்மூன்ரும்நாளிலே நாமகரணஞ் செய்யக்கருதி ஆலோசனை உண்டாயிற்றென்க. க்ஷத்திரியர்க்குப் பன்னிரண்டுநாள் சூதகாசௌசமென்பதும், அதுகழிந்த பதின் மூன்ரும்நாளே நாமகரணஞ் செய்யவேண்டும் மென்பதும் விதி யென்ப. பி-ம்:—[1]சிறந்த. [2]தத்தமில். [3]உணர்ந்திலர். தாழ்வில், ஆவர், தாவின், தாமும். [5]விதிக்க, விருப்பம். [6]வகுத்தான். (298)

119.—முறையே புதல்வர் நால்வருக்கும் வசிட்டன் நாமகரணஞ் செய்தல், இதுமுதல் நான்குகவிகளாற் கூறப்படுகின்றது.

கராமலையத் [1]தளர் கைக்[2]கரி[3]யெய்த்தே
அராவணை யில்துயில் வோயென வந்நாள்
விராவி[4]யளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய [5]ரீந்தன [6]னன்றே.

(இ - ள்.) கராம் மலைய தளர் கை கரி-முதலை போர்செய்தலால் தளர்ச்சியடைந்த துதிக்கையையுடைய யானையானது, எய்த்து - (கடவுளின் தன்மையை) அறிந்து, அரா அணையில் துயில்வோய் என-'ஆதிசேடனாகிய சயனத்திற் பள்ளிகொண்டருள்கின்ற ஆதி மூலமே!' என்று விளிக்க, அ நாள்-அப்பொழுதே, விராவி-(அங்கு) வந்து, அளித்தருள்-(அதனைக்) காத்தருளின, மெய் பொருளுக்கு - உண்மைப்பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு, இராமன் என பெயர் ஈந்தனன் - இராமனென்னும் திருநாமஞ் சாத்தினன், (வசிட்டன்); (எ - று.) அன்றே-ஈற்றசை.

கஜேந்திராழ்வானைக் காப்பாற்றின வரலாற்றை யெடுத்துக் கூறியது, உயர்திணைப்பொருளோடு அஃறிணைப்பொருளோடு வாசியற அடிமைப்பட்ட பொருள்களைப் பாதுகாக்கின்றகடவுளின் கருணை

மிகுதியை விளக்குதற்கு. கரியென்னும் பெயருக்கே துதிக்கையை யுடையதென்று பொருளாதலால், கையென்று அவசியமில்லாத அடைமொழி கொடுத்தது முதலையின் வாய்ப்பட்ட அவ் யானையின் கைம்மாத்திரம் வெளித்தெரிய மற்றையுறுப்புக்கள் நீர்க்குள் அமிழ்ந்தன என்ற கருத்தைப் புலப்படுத்துதற் பொருட்டு. தளர் கைக் கரி என எடுத்து - தளர்ச்சியையடைந்த யானை யென்றுமாம். எய்த்து-அறிந்து: "எய்யாமையே யறியாமையே" என்பது தொல் காப்பியச் சூத்திரம். பி-ம்:—[1]பொரு, புழைக், திரள். [2]களிறு. [3]மொய்த்தே. [4]அழைத்தருள். [5]இட்டனன். [6]வேந்தன். (299)

120. கரதல முற்[1]றொளிர் நெல்லி கடுப்ப
விரத மறைப்பொருண் மெய்ந்நெறி [2]கண்ட
வரத [3]னுதித்திடு மற்றைய வொளியைப்
பரத னெனப்பெயர் [4]பன்னின [5]னன்றே.

(இ - ள்.) கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப-கையினிடத்துப் பொருந்தி விளங்குகின்ற நெல்லிப்பழத்தை யொக்க, விரதம் மறை பொருள் மெய் நெறி கண்ட - (பலவகை) விரதங்களைக் கூறுகின்ற வேதங்களின் உண்மைப்பொருளை (ஐயந்திரிபறநன்கு) அறிந்த, வரதன் - (தன் தவவலிமையால் வேண்டுவார்க்கு வேண்டிய) வரங்களைக் கொடுக்கவல்ல வசிட்டன், உதித்திடும் - அவதரித்த, மற்றைய ஒளியை - (இராமனுக்குப்) பின்பிறந்த சோதிமயமான குழந்தையை, பரதன் என பெயர் பன்னினன்—; (எ - று.)

கையில் நெல்லிக்கனி யிருப்பின் அதன் வெளிவரைகொண்டு ஊகத்தால் உள்வரைகளும் உணரப்படுதல்போல, வேதத்தின் வெளிப்படைப் பொருளையும் உட்பொருளையும்ஆய்ந்தறிந்தவனென்பது, முன்னிரண்டடியின்பொருள். விசுவாமித்திரனைச் சேனையோடு உபசரித்தமை, அவனுக்குப் பிராமணியம் உண்டாகும்படி யனுக்கிரகித்தமை, சூரியகுலத்துப் புரோகிதனாயிருந்து அக்குலத்தார்க்குக் குறைவுவராமற் பாதுகாக்கை முதலிய தன்மைகளைப் பெற்றிருத்தலால், வசிட்டனை, 'வரதன்' என்றார். [3]உதித்திட என்று பாடங்கொண்டு, கரதலம் உற்றொளிர் நெல்லி கடுப்ப விரதம் மறைப்பொருள் மெய்ந்நெறிகண்ட வரதன் உதித்திட - கையிலங்கு நெல்லிக்கனிபோலப் பலவகை விரதங்களையும் ஸ்பஷ்டமாக ஓதுகின்ற மறைப்பொருளாகி உண்மையான உபாயத்தாலுணரப்படுகின்ற திருமால் இராமனாக உதித்திட, மற்றைய ஒளியை - அவ்வரதனுக்குப் பின்தோன்றிய ஒளிவடிவை என்றும் உரைப்பாருமுளர். இராமபிரான் காடேறவும் சக்கரவர்த்தி துஞ்சவும் காவலனில்லாத இராச்சியத்தை யாளவல்ல தன்மையுடையனாகப் போவதைத் திரிகாலஞானத்தாலுணர்ந்த வசிட்டமுனிவன் அந்த இரண்டாவது குமாரனுக்குப் பரதனென்று நாமகரணஞ் செய்தனனென்க. பி-ம்:—[1]ஒரு. [2]மேய. [3]நுனித்திட, உதித்திடு, நுனித்திடு, அளித்திட, உரைத்திட. [4]பன்னினர், பண்ணினன், பரிவின். [5]அளித்தான், என்றே. (300)

121. உலக்குநர் வஞ்சக ரும்பரு[1] முய்ந்தார்
நிலக்[2]கொடி யுந்துயர் [3]நீத்தன ளிந்த
விலக்கரு மொய்ம்பின் [4]விளங்கொளி நாமம்
இலக்குவ னென்ன [5]விசைத்தன [6]னன்றே.

(இ-ள்.) (இக்குழந்தை பிறந்தபொழுதே), வஞ்சகர் உலக்குநர்-வஞ்சனையை யுடையவர்களாகிய இராக்கதர்கள் அழியுந்தன்மையராவர், (அதனால்), உம்பர்உம் உய்ந்தார் - தேவர்களும் பிழைத்தார்கள்; நிலம் கொடிஉம் துயர் நீத்தனள் - பூமிதேவியும் துன்பமொழிந்தாள்; விலக்கு அரு மொய்ம்பின் இந்த விளங்கு ஒளி நாமம்-(எவராலும்) விலக்குதற்கு முடியாத வலிமையையுடைய இத்தன்மையான விளங்குகின்ற சோதிமயமான மகவுக்குப்பெயர், இலக்குவன்-லக்ஷ்மணன் என்பதாம், என்ன இசைத்தனன்-என்று (முனிவன்) கூறினான்; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

இலக்குவன்—லக்ஷ்மணன்: இச்சொல்லுக்கு - உத்தமபுருஷ லக்ஷணங்களெல்லாம் அமையப்பெற்றவ னென்றும், பகவத்கைங்கரிய லக்ஷ்மியோடு கூடியவ னென்றும் பொருளாம். பூமிபாரம் நீங்குவது திண்ணமென்ற துணிவினால்,பூமிதேவி துயர் நீத்தனளென்க. பி - ம்:—[1]உயர்ந்தார், உலைந்தார். [2]கொடியின். [3]நீத்தருளீந்த, நீத்தருளீய, நீத்தருணீந்த, நீத்தனணீந்த. [4]விளக்கொளி. [5]இசைந்தனன். [6]முனிவன், என்றே. *(301)*

122. முத்துருக் [1]கொண்டுசெம் [2]முளரி யலர்ந்தால்
ஒத்திருக் கும்மெழி லுடையவிவ் [3]வொளியால்
எத்திருக் குங்கெடு மென்பதை [4]யெண்ணச்
சத்துருக் கன்னெனச் [5]சாற்றின னாமம்.

(இ - ள்.) 'முத்து - முத்துக்கள், உரு கொண்டு - (ஒரு குழந்தை) வடிவத்தையெடுத்து, செம்முளரி அலர்ந்தால்-செந்தாமரை மலர் (தன்னிடம்) மலரப்பெற்றால், (அதனை), ஒத்திருக்கும் - ஒத்திருக்கின்ற, எழில் உடைய - அழகை யுடைத்தான, இ ஒளியால்- இந்தச் சோதிசொரூபத்தால், எ திருக்கும் கெடும் - எல்லாப்பகைகளும் ஒழியும்,' என்பதை—,எண்ணு - ஆலோசித்து, (குலகுரு), சத்துருக்கன் என நாமம் சாற்றினன்—; (எ-று.)

சத்துருக்கன் = சத்ருக்நன்; பகைவரைக்கொல்பவனென்பது பொருள். உட்பகையாகிய துர்க்குணங்களையும் லவணசுரனாதியோரையும் இவன் ஒழிக்குந்தன்மையனென்பதுபற்றி, இப்பெயரிட்டனன்.பாகவதனாகிய பரதாழ்வானிடத்துப் பக்தி செலுத்துவதற்கு இராமனது அழகில் ஈடுபடுதலென்பது இடையூறுகுமாதலால், அவ்வகையான அகப்பகையை யொழித்துப் பரதாழவானது கைங்கரியத்திலேயே ஈடுபட்டவ னென்ற காரணம் பற்றி, 'சத்ருக்நன்' என்று பெயரிட்டதாகக் கூறுவர், பெரியோர். முதலடி-இல்பொருளுவமை. சத்துருக்கனனது திருமேனிநிறம் வெண்மையாதலால் 'முத்துருக் கொண்டு' என்றும், கைகால் முதலிய அவயவங்களின் தன்மை பற்றி, 'செம்முளரி யலர்ந்தால்' என்றும் கூறினர். திருக்கு-குற்றமு

மாம். பி-ம்:—[1]கொள்வெண், கொண்ட செம். [2]முளரியலர்ந்தது. [3]ஒளியை. [4]எண்ணி, உன்னு. [5]சாத்தினன். (302)

123.—நாமகரணஞ் செய்தபோது மன்னவன் தானஞ் செய்தல்.

பொய்[1]வழி யின்முனி [2]புகறரு [3]மறையால்
[4]இவ்வழி பெயர்க [5]ளிசைத்துழி யிறைவன்
கைவழி [6]நிதியெனு நதிகலை மறையோர்
மெய்வழி யுவரி [7]நிறைத்தன மென்மேல்.

(இ - ள்.) பொய் வழி இல் முனி - அசத்தியமான நெறியிற் செல்லாத வசிட்டமுனிவன், புகல்தரு மறையால் - (சிறப்பித்துச்) சொல்லப்படுகிற வேதமந்திரங்களைக் கொண்டு, இ வழி - இங்ஙனம், பெயர்கள் இசைத்த உழி - பேர்களை யிட்டருளினபோது,—இறைவன் - சக்கரவர்த்தியினது, கை வழி - கைகளினின்று பெருகின, நிதி எனும் நதி - திரவியங்களான ஆறுகள், கலை மறையோர் - வேதசாஸ்திரம்வல்ல பிராமணர்களின், மெய்வழி - மெய்ப்பொருள் வழியும், உவரி - (மனமாகிய) கடலை, மெல் மேல் நிறைத்தன -; (எ - று.)

உருவகவணி. தசரதன் தானநீருடனே கொடுத்துவருகிற அளவிறந்த செல்வங்களால் அந்தணர்களின் மனம் திருத்தியடைந்ததென்பதாம். மெய் வழி உவரி - உடம்பினிடமாகிய கடலை யென்பாருமுளர். மெய் - அறிவு என்றுகொண்டு, மறையோர் மெய்வழி உவரி - மறையோரின் அறிவாகிய கடல் என்றலுமாம். மறையால் - வேதவிதிப்படி யெனினுமாம். கை மூலமாகப் பொழிகின்ற நீராகிய நதியோடு நிதிகளைச் சமுத்திரம்போல் வந்துள்ள மறையோர்க்குக் கொடுத்தானென்றலும் ஒன்று. பி-ம்:—[1]தவிரம், வழியிலன். [2]புகரறு. [3]முறையால். [4]எய்வழி. [5]இசைந்துழி, இசைத்தருள். [6]நிதிபெறுகலைமறையோர்தம்; நதியொடுநிதி கலைமறையோர், நிதி பலகலைதெரி***, நிறைகள்பெறுங்கலை...,நிதி பொழி..., நிதி பெறு..., இன்னதிகலைவலை..., நிதிபெறுவது கலைமறையின். [7]நிறைத்தனர், நிறைந்தன, நிறைத்தனன், இறைத்தன. (303)

124.—தசரதன் இராமனிடத்து அன்புகொண்டிருந்தமை.

காவியு [1]மொளிர்தரு [2]கமலமு மெனவே
[3]ஓவிய [4]வெழிலுடை யொருவனை யலதுஓர்
ஆவியு [5]முடலமு மிலதென வருளின்
மேவின [6]னுலகுடை வேந்தர்தம் வேந்தன்.

(இ - ள்.) காவி உம் ஒளிர் தரு கமலம் உம் எனவே - நீலோற்பல மலர்களும் (அவற்றினிடையிடையே விளங்குகின்ற) செந்தாமரை மலர்களுமென்று சொல்லும்படியாகவே, ஓவியம் எழில் உடை - சித்திரித்ததுபோன்ற அழகையுடைய, ஒருவனை அலது - ஒப்பற்ற ஸ்ரீராமபிரானை யல்லாமல், ஓர் ஆவி உம் உடலம் உம் இலது என - (தனக்கு) ஓருயிரும் உடம்பும வேறில்லையென்னும்படி, உலகு உடை வேந்தர் தம் வேந்தன் - உலகு முழுவதையும் ஆளுதலை

யுடைய தசரதசக்கரவர்த்தி, அருளின் மேவினன் - (மூத்தகுமாரனிடத்துப்) பேரன்போடு பொருந்தியிருந்தான்; (எ - று.)

காவி கரிய திருமேனிக்கும், கமலம் செவ்விய அவயவங்கட்கும் உவமை. கைவல்ல ஓவியன் தன்மனத்தால் எங்ஙனம்கருதுகின்றானோ அங்ஙனம் அழகுபெறச் சித்திரிக்க முடியு மாதலால், 'ஓவிய வெழிலுடை' என்றார். தசரதன் இராமனிடத்துப்பேரன்பு வைத்தமையைப் பின்னிரண்டடிகள் காட்டும். பி-ம:—[1]ஒளி. [2]கனகமும், ககனமும். [3]ஓவியம். [4]எழிலுறு. [5]உணர்வுமதிலதென, உடலமுமீதென. [6]உலகிடை.

இச்செய்யுளுக்குப்பின் சில பிரதிகளிற் காணப்படும் பாடல் வருமாறு:—"அருமறை நெறிவழி யரசனுமன்னப், பிரசன [1]மதலையர் பெறுவழி யுதவிக், கரையறு திருநகர் விழவொடு [2]களியா, விருமையு முதவுறு தானமு மீந்தான்." இது சில பிரதிகளில் "பொய்வழி" (*123*) என்ற பாடலின் பின் உள்ளது. பி-ம்:—[1]முதலயர். [2]கரியால், கனியால். (*304*)

125.—குமாரர் வளர்கை.

அமிர்துகு குதலையொ டணிநடை பயிலாத்
திமிரம தற[1]வரு தினகர னெனவும்
தமரம[2]துடன்வளர் சதுமறை யெனவும்
குமரர்க ணிலம்கள் [3]குறைவற வளர்நாள்.

இதுமுதல் நான்கு கவிகள் - குளகம்.

(இ - ள்.) குமரர்கள் - (அச்சக்கரவர்த்தியின்) குமாரர்கள் நால்வரும்,—அமிர்து உகு குதலையொடு - அமிர்தஞ் சிந்துகின்ற [மிக்க இனிமைநிரம்பிய] மழலைச் சொற்களுடனே, அணி நடை - அழகிய தளர்நடையையும், பயிலா - பழகி,—திமிரம் அது அற வரு தினகரன் எனஉம் - இருள்நீங்கும்படி உதித்து வருகிற சூரியன் போலவும், தமரம் அது உடன் வளர் சதுமறை எனஉம் - (ஸ்வரங்களின்) ஒலியுடனே (உலகத்தில்) விருத்தியடைகிறநான்கு வேதங்கள்போலவும், நிலம் மகள் குறைவு அற - பூமிதேவியின் குறைவுகளெல்லாம் ஒழிய, வளர்நாள் - வளர்கின்றகாலத்திலே,—(எ-று.)— 'சவுளமொடு... தருகுற்று' (*126*) எனத் தொடரும்.

பகையிருளை யொழிக்குந் திறனுடையராதலால், குமரர் நால்வர்க்கும் திமிரமது அறவரு தினகரனை யுவமித்தார். வேதத்திற்கு, உதாத்தம் அநுதாத்தம் ஸ்வரிதம் ப்ரசயம் என்ற ஸ்வரங்கள் முக்கியமாதலால், 'தமரமதுடன்வளர்மறை' என்றார். நால்வராயிருந்து உலகோர்க்குச் சிறந்த மெய்ப்பொருளை யுணர்த்தலால், சதுமறை உவமை. பி - ம்:—[1]வளர். [2]உடன்வரு. [3]குறையற. (*305*)

126.—சவுள உபநயனங்கள் நடத்தியதும் வசிட்டன் பல கலைகளையும் அக்குமரர்கட்குப் பயில்வித்தலும்.

சவுளமொ[1]டுபநயம் விதிமுறை தருகுற்று
இவளவ தெனவொரு[2]கரைபிறி[3]திலவா
[4]உவடரு மறையினொ[5]டொழிவறு கலையும்
[6]தவண்மதி புனையர னிகர்முனி தரவே.

(இ - ள்.) (அவர்கட்கு), தவள் மதி புனை அரன் நிகர் முனி- வெண்ணிறமான சந்திரனைத் தரித்த சிவபிரானையொத்த வசிட்ட முனிவன், சவுளமொடு உபநயம் விதி முறை தருகுற்று - சவுளத்தையும் உபநயனத்தையும் (சுருதி ஸ்மிருதிகளிற் கூறிய) முறைப்படியே செய்வித்து, இ அளவது என ஒரு கரை பிறிது இல ஆ- இவ்வளவினையுடையதென்று ஒரு எல்லை தனியே இல்லையாம்படி, உவள் தரு மறையினொடு ஒழிவுஅறு கலைஉம் - அழிதலில்லாத வேதங்களையும் கெடுதலில்லாத மற்றைச் சாஸ்திரங்களையும், தர - சொல்லிக் கொடுக்க, (அவைகளைப் பயின்று),—(எ - று.)—'இயல்பினி னடையுற்று' என்று அடுத்த கவியோடு தொடரும்.

அரன் - சங்காரக்கடவுள். முனிவனுக்குச் சிவனுவமை - முற்றுணர்விலும் நால்வர்க்கு ஒருங்கு உபதேசித்தலிலும். சௌளம் - குடுமி வைக்குஞ் சடங்கு. முடியென்ற பொருளுள்ள 'சூடா' என்ற வடமொழியின் தத்திதமாகிய சௌடம் என்பது, டகரளகரங்கட்கு அபேதத்தால் 'சௌளம்' என வழங்கும்;அது சவுளம் எனப் போலி பெற்று வந்தது; இது, ஆண்குழந்தைகட்கு மூன்றுமாண்டிற் செய்யப்படும். உபநயனம்-பூணூல் அணிவிக்குஞ் சடங்கு; இது க்ஷத்திரியர்கட்குப்பத்தாமாண்டிற் செய்யப்படுவது. தருகுற்று, கு - சாரியை. இவளவது - தொகுத்தல். உவள் - தூய்மைசெய்கின்ற எனினுமாம்: நடுக்கமென்பாருமுளர். கலை-ஆறங்கமும், மீமாஞ்சை, நியாயம், புராணம், தருமசாத்திரம் என்பனவும்; அறுபத்துநான்கு கலை யென்பாருமுளர். தவள் = தவளம் என்ற வடசொல் திரிந்து வந்தது. பி - ம்:—[1] உபநயனமும். [2] குறை. [3] இலவாய், இலவால். [4] உவளரு, உவள்வரு, வளர்தரு. [5] ஒழிவரு, ஒளிர்வரு, ஒளிர்வறு. [6] தவழ். (306)

127.—குமாரர்கள் அரசருக்குவேண்டிய கலைகளிற் பயிலுதல்.

யானையு மிரதமு மிவுளியு முதலா
ஏனைய [1]பிறவுமவ் [2]வியல்பினி [3]னடையுற்று
[4]ஊனுறு [5]படைபல சிலையொடு [6]பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு [7]வளர.

(இ - ள்.) யானைஉம் - யானையேறுந் தொழிலும், இரதம்உம் - தேரேறுந் தொழிலும், இவுளிஉம் - குதிரையேறுந் தொழிலும், முதல் ஆ - முதலாக, ஏனைய பிறஉம் - (க்ஷத்திரியர்கட்கு உரிய) மற்றையெல்லாத்தொழில்களையும், அ இயல்பினின் - அதற்கு உரிய முறைப்படியே, அடையுற்று - அறியப்பெற்று,—ஊன் உறு படை பல - (பகைவரது) தசை பொருந்துதற்கு உரிய பல படைக்கலங்களை, சிலையொடு - வில்வித்தையுடனே, பயிலா - பயின்று,—வானவர் தனிமுதல் - தேவர்கட்கு ஒப்பற்ற முதல் வனாகிய திருமால் [இராமன்], கிளையொடு - தம்பிமார்களுடனே, வளர - வளர்ந்துவர,—(எ - று.) (128) 'உறுவார்' என்க.

பூணூற்சடங்கு நிகழ்ந்தபின் கற்கவேண்டிய பொதுக்கலைகளைப் பெற்றமையைக் கீழ்ச்செய்யுளிற் கூறி, இதனால் வேந்தர்க்

குரிய வித்தைகளைக் கற்றமையைக் கூறுகின்றார். 'அடைதற் பொருளன, அறிதற்பொருள' என்னும் நியாயம்பற்றி, அடையுற்று என்பதற்கு - அறியப்பெற்று எனப்பட்டது. யானைமுதலியன - இலக்கணையால், யானையேற்றம்முதலிய பொருளைத் தந்தன; ஏனைய - கோவேறுகழுதை ஒட்டகம் முதலியவற்று ஏறுந் தொழில்கள். பி-ம்:—[1]பிறவுடன், பிறவுமிது. [2]இயல்பல. [3]நடைபெற்று, அவையுற்று, நடைகற்று. [4]ஊனமில், ஊனறு. [5]படைவல சிலையொடு, படைமுதல் சிலையொடு, படைசிலையொடுபல. [6]பயில. [7]வளர் நாள், வளரா, மகிழ்வார். (307)

128.—முனிவர்முதலியோர் இராமனாதியோரை யணுகியிருத்தல்.

அருமறை முனிவரு மமரரு மவனித்
[1]திருவும நகருறை[2]செனமுந மிடரோடு
இருவினை [3]துணிதரு [4]மிவர்களி [5]னிவணின்று
ஒருபொழு [6]தகல்கில முறையென [7]வுறுவார்.

(இ - ள்.) அரு மறை முனிவர்உம்-(உணர்தற்கு) அரியவேதம் வல்ல முனிவர்களும், அமரர்உம் - தேவர்களும், அவனி திருஉம்- பூமிதேவியும், அ நகர் உறை செனம்உம் - அந்தநகரத்தில் வசிக்கின்ற ஜனங்களும், 'இவர்களின்-இவ்வரசிளங்குமரரால், நம் இடரோடு இருவினை துணிதரும் - நமது துன்பங்களெல்லாவற்றுடனே (அவற்றிற்குக் காரணமான) பெரிய கருமங்களும் ஒழியும்; (ஆதலால்), இவண் நின்று ஒரு பொழுது அகல்கிலம் - இவ்விடத்தினின்றும் (நாம்) ஒருபொழுதேனும் நீங்குவோமல்லோம்; முறை - (இதுவே நமக்கு) முறைமையாம்', என-என்று கருதி, உறுவார்- (அக்குமாரர் வசிக்கின்ற இடத்தில்) வருவார்; (எ-று.)

ஸ்ரீராமன் முதலியோர் பகவானது அமிசமாதலால், முனிவர் முதலியோரின்மனம் அக்குழந்தைகளாற் கவரப்பட, அம்முனிவர் முதலியோர் குழந்தைகளிடத்துப் பக்தி கொண்டு அணுகலாயினரென்க. ஈற்றடியில் 'ஒருபொழுது அகல்கிலம், உறை [உறைவோம்]' என்று உரைத்தலுமொன்று. அநகர் - தொகுத்தல் திரு - இலக்குமி; இங்கே பெண்ணென்ற மாத்திரமாய் நின்றது. பி - ம்:— [1]திருவுறு, திருவுமிந். [2]சேனையும், செனமென. [3]துணைதரும். [4]இவரினிது, இவரினின், இவரினில். [5]இவரோடு. [6]அகல்கிலர். [7]உறைவார். (308)

129.—இராமலட்சுமணர் எப்போதும் ஒருவரையொருவர் பிரியாதிருத்தல்.

ஐயனு மிளவலு மணிநில மகடன்
செய்தவ [1]முடைமைக டெரிதர [2]நதியும்
மைதவழ் பொழில்களும் [3]வாவியு மருவி
நெய்குழ லுறுமிழை [4]யெனநிலை [5]திரிவார்.

(இ - ள்.) ஐயன்உம் - (யாவர்க்குந் தலைவனாகிய) ஸ்ரீராமனும், இளவல்உம் - லக்ஷ்மணனும், அணி நிலம் மகள் தன் செய் தவம் உடைமைகள் தெரிதர - அழகிய பூமாதேவியின் செய்த தவமுடைமைகள் [தவஞ்செய்துள்ள தன்மை] (யாவரும்) உணரும்படி, மை தவழ் பொழில்கள்உம் - மேகங்கள் தவழப்பெற்ற சோலைகளிலும், வாவிஉம்-தடாகங்களிலும், மருவி - சேர்ந்து, நெய்குழல்உறும் இழை என - நெய்கின்ற குழலுடனே விடாது பொருந்திய நூலிழைபோல (ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல்), நிலை திரிவார் - பூமியிலே சஞ்சரிப்பார்கள்; (எ - று.)

வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத கடவுள் இங்ஙனம் மானுடனாக இங்கு அவதரித்துத் தன் சேவடியால் தீண்டும் பாக்கியம் பூமிதேவிக்குக் கிடைத்தமை யாவர்க்கும் புலனாதலால், 'நிலமகள் தன்செய் தவமுடைமைகடெரிதர' என்றார். இளவல் - இளையபெருமாள். பி - ம்:—[1] முறைமைகள். [2] வனமும். [3] ஆவியும். [4] எனுநிலை, எனநெறி. [5] தெரிவார், திரியார். (309)

130.—பரதசத்துருக்கனர் ஒருவரையொருவர் பிரியாதிருக்கை.

பரதனு மிளவலு மொருநொடி [1] பகிராது
இரதமு மிவுளியு மிவரினு மறை[2] நூல்
உரைதரு பொழுதினு [3] மொழிகிலர் எனையாள்
வரதனு மிளவலு மென[4] மரு வினரே.

(இ - ள்.) பரதன்உம் - பரதாழ்வானும், இளவல்உம்-சத்துருக்கனாழ்வானும், ஒரு நொடி பகிராது - ஒரு நொடிப்போதும் (ஒருவரையொருவர்) விட்டுப்பிரியாமல், இரதம்உம் இவுளிஉம் இவரின் உம்-தேரின்மீதும் குதிரைகளின்மீதும் ஏறினாலும், மறை நூல் உரைதரு பொழுதின்உம் - வேத சாஸ்திரங்களைக் கற்குங் காலத்தும், ஒழிகிலர் - நீங்காதவர்களாய், எனை ஆள் வரதன்உம் இளவல்உம் என மருவினர் - என்னை அடிமையாகவுடைய ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் போலக் கூடியிருந்தார்கள்; (எ-று.)

பரதசத்துருக்கனர் ஒருகணப்பொழுதும் பிரியாதிருந்ததற்கு இராமலட்சுமணர் பிரியாதிருந்தது உவமை. பி - ம்:—[1] பிரியாது. [2] நால். [3] ஒழிவிலர். [4] மருவினரால். (310)

131.—புதல்வர் பகலில் முனிவர்களிடத்திற்சென்று பழகி, மாலையில் நகரத்தார் மகிழ்ச்சியோடு எதிர்கொள்ள மீளுதல்.

[1] வீரனு [2] மிளைஞரும் வெறிபொழில் களின்வாய்
ஈரமொ [3] டுறைதரு [4] முனிவர ரிடைபோய்ச்
[5] சோர்பொழு [6] தணிநகர் [7] துறுகுவ [8] ரெதிர்வார்
கார்வர [9] வலர்பயிர் பொருவுவர் களியால்.

(இ - ள்.) (நாள்தோறும்), வீரன்உம் - பராக்கிரமசாலியான இராமனும், இளைஞர்உம் - (அவனுக்குத்) தம்பிமாரான பரதனும்

லட்சும்மணனும் சத்துருக்கனனும், வெறி பொழில்களின்வாய் - வாசனைவீசுகிற (ஊருக்கு வெளியிலேயுள்ள) சோலைகளினிடத்து, ஈரமொடு உறைதரு-குளிர்ந்த கருணையோடு வசிக்கின்ற, முனிவரரிடை - சிறந்த முனிவர்களிடத்து, போய் - (காலையிற்) சென்று, சேர் பொழுது - (சூரியன்) அஸ்தமிக்கின்ற சமயத்தில், அணி நகர் துறுகுவர்-அழகிய அயோத்தியாபட்டணத்துக்குத் திரும்பி வந்து சேருவார்கள்; எதிர்வார் - (அப்பொழுது) அவர்களை யெதிர் கொள்கின்ற நகரத்து மாந்தர், களியால்-களிப்பினால், கார் வரவு அலர் - மேகத்தினது வருகையை நோக்கிச் செழிக்கின்ற, பயிர் பொருவுவர் - பயிரை யொப்பார்கள்; (எ-று.)

அந்நான்கு புதல்வர்களும் தினந்தோறும் காலைப்பொழுதில் அந்நகரத்து வெளியிலுள்ள சோலைகளிலே வசிக்கும் முனிவர்களிடத்துச் சென்று அவர்களோடு அளவளாவிப் பல நுண்ணிய நூற்பொருள்களை வினவி அறிந்து மாலைப்பொழுதில் நகரத்துக்குத் திரும்பிவர, அவர்களை யெதிர்கொள்ளும் நகரத்துமாந்தர் கார்கண்டபயிர்போற் செழிப்பாராயின ரென்க. இராமபிரான் மஹாவீரனெனப் படுவன்: அதனால், வீரனென்றே கூறியது. பி-ம்:—[1]வீரரும். [2]இளையரும், இளைஞனும். [3]உரைதரும். [4]முனிவரது. [5]சேர். [6]அணிதரு. [7]துறைநகரெதிரா, துடருவரெதிர்வார், உறைபவர், உறநகர், செறிபவ. [8]எதிரா. [9]வளர். (311)

132—அந்நகரத்து ஆடவரும் மகளிரும் மற்றுமுள்ளவரும் இக்குமாரர்வாழ்ச்சியைக் குறித்து இஷ்டதேவதைகளைப் பிரார்த்தித்தல்.

ஏழைய ரணைவரு [1]மிவர்தட முலைதோய்
கேழ்கிளர் மதுகையர் [2]கிளைகளு [3]மிணையார்
[4]வாழிய ரெனவவர் [5]மனனுறு கடவுள்
தாழ்குவர் கவுசலை தயரத னெனவே.

(இ - ள்.) ஏழையர் அனைவர்உம் - (அந்நகரத்து) மாதர்களெல்லோரும், இவர் தட முலை தோய் கேழ் கிளர் மதுகையர் (உம்)-இம்மாதர்களது பெரிய தனங்களைப் பொருந்துகின்ற மிக்கு விளங்கும் வலிமையையுடைய ஆடவர்களும், கிளைகள்உம்-(அவர்களின்) சுற்றத்தாரும்,—கவுசலை தயரதன் எனவு - கௌஸல்யாதேவியும் தசரதமகாராசனும் போலவே, இணையார் வாழியர் என - இக்குமாரர்கள் வாழ்வார்களாக என்று, அவர் மனன் உறு கடவுள் - அவரவர்கள் மனத்திற்பொருந்திய தெய்வத்தை, தாழ்குவர்-வணங்குவார்கள்; (எ - று.)

"ஸர்வாந்தேவாந்நமஸ்யந்தி-ராமஸ்யார்த்தே யசஸ்விந:" என்ற ஸ்ரீவால்மீகிராமாயணத்தின் கருத்துக்கொண்டது, இச்செய்யுள். பட்டமகிஷியருள் பிரதானமானவளாதலால், கௌசலையைக் கூறினர். இதனால், தன்மகனென்றும் பிறர்மகனென்றும் வேறுபாடில்லாமல் நால்வரிடத்தும் சமமாகவுள்ள கௌசலையினன்பு விளங்கும். பி-ம்:—[1]இவர்கடம், அவர்தட. [2]கிளைஞரும். [3]அணையார், இணையார், இளையார். [4]வாழிய. [5]மகிழ்வுறு, மண்ணுறு, மனமுறு.

133.—முனிவராச்சிரமங்களினின்று திரும்பிவரும் இராமலட்சுமணர்க்கு உலகத்தார் கூறும் உவமை.

[1]கடல்கரு முகி[2]லொளிர் கமலம [3]தலரா
வடவரை யுடன்வரு செயலென மறையும்
தடவுத லறிவரு தனிமுத லவனும்
புடைவரு மிளவலு மென[4]நிகர் புகல்வார்.

(இ - ள்.) மறைஉம் தடவுதல் அறிவு அரு - வேதங்களாலும் ஆராய்ந்து அறிதற்குக் கூடாத, தனிமுதலவன்உம்-ஒப்பற்றதலைவனான ஸ்ரீராமனும், புடை வரும் இளவல்உம் - (அவனது) பக்கத்திலே (எப்பொழுதும் விடாது) வருகின்ற இலட்சுமணனும், (என்ற இவர் வருகை),—'கரு கடல் (கரு) முகில் - கருங்கடல் காளமேகமென்னுமிரண்டனுள் ஒன்று, ஒளிர் கமலம் அது அலரா-விளங்குஞ் செந்தாமரைமலர்த்தொகுதி பூக்கப்பெற்று, வடவரையுடன் வரு செயல் - வடக்கிலுள்ள மகாமேருகிரியுடனே வருகின்ற செய்கை போலாம்,' என என - என்று பலமுறை, (கண்டோர்கள்), நிகர் -ஒப்புமையை, புகல்வார் - சொல்வார்கள்; (எ - று.)

கமலம் பூத்த கடல் அல்லது கருமுகில் பெரிய பெருமாளாகிய இராமனுக்கும், மேருமலை இளைய பெருமாளுக்கும் நிறம்பற்றிய உவமை. கடல் கருமுகில் - கடல் நீரை முகத்தலாற் சூல்கொண்ட மேகமென்றுமாம். [4]நனிபுகல்வார் என்று பாடங்கொண்டு—'முதல்வனும் இளவலும் உடன்வரு செயல், கடலால் தரப்பட்ட முகில் வரையுடன் வருசெயல், என என நனி புகல்வார் - என்று உரைத்தலுமொன்று. என இரண்டனுள்ஒன்று அசையுமாம். பி-ம்:—[1]கடறரு, கடல்கவர், கடல்வரு. [2]ஒளி. [3]அலர. (313)

134, 135.—இரண்டு கவிகளும்-ஒருதொடர்: இராமன் நகரத்தவரைச் சேமம் வினவுதலும், அவர் விடையளித்து ஸ்ரீராமபிரானை வாழ்த்துதலும்.

134. [1]எதிர்வரு [2]மவர்களை [3]யெமையுடை யிறைவன்
முதிர்தரு [4]கருணையின் முகமல [5]ரொளிரா
எதுவினை யிடரிலை [6]யினிதினு மனையும்
மதிதரு [7]குமரரும் வலியர்கொ லெனவே.

135 [1]அஃதைய [2]நினையெம தரசென வுடையேம்
[3]இஃதொரு பொருளல வெமதுயி ருடனேழ்
மகிதல முழுதையு [4]முறுகவி மலரோன்
[5]உகுபக லளவென வுரைநனி [6]புரிவார்.

(இ - ள்.) (134) எமை உடை இறைவன் - நம்மை அடிமையாகவுடைய தலைவனான ஸ்ரீராமன், எதிர்வரும் அவர்களை -(தனது) எதிரில் வருகின்ற அந்நகரத்தவர்கள் பலரையும் (நோக்கி), முதிர் தரு கருணையின் - மிக்க அருளுடனே, முகம் மலர் ஒளிரா-தாமரை மலர்போன்ற (தன்) திருமுகம் விளங்க, [முகம்மலர], 'வினை எது- (உம்முடைய) தொழில் யாது? இடர் இலை (கொல்) - துன்பமொன்

றும் உண்டாகாதிருக்கின்றதா? நும் மனைஉம் - உங்களது மனைவியரும், மதி தரு குமரர்உம் - அறிவுபெற்ற புத்திரர்களும், இனிதின் - சுகமாக, வலியர்கொல் - வலிமையுடையரா யிருக்கின்றனரா?' என - என்று (அவரவரது குடும்ப யோகக்ஷேமங்களை) வினவ,—(135) அஃது - அவ்வினவுக்கு (அச்சனங்கள்), 'ஐய - தலைவனே! நினை எமது அரசு என உடையேம் - உன்னை எங்களது அரசனாகவுடையோம் (நாங்கள்): (ஆகையால், எமக்கு) இஃது ஒரு பொருள் அல - இங்ஙனம் ஒரு குறையின்றி வாழ்வது ஒரு பெருங்காரியமன்று; எமது உயிருடன் - எங்களது உயிரையும், ஏழ் மகிதலம் முழுதைஉம் - ஏழுதீவுகளாகவுள்ள பூலோக முழுவதையும், இ மலரோன் உகு பகல் அளவு - இந்தப்பிரமன் அழியுங்கால மட்டும், உறுக - ஆட்சி செய்தருளுவாயாக,' என-, நனி உரை புரிவார் - நன்றாக (வாழத்தி) உத்தரங் கூறுவார்கள்; (எ-று.)

இராமபிரான் காலையில் முனிவர்களுறையும் பொழில்களுக்குச் சென்று மாலைக்காலத்து மீண்டுவருகையில், மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளும் நகரத்துமாந்தரை நோக்கி, அவர்கள் தன்னை வினவுவதற்கு முன்னமே தான் அவர்களின் யோகக்ஷேமங்களை வினவ, அவர்களும் 'நீ அரசனாக இருக்கையில் எமக்குக்குறை எங்ஙனம் நிகழும்? நீ ஊழிக்காலம் வாழ்க' என்று வாழ்த்துவரென்க.

134.—எதுவினை - என்னுல் ஆகவேண்டியது யாது உளது? என்றுமாம். கொல்-வினா: இதனை, இலை என்பதனோடுங் கூட்டுக. அன்றி, இலை யென்பதே ஓசைவேறுபாட்டால் வினாப்பொருளைத் தந்ததென்க. [6]இனிது நுமனை என்ற பாடத்திற்கு-நும்மனை இனிது (கொல்)-நும்மனைவி அல்லது நுமதுவீடு சுகமா? எனப் பொருள். மனை - மனைவியையுணர்த்தும்போது இடவாகுபெயர்; நும் அனை என்றும் பிரிக்கலாம். 'பூர்வபாஷீசராகவ:' என்ற முதனூலிற்கு ஏற்ப, ஸ்ரீராமபிரான் கண்டோருடன் முற்பட்டுப் பேசுந் தன்மையனென்பதை, இதில் விளக்கினர். பி-:ம்—[1]எதிர்தரும். [2]இவர்களை. [3]எனையுடை. [4]கருணையான். [5]ஒளிர. [6]குரவரும்.

135.—அஃதைய என்பதற்கு - ஐயனே! அங்ஙனமே [நீ வினவியபடியே] இடரிலை, மனையினிது, குமரர் வலியர் என்றும் உரைக்கலாம். இஃது பொருளல-ஒருமைப்பன்மைமயக்கம். பி - ம்:—[1]அஃதியை, அஃதியல், அஃதிது, அஃகுதைய, அஃகுதய. [2]நினைவெம, நினைவெமை. [3]இஃது பொருளல வெமதுயிருடலுடனேழ். [4]உறுகென, உறுகுவை. [5]உறு. [6]பகர்வார், புகல்வார். (314, 315)

வேறு.

136.—உலகத்தார்புகழ, தம்பிமார் துதிக்க, இராமன் இனிதிருத்தல்.

இப்பரி சணிநக [1]ருறையும் யாவரும்
மெய்ப்புகழ் [2]புனைதர விளைய [3]வீரர்கள்
[4]தப்பற [5]வடிநிழல் தழுவி யேத்துற
முப்பரம் [6]பொருளினு முதல்வன் [7]வைகுறும்.

(இ - ள்.) இ பரிசு-இந்தவிதமாக, அணி நகர் உறையும் யாவர் உம் - அழகிய அந்நகரத்திலே வசிக்கின்றவர்களெல்லோரும், மெய் புகழ் புனைதர - (தனது) உண்மையான கீர்த்தியை வருணித்துக் கூறவும், இளைய வீரர்கள் - தம்பிமார்கள், தப்பு அற - தவறுதலில்லாமல், அடி நிழல் தழுவி - (தனது) திருவடியின் சாயையைப் பொருந்தி, - ஏத்துஉற-துதிக்கவும், மு பரம் பொருளின்உம் முதல்வன் - தலைமைத் தேவதைகளாகிய திரிமூர்த்திகளுள்ளுந் தலைவனான ஸ்ரீராமன், வைகுறும் - வாழ்பவனானான்; (எ - று.)

"முப்பரம் பொருளிற்குண்முதலை" என்பர், மேல் கடிமணப் படலத்தும். பி-ம்:—[1] இறையும். [2] புனைதரும். [3] வீரரும். [4] தப்புற. [5] அடிமலர். [6] பொருளுக்கு, பொருளெனும், பொருளிற்கும், பொருளிற்குண். [7] வைகுநாள். (316)

137.—தசரதன் பெருமகிழ்ச்சியடைந்து அரசாட்சி செய்தல்.

அரசர்தம் [1] பெருமக னகிலம் யாவையும்
[2] விரசுறு தனிக்குடை விளங்க [3] வென்றிசேர்
முரசொலி கறங்கிட முனிவ ரேத்துறக்
கரை [4] செய வரியதோர் களிப்பின் [5] வைகுநாள்.

(இ - ள்.) அரசர்தம் பெரு மகன் - அரசர்களுக்கரசனான தசரதன், அகிலம் யாவைஉம் - உலகம் முழுவதும், விரசு உறு தனி குடை விளங்க - பொருந்திய (தனது) ஒப்பற்ற ஒற்றைவெண்கொற்றக்குடைநிழலில் விளங்கவும், வென்றி சேர் முரசு ஒலி கறங்கிட - வெற்றிபொருந்திய பேரிகைகளின் ஓசை முழங்கவும், முனிவர் ஏத்துற - முனிவர்கள் துதிக்கவும், கரை செய அரியது ஓர் களிப்பின் - கரைகோலுதற்கு அருமையான ஒப்பற்ற ஆனந்தக்கடலிலே, வைகும் நாள் - மூழ்கிவாழுங் காலத்தில்,—(எ - று.) 'மண்டபம் பொலியஎய்தினன்' என அடுத்த கவியோடு முடியும்.

கரைசெய லரியது என்றமையால், களிப்பு, கடலெனப்பட்டது. சிலபிரதிகளில், இது கையடைப்படலத்தின் முதற்செய்யுள். பி-ம்:—[1] பெருமையின். [2] விரைசறு. [3] வெற்றி. [4] செயல். [5] வைகுவார், வைகினன்.

இங்கே சிலபிரதிகளிற் காணப்படும் பாடல்வருமாறு.—"அரியணை மிசைதனி லழகுமன்றினில், புரிதவ மிகுபதப் பொற்பினீடரு, ளரசர்கள் முடிபடி யணைய வம்பொனி, னுரைபொடி மலைகுவை யொப்ப குப்பையோ." (317)

திருவவதாரப்படலம் முற்றிற்று.

———

6 - ஆவது கையடைப்படலம்.

தசரதசக்கரவர்த்தி தன் குமாரர்கள் இராமலட்சுமணர்களை விசுவாமித்திரமுனிவன்வசத்தில் அடைக்கலமாக ஒப்பித்த செய்தியைக் கூறும் பாகமென்பது பொருள். கையடை - அடைக்கலம். அடைக்கலமாவது - பத்திரமாகப் பாதுகாத்துவைத்திருந்துபின்பு தம்பக்கல்தருமாறு பிறனொருவனிடத்திற் கொடுத்து வைக்கும் பொருள். இது இப்பொருளதாதலை, சிலப்பதிகாரத்து 'அடைக்கலக்காதை' என்ற இடத்துங் காண்க. கையடை - கை அடை என்றுபிரிந்து, ஒருவனது கையை [சுவாதீநத்தை] அடைவது, அன்றி ஒருவனது கையில் சேர்வது என்று காரணப் பெயராம்.

1.—தசரதசக்கரவர்த்தி சபாமண்டபஞ் சேர்தல்.

நனைவரு கற்பக [1] நாட்டு நன்னகர்
[2] அனைவரு [3] மணைதர வயிர்க்குஞ் சிந்தையான்
நினையவு மரியது [4] விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் [5] பொலிய [6] வெய்தினான்.

(இ - ள்.) (ஒருநாள்),—நனை வரு - அரும்புகள் நிறைந்த, கற்பகம் - கல்பகவிருட்சத்தையுடைய, நாடு - சுவர்க்கலோகத்திலேயுள்ள, நல் நகர் - சிறந்த (அமராவதியென்னும்) நகரத்தில் வாழ்கிற, அனைவர்உம் - (தேவர்கள்) எல்லாரும், அணை தர-(இந்திரசபை இதுவென்னுங் கருத்தினால் தாம்) வந்து சேரும்படி, அயிர்க்கும் - சந்தேகிக்கின்ற, சிந்தையான்-மனத்தைக்கொண்டு, நினையஉம் அரியது - நினைத்தற்கும் அருமையானதும், விசும்பின் நீண்டது-தேவலோகத்தளவும் உயர்ந்துள்ளதுமாகிய, ஓர் - ஒரு, மணிபுனை மண்டபம்-இரத்தினகசிதமான சபாமண்டபம், பொலிய - விளக்கமடையும்படி, எய்தினான்-(தசரதன்) சேர்ந்தான்; (எ-று.)

கீழ்ப்படலத்தினிறுதியில்வந்த 'அரசர்தம்பெருமகன்' என்றதே, எய்தினான் என்பதற்கு எழுவாய். தேவர்கள் இச்சபாமண்டபத்தைத் தங்கள் சபாமண்டபமான சுதர்மையென்று சங்கித்துத் தாம் இதில் வந்துசேரக் கருதுமாறு உள்ளது என்பது, முதலிரண்டடிகளின் கருத்து. 'சிந்தையான் நினையவும் அரியது' என்பது, வேலைத்திறங்களினருமையை விளக்கிநின்றது. 'விசும்பின் நீண்டது' என்றது, மிக்க உயர்ச்சியைக் காட்டும்; அத்தேவர்கள் அணைதர அயிர்க்குஞ் சிந்தையராதற்கு, இதுவும் ஒரு காரணம். தசரதன் வந்துசேர்தலால் அம் மண்டபத்துக்குப் பொலிவு உண்டாகின்றதென, அவனது அழகு முதலியசிறப்புக்களை உணர்த்துவார், 'மண்டபம் பொலிய எய்தினான்' என்றார்; உயர்வுநவிற்சியணி.

கற்பகம்; தேவதரு ஐந்தில் ஒன்று; மற்றவை - சந்தானம், பாரிஜாதம்,மந்தாரம்,அரிசந்தநம் என்பன.வேண்டுவோர் வேண்டும் பொருள்களை அவர் வேண்டியபடியெல்லாம்கல்பிப்பது [உண்டாக்குவது] என்பது, கல்பகம் என்றதற்குக் காரணப்பொருள். நனை வரு-(மலர்களின்) தேன் பொருந்திய என்றும், (தேன்பெருக்கினால்) நனைந்த என்றும் பொருள்கொள்ளலுமாம். பி-ம்;—[1] நாடும். [2] அனைய

தும். [3]முனிவருமயிர்க்குஞ், மனி தருமயிர்க்குஞ், மனி தர்களயர்க் குஞ், அணை தரமயக்குஞ். [4]விசும்பு. [5]பொலிவின். [6]மேவினன், மேயினன், எய்தியே. 'வினைதொழின் மதிமிகுமயங்குஞ் சிந்தையான்' என்றும், 'வனைவன வனை தருமயற்குஞ்சிந்தையால்' என்றும் இரண் டாமடி. (318)

2.—அங்குச் சக்கரவர்த்தி சிங்காதனத்தில் வீற்றிருத்தல்.

தூயமெல் லரியணைப் பொலிந்து [1]தோன்றினன்
[2]சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயக [3]னிவன்கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றைய [4]நீங்கினர்.

(இ - ள்.) (அம்மண்டபத்திற் சக்கரவர்த்தி), தூய மெல் அரி அணை - தூய்மையையுடைய மென்மையான சிங்காதனத்திலே, பொலிந்து தோன்றினன் - விளங்கி வீற்றிருந்தான்: (அப்பொழுது அவனை நோக்கி), சேய் இரு விசும்பிடை திரியும் சாரணர் - உயர்ந்த பெரிய ஆகாசமார்க்கத்திலே சஞ்சரிக்கின்ற சாரணரென்னுந் தேவ சாதியார், நாயகன் இவன்கொல் என்று அயிர்த்து - (தங்கள்) தலை வனான தேவேந்திரன் இவன்தானோ என்று (முதலிற்) சந்தேகித்து, (பின்பு ஊன்றிப்பார்த்து), நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை என்று - (இவனுக்கு) ஆயிரங்கண்களில்லை (ஆதலால் இவன் இந்திரனல் லன்) என்று, ஐயம் நீங்கினர்-அச் சந்தேகந் தீர்ந்தார்கள்; (எ - று.)

'இந்திரனுக்குக் கண்கள் ஆயிரம்: தசரதனுக்குக் கண்கள் இரண்டே' என்ற வேறுபாடு தவிர, மற்றைச் செல்வம் அதிகாரம் அழகு விளக்கம் முதலிய சிறப்புக்களிலெல்லாம் தேவேந்திரனை யொத்தவன் தசரதன் என இதனால் விளக்கினர்; துணிவை முடி விற்கொண்ட ஐயவணி. இந்திரனது கொலுமண்டபத்தோடு தசர தனது அத்தாணிமண்டபத்துக்கு உள்ள ஒப்புமையைத் தேவலோ கத்தாரின் ஐயம் மூலமாகக் கீழ்ச்செய்யுளில் விளக்கிப்போந்த ஆசி ரியர், அச்சபாமண்டபத்துக்குத் தலைவனான இந்திரனுக்கும் இச் சபாமண்டபத்துக்குத் தலைவனான தசரதனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை, அத்தேவசாதியில் ஒரு வகுப்பினரான சாரணர் களது ஐயந்தெளிவுகளின் மூலமாக இங்குவிளக்கினரென நயங் காண்க. சாரணர் - பதினெட்டுத் தேவகணங்களில் ஒருசாரார்: இவ் வடசொல் - (வர்னத்திற்) சஞ்சரிப்பவரென்று பொருள்படுதலால், அவ்வேதுப்பொருளையே 'சேயிருவிசும்பிடைத்திரியும்' என்ற அடைமொழிகொண்டு விளக்கினர்; ஆகவே, சாரணர் - வெறும் பெயர் மாத்திரை. தவிசின் மென்மையைச் சிங்காசனத்தின்மே லேற்றி, 'மெல்லரியணை' என்றது. பி - ம்:-[1]துன்னினன். [2]சேயு யர், சேயிடை. [3]இவனென். [4]நீங்கவே, நீங்கினன். (319)

3.—அங்கு விசுவாமித்திரமுனிவன் வருதல்.

மடங்கல்போன் மொய்ம்பினன் [1]முன்னர் மன்னுயிர்
அடங்கலு [2]முலகும்வே றமைத்துத் தேவரோடு
இடங்கொண்ணன் முகனையும் படைப்ப [3]னீண்டெனுத்
தொடங்கிய[4]துனியுறு முனிவன் தோன்றினன்.

(இ - ள்.) மடங்கல் போல் மொய்ம்பினுன் முன்னர் - சிங்கம் போன்றவலிமையையுடையவனுகிய அச்சக்கரவர்த்தியினெதிரில், 'மன் உயிர் அடங்கல்உம்-நிலைபெற்ற உயிர்களெல்லாவற்றையும், உலகுஉம் - (அவை தங்குதற்கு இடமான) உலகங்களையும், வேறு அமைத்து - வேறேபடைத்து, தேவரோடு - (மற்றைத்) தேவர்களுடனே, இடம் கொள் நான்முகனைஉம் - (சத்தியலோகமென்னுஞ் சிறந்த) இடத்தைக்கொண்ட நான்கு முகங்களையுடையனை பிரமதேவனையும், ஈண்டு- இப்பொழுதே, படைப்பன்-(வேறு) சிருட்டிப்பேன்,' என - என்று, தொடங்கிய-ஆரம்பித்த, துனிஉறு - பெருங்கோபம் மிக்க, முனிவன்-விசுவாமித்திரன், தோன்றினுன்—;(எ-று.)

விசுவாமித்திரமுனிவன் அத்தசரதசக்கரவர்த்தியின் சபைக்கு எழுந்தருளினனென்பதாம். முதலிரண்டுசெய்யுளில் தசரதனுக்கு இந்திரனை ஒப்புமைதோன்றக்கூறிய கவி, இங்கு முனிவனுக்குப் பிரமனேடு ஒப்புமைதோன்றக் கூறியமை காண்க. இங்கு அக்கௌசிகமுனிவனது கோபத்தை யெடுத்துக்கூறியது, அவனது தபோபலத்தின் சிறப்பு விளங்க. விசுவாமித்திரன் பிரமனது புதல்வனை குசனென்னும் அரசனுடைய புத்திரர் நால்வருட் குசநாபனது மகனுகிய காதியின் குமாரன்; கௌசிகனென்றும் வழங்கப் பெறுவன். க்ஷத்திரிய சாதியினனய் அரசாட்சிசெய்து கொண்டிருந்த இவன் தவஞ்செய்து பிரமவிருடியாயினன். உயிரைப்படைத்தலாவது-உயிரை உடம்பொடுகூடும்படி செய்தல். இடம் - பெருமையும், நல்லறிவுமாம்.

மடங்கல் - (பிடரிமயிர்) மடங்குதலையுடையது என ஆண்சிங்கத்துக்குக் காரணக்குறி. நான்முகனையும், உம்மை - இறந்தது தழுவிய எச்சத்தோடு, உயர்வுசிறப்பு. பி - ம்:—[1] தன்முன், முன்னம். [2] உலகம். [3] ஈண்டெனத். [4] நனியறு, துனிவுறு, துனியறு, நனியுறு, கோசிக. சிலவற்றில், இச்செய்யுளோடு அரசியற்படலம் முற்றும்.

வேறு.

4.—தசரதன் எழுந்து அம்முனிவனை வணங்குதல்.

வந்துமுனி யெய்துதலு [1] மார்பினணி யாரம்
அந்தர [2] த லத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
[3] கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரனெ னக்கடிதெ ழுந்தடிப ணிந்தான்.

(இ-ள்.) முனி வந்து எய்துதலும் - அம்முனிவன் வந்து சேர்ந்தவுடனே,—(சக்கரவர்த்தி),—கந்தம் மலரில் கடவுள் தன் வரவு காணும்-நறுமணமுள்ள தாமரைமலரில் தோன்றிய பிரமதேவனது வருகையை நோக்கிய, இந்திரன் என-தேவேந்திரன்போல, - மார்பின் அணி ஆரம் அந்தரதலத்து இரவி அஞ்சஒளிவிஞ்ச கடிது எழுந்து -(தனது) மார்பிலே அணிந்துள்ள இரத்தினஹாரமானது ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்கின்ற சூரியனும் தோற்கும்படி ஒளி மிகுமாறு

விரைவாக (ஆசனத்தைவிட்டு) எழுந்திருந்து, அடி பணிந்தான் - (அம்முனிவனது) திருவடிகளை வணங்கினான்; (எ - று.)

கீழ் விசுவாமித்திரன் தசரதனிடம் வந்ததற்கு, படைத்தல் தொழிற்கடவுளான பிரமன் இந்திரனிடத்து வந்தது போலும் என்று கூறி, இங்கு அப்பிரமன் வரவு கண்ட இந்திரன்போல இக்கௌசிகன் வரவுகண்ட தசரதன் விரைந்தெழுந்து அடிபணியலாயினனென்றார்; "ப்ரஹ்மாணமிவ வாஸவ:" என இச்சந்தர்ப்பத்தில் இவ்வுவமை வால்மீகத்திலும் கூறப்பட்டது. விரைவாக எழும்பொழுது உண்டாகிற அசைவினால், மார்பிலணிந்துள்ள இரத்தினஹாரம் பளபளவென்று பேரொளிவீசி விளங்குதல்பற்றி, 'மார்பினணியாரம் ஒளிவிஞ்சக் கடிதெழுந்து' என்றார். இங்கு மார்புக்கு வானத்தோடு ஒப்புமை தோன்றுதலால், அதன் பரப்பு விளங்கும்; மார்பு பரந்திருத்தல், உத்தமபுருஷலக்ஷணம். அஞ்ச-தோற்கும்படி: 'அஞ்சல் தோல்விப்பெயர்' என்பது, பிங்கலந்தை. பி-ம்:—[1]மார்பிலணி, மார்பின்மணி. [2]நிலத்து. [3]கஞ்ச. (321)

5.—தசரதன் கௌசிகனை உபசரித்து இன்சொல் கூறல்.

பணிந்துமணி செற்றுபு [1]குயிற்றியவிர் [2]பைம்பொன்
அணிந்ததவி சிட்[3]டதி லருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்[4]சரண ருச்சனைசெய் தின்றே
துணிந்த[5]தென் வினைத்[6]தொட ரெனத்தொழுது [7]சொல்லும்.

(இ - ள்.) (சக்கரவர்த்தி)—, பணிந்து - (முனிவனை) வணங்கி, மணி செற்றுபு குயிற்றி - இரத்தினங்களை நெருக்கமாகப் பதித்து, அவிர் பைம் பொன் அணிந்த - விளங்குகின்ற பசும்பொன்னினால் அழகிதாகச் செய்யப்பட்டுள்ள, தவிசு - ஆசனத்தை, இட்டு-சமர்ப்பித்து, அதில்-அவ்வாசனத்திலே, அருத்தியொடு இருத்தி - (அம்முனிவனை) அன்போடு எழுந்தருளப்பண்ணி,—இணைந்த கமலம் சரண்-(அவனது) இரண்டாகப்பொருந்திய திருவடித்தாமரைமலர்களை, அருச்சனை செய்து - அருச்சித்து,—என் வினை தொடர் இன்றே துணிந்தது என - 'எனது ஊழ்வினையின் தொடர்ச்சி இப்பொழுதே அழிந்துபோய்விட்டது' என்று(முகமன்) கூறி, தொழுது சொல்லும் - கைகூப்பிக்கொண்டே பின்னும் கூறுவான்; (எ-று.)

பெரியோர்க்குச் செய்யவேண்டுவனவான ஷோடச [பதினாறு] உபசாரங்களுள் ஆசனஞ் சமர்ப்பித்தலை 'தவிசுஇட்டு அதில் அருத்தியொடு இருத்தி' என்றதனாற் கூறி, கந்தம் தூபம் தீபம் மந்திரபுஷ்பம் முதலிய பிறவற்றை 'அருச்சனைசெய்து' என்றதனால் சுருங்க உரைத்தார். பெரியோர்களதுசேர்க்கை தீவினையறுதற்குக் காரணமாதலால், 'இன்றே துணிந்தது என்வினைத்தொடர்' என்றது. வினைத்தொடர் - முற்பிறப்புக்களிற் செய்த கருமத்தின் பயன்: அது செய்த உயிரைப் பிற்பிறப்பிற் சென்று அடைவது. கீழ்ச்செய்யுளோடு இச்செய்யுள் அந்தாதித்தொடையாக அமைந்துள்ளது. பி - ம்:—[1]பயிற்றி. [2]செம். [3]இனிது. [4]சரணமர்ச்சனை. [5]எம். [6]தொடர்பு, துயர், தொகை. [7]சொன்னான். (322)

6.—மற்றும் தசரதன் கௌசிகனைத் துதிக்க, அம்முனிவன் சக்கரவர்த்தியைப் புகழத்தொடங்கல்.

நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்[1] வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கவெளி [2] வந்தவிது [3] முந்தென்
குலஞ்செய்தவ [4] மென்றினிது கூறமுனி கூறும்.

(இ - ள்.) 'நெடியோய் - பெரியோனே! யான் வலம் செய்து வணங்க - நான் பிரதட்சிணஞ்செய்து நமஸ்கரிக்கும்படி, (பிரமவிருடிப்பட்டம்பெற்ற), நீ—, நகர் - இந்நகரத்தில், எளி வந்த - எளிதில் எழுந்தருளியதாகிய, இது - இந்நன்மைக்குக் காரணம்,—நிலம்செய் தவம் என்று உணரின் - இத்தேயம் செய்துள்ள தவமோ என்று ஆலோசித்தால், அன்று-(அதுவும்) அமையாது: என் செய் நலம் வினை உண்டு எனின்உம் - யான் செய்துள்ள நல்வினையாயிருக்குமென்றாலும், அன்று - (அதுவும்) அமையாது; (மற்று என்னையோவெனின்,—) 'முந்து என் குலம் செய் தவம் - முன்பு எனதுவமிசத்தார் செய்துள்ள தவமேயாம்,' என்று—, இனிதுகூற - (மற்றும் தசரதன் கௌசிகனை நோக்கி) உபசாரவார்த்தை சொல்ல, முனி கூறும் - விசுவாமித்திரன் சொல்வான்; (எ - று.)—அதனை, மேல் இரண்டு கவிகளிற் காண்க.

மிகப்பெரியவரான தேவரீர் இங்கு எழுந்தருளும் பெரும்பேற்றை விளைத்தற்குப்போதுமான காரணம் - இந்நாடுசெய்த தவமென்னலாமென்றால், இது முன்னமே யிருப்பதால் முன்னமே வந்திருக்கவேண்டும்; எனக்கோ அத்துணை தவப்பயன் இராது; இந்த மகாபாக்கியத்துக்கு ஏது, தொன்றுதொட்டு வருகிற என் குலத்து முன்னோர்யாவரும் செய்துசேர்த்துவைத்துள்ள நல்வினையேயாதல்வேண்டு மென்றனன், தசரதனென்க. நெடியோய்-ஞானவ்ருத்தனும் சீலவ்ருத்தனுமானவனே! பி-ம்:—[1] தவம். [2] வந்ததிது, வந்ததவம். [3] முந்தெம். [4] இன்றினிது. (323)

வேறு.

7.—இதுவும், அடுத்த செய்யுளும் -ஒருதொடர்; கௌசிகன் தசரதனைப்புகழ்தல்.

என்னனைய [1] முனிவரரு மிமையவரு மிடையூறொன் றுடைய ரானால்
பன்னகமு[2] நகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும் பதுமபீடத்
தன்னகருங் கற்பகநாட்டணி[3] நகரு மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ இகல்[4] கடந்த புலவுவேலோய்.

(இ - ள்.) இகல் கடந்த - பகைவரை(ப்போரில்) வென்ற, புலவு வேலோய் - (அவர்களது) தசைபொருந்தியவேலாயுதத்தையுடையவனே!—என் அனைய முனிவரர்உம்-என்னைப்போன்ற இருடிச்சிரேட்டர்களும், இமையவர்உம்-தேவர்களும், இடையூறு ஒன்று உடையர் ஆனால் - ஒருதுன்பத்தையுடையவர்களாவாராயின்,—(அவர்கட்கு),—பல் நகம்உம் நகு வெள்ளி பனிவரைஉம் - பலமலைகளையும்

அவமதித்துச் சிரிக்கின்ற வெள்ளிமயமான குளிர்ந்த கைலாசபருவதமும், பாற்கடல்உம் - திருப்பாற்கடலும், பதுமபீடத்தன் நகர்உம்-தாமரைமலரை ஆசனமாகவுடையவனான பிரமனது சத்திய லோகமும், கற்பகம் நாடு அணி நகர்உம் - கல்பகவிருட்சத்தையுடைய சுவர்க்கலோகத்திலுள்ள அழகிய அமராவதிபட்டணமும், அணி மாடம் அயோத்தி என்னும் பொன் நகர்உம் - அழகிய உபரிகைகளை யுடைய அயோத்தியென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற அழகிய இந்த நகரமும், அல்லாது - (புகலிடங்களாவன) அல்லாமல், புகல் உண்டுஓ-சரணமடைதற்கு உரிய இடம்(வேறு) உள்ளதோ? (எ-று)

இதனால், முனிவர்க்கும் தேவர்க்கும் துன்பமுண்டானால் அதனைநீக்கும் வல்லமையுள்ளவர் திரிமூர்த்திகளும் இந்திரனும் அயோத்தியரசருமே யன்றி வேறுயாவர்? என்றவாறும். 'நிலவுலகத்தவர் எளிதில் அடையக்கூடிய இடமான அயோத்தி, ஈற்றில் வைக்கப்பட்டது. சிவபிரானுக்கு இருப்பிடமான கைலாசகிரி, திருமால் தங்குமிடமான திருப்பாற்கடல், பிரமன்வசிக்குமிடமான சத்தியலோகம், இந்திரன்வாழுமிடமான அமராவதிபட்டணம் என்றவற்றோடு, தசரதனது இராசதானியான அயோத்தியையும் ஒப்புமையமைய உடன்வைத்துச்சொன்னது-ஒப்புமைக்கூட்டவணியாம். கைலாசத்தின் வெள்ளொளிவீசுதலாகிய தன்மையால்மற்றை மலைகளைச்சிரிப்பதாகக் குறித்தது, தன்மைத்தற்குறிப்பேற்றவணி; இதனால், கைலாசம் மற்றைப்பருவதங்களினும் மிக்கதென்பது பெறப்படுகின்றது. சிரிக்கிறபோது பற்களின் வெள்ளொளி வெளித்தோன்றுதல் இயல்பு. பற்பல இடையூறுகளைக் கடந்து நெடுங்காலம் இடைவிடாதுஅரியபெரிய தவத்தைச்செய்துமுடித்துப் பிரமவிருடிப்பட்டம் பெற்ற தமது சிறப்பைக் குறித்து, 'என்னனைய முனிவரர்' என்றார். அப்படிப்பட்டவர்களுக்கும் நீங்களே கதியென்று தசரதனைப் புகழ்தலில் நோக்காதலால், இது தற்புகழ்ச்சிக்குற்றத்தின்பாற் படாது. பன்னகம் [பல்+நகம்]உம் - (சுப்பிரமணியக்கடவுளின் வாழிடமான) பலமலைகளும் என்று கூறுவாருமுளர். 'ஒன்று' என்றது, சிறிதென்றபடி. நகம்-நடத்தலில்லாதது: சலியாதது: அசலம். 'ஆனால்' என்பதன்பின், உம்மை விகாரத்தால் தொக்கது. பீடத்தன்னகர் - எதுகைநோக்கிய விரித்தல். பி-ம்:—[1] முனிவர்களும். [2] அந்த. [3] கவரும். [4] கடிந்த. (324)

8. இன்[1]றளிர்க்கற் பகநறுந்தே னிடைதுளிக்கு நிழலிருக்கை [2]யிழந்து போந்து, நின்றளிக்குந் தனிக்[3]குடையி னிழலொதுங்கிக் குறையிரந்து நிற்ப நோக்கிக், குன்[4]றளிக்குங் [5]குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுந் [6]தொலைத்து [7]நீகொண்டு, அன்றளித்த வரசன்றோ புரந்தரனின் [8]ருள்கின்ற [9]தரச வென்றான்.

(இ - ள்.) 'அரச - சக்கரவர்த்தியே! இன் - இனிமையான, தளிர் - துளிர்களையுடைய, கற்பகம் - கல்பகவிருட்சத்தினது, நறு தேன் இடை துளிக்கும் நிழல் - வாசனைவீசுகிற தேன் இடையிடையே சிந்தப்பெற்ற நிழலிலே, இருக்கை - அரசுவீற்றிருத்தலை, இழந்து போந்து - இழந்துவந்து, நின்-உன்னுடைய, தளிக்கும்-

செழித்துள்ள, தனி குடையின்நிழல் - ஒற்றைவெண்கொற்றக் குடையின் நிழலில், ஒதுங்கி-சேர்ந்து, குறை இரந்து நிற்ப-(தனது) குறையைச்சொல்லி யாசித்துநிற்க,—நோக்கி - (அதனைப்) பார்த்தருளி [இரங்கி யென்றபடி], குலம் குன்று அளிக்கும் மணி தோள் சம்பரனை - குலபருவதங்களை யொக்கின்ற அழகிய புயங்களையுடைய சம்பரனென்னும் அசுரனை, குலத்தோடுஉம் தொலைத்து - வமிசத்தோடு வேரறுத்து, கொண்டு-(உன்) வசமாக்கிக்கொண்டு, அன்று - அப்பொழுது, அளித்த-கொடுத்தருளிய, அரசு அன்றுஓ-அரசாட்சியன்றோ, புரந்தரன் இன்று ஆள்கின்றது - இந்திரன் இப்பொழுதும் ஆண்டுவருவது?' என்றான் - என்று (விசுவாமித்திரன் தசரதனை நோக்கிக்) கூறினான்; (எ-று.)

இந்திரனது இப்போதைய ஆட்சி உன்னாலேதான் கிடைத்ததென்கிறான், விசுவாமித்திரன். தண்டகாரணியத்தில் வைஜயந்த நகரத்திலே இருந்து அரசாண்டுவந்தவனும் திமித்துவசனென்னும் மறுபெயருள்ளவனும் பற்பல மாயைகளில் தேர்ந்தவனுமான சம்பரனென்ற அசுரன் பல அசுரர்களையும் அரக்கர்களையும் உடன்கொண்டுசென்று தேவர்களுடன் பெரும்போர் செய்து அவர்களைப் பலவாறு வருத்தித் தேவராசனை இந்திரனையுமுட்பட வென்று அவனதுபொன்னுலகத்தை அபகரித்துக்கொண்டு துரத்திவிட, அங்ஙனம் அரசிழந்த தேவேந்திரன் தசரதசக்கரவர்த்தியை அடுத்துச் சரணமடைந்து தன்குறையைக்கூறித் தனக்கு உதவிசெய்யுமாறு பிரார்த்திக்க, அவனது அந்நிலையை நோக்கி இரக்கங்கொண்ட தசரதன் அவ்வேண்டுகோட்கு இணங்கிக் கைகேயியையும் உடன் அழைத்துக்கொண்டு இந்திரனுக்கு உதவியாகத் தேவாசுரயுத்தத்தில் தலையிட்டுச் சம்பரனுடன் எதிர்த்துக் கடும்போர்புரிய, அந்த உக்கிரமானயுத்தத்தை ஆற்றமாட்டாத அவன் மாயையால்மறைந்து ஓட்டங்காட்டவே, அவன் சென்றசென்ற திசைகளிலெல்லாம் தசரதன் விடாது தொடர்ந்து சென்று பொருது அவனைச் சுற்றத்துடன் கொன்று, முன்பு அவனாற்கவரப்பட்ட இந்திரனது அரசாட்சி தனக்கு உரியதாகப் பெற்றவனாய் மீண்டு, உடனே அவ்வரசாட்சியை இந்திரனுக்குக் கொடுத்தன னென்பது, இங்கு அறியவேண்டிய கதை. இங்கு அவ்வரலாற்றைக் கூறியது கீழ்ச்செய்யுளில் முனிவரர்க்கும் இமையவர்க்கும் புகலிடமாகக் கூறிய ஐவருள் ஒருவனான நீ அவர்களில் மற்றொருவனான இந்திரனுக்குப் புகலிடமாகுஞ் சிறப்புடையா யென்றற்கும், வேண்டியதைக் கொடுக்கவ லாயென்றதனாலேயே நான் இங்குவந்தே னென்றற்கும்.

குலபருவதங்கள் - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என ஏழாம்; கந்தமாதனமுங் கூட்டி எட்டெனவும்படும்: அளிக்கும் - உவமவுருபு. குலம் மணித்தோள் என்று எடுத்து, சிறந்த இரத்தினாபரணங்களையணிந்ததோளென்றுமாம்; இப்பொருளில், மணி - ஆகுபெயர். புரந்தரன்-(பகைவர்களின்) நகரங்களை அல்லது உடல்களை யழிப்பவனென்று பொருள்படும்; (புரம் - ஊரும், உடலும்.) நின்று அளிக்கும் என்றும், புரந்தரன்

கின்று ஆள்கின்றது என்றும் பிரித்து உரைத்தலுமாம். பி-ம்:—[1] தளிக். [2] இகழ்ந்து. [3] குடைக்கீழதின். [4] அளக்கும். [5] குருமணி. [6] கொன்று. [7] நீவென்று [8] அளிக்கின்றது, ஆள்கின்றான், அளிக்கின்ற, அருள்கின்ற. [9] அரசுதானே, அரசதென்றான். (325)

9.—தசரதன் கௌசிகனைநோக்கி 'யான் செய்யவேண்டிய பணிவிடை யாது?' எனல்.

உரை[1]செய்யு[2] மளவினவன் முகநோக்கி [3]யுள்ளத்தி னொருவரா லும், கரை[4]செய்ய வரியதொரு பேருவகைக் கடல்[5]பெருகக் கரங்கள் கூப்பி, [6]அரசெய்தி யிருந்தபய [7]னெய்தினன்மற் றினிச்செய்வ தருளு [8]கென்று,[9]முரசெய்து கடைத்தலையான் முன்மொழியப்[10]பின்மொழியு முனிவ னாங்கே.

(இ - ள்.) உரை செய்யும் அளவின் - (அம்முனிவன் இவ் வாறு)சொன்ன வளவிலே,—முரசு எய்து கடைத்தலையான்-பேரி கைகள் முழங்குகின்ற தலைவாயிலையுடையவனான தசரதசக்கர வர்த்தி,—உள்ளத்தின் - மனத்திலே, ஒருவரால்உம் கரைசெய்ய அரியது ஒரு பேர் உவகை கடல் பெருக - எவராலும் அளவிட வொண்ணாத ஒப்பற்ற பெருமகிழ்ச்சியாகிய கடல் பொங்காநிற்க, கரங்கள் கூப்பி - கைகளைக் குவித்து [அஞ்சலிசெய்துகொண்டு], அவன் முகம் நோக்கி - அம்முனிவனது முகத்தைப் பார்த்து, 'அரசு எய்தியிருந்த பயன் எய்தினன்-(தேவரீர் எழுந்தருளப் பெற்றதனால்) அரசாட்சியையடைந்திருந்ததனாலாகிய பயனைப் பெற்றேன்; இனி செய்வது அருளுக - இப்பொழுது (யான்) செய்யவேண்டுவதை நிய மித்தருள்வீராக' என்று—, முன்மொழிய - முன்னே சொல்ல,— ஆங்கு-அப்பொழுது, முனிவன் விசுவாமித்திரன், பின் மொழியும்- பின்புசொல்வான்; (எ - று.)—அதனை அடுத்த செய்யுளிற் காண்க. மற்று - வினைமாற்று.

கரை செய்ய அரியது - கரைகோலித் தடுக்கவொண்ணாதது எனினுமாம். முரசெய்து கடைத்தலையான் - கொடைமுரசு, மங்கல முரசு, வெற்றிமுரசு என்னும் மூவகைமுரசமும் முழங்கப்பெற்ற தலை வாயிலை யுடையான். தலைக்கடை = கடைத்தலை: இலக்கணப்போலி. முன் மொழியப் பின்மொழியும் = முரண்தொடை. பி - ம்:—[1] செய்த. [2] அளவையிற்றான், அளவினனன், அளவையிற்றன். [3] உள்ளத்துள். [4] செய்தற்கு, செய்யல். [5] பெருகி. [6] அரைசு. [7] உணர்ந்தனன், எய் தின. [8] என்ன. [9] முரைசெய்து, முரசறையும். [10] பின்முனியுமொழிவ தானான், பின்முனியுமொழியலுற்றான். (326)

10.—'வேள்விகாத்தற்கு இராமனையனுப்புக' என்று கௌசிகன் கூறல்.

தரு[1]வனத்துள் [2]யானியற்றுந் [3]தகைவேள்விக் கிடையூறுத் தவஞ்[4]செய் வோர்கள், வெருவரச்சென் [5]றடைகாம வெகுளியென நிருதரிடை [6]விலக்கா வண்ணஞ்,செரு[7]முகத்துக்[8]காத்தியென [9]நின் [10]சிறுவர் [11]நால்வரினுங் கரிய செம்மல், ஒருவனைத் [12]தந்தீதியென வுயி[13]ரிரக்குங் [14]கொடுங் கூற்றி னுளையச் சொன்னான்.

(இ - ள்.) 'தரு வனத்துள் - (பயனைத்) தவறாது தருகின்ற காட்டிலே, [சித்தாச்சிரமத்திலே], யான் இயற்றும் - நான்செய்யப் போகின்ற, தகை வேள்விக்கு-சிறப்பையுடைய யாகத்துக்கு, இடை யூறு ஆ-தடையாக(வந்து), தவம்செய்வோர்கள் வெருவர சென்று அடை காமம் வெகுளி என-முனிவர்கள் அஞ்சும்படி (அவர்களிடம்) போய்ச்சேர்கிற காமக்குரோதங்கள் போல, நிருதர் - இராக்கதர்கள், இடை-நடுவிலே, விலக்கா வண்ணம்-தவிர்க்காதபடி, 'செருமுகத்து காத்தி - யுத்தத்தில் (நின்று) காப்பாயாக,' என - என்று கட்டளை யிட்டு, நின் சிறுவர் நால்வரின்உம் கரிய செம்மல் ஒருவனை தந்தி- உனது. புத்திரர்கள் நால்வருள்ளும் கருநிறமுடைய ஒப்பற்ற ஸ்ரீ ராமனை (என்னுடன்) அனுப்புவாயாக,' என-என்று, உயிர் இரக்கும் கொடுங் கூற்றின் - பிராணனை யாசிக்கின்ற கொடிய யமன் போல, உளைய-(சக்கரவர்த்தியின் மனம்) வருந்தும்படி, சொன்னான்-(விசுவா மித்திரன்) கூறினான்; (எ - று.)

'ஸ்ரீராமனை என்னுடன் அனுப்புவாயாக' என்று முனிவன் வேண்டியது, சக்கரவர்த்திக்கு, 'யமன் வந்து உன் உயிரைக் கொடு' என்று கேட்டாற்போலிருந்தது என்பதாம்; இராமன் தசரதனுக்கு உயிர்போன்றவ னென்பதை, "ஓவியவெழிலுடை யொருவனையலதோ, ராவியுமுடலமு மிலதெனவருளின், மேவின னுலகுடை வேந்தர்தம்வேந்தன்" என்றதனால் அறிக. இராமன் கரிய திருமேனிநிற முடையனாதலால், 'கரிய செம்மல்' எனப்பட் டான்; அன்றியும், வேதவழக்கின்படி ராம னென்ற திருநாமம் கருநிறமுடையவ னென்றும் ஒருபொருள்படுமென்ப. தருவனம் - சித்தாச்சிரமம்: இது தன்னிடத்திற்செய்யுந் தவவேள்விகள் விசேஷமாகச் சித்திபெறும் இடம். விசுவாமித்திரன் நித்திய வாசஞ்செய்வது இமயமலை: தலவிசேஷம்பற்றி அங்கு நின்று சித்தாச்சிரமத்துக்கு வந்து வேள்விசெய்து முடித்துச் சீதாகலியா ணத்துக்குப் பின்பு மீண்டும் இமயத்திற்கே செல்வன்.

காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாத்ஸர்யம் என்ற ஆறு குற்றங்களும் தீவழிச்செலுத்திக் கெடுப்பன வாதலால் உட்பகையென்றும், நித்யசத்துருவென்றும் கூறப்படும்; அவை யனைத்தினுள்ளும்மிகக்கொடிய காமக்குரோதங்கள் தவவேள்விக்கு இடையூறாய்வந்து விலக்குகிற அரக்கர்க்கு உவமை. புறப்பகைவ ராகிய அரக்கர்களிற் சிறந்தவர்களான சுபாகுமாரீசர் என்னும் இருவர்க்கும் உட்பகைகளிற் சிறந்த காமக்குரோதங்களை உவமை யாகக்கருதி, இங்ஙன் வகுத்துக்கூறின ரென்னலாம். காமம் வெகுளி மயக்கம் என்ற குற்றங்கள்மூன்றனுள்காமவெகுளிகட்குக் காரணமாகிய மயக்கமென்னும் அவிச்சைபோல, இச்சுபாகு மாரீசர்கட்குத் தாயான தாடகையைக் கருதுக. யாகத்துக்குத் தீக்ஷைபண்ணிக்கொண்டிருக்கிறவன் சினத்துக்கு இடங்கொடுக்க லாகா தென்பது விதி யாகையால், யான் சினங்கொண்டு அவர் களைச் சபித்து அழிக்கத் துணிந்திலே னென்ற கருத்துத் தொ னிக்க இங்கு இவ்வுமை கூறினன், முனிவன்: இவ்விஷயம், வால்மீகத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. காமம் -

எணக்கு இது வேண்டுமென்று ஒருபொருளின்மீது உண்டாகும் ஆசை; அதுபற்றி அதன்மறுதலையின்மீது செல்லும் சினம், வெகுளி.

காத்தற்கு எழுவாய் இராமனும், தந்திடுதற்கு எழுவாய் தசரதனுமாவர். தந்தீதி-ஏவல்வினைமுற்றுத்திரிசொல். பி-ம்:—[1]வனத்தில். [2]யாம். [3]தழல், தவ, தனி. [4]செய்வோரை. [5]அடர். [6]விலங்கா. [7]முகத்திற். [8]காத்தியெனை, காத்திடுதற்கு. [9]உன். [10]புதல்வர். [11]அனைவரினும். [12]தந்திடுதி. [13]ஈர்க்கும். [14]கடுங். (327)

11.—அதுகேட்டுத் தசரதன் மிகவருந்துதல்.

எண்ணிலா [1]வருந் தவத்தோ னியம்பியசொன் [2]மருமத்தி னெறிவேல் பாய்ந்த, [3]புண்ணிலாம் [4]பெரும்புழையிற் கன [5]னுழைந்தா லெனச்செவியிற் புகுத லோடும், உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த வாருயிர்நின் றூச லாடக், கண்ணிலான் பெற்றிழந்தா லென[6]வுழந்தான் [7]கடுந்துயரங் [8]கால வேலான்.

(இ - ள்.) எண் இலா அருந் தவத்தோன் - அளவில்லாத அருமையான தவத்தையுடையவனான விசுவாமித்திரன், இயம்பிய - (இங்ஙனஞ்) சொன்ன, சொல் - வார்த்தையானது, மருமத்தின் எறி வேல் பாய்ந்த புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தால் என - மார்பிலே (பகைவன்) எறிந்த வேலாயுதம் பாய்ந்ததனாலாகிய புண்ணி லுண்டான பெரிய துவாரத்திலே கொள்ளிக்கட்டை நுழைந்தாற் போல் [மிகவருத்தந்தரும்படி], செவியில்புகுதலோடுஉம்-(சக்கரவர்த்தியின்) காதுகளில் நுழைந்தவுடனே,—காலன் வேலான் - (பகைவர்க்கு) யமனையொத்த வேலாயுதத்தையுடையவனான அத்தசரதன், உள் நிலாவிய துயரம் பிடித்து உந்த - மனத்திலுண்டான துன்பம் பிடித்து வெளியே தள்ளுதலால், ஆர் உயிர் நின்று ஊசல் ஆட - அரிய உயிரானது ஊஞ்சலாடுவதுபோலப் போவதும் வருவதுமாயிராநிற்க, கண் இலான் பெற்று இழந்தால் என - பிறவிக்குருடன் கண்களைப் பெற்று (மீண்டும்) இழந்தாற்போல, கடுந் துயரம் உழந்தான் - மிக்க துன்பத்தை அனுபவித்தான்; (எ-று.)

புத்திரவாற்சலியத்தால் இங்ஙனம் மிக்க சோகமுற்றனன் தசரதனென்க: பதினாறு பிராயமும் நிரம்பாத சிறுவனான இராமனை அரக்கரோடு போர்செய்தற்பொருட்டு முனிவன்பின்னே அனுப்புதல் அத்திருமகனுக்கு அபாயகரமா மென்பது, தசரதன் எண்ணம். அறுபதினாயிரம் வருஷமாகப் பிள்ளையில்லாதிருந்த சக்கரவர்த்தி பின்பு தான் அரிதிற் பெற்ற திருமகனை இப்பொழுது முனிவனுக்குக் கொடுத்தலை அம்மகனை இழக்கின்றவாறு போலக் கருதுகின்றன னாதலின், அதற்கு, இயற்கையிற் கண்ணில்லாதிருந்த பிறவிக்குருடன் தெய்விகமாகக்கண்ணைப்பெற்று அதனை உடனே இழத்தலை உவமைகூறினார். பிறவிக்குருடன் மனத்திற் கொள்ளுந் துயரத்தினும், அவன் ஒருகால் கண்களைப் பெற்று உலகத்துப்பொருள்களையெல்லாம் கண்ணுற்று ஆனந்த

மடைந்துகொண்டிருக்கும்போது இக்கண்களை மீளவும் இழக்க நேர்ந்தால் அடையும் வருத்தம் மிகவும் அதிகமாவது, வெளிப்படை: அவ்வாறே, பிள்ளையின்றியிருந்த சோகத்தினும், பிள்ளை பெற்று இழக்க நேர்கிற சோகம் பெரிதென்பதும் தெரிந்ததே.

புண்ணிலாம் பெரும்புழையிற் கனல் நுழைதல் - மிக்க அன்பினால் இவ்வருமைமகனுக்கு எப்பொழுது என்ன தீங்குநேர்கிறதோஎன்று கவலையுற்று நிற்கிற நிலையில் விசுவாமித்திரன்வந்து சொன்னது: இது, வருத்தத்தின் மேல் வருத்தத்தைவிளைப்பதால், உவமை. இவ்வகையானசோகம் மனத்திற்பொங்குதலால், தசரதன் மூர்ச்சையடைந்தனனேயன்றி அந்திமகாலம் நேர்ந்திலதாதலின் மரணமடைந்திலன்; இங்ஙன் மூர்ச்சையும் தெளிவுமான நிலையில், உயிர்போகத் தொடங்குவதும் மீளவருவதுமாகி அலைதல்பற்றி, 'உண்ணிலாவிய துயம்பிடித்து உந்த ஆருயிர் நின்று ஊசலாட' என்றார்.

மருமம் = மர்மம்: உயிர்நிலை. யமன்போலத் தவறாது கொல்லும் வேல் என்பார், 'காலவேல்' என்றார். பி-ம்:—[1] அருங்குணத்தோன், பெருங்குணத்தான். [2] மருமத்துள். [3] புண்ணுளாம், புண்ணிலாழ். [4] பெருமுறையிற். [5] நுழைத்தால். [6] உழன்றான், உழந்த. [7] கடுந்துயராற், நெடுந்துயராற். [8] காவல். (328)

12.—தசரதன் தானே வந்து வேள்விகாப்பதாகக் கூறுதல்.

தொடை [1] யூற்றிற் றேன்றுளிக்கு நறுந்தாரா னொருவண்ணந் துயர நீங்கிப், படையூற்ற மிலன்சிறிய [2] னிவன்பெரியோய் பணி[3] யிது வேற் பணிநீர்க் கங்கை, புடையூற்றுஞ் சடையானும் [4] புரந்தரனும் நான்முகனும் புகுந்து [5] செய்யும், இடையூற்றுக் கிடையூறு யான் காப்பென் பெருவேள்விக் கெழுக வென்றான்.

(இ - ள்.) (பின்பு), தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறுந் தாரான் - தேன்கூடு (தேன்) ஊற்றுவதுபோல (இடையறாது) தேனைச் சிந்துகின்ற வாசனைவீசும் மாலையையுடையவனான சக்கரவர்த்தி,—ஒரு வண்ணம் துயரம் நீங்கி-ஒருவாறு துன்பஞ்சிறிது தணியப்பெற்று,—(முனிவனை நோக்கி),—'பெரியோய்-(அறிவொழுக்கங்களாற்) பெரியவனே! இவன் - இந்த இராமன், சிறியன் - இளம்பிராயமுடையவன்: படை ஊற்றம் இலன் - ஆயுதத்தேர்ச்சியில்லாதவன்; (ஆதலால் இவன் வேண்டா); இது பணி ஏல் - (அரக்கர் விலக்காதபடி வேள்விகாத்தலாகிய) இதுவே (நினது) கட்டளையானால், பனி நீர் கங்கை புடை ஊற்றும் சடையான்உம் - குளிர்ந்த நீரையுடைய கங்காநதியை ஒருபக்கத்திலே ஒழுகவிட்ட (கபர்த்தமென்னுஞ்) சடைமுடியையுடையவனான சிவபிரானும், நான்முகன்உம் - பிரமனும், புரந்தரன்உம் - இந்திரனும், புகுந்து செய்யும் - (தனித்தனியேனும் ஒருங்கு கூடியேனும்) வந்து செய்யும், இடையூற்றுக்கு - தடைகளுக்கும், இடையூறுஆ-தடையுண்டாக, யான் காப்பென - அடியேன் (வேள்வியைக்) காத்திடுவேன்; பெருவேள்விக்கு எழுக - பெரிய யாகத்தைச் செய்தற்கு எழுந்தருள்க,' என்றான்-என்று கூறினான்; (எ-று.)

முனிவனுக்குத் தக்க சமாதானஞ்சொல்லி அவனுடன் இராமனை அனுப்பாதிருக்கலாமென்ற ஒரு கருத்தினால் அத்துயரம் சிறிது தணிந்தனனென்றற்கு, 'ஒருவண்ணந் துயர நீங்கி' என்றது. இராமனுடைய இளமையையும், அரக்கரை யழித்தற்குவேண்டிய அளவு படைக்கலப்பயிற்சியில்லாமையையும், அவ்விஷயத்தில் தனக்குஉள்ள பெருந்திறமையையும் எடுத்துக் கூறி, 'சிறியவனான இராமன் ஏதுக்கு? நான் வந்து காக்கின்றேன்' என்றான். ஆற்றலாற் பெரியராய சிவபிரான்முதலிய தலைமைத்தேவர்கள் இடையூறு செய்வராயினும் அவற்றைத்தவிர்ப்பேனெனவே, பிறர்செய்யும் இடையூற்றையொழித்தல் கூறவேண்டாதாயிற்று. 'இடையூற்றுக்கு இடையூறு' என்றதை, 'இடும்பைக்கு இடும்பைபடுப்பர்'' என்றாற் போலக் கொள்க. சிறியன் - பாலன்; ''பதினாறுபிராயமுமாகாதவன்'' என்று ஸ்ரீவால்மீகத்திற்கூறியுள்ளது; பன்னிரண்டு பிராயமுள்ளவனென்று அதற்குக் கருத்து உரைப்பர், ஆன்றோர்.

தக்ஷமுனிவனது யாகத்தைச் சிவபிரான் தனது அமிசமான வீரபத்திரக்கடவுளால் அழித்தமைபற்றியும், அழித்தற்கடவுளாதல்பற்றியும், அப்பெருமானை இங்கு முதலில் எடுத்துக் கூறினன். சிவபெருமானது சடையினின்று வெளிப்போந்த கங்கை ஜஹ்நு முனிவனது யாகசாலையை யழித்து அம்முனிவனது வேள்விக்கு இடையூற்றை விளைத்ததாதலால், 'கங்கைபுடையூற்றுஞ் சடையான்' என்ற பெயர் கருத்துடையடைகொளியணியாம். சிருஷ்டிகர்த்தாவான பிரமனுக்கு மாறாகப் பிரதிசிருஷ்டி செய்யத்தொடங்கியது காரணமாய்க் கௌசிகன்மீது அப்பிரமன் அழுக்காறும் கோபமுங் கொண்டு அவன் செய்யும் வேள்வியை அழிக்கவரக்கூடுமென்பது பற்றி, இங்கு நான்முகன் எடுத்துக் கூறப்பட்டனன். 'வேறு இந்திரனை உண்டுபண்ணுகிறேன்; அல்லது உலகத்தை இந்திரனேயில்லாமற் செய்துவிடுகிறேன்' என்று சபதங்கூறி, தான் படைக்கிற சுவர்க்கத்துக்குத் திரிசங்குவை இந்திரனாக்க முயன்றவனாதலால், இம்முனிவனது விஷயத்தில் இந்திரனும் இடையூறுசெய்தற்கு உரியனென்க. அன்றியும், இந்திரன் சகர சக்கரவர்த்தி முதலிய பலரது வேள்விகட்கு இடையூறு செய்தவனுமாதல் காண்க. திரிமூர்த்திகளுள் திருமாலை இங்குக் கூறாதுவிட்டது, ''வேள்வியாய்த் தக்கிணையாய்த் தானுமானான்'' என்றபடி திருமால் யஜ்ஞமூர்த்தியும் யஜ்ஞாங்கனுமாயிருந்து பயனளிப்பவனாதலாலென்பர்.

தொடுக்கப்படுவது - தொடை. தொடை - மாலைபோலஎளினுமாம். ஊற்றம்-ஊன்றியுணர்தல். [2] அவர்பெரியோரென்ற பாடத்தில், அவர் - அரக்கர். பி - ம்:—[1] ஊற்றும். [2] இவர்பெரியோர். [3] இதுவே. [4] நான்முகனும்புரந்தரனும், புரந்தரனும்வெகுண்டெழுந்து. [5] போர்செய். (329)

13.—கௌசிகனது பெருங்கோபமும், அதனாலுண்டாகிய குழப்பமும்.

என்றனனென் றலு[1] முனிவோ[2] டெழுந்தனன்மண்படைத்தமுனி
யிறுதிக் காலம், அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல்

வெயில் [3]கரந்த தங்கு மிங்கும், நின்றனவுந் திரிந்தன [4]மீ [5]நிவந்த [6]கொழுங் கடைப்புருவ நெற்றி முற்றச், [7]சென்றன [8]வந் ததுநகையுஞ் சிவந்தனகண் [9]ணிருண்டனபோய்த் திசைக ளெல்லாம்.

(இ - ள்.) என்றனன்-என்று (முனிவன்கருத்துக்கு மாறாகத் தசரதன்) சொன்னான்; என்றலும் - என்று சொன்னவளவிலே, மண் படைத்த முனி-உலகங்களை (வேறாகச்) சிருஷ்டிக்கத் தொடங் கிய விசுவாமித்திரன், முனிவோடு எழுந்தனன - கோபத்தோடு எழுந்திருந்தான்; (அப்பொழுது அதனை நோக்கி), இமையோர்-தேவர்கள், இறுதி காலம் ஆம் என அன்று என - உலகமுடியுங் காலம் இதுவாகுமென்றும் அன்றென்றும், அயிர்த்தனர் - சந்தே கித்தார்கள்; மேல் வெயில்கரந்தது - ஆகாயத்தில் விளங்குகின்ற சூரியனும் மறைந்துபோயிற்று; அங்குஉம் இங்குஉம் நின்றனஉம் திரிந்தன - அவ்வுலகத்தும் இவ்வுலகத்தும் [எவ்வுலகத்தும்] நிலை யாய்நின்ற அசரங்களும் சுழன்றன; கொழுங்கடை புருவம் மீ நிவ ந்த நெற்றி முற்ற சென்றன - (அக்கௌசிக முனிவனது) செழுமை யான புருவநுனிகள் மேலேறியனவாய் நெற்றிமுழுவதும் பரந்தன; நகைஉம்வந்தது - (அம்முனிவனுக்குக் கோபத்தாற்)சிரிப்பும் உண் டாயிற்று; கண்-கண்கள், சிவந்தன-; திசைகள் எல்லாம் போய் இருண்டன - எல்லாத் திக்குக்களும் இருண்டுபோயின; (எ - று.)

தன் வார்த்தைக்குத் தசரதன் குறுக்குச் சொன்னதுபற்றி விசுவாமித்திரன் பெருங்கோபங்கொண்டு ஆசனத்தைவிட்டு எழுந்தவளவிலே, அதுகண்டு 'இம்முனிவனால் உலகத்துக்கே முடியுங்காலம் வந்துவிடுமோ!' என்று தேவர்கள் சங்கித்தார்கள்; சூரியன் மறைந்தான்; உலகங்கள் நிலைபெயர்ந்து சுழலலாயின: அப்பொழுது முனிவன் புருவத்தை நெறித்துப் பெருஞ்சிரிப்புச் சிரித்துக் கண்சிவந்தவளவிலே, திக்குக்களெல்லாம் இருண்டன என்பதாம். திசைகளெல்லாம் இருண்டுபோனமை, அவனதுகோபா க்கினியிலுண்டான புகையாலென்க. இறுதிக்காலம், அன்று என ஆம்-அன்றைக்கு என்னும்படி ஆய்விடுமோ, என-என்று, அயிர்த் தனர்-சங்கித்தார்க ளெனினுமாம். வெயில் - சினையாகுபெயராய்ச் சூரியனைக் குறித்தது. நின்றனவும் அங்கும் இங்கும் திரிந்தன என்று மொழிமாற்றி, நிலைத்திணைப்பொருளாகிய தாவரங்களும் அங்கும் இங்குமாகச் சுழலலாயின என்றலும் அமையும். புருவம் நெறித்தலும், நகைத்தலும், கண்சிவத்தலும் - கோபக்குறி. 'என் றனன்' என்றது-அநுவாதம். அன்றென ஆமென, அங்கும் இங்கும், நின்றன திரிந்தன, சென்றன வந்தது, சிவந்தன இருண்டன - தொடைமுரண். இச்செய்யுள் முந்திய செய்யுளோடு அந்தாதித் தொடையமையப் பாடப்பெற்றுள்ளது. இச்செய்யுள் முழுவதும், சினத்தின்செயல் விளங்குவதால் ரௌத்ரரஸமென்னும் வெகுளிச் சுவைக்கு உதாரணமாகத்தக்கது. பி-ம்:—[1]முனியோடு, அவனோடு, இவனோடு. [2]எதிர்ந்துபுவிபடைத்தமுனி, எதிர்ந்தனன்பண் டிரந்து வரும், எதிர்ந்ததுபண்டெழுந்தமுனி, எழுந்தெதிர்பண்டடைந்த முனி, எதிர்ந்தனன் பண்டடைந்தமுனி, எதிர்ந்தனபண்டடைந்த முனி. [3]கரந்த. [4]மேல், உம். [5]நிமிர்ந்த. [6]கொடுங், செழுங். [7]சென் றது. [8]வந்தன. [9]இரிந்தன. (330)

வேறு.

14.—இரண்டு கவிகள் - வசிட்டன் 'இராமனை முனிவனுடன் அனுப்புக' என்றலைத் தெரிவிக்கும்.

கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் [1]புகன்று [2]நின்மகற்கு
[3]உறுத்த லாகலா வுறுதி யெய்துநாள்
மறுத்தி [4]யோவெனு வசிட்டன் [5]கூறினன்.

(இ - ள்.) (இவ்வாறு விசுவாமித்திரன் பெருஞ்சினங் கொண்டபோது), - வசிட்டன்-, கறுத்த மா முனி கருத்தை - சினந்த அந்த விசுவாமித்திரமகாமுனிவனது எண்ணத்தை, உன்னி - அறிந்து,— 'நீ—, பொறுத்தி-பொறுத்தருள்வாயாக' என்று—,அவன் புகன்று -அம்முனிவனைநோக்கிச் சொல்லி,—(உடனே தசரதனைநோக்கி),- 'நின் மகற்கு-உனதுகுமாரனுக்கு, உறுத்தல் ஆகா-(பிறரால்)அடைவித்தற்குக்கூடாத, உறுதி - பெருநன்மைகள், எய்தும் நாள் - (தாமாக) வந்துசேர்கிறகாலத்தில், மறுத்தியோ - (அவற்றைத்) தடுக்கக்கடவையோ? எனு - என்று, கூறினன்—; (எ - று.)

விசுவாமித்திரனது மகிமைகளையெல்லாம் முன்னரே கண்கூடாகஅறிந்தவனாதலால்,'இவனது சினத்தால் சக்கரவர்த்திக்கும் அவன் திருமகனுக்கும் என்ன தீங்குவருமோ?' என்று சங்கித்து, வசிட்டன் அம்முனிவனுக்குச் சமாதானங்கூறி, 'இவன் இராமனைத் தரும்படி கேட்பதெல்லாம் இராமனுடைய நன்மைக்காகவே: வலிய வந்த சீதேவியைக் காலா லுதைத்துத் தள்ளுதல்போல, இவனால் உனது குமாரனுக்கு எவ்வளவோ நன்மைகள் நேரஇருப்பதைத் தடுக்கலாகாது' என்று சொல்லித் தசரதனது மனக்கலக்கத்தை மாற்றுவானாயினனென்க. அரசன் தவறுகிறபோது அவன்போகிற வழியில் விடாமல் தடுத்து, அவனுக்கு நன்மை நிகழும்படி இடித்துக்கூறவேண்டுவது, புரோகிதர்க்கும் அமைச்சர்க்கும் கடமை யாதலால், வசிட்டன் இவ்வாறு கூறுகின்றனன். விசுவாமித்திரனது புருஷகாரத்தில் இராமனுக்கு நிகழுஞ் சீதாவிவாகத்தையும் வசிஷ்டன் ஞானக்கண்ணா லுணர்ந்ததுவும் அடங்க, 'நின்மகற்கு உறுத்தலாகலாவுறுதி' என்றனன். தனது குமாரர்களின் விவாகத்தைக் குறித்து அந்தச் சபையில் தசரதன் ஆலோசிக்கும்போதே விசுவாமித்திரன் அங்கு வந்தன னென்பது, முதனூலால் விளங்கும்.

பி - ம்:—[1]புகழ்ந்து. [2]நீள். [3]உறுத்தலாதலால், உறுத்தியாவதோர், உறுத்தலாகுமோ, உறுத்தவாகலா, உறுத்தியாதலால். [4]ஆமென, நீயென்று. [5]கூறுவான். (331)

15. பெய்யு [1]மாரியாற் [2]பெருகு [3]வெள்ளம்போய்
மொய்கொள் [4]வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய நின்மகற் [5]களவில் விஞ்சைவந்து
எய்து கால[6]மின் [7]றெதிர்ந்த [8]தாமென்றான்.

(இ - ள்.) 'ஐய-அரசனே! பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம்- பெய்கின்றமழையினாற் பெருகுகின்ற வெள்ளங்கள், போய்-, மொய் கொள் வேலைவாய் - பெருமையைக் கொண்ட கடலிலே, முடுகும்

ஆறு போல்-விரைந்துசேரும் விதம்போல, நின்மகற்கு - உனது குமாரனாகிய ஸ்ரீராமனுக்கு, அளவு இல் விஞ்சை-அளவில்லாத வித்தைகள், வந்து எய்து - வந்து சேரும்படியான, காலம் - நற்காலம், இன்று எதிர்ந்தது ஆம் - இன்றைக்கு நேர்ந்ததாகும்,' என்றான் - என்றும் (வசிட்டன்) சொல்லினான்; (எ-று.)

கீழ்த் தொகுத்துச்சுட்டியதை வகுத்துக்காட்டியவாறாகும், இது. மழையினாற் பெருகும் வெள்ளங்களெல்லாம் சென்று ஒருங்கே கடலினிடஞ் சேர்தல்போல கௌசிகமுனிவன் வசத்திலுள்ள அஸ்திரசஸ்திரங்கள் யாவும் இராமபிரானிடத்து வந்து சேரப்போகின்றன என்றான். எல்லா அஸ்திரங்களும், பிருசாசுவ முனிவனுடைய குமாரர்கள்: அங்ஙனுண்டான நூறு அஸ்திரசஸ்திரவித்தைகளும் அவனால் விசுவாமித்திரனுக்குக் கொடுக்கப்பட்டன என்று முதனூலால் தெரிகிறது. வெள்ளத்துக்குக் கொடுத்த 'பெய்யுமாரியாற் பெருகு' என்ற அடைமொழி, உபமேயமாகிய அளவில்விஞ்சைகள் பிருசாசுவமுனிவனிடமிருந்து தோன்றி விசுவாமித்திரனிடத்துச் சேர்ந்தவையென்ற கருத்தைக் குறிப்பிக்கும். எவ்வளவுவெள்ளம் பாய்ந்தாலும் அவ்வளவையும் தனது அகத்து அடக்கிக்கொள்ள வல்ல கட லென்பார், 'மொய்கொள்வேலை' என்றார். இராமனும் அங்ஙனமே எவ்வளவு வித்தைகளையும் தனது அகத்துத் தரிக்கவல்லவனென்பது போதரும். "ஸமுத்ரஇவ காம்பீர்யே" என்று ஸ்ரீவால்மீகிபகவானும் இராமபிரானுக்கு ஆழ்ச்சியிற் கடலை உவமைகூறியுள்ளார். பி - ம்:—[1] மாரியிற். [2] பிறிதொர். [3] வெள்ளமாய், வெள்ளநீர். [4] வேலையை, வேலைமுன், வேலைநீர், வேலைமேல். [5] ஆன. [6] தான், வந்து, இங்கு. [7] இயைந்தது. [8] என்னவே. (332)

16.—உடனே தசரதன் உடன்பட்டு இராமனை வரவழைத்தல்.

குருவின் வாசகங் [1] கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் [2] கொணர்மின் சென்றென
வருக [3] வென்றன [4] னென்ன லோடும்வந்து
அருகு சார்ந்தன னறிவி [5] னும்பரான்.

(இ - ள்.) குருவின் வாசகம் கொண்டு - (இங்ஙன் கூறிய) குலகுருவாகிய வசிட்டனது வார்த்தையை ஏற்றுக்கொண்டு,— கொற்றவன் - வெற்றியையுடையவனான தசரதன்,—(ஏவலாளரை நோக்கி, 'நீங்கள்), சென்று—, திருவின் கேள்வனை கொணர்மின் - இலக்குமிகணவனான ஸ்ரீராமனை அழைத்துக்கொண்டுவாருங்கள்,' என - என்று கட்டளையிட, (அவர்கள் உடனே இராமனிடஞ் சென்று), வருக என்றனன் என்னலோடும் - ['சக்கரவர்த்தி உம்மை] வரவேண்டுமென நியமித்தான்' என்று சொன்னவளவிலே,—அறிவின் உம்பரான் - யாவர் அறிவையுங் கடந்துள்ளவனான ஸ்ரீராமன், அருகு வந்து சார்ந்தனன் - (தந்தையின்) அருகில் வந்துசேர்ந்தான்; (எ-று.)

குருஎன்றவடசொல் - அஜ்ஞாநவிருளை யொழிப்பவனென்று உறுப்புப்பொருள்படும்; (கு-இருள்.) குருவாக்கியத்தை அங்கீகரித்

ததனுல்,கௌசிகனது சாபத்துக்குஉள்ளாகாது மகனுக்குநன்மை விளைய மேன்மைபெறுதல் தோன்ற, இங்கே 'கொற்றவன்' என்ருர். சக்கரவர்த்தியின் செல்வங்கட்கும் இராச்சியத்துக்கும் உரிய மூத்தமக ஞதலால், இராமன் 'திருவின்கேள்வன்' எனத்தக்கான். 'அறிவினும்பரான்'—"எங்கள் நான்மறைக்குந் தேவரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச், செங்கண்மால்." 'அறிவினும்பரான் வந்து அருகு சார்ந்தனன்' என்றது - எவர்க்கும் எட்டாது பரத்துவ நிலையிலுள்ளவன் இங்கு மேற்கொண்ட மநுஷ்யபாவனைக்கு ஏற்ப, மகன் தந்தையினிடம் ஒழுகவேண்டிய முறை தவருது நடந்தன னென்றவாறு. இனி, 'அறிவி னும்பரான்' என்பதற்கு - அறிவி ஞல் மேம்பட்டவனென்றுமாம். பி-ம்:—[1]கொண்ட, கேட்ட. [2]கொணர்க. [3]என்றனர். [4]வருதலோடும், என்றலோடும். [5]எம்பிரான். (333)

17.—இராமனை இலக்குமணனுடன் தசரதன் கௌசிகனிடம் ஒப்பித்தல்.

வந்த நம்பியைத் தம்பி தன்னெ[1]டும்
[2]முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
தந்தைநீதனித் தாயு நீ [3]யிவர்க்கு
எந்தை [4]தந்தன னியைந்த [5]செய்கென்ருன்.

(இ - ள்.) (உடனே தசரதன்),—தம்பி தன்னெடும் - இலக்கு மணனுடனே, வந்த நம்பியை -(தன்னருகில்) வந்த ஸ்ரீராமனை, முந்தை நால் மறை முனிக்கு காட்டி - அநாதியான நான்குவேதங்களிலும்வல்ல விசுவாமித்திர முனிவனுக்குச் சுட்டிக்காண்பித்து,- 'எந்தை-எமது தலைவனே! இவர்க்கு - இவ்விளங்குமாரர்க்கு, நல் தந்தை நீ-நல்லதந்தையும் நீயே; தனி தாய்உம் நீ-ஒப்பற்ற தாயும் நீயே; தந்தனன்-(இவர்களை உன்னிடம்) ஒப்பித்தேன்; இயைந்த செய்க-(இவர்கட்கு) ஆகவேண்டிய அநுகூலங்களைச் செய்தருள் வாயாக,' என்ருன் - என்றுசொல்லி (அடைக்கலமாக)க்கொடுத் தான்; (எ-று.)

தனதுமகனுல் அம்முனிவனுக்குக் காரியமாவதென்ற எண்ணம் வசிஷ்டன்வார்த்தையால் நீங்கித் தனது மகனுக்குஅம்முனிவனுல் நன்மைகள் நிகழவிருக்கின்றன என்ற கருத்தே தசரதனுக்கு நிலைத்திருத்தலால் 'இவர்க்கு இயைந்தசெய்க' என்ருன். 'நல் தந்தைநீ தனித்தாயும்நீ இவர்க்கு, எந்தை தந்தனன்' என்ற அடைக்கலவார்த்தைக்கும், 'கையடைப்படலம்' என்ற படலப் பெயர்க்கும் ஏற்ப அமைந்ததுஇவ்வுரை. 'கரியசெம்மலொருவனைத் தந்தீதி' என்று வேண்டிய முனிவனுக்குத் தசரதன் இலக்கு மணனையும் அனுப்பியது என்? எனின்—இளமை தொடங்கி எப்போதும் விட்டுப்பிரியாது இலக்குமணன் இராமனேடு ஒற்று மைப்பட்டவஞதலின், அனுப்பிய தென்க. 'இராமனைத்தருக' என்று முனிவன் வேண்டியபடி தசரதன் உடனே அவனை அனுப்பாது மறுத்து அம்முனிவன்திறத்தில் அபசாரப்பட்டன ஞதலால், அக்குற்றந்தீர அபராதக்காணிக்கையாக இலக்குமணனை

யும் சேர்த்து அனுப்பின னென்று கூறுதலு முண்டு. பிள்ளையின் உயர்ச்சிமிகுதிக்குப் பிதா காரண மாதலால், 'நல்தந்தை' என்று முதலிற் கூறினர். தந்தை இதத்தையே செய்வன், தாய் பிரியத்தையே செய்வள்; ஆகவே, தந்தைசெய்யும் உதவியைத் தாய் செய்யாள்; தாய்செய்யும் உதவியைத் தந்தை செய்யான்: அங்ஙனன்றி, அவ்விருவகை நன்மைகளையும் இவர்கட்கு நீயே செய்யக் கடவாயென்பான்,'நல்தந்தைநீ தனித்தாயும்நீ' என்றான்.

சிலபிரதிகளில் இச்செய்யுளிலும் சிலபிரதிகளில் அடுத்த செய்யுளிலும், சிலபிரதிகளில் "கரும்புகால் பொர" என்ற செய்யுளிலும் கையடைப்படலம் முடிவுபெறும்.பி-ம்:—[1] அம், எம். [2] முந்த, முந்து. [3] இவற்கு. [4] தந்தனை யிசைந்த. [5] செய்கென. (334)

18.—கௌசிகன் மகிழ்ச்சியோடு அவர்களுடன் புறப்படல்.

கொடுத்த [1] மைந்தரைக் கொண்டு சிந்தை [2] முந்து
எடுத்த சீற்றம்விட் [3] டினிது [4] வாழ்த்திமேல்
[5] அடுத்த வேள்விபோய் [6] முடித்து நாமென
நடத்தன் [7] மேயினன் [8] நவைக்க [9] ணீங்கினன்.

(இ - ள்.) (உடனே),நவைக்கண் நீங்கினன்-(காமம் முதலிய) குற்றங்களினின்று நீங்கியவனான விசுவாமித்திரன்,—கொடுத்த மைந்தரை கொண்டு - (தசரதன்) தந்த குமாரர்களைப் பெற்றுக் கொண்டு, சிந்தை முந்து எடுத்த சீற்றம்விட்டு-மனத்திலே முன்பு மிகுதியாகக்கொண்ட கோபத்தை யொழித்து, இனிது வாழ்த்தி -தசரதனை நன்றாக ஆசீர்வதித்து,—மேல்-பின்பு,—நாம் போய் அடுத்த வேள்வி முடித்தும் என-'நாம் சென்று (செய்தற்கு) அடுத்த யாகத்தை(ச் செய்து) முடிப்போம்' என்று (குமாரரை நோக்கிச்) சொல்லி, நடத்தல் மேயினன் - செல்லுதலைப் பொருந்தினன்: (எ - று.)

நவைக்கண் - நீக்கப்பொருளில் ஏழனுருபுவந்தது, உருபு மயக்கம். நவை - காமவெகுளிமயக்கங்கள். பி-ம்:—[1] மைந்தனை. [2] முன்பு, முன், வந்து. [3] இனிதின். [4] வாழ்த்தியே. [5] எடுத்த. [6] முடிக்கலாம், முடிப்பதாம், முடிப்பநாம். [7] மேயினர். [8] நவைகள். [9] நீங்கினர். (335)

19.—இராமன் ஆயுதங்களை எடுத்துக்கொள்ளுதல்.

வென்றி [1] வாள்புடை விசித்து [2] மெய்ம்மைபோல்
என்றுந் [3] தேய்வுறுத் [4] தூணி [5] யாத்திரு
[6] குன்றம் [7] போன்றுயர் [8] தோளிற் கொற்றவில்
[9] ஒன்று தாங்கின னுலகந் தாங்கினன்.

(இ - ள்.) (அப்பொழுது),—உலகம் தாங்கினன்-எல்லாவுலகங்களையுங் காத்தருளுங்கடவுளான ஸ்ரீராமன், வென்றிவாள் புடை விசித்து - வெற்றியைத்தரவல்ல உடைவாளை இடைப்புறத்திலே கட்டிக்கொண்டு, இரு குன்றம் போன்று உயர்தோளில் - இரண்டு மலைகள்போல உயர்ந்துள்ள இரண்டு தோள்களிலும், மெய்ம்மை

போல் என்றும் தேய்வு உறு தூணி யாத்து - சத்தியமென்கிற தருமம் (எப்போதும்பயன்குறைபடாதது) போல எப்பொழுதும் (அம்புகள்) குறைபடுதலில்லாத (இரண்டு) அம்பறுத்தூணிகளைக்கட்டி, கொற்றம் வில் ஒன்று தாங்கினன் - வெற்றியைத் தருகிற ஒரு வில்லை (இடக்கையிற்) பிடித்துக்கொண்டான்; (எ - று.)

தனது தலைக்குச் சரியாக உயர்ந்து தோன்றும்படி இரண்டு அம்பறுத் தூணிகளை இரண்டுதோள்களிற் கட்டிக்கொண்டனனென்பதுபற்றி, முத்தலைநாகத்தை உவமை கூறியுள்ளார், ஸ்ரீ வால்மீகிபகவான். வில்லை இடக்கையிலேந்தினனென்பது, மேல் தாடகைவதைப்படலத்தில் "சங்குறை கரத்தொருதனிச்சிலை தரித்தான்" என்பதனாலும் விளங்கும். என்றுந்தேய்வுறுத்தூணி - அக்ஷயதூணீரம். பலவகையாலும் அறப்பயனைவிளக்கி உலகத்தை நல்வழிப்படுத்துவதே காப்பியங்களின் நோக்கமாதலின், இங்கு 'மெய்ம்மைபோல் என்றுந்தேய்வுறுத் தூணி' என உபமானவகையால், வாய்மை, இம்மைமறுமைப்பயன்களையெல்லாம் குறைவின்றித் தானே தரவல்லதென்பதை விளக்கினர்.

காத்தல்தொழிற் கடவுளான திருமால் ஸ்ரீராமனாகத்திருவவதரித்ததன் பயனாக துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலன தருமங்களை இளமைதொடங்கிச்செய்து முடிக்கவேண்டி இப்பொழுது அரக்கரையழித்தற்பொருட்டுப் படைக்கலமெடுக்கலாயினனென்னுங் கருத்து விளங்க, 'கொற்றவில் ஒன்று தாங்கினன் உலகந்தாங்கினன்' என்றார். இனி, 'உலகந்தாங்கினன்' என்பதற்கு-எல்லாவுலகங்களையும் பிரளயகாலத்திலே வயிற்றினுள் வைத்துக் குறிக்கொண்டு பாதுகாத்தவனென்ற பொருளும் அமையும். தாங்கினன் என்ற சொல்லை, வினைமுற்றாகவும் வினையாலணையும்பெயராகவும் ஓரடியினுள்ளே பிரயோகித்தது,கவிசமத்காரம். பி-ம்:—[1] வாளிடை. [2] மென்மை, மேன்மை. [3] தேய்விலா. [4] பூணி. [5] ஆர்த்திரு, ஆர்த்திருட். [6] குன்று. [7] போன்றுள, போன்றுலாம், போன்றுளான், போன்றுளார், போலுயர். [8] குனியுங், பணியுங். [9] ஒன்றும். (336)

20.—இராமன் இலக்குமணனுடன் முனிவன்பின்னே செல்லுதல்.

அன்ன தம்பியுந் தானு [1] மையனும்
மன்ன னின்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவற் [2] றொடர்ந்து சாயைபோற்
பொன்னின் மாநகர்ப் புரிசை [3] நீங்கினன்.

(இ - ள்.) (ஸ்ரீராமன்),—அன்ன தம்பிஉம் தான்உம் - அப்படிப்பட்ட [தன்னைப்போலவே வர்ளும் தூணிகளும் வில்லும் தரித்த] தம்பியும் தானுமாக, ஐயன் ஆம் மன்னன் இன் உயிர் வழிக்கொண்டால் என - தந்தையாகிற சக்கரவர்த்தியினது இனிய உயிரானது வெளியிற் பிரயாணப்பட்டாற்போல,—சொன்ன மா தவன் சாயை போல்-(கீழ்க்) கூறிய விசுவாமித்திர மகாமுனிவனை விடாதுதொடர்ந்துசெல்லுகிற நிழல் போல, தொடர்ந்து—,

பொன்னின் மா நகர் புரிசை நீங்கினன்-பொன்மயமான பெரிய அயோத்தியாநகரத்தின் மதிலைக் கடந்து சென்றான்; (எ - று.)

முதலில் விசுவாமித்திரனும், அவன்பின்னே இராமபிரானும் அவன் பின்னே இலக்குமணனுமாகச் சென்றனரென்று வால்மீகி வகுத்துக் கூறியுள்ளார். சொன்ன—"அடுத்த வேள்விபோய் முடித்தும் நாம்" என்று சொன்ன என்றபடி. ஆசிரியன்பக்கல் மாணாக்கன் வழிபாடு செய்யும் வகையைப் மேற்கொண்டு, "நிழலின் நீங்கான்" என்றபடி ஸ்ரீராமன் கௌசிகமுனிவனைச் சாயைபோல விடாது பின்தொடர்ந்து சென்றனனென்றார்: இராமனுக்கு விசுவாமித்திரன், மஹாகுரு. தம்பியும் தானும் நீங்கினன் - சிறப்பினால் ஒருமை முடிபேற்ற பால்வழுவமைதி. சாயை-சாயா: வடசொல்லின் திரிபு. பி - ம்:—[1] ஐயனும், அன்பினால், மையறு, ஐயன்பின். [2] தொடர்ந்த. [3] நீங்கினார். (337)

21.—மூவரும் சரயுநதியைச் சார்தல்.

[1] வரங்கண் மாசறத் [2] தவஞ்செய் தோர்கள்வாழ்
புரங்க [3] ணேரிலா [4] நகர நீங்கிப்போய்
அரங்கி னாடுவார் சிலம்பி [5] னன்னநின்று
இரங்கு வார்புனற் சரயு [6] வெய்தினர்.

(இ - ள்.) (அங்ஙனம் புறப்பட்ட மூவரும்),—வரங்கள் மாசு அற - (தாம் தாம் பெறும்) வரங்கள் குற்றமில்லாதனவாம்படி, தவம் செய்தோர்கள் - பெருந்தவஞ் செய்துள்ளவர்கள், வாழ்-(அத் தவத்தின் பயனாக), வாழுமிடமான, புரங்கள்-(அமராவதி முதலிய) தேவநகரங்களும், நேர் இலா-ஒப்பாகாத, நகரம்-அயோத்தி நகரை, நீங்கி போய் - விட்டுச் சென்று,—அரங்கின் ஆடுவார் சிலம்பின் - நடனசாலையிலே நர்த்தனஞ்செய்கிறமகளிரது காற் சிலம்பு போல, அன்னம் நின்று இரங்கு-அன்னப்பறவைகள் நின்று ஒலிக்கப்பெற்ற, வார் புனல்-பெருகுகிற நீரையுடைய, சரயு-சரயு நதியை, எய்தினர் - அடைந்தார்கள்; (எ-று.)

மூவரும் அயோத்தியாபுரியினெல்லையைக் கடந்து சரயுநதியைச் சார்ந்தன ரென்பதாம். அவர்கள் ஒன்றரையோஜனைதூரம் வழிநடந்து சரயுவின் தென்கரைசேர்ந்தார்களென்று முதனூலில் கூறியுள்ளது. 'வரங்கள்மாசறத்தவஞ்செய்தோர்' என்றது, வேண்டும்பயன்களை வேண்டியவாறேயடைவிக்கவல்ல சிறப்புடையதான தவத்தைப் பழுதுபடாதபடி செய்துமுடித்துச் சித்திபெற்றவர் என்றபடி. 'வரங்கள்மாசறத் தவஞ்செய்தோர்கள்வாழ் புரங்கள்' என்றதில் ஸ்ரீவைகுண்டநகரமும் அடங்கும். அதுவுமுட்பட இவ்வயோத்தியாபுரிக்கு ஈடாகாதென இந்நகர்ச்சிறப்பை விளக்கியவாறும். பரத்துவத்திலும் சௌலப்பியம் விசேஷமானதென்று பாராட்டிக்கூறுதல் ஆன்றோர் மரபு ஆதலால், அங்ஙனம் அமரர்க்கும் அரியனாய்ப் பரமபதநாதன் எழுந்தருளியிருக்கிற நகரத்தினும், அப்பரமன் தானே அடியவர்க்கெளியவனாய்த் திருவவதாரஞ்செய்து வாழ்கிற தலமான திருவயோத்தி மேம்பட்டதென்க. அங்குக் காட்சியளித்தலென்ற ஒன்றே உள்ளது; இங்கோ துஷ்ட நிக்கிரகசிஷ்ட

பரிபாலந ரூபமான தருமமிரண்டும் உள்ளன என்பதுங் காண்க. பி-ம்:—[1] வரஞ்செய், வரங்கொள். [2] தவங்கள் செய்ஞர், தவஞ்செய் வோர்கள். [3] நேரலா, நீரிலாப், நேரலார். [4] நகரி, நகரின், நகரை, புரிசை, நகருள். [5] என்ன. [6] எய்தினன். (338)

22.—மூவரும் ஒரு சோலையை யடைதல்.

கரும்பு கால்பொரக் [1] கழனி [2] வார்ந்ததேன்
[3] வரம்பு [4] மீறிடு மருத [5] வேலிவாய்
அரும்பு [6] கொங்கையா ரம்மெ [7] லோதிபோல்
சுரும்பு வாழ்வதோர் சோலை [8] வைகினர்.

(இ - ள்.) (அங்கு), கரும்பு கால் பொர - கரும்புகள் காற்றினால் மோதப்பெறுதலால், கழனி வார்ந்த - கழனிகளிற் பெருகின, தேன் - தேனானது, வரம்பு - வயல்வரப்புக்களை, மீறிடும் - கடந்து பாயப்பெற்ற, மருதம் வேலி வாய் - கழனிகளைவேலியாகக்கொண்டதான, அரும்பு கொங்கையார் அம் மெல் ஓதிபோல் சுரும்பு வாழ்வது ஓர்சோலை - தாமரையரும்புபோன்ற தனங்களையுடையமகளிரின் அழகிய மெல்லிய கூந்தலைப்போன்ற வண்டுகள் வாழிடமான ஒருசோலையில், வைகினர்-(மூவரும் அன்று) தங்கினர்கள்; (எ-று.)

விசுவாமித்திரமுனிவன் முதலிய மூவரும் சரயுவின் தென் கரையையடைந்தபோது இராப்பொழுது வந்து விட்டதனால், அம்மூவரும் அதன்கரையிலுள்ள சோலையில் தங்கின ரென்க. ஓதி போல் என்பதைச் சோலைக்கும் இயைக்கலாம். பி - ம்:—[1] கமுகின். [2] வாய்ந்த. [3] வரம்பின், வரம்பை. [4] மீதிடு. [5] வேலியார். [6] கோதையர். [7] ஓதிமேல். [8] நண்ணினர், எய்தினர், மேயினர், நண்ணினன். சில பிரதிகளில் இச்செய்யுள் "தாழுமாமழை" என்ற செய்யுளின்பின் உள்ளது. (339)

23.—உதயகாலத்தில் அவர்கள் நதியைக் கடத்தல்.

தாழு மாமழை [1] தழுவு நெற்றியால்
சூழி [2] யானைபோல் தோன்று மால்வரைப்
பாழி மாமுகட் டுச்சிப் பச்சைமா
ஏழு [3] மேறப்போ யாறு [4] மேறினர்.

(இ - ள்.) தாழும் மா மழை தழுவும் நெற்றியால் - வந்து தங்குகின்ற பெரியமேகங்கள் பொருந்திய மேலிடத்தை யுடைமையால், சூழி யானைபோல் தோன்றும்-முகபடாத்தையணிந்த யானைபோலக் காணப்படுகிற, மால்வரை - பெரிய (உதய) கிரியினது, பாழி மா முகடு உச்சி - வலிமையையுடைய பெரிய சிகரத்தின் நுனியிலே, பச்சை மா ஏழும் ஏற - (சூரியனது) பசுமை நிறமுள்ள குதிரைகளேழும் ஏருநிற்க [சூரியோதயகாலத்தில் என்றபடி], போய் - (மூவரும்) சென்று, ஆறும் ஏறினர் - நதியைக்கடந்து (அக்கரை) ஏறலானார்கள்; (எ - று.)

கீழ் 'சரயுவெய்தினர்' (21) என்றுகூறி, இங்கு 'ஆறுமேறினர்' என்று பொதுப்படக் கூறியிருத்தலால், இதற்கு, சரயுநதியைத்

தாண்டினார்களென்று பொருள் கூறுகின்றனர். அயோத்தியி லிருந்து சித்தாச்சிரமத்திற்குச் செல்லும் மார்க்கத்திலே சரயுநதி இல்லை யாகையால் அவ்வுரை பொருந்தாது: இடங்களின் நிலையை யும், முதனூற்போக்கையும் நன்றாக ஆராயுமிடத்து. கங்கையைத் தாண்டினார்களென்று கொள்ளுதலே பொருத்தமுடையதாகிறது. 'ஆறு' என்ற பொதுப்பெயர் - இங்கு, சகலநதிகளினுஞ் சிறந்த தாகிய கங்கையை யுணர்த்தும். அயோத்தியின் தெற்குத்தவிர மூன்று பக்கமும் சரயு அதனைத் தழுவினாற்போலப் பிரதக்ஷிண மாகச் செல்லுகின்றது. தென்கிழக்கு நோக்கிப் புறப்பட்டுச் சரயு வின் தென்கரைவழியாய்ச்சென்ற இவர்கள், அந்தச்சரயுவும் கங்கை யும் சேருமிடத்தைச் சமீபித்து, அவை சேருமிடத்துக்கு முன்னமே தெற்குமுகமாய்க் கங்கையைக்கடந்து அதன் தென்கரை சேர்ந்து, அக்கங்கைக்குத் தெற்கேயுள்ள தாடகைவனத்தைநோக்கிச் செல்ல லானா ரென்று முதனூலால் விளங்கும். மற்றும் அயோத்தியாபுரி கங்கைக்கு வடக்கே சரயுவின்தென்கரையில் உள்ளதென்றும், விசு வாமித்திரன் வேள்விசெய்யுமிடமானசித்தாச்சிரமம் கங்கைக்குத் தெற்கேயுள்ளதென்றும், அந்த ஆதிகாவியங்கொண்டே உணரலா கும்.

இனி, இங்கு வரை - அஸ்தமநகிரி யென்று கொண்டு, 'மால் வரைப் பாழி மாமுகட்டுச்சிப் பச்சைமாவேழு மேற' என்பதற்கு - சூரியன் அஸ்தமனமடைய என்று பொருள்கொள்ளுதல், இச்சந் தர்ப்பத்துக்கும் முதனூலுக்கும் இயையாதாம்; பச்சைமாவேழு மேற' என்ற சொல்லமைப்பும் சூரியோதயத்துக்கே இனிதுசேரும். (இப்படலத்துக்கு அடுத்ததான தாடகைவதைப்படலத்தின் நான் காஞ்செய்யுளில் "அவ்வயிற், சென்றுவந்தெதிரெழுஞ் செந்நெறிச் செல்வரோ, டன்றுறைந்து" எனவருவது, மறுநாட்கழிவைப்பற்றி.)

முன்னிரண்டடி-உவமையணி. கரிய பெரிய வலிய யானை-மலைக் கும், அந்த யானையின் முகபடாம் - மலைச்சாரலில் மேற்புறத்தே படிகின்ற மேகத்துக்கும் உவமை யெனக் காண்க. ஒற்றைச்சக்கர முடைய சூரியனது தேர்க்குக் குதிரைகள் ஏழென்றும், காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் ப்ருஹதீ பங்க்தி தரிஷ்டுப் ஜகதீ என்ற ஏழுசந்தசுகளுமே அக்குதிரைகளாக அமைந்துள்ளன வாத லால், அவை அப்பெயர்பெறு மென்றும், அக்குதிரைகளின் நிறம் பசுமை யென்றும் புராணம் கூறும். ஏழுமேறப்போ யாறுமேறினார்-முரண்டொடை. 'தாழுமாமழை' 'பச்சைமா ஏழுமேற' என்ற சொற்போக்கு, உதயகிரியின் நெற்றியளவு மேகமண்டலத் துக்குமே லுள்ள தென்றும் அக்கிரியின் உச்சி சூரியவீதிக்கு மேலுள்ளதென்றும் விளக்கி, அம்மலையின் மிக்க உயர்ச்சியைத் தெரிவித்தல் காண்க. பி-ம்:—[1] தவழும், தழுவ. [2] யானையின், யானையாய். [3] ஏறி. [4] ஏறினன். இதுமுதல் சிலபிரதிகளில் தாடகை வதைப்படலம் தொடங்குகின்றது. (340)

இங்கே சிலபிரதிகளிற் காணப்படும் பாடல்கள் வருமாறு:—(1) இனையசோலைமற்றியாவ[1] தென்றுமா, முனிவ கூறென முதல்வன்

கூறலும், பனுவல்வேதநூல் [2]பகருமர்தவன், தனுவலாயிதன்
றன்மைகே[3]ளெனா. பி-ம்:—[1]என்னமா. [2]பயக்கும். [3]என்றான்.

(2) [1]சம்பரப்பெயர்த் [2]தானவன்னொடு, னும்பர்[3]கோமக [4]னம
ருடன்ற நாள், வெம்பிமற்றவன் வெற்றிகொண்டபோ், [5]தம்பரம்
[6]மிழந்தவனி[7]வந்தனன். பி-ம்:—[1]சம்பரன்னெனும், சம்பரப்பெயர்.
[2]உடையதானவன், தானவன்னொடும். [3]கோவுமாய். [4]நக்கு.
[5]அம்பரத்து. [6]இழிந்து. [7]எய்தினன்.

(3) அவனி[1]வந்துமன் னவரிடந்தொறுந், தவனனென்னவே
தா[2]னுழன்றறிந், [3]திவரில்[4]வேறுமற் றில்லை[5]ப் போர்கெழு,
[6]வுவன்விரும்பிவந் துந்தை[7]நாடுறா. பி-ம்:—[1]எய்தி. [2]உழன்ற
போழ்து, உழற்றிவந்து, உடற்றி வந்து. [3]இவரின். [4]மாறுவேறு.
[5]எற்கெனா, போர்க்கெனா. [6]அவன். [7]அன்புறா.

(4) இந்தவிவ்விடத் தெய்தியிந்திரன், சந்தவார்பொழிற்[1]றரு
வினைந்தையும், வந்து[2]நிற்கெனா மன[3]னினைப்பின்முன், [4]முந்து
வந்துமா முரல [5]நின்றவால். பி-ம்:—[1]தருவிடந்தனில். [2]நிற்க
ரும், நிற்கொணா. [3]நினைப்புமுன், நினைப்பினில். [4]முந்து, முந்தி.
[5]நின்றதே, நின்றதால்.

(5) நின்றசோலைவாய் நியம[1]நித்தமும், குன்றலின்றியே
செய்து கொர்ண்டவன், நன்றியா[2]லிருந் [3]தரசை [4]நண்ணிய,
[5]துன்று[6]சோலையின் [7]றொழிலுணர்த்தினான். பி-ம்:—[1]நித்தலும்.
[2]அறிந்து, அருந்து. [3]அரணர், அரசு, ஆசை, அரசன். [4]நண்
ணியே, நண்ணியது. [5]என்று. [6]கோவையின். [7]தொழில்செலுத்
தினான், தொழிலுறுத்தினான், இயல்புணர்த்தினான்.

(6) உருவ [1]மாறிவே றுருவமாகியே, நிருப [2]நின்குடை
நிழலினிற்றலும், [3]பரிதல்[4]நோக்கிநீ[5]பகர்தியாலெனத், [6]தருவினா
யகன் றான்விளம்பினான். பி-ம்:—[1]ஆகிவேறருவம், மாறி மானுரு
வம். [2]நன்குடை, அங்கொரு. [3]பரிவின். [4]நோக்கியே. [5]பதாதியா
னெனாத். [6]திருவினாயகற்றெரியச்செப்பினான்.

(7) சதமகன் [1]றனைச் சம்பரன்னெனா, [2]மதமகன் [3]றாரந்
[4]தரசுவவ்வினான், கதமகன்றிடாக் [5]கனக [6]வெற்பவன், வித
மகன்றுவந்துன்னை மேவினேன். பி-ம்:—[1]எனை. [2]மது. [3]தொடர்ந்து.
[4]அரசை. [5]சுகன, கவன. [6]வெற்பையவ்விதம். இச்செய்யுள்
'வெள்ளி' என்று குறிக்கப்பட்டுள்ளதென்ப.

(8) என்றபோது [1]தா னிரதமேறியே, சென்று மற்றவன்
சேனையோடுகக், கொன்று [2]வாசவனரசுகொள்ளவே, யன்றளித்து
மீண்டயோத்திமேவினான். பி-ம்:—[1]தன். [2]மீண்டவன்; வாசவற்கு.

(9) [1]அன்ன காதலி னவனி [2]வந்தகா,[3]வின்னநாமமிச் சோலை
யென்றலும், மன்னர்மன்னவன் மதலைநன்றெனப், பின்னை [4]நன்று
யிர்ப் பிரிய[5]மாயினார். பி-ம்:--[1]அன்னகாதலன், அன்னதாலிவண்,
அன்னகாலமிவ். [2]வந்ததால் ஐந்துதார். [3]இன்ன என்றும். [4]நின்று.

[5] எய்தினர். இவ்வொன்பது பாடல்களின்பின் கையடைப்படலம் முற்றும் என்றும் காணப்படுகின்றது.

24—ஒரு சோலையைக் கண்டு இராமன் 'இது யாது?' என்றல்.

தேவு [1] மாதவற் றொழுது தேவர் [2] தம்
நாவு [3] ளாவுதி நயக்கும் [4] வேள்விவாய்த்
தாவு மாபுகை [5] தழுவு சோலைகண்டு
யாவ தீதென்று [6] னெவர்க்கு [7] மேனின்றான்.

(இ - ள்.) (அப்பொழுது),—தேவர் - தேவர்கள், தம் நாவுள் - தமது நாவினிடத்து, ஆவுதிநயக்கும் - ஆகுதியைவிரும்பியுண்ணு தற்கு உரிய, வேள்விவாய் யாகத்திலே, தாவும் - மேலெழுகிற, மா புகை-பெரிய புகை, தழுவு-சூழ்ந்த, சோலை-ஒருசோலையை, கண்டு-பார்த்து,—எவர்க்குஉம் மேல் நின்றான்-யாவர்க்கும் மேம்பட்டு நின் றவனான ஸ்ரீராமன்,—தேவு மாதவன் தொழுது - தெய்வத்தன்மை யுள்ள மகாதபஸ்வியான விசுவாமித்திரமுனிவனை வணங்கி, ஈது யாவது என்றான் - 'இச்சோலை யாது?' என்று வினவினான்;(எ-று.) —இதற்கு அம்முனிவன் கூறும் விடை, அடுத்த படலத்தின் முதல்மூன்றுசெய்யுள்களில் அமைந்துள்ளது.

இங்குக் குறிக்கப்பட்ட சோலை - பூர்வத்திற் சிவபிரான் தவஞ் செய்து கொண்டிருந்த இடமாதலால் ஸ்தாணுவாச்சிரம மெனப் படும்; அங்ஙனம் அப்பிரான் தவஞ்செய்து கொண்டிருந்தபோது மன்மதன் அவனது நெற்றிக்கண்ணின் நெருப்பினால் நீறுபட் டொழிந்த இடமாதலாற் காமாச்சிரமமென்றும் கூறப்படுவது: அங் ஙனம் மன்மதன் அநங்கனாகுமாறு அவனது அங்கம் விழுந்த இட மாதல்பற்றி, அந்நாடு அங்கதேசமெனப்படும். இந்த ஆச்சிரமம், கங்கைக்குவடக்கே சரயுவும் கங்கையுஞ் சேர்கிற சங்கமத் துறைக்கு அருகே யிருக்கிறதாகவும், இதைப்பற்றி இராகவன் விசுவாமித் திரனை வினவியதும் அதற்கு அவன் விடையளித்ததும் அவர்கள் கங்கை கடத்தற்கு முன்னமே நிகழ்ந்ததாகவும், வால்மீகத்தால் தெரிகின்றன. அச்சோலை நெடுந்தூரமளவும் தெரியக்கூடியதாத லால், அதனைப்பற்றிய வினவிடை கங்கைகடந்துசெல்லுகிறபோது நிகழ்ந்ததாகக் கம்பர்கூறுவது, பெரியதொரு மாறுபாடாகாது. பரி சுத்தமான அந்த ஆச்சிரமத்திலே பெருந்தவத்தினரான அநேக முனிவர் வசித்து வேள்வி செய்து கொண்டிருந்தமை பற்றி, 'வேள் விவாய்த்தாவுமாபுகை தழுவு சோலை' எனப்பட்டது. அங்ஙனம் தேவர்களை உத்தேசித்து வைதிகாக்கினியில் ஓமஞ்செய்யப்படுகிற ஹவிசுகளை அத்தேவர்கள் பெற்றுஉண்டு மகிழ்பவராகுதலால், 'தேவர்தம்நாவுளாவுதிநயக்குவேள்வி' எனப்பட்டது. விசுவாமித் திரனுக்குத் தெய்வத்தன்மை - சாபாநுக்கிரகசக்தி, பிரதிசிருஷ்டி செய்யும்வல்லமை முதலியன. எவர்க்கும்மேல் நின்றான் - பரப்ரஹ்ம ஸ்வரூபி.

தொழுது நயக்கும் என்று இயைத்து, தேவு-தெய்வத்தன்மை யுடைய, மா தவன்-திருமகள் கணவனான திருமாலை, தொழுது-

வணங்கி, தேவர் தம் நாவுள் ஆவுதி நயக்கும்-தேவர்கட்குநாவாகிற வைதிகாக்கினியிலே (முனிவர்கள்) ஆகுதிகளை விரும்பிச்செய்யப்பெற்ற, வேள்விவாய்-யாகத்திலே என்று பொருள்கூறலாம். இவ்வுரைக்கு—'என்றான்' என்ற விடத்து, 'முனிவனை நோக்கி' என்பது எளிதில் வருவிக்கத்தக்கது. இனி, தேஉமாதவன் என்று பிரித்து-தெய்வத்தன்மையுள்ள அம்பிகைகொழுநனான சிவபிரானை வணங்கி, முனிவர்கள் அன்புடன் அக்கினியில் ஆகுதி செய்யும் வேள்வியென்றுபொருள் கொள்ளுதல் விசேஷம்: அந்த ஸ்தாணுவாச்சிரமத்துவசிக்கின்ற முனிவர்கள் தொன்றுதொட்டுச் சிவனது சிஷ்யர்களென்று வால்மீகி கூறியுள்ளதனால், அங்ஙனம் (சிவசிஷ்யரான அவர்கள்) தங்கள்குருவான சிவபிரானைத்தொழுது முன்னிட்டு வேள்வி செய்கின்றன ரென்றல் மிகப்பொருந்துமாறு காண்க. பி-ம்:- [1] மாதவர்த். [2] தாம். [3] ஆகுதி. [4] வேள்வியால், வேள்வியில். [5] தவமுஞ். [6] எவற்கும். [7] மேலுளான். (341)

கையடைப்படலம் முற்றிற்று.

7—ஆவது தாடகைவதைப்படலம்.

தாடகையென்னும் இராக்கதியை இராமபிரான் விசுவாமித்திரனது விருப்பத்தின்படி கொன்றருளிய கதையைக் கூறும் பாகமென்பது பொருள்.

1.—இதுமுதல் மூன்றுகவிகள் - விசுவாமித்திரனது மறுமொழி.

திங்கண்மே வுஞ்சடைத் [1] தேவன்மேன் மாரவேள்
[2] இங்குநின் றெய்யவு மெரிதரும் நுதல்விழிப்
பொங்குகோ பஞ்சுடப் பூளை [3] வீ யன்னதன்
அங்கம்வெந் தன்றுதொட் [4] டனங்கனே யாயினான்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) மாரன் வேள் - மன்மதனானவன், இங்கு நின்று - இவ்விடத்திலேயிருந்து, திங்கள் மேவும் சடை தேவன்மேல்-சந்திரன்பொருந்திய சடையையுடைய சிவபிரான்மேலே, எய்யஉம் - (மலரம்புகளைப்) பிரயோகித்த வளவிலே, எரி தரும் நுதல்விழி பொங்கு கோபம் சுட-(அப்பிரானது) நெருப்பைச்சொரிகிற(அக்கினிமயமான) நெற்றிக்கண்ணினின்று மிக்கெழுந்த கோபத் தீச் சுடுதலால், பூளை வீ அன்ன தன் அங்கம் வெந்து - பூளைப் பூப்போல் மெல்லியதான தன்னுடம்பு வெந்துபோய், அன்றுதொட்டு அனங்கனே ஆயினான் - அற்றைநாள்தொடங்கி அனங்கனாகவேயானான்; (எ-று.)

விசுவாமித்திரன் இராமபிரானைநோக்கி, 'நீ வினவியது-காமனாச்சிரமமும், சிவபெருமான் யோகாப்பியாசஞ் செய்த இடமுமாம்' என்று மறுமொழி கூறத்தொடங்கி, காமன் சிவபெருமானால் அநங்கனான தன்மையை இந்தச் செய்யுளாற் கூறுகின்றனனென்க. சிவபெரு

மர்ன் யோகஞ்செய்கையில் அதனைக் கெடுக்குமாறு மன்மதன் அப்பெருமான்மேல் மலரம்புகளைத்தொடுக்க, அப்பரமன் சினந்து தன் நெற்றிக்கண்களைத் திறந்தனனாக, அதனினின்று எழுந்த தீப்பொறி சுட்டதனால் மன்மதனுன் தன் அங்கத்தையிழந்து அது முதல் அநங்கனாயின னென்பதாம். மாரன்-(ஆண்பெண்களை ஆசை நோயால்) மரணவேதனைப்படுத்துங்கடவுள். மாரன்வேள்-மாரனாகிய வேள். கோபம்-தீப்பொறிக்கு, இலக்கணை. அனங்கன் - ந+அங்கன். வேள் - விருப்பத்தையுண்டாக்குபவன். பூளைவீ, மிகவும்மென்மையாயிருத்தலில் உவமை. பி - ம்:—[1]தேவர். [2]அங்கமேல். [3]வீந்தன்னதன். [4]அனங்கவேள். இரண்டாமடியில் 'எங்கண்மேலெய்யவு மரியவம் பெய்தவன்,......எய்தவும்...,......பரியவம்பு..., அங்கமேல்..., அங்கன்......என வெவ்வேறு பாடங்கள் உள்ளன. (342)

2. வாரணத் துரிவையான் மதனனைச் சினவுநாள்
ஈரமற் [1]றங்கமிங் [2]குகுதலா லிவணெலாம்
ஆரணத் துறையுளா [3]யங்கநா [4]டிதுவுமக்
காரணக் [5]குறியுடைக் காமனாச் சிரமமே.

(இ - ள்.) ஆரணத்து உறையுளாய் - வேதங்களை யிருப்பிடமாகவுடையவனே [வேதத்தில் வல்லவனே]! வாரணத்துஉரிவையான்-யானைத்தோலைப் போர்வையாகவுடையபரமசிவன், மதனனை சினவும் நாள் - மன்மதனைக் கோபித்து எரித்த அக்காலத்திலே, அங்கம்-(அவனது) உடம்பு,ஈரம் அற்று-பசையில்லாமல் சாம்பராகி, இங்கு உகுதலால் - இவ்விடத்திலேசிந்தியதனால், இவண் எலாம் - இந்த இடமெல்லாம், அங்கம் நாடு - அங்கமென்னுந்தேசமாகும்; இதுஉம்-(நீ வினவிய) இவ்விடமும், அ காரணம் குறி உடை காமன் ஆச்சிரமம் ஏ-அத்தன்மையதான காரணப்பெயரையுடைய காமாச்சிரமமாகும்; (எ - று.)

இவ்விடங்களெல்லாம், சிவபெருமானது கோபத்தீக்கு இலக்கான மன்மதனது அங்கம் நீறாகி வீழ்ந்ததைக் கொண்டிருத்தலால் அங்கநாடு எனப் பெயர்பெறும்: நீ வினவிய இடமும் மன்மதனைச் சிவபிரான் சாம்பராக்கிய காரணத்தினால் காமாச்சிரமமென்று பெயர் பெறுமென்பதாம். 'அக்காரணக்குறியுடை' என்பதை, காமனென்பதனோடு இயைத்து, அங்கமற்றதனால் அநங்கனென்று பெயர் பெற்ற காமனது, ஆச்சிரமம்-வாழிடமாயிருந்ததாகுமெனக் கூறலுமாம். புராணாந்தரங்களில் இமயமலைச் சாரலிற் சிவபிரான் தவநிட்டையிலிருக்கையில் அப்பிரானது தவத்தைக் கெடுக்கமுயன்று காமன் அநங்கனாயினனென்று கூறியுள்ளது, கற்பபேதத்தினாற் சமாதானம் கூறத்தக்கது. மதனன்-எல்லாவுயிர்களையும் மதத்தை [களிப்பை]யடையச் செய்பவன். ஆரணத்துஉறையுளாய் - வேதப்பிரதிபாத்யனே! என்க: ஆரணம் துறையுளாய்என்று பிரித்து-வேதமார்க்கத்திலே நிலைநிற்பவனே! என்றுமாம். காமன்-வேட்கையை விளைப்பவன்.வாரணத்துரிவையான் என்றதில் அடங்கிய கதை—அருந்தவமியற்றிப் பெருவரம் பெற்ற கஜாசுரனென்பவன் தேவர்முனிவர் முதலியோரை இடைவிடாது வருத்தித் துரத்த,அஞ்சி ஓடிவந்து சரண

மடைந்த அத்தேவர் முதலியோரது வேண்டுகோளினாற்பரமசிவன் சென்று தன்னை யெதிர்த்துப் போர்செய்ய வந்த அவ்வசுரனைக் காலாலுதைத்துத்தள்ளிக்கொன்று தோலையுரித்துப் போர்த்தருளினனென்ப: வேறும்கூறுவர். பி - ம்:—[1] அங்குமிங்கு, அங்கம் வெந்து. [2] எரித்தலால். [3] அனங்கனுடு, அங்கனுடு. [4] அதுவும். [5] குறியினாற்.

3\. [1] பற்றவா வேரொடும் பசை [2] யறப் [3] பிறவிபோய்
[4] முற்ற [5] வா லுணர்வு[6] மேன் [7] முடுகினா ரறிவுசென்று
[8] உற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனிற்
சொற்றவா [9] மளவதோ [10] மற்றிதன் றூய்மையே.

(இ - ள்.) பற்று - பாசமும், அவா - ஆசையும், வேரொடு உம்-வேருடனே, பசை அற - தொடர்ச்சிநீங்கவும், பிறவி போய் முற்ற - பிறப்புக்களொழிந்து போகவும், வால் உணர்வு மேல் முடுகினார் - தத்துவஞானத்தைப் பெறவேணுமென்று விரும்பினவர்களின், அறிவு-உணர்வு, சென்று உற்ற-போய்ச் சேரப்பெற்ற,வானவன்-பரமசிவன், இருந்து-(இவ்விடத்திலே) இருந்து, யோகு செய்தனன் எனின்-யோகாப்பியாசஞ்செய்தா னென்றால், இதன் தூய்மை-இவ்விடத்தினது சுத்தமானதன்மை, சொற்ற ஆம் அளவதுஓ - சொல்லக்கூடிய தன்மையையுடையதோ? (எ - று.)

இது, தத்துவஞானத்தைத் தனது நிலையாலும் உபதேசிக்க வல்ல சிவபிரான் தவஞ்செய்த இடமாகுமென்று அதன் சிறப்பை எடுத்துக்கூறினன் முனிவனென்க. "சங்கராத் ஜ்ஞாநமந்விச்சேத் [சிவபெருமானிடத்தினின்று தத்துவஞானத்தைப் பெறக்கடவன்]" என்று நூல்கள் கூறுதலால் தமது பிறவிநோயறுமாறு தத்துவஞானத்தைப் பெறவேணுமென்று விரும்புகின்றவர்சிவபெருமானைச் சேர்வ ரென்பதுபற்றி, 'வாலுணர்வுமேன்முடுகினாரறிவு சென்றுற்றவானவன்' என்றார். அறியாமை காரணமாகத் தோன்றும்பற்று அவாக்கள் நீங்க, பிறப்பு நீங்கும்: பிறப்பு நீங்க, மோட்சமுண்டாமென்று "அற்றதுபற்றெனி லுற்றது வீடுயிர்" என்ற பாசுரத்திற் கூறிய பொருளை இங்குக் காண்க. பற்று-அகங்கார மமகாரங்கள். அவா—ஒன்றைப் பெறவேணுமென்னும் விருப்பம். வேர் - பற்று அவாக்களால் தோன்றும் மயக்கமென்னலாம்; வேறுவகையாகவும் கூறுவர். சொற்ற = சொல்ல: செயவெனெச்சம்; பெயரெச்சமன்று. யோகு = யோகம்: இயமம் நியமம் முதலிய எட்டுறுப்புக்களுடனே கூடிய தவம். பி - ம்:—[1] பற்றவாவொடுமனம், பற்றவாவெடுமற. [2] இற, உற. [3] பரிவு. [4] முற்று. [5] வான். [6] போய். [7] முறுகினார். [8] உற்று. [9] அளவிதோ. [10] அன்று. (344)

4.—விசுவாமித்திரன் முதலிய மூவரும் ஒருநாள் அங்குத் தங்கி, மறுநாள் ஒருபாலைவனஞ் சேர்தல்.

என்றவந் தணனியம் பலும் [1] வியந் தவ்வயின்
சென்றுவந் தெதி[2] ரெழுஞ் [3] செந்நெறிச் செல்வரோடு
அன்றுறைந் [4] தலர்கதிர்ப் பரிதிமண் டிலமகல்
குன்றி[5] னின் றிவரவோர் சுடுசுரங் குறுகினார்.

(இ - ள்.) என்று அ அந்தணன் இயர்பலும் - என்று அந்த விசுவாமித்திரமுனிவன் சொல்லியவளவிலே, - (இராமலட்சுமணர்கள்), வியந்து-ஆச்சரியமுற்று, அ வயின் சென்று-(மூவரும்) அந்த இடத்திலேபோய்,—உவந்து எதிர் எழும் செம் நெறிசெல்வரோடு - மகிழ்ந்து (தம்மை) எதிர் கொள்ளவருகின்ற சன்மார்க்கத்தையே செல்வமாகவுடைய முனிவர்களுடனே, அன்று உறைந்து-அன்றையதினம் முழுவதும் (அவ்விடத்துத்) தங்கி, (மறுநாள்), அலர் கதிர் பரிதி மண்டிலம் - பரவி விளங்குகின்ற கிரணங்களையுடைய சூரிய மண்டலம், அகல் குன்றில் நின்று இவர -விசாலமான உதயகிரியில் நின்றுமேலேறுகையில், ஓர் சுடுசுரம் குறுகினர்-வெப்பமான தன்மையையுடைய ஒரு பாலை நிலத்தையடைந்தார்கள்; (எ - று.)

அங்குவசிக்கின்ற முனிவர்கள் விசுவாமித்திரன் முதலிய மூவர்களின் வருகையையுணர்ந்து எதிர்கொண்டவராக, அம்முனிவர்களுடனே அவர்கள் அங்குத் தானே அன்றுவசித்து மறுநாள்பயணமாகி நடுப்பகலில் ஒருபாலைவனஞ் சேர்ந்தன ரென்பதாம். பாலை-நீர் நிழலின்றி வெப்பம்மிக்க நிலம். ஓர்-ஆராய்தற்கு உரிய என்றுமாம். பி-ம்:—[1] வியந்தவன்வயிற், வியந்தனவயிற், வியந்தவளவிற், வியந்தளவினிற். [2] தொழும். [3] சேணெறிச், சென்னெறிச். [4] அழல். [5] வந்திவர, வந்திழிவது, வந்தணைய, வந்தணய. (345)

5.—இதுமுதற் பன்னிரண்டுகவிகள்-அந்தப்பாலைநிலத்தின் வருணனை.

பரிதிவா னவனிலம் பசை[1] யறப் [2] பருகுவான்
விருதுமேற் கொண்[3] டுலாம் வேனிலே [4] யல்லதோர்
[5] இருதுவே றின்மையா லெரி[6] சுடர்க் கடவுளும்
கருதின்வே முள்ளமுங் காணின்வேம் நயனமும்.

(இ - ள்.) பரிதி வானவன் - சூரியதேவன், நிலம் பசை அற-நிலத்திலுள்ள சாரம் முழுவதும் ஒழியும்படி, பருகுவான் - (அதிலுள்ளநீரை) உறிஞ்சும்பொருட்டு, விருது மேல்கொண்டு - வெற்றிக்கொடியை மேலேகொண்டு [உயர்த்தி], உலாம்-சஞ்சரிக்கின்ற, வேனிலே அல்லது-வெயிற்காலமேயல்லாமல், வேறு ஓர் இருது இன்மையால் - வேறொருகாலம் (அந்தநிலத்திலே எப்பொழுதும்) இல்லாமையினாலே,எரி சுடர் கடவுள்உம்-பற்றி யெரிகின்ற அக்கினி தேவனும், கருதின் - (அந்நிலத்தின் தன்மையை) நினைப்பானாயின், உள்ளம்உம் வேம் - (அவனது) நெஞ்சும் வெந்துபோகும்; காணின் - பார்ப்பானாயின், நயனம்உம் - கண்களும், வேம் - வெந்துபோகும்;

நீராகிய சாரமுழுவதையும் சூரியன் உட்கொண்டு உமிழ்ந்தகோது போல்வது அந்தப்பாலைநில மென்றும், அந்நிலத்தில் வெயிற்காலத்தோடு மழைபனிக்காலங்களோடு வாசியற எப்போதும் இயற்கையாகவே வெப்பம் மிகுந்துள்ள தென்றும்,அவ்வெப்பம் அக்கினியின் வெப்பத்தினும் மிக அதிகமான தென்றும் கூறியவாறு. வேனில்-இளவேனிலும், முதுவேனிலும். இருது = ருது: இரண்டுமாதங் கொண்ட காலம்: அது-இளவேனில் முதுவேனில் கார் கூதிர் முன்

பனி பின்பனி என அறுவகைப்படும்; சித்திரைமுதலாக இவ்விரண்டுமாதம் ஒருபருவமாம். பரிதிவானவன் நிலம் பசையறப் பருகுதலை "நானிலம்வர்க்கொண்டு நன்னீரறமென்று கோது கொண்ட, வேனிலஞ்செல்வன் சுவைத்துமிழ்பாலை" என்ற இடத்துங் காண்க. வேனிற்காலத்து வெம்மையைத் தருஞ் சூரியனது தன்மையை, முதலிரண்டடிகளில் தற்குறிப்பேற்றவணியினால் விளக்கினார். பின்னிரண்டடி உயர்வுநவிற்சியணி. பி-ம்:—[1]இற. [2]பருகலான், பருகிவான். [3]உலாய். [4]அன்றிவேறு, அன்னதோர். [5]இருதுவொன்று, இருதுவென்று. [6]முதற், முகக். (346)

6. [1]படியின்மேல் வெம்மையைப் பகரினும் [2]பகருநா
[3]முடியவேம் முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
[4]விடியுமேல் வெயிலும்வேம் மழையும்வேம் மின்னினோடு
இடியும்வே மென்னில்வே றியாவைவே வாதவே.

(இ - ள்.) படியின்மேல் வெம்மையை-(அப்பாலை) நிலத்திலேயுள்ள வெப்பத்தை, பகரின்உம்-சொன்னாலும், பகரும் நா-சொல்லுகிற நாக்கும், முடிய வேம் - முழுவதும் வெந்துபோம்; (அந்தநிலத்தின் வெப்பத்தால்), முடிய மூடு இருள்உம் - (உலக முழுவதிலும்) மறைத்துக்கொண்டு பரவுந்தன்மையுள்ள அந்தகாரமும், வான் முகடுஉம் - அண்டகோளத்தினது மேல் முகடும், வேம்-; விடியும் ஏல்-உதயமானால், வெயில்உம்-சூரியனும், வேம் - வெந்துபோவான்; (அந்நிலத்துக்கு மேலாகவந்தால்), மழைஉம்-மேகங்களும், வேம் - வெந்துபோகும்; மின்னினோடு இடிஉம் - (அந்நிலத்துமேல் தோன்றும்) மின்னல்களும் இடிகளும், வேம்—; என்னில்-என்றால், வேறு யாவை வேவாத - (அந்நிலத்தில்) வெந்து போகாதவை வேறு எவையுள? (எ - று.)

குளிர்ந்தபொருளோடு வெம்மையுள்ள பொருளும், உயரத்திலுள்ள பொருளோடு தாழத்திலுள்ள பொருளும் வாசியற எல்லாப் பொருள்களும் அங்கு நிலவெப்பத்தால் வெந்துபோகுந் தன்மையனவாம்; அங்ஙனம் மிகப் பயங்கரமாகவுள்ள பாலையினியல்பை எடுத்துக்கூறுதற்கு நாக்குத்தானும் கூசுகின்றதென்பதாம். "வதிகொண்டதோர் வெவ்வழல் வாய்சொலின்வேம்" என்றார்,சிந்தாமணியாரும். இருளும் வேம்-இரவிலும் வெப்பம்மிகுமென்க. [1]படியின் மேலுலகும்வேம், படியும்வேம்வெம்மையை. [2]பகருநாள். [3]முடியுமே ..., முடியுமேலுலகைமூடு, முடியவேமுயரின்மூடு, முடியவேமிரவின்மூடு. [4]வெடிவின் மேன், விடியின் மேன். (347)

7. [1]விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்செவே செருமுகத் [2]தமர்செயுந் திறனிலா
வஞ்சர் [3]தீ வினையினான் [4]மானமா [5]மணியிழந்து
அஞ்சினார் நெஞ்சுபோ [6]லென்றுமா றுதரோ.

(இ - ள்.) செரு முகத்து - யுத்தகளத்திலே, செம் செவே - மிகவும் செவ்வையாக, (பகைவர்கள்வீசிய), அம்புஉம் வேல்உம்-, விஞ்சு வான் மழையின் - மிகுந்த மேகத்தின் மழைத்தாரைபோல,

மேல் பட - (தங்கள்) மீது பொருந்த, (அவற்றைத் தாங்கி), அமர் செயும் - போர் செய்கின்ற, திறன் - வல்லமை, இலா - இல்லாத, வஞ்சர்-வஞ்சனைக்குணமுடையவர்கள் (செய்யும்), தீவினையினால் - கொடுந்தொழிலால், மானம் மா மணி இழந்து - மானமாகிய சிறந்த இரத்தினத்தையிழந்து, அஞ்சினார்-(தோற்றவர்களான)வீரர்களின், நெஞ்சு போல் - மனம்போல, என்றும் ஆறாது - (அப்பாலைநிலம்) எப்போதும் தாபந்தணியாமற் கொதிக்கும்; (எ-று.)

போர்முகத்தில் தம்மாலியன்றவளவும் பொருது தோற்று மானத்தையிழந்தவரின் மனமோ எப்போதும் கொதிப்புள்ளதாகும்; அப்படிப்பட்ட மனத்தை எப்போதும் வெப்பந்தணியாத பாலைக்கு உவமை கூறினார். இங்ஙனம் பொருந் திறனிலா வஞ்சகரின் தீவினையினால் வீரர்கள் மானமிழந்ததற்கு, சூதாடிச்செல்வமனைத்தையுந் தோற்ற நளன் பாண்டவர் முதலியோரை உதாரணமாகக் காண்க. மானமாவது - எப்பொழுதும் தம்நிலையினின்று தாழாமையும், ஊழ் வினையினால் தாழ்வு வந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். மானத்திற்கு மணியையுவமைகூறியது, அருமைக்கும் மிகச்செவ்விதாகக் காத்தற்கு உரியதாந்தன்மைக்குமென்க. மானம் ஆம் மணி என்றும் பிரிப்பர். மழையின்மேல் - மழையைவிஞ்ச என்றுமாம். [2]அன்றியே என்றபாடத்திற்கு—தம்மேல் அம்பும் வேலும்படச் செருமுகத்துத் தோற்பதன்றி, வஞ்சர்தீவினையினால் தோற்று அஞ்சினார்நெஞ்சு போல, பாலைவனம் கொதிப்பு மாறாதென்க. பி-ம்:—[1]விஞ்சை. [3]தீவினைகளான், தீவினைகளாம். [4]ஆவிமா. [5]மழையிழந்து, மணி விழுந்து. [6]ஒன்றும். (348)

8. [1]பேய்பிளந் [2]தொக்கநின் றுலர்பெருங் கள்ளியின்
தாய்பிளந் துக்ககா [3]ரகில்களுந் [4]தழையிலா
வேய்பிளந் துக்கவெண் டரளமும் விடவரா
வாய்பிளந் [6]துக்கசெம் மணியுமே வனமெலாம்.

(இ-ள்.) நின்று உலர் - உலர்ந்து நிற்கிற, பெரு கள்ளியின் தாய் - பெரிய கள்ளிமரத்தினது வைரம்பற்றிய அடியிடம், பேய் பிளந்து ஒக்க - பேய் உடல் பிளந்துநின்றாற்போல, பிளந்து - பிளவு பட்டு, உக்க-(அதினின்று) வெளித்தோன்றிய, கார் அகில்கள்உம் - கருநிறமுடைய அகிற்கட்டைகளும், தழை இலா வேய் பிளந்து - இலைகளில்லாமலுலர்ந்த மூங்கில்கள் பிளந்து, உக்க - (அவற்றினின்று) சிந்திய,வெள் தரளம்உம்-வெண்ணிறமான முத்துக்களும், விடம் அரா வாய்பிளந்து-விஷத்தையுடைய நாகங்கள் (தம்) வாய் திறந்து, உக்க-சிந்திய, செம் மணிஉம்ஏ-சிவந்தநிறமுள்ள மாணிக்கங்களுமே, வனம்எலாம் - அக்காடுமுழுவதும், (நிறைந்துள்ளன); (எ-று.)—வினை வருவிக்க.

அப்பாலையில் அகில் முத்து செம்மணி என்ற இவைகளே உள்ளன வென்க. கள்ளிமுதலியன பாலைநிலத்தின் கருப்பொருள்களாம். முற்றின கள்ளியின் உள்ளிருந்து அகிலுண்டாவதை "கள்ளிவயிற்றி னகில்பிறக்கும்" என்றதனாலும், மூங்கிலில் முத்துப் பிறத்தலை "**கழை கனனலாவின்பல் கட்செவி கார்,இந்து உடும்பு

கரா முத்தமீனும்'' என்றதனுலுங் காண்க. பி - ம்:—[1]காய். [2]உக்க. [3]அகிலுமே, அகிலுமோர். [4]தழைபெரு, தழைகிலா. [5]உக்கநன், உக்கமர். (349)

9. பாரு[1]மோ டாதுநீ டாதெனும் [2]பாலதே
சூருமோ டாது[3]கூ டாதரோ சூரியன்
தேருமோ டாது[4]மா [5]மாகமீ தேரினேர்
காருமோ டாதுநீள் காலுமோ டாதரோ.

(இ - ள்.) பார்உம் - பூதேவதையும், ஓடாது - (அந்நிலத்தை விட்டு ஓடிப்போக முயலுமே யாயினும்) ஓடிப்போகமாட்டாது; (ஏனெனில்), நீடாது எனும் பாலதுஏ - (இடத்தைவிட்டு) அப்புறப் படாதென்னுந் தன்மையையுடையது (ஆதலால்); சூர்உம்-(அந் நிலத்துக்குஉரிய) காளியாகிய தெய்வமும், ஓடாது - (அந்நிலத்தை விட்டு ஓடிப்போகமுயலுமேயாயினும்) ஓடிப்போகமாட்டாது; (ஏனெனில்), கூடாது அரோ - (நிலத்தெய்வம் நிலத்தைவிட்டு அகல) முடியாதன்றோ? மா மாகம் மீ - (அந்நிலத்துக்கு நேராகப்) பெரிய ஆகாயத்திலே, சூரியன் தேர்உம் - சூரியனது இரதமும், ஓடாது - (அந்நில வெப்பத்தால் குதிரைகள் சோர்வடைவதனல்) விரைந்து செல்லமாட்டாது [மந்தகதியாகவே செல்லும்]; (வெப்பந்தணிப்ப தற்குஉரிய குளிர்ந்த மழையுங் காற்றும் அங்கு இல்லையோ எனின்), —தேரின் - ஆலோசிக்குமிடத்து, நேர் - (அந்நிலத்துக்கு) நேராக, கார்உம்-மேகமும், ஓடாது - (நிலவெப்பத்திற்கு அஞ்சி வானத்திற்) செல்லாது; நீள் கால்உம் ஓடாது - வீசுகின்ற காற்றும் (அங்ஙனமே) செல்லாது; (எ - று.)

பூமி 'அசலா [சலியாதது]' என்று பெயர் பெறுமாதலால், 'பார் நீடா தெனும்பாலது' என்றார்; நீடுதல்-நீங்குதல். முதலிரண் டடிகளில் ஓடாது என்பதை எச்சமாகக் கொண்டு, பாரும் ஓடாமல், நீடாது-நிலைத்திருக்கமுடியாதென்றும்; சூரும் ஓடாமல், கூடாது - (இருக்க) இயலாதென்றும் கூறுவாரு முளர். சூரியன் தேரும் ஓடாது - சூரியன் இரதமும் அந்நிலத்திற்கு நேராகச் செல்லாதெனி னுமாம். அந்நிலத்தில், காலை நண்பகல் மாலையென்னும் காலவேறு பாடின்றிக் கொதிப்பு மிக்குள்ள தன்மைபற்றி, 'சூரியன்தேருமோ டாது...' என்றார். மாகம் = மஹாகம். பி-ம்:—[1]ஓடாமை. [2]பாலதோ. [3]கூடாததே, கூடார்ததோர். [4]மெய், நேர். [5]தேரினேர் மூரிவெம், தேரில்வானூர்பெரும், தேருமேதேரினேர், தேரின் மீதேறினோர், தேரினேர்மூசுவெங், வானமேதேரினோர், மாகமீதேருநேர், மாகமீ தேறிநேர். (350)

10. கண்[1]கிழித் துமிழ்விடக் கனலரா வரசு[2]கார்
விண்[1]கிழித் [3]தொளிருமின் னணையபன் மணி[4]வெயின்
மண்[1]கிழித் திட[5]வெழுஞ் சுடர்கள்மண் மகளுடற்
புண்[1]கிழித் திடவெழுங் [6]குருதியே [7]போலுமே.

(இ - ள்.) கண் கிழித்து உமிழ் விடம் கனல் அரா அரசு - (பார்ப்பவர்)கண்களை (அச்சமுறுத்தி) ப்பிளந்துகொண்டு கக்குகின்ற

விஷாக்கினியையுடைய (பாதாளலோகத்திலுள்ள) நாகராசனுன ஆதிசேடனது, கார் விண் கிழித்து ஒளிரும் மின் அனைய பல் மணி-கருநிறமுள்ள வானத்தைப் பிளந்துகொண்டு பிரகாசிக்கின்ற மின்னல்களையொத்து விளங்குகின்றபல மாணிக்கங்களிலிருந்து,வெயில் மண் கிழித்திட எழும் - சூரியகிரணம் அந்நிலத்தைப்பிளக்க (அவ் வெடிப்புக்களின்வழியாக) மேலெழுகின்ற, சுடர்கள்-சிவந்த ஒளிகள், மண்மகள் உடல் புண் கிழித்திட எழும் குருதியே போலும்-பூமிதேவியினது உடம்பிலுள்ளவிரணங்கள் வாய்திறக்க (அவற்றினின்று) வெளியெழுகின்ற செந்நீரையே ஒக்கும்; (எ-று.)

பாலைவனநிலம் நீரற்றுப் பாதலம்வரையும் கமர்வெடித்துக் கிடக்குமென்றுகூறியவாறு. நிலவெடிப்பின்வழியாய்மேலெழுந்து விளங்குகின்ற ஆதிசேடன் முதலியசிறந்தநாகங்களின் மாணிக்கக் காந்தியானது, அதிக வெப்பத்தால் பூமிதேவியின் உடலில் தோன்றிய புண் வெடித்துவிட அப்புண்களிலிருந்து வெளிப்படுகின்ற இரத்தத்தைப்போலுமென்க; இந்தத் தற்குறிப்பேற்றவணியால், நில வெம்மை தொனிக்கும். கண் கிழித்து-(கோபத்தால் நாகங்களின்) கண்கள் பிதுங்கி எனினும் அமையும். பி-ம்:—[1]விழித்து, கிழிந்து. [2]கால். [3]உமிழும். [4]எலாம். [5]விடும். [6]குருதிநீர். [7]போன்றதே, போலுமால். (351)

11. [1]புழுங்குவெம் பசியொடு[2]புரளும்[3]பேரரா
விழுங்கவந் [4]தெழுந்தெதிர் [5]விரித்த வாயின்வாய்
[6]முழங்கு[7]திண் [8]கரிபுகு [9]முடுகி மீமிசை
[10]வழங்குவெங் கதிர் [11]சுட மறைவு [12]தேடியே.

(இ - ள்.) (அந்நிலத்திலே), புழுங்கு - (மனம்) தவித்தற்குக் காரணமான, வெம் பசியொடு-கொடியபசியுடனே, புரளும்-புரண்டு கொண்டிருக்கின்ற, பேர் அரா - பெரும்பாம்பு, விழுங்க-(அகப்பட்டவற்றை) உட்கொள்ளும் பொருட்டு, எழுந்துவந்து-(தன்னிடம்) விட்டுவந்து, எதிர்விரித்த-எதிரிலேநன்றாகத்திறந்த, வாயின்வாய் - வாயிலே, முழங்கு திண் கரி - பிளிறுந் தன்மையுள்ள வலிய யானை, மீமிசைவழங்கு வெம்கதிர் சுட மறைவு தேடி - ஆகாயத்திலே வீசுகின்ற உஷ்ணமான சூரிய கிரணங்கள் சுடுவதனால் (அவ்வெப்பத்திற்கு ஆற்றாமல்) மறைதற்கு இடமான நிழலைத்தேடி, முடுகிபுகும்-விரைந்துசென்று நுழையும்; (எ-று.)

வழிதப்பி அங்குச் சேர்ந்து வெம்மையைத் தாங்கமாட்டாமல் நிழலைத்தேடித் திரியும் யானை, பசியினால் தவித்து 'என்ன இரை கிடைக்கும்?' என்று தன்னெதிரேவரும் பெரும்பாம்பின் அங்காந்த வாயிலேபுகுமென்பதாம். "களிறுபாந்தட்பட்டென" "யானை விளிபடத்துழவுமகல்வாய்ப் பாந்தள்" என்பன, இங்கு ஒப்புநோக்கத் தக்கன. புழுங்கு-பசியினால் உடல்வியர்க்கின்ற என்பாருமுளர். பி - ம்:—[1]புழுங்கி. [2]வாழும். [3]போரரா. [4]எதிரெதிர். [5]விரிந்த. [6]முழங்கி. [7]வெங். [8]கரிபுக. [9]முகடு, முடுகு, முழுகு. [10]வழங்க. [11]சுடா. [12]நேடியே. (352)

12. ஏகவெங் கனலர சிருந்த [1]காட்டினில்
[2]காகமுங் கரிகளுங் கரிந்து [3]சாம்பின
மாகவெங் [4]கனலெனும் வடவைத் தீச்சுட
மேகமுங் கரிந்திடை [5]வீழ்ந்த [6]போலுமே.

(இ - ள்.) ஏகம் வெம் கனல் - ஒப்பில்லாத வெப்பமுடைய அக்கினிதேவன், அரசு இருந்த - அரசாட்சிசெய்து வீற்றிருக்குமிடமான, காட்டினில் - அப்பாலைவனத்திலே, காகம்உம் கரிகள்உம் கரிந்து சாம்பின - காக்கைகளும் யானைகளும் (அந்நிலவெப்பத்தால் வெந்து) கரிந்து விழுந்துகிடப்பவை,—மாகம் வெம் கனல் எனும் வடவை தீசுட மேகம்உம்கரிந்து இடை வீழ்ந்தபோலும் - ஆகாய முழுவதும் அளாவுகின்ற (அந்நிலத்திற்பொருந்திய) வெவ்விய அக்கினியென்கிற படபாமுகாக்கினி எரிப்பதனல் மேகங்களும்கருகி (அந்நிலத்தின்) இடையிடையேவீழ்ந்தனவற்றையொக்கும்;

வெம்மையை யாற்றமாட்டாமல் வெந்து கரிந்து வீழ்ந்த காகமும் யானைகளும், அந்நிலத்தின் எரியினல் வானத்துச்செல்லும் மேகங்கள் கரிந்து வீழ்ந்தவற்றை யொக்குமென்பதாம்: தற்குறிப்பேற்றவணி. காகம் சிறு மேகத்திற்கும், யானை பெருமேகத்திற்கும் உவமை. கனலெனும்வடவை - அபநுதி. பி - ம்:—[1]நாட்டினில், காட்டிடை, நாட்டிடை. [2]காகவெங். [3]சாய்வன, சாய்ந்தன. [4]கதிர். [5]விழுந்த, வீழ்வ. [6]போன்றதே, போலவே. (353)

13. கானகத் தியங்கிய கழுதின் தேர்[1]க்குலம்
[2]தானகத் தெழுதலால் தலைக்கொண் டோடிப்போய்
மே[3]னிமிர்ந் [4]தெழுந்திடில் விசும்பும் வேமென
வானவர்க் கிரங்கிநீர் [5]வளைந்த [6]தொத்ததே.

(இ - ள்.) கானகத்து இயங்கிய - அவ்வனத்தினிடத்திலே உலாவுகின்ற, கழுதின் தேர் குலம்-கானற்கூட்டமானது,—'தான் - வெப்பம், அகத்து எழுதலால் - அவ்விடத்துத் தோன்றிக்கொண்டிருப்பதனல், தலைக்கொண்டு ஓடி போய் - (அவ்வெப்பம்) அதிகப்பட்டு விரைந்துசென்று, மேல் நிமிர்ந்து எழுந்திடில் - மேலேஓங்கியெழுமானல், விசும்பும் வேம் - தேவலோகமும் வெந்துபோமே!' என-என்றுகருதி, வானவர்க்கு இரங்கி - தேவர்கள் பக்கலிரக்கங்கொண்டு, நீர்-நீர்க்கடவுள், வளைந்தது ஒத்தது—; (எ - று.)

கானல் - நீர்போலக்காணப்படுவது. அங்குக் கானல் தோன்றுவது-'அவ்விடத்துள்ளவெப்பம் இன்னும் அதிகப்பட்டு வானத்திலும் பரவுமாயின், வானுலகும் வெந்துவிடுமே!' என்று இரக்கங்கொண்டு நீர்க்கடவுள் வெப்பம் மேலேபோகாமலிருக்கும்படி தான் வளைந்ததை யொக்கு மெனக் குறித்தார்: தற்குறிப்பேற்றவணி. கழுதின்தேர் - பேய்த்தேர், கானல். கழுது-பேய். இத்தலைக்கு அத்தலையும், அத்தலைக்கு இத்தலையுமாகக் காணப்படுதலால், 'இயங்கிய' என்றார். விசும்பு-ஆகுபெயர். பி-ம்:—[1]புனல். [2]தானகக் கிரிகளின், தானகைக்கிரிகளிற், கானகல்கிரிகளிற், தானகங்கரித்தலின், தானமாக்கிரிகளிற். [3]நிமிர்த்து, நிவந்து. [4]எழுந்தனல். [5]வளைத்தது. [6]ஒக்குமே, ஒத்தவே. (354)

14. [1]ஏய்ந்தவக் கனலிடை யெழுந்த கானற்றேர்
காய்ந்த[2]வக் [3]கடுவனங் [4]காக்கும் [5]வேனிலின்
வேந்தனுக் கரசுவீற் றிருக்கச் [6]செய்ததோர்
பாய்ந்த [7]பொற்[8]காலுடைப் பளிக்குப் பீடமே.

(இ - ள்.) ஏய்ந்த அ கனலிடை எழுந்த தேர் கானல்-(அந் நிலத்திற்) பொருந்திய அவ்வெப்பத்தினின்று தோன்றிய பேய்த் தேரெனப்படுங் கானலானது, காய்ந்த அ கடு வனம் காக்கும் - கொதிக்கின்ற அந்தக்கொடிய வனத்தையாள்கின்ற, வேனிலின் வேந்தனுக்கு - கோடையாகிய அரசனுக்கு, அரசு வீற்றிருக்க - அர சாட்சிசெய்ய வீற்றிருப்பதற்காக, செய்தது - செய்யப்பட்டதாகிய, ஓர்—, பாய்ந்த பொன்கால் உடை - நீண்ட பொற்கால்களையுடைய, பளிங்கு பீடம்—; (எ-று.)

அந்நிலத்தி லெழுகிற கானல், வேனிலரசன் வீற்றிருக்க அமைத்த பொற்காற் பளிங்காசனத்தை யொக்கு மென்றபடி; தற் குறிப்பேற்றவணி. கனலுக்குப் பொற்காலும், வெள்ளிய நீர் மய மாய்த்தோன்றுங் கானலுக்குப் பளிங்குப்பீடமும் ஒப்பு. தேர் = பேய்த்தேர். நாமைகதேசம். பி-ம்:—[1]ஏய்ந்ததக், ஏய்ந்ததிக். [2]நற். [3]தனி, கனல். [4]கடுக்கும். [5]வேனலின். [6]செய்தரோ, மேய்தோர். [7]நற். [8]காலிடை. (355)

15. தாவரு மிருவினை [1]செற்றுத் [2]தள்ளரும்
மூவகைப் [3]பகையரண் [4]கடந்து முத்தியில்
போவது [5]புரிபவர் மனமும் [6]பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு [7]மற்றதே.

(இ - ள்.) தா வரும் - துன்பம் வருதற்குக்காரணமாகிய, இரு வினை - (நல்வினை தீவினை என்னும்) இருவகைவினைகளை, செற்று - ஒழித்து, தள்ள அரு மூவகை பகை அரண் கடந்து - நீக்குதற்கு அருமையான (காமம் வெகுளி மயக்கம் என்னும்) மூன்றுவகைப் பகையாகிய மதில்களைத் தாண்டி, முத்தியில் போவது புரிபவர் - மோட்சலோகத்திற் செல்லுதலை விரும்பிய ஞானியரது, மனம்உம் -உள்ளமும், பொன் விலை பாவையர் மனம்உம் - பொன்னை(த் தமது இன்பத்திற்கு) விலையாகக்கொள்ளுகிற வேசைமாதரது நெஞ்சமும், போல்—, பசைஉம் அற்றது - சிறிதும் பசையில்லாதது, (அந் நிலம்); (எ-று.)

பாலைநிலத்தின் ஈரமற்ற தன்மையில் முமுட்சுக்களின் மனத் தையும் வேசையரது உள்ளத்தையும் உவமைகூறினர். இராச தானியான நகரத்துக்கு எளிதிற் புகமுடியாதபடி மும்மதில் களும் அம்மதிலுக்குப் புறம்பு காட்டரணும் அமைதல்போல, மோட்சலோகமாகிய நகர்க்குள் எளிதிற்புகமுடியாதபடி காமம் வெகுளி மயக்கம் என்னும் மும்மதில்களும் அவற்றுக்குப் புறம்பே இருவினைக்காடுகளும் அமைந்துள்ளன என்க. இவற்றைக்கடந்த வரே முத்தியிற் போவதுபுரிபவர். முத்தியிற்போகுபவரது மனத் துக்குப் பசை - எம்பெருமானது திருவடியிலன்றி வேற்றுப்பொரு

ளில் அன்பு; வேசியர்மனத்துக்குப் பசை - பொருட்பற்றின்றி உண்மையாகக்கொள்ளும் காதற் பற்று. நிலத்திற்குப்பசை - ஈரம்: பசைஎன்ற இது, சிலேடை. தா அரும் என்று பிரித்து அழிதற்கு அருமையான எனினுமாம். பி - ம்:—[1] தள்ள, தள்ளி, துறந்து. [2] முற்றிய. [3] அரணமுங். [4] கடிந்து. [5] புரிந்தவர். [6] பொய். [7] அற்றவே. சிலபிரதிகளில் "தோமறுமிருவினைத் தொடர்புமுற்றிய, தேவருளிருவினைசெற்றுமுற்றிய...செற்றுத்தேறிய, தோமருமிருவினை துறந்ததூநெறி, ஓவருமிருவினையிற்றுமுற்றெரி" என்று முதலடியிற் பிரதிபேதம்; இங்கே சிலபிரதிகளிற் காணப்படுஞ் செய்யுள் வருமாறு:—திருகிக்காய்சுரஞ்சிந்திக்கச் சிந்தைநொந், துருகிப் போமென்றுரைசெய வேண்டுமோர், கருகிக் கண் சிவந் [1] துண்டுமண் கான்றுநெய், பருகிப்பின்னையும் பாற்கடற்றுஞ்சுமால். பி-ம்:- [1] உண்ட. [2] நெய்ப். இச்செய்யுள் சிலபிரதிகளில் "பொரிபரல்" (16) என்ற பாடற்குப் பின். (356)

16. பொரிபரல் [1] படர்நிலம் [2] பொடிந்து கீழுற
விரிதலிற் பெரு[3] வழி [4] விளங்கித் தோன்றலால்
[5] அரிமணிப் [6] பணத்தரா [7] வரச ருட்டினும்
எரிகதிர்க் [8] கினிதுபுக் கியங்க [9] லாயதே.

(இ - ள்.) பொரி - (வெப்பத்தினாற்) பொரிந்த, பரல் - பருக்கைக்கற்கள், படர் - பரவியுள்ள, நிலம் - அந்தநிலமானது, பொடிந்து - வெடித்து, கீழ் உற விரிதலின் - பாதாளலோகம்வரையிலும் விரிந்துள்ளதனால், பெரு வழி விளங்கி தோன்றலால் - பெரியவழி விளங்கிக்காணப்படுதலால்,—எரி கதிர்க்கு - தபிக்கின்ற சூரியகிரணத்துக்கு, அரி மணி பணத்து அரா அரசன் நாட்டின்உம்-சிவந்த மாணிக்கங்களையுடைய படங்களையுடைய சர்ப்பராசனது இடமாகிய பாதாளலோகத்திலும், இனிது புக்கு இயங்கல் - எளிதிற்பிரவேசித்து உலாவுதல், ஆயது-உண்டாயிற்று; (எ - று.)

அங்குக் கமர் மிக்கிருக்கின்றமை, இதனாற் கூறப்படுகின்றது. அரி - அழகுமாம். பி - ம்:—[1] படு, பட. [2] பொரிந்து, போழ்ந்து, பொருந்து. [3] வெளி. [4] விளங்க, விளக்கில். [5] அரு, பரி. [6] பணிமுடி. [7] அரசர். [8] இனிய. [9] ஆனதே. (357)

17.—நிலவெம்மையால் குமரர்கள் வருந்துவரேயென முனிவன் சிந்தித்தல்.

எரிந்தெழு கொடுஞ்சுர [1] மினைய தெய்தலும்
அருந்தவ னிவர்பெரி தளவி [2] லாற்றலைப்
பொருந்தின ராயினும் பூவின் மெல்லியர்
வருந்துவர் [3] சிறிதென [4] மனத்தி [5] னேக்கினன்.

(இ - ள்.) இனையது - இத்தன்மையதான, எரிந்து எழு - அனல்பற்றியெழுகின்ற, கொடு சுரம் - கொடிய பாலைநிலத்தை, எய்தலும் - (மூவரும்) அடைந்தவளவிலே,—அரு தவன் - விசுவாமித்திரமுனிவன், 'இவர் - இவ்விராமலக்குமணர், பெரிது அளவு

இல் ஆற்றலே பொருந்தினர் ஆயின்உம் - சிறந்த அளவில்லாத சக்தியையுடையவர்களானாலும், பூவின் மெல்லியர் - மலரினும் மிக மெல்லிய இயற்கையுடையர்: (ஆதலால்), சிறிதுவருந்துவர்-(நில வெப்பத்தாலும் வழிநடையாலும்) கொஞ்சம் வருத்தமடைவார்கள்,' என-, மனத்தில் நோக்கினன் - மனத்திலே எண்ணினன்;

இந்தக்குமரர் பேராற்றல் படைத்துள்ளாராயினும், பூவினும் மெல்லியராதலாற் சிறிதுவருந்துவரேயென்று விசுவாமித்திரன் கருதினன். பி-ம்:—[1] அனையது. [2] ஆற்றலின், ஆற்றலால். [4] பெரிதென. [3] மனத்துள். [5] எண்ணினன். (358)

18.—வெம்மை தோன்றுமைக்காக முனிவன் அவர்கட்கு இரண்டு விஞ்சைகளை உபதேசித்தல்.

நோக்கின [1] னவர்முக [2] நோக்க [3] நோக்குடைக்
கோக்குமா ரருமடி குறுக நான்முகன்
[4] ஆக்கிய விஞ்சைக [5] ளிரண்டு [6] மவ்வழி
[7] ஊக்கின னவையவ ருள்ளத் துள்ளினர்.

(இ - ள்.) (விசுவாமித்திரன் அவ்வாறு நினைத்து), அவர் முகம் நோக்கினன்-அவ்விராமலக்குமணர்களின் முகங்களை(க்குறிப்பாக)ப் பார்த்தான்; நோக்க - (அங்ஙனம்) பார்க்கவே, நோக்கு உடை கோ குமரர்உம் - குறிப்பறியுந்தன்மையையுடைய சக்கரவர்த்தியின் குமாரர்களும், அடிகுறுக-(விசுவாமித்திரனது) திருவடிகளைச் சேர அவ்வளவிலே,—(அம்முனிவன்), நான்முகன் ஆக்கிய விஞ்சைகள் இரண்டும்உம்-பிரமதேவனாலுண்டாக்கப்பட்ட (பலை அதிபலை என்னும்) இரண்டுவித்தைகளையும், அ வழி - அப்பொழுது அவ்விடத்தில், ஊக்கினன் - (தெரியுமாறு அவர்கட்கு) உபதேசித்தான்; அவை - அம் மந்திரங்களையும், அவர் - அவ்விருவரும், உள்ளத்து -மனத்திலே, உள்ளினர் - சிந்தித்துக்கொண்டார்கள்; (எ-று.)

கோசலதேசத்தவர் குறிப்பறிதலிற் சிறந்தவராதலால், 'நோக்குடைக் குமரர்' என்றார். அவர் முகம்-மத்திமதீபம். பி - ம்:— [1] வாள், தம், தனி, தன். [2] நோக்கி, நோக்கும், நோக்கின. [3] நோக்கிடைக். [4] ஆக்கின. [5] இரண்டை. [6] அவ்வயின். [7] ஓக்கினவானவர், ஓக்கினனவனவர், ஓக்கினனவரவை, ஓக்கியயாவையும். சிற்சிலபிரதிகளில், 'ஆக்கிய பெலையதி பெலையென்றுய்மறை' என்றுமூன்றமடியும், நோக்கின னவரவையுளத்து நோக்கினர்' என்று ஈற்றடியும். (359)

19.—அப்பாலைவனம் குமாரர்கட்குக் குளிர்ந்து தோன்றுதல்.

உள்ளிய காலையி னூழித் [1] தீயையும்
[2] எள்ளுறு [3] கொழுங் [4] கன [5] லெரியும் வெஞ்சுரம்
தெள்ளு [6] தண் [7] புனலிடைச் [8] சேற [9] லொத்தது
வள்ளலு முனிவனை வணங்கிக் [10] கூறுவான்.

(இ - ள்.) உள்ளிய காலையின் - (அம்மந்திரங்களை அவர்கள்) சிந்தித்த பொழுதிலே, ஊழி தீயைஉம் எள்ளுறு கொழு கனல் எரியும் வெம் சுரம் (சேறல்)-யுகாந்தகாலத்து அக்கினியையும் இகழ்கின்ற மிக்கதீ யெரியப்பெற்ற கொடிய அப்பாலைநிலத்திலே (தாங்கள்) செல்லுதல், தெள்ளு தண் புனலிடை சேறல்ஒத்தது - தெளிவான குளிர்ந்தநீரிலே செல்லுதலையொத்துக் குளிர்ந்திருந்தது; (அப்பொழுது), வள்ளல்உம் - வரையாது கொடுக்குந்தன்மையுள்ள ஸ்ரீராமனும், முனிவனை வணங்கி கூறுவான் - கௌசிக முனிவனை நமஸ்கரித்துச்சொல்லுவானானான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க. பி-ம்:—[1] தீயெனுங், தீயினை. [2] எள்ளுவ. [3] கொடுங். [4] கதிர். [5] எஞ்சும், எஞ்சி. [6] வெண். [7] புனலெனச். [8] சென்றது. [9] ஒத்தவ், ஒத்தன. [10] சொல்லுவான், வேண்டுவான், வாழ்த்தியே, ஏத்தியே. (360)

20.—'இந்த இடம் இங்ஙனம் வெப்பமாயிருத்தற்குக் காரணம் யாது?' என்று முனிவனை இராமன் வினவுதல்.

சுழிபடு [1] கங்கையந் தொங்கன் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறுதா னுண்டோ
பழி [2] படர் மன்னவன் [3] படைத்த [4] நாட்டினூங்கு
[5] அழிவதென் காரண [6] மறிஞ கூறென்றான்.

(இ - ள்.) 'அறிஞ - முற்றுணர்வுடைய முனிவ! (இந்நிலம்), சுழிபடு கங்கை அம் தொங்கல் மௌலியான் விழி பட வெந்ததுஒ - நீர்ச்சுழிகள் பொருந்திய கங்காநதியையும் அழகிய (கொன்றைப்) பூமாலையையும் அணிந்த சடைமுடியையுடையசிவபிரானது நெற்றிக் கண்பார்வை படுதலால் வெந்துபோயிற்றோ? வேறு தான் உண்டுஒ- (இங்ஙனம்வெப்பமுடைத்தாயிருத்தற்கு) வேறுயாதாயினும் காரணமுளதோ?பழி படர் மன்னவன் படைத்தநாட்டின் ஊங்கு-நிந்தைகள் நிரம்பியகொடுங்கோலரசனொருவன் பெற்றுள்ள நாட்டினும் அதிகமாக, அழிவது-(இங்ஙனம்) அழிவடைதற்கு, என் காரணம்-என்ன காரணம்? கூறு-சொல்வாயாக,' என்றான்-என்று (ஸ்ரீராமன் விசுவாமித்திரனை) வினவினான்; (எ - று.)

இங்ஙனம் இந்நிலம் வெப்பமாதற்குக்காரணம், காமனையெரித்த சிவபிரானது விழித்தீப் பட்டதா? வேறு யாதேனும் உண்டா? என்று முனிவனைக் குமரன் வினவினன். பழிபடர்மன்னவன் படைத்த நாடு மிக அழிவதைத் தண்டகன் வரலாறு முதலியவற்றிற் காண்க. [2] பழிபடாமன்னவன் என்று படித்து-வசைச்சொல்லைப் பெறுதமன்னவனாகிய தசரதனது, நாட்டின் - நாட்டிற்குள்ளே என்றும், கங்கையந்தொங்கல் மௌலியான் என்பதற்கு - கங்காநதியை அழகியமாலையாக முடியிற்சூடியவனென்றுமாம். பி - ம்:—[1] கங்கையத், கங்கையின். [2] பட, படு. [3] பரித்த. [4] நாட்டிடை, நாட்டினில், நாட்டிவண், நாட்டினும். [5] அழிவன, அழிவதின். [6] அறிவ. (361)

21.-இனி இருபத்துநான்கு கவிகள்-ஸ்ரீராமனதுவினவிற்கு விசுவாமித்திரன் கூறுகின்ற உத்தரம்: தாடகை வரலாறு:- முனிவன் 'ஓரரக்கியின் வரலாற்றைக் கேட்பாயாக' எனல்.

என்றலு மிராமனை நோக்கி யின்னுயிர்
கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் றோற்றத்தள்
அன்றியு மையிரு நூறு மையன்மா
ஒன்றிய வலியின [1]ளுறுதி கேளெனா.

(இ - ள்.) என்றலும்-என்று வினவியவளவிலே, (முனிவன்), இராமனை நோக்கி - ஸ்ரீராமனைப்பார்த்து,—'இன் உயிர் கொன்று உழல் வாழ்க்கையள் - நல்ல பிராணிகளைக் கொலைசெய்து உண்டு திரிகின்ற உயிர்வாழ்வுடையவளும், கூற்றின் தோற்றத்தள் - யமனது உருவம்போலப் பயங்கரமான உருவமுடையவளும், அன்றி உம் - அல்லாமலும், ஐ இரு நூறு மையல் மா ஒன்றிய வலியினள்- ஆயிரம் மதயானையடைந்துள்ள வலிமையுடையவளுமாகிய ஒருத்தியினது, உறுதி - வரலாற்றை, கேள் - கேட்பாயாக, எனா - என்று சொல்லி—,(எ - று.) (44)'என்றான்' என்று முடியும்.

மையல்=மயல். உறுதி-உற்ற செயல்: எனவே, வரலாறு. 'மா' என்ற பொதுப்பெயர் 'மயல்' என்ற அடைமொழியைப் பெற்றதனால், யானையை யுணர்த்திற்று. பி-ம்:—[1]ஊழித்தீயனாள், உறுதிகேளென்றான், உறுதிகேட்கெனா. இங்குச் சிலபிரதிகளில் "ஓங்கிய தவத்தினாலே யுயர்ந்த மாமுனிவர் தம்மைத், தீங்கது செய்து கொன்று தேவர்தம் பதங்களெங்கு, மேங்கிடத்திரியுங்கானி லியங்குறுபோதிலிந்த, வீங்கிடையரக்கிவந்த [1]வாறெலாம் விளம்பக் கேணீ" என்ற பாடல் காணப்படுகின்றது.

சில பிரதிகளில் இங்குக் காணப்படுஞ் செய்யுள்:—கன்னவிறோளினாய் கமலத் தோனருண், மன்னுயி [1]ரனைத்தையும் வாரி [2]வாய்மடுத், [3]தின்னுயிர் வளர்க்குமோ ரெரிகொள் [4]கூற்றநே, ரன்னவள் யாவளென் [5]றறையக்கேட்டியால். பி - ம்:—[1]யாவையும். [2]வாய்ப்படுத்து, வாய்ப்பெயா. [3]என்னையும்விழுங்குவாள், இன்னவளார்த்திடும், இன்னுயிரனைத்தையும். [4]கூற்றினேர், கூற்றனாள். [5]அறிய. மற்றுஞ்சிலபிரதிகளில், "கன்னவில்" என்ற பாடலோடு "இயக்கர்தம்" (22) என்ற பாடல்முதல் 'மிகுந்திறல்' (38) என்பது வரையிலுள்ள பாடல்களும் காணப்படாதனவாக, சிலபிரதிகளில் 41-இன் பின்னும், வேறு சிலபிரதிகளுள் 42-இன் பின்னும் "கன்னவில்" என்ற இச்செய்யுள் எழுதப்பெற்று, 'இது வெள்ளி' என்றும் குறிக்கப்பட்டுள்ளதென்கின்றனர். மற்றுஞ் சிலபிரதிகளில் "பெருவரை" (40), "சூடக" (41) "கன்னவில்" என்ற முறையிற் பாடல்களும், வேறு சில பிரதிகளில் "மண்ணுருத்து" (39) "பெருவரை" "சூடக", "கன்னவில்" என்ற முறையிற் பாடல்களும், பின்னர் "இயக்கர்தம்" என்பது முதலியனவும் உள்ளன. (362)

22.—இதுமுதல் நான்குகவிகளால், சுகேதுவென்பவன் பிரமனை நோக்கித் தவஞ்செய்து ஒருபெண்மகவைப் பெற்றதனைக் கூறுகின்றார்.

இயக்கர்தங் குலத்துளா [1]னுலக மெங்கணும்
[2]வியக்குறு மொய்ம்பினு [3]னெரியின் வெம்மையான்
[4]மயக்கிலன் சரனெனும் [5]வலத்தி னனருள்
[6]துயக்கிலன் [7]சுகேதுவென் றுளனோர் தூய்மையான்.

(இ-ள்.) இயக்கர் தம் குலத்து உளான்-யட்சர்களது குலத்திற் பிறந்தவனும், உலகம் எங்கண் உம் வியக்குறும் மொய்ம்பினன் - உலகமுழுதும் ஆச்சரியப்படத்தக்க வலிமையுடையவனும், எரியின் வெம்மையான்-நெருப்புப்போன்ற கோபத்தையுடையவனும், மயக்கு இலன் - மயக்கமில்லாதவனும் [நல்லறிவுடையவனும்], சரன் எனும் வலத்தினன்-குஞ்சரம் [யானை] போன்ற வலிமையையுடையவனும், அருள் துயக்கு இலன் [துயக்கு இல் அருளன்] - தளர்ச்சியில்லாத அருளையுடையவனுமாகிய,சுகேது என்ற ஓர் தூய்மையான்-பரிசுத்த குணமுடையானொருவன், உளன் - உள்ளவனானன் [இருந்தான்];

மிக்கவலிமையும்கோபமும்படைத்து யானைபோற் கம்பீரமான தோற்றத்தோடு வெற்றிபூண்டு அருளுக்குக் கொள்கலமாகி யட்ச குலத்துத் தோன்றிய சுகேதுவென்னும் ஒருத்தன் இருந்தன னென்பதாம். சரன் = குஞ்சரனென்பதன்விகாரம்; யானைபோன்றவ னென்க. [4]'மயக்கிலன்சர்ச்சனென்'று சிலபிரதிகளிற் காணப்படு கின்ற பாடத்தைக் கொண்டால், யட்சகுலத்தில் தோன்றிய சர்ச்ச னென்பவனுக்குச் சுகேது என்று ஒருபுதல்வனிருந்தனனென்று பொருளாம். சுகேது - அழகியதுவசமுடையவ னென்று பொருள் படும். பி-ம்:—[1]ஒருவன். [2]வியப்புறு, வியக்குவ. [3]எரியும். [4]மயக்கில் சற்சரன், மயக்கில்சச்சரன், மயக்கிலீற்சரன். [5]வரத்தினன். [6]துயக் கலில். [7]சுகேசன், கேது. (363)

23. அன்னவன் மகவிலா தயருஞ் [1]சிந்தையான்
மன்னெடுந் தாமரை [2]மலரின் [3]வைகுறும்
நன்னெடு [4]முதல்வனை வழுத்தி நற்றவம்
பன்னெடும் பகலெலாம் [5]பயின்ற [6]பான்மையான்.

(இ - ள்.) அன்னவன் - அந்தச்சுகேதுவென்பவன், மகவு இலாது அயரும் சிந்தையான்-பிள்ளையில்லாமையால் தளர்கின்ற மனத்தையுடையவனாய், மன் நெடு தாமரை மலரின் வைகுறும் நல் நெடு முதல்வனை-நிலைபெற்ற பெரிய தாமரைமலரிலே தங்குகின்ற நல்ல பெரிய முதன்மூர்த்திகளுள் ஒருவனான பிரமனை, வழுத்தி - துதித்து, பல் நெடு பகல் எலாம்-மிகப்பலவான நாட்களிலெல்லாம், நல் தவம் பயின்ற-சிறந்த தவத்தைச் செய்த, பான்மையான்-தன் மையுடையவனானன்; (எ - று.)

அந்தச் சுகேதுவென்பவன் மகவில்லாக்குறையாற்பிரமதேவனை நோக்கி நெடுநாள் தவம் புரிந்தன னென்க. மக - பண்பாகுபெயர்.

பி-ம்:—[1] தன்மையான். [2] மலருள். [3] வைகிய. [4] முதறனே. [5] பயந்த, ஆய்ந்த, உழந்த. [6] பான்மையால். (364)

24. முந்தின னருமறைக் கிழவன் முற்றுநின்
சிந்தனை யென்னெனச் சிறுவ [1] ரின்மையால்
நொந்தன [2] னருள்கென [3] நுணங்கு [4] கேள்வியாய்
மைந்தர்க [5] ளில்லையொரு [6] மகளுண் டாமென்றான்.

(இ - ள்.) நுணங்கு கேள்வியாய்-நுட்பமான நூற்கேள்விகளை யுடையவனே! (அங்ஙனந் தவஞ்செய்கையில்), அரு மறை கிழவன்-அருமையான வேதங்களுக்குஉரியவனான பிரமதேவன், முந்தினன்-(அவனெதிரில்) தோன்றியவனாய், முற்றும் நின்சிந்தனை என்என - 'நிறைவேறவேண்டிய உனது எண்ணம் யாது?' என வினவ,—(சுகேது), 'சிறுவர் இன்மையால் நொந்தனன்-புத்திரரில்லாமையால் வருந்தினேன்; அருள்க - (இனிப்புத்திரருண்டாம்படி) கருணை புரி வாயாக', என-என்றுபிரார்த்திக்க,—(பிரமன்), 'மைந்தர்கள் இலை - (உனக்கு) ஆண்மக்களுண்டாவதில்லை; ஒருமகள் உண்டு ஆம்-,- என்றான்-; (எ - று.)

சுகேதுவின் தவத்துக்கு உவந்து பிரதியட்சமான பிரமதேவனிடம் சுகேது தன்குறையைத் தெரிவிக்க, பிரமதேவன், 'உனக்கு ஆண்சந்ததி யுண்டாகாது; பெண்சந்ததிமாத்திரம் ஒன்று உண்டாம்' என்று அருள்புரிந்தனனென்பதாம். 'நுணங்குகேள்வியாய்' என்பது, கதை கூறுகின்ற விசுவாமித்திரமுனிவன் இராமனை விளித்த விளி. கதைகூறுபவர் தாம் கூறுகின்ற கதையிற் கவனக் குறைவு நிகழாதிருத்தற்பொருட்டுக் கதை கேட்பவரை விளித்து மேலும் கதைகூறுதல், இயல்பு. இனி, வரங்கொடுக்குமாறு பிரதியட்சமாகவந்த பிரமதேவன் சுகேதுவை விளித்தவிளியுமாம். இன்மை யான் என்றும் பிரித்து உரைக்கலாம். பி-ம்:—[1] இன்றியே. [2] அருளென. [3] நுணுகுங். [4] கேள்வியான், வேள்வியாய். [5] அல்லையோர். [6] மகவுண்டென்றனன். (365)

25. பூமட மயிலினைப் [1] பொருவும் [2] பொற்பொடும்
ஏமுறு [3] மதமலை யீரைஞ் [4] ஞூறுடைத்
[5] தாமிகு வலியொடுந் [6] தனயை தோன்று[7] நீ
[8] போவென மலரயன் புகன்று போயினான்.

(இ - ள்.) 'பூ மடம் மயிலினை-(எல்லாமலர்களுள்ளுஞ் சிறந்த) தாமரைமலரில்வாழ்கின்ற (என்ஞான்றும்) இளமையுடைய மயில் போலுஞ்சாயலுள்ள திருமகளை, பொருவும்-ஒக்கின்ற, பொற்பொடு உம்-அழகுடனும், ஏம் உறும்-களிப்புமிக்க,மதம் மலை ஈர்ஐஞ்ஞூறு-ஆயிரம மதயானைகள், உடை - கொண்டுள்ள, தா மிகுவலியொடு உம்-(தன்கைப்பட்டார்) வருத்தம் மிகுதற்குக் காரணமான வலிமை யுடனும், தனயை-(ஒரு) புத்திரி, தோன்றும்-பிறப்பாள்; நீ போ-நீ (கவலையில்லாமல் உன்னிடஞ்) செல்வாய்,' என-என்று(ம்), மலர் அயன்-தாமரைமலரில் வாழ்கின்ற பிரமன், புகன்று-சொல்லிவிட்டு, போயினான்-(தன்னுலகு) சென்றான்; (எ-று.)

பேரழகையும் ஆயிரம்மதயானைவலிமையையும் உடையவளாய் ஒரு பெண் உனக்குத் தோன்றுவ ளென்று பிரமதேவன் அநுக்கிரகித்துச் சென்றனனென்பதாம். மதமலை-அடையடுத்த உவமவாகுபெயர். மடமை-பேதைமையுமாம். பி - ம்:—[1]பொருவு. [2]பொற்புடன். [3]கதமலை, மதலைமா. [4]நூற்றிடைத். [5]தாமுறு. [6]தனயள். [7]நீர். [8]போமெனமலர், போமதியென. (366)

26 —பிரமதேவன்வரத்தினுற் பிறந்துவளர்ந்த அப்பெண்ணை, சுகேது சுந்தனென்பவனுக்கு மணஞ்செய்து தருதல்.

ஆயவ னருள்வழி [1]யலர்ந்த தாமரைச்
சேயவ ளென[2] வளர் செவ்வி கண்டிவட்கு
[3]ஆயவன் யார்கொலென் றுய்ந்து [4]தன்கிளை
நாயகன் [5]சுந்தனென் பவற்கு நல்கினுன்.

(இ - ள்.) ஆயவன் அருள் வழி - அப்பிரமதேவனருளிச் செய்தபடியே, (ஒருபெண் பிறந்து), அலர்ந்த தாமரை சேயவள் என - மலர்ந்த தாமரைமலரில்வாழ்கின்ற செந்நிறமுடைய இலக்குமி போல, வளர்-வளர்ந்துவருகிற, செவ்வி-அழகியபருவத்தை,கண்டு-(சுகேதுவானவன்) பார்த்து,—இவட்கு ஆயவன் யார் கொல் என்று ஆய்ந்து - 'இவளுக்குத் தக்க கணவன் யாவனோ?' என்று ஆராய்ந்து, தன் கிளை நாயகன் சுந்தன் என்பவற்கு - தனது இனத்தாராகிய யட்சர்களுக்கெல்லாந் தலைவனுன சுந்தனென்றுபேர்சொல்லப்பட்டவனுக்கு, நல்கினுன் - (அம்மகளை மணஞ்செய்து) கொடுத்தான்; (எ - று.)

இந்த ஸுந்தனென்பவன் ஜர்ஜனென்னும்யட்சனது புதல்வனென்பது, முதனூலாற் பெறப்படும். பி-ம்:—[1]பிறந்தவாயிழை. [2]வரு. [3]ஆயவரியாவரென்று. [4]தங்கிளை, தன்குல. [5]சுசுந்தனென்பவற்கு, சுகந்தனென்பவற்கு, சுதனெனவவற்கு. (367)

27.—மணமகனும் மணமகளும் சுகித்திருத்தல்.

காமனு மிரதியுங் கலந்த [1]காட்சியீது
ஆமென வியக்கனு மணங்[2]க ஞளும்வேறு
யாமமும் பகலுமோ [3]ரீறின் றென்னலாய்த்
[4]தாமுறு பெருங்களிச் [5]சலதி [6]மூழ்கினர்.

(இ - ள்.) காமன்உம் இரதிஉம் கலந்த காட்சி ஈது ஆம் என - 'மன்மதனும் (அவன்) மனைவியான இரதிதேவியும் சேர்ந்ததோற்றத்தை யொக்கும் இது' என்னும்படி, இயக்கன்உம் - (அந்தச் சுந்தனென்கிற) யட்சனும், அணங்கு அனுள்உம் - மோகினியையொத்த அத்தாடகையும், வேறு - தனியாக, யாமம்உம் பகல்உம் - இராத்திரியிலும் பகலிலும், ஓர் ஈறு இன்று என்னல் ஆய் - ஒருமுடிவில்லையென்று சொல்லலாம்படியாய், உறு பெரு களி சலதி மூழ்கினர் - மிக்க பேரானந்தமாகியகடலில் மூழ்கினர்கள்; (எ-று.)

சுந்தனும் தாடகையும் இரவும் பகலும் முடிவில்லாத இன்பக்கடலு ளாழ்ந்தன ரென்க. யாமம் - ஏழரைநாழிகைப்பொழுது; இங்கு

யாமத்தின் மூலமான பேரையுடைய இரவுக்கு ஆயிற்று; ஆகு பெயர். யாமமும் பகலும் ஓர்ஈறு இன்று என்னலாய் என்பதற்கு-இரவுக்கும் பகலுக்கும் ஓர்வேறுபாட்டெல்லை இல்லையென்னலாம்படி என்றும் உரைக்கலாம். களி-கலவியின்பம். சலதி=ஜலதி: நீரிருக்குமிடம்: பி - ம்:—[1] காட்சியது. [2] அனுளுமே. [3] ஈறுகாண்கிலார், ஈறின்றென்னலாத். [4] தாமிகு. [5] சலத்தின். [6] வைகினர். (368)

28.—அவர்கட்கு மாரீசன் சுபாகு என்னும் இருமக்கள் தோன்றுதல்.

பற்பல நாட்[1] செலீஇப் பதுமை [2] போன்றொளிர்
பொற்பினுள் வயிற்றிடைப் புவன [3] மேங்கிட
[4] வெற்பணி புயத்து[5] மா ரீச னும்விறல்
மற்[6] பொரு சுவாகுவும் வந்து தோன்றினர்.

(இ - ள்.) (பின்பு), பற்பல நாள் செலீஇ - அநேகநாட்கள் கழித்து, பதுமை போன்று ஒளிர் பொற்பினுள் வயிற்றிடை - தாமரைமலரில்வாழ்கிற திருமகளையொத்த அழகுடைய அத்தாடகையினது வயிற்றிலே,வெற்பு அணி புயத்து மாரீசன்உம்-மலைகளையொத்த தோள்களையுடைய மாரீசனென்பவனும், விறல் மல் பொரு சுவாகுஉம் - வெற்றியுடைய மற்போரைச் செய்யுந்தன்மையுள்ள சுவாகுஎன்பவனும், புவனம் ஏங்கிட - உலகத்திலுள்ள பிராணிகள் அஞ்சும்படி, வந்து தோன்றினர்-வந்துபிறந்தார்கள்; (எ - று.)

தாடகைக்குப் பிறந்த புதல்வராகிய மாரீசசுபாகுக்கள் நிலவுலகத்திலுள்ள பிராணிகளையெல்லாம் அழிக்குந்தன்மைவாய்ந்தவராதலால், 'புவனமேங்கிடத்தோன்றினர்' என்றார். பதுமை=தாமரைமலரில் வாழும் இலக்குமி:சித்திரப்பாவை போலழகிய என்றும்ஆம். பி-ம்:—[1] செலப். [2] போலிய, போலொளிர். [3] ஓங்கிட. [4] வெற்புறழ், வெற்பன, வெற்படு. [5] மாரீசன் வென்றிசேர். [6] பெருஞ். (369)

29, 30.—இவ்விரண்டு கவியும்–குளகம்: சுந்தனென்பவன் களிப்பினால் அகத்தியமுனிவன் வாழுமிடத்து மரங்களைப் பறித்து வீசியதைக் கூறும்.

29. [1] மாயமும் வஞ்சமும் வரம்பி லாற்றலும்
தாயினும் [2] பழகினர் [3] தமக்குந் [4] தேர்வொணுது
ஆயவர் [5] வளர்வுழி யவரை யீன்றவக்
[6] காய்சினத் தியக்கனுங் களிப்பின் [7] மேன்மையான்.

30. [1] தீதுறு மவுணர்கள் தீமை [2] தீர்தர
[3] மோதுறு கடலெலா மொருகை [4] மொண்டிடு
மாதவ [5] னுறைவிட [6] மதனின் வந்துநீள்
பாதவ மனைத்தையும் பறித்து [7] வீசினான்.

(இ - ள்.) (29) ஆயவர்-அம்மக்களிருவரும், மாயம்உம்-(தமது) மாயையையும், வஞ்சம்உம் - வஞ்சனையையும், வரம்பு இல் ஆற்றல் உம்-அளவில்லாத போர்வல்லமையையும், தாயின்உம் பழகினர்

தமக்குஉம் தேர்வுஒண்ணாது - தாயைக்காட்டிலும் அதிகமாக (நெருங்கி)ப் பழகினவர்களாலும் அறிதல் கூடாதபடி, வளர்வுஉழி-வளர்ந்து வருகிற பொழுதில்,—அவரை ஈன்ற-அவ்விருவரையும்பெற்ற, அகாய் சினத்து இயக்கன்உம்-கொதிக்கின்ற கோபத்தையுடைய சுந்தனென்கின்ற அந்தயக்ஷனும், களிப்பின் மேன்மையான்-சந்தோஷத்தினாலாகிய செருக்கின் மிகுதியை யுடையவனாய், (30) தீதுஉறும் அவுணர்கள் தீமை தீர்தர - துர்க்குணம்மிகுந்த அசுரர்கள்செய்யும் பொல்லாங்கு ஒழியும்படி, மோதுஉறு கடல் எலாம் ஒரு கை மொண்டிடு-(அலைகள்) மோதுதல்மிக்க கடல்முழுவதையும் ஒருகையால் மொண்டு பருகிய, மா தவன் - மிக்க தவவலிமையுள்ள அகத்திய முனிவன், உறைவு இடம் அதனின் - எழுந்தருளியிருக்கிற இடத்திலே, வந்து—, நீள் பாதவம் அனைத்துஉம் பறித்து வீசினான் - உயர்ந்த மரங்களையெல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்தான்; (எ - று.)

தன்குமாரர்கள் மாயை முதலியவற்றுடன் வளர்கையில், அவர்களது தந்தையாகிய சுந்தன் செருக்குடன் அகத்தியனாச்சிரமத்தைக்கிட்டி மரங்களை யெல்லாம்பறித்து வீசலாயினனென்க.

29.—மாயம் - மந்திரசக்தியாற் செய்யும் வஞ்சனை. வஞ்சம் - புத்திவலியாற் செய்யுஞ் சூது. 'மாயமும்வஞ்சமும்... தாயினும் பழகினார் தமக்கும் தேர்வொணாது ஆயவர்வளர்வுழி'—"தாயினும் பழகினாரும் தன்னிலை தெரிக்கலாகா, மாயைவல்லுருவத்தான்" என்பர். இனி, இத்தொடர்க்கு-மாயம் முதலியவைகளில், தங்கள் தாயாகிய தாடகையினும் மிகுதியாகப்பழகியவர்களாய்த் தமக்குள்ளும் ஒருவரோடொருவர் அம்மாயைமுதலியன தெரியவொண்ணாதபடிஅவர்கள் வளரும்போது என்று உரைப்பாரு முளர். "ஸுதௌஸுந்தோபஸுந்தயோ:***மாரீசஸ்சஸுபாஹுஸ்ச வீர்யவந்தௌஸுஶிக்ஷிதௌ" (பாலகாண்டம், ஸர்க்கம்-20,ச்லோ-25, 26) என்று மாரீசனை ஸுந்தனுடைய புதல்வனாகவும், ஸுபாஹுவை உபஸுந்தனுடைய புதல்வனாகவும்: 'கஸ்ய சித்த்வத காலஸ்ய யக்ஷீவை காமரூபிணீ - தாடகாநாம பத்ரந்தே பார்யாஸுந்தஸ்ய தீமத:—மாரீசோராக்ஷஸ: புத்ரோ யஸ்யாஸ்ஶக்ர பராக்ரம:" (பாலகா. ஸர். 25, ச்லோ. 25, 26) என்று தாடகை மாரீசனென்ற புத்திரனையே பெற்றாளாகவும் ஸ்ரீவால்மீகிராமாயணத்திற் கூறியுள்ளது. பி-ம்:—[1] மாயையும். [2] பழகினுந். [3] தமக்குத். [4] தேரொணா. [5] வளர்வுழீஇ. [6] காய்சினவியக்கனும். [7] மேன்மையால், வைகினான், வைகுவான்.

30.—தம் பகைவனாகிய விருத்திராசுரன் மற்றும் பல அசுரர்களுடன் கடலில் ஒளித்துக்கொண்டபொழுது, இந்திரன் முதலிய தேவர்கள் அகத்திய முனிவனைப் பிரார்த்திக்க, அம்முனிவன் கடல் நீரை ஒருகையால் முற்றுமுகந்து பருகி ஒளிந்திருந்த அசுரரை இந்திரன் கொன்றபின் அவன் வேண்டுகோளின்படி மீண்டும் உமிழ்ந்தனனென்பது. 'கடலெலா மொருகைமொண்டிடு மாதவன்' என்பதில் அடங்கிய வரலாறு. பாதவம்=பாதபம்; தாளால்நீரை உண்பது: மரம். பி-ம்:—[1] தீதறும். [2] தீதர. [3] ஓதுறு. [4] மொண்டுணும். [5] உறையிடம். [6] அதனை. [7] வீசினார். (370, 371)

31.—அகத்தியமுனிவனது கோபத்தாற் சுந்தன் சாம்பராதல்.

[1]விழைவுறு [2]மாதவம் [3]வெஃகி னோர்விரும்பு
[4]உழைகலை யிரலையை யுயி[5]ருண் டோங்கிய
[6]வழைமுதன் மரனெலா [7]மடிப்ப மாதவன்
தழலெழ [8]விழித்தனன் சாம்ப ராயினான்.

(இ - ள்.) விழைவு உறும்-(எல்லாராலும்) மிகவிரும்பத்தக்க, மா தவம்-பெருந்தவத்தை, வெஃகினோர் - விரும்பிச்செய்பவரான முனிவர்கள், விரும்பு - விரும்புகிற, (ஆச்சிரமத்திலுள்ள), உழை கலை இரலையை - உழை கலை இரலை என்கிற மான்களையெல்லாம், (சுந்தன்), உயிர் உண்டு - கொன்றுதின்று, ஓங்கிய வழை முதல் மரன் எலாம்-உயர்ந்துள்ள சுரபுன்னை முதலிய மரங்களெல்லாவற்றையும், மடிப்ப-அழிக்க,—மா தவன்-மிக்கதவமுள்ள அவ்வகத்தியன்,- தழல் எழ - நெருப்பு எழும்படி, விழித்தனன் - (கோபத்தாற்) கண் திறந்துபார்க்க, சாம்பர் ஆயினான்-(உடனே சுந்தன்)நீறாய்விட்டான்;

ஆச்சிரமத்துள்ள பலவகைமான்களைக்கொன்று தின்பதையும் மரங்களைப்பறித்தெறிதலையும் சுந்தன் செய்யவே, அகத்திய முனிவன் அந்தச் சுந்தனை நெருப்பெழச் சினந்துபார்க்க, அந்தச் சுந்தன் சாம்பராயினனென்க. உழை முதலியன, மானின் சாதி பேதம். உழை-புள்ளிமான். கலை-கலைமான். இரலை-புல்வாயெனப்படும். இனி, உழை - பெண்மைப்பெயர், கலை - ஆண்மைப்பெயரென்று கொள்வாருமுளர். [1]விழைவறு பாடமாயின்-பற்றறுதற்குக் காரணமான என்க. பி - ம்:—[2]மாறவன். [3]வெஃகினோன். [4]உழைதனை, உழைதலை, உழைகளை. [5]கொண்டேகிய. [6]வழையொடு, வழைதழை, வழியொடு, வழையுடை. [7]மடிய. [8]விழித்தலும். 'பழியொடும்பகைப் புறம்பார்த்த பண்ணவன்' என்று சிலபிரதிகளில் மூன்றாமடி. (372)

32.—கணவனிறந்தமை கேட்டுத் தாடகை தன்குமாரரோடும் அகத்தியனுறைவிடஞ் சேர்கை.

மற்றவன் [1]விளிந்தமை மைந்தர் தம்மொடும்
பொற்றொடி கேட்டு[2]வெங் கனலிற் பொங்குரு
முற்றுற [3]முடிக்குவென் முனியை [4]யென்றெழா
நற்றவ னுறைவிட மதனை [5]நண்ணினாள்.

(இ - ள்.) அவன் விளிந்தமை-(கணவனான) அந்தச் சுந்தன் இறந்ததை, பொன் தொடி - பொன்னாலாகிய தொடியென்னும் கைவளையை யணிந்த தாடகை, கேட்டு - கேள்விப்பட்டு, வெம் கனலின் பொங்குரு-கொடிய அக்கினிபோலக் கோபம்மிகுந்து, முனியை முற்றுற முடிக்குவென் என்று-'அம்முனிவனை யழியும்படி கொல்லுவேன்' என்று சொல்லிக்கொண்டு, மைந்தர் தம்மொடு உம் - புத்திரரான சுபாகுமாரீசர்களுடனே, எழா-புறப்பட்டு, நல் தவன் உறைவு இடம் அதனை-சிறந்ததவமுள்ள அம்முனிவன் வசிக்கின்ற இடத்தை, நண்ணினாள் - சேர்ந்தாள்; (எ-று)

அகத்தியனால் தன் கணவன் இறந்தானென்பதைக் கேள்விப்பட்ட அந்தத் தாடகை அம்முனிவனை யுண்பேனென்று பேராரவாரஞ்செய்துகொண்டு, தன் புத்திரரோடும் அவன் வாழுமிடத்தைச் சேர்ந்தாளென்க. பி-ம்:—[1] விளிந்தனன், அழிந்தமை. [2] வந்தனலிற். [3] முடிக்குவம், முடுக்குவன். [4] என்றவர். [5] நண்ணினர். (373)

33, 34.—இரண்டு கவிகள்-குளகம்: தாடகை அகத்தியனை அழிக்குமாறு குமாரர்களோடும் வர, அம்முனிவன் அவர்களைச் சபித்தல்.

33\. இடியொடு மடங்கலும் [1] வளியு [2] மேங்கிடக்
கடிகெட [3] வமரர்கள் கதிரு [4] முட்குறத்
தடியுடை முகிற்குலஞ் சலிப்ப வண்டமும்
[5] வெடிபட வதிர்த்தெதிர் [6] விளித்து [7] மண்டவே.

34\. தமிழெனு [1] மளப்பருஞ் சலதி தந்தவன்
உமிழ்கனல் விழிவழி [2] யொழுக [3] வுங்கரித்து
அழிவன செய்தலா லரக்க [4] ராகியே
[5] இழிகென வுரைத்தன னசனி [6] யெஞ்சவே.

(இ-ள்.) (33) (அங்ஙனம் அடைந்த தாடகையும் சுபாகுமாரீசரும்), இடியொடு-இடியும், மடங்கல்உம் - ஊழித்தீயும், வளிஉம்-ஊழிப்பெருங்காற்றும், ஏங்கிட-அஞ்சவும்,—அமரர்கள்-தேவர்கள், கடி கெட-(அச்சத்தால் தமது) ஒளி யழியவும், கதிர் உம் உட்கு உற-சூரிய சந்திரர்களும் பயமடையவும், தடி உடை முகில் குலம் - மின்னல்களையுடைய மேகக்கூட்டம், சலிப்ப - (அச்சத்தால்) நடுங்கவும், அண்டம்உம் வெடிபட - அண்டகோளமும் (அதிர்ச்சியால்) பிளவுபடவும், அதிர்த்து-கர்ச்சித்துக்கொண்டு, எதிர் விளித்து - (முனிவனை) எதிரிலே கூவியழைத்துக்கொண்டு, மண்ட-நெருங்க,- (34) தமிழ் எனும் - தமிழ்ப்பாஷையென்கின்ற,அளப்பு அரு சலதி-அளவிடுதற்குக்கூடாத கடலை, தந்தவன் - (தென்னாட்டாருக்குக்) கொணர்ந்து கொடுத்தவனாகிய அகத்திய மகாமுனிவன், உமிழ் கனல் விழிவழி ஒழுக - வெளிப்படுகின்ற கோபாக்கினி கண்களின் வழியாய்ச் சிந்தாநிற்க,உங்கரித்து-(கோபத்தால்) உங்காரஞ்செய்து, (அவர்களை நோக்கி), '(நீங்கள்), அழிவன செய்தலால் - (பிராணிகள்) அழிதற்குரிய தீச்செய்கைகளைச் செய்வதனால், அரக்கர் ஆகி-, இழிக-தாழ்வடைவீராக,' என - என்று, அசனி எஞ்ச - இடியும் வலிமை யொடுங்கும்படி, உரைத்தனன்-(சாபவார்த்தை) கூறினான்;

33.—அந்தத்தாடகை முதலியோர் வரும்போது கோபாவேசத்துடன் வந்ததைத் தெரிவிக்கும் இதில் உருத்திரச்சுவை தோன்றும். மடங்கல் - எல்லாப்பொருளையும் மடங்க [அழிய]ச் செய்வது; ஊழித்தீ: யமனென்றும், சிங்கமென்றும் கொள்ளலுமாம். கடி - விளக்கம்: உரிச்சொல். காவலென்று கொண்டு, அமரர்கள் கடிகெட- (திக்பாலகராகிய) தேவர்கள் திசைக்காவலொழிந்தோட என்றுமாம். தடி = தடித்: வடசொல். பி-ம்:—[1] எவையும், வெளியும், விளியும், ஒளியும். [2] ஓங்கிட. [3] அமரரும். [4] உட்கிட, உட்கற, மட்குற. [5] வெடி

வகிர்த்தெதிரவள், ...வதிர்ந்தெதிர், ...ஆர்த்தெதிர். [6] விழித்து. [7] மண்டினன்.

34.—பூர்வத்தில் இருடிய ரெல்லாருங்கூடி வடமொழியை யபிவிருத்தி செய்து காசியில் வடமொழிச்சங்கமொன்றுஏற்படுத்த, அச்சங்கப்புலவருளொருவனுகிய அகத்தியமுனிவன் மற்றைப்புலவர் களோடு தருக்கஞ்செய்து ஒருநாள் அவர்களோடு மாறுகொண்டு அவர்களிறுமாப்பை யடக்கும்பொருட்டுச் சிவபெருமானிடஞ் சென்று தன்கருத்தை வெளிப்படுத்திப் பேசிக்கொண்டிருக்கையில், தான் நின்ற மண்டப முழுவதும் திவ்வியபரிமளமொன்று வீச, அகத்தியன் பரமசிவனை நோக்கி, 'சுவாமி! இவ்வாசனை ஏது?' என்று வினவ, பரமசிவன் அம்முனிவனை அம்மண்டபத்தின் ஓர் மூலைக்கு அழைத்துக்கொண்டுபோய்க் குவியலாய்ப் போட்டிருந்த சில ஏட்டுப்பிரதிகளைக் காட்டவே, அவற்றைக் கண்டமாத்திரத்தில் மதுரமென்று பொருளுள்ள தமிழ் என்னும் பெயரை அகத்தியன் பலமுறைசொல்ல, உடனே பரமசிவன் 'அப்பாஷைக்கு ஆதாரவிதி கள் இவ்வேட்டுப்பிரதிகளிலுள்ளன' என்று எடுத்துக்கொடுத்து உபதேசிக்க, உடனே அம்முனிவன் தென்திசைக்குப்போய்ப் பொதியமலையில் வசித்து, அவ்விதிகளைக்கொண்டு 'பேரகத்தியம், சிற்றகத்தியம்' என்னும் இலக்கணநூலைச் செய்து, அவற்றைத் தம்மாணுக்கராகிய தொல்காப்பியன்முதலிய பன்னிருவர்க்குங்கற்பித் தருளித் தமிழ்ப்பாஷையைத் தழைத்தோங்கச் செய்தனனென்பது, 'தமிழெனுமளப்பருஞ் சலதிதந்தவன்' என்பதிற் குறித்த வரலாறு. பி - ம்:—[1] அளக்கரும். [2] ஓங்க. [3] உட்கறுத்து, உங்கருத்து. [4] ஆதி ரென்று. [5] இமிழ்கென. [6] எஞ்சிட, அஞ்சிட. 'அமிழ்வன செய்தலா லரக்கராதிரென்று' என்று சிலபிரதியில் மூன்ருமடி. (374, 375)

35.—அகத்திய சாபத்தின்படி தாடகைமுதலியவரும் அரக்கராதல்.

[1] வெருக்கொள வுலகையும் விண்ணு ளோரையும்
முருக்கியெவ் [2] வுயிருமுண் [3] டுழலு [4] மூர்க்கராம்
அரக்கர்க ளாயின ரக்க ணத்தினில்
உருக்கிய செம்பென [5] வுமிழ்கட் டீயினர்.

(இ - ள்.) அ கணத்தினில் - (முனிவர் சபித்த) அந்தக்ஷணத்தி லேயே, (அம்மூவரும்),—உருக்கிய செம்பு என—, உமிழ் - வெளிச் சிந்துகின்ற,கண் தீயினர்-கண்களினின்று உண்டாகிற கோபாக்கினி யுடையவர்களாய், வெரு கொள - அச்சங்கொள்ளும்படி, உலகை உம்-இந்நிலவுலகத்திலுள்ள பிராணிவர்க்கங்களையும்,விண் உளோரை உம்-மேலுலகத்திலுள்ளதேவர்களையும், முருக்கி-கொன்று, எ உயிர் உம் உண்டு - எல்லாப்பிராணிகளையும் தின்று, உழலும்-திரிகின்ற, மூர்க்கர் ஆம் - பிடிவாதகுணமுடையவர்களாகிய, அரக்கர்கள் ஆயி னர்-; (எ - று.)—வெரு-வெருவு: தொழிற்பெயர். பி-ம்:—[1] வெருக் கொளிங். [2] உலகுமுண்டு. [3] உமிழும். [4] மூர்க்கராய். [5] ஓதியோங்கவே, ஓதியாயினர். இச்செய்யுள் 'வெள்ளி' என்று ஒரு ஏட்டுப்பிரதியிற் குறிக்கப்பட்டுள்ள தென்ப. (376)

36.—சுமாலியென்பவனோடு சுபாகுமாரீசர் உறவு கொள்ளுதல்.

ஆங்கவன் வெகுளியு மறைந்த சாபமும்
தாங்கின ரெதிர்செயுந் தருக்கி லாமையின்
[1]நீங்கினர் [2]சுமாலியை [3]நேர்ந்து [4]நிற்கியாம்
ஓங்கிய [5]புதல்வரென் றுறவு [6]கூர்ந்தனர்.

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது, அவன் - அம்முனிவனது, வெகுளிஉம்-கோபத்தையும், அறைந்த-(அக்கோபத்தாற்) கூறின சாபம்உம்-சாபத்தையும், தாங்கினர்-ஏற்றுக்கொண்ட அவர்கள், எதிர் செயும் தருக்கு இலாமையின் - (அதற்குப்)பிரதிசெய்தற்குத் தக்க வல்லமையில்லாமையினால், நீங்கினர்-(அவ்விடத்தைவிட்டு) நீங்கி, சுமாலியை நேர்ந்து - சுமாலி யென்கிற ராட்சசராசனையடைந்து, நிற்கு யாம் ஓங்கிய புதல்வர் என்று-உனக்கு நாங்கள் சிறந்த புத்திரர்களாவோம் என்று கூறி, உறவு கூர்ந்தனர்-உறவு கொண்டாடினார்கள்; (எ - று.)

சுமாலி யென்பவன் - இராவணனுடைய தாயாகிய கேகசி யென்பவளது தகப்பன். சுகேசனதுமகனான இவன், திருமாலால் வலியழிந்துமாலியவான்முதலியவரோடுஅஞ்சியோடி இலங்கையைவிட்டு வந்து பாதலத்திற்குடிபுகுந்தனன்:அங்ஙனம்பாதலத்திலிருக்கையில் அவனுக்கு அபிமானபுத்திரர்களாயினர் சுபாகுமாரீச ரென்க. வெகுளியும் சாபமும் தாங்கினரென்று பொதுவாகக் கூறியிருப்பினும், தகுதிபற்றி 'நிற்கியாம் ஓங்கியபுதல்வர்' என்றது, சுபாகுமாரீசர்களைக்காட்டிற்று. பி - ம்:—[1]நீங்கியே. [2]மாலியை. [3]நெருக்கி, நெருங்கி, நெருக்க. [4]நிற்குநர், நிற்குநாம், நிற்குளம். [5]மைந்தர். [6]கூறினார், கூறியே, பூண்டனர். 'தாங்குனளதிசெயந்தரிக்கிலாமையால்' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி. சிலபிரதிகளில் இச்செய்யுள் "தமிழெனும் (34)" என்பதன்பின். (377)

37.—பிறகு இராவணன் சுபாகுமாரீசர்களைமாமன்மாரென்று பாராட்ட, அவர்கள் உலகத்தாருக்குத் தீமைபுரிதல்.

[1]அவனொடும் பாதலத் தனேக நாட்[2]செலீஇத்
[3]தவனுறு தசமுகன் றனக்கு மாதுலர்
இவரெனப் [4]புடைத்தழித் துலக மெங்கணும்
பவனனிற் [5]றிரிகுநர் பதகி மைந்தர்கள்.

(இ - ள்.) பதகி மைந்தர்கள் - பாவச்செய்கைகளையேயுடைய அந்தத் தாடகையின் பிள்ளைகளிருவரும், அவனொடுஉம்-அந்தச் சுமாலியுடனே, பாதலத்து-பாதாளலோகத்திலே, அனேகம் நாள் செலீஇ - பலகாலங் கழித்து, (பின்பு வெளிப்பட்டு), தவன் உறு தசமுகன் இவர் தனக்கு மாதுலர் என - தவம்மிக்க இராவணன் 'இவர் எனக்கு மாமன்மார்கள்' என்று பாராட்ட, உலகம் எங்கண் உம் - எல்லாவுலகங்களையும், புடைத்து அழித்து - அடித்து நாசம் பண்ணி, பவனனின் - (யுகாந்தகாலத்துப் பெருஞ்) சுழல்காற்றுப் போல, திரிகுநர் - அலைகின்றவரானார்கள்; (எ - று.)

அந்தச்சுமாலியுடனே சுபாகுமாரீசர்கள் அந்தப்பாதலத்திலே வெகு காலங்கழித்தனர். பிறகு இராவணன் இலங்கையைக் குபேர னிடத்தினின்றுமீட்டுச் சுமாலி முதலியோருடன் வசிக்கும்போது அவ்விராவணன் இவர்களைத் தன்மாமன்மாரென்று பாராட்டி உறவு கொண்டாட, இவர்கள் அவ்விராவணனுடைய தூண்டுதலால் உலக மெல்லாம் திரிந்துபுடைத்தழிக்கலாயினரென்பதாம். 'தசமுகன் றனக்கு' என்பதை ஒருசொல்லாகக் கொண்டு, தசமுகனுக்குஎன்று உரைப்பாருமுளர். தசமுகன்-பத்துமுகங்களை யுடையவனென்பது பற்றியபெயர். பதகி-பாதகி. பி - ம்:—[1] அவனொடு, அவனொடும். [2] செலத். [3] தவலரும், தவமுறு. [4] தெழித்தழித்து, தெழீஇத் தெழீஇ. [5] விரைவினுற்றிரிவர்பாதகர். இச்செய்யுளின்பின் "ஆங் கவர் போய பின்னை யரக்கியிவ் வனத்திலெய்தி, ஓங்கிய முனிவ ரோடு முற்றதோர் பகையை யுன்னித், தீங்கறுகுணத்தான் மிக்க சிறப்புடை யவர்களோடும், ஏங்கியிவ்வொலிகள் சால விறந்திடத் திரியலுற்ருள்" என்ற செய்யுள் சில ஏட்டுப் பிரதிகளில். (378)

38.—புதல்வரைப்பிரிந்து இங்கு அந்தத்தாடகை வசித்தல்.

[1] மிகுந்திறன் மைந்தரை [2] வேறு [3] நீங்குருத்
தகுந் [4] தொழின் [5] முனிவரன் சலத்தை [6] யுன்னியே
[7] வகுந்துவின் [8] வசுவரி [9] வதிந்த திவ்வனம்
புகுந்தன [10] ளழ [11] லெனப் [12] புழுங்கு நெஞ்சினுள்.

(இ - ள்.) (பின்பு ஒருகாலத்தில் தாடகை), மிகும் திறல் மைந் தரை - மிக்கவலிமையுடைய (தன்) புத்திரர்களை, வேறு நீங்குரு - வேருகப்பிரிந்து, தகும் தொழில் முனிவரன் சலத்தை உன்னி-தக்க தவச்செயல்களையுடைய இருடிச்சிரேட்டனை அகத்தியமுனிவனது கோபத்தை நினைத்து, அழல் என புழுங்கும் நெஞ்சினுள்-நெருப்புப் போலக் கொதிக்கின்ற மனமுடையவளாய், வகுந்துவின் - வழிமுழு வதும், வசு - சுவாலையையுடைய, அரி - அக்கினி, வதிந்தது - குடிகொண்டுள்ளதாகிய, இ வனம் - இந்தக் காட்டை, புகுந்தனள்- அடைந்தாள்; (எ - று.)

இவ்வனவகுந்துவின் புகுந்தனளென்று கூட்டினுமாம். வஸு = ஒளி: ஜ்வாலை: அரி-அக்கினி: வடசொற்கள். பி - ம்:—[1] மிகுந்தி டின். [2] வெறிது, வெறுத்து, வெறித்து. [3] நீக்குருள், நீங்குருள், நீக்குருத். [4] திறல், தவ. [5] முனிவர்கடவத்தை. [6] உள்ளியே. [7] வகுந் துற, வகுந்தெரி, வகுந்திறல், வகுந்துபின், வகுந்தவன். [8] அசுவரி, வசுவழி, வடவெரி. [9] வகிர்ந்தவிவ்வனம், வதிந்ததீவனம். [10] அனல். [11] எழ. [12] புகையுங்கண்ணினுள். இச்செய்யுள் சில பிரதிகளில் "உள ப்பரும்" (42) என்பதன்பின். (379)

39.— இதுவும், அடுத்த கவியும் - தாடகையினது வருணனை.

மண்ணுருத் [1] தெடுப்பினுங் கடலை [2] வாரினும்
விண்ணுருத் [3] திடிப்பினும் [4] வேண்டிற் செய்கிற்பாள்
[5] எண்ணுருத் தெரிவரும் பாவ மீண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் [6] தெரியும் பெற்றியாள்.

(இ - ள்.) (அவள்), மண் உருத்து எடுப்பின்உம் - பூமிமுழுவதையும் கோபங்கொண்டு எடுக்கவேண்டுமானாலும், கடலை வாரின்உம் - கடல்நீர்முழுவதையும் முகந்து பருகவேண்டுமானாலும், விண் உருத்து இடிப்பின்உம் - மேலுலகத்தைக் கோபித்து இடித்துவிடவேண்டுமானாலும், வேண்டின் - (தான்செய்ய) விரும்பினால், செய்கிற்பாள் - செய்து முடிக்கும் வல்லமையுள்ளவள்; எண் உரு தெரிவு அரு பாவம்-அளவும் உருவமும் (இத்தன்மைய என்று) அறியமுடியாத பலபாவங்கள், ஈண்டி-(ஒருங்கு) திரண்டு, ஓர் பெண் உரு கொண்டு என - ஒருபெண்ணின் வடிவத்தைக் கொண்டாற்போல, தெரியும் - காணப்படுகிற, பெற்றியாள் - தன்மையையுள்ளவள்; (எ - று.)

நிலவுலகைப் பெயர்த்தெடுத்தல் கடலை வாரிப்பருகுதல் மேலுலகை யிடித்துத்தள்ளுதல்என்ற அரும்பெருங்காரியங்களைச்செய்ய வேண்டுமென்றாலும் செய்யவல்லவளென்று அந்தத்தாடகையின் வல்லமையைக் கூறியவாறு. பின்னிரண்டடி-இவ்வளவு என்றாவது இன்ன இன்னஎன்றாவது சொல்லமுடியாதபடி எல்லாப் பாவங்களையும் மிகவுஞ்செய்துள்ளாளென்று அவள் கொடுஞ்செயலைவிளக்கும். எடுப்பினும் வாரினும் இடிப்பினும் என்பவற்றின்பின் தடுப்பவரில்லை என்றுகூட்டி, உரை கூறுதலுமொன்று. பி - ம்:—[1]எடுப்பதும். [2]வார்வதும். [3]இடிப்பதும். [4]வேண்டிச். [5]எண்ணுமத். [6]திரியும். (380)

40. பெருவரை யிரண்டொடும் பிறந்த [1]நஞ்சொடும்
[2]உருமுறழ் முழக்கொடு [3]ஊழித் தீயொடும்
இருபிறை [4]செறிந்தெழு கட[5]லுண் டாமெனின்
[6]வெருவரு [7]தோற்றத்தண் மேனி [8]மானுமே.

(இ - ள்.) பிறந்த நஞ்சொடுஉம் - (வெளியிலே) தோன்றிய விஷத்துடனும், உரும் உறழ் முழக்கொடுஉம் - இடியோசையினும் மிக்க பேரொலியுடனும், ஊழி தீயொடுஉம் - பிரளயகாலத்து அக்கினியுடனும், பெரு வரை இரண்டொடுஉம்-பெரிய இரண்டுமலைகளுடனும், (கூடியதாகி), இரு பிறை செறிந்து - இரண்டுபிறைச் சந்திரன்கள் (தன்னிடத்தே) பொருந்தப்பெற்று, எழு-நடந்துவருகின்ற, கடல்-கடலொன்று, உண்டு ஆம் எனின் - உள்ளதாகுமானால், (அது), வெருவரு தோற்றத்தள் மேனி-(யாவரும்) அஞ்சுதற்குக்காரணமான காட்சியையுடைய அவளதுஉடலை, மானும் - ஒக்கும்; (எ - று.)

தாடகைக்கு, நஞ்சு முழக்கு பெருவரையிரண்டு முதலியவற்றுடன் கூடிவருகின்ற கடல்-இல்பொருளுவமையாம்: வெருவுஅரு தோற்றத்தள்-எதற்கும் அஞ்சாத தன்மையையுடையவளெனினுமாம். [3]ஊழிக்காற்றெடும் என்றபாடத்தில், ஊழிக்காற்று - அந்தத் தாடகையின் விரைந்த நடைக்கு உவமையாகுமென்க. பி - ம்:—[1]நெஞ்சொடும். [2]உருமுற. [3]ஊழிக்காலொடும். [4]செறித்தெழு, செறித்திடு, தெறிந்தெழும். [5]உண்டாயிடின். [6]வெருவருந். [7]தோற்றத்த. [8]மன்னுமே. (381)

41.—விசுவாமித்திரன் அவள் பெயர் தாடகையெனல்.

சூடக [1]வரவுறழ் சூலக் கையினள்
[2]காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை [3]யவாவுந் [4]தோளினுய்
[5]தாடகை [6]யென்பதச் [7]சழக்கி நாமமே.

(இ - ள்.) கண்ணின் காண்பரேல்—, ஆடவர் பெண்மையை அவாவும் தோளினுய்-ஆண்மக்களும் பெண்தன்மையை விரும்பும் தோள்களினழகையுடைய ஸ்ரீராமனே! (அவள்),—அரவு சூடகம் உறழ்-நாகம் கங்கணமாகப் பொருந்திய, சூலம் கையினள்-சூலாயுதம் பொருந்திய கைகளையுடையவள்; காடுஉறை வாழ்க்கையள் - வனத்தில் வசிக்கின்ற வாழ்வையுடையவள்; அ சழக்கி நாமம் - அந்தக் கொடியவளது பெயர், தாடகை என்பது - தாடகை யென்பதாம்;

"பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் [ஆடவரின் கண் மனம் என்பவற்றைக் கவருபவன்]" என்று ஸ்ரீவால்மீகிபகவான் அருளிச்செய்தாற்போல, 'கண்ணிற் காண்பரே லாடவர் பெண்மையையவாவுந் தோளினுய்' என்றுர். இத்தோளினழகின்சிறப்பு நோக்கி, ஆடவர் மனத்தால் மகளிர்தன்மையை யடைந்து அத்தோளினுல் தழுவப்படவேணுமென்று காதல்கொள்ளுமாறு உள்ளவனே! என்க; ஆகவே, மகளிர் காதல் கொள்வரென்பது, கூறவேண்டாதாயிற்று. 'ஆடவர்' எனப்பொதுப்படக்கூறினமையால் முற்றத் துறந்தமுனிவரும் இவனழகில் துவக்குண்டு ஈடுபட்டு நைவரென்க. 'கண்ணின்' என்று வேண்டாதுகூறினுர், அவ்விராமனைக் காண்பதற்குக்கண்கள் தவம்புரிந்திருக்கவேண்டுமென்றற்கு. அவ்வரக்கி தன் கொடுமை வெளிப்படும்படி அரவத்தைச் சூடகமாகப் பூண்டனளென்க. சூடக அரவுறழ்சூலக்கையினள் - கைவளையாக அணிந்த படம்விரிந்த பாம்பை ஒப்பதும் சூலத்தைத் தாங்கியதுமான கையுடையாள் என்றும், சூடகமாகஅணிந்த அரவையொத்த சூலப்படையைக் கையிற்கொண்டவளென்றும் உரை கூறுவர். தாடகையென்ற சொல் - மலையில் திரிபவளென்று பொருள்படும். சழக்கு-குற்றம்: அதனையுடையவள் - சழக்கி. இனி, சழக்கு - நீதிக்குமாருனது என்று பொருள்கொண்டு, "இழக்கின்றேன் மைந்தனையென்றெல்லீருஞ் சொல்லியவிச், சழக்கின்று நானிசைந்தாற் றருமந்தான் சலியாதோ" என்ற மேற்கோளைக்காட்டுவாருமுளர். பி-ம்:—[1]வாழ்வுழல், அரவுழல், வாயுழல், அரவினள். [2]காடுறு. [3]அளாவும், ஆற்றும். [4]தோளினுள். [5]தாடகி. [6]என்பவள், என்னுமச். [7]சளத்தின். (382)

42.—இவ்விடம் இங்ஙனமானது இவளாலேயே யெனல்.

[1]உளப்பரும் [2]பிணிப்பரு வுலோப மொன்றுமே
அளப்பருங் [3]குணங்களை யழிக்கு மாறுபோல்
[4]கிளப்பருங் [5]கொடுமைய வரக்கி கேடிலா
வளப்[6]பரு [7]மருதவைப் பழித்து மாற்றினுள்.

(இ - ள்.) உளம் பரு பிணிப்பு அரு - (ஒருவனது) மனத்திலே மிக்க பந்தம் நீங்காத, உலோபம் ஒன்றும்ஏ - லோபமென்ற துர்க்குணமொன்று மாத்திரமே, அளப்பு அரு குணங்களை - அளவிடுதற்குக்கூடாத [மிகப்பல] நற்குணங்களையெல்லாம், அழிக்கும் ஆறுபோல் - அழியச்செய்யும்விதம்போல,—கிளப்பு அரு கொடுமைய அரக்கி - சொல்லுதற்குமுடியாதகொடுந்தன்மையுள்ள அரக்கியாகிய அத்தாடகை, கேடு இலா வளம் பரு மருதம் வைப்பு அழித்து மாற்றினள் - கெடுதியில்லாத [ஒருபொழுதும்மாறாத] வளங்களையுடைய பெரிய மருதநிலத்தை நாசஞ்செய்து(பாலைநிலமாக) மாற்றிவிட்டாள்; (எ-று.)

அரக்கியொருத்தி எல்லாவளமும்நிறைந்த மருதம்முழுவதையும் கெடுத்தற்கு, உலோபகுணமென்ற ஒன்று, நற்குணங்களெல்லாம் நிறைந்த மனத்தைக் கெடுப்பது உபமானம். [1]உளர்ப்பரும் என்றபாடத்திற்கு - அசைத்தற்குமுடியாத, பிணிப்பு என்க. கேடிலா வளம்-நீர்வளம் நிலவளம் விளைவு செல்வம் முதலியன. இதனால், மலத கரூச தேசங்கள் தாடகையால் அழிபட்ட செய்தியை விசுவாமித்திரன் இராமனுக்குக் கூறினான்: அதன் விவரம் முதனூலிற் கூறப்பட்டுள்ளது வருமாறு:—முன்னே விருத்திராசுரனைக் கொன்றதனாலான பிரமகத்தி தேவேந்திரனைப்பிடித்துக்கொள்ள, அதனால் பாவமும் பசியும் அத்தேவேந்திரனுக்குத்தோன்ற, அப்போது முனிவரும்தேவர்களும் புண்ணியதீர்த்தங்களாலும் மந்திரத்தாற் பரிசுத்தமான தீர்த்தங்களாலும் நீராட்டி அவ்விந்திரனது பாவத்தையும் பசியையும் இங்கே போக்குவிக்க, அதனாற் பெருமகிழ்ச்சியடைந்த இந்திரன் 'எனது மலத்தையும் [பாவங்களையும்] கரூசத்தையும், [பசியையும்] வாங்கினமையால் இத்தேசங்கள் தனதானியங்களால் நிரம்பி, மலதமென்றும் கரூசமென்றும் வழங்குக' என்று வரங்கொடுத்தானாக, அது முதல் வளமெல்லாம் நிரம்பி, மலதமென்றும் கரூசமென்றும் வழங்கின: உயிர்களைப் பீடித்தவண்ணம் தாடகை வாசஞ்செய்யத் தொடங்கியபின் இந்த இடங்கள் இங்ஙனம் பாழாயினவென்பது. பி-ம்:-[2]பிணிப்பற, பிணிப்புரு. [3]குணந்தனை. [4]கிளைப்பெருங், கிளைப்பருங். [5]கொடுமையவ். [6]பெரு. [7]மருதவைப்பதனை, அருந்தவங்களைந்து, தவங்களையழித்து, தவத்தையேயழித்து. (383)

வேறு.

43.—தாடகையினால் விளையுந் தீங்குகள்.

இலங்கையரசன் [1]பணி யமைந்தொ[2]ரிடையூறு
[3]விலங்கல்வலி [4]கொண்டெனது வேள்வி[5] நலிகின்றாள்
அலங்கன்[6]முகி லேயவ[7]ளிவ்[8]வங்கநில மெங்கும்
குலங்களொ டடங்கநனி கொன்றுதிரி கின்றாள்.

(இ - ள்.) அலங்கல் முகிலே - மாலையணிந்த மேகம்போல்பவனே! அவள்-அத்தாடகை,—இலங்கை அரசன்பணி அமைந்து - இலங்காராசனான இராவணனது ஏவலின்கீழடங்கி, ஓர் இடையூறு

ஆ-ஒருபெருந்தடையாக, விலங்கல் வலி கொண்டு - மலையினது பலம்போன்ற பலத்தால், எனது வேள்வி நலிகின்றாள் - என்யாகத்தைக் கெடுக்கின்றாள்; (அன்றியும்), இ அங்கம் நிலம் எங்குஉம்- இந்த அங்கதேசம் முழுவதும் (உள்ள உயிர்களை), குலங்களொடு அடங்க-வமிசங்களோடு அழியும்படி, நனி கொன்று திரிகின்றாள் - மிகவுங்கொன்று திரிகிறாள்; (எ - று.)

எனது வேள்விக்கு இடையூற்றைச் செய்பவளும், இந்த அங்கதேசத்து உயிர்களை யெல்லாம் கொன்றுதிரிபவளும், இராவணனுணையைக்கைக்கொண்ட அவ்வரக்கியே யென்றவாறு. விலங்கல் - ஊர்க்கு ஒருபுறமாக விலகியிருப்பதென்பதுபற்றி வந்தது; உவமையாகுபெயராக, யானைகளென்னவுமாம். பி - ம்:—[1] பணியின் மைந்தர், பெயரொடமைந்தொர், பணியமைந்தர்,—பெயரமைந்த, பெயரின்மைந்தர், பெயரியைந்த, பெயரொடமைந்தது, மெயறி மைந்தர். [2] இடையூறாய். [3] விலங்கநனி. [4] கொன்றெனது, கொண்டு நனி. [5] நலிகின்றார். [6] முகிலங்கவள், முகிலேயிவள். [7] அவ். [8] இயங்கு நிலம், இயங்கநிலம், அங்கணிலம். (384)

44.—தாடகையின் செய்தியை முடித்தல்.

[1] முன்னுலக ளித்தமுனி தந்த [2] வுயி ரெல்லாம்
தன் [3] னுண வெனக்கருது [4] தன்மையி னமைந்தாள்
என் [5] னினி யுணர்த்துவ தினிச்சிறிது நாளின்
மன்னுயி ரணைத்தையும் [6] வயிற்றினிடு மென்றான்.

(இ - ள்.) முன் உலகு அளித்த முனி - முதலில் உலகைப் படைத்த பிரமதேவன், தந்த - (உடலுறுப்புக்களோடு) உண்டாக்கின, உயிர் எல்லாம்-உயிர்களெல்லாவற்றையும், தன் உணவுஎன கருது-தனது உணவென்று எண்ணுகின்ற, தன்மையின் அமைந்தாள் - தன்மையோடு பொருந்தியவள்; இனி உணர்த்துவது என் - இன்னும் (அவளைப்பற்றிக்) கூறவேண்டுவது யாது? இனி சிறிது நாளில்-இன்னமும் சில நாட்களுள், (அத்தாடகை), மன்உயிர் அணைத்தைஉம் வயிற்றின் இடும்-நிலையாயுள்ள எல்லாவுயிர்களையும் (தன்) வயிற்றிலே யடக்கிக்கொள்வாள், என்றான்-என்று (ஸ்ரீராமனுக்கு முனிவன்) சொன்னான்; (எ - று.)

இவளை நீ சங்காரஞ்செய்யாது விடின், இந்த அங்கதேசமேயன்றி, இவ்வுலகமுழுதுமே நாசமாய்விடு மென்ற குறிப்புத்தோன்ற, அவளது கொடுமையைக் கூறி அவள்வரலாற்றை முடித்தனனென்க. உடம்பு அழிவதன்றி உயிர் அழியாதாதலால், 'மன்னுயிர்' என்றது. 'முன்னுலகளித்துமுறைநின்றவுயிரெல்லாம், தன்னுயிரெனக்கருது தன்மையினன்மைந்த' என்றபாடத்துக்கு, உன் தந்தை துன்மார்க்கத்தில் நிற்பவரைப் பகைவர்போலக்கருதி ஒறுத்திடுபவன்: "மகனறிவு தந்தையறிவு" என்பவாதலால், நீயும் தந்தைபோலவே பகையொறுக்கவேண்டு மென்ற குறிப்பினால், 'நின்ற ... தன்மையினன்மைந்த' என்று விளித்தானென்க: கருத்துடையடைகொளி. பி - ம்:—[1] முன்னுலகழித்து முறைநின்ற, முன்னுல

களித்த முதல்வந்த, முன்னுலகு... தந்த,பின்னுலகளித்த முதறந்த. [2]உலகு. [3]உணர்வு. [4]தன்மையவன்...,தன்மையிவன்..., தன்மையவள்..., தன்மையினன்.... [5]இனிது. [6]வயிற்றடையும், வயிற்றிடுவள். (385)

45.—'அத்தாடகை வசிக்குமிடம் எது?' என்று இராமன் வினவுதல்.

அங்[1]கிறைவ [2]னப்பரி[3]சு ரைப்பவது கேளா
[4]கொங்குறை நறைக்[5]குல மலர்[6]ச்செனி [7]குலுக்கா
எங்[8]குறைவ தித்தொழி [9]லியற்றுபவ ளென்ருன்
சங்குறை[10]கரத்தொரு தனிச்சிலே தரித்தான்.

(இ - ள்.) அங்கு - அப்பொழுது [அவ்விடத்து], இறைவன் - விசுவாமித்திரன், அ பரிசு உரைப்ப - அவ்விதமாகச் சொல்ல, அதுகேளா-அதனைக் கேட்டு,—சங்கு உறை கரத்து ஒரு தனிசிலே தரித்தான் - (பாஞ்சசன்னியமென்கிற) சங்கம் தங்குகின்ற (தனது இடக்) கையிலே ஒப்பற்ற ஒரு (கோதண்டமென்னும்) வில்லேத் தாங்கிய ஸ்ரீராமன், கொங்கு உறை நறை குலம் மலர்செனி குலுக்கா -வாசனைபொருந்திய தேனினையுடைய சிறந்த பூக்களைச்சூடுதற்கு உரிய (தனது) திருமுடியை அசைத்து, இ தொழில் இயற்றுபவள் எங்கு உறைவது என்ருன்-'இக்கொடுந்தொழிலேச்செய்பவள் எவ்விடத்தில் வசிப்பது?' என்று வினவினன்; (எ-று.)

இராமபிரான் இடக்கையில் வில்லேத்தாங்கியபடி விசுவாமித்திரனது பேச்சைக் கேட்டுத் தலையசைத்தவண்ணம் நின்றதை, நம் கண்முன் ஒருசித்திரம் அமைத்தாற்போற் பாடியிருத்தல் பாராட்டத்தக்கது. சங்குஏந்தியகை-இடக்கை. முனிவர்தலைவனுதலாலும் பிரமவிருடியாதலாலும் உலகுபடைக்கத்தொடங்கினமையினுலும், இளமையில் அரசுபுரிந்ததனுலும், கௌசிகன் 'இறைவன்' எனப்பட்டான். செனி = சென்னி. தலைகுலுக்குதல், உள்ளே கொண்ட வியப்பைப்புலப்படுத்தும். குலம் - தொகுதியுமாம். பி-ம்:—[1]அறிஞன். [2]இப்பரிசு, அப்படி, அப்பொழுது. [3]உரைத்தபடி. [4]கொங்கறை. [5]குவை. [6]குழல். [7]துளக்கா. [8]உறைவள், உறைப. [9]இயற்றுமவள். [10]கரத்திலொர். (386)

46.—விசுவாமித்திரன் தாடகையினுறைவிடத்தைக் காட்டுமுன் அவள் எதிர்வருதல்.

கைவரை யெனத்தகைய காளையுரை கேளா
ஐவரை [1]யகத்திடை யடைத்தமுனி யைய
[2]இவ்வரை [3]யிருப்பதவ ளென்பதனின் [4]முன்போர்
மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்.

(எ - று.) ஐவரை அகத்திடை அடைத்த முனி - பஞ்சேந்திரியங்களை (ஐம்புலன்களிற் செல்லவொட்டாமால்) மனத்திலேஅடக்கி வைத்துள்ள விசுவாமித்திரன், கை வரை என தகைய-துதிக்கையையுடைய மலைபோன்ற யானையென்றுசொல்லத்தக்க [கம்பீரத்

தையுடைய], காளை-இடபம்போன்ற ஸ்ரீராமனது, உரை-வார்த்தை யை, கேளா-கேட்டு,-(அவ்விராமனை நோக்கி), ஐய-தலைவனே! அவள் இருப்பது-அந்தத் தாடகை யிருக்குமிடம், இ வரை-இந்த எல்லை, என்பதனின் முன்பு-என்று சொல்வதற்கு முன்னே, ஓர் மைவரை நெருப்பு எரிய வந்தது என வந்தாள்-அஞ்சனமயமானதொரு மலை தீயெரியும்படி வந்ததுபோலவந்தாள்; (தாடகை); (எ - று.)

இராமபிரான் வினவிற்கு 'இவ்வரை அவள் இருப்பது' என்று முனிவன் கூறிமுடியாநிற்கையில், நாடகபாத்திரபிரவேசம்போலத் தாடகையின் வடிவத்திற்குப் புறக்கோடிட்டு அவள்வந்தமையைக் கவிச்சக்கரவர்த்தி காட்டியமை, மிகவும் பாராட்டத்தக்கது. அத் தாடகையின் செம்பட்டமயிருக்கு, நெருப்புஉவமை: கோபத்துடன் வரும் அந்தத் தாடகைக்கு நெருப்பெரிய வரும் மைவரை உவமை யெனினுமாம். போர் - போர்செய்யவல்ல, அஞ்சனமலை யென்று மாம். மூன்றுவது அடியில், வரை-எல்லையென்க. முதனூலில் மலை யில் வாழ்பவளெனக் கூறுமையாலும் திரிபு என்னுஞ் சொல்ல ணிக்கு ஏற்றிருத்தலாலும் இப்பொருளே சிறந்ததாம். கைவரை - அடையடுத்த உவமவாகுபெயர். 'அகத்தடைத்தமுனி' என்றத னுல், ஐவர்-பஞ்சேந்திரியங்களைக் காட்டும். ஐவர்-செறலினுல் அஃ றிணை உயர்திணையாயிற்று. பி - ம்:—[1] அகத்தினில். [2] எவ்வரை. [3] இருப்பளவள். [4] முன்னம். (387)

47.—தாடகை அங்கு வருதலின் வருணனை.

[1] சிலம்புகள் சிலம்பிடை [2] செறித்தகழ லோடும்
நிலம்[3] புக [4] மி தித்தன [5] ணெளித்தகுழி [6] வேலைச்
[7] சலம்புக [8] வனற்றறு கண ந்தகனு மஞ்சிப்
[9] பிலம்[10] புக [11] நிலைக்[12] கிரிகள்[13] பின் றெடர வந்தாள்.

(இ - ள்.) சிலம்புகள் - மலைகளை, சிலம்பிடை-(தன்) காற் சிலம்புகளில், செறித்த - (பருக்கைக் கற்களாகப்) பெற்றுள்ள, கழலோடும்உம் - கால்களினுல், நிலம் புக - தரை அழுந்தும்படி, மிதித்தனள்-மிதித்துக்கொண்டு, நெளித்த குழி வேலை சலம் புக - (அவ்வாறுநிலம்) நெளித்ததனுலுண்டான குழிகளிலே கடல்நீர் பாயவும், அனல் தறுகண் அந்தகன்உம் அஞ்சி பிலம் புக - நெருப்புப்போன்ற பயங்கரமான தன்மையையும் அஞ்சாமையையு முடைய யமனும் [தன்னைநோக்கிப்] பயந்து குகையிலே ஓடி ஒளிக்கவும், நிலை கிரிகள் பின்தொடர - இடம்விட்டுப்பெயர்த லில் லாத மலைகளெல்லாம் (தான் வருகிற வேகத்தால் இடம்விட்டுப் பெயர்ந்து தன்) பின்னே தொடர்ந்து வரவும், வந்தாள் - (அவ் விடத்துக்கு) வந்தாள், [அந்தத்தாடகை]; (எ-று.)

தான் அங்குவரும்போது தன் பாதத்தை ஊன்றிவைக்க, அதன்பாரத்தைத் தாங்கமாட்டாமல் நிலம் குழிபட, அந்தக் குழியில் கடல்நீர் புகுமாறும், யமனும் தனது கொடுந்தோற்றத் தைக்கண்டு நடுங்கிப் பிலத்தி லொளித்துக்கொள்ளுமாறும், தான் வருகிற விசையால் அசலங்களாகிய மலைகளும் இடம்

விட்டுப்பெயர்ந்து தன்பின்னேதொடருமாறும் வந்தனள் தாடகை யென்க. முதலடிக்கு-சிலம்புஇடை செறிக்கப்பெற்ற கழலுடனே, சிலம்புகள்-மலைகள், நிலத்திற்புக மிதித்து என்று உரைப்பினுமாம். செல்லும் விசைக்காற்றினால் மலைகள் பிடுங்குண்டதனாற் பின்னே தொடர்ந்தனவென்க; 'அண்ணல் சென்ற வேகத்தாலெழுந்த குன்று' எனக்கடருவு படலத்திற் கூறுவதுங் காண்க. அந்தகன்-மரணத்தையுண்டாக்குங்கடவுள். பி - ம்:—[1]சிலம்புகொள் சிலம்பிடை,சிலம்பிடைசிலம்புகள். [2]செறிந்த. [3]பக. [4]மிதித்திடை, மிதித்திட. [5]நெரித்த. [6]வேலை. [7]அலம்புக, சலம்புகு. [8]அழல். [9]பெலம். [10]புகு. [11]நிலக், நிரைக். [12]கரிகள். [13]முன். (388)

48.—தாடகை விழித்துப் பார்த்தல்.

[1]இறைக்கடை துடித்தபுரு வத்தளெயி றென்னும்
[2]பிறைக்கடை [3]பிறக்கிட மடித்த[4]பில[5]வாயள்
[6]மறைக்கடை யரக்கிவட வைக்கன [7]லிரண்டாய்
[8]நிறைக்கடன் [9]முளைத்தென [10]நெருப்பெழ [11]விழித்தாள்.

(இ - ள்.) மறை கடை அரக்கி - வேதங்களிற்கூறிய் சந்மார்க்கத்திற்குப் புறம்பாகிய அந்த ராட்சசியானவள்,—இறை கடை துடித்த புருவத்தள்-[கோபத்தாற்] சிறிது நுனி துடிக்கின்ற புருவங்களை யுடையவளும், எயிறு என்னும் - கோரதந்தங்களென்கிற, பிறை-பிறைச்சந்திரர்கள், கடை பிறக்கிட-கடைவாயிலே வெளிவிளங்கும்படி, மடித்த - மடிக்கப்பட்டுள்ள, பிலம் வாயள்-குகையையொத்த வாயையுடையவளுமாய்,—வடவை கனல் நிறை கடல் இரண்டு ஆய் முளைத்து என - படபாமுகாக்கினியானது நீர்நிறைவையுடைய கடலிலே இருகூறாகத்தோன்றினாலொக்கும்படி, நெருப்புஎழ-எரிபறக்க, விழித்தாள்-; (எ - று.)

தாடகையின்கரியஉடல் - கடலுக்கும், அதிற்கோபத்தாற் சிவந்துதோன்றுங் கண் - வடவைக்கனலுக்கும் உவமையாம். வடவைக்கனலிரண்டு - இல்பொருளுவமை. பிறக்கிட=பிறங்கிட; வலித்தல். "பின்றல்பிறக்கிடல் பிறகிடலாகும்" என்றபிங்கலந்தையால், பிறக்கிட-பிந்தஎன்றுகொண்டு, எயிறென்னும்பிறை கடைவாய்களுக்குப்பின்னாகும்படி என்றுஉரைகூறுவாருமுளர். [6]மறக்கடை என்ற பாடத்திற்கு-பாவத்தைச்செய்கிறகீழ்மையையுடைய, அரக்கி யென்க. பி - ம்:—[1]இறக்கடை. [2]பிறக்கிடை. [3]பிறங்கிட, பிறக்கடை. [4]பெல. [5]வாயாள். [6]மறக்கிட, மறக்கிடை, மறைக்கட, கறைக்கடை. [7]இரண்டே. [8]நிறக்கடல். [9]இரண்டென. [10]நெருப்பென. [11]விழிப்பாள். (389)

49.—தாடகை யாரவாரித்தல்.

கடங்கலுழ் [1]தடங்களிறு [2]கையொடுகை [3]தெற்று
[4]வடங்கொள நுடங்குமிடை யாண்[5]மறுகி [6]வானோர்
இடங்களுநெ டுந்[7]திசையு மேழுலகு[8]மெங்கும்
அடங்கலுந டுங்க[9]வுரு [10]மஞ்சநனி யார்த்தாள்.

(இ - ள்.) கடம் கலுழ் - மதநீரொழுகப்பெற்ற, தட களிறு - பெரிய ஆண்யானைகளை, கையொடு கை தெற்று-துதிக்கையோடு துதிக்கையை முடிந்து, வடம் கொள் - ஆரமாக அணிந்திருத்த லால், நுடங்கும் - துவளுகின்ற, இடையாள் - இடையையுடைய அவ்வரக்கி,—வானோர் இடங்கள்உம் - தேவலோகங்களும், நெடு திசைஉம் - நீண்டதிக்குக்களும், ஏழ் உலகுஉம் - எழுவகையுலகங்களும், எங்கும்-, அடங்கல்உம் - முழுவதும், மறுகிநடுங்க - கலங்கி நடுங்கவும், உரும் அஞ்ச - இடியோசையும் பயப்படவும், நனி ஆர்த்தாள்-மிகுதியாக ஆரவாரித்தாள்; (எ-று.)

வடம் கொள - இடையிலணியுங்கோவையணி அணிதலால், துவள்கின்ற இடையையுடையவளென்று உரைத்தலும் ஒன்று. [4]வடங்களினுடங்குமுலையாள் என்ற பாடத்திற்கு - களிற்றைக் கையோடுகை தெற்றியணிந்த ஆரங்களோடு நுடங்குகின்ற தனங்களையுமுடையவ ளென்க. பி - ம்:—[1]கடுங், கடக், கருங். [2]கைகொடு. [3]தெற்றி தெற்று, தெற்றும், தட்டி. [4]வடங்களி னுணங்கும். [5]மறுகும். [6]வானொடு. [7]கடலும். [8]மேலும். [9]உரு. [10]அஞ்சி. (390)

50, 51.—இரண்டுகவிகள்–ஒருதொடர்: விசுவாமித்திரன் முதலியோரைப் பார்த்துச் சிரித்து, தாடகை வீரவாதங் கூறுதல்.

50. ஆர்த்தவரை நோக்கி[1] நகை செய்தெவரு [2]மஞ்சக்
[3]கூர்த்த[4]நுதி முத்தலைய யிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு தின்றுபகு வாய்முழைதி றந்தோர்
வார்த்தையுரை [5]செய்தன [6]ளிடிக்குமழை யன்னாள்.

51. கடக்கரும்[7] வலத்தெனது[8] காவலிதில் [9]யாவும்
கெடக்[10]கருவ றுத்தன [11]னினிச்சுவை [12]கிடக்கும்
விடக்கரி தெனக்கருதி யோ[13]விதிகொ டுந்தப்
படக்கருதி யோபகர்மின் வந்த [14]பரி[15]சென்றே.

(இ - ள்.) (50) இடிக்கும் மழை அன்னாள் - இடியிடிக்கின்ற (மேகத்தைப்போன்ற) அத்தாடகை,—ஆர்த்து - (இங்ஙனம்) ஆரவாரஞ்செய்து, அவரைநோக்கி - (முனிவர்முதலிய) அம்மூவரையும் பார்த்து, நகை செய்து - (இகழ்தல்தோன்றச்) சிரித்து, எவர்உம் அஞ்ச-யாவரும் பயப்படும்படி, கூர்த்த நுதி முதலை அயில் கொடிய கூற்றை பார்த்து - கூர்மையான நுனியைக்கொண்ட மூன்று தலைகளையுடைய (தனது) சூலாயுதமாகிய கொடுந்தன்மையுள்ள யமனை நோக்கிக்கொண்டு, எயிறு தின்று - பற்களைக்கடித்து, பகுவாய் முழை திறந்து - பிளவுபட்ட குகைபோன்ற (தன்) வாயைத் திறந்து, (51) 'கடக்க அரும் வலத்து - (எவராலும்) விலக்குதற்குக் கூடாத பலத்தையுடைய, எனது - என்னுடைய, காவல் - காவலிடமாகிய, இதில்-இவ்வனத்திலே, யாஉம் கெட - எல்லாவுயிர்களும் அழியும்படி, கரு அறுத்தனன் - கருவும் இல்லாதபடி செய்து விட்டேன்: (ஆகையால், எனக்கு), இனி - இனிமேல், சுவைகிடக்கும் விடக்கு - இனிமைபொருந்திய மாமிசம், அரிது - (கிடைத்தற்கு) அரியது,'

என-என்று, கருதிஓ - நினைத்தோ, (அல்லது), விதி கொடு உந்த-ஊழ்வினை கொண்டுவந்து பிடித்துத்தள்ள, பட கருதிஓ - இறத்தற்கு நினைத்தோ, வந்த பரிசு-(நீங்கள் இங்கே) வந்த விதம், பகர்மின் - கூறுங்கள்,' என்று—; (50) ஓர் வார்த்தை உரை செய்தனள்—; (எ - று.)

அவரை நோக்கி நகைசெய்தது எள்ளல்பற்றியென்க. 'நீங்கள் இங்கே வந்தது-மரணத்திற்குக் காரணமான உங்கள் ஊழ்வினைஉங்களைக் கழுத்தைநெட்டித்தள்ளிக் கொண்டு வந்ததனாலா? அன்றி இங்குஉள்ள உயிர்களையெல்லாம் கொன்றுதின்றுவிட்டு இரை கிடைக்காமற் பசியா லுழல்கின்ற எனக்கு உணவு தரவேண்டுமென்ற கருத்தினாலா?' என்று தாடகை வினவினள்; இந்த வினாவினால், நீங்கள் எனக்கு உணவாவீரென்று கூறியவாறாயிற்று. சில பிரதிகளில் 50-ஆஞ் செய்யுள் 47-இன்பின். பி - ம்:—[1] அனலென்றெவரும், நகைசெய்யவரும், நகைசெய்தெனினும். [2] அஞ்சிக். [3] கூர்த்து. [4] நனி. [5] ஆடினள். [6] அலைக்குமழை, மலைக்குவமை. [7] வனத்து. [8] காவலிது. [9] யாரும். [10] கரிசறுத்தனன், கருசறுத்தனன். [11] இசைச்சிலை, இனிச்சிலை. [12] கிடைக்கும். [13] விதி கொணர்ந்தோ. [14] படி. [15] என்றாள். (391,392)

52.—வேற்படையை எறிவேனென்று தாடகை சினத்தல்.

மேகமவை [1]யிற்றுக [2]விழித்தனள் புழுங்கா
[3]மாகவரை [4]யற்றுக வுதைத்தனண் மதித்திண்
பாக[5]மெனு முற்றெயி றதுக்கி[6]யயில்பற்றா
ஆகமுற [7]வுய்த்தெறிவ னென்றெதி ரழன்றாள்.

(இ - ள்.) (இங்ஙனங்கூறித் தாடகை), மேகம் அவை-மேகங்கள், இற்று உக-பொடியாய்ச் சிந்தும்படி, விழித்தனள் - கண் திறந்து பார்த்து, புழுங்கா-மனம் வெதும்பி, மா கம் வரை அற்று உக-பெரிய ஆகாயத்தையளாவிய மலைகளும் பொடியாய்ச்சிந்தும்படி, உதைத்தனள்-காலாலுதைத்துக்கொண்டு, மதி திண் பாகம் எனும் முற்று எயிறு - சந்திரனது வலிய கூறென்னத் தக்க வளைந்த பற்களை, அதுக்கி-கடித்து, அயில் பற்றா ஆகம்உற உய்த்து எறிவன் என்று - இவ்வேற்படையைப் பிடித்து இவர்கள் மார்பிலே அழுந்தும்படி வேகமாக எறிவேன் என்றுகூறி, எதிர் அழன்றாள் - எதிரிலே நின்று கோபித்தாள்; (எ - று.)

அவளது கொடுமையையும் வலிமையையும் விளக்க, விழித்துப்பார்த்தலால் மேகமும், உதைத்தலாற் பெருமலைகளும் அழிவனவாயின என்றார். பி-ம்:—[1] அற்றுக, பற்றுபு. [2] பிழிந்தனள் விழுங்கா. [3] ஊகவரை. [4] இற்றுக, உற்றுக. [5] என. [6] இயல்பாரா, இயல்பற்ற. [7] உயர்த்தெறிவன், முற்றெறிவன். (393)

53.—பெண்ணென்று அந்தத்தாடகையை இராமன் கொல்லாதிருத்தல்.

அண்ணன்முனி வற்[1]கதுக ருத்தெனினு மாவி
உண்ணென வடிக்கணை [2]தொடுக்கில [3]னுயிர்க்கே

[4]துண்ணெனும் [5]வினைத்தொழில் தொடங்கி[6]யுளளேனும்
பெண்ணென [7]மனத்திடை பெருந்தகை நினைந்தான்.

(இ - ள்.) அண்ணல் முனிவற்கு - பெருமையிற் சிறந்த விசுவாமித்திரமுனிவனுக்கு, அது கருத்து எனின் உம்-அத்தாடகையைக்கொல்வது சம்மதமாயினும்,—பெருந் தகை-பெருமைக்குணங்களையுடைய ஸ்ரீராமன்,—ஆவி உண் என - 'அவளுயிரையொழிப்பாய்' என்று ஏவி, வடி கணை தொடுக்கிலன் - கூர்மையானபாணத்தை யெய்தானில்லை; (ஏனெனில்), உயிர்க்கு ஏ துண்ணெனும் வினை தொழில் தொடங்கி உளள் ஏன்உம் - தங்களுயிர்களுக்கே அச்சந்தருகின்ற பாவச்செய்கைகளை (அவள்) செய்யத்தொடங்கியிருக்கின்றவளாயினும், பெண் என - பெண்ணென்று, மனத்திடை-திருவுள்ளத்திலே, நினைந்தான்-எண்ணினான்; (எ-று.)

பேரர்ரவாரஞ்செய்துகொண்டு பெருஞ்சினத்துடன் வந்த தாடகையை இராமபிரான் கொல்லவேணுமென்று முனிவன் கருதினனாயினும், அம்முனிவன் குறிப்பையுணர்ந்தும், அவ்விராமபிரான் பெண்கொலை பெரும்பாவமென்றுகருதி வாளாவிருந்தனனென்பதாம். ஆவியுண்ணுதல் - கொல்லுதல். வடிக்கணை - ஆராய்ந்தெடுக்கப்பட்ட அம்பு எனினுமாம். பி-ம்:—[1]இது. [2]தொகுத்திலன். [3]உயிர்த்தே. [4]துண்ணென. [5]மறத். [6]உளன். மனத்திறை, மதித்திறை. (394)

வேறு.

54.—விசுவாமித்திரன் இராமன் கருத்தறிந்து கூறத்தொடங்குதல்.

வெறிந்த செம்மயிர் வெள்[1]ளெயிற் றுடனை
எறிந்து [2]கொல்வெனென்[3]றேற்கவும்[4]பார்க்கிலாச்
செறிந்த தாரவன் சிந்தைக் கருத்தெலாம்
[5]அறிந்து நான்மறை யந்தணன்[6]கூறுவான்.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) வெறிந்த செம் மயிர் - நெருங்கியிருக்கின்ற செந்நிறமான மயிர்களையும், வெள் எயிற்றுள் - வெண்ணிறமான பற்களையுமுடைய தாடகை, தனை-தன்னை, எறிந்து கொல்வென் என்று -(சூலாயுதத்தை) வீசிக் கொல்வேனென்றுகூறி, ஏற்கஉம்-எதிர்த்துவரவும், பார்க்கிலா-(அவளைக்) கொல்ல முயலாத, செறிந்த தாரவன் - நெருங்கியமாலையையுடைய ஸ்ரீராமனது, சிந்தை கருத்து எலாம் - மனத்தினெண்ணம் முழுவதையும், அறிந்து—,நால்மறை அந்தணன் - நான்குவேதங்களையு மறிந்த கௌசிகன், கூறுவான் - (இராமனை நோக்கிச்) சொல்லுவான்; (எ-று.)—அதனை மேற்காண்க. பி - ம்:—[1]எயிற்றுளயில், எயிற்றுடயில்.[2]கொல்வள். [3]எஃகமும், எஃகையும், ஏதமும். [4]பார்த்திலாச், பார்த்திலன். [5]அறிந்த. [6]கூறினன். (395)

55.—இதுமுதல் மூன்றுகவிகளால், முனிவன் இந்தத் தாடகையைப் பெண்ணென்றல் தகாது எனல்.

தீதென் [1]றுள்ளவை யாவையுஞ் செய்[2]தெமை
கோதென் றுண்டில[3]ளித்தனை யேகுறை
[4]யாதென் [5]றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் [6]றெண்ணுவ தோ[7]மணிப் பூணினாய்.

(இ-ள்.) மணி பூணினாய் - இரத்தினாபரணங்களை யணிந்த இராமனே! (இவ்வரக்கி), தீது என்று உள்ளவை யாவைஉம் செய்து - பொல்லாங்குகளென்று உலகத்திலுள்ளவை எல்லாவற்றையும் செய்து, எமை - (தவசிகளாகிய) எங்களை, கோது என்று -சாரமில்லாதபொருள்களென்று கருதி, உண்டிலள் - உண்ணாமல் விட்டிட்டாள்; இ தனைஏ குறை-(உண்ணாமல்விட்ட) இவ்வளவே குறைவாயுள்ளது; யாது என்று எண்ணுவது - (இவளை) என்ன என்று கருதுவது? இ கொடியாளைஉம் - கொடுந்தன்மையையுடைய இவளையும், மாது என்று எண்ணுவதுஓ-பெண்ணென்று கருதுவது தகுமோ? (எ-று.)

எவ்வளவு தீங்கு விளைக்கலாமோ அவ்வளவும் இவள் தவசிகளாகிய எங்களுக்கு இழைத்திருக்கின்றாள்; எங்களையே உண்டும் இருப்பாள்:உண்ணாதது-எங்கள் உடம்பு தவத்தினால்வாடி இறைச்சியற்றிருத்தலால், 'இது பசையுள்ளதன்று; கோது' என்ற இகழ்ச்சி பற்றியே: இப்படிப்பட்ட கொடியவளையும் பெண்ணென்று நினைக்கலாமோ? என்பதாம். மற்றை முனிவரையும் உளப்படுத்தி 'எமை' என்றான். பி-ம்:—[1]உள்ளன. [2]எனைக். [3]அத்தனை. [4]ஏதென்று. [5]உன்னுவது. [6]எண்ணுதியோ, உன்னும்தோ, எண்ணுவையோ, எண்ணுமதோ. [7]மதிப். (396)

56. நாண்மை யே [1]யுடை யார்ப்பிழைத் தால்[2] நகை
[3]ஆண்மை [4]யேபெற்ற வன்றிற லாடவர்
தோண்மை யேயிவள் பேர்சொலத் [5]தோற்குமால்
ஆண்மை [6]யென்னும [7]தார்வசத் தாகுமே.

(இ-ள்.) நாண்மைஏ உடையார்ப்பிழைத்தால் - நாணமென்ற குணத்தை முதன்மையாக்கொண்ட மகளிரைக் கொன்றால், (அது), நகை - '(வீரனென்றுபேர்கொண்ட இவன் பெண்வதை செய்தானே' என்று பலரும் பரிகசித்துச்) சிரித்தற்குக் காரணமாம்; இவள் பேர் சொல-இவள்பேரைச் சொன்னமாத்திரத்தில், ஆண்மைஏ பெற்ற வல் திறல் ஆடவர்-சுத்தவீரகுணத்தைக்கொண்ட வலிய பராக்கிரமத்தையுடைய ஆண்மக்களுடைய [பெருவீரருடைய], தோண்மைஏ-புயவலிமுழுவதுமே, தோற்கும்-போய்விடும்: (என்றால்), ஆண்மைஎன்னும் அது ஆர் வசத்து ஆகும்-ஆண்தன்மையென்பது (இவளிடத்திலே யொழிய) மற்றை யாரிடத்திலிருப்பதாகும்? (எ-று.)

'இராமா! நீ நினைக்கின்றபடி பெண்களைக் கொலைசெய்வது, பலரும் ஏளனஞ்செய்யத்தகுந்த பாவத்தொழில்தான்; பெண்

கட்குஉரிய நாணம் சிறிதும் இல்லாமையால் இவள் பெண்ணல் லள், ஆணே; அன்றியும், தன் பெயரைச் சொன்னாலும், அது கேட்ட மாத்திரத்திலேயே பெருவீரரும் தங்கள் வலிமை முழுவதை யும் இழந்து இவளுடன் பொரப் பின்வாங்குவரென்றால், இவளிடத் தில் ஆண்மையுள்ளதென்பதா, மற்றையோரிடத்தில் ஆண்மை யுள்ளதென்பதா? இங்ஙனம் ஆண்மைநிறைந்துள்ளவளைக் கொல் வது, 'எப்படிப் பெண்கொலையாகும்?' என்று விசுவாமித்திரன் கூறினனென்க.

நாண்மை-மகடூஉக்குணங்களுள் முதலது: அது, பிற ஆடவ ரைக் காணுதற்கும் மனங்கூசுதல். பிழைத்தலென்பது - இலக் கணையால், கொல்லுதலை யுணர்த்திற்று. [2]நகுவாண்மை என்ற பாடத்திற்கு, நாண்மை உடையார் - (இவளுடன் போர்செய்வ தற்கு) நாணங்கொண்டு அப்போரைச்செய்யாதொழிந்தவர்கள் தாமே, பிழைத்தார்-உயிர்பிழைத்தார்கள்; [அஞ்சாது எதிர்த்து இவளொடு பொருதவரெல்லாரும் இறந்தனரென்றபடி]; நகு வாண்மை ஏ பெற்ற - விளங்குகின்ற வாளினாற்செய்யும் போரின் தன்மையையே கொண்டுள்ள, வல் திறல் ஆடவர் என்க. பி - ம்:— [1]உடையார் பிழைத்தார். [2]நகும், நக்கு. [3]வாண்மை. [4]ஏயுடை, ஏகற்ற, அற்றிடும். [5]தோற்பரால், தோற்பரேல். [6]இன்னுமீது, என் பதிங்கு. [7]ஆர்வசத்தாகுமோ, ஆரிடைவைகுமே, ஆர்கண்ண தாகுமே. 'தாண்மையேயுடையார்ப் பிழைத்தார்க்கு' என்று சில பிரதிகளில் முதலடி.

"மன்னர் மன்னவன்" (58), "பிருகுவென்னும்" (59), "வான கந்தனின்" (60) "ஆதலால்" (61) என்ற பாடல்கள் சிலபிரதி களில் இங்கு உள்ளன. (397)

57. இந்திரன் [1]னிடைந்தா [2]னுடைந்[3]தோடினார்
தந்திரம்[4]படத் தானவர் வானவர்
மந்தரம்[5]மிவள் தோளெனின் [6]மைந்தரோடு
அந்தரம்[7]மினி யாதுகொ[8]லாண்மையே.

(இ - ள்.) இந்திரன் - தேவேந்திரன், இடைந்தான் - (இவளுக் குத்) தோற்றான்; தானவர் வானவர் - அசுரர்களும் மற்றைத்தேவர் களும், தந்திரம் பட-(தங்கள்) சேனைகளெல்லாம் அழிய, உடைந்து ஓடினார் - (இவளுக்குமுன் நிற்கமாட்டாமல்) தோற்று ஓடிப்போனார் கள்: இவள் தோள் - இவளது புயங்கள், மந்தரம் எனின் - மந்தர கிரிக்கு ஒப்பாமென்றால், இனி - (இவளுக்கு), மைந்தரோடு-ஆண் மக்களுடனே, ஆண்மை - பராக்கிரமத்தில், அந்தரம் யாது-வேறு பாடு யாதோ? (எ-று.)—கொல் - அசை.

இந்திராதிதேவரையும் அசுரர்களையும் பறக்கடித்து மந்தர மலைபோற் பருத்த தோள்களை இந்தத்தாடகை பெற்றிருக்கின்றா ளென்றால், ஆடவர்க்கும் இவட்கும் வேறுபாடு என்ன உளது? என்றனனென்க. மந்தரத்தைத் தோளுக்கு உவமை கூறியதனால், அம்மலை பாற்கடலைக் கலக்கியதுபோல, இவளது தோள் பகைக்

கடலைக் கலக்குமென்பது பெறப்படும். ஈற்றடிக்கு, அந்தரம்-முடிவாக, மைந்தரோடு-ஆண்மக்களிடத்தில், ஆண்மை - ஆண்மைத்தன்மை, இனி - இனிமேல், யாது - என்ன உள்ளது? [இவளிடத்தில்தான் ஆண்மை நிரம்பியுள்ளது] என்று உரைப்பாருமுளர். பி-ம்:—[1]உடைந்தான்.[2]உடைந்தே,இடைந்து. [3]ஓடினன்.[4]படைத், படி. [5]அவள். [6]மைந்தவோர், மைந்தர்தோள். [7]இது. [8]ஆண்மையாய், ஆண்மையால், ஆமைய. (398)

58.—முனிவன் மற்றுஞ் சொல்லத் தொடங்குதல்.

மன்னர் மன்னவன் [1]காதல [2]மற்றுமொன்று
[3]இன்னம் யா[4]னுரைக் கின்றதி யாதெனின்
முன்னொர் [5]கால [6]நிகழ்ந்த [7]முறைமையீது
என்ன வோதலுற் ருன் [8]தவத் தீறிலான்.

(இ - ள்.) 'மன்னர் மன்னவன் காதல - சக்கரவர்த்தித் திருமகனே! மற்றும் ஒன்று இன்னம் யான் உரைக்கின்றது-வேறும் ஒரு செய்தி இன்னமும் நான் சொல்லவேண்டியது (இருக்கிறது): யாது எனின் - (அது) என்னஎன்றால், முன் ஒர் காலம் நிகழ்ந்த முறைமை ஈது-முன்னே ஒரு காலத்தில் நடந்த கிரமம் இதுவாம்,' என்ன-என்று சொல்லி, தவத்து ஈறு இலான்-தவத்துக்கு ஒரு எல்லையில்லாதவனாகிய விசுவாமித்திரன், ஓதல் உற்றான் - (அதனைக்) கூறலானான்; (எ - று.)—அது, மேல் 3-கவிகளிற் காண்க.

ஈது என்றது-பெண்களாயினும் பொல்லாங்கு உடையராணற் கொல்லலாமென்பது. இந்தச் செய்யுள்முதல் நான்குசெய்யுள்கள் சிலபிரதிகளிலில்லை; சிலபிரதிகளில் 'வெள்ளி' என்று குறிக்கப்பட்டுள்ளன. சிலபிரதிகளில், இதுவும் அடுத்த செய்யுளும் "சாற்றுநாள்" (63) என்பதன் பின்னும், சிலபிரதிகளில் "மன்னும்" (64) என்பதன் பின்னும் உள்ளன. பி - ம்:—[1]காதலன். [2]மாறுமொன்று. [3]இன்மை. [4]உரைக்கின்றனன்.[5]காலை. [6]முயன்ற. [7]முறைமையது, முறையிஃது, முறைமையிது, முறையதே.[8]அறத்து.(399)

59.—இரண்டு கவிகள் – மகளிரைப் பொல்லாங்கு கருதிக் கொன்று மேன்மைபெற்ற சரிதைகளைத் தெரிக்கும்.

பிருகு வென்னும் பெருந்தவன் தன்மனை
வருக யற்கட் [1]கியாதிவல் [2]லாசுரர்க்கு
உருகு காத லுற [3]வுற வாதலே
கருதி யாவி கவர்ந்தனன் [4]நேமியான்.

(இ - ள்.) பிருகு என்னும் பெரு தவன் தன் - பிருகு என்கிற பெரிய தவமுள்ள முனிவனுக்கு, மனை வரு-மனைவியாகப் பொருந்திய, கயல் கண் கியாதி-கயல்மீன்போற்பிறழ்கின்ற கண்களையுடைய கியாதியென்பவள், வல் ஆசுரர்க்கு-வலிமையுடைய அசுரர்களுக்கு, உருகு காதல் உற-மனமுருகுதற்குக் காரணமான அன்புபொருந்த, உறவு ஆதலே கருதி - துணையாதலை யெண்ணி, நேமியான் - சக்கரபாணியான திருமால், ஆவி கவர்ந்தனன்—; (எ-று.)

முன்பு தேவர்க்கும் அசுரர்க்கும் பெரும்போர் நடந்தபோது, நேமிதாங்கிய திருமால் அசுரரைத் துரத்த, அவர்கள் ஓடிப் பிருகு முனிவனாச்சிரமத்திலே நுழைந்து அம் முனிவனது பத்தினி யான கியாதியென்பவளை அடைக்கலமாகப் புக, அவள் அவர்கட்கு அபயங்கொடுத்துத் தன்னாச்சிரமத்தில் மறைத்துக்காத்துவந்தாள்: அதனை யறிந்த உபேந்திரனான திருமால் பகைவரான அசுரரைக் காட்டும்படி வெகுவாய்க்கேட்டும் அவள் இயையாமையால், முற்பட அவள் சிரத்தைக் கொய்து, பிற்பட அசுரர்களை வதைத்தானென் பது, இந்தச்செய்யுளிற் குறித்த வரலாறு. இந்தக் கியாதியென்ப வள் - அசுரகுருவான சுக்கிரனது தாய். ஆசுரர்-நீட்டல். நேமியான்- கருத்துடையடைகொளி. இச்செய்யுளுள்ள பிரதி சிலவற்றில் ''மன்னர்மன்னவன்'' (58) என்ற செய்யுள் இல்லை. பி-ம்:—[1]கயாதி, கெயாதி. [2]ஆசுற. [3]உலகாள்வதால், உலகோதலால், உறவாதலால். [4]நேமிமால். (400)

60. [1]வான கந்தனின் [2]மண்ணினின் [3]மன்னுயிர்
போன கந்தனக் கென் [4]றெணும் [5]புந்திய
தான வள்[6]கும திப்பெய ராடனை
ஊனொ ழித்தனன் [7]வச்சிரத் தும்பர்கோன்.

(இ - ள்.) வானகந்தனில் - தேவலோகத்திலும், மண்ணினில்- பூலோகத்திலும், மன்-பொருந்தியுள்ள, உயிர் - உயிர்களையெல்லாம், தனக்கு போனகம் என்று எணும் - தனக்கு உணவென்று கருது கின்ற, புந்தியது ஆனவள் - அறிவுடையவளாகி, குமதி பெயராள் தனை - குமதியென்று பெயர் பெற்றவளை, உம்பர் கோன்-தேவராச னான இந்திரன், வச்சிரத்து - வச்சிராயுதத்தினால், ஊன் ஒழித்த னன் - உடலை யொழித்தான் [கொன்றனன்]; (எ - று.)

உலகங்களையெல்லாம் பாழடையச்செய்யவேணு மென்று கரு திய விரோசனனுடைய மகளாகிய மந்தரையென்பவளைத் தேவேந் திரன் கொன்றொழித்தா னென்று ஸ்ரீவான்மீகத்திற் கூறியுள்ளது; ஆகவே, குமதிப்பெயராள் என்பது - பெயரைக்கூறிய தெனக்கொள் ளாமல் துர்ப்புத்தியுடையவளென்று பிரசித்திபெற்றவ ளென உரைகூறலாம். [6]மந்தரைப்பெயராள் என்ற பாடத்தைக் கொள்ளி னுமாம். பி-ம்:—[1]வானகத்தினின், வானகத்திலும். [2]மண்ணிலும், மாந்தரை. [3]மண்ணினில். [4]எனும். [5]புந்தியள்மானம்வெஃ (குமதி), புந்தியத்தானவள், புந்தியமானவெஃ, புந்தியவானவள், புந்தி யளானவொள், புந்தியத்தானவொள். [6]சுமதிப். [7]இந்திரனொள்ளி யோய். இரண்டாமடியிலிருந்து 'புந்தியாற், றனமெங்குந்தனிதிரி வாடன, தானொழித்திடனன்றெனவோதினன்' என்று சிலபிரதி களில். (401)

61.—ஸ்ரீவிஷ்ணுவும் இந்திரனும் பெண்கொலையாற் புகழேபெற்றமை.

ஆத லா[1]லரிக் காகண்ட லன்றனக்கு
ஓது கீர்த்தி[2]யுண் டாய[3]தல் லாதிடை
ஏத மென்பன [4]வெய்திய வோசொலாய்
தாத டர்ந்து தயங்கிய [5]தாரினாய்.

(இ - ள்.) ஆதலால் - (பெண்கொலை செய்த) அச்செய்கையினால், அரிக்கு-விஷ்ணுவுக்கும், ஆகண்டலன் தனக்கு - இந்திரனுக்கும், ஓது கீர்த்தி-(யாவராலும் எடுத்துச்சிறப்பித்துச்) சொல்லுதற்குரிய புகழ், உண்டாயது அல்லாது-உண்டாயிற்றே யல்லாமல், இடை - இடையிலே, ஏதம் என்பன - குற்றமெனப்படுபவை [பழி], எய்திய ஓ - நேர்ந்தனவோ? சொலாய்-சொல்வாயாக; தாது அடர்ந்து தயங்கிய தாரினாய் - பூந்தாதுகள் நெருங்கி விளங்குகின்ற மாலையையுடையவனே! (எ - று.)

பெண்கொலையால் திருமாலுக்கும் தேவேந்திரனுக்கும் புகழேயன்றிப் பழியுண்டாகவில்லை யாதலால், இவளைப்பெண்ணென்றே கொண்டாலும், இவளுடையவதையாற் புகழேயுண்டாகுமென்று விசுவாமித்திரன் இராமனுக்கு எடுத்துக்காட்டியவாறு. அரி-ஹரி; அடியார்களின் பாவங்களை யொழிப்பவன். ஆகண்டலன் - சத்துருக்களை நன்கு துண்டிப்பவன். பி-ம்:-[1] அவர்க்கண்டவர்க்கன்பினால், அவர்க்காகண்டலன்னவற்கு. [2] உண்டாயதல்லா, உடைய. [3] அல்லால். [4] எய்தியதோ. [5] தோளினாய். (402)

62.—'இத்தாடகைக்கு ஆண்மையில்லையென்று குறைபட வேண்டா' என்று முனிவன் கூறுதல்.

[1] கறங்க டல்திகி ரிப்[2] படி காத்தவர்
[3] பிறங்க டைப்[4] பெரி யோய்பெரி யோரொடு
மறங்கொ [5] டித்தரை மன்னுயிர் [6] மாய்த்து நின்று
அறங்[7] கெ டுத்தவட் [8] காண்மையும் வேண்டுமோ.

(இ - ள்.) கறங்கு - ஒலிக்கின்ற, அடல் - வலிமையையுடைய, திகிரி-ஆஜ்ஞாசக்கரத்தினால், படி-பூமியை, காத்தவர்-பாதுகாத்து வந்த சூரிய குலத்தரசரின், பிறங்கடை-வமிசத்திற்பிறந்த, பெரியோய் - பெருமைபெற்றவனே! பெரியோரொடுஉம் மறம்கொடு-பெரியோர்களுடனே பகையைக்கொண்டு, இ தரை மன் உயிர்மாய்த்து - இப்பூமியிற் பொருந்திய உயிர்களை யொழித்து, நின்று - (தானொழியாமல்) நிலைபெற்று, அறம் கெடுத்தவட்கு-தருமத்தையொழித்த இத்தாடகைக்கு, ஆண்மைஉம் வேண்டும்ஓ - ஆண்மையென்பதொன்றும் வேருக வேண்டப்படுமோ? (எ-று.)

அறத்தைக்கெடுத்துப் பெரியோர்க்குத் தீங்கிழைக்கின்ற இவளது செய்கைக்காகவே இவளை வதைக்கலாமென்று காட்டியவாறு. பிறங்கடை - வழித்தோன்றல்: "கரும்பிவட்டந்தோன் பெரும் பிறங்கடையே" என்றார், பிறரும். கறங்குதல் - சுழலுதலுமாம். இதுவும் அடுத்த செய்யுளும் சிலபிரதியில் "இந்திரன்னிடைந்தான்" (57) என்பதன்பின். பி-ம்:—[1] கறங்கிட. [2] படை. [3] பிறங்கடற், பிறங்கிடப். [4] பெரியோர்..., பெரியோய்பெரியோய்கடம்,... பெரியோனொடும். [5] இத்தனை. [6] மாய்த்தெனது, மாய்த்துநல், மாய்த்துற, மாய்த்தற, மாய்த்துள. [7] கெடுத்தவற்கு, கெடுத்தவள். [8] தன்மையுமாயுமோ, ஆருள் வேண்டுமே. (403)

63.—அத்தாடகை யமனினுங் கொடியவளெனல்.

சாற்று[1] நாளற்ற [2]தென்று [3]தருமம்பார்த்து
ஏற்றும் விண்ணென்ப [4]தன்றி யிவளைப்போல்
நாற்றங் [5]கேட்டலுந் [6]தின்ன [7]நயப்பதோர்
[8]கூற்றுண் டோ[9]சொலாய் [10]கூற்றுறழ் வேலினாய்.

(இ - ள்) கூற்று உறழ் வேலினாய் - (பகைவர்க்கு) யமனைப் போன்ற வேலையுடைய இராமனே! '(யமன்), சாற்றும் நாள் அற்றது என்று-(ஊழ்வினையின்படி) விதித்துக்கூறப்பட்டுள்ள ஆயுள் நாள் முடிந்ததென்று ஆலோசித்து, தருமம் பார்த்து - (உயிர்கள் செய்துள்ள) புண்ணியத்தையும் நோக்கி, விண் ஏற்றும் - (அவ்வுயிர்களை) மேலுலகத்துக்குக் கொண்டுசெலுத்துவான்,' என்பது அன்றி - என்பதுவே யல்லாமல், இவளை போல் - இத்தாடகையைப்போல, நாற்றம் கேட்டலும் தின்ன நயப்பது - (பிராணிகளின்) மணத்தை (உயிர்ப்பினால்) உணர்ந்தமாத்திரத்தில்தானே (அவற்றைத்) தின்ன விரும்புவதான, ஓர் கூற்று - ஒருயமன், உண்டோ - (உலகத்தில்) உள்ளதோ? சொலாய்—; (எ-று.)

'தருமராசனானயமனோ, ஆயுள்முடிந்தவரைப்பார்த்து உலகத்தில் தருமம் நிலைநிற்றற்பொருட்டு உயிர்கவர்ந்து, அவரவர் வினைக்குஏற்ப, விண்ணுலகத்திற்கு அனுப்புவதோ, நரகத்தில் தள்ளி உபத்திரவிப்பதோ, ஒன்றைச் செய்கின்றான்: இந்தத் தாடகையோ ஏதேனும் ஒருபிராணியின் நாற்றத்தை மோப்பாளாயினும், அப்பிராணி தருமகாரியஞ் செய்துகொண்டிருந்தாலும் அந்தப்பிராணியின் ஆயுள்நாளையும் உடனே ஒழிக்கவருகின்றாளே, இவள் அந்த யமனிலுங் கொடியவளல்லளோ?' என்று அவள் கொடுமையையெடுத்துக்காட்டியவாறு. "காலனும் காலம்பார்க்கும்பாராது, வேலீண்டுதானைவிழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர்வேந்தே" என்பது, ஈண்டு ஒருசார் நோக்கத்தக்கது. வெகுதூரத்திலிருந்தாலும் அறியவல்ல ளென்பதற்கு 'நாற்றங்கேட்டலும்' என்றார்: மரபுவழுவமைதி. புலன் மாறி வந்த வழக்குமாம். கூற்றுஉறழ் - புகழ்ச்சொல்லைப்பெருக்கிய என்றுமாம். பி - ம்:— [1]நாளென்பது, நாளற. [2]எண்ணி. [3]தருமன். [4]அல்லது, இல்லை. [5]கேட்பினும், காண்டலும். [6]தின்ப. [7]நயந்ததோர். [8]கூற்றுமுண்டோ. [9]சொலை, சொல்க, சொலக், சொலும், உரை. [10]கூற்றுழல். ()

64.—இவளைப் பெண்ணென்பதே தகுதியன்றெனல்.

மன்னும் [1]பல்லுயிர் [2]வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் [3]புன்மையில் [4]தீமையெ தோவைய
பின்னுந் [5]தாழ்குழற் பேதைமைப் பெண்ணிவள்
என்னுந் தன்மை [6]யெளிமையின் [7]பாலதே.

(இ - ள்.) ஐய-தலைவனே! மன்னும் பல் உயிர் வாரி-பொருந்திய பல பிராணிகளையும் (கைகளால்) திரட்டி, தன் வாய் பெய்து-தனது வாயிலே போகட்டுக்கொண்டு, தின்னும்-தின்னுகின்ற, புன்மையின்

-கீழ்மையைக் காட்டிலும், தீமை எது ஓ-கொடியது எதுவோ? [எதுவும் இன்றென்றபடி]; 'இவள் - இத்தாடகை, பின்னும் தாழ் குழல் பேதைமைபெண் - பின்னப்படுகிற நீண்டு தொங்குகின்ற கூந்தலையும் மடமைக்குணத்தையு முடையாளொருபெண்ணவள்,' என்னும் தன்மை-என்று நினைக்கின்ற தன்மை, எளிமையின் பாலதுவ-தாழ்வின்பாற்படுவதே [தகுதியன்றென்றபடி]; (எ-று.)—எளிமை-புத்தியின்வலியின்மை. பி-ம்:—[1] தன்னுயிர். [2] வாரத்தன். [3] புன்மையை, புன்மையெத், தீமையத், புன்மையத். [4] தீமையதோ, தீமையதே, தீமைசெய்தோ. [5] தார். [6] இருமையின், எளிமைநின். [7] பாலதோ. (405)

65.—விசுவாமித்திரன் நான் ஆராய்ந்து கூறுவதால் நீ தயங்காமல் இவளைக் கொல்லலா மெனல்.

ஈறில் நல்லறம் பார்த்திசைத் தேனிவட்
[1] சீறி நின்றிது செப்புகின் றே[2] னலேன்
ஆறி நின்ற [3] தருளன் றரக்கியைக்
கோறி [4] யென்றெதி ரந்தணன் [5] கூறினன்.

(இ - ள்.) ஈறு இல் - அழிவில்லாத, நல் அறம் - நல்ல தருமத்தை, பார்த்து—,இசைத்தேன்-(இவ்வாறு) கூறினேன்; இவள் சீறி நின்று-இவளைக் கோபித்துநின்று, இது செப்புகின்றேன் அலேன்-இவ்வார்த்தை சொல்லுகிறேனல்லேன்; ஆறி நின்றது - (நீ இவள்பக்கல் சினந்) தணிந்து நின்றது, அருள் அன்று-அருளாகாது, அரக்கியை கோறி - இவ்விராக்கதியைக் கொல்வாயாக, என்று—, எதிர்-(ஸ்ரீராமபிரானது) முன்னிலையில், அந்தணன் - கௌசிகமுனிவன், கூறினன்-சொன்னன்; (எ - று.)

"காய்வதன்க ணுற்றகுணந்தோன்றாதாகும்" என்பதுபற்றி 'சீறிநின்றிது செப்புகின்றேனலேன்' என்றான். "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தற் பைங்கூழ், களைகட்டதனோடுநேர்" என்றது, குறள். இவள்திறத்து ஆறிநிற்பது அருளென்று கருதுகின்றாய்: அது அருளாகாது: இவளால் நல்லோர்க்கெல்லாம் பேரிடர் விளையுமே: ஆகவே, கோறியென்றான். ஆறுதல்-தாமதித்தலுமாம். இச்செய்யுள் சிலபிரதிகளில் 61-இன் பின்னும், சிலபிரதிகளில் 63-இன் பின்னும். பி-ம்:—[1] சீறுகின்றது, சீறிநின்றது, சீறிநின்றதில், சீறிநன்றிது. [2] இலேன். [3] அறனன்று, அருணன்று, அறநன்று. [4] என்றனனன்னெறி, என்றெதிர்ந்தந்தணன். [5] கூறுவான். (406)

66.—இராமன் முனிவனேவலுக்கு இசைந்ததாகக்கூறுதல்.

ஐய [1] னங்கது [2] கேட்டற [3] னல்லவும்
[4] எய்தி ஞ[5] லது [6] செய்கவென் றேவினன்
[7] மெய்ய நின்னுரை வேதமெ னக்[8] கொடு
[9] செய்கை யன்றோ வறஞ்செயு மாறென்றான்.

(இ - ள்.) ஐயன் - ஸ்ரீராமன், அங்கு - அப்பொழுது, அது கேட்டு-அம்முனிவன் வார்த்தையைச் செவியுற்று, [அம்முனிவனை நோக்கி], 'மெய்ய-சத்தியசொரூபியானவனே! அறன் அல்லஉம் - தருமமல்லாதனவாகத் தோன்றுங் காரியங்களும், எய்தினல்-(செய்யும்படி) நேர்ந்தால், அதுசெய்க என்று ஏவினல்-அதனைச்செய்வாயாகவென்று (என்னை நீர்) நியமித்தால், நின் உரை வேதம் என கொடு - உம்வார்த்தையையே வேதவாக்கியமென்று மனத்திற் கொண்டு [கருதி], செய்கை அன்றோ-செய்வதன்றோ, அறம்செயும் ஆறு-தருமஞ்செய்யும் முறைமையாம்,' என்ருன்-என்று கூறினன்; (எ-று.)

எனக்கு உன்னைப்போன்றவர் ஒன்றை ஏவினல் அதனைச் செய்யவேண்டுவதுதான் கடமையென்று தன்னிணக்கத்தை இராமன் தெரிவிக்கின்றனன். பி-ம்:—[1] அங்கவை. [2] கேட்டபின். [3] அல்லதும், அல்லவாய். [4] எய்தினும். [5] இது, அவை. [6] செய்கெனமேவினல். [7] மெய்யின். [8] கொணர், கொண்டு. [9] செய்வது. இனி, சிற்சில பிரதிகளில் 'செய்யுமாறஃதெற்கெனச்செப்பினன், செய்கையாலறஞ் செய்யுஞ்செயலென்ருன்' என்று ஈற்றடி. (407)

67.–இனித் தாடகையோடு நிகழ்ந்த போர்கூறப்படுகிறது:–
அப்போது தாடகை தன்சூலத்தைச்
சினத்தோடு இராமன்மீது ஏவுதல்.

கங்கைத் [1] தீம்புன ஞடன் [2] கருத்தையும்
மங்கை[3] த் தீயனை யாளு மனக்கொளாச்
செங்கைச் சூலவெந் [4] தீயினைத் [5] தீயதன்
வெங்கட் [6] டீயொடு [7] மேற்செல வீசினள்.

(இ - ள்.) (அப்பொழுது) மங்கை தீ அனையாள்உம் - ஒரு பெண்ணின் வடிவங்கொண்டுவந்த அக்கினியையொத்தவளான அத்தாடகையும், கங்கை தீம் புனல் நாடன் கருத்தைஉம் - கங்காநதியினது மதுரமானநீரைக்கொண்டுள்ளகோசலநாட்டையுடைய ஸ்ரீராமனது எண்ணத்தையும்,மனம்கொளா-மனத்திலே கொண்டு [கருதியென்றபடி], செம் கை சூலம் வெம் தீயினை-(தனது)சிவந்த கையிலுள்ள சூலாயுதமாகிய கொடியநெருப்பை, தீய தன் வெம் கண் தீயொடு-கொடிய தனது பயங்கரமான கண்களினின்று எழுகின்ற அக்கினிச்சுவாலையுடனே, மேல் செல - (இராமன்) மேலே செல்லும்படி, வீசினள் -எறிந்தாள்; (எ - று.)

கோசலத்தின் தென்புறத்திற் கங்காநதி செல்வதுபற்றி, 'கங்கைத் தீம்புனஞடன்' என்ருர். இச்செய்யுளில் முத்தீக் கூறப்பட்டுள்ளமை காண்க. மங்கைத்தீயனையாள் - இல்பொருளுவமை. சூலத்தீயினைக் கண் தீயொடு வீசினள்-உடனவிற்சியணி. சூலவெந்தீ-உருவகம். பி-ம்:—[1] தண்-[2] கருத்தெலாம்,கருத்தையம்.[3] கூற்றனையாளும், தீவினையாளும். [4] தீயையத். [5] தீயவார். [6] தீயென. [7] மீச. (408)

68.—தாடகையின் சூலப்படை இராமன்மீது வருதல்.

புதிய கூற்றனை யாள் [1] புகைந் [2] தேவிய
[3] கதிர்கொண் [4] மூவிலைக் காலவெந் தீமுனி
விதியை [5] மேற்கொண்டு [6] நின்றவன் [7] மேலுவா
மதியின் மேல்வருங் கோளென வந்ததே.

(இ - ள்.) புதிய கூற்று அனையாள் - நூதனமான ஒருயமனை யொத்த தாடகை, புகைந்து ஏவிய - மனமெரிந்து வீசின, கதிர் கொள் மூ இலை காலம் வெம் தீ-ஒளியைக்கொண்ட மூன்று இலைகளையுடைய சூலாயுதமாகிய கொடிய சங்காரகாலாக்கினியானது, முனி விதியை மேற்கொண்டுநின்றவன்மேல்-விசுவாமித்திர முனிவனது கட்டளையை அங்கீகரித்துநின்ற ஸ்ரீராமபிரான்மேலே, உவா மதியின்மேல் வரும் கோள் என - பூர்ணிமா சந்திரன்மேலே (அவனை விழுங்குவதற்கு) வருகிற இராகுவென்கிற கிரகம்போல, வந்தது—; (எ-று.)

இராமசந்திரன்மீது வருஞ் சூலத்திற்கு உவாமதியின்மீது வரும் இராகுவை உவமை கூறினர். புதியகூற்று-பெண்கூற்று. கதிர் - கூர்நுனியுமாம். பி-ம்:—[1] புகுந்து. [2] ஏவியக். [3] கதி. [4] வேலெனும். [5] மேற்கொடு. [6] நின்றவர். [7] மேல்வர. மூன்ருமடியின் ஈற்றுச்சீர் முதல் 'மேலுவாப், பதியின் மேல்வருங் கோளெனப் பாய்ந்ததே' என்று சிலபிரதிகள். (409)

69.—அச்சூலத்தை இராமன் துணித்தல்.

மாலு மக் [1] கணம் வாளியைத் [2] தொட்டதும்
கோல விற்கால் [3] குனித்ததுங் கண்டிலர்
[4] கால னைப்பறித் தக் [5] கடி யாள் [6] விட்ட
சூல [7] மற்றன துண்டங்கள் [8] கண்டனர்.

(இ - ள்.) மால்உம்-விஷ்ணுவின் அவதாரமான இராமனும், அ கணம்-அந்த க்ஷணத்திலே, வாளியை-பாணத்தை, தொட்டது உம்-எடுத்துப்பிரயோகித்ததையும், கோலம் வில் கால் குனித்ததுஉம்-அழகிய வில்லின் குதையை வளைத்ததையும், கண்டிலர்-(எவரும்) கண்டாரில்லை; காலனை பறித்து - யமனிடத்தினின்றும் பிடுங்கி, அ கடியாள் விட்ட - கொடுந்தன்மையுடைய அந்தத் தாடகை வீசின, சூலம்-சூலாயுதம், அற்றன - அறுபட்டதனாலான, துண்டங்கள் துண்டுகளையே, கண்டனர் - (யாவரும்)பார்த்தார்கள்: (எ-று.)—கண்டிலர் கண்டனர் என்பவற்றிற்கு, விசுவாமித்திர லட்சுமணர் எழுவா யென்பாரு முளர்.

இதனால், இராமபிரான் எளிதில் தொழில்செய்யுந் திறமுடையனாதல் விளங்கும். காரணகாரியங்களின் விரைவை விளக்கும் பொருட்டு வாளியைத் தொட்டதனை முன்னும், விற்கால் குனித்தலைப் பின்னுமாக வைத்துக் கூறினர். தாடகையின் சூலம் யமனது சூலத்தைப்போலுமென்பது, மூன்ருமடியின் கருத்து. இனி, காலனைப்பறித் தக்கடியாள்விட்ட சூலம் என்பதற்கு - யமனை இடத்தைவிட்டெடுத்துத் தன்மாயையால் ஆயுதமாக்கி எதிரியின்

மேல் எறிந்தாற்போன்ற சூலம் என்றுமாம். பி-ம்:—[1]கணை. [2]தொட்டலும். [3]குணித்ததும். [4]ஆலமென்னவுமக், காலனைப்பழித்தக், காலனைப்பழித்துக். [5]கொடியாள். [6]விட. [7]அற்றுறு, அற்றிரு, இற்றதன், அற்றதன். [8]கண்டதே, கண்டவே. (410)

70.—தாடகை கல்மழைபொழிதலும், இராமன் அம்புகளால் தடுத்தலும்.

அல்லின் மாரி யனைய நிறத்தவள்
[1]சொல்லு மாத்திரை யிற்கடல் [2]தூர்ப்பதோர்
கல்லின் மாரியைக் கைவகுத் தா[3]ளது
வில்லின் [4]மாரியின் வீரன் விலக்கினன்.

(இ - ள்.) அல் - இருளையும், மாரி-மேகத்தையும், அனைய-ஒத்த, நிறத்து - கருநிறத்தையுடைய, அவள் - அத்தாடகை, சொல்லும் மாத்திரையின்-மிகச்சிறிது நேரத்திலே, கடல் தூர்ப்பது ஓர் கல்லின் மாரியை-கடலினையும் நிரப்பிவிடும்படியான கற்களின் மழையை, கைவகுத்தாள்-கைகளினால் எடுத்துப் பெய்தாள்; அது - அந்தக் கல்லின்மாரியை, வீரன் - ஸ்ரீராமன், வில்லின் மாரியின் - வில்லினின்று விடப்படுகிற அம்புமழையால், விலக்கினன்-(தன்மேல்விழவொட்டாது) தடுத்தான்; (எ - று.)

அல்லின்மாரி - இன், சாரியை. இனி, அல்லின்மாரி-இரவில் தோன்றிய மேகமுமாம். பி - ம்:—[1]சொல்லின். [2]தூர்ப்பன. [3]அதை. [4]மாரியால்.

இதன்பின் சிலபிரதிகளிற் காணப்படுஞ் செய்யுட்கள்:—ஏக்கமோடவிமையவ ரெங்கணும், வாக்கின் முந்துற [1]மாயை வளர்ப்பவள், மூக்கும் [2]வார் செவியும் [3]முறைபோயிடத், தாக்கும் [4]வள்ளலிளவலுந் தாக்கினன். பி - ம்:—[1]மாய்கைபுணர்ப்பவள். [2]வன். [3]முழை. [4]வள்ளற்கிளவலும், வள்ளலிராமனும். ஏக்கமோடவிமையவர்க் கெங்கணும், தாக்கும் வள்ளற்கிளவலுந் தாக்கினன், மூக்கும் வன் செவியும் முறைபோயிடப், போக்கினனவள் மாயப்புணர்ப்பெலாம்—என்று சிறிதுமாறுபட வேறுசில பிரதிகளில். விலக்கி [1]நின்றவன் வெங்கணை [2]விரைவினில் [3]விலக்கிக், கலக்கம் வானவர் தவிர்ந்திடக் காலனுங் [4]கலங்கத், [5]துலக்கிவையகத் [6]திடுக்கணு முனிவர்தம் [7]துயரும், உலக்கவூழித் [8]தீயொப்பதோர் கணைதொடுத்தெய்தான். பி-ம்:—[1]நின்றபின். [2]விரவின. [3]வாங்கிக். [4]களிப்ப. [5]இலக்கில். [6]இருக்கமும். [7]இடரும். [8]தீயெனனக்கொடுஞ் சிலைதொடுத்துய்த்தான். (411)

வேறு.

71.—பிறகு இராமபாணம் தாடகையின் நெஞ்சில் ஊடுருவிச் செல்லுதல்.

சொல்லொக்குங் கடியவேகச் சுடுசரங் கரிய செம்மல்
[1]அல்லொக்கு [2]நிறத்தினண்மேல் [3]விடுத்தலும் [4]வயிரக் [5]குன்றக்
கல்லொக்கு நெஞ்சில் தங்கா தப்புறங் [6]கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன [7]பொருளெனப் போயிற் றன்றே.

(இ - ள்.) கரிய செம்மல் - கருநிறமுள்ள ஸ்ரீராமன், சொல் ஒக்கும் கடிய வேகம் சுடுசரம் - (முனிவனது) சாபச்சொல்லையொத்த மிக்கவிரைவையுடைய சுடுகின்ற ஒரு அம்பை, அல் ஒக்கும் நிறத்தினள் மேல் - இருளையொத்த கருநிறத்தையுடைய அத்தாடகையின்மேல், விடுத்தலும் - பிரயோகித்தவளவில்,—(அந்த அம்பு), வயிரம் குன்றம் கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது - வச்சிரமயமான மலையிலுள்ள கல்லைப்போன்ற [உறுதியான] (அவளது) மார்பிலே (தைத்துத்) தங்கியிராமல், அ புறம் கழன்று - பின்னே உருவி, கல்லாபுல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் என - படியாத மூடர்களுக்கு நல்லறிவுடையோர் போதித்த அர்த்தம்போல, போயிற்று -போய்விட்டது; (எ - று.)

மேன்மக்கள் கீழோர்க்கு உபதேசிக்கும் உபதேசங்கள் அவர்கள் நெஞ்சில் தங்காமலே போதல்போல, இராமபாணம் அவள் மார்பில் தங்காது ஊடுருவிச் சென்றதென்க. சொல்-முனிவர்களின் சாபச்சொல்: தன்பயனைத் தவறாது அளித்தலில் அம்புக்கு உவமையாயிற்று. சொல் - வசவுச்சொல்லென்றுகொண்டு, "ஆறாதே நாவினாற் சுட்டவடு" என்றவாறு ஒருவர் கூறுங் கடுஞ்சொற்போல் மிகவுக்கிரமாக வருத்துந்தன்மையுள்ள அம்பென்றுமாம்; "வைவன முனிவர் சொல்லனைய வாளிகள்" என்பர், மேலும். [5]குன்ற என்ற பாடத்திற்கு - குன்றிலுள்ள என்க. பி-ம்:-[1]மல். [2]வடிவினள், படிவத்தாள். [3]விடவது, விடுதலும். [4]அருவிக். [6]கடந்து. [7]மறையென. (412)

72.—தாடகை இறந்துவிழுதல்.

பொன்[1]னெடுங் குன்ற மன்னான் புகர்முகப் [2]பகழி யென்னும்
[3]மன்னெடுங் கால வன்காற் [4]றடித்தலு [5]மிடித்து வானில்
கன்னெடு மாரி [6]பெய்யக் கடையுகத் [7]தெழுந்த மேகம்
மின்னொடு [8]மசனி யோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள்.

(இ - ள்.) பொன் நெடு குன்றம் அன்னான் - பொன்மயமான பெரிய மேருமலையையொத்த கம்பீரத்தன்மையையுடைய ஸ்ரீராமனது, புகர் முகம் பகழி என்னும் - கூர்மையை நுனியிலேயுடைய அம்பென்ற, மன் நெடு வல் காலம் காற்று - நிலைபெற்ற பெரிய வலிய ஊழிக்காலத்துக்காற்றானது, அடித்தலும் - வீசினமாத்திரத்திலே, இடித்து - இடியிடித்துக்கொண்டு, வானில் - ஆகாசத்திலே, நெடு கல் மாரி - பெரிய கல் மழையை, பெய்ய - பொழிதற்கு, கடையுகத்து எழுந்த - யுகாந்தகாலத்திலே மேலெழுந்த, மேகம் - மேகமானது, மின்னொடுஉம் அசனியோடுஉம் - மின்னலுடனும் இடியுடனும், வீழ்வதேபோல-கீழ்விழுவதுபோல, வீழ்ந்தாள்-(தாடகை இறந்து) விழுந்தாள்; (எ-று.)

யுகாந்தகாலத்துச் சண்டமாருதம் வீச அந்தக்காற்றின் விசையைத் தாங்கமாட்டாது வானத்து நின்ற மேகம் மின்னல் இடிகளுடன் கீழ்விழுவதுபோல, அத்தாடகை தன்நெஞ்சிற்பாய்ந்த இராமபாணத்தின் விசையைத் தாங்கமாட்டாமல் கீழ் வீழ்ந்தனளென்க. தாடகையின் வக்கிரதந்தம் மின்னலுக்கும், பெருங்குரல்

இடிக்கும் உவமை. உருவகவணியை யங்கமாகப் பெற்றுவந்த உவமையணி. பி - ம்:—[1] நிறக். [2] பகழியோடும், பகழியொனருல். [3] அந்நெடுங்காலவெங். [4] இடித்தலும். [5] அடிதததுநின்ற, அடித்த வானில். [6] பெய்யும். [7] எழுந்து. [8] இடியினேடும். (413)

73 —தாடகை இறந்துவிழுந்ததன் வருணனை.

[1] பொடியுடைக் கான மெங்குங் குருதிநீர் [2] பொங்க [3] வீழ்ந்த
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த் தாடகை [4] தலைக டோறும்
முடியுடை [5] யரக்கற் கந்நாண் முந்தியுற் பாத[6] மாகப்
[7] படியிடை [8] யற்று [9] வீழ்ந்த [10] வெற்றி [11] யம்பதாகை யொத்தாள்.

(இ - ள்.) பொடி உடை கானம் எங்குஉம் - புழுதிகளையுடைய அக்காட்டினிடம் முழுவதும், குருதி நீர் பொங்க - இரத்தவெள்ளம் மிகும்படி, வீழ்ந்த-(கீழே) விழுந்த, தடி உடை எயிறு பேழ் வாய்-(பலபிராணிகளின்) தசையையுடையபற்களையும்,திறந்தவாயையுங் கொண்ட, தாடகை-தாடகையானவள், தலைகள்தோறும்-(பத்துத்) தலைகளிலும், முடி உடை - கிரீடத்தையுடைய, அரக்கற்கு-ராட்சச ராசனுன ராவணனுக்கு, முந்தி - (விநாசகாலத்துக்கு) முற்பட்டு, உற்பாதம் ஆக - துர்நிமித்தமாக, அ நாள் - அந்தத்தினத்திலே, படிஇடை அற்று வீழ்ந்த-பூமியிலே அறுந்துவீழ்ந்த, அம்வெற்றி பதாகை ஒத்தாள்-அழகியவெற்றிக்கொடியைப்போன்ருள்; (எ-று.)

தாடகை முதன்முதலில் இராமபிரானுல் இறந்துகீழ் விழுந்தது - இராமபிரான் இராவணுதிராட்சச சங்காரத்துக்குத் தொடங்கியாயிற்றென்பதைத் தெரிவிக்கு மென்பதாம். தற்குறிப் பேற்றவணி. தாடகையின் வீழ்ச்சியே ராட்சசசங்காரத்துக்குத் தொடக்கச்செயலாமாதலால் இவ்வாறுவருணித்தது. உற்பாதம்-பின்னே நிகழுந் தீமையை முந்தித் தெரிவிக்குந் தீநிமித்தம். கொடி யறுந்துவிழுதல்- தீநிமித்தமாகும்.வீழ்ந்த தாடகையென இயையும். தடி-தசை; தடித் என்ற வடசொல்லின் விகாரமெனில், மின்னலை யொத்த எயிறு என்க. பி - ம்:—[1] கொடி. [2] பொங்கி. [3] வீழ. [4] கொடியாள் வீழ்தல், கொடியாள் பத்து. [5] அரக்கர்க்கந்நாள், அரக்கரந் நாள். [6] ஆகி. [7] படை. [8] இற்று. [9] வீழும். [10] வென்றி. [11] வெம். (414)

74.—தாடகையின் மார்பினின்று பெருகின இரத்த வெள்ளம்.

[1] கான்றிரிந் தாழி யாகத் தாடகை கடின மார்பத்து
ஊன்றிய பகழி[2] வாயூ டொழுகிய குருதி [3] வெள்ளம்
ஆன்ற[4] வக் கான மெல்லா [5] மாயின தந்தி மாலைத்
தோன்றிய செக்கர் வானந் தொடக்கற்று[6] வீழ்வ [7] தொத்தே.

(இ - ள்.) கான் - (அக்) காடானது, திரிந்து ஆழி ஆக - (தன் தன்மை) வேறுபட்டுக் கடலாம்படி, தாடகை கடினம மார்பத்து-தாடகையினது வலிமையான மார்பினிடத்திலே, ஊன்றிய-தைத்த, பகழி வாய் ஊடு-பாணஞ்சென்ற வழியாக, ஒழுகிய-பெருகின, குருதி

வெள்ளம்-இரத்தவெள்ளமானது, - அந்தி மாலை தோன்றிய - மாலை வேளையிற் காணப்படுகிற, செக்கர் வானம் - செவ்வானமானது, தொடக்கு அற்று - (வானத்து) ஆதாரமில்லாமையால், வீழ்வது ஒத்து-(தரையிலே) விழுவதனை யொத்து, ஆன்ற அ கானம் எல்லாம் - விசாலமான அந்தக்காட்டினிடம் முழுதும், ஆயினது - பரவிற்று; (எ - று.)

தாடகை மார்பிலிருந்து இரத்தவெள்ளம் பெருகிக் காடு முழுவதும் பரவியது - அந்திப்போதிற்செவ்வானம் ஆகாயத்திற் பிடிப்பில்லாமையாற் கீழ்வீழ்ந்து பரவியதுபோலு மென்றார்; இதுவும், தற்குறிப்பேற்றவணியே. தாடகையுடன் போர்புரிந்தது அந்திக்காலத்துக்குச் சற்றுமுந்தி யென்பது, முதனூலாற்பெறப்படும். ஆன்ற = அகன்ற. பி - ம்:—[1] தான்றிருந்து. [2] வாயோடு. [3] நீத்தம். [4] பேருலகமெல்லாம், பேருலகமெங்கும். [5] ஆயின. [6] வீழ்ந்தது, வீழ்வ. [7] ஒத்த, ஒத்தாள். (415)

75.—கவிக்கூற்று.

வாச [1] நாண் மலரோ [2] னன்ன மாமுனி [3] பணிம றுத
காசுலாங் கனகப் பைம்பூட் காகுத்தன் கன்னிப் போரிற்
[4] கூசிவா ளரக்கர் தங்கள் குலத்துயிர் [5] குடிக்க வஞ்சி
ஆசையா லுழலுங்[6] கூற்றுஞ்[7] சுவைசிறி தறிந்த தன்றே.

(இ - ள்.) வாசம் நாள் மலரோன் அன்ன - நறுநாற்றத்தையுடைய புதிய தாமரை மலரில்வாழும் பிரமதேவனைப்போன்ற, மாமுனி - விசுவாமித்திரமாமுனிவனது, பணி-கட்டளையை, மறுத- மறுக்காமற்செய்கின்ற, காசு உலாம் கனகம் பைம் பூண் - இரத்தினங்கள் விளங்குகின்ற பசும் பொன்னுபரணங்களை யணிந்த, காகுத்தன்-ஸ்ரீராமபிரானது, கன்னிபோரில்-முதற்போரில், வாள் அரக்கர்- வாள் முதலிய ஆயுதங்களைத்தாங்கிய அரக்கர், தங்கள் குலத்து உயிர் குடிக்க-தங்கள் குலத்தவரின் உயிரையுண்பதற்கு, அஞ்சி- பயந்து, கூசி-கூச்சங்கொண்டிருந்து, ஆசையால் - உண்ணவேணுமென்கிற விருப்பத்தோடு, உழலும் - திரிந்துகொண்டிருக்கின்ற, கூற்றுஉம்-யமனும், அன்று - அன்றைத்தினத்தில், சிறிது சுவை அறிந்தது-(அரக்கருயிரின்) உருசியைச் சிறிது உணர்ந்தது; (எ-று.)

கன்னிப்போர் - முதற்போர்: இது-குமரிப்போரெனவும்படும். பெண்ணுடன் செய்த போரென்ற பொருளும் தோன்றும். இராவண பயத்தால் இதுவரையிலும் அரக்கருயிரைக்கவரவேணுமென்ற எண்ணமிருந்தும் அங்ஙன் கவராதிருந்த யமன், இராமன் முதன்முறைசெய்த இந்தத்தாடகைப்போரில் அவ்வச்சம் நீங்கிச் சிறிது அரக்கச்சுவையை யறிந்தனனென்க. தேவர்களை இருதிணையாலுங் கூறலாமாதலால், 'கூற்று அறிந்தது' என்றார். காகுத்தன் = காகுத்ஸ்தன்: ககுத்ஸ்தனென்னும் அரசனதுவமிசத்திற் பிறந்தவன்: தேவேந்திரன் ஒருகால் தன்னுடைய பகைவரை அழிக்குமாறு வேண்டிப் புரஞ்சயனென்னுஞ் சூரியகுலத்து மன்னவனது விருப்பத்தின்படி போர்க்களத்தில் எருத்துவடிவ மெடுத்து அவனைத்

தாங்கிச்சென்றன ஹதலால், அவ்வரசன் ககுத்ஸ்தனென்று பெயர் பெற்றான்; ககுத் - (தேவேந்திரனாகிய எருத்தின்) முசுப்பு: அதில் ஏறியிருந்தவன்-ககுத்ஸ்தன். காசு-நவரத்தினம். உயிர்குடிக்க-மரபு வழுவமைதி. பி-ம்:—[1]மா. [2]என்ன. [3]அருண்மாறுத, அருண்மறுத, பணிப்பறுத, பணியறுத. [4]கூசு. [5]குடிப்ப, கொள்ள. [6]கூற்றம், கூற்றுச். [7]சிறுசுவை. (416)

76.—தேவர்கள் வந்து தமது மகிழ்ச்சியைத்தெரிவித்து முனிவனிடம் அஸ்திரங்களையெல்லாம் இராமனுக்குத் தருமாறுசொல்லிச் செல்லல்.

[1]யாமுமெம் மிருக்கை [2]பெற்றே [3]முனக்கிடை யூறு மில்லை
கோமகற் [4]கினிய தெய்வப் படைக்கலங் கொடுத்தி[5]யென்னு
மாமுனிக்[6]குரைத்துப்[7]பின்னர் விற்கொண்ட [8]மழையனான்மேல்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் [9]போயினாரே.

(இ - ள்.) (அப்பொழுது), விண்ணவர் - தேவர்கள்,—'யாம்உம் எம்இருக்கை பெற்றேம் - (இனி) நாங்களும் எங்களிருப்பிடங்களைப் பெற்றவரானோம்; உனக்கு இடையூறுஉம் இல்லை - உனக்கும் (வேள்விமுதலிய நற்கருமங்களைச் செய்தற்கு) ஒருதடையும் உண்டாகாது; கோமற்கு இனிய தெய்வம்படைக்கலம்கொடுத்தி - சக்கரவர்த்தித் திருமகனுக்கு நல்ல தெய்வத்தன்மையையுடைய ஆயுதங்களைக் கொடுப்பாயாக,' என்னு-என்று, மா முனிக்கு-விசுவாமித்திரமகாமுனிவனுக்கு, உரைத்து - சொல்லி, பின்னர் - பின்பு, வில் கொண்ட மழை அனான் மேல் - வில்லை(த்தன்னிடத்தே) கொண்டுள்ள காளமேகத்தைப் போன்றுள்ள ஸ்ரீராமபிரான்மீது, பூ மழை பொழிந்து-மலர்மழையைச்சொரிந்து, வாழ்த்தி—, போயினார்-(தத்தமிடங்களுக்குச்) சென்றார்கள்; (எ-று.)

வானத்திலிருந்தவண்ணம் போரைக் கண்டுகொண்டிருந்த தேவர்கள் தாடகைவதம் நிகழ்ந்ததும் விசுவாமித்திரனிடம்வந்து 'இனி, அரக்கரால் நிகழும் இடர்தீர்ந்து எம்மிருக்கையைப் பெற்றிட்டோம். உன்வேள்வியும் இனிதுமுடியும்: உன்னிடத்துள்ள தெய்வப்படைக்கலங்களெல்லாவற்றையும் ஸ்ரீராமனுக்குத் தருக' என்றுசொல்லி இராமபிரான்மீது மலர்மாரி பொழிந்து சென்றனரென்பதாம். பெற்றேம் - துணிவினால் வந்த காலவழுவமைதி. தெய்வப்படைக்கலம் - இந்திரன் முதலிய தேவதைகளை அதிதேவதைகளாகக்கொண்ட அஸ்திரங்கள். வில்லையேந்தி நிற்கின்ற இராமனுக்கு, இந்திரவில்லைக்கொண்ட முகில் உவமை. பி - ம்:—[1]யாமுமே. [2]பெற்றாம், பெற்றோம். [3]முனிக்கு, உமக்கு. [4]இனிநீ, இயைந்த, இளையாத். [5]என்று. [6]உரைத்த. [7]பின்னை, பினனம். [8]மழையினான், மழையினார். [9]போயினாரால். (417)

தாடகை வதைப்படலம் முற்றிற்று.

8 - ஆவது வேள்விப்படலம்.

விசுவாமித்திர முனிவனாற்செய்யப்படுவதும் இராமலக்ஷ்மணர்களாற் காக்கப்படுவதுமாகிய வேள்வியினது வரலாற்றை உணர்த்தும் பாகமென்றுபொருள். சிலபிரதிகளில் முதல் 14—பாடல்களும், சிலபிரதிகளில் முதல் 15—பாடல்களும் கவுசிகையாற்றுப்படலம் என்று காண்கின்றது. "ஆதலால்" (39) என்ற பாடலில்தான் வேள்விப்படலம் தொடங்குகின்றது.

1.—விசுவாமித்திரன் இராமனுக்குப் படைக்கலந் தருதல்.

விண்ணவர் போய [1]பின்றை விரிந்தபூ மழையி னாலே
தண்ணெனுங் கான நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
[2]மண்ணவர் வறுமை நோய்க்கு[3] மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லே யன்ன படைக்கல மருளி னானே.

(இ - ள்.) விண்ணவர் - தேவர்கள், போய பின்றை - (மலர் மழை பொழிந்து தத்தம் இருப்பிடத்திற்குச்) சென்றபின்பு,— தாங்கு அரு தவத்தின் மிக்கோன் - (பிறரால்) தரிப்பதற்கு அரிய பெருந்தவத்திலே மிகுந்தவனாகிய விசுவாமித்திரன், விரிந்த பூ மழையினால்ஏ-(அத்தேவர்களினாற் சொரியப்பட்ட) மலர்ந்த மலர் மழையினால், தண் எனும் கானம்-குளிர்ச்சியடைந்த [இயற்கையில் மிக்கவெப்பத்தையுடைய] அந்தப்பாலைவனத்தை, நீங்கி-(இராம லக்குமணர்களுடனே) கடந்து, - மண்ணவர் வறுமை நோய்க்கு -பூமியிலுள்ள மனிதர்களது தரித்திரமாகிய வியாதியைத் தீர்க்க, மருந்து அன-மருந்தையொத்த, வெண்ணெய் அண்ணல் சடையன் தன்-திருவெண்ணெய்நல்லூரிலுள்ள பெருமையிறசிறந்த சடையப்பமுதலியாரது, சொல்ஏ - வார்த்தையையே, அன்ன - ஒத்த, படைக்கலம் - அஸ்திரங்களை, அருளினான் - (இராமபிரானுக்குக்) கொடுத்தருளினான்; (எ - று.)

விரிந்த பூமழைஎனினுமாம். கற்பகமலர்களின் தொகுதியிலுள்ள தேன்மிகுதியால் அவ்வெவ்வியவனமும் தண்மையடைந்த தென்க. மருந்தைக்கண்டால்வியாதி நில்லாததுபோல் சடையனைக் கண்டால் வறுமைநில்லா தென்றகருத்தால், 'மருந்தனசடையன்' என்றார். 'அண்ணல்தன் சொல்லேயன்ன படைக்கலம்' என்றது, அவனதுசொல் எங்கும் எப்பொழுதும் தப்பாமல் தன்பயனைத்தருவதுபோல் ஆயுதங்களும் எங்கும எப்பொழுதுந் தவறாமல் வெற்றியாகிய பயனைத் தருவன என்றபடி. 'மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன' என்றதனால், அப்பிரபுவினது உதாரகுணமும் 'சொல் லேயன்ன' என்றதனால், செல்வாக்கும் சத்தியமும், இரண்டினாலும் பரோபகாரசிந்தையும் வெளியிடப்பட்டன: உவமையணி: "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், உவமைக்கு உவமைகூறி அடுக்கி நிறுத்தல் குற்றமாய் முடியுமாதலின், 'மருந்தன' என்பதைச் சொல்லுக்கு அடைமொழியாக்கலாகாது. இனி, இவ்வாயுதங்கள் மேல்இராட்சச

சங்காரஞ்செய்து உலகத்தாரது துன்பங்களை யொழிப்பதனால், மருந்தன படைக்கல மென்றும் இயைக்கலாம்.

பிருசாசுவமுனிவன் தட்சப்ரஜாபதியின் குமாரிகளான ஜயை, சுப்பிரபை யென்னும் இருவரை மணந்து அவர்களிடத்தில் சகல அஸ்திரங்களையும் சஸ்திரங்களையும் மக்களாகப் பெற்றனனாகை, விசுவாமித்திரன் தான் அரசனாக இருக்கையில் அந்த அஸ்திரசஸ்திரங்களை யெல்லாம் அம்முனிவனிடத்தினின்று அடைந்தனனென்றும், அன்றியும் விசுவாமித்திரன் அங்கஉபாங்கங்களோடும் மற்றும் உபதேசத்தாலுணரவல்ல அர்த்தங்களோடுங்கூடின மந்திரங்களோடு தநுர்வேதத்தையும் எல்லா அஸ்திரங்களையும் நன்குவிளங்குமாறு சிவபிரானிடத்து வரம்வேண்டிப்பெற்றனனென்றும் ஸ்ரீவான்மீகத்தா லறியலாம்.

திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பமுதலியார் இந்நூலாசிரியராகிய கம்பருக்குப் பலசெல்வமுங்கொடுத்து ஆதரித்துவந்ததனால் தமது நன்றியறிவை விளக்கும்பொருட்டு, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இவ்வள்ளலை இதிகாசமாகிய இப்பெருங்காப்பியத்தில் இடையிடையே புகழ்ந்து பேசுவர்; இவ்வாறு புகழேந்திப்புலவர் முதலியவரும் தம்மையாதரித்தவர்களைத் தாம்பாடிய நூல்களிற் பேசுவர். வெண்ணெய்-கடைக்குறைவிகாரம். பி - ம்:—[1]பின்னை. [2]மண்ணுளோர். [3]மருந்தெனுஞ். (418)

2.—படைக்கலங்கள் இராமபிரானை யடைதல்.

ஆறிய [1]வறிஞன் கூறி யளித்தலு மண்ண றன்பால்
ஊறிய வுவகை யோடு மும்பர்தம் [2]படைக ளெல்லாம்
தேறிய மனத்தான் செய்த நல்வினைப் [3]பயன்க ளெல்லாம்
[4]மாறிய [5]பிறப்பிற் றேடி வருவபோல் வந்த வன்றே.

(இ - ள்.) ஆறிய - (காமம் முதலிய குற்றங்கள்) தணிந்த, அறிஞன் - திரிகாலஞானமுள்ள விசுவாமித்திரன், கூறி - (அவ்வவற்றிற்கு உரிய மந்திரம் முதலியவற்றைச்) சொல்லி, அளித்தலும் - கொடுத்த அளவில்,—உம்பர்தம் படைகள் எல்லாம் - அந்தத்தேவ அஸ்திரங்கள்யாவும், தேறிய மனத்தான் செய்த நல்வினை பயன்கள் எல்லாம் - (ஐயம் திரிபு அறியாமை என்ற இக்குற்றங்கள் இல்லாமல்) தெளிந்த மனத்தையுடையவனொருவன் (ஒருபிறப்பிற்) செய்த சற்கருமங்களின் பயன்கள் யாவும், மாறிய பிறப்பில்-மறு பிறப்பிலே, தேடி-(அவனைத்) தேடிக்கொண்டு, வருவபோல் - (அவனிடமே தவறாமல்) வந்து சேர்வனபோல, அண்ணல் தன்பால்-ஸ்ரீராமனிடத்தில், ஊறிய உவகையோடுஉம் - மேன்மேற் சுரந்தெழுந்த மகிழ்ச்சியுடனே, வந்த - வந்துசேர்ந்தன; (எ - று.)

முற்றத்துறந்த விசுவாமித்திரமுனிவனிடத்துச் செய்தொழிலொன்றுமின்றி வாளாவருந்தியிருந்த தெய்வப்படைகள், ராக்ஷசசங்காரத்திற்கென்று திருவவதரித்து முதலில் தாடகையைக் கொன்று அத்தொழிலைத்தொடங்கிய இராமனிடம் தமக்குஉள்ள தினவை யொழித்துத் திருப்தியடையலாமென்ற கருத்தினாலும்

தகுந்த பாத்திரமாதலாலும் மிக்க குதூகலத்தோடு வந்தடைந்தன வென்க. உவமையணி. ஆறிய - தாடகையின் துன்பந்தீரப் பெற்ற என்றுமாம். ஒவ்வொரு அஸ்திரமும் இந்திரன் முதலியோருள் ஒவ்வொருவரைத் தனக்குஉரிய தேவதையாகக் கொண்டுள்ள தாதலால், 'உம்பர்தம்படைகள்' எனப்பட்டன. 'இன்னவை நல்லவை, இன்னவை தீயவை' என்னும் விவேகம் உறுதியாக ஒருவனுக்கு இல்லாமற்போனால் அவன் தீவினைகளை ஒழித்து நல்வினைகளையே செய்தல் கூடாதாதலால், 'தேறிய மனத்தான் செய்த நல்வினை' என்றார். தீவினைப்பயன்களும் மறுபிறப்பில் தேடிவருவனவாயினும், அவை, துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ் செய்து எல்லாவுலகத்தார்க்கும் அளவிறந்த நன்மையை அளித்தற்கு உதவுகிற அப்படைக்கலங்களுக்கு உவமையாதற்கு ஏலாவென்க. இருவினைகளும் செய்தவனை நாடியடையுமென்பதை "பல்லாவுளுய்த்து விடினும்" என்ற நாலடியாராலும் அறிக.அன்றே-ஈற்றசை: தேற்றமுமாம். அன்றே வந்த என இயைத்து, அப்பொழுதே வந்தன என்றும் உரைக்கலாம். பி - ம்:—[1] அறிவன். [2] உபசங்காரம். [3] உதவியெல்லாம், உதவிசெய்வான். [4] மாறியோர். [5] பிறப்புத். *(419)*

3.—அஸ்திரங்கள் யாவும் வேண்டி இராமனுக்கு அடிமையாதல்.

[1] மேவினம் பிரித லாற்றேம் [2] வீரநீ [3] விதியி னெம்மை
ஏவின செய்து [4] நிற்று மிளையவன் போல வென்று
தேவர்தம் [5] படைகள் செப்பச் [6] செவ்விதென் றவனு நேரப்
பூவைபோ னிறத்தி னுற்குப் புறத்தொழில் புரிந்த வன்றே.

(இ - ள்.) தேவர்தம் படைகள் - (விசுவாமித்திரனால் உபதேசிக்கப்பெற்ற) அத்தேவாஸ்திரங்கள், (ஸ்ரீராமனை நோக்கி), 'வீர - பராக்கிரமமுடையவனே! மேவினம் - (நாங்கள் உன்னை வந்து) அடைந்தோம்; பிரிதல் ஆற்றேம்-(இனி உன்னை விட்டுப்) பிரியமாட்டோம்: நீ விதியின் எம்மை ஏவின - நீ முறைமையாக எங்களை ஏவின தொழில்களை, இளையவன் போல-(உனது) திருத்தம்பியாகிய இலக்குமணன்போல, செய்து நிற்றும் - (தவறுமற) செய்துநிற்போம்,' என்று—, செப்ப - சொல்ல, அவனும் - இராமனும், செவ்விது என்று-நல்லது என்றுசொல்லி, நேர - (அவை தொழில்செய்தற்கு) உடன்பட, (அதுமுதல் அந்த அஸ்திரங்கள்), பூவைபோல் நிறுத்தினுற்கு-காயாமலர்போற் கருநிறத்தையுடைய ஸ்ரீராமனுக்கு, புறம் தொழில் புரிந்த-வெளியிற்செய்ய வேண்டிய திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தன; (எ - று.)

விசுவாமித்திர முனிவன் அஸ்திரமந்திரங்களனைத்தையும் ஸ்ரீராமனுக்கு உபதேசித்து அஸ்திரதேவதைகளை இராமனுக்கு வசப்படுத்தும்படி கருதி ஜபஞ்செய்ய, அத்தேவதைகள்யாவும் ஒளிமயமானஉடலுடன் முனிவனருகே வந்து தக்க ஆச்சிரயங் கிடைத்ததனால் மகிழ்ந்து, இராமனைநோக்கி 'நாங்கள் உனக்குப் பணிசெய்பவர்' என்று சொல்ல, இராமனும் அங்கீகரித்து, 'யான் நினைக்கும்போது வந்துஉதவுக' என்று பணித்துவிட்டுப் புறப்

படுகையில், மீண்டும் முனிவனைநோக்கி இராமன் 'அஸ்திர பிரயோகத்தை உபதேசித்ததுபோல உபஸம்ஹாரமந்திரங்களையும் உபதேசிக்கவேணும்' என்று வேண்ட, அம்மந்திரங்களையும் முனிவன் உபதேசித்து அந்தத்தேவதைகளையும் ஸ்ரீராமனுக்கு வசப்படுத்தின னென்று முதனூலால் விவரம் உணரலாம். புறத்தொழில்-குற்றேவல்: என்றது-அரக்கர் முதலியோரை அழித்தல் முதலியவற்றை. பி-ம்:—[1]மேவியபிறிதலாற்றும். [2]விதியினீ. [3]விரைவின். [4]கிற்பம். [5]படைகளெல்லாம். [6]செய்வது. (420)

4.—பின்பு இரண்டு காவதம் முனிவன் முதலியோர் நடக்க, அங்குத்தோன்றிய பேரரவத்தைக்குறித்து வினவிய இராமனுக்கு முனிவன் கூறத்தொடங்குதல்.

இனையன நிகழ்ந்த பின்னர்க் காவத மிரண்டு சென்றார்
அனையவர் [1]கேட்க வாண்டோ [2]ரரவம்வந் தணுகித் தோன்ற
முனைவவீ தியாவ தென்று முன்னவன் [3]வினவப் பின்னர்
வினையற நோற்று [4]நின்ற மேலவன் விளம்ப லுற்றான்.

(இ - ள்.) இனையன - இத்தன்மையனவாகிய காரியங்கள், நிகழ்ந்த பின்னர்-நடந்தபின்பு, காவதம் இரண்டு சென்றார்-(இம்மூவரும்) இரண்டு காதவழிதூரம் நடந்துபோனார்கள்; ஆண்டு - அவ்விடத்தில், அனையவர் கேட்க-அவர்கள் கேட்கும்படி, ஓர் அரவம் ஓசையொன்று, வந்து அணுகி தோன்ற- சமீபித்து வந்து விளங்க, முன்னவன்-(இராகவவீரர்களுள்) மூத்தவனாகிய ஸ்ரீராமன், (விசுவாமித்திரனைநோக்கி), 'முனைவ-பெரியவனே! ஈது யாவது - இவ்வோசை எதனா லுண்டாவது?', என்றுவினவ-என்று கேட்க, பின்னர்-உடனே, வினை அற நோற்று நின்ற மேலவன் - கருமங்களொழியும்படி தவஞ்செய்துநின்ற மேன்மையுடைய அம்முனிவன், விளம்பல் உற்றான் - சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அதை மேற்கவியிற் கூறுகிறார்.

முனைவன் - முன்னையவன். இனி, முனைவ-முனிவனே யென்றுமாம். முன்னவன் என்பதில், தேவர் முதலிய யாவர்க்கும் முதல்வராகிய திரிமூர்த்திகளுள்ளும் முதல்வன் என்னும் பொருளுந் தோன்றும். காவதம், யாவது - காதம், யாது என்பவற்றின் விரித்தல்விகாரம். பி - ம்:—[1]காண. [2]அரவம்வந்தெழுந்ததாங்கே, அகனதியணுகித்தோன்ற. [3]மொழிய. [4]வென்ற. (421)

5.—சரயுவிற் கோமதி சங்கமமாகும்பேரொலி யென்று முனிவன் சொல்ல, பின் அவர்கள் வேறொருநதியை யடைதல்.

மானச மடுவிற் றோன்றி வருதலாற் சரயு வென்றே
[1]மேன்முறை யமரர் போற்றும் விழுநதி [2]யதனி னோடும்
ஆன[3]கோ மதிவந் தெய்து மரவம [4]தென்ன வப்பாற்
போனபின் பவங்க டீர்க்கும் புனித[5]மா நதியை யுற்றார்.

(இ - ள்.) 'மானசம் மடுவில் - மானசசரசினின்றும், தோன்றி -உற்பத்தியாகி, வருதலால் - வருவதனால், சரயு என்று-சரயுஎன்று பேர்சொல்லப்பட்டு, மேல் முறை அமரர்போற்றும்-மேன்மையான தன்மையுடைய தேவர்களும் சிறப்பித்துச்சொல்லும்படியான, விழு நதி அதனினோடுஉம் - பெரிய அந்நதியோடு, ஆன கோமதி- பொருந்திய கோமதியென்னும் நதி, வந்து எய்தும்-வந்துகலத்தலா லுண்டாகிற, அரவம் அது - ஓசையாகும் (இது),' என்ன - என்று (கௌசிகமுனிவன்) சொல்ல,—அப்பால் போன பின் - (மூவரும்) அப்புறஞ்சென்றபின்பு, பவங்கள் தீர்க்கும் புனிதம் மா நதியை - (தன்னில் மூழ்கியவரது) பிறப்புக்களை ஒழிக்கின்ற பரிசுத்தமான பெரியதொரு நதியை, உற்றார் - அடைந்தார்கள்; (எ-று.)

பிரமனது மனசினால் நிருமிக்கப்பட்டதனால், மானசமென்று பெயர். சரயு-பொய்கையினின்றும் ஓடிவருகின்றதென்றுபொருள் படும். மேல்முறை-மேலிடத்துள்ள, தேவர் எனவுமாம். புனிதமா நதி-கௌசிகியென்பது. இங்குக்கூறிய நதீசங்கமமும் கிளைக்கதை களின் அமைப்பின் முறைமையும் முதனூலோடு மாறுபடுகின்றன. தாடகாவதமான பின்பு வாமனாச்சிரமத்தையடைந்தன ரென்றும், கௌசிகிநதியை யடைந்தது வேள்வியை முடித்த பின்பு மிதிலைக்குப் போகையி லென்றும் முதனூலிற் கூறியுள்ளது. பி - ம்:—[1]ஈனமில மரர்போற்றுமிருநதி. [2]இதனினோடும். [3]கோசிகை. [4]என்றும். [5]நீர்.

6.-இதுமுதற் பத்துப்பாடல்கள்-கௌசிகிநதியின் வரலாறு:- பிரமபுத்திரனை குசன் என்பவனுக்கு நான்குபுதல்வ ரெனல்.

சுரர்தொழு திறைஞ்சற் கொத்த தூநதி யாவ தென்று
[1]வரமுனி தன்னை யண்ணல் வினவுற மலருள் வைகும்
பிரமனன் [2]றளித்த வென்றிப் பெருந்தகைக் குசனென் றோதும்
அரசர்கோன் [3]மனைவி தன்பா லளித்தவர் நால்வ[4]ராகும்.

(இ - ள்.) 'சுரர் தொழுது இறைஞ்சற்கு ஒத்த - தேவர்கள் வணங்கித் துதித்தற்குத்தக்க, தூ நதி-பரிசுத்தியையுடைய இந்த நதி, யாவது-எத்தன்மையது?' என்று—,வரமுனி தன்னை-சிறந்த முனிவனாகிய விசுவாமித்திரனை, அண்ணல் - சக்கரவர்த்தி திரு மகன், வினவுற-கேட்க,—(அம்முனிவன் கூறுவான்):—மலருள் வைகும் பிரமன் - (திருமாலினது திருவுந்தித்) தாமரைமலரில் தோன்றிய பிரமதேவன், அன்று அளித்த-ஆதிகாலத்திற்பெற்ற, வென்றி பெரு தகை - வெற்றியையும் பெருமைக்குணத்தையு முடைய, குசன் என்று ஓதும் அரசர் கோன்-குசனென்று பெயர் சொல்லப்படுகிற அரசர்களுக்கு அரசன், மனைவி தன்பால்-(தனது) தருமபத்தினியிடத்தில், அளித்தவர் - பெற்ற பிள்ளைகள், நால் வர்-நாலுபேராவர்; (எ-று)—இக்கவியில் 'வினவுற' என்னும் வினை யெச்சம், மேல் பதினைந்தாங் கவியில் ''என்று அம் முனிபுகல'' என் பதனோடு முடியும்; ஆகவே பத்துபபாடல்கள் ஒருதொடர். 'ஆகும்'—அசை.

புதல்வர்கள் இன்னாரென்பதை அடுத்த பாடலினா லறிக. 'நாம் கிட்டிய நதி எது?' என்று கேட்ட இராமனுக்கு அந்தக் கௌசிகன் நதியின்வரலாற்றைச் சொல்லத்தொடங்கி, அந்நதி தன்னுடன் பிறந்தவ ளாதலால், தன்மரபைக் கூறத்தொடங்கினனென அறிக. குசன்மனைவி, வைதர்ப்பி யென்பவள். வரன்முனி எனப் பிரிக்க: வரம் முனி எனப் பிரித்து, வேண்டுவார் வேண்டும் வரங்களைத் தரும் முனி யெனினும் அமையும். குசனென்பதற்கு-பூமியில் வாழ்பவனென்று பொருள்: கு-பூமி: பிரமபுத்திரனாகையால் அப்பிரமலோகத்திலேயே இருந்துவிடாமல் மனிதர்களைக் காக்கும் பொருட்டு நிலவுலகத்தில் வந்தமைபற்றிய பெயரென்பர். பிரமன் மகனாகிய இவனை 'அரசர்கோன்' என க்ஷத்திரியனாகக் கூறினது, அரசத்தொழிலைப் பூண்டதனால். பி - ம்:—[1]வரநதி, வருமுனி. [2]அளிக்க. [3]அளித்த மைந்தரருமறையனைய, மனைவியன்பாலளித்தவர் நால்வர், மனையாடன்பாலளித்தவர் நால்வர், ஆவர். (423)

7.—குசனது புதல்வர் நால்வரின் நாமதேயமும், அவர்களின் ஆட்சி நகரும்.

குசன்குச நாபன் கோதில்[1]குணத்தினா தூர்த்தன் கொற்றத்து
இசைகெழு வசுவென் றோது மிவர்பெய ரிவர்க டம்மில்
குசன்[2]கவு சாம்பி நாபன் [3]குளிர்மகோ தயமா தூர்த்தன்
[4]வசையிறன் மவன மற்றை வசுகிரி விரசம் வாழ்ந்தார்.

(இ - ள்.) 'இவர் பெயர் - இவர்களது நாமம், குசன்—: குசநாபன்—: கோது இல் குணத்தின்-குற்றமில்லாத நற்குணங்களையுடைய, ஆதூர்த்தன்—; கொற்றத்து இசை கெழு - வெற்றியினாற் கீர்த்தி விளங்கிய, வசு—,' என்று ஓதும் - என்று சொல்லப்படும்; இவர்கள் தம்மில் - இவர்களுள், குசன்—, கவுசாம்பி-கௌசாம்பியென்னும் நகரத்திலும், நாபன் - குசநாபன், குளிர் மகோதயம் - (நீர்வளம் முதலியவற்றால்) குளிர்ந்துள்ள மகோதயமென்னும் நகரத்திலும், ஆதூர்த்தன்—, வசை இல் தன்மவனம் - குற்றமில்லாத தருமாரணிய மென்னும நகரத்திலும், மற்றை வசு - மற்றொருவனாகிய வசு என்பவன், கிரிவிரசம - கிரிவிரசமென்னும் நகரத்திலும், வாழ்ந்தார் - (அரசுபுரிந்து) வாழ்ந்திருந்தார்கள்; (எ-று.)

முதனூலில் மூத்தகுமாரனது பெயர் குசாம்பனென்றுகூறப்பட்டுள்ள தாதலால், இங்கே 'குசன்' என்பது அதன் விகாரம் போலும்; இவனது சம்பந்தம்பற்றியே இவனாண்ட நகரத்துக்கு 'கௌசாம்பி' என்று பெயர் வழங்கிற்று. கவுசாம்பி=கௌசாம்பி. ஆதூர்த்தன் - ஆதூர்த்தரஜஸ் என்று வால்மீகத்திற் காணப்படுகிறது. நாபன - முதற்குறைவிகாரம். தன்மவனம் - தர்மவநம்: அறம்வளருங்காடென்று பொருளாம். மகோதயம் என்பதற்கு - சிறந்த அபிவிருத்தியை யுடைய தென்றும், கிரிவ்ரஜம் என்பதற்கு-மலைகளின் கூட்டத்தையுடைய தென்றும் பொருள்: ஐந்து மலைகளினிடையிலுள்ள நகரமாதலால், கிரிவ்ரஜம் என்று பெயர் பெற்றதென்க. நாட்டுக்குக் குற்றமாவது-மிக்கமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்ற இவற்றால வருவது; இவற்றை

வட நூலார் ஈதிபர்தை யென்பர். பி - ம்:—[1]குணத்தவதூர்த்தன், குணத்தினதூர்த்தன். [2]கிரவிரசைநாபன், கிரிவிரசுநாபன். [3]கொள் கவுசாம்பிமன்னன், குளிர்...அதூர்த்தன், கொள்மகோதயமர்தூர்த் தன். [4]வசந்தமாரணியமற்றை.... இசைகெழுமாண்பின்வந்த வசு வதிவசுவுக்கேய்ந்த, இசை...வசுபதிவசுவைக்...என்பது இரண்டா மடி. (424)

8, 9.—குளகம்: குசநாபன்மகளிரை வாயுதேவன் காதலிக்க, தந்தையனுமதியின்றி உடன்படோமென்ற அவர்களின் முதுகை அந்த வாயுதேவன் ஒடித்தல்.

8. [1]அவர்களிற் குசநா பற்கே யையிரு [2]பதின்ம ரஞ்சொல்
துவரி தழ்த் தெரிவை நல்லார் தோன்றினர் வளரு நாளில்
இவர்பொழிற் றலைக்க ணுயத் [3]தெய்துழி வாயு வெய்திக்
கவர்மனத் தனனு யந்தக் கன்னியர் தம்மை நோக்கி.

9. கொடித்தனி மகரங்[1]கொண்டோன் குனிசிலைச் சரத்தானொந்தேன்
[2]வடித்தடங் கண்ணீ [3]ரென்னை மணத்திரென் றுரைப்ப வெந்தை
அடித்தலத் துரைத்துநீரோ டளித்திடி [4]னணைது [5]மென்ன
ஒடித்தனன் வெரிநை வீழ்ந்தா ரொளி[6]வளை மகளி ரெல்லாம்.

(இ - ள்.) (8) அவர்களில் - அவர்களுள், குசநாபற்கு-குசநாப னென்பவனுக்கு, அம் சொல்-அழகிய சொற்களையும், துவர் இதழ்-பவழம்போன்ற (சிவந்த) அதரத்தையுமுடைய, தெரிவை நல்லார் - நற்குணமுடைய பெண்கள், ஐ இருபதின்மர்- நூறுபேர், தோன்றி னர்-பிறந்து, வளரும் நாளில் - வளர்ந்து வருகிற காலத்தில், (ஒரு நாள்), இவர் - இப்பெண்களெல்லாரும், பொழில் தலைக்கண் - ஒரு சோலையினிடத்திலே, ஆயத்து-தோழிமார்கூட்டத்துடனே, எய்து உழி - (பூக்கொய்துவிளையாடுதற்குப்) போய்ச்சேர்ந்த பொழுதில் — வாயு - வாயுதேவன்,—எய்தி - (அங்கு) வந்து, கவர் மனத்தனன் ஆய் - (அவர்களால்) இழுக்கப்பட்ட மனத்தையுடையவனாய், அந்த கன்னியர் தம்மைநோக்கி-கலியாணமாகாத அந்த இளம்பெண்களைப் பார்த்து, (9) 'வடி தட கண்ணீர்-மாவடுவின் பிளவையொத்த பெரிய கண்களையுடைய பெண்களே! (யான்), கொடி தனி மகரம் கொண் டோன் - (தனது) துவசத்திலே ஒப்பில்லாத சுறுமீனினது வடிவத் தைக்கொண்டுள்ள மன்மதனது, குனி சிலை-வளைந்த (கருப்பு) வில் லினு லெய்யப்பட்ட, சரத்தால்-மலரம்புகளினால்,நொந்தேன்-வருந்தி னேன்: (ஆதலால்), என்னை —, மணத்திர் - (நீங்கள்) கலியாணஞ் செய்துகொள்ளுங்கள்,' என்று உரைப்ப-என்று சொல்ல,—(அந்தப் பெண்கள் அதற்கு உடன்படாமல்), 'எந்தை அடித்தலத்து உரைத்து-எமது தந்தையினது திருவடிகளில் (இக்கருத்தை வெளி யிட்டுச்) சொல்லி, (அதன்பின் அவர் அதற்கு உடன்பட்டு), நீரோடு அளித்திடின் - ஜலத்துடனே (தாரைவார்த்து உனக்கு எங்களைக் கலியாணஞ்செய்து) கொடுத்தால், அணைதும்-(பின்பு நாங்கள் உன் னைக்) கூடுவோம்,' என்ன-என்றுசொல்ல,-(அதுகேட்டுக் கோபித்த வாயுதேவன்), வெரிநை ஒடித்தனன் - (தனது ஆற்றலால்) அவர்க ளுடைய முதுகுகளைக் கூனும்படி ஒடித்தான்; (அதனால்),ஒளி வளை

மகளிர் எல்லாம்-ஒளியையுடைய வளையல்களையணிந்தஅந்தப்பெண் கள்யாவரும், வீழ்ந்தார்-(உடனே) கீழே விழுந்தார்கள்; (எ - று.)

குசநாபனென்பானுக்குத் தோன்றிய கட்டழகுடைய மகளிர் நூற்றுவர் பருவம் வாய்த்துத் தோழிமாருடன் பூஞ்சோலையிற் சென் றனர்: வாயுதேவன் அவர்களின் கட்டழகுகண்டு காமுற்றுத் தன்னை மணக்குமாறு வேண்ட, அம்மகளிர் 'யாம் தந்தைக்குப் பராதீனர்: அவர் கன்னிகாதானஞ் செய்து தந்தால் மணப்போம்' என்ன, வாயு தேவன் தன்வேண்டுகோட்கு அம்மகளிர் இணங்காததுபற்றிச் சினந்து அவர்களது சரீரத்திற் புகுந்து முதுகை முறித்துக் கூனிக ளாக்கின னென்பதாம்.

8:—குசநாபனது மனைவி கிருதாசியென்னும் அப்ஸரஸ் ஸ்திரீ யாவள். தெரிவைநல்லார்-நல்தெரிவையார் என மாறுக. தோன்றி னர் - முற்றெச்சம். நல்லார் தோன்றினர் வளருநாளில் பொழிலின் கண் எய்துழி என முடியுமிடத்து, 'இவர்' என வேண்டாமையின், அது மகளிரைச்சுட்டாமல், இங்ஙனம் அழகியவர் அங்ஙனம் வெரிந் ஒடிந்துவீழ்ந்தார் என நூலாசிரியரது இரக்கத்தைத் தெரிவிக்கு மாறு பின்னிற்கவியைநோக்கித் தகுதிபற்றி வந்தது. இனி, இவர் பொழில்-மிகவிரும்பப்படும் பொழில் எனவுமாம். தலை-தலம்: விகாரம். அந்தம் எனப்பிரித்து, அழகிய வென்றுமாம். 'கன்னியர் தம்மைநோக்கி' என்பது - மத்திமதீபம். பி - ம்:—[1] அவர்களுள். [2] பத்தின். [3] எய்துபு.

9:—அவர்களுடைய கண்ணழகிலே தான் ஈடுபட்டதனைத் தெரிவித்தற்கு, 'வடித்தடங்கண்ணீர்' என்றான். வடி-வடு; மாவின் இளங்காய்: அதன்உட்பிளவு, வடிவத்தால் உவமை; "வடித்தலைக் கண்" என்றார், சிந்தாமணியாரும். இனி, வடி என்பதற்கு-வடிக்கப் பட்ட அம்பு அல்லது வேல், அன்றி வாள் எனக்கொண்டு, அது போன்ற கண் என்றுமாம்; கூர்மைக்கும், ஆடவரை வருத்துதற்கும் உவமை. வடித்தல் - நெருப்பில்வைத்துக் காய்ச்சியடித்து அராவி வேலைசெய்து கூராக்குதல். 'அடித்தலத்து' என்றது,பிதாவினிடத் துத் தங்களுக்கு உள்ளபக்திதோன்ற, 'எந்தையடித் தலத்து உரைத்து நீரோடளித்திடின் அணைதும்' என்றதனால், பெண்களது சுவாதந்திரியமின்மை வெளியிடப்பட்டது. பி-ம்:—[1] கொண்டான். [2] வடித்தபூங்குழலீர். [3] இன்றே. [4] அணைத்தும். [5] என்றார். [6] வளையார் களெல்லாம். (425, 426)

10.—அம்மகளிர் தந்தைக்குச் செய்தி தெரிவிக்க, குசநாபன் அவர்களைப் பிரமதத்த னென்பவனுக்கு மணஞ்செய்து தருதல்.

சமிரண [1]னகன்ற பின்னர்த் தையலார் தவழ்ந்து சென்றே
அமிர்துகு குதலை மாழ்கி யரசன்மாட் டுரைப்ப வன்னான்
நிமிர்குழன் [2]மடவார்த் தேற்றி நிறைதவன் [3]சூளி நல்குந்
திமிரறு பிரம தத்தற் களித்தனன் றிருவ னுரை.

(இ - ள்.) சமிரணன் - வாயு, அகன்ற பின்னர் - (இங்ஙனஞ் செய்துவிட்டுப்) போனபின்பு, தையலார் - அழகையுடைய அம் மகளிர், தவழ்ந்து சென்றுஏ -(நடக்கமாட்டாமல்)நகர்ந்து கொண்டே போய், அமிர்து உகு குதலை - அமிருதத்தினது இனிமை பெருகு கின்ற மழலைச்சொற்களால், மாழ்கி - வாய் குழறி, அரசன் மாட்டு உரைப்ப - குசநாபனிடம் (நிகழ்ந்த செய்தியைச்) சொல்ல,—அன் னான்-அவ்வரசன்,—நிமிர் குழல் மடவார் தேற்றி-வளர்ந்த கூந்தலை யுடைய அவ்விளம்பெண்களைத் (தன் வார்த்தையால்) தேறுதல் செய்து, நிறை தவன் சூளி நல்கும்-நிறைந்த தவத்தையுடையவனா கிய சூளியென்னும் முனிவன் பெற்ற, திமிர் அறு பிரமதத்தற்கு - (அஜ்ஞான) இருள் நீங்கிய பிரமதத்தனென்னும் அரசனுக்கு, திரு அன்னார் - இலக்குமியை யொத்த அப்பெண்களை, அளித்தனன் - (கலியாணஞ்செய்து) கொடுத்தான்; (எ - று.)

குசநாபனது மகளிர் நூற்றுவரும் தந்தையிடஞ்சார்ந்து செய்தி தெரிவிக்க, தந்தை தன்மகளிர் வாயுதேவனைச் சபித்து விடாமற் பொறுமையுடன் இருந்ததற்கு மனமுவந்து அவர்களைக்கொண்டாடி யனுப்பிவிட்டு, மந்திரிமாரோடு ஆலோசித்து, சூளியென்னும் முனி வனது புத்திரனான பிரமதத்தனென்பவனுக்கு அவர்களைக் கன்னி காதானஞ் செய்தன னென்பதாம். சூளியென்னும் மகாமுனிவன் பிரமசாரியாய்த்தவஞ்செய்துவருகையில் ஊர்மிளையென்பவளது மக ளாகிய சோமதையென்னுங் கந்தருவ கன்னிகை அவனை வழிபட்டு அவனது அருளைப் பெற்றுத் தனக்கு நல்ல புதல்வனொருவனை அளிக்கவேண்டுமென வேண்ட, முனிவன் அவளுக்கு ஒருமகன் உதிக்கும்படி திருவுளம்பற்றினான்; அவனது தவமகிமையால் உண் டானமைபற்றி, அக்குமாரனுக்குப் பிரமதத்தனென்று பெயர்: (பிரமம்-தவப்பெருமையால், தத்தன் - கொடுக்கப்பட்டவன் என்று பொருள்:) இவன் சூளியின் மாநஸபுத்திர னென்று அறிக: இவனது தாய் க்ஷத்திரியஸ்திரீயாதலால், இவன் அரசனாய்க் காம்பிலியநகரத் தை ஆண்டு வந்தான். சமிரணன் - ஸமீரணன் என்னும் வடமொழி யின் விகாரம்; நன்றாகச் சஞ்சரிக்குந்தன்மை யுடையவன் என்று பொருள். 'அமிர்துகு குதலை' என்றது - தேவாமிருதம் நாவுக்கு இனிமைதருவது போலச் செவிக்கு இனிமைதரும் நிரம்பா மென் சொல்லை. திமிர்-திமிரம் என்பதன் விகாரம். கன்னியர்க்குத் திருமக ளுவமம்-அழகிற்கும், செல்வத்திற்கும், நல்வினையுடையோனிடத் துச் சென்று சேருமளவும் பொதுவாயிருத்தற்கு மென்க. பி-ம்:— [1] அகன்றதற்பின். [2] மாதர்த். [3] அருளை. (427)

11.—குசநாபனுக்குக் காதியென்பவன் பிறத்தல்.

அவன்மலர்க் கைகள் தீண்டக் கூனிமிர்ந் தழகு [1] வாய்த்தார்
புவனமுற் றுடைய கோவும் புதல்வரில் லாமை வேள்வி
[2] தவர்களிற் புரித லோடுந் [3] தகையுறத் தழலி னுப்பண்
கவன [4] வேக த்து ரங்கக் காதிவந் துதயஞ் செய்தான்.

(இ - ள்.) அவன் - அந்தப்பிரமதத்தன், மலர் கைகள் - (அப் பெண்களின்) செந்தாமரைமலர்போலுங் கைகளை, தீண்ட - தொட்ட

மாத்திரத்தில், (அப்பெண்கள் யாவரும்), கூன் நிமிர்ந்து - (தங்கள் தங்கள்) முதுகு வளைவு ஒழிந்து நேராகி, அழகு வாய்த்தார்-அழகு பெற்றார்கள்; (இது நிற்க); புவனம் முற்று உடைய கோஉம் - பூமி முழுவதையும் (தனது ஆளுகையில்) உடைய குசநாபனென்னும் அரசனும், புதல்வர் இல்லாமை - (தனக்குப்) புத்திரரில்லாமை, (நீங்க), வேள்வி - புத்திரகாமயாக மொன்றை, தவர்களின்-முனிவர் களைக்கொண்டு, புரிதலோடும் - செய்தவளவில், தகை உற - அழகுபொருந்த, தழலின் நாப்பண் - (அந்த) யாகாக்கினியின் மத்தியில், கவனம் வேகம் துரங்கம் காதி - நடையிலே விரைவை யுடைய குதிரைச் சேனையையுடைய காதியென்பவன், வந்து உதயம் செய்தான் - வந்து பிறந்தான்; (எ - று.)

பிரமதத்தன் அவர்களைக் கையால் தீண்டியபொழுதே அம் மகளிரனைவரும் தமதுகூன் நீங்கப்பெற்று முன்போல் மகாரூப வதிகளாய் விளங்க, அதுகண்ட குசநாபன் மிகவும் மகிழ்ந்து பிரம தத்தனை மனைவிமார் முதலியோரோடும் காம்பிலியநகரத்துக்கு அனுப்பிவிட்டுப் புத்திரனில்லாக்குறையைப் போக்கிக்கொள்ளும் பொருட்டுப் புத்திரகாமயாகஞ்செய்ய, அக்கினியினின்றும் காதி தோன்றின னென்பதாம். காதியினது தேஜஸைக் குறிப்பிக்கும் பொருட்டு, 'காதி வந்து உதயஞ்செய்தான்' என்றார். குசநாபன் யாகஞ் செய்கையில் அவனது தந்தையாகிய குசன் வந்து 'உனக் குக்காதியென்று ஒரு புத்திரன் பிறந்து குலத்தை விளங்கச் செய் வான்' என்று சொல்லிவிட்டு ஆகாசமார்க்கமாய்ப் பிரமலோகஞ் சென்றானாக, பின்பு கிருதாசியென்ற மனைவியிடம் காதி தோன்றி னான் என்று வான்மீகத்திற் கூறப்பட்டுள்ளது. [3]தகைவற என்ற பாடத்துக்கு-(அரசன்) மனவருத்தம் ஒழிய என்று பொருள். அவன் மலர்க்கைகள் தீண்ட-அந்தப்பிரமதத்தனது தாமரைமலர் போன்ற கைகள் பட்டமாத்திரத்தில் என்றுமாம். 'புவனமுற்றுடைய கோவும் புதல்வரில்லாமை' என்ற சேர்த்தியால், உலகையாளுதற் குப் புத்திரரைப்பெற விரும்புவானாயினா னென்க. கவனம் - கமநம்: வடமொழி. கவனவேகம் - பலவகை நடைகளையும் விரைவையு முடைய எனவுமாம். பி-ம்:—[1]வாய்ந்தார். [2]தவனிற். [3]தகவுற. [4]வேகத்தின்மிக்க. (428)

12.–காதியென்பவனுக்குத் தானும் கௌசிகியென்பவளும் பிறந்தமை.

அன்னவன் றனக்கு வேந்த னரசொடு முடியு மீந்து
பொன்னக ரடைந்த பின்னர்ப் புகழ்[1]மகோ தயத்தில் வாழும்
மன்னவன் காதிக்கி யானுங் [2]கவுசிகி யென்னு மாதும்
முன்னர்வந் துதிப்ப வந்த முடியுடை வேந்தர் வேந்தன்.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) அன்னவன் தனக்கு - அந்தக் காதியென்னும் புத் திரனுக்கு, வேந்தன்-குசநாபனென்னும் அரசன், அரசொடு முடி உம் ஈந்து - இராச்சியத்தையும் (அதனை ஆளுகைக்குச் சூசகமான). கிரீடத்தையுங் கொடுத்து [பட்டாபிஷேகஞ் செய்துவிட்டு], பொன் நகர் அடைந்த பின்னர் - பொன்மயமான சுவர்க்கலோகத்தை

(இறந்து) அடைந்தபின்பு, புகழ் மகோதயத்தில் வாழும் மன்னவன் காதிக்கு-(யாவராலும்) புகழப்படுகிற மகோதய நகரத்தில் வாழ்கிற அரசனாகிய அந்தக்காதி யென்பவனுக்கு, யான்உம் - நானும், முன்னர்-(எனக்கு) முன்னே, கவுசிகி என்னும் மாதுஉம் - கௌசிகி யென்றபெண்ணும், வந்து உதிப்ப-வந்து பிறக்க, அந்த முடி உடை வேந்தர் வேந்தன் - கிரீடத்தையுடைய அரசர்களுக்கு அரசனாகிய அந்தக் காதியென்பவன்,—(எ-று.)—'ஈந்தான்' என மேற்கவியோடு இயையும்.

குசநாபன் தன்மகனாகிய காதிக்கு முடிசூட்டிச் சுவர்க்கம் புக்கனனாக, அந்தக்காதிக்குக் கௌசிகியென்பவளும் யானும் தோன்றினோமென்று விசுவாமித்திரன் கூறுகின்றனனென்க. முடியென்ற சிரசின் பெயர் - அதிலணியுங் கிரீடத்துக்கு இடவாகுபெயர். கவுசிகி - முதற்போலி: இது-கௌசிகன் என்பதன் பெண்பால்; இதற்கு -குசனதுமரபிற்பிறந்தவளென்றுபொருள்; இவளது இயற்பெயர், சத்தியவதியென்பது. பி - ம்:—[1]கவுசாம்பி. [2]கௌசிகி, கௌசிகை.

13.—கௌசிகியைக் காதி பிருகுபுத்திரனான ரிசீகனுக்கு மணஞ்செய்விக்க, அவன் இல்லறத்துச் சிலநாளிருந்து பிரமலோகஞ் சேர்தல்.

பிருகுவின் மதலை யாய[1]பெருந்தகைப் பிதாவு மொவ்வா
[2]இரிசிக னென்ப வற்கு [3]மெல்லிய லாளை யீந்தான்
அருமறை யவனுஞ் சின்னா ளறம்பொரு ளின்ப முற்றி
விரிமலர்த் தவிசோன் றன்பால் விழுத்தவம்[4]புரிந்து மீண்டான்.

(இ - ள்.) பிருகுவின் மதலை ஆய - பிருகுமகாரிஷியினது புத்திரனான, பெரு தகை பிதாஉம் ஒவ்வா - பெருந்தன்மையுடைய (தனது) தந்தையாகிய அப்பிருகுவும் (தனக்குத் தவவொழுக்கத்தில்) ஒப்பாகப்பெறாத, இரிசிகன் என்பவற்கு - ரிசீகன் என்னும் முனிவனுக்கு, மெல் இயலாளை - மென்மையான தன்மையுடைய கௌசிகியை, ஈந்தான் - (என் தந்தை) விவாகஞ் செய்துதந்தான்; அரு மறையவன்உம் - (அறிதற்கு) அருமையான வேதங்களை யுணர்ந்த அந்த ரிசீகனும், சில் நாள் - சிலகாலம், அறம் பொருள் இன்பம் முற்றி - தரும அர்த்த காமமென்னும் மூன்று புருஷார்த்தங்களையுஞ்செய்து முடித்து [சமுசாரத்திலிருந்து], (பின்பு), விழு தவம் புரிந்து-மேன்மையான தவத்தைச்செய்து, விரி மலர் தவிசோன் தன்பால்-மலர்ந்த தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவனிடத்தில் [பிரமலோகத்திற்கு], மீண்டான் - (அவனருளாற்) செல்வானானான்; (எ-று.)

பெருந்தகை - மகிமை. மேற்பட்டசாதியிற் பிறந்த ஆடவர் கீழ்ப்பட்ட சாதியிற் பிறந்த மகளிரை மணம்புணர்தல் வழுவன்றாதலால், பிராமணகுமாரனான ரிசீகன் க்ஷத்திரியபுத்திரியான கௌசிகியை மணந்தான். இரிசிகன் - ரகரத்திற்கு இகரம் மொழிமுதலாகிமுன் வந்தது. பி - ம்:—[1]பெருந்தகைபிதா. [2]இருசிகன் தனக்குமாதை, இருகனென்பவற்குமாதை. [3]ஈந்தனனவளாலந்த, ஈந்தனனவளுமந்த. [4]செய்துபோனான், புரியுமீட்டால். (430)

14.—கௌசிகி நதியாகிக் கணவனைத் தொடர, ரிசீகன் உலகத்தார் துன்பம்நீங்கப் பூமியில் நதியாய்ச் செல்லப் பணித்துச் செல்லுதல்.

காதலன் [1]சேணி னீங்கக் [2]கவுசிகி தரிக்க லாற்ருள்
மீதுறப் படர லுற்ருள் விழுநதி வடிவ மாகி
[3]மாதவர்க் கரசு நோக்கி மாநிலத் துறுக [4]ணீக்கப்
போதுக [5]நதியா யென்னுப் பூமக [6]னுலகு புக்கான்.

(இ - ள்.) காதலன் - (தனது) கணவனாகிய ரிசீகன், சேணில் நீங்க - (தன்னைவிட்டு) ஆகாசமார்க்கத்திலே செல்ல, கவுசிகி- கௌசிகியானவள், தரிக்கல் ஆற்ருள் - (அக்கொழுநனது பிரிவைப்) பொறுக்கமாட்டாதவளாய், விழு நதி வடிவம் ஆகி - சிறந்ததொரு நதியினது ரூபமாய், மீது உற படரல் உற்ருள் - ஆகாயத்திலே பொருந்த (அவனைவிடாமல்தொடர்ந்து பின்) செல்லத்தொடங்கினுள்; (தொடங்கவே), மா தவர்க்கு அரசு - மிக்க தவத்தையுடைய முனிவர்களுக்குத் தலைவனாகிய ரிசீகன், நோக்கி - (அவளைப்)பார்த்து, 'மா நிலத்து உறுகண் நீக்க - பெரிய நிலவுலகத்திலுள்ள ஜனங்களது (பிறவித்) துன்பங்களை (உன்னிடத்து மூழ்குவதனுல்) ஒழிக்கும்பொருட்டு, நதி ஆய் - இந்த ஆற்றின் வடிவமாகவே, போதுக - (பூலோகத்திற்) செல்வாயாக,' என்னு - என்று (அவளுக்கு) நியமித்துவிட்டு, பூமகன் உலகு புக்கான் - (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றிய குமாரனுன பிரமனது லோகத்திற் சென்றுசேர்ந்தான்; (எ - று.)

கௌசிகி தன் கணவனாகிய ரிசீகமுனியைநன்குவழிபட்டமையாற் சரீரத்துடன் சுவர்க்கஞ் சேர்ந்து, உலகத்தார்க்கு இம்மை மறுமைப் பயன்களை யளிக்கும் பொருட்டு அந்தச் சுவர்க்கத்திலிருந்து மீண்டு இமயமலையினருகிலே நதியாகப் பெருக, நான் அவளிடத்துள்ள உடன்பிறந்த தொடர்பினுல் அம்மலைச்சாரலில் தானே இனிதுவசிப்பவனுகி இப்போது வேள்விக்காகச் சித்தாச்சிரமத்துக்கு வந்துள்ளேனென்று விசுவாமித்திரன் கதையை முடிக்க, பிறகு யாவரும் துயின்றன ரென்று முதனூலால் அறிக. நிலத்து உறுகண் நீக்க என்பதற்கு - இரட்டுறமொழிதலால், பூமியின் (வளமின்மையாகிய) வருத்தத்தை (நீர்ப்பெருக்கத்தால்) ஒழிக்க என்றும் பொருள்கொள்க. [5]போதுகோமதியாய்' எனப் பாடமோதி, கௌசிகை கோமதி என்னும் இரண்டுபெயரும் ஒருநதியையே குறிக்குமென உரைப்பாருமுளர். பி-ம்:—[1]சேணு. [2]கௌசிகை. [3]மாதினைரிசிகனேக்கி. [4]நீக்கிப். [5]பதிநீ. [6]உலகம்.

சிலபிரதிகளில் இந்தச்செய்யுளோடும் சிலபிரதிகளில் அடுத்த செய்யுளோடும் கவுசிகி அல்லது கவுசிகை யாற்றுப்படலம் முடிய, அடுத்த செய்யுளில் மாவலியாண்மைப்படலம் தொடங்குகின்றது; மாவலியாணப்படலம் என்றும், மாவலியரண்புகுபடலம் என்றும், மாவலியாண்டபடலம் என்றும் மாவலிபடலம் என்றும் இப்படலப் பெயர்க்குப் பிரதிபேதம். (431)

15.—நதியின் செய்தி கேட்டு மகிழ்ந்து சிறிதுநடந்தபின் அங்குத்தோன்றிய சோலையை இராமன் வினவுதல்.

[1]எம்முனு ணங்கை யிந்த விருநதி யாயி ளுளென்று
அம்முனி புகலக் கேளா வதிசய மிகவுந் தோன்றச்
செம்மலு மிளைய கோவுஞ் சிறிதிடந் [2]தீர்ந்த பின்னர்
மைம்மலி பொழில்யா தென்ன மாதவன் கூற லுற்ருன்.

(இ - ள்.) எம் முனுள் - எமக்கு முன்பிறந்தவளாகிய, நங்கை - பெண்களிற்சிறந்த அக்கௌசிகியென்பவள், இந்த இரு நதி ஆயினுள்-(தன் கணவன் கட்டளைப்படியே பூலோகத்தில்) இந்தப்பெரிய ஆற்றின் வடிவமானுள், என்று—, அ முனி-அந்தவிசுவாமித்திரன், புகல - சொல்ல, கேளா - கேட்டு, அதிசயம் மிகஉம் தோன்ற - மிகவும் (மனத்தில்) வியப்புண்டாக, செம்மல்உம் - நன்மைக்குணமுடைய ஸ்ரீராமனும், இளைய கோஉம் - இளையபெருமாளும், சிறிது இடம் தீர்ந்தபின்னர் - சிறிது தூரம் கடந்த பிறகு,—(ஒரு சோலையைக்கண்டு), மை மலி பொழில் யாது என்ன-'(உயர்ச்சிமிகுதியால்) மேகங்கள்படிகின்ற இச்சோலை என்னது?' என்று (ஸ்ரீராமன்)கேட்க, —மா தவன் - மிகுந்த தவத்தையுடைய விசுவாமித்திரன், கூறல் உற்ருன்-உத்தரஞ்சொல்லத் தொடங்கினுன்; (எ-று.)—அது மேல் இருபத்துமூன்று கவிகளிற் காண்க.

மேகத்துக்குஞ் சோலைக்குஞ் சம்பந்தமில்லாதிருக்கவும் சம்பந்தத்தைக் கற்பித்துக் கூறியது, தொடர்புயர்வுநவிற்சியணி. இனி, மைம் மலி பொழில் - கருநிறம் பொருந்திய சோலை யென்றும், (அடர்த்தியால்) இருள்நிரம்பிய சோலை யென்றுமாம். பி - ம்:—[1]எம் முனும். [2]தீர்ந்து. (432)

16.—விசுவாமித்திரன் அச்சோலையின் தன்மையைக் கூறுபவனுய், வாமனுவதார விருத்தாந்தத்தைக் கூற இதுமுதல் 23 கவிகளால் மாவலிசரித்திரத்தையும் கூறலுறுகிருன்:—

அச்சோலையின் சிறப்பு.

தங்கணு யகனிற் றெய்வந் [1]தான்பிறி [2]தில்லென் றுன்னும்
மங்கைமார் [3]சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்
எங்கணுன் மறைக்குந் தேவ ரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்து மேனுட் செய்தவஞ் செய்த [4]தன்றே.

(இ - ள்.) (இச்சோலை), 'தங்கள் - தங்களுடைய, நாயகனின்- கணவனைப்பார்க்கிலும், தெய்வம் - கடவுளென்பது, பிறிது இல் - வேறு இல்லை,' என்று உன்னும் - என்று நினைக்கிற, மங்கைமார்-பதிவிரதைகளாகிய பெண்களது, சிந்தை போல - மனம்போல, தூயது - பரிசுத்தியையுடையது: மற்றுஉம் கேளாய் - இன்னும் (இதன் தன்மையைக்) கேட்பாயாக: நால்மறைக்குஉம் - நான்கு வேதங்களுக்கும், தேவர் அறிவிற்குஉம் - தேவர்களது புத்திக்கும், பிறர்க்குஉம் - மற்றை முனிவர் முதலியோரறிவுக்கும், எட்டா - சொரூப மறியவொண்ணுத, எங்கள் செம் கண் மால் - சிவந்ததிருக்

கண்களையுடைய எங்கள் திருமால், மேல்நாள் - முன்னொருகாலத்தில், இருந்து - வசித்து, செய் தவம் செய்தது - செய்தற்கு உரிய தவத்தைச் செய்யப்பெற்ற இடமாம்; (எ - று.)

இது, திருமால் தங்கியிருந்து தவஞ்செய்த பெருமையையுடைய இடமென்றவாறு. மகளிர்க்குத் தமது நாயகனைவிடத்தெய்வம் பிறிதில்லை என்பதனை, 'குலமகட்குத் தெய்வங்கொழுநனே மன்ற'', ''தெய்வந் தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப்பெய்யுமழை'' என்பவற்றாலும் அறிக. சோலைக்குத் தூய்மை -பழிபாவங்களுக்கு இடமாகாமையும், தவச்சித்திக்கு உரிய இடமாதலும். இதுபற்றியே, இது, 'சித்தாச்சிரமம்' எனப்படும். 'மற்றுங் கேளாய்' என்றது, இராமனை நோக்கி முனிவன் கூறியது. 'எங்கள்' எனப் பன்மையாக்கூறியது, மற்றைமுனிவர்களையும் உளப்படுத்தி. 'எங்கள் செங்கண்மால்' என்றதனால், விசுவாமித்திரனது விஷ்ணு பக்தி வெளியாகின்றது. 'நங்கள்' என்னமல் 'எங்கள்' எனப் படர்க்கையுளப்பாட்டுத்தன்மையாற்கூறியது, ஸ்ரீராமபிரான் அத்திருமாலினது திருவவதாரமென்பது பற்றி. எங்கள் நான்மறையென்றும், எங்களறிவிற்கும் என்றும் இயைக்கலுமாம். இரண்டாமடி - உவமையணி. தெய்வந்தான், தான் - அசை. பி - ம்:—[1] தவம். [2] இலையென்றெண்ணும், இல்லையென்னும், இலவென்றெண்ணும். [3] மனனே. [4] என்றான். (433)

17.—பலநாள் திருமால் தவஞ்செய்தல்.

பாரின்பால் விசும்பின் பாலும் பற்றறப் [1] படிப்ப தன்னான்
[2] பேரென்பா னவன்செய்மாயப் [3] பெரும்பிணக் கொருங்குதேர்வார்
[4] ஆரென்பா னமல மூர்த்தி கருதிய தறித றேற்றும்
ஈரைம்பா னூழிக் கால மிருந்தவ மியற்றி யிட்டான்.

(இ - ள்.) பாரின்பால் - பூலோகத்திலும், விசும்பின்பால்உம் - தேவலோகத்திலும், (உள்ளவர்கள்), பற்று அற - (தம்தமதுபாச) பந்தம் ஒழியும்பொருட்டு, படிப்பது-உச்சரிப்பது, அன்னான் பேர் - அவனது திருநாமத்தையே, என்பான் - என்று சொல்லப்படுபவனும், அவன் செய் - அவன் செய்கின்ற, மாயம் - மாயையினாலாகிய, பெரு பிணக்கு - பெரிய மாறுபாட்டை, ஒருங்கு - முழுவதும், தேர்வார் - அறிபவர், ஆர்-யாருளார்? [எவருமில்லை], என்பான்-என்று சொல்லப்படுபவனுமாகிய, அமல மூர்த்தி - பரிசுத்தமான திருவுருவத்தையுடைய அத்திருமால், கருதியது - (திருவுள்ளத்தில்) எண்ணிய பயனை, அறிதல் தேற்றும் - (நாம்) அறிந்துதெளிகிறோமில்லை; (அவன் இங்கு எழுந்தருளி), ஈர் ஐம்பான் ஊழி காலம் - நூறுஊழியவ்வளவுகாலம், இருதவம் - பெரியதவத்தை, இயற்றியிட்டான்-செய்தான்; (எ - று.)

கீழ்த் திருமால் தவஞ்செய்தானென்றதை, இந்தக்கவியினால் விரித்துக் கூறுகின்றனர். எங்குந் தன்பெயர் யாவராலுஞ் சொல்லப்படுமாறு உள்ள திருமால் என்னபயன்கருதியோ நெடுங்காலந் தவஞ் செய்திட்டனனென்பதாம். எல்லாம் பெற்றவனாய் வேண்டுதல்

வேண்டாமையில்லாப் பரம்பொருளான திருமால் தவஞ்செய்யப் பய னுகக் கருதியது - தவஞ்செய்வது இன்னபடி யென்பதை உலகத் தார்யாவருக்கும் தெரிவிக்கவெண்டுமென்பது போலும்; குருசிஷ்ய கிரமத்தை உலகத்தார்க்குப் புலப்படுத்தும் பொருட்டுப் பதரிகாச் சிரமத்தில் தானே நாராயணனென்னும் குருவின் வடிவமும் நர னென்னும் சிஷ்யனதுவடிவமுமாகி நின்றதுபோல. மாயை - கூடாத தையுங்கூட்டுவிக்குந்திறம். 'அமலமூர்த்தி' என்பது - யாதொருகுற் றமும் இயற்கையிலே, தன்னிடஞ் சேரப்பெருதவனென்னும் பொரு ளோடு, தனக்குச் சரீரமாகவுள்ள சராசரங்களின் சம்பந்தத்தா லாகிய குற்றமுந் தொடரப்பெருதவ னென்னுங் கருத்தையும் உடையது. "எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயிற், பிற்படக் கிளவார் முற் படக் கிளத்தல்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவிதியினுல், 'பாரின்பால்' என உம்மை யில்லாதசொல் முன்னும், 'விசும்பின் பாலும்' என உம்மையுள்ள சொல் பின்னுமாக வைக்கப்பட்டது. 'ஐம்பான்' - ஐம்பது ஈறுகெட்டு ஆன்சாரியை பெற்றது. பி - ம்:— [1]படிவங், வடிவங். [2]பேரன்பால், பேரென்பது. [3]பெரும்பணத்தொ ருங்குந்தேவன், பெருங்குணக்கொருங்குதேர்வார், பெரும்பிணக்கார தோர்வார், பெரும்பிணக்காரத் தேர்வான். [4]ஆரென்ப. (434)

வேறு.

18.—அக்காலையில் மாவலி விண் மண்களை வெளவுதல்.

ஆனவ னிங்குறை கின்றவந் [1]நாள்வாய்
ஊனமின் ஞால [2]மொடுங்கு [3]மெயிற்ருண்
ஏன மெனுந்திறன் மாவலி யென்பான்
வானமும் வையமும் வெளவுதல் செய்தான்.

(இ - ள்.) ஆனவன்-அத்தன்மையனுகிய திருமால், இங்கு-இச் சோலையிலே, உறைகின்ற-(தவஞ்செய்து) வசிக்கின்ற, அ நாள்வாய்- அக்காலத்தில், ஊனம் இல் ஞாலம் ஒடுங்கும் - குறைவில்லாமல் நிறைந்த இப்பூலோகமுழுவதும் அடங்கின, எயிறு - (வக்கிர) தந் தத்தையுடைய, ஆண் ஏனம் எனும் - ஆண் பன்றி [வராகமூர்த்தி] என்று சொல்லத்தக்க, திறல் - வல்லமையையுடைய, மாவலி என் பான் - மகாபலியென்பவன், வானம்உம் - விண்ணுலகத்தையும், வையம்உம்-மண்ணுலகத்தையும், வெளவுதல் செய்தான்-(அதற்கு உரிய அரசர்களிடத்தினின்று தனது ஆற்றலாற்) பறித்துத் தன் வசப்படுத்தினுன்; (எ - று.)

திருமால் தவஞ்செய்து கொண்டிருந்த அக்காலத்தில், மஹா பலியென்பவன் தன்வலிமையால் விண்ணையும் மண்ணையும் தன்வச மாக்கிக்கொண்டன னென்பதாம். பூமியைத் தரிப்பதில் வராகமூர்த் திக்குச் சிறிதுஞ் சிரமமில்லாததுபோல எளிதிலே உலகமுழுவதை யும் ஆளும் வல்லமையுடையவனுனதால், மகாபலி சக்கரவர்த்தி விண் மண் என்ற இரண்டையும் ஆண்டனன்.

முன்னொருகாலத்திற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிப்போன இரணியாக்கனென்னும் அசுரராச னைத் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளின்படி திருமால்

வராகரூபமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தி எடுத்துக் கொண்டுவந்து விரித்தருளினனென்பது வரலாறு: ஒருபிரளயத்திற் சமுத்திரஜலத்தில் மூழ்கிப்போன பூமியை ஸ்ரீமகாவிஷ்ணு வராகவடிவங்கொண்டு எடுத்து வந்தனனென்னுங் கதையும் உண்டு: அன்றியும், விஷ்ணு ஆதிவராகரூபியாய்ப் பூமியின்கீழிருந்து அதனைத் தாங்கிநின்றனனென்றும் புராணங் கூறும். ஊனமில் - அகண்டமான என்றபடி. பி-ம்:—[1]நாளான். [2]ஒடுக்கும். [3]எயிற்றின், எயிற்றோர். (435)

19.—மகாபலி வேள்விதொடங்கி அந்தணர்க்குத் தானஞ்செய்ய உறுதிகொள்ளுதல்.

[1]செய்தவன் வானவ ருஞ்செய [2]லாற்று
நெய்தவழ் [3]வேள்வியை முற்றிட நின்றான்
ஐயமில் சிந்தைய னந்தணர் தம்பால்
வையமும் யாவும் வழங்க வலித்தான்.

(இ-ள்.) ஐயம் இல் சிந்தையன்-(தன்னை எவராயினும் வென்றுவிடுவாரோ என்கிற) சங்கையில்லாத மனத்தையுடையவனும், செய்தவன்-செய்த தவத்தையுடையவனுமான அந்தச் சக்கரவர்த்தி,—வானவர்உம் - தேவர்களும், செயல் ஆற்று - செய்து முடித்தல் கூடாத, நெய் தவழ் வேள்வியை - நெய்யை நிரம்பச் சொரிகின்றதொரு பெருயாகத்தை, முற்றிட-முடித்தற்கு, நின்றான்-தொடங்கி நின்று,—வையம்உம் - பூமியையும், யாஉம் - (கொடுத்தற்கு உரிய) மற்றையெல்லாப் பொருள்களையும், அந்தணர் தம்பால் - பிராமணர்களிடத்து, வழங்க - தானஞ்செய்ய, வலித்தான்—; (எ-று.)

மூவுலகங்களையும் வென்று புகழ்பெற்ற மாவலி, அந்தத் தேவர்களின் இராச்சியத்தை மந்திரிகளின்வசம் ஒப்புவித்து ஒரு வேள்வியைத் தொடங்கி, அந்த வேள்வியில் பிராமணருள் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவானாயினனென்க. ஐயமில் சிந்தையன் என்பதற்கு-தேவர்மூவருள் யாவர் பரதத்துவமோ? என்கிற சந்தேகமில்லாதவ னென்றுமாம்; இங்ஙனம் கூறின், இவன்செய்கிறது திருமாலின் ஆராதனரூபமானதொரு யாக மென்பது பெறப்படும்.யாகமென்பது - தேவர்களைக் குறித்து அங்கியில் அவிசைச்சொரிவதேயாதலால், தேவசத்துருவாய் அசுரர்தலைவனான மகாபலி வேள்வியியற்றினனென்பது எவ்வாறு பொருந்துமெனின்? - இவன் செய்யும் வேள்வி இந்திரன்முதலியதேவர்களைக் குறித்ததல்லாமல் திருமாலின் ஆராதனரூபமானதாகையாற் பொருந்து மென்ப. பி - ம்:—[1]செய்தவர், செய்தவம். [2]ஆற்றார். [3]வேள்வியும். (436)

20.—அப்போது தேவர்கள் மாவலிகொடுமையைத் தீர்க்குமாறுவேண்ட, திருமால் உடன்படுதல்.

ஆய தறிந்தனர் வானவ [1]ரந்நாள்
மாயனை வந்து வணங்கி [2]யிரந்தார்
தீயவன் வெந்தொழில் தீரென நின்றார்
நாயக னும்மது செய்ய நயந்தான்.

(இ - ள்.) வானவர் - தேவர்கள், ஆயது - ஆகிய அச்செய்தியை [தான் செய்யும் வேள்வியில் மாவலி அந்தணர்கேட்பதையெல்லாங் கொடுக்கச் சித்தனயிருத்தலை], அறிந்தனர் - அறிந்து, அ நாள் - அக்காலத்தில், வந்து - (இச்சோலைக்கு) வந்து, மாயனை - திருமாலை, வணங்கி - நமஸ்கரித்து, இரந்தார் - (தமது குறையைச் சொல்லி) இரந்து, தீயவன் வெம் தொழில் தீர் என-'கொடியவனுகிய பலியினது கொடுஞ்செய்கையை ஒழித்தருளுவாய்' என்று, நின்ருர் - வேண்டிநின்ருர்கள்; (நிற்கவே), நாயகன்உம் - (யாவர்க்குந்) தலைவனுகிய திருமாலும், அது செய்ய - அத்தேவர்வேண்டுகோளைச் செய்தற்கு, நயந்தான்-விரும்பினுன்; (எ-று.)

தங்களை வெருட்டியோட்டிய மாவலி வேள்விசெய்வது கண்டு அஞ்சிய தேவர்கள் அக்கினிதேவனை முன்னிட்டுக்கொண்டு பெருந்திரளாகவந்து சித்தாச்சிரமத்திலிருந்த திருமாலைக் கிட்டித் துதித்து 'பலிசக்கரவர்த்தி செய்கின்ற சிறந்த யாகம் முடியும்முன்னமே வேண்டியதையெல்லாந் தருகின்ற அந்த மாவலியினிடஞ் சென்று, உனது மாயாசக்தியால் உன்மேன்மையை மறைத்து வாமனனுகி எங்களுக்கு க்ஷேமமுண்டாகும்படி செய்யவேணும்' என்று வேண்ட, திருமாலும் அதற்கு உடன்பட்டனனென்று இச்செய்யுளின் கருத்தை விரித்துஉரைத்துக்கொள்க. மாயன் - மாயையுடையவன். தேவர்களை ஒருபொருளாக மதியாமல் அக்கிரமமாக அவர்களோடு போர்செய்து வென்று இந்திரனது மூவுலகத்தரசாட்சியைக் கைப்பற்றியவனுதலால், மாவலி 'தீயவன்' எனப்பட்டான். அவனது வெந்தொழிலைத் தீர் என்றது-திரிலோகாதிபத்தியத்தைப் பறித்து அவனை அடக்கிவிடு என்றபடி. நாயகனும்மது - விரித்தல். அது - மகாபலிநிக்கிரகம். தன்னுடைய பக்தனுக்கு இடையூறு இழைக்கத் திருவுள்ளங்கொள்ளுதல் திருவருளுடைய திருமாலுக்கு அடுக்குமோ எனில்? - தன்மக்கள் பலருக்கு இடுக்கண் இயற்றுகின்ற மற்ருெருவனைத் தண்டிப்பது தந்தைக்குக் கடமையாவதுபோல, தனதுபக்தர்களாகிய இந்திரன் முதலிய தேவர்கட்குத் தீங்குசெய்த பலியைச் சிக்ஷிப்பது கடவுளுக்குக் கடமையேயாமென்ப: அன்றியும், அடியவனே யாயினும் அபராதஞ்செய்தவனை ஒறுப்பது உயர்ந்தோர் முறைமையே; "தெய்வ முளதென்பார் தீய செயப்புகின், தெய்வமே கண்ணின்று நின்ருெறுக்கும்***இன்புதல்வர்க் கன்றே, பலகாலுஞ் சொல்வார்பயன்" என்ற நீதியையும் உணர்க. பி - ம்:— [1] அன்னுர். [2] இருந்தார். (437)

21.—திருமால் வாமனனுதல்.

கால நுனித்துணர் [1] காசிப னென்னும்
வாலறி வற்கதி திக்கொரு மகவாய்
நீல நிறத்து நெடுந்தகை வந்து ஓர்
ஆல்மர் வித்தி னருங்குற ளானுன்.

(இ - ள்.) (அங்ஙனம் விரும்பிய), நீலம் நிறத்து நெடு தகை-கரியதிருமேனிநிறத்தையும் பெருமைக்குணங்களையுமுடைய திருமால்,—(உடனே), காலம் நுனித்து உணர் - முக்காலத்து விஷயங்

களையும் சூட்சுமமாக ஆராய்ந்தறிகின்ற, காசிபன் என்னும் - காசியபனென்கிற, வால் அறிவற்கு - (சுத்தமான) தத்துவஞானமுடைய முனிவனுக்கும், அதிதிக்கு - (அவனதுமனைவியான) அதிதிதேவிக்கும், ஒரு மகவு ஆய்! வந்து - ஒருகுமாரனாய்த்திருவவதரித்து, ஓர் ஆல் அமர் வித்தின் - (பெரிய) ஆலமரமுழுவதும் உள்ளேயடக்கியிருக்கப்பெற்ற (சிறிய அதன்) விதையொன்றுபோல, அரு குறள் ஆனன் - அரிய வாமனவடிவமானான்; (எ-று.)

காசியபமகாமுனிவன் தனது பத்தினியாகிய அதிதிதேவியோடு கூடித் தேவமானத்தால் ஆயிரமாண்டு திருமாலைக்குறித்து நடத்தி வந்த விரதத்தை முடித்து, தனக்கு வரந்தருமாறு கண்கூடாக வந்துநின்ற திருமாலைத் துதித்து, 'அசுரர்களையடக்கும்பொருட்டு எனக்கு அதிதிதேவியினிடம் புதல்வனாகப் பிறந்து உபேந்திரனாகி, வருந்துகின்ற தேவர்களின் இடரைப் போக்க வேணும்' என்று வரம்வேண்ட, திருமாலும் அவ்வேண்டுகோட்கு இரங்கி அங்ஙனமே பிறந்து வாமனனாயினானென்று கருத்தை விரித்து உரைக்க. இங்ஙனம் காசியபமுனிவன் ஆயிரம்வருடம் விரதத்தை மேற்கொண்டு சித்திபெற்ற அவ்விடம் திருமாலின் அநுக்கிரகத்தாற் சித்தாச்சிரமமென்று பேர்பெற்றதென்க. தேவர்கள் விஷ்ணுவை வேண்டியதும், காசியபமுனிவன் விரதம் முடித்துத் திருமாலைப் புதல்வனாகப்பிறக்குமாறு வேண்டியதும் ஒத்தகாலமென்பர். காசிபன் - காச்யபன் என்னும் வடசொற்றிரிபு. வாலறிவு-தூயவறிவு: மெய்யுணர்வு. ஆலமர்வித்து - முன் மிகச்சிறியதாயிருந்து பின் மிகப்பெரியதர்தல்பற்றி, உவமை. "உறக்குந் துணையதோ ராலம் வித்தீண்டி, யிறப்ப நிழற்பயந்தாஅங்கு" என்பது காண்க. இரண்டடியளவு சிறியது குறள் என்றும், மூன்றடியளவு சிறியது சிந்து என்றும் சொல்லப்படும். இத்தன்மைய குறள் உலகத்தில் அரியதென்பார் 'அருங்குறள்' என்றார். நெடுந்தகை குறளானன் என விரோதாபாசமென்னும் அலங்காரந்தோன்றக்கூறினர்: இதில், கவியின் ஈடுபாடு வெளியாம். நெடுந்தகை-பண்புத்தொகையன்மொழி. சிறுமையுணர்த்துங் குறளென்னும் பண்புப்பெயர் - ஆகுபெயராய், சிறியவடிவத்தை உணர்த்திற்று. பி-ம்:—[1]காசிபனுக்கும் வாலதிதிக்குமொர்மாமகவாகி. (438)

22.—திருமால் கொண்ட வாமனத்திருவுருவம்.

முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதொர் [1]நாவ னனற்படு கையான்
[2]அற்புத னற்புத ரேயறி யுந்தன்
[3]சிற்பத மொப்பதொர் மெய்க்கொடு சென்றான்.

(இ - ள்.) அற்புதன் - ஆச்சரியகரமான குணஞ் செயல்களையுடைய திருமால்,—முப்புரிநூலினன் - மூன்றுவடமாகிய பூணூலையுடையவனும், முஞ்சியன்-முஞ்சிப்புல்லாலாகிய அரைநாணையுடையவனும், விஞ்சை கற்பது ஓர் நாவன் - வேதமந்திரத்தை யுச்சரிக்கின்ற ஒப்பில்லாத நாக்கையுடையவனும், அனல் படு கையான் - அக்கினி பொருந்திய கையையுடையவனுமாய்,—அற்புதர் ஏ அறி

யும்-வியக்கப்படுகின்ற ஞானவான்கள் மாத்திரமே அறியத்தக்க, தன் சித் பதம் - தனது ஞானசொரூபத்தை, ஒப்பது - ஒத்து (எவர்க்கும் எளிதில் அறிதற்கரியதாய்) உள்ளதான, ஓர் மெய் கொடு-ஒரு (சிறிய) திருவுருவைக் கொண்டு, சென்ருன்-(மாவலி பக்கற்) போனுன்; (எ-று.)

இச்செய்யுள், மாவலியிடஞ் சென்றபோது திருமால் மேற் கொண்ட பிரமசரியக்கோலத்தை யுணர்த்தும். வடமும் வடத்திற் புரியும் புரியில் நூலிழையும் தனித்தனி மூன்ருயிருத்தலால், முப்புரிநூலென்று யஜ்ஞோபவீதத்துக்குப் பெயர்; "ஒன்பது கொண்ட மூன்றுபுரிநுண்ஞாண்" என்னுந் திருமுருகாற்றுப் படையையும், அதன் நச்சினர்க்கினியருரையையும் இங்கே உணர்க. முப்புரிநூலினன் - ஒற்றைப்பூணூலுடையானென்ற படி. பார்ப்பாரது வலக்கையில் நெருப்பு இருப்பதென்பது, நூற்றுணிபு. அனற்படுகையான் என்பதற்கு - (சமிதாதானத் தால் பிரதிதினமும் காலைமாலைகளில்) அக்கினியை வளர்க்குங் கையையுடையா னென்றும் உரைக்கலாம். அற்புதரே என்ற பிரிநிலையேகாரத்தால், பிறர் அறியாரென்பது விளங்கும். மெய் யுணர்வுடையார்க்குத் தன்ஞானமயமான வடிவை மனக்கண்ணுக் குத் தோற்றுவிப்பவ னென்பதுபற்றி, 'அற்புதரேயறியுந்தன் சிற்பதம்' என்றது. பி-ம்:—[1]நாவினனற்படு, நாவினன்புற்படு. [2]அற்புதர். [3]சிற்பரம். (439)

23.—அந்த வாமனனை எதிர்கொண்டு மாவலி முகமன் கூறுதல்.

அன்றவன் வந்த தறிந்துல கெல்லாம்
வென்றவன் முந்தி [1]வியந்தெதிர் கொண்டான்
நின்றனி னந்தண ரில்லை [2]நிறைந்தோய்
என்றனி னுய்ந்தவர் [3]யாருள ரென்ருன்.

(இ - ள்.) அன்று - அந்நாளில், அவன்-அவ்வாமனமூர்த்தி, வந்தது - (தன்னிடம்) எழுந்தருளியதை, உலகு எல்லாம் வென் றவன்-எல்லாவுலகங்களையுஞ் சயித்த பலிசக்கரவர்த்தி, அறிந்து- உணர்ந்து, வியந்து-(அவ்வடிவத்தைப்பார்த்து) ஆச்சரியப்பட்டு, முந்தி - முற்பட்டுச்சென்று, எதிர்கொண்டான் - எதிர்கொண்டு அழைத்துவந்து '(அவனைநோக்கி), 'நிறைந்தோய்-(எல்லாக்குணங் களாலும்)நிறைந்தவனே! நின்தனின் - உன்னினும் (சிறந்த), அந்த ணர்-பிராமணர்,இல்லை-(உலகத்தில்)இலர்;(ஆதலால்), என்தனின்- (இப்படிப்பட்ட உன்னை எளிதிலே தரிசிக்கப்பெற்ற) என்னைப் போல,உய்ந்தவர்-ஈடேறினவர், யார் உளர் - வேறு யாவருளர்? [எவருமில்லை],'என்ருன்-என்று (இன்சொல்)சொன்னுன்; (எ - று.)

பெரியோரை எதிரேபோய் அழைத்துவந்து உபசரித்தல், மரியாதை. அளவிடப்படாத பிரமதேஜஸை உற்றுநோக்கி உய்த் துணர்ந்து 'நின்றனினந்தணரில்லை' என்ருன். எங்கும் நிரம்பிய வனே என்ற பொருளுந்தோன்ற, 'நிறைந்தோய்' என்கிற சொல் லைக் கவி உபயோகித்தார். நின்தனின் என்தனின் என்கிற இடங்

களில், இன்-முறையே உறழ்பொருவும், ஒப்புப்பொருவும். பி-ம்:—[1]விரைந்து. [2]நிறைந்தோர். [3]யாரினி. (440)

24.—வாமனன் மாவலியைப் புகழ்தல்.

ஆண்டகை [1]யவ்வகை [2]கூறவ றிந்தோன்
[3]வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகை யா[4]யினி நின்னுழை வந்தோர்
மாண்டவ ரல்லவர் [5]மாண்பில ரென்ருன்.

(இ - ள்.) ஆண் தகை - ஆண்மைக்குணத்தையுடைய மகாபலி, அ வகை கூற-அவ்வாறுசொல்ல, அறிந்தோன்-(எல்லாவற்றையும்) உணர்ந்த வாமன மூர்த்தி, (அவனைநோக்கி), 'வேண்டினர்-விரும்பி இரந்தவர்களது, வேட்கையின்-விருப்பத்திலும், மேற்பட-அதிகமாக,வீசி-(பொருள்களை)எடுத்தெடுத்து விரைந்து கொடுத்து, நீண்ட-நீளுந்தன்மையுள்ள, கையாய்-கையையுடையவனே! இனி-இனிமேல் [இப்படிப்பட்ட உதாரகுணமுள்ள நீ உளனான பின்பு], நின்னுழை வந்தோர்-உன்னிடத்து (இரக்குமாறு) வந்தவர்கள்தாமே, மாண்டவர் - மாட்சிமைப்பட்டவர்கள்; அல்லவர்-உன்னிடம் வராதவர்களோ என்றால், மாண்பு இலர் - சிறப்பில்லாதவராவர்,' என்ருன்-என்று சொன்னான்; (எ-று.)

இவனிடம் வந்து இரப்பார் வேண்டுவனவற்றினும் மிகுதியாகப் பெறுதலாலும், பிறரிடம் வேண்டுவனவற்றைப் பெறுதலும் அரிதாதலாலும்,'நின்னுழைவந்தோர்மாண்டவர், அல்லவர் மாண்பிலர்' என்ருன். "இன்பமொருவற்கிரத்தலிரந்தவை துன்பமுருஅவரின்", "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார்காணின், இரப்பும் ஓரேஎ ருடைத்து","இரத்தலு மீதலேபோலும் கரத்தல், கனவிலுந் தேற்றுதார் மாட்டு", "இகழ்ந்தெள்ளாதீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம், உள்ளுளுவப்பதுடைத்து" என்பன, இங்கு நினைவிற்கு வருகின்றன. பி-ம்:—[1]அவ்வழி. [2]கூறிடவந்தோன். [3]வேண்டுவார். [4]என. [5]மாண்பினர். (441)

25.—வாமனன் மூவடிமண் வேண்டிப்பெற, சுக்கிரன் தடுத்தல்.

சிந்தை[1]யு வந்தெதி ரென்[2]செய வென்ருன்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்[3]திற லா[4]யிது வேண்டு மெனுமுன்
தந்தனெ னென்றனன் வெள்ளி தடுத்தான்.

(இ - ள்.) (அதுகேட்டு மாவலி), சிந்தை உவந்து - மனம் மகிழ்ந்து, எதிர்-(அவ்வாமனன் வார்த்தைக்கு) உத்தரமாக, என் செய என்ருன் - '(நான்) என்னசெய்யவேண்டும்?' என்று கேட்டான்; (உடனே), அந்தணன்-வாமனன், (அவனைநோக்கி), 'வெம் திறலாய் - (பகைவர்க்குக்) கொடிய வலிமையுடையவனே! அருள் உண்டுஏல் - (என்பக்கல் உனக்குக்) கருணை உளதானால், மூ அடி மண் இது-(என்காலால்) மூன்று அடியளவு நிலமாகிய இது, வேண்

டும் - (எனக்குத் தரல்) வேண்டும்,' எனுமுன் - என்று சொல்லி முடித்தற்கு முன்னே, தந்தனென் என்றனன் - கொடுத்தேனென்று (மாவலி) சொன்னான்; வெள்ளி தடுத்தான் - (அருகிலிருந்த) சுக்ரன் (அதனைத்) தடுப்பானாயினான்; (எ - று.)

இனி, உண்டேல் - (என்னிடம்) உள்ளதானால் [கொடுத்தற்கு இசைவதானாலென்றபடி], மூ அடி மண் அருள் - மூன்றடிநிலங் கொடு: [இதுவேண்டும்] என்றுமாம், எனுமுன் தந்தனெனென்றனன் - காரணத்தின்முன் காரியம் நடந்ததாகச் சொல்லிய இது, காரிய விரைவைப் புலப்படுத்தும். 'தந்தனென்' - காலவழுவமைதி. வெள்ளி - வெண்ணிறமுடையவன்; சுக்கிரன். பி - ம்:—[1]உவந்தது. [2]செய்க. [3]திறலோய். [4]அது, தர. (442)

26.—இது, சுக்கிரன் தடுத்துக்கூறிய வார்த்தை.

கண்ட திறத்[1]திது கைதவ மைய
கொண்டல் நிறக்குற ளென்பது கொள்ளேல்
அண்டமு [2]முற்று மகண்டமு மேனாள்
உண்டவ [3]னாமி துணர்ந்துகொ ளென்றான்.

(இ - ள்.) 'ஐய-தலைவனே! கண்ட திறத்து இது-(நம்எதிரிற்) பார்க்குந் தன்மையையுடைய இவ்வடிவம், கைதவம்-வஞ்சனையைக் கொண்டது: கொண்டல் நிறம் குறள் என்பது கொள்ளேல் - நீர் கொண்ட காளமேகம் போன்ற கருநிறத்தையுடைய வாமனனென்பதாக எண்ணாதே; அண்டம்உம் - எல்லாவண்டங்களையும், முற்றும் - (அவ்வண்டங்களிலுள்ள) எல்லாப்பொருள்களையும், அகண்டம்உம் - அனைத்தையும், மேல் நாள் - முன்னொருகாலத்தில், உண்டவன் ஆம் - அமுதசெய்த திருமாலாகும் (இவன்); இதுஉணர்ந்து கொள் - இந்த இரகசியத்தை (நீ) அறிந்துகொள்,' என்றான்-என்று (சுக்கிராசார்யன் மகாபலிக்குச்) சொன்னான்; (எ-று.)

சுக்கிரபகவான் தவமிகுதியால் ஞானக்கண் பெற்றுள்ளவனாதலால் இக்கடவுளின்மாயையை அறிந்து, 'திருமாலே தனது மாயத்தால் தன்னுருவத்தை மறைத்து உன்னை வஞ்சிக்க இங்ஙனம் வாமனனாக வந்திருக்கின்றான்; இவனுக்குத் தானஞ்செய்யாதே: செய்தால் உடனே தீங்குவரும்' என்றனனென்க. இங்ஙனம் பின்வருந் தீமைநன்மைகளைத் தெரிவித்தல்,புரோகிதர் கடமையாம். பிரளயசமுத்திரத்தில் திருமால் ஒரு சிறு குழந்தை வடிவமாய்ச் சிறியதோர் ஆலிலையின்மேல் உலகங்களையெல்லாந் தனது திருவயிற்றிலே அடக்கிவைத்துக்கொண்டு அறிதுயிலமர்கின்றனனென்பது, நூற்கொள்கை. பி - ம்:—[1]அது. [2]முற்ற. [3]நீயிது, நீயது. (443)

27.—இதுமுதல் ஏழு கவிகள் - மாவலியினுத்தரம்.

[1]நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது [2]தாழ்வில்
கனக்கரி யா[3]னது கைத்தல மென்னின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான்.

(இ - ள்.) (அதுகேட்டு மாவலி சுக்கிரனை நோக்கி), 'என்கை நிமிர்ந்திட - எனது (கொடுக்குங்) கை உயர்ந்து மேலாக இருக்க, வந்து தனக்கு இயலா வகை தாழ்வது - (அதன்கீழ்) வந்து தனது பெருமைக்குத் தகாதபடி தாழ்ந்திருப்பது, தாழ்வு இல் கனம் கரியானது கைத்தலம் - ஒருகுறைவுமில்லாத நீர்கொண்டமேகம்போற் கருநிறமுடைய திருமாலினது திருக்கையிடம், என்னின்-என்றால், எனக்கு இதன்மேல் நலம் யாது - எனக்கு இதனினும் மேம்பட்ட நன்மை என்ன இருக்கிறது? [ஒன்றுமில்லை]; நினைக்கிலை - (இதனை நீ) நினைக்கவில்லையே!' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

யாவரினுஞ்சிறந்த திருமால் தானே தனது பெருமை யனைத்தையும் குறைத்துக்கொண்டு இரப்பாளனாய் என்னிடம்வந்து ஒரு பொருளை வேண்டுவானானால் அவனுக்கு அதனைக்கொடுத்துப் பெருமைபெறுதலினும் மிக்கசிறப்பு எனக்குவேறொன்று உளதோ என்றான். எல்லாப்பொருளையும் இழந்தாயினுந் தவறாமற் பெறுதற்கு உரிய பேறு இதுவாகுமென்று பலி கருதினான். கொடுப்பவர்கை மேலே யிருக்க அதனைப் பெறுபவர்கை கீழேயிருப்பது பற்றி 'என்கை நிமிர்ந்திடத்தாழ்வது கரியான்கை' எனப்பட்டது. நினைக்கிலைஎன்பதில் 'எனக்கு விளையும் மேன்மையை யெண்ணாது நீ வேறுவகையாக நினைப்பது தவறு' என்ற பொருளும் தோன்றும். [1]நினக்கிலைஎன்னும் பாடத்துக்கு-(இவ்வறிவு) உனக்கு உண்டாக வில்லையே என்று பொருள். 'தனக்கு இயலாவகை' என்றதனால், எம்பெருமானது சௌசீலியமும் 'தாழ்வில்' என்றதனால் பரத்துவமும்வெளியிடப்பட்டவாறும். கொல்-அசைநிலை. தனக்கு நற்புத்தி உபதேசிக்க வந்த குருவை இங்ஙனம் உபேக்ஷித்தது, தானத்தினிடத்துள்ள விருப்பமிகுதியாலென்க. கநம் - மேகம்: வடசொல். பி - ம்:—[1]நினக்கியல். [2]தாவில். [3]இரு. (444)

28. துன்னினர் துன்னல ரென்பது [1]சொல்லார்
முன்னிய நன்னெறி நூலவர் முன்வந்து
உன்னிய தான [2]முயர்ந்தவர் [3]கொள்க
என்னி னிவன்றுணை யாவ ருயர்ந்தார்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) முன்னிய - (யாவராலும்) மதிக்கப்படுகின்ற, நல் நெறி - சன்மார்க்கத்தைச் சொல்லுகிற, நூலவர் - தருமசாஸ்திரத்தை யறிந்த பெரியோர்கள், 'துன்னினர் - (நமக்கு) வேண்டியவர்கள் (தாம் தானஞ்செய்யப்படுதற்கு உரியவர்): துன்னலர்-வேண்டாத பகைவர், (தானஞ்செய்யப்படுதற்கு உரியவரல்லர்),' என்பது-என்னும் வார்த்தையை, சொல்லார்-சொல்லாதவர்களாய், 'உன்னிய தானம் - (தாம்) கருதிய பொருட்கொடையை, உயர்ந்தவர் - மேன்மையையுடையவர்கள், முன் வந்து - (கொடையாளிகளின்) எதிரில்வந்து, கொள்க - பெற்றுக்கொள்ளக்கடவர்,' என்னின்-என்று சொல்வார்களானால் [என்றுசொல்வதனாலென்றபடி], இவன் துணை உயர்ந்தார் யாவர்-இவனுக்கு ஒப்பாக மேலோர் யாவருளர்? [எவருமில்லை]; (எ-று.)

'அசுரசாதியாராகிய நாம் தேவசாதியிற்சேர்ந்ததிருமாலுக்குத் தானஞ்செய்தல் கூடாது' என்பையாயின், வேண்டியவர் வேண்டாதவ ரென்று கருதாமற் சற்பாத்திரங்களிற்கொடுக்கவேண்டு மென்பதே தானவிதி யாதலால், நீ கூறுவது நீதியன்று; சற் பாத்திரங்களை ஆராய்ந்தால் இவனுக்கு மிக்கவராயினும் ஒத்தவ ராயினும் உளரோ? ஆதலால், தானஞ் செய்தற்கு உத்தமபாத்திரம் இவனே யென்றான். பி-ம்:—[1] சொல்லா. [2] உவந்தவன். [3] கொள்வான், கொள்வர். (445)

29\. வெள்ளியை [1] யாதல் [2] விளம்பினை [3] மேலோர்
வள்ளிய [4] ராக வழங்குவ தல்லால்
[5] எள்ளுவ வென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்.

(இ - ள்.) வெள்ளியை ஆதல் - (நீ) வெள்ளியென்று சொல் லப்படுவாயாதலால், விளம்பினை - இவ்வாறு சொன்னாய்; மேலோர்- மேன்மையையுடையவர்கள், வள்ளியர் ஆக-வரையாது கொடுப்ப வராக, வழங்குவது அல்லால் - (யாசகர் கேட்ட எப்பொருளையுங்) கொடுப்பதே யல்லாமல், எள்ளுவ-(அம்மேலோர்களாற் கொடுக்கப் படாதவையென்று) விலக்கப்பட்டவையாகிய, சில-சிலபொருள்கள், என்-எவை? [எவையுமில்லை யென்றபடி]; இன் உயிர் ஏன்உம்- (தனது) இனிய உயிரையேயானாலும், கொள்ளுதல் - இரந்து பெறு தல், தீது-துன்பந்தருவது; கொடுப்பது-(தனது இன்னுயிரையே யாயினும் யாகசகர்க்குத்) தானஞ்செய்வது, நன்று—; (எ - று.)

'உன்னிடம் இப்பொழுது இரப்போனாய்வந்தவன் மாயவனாத லால், அவன் கேட்டதைக் கொடுத்தல் கூடாது என்பையாயின், எதைக்கேட்டாலுங் கொடுப்பது வள்ளல்களுக்கு உரிய குணமாத லால் அதுவும் அங்கீகரிக்கப்படமாட்டாது' என்கிறான். 'தனது உயிர்போவதாயினும் கொடுத்தல் நல்லது, இரத்தல் கூடாது' என் பது இதன்கருத்து; நல்லது கூறுவார் தீயதும் உடன் கூறினார். "நல்லாறெனினுங் கொளல்தீதுமேலுலகம், இல்லெனினு மீதலே நன்று" என்ற குறள் இங்குக் காணத்தக்கது.

'வெள்ளியை' என்பது, சிலேடையாக வெள்ளியென்னும்பெய ரையுடையாய் என்றும், அறியாமையையுடையாய் என்றும் இரு பொருள் படும். வெண்மையாவது - அறிவுமுதிராமை, புல்லறிவு உடைமை; இது இப்பொருளதாதலை "வெண்மையெனப்படுவதியா தெனினொண்மை, யுடையம்யா மென்னுஞ் செருக்கு", "விளையு மாற்ற நின்திருவடிவினுமிகவெள்ளையாகிய தென்ன", "வெள்ளை மைகலந்தநோக்கின" என்ற இடங்களிலுங் காண்க. "வெள்ளியை யாதல் விளம்பினை' என்பதில், நீ பொன்னாயின் இங்ஙனஞ்சொல் லாய் என்றும் ஒருகருத்துத்தொனிக்கும். [வெள்ளி-வெண்பொன், ரஜதம்: சுக்கிரன். பொன்-செம்பொன், சுவர்ணம்: (தேவகுருவாகிய) பிருகஸ்பதி.] வள்ளியர்-இன்னார்க்குக் கொடுக்கலாம் இன்னார்க்குக் கொடுக்கலாகாது என்றும், இன்னதுகொடுக்கலாம் இன்னது கொடுக்கலாகாது என்றும், இன்னசமயத்துக்கொடுக்கலாம் இன்ன

சம்யத்துக்கொடுக்கலாகாது என்றும் ஒருவரையறை செய்யாமலும் தமக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமலும் யாசகர் எவராயிருப்பினும் அவர்கேட்பன எவையாயிருந்தாலும் அவற்றையெல்லாம் எப்பொழுதுங் கொடுப்பவர். இரண்டாமடியில், வள்ளியராகி வழங்குவதல்லார் எனப் பாடங்கொண்டு, வள்ளியராகி வழங்குவதை, அல்லார்-வண்மைக்குணமற்றவரான கொடாதவர், எள்ளுவது-(சில வார்த்தை கூறி) இகழ்வது, என்-என்னேயோ? என்று உரைத்தாரும்உளர். பி-ம்:—[1]யாது.[2]விளம்பலம்.[3]மேலோய். [4]ஆகில். [5]எள்ளுவது. (446)

30. மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயாது
ஏந்திய [1]கைக்கொ டிரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

(இ-ள்.) எந்தாய் - எனது தந்தைபோன்றவனே! (உலகத்தில்) மாய்ந்தவர்-இறந்தவர், மாய்ந்தவர் அல்லர்கள் - இறந்தவர்களல்லர்; (பின்னை யாவர் இறந்தவர் என்றால்), மாயாது ஏந்திய கைகொடு இரந்தவர்-(தம்) உயிரைவிடமாட்டாமல் கைகளை ஏந்தியாசித்தவர்களே (இறந்தவர்கள்); வீந்தவர்என்பவர் - இறந்தவர்களென்று சொல்லப்படுபவர், வீந்தவர் ஏன்உம்-இறந்தவர்களேயாயினும், ஈந்தவர் அல்லது-தானஞ்செய்தவர்களல்லாமல், இருந்தவர்-(உலகத்தில்) நிலையாயிருந்தவர்கள், யார்ஏ - வேறுயாவருளர்? [எவருமில்லை]; (எ-று.)

இரந்து உயிர்வாழ்வார் உயிரோடிருப்பினும் இறந்தவர்களே ஈந்து வாழ்ந்தார் உயிர் இறப்பினும் உயிரோடிருப்பவர்களே என்பது கருத்து. இதனால், இரப்பது மரணவேதனையினுங் கொடிதென்பதும், தானஞ் செய்வது என்றுமழியாத புகழுடம்புக்குக் காரணமென்பதும் விளக்கப்பட்டன. இங்கு, ஈதலினுயர்வும் இரத்தலினிழிவும் நன்கு பெறப்படும். இறந்தவரை இறந்தவரல்லரென்று மறுத்து இரந்தவரிடத்து அத்தன்மையையேற்றிக்கூறியதும், ஈந்தவர் இறந்தவராயினும் அவர் புகழுடம்புஅழியாது நிற்றல்பற்றி இறப்பை அவரிடத்துவிலக்கி அவரையிருந்தவராகக் கூறியதும் - ஒழிப்பணியாம். "மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர், தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே", "நின்றுநீ கெடாஅ நல்லிசை நிலீஇ" என்பன இங்குக் காணத்தக்கன. இனி, மாய்ந்தவர் மாய்ந்தவரல்லர்; மாயாதேந்தியகைக்கொடு இரந்தவர் வீந்தவரென்பவர்: ஈந்தவர் வீந்தவரேனும் (அவரை) அல்லது இருந்தவர் யாரே? என மூன்று வாக்கியமாக்கி முடிப்பினும் அமையும். பி - ம்:—[1]கையொடிரந்தவரேந்தல், கைகொடு...எந்தாய். (447)

31. அடுப்ப வரும்[1]பழி செய்ஞ்ஞரு மல்லர்
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று
தடுப்பவ ரேபகை தம்மையு [2]மன்னர்
கெடுப்பவ [3]ரன்னதொர் கேடிலை யென்றான்.

(இ - ள்.) (ஒருவருக்கு), வரும் பழி - மேன்மேல்வளர்கின்ற பொல்லாங்கை, அடுப்ப - (அவரைச்)சேரும்படி, செய்ஞரும் - செய்துவருபவர்களும், அல்லர் - (அவருக்குப்) பகைவர்களாகார்; (மற்றுயாவர் பகைவர்எனில்), கொடுப்பவர் முன்பு - (இரப்பவர்க்குத்) தானஞ்செய்யும் அவர்களுக்கு எதிரில், நின்று - பொருந்தி, கொடேல் என - தானஞ்செய்யாதேயென்று, தடுப்பவரே - தடை செய்பவரே, பகை-(அக்கொடுப்பவருக்குப்) பகைவராவர்: அன்னர் - அங்ஙனம் ஈவதுவிலக்குபவர்,—தம்மைஉம் - தம்மைத்தாமே, கெடுப்பவர் - கெடுத்துக்கொள்பவருமாவர்; அன்னது ஓர்கேடு இலை -அக்கொடுப்பதுவிலக்குவதைப்போல்வதொரு தீச்செயல் வேறில்லை, என்றான் - என்று (மாவலி குருவுக்குக்) கூறினான்; (எ-று.)

கீழ்க்கவியால் ஈவோரின்சிறப்பைக்கூறிய மகாபலி, இதனால், கொடுப்பதைத் தடுப்பதன் கொடுமையைக் கூறுகின்றான். நீ கொடுப்பதைத் தடுப்பது தகாது என்று அறிவு உறுத்தியவாறு. ஒருவர்க்கு மற்றொருவர் கொடுப்பதை இடையிலேயிருந்து தடுப்பவர், அக்கொடுப்பவரைக் கொடாமையாலாகிய பாவத்துக்கு இலக்காக்குவது மன்றி, தாமும் தானம்விலக்கிய பாவத்தின் மிகுதியாற் கெடுவரென்பதாம். தன்னையும் பிறரையும் ஒருங்கு கெடுத்தல் பற்றி, "அன்னதொர்கேடிலை" என்றான். "ஈவதுவிலக்கேல்" என ஔவையாரும், "அழுக்காறுடையார்க்கது சாலுமொன்னார், வழுக்கியுங் கேடீன்பது" எனத் திருவள்ளுவனாரும் கூறியவாற்றையும் அறிக. இனி; அடுப்ப அரு பழி செய்ஞரும் என எடுத்து-அடாப் பழியைச் செய்கின்றவர்களும் என்றும் கூறலாம். பகை என்ற பால்பகாவஃறிணைப்பெயர் - பொருளால் உயர்திணைப் பன்மையை உணர்த்தி, 'தடுப்பவர்' என்பதற்கு முடிக்குஞ்சொல்லாயிற்று.
பி-ம்:—[1]பகை. [2]அன்னர். [3]இன்னதொர். (448)

32\. கட்டுரை [1]யிற்றம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்த [2]முயன்றோர்
உட்டெறு வெம்பகை யாவது [3]லோபம்
விட்டிட லென்று விலக்கினர் [4]தாமே.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) கட்டு உரையின் - (தருமநூல்களிற் கூறிய) உறுதி வார்த்தையின்படி, தம கைத்து உள போழ்துஏ - தங்களுடைய செல்வங்கள் தங்கள் வசத்திலிருக்கிற பொழுதில்தானே, இட்டு - தானஞ் செய்து, இசைகொண்டு - (அதனால் இம்மையிற்) கீர்த்திபெற்று, அறனஎய்த - (மறுமையில்) அந்தத்தருமத்தின் பயனாகிய புண்ணியத்தையும் அடைதற்கு, முயன்றோர் - முயற்சிசெய்து வருபவர்களுக்கு, உள் தெறு வெம் பகை ஆவது - உள்ளேயிருந்து அழிக்கின்ற கொடிய பகைவராவர் (யாவரெனின்), உலோபம் விட்டிடல் என்று - உலோபகுணத்தை விட்டிடாதேயென்றுசொல்லி, விலக்கினர்தாம்ஏ - (தாம் அநுகூலமானவர்போல இருந்து ஒருவர் பிறர்க்குத் தானஞ்செய்யும்பொழுது) செய்யாதேயென்று தடுத்தவரே யாவர்; (எ - று.)

அனுகூலர்போலப் பழகிக் கொடுப்பது விலக்குகின்றவர்களைக் கொடையாளிகளுக்குப் பகைவரென்று பொதுப்படக் கீழ்க்கவியிற் கூறி, இக்கவியில் அவர்களை உட்பகைவரென்று விசேடித்துக் கூறுகின்றான். கொடையாளிகட்குப் பகையாகுபவர், அவர் கொடுக்கும்போது உலோபகுணத்தை விடக்கூடாதென்று உபதேசித்து அக்கொடுத்தலுக்குத் தடைசெய்பவரே யென்றவாறு. பகையாவது விலக்கினர்-திணைவழுவமைதி; ஈவதை விலக்குபவருடைய இகழ்ச்சி விளங்க உயர்திணையை அஃறிணையாகக்கூறினார். லோபமாவது - இரப்பவர்க்கு ஈயாமல் வைத்துக்கொண்டே இல்லையென்னுதல். உட்பகை - அந்தச்சித்திரம். அறன் எய்த முயன்றோர்(க்கு) உட்பகையாவது, உலோபம்: (அதனை), விட்டிடல் - விட்டிடுக, என்று—, விலக்கினர் - (நூலோர்) விலக்கியுள்ளார் என்று உரைகூறினுமாம்: அறஞ்செய்யமுயன்றோரென்பவர் உலோபம் விலக்கினவர்களே யென்று கருத்து. இவ்வுரையில், விட்டிடல் - உடன்பாட்டு வியங்கோள். தாம்-அசை. பி - ம்:—[1]உத்தம. [2]முயன்றோர்க்கு. [3]போரோ. [4]மாதோ. சிலபிரதிகளில், இது "அடுப்ப" (31) என்பதற்குமுன் காணப்படுகின்றது. (449)

33. எடுத்தொரு வருக்கொருவ ரீவதனின் முன்னம்
தடுப்பது [1]நினக்கழகி தோ[2]தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு[3]கொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றி[4]விடுகின்றாய்.

(இ - ள்.) தகவு இல் - நற்குணமில்லாத, வெள்ளி-சுக்கிரனே! கொடுப்பது விலக்கு கொடியோய்-தானத்தைத் தடுக்கின்ற கொடுந்தன்மையையுடையவனே! ஒருவர் - (கொடையாளிகளுள்) ஒருத்தர், ஒருவருக்கு - (யாசகர்களுள்) ஒருத்தர்க்கு, எடுத்து - (அவர் விரும்பினதொரு பொருளைக் கையில்) எடுத்து, ஈவதனின் முன்னம் - கொடுப்பதற்கு முன்பே, தடுப்பது - (வேண்டாமென்று இங்ஙனந்) தடைசெய்வது, நினக்கு - (குருவாகிய) உனக்கு, அழகிதுஓ - அழகுடையதாமோ? [ஆகாதன்றோ]; (அன்றியும் நீ இக்கொடுந்தொழிலின்பயனால்), உனது சுற்றம் உடுப்பதுஉம் உண்பதுஉம் இன்றி விடுகின்றாய்-உனது பந்துவர்க்கம் உடுக்கஉடையும் உண்ண உணவும் இல்லாதபடி ஆய்விடுகிறாய்; (எ-று.)

இதுவரையிற் சுக்கிரனைப் படர்க்கையாகக்கொண்டு கூறிவந்த மாவலி, இப்போது முன்னிலைப்படுத்திக் கூறுகின்றனன். உடுப்பது - உடுக்கப்படுவது; உண்பது - உண்ணப்படுவது: சாதியொருமை. இவ்விரண்டுமில்லாமலெனவே, மற்றைச்செல்வங்களையிழத்தல் கூறவேண்டாதாயிற்று. 'விலக்குபவனது சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக்கெடும்' எனவே, அவன் கெடுதல் சொல்லப்படாமலே அருத்தாபத்திப்பிரமாணத்தாற் கொள்ளப்படும். பிறர்பேறு பொருமை, தன்பேற்றையேயன்றித் தன்சுற்றத்தின்பேற்றினையும் இழப்பிக்குமென்பதாம். "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ, முண்பதூஉ மின்றிக்கெடும்" என்னுந் திருக்குறளின்கருத்தைக் கூறியது, இறுதிவாக்கியம். 'ஈவத

ணின் முன்னே' என்றது, தடுத்தலின் விரைவு தோன்ற நின்றது. தகவு என்னுஞ்சொல்லுக்கு - அறிவு, உரிமை, ஒழுக்கம், கிருபை, தகுதி, தெளிவு, நன்மை, நீதி முதலியனவாகப் பலபொருள்கள் உண்டு. [2] தகைவில் என்று பாடமாயின், (இக்குணமொன்றொழியப் பிறகுணங்களில்) தளர்ச்சியில்லாத என்று பொருள்கொள்க. கொடுப்பது விலக்கு கொடியோய் - கொடுப்பது விலக்கக் கொடிகட்டியவனே! என்றும் பொருள்தோன்றும். நிச்சயம்பற்றி 'இன்றிவிடுகின்றாய்' என நிகழ்காலமாகக் கூறினான்; காலவழுவமைதி. பி-ம்:—[1] நினக்கிதழகோ. [3] கொடியோர் தமது. [4] ஒழியுங் காண். (450)

34.—மாவலி வாமனனுக்கு மூவடிமண் தாரைவார்த்துக் கொடுத்தல்.

முடியவிம் மொழியெலா [1] மொழிந்து மந்திரி
கொடியனென் றுரைத்தசொ லொன்றுங் கொண்டிலன்
அடியொரு மூன்றுநீ யளந்து [2] கொள்கென
நெடியவன் குறியகை [3] நீரி னீட்டினான்.

(இ - ள்.) (மாவலி), முடிய இம் மொழி எலாம் மொழிந்து-முழுவதும் இத் தன்மையான [கடுமையான] வார்த்தைகளெல்லாவற்றையுஞ்சொல்லி, மந்திரி கொடியன் என்று-(நமது) மந்திரி [சுக்கிராசார்யன்] துர்க்குணமுடையவனென்று கருதி, உரைத்த சொல் ஒன்றும் கொண்டிலன்-(அவன்) சொன்னவார்த்தையைச்சிறிதும் ஏற்றுக் கொள்ளாமல், அடி ஒரு மூன்றுஉம் நீ அளந்து கொள்க என - 'மூன்றடிநிலத்தையும் நீயே அளந்து (உன்னுடையதாகப்) பெற்றுக்கொள்வாய்' என்று (வாமனனைநோக்கிச்) சொல்ல, நெடியவன்-(உடனே திரிவிக்கிரமனாக) நீளப்போகின்ற வாமனன், குறிய கை-(தனது) சிறியகையை, நீரின்-(மாவலி தாரைவார்த்த) தான ஜலத்தை, நீட்டினான்-நீட்டிப்பெற்றான்; (எ - று.)

தன் மந்திரி சுக்கிரனைத் துர்க்குணமுடையானென்று கருதியதனால், அவன் மொழியைக் கொள்ளாமல், மாவலி, வாமனன் வேண்டியபடியே மூவடிநிலத்தைக்கொள்ளுமாறு தாரைவார்த்துக் கொடுக்க, திருமால் தன்குறுங்கையைத் தானநீரைப்பெறுதற்காக நீட்டியேந்தினனென்றவாறு. தன்காலால் மூன்றடிநிலம்வேண்டுமென்றுகேட்டதனாலும், இரப்பவர்களை அவர்கள் விருப்பத்தின்படி கொள்ளவிடுவது மிக்க உதாரமும் அவர்களுக்கு மிக்க திருப்திகரமு மாகு மாதலாலும், 'நீயளந்துகொள்க' என்றான். மாவலிக்குச் சுக்கிரன் குருவும் முதல்மந்திரியுமாவன். அடி-கால்வைத்து அளக்கப்பட்ட நிலத்தைக் குறித்தலால், நீட்டலளவையாகுபெயர். மூன்றும், உம்மை-முற்று. இனி, நீரொடுகொடுத்தல் தானமுறையாதலால், வாமனனுடையகையில் நீரின்நீட்டினான் என்றுமாம். நெடியவன் குறிய கை-முரண்டொடை. முடிய-முடிவுபெறஎன்றும், கொடியனென்று மந்திரி உரைத்தசொல் என இயைத்து - (திருமால்) கொடிய வஞ்சகனென்று அமைச்சன் சொன்ன வார்த்தையை என்றும் உரைப்பர். பி - ம்:—[1] மொழிந்த [2] கொள்ளென. [3] நீரை.

தன்வார்த்தையைக் கேளாமல் மாவலி வாமனன்கையில் தாரைவார்த்துக்கொடுக்கப் புகுந்தவளவிலே, சுக்கிரன் ஒரு சிறு வடிவைக் கொண்டு நீர்ப்பாத்திரத்தின் துவாரத்திலே நுழைந்து நீர் விழாதபடி தகைய, அதனை அறிந்து எம்பெருமான் துவார சோதனம் பண்ணுபவன்போலத் தனது திருக்கையில் திருப்பவித் திரத்தினுடைய நுனியாலே அந்தத் துவாரத்திற் குத்தின அள விலே, அந்தத்தருப்பைப்புல்லினாற் சுக்கிரன் ஒருகண் பழுதுபட்டுக் கலங்கி ஒதுங்கிப்போதலும், நீர் கையில்விழுந்தது என்னுங் கதா சந்தர்ப்பத்தைக் காட்டுவதாகி,

குறியவன் [1]கையினீர் விழாமற் குண்டிகை
மறிபட [2]வாமனன் மலர்க்கைத் தர்ப்பையாற்
[3]செறிவது நீக்கிடச் சிதைந்து கண்ணுடைந்து
உறுதுயர்க் கடலிடை [4]யொதுங்கிப் போயினான்.

என்று ஒருகவி இக்கவியின்பின் சில ஏட்டுப்பிரதிகளிற் காணப் படினும், பல பிரதிகளிலும் பயிலவழங்காமையின், உரை யெழு தாது விடப்பட்டது; சுக்கிரன் தடுத்த செய்தியே முதனூலிற் காணப்படவில்லை. "மிக்கபெரும்புகழ் மாவலிவேள்வியில், தக்கதி தன்றென்று தானம்விலக்கிய, சுக்கிரன்கண்ணைத் துரும்பாற் கிளறிய, சக்கரக்கையன்" என்று பெரியாழ்வார் அருளியுள்ளார். பி-ம்:—[1] தகவின். [2] அடைத்தலும். [3] சிறியவனீக்கலும். [4] ஒதுங்கப்.

35.—வாமனன் திரிவிக்கிரமனாதல்.

கயந்தரு நறும்புனல் கையிற் [1]றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் [2]குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி [3]யொப்பவே.

(இ - ள்.) கயம் தரு நறு புனல் - குளத்திலுள்ள நல்ல (மாவலி தாரை வார்த்துக்கொடுத்த) நீரானது, கையில் தீண்டலும்-(தனது) கையிற் பட்டமாத்திரத்திலே, பயந்தவர்கள்உம் இகழ் குறளன் - பெற்றவர்களும் இகழ்தற்குரிய குள்ளவடிவமுள்ள வாமனமூர்த்தி, எதிர் பார்த்து வியந்தவர் வெருக்கொள - (எல்லோரும் தன்பேரு ருவத்தை) எதிரிலேயிருந்து நோக்கி ஆச்சரியப்பட்டவர்களாய் அச்சங்கொள்ளும்படி,உயர்ந்தவர்க்குஉதவிய உதவி ஒப்ப-(நற்குண நற்செய்கைகளாற்) சிறந்தவர்களுக்குச் செய்த தானத்தின் பலன் போல, விசும்பின் ஓங்கினான் - ஆகாயத்திலே உயர்ந்துவளர்ந்தான்;

மாவலி தாரைவார்த்துக்கொடுத்ததும் வாமனன் பேருருவங் கொண்டன னென்றவாறு. குள்ளனிலுங்குள்ள னானதுபற்றி, 'பயந்தவர்களுமிகழ்குறளன்' என்றார். 'பயந்தவர்களும்' என்ற உம்மை, எத்தன்மைத்தான விகாரரூபமாயிருப்பினும் மக்களை மாதாபிதாக்கள் இகழா ரென்பதுபட நின்றது; 'காக்கைக்குத்தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பது பழமொழி. பயந்தவரிகழ்வது வடிவச்சிறுமைபற்றிய இகழ்ச்சியே யன்றி வேறன்று; இது

பற்றியே, "சிறியனென்றென் னிளஞ்சிங்கத்தை தயிகமேழல்கண்டாய்" என்றார், பெரியாரும். குறளைக்குறிக்கும் வாமனன் என்பது - காண்பார்க்குச் சுகத்தை யுண்டாக்குமவனென்றுபொருள்படுதல் இங்குக் கருதத்தக்கது. மிகச்சிறிய குறள் வளர்ந்து கண்கொளாப் பேருருவமாவதுபற்றி, முதலில் வியப்பும் பின்னர் அச்சமும் கொண்டனர். விசும்பின்-ஆகாயம்போல உயர்ந்தான் என்றும் உரைப்பர்: இது, பண்புவமை.

"உதவிவரைத்தன்றுதவியுதவி, செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்ற குறளைத் திருட்டாந்தப்படுத்தி, ஈற்றடியைக் கவி பூரித்தா ரென்பர். மகாபலியாலுதவி செய்யப்பட்டவன் மகாவிஷ்ணு: அவனுக்குச் செய்த உதவி, மூவடிமண். ஆதலின், அது சிறியது: அவ்வுதவிப்பயனே அம்மகாவிஷ்ணுவின் சால்பு போல மூவுலகையும் அவர்க்கு ஆக்கிவிட்டது என விரிவுகாண்ப. உயர்ந்தவர்க்கு உதவிய உதவி மிக ஓங்குதலை "அறப்பயனுந், தான் சிறிதாயினுந் தக்கார்கைப்பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்துவிடும்" என்னும் நாலடியாராலும், "இனைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின், துணைத்துணை வேள்விப்பயன்" என்னுந் திருக்குறளாலும் அறிக. பி-ம்:—[1] நீண்டுமுன். [2] குறளொன் பார்க்கெதிர். [3] போலவே. (452)

36.—திருமால் மண்விண்களை ஈரடியாலளந்து விடுதல்.

நின்ற [1] தாண் மண்ணெலா [2] நிரப்பி யப்புறம்
சென்று[3] பா விற்றிலை சிறிது பாரெனு
[4] ஒன்ற[5] வா னகமெலா மொடுக்கி யும்பரை
வென்ற[1] தாண் மீண்டது வெளி[6] பெ ருமையே.

(இ - ள்.) நின்ற தாள் - (நிலவுலகத்திலே) ஊன்றிய (வாமன மூர்த்தியினது) ஒருதிருவடியானது, மண் எலாம் நிரப்பி - பூலோக முழுவதையும் நிரம்பச்செய்து, பார் சிறிதுஎனு-பூமி சிறியது என்ற காரணத்தினால், அப்புறம் சென்று பாவிற்று இலை - (அதற்கு) அப்பாற்போய்ப் பரவியதில்லை; வான் அகம் எலாம் - ஆகாயத்தினிடம் முழுவதையும், ஒன்ற - ஒருசேர, ஒடுக்கி - (தன்னுள்) அடங்கச்செய்து, உம்பரை வென்ற - அம்மேலுலகைக்கடந்த, தாள் - மற்றொருதிருவடியும், வெளி பெருமை - வேறு இடம் பெறாததனால், மீண்டது-திரும்பியது; (எ - று.)

தான் மூன்றடிநிலம் வேண்டின திருமால் தனது ஓரடியால் மண்ணுலகையும் மற்றோரடியால் விண்ணுலகையும் அளந்தனனென்பதாம். எம்பெருமானது பாதங்கள் இன்னும் பெரியனவாக வளரக்கூடியனவாயினும் மேலேசெல்வதற்கு இடமில்லாமையால் மண்ணையும் விண்ணையும் அளக்கையில் ஓரளவோடு நின்றிட்டனவென்க. இங்கு 'எலாம்' என்னும் பெயர், ஒருபொருளின் பலவிடங் குறித்துநின்றது. பி - ம்:—[1] கால். [2] நிரம்பி. [3] பாவியதிலைச், பாவிற்றில. [4] ஒன்றின். [5] வானுலகு. [6] பெருமையால். (453)

37.—மூன்றாவது அடிக்காகத் திருமால் மாவலிமுடிமேற் பாதம் வைத்தல்.

உலகெலா முள்ளடி [1]யடக்கி யோரடிக்கு
[2] அலகிலா தவ்வடிக் [3] கன்பன் [4] மெய்யதாம்
இலைகுலாந் துழாய்முடி யேக நாயகன்
சிலைகுலாந் தோளினாய் சிறியன் சாலவே.

(இ - ள்.) உலகு எலாம்-எல்லாவுலகங்களையும் [மேலுலகத்தையும் கீழுலகத்தையும்], உள் அடி அடக்கி (திருமால் தனது) இரண்டடிகளினுள்ளே அடங்கச் செய்துவிட்டதனால், ஓர் அடிக்கு அலகு இலாது - (மூன்றாவதாகிய) மற்றோரடிக்கு (அளத்தற்குரிய) இடம் இல்லாமற் போனமைபற்றி, அ அடிக்கு - அந்த அடியைப் புக்கு, அன்பன் மெய் அது ஆம் - அன்புடைய மாவலியினது சிரசு இடமாயிற்று; சிலை குலாம் தோளினாய் - வில் விளங்குகின்ற திருத் தோளுடையவனே! இலை குலாம் துழாய்முடி ஏகநாயகன் - இலைகள் விளங்குகின்ற திருத்துழாய்மாலையை யணிந்த திருமுடியையுடைய ஒப்பற்ற தலைவனாகிய திருமால், சால சிறியன் - மிகவுஞ் சிறியவன்;

ஒருதிருவடியால் மண்ணுலகையும் மற்றொருதிருவடியால் விண்ணுலகையும் இவ்வாறு எல்லாவுலகங்களையும் இரண்டடியால் அளந்துவிட்டு, 'மூன்றடிதருகிறோம் என்றாய்; மற்றையோரடிக்கு இடம் காட்டாய்' என்று திருமால் கூற, அதற்கு 'அடியேனது முடியே உள்ளது' என்று மாவலி சொல்ல, எம்பெருமான் அதிற் பாதத்தை வைத்து அழுத்தி அவனைப் பாதாளத்திற்செலுத்தினனென்ப: "ஒருகுறளாயிருநிலம் மூவடிமண்வேண்டி யுலகனைத்து மீரடியாலொடுக்கியொன்றுந், தருகவெனாமாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்" என்றார், பெரியாரும். பூலோகத்தின்கீழுள்ள பாதாளலோகம் பூலோகத்தில் அடங்குதலால், மூன்றாமடிக்கு வேறு இடம் இன்றாயிற்று. 'உள்ளடி யடக்கி' என்றார், அளக்கும்போது காற்கீழ் அகப்பட்ட உயிர்களுக்கு அபாயம் சிறிதும் நிகழாதபடி குறிக்கொண்டு காத்தமைதோன்ற; வெயில் நிலாவிளக்கொளி முதலியன உலகத்திற்பரவுதல்போலத் தேஜோரூபமான சுவாமியினது திருவடி எங்கும் பரவியதனால், அதன்கீழ்ப்பட்ட பிராணிகளுக்கு அபாயஞ் சிறிதும் உண்டாகவில்லை யென்ப: அன்றியும், பகவானது சரணம் செந்தாமரைமலரினும் மெல்லியதாதலால், அது மேலேபடுதலால் இன்ப முண்டாகுமேயன்றித் துன்பம் உண்டாகா தென்க. கீழ் 'அலகு' என வந்ததனால், மேல், இடத்தை 'அது' எனச்சுட்டினார். திருமால்விசித்திரசக்தியுடையனாதலால், உலகத்தை அளக்குங் காலத்து அவ்வுலகினளவாய் வளர்ந்துநின்ற அவனது திருவடி தானே மூன்றாமடி அளக்குங்கால் மாவலியின்முடியினதளவாகக் குறுகிற்றென்க. உத்தம அங்கமா யிருத்தல்பற்றி, தலை 'மெய்' எனப் பட்டது. 'சிறியன் சால' என்றது - அவனது மிக்கபெருமையை விளக்குவதொரு குறிப்பு; இவ்வுலகத்தையெல்லாம் ஓரடியுள்ளே யடக்கிய இவ்வடிவம் சாலச்சிறியதேயென்று வியந்தவாறு. சிலை குலாந்தோளினாய் என்றது, முனிவன் இராமனைநோக்கிக் கூறிய விளி; இதற்கு - வில்லைப் பிடித்துள்ள (இடத்) திருக்கையை யுடை

யாயென்றும், வில்லினைமாட்டிவைத்துள்ள (இடத்) தோளுடையா யென்றும், வில்வித்தையில் மிகப்பயிற்சியையுடைய புயங்களை யுடையாயென்றுங் கருத்துக்கொள்ளப்படும்: அன்றி, (வலிமையாற்) கல்மலையை யொத்துவிளங்குந்தோள்களுடையா யென்றும் பொருள் கொள்ளலாம். பி - ம்:—[1] அடங்கிற்றோரடி, அடக்கியோரடி. [2] அலகிலா. [3] அமைந்த. [4] மெய்யனேல், மெய்யனே, மெய்யதே, மெய்யென. (454)

38.—திருமால் மூவுலகாட்சியைத் தேவேந்திரனுக்கு அளித்துவிட்டுத் தன் வியூகமூர்த்தத்திற் சேர்தல்.

உரிய[1] திந் திரற்கிதென் றுலக மீந்துபோய்
[2] விரிதிரைப் பாற்கடற் பள்ளி மேவினான்
கரியவ னுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் சிவந்து [3] காட்டவே.

(இ - ள்.) கரியவன் - கருநிறமுடைய திருவிக்கிரமமூர்த்தி, இந்திரற்கு இது உரியது என்று - தேவேந்திரனுக்கே இதுஉரியதா மென்று சொல்லி, உலகம் ஈந்து போய்-திரிலோகாதிபத்தியத்தைக் கொடுத்துவிட்டுச்சென்று, உலகு எலாம் கடந்த தாள் இணை-எல்லா வுலகங்களையும் அளவிட்டுச்சிரமப்பட்ட (தனது) உபயபாதர், திருமகள் கரம் தொட-பெரிய பிராட்டியார் (அச்சிரமந் தீரப்பிடிக்கக்)கைகளால் தொடுதலால், சிவந்துகாட்ட-செம்மை நிறமடைந்து தோன்றும்படி, விரி திரை பாற்கடல் பள்ளி மேவினான்-பரவிய அலைகளை யுடைய க்ஷீரசமுத்திரத்திலே (ஆதிசேஷ) சயனத்திற் பொருந்தி யோகநித்திரை கொண்டருளினான்; (எ - று.)

உலகனைத்தையும் உந்தியிற்பூத்தருளியமைபற்றித் தனக்கே உரியதும் தன்னாலே இந்திரனுக்கென்று அளிக்கப்பட்டதுமான திரிலோகத்தை அவனிடத்தினின்று கவர்ந்துகொண்டு தன்ன தென்று அபிமானித்தவனைத் திருமால் செருக்கடக்கி அவ்வுலகங் களைப்பறித்து இந்திரனுக்குக்கொடுத்தது சிறிதும் வஞ்சனையாகா தென்க. திரு என்பது-கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம். இப்படிப்பட்ட அழகு உண்டாகையாலே, இலக்குமிக்குத் திருமக ளென்று பெயர். திருமகளது மிகமெல்லிய திருக்கரந்தொடுதலா லும் திருமாலின் அடி கன்றிச் சிவந்துகாட்டும் என, அத்திருவடி யின் மென்மைமிகுதி கூறியவாறும். "தாளாலுலக மளந்தவசைவே கொல், வாளாகிடந்தருளும் வாய்திறவான் **ஐந்தலைவாய்நாகத் தணை" என்பதன் கருத்துக்கு ஏற்ப, திருமாலின் திருவடிகளுக்கு உலகமளந்ததனாற் சிரமம் உண்டானதாக் கற்பனைகூறுவார், 'உல கெலாங்கடந்த தாளிணை திருமகள் கரந்தொடச் சிவந்துகாட்டப் பள்ளிமேவினான்' என்றார். கரியவன் - க்ருஷ்ணனென்பதன் மொழி பெயர்ப்பாம்: இது, அவதாரப்பெயராகாமல் திருமாலுக்குஉரிய பெய ராக வழங்கும். பி - ம்:—[1] இந்திரற்கென. [2] விரியும். [3] காட்டிற்றே. இதுவரையில் மாவலிப்படலம்: மேல் வேள்விப்படலம் என்று சில பிரதியில் என முன்னரே காட்டப்பட்டது. (455)

39.—முனிவன் இதுவே வேள்விக்கு ஏற்றஇடமெனல்.

ஆதலா [1]லருவினை யறுக்கு மாரிய
காதலாற் கண்டவர் பிறவி காண்குறார்
வேதநூன் முறைமையால் வேள்வி முற்றுவேற்கு
ஈதலா [2]தில்லைவே றிருக்கற் பாலதே.

(இ - ள்.) அரு வினை அறுக்கும் ஆரிய - (பிறரால் அழித்தற்கு) அருமையான (அடியார்களது) கருமங்களை வேரோடு அழிக்கின்ற சிறந்த இராமனே! ஆதலால் - (இந்தச்சோலை திருமால் தவஞ் செய்த இடம்) ஆகையால், காதலால் கண்டவர் பிறவி காண்குறார் - (இச்சோலையை) அன்புடனே பார்த்தவர்கள் (மீண்டும்) பிறத்தலை அடையமாட்டார்கள்; (ஆதலின்), வேதம் நூல் முறைமையால் வேள்வி முற்றுவேற்கு-வேதசாஸ்திரங்களிற் கூறியுள்ள விதிப்படி யாகத்தைச் செய்து முடிக்கவேண்டிய எனக்கு, ஈது அலாது - இவ் வாச்சிரமமே யல்லாமல், இருக்கல் பாலது - (யாகஞ்செய்ய) இருத்தற்கு உரிய இடம், வேறு இல்லை—, (எ - று.)

விஷ்ணுவும் காசியபனும் தவஞ்செய்துசித்திபெற்ற ஆச்சிரமமாதலால், தானும் யாகஞ்செய்து சித்திபெறுதற்கு இதனையே சிறந்தஇடமாகக் கருதினான், முனிவன். ஸ்ரீராமனது ஸர்வசக்தி முதலிய பரத்துவசின்னங்களைச் சிறிதும் உணராமற் சாதாரண மனிதனென்றுகருதிப் புத்திரவாஞ்சையாலே "படையூற்றமிலன் சிறியனிவன்" என்று கூறிய தசரதசக்கரவர்த்திக்கு விசுவாமித்திரன் "அஹம் வேத்மி மஹாத்மாநம் [யான் அறிவேன்பரமாத்மாவான ஸ்ரீராமனை]: (நீ அறியாய்)" என்று உரைத்த தத்துவஞான பரிபூர்த்தியையுடையவனாதலால், 'அருவினையறுக்குமாரிய' என்று விளித்தான். அறுக்கும் - முற்றுகக்கொண்டு, அருவினை அறுக்கும்-இந்த ஆச்சிரமம் போக்குதற்கு அரிய தீவினையை யொழித்துத் தொடங்கியசெயலைச் சித்திபெறச்செய்யு மென்றுமாம். ஆதலால் - இச்சோலையின் வரலாறு இதுவாகையால், பிறவி காண்குறார்-முத்தி பெறுவரென்றபடி; வீடுபெற்றவர்க்குமாத்திரமே மீணடும் பிறப்பில்லை. வேதநூல் - பண்புத்தொகையாகவேனும், உம்மைத் தொகையாகவேனும் பொருள் கொள்க. முதலடி - முற்றுமோனை.
பி - ம்:—[1] இரு. [2] இருக்கைவேறில்லைப்பாலதோ, இல்லைமற்றிருக்கற் பாலதே. (456)

40.—குமாரர்களைக் காவலாக ஏவி, முனிவன் வேள்விதொடங்குதல்.

ஈண்டிருந் தியற்றுவென் யாகம் யானென
நீண்டபூம் [1]பழுவத்து நெறியி னெய்திப்பின்
வேண்டுவ கொண்டு[2] தன் வேள்வி மேவினான்
[3]காண்டகு குமரரைக் [4]காவ லேவியே.

(இ - ள்.) 'ஈண்டு இருந்து - இவ்விடத்தி லிருந்து கொண்டு, யான் யாகம் இயற்றுவென்-நான் வேள்வியைச் செய்வேன்,' என - என்று (விசுவாமித்திரன் ஸ்ரீராமனுக்குச்) சொல்லி, நீண்ட பூ பழு

வத்து - பெரிய அழகிய அச்சோலையிலே, நெறியின்எய்தி - வழியே நடந்துபோய், பின் - அதன்பின்பு, வேண்டுவ கொண்டு - (யாகத்துக்கு) வேண்டிய உபகரணங்களைச்சேகரித்துக்கொண்டு, காண்தகு குமரரை-(யாவராலும்) கண்டு மகிழத்தக்க இராமலட்சுமணர்களை, காவல் ஏவி-காவல்காக்க நியமித்து, தன் வேள்வி மேவினன்-தான் செய்யக்கருதிய யாகத்தைத் தொடங்கினான்; (எ - று.)

ஏவி மேவினன் என இயையும். முனிவன் அரக்கர்களாலுண்டாகுந் தீங்குகளினின்று தனது யாகத்தைக் காக்குமாறு குமாரர்கட்குக் கட்டளையிட்டு யாகஞ்செய்யத் தொடங்கினனென்க. காண்டகு குமரர் - ஞானத்தால் உணரத்தக்க குமாரருமாம். பி-ம்:—[1]பழுவத்தை. [2]தான். [3]காண்வரு. [4]காவன்மேவியே, காக்கவேவியே. ()

41.—குமாரர்கள் யாகத்தைக் காத்தல்.

எண்ணுதற் [1]காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணிணைக் காக்கின்ற விமையிற் காத்தனர்.

(இ - ள்.) மண்ணினை - பூலோகத்தை, காக்கின்ற - அரசாள்கின்ற, மன்னன் - தசரதசக்கரவர்த்தியினது, மைந்தர்கள்-குமாரர்களாகிய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள்,—விண்ணவர்க்கு - தேவர்களின் பொருட்டு, இரண்டு மூன்று நாள் - ஆறுதினங்களில், முனிவன் ஆக்கிய-விசுவாமித்திரன் செய்த, எண்ணுதற்கு ஆக்க அரிது - (பிறரால்) செய்யநினைத்தற்குஞ் செய்தற்கும் அருமையுடையதான, வேள்வியை - யாகத்தை, கண்ணிணை காக்கின்ற இமையின் - கண்ணைக் காப்பாற்றுகின்ற இமைகள்போல, காத்தனர் - இரட்சிப்பாரானார்கள்; (எ-று.)

எண்ணுதற்கும் செய்தற்கும் ஆகாத தெனவே - வாயினாற் சொல்லுதற்கும் ஆகாத தென்பது தானே போதரும். எண்ணுதற்கு ஆக்கரிது என்பதை, காத்தனரென்பதனோடு இயைத்து - (இவர்செய்கின்ற காவல் பிறரால்) எண்ணுவதற்கும் செய்வதற்கும் அரிதாகுமாறு காத்தனரென்றுமாம்: இக்காவல் எண்ணுதற்கும் ஆக்குதற்கும் அரிது என்று முற்றாக்கியும் உரைப்பினுமாம். இனி, எண் நுதற்கு - எட்டுப்புருவங்களை [அதாவது நான்கு முகங்களை] யுடைய பிரமதேவனுக்கும்,செய்தற்கு அரியது என்று உரைப்பாரும் உளர்; இது, நலிந்துகோடலாம். இப்பொருளில், எண்ணுதல்-பண்புத்தொகை யன்மொழி. இரண்டு மூன்றுநாள் - ஆறுநாள் என்க; பண்புத்தொகை. வேறுவகையாகப் பொருளுரைத்தற்கு இடமிருப்பினும், முதனூலுக்கு ஏற்ப, ஆறுதின மென்று பொருளுரைக்கப்பட்டது. இனி, நாள் என்பதை - நாளைக்குறிக்கின்ற நட்சத்திரங்களுக்கு ஆகுபெயரெனக்கொண்டு, இரண்டு மூன்றுநாள் என்பதை உம்மைத்தொகையாக்கி, தன் கட்டளையினாற் பூதவுடம்புடனே சுவர்க்கலோகத்திற்குச் சென்ற திரிசங்குமகாராசனை அவமதித்த தேவர்களைச் செருக்கு அடக்கும்பொருட்டு அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என்னும ஐந்து நட்சத்திரங்களைத்

தென்திசையில் விளங்கும்படி செய்த விசுவாமித்திரனது என்று பொருளுரைப்பதும் நலிந்து பொருள்கோடலாம். மன்னன் மைந்தர்கள் வேள்வியைத் காத்தனர் என இயையும். இமை கண்ணைக் காத்தல்-புழுதிமுதலியவை வந்து விழாமல் தடுத்தல். மைந்தர்கள் வேள்வியைக் காத்தல் - இராட்சசர்களால் தீங்குநேராமற் காத்தல்.

"கண்ணினைக் காக்கின்ற இமையிற்காத்தனர்" என்பதற்கு ஒரு சாரார் சிறப்பாகக்கூறும் பொருள்வருமாறு:—மேலிமைகீழிமை என்னும் கண்ணிமை யிரண்டில் மேலிமை பெரியது, கீழிமை சிறியது: அன்றியும், மேலிமை அசைந்து கொண்டிருப்பது, கீழிமை அசையாமலிருப்பது: மேலிமைபோலப் பெரியவனாகிய இராமன் நிலைபெயர்ந்து கௌசிகமுனியாச்சிரமத்தின் நாற்றிசையிலும் இராக்கதர்கள்வந்து உபத்திரவஞ்செய்யாமலிருக்கும்பொருட்டுச் சக்கரஞ் சுற்றுவதுபோலச் சுற்றித்திரிந்து காவல்செய்தான்; கீழிமைபோலச் சிறியவனாகிய இலக்குமணன் உள்ளே ஒருவரும் புகாதிருக்கும் பொருட்டு ஆச்சிரமத்தின் வாயிலில் அசையாதுநின்றபடி காவல் செய்தான்; இவ்விதமாகக் காவல்செய்யும் அவ்விருவரில் இராமன் ஆச்சிரமத்தின் புறத்திற் சுற்றிவரும்போதெல்லாம் மேலிமை கீழிமையை இமைத்திமைத்துத் தீண்டுவதுபோல வாயிலிலிருக்கின்ற இலக்குவனைக்கையினால் அடிக்கடிதட்டி, 'லக்ஷ்மண, ஜாக்கிரதை' என்று எச்சரித்துக்கொண்டேவந்தான் என்பது. பி - ம்:—[1] ஆர்க்கெளிது. (458)

42.—அரக்கர் எப்போது வருவரென்று ஸ்ரீராமன் முனிவனை வினவுதல்.

காத்தனர் திரிகின்ற காளை வீரரில்
மூத்தவன் முழுதுணர் முனியை [1]முன்னிநீ
தீத்தொழி [2]லியற்றுவ ரென்ற தீயவர்
ஏத்தருங் குணத்தினாய் வருவதென் றென்றான்.

(இ - ள்.) காத்தனர் திரிகின்ற-(இவ்வாறு யாகத்தைக்)காவல் செய்துகொண்டு உலாவிவருகின்ற, காளை வீரரில் - இளவெருது போன்ற இராகவ வீரர்களில், மூத்தவன் - முன்னவனாகிய ஸ்ரீராமன், முழுதுஉணர் முனியை முன்னி - யாவும் அறிந்த விசுவாமித்திரனை (அடைந்து அவனை) நோக்கி, 'ஏத்துஅரு குணத்தினாய்-(எவராலும்) புகழ்ந்துசொல்லுதற்கு முடியாத நற்குணங்களையுடையவனே! நீ தீத்தொழில் இயற்றுவர் என்ற தீயவர் - கொடுஞ்செயல்களைச் செய்வார்களென்று நீ சொன்ன கொடிய அரக்கர்கள், வருவது—, என்று-எப்பொழுது?' என்றான் - என்று வினவினான்; (எ - று.)

இதனால், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தில் இராமபிரானுக்கு உள்ள ஊற்றம் உணர்த்தப்படுகிறது. தீத்தொழில்-கொடுமையாகிய செய்கை; தீப் போன்ற தொழிலுமாம். ஏத்து அரு குணத்தினாய்-(யாவராலும்) புகழப்படுகின்ற (பிறரிடத்து) அருமையான குணங்களையுடையவனே! என்றுமாம். ஏ தரும் - மேன்மைக்கு தலைத் தருகின்ற, குணத்தினாய் என்றுமாம். கீழ்க்கவியினுரையிற்

காட்டிய விசேஷார்த்தத்துக்குப் பொருந்த,காத்தனராகிய காளை வீர ரில் திரிகின்ற மூத்தவன் என மொழிமாற்றி உரைத்தலும் உண்டு. இரண்டாமடி-முற்றுமோனை. பி-ம்:—[1] முன்னியத். [2] இயற்றுவது. ()

43.—முனிவன் மௌனியாயிருக்க, இராமன் வானத்தைக் காண்கையில், அங்கு அரக்கர் ஆரவாரஞ் செய்தல்.

வார்த்தைமா றுரைத்திலன் முனிவன் [1] மோனியாய்ப்
போர்த்தொழிற் [2] குமரனுந் தொழுது [3] போந்தபின்
[4] பார்த்தனன் [5] விசும்பினைப் பருவ மேகம்போல்
ஆர்த்தன ரிடித்தன ரசனி [6] யஞ்சவே.

(இ - ள்.) (அவ்விருவிற்கு), முனிவன் - கௌசிகன், மோனி ஆய் - மௌன விரதமுடையவனாய், (அதனால்), மாறு வார்த்தை உரைத்திலன் - உத்தரம் ஒன்றும் சொன்னானில்லை; போர் தொழில் குமரன்உம் - யுத்தச்செய்கையிற் சிறந்த மைந்தனாகிய ஸ்ரீராமனும், தொழுது - (அவனை) வணங்கி, போந்தபின் - (வெளியே) வந்த வுடனே, விசும்பினை பார்த்தனன் - ஆகாயத்தை நோக்கினான்; (அப்பொழுது அங்கு), அசனி அஞ்ச - இடியும் அஞ்சும்படி, பருவம் மேகம் போல் - கார்காலத்து (நீர்கொண்ட) மேகம்போல, ஆர்த்தனர் இடித்தனர் - (அரக்கர்கள்) மிகப் பேராரவாரஞ்செய் தார்கள்; (எ - று.)

யாகத்தில் தீட்சைகொண்ட விசுவாமித்திரனை நோக்கி இராமன் யாகத்தைக் காக்கும் நிமித்தம் 'சுபாகுமாரீசர் முதலியோரை நாங்கள் தடுக்கவேண்டுவது எப்போது' என்று வினவ, அருகிலிருந்த முனிவர் 'விசுவாமித்திரர் யாகதீட்சைகொண்டு மௌனவிரதம் பூண்டிருத்தலாற் பேசமாட்டார்; இன்றுமுதல் ஆறுநாள் காக்கவேண்டும்' என்று மறுமொழியுரைத்தனரென்றும், அதுமுதல் ஐந்துநாள் கழிந்தபின் ஆறுநாள் சுபாகுமாரீசர் முதலிய அரக்கர் வந்தனரென்றும் ஸ்ரீவால்மீகம் கூறும். மோனம் = மௌனம்: பேசாவிரதம். ஆர்த்தனர் இடித்தனர் - ஒருபொருட்பன் மொழி. எல்லாப்பிராணிகளுக்கும் அச்சத்தை விளைக்கின்ற இடியும் அச்சத்தையடைய என இராட்சசர்களது ஆரவாரத்தின் பயங்கர மான தன்மையை வெளியிட்டார். மேகம், கருநிறத்துக்கும் பெரு வடிவுக்கும் வானத்தில் நிறைந்து உலாவுதற்கும் ஆரவாரத்துக் கும் அரக்கர்க்கு உவமை. பி-ம்:—[1] மௌனி. [2] குமரருந். [3] போந்து. [4] பார்த்தனர். [5] விசும்பிடை. [6] எஞ்ச, என்ன. *(460)*

44.—அரக்கர் செய்த தீத்தொழில்கள்.

எய்தன ரெறிந்தன ரெரியு [1] நீருமாய்ப்
பெய்தனர் [2] பெருவரை பிடுங்கி வீசினர்
வைதனர் தெழித்தனர் [3] மழுக்கொண் டோச்சினர்
செய்தன [4] ரொன்றல தீய மாயமே.

(இ - ள்.) (அவ்வரக்கர்கள்),—எய்தனர் - (அம்புகளைப்) பிரயோ கித்தார்கள்; எறிந்தனர் - (வேல்முதலிய ஆயுதங்களை) மேல் வீசினார் கள்; எரிஉம் நீர்உம் ஆய் பெய்தனர் - நெருப்பும் நீருமாகச்சொரிந்

தார்கள்; பெரு வரை பிடுங்கி வீசினர் - பெரிய மலைகளைப் பெயர்த்தெடுத்து எறிந்தார்கள்; வைதனர் - வசைச்சொற்களைச்சொன்னார்கள்; தெழித்தனர் - அதட்டினார்கள்; மழு கொண்டு ஓச்சினர் - மழுவாயுதத்தைக்கொண்டு வீசினார்கள்; ஒன்று அல பலவான, தீய மாயம் செய்தனர் - கொடிய மாயைகளைச் செய்தார்கள்; (எ-று.) —மழு-பரசு, கோடாலி. பி - ம்:—[1]நீருமாப். [2]நெடு. [3]மழுக்கள். [4]ஒன்றலாத். (461)

45.—அரக்கர்சேனை வானத்தில் வளைந்து பொருதல்.

ஊனகு படைக்கல [1]முருத்து [2]வீசின
கானக [3]மறைத்தன கால மாரிபோல்
மீனகு திரைக்கடல் விசும்பு [4]போர்த்தென
வானக [5]மறைத்தன வளைந்த சேனையே.

(இ - ள்.) உருத்து - கோபித்து, வீசின - (அரக்கர்களால்) எறியப்பட்டனவான, ஊன் நகு படைக்கலம் - (பகைவருடலிற் பாய்தலால் அவர்களது) மாமிசம் (தம்மிடத்து)விளங்கப்பெற்ற ஆயுதங்கள்,—காலம் மாரி போல்-கார்காலத்து அல்லது பிரளய காலத்து மழைபோல, கான் அகம் மறைத்தன - காட்டினிடம் முழுவதையும் மறைத்துவிட்டன; வளைந்த சேனை-(நாற்புறத்துஞ்) சூழ்ந்த (அரக்கர்) சேனைகள்,—மீன் நகு திரை கடல் விசும்பு போர்த்து என-மீன்கள் களித்திருக்குமிடமான அலைகளையுடைய கடல் (எழுந்து) ஆகாயத்தை மறைத்தாற்போல, வான் அகம் மறைத்தன - ஆகாயத்தினிடம் முழுவதையும் மறைத்துவிட்டன; (எ-று)

கருநிறமுடைய அரக்கர்சேனை பலபோர்க்கருவிகளுடனே வானத்து எழுந்து வளைந்தது - மீன் மிக்குள்ள கருங்கடல் எழுந்து வானத்தைப் போர்த்ததுபோலு மெனக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. முன்னிரண்டடி - உவமையணி. ரக்ஷோக்நமந்த்ரத்தை முனிவர் ஜபித்தலால், நிலத்தில் வந்து பொரமுடியாது வானத்திலேயே அரக்கர் நின்றன ரென்பர். பி - ம்:—[1]உறுமி. [2]வீசினர். [3]மறைத்தனர், மறைத்தது. [4]போர்த்தன. [5]மறங்கொள வளைத்த.()

46.—அந்தச்சேனையின் வருணனை.

வில்லொடு [1]மின்னுவான் மிடைந்து [2]லாவிடப்
பல்லியங் [3]கடிப்பினி னிடிக்கும் [4]பல்படை
[5]ஒல்லென வுரறிய வூழிப் [6]பேர்ச்சியின்
வல்லைவந் தெழுந்ததோர் மழையும் [7]போன்றவே.

(இ - ள்.) வில்லொடு -விற்களும், மின்னு வாள்-மின்னுகின்ற வாளாயுதங்களும், மிடைந்து - (தம்மில்) நெருங்கி, உலாவிட-சஞ்சரியாநிற்க, (அவற்றைப் பிரயோகித்துக்கொண்டு), பல் இயம் கடிப்பினின் இடிக்கும்-பலவகை வாத்தியங்களைக் குறுந்தடியால் இடிபோலொலிக்கும்படி யடிக்கின்ற, பல் படை-பல (இராக்கத) சேனைகள்,—ஒல்லென உரறிய-ஒல்லென்று பேரொலிசெய்கின்ற, ஊழி பேர்ச்சியின் வல்லை வந்து எழுந்தது - யுகமுடிவில் (உலகம்) நிலைபெயருங்

காலத்தில் (விடாப்பெரும்மழை பெய்து உலகை அழித்தற்கு) விரைவிற் கிளர்ந்துவந்ததாகிய, ஓர் மழைஉம் - ஒப்பற்ற மேகங்களையும், போன்ற - ஒத்திருந்தன; (எ - று.)

யுகாந்தகாலத்து மேகங்கள் மழையோடும் இடியோடும்வானத்திலெழுந்து வருவனபோல, அரக்கர்சேனைகள்படைகளைப் பொழிந்துகொண்டும் இன்னியங்களை யொலித்துக் கொண்டும் வானத்திலெழுந்து வந்தன வென்பதாம், 'மழையும்' என்ற உம்மை, இறந்ததுதழுவிய எச்சம், கீழ் 'கடல்விசும்புபோர்த்தென' என்றதனை நோக்கியதனால். பி - ம்:—[1]பகழி. [2]மீதுலாய். [3]கடிப்பிடை. [4]போர்ப்படை, போர்ப்பிடை. [5]ஒல்லொலி. [6]பேர்ச்சியுள். [7]போன்றதே, ஆனதே. (463)

47.-வந்த அரக்கரை இராமன் இலக்குவனுக்குக் காட்டுதல்.

கவருடை [1]யெயிற்றினர் கடித்த வாயினர்
[2]துவர்நிறப் பங்கியர் சுழல்கட் டீயினர்
பவர்சடை யந்தணன் பணித்த தீயவர்
இவரென விலக்குவற் கிராமன் காட்டினன்.

(இ - ள்.) 'கவர் உடை எயிற்றினர் - பிளவுபடுதலையுடைய [இரட்டையாக வெளித்தோன்றுகின்ற] கோரதந்தங்களையுடையவர்களும், கடித்த வாயினர் - (பெருங்கோபத்தால் மடித்துக்) கடித்த வாயின் உதட்டையுடையவர்களும், துவர் நிறம் பங்கியர் - செம்மை நிறத்தையுடைய மயிரையுடையவர்களும், சுழல்கண் தீயினர்-சுழலுகின்ற கண்களில் நெருப்புப் பொறியையுடையவர்களும், (ஆகிய), இவர் - இவர்கள், பவர் சடை அந்தணன் பணித்த தீயவர் - நெருங்கிய சடையையுடைய விசுவாமித்திரமுனிவன் சொன்ன கொடிய அரக்கராவர்', என-என்றுசொல்லி, இராமன் இலக்குவற்கு காட்டினன்-இராமன் இளையபெருமாளுக்குச் சுட்டிக் காண்பித்தான்;

இனி, கவருடை யெயிற்றினர்-(பிறர்தசைகளைக் கடித்துக்)கவர்தலையுடைய பற்களையுடையவ ரென்றும், துவர் நிறம் - பவழம் போன்ற நிறமென்றுங் கூறலாம். பங்கி-ஆண்மயிர். கோபத்தாற் கண்கள் மிகச்சிவந்திருக்க உருட்டிப்பார்த்தல்பற்றி, 'சுழல் கட்டீயினர்' என்றார். பி - ம்:—[1]எஃகினர். [2]துவருடைப். (464)

48.—இலக்குமணன் இவர்களை இப்பொழுதே துண்டங்காண்பே னெனல்.

கண்டவக் குமரனுங் கடைக்கண் டீயுக
விண்டனை நோக்கித்தன் வில்லை [1]நோக்கினன்
[2]அண்டர்நா யகவினிக் காண்டி [3]யீண்டவர்
துண்டம்வீழ் வனவெனத் தொழுது சொல்லினன்.

(இ - ள்.) (உடனே), கண்ட - (அவ்வரக்கர்சேனையைப்) பார்த்த, அ குமரன்உம் - அவ்விளையபெருமாளும், கடைக்கண் தீ உக-(கோபத்தாற்) கடைக்கண்களினின்றும் நெருப்புப்பொறி சிதற, விண்தனை நோக்கி - ஆகாயத்தைப் பார்த்து, தன் வில்லை நோக்கி

ஞன் - தனதுவில்லையும் பார்த்து, (ஸ்ரீராமனை நோக்கி), 'அண்டர் நாயக - தேவர்தலைவனே! இனி - இப்பொழுதே, ஈண்டு-இவ்விடத்தில், அவர் துண்டம் வீழ்வன - அவர்களது சரீர கண்டங்கள் கீழ் விழுவனவற்றை, காண்டி-பார்ப்பாயாக,' என - என்று, தொழுது சொல்லினன் - வணங்கிச் சொன்னான்; (எ - று.)

'விண்தனை நோக்கித் தன்வில்லை நோக்கினன்' என்றதனால், ஆகாயத்தில்வந்து வளைந்துநிறைந்திருக்கிற அரக்கரனைவரையும் கணப்பொழுதில் அழிக்கவல்ல வில்வித்தைவல்லமை விளங்குகின்றது. 'இனி' என்பது-இப்பொழுதென்னும்பொருளது: "இனி நினைந்திரக்கமாகின்று" என்ற இடத்துப்போல. பி - ம்:—[1]நோக்குரு. [2]அண்டநாயக. [3]ஈண்டிவர். (465)

49.—யாகசாலையில் அரக்கரின் இரத்தம் சிந்தாதபடி இராமன் சரகூடம் கட்டுதல்.

தூமவே லரக்கர்தந் [1]நிணமுஞ் சோரியும்
ஓமவெங் கனலிடை யுகுமென் [2]றுன்னியத்
தாமரைக் கண்ணனுஞ் சரங்க ளேகொடு
கோமுனி யிருக்கையோர் கூட மாக்கினன்.

(இ - ள்.) 'தூமம் - (கோபாக்கினியின் மிகுதியாற்) புகையெழுகின்ற, வேல்-வேலாயுதத்தையுடைய, அரக்கர்தம்-இராக்கதர்களது, நிணம்உம்-(உடம்பின்) மாமிசமும், சோரிஉம் - இரத்தமும், ஓமம் வெம் கனலிடை-(யாகத்தின் வெவ்விய) ஓம அக்கினியிலே, உகும்-விழுதல்கூடும்,' என்று உன்னி - என்றுநினைத்து,—அ தாமரைக் கண்ணன்உம் - செந்தாமரைமலர் போன்ற திருக்கண்களையுடைய அவ்விராமபிரானும்,—சரங்கள்ஏ கொடு - (தனது) பாணங்களைக் கொண்டே, கோ முனி இருக்கை - சிறந்த கௌசிக முனிவனது இருப்பிடத்துக்கு,ஓர் கூடம் ஆக்கினன்-ஒரு மேல் மறைவைச் செய்தருளினன்; (எ-று.)

அழித்தல்தொழிலைக் கைக்கொண்ட முக்கட்கடவுட்கும் கூற்றுவனுக்கும் சூலவேல் படையாதலாலும்,அசுரர்களை யழித்தற்கென்று அவதரித்த முருகக்கடவுட்கும் வேல்படையாதலாலும், சான்றோரெல்லாம் வேற்படையையே சிறப்பப் பெரும்பான்மை கூறுதல் பற்றி, இங்கு 'தூமவேலரக்கர்' என வேலைக்கூறி, மற்றையாயுதங்களை உபலக்ஷணத்தாற் பெறவைத்தார். அரக்கரதுகோபத்தை வேலின்மேலேற்றி, வேலுக்குத் தூமமென்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. இனி, தூமம் வேல் அரக்கர் -புகைநிறமுடையவரும் வேற்படையுடையவருமாகிய அரக்கரென்றுமாம். வேல் - அரக்கர்க்குச்சாதியடை. சோரி - (உடம்பினின்று) சொரிவது எனக்காரணப்பெயர். கோமுனி-முன் அரசனாயிருந்து இப்பொழுது முனிவனானவனுமாம். கூடம் - பந்தர் போகட்டதுபோலவும், வீட்டிற்குக் கூரை வேய்ந்தாற்போலவும் அம்புகளால் இடைவிடாமல் மேலேதொடுக்கும் பின்னற்செறிவு. பி - ம்:—[1]பிணமும். [2]துன்னியே. (466)

50.—அப்போது முனிவர்கள் அரக்கர்கட்கு அஞ்சி ஸ்ரீராமனை அபயம் வேண்டுதல்.

நஞ்சட வெழுதலு [1] நடுங்கி நாண்மதிச்
செஞ்சடைக் கடவுளை யடையுந் [2] தேவர்போல்
[3] வஞ்சனை யரக்கரை வெருவி மாதவர்
அஞ்சன வண்ண நின் னபயம்யா மென்றார்.

(இ - ள்.) நஞ்சு - (திருப்பாற்கடல் கடைந்தகாலத்து அதனினின்று தோன்றிய) ஆலகாலவிஷமானது, அட - (யாவரையுங்) கொல்லுமாறு, எழுதலும் - மேலே கிளர்ந்தவளவில், நடுங்கி - (அச்சத்தால்) நடுக்கமுற்று, நாள் மதி-புதிய[ஒற்றைக்கலையுள்ள] இளஞ்சந்திரனைத்தரித்த, செம் சடை-சிவந்த (கபர்த்தமென்னுஞ்) சடையையுடைய, கடவுளை - பரமசிவனை, அடையும் - சரணமடைந்த, தேவர் போல் - (இந்திரன்முதலிய) தேவர்கள்போல, மாதவர்-மிக்க தவமுடைய முனிவர்கள் யாவரும், வஞ்சனை அரக்கரை வெருவி-வஞ்சனையையுடைய இராட்சசர்களுக்குப்பயந்து,(ஸ்ரீராமனை அடைந்து), 'அஞ்சனம் வண்ண - மைபோலக் கரிய திருநிறமுடையவனே! யாம் நின் அபயம் - நாங்கள் உனக்கு அடைக்கலம்,' என்றார் - என்று சொன்னார்கள், (எ - று.)

நீலநிறமுள்ளவனும் கடவுளுமாகிய ஸ்ரீராமபிரானுக்கு-நீலகண்டனாகிய முக்கட்கடவுளும், பூதேவராகியபிராமணர்க்குத் தேவர்களும், கருநிறமுள்ளவரும் அகப்பட்டாரைக்கொல்லுகின்றவருமாகிய அரக்கர்க்கு-கரிய கொடியவிஷமும் உவமை. பாற்கடலிலிருந்து உண்டான கொடிய விஷமும் குளிர்ந்தசந்திரனும் திருமாலாற் சிவனுக்குக்கொடுத்தருளப்பட்டன என்பதை மேற்படலத்தில் அறிக. நின் அபயம் யாம்-பயப்படாதேயுங்கள் என்று சொல்லி உன்னாற் காக்கப்படும் பொருளாவோம் நாங்கள்; உன்னையன்றி வேறுசரணமில்லோம் என்றவாறு. தேவர் என்பதற்கு - விண்ணுலகத்து உள்ளவரென்றும், விளங்குபவ ரென்றும் அவயவப்பொருள். பி-ம்:- [1] கலங்கி. [2] தேவரின். [3] வெஞ்சினவரக்கரை. (467)

51.—முனிவர்கட்கு அபயமளித்து இராமன் அரக்கரைப் பொருதுகொல்லல்.

கவித்தனன் [1] கரதலங் [2] கலங்க னீரெனச்
செவித்தல நிறுத்தினன் சிலையின் றெய்வநாண்
புவித்தலங் குருதியின் புணரி யாக்கினன்
குவித்தன் னரக்கர்தஞ் சிரத்தின் குன்றமே.

(இ - ள்.) (அப்பொழுது ஸ்ரீராமன்),—(முனிவர்களை நோக்கி), நீர் கலங்கல் என-'நீங்கள் (அரக்கரிடத்து அச்சத்தால்) மனக்கலக்கமடையவேண்டா' என்று சொல்லி, கரதலம் கவித்தனன்-(தனது) கைகளினிடத்தை அமர்த்தி (அபயமளித்து), சிலையின் தெய்வம் நாண்-(தனது கோதண்டமென்னும்) வில்லினது தெய்வத்தன்மையையுடைய நாணியை, செவி தலம் நிறுத்தினன் - காதுகளினிடத்

திலே நிற்கச்செய்து [வில்லைவளைத்து நாணியைக் காதளவும் இழுத்து அம்பெய்து], புவி தலம் - பூமியினிட முழுவதையும், குருதியின் - (அரக்கர்களது) இரத்தத்தால், புணரி ஆக்கினன்-சமுத்திரமாகச் செய்து, அரக்கர்தம் சிரத்தின் குன்றம் குவித்தனன்-இராக்கதர்களது தலைமலைகளைக் குவித்தான்; (எ-று.)

நாணிக்குத் தெய்வத்தன்மை - ஓசையைக்கேட்டமாத்திரத்திற் பகைவர்களை அஞ்சி நடுங்கிக் கலங்கி யிறக்கச்செய்தல். குருதியின் புணரி ஆக்கினன் என்பதற்கு-இரத்தவெள்ளம் கடல்போலப்பரவிப் பெருகியதென்றும், சிரத்தின் குன்றம் குவித்தனன் என்பதற்கு - அறுபட்டதலைகள் ஒன்றன்மேலொன்றுவிழுந்து மலையாகக்குவிந்து கிடந்தன என்றும் கருத்து. நாண் செவித்தலம் நிறுத்தினன் என்ற காரணச்சொல், அம்புஎய்தான் என்ற காரியப்பொருளை யுணர்த்திற்று: உபசாரவழக்கு. பி-ம்:—[1]கைத். [2]கலங்கலீர். (468)

52.—இராமன் அஸ்திரங்களால் மாரீசனைக் கடலில்தள்ளிச் சுபாகுவைக் கொல்லுதல்.

திருமக ணாயகன் றெய்வ வாளிதான்
[1]வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரி னொருவனைக் கடலி [2]னிட்டதங்கு
ஒருவனை யந்தகன் புரத்தி னுய்த்ததே.

(இ - ள்.) திருமகள் நாயகன் - இலக்குமிக்குக்கொழுநனான ஸ்ரீராமனது, தெய்வம் வாளி-தெய்வத்தன்மையையுடைய அஸ்திரமானது, வெருவரு தாடகை பயந்த வீரர்கள் இருவரின் - (யாவரும்) அஞ்சுதற்குக் காரணமான தாடகையென்பவள்பெற்ற இரண்டுவீரர்களுள், ஒருவனை - ஒருத்தனாகிய மாரீசனை, கடலின் இட்டது - கடலிற் கொண்டுபோய் போகட்டது: ஒருவனை-மற்றொருவனை, அந்தகன் புரத்தின் உய்த்தது - யமலோகத்திற்கொண்டுபோய்ச் சேர்த்தது [கொன்றதென்றபடி]; (எ - று.)

மாரீசன்மேல் மானவாஸ்திரமும், சுபாகுவின்மேல் ஆக்கினேயாஸ்திரமும், பிறர்மேல் வாயவியாஸ்திரமும் பிரயோகிக்கபபட்டன என்று முதனூல் கூறும். திருமாலினது ஏழாவது அவதாரமான இராமபிரானுக்கு விரைவிலே நேரப்போகின்ற திருமகளினது திருவவதாரமான சீதாபிராட்டியினது கலியாணமும் இப்பொழுதுநேர்ந்த வெற்றித்திருமகளினது சேர்க்கையுந் தோன்ற இங்கே 'திருமகள் நாயகன்' என்றார். வாளிக்குத் தெய்வத்தன்மை - குறித்த இலக்குத் தவறாமையும், எய்தவனது கருத்தின்படி தொழில்செய்தலும். மாரீசன் தாடகைக்கு ஒரேபுதல்வனாதலால் பெற்றவளின்ஈமக்கடனை அவன்புரியுமாறு தர்மிஷ்டனான இராமன் அவனைஉயிரோடுவிட்டிட்டானென்றபொருள் முதனூலில் தோன்றுமென்ப. வெருவு அரு எனப் பிரித்து-(எவருக்கும்தான்) அஞ்சுதலில்லாத, தாடகை எனினும் அமையும்; இவ்வடைமொழியை வீரர்களுக்குக் கூட்டுதலுமாம். அங்கு, தான்-அசைகள். பி-ம்:—[1]பருவரைத். [2]இட்டதவ்.

53.—எஞ்சிய அரக்கர் இராமபாணங்கட்கு அஞ்சியோடுதல்.

துணர்த்தபூந் [1]தொடையலான் பகழி தூவினன்
[2]கணத்திடை விசும்பினைக் [3]கவித்துத் [4]தூர்த்தலால்
பிணத்திடை [5]நடந்திவர் பிடிப்ப [6]ரீண்டென
உணர்த்தின ரொருவர்[7]மு னொருவ ரோடினர்.

(இ - ள்.) துணர்த்த பூ தொடையலான் - பூங்கொத்துக்களாலமைந்த அழகிய மாலையையுடைய ஸ்ரீராமன், பகழி தூவினன் - (மற்றையிராக்கதர்களின்மேற் பல) பாணங்களைப் பொழிந்தான்; (அப்பாணங்களெல்லாம்), கணத்திடை - க்ஷணப்பொழுதினுள்ளே, விசும்பினை கவித்து தூர்த்தலால் - ஆகாயத்தை மறைத்து முழுதும் நிறைத்துவிட்டதனால் [சென்று அனேகரைக்கொன்றதனால்], (இறந்தவர்ஒழிந்த அரக்கர்கள்), இவர் - இவ்விராகவவீரர், ஈண்டு - இப்போது, பிணத்திடை நடந்து-பிணமலைகளின்மேலே நடந்து வந்து, பிடிப்பர் - (நம்மைஉயிரோடு)பிடித்துக் கொள்வார்கள், என -என்று, உணர்த்தினர்-(ஒருவருக்கொருவர்) தெரிவித்துக்கொண்டவர்களாய், ஒருவர்முன் ஒருவர் ஓடினர் - ஒருவர்க்குமுன் ஒருவராக (யாவரும் விரைந்து) ஓடுவாரானார்கள்; (எ - று.)

இராக்கதர் ஆகாசசஞ்சாரிகளும் மனிதர் பூலோகசஞ்சாரிகளும் ஆதலால், 'பிணத்திடைநடந்து பிடிப்பர்' என்றார். இதனால், வானத்தையெட்டுமாறு பிணம் குவியலாய்க்கிடந்தமை பெறப்படும். துணர்த்த - குறிப்புப் பெயரெச்சம்; துணர் - பூங்கொத்து; பகுதி. ஈற்றடி - முற்றுமோனை. பி - ம்:—[1]தெரியலான், தொடையினன். [2]குணத்தினர். [3]கதுவித், கடித்துத், குவித்துத். [4]தூர்த்தது. [5]வந்திலர். [6]வந்தென. [7]முன்பு. (470)

54.—படுகளச்சிறப்பு.

ஓடின வரக்கரை யுருமின் வெங்கணை
கூடின குறைத்தலை [1]மிறைத்துக் [2]கூத்துநின்று
ஆடின வலகையு மையன் கீர்த்தியைப்
பாடின பரந்தன பறவைப் பந்தரே.

(இ - ள்.) ஓடின அரக்கரை - (அங்ஙனம்) ஓடிப்போகத்தொடங்கின இராக்கதரை, உருமின் வெம் கணை - இடிபோற்பயங்கரமான கொடிய இராமபாணங்கள், கூடின-விடாது பின்தொடர்ந்துசேர்ந்தன; (அதனால்), குறை தலை - (அவ்வரக்கர்களது) தலையற்ற உடம்புகள் [கபந்தங்கள்], மிறைத்து நின்று-துடித்துநின்று, கூத்து ஆடின-நர்த்தனஞ் செய்தன; அலகைஉம்-(அங்குபிணந்தின்னவந்த) பேய்களும், (திருப்தியுண்டாக உணவைக்கொடுத்தருளின உபகாரத்தைநோக்கி), ஐயன் கீர்த்தியை - ஸ்ரீராமனது புகழை, பாடின-; பறவை பந்தர்- பிணந்தின்னவந்தகழுகுமுதலிய) பக்ஷிகளாலாகிய பந்தல்கள், பரந்தன - பரவின; (எ - று.)

கோபத்தோடு விரைந்து போர்செய்துநின்ற வீரர்களது உடம்புகள் தலையறுபட்டபின்பு பதைபதைத்துக் கைகால்கள் துடிப்பனவற்றைக் கூத்தாடி நின்றனவாகக் குறித்தார். சுத்தவீரனாகிய ஸ்ரீராமபிரான் புறங்கொடுத்துஓடின அரக்கரைப் பின்புகொன்றது குற்றமாகுமன்றோ எனின்,—புறங்கொடுப்பதற்குமுன்னமே இராமனெய்த அம்புகள் ஓடத்தலைப்பட்டவர்களினும் விரைந்து சென்று அவர்களை வதைத்தனவே யன்றி, அவர்களோடினபின்பு அவர்களின்மீது இராகவபிரான் அம்புதொடுத்தானில்லை யென்க. குறைத்தலை - குறைத்தலையுடைய தலையையுடையது: வேற்றுமைத்தொகையன்மொழி. பறவைப்பந்தர்பரந்தன-பறவைகள் பந்தலிட்டாற்போல மேலே இடைவிடாமற் பரவின என்றபடி.மிறைத்து -விறைத்துஎனினுமாம். பி - ம்:—[1]மறைத்து, நிறைத்து,குவித்து. [2]கூற்றினின்று. (471)

55.—வானவர் பூமழைபொழிந்து அந்தரதுந்துமி முழக்கி வாழ்த்துதல்.

பந்தரைக் [1]கிழித்தது பரந்த பூமழை
அந்தர துந்துமி [2]யலையி னார்த்தன
[3]இந்திரன் முதலிய வமர ரீண்டினர்
சுந்தர வில்லியைத் தொழுது வாழ்த்தினர்.

(இ - ள்.) பரந்த பூ மழை - (தேவர்களினால் இராமலக்குமணர் மீது சொரியப்பெற்றுப்) பரவிய மலர்மழை, பந்தரை கிழித்தது- (பறவைப்)பந்தலை (இடையிடையே) கிழித்துக்கொண்டு கீழ்வீழ்ந்தது; அந்தரம் துந்துமி - ஆகாயத்திலே (தேவர்களினால் அடிக்கப்படுகின்ற) பேரிகைகள், அலையின் ஆர்த்தன - கடல் முழங்குவது போல முழங்கின; (அப்பொழுது), இந்திரன்முதலிய அமரர் - இந்திராதிதேவர்கள், ஈண்டினர் - (வானத்தில்) திரண்டு வந்து, - சுந்தரம் வில்லியை - அழகிய கோதண்டத்தையுடைய ஸ்ரீராமனை, தொழுது -வணங்கி, வாழ்த்தினர் - மங்கலவாழ்த்துக்கூறினர்; (எ - று.)

'பந்தரைக் கிழித்தது பரந்தபூமழை' என்றது, மலர்மாரியினதுமிகுதி தோன்றுதற்கு. வில்லுக்குச் சுந்தரத்தன்மையாவது - இராமனது திருக்கையின் சேர்த்தியாலுண்டான அழகு; அன்றியும், எம்பெருமானுக்கு வில் முதலியன எல்லாம் சத்துருசங்கார காலத்து ஆயுதகோடியிலேயாயிருந்து அவர்களை அஞ்சுவித்துப் பிற்காலத்து ஆபரணகோடியிலேயாய் அழகுசெய்து நிற்குமென்ற கருத்தும் விளங்கும். தேவாதிதேவனாகிய ஸ்ரீராமபிரானை அவனிலுங்கீழ்ப்பட்ட தேவர்கள் வாழ்த்துவதுஎன்னெனின்,—மிக்க இளமைப் பருவத்திலேயே துஷ்டராட்சசர்கள் பலரை ஒருங்கேநாசஞ்செய்து தங்களுக்கு உபகரித்த இராமமூர்த்தியினது திருமேனி கண்ணெச்சில்படாமே நெடுங்காலம் நிலைத்துநிற்க வேண்டுமென்ற பெருவிருப்புத் தலையெடுத்ததனாலென்க. ஆழ்வார்முதலியோர் மங்களாசாஸனஞ்செய்தலையும் ஸ்ரீவசனபூஷணத்திற் பொங்கும் பரிவி

ஞற் செய்வதாற் பொருந்துமென்று தடைவிடைகளால் நிறுவிய துங் காண்க. பி - ம்:—[1]கிழித்தன. [2]முழங்கி, முகிலின். [3]இந்திரர்.()

வேறு.

56.—முனிவன் வேள்வியை முற்றுதல்.

புனித மாதவ [1]ராசியின் பூமழை பொழிந்தார்
அனைய [2]கானத்து மரங்களு மலர்மழை [3]சொரிந்த
முனியு [4]மவ்வழி [5]வேள்வியை முறைமையின் முற்றி
இனிய சிந்தைய னிராமனுக் [6]கினையன [7]விசைத்தான்.

(இ - ள்.) புனிதர் மாதவர் - பரிசுத்தரான மிக்கதவமுடைய முனிவர்களும், ஆசியின் பூமழை பொழிந்தார் - வாழ்த்துதலோடு மலர்மாரியைச் சொரிந்தார்கள்; (அன்றியும்), அனைய கானத்து - அந்தக்காட்டிலுள்ள, மரங்களும்-, அலர் மழை சொரிந்த - பூமாரியைப் பொழிந்தன; முனிஉம் - விசுவாமித்திரனும், அ வழி - அப்பொழுது, வேள்வியை - யாகத்தை, முறைமையின் - விதிப்படியே, முற்றி - முடித்துவிட்டு, (உடனே), இனிய சிந்தையன் - இனிமையான மனத்தையுடையவனாய், இராமனுக்கு - இராமசந்திரனுக்கு, இனையன - இத்தன்மையனவான உபசார வார்த்தைகளை, இசைத்தான்-சொல்வானானான்; (எ-று.)—அதனை மேற்கவியிற் காண்க.

ஆசியின் பூமழை பொழிந்தார் என்பதற்கு-ஆசீர்வாதமாகிய மலர்மாரிகளைச் சொரிந்தா ரென்றுமாம். 'மரங்களும்' என்ற இழிவு சிறப்பும்மை - சித்தாச்சிரமத்திலுள்ள ஓரறிவுயிராகிய விருட்சங்களுக்கும் அக்காலத்தில் எம்பெருமான்பக்கலுண்டான அன்பின் மிகுதியை விளக்கிற்று. மலர்மழை எனப் பிரித்தல் மோனைத்தொடைக்குப் பொருந்தாது. இரா மன் என்னுஞ் சொல்லில்-இராத்திரிக்கு அரசன் [அதாவது நிசாபதியாகிய சந்திரன்] என்றும் ஒரு பொருள் தொனித்தலால், இரட்டுறமொழிதலாய்ச் சிலேடையுருவகமாக, இராமன் - இராமசந்திரன் என்று உரைக்கப்பட்டது; குளிர்ந்ததன்மையாற் சந்திரன்போன்ற இராமனென்க. இனி, இரா மன் என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத் தொடராக்கொண்டால், (உலகத்தில் தன்னை யொப்பார் எவரும்) இராத அரசனென்ற அருத்தந் தோன்றும். இங்ஙன் பலபடிபொருள் கூறுவது, கம்பர் கவியின் சொற்களினாற்றலைத்தெரிவிக்கும். கவிக்குச்சம்மதமாகுமா என்பது, ஆராய்தற்குஉரியது. பி - ம்:—[1]ஆசியம். [2]காலத்து. [3]பொழிந்த. [4]அவ்வயின். [5]வேள்வியின் முறைமையை, முறைமையின் வேள்வியை, வேள்வியைமுறைநெறி. [6]இன்னன. [7]உரைத்தான். (473)

57.—விசுவாமித்திரன் இராமனிடங் கூறிய முகமன்.

பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பொருளென [1]வுணர்கிலென் புவனம்
ஆக்கி மற்றவை யகிலமு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனுங் கருத்தே.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) புவனம் ஆக்கி - எல்லாவுலகங்களையும் (ஆதிகாலத்திற் பிரமரூபியாய்ப்) படைத்தருளி, மற்று-பின்பு, [பிரளயகாலத்தில்], அவை அகிலம்உம் - அவ்வுலகங்கள் எல்லாவற்றையும், அணி வயிறு அடக்கி - அழகிய திருவுதரத்திலே அடங்கச்செய்து வைத்து, காக்கும்-காத்தருளுகிற, நீ—, ஒரு வேள்வி காத்தனை - (எனது சிறிய) யாகமொன்றைக் காத்தருளினாய், எனும் கருத்து-என்கிற எண்ணத்தினால், பாக்கியம் எனக்கு உளது என நினைவுறும் பான்மை பேர்க்கி - (பொருளல்லாத என்னை நீ ஒரு பொருளாக மதித்துவந்து உன்னால் வேள்வி காக்கப்படுவதற்கு ஏதுவானதொரு) நல்வினை எனக்கு இருந்ததென்று (யான்) எண்ணுவேனேயன்றி அத்தன்மையை ஒழித்து, நிற்கு இது பொருள்என உணர்கிலென் - (சர்வரக்ஷகனான) உனக்கு இந்த யாகரக்ஷணம் ஒரு பெருங்காரியமென்று அறிகிறேனில்லை; (எ - று.)

உலகங்களையெல்லாம் படைத்தளித்தழிக்கும் ஆற்றலுள்ள உனக்கு இந்தயாகத்தைக் காத்தல் அரியதொருதொழிலாக நினைக்கிலேன்; பின்னை எவ்வாறு நினைப்பேனெனின், எனது முற்பிறவியின் நல்வினைச்சிறப்பால் நீ இங்ஙனம்வந்து அருள் செய்தாயென்றே கருதுவேன் என்பது கருத்து. இதனால், எம்பெருமானது சர்வசக்தியும், பரத்துவமும், தன்பக்கல்பக்தியையுடைய அடியார்க்கு மிக எளியனாகிற சௌலப்பியமும், முற்பிறப்பிற்செய்த பெரிய பாக்கியமிருந்தாலன்றிப் பரமாத்துமாவினது பேரருளைப்பெறுதல் முடியாதென்பதும், அப்படிப்பட்ட பரமபாக்கியம் தனக்குப்பூர்த்தியாக அமைந்துளதென்பதும் இவை முதலிய விசேஷார்த்தங்கள் விசுவாமித்திரனால் வெளியிடப்பட்டன. இனி, செய்யுளுள்ளவாறே பொருள்கூறி,கருத்தே என்ற இடத்து முடிக்குஞ்சொல் வருவித்து, நீ வேள்வியை அருமைப்பட்டுக்காத்தாயென்ற எண்ணமும் கொள்ளத்தக்கதோ?என்க. ஒருசெயலை அதிசயித்துக் கூறுமிடத்து இவ்வாறு முடிக்குஞ்சொல் இன்றி உரைப்பது, கவிசம்பிரதாயம். ஏ - வினா.

"ஆக்குமா றயனா முதலாக்கிய வுலகங், காக்குமா று செங்கண்ணிறை கருணையங் கடலாம், வீக்குமா றரனும்" என்பது சாஸ்திர சித்தாந்த மாதலால், 'புவனமாக்கி மற்றவையகிலமுமணிவயிற்றடக்கிக்காக்குநீ' என்றார். பிரமன் முதலான சகலதேவர்களு முட்பட யாவும் அழிந்துபோகின்ற யுகாந்தகாலத்தில் ஏகார்ணவமான மகாப்பிரளயசமுத்திரத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன்வயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறுகுழந்தை வடிவமாய் ஆதிசேஷாமிசமான ஆலிலையின்மீது பள்ளிகொண்டு தனது மாயாசொரூபமான யோகநித்திரையைக் கைக்கொண்டு திருக்கண்வளர்ந்தருளுகின்றன னென்பது, புராணவரலாறு. தன்னுட் சென்ற பொருள்களைச் சீரணிக்கப் பண்ணுதல் வயிற்றுக்கு இயற்கையா யிருக்கவும் அங்ஙனஞ்செய்யாமல் எல்லாவுலகங்களுக்கும் பிரளய ஆபத்தில் ஒதுங்குதற்கு இடங்கொடுத்து ஒரு குறை

யும் நேரர்மற் பாதுகாத்து அவற்றை மீண்டும் வெளிநாடுகாண உமிழ்ந்தருளின விசித்திரந்தோன்ற, 'அணிவயிறு' என்றார். மணி வயிறு என்றும் பிரிக்கலாம்; பொருள் இதுவே: நீலநிறமுள்ள திரு வயிறென்றுங் கொள்ளலாம்; "உய்யவுலகு படைத்துண்டமணி வயிறு" என்றார் பெரியாரும். பாக்கியம்மெனக்கு-விரித்தல். பி-ம்:- [1] நினைகிலென். (474)

58.—'இன்று எனக்குப்பணியாது?' என்று இராமன் முனிவனை வினுதல்.

என்று கூறிய பின்னரவ் வெழின்மலர்க் கானத்து
அன்று தா[1]னுறைந் தருந்தவ முனிவரோ[2]டிருந்த
குன்று போற்குணத் தானெதிர்க் [3]கோசலை குரிசில்
இன்றி யான்செயும் பணியென்கொல் பணியென[4]விசைத்தான்.

(இ - ள்.) என்று கூறிய பின்னர் - இவ்வாறு சொன்ன பின்பு, எழில் மலர் அ கானத்து - எழுச்சியையுடைய மலர்களை யுடைய அச்சோலையில்தானே, அன்று - அன்றைத்தினத்தில், அரு தவம் முனிவரோடு - (பிறரால் செய்தற்கு) அருமையான தவத்தைச் செய்துள்ள பல இருடிகளுடனே, தான்—, உறைந்து இருந்த - வசித்திருந்த, குன்றுபோல் குணத்தான் எதிர்-மலைகள் போன்ற நற்குணங்களையுடைய விசுவாமித்திரனது முன்னிலையில், கோசலை குரிசில் - கௌசல்யாதேவியினது குமாரனாகிய ஸ்ரீராம பிரான், (மறுநாட்காலையிலே போய்த் தொழுதுநின்று), 'இன்று யான் செயும் பணி என்கொல் - இன்றைக்கு அடியேன் செய்ய வேண்டுங் கட்டளை யாது? பணி - நியமித்தருளுவாயாக', என - என்று, இசைத்தான்-(அம்முனிவனைநோக்கி) வினவியருளினன்;

பணி என - கூறுவாய் என்று (இராமன்) சொல்ல, இசைத் தான்-(கௌசிகமுனி) கூறுவானாயினன் என்றுமாம். 'எழிலாவது - வளர்ந்து அமைந்த பருவத்தும் இது வளர்ந்துமாறியதன்றி இன் னும்வளரு மென்பதுபோன்று காட்டுதல்' என்றார், ஆசிரியர் நச்சி னார்க்கினியர்: இதனால், எழில் என்பதற்கு - வளர்ச்சியென்று பொருளென்றும், இச்சொல் தொழிற்பெயரென்றும் அறிக:இதற்கு -அழகு என்னும் பொருளும் உண்டு. குணங்கள் - துறவு, மெய் யுணர்வு, அவாவின்மை முதலியன. சலியாமையும் பெருமையும் பற்றி, குணங்களுக்குக் குன்று உவமை கூறப்பட்டது; "குணமென் னுங்குன்று" என்றார், திருவள்ளுவனாரும், கோசலை குரிசிலென் கிறது - தசரதசக்கரவர்த்தி ஸ்ரீராமனுக்குப் பட்டங்கட்ட முயன்று தன்னெண்ணங் கைகூடாமல் இடையே மரித்தானாகை, இவளே புதல்வனாற் பெறக்கூடிய இன்பத்தை முழுதும் பெற்றனளாதலா லும், பட்டமகிஷியின் புதல்வ னென்பதால் இவனே அரசுக்குஉரிய னெனப் பெறப்படுமாதலாலு மென்பர். பி - ம்:—[1]உவந்து. [2]இருந் தான், இருந்து. [3]கோசலக்குரிசில். [4]உரைத்தான். (475)

59.—முனிவன் சனகராசனதுவேள்வியைக் காணப் போவோமென்ன, மூவரும் மிதிலைக்குப் புறப்படுதல்.

அரிய யான்[1] சொலி [2]னையநிற் கரியதொன் றில்லை
பெரிய காரிய [3]முளவவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநா மெழுகென்று [4]போனார்.

(இ - ள்.) 'ஐய-தலைவனே! யான் அரிய சொலின் - நான் (செய் தற்கு) அருமையுடையனவென்று சிலகாரியங்களைச் சொன்னால், நிற்கு அரியது ஒன்று இல்லை-உனக்கு(ச் செய்ய) அருமையானது ஒருதொழிலுமில்லை; பெரிய காரியம் உள - (செய்யத்தக்க) பெருந் தொழில்கள் (சில) உள்ளன; அவை முடிப்பது பின்னர் - அவற்றை நிறைவேற்றுவது பின்பு (ஆகக்கடவது); (இப்பொழுது), விரியும்- பரவிப்பாய்கின்ற, வார் - நீண்ட [மிகுந்த], புனல் - நீர்வளமுள்ள, மருதம்-மருதநிலத்தால் [கழனிகளால்], சூழ்-சூழப்பட்ட, மிதிலையர்- மிதிலாநகரத்திலுள்ள ஜனங்களுக்கு, கோமான் - அரசனாகிய ஜனக மகாராஜன் புரியும்-செய்கின்ற, வேள்விஉம் - யாகத்தையும், நாம் காண்டும்-நாம்போய்ப்பார்ப்போம், எழுக-புறப்படுக,' என்று-என்று (விசுவாமித்திரன் சொல்ல), (உடனே), போனார்-(ராமலக்ஷ்மணர்கள் விசுவாமித்திரனுடனே) புறப்பட்டுச்சென்றார்; (எ - று.)

பெரியகாரியம் என்றது-ராவணசங்காரமும் ராஜ்யபரிபாலனமும் முதலியவற்றை. நாடும், நாட்டைச்சார்ந்த இடமும் - மருதநிலம். மிதிலை என்றதற்கு-மிதி என்பவனால் ஏற்படுத்தப்பட்டதென்பது பொருள்; விதேகனானநிமிமகாராஜனது தொடையில் அரணியிட்டுக் கடையநேர்ந்ததனால் உண்டானமைபற்றி, மிதி என்று ஜனககுலத் தலைவனுக்குப் பெயர். நிலவளம், நீர்வளம் முதலிய பலவளங்களு முடைமை விளங்குதற்கு, 'விரியும்வார்புனன் மருதஞ் சூழ்'என்றும் விசேடணம் கொடுத்தார். 'என்று' என்றபின் 'சொல்ல' என வரு விக்க. இனி, 'என்று' - என்ன என்பதன் திரிபுமாம். வேள்வியும், உம்மை-இறந்ததுதழுவிய எச்சம். பி - ம்:—[1]சொல. [2]ஐயனுக்கு. [3]உளத்து. [4]போனான். (476)

வேள்விப்படலம் முற்றிற்று.

---

9 - ஆவது அகலிகைப்படலம்.

கௌதமமுனிவனது மனைவியும் ஜனகமகாராஜாவுக்குப் புரோ கிதனான சதானந்தமுனிவனது தாயுமான அகலியை தேவேந்திர னால் ஏமாற்றப்பட்டு அவனைக்கூடிப் பிறகு கௌதம முனிவன் சாப த்தினால் கல்லுருவமாகி ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவாமித்திரனோடு மிதி லைக்குச் செல்லும்போது ஸ்ரீராமனது திருவடித்துகள் பட்ட மாத் திரத்தில் சாபம்நீங்கி இயற்கையுருவமடைந்த வரலாற்றைக் கூறும் பகுதி. அகலிகை - அஹல்யா என்னும் வடமொழித் திரிபு: இச் சொல்லுக்கு அழகில்லாமை யில்லாதவ ளென்று பொருள்: மிக்க அழகுடையவ ளென்று கருத்து; ஹல்யம்-அழகின்மை. இந்தப்பட

லத்திற் காணப்படுகின்ற செய்யுள்கள் 86-இல் முதல் 31 - செய்யுள்கள் 'துருவாசப்படலம்' என்றும், அதன்பின் 31 - செய்யுள்கள் '*கங்கைவரலாற்றுப்படலம்' என்றும், அதன்பின்னுள்ள 24 - செய்யுள்கள் 'அகலிகைப்படலம்' என்றும், சில ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றன.

1.—முனிவன்முதலிய மூவரும் சோணநதியை யடைதல்.

அலம்பு மாமணி யாரத்தோ டகி[1]லளை புளினம்
நலம்பெய் பூண்முலை நாகிள வஞ்சியா [2]மருங்குல்
புலம்பு மேகலைப் புதுமலர்ப் புனையறற் கூந்தல்
சிலம்பு [3]சூழுங்காற் [4]சோணையாந் தெரிவையைச் சேர்ந்தார்.

(இ - ள்.) அலம்பும் மா மணி ஆரத்தோடு - கழுவப்பெற்ற பெரிய [சிறந்த] இரத்தினங்களும் சந்தனமும், அகில் - அகிலும், அளை-(தன்னிடம்) பொருந்தப்பெற்ற, புளினம்-மணற்குன்றுகளாகிய, நலம் பெய்பூண் முலை-இன்பத்தைத்தருகின்ற ஆபரணங்களை யணிந்த தனங்களையும், நாகு இள வஞ்சி ஆம் மருங்குல் - மிகவும் இளமையான நீர்வஞ்சிக்கொடியாகிய இடையையும், புது மலர் புலம்பும் மேகலை - புதிய அன்றுமலர்ந்த மலர்களின் வரிசையாகிய ஒலிக்கின்ற மேகலையென்னும் இடையணியையும், புனை அறல் கூந்தல் - அழகிய கருமணலாகிய கூந்தலையும், சிலம்பு சூழும் கால் - மலையைச் சுற்றிலுஞ் செல்லுகிற வாய்க்கால்களாகிய சிலம்பென்னும் அணியைச் சுற்றிலுமணிந்த பாதங்களையுமுடைய, சோணை ஆம் தெரிவையை-சோணையென்னும் ஆறாகியபெண்ணை, சேர்ந்தார் - (மூவரும் போய்) அடைந்தார்கள்; (எ - று.)

உருவகவணி; நதியினிடத்துப் பெண்ணினது தன்மை ஏற்றிக் கூறப்பட்டது. 'சிலம்புசூழுங்கால்' என்றவிடத்து, உருவகத்துக்குச் சிலேடையணி அங்கமாக நின்றது. புளினத்துக்கு முத்து முதலிய இரத்தினங்களும் சந்தனக் கட்டையும் அகிற்கட்டையும் மலையினின்று ஆற்றினாற் கொணர்ந்து கொழிக்கப்பட்டவை. நதியென்பது பெண்பாற்சொல் ஆதலால், இங்ஙனங் கூறினர். சோணை - இது, ஓர் நதம்: கிழக்கிலிருந்து மேற்கே செல்வது. இது, மகததேசத்தின்வழியாய்ப் பெருகிவருவது பற்றி மாகதியென்னும் பெயரதென்பதும், குசனது புதல்வர் நால்வரில் வசுவென்பவனது கிரிவிரசநகரம் இந்நதியின் கரையிலுள்ளதென்பதும் முதனூலால் விளங்கும். அலம்பும் - (யாற்றுநீரினால்) அசையப்பெற்ற என்றுமாம். மணி-இங்கே, நவரத்தினப்பொதுப் பெயர். விலையுயர்ந்த பெரிய இரத்தினஹாரங்களையுஞ் சந்தனக் குழம்பையும் அகில்தேய்வையையும் அணிவது கொங்கையின் இயல்பாதலால், அதற்கு ஏற்ப, உபமேயமாகிய மணல்மலைக்கு 'மாமணியாரத்தோடகிலளை' என்று அடைமொழி கொடுத்தார். பருமை மோடாந்தன்மைகள்பற்றி, மணற்குன்று தனத்துக்குஉவமையாம். ஒல்கி ஒசிந்து தளருந்தன்மையினால் வஞ்சிக்கொடியோடு

*கங்கையாற்றுப்படலம் என்று பிரதிபேதம்.

இடை உவமிக்கப்படும். மேகலை-மாதரிடையணியுள் எண்கோவை யணி. மேகலைக்கு'புலம்பு' என்றவிசேஷணத்தைக்கொடுத்ததனால், புதுமலர்கள் தம்மேல்மொய்க்கின்றவண்டுகளினால் ஆரவாரத்தைப் பெறுவன வென்க. கருமையாலும், அரியுடைமையாலும் கூந்தலுக்கு அறல் உவமை. நதிக்கு அடைமொழியாம் பொழுது, 'சிலம்புசூழுங்கால்' என்பதற்கு - ஒலிநிறைந்த கால்வாய்களென்றும்பொருள்: பெண்ணுக்கு அடைமொழியாம்பொழுது, சிலம்பு-நூபுரமென்னுங் காலணி. பி - ம்:—[1] அணி, புனை. [2] மருங்கிற். [3] அலம்புகாற. [4] சோணமாம். (477)

2.—சூரியாத்தமன வருணனை.

[1] நதிக்கு வந்தவ ரெய்தலு மருணன்ற னயனக்
கதிக்கு முந்துறு கலினமான் றேரொடுங் கதிரோன்
உதிக்குங் காலையிற் றண்மைசெய் வான்றன துருவில்
கொதிக்கும்[2] வெம்மையை யாற்றுவான் போற்கடல் குளித்தான்.

(இ - ள்.) அவர் - (விசுவாமித்திரன் இராமன் லக்ஷ்மணன் என்கிற) அந்தமூவரும், நதிக்கு-சோணையாற்றுக்கு, வந்து எய்தலும்-வந்து சேர்ந்தவளவில்,—கதிரோன் - ஆயிரங்கிரணங்களையுடைய சூரியன், உதிக்கும் காலையில் - (மறுநாள் தான்) உதயமாகும்பொழுது, தண்மை செய்வான்-(இம்மூவர்க்கும்) குளிர்ச்சியைச் செய்யும்பொருட்டு, தனது உருவில் கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான் போல் - தனதுவடிவத்திலே (இயற்கையாக எப்பொழுதுங்) கொதிக்கின்ற வெப்பத்தை (இப்பொழுது) தணியச்செய்பவன்போல, அருணன் தன் நயனம் கதிக்குஉம்-(தன்சாரதியாகிய) அருணனுடைய கண்கள் விரைந்துசெல்லுதலினும், முந்துறு - முற்பட்டுச்செல்லுகின்ற, கலினம் மான் தேரொடுஉம்-கடிவாளத்தைக்கொண்ட குதிரைகளைப் பூட்டிய (தனது) இரதத்துடனே, கடல் குளித்தான்-(மேற்குச்) சமுத்திரத்தில் மூழ்கினான்;

மேற்கிற் சூரியன் அஸ்தமித்தலை அவன் தன்வெம்மையை ஆற்றும்பொருட்டு மேல்கடலில் முழுகியதாக வருணித்தார்; பயன் தற்குறிப்பேற்றவணி. சூரியன்முதலிய கிரகநட்சத்திர தாரகைகள் மேற்கே அஸ்தமித்துக் கிழக்கே உதிப்பனவற்றை மேல்கடலில் மூழ்கி மறைந்து கீழ்க்கடலில் மீண்டும் எழுவனவாகக் கூறுதல் கவிமரபு: கண்களுக்குப் புலனாகிறதோற்றமாத்திரத்தைக்கொண்டு இங்ஙன்கூறுவர். 'அருணன் தன்நயனக்கதிக்குமுந்துறு கலினமான்' என்றது - தேர்ப்பாகனது கண்களின் பார்வை எவ்வளவு தூரஞ்செல்லுமோ அதைவிட அதிகதூரம் அவன்கண் செல்லுதற்குமுன்னமே செல்லுங் குதிரை யென்க; இதனால் சூரியன் தேர்க்குதிரையினது மிக்கவிரைவு உணர்த்தப்பட்டது. அருணன்-சூரியனுடையதேர்ப்பாகனது பெயரென்ப. பி-ம்:—[1] நதிக்குள். [2] வெம்மையாய். (478)

3.—அன்றிரவு மூவரும் ஒருசோலையில் தங்குதல்.

கறங்கு தண்புனற் கடிநெடுந் தாளுடைக் கமலத்து
அறங்கொ [1]ளுண்மலர்க் [2]கோயில்க ளிதழ்க்கத வடைப்பப்

பிறங்கு தாமரை வனம்விட்டுப் [3]பெடையொடுங் களிவண்டு
உறங்கு கின்றதோர் நறுமலர்ச் சோலைபுக் குறைந்தார்.

(இ - ள்.) கறங்கு தண் புனல் - ஒலிக்கின்ற குளிர்ந்த நீர் நிலைகளிலேயுள்ள, கடி - வாசனையையும், நெடு தாள் - நீண்டநாளத்தையும், உடை - உடைய, நாள் கமலத்து மலர் - அன்று மலர்ந்த தாமரையின்மலர்களாகிய, அறம் கொள் கோயில்கள் - (விருந்தாக வருகிற வண்டுகளுக்குத் தாகந்தீரத் தேனையளித்தலாகிய) தருமத்தைக்கொண்ட சிறந்தமாளிகைகள், இதழ் கதவு அடைப்ப-(தமது) இதழ்களாகிய வாயிற்கதவுகளை மூடி விட்டதனால், (அங்குச் சென்று மதுவுண்டு களித்துஉறங்க இயலாமல்), பிறங்கு தாமரை வனம் விட்டு - விளங்குகின்ற அத்தாமரைக்காட்டை நீங்கி, களி வண்டு-களிப்பையுடைய ஆண்வண்டுகள், பெடையொடும் உறங்குகின்றது - பெண்வண்டுகளுடனே (வந்து) தங்குதற்குஇடமான, ஓர் நறு மலர் சோலை - வாசனைவீசுகின்ற மலர்களையுடைய ஒரு சோலையில், புக்கு-பிரவேசித்து, உறைந்தார் - (அன்றிரவு மூவரும்) தங்கினார்கள்; (எ - று.)

குவிந்த தாமரைமலர்களில் தேனைப்பெறுமையால் வண்டினங்கள் அவற்றைவிட்டுச் சோலைகளிலுள்ள பலவகை மலர்களின் தேனை உண்டு களித்தன. கொடையாளிகள் ஒருகாலத்து இரக்க வருவார்க்கு இடங்கொடாமல் இற்கதவை அடைத்து விட்டால் வருபவர் மீண்டு வேற்றிடஞ்சென்று தாம் வேண்டியதுபெற்று மகிழ்தலாகிய உலகியற்கையை உட்கொண்டு, இங்ஙனம் வருணித்தார். தாமரைமலராகிய தருமசாலை இரவு வரவே கதவடைக்கப்பட்ட தென்பது தோன்றுமாறும் கூறினாரென்னலாம். பெடையொடும் களிவண்டு என எடுத்து - பெடையோடுகூடிக் களிக்கின்ற வண்டு எனவுமாம். வநம் என்னும் வடசொல்லுக்கு - நீரென்னும் பொருளும் உண்டு ஆதலால், தாமரைவனம் - தாமரைப்பொய்கை யாகவுமாம்; வனம் - பொய்கைக்கு ஆகுபெயர். தாமரை, பகலில் மலர்ந்து இரவிற்குவியும். பி - ம்:—[1]நாண்மலர். [2]கோயிலின். [3]பெடையொடு.

முதனூலில், முனிவர் முதலியோர் சோணநதியைக் கடந்தபின் பலவனங்களையும் பார்த்தவண்ணம் கங்கையையடைந்தனரென்றும், அந்தக்கங்கைவரலாற்றைக் கேட்டபின் அதன்வடகரையைக் கடந்து அங்குள்ள விசாலையென்னும் பட்டணத்தைக் கண்டனரென்றும், அதன் வரலாறு கூறத்தொடங்குகையில் பின்வருவன விசுவாமித்திரனாற் கூறப்பட்டன என்றும் உள்ளன. (479)

4.—இராமன் அந்தச்சோலையை வினவ,முனிவன் கூறுதல்.

இனைய சோலைமற் றியாதென விராகவன் வினவ
வினையெ லாமற நோற்றவன் விளம்புவான் மேனாள்
தனைய ரானவர்க் கிரங்கியே காசிபன் றனது
மனையு ளாடவம் [1]புரிந்தன ளிவணென வலித்தான்.

(இ - ள்.) (அப்பொழுது), 'இனைய சோலை - இந்தப்பூஞ் சோலை, யாது - எத்தன்மையது?', என - என்று, இராகவன் - ரகுகுலதிலகனாகிய ஸ்ரீராமபிரான், வினவ - கேட்க,—வினை எலாம் அற நோற்றவன் - கருமங்களெல்லாம் ஒழியும்படி தவஞ்செய்தவனாகிய விசுவாமித்திரன், விளம்புவான் - விடைகூறுபவனாய்,—'மேல் நாள்-முன்னொருகாலத்தில், காசிபன் தனது மனையுளாள் - காசியப முனிவனது மனைவியாகிய திதிஎன்பவள், தனயர் ஆனவர்க்கு இரங்கி - (தனது) புத்திரர்களாகிய அசுரர்களுக்காகச் சோகித்து, இவண் - இவ்விடத்தில், தவம்புரிந்தனள் - தவஞ்செய்தாள்,' என - என்று, வலித்தான்-தெளிவாகச்சொன்னான்; (எ-று.)

காசிபன் மனைவியருள் திதியென்பவள் தனது புத்திரர்களான அசுரர்கள் தேவர்களால் அடியுண்டுமாண்டுபோனதனால், மிகத்துயரமடைந்து இந்திரனைக்கொல்லும் வலிமையுடன் மூவுலகையும் ஆளவல்ல ஒருபுத்திரனைப் பெறுமாறு தன் கணவனிடம் அநுமதிபெற்றுப் பலநாள் தவம்புரிந்த இடம் இது என்று முனிவன் கூறினனென்க. இரகுவென்பவன் ஒருபெரு வேள்விசெய்து பொருளனைத்தையும் வழங்கிவிட்டு வெறுங்கையனாயிருக்கையில், கௌத்ஸனென்னும் பிராமணன் தன்குருவான வரதந்து முனிவனுக்குக் குருதட்சிணைகொடுத்தற்பொருட்டு வந்து யாசிக்க, குபேரனிடத்திலிருந்து வேண்டியபொருளை அழைப்பித்து அந்தக் கௌத்ஸமுனிவனுக்குக்கொடுத்து இவ்வாறு மிகுந்தவீரமுங் கொடையுமுடையவனானதால், இராமபிரானை அவன்வமிசத்துப் பெயரால் கூறினர். மற்று, ஏ-அசைகள். பி-ம்:—[1]புரிந்திடம். (480)

5 —இதுமுதல் இருபத்தைந்துகவிகளால் விசுவாமித்திரன் சோலையின் வரலாற்றை விரித்துக் கூறுகின்றான்.

ஒருவித்தியாதரமகள் திருமகளிடத்து மலர்மாலை பெறுதல்.

அண்ட கோளகைக் கப்புறத் தென்னையா ளுடைய
கொண்டல் நீள்பதத் தெய்தியோர் விஞ்சையர் கோதை
புண்ட ரீகமென் [1]பதத்தியைப் புகழ்ந்தனள் புகழ
வண்ட ருமது மாலைகைக் கொடுத்தனள் மகிழ்ந்து.

(இ - ள்.) அண்டகோளகைக்கு அ புறத்து - இவ்வுலக வுருண்டைக்கு அப்பாலுள்ள, என்னை ஆள்உடைய கொண்டல் நீள் பதத்து - என்னை அடிமையாகவுடைய காளமேகம்போன்ற திருமாலினது நீண்ட ஸ்தானத்திலே, ஓர் விஞ்சையர் கோதை - ஒருவித்தியாதரப்பெண், எய்தி-போய்சேர்ந்து, புண்டரீகம் மென் பதத்தியை-செந்தாமரைமலரை மென்மையான வாசஸ்தானமாகவுடைய இலக்குமியை, புகழ்ந்தனள் -(யாழ்கொண்டுபாடித்)தோத்தரித்தாள்: புகழ-(அங்ஙனம்) தோத்தரிக்க, மகிழ்ந்து - (அத் திருமகள்) திருவுள்ளமுவந்து, வண்டு அரு மது மாலை - வண்டுகள்நீங்காத தேனினையுடைய (தனது) பூமாலையை, கை கொடுத்தனள் - (தனது கூந்தலினின்றும் எடுத்து அவள்) கையில் (வெகுமானமாகக்) கொடுத்தாள்; (எ-று.)

திதியின் துயர்க்குக் காரணமாக அசுரர் தேவர்களால் மாண்டதைக் கூறுவதன் நிமித்தம், பாற்கடல்கடைந்து அதினின்று தோன்றிய அமுதங் காரணமாகத் தேவாசுரர்கட்குப் போருண்டாக அப்போரில் அசுரர் தோற்றனரென்று கூறுதற்காக, பாற்கடல்கடைந்த வரலாற்றைக் கூறத்தொடங்குகின்றான். பரமபதமடைந்தவர் மீண்டு வருத லில்லையென்பது நூற்கொள்கை யாதலாலும், இவ்வித்தியாதரப்பெண் மீண்டுவந்தன ளென்று மேற்கவியிற் கூறுதலாலும், இங்கு 'நீள்பதம்' என்பது- காரணவைகுண்டமென்னும் விஷ்ணுலோகமாம். 'என்னையாளுடையகொண்டல்' எனத்திருமாலைக்கூறியதனால், கம்பர் வைஷ்ணவராதலறிக. விஞ்சையர் - பதினெட்டுத்தேவகணங்களுள் ஒரு சாதியார். கோதை-பூமாலை; அதுபோல மென்மையும் அழகையுமுடைய பெண்ணுக்கு உவமையாகுபெயர். புண்டரீகம் என்பது- வெண்டாமரையின் பெயராகக் கூறப்பட்டிருப்பினும், இடப்பொருத்தம் நோக்கிச் செந்தாமரை யெனக் கொள்ளத்தக்கது; 'புண்டரீகாக்ஷன்' என்பதிற் போல. பதம் - இடம், இனி, புண்டரீகம் மென் பதத்தி - தாமரைமலர்போல மென்மையான திருவடிகளை யுடையவள் என்றுமாம். புண்டரீகம் என் எனப்பிரித்து- தாமரைமலரெனப்படுகிற என்றும் உரைக்கலாம். மகிழ்ந்து- (மாலையைப் பெற்ற வித்தியாதரப்பெண்) களித்து, மீடலும் என மேற்கவியோடு இயைப்பினும் அமையும். சோலைவரலாற்றைக் கூறும் இருபத்தைந்து கவிகளும், சில பிரதிகளிலில்லை. பி-ம்:—[1]பதத்திசை. (481)

6, 7.—இதுவும், மேலைக்கவியும் - ஒரு தொடர்: அவ்விஞ்சைமகள் அந்தமலர்மாலையைத் துருவாச முனிவனுக்கு அளித்தல்.

6. அன்ன மாலையை யாழிடைப் பிணித்தய னுலகம்
கன்னி மீடலுங் [1]கசட்டுறு முனியெதிர் காணா
என்னை யாளுடைய நாயகிக் கிசை[2]யெடுப் பவளென்று
அன்னள் தாளிணை வணங்கிநின் றேத்தலு மனையாள்.

7. உலகம் யாவையும் படைத் [1]தளித் துண்டுமி ழொருவன்
[2]இலகு மார்பகத் திருந்[3]துயிர் யாவையு [4]மீன்ற
திலக வாணுதல் சென்னியிற் [5]சூடிய தெரியல்
[6]அலகின் மாமுனி பெறுகென வளித்தன ளளியாள்.

(இ - ள்.) (6) அன்ன மாலையை - அந்தப்பூமாலையை, யாழிடை பிணித்து-(தன்) வீணையிலே கட்டிக்கொண்டு, கன்னி- விவாகமில்லாத அந்த வித்தியாதரப்பெண், அயன் உலகம் மீடலும் - பிரமலோகத்துக்குத் திரும்பிவந்தவளவில்,—கசடு உறு முனி - கோபம்மிக்க துருவாசமுனிவன், (பிரமலோகஞ் சென்றிருந்தவன்), எதிர் காணா - (அவளை) எதிரிலே கண்டு, என்னை ஆள்உடை நாயகிக்கு இசை எடுப்பவள் என்று - என்னை அடிமையாகவுடைய யாவர்க்குந்தலைவியாகிய இலக்குமிக்குக் கீதம்பாடுமவளென்று அறிந்து, அன்னள் தாள் இணை வணங்கி நின்று-அவளது உபயபாதத்

தில் வீழ்ந்து நமஸ்கரித்து (எழுந்து) நின்று, ஏத்தலும் - துதித்த வளவில், அணையாள் - அவ்விச்சாதரமகள், (7) 'உலகம் யாவைஉம் - எல்லாவுலகங்களையும், படைத்து - (ஆதிகாலத்திலே பிரமரூபியாய்ச்) சிருஷ்டித்து, அளித்து-(பின்பு தானானநிலையிலே விஷ்ணுரூபியாய்க்) காத்து, உண்டு-(பிரளய காலத்திலே) திருவமுதுசெய்து (திருவயிற்றினுள்ளே கொண்டு), உமிழ் - (பிரளயம்நீங்கியவுடனே மீண்டும்) வெளிப்படுத்தியருளுகிற, ஒருவன் - ஒப்பற்றவனாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினது, இலகு மார்பு அகத்து-விளங்குகின்ற திருமார்பினிடத்திலே, இருந்து - வீற்றிருந்து, உயிர்யாவைஉம்- எல்லாவுயிர்களையும், ஈன்ற-பெற்றருளின, திலகம் வாள் நுதல்-திலகத்தையணிந்த பிரகாசமான நெற்றியையுடைய திருமகள், சென்னியில்-(தனது) திருமுடியிலே, சூடிய - தரித்திருந்துள்ள, தெரியல்- இம்மலர்மாலையை, அலகு இல் மா முனி - (தவப்பெருமைக்கு ஒரு) அளவில்லாத சிறந்த முனிவனே! பெறுக—பெறுவாயாக,' என - என்றுசொல்லி, அளியால்-அன்போடு, அளித்தனள்-(தன்யாழிற் கட்டியுள்ள பூமாலையை வித்தியாதரமகள் துருவாசமகாமுனிவனுக்குக்) கொடுத்தருளினாள்; (எ-று.)

6:—இதனால், துருவாசமகாமுனிவனது விஷ்ணுபக்தியும், ஒருவைஷ்ணவர் மற்றொருவைஷ்ணவரைக் கண்டமாத்திரத்தில் தண்டனிட்டு உபசரிக்கவேண்டுமென்பதும், அங்ஙனம் உபசரிக்குங் காலத்து ஆண்பாலார் பெண்பாலார்என்ற வேறுபாடு கருதப்படாதென்பதும் விளங்கும். கசடு - குற்றம்; தவமுடையவர்க்குப் பெருங்குற்றமாகுந் தன்மைபற்றி, இங்கே கோபம் 'கசடு' எனப்பட்டது. துருவாசமகாமுனிவன் அளவிறந்த முன்கோபமுடையவனாதலால், 'கசட்டுறுமுனி' எனப்பட்டான்; வில்லிபுத்தூரார் "சாபத்தாலுஞ் சாபமொழிதன்னால் வளருந்தவத்தாலுங் கோபத்தாலும் பேர்படைத்த கொடிய முனிவன் றுருவாசன்" என்று கூறியது காண்க. மற்றையோர்க்கெல்லாம் பிறரைச்சபிக்கச்சபிக்கத் தவம் குறையும்: இவனோ சபிக்கச் சபிக்கத் தவம்வளர்ந்துவருமாறு வரம் பெற்றுள்ளவன்: ஆதலால், எப்பொழுதும் பெருங்கோபமுடையவனாய் எல்லோரையுஞ் சபித்தல் இவனுக்கு இயல்பு. இவன் அத்திரிமுனிவனது புத்திரன். யாழின்கோட்டில் மாலைசுற்றுதலை "கோதைசுற்றிய, ஐதமைபாணி வளர்கோட்டுச் சீறியாழ்" என்ற இடத்தில் காண்க. பி - ம்:—[1] கசடறு, கசட்டுடை, கசட்டுரை. [2] புணர்ப்பவள்.

7:—ஒருவன் - ஏகமூர்த்தி; அத்விதீயன். [2] இலகமார்பகத்து என்ற பாடத்துக்கு-மார்பினிடத்திலே (அது) விளங்கும்படி வீற்றிருந்து என்று உரைகூறுக. உயிர்களெல்லாவற்றையும் படைத்தலால் அவையனைத்துக்குந் தந்தையாகிய திருமாலினது மனைவியாதல்பற்றித் திருமகள் அவற்றுக்கெல்லாந் தாய்முறையாவளாதலால், 'உயிர்யாவையுமீன்ற' என்றாள்; அன்றியும், திருமாலினது திவ்வியசக்தியினது சொரூபமே திருமகளென உணர்க. வாணுதல்என்பது உரிச்சொற்றொடராதலால், திலகவாணுதல் என்பது அன்மொழித்தொகையாகாது. தெரியல் - விளங்குதல்;

விளங்கும்மாலைக்குத் தொழிலாகுபெயர். பி-ம்:—[1] இடந்து. [3] உலகியாவையும். [4] என்றாள். [5] சூட்டிய. [6] அலகிலாமுனி, அலகின் மாதவ. (482, 483)

8.—மாலையைப்பெற்ற துருவாசன் மகிழ்ந்து தேவலோகத்தைச் சேர்தல்.

தெய்வ நாயகி சென்னியிற் [1]சூடிய தெரியல்
ஐய யான்பெறப் புரிந்ததெத் தவமென வாடி
வெய்ய மாமுனி சென்னியிற் சூடியே வினைபோய்
உய்யு மாறிதென் றுவந்து[2] வந் தும்பர்நா டடைந்தான்.

(இ - ள்.) 'தெய்வம் நாயகி - எல்லாத்தேவர்களுக்குந் தலைவியாகிய திருமகள், சென்னியில் சூடிய - (தனது) முடியிலே தரித்திருந்த, தெரியல் - மாலையை, பெற - (இப்பொழுது) பெற்றதற்கு, யான் புரிந்தது - நான் (முன்னே) செய்துள்ளது, எ தவம்-எப்படிப்பட்ட பெருந்தவமோ? ஐய - (இது எனக்குக்கிடைத்தது) ஆச்சரியம்!' என - என்று எண்ணிக்கொண்டும் சொல்லிக்கொண்டும், வெய்ய மா முனி - (கோபத்தாற்) கொடிய துருவாச மகாமுனிவன், ஆடி - (பெருமகிழ்ச்சியால்) கூத்தாடிக்கொண்டே, சென்னியில் சூடி - (தனது) முடியிலே (அம்மாலையைத்) தரித்துக்கொண்டு, வினைபோய் உய்யும் ஆறு இது என்று - கருமமொழிந்து நற்கதி பெறும் விதம் இதுவாமென்று கருதி, உவந்து வந்து - மகிழ்ந்துகொண்டேவந்து, உம்பர் நாடு அடைந்தான் - தேவலோகத்தைச் சேர்ந்தான்; (எ - று.)—ஏ-அசை.

தெய்வநாயகன் - திருமால்; அதன்பெண்பால்-தெய்வநாயகி. ஐய - அம்ம என்பதுபோல வியப்புப்பொருள்கருதுவதோர் இடைச்சொல்: இனி, ஐய-ஆச்சரியப்படத்தக்க, தவம் எனலுமாம். ஐய-அசைநிலை என்பாருமுளர். உவந்து உவந்து எனப்பிரித்து, மிகுதி பற்றிய அடுக்கெனவுமாம். பி-ம்:—[1] சூட்டிய. [2] தன். (484)

9—12:—இதுமுதல் நான்குகவிகள்-ஒருதொடர்:சுவர்க்கலோகத்தில் தேவேந்திரன் ஐராவதத்தின் மீதிலேறிப் பவனி வருதற்சிறப்பு கண்டு துருவாசன் வியப்படைந்தமை கூறப்படுகின்றது.

9\. பெய்யு மாமுகில் வெள்ளியம் பிறங்கன்[1] மீப் பிறழும்
செய்ய தாமரை யாயிர மலர்ந்துசெங் கதிரின்
[2]மொய்ய சோதியை மிலைச்சிய முறைமைபோன் றொளிரும்
மெய்யி னோடயி ராவதக் களிற்றின்மேல் விளங்க.

10\. அரம்பை மேனகை திலோத்தமை யுருப்பசி யனங்கன்
சரம்பெய் தூணியிற் றளிரடி நூபுரந் தழைப்பக்
[1]கரும்பை யுஞ்சுவை[2] கைப்பித்த [3]குதலையர் விளரி
நிரம்பு பாடலோ டாடினர் வீதிக ணெருங்க.

11. நீல மால்வரை தவழ்தரு [1]நிறைநிலாக் கற்றை
போல வேயிரு புடையினுஞ் சாமரை புரளக்
கோல மாமதி குறைவற நிறைந்தொளி [2]குலாவ
[3]மேலி வர்ந்தென வெள்ளியந் தனிக்குடை விளங்க.

12. தழங்கு பேரியுங் குறட்டொடு [1]பாண்டிலுஞ்[2]சங்கும்
வழங்கு கம்பலை மங்கல கீதத்தை மறைப்ப
முழங்கு நான்மறை மூரிநீர்[3]முழக்கென வுலகை
[4]விழுங்கு மாவரும் விழாவணி கண்டுளம் வியந்தான்.

(இ - ள்.) (9) வெள்ளி அம் பிறங்கல் மீ - வெள்ளிமயமான அழகியதொருமலையின்மேலே, பெய்யும் மா முகில் - மழைபெய்ய நிற்பதொரு கரிய [பெரிய] காளமேகம், பிறழும் செய்ய தாமரை ஆயிரம் மலர்ந்து - விளங்குகின்ற சிவந்த ஆயிரந்தாமரைமலர்கள் (தன்னிடத்திலே) மலரப்பெற்று, செம் கதிரின் மொய்ய சோதியை மிலைச்சிய - சிவந்த கிரணங்களையுடைய சூரியனது அடர்த்தியை யுடைய ஒளியினையுந் தன்மேற்கொண்ட, முறைமைபோன்று - தன்மையை ஒத்து, ஒளிரும் - விளங்குகின்ற, மெய்யினோடு - (தனது) [இந்திரனது] உடம்பினோடு, அயிராவதம் களிற்றின் மேல் - ஐராவதமென்னும் யானையினது மேலிடம், விளங்க-பிரகாசிக்கவும்,—(10) கரும்பைஉம் - கருப்பஞ்சாற்றையும், சுவை-(தனது இனிய) உருசியினால், கைப்பித்த-கசப்பாம்படிசெய்த, குதலையர்-மழலைச்சொற்களையுடையவர்களாகிய, அரம்பை - ரம்பையும், மேனகை - மேநகையும், திலோத்தமை - திலோத்தமையும், உருப்பசி - ஊர்வசியும், (என்கின்ற தேவதாசிகள்), அனங்கன் சரம் பெய் தூணியின் - மன்மதனது மலரம்புகளைப் பெய்ததொரு தூணீரம் போன்ற, தளிர் அடி - துளிர் போல்மென்மையான (தமது) பாதங்களிலே, நூபுரம்-சிலம்பென்னுங் காலணி, தழைப்ப - ஒலிமிகுமாறு, விளரி நிரம்பு பாடலோடு - விளரி என்னும் இசை நிறைந்த பாட்டுடனே [வாயாற் பாடல்பாடிக் கொண்டு], ஆடினர் - நர்த்தனஞ் செய்துகொண்டு, வீதிகள் - தெருக்களில், நெருங்க - சமீபத்தில் அடர்ந்துவரவும், - (11) மால் நீலம் வரை - பெரியதொரு நீலநிறமுள்ள மலையின் இருபுறத்தும், தவழ்தரு - சஞ்சரிக்கின்ற, நிறை நிலா கற்றை போல - நிறைந்த சந்திரகாந்தியின் தொகுதியை ஒப்ப, இரு புடையின்உம் - தனது [இந்திரனது] இரண்டு பக்கங்களிலும், சாமரை புரள - சாமரங்கள் அசையவும், கோலம் மா மதி - அழகிய சிறந்த சந்திரன், குறைவு அற நிறைந்து - குறைவில்லாமல் (பதினாறுகலைகளும்) நிரம்பி, ஒளி குலாவ - (தனது) ஒளி விளங்க, மேல் இவர்ந்து என - மேலே தங்கியிருந்தாற்போல, வெள்ளி அம் தனி குடை - வெண்மைநிறத்தையுடைய அழகிய ஒப்பற்ற ஒற்றைக்குடை, விளங்க - பிரகாசிக்கவும்,—(12) தழங்கு - ஒலிக்கின்ற, பேரிஉம் - பேரிகைகளும், குறட்டொடு - குறடு என்னும் வாத்தியங்களும், பாண்டில்உம் - கைத்தாளங்களும், சங்குஉம் - சங்கங்களும், வழங்கு - உண்டாக்குகின்ற, கம்பலை - ஓசையானது, மங்கல கீதத்தை - (பெண்கள்பாடுகின்ற) மங்கல வாழ்த்துப்பாட்டை, மறைப்ப - (பிறர்க்குக் கேட்கவொண்ணாதபடி) மறையச் செய்யவும், முழங்கு நால்மறை-

(முனிவர்முதலியோரால்) உரத்த குரலோடுசொல்லப்படுகிற நான்கு வேதங்களின் ஓசையானது,மூரி நீர் முழக்கு என-பழமையான கடலி னது பேரொலியை ஒத்திருக்கவும், உலகை விழுங்கும் ஆ(று) - உல கத்தை விழுங்கும்படி, வரும் - (இந்திரன் பவனி) வருகின்ற, விழா அணி - திருவிழாவின் அழகை, கண்டு - (துருவாசமுனி) பார்த்து, உளம் வியந்தான் - மனத்தில் ஆச்சரியமடைந்தான்; (எ - று.)

9.—இக்கவி, இல்பொருளுவமையணி. ஐராவதத்தின்மேல் வீற் றிருத்தலால் இந்திரனுக்குச்சிறப்புஉண்டாவதென்பதன்றிக்கே, இந்திரன் வீற்றிருத்தலால் ஐராவதத்துக்குச்சிறப்பு உண்டாவது எனக் கூறி, இதனால் இந்திரனதுசிறப்பை விளக்குவார் 'மெய்யி னோடையிராவதக்களிற்றின்மேல்விளங்க' என்றார். வெள்ளிமலை-ஐரா வதத்துக்கும், மேகம் - இந்திரனுடம்புக்கும், ஆயிரந்தாமரை மலர் கள் - அவனது ஆயிரங்கண்களுக்கும், சூரியகிரணங்கள் - அவன் அணிந்துள்ள கிரீடம்முதலிய ஆபரணங்களின் ஒளிகளுக்கும் உப மானமாகும். பிறங்கல் மீ முகில் மலர்ந்து மிலைச்சிய முறைமை போன்று என இயையும். வலிமையும் பெருமையும் மதநீரருவியுடை மையும் பற்றி, யானைக்கு மலை உவமையாம். ஐராவதம்-வெண்ணிற முடையதாதலால், வெள்ளிமலையை உவமை கூறினார், ஐராவதம் - இந்திரனது பட்டத்துயானை; நான்குதந்தங்களுடையது. பிறங்கு வது-(நெடுந்தூரத்திலுள்ளாருங் கண்டறியும்படி உயர்ந்து விளங்கு வது) பிறங்கல்; மலைக்குக் காரணப்பெயர். இந்திரனது நிறம் கருமை யாதலால், மேகம் அவனுடம்புக்கு உவமை கூறப்பட்டது. வெள்ளி யம்பிறங்கல், அம்-சாரியை. ஆயிரம் அலர்ந்து எனவும் பதம் பிரிக் கலாம். பி - ம்:—[1]மேல். [2]மொய்கொள்.

10.—இப்பாட்டில், அரம்பைமுதலியநால்வரைக் கூறியது - மற் றைத் தேவகணிகையர்க்கும், நூபுரம்-மற்றையணிகளுக்கும்,விளரி- மற்றையிசைகளுக்கும் உபலட்சணம். அரம்பை-குபேரனதுகுமார னான நளகூபரனது போகமாது.திலோத்தமை-அழகிய மகளிர்களது உடம்பழகுகளில் எள்ளளவு எள்ளளவாக எடுத்துத் திரட்டிப்பிரம தேவனால் மேலானவளாகப் படைக்கப்பட்டவள்; திலம்-எள், உத்த மை-மேலானவள். உருப்பசி-ஊர்வசி, வடமொழிச் சிதைவு. (பதரி காச்சிரமத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த நாராயணமகாமுனிவ னது) ஊருவினின்று [தொடையினின்று] தோன்றினவள்; இவள், நாராயணமுனிவனது தவத்தைக்கெடுக்கும்படி இந்திரனால் ஏவப் பட்டுவந்த தேவமாதர்களை மோகிப்பிக்கும் பொருட்டு அம்முனிவ னாற் படைக்கப்பட்டவள். தூணீரம், கணைக்காலுக்கு வடிவுவமை. கரும்பையுஞ் சுவை கைப்பித்த குதலை என்பதற்கு-சுவையில் கைப் புக்குந் தித்திப்புக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ, அவ்வளவு வேறுபாடு இனிமையிலே கருப்பஞ்சாற்றுக்கும் குதலைச்சொல்லுக் கும் உண்டென்பது கருத்து; நாவுக்கு இனிமை தருகிற கருப்பஞ் சாற்றினும் பலமடங்கு அதிகமாகச் செவிக்கு இனிமைதருகிற குதலை யென்பது தாற்பரியம். கரும்பு-அதன் இரசத்துக்கு ஆகு பெயர். விளரி-ஏழுஇசைகளுள் ஒன்று: விளரி நிரம்பு பாடலோடு என்பதற்கு - யாழின் நிறைந்த பாட்டோடு ஒக்க என்றும் பொருள்

கொள்ளலாம். பி - ம்:—[1]கரும்பினும். [2]கற்பித்த. [3]சொல்லியர், குதலையர்ல்.

11.—நீலவரை-நீலரத்தினமயமான மலையென்றுமாம். நீலகிரி - இந்திரனது நீலமேனிக்கும், நிலாக்கற்றை - வெண்சாமரைக்கும் உவமம். கற்றை - மயிர்முதலியவற்றின் தொகுதி. சாமரை-சமர மென்னும் மானினது வாலின்மயிரினுற் செய்யப்பட்டதொரு இராச சின்னம். கோலம் ஆம் மதி எனப் பிரித்து - அழகாகிய சந்திரன் என்றுமாம். பி - ம்:—[1]கதிர்நிலா, நிறைமதி. [2]குலாவி. [3]மேல் நிவந்து, மேலுயர்ந்து, மேல்நிமிர்ந்து.

12.—'வழங்குகம்பலை மங்கலகீதத்தைமறைப்ப' என்றது - வாய்ப்பாட்டொலியினும் வாத்தியகோஷமும் கைத்தாளவொலியும் அதிகப்பட என்றபடி. இதில், இந்திரனுக்கு மேலேவருகிறதீங்குக்கு அறிகுறியாக 'மங்கலகரமான பாட்டை மறைக்க' என்கிற அருத்த முந் தொனிவகையால் தோன்றுமென்ப. பூமிக்குமுன்பே கடல் படைக்கப்பட்டதனுல், 'மூரிநீர்' எனப்பட்டது. நீர்-கடலுக்கு ஆகு பெயர். உலகைவிழுங்குமாவரும் என்பதற்கு - மிகத்திரண்டு வரு கிற என்று கருத்து: இனி, உலகை விழுங்குமாவரும் மூரிநீர் என இயைத்து, பிரளய சமுத்திரகோஷம் போல என்றுமாம். விழா - உற்சவம், ஊர்கோலம், உலாப்போதல். பி - ம்:—[1]பாண்டிலின். [2]சதியின். [3]முழக்கினுல். [4]விழுங்கமால். *(485-488)*

13.—தான்பெற்றமாலையை இந்திரனுக்குத்தர, அவன் தோட்டியால் அதனைவாங்கி யானையின் தலைமீதுவைக்க, அது எடுத்துத் துகைத்தல்.

தனையொ வாதவன் மகிழ்ச்சியால் வாசவன் றன்கை
வனையு மாலையை நீட்டலுந் தோட்டியால் வாங்கித்
துனைவ லத்தயி ராவதத் தெருத்திடைத் தொடுத்தான்
பனைசெய் கையினுற் பறித்தடிப் படுத்ததப் பகடு.

(இ - ள்.) தனை ஒவாதவன்-தன்னைப் பிறர்) ஒப்பாரிலாத துருவாசமுனி, மகிழ்ச்சியால்-சந்தோஷத்தால், வனையும் மாலையை-(தான்) தரித்திருந்த அப்பூமாலையை, வாசவன் தன்கை நீட்டலும் - இந்திரனது கையிலே கொடுக்கப்புக்கவளவில், (அவன்), தோட்டியால் வாங்கி - (அதனைத் தன்கையால்வாங்காமல்) அங்குசத்தால் வாங்கி, துனை வலத்து அயிராவதத்து எருத்திடை தொடுத்தான் - விரைந்துசெல்லுகின்ற வலிமையையுடைய (தனது) ஐராவதயானை யினது பிடரியிலே வைத்தான்: அ பகடு-அந்த யானையானது, பனை செய் கையினுல் - பனைமரத்தையொத்த (தனது) துதிக்கையினுல், பறித்து-(அம்மாலையை) இழுத்து அடி படுத்தது - (தன்) காலின் கீழிட்டுத் தேய்த்தது; (எ-று.)

வாசவன் - அஷ்டவசுக்களுக்குத்தலைவன்; அல்லது, எல்லா வைசுவரியமுமுடையவன். செய் - உவமவுருபு. ஐராவதத்தினது துதிக்கைக்கு, பனைமரம் திரண்டு உருண்டு நீண்ட வடிவத்தால் உவமை; நிறம்பற்றிய உவமையாகாது. *(489)*

14.—துருவாச முனிவனது சினம்.

கண்ட மாமுனி விழிவழி யொழுகுவெங் கனலால்
அண்ட கூடமுஞ் சாம்பரா யொழியுமென் [1]றழியா
விண்டு நீங்கினர் விண்ணவ ரிருசுடர் மீண்ட
எண்டி சாமுக மிருண்டன சுழன்றதெவ் வுலகும்.

(இ - ள்.) கண்ட-(அதனைப்) பார்த்த, மா முனி - துருவாச மகாமுனிவனது, விழி வழி-கண்களின்வழியாக, ஒழுகு-வெளியிற் சிந்துகிற, வெம்கனலால் - கொடிய கோபாக்கினியினாலே, அண்ட கூடம்உம்-எல்லா அண்ட கோளங்களும், சாம்பர் ஆய் ஒழியும் - (எரிந்து) சாம்பலாகி அழிந்துவிடும், என்று - என்றுநினைத்து, அழியா-மனம்வருந்தி,—விண்ணவர்-தேவர்களெல்லாரும், விண்டு நீங்கினர் - (தத்தமது இடங்களினின்று) பிரிந்து ஓடிப்போனார்கள்; இரு சுடர் மீண்ட - (சூரியன் சந்திரன் என்னும்) இருசுடர்களும் (மேற்செல்லமுடியாமல்) திரும்பிவிட்டன; எண் திசாமுகம்-எட்டுத் திக்குக்களின் இடமெங்கும், இருண்டன - இருட்சிபெற்றன; எ உலகுஉம்-எல்லாலோகமும், சுழன்றது-சுழற்சியடைந்தது; (எ-று.)

தங்கள் அரசனான இந்திரன் செய்த தவற்றினால் துருவாச முனிவன் பெருங் கோபம் கொண்டனனாக, அதுகண்ட தேவர்கள் 'இம்முனிவனது பெருஞ்சீற்றத்தினால் யாது தீங்குவிளையுமோ?' என்று அஞ்சிநடுங்கி எதிர்நிற்கவும்மாட்டாது ஓடிப்பதுங்க, அத் தேவர்களின இனத்தவரான சூரியசந்திரரும் தமதுகதி தடுமாற, அப்போது இருள் எங்கும் மூடியதனால் எல்லாவுலகங்களும் சுழலலாயின வென்க. கண்களில் கோபக்குறி மிக்குத்தோன்றுவதை 'விழிவழியொழுகுவெங்கனல்' என்றார். பி-ம்:—[1] அயரா, அஞ்சி. ()

15.—கோபங்கொண்ட துருவாசமுனிவன் இந்திரனை நோக்கிக் கூறத்தொடங்குதல்.

புகையெ ழுந்தன வுயிர்தொறு மெயில்பொடித் தவனின்
நகையெ ழுந்தன நிவந்தன புருவ[1] நன் னுதலிற்
சிகையெ ழுஞ்சுடர் விழியின [2]னசனியுந் [3]திகைப்ப
மிகையெ ழுந்திடு சதமக கேளென வெகுண்டான்.

(இ - ள்.) உயிர்தொறும்-(அம்முனிவனது) மூச்சுக்களிலெல்லாம், புகை எழுந்தன - புகைகள் கிளம்பின; எயில் பொடித்தவனில் - திரிபுரத்தைச் சாம்பராக்கின பரமசிவனைப்போல, (அம்முனிவனுக்குப் பெருங்கோபத்தால்), நகை-சிரிப்புக்கள், எழுந்தன-; புருவம் - புருவங்கள், நல் நுதலில் - அழகிய நெற்றியிலே, நிவந்தன - ஏறிவிட்டன; (உடனே அம்முனிவன்), சிகை எழும் சுடர் விழியினன்-சுவாலைகள் மேலோங்குகிற நெருப்பையுமிழ்கின்ற கண்களையுடையவனாய், அசனிஉம் திகைப்ப - இடியும் (இது என்ன ஓசையோ! என்று அஞ்சிப்) பிரமிக்கும்படி,—'மிகை எழுந்திடு சதமக-குற்றம்மிகுந்திட்ட இந்திரனே! கேள் - (யான் சொல்லும் இதனைக்) கேட்பாயாக,' என-என்று, வெகுண்டான் - கோபித்துக்கூறு

வர்ணுயினுன்; (எ - று.)—அதனை, மேலிரண்டு கவிகளிற் கூறு கின்றூர்.

தமது நெட்டுயிர்ப்பிற் புகையுண்டாகவும், திரிபுரசங்காரஞ் செய்த சிவபெருமான் போலக் கோபச்சிரிப்புத் தோன்றவும், புருவங் கள் நெரிந்து நெற்றியி லேறவும், கண்களில் தீப்பொறி பறக்கவும், மிக்கபெருஞ்சினங்கொண்ட துருவாசமுனிவன் இடியை யொத்த பெருங்குரலோடு அத் தேவேந்திரனை நோக்கிக் கூறலாயின னென்ப தாம்.

'நன்னுதல்' என்றது-பிரமதேஜசு விளங்குகிற நெற்றி யென்ற படி. [1]நண்ணுதல் பாடமாயின், நள்நுதல் - நடுநெற்றியென்க மிகை எழுந்திடு சதமக என்பதற்கு - மிகுந்த ஆடம்பரத்துடனே வருகின்ற இந்திரனே என்று உரைப்பாருமுளர். சதம்-நூறு, மகம்-யாகம்: நூறு அசுவமேதயாகங்களைச் செய்து இந்திரபதவி பெற்றத லால், இவனுக்கு இப்பெயர்வந்தது. எயில் - மதில்; மதில்சூழ்ந்த பட்டணங்களுக்கு ஆகுபெயர். 'அசனியும்' என்ற உயர்வுசிறப்பும் மையால் அதனது பேரொலியைக் கேட்கயாவரும் அஞ்சும் பயங்கரத் தன்மை விளங்கும். பி-ம்:—[2]யாவரும். [3]திகைப்பு. (491)

16.—துருவாசமுனிவன் தான் மலர்மாலைபெற்ற வரலாறு கூறுதல்.

பூத நாயகன் புவிமக ணுயகன் [1]பொருவில்
வேத நாயகன் மார்பகத் தினிது [2]வீற் றிருக்கும்
ஆதி நாயகி விருப்புறு தெரியல்கொண் டணைந்த
மாத ராள்வயின் பெற்றனன் முயன்றமா தவத்தால்.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) பூதம் நாயகன்-ஐம்பெரும்பூதங்களுக்குத் தலைவனும், புவி மகள் நாயகன் - பூமிதேவிக்குக் கொழுநனும், பொருவு இல் வேதம் நாயகன் - ஒப்பில்லாத வேதங்களுக்குத் தலைவனுமாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவினது, மார்பு அகத்து - திருமார்பினிடத்திலே, இனிது வீற்றிருக்கும்-இனிமையாக எழுந்தருளியிருக்கின்ற, ஆதி நாயகி-(யாவர்க்கும்) முதன்மையான தலைவியாகிய திருமகள், விருப்பு உறு - மிக்கவிருப்பத்தோடு சூடியிருந்த, தெரியல் - (இந்தப்) பூமா லையை, கொண்டு அணைந்த - பெற்றுவந்த, மாதராள்வயின் - (ஒரு வித்தியாதர) மகளினிடத்தே, முயன்ற மா தவத்தால் பெற்றனன்-(நான்) முற்பிறப்பிற்செய்துள்ள பெரிய தவத்தின் மகிமையால் (அவள் கொடுக்கப்) பெற்றேன்; (எ - று.)

பூதநாயகன்-பஞ்சபூதங்களையும் படைத்து அவற்றை நியமிப் பவன்; பூதம் - பிராணிவர்க்கமென்றுமாம். வேதநாயகன் - வேதத்தி னாற் பிரதிபாதிக்கப்படுபவன். ஆதிநாயகி-சரசுவதி, பார்வதி, இந்தி ராணி முதலிய நாயகிகளாவார் யாவர்க்கும் நாயகி யென்றபடி. பி - ம்:—[1]புணர்ந்த, பொருப்பில். [2]வீற்றிருந்த. (492)

17.—துருவாசமுனிவன் தேவேந்திரனுக்குச் சாபமிடுதல்.

இன்று நின்பெருஞ் செவ்விகண் டுவகையி னீந்த
மன்ற லந்தொடை யிகழ்ந்தனை நினதுமா நிதியும்
ஒன்ற லாதபல் வளங்களு முவரிபுக் கொளிப்பக்
[1]குன்றி நீதுய[2]ருறுகென வுரைத்தனன் [3]கொடியோன்.

(இ - ள்.) 'இன்று-இப்பொழுது, நின் பெரு செவ்வி கண்டு - உன்னுடைய (உலாவருகின்ற) பெரிய வைபவத்தைப் பார்த்து, உவகையின் ஈந்த - (இந்தப்பூமாலை உனக்கேஉரியதென்று) மகிழ்ச்சியோடு (யான்) கொடுத்த, மன்றல் அம் தொடை - வாசனையுடைய அழகிய மாலையை, இகழ்ந்தனை-அலட்சியஞ்செய்தாய்; (ஆதலால்), நினது மா நிதிஉம்-உன்னுடைய பெரியநிதிகளும், ஒன்று அலாத பல் வளங்கள்உம் - ஒன்றல்லாத [அநேகமான] பலவகைச் செல்வங்களும், உவரி புக்கு ஒளிப்ப-கடலிலேபோய்மறைய, குன்றி-பெருமை குறையப் பெற்று, நீ—, துயர் உறுக - துன்பமடைவாயாக', என- என்று, கொடியோன் - கடுங்கோபமுடைய துருவாச முனிவன், உரைத்தனன்-(இந்திரனுக்குச்) சாபங்கொடுத்தான்; (எ - று.)

'யான் முற்பிறப்பிற்செய்த நல்வினையின் பயனாகப்பெற்றதும் செல்வத்திற்கு அதிதேவதையான லக்ஷ்மீதேவியின் மஹாப்ரஸாதமுமான மலர்மாலையை 'இது உனக்கே தக்கது' என்று மனமகிழ்ந்து கொடுக்க, நீ அதனைச்செல்வச்செருக்கினால் அலட்சியஞ் செய்து மதக்களிற்றின் கைப்படும்படிசெய்தா யாதலின் அதன் பயனாக உனது செல்வங்கள்யாவும் பாற்கடலிற்போய் மறைய நீ வறுமையினால் துன்பமடைவாயாக' எனச் சபித்தனன், துருவாச முனிவனென்பதாம். குன்றி - மனவேதனையால் உடல் குன்றிப்போய் எனினுமாம். உவரி - உப்புச்சுவையுடையது; இச்சொல் - இங்கே பொதுவாய், கடலென்னுமாத்திரையாய்நின்று, பாற்கடலைக் குறித்தது. பி - ம்:—[1]குன்றும். [2]பெறுகென. [3]கொதித்தே. (493)

18.—இந்திரனது பொருள்கள் யாவும் பாற்கடலிற் புக்கொளித்தல்.

அரம டந்தையர் கற்பக நவநிதி [1]யமிர்தச்
சுரபி [2]வாம்பரி மதமலை முதலிய[3]தொடக்கற்று
ஒருபெ ரும்பொரு ளின்றியே [4]யுள்ளன வெல்லாம்
வெருவி[5] யோடிப்புக் கொளித்தன விரிதிரைக் கடலின்.

(இ - ள்.) (துருவாசன் இவ்வாறு சபித்தமாத்திரத்தில், இந்திரனது ஐசுவரியங்களாகிய), அரமடந்தையர் - அரம்பை முதலிய தேவமாதர்களும், கற்பகம் - கல்பகவிருட்சங்களும், நவ நிதி - ஒன்பதுவகை நிதிகளும், அமிர்தம் சுரபி - பாலைக்கறக்கும் காமதேனுவும், வாம் பரி - தாவுகின்ற (உச்சைச்சிரவ மென்னும் வெள்ளைக்) குதிரையும், மதம் மலை - மதத்தையுடையமலைபோன்ற ஐராவதயானையும், முதலிய - முதலான, உள்ளன எல்லாம் - உள்ள எல்லாப் பொருள்களும், தொடக்கு அற்று - சம்பந்தமொழிந்து, ஒரு பெரு பொருள் இன்றிஏ - ஒரு பெரியபொருளாயினும் (இந்திரன்வசத்தில்) இல்லாமல், வெருவி - அஞ்சி, விரி திரை கடலின்-

விரிகின்ற அலைகளையுடைய பாற்கடலிலே, ஓடி புக்கு ஒளித்தன-ஓடிப்போய்மறைந்தன; (எ - று.)

துருவாசமுனிவன் சாபமிட்டவுடனே அதன்படியே தேவலோகத்தில் ஒருபொருளும் மிச்சமில்லாமல் எல்லாப்பொருள்களும் கடலிற்போய் மறைந்தன வென்பதாம். அரமடந்தையர் - அரம்பைமடந்தையர் அல்லது அமரமடந்தையர் என்பதன் விகாரம். நவநிதி-மகாபதுமம், பதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்பன; இனி, நவநிதி என்பதற்கு-என்றும் புதியனவான சங்கம் பதுமம் என்னும் இரண்டு நிதிகள் என்றும் பொருள் கொள்ளக்கூடும். [5]ஓடினர் விண்ணவர்கண்ணன் மேவாரின், ஓடினர் விண்ணவர்வெண்ணெய்மேவாரின், ஓடின வெண்ணெய்வாழ் கண்ணன்மேவாரின், என்ற பாடங்கள் கம்பரின் நன்றியறிவைத் தெரிவிப்பதாற் சிறக்கும். பி - ம்:—[1]அமிர்தஞ். [2]வெம். [3]தொடக்கத்து. [4]உவரிபுக்கொளிப்ப. [5]ஓடிப்...கடல்வாய். (494)

இங்கே சிலபிரதிகளில் ஒருபாடல் காணப்படுகின்றது: அது வருமாறு:—

அந்த வேலையி லிந்திரன் சிந்தைநொந் தழிந்து
வந்து [1]தான்வர முனிவனை வழிபட்டு வழுத்த
நந்து நின்பெருஞ் செல்வமா லருளினு னயக்க
முந்து மென்று சாபத்தின் [2]மோக்கமு மொழிந்தான்.

பி - ம்:—[1]வானவர். [2]ஓக்கமும்.

19.—அப்போது தேவர்கள் ஒன்றுகூடித் திருமாலைச் சரணமடைதல்.

வெய்ய மாமுனி வெகுளியால் விண்ணக முதலாம்
வைய மியாவையும் வறுமைநோய் [1]நலிதர வானோர்
தையல் பாகனுஞ் சதுமுகக் கடவுளுங் கூடிச்
செய்ய தாமரைத் திருமறு மார்பனைச் சேர்ந்தார்.

(இ - ள்.) வெய்ய-(கோபத்தாற்) கொடிய, மா - தவமகிமையையுடைய, முனி - துருவாசமுனிவனது, வெகுளியால்-கோபத்தால், விண் அகம் முதல் ஆம்-தேவலோகம் முதலான, வையம் யாவைஉம்-உலகங்களெல்லாவற்றையும், வறுமை நோய் - தரித்திரமாகியவியாதி, நலிதர - வருத்த,—வானோர்-(அதனைக்கண்ட) தேவர்கள்யாவரும்,—தையல்பாகன்உம் - உமாதேவியை இடப்பக்கத்திலேயுடைய சிவபெருமானோடும், சதுமுகன்கடவுள்உம்-நான்குமுகங்களையுடையனான பிரமதேவனோடும், கூடி - சேர்ந்து,—செய்ய தாமரை திரு மறு மார்பனை-சிவந்த தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியையும் (ஸ்ரீவத்ஸமென்னும்) மறுவையுமுடைய திருமார்பினையுடைய திருமாலை, சேர்ந்தார் - அடைந்தார்கள்; (எ-று.)

துருவாசமுனிவன் சாபத்தால் எல்லாச்செல்வமும் கடலிற்புக்கொளித்ததனால், திரிலோகாதிபதியான இந்திரனுக்கு நேர்ந்த

வறுமை அவனாலாளப்படுகின்ற உலகமனைத்தையும் வருத்தத் தொடங்கவே, அக்கொடுமையைப்பொறுக்கமுடியாமல் தேவர்கள் யாவரும் தமக்குள் தலைவராகிய உருத்திரமூர்த்தியோடும் பிரம தேவனோடுங்கூடிச் சர்வேசுவரனான திருமாலைச் சரணமடைந்தன ரென்பதாம். செல்வத்தையிழந்த தேவர்கள் அச்செல்வத்திற்கு அதிதேவதையான லக்ஷ்மீதேவியின் கணவனை யடைந்தன ரென்க. மாமுனியின் வெய்ய வெகுளி என இயைத்தலும் ஒன்று. மறு-எம்பெருமானதுமார்பில் உள்ளதொரு உத்தமலக்ஷணக்குறி. இனி, திரு மறுமார்புஎன்பதற்கு-திருமகள்பிறர்மார்பைமறுத்தற் குக் காரணமான மார்பு என்றுமாம். பி - ம்:—நலியவானவரும்(495)

20.— சரணடைந்த பிரமன் முதலியோர்க்குத் திருமால் அபயமளித்தல்.

வெஞ்சொன் மாமுனி வெகுளியால் விளைந்தமை விளம்பிக்
கஞ்ச நாண்மலர்க் கிழவனுங் கடவுளர் பிறரும்
தஞ்ச மில்லைநின் சரணமே சரணெனச் [1] சலியாது
அஞ்ச லஞ்சலென் றுரைத்தன னுலகெலா மளந்தோன்.

(இ - ள்.) (அடைந்து), நாள் கஞ்சம் மலர் கிழவன்உம்-அன்றுமலர்ந்த தாமரைப்பூவிலே தோன்றிய பிரமனும், கடவுளர் பிறர்உம் - (சிவபிரான் முதலிய) மற்றைத்தேவர்களும், வெம் சொல் மா முனி வெகுளியால் விளைந்தமை விளம்பி-கொடிய சாபச்சொல்லையுடைய சிறந்த முனிவனது கோபத்தால் நிகழ்ந்த தைச் சொல்லி, 'தஞ்சம் இல்லை - (வேறு எங்களுக்குப்) புகலிடம் இல்லை; நின் சரணமே சரண் - உனது திருவடிகளே அடைக்கலம்,' என - என்று பிரார்த்திக்க,—உலகு எலாம் அளந்தோன்-எல்லாவுல கங்களையும் அளவிட்டருளுந் திருமால், சலியாது-வஞ்சனையில்லா மல் [மனப்பூர்வமாக], (அத்தேவர்களைநோக்கி),—அஞ்சல் அஞ்சல் என்று-'பயப்படாதேயுங்கள் பயப்படாதேயுங்கள்' என்றுகூறி, உரைத்தனன் - (சிலவார்த்தைகள்) சொல்லியருளுவானாயினான்; (எ - று.)—அதனை, மேலிரண்டுகவிகளிற் காண்க. பி-ம்:—[1] செப்ப, சலியா. (496)

21, 22—இரண்டு கவிகள் – ஒருதொடர்: திருமால் பாற் கடலைக் கடையுமாறு கட்டளையிடத் தேவர்கள் மகிழ்தல்.

21. மத்து மந்தரம் வாசுகி கடைகயி [1] றடைதூண்
[2] மெத்து சந்திரன் சுராசுரர் வேறுவே றுள்ள
கொத்தி ரண்டுபால் [3] வலிப்பவ ரோடதி கொடுத்துக்
[4] கத்து வாரிதி மறுகுற வமிழ்தெழக் கடைமின்.

22. யாமு மவ்வயின் வருதுநீர் கதுமென வெழுந்து
போமி னென்றருள் புரிதலு மிறைஞ்சினர் [5] புகழ்ந்தார்
நாம மின்றெனக் குனித்தனர் நல்குர வொழிந்தது
ஆமெ னும்பெருங் களிதுளக் குறுதலா லமரர்.

(இ - ள்.) (21) 'மந்தரம் - மந்தரமலை, மத்து - மத்தாகவும், வாசுகி - வாசுகியென்னும் பாம்பு, கடை கயிறு - கடைகின்ற கயி

ருகவும், மெத்து சந்திரன் - குளிர்ந்ததன்மையையுடைய சந்திரன், அடை தூண் - அடைதூணாகவும், வேறு வேறு கொத்து உள்ள சுர அசுரர் - வெவ்வேறு கூட்டமாகப்பிரிந்துள்ள தேவர்களும் அசுரர்களும், இரண்டு பால் வலிப்பவர் - (வால் தலை என்னும்) இரண்டுபக்கங்களிலும் (கடைகயிற்றைப்) பிடித்திழுத்துக்கடைபவராகவும் (அமைய), ஓடதி கொடுத்து-ஓஷதியைப்பெய்து, கத்து வாரிதி ஒலிக்கின்ற பாற்கடலை, மறுகுஉற-கலங்கும்படி, அமிழ்து எழ - அமிருதம் உண்டாக, கடைமின்-கடையுங்கள்; (22) யாம்உம்-நாமும், அவ் வயின்-(பாற்கடல் கடைகின்ற) அவ்விடத்து, வருதும் -வருவோம்; நீர்-நீங்கள், கதுமென-விரைவாக, எழுந்துபோமின் - புறப்பட்டுப்போங்கள்,' என்று—, அருள் புரிதலும் - (திருமால்) திருவாய்மலர்ந்தருளினவளவில்,—அமரர்-தேவர்கள், இறைஞ்சினர் புகழ்ந்தார்-(அத்திருமாலை) வணங்கித் துதித்து, நல்குரவு ஒழிந்தது ஆம் எனும் பெரு களி துளக்குறுதலால்-'(நமது) வறுமை (இனி விரைவில்) நீங்கியதாய்விடும்' என்கிற கருத்தினாலாகிய மிக்க மகிழ்ச்சியானது ஆட்டுதலினால், நாமம் இன்று என - அச்சமில்லையென்று சொல்லிக்கொண்டு, குனித்தனர் - ஆனந்தக்கூத்தாடினார்கள்; (எ - று.)

தேவர்கட்கு அபயமளித்த திருமால் இழந்த செல்வங்களை மீண்டும் பெறும்பொருட்டுப் பாற்கடலைக் கடையுமாறு அத்தேவர்கட்குக் கட்டளையிட்டுத் தானும் துணைபுரியுமாறு வருவதாகத் திருவருள்புரிய, அதனைக்கேட்ட தேவர்கள், அப்பெருமானைப் புகழ்ந்து இனித் தங்களது வறுமைத் துன்பந் தீருமென்று துணிவுகொண்டு ஆனந்தக் கூத்தாடினார்களென்க.

மத்து - மந்தம் என்ற வடமொழியின் திரிபு. அடைதூண் - கடைகயிற்றைச்சார்த்திக்கட்டுந் தூண். மெத்துதல் - மெத்தென்றிருத்தல்: இலக்கணையால், குளிர்தலெனப்பட்டது. ஓடதி - ஓஷதி: இங்கே, அமிருதவல்லியென்னும் மூலிகை. பி - ம்:—[1] இடுதூண், இடுநாண். [2] மெய்த்து. [3] வலிப்பவரோடெதிர். [4] கத்தும். [5] புகழ்ந்து.

23.—திருமாலின் கட்டளைப்படியே தேவர்கள் பாற்கடல் கடைதல்.

மலைபி டுங்கினர் வாசுகி பிணித்தனர் [1] மதியை
நிலைபெ றும்படி [2] நட்டன ரோடதி [3] நிரைத்தார்
அலைபெ றும்படி பயோததி கடைந்தன ரவனி
நிலை [4] த ளர்ந்திட வனந்தனுங் கீழுற நெளித்தான்.

(இ - ள்.) (பின்பு தேவர்கள் திருமாலின் நியமனத்தின்படி அசுரர்களையுங் கூட்டிக்கொண்டு), மலை பிடுங்கினர் - (மந்தர)கிரியைப் பேர்த்து வந்து, வாசுகி பிணித்தனர் - வாசுகியென்னும் பாம்பாற் கட்டி, மதியை நிலை பெறும்படி நட்டனர் - சந்திரனை(த் தூணாக) நிலைத்துநிற்கும்படி நட்டு, ஓடதி நிரைத்தார் - மூலிகைகளைக் கூட்டமாகப்பெய்து, அலைபெறும்படி - (மிக்க) அலைகளை அடையும்படி, பயோததி கடைந்தனர் - திருப்பாற்கடலைக் கடைந்

தார்கள்; (அப்பொழுது தேவர்களும் அசுரர்களும் யாவரும் ஓரிடத்திற் கூடிநின்று கடைதலா லுண்டான அதிபாரத்தால்), அவனி நிலை தளர்ந்திட-பூமி நிலைகுலைய, அனந்தன்உம்-(அதன் கீழிருந்து தாங்குகின்ற) ஆதிசேஷனும், கீழ்-பாதாளலோகத்தில், உற-மிகவும், நெளித்தான்-உடம்பு நெளித்தான்; (எ - று.)

திருமாலின் கட்டளைப்படியே தேவர்கள் அசுரர்களையும் துணைக்கொண்டு வாசுகியின் வாய்ப்புறத்தில் அசுரர்களும் வாற்புறத்தில் தாமுமாக இருந்து மிகவுங்குழம்பும்படி பாற்கடலைக் கடைகையில், கீழிருந்து பூமியைத் தாங்குகின்ற ஆதிசேஷனும் ஒருங்கே பலருந் திரண்டதனாலுண்டான பாரத்தைத் தாங்க முடியாமல் வருந்தி உடல்நெளித்தன னென்பதாம். தேவர் அசுரர் என்ற இருத்திறத்தாருக்கும் 'சாவும் கிழத்தனமும் இல்லாமலிருப்பதற்கு என்னசெய்யலாம்?' என்று ஓரெண்ணமுண்டாக, பாற்கடலைக் கடைந்து ஸாரமாகிய அமிருதத்தைக் கொள்ளவேண்டுமென்று எண்ணமுண்டாய்க் கடலைக் கடைந்தன ரென்றே முதனூலிற் காணப்படுகின்றது.

பயஸ் - பால்; உததி - கடல், அநந்தன்-பிரளய காலத்தும் அழிவில்லாமல் என்றும் ஒருதன்மையாக நித்தியனாயிருப்பவன்; இவன் பூமியின்கீழிருந்து ஆயிரந்தலைகளாலும் பூமியைத் தாங்குகின்றன னென்பது, நூற்கொள்கை. பி-ம்:—[1] மதியம். [2] நாட்டினர். [3] நிறைத்தார். [4] தளர்ந்திடையயர்ந்தனள் பூமகள் நெளித்தாள்.(499)

24.—பாற்கடலைக் கடைதற்குத் திருமால் உதவிபுரிதல்.

திறல்கொ ளாமையாய் முதுகினில் மந்தரந் திரிய
விறல்கொ ளாயிரந் தடக்கைகள் பரப்பிமீ வலிப்ப
[1] மறனி லா முனி வெகுளியின் மடிந்தன வரவே
[2] அறனி லார்மனத் தடையலா நெடுந்தகை[3] யமைத்தான்.

(இ - ள்.) அறன் நிலார் மனத்து - தருமநெறியில் நில்லாதவருடைய மனத்திலே, அடையலா-சேராத, நெடு தகை-பெருமைக் குணங்களையுடைய திருமால்,—முதுகினில் மந்தரம் திரிய - (தனது) முதுகின்மேலே மந்தரமலை சுழலும்படி, திறல் கொள் ஆமை ஆய் - வலிமையைக்கொண்டதொரு கூர்மாவதாரமாகியும்; மீ வலிப்ப - (மந்தரகிரியை) மேலே அழுத்தும்படி, விறல்கொள் ஆயிரம் தடக்கைகள்பரப்பி - வலிமையைக்கொண்ட (தனது) பெரிய ஆயிரந்திருக்கைகளைப் பரவச்செய்தும், மறன் இலா முனி வெகுளியின் மடிந்தன வர - பாவமில்லாத துருவாசமுனிவனது கோபத்தால் நீங்கின பொருள்கள் மீண்டும் வரும்படி, அமைத்தான் - (அதற்கு வேண்டிய காரியங்களைச்) செய்தருளினான்; (எ-று.)

பக்தியையுடைய அடியவர்களது உள்ளக்கமலத்தில் அவர்கள் நினைத்த வடிவோடு விரைந்துசென்று வீற்றிருத்தலும் அங்ஙனம் அடியவரல்லாதவரது மனத்திற் சென்று சேராமையும் கடவுளது இயல்பு. மறன் இல் ஆம் எனப்பிரித்து-கோபத்துக்கு இடமான என்றும், மறன் நில்லா எனப் பிரித்து - கோபம் மனத்தில்

அடங்கிநிற்கப்பெருத என்றும், மறன் நிலாம் எனப்பிரித்து-கோபம் உலாவிவிளங்குதற்கிடமான என்றும் பொருள்கொள்ளலாம். நான் காம் அடியில், அறன் இலார் என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1] மறமுலாம். [2] அறநிலா. [3] அமைந்தான். (500)

25.—பாற்கடலில் தோன்றிய அமிருதத்தைத் தேவர்களே பெறுதல்.

இறந்து நீங்கின யாவையு மெம்பிரா னருளாற்
பிறந்த வவ்வயின் சுராசுரர் தங்களிற் [1] பிணங்கச்
சிறந்த [2] மோகினி மடந்தையா லவுணர்தஞ் செய்கை
துறந்து மாண்டன ராரமிர் தமரர்கள் துய்த்தார்.

(இ - ள்.) இறந்து நீங்கின யாவைஉம் - (முன்னே முனிவர் இட்ட சாபத்தாற் கடலிற்போய்) மறைந்து ஒழிந்த பொருள்களெல்லாம், எம்பிரான் அருளால்-எமது தலைவனான திருமாலினது திருவருளினாலே, பிறந்த-(பாற்கடலினின்று) உண்டாயின; அவ்வயின்-அப்பொழுது, சுரஅசுரர் - தேவர்களும் அசுரர்களும், தங்களின் பிணங்க-(அங்குஉண்டான அமுதம் தமக்குச் சேரற்பாலது என்று) தங்களுக்குள்ளே மாறுபட,—சிறந்த மோகினி மடந்தையால் - (அதைக்கண்டு எம்பெருமான்கொண்ட) சிறப்பான கண்டவர்களை மயக்குவதொரு பெண்வடிவத்தால், அவுணர் தம் செய்கை துறந்து மாண்டனர் - அசுரர்கள் (அமுதத்திற்காகப்பிணங்கிய) தமது செய்கையையொழிந்துமடிந்தார்; (அச்சமயத்தில்), அமரர்கள்-தேவர்கள், ஆர் அமிர்து - (பெறுவதற்கு) அருமையாகிய அமிருதத்தை, துய்த்தர்-உண்டார்கள்; (எ-று.)

திருமால் பாற்கடலைக்கடையுமாறு உதவிபுரிந்தபோது, துருவாச முனிவன் சாபத்தாற் கடலிற்சென்றொளித்த தேவலோகத்துப்பொருள்கள் யாவும் மீண்டுந் தோன்றுகையில், அங்குத் தோன்றிய அமிருதங் காரணமாகத் தேவர்கட்கும் அசுரர்கட்கும் பிணக்கு உண்டாக, திருமால் மோகினிவடிவமெடுத்து அசுரர்களை வஞ்சனையால் மோகிப்பித்து ஒடுங்கச்செய்து தேவர்கட்கே அவ்வமிருதத்தைக் கொடுத்தன னென்பதாம். ஸ்ரீமந்நாராயணனது நியமனத்தின்படி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக்கடையும்போது வாசுகியின்சிரம் விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கையில் ஹாலாஹலவிஷம் முதலில்தோன்ற, தேவர்களின் வேண்டுகோளினாலும் திருமாலின் நியமனத்தாலும் சிவன் அதனையுட்கொண்ட பின் மீண்டும் கடைகையில், சுழலாநின்ற மந்தரம் அழுந்த, திருமால் அப்பருவதத்துக்குக்கீழே மஹாகூர்மரூபத்தைத்தரித்து அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்து அதனைக் கடலினுள் அழுந்தி விடாதபடி செய்தனனென்றும்: மிகவும் பெரியதான ஒரு திவ்விய ரூபத்தினாலே அப்பருவதத்தின் மேற்புறத்தை ஆக்கிரமித்து அதனைப் பலப்படுத்தியருளினனென்றும்: வேறொரு திருமேனியைத் தரித்துத் தேவதைகள் பக்கத்திலேயும் மற்றொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள்பக்கத்திலேயும் நின்று வாசுகியி

னுடைய வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தருளினனென்றும்: அப்பால் தந்வந்திரி அப்ஸரஸ் வாருணி உச்சைச்சிரவஸ் கௌஸ்துபம் முதலியவற்றோடு அமிர்தமும் உண்டாக, அதுநிமித்தம் தேவாசுரர்கட்குப்பெரும்போர்விளைய, அத்திருமால் மோகநாகாரமான ஒரு ஸ்திரீரூபத்தைத் தரித்து அசுரர்களை வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்களுக்கே அருள்புரிந்தானென்றும் நூல்கள் கூறும். மோஹிநீ - (தன்னைக் கண்டவரை) மதிமயங்கச் செய்யும் கட்டழகுடைத்தெய்வமகள். பி - ம்:—[1]பிணங்கி. [2]மோகனி. (501)

26.—திருமால் பாற்கடலில்தோன்றிய பொருள்களைப் பங்கிடுதல்.

வெருவு மாலமும் பிறையும் [1]வெவ் விடையவற் கீந்து
தருவும் வேறுள தகைமையும் சதமகற் [2]கருளி
மருவு [3]தொல்பெரு வளங்களும் வேறுற வழங்கித்
திருவு மாரமு மணிந்தனன் சீதர மூர்த்தி.

(இ - ள்.) வெருவும்-(கண்டவர்) அஞ்சும்படியான, ஆலம்உம்-(கொடிய) ஹாலாஹலவிஷத்தையும், பிறைஉம் - (குளிர்ந்த) சந்திரனையும், வெம் விடையவற்கு - பயங்கரமான இடபத்தை வாகனமாகவுடைய சிவபிரானுக்கு, ஈந்து - கொடுத்து,—தருஉம்-பஞ்சதருக்களையும், வேறுஉள தகைமைஉம் - (தேவமாதர் நிதிகள் உச்சைச்சிரவம் ஐராவதம் சிந்தாமணி முதலாக) மற்றுமுள்ள சிறப்புப்பெற்றபொருள்களையும், சதமகற்கு அருளி - நூறுயாகஞ்செய்துள்ளவனாகிய இந்திரனுக்குக் கொடுத்து,—மருவு தொல்பெரு வளங்கள்உம் - மற்றும்பொருந்திய (புஷ்பகம் முதலிய) பழமையான பெரிய ஐசுவரியங்களையும், வேறு உற வழங்கி - (குபேரன் முதலிய) வெவ்வேறு தேவர்களுக்குப் பொருந்தக்கொடுத்து,—சீதரமூர்த்தி - திருமகளைத் திருமார்பில் தரிக்கின்ற திருமேனியையுடைய திருமால்,—திருஉம்-இலக்குமியையும், ஆரம்உம் - கௌஸ்துப ரத்தினத்தையும், அணிந்தனன் - (தான்) தரித்துக்கொண்டான்;

பாற்கடலில்தோன்றிய அமிருதத்தைத்தேவர்கள்யாவர்க்குங் கொடுத்த திருமால், அதனினின்று தோன்றிய ஹாலாஹலத்தையும் பிறைச்சந்திரனையும் சிவபிரானுக்கும், கற்பகவிருக்ஷம் முதலியவற்றைத் தேவேந்திரனுக்கும், புஷ்பகம் முதலியவற்றைக் குபேரன் முதலியோர்க்கும் கொடுத்தருளி, இலக்குமியையும் கௌஸ்துபரத்நத்தையும் தானே அணிந்தருளினனென்க. ஸ்ரீதரனென்ற பேருக்கு ஏற்பத் திருவையணிந்தானென்று தோன்றுமாறு 'சீதர மூர்த்தி திருவணிந்தனன்' என்றது: 'சீ' என்பது - இலக்குமியையேயன்றி, ஒளியென்ற பொருளையுமுடையதாதல் கருதத்தக்கது. பிறை-பிறப்பது என இளஞ்சந்திரனுக்குக் காரணக்குறி. தகைமை-பெருமை பெற்ற பொருளுக்கு ஆகுபெயர். ஆரம்-இரத்தினத்திற்குக் காரியவாகுபெயர். பி - ம்:—[1]வெள். [2]அளித்து. [3]பல். (502)

27.—தேவர்களைக்கொல்லும் புதல்வனைத் தருமாறு திதி தன் கணவனை வேண்டுதல்.

அந்த வேலையிற் றிதிபெருந் துய [1]ருழந் தழிவாள்
வந்து காசிபன் மலரடி வணங்கியென் மைந்தர்
இந்தி ராதியர் புணர்ப்பினு [2]லிறந்தன ரெனக்கோர்
மைந்த னீயரு ளவர்தமை மடித்தலுக் கென்றுள்.

(இ - ள்.) அந்த வேலையில் - அக்காலத்தில், திதி - (அசுரர்களது தாயாகிய) திதியென்பவள், பெரு துயர் உழந்து அழிவாள் - (புத்திரசோகத்தால்) மிக்க துன்பத்தை அனுபவித்து மனமழிபவளாய், வந்து - (அருகில்) வந்து, காசிபன் மலர் அடி வணங்கி - (தனது கொழுநனாகிய) காசியபமுனிவனது தாமரைமலர்போலுந் திருவடிகளை நமஸ்கரித்து, (அவனைநோக்கி), 'என் மைந்தர்-எனது மக்களாகிய அசுரர்கள், இந்திர ஆதியர் புணர்ப்பினால்-இந்திரன் முதலான தேவர்களது சூதினால், இறந்தனர் - மரணமடைந்தார்கள்; (ஆதலால்), அவர் தமை மடித்தலுக்கு - அத்தேவர்களை அழிப்பதற்கு, எனக்கு ஓர் மைந்தன் நீ அருள்-எனக்கு ஒரு மகனை நீ அளித்தருளுவாயாக,' என்றுள்- என்று வேண்டிக்கொண்டாள்;

அமிருதம்நிமித்தமாகத்தேவாசுரர்களுக்குள் நிகழ்ந்தபோரில் திருமாலினுதவியினல் தேவர்கள் அசுரர்களைக்கொன்று அமிருதத்தையும் சுவர்க்கத்தையும் பெற்று இனிதிருந்தனராக, தன்மைந்தர்கள் தேவர்களாலிறந்தது கண்டு பெருந்துயரமடைந்த திதி, தன் கணவனைக் கிட்டி, 'உமது புத்திரர்களான தேவர்களால் என்புதல்வர் மாண்டனராதலால் தேவேந்திரனைக்கொன்று மூவுலகங்களையும் ஆளவல்ல ஒருபுதல்வனைப் பெறவிரும்புகின்றேன்; என்கருத்து நிறைவேறும்படி அருள்புரிந்து அதற்கு ஏற்பத் தவஞ்செய்யும்படி அநுமதியுந் தருக' என வேண்டினளென்க. திருமால் மோகினியவதாரமெடுத்து அசுரர்களைச்செயலொழிந்து மடியச்செய்ததற்குத் தேவர்களதுவேண்டுகோள் காரணமாதலால், 'இந்திராதியர்புணர்ப்பினுலிறந்தனர்' என்றது. பி - ம்:—[1]உழன்று. [2]மடிந்தனர். (503)

28.—தன் கணவன் கட்டளையால் திதி தவஞ்செய்தல்.

என்று கூறலு மகவுனக் களித்தன மினிநீ
சென்று பாரிடைப் பருவமோ ராயிரந் தீர
நின்று மாதவம் புரிதியே னினைவுமுற் றுதியென்று
அன்று கூறிடப் புரிந்தன [1]ளருந்தவ மணையாள்.

(இ - ள்.) என்று கூறலும் - இவ்வாறு (திதி) சொன்னவளவில், (காசியபன்), 'உனக்கு மகவு அளித்தனம் - நினக்குப் புத்திரனொருவனைக் கொடுத்தோம்; இனி-இனிமேல், நீ—,பாரிடைசென்று -(தவஞ்செய்தற்குத்தக்க) பூமியிலே போய், பருவம் ஓர் ஆயிரம் தீர -ஓராயிரம் வருஷகாலங்கழிய,நின்று மா தவம் புரிதிஏல்-நிலைநின்று பெரிய தவத்தைச் செய்வாயானல், நினைவு முற்றுதி - (உன்) எண்ணம் நிறைவேறப்பெறுவாய்,' என்று,—அன்று கூறிட - அப்

பொழுது சொல்லியருள, அனையாள் - அந்தத்திதி, அரும் தவம் புரிந்தனள் - (பிறர்செய்தற்கு) அருமையான தவத்தைச் செய்தாள்;

'நீ வேண்டியபடியே வரங்கொடுத்தேம்: நீ ஆயிரம் வருஷங்கள் நிரம்பும்வரையில் டரிசுத்தமாக இருந்து தவம்புரிந்தாயாயின் உனக்கு இந்திரனைக்கொல்லும் புதல்வன் தோன்றுவான்' என்று காசிபன் அருள, குசப்லவமென்றுபேர்வழங்கிய இந்த இடத்தில் திதி கடுந்தவம்புரியலாயின ளென்க. நினைவு முற்றுதி-தொழில், வினைமுதல்வினைகொண்டது. பி - ம்:—[1] மர்தவம். (504)

29.—திதி தவஞ்செய்வதுணர்ந்த இந்திரன் அவளுக்கு அடிமையிலமர்ந்து தவச்சோர்வில் அவள்கருப்பத்தைச் சிதைத்தல்.

கேட்ட வாசவ னன்னவட் கடிமையிற் [1]கிடைத்து
வாட்ட மாதவத் துணர்ந்தவள் வயிற்றுறு மகவை
வீட்டி யேயெழு கூறுசெய் திடுதலும் விம்மி
நாட்ட நீர்[2] தர மருத்தெனு நாமமு நவின்றான்.

(இ - ள்.) கேட்ட - (இச்செய்தியைக்) கேள்வியுற்ற, வாசவன்- இந்திரன், அன்னவட்கு அடிமையில் கிடைத்து - அவளுக்கு அடிமைத்தொழில் செய்யும் வேலையிலே அமர்ந்து, மாதவத்து வாட்டம் உணர்ந்து-(அவள்செய்துவரும்) பெருந் தவத்திலே ஒரு சோர்வை அறிந்து, (அச்சமயத்தில்), அவள் வயிறு உறு மகவை வீட்டி - (தான் நுண்ணிய உருக்கொண்டு) அவளது வயிற்றினுள்ளே (சென்று அங்குத்) தங்கிய கருப்பத்தைப் பிளந்து, எழு கூறுசெய்திடுதலும் - ஏழுதுண்டாக்கினவளவில், (அவள்) விம்மி - அழுது, நாட்டம் நீர்தர-கண்களில் நீரைப் பெருக்க, மருத்து எனும் நாமம்உம் நவின்றான்-(இந்திரன் அவள் விருப்பத்தின்படி அக்கண்டங்களுக்குச்) சப்தமருத்துக்களென்னும் பெயரையுங் கூறிப்போனான்; (எ-று.)—ஏ - அசை.

திதியென்பவள் தன்னைக்கொல்லும்புத்திரனைப் பெறத்தவஞ் செய்கின்றாளென்பதனை யறிந்த தேவேந்திரன் விநயம் முதலிய குணங்களோடு அவளுக்குப் பணியாளனாயமர்ந்து நின்றனனாக, திதியின் தவம் முற்றுப்பெறுவதற்குப் பத்து வருஷங்களிருக்கையில் ஒருநாள் நடுப்பகலில் அவள் *தலைமாட்டிற் காலைவைத்து உறங்க,அசுசிநேர்ந்த அச்சமயம்பார்த்து இந்திரன் நுண்ணியவுருவங் கொண்டு அவளது வயிற்றினுள்ளே சென்று அவள் கருப்பத்தை ஏழுதுண்டங்களாகப் பிளக்கையில் வயிற்றுக்கரு அழ, திதி, கண் விழித்து 'கருவைக் கொல்லவேண்டா' என்ன, இந்திரன் அவள் முன்னே தோன்றி, 'தாயே! உமக்குத்தூய்மை தப்பினமையால் நான் கருவை ஏழுதுண்டமாகச்சிதைத்தேன்; என் பிழையைப் பொறுக்க

*தெற்குப்புறம் தலைவைத்துப் படுக்கவேண்டுமென்ற ஸ்மிருதிக்கு மாறாக வடபுறம் தலைவைத்தாளென்றும், படுக்குங்கிருஷ்ணாஜிநத்தின்காற்புறந் தலைவைத்தாளென்றும் இவ்வாறு பொருள் கூறுவர்.

வேண்டும்' என்ன, திதியும் துயரமடைந்து அவ்விந்திரனைநோக்கி, 'என் தவற்றினால் என்கருப்பம் துண்டுபட்டது: உன்மீது பிழை யில்லை; என்புத்திரர்களான இவ்வெழுவரும் வாதஸ்கந்தாபிமான தேவதைகளாகி மாருதர்களென்று பேர்பெற்று எங்குஞ் சஞ்சரித் துக்கொண்டிருக்கவேண்டும்' என்ன, தேவேந்திரன் அவ்வேண்டு கோளுக்கிணங்கி அவ்வேழுதுண்டங்கட்கும் பெயர்தந்து எங்குஞ் சஞ்சரிக்கவிடுத்தனனென்ப. மருத்து - வாயு. சப்தமருத்துக்களின் பெயர் - ஆவகம், பிரவகம், சம்வகம், உத்வகம், விவகம், பரிவகம், பராவகம் என்பன. ஏழுமாருதங்களுக்கும் பிரமலோகம், இந்திரலோ கம், ஆகாயம், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்குஎன்னும் ஏழும் இடமென்று ஸ்ரீவால்மீகத்திற் கூறியுள்ளது. பி-ம்:—[1] கிடைப்ப. [2] வர. (505)

30.—விசுவாமித்திரன் சரவணத்தைக் காட்டுதல்.

[1] ஆய திவ்விட [2] மவ்விட மவிர்மதி யணிந்த
தூய வன்றனக் [3] குமைவயிற் றோன்றிய தொல்லை
[4] வாயு வும்புனற் கங்கையும் பொறுக்கலா வலத்த
சேய்வ ளர்ந்தருள் சரவண மென்பதுந் தெரித்தான்.

(இ - ள்.) ஆயது இ இடம்-இங்ஙனமாகிய வரலாற்றையுடை யது இந்த இடம்; அ இடம்-அந்த இடம்,—அவிர் மதி அணிந்த தூயவன் தனக்கு-விளங்குகின்ற சந்திரனைத்தரித்த பரிசுத்தனாகிய சிவபிரானுக்கு, உமைவயின்-உமாதேவியின் மூலமாக, தோன்றிய - பிறந்த, தொல்லை வாயுஉம் புனல் கங்கைஉம் பொறுக்கலா-பழமை யான வாயுதேவனாலும் நீர்மயமான கங்காதேவியினாலும் தாங்கமுடி யாத, வலத்த-வலிமையையுடைய, சேய்-செம்மைநிறமுடையசுப்பிர மணியக்கடவுள், வளர்ந்தருள் - வளர்ந்தருளிய, சரவணம் - நாணற் காடாகும், என்பதுஉம் - என்பதையும், தெரித்தான்-(கௌசிகமுனி இராமனுக்குத்) தெரிவித்தான்; (எ-று)

அவ்விடமென்றது - எதிரிற்சேய்மையிற் காணப்பட்டதொரு சோலையை. சேனாதிபதிவேணுமென்று வேண்டிய தேவர்களின் வேண்டுகோளினால் வாயுதேவனைச்சகாயமாகக்கொண்ட அக்கினி தேவன் சிவபெருமானது திருமேனியினின்று வெளிப்பட்ட வீரியத் தைத் தாங்கிக் கங்கையில்விட, அக்கங்கையும் தாங்கமாட்டாமல் கைலாயத்தினருகேயிருந்த நாணற்காட்டில்விட, சுப்பிரமணியக்கட வுள் அங்குத்தோன்றிக் கிருத்திகாநட்சத்திரங்கள் முலைகொடுக்க ஆறுமுகங்கொண்டு வளரலாயின னென்றறிக. கங்கையையடைந்த தும் முனிவனைக் கங்கையின்வரலாற்றைக் கூறுமாறு இராமன் கேட்க, அதனைச்சொல்லத்தொடங்குகையில் இமவானுக்குக் கங்கை பார்வதியென்று இரண்டுபுத்திரிகளெனத்தொடங்கி, பார்வதி சிவ பிரானை மணந்தது, குமரக்கடவுளையுண்டாக்கியது முதலிய வரலாறு களைக் கூறியதாக வந்துள்ளதன்றிச் சரவணத்தைச் சுட்டிக்காட்டிய தாக முதனூலிற் கூறப்படவில்லை. சர + வநம் = சரவணம். பி-ம்:— [1] ஆயதிப்புறம். [2] அப்புறத்து. [3] அரிவையில். [2] வாயுநற்கங்கையும் பரும். (506)

31.—சூரியோதய வருணனை.

காலன் மேனியிற் கருகிருள் கடிந்துல களிப்பான்
நீல வார்கலித் தேரொடு நிறைகதிர்க் கடவுள்
மாலின் மாமணி யுந்தியி னயனொடு [1]வந்த
மூல தாமரை முழுமலர் முளைத்தென முளைத்தான்.

(இ - ள்.) (பின்பு), காலன் மேனியின்-யமனது உடம்பினிறம் போல, கருகு-கறுத்துள்ள, இருள்-இருட்டை, கடிந்து-நீக்கி, உலகு அளிப்பான் - உலகத்தைக்காப்பவனாகிய, நிறை கதிர் கடவுள் - நிறைந்த கிரணங்களையுடைய சூரியபகவான், தேரொடுஉம்-(தனது) இரதத்துடனே, நீலம் ஆர்கலி-நீலநிறமாகிய கடலிலே, மாலின் மா மணி உந்தியின் அயனொடு வந்த மூலம் தாமரை முழு மலர்முளைத்து என-திருமாலினது கரிய அழகிய திருநாபியிலே பிரமனோடு தோன்றிய முதன்மையான பெரிய தாமரைமலர் முளைத்ததுபோல, முளைத்தான்-உதித்தான்; (எ - று.)

தற்குறிப்பேற்றம். திருமால்-கடலுக்கும், திருமாலினுந்தி - அக்கடலிற் சூரியன் தோன்றுகிற உதயபருவதத்தலத்துக்கும், பிரமன்-சூரியனுக்கும், தாமரைமலர் அவனதுதேருக்கும் உவமையெனக் காண்க. பிரமன் செந்நிறமுடையவனாதலால், சூரியனுக்கு உவமையாவன். உலகளிப்பான் - உலகத்தைக்காக்கும்பொருட்டு, முளைத்தான் என்றுமாம். பி-ம்:—[1]மலர்ந்த, வந்து. (507)

32.—மூவரும் கங்கையைக் காணுதல்.

அங்கு நின்றெழுந் தயன்முதன் மூவரு மனையார்
செங்க [1]ணேற்றவன் [2]செறிசடைப் [3]பழுவத்தி னிறைதேன்
பொங்கு கொன்றையீர்த் தொழுகலாற்[4]பொன்னியைப் பொருவுங்
கங்கை யென்னுமக் கரை[5]பொரு திருநதி கண்டார்.

(இ - ள்.) (சூரியோதயமானவுடன்), அயன் முதல்மூவர்உம் அனையார் - பிரமன்முதலான திரிமூர்த்திகளையும் ஒத்தவராகிய விசுவாமித்திரன் முதலிய மூவரும், அங்குநின்று எழுந்து-அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, செம் கண் ஏற்றவன் செறி சடை பழுவத்தில்-(கோபத்தாற்) சிவந்த கண்களையுடைய இடபத்தை வாகனமும் கொடியுமாகவுடையசிவபிரானதுநெருங்கிய ஜடாடவியிலுள்ள,நிறை தேன் பொங்கு-நிறைந்த தேனினால் விளங்குகின்ற, கொன்றை - (பொன்னிறமுள்ள) கொன்றைமலரை,ஈர்த்து ஒழுகலால்-இழுத்துக்கொண்டு பெருகுதலாலே,பொன்னியை பொருவும்-(பொன்னியென்னும்பெயர்பெற்றுப் பொன்னைக் கொழித்துவருகின்ற) காவேரிநதியை ஒக்கின்ற, கங்கை என்னும்-கங்கையென்கிற, அ-அந்த, கரை பொரு - இருகரைகளிலும் மோதுகின்ற, திரு நதி - அழகிய [மேன்மையான] யாற்றை, கண்டார் - பார்த்தார்கள்; (எ-று.)

திருமாலினது உலகமாகிய பரமபதத்திற்கு அருகிலுள்ள விரஜையென்கிற பரிசுத்தமான நதியினது அமிசமாய் நிலவுலகத்தில் திருமாலின்திருப்பதிகளுட் சிறந்த திருவரங்கம் பெரியகோயிலின்

இருபாலிலும் மாலைபோலச் சூழ்ந்துள்ள காவேரிநதியை, சுவர்க்க லோகத்தினின்று பூலோகத்துக்கு வந்த கங்காநதிக்கு உவமையாகக் கூறுதல் சிறப்புடையதாமாறு அறிக. எவரும் தமதுநாட்டிலுள்ள தைச் சிறப்பித்துக் கூறுதல் இயல்பு ஆதலால், கவி கங்கைக்குக் காவிரியை உவமைகூறினர்; உபமேயத்தினும் உபமானம் சிறந்திருத்தல்வேண்டு மென்பது, அலங்கார நூலார்கொள்கை. "கங்கையிற்புனிதமாய காவிரி" என்றார் பெரியார். "நலந்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும் நாரணன் பாதத்துழாயுங், கலந்திழி புனலாற் புகர்படு கங்கை" என்னும் பெரியார் பாசுரத்துக்கு ஏற்ப,'செங்கணேற்றவன் செறிசடைப் பழுவத்தினிறைதேன், பொங்கு கொன்றையீர்த் தொழுகலால்' என்றார். 'வெண்ணிறக்கங்கை பொன்னிற மலரைக்கொண்ட கொன்றையையீர்த்தொழுகலாற் பொன்னியைப் பொருவும்' என்றார். பிரமன் - பிரமவிருடிப்பட்டத்தை அரிதிற் பெற்ற விசுவாமித்திரனுக்கும், விஷ்ணு - அவனது அவதாரவிசேஷமான ஸ்ரீராமனுக்கும், சங்காரக் கடவுளான உருத்திரன் - முன்கோபமுடைய லக்ஷ்மணனுக்கும் உவமையாவர். அத்திருநதி என்ற சேய்மைச்சுட்டு, அந்நதியின் சிறப்பை விளக்கிற்று. பி-ம்:—[1]ஏற்றுவன். [2]செஞ். [3]பருவத்தின். [4]பொன்னியல், பொன்னியிற். [5]பொருந். சிலபிரதிகளில் இங்குக் கங்கைவரலாற்றுப்படலம் தொடங்குகின்றது. (508)

33.—இதுமுதல் இருபத்தொன்பதுகவிகள்–ஒருதொடர்: கங்கையின்வரலாறு:—

முனிவன் சகரனென்றொருவ னுளனெனல்.

இந்த மாநதிக் குற்றுள [1] தகைமைய யாவும்
எந்தை கூறுகென் றிராகவன் வினவுற வெனையாள்
மைந்த நின்றிரு மரபுளா னயோத்திமா நகர்வாழ்
விந்தை சேர்புயன் சகரனிம் மேதினி புரந்தோன்.

(இ - ள்.) 'இந்த மா நதிக்கு-இப்பெரிய யாற்றுக்கு, உற்று உள-அமைந்துள்ள, தகைமைய யாஉம்-பெருமையுடைய வரலாறுகளனைத்தையும், எந்தை-எனது தந்தைபோற்சிறந்த முனிவனே! கூறுக-சொல்வாயாக,' என்று—, இராகவன்-ஸ்ரீராமன், வினவுற - கேட்க,—(விசுவாமித்திரன் சொல்வான்):—எனை ஆள்மைந்த - என்னைக்காத்தருளின [அடிமைகொண்ட] சக்கரவர்த்தி திருமகனே! நின் திரு மரபு உளான்-உனது [நீ அவதரித்த]மேலான சூரியகுலத்திலே பிறந்துள்ளவனும், மா அயோத்திநகர் வாழ்-பெரிய அயோத்தியையென்னும் பட்டணத்திலே அரசாண்டு வந்த, விந்தை சேர் புயன்-வீரமகள் பொருந்திய தோளுடையவனும் ஆகிய, சகரன்-சகரனென்பவன், இ மேதினி புரந்தோன்-இந்தப் பூமி முழுவதையும் ஒருவனாய் அரசாண்ட சக்கரவர்த்தி; (எ - று.)—இக்கவியில் 'வினவுற' என்பது, மேல் 62-ஆம் கவியில் "என்று கூறலும்" என இயையும்.

விசுவாமித்திரன், தனது வேள்வியை இராமன் காத்ததனாலும், தான் தத்துவஞானமுடையவனாதலாலும், ஸ்ரீராமனை 'எனையாள்

மைந்த' என்றான். விந்தை-விந்த்யவாஸிநீ யென்பதன் திரிபென்பர்; போருக்கு உரிய தேவதை காளியாதலாலும், அவளருளே வெற்றிக்குக் காரணமாதலாலும்,அவள் வாழிடம் விந்த மலையாதலாலும், வீரத்தைத் தோள்வலியென்பதுமரபாதலாலும் 'விந்தைசேர்புயன்' என்றான்: ''அந்தரியிருந்த, விந்தமால்வரை'' ''விந்தைவாழ்வுகூர் விறன்மிகுத்ததோள்'' என்பன, இங்கு நோக்கத்தக்கன. சகரன்-விஷத்தோடு கூடப் பிறந்தவன்; கரம்-விஷம்: பாகுஎன்னும் அரசனது மனைவிகளுளொருத்தி கர்ப்பவதியாயிருக்க, அவளுடைய சக்களத்தி அழுக்காறு கொண்டு அக்கருவை அழித்தற்கு அவளுக்கு விஷத்தைக் கொடுக்க, அந்த விஷம் அக்குழந்தையை அழித்தற்கு ஆற்றலில்லாமற் கூடவேயிருக்க, அதனோடு பிறந்தவன். மேதிநீ - வடசொல்: திருமாலால், வதைக்கப்பட்ட மதுகைடபர்களின் மேதசினால் [கொழுப்பினால்] நனைந்ததென்பது பொருள். பி - ம்:—[1] தன்மையது. (509)

34.—சகரனது புத்திரர்களும் பௌத்திரனும்.

விறல்கொள் வேந்தனுக் குரியவ ரிருவரில் விதர்ப்பை
பொறையி னல்கிய [1]வசமஞ்சற் கஞ்சுமான் புதல்வன்
பறவை வேந்தனுக் கிளையமென் சுமதிமுற் பயந்த
அறனின் மைந்தர்க [2]ளறுபதி னாயிரர் வலத்தார்.

(இ - ள்.) விறல் கொள் - ஜயத்தைக்கொண்ட, வேந்தனுக்கு- அந்தச் சகரமகாராஜனுக்கு, உரியவர் - உரியமனைவிமார், இருவரில்- இரண்டுபேர்களுள், விதர்ப்பை - விதர்ப்பதேசத்தரசனது மகளாகிய முதல்மனைவி,பொறையின் நல்கிய-கருப்பத்திற் சுமந்து [பொறுமையோடு] பெற்ற, அசமஞ்சற்கு-அசமஞ்சனென்பவனுக்கு,அஞ்சுமான்-அம்சுமா னென்பவன், புதல்வன்-புத்திரனாவன்; பறவை வேந்தனுக்கு இளைய மெல் சுமதி-பட்சிகளின் அரசனாகிய கருடனுக்குத் தங்கையான மென்மைக்குணமுடைய சுமதியென்னும் இரண்டாம் மனைவி, முன் பயந்த-முன்னே பெற்ற, அறனின் மைந்தர்கள்- தருமவழியையுடைய குமாரர்கள், அறுபதினாயிரர் - அறுபதினாயிரம்பேர்; (அவர் யாவரும்), வலத்தார் - மிக்கவலிமையுள்ளவர்கள்; (எ - று.)

விதர்ப்பை-பிறந்தநாட்டினால்வந்த பெயர்; இவளுக்குக் கேசினி யென்பது இயற்பெயர். சகரசக்ரவர்த்தி தன்மனைவியரிருவரோடும் இமாலயத்தினருகிலிருக்கும் பிருகுப்ரஸ்ரவணமென்னும் மலையிற் சென்று தவம்புரிகையிற் பிருகுமகாமுனி பிரசன்னனாகி 'உன்மனைவியரிருவரில் ஒருத்தி வம்சவிருத்திகரனான புத்திரனொருவனையும் மற்றொருத்தி மகாபலசாலிகளான மக்களறுபதினாயிரவரையும் பெறுவர்'என்று அநுக்கிரகிக்க அங்ஙனமே கேசினி ஒருபுத்திரனைப் பெற, சுமதி சுரைக்காயைப்போலொரு கர்ப்பபிண்டத்தைப் பெற, வெடித்த அதினின்று அறுபதினாயிரகுமாரர்கள் தோன்றின ரென்றும்: மூத்தாளது மகன் பெயர் அஸமஞ்சனென்றும்: அவன் ஊரிலுள்ளாரின் குழந்தைகளைக்கொண்டுபோய்ச் சரயுநதிநீரிற் போகட்டு அவை துடித்து மரிப்பதைக் கண்டு சிரித்துவிளையாடுங் கொடுங்

தொழிலுடையனு யிருந்ததனல் அவனைத் தந்தை காட்டுக்குத் துரத்திவிட்டா னென்றும் முதனூலிற் கூறப்பட்டுள்ளன. பொறை-கருப்பம்: பொறுக்கப்படுவ தென்று காரணப்பொருள்; பொறுத்தல்-பரித்தல். சுமதியென்பதற்கு - நல்லறிவுடையவளென்றும், அம்சுமா னென்பதற்கு - ஒளியுடையவனென்றும் பொருள். சுமதி-காசியப முனிவனுக்கு விநதையினிடம் தோன்றினவள்:கருடனுக்கு உடன்பிறந்தவள். அறனின்மைந்தர், இன் - சாரியை. மூத்தாள் மகன்போல இளையாள்மக்கள் பாவிகளல்ல ரென்பார், அவர்களை 'அறனின்மைந்தர்' என்றூர்; இனி கபிலமுனிவனைக் காரணமில்லாமல் முன்கோபத்தால் ஆராயாது குற்றமுடையனுக்கருதி விரைந்துவைதன ரென வருதலின், அறன் இல் மைந்தர் எனப் பிரித்து - தருமமில்லாத மக்களென்றுமாம். பி - ம்:—[1]போசணனென்ருெரு, போசனனென்றுளனெருரு. [2]ஆறயுதர் மற்றஞ்சுபானவன்சேய். (510)

35.—சகரன் அசுவமேதஞ்செய்ய, வேள்விக்குதிரையை இந்திரன் ஒளித்தல்.

திண்டி றற்புனை சகரனுந் தனயர்[1]சே வகங்கள்
கண்டு முற்றிய வயமகம் புரிதலுங் கனன்று
வண்டு துற்றதார் வாசவற் [2]குரைத்தனர் வானோர்
ஒண்டி றற்பரி கபிலன திடையினி னொளித்தான்.

(இ - ள்.) திண் திறல் புனை சகரன்உம் - மிக்கவலிமையைப் பொருந்திய சகரமகாராசனும், தனயர் சேவகங்கள் கண்டு - (தன்) புத்திரர்களது பராக்கிரமத்தைப் பார்த்து, முற்றிய அயமகம் புரிதலும் - (சிறப்பால்)மிக்க அசுவமேதயாகத்தைச் செய்யத்தொடங்கிய வளவில், வானோர் - தேவர்கள், கனன்று - (அதனை அறிந்து) கோபங்கொண்டு, வண்டு துற்ற தார் வாசவற்கு - வண்டுகள்நெருங்கிய பூமாலையையுடைய இந்திரனுக்கு, உரைத்தனர் - (செய்தியைக்) கூறினுர்கள்; (அவ்விந்திரன் உடனே), ஒண் திறல் பரி-பிரகாசமான வலிமையையுடைய அந்தயாகக்குதிரையை, கபிலனது இடையினின் - (பாதாளலோகத்திற்) கபிலமுனிவனது பின்புறத்திலே, ஒளித்தான்-(மாயையாற்கொண்டுபோய்) மறைத்துவைத்தான்;

பூலோகத்தில் எவனுயினும் நூறு அசுவமேதயாகஞ்செய்து முடித்துவிட்டால் உடனே அப்போது இருக்கின்ற தேவேந்திரனை அப்பதவியினின்றும் ஒழித்துவிட்டு இவனை இந்திரனுக்கிவிடுவது இயல்பு: ஆனதுபற்றி அசுவமேதயாகத்துக்கு இந்திரன் தன்னுலியன்றவளவு இடையூறுசெய்வது வழக்கம்;அப்படியே சகரன் அம்சுமானைப் பாதுகாப்பவனுக நியமித்துப் பூமிப்பிரதக்ஷிணத்தின் பொருட்டு விடுத்த உத்தம அசுவத்தை இந்திரன் மாயையாற் கவர்ந்துசென்று, பாதாளலோகத்திலே பெருந்தவஞ்செய்யும் கபில முனிவனது பின்புறத்தி லுள்ளதொரு மரத்தடியிற்கட்டிப்போயினு னென்க. திருமாலின் அமிசாவதாரமாயுள்ள இவன் தவஞ்செய்கையில் தான் விழித்துநோக்கினுல் முதற்பார்வையில் எதிர்நின்றவர் எரிந்திறந்து போம்படி சங்கற்பித்துள்ளவன். தத்காலத்தில் தங்க

னுக்குத் தலைவனாகவுள்ளவனுக்கு விரோதமான காரியமாதலால், தேவர் தம்மை நோக்கிச் செய்யப்படுகின்ற அசுவமேதயாகத்தை அறிந்து மகிழாமற் கோபிப்பாராயினர். முற்றிய - விதிப்படி இலக்கணங்கள் நிறைந்த என்றும்பொருள் கூறலாம். பி - ம்:—[1]சேவகந்தான். [2]உணர்த்தினர். (511)

36.—அம்சுமான் வேள்விக்குதிரை கவரப்பட்டதைப் பாட்டனிடம் தெரிவித்தல்.

வாவு வாசிபின் சென்றன னஞ்சுமான் மறுகிப்
பூவி லோரிட மின்றியே நாடினன் புகுந்து
தேவர் கோமகன் கரந்தமை [1]யறிகிலன் றிகைத்து
மேவு தாதைதன் றாதைபா லுரைத்தனன் மீண்டு.

(இ - ள்.) வாவு வாசி பின் சென்றனன்-தாவிச்செல்கின்ற குதிரையின் பின்னே (காவலனாகப்) போனவனாகிய, அஞ்சுமான் - அம்சுமான், மறுகி-(குதிரையைக்காணாமல்) கலங்கி, தேவர் கோமகன் கரந்தமை அறிகிலன்-தேவராசனான இந்திரன் ஒளித்ததை அறியாதவனாய், திகைத்து - மனம்மயங்கி, பூவில் ஓர்இடம் இன்றிஏ நாடினன் -பூலோகத்தில் ஒரு இடமும் மிச்சமில்லாமல் (முழுவதுஞ் சென்று) தேடிப்பார்த்து, (எங்குங்காணாமல்), மீண்டுபுகுந்து - திரும்பி வந்து, மேவு தாதைதன் தாதைபால் - (யாகத்தைமுடிக்க வேணுமென்று) விருப்பங்கொண்டுள்ள தன்தந்தையின் தந்தை சகரனிடத்து, உரைத்தனன் - (செய்தியைச்) சொன்னான்; (எ-று.)

வாசி - வாஜி; வடசொல். பி - ம்:—[1]அறிந்திலன். (512)

37.—சகரன் வேள்விக்குதிரை காணாதுபோனதை மக்களிடம் தெரிவிக்க, அவர்கள் பாதலம்வரையில் தோண்டித் தேடிப் பார்த்தல்.

கேட்ட வேந்தனு மதலையர்க் கம்மொழி [1]கிளத்தி
வாட்ட மீக்கொளச் சகரர்கள் வடவையின் மறுகி
நாட்டம் வெங்கனல் பொழிதர நானிலந் [2]தடவித்
தோட்டு நுங்கினர் புவியினைப் பாதலந் தோன்ற.

(இ - ள்.) கேட்ட - (அஞ்சுமான்சொன்னதைக்) கேள்வியுற்ற, வேந்தன்உம்-சகரனும், மதலையர்க்கு-(தனது) குமாரர் அறுபதினாயிரவருக்கு, அ மொழி கிளத்தி - அந்த வார்த்தையைச்சொல்லி, வாட்டம் மீக்கொள-மனவருத்தம் அதிகப்பட்டிருக்க,—சகரர்கள் - (அதுகேட்ட) சகரகுமாரர்கள், வடவையின் மறுகி - வடபாமுகாக்கினிபோலக் கோபித்து, நாட்டம் வெம் கனல் பொழிதர - (அக்கோபத்தால்) கண்கள் கொடிய நெருப்பைச் சொரிய, நானிலம் தடவி -பூமிமுழுவதும் தேடிப்பார்த்து, (யாகக்குதிரையைக்காணாமையால்), பாதலம்தோன்ற-பாதாளலோகந்தெரியும்படி, புவியினை - பூமியை, தோட்டு நுங்கினர்-தோண்டி யெடுத்தார்கள்; (எ - று.)

வேள்விக்குதிரை காணமற்போனதை அம்சுமான் சகரனுக்கு உணர்த்த, அவன் தன்மக்கள் அறுபதினாயிரவர்க்கு அதனைத்

தெரிவிக்க, மகாபலவான்களான அவர்கள் கடுஞ்சினங்கொண்டு பூமிமுழுதும் தேடிப்பார்த்தும் அக்குதிரை யகப்படாமையால் பாதாளலோகத்திலும் தேடுமாறு அப்பாதாளத்திற்குச்செல்லும் வழியைத் தோண்டி யுண்டாக்கின ரென்பதாம். வடவை - பெண் குதிரை; அது - இங்கே அதன் முகத்திலுள்ள நெருப்புக்கு இட வாகுபெயர். கடலிடையிலே வாழும் ஒருபெண்குதிரையின் முகத் திலே நெருப்பு எப்பொழுதும் அவியாமலிருக்கின்றதென்றும், அது மழைநீர் முதலியவற்றாற் கடல் பொங்காதபடி நீரை உறிஞ்சியிற்கிற தென்றும், அதுவே பிரளயகாலத்துக் கடலினின்று வெளிப்பட்டு உலகங்களை எரித்து அழிக்குமென்றும் கூறுப. 'தொட்டு' என்பது எதுகையின்பநோக்கி 'தோட்டு' என நின்றது. பி ம்:—[1]கிளத்த. [2]துருவித். (513)

38.—சாகரர் பாதலஞ்சென்று கபிலமுனிவன் பின்னே குதிரையைக்கண்டு அவனை வருத்துதல்.

நூறி யோசனை [1]யகலமு மாழமு நுடங்கக்
கூறு செய்தன [2]ரென்பரால் வடகுண திசையின்
ஏறு மாதவக் [3]கபிலன்பி னிவுளிகண் [4]டெரியிற்
சீறி வைதனர் [5]செருக்கினர் நெருக்கினர் செறுத்தார்.

(இ - ள்.) (அச்சகரகுமாரர்கள்), நூறு யோசனை அகலம்உம் ஆழம்உம் நுடங்க - நூறு யோசனையவ்வளவு அகற்சியும் (மிக்க) ஆழமுமாய்க் குழியும்படி, வடகுணதிசையின் - வடகிழக்குத் திக்கிலே, கூறு செய்தனர்-(பூமியைத்) தோண்டுதல் செய்தார்கள், என்பர் - என்று (முதனூலாசிரியர்) சொல்வர்; (அங்ஙனந் தோண்டினபின்பு அவர்கள்), ஏறு மாதவம் கபிலன்பின் - மேன் மேல்வளர்கின்ற பெருந்தவமுள்ள கபிலமுனிவன்பின்னே, இவுளி கண்டு - (தம்) குதிரையைப்பார்த்து, எரியின் சீறி - நெருப்புப் போல (உக்கிரமாக)க் கோபித்து, வைதனர் - (அவனைநோக்கி) வசைச்சொற்கள் சொல்லி, செருக்கினர் - கர்வமுடையவர்களாய், நெருக்கினர் - (அம்முனிவனைச் சுற்றிலும்) நெருங்கச்சூழ்ந்து கொண்டு, செறுத்தார்-வருத்தினார்கள்; (எ-று.)

சகரபுத்திரர்கள் பூமியின் வடகீழ்திசையில் நூறுயோசனை யகலமும் ஆழமும் பொருந்துமாறு தோண்டி அவ்வழியாகப் பாதாளத்திற்குச் சென்று அங்குத் தவஞ்செய்திருந்த கபில முனிவனது பின்னே குதிரையைக் கண்டு 'இவனே குதிரையைக் கவர்ந்த கள்வன்' என்று அநுமானங்கொண்டு சினந்து வருத்தி, அம்முனிவனது தவத்திற்கு இடையூறுஇயற்றினார்களென்றபடி. யோசனையென்பது ஜைநநூல்வழக்கு. பி - ம்:—[1]அகலமாமதலமும். [2]நவமதாய், ஒன்பதா. [3]கபிலனில். [4]எரியச். [5]தருக்கினர். (514)

39.—கபிலனதுசினத்தாற் சாகரர்சாம்பராக, தூதர் அரசனுக்கு உணர்த்தல்.

மூளும் வெஞ்சினத் தருந்தவன் முனிந்[1]தெரி விழிப்பப்
பூளை [2]சூடிதன் கையினி லெயில்[3]பொடிந் தனபோல்

ஆளு [4]மைந்தரா றயுதருஞ் சாம்பரா யவிந்தார்
வேள்வி [5]கண்டநல் வேந்தனுக் குரைத்தனர் [6]வேய்கள்.

(இ - ள்.) மூளும் வெம் சினத்து - பொங்குகின்ற கொடிய கோபத்தையுடைய, அரு தவன்-அருமையான தவத்தையுடைய அக்கபிலமுனிவன், முனிந்து-சீறி, எரி விழிப்ப-நெருப்புப்போலக் கண்ணைதிறந்துபார்த்தவளவில், பூளைசூடி தன் நகையினில் எயில் பொடிந்தன போல்-பூளைப்பூவைத் தரித்த பரமசிவனதுபுன் சிரிப்பினாலே திரிபுரங்கள் சாம்பராயினபோல, ஆளும் மைந்தர் ஆறு அயுதர்உம் சாம்பர் ஆய் அவிந்தார்-அரசாளுதற்குரிய ராஜ குமாரர்கள் அறுபதினாயிரம்பேரும் சாம்பராகி ஒழிந்தார்கள்; (இச் செய்தியை), வேய்கள்-ஒற்றர்கள், (போய்), வேள்வி கண்ட நல் வேந்தனுக்கு - யாகத்தைச்செய்யத்தொடங்கிய நற்குணமுடைய சகரனுக்கு, உரைத்தனர்—; (எ - று.)

பூளைசூடி-பெயர். பூளை-அதன்மலருக்கு, முதலாகுபெயர். பூளை-உழிஞையென்பர். பி - ம்:—[1]எதிர். [2]கொண்டவன். [3]பொடித்தன. [4]மைந்தர்களறுபதினாயிரர். [5]கொண்ட. [6]வேவர், வெய்தின். (515)

40.—புத்திரசோகத்தால் வருந்திய சகரன் கட்டளைப்படி அம்சுமான் குதிரைகொணரப் பாதலஞ் சார்தல்.

[1]உழைத்து வெந்துயர்க் [2]கீறுகாண் கிலனுணர் [3]வொழியா
அழைத்து [4]மைந்தன்றன் மைந்தனை யவர்கழிந் தனரேல்
இழைத்த வேள்வியின் றிழப்பதோ [5]வெனவவ னெழுந்து
தழைத்த மாதவக் கபிலன்வாழ் பாதலஞ் சார்ந்தான்.

(இ - ள்.) (அதுகேட்ட சகரன்), உழைத்து-(புத்திரசோகத்தால்) வருந்தி, வெம் துயர்க்கு ஈறு காண்கிலன்-கொடிய தனது துன்பத்திற்கு ஒருமுடிவைக் காணாதவனாய், உணர்வு ஒழியா - அறிவுஒடுங்கி (பிறகுதேறி), மைந்தன் தன் மைந்தனை அழைத்து-(தனது) புத்திரனது புத்திரனை அம்சுமானைக்கூப்பிட்டு, 'அவர் கழிந்தனர்ஏல்-அப்புத்திரர்கள் இறந்து போய்விட்டாராயின், இழைத்த வேள்வி இன்று இழப்பதுஓ - செய்யத்தொடங்கிய யாகத்தை இப்பொழுது (யான்) செய்யாதுவிடுவதோ?' என - என்று கேட்க,—அவன்-அம்சுமான், எழுந்து - புறப்பட்டு, தழைத்த மாதவம் கபிலன் வாழ் - மிகுந்த பெருந்தவத்தை யுடைய கபிலன் வாழ்கின்ற, பாதலம்-பாதாளலோகத்தினிடத்தை, சார்ந்தான் - அடைந்தான்; (எ - று.)

தனதுபுத்திரர் அறுபதினாயிரவரும் இறந்தொழிந்ததுகேட்ட தனாற் பெருந்துயரடைந்த சகரன் தனது பேரனாகிய அம்சுமானை விளித்து 'மைந்தரைத்தான் இழந்தேனே! யாகத்தையும் இழப் பதோ!!' என்று வருந்திக்கூற அவ்வரசனது கருத்தை யுணர்ந்த அம்சுமான் உடனே வேள்விக்குதிரையைக் கொணர்வதாகச் சொல்லிப் புறப்பட்டுப் பாதலஞ்சென்றனனென்க. கழிந்தனரேல் - கழிந்தனராதலால் என்றபடி; என்னில் என்னும் எதிர்காலவினை

யெச்சத்தின் திரிபாகிய 'ஏல்' என்றது - இங்கே ஏதுப்பொருளை விளக்கிற்று. பி - ம்:—[1] உழைத்த. [2] ஊறு. [3] ஒழியாது. [4] மைந்தனன். [5] என்றனன். (516)

41.—சிறுதாதையரின் கதியை யுணர்ந்து திடுக்கிட்ட அம்சுமான் கபில முனிவனிடத்தினின்று வேள்விக் குதிரையைப் பெறுதல்.

விண்டு நீங்கின ருடட[1] லுகு பிறங்கல்வெண் [2] ணீறு
கண்டு [3] துண்ணெனு மனத்தினன் கபிலமா முனிதன்
[4] புண்ட ரீகநற் றுடொழு [5] தெழுந்தனன் [6] புகலக்
கொண்டு[7] போகநின் னிவுளியென் றுற்றதுங் குறித்தான்.

(இ - ள்.) (சேர்ந்த அம்சுமான் அங்கே), விண்டு நீங்கினர் - இறந்தொழிந்த தன் தாதையரது, உடல் - உடம்புகள், உகு - சிந்தின, பிறங்கல் வெள் நீறு - மலைபோன்ற வெண்ணிறச்சாம்பர்க் குவியலை, கண்டு—, துண்ணெனும் மனத்தினன் - திடுக்கிட்ட நெஞ்சையுடையவனாய், கபில மா முனி தன் புண்டரீகம் நல் தாள் தொழுது - கபிலமகாமுனிவனது தாமரைமலர்போன்ற அழகிய திருவடிகளில் விழுந்து வணங்கி, எழுந்தனன் - எழுந்துநின்று, புகல - (தான் வந்த காரணத்தை அம்முனிவனிடத்து)ச் சொல்ல,- (கபிலன்), நின் இவுளிகொண்டு போக என்று-'உனது குதிரையைக் கொண்டுபோகுக' என்றுசொல்லி, உற்றதுஉம் குறித்தான்-நடந்த செய்தியையுஞ் சொன்னான்; (எ - று.)

பாதலஞ்சேர்ந்த அம்சுமான் தனது சிறிய தந்தையர் இறந்து சாம்பராய்க்கிடப்பது கண்டு திடுக்கிட்டு, பிறகு 'இங்கிருக்கும் கபிலமுனிவனிடஞ் சொல்லாமல் வேள்விக்குதிரையைக் கொண்டு சென்றால் தனக்கும் ஏதேனும் தீங்கு நேருமோ?' என்று அஞ்சி அம்முனிவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கி யெழுந்து தான் வந்த காரணத்தைத் தெரிவிக்க, அம்முனிவன் வேள்விக்குதிரையைக் கொண்டுபோமாறு அனுமதிதந்து நடந்த செய்தியையுங் கூறினனென்பதாம். உற்றது - இந்திரன் குதிரையைக் கொணர்ந்து ஒளித்ததும், அதனை அறியாது தன்னைவைத சகரகுமாரர்கள் தன்கோபத்தீக்கு இலக்கானதும். பி - ம்:—[1] உறு. [2] நீற்றை. [3] துண்ணென்ற. [4] புண்டரீகமென். [5] எழுதலும். [6] புகழ்ந்து, புகழ. [7] போகு. (517)

42.—சகரசக்கரவர்த்தி யாகத்தைப் பூர்த்திசெய்து, தன்பேரனுக்கு முடிசூட்டிப் பரலோகஞ்சேர்தல்.

பழுதி லாதவ னுரைத்தசொற் கேட்டலும் பரிவால்
தொழுது [1] வாம்பரி [2] கொணர்ந்தவி [3] சுரர்களுக் கீயா
முழுதும் வேள்வியை முற்றுவித் தரச னு முடிந்தான்
எழுது [4] கீர்த்தியாய் மைந்தனுக் கரசிய லீந்து.

(இ - ள்.) எழுது கீர்த்தியாய் - (யாவராலும் நூல்களிலே) எழுதப்படுகின்ற புகழையுடைய ஸ்ரீராமனே! பழுது இலாதவன் உரைத்த சொல் கேட்டலும்-குற்றமில்லாத அம்முனிவன் சொன்ன

வார்த்தையைக் கேட்ட பின்பு, (அம்சுமான்), பரிவால் தொழுது - (முனிவனை) அன்போடு வணங்கி, வாம் பரி கொணர்ந்து - தாவிச் செல்லுந்தன்மையுள்ள அக்குதிரையைக்கொண்டுவர, அரசன்உம் - சகரனும், சுரர்களுக்கு அவி ஈயா - தேவர்களுக்கு அவிசைக் கொடுத்து, வேள்வியை முழுதுஉம் முற்றுவித்து - யாகத்தை முழுவதும் பூர்த்திசெய்துவிட்டு, (பின்பு) மைந்தனுக்கு - புதல்வனான அம்சுமானுக்கு அரசு இயல் ஈந்து - அரசுரிமையைக்கொடுத்து, முடிந்தான் - இறந்தான்; (எ - று.)

பழுது - காரியம் வெகுளி மயக்கம் முதலியன. எழுது கீர்த்தி - அவரவர்மனத்திற் பதியவைத்துக்கொள்ளுங் கீர்த்தி யென்றுமாம். கொணர்ந்து - கொணர; எச்சத்திரிபு. பி - ம்:—[1]வெம். [2]கொணர்ந்தது. [3]சுரபதிக்கு. [4]சீர்த்தியாய். (518)

43.—அம்சுமானுடைய வமிசத்திற் பகீரதன் பிறத்தல்.

சகரர் [1]தொட்டலாற் சாகர மெனப்பெயர் தழைப்ப
மகர வாரிதி சிறந்தது மகிதல முழுதும்
நிகரின் மைந்தனே புரந்தன [2]னிவனெடு மரபிற்
பகிர தன்னெனும் [3]பார்த்திபன் [4]வந்தனன் பரிவால்.

(இ - ள்.) சகரர் தொட்டலால் - சகரகுமாரர்கள் தோண்டியதனால், சாகரம் என பெயர் தழைப்ப - சாகரமென்றுபெயர் விளங்க, மகரம் வாரிதி - மீன்களையுடைய கடலானது, சிறந்தது - சிறப்புப் பெற்றது; மகிதலம் முழுதுஉம் - பூமியினிடம் முழுவதையும், நிகர் இல் மைந்தன்ஏ - ஒப்பில்லாத குமாரனாகிய அம்சுமானே, புரந்தனன் - காத்துவந்தான்; இவன் நெடு மரபில் - இவனது நீண்ட [பெரிய] வமிசத்திலே, பகிரதன் எனும் பார்த்திபன் - பகீரதனென்னும் அரசன், பரிவால் - அன்போடு, வந்தனன் - தோன்றினான்; (எ - று.)

அம்சுமானது குமாரன் திலீபனும், திலீபனதுமகன் பகீரதனும் என அறிக. பகிரதன் - எதுகை நோக்கிய குறுக்கல். 'பகிரதன் பரிவால் வந்தனன்' என்றது, தனது குலமுன்னோராகிய சகரகுமாரரிடத்து, மற்றை அம்சுமான் முதலியோரினும் இவன் அன்புடையனாய் அவர்களை நற்கதிபெறுவித்தற்பொருட்டுத் தான் மிகவருந்திப் பலகாலம் அருந்தவம் புரிந்து கங்கைகொணர்ந்த கருணையுடையோனாதலின்; இனி, பரிவால் திகிரியைஉருட்டி [அரசாண்டு] என வருங் கவியோடு இயைத்தலுமாம். பார்த்திபன் = பார்த்திவன்: பிருதிவியையாளுபவன்; பிருதிவி: பூமி; பிருதுஎன்னுஞ் சக்கரவர்த்தியாற் சீர்திருத்தப்பட்டமைபற்றி வந்த காரணக்குறி. பகிரதன்னெனும் - விரித்தல். பி-ம்:—[1]தொட்டதால். [2]அவன். [3]பார்த்திவன். [4]வந்தவதரித்தான். (519)

44.—பகீரதன் தன்முன்னோர்களின் செய்தி கேட்டதும், பின்னும் வசிஷ்டனை வினவத்தொடங்கல்.

உலகம் யாவையும் பொதுவறத் திகிரியை யுருட்டி
இலகு மன்னவ [1]னிருந்துழி [2]யிறந்தன வினவ

அலகி றெென்முனி [3]யிறந்தன வுரைத்திட வரசன்
திலக மண்ணுற வணங்கிநின் றெருமொழி செப்பும்.

(இ - ள்.) உலகம் யாவையும் - எல்லாவுலகங்களிலும், பொது அற-(அவை பல அரசர்க்குப்) பொதுவாயிருக்குந்தன்மை நீங்கித் தன்னொருவனுக்கே உரியனவாம்படி, திகிரியை உருட்டி-ஆஜ்ஞா சக்கரத்தைச் செலுத்தி, இலகும் - விளங்குகின்ற, மன்னவன் - பகீரதசக்கரவர்த்தி, இருந்தஊழி-அரசாண்டிருந்தபொழுது, (ஒருநாள்), —இறந்தன வினவ-நிகழ்ந்த செய்தியை (என்னென்று) கேட்க, அலகு இல் தொல் முனி இறந்தன உரைத்திட - (தவமகிமைக்கு ஒரு) எல்லையில்லாத பழமையான வசிட்டமுனிவன் நடந்தவற்றைச் சொல்ல, அரசன் - பகீரதன், (கேட்டு), திலகம் மண் உற வணங்கி நின்று - (தனது நெற்றியிலுள்ள) திலகம் நிலத்திலேபடும்படி (தனதுகுலகுருவாகிய அம்முனிவனைச் சாஷ்டாங்கமாக) நமஸ்கரித்து (எழுந்து) நின்று, ஒரு மொழி செப்பும் - (அவனை நோக்கி) ஒரு வார்த்தை கூறுவான்; (எ-று.)—அதனை மேற்கவியிற் காண்க.

பகீரதன் தன்குலகுருவாகிய வசிட்டனிடத்தில் தன் முன்னோர்களின்வரலாறு கேட்டுவருகையில், அம்முனிவன் சுராசுரர்களின்வரலாற்றைக் கூற, அதுகேட்ட பகீரதன் தன்குருவினிடம் ஒன்று கூறலாயினனென்க. பி - ம்:—[1]இறந்தன. [2]இறந்தமை. [3]உரைத்திடக்கேட்டனன். (520)

45.—பகீரதன் தன் மூதாதையர்க்கு நற்கதியுண்டாம் வகையை வினவ, வசிட்டன் கூறத்தொடங்குதல்.

கொடிய மாமுனி வெகுளியின் மடிந்தவெங் குரவர்
முடிய நீணிர யத்தினி [1]லழுந்திடு முறைமை
கடியு மாறெனக் கருந்தவ [2]மமைகுறு கருமம்
அடிகள் [3]சாற்றுக வென்றலு மந்தண னறைவான்.

(இ - ள்.) 'கொடிய மா முனி - கோபத்தாற் கொடுமையையுடைய கபிலமாமுனிவனது, வெகுளியின்-கோபத்தினால், மடிந்த-இறந்துபோன, எம் குரவர்-எமது குலத்து முன்னோர்கள், முடிய-முழுவதும், நீள் நிரயத்தினில்-பெரிய நரகத்திலே, அழுந்திடும் - ஆழ்ந்துவருந்துகிற, முறைமை-தன்மையை, கடியும் ஆறு-நீக்கும்படி, எனக்கு அருதவம் அமைகுறு-யான் அருமையான தவத்தைச் செய்தற்கு இசைந்த, கருமம் - தொழிலை, அடிகள்-சுவாமிகளே! சாற்றுக - சொல்லியருள்வீராக,' என்றலும் - என்று பிரார்த்தித்தவளவில்,—அந்தணன்-அழகிய அருளையுடைய வசிட்டன், அறைவான்-சொல்பவனானான்; (எ - று.)—அதை மேற்கவியிற் காண்க.

இக்கவிக்கு - மடிந்த எம் முன்னோர் நரகத்திலழுந்திடுந் தன்மையை நீக்கும் விதமே எனக்கு அருந்தவமாகும்: அதற்கு இசைந்த காரியத்தைச் சொல்லவேண்டும என்று உரைப்பினுமாம். முனிவர்களது கோபத்தாலும் சாபத்தாலும் இறந்தவர்களுக்கு நற்கதியில்லையென்பது நூற்றுணிபு. அடிகள் - ஆசிரியர்; பெரியவர் என்று பொருள்: பாதா: என்னும் வடசொல்லின்

மொழிபெயர்ப்பு. பி-ம்:—[1] முந்துறு. [2] அதற்குறு, அமைவுறு, அமைக்குறு. [3] சொற்றுக. (521)

46.—வசிட்டமுனிவன் உபாயம் கூறுதல்.

வைய மாளுடை மன்னவர் மன்னவ மடிந்தோர்
உய்ய நீடவ மொழிவறு பகலெலா மொருங்கே
செய்ய [1] நாண்மலர்க் கிழவனை நோக்கிநீ செய்தி
நைய [2] லென்றினி துரைத்தன னவையறு முனிவன்.

(இ - ள்.) 'வையம் ஆள்உடை - பூலோகத்தை அரசாளுதலை யுடைய, மன்னவர் மன்னவ - அரசர்களுக்கு அரசனே! மடிந்தோர் உய்ய - இறந்த (உன்) மூதாதையர் நற்கதிபெறும்படி, நீ—, செய்ய நாள் மலர் கிழவனை நோக்கி - சிவந்த புதிய தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பிரமனைக் குறித்து, ஒழிவு அறு பகல் எலாம்-முடிவில்லாத [அநேக] நாள், ஒருங்குஏ - ஒருசேர [இடைவிடாமல்], நீள் தவம் செய்தி - பெரிய தவத்தைச் செய்வாயாக; நையல்-மனம்வருந்தாதே', என்று—, நவை அறு முனிவன்-குற்றமற்ற வசிட்டன், இனிது உரைத்தனன் - இனிமையாகச்சொல்லியருளினன்; (எ-று.)

வசிட்டன் பகீரதனைநோக்கி 'சக்கரவர்த்தி! உனது மூதாதையர் நற்கதியடையும்பொருட்டு வருந்தாதே; பிரமனைநோக்கி நீ தவஞ்செய்க: செய்தால், உனது எண்ணம் நிறைவேறும்' எனக்கூறினனென்பதாம். மலர்க்கிழவன்-நாபீகமலத்தில் வாழும் முதியவனுமாம். பி - ம்:—[1] நான்மறைக். [2] இன்றெனை. (522)

47.—பகீரதன் தவஞ்செய்யப் பிரமன் பிரதியட்சமாதல்.

ஞாலம் யாவையுஞ் சுமந்திரன் றன்வயி னல்கிக்
[1] கோலு மாதவத் திமகிரி மருங்கினிற் குறுகிக்
கால மோர்பதி னுயிர மருந்தவங் கழிப்ப
மூல தாமரை முழுமுதற் கிழவன்முந் தினனே.

(இ - ள்.) (உடனே பகீரதன்), ஞாலம் யாவைஉம் - (தான் ஆள்கின்ற) உலகம் முழுவதையும், சுமந்திரன் தன் வயின் - சுமந்திரனிடம், நல்கி - (அரசாளும்படி) ஒப்பித்து, கோலும் மா தவத்து-பெரிய தவத்தைச்செய்வதற்குரிய இடமாகிய, இமகிரிமருங்கினில் - இமயமலையினிடத்திலே, குறுகி-சேர்ந்து, காலம் ஓர் பதினுயிரம் - ஒரு பதினுயிரம் வருடகாலத்தை, அரு தவம் கழிப்ப-அருமையான தவத்தைச் செய்து கழிக்க,—(பின்பு), மூலம் தாமரை-அனுதியான (விஷ்ணுவினது திருநாபித்) தாமரைமலரிலே தோன்றின, முழு முதல் கிழவன்-எல்லாப் பிராணிகளுக்கும் முதல்வனுகிய பிரமதேவன், முந்தினன்-பிரதியட்சமானுன்; (எ-று.)

வசிட்டன் மொழிப்படி இமயமலைச்சாரலிற் பதினுயிரமாண்டு பகீரதன் தவஞ்செய்ய, பிரமன்பிரதியட்சமானு னென்க. சுமந்திரனென்பது-ஒருவனுக்குப் பெயரன்றித்தொழில்பற்றி வந்தபெயர்: அவனது தொழில்,—'அரசனது சங்கமத்தாவரச்சொத்துக்களில்

வரவுசெலவுகள் இவ்வளவென்றும் மிச்சம் இவ்வளவென்றும் அறிவித்தல்' என்று வடமொழி அர்த்தசாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ளது. சுமந்திரன் என்பதற்கு-நல்ல ஆலோசனையுடையவனென்று பொருள். இங்கே 'காலம்' என்றது. அகண்டமாய்ச் செல்லுகிற காலத்தினது ஒருகண்டமாகிய வருடத்தை. கோலுமாதவத்து-மாதவத்தைக்கோலுமெனமாறுக. பி - ம்:—[1]கோலம். (523)

48.—அப்பிரமதேவன் கங்காநதியால் நின்முன்னோர் நற்கதிபெறுவரெனல்.

நின்பெருந்தவ [1]மகிழ்ந்தன னினதுநீள் குரவர்
முன்பிறந்தன ரருந்தவன் முனிவினு தலினுன்
மன்பெரும்புவி யதனில்வா னதி[2]கடி தணுகி
என்பு தோயுமே லிருங்கதி பெறுவரென் றிசைத்தான்.

இதுவும், மேலைக்கவியும்-பிரமன் வார்த்தை.

(இ - ள்.) (எதிர்ப்பட்ட பிரமன் பகீரதனைநோக்கி), 'நின் பெரு தவம் மகிழ்ந்தனன் - உனது சிறந்த தவத்தைக் கண்டு (யான்) மகிழ்ச்சியடைந்தேன்: நினது நீள் குரவர்-உனது எண்ணில் அதிகரான [அறுபதினாயிரவரான] குலத்துமுன்னோர்கள், முன்பு-, அரு தவன் முனிவின் இறந்தனர் ஆதலினால் - அரிய தவத்தையுடைய கபிலமுனிவனது கோபத்தால் மரணமடைந்தார்களாகையால், மன் பெரு புவியதனில் - நிலைபெற்ற பெரியபூலோகத்தில், வான் நதி கடிது அணுகி - ஆகாயகங்கை விரைவிலே வர, என்பு தோயும் ஏல் - (அதன் புண்ணிய தீர்த்தத்தில் அவர்களது பொடியான) எலும்பு படியுமானால், (அப்பொழுதுதான்), இரு கதி பெறுவர் - பெரிய (உரிய) கதியை அடைவார்கள்', என்று—, இசைத்தான்-; (எ-று.)

முனிவன் கோபத்தினால் அகாலமிருத்து அடைந்த நின் மூதாதையர் நரகம் நீங்கி ஈடேறுதற்கு உரிய உபாயம், ஆகாயகங்கையின் நீரிலே அவர்களெலும்பு படிதலேயென்று பிரமன் கூறினனென்க. கதி-இறந்தபின்பு அடையும் பதவி. பி-ம்:—[1]வியந்தனம். [2]நடந்து, கடந்து. (524)

49.—கங்கையைத்தாங்குமாறு சிவபிரானைநோக்கித் தவஞ் செய்யப் பகீரதனுக்குக் கட்டளையிட்டுப் பிரமன் செல்லுதல்.

மாக நன்னதி புவியிடை [1]வருகின்மற் றவடன்
வேக மாற்றுதல் கண்ணுதற் கன்றிவே றரிதால்
தோகை பாகனை நோக்கிநீ யருந்தவந் தொடங்கென்று
ஏகி னானுல கனைத்துமெவ் வுயிர்களு [2]மீந்தான்.

(இ - ள்.) 'மாகம் நல் நதி-பெரிய ஆகாயத்திலுள்ள சிறந்த கங்காநதியானது, புவியிடை வருகின்-பூமியிலே வருமாயின், அவள் தன் வேகம் ஆற்றுதல் - அந்நதியினது வேகத்தைப் பொறுத்துத்

தாங்குதல், கண்நுதற்கு அன்றி - (நெருப்புக்)கண்ணை நெற்றியிலுடைய சிவனுக்கு எளிதாயிருப்பதல்லாமல், வேறு அரிது-மற்றையோருக்கு அருமையுடையதாம்: ஆல்-ஆதலால், தோகை பாகனை நோக்கி - மயில்போலுஞ்சாயலையுடைய உமாதேவியை வாமபாகத்திற்கொண்ட சிவனைக் குறித்து, நீ—, அரு தவம் தொடங்கு-அருமையான தவத்தைச் செய்யத்தொடங்குவாய்', என்று - என்று(ம் பகீரதனுக்குச்) சொல்லியருளி, உலகு அனைத்துஉம் ஏ உயிர்கள்உம் ஈந்தான் - உலகங்களெல்லாவற்றையும் எல்லாவுயிர்களையும் படைத்தவனாகிய பிரமதேவன், ஏகினான் -(தன்னுலகத்திற்குச்) சென்றான்;

'ஆகாயகங்கை நேரே பூமியில் விழுந்தால் அதன் வேகத்தைப் பூமியினால் தாங்கமுடியாதாகையாலும்,அதனைத் தாங்கும் வல்லமை சிவபிரானொருவனுக்கே உள்ளதாதலாலும், கங்கையைத் தாங்குமாறு நோற்றுச் சிவபிரானிடம் முதலில்வரம்பெறுக' என்றுங் கூறிப் பிரமன் அந்தர்த்தானமாயினனென்க. வேறு - வேற்றோர்க்குப் பண்பாகுபெயர். 'உயிர்கள்' என்றது - பிராணிராசிகளை; ஆன்மாக்களையன்று. ஜீவாத்மாக்கள் பரமாத்மாவைப் போலநித்தியமாதலாலென்க. கண்ணுதல் - வேற்றுமைத்தொகையன்மொழி. பி-ம்:— [1] நடக்கின். [2] ஈன்றான். (525)

50.—பகீரதன் நோற்றுச் சிவபிரானிடம் வரம்பெற்றுக் கங்கையைக் குறித்து நோற்றல்.

மங்கை பாகனை நோக்கிமுன் மொழிந்தன வருடம்
[1] தங்கு மாதவம் புரிதலுந் தழனிறக் கடவுள்
அங்கு வந்துநின் கருத்தினை முடித்துமென் றகன்றான்
கங்கை யைத்[2] தொழக் காலமை யாயிரங் கழித்தான்.

(இ - ள்.) (அதுகேட்டு உடனே பகீரதன்), மங்கை பாகனை நோக்கி - பார்வதீதேவியை இடப்பக்கத்திலுடைய பரமசிவனைக் குறித்து, முன் மொழிந்தன வருடம் - முன்னே சொல்லப்பட்ட அவ்வளவு[பதினாயிரம்] வருஷகாலம், தங்கு மா தவம் புரிதலும் - நிலைபெற்ற பெரிய தவத்தைச் செய்தவளவில்,—தழல் நிறம் கடவுள் - நெருப்புப்போன்ற செந்நிறத்தையுடைய சிவபிரான்,—அங்கு வந்து- (அவன் தவஞ்செய்துநின்ற) அவ்விடத்துவந்து, நின் கருத்தினை முடித்தும் என்று - 'உனது கருத்தை நிறைவேற்றுவோம்' என்று சொல்லி, அகன்றான் - போய்விட்டான்; (அதன்பின்பு), கங்கையை தொழ - கங்காதேவியை(ப் பிரதியட்சமாகப்பெற்று) வணங்குதற்கு, காலம் ஐயாயிரம் கழித்தான் - ஐயாயிர வருஷகாலம் (தவத்திலே) போக்கினான்; (எ-று.)

பிரமன் கட்டளைப்படியே பகீரதன் சிவபிரானைநோக்கிப் பதினாயிரம் வருடந் தவஞ்செய்ய, அப்பால் அச்சிவபிரான் பிரதியட்சமாகி அவன் வேண்டியபடி கங்கையைத் தான் நேரே பூமியில் விழாது தாங்குவதாக வரமளித்துச் செல்ல, பின்பு அப்பகீரதன் பூமியில் வரும்படி இசைவதற்காகக் கங்காதேவியை நோக்கித் தவம் புரியலாயினனென்க. வந்துஎன்பது, என்று என்பதனோடு இயைந்தது; 'முடித்தும்' என்பதனோடு இயைந்ததாக்கி, கங்கை பூலோகத்துக்கு

வருகிற அவ்விடத்துக்கு யாம் வந்து உன்னெண்ணத்தைப் பூர்த்தி செய்வோமென்றுமாம். 'நின்கருத்து' என்றது-கங்கை பூமிக்குவரும் போது சிவன் தாங்கவேண்டுமென்றதை. பி - ம்:-[1] தங்கி. [2] தொழா.

51.—கங்காதேவி, பிரதியட்சமாகி 'என்வேகத்தைச் சிவபிரானுலுந் தாங்குதல் முடியாதாகையால் அவன் கருத்தைஅறியமீண்டுந்தவம்புரிக' என்றுசொல்லிப்போதல்.

ஒரும டக்கொடி [1]யாகிவந் துனதுமா தவமென்
பொருபு னற்கொடி வரினவள் வேகமார் பொறுப்பார்
அரனு ரைத்தசொல் விநோதமற் றின்னுநீ யறிந்து
பெருகு நற்றவம் [2]புரியென [3]வரநதி பெயர்ந்தாள்.

(இ - ள்.) (பின்பு), வர நதி - (எல்லாநதிகளுள்ளுஞ்) சிறந்த நதியாகிய கங்காதேவி,—ஒரு மடம் கொடி ஆகி - இளைய கொடி போன்ற ஒரு பெண்ணின வடிவமாய்,வந்து (அவ்வரசனது எதிரில்) தோன்றி, 'உனது மாதவம் என் -(என்னைநோக்கிச் செய்கின்ற) நின் பெருந்தவம் என்னபயன் கருதியது? பொரு புனல் கொடி-(அலைகள்) மோதுகின்ற நீர்மயமான கங்காநதி, வரின் - வந்தால், அவள் வேகம் ஆர் பொறுப்பார்-? [எவருமில்லை]; அரன் உரைத்த சொல் விநோதம்-சிவபிரான் (உன்கருத்தை நிறைவேற்றுவதாகச்) சொன்ன வார்த்தை விளையாட்டாம்; (ஆதலால்), இன்னும் நீ அறிந்து-மீளவும் (அவன்கருத்தை) நீ (நன்ருய்) அறிதற்கு, பெருகு நல் தவம் புரி-மேன்மேல் வளர்கின்ற சிறந்த தவத்தைச் (சிவனைநோக்கிச்) செய்வாய்,' என - என்று சொல்லி விட்டு, பெயர்ந்தாள்-சென்ருள்;

'உனது மாதவம் என்' என்றது-என் வேகத்தைப் பொறுப்பாருண்டானல் யான் வருதற்குத்தடையில்லையென்று அவனது பிரார்த்தனையை அங்கீகரித்தபடியாம். கங்கை தனது வேகத்தைப் பொறுக்கும் ஆற்றல் சிவபிரானுக்கு இல்லை யென்றுகருதிச் செருக்கி, 'அவன்சொன்னபடி செய்யான்' என்ருள். 'பொருபுனற் கொடிவரின் அவள்' என்றது-தன்னைப்பிறள்போற் கூறியபடர்க்கை. அரன்-ஹரன்: (யுகாந்தகாலத்தில் எல்லாப்பிராணிகளையும்) அழித்தற்குரிய கடவுளென்றும், எப்பொழுதும் தன்னைச் சரணமடைந்த அடியார்களது அருந்துயரை அழிப்பவனென்றும் பொருள் கொள்ளபபடும். மற்று-வினைமாற்று. அறிந்து = அறிய: எச்சத்திரிபு; இனி(யான்கூறியதை) உணர்ந்து என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1] ஆக. [2] புரிகென. [3] வானதி. (527)

52, 53.—இதுவும் மேற்கவியும்-குளகம்; பகீரதன் சிவபிரானைநோக்கி மீண்டு தவம்புரிதலும் அப்பிரான் பிரதியட்சமாகி அபயமளித்துச் செல்ல, பின்னும் அவன் கங்கையைநோக்கித் தவம்புரிதல்.

52. கரந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளை கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினை நினையா
அரந்தை யுற்றவ னிரண்டரை யாயிர [1]மாண்டு
புரிந்து நற்றவம் பொலிதர [2]வரையுறை புனிதன்.

53. எதிர்ந்து நின்னினை வென்னென விறைஞ்சியெம் பெரும
அதிர்ந்து கங்கையீ தறைந்தன ளென்றலு [3]மஞ்சல்
பிதிர்ந்த டாவகை காத்துமென் றேகிய பின்னை
முதிர்ந்த மாதவ மிரண்டரை யாயிர முடித்தான்.

(இ - ள்.) (52) அரந்தை உற்றவன் - (கங்கைசொன்ன வார்த்தையைக் கேட்டுத்) துன்பமடைந்தவனாகிய பகீரதன், கரந்தை-கரந்தையென்னும் பூண்டும், மத்தமோடு-ஊமத்தம்பூவும், எருக்கு அலர்-எருக்கம்பூவும், கூவிளை-வில்வபத்திரமும், கடுக்கை-கொன்றைப் பூவும், நிரந்த-கலந்து நிறைந்த, பொன் சடை - பொன்னிறமான (கபர்த்தமென்னுஞ்) சடையினையுடைய, நின்மலம் கொழுந்தினை - குற்றமில்லாத அக்கினிச்சுவாலைவடிவமான பரமசிவத்தை, நினையா-தியானித்து, புரிந்து-விரும்பி[பக்தியுடனே], இரண்டு அரை ஆயிரம் ஆண்டு - இரண்டாயிரத்தைந்நூறுவருடம், நல்தவம் பொலிதர - நல்ல தவத்திலே விளங்க, (பின்பு), வரை உறை புனிதன்-கைலாச மலையில்வாழ்கின்ற பரிசுத்தமூர்த்தியான பரமசிவன் (53) எதிர்ந்து-பிரதியட்சமாகி, (பகீரதனை நோக்கி), நின் நினைவு என் என -'உனது எண்ணம் என்ன?' என்று கேட்க, (அவ்வரசன்), இறைஞ்சி-வணங்கி, 'எம்பெரும-எமது தலைவனே! கங்கை-கங்காநதியானவள், அதிர்ந்து-முழங்கி வந்து, ஈது - (அரன் உரைத்த சொல் வினோதம் என்ற) இவ்வார்த்தையை, அறைந்தனள்-சொல்லினாள்,' என்றலும்-என்று சொன்னவளவில்,—(உருத்திரமூர்த்தி அவனைநோக்கி), 'அஞ்சல்-(நீ) பயப்படாதே; பிதிர்ந்திடாவகை - (கங்கைநீர் சிறிதும்) சிந்தாதபடி, காத்தும்-(அதனைத் தடுத்துப் பூமியை)இரட்சித்தருள்வோம்', என்று - என்றுசொல்லி, ஏகிய பின்னை - சென்றபின்பு, இரண்டு அரை ஆயிரம் - இரண்டாயிரத்தைந்நூறுவருஷம், முதிர்ந்த மா தவம் - சிறந்த பெருந்தவத்தை, முடித்தான்-(மீண்டும் கங்கையை நோக்கிச் செய்து) நிறைவேற்றினான்; (எ - று.)

கங்கையின் சொல்லைக் கேட்டதனாற் கலக்கமடைந்தபகீரதன் சிவபிரானைநோக்கி நோற்க, அவள் மீண்டும் பிரசன்னனாகி 'கங்கையின்சொல்லுக்காகக் கலங்காதே; நாம் அதனைச் சிந்தாவகை காக்க வல்லோம்' என உறுதி கூற, மீண்டும் கங்கையை நோக்கித் தவம் புரியலாயினனென்க. கரந்தை-ஓர்பூடு. மத்தம் கடுக்கை என்பன-அதனதன் மலர்க்கும், கூவிளை - அதன் இலைக்கும் முதலாகுபெயர். மத்தம் = உன்மத்தம்: முதற்குறை. கொழுந்து-அனற்பிழம்பு, [2]வரைமகள் புனிதன் என்ற பாடத்திற்கு-பார்வதியின்கொழுநனான புனிதனென்க. இமயமலைக்கு உரிய ஆண்தெய்வம் உமாதேவியைநோக்கிப் பலகாலந் தவம்புரிந்து 'எனக்கு ஒருகால் நீ மகளாகத்தோன்றி உனக்குத் தந்தையாகும் பெருமையைத் தந்தருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, அவ்வேண்டுகோளை நிறைவேற்றும்பொருட்டு அம்பிகை தட்சன்மகளான உருவத்தை ஒழித்த பொழுது மலையரசன் மகளாக அவதரித்தனளென்பது புராணகதை; பருவதத்தின்மகளானதனால், கௌரிக்குப் பார்வதியென்று பெயர். பி-ம்:—[1]வருடம். [2]வரையுறு, மலைமகள். [3]அஞ்சேல். (528, 529)

54.—பகீரதனுடைய தவச்சிறப்பு.

பெருகு நீரொடு [1]பூழ்தியும் வாயுவும் பிறங்கு
சருகும் வெங்கதி ரொளியையுந் [2]துய்த்துமற் றதையும்
பருக [3]லின்றியே முப்பதி னுயிரம் பருவம்
உருகு காதலின் மன்னவ னருந்தவ [4]முழந்தான்.

(இ - ள்.) மன்னவன் - பகீரதராசன், பிறங்கு சருகுஉம் - விளங்குகின்ற [உலர்ந்த] இலைகளையும், பூழ்திஉம் - புழுதியையும், பெருகும் நீரொடு-வழியுந் தன்மையுள்ள ஜலத்துடன், வாயுஉம் - காற்றையும், வெம் கதிர் ஒளியைஉம்-வெவ்வியசூரிய கிரணத்தை யும், துய்த்து - (முதலில்) உண்டுவந்தும்,—மற்று - பின்பு, அதை உம் பருகல் இன்றிஏ - அந்தஒளியையும் உண்ணுதலில்லாமல், முப்பதினுயிரம் பருவம் - முப்பதினுயிரம் வருஷகாலம், உருகு காதலின்- உருகுந்தன்மைவாய்ந்த அன்புடனே, அரு தவம் உழந்தான்-அரிய தவத்தை வருந்திச் செய்தான்; (எ - று.)

இதனல், பகீரதன் பிரமனைக்குறித்துப்பதினுயிரமும், சிவனைக் குறித்துப் பதினுயிரமும், கங்கையைக்குறித்து ஐயாயிரமும், மீண் டும் சிவனைக்குறித்து இரண்டரையாயிரமும், மீண்டும் கங்கையைக் குறித்து இரண்டரையாயிரமும் ஆக முப்பதினுயிரம் வருஷகாலம் இடைவிடாது நெடுந்தவம்புரிந்த அருமையைக் கவி வியந்து கூறு கிருர். பருவம் - ஆண்டு: ருதுவன்று. அந்தப் பகீரதன் தவஞ் செய்த நாள்களில் முதலிற் சருகையும், பின்பு சாம்பலையும், பிறகு நீரையும், பின்னர்க் காற்றையும், அப்பால் வெயிலையும் உண்டு, பின்பு அவ்வெயிலைத்தானும் உண்ணுமலிருந்தன னென்க. "பாடக்ர மாபேட்சயா அர்த்தக்ரமஸ்யபலீயஸ்த்வம் [சொல்முறையினும் பொருண்முறை வலிமையுடைத்து]" என்ற நியாயம் பற்றி, சருகு பூழ்தி நீர் வாயு வெயில் என முறைபப்படுத்தி உரைக்கப்பட்டது. நீருக்கு உரிய பருகலென்னுஞ் சிறப்புவினை இங்குப் பொதுவினை யாய் நின்றது. [4]முயன்ருன் என்ற பாடத்திற்கு முருகு காதல் எனப் பிரித்து-முதிர்ந்த அன்பு என்க. பி - ம்:—[1]பூதியும். [2]மற்றதனை யும், அன்னவைதமையும், துய்த்துமற்றெதையும். [3]இன்றியும்.

55.—கங்கை இரைத்துவரச் சிவபிரான் அவ்வெள்ளத்தைத் தனது சடையி லொளித்தல்.

உந்தி யம்புயத் துதித்தவ னுறைதரு முலகும்
இந்தி ராதிய ருலகமு [1]நடுக்குற விரைத்து
வந்து [2]தோன்றினள் [3]வரநதி மலைமகள் கொழுநன்
சிந்தி டாதொரு சடையினிற் கரந்தனன் சேர.

(இ - ள்.) (பகீரதன் மீண்டுந் தவம் முடித்தபின்பு), வர நதி - சிறந்த நதியான கங்கை, உந்தி அம்புயத்து உதித்தவன் உறை தரும் உலகுஉம் - (திருமாலின்) திருநாபீகமலம்மலரிலே தோன்றின பிரமன் வசிக்கிற சத்தியலோகமும், இந்திர ஆதியர் உலகம்உம்-இந் திரன் முதலான தேவர்களது (சுவர்க்கம்முதலிய) லோகமும், நடுக்கு உற - நடுங்குதலடையும்படி, இரைத்து - ஆரவாரித்து, வந்து

தோன்றினள்-(பூலோகத்தில்) வந்துசேர்ந்தாள்; (அங்ஙனஞ் சேர்கையில்), மலைமகள் கொழுநன்-பார்வதிபதியான பரமசிவன், ஒரு சடையினில் - (தனது) ஒப்பற்ற சடையிலே, சிந்திடாது-(அக்கங்கைநீர் சிறிதும்) வெளிச்சிந்தாதபடி. சேர - முழுவதையும், கரந்தனன் - மறைத்தருளினான்; (எ - று.)

'அரன்உரைத்தசொல் விநோதம்: புனற்கோடிவேகம் ஆர் பொறுப்பார்?' என்று கங்காதெய்வம் கூறினவளாதலால், மிக்க செருக்கினால் உக்கிரத் தன்மைகொண்டு பிரமலோகமுள்பட நடுக்குறும்படி கங்கை இரைத்துவந்தாள்: சிவபெருமான் பகீரதனுக்கு உரைத்தபடியே அந்நதியின் செருக்குக் குலைய ஒருதுளியும் சிந்திடாது சேரக் கரந்தனனென்க. அம்புயம்-அம்புஜம்; நீரிற் பிறப்பது. ஒரு சடையினில் - தனதுசடையின் ஒருபாகத்திலே என்றுமாம். பி - ம்:—[1]நடுங்குற. [2]தோன்றினன். [3]வானதி. (531)

56.—பகீரதன் திகைத்து நிற்க, அவனைத்தேற்றிச் சிவன் கங்கையை ஒருசிறிது பூமியில் விடுதல்.

புன்னு னித்தரு பனியென [1]வரநதி புனிதன்
சென்னி யிற்கரந் [2]தொளிதர வணங்கினன் றிகைத்து
மன்ன னிற்றலும் வருந்தனஞ் [3]சடையள்வர னதியின்று
என்ன விட்டன னொருசிறி தவனிபோந் திழிந்தாள்.

(இ - ள்.) புல் நுனி தரு பனி என-புல்லின்நுனியிலே தங்கிய பனிநீர்த்துளிபோல, வர நதி - சிறந்த கங்காநதி, புனிதன் சென்னியில்-பரிசுத்தனான சிவனது சிரசிலே, கரந்து ஒளி தர - மறைந்து ஒளிக்க, மன்னன் - பகீரதன், திகைத்து - (நதியைக் காணாமல்) மனமயங்கி, வணங்கினன் நிற்றலும் - (சிவபிரானை) நமஸ்கரித்து நின்றவளவில், (அக்கடவுள் பகீரதனை நோக்கி), 'வருந்தல் - மனம்வருந்தாதே; வான் நதி - ஆகாசகங்காநதி, இன்று - இப்பொழுது, நம் சடையள்-நமது சடையினிடத்துள்ளாள்', என்ன-என்று கூறி, ஒரு சிறிது விட்டனன்-மிகச்சிறியதொரு பாகத்தைவெளிவிட, அவனி போந்து இழிந்தாள்-(கங்கை) தரையிலே வந்து இறங்கினாள்;(எ-று.)

நிலத்தில் இழியாவிட்டால், கங்கை, தேவலோகத்தி லிருந்ததோடு சிவபிரான் சடையி லிருப்பதோடு வாசியில்லை யாதலால், பகீரதன் திகைத்துநின்றான். சிவபெருமான் பகீரதனுக்கு அபயமளித்துத் தனதுசடையிலிருந்து ஒருசிறிது வெளிவிட்டனனென்பதாம். போந்து - புகுந்து; மரூஉமொழி. பி - ம்:—[1]வானதி. [2]ஒளித்திட, ஒளித்தலும். [3]சடையின். (532)

57, 58.—இதுவும் மேற்கவியும் - குளகம்: பகீரதனது பின்னேவந்த கங்கையைச் சன்னுமுனிவன் பருகிப் பகீரதன் வேண்டுகோளால் வெளிவிட, அக்கங்கை சாகரரின் உடற்சாம்பரை நனைத்தல்.

57. இழிந்த கங்கைமுன் மன்னவன் விரைவொடு மேகக்
கழிந்த மன்னவர் கதிபெற முடுகிய கதியால்

அழுந்து மாதவச் சன்னுவின் வேள்வியை யழிப்பக்
கொழுந்து விட்டெரி வெகுளியன் குடங்கையிற் கொள்ளா.

58. உண்டு வந்தனன் மறைமுனிக் கணங்கள்கண் டுவப்பக்
[1] கண்டு வேந்தனும் வணங்கிமுன் னிகழ்ந்தன கழறக்
கொண்டு போகெனச் செவிவழிக் கொடுத்தனன் குதித்து
விண்டு நீங்கின ருடலுகு பொடியின் [2] மே யினளே.

(இ - ள்.) (57) இழிந்த கங்கை முன் - (இங்ஙனம்) இறங்கின கங்காநதிக்கு முன்னே, மன்னவன் விரைவொடுஉம் ஏக - பகீரதன் வேகமாய்ச் செல்ல, (அக்கங்கை), கழிந்த மன்னவர் கதிபெற முடுகிய கதியால் - (முன்னே) இறந்த சாகரராசர்கள் நற்கதியைப்பெறும்பொருட்டு(த் தான்) விரைந்துசெல்கின்ற நடை வேகத்தால், அழுந்து மா தவம் சன்னுவின் வேள்வியை அழிப்ப - (பெருந்தவத்திலே) மனம்பதிந்துள்ள ஜஹ்நு என்னும் முனிவனது யாகத்தை அழிக்க, (அவன்), கொழுந்துவிட்டு எரி வெகுளியன் - சுவாலைவிட்டு எரிகின்ற கோபாக்கினியையுடையவனாய், குடங்கையில் கொள்ளா - (தனது) அகங்கையிலே (அக்கங்கை நீர்முழுவதையும்) முகந்துகொண்டு,—(58) மறைமுனி கணங்கள் கண்டு உவப்ப - (தன்னுடனிருந்த) வேதம்வல்ல முனிவரின் கூட்டங்கள் பார்த்து மகிழும்படி, உண்டுஉவந்தனன் - குடித்துக் களித்தான்; வேந்தன்உம்-பகீரதனும், கண்டு - (அதனைப்) பார்த்து, வணங்கி-(முனிவனை) நமஸ்கரித்து, முன் நிகழ்ந்தன கழற-முன்னே நடந்த செய்திகளெல்லாவற்றையும் (ஆதியோடந்தமாய்ச்) சொல்ல, (அதுகேட்ட அம்முனிவன் இரங்கி), கொண்டுபோகுஎன - (ஆனல்) அழைத்துக்கொண்டு போவாய் என்றுசொல்லி, செவி வழி-காதின் வழியாக, கொடுத்தனன் - (நதியைக்) கொடுத்தருளினான் [நீரைப் பெருகவிட்டானென்றபடி]; (உடனே கங்கையானவள்), குதித்து - (அவன்செவியினின்றும்) இறங்கி, விண்டு நீங்கினர் உடல் உகு பொடியில்மேயினள் - (முன்) இறந்துபோன சாகரர்களின் உடம்புகள் சிந்தின சாம்பரிலேபோய்ச் சேர்ந்தாள்; (எ - று.)

சிவபிரான் சிறிதுவிடப் பூமியிலிறங்கிய கங்கை சாகரரை நற்கதிபெறுவித்தற்பொருட்டு அப்பகீரதனதுபின்னுகவே விரைந்து சென்று வழியிலிருந்த ஜஹ்நுமுனிவனதுயாகத்தை யழிக்க, அம்முனிவன் வெகுண்டு அக்கங்கையைப் பருகிட, பகீரதன் அம்முனிவனைப்பணிந்து குறையிரந்து நிற்க,முனிவன் இரக்கங்கொண்டு தன் காதின்வழியாகக் கங்கையை வெளிவிட, கங்காதேவியும் சாகரர் நற்கதியடையுமாறு அவரது உடல்கள் சாம்பராய்க் கிடந்த இடத்தின்மீது சென்றனளென்பதாம். ஜஹ்நுமுனிவன் பருகி வெளிவிட்ட காரணம்பற்றிக் கங்கைக்கு 'ஜாஹ்நவீ' என்று ஒருபெயருண்டாயிற்று. உண்டு - பொதுவினை, இங்குச் சிறப்பாய்நின்றது. உவப்புக்குக் காரணம், தன்வேள்வியை அழிக்க வந்த யாற்றைத் தான் அழித்துவிட்டமை. மறை முனிக்கணங்கள் - வேதங்களைத் தாம் ஓதுதலும், பிறர்க்கு ஓதுவித்தலும், அவற்றின் விதிப்படி ஒழுகுதலு முடைய முனிவர் குழாமென்றபடி. குதித்து - மகிழ்ந்து. பி-ம்:-
[1] கண்ட. [2] மேவினளே. (533, 534)

59.—சாகரர் நற்கதியடைந்ததுகண்டு தேவர்கள் மலர்மாரிபொழிய, பகீரதன் அயோத்திக்கு மீளுதல்.

நிரய முற்றிய சகரர்க ணெடுங்கதி செல்ல
விரைம லர்ப்பொழிந் [1] தார்த்தன விண்ணவர் குழாங்கள்
முரச முற்றிய பல்லிய முறைமுறை [2] முழங்க
அரச னப்பொழு தணிமதி லயோத்தி [3] மீண் டடைந்தான்.

(இ - ள்.) (உடனே), நிரயம் முற்றிய சகரர்கள்-(முன்னே) நரகத்திற்போய் நிரம்பிய சகரகுமாரர்கள், நெடு கதி செல்ல - உயர்ந்த நற்பதவியிலே சென்று சேர, (அதுகண்டு மகிழ்ந்து), விண்ணவர் குழாங்கள் - தேவசமூகங்கள், விரை மலர் பொழிந்து - வாசனையையுடைய (கற்பகவிருக்ஷங்களின்) மலர்களை(ப் பகீரதன்மேற்) சொரிந்து, ஆர்த்தன-ஆரவாரஞ்செய்தன: முரசம்-பேரிகைகளும், முற்றிய பல் இயம் - நிறைந்த வேறுபலவகை வாத்தியங்களும், முறை முறை முழங்க-வரிசைவரிசையாகக்கோஷிக்க, அரசன் - பகீரதன், அப்பொழுது—, அணி மதில் அயோத்தி மீண்டு அடைந்தான்-அழகியமதிலையுடைய அயோத்தியாபுரிக்குத் திரும்பிவந்து சேர்ந்தான்; (எ - று.)—முறைமுறை - அடுக்கு, மிகுதிப் பொருளது. பி - ம்:— [1] ஆர்த்தனர். [2] துவைப்ப. [3] சென்று. (535)

60.—கங்கையின் சிறப்பு.

அண்ட [1] கோளகைப் புறத்தா [2] யகிலமன் றளந்த
புண்ட ரீகமென் [3] பதத்திடைப் பிறந்துபூ மகனார்
கொண்ட தீர்த்தமா [4] யரன்கொளப் பகிரதன் [5] கொணர
மண்ட லத்துவந் தடைந்ததிவ் [6] வானதி மைந்த.

(இ - ள்.) மைந்த - சக்கரவர்த்தித்திருமகனே! இ வான் நதி - இந்த ஆகாயத்திருந்த கங்காநதி,—அண்டம் கோளகை புறத்தது ஆய் - இவ்வண்டவுருண்டைக்கு அப்புறத்திலுள்ளதாய், - அகிலம் அன்று அளந்த - உலகமனைத்தையும் (திரிவிக்கிரமனாகி) அக்காலத்தில் அளந்துசென்ற, புண்டரீகம் மெல் பதத்திடை - (திருமாலினது) தாமரைமலர்போன்ற மென்மையான திருவடியிலே, பூ மகனார் கொண்ட தீர்த்தம் ஆய்-(அத்திருமாலின் நாபித்) தாமரை மலரிலே தோன்றிய குமாரனாகிய பிரமதேவன் (தன்கைக்கமண்டலத்தினின்று சேர்த்துக்) கொண்ட ஸ்ரீபாததீர்த்தமாகி, பிறந்து - தோன்றி,—பகிரதன் கொணர - பகீரதன் கொண்டுவர, அரன் கொள -சிவபிரான் ஏற்றுக்கொள்ள, மண்தலத்து - பூலோகத்திலே, வந்து அடைந்தது—; (எ - று.)

திருமால் உலகமளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்திலே சென்ற அப்பரமனது திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டல தீர்த்தத்தாற் கழுவி விளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்காநதியாகப்பெருகியதென்று உணர்க; பெரியாழ்வார் "சதுமுகன்கையிற் சதுப்புயனருளிற் சங்கரன் சடையினிற்றங்கிக், கதிர்முகமணி கொண்டிழிபுனற் கங்கை" என்று அருளிச்செய்தவாறுங்காண்க.

ஞானப்புதல்வனுதல்பற்றி 'மைந்த' என்று விளித்தானெனினு மாம். பி-ம்:—[1]கோளகைக்கப்புறத்து. [2]ஆதி. [3]மலரிடை. [4]பகிர தன்றவத்தினுல். [5]கொண்ட. [6]மாநதி. (536)

61.—பாகீரதி சானவி என்ற கங்கையின் பெயர்கட்குக் காரணம்.

சகரர் தம்பொருட் டருந்தவம் [1]பெரும்பக றள்ளிப்
பகிர தன்கொணர்ந் திடுதலாற் பகீரதி யாகி
மகித லத்திடைச் சன்னுவின் செவிவழி வரலால்
நிகரில் [2]சானவி யெனப்பெயர் படைத்ததிந் நீத்தம்.

(இ - ள்.) இ நீத்தம்-இந்தக் கங்காநதியின் நீர் வெள்ளமானது,—சகரர் தம் பொருட்டு-சகரகுமாரர்களை நற்கதிசெலுத்துதனிமித்தம், பெரு பகல் அரு தவம் தள்ளி - அனேக நாட்களை அருமையான தவத்திலேகழித்து, பகிரதன்-பகீரதனுல், கொணர்ந்திடுதலால் -கொண்டுவரப்பட்டதனுல், பகீரதி ஆகி-பாகீரதியென்னும் பெயருடையதாய், மகிதலத்திடை-பூலோகத்திலே, சன்னுவின் செவி வழி வரலால்-ஜஹ்நுமுனிவனது காதுகளின்வழியாக வந்ததனுல், நிகர் இல் சானவி என பெயர் படைத்தது - ஒப்பில்லாத ஜாஹ்நவீ என்று ஒருபெயரையும் பெற்றது; (எ - று.)

சகரர்-ஸாகரர்: பகீரதி-பாகீரதி: சானவி-ஜாஹ்நவீ: வடசொற்கள். பகல் - நாளுக்கு, ஆகுபெயர். பி - ம்:—[1]நெடும்பகல். [2]சானுவி. (537)

62, 63. —இதுவும், மேற்கவியும் குளகம்: கங்கையைக் கடந்து, விசாலையையடைந்து அந்நகரவரசன் கௌரவிக்க, பின்பு மூவரும் விதேகநாட்டை யடைதல்.

62. என்று கூறலும் வியப்பினொ டுவந்தன ரிறைஞ்சிச்
சென்று தீர்ந்தனர் கங்கையை விசாலை[1]வாழ் சிகரக்
குன்று போற்புயத் தரசன்வந் [2]தடியிணை குறுக
நின்று நல்லுரை விளம்பிமற் றவ்வயி னீங்கா.

63. பள்ளி நீங்கிய பங்கயப் பழனநன் ஞரை
[1]வெள்ள வான்களை [2]களைவுறு [3]கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாணெடுங் கண்ணிழல் கயலெனக் கருதா
அள்ளி நாணுறு மகன்பணை [4]விதேகநா டடைந்தார்.

(இ - ள்.) (62) என்று கூறலும்-என்று (விசுவாமித்திரன்) சொல்லியருளியவளவில், வியப்பினொடு உவந்தனர் இறைஞ்சி - (கேட்ட ராமலட்சுமணர்) ஆச்சரியத்துடனே மகிழ்ந்து(கங்கையை) வணங்கி, சென்று-(பின்புமூவரும்) புறப்பட்டுப்போய், (அவ்விடத்திலே), கங்கையை தீர்ந்தனர் - கங்காநதியைக் கடந்து, விசாலை வாழ்-விசாலாநகரத்தில் வாழ்கின்ற, சிகரம் குன்றுபோல் புயத்து அரசன் - சிகரத்தையுடைய மலைபோன்ற தோள்களையுடையானொரு அரசன், வந்து அடி இணை குறுக - எதிர்கொண்டு

வந்து (விசுவாமித்திரனது) உபயபார்தத்திற் சேர்ந்து வணங்க, நின்று - (மூவரும் அங்கே சிறிதுபொழுது) நின்று, நல் உரை விளம்பி - (அவனோடு) இன்சொற்சொல்லிவிட்டு, மற்று - பின்பு, அவயின் நீங்கா - அவ்விடத்தினின்று நீங்கி,—(63) பங்கயம் - தாமரைகளையுடைய, பழனம்-கழனிகளிலே, பள்ளி நீங்கிய-(அப்போதுதான்) நித்திரையொழிந்த, நல் நாரை - நல்ல நாரைகள், வெள்ளம் வான் களை களைவுறு-நீர்ப்பெருக்கத்திலே தோன்றுகிற சிறந்த களைகளைப் பறிக்கின்ற, கடைசியர் - உழவர்மகளிரது, மிளிர்ந்த - பிறழ்கின்ற, கள்ளம் வாள் நெடு கண் - வஞ்சனையையுடைய வாளாயுதம்போன்ற நீண்ட கண்களினது, நிழல் - சாயையை, கயல் என கருதா - கயல்மீன்களென்று நினைத்து, அள்ளி - (மூக்கினாற்) குத்தியெடுத்து, நாணுறும் - (அவை தாம் நினைத்தபடி மீனல்லாமையால்)வெட்கமடைதற்குஇடமான, அகல் பணை - பரந்த மருதநிலஞ்சூழ்ந்த, விதேகநாடு - விதேகநாட்டை, அடைந்தார் - (மூவரும்) சேர்ந்தார்கள்; (எ - று.)

62:—இட்சுவாகுமகாராசனுக்கு அலம்புசையென்பவளிடம் பிறந்த விசாலனென்பவனால் ஏற்படுத்தப்பட்டதனாலும் விசாலமாயுள்ளதனாலும், இந்நகரத்திற்கு விசாலையென்று பெயர். இம்மூவரும் கங்கையைக்கடந்து விசாலையென்ற நகரத்தைச் சார, அந் நகரத்தரசன் விசுவாமித்திரனது வருகையைக் கேள்வியுற்று எதிர்கொண்டு அழைத்துப்போய் உபசரித்து, இராமலட்சுமணர்களை விசாரித்து அறிந்து அவர்களையுஞ் சற்கரித்து அனுப்ப, பின்பு மூவரும் விதேகநாட்டைச் சேர்ந்தனரென்க. மிதிலையை நோக்கி வடக்குமுகமாகவரும்போது இடைப்பட்ட கங்கையைக் கடந்து அதன் வடகரைக்குமீள்வது இங்கே கூறப்பட்டது. (கையடைப்படலத்துத் தெற்குமுகமாய்க் கங்கை கடந்தமை கூறினர்; முதனூலிலும் இருமுறை கங்கைகடந்தமை கூறியுள்ளது.) அப்போது அங்கு இருந்தவன் இட்சுவாகுவமிசத்தரசனாகிய சுமதியென்பவன். கங்கை-(விஷ்ணுபாதத்திலிருந்து) பூமியையடைந்ததென்று பொருள்படும். பி- ம்:—[1] வான். [2] இணையடிகுறுகி, எதிரடிகுறுகி.

63.—விசுவாமித்திரர்முதலிய மூவரும் மிதிலையிற்புகுவதைக் கூற விரும்பிய ஆசிரியர், அந்த மிதிலாபட்டணத்தைத் தன்னுட்கொண்ட விதேகநாட்டையடைந்தமையை இங்குக்கூறுகின்றார். பழனங்களிற் பங்கயமலர்களிலே அப்பொழுதுதான் துயில்நீங்கிய நாரைகள் இன்னமும் தூக்கத்தெளிவை நன்குபெறுமையால் நீர்ப்பெருக்கிலேயுள்ள களைகளைக் களையும் பள்ளமாதரின் கண்ணிழலைக் கயலெனக் கருதிக் கொத்தி மீனல்லாமையால் நாணுதற்குஇடனான கழனிநிலம் சூழவுள்ளது விதேகநாடு என்க. அந்நாட்டிலுள்ள கீழ்ச்சாதிப்பெண்களது அழகும் இத்தன்மையதென்றுகூறி, சீதை முதலிய கட்டழகுடையமகளிர் வாழ்தற்கிடமான அந்நகரத்தின் சிறப்பை விளக்குகின்றார். கண்களின் நிழலைக் கயல்மீனென்று நாரைகள் மயங்கியனவாகக் கூறியது, மயக்கவணி. 'பள்ளிநீங்கிய' என்ற அடைமொழியைப் பங்கயத்

திற்குச் சேர்ப்பின் அத்தொடர்க்கு - மலர்ந்தனன இலக்கணைப் பொருள் கொள்ளவேண்டுதலாலும், அங்ஙனம்கொள்ளினும்அத்தொடர் சிறப்பான பொருளைத் தராது வெற்றெனத்தொடுத்ததாமாதலாலும், அங்ஙன் இயைக்கவில்லை. கண்களைக்கயலெனமயங்கிக் கொத்துந்தொழிலை நாரைநிகழ்த்துவதற்கு ஏதுவாகிச் சிறத்தலால், 'பள்ளிநீங்கிய நாரை' என்று கூட்டப்பட்டது. தாமரை முதலியனவன்றி வேறு களையில்லாமையால் 'வான்களை' என்றார்.

பெண்கள் கண்களுக்குக் களவுத்தன்மையாவது-ஆடவருள்ளத்தை மயக்கிக் கவர்ந்து கொள்ளைகொள்ளுதல். காதளாவிய கண்களென்பார், 'நெடுங்கண்' என்றார். கண்களுக்குக் கயலுவமை - வடிவமும் பிறழ்ச்சியும் பற்றி. வாள் - ஒளியுமாம். வெள்ளம் - மிகுதியாகிய, களை எனினுமாம். பி - ம்:—[1]மெள்ள. [2]தடவிய, தடவுறும். [3]கடைச்சியர். [4]மிதிலை. சிலபிரதிகளில் 62-ஆம் பாடலில் கங்கைவரலாற்றுப்படலம் முடிய, இந்த 63-ஆம் பாடல் முதல் படலம் முடிகிறவரையில் அகலிகை சாபந்தீர்படலம் என்று பெயர் காண்கிறது. (538, 539)

64.—அந்நாட்டுச் சோலைகளின் வருணனை.

வரம்பில் வான்சிறை [1]மதகுகண் முழவொலி வழங்க
அரும்பு நாண்மல [2]ரசோகங்க ளலர்விளக் கெடுப்ப
நரம்பி னுன்றதேன் [3]றாரைகொ ணறுமலர் யாழிற்
சுரும்பு பாண் [4]செயத் தோகைநின் றாடுவ சோலை.

(இ - ள்.) சோலை - அந்நாட்டுச்சோலைகளில்,—வரம்பு இல் - அளவிறந்தனவான, வான்சிறை - பெரிய நீர்நிலையின், மதகுகள்—, முழவு ஒலி - மத்தளவோசையை, வழங்க - கொடுக்கவும்,—அசோகங்கள்-அசோகமரங்கள், அரும்பு நாள் மலர் - தோன்றுகின்ற புதிய மலர்களாகிய, அலர் விளக்கு - விளங்குகின்ற விளக்குகளை, எடுப்ப - ஏந்தவும்,—நரம்பின் நான்ற தேன் தாரை கொள் - (யாழின்) நரம்பு போல ஒழுகுகின்ற தேனினொழுக்கைக்கொண்ட, நறுமலர் - நன்மணம்வீசும் மலர்களாகிய, யாழில்-வீணைகளிலே, சுரும்பு - வண்டுகள், பாண் செய-பாடுதலைச் செய்யவும், தோகை-மயில்கள், நின்று ஆடுவ-நிலைபெற்று ஆடுவன; (எ - று.)

மயில்களிடத்து ஆடும் மகளிரின் தன்மையை யேற்றிக்கூறினார். சோலைகளிலுள்ள மதகுகளில் நீர்பாய்தலினாலுண்டாகிற ஒலியை மத்தளவொலியாகவும், அசோகமலர்களை விளக்கின் ஒளிப்பிழம்பாகவும், தேன்தாரையை யாழ்நரம்பாகவும், மலரையாழாகவும், வண்டுகளைப் பாடகராகவும், மயில்களைக் கூத்தாடும் மகளிராகவும் உருவகப்படுத்தினார். மதகினின்று புறப்படும்நீரொலியை மத்தளவொலியாகவும் அசோகமலரை விளக்காகவும் கூறியதற்குஏற்ப,மதகுகளை மத்தளம் கொட்டுபவராகவும் அசோகமரங்களை விளக்கேந்தும் மகளிராகவும் கொள்க. சிறை - நீரைத் தடைப்படுத்திவைத்திருக்கும் ஏரி குளம்போல்வன: நீரைத்தடுத்துக்கட்டிய அணையென்பாருமுளர். இவ்வருணனையில் மரஞ்செறிந் திருண்ட அந்நாட்

டுச்சோலையைப்பகலிலும் நடனம்நிகழும் கூத்தச்சாலையென்று கொண்டமை பெறப்படும். தனது நிழலினால் தண்மையையுஞ் செழுமையால் இனிமையையுந் தந்து தன்னைக் காண்பவரது மனத்திலுள்ள சோகத்தை [சோர்வை] ஒழித்தலால், அசோகமென்று பெயர். தோகைநின்றாடுவ சோலை என எடுத்து - மயில்கள்நின்று ஆடப்பெறுவன சோலைகள் என்றுமாம். பி - ம்:—[1]மதவுகள். [2]அசோகுகள். [3]தாரையின், தாரைகள். [4]செய்த.

இங்கே ஒருபாடல் சிலபிரதியிற் காண்பது வருமாறு—

மதுமலைந்த வெண்டரளமும் (வயிரமும்) மணியும்
கதிர்வளஞ்செயும் பவளமுங் கழுத்திடை காட்டி
எதிர்மலைந்த பைங்கூந்தலை யினவண்டு (நணுக)
புதுமணஞ்செயு மடந்தையர் போன்றன பூகம். (540)

65.—கழனிகளின் சிறப்பு.

பட்ட வாணுதன் மடந்தையர் [1]பார்ப்பெனுந் தூதால்
எட்ட [2]வாதரித் துழல்பவ [3]ரிதயங்கள் [4]வெறுப்ப
வட்ட நாண்மரை மலரின்மேல் வயலிடை மள்ளர்
கட்ட [5]காவியங் கட்கடை [6]கழிப்பன கழனி.

(இ - ள்.) கழனி - (அந்நாட்டுக்) கழனிகள்,—பார்ப்பு எனும் தூதால் - (தங்கள்) பார்வையென்கிற தூதினால், எட்ட - (தங் கணவரைச்) சேர்தற்கு, ஆதரித்து - விரும்பி, உழல்பவர் - சஞ்சரித்துத்திரிபவராகிய, பட்டம் - நீர்நிலையிலுள்ள, வாள் நுதல்-பிரகாசமான நெற்றியையுடைய, மடந்தையர்-உழவ மகளிரது, இதயங்கள் - மனங்கள், வெறுப்ப - வெறுப்பையடையும்படி, வயலிடை - வயல்களிலே, மள்ளர் - உழவர்கள், வட்டம் நாள் மரை மலரின் மேல்-வட்டவடிவமான புதிய தாமரைமலர்களின்மேல், கட்ட-களை பறித்தெறிந்த, காவி-கருங்குவளைமலர்களாகிய, அம் கண் கடை - அழகிய கண்களின் கடைசிகள், கழிப்பன - மிகப்பெறுவன;

நீர்வளமுள்ள கழனிகளிலே அப்பொழுதுமலர்ந்த செந்தாமரைமலர்களின்மேலே களைபிடுங்குபவர்களாற் பறித்தெறியப்பட்டு விழுந்து கிடக்கின்ற கருங்குவளைமலர்கள் பெண்களின் அழகிய முகத்தினிடத்தே பொருந்திய கண்களை ஒத்திருக்கு மென்றபடி. தம்து குளிர்ந்த கண்பார்வையால் உழவரை வசப்படுத்தி அணைய வந்த உழத்தியர் அக்கழனியிற் பலவிடத்துந் தாமரைமலரின்மேற் கருங்குவளைமலர் படிந்திருத்தலைக் கண்டு, தமக்குமுன்னமே அவ்வாடவர்களை வசீகரிப்பதற்கு வேறு சில மகளிர் அவர்களைக் கண்களால் நோக்குகின்றன ரென மயங்கி, 'இனித் தமதுகருத்துக் கைகூடுமோ, கூடாதோ?' என்கிற ஐயத்தின் மிகுதிப்பாட்டால் மனம் வெறுப்பாராயின ரென்க; இது-மயக்கவணியின்பாற் படும். இனி, இச்செய்யுளுக்கு-மகளிர்களுடைய பார்வையாகிய தூதினால் அழைக்கப்பட்டு அவர்களைச் சேர விரும்பித் திரிகிற ஆடவர்களுடைய மனம் வெறுக்கும்படி தாமரையின்மேற் காவிகள் மிகுந்துள்ளன என்று பொருளுரைத்தலும் ஒன்று: இவ்வுரைக்குக் கருத்து

வருமாறு:—தாமரைப்பூவிற் பொருந்திய நீலமலர்களை நோக்கித் தம்மைக் குறிப்பாகக் கண்காட்டி யழைக்கின்றமகளிரது முகமென மயங்கி அருகில்வந்த ஆடவர்கள் அவற்றை உற்றுப்பார்த்துஅவை முகமுங் கண்ணுமாகாமல் பூக்களாயிருக்கின்றமையை அறிந்து தமது ஆசை வீணாயினதனால் மனவெறுப்புறுபவராவ ரென்பதாம். குறிப்புநோக்கத்தால் தமதுகருத்தை ஆடவர்க்குப் புலப்படுத்த லும் அவரையழைத்தலும் முதலியன செய்தலால், அதனைத் தூதாக உருவகப்படுத்தினர். உழல்பவர் பலராதலால், இதயமும் பலவாயின. பட்டம் - நீர்நிலை: மகளிரின் அணிவகையெனக் கொள்வாருமுளர். பார்ப்பு - மகளிர்பார்வை. பி - ம்:—[1]பாற்படுங். [2]ஆதரத்து. [3]இதயமே. [4]கொதிப்ப. [5]காவிகள். [6]காட்டுவ, கவிப் பன. (541)

66.—நீர் நிலைகளின் சிறப்பு.

தூவி யன்னந்[1] த னினமென்று நடைகண்டு [2]தொடருங்
கூவு மென்குயிற் குதலையர் [3]குடைந்ததண் புனல்வாய்
ஓவில் குங்குமச் சுவடுற வொன்றொடொன் [4]றூடிப்
பூவு றங்கினும் புள்ளுறங் காதன பொய்கை.

(இ - ள்.) பொய்கை-(அவ்விதேக நாட்டிலுள்ள) நீர்நிலைகள், தூவி அன்னம்-சிறகழகையுடைய அன்னப்பறவை, நடைகண்டு - நடையழகைப் பார்த்து, தன் இனம் என்று தொடரும்-தன் இன மான அன்னப்பறவை யென்று மயங்கிப் பின்தொடரப்பெற்ற, கூவும் மெல் குயில் குதலையர்-(இனிப்பாகக்) கூவுகின்ற மென்மை யான குயிலின் குரல்போன்ற மழலைச்சொற்களையுடைய மகளிர் கள், குடைந்த - மூழ்கிவிளையாடின, தண் புனல்வாய் - குளிர்ந்த நீரினிடத்திலே, ஓவு இல் குங்குமம் சுவடு உற - நீங்குதலில்லாத குங்குமக்குழம்பின் சுவடுகள் (தம்மேற்) பொருந்துதலால், ஒன்றொடு ஒன்று ஊடி - ஒன்றோடொன்று கலகப்பட்டு, பூ உறங்கின்உம்-(அந் நீரிலுள்ள தாமரை முதலிய) மலர்கள் உறங்கினாலும், புள் உறங்கா தன - (அவற்றிலுள்ள) பறவைகள் உறங்காமல் ஒலித்துநிற்கப் பெறுவன; (எ - று.)

குளங்களிலே மகளிர்கள் இறங்கி விளையாடும் பொழுது அவர்க ளுடம்பில் அணிந்துள்ள குங்குமக்கலவை அங்குப்பொருந்திய பற வைகளின் உடலின்மீது படிதலால், தம்மில் ஒன்றையொன்று நோக் கும்பொழுது தம் இனமானவற்றையே பிறசாதிப் பறவைகளென மயங்கித் தம்முள் பறவைகள் மாறுபடுவனவாயின என்க; மயக்க வணி. முதலடியில் அன்னங்கள் மகளிரைத் தமது இனமெனக் கருதின எனக் கூறியதும், இவ்வணியே. வேற்றுப் புட்களைக்கண்ட மாத்திரத்தில் அவற்றோடு கலகப்படுதல் பறவைகளின் இயல்பு. அன்னப்பறவைகள் தங்கியிருந்த தாமரைகள் இரவு வரத் தாம் குவிந்து இரவுவந்ததைக் காட்டினாலும் அதைக் கவனியாது மனம் ஊடுதலிலேயே செல்லப்பெற்று அப்பறவைகள் இரவிலும் பிணங் கியே உறக்கமின்றிக் கிடக்குமென்க. இனி, ஊடி என்பதற்கு-(கலவி யிற்) பிணங்கி யெனப் பொருள்கொண்டு, சிவந்த குங்குமக்குறியும்

குங்குமம்மணமும் பொருந்திய ஆண்பறவைகளைப் பெண்பறவைகள் கண்டு அவற்றை வேறுபேடையோடு புணர்ந்து வந்தனவர்கக் கருதிப் பிணங்கின வென்று உரைப்பாரும்உளர்: நிறம் வேறுபடுதலும் நன்மணமுறுதலும் கலவிக்குறியாம். பூவுக்கு உறக்கம்-இதழ்குவிதல்; புள்ளுக்கு உறக்கம்-கவலையின்றி இளைப்புத்தீரத்தூங்குதல். மென்மை - செவிக்கினிமை. பி-ம்:—[1] தம். [2] தொடர. [3] குடைந்து. [4] ஊட. (542)

67.—யாறுகளின் சிறப்பு.

முறையி [1] னின் [2] முது மேதியின் முலைவழி [3] பாலும்
துறையி னின்றுயர் மாங்கனி தூங்கிய சாறும்
அறையு [4] மென்கரும் [5] பாட்டிய வமுதமு மழிதேன்
[6] நறையு மல்லது நளிர்புனல் [7] பெருகலா [8] நதிகள்.

(இ - ள்.) நதிகள் - (அந்நாட்டு) யாறுகள்,—முறையினின் - ஒன்றன்பின் ஒன்ருக,—முது மேதியின் முலை வழி பால்உம்-முதிர்ந்த எருமைகளின் முலைகளினின்று பெருகுகிற பாலும், துறையில் நின்று உயர் மா கனி தூங்கிய சாறுஉம் - கரைகளிலேபொருந்தி ஓங்கிவளர்ந்துள்ள மாமரங்களின் பழங்களினின்று பெருகின இரசமும், அறையும் - வெட்டப்படுகின்ற, மெல் கரும்பு - சுவையினிய கரும்புகளை, ஆட்டிய -(ஆலையில்வைத்து) ஆட்டுவதனுலுண்டான, அமுதம்உம் - அமிருதம்போலினிய சாறும், அழிதேன் நறைஉம் - (தேன் கூடுகள்) சிதைதலாற்பெருகுகிற மணமுள்ள தேனும், அல்லது-(என்கிற இவை மாறிமாறிப் பெருகுவனவே) அல்லாமல், நளிர் புனல் பெருகலா-குளிர்ந்தநீர் பெருக இடம்பெறுதன; (எ-று.)

பாலும் சாறும் அமுதமும் நறையும் முறையினின் பெருகுவதல்லது புனல் பெருகலாதன நதிகள் என்க. நதிகளை வருணிக்கின்ற வியாஜத்தால், எருமைகள் தாமாகப் பால் சுரக்கின்ற வளத்தையும், மாமரச்சோலை வளப்பத்தையும், கரும்புமிகுதியையும், தேன்பெருக்கையுந் தெரிவித்தார். முதுமேதி - கருவுற்றுப் பருவநிரம்பிக் கன்றீன்ற எருமை யென்றபடி. "கருமேதிக, ளூரினின்றகன் றுள்ளிடவுண்முலை,தாரை கொள்ளத் தழைப்பன சாலியே"எனக் கீழ்நாட்டுப் படலத்துக் கூறியவாறுகழனிகளிலே மேய்கின்ற எருமைகள் ஊரிலேயுள்ள தம்தம் கன்றுகளை அன்போடு நினைக்கும்பொழுது அவற்றின் முலைகளினின்றுமிகுதியாகப் பால் சுரந்து பெருகுகின்றதென்க. "கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி, நினைத்து முலைவழியே நின்றுபால் சோர" என்ற கோதையார்வாக்கு, ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கது. உயர்மாங்கனி-முப்பழங்களுள் முதல்தரச் சிறந்த மாம்பழம் என்றுமாம். பி-ம்:—[1] நன். [2] முலை. [3] அமிர்தும், பிழியும். [4] ஐங். [5] ஆடிய, [6] நறவும். [7] பெருகல, பெருக்கெலாங். [8] திகழ. (543)

68.—நீரோடைகளின் சிறப்பு.

[1] இழைக்கு நுண்ணிடை யிடைதர முகடுயர் கொங்கை
மழைக்கண் மங்கைய ரரங்கினில் [2] வயிரியர் முழவம்
முழக்கு மின்னிசை வெருவிய மோட்டிள [3] மேதி
உழக்க வாளைகள் பாளையிற் குதிப்பன வோடை.

(இ - ள்.) ஓடை - (அவ்வூரிலுள்ள) நீரோடைகள்,-இழைக்கு உம் - (பஞ்சின்) நூலினைக் காட்டிலும், நுண் - நுட்பமாக, இடை - இடையானது, இடைதர - (பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் மெலிந்து) பின்வாங்கும்படி, முகடுஉயர் - (மலைச்) சிகரம்போலோங்கியுள்ள, கொங்கை - தனங்களையும், மழை கண்-மழைபோல் குளிர்ந்த கண்பார்வையையுமுடைய, மங்கையர்-மங்கைப்பருவமுடைய இளம் பெண்கள், (நர்த்தனஞ்செய்கின்ற), அரங்கினில் - நாடகசாலையிலே, வயிரியர் - (உடனிருக்கும்) பாடகர்கள், முழவம்முழக்கும் - மத்தளத்தை முழங்கச்செய்வதனாலுண்டாகிய, இன்இசை - இனிமையான ஓசைக்கு, வெருவிய - அஞ்சியோடுகிற, மோடு இளமேதி - பெரிய இளமையான எருமைகள், உழக்க - (போய்விழுந்து) கலக்குவதனால், (அதற்குஅஞ்சி), வாளைகள் - வாளைமீன்கள், பாளையில்-(பக்கங்களிலுள்ள தெங்கு கமுகு முதலியவற்றின்) பாளைகளின்மேல்,குதிப்பன-தாவிப்பாயப்பெறுவன; (எ-று.)

அரங்கில் மகளிராடும்பொழுது வயிரியர் மத்தளம் முழக்க, அதற்கு அஞ்சிய எருமைகள் ஓடிச்சென்று ஓடைகளில்விழுந்து அவற்றின்நீரைக் கலக்க, அவற்றிலுள்ள வாளைகள் பாளைகளிற் பாயுமென்க. இதில் மீன்களின் செழுமையுங் காண்க. "ஏழாண்டியற்றி யோரீராண்டிற், சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி," "பன்னிரண்டாண், டேய்ந்ததற்பினுடலுடன்பாடலழகிம்மூன்றும், வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு" என்றவாறு, பன்னிரண்டு பிராயம் நிறைந்த இளமகளிர் நிருத்தத்திற்குச் சிறந்தவ ரென்பது இலக்கணமாதலால், அதற்குஏற்ப 'மங்கையர்' என்றார். வயிரியர் என்றது, தண்ணுமையாசிரியரை. பி - ம்:—[1] இழையணி. [2] மகரயாழ். [3] எருமை, மூரி. (544)

69.—குளங்களின் சிறப்பு.

படைநெ டுங்[1] கண்வா ளுறைபுகப் படர்புனன் மூழ்கிக்
[2] கடைய முன்கடற் [3] செழுந்திரு வெழும்படி காட்டி
மிடையும் [4] வெள்வளை புள்ளொடு மொலிப்பமெல் லியலார்
[5] குடைய வண்டினங் கடிமலர் குடைவன குளங்கள்.

(இ - ள்.) குளங்கள்-(அங்குள்ள) தடாகங்கள்,—மெல் இயலார்-மென்மையான தன்மையையுடைய மகளிர், நெடு கண் - (தமது) நீண்ட கண்களாகிய, வாள் படை-வாளாயுதங்கள், உறைபுக-(இமைகளாகிய) உறைகளினுள்ளே பொருந்திமறையும்படி, [கண்களை மூடிக்கொண்டு] படர் புனல் மூழ்கி - பரந்த நீரிலே இறங்கி ஸ்நானஞ் செய்து, (தாம் எழுந்திருக்கும்பொழுது),முன்கடல் கடைய-முன்னே திருப்பாற்கடலைக் கடைந்தகாலத்தில், (அங்கிருந்து), செழு திரு - அழகிய இலக்குமி, எழும்படி - (அவதரித்து)மேலெழுந்தன்மையை, காட்டி-தோற்றுவித்து, மிடையும் வெள்வளை-நெருங்கியணிந்துள்ள வெண்ணிறமான கைவளையல்கள், புள்ளொடுஉம் ஒலிப்ப - நீர்ப்பறவைகளோடு சமமாக ஒலிக்கும்படி, குடைய - நீரில்மூழ்கியெழுதலைச் செய்யாநிற்க,—வண்டு இனம்-வண்டுகளின் கூட்டங்கள், கடி மலர்-வாசனையையுடைய பூக்களை, குடைவன - குடைந்து மதுபானஞ் செய்துகளித்திருக்கப்பெறுவன; (எ-று.)

மகளிர் கைவளையல்கள் ஒலிக்க நீரில்மூழ்கி மேலெழுவது. பாற் கடல் கடைகையில் திருமகள் அக்கடலினின்று மேலெழுவது போலுமென்க. கடற் செழுந்திரு எழும்படி காட்டி மெல்லியலார் குடைவன குளங்கள் என்றஇடத்துக் காட்சியணி காண்க. பாற் கடல்-குளத்துக்கும், திருமகள் - அந்நாட்டுமகளிர்க்கும் உவமை. கண்களை 'வாள்' என்றதற்கு ஏற்ப, இமைகளை 'உறை' என்றார்; உருவகவணி. 'வெள்வளை' என்றது-சங்கு,யானைத்தந்தம் இவற்றை அரிந்து செய்யப்பட்டவற்றை. புள்ளொடும் - மற்றைக்கைவளை களுடனேயென்றுமாம். புள் கைவளையாதலை "புட்கைபோகாப் புன்றலை மகார்" என்ற இடத்துங் காண்க. மெல்லியலார் நீர்குடைய, வண்டினம் மலர்குடைவன என நயந்தோன்றக் கூறினர். முன் எழும் - இயல்புபற்றிவந்த காலவழுவமைதி. பி - ம்:—[1]கண்கள். [2]கடையுநன். [3]செந். [4]ஒள்வளை. [5]குடையும். (545)

70.—மிதிலையைக்கிட்டி விசுவாமித்திரன் அகலிகை கல்லாய்க்கிடக்கும் மேட்டைக் காணுதல்.

இனைய [1]நாட்டினி லினிதுசென் றிஞ்சிசூழ் மிதிலை
புனையு [2]நீள் கொடிப் புரிசையின் புறத்துவந் திறுத்தார்
மனையின் [3]மாட்சியை யழித்திழி மாதவப் பன்னி
[4]கனையு [5]மேட்டுயர் கருங்கலோர் வெள்ளிடைக் கண்டார்.

(இ - ள்.) இனைய - இத்தன்மையதான, நாட்டினில் - விதேக நாட்டில், இனிது சென்று - (ஸ்ரீராமலட்சுமணர்களும் விசுவாமித் திரனும்) இனிமையாகப் போயடைந்து, இஞ்சி சூழ் மிதிலை புனை யும்-மதில்களாற் சூழப்பட்டுள்ள மிதிலாநகரத்தை அலங்கரிக்கின்ற, நீள் கொடி புரிசையின்-உயர்ந்த துவசங்களையுடைய வெளிமதிலி னது, புறத்து - வெளியிலே, வந்து இறுத்தார் - வந்துதங்கினவர் களாய்,—மனையின் மாட்சியை அழித்து இழி-இல்லறவாழ்க்கைக்கு உரிய சிறந்தஒழுக்கமாகிய கற்பை அழியச்செய்து (அதனால்) இழி வையடைந்த, மா தவன் பன்னி - மிகுந்த தவத்தினையுடைய கௌ தம மகாமுனிவனது பத்தினியாகிய அகலிகையின், (சாபரூபமாய்), கனையும் மேடு உயர் - செருங்கின மேடாக உயர்ந்துதோன்றுகின்ற, கருங் கல்-கரியகல்லை, ஓர் வெள் இடை - ஒருவெற்றிடத்திலே, கண்டார்—; (எ-று.)

விசுவாமித்திரன் முதலியோர் மிதிலையின்மதிற்கு வெளியே தங்கியபோது கௌதமமுனிவனது மனைவி அகலிகை கல்லாய்க் கிடக்கும் இடத்தைக் கண்டன ரென்க. மாதவன் + பன்னி = மாத வப்பன்னி. பன்னி = பத்நீ. பி - ம்:—[1]நாட்டினை, நாட்டிடை. [2]வார். [3]மாட்சிமை. [4]கனைய. [5]மோட்டுயர். (546)

71.—அகலிகை சாபவடிவம் நீங்கி முன்னைய வடிவம் பெறுதல்.

கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை [1]மயக்கற வேறுபட் டுருவம்

கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை [2]வண்ணமாய் நின்றனண் மாமுனி பணிப்பான்.

(இ - ள்.) கண்ட கல்மிசை - (அங்ஙனம் அவ்விடத்திற்) பார்க்கப்பட்ட சிலையின் மேலே, காகுத்தன் கழல் துகள் கதுவ - ஸ்ரீராமபிரானது திருவடித் தூளி போய்ப் பட்டதனால்,—உண்டபேதைமை மயக்கு அற - (தான்) உள்ளத்திற்கொண்டுள்ள அஜ்ஞானமயக்கம் நீங்கும்படி, மெய் உணர்பவன் - தத்துவ ஞானத்தையடைந்தவன், வேறுபட்டு உருவம் கொண்டு - தனது அஜ்ஞாநநிலை மாறி நிசவடிவமடைந்து, கழல் கூடியது ஒப்ப - (எம்பெருமானுடைய) திருவடியை அடைதலை யொக்க, பண்டைவண்ணம் ஆய் நின்றனள் - (அவ்வகலிகை) முன்னைய ரூபமாய் எழுந்து நின்றாள்; மா முனி - (அதனைக் கண்ட) சிறந்த விசுவாமித்திரன், பணிப்பான் - (ஸ்ரீராமனை நோக்கிச்) சொல்வான்; (எ-று.)—அது மேற்கவியிற் கூறுகின்றார்.

எம்பெருமான் திருவடிசேர்பவர் கருமமொழிந்து இப்புன் புலால்யாக்கையை ஒழித்து ஒளிமயமான உருவத்தை அடைவதுபோல, இராமனது திருவடிப்பொடி சேர்ந்த இவள் சாபமொழிந்து கல்லுருவம் மாறி நல்லுருவம் பெற்றாளென்க. கழல்துகள்-பாததூளி. பேதைமையயக்கு-அவித்தையின் தொடர்ச்சி. மெய்யுணர்தலாவது - பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையாக அறிதல். வேறுபட்டு உருவங்கொள்ளுதல் - பஞ்சபூதமயமான இந்தக் கர்மவினையுடலொழிந்துதேஜோமயமான திவ்வியமேனியைப்பெறுதல்; இது, முத்திபெறுவோர்க்கு உள்ளது. மூன்றாமடியில், மெய்யுணர்வு கொண்டு அவன் கழல் கூடியது என இயைத்து - (ஒருவன்) தனது தத்துவ ஞானத்தால் அகாரவாச்சியனான திருமாலினது திருவடியை அடைந்தது என்று உரைப்பாருமுளர். மிதிலைக்கு அருகிற் செல்லும்போது ஆச்சிரமமொன்று பாழாயிருப்பதுகண்டு அதைக் குறித்து இராமன் வினவ, விசுவாமித்திரன் அகலிகையின்வரலாறு கூறி அவ்வாச்சிரமத்திற் செல்லுமாறு வேண்ட, சாபவிமோசன முண்டாகுமாறு இராமன் அங்குச்சென்றானென்று முதனூல் கூறும். முதலடி - முற்றுமோனை. பி-ம்:—[1]மயக்கிட. [2]வண்ணத்தினின்றனள், வண்ணகத்தளாயினள். (547)

வேறு.

72.—சாபம்நீங்கிய அகலிகையை முனிவன் இராமனுக்கு அறிவித்தல்.

மாயிரு விசும்பிற் கங்கை மண்மிசை[1]க் கொணர்ந்தோன் மைந்த
மேயின வுவகை யோடு மின்னென [2]வொதுங்கி நின்றாள்
தீவினை [3]நயந்து செய்த தேவர்[4]கோன் றனக்குச் செங்கண்
ஆயிர மளித்தோன் பன்னி யகலிகை யாகு மென்றான்.

(இ - ள்.) 'மா இரு விசும்பின் - மிகவும் பெரிய ஆகாசத்திலிருந்து, கங்கை - கங்காநதியை, மண்மிசை - பூலோகத்திலே, கொணர்ந்தோன் - கொண்டுவந்த பகீரதசக்கரவர்த்தியினது (வமிசத்

திற்பிறந்த), மைந்த - குமாரனே! மேயின உவகையோடு-பொருந்தின மகிழ்ச்சியுடனே, மின் என ஒதுங்கி நின்ருள்-மின்னற்கொடிபோல (ஒருபுறத்தே) ஒதுங்கிநின்ற இவள், (யாரெனில்), தீவினை நயந்து செய்த-(பிறன்மனையைப் புணர்தலாகிய) கொடுந்தொழிலை விரும்பிச்செய்த, தேவர்கோன் தனக்கு - தேவர் தலைவனான இந்திரனுக்கு, செம் கண் ஆயிரம் அளித்தோன்-சிவந்த ஆயிரங்கண்களைக் கொடுத்த கௌதம முனிவனது, பன்னி - பத்தினியாகிய, அகலிகை-, ஆகும்-ஆவாள்' என்ருன்-என்று (கௌசிகமுனிவன்)கூறினான்; (எ-று.)

இப்போது சிலைவடிவம் நீங்கிப் பெண்வடிவுபெற்று மகிழ்வோடு நாணத்தினால் இங்கு ஒதுங்கி நிற்பவள் கௌதமமுனிவனது பத்தினியாவளென்றும், தேவேந்திரன் தீவினையை விரும்பிச்செய்ய அதற்காகக் கௌதமமுனிவர் சபாங்கொடுத்துப் பின் அதனால் விளைந்ததைக் கண்ணாயிரமாகுமாறு அம்முனி வரமளித்தாரென்றும் நிகழ்ந்த சரிதையை விசுவாமித்திரன் சுருக்கமாகத் தெரிவித்தனனென்க. கண்ணாயிரமளித்ததை மேலேகாண்க. மின்-ஒளிக்கும், மெல்லியஉருவத்துக்கும் உவமை. பி-ம்:—[1] தந்தோன், இழித்தோன். [2] ஒடுங்கி. [3] நயத்தல். [4] கோமாற்கு. (548)

73.—ஸ்ரீராமன் அகலிகையின் சாபவரலாற்றை வினவுதல்.

பொன்னை[1]யேர் சடையான் கூறக் கேட்டலும்[2]பூமின் கேள்வன்
என்னையே யென்னை யேயிவ் வுலகிய லிருந்த [3]வண்ணம்
முன்னையூழ் வினையி னாலோ நடுவொன்று முடிந்த துண்டோ
அன்னையே யனையாட் [4]கிவ்வா றடுத்தவா [5]றருளு கென்ருன்.

(இ-ள்.) பொன்னை ஏர் சடையான் - (செந்நிற வொளியாற்) பொன்னினையொத்த சடையினையுடைய கௌசிகமுனிவன், கூற - (இவ்வாறு) சொல்ல, கேட்டலும் - கேட்டவுடனே, பூ மின் கேள்வன் - தாமரைமலரில் வாழ்கிற மின்னல்போன்ற திருமகளுடைய கணவனான இராமபிரான், (வியப்புற்று முனிவனைநோக்கி), 'இ உலகு இயல் இருந்த வண்ணம் - இந்த உலகத்தினது இயற்கை இருந்தவிதம், என்னைஏ என்னைஏ - எத்தன்மையது! எத்தன்மையது!! முடிந்தது - இங்ஙனம் நேர்ந்தது, முன்னை ஊழ் வினையினால் ஓ-முற்பிறப்பிற்செய்த கருமத்தின் சம்பந்தத்தினாலோ? நடு ஒன்று உண்டுஓ - (அல்லது இதற்குக்காரணமாய்) இடையிலே நேர்ந்ததொருசெய்கை உள்ளதோ? அன்னைஏ அனையாட்கு - (உலகுக்கெல்லாந்) தாயையே ஒத்த அகலிகைக்கு, இ ஆறு அடுத்த ஆறு - இந்தப்படிநேர்ந்தகாரணத்தை, அருளுக - கூறியருளுவாயாக,' என்ருன் - என்றுவினவினான்; (எ - று.)

இவளோ உலகத்தாய்போன்று குற்றமற்றவளாகத்தோன்றுகின்ருள்: இப்படிப்பட்டவட்கும் கல்லாக மாறும் நிலை நேரிட்டதென்றால், இவ்வுலகியலை என்னென்பது! இப்படி இவள் உருவம் மாறுபட்டதற்குக்காரணம், முன்னைய ஊழ்வினையா? அன்றி, இப்பிறப்பில் ஏதேனும் நேர்ந்ததுஉண்டா? இக்காரணத்தை விளக்க

மாகக்கூறுக என்று இராமன் முனிவனைக் கேட்டுக்கொண்டன னென்க. சீதாகலியாணம் சமீபித்திருத்தலால், 'பூமின்கேள்வன்' என்றார். பூமின்கேள்வன்என்பதற்கு-பூமியினிடத்து அவதரித்த மின்னல்போன்ற ஜாநகியின் கொழுநனாகுபவனென்றும் பொருள் கொள்ளலாம்; பூ-வடசொல்; மின்-உவமையாகுபெயர். என்னையே என்னையே-அடுக்கு, அதிசயம் பற்றியது. பி-ம்:—[1]நேர், ஏய். [2]பூமி. [3]ஆறே, ஆறென். [4]இங்ஙன். [5]அருளும். (549)

74.—இதுமுதல் ஒன்பதுகவிகள்—அகலிகையின் சாபவரலாறு:—இந்திரன் முனிவனில்லாச்சமயத்து அகலிகையைச் சேர்தல்.

அவ்வுரை யிராமன் கூற வறிஞனு [1]மவனை நோக்கிச்
செவ்வியோய் கேட்டி மேனாள் செறிசுடர்க் குலிசத் தண்ணல்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யற்ற நோக்கி
நவ்விபோல் விழியி னாடன் வனமுலை [2]நணுக லுற்றான்.

(இ - ள்.) அ உரை - (கீழ்க்கூறிய) அந்த வார்த்தையை, இராமன்—, கூற-சொல்ல, (கேட்டு), அறிஞன்உம் - முற்றுமறிந்த விசுவாமித்திரனும், அவனைநோக்கி - அந்தஇராமபிரானைப்பார்த்து, (கூறுவானானான்);—செவ்வியோய்-எல்லா நன்மைகளையும் உடையவனே! கேட்டி - (யான் கூறுவதைக் கருத்தோடு) கேட்பாயாக; மேல் நாள் - முன்னொருகாலத்திலே, செறி சுடர் குலிசத்து அண்ணல் - மிகுந்தஒளியையுடைய வச்சிராயுதத்தை யேந்திய பெருந்தன்மையுடைய தேவேந்திரன், அவ்வியம் அவித்த சிந்தை முனிவனை அற்றம் நோக்கி - பொறாமை முதலிய துர்க்குணங்களை யொழித்த மனத்தையுடைய கௌதமமுனிவன் (ஆச்சிரமத்தில்) இல்லாத சமயத்தைப் பார்த்து, (அங்குச்சென்று), நவ்வி போல் விழியினாள்தன்-மான்பார்வைபோன்ற பார்வையையுடைய அகலிகையினது, வனம் முலை - அழகிய தனங்களை, நணுகல் உற்றான் - சேர விரும்புபவனானான்; (எ - று.)

படைத்தற்கடவுளான பிரமதேவன், முன்னர்ப்படைத்த பிரஜைகளின் அங்கங்களிலுள்ள சிறப்பையெல்லாம் எடுத்து அழகு மிகுந்த பெண்ணொருத்தியைப் படைத்து அவளுக்கு அஹல்யா என்று பெயரிட்டான்; [ஹலம் என்றால் விரூபம், அதாவது - கண்ணுக்கு இனியாதது; அதனாலுண்டானது-ஹல்யம், அதாவது அழகின்மை; அஃதில்லாதவள்-அஹல்யா.] இந்திரன் இம்மேலான மங்கைக்குத் தக்க கணவன் தானேயன்றி வேறில்லை யெனச் செருக்குற்று அவளைத் தனக்குத் தாரமாக எண்ணினான்;பிரமனது சங்கற்பத்திற்கு மாறாக அங்ஙனம் இந்திரன் எண்ணிச் செருக்குற்றிருந்தனனாதலால், பிரமதேவன் அவளை அவனுக்குக் கொடாமல் கௌதமமுனிவனிடங் கொடுத்து 'அவளைப் பாதுகாத்து வருக' எனக் கட்டளையிட்டான்: அவ்வாறே அவன் வெகுகாலம் பாதுகாத்துப் பின்படைத்தற்கடவுளிடங் கொணர்ந்து விட்டான்; அவனுடைய மனஞ் சபலப்படாமலிருந்ததையும் தவநிட்டையையும்

கண்டு நான்முகக்கடவுள் உவந்து அம்முனிவனுக்கே அவளைத் தாரமாக்கினன்; இந்திரனே பொறாமை கொண்டு வேற்றுருவத்தால் அவளைக் கற்பழிக்கலுற்றனென்க. நோக்கி என்ற வினையெச்சத்திற்கு முடிக்குஞ்சொல் வருவித்து உரைக்கப்பட்டது. அறிஞன் - திரிகாலஞானி. செவ்வி-நற்குணம்: அழகுமாம். அவ்வியம்-(மனங்) கோணுதல் என்றுபொருள்: இங்கே பிறராக்கம்பொறாமையை உணர்த்திற்று; இதனை "அவ்விய நெஞ்சத்தா னாக்கம்" என்னுந் திருக்குறளில், கோட்டத்தினைப்பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கம்: 'கோட்டம் - ஈண்டு, அழுக்காறு' எனப் பரிமேலழகர் உரைத்தவாற்றால் அறிக. இது, மற்றைத் தீக்குணங்களுக்கும் உபலட்சணம். நவ்வி-பெண்மான்; அதன்பார்வைக்கு, முதலாகுபெயர். எல்லாவுறுப்புக்களுள்ளுஞ்சிறந்த கண்களின் அழகைக் கூறியது, மற்றையங்கங்களின் அழகுக்கும் உபலட்சணம். பி-ம்:—[1] இவளை. [2] நச்சல், நயக்கல். (550)

75.—இதுவும் அது.

தையலா ணயன வேலு மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதி நாடி [1] யுழல்பவ னொருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் [2] செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்.

(இ - ள்.) தையலாள் நயனம் வேல்உம் - அகலிகையினது கண்களாகிய வேலாயுதங்களும், மன்மதன் சரம்உம்-மன்மதனுடைய பாணங்களும், பாய-(தன்மேற்) பாய்வதனால், (மிகவருந்தி),உய்யல் ஆம் உறுதி நாடி - (அவளைச் சேர்ந்து அக்காமநோய்நீங்கிப்) பிழைக்கும்படியானதொரு தவறாத உபாயத்தைத் தேடி, உழல்பவன்-அலைபவனாகிய அவ்விந்திரன், ஒருநாள் - ஒருதினத்தில், உற்ற மையலால் அறிவு நீங்கி-(வரம்புகடந்து) மிகுந்த காமமயக்கத்தால் நல்லறிவுகெட்டு, மா முனிக்கு அற்றம் செய்து - பெருமை பொருந்திய அக்கௌதமமுனிக்குப் பிரிவையுண்டாக்கி, பொய் இலா உள்ளத்தான் தன் உருவம்ஏ கொண்டு - பொய்யில்லாத மனத்தையுடைய அக்கௌதமமுனிவனது வடிவத்தையே தான் எடுத்துக்கொண்டு, புக்கான் - (அம்முனிவனாச்சிரமத்தினுட்) சென்றான்; (எ-று.)

கீழ்க்கவியிற் கூறியதை, இதனால் விவரித்துக் கூறுகின்றனர். தேவேந்திரன் அகலிகையின்கண்வேலும் மன்மதபாணமும் பாயவே, காமவேகம் மிக, 'நாம் உய்யும்வகை என்?' என்று உழல்பவனாய், ஒருகால் காமமயக்கம் நல்லுணர்வையொழிக்கவே, 'நாம் கௌதமவேடங்கொண்டு அகலிகையைச் சார்வதே உய்யும்வழி' என்று உறுதிகொண்டு, கௌதமமுனிவனை அப்பாற் போகுமாறு செய்து அந்தக்கௌதமமுனிவனது வடிவுகொண்டு சென்றானென்பதாம். இந்திரன் அகலிகையின் கண்ணழகிலீடுபட்டமையை 'தையலாள் நயனவேல் பாய' என்றார். இங்ஙனன்றி, அகலிகை காமக்குறிப்புக்கொண்டு இந்திரனை நோக்கினாளென்று கூறற்கு இடனில்லாமையை யறிக. 'முனிக்கு அற்றஞ்செய்து' என்றதனால் - கோழி

போலக்கூவிக்காலைக்கடன்கழித்தற்பொருட்டு முனிவனைப் பிரியச் செய்தமையை உணர்த்தினு ரென்ப. பெண்களது கண்ணழகும் மன்மதபாணமும் காமத்தை மூட்டி மனத்தை வருத்துவதில் ஒன்றற்கொன்று இனமாகும். பி-ம்:—[1] திரிபவன், தீயவன். [2] நோக்கி.

76.—அகலிகை தன்னைப் புணர்ந்தவன் இந்திரனென்று உணர்ந்தும் உடன்பட்டிருக்க, வெளிச் சென்றிருந்த கௌதமமுனிவன் வருதல்.

[1] புக்கவ ளோடுங் காமப் புது[2] மண மதுவின் றேறல்
ஒக்கவுண் டிருத்த லோடு முணர்ந்தன[3] ளுணர்ந்த பின்னும்
தக்கதன் [4] றென்ன[5] வோராள் [6] தாழ்ந்தன [7] ளிருப்பத் தாழா
முக்கண னனைய வாற்றன் முனிவனும் [8] முடுகி வந்தான்.

(இ - ள்.) புக்கு - (இங்ஙனம் இந்திரன்வேற்றுருவங்கொண்டு) சென்று, அவளோடுஉம்-அவ்வகலிகையுடனே, காமம் புது மணம் மதுவின் தேறல் - காமவின்பமாகிய புதிய வாசனையையுடைய மதுவினது தெளிவை, ஒக்க உண்டு இருத்தலோடுஉம் - சமமாக அநுபவித்துக்கொண்டிருக்கையில், உணர்ந்தனள் - ('தன்னைப் புணர்பவன் கணவனல்லன்; இந்திரன்' என்று அகலிகை) அறிந்தாள்; உணர்ந்த பின்உம் - அறிந்த பின்பும், தக்கது அன்று என்ன ஓராள்-(இத்தீச்செயல் தனக்குத்) தகுதியானதன்றென்று ஆலோசித்து அதனை விலக்காதவளாய், தாழ்ந்தனள் இருப்ப-(அக்கொடுஞ் செய்கைக்குத் தான்) கீழ்ப்படிந்திருக்க, (அச்சமயத்தில்), தாழா முக்கணன் அனைய ஆற்றல் முனிவன்உம்-(ஒருவாற்றாலுங்) குறைவில்லாத மூன்று திருக்கண்களையுடைய பரமசிவனை யொத்த பெருவல்லமையுடைய அக்கௌதமமுனிவனும், முடுகி வந்தான்-விரைவாய் மீண்டுவந்து விட்டான்; (எ - று.)

தன் கணவனென்றே நினைத்துக்கொண்டு தேவேந்திரனோடு ரமிக்கையில், அகலிகை, புதுமணமதுவின்தேறலை யுண்டதனால் தன்னோடு ரமிப்பவன் தேவேந்திரனென்று உணர்ந்தாள்: உணர்ந்தும் அன்னவள் இது தக்கதன்று என்று ஆராய்ந்து விலக்கக் கூடிய அறிவுத்திறனைப் பெறுமல் அச்செயலுக்கு உடந்தையாய் நின்றாள்: அந்நிலையில் கௌதமமுனிவன் விரைவாக வந்தான். முனிவன் முடுகிவருவதற்குக் காரணம் - தான் எழுந்துபுறப்பட்டுப் போனது நடுநிசியாகிய அகாலமென்றும், அவ்வாறு தான் செல்லும்படி இந்திரன் வஞ்சனை செய்தானென்றும் ஞானக்கண்ணால் அறிந்தமை. காமம் - சிற்றின்பம். காமப்புதுமணம் மது - ஆசை மிகுதியாலுண்டாகிய புணர்ச்சியின்பமாகிய மது என்றுமாம்: பிறன் மனைவிழைதலும் மதுபானமும் ஒழுக்கத்தையும் உணர்வையும் அழித்தலில் ஒன்றோடொன்று ஒப்பனவாதலால், இவ்வாறு உருவகப்படுத்தினர். தாழ்தல் - (ஆசைப்பெருக்கத்தால்) உடன்பட்டு ஒழுகுதல். இனி, 'உணர்ந்தனள் - புதுமண இன்பத்தையுணர்ந்தாள்: தக்கது-இவ்வின்பம் தக்கதாக இருக்குமா? அன்று - தக்கதன்றோ? என்று ஆராய்ச்சி கொள்ளாளாய்' என்பாருமுளர். தாழா-

காலதாமதமில்லாமல், வந்தான் என்று உரைப்பினுமாம். இங்கே பிறபெயர்களாற் கூறாமல் 'முக்கணன்' என்ற திருநாமத்தாற் கூறியது-சங்காரத்தொழிலை நடத்தும்பொருட்டு நெற்றிக்கண்ணைத் திறந்துள்ள உருத்திரமூர்த்தியை யொப்ப முனிவன் பெருங்கோபங் கொண்டு வந்தா னென்பதை உணர்த்த. பி - ம்:—[1] புக்கவனோடும். [2] நலம். [3] உணர்ந்து. [4] எண்ணி. [5] தேராள், தேரு. [6] தாழ்ந்தனன். [7] அளிப்ப. [8] முடுக. (552)

77.—அகலிகை நடுங்கிநிற்க, இந்திரன் அஞ்சிப் பூனையாய்ப் போகத் தொடங்குதல்.

சரந்தரு சாப மல்லாற் றடுப்பருஞ் சாபம் [1] வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கு நெடும்பழி பூண்டாள் நின்றாள்
புரந்தர னடுங்கி யாங்கோர் [2] பூசையாய்ப் போக லுற்றான்.

(இ - ள்.) சரம் தரு சாபம் அல்லால் - (தடுக்கக்கூடிய) பாணங்களைத் தொடுக்கின்ற வில்லின்தொழிலினு லல்லாமல், தடுப்பு அரு சாபம்-(எவராலும்) தடுப்பதற்கு முடியாத சாபத்தைக் கொடுத்திடுவதிலே, வல்ல - திறமையையுடைய, வரம் தரு - (வேண்டுவார் வேண்டும்) வரங்களையெல்லாங் கொடுக்கவல்ல, முனிவன்-கௌதமன், எய்த வருதலும் - (ஆச்சிரமத்தைச்) சேரவந்தவளவில், நிரந்தரம் உலகில் மாயா நிற்கும் நெடு பழி பூண்டாள் - எக்காலத்திலும் உலகமுழுவதிலும் அழியாமல் நிலைத்திருக்கும்படியான பெரிய பழிச்செய்கையை மேற்கொண்டவளாகிய அகலிகை, வெருவி நின்றாள் - அஞ்சி நின்றாள்; புரந்தரன்-இந்திரன், நடுங்கி - (செய்யத்தகாத தொழிலைச் செய்ததனாலுண்டான அச்சத்தால் மனமும் உடம்பும்) நடுங்குதலையடைந்து, ஓர் பூசை ஆய் - ஒரு பூனையின் வடிவங் கொண்டு, ஆங்கு - அவ்விடத்தினின்று, போகல் உற்றான் - செல்லத் தொடங்கினான்; (எ - று.)

கௌதமமுனிவன் திரும்பிவந்ததும் 'தேவேந்திரனால் வஞ்சிக்கப்பட்டோமே!' என்று அம்முனிவனெதிரே அகலிகை நடுங்கிநின்றாள். தேவேந்திரனோ, வஞ்சிப்பதில்வல்ல பூனையின் வடிவத்தையெடுத்துச்சென்றானென்பதாம். தன் கற்பை யழித்தற்குத் தானே முதன்மைக்காரணமாக இருந்தால், அந்த அகலிகை 'கற்புநீங்கினவள் [வியபிசாரி]' என்று ஏசுதற்கு ஏற்றவளாவள்: அங்ஙனன்றி, அறியாமையால் பிறஆடவனோடு கூடியதால் முழுப்பழி இவள் மீது சுமக்கக் காரணமில்லை: 'தேவேந்திரனென்று தெரிந்தவுடனே அத்தீச்செயலை விலக்கவேணுமென்ற அறிவுத்தெளிவு பிறவாததே இவள்மீது குறை' என்ற கருத்தைப் புலப்படுத்த 'நெடும்பழிபூண்டாள்' என்றார். சரந்தரு, தடுப்பரு, என்னும் அடைமொழிகள் - சாபம் என்னுஞ் சொல்லின், பொருளை வெளிப்படையாக்க வந்தன; பிறகுறிப்பு. தடுக்கக்கூடிய வில்லம்பினும் தடுக்கக்கூடாத சொல்லம்பு மிகக் கொடியதென்பார், 'சரந்தருசாபமல்லால் தடுப்பருஞ்சாபம்' என்றார். முனிவரது சாபத்தைக் கடவுளருங் கடக்குந் தன்மைய ரல்லர் என அறிக. வெகுண்டும் அருள்கொண்டும் கூறு

கின்ற சாபம் அநுக்கிரகம் என்னும் இரண்டுவகைப்பட்ட நிறைமொழிகளிலுஞ் சிறந்தவ னென்பது தோன்ற, 'சாபம்வல்ல வரந்தரு முனிவன்' என்றார். "எஞ்ஞான்றும், விளியாது நிற்கும் பழி" என்பவாதலால், 'மாயாநிரந்தர முலகினிற்கும் நெடும்பழி' என்றார். பி-ம்:- [1] அல்ல. [2] பூஜை. (553)

78.—இந்திரனுக்குக் கௌதமன் சாபங்கொடுத்தல்.

தீவிழி சிந்த நோக்கிச் செய்ததை யுணர்ந்து [1] செய்ய
தூயவ னவனை நின்கைச் சுடுசர மனைய [2] சொல்லால்
ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி [3] யுனக்குண் டாகென்று
ஏயின னவையெ லாம்வந் [4] தியைந்தன விமைப்பின் முன்னம்.

(இ - ள்.) (அப்பொழுது), செய்ய தூயவன் - நடுநிலைமையையுடைய பரிசுத்தனாகிய அக்கௌதமமுனிவன், விழி தீ சிந்த நோக்கி -கண்கள் நெருப்புப்பொறியைச் சொரியும்படி கோபித்துப்பார்த்து, செய்ததை உணர்ந்து - (அவ்விருவருஞ்) செய்த தீக்காரியத்தையறிந்து, நின் கை சுடு சரம் அனைய சொல்லால் - நினது திருக்கையால் ஏவப்படுகிற வெவ்விய அம்பை யொத்த சொல்லினால், அவனை-அவ்விந்திரனை, ஆயிரம் மாதர்க்கு உள்ள அறிகுறி உனக்கு உண்டாக என்று - 'பெண்களுக்கு அடையாளமாகவுள்ள குறி ஆயிரம் உனக்கு (உடம்பு முழுவதிலும்) உண்டாகக் கடவன' என்று, ஏயினன்-(சாபம்) ஏவினன் [சபித்தான்]: அவை எலாம் இமைப்பின் முன்னம் வந்து இயைந்தன-(அவ்வாறே) அப்பெண்குறிகளாயிரமும் கண்ணைமூடித் திறக்குங்காலத்துக்குள்ளே வந்து (அவனுடம்பிற்) பொருந்தின; (எ - று.)

செய்தது - இடக்கரடக்கல். தன்னோடு யாதோருறவுமில்லாத இந்திரனுக்குச் சாபங்கொடுத்ததோடு தன்மனைவிக்குஞ் சிறிதும் பட்சபாதமின்றிச் சாபங்கொடுத்தவனாதலால், 'செய்ய தூயவன்' என்றார். இந்திரன் ஒருபெண்ணின்குறியில் விழைவுகொண்டு தீச்செயல் புரிந்தமையால் அதனிடத்து வெறுப்புண்டாகும்பொருட்டு அக்குறிகள் ஆயிரந்தோன்றுமாறு சபித்தனன். இங்ஙனம் சபித்ததாகக் கூறியது, பிறநூல் மேற்கொண்டாகும். உபமான உபமேயங்களை மாற்றி, இங்கே 'நின்கைச்சுடுசரமனைய சொல்' என்றார். ராமபாணம் பகைவரைக் கொல்லுதலாகிய தன் பயனை விரைவிலே கொடுப்பதுபோல முனிவர்சொல் கொடியவரை அழித்தலாகிய தன்பயனைத் தவறாமல் விரைவிலே தந்தேவிடுமென்க. ஏயினன் = ஏவினன். பி - ம்:— [1] வெய்ய. [2] சொல்லான். [3] இவற்கு. [4] எய்தின. (554)

79.—அகலிகைக்குக் கௌதமன் சாபங் கொடுத்தல்.

எல்லையி னுணர்வெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னோடும் புரந்தரன் போய பின்றை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயும்
கல்லிய [1] லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு [2] வீழ்வாள்.

(இ - ள்.) புரந்தரன்-தேவேந்திரன், எல்லை இல் நாணம் எய்தி-(தனது உடம்புமுழுவதும் கெட்டுவிட்டதனால்) அளவில்லாத வெட்கத்தை அடைந்து, யாவர்க்குஉம் நகைவந்துஎய்த-(தனது நிலைமையைக் கண்டவர்கள் கேட்டவர்கள்) எல்லோருக்கும் பரிகாசச் சிரிப்பு வந்துபொருந்தும்படி, புல்லிய பழியினோடுஉம் - (தனக்கு) நேர்ந்த பழியுடனே, போய பின்றை - (தன் உலகத்துக்குப்) போனபின்பு,—(முனிவன்), மெல் இயலாளை நோக்கி-மென்மையான தன்மையுடைய (தன்) மனையாளைப்பார்த்து, 'விலை மகள் அனைய நீஉம் - (தீயொழுக்கத்தால்) வேசியையொத்த நீயும், கல் இயல் ஆதி-கல்வடிவமாவாய்', என்றான்-என்று சபித்தான்; கருங்கல் ஆய் மருங்கு வீழ்வாள் - (உடனே அவள்) கருங்கல்வடிவமாய் அவ்விடத்திலே விழுபவளானாள்; (எ-று.)

உண்மையில் அகலிகைமீது கற்பழித்துக்கொள்ளுந் தன்மையில்லாதிருக்கக் கௌதமமுனிவன் சினத்தினால் உண்மையை ஆழ்ந்து ஆலோசியாமல் 'விலைமகளனைய நீயும்' என்றான். கருங்கலலாகுமாறு சபித்ததாகப் பத்மபுராணத்திலுள்ளது. நகைப்பு-இகழ்ச்சிபற்றியது. புல்லிய பழி - இழிவான நிந்தையென்றுமாம். பி - ம்:—[1] ஆக. [2]வீழ்ந்தாள். (555)

80.—அகலிகை வேண்ட, கௌதமமுனிவன் சாபவிமோசனவகை கூறல்.

[1]பிழைத்தது [2]பொறுத்த லென்றும் பெரியவர் [3]கடனே [4]யென்பர்
அழற் [5]றருங் கடவு ளன்னாய் [6]முடிவிதற் கருளு கென்னத்
தழைத்துவண் டிமிருந் தண்டார்த் தசரத ராம னென்பான்
கழற்றுகள் [7]கதுவ விந்தக் கல்லுருத் [3]தவிர்தி யென்றான்.

(இ - ள்.) (அங்ஙனம் விழுகிறவள் அம்முனிவனை நோக்கி), 'அழல் தரும் கடவுள் அன்னாய் - (தனது நெற்றிக்கண்ணினின்றும் புன்சிரிப்பினின்றும்) நெருப்பைப் புறப்படவிடுகிற உருத்திர மூர்த்தியை யொத்த திறமையையுஞ் சினத்தையு முடைய முனிவனே! பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடன்ஏ என்பர் - (சிறியோர்) பிழைசெய்ததைப்பொறுப்பது எப்பொழுதும் பெரியோர்களுடைய கடமையேயா மென்று (நூலோர்) கூறுவர்; (ஆதலால்), இதற்கு முடிவு அருளுக என்ன - இச்சாபத்துக்கு ஒருமுடிவை அனுக்கிரகிப்பாயாக' என்று வேண்ட, (அவ்வேண்டுகோளுக்கு இரங்கி அக்கௌதமன்), 'தழைத்து வண்டு இமிரும் தண் தார் தசரதராமன் என்பான் கழல் துகள் கதுவ-செழிப்புள்ளதாய் வண்டுகள் ஒலித்தற்குஇடமான குளிர்ந்த பூமாலையையுடைய தசரதகுமாரனை ஸ்ரீராமனது திருவடித்தூளி (உன்மேற்) படியும்பொழுது, இந்த கல் உரு தவிர்தி-இந்தக் கருங்கல்வடிவத்தை நீங்குவாய்,' என்றான்-என்றுசாபவிமோசனம் அருளினான்; (எ - று.)

"சிறியோர்செய்த சிறுபிழை யெல்லாம், பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்றார் பிறரும். என்றும் - அவர்கள்செய்த பிழை பெருந்தீங்கைப்பயந்தபொழுதும் என்றபடி. அழல்தருங்

கடவுள் - அக்கினிபோன்ற செந்நிறத்தைப் பொருந்திய சிவன் என்றுமாம்; இனி, அக்கினிதேவனை யொத்த தூய்மையுடையா னென்றும் உரைக்கலாம். பி - ம்:—[1]பிழைத்தனன். [2]பொறுக்கையென்ப, பொறுக்கையென்றும். [3]கடமை, தகைமை. [4]என்பால், அன்பால். [5]பெருங். [6]முடிவதற்கு, முடிவெனக்கு. [7]கதுவி. [8]தவிரும். (556)

81.—பிரமனை முன்னிட்டுத் தேவர்கள் வேண்ட, இந்திரன் சாபத்தை ஒருவாறு முனிவன் போக்குதல்.

அந்தவிந் திரனைக் கண்ட வமரர்கள் பிரமன் முன்னு
வந்துகோ தமனை வேண்ட மற்றவை தவிர்த்து மாருச்
சிந்தையின் முனிவுதீர்ந்து சிறந்தவா யிரங்கண் [1]ணுக்கத்
தந்தம துலகு புக்கார் தையலுங் கிடந்தாள் கல்லாய்.*

(இ - ள்.) (இது நிற்க), அந்த இந்திரனை கண்ட அமரர்கள் - அத்தேவேந்திரனைப்பார்த்த தேவர்கள், பிரமன் முன் ஆ வந்து - பிரமதேவனை முன்னிட்டுக்கொண்டு வந்து, கோதமனை வேண்ட - (இந்திரனது சாபத்துக்கு விடுதலையை யருளும்படி) அக்கௌதம முனிவனை வேண்ட, (அம்முனிவன்), மாரு சிந்தையில் - (என்றும்) மாறுபடாத (தனது) திருவுள்ளத்திலே, முனிவு தீர்ந்து-கோபந் தணிந்து, அவை தவிர்த்து - (அவனுடம்பிலுண்டான) அந்த ஆயிரங் குறிகளை ஒழித்து, சிறந்த ஆயிரம் கண் ஆக்க - மேன்மையான ஆயிரங்கண்க ளாகும்படி அருள, (பின்பு தேவர்கள்). தம் தமது உலகு புக்கார்-தங்கள் தங்களது லோகத்துக்குப்போய்ச் சேர்ந்தார்கள்; தையல்உம் கல் ஆய் கிடந்தாள் - அழகிய அகலிகையும் சிலாரூபமாய் விழுந்து கிடந்தாள்; (எ-று.)

பிரமனை முன்னிட்டுச் சாபநீக்கம்பெற்றுத் தேவர்கள் செல்ல, இவள் இங்ஙனங் கல்லாய்க் கிடக்கலாயின ளென்று விசுவாமித்திரன் கூறினனென்க. 'சிறந்த ஆயிரங்கண்' என்றது - உறுப்புக்களனைத்தினும் கண் சிறந்தஉறுப்பு ஆதலாலும், ஆயிரங்கண்கள் கடவுளை யொழியப் பிறருக்கு இல்லாமையாலுமென்க. 'கௌதமன்

---

*இந்தப் பாடலிற்குப் பிரதியாகச் சில ஏடுகளில்

வண்ணவார் [1]குழலி னுட்கும் வானவர் தமக்கு மாகேன்
எண்ணி[2]நான் செய்த குற்றம்[3]முனிவநீ பொறுத்தி யென்னப்
பண்ணிய வுறுப்பிற [4]கோடல் பத்துநூ றவையும்[5]போக
அண்ணிய விண்ணி [6]லாளிக் காயிர நயன மென்றான்.

என்று ஒருபாடல் காணப்படுகின்றது. இந்திரன் அகலிகையைத் தான சேரவேண்டிப் பெருவிருப்பங்கொண்டிருந்தானுயினும், கௌதமமுனிவன் கடுந்தவம் புரிந்தானுக அந்தக் கடுந்தவத்தினுல் தேவர்கட்கு உண்டான தாபந் தீர்தற்பொருட்டே தீத்தொழில் புரிந்தா னென்பது முதலடியிற் கருதத்தக்கது. பி - ம்:—[1]குழலினார்க்கும். [2]யானிழைத்த. [3]இறைவ. [4]கோசம், கொண்ட. [5]போகி. [6]வாழிக்கு, வாழிஃது.

இந்திரனை ஆண்குறி யிழக்கும்படியும், அகலிகையை அரூபியாகி உணர்வில்லாமற் பலநாள் சாம்பலிலே கிடக்கும்படியும் சபித்திட்டனன்' என்று வால்மீகி ராமாயணத்திற் கூறியுள்ளது. பி - ம்:—[1] ஆக்கி. (557)

82.—விசுவாமித்திரன் இராமனைப் புகழ்தல்.

இவ்வண்ண நிகழ்ந்த வண்ண மினியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண [1]முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண [2]மங்குக் கண்டேன் கால்வண்ண [3]மிங்குக் கண்டேன்.

(இ - ள்.) இ வண்ணம் - இந்தவிதம், நிகழ்ந்த வண்ணம் - (முற்காலத்தில்) நடந்த முறையாம்: இனி - இனிமேல் [நீ திருவவதரித்துத் தீயோரைக் கடிந்து நல்லோரைப் பாதுகாத்தலென்பது ஏற்பட்டபின்பு], இந்த உலகுக்கு எல்லாம்-இவ்வுலகத்திலுள்ள எல்லாப்பிராணிவர்க்கத்திற்கும், உய் வண்ணம் அன்றி - (துன்பம் நீங்கி) ஈடேறும் வழியே யல்லாமல், மற்று ஓர் துயர் வண்ணம் - அதற்கு வேறுபட்டதொரு துன்பத்தின் வழியை, உறுவது-அடைவது, உண்டுஓ - உளதாகுமோ? [ஆகாதென்றபடி]; மழை வண்ணத்து அண்ணலே - மேகம்போன்ற திருமேனி நிறத்தையுடைய ஸ்ரீராமனே! அங்கு - அவ்விடத்தில் [வருகிறவழியில்], மை வண்ணத்து அரக்கி போரில் - அஞ்சனம்போன்ற கருநிறத்தையுடைய (தாடகையென்னும்) இராட்சசியோடுசெய்த யுத்தத்தில், உன் கை வண்ணம் கண்டேன் - (உனது) கையின்திறத்தைப் பார்த்தேன்: இங்கு - இவ்விடத்தில், கால் வண்ணம் கண்டேன் - (உனது) திருவடியினது திறத்தைப் பார்த்தேன், (என்று விசுவாமித்திரன் இராமனைக் கொண்டாடி அகலிகையின் வரலாற்றை முடித்தான்;)

உணர்ச்சியற்ற கல்வடிவம் இராமபிரானது திருவடித்துகள் பட்டமாத்திரத்தில் நல்வடிவம் பெற்றதனால் அம்மூர்த்தியினது திருவடியை யடைந்தசேதநர்கள் இக்கருமசரீரமொழிந்து திவ்விய சரீரம் பெறுவரென்பது கூறாமலே பெறப்படும். 'மழை வண்ணத் தண்ணல்' என்றது - கண்டாரின் மனக்கொதிப்பை நீக்குங்குளிர்ந்த கருநிறத்தோடு கைம்மாறுகருதாது கருணைமழைபொழிபவன் இராமன் என்னும் பொருளையுங் கொண்டது. பொய் கொலை வஞ்சனை முதலிய தீக்குணங்களுக்கு உறைவிடமானவள் தாடகை என்பதைக் குறிப்பிக்குமாறு, அவளுட்குக் கருநிறம் அமைந்ததென்பார், 'மை வண்ணத்தரக்கி' என்றார். இராமபிரானது கருநிறத்துக்கும் தாடகையென்ற அரக்கியின் கருநிறத்துக்கும் தோற்றத்திலேயே வேறுபாடு தோன்றுமாறு உள்ளதென்று குறிப்பிப்பார், 'மை வண்ணத் தரக்கி, மழை வண்ணத்தண்ணல்' என்று இருவரையும் இருபடியாகக் கூறினார். 'கைவண்ணமங்குக்கண்டேன் கால்வண்ணமிங்குக் கண்டேன்' என்றதனால், தீயோரைக்கடிதலும் நல்லோரைக் காத்தலுமாகிய இருவகைத்திறனையும் கூறினார். பி-ம்:—[1] உள்ளது. [2] அங்கும். [3] இங்கும். (558)

83.—இராமன் அகலிகைக்கு முகமன்கூறி விடைகொடுத்து வணங்கிச் செல்லல்.

தீதிலா வுதவி செய்த சேவடிக் கரிய [1]செம்மல்
கோதிலாக் குணத்தான் சொன்ன பொருளெலா மனத்திற்[2] கொண்டு
மாதவ னருள்[3]ளுண் டாக [4]வழிபடு [5]படரு ருதே
போதுநீ [6]யன்னை யென்று [7]பொன்னடி [8]வணங்கிப் போனான்.

(இ - ள்.) தீது இலா - குற்றமில்லாத, உதவி - உபகாரத்தை, செய்த-(அகலிகைக்குச்) செய்தருளின, சே அடி - சிவந்த திருவடிகளையுடைய, கரிய செம்மல்-கருநிறமுடைய ஸ்ரீராமன், கோது இலா குணத்தான் சொன்ன - குற்றமில்லாத நற்குணங்களையுடைய கௌசிகமுனிவன் சொன்ன, பொருள் எலாம் - செய்திமுழுவதையும், மனத்தில்கொண்டு-திருவுள்ளத்திலே கொண்டு, (அகலிகையைநோக்கி), 'அன்னை - தாய்போன்றவளே! மா தவன் அருள் உண்டாக-மிகுந்த தவத்தையுடைய கௌதமனது கருணை (உன்பக்கல்) உண்டாகும்படி, நீ—, வழி படு-(அம்முனிவனுக்குப்) பணிவிடை செய்வாய்; படர் உருதே - (இடையிலே நேர்ந்த துன்பத்தை நினைந்து) வருந்தாதே; போது-செல்க', என்று-என்று சொல்லி, பொன் அடி-(அவளுடைய) அழகியபாதங்களை, வணங்கி - நமஸ்கரித்து, போனான்-(அப்பாற்) செல்லலானான்; (எ - று.)

முனிபத்தினியாதலாலும் நெஞ்சினுற் பிழைப்பிலாதவளாதலாலும் நிகழ்ந்தவற்றிற்குத் தண்டனைபெற்றிட்டாளாதலாலும், உத்தமியென்று அகலிகையைத் தாசரதி வணங்கினான். 'தீதிலா வுதவி' என்றது-பிறருக்குத் தீமை பயவாததும், கைம்மாறு கருதாததும், முன்செய்த உதவியை நோக்காததுமான உபகாரம். சேவடிக் கரிய செம்மல்- முரண்தொடை. பி-ம்:—[1]சிங்கம். [2]கொண்டான். [3]உண்டாகில். [4]வழிப்படர், வழிபடாய், வழிப்படு. [5]பழி. [6]அன்னையென்ன, என்றுபோற்றி. [7]புகழ்ந்துடன். [8]வணங்கிப்போனாள், வணங்கப்போனாள், கொண்டுபோனார். (559)

84, 85.—இரண்டு கவிகள் - குளகம்: கௌதமமுனிவனாச்சிரமத்தை விசுவாமித்திரன்முதலியோர் அடைந்துஅவனாலுபசாரம் பெற்றபின், விசுவாமித்திரன் அகலிகையையங்கீகரிக்குமாறு சொல்லுதல்.

84. அருந்தவ [1]னுறையு டன்னை [2]யணையவ ரணுக லோடும்
விருந்தினர் தம்மைக்காணு [3]மெய்ம்முனி வியந்த நெஞ்சன்
பரிந்தெதிர் கொண்டு புக்குக் கடன்முறை [4]பழுது ருமல்
புரிந்தபின் காதிசெம்மல் புனிதமா தவனை நோக்கி.

85. அஞ்சன வண்ணத் தான்ற னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாண் [1]முன்னை வண்ணத்த ளாகி நின்ருள்
நெஞ்சினுற் [2]பிழைப்பி லாளை நீ[3]யழைத் திடுக வென்னக்
கஞ்சமா [4]முனிவ னன்ன மூனிவனுங் கருத்துட் கொண்டான்.

(இ-ள்.) (84) அரு தவன் உறையுள் தன்னை - (பிறருக்கு) அருமையான தவத்தைச்செய்துள்ள கௌதமமுனிவனது ஆச்சிரமத்தை, அனையவர்-அவர்கள், அணுகலோடுஉம்—, மெய் முனி-தத்துவஞானத்தையுடைய கௌதமமுனிவன்,—விருந்தினர் தம்மை காணா - விருந்தாளிகளாகிய அவர்களை நோக்கி, வியந்த நெஞ்சன் - அதிசயமுற்ற மனத்தையுடையவனாய், பரிந்து - அன்புகொண்டு, எதிர்கொண்டு புக்கு-எதிரேபோய் அழைத்துவந்து, கடன் முறை பழுதுஉறாமல் - (அதிதிகளுக்குச் செய்யவேண்டுங்) கடமையாகிய உபசாரமுறைமை குறைவுபடாமல், புரிந்தபின் - செய்தபின்பு,— காதி செம்மல் - காதியென்னும் ராஜரிஷியினது குமாரனாகிய விசுவாமித்திரன், புனிதன் மாதவனை நோக்கி - பரிசுத்தனான அம்முனிவனைப் பார்த்து,—(85) 'அஞ்சனம் வண்ணத்தான் தன் - மைபோற் கரிய திருநிறத்தையுடைய ஸ்ரீராமபிரானது, அடி துகள் - திருவடிப் பொடி, கதுவா முன்னம் - (தன்) மேற் படுதற்கு முன்பே [பட்டவுடனே யென்றபடி], வஞ்சிபோல் இடையாள் - வஞ்சிக்கொடிபோல் மெல்லிய இடையினையுடைய அகலிகை, முன்னை வண்ணத்தள் ஆகி நின்றாள் - பழையவடிவத்தையுடையவளாய் எழுந்துநின்றாள்; நெஞ்சினால் பிழைப்பு இலாளை - மனத்தோடுபொருந்திய குற்றம் இல்லாத இவளை, நீ அழைத்திடுக - நீ அழைத்துச் சேர்த்துக் கொள்வாயாக,' என்ன - என்று (கௌசிகன்) கூற,—கஞ்சம் மா முனிவன் அன்ன முனிவன்உம்-தாமரைமலரிலே வாழ்கின்ற சிறந்த பிரமதேவனையொத்த சிறப்பையுடைய கௌதமமுனிவனும், கருத்துள்கொண்டான் - (அவ்வார்த்தைகளை) மனத்திலே ஏற்றுக் கொண்டான்; (எ-று.)

84:—உறைஉள் - தங்கும் இடம். மனைவி இந்திரன் என்ற இருவர்களைச் சபித்தபின்பு அச்சாபத்தினால் நேர்ந்த பாவத்தைப் போக்கிக்கொள்ளுமாறு இமயமலைச்சாரலில் தவஞ்செய்யச் சென்ற கௌதமன் தனது ஞானக்கண்ணினால் மனைவியின் சாபவிமோசனத்தையுணர்ந்து அங்குவந்து விருந்தினரை உபசரித்தனனென்று முதனூல் கூறும். விருந்தினருடைய வருகைக்கு மனமுவப்பது நன்மக்களியல்பு ஆதலால், 'விருந்தினர் தம்மைக் காணாமெய்ம்முனி வியந்த நெஞ்சன் பரிந்து' என்றார். வியந்தநெஞ்சன் - இத்தகைய சிறந்த விருந்தினர் வருகைக்குக் காரணமாய்த் தான் முன் செய்துள்ள பெருந்தவம் யாதோ! என்று ஆச்சரியமுற்ற மனத்தவன் என்றபடி. இனி, உடனிருந்த விருந்தினரை உபசரித்தற்கு உதவியாகிய தனது வாழ்க்கைத்துணைவியைப் பிரிந்தநாள் முதல் யாதொரு விருந்தினரையும் தன்பக்கல் வரக்காணாத அம்முனிவன் இப்பொழுது அவ்வில்வாழ்க்கைத்துணைவியுடனே விருந்தினரும் வருதலைக் கண்ணுற்று வியந்தவனானனென்றுமாம். பி - ம்:— [1]உறையுட்டன்னை. [2]அணுகினனணுகலோடும், அணுகினரணுகலோடும், அனையவாணுதலியோடும். [3]விம்மலால். [4]யாவும்பண்ணி.

இதுமுதல் மூன்றுகவிகள் சிலபிரதிகளி லில்லை.

85:—மனப்பூர்வமாகக் குற்றஞ்செய்யத்தொடங்காத இவளை அங்கீகரிக்கவேணுமென்று விசுவாமித்திரன் சொல்ல, கௌதமன்

அகலிகையை அங்கீகரிப்பவனானென்பதாம். நெஞ்சினுற் பிழைப் பிலாள் - மனப்பூர்வமாகக் குற்றத்தைத் தொடங்கிச் செய்யாதவள்; இவ்வாறுகூறியது, 'விலைமகளனையளீயும்' என்று கூறிய கௌதமன்கொள்கை தவறு என்று காட்டுவதற்காக: அம்முனிவனும் தன்கொள்கையை மாற்றிக்கொண்டானென்பார் 'கஞ்சமா முனிவனன்னமுனிவனும் கருத்துட்கொண்டான்' என்றார். 'நெஞ்சினுற் பிழைப்பிலாள்' என்று கூறுவதால், 'அறிவு நீங்கி அறம் பிழைத்த ஆண்மகனது வஞ்சமே, இந்த அகலிகை பெண்மை நெறி தவறியதற்குக் காரணம்' என்ற இவ்வுண்மையைக் குறிப்பித்துள்ளவாறு காண்க: இதுபற்றியே அகலிகையை, மேல் 'மாசறு கற்பின்மிக்க அணங்கு' என்றது. பி - ம்:—[1]பண்டை. [2]பிழையிலாளை. [3]அழைத்திடுதி, அளித்திடுதி. [4]மலரோன். (560, 561)

86.—அகலிகையைக் கௌதமனிடஞ் சேர்ப்பித்தபின்பு விசுவாமித்திரன் முதலிய மூவரும் மிதிலாநகரின் மதிலைப் பார்த்தல்.

குணங்களா லுயர்ந்த [1]வள்ளல் கோதமன் கமலத் [2]தாள்கள்
வணங்கினன் வலங்கொண் டேத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை யவன்கை யீந்தாண் டருந்தவ னோடும் வாசம்
மணங்கிளர் சோலை நீங்கி மணிமதிற் [3]கிடக்கை கண்டார்.

(இ - ள்.) குணங்களால் உயர்ந்த வள்ளல் - எல்லா நற்குணங்களினுலுஞ் சிறப்புற்ற வரையாது கொடுக்குந்தன்மையையுடைய ஸ்ரீராமன், கோதமன் கமலம் தாள்கள் வணங்கினன் - கௌதமனது தாமரைமலர்போன்ற திருவடிகளை நமஸ்கரித்து, வலங்கொண்டு - பிரதட்சிணஞ்செய்து, ஏத்தி-துதித்து, மாசு அறு கற்பின்மிக்க அணங்கினை - குற்றமற்ற பதிவிரதா தருமத்தினல் மேம்பட்ட தெய்வப்பெண்போன்ற அகலிகையை, அவன்கைஈந்து - அம்முனிவனது வசத்திலே கொடுத்து, ஆண்டு - அப்பொழுது, அருதவனோடுஉம்-அரிய தவத்தையுடைய விசுவாமித்திரமுனிவனுடனே, வாசம் மணம் கிளர் சோலை நீங்கி - மிகுந்த வாசனைவீசுகின்ற அந்தச் சோலையினின்றும் புறப்பட்டு,—மணி மதில்கிடக்கை கண்டார் - நவரத்தினங்களும் இழைத்துள்ள (மிதிலா நகரத்தினது) மதில்களின் நிலைமையை (மூவரும்) பார்த்தார்கள்;(எ - று.)

வாசம் என்பதைச்சோலையென்பதனோடு இயைத்து, கௌதம முனிவனது வர்சஸ்தலமான ஆச்சிரம மென்றுமாம். மணி- அழகும் உறுதியுமாம். பி-ம்:—[1]அண்ணல். [2]பாதம். [3]மிதிலை, கிடங்கை. ()

அகலிகைப்படலம் முற்றிற்று.

10 - ஆவது மிதிலைக்காட்சிப் படலம்.

சனகம்காராசனின் தேசமாகிய விதேகநாட்டினது இராசதானியான மிதிலாநகரத்தினது தோற்றத்தைச் சக்கரவர்த்தித்திருமகனும் இளையபெருமாளும் கௌசிகமாமுனிவனும் கண்டவரலாற்றைக் கூறுவதொருநூற்கூறுபாடென்பது இதற்குப் பொருள். மிதிலையென்னும் நகர்ப்பெயர்க்குக் காரணம், கீழ், வேள்விப்படலத்தின் இறுதிச்செய்யுளினுரையிற் கூறப்பட்டது. காட்சி - காணுதல். இந்தப்படலத்திற் காணப்படுகின்ற மொத்த செய்யுள்கள் 157-இல், முதல் 39 - செய்யுள்கள் - மிதிலைகாண்படலமென்றும், அதன்பின் 43-செய்யுள்கள்-கைக்கிளைப் படலமென்றும், அதன்பின் 56 - செய்யுள்கள் விசுவாமித்திரப்படலம் அல்லது கோசிகப்படல மென்றும் காணப்பட, பிறகு குலமுறைகிளத்தல் தொடங்குகின்றது. கைக்கிளைப்படலத்துக்குப் பின் 73-பாடல்கள் விசுவாமித்திரப்படல மென்றும், அதன்பின்னுள்ள 2 - பாடல்கள் மேற்படலமாகிய குலமுறைகிளத்துபடலத்தை அல்லது வரலாற்றுப்படலத்தைச் சேர்ந்தனவாகவும் சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றன. சிலபிரதிகளில் 23 - ஆம் பாடலோடு மிதிலைகாண்படலம் முடிய, காட்சிப்படலம் தொடங்கிப் பதினாறுபாடலில் முடிகின்றது: சில பிரதிகளில் 24-ஆம் பாடலிலே கைக்கிளைப்படலம் தொடங்குகின்றது.

முதல் 21-பாடல்களால் மிதிலை வருணனை கூறப்படுகின்றது.

1.—கொடிகளின் காட்சி.

மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற[1] தம்மா.

(இ - ள்.) அந்த கடி நகர் - காவலையுடைய அம்மிதிலாநகரமானது, 'செய்யவள் - செந்நிறமுடைய திருமகள், மை அறு மலரின் நீங்கி-குற்றமில்லாத தாமரைமலரை விட்டுநீங்கி, யான் செய் மா தவத்தின்-நான் செய்த பெரிய தவப்பேற்றினால், வந்து இருந்தாள்-(என்னிடத்தில்) வந்து அவதரித்திருக்கிறாள்,' என்று - என்று சொல்லி, செழு மணி கொடிகள் என்னும்-பெரிய அழகிய துவசங்களென்கிற, கைகளை - (தன்) கைகளை, நீட்டி-உயரக்காட்டி, (அவற்றால்), கமலம் செம் கண் ஐயனை-தாமரைமலர்போன்ற சிவந்த திருக்கண்களையுடைய ஸ்ரீராமபிரானை, ஒல்லை வா என்று - விரைவில் வருவாயாக வென்று, அழைப்பது - அழைப்பதை, போன்றது - ஒத்தது; (எ-று.)

இராமபிரான் அருகிற் செல்லும்போது அந்நகரத்துமதில்களின் மேலுள்ள கொடிகள் அசைவது, ஸ்ரீமகாலக்ஷ்மி தன்பக்கல் சீதாபிராட்டியாகத் திருவவதரித்துவளர்வதைக் குறிப்பாகச் சொல்லி, அந்நகரம், அவளுக்குக் கொழுநனாதற்குஏற்றஸ்ரீராமனை விரைவில்வந்து மணம்புரியுமாறு கைகாட்டியழைப்பதுபோலுமென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இது, 'கொடிகளென்னுங்

கைகள்' என்ற உருவகத்தை அங்கமாகக்கொண்டு வந்தது. தாமரைமலருக்குக் குற்றம்-மலர்ந்து பின்குவிதலும், வாட்டமடைதலும். 'மலரினீங்கிவந்து செய்யவளிருந்தாள்' என்றதனால், மிதிலாநகரம் திருமகளாருக்குச் செந்தாமரைமலரினுஞ் சிறந்த இனிய வாசஸ்தானமா மென்பதை யுணர்த்தினர். திருமகள் தனது இயற்கையான இடத்தைவிட்டு விரும்பிவந்து தன்னிடம் வீற்றிருத்தற்கு ஏற்ற தகுதி நல்வினையினா லன்றிக் கூடாதாதலின், 'யான் செய் மாதவத்தின் வந்து' எனப்பட்டது. மணிக்கொடிகள் - இரத்தினங்களிழைத்துச் செய்யப்பட்ட தண்டத்தோடுகூடிய துவசங்களென்றுமாம்; இப்பொருளில், மணி - காரியவாகுபெயர். அம்மா - வியப்பிடைச்சொல். பி-ம்:—[1] அன்றே. (563)

2.—இதுவும் அது.

நிரம்பிய மாடத் தும்பர் நிரைமணிக் கொடிக ளெல்லாம்
தரம்[1] பிற ரின்மை யுன்னித் தருமமே தூது [2]செல்ல
வரம்பில்பே ரழகி னாளை மணஞ்செய்வான் வருகின் றானென்று
அரம்பையர் விசும்பி னாடு மாடலி [3]னாடக் கண்டார்.

(இ - ள்.) 'பிறர் தரம் இன்மை உன்னி - (சீதாபிராட்டியைத் திருக்கலியாணஞ்செய்து கொள்ளுதற்கு ஸ்ரீராமபிரானைத்தவிர) வேறொருவருக்கும் தகுதியில்லாமையை நினைத்து, தருமம்ஏ - தரும தேவதையே, தூதுசெல்ல - தூதுபோய்த்தெரிவிக்க, (அவ்விராம மூர்த்தி), வரம்பு இல் பேர் அழகினாளை - எல்லையில்லாத சிறந்த அழகினையுடைய ஜானகியை, மணஞ்செய்வான் - திருக்கலியாணஞ் செய்யும் பொருட்டு, வருகின்றான்—, என்று - என்று (மகிழ்ந்து), அரம்பையர் விசும்பின் ஆடும் ஆடலின் - தேவமகளிர் ஆகாசத்தில் (ஆனந்தத்தால்) ஆடுகின்ற ஆட்டம்போல, நிரம்பிய மாடத்து உம்பர் - (அந்நகரத்தில்) நிறைந்துள்ள உபரிகைவீடுகளின்மேலே, நிரை மணி கொடிகள் எல்லாம் - வரிசையாகவுள்ள அழகிய துவசங்கள்யாவும், ஆட - (காற்றில்) ஆட, கண்டார் - (அம்மூவரும்) பார்த்தார்கள்; (எ - று.)

இக்கவியிற் கூறியது, மாடமாளிகைகளின்மீதுள்ள துவசங்களின் காட்சி; கீழ்க்கவியிற் கூறியது, மதில்களின்மீதுள்ளகொடிகளின் தோற்றம் என வேறுபாடு காண்க. கொடிகளசைதலை, தரும தேவதை தூண்ட இராமபிரான் சீதாபிராட்டியை மணஞ்செய்ய வருதற்காகத் தேவமாதர்களாடுதலாகக் குறித்தார்: தன்மைத்தற் குறிப்பேற்றவணி. "வெங்கதிர் நெற்றி தோய்ந்து விளங்குபொற் கொடியி னீட்டம், மங்குல்வா னிழியும் வான மடந்தையர்வடிவு காட்ட" என்றது, ஒப்புநோக்கத்தக்கது. உருவத்திலும் குலத்திலும் குணத்திலும் ஒத்த சிறப்புடைய ஆண்பெண்கள் ஒருவரையொருவர் மணம்புரிதல் தருமத்தின்பய னாதலால், 'தரம் பிறரின்மை யுன்னித் தருமமே தூதுசெல்ல' என்றார். இரண்டாமடிக்கு - (இந்நன்மணத்தைக் கூட்டி முடிப்பதற்குத் தூது செல்ல) வல்லவர் பிறரில்லாமையைக் கருதி அறக்கடவுள்தானே தூதுபோயழைக்க என்றும் உரைக்கலாம். நிரம்பிய மாடம்-

(சிற்பத்தொழில்) முற்றின மாளிகைகள் என்றுமாம். பி - ம்:—[1]பிறிதின்மை. [2]செப்ப. [3]ஆடல். (564)

3.—வெண்ணிறக்கொடிச்சீலைகளின் காட்சி.

பகற்கதிர் மறைய வானம் பாற்கடல் கடுப்ப நீண்ட
துகிற்கொடி மிதிலை மாடத் தும்பரில் துவன்றி [1]நின்ற
முகிற்குலந் தடவுந் தோறு நனைவன முகிலில் சூழ்ந்த
அகிற்புகை கதுவுந் தோறும் [2]புலர்வன வாகக் கண்டார்.

(இ - ள்.) பகல் கதிர் மறைய - பகற்பொழுதிற்குக் காரணமான சூரியனது கிரணங்கள் மறையவும், வானம் பாற்கடல் கடுப்ப-ஆகாசம் திருப்பாற்கடலையொத்துத் தோன்றவும், மிதிலை மாடத்து உம்பரில் துவன்றி நின்ற-மிதிலாபட்டணத்தின் உபரிகைவீடுகளின்மேல் நெருங்கிநின்றனவாகிய, நீண்ட துகில் கொடி- உயர்ந்த வெள்ளைக்கொடிச்சீலைகள், முகில் குலம் தடவும் தோறும் நனைவன - மேகக்கூட்டம்(தம்மைவந்து) வருடும் பொழுதெல்லாம் (அதன்நீரால்) நனைவனவும், முகிலின் சூழ்ந்த அகில் புகை கதுவும் தோறும் புலர்வன ஆக - மேகம்போலச் சூழ்ந்துகொண்ட அகிற்கட்டையின் புகை (தம்மேல் வந்து) பொருந்தும் பொழுதெல்லாம் உலர்வனவுமாக, கண்டார்—; (எ - று.)

இதனால், கொடிகளின் அடர்த்தியும், மிகுதியும், மேகமண்டலத்தை யளாவும் உயர்ச்சியும், அகிற்புகையின் மிகுதிப்பாடும் உணர்த்தப்பட்டன. துகிற்கொடி முகிற்குலத்தால் நனைவதும் அகிற்புகையால் உலர்ந்து முன்னைய நிலையை யடைவதும் கூறியது-தொல்லுருப்பெறலணியாம். முகிலிற் சூழ்ந்த அகிற்புகை, அந்நாட்டுமகளிராற் கூந்தலுக்கும் ஆடைக்கும் நன்மணத்தின்பொருட்டு ஊட்டியதாகும். 'பாற்கடல்கடுப்ப' என்றஉபமானத்தால் துகிற்கொடி-வெண்ணிறமுடைய தெனப்பட்டது. பி-ம்:—[1]நின்று. [2]புலர்வன வாட, உலர்வனவாக. சிலபிரதியில் "தயிருறு" (11)என்பது 3-ஆவது பாடலாக இருக்க, இது நான்காவது பாடலாகவுள்ளது. (565)

4.—அம்மூவரும் மிதிலாநகரத்தினுள் செல்லுதல்.

ஆதரித் [1]தமுதிற் கோறேய்த் தவயவ மமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லான் மதனற்கு [2]மெழுத வொண்ணுச்
சீதையைத் தருத லாலே திருமக ளிருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும் பொன்மதின் மிதிலை புக்கார்.

(இ - ள்.) (மன்மதன்), ஆதரித்து - (பிராட்டியின் திருமேனியையொத்ததொரு சித்திரவுருவத்தை எழுத) விரும்பி, அமுதில் கோல் தோய்த்து-அமிருதத்திலே எழுதுகோலைத் தோய்த்துக்கொண்டு, அவயவம் அமைக்கும் தன்மை யாது என-(இவ்வடிவத்து) உறுப்புக்களைச் சித்திரிக்கும் விதம்(அறியாமையால் அவ்வகை) யாதோ என்று, திகைக்கும் அல்லால் - திகைத்து நிற்பானேயல்லாமல், மதனற்குஉம் எழுதஒண்ணு-(அந்த) மன்மத

னுக்கும் எழுதமுடியாத (பேரழகையுடைய), சீதையை - ஜானகியை, தருதலால்ஏ-பெற்றதனாலே, திருமகள் இருந்தசெய்யபோது என பொலிந்து தோன்றும்-இலக்குமி வீற்றிருக்கின்ற செந்தாமரைமலர்போல விளங்கிக் காணப்படுகிற, பொன் மதில் மிதிலை-பொன்னினாலாகியமதில்களையுடைய மிதிலாபட்டணத்தில், புக்கார்-(மூவரும்) உட்சென்றார்கள்; (எ-று.)

உலகத்தார் யாவரது அழகையும் வரையறுத்து உணர்ந்தும், ஆண் பெண் மக்களின் மனத்துத் தோன்றியும், தான் வடிவில்லாமலிருந்தே ஐங்கணைகொண்டு மூவுல்கையும் தன்வசப் படுத்துந்திறமைபெற்றுமுள்ள மன்மதன், வரம்பில் பேரழகினனான சீதையின் வடிவத்தைத் தானே சித்திரத்திலமைக்க வண்ணப்பொருள் அமிழ்தமேயென்று தீர்மானித்து, அமிருதத்திலெழுதுகோலைத் தோய்த் தெடுத்துக்கொண்டு எழுதத்தொடங்கினாலும் அவளது அழகை எவ்வகை எழுதுவது எனத் திகைப்பானேயல்லாது அச்சீதையின் அவயவங்களுளொன்றைக்கூடச் சரிவர எழுதமுடியாதென அவளதுகட்டழகை வருணித்தார். ஜனகமகாராஜன் வேள்விச்சாலையமைப்பதற்காகப் பூமியை யுழுதபொழுது கலப்பையுழுபடைச்சாலில் அகப்பட்டவளாதலால், சீதையென்று திருநாமம்: ஸீதா-உழுபடைச்சால்: இது இங்கே இடவாகுபெயர். மதனற்கும், உம்மை-உயர்வுசிறப்பு. மிதிலைக்கு மற்றைநகரங்களெல்லாவற்றினுஞ் சிறப்பு, சீதையைத் தருதல். பி-ம்:—[1] அமுது. [2] எழுதலாகா. (566)

5.—அவர்கள் அந்நகர்வீதியிற் சென்றமையை மூன்றுகவிகள் கூறும்.

சொற்கலை முனிவ னுண்ட சுடர்மணிக் கடலுந் [1] துன்னி
அற்[2] கலந் திலங்கு பன்மீ னரும்பிய வானும் போல
விற்[3] கலை நுதலி னாரு மைந்தரும் வெறுத்து நீத்த
பொற்கலன் கிடந்த மாட நெடுந்தெரு [4] வதனிற் போனார்.

(இ-ள்.) சொல் கலை முனிவன் உண்ட - (தமிழுக்கு) இலக்கண நூலைச்செய்த அகத்தியமுனிவனாற் பருகப்பட்டு (நீர் வற்றி)க்கிடந்த சுடர் மணி கடல்உம் -ஒளியையுடைய இரத்தினங்களுக்கு இருப்பிடமான சமுத்திரமும், அல் கலந்து-இராக்காலத்திலே பொருந்தி, துன்னி இலங்கு-நெருங்கிவிளங்குகிற, பல் மீன் அரும்பிய-பலநட்சத்திரங்கள்தோன்றின, வான்உம்போல - ஆகாசமும்போல, வில் கலை நுதலினார்உம் மைந்தர்உம்-ஒளியினையுடைய பிறைச்சந்திரன்போன்றநெற்றியையுடைய மகளிர்களும் ஆடவர்களும், வெறுத்து நீத்த - வெறுப்புற்றுக் கழற்றியெறிந்த, பொன் கலன் - பொன்மயமான ஆபரணங்கள், கிடந்த - விழுந்துகிடக்கப் பெற்ற, மாடம் நெடு தெரு அதனில்-பெருவீடுகளையுடையநீண்ட இராசவீதியிலே, போனார்-(அவர்கள்) சென்றார்கள்; (எ-று.)

மைந்தரும மாதராரும் வெறுத்து எறிந்த அணிகலன்கள் மிக்கபரப்புடனே விளங்குவதனால், அகத்தியனுண்டதனால்நீரற்று

இரத்தினங்கள்விளங்கும் கடலிடம்போலவும், நட்சத்திரங்கள் விளங்கும் வான்போலவும் மிதிலைநகர்வீதிதோன்றும்: அங்கு ராம லட்சுமணர் விசுவாமித்திரனுடனேசென்றார்க ளென்பதாம். ஆட வரும் மகளிரும் கலனை வெறுத்துநீத்தற்குக் காரணம்—கலவிக் காலத்தில் இறுகப்புல்லுதற்கு அவை இடையூறுதலின் நீத்தார் என்பது: இதனை, மேல் "விற்பகை நுதலினார்தங் கலவியின் வெறுத்துநீத்த, கற்பகமீன்ற மாலை கலனொடுங் கிடப்பக் கண்டார்" என வரும் வரைக்காட்சிப்படலச் செய்யுளாலும் அறியலாம். இனி, புதியனபுதியனவாக ஆபரணங்கள்கிடைக்க அவை அளவுகடந்து அநேகமாயிருத்தலா லாகும் என்றும் கொள்ளலாம். அந்நகரத்தில் யாவரும் மிக்க பெருஞ்செல்வவான்களாதலால் வீதியில்விழுந்து கிடக்கிற ஆபரணங்களை விரும்பியெடுக்கும்வறியரெவரு மிலராதல் பற்றி, 'கிடந்த' என்றார்; செல்வமிகுதியைச்சொல்லுதலால், வீறு கோளணியாம். அகத்தியன் தமிழ்ப்பாஷையினிலக்கணவிதி களைச் சிவபெருமானிடம் உபதேசம்பெற்று 'பேரகத்தியம், சிற்ற கத்தியம்' என்னும் இலக்கண நூல்களை இயற்றித் தன்மாணாக்கரா கிய தொல்காப்பியன் முதலிய பன்னிருவர்க்குங் கற்பித்தருளித் தமிழ்ப்பாஷையைத் தழைத்தோங்கச்செய்தவனாதலால், 'சொற்கலை முனிவன்' என்றார். இலக்கண நூலை வடநூலார் 'சப்தசாஸ்த்ரம்' என்ப ஆதலால், அத்தொடரை மொழிபெயர்த்து 'சொற்கலை' என்றது.("நாராயணேதி சப்தோஸ்தி"என்பது முதலிய இடங்களில் சப்தம் என்பது, சொல்என்றபொருளில் வருதல் காண்க.) மணிக் கடல் - ரத்நாகரம். அல் - இருள்: இரவிற்கு ஆகுபெயர். கலை-சந்திர கண்டம். வில் கலை நுதலினார் - வில்லின் தன்மையைத் தோற்கச் செய்த [வளைந்த] நெற்றியையுடையாருமாம். பி-ம்:—[1] துன்றி. [2] கலன். [3] குலாம். [4] அரிதிற். (567)

6. தாறு[1]மாய் தறுகட் குன்றந் தடமத வருவி தாழ்ப்ப
ஆறு[2]மாய்க் கலின மா[3]வி லாழியா லழிந்தோ ராறுய்ச்
சேறுமாய்த் தேர்க ளோடத் துகளுமா யொன்றோ டொன்று
மாறுமா றுகி வாளா கிடக்கிலா மறுகிற் சென்றார்.

(இ - ள்.) தாறு மாய் - (களிப்புமிகுதியால்) இருப்புமுட்கோலை முறிக்கின்ற, தறுகண் - அஞ்சாமையையுடைய, குன்றம் - மலை போன்ற யானைகள், தட மத அருவி - மிகுந்த மதநீர்ப்பெருக்கை, தாழ்ப்ப-சொரியவிடுவதனால், ஆறு உம் ஆய் - (கருநிறமுள்ள) ஒரு நதிதோன்றி, கலினம் மா விலாழியால் - கடிவாளம் பூண்டுள்ள குதிரைகளின் வெண்மையான) வாய்நுரையால், அழிந்து - (அந் நிறம்) மாறி, ஓர் ஆறு ஆய் -வேறொரு வெண்ணிற நதியாகி, தேர் கள் ஓட - இரதங்கள் இடைவிடாது சஞ்சரித்தலால், சேறு உம் ஆய் - (நீர் சிறிதுஉலர்ந்தபின்) சேறுமாகி, (பின்னும் தேர்கள் ஓடு வதனால்), துகள் உம் ஆய் - புழுதியுமாகி, ஒன்றோடு ஒன்று மாறு மாறு ஆகி-(இங்ஙனம் அடிக்கடி) ஒன்றுடனொன்று மிகமாறுபடுந் தன்மையையுடையதாய், வாளா கிடக்கிலா-(சிறிதுபொழுதாயினும்) ஒருதன்மைத்தாக இராத, மறுகில் - பெருவீதியில், சென்றார் - (மூவரும்) போனார்கள்; (எ - று.)

யானையின் மதநீரால் ஓர் கருநிற ஆறு தோன்ற, அதனோடு குதிரையின் வாய்நுரை கலந்து அத்தன்மை சிறிதுமாறி வெண்ணிறநதியாகி, தேர்கள் இடைவிடாது ஓடுதலால் தூளிமிகுதியாக விழுந்து முதலிற் சேறும் பின் காய்ந்து அவ்விடம் புழுதியுமாக, இங்ஙனமே மீண்டும்மீண்டும் யானை முதலிய செல்லுதலால் மாறி மாறிக் கருநிறநதிமுதலியன உண்டாகும் வீதியிற் சென்றாரென்க. மறுகு - குறுந்தெரு என்பாரு முளர். யானையைக் குன்றமென்ற தற்கு ஏற்ப, 'மதவருவி' என்றார். அழிந்தோராறாய்-அந்நதியழிந்து வேறொரு வகையாகி யென்று உரைப்பினுமாம். தாறு - மதங் கொண்ட யானைகளை யடக்க இருப்புமுள்வடிவான ஓர் கருவி. பி-ம்:- [1]பாய் தறுகட்குன்றத் தடமத வருவி தாழ, ...தறுகண்யானை... தாழ்ப்ப. [2]பாய். [3]விலாழியுமிழிந்து, விலாழியுமிழுந்து. (568)

7\. தண்டுத லின்றி யொன்றித் [1]தலைத்தலைச் சிறந்த காதல்
உண்டபின் கலவிப் போரி னொசிந்தமென் மகளி ரேபோல்
பண்டரு கிளவி யார்தம் புலவியிற் பரிந்த கோதை
வண்டொடு கிடந்து தேன்சோர் மணிநெடுந் தெருவிற் சென்றார்.

(இ - ள்.) தண்டுதல் இன்றி - நீங்குதலில்லாமல், தலைத்தலை- (கொழுநன் மனைவி யென்கிற) இரண்டிடத்திலும், ஒன்றி - ஒரு தன்மையதாய், சிறந்த - மிக்கிருந்த, காதல் - ஆசையின்பயனான காமவின்பத்தை, உண்ட பின் - (ஆடவரும்மகளிரும்) ஒக்க அனுபவித்தபின்பு, கலவிபோரின்-அப்புணர்ச்சியாகியபோரிலே, ஒசிந்த - இளைத்துக்கிடந்த, மெல் மகளிர் போல்-மென்மையான தன்மையை யுடைய மாதர்கள்போல, பண் தரு கிளவியார்தம் புலவியில்-இராகத்தையொத்த இனிய சொற்களையுடைய பெண்களது ஊடல்களிலே, பரிந்த - (அவர்களாற்) கழற்றியெறியப்பட்ட, கோதை- பூமாலைகள், வண்டொடு கிடந்து-(தம்மேல்மொய்த்த) வண்டுடனே கீழேவிழுந்துகிடந்து, தேன் சோர் - தேன்வழியப்பெறுதற்கு இடமான, மணி நெடு தெருவில் - அழகிய பெரிய வீதியில், சென்றார்—; (எ - று.)

புணர்ச்சியினிறுதியில் மெலிந்து துயில்கிற மாதர்கள்போல, மகளிர் புலவியிற் கழற்றியெறியப்பட்ட பூமாலைகள் வாடிக்கிடக்கின்றன வென்பதாம். மாலை தேன்சோர்தற்கு ஏற்ப, மகளிர்க்குக் காமச்செவ்வியால் வெயர்வரும்புதல் கொள்க. மகளிரே போல் கோதை என்றதால் அம்மகளிர் கத்தூரிப்பொட்டை யணிந்திருப்பாராதலால், அதற்கேற்ப வண்டுடன்கிடக்கும்மாலை என்றது என்க. இடையிலேமாறுகிற அன்பும் ஒருதலைக்காமமும் புணர்ச்சியின்பத்துக்குக் காரணமாகுஞ் சிறப்புடையவல்ல வாதலால், 'தண்டுதலின்றியொன்றித் தலைத்தலைச்சிறந்த காதல்' என்றார். கலவியை 'போர்' என்றது - ஆடவரும் மகளிரும் ஒருவரையொருவர் எதிர்ந்து சோர்வின்றி ஊக்கத்தோடு நிகழ்த்தலால். பரிந்த - அற்ற எனினுமாம். விசுவாமித்திரன் முதலிய மூவரும்பலதெருக்கள்வழியாகச் செல்லுதலைக் குறிப்பிக்க, கவி மூன்றுபாடல் கூறினரென்னலாம். அம்மிதிலையின் தெருக்கள் பலவகைப்பட்டிருக்கு

மென்பது, இதனால் அறியக்கிடத்தலுங் காண்க. பி - ம்:—[1] தனித் தனி. (569)

8.—நடனசாலைக் காட்சி.

நெய்திர ணரம்பிற் றந்த [1]மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
ஐயநுண் ணிடையா ராடு மாடக வரங்கு கண்டார்.

(இ - ள்.) நெய் திரள் நரம்பின் - தேனொழுக்குப்போல் திரண்டவடிவமான யாழ்நரம்பி னிசைபோல, தந்த - (கேட்டற் கினியதாகப்) பாடப்பட்ட, மழலையின் இயன்ற-மழலைச்சொற்போல் (இனிய தந்தமதுகண்டத்தொனியாற்) பொருந்திய, பாடல்-வாய்ப் பாட்டிசையும், தைவருமகரவீணை -(கைவிரலால்) தடவிவாசிக்கப் படுகிற மகரவீணையினிசையும், தண்ணுமை-மத்தளத்தின் ஒலி யும், தழுவி-(மாறுபடாமல் ஒன்றோடொன்று) இணங்கி, தூங்க - ஒலிக்கவும்,—கை வழி நயனம் செல்ல-(பலவகையாகக் குறிப்புக் காட்டுகிற தமது) கைகள் செல்லும்வழியே (தமது) கண்களின் குறிப்புநோக்கஞ் செல்லவும், கண் வழி மனம்உம் செல்ல-அக் கண்களின் பார்வைசெல்லும்வழியே மனத்தின்குறிப்புஞ் செல்ல வும்,(அபிநயஞ் செய்துகொண்டு) ஐயம் நுண் இடையார்-(உண்டோ இல்லையோ என்று காண்பவர்கள்) சந்தேகப்படுவதற்குரிய நுட்ப மான இடையையுடைய மங்கைமார், ஆடும் - நர்த்தனஞ்செய்கின்ற, ஆடகம் அரங்கு - பொன்னாற்சமைக்கப்பட்டுள்ள நடனசாலைகளை, கண்டார்—; (எ - று.)

பாட்டுப்பாடிக்கொண்டே அபிநயத்துடனே ஆடுதல்செய்யு மிடத்துச் செய்யும்முறைமைநான்குவகையாலாகும்; கையும், கருத் தும், மிடறும், சரீரமும் என: என்னை? "அவை தாங்,கையேகருத்தே மிடறே சரீரமென், றெய்த முன்பமைத்த விவையெனமொழிப" என்றாராகலின்; இவை நான்கினுள் 'கைவழி நயனஞ்செல்ல' என்ற தனால் கையின் தொழிலையும்,'கண்வழிமனமுஞ்செல்ல' என்றதனால் கருத்தின் தொழிலையும் 'மழலையி னியன்றபாடல்' என்றதனால் மிடற்றின்தொழிலையும், 'ஆடும்' என்றதனால் சரீரத்தின்தொழிலை யுங் கூறினார். யாழ்நரம்புக்குத் தேனொழுக்கு உவமையாதலை, "தேன்துளக்கறவொழுகியன்ன துய்யறத் திரண்ட திண்கோல்" "ஈந்தே, னணிபெறவொழுகியன்ன வமிழ்துறழ் நரம்பி னல்யாழ்" "தேம்பெய்து, அமிழ்து பொதிந்திலிற்று மடங்குபுரி நரம்பின்" என்ற இடங்களிலுங் காண்க. நெய் தேன் என்னும் பொருளதாதலை "நெய்க்கண்ணிறூஅல்" என்ற கலித்தொகைப்பகுதியாலும் அறிக. நெய் திரள் நரம்பின் தந்த மழலையின் இயன்ற என்பதற்கு - (கறை பிடியாதிருத்தற்பொருட்டு) நெய்பூசப்பட்டுள்ள திரண்ட வடிவ மாக விருக்கிற யாழ்நரம்பிலெழுப்பிய இன்னோசைபோன்று பண் முற்றுப்பெற்ற, பாடலென்று உரைப்பாருமுளர். மழலையின் இயன்ற - நிரம்பாத மெல்லிய குதலைச்சொற்களால் அமைந்த என்றுமாம். பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழ் என்னும் யாழ்வகை நான்கனுள் பத்தொன்பது நரம்பு

கட்டினது மகரயாழ்; மகரம் - சுறாமீன்: அதனது அங்காந்த வாய்போல வளைந்த நுனி அமைக்கப்படுதலால், மகரவீணை யென்று பெயர்பெற்றதுபோலும். நாடகசாலைக்குரிய கூத்திமுதலியோரின் அமைதிகளுள் யாழாசிரியன் தண்ணுமை முதல்வன் இவர்களமைதி 'தைவருமகரவீணை தண்ணுமை தழுவித்தூங்க' என்றதனாலும், கூத்தியமைதி 'ஐய நுண்ணிடையார்' என்றதனாலும், அரங்கினமைதி 'ஆடகவரங்கு' என்றதனாலும் கூறப்பட்டன. 'மனத்தின் வழிக் கண்செல்ல' என்னுது 'கண்வழிமனஞ்செல்ல' என்றது, பயிற்சிமிகுதியை விளக்கிற்று. நரம்பு, வீணை, தண்ணுமை-அவற்றினின்று தோன்றும் ஒலிகட்கு, பொருளாகுபெயர். பி - ம்:—[1]மகர யாழ் நிறைந்த. (570)

9.—மாதர்கள் ஊசலில் வீற்றிருந்து ஆடுங் காட்சி.

*பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கிப் [1]பொங்க
மாசுறு பிறவி போல வருவது போவ[2]தாகிக்
காசறு பவளச் செங்காய் மரகதக் [3]கமுகிற் பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர் [4]சிந்தையோ டுலவக் கண்டார்.

(இ - ள்.) மாசு உறு பிறவி போல் வருவது போவது ஆகி - குற்றம் மிகுந்த பிறப்புப்போல (மாறிமாறி மேல்கீழாய் ஓடியோடி) வருவதும் போவதுமாகி, காசு அறு பவளம் செம் காய் மரகதம் கமுகில் பூண்ட - குற்றமற்ற பவழம்போலச் சிவந்தநிறமான காய்களையுடைய மரகதரத்தினம் போலப்பசுநிறமான பாக்குமரங்களிலே பூட்டப்பட்டுள்ள, ஊசலின் - ஊஞ்சல்களிலே, மகளிர் - பெண்கள், பூசலின் எழுந்த வண்டு - ஆரவாரத்தோடு மேலெழுந்த வண்டுகள், மருங்கினுக்கு இரங்கி பொங்க-(தமது) இடையின்மென்மைக்காக இரங்கி ஒலிக்காநிற்கையில்,—மைந்தர் சிந்தையோடு - ஆடவர்களின் மனத்துடனே, உலவ - ஆட, கண்டார்—; (எ - று.)

மகளிர் ஊசலாடும்பொழுது அவ்வழகைநோக்கி ஆடவர் மனம் காதல்மிகுதியால் அவர்களை விடாது தடுமாறுதலால், 'மைந்தர் சிந்தையோடுலவ' என்றார். மகளிர் ஊசலில் வீற்றிருந்து விசையாக ஆடும்பொழுது, அவ்வதிர்ச்சியால் அவர்களுடம்பிலணியப்பட்டுள்ள பூமாலைகளில் மொய்த்திருந்த வண்டுகள்மேலெழுந்து பேரொலி செய்தலை, அவ்வண்டுகள் இம்மாதரதுமெல்லிய இடை இவ் விசையைப்பொறுக்கமாட்டாதென்று இரக்கமுற்று வாய்விட்டு அரற்றுவதுபோலுமென்றார்; தற்குறிப்பேற்றவணி. பிறப்புக்கும் ஊசலுக்கும் ஒப்புமை கூறப்படுவதை "உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்து மூச லாடுவது" என்ற இடத்தும் காண்க. மூன்றுமடிக்கு - பவழத்தாலமைக்கப்பட்ட செங்காய்களோடு கூடிய மரகதரத்தினத்தா லியன்ற பாக்குமரங்களிற் பூட்டிய ஊசல் என்றும் உரைப்பர். பி - ம்:—[1]பொங்கி. [2]ஆக. [3]கமுகு. [4]சிந்தைபோல்.

---

*இதுமுதல் இந்த விருத்தம் முடியுமளவுமுள்ள பாடல்கள், முன்பின்னுக மாறிமாறி ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றன.

10.—கடைத்தெருவின் காட்சி.

[1] வரப்பறு மணியும் பொன்னு மாரமுங் கவரி வாலும்
[2] சுரத்திடை யகிலும் மஞ்ஞைத் தோகையுந் தும்பிக்[3] கொம்பும்
[4] குரப்பணை நிரப்பு மள்ளர் குவிப்புறக் கரைக டோறும்
[5] பரப்பிய பொன்னி யன்ன வாவணம் பலவுங் கண்டார்.

(இ - ள்.) வரம்பு அறு மணிஉம் - அளவில்லாத இரத்தினங்களையும், பொன்உம் - பொன்னையும், ஆரம்உம் - முத்துக்களையும், கவரி வால்உம்-கவரியென்னும் மானினது வாலையும், சுரத்திடை அகில்உம்-காடுகளிலே யுண்டாகிய அகிற்கட்டைகளையும், மஞ்ஞை தோகைஉம்-மயிற்பீலிகளையும், தும்பி கொம்புஉம்-யானைத் தந்தங்களையும், குரம்பு அணை நிரப்பும் மள்ளர் - (கழனிகளுக்கு) வரப்புக்களாகிய கரைகளைச் செய்துமுடிக்கும் உழவர்கள், குவிப்புற - (கூட்டங்கூட்டமாகக்) குவித்துவைக்கும்படி,கரைகள் தோறும் பரப்பிய-கரைகளிலெல்லாம் பரவச்செய்கிற, பொன்னி - காவிரிநதியை, அன்ன - ஒத்த, ஆவணம் பலஉம் - கடைகள் பலவற்றையும், கண்டார்—; (எ - று.)

மணிமுதல் யானைத்தந்தம் ஈருகச் சொல்லப்பட்ட பொருள்களைத் தனித்தனிப் பக்கங்களிற் குவித்துவைத்தலால், கடைவீதி, கழனிக்கு வரம்புகளைச்செய்யும் மள்ளர் குவித்துவைக்குமாறு மணி முதலியபொருள்களை மலைகளிலிருந்து கொழித்துக்கொணரும் காவேரிநதியை யொக்கு மென்பதாம். கடைக்கு மணி முதலியன, வணிகரார் சேர்த்துவைக்கப்பட்டன. அகில் - சந்தன மரம்போல இயற்கையில் வாசனையுடையதொரு மரம். "கள்ளிவயிற்றி னகில் பிறக்கும்" என்றபடி வயிரம்முற்றின கள்ளிச்செடியின் பிளப்பினின்று அகில் தோன்று மென்ப ஆதலின், 'சுரத்திடையகில்' என்பதற்கு-(கள்ளிச் செடிகள் வேரூன்றிச் செழித்து வளர்தற்கிடமான) பாலைநிலத்திலே தோன்றிய அகிற்கட்டையென்றும்பொருள் கொள்ளலாம். சுரம் - வெப்பமுடையநிலமென்று பொருள். பி- ம்:— [1] வரம்பறு, வரப்புறு. [2] சுரப்புடை, சுரம்படை. [3] கோடும். [4] குரம்பணை. [5] பரம்பிய. (572)

11.—யானைகள் போர்புரியுங்காட்சி.

தயிருறு மத்திற் காம சரம்படத் தலைப்பட் [1] டூடும்
உயிருறு காத லாரி னொன்றையொன் [2] றொருவ கில்லா
செயிருறு மனத்த வாகித் தீத்திரள் செங்கண் சிந்த
வயிரவான் [3] மருப்பி யானை மலையென [4] மலைவ கண்டார்.

(இ - ள்.) தயிர் உறு மத்தின் - தயிரைக்கடைதற்குப் பொருந்தும் மத்துப்போல, காம(ன்)சரம் பட - மன்மதனது பாணம் வந்து உறுத்துதலால், தலைப்பட்டு - (ஒருவரோடொருவர் புணரத்) தொடங்கி, ஊடும் - (அக்கூடுதலிலின்பஞ்சிறக்கும்பொருட்டு விளையாட்டாக ஒருவரோடொருவர்) பிணக்குக்கொள்ளுகிற, உயிர் உறு காதலாரின் -(ஒருவர்க்கொருவர்) உயிரையொத்த அன்பையுடைய ஸ்திரீ புருஷர்போல,—வயிரம் வால் மருப்பு யானை-வயிரம்போலுறுதியான

வெண்ணிறமான தந்தங்களையுடைய யானைகள்(இவ்விரண்டு),செயிர் உறு மனத்த ஆகி - கோபம்மிகுந்த மனத்தினையுடையவையாய், செம் கண் தீ திரள் சிந்த-(தத்தமது கோபத்தாற்) சிவந்த கண்கள் நெருப்புத்திரளை உமிழும்படி, ஒன்றை ஒன்று ஒருவகில்லா-ஒன்றை யொன்று விட்டு நீங்காதவையாய், மலை என - (இரண்டு) மலைகள் (ஒன்றோடொன்று போர்செய்வன) போல, மலைவ - போர்செய்வன வற்றை, கண்டார்—; (எ - று.)

இவ்யானைகள் அந்நகரத்துள்ள மைந்தர்களால் விநோதார்த்தமாக ஒன்றோடொன்று சண்டைக்கு விடப்பட்டனவென அறிக; இங்ஙனம் விடுதலை "கரியொடு கரியெதிர் பொருத்தி...பொழுது போஞ் சிலர்க்கச் சேணகர்" எனக் கூறியதனாலும் அறிக. ஆண் பெண்கள் மனத்திலே பகைமையில்லாதிருக்கவும் புணர்ச்சிக் காலத்து ஒருவரோடொருவர் கலகப்படுவதுபோல, யானைகள் மனத்திற் பகைமையில்லாதிருக்கவும் வெளிக்குத் தற்காலத்தில் பகையை விளைத்துக்கொண்டு போர்செய்தனவென்க; உவமையணி. மத்து தயிரைக் கலக்குவதுபோல மன்மதபாணம் மனத்தைக் கலக்குதலால், உவமை கூறினர். உயிருறு - வளர்கின்ற என்றுமாம். வயிரம் - கருவியாகுபெயரெனக்கொண்டு, வச்சிரரத்தினங்களழுத்திய பூண்களையுடைய,மருப்பு என்றும், வான் மருப்பு எனப்பிரித்து-சிறந்த தந்தமென்றும் உரைக்கவும் அமையும். பருமையும் வலிமையும் கம்பீரமான தோற்றமும் மதமழைபொழிதலும்பற்றி, யானைக்கு மலை உவமை. பி-ம்:—[1]ஓடும். [2]ஒருவுகில்லா, ஒருவகில்லா. [3]களையத்தியானை. [4]மலையக். இச்செய்யுள் சில பிரதிகளில் "நிரம்பிய" (2) என்றதன்பின் உள்ளது. (573)

12.—மகளிர் கீதம்பாடுகின்ற இடங்களின் காட்சி.

வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் [1]கையொடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவ [2]றோன்ற விருந்தென மகளி ரீந்த
தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத் [3]தினிது சென்றார்.

(இ - ள்.) மகளிர்-(அந்நகரத்துப்) பெண்கள், வள் உகிர் தளிர் கை நோவ - கூர்மையான நகங்களையுடைய தளிர்போல மெல்லிய (தமது) செங்கைவிரல்கள் நோகும்படி, மாடகம் பற்றி - வீணையின் முறுக்காணிகளைப் பிடித்துத் திருகி, வார்ந்த கள் என நரம்பு வீக்கி- ஒழுகுகின்ற தேன்தாரைபோன்ற அவ்யாழ்நரம்பை இறுகக்கட்டி, கையொடு மனம்உம் கூட்டி - (அந்நரம்புகளின்மேல் வருடச்செல்லுகின்ற) கைவிரல்களின் குறிப்புடனே மனத்தையும் பதியவைத்து, வெள்ளிய முறுவல்தோன்ற - வெண்ணிறமான (தமது) புன்சிரிப்பு வெளிப்பட, விருந்துஎன-புதிதாய்வந்தவர்க்கு இனிய உணவிடுதல் போல, ஈந்த - கொடுத்த, தெள்விளிபாணி தீம் தேன் - தெளிவான இசையோடுகூடிய பாட்டாகிற இனிப்புள்ள தேனை, செவி மடுத்து- காதுகளாற் பருகிக்கொண்டு, இனிது சென்றார் - (மூவரும்) இன்பமாக வழிச்சென்றார்கள்; (எ - று.)

மகளிர் பாடும் இனியகீதம் செவியில்விழ, இத்தகைய இனிய கீதத்தைக் கேட்டதனாலுண்டாகிற ஆனந்தத்தால் வழிநடந்து செல்லும் இளைப்புத் தீர, மூவரும் இனிது சென்றாரென்க. வீணை வாசிப்போர்க்கு அவ்வாசினையால் இயல்பாகஉண்டாகும்மனமகிழ்ச்சியைக் காட்டும் இனிய பார்வையையும் புன்னகையையும், விருந்தினரை இனிது நோக்கிப் புன்முறுவல்புரிந்து உபசரிக்குஞ் செயலாக அமைத்துக்கொண்டார். மாடகம்பற்றி நரம்பு வீக்குதலால் கைக்கு நோவுண்டாகிறதென மகளிரது மிக்க மென்மைத் தன்மையைத் தெரிவித்தார். கோடு, பத்தர், ஆணி, நரம்பு, மாடகம் என்பன - யாழுறுப்புக்கள். மாடகமென்பது - நால்விரலளவான பாலிகைவடிவாய் நரம்பை வீக்குங் கருவி. கையொடு மனமுங்கூட்டி என்றது-கீதத்தி லொழியப் பிறிதொன்றில் மனம்வையாமல் மனோவேகமாகக் கையை விசைபடச்செலுத்தி யென்றுகூறியவாறும். 'வெள்ளிய முறுவல் தோன்ற' என்றதனால், அதிக சிரமமில்லாமல் அரிய கீதங்களையும் உல்லாசமாக எளிதிற் பாடவல்ல தன்மை உணர்த்தப்பட்டது. புன்சிரிப்புச் செய்யுங்காலத்துப் பற்களின் வெள்ளொளிசிறிது வெளித் தோன்றுதலால், 'வெள்ளிய முறுவல்தோன்ற' என்றார். தெள்விளி-ஓரிராகமுமாம். செவிமடுத்தல்-வாயாலுண்ணல்போலக் காதால் நிரம்பக் கேட்டு மகிழ்தல். பாணித் தீந்தேன்-நாவுக்கு இனிமைதருந் தேன்போலக் காதுக்கு இனிமைதரும் பாட்டு என்றபடி. பி - ம்:—[1] கண்ணொடு. [2] தோன்ற. [3] இனிதினுண்டார். (574)

13.—குதிரைகள் மண்டலகதியிலே சுழன்றோடுங் காட்சி.

கொட்புறு கலினப் பாய்மா [1] குலான்மகன் [2] முடுக்கி விட்ட
மட்கலத் [3] திகிரி போலே வாளியின் வருவ மேலோர்
நட்பினி [4] னிடைய ருவாய் ஞானிக ளுணர்வி னொன்றாய்க்
கட்புலத் தினைய வென்று தெரிவில [5] தெரியக் கண்டார்.

(இ - ள்.) குலால் மகன் முடுக்கி விட்ட-குயவனால் விசையாகச் சுழற்றிவிடப்பட்ட, மண் கலம் திகிரி போல - மண்ணினாற் செய்யப்படும் பாத்திரங்களுக்குத் துணைக்கருவியாகிய சக்கரம்போல, வாளியின் வருவ - வட்டகதியாய் ஓடிவருவனவும், மேலோர் நட்பினின் இடைஅரு ஆய் - பெரியோர்கள் (ஒருவர்க்கொருவர் செய்யுஞ்) சிநேகம் (இடையில்விட்டு நீங்காமைபோல) இடையில்விட்டு நீங்காதனவுமாய், ஞானிகள் உணர்வின் ஒன்று ஆய்-தத்துவ ஞானமுடையார்களது அறிவு(பல பொருள்களிலுஞ் செல்லாமல் ஒருபொருளினிடத்திலேயே செல்லுதல்) போல ஒரு தன்மையுடையனவுமாகி, கண் புலத்து இனைய என்று தெரிவு இல-கண்ணின்பார்வைக்கு இத்தன்மையன வென்று அறிதல் கூடாதனவான, கொட்பு உறு கலினம் பாய் மா-சுழன்றோடுதல்மிகுந்து கடிவாளம்பூண்டு பாய்ந்து செல்லுந் தன்மையுள்ள குதிரைகள், தெரிய - தோன்ற, கண்டார்—; (எ-று.)

இடையில் நிற்காமலும் வழியைவிட்டு விலகாமலும் குதிரைகள் மண்டலமாக ஓடுவதனைக் கண்டனரென்க. 'கூட்டுற முடுக்கிவிட்ட குயமகன் றிகிரிபோல, வட்டிறல் தேவதத்தன்கலினமா திரியுமன்றே' என்ற சிந்தாமணி இங்கு ஒப்புநோக்கத்தக்கது. குதிரைக்கு

இடையறுமை-இடையிடையே நிற்காமலோடுதல்; ஒன்றுதல் - வழி விட்டு விலகாமல் ஒழுங்காகச் செல்லுதல். குதிரை ஒவ்வொன்று யிருந்தும் அதனதன் செல்லுகை பலவிடத்தும் ஒருங்கே காணப் படுதலால், இத்தன்மையவென்று அறியப்படாதாயிற்று. 'மேலோர் நட்பினி னிடையறுவாய்' என்பதற்கு - மேலோர் வெவ்வேறிடத் திருந்தாலும் அவரது நட்பு இடையறுதிருத்தல்போலக் குதிரை ஒவ்வொருசமயத்து ஒவ்வோரிடத்து இருந்தாலும் அதன்கதிவிரை வினால் இடையறுது காணப்படுகிறதென்றும், 'ஞானிகளுணர்வி னென்றாய்' என்பதற்கு-ஞானிகளறிவுதான் ஒன்றாயிருந்துஞ் சிறிது பொழுதிலே பலபொருள்களிடத்துஞ் செல்லுதல்போலக் குதிரை ஒன்றாயிருந்துஞ் சிறிது காலத்தினுள்ளே பலவிடத்துஞ் செல்லுந் தன்மையதென்றும்பொருள்கொள்ளலாம். புலன் - விஷயம், கண் ணின்புலம் - காட்சி. 'தெரிவில தெரிய' என்றதனால், நுண்ணறி வுடையரா்தலால் பிறர்கண்ணுக்குப் புலப்படாதன இவர்கண் ணிற்குப் புலப்பட்டன வென்க. "இருவகைச்சாரியு மெதிர்ந்து வட்டமாய், வருவழி னெகிழிபோன் மறுகெலாமொரு, துரகதமேநிலை நின்றதோற்றமொத், தொருவற நடத்தினு ரொருகணத்தினே" என்னுந் திருவிளையாடற்பாடற் கருத்தை இங்கே உணர்க. இனி, வாளியின் வருவ என்பதற்கு-அம்புபோல் நேராகவோடுவன எனக் கொண்டு, மட்கலத்திகிரி போலவருவ(ன)மேலோர்நட்பினினிடை யறுதுள்ளன: வாளிபோல் வருவன ஞானிகளுணர்வினென்றாயுள் ளன என்று முறைநிரனிறைப்பொருள்கோள் பட உரைப்பாருமுளர். குலால்மகன் - குலால மகன் என்பதன் விகாரம். மேலோர் நட்பு இடையறுமையை "நிறைநீர நீரவர்கேண்மை பிறைமதி" என்னுந் திருக்குறளாலும், "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்,வரிசை வரிசையாநந்தும்" என்னும் நாலடியாராலும் அறிக. பி - ம்:—[1]குய மகன். [2]முடுகி. [3]திரிகை. [4]இடையறுது. [5]திரிய. (575)

14.—மாடங்களில் மாதர்களின் காட்சி.

வாளரம் பொருத வேலும் மன்மதன் சிலையும் [1]வண்டின்
கேளொடு [2]கிடந்த நீலச் சுருளுஞ்செங் கிடையுங் கொண்டு
நீளிருங் களங்க [3]நீக்கி நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் [4]தோறுந் தோன்றுஞ் சந்திர வுதயங் கண்டார்.

(இ - ள்.) வாள் அரம் பொருத வேல்உம் - அரமென்னும் வாள் விசேடத்தால் அராவப்பட்ட வேலாயுதத்தையும், மன்மதன் சிலை உம் - மன்மதனது வில்லையும், வண்டின் கேளொடு கிடந்த நீலம் சுருள்உம் - வண்டுகளினினத்தோடு பொருந்தியுள்ள நீலரத்தினச் சுருளையும், செம் கிடைஉம் சிவந்த கிடையென்னுஞ் சடையையும், கொண்டு - (தன்னிடத்தே) கொண்டு, நீள் இரு களங்கம் நீக்கி - நெடுங்கால்மாகவுள்ள பெரிய (தனது) களங்கத்தை யொழித்து, நிரை மணி மாடம்-வரிசையர்கவுள்ள இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற உபரிகைவீடுகளின், நெற்றி-மேலிடத்திலிருக்கிற, சாளரம் தோறு உம் - பலகணிவாயில்கள் தோறும், தோன்றும்-காணப்படுகின்ற, சந்திர உதயம் பூரணசந்திரர்களின் உதயத்தை, கண்டார்—;(எ-று.)

தெருவில் நிகழும் நிகழ்ச்சிகளைக் காண்பதற்காக உபரிகை மேற் சாளரங்கள்தோறும் நிற்கின்ற மகளிரது முகங்களின் தோற்றத்தைக் கண்டமை கூறப்படுகிறது. வானத்துக்காண்பதான சந்திரன் ஒன்று: அதுவும் பகலில் ஒளிமழுங்குவது: களங்கமுள்ளது: இந்த இராமாதியோர், வீதிவழியேசெல்லும்போது பகலில்தானே ஒளிமழுங்காது களங்கமற்றுப் பலசந்திரர்கள் உதித்து மாளிகைச் சாளரந்தோறும்தோன்றவே, அந்தப்பலசந்திரர்களின்உதயத்தை வியப்புடனே கண்டன ரென்றவாறு; உருவகவுயர்வுநவிற்சியணி. வேல் - கண்களுக்கும், சிலை - புருவத்துக்கும், வண்டொடு கிடந்த நீலச்சுருள் - கூந்தலுக்கும், செங்கிடை-அதரத்துக்கும், களங்கம் இன்றித்தோன்றும் சந்திரன்-முகமண்டலத்துக்கும் உவமை. வில் நெற்றிக்கு உவமை என்றலும் ஒன்று. தோன்றும் என்ற பெயரெச்சம், 'சந்திரவுதயம்' என்ற தொடரில் சந்திரன் என்பதனோடு இயையும். வாளரம்பொருத வேல் - "வாளரந்துடைத்த வைவேலிரண்டுடன்மலைந்தவேபோ, லாள் வழக்கொழிய நீண்ட வணிமலர்த் தடங்க ணெல்லாம்" என்றார், சிந்தாமணியிலும். அரவாள்-ஒருவகை வாள். வாள்அரம் - ஒளிபொருந்திய அரமுமாம். "கடைகுழன்ற கருங்குழல்கள்" ஆதலால், நீலச்சுருளை உவமை கூறினர். கிடை-கிடைச்சி யெனவும், நெட்டியெனவும்படும். வண்டின் கேளொடு கிடந்த நீலச்சுருள் - வண்டுகளுக்கு உறவாகிய பூக்களோடு பொருந்தியுள்ள பின்மயிர்ச்செருகு என்று உரைப்பாரு முளர். பி - ம்:—
[1] அம்பும். [2] கிளைத்த. [3] நீங்கி. [4] தோன்றுந்தோறுஞ். (576)

15.—மதுபானஞ்செய்து ஊடிய மாதர்களின் முகக்காட்சி.

பளிக்குவள் ளத்து [1] வாக்கும் பசுநறுந் தேறன் மாந்தி
வெளிப்படு [2] நகைய வாகி [3] வெறியினை [4] மிழற்று கின்ற
ஒளிப்பினு மொளிக்க வொட்டா வூடலை யுணர்த்து மாபோற்
களிப்பினை யுணர்த்துஞ் செவ்விக் கமலங்கள் பலவுங் கண்டார்.

(இ - ள்.) பளிங்கு வள்ளத்து வாக்கும் - ஸ்படிகமயமான கிண்ணத்திலே வார்க்கப்படுகின்ற, பசு நறு தேறல் - புதியவாசனைவீசுகிற தெளிவான மதுவை, மாந்தி - குடித்து, வெளிப்படு நகைய ஆகி-வெளியிலே காணப்படுகிற சிரிப்பையுடையனவாய், வெறியினை மிழற்றுகின்ற-வெறிகொண்ட வார்த்தைகளைப் பேசுகிற, ஒளிப்பின்உம் ஒளிக்க ஒட்டா ஊடலை உணர்த்தும் ஆ(று)போல் களிப்பினை உணர்த்தும் - மறைத்துவைக்க முயன்றாலும் மறைத்து வைக்க முடியாத பிணக்கத்தை அறிவிக்கும் வகையாகக் களிப்பை வெளிப்படுத்துகிற, செவ்வி கமலங்கள் பலஉம் - அழகிய செந்தாமரைமலர்கள் பலவற்றையும், கண்டார்—; (எ - று.)

இதனால், வீதியிற்செல்லும் இராமன்முதலியோர் கட்குடித்த மாதராரைக் கண்டமை கூறப்படுகின்றது. கமலங்கள் என்றது, மகளிர் முகங்களை; உருவகவுயர்வுநவிற்சி. காரணமின்றிச் சிரித்தலும், வெறிகொண்ட பேச்சுக்களைப்பேசுதலும், மறைத்துவைக்கத் தக்க பொருளை வெளிப்படுத்துக் கூறிவிடுதலும்,களிப்புமிகுதலும்-

கட்குடித்தவரது இயல்பு. தாம் கொழுநரோடு கொண்ட ஊடலை மறைத்துவைக்க முயன்று அது முடியாமல் வெளிப்படுத்துவது போலவே களிப்பையும் வெளிப்படுத்துகிறாரென, மாதர்களின் கட்குடியினாலாகிய உணர்வுமயக்கத்தைக்கூறினர். பி - ம்:—[1]வார்த்த. [2]தகைய. [3]வெறியின, வெறியென. [4]நிகழ்த்துகின்ற. (577)

16.—மகளிர் பந்தாடுங் காட்சி.

மெய்வரு போக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையர வல்கு லார்த முள்ளமும் [1]பளிங்கும் போல
மையரி நெடுங்க ணோக்கம் படுதலுங் கருகி வந்து
[2]கைபுகிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார்.

(இ - ள்.) மெய் வரு போகம் - உடம்பின் சேர்க்கையா லுண்டாகிய காமவின்பத்தை, ஒக்க உடன் உண்டு - (ஆடவர்களோடு) ஒக்கத் தாமும் அனுபவித்து, விலைஉம் கொள்ளும் - (அவ்வின்பத்திற்காகத் தாம் ஆடவர்களிடமிருந்து) விலைப்பொருளையும்வாங்குகிற, அரவு பை அல்குலார்தம்-பாம்பின் படத்தையொத்த அல்குலையுடைய வேசையர்களது, உள்ளம்உம்-மனமும், பளிங்குஉம்-கண்ணாடியும், போல—, மை அரி நெடு கண் நோக்கம் படுதலும் கருகி - மையிடப்பட்டுள்ள செவ்வரிபரந்த நீண்ட (தமது) கண்களின் கரிய பார்வை படுகிறபொழுது கருமைநிறமடைந்து, வந்து கைபுகின் சிவந்து காட்டும் - (தமது சிவந்த) கைகளினிடம் வந்து பொருந்தினால் (அப்பொழுது) செந்நிறத்தையடைந்துதோற்றுகின்ற, கந்துகம் பலஉம் - பந்துகள் பலவற்றையும், கண்டார்—; (எ-று.)—அல்குல் - அரையின் முன்புறம்.

விலைமகளிர்க்குப் பொருளாசையே யுள்ளது: தம்மையடைந்த ஆடவரிடத்து உண்மையான காதல் இல்லை: ஆயினும் அம்மகளிர் தம்முள்ளத்து அவரிடம் காதல் கொண்டவர்போல் நடிப்பார்கள்; பளிங்குக்கல்லில் தன்னையடுத்த பொருளிலுள்ள நிறம் இல்லை: ஆயினும், அந்நிறம் தன்னிடத்து உள்ளதுபோலக் காட்டும்; அவைபோலவே, பந்துகள் மகளிரின் கண்ணோக்கம் தம்மீதுபடும்போது தம்மிடத்துக் கருநிறம் இல்லையாயினும் அந்தக்கண்ணின் கருநிறத்தையும், அம்மகளிரின் செந்நிறக்கை படும்போது தம்மிடத்துச் செந்நிறமில்லையாயினும் அந்தக்கையின் செந்நிறத்தையும் தம்மிடத்துக் கொண்டு காட்டும்: இங்ஙன் கருமை செம்மை பதியுமாறு மகளிராடுகின்ற பந்தாட்டங்களைக் கண்டன ரென்பதாம்; இது,பிறிதின்குணம்பெறலணி.இங்கு எடுத்த பந்து, இயற்கையில் வெண்ணிறத்ததுபோலும், அந்நிறமே மற்றைய நிறங்களை எளிதிற் பற்றுமாதலின். பின்னிரண்டடிகளால், மகளிர்கண்களது மிக்ககருநிறமும், கைகளின் மிக்கசெந்நிறமும் வெளிப்படுகின்றன. வரைவின்மகளிர் தம்மிடத்தில்லாத குணத்தை உள்ளதாகச்சொல்லி நடித்தலை "பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின்மகளிர்" என்றதனாலும், பளிங்கு அடுத்தபொருளின் நிறத்தைக் காட்டுதலை "அடுத்தது காட்டும் பளிங்கு போல்" என்றதனாலும் கூறியிருத்தலைக் காண்க. 'விலையும்'

என்ற உம்மை - இருவரும் ஒருவரோடொருவர் சேர்ந்து பெறும்இன்பத்தில் அவ்வின்பத்தையே பெரும்பயனுகக்கருத வேண்டியிருக்க, அவ்வின்பத்தை விலையின்றியே தாம் பெற்றும், தம்மால் அந்த ஆடவர்கள் பெறும் இன்பத்திற்காகத் தாம் மாத்திரம் அவர்களிடம் பெரும்பொருள் வாங்கியும் வருகின்ற வேசையர்களது நீதியற்ற கொடுமையை விளக்கும். "அலைவிழிக் கணிகை மாத ராடவர் தம்க்குநல்கும், இலைநிகரேனு மின்பத்திற் கின்பமும் சமமாக்கொண்டு, விலையென நிதியுங்கோடல் வியப் பிற்றே யேற்றமாக, மலைநிகர் தனங்களீந்தோர் மலைநிகர் தனமும் கொள்வார்" என்றது, இங்குக் காணுதற்கு உரியது. பி - ம்:— [1]பளிக்குமேபோல். [2]கையுறச். (578)

17.—மகளிர் ஆடுமிடங்களின் காட்சி.

கடகமுங் குழையும் பூணு மாரமுங் கலிங்க நுண்ணூல்
வடகமு மகர யாழும் [1]வட்டினி கொடுத்து வாசத்
தொடையலங் கோதை சோரப் பளிங்குநாய் சிவப்பத் தொட்டுப்
படைநெடுங் கண்ண [2]ராடும் பண்ணைகள் பலவுங் கண்டார்.

(இ - ள்.) கடகம்உம் - கைவளைகளையும், குழைஉம்-காதணி களையும், பூண்உம்·மற்றும் பல ஆபரணங்களையும், ஆரம்உம்-ரத்தினஹாரங்களையும், நுண் நூல் கலிங்கம் வடகம்உம்-மெல்லிய நூல்களாற் செய்யப்பட்ட கலிங்க தேயத்து விலையுயர்ந்த மேற் போர்வைகளையும், மகரயாழ்உம் - மகரவீணைகளையும், வட்டினி கொடுத்து-பந்தயப்பொருளாக வைத்து, வாசம் தொடையல் அம் கோதை சோர-நல்மணமுள்ள பூமாலைகளையணிந்த அழகிய (தமது) கூந்தல் தளரும்படி, பளிங்கு நாய் சிவப்ப தொட்டு - பளிங்கினற் செய்யப்பட்ட நாய் எனப்படுகிற காய்கள் செந்நிற மடையும்படி (அவற்றைத் தமது செங்கைகளால்)தொட்டு, படை நெடு கண்ணர்-வேல்போன்ற நீண்ட கண்களையுடைய மாதர்கள், ஆடும்-ஆடுகிற, பண்ணைகள் பலஉம்-இடங்கள் பலவற்றையும், கண்டார்—; (எ-று.)

கலிங்க நுண்ணூல் வடகம்—"விலைவரம் பறியலாகா வின் னுரைக் கலிங்கம்", பளிங்குநாய்-"பலகை செம்பொனுகப் பளிங்கு நாயாப் பரப்பி", என்பது, சிந்தாமணி. படை-வாளுமாம். பண்ணை-மகளிர் விளையாட்டுஎன்றலும் ஒன்று. பி - ம்:—[1]வட்டினர் கொடுத்து, வட்டித்தற்கொடுத்த, வட்டினற் றெடுத்து, வட்டிகை கொடுத்து. [2]ஆடு, ஓடும். (579)

18.—பெண்கள் நீர்நிலைகளில் நீராடுங் காட்சி.

[1]பங்கயக் குவளை யாம்பல் படர்கொடி வள்ளை நீலஞ்
செங்கிடை [2]தரங்கங் [3]கெண்டை சினைவரா [4]லினைய தேம்பத்
[5]தங்கள்வே றுவமை யில்லா [6]வவயவந் தழுவிச் [7]சாலும்
மங்கையர் விரும்பி யாடும் வாவிகள் பலவுங் கண்டார்.

(இ - ள்.) பங்கயம் - தாமரைமலர்களும், குவளை-கருநெய்தல் மலர்களும், ஆம்பல்-செவ்வாம்பல்மலர்களும், படர் கொடிவள்ளை-பரவின வள்ளைக்கொடியினிலைகளும், நீலம்-நீலோற்பலமலர்களும், செம் கிடை-சிவந்த கிடையென்னுஞ் சடைகளும், தரங்கம்-நீரலைகளும், கெண்டை-கெண்டைமீன்களும், சினை வரால்-சூல்கொண்ட வரால்மீன்களும், இனைய-இவைபோல்வன பிற நீர்வாழ்பொருள்கள் பலவும், தேம்ப- (மகளிரவயவங்களுக்கு ஒப்பாகாமையால்) வருந்தும்படி, தங்கள் வேறு உவமை இல்லா அவயவம் தழுவி-தங்களுக்கு (த் தாங்களேயன்றி) வேறு உபமானம் பெறாத (தங்களது முகம்முதலிய) அவயவங்களோடு பொருந்தி, சாலும் மங்கையர் - சிறந்த மகளிர்கள், விரும்பி ஆடும்-விரும்பி நீராடுகின்ற, வாவிகள் பலவும்-தடாகங்கள் பலவற்றையும், கண்டார்—; (எ-று.)

மங்கையர் நீராடும் நீர்நிலைகளைக் கண்டன ரென்க. 'தங்கள் வேறு உவமையில்லா அவயவந்தழுவி' என்பது - நீராடும்போது நீர் புகாதபடி செவித்துவாரங்களையும் நாசித்துவாரங்களையும் கைவிரல்களாற் புதைத்தலைக் காட்டுமென்றல் ஏற்கும். தாமரை-முகத்துக்கும், குவளையும் கெண்டையும் - கண்ணுக்கும், ஆம்பல் - வாய்க்கும், வள்ளை - காதுக்கும், நீலம் - கூந்தலுக்கும், கிடை - அதரத்துக்கும், அலை - வயிற்றும்மடிப்புக்கும், வரால்மீன் - கணைக்காலுக்கும் ஒப்பாகாமையால் வருந்து மென்க. இப்படலத்தில், மேல் "படர் பூங்குவளை நாண்மலரோ நீலோற்பலமோ பானலோ" என்பதனாலும், குவளையும் நீலமும் வெவ்வேறென்பது பெறப்படும். 'சினைவரால்' என்றது - அதற்கு வயிறு பருத்திருத்தல்போல, உபமேயமான கணைக்காலுக்குப் பின்புறத்து மேற்பங்கு பருத்திருத்தலால். 'இனைய' என்றது, சங்கம் - கண்டத்துக்கும், கெளிற்றுமீன் - கைவிரலுக்கும், நீர்ச்சுழி-நாபிக்கும், நண்டு - முழங்காலுக்கும், ஆமை-புறங்காலுக்கும், பாசி - கூந்தலுக்கும், முத்தம்-தந்தத்துக்கும், நீர்க்குமிழி - கொங்கைக்கும், இன்னுஞ் சிலபொருள்-இன்னுஞ் சில அவயவங்களுக்கும் ஒப்பாகாவென்னுங்கருத்தால். வாவி-வாபீ: வடசொல். பி-ம்:—[1]பங்கயங். [2]தரங்கக். [3]ஞெண்டு. [4]அனைய. [5]தங்களையுவமையான. [6]அவயவத்தகைமை, வையகத்தகைம. [7]சான்ற. (580)

19.—மைந்தர் வட்டாட்டாடும் இடங்களின் காட்சி.

இயங்குறு புலன்க ளங்கு மிங்குங்கொண் டேக வேகி
மயங்குபு [1]திரிந்து நின்று மறுகுறு முணர்வி தென்னப்
[2]புயங்களிற் கலவைச் சாந்தும் புணர்முலைச் சுவடு நீங்காப்
[3]பயங்கெழு குமரர் [4]வட்டாட் டாடிடம் பலவுங் கண்டார்.

(இ - ள்.) இயங்குறு புலன்கள்-(பலவிடத்துஞ்) செல்லுதற்குரிய பஞ்சேந்திரியங்கள், அங்குஉம் இங்குஉம் கொண்டு ஏக - அதததற்குரிய பலவிஷயங்களிலும் இழுத்துக்கொண்டு செல்ல, ஏகி -(அவற்றின் வழியிலே) சென்று, மயங்குபு திரிந்து நின்று மறுகுறும் - மயக்கமடைந்து அலைந்துகொண்டே கலங்குகிற, உணர்வு

இது என்ன - சிற்றறிவை யொக்கும் இது என்று சொல்லும்படி, கலவை சாந்துஉம்-(குங்குமப்பூ முதலிய வாசனைப் பொருள்களோடு கூடிய) கலவைச்சந்தனக் குழம்பும், புணர் முலை சுவடுஉம்-(ஒன்றோடொன்று) நெருங்கிய மகளிர் தனங்கள் (இறுகத்தழுவுங்காலத்து) மேற்பொருந்திய தனுலாகிய தழும்பும், புயங்களில் நீங்கா - (தம்) தோள்களில் நீங்கப்பெறாத, பயம் கெழு - (கல்வி செல்வம் முதலிய) பயன்கள் மிக்க, குமரர் - இளமைந்தர்கள், வட்டு ஆட்டு - வட்டாட்டத்தை, ஆடு-ஆடுகின்ற, இடம்—, பலஉம் - பலவற்றையும், கண்டார்—; (எ - று.)

பொறிகளுக்குரிய புலன்கள் பலவற்றின் வழியிலே சென்று சுழலும் அறிவு, மைந்தர்கள் ஆடும்பொழுது எங்குஞ்சுற்றுகிற வட்டுக்கு உவமை. 'இது' என்பது - வட்டைக் காட்டும். வட்டு - உருண்ட காய். மூன்றுமடி - அவ்வீரர்கள் யௌவன முள்ளவரென்பதைக் காட்டும். பி-ம்:—[1] திரிய. [2] புயங்களின். [3] வயங்கெழில். [4] வாளாட்டு. (581)

20.—இளமைந்தர்களின் காட்சி.

வெஞ்[1] சுட ருருவிற் றன்ன மேனியர் வேண்டிற் றீயும்
நெஞ்சின ரீசன் கண்ணி [2] னெருப்பரு வனங்க னன்னார்
செஞ்சிலைக் கரத்தர் மாதர் புலவிகள் திருத்திச் [3] சேந்த
குஞ்சியர் [4] சூழ நின்ற மைந்தர்தங் [5] குழாங்கள் கண்டார்.

(இ - ள்.) வெம் சுடர் உருவிற்று அன்ன மேனியர் - வெம்மையுள்ள சூரியன் வடிவமெடுத்து (இவ்வுலகத்திலே) பொருந்தினுலொத்த [மிக்கவொளியையுடைய] உடம்பையுடையவர்களும், வேண்டிற்று ஈயும் நெஞ்சினர்-(வேண்டுவோர்) வேண்டும்பொருள்களைத் தருகின்ற (அருளோடுகூடிய) மனமுடையவர்களும்; ஈசன் கண்ணின் நெருப்பு அரு அனங்கன் அன்னார்-சிவபிரானது நெற்றிக் கண்ணின் நெருப்புக்கு இலக்காகி எரிந்திடாத [தனது இயற்கை வடிவத்தோடு கூடியுள்ள] மன்மதனை (அழகில்) ஒத்தவர்களும், செம் சிலை கரத்தர் - வில்லையேந்திய சிவந்த கையையுடையவர்களும், மாதர் புலவிகள் திருத்தி சேந்த குஞ்சியர் - மகளிரது ஊடல்களைத் தணித்து (அதனுற்) சிவந்த முடியையுடையவர்களுமாகிய, சூழ நின்ற மைந்தர் தம் குழாங்கள் - சுற்றுப்பக்கங்களிற் பொருந்தியுள்ள யௌவன புருஷர்களது கூட்டங்களை, கண்டார்—;

மாதர்புலவிகள் திருத்திச் சேந்த குஞ்சியரென்றது - கலவிக் காலத்தில் மாதர்கள்கொண்ட ஊடலைத் தீர்க்கும் பொருட்டு மைந்தர்கள் அவர்களது அடிகளிலே தமது முடிபடும்படி விழுந்து வணங்க, அப்பொழுது அவர்கள் காலிலணியப்பட்டுள்ள செம்பஞ்சுக்குழம்பு இவர்களது தலைமயிரிலேபடுதலால்; கலவிவேளையில் மாதர்க்கு இதஞ்செய்வதே முக்கியமென்பதும், மற்ற வேளையில் ஒருவர்க்கொருவர் செய்யும் மரியாதை அப்பொழுது வேண்டுவதன்று என்பதும் நூற்கொள்கை; இங்ஙனம் ஊடல் தணிக்க வணங்குவதாகவருவதைப்பெரியகாப்பியங்களிலும் காண்க. கூடும்

பொழுதுதோறும் அவ்வின்பஞ் சிறத்தற்பொருட்டு ஊடுதலால், 'புலவிகள்' எனப் பன்மையாற் கூறினர். ஈசன் கண்ணினெருப் பரு வனங்கன்- இல்பொருளுவமை. குஞ்சி- ஆண்மயிர். பி-ம்:—[1] சின முருவிற்றென்னும், சினவுருவிற்றன்ன. [2] நெருப்புரு. [3] தேய்ந்த. [4] சுழலாநின்ற. [5] குழாமும். (582)

வேறு.

21.-மகளிர் பூக்கொய்து விளையாடுஞ்சோலைகளின் காட்சி.

பாகொக் குஞ்சொற் பைங்கிளி யோடும் பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர்கொய்யுந்
தோகைக் கொம்பி னன்னவர்க் கன்ன நடைதோற்றுப்
போகக் [1] கண்டு வண்டின மார்க்கும் பொழில்கண்டார்.

(இ - ள்.) பாகு ஒக்கும் - சருக்கரைப்பாகையொத்து இனிய, சொல் பல - பலசொற்களை, பைங் கிளியோடுஉம் - பச்சைக்கிளி களுடனே, பேசி - பேசிக்கொண்டு, மாகத்து உம்பர் மங்கையர் நாண - பெரிய ஆகாயத்தின்மீதுள்ள தெய்வப்பெண்களெல்லா ரும் (தமது வடிவழகுக்குத்தோற்று) வெள்கும்படி, மலர் கொய்யும்- பூக்களைப் பறிக்கின்ற, தோகை கொம்பின் அன்னவர்க்கு-(சாயலில்) மயிலையும் (மெல்லிய உருவத்திற்) பூங்கொம்பையும் ஒத்த மாதர் களுக்கு, அன்னம் நடை தோற்று போக - நடையழகிலே அன்னம் (ஒப்பாகாமல்) தோல்வியடைந்து பின்செல்ல, கண்டு - (அதனைப்) பார்த்து, வண்டு இனம் ஆர்க்கும் - வண்டுகளின் கூட்டம் ஆரவா ரஞ்செய்தற்கிடமான, பொழில் - சோலைகளை, கண்டார்—; (எ-று)

உயர்ந்தவர் வெல்லவும் இழிந்தவர் தோற்கவுங்கண்ட மத்தி யஸ்தர் வென்றவர்க்கு மகிழ்ச்சியும் தோற்றவர்க்கு அவமதிப்பும் உண்டாம்படி ஆரவாரஞ்செய்த லியல்பாதலால், இயற்கையிற் பேரொலிசெய்கின்ற வண்டுகளை அன்னம் மகளிர்நடைக்குத்தோற் றுப் போனதற்காக ஆரவாரிப்பன போலு மென்றார்; இங்ஙன் வெளிப்படையாகவன்றி வருவது, குறிப்புத்தற்குறிப்பேற்றவணி. இனி, இராமன்முதலிய மூவரும் பூக்கொய்யும் மகளிரின் நடைக்குத் தோற்றுப்போகும் அன்னத்தையும், வண்டினம் ஆர்க்குஞ்சோலை யையும் கண்டார்களென்றுமாம். கிள்ளைகள் இம்மாதரிடம் இன் சொல் பயில வந்தன. கொம்பின் - இன்சாரியை நிற்க, இரண்டனு ருபு தொக்கது. தோகைக்கொம்பினன்னவர் - தோகையையுடைய கொம்பை யொத்தவ ரெனவுமாம்; கூந்தலையுடைய மாதர்க்கு உவமை. பி-ம்:—[1] கண்டே, கண்டும். (583)

22.—அரண்மனை மதிலைச் சூழ்ந்துள்ள அகழியைக் காணுதல்.

உம்பர்க் கேயும் மாளிகை [1] யோளி நிழல்பாய
இம்பர்த் தோன்றுந் [2] நாகர்த நாட்டி னெழில்[3] காட்டிப்
பம்பிப் பொங்குங் கங்கையி னூழ்ந்த படைமன்னன்
அம்பொற் கோயிற் பொன்மதில் சுற்றும் மகழ்கண்டார்.

(இ - ள்.) உம்பர்க்கு - (இந்திராதி) தேவர்களுக்கு, ஏயும் - (தங்குதற்கிடமாகப்) பொருந்திய, மாளிகை - பெருவீடுகளின், ஒளி- வரிசையினது, நிழல் - சாயை, பாய - (தன்னிடத்தே) படிதலால்,- இம்பர் தோன்றும் - இவ்விடத்தே காணப்படுகிற, நாகர்தம் நாட்டின் - தேவலோகத்தினது, எழில்-அழகை, காட்டி-(தன்னிடத்தே) காண்பித்து,—பம்பி பொங்கும் கங்கையின் ஆழ்ந்த-(அலைகள்) மிகுந்து மேலே (நீர்) பொங்குகிற கங்காநதிபோல ஆழமாகவுள்ள, படை மன்னன் அம் பொன் கோயில் பொன் மதில் சுற்றும் அகழ் - சேனைகளையுடைய சனகராசனது அழகிய பொன்மயமான அரண்மனையின் சுற்றிலுமுள்ள பொன்னினாலாகிய அகமதிலைச் சூழ்ந்துள்ள அகழியை, கண்டார்; (எ - று.)

மிகவுமழகிய பொன்மயமான பெரியவீடுகளின் வரிசைகளோடு கூடிய அரண்மனையைச் சூழ்ந்துள்ள அகழி, பொன்மயமான அமராவதிபட்டணத்தினது பிரதிபிம்பத்தைத் தனது நடுவிலே செவ்விதாக விளங்கக் காட்டுவதொரு பெரிய நீர்நிலையை யொக்குமென்பது, முதலிரண்டடிக்குக் கருத்து; தற்குறிப்பேற்றவணி. இனி, தெளிவுமிகுதியால் தேவலோகத்தினிழல் தன்னிடத்தே காணப்பட, அத்தெளிவோடுகூடிய ஆழமிகுதியால் சர்ப்பசாதியாரது பாதாளலோகத்தின் அழகையும் இங்கே காணும்படி காட்டியென்றும் பொருள்கொள்ளலாம். நாகர்-தேவரும் உரகரும். படை - ஆயுதமுமாம். ஏயும்மாளிகை, தோற்றுந்நாகர், சுற்றும் மகழ் - விரித்தல் விகாரங்கள். கங்கையினாழ்ந்த என்பதற்கு-கங்காநதியின் நீர் பாய்தலால் ஆழமாகவுள்ள என்றுங் கொள்ளலாம். பி - ம்:—[1] ஒளியின். [2] நாகநனாட்டின், நன்னகர்நாட்டின். [3] காட்டப். (584)

23.—அரண்மனையிலுள்ள கன்னிமாடத்துச் சீதையைக் காணுதல்.

பொன்னின் சோதி [1] போதினி னாற்றம் [2] பொலிவேபோல்
[3] தென்னுண் [4] டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் [5] மாடே [6] களிபேடோடு
அன்னம் மாடு முன்றுறை கண்டாங் கயனின்றார்.

(இ - ள்.) கன்னி மாடத்து உம்பரின் மாடு - கன்னியாமாடத்தினது மேலிடத்திலே, களிபேடோடு அன்னம் ஆடு-மகிழ்ச்சியுள்ள பெட்டையன்னங்களுடனே ஆணன்னங்கள் கூடிவிளையாடப்பெற்ற, முன்துறை - இடத்திற்கு முன்புறத்து,-பொன்னின் சோதி-பொன்னின் ஒளியும், போதின் இன் நாற்றம் - பூவின் நறுமணமும், தென் உண் தேனின் தீம் சுவை - வண்டுகளுண்ணும் தேனின் இனிய உருசியும், செம் சொல் கவி இன்பம் - திருத்தமான சொற்களினாலமைந்த செய்யுளின் இரசமும், (என்னுமிவை), பொலிவுஏபோல்- (ஓருருவெடுத்து) விளங்குவதுபோல்,(சீதாபிராட்டிதோன்ற),கண்டு- -பார்த்து, ஆங்கு அயல்நின்றார்- (மூவரும்) அவ்விடத்தருகில் நின்றார்கள்; (எ - று.)

கன்னிமாடத்தும்பரில் அன்னமாடும் முன்துறைக்குமுன்னே, பொன்னின் சோதியும் போதின் நறுமணமும் தேனின் தீஞ்சுவையும் செஞ்சொற்கவியின் இன்பமும் ஒருங்கே உருவெடுத்துப் பொலிவதுபோலுள்ள சீதாபிராட்டியை, அம்மூவரும் கண்டு அக்கன்னிமாடத்தருகே நின்றூர்களென்பதாம்: இச்செய்யுள் சீதையைக் கண்டமையைக் கூறுமென்பதை "முன்னை நான் முனியொடும் முதிய நீர்மிதிலைவாய்ச், சென்னிநீண்மாலையான் வேள்விகாணிய செல, அன்னமாடுந்துறைக் கருகுநின்றூளையக், கன்னிமாடத்திடைக்கண்டதுங் கழறுவாய்" என்ற நாடவிட்டபடலத்துச் செய்யுளும் புலப்படுத்தும். 'பொன்னின்சோதி...கவியின்பம் பொலிவேபோல்' என்ற வருணனை முகத்தால், சீதாபிராட்டியாராகிய உபமேயத்தைப் பெற வைத்தார். அடுத்த செய்யுளில் சீதாபிராட்டியின் வருணனை தொடங்குவதும், கவி இங்ஙன் கொண்டாரென்பதைத் தெளிவுறுத்தும்: சீதை பொன்னினெளி முதலிய கொண்டவளென்பதை "பொன்னினெளி பூவின்வெறி சாந்து பொர்திசீதம், மின்னினிழல் அன்னவள்" என மேலும் கூறுவர். இச்செய்யுளில் ஐம்பொறிகளாற் பெறப்படும் இன்பங்களுள் ஒளி நாற்றம் சுவை ஓசை என்ற நான்கைக் கூறியவர், ஊற்றின்பத்தை உபலட்சணத்தாற் பெறவைத்தார்; "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" என மாதரிடத்து ஐம்புலனும் உள்ளனவாகக்கூறப்படுதல் காண்க. இதுவரையிற் பல காட்சிகளைக் கண்டுகொண்டே சென்றவர்கள் இக்காட்சிநேர்ந்த இடத்துநின்றூரென்றதனல், இக்காட்சி அவசமாய் அப்பாற்போகவொட்டாது செய்தது என்பது பெறப்படும்: அன்றியும், கவி, சீதையைப்பற்றிவருணிப்பதற்கும் ஓரவகாசம் ஏற்படுத்திக்கொண்டனரென்க. முதலடியின் ஈற்றிலிருக்கும் 'பொலிவே போல்' என்பது - கவியின்பம் என்பதன்பின் கூட்டத்தக்கது. இனி, மத்திமதீபமாகக்கொண்டு, பொன்னினுள் சோதிப் பொலிவுபோலவும், போதில் நாற்றப்பொலிவுபோலவும், தேனில் சுவைப்பொலிவுபோலவும், கவியில் இன்பப் பொலிவு போலவும் பொலிபவளான சீதை என்பாருமுளர். கன்னிகாமாடத்துக்கூறிய அன்னங்கள் பிராட்டியுடன் விளையாடுவனபோலும்.

இனி, இக்கவிக்கு - பொன்னில் ஒளி பொலிதல்போலவும், மலரில் நறுமணம் பொலிதல்போலவும், தேனில் இன்சுவைபொலிதல்போலவும் கவிஞர் பாவில் செவ்விய ஓசையின்பம் பொலிதல் போலவும் (ஒளிமுதலியவற்றோடு) விளங்குபவளாகி) கன்னிமாடத்தின்மீது அன்னப்பேடுபோன்ற தோழிப்பெண்களுடனே பெண்ணரசவன்னம்போன்ற சீதை விளையாடுகின்ற முன்னிடத்தைப் பார்த்து அவ்விடத்திற்குப் பக்கத்திலே நின்றூர்கள் என உரைப்பினுமாம். கன்னிமாடத்...முன்றுறை என்பதற்கு - கன்னிமாடத்து மேடையிலே பேடோடு அன்னம் ஆடும்படி அமைத்ததடாகநீர்த்துறைக்கு முன்னே என்று உரைகூறினருமுளர். தென்-தேன் என்பதன் குறுக்கல் விகாரம். பேடு - பறவைக்குரிய பெண்பெயர். பி-ம்:- [1]போதிள. [2]பொலிவெய்தின். [3]தின்னுண். [4]தேறல். [5]மாடொர். [6]கழிபேடோடு, பெடையோடும். (585)

24.—சீதாபிராட்டியாரைப் பற்றிய கவிக்கூற்று.

செப்புங் காலைச் செங்கமலத்தோன் முதல்யாரும்
[1]ஒப்பெண் பாலும் கொண்டுவ மிப்போ ருவமிக்கும்
அப்பெண் டானே யாயின போதிங் கயல்[2]வேறோர்
ஒப்பெங் கேகொண் [3]டெவ்வகை நாடி யுரை [4]செய்வேம்.

(இ - ள்.) செப்பும் காலை - (அச்சானகிபிராட்டிக்கு உவமை) சொல்லப் புகுமிடத்து, செம் கமலத்தோன் முதல் யார்உம் - சிவந்த தாமரைமலரில் வாழ்கிற பிரமதேவன் முதல் (சாதாரணமனிதரீறாக) உள்ளவரெவரும், '(எந்தப்பெண்ணுக்கும்), எண்பால்உம் ஒப்பு கொண்டு உவமிப்போர்-எண்ணத்தகுந்த பகுதிகளெல்லாம் ஒப்புப்பொருளை ஆராய்ந்துகொண்டு உவமிப்பவர்கள், உவமிக்கும் - உவமையாக எடுத்துச்சொல்லுகிற, அ பெண் தானே ஆயினபோது - அந்த(ப் பெண்களுட்சிறந்த) திருமகள் தானே (சீதையாக இவ்விடம்) வந்துள்ளபோது [வந்திருத்தலால்], இங்கு - இவ்விடத்து, அயல் வேறு ஓர் ஒப்பு எங்கே நாடி - அத்திருமகளைவிட வேறொருஉவமைப்பொருளை எவ்விடத்தில்தேடி, எவகைகொண்டு உரைசெய்வேம் - எவ்வாறு எடுத்துச்சொல்வோம்?

எல்லாப்பெண்களுக்கும் யாவராலும் உபமானமாகவெடுத்துச் சொல்லப்படுகிற இலக்குமியே இங்குச் சீதையா யவதரித்திருத்தலால், இவளுக்கு அவ்விலக்குமியை யொழிய வேறுஉவமையெடுத்துச்சொல்ல முடியாதென்பதாம்; சீதை உவமையற்றவளென்பது கருத்து. 'உரைசெய்வேம்'-கவிகளுக்குரியபன்மை.
பி-ம்:—[1]எப்பெண்பாலும். [2]மற்றோர். [3]ஏவரை. [4]செய்கேன். (586)

25.—இதுமுதல் பத்துப் பாடல்கள்—சீதையின் வருணனை.

*உமையா ளொக்கு மங்கைய ருச்சிக் கரம் [1]வைக்கும்
கமையாண் மேனி கண்டவர் காட்சிக் கரை[2]காண
[3]இமையா நாட்டம் [4]பெற்றில மென்றா ரிருகண்ணால்
அமையா தென்றா ரந்தர வானத் தவரெல்லாம்.

(இ - ள்.) உமையாள் ஒக்கும் மங்கையர் - பார்வதீதேவிமுதலிய சிறப்புடைய மாதர்களும், உச்சி கரம் வைக்கும்-(தங்கள்) தலைமேற் கைகளைவைத்துக்கூப்பி அஞ்சலிசெய்வதற்கு உரிய, கமையாள் - பொறுமைமுதலிய நற்குணங்களையுடைய சானகிப்பிராட்டியினது, மேனி - திருமேனியழகை, கண்டவர் - பார்த்தவராகிய மண்ணுலகத்தவர், 'காட்சி கரை காண-இவ்வழகின் எல்லையை(முழுவதுங்)காணுமாறு, இமையா நாட்டம் பெற்றிலம்-இமைமூடப்பெறாத கண்களைப் பெற்றோமில்லையே!' என்றார் - என்று (தம்மைப்பற்றிக்] குறையுற்றனர்; அந்தரம் வானத்தவர் எல்லாம்-(இமையா நாட்டம் பெற்றுள்ள) மேலுலகத்தில்வாழுந் தேவர்களெல்லாரும், 'இரு கண்ணால் அமையாது - (இவ்வழகைப்பார்க்க) நமது இரண்டு கண்களால் முடியாது,' என்றார்—; (எ-று.)

---

*"பொன்சேர்மென்கால்" (31)என்பது,சிலபிரதிகளில் 25-ஆவது பாடல்: சிலபிரதிகளில் "வென்றம்மானை" (26) என்றதன்பின்.

சீதையைக் கண்டவர்கள் அவளுடைய உடலழகிற்கு எல்லை காணாராக, அவர்களுள் மண்ணுலகத்தார், தேவர்கள்போல எமக்கு இமையாநாட்டமில்லையே யென்று குறையுற்றனர்: வானத் தவரோ, எமக்கு இமையாநாட்டம் இருந்தும் அவையிரண்டே யாயினமையால் இவளழகை முற்றிலும் ஒருங்கே பார்க்கப் போதாவேயென்று குறையுற்றனரென்பதாம். "ஆயிரங்கண்ணி லாதார்க்கழகுகாண்பரிய நங்கை", "கண்டுகண்ணேராக் காமர் காரிகை" என்றார், பிறரும். சீதையைக் காணும்போது அவ ளிடத்துப் பக்தி தோன்றுதலால், மங்கையர் கைகூப்புவர். கமை-மற்றைக்குணங்கட்கும் உபலக்ஷணம். கமையாள்-பொறுமையே வடிவுபடைத்தாற்போன்றவள்: தன்னை இலங்கையில் நலிந்த அரக்கியரையுமுளப்படப் பொறுத்தவ ளாதலால், இவள் பொறுமை பிரசித்தமானது. ஒக்கும்-ஒப்பில்போலி. கமை-க்ஷமா: வடமொழித்திரிபு. கரைஎன்றதற்குஏற்ப, காட்சியைக் கடலென்க. பி-ம்:—[1]வைப்பக், வைக்கக். [2]காணார். [3]இமையார். [4]பெற்றன மென்றால். (587)

26. வென்றம் மானைத் [1]தாரயில் வேலுங் கொலைவாளும்
பின்றம் [2]மானப் பேர்கய லஞ்சப் பிறழ்கண்ணாள்
[3]குன்றம் மாடக் கோவி னளிக்குங் கடலன்றி
[4]அன்றம் மாடத் தும்ப ரளிக்கும் மமுதன்னாள்.

(இ-ள்.) அம் மானை வென்று-(புலவர்கள் உவமை கூறு கின்ற) அழகிய மானை(ப் பார்வையிலே) சயித்து, தார் அயில் வேல்உம் கொலை வாள்உம் பின்ற - வெற்றிமாலையையணிந்த கூர்மையையுடைய வேலாயுதமும் கொலைத்தொழிலிற் பயின்ற வாளாயுதமும் (ஒப்பாகாமற்) பின்னிடும்படியாகவும், மானம் பேர் கயல் அஞ்ச - (பிறமகளிர் கண்களுக்கெல்லாம் உவமை யாகக் கூறப்படுஞ்) சிறப்பையுடைய பெரிய கயல்மீன்களும் (ஒப்பாக முன்னிற்கமாட்டாமல்) அஞ்சிப் பின்னிடும்படியாக வும், பிறழ் - பிறழ்கின்ற, கண்ணாள் - கண்களையுடைய சானகிப்பிராட்டி,—குன்றம் ஆட - (மந்தர) மலை (தன்னிடத்தே) சுழல, கோவின் அளிக்கும் கடல் அன்றி - கோவென்னும் ஆர வாரத்தோடு (அமுதத்தை) ஈன்ற கடலினா லல்லாமல், அன்று அ மாடத்து உம்பர் அளிக்கும் அமுது அன்னாள்-அக்காலத்திலே அந்தக்கன்னியாமாடத்தினது மேலிடத்தாற் பெறப்பட்டதொரு அமிர்தத்தை ஒத்தவள்; (எ-று.)

கடல் தான் ஒன்றினாற் கடையப்பட்டு மிகநலிந்து பெற்ற அமுதம், இந்தச் சீதைக்கு ஒப்பாகாது; மாடத்தின் மேலிடம் ஒரு சிறந்த தேவாமிருதத்தை எளிதிற்பெற்றாற் போல்பவள் இவ ளென்றவாறு. கயலஞ்சப் பிறழ்கின்ற மானம் கண்ணாள்-பேரள வானகண்களையுடையவ ளென்பாருமுளர். தார் அயில் என்னும் அடைமொழியும் வேலுக்கே யன்றி வாளுடனும், கொலை யென் னும் அடைமொழியும் வாளுக்கேயன்றி வேலுடனும் சேரும். கோ-ஒலிக்குறிப்பு. முதலடியில், அ மானை என்றும் பிரிக்கலாம்.

கோவின் குன்றம் ஆட கடல் அளிக்கும் அமுது அன்றி-திருமாலால் மந்தரமலை (அழுந்தாமல் மத்தாகச்) சுழல (அக்காலத்துப்) பாற்கடல் அளித்த அமுதமல்லாமல் என்றுமாம். பின்றம் மானப், குன்றம்மாட-விரித்தல். பி-ம்:—[1]காய். [2]மானில். [3]அன்றவ்வானத்தும்பரளிக்கும் மமுதன்றி, குன்றம்மாடக் கோவினளிக்கும் மமுதன்றி. [4]இன்றிம்மாடத்திம்பர். (588)

27. [1]பெருந்தே னின்சொற் பெண்ணிவ [2]ளொப்பா ளொருபெண்
தருந்தா [3]னென்ரு ஞன்முக னின்னுந் தர[4]லாமே [ணைத்
[5]அருந்தா வந்தத் தேவ ரிரந்தா லமிழ்தென்னும்
[6]மருந்தே யல்லா தென்னினி நல்கும் மணியாழி.

(இ - ள்.) பெரு தேன் இன் சொல் பெண் இவள் ஒப்பாள்-ஒருபெண்ணை த(ா)ரும் என்ருல்-'பெருமைபெற்ற தேன்போன்ற இன்சொல்லையுடைய இப்பெண்ணைப்போல்பவ ளொருபெண்ணைப் படைத்துக்கொடும்' என்று(தேவர்கள் திரண்டுவந்து)வேண்டினு லும், நான்முகன் இன்னும் தரல் ஆம்ஏ-(படைத்தற்கடவுளாகிய) நான்குதிசையிலும் நான்குமுகங்களையுடைய பிரமதேவனுல்தான் இனியாகிலும் படைத்தல்கூடுமோ? [கூடாது]; அருந்தா அந்த தேவர் இரந்தால் - (அமிர்தத்தை யொழிய வேருென்றை) உண்ணுத அப்படிப்பட்ட சிறப்பையுடைய தேவர் (வந்து) வேண்டினுலும், மணி ஆழி-இரத்தினங்களுக்கு ஆகரமானகடல், அமிழ்து என்னும் மருந்துஏ அல்லாது-அமிருதமென்கிறதிவ்விய ஔடதத்தையே மீண்டுங் கொடுப்பதல்லாமல், இனி என் நல்கும்-இனி வேறெதைக் கொடுக்கவல்லது? (எ-று.)

அமுதத்தையேயன்றி அதனிற் சிறந்த பொருளைக் கடலால் தரமுடியாதவாறுபோல, தான் படைத்துப் பழகிய மாதரைப் போன்ற மாதரை யன்றி, இவளைப்போற் சிறந்தமங்கையைப் பிரமனுலும் படைத்த லியலா தென்று எடுத்துக்காட்டுவமையணி படக் கருத்துக் காண்க. இதனுல், சீதாபிராட்டி, பிரமனுற் படைக்கத் தக்கவளல்லள்: க்ஷீரசமுத்திரராசனிடத்தினின்று தோன்றத்தக்க வளு மல்லள்: அயோநிஜை என்பது குறிப்பிக்கப்பட்டது. "சமைத்தவரையின்மை மறைதானு மெனலாம்ச், சுமைத்திரண்முலைத் தெரிவை தூய்வடிவு கண்டார்" என்பர், மேலும். இனி, இலக்குமியை முன்பு தந்த பாற்கடல் இலக்குமியே இங்குவந்து விட்டதனுல், தான் பாற்கடலாயிருத்தல்பற்றி அமிருதத்தையன்றி இலக்குமியை எவ்வாறு தரவல்லது என்று பின்னடிகட்குப் பொருள் காண்டலும் உண்டு. நான்முகன் என்னும் பெயரைப் பண்புத்தொகையாகக் கொள்ளாமல் வினைத்தொகையாகக் கொண்டு, (தன்னைவந்தடைந்து வேண்டுவாரது வேண்டுகோளை முடிக்கும் வல்லமையின்மையாலுண்டான அவமானத்தால்), நால் - தொங்குதலடைந்த, முகன் - முகத்தையுடையவன் என்று தொனிப்பொரு ளுரைப்பர். தரலாமே, ஏ - எதிர்மறை. 'இன்னும்' என்றதனுல், இதுவரையிலும் படைக்கப்படவில்லையென்பது உணர்த்தப்பட்டது: இன்னும்-இவளது வடிவழகைக்கண்டபின்பாயினும் என்றுமாம். தரும்

என்பதைப் படர்க்கைவினைமுற்றாகக்கொண்டு, இப்பிராட்டியை யொத்த பெண்ணைப் பிரமன்தான் படைக்கவல்லனென்று கூறுவார் சிலருளராயின் அவன் இன்னும் படைக்கலாமேயென்று உரைத்து, பிரமசிருஷ்டியில் இவளையொத்த பெண் எங்குங் காணப்படாமையால் பிரமன் இவளைப்போன்ற பெண்ணைப்படைக்குந் திறமுடையவனல்ல னென்பது போதரு மெனக் கொள்ளினுமாம். 'அருந்தா வந்தத் தேவ ரிரந்தால்' என்பது மத்திமதீபமாய், முன்வாக்கியத்தோடும் பின்வாக்கியத்தோடும் இயையும். 'இனி' என்றது, முன் திருமகளைத் தந்துவிட்டதைக்கருதி. பி - ம்:—[1] பெருந்தேரல்குல். [2] என்பால். [3] இன்னநான்முகனென்றால். [4] ஆமோ. [5] அருந்தா வந்தோ. [6] மருந்தாமல்லால். (589)

28. அணையாண் மேனி கண்டபி னண்டத் தரசாளும்
[1] வினையோர் மேவும் மேனகை யாதிம் மிளிர்வேற்கண்
இணையோ ருள்ளத் தின்னலி னோர்தம் முகமென்னும்
பனிதோய் [2] வானின் [3] வெண்மதிக் கென்றும் பகலன்றே.

(இ - ள்.) அண்டத்து அரசு ஆளும் வினையோர் - விண்ணுலகத்தில் அரசாட்சிசெய்கிற நல்வினையையுடைய இந்திராதிதேவர்கள், மேவும் - விரும்புகிற, மேனகை ஆதி மிளிர் வேல் கண் இணையோர்-மேனகை முதலிய ஒளிசெய்கிற வேலாயுதம்போன்றகண்களையுடைய இத்தெய்வப்பெண்கள், அணையாள் மேனி கண்டபின்-அந்தச் சீதாபிராட்டியினது (பெருஞ்சிறப்பையுடைய) திருமேனியழகைப் பார்த்தபின்பு, உள்ளத்து இன்னலினோர் - (தத்தம் அழகெல்லாங்கூடி அவளது அழகொன்றுக்கு ஈடாகாளென்று அறிந்து) மனத்தில் துன்பத்தையுடையவர்களானார்கள்: (மேலும்), தம்முகம் என்னும்-அந்த மேனகை முதலிய மாதரின் முகமண்டலமென்கிற, பனி தோய் வானின் வெண்மதிக்கு-குளிர்ச்சி நிறைந்த ஆகாயத்தில் விளங்குகின்ற வெண்ணிறமுள்ள சந்திரமண்டலத்துக்கு, என்றும் பகல் அன்றே-(பகல் இரவு என்கின்ற வேறுபாடின்றி) எப்பொழுதும் பகற்பொழுதாகவே யிருக்கும்; (எ - று.)

மேனகை முதலிய தேவமாதர் சீதையின் மேனியழகைக் கண்டு 'நம்மழகு இதற்கு ஈடாகாது' என்று மனம் அழுங்க, அதனால் அவர்கள் முகம் பகற்சந்திரன்போல எப்போதும்ஒளிமழுங்கியிருக்கு மென்பதாம். பி-ம்:—[1] வினையோன்மேவும், வினையோராமே, வினையோராரும். [2] வானம். [3] என்றுமதிக்குப். (590)

29. மலர்மே னின்றிம் மங்கையிவ் வையத் திடைவைகப்
பலகா லுந்தம் மெய்ந்நனி வாடும் படிநோற்றார்
அலகோ வில்லா வந்தண ரோநல் லறமேயோ
உலகோ வானோ வும்பர்கொ லோவீ துணரேமால்.

(இ - ள்.) இ மங்கை - இத்தன்மைய பிராட்டி, மலர் மேல் நின்று - செந்தாமரைமலரின்மேலிடத்தினின்று (இறங்கி), இ வையத்திடைவைக - இப்பூலோகத்திலே தங்கியிருக்கும்பொருட்டு, பல கால்உம் - அநேககாலமாய், தம் மெய் நனி வாடும்படி - தத்த

ந்து உடம்பு (விரதங்களால்) மிகவும் வாட்டமடையும்படி, நோற்றார்-(அரிய பெரிய) தவஞ்செய்தவர்கள், அலகு இல்லா அந்தணர்ஓ-அளவிறந்த பிராமணர்கள்தாமோ? நல் அறம்ஏ ஓ-நல்ல தருமதேவதைதானோ? வான்ஓ - விண்ணுலகந்தானோ? உம்பர் கொல்ஓ - எல்லாத்தேவர்களுமேயோ? ஈது உணரேம் - இதன் உண்மையை அறிகின்றோமில்லை; (எ - று.)

சீதாபிராட்டி, தான் சிறையிருந்து, விண்ணுலகத்தவரான தேவர் மண்ணுலகத்தவரான அந்தணர் முதலியோர்க்குப்பேரிடரிழைத்துவந்த இராவணாதியரைச் சங்கரித்துப் பாவம்ஒழியப் புண்ணியத்தையோங்கும்படி செய்யப்போவதனால், பூதேவராகிய வேதியர் முதலியோரால் வருந்திச்செய்யப்பட்ட தவத்தின் பயனாலேயே அப்பிராட்டி பூமியில் வாழ்கின்றாளென்று சொல்லும்படியுள்ளதென்பது கருத்து. ஈதுணரேம்-கவிக்கூற்று. 'அலகோ' என்பதில் ஓவும், 'உம்பர்கொல்' என்பதில் கொல்லும் - அசைநிலை.

30. [1] தந்நே ரில்லா மங்கையர் செங்கைத் [2] தளிர்மானே
அன்னே தேனே யாரமிர் தேயென் றடி[3] போற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறை [4] சாரப்
பொன்னே சூழும் பூவி னொதுங்கிப் பொலிகின்றாள்.

(இ - ள்.) தம் நேர் இல்லா மங்கையர் - (தமக்கு) உவமைப் பொருளைப் பெறாத (கட்டழகையுடைய) தோழிமார் பலர், 'செம் கை தளிர்மானே - சிவந்த தளிர்போலுங் கைகளையுடைய மான் போன்றவளே! அன்னே - தாயே! தேனே - (இனிமையில்) தேன் போல்பவளே! ஆர் அமிர்தே - (பெறுதற்கு) அரிய அமிருதம்போல் பவளே!' என்று - என்று அழைத்து, அடி போற்றி-(மெத்தென் றிருத்தலால்) பாதங்களைப் பேணி, முன்ஏ முன்ஏ மொய் மலர் தூவி-(நடந்துசெல்லவேண்டிய) முன்னிடங்களிலெல்லாம் நெருங்கின பூக்களைக் கொண்டுவந்து சொரிந்து, முறைசார - முறைமையாக நிரம்பி நிரம்பிநிற்க, (அம்மலர்களின்மேல்), பொன்ஏ சூழும்பூவின்-மகரந்தப் பொடி நிரம்பியுள்ள (தூவிய) அந்தப்பூவிலே, ஒதுங்கி - நடந்து, (பிராட்டி), பொலிகின்றாள் - விளங்குகிறாள்; (எ-று.)

தோழிமார் அடிபோற்றித் தூவிச் சார அவர்கள் தூவிய மலர்களில் பாதம் வைத்து நடக்கின்றாளெனப் பிராட்டியின் மென்மை கூறியவாறு. பொன் - மகரந்தத்துக்கு, உவமவாகுபெயர். "கரும்பேதேனே யமிர்தே காமர்மணியாழே, யரும்பார்மலர்மேலணங்கே மழலையன்னம்மே, சுரும்பார் சோலைமயிலே குயிலே சுடர் வீசும், பெரும்பூண் மன்னன்பாவாய் பூவாய் பிணைமானே," "அம் மெல்லனிச்சம்மலருமன்னத்தூவியும், வெம்மையாமென்றஞ்சி மெல்லமிதியாத, பொம்மென் னிலவப்பூம்போதனநின்னடிபோற்றி, யிம்மென்கலையா ரிடுவென்றேத்தவொதுங்கினாள்" என்ற சிந்தாமணிச்செய்யுளும், அவற்றினுரையும் இங்குக்காணத்தக்கன, அடி போற்றி - திருவடிபரவி யென்றுமாம். பொன்னே சூழும் பூவின் - அழகுநிரம்பிய மலரில் எனினுமாம். இனி, மொழிமாற்றுப்பொருள் கோளாக 'பொன்னே சூழும் பூவின்' என்பதை, 'பூவே சூழும்பொன்

னின்' என்று இயைத்து-தாமரைமலரிலேவாழ்கிற இலக்குமிபோல என்றுமாம். 'தந்நேரில்லா மங்கையர்' எனத் தோழிமாரைச் சிறப் பித்துக் கூறியதனால், தலைமகளது சிறப்புத் தானே விளங்கும். அனனே - அன்னேயென்பதன்விளி. "அனிச்சமு மன்னத்தின் றூவியுமாத, ரடிக்கு நெருஞ்சிப் பழம்" என்னுந் திருக்குறளின் கருத்தை இங்கே தெரிந்துகொள்க. முன்னே - அடுக்கு, தொறுப் பொருளது. பி - ம்:—[1] தன்னேரில்லா. [2] தனிமானே. [3] போற்ற. [4] சாற்றப், சாலப். (592)

31. பொன்சேர் [1]மென்காற் கிண்கிணி யாரம் புனை [2]யாரம்
கொன்சே ரல்குன் மேகலை [3]தாங்கிக் கொடியன்னார்
தன்[4]சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்[5]சேவிக்க மின்னர சென்னும் படிநின்றாள்.

(இ - ள்.) பொன் சேர் - பொன்னினாலாகிய, மென் கால் கிண்கிணி-மெல்லிய பாதங்களிலணிகிற சதங்கைகளையும், ஆரம் - இரத்தினமாலைகளையும், புனை ஆரம் - சூடுதற்குரிய பூமாலைகளை யும், கொன் சேர் அல்குல் மேகலை - பெருமைபொருந்திய இடையி லணியும் மேகலையென்னும் ஆபரணத்தையும், தாங்கி - தரித்து, கொடி அன்னார்-பூங்கொடியைப்போன்ற தோழிப்பெண்கள் பலர், தன் சேர் கோலத்து இன் எழில் காண - தன்னிடத்துப்பொருந் தியவடிவத்தினது இனிய அழகை விரும்பிப்பார்த்து நிற்க, (அவர் களின் இடையிலே), சதம் கோடி மின் சேவிக்க - நூறுகோடிமின் னல்கள் (சுற்றிலுமிருந்து வணங்கிக்) குற்றேவல்செய்ய, மின் அரசு என்னும்படி - (அவற்றினிடையே நின்றதொரு) மின்னலினரச சென்று கருதும்படி, (பிராட்டி), நின்றாள்-; (எ-று.)

'கொடியன்னார் தன்சேர்கோலத் தின்னெழில்காண' என்ற தனால், பெண்டிரும் விரும்பும் பிராட்டியின் பேரழகு பெறப்பட்டது. மேகலை-மாதரிடையணி. சதகோடி - வச்சிராயுதத்தின், மின் - ஒளி என்றுமாம். ஈற்றடி-தற்குறிப்பேற்றவணி. மின்னரசு - சிறந்தமின் னல். இச்செய்யுள் சில பிரதிகளில் "செப்புங்காலை" (24) என்ற செய்யுளின்பின் உள்ளது. பி - ம்:—[1] அங்கால், காலிற். [2] மார்பம். [3] தாங்கும். [4] சேர்வொக்கத்தன், சேர்மேவத்தன். [5] சேவிக்கும். (593)

32. கொல்லும் வேலுங் கூற்றமு மென்னும் மிவையெல்லாம்
வெல்லும் வெல்லும் [1]மென்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்[2]றது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுருகப்பெண் கனிநின்றாள்.

(இ - ள்.) கொல்லும் - கொலைத்தொழிலில்வல்ல, வேல்உம் - வேலாயுதமும், கூற்றம்உம் - யமனும், என்னும் - என்றுசொல்லப் படுகிற, இவைஎல்லாம்-இவையெல்லாவற்றையும், வெல்லும்வெல் லும்-வென்றேவிடும், என்ன-என்றுசொல்லுமாறு, மதர்க்கும் - களி ப்புக் கொண்டுள்ள, விழி கொண்டாள் - கண்களைக்கொண்டுள் ளாள், (பிராட்டி): அது - பிராட்டியினது அங்கிலைமை,—சொல்லும் தன்மைத்து அன்று - (எம்போலியரால் வருணித்துச்) சொல்லி

முடிக்குந் தன்மையுடையதன்று; (ஏனெனின்), பெண் கனி-பெண்ணுருக்கொண்டகனிபோன்ற அப்பிராட்டி,—குன்றுஉம் - (பெருந்தோற்றமுடைய) மலைகளும், சுவர்உம் - (சிறுதோற்றமுடைய) சுவர்களும், திண் கல்உம் - வலிய கற்களும், புல்உம் - (மெல்லிய) புற்களும், (இப்படிப்பட்ட அசேதனங்களும்), கண்டு உருக - (தன் அழகைப்) பார்த்து உருக்கமடையும்படி, நின்ருள்—; (எ-று.)

தாம் இருந்தவிடத்திலிருந்தபடியே காமநோயை யுண்டாக்கி ஆடவரை வருத்துதலால், பிறரிருக்குமிடத்துச் சென்று வருத்துந்தன்மையுள்ள வேலும் கூற்றமும் பிராட்டிகண்ணுக்கு உவமையாகா வென்க. 'வெல்லும்' என்னும் அடைமொழியைக் கூற்றத்தோடுங் கூட்டுக. வெல்லும் வெல்லும்-அடுக்கு, துணிவுப்பொருளது. கண்டுஉருக-காணுதது காண்பதுபோலக் கூறப்பட்டது, ஒருவகைவழுவமைதி. திண்மையைக் குன்றுசுவர்களுக்கும் கூட்டலாம். பி-ம்:—[1] என்னுமதற்கே, என்பதனுக்கே. [2] இது. (594)

வேறு.

33. வெங்[1] களி விழிக்கொரு விழவு மாயவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலான்
மங்கையர்க் கினியதோர் மருந்து மாயவள்
எங்க[2]ணு யகற்கினி யாவ தாங்கொலோ.

(இ - ள்.) வெம் களி விழிக்கு - (பார்க்கும் ஆடவர்களது) விருப்பத்தோடு கூடிய களிப்பையுடைய கண்களுக்கு, ஒரு விழவு உம் ஆயவர்-ஒரு சிறந்த திருவிழாவை யொத்து உற்சாகத்தை யுண்டாக்குகின்ற(அழகுடைய) மங்கைமார்பலர், கண்களின் காண ஏ-(தத்தமது) கண்களால் (தன்னைப்) பார்க்குந்தோறும், களிப்பு நல்கலால்-(அவர்களுக்கும் தான்) களிப்பைத் தருவதனல், மங்கையர்க்கு இனியது ஓர் மருந்துஉம் ஆயவள் - (அப்) பெண்களுக்கெல்லாம் இனிப்பைத்தருவதொரு சிறந்த அமிருதத்தைப் போன்ற பிராட்டி, இனி எங்கள் நாயகற்கு யாவதுஆம் கொல்ஓ-இனிமேல் எங்கள் தலைவனை இராமபிரானுக்கு எத்தன்மைய பொருளாவளோ? (எ - று.)—இது, கவிக்கூற்று.

ஆடவர் கண்களுக்கெல்லாம் களிப்பைத்தருகின்ற பெண்களும் பிராட்டியின் அழகைக்கண்டுகளிப்புறுகின்றார்களென்றால், புருடோத்தமனகிய ஸ்ரீராமபிரானுக்கு இவளழகு எத்தன்மையதாகுமோ? என்க: கீழ்ச்செய்யுளில் சீதையை அஃறிணைப்பொருட்குக் கனியானுளென்றுகூறி, இச்செய்யுளில் பொதுநோக்காற் காண்கின்ற மாதரார்க்கும் கனியினும் இனிய அமுதமானுளென்று கூறிய கவி, அமிழ்தினும் இனிய பொருள்இல்லாமையால், காதல் நோக்குள்ள இராமனுக்கு 'யாவதாங்கொலோ?' என்ருர்; அமிழ்தினும் இனியள் சீதை யென்றவாறு. விழவும், மருந்தும், உம்மைகள்-உயர்வுசிறப்பு. விழவுமாய் அவர் கண்களிற் காண எனவும் பிரித்து உரைக்கலாம். பி - ம்:—[1] களியினுக்கு. [2] நாயகற்குமேயினியது. (595)

34. இழைகளுங் குழைகளு [1]மென்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
[2]பழகிய வெனினுமிப் பாவை தோன்றலால்
அழகெனு [3]மணியுமோ ரழகு [4]பெற்றவே.

(இ - ள்.) குழைகள்உம் - காதணிமுதலிய சிற்றணிகலங்களும், இழைகள்உம்-(கழுத்திலணியும் ஆரம்போன்ற) பேரணிகலங்களும், என்ன-என்று சொல்லுமாறு, முன்னமே - (இப்பிராட்டி அவதரிப்ப தற்கு) முந்தியே, மழை பொரு கண் இணை மடந்தைமாரொடுஉம் பழகிய எனின்உம்-(குளிர்ச்சியால்) மழையையொத்த இரண்டுகண் களையுடைய (பல அழகிய) மகளிர்களுடனே பழகியவையாயிருந்தா லும், இ பாவை தோன்றலால் - இப்பிராட்டி அவதரித்ததனால், அழகு எனும் அணிஉம் ஓர் அழகு பெற்ற -(பிறர்க்கு) அழகைத் தருவன எனப்படும் அவ்வணிகலன்களும் (தாம்) அழகைப் புதுமை யாகப்பெற்றன; (எ-று.)

பிறரை அணிந்து அழகுசெய்வதனால் ஆபரணங்கட்கு 'அணி' என்று பெயர்: அங்ஙனுள்ள ஆபரணங்கள், பிறமகளிருடம்பிலெல் லாம் அணியப்பட்டு அவர்க்கு அழகைத் தரும்; அவரால் தாம் அழ கைப் பெரு: இவளுடம்பிலோ அவை அணியப்பட்டுத் தாம் அழ கைப் பெற்றனவென்பது கருத்து: இதனால், ஆபரணங்கட்கும் அழகுகொடுக்கும் பிராட்டியின் பேரழகு அறிவிக்கப்பட்டது; "பூணுக் கழகளிக்கும் பொற்றொடி" என்றார், பிறரும்: "ஆபரண ஸ்யாபரணம்" என்றார், காளிதாசர். 'ஆபரணங்களுக்கு அழகு கொடுக்கும்பெருமாள்' எனத் திருமாலுக்கு ஒரு விருது இருத்தலுங் காண்க. பாவை-உவமவாகுபெயர். குழை-மற்றைச் சிற்றணிகட்கும் உபலட்சணம். காது முதலிய சிற்றிடங்களில் அணியப்பெறும் குழை முதலியன, சிற்றணிகலமெனப்படும்: கழுத்து இடைமுதலிய இடங்களி லணியப்பெறும் ஆரம் மேகலை போல்வன, பேரணிகல மெனப்படும். 'குழை' என்ற சிறப்புப்பெயரால் சிற்றணிகலத்தைப் பெறவைத்ததனால், பொதுப்பெயராகிய இழை, பேரணிகலமென்ற பொருளைத் தந்தது. பி-ம்:—[1]இன்ன. [2]பழகிது. [3]அவையும், அழ கும், அதுவும். [4]பெற்றதே. (596)

35.—இதுமுதல் நான்கு பாடல்களால், இராமபிரானும் சீதாதேவியும் ஒருவரையொருவர் கண்டு மிக்க காதல்கொண்டமை கூறப்படுகிறது.

[1]எண்ணரு நலத்தினா [2]ளிணைய ணின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை [3]கவ்வி யொன்றையொன்று
[4]உண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்.

(இ - ள்.) எண் அரு நலத்தினாள் - (மனத்தினால்) நினைத்திடு வதற்கும் அருமையான அழகையுடைய பிராட்டி, இணையள் நின்று உழி-இத்தன்மையளாய் நின்றபொழுது, கண்ணொடு கண் இணை கவ்வி - ஒருவர்கண்ணிணையோடு மற்றொருவர்கண்ணிணை பற்றி,

ஒன்றை ஒன்று உண்ணஉம் - ஒன்றையொன்று கவர்ந்து அனுபவிக்கவும்,—உணர்வுஉம்-இருவரறிவும், நிலைபெறாது-(தத்தமிடங்களில்) நிலைபெற்றிராமல், ஒன்றிட-(ஒன்றையொன்று கூடி) ஒற்றுமைப்படவும், அண்ணல்உம் நோக்கினான் - இராமபிரானும் (பிராட்டியைப்) பார்த்தான்: அவள்உம் நோக்கினாள்-பிராட்டியும் (இராமனைப்) பார்த்தாள்; (எ - று.)

கீழ் "பொன்னின்சோதி" என்ற செய்யுளில் மூவரும் சீதையைக்கண்டாரென்ற இடத்து இராமபிரானுடைய பொதுநோக்கைக் கூறியவர், இங்கே சீதாராமர்களுடைய காதல்நோக்கைக் கூறுகின்றார். இராமபிரான்கண் சீதைமீது விழ, அவள்கண் இராமபிரான்மீது விழ, அப்போது இருவர் மனவுணர்ச்சியும் ஒற்றுமைப்பட்டு ஒருதன்மைத்தான காதலைக் கொண்டதென்க. 'எண்ணரு' என்றதனால், சொல்லுதற்குங் காண்டற்கும் அருமை கூறாமலே விளங்கும். முதலிரண்டடியிற் கூறியதைச் சட்சுப்பிரீதியென்றும், மூன்றாமடியிற்கூறியதை மநஸ்ஸங்கமென்றும் வடமொழியாளர் கூறுவர். வில்லை யிறுப்பதற்குமுன் சீதை இராமன் இவர்கள் ஒருவரையொருவர் கண்டதாக முதனூலிற் கூறப்படவில்லை; இது, கம்பர் தமதுகற்பனையாகக்கூறுமவற்றுள் ஒன்றாகும் என்றேபலரும் கருதுவர்: வான்மீகத்தையே முதனூலாகக் கொண்டாரேனும், கம்பர்,வடமொழியிலும் தமிழ்மொழியிலும் அமைந்த இராமாயணங்களின் கதைகளையும் தழுவிக்கொண்டாரென்றலே யேற்புடைத்து: தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் "ஆள்வினைமுடித்த வருந்தவமுனிவன், வேள்விபோற்றியவிராமனவனோடு, மிதிலைமூதூரெய்திய ஞான்றை, மதியுடம்பட்ட மாக்கட் சீதை" என்று சுட்டியொருவர் பெயர்கொண்ட கைக்கிளைக்கு நச்சினார்க்கினியர் மேற்கொள் காட்டிய செய்யுள் கம்பர்காலத்துக்கு முந்தியதென்பதும், இதில் இராமபிரானுக்கும் பிராட்டிக்கும்நிகழ்ந்த உள்ளப்புணர்ச்சியாகிய மதியுடம்பாடு கூறப்பட்டிருத்தலும் காண்க. அண்ணலும்என்ற உம்மை - உயர்வுசிறப்பு: ஸ்வதந்த்ரனும் என்றபடி: அவளும் - அபலையானவளும்: இழிவுசிறப்பு.பி - ம்:— [1] எண்ணருங்கலத்தினாள். [2] இனைய. [3] கதுவி. [4] உண்ணவுண்ணிறையொடும், உண்ணவுண்ணிறைவொடும். (597)

36. நோக்கிய நோக்கெனு நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி னாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவ [1] டனத்திற் றைத்தவே.

(இ - ள்.)நோக்கிய நோக்கு எனும் - (அவ்வாறு பிராட்டி) பார்த்த பார்வை யென்கிற, நுதி கொள் வேல் இணை - கூர்மையைக் கொண்ட இரண்டு வேலாயுதங்கள், ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன - வளர்ந்த வலிமையையுடைய இராமனது புயங்களிலே அழுந்தின; வீக்கிய கனை கழல் வீரன் செம் கண் உம்- கட்டப்பட்ட ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய வீரனான இராமனது சிவந்த கண்களும், தாக்கு அணங்கு அனையவள் தனத்தில்

தைத்த மோகினியென்னும் பெண்தெய்வத்தை யொத்த பிராட்டியினது கொங்கைகளிலே மூழ்கின; (எ-று.)

இதனால், ஓராவிற்கு இருகோடு தோன்றினாற்போல, ஒத்த கர்மத்தராயின ரென்றவாறு: "கண்ணொடுகண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க, ளென்னபயனுமில" என்ற குறள், கருதத்தக்கது. மகளிர்க்குத் தனம்போல ஆடவர்க்குத் தோள் வேட்கை விளைக்குஞ் சிறந்தவுறுப்பாம். தாக்கணங்கு-(காணும் ஆடவர்க்கு வேட்கையைவிளைத்து அதனால் அவரைத்) தாக்குகிற தேவதை: இனி இச்சொல்லுக்கு இலக்குமியெனவும் பொருள் உரைப்பர். பி - ம்:—[1] முலையில். (598)

37. பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்து
ஒருவரை யொருவர்த முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க [1] ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்.

(இ - ள்.) பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து - (தம்முள் ஒருவரழகை ஒருவர்) விழுங்கிய கண்பார்வை யென்கிற கயிற்றினாற் கட்டி, ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்-ஒருவரை மற்றொருவரது மனம் இழுத்தலினால், வரி சிலை அண்ணல் உம் வாள் கண் நங்கைஉம் இருவர்உம் - கட்டமைந்த வில்லையுடைய ஆடவரிற்சிறந்த இராமனும் வாள்போலுங் கண்களையுடைய மகளிரிற் சிறந்த சீதையும் என்னும் இவ்விருவரும், இதயம் மாறி புக்கு எய்தினர் - (ஒருவர்) மனத்தை (ஒருவர்) மாறிப் புகுந்து அடைந்தார்; (எ - று.)

சீதாராமர்களிருவரும் கண்பார்வையாற் காதல்கொண்டு ஒருவர்மனத்தில் மற்றொருவர் குடிகொள்ளலாயின ரென்க. இங்குச் சீதைக்கு இராமனும், இராமனுக்குச் சீதையும் உயிரானமை தொனிக்கும்: இது, இவர்கள் காதலாற் பெற்ற புத்துயிர். தலைமகனுக்கு விற்படை கூறியதற்கு ஏற்ப தலைமகளுக்கு வாட்படை கூறினார்போலும்: இங்ஙனம் இருதலையிலுஞ் சிறிதும் வேறுபாடு தோன்றாதுகூறிவருவதனால், தம்பதிகளது ஒப்புமை பெறப்படும். "உள்வழி யுணரா துழலுமென் னெஞ்சினைப், பல்லிதழ்க்கோதைப் பதுமா பதியெனும், மெல்லியற் கோமகள்மெல்லென வாங்கித், தன்பால்வைத்துத் தானுந் தன்னுடைத், திண்பானெஞ்சினை திரிதலொன்றின்றி, என்னுழை நிறீஇ" என்ற பெருங்கதைப்பகுதி இங்கு ஒப்புநோக்கத்தக்கது. பி - ம்:—[1] மங்கையும். (599)

38. மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
[1] ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ.

(இ - ள்.) மருங்கு இலா நங்கைஉம் - இடையில்லாத [நுண்ணிய இடையையுடைய] சீதையும், வசை இல் ஐயன்உம் - குற்ற

மில்லாத இராமனும், (ஒருவர்மேலொருவர் கொண்ட மிக்க அன்பினால்), ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினர் - ஒற்றுமைப்பட்ட இரண்டுஉடம்புகளுக்கு ஒருயிரென்னும்படியானார்கள்; கரு கடல் பள்ளியில் கலவி நீங்கி போய் பிரிந்தவர் - பெரிய திருப்பாற்கடலிலே ஆதிசேஷசயனத்திலே(ஒருவரோடொருவர் கூடியிருந்த) கூட்டம் நீங்கி(த் தனித்தனி)ப் பிரிந்து போனவர்கள், கூடினால் - (மீண்டும் ஓரிடத்திற்) கூடினால், (அவர்களுக்கு உண்டாகுங் காதலை),பேசல்வேண்டும்ஓ-சொல்லுதல் வேண்டுமோ? [வேண்டா];

இராமபிரானும் சீதையும் ஒருவரையொருவர் கண்டமாத்திரத்தில் இரண்டுடற்கு ஒருயிர் தோன்றினாற்போல மனவொற்றுமைப்பட்டார்களென்க. இங்ஙன் முன்னடிகளிற் கூறியதை, பின்னடிகள் சமர்த்தித்துநிற்பது, தொடர்நிலைச்செய்யுட்குறியணியாம். திருப்பாற்கடலிற் பள்ளியினின்று பிரிந்தவர் இப்போது ஒருவரையொருவர் காண நேர்ந்ததனால் இங்ஙனமாயினரென்றவாறு. மருங்கிலர் என்ற இடத்து, இன்மை - நுண்மைமேலது. சீதையினிடம் குறைகூறியதுபோலச் சாதாரணமானிடர் நினைக்க அன்னாளை 'மருங்கிலாநங்கை' என்றுசிறப்புப்படுத்தியகவி, 'வசையிலையனும்' என்று இத்தலைவனுக்கும் ஒன்றுஇல்லாமைகூறி, அதனாற் சிறப்புப்படுத்திய நயம், ரஸிகராற் சுவைத்தற்குரியது. கருங்கடல்- கருமை, பெருமைமேலது: இனி, திருப்பாற்கடல் வெளுத்தநிறத்ததாயினும் திருமாலினது திருமேனியின் நிழலீட்டாலே கறுத்த நிறத்ததாதலால், 'கருங்கடல்' என்றாரெனினுமாம்: "கருந்தண் மாகடற் கண்டுயின்றவன்," "நீலக் கடல்கடைந்தாய்" என்றார், ஆழ்வார்களும். போய்ப்பிரிந்தவர் = பிரிந்துபோயவர்: விகுதி பிரித்துக்கூட்டல். பி-ம்:—[1] ஒருங்குற. (600)

39.—கன்னிமாடத்தயல் சீதையைக் காதல்நோக்குடன் கண்ட ஸ்ரீராமன் முனிவனொடும் போய்விடுதல்.

அந்தமில் நோக்கிமை யணைகி லாமையால்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையு நிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினான்.

(இ - ள்.) அந்தம் இல் - எல்லையில்லாத [செல்லும் இராமபிரானைத் தொடர்ந்து பின் நீளச் சென்ற], நோக்கு - கண், இமை- இமைத்தலை, அணைகிலாமையால் - பொருந்தாமையால், பைந்தொடி - பசும்பொன்னாலாகிய தொடியென்னும் வளையையுடைய பிராட்டி, ஓவியம் பாவை போன்றனள் - (மூச்சுப்பேச்சற்ற) சித்திரப்பதுமைபோல அசைவற்றுநின்றாள்; சிந்தைஉம் நிறைஉம் மெய்நலன்உம் பின்செல-(அவளது) மனத்தினினைப்பும்மனவுறுதியும் உடம்பினழகும் (தன்) பின்னே வரும்படி, மைந்தன்உம் - இராமபிரானும், முனியொடு - விசுவாமித்திரமுனிவன் பின்னே, மறைய போயினான்-கண்மறையச் சென்றான்; (எ - று.)

இராமபிரான் முனிவர்பின்னே செல்கையில் சீதையின் நோக்கு அவ்விராமபிரானைத் தொடர்ந்து நீளச் செல்ல, அப்

பிராட்டி 'கண்ணிமைத்தால் அழகனைப் பருகுவது அப்போது நின்றுவிடுமே!! என்று கண்கொட்டாதுநின்றாளாதலால், ஓவியப்பாவைபோன்றாளென்பது முன்னிரண்டடியின் கருத்து. சானகியின்மனம் இராமன் பின்னேயே சென்றதென்றும், இராமன் மறைந்துபோனதனால் மனத்துள்ளே அடக்கவேண்டியவைகளை அடக்கிவைக்கும் பெண்மைக்குணம் அவளிடத்து இல்லையாய்த் தன்மனக்காதலை அவள் வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டாளென்றும், இவ்வாறுண்டான காமவிகாரத்தால் அவளது மேனியழகும் குறைவுபட்டதென்றும் பின்னடிகட்குக் கருத்து. ஸங்கல்பம் [ஒன்றையேநினைத்தல்], லஜ்ஜாத்யாகம் [நாண் அறுதல்], கார்சியம் [உடலிளைப்பு] என்ற மதனவஸ்தைகள் இங்குக் கூறப்பட்டன. 'அந்த மிலழகனையணைகிலாமையால்' என்று முதலடியிற் காணப்படுகிற பாடம், 'பைந்தொடி யோவியப்பாவை போன்றனள்' என்ற இரண்டாம் அடியிற்பொருளுக்குத் தக்க ஏது ஆகாமையாற் சிறவாது. இமை-முதனிலைத்தொழிற்பெயர். (601)

40.—ஐந்துகவிகள் – சீதையின் காதல்நோயைக் கூறும்.

[1]பிறையெனு நுத[2]லவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசரம்
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே.

(இ-ள்.) நறை கமழ் அலங்கலான் - நல்லவாசனைவீசுகிற பூமாலையையுடைய இராமபிரான், நயனகோசரம்-(பிராட்டியின்) கண்ணின் பார்வைக்குப்புலனாகை (இன்றி), மறைதலும்-மறைந்தமாத்திரத்தில், மனம் எனும் மத்தம் யானையின்-(அவளது) மனமென்கிற மதம்பிடித்த யானையின், நிறை எனும் அங்குசம் - உறுதிப்பாடென்கிற மாவெட்டி, நிமிர்ந்துபோயது - நிமிர்ந்துபோயிற்று: (போகவே), பிறை எனும் நுதலவள் பெண்மை என்படும்-பிறைச்சந்திரனெனத்தக்க நெற்றியையுடைய அவளது (நாணம் முதலிய) பெண்மைக்குணங்கள் என்ன நிலைமையையடையும்? [அவையும் ஒழிந்தனவென்பதாம்]; (எ-று.)

தன் கண்ணுக்குப்பாகன்மறைந்தமாத்திரத்தில், மதம்பிடித்த பேரியானை தன்காதில்மாட்டியிழுத்துத் தன்னையடக்குகிற அங்குசத்தைநிமிரப்பண்ணித் தள்ளிவிட்டுத் தான் விரும்பினவழியே செல்லுதல்போல, தனக்குரிய தலைவனான இராகவமூர்த்தி மறைபட்டமாத்திரத்திலே பிராட்டியின் மனம் தன்னையடக்கிவைக்கும் நிறையென்னுங்குணத்தை யொழித்துத் தான் விரும்பியவழியே சென்றதென்க. பின்னடிகள் - உருவகம். பெண்மை - அமைதித்தன்மை. கலித்தொகையில் ''வேழமிகுதரு கடாத்தால், தொழில் மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்கு, அறிவு நம்மறிவாய்ந்தவடக்கமும்***நாணொடு, என்னெஞ்சமென்னோடுநில்லாமை நனிவௌவித், தன்னலங் கரந்தானை'' எனத் தோட்டியைக் கை நிமிர்த்துச்சென்ற மதவேழத்தின் தன்மையைத் தலைவியால் தன் நிறையொழியப்பெற்ற தலைவன் தனக்கே உவமைகூறுதலையும்,

"மன்னவன் முகத்தே மாதருநோக்கி, உள்ளமு நிலையுந் தள்ளிடக் கலங்கி,... துடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து, மதக்களி றிரண்டுடன் மண்டியாங்கு, இல்வழிவந்த தம்பெருமை பீடுற,... உழுவலன்பி னுள்ளந் தாங்கி" எனப்பெருங்கதையுள் உதயணன் வாசவதத்தைஎன்ற தலைவன் தலைவியர் இருவருள்ளத்தையும் மத்தயானையாகக்கொண்டு, அவர்கள் தம் நிறைநீங்கப் பெற்றன ரென்று கூறியிருப்பதையும், மகாகவியாகிய கம்பர்தம்மனத்துக்கொண்டு, தெய்வம் இடைநின்று கூட்டுதலால் நற்பண்புகட்கெல்லாம் தங்குமிடமாகிய சீதைதன்மனம் இராமனிடம் கலந்திட அந்நிலையிலும் நிறையென்னும் அங்குசத்தால் மனமாகிய மத்தயானையை அடக்கியொடுக்கத்தன்னாலான அரும்பாடுபட்டும் அந்த மனக்களிறு அந்நிறைத்தோட்டியின் பிடிப்பை நீக்கி நிமிரச்செய்து இராமன்பால் ஓடிவிட்டதென மிகவும் நயம்படக் கூறினாரென்பர். பி - ம்:—[1] பிறையன. [2] இவள். (602)

41. மாலுற வருதலு மனமு மெய்யுந்தன்
நூலுறு மருங்குல்போ னுடங்கு வாணெடுங்
காலுறு கண்வழிப் புகுந்த [1] காதனோய்
பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே.

(இ - ள்.) மால் உற வருதலும் - ஆசைமிகுதியாகத் தோன்றுதலும், மனம்உம் மெய்உம்-நெஞ்சமும் உடம்பும், நூல்உறு தன் மருங்குல்போல்-நூலிழையையொத்த [நுண்ணிய] தனது இடைபோல, நுடங்குவாள் - தளரப்பெறுகின்றவளாகிய அந்தச் சீதாபிராட்டியினது, கால் உறு நெடு கண்வழி புகுந்த காதல் நோய் - வழியாகப்பொருந்தின நீண்ட கண்களின் மூலம் உட்சென்ற காமநோயானது, பால்உறு பிரைஎன-பாலிற் பொருந்திய பிரைபோல, எங்குஉம் பரந்தது-(உடம்பு) முழுவதும் பரவிற்று; (எ-று.)

பிரை - பாலையுறைவிக்குஞ் சிறு மோர்த்துளி; அது, தான் பாலிலே முதலில் ஓரிடத்திற் சேர்ந்து உடனே அப் பால் முழுவதையும் மாற்றுவதுபோல, காமநோய் முதலிற் கண்வழியேயுட்சென்று உடனே உடம்புமுழுவதும் பரவிற்றென்பதாம். இராமனைப் பார்த்த மாத்திரத்திலேயுண்டான ஆசையினாற் பின்பு சீதையின் உடம்பு முழுவதிலும்காமாக்கினி பரவிற்றென்க. இனி, நெடுங்கா லுறு கண்வழிப் புகுந்த காதல்நோய் என்பதற்கு - நெடியவாய்க்காலையொத்த கண்ணின்வழியாக உட்சென்ற காமநோய் எனினுமாம்: நீர் ஓரிடத்திற்போய்ச் சேர்ந்து பரவுதற்கு வாய்க்கால் வழியாவதுபோல ஆசை மனத்திற்போய்ப் பரவக் கண் வழியாதலால், 'காலுறு கண்'எனப்பட்டது. கண்களுக்குக் கால்வாயை உவமை கூறியதற்கு ஏற்ப, காதனோய்க்கு நீர்ப்பெருக்கை உவமையாகக் கொள்ளலாம். இரண்டு மூன்றுமடிகளில், உறு-உவமவுருபு. மால் உற வருதலும் - இராமபிரான் (எதிரிலே) பொருந்த வந்த மாத்திரத்திலே என்றும், நெடுங் கால் உறுகண்-வெகுதூரம்வரையிலும் உற்றுப்பார்க்குந் தன்மையுள்ளகண் என்றும் உரைப்பாருமுளர். நூல்உறு மருங்குல் -(சாமுத்திரிக) சாத்திரவிலக்கணப்படியே அமைந்துள்ள இடை என்றலும் சிறக்கும். பி-ம்:—[1] காமநோய். (603)

42. நோமுறு [1]நோய்நிலை [2]நுவல கிற்றிலள்
[3]ஊமரின் மனத்திடை யுன்னி [4]விம்முவாள்
காமனு மொருசரங் [5]கருத்தி லெய்தனன்
வேமெரி யதனிடை விறகிட் டென்னவே.

(இ - ள்.) நோம் - (பிராட்டி காமநோயால்) வருந்துவாள்; உறும் நோய் நிலை நுவலகிற்றிலள் - (ஒருகாலைக்கொருகால் தன்னிடம்) மிகுகின்ற அந்தக்காமநோயின்நிலையை (ஒருவரோடுஞ்) சொல்ல மாட்டாதவளாய், ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள் - ஊமைகள்போல மனத்திடத்திலேயேநினைந்துகலங்குவாள்:(அப்பொழுது), காமன்உம் - மன்மதனும், ஒரு சரம் - ஒரு பாணத்தை, கருத்தில் - (அவளது) மனத்திலே, வேம் எரி யதனிடை விறகு இட்டு என்ன - எரிகிற நெருப்பிலே விறகைப் போகட்டாற்போல, எய்தனன் - பிரயோகித்தான்; (எ - று.)

மன்மதன் தனது ஐங்கணைகளுள் நினைப்பைமிகுவிப்பதும் முதற்கணையுமாகிய தாமரைமலரை எய்தன னென்பார், 'ஒருசரங் கருத்தினெய்தனன்' என்றார்; இதனை ''நினைக்கு மரவிந்தம்,' என்பதனாலும் அறிக. இனி, ஒரு சரம்-ஒப்பற்றஐந்து பாணங்களை யென்றுமாம். நான்காமடி, காமாக்கினியை மிகுத்தலை விளக்கும்.
பி-ம்:—[1]நுவனிலை. [2]நுவலகிற்கில, நுவலகிற்றலர். [3]ஊமனின். [4]விம்மினாள். [5]கருத்தின். (604)

43. நிழலிடு குண்டல மதனி னெய்யிடா
[1]அழலிடா மிளிர்ந்திடு மயில்கொள் கண்ணினாள்
சுழலிடு கூந்தலுந் துகிலுஞ் சோர்தரத்
தழலிடு வல்லியே [2]போலச் சாம்பினாள்.

(இ - ள்.) நிழல் இடு குண்டலம் அதனின் - ஒளி வீசுகிற காதணிவரையிலும் (சென்று) [மிகநீண்டு என்றபடி], நெய் இடா அழல் இடா மிளிர்ந்திடும் அயில் கொள் - நெய் மேலே தடவப்பெறாமலும் நெருப்பிலே வைத்துக் காய்ச்சப்படாமலும் (கூர்மையாய்) விளங்குவதொரு வேல் உளதாயின் அதனை யொக்கின்ற, கண்ணினாள் - கண்களையுடைய வைதேகி,-சுழல் இடு கூந்தல்உம் துகில்உம் சோர்தர - (தனது) கடைகுழன்ற கூந்தலும் உடையும் நெகிழும்படி, தழல் இடு வல்லியே போல - நெருப்பிலே போகடப்பட்ட பூங்கொடி போல, சாம்பினாள் - வாடினாள்; (எ - று.)

நெய்யிடா அழலிடா மிளிர்ந்திடும் அயில் - இல்பொருளுவமை. கொள் - உவமவுருபு. சுழலிடு கூந்தல் என்பதற்கு - சுருண்டவடிவமாக அலங்கரித்துப் பின்னி முடிக்கப்பட்ட கூந்த லென்றுமாம்: அங்கனம் முடித்தல், பனிச்சையெனப்படும்: அது, ஐம்பாலி லொன்று.
பி - ம்:—[1]அழலிட, அழலிடை. [2]என்ன. (605)

44. தழங்கிய கலைகளு நிறையுஞ் சங்கமும்
மழுங்கிய வுள்ளமு மறிவு [1]மாமையும்
இழந்தவ [2]ளிமையவர் கடைய யாவையும்
வழங்கிய கடலென வறிய ளாயினாள்.

(இ - ள்.) தழங்கிய கலைகள்உம்-ஒலிக்கின்ற மேகலாபரணங்களை யும், நிறைஉம்-மனவுறுதியையும், சங்கம்உம் - சங்கினாலாகிய வளை யல்களையும், மழுங்கியஉள்ளம்உம் - வாட்டமடைந்த மனத்தையும், அறிவுஉம்-அறிவையும், மாமைஉம்-மேனியின் நிறத்தையும், இழந் தவள்-(அப்பொழுது காமவிகாரத்தால்) இழந்துநின்ற பிராட்டி,— இமையவர் கடைய யாவைஉம் வழங்கிய கடல் என - தேவர்கள் கடைந்தபொழுது (தன்னிடத்துள்ள சிறந்த பொருள்கள்) எல்லா வற்றையும் கொடுத்துவிட்ட கடல்போல, வறியள் ஆயினாள்- யாதொருசிறந்தபொருளும் தன்னிடமில்லாதவளானாள்; (எ-று.)

மகளிர்க்குச் சிறந்த ஆபரணங்களாகிய மேகலை முதலியவற்றை யும், குணங்களாகிய நிறை முதலியவற்றையும் பிராட்டி யிழந்த தனால், 'வறியளாயினாள்' என்றார். காமவேதனையால் உடம்பு மெலி தல்பற்றி, மேகலைகளும் கைவளைகளும் கழன்றன. 'மேகலைகள்' எனப் பன்மையாற் கூறியது, எட்டுக்கோவை யுடைமைகருதி. இனி, தழங்கிய கலைகள் - சிறப்பித்துக் கூறப்படுகிற ஆடைகளு மாம். 'கலைகள்' எனப் பன்மையாகக் கூறினது, உள்ளாடை [அந்த ரீயம்] மேலாடை [உத்தரீயம்] என மகளிரும் ஈருடையுடுத்தல் முற் காலத்து எங்கும் மரபாதலி னென்ப. சங்கம் - வளைக்குக் கருவியாகு பெயர். அழுங்கிய எனப் பதம் பிரித்து முரைக்கலாம். இமையவர் - கண் இமையாதவர்; இமையில் விசேடமுடையவர்: இமயமலையில் வாழ்பவர். பி - ம்:—[1] வாய்மையும், மாண்மையும். [2] இமையவரடைய, இமையவர்க்கடைய. (606)

45.—சீதையின் நோய்க்குப் பரிகாரஞ் செய்யத் தோழிமார் அன்னளை அழைத்துக்கொண்டுபோதல்.

கலங்குழைந் துகநெடு நாணுங் [1] கண்ணற
நலங்[2] குழை தரநகின் முகத்தி னேவுண்டு
மலங்குழை யெனவுயிர் வருந்திச் [3] சோர்தரப்
பொலங்குழை மயிலைக்கொண் டரிதிற் போயினார்.

(இ - ள்.) கலம் குழைந்து உக - ஆபரணங்கள் நெகிழ்ந்து விழவும், நெடு நாண்உம் கண் அற - மிகுந்த நாணமும் (தன்னிடத் திலிருந்து) ஒழியவும், நலம் குழைதர - அழகு மாறவும், நகில் முகத்தின் ஏவுண்டு - (தனது) கொங்கைகளினிடத்திலே மன்மத பாணத்தால் அடிபட்டு,—மலங்கு உழை என-(வேடனது அம்பா லடிபட்டு) வருந்துகிற மான்போல, உயிர் வருந்தி சோர்தர-உயி ரும் வருந்துதலடைந்து (சீதை) வாடிநிற்க, (அதைக்கண்ணுற்ற தோழிமார்),—பொலம் குழை மயிலை - பொன்னாலான குழை யென் னுங் காதணியை யணிந்த மயில்போலுஞ் சாயலையுடைய அச் சீதையை, அரிதின் கொண்டுபோயினார் - சிரமப்பட்டு அழைத்துக் கொண்டுபோனார்கள்; (எ - று.)

சீதை காமநோயால் வருந்துவது கண்டு பரிகாரஞ்செய்தற் காகத் தோழிமார் அதற்குஏற்ற இடத்து அவளையரிதில் இட்டுக் கொண்டுபோயின ரென்க. 'நகின் முகத்தின்' என இடங் குறித்த

தனால், ஏவுண்டென்பது - பசலைநிறத்தைத்தருவதாகிய மாம்பூ வாகிறபாணத்தா லெய்யப்பட்டு என்க: இதன்குணம், நிறம்மாறு தல்: "நீள்சூதங்கொங்கை", "நீள்பசலை மாம்பூ" என்பன காண்க. பி-ம்:—[1]கண்ணுற. [2]குழைந்தாள். [3]சோர்தரும். (607)

46.—தோழிமார் சீதையை மலர்ப்படுக்கையிற் சேர்த்தல்.

காதொடுங் [1]குழைபொரு [2]கயற்க [3]ணங்கைதன்
பாதமுங் கரங்களு மனைய [4]பல்லவம்
தாதொடுங் [5]குழையொடு மடுத்த தண்பனிச்
சீதநுண் [6]டுளிமல ரமளிச் சேர்த்தினர்.

(இ - ள்.) காதொடும்—, குழை பொரு - குழையணியிலும் முட்டுகின்ற, கயல் கண் - கயல்மீன்போற் பிறழுங் கண்ணினை யுடைய, நங்கைதன் - பிராட்டியினது, பாதம்உம்-திருவடிகளையும், கரங்கள்உம் - திருக்கைகளையும், அனைய - ஒத்த, பல்லவம் குழை யொடுஉம் - பல்லவ மென்று பெயருள்ள (மென்மையான செந்) தளிர்களுடனும், தாதொடுஉம் - பூந்தாதுகளுடனும், அடுத்த - பொருந்திய, தண் பனி சீதம் நுண் துளி - மிக்ககுளிர்ச்சியுள்ள நுட்பமான பனிநீர்த்துளிகள்தெளிக்கப்பட்ட, மலர் அமளி-பூக்களா லாகிய படுக்கையில், சேர்த்தினர் - (சானகியைப்) படுக்கவிட்டார் கள்; (எ - று.)

பல்லவக்குழை - மென்மையான தளி ரென்றபடி. சீதையின் வெம்மையைத் தணிப்பித்தற்குப் பூந்தாதுகளையும் தளிர்களையுங் கீழேயிட்டு மேலே மலர்பரப்பிய படுக்கையை யமைத்தனர், பாங்கிய ரென்க. குழை-குழைந்து காட்டும் இதழ் என்றுகொண்டு, பல்ல வத்தையும் தண்பனிச்சீதநுண்டுளியையுங் கொண்டதாய்த் தாது டனும் குழையுடனும் அடுத்த மலரின் அமளி என்னலாம். [4]பல்ல வத்தாதொடும் என்ற பாடத்துக்கு - பல்லவம்போன்ற [மெத்தென் றுள்ள] மகரந்தப் பொடியோடும் என்க. பி - ம்:—[1]கடைபொரு. [2]கடைக்கண். [3]மங்கை. [5]இலையொடும். [6]தளிர். (608)

47.—படுக்கையிற்கிடக்கும் சீதையின் வருணனை.

[1]நாளரு நறுமல ரமளி நண்ணினள்
பூளைவீ புரைபனிப் புயற்குத் தேம்பிய
தாளதா மரைமலர் ததைந்த பொய்கையும்
வாளரா நுங்கிய மதியும் [2]போலவே.

(இ - ள்.) பூளை வீ புரை பனி புயற்கு - பூளைப்பூவையொத்த [மெல்லிய வெண்ணிறமான] பனிமழைக்கு, தேம்பிய-வாடின, தாள தாமரை மலர் - நாளத்தோடுகூடிய தாமரைப்பூக்கள், ததைந்த - நெருங்கின, பொய்கைஉம் - தடாகத்தையும், வாள் அரா நுங்கிய மதிஉம் - வாள்போற்கொடிய பாம்பினால் விழுங்கப்பட்ட சந்திரனை யும், போல - ஒப்ப [அம்மலர்ப்படுக்கை] வாட்டத்தையடையும்படி, நாள் அரு நறு மலர் அமளி நண்ணினள் - நாள்கழியாத [அன்று மலர்ந்த] வாசனை வீசுகிற பூக்களைக்கொண்டு பரப்பப்பட்டுள்ள அப் படுக்கையிற் (பிராட்டி) சேர்ந்தாள்; (எ - று.)

பாங்கிமார் அமைத்த மலர்ப்படுக்கையைச் சீதாபிராட்டி சேர அவளது மேனிவெப்பத்தால் அந்தப்படுக்கை தீய்ந்துவிட்டதென்ப தாம். [2]போன்றன வென்ற பாடத்துக்கு - பனிப்புயலால் தாமரைப் பொய்கை ஒளியிழப்பதுபோலவும், கோள்தீண்டிய சந்திரன் ஒளி கெடுவதுபோலவும், வெம்மை மிகுதலாற் சீதைமுன்னினும் ஒளி கெட்டன வென்க. கிரகணகாலத்திற் சந்திரமண்டலத்தை மறைக் கிற பூமியின்சாயையை இராகுகேதுக்களென்னும் பாம்புகளாகக் கூறுதல், புராண நூல் வழக்கு. தாமரை பனிக்கு வாடுதல், இயல்பு. பி-ம்:—[1]நாளுலா, நாளெலாம். [2]என்னவே. சிலபிரதிகளில் இதன் பின் "கம்பமில்" (49) என்ற பாடல். (609)

48.—மூன்றுகவிகள் - தோழிமார்செய்த பரிகாரம் பயன்படாமையைக் கூறும்.

மலைமிசைத் [1]தடத்துகு மழைக்க ணாலிபோல்
முலை[2]முகட் டுதிர்ந்தன [3]நெடுங்கண் முத்தினம்
சிலைநுதற் கடையுறை [4]செறித்த வேற்கணாள்
[5]உலைமுகப் [6]புகைநிமி ருயிர்ப்பின் [7]மாய்ந்ததே.

(இ - ள்.) சிலை நுதற்கடை உறை செறித்த - வில்லை [புரு வத்தை]க்கொண்ட நெற்றியினோரமாகிய உறையிலே நெருக்கியிடப் பட்ட, வேல் - வேற்படையையொத்த, கணாள் - கண்களையுடைய ளான அச்சீதையின்,—மலை மிசை தடத்து - மலையினது மேலிடத் திலே, உகும்-சிந்துகிற, மழைக்கண் ஆலி போல்-மேகத்தினிடத்தே தோன்றுகிற மழைநீர்த்துளிகள்போல, முலை முகடு உதிர்ந்தன - கொங்கைகளின் நுனியிடத்திலே சிந்தினவாகிய, நெடுகண் முத்து இனம்-நீண்ட கண்களினின்று பெருகுகிற முத்துக்களின் திரளை யொத்த நீர்த்துளி, உலை முகம் புகை நிமிர் உயிர்ப்பின்-(கொல்ல னது) உலைக்களத்திலே யெழுகிற புகைபோல (வெப்பம் மிக்கு) வெளிப்படுகிற (அவ்வேற்கணாளது) பெருமூச்சுக்காற்று வீசுவத னால், மாய்ந்தது-வறண்டுபோயிற்று; (எ - று.)

காமவேதனையை யாற்றமாட்டாது கண்களிலிருந்து நீர்பெருகி வழிய, நெட்டுயிர்ப்பினால் அந்நீர் மறைந்ததென்க. 'வேற்கணாள் கண்முத்தினம்' என இயையும். 'சிலைநுதற் கடையுறை செறித்த வேற்கணாள்' என்பது, மத்திமதீபம். உருவகவணி காண்க. முத்து- உவமையாகுபெயர். பி - ம்:—[1]தழைத்துகு. [2]முகத்து. [3]நெடுந்தண். [4]செறிந்த வேர்வுதன். [5]உலைமுகம். [6]புகைதரும், புகைநிகர். [7]மாய்ந்தவே. (610)

49. கம்பமில் கொடுமனக் [1]கான வேடன்கை
அம்பொடு சோர்வதோர் மயிலு மன்னவள்
வெம்புறு [2]மனத்தனல் [3]வெதுப்ப மென்மலர்க்
கொம்பென வமளியிற் குழைந்து [4]சாய்ந்தனள்.

(இ - ள்.) கம்பம் இல் - கலங்குதலில்லாத, கொடு மனம்-வலிய மனத்தையுடைய, கானம் வேடன் - காட்டில் வசிக்கின்றவேடனது, கை - கையினாலெய்யப்பட்ட, அம்பொடு - அம்பினால், சோர்வது -

தளர்ந்து கீழ்விழுவதாகிய, ஓர் மயில்உம் - ஒருமயிற் பறவையை யும், அன்னவள் - ஒத்தவளான பிராட்டி,—வெம்புறு மனத்து அனல் வெதுப்ப - கொதிக்கிற (தன்) மனத்திற் பொருந்திய காமாக் கினி எரிப்பதனால், மெல் மலர் கொம்பு என-(நெருப்பினு லெரிக்கப் படுவதொரு) மென்மையான பூங்கொம்புபோல, அமளியில் - அம் மலர்ப்படுக்கையிலே, குழைந்து - வாடி, சாய்ந்தனள்—; (எ-று.)

வேடனம்பினாலெய்யப்பட்ட மயிற்பறவை தளர்ந்து வீழ்வது போலச் சீதாபிராட்டி மன்மதன் மலர்க்கணையால் அடிபட்டுச்சோர் ந்து வீழ்ந்தனளென்க. அங்ஙனம் வாடிய அச்சீதைக்குப் பூங் கொம்பை உவமை கூறினார்: "தழலிடுவல்லியேபோலச் சாம்பினாள்" என்றார், கீழும். கம்பம் - சலனம்; இங்கே, நிலைமாறுதல். கம்பம் இல் மனம் - (உயிர்களை வருத்துவதிற் சிறிதும்) இரக்கமில்லாத நெஞ்சமென்றபடி. அம்பொடு, ஒடு - கருவிப்பொருளில் வந்தது, "ஊசியொடு குயின்றதூசும்பட்டும்" என்புழிப்போல. பி-ம்:—[1]காம. [2]வனத்தனல். [3]வெதும்ப. [4]சாம்பினாள். (611)

50. சொரிந்தன நறுமலர் [1]சுறுக்குண் [2]டேறின
பொரிந்தன கலவைகள் [3]பொறியிற் சிந்தின
எரிந்தவெங் கனல்சுட விழையிற் கோத்தநூல்
பரிந்தன கரிந்தன பல்ல வங்களே.

(இ - ள்.) (அப்பொழுது), சொரிந்தன நறு மலர் - (படுக்கை யாகப்)பெய்யப்பட்டுள்ள வாசனையுள்ள மலர்கள், சுறுக்குண்டுஏறின -(அவளுக்கு மென்மையைச் செய்யமாட்டாமல்) கூர்மையாய் (உடம் பில்) தைத்தன; பொரிந்தன கலவைகள் - (அவளது உடம்பிற் பொருந்திய காமாக்கினியாற்) பொரிந்து போயினவையாகிய கல வைச் சந்தனங்கள், பொறியின் சிந்தின - நெருப்புப்பொறிகள்போல உதிர்ந்தன; எரிந்த வெம் கனல் சுட - (அவளது உடம்பிற் பற்றி) எரிகிற வெவ்விய காமத்தீச் சுடுதலால், இழையில் கோத்த நூல் பரிந்தன - பேரணிகலங்களிற் கோக்கப்பட்டுள்ள நூல்கள் அற்று நீங்கின; பல்லவங்கள் கரிந்தன - (சயனத்திற் பரப்பப்பட்டுள்ள) தளிர்கள் கரிந்துபோயின; (எ-று.)

'எரிந்தவெங்கனல்சுட' என்னுங் காரணத்தைப் பிற வாக்கி யங்களோடுங் கூட்டுக. [3]பொரியிற்சிந்தின என்ற பாடத்துக்கு - நெற்பொரிகள் போலச் சிதறின என்று பொருள்; பொரிதல்- தீய்ந்து பொடிதல். சுறுக்குண்டு - கூர்மையையடைந்து. [1]சுருக்கொண்டு என்றபாடத்துக்கு-சுருசுரு என்னும் ஓசைபடத் தீய்ந்துகொண்டு போயின வென்க. பி - ம்:—[2]ஏறிட. (612)

51.—சீதைக்குக் காமநோய்நேர்ந்துள்ளதென்பதையறியாத தாதியர் முதலியோர் திருஷ்டிகழித்தல்.

தாதியர் செவிலியர் தாயர் தவ்வையர்
மாதுய [1]ருழந்துழந் தழுங்கி மாழ்கினர்
யாதுகொ லிதுவென வெண்ண றேற்றலர்
[2]போதுட னயினிநீர் சுழற்றிப் [3]போற்றினர்.

(இ - ள்.) (பிராட்டியினது), தாதியர் - தாதிமார்களும், செவிலியர்-செவிலிமார்களும், தாயர் - ஐவகைத்தாய்மார்களும், தவ்வையர்-தவ்வைமார்களும், மாதுயர்உழந்து உழந்து அழுங்கி - (அவளுக்குஉண்டான நோயைநோக்கிப்) பெருந்துன்பத்தை மிகவும் அனுபவித்தலினால் மிகவருந்தி, மாழ்கினர்-மனங்கலங்கினவர்களாகி, இது யாது கொல்என எண்ணல் தேற்றலர் - இந்நோய் எந்நோயோ எனஆலோசித்து அறியமாட்டாதவர்களாய், போதுடன் அயினி நீர் -பலவகை மலர்களோடு கூடிய ஆலத்திநீரை, சுழற்றி போற்றினர் - சுற்றி (அவளுக்கு)க் கண்ணெச்சில் கழித்தனர்; (எ-று.)

சீதையின் கருத்திற் பொருந்திய காமநோயை யறியாமல் திருஷ்டிதோஷத்தாலுண்டான நோயெனக் கருதி அதற்குப் பரிகாரமாக மங்களாலத்தி சுற்றினார்களென்க. அயினி-செஞ்சோறு: அதனோடுகூடிய நீராதலின் அயினிநீரெனப்பட்டது: இது, கண்ணூறு அச்சம் முதலியவற்றாலுண்டாகிய குற்றம் களைவது: ஆட்டுவாள், ஊட்டுவாள், ஓலுறுத்துவாள், நொடிபயிற்றுவாள், கைத்தாய், எனத் தாயர் ஐவகைப்படுவர்; பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் என்றுங்கூறுவர். தாதியர்-வேலைக்காரியென்ற பொருளைக்கொண்ட தாஸீ என்பதன் திரிபாகிய தாதி என்பதன் பன்மையாகிய இது, பரிசாரிகைப்பெண்களைக் காட்டும். செவிலியர்-வளர்க்குந் தாய்மார், 'தாயர்' என்றது-பிறதாய்மார்களை. 'தவ்வை' என்பது-தமக்கையென்னும் பொருளதாதலின், 'தவ்வையர்' என்றது-ஐவகைத்தாய்மாரின் மக்களாய்ச் சீதைக்கு மூத்தவர்களை; சிந்தாமணியில் "கலம்புரி" என்று தொடங்கும் பாட்டில் "தாயர் தவ்வையர்" என்பதற்கு இங்ஙனமே ஆசிரியர் நச்சினார்க்கினியருரைத்துள்ளார். தேற்றலர்-தேறலர்: தன்வினைப்பொருளது. பி-ம்:—[1]உழந்தனர்விழுந்து. [2]போதினோடு. [3]போக்கினர். (613)

52.—காமவெப்பம்மிக்க சீதையின் வருணனை.

அருகினின் [1]றசைக்கின்ற வால வட்டக்கால்
எரியினை [2]மிகுத்திட விழையு மாலையும்
கரிகுவ தீவன கனல்வ காட்டலால்
உருகுபொற் பாவையு [3]மொத்துத் தோன்றினாள்.

(இ - ள்.) அருகில் நின்று அசைக்கின்ற - சமீபத்திலேயிருந்து (தோழிமார்) வீசுகின்ற, ஆலவட்டம் - ஆலவட்டங்களினால்தோன்றுவதான, கால்-காற்றானது, எரியினை மிகுத்திட - காமாக்கினியை வளர்த்திட, இழைஉம் மாலைஉம் - (பிராட்டியணிந்த) ஆபரணங்களும் பூமாலைகளும், கரிகுவ - கரிந்து போவனவும், தீவன - தீய்ந்து போவனவும், கனல்வ - எரிவனவுமாக, காட்டலால்-ஆய்விடுதலால், (பிராட்டி),—உருகு பொன் பாவைஉம் ஒத்து - (நெருப்பிற்பட்டு) உருகுகிற பொன்னினாலாகிய பிரதிமையையும் போன்று,தோன்றினாள் - காணப்பட்டாள்;(எ-று.)

அணிந்தமாலை அணி என்ற இவை காமவனலால் கருகுதல் தீதல் எரிதல்களாக, அக்காமவனலில் நிற்கும் பிராட்டி நெருப்பி

னிடைப்பட்ட பொற்பாவைபோன்றன ளென்க: தற்குறிப்பேற்ற வணி. ஆலவட்டம் - பெருவிசிறி: தாலவ்ருந்தமென்றவடசொல் லின்சிதைவு. விசிறிக்காற்றுப்படுதலால் நெருப்புவளர்தலியல்பா தலின், 'ஆலவட்டக்கால் எரியினை மிகுத்திட' என்றார். கரிதல்-நிறங்கருகவேதல், தீதல்-நிறங்கருகாமைவேதல் என்று சிறிது பொருள்வேறுபாடுகொள்க. பாவையும் - உம்மை, இறந்ததுதழுவியது. பி - ம்:—[1]அசைகின்ற, அசைதரும். [2]உகுத்திட. [3]ஒப்பத். (614)

53.—ஏழுகவிகள்-காதல்நோய்கொண்ட சீதாபிராட்டியின் வாய்பிதற்றல்.

அல்லினை வகுத்ததோ ரலங்கற் காடெனும்
வல்லெழு [1]வல்லவேன் மரக தப்பெருங்
கல்லெனு மிருபுயங் [2]கமலங் கண்ணெனும்
வில்லொடு மிருந்ததோர் மேக [3]மென்னுமால்.

(இ - ள்.) (பிராட்டி), அல்லினை வகுத்தது ஓர் அலங்கல் காடு எனும்-'(இராமனது மயிர்முடி) இருளைக்கொண்டு அமைக்கப் பட்டதொரு பூமாலையோடுகூடிய காடு' என்பாள்; 'இரு புயம் - (அவனது) இரண்டுதோள்கள், வல் எழு - வலிய தூண்கள்: அல்லஏல் - (அவை) அல்லவாயின், மரகதம் பெரு கல் - மரகத ரத்தினமயமான பெரிய மலைகளேயாம்', எனும் - என்பாள்; கண் கமலம் எனும் - '(அவனது) திருக்கண்கள் செந்தாமரை மலர்' என்பாள்; '(அவனது திருவடிவம்), வில்லொடுஉம் இழிந்தது ஓர் மேகம்-இந்திரவில்லுடனே கூட (வானத்தினின்று பூமியிலே) இறங்கினதொரு மேகம்', என்னும்—; (எ - று.)

இவை, இராமபிரானிடத்துத் தன்மனஞ்செல்லப்பெற்ற சீதா பிராட்டி அப்பிரானைப்பற்றி வாய்பிதற்றுவதைக் கூறும். குடுமி யின் கருமையும் மயிர்களின் அடர்த்தியும்பற்றி, 'அல் வகுத்த தோர்காடு' என்றது. 'அலங்கற்காடு' என்றது, பூமாலை சூடுவ தனால். எழு - இருப்புத்தூண். தோள்கள் திரண்டுருண்டு நீண்டி ருத்தல்பற்றியும் பருத்துயர்ந்துமிகவலியனவாயிருத்தல்பற்றியும் இங்ஙனங்கூறியது. இராமன் கோதண்டமும் கையுமா யிருந்த தனால், 'வில்லொடுமிழிந்ததோர் மேகம்' என்றாள்; ''விற்கொண்ட மழையனான்'' என்றார் கீழும். பி - ம்:—[1]வல்லவன், வல்லவொர். [2]கமலக். [3]என்னுமே. (615)

54. நெருக்கியுட் [1]புகுந்தரு நிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு [2]போனவன்
பொருப்புறழ் தோள்புணர் [3]புண்ணி யத்தனு
கருப்புவில் லன்[4]றவன் காம னல்லனே.

இதுமுதல் எட்டுக்கவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) நெருக்கி உள் புகுந்து - நெருக்கி (என்மனத்தி னுள்ளே) வந்துசேர்ந்து, அரு நிறைஉம்-அழித்தற்கரிய (எனது) மனவுறுதியையும், பெண்மைஉம் - (நாணம்முதலிய பிற) பெண் மைக்குணங்களையும், உருக்கி-கரையச்செய்து, (அவற்றை), என்

உயிரொடுஉம்-எனது உயிருடனே, உண்டு போனவன்-கவர்ந்து கொண்டுசென்ற புருஷோத்தமன், (மன்மதனோ வென்றால்), (அவனது), பொருப்பு உறழ் தோள் புணர்-மலையோடு மாறுபடுகிற தோளிற் சேர்ந்த, புண்ணியம் தனு-நல்வினையுடைய வில், கரும்பு வில் அன்று-; (ஆதலின்), அவன் காமன் அல்லன்-அவன் மன்மதனல்லன்; (எ - று.)

இராமபிரானது கட்டழகைக் கண்டு 'இவன் மன்மதனோ?' என்று முதலில் ஐயுற்றுப் பிறகு கையிற் கருப்புவில்லன்றி மூங்கில்வில்லையே கொண்டிருத்தலாற் காமனல்லனென்று தெளிந்தவாறு. இதனால் இராமபிரானது பேரழகு தொனிக்கும், இது-தெளிவை முடிவிற்கொண்ட ஐயவணி. "நிறையெனப் படுவது மறைபிறரறியாமை' என்னுங் கலித்தொகையடியால், நிறையென்றுசொல்லப்படுவது பிறரறியாதபடி மனத்து அடக்கற்பாலனவற்றை அடக்கியொழுகுதலென அறிக. 'தோள் புணர் புண்ணியத்தனு' என்றதனால், "அவனுடைய தோளைப் புணர்தற்கு மூங்கில்வில் நோற்றுள்ளதுபோல நான் நோற்றிலேனே! அத்தோளைப் புணர்தல், முன்னைய நல்வினை யிருந்தாலொழியக் கூடாதன்றோ!' என்று கருதியமை தோன்றும். 'உயிரொடு' என்றது, உயிரினுணர்வை. பி-ம்:—[1]புகுதரு. [2]போயினான். [3]புண்ணியத்தது. [4]அது. (616)

55. பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
எண்வழி யுணர்வு[1] நா னெங்குங் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையு[2]மோர் கள்வ னேகொலாம்.

(இ - ள்.) பெண் வழி-பெண்ணிடத்து இயல்பாகவுள்ள, நலனொடுஉம்-அழகையும், பிறந்த நாணொடுஉம்-உடன் தோன்றிய நாணத்தையும், எண் வழிஉணர்வுஉம்-மனத்திலுள்ள அறிவையும், நான்—, எங்குஉம் காண்கிலேன்-(அம்மைந்தன் வந்துபோன பின்பு) எங்குங் காண்கிறேனில்லை; (ஆதலால்), அடி வருந்த மண்வழி நடந்து போனவன்-திருவடிகள் வருந்தும்படி தரையிலே நடந்துசென்ற அவ்விளமகன், கண்வழி நுழையும்ஓர்-கண்களின் வழியாக உள்ளே செல்லவல்லானொரு, கள்வன்ஏ கொல் ஆம் - கள்ளனேபோலும்; (எ - று.)

அம்மைந்தனை யான் கண்டவுடனே எனது நலன் நாண் உணர்வு என்ற இவற்றை யிழந்தேன்; ஆகையால், அம்மைந்தன் கண்ட கண்வழியே புகுந்து கரந்து செல்லவல்ல விசித்திரக்கள்ளன்போலுமென்கிறாள், சீதையென்க. தற்குறிப்பேற்றம். 'கள்வன் கொல் யானறியேன் கரியானொருகாளை" என்றார் பெரியாரும். 'கள்வன்' என்று அன்பிற்கு உரிய ஸ்ரீராமனைப் பழித்தது, தன்னை வருந்தவிட்ட வெறுப்பினாலாம். மூன்றாமடியில், 'நடப்பதனால் அடி வருந்துமே!' என்று அப்பிரானிடத்துத் தனக்கு உண்டான இரக்கத்தைக் குறிப்பிக்கின்றாள். பெண்வழி நலன்-பெண்களுக்கு வமிச பரம்பரையாக வருகிற நற்குணம் என்பாருமுளர். எண்வழி-எண்ணு

மிடத்து என்றுமாம். எண்வழியுணர்வு-எண்ணத்தின் வழியே செல்கின்ற அறிவு என்றுமாம். பி-ம்:—[1] தான். [2] என். (617)

56. இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமுந் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தி[1]யென் னுயிரையம் முறுவ லுண்டதே.

(இ - ள்.) (எனதுஉயிரைப் பருகினவை),-இந்திர நீலம் ஒத்து இருண்டகுஞ்சிஉம்-இந்திரநீலவிரத்தினத்தை யொத்துக் கறுத்த நிறமாகவுள்ள (அவனது) மயிர்முடியும், சந்திர(ன்) வதனம்உம் - பூரணசந்திரன்போன்ற திருமுகமும், தாழ்ந்த கைகள்உம்-தொங்குகின்ற திருக்கைகளும், சுந்தரம் மணி வரை தோள்உம்ஏ-அழகிய நீலவிரத்தினமலைகள்போன்ற திருத்தோள்களும் என்னுமிவையே, அல-அல்ல: (பின்னை யாது எனின்)? - அ முறுவல் - அந்தப்புன்சிரிப்பு, முந்தி-(இவையெல்லாவற்றிற்கும்) முற்பட்டு, என்உயிரை உண்டது - எனது உயிரைக் கவர்ந்தது; (எ - று.)

என் காதலனுடைய குஞ்சி முதலியன என்னுயிரையுண்டனவாயினும், முற்பட்டு உயிரையுண்டது, அன்னனது புன்முறுவலே யென்று வருந்திக் கூறுகிறாள்; இதனால், அப்பிரானது புன்முறுவலில் சீதையினெஞ்சம் மிகவும் ஈடுபட்டமைதோன்றும். இந்திரநீலம் - சிறந்தசாதிநீலமணி. தாழ்ந்த கை - முழங்காலளவும் நீண்டு தொங்குங் கை: இது, உத்தமபுருஷலட்சணம். மணி-நவமணிகளுக்குப் பொதுப்பெயராக வன்றி, நீலமணிக்குச் சிறப்புப் பெயராகியும் வரும்: 'மணிவண்ணன்' என்ற விடத்துப்போல. உண்டது-கொள்ளைகொண்டது. அம்-அழகிய எனினுமாம். பி-ம்:—[1] எம்முயிரின். (618)

57. படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமும்
தடந்தரு தாமரைத் தாளு மேயல
கடந்தரு மா[1]மதக் களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே.

(இ-ள்.) (எனது மனத்திற் பதிந்தன),-படர்ந்து ஒளிபரந்து - விசாலமாய் ஒளிபரவி, உயிர் பருகும் - காண்பர்ருயிரைக் கொள்ளையிடுகின்ற, ஆகம்உம்-(அவனது) திருமார்பும், தட தரு தாமரை தாள்உம்ஏ - பெருமையைக்கொண்ட செந்தாமரைமலர்போலுந் திருவடிகளும் என்னுமிவையே, அல - அல்ல: கடம் தரு மா மதம் களி நல் யானை போல் நடந்தது-கன்னஞ்சுரக்கின்ற மிக்க மதநீர்பெருகப் பெற்ற களிப்பையுடைய சிறந்த ஆண்யானைபோல(க் கம்பீரமாக அப்பெருமான்) நடந்துசென்ற நடையழகு, என்உள்ளம் நண்ணி கிடந்தது-எனது மனத்திற்பொருந்தி (எப்பொழுதும் நீங்காது) பதிந்துள்ளது; (எ - று.)

இதனால், சீதாபிராட்டி, ஸ்ரீராமனது பரந்த திருமார்பினழகு தாமரைத்தாள்களினழகு என்ற இவற்றினும் அம்மைந்தனது நடையழகில் தன்மனம் பதிந்தமையைத் தெரிவிக்கின்றனள்.

தடந் தரு தாமரை - தடாகம் பூத்த தாமரை யெனினுமாம்: பறிக்கப்பட்டு வாடிப்போகாத அன்றலர்ந்த மலரென்றபடி. நல்யானை - உத்தமலட்சணம்முழுவதும் அமையப்பெற்றுள்ள யானை. பி - ம்:—[1] மதங்கலுழ். (619)

58. உரைசெயிற் றேவர்தம் முலகு ளானலன்
விரைசெறி தாமரை யிமைக்கு [1] மெய்ம்மையான்
வரிசிலைத் தடக்கையன் மார்பி னூலினன்
அரசிளங் குமரனே [2] யாகல் வேண்டுமால்.

(இ - ள்.) உரை செயின் - (அவ்வாண்மகனை இன்னானென்று) சொல்லப் புக்கால், தேவர் தம் உலகுஉளான் அலன் - தேவலோகத்திலுள்ளானொரு தேவ னல்லன்:(ஏனெனில்), விரைசெறி தாமரை இமைக்கும் மெய்ம்மையான் - வாசனைமிகுந்த செந்தாமரைமலர்போலுந் திருக்கண்கள் இமைத்தல் செய்யுந்தன்மையையுடையவன்: (ஆதலால்), வரி சிலை தட கையன் - கட்டமைந்தவில்லை யேந்திய பெரிய கையையுடையவனும், மார்பில் நூலினன் - திருமார்பிற் பூணூலையுடையவனுமாகிய அவன், அரசு இள குமரன்ஏ ஆகல் வேண்டும்—; (எ-று.)—ஏ-தேற்றம். ஆல் - அசை.

சீதாபிராட்டி இராமபிரானைக் கண்டபோது முதலில் 'தேவனோ?' என ஐயமுற்றுப் பின் கண்ணிமைத்தல் முதலிய குறிகளை நோக்கித் தேவனல்லன் மானுடனென்றும், வில்லும் முப்புரிநூலும் முதலியவற்றை நோக்கி அம்மானுடருள்ளும் ராஜகுமாரனே யென்றும் உய்த்துணர்ந்து தெளிந்தமை கூறப்பட்டது; ஐயவணி. இளங்குமரன்-யௌவனகுமாரன். பி-ம்:—[1] மெய்ம்மையால், மேன்மையால், வெம்மையான். [2] ஆதல். (620)

59. பிறந்துடை நலநிறை பிணித்த வெந்திரம்
கறங்குபு திரியுமென் கன்னி மாமதில்
எறிந்தவக் குமரனை யின்னுங் கண்ணிற்கண்டு
அறிந்துயி ரிழக்கவு [1] மாகுமே கொலாம்.

(இ - ள்.) பிறந்த உடை-(என்னோடுகூடவே) பிறந்து (என்) உடைமையாயுள்ள, நலம்-நல்ல, நிறை-மனவுறுதி ஆகிய, பிணித்த எந்திரம் - கட்டமைந்த யந்திரம், கறங்குபு திரியும் - சுழன்று திரிதற்கிடமான, என் கன்னி மா மதில் - எனது கன்னித்தன்மையாகிய பெரிய மதிலை, எறிந்த-அழித்துச்சென்ற, அ குமரனை-அந்தக் குமாரனை, இன்னும் கண்ணின் கண்டு அறிந்து - இன்னமும் ஒருகால் கண்களாற் கண்டு அனுபவித்து, உயிர்இழக்கஉம் ஆகும்ஏ கொல்ஆம்-(அதன்பின் என்) உயிரையிழக்கவாயினுங் கூடுமோ?

கன்னித்தன்மை மனத்திலுள்ளே ஒரு புருடனுஞ் செல்லவொண்ணாதபடி காத்தலால் அதனை 'மதில்' என்றும், நிறை அக்கன்னித்தன்மைக்குக் காவலாய் நின்று உறுதி தருதலால் அதனை 'எந்திரம்' என்றும் உருவகப்படுத்திக் கூறினாள்; இங்கே "காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னும், நாணுத்தாழ் வீழ்த்தகதவு" என்னுந் திருக்குறளின் பொருள்விசேடத்தைக் கேட்டுணர்க. எந்தி

ரம்-யந்த்ரம்: மதிலிற்பொறி. 'நான்கண்ட அம்மைந்தனை மணந்து அணைந்து புணர்தல் கூடாவிட்டாலும், மற்றொருகால் கண்ணாரக் கண்டு களித்திட்டபின் என்னுயிர்போவதானாலும் எனக்கு உடன் பாடே: அங்ஙனமாயினும் நேரிடுமோ?' என்று சீதை வேண்டு கின்றன ளென்க. 'உயிரிழக்கவும்' என்றது, இங்ஙனம் காதல்நோய் கைவிஞ்சின் பின்பு அவனையணைதல்கூடாவிட்டால் தான் இறந்து படுதல் திண்ண மென்னுங் கருத்தால். 'கண்ணின்' என வேண் டாது கூறினது - இப்பொழுது மனத்தாற் காணுதலாலும், அம் மாத்திரத்திலேதான் திருப்திப்படாமையாலுமென்க. இப்பொழுது தான் உணர்வை இழந்திருத்தலால், இனி அவனைக் கண்டபின்பு தான் அவ்வுணர்வு மீண்டுவரு மென்னுங் கருத்தால், 'கண்டறிந்து' என்றாள். பி-ம்:—[1] ஆகவேண்டுமால். (621)

60.—சீதாபிராட்டி காமவேட்கையால் பின்னும் வாய்பிதற்றி யுருகியமை.

என்றிவை யினையன [1] விளம்பு மெல்லையின்
நின்றன [2] னிவணெனு நீங்கி னானெனும்
கன்றிய மனத்துறு காம வேட்கையால்
ஒன்றல பலநினைந் [3] துருகுங் காலையே.

(இ - ள்.) என்ற இவை - என்ற இவற்றையும், இனையன - இவைபோல்வன பிறவற்றையும், விளம்பும் எல்லையின் - (சீதா பிராட்டி) கூறுகின்றபொழுதில், (உருவெளிப்பாட்டில் அவ்வீரன் எதிரிலே தோன்றினானாக), இவண் நின்றனன் எனும் - (நான் முன்பு கண்ட மைந்தன் இதோ)இங்கு நின்றருளினா னென்பாள்; நீங்கினான் எனும் - (உடனே அவ்வுருவம் மறைதலால்) நீங்கிவிட்டான் என் பாள்; (இவ்வாறு அப்பிராட்டி), கன்றிய மனத்து உறு காமம் வேட் கையால் - வெதும்பின மனத்தில் மிகுந்த காமவிருப்பத்தால்,ஒன்று அல பல நினைந்து - ஒன்றல்லாதனவாகிய பலவற்றை எண்ணி யெண்ணி, உருகும் காலை - மனமுருகும் பொழுதில்,—(எ - று.)— 'கதிரவன் கடலில் மூழ்கினான்' என மேற் கவியோடும் இயையும்.

காமவேட்கை - காமனாலுண்டாகிய வேட்கை யென்றேனும், காமமாகியவேட்கையென்றேனும்கொள்க. அளவிறந்தவென்னுங் கருத்துப்பட, 'ஒன்றலபல' என்றது. ஒருதன்மையதான எண்ணம் பலவற்றையும் பலதன்மையதான எண்ணம் பலவற்றையும் ஒருங்கே நினைந்தாள் என்று கூறினுமாம். பி - ம்:—[1] இயம்புமேல்வையின், எண்ணுமென்வயின், விளம்பும் வந்தெதிர். [2] அவன். [3] உணங்கும்.

61.—சூரியாஸ்தமன வருணனை.

அன்னமென் [1] னடையவட் கமைந்த காமத்தீத்
தன்னையுஞ் [2] சுடுவது [3] தரிக்கி லானென
நன்னெடுங் கரங்களை நடுக்கி யோடிப்போய்
முன்னைவெங் கதிரவன் கடலின் மூழ்கினான்.

(இ - ள்.) அன்னம் மெல் நடையவட்கு - அன்னப்பறவையின் நடைபோன்ற மெதுவான நடையையுடைய சீதாபிராட்டிக்கு, அமைந்த-(உடம்பு முழுவதிலும்) பொருந்தின, காமம் தீ-காமமாகிய நெருப்பு, (மேலெழுந்து), தன்னை உம்சுடுவது-(இயற்கையில் வெப்பமான கிரணங்களையுடைய) தன்னையும்வந்து எரிப்பதை, தரிக்கிலான் என-பொறுக்கமாட்டாதவன்போல, முன்னை வெம் கதிரவன்-பழமையான உஷ்ணகிரணனாகிய சூரியன், நல் நெடு கரங்களை நடுக்கி -(தனது) சிறந்த நீண்ட கைகளை [கிரணங்களை] நடுங்கச்செய்து கொண்டு, ஓடிப்போய் - விரைவாகச் சென்று, கடலில் மூழ்கினன்-(மேற்குக்) கடலிலே நீராடினன்; (எ-று.)

சூரியனது உதயாஸ்தமனங்களைக் கீழ்க்கடலில் உதயகிரியிலெழுவதாகவும் மேற்கடலில் அஸ்தகிரியில் மறைவதாகவுங் கூறுதல், கவிமரபு. இயற்கையிலேமறைகிற சூரியனைச் சீதையின் காமத்தீச் சுடுதலால் வெதும்பிக் கடலில் மூழ்கினதாக வருணித்தது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. அன்னம் என் நடை-அன்னப்புள் என்று சொல்லத்தக்க நடையென்றுமாம். 'தன்னையும்' என்றமையால் சூரியனது வெம்மையினும் காம வெம்மை மிக்கதென்பது, பெறப்படும். உஷ்ணகிரணனை சூரியனையும் சுடுமென்னவே, பிறரைச்சுடுதல் தானே விளங்குமென்க. வெப்பம்முதலியவற்றால் துன்ப முறுவார்க்குக் கைகள் நடுங்குதல் இயல்பு. சூரியகிரணங்களை நடுங்குவனவாகக் கூறியது, பளபளக்குங்கால் அவை தாம் அசைவனவாகக்காணப்படுதலை. 'முன்னைவெங்கதிரவன்' என்றது. படைப்புக்காலந் தொடங்கியுள்ளவ னென்றவாறும். 'முன்னை' என்ற அடைமொழியால், சூரியன்தான் நெடுங்காலமாக இருந்தும் இத்தன்மைய காமத்தீத் தன்னைச்சுடுதலை இதுகாறுங்கண்டறியானென்றும், 'அவட்கமைந்த காமத்தீ' எனவே, பிற மங்கையர்க் கமைகிற காமத்தீ அவனைச்சுட்டதில்லை யென்றும் குறிப்பித்தவாறு. பி - ம்:—[1] நடையவளமைத்த. [2] சுடுமெனல், சுடவது. [3] தரிக்கிலாமையால். (623)

62.—இதுவும் அடுத்த கவியும்-அந்திமாலை தோன்றியதன் வருணனை.

விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரி[1] நிறச் செக்கரு மிருளுங் காட்டலால்
அரியவட் கனறரு மந்தி மாலையாம்
கருநிறச் செம்மயிர்க் காலன் றோன்றினன்.

(இ - ள்.) விரி மலர் தென்றல் ஆம்-மலர்ந்த பூக்களிற் படிந்து வருகிற தென்றற் காற்றாகிய, வீசு பாசம்உம்-மேலெறிவதற்குஉரிய பாசாயுதத்தையும், எரி நிறம் செக்கர் உம்-நெருப்புப்போற் செந்நிறத்தையுடைய செவ்வானமாகிய செம்மயிரையும், இருள்உம்-இருளாகிய கருநிறத்தையும், காட்டலால் - (தன்னிடத்தே) தோன்றக் காண்பித்தலால், அரியவட்கு அனல் தரும் - (உலகத்தில்) அருமையானவளாகிய அப்பிராட்டிக்குக் காமாக்கினியை வளர்க்கின்ற, அந்தி மாலை ஆம் - அந்திக்கால மென்கிற, கரு நிறம் செம் மயிர் காலன் - கரியநிறத்தையுஞ் சிவந்த மயிர்களையுமுடைய யமன், தோன்றினன் - வந்தான்; (எ - று.)

பிராட்டி காமவேதனையால் வருந்தியிருக்கும்பொழுது அவ்வேதனையை மிக வளர்ப்பதாகிய அந்திப்பொழுது வந்தது, யமன் வந்து காணப்பட்டதுபோல அவளுக்கு மிகப் பயங்கரமாக விருந்ததென்பதாம். பாசமும் காட்டலால் காலன்-பாசம் முதலியவற்றைத் தன்னிடத்துக் காணுமாறுகொண்டிருத்தலால் அந்திமாலை காலனென்று சொல்லத்தக்க தென்க. தென்றலைக் காலபாசமெனஉருவகப்படுத்தினது, தெற்கில் வெகுதூரத்தினின்றுவந்து மேல் வீசுதலால். 'செக்கர்' என்பதற்கு-முதலிற்செந்நிறம் என்று பொருள்; செவ்வானத்துக்குப் பண்பாகுபெயர். இரண்டாமடியில் செக்கரும் இருளும் வைத்த முறைப்படியே நான்காமடியில் செம்மயிரையும் கருநிறத்தையும் ஒன்றன்பின் ஒன்ருக வையாதது - எதிர்நிரனிறைப்பொருள்கோள். அரியவள் - பிறமங்கையர்க்கு அருமையான குணங்களை யுடையவ ளென்றும், செந்நிறமுடையவளென்றும், திருமாலுக்கேயுரியவ ளென்றும், கிளிபோன்றவளென்றும் பொருள்கள்படும்; அரி - செந்நிறம், திருமால், கிளி முதலிய பலபொருள் கொண்ட ஒருபெயர்த்திரிசொல். மாலைப் யந்தியென விளங்கும்பொருட்டு 'அந்திமாலை' என்ருர். ஈற்றடி - முரண்டொடை. பி-ம்:—[1] கதிர்சீ. (624)

63. மீதறை [1] பறவையாம் பறையுங் கீழ்விளி
ஓத[2] மென் [3] சிலம்பொடு முதிரச் செக்கரும்
பாதக விருள்செய்கஞ் சுகமும் பற்றலாற்
[4] சாதக மென்னவுந் [5] தகைத்திம் மாலையே.

(இ - ள்.) மீது அறை பறவை ஆம் - மேலே [ஆகாயத்திலே] ஒலிக்கின்ற பறவைகளாகிய, பறைஉம் - பறையென்னும் வாத்தியத்தையும், கீழ் விளி-கீழே [பூமியிலே] ஒலிக்கின்ற, ஓதம் என் - கடலெனப்படுகிற [கடலாகிய], சிலம்பொடுஉம் - காற்சிலம்பையும், செக்கர்-செவ்வானமாகிய, உதிரம்உம் - இரத்தத்தையும், பாதகம் இருள் செய் - (பிராட்டிபோலக் காமவேதனை கொண்டார்க்குத்) துன்பத்தை வளர்க்கிற இருளாலியன்ற, கஞ்சுகம்உம் - கருஞ்சட்டையையும், பற்றலால் - கொண்டிருப்பதனால், —இ மாலை-இந்த மாலைப்பொழுதானது,—சாதகம் என்னஉம்- (ஒருவகைப்) பூதம் என்று சொல்லுதற்கும், தகைத்து - தகுதியுடையது; (எ-று.)

மாலைக்காலம் பறவையொலியையே பறையொலியாகவும், கடலொலியையே காற்சிலம்பொலியாகவும் கொண்டு, இருளாகிய கருஞ்சட்டையைத்தரித்துச் செக்கராகிய உதிரத்தையேந்தி நிற்கும் பூதம்போன்றிருந்ததென்பதாம்: உருவகத்தையங்கமாகக் கொண்டுவந்த தற்குறிப்பேற்றம். உதிரச்செக்கரும் என்றவிடத்து, அந்வயம்மாற்றியுரைக்கப்பட்டது. மென் சிலம்பு என எடுத்து-மெல்லோசையுடைய சிலம்புஎன்றும் உரைப்பர். பாதகம் - பாவம்போலக் கருநிறமுள்ள இருளினாற்செய்த உடம்பின்மேற்சட்டையென்றும் உரைக்கலாம்; பாவத்தைக் கருநிறமுடையதென வருணித்தல், கவிசமயம். 'சாதகமென்னவும்' என்ற உம்மை - இறந்

ததுதழுவியது. பி-ம்:—[1]பாவையும். [2]வெண், ஒண். [3]சிலம்பரும். [4]சாதகர். [5]தழைத்த, தகைத்தம். (625)

வேறு.

64.—அந்திவானை நோக்கிச் சீதாபிராட்டி வருந்திக் கூறுதல்.

கயங்க ளென்னுங் கனறோய்ந்து கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவே ளெய்த புண்ணினிடை நுழைய
உயங்கு முணர்வு நன்னலமு முருகிச் [1]சோர்வா ளுயி[2]ருண்ண
[3]வயங்கு மாலை[4]வானோக்கி யிதுவோ கூற்றின் வடிவென்றாள்.

(இ - ள்.) கயங்கள் என்னும் கனல் தோய்ந்து - குளங்கள் என்கிற நெருப்புக்களிலே படிந்து (உடம்பு காய்ந்து), கடி நாள் மலரின் விடம் பூசி - வாசனையையுடைய புதிய பூக்களினின்று (மகரந்தமாகிய) விஷத்தையெடுத்து மேலே பூசிக்கொண்டு, இயங்கு தென்றல் - வீசுகின்ற தென்றற்காற்று (ஆகிய கூர்வேலானது), மன்மதவேள் எய்தபுண்ணின் இடைநுழைய-(பிராட்டியினுடம்பில்) மன்மதன் (அம்புகளை) எய்ததனாலாகிய புண்களின் துளைகளிலே தைத்து உட்செல்ல,(அதனால்),உய்ங்கும் உணர்வுஉம் நல் நலம்உம் உருகி சோர்வாள் - வருந்துகிற அறிவும் சிறந்த பெண்மைக்குணங்களும் அழிந்து தளர்பவளாகிய அச்சானகியானவள்,—உயிர் உண்ண - (தனது) உயிரைக்கவரும்பொருட்டு, வயங்கும்-(வந்து) விளங்குகிற, மாலை-மாலைப்பொழுதோடுகூடிய, வான்-வானத்தை, நோக்கி - பார்த்து, கூற்றின்வடிவு இதுஒ என்றாள் - யமனது பயங்கரமான ரூபம் இதுதானோ? என்று எண்ணி அஞ்சினாள்; (எ-று.)

'கனல் தோய்ந்து விடம் பூசி' என்று முன்னர் வருதலாலும் 'மன்மத வேளெய்த புண்' என்று பின்னர் வருதலாலும், தென்றலை வேலென்று கொள்ளவேண்டுவ தாயிற்று. மன்மதனம்புகளால் துளைக்கப்பட்டு முன்னமே வருந்திக்கிடக்கின்ற உடம்பில் புண்ணில் வேலுருவியதுபோலத் தென்றல் தாக்கிச்செல்ல, அதனால் வருத்தம் மிகவிஞ்சிய சீதாபிராட்டி, தனது உயிரையே கொண்டுவிடு மென்று கருதக்கூடிய வருத்த முண்டாதற்குக் காரணமாக இருக்கும் மாலைப்போதில் தோன்றிய வானத்தைக் கண்டு, 'கூற்றின்வடிவம் இங்ஙனம்தான் இருக்கும்போலும்' என்று வருந்தின ளென்க. மாலையும் தென்றலும்பிறர்க்கெல்லாம் இன்பத்தைச் செய்வனவாயினும், தம் விருப்பிற்கு இடனானவரைச் சேராத தலைவர்தலைவியர்க்குக் காமத்தை வளர்த்து வருத்தலால், இங்ஙனங் கூறினது. பி-ம்:—[1]சோர்வார். [2]உண்ணும். [3]மயங்கு, மயங்கி. [4]வர. (626)

65.—கவிக்கூற்று.

கடலோ [1]மழையோ முழுநீலக் கல்லோ காயா நறும்போதோ
படர்பூங் குவளை [2]நறுமலரோ நீலோற் பலமோ [3]பானலோ
இடர்சேர் மடவா ருயிருண்ப தியாதோ வென்று தளர்வாண்முன்
[4]அடல்சே ரசுரர் நிறம்போலு மந்தி மாலை [5]வந்ததுவே.

(இ - ள்.) 'கடல்ஓ - கருங்கடலோ, மழைஓ - காளமேகமோ, முழு நீலம் கல்ஓ-சிறந்த பெரிய இந்திரநீலத்தின் மலையோ, காயா நறு போதுஓ - காயாமரத்தின் வாசனையுள்ள பூவோ, படர் பூ குவளை நறுமலர்ஓ - படர்ந்த அழகிய கருங்குவளைக்கொடியினது நறுமணமுள்ள பூவோ, நீலோற்பலம்ஓ - நீலோற்பலமலரோ, பானல்ஓ - கருநெய்தல்மலரோ, இடர் சேர் மடவார் உயிர் உண்பது யார்துஓ - பலவகைத் துன்பங்களும் வந்தடைதற்கிடமான இளம் பெண்களது உயிரைக் கவர்வது (கீழ்க்கூறிய இவற்றுள்) எது தானோ?' என்று - என்று நினைந்து, தளர்வாள் முன் - (மனமும் உடம்பும்) தளர்பவளாகிய அப்பிராட்டியி னெதிரிலே, அடல்சேர் அசுரர் நிறம் போலும் அந்தி மாலை வந்தது-வலிமை பொருந்திய அசுரரின் நிறத்தையொத்த மாலையந்திப்பொழுது வந்துசேர்ந்தது;

இச்செய்யுளில் கடல்முதலாகப் பான லீறுகச் சொல்லப்பட்டுள்ள பொருள்களேழும் ஸ்ரீராமனது திருமேனிநிறத்துக்கு உவமையாகுவனவாதலால் இரங்கிக்கூறினள். இரண்டாமடியிற்கூறிய மூவகைநீர்ப் பூக்களும், ஒன்றோடொன்று சிறிது வேறுபாடுள்ள சாதிபேதமென உணர்க. பெண்பிறப்புப் பெருந்துன்பத்துக்கு இடமாவதென்று பிரிவுத்துயரையுற்ற மகளிர் கூறுவதை, "பெண் பிறந்தா ரெய்தும் பெருந்துயர் காண்கிலேனென்று, ஒண்சுடரோன் வாரா தொளித்தான்" எனத் திருவாய்மொழியிலுங் காண்க. இருள் பரவாநிற்கச் செக்கர்வானத்தினைக்கொள்ளும் அந்திமாலை, கருநிறத்தோடு உடம்பெங்குஞ் செம்பட்டமயிரைக் கொண்டிருக்கும் அசுரர் நிறத்தைப் போலும். அந்தி=ஸந்த்யா: பகலும்இரவும் சந்திக்கும் பொழுது: இந்த அந்தி, காலையந்தி மாலையந்தி என்று இருதிறத்த தாதலால், அந்திமாலையென்றாள்; "காலை யந்தியும் மாலை யந்தியும்" என்றது, புறநானூறு. பி - ம்:—[1]மலையோ. [2]நாள். [3]பானலமோ. [4]மடல்சேர் தாரான், மடலேர் தாரான். [5]பரந்தது. (627)

66.—அந்திமாலைப்பொழுதைக் குறித்துப் பிராட்டியிரங்கல்.

[1]மைவா னிறத்து [2]மீனெயிற்று வாடை யுயிர்ப்பின் வளர்செக்கர்ப்
பைவா யந்திப் படவரவே [3]யென்னை வளைத்துப் பகைத்தியால்
எய்வா னொருவன் கையோயா னுயிரு மொன்றே [4]யினியில்லை
உய்வா [5]னுறவிப் பழி[6]பூண [7]வென்னோ டுனக்குப் பகையுண்டோ.

நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வான் - ஆகாயத்துப்பரவிய, மை நிறத்து - கருநிறத்தையும், மீன் - நட்சத்திரங்களாகிய, எயிறு - விஷப்பற்களையும், வாடை - தென்றற் காற்றாகிய, உயிர்ப்பின்-பெருமூச்சையும், வளர் செக்கர் - பரவிய செவ்வானமாகிய, பை வாய் - விஷப்பையை யுடைய வாயையுமுடைய, அந்தி - மாலையந்திப்பொழுதாகிய, படம் அரவே - படத்தோடுகூடிய பெரிய நாகமே! (நீ), என்-என்ன காரணத்தால், நா வளைத்து பகைத்தி - நாவினால் (என்னை) வளைத்துப்பற்றி வருத்துகிறாய்? எய்வான் ஒருவன் - (என்மீது) அம்புகளை யெய்பவனாகிய ஒப்பற்ற மன்மதனொருத்தன், கைஓயான்-(அவ்வெய்

தல்தொழிலில்) கை சிறிதும் தளர்கிறுனில்லை; உயிர்உம் ஒன்றே - (எனக்கு) உள்ளதும் ஒருயிரேதான்; இனி இல்லை-(அதனை அவன் கவர்வானுனல் உனக்குக் கவர) வேருெரு உயிரில்லை; உய்வான் உற -(அம்மன்மதனுக்குத்) தப்பிப்பிழைப்பதாக யானிருக்க, இ பழி பூண - (இச்சமயத்து) இப்பெண்கொலைப்பெரும்பழியை (நீ) ஏற்ப தற்கு, என்னேடு உனக்கு பகைஉண்டுஓ - என்னிடத்து உனக்கு விரோதமுள்ளதோ? (எ-று.)

இதுமுதல் மூன்று கவிகள்-சீதையின் இரங்குதலைக் கூறும். அச்சந்தருதலால் இருளைக் கருநிறமாகவும், பளபளத்தலால் விண் மீனை எயிருகவும், அனல்வீசுதலால் வாடையை உயிர்ப்பாகவும், தன்னை விழுங்குவதுபோலுதலாற் செவ்வானத்தை வாயாகவும், கொல்லவருதலால் மாலையைப் பாம்பாகவும் உருவகப்படுத்தினுள். மன்மதன் முன்னமேபிடித்து உயிர்கவர முயல்கிறுன்; நீயும் வந்துதோன்றினுய்; எனது உயிர் ஒன்றேயாதலின், அவன் கருத் துக் கைகூடிவிட்டால், உனதுமுயற்சி வீணுய்முடியுமே! அன்றி, அவனிடத்தினின்று தப்பிப் பிழைக்க முயல்கின்ற எனதுமுயற்சி கைகூடுமாயின், அப்போது நலிவதற்காக இங்ஙனம் நீ செய்வதா யிருந்தால், பெண்பழியைக் கட்டிக்கொள்ளுமாறு உனக்கு என் மேற் பகைமுள யாது காரணம்? ஒன்றுமில்லையே: ஆதலின், நீ இப்பொழுதே அப்பாற்செல் என்றவாறு. இனி, அந்திப்போதே எனக்குஉயிர்ஒன்றே: என் உயிரைக் கவர்ந்தாலன்றி மீள்வதில்லை யென்று ஓயாது மன்மதன் அம்பு எய்கிறுன்: அவ்வுயிரை அவன் கொண்டால் நான் பிழைத்திருக்க வேறு உயிரில்லை: ஆகவே, என் மீது பகைசெலுத்தலால் உனக்கு என்ன பயனுண்டு? பயனின்றி வீணே வருத்துதற்கு என்னிடத்து முன்னமே பகையில்லையே: உண்டாயின் சொல்லுவாயென்று ளாகவுமாம். மீன் - விண்மீனை. வாடை - வடக்கிற்செல்லுங் காற்று என்ருயினும், கூடாதார் வாடு தற்குக்காரணமான காற்று என்ருயினும் ஏதுப் பெயராகக் கொள்க: இங்ஙனங்கொள்ளாது வடக்கிலிருந்து வருங் காற்றெனக் கொள்ளு தல், கீழ் "விரிமலர்த்தென்றல்" "இயங்குதென்றல்" என்று வந்த வற்ருேடு மாறுகொள்ளும். 'நா' என்றது-மாலைப்பொழுதிற் காணப்படும் ஒருவகைச் சிறுசெவ்வொளியை. உய்வான் உறவு இனி இல்லை - உய்தலுறுவது இனி இல்லை யெனினுமாம். இங்கு, வான் மைநிறம் என்றது, சூரியனத்தமித்ததும் முதலில் தோன்று கிற இருளை. பி-ம்:—[1]மைவாள், மைய. [2]மின். [3]என்னை, இன்னு. [4]பிறிது. [5]வழியிற். [6]பூண்டாய். [7]உன்னேடெனக்கு, உன்னே டென்ன. (628)

67.—இருளை நோக்கிப் பிராட்டி புலம்புதல்.

ஆல முலகிற் [1]பரந்ததுவோ வாழி [2]கிளர்ந்த தோவவர்தம்
நீல நிறத்தை யெல்லோரு நினைக்க வதுவாய் நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற் கலந்து [3]குழைத்துக் காயத்தின்
[4]மேலு[5]நிலத்து[6]மெழுகியதோ [7]விளக்கு மிருளாய்[8]விளைந்ததுவே.

(இ - ள்.) விளக்கும் இருள் ஆய் விளைந்தது - (தனிப்பட்ட வர்க்குத் துன்பத்தை) உண்டாக்குகின்ற இருளுருவமாய்முதிர்ச்சி

யடைந்துள்ளது,—ஆலம் உலகில் பரந்ததுஓ-ஹாலாஹலவிஷம் உலகமுழுவதிலும் பரவியதுதானோ? ஆழி கிளர்ந்ததுஓ - கருங் கடல் மேற்பொங்கிவந்ததுதானோ? அவர்தம் நீலம் நிறத்தை எல் லோரும் நினைக்க - அப்புருஷோத்தமனுரது திருமேனியின் நீல நிறத்தை (உலகத்தில்) யாவரும் நினைத்தலால், அது ஆய் நிரம் பியதுஓ - (எங்கும்) அந்நிறமேயாகி வியாபித்ததுதானோ? காலன் நிறத்தை - யமனது கருநிறத்தை, அஞ்சனத்தில் கலந்து - மை யோடு கலந்து, குழைத்து—, (அதனை), காயத்தின்மேலும் நிலத்து உம் மெழுகியது ஓ - வானத்தின்மீதும் பூமியின்மீதும் (முழுவதும்) பூசியதுதானோ? (எ - று.)—ஏ - இரக்கம்.

ஆலமும் காலன்நிறமும், யாவர்க்கும் அச்சஞ்செய்வன; ஆழி, பிரிந்தார்க்கு வருத்தம் விளைப்பது; எம்பெருமானது திருநிறம், பிராட்டிக்குக் காதல்துன்பம் விளைப்பது; ஆதலால், இக்கரிய பொருள்களுள் ஒன்று' அச்சத்தையும் வருத்தத்தையும் காதல் துன்பத்தையும் விளைக்குமாறு இருளாய் விளைந்திருக்க வேணு மென்கிருள்: இருள் விளைவதற்கு வித்தாயது உலகிற் பரந்த ஆலம் முதலியனவோ? என்று பலபடியாக விகற்பித்துக் குறிக்கின் ருள்: தற்குறிப்பேற்றம். காயம் - ஆகாய மென்பதன் முதற்குறை. [7]விளங்குமிருள் என்ற பாடத்துக்கு - மிகவும் கருநிறமாய் விளங்கு கிற இருள் என்க; இது அந்திப்போது கழிந்தபின் நன்கு கறுத்துத் தோன்றும் இருளைக் காட்டும். பி-ம்:—[1]பரந்தன. [2]கிளர்ந்தவொவ் வாத. [3]குழைத்தாகாயத்தின். [4]மேலே. [5]நிலத்தின். [6]எழுதியதோ. [7]விளைந்ததுவோ. (629)

68.—பிராட்டி அன்றிற்பறவையை நோக்கி இரங்கியது.

வெளிநின் றவரோ போய்மறைந்தார் விலக்க வொருவர் தமைக் காணேன், [1]எளியள் பெண்ணென் றிரங்காதே யெல்லி [2]யாமத் [3]திருளூடே, ஒளியம் பெய்யு மன்மதனு [4]ருனக்கிம் மாய முரைத்தா ரோ, அளியென் [5]செய்த [6]தீவினையே யன்றி லாகி[7]வந்தாயோ.

(இ - ள்.) (ஓ பறவையே!) வெளி நின்றவர் ஓ - (எனது கண் ணின்முன்னே சிறிதுபொழுது) வெளிப்பட்டுத்தோன்றிய தலைமக னுரோ, (இப்பொழுது), போய் மறைந்தார் - மறைந்துசென்ருர்: விலக்க-(அங்ஙனம் அவரைப் போகவொட்டாமல் எனக்காகத்) தடுப் பதற்கு, ஒருவர்தமை காணேன் - ஒருவரையுங் காணப்பெற்றே னில்லை; எளியள் பெண் என்று இரங்காது ஏ-(இங்கனங் கதியற்ற) எளிமையையுடையவளாகிய ஒரு பெண்ணென்று கருதி (என் விஷ யத்திற் சிறிதும்) இரக்கங்கொள்ளாமலே, எல்லி யாமத்து இருளூடு-இராத்திரிகாலத்து இருளிடையிலே, ஒளி அம்பு எய்யும்-மறைந்து நின்று அம்புகளை (என்மீது) எய்கின்ற, மன்மதனுர்-காமதேவர், உனக்கு இ மாயம் உரைத்தார்ஓ-உனக்கு இந்தக் கொடுவஞ் சனையைச் சொல்லிக்கொடுத்தாரோ? (அல்லது), அளியென் செய்த தீவினையே-எளியேன் (முற்பிறப்பிற்) பண்ணின பாவமே! அன்றில் ஆகி வந்தாய் ஓ-(நீ இப்பிறப்பில்) அன்றிற்பறவையுருவங்கொண்டு (வருத்த) வந்தனையோ? (எ-று.)

அன்றிலென்னும் புள் எப்பொழுதும் ஆணும்பெண்ணுங் கூடியே நிற்கும்: கணநேரம்ஒன்றையொன்றுவிட்டுப்பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறுமல் ஒன்றையொன்று இரண்டுமூன்று தரங் கத்திக்கூவி அதன்பின்புந் தன் துணையைக் கூடாவிட்டால் உடனே இறந்துபடும். இது வடமொழியிற் கிரௌஞ்சமெனவும், தமிழிற் குருகெனவும்படும். அன்றிற்பறவை இரவில் துணையைப் பிரிந்து வருந்தி அங்ஙலிவாற் கூவுகிற குரலோசை தலைவரைப் பிரிந்து வருந்துகிற மகளிர்க்கு அவ்வருத்தத்தை வளர்ப்பதாகக் கூறுவது கவிமரபு. விலக்க - நீ கூவுவது என்னை வருத்துவதைத் தடுப்பதற்கு என்று முரைக்கலாம்; என் கண்ணெதிரிற் காணப்பட்டவர் மறைந்துபோகாதிருப்பின் உன் குரல் எனக்குத் துன்பம் பயவாதென்பது கருத்து. இனி, விலக்க ஒருவர் தமைக் காணேன் என்பதற்கு - (எனக்கு உண்டான காமநோயை) நீக்குவதற்கு ஒருவரையுங் காண்கின்றிலே னென்று உரைத்தலுமொன்று; அப்போது தாதியர் முதலிய பலர் அருகிலிருந்தும் அவர்கள் தன் கருத்தின் குறிப்பை யறிந்து அதனை நிறைவேற்றமாட்டாமையின் இங்ஙனங் கூறியது; இனி, துன்பஞ்செய்யும் அன்றிலொன்றே அவள் கண்முன் பட்டு அத்துன்பத்தையொழிக்கக்கூடியவரெவரும் எதிர்ப்படாமையாற் கூறியதுமாம். யாமம் என்னும் ஏழரைநாழிகையின் பெயர் இங்குப் பொதுவாய்க் காலமென்னும் பொருளை யுணர்த்திற்று. ஒளி-ஒளிந்து என்னும் வினையெச்சத்தின் விகாரம்; பெயர்ச்சொல்லாக, ஒளியையுடையஎன்று உரைப்பாருமுளர். மன்மதனுர் என்ற பன்மை, வெறுப்புப்பற்றினது. இம்மாயம்-இருளில் நின்று எனக்குத் தீங்கிழைக்கும் வித்தை. அளியென் - பிறரால் அருள் செய்யத்தக்க எளியவள் யான். பி - ம்:—[1] எளியன். [2] மாயத்து. [3] இடையூடே. [4] உனக்குமாற்றம், உமக்கிம்மாற்றம். [5] செய்யும். [6] தீவினையேயந்தியாகி, தீவினையாலன்றிலீரும், தீவினையாலன்றிலாரும். [7] வந்திரேர், வந்தாரேர், வந்தாயே. (630)

69.—தோழிமார் செய்த உபசாரம்.

ஆண்டங் கனையா ளினையநினைந் தழுங்கு[1] மேல்வை யகல் வானந்
தீண்ட நிமிர்ந்த பெருங்கோயிற் சீத [2] மணியின் வேதி கைவாய்
நீண்ட சோதி நெய்விளக்கம் வெய்ய வென்றங் கவை நீக்கித்
[3] தூண்டல் செய்யா மணிவிளக்கின் சுடரா [4] லிரவைப் பகல்செய்தார்.

(இ - ள்.) ஆண்டு - அவ்விடத்திலே, அனையாள் - அப்பிராட்டி, இனைய நினைந்து - இவற்றையும் இவைபோல்பவற்றையும் எண்ணி, அங்கு - அவ்வாறு, அழுங்கும் ஏல்வை - வருந்தும் பொழுது,—(தோழிமார்),—அகல் வானம் தீண்ட நிமிர்ந்த பெருகோயில் - நெடுந்தூரத்திலுள்ள மேலுலகத்தையுந் தொடும்படி உயர்ந்துள்ள பெரிய சிறந்த அக்கன்னிமாடத்து, சீதம் மணியின் வேதிகைவாய் - குளிர்ந்த சந்திரகாந்தக்கல்லினுற் செய்யப்பட்ட மேடையிலே, நீண்டசோதி நெய் விளக்கம் - மிகுந்தஒளியையுடைய நெய்யினுலேற்றப்படுகிற விளக்குக்கள், வெய்ய என்று - வெப்பமுடையனவென்று கருதி, அங்கு அவை நீக்கி - அவ்விடத்திலே அவற்றையொழித்துவிட்டு, தூண்டல் செய்யா மணி விளக்கின்

சுடரால்-தூண்டுதல்செய்யவேண்டாத இரத்தினதீபங்களின் காந்தியால், இரவை பகல் செய்தார்-இராப்பொழுதைப் பகல் போல வெளிச்சமுண்டாகும்படி செய்தார்கள்; (எ-று.)

சீதை வருந்தும்போது, நெய்விளக்கும் அச்சீதையின் வெப்பத்தை மிகுவிக்குமென்று தோழிமார் அவற்றையெல்லாம் அப்பாற்படுத்திவிட்டு, மணிவிளக்கினால், அங்கு வெளிச்சமுண்டாம்படி செய்தனரென்க. மணிவிளக்கின் பகல்செய்தார்—"ஆறே தயிருள் பருகுமருமணி" என்ற சிந்தாமணிப்பகுதியையும் அதனுரையையுங் காண்க. அங்கனையாள் என ஒருசொல்லாக எடுத்து, பெண்ணிற் சிறந்தவளென்று முரைக்கலாம்; 'அங்கநா' என்பதன் திரிபாகிய அங்கனையென்பது, பெண்பால்விகுதிபெற்று வந்தது. 'அகல்வானம்' என்பதற்கு-பஞ்சபூதங்களுள் தன்னை யொழிந்த நான்குபூதங்களுந் தன்னிடத்தே அகன்றுவிரிதற்குக் காரணமான ஆகாயமென்று உரைப்பர். இப்பாட்டுக்குத் தகுதி நோக்கி எழுவாய் வருவிக்கப்பட்டது. பி - ம்:—[1]வேலை. [2]அணையின் வேதிகைவாய், மணிவேதிகைவாயின். [3]தூண்டாச்செய்யும். [4]இருளை. (631)

70.—இதுவும் அடுத்த கவியும் – சந்திரோதய வருணனை.

பெருந்திண் ணெடுமால் வரைநிறுவிப் பிணித்த பாம்பின் மணித்
[1]தாம்பின், விரிந்த திவலை [2]யுதிர்ந்தமணி விசும்பின் மீனின் மேல்
விளங்க, அருந்த வமரர் கலக்கியநா ளமுது நிறைந்த பொற்கலசம்,
இருந்த திடைவந் தெழுந்ததென வெழுந்த தாழி வெண்டிங்கள்.

(இ - ள்.) பெரு திண் நெடு மால் - சிறந்த வலிய திரிவிக்கிரமாவதாரஞ் செய்த திருமால், வரை நிறுவி-மந்தரமலையை (மத்தாக) நாட்டி, பிணித்த-(அதில்) கட்டப்பட்ட, பாம்பின்-(வாசுகியென்னும்) பாம்பாகிய, மணி தாம்பின்-முறுக்கேறிய கடைகயிற்றால், அமரர்-தேவர்கள், அருந்த - உண்ணுவதற்காக, கலக்கிய நாள்-(திருப்பாற்கடலைக்) கடைந்திட்ட காலத்தில், விரிந்த திவலை-(வெளியிலே தெறித்துப்) பரவிய நீர்த்துளிகளும், உதிர்ந்த மணி-சிதறின இரத்தினங்களும், விசும்பின் மீனின்மேல்-வானத்தே காணப்படுகிற நக்ஷத்திரங்களைக்காட்டிலும் அதிகமாய், விளங்க-விளங்காநிற்க, இடைஇருந்து அமுது நிறைந்த பொன் கலசம்வந்து எழுந்தது என - அக்கடலினிடையிலே இருந்ததாகிய அமிருதம்நிறைந்த பொன்மயமான கலசமானது மேலெழுந்து தோன்றியதுபோல, வெள் திங்கள் - வெண்ணிறமுள்ள சந்திர மண்டலம், ஆழி-கருங்கடலினின்று,எழுந்தது-உதித்தது; (எ-று.)

கடலினிடையே தோன்றிய சந்திரனைப் பாற்கடலினிடையே தோன்றிய அமுதம்நிறைந்த பொற்கலசமாகக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. சந்திரகிரணத்தால் வெண்ணிறமடைதல்பற்றிக் கருங்கடலுக்குப்பாற்கடல்ஒப்பாம். சந்திரன் அமுதகிரணனாதலால் அவனுக்குஅமுதகலசத்தைஉவமைகூறுதல் அடுக்கும். சந்திர மண்டலம் வெண்ணிறத்ததாயினும், உதிக்குங்காலத்துச்செந்நிறத்ததாகக் காணப்படுதலின், பொற்கலசமென்றார்; இனி, பொன் கலசம் - அழகிய கலசமெனினுமாம்: அன்றி, அமுதம் நிறைந்த

பொற்கலசம்-அமிருதம்நிரம்பி மேல்வழியப்பெற்ற பொற்பாத்திரமுமாம். வெண்திங்கள் என்றது - உதித்த சிலநேரத்துக்குப்பின் வெண்மை நிறமே புலப்படலாலும், இயற்கையில் வெண்ணிறமேயுள்ளதனாலுமாம். பெருந்திண் நெடு மால் வரை என்ற சொற்றொடர் - சிறந்தவலிய உயர்ந்தபெரியமந்தரமலை என்றும் பொருள்படும். மணித்தாம்பு-உறுதியுள்ள கயிறு: அழகிய கயிறென்றும் மாணிக்கத்தோடுகூடிய கயிறென்றும் உரைக்கலாம். இரண்டாமடியில், விரிந்த திவலை மணி விசும்பின் உதிர்ந்தமீனின்மேல் விளங்க எனக் கூட்டி - (கடலினின்று) பரந்த நீர்த்துளிகள் கரிய ஆகாயத்தினின்று சிந்தின விண்மீன்களினும் பலவாய்விளங்க என்றும், உதிர்ந்தவிரிந்ததிவலை என மொழிமாற்றி - கடலினின்று சிதறிப்பரவினநீர்த்திவலைகள், ஆகாயத்து நக்ஷத்திர மண்டலத்து மேலுந்தெறித்து விளங்க என்றும் பொருள்கொள்ளலாம். ஆழி வெண்டிங்கள் - வட்டவடிவமாகிய சந்திரனென்றுமாம். வந்து-சொல்விழுக்காடு. பி-ம்:—[1] தாம்பால். [2] பொதிந்த. (632)

71\. வண்டா [1]யயனுன் மறைபாட மலர்ந்த தொருதா மரைப்போது
பண்டா லிலையின் மிசைக்கிடந்து பாரு நீரும் பசித்தான்போல்
உண்டா னுந்திக் கடல்பூத்த தோதக் கடலுந் தான்வேறோர்
வெண்டா மரையின் மலர்பூத்த தொத்த தாழி வெண்டிங்கள்.

(இ - ள்.) பண்டு - முற்காலத்திலே, ஆல் இலையின் மிசை கிடந்து - (பிரளயப்பெருங்கடலில்) ஆலிலையின்மேலே பள்ளிகொண்டு, பசித்தான்போல் - பசியடைந்தவன்போல, பார்உம் நீர் உம் - உலகங்களையும் கடல்களையும், உண்டான் - உட்கொண்டருளின திருமாலினது, உந்தி கடல் - நாபியாகிய கடலானது,—அயன் -பிரமதேவன், வண்டு ஆய் -வண்டையொத்து, (மேலேவீற்றிருந்து), நால் மறை பாட - நான்குவேதங்களையும் பாடாநிற்க, மலர்ந்தது - மலர்ந்ததாகிய, ஒரு தாமரை போது - ஒருசெந்தாமரைமலரை, பூத்தது - உண்டாக்கிற்று: (அதனைநோக்கி இனி), ஓதம் கடல்உம் - அலைகளையுடைய கடல்தானும், தான் வேறு ஓர் வெள்தாமரையின் மலர் பூத்தது ஒத்தது - தான் வேறொரு வெண்டாமரைப்பூவைப் பூத்ததையொத்திருந்தது, ஆழி வெண் திங்கள் - கடலினின்று வெண்ணிறமான சந்திரன் (உதித்தது); (எ - று.)

அயன் வண்டாய்ரீங்காரவொலிபோல நான்மறைபாடத் திருமாலின் திருவுந்திக்கடல் ஒருதாமரைமலரைப் பூத்ததைக் கண்டு, கருங்கடலும் தான் ஒருவெண்டாமரை பூத்ததுபோன்றது, கடலிற் சந்திரனுதித்த தென்க; தற்குறிப்பேற்றவணி. ஒருவர் ஒரு காரியத்தைச் செய்தால் பிறரும் அதனை விரும்பிச் செய்தலும், அங்ஙனஞ்செய்யும்போது சிறிதுவேறுபாடு காட்டுதலும் உலகத்தாரது தன்மை யாதலால், உந்திக்கடல்போலச் செந்தாமரை பூவாது இக்கடல் வெண்டாமரை பூத்ததென்றார். வண்டுக்கு ரீங்காரம் போலப் பிரமனுக்கு வேதங்களை முகங்களாற் பாடுதல். மலரின்நடுவில் வண்டு மொய்த்தல்போலப் பிரமன் பூவின் ஏகதேசத்தில் அடங்கிக்கிடந்தா னெனத் திருமாலினது நாபீகமலத்தின்

பெருமையைத் தெரிவித்தார். உந்தியை 'கடல்' என்றதனால், அந்த நாபியின் பெருமை விளங்கும். பாரையும் நீரையும் சோறுந் தண்ணீருமாகக் கொள்க. இவ்விரண்டும் மற்றைப் பூதங்கட்கு உபலட்சணமுமாம். 'பசித்தான்போல்' என்றதனால் கடவுளுக்குப் பசியில்லாமை பெறப்பட்டது. கலைநிறைந்த சந்திரமண்டலம், இதழ்விரிந்த வெண்டாமரைமலரையொக்கும். தாமரைபூப்பது நீர்நிலையிலாதலின், உந்தியைக் கடலென்றது. பி-ம்:—[1]அய்யனார். (633)

72.—இதுமுதல் மூன்றுகவிகள்-நிலாக்கற்றையின் வருணனை.

புள்ளிக் குறியிட் [1]டென [2]வொண்மீன் பூத்த வானம் [3]பொலி கங்குல், நள்ளிற் [4]சிறந்த விருட்பிழம்பை நக்கி[5]நிமிரு நிலாக்கற்றை, கிள்ளைக் கிளவிக் கென்னாங்கொல் கீழ்பாற் றிசையின் [6]மிசைவைத்த, வெள்ளிக் கும்பத் திளங்கமுகின் பாளை போன்று [7]விரிந்துளதால்.

(இ - ள்.) புள்ளி குறி இட்டு என - புள்ளிகளை அடையாளமாக இட்டாற்போல, ஒள் மீன்பூத்த-பிரகாசமான நட்சத்திரங்கள் விளங்கப்பெற்ற, வானம்-ஆகாயத்தினிடத்தே, பொலி - விளங்குகின்ற, கங்குல் நள்ளில் - இராத்திரியினது நடுப்பொழுதிலே, சிறந்த இருள்பிழம்பை-மிகுகின்ற இருட்கூட்டத்தை, நக்கி நிமிரும் -உண்டு சிறக்கின்ற, நிலா கற்றை-(சந்திரனது) நிலவின் தொகுதியானது,—கீழ் பால் திசையின் மிசை வைத்த - கிழக்குத்திக்கிலே மேலிடத்திலே வைக்கப்பட்ட, வெள்ளி கும்பத்து - வெள்ளிமயமானதொரு பூர்ணகும்பத்தின் பக்கலிலே யுள்ள, இள கமுகின் பாளை போன்று - இளமையான பாக்குமரத்தின் (வெண்ணிறமான) பாளையை யொத்து, விரிந்து உளது-பரவியுள்ளது; (இது), கிள்ளை கிளவிக்கு என் ஆம் கொல் - கிளிமொழிபோலும் மொழிகளையுடைய பிராட்டிக்கு யாதாய் முடியுமோ? (எ-று.)

சந்திரனுடைய நிலாக்கற்றை, வெள்ளிக் கும்பத்து நாட்டிய வெண்பாளைக்கமுகுபோலு மென்றார்; தற்குறிப்பேற்றவணி. பூரண கும்பம் வைத்துப் பாளைக்கமுகுநாட்டுதல், மங்களம். வெள்ளிக் கும்பம்-சந்திரனுக்கும், கமுகம்பாளை - நிலாக்கற்றைக்கும் ஒப்பு. புள்ளியைக் குறியிடுதல், உலக வியற்கை. நிலா இருட்பிழம்பை நக்குதல், தனது ஒளியாலென்க. 'என்னாங்கொல்' என்றது - மிக்கதுன்பத்தைச்செய்யும் என்பதுபட நின்றது. கிள்ளைக்கிளவி - உவமைத்தொகையன்மொழி. பி - ம்:—[1]அன. [2]வெண், பன். [3]பொதி, போல். [4]செறிந்த. [5]நிமிர்ந்த. [6]மேல். [7]விரிந்துள. இச்செய்யுளின்பின் சிலபிரதிகளில் "விரைசெய்" (75) என்றபாடல்; மற்றுஞ் சில பிரதிகளில் அது அடுத்தபாடலின் பின். (634)

73. வண்ண மாலைக் கைபரப்பி யுலகை [1]வளைந்த விருளெல்லாம், உண்ண வெண்ணித் தண்[2]மதியத் துதயத் தெழுந்த நிலாக்கற்றை, விண்ணு மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப், பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன் புகழ்போ லெங்கும் பரந்துளதால்.

(இ - ள்.) வண்ணம் மாலை கைபரப்பி - நிறமுள்ள மாலைப் பொழுதாகிய (தனது) கையை விரித்து நீட்டி, உலகை வளைந்த இருள் எல்லாம்-உலகத்தைச் சூழ்ந்துள்ள இருள்முழுவதையும், உண்ண எண்ணி - புசித்து உட்கொள்ளக்கருதி, தண் மதியத்து உதயத்து எழுந்த-குளிர்ந்த சந்திரனது உதயத்திலே வெளிப் புறப்பட்ட, நிலா கற்றை-நிலாவின் திரளானது,—விண் உம் மண் உம் திசை அனைத்துஉம் விழுங்கி கொண்ட-விண்ணுலகமும் மண்ணுலகமும் எல்லாத்திக்குகளுமாகியஉலகமுழுவதையும் (தன்னுடையதாக்கி) விழுங்கிவிட்ட, விரி நல்நீர் பண்ணை வெண்ணெய் சடையன் தன் புகழ்போல் - பரவிய நல்ல நீர்வளத்தையுடைய கழனிகளையுடைய திருவெண்ணெய்நல்லூரில்வாழ்கிற சடையப்ப வள்ளலினது கீர்த்திபோல, எங்குஉம் பரந்துஉளது—; (எ - று.)

இருள்தொகுதியாகிய அரக்கக்கூட்டம், மாலைக்காலமாகிய கையைப் பரப்பி உலகம்முழுவதையும் வளைத்துக்கொண்டது: அவ்விருள் முழுவதையும் ஒழிக்க எண்ணிய சந்திரனாகிய பெரு வீரனது நிலாக்கற்றையாகியபடைக்கலத்தொகுதி, சடையன்புகழ் போல எங்கும் பரந்ததென்பதாம்; ஏகதேசவுருவகத்தோடு உவமை யணி சேர்ந்து வந்தது. கீர்த்தியை வெண்ணிறமுடையதாக வருணித்தல் கவிசமயம். வண்ணமாலை - செக்கர்வானச்செந்நிறமும் இராப்போதின் கருநிறமுஞ் சேர்ந்தமாலை. பிம்:—[1] வளைத்த. [2] மதிய மதனுணிமிர்ந்த நெடுநிலா. (635)

74. நீத்த மதனின் முளைத்தெழுந்த நெடுவெண் டிங்களெனுந் தச்சன், [1] மீத்தன் கரங்க ளவைபரப்பி [2] மிகுவெண் ணிலவாம் வெண் சுதையாற், காத்த கண்ணன் மணியுந்திக் கமல நாளத் திடைப் பண்டு, பூத்த வண்டம் பழையதென்று புதுக்கு வானும் போன்றுள தால்.

(இ - ள்.) நீத்தம் அதனில் முளைத்து எழுந்த - கடல்வெள்ளத் திலே யுதித்து மேலெழுந்த, நெடு வெண் திங்கள் எனும் - பெரிய வெண்ணிறமுள்ள சந்திர னென்கிற, (நெடு) தச்சன் - சிறந்த சிற்பி யானவன், காத்தகண்ணன்-காத்தற்றொழிலையுடைய திருமாலினது, மணி உந்தி கமலம்-அழகிய நாபீகமலத்தினது, நாளத்திடை-நாளத் தினிடமாக, பண்டுபூத்த - முன்புதோன்றின, அண்டம் - அண்ட கோளமாகியவீடு, (இப்பொழுது), பழையது என்று - பழையதாய் விட்டதென்று, தன் கரங்கள அவை- தனது கிரணங்களென்கிற கை களை, மீ பரப்பி-மேலே பரவச்செய்து, மிகு வெள் நிலவு ஆம் வெள் சுதையால்-மிகுந்த வெள்ளிய நிலாவாகிய வெண்ணிறமுள்ள சுண் ணச்சாந்தினால், புதுக்குவான்உம்-(அதனைத் தான்) புதுப்பித்தலை யும், போன்று உளது-ஒத்துள்ளது, (உலகு எங்கும் நிலாக்கற்றை பரவினது); (எ - று.)

வீடு அழுக்கடைந்து பழமையானதாகத் தோன்றும்போது அதற்குச் சுண்ணம்படித்துப் புதுப்பிக்கும் உலகவழக்கத்தை யனுசரித்துத் திருமால் படைத்த இவ்வண்டமே பழமையானதா கத் தோன்றியது பற்றி அதனை முழுவதையும்சுதைகொண்டு புதுப்பிப்பதுபோலச் சந்திரனது நிலாக்கற்றை எங்கும் பரவிற்

றென்பதாம்; உருவகத்தை யங்கமாகக்கொண்டுவந்த தற்குறிப்பேற்ற வணி. புதுக்குவான் - வினையெச்சம், தொழிற்பெயர்ப் பொருளது. தச்சன் - தொழிலாளியென்ற பொருளில் வந்தது. நெடுந்தச்சன் - ஸர்வ சக்தனுகி நாராயணனுற் படைக்கப்பட்ட அண்டகோளமுழுவதையும் ஒருவீடுபோலக்கொண்டு தானொருவனே புதிதாக்கவல்ல ஆற்றலுடைய சிற்பியென்றவாறும். கரம் - கிரணம் கை என்ற இரு பொருளது; கரங்களாகிய கை என்று சிலேடையுருவகம். சுதை = ஸுதா: வடசொற்றிரிபு. கண்ணனென்பது. திருமாலின் ஓரவதாரப் பெயரன்றிக்கே திருநாமமாயிரத்தெட்டனு ளொன்றுமாம். 'உளது' என்பதற்கு, எழுவாய் வருவிக்க. பி - ம்:—[1] மீத்த, மீத்தண். [2] விரிந்த. (636)

75.—அப்போது தாமரை குவிய ஆம்பல் மலர்தல்.

விரைசெய் கமலப் பெரும்[1]போது விரும்பிப் புகுந்த[2] திருவினொடும்
குரைசெய் வண்டின் குழாமிரியக் கூம்பிச் சாம்பிக் குவிந்துளதால்
உரைசெய் திகிரி தனையுருட்டி யொருகோ லோச்சி யுலகாண்ட
அரச னொதுங்கத் தலையெடுத்த [3]குறும்பு போன்ற தரக்காம்பல்.

(இ - ள்.) (இங்ஙனஞ் சந்திரன் உதித்தபொழுது), விரை செய் பெரு கமலம் போது - வாசனையை வீசுகின்ற பூவிற்சிறந்த தாமரைமலரானது,—விரும்பி புகுந்த திருவினொடும் - விரும்பி(த் தன்னிடம்) வந்து சேர்ந்து வீற்றிருக்கிற திருமகளுடனே, குரை செய் வண்டின் குழாம் இரிய-ஒலித்தலைச்செய்கின்ற வண்டுகளின் கூட்டமும் (தன்னை விட்டு) நீங்கிப்போகும்படி, கூம்பி - இதழ்குவிந்து, சாம்பி - வாடி, குவிந்துளது-மூடிக்கொண்டுள்ளது; அரக்கு ஆம்பல் - செவ்வாம்பல் மலரானது,—உரை செய் திகிரிதனை உருட்டி-சிறப்பித்துச் சொல்லப்படுகிற (ஆஜ்ஞா) சக்கரத்தை (எங்குந்தடையில்லாதபடி) உருளச்செய்து, ஒரு கோல் ஓச்சி-ஒப்பற்ற செங்கோலைச் செலுத்தி, உலகு ஆண்ட-உலகமுழுவதையும் அரசாண்டுவந்த, அரசன்-சக்கரவர்த்தி, ஒதுங்க - ஒழிந்தமாத்திரத்தில், தலையெடுத்த—, குறும்பு - குறுநிலமன்னனை, போன்றது - போன்று மலர்ந்தது; (எ-று.)

சூரியன் அத்தமித்தவுடனே தாமரைகுவிதலும் ஆம்பல் மலர்தலுமாகிய இயல்பை வருணித்தார். ஒற்றைத்தேராழியை யுருட்டி ஒப்பற்ற கிரணத்தை வீசி உலகமுழுவதும் ஆட்கொண்ட சூரியன் ஒதுங்குதல் ஆம்பல் தலையெடுத்தற்குக் காரணமாகுமென்பது, பினனிரண்டடிகளில் விளங்கிற்று; இனி ஆம்பலாகிய குறுநிலமன்னனுக்குத் தாமரையை அரசனுகக் கூறுதலும் ஒன்று. குறும்பு - சிற்றூர்; குறும்பனுக்கு ஆகுபெயர். பி-ம்:—[1] போதில். [2] திருவோடும். [3] குறும்பர். (637)

76.—சந்திரனைப் பழிப்பது.

[1] நீங்கா மாயை யவர்தமக்கு நிற[2]மே தோற்றுப் [3]புறமேபோய்
ஏங்காக் [4]கிடக்கு மெறிகடற்கு மெனக்குங் கொடியை[5] யானுயே

ஓங்கா நின்ற விருளாய்வந் துலகை விழுங்கி மென்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி னிடையே யெழுந்த வெண்ணெருப்பே.

(இ - ள்.) ஓங்காநின்ற - மிகுகிற, இருள் ஆய்-இருளின் வடிவமாய், வந்து—, உலகை விழுங்கி - உலகமுழுவதையும் கவர்ந்து, மெல்மேல்உம் வீங்காநின்ற - மேலும்மேலும் விருத்தியடைகிற, கரு நெருப்பின் இடையே - கருநிறமுள்ளதொரு தீயினிடையிலே, எழுந்த - தோன்றிக் காணப்பட்ட, வெள்நெருப்பே - வெண்ணிறமுள்ளதொரு தீயே! நீங்கா மாயை அவர் தமக்கு - நீங்காதமாயையைச்செய்கிற அப்புருடோத்தமனுக்கு, நிறம்ஏ தோற்று-நிறத்தினால் தோல்வியடைந்து, புறம்ஏ போய் - (உலகத்திற்குப்) புறம்பாகச்சென்று, ஏங்கா கிடக்கும் - ஏங்கிக்கொண்டிருக்கிற, எறி கடற்கு உம் - அலைவீசுகிற கடலுக்கும், எனக்குஉம் - (காமவேதனையால் வருந்துகிற) எனக்கும், கொடியை ஆனாய் ஏ - (நீ) கொடுந்தன்மையுடையை யாயினையே! (எ - று.)

விரகநோய்கொண்ட பிராட்டி மேலுதித்த சந்திரனைநோக்கி நிந்திக்கின்றன ளென்க. பிரிந்தார்க்குத் தென்றல் சந்திரன் முதலிய காதல்நோயை மிகுவிக்கும் பொருள்கள் துயரத்தைவிளைத்தலால், அன்னார் அவற்றை வெறுத்துக்கூறுதல், இயற்கை. மிகக் கரியகுளிர்ந்த இருளிடையேதோன்றிய வெள்ளிய தண்ணியசந்திரமண்டலம் காதல்நோயால் வருந்துகிற தனக்கு வெப்பத்தை மேன்மேல்மிகுவித்தலால், 'கருநெருப்பினிடையே யெழுந்தவெண்ணெருப்பு' என்கிறாள். தன்விரகவேதனையைமிகுத்தும், கடலை ஓர் நிலையிலிருக்கவொட்டாது பொங்கச்செய்தும் அலைத்தலால், சந்திரனை 'கடற்கும் எனக்குங் கொடியையானாயே' என்றது. ஏ-இரக்கம். நீங்காமாயையவர்தம்க்கு நிறமே தோற்றுப்புறமேபோ யேங்காக் கிடக்கு மென்றதை, எனக்கும்என்பதனோடும் இயைத்து, இராமபிரானைக் கண்டதுமுதல் தனது மாமையிழந்து தனியிடத்துச் சீதையிரங்குவதனால் இங்ஙனங் கூறுகின்றாளென்க. விரகிகள் எதிர்ப்பட்ட பொருளையும் தம்மைப்போலவே யிருப்பனவாகக் கருதுதல் இயற்கையாதலால், கடலும் தன்னைப்போல் நிறந்தோற்று ஏங்கிக்கிடப்பதாகக் கூறுகின்றாள் பிராட்டி. சந்திரோதயமானமாத்திரத்தில் கடல்நீர் பொங்கிப் பேராரவாரஞ்செய்தலின், 'ஏங்காக் கிடக்கும் எறிகடல்' என்றது. ஏங்காக்கிடத்தல் என்பது-சிலேடையால் ஒலித்தல் ஏங்கிக்கிடத்தல் என்ற இருபொருளது. 'நீங்கா மாயையவர்' என்றது, தன் கண்ணெதிரிற் காணப்பட்டு உடனே மறைந்துநின்று தனனை வருத்துதலால். 'மாயையவர்தமக்கு நிறமே தோற்று' என்றது - கடலின்கருநிறத்தினும் இராமபிரானது திருமேனிநிறம் மிகக்கறுத்துள்ளதனால். ஒருவர்க்கு ஒருவிஷயத்தில் தோற்றவர் வெளியில் தனியிடத்திலே சென்று அழுதுகொண்டு கிடத்தல் இயல்பு;அங்ஙனம் கடல் கிடப்பதாகக் குறித்தாள். 'அவர்' என்றது-நெஞ்சறிசுட்டு. பி-ம்:—[1] நீங்காமாமையவர். [2] ஒவ்வாமல், என்றுன்னிப். [3] புறம்போமோ. [4] நின்ற. [5] ஆனாயோ. (638)

வேறு.

77.—இதுவும் அது.

கொடியை யல்லைநீ யாரையுங் கொல்கிலாய்
[1] வடுவி லின்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென் றாலெனைச்
[2] சுடுதி யோகடற் றோன்றிய திங்களே.

(இ - ள்.) கடல் தோன்றிய திங்களே-(குளிர்ந்த) சமுத்திரத்தினிடத்து உதித்த சந்திரனே! நீ—, கொடியை அல்லை-(இயற்கையிற்) கொடுந்தன்மையுடையாயல்லை: (அது எவ்வாறு தெரிகின்ற தென்னில்),—யாரைஉம் கொல்கிலாய்- (உலகத்தில்) எவரையுங் கொல்லுகிறாயில்லை யாகையால்: (அன்றியும் நீ), வடு இல்-குற்றமற்ற, இன் அமுதத்தொடுஉம்- இனிமையான அமிருதத்துடனும், பிடியின் மெல் நடை பெண்ணொடு(உம்) - பெண்யானையின் மெல்லிய நடையுடைய திருமகளுடனும், வந்தனை-பிறந்தாய்: என்றால்—, எனை சுடுதிஓ - ? (எ-று.)

'எறிகடற்கும் எனக்கும் கொடியையானாயே என்று யான் கூறினும், நீ எல்லோரையுங் கொல்லுந் தன்மையுடையையல்லை யாதலாற் கொடுந்தன்மையுடையாயல்லை; கடலினின்று தோன்றினவனாதலால், இயற்கையிற் குளிர்ச்சியோடு கூடினவன்: அமிர்தத்தோடு கூடப்பிறந்தவனாதலால் மரணத்தைத் தடுக்கவல்லவன்: பெண்ணோடுகூடப் பிறந்தவனாதலாற் பெண்ணிடத்து அன்புவைத்திருக்கத்தக்கவன்; அவ்வாறு இருக்க, நீ, பெண்ணாகிய என்னை வருத்துவது தகுதியோ?' என்கிறாள். அன்பில்லாதவனை நோக்கி, 'நீ ஆணொடுபெண்ணொடு பிறந்திலையோ?' என்றுகூறும் உலக வழக்கைப்பற்றி, 'பெணணொடுபிறந்தநீ என்னை வருத்தலாமோ?' என்கிறாள். இயற்கைக்குணம், தொழில், பிறப்பிடம், சேர்க்கை. உடன்பிறப்பு என்னும் இவை யொன்றிலுந் தீமையில்லாமையைச் சந்திரனுக்குக் கூறி, சுடுகின்றாயே யென்றது - பிறிதாராய்ச்சியணியாம். கொடியையல்லை - மென்மைத்தன்மையையுடைய பொருள்களுடன் பிறந்ததனால் இரக்கமுடையை. கொல்கிலாய் - அமுதத்துடன் பிறந்ததனால் உயிரைக் காப்பாற்றுவாய் என்று குறிப்புப் பொருள் காண்ப. [1] மடிவில் என்ற பாடத்துக்கு, மடிவு இல் - மரணமில்லாமைக்குக் காரணமான என்க. பி-ம்:—[2] சுடுதியால். (639)

78.—மூன்று பாடல்கள்–பிராட்டியினது காமவெப்பத்தைக் கூறும்.

மீது மொய்த்தெழு வெண்ணில வின்கதிர்
மோது மத்திகை மென்முலை மேற்பட
ஓதி மப்பெடை [1] வெங்கன லுற்றெனப்
போது மொய்த்தம ளிப்புரண் டாளரோ.

(இ - ள்.) மீது - ஆகாயத்தின்மேல், மொய்த்து எழு-நெருங்கியெழுகிற, வெள் நிலவின கதிர் - வெண்மையான சந்திரனது கிரண

மாகிய, மோது மத்திகை - அடிக்குந் தன்மையுள்ள சம்மட்டி, மெல் முலைமேல் பட—, (பிராட்டி),-ஓதிமம் பெடை வெம் கனல் உற்று என - பெட்டையன்னம்வெவ்வியநெருப்பினிடத்துப்பொருந்தினாற் போல, போது மொய்த்த அமளி புரண்டாள் - தாமரை மலர்கள் நெருங்கிநிறைந்த படுக்கையில் விழுந்துபுரண்டாள்; (எ-று.)

இதனால் சந்திரகாந்தியோடு மலர்ப்பஞ்சணைமெத்தையும் வெப்பந்தருந் தன்மை வெளிப்படுத்தப்பட்டது. தாமரைமலர்ப்படுக்கையில் பிராட்டி புரண்டதற்கு ஒப்புமையமையப் பெடையன்னம் நெருப்பினிடத்துப் பொருந்தியதுபோலு மென்று கற்பித்துக் கொண்டுகூறியது - தற்குறிப்பேற்றம். பி-ம்:—[1] வெம்பனல். (640)

79. நீக்க மின்றி நிமிர்ந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து [1] தளர்ந்து சரிந்தனள்
சேக்கை [2] யாகி மலர்ந்த செந்தாமரைப்
பூக்கள் [3] பட்டதப் பூவையும் பட்டனள்.

(இ - ள்.) நீக்கம் இன்றி - நீங்குத லில்லாமல், நிமிர்ந்த - (எங்கும்) பரவியுள்ள, நிலா கதிர் - சந்திரகிரணம், தாக்க-மேலேமோதுதலால், (பிராட்டி),—வெந்து - (உடல்) வெதும்பி, தளர்ந்து-(மனந்) தளர்ந்து, சரிந்தனள் - கீழ்விழுந்தாள்; சேக்கை ஆகி மலர்ந்த செம் தாமரைப்பூக்கள் - (அப்பிராட்டிக்குத்) தங்குமிடமாகி (அதனால் மகிழ்ந்தனபோல) விரிந்த செந்தாமரைமலர்கள், (அவ்விராத்திரி காலத்தில்), (சேக்கை ஆகி)-(அச் சீதைக்குத்)திருப்பள்ளிமெத்தையாய், பட்டது - (அவள்புரண்டபோது அவளது தேகதாபத்தால்) அடைந்த நிலையை, அ பூவைஉம் பட்டனள்-கிளிபோல் இன்சொற்களையுடைய அப்பிராட்டியும் அடைந்தாள்; (எ - று.)

மாலைப்போது சிறிது நேரமிருந்து நீங்கியதும், அதன்பின் வந்த இருளும் சந்திரன் வருமளவும் நின்று பின்னர் நீங்கியது: இந் நிலாவோ அவை போலவல்லாமல், அடிவானத்திருந்து மேலெழுந்து ஓங்கியது என்பாள் 'நீக்கமின்றி நிமிர்ந்த நிலாக்கதிர்' என்றாள். முன்னர்ச் சேக்கையாகி மலர்ந்த செந்தாமரைப்பூக்கள் இப்போது சேக்கையாகிப்பட்டது என்று, 'சேக்கையாகி' என்பது ஈரிடத்துக் கூடி வெவ்வேறு பொருள்பட அமைந்துள்ளது. தாமரைப்பூக்கள் பட்டதன்மை-கூம்பிச் சாம்பிப்பொலிவழிந்து வாடியொடுங்கியமை. பூவை - உவமையாகுபெயர்: நாகணவாய்ப்புள்ளுமாம். பி - ம்:—[1] கரிந்துசரிந்தன, சரிந்துதளர்ந்தன. [2] ஆக. [3] பட்ட. (641)

80. வாச மென்கல வைக்களி [1] வாரிமேற்
பூசப் பூசப் புலர்ந்து [2] புழுங்கினள்
வீச வீச [3] வெதும்பினண் மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ.

(இ - ள்.) மெல் முலை - மென்மையான தனங்களையுடைய பிராட்டி,—வாசம்-வாசனைப்பண்டஞ்சேர்ந்த, மெல் - மென்மையான, கலவை களி - கலவைச்சந்தனக்குழம்பை, வாரி - அள்ளியெடுத்து, மேல் பூச பூச - (தோழிமார்கள் தன்னுடம்பின்)மேற் பூசுந்தோறும்,

புலர்ந்து - (உடம்பு) வெதும்பி, புழுங்கினள்-தவித்தாள்; வீச வீச-(ஆலவட்டம் முதலியவற்றைக்கொண்டு) வீசுந்தோறும், வெதும்பினள் - வெப்பமடைந்தாள்; ஆசை நோய்க்கு - காமநோயைத் தீர்க்க, மருந்துஉம் உண்டு ஆம் கொல் ஓ—? (எ - று.)

சீதையினது தாபத்தைத் தணிக்கும்பொருட்டுத் தோழிமார் செய்யுஞ் சீதோபசாரங்கள்யாவும் அவளுக்குவெப்பத்தை வளர்த்தன என்பதாம்; பிறிதாராய்ச்சியணி யென்னும் விபாவனாலங்காரமாம். பிராட்டி மிக்கதாப மடைந்தா ளென்னுஞ் சிறப்புப்பொருளை 'ஆசைநோய்க்கு மருந்துமுண்டோ' என்னும் பொதுப்பொருளால் விளங்க வைத்தது - வேற்றுப்பொருள்வைப்பணி. ஆசை நோய்க்கு வேறு பரிகாரமில்லாமை-"நீருட், குளிப்பினுங் காமஞ்சுடுமே குன்றேறி, யொளிப்பினுங் காமஞ்சுடும்" என்பதனாலும் அறிக. மென்முலை - அன்மொழித்தொகை. இனி, 'பிராட்டி' என எழுவாய் வருவித்து, மென்முலை வெதும்பினள் என்பாருமுளர், பி - ம்:—[1]வாரிப்போய். [2]புழுங்கின. [3]வெதும்பின. (642)

81.—தோழிமார் பிராட்டிக்குச் செய்த உபசாரம்.

தாய ரிற்பரி சேடியர் தாதுகு
[1]வீய ரித்தளிர் [2]மெல்லணை மேனியில்
[3]காயெ ரிக்கரி ய[4]க்கரி யக்கொணர்ந்து
ஆயி ரத்தி னிரட்டி யடுக்கினர்.

(இ - ள்.) மேனியில் - (பிராட்டியினுடைய) திருமேனியிலே, காய் - கொதிக்கின்ற, எரி - காமாக்கினியினால், தாது உகு வீ - மகரந்தப்பொடிகள் சிந்தப்பெற்ற பூக்களைக்கொண்டும், அரி தளிர்-மெல்லிய தளிர்களைக்கொண்டும், (அமைக்கப்பட்டுள்ள), மெல் அணை -மென்மையான (அவளுடைய) படுக்கை மெத்தைகள், கரிய கரிய-கருகிக்கொண்டேயிருக்க [தீய்ந்துபோகுந்தோறும்], தாயரின் பரிசேடியர் - தாய்மார்கள் (தங்கள் குழந்தைகளிடத்துக்கொள்ளும்) அன்பைக்காட்டிலும் மிகுந்த அன்பைக்கொண்ட (பிராட்டியின்) பாங்கிமார், ஆயிரத்தின் இரட்டி கொணர்ந்து அடுக்கினர்-இரண்டாயிரம் படுக்கைமெத்தைகளை (ஒன்றன்பின் ஒன்றாக)க் கொண்டு வந்து மேல்மேலடுக்கி அமைத்துவந்தார்கள்; (எ - று.)

சேடியர் அன்போடு அடிக்கடி படுக்கைகளை மாற்றிக்கொண்டேயிருந்தார்க ளென்பதாம். 'ஆயிரத்தினிரட்டி' என்றது-மிகப் பலவென்னுமாத்திரையாய் நின்றது; "தெவ்வோ ரெழுபது கோடியுறும்" என்னுந் திருக்குறளிற் போல. இரட்டுதலையுடையது, இரட்டி: இரட்டுதல் - இரண்டாதல். தாயரின் - தாய்மார்போல என்றுமாம். அரி-செந்நிறமுமாம்: இனி, அரி தளிர்-அடர்த்தியையுடைய, அன்றி வண்டுகள் மொய்க்கின்ற, அல்லது பொன்னிறமான தளிர் என்க: ஒளியுள்ள தளிர் என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]மேயரி. [2]மெல்லியர். [3]காயெனக். [4]கொணர்ந்தாரவர். (643)

82.—கவிக்கூற்று: சீதைநிலை இவ்வாறாக, இனி, இராமபிரான் நிலையைச் சொல்வோமெனல்.

கன்னி [1] நன்னக ரிற்கமழ் சேக்கையுள்
அன்ன மின்னண மாயின [2] ளாயவள்
மின்னின் மின்னிய மேனி [3] கண் டானெனச்
சொன்ன வண்ணலுக் குற்றது சொல்லுவாம்.

(இ - ள்.) கன்னி நல் நகரில்-அழகிய கன்னியாமாடத்திலே, கமழ் சேக்கையுள் - வாசனைவீசுகிற பூம்பள்ளிமெத்தையில், அன்னம்-அன்னப்பேடுபோன்ற பிராட்டி, இன்னணம் ஆயினள்-இவ்வாறு வருந்துபவளானாள்; (இதுநிற்க: இனி), ஆயவள் - அப்பிராட்டியினது, மின்னின் மின்னிய மேனி - மின்னல்போல விளங்குந் திருமேனியை, கண்டான் என சொன்ன-பார்த்தா னென்று கீழ்ச்சொல்லப்பட்ட, அண்ணலுக்கு - இராமபிரானுக்கு, உற்றது-நேர்ந்தசெய்தியை, சொல்லுவாம் - சொல்லத் தொடங்குவாம் : (எ-று.)—அது மேற்காண்க.

நகர் - இடவாகுபெயராய், மாளிகையென்னும்பொருளைத் தந்தது; அக்கன்னியாமாடமொன்றே ஒருபெரியநகரம்போல இருந்ததென்னுங் கருத்தால், அதனை 'நகர்' என்றதாகவுமாம். பி - ம்:—[1] நன்மனையில். [2] அன்னவள், ஆன்றவள். [3] கண்டார். (644)

83.—விசுவாமித்திரன் முதலிய மூவரும் ஜநகராஜனால் எதிர்கொள்ளப்பட்டு அவன்காட்டிய மாளிகையில் தங்குதல்.

ஏகி மன்னனைக் கண்டெதிர் [1] கொண்டவன்
ஓகை யோடு மினிதுகொண் டுய்த்திடப்
போக பூமியிற் பொன்னக ரன்னதோர்
மாக மாடத் [2] தனைவரும் வைகினர்.

(இ - ள்.) அனைவர்உம்-(விசுவாமித்திரன் முதலிய) அம்மூவரும்,—ஏகி - (அரண்மனையினுள்ளே) சென்று, மன்னனை - ஜனகமகாராசனை, கண்டு - பார்த்து, அவன் - அவ்வரசன், ஓகையோடு உம் - மகிழ்ச்சியுடனே, எதிர்கொண்டு-எதிரில்வந்து உபசரித்து, இனிது - இனிமையாக, கொண்டு - அழைத்துக்கொண்டுபோய், (அதன்பின்), போக பூமியில் பொன் நகர் அன்னது - (நல்வினைப்பயனாகிய) இன்பத்தை யனுபவிக்கும் பதவிகளிற் (சிறந்த) பொன்மயமான அமராவதிபட்டணத்தைப் போலச் சிறந்ததான, ஓர் மாகம் மாடத்து - ஒரு பெரிய வானத்தையளாவிய மாளிகையிலே, உய்த்திட - செலுத்த, வைகினர் - தங்கியிருந்தார்கள்: (எ - று.)—போகபூமியிற் பொன்னகர் - போகபூமியிலுள்ள அழகிய கோயிலெனினுமாம். பி-ம்:—[1] கொண்டுபின். [2] அனையவர். (645)

84.—அங்குச் சதாநந்தமுனிவன் வருதல்.

வைகு [1] மவ்வுழி மாதவம் யாவுமோர்
செய்கை கொண்டு நடந்தெனத் தீதறு

மொய்கொள் வீரன் முளரியந் தாளினன்
மெய்கொண் [2]மங்கை யருண்முனி மேவினன்.

(இ - ள்.) தீது அறு மொய் கொள் வீரன் - குற்றமில்லாத வலிமையைக் கொண்ட [சிறந்த] வீரனை ஸ்ரீராமனது, முளரி அம் தாளினல் - செந்தாமரைமலர்போன்ற அழகிய திருவடித் தூளியால், மெய் கொள் மங்கை - (சாபவடிவமொழிந்து தனது) உண்மை வடிவத்தை யடைந்த அகலியாதேவி, அருள் - பெற்றருளின(குமாரனை), முனி-சதானந்தமுனிவன்,—வைகும் அ உழி -(அவர்கள்) தங்கியிருந்த அம்மாளிகையிடத்தில்,—மா தவம் யாஉம் ஓர் செய்கை கொண்டு நடந்து என - (உலகத்திலுள்ள) சிறந்த தவங்கள் முழுவதும் ஒரு மனிதவடிவத்தை யெடுத்துக் கொண்டு நடந்துவந்து சேர்ந்தாற்போல, மேவினன் - வந்தனன்;

கௌதம்முனிவனுக்கு அகலியையினிடந் தோன்றிய சதாநந்த முனிவன், விசுவாமித்திரன் முதலியோர் வருகையையறிந்து, அவர்கள் தங்கிய மாளிகையைச் சேர்ந்தனனென்பதாம். இந்தச் சதாநந்தன் - ஜனககுலபுரோகிதன். மாதவம்யாவும் ஓர்செய்கை கொண்டு நடந்தென முனி மேவினனென்க; இல்பொருளுவமை. வலிமைக்குக் குற்றம் - தோல்வி. பி - ம்:—[1]அவ்வழி. [2]நங்கை. (646)

85.–இராமனை வாழ்த்திச் சதாநந்தன் விசுவாமித்திரனருகு சார்தல்.

வந்தெ திர்ந்த முனிவனை வள்ளலும்
சிந்தை யார வணங்கலுஞ் சென்றெதிர்
அந்த மில்குணத் தா[1]னெடி தாசிகள்
தந்து [2]கோசிகன் றன்மருங் கெய்தினன்.

(இ - ள்.) வந்து எதிர்ந்த முனிவனை - (இங்ஙனம்) வந்து தோன்றிய அம்முனிவனை, வள்ளல்உம்-வரையாது அருள் செய்யும் இராமபிரானும், சிந்தை ஆர-மனம் மகிழ, வணங்கலும்-நமஸ்கரித்தவுடனே,—அந்தம் இல் குணத்தான்-எல்லையில்லாத நற்குணங்களையுடைய அச் சதானந்தமகாமுனிவன், ஆசிகள் நெடிது தந்து-(இராமனுக்கு) ஆசீர்வாதங்களை மிகுதியாகச் செய்து, சென்று எதிர்-(தன்னை) வந்து எதிர்கொண்ட, கோசிகன்தன் மருங்கு - விசுவாமித்திரனது அருகில், எய்தினன்—; (எ - று.)

இராமனைக்கூறியது - இலட்சுமணனுக்கும் உபலட்சணம். அப்போது இராமன் இலக்குமணனுடனே சதானந்தமுனிவனை வணங்க, அம்முனிவன் அவர்களை வாழ்த்திவிட்டு, தன்னை யெதிர்கொண்ட விசுவாமித்திரனது அருகிற் சேர்ந்தன னென்க. எதிர் சென்று ஆசிகள் தந்துஎன்று இயைத்து உரைப்பினுமாம். இங்கு 'வள்ளல்' என்றது - அகலிகைக்கு அருளினதைக் கருதி யென்னலாம். குணம் -மெய்யுணர்வு, அவாவின்மை, தூய்மை முதலியன. பி - ம்:—[1]எடுத். [2]மாமுனிகோசிகற்சாற்றுவான், கோசிகற் சார்வுறச் சாற்றுவான், கோசிகன்றன் மருங்கெய்தலும். (647)

86.—சதாநந்தன் விசுவாமித்திரனை நோக்கி முகமன் கூறுதல்.

கோத மன்றரு கோமுனி கோசிக
மாத வன்றனை [1]மாமுக நோக்கியிப்
போது நீயிவட் போதவிப் பூதலம்
[2]ஏது செய்த தவமென் றியம்பினன்.

(இ - ள்.) கோதமன் தரு கோ முனி - கௌதமமுனிவன் பெற்றருளிய சிறந்த இருடியாகிய சதானந்தன்,—மா தவன் கோசிகன்தனை மா முகம் நோக்கி - மிக்கதவத்தையுடைய அக்கௌசிக முனிவனது திருமுகத்தைப் பார்த்து, 'இபோது நீ இவண் போத - இப்பொழுது நீ இவ்விடத்து வரும்படி, இ பூதலம்-இந்த மிதிலா நகரத்தினிடமானது, செய்த தவம்—, ஏது - யாதோ?', என்று இயம்பினன்-என்று (உபசாரவார்த்தை) கூறினன்; (எ - று.)

"பாததூளிபடுதலா லிவ்வுலகம் பாக்கியஞ் செய்ததே" எனவும், "திரிதலாற் றவமுடைத்தித் தரணிதானே" எனவும், "கருதி நீ யெய்தற் கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில்" எனவும் பிறர் கூறியுள்ளவாறு சதாநந்தன் கூறினனென்க. பி-ம்:—[1]மாமுனி. [2]யாது. இதுவும், அடுத்த செய்யுளும் சில ஏட்டுப்பிரதிகளிலில்லை.

87.—விசுவாமித்திரன் கூறத்தொடங்குதல்.

பூந்தண் சேக்கைப் புனிதனை யேபொரு
வேய்ந்த கேண்மைச் சதானந்த [1]னென்றுரை
வாய்ந்த மாதவன் மாமுக நோக்கிநூல்
தோய்ந்த [2]சிந்தையன் கௌசிகன் [3]சொல்லுவான்.

(இ - ள்.) (இங்ஙனம் முகமன்கூறின) தண் பூ சேக்கை-குளிர்ந்த தாமரைமலராகிய ஆசனத்தையுடைய, புனிதனை ஏ-பரிசுத்தகுணமுள்ள பிரமதேவனையே, பொருவு ஏய்ந்த-உவமையாகப் பொருந்திய, கேண்மை - (எல்லாவுயிர்களிடத்தும்)நட்பையுடைய, சதானந்தன் என்று உரை-சதானந்தனென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற, வாய்ந்த மா தவன்-பலித்த மிக்க தவத்தையுடைய முனிவனது, மா முகம் நோக்கி-சிறந்த திருமுகத்தைப்பார்த்து, நூல் தோய்ந்த சிந்தையன் கௌசிகன் - சாஸ்திரங்களிலே முழுகினமனத்தையுடைய விசுவாமித்திரன், சொல்லுவான்-; (எ-று.)

பிரமன் - வேதமோதுதலிலும், நல்லொழுக்கத்திலும், பெருந்தவமுடைமையிலும், பிராமணர்க்குத் தலைமைபூணுதலிலும் முனிவனுக்கு உவமை. சதாநந்தனென்பதற்கு-மிகுதியான ஆனந்தத்தையுடையவனென்று பொருள்; கடவுளையே எப்பொழுதுந் தியானஞ் செய்துகொண்டு அதனாற் பரமானந்தமடைபவனென்பது கருத்து: சத ஆனந்தன் எனப்பிரிக்க; ஆனந்தம் - பெருமகிழ்ச்சி. நூல் தோய்ந்த சிந்தை - ஸகல சாஸ்திரங்களையும் முழுவதுமுணர்ந்த மனமென்றபடி. தோய்ந்த என்னுஞ் சொல்லுக்கு ஏற்ப, நூலைக் கடலாக் கொள்க. கேண்மை - அருள். பி - ம்:—[1]என்றெணும், என்றெனும். [2]சிந்தைக். [3]ஓதுவான். (649)

88.—சதானந்த முனிவனுக்கு இராமனது பெருமையை விசுவாமித்திரன் தெரிவித்தல்.

வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளருன்
இடித்த வெங்குரற் ருடகை யாக்கையும்
[1]அடுத்தென் வேள்வியு நின்னன்னை சாபமும்
முடித்தென் னெஞ்சத் திடர்முடித் தானென்ருன்.

(இ - ள்.) 'வடித்த மாதவ-(நூல்களில்) தெளிந்தெடுக்கப்பட்ட பெரிய தவத்தைச் செய்துள்ள சதானந்தமுனிவனே! கேட்டி-(யான் கூறுவதைக்) கேட்பாயாக; இ வள்ளல் தான்-வரையாதருளுந் தன்மையையுடைய இந்த இராமபிரான், இடித்த வெம் குரல் தாடகை யாக்கைஉம்-இடியைப்போல முழங்கிய பயங்கரமான கண்டத்தொனியையுடைய தாடகையென்னும் அரக்கியினது உடம்பையும், என் வேள்விஉம் - எனது யாகத்தையும், நின் அன்னை சாபம்உம் - உனது தாயான அகலிகையினது சாபத்தையும், அடுத்து - ஒன்றன்பின் ஒன்ருக, முடித்து - முடிவுசெய்து, என் நெஞ்சத்து இடர் முடித்தான் - எனது மனத்தினது துயரத்தை ஒழித்தவனுவன்', என்ருன்-என்று (கௌசிகமுனிவன) கூறியருளினன்; (எ-று.)

தாடகையின் யாக்கையை முடித்தல் - கொல்லுதல். வேள்வியை முடித்தல் - நிறைவேறச்செய்தல்; சாபத்தை முடித்தல் - ஒழியச்செய்தல்; இடரை முடித்தல் - நீக்குதல்: முடித்தலென்ற சொல் பலபொருளில் வந்தது- சொற்பின்வருநிலையணி. என் நெஞ்சத்திடர் என்றது-தாடகையாக்கை எனதுவேள்வி நின் அன்னை தன்சாபம் என்ற இவை மூன்றும் முடிவுருததனுல் ஆன வருத்தம். மிக்க நண்பினுல், சதாநந்தமுனிவனது அன்னை சாபம் முடிவுருதது, இந்த விசுவாமித்திரமுனிவனுக்கு நெஞ்சத்து இடரையுண்டாக்கிய தென்க. அடுத்தென் என்பதை அடுத்த என் என்பவற்றின் தொகுத்தல் எனக்கொண்டு - (தன்னைத் துணையாக) அடுத்தவனுகிய எனது என்றும் பொருளுரைப்பர். விசுவாமித்திரன் வந்ததையுணர்ந்த சனகராசன் சதாநந்தமுனிவனை முன்னிட்டு அவ் விசுவாமித்திரனையணுகி உபசரித்து அளவளாவியபின் இராமலட்சுமணரைப்பற்றி வினவ, அவன் அவர்களைப்பற்றித் தெரிவித்ததாக முதனூலிலுள்ளது. பி-ம்:—[1]அடுத்து. (650)

89.—உனதருளிருக்கையில் இவ்வீரரால் எதையுஞ் செய்யக்கூடுமென்று சதாநந்தன் கூறுதல்.

என்று கோசிகன் கூறிட வீறிலா
வன்ற போதனன் மாதவ நின்னருள்
இன்று தானுள தே[1]லரி தியாதிந்த
வென்றி [2]வீரர்க் கெனவும் விளம்பிமேல்.

இதுமுதல் நாற்பத்தொன்பது கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) என்று கோசிகன் கூறிட - என்று விசுவாமித்திரன் சொல்ல, ஈறு இலா வல் தபோதனன் - எல்லையில்லாத உறுதி

யான தவத்தையே செல்வமாகக்கொண்டுள்ள சதானந்தமுனிவன், (விசுவாமித்திரனை), 'மா தவ - மிக்க தவமுடையவனே! நின் அருள் - உனது கருணை, இன்று - இப்பொழுது, உளது ஏல் - (இக்குமாரர்களிடம்) இருப்பதானால் [இருப்பதனால் என்றபடி], இந்த வென்றி வீரர்க்கு - வெற்றியையுடைய வீரராகிய இந்த ராமலட்சுமணர்க்கு, அரிது - அருமையான காரியம், யாது - என்ன இருக்கின்றது? [ஒன்றுமில்லை]', எனஉம் விளம்பி - என்றுஞ்சொல்லி,—மேல் - பின்பும்,—(எ-று.)—"வள்ளறன்னை முகம்நோக்கி" என மேல் இயையும்.

இங்கு விசுவாமித்திரனை நோக்கி 'இன்று நின்னருளுளதேல் இந்த வென்றி வீரர்க்கு யாது அரிது?' என்று கூறியதற்கு ஏற்ப, 137-ஆஞ் செய்யுளில் இந்தச்சதாநந்தமுனிவன், இராமலட்சுமணரை நோக்கி "நீதிவித்தகன் றன்னருள் நேர்ந்தனிர்: யாது உமக்கு அரிது" என்று கூறுவது காண்க. [2]வீரற்கு என்ற ஒருமையான பாடம் - ஸ்ரீராமனுக்கு என்று பொருள்படும். இராமன் இன்னானென்பதையும் அப்பிரானது வீரச்செய்கை முதலியவற்றையும் சிவதனுசைப்பார்க்க வந்திருப்பதையும் சனகராசனுக்கு விசுவாமித்திரன் தெரிவித்தபின்பு, சதானந்தன், தனது தாயின் சாப விமோசனம் முதலியவற்றை விசுவாமித்திரனாலுணர்ந்ததும் ஸ்ரீராமனை நோக்கி 'விசுவாமித்திரனை முன்னிட்டு இங்கு வந்தது எனது பாக்கியமே; இம்முனிவனோ அளவிட முடியாத மகிமையுள்ளவன்' என்றுசொல்லி, அம்முனிவனுடைய வரலாற்றைக் கூறியதாக முதனூலி லுள்ளது. தபோதனன்-யாவருஞ் செல்வத்தை விரும்பிப் பாதுகாப்பதுபோலத் தான் தவத்தை விரும்பிப் பாதுகாக்கும் முனிவன். பி-ம்:—[1]அரியயாவையிவ். (651)

90.—விசுவாமித்திரனது சரிதையைக் கூறக்கருதிச் சதாநந்தன் இராமனது முகத்தைப் பார்த்தல்.

எள்ளில் பூவையு மிந்திர நீலமும்
அள்ளல் வேலையு மம்புத சாலமும்
விள்ளும் [1]வீயுடைப் பானலு [2]மேவுமெய்
வள்ள றன்னை மதிமுக நோக்கியே.

(இ - ள்.) எள் இல் பூவைஉம் - பழிப்பதற்கிடமில்லாத [மிகச் சிறந்த] காயாமலரையும், இந்திரநீலம்உம் - இந்திரநீலரத்தினத்தையும், அள்ளல் வேலைஉம் - குழைசேற்றோடுகூடிய கருங்கடலையும், அம்புத சாலம்உம்-மேகக்கூட்டத்தையும், விள்ளும் வீ உடை பானல்உம்-மலர்கிற பூக்களையுடைய நீலோற்பலத்தையும், மேவும்-(உவமையாகப்) பொருந்துகிற, மெய் - திருமேனியையுடைய, வள்ளல்தன்னை - இராமபிரானை, மதி முகம் நோக்கி - சந்திரமண்டலம் போன்ற திருமுகத்தைப் பார்த்து,—(எ-று.)—"என்றனன்" என மேல் 137-ஆங்கவியில் இயையும். பி-ம்:—[1]வீயடை. [2]போன்ற, ஏயும். இச் செய்யுள், சிலபிரதிகளி லில்லை. (652)

இனி, 46 கவிகள் - சதாநந்தன் கூறும் விசுவாமித்திர சரிதை:—

91.—விசுவாமித்திரன் அரசனாயிருந்தமை.

நறும லர்த்தொடை [1] நாயக நானுனக்கு
அறிவு றுத்துவென் [2] கேளிவ் வருந்தவன்
இறையெ னப்புவிக் கீறில்பல் லாண்டெலாம்
முறையி னிற் [3] புரந் தேயருண் முற்றினான்.

(இ - ள்.) நறு மலர் தொடை - வாசனைவீசுகிற பூக்களினாலாகிய மாலையை யணிந்த, நாயக - (யாவர்க்கும்) தலைவனான ஸ்ரீராமனே! நான் உனக்கு அறிவுறுத்துவென் - யான் உனக்கு (ஒரு செய்தியை)த் தெரிவிப்பேன்; கேள் - (அதனைக்) கேட்பாயாக! இ அரு தவன் - (பிறர்க்குச் செய்தற்கு) அரிய தவத்தைச் செய்துள்ள இக்கௌசிகமுனிவன், (ஆதியில்), புவிக்கு இறை என - பூலோகத்துக்கு ஒரு அரசனாகி, ஈறு இல் பல் ஆண்டு எலாம் - எல்லையில்லாத அநேகவருஷகாலமளவும், முறையினில் புரந்து - அரசநீதி முறைப்படி பாதுகாத்து, அருள் முற்றினான் - (எல்லாவுயிர்களிடத்தும்) கருணை மிகுந்திருந்தான்; (எ - று.)

ஆசிரியனது மகிமையைச் சீடன் உணரவேண்டுவது அவசியமென்ற கருத்தினால் வில்வித்தை முதலியவற்றில் ஸ்ரீராமனுக்கு ஆசிரியனான விசுவாமித்திரனது மகிமையைச் சதாநந்தன் இராமனுக்கு உணர்த்தலாயினனென்பர். நறுமலர்த்தொடை யெனப் பொதுப்படக் கூறியதனால், வெற்றிக்குரிய வாகைப்பூமாலையும் அரசர்குலத்துக்குரிய இயற்கைப்பூமாலையும் பெறப்பட்டன; "படையுங் கொடியும்" என்று தொடங்குந் தொல்காப்பியச்சூத்திரத்தில் 'தாரெனவே போர்ப்பூவும் அடையாளப்பூவும் அடங்கின' என உரைத்தவாற்றை அறிக. பி-ம்:—[1] நாதனைநோக்கி யொன்று. [2] நிற்கிவ்வருந்தவன். [3] புரிந்து. (653)

92.—அப்போது ஒருகால் விசுவாமித்திரன் வேட்டையாடிக் காடுசென்று வசிட்டனாச்சிரமஞ் சார்தல்.

அரசின் வைகி யறனி னமைந்துழி
[1] விரசு கானிடைச் சென்றனன் வேட்டைமேல்
உரைசெய் [2] மாதவத் தோங்கு வசிட்டனாம்
பரசு வானவன் பாலணைந் தானரோ.

(இ - ள்) (இங்ஙனம் இவன்),—அரசின் வைகி - அரசாட்சியிலே பொருந்தி, அறனின் அமைந்த உழி - தருமமுறைப்படி இருந்துள்ளபொழுதில், (ஒருநாள்), வேட்டைமேல் - வேட்டையாடுதலினிமித்தம், விரசு கானிடை சென்றனன்-நெருங்கிய வனத்தினிடத்தே போய், (அங்கு) உரைசெய் மா தவத்து ஓங்கு வசிட்டன் ஆம் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற மிக்கதவத்திலே சிறந்த வசிட்டனாகிய, பரசு வானவன்பால் (யாவராலும்) துதிக்கப்படுகிற தேவமுனிவனிடத்து, அணைந்தான்-சேர்ந்தான்; (எ - று.)

தரணிமுழுதுந் திரிவதாகக் கோலிச் சேனையோடும் விசுவாமித்திரன் பயணப்பட்டுப் பலதேசங்களையுஞ் சுற்றிக்கொண்டு வசிட்டமுனிவனுச்சிரமஞ் சேர்ந்தா னென்று முதனூல் கூறும். வேட்டை-துஷ்டமிருகங்களையும் பறவைகளையும் நாசப்படுத்துந் தொழில். பரசுவான என்று எடுத்து, துதிக்கும்பொருட்டு என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1] விரைசெய். [2] மாதவத்தோங்கு வசிட்டனை, நான்மறை மாதவத்தோங்கருன். (654)

வேறு.

93.—விருந்திடுமாறு கருதிய வசிட்டனுணையால் காமதேனு கௌசிகராசனுக்கு உணவுகளைச் சுரத்தல்.

அருந்ததி கணவன் வேந்தற் கருங்கடன் முறையி னாற்றி
இருந்தரு டருதி யென்ன விருந்துழி யினிது [1] நிற்கு
விருந்[2] தினி யமைப்பெ னென்னுச் சுரபியை விளித்து நீயே
சுரந்[3] தரு ளமிர்த மென்ன வருண்முறை [4] சுரந்த தன்றே.

(இ - ள்.) (அப்பொழுது), அருந்ததி கணவன் - அருந்ததிக்கு கொழுநனான வசிட்டமாமுனிவன், வேந்தற்கு - இந்தக்கௌசிகராசனுக்கு, அரு கடன் - (செய்தற்கு) அருமையான (செய்யவேண்டுங்) கடமைகளை, முறையின் ஆற்றி - கிரமமாகச்செய்து, இருந்து அருள் தருதி என்ன - '(இங்கே) வீற்றிருந்துகருணை புரிவாயாக' என்று சொல்ல,—இருந்த உழி - (கௌசிகன் அவ்வாறே அவ்விடம்) இருந்தபொழுது,—இனி நிற்கு விருந்து இனிது அமைப்பென் என்னு - 'இப்பொழுது உனக்கு விருந்துணவை இனிமையாகச் செய்விப்பேன்' என்று (வசிட்டன்) கூறி, சுரபியை விளித்து - (உடனே) காமதேனுவை அழைத்து, நீஏ அமிர்தம்சுரந்தருள் என்ன - 'அமிருதம் போலினிய உணவு முதலியவற்றை நீயே (இவற்காக இப்பொழுது) சுரந்திடுவாயாக' என்று கட்டளையிட,—(அத்தெய்வப்பசு), அருள் முறை-(வசிட்டன்) நியமித்தருளினபடியே, அன்றே - அப்பொழுதே, சுரந்தது - எல்லாப் பொருள்களையும்) கறந்திட்டது; (எ - று.)

அருந்ததி - வசிட்டர் மனைவி; கற்புநிலைமையில் மிகச்சிறந்தவள்; பாதிவிரத்தியத்திற்கு இவளையே எல்லா மகளிர்க்கும் உவமையெடுத்துக் கூறுவர். அருங் கடன் - அரசர்க்கு முனிவர் செய்யத்தகும் உபசாரங்கள். ஸுரபி-வடசொல்: இது-பாற்கடல் கடைந்தகாலத்து அதனினின்று தோன்றியது; வேண்டுவார் வேண்டும் பொருளனைத்தையும் உடனே சுரந்தளிப்பது: இப்பசுதானகவே வசிட்டமாமுனிவனிடம் வந்துசேர்ந்திருந்தது. அருள் தருதி-ஒருசொல்: இதில்,தா-துணைவினை.பி-ம்:—[1] நிற்கே. [2] இனிது. [3] அருடருதி. [4] சுரந்த. (655)

94.—அறுசுவையுணவையும் மலர்சந்தனங்களையும் காமதேனு சுரந்துதர, கௌசிகராசன் சேனையோடும் பெறுதல்.

அறுசுவைத் தாய வுண்டி யரசநின் னனிகத் தோடும்
பெறுகென[1] வளித்து வேந்தோ டியாவருந் துய்த்த பின்றை

[2] நறுமலர்த் தாரும் வாசக் கலவையு நல்க லோடும்
உறுதுயர் தணிந்து மன்ன[3]னுய்த்துணர்ந் துரைக்க லுற்றான்.

(இ-ள்.) (உடனே வசிட்டன் இக்கௌசிகனைநோக்கி), 'அரச—! அறு சுவைத்து ஆய உண்டி - ஆறுவகைப்பட்ட உருசிகளையுடைய இவ்வுணவுகளை, நின் அனிகத்தோடுஉம் - உனது சேனையிலுள்ள ஜனங்களுடனே, பெறுக - (நீயும்) பெற்று உண்பாயாக', என - என்றுசொல்லி, அளித்து - (காமதேனு சுரந்தவற்றையெல்லாம்) கருணையோடு கொடுத்து, வேந்தோடு யாவர்உம் துய்த்த பின்றை - கௌசிகமன்னனும் மற்றைச்சனங்களெல்லோரும் உண்டபின்பு, நறு மலர் தார்உம் - நன்மணத்தையுடைய பூமாலைகளையும், வாசம் கலவைஉம் - நறுமணமுள்ள கலவைச்சந்தனத்தையும், நல்கலோடுஉம் - (வசிட்டன் யாவர்க்குங்) கொடுத்தருளினவுடனே,—மன்னன் - இந்தவிசுவாமித்திரராசன், உறுதுயர் தணிந்து - மிகுந்த சிரமந் தீர்ந்து, உய்த்து உணர்ந்து - ஆலோசித்தறிந்து, உரைக்கல் உற்றான் - (வசிட்டனை நோக்கி ஒருவார்த்தை) சொல்லத் தொடங்கினான்; (எ - று.)—அதனை மேல் இரண்டு கவிகளிற் காண்க.

காமதேனு உணவு முதலியவற்றைச் சுரக்கவே, வசிட்டன் விசுவாமித்திரனுக்கும் அவனது சேனைகட்கும் அவற்றை யளித்தனனென்க, அறுசுவை - உப்பு, புளிப்பு, துவர்ப்பு, தித்திப்பு, கார்ப்பு, கைப்பு என்பன. உறுதுயர்-வழிநடையாலும் வேட்டைத்தொழிலாலும் நேர்ந்த இளைப்பு. பி-ம்:—[1] அளிப்ப. [2] நறைகமழ்மலரும். [3] மனத்து, உற்று. (656)

95.—இதுவும் அடுத்த கவியும்-கௌசிகன் 'இந்தச் சுரபியைத் தருக' என்ன, வசிட்டன் 'வந்தால் நீயே இட்டுக்கொள்' என்றதைத் தெரிவிக்கும்.

மாதவ வெழுந்தி லாய்நீ [1]வயப்புடைப் படைகட் கெல்லாம்
[2]கோதறு [3]மமிர்த மிக்கோ வுதவிய கொள்கை தன்னால்
தீதறு குணத்தான் மிக்க செழுமறை தெரிந்த நூலோர்
மேதகு பொருள்கள் யாவும் வேந்தருக் கென்கை தன்னால்.

(இ - ள்.) மாதவ - மிக்கதவத்தை யுடையவனே! நீ எழுந்திலாய் - (உனது இருப்பிடத்தைவிட்டு)நீ எழுந்திருந்தாயுமில்லை; (இப்படியிருக்கையில்), இ கோ-இந்தத்தெய்வப்பசு, கோது அறும் அமிர்தம்-குற்றமில்லாத நல்லுணவுகளை, வயம் புடை படைகட்கு எல்லாம்-வெற்றியையுடைய (எனது) பக்கத்திலுள்ள சேனைகளெல்லாவற்றுக்கும், உதவிய - கொடுத்த, கொள்கை தன்னால் - சிறப்புத்தன்மையுடைமையாலும், தீது அறு குணத்தால் மிக்க செழு மறை தெரிந்த நூலோர் [நூல் தெரிந்தவர்] - குற்றமற்ற நற்குணங்களா லுயர்ந்த சிறந்த வேதம்முதலிய சாஸ்திரங்களை அறிந்தவர்கள், மேதகு பொருள்கள் யாஉம் வேந்தருக்கு என்கை தன்னால்-மேன்மைபொருந்திய எல்லாப்பொருள்களும் அரசருக்கே யுரியனவென்று சொல்லுதலினாலும்,—(எ-று.)—இது முதல் மூன்று கவிகள் குளகம்.

நான்காமடியிற்கூறியது—" ரத்நஹாரீசபார்த்திவ : [சிறந்த பொருளைக் கொள்ளுதற்கு உரியவன் அரசன்]" என்கிற நியாயம். முன்னிரண்டடிகள் - அந்தக் காமதேனு இரத்தினம் [சிறந்த பொருள்] என்பதையும், பின்னிரண்டடிகள் - சிறந்த பொருளைக் கொள்ளுதற்கு உரியார் அந்தணரல்லர், அரசரே என்பதையும் தெரிவித்தன: இவ்விரண்டுஏதுக்களும் விசுவாமித்திரனால் அந்தப் பசு தனக்கேயுரிய தென்பதைக் காட்டக் கூறியன. மறைக்குச் செழுமை - அறம் பொருளின்பம் வீடென்னும் நாற்பயன்களையும் அளிக்கும்வன்மை. பி-ம்:—[1]வயமுடை. [2]கோதற. [3]அமுதத் தோடும். (657)

96. நிற்கிது தகுவ தன்று [1]னீடருஞ் சுரபி தன்னை
எற்கரு ளென்ற லோடு மியம்பலன் யாதும் பின்னர்
வற்கலை[2] யுடையென் யானே வழங்கலென் [3]வருவ தாகிற்
கொற்கொள்வே லுழவ நீயே கொண்டகல் கென்று[4] கூற.

(இ - ள்.) 'நிற்கு - உனக்கு, இது - இப்பசு, தகுவது அன்று -தகுதியுடையதன்று; ஆல் - ஆதலால், நீள் தரும் சுரபிதன்னை- சிறப்பு மிக்க காமதேனுவை, எற்கு அருள் - எனக்குக் கொடுத் திடுவாயாக,' என்றலோடும் - என்று (கௌசிகன் சொன்ன) மாத்திரத்திலே, யாதுஉம் இயம்பலன் - (வசிட்டன் சிறிதுநேரம்) ஒன்றுஞ் சொல்லமாட்டாதவனாய், பின்னர்-பின்பு, 'கொல் கொள் வேல் உழவ - (பகைவர்க்கு) அச்சந்தருதலைக் கொண்ட வேலாயுதத் தையுடைய வலிய அரசனே! வற்கலை உடையென் யான்ஓ - மரவுரியை ஆடையாகவுடைய முனிவனாகிய நானே, வழங்க லென்-(இதனை உனக்குக்) கொடுக்கும் உரிமையுடையேனல்லேன்; வருவது ஆகில்-(அது உன்னிடம்) வருவதானால், நீஏ கொண்டு அகல்க-நீயே அழைத்துக்கொண்டு போவாயாக', என்று கூற - என்று சொல்ல,—(எ-று.)—"பார்த்திபன்...பிணித்தனன்" என வருங் கவியோடு குளகமாக இயையும்.

இத்தகைய சிறப்பையுடைய பசு அரசனாகிய தன்னிடத்து இருந்தால் அதனைக்கொண்டு தான் மிக்கபயனை யடையலாம் என்று கருதின பேராசையால் இங்ஙனங் கௌசிகன் தருமாறுகேட்க, கௌ சிகனது ஆசைப்பெருக்கத்தை நோக்கி வெறுப்பினால் முன்னர் வசிட்டன் யாதும் பேசாதவனானான். காமதேனு தானாகவே வசிட்ட னிடம் வந்து சேர்ந்ததாகலின், அதனைப் பிறர்க்குக்கொடுக்கும் அதி காரம் அவனுக்கு இல்லையாயிற்று: அன்றியும், வற்கலையுடை யென் யானே வழங்கலென்' என்றதனால், முனிவர்க்கு அரசர் பசு முதலியபொருள்களைக் கொடுத்திடுவது மரபே யொழிய, முனிவர் அரசர்க்குக் கோதானஞ்செய்வது தக்கதன் றென்ற கருத்தைக் குறிப்பாகத் தெரிவித்தான். விசுவாமித்திரன் தான் வேண்டிய பொருள்களையெல்லாந் தருவதாகவும் இந்தக்காமதேனுவை மாத்தி ரம் தனக்குக்கொடுத்துவிடுமாறும் மிகவும் நெருக்கிப் பலபடச்சொல் லிக் கேட்கவும், வசிட்டமுனிவன் இசையாது நிற்க, கௌசிகன் தானேவலியக் கவரத்தொடங்கின னென்று முதனூலி லுள்ளது.

கொல் கொள் வேல் எனப்பிரித்து, கொலைத்தொழிலைக் கொண்ட வேலென்றும், கொல்லனது உலைக்களத்திற் சமைக்கப்பட்ட வேலென்றும், பொருள்கொள்ளலாம். வேல் உழவன்-பகைவரது உடம்பாகிய விளைநிலத்தைத் தனது வேலாயுதமாகிய கலப்பையைக்கொண்டு உழுது போராகிய பயிரைச் செய்து வெற்றியாகிய பயனை விளைப்பவனென்றபடி. ஆல்-ஆதலால் என்பதன் விகாரம். வற்கலை - வல்கலா, வடசொல். யானோ, ஓ-இழிவுசிறப்பு. அகல்கென்று - விகாரம். பி - ம்:—[1]நீடிருஞ், நீளருஞ். [2]உடையோன். [3]வருமது. [4]சொன்னான், கூறு. (658)

97.—காமதேனுவை விசுவாமித்திரன் வலியக்கைப்பற்ற, அது வசிட்டனையணுகி 'நீ என்னைக் கோசிகனுக்குக் கொடுத்தாயோ?' எனல்.

பணித்தது புரிவெ னென்னாப் பார்த்திப னெழுந்து[1] பொங்கிப்
பிணித்தனன் சுரபி தன்னைப் பெயர்வுழிப் பிணியை வீட்டி
மணித்தடந் தோளி னாற்குக் கொடுத்தியோ மறைகள் யாவும்
கணித்தவெம் பெரும வென்னக் கலைமறை முனிவன் சொல்வான்.

(இ - ள்.) (அது கேட்டு), பார்த்திபன் - கௌசிகராசன், பணித்தது புரிவென் என்னா - (முனிவன்) சொன்ன காரியத்தைச்செய்திடுவேனென்று, எழுந்து - (இருப்பிடம்விட்டு) எழுந்து, பொங்கி-உற்சாகங்கொண்டு, சுரபி தன்னை - அந்தக்காமதேனுவை, பிணித்தனன்-கட்டிக்கொண்டு, பெயர்வுழி-புறப்படும் பொழுதில், (அந்தப் பசு), பிணியை வீட்டி-கட்டை யறுத்துவிட்டு, (வசிட்டனைநோக்கி), 'மறைகள் யாஉம் கணித்த எம்பெரும-வேதங்களெல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்த எமது தலைவனே! மணி தடதோளினாற்கு-அழகிய பெரிய தோள்களையுடைய விசுவாமித்திரனுக்கு, கொடுத்தியோ-(என்னைக்) கொடுத்திட்டாயோ?' என்ன - என்றுவினவ, கலை மறை முனிவன் - (வேதம்முதலிய) எல்லாக்கல்விகளையும் அறிந்த வசிட்டன், சொல்வான் - (உத்தரஞ்) சொல்பவனானான்; (எ - று.)—அது, மேற்கவியிற் காண்க.

சொன்னபடியே செய்வேனென்று விசுவாமித்திரன் அந்தக் காமதேனுவைக் கட்டி யிழுத்துக்கொண்டுபோகத்தொடங்க, அது அந்தப்பிணிப்பை யறுத்துவிட்டு வசிட்டனை யணுகி 'நீ என்னை இந்த அரசனுக்குக் கொடுத்தாயா?', என்று வினவ, முனிவன் கூறலாயின னென்க. 'மணித்தடந்தோளினாற்குக் கொடுத்தியோ மறைகள் யாவுங் கணித்த வெம்பெரும' என்றதனால், 'வேதம் வல்ல அந்தணன் அரசனுக்குக் கொடுத்தல் தகாது' என்பது, குறிப்பிக்கப்பட்டது. பணித்து அது என இரண்டு சொல்லாகப் பிரித்து, அதுபுரிவென் என்னாப்பணித்துஎன இயைத்து, உரைப்பாருமுளர். பெயர்வுழி யென்பதை-பெயர்வு உழி எனப்பிரிக்க: இனி, பெயர் உழி யெனப் பிரித்து, வகரமெய் - உடம்படுமெய்யல்லாதமெய் [மெய்யீற்றுடம்படுமெய்] எனினும் ஒக்கும். வீட்டுதல் - விடுவித்தல். மணி - கருவியாகுபெயராய், இரத்தினாபரணங்களு

மாம். வேதங்கள் அனந்த மாதலால், 'மறைகள் யாவும்' என்றார். கலைமறை - பலசாகைகளோடுகூடிய வேதம்: அஞ்ஞானத்தை ஒழிக்கும் வேதம் என்றுமாம். பி-ம்:—[1]போகி. (659)

98.—வசிட்டனுடைய மறுமொழியைக் கேட்டுக் காமதேனு தன்னுடல்மயிரைச் சிலிர்த்தல்.

கொடுத்திலென் [1]யானே [2]மற்றக் குடைகெழு வேந்தன் றானே
பிடித் [3]தகல் வுற்ற தென்னப் பெருஞ்சினங் கதுவு நெஞ்சோடு
[4]இடித்தெழு [5]முரச வேந்தன் சேனையை யானே யின்று
முடிக்குவென் காண்டி யென்னு [6]மொய்ம்மயிர் சிலிர்த்த தன்றே.

(இ - ள்.) 'யானே கொடுத்திலென் - (உனது உடன்பாடில்லாமல் உன்னை) நானே (கௌசிகனுக்குக்) கொடுத்தேனில்லை; அ குடை கெழு வேந்தன் தானே பிடித்து அகல்வுற்றது - வெற்றிக்குடை விளங்குகிற அவ்வரசன் தானே(உன்னைப்)பிடித்துக்கொண்டு போகத்தொடங்கினசெய்கை (இது)', என்ன - என்று (வசிட்டன்) விடைகூற,—(அதுகேட்டு அப்பசு), பெரு சினம் கதுவும் நெஞ்சோடு-மிகுந்த கோபம்மூண்ட மனத்துடனே, இடித்து எழும் முரசம் வேந்தன் சேனையை யானே இன்று முடிக்குவென் காண்டி என்னு - 'இடியையொத்து ஒலியெழுகிற பேரிகைகளையுடைய இவ்வரசனது சைனியத்தை நானே இப்பொழுது அழித்துவிடுவேன், பார்ப்பாய்' என்று (வசிட்டன் முன்னிலையிற்) சொல்லிச் சபதஞ்செய்து, அன்றே மொய் மயிர்சிலிர்த்தது - அப்பொழுதே நெருங்கிய தன்னுடம்பின் மயிர்களைச்சிலிர்த்தது; (எ-று)—மற்று-வினைமாற்று.

'வருவதாகில் கோர்வைக் கொண்டகல்க' என்று வசிட்டன் கௌசிகனிடம் கூறினனுதலால்,'நான் கொடுக்கவில்லை: வேந்தனே உன்னைக்கொண்டகல்வுற்றான்' என்ன, கௌசிகனது செருக்குக் கண்டு சினந்த அந்தச்சுரபி 'நானே அவன்சேனையை முடித்துவிடுகிறேன்' என்று சொல்லித் தன்னுடம்பு மயிரைச்சிலிர்த்த தென்க. அகல்வுற்றது - தொழிற்பெயர், வினைமுற்றின் தன்மைப்பட்டு நின்றது; மூன்றுமடியில் 'யானே' என்றது - பிறருதவியில்லாமலே என்றபடி. பி-ம்:—[1]யானு. [2]மற்றிக், மற்றைக். [3]அகல்வுற்றான். [4]இடித்தரு. [5]முரசின். [6]முனிந்துமெய். (660)

99.—பலவகை வீரர்கள் அச்சுரபியினிடந் தோன்றிக் கௌசிகன்படையை யழிக்க, அவன் புதல்வர் வெகுளுதல்.

பப்பர [1]ரெயினர் சீனர் சோனகர் முதல பல்லோர்
கைப்படை யதனி னோடுங் கபிலைமாட் [2]டுதித்து வேந்தன்
துப்புடைச் சேனை யாவுந் [3]தொலைவுறத் [4]துணித்த லோடும்
வெப்புடைக் கொடிய மன்னன் றனயர்கள் [5]வெகுண்டு மிக்கார்.

(இ - ள்.) (அங்ஙன்கபிலை மயிரைச்சிலிர்த்தவுடனே), பப்பரர்-பப்பரர்களும், எயினர் - வேடர்களும், சீனர்-சீனர்களும், சோனகர்-

சோனகர்களும், முதல-முதலான, பல்லோர்-பல மிலேச்ச கணங்கள், கை படைஅதனிேைடுஉம் - (தங்கள் தங்கள்) கைகளிற் கொண்டஆயுதங்களுடனே, கபிலை மாட்டு உதித்து-அப்பசுவினிடத்தே தோன்றி, வேந்தன் துப்புஉடை சேனை யாஉம்-அக்கௌசிக ராசனது வலிமையையுடைய சேனைகளெல்லாவற்றையும், தொலைவுஉற-அழியும்படி, துணித்தலோடுஉம்-வெட்டித்தள்ளினவளவிலே,—வெப்பு உடை கொடிய மன்னன் தனயர்கள் - கோபதாபமுடைய கொடியவர்களாகிய கௌசிகராசனது குமாரர்கள், வெகுண்டு மிக்கார்-கோபித்து நெருங்கி நிறைந்தார்கள்; (எ-று.)

அந்தச் சுரபியினுடைய சிலிர்த்த மயிரிலிருந்து பப்பரர் முதலிய வீரர்கள் தோன்றிக் கௌசிகனது சேனைகளை . மிச்சமில்லாம லொழித்தார்களாக, அதுகண்ட கௌசிகனது குமாரர் சினங்கொண்டு ஒருங்கேதிரண்டன ரென்க. பப்பரம், சீனம், சோனகம் என்பன - மிலேச்சஜாதிபேதங்கள்; அவர் வாழ்ந்த நாடுகள் ஐம்பத்தாறுதேசங்களில் வழங்குகின்றன. பி - ம்:— [1]யவனர்சீனரவந்திகர். [2]உதித்தவன்னுன். [3]துணித்தனர், தொலைவறத். [4]துணிதலோடும். [5]வெகுளி. (661)

100.—அடர்த்த கௌசிகன்புதல்வர் யாவரும் அந்த வசிட்டன் சினத்தா லிறத்தல்.

[1]சுரபியின் வலியி தன்ருற் சுருதிநூ லுணர வல்ல
வரமுனி வஞ்ச மென்னு [2]மற்றவன் சிரத்தை யின்னே
அரிகுது மென்னப் பொங்கி யடர்த்தன [3]ரடர வன்னுன்
எரியெழ விழித்த லோடு மிறந்தனர் குமர ரெல்லாம்.

(இ - ள்.) (சினம்மிக்க கௌசிககுமாரர்கள்), 'இது-இங்ஙனம் பசுவினிடத்து மிலேச்சர்தோன்றி நமதுசேனையை யழித்தது, சுரபியின் வலி அன்று - காமதேனுவினது வலிமையன்று; சுருதி நூல் உணரவல்ல வரன் முனி - வேதசாஸ்திரங்களை யறியவல்ல சிறந்தவனான முனிவனது, வஞ்சம்-மாயையேயாம்', என்னு-என்று சொல்லி, அவன் சிரத்தை-அம்முனிவனது தலையை, இன்னே அரிகுதும்-இப்பொழுதே அறுத்திடுவோம், என்ன-என்று, பொங்கி-சினந்தெழுந்து, அடர்த்தனர்-எதிர்த்துநெருங்கினுர்கள்; அடர-(அவ்வாறு) நெருங்க, (அப்போது), அன்னுன் - அவ்வசிட்டமுனிவன், எரி எழ விழித்தலோடும்-நெருப்புப்புறப்படும்படி விழித்துப் பார்த்தமாத்திரத்தில், குமரர் எல்லாம் - விசுவாமித்திரபுத்திரர் யாவரும், இறந்தனர் - மரித்தார்கள்; (எ-று.)

விசுவாமித்திரராசன் அந்தக் காமதேனுவைக்கட்டியிழுத்துக் கொண்டு போகத் தொடங்குகையில், அது அந்தக்கட்டை உதறிவிட்டு வசிட்டனிடஞ்சென்று முறையிட, அம்முனிவன் 'அரசனும் விருந்தாளியுமான இவனை என்னுடைய தவவலிமையால் தண்டிப்பது தகுதியன்று; மேலும், இவனுடைய சேனை கடல்போலப் பரந்திருக்கின்றதே; பிராமணனான யான் என்ன செய்யலாம்?' என்ருன்: காமதேனு, 'பிரமதேசசின்வலிக்கு முன்னே அரசனது

பலம் ஒருபலமோ! நீர் எனக்கு மகிமையைக் கற்பித்துக் கட்டளை கொடுத்தால் நான் இந்தச்சேனைகளையெல்லாம் நாசஞ்செய்து விடுகிறேன்' என்ன, முனிவனும்கட்டளை கொடுக்க, அந்தக் காமதேனு தன்னுடம்பின் பலபகுதிகளிலிருந்து பலவகை வீரரையுண்டாக்கி விசுவாமித்திரனது சேனைகளை யொழிக்க, அப்போது அவனுடைய புத்திரர் நூற்றுவர் வசிஷ்டனது யோகமகிமையால்தான் இங்ஙனம் விளைந்த தென்று அம்முனிவரன்மீது சினந்து செல்ல, வசிட்டன் தனது உங்காரத்தால் அவர்கள் யாவரையும் அழித்தன னென்று முதனூலிற் கூறியுள்ளது. பி - ம்:—[1] சுரபிதன். [2] மற்றிவன். [3] அடர்ப்ப. (662)

101.—அப்போது விசுவாமித்திரன் உக்கிரங்கொண்டு வசிட்டன்மேல் அம்புஎய்ய, அவன் தன் பிரமதண்டத்தை எதிருமாறு ஏவுதல்.

ஐயிரு [1] பதின்மர் மைந்த [2] ரவிந்தமை யரசன் [3] காணு
நெய் [4] பொழி கனலிற் [5] பொங்கி நெடுங்கொடித் தேர்க டாவிக்
கைதொடர் கணையி னோடுங் கார்முகம் வளைய வாங்கி
எய்தனன் முனியுந் தன்கைத் தண்டினை [6] யெதிர்க வென்றான்.

(இ - ள்.) (அப்பொழுது), அரசன் - இக்கௌசிகராசன்,— ஐ இரு பதின்மர் மைந்தர் அவிந்தமை - (தனது) புத்திரர் நூறுபேர் இறந்ததை, காணு - கண்டு, நெய் பொழி கனலின் பொஙகி - நெய்நிறையவார்க்கப்பட்ட நெருப்புப்போல மிகஉக்கிரமாக எழுந்து, நெடு கொடி தேர் கடாவி - உயர்ந்த துவசத்தையுடைய (தனது) இரதத்தை (முனிவனெதிரில்) செலுத்தி, கார்முகம் வளைய வாங்கி - வில்லையெடுத்து நன்றாகவளைத்து, கை தொடர் கணையினோடுஉம்-(தனது) கையினால் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக எடுத்து விரைவில் விடப்படுகிற அம்புகளால், எய்தனன் - (வசிட்டன்மீது) எய்யத்தொடங்கினான்; முனிஉம் - வசிட்டமுனிவனும், தன் கை தண்டினை-(தனது) கையிலுள்ள பிரமதண்டத்தை நோக்கி, எதிர்க என்றான் - '(நீ அவ்வாயுதங்களை) ஏற்றிடுவாய்' என்று நியமித்தான்; (எ - று.)

கணையினோடு, ஓடு - கருவிப்பொருளது. உம்மை-இசைநிறை. வளையவாங்குதல்-ஒருபொருட்பன்மொழி.பி-ம்:—[1] பத்தின். [2] அவிந்தனர். [3] காண. [4] சொரி. [5] காந்தி. [6] எதிர்மின். (663)

102.—விசுவாமித்திரனெய்த படைக்கலங்களையெல்லாம் பிரமதண்டம் விழுங்கிவிட, சிவனையடைந்து கௌசிகன் அஸ்திரம் பெறுதல்.

கடவுளர் [1] படைக ளீருக் கற்றன படைகள் யாவும்
விடவிட [2] முனிவன் றண்டம் விழுங்கிமேல் விளங்கல் காணு
வடவரை வில்லி தன்னை [3] வணங்கினன் வழுத்த லோடும்
அடலுறு படையொன் றீயா வன்னவ [4] னகன்று னன்றே.

(இ - ள்.) கடவுளர் படைகள் ஈறு ஆ - (சாதாரணபாணங்கள் முதல்) தேவர்களது அஸ்திரங்களிறுதியாக, கற்றன படைகள்யாவும் - (தான்) அறிந்து பழகிய ஆயுதங்களெல்லாவற்றையும், விட விட - (கௌசிகன்) பிரயோகித்துக்கொண்டேவர, முனிவன் தண்டம் - வசிட்டனது பிரமதண்டமானது, விழுங்கி - (அவற்றையெல்லாம்) உட்கொண்டு, மேல் விளங்கல் - மேன்மையாக விளங்குதலை, காணு - பார்த்து,—(கௌசிகன்), வட வரை வில்லி தன்னை - வடக்கின்கணுள்ள மகாமேருகிரியாகிய வில்லை(த் திரிபுர சங்காரகாலத்திற்) கொண்ட உருத்திரமூர்த்தியை, வணங்கினன் - (தியானித்து) நமஸ்கரித்து, வழுத்தலோடுஉம்-துதித்தமாத்திரத்திலே, அன்னவன்-அச்சிவபிரான், (பிரதியட்சமாகி), அடல் உறு படை ஒன்று ஈயா - வலிமைமிக்க ஒப்பற்ற அஸ்திரத்தைக் கொடுத்துவிட்டு, அகன்றான்-நீங்கினான்; (எ - று.)

படையொன்று-ரௌத்ராஸ்த்ரமென்க. இனி "கோசிகப்பெயருடைக்குலமுனித்தலைவன்...ஈசனிற் பெறுபடைக் கலங்கொடுத்தனை" என யுத்தகாண்டத்து மந்திரப்படலத்துவருவதற்குஏற்ப, 'படையொன்று' என்பதற்கு - ஒப்பற்ற படைக்கலங்கள் என்று பொருள் கூறினுமாம். தேவர்களும் தோத்திரப்பிரியரென்ப ஆதலால்,வழுத்தலோடும் படை ஈந்தருளினான். பி-ம்:—[1]படையீறாக. [2]வேந்தன. [3]வணங்கியே, வழுத்தியே. [4]அகறலோடும், துற்றலோடும். (664)

103.–கௌசிகன் பிரயோகித்த படையையுண்டு வசிட்டன் விளங்குதல்.

விட்டனன் படையை வேந்தன் விண்ணுளோ [1]ருலகையெல்லாஞ்
சுட்டன னென்ன வஞ்சித் துளங்கினர் முனியுந் [2]தோன்றிக்
கிட்டிய படையை யுண்டு [3]கிளர்ந்தனன் கிளரு மேனி
[4]முட்டவெம் பொறிகள் [5]சிந்தப் [6]பொருபடை [7]முரணதிற்றே.

(இ - ள்.) வேந்தன்-விசுவாமித்திரன், படையை-அந்த அஸ்திரத்தை, விட்டனன் - (வசிட்டன்மீது) பிரயோகித்தான்; விண் உளோர் - (அதனைக்கண்ட) தேவர்களும, (இப்படையால்), இவன் உலகை எல்லாம் சுட்டனன் என்ன—, அஞ்சி துளங்கினர்-பயந்து நடுங்கினார்கள்; (ஆயினும்), முனி உம்-வசிட்ட முனிவனோவெனில், தோன்றி - எதிரில்வந்து, கிட்டிய படையை உண்டு - சமீபித்து வந்த அந்த அஸ்திரத்தை(த் தான்) உட்கொண்டு, கிளரும் மேனி முட்ட வெம் பொறிகள் சிந்த-(அந்த அத்திரத்தின்சுவாலையினால்) விளங்குகிற (தனது) உடம்புமுழுவதிலுமிருந்து வெவ்விய நெருப்புப்பொறிகள் வெளிப்பட, கிளர்ந்தனன் - (பிரமதேஜசோடு அந்த அத்திரச்சுடரையுங்கொண்டு) மிக்குவிளங்கினான்; பொருபடை முரண் அது-(பிறரையெல்லாம்) போர்செய்து அழிப்பதற்கு உரிய ருத்திராஸ்திரத்தினது அவ்வலிமை, இற்று-(வசிட்டன்திறத்தில்) இங்ஙனாயிற்று; (எ - று.)—ஈற்றேகாரம்-தேற்றம்: இரக்கமுமாம்.

தனது சேனையும் புத்திரரும் நாசமாய்விட்டது கண்ட கோசிகன் உற்சாகங் குன்றி அந்தப்போரில் இறவாதுதப்பின தன் புத்

திர னொருவனுக்குப் பூமியைப் பர்துகாக்குமாறு பட்டங்கட்டிவிட்டுத் தான் இமயமலையைச் சார்ந்து சிவபிரானை நோக்கிக் கடுந்தவம் புரியலானான்: சிலகாலஞ் சென்றபின் உருத்திரமூர்த்தி பிரத்யட்சமாகி வேண்டிய வரத்தைக் கேட்குமாறு அருள, வில்வித்தைகள் சாங்கமாக அவற்றிற்கு உரிய ரஹஸியங்களுடனே தனக்குத் தோன்றுமாறும், எல்லா அஸ்திரங்களும் தோன்றுமாறும் மற்றுமுள்ள தன் கருத்துக்கள் முற்றுமாறும் திருவருள்புரியும்படி வேண்டி அந்தக் கடவுளின் அருளைப் பெற்றான்: பின்பு கௌசிகன் அளவிடமுடியாத செருக்குடனே வசிஷ்டனுடைய ஆச்சிரமத்துக்குச் சென்று பலவகைப்படைகளைப் பிரயோகிக்க, வசிஷ்டமுனிவனும் சினங்கொண்டு பிரமதண்டத்தைக் கையிலேந்தி முன்னே நிற்க, கௌசிகன் பலதெய்விகஅஸ்திரங்களையெல்லாம்பிரயோகிக்கவும், அவற்றையெல்லாம் பிரமதண்டம் விழுங்கிவிட்டது: இறுதியில் விசுவாமித்திரன்பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்க, அதையும் தனது பிரமதண்டத்தாலடக்கிவிட்டு வசிஷ்டன்உக்கிரங்கொண்டு நின்றான்: முனிவர்களனைவரும் வசிட்டனைப் புகழ்ந்து துதிக்க, வசிட்டமுனிவன் சினந்தணிந்தனனென்று முதனூலிற் கூறியுள்ளது. சுட்டனன்-தெளிவுபற்றிய காலவழுவமைதி. இற்று-முற்று: இனி, இற எனச் செயவெனெச்சமாத்திரித்து, தனது அந்த அஸ்திரத்தினது வலிமை அழியுமாறு வசிட்டன் அதனை உண்டிளர்ந்தான் எனினுமாம். பி - ம்:—[1]படையை. [2]வந்து. [3]விழுங்கினன், விளங்கினன். [4]முட்டி. [5]சிந்தி. [6]பெரும். [7]முரணிதிற்ற, முரணதற்ற, முரணகற்ற. (665)

104.—பிரமதேஜஜசைப் பெறக் கௌசிகன் தவத்திற்குச் செல்லல்.

கண்டன னரசன் [1]காணுக் கலை[2]மறை முனிவர்க் கல்லால்
திண்டிறல் [3]வலியுந் தேசு முளவெனல் சீரி [4]தன்றால்
மண்டல முழுதுங் காக்கு மொய்ம்பொரு [5]வலி[6]யன் றென்னு
ஒண்டவம் [7]புரிய வெண்ணி யும்பர்கோன் றிசையை யுற்றான்.

(இ - ள்.) அரசன்-இந்தக் கௌசிகராசன், கண்டனன்-(அந்த ருத்திராஸ்திரமும் வீணாய்விட்டதைப்) பார்த்தான்; காணு-பார்த்து, 'திண் திறல் வலிஉம்-மிகவும் அதிகமான வலிமையும், தேசுஉம் - ஒளியும், கலை மறை முனிவர்க்கு அல்லால் - வேதசாஸ்திரங்களையறிந்த முனிவர்களுக்குமாத்திர முள்ளனவே யல்லாமல், (பிறருக்கு), உள எனல் - உள்ளன என்று கருதுதல், சீரிது அன்று-அழகுடையதல்ல; மண்டலம் முழுதுஉம் காக்கும் மொய்ம்பு - பூலோகமுழுவதையும் அரசாளுகின்ற வலிமை, ஒரு வலி அன்று - (முனிவர்வலிமைக்குமுன்) ஒருவலிமையாகமாட்டாது,' என்னு-என்று நிச்சயித்தறிந்து, ஒள் தவம் புரிய எண்ணி - ஒளியுள்ளதான [சிறந்த] தவத்தைச் செய்யநினைத்து, உம்பர் கோன் திசையைஉற்றான் - தேவராசனான இந்திரனது திக்காகிய கீழ்திசையை அடைந்தான்; (எ-று.)

அரசராற்றலினும் முனிவராற்றல் மிகச்சிறப்பையுடையதென் பதைத் தெளிவாக அறிந்த கௌசிகன், அந்த ஆற்றலைத் தான் பெறக்கருதித் தவஞ்செய்யப்போனானென்பதாம். முதன் முதலில் தவஞ்செய்யுமாறு கௌசிகன் சென்றது தென்திசையென்று முத னூல் கூறும். "ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து வேந் தனும் வேந்து கெடும்" என்னுந்திருக்குறளினாலும், அரசவலிமை யினுந் தவவலிமையுடையார்க்குள்ள சிறப்புத்தெள்ளிதின் விளங் கும். திறல் வலி - வெற்றிக்குக்காரணமான வலிமையுமாம். ஆல் - தேற்றம்: அசையுமாம். பி-ம்:—[1]கண்ணால். [2]மறையவர்கட்கு. [3]வலிய. [4]அல, அம்மா. [5]வலன். [6]இன்று, நன்று. [7]புரிவனென்ன. (666)

105.—கௌசிகன் புரியுங் கடுந்தவத்தைக் கெடுக்குமாறு இந்திரன் திலோத்தமையை யேவுதல்.

மாண்டமா தவத்தோன் செய்த[1]வலனையே மனத்தி னெண்ணிப்
பூண்டமா தவத்த னாகி யரசர்கோன் பொலியு நீர்மை
காண்டலு மமரர் வேந்தன்[2]றுணுக்குறு கருத்தி னோடும்
தூண்டின னரம்பை மாருட் டிலோத்தமை யெனுஞ்சொன்மானை.

(இ - ள்.) (இவ்வாறு), அரசர் கோன் - அரசர்களுக்கு அரச னாகிய கௌசிகன், மாண்ட மா தவத்தோன் செய்த வலனை ஏ மனத்தின் எண்ணி - மாட்சிமைப்பட்ட பெருந்தவத்தையுடைய வசிட்டமுனிவன் பெற்ற வெற்றிச்செய்கையையே மனத்தி லிடை விடாது சிந்தித்து, பூண்ட மா தவத்தன் ஆகி - (தான்) மேற் கொண்ட சிறந்த தவச்செய்கையை யுடையவனாய், பொலியும்- விளங்குகிற, நீர்மை- தன்மையை, காண்டலும்-பார்த்தவளவிலே,- அமரர் வேந்தன் - தேவர்களுக்கரசனாகிய இந்திரன்,—துணுக்குறு கருத்தினோடும்-அச்சம்மிகுந்த கருத்துடனே, அரம்பைமாருள் திலோத்தமை எனும் சொல் மானை - அரம்பைமுதலிய தெய்வப் பெண்களுள் திலோத்தமை யென்னும் பெயருள்ள புகழைக்கொண்ட மான்போன்ற பார்வையையுடையபெண்ணை, (அக்கௌசிகனது தவத்தைக் கெடுத்தற்பொருட்டு) தூண்டினன்—; (எ - று.)

வசிட்டன் தன்னைவென்று தோற்கடித்ததனால் அவமானம் மனத்தையுறுத்திக்கொண்டிருக்க, கௌசிகன் க்ஷத்திரியதேஜஸை வெறுத்துப் பிரமதேஜஸைப் பெறும்பொருட்டுத் தேவேந்திரனும் துணுக்குறுமாறு கடுந்தவம் புரிய, அவன் தவத்தைக் கெடுக்கு மாறு இந்திரன் திலோத்தமையையேவினனென்பதாம். இந்திரன் மனத்திடுக்கிடுதற்குக் காரணம், மிக்கதவத்தைச் செய்பவரது கபா லத்தினின்றும் ஒருவகைத்தீ மேலெழுந்து தன்னுலகத்தையெரி க்கு மென்னு மச்சம். சொல்-புகழ்; "சொன்மாண்பமைந்தகுழூ" எனச் சிந்தாமணியிலுங் காண்க. பி-ம்:-[1]அதனை. [2]வணக்குறு.(667)

106.—கௌசிகன் அப்போது சிற்றின்பத்து மூழ்கிப் பிறகு வெறுத்தல்.

அன்னவண் மேனி காணு வனங்கவேள் சரங்கள் பாயத்
தன்னுணர் வழிந்து காதற் சலதியி னழுந்தி வேந்தன்

பன்னரும் பகறீர் வுற்றுப் [1] பரிணதர் [2] தெரித்த நூலின்
நன்னய முணர்ந்தோ [3] னுகி நஞ்செனக் கனன்று நக்கான்.

(இ - ள்.) வேந்தன்-கௌசிகன்,—அன்னவள் மேனி காணு - அந்தத் திலோத்தமையின் உடம்பழகைக் கண்டு, அனங்க(ன்) வேள் சரங்கள் பாய - மன்மதனது பாணங்கள் (தன்மேற்) படுதலால், தன் உணர்வு அழிந்து-தனது நல்லறிவுகெட்டு, காதல் சலதியின் அழுந்தி - (அவளது) காமவின்பமாகிய கடலிலே மூழ்கி, பன்ன அரு பகல் தீர்வுற்று - சொல்லுதற்கு அருமையான [அநேக] நாள்கள் கழியப்பெற்று, (அதன்பின்), பரிணதர்தெரித்த நூலின் நல் நயம் உணர்ந்தோன் ஆகி - புத்திமான்கள் ஆராய்ந்துகூறின சாத்திரங்களின் நல்ல பொருளை அறிந்தவனுய், நஞ்சு என கனன்று - (அவ்வின்பத்தை) விஷத்தைப்போல வெறுத்து, நக்கான் - சிரித்தான்; (எ-று.)

திலோத்தமையைக் கண்டதும் விசுவாமித்திரன் காமவசப் பட்டு அவளுடன் சிற்றின்பம் அனுபவித்துப் பிறகு ஒருபாற் சினமும் ஒருபால் தனது செய்கையில் வெறுப்புங்கொண்டு சிரிக்க லாயினனென்க. சிரித்தற்குக்காரணம்-தான் செய்யக்கூடாத ஒழுக் கத்தைச் செய்துவிட்டதைக் கருதியது. பரிணதர்-அறிவின்பகுதி வதசையை யடைந்தவர். பி-ம்:—[1] பருணிதர். [2] தெரிந்த. [3] ஆக. ()

107.—திலோத்தமையைச் சபித்திட்டுக் கௌசிகன் தவம்புரியத் தென்திசை சார்தல்.

விண்முழு தாளி செய்த வினையென வெகுண்டு நீபோய்
மண்மக ளாதி யென்று மடவர றன்னை யேவிக்
கண்மலர் [1] சிவப்ப வுள்ளங் கறுப்புறக் கடிதி னேகி
எண்மரின் [2] வலிய னுய வெமன்றிசை தன்னை யுற்றுன்.

(இ - ள்.) (இங்ஙனம் தான் தவம் அழிந்தது), விண் முழுது ஆளி செய்த வினை-தேவலோகமுழுவதையும் அரசாள்பவனுகிய இந்திரன் செய்த வஞ்சனைச் செய்கையினுலாகும், என - என்று (அறிந்து), வெகுண்டு - கோபங்கொண்டு, நீ போய் மண் மகள் ஆதி என்று மடவரல்தன்னை ஏவி - 'நீ பூலோகத்திற் சென்று மானுட மகளாகப்பிறப்பாய்' என்றுசொல்லி அத்திலோத்தமையைச் சபித் திட்டு,—கண் மலர் சிவப்ப - தாமரைமலர்போலும் (தன்) கண்கள் (கோபத்தாற்) செந்நிறமடையவும், உள்ளம் கறுப்பு உற - மனம் கோபத்தையடையவும், கடிதின் ஏகி-(அவ்விடத்தைவிட்டு) விரை வாகச் சென்று, எண்மரின் வலியன் ஆய எமன் திசைதன்னை - அஷ்டதிக்குப் பாலகர்களுள் வலிமையுடையவனுன யமனது திசையை, உற்றுன்-அடைந்தான், (கௌசிகன்); (எ-று.)

தனது தவம் நிலைகுலைதற்குக்காரணமான திலோத்தமையைச் சபித்திட்டு, கௌசிகன் அத்திசையைவிட்டுத் தென்திசையில் தவம்புரியுமாறு சென்றனனென்க. தென்திசைப்பாலகன், யமன், மடவரல் - இளமைப்பருவத்தின் வருகையையுடையவள்: வேற்று

மைத்தொகையன்மொழி. எண்மர் - தொகைக்குறிப்பு. பி - ம்:—[1]சேப்ப. [2]வலிதென்றெண்ணும் யமன்றிசையதனை. (669)

108.—அப்போது திரிசங்கு வசிட்டனைக் கிட்டி 'இச்சரீரத்தோடு சுவர்க்கஞ்செல்ல அருள்' என்று வேண்ட, அவன் மறுத்தல்.

தென்றிசை யதனை நண்ணிச் செய்தவஞ் [1]செய்யுஞ் செவ்வி
வன்றிற லயோத்தி வாழு [2]மன்றிரி சங்கு வென்பான்
தன்றுணைக் குருவை நண்ணித் தனுவொடுந் துறக்க மெய்த
இன்றெனக் கருளு கென்ன [3]யானறிந் திலன தென்றான்.

(இ - ள்.) (இங்ஙனம் கௌசிகன்), தென்திசையதனை நண்ணி-தெற்குத்திக்கை விரும்பியடைந்து, செய் தவம் செய்யும் செவ்வி-செய்தற்குரிய தவத்தைச்செய்யும்பொழுதில்,-வல் திறல் அயோத்தி வாழும் மன் - மிக்கவலிமையையுடைய அயோத்தியாபட்டணத்தில்வாழ்கிற அரசனான, திரிசங்கு என்பான்—, தன் துணை குருவை நண்ணி-(எந்தக்காரியத்துக்கும்) தனக்குத் துணையான ஆசிரியனாகிய வசிட்டனை யடுத்து, தனுவொடுஉம் துறக்கம் எய்த-'இந்தப் பூதவுடம்புடனே சுவர்க்கலோகத்தையடையும்படி, இன்று - இப்பொழுது, எனக்கு—, அருளுக-அருள்செய்வாயாக', என்ன-என்று பிரார்த்திக்க, (வசிட்டன்), 'யான்—, அது - அங்ஙனம் இச்சரீரத்தோடு சுவர்க்கஞ்சேர்க்கும் செயலை, அறிந்திலன் - ', என்றான் - என்று (அவ்வரசன் வேண்டுகோளை மறுத்துக்) கூறினான்; (எ-று.) —திரிசங்கு வென்பான் "ஒர்நாள் கௌசிகப்பேர்க்கோனினிதுறையுஞ்சோலைகுறுகினன்" என மேல் 112-ஆங் கவியோடும் தொடரும்.

திரிசங்கு தனது குலகுருவாகிய வசிட்டனை வரவழைத்து, 'இந்தச்சரீரத்தோடு சுவர்க்கஞ் செல்லுமாறு அருள்க' என்று வேண்ட, வசிட்டன் அங்ஙனஞ்செல்லுதல் இயலாதென்று மறுத்துக் கூறினனென்க. திரிசங்கு=த்ரிசங்கு: த்ரய்யாருணியென்னும் மன்னவனுக்குப் புதல்வனாகிச் சத்தியவிரதனென்று இயற்பெயர் கொண்ட இவன் பிராமணகன்னிகையைக் கவர்ந்து தந்தையின் சொல்லை மீறியது, குருவான வசிட்டமுனிவனது தேனுவை வதஞ் செய்தது, ஜலத்தினாற் புரோட்சித்துப் பரிசுத்தமாக்கப்படாத மாமிசத்தையுண்டது என்கிற மூன்று குற்றங்களையுடையவனானமை பற்றி, 'த்ரிசங்கு' எனப்பெயர்பெற்றனன். இவன் சூரியவமிசத்திற் பிரசித்திபெற்ற ஓரரசன்; இராமனது வமிசபிதா. இவனது மகன்தான், சத்திய அரிச்சந்திரன். பி-ம்:—[1]செலுத்தும்வைகல். [2]மன்னவன்றிரிசங் கென்பான். [3]ஆண்டிறந்தெய்துக, ஈண்டிறந்தெய்துக. (670)

109.—திரிசங்கு வேறுபுரோகிதனை நாடி யாகம்புரிவேனென்ன, வசிட்டன் நீசனாகுமாறு அவனைச் சபித்தல்.

நினக்கொலா தாகி னைய நீணிலத் தியாவ ரேனும்
மனக்கினி யாரை நாடி வகுப்பல்யான் வேள்வி யென்னச்

சினக்கொடுந் [1]திறலோய் முன்னர்த் தேசிகற் [2]பிழைத்து
நினக்கித [3]ஞடி நின்ருய் நீசனுய் விடுதி யென்ருன். [வேருேர்

(இ - ள்.) (அதுகேட்ட திரிசங்கு தனது குலகுருவான வசிட்டரை நோக்கி), 'ஐய - தலைவனே! நினக்கு ஒலாது ஆகின்-(என்னை இவ்வுடம்புடன் சுவர்க்கமேற்றும் இச்செய்கை) உனக்கு முடியாதாயின், நீள் நிலத்து - பெரிய பூலோகத்திலே, யாவர்ஏன்உம் மனக்கு இனியாரை நாடி - எவராயினும் (என்) மனத்துக்கு இஷ்டரானவரைத்தேடி, யான் வேள்வி வகுப்பல் - நான் (அவரைக்கொண்டு அதற்குரிய) யாகத்தைச் செய்வேன்', என்ன - என்று சொல்ல,—(வசிட்டன் கோபங்கொண்டு அவனைநோக்கி), 'சினம்கொடு திறலோய்-கோபத்தையும் (பகைவர்க்குப்) பயங்கரமான வலிமையையுமுடையவனே! முன்னர் தேசிகன் பிழைத்து - பழமையான (உனது சிறந்த) ஆசிரியனிடத்தில் அபசாரப்பட்டு (அவனைவிட்டு), வேறு ஓர் நினக்கு இதன் - உனக்கு இஷ்டனான வேருெருகுருவை, (நீ), நாடிநின்ருய்—: (ஆதலால்), நீசன் ஆய் விடுதி-புலையனுய் விடுவாயாக,' என்ருன்-என்று சபித்தான்; (எ-று.)

வசிட்டன் மறுக்கவே, திரிசங்கு குருபுத்திரர்களைச் சார்ந்து வசிட்டன் நிராகரித்ததைச் சொல்லித் தன்கருத்தை முற்றுவிக்குமாறுவேண்ட, அவர்களும் கடிந்து கூற, அந்தத்திரிசங்கு 'என் குருவும் குருவின்புதல்வராகிய நீங்களும் என்கருத்தை முற்றுவிக்கமுடியாதென்று கூறிவிட்டதனுல் என்கருத்தை நிறைவேற்றுவிக்கவல்ல வேருெருகுருவைத் தேடிக்கொள்ளுகிறேன்' என்ன, அந்தவசிட்டகுமாரர் நூற்றுவரும் அரசனை நோக்கி 'மதிகேடனே! நீ குலகுருவை விட்டு வேருெரு புரோஹிதரையடுக்குமாறு நினைத்தாயாதலால், சண்டாளனுகக்கடவாய்' என்று சபித்துவிட்டுத்தமது ஆச்சிரமஞ்சேர்ந்தன ரென்று முதனூல்கூறும். இதனுல், பரம்பரையான ஆசிரியன் தகுந்தவனுயிருக்க அவனை அவமதித்து வேருெருகுருவைத் தேடுதல் கூடாதென்பது போதரும். இதன் = ஹிதன். நீசன் - சண்டாளன். தேசிகன்-தன்னைப் படர்க்கைபோற்கூறினது; வழுவமைதி. பி-ம்:—[1] திறலோன். [2] தப்பி. [3] ஆதிநன்றே.

110.—சாபத்தின்படி திரிசங்கு சண்டாளனுதல்.

[1]மலருளோன் மைந்தன் [2]மைந்த வழங்கிய சாபந் தன்னுல்
அலரியோன் ருனு நாணும் [3]வடிவிழந் தரசர் கோமான்
புலரியங் கமலம் [4]போலும் பொலிவோரீஇ வதனம் பூவில்
பலருமாங் கிகழ்தற் கொத்த படிவம்வந் துற்ற தன்றே.

(இ - ள்.) மைந்த - சக்கரவர்த்திதிருமகனே! மலருளோன் மைந்தன் - தாமரைமலரில்வாழ்கிற பிரமதேவனுக்கு மானசபுத்திரனை வசிட்டன், வழங்கிய - இட்ட, சாபந்தன்னுல்-, அரசர் கோமான்-அரசர்களுக்கரசனுகிய திரிசங்குமகாராசன், அலரியோன் தான்உம் நாணும் வடிவு இழந்து - சூரியபகவானும் வெள்குதற்குக் காரணமான (மிகுந்த ஒளியையுடைய)அரசவடிவத்தை நீங்கி, புலரி அம் கமலம்போலும் வதனம் பொலிவு ஒரீஇ-சூரியோதயகாலத்தில்

மலர்கிற அழகிய தாமரைமலர்போன்ற திருமுகத்தின் அழகு கெட,—பூவில் பலர்உம் இகழ்தற்கு ஒத்த படிவம் - பூலோகத்தில் எல்லோரும் இகழ்வதற்குஉரிய சண்டாளவடிவம், ஆங்கு அன்றுஏ வந்து உற்றது - (அவ்வரசனுக்கு) அவ்விடத்து அப்பொழுதே வந்துபொருந்திற்று; (எ - று.)

தன்மேனி முகப்பொலிவு யாவும்நீங்கி, திரிசங்கு சண்டாள வடிவத்தை யடைந்தன னென்க. மைந்த - சதானந்தன் அழைத்த விளி. அலரி-(ஆயிரங்கிரணங்களால்) விளங்குபவன். பி-ம்:—[1] மலரி ஞேன். [2] மைந்தன், மைந்தின், சீறி. [3] ஒளி. [4] போலப். (672)

111.—ஊர்சேர்தலும் யாவரும் சீசீ யென்ன, திரிசங்கு காடுசேர்தல்.

காசொடு முடியும் பூணுங் [1] கரியதாங் கனகம் போன்றும்
தூசொடு மணியு முந்நூல் தோல்தருந் தோற்றம் போன்றும்
மாசொடு கருகி மேனி வனப்பழிந் திடஊர் வந்தான்
[2] சீசியென் றியாரு மெள்ளத் திகைப்பொடு பழுவஞ் சேர்ந்தான்.

(இ - ள்.) காசொடு - இரத்தினஹாரங்களும், முடிஉம் - கிரீடமும், பூண்உம் - மற்றையாபரணங்களும், கரியது ஆம் கனகம் போன்றுஉம்-கரும்பொன்னாகிய இரும்பை யொத்து(க் கறுத்த நிறத்தை யடைந்து)ம்,—தூசொடுஉம் - (உடுத்த) ஆடைகளும், அணியும் முந்நூல் - தரித்துள்ள முப்புரிநூலும், தோல் தரும் தோற்றம் போன்றுஉம்-தோலினாலாகிய தன்மையை யொத்தும், - மேனி - உடம்பானது, மாசொடு கருகி-அழுக்குடனே கூடிக்கறுத்து, வனப்பு அழிந்திட-அழகுகெட, ஊர் வந்தான்-(வசிட்டனாச்சிரமத்திலிருந்து திரிசங்குமகாராசன் தனது) அயோத்திநகரத்துக்கு வந்தான்: (அப்போது), சீசி என்று யார்உம் எள்ள-(அங்கே) எல்லாரும் சீசீயென்று (தன்னை) இகழ்தலால், திகைப்பொடு பழுவம் சேர்ந்தான்-கலக்கத்துடனே காட்டையடைந்தான்; (எ - று.)

பூண்ட அணிகலங்கள் இரும்பினாலியன்றனவாகவும் உடுத்த உடையும் பூணூலும் தோலாகவும் மாற, உடல்கருகித் தோன்ற, திரிசங்கு முன்னையவடிவம் நீங்கிச் சண்டாளவடிவத்துடனே அயோத்தி சேர, நகரத்தவர் இகழ நகரத்தைவிட்டுக் காடுசேர்ந்தன னென்க. பி - ம்:—[1] கரிய. [2] சீசியுற்று. (673)

112.—ஒருகால் கௌசிகனைச்சேர்ந்து திரிசங்கு தன்செய்தி தெரிவித்தல்.

கானிடைச் சிறிது வைகல் கழித்தொர்நாட் கௌசி கப்பேர்க்
கோ[1]னினி துறையுஞ் சோலை குறுகினன் [2] குறுக வன்னான்
ஈனனீ யாவ [3] னென்னை நேர்ந்ததிவ் விடையி [4] னென்ன
மேனிகழ் பொருள்க [5] ளெல்லாம் விளம்பினன் வணங்கி வேந்தன்.

(இ - ள்.) கானிடை - காட்டினிடத்திலே, சிறிது வைகல் கழித்து - சிலநாட்களைப் போக்கி, ஓர்நாள் - ஒருதினத்தில், கௌசி

கன் பேர் கோன் இனிது உறையும் சோலை குறுகினன் - கௌசிக னென்று பேருள்ள இவ்வரசன் இனிமையாக(த் தவஞ்செய்து) வசிக்கிற சோலையை(த் திரிசங்கு நாடி)ச் சமீபித்தான்; குறுக - சமீபித்தமாத்திரத்தில், அன்னான் - அக்கௌசிகன், 'ஈனன் நீயாவன் - சண்டாளனாகிய நீ யார்? இ இடையின் நேர்ந்தது என்னை - இந்த இடத்தில் வந்தது என்ன காரணம்?' என்ன - என்று வினவ,— வேந்தன் - திரிசங்கு, வணங்கி - (கௌசிகனை) நமஸ்கரித்து, மேல் நிகழ் பொருள்கள் எல்லாம் விளம்பினன் - முன்நடந்தசெய்திகளனைத்தையுஞ் சொன்னான்; (எ - று.)

வசிட்டனுக்குப் பகையென்று விசுவாமித்திரனைத் திரிசங்கு அடைந்தான். மேல்நிகழ்பொருள் - வசிட்ட சாபம் முதலியன. பி-ம்:—[1] இருந்து. [2] குறுகலோடும். [3] போந்ததிவ்விட மென்முன். [4] ஏவம். [5] யாவும். (674)

113.—கௌசிகன் முனிவர்களை யழைக்க, வசிட்டகுமாரர் வர மறுத்தல்.

[1] இற்றிதோ [2] வெனநக் கன்னான் யானிரு வேள்வி முற்றி
மற்றுல களிப்பெ னென்னா மாதவர் தம்மைக் கூவச்
சுற்றுறு முனிவர் யாருந் தொக்கனர் வசிட்டன் மைந்தர்
கற்றில மரசன் வேள்வி கனற்றுறை புலையற் கீவான்.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) அன்னான்-அதுகேட்ட கௌசிகன், இற்றிது ஓ என - இவ்வளவுதானா என்று அலட்சியமாகச்சொல்லி, நக்கு-சிரித்து, யான் இரு வேள்வி முற்றி மற்று உலகு அளிப்பென் என்னா-நான் பெரியதொரு யாகத்தைச் செய்துமுடித்துத் தேவலோகத்தை (நீ இவ்வுடலோடு சேருமாறு உனக்கு)த்தந்திடுவேனென்று சொல்லி, மா தவர் தம்மை கூவ - மிக்க தவமுள்ள முனிவர்களை (யாகத்தின் பொருட்டு) அழைக்க, சுற்றுறு முனிவர் யார்உம் - (கௌசிகனுள்ள இடத்துக்குச்) சுற்றுப்பக்கங்களிலுள்ள முனிவர்களெல்லோரும், தொக்கனர்-வந்துகூடினார்கள்; (அப்பொழுது), வசிட்டன் மைந்தர்-, 'அரசன் - க்ஷத்திரியஜாதியானொருத்தன், புலையற்கு-ஒருசண்டாளனுக்காக, கனல் துறை-அக்கினியினிடத்திலே, வேள்வி-யாகத்தை, ஈவான்-செய்து தருதலை, கற்றிலம்-(யாங்கள் எந்நூலிலும்) படித்தோமில்லை',—(எ - று.)—'என்றுரைத்து...என்றனர்'' எனமேற் கவியோடுமுடியும்.

நூற்கொள்கைக்கு மாறாக க்ஷத்திரியனான விசுவாமித்திரன் யாகஞ்செய்விக்குமாறு புரோகிதனாதலும் யாகம் செய்கின்ற யஜமானன் சண்டாளனாதலும் தகாத செயலாதலால் வசிட்டகுமாரர்கள் கௌசிகன் அழைத்ததற்கு இணங்கவில்லை யென்க. நகுதல், வசிட்டனையிகழ்தல்காரணமாகப் பிறந்தது. இரு-(இங்கே சிறிதுபொழுது) தங்கியிரு என்றும் உரைக்கலாம். மற்றுலகு-இவ்வுலகத்தினும் மற்றையதாகிய லோகம்; பரலோகம். கற்றிலம்-அறிந்திலோமெனக்

காரியப்பொருள் தந்தது. பி-ம்:—[1] இற்றதோ. [2] என்னநக்கு, எனநக் காங்கு, எனநக்கிங்கு. (675)

114.—அவர்களைச் சபித்திட்டுக் கௌசிகன் வேள்வி தொடங்குதல்.

என்றுரைத் தியாங்க ளொல்லோ மென்றன [1]ரென்னப் பொங்கிப்
புன்றொழிற் கிராத ராகிப் போகெனப் புகற லோடும்
அன்றவ ரெயின ராகி யடவிக டோறுஞ் சென்றார்
நின்று[2] வேள் வியையு முற்றி [3]நிராசனர் வருக வென்றான்.

(இ - ள்.) என்று உரைத்து-என்று சொல்லி, யாங்கள் ஒல்லோம் என்றனர்-'நாங்கள் (இந்தக்காரியத்துக்கு) உடன்பட்டு வர மாட்டோம்' என்று சொன்னார்கள், (வசிட்டகுமாரர்கள்); என்ன-என்று சொல்ல,—(அதனைக்கேட்ட கௌசிகன்),—பொங்கி - கோபித்து, (அவர்களைக்குறித்து), புன்தொழில் கிராதர் ஆகி போக என - 'இழிவான தொழில்களையுடைய வேடர்களாய்விடக் கடவீர் கள்' என்று, புகறலோடுஉம்-(சாபவார்த்தை) கூறின வளவிலே,—அன்று - அப்பொழுதே, அவர் - அவர்கள், எயினர் ஆகி - வேடர் களாய், அடவிகள் தோறுஉம் சென்றார் - காடுகள் தோறும் போய் விட்டார்கள்; நின்று-(விசுவாமித்திரனே தொடங்கின காரியத்திற் சிறிதுஞ் சலியாமல்) நிலைநின்று, வேள்வியைஉம் முற்றி-யாகத்தை யும் முடிக்கத்தொடங்கி, நிராசனர் வருக என்றான்-'(ஆகுதி பெற்று உண்ணுதற்பொருட்டுத்) தேவர்களே! (நீவிர்) வருவீராவீர்' என்று (அவர்களை) அழைத்திட்டான்; (எ - று.)

விசுவாமித்திரனுடைய சிஷ்யர்கள் பலவிடங்கட்குஞ்சென்று வேள்விக்கு அந்தணர்களை யழைக்க, அந்தணர் யாவரும் வர, மஹோதயனென்ற முனிவனும் வசிட்டகுமாரர் நூற்றுவரும், 'க்ஷத்திரிய னொருவன் சண்டாளனுக்கு யாகஞ் செய்விக்கிறது மிக நன்று! இந்த வேள்வியில் எங்ஙனம் தேவர்கள் அவிர்ப்பாகம் பெறு வார்கள்? சண்டாள னன்னத்தை எங்ஙனம் புசிப்பார்கள்?' என்றாற் போலச் சொல்லி வரமாட்டோமென்ன,அதனை அச்சீடர்கள் கௌசி கனிடஞ் சொல்ல,பெருஞ்சினங்கொண்ட கௌசிகன் 'மஹாநுபாவர் களின் தேஜோவிசேஷத்தினால் எத்தொழிற்கும் எவ்வகைத் தீங்கும் உண்டாகாதென்ற நியாயத்தை மறந்து என்னை யிகழ்ந்ததனால் வசிஷ்டகுமாரர்கள் முஷ்டிகரென்னும் ஈனசாதியினராகி உலகத்தில் வெகு காலம் உழல்க' என்றும் மஹோதயன் 'வேடனாகியுழல்க' என்றும் சொல்லி, தான் அத்வர்யுவாக நின்று யாகஞ்செய்யத் தொடங்கி அவிசுபெறுமாறு தேவர்களைக் கூவினனென்று முத னூலாலறிக. நிராசனர் - நிரசநர்: உணவை வேண்டாதவர்: தேவர்க்குக் காரணப்பெயர்: இது - இங்கே அண்மைவிளி; இது, 'உண வின்றிப் பட்டினிகிடப்பவர்களே! இந்த அவிசைப் பெற்று உண்க' என்ற குறிப்பினது. பி-ம்:—[1] எழுந்து. [2] வேளவித்தான். [3] நித்தரை. நின்றுமாதவத்தைமுற்றி நித்தரை வருகவென்றான் என்றும், நின்ற மாதவரை முற்றி நித்தராய் வருகவென்றான என்றும் சிலச்சில பிரதிகள். (676)

115.—கௌசிகன் தன் தவமகிமையால் திரிசங்குவை வானத்தி லேற்றுதல்.

[1]அரசனிப் புலையற் [2]கென்னே [3]யனற்றுறை [4]முற்றி யெம்மை
விரசுக வல்லை [5]யென்பான் விழுமிதென் றிகழ்ந்து நக்கார்
புரசைமா [6]களிற்று வேந்தைப் போகநீ துறக்கம் யானே
உரைசெய்தேன் றவத்தி னென்ன வோங்கினன் [7]விமானத் தும்பர்.

(இ - ள்.) (அழைக்கப்பட்ட தேவர்கள்), 'அரசன் - விசுவாமித்திரன், இ புலையற்கு - இந்தச்சண்டாளன்பொருட்டாக, அனல் துறை முற்றி - யாககாரியத்தைநிறைவேற்றத்தொடங்கி, எம்மை-, வல்லை விரசுக என்பான்-விரைவில் வருவீராக என்று அழைப்பவனான்: என்னே—! விழுமிது-(இச்செயல்) சிறப்புடையது,' என்று இகழ்ந்து - என்று நிந்தித்து, நக்கார் - சிரித்தார்கள்; (ஆயினும் கௌசிகனோ, விடாமல்); புரசை மா களிறு வேந்தை - கழுத்திடு கயிற்றையுடைய பெரிய யானைச்சேனையையுடைய அத் திரிசங்கு ராசனைநோக்கி, 'நீ துறக்கம் போக - நீ சுவர்க்கத்துக்குச் சென்று சேர்ந்திடுவாயாக; யானே தவத்தின் உரை செய்தேன் - (பிறரொருவருடைய அனுமதியை வேண்டாமல்) நானே (எனது) தவத்தினால் கட்டளை கூறினேன்', என்ன - என்றுசொல்ல, (அவ்வாறே திரிசங்கு), விமானத்து உம்பர் ஓங்கினன் - விமானத்தின் மேலேறி உயரச்சென்றான்; (எ-று.)

மந்திரங்களைச்சொல்லி வெகுநேரமாக அழைத்தும் அவிர்ப்பாகத்தைப் பெறுமாறு தேவர்கள் வராமையால் கௌசிகன் பெருஞ்சினங்கொண்டு ஓமஞ்செய்யும் அகப்பையையுயரவெடுத்து 'யாகம் இருக்கட்டும்: என் தவத்தின்பயனால் இச்சரீரத்துடனே சுவர்க்கஞ் செல்லுக' என்ன, முனிவர்யாவரும் பார்த்துக்கொண்டிருக்கையில் திரிசங்கு சுவர்க்கஞ் சேர்ந்தனனென்க. விழுமிது- எதிர்மறையிலக்கணை. களிற்றுவேந்து - யானையையொத்த அரசனுமாம். பி - ம்:—[1]அரசனும். [2]இன்னே. [3]அழல். [4]முற்ற. [5]என்றல், என்றான். [6]களிற்றின். [7]மானத்து. (677)

116.—தேவர்கள் திரிசங்குவைத் தள்ளிவிட, வானத்தினின்று கீழ்விழுகின்ற அவனை நிற்குமாறு கௌசிகன் செய்தல்.

ஆங்கவன் றுறக்க மெய்த வமரர்கள் வெகுண்டு நீசன்
ஈங்குவந் [1]திடுவ தென்னே யிருநிலத் [2]திழிக வென்னத்
[3]தாங்கலில் கவிழ்வான் மற்றுத் தாபத சரண மென்ன
ஓங்கின னின்னி லென்ன [4]வுரத்துரு மொக்க நக்கான்.

(இ - ள்.) ஆங்கு - அவ்வாறு, அவன் - அவ்வரசன், துறக்கம் எய்த-சுவர்க்கலோகத்தையடைய, (அதுகண்டு), அமரர்கள்- தேவர்கள், வெகுண்டு - கோபித்து, 'நீசன் ஈங்கு வந்திடுவது என்னே - சண்டாளன் இவ்விடத்தே (அவ்வுடம்போடு) வந்து சேர்வது என்ன நீதி? இரு நிலத்து இழிக - பெரிய பூலோகத்

தில்தானே இறங்கிச் சேர்ந்திடுவாளுக', என்ன-என்று தள்ள,— தாங்கல் இல் கவிழ்வான் - (தன்னைத்) தாங்குவதொரு ஆதார மில்லாமல் தலைகவிழவிழுபவனாகிய அந்தத்திரிசங்கு, மற்று-பின்பு, (கௌசிகனை நோக்கி, தாபத சரணம் என்ன-முனிவனே! (நீயே எனக்குப்) புகலிடமென்று (அங்கிருந்து) கூவ, (அதுகேட்ட கௌசிகன்), நில் நில் என்ன-(அவ்விடத்தே) நிற்பாயாக என்று, ஓங்கினன் உரத்து - உரக்கச் சொல்லி, உரும் ஒக்க - இடிமுழக் கத்தை யொக்கும்படி, நக்கான்-சிரித்திட்டான்; (எ - று.)

தேவேந்திரன் தேவர்களோடு கூடி 'குருசாபத்தினால் நீசனாகிய நீ இங்குஇருக்கத்தக்கவனல்லை; தலைகீழாகவிழுந்திடுக' என்ன, திரிசங்கு விழுகையில் கதறினனாக, அதுகேட்ட கௌசிகன் 'அங்குத் தானே நில்' என்று சொல்லித் தவமகிமையால் அவனை வானத்தில் தானே நிறுத்தினனென்க. சிரிப்பு - தேவர்களின் மீதுள்ள வெகுளியாலும், எள்ளலாலும் ஆகியது. இல் என்ற பண்படி இல்லாமல் என வினையெச்சப்பொருள் தந்தது. தாபத = தாபஸ. சரணம்-காத்திடுபவனென்று பொருள். தாங்கலில்-பூமியில்என்றும், ஓங்கினன்-(தான்) எழுந்து என்றும் உரைப்பர். நில் நில் - அடுக்கு, விரைவு. பி-ம்:—[1] அடைவது. [2] அடைக. [3] தாங்குதலின்றி வீழ்வான். [4] உரைத்து, உருத்து. (678)

117.—தேவர்கள்மீது சினத்தினால் கௌசிகன் பிரதிசிருட்டி செய்யத் தொடங்குதல்.

[1] பேணலா திகழ்ந்த விண்ணோர் பெரும்பத [2] முதலா மற்றைச்
சேண் [3] முழு தமைப்ப லென்னாச் செழுங்கதிர் கோளு டிங்கண்
மாணொளி கெடாது தெற்கு [4] வடக்கவாய் வருக [5] வென்று
தாணுவோ டூர்வ [6] வெல்லாஞ் [7] சமைக்குவெ னென்னும் வேலை.

ஏழு கவிகள் - குளகம்.

(இ - ள்.) (அங்ஙனம் சினந்த விசுவாமித்திரன்), 'பேணலாது-(என் வார்த்தையை) மதிக்காமல், இகழ்ந்த - (என்னையும் திரிசங்குவையும்) அவமதித்த, விண்ணோர் - இந்திராதி தேவர்களது, பெரும் பதம் முதல் ஆ-பெரிய பதவி முதலாக, மற்றை சேண் முழுது - மற்றை விண்ணுலக முழுவதையும், அமைப்பல்-(வேறு) படைப்பேன்', என்னா-என்று சொல்லி, 'செழு கதிர்-(என்னாற் படைக்கப்பட்டு என்னுடைய ஆஜ்ஞைக்கு உட்படும்) செழுமையான கிரணங்களையுடைய சூரியனும், திங்கள்-சந்திரனும், கோள் - மற்றைக்கிரகங்களும், நாள் - நட்சத்திரங்களும், மாண் ஒளி கெடாது - மாட்சிமைப்பட்ட ஒளி அழியாமல் [எப்பொழுதும் மிக்க ஒளியோடு கூடியே], தெற்கு வடக்க ஆய் வருக - தெற்குத் திக்கில்உதயமும் வடக்குத்திக்கில்அஸ்தமனமும் உடையனவையாகி வரக்கடவன', என்று-என்று கட்டளையுமிட்டு, 'தாணுவோடு-நிலையியற்பொருள்களுடனே, ஊர்வ - இயங்கியற்பொருளகளும், எல்லாம்-ஆகிய எல்லாவற்றையும், சமைக்குவென்-(இப்பொழுதே) படைத்திடுவேன்', என்னும்வேலை-என்று தொடங்கும்பொழுது,-

(எ-று.)—"நறைத்தருவுடைய கோனும்...மற்றைக்கடவுளர் பிறருந் தொக்கு" என மேற்கவியோடு குளகமாகச் செல்லும்.

தலைமைபற்றிச் சந்திர சூரியர்களை 'செழுங்கதிர், திங்கள்' என்று தனியே கூறியிருத்தலால், இங்கே 'கோள்' என்றது - அவர்களை யொழிந்த அங்காரகன் புதன் குரு சுக்கிரன் சனி ராகு கேது என்னும் எழுவரை. நாள் என்றது - தினத்தைத் தெரிவிக்கிறஅசுவினி முதலியஒளிகளுக்கு ஆகுபெயர். காலபேதத்தாலும் ஸ்தானபேதத்தாலும் இப்பொழுதுள்ள கிரகம் முதலியவற்றிற்கு நேரிடுகிற ஒளிக்குறைவு தமது படைப்பிற்கு உட்பட்டவற்றிற்கு ஒருகாலுங் கூடா தென்பார் 'மாணொளிகெடாது' என்றார். பி - ம்:—[1]பேணலர். [2]முதல. [3]முழுதுலாவுகின்ற. [4]வடக்கதாய். [5]மற்றைத். [6]யாவும். [7]சமைக்குவம். (679)

118.—தேவர்கள் திரண்டுவந்து கௌசிகனைச் சாந்தப்படுத்துதல்.

நறைத்தரு வுடைய [1]கோனு நான்முகக் கடவு ளானும்
கறைத்தரு களனு மற்றைக் [2]கடவுளர் பிறருந் தொக்குப்
பொறுத்தருண் முனிவ நின்னைப் புகல்புகுந் தவனைப்[3]போற்று
மறத் [4]திற னன்று தாரா கணத்தொடு [5]மமைக வன்னான்.

(இ - ள்.) நறை தரு உடைய கோன்உம் - தேனினையுடைய கற்பகச் சோலையை யிடமாகவுடைய தேவராசனான இந்திரனும், நான்முகக்கடவுள் தான்உம் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், கறை தரு களன்உம் - விஷக்கறுப்புப் பொருந்திய ஸ்ரீகண்டத்தையுடைய உருத்திரமூர்த்தியும், மற்றை கடவுளர் பிறர் உம் - மற்றைச் சாதாரணதேவர்களோடு ஏனைமுனிவர் முதலியோரும், தொக்கு - ஒருங்குகூடி,—(கௌசிகனைநோக்கி),—,முனிவ - ராஜரிஷியே! பொறுத்தருள் - (தேவர்கள் உன்னை அவமதிப்புச் செய்ததைப்) பொறுத்தருளுவாயாக; நின்னை புகல் புகுந்தவனை - உன்னைச் சரணமடைந்தவனை, போற்றும் - கைவிடாது காப்பாற்றியருளுகிற, அறம் திறன் - (உன்) தருமமார்க்கத்தின் கூறுபாடு, நன்று-; அன்னான் தாரா கணத்தொடுஉம் அமைக - அந்தத் திரிசங்குமகாராசன நக்ஷத்திரங்களின் தொகுதியுடனே பொருந்தியிருக்கக்கடவன்: (எ-று.)—மேல் "என்ன" என இயையும். புகல்-தொழிலாகுபெயர். பி - ம்:—[1]கோவும். [2]விண்ணவர். [3]காத்த, காத்தல். [4]துறைநன்று, திறனென்று, திறனென்றும். [5]அடைக.

119.—கடவுளர் சாந்தப்படுத்திச் சென்றபின், கௌசிகன் மேற்றிசையை யடைந்து தவம்புரிதல்.

அரசமா தவனீ யாதி யைந்துநாட் டென் பால் வந்துன்
புரைவிளக் கிடுக வென்னக் கடவுளர் போய [1]பின்னர்
[2]நிரைதவன் விரைவி [3]னேகி நெடுங்கடற் [4]கிறைவன் வைகும்
[5]உரவிட மதனை நண்ணி யுறுதவ முஞற்றுங் காலை.

(இ - ள்.) அரசன் மா தவன் நீ ஆதி - நீ சிறந்த ராஜரிஷியாவாய்; ஐந்து நாள் தென்பால் வந்து உன் புரை விளக்கிடுக - (வடக்கேயுள்ள இருபத்தேழுநக்ஷத்திரங்களுள்) ஐந்து நக்ஷத்திரங்கள் தெற்குத்திக்கில் வந்திருந்து உனது பெருமையைத் தெரிவிக்கக்கடவன, என்று-என்று சொல்லி, (கௌசிகனைச் சமாதானப்படுத்திவிட்டு), கடவுளர் போய பின்னர்-(இந்திரன் முதலிய) தேவர்கள் புறப்பட்டுப் போனபின்பு,—நிரை தவன் - ஒழுங்காகிய தவத்தையுடைய கௌசிகன், விரைவின் ஏகி-துரிதமாகச்சென்று, நெடு கடற்கு இறைவன் வைகும் - பெரிய கடலுக்குத் தலைவனாகிய வருணன் (திக்குப்பாலகனாகத்) தங்கப்பெற்ற, உரம் இடம் அதனை-வலியமேற்குத்திசையினிடத்தை, நண்ணி—, உறு தவம் உஞற்றும்காலை-மிக்க தவத்தைச் செய்யும்பொழுது,—(எ-று.)—"செவ்வியகுரிசில்தானும்***பாதகமலமதுச்சிசேர்த்தான்" என மேல் 123-ஆம் கவியில் குளகமாகத் தொடரும்.

திரிசங்குவை வானத்து நிறுத்திய கௌசிகன் பெருஞ்சினத்துடனே அங்குத்தானே வேறொருசுவர்க்கத்தைப் படைக்க முயன்று, தென்திசையில் வேறாகச் சப்தரிஷிகளைப்படைத்துப் பின் 'வேறொரு இந்திரனைப்படைப்பதினும் திரிசங்குவே அதற்கு இந்திரனாகலாம்' என்று தீர்மானித்து இந்திரனுக்குப்பரிவாரமாகத் தக்க தேவர்களைப் படைக்க முயல, அதுகண்ட தேவர்கள் முதலியோர் அம்முனிவனிடம்வந்து இன்சொல்லினாற் சினந்தணிவித்து, 'குருசாபத்தினாற்கேடு அடைந்தஇவன் இந்தவுடலுடனே துறக்கஞ்சேரத் தக்கவனல்லனே!' என்ன, கௌசிகன் 'இவ்வுடம்புடன் துறக்கமேற்றுவதாக வாக்களித்துவிட்டதனால் இவ்விடத்தையேஇச்சரீரத்தோடு துறக்கமாக்கொண்டுசாசுவதமாக இருக்குமாறும், நான் படைத்த நட்சத்திரங்கள் யாவும் சாசுவதமாக இருக்குமாறும் அருள் புரிக' என்ன, அவர்களும் இசைந்தனரென்று முதனூலிற் கூறியுள்ளது. ஐந்துநக்ஷத்திரங்கள்-அநுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என்பன; படைப்புக்காலந் தொடங்கி வடதிசையிலிருந்த இவை விசுவாமித்திரனுக்காகத் தென்திசையில் வந்தன வென்பர். பி-ம்:—[1]பின்றை. [2]நிறைதவன். [3]எய்தி. [4]அரசன். [5]உறைவிடமதனை, உரவிடையதனை, உறுகுடதிசையை. (681)

120.—அப்போது அம்பரீடன் நரமேதத்திற்கு ஆள்தேடிக் காடு செல்லல்.

குதை[1]வரி சிலைவாட் டானைக் கோமக னம்பரீடன்
சுதைதரு மொழியன் வையத் துயிர்க்குயி ராய தோன்றல்
வதைபுரி புருட மேதம் வகுப்பவோர் மைந்தற் கொள்வான்
[2]சிதைவிலன் [3]கனகந் தேர்கொண் டடவிக[4]டுருவிச் சென்றான்.

(இ - ள்.) குதை-குதையையுடைய, வரி-கட்டமைந்த, சிலை-விற்களையும், வாள்-வாட்களையுமுடைய, தானை-சேனையையுடைய, கோமகன் - இராசகுமாரனும், சுதை தரு மொழியன்-தேவாமிரு

தத்தை யொத்த இன்சொற்களையுடையவனும், வையத்து உயிர் ஆய தோன்றல்-உலகத்திலேயுள்ள பிராணிவர்க்கங்களுக்கெல்லாம் உயிரையொத்த பெருமையோனுமாகிய, அம்பரீடன்-, வதை புரி புருடமேதம்வகுப்ப-(ஒருமனிதனைக்) கொன்று ஓமஞ்செய்வதாகிய புருஷமேதத்தைச் செய்வதற்காக, ஓர் மைந்தன் கொள்வான்-ஒரு சிறுவனை வாங்கும்பொருட்டு, சிதைவு இலன்-(செய்யவேண்டும் முயற்சியிற்) குறைவற்றவனாய், கனகம் தேர்கொண்டு - (மிகுந்த) பொன்னைத் தேர்மேல் (நிறைத்துவைத்துக்) கொண்டு, அடவிகள்-காடுகள்தோறும், துருவி சென்றான்-தேடிப்போனான்; (எ - று.)

யாகஞ்செய்து வரும்பொழுது அவ்வியாகபசு காணப்படாமற் போய்விடுமாயின் அதற்கீடாக ஒருமனிதனைக்கொன்று ஓமஞ்செய்து வேள்வியை நிறைவேற்றவேண்டுமென்பதும் யாகத்திற்செய்யப் படும் இமிசை இமிசையன்றென்பதும் நூற்றுணிபு என்ப: அதற்கு ஏற்ப, இந்திரனால் யாகபசு கவரப்பட்ட அயோத்திமன்னவனாகிய அம்பரீஷன் தனது உபாத்தியாயர் மொழிப்படியே அங்ஙனஞ் செய்யலுற்றானென்க. வரி - நீட்சியுமாம். வையத்துயிர்க்கு உயிராய தோன்றலா யிருப்பினும் வைதிககாரியத்தில் ஊற்றமுடையவனாதலால், அதனைமுடிக்கும்பொருட்டு ஆள் தேடுபவனானான். பி-ம்:— [1]வரு. [2]சிதைவில். [3]கனகத். [4]தோறும். (682)

121.—அம்பரீடன் ரிசீகமுனிவனை யணுக, தன்னைப் போற்றுவாரில்லாதஅவனது நடுக்குமாரன் கூறத் தொடங்குதல்.

நற்றவ ரிசிகன் வைகு [1]நனைவரும் பழுவ நண்ணிக்
கொற்றவன் வினவ லோடு [2]மிசைந்தனர் குமரர் தம்முள்
பெற்றவ ளிளவ லெற்கே [3]யென்றனள் பிதாமுன் னென்றான்
[4]மற்றைய மைந்த னக்கு மன்னவன் றன்னை நோக்கி.

(இ - ள்.) கொற்றவன் - (அங்ஙனஞ் சென்ற) வெற்றியையுடைய அம்பரீஷமகாராசன், நல் தவம் ரிசிகன் வைகும் நனைவரும் பழுவம் நண்ணி - சிறந்த தவவொழுக்கத்தையுடைய ரிசீகனென்னும் முனிவன் வசிக்கின்ற பூவரும்புகள் மலர்தற் கிடமான சோலையை அடைந்து, வினவலோடுஉம் - (தான் வந்த செய்தியைச் சொல்லி அவனுடையபிள்ளையை விலைக்குக்) கேட்டவளவில், இசைந்தனர் குமரர்தம்முள் - பொருந்தின (தமது) புத்திரர் மூவருள், இளவல் - இளையவன், எற்கே - எனக்கே (உரியவன்) [அவனை விற்கமுடியாது], என்றனள் பெற்றவள் - என்று சொன்னாள் தாயாகிய ரிசீகர்மனைவி: பிதா முன் என்றான்-தந்தையாகிய ரிசிகன் மூத்தவன் (எனக்கே யுரியவன்) என்று சொன்னான்: மற்றைய மைந்தன்-எஞ்சிநின்ற நடுக்குமாரனாகிய சுனச்சேபனென்பான், நக்கு - (தாய்தந்தையரிருவரும் பெற்றுவளர்த்த தன்னை விலைப்படுத்தச் சித்தராயிருத்தலை நோக்கிச்) சிரித்து, மன்னவன் தன்னை நோக்கி - (தான்) அம்பரீடராசனைப்பார்த்து,—(எ-று.)— "என்று தொழுது தேரினேறிப் படர்தலோடும்,' என இயையும்.

உபாத்தியாயர் மொழிகேட்டு அனேகவாயிரம் பசுக்களைக் கொடுத்து நரபசுவைக்கொள்ளுமாறு தேடிச்சென்ற அம்பரீடன், பல இடங்களிலுந்தேடிக்கொண்டு ரிசீகனென்னும் முனிவன் மனைவியோடு இனிதுதங்கும் பிருகுதுங்கமென்ற மலையை யடைந்தான்; அவ்விரிசீகனைக் கண்ட மன்னன் தன் கருத்தைத் தெரிவிக்க, அவன், மூத்தகுமாரனைக் கொடுக்கஇசையாதிருக்க, அவன்மனைவி ஈற்றுப்புதல்வனைத்தர இசையாதவளாக, நடுப்பிள்ளையாகிய சுனச்சேபன் 'முதல்வனைத் தந்தையும் ஈற்றவனைத் தாயும் விலைக்குத் தாரேனென்று சொன்னதனால், என்னை நீ விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்' என்ன, அரசன் நூறாயிரம்பசுக்களைக்கொடுத்து அந்தச்சுனச்சேபனை வாங்கிக்கொண்டு அயோத்தி நகரம் நோக்கிச் செல்லலாயின னென்ற விவரத்தைக் காண்க. இச் செய்யுளால், மூத்த மைந்தனிடத்துத் தந்தையும் இளைய மைந்தனிடத்துத் தாயும் அன்பு கொள்ளுதல் உலகவியற்கை யென்பதும், புத்திரரை விற்பதற்குக்கூட உரிமையுண்டு பெற்றோர்களுக் கென்பதும், பொருளாசை தம்பொருளென்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புத்திரரையும் விற்கத் துணியச்செய்யுமென்பதும் விளங்குகின்றன. நனைவரும் பழுவம் - (சுற்றிலுமுள்ள மரங்களின்பூக்களினின்று துளிக்கிற தேனினால் எப்பொழுதும்) நனைந்திருக்கிற ஆச்சிரமவன மென்றுங் கொள்ளலாம். முன்-முன்பிறந்த மகனுக்குக் காலவாகுபெயர். ரிசீகன்-கௌசிகைகொழுநன்: "ரவிகுலதிலகன்" என்ற சிந்தாமணியிற்போலரகரவொற்றுமொழிமுதலாகி வந்தது. பி - ம்:—[1] நனைபழுவத்தை. [2] இயைந்தனன். [3] என்றுள் பிதாமகன் முன்னோன். [4] மற்றவம். (683)

122.—சுநச்சேபன்சொற்படி அம்பரீடன் அவனை வாங்கிக் கொண்டு செல்கையில் உச்சிப் போதாதல்.

கொடுத்தருள்வெறுக்கை வேண்டிற் றொற்கமாம்[1] விழுமங்குன்ற
எடுத்தெனை வளர்த்த தாதைக்[2] கென்றவற் றொழுது வேந்தன்
தடுப்பருந் தேரி[3]னேறித்[4] தடையிலாப் படர்த லோடுஞ்
சுடர்க்கதிர்க் கடவுள் வானத் துச்சியஞ் சூழல் புக்கான்.

(இ - ள்.) 'எனை எடுத்து வளர்த்த தாதைக்கு - என்னை எடுத்து வளர்த்த தந்தையாகிய ரிசீகனுக்கு, ஒற்கம் ஆம்விழுமம் குன்ற-வறுமையாகிய துன்பங் கெடும்படி, வேண்டிற்று வெறுக்கை கொடுத்தருள்-(அவன்) விரும்புமளவினதாகிய பெருஞ் செல்வத்தை (எனக்கு விலையாக)க் கொடுத்தருள்வாயாக', என்று - என்று (அரசனைநோக்கிக்) கூறி, அவன் தொழுது - அத்தந்தையை வணங்கி, வேந்தன் தடுப்பு அரு தேரின் ஏறி-அரசனது தடையில்லாத [எவராலுந்தடுத்தற்குமுடியாத] இரதத்தின்மேலேறிக்கொண்டு, தடை இலா படர்தலோடுஉம்-(தன்னால் ஒரு சிறிது) தடையுமில்லாமல் (தான் அவ்வரசனுடனே) செல்லுகையில்,—சுடர் கதிர் கடவுள் வானத்து உச்சி அம்சூழல்புக்கான்-(மிகுந்த) ஒளியையுடைய கிரணங்களோடு கூடிய சூரியபகவான் ஆகாயத்தில் நடுவாகிய அழகிய இடத்தை அடைந்தான்; (எ-று.)

'எடுத்து எனை வளர்த்த தாதைக்கு' என்றதனால், தன்னை விற்றுச் செல்வம் பெறுவதை, சுனச்சேபன், தன்னை எடுத்து வளர்த்த உதவிக்குக் கைம்மாறாகக் கருதினனென்க. ஒற்கம் - தளர்ச்சி; பலவகைத் தளர்ச்சிக்குங் காரணமான தரித்திரத்தைக் காட்டிற்று. பி - ம்:—[1] இழுக்கம். [2] எனவவற்றெழுது, எனவவற் கிந்து, என்றனன்றெழுது. [3] ஏற்றி. [4] தாண்டுமாத்தூண்டிச்செல்ல, கடவினன்கடவலோடும். (684)

123.—உச்சிக்கடனுக்குச் செல்கையில் சுநச்சேபன் மாதுலனைக் காணல்.

அவ்வயி னிழிந்து வேந்த னருங்கடன் முறையி னாற்றச்
செவ்விய குரிசி லானுஞ் சென்றன னியமஞ் செய்வான்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யாண்டுக் காணாக்
கவ்வையி னோடும் பாத கமலம துச்சி சேர்த்தான்.

(இ - ள்.) (அப்பொழுது), வேந்தன்-அம்பரீடன், அ வயின்-(கௌசிகன் தவஞ்செய்துகொண்டிருந்த) அந்த இடத்திலே, இழிந்து - (தேரினின்று) இறங்கி, அரு கடன் முறையின் ஆற்ற-(செய்தற்கு) அரிய மாத்தியான்னிகச்சடங்கைக் கிரமப்படி செய்யாநிற்க,—செவ்விய குரிசில் தான்உம் - நற்குணநற்செய்கைகளையுடைய குமாரனான சுனச்சேபனும், நியமம் செய்வான்-(நடுப்பகற்பொழுதிற் செய்வதற்குரிய வைதிகக்)கடனைச் செய்யும்பொருட்டு, சென்றனன்-(அங்குஇறங்கிப்) போனான்: (போனவன்), ஆண்டு-அவ்விடத்திலே, அவ்வியம் அவித்த சிந்தைமுனிவனை-பொறாமை முதலிய துர்க்குணங்களை யொழித்த மனத்தையுடைய கௌசிக விருடியை, காணா - கண்டு, கவ்வையினோடுஉம்-துன்பத்துடனே, பாத கமலம் அது - (அவனுடைய) திருவடித்தாமரைமலர்களை, உச்சி சேர்த்தான் - தலைமேற் சூடினான்; (எ-று.)—கமலமது-சாதியொருமை. கவ்வை-இங்கே, மரணபயம். (685)

124.—சுநச்சேபன் தன்குறையைக் கௌசிகனிடம் தெரிவித்தல்.

[1] விறப்பொடு வணக்கஞ் செய்த விடலையை யினிது நோக்கிச்
[2] சிறப்புடை முனிவ னென்னே தெருமரல் செப்பு கென்ன
அறப்பொரு[3] ளுணர்ந்தோ யென்ற[4] னன்னையுந் தாதை தானும்
உறப்பொருள் கொண்டு வேந்தற்[5] குதவின[6] ரென்ற னுற்றோன்.

(இ - ள்.) விறப்பொடு வணக்கம் செய்த விடலையை - மரணபயத்துடனே (தன்னை) வணங்குதல்செய்த அந்தக்குமாரனை, சிறப்பு உடை முனிவன் - சிறந்த குணங்களையுடைய கௌசிக முனிவன், இனிது நோக்கி - இனிமையாகப்பார்த்து, 'தெருமரல் என்னே-(நீ இங்ஙனங்) கலங்குதல் யாதுகாரணத்தால்? செப்புக - சொல்வாயாக,' என்ன - என்று வினவ,—உற்றோன் - (அவனைச் சரணமாக) வந்தடைந்த சுனச்சேபன், 'அறம் பொருள் உணர்ந்தோய் - தருமசாஸ்திரங்களின் அருத்தத்தை அறிந்தவனே!

என் தன் - என்னுடைய, அன்னைஉம் - தாயும், தந்தை தான்உம் - தந்தையும், உற பொருள் கொண்டு - மிகுதியாகச் செல்வத்தைப் பெற்றுக்கொண்டு, வேந்தற்கு - இந்த அம்பரீஷராஜனுக்கு, உதவினர் - (நரமேதத்தின்பொருட்டு என்னைக்) கொடுத்துவிட்டார்கள்', என்றான் - என்று (நடந்த செய்தியைச்) சொன்னான்; (எ - று.)

''விறப்பே வெரூஉப்பொருட்டு மாகும்'' என்பது, தொல்காப்பியம். 'சிறப்பு' - சிறந்ததாகிய சரணமடைந்தவனைக் கைவிடாது காக்கும் உறுதியும் தவவொழுக்கமும். அறம் - அறநூல்களுக்குக் காரியவாகுபெயர். [4]அன்னை நும் முன்னையென்னை என்ற பாடத்திற்கு, நும் முன்னை - உமது முன்பிறந்தவளாகிய, என் தன் அன்னை - என்னுடைய தாயும், என் ஐ - எனது தந்தையும் என்க. பி - ம்:—[1]இறப்பொடு. [2]சிறப்பொடு. [3]உணர்ந்தமேலோய். [4]அன்னையர் தானுமீன்றோன், அன்னையுமத்தன்றானும், அன்னையாநும்முனோண் மற்று, அன்னையாமும்முனாள்கை. [5]உதவினள். [6]உவகைவேண்டி, உதவிவேண்டி. (686)

125.—கௌசிகன் சுநச்சேபனுக்கு அபயமளித்துத் தன் மக்களில் ஒருவன் அவனுக்குப் பதிலாகச் செல்க வெனல்.

மைத்துன னோடு முன்னோள் வழங்கிய முறைமை கேளாத்
தத்துற லொழிநீ யானே [1]தடுப்பெனின் னுயிரை யென்னாப்
புத்திரர் தம்மை நோக்கிப் போகவேந் தோடு மென்னா
அத்[2]தகு முனிவன் கூற வவர்மறுத் [3]தகறல் காணா.

(இ - ள்.) முன்னோள் - (தனது) முன்பிறந்தவளும், மைத்துனனோடு - (தன்) மைத்துனனான ரிசீகனும், வழங்கிய - (பிள்ளையை விலைக்குக்) கொடுத்துவிட்ட, முறைமை - செய்கையை, கேளா - கேட்டு,—அ தகு முனிவன் - தகுதியையுடைய அக்கௌசிக முனிவன்,—(சுனச்சேபனைநோக்கி), 'நீ—, தத்து உறல் ஒழி - துன்பம்அடைதலைநீங்குவாய்: யான்ஏ நின் உயிரை தடுப்பென் - நானேஉனதுஉயிரைக் காப்பேன்', என்னா - என்று (அபய வார்த்தை) கூறி,—புத்திரர் தம்மை நோக்கி - (தனது) குமாரர்களைப்பார்த்து, வேந்தொடுஉம் போக என்னா கூற - '(உங்களில் ஒருவன்) இவ்வரசனுடனே (நரமேதத்தின்பொருட்டு இவனுக்கு ஈடாகப்) போகுக' என்று சொல்ல, அவர் மறுத்து அகறல் காணா - அம்மக்கள் கட்டளைமறுத்து நீங்குதலைக் கண்டு,-(எ - று.) —''இருகண்சிவந்தனன்'' என மேற்கவியோடு குளகமாயியையும்.

தாய்தந்தையர்களாற் கைவிடப்பட்டுத் தன்னைச் சரணமாக அடைந்த மருமகனுக்கு அபயமளித்து, 'என் புத்திரரில் எவனேனும் இவனுக்குப் பதிலாகச் செல்லுக' என்ன, அதற்கு ஒருவனும் உடன்படவில்லையென்க. தடுத்தல் - காத்தல். மைத்துனன் - இங்கே, உடன்பிறந்தவளது கணவன். புத்திரர் - முன் வசிட்டனாலிறந்தவர்போக, மிகுந்தவனாகிப் பட்டம்பெற்றவன் ஒருத்தனும், அதன்பின் தென்திசையிற் பட்டமகிஷியோடு தவஞ் செய்கையிற்பிறந்த ஹவிஷ்யந்தன் மதுஷ்யந்தன் த்ருடநேத்ரன்

என்ற மூவருமாக நால்வரென்று முதனூலால் ஏற்படும். பி - ம்:— [1] தடுப்பலுன். [2] தக. [3] அகல்கை. (687)

126.—மறுத்த தன் குமாரர்களைக் கௌசிகன் சபித்தல்.

எழுங்கதி ரவனு நாணச் [1] சிவந்தன னிருக ணெஞ்சம்
[2] புழுங்கினன் [3] வடவை தீய மயிர்ப்புறம் பொறியிற் றுள்ள
அழுங்கலில் [4] சிந்தை யிர்நீ ரடவிக டோறுஞ் சென்றே
ஒழுங்கறு புளிஞ ராகி யுறுதுய ருறுக வென்றான்.

(இ - ள்.) எழும் கதிரவன்உம் நாண - உதித்துவிளங்குகிற சூரியனும் வெள்கும்படி, இரு கண் சிவந்தனன்-(தனது) இரண்டு கண்களுஞ்செந்நிறமடைந்து, நெஞ்சம் புழுங்கினன் - மனம்தவித்த வனாய், வடவை தீய மயிர்ப்புறம் பொறியின் துள்ள-படபாமுகாக் கினியுந் தீந்துபோம்படி (தனது) உடம்பின்மேலுள்ள உரோமத் துவாரங்கள் அனற்பொறிகளால் மிக, (இங்கன் கௌசிகன் பெருங்கோபங்கொண்டு தன்புதல்வரைநோக்கி), 'அழுங்கல் இல் சிந்தையிர் - இரக்கமில்லாத மனமுடையவர்களே! நீர் - நீங்கள், அடவிகள்தோறுஉம் சென்று-காடுகளிலெல்லாம் போய், ஒழுங்கு அறு புளிஞர் ஆகி - நாகரிகமில்லாத வேடர்களாய், உறு துயர் உறுக - மிக்க துன்பத்தை அடைவீர்க', என்றான் - என்று சொல்லிச் சபித்தான்; (எ - று.)

'தந்தைசொல்லை மீறிய நீங்கள் வசிட்டபுத்திரர்களைப்போல் முஷ்டிக ஜாதியர்களாகி நாயின்மாமிசத்தையுண்டு ஆயிரமாண்டு கள் புவியில் உழல்வீராக' என்று சபித்ததாக முதனூலால் விளங்கும். கதிரவன் நாணுதற்குக் காரணம் - கௌசிகனது கண் களின்செந்நிறம் தனது மண்டலத்தின் செந்நிறத்தினும் மிக்கிருத் தலும், அவனதுகோபதாபம் தனது கிரணதாபத்தினும் அதிகப் படுதலும். புளிஞர்=புளிந்தர். வடவை என்பதன்பின் உம்மை விகாரத்தால் தொக்கது. பி-ம்:—[1] சிவந்தன. [2] புழுங்கின. [3] வடவைத் தீயின். [4] சிந்தையான், சிந்தையர். (688)

127.—பிறகு இரண்டுமந்திரங்களைச் சுனச்சேபனுக்குக் கௌசிக னுபதேசித்தல்.

மாமுனி வெகுளி தன்னான் [1] மடிகலா மைந்தர் நால்வர்
தாமுறு சவர ராகச் சபித்தெதிர் சலித்த சிந்தை
ஏமுற லொழிக வின்னே பெறுகென விரண்டு விஞ்சை
[2] கோமரு கனுக்கு நல்கிப் பின்னருங் [3] குறிக்க லுற்றான்.

(இ - ள்.) மா முனி வெகுளி தன்னால்-சிறந்த வசிட்டமகா முனிவனது கோபத்தால், மடிகலா - இறவாத, மைந்தர் நால்வர் தாம் - (தனது) புத்திரர் நாலுபேரும், உறு சவரர் ஆக - (இழி குணம்)பொருந்திய வேடர்களாகும்படி, சபித்து-(விசுவாமித்திரன்) சாபங்கொடுத்துவிட்டு, (அதன்பின்பு), எதிர் - (தனது) எதிரில் நின்ற, கோ மருகனுக்கு - சிறந்த (தன்) மருமகனுக்கு, 'சலித்த சிந்தை ஏம் உறல் ஒழிக-கலங்கின (உனது) மனத்திலே துன்பப் படுதலை நீங்குவாயாக; இன்னே இரண்டு விஞ்சை பெறுக - இப்

பொழுதே இரண்டுமந்திரங்களை (என்னிடம்) உபதேசம் பெறுவாயாக,' என நல்கி - என்று (மந்திரங்களைச் சொல்லிக்) கொடுத்து, பின்னர்உம்-மீண்டும், குறிக்கல் உற்றான் - கூறுபவனானான்; (எ-று.) —விசுவாமித்திரன் கூறியதை மேற்கவியிற் காண்க.

மாமுனிவெகுளிதன்னால் விசுவாமித்திரன் மைந்தர் மடிந்தமையை, 100-ஆஞ் செய்யுளிற் காண்க. நால்வர் என்றதன்பின் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. சவரர்-சபரர். பி-ம்:—[1]மடிதலான். [2]கோமருமகற்கு. [3]குணிக்கல். (689)

128.—சுநச்சேபனைக் கௌசிகன் விடைகொடுத்து அனுப்புதல்.

அரசனொ [1]டேகி யூபத் [2]தணைக்குபிம் மறையை [3]யோதின்
[4]விரசுவர் விண்ணு ளோரும் விரிஞ்சனும் விடைவ லோனும்
உரைசெறி வேள்வி முற்று முன்னுயிர்க் கீறுண் டாகா
பிரசமென் தாரா யென்னப் பழிச்சொடும் பெயர்ந்து போனான்.

(இ - ள்.) 'பிரசம் மெல் தாராய் - தேனினையுடைய மென்மையான பூமாலையை யுடையவனே! அரசனொடு ஏகி - அம்பரீஷராஜனுடனே சென்று, யூபத்து அணைக்குபு - யூபத்தூணிற் கட்டும்போது, இ மறையை ஓதின் - இந்த மந்திரங்களைச் சொன்னால், விண்உளோர்உம் - தேவர்களும், விரிஞ்சன்உம்-பிரமனும், விடைவலோன்உம் - ரிஷபத்தை (வாகனமாகக்கொண்டு ஏறி) நடத்துதலில்வல்ல உருத்திரனும், விரசுவர் - (யாகசாலைக்கண் தம் அவிர்ப்பாகத்தைப் பெற) வந்துசேர்வார்கள்; உரை செறி வேள்வி முற்றும் -புகழ்மிகுந்த யாகமும் பூர்த்தியாம்; உன் உயிர்க்கு ஈறு உண்டாகா(து)—,' என்ன - என்று (தன் மருகனைநோக்கிச்) சொல்ல: (அதுகேட்டு அவன்), பழிச்சொடுஉம் பெயர்ந்து போனான் - துதிசெய்தலுடனே (அவ்விடத்தைவிட்டு) நீங்கி (அரசனுடனே) சென்றான்;

அரசன் முனிகுமாரனைச் சந்தனம் மாலை முதலியவற்றாற் செவ்வையாக அலங்கரித்து நரமேதத்துக்காக அழைத்துக்கொண்டு போனானதலால், கௌசிகன் அவனை 'பிரசமென தாராய்' என விளித்தான். யூபம்-யாகபசுவைக் கட்டுந் தூண். இரண்டு மந்திரங்களுள் ஒன்று பலியை யுண்பவனாகிய தேவேந்திரனையும், மற்றொன்று யூபஸ்தம்பத்தின் தேவதையாகிய உபேந்திரனையும் துதிப்பன. விடை - வ்ருஷம்; வடசொல். உண்டாகா - விகாரம். விண்ணுளோரென்பதை உயர்வுப்பன்மையாகக்கொண்டு, மேற்கவியில் வருவதற்கு ஏற்ப பரமபதத்திலிருக்குந் திருமாலெனினுமாம். பி-ம்:—[1]எய்தி. [2]அணைக்குபு. [3]ஆய்தி. [4]விரசுவான். (690)

129.—சுநச்சேபனுயிர்க்குத் தீங்கில்லாமலே யாகம் முடிதலும், விசுவாமித்திரன் வடதிசை செல்லுதலும்.

மறைமுனி யுரைத்த வண்ண [1]மனத்துற மைந்த னயச்
சிறையுறு கலுழ னன்னஞ் சேமுதற் பிறவு மூரும்
இறைவர்தொக் கமரர் சூழ விளவறன் னுயிரும் வேந்தன்
முறைதரு மகமுங் காத்தார் வடதிசை முனியுஞ் [2]சென்றான்.

(இ - ள்.) மறை முனி உரைத்த வண்ணம் - வேதங்களை யறிந்த கௌசிகமுனிவன் கூறியபடியே, மைந்தன் - அந்தக்குமாரன், (தன்னை யூபஸ்தம்பத்திற் கட்டிய பொழுது), மனத்துஉற ஆய-மனத்தினுற் பொருந்த (அம்மந்திரங்களை)த் தியானிக்க, (அப்பொழுது), சிறை உறு கலுழன் - இறகு வளம்பொருந்திய கருடனும், அன்னம்-ஹம்ஸமும், சே-ரிஷபமும், முதல்-முதலிய, பிறஉம்-மற்றை வாகனங்களையும், ஊரும் - ஏறிச்செலுத்துகிற, இறைவர் - (திருமால் பிரமன் உருத்திரன் முதலிய) தலைமைத்தேவர்கள், அமரர் சூழ - மற்றைத் தேவர்கள் (தம்மைச்) சுற்றிலும் வரும்படி, தொக்கு -(அவ்வேள்விச்சாலையில்) வந்துசேர்ந்து, இளவல்தன் உயிர்உம் -அக்குமாரனது பிராணனையும், முறைதரு வேந்தன் மகம்உம் - வைதிகவிதிப்படியே செய்யப்படுகிற அவ்வரசனது அந்தயாகத்தையும், காத்தார் - (அழியாதபடி) பாதுகாத்திட்டார்கள்; முனிஉம் - கௌசிகமுனிவனும், (மேற்குத்திக்கில் தனது தவம் முடியாமையால்), வடதிசை சென்றான்-; (எ-று.)—'பிறவும்' என்றது - இந்திரன் அக்கினி யமன் முதலியோர்க்கு ஊர்திகளாகிய-வெளளையானை, ஆட்டுக்கடா, எருமைக்கடா முதலியவற்றை. பி-ம்:—[1] மகத்துறை. [2] போனான். (691)

130.–வடக்கில் கௌசிகன் கடுந்தவம்புரிய, எல்லாவுலகுஞ் சலித்தல்.

வடாதிசை முனியு நண்ணி மலர்க்கர நாசி வைத்தாங்கு
இடாவுபிங் கலை[1]யா னைய விதயத்தா டெழுத்தொன் றெண்ணி
விடாதுபல் பருவ நிற்ப மூலமா முகடு விண்டு
தடாதிருட் படலை [2]மூடச் சலித்ததெத் தலமுந் தாவி.

(இ - ள்.) முனிஉம் - கௌசிகமுனிவனும், வடா திசை நண்ணி - வடக்குத் திக்கை அடைந்து, ஆங்கு-அவ்விடத்திலே, மலர் கரம் நாசி வைத்து-தாமரைமலர்போன்ற (தனது) கையின் விரல்களை மூக்கின்மேல் வைத்து, இடாவு பிங்கலையால் நைய - இடைகலையானது பிங்கலையோடு அடங்கும்படி, (பிராணாயாமஞ்செய்து), இதயத்தாடு எழுத்து ஒன்று எண்ணி - (தன்) மனத்திலே ஏகாட்சரமாகிய பிரணவ மகாமந்திரத்தைத் தியானஞ்செய்துகொண்டு, பல் பருவம் விடாது நிற்ப - அநேகவருஷகாலம் (தவவொழுக்கத்தினின்று) நீங்காமல் நிலைநின்றிருக்க, (அப்பொழுது), மூலம் மா முகடு விண்டு - மூலாக்கினியினாலே (அவனது) பெரிய கபாலம் வெடித்துவிரிந்து (அதனினின்று), இருள் படலை - இருளின் கூட்டத்தையொத்த புகைத்திரள், தடாது - தடுக்கப்படாமல், தாவி - மேலெழுந்து, மூட - (எங்கும்) மறைக்கத் தொடங்கவே, எ தலம் உம்-எல்லாவுலகமும், சலித்தது-நடுங்கிற்று; (எ-று.)

அந்த விசுவாமித்திர முனிவன் பலபருவங்கள் யோகம் புரிய, அப்போது மூலாக்கினியால் கபாலம்விரிந்து புகையெங்கும் மூடுவதாயிற் றென்க. இந்திரியங்களை யொடுக்கி இடைகலையால் வாயுவை யிரேசித்துப் பதினாறு மாத்திரை யளவு பூரித்து அறுபத்துநான்கு மாத்திரையளவு கும்பித்து முப்பத்திரண்டு மாத்

திரையால் வெளிவிட்டு இவ்வாறே அவ்வாயுவைப் பிங்கலையால் மும்முறை இரேசகம் முதலியனசெய்து பிராணவாயுவைச் சுஷும்னையிற் செலுத்தலாகிய பிராணாயாமகாலத்துச் சுவாசபந்தனத்தால் மூக்கின் துவாரங்கள் வருந்துமென்பார், 'இடாவுபிங்கலையால் நைய' என்றார். இடை பிங்கலை என்பன - தசநாடிகளிற் சேர்ந்தவை; இவை - கத்திரிகைக்கால்போல ஒன்றோடொன்று பின்னிநிற்கும் மூக்கின்நாடிகள்; இடைகலை - இடைகலையென்னும் நாடியினின்று இடமூக்கால்வருஞ் சுவாசம், பிங்கலையென்னும் நாடியினின்று வல மூக்கால்வருஞ்சுவாசம்-பிங்கலை. மூச்சை வெளிவிடுதல் - இரேசகம். உள்வாங்குதல் - பூரகம்; கும்பகம் - பிராண வாயுவைச் சமப்படுத்தி யடக்கல். மூலமாமுகடு விண்டு-அண்டகோளத்தின் மேல்முகட்டை யுங்கடந்து என்றுமாம். வடாதிசை - எதுகைநோக்கிய விகாரம். இடாவென்பது உகரச்சாரியைபெற்று நின்றது. பிங்கலை - ஆவீறு ஐயாயிற்று. முகடு - தலையோட்டின் உச்சி. படலம்=படலை. 'பிங் கலையால்' என்பதில், ஆல் - ஓடுஎன்பதன் பொருளது. பி - ம்:—
[1] தாரைநைய, தானய. [2] மூடிச். (692)

வேறு.

131, 132.—இரண்டு கவிகள்-குளகம்: கௌசிகனது தவக்கனலினூற் புகைவிம்முதலைத் தெரிவிக்கும்.

131. எயிலெ ரித்தவன் யானையு ரித்தநாள்
[1]பயிலு றுத்துரி [2]போர்த்தநன் பண்பெனப்
புயல்வி ரித்தெழுந் தாலெனப் பூதலம்
[3]குயிலு றுத்திக் கொழும்புகை விம்மவே.

132. தமந்தி ரண்டுல கியாவையுந் [1]தாவுற
[2]நிமிர்ந்த வெங்[3]கதிர்க் கற்றையு நீங்குறக்
[4]கமந்த மாதிரங் காவலர் [5]கண்ணொடுஞ்
சுமந்த [6]நாகமுங் கண்[7]சும் புளித்தவே.

(இ - ள்.) (131) எயில் எரித்தவன் - திரிபுரத்தை யெரித்த சிவன், யானை உரித்த நாள் - யானையை யுரித்த காலத்தில், பயில் உறுத்து - (உடம்போடு) செறியச்செய்து, உரி போர்த்த - (அவ் யானையின்) தோலை மேலே போர்த்துக்கொண்ட, நல் பண்பு என - நல்ல தன்மை போலவும், புயல் - மேகங்கள், விரித்து எழுந்தால் என-எங்கும் பரவி யெழுந்தாற்போலவும், பூதலம் குயிலுறுத்தி - பூமியிடமுழுவதையும் நெருங்கச்செய்து, கொழு புகை - மிகுந்த (அந்தமூலாக்கினியின்) தூமமானது, விம்ம - மிகுதியாக,—(132) தமம்-இருள், திரண்டு-மிகுதியாய் ஒருங்கு கூடி, உலகு யாவைஉம்-எல்லாவுலகங்களிலும், தாவுற-சென்று பரவ, (அதனால்), நிமிர்ந்த வெம் கதிர் கற்றைஉம் நீங்குற - பரந்த வெவ்விய (சூரியனது) கிர ணங்களின் தொகுதியும் மறைபட்டொழிய, கமந்த மாதிரம் காவலர் கண்ணொடுஉம் - (மேலுலகத்திலே) நிறைந்துள்ள திக்குப்பாலகர்க ளது கண்களுடனே, சுமந்த நாகம் கண்உம்-(கீழுலகத்திலேயிருந்து பூமியைத்) தாங்குகிற திக்கு யானைகளின் கண்களும், சும்புளித்த-கூசின; (எ - று.)

131. புகை எங்கும் கம்மியது - பேருருவுகொண்ட சிவபெருமான் யானையையுரித்து அதன்தோலைப் போர்த்துக்கொண்டதையும், பூமியிலெங்கும் புயல் விரிந்தெழுந்ததையும் போலுமென்றார். யானை — தாருகவனத்து முனிவர் ஏவினதென்றாயினும், கஜாசுரனென்றாயினுங் கொள்க. விரித்து - வலித்தல். குயிலுறுத்தல் - அடைத்தல், நிறைத்தல். எயில் - மதில்: பட்டணத்துக்கு ஆகுபெயர். பி - ம்:—[1] பயில்வுறுத்துரி, பயிலுரித்துரி, பயில்வுறத்தனி, பயிலுறத்தனி. [2] போர்த்தனன, போர்த்திடும். [3] குயில்வு.

132.—கௌசிகமுனிவனது கபாலத்தினின்று கிளர்ந்தெழுந்த புகைமிகுதியா லுண்டான இருளடர்த்தியால் மேலுலகத்திலுள்ள தேவர்களது இமையாக்கண்களும், கீழுலகத்திலுள்ள திக்கஜங்களது கண்களும் கூசியமை கூறவே, நிலவுலகத்தாரது கண்கள் கூசியமை தானே பெறப்படும். தமஸ் = தமம். கமந்த - இறந்தகாலப் பெயரெச்சம்: "கமநிறைந்தியலும்" என்பது தொல்காப்பியம். மாதிரக் காவலர் - (எட்டுத்) திக்குகளையுங் காப்பவர்; கிழக்காதிமுறையேயுள்ள இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என இவர். பூமியின் கீழ் ஒவ்வொருதிக்கிலும் ஐராவதம் முதலிய யானைகளிருந்து பூமியைத் தாங்கிநிற்கின்றன என்பது, நூற்கொள்கை. [4] கமைந்த என்னும் பாடத்துக்கு-பொறுமையுள்ள வென்க. பி - ம்:—[1] தாவற. [2] நிமிர்ந்து. [3] கனற். [4] கமந்து, கமைந்து. [5] தன்னோடும். [6] யானையும். [7] சும்புளிக்கவே. (693, 694)

133.—உலகத்து அப்போது தோன்றிய மாறுபாடு.

திரிவ நிற்ப செகதலத் தியாவையும்
வெருவ [1] லுற்றன வெங்கதிர் மீண்டன
கருவி யுற்ற ககனமெ லாம்புகை
[2] உருவி யுற்றிட வும்பர் துளங்கினர்.

(இ - ள்.) கருவி-(உலகமும் உலகத்துயிர்களும் வாழ்வதற்குத்) துணைக்காரணமான மேகங்கள், உற்ற - நிறைந்துள்ள, ககனம் எலாம் - ஆகாயமுழுவதிலும் புகை-புகையானது, உருவி உற்றிட - (அங்ஙனஞ்) சென்று நிறைந்ததனால்,—செகம் தலத்து - உலகத்தினிடத்திலே, திரிவ-சஞ்சரிப்பனவாகிய பொருள்களும், நிற்ப - (சஞ்சரியாமல்) நிலைநிற்பனவாகிய தாவரப்பொருள்களும், யாவைஉம் - (ஆகிய) எல்லாப்பொருள்களும், வெருவல் உற்றன - அஞ்சுதலையடைந்தன; வெம் கதிர்-உஷ்ணமான சூரியகிரணங்களும், மீண்டன —(வெளியிற் சென்று விளங்கமாட்டாமல்) திரும்பிவிட்டன; உம்பர் - தேவர்களும், துளங்கினர் - (அச்சத்தால்) நடுக்கமுற்றார்கள்; (எ - று.)—கருவி-மின்னு முழக்கு இவற்றின் தொகுதி யெனினுமாம். பி-ம்:—[1] உற்றென. [2] துருவி. (695)

134.—தேவர்கள் யாவரும் கௌசிகனிடத்து வருதல்.

புண்ட ரீகனும் [1] புட்டிருப் பாகனும்
குண்டை யூர்தி [2] குலிசியு மற்றுள
அண்டர் தாமும்வந் தவ்வயி [3] னெய்திவேறு
எண்ட போதனன் றன்னை யெதிர்ந்தனர்.

(இ - ள்.) (பின்பு), புண்டரீகன்உம் - தாமரைமலரில் வாழ்கிற பிரமதேவனும், புள் திரு பாகன்உம் - கருடாழ்வானுக்குச் சிறந்த பாகனாகிய திருமாலும், குண்டை ஊர்தி(உம்)-இடபத்தை வாகனமாகவுடைய சிவனும், குலிசிஉம் - வச்சிராயுதமுடைய இந்திரனும், மற்று உள அண்டர் தாம்உம் - மற்றுமுள்ள தேவர்களும், வேறு வந்து அவ்வயின் எய்தி - தனித்தனி வந்து அவ்விடத்திற்சேர்ந்து, எண் தபோதனன் தன்னை - (யாவராலுஞ்) சிறப்பித்து எண்ணப் படுகிற தவத்தையே செல்வமாகவுடைய அக்கௌசிகமுனிவனை, எதிர்ந்தனர் - சந்தித்தார்கள்; (எ-று.)

புள் - ஈண்டுப் பறவைக்கரசாகிய கருடன். குண்டையூர்தி - பண்புத்தொகையன்மொழி. குலிசம் - வச்சிராயுதம். வேறு எண் என எடுத்து - (மற்றைமுனிவர்களினுஞ் சிறப்பாகத்) தனியே பிரித்து எண்ணப்படுகிற என்றும், (தான்பிறந்த க்ஷத்திரியசாதியினின்றும்) வேறாகிய பிராமணஜாதியனாகும்படி எண்ணுகிற என்றும் உரைக்கலாம். படைத்தல் காத்தல் அழித்தல் என்னுந் தொழில்களின் முறைமைப்படி பிரமவிஷ்ணுருத்திரர்களை வைத்தார். பி - ம்:—[1]புட்டரு புட்டரும். [2]குலிசனும். [3]எய்தியே. (696)

135.–வந்த தேவர்கள் கௌசிகனை 'நீ பிரமவிருடியாவாய்' எனல்.

பாதி மாமதி சூடியும் பைந்துழாய்ச்
சோதி யானுமத் [1]தூய்மல ராளியும்
வேத பாரகர் வேறிலர் [2]நீயலான்
மாத போதன வென்ன வழங்கினர்.

(இ - ள்.) மா பாதி மதி சூடிஉம்-சிறந்த கலைகுறைந்த பிறைச் சந்திரனை முடியிலணிந்துள்ள சிவனும், பைந் துழாய் சோதியான் உம்-பசுமையான திருத்துழாயை யணிந்த ஒளிவடிவமான திருமாலும், அ தூய் மலர் ஆளிஉம் - அத்திருமாலினது பரிசுத்தமான நாபித்தாமரைமலரைத் தங்குமிடமாகவுடைய பிரமனும், (என்னுந் திரிமூர்த்திகளும் அம்முனிவனை நோக்கி), 'மா தபோதன - சிறந்த தவத்தையே செல்வமாகவுடைய முனிவனே! வேத பாரகர் நீ அலால் வேறு இலர் - வேதங்களின்கரையைக் கண்டு உணர்ந்தவர் நீ யல்லாமல் (உலகத்தில்) வேறொருவரு மில்லை,' என்ன வழங்கினர்-என்று (உபசாரமாகக்) கூறினார்கள்; (எ - று.)

இதனால், 'நீ பிரமவிருடியாவாய்' என்று தேவர்களுணர்த்தியதைக் கூறுகின்றார். விசுவாமித்திரன் தென்திசையில் கடுந்தவம் புரிந்து பிரமனால் ராஜரிஷி யெனப் பேர் பெற்றும் பிராமணத்வம் பெறுமையால் மீளத் தவம்புரிய, அங்குத் திரிசங்குவைச் சுவர்க்கமேற்றிப் பிறகு மேற்கே புஷ்கரக்ஷேத்திரத்தில் தவம் புரிந்து அங்குச் சுநச்சேபனைப் பாதுகாத்துப் பின்னும் தவம் புரிகையில் மேனகையினிடத்து மோகங்கொண்டு தவநிலை குலைய, அதனை விட்டு வடக்கே கௌசிகிநதிக்கரையில் கடுந்தவம்புரிந்து பிரமதேவனால் மகரிஷியெனப்பட்டம்பெற்றும் ஐம்பொறிகளை வென்றவ்

னென்ற பெயரைப்பெருமையாற் பின்னுங் கடுந்தவம் புரிகையில் தேவர்களின் சூழ்ச்சியால் அரம்பை தவத்தைக் கெடுக்கவர, முனிவன் அவளைப் பதினாயிரமாண்டு கல்லாகக் கிடக்குமாறு சபித்து விட்டு, கோபத்திற்கு வசமாகிச் சபித்ததற்காக இரங்கி, கீழ் திசையை யடைந்து ஆயிரமாண்டு தவஞ்செய்து பின் பாரணை செய்ய அன்னத்தைச் சித்தமாக்க, அங்கு இந்திரன் அந்தணவடிவங்கொண்டு வந்துகேட்க, அவனுக்கு அதை அளித்திட்டுப் பின்னுங் கடுந்தவம் புரிய, தேவர்கள் அவனது தவக்கனலைப் பொறுக்க முடியாமற் பிரமதேவனைப் பிரார்த்திக்க, அவன் தேவர்களோடு முனிவனை யடைந்து பிரமரிஷியாவாயென்று கூற, தேவர்களின் வேண்டுகோளினால் வசிட்டனும் விசுவாமித்திரனைப் பிரமரிஷியாக மதித்து நண்பு பூண்டனனென்பது, முதனூலால் விளங்கும். பி-ம்:—[1] தூமலர். [2] தின்னலரால். (697)

136.—தேவர்கள் தம்மிடஞ் சேர்தல்.

அன்ன வாசகங் கேட்[1]டுண ரந்தணன்
சென்னி தாழ்த்திரு செங்[2]கம லங்குவித்து
உன்னு [3]நல்வினை யுற்றதென் றோங்கினான்
துன்னு தேவர்தஞ் சூழலுட் போயினார்.

(இ - ள்.) அன்ன வாசகம்-(தேவர்களின்) அந்த வார்த்தையை, கேட்டு உணர் - செவியுற்றறிந்த, அந்தணன் - கௌசிகமுனிவன், சென்னி தாழ்த்து - தலைவணங்கி, இரு செம் கமலம் குவித்து- இரண்டு செந்தாமரைமலர்கள்போலுங் கைகளைக் கூப்பி [வந்த தேவர்களைத் திருவடிகளில் விழுந்து தெண்டனிட்டு], 'உன்னும் நல்வினை-(யாவராலும்) கருதப்படுகிற நல்ல புண்ணியத்தின்பயன், உற்றது - (எனக்கு வந்து) பொருந்திற்று', என்று ஓங்கினான் - என்று பூரிப்புற்றான்; (பின்பு), துன்னு தேவர் - (அங்குவந்து) பொருந்தின தேவர்கள், தம் சூழலுள் போயினார் - தத்தமிடத்திற்குச் சென்றார்கள்; (எ - று.)—பி-ம்:—[1] உணர்ந்து. [2] கரமும். [3] நம். ()

137.—கௌசிகன் சரிதையைச் சதாநந்தன் முடித்திடல்.

ஈது முன்னர் நிகழ்ந்த திவன்றுணை
மா[1]த வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி [2]வித்தகன் [3]றன்னரு [4]ணேர்ந்தனிர்
[5]யாது மக்கரி தென்றன னீறிலான்.

(இ - ள்.) 'முன்னர் நிகழ்ந்தது ஈது-முன்னே நடந்தவரலாறு இதுவாம்; இவன் துணை-இக்கௌசிகனுக்கு ஒப்பாக, மா தவத்து உயர் மாண்பு உடையார்-பெரிய தவத்தினாற்சிறந்த மகிமையுடையவர், இலை - (வேறெவரும்) இல்லை: நீதி வித்தகன் தன் அருள் நேர்ந்தனிர் - நியமந்தவறாத மெய்யுணர்வுக்கு இருப்பிடமாகவுள்ள இம்முனிவனது கருணையை (நீங்கள்) பெற்றுள்ளீர்கள்: (ஆதலால்) உமக்கு அரிது யாது - உங்களுக்கு அருமையான காரியம் யாதுள்ளது?' என்றனன்-என்று (ராமலக்ஷ்மணர்களைநோக்கிச்) சொல்லி முடித்தான்: (யாவனெனில்), - ஈறு இலான் - (நற்குணங்களுக்கு) ஒரெல்லையில்லாத சதானந்த மகாமுனிவன்; (எ-று.)

சதானந்தனென்னும் பெயரின் பொருளை உட்கொண்டு, ஈறு இலான் - (ஆனந்தத்துக்கு) முடிவில்லாதவன் என்றதென்பர் ஒருசாரார். 89-ஆங் கவியில் 'ஈறிலாவன்றபோதனன்' என்று எழுவாய் வந்திருப்பதை நினைப்பூட்ட, இங்கு 'ஈறிலான்' என்றனரென்னலாம். பி-ம்:—[1] தவததுறை. [2] வித்தக, உற்றவன். [3] தன்னுடு, நிற்கருள். [4] நேர்ந்தநீர், நேர்ந்தனை. [5] யாது நிற்கு. (699)

138.—சதாநந்தன் குமாரர்களை வாழ்த்திவிட்டுப் போதல்.

என்று கோதமன் காதலன் கூறிட
வென்றி [1] வீரர் வியப்பொ[2]டு வந்தெழா
[3] ஒன்று மாதவன் [4] ருடொழு தோங்கிய
பின்றை [5] யேத்திப் [6] பெயர்ந்தனன் [7] றன்னிடம்.

(இ-ள்.) என்று கோதமன் காதலன் கூறிட - என்று (இவ்வாறு) கௌதமமுனிகுமாரனாகிய சதாநந்தமுனிவன் சொல்ல,— வென்றி வீரர் - வெற்றியையுடைய வீரர்களாகிய ராமலக்ஷ்மணர்கள், வியப்பொடு - (கதை கேட்டதனாலுண்டான) அதிசயத்துடனே, உவந்து எழா - களிப்புற்றெழுந்து, ஒன்றும் மா தவன் தாள் தொழுது ஓங்கிய பின்றை - பொருந்தின சிறந்த தவத்தையுடைய அச்சதாநந்தமுனிவனது திருவடிகளில் விழுந்து வணங்கியெழுந்தபின்பு,—ஏத்தி - (அச்சதாநந்த முனிவன் சக்கரவர்த்தி திருககுமாரர்களை) வாழ்த்திவிட்டு, தன் இடம் பெயர்ந்தனன் - தன்னிடத்துக்குப் போயினன்; (எ - று.)-பி - ம்:—[1] வீரன். [2] உவந்திடத். [3] துன்று. [4] தாளிணைசூடின. [5] அம்முனி, எய்திப், ஏகிப். [6] பேர்ந்தனன், பெயர்ந்தனர். [7] தம்மிடம். (700)

139.—முனிவனும் இலக்குமணனும் படுக்குமிடத்தைச் சேர, இராமன் சீதையை எண்ணியவண்ண மிருத்தல்.

முனியுந் தம்பியும் [1] போய்முறை யாற்றமக்கு
இனிய [2] பள்ளிக [3] ளெய்தினர் [4] பின்னிருட்
கனியும் [5] போல்பவன் கங்குலுந் திங்களும்
தனியுந் தானுமத் தையலு மாயினன்.

(இ - ள்.) முனிஉம் - விசுவாமித்திர முனிவனும், தம்பிஉம் - இலக்குமணனும், போய்—, முறையால்-முறைமைப்படி [வழக்கப்படியே], தமக்கு இனிய பள்ளிகள்-தந்தமக்கு இனிமையான படுக்கையிடங்களை, எய்தினர் - அடைந்தார்கள்; பின் - பின்பு, இருள் கனிஉம் போல்பவன் - இருள்மயமானதொரு பழத்தை யொப்பவனாகிய இராமபிரான், கங்குல்உம் - இராத்திரியும், திங்கள்உம் - சந்திரனும், தனிஉம் - தனிமைப்பாடும், தான்உம்—, அ தையல் உம்-அச்சீதாபிராட்டியுமாக, ஆயினன்-ஆனான்; (எ-று)

இராமபிரான் அவ்விராத்திரிகாலத்தில் சந்திரனது வெண்ணிலா விளங்குஞ் சமயத்தில் தான் தனியனாகிப் படுக்க இருந்தபொழுது, சீதையின் நினைவுவர, காதலின பேலீட்டால் உருவெளிப்பாட்டால் அந்தச் சீதை உடன்தோன்றிநின்று கைக்கு அகப்

படாதிருக்க, மிகவும் வருந்துபவனாயினனென்பது, கருத்து. முனிவனும் தம்பியும் முறையாற் பள்ளிகள் எய்தினர் என்றதனால், இராமபிரான் வழக்கப்படி பள்ளிகொள்ளவில்லையென்பது பெறப்படும்: இதுவரையில் இனியனவாகவிருந்த இரவும் சந்திரனும் முன்புபோலவன்றி இத்தனிமையில் இன்னாதனவாயினவென்றும், இரவில் இதுவரையில் துணையாயிருந்த துயிலும் இப்போது துணையாகாதுவிட இந்தத் தனிமையில் இரவில் உருவெளிப்பாட்டில் தோன்றிய சீதையே துணையாக இருக்கப் பள்ளிகொள்ளாதிருந்தானென்பதும், 'பின்***தையலுமாயினன்' என்றவிடத்துத் தோன்றும். கருநிறத்தாலும், யாவராலும் விரும்பப்படுதலாலும், இருட்கனியை உவமைகூறினர். இருட்கனி - முற்றிய இருளுமாம்:—''இருளன்னமாமேனி யெம்மிறையார்'' என்பர் நம்மாழ்வார். இருட்கனிபோல்பவன் கங்குலுந் திங்களுந்தனியுந் தானுமத்தையலு மாயினன்-''தானுந் தேரும் பாகனும் வந்தென்னலனுண்டான்'' என்பதிற்போலத் திணைவிரவித் தலைமைபற்றி உயர்திணையொருமைமுடிபு ஏற்றது. இருட்கனியும். உம்மை-இசைநிறை; இனி, மழை பானல் முதலியவற்றைப்போல்வதன்றி இருட்கனியையும்போல்பவனென்று எச்சவும்மையாகவுமாம். பி-ம்:—[1]மொய்ம்முறையால், போய்மறையால். [2]பள்ளியுள். [3]எய்திய. [4]பின்னருட். [5]போல்வன. சிலபிரதிகளில், இதுமுதற் குலமுறைகிளத்தல். (701)

140.—இதுமுதல் எட்டுப்பாடல்கள்—இராமபிரான் சீதையின் உருவெளிப்பாட்டை நோக்கித் தன்னுட் கூறுவன.

[1]விண்ணி னீங்கிய மின்னுரு [2]விம்முறைப்
பெண்ணி [3]னன்னலம் பெற்றத [4]துண் டேகொலோ
எண்ணி [5]னீதல தென்றறி யேனிரு
கண்ணி னுள்ளுங் [6]கருத்தினுங் காண்பனால்.

(இ - ள்.) விண்ணின் நீங்கிய மின் உரு - மேகத்தினின்று நீங்கின மின்னலின் வடிவம், இ முறை - இந்தப்படி, பெண்ணின் நல் நலம் பெற்றது உண்டுஏ கொல்ஓ - பெண்ணினது நல்ல அழகை அடைந்துள்ள தன்மை உண்டோ? எண்ணின் - ஆராயுமிடத்து, ஈது அலது என்று அறியேன் - (என் கண்ணுக்குப் புலப்படுகின்ற) இந்த உரு (மின்னல் பெண்வடிவத்தைக்)கொண்டு வந்ததன்று என்று சொல்வதற்கு (வேறுவழிஒன்றும்) அறிகிறேனில்லை; இரு கண்ணினுள்உம் கருத்தின்உம் காண்பன் (இவ்வடிவத்தை என்னுடைய) இரண்டு கண்களிலும் மனத்துள்ளுங் காண்கின்றேன்; (எ-று.)

'மின்னல், தோன்றி உடனே மறைவது: அன்றியும், கண் கால் முதலிய அவயவங்களைக் கொண்டிராது: என்கண்ணுக்குப் புலப்படும் உருவோ, மின்னல்போன்ற பளபளப்புடனே கண் கை கால் முதலியஅவயவங்களைப்பெற்றுள்ளது: ஆகவே மின்னல் பெண்ணுருவம் பெற்றுவந்துள்ளது என்று இவ்வாறு அவ்வுருவத்தைச் சொல்வதன்றி, வேறுவகையாகச்சொல்ல வழி

யறிகின்றிலேன்: இவ்வுரு என்னகத்துத் தோன்றிப் புறத்தும் தோன்றுகின்றது: இப்புதுமையிருந்தபடி என்னே! என்றவாறு. ஆல்-அசை: வியப்புமாம். என்று=என்ன:எச்சத்திரிபு.காண்பன்-காலவழுவமைதி. பி-ம்:-[1]விண்ணியங்கிய.[2]விம்முறப், வின்முறைப். [3]நண்ணிய. [4]என்றே. [5]நன்னலத்தெண். [6]கருத்துளும். (702)

141. வள்ளற் [1]சேக்கைக் கரியவன் [2]வைகுறும்
[3]வெள்ளப் பாற்கடல் போன்மிளிர் கண்ணினுள்
அள்ளற் பூமக [4]ளாகுங்கொ லோவெனது
உள்ளத் தாமரை யுள[5]ளுறை கின்றதால்.

(இ - ள்.) வள்ளல் சேக்கை கரியவன் - (தன்னை) வரையாது கொடுக்குந் தன்மையைக்கொண்ட (ஆதிசேஷனாகிய) படுக்கையைக்கொண்ட கருநிறமுள்ள திருமால, வைகுறும் - பள்ளி கொண்டு உறைகின்ற, வெள்ளம் பாற்கடல்போல் - வெள்ளமாகிய திருப்பாற்கடல்போல, மிளிர்-விளங்குகின்ற, கண்ணினுள்-கண்களை யுடைய நங்கை, எனது உள்ளம் தாமரையுள் உறைகின்றதால் - எனது மனமாகிய தாமரைமலரினுள் வந்து வசிக்கின்ற காரணத்தினால், அள்ளல் பூமகள் ஆகும்கொல் ஓ-சேற்றிலுண்டாகிற தாமரை மலரிலே (எப்பொழுதும்) வாழ்கிற திருமகளாவளோ? (எ - று.)—உள்ளத்தாமரை-இருதய கமலம்.

பாற்கடலினிடையே பாம்புப் படுக்கையிற் பள்ளிகொண்டருளுகிற கருநிறமுடைய திருமால்-வெண்ணிறமுள்ள பெரிய கண்ணினிடையே கருநிறமுடைய கண்மணியில் தோன்றும் பாவைக்கும், திருமாலின் திருமேனி நிறச் சிறப்பால் கறுத்துத்தோன்றும் சேடனாகிய பாம்பு-பாவையைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் கருவிழிக்கும், அவ்வாதிசேடனுக்குச் சுற்றிலுமுள்ள பாற்கடல்வெள்ளம் - அக்கருமணியைச் சூழந்துள்ள வெண்ணிறப்பரப்புக்கும் உவமையாம்.கருவிழியிடையில் தோன்றும் பாவையைக் கிருஷ்ணன் என்று ஒருசார் வழங்குவதனைக் கொண்டு, அப்பொருளும் தோன்ற, அதன் பரியாயச்சொல்லாக 'கரியவன்' என்று கம்பர் அமைத்தா ரென்பர். அள்ளற்பூ - பங்கஜம். இங்குந் தாமரையில் வந்து தங்கியதனால், 'என்றுந் தாமரையில் தங்குந்திருமகளோ?' என்று ஐயமுற்றான்; ஐயவணி. "சென்றாற்குடையாம்" என்கிற பாசுரப்படியே திருமாலுக்குத் தன்னைப் பலபடியாகவும் உதவுதலால், "வளளற்சேக்கை" என்றது: இனி, வள்ளற்சேக்கை என்பதற்கு - வளைந்து செல்லுந் தன்மையுளள சர்ப்பராஜனாகிய சேக்கையென்பாரு முளர். வெள் அம் பாற்கடல் எனவும் பிரிக்கலாம். பி-ம்:—[1]செங்கை. [2]வைகுமவ், வைகிய. [3]வெளளை. [4]ஆகிக்கொலாம். [5]உறைகின்றதே. (703)

142. அருளி லாளெனி னும்மனத் தாசையால்
[1]வெருளு நோய்[2]விடக் கண்ணின் [3]விழுங்கலால்
தெரு[4]ளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்[5]னுரு [6]வாயவே.

(இ - ள்.) அருள் இலாள் எனின்உம் - (அவள் என்பக்கல்) கருணையில்லாதவளாயினும், மனத்து ஆசையால் - (எனது)மனத்

தில் (அவள்பக்கலுண்டான) காதலினாலும், வெருளும் நோய்விடம் -(யாவரும்) அஞ்சுதற்குக்காரணமான காமநோயைத் தருகிற விடம் போன்ற, கண்ணின் - (தன்) கண்களால், விழுங்கலால் - (அவள் என்னை) உட்கொண்டதனாலும்,—தெருள் இலா உலகில் சென்று நின்று வாழ் பொருள் எலாம் - தெளிவில்லாத இவ்வுலகத்திலே சரமாகியும் அசரமாகியும் வாழ்கிற எல்லாப்பொருள்களும்,(எனக்கு), அவள் பொன் உரு ஆய-அந்நங்கையின் பொன்மயமான வடிவமாய் விட்டன; (எ-று.)

சீதை தன் கண்ணினால் விழுங்குவதுபோன்ற நோக்கினால் தோற்றுவித்த காதல்மிகுதியால் ஸ்ரீராமனுக்கு எங்கும் அச்சீதையின் வடிவமே காணப்படுதலால், இங்ஙனங் கூறியது. இனி, சீதை திறத்து எனக்குள்ள காதலோடு ஒருவாறு காமநோய் நீங்க நான் அவளை யுட்கொண்டதனால், எங்கும் அவளேயாயினாளென்றலும் ஒன்று. 'அருளிலாள்' என்றது-தன்னை யுடனேவந்து தழுவித் தனக்குப் புணர்ச்சியின்பத்தைத் தந்து மகிழ்வியாது தாமதஞ் செய்து வருத்துதலால். பிராட்டியது திருமேனி உருக்கிய பொன்னின் நிறத்தையுடைய தாதலின், 'பொன்னுரு' எனப்பட்டது. எல்லாப்பொருளையும் சீதையாகக் காணும் தனது தெள்ளறிவில்லாமையை உலகின்மே லேற்றி, 'தெருளிலாவுலகு'என்கின்றான்: இனி, "இருள் தருமா ஞாலம்" எனப் பெரியார் பணித்தாற்போல, 'தெருளிலாவுலகு' என்றதென்பர். சென்றுநின்றுவாழ்பொருள்-சங்கமதாவரப்பொருள். பி-ம்:—[1] வெருளின். [2] கெட. [3] அழுங்கலால். [4] உலா. [5] நிறம். [6] ஆனவே. (704)

143. பூணு லாவிய பொற்கல சங்களென்
ஏணி லாகத்[1] தெழுதல [2] வென்னினும்
வாணி லாமுறு வற்கனி வாய்[3] மதி
காண [4] லாவதொர் காலமுண் டாங்கொலோ.

(இ - ள்.) பூண் உலாவிய - (ஆரம்முதலிய) ஆபரணங்கள் அசையப்பெற்ற, பொன் கலசங்கள் - பொன்னினாலாகிய கலசங்களை யொத்த(அந்நங்கையின்) கொங்கைகள், என் ஏண் இல் ஆகத்து - எனது பெருமையில்லாதமார்பிலே, எழுதல என்னின் உம்-தழுவிப் பதியாமற்போயினவாயினும்,—வாள்நிலா முறுவல்-ஒளியையுடைய சந்திரகாந்தி போன்ற புன்சிரிப்பையும், கனி வாய் - கொவ்வைப் பழம்போன்ற அதரத்தையுமுடைய, மதி-(அவளது முக)சந்திரனை, காணல் ஆவது ஒர் காலம் - (மீண்டும்) பார்க்கக் கூடுவதொரு காலமேனும், உண்டு ஆம்கொல்ஓ-உண்டாகுமோ? (எ-று.)

உருவெளிப்பாட்டிற் கண்ட சீதையைத் தழுவப் பார்த்து அவள் அணைக்கக் கைக்குக் கிட்டாமையால், 'அச்சீதையின் மெய்யுருவத்தை மீண்டும் காணப்பெறுவேனோ?' என்கின்றான், இராமபிரானென்க. சீதையை இறுகத் தழுவுவதனாலான இன்பம் கைகூடாவிட்டாலும், அவளது முகதரிசனமாயினும் இன்னொருகாற்கூடினாற்போதுமென, அப்பிராட்டியிடத்துத் தனக்கு மிகுதி

யாக எழுந்த காதலை வெளியிடுகிறான். இத்தகைய சிறப்புடைய மங்கையைத் தழுவப்பெறும் பாக்கியத்தைப் பெறாமையின், தனது மார்பை 'ஏணிலாகம்' என வெறுத்தான். வாள் நிலாம் - ஒளி பொருந்தியஎன்றுமாம்; நிலாம் = நிலாவும். கலசம், மதி-உவமவாகு பெயர்கள். பி-ம்:—[1] அழுந்தில. [2] ஆயினும். [3] ஒளி, இதழ். [4] ஆகும். இங்கே சில பிரதிகளில் ஒருசெய்யுள் காணப்படுவது வருமாறு:—

கர்தலா லொருத்தியை நினைப்பக் [1]கண்டுயின்
மாதரா ளவன்திற [2]மறுப்பக் கங்குன்மான்
ஏதிலான் தமியனென் றேக லேனென
ஆதலா லிருந்தன [3]ளளிய ளென்செய்வாள்.

பி-ம்:—[1] கண்டுபின். [2] மறப்ப. [3] அழிந்த நெஞ்சினன். (705)

144. வண்ண மேகலை தேரொன்று வாணெடுங்
கண்ணி ரண்டு [1]கதிமுலை தாமிரண்டு
உண்ணி வந்த [2]நகையுமென் றொன்றுண்டால்
எண்ணுங் [3]கூற்றினுக் [4]கித்தனை வேண்டுமோ.

(இ - ள்.) எண்ணும் - (யான் எப்போதும்) நினைத்துக்கொண்டிருக்கிற, கூற்றினுக்கு - கன்னிகையாகிய யமனுக்கு, வண்ணம் மேகலை - அழகிய மேகலையென்னும் ஆபரணத்தை யணிந்த, தேர் ஒன்று - தேர்த்தட்டுப்போன்ற அல்குலொன்றும், வாள் நெடு கண் இரண்டு-வாளாயுதம்போன்ற நீண்ட கண்களிரண்டும், கதி முலை தாம் இரண்டு-இறுமாந்ததுபோன்ற தனங்களிரண்டும், உள் நிவந்த நகை என்ற ஒன்றுஉம்-வாயினுள்ளே (அடங்கிச்) சிறந்த புன்சிரிப்பு என்ற ஒன்றும், உண்டு - உள்ளன; இத்தனை வேண்டும்ஓ - (அந்த யமனுக்கு என்னைக்கொல்ல) இத்தனை கருவிகளும் வேண்டுமோ? (எ - று.)—ஆல்-தேற்றம்: வியப்புமாம்.

சீதையினுடைய அல்குல் கண் முலை நகைஎன்ற இவற்றுள் ஒவ்வொன்றும் என்னை வருத்துகின்றதென்பது கருத்து. தேர்-உவமையாகுபெயர். பி - ம்:—[1] கதிர். [2] நகையொன்றுண்டாமெனின், நகையெனுமொன்றுண்டேல், நகையுமொன்றுலென்றால், நகையுமுண்டாமென்றால். [3] கூற்றெனக்கு, கூற்றுவற்கு. [4] இத்துணை. சில பிரதிகளில் "கொள்ளை கொள்ள" (146) என்றதன்பின் இது. (706)

145. கன்ன [1]லின்கருப் புச்சிலை யான்விரை
[2]பொன்னை முன்னிய பூங்கணை [3]மாரியால்
என்னை யெய்து தொலைக்குமென் றாலினி
வன்மை யென்னுமி [4]தாரிடை வைகுமே.

(இ - ள்.) 'கன்னல் இன் கரும்பு சிலையான்-சாறு இனிமையாக இருக்கப்பெற்ற (மெல்லிய) கரும்பைவில்லாகவுடைய மன்மதன்,— விரை பொன்னை முன்னிய பூ கணை மாரியால் - விரைவாக இத்திருமகளைக்குறித்து (என்மீது) குறித்துத்தொடுக்கிற மலரம்பு மழையால், எய்து—, என்னை - (எவர்க்கும் வலிதொலையாத) என்னை, தொலைக்கும் - வலிமையழிப்பான்,' என்றால்—, இனி - இனிமேல்,

வன்மை என்னும் இது - வலிமையென்று சொல்லப்படுகிற இக் குணம், ஆரிடை வைகும் - யாரிடத்திலே தங்கும்? (எ-று.)

இதுகாறும் வலிய வில்லம்புகளோடு வலிய உடம்பையுமுடைய வீரரெவர்க்கும் வலிதொலையாத யான் இப்பொழுது மெல்லிய கருப்பு வில்லையும் மலரம்புகளையு முடைய அனங்கனுடைய மன்மதனுக்கு வலிய உடம்பையிழக்கும்படியாயிற்றே என்று இரங்கினான். கன்னலின் கரும்பு, கன்னலெனப்படுகிற கரும்பு எனினுமாம். விரை - விரைந்து, வினையெச்சவிகாரம்: பெயர்ச்சொல்லாக நறுமணமுடைய எனினுமாம். பி-ம்:—[1] வார்சிலைகால்வளைத்தேமதன். [2] பொன்னின் மின்னிய. [3] வாளியால். [4] ஆர்க்கண்ணதாகுமோ, ஆர்வசத்தாகுமோ-

146. கொள்ளை கொள்ளக் [1]கொதித்தெழு பாற்கடல்
பள்ள வெள்ள [2]மெனப்பட ருந்நிலா
உள்ள வுள்ள வுயிரைத் [3]துருவிட
வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ.

(இ - ள்.) கொள்ளை கொள்ள - (உலகமுழுவதையும்) கொள்ளையிடுதற்கு [கவர்ந்து தன்வசமாக்குவதற்கு], கொதித்து எழு - பொங்கியெழுகின்ற, பால்கடல் பள்ளம் வெள்ளம் என - திருப்பாற்கடலினது ஆழமாகிய நீர்வெள்ளம்போல, படரும் - (உலகெங்கும்) பரவியுள்ள, நிலா - சந்திரகாந்தியானது, உள்ள உள்ள - (யான் அந்த மங்கையை) நினைப்பதேபயனாகப் பிழைத்துள்ள, உயிரை-(எனது) உயிரை, துருவிட - துளைப்பதனால், வெள்ளை வண்ணம் விடம் உம் உண்டு ஆம் கொல் ஓ - வெண்ணிறத்தையுடையதொரு விஷமும் உலகத்தில் இருக்கிறதோ? (என்ற ஐயம் எனக்கு உண்டாகிறது);

துருவிட என்பதற்கு ஏற்ப, முடிக்குஞ்சொல் வருவிக்கப்பட்டது. 'நஞ்சம் கரியநிறமுடையதென்பது உலகத்திற்பிரசித்தம்; நிலாவென்கிற வெள்ளியநிறத்தையுடையதொரு விஷம் காணப்படுகின்றதே! இது என்ன?' என்று காதலியைத் தழுவப்பெறாது தனித்துள்ள ஸ்ரீராமன் தன்னை மரணவேதனை செய்து வருத்துவதனால் நிலவைப்பழித்துக் கூறுகின்றான். கொள்ளை கொள்ளக் கொதித்தெழு நிலா - (என்னுயிரை யானும் அறியாமற்) கவர்ந்து போவதற்குச் சீறியெழுகின்ற நிலா என்றுமாம். சீதைக்குக் கூறியதுபோல, மாலையந்தி இருள் இவைகட்கு ஸ்ரீராமன் வருந்தியதாகக் கூறாது நிலவுக்குவருந்தியதாகக்கூறியது, ஸ்ரீராமன் அப்போது விசுவாமித்திரருடன் இருந்ததனாலென்ப. பி - ம்:—[1] குதித்து. [2] எனப்படர்பானிலா, இதென்னப்படர்நிலா. [3] துருவுமால். சிற்சில பிரதிகளில், உள்ளமுள்ளவுயிரைத்துருவிட, உள்ளுமுள்ளுற்றுயிரைத் தொடருமால், உள்ளுமுள்ளுற்றுயிரைத்துருவிடும், உள்ளமுள்ளுற்றுயிரைத் தொடருமாம் என மூன்றுமடி. (708)

147. [1]ஆகு நல்வழி யல்வழி யென்மனம்
[2]ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு [3]போன்மொழிப் பைந்தொடி கன்னியே
யாகும் [4]வேறிதற் கையுற வில்லையே.

(இ - ள்.) ஆகும் நல் வழி அல் வழி - செல்லுதற்குரியதான சன்மார்க்கமல்லாத தீயநெறியில், என் மனம் ஆகுப ஓ - எனது (பரிசுத்தமான) மனம் செல்லுமோ? [செல்லாது என்றபடி]; ஆகிய காரணம் - (அப்படியிருக்கவும் என்மனம் இம்மங்கைபக்கற் காதல்கொண்டு சென்றதற்குப்) பொருந்திய காரணம், பாகு போல்மொழி பைந்தொடி - கருப்பஞ்சாறுபோலினிய சொற்களையும் பசியபொற்றொடியையு முடைய இந்நங்கை, கன்னிஏ ஆகும் - கலியாணமாகாத ராஜகன்னிகையே யாவள்: இதற்கு வேறு ஐயுறவு இல்லை - இம்முடிபுக்கு வேறாகச் சந்தேகப்படவேண்டுவ தொன்றுமில்லை; (எ-று.)—இச்செய்யுள்-"அண்ண லிவ்வண்ண மயலுழந்து தளருமேல்வை" என 150-ஆஞ்செய்யுளோடு தொடரும். மேல் வருங் கவிகள் இரண்டும் - இடைப்பிறவரல்கள்.

தனதுமனம் சீதையினிடத்துச் சென்றதனால், அவள் கலியாணமாகாத அரசகன்னிகையாயிருக்கவேண்டு மென்று ஸ்ரீராமன் கருதுகின்றான். இதனால், சான்றோர்க்குத் தூய மனச் சாட்சியே முக்கிய பிரமாணமாம் என்பது புலப்படுகின்றது. சாகுந்தல நாடகத்தில் ஸ்ரீகாளிதாசமகாகவி, இக்கருத்தை "ஸதாம்ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு - ப்ரமாணம் அந்த: கரணப்ரவ்ருத்தய:" என்று கூறியது காண்க. நல்வழியல்லாத வழி - இங்கே, பிறன்மனைவியைவிழைதல். 'என்மனம் நல்வழி ஆகும்: அல்வழி யாகுமோ?' என்று இயைத்து உரைப்பினுமாம். பி-ம்:—[1]ஏகும். [2]ஏகுமோவிதற்காகிய, ஏகுமேயதுவேயிதன், ஏகுமோர்விதுவெய்தின. [3]சேர். [4]ஆசைக்கொர், ஆமதற்கு. (709)

148.—இதுவும், மேலைக்கவியும்–சந்திராத்தமன வருணனை.

கழிந்த கங்கு லரசன் கதிர்க்குடை
விழுந்த [1]தென்னவு மேற்றிசை [2]யாள்சுடர்க்
கொழுந்து சேர்நுதற் கோதறு சுட்டிபோய்
அழிந்த தென்னவு மாழ்ந்தது திங்களே.

(இ - ள்.) கழிந்த - காலங்கழித்து இறந்துபோன, கங்குல் அரசன் - இராத்திரிகாலமாகிய அரசனது, கதிர் குடை - ஒளியை யுடைய ஒற்றை வெண்கொற்றக்குடையானது, விழுந்தது என்ன உம்-(கீழே) விழுந்தது போலவும்,—மேல் திசையாள்-மேற்குத்திக் காகிய பெண்ணினது, சுடர் கொழுந்து சேர் - இளமையான ஒளி பொருந்திய, நுதல் கோது அறு சுட்டி - நெற்றியிலணிந்துள்ள குற்றமற்ற வட்டவடிவமான சுட்டியென்னும் ஆபரணமானது, போய் அழிந்தது என்னஉம்-அழிந்துபோயினதுபோலவும், திங்கள்-சந்திரமண்டலம், (மேல்கடலில்), ஆழ்ந்தது-மூழ்கியது; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. 'கலங்குலரசன்' எனவும், 'மேற்றிசையாள்' எனவும், அஃறிணைப் பொருள்களிடத்து உயர்திணைத்தன்மையை யேற்றிக் கூறியது-வடநூன்முறை. பி-ம்:—[1]ஆமென. [2]வாள். (710)

149. வீசு கின்ற நிலாச்சுடர் [1]வீந்ததால்
[2]ஈச ளுமதி யேகலுஞ் சோகத்தால்

[3]பூசு வெண்கல வைப்புனை சாந்தினை
ஆசை மாத ரழித்தன ரென்னவே.

(இ - ள்.) ஈசன் ஆம் மதி - (தந்தமக்குக்) கொழுநனாகிய சந்திரன், ஏகலும்-(தம்மைப் பிரிந்து போயின அளவிலே,—ஆசை மாதர்-திக்குக்களாகிய (அவனுடைய) விருப்பமுள்ள மனைவியர், பூசு வெள் கலவை புனை சாந்தினை - (தம்தம் உடம்பில் முன்பு அக்கொழுநனாற்) பூசப்பட்டுள்ள அழகிய வெண்ணிறமுள்ள கலவைச் சந்தனத்தை, சோகத்தால்-(அவனைப்பிரிந்த) துயரத்தால், அழித்தனர் என்ன-அழித்துவிட்டார்கள்போல, வீசுகின்ற நிலா சுடர் வீந்தது - (சந்திரன் அத்தமித்தமாத்திரத்தில்) முன்பு (எத்திக்கிலும்) பரவியுள்ள (அவனது) ஒளியாகிய நிலா ஒழிந்தது; (எ - று.) —"(அப்போது), வெய்யோன் உதயஞ்செய்தான்") (150) என்க.

எல்லாத்திக்குக்களினின்றும் நிலாவொளிபோயினது - திசைகளாகிய மகளிர் கொழுநனாகிய சந்திரன் ஏக, தாமணிந்த கலவைச்சாந்தைச் சோகத்தா லழித்ததுபோலு மென வருணித்தார்; தற்குறிப்பேற்றவணி. திக்கின் பெயராகிய ஆசா: என்பது பெண்பாலாதலால் 'ஆசைமாதர்' என்றார்: ஆசைமாதர்-விருப்பமுள்ள மகளி ரென்ற பொருளையுந் தந்தது: இரட்டுறமொழிதல். வீசுகின்ற-இயல்பினால்வந்த காலவழுவமைதி. பி-ம்:-[1]வீழ்ந்ததால், சேர்ந்ததால். [2]ஈசனும்பதி, ஈசனார்மதி. [3]பூசுமென். (711)

வேறு.

150.—சூரியோதய வருணனை.

தகையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண மயலுழந்து தளரு [1]மெல்லை, சிதையு[2]மனத் திடருடைய செங்கமல [3]முகமலரச் செய்ய வெய்யோன், புதையிருளி [4]னெழுகின்ற புகர்முகயானையினுரிவைப் போர்வை போர்த்த, உதயகிரி யெனுங்கடவு ணுதல் [5]கிழித்த விழியேபோ லுதயஞ் செய்தான்.

(இ - ள்.) ததையும் மலர் தார் அண்ணல் - நெருங்கின பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையையுடைய புருஷோத்தமனாகிய ஸ்ரீராமன், இ வண்ணம் - இந்தவிதமாக, மயல் உழந்து - காம மயக்கத்தால் வருந்தி, தளரும் எல்லை - தளர்ச்சியடைகிற பொழுதில்,—செய்ய வெய்யோன் - செந்நிறமுடைய உஷ்ண கிரணனாகிய சூரியன், - சிதையும் மனத்து இடர் உடைய செம் கமலம் - (கொழுநனாகிய தன்னைப் பிரியப்பெற்றதனால்) நிலைகுலைகின்ற (தன்) நெஞ்சத்திலே சோகத்தையுடைய செந்தாமரை மலர்களாகிய தன்மனைவிமாரின், முகம் மலர - முகங்கள் (தான் வந்துகூடப்பெற்ற ஆனந்தத்தால்) மலர்ச்சியைப்பெறும்படி, புதை இருளின் - ஆழ்ந்த இருளாகிய, எழுகின்ற புகர் முகம் யானையின் - உயர்ந்து தோன்றுகின்ற செம்புள்ளிகளையுடைய முகத்தோடு கூடின யானையினது, உரிவை போர்வை - தோலாகிய போர்வையை, போர்த்த-(தன்மேல்) தரித்துள்ள, உதயகிரி எனும் கடவுள் - உதயபருவதமாகிய உருத்திரமூர்த்தியினது, நுதல் கிழித்த விழியே போல் - நெற்றியினின்று திறந்துதோன்றின நெருப்புக்கண்போல், உதயம் செய்தான்-உதித்தலைச்செய்தான்;

சூரியனைக் கண்ட மாத்திரத்தில் தாமரை மலர்தலும் அவனைப் பிரிந்தமாத்திரத்தில் அது குவிதலுமாகிய இயல்புபற்றித் தாமரைக்கொடிகளாகிய பெண்களுக்குச் சூரியனைத் தலைவனாகக் கூறுதல், கவிமரபு; இம்மரபுபற்றியே, இங்கு 'சிதையுமனத் திடருடைய செங்கமல முகமலரச் செய்யவெய்யோன் உதயஞ்செய்தான்' என்றது. இதில், தலைவி முகமலரத் தலைவன் கூடினானென்றஒரு செய்தி தோன்றுமாறு கூறியது, சுருங்கச்சொல்லலணி; இதற்கு அங்கமாக, உருவகவணியும் உவமையணியும் வந்துள்ளன. மிகுந்த கரிய இருளிலே மறைந்துள்ள உயர்ந்த உதயகிரிக்கு-கருநிறமுடைய யானையின் தோலை மேற்போர்த்துள்ள பரமசிவனும், அம்மலையின் சிகரத்திலே உதித்துவிளங்குகிற சூரியமண்டலத்திற்கு - அச்சிவபிரானது நெற்றியில் திறந்துவிளங்கும் நெருப்புநயனமும் ஒப்பு: கரிய இருளின் மீது விளங்குகிற வெண்ணிறங் கலந்த சிவந்த நட்சத்திரங்களைக் கரியயானையின் முகத்தில்நிறைந்துள்ள வெண்செம்புள்ளிகளாகக் கொள்க. இராமபிரான் காதல்நோயால் தளர்வுற்றுக் கூறியதை 140-முதல் 147 வரையிலுள்ள செய்யுள்களிற் காண்க. இனி, இதற்கு-நிலைகுலைகிற (தன்) மனத்திலே (தலைவியைக் கூடாத) துன்பத்தையுடைய (இராமபிரானது) செந்தாமரைமலர் போன்றமுகம் (தான் உதித்தலால் துயிலொழிந்து) மலர்ந்துவிளங்கும்படி சூரியனுதித்தான் என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1] எல்லை, வேலை. [2] மனத்துயருழந்து, மனத்திடருடையச். [3] முகையவிழச். [4] வெளிநின்ற, எதிர்நின்ற. [5] கிழிந்த. (712)

151.—வெயில் பரவுதலின்வருணனை.

விரையாடற் பசும்புரவிக் [1] குரமிதிப்ப வுதயகிரி விரிந்த தூளி,
பசையாக மறையவர்கைந் நறைமலரு நிறைபுனலும் பரந்து பாய,
[2] அசையாத நெடுவரையின் [3] முகடுதொறு மிளங்கதிர்சென் [4] றளைந்து
வெய்யோன், திசையாளு மத[5] கரியைச் சிந்தூர [6] மப்பியபோற்
[7] சிவந்த மாதோ.

(இ-ள்.) விசை-வேகத்தையும், ஆடல் - வலிமையையுமுடைய, பசு புரவி - (சூரியனது ஒற்றைத்தனியாழிதேரிற் பூட்டப்பட்டுள்ள) பச்சை நிறமுடைய குதிரைகளின், குரம் - குளம்புகள், மிதிப்ப - மிதித்தெழுப்பியதனால், உதயகிரி-உதயபருவதத்திலே, விரிந்த - பரவிய, தூளி - செந்துகள், பசை ஆக - ஈரமாய் நனையும்படி, மறையவர் கை நறை மலர்உம் நிறை புனல்உம் - (காலைக்கடன் கழிக்கின்ற) அந்தணர்களது கைகளாலெடுத்திடப்படுகிற தேன் நிறைந்த மலர்களும் (கைந்) நிறைந்த நீர்களும், பரந்து பாய-பரவிப் பாய்ந்திட,—(இங்ஙனம் பிராமணர்களாற் கையிலெடுத்து விடப்பட்ட அர்க்கியஜலத்தினாலும் அதனோடுசேர்ந்துள்ள மலர்களினின்றுவழிகிற தேனினாலும் நன்றாக நனைந்துள்ள உதயகிரியிற் பொருந்திய செந்தூளியைக்கொண்டு), வெய்யோன்-உஷ்ணகிரணனான சூரியன், திசை ஆளும் மதம் கரியை-(தனக்குரிய) கிழக்குத் திக்கை யிடமாகக்கொண்ட மதயானைக்கு, சிந்தூரம் அப்பிய போல்-சிந்தூரத்திலகத்தை யப்பியதுபோல. அசையாத நெடுவரையின்

முகடுதொறும்-சலித்தலில்லாத பெரிய அவ்வுதயகிரியின் சிகரங்களிலெல்லாம், இள கதிர் சென்று அளைந்து - இளமையான சூரிய கிரணங்கள் போய்ப்படிந்து, சிவந்த - செந்நிறமாய் விளங்கின;

கிழக்கிலுள்ள உயர்ந்த உதயகிரியின் பரந்த சிகரத்திற் பரவி விளங்குகிற செந்நிறமுள்ள சூரியகிரணம், பெரிய கிழக்குத்திக்கு யானையின் பரந்த முகத்தில் தீட்டப்பட்ட சிந்தூரத்திலகத்தைப் போலுமென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. காலைச் சந்தியாவந்தன காலத்தில் மந்திரபூர்வமாகப் பிராமணர்கள் கைகளால் எடுத்து விடுகிற அர்க்கியசலம் வச்சிராயுதவடிவமாய்ச் சென்று, சூரியனைச் சூழ்ந்துகொண்டு அவனது சஞ்சாரத்துக்குத் தடைசெய்துவருத்துகிற மந்தேகர் என்னும் அசுரர்களை அழிக்கின்றதென்பது நூற்கொள்கையாதலின், 'உதயகிரி விரிந்ததூளி பசையாக மறையவர்கைந்நறைமலரு நிறைபுனலும் பரந்துபாய' எனப்பட்டது. அசையாத நெடுவரை - அசலம். அர்க்கியஜலத்தில் மலர்களையுங்கூடத் தூவுதல் முறைமை. பி-ம்:—[1] கால். [2] இசையாத. [3] முகந்தோறும். [4] அளைந்துவேய்ந்த, அணைந்துவேய்ந்த, அணவவேய்ந்த, அடைந்துவேய்ந்த. [5] கரிகள், கிரிகள். [6] பரப்பிய. [7] திகழும், திகழ்ந்த. (713)

152.—பொய்கைகளில் தாமரைகள் மலர்ந்து விளங்குதல்.

பண்டுவருங் குறிபகர்ந்து [1] பாசறையிற் பொருள்வயினிற்
[2] பிரிந்து [3] போன, வண்டு [4] தொடர் நறுந் [5] தெரிய லுயிரனைய [6] கொழுநர்வர மணித்தே ரோடும், கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
மெலி [7] வகலும் கற்பி ஞர்போல், புண்டரிக முகமலர [8] வகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம்.

(இ - ள்.) பண்டு - (தம் தலைவியரைப் பிரிவதற்கு) முன்னம், வரும்குறி பகர்ந்து - (தாம்மீண்டு) வருங்காலத்தின் எல்லையை (அத்தலைவியரோடு) சொல்லி, பாசறையின் - பகைவர்மீது போர்செய்ய எழுதல்காரணமாகவாயினும், பொருள்வயினின் - செல்வப்பொருளையீட்டுதல்காரணமாகவாயினும், பிரிந்துபோன - (தலைவியரைப்) பிரிந்துசென்ற, வண்டு தொடர் நறு தெரியல் உயிர் அனைய கொழுநர் - வண்டுகள் இடைவிடாதுதொடர்ந்து மொய்த்தற்குரிய நன்மணமுள்ள பூமாலைகளையுடைய (தமது) உயிரையொத்த தலைவர், மணி தேரோடுஉம் வர - அழகிய (தேரின்மீதேறிக் கொண்டு அத்) தேருடனே மீண்டுவர, கண்டு-(அதனைப்) பார்த்து, மனம் களி சிறப்ப-மனத்திலே களிப்பு உண்டாகிமிக, ஒளி சிறந்து-(தலைவரைப் பிரிந்தகாலத்துத் தம்முடம்பினீங்கியுள்ள) ஒளி (இப்பொழுது) வந்துகூடி மிகப்பெற்று, மெலிவு அகலும் - தளர்ச்சி நீங்கின, கற்பினர்போல் - கற்பு நிலைமையையுடைய மனைவிமார் போல,—புண்டரிகம் முகம் மலர - (தம்மை முந்தினநாட்பிரிந்து சென்ற தம் கொழுநனாகிய சூரியன் தேருடனே மீண்டுவரக் கண்டு மகிழ்ந்து) தாமரை முகங்கள் மலர்ச்சிபெற, (அதனால்), பூ பொய்கை எல்லாம் - அழகிய நீர்நிலைகள்யாவும், அகம் மலர்ந்து பொலிந்தன - உள்ளிடஞ் செழித்து விளங்கின; (எ - று.)

வினைவயிற் பிரிவினாலேனும் பொருள்வயினிற்பிரிவினாலேனும் மீண்டுவருங்காலங்குறித்துப் பிரிந்துசென்ற கணவர் மீண்டு வந்துகூட மகிழ்ந்து நிற்குங் கற்புடையமகளிரை, சூரியனைக்கண்டதனால் மலர்ந்திருக்கப்பெற்ற தாமரைகளையுடைய பொய்கைகட்கு உவமை கூறினர். பசுமை + அறை = பாசறை - புதிய வீடு: பகைமேற்சென்றோர் உறையும் படைவீடு: பாசறையிற்பிரிதல் எனவே, போர்செய்யவெழுதல் காரணமாகப் பிரிதலாயிற்று. உயிரனைய கொழுநர் - பிராணநாயகர். மணித்தேர் - அடிக்கும் மணிகள் கட்டியதேரும், இரத்தினங்கள் பதித்துள்ளதேரும். ஈண்டு, அயோத்தியாகாண்டம் வனம்புகுபடலம், செ. 46 ஒப்புநோக்குக. பி - ம்:— [1]பாசறையும் பொருள்வயினும். [2]பரிந்து, பறிந்து. [3]போந்து, போந்த. [4]படு, சுடர். [5]தொங்கல். [6]கொழுநன். [7]அகற்றும். [8]நகை.

153.—சூரிய கிரணங்கள் விரிதலின் வருணனை.

எண்ணரிய மறையினொடு கின்னரர்க ளிசைபாட வுலகமேத்த, விண்ணவரு [1]முனிவர்களும் வேதியருங் கரங்குவிப்ப வேலை [2]யென்னும், [3]மண்ணுமணி முழவதிர [4]வானரங்கி [5]னடம்புரிவா ளிரவி [6]யான, கண்ணுதல்வா னவன்கனகச் சடை[7]விரிந்தாலெனவிரிந்த கதிர்க ளெல்லாம்.

(இ - ள்.) எண் அரிய-அளவிடுவதற்கு அருமையான, மறையினொடு-வேதங்களுடனே, கின்னரர்கள்-கின்னரர்களும், இசை பாட-கானம்பாடவும், உலகம் ஏத்த-உயர்ந்தோர்யாவரும் துதிக்கவும், விண்ணவர்உம்-தேவர்களும், முனிவர்கள்உம்-தவசியரும், வேதியர்உம்-சாதாரண பிராமணர்களும், கரம் குவிப்ப - கைகூப்பி வணங்கவும், வேலை என்னும் - கடலென்கிற, மண்ணும் அணி முழவு-மார்ச்சனையமைந்த அழகிய மத்தளம், அதிர - ஒலிக்கவும்,—வான் அரங்கின் - ஆகாயமாகிய நடனசபையிலே, நடம் புரி-திருநிருத்தஞ் செய்தருளுகிற, வாள் இரவி ஆன - ஒளியையுடைய சூரியனாகிய, கண்நுதல் வானவன் - நெருப்புக்கண்ணை நெற்றியிலுடைய உருத்திரதேவனது, கனகம் சடை - பொன்னிறமான சடைகள், விரிந்தால் என-பரந்து விளங்கினாற்போல, கதிர்கள் எல்லாம்-(செந்நிறமுள்ள) கிரணங்கள் யாவும், விரிந்த - (எங்கும்) பரவின; (எ - று.)

வானத்தின்மீது சூரியனது கிரணங்கள் பரவுதல், வானத்தையளாவி ஓங்கியுயர்ந்து சிவபிரானது செஞ்சடை விரிதலை யொக்குமென்பதாம்: உருவகவணியை யங்கமாகக்கொண்ட தன்மைத்தற்குறிப்பேற்றம். சூரியனுதிக்குங்காலத்தும் சிவபிரான் திருநடனம் புரிந்தருளும் பொழுதும், அந்தணர்களால் வேதமுழக்கம் எங்கும் எழுதலும கின்னரர் இசைபாடுதலும் உயர்ந்தோர் ஏத்துதலும் தேவராதியர் கைகூப்பி வணங்குதலும் நிகழுமென்க. சிவபிரானது நடனத்துக்கு மிருதங்கநாதம்போல, சூரியநடனத்துக்குச் சமுத்திரகோஷம்: சிவனுக்கு அம்பலம்போலச் சூரியனுக்கு அம்பரம். சூரியனை நடம்புரிவதாகக் கூறியது, அவனது கிரணங்கள் பளபளக்குங் காலத்து அசைவதாகத் தோன்றுதல்பற்றி; "மாயிரு ஞாலத்துயிர் காண வானரங்கிற், பாயிருளென்னும் படாம்வாங்கிச்—சேய்நின்,

றைந்தா ரணம்பாட வாடிப்போய் வெய்யோன், மறைந்தான் குட பால் வரை'' என்றது, இங்குக் காணத்தக்கது. சூரியன் உலகத்தார் யாவராலும் புகழப்படுவதனை ''பலர்புகழ் ஞாயிறு'' என்றதனாலு மறிக. மண்ணுதல்-முழவில் அடிக்கப்படுங் கண்ணிடத்தைப் பத மாக அமைத்தல். பி - ம்:—[1] முனிவரரும். [2] என்ன. [3] எண்ணும், மன்னும். [4] விசும்பரங்கின். [5] நடமாடும், நடம்புரிவான். [6] என்னும், என்னக், மானக். [7] விரித்தர்லெனவிரித்த, விரித்தானெனவிரிந்த.

154.—இராமபிரான் திருப்பள்ளியெழுதல்.

கொல்லாழி நீத்தங்கோர் குனிவயிரச் சிலைதடக்கைக் கொண்ட கொண்டல், [1] எல்லாழித் தேரிரவி யிளங்கரத்தா லடிவருடி யனந்தல் தீர்ப்ப, அல்லாழிக் கரைகண்டா [2] ஞயிரவாய் மணிவிளக்க மழலுஞ் சேக்கைத், தொல்லாழித் துயிலாதே துயராழி [3] நெடுங்கடலுட் டுயில்கின் றுனே.

(இ - ள்.) அங்கு - திருப்பாற்கடலிலே, கொல் ஆழி - கொல்ல வல்ல சக்கராயுதத்தை, நீத்து - நீக்கிவிட்டு, ஓர் குனி வயிரம் சிலை தட கை கொண்ட - ஒப்பற்ற வளைவாகிய உறுதியான (கோதண்ட மென்பதொரு) வில்லைப் பெரிய திருக்கையிலே கொண்டு (இங்கு) எழுந்தருளிய, கொண்டல் - மேகம்போன்றவனாகிய சக்கரவர்த்தித் திருமகன்,—ஆயிரம் வாய் மணி விளக்கம் அழலும் - ஆயிரம் முகங் களையுடைய (ஒவ்வொருதலையிலுமுள்ள) மாணிக்கமாகிய தீபங்கள் சொலிக்கப்பெற்ற, சேக்கை-(ஆதிசேஷனாகிய) சயனத்திலே,தொல் ஆழி-பழமையான திருப்பாற்கடலிலே, துயிலாது-பள்ளிகொண்ட- ருளாமல் (இருந்து), [பாற்கடலுட் பாம்பணையிற் பள்ளிகொள்ளு தலைவிட்டு இங்குவந்து இராமனாய்த் திருவவதரித்தும்], துயர் ஆழி நெடு கடலுள் - (பிராட்டியைச் சேராமையினாலுண்டாகிய) துனப மாகிய ஆழ்ந்துள்ள பெரிய கடலினிடையிலே, துயில்கின்றான் - மயங்கிக்கிடப்பவனானான்; (அவனை) எல் - ஒளியையுடைய, ஆழி தேர்-ஒற்றைச்சக்கரத்தைக்கொண்ட தேரையுடைய, இரவி-சூரியன், இள கரத்தால் - (தனது) இளமையான கிரணங்களாகிய மெல்லிய கைகளால், அடி வருடி - திருவடிகளை மென்மையாகப் பிடித்துத் தடவி, அனந்தல் தீர்ப்ப-நித்திரையை யொழிக்க, (அப்பிரான்), அல் ஆழி கரை கண்டான் - இரவாகிய கடலுக்கு ஓரெல்லையைப் பார்த் தான்; (எ-று.)

சூரியனுதித்து அவனது கிரணங்கள் வெளிப்பட்டு விளங்கிய மாத்திரத்தில், இராமபிரான் பள்ளியுணர்ந்தருளினனென்பதாம். உறக்கம்பிடியாதுசோர்வுற்றிருத்தலால், சூரியகிரணம்பட்ட பின்பே உணர்ந்தான்போலும். ஒருவரையொருவர் தழுவப்பெறாத தலைவன் தலைவியர்க்கு இராமுழுவதுந் தூக்கம்பிடியாமல் அவ்விராக்கால மொன்றே அநேகயுககாலம்போலக் காணப்படுமாதலால், 'அல்லாழி' என்றார். உயர்ந்தோரைத்துயிலுணர்த்தவேண்டுபவர் தமது மெல் லியகைகளால் அவரது திருவடிகளை வருடித் துயிலெழுப்புதல் முறையாதலால், 'இரவி யிளங்கரத்தா லடிவருடி யனந்தல் தீர்பப' எனப்பட்டது. இளங்கரம் - சிலேடையுருவகம். எம்பெருமானுக்குச் சயனமாகவுள்ள திருவனந்தாழ்வான் தானே தனது ஆயிரந்தலை

களிலுமுள்ள மாணிக்கங்களின் சோதியால் இரத்தின தீபமாகியும் விளங்குமாதலால், 'ஆயிரவாய் மணிவிளக்க மழலுஞ சேக்கை' எனப்பட்டது. துன்பத்தை 'கடல்' என்றது, அளவற்ற தென்னுங் கருத்தால். துயரில் மயங்கிக் கிடப்பதை, 'அனந்தல்' என்றது. இரவி = ரவி. கொண்டல்-உவமையாகுபெயர். பி - ம்:—[1] செல்லாழி. [2] ஆயிர மாமணி. [3] தடங்கடலுள், சுடர்க்கடவுள், சுடர்க்கடலுட், துயர்க் கடலே, இடைக்கிடந்து, துயிலாதே. (716)

155.—இராமனுதியர் சனகனது வேள்விச்சாலை சார்தல்.

ஊழி[1] பெயர்ந் தெனக்கங்கு லொருவண்ணம் புடைபெயர [2] வுறக்க நீத்த, சூழியா ஊனயினெழுந்து தொன்னியமத் துறை முடித்துச் சுருதி யன்ன, [3] வாழிமா தவற்பணிந்து [4] மனக்கினிய தம்பியொடும் [5] வம்பின் மாலை, தாழுமா மணிமௌலித் [6] தார்ச் சனகன் பெருவேள்விச் சாலை [7] சார்ந்தான்.

(இ - ள்.) ஊழி பெயர்ந்து என - கற்பகாலங் கழிந்தாற்போல, கங்குல் - அவ்விராத்திரிகாலமானது, ஒருவண்ணம் - ஒருவாறு, புடை பெயர-(தன்) நிலையில்நின்று நீங்க [கழிய], (அவ்விடியற் காலத்திலேயே ஸ்ரீராமபிரான்), உறக்கம் நீத்த சூழி யானையின்- தூக்கத்தைவிட்டெழுந்த முகபடாத்தையுடைய யானை போல, எழுந்து - துயிலுணர்ந்து (கம்பீரமாக) எழுந்து, தொல் நியமம் துறை முடித்து - பழமையான (தனது வருணச்சிரமங்களுக்கும் அக்காலத்துக்கும்உரிய) நித்தியக்கடன்களை நிறைவேற்றி, சுருதி அன்ன மா தவன் பணிந்து - வேதத்தின் வடிவத்தை யொத்த கௌசிகமுனிவனை வணங்கி, (அவனுடனும்), மனக்கு இனிய தம்பியொடுஉம் - (தன்) மனத்துக்கு இனிய தம்பியாகிய இலக்குமணனோடும், வம்பின் மாலை தாழும்-வாசனையையுடைய பூமாலைகள் தொங்குகிற, மா மணி மௌலி - சிறந்த இரத்தின கிரீடத்தையும், தார் - பூமாலையையுமுடைய, சனகன் - சனகமகாராசனது, பெரு வேள்வி சாலை-பெரிய யாகசாலையை, சார்ந்தான்—;

'ஊழிபெயர்ந்தெனக் கங்கு லொருவண்ணம் புடைபெயர' என்றதனல், காமிகளுக்கு இராக்காலம் நீட்டித்து நிற்றல் விளக்கப்பட்டது. மா தவன்-திருவாராதனமாகிய திருமாலென்று உரைப்பாரு முளர். வாழி - அசை. பி - ம்:—[1] போந்தென, பேர்ந்தென. [2] புறக்கண்நீங்கிச். [3] வாழும். [4] மனத்து. [5] வரம்பின். [6] சனகனுறை பெருவேள்விச், தார்ச்சனகனகல்வேள்விச், வாசமலர்த்தார்ச்சன கன். [7] சார்ந்தார். (717)

156.—சனகன் வீற்றிருத்தல்.

முடிச்சனகர் பெருமானு முறையாலே [1] மறைவேள்வி [2] முற்றிச் சுற்றும், இடிக்குரலின் முர[3] சியம்ப [4] விந்திரன்போற் சந்திரன்றேய் கோயி லெய்தி, [5] எடுத்தமணி மண்டபத்து ளெண்டவத்து முனிவ ரொடு மிருந்தான் பைந்தார், வடித்தகுனி [6] வரிசிலைக்கைம் மைந்தனு தம் பியுமருங்கி னிருப்ப மாதோ.

(இ - ள்.) முடி சனகர் பெருமான்உம்-கிரீடத்தையுடைய சனக குலத்தார்க்குத் தலைவனுகிய அச்சனகமகாராஜனும்,—(அப்

பொழுது), முறையால்-வேதவிதிமுறைப்படியே, மறை வேள்வி முற்றி - வேதமந்திரங்களோடு கூடிய யாககாரியத்தை முடித்துவிட்டு, சுற்றும் இடி குரலின் முரசு இயம்ப-எல்லாப்பக்கங்களிலும் இடிமுழக்கம்போன்ற தொனியையுடைய பேரிகைகள் ஒலியாநிற்க,—இந்திரன் போல் - தேவேந்திரன்போல, சந்திரன் தோய் கோயில் எய்தி - சந்திரமண்டலத்தையளாவி யுயர்ந்துள்ள அரண்மனையை அடைந்து, எடுத்த மணி மண்டபத்துள்-(அங்கே)உயர்த்திக்கட்டப்பட்டுள்ள நவரத்தினமயமண்டபத்திலே, (வேள்விச்சாலை சார்ந்த விசுவாமித்திரன் முதலியோரை உபசரித்து இருக்குமாறு சொல்ல), எண் தவத்து முனிவரொடுஉம்-(யாவராலும்) மதித்தெண்ணப்படுகிற நற்றவத்தையுடைய விசுவாமித்திர முனிவனுடனே, பை தார் வடித்த குனி வரி சிலை கை மைந்தன்உம்-பசிய வெற்றிப்பூமாலையைச் சூடிய சிறந்தெடுத்த வளையுமியல்புள்ள கட்டமைந்த வில்லையேந்திய கையையுடைய சக்கரவர்த்தித் திருமகனும், தம்பிஉம்-(அவனது)திருத்தம்பியாகிய இளைய பெருமாளும், மருங்கின் இருப்ப-(தனது) பக்கத்திலே வீற்றிருக்க, இருந்தான்-(தான்) வீற்றிருந்தான்; (எ - று.)—மாதோ - ஈற்றசை.

சனகன் தனதுவேள்விமுடிந்ததும், அரண்மனையிலேலக்கமண்டபத்திலே வேள்விகண்டு வந்த விசுவாமித்திரனும் இராமலட்சுமணரும் உடனிருக்கத் தங்கினனென்க. சிலைக்கைம்மைந்தன்-வில்லின்வலிமையோடு தோள்வலிமையுமுடையவன் என்றவாறுமாம். முனிவரொடும்-உயர்வுப்பன்மை: முனிவர்களுடனே என்று உரைப்பாருமுளர். மறைமுறையாலே வேள்வி முற்றி என்றும் இயைக்கலாம். பி-ம்:—[1]பெரு. [2]முற்றுவித்தாங்கு, முற்றுவித்தே, முடித்துப்பின்னும். [3]அதிர. [4]இந்திரனில். [5]படுத்த. [6]வரிச்சிலைக், வரிகுனிக், சிலைத்தடக். (718)

157.—இராமலக்ஷ்மணர்களைச் சனகன் வினவ, முனிவன் கூறுதல்.

இருந்தகுலக் குமரர்தமை யிரு[1]கண்ணும் [2]முகந்தழகு பருக நோக்கி, அருந்தவனை யடிவணங்கி [3]யாரிவரை [4]யுரைத்திடுமி னடிகளென்ன, விருந்தினர்க ணின்னுடைய வேள்விகா ணியவந்தார் வில்லுங் காண்பார், பெருந் [5]தகைமைத் தயரதன்றன் [6]புதல்வரென வவர் [7]தகைமை பேச லுற்றான்.

(இ - ள்.) (அங்ஙனம்வீற்றிருந்த சனகமகாராசன்), இருந்த குலம் குமரர் தமை-(தன்னருகில்)வீற்றிருந்த உயர்குலத்துதித்த(சக்கரவர்த்தி)குமாரர்களை, இரு கண்உம் அழகு முகந்து பருக-(தனது) இரண்டுகண்களும்(அவர்களது) அழகை அள்ளி முழுவதும் உண்ணும்படி, நோக்கி-(நன்றாகப்) பார்த்து, (உடனே), அரு தவனை - அரிய தவத்தையுடைய விசுவாமித்திர முனிவனை, அடி வணங்கி - திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு,(அவரை நோக்கி), 'அடிகள் - சுவாமிகளே! யார்-(இக்குமாரர்கள்)யாவர்? இவரை உரைத்திடுமின்-இவர்களை (இத்தன்மையரென்று), எடுத்துச் சொல்வீராக,' என்ன-என்றுவினவ,—(கௌசிகமுனிவன்), 'விருந்தினர்கள்-(உன்பக்கல்) புதியராய்வந்த இவர்கள், பெரு தகைமை தயரதன் தன் புதல்வர்-

கம்பீரமான சிறந்த குணத்தையுடைய தசரத சக்கரவர்த்தியின் திருக்குமாரர்கள்; நின்னுடைய வேள்வி காணிய வந்தார் - உனது யாகத்தைப் பார்க்கும் பொருட்டு வந்தார்கள்; (அது தீர்ந்துவிட்டதனால், இனி), வில்உம் காண்பார்-(நின்னிடமுள்ள சிவ) தனுசின் வலிமையையும்(பார்க்க அனுமதிதந்தாற்) பார்ப்பார்கள்,' என - என்றுகூறி, அவர் தகைமை-அந்தச்சக்கரவர்த்தி குமாரர்களின் மகிமையை, பேசல்உற்றான்—; (எ-று.)—அதனை மேலிற்படல முழுவதிலுங் காண்க.

'அவர் குலப்பெருமை அவர் பெருமை' என்று உணர்த்துமாறு,'அவர் தகைமை பேசலுற்றான்' என்று கூறி முடிவில் 'ஈதிவன்றன் வரலாறு' என முடிப்பர்: தயரதன் பெருந்தகைமையை மேலே கூறுவர்: 'பெருந்தகைமைத் தயரதன்றன் புதல்வர்' எனவே, "மகனறிவு தந்தையறிவு" என்றவாறு இவர்கள் பெருந்தகைமையை யுடையவரென்றபடி. வில்லுங் காண்பார் என்பதில், மற்றவர்போல வேள்வியைக் கண்ணுற் காண்டலோடு நில்லாமல் நீ கன்யாசுல்கமாக வைத்துள்ள சிவதநுசையும் ஒரு கை பார்க்கவல்ல வல்லமைசாலிகள் என்ற குறிப்புத்தோன்றும். அடிகள் -பாதா: என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு: இது இங்கே அண்மைவிளி. இங்கே, குறித்த சிவவில்,சனகமகாராசனால் சீதைக்குக் கன்னியாசுல்கமாக வைக்கப்பட்டது. 'யார் இவரை' என எடுத்து, ஐ - சாரியை என்றுமாம். பி - ம்:—[1]கண்ணின், விழியும். [2]உவந்தழகும்பருகி, முகத்தழகுபருகி. [3]யாரிவர்கள், யாரையிவர். [4]உரைத்திடுநீர். [5]தன்மைத். [6]சிறுவரென. [7]பெருமை. (719)

மிதிலைக்காட்சிப்படலம் முற்றிற்று.

---

11 - ஆவது குலமுறைகிளத்துபடலம்.

சூரியவமிசத்தரசர்களது மகிமையைக் கௌசிகமுனிவன் சனகமகாராசனுக்குக் கூறுகின்ற செய்தியைச் சொல்லும் பாகமென்று பொருள். குலமுறை - பிரவரம். இங்கே, ராமலக்ஷ்மணர் பிறந்த குலம். முறை - பரம்பரை: மரபு. கிளத்துதல் - கூறுதல். வரலாற்றுப்படலம் என்று சில பிரதிகளில் இந்தப்படலத்திற்குப் பேர்.

வேறு.

1.—மனுவும் பிருதுவும்.

ஆதித்தன் குல[1]முதல்வன் மனுவினையா ரறியாதார்
பேதித்த வுயி[2]ரனைத்தும் பெரும்பசியால் வருந்தாமல்
[3]சோதித்தன் வரிசிலையா னிலமடந்தை முலைசுரப்பச்
சாதித்த பெருந்தகையு மிவர்[4]குலத்தோர் தராபதிகாண்.

(இ - ள்.) ஆதித்தன் குலம் முதல்வன் - சூரியவமிசத்தில் தோன்றிய முதற்புத்திரனை, மனுவினை - மனுச்சக்கரவர்த்தியை, அறியாதார் ஆர் - (உலகத்தில்) அறியாதவர் யாவருளர்? [எல்

லோரு மறிவரென்றபடி]; பேதித்த உயிர் அனைத்துஉம் - பல வகைப்பட்ட பிராணிவர்க்கங்களெல்லாம், பெரும் பசியால் வருந்தாமல் - மிக்க பசியினால் வருத்தப்படாதபடி, சோதி தன் வரி சிலையால் - ஒளியையுடைய தனது கட்டமைந்த வில்லினால், நிலம் மடந்தை முலை சுரப்ப-பூமிதேவி முலைப்பால் சுரந்திடும்படி, சாதித்த -(அரிய காரியத்தை) முயன்று செய்துமுடித்த, பெரு தகைஉம் - பெருமைக்குணமுடையவனும், இவர் குலத்து ஓர் தராபதி காண் - இக்குமாரரது வமிசத்திலே தோன்றின ஒரு அரசனேயென்று அறிவாய்; (எ - று.)

இந்தப்படலத்துள்ள 29 கவிகளும்-விசுவாமித்திரன் இராம பிரானது முன்னையோர் பெருமையையும் தன்மையையும் சனகராசனுக்கு உணர்த்த வேண்டிக் கூறுகின்றவை; ஆகவே, இவை - ஒருதொடர். இப்பாடலுக்கு விசுவாமித்திரன் என்ற எழுவாய் வருவித்து, இறுதிச்செய்யுளிலுள்ள உரைத்தான் என்பதோடு முடிக்க.

ஆதியிற் பிரமதேவன் பிரஜைகளைப் படைக்க நினைத்து ஒன்பது புத்திரரை மனத்தினாற் சிருஷ்டித்தான்; அவர்கள் பிரமனுக்குச் சமானராகையால் நவப்பிரஜாபதிகளென்றும், படைப்புத்தொழிலிற் பிரமதேவனுக்கு உதவியாய் நின்றவராதலால் உபப்பிரமாக்களென்றும் உயர்த்திக் கூறப்படுவார்கள்; அவர்களில் தட்சப்பிரஜாபதியினுடைய புத்திரிகள் பலருள் ஒருத்தியான அதிதியென்பவள் மரீசிபிரசாபதியினது குமாரனான காசியபமகாமுனிவனது மனைவிகளுள் ஒருத்தியாயினாள்; அவ்வதிதிதேவியினிடம் விவஸ்வான் என்று ஒரு பெயருள்ள சூரியன் தோன்றினான்; மற்றைத் தேவர்கள் பலரும் அவளுக்குக் குமாரர்களே யாவர்; ஆதலால், சூரியனுக்கு ஆதித்யனென்றும், மற்றைத் தேவர்களுக்கு ஆதிதேயரென்றும் பெயர்கள் வழங்கின. அந்தச் சூரியனது குமாரன, மனு; இவன் - விவஸ்வானது புத்திரனாதலால், வைவஸ்வத மனுவெனறு கூறப்படுவன்; இவன்தான், இராமபிரானது வமிசத்துக்கு ஆதிபுருஷன். இந்தமனு, மனுக்கள் பதினால்வருள் ஏழாமவனாவன்; இம்மனுவினது அந்தரமே [வைவஸ்வத மந்வந்தரமே] இப்பொழுது நடக்கின்றது; இந்தமனு நல்லொழுக்கத்திலேயே யொழுகி எல்லா நற்குணங்களோடுங் கூடிப் பிரசித்திபெற்றவனாதலால், 'மனுவினை யாரறியாதார்' என்றது.

பெருந்தகை-பிருதுசக்கரவர்த்தி. வேனன் என்னும் அரசன் குணவீனனாய்த் துஷ்டசுபாவனாய் ஸ்ரீமகாவிஷ்ணுவை நிந்தித்து யாகம் தானம் முதலிய சற்காரியங்களைச் செய்யவொட்டாது தகைந்து, முனிவர்கள் எவ்வளவு நற்புத்தி கூறியதையுங் கொள்ளாமலிருக்கவே, அவர்கள் அவனைக் குசை[தருப்பை]களினாலே அடித்துக்கொன்று, அவனுடைய வமிசவிருத்திக்காக அவனிடம் ஒரு புத்திரனை யுண்டாக்கவேண்டுமென்று ஆலோசித்து அவனுடைய வலக்கையைக் கடைந்து அக்கினியுண்டாக்கி அதிற் பிரமனைக்குறித்து யாகஞ்செய்ய, அவ்வேள்வியிற் பிருது என்பவன் நாராயணாம்சமுடையவனாய் உதித்தான். வேனன் இறந்துபோனதனாற் சில

காலம் அராஜகமாயிருந்த பூமியிலுள்ள ஜனங்கள் யாவரும், இப் பிருதுமகாராஜன் பிரமதேவனுற் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டுப் பூமண்டலமுழுவதையும் அரசாளத் தொடங்கினபொழுது இவனிடம்வந்து, 'ஓ மகாராஜனே! நீ இராச்சியாபிஷேகஞ்செய்வதற்கு முன்னே பூமண்டலம் அராஜகமாகிச் சகல ஓஷதி வருக்கங்களையுந் தனக்குள்ளே இழுத்துக்கொண்டது; ஆனதனுல், இப்போது ஆஹாரங்களில்லாமல் பிரஜைகள் பசித்துன்பத்தாலே நாசத்தையடைகிருர்கள், பசியினுற் பீடிக்கப்படுகிற எங்களுக்குப் பிழைக்கும்படி ஓஷதிகளையுண்டாக்கி அன்னபானங்களைக் கொடுத்துக் காத்தருளவேண்டும்' என்று முறையிட, அதனைக்கேட்டு அம் மன்னவன் அவ்வாறே ஆகுகவெனச்சொல்லி, தான் பிறந்தபொழுது தன்னுடனே ஆகாசத்திலிருந்து விழுந்த அஜகவமென்கிற முதல்வில்லையும் திவ்வியமான பாணங்களையும் கவசத்தையும் தாங்கியவனுய்க் கோபம் மூண்டு பூமியின் மேல் எதிர்த்துவந்தான்; அப்பொழுது பூமிதேவி பசுரூபத்தைத் தரித்துப் பயந்தோடினுள்; அவனும் விடாமற் பின்தொடர்ந்துபோகப் பின்பு அந்தப் பூமிதேவி சகலலோகங்களிலும் ஓடிப்பார்த்தும் எங்குஞ் சரணங் காணுமையால் அவ்வரசனடியையே யடைந்து 'உலகத்திலுண்டான ஓஷதிவருக்கங்கள் யாவும் என்னிடத்தில் பாலின் வடிவாக இருக்கின்றன; தகுந்த ஒருகனறை யுண்டாக்கிக் கொடுத்தால் அதனிடத்து அன்பினுல் அவற்றைச் சுரந்து கொடுக்கிறேன்; நான் கொடுக்கிற பால் பூமி முழுவதும் பரவும்பொருட்டு மேடுபள்ளமாயிருக்கிற இடம் சமமாகும்படி மலைகளை விலக்கி நிரவவேண்டும்' என்று கூறினுள்; அரசன் அவ்வாறே மலைகளையெல்லாந் தன் வின்னுனியால் அப்பால் தள்ளிப் பூமண்டலத்தைச் சமமாகச்செய்து சுவாயம்புவமனுவைக் கன்ருகவைத்துத் தனது கையைப் பாத்திரமாகச்செய்து பசுவடிவங்கொண்ட பூமியினிடத்திலிருந்து சகல ஓஷதிகளையுங் கறந்து பெய்து பூமிமுழுவதும் பரவச்செய்தான்; அதனுல் பிரஜைகள் சந்தோஷமடைந்து அவனுண்டாக்கின ஆகாரத்தினுலே வலிமை பெற்று ஜீவித்துவரலானுர்கள்; அவனுற் சீர்திருத்தப்பட்டமை பற்றிப் பூமிக்குப் பிருதுவி என்கிற பெயருண்டாயிற்று: (இச்சக்கரவர்த்தியை ஆதிமனுவாகிய சுவாயம்புவமனுவினது சந்ததியில் தோன்றினவனுகப் புராணங்கள் பலவற்றிலுங் கூறியிருப்பினும் நல்லிசைப் புலவராகிய கம்பர் இங்ஙனம் வைவச்சுவதமனு வமிசத்தவனுகக் கூறியது, கற்பபேதத்தாற் போலும்: வைவச்சுவதமனுவமிசத்திலும் பிருதுவென்னும் பெயருடையானேர் அரசன் உண்டு.) பேதித்த உயிர் - நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினவாய்ப் பகுக்கப்பட்டுள்ள பிராணிவகைகள்.பி-ம்:—[1]மைந்தன். [2]எல்லாம், அணையாப். [3]சோதித்த. [4]குலத்துத். (720)

2.—இட்சுவாகு மன்னவன்.

பிணி[1]யரங்க வினை[2]யகலப் பெருங்காலந் தவம்பேணி
மணி[1]யரங்க நெடுமுடியாய் மல[3]ரயனை [4]வழிபட்டுப்
பணி [5]யரங்கப் [6]பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் தந்தானை யறியாதா ரறியாதார்.

(இ - ள்.) மணி-நவரத்தினங்களும், அரங்கு - அழுத்திப் பதிக்கப்பெற்ற, அம்-அழகிய, நெடு முடியாய்-பெரிய கிரீடத்தையுடைய சனகமகாராசனே! பிணி அரங்க-நோய்கள் கெடவும், வினை அகல-(அவற்றிற்குக்காரணமாகிய கொடிய)ஊழ்வினைகள் ஒழியவும், பெரு காலம் - அநேக வருஷகாலம், தவம் பேணி - தவத்தை விரும்பிச் செய்து, மலர் அயனை - தாமரைமலரில் தோன்றிய பிரமதேவனை, வழிபட்டு-வணங்கிப்பூசித்து, (அவனருளால்), பணி அரங்கம் பெரு பாயல் பரம் சுடரை-(அப்பிரமனது திருவாராதனத்திலிருந்த) ஆதிசேஷனது உடம்பினிடத்தைப் பெரியதிருப்பள்ளிமெத்தையாகக் கொண்டுள்ள எல்லாவொளிகளினும் மேம்பட்ட ஒளிவடிவமான நம்பெருமானை, யாம் காண - எம்போலியருந் தரிசித்து உய்யும்படி, அணி அரங்கம் - அழகிய ஸ்ரீரங்கவிமானத்துடனே, தந்தானை-(சத்தியலோகத்திலிருந்து பூலோகத்துக்குக்) கொண்டுவந்த இவ்வமிசத்தானாகிய இக்ஷ்வாகுமகாராசனை, அறியாதார்-அறியாதவர்கள், அறியாதார் - அறிவில்லாதவரே; (எ - று.)

'அறியாதா ரறியாதார்' என்றதனால், இக்ஷ்வாகும்காராஜன் அறிவுடையார் யாவராலும் அறியப்பட்ட மிகப்பிரசித்திபெற்ற ஓரரசனென்றும், அறிவுபடைத்ததற்குப்பயன் அப்பெருந்தகை மன்னனது மகிமையை அறிதலேயாமென்றும் விளக்கியவாறும். (ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல், யோகியரது உள்ளக்கமலம் என்னுமிவற்றிலுங்காட்டில் திருமால்) திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடமாதல்பற்றி, ரங்கமென்று இவ்விமானத்துக்குப் பெயர்; ரங்கமென்னும் வடமொழி, அரங்கமென வந்தது. பிரணவாகாரமான இந்த ஸ்ரீரங்கவிமானத்திலே ஆதிசேஷசயனத்திலே திருமகளும் நிலமகளுந் திருவடிவருடப் பள்ளிகொண்டருளுந் திருமால் ஆதியிற் சத்தியலோகத்திற் பிரமதேவனது திருவாராதனத்திருவுருவமாயிருந்தான்; வைவச்சுவதமனுவின் புத்திரனாகிய இட்சுவாகுமன்னவன், பிரமதேவனைநோக்கிப் பலகாலம் அரும்பெருந்தவம்புரிந்து அத்தேவனருளால் அவ்வெம்பெருமானைப் பெற்றுத் திருவயோத்திக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து ஆராதனம்பண்ணிவந்தான்; அந்த ஸ்ரீரங்கநாதனே இட்சுவாகு முதல் இராமபிரானீருகவுள்ள இரவிகுல மன்னவரெல்லோர்க்குங் குலதெய்வமாக விளங்கினான்; இராமபிரான் தனது பட்டாபிஷேகத்தின்பின்பு சுக்கிரீவன் முதலியோரை விடைகொடுத்தனுப்பும்பொழுது அந்நம்பெருமானை விபீஷணாழ்வானிடங்கொடுத்து ஆராதித்துவரும்படி நியமித்தனுப்பினான்; அவ்வரக்கர்பெருமான் அவ்வமரர்பெருமானை அவ்விமானத்துடனே யெழுந்தருளிப்பண்ணிக்கொண்டு இலங்கைநோக்கிச் செல்லும்பொழுது இடைவழியிலே உபயகாவேரிமத்தியிலே பெருமான் புடைபெயராது விமானத்துடனே நிலைநின்றருளினார்: அத்தலமே திருவரங்கம்பெரியகோயிலென்னுஞ் சோழநாட்டு முதற்றிருப்பதியாம். பரஞ்சுடர்-சூரியன் சந்திரன் அக்கினியென்னும் முச்சுடர்களினும் மேம்பட்ட ஒளியுருவம். பணீ - படமுடையது. அரங்க-அழுந்த; அழிய. திரிபணி. (பணி - காளியன் ஆதிசேஷன் என்ற பாம்புகளை, முறையே, அரங்கு - நர்த்தனசாலையாகவும், அ பெரும்பாயலாகவுமுடைய பரஞ்சுடர் என்

பாரு முளர்.) பி-ம்:—[1] அரங்கு. [2] துணிப்ப, துணிய. [3] அய்னே. [4] வழி படமுன், வழிப்பட்டுப், வழிபட்ட. [5] அரங்கு, அரங்கம். [6] நெடும். ()

3.—ககுத்ஸ்தன்.

தான்றனக்கு வெலற்கரிய தானவரைத் தலை[1] துமித்து
வான்[2] றரக்கிற் றிகொலென்று குறையிரப்ப வரங்[3] கொடுத்தாங்கு
ஏன்றெடுத்த சிலையினனு யிகல்[4] புரிந்த விவர்குலத்தோர்
தோன்றலைப்பண்[5] டிந்திரன்காண் விடையேருய்ச் சுமந்தானும்.

(இ - ள்.) தான் - தேவேந்திரன் தான், தனக்கு வெலற்கு அரிய-தன்னுற் செயித்தற்குக்கூடாத, தானவரை - அசுரர்களை, 'தலை துமித்து - தலையைத் துணித்து [கொன்று என்றபடி], வான் தர கிற்றிகொல் - தேவலோகத்தை (அவர்களிடத்திருந்து எனக்கு மீட்டு)க் கொடுக்கவல்லையோ?' என்று - என்றுசொல்லி, குறை இரப்ப-(தனது) குறையைக்கூறி வேண்டி நிற்க, வரம் கொடுத்து-(அங்ஙனமே செய்வதாக வாக்களித்து அவனுக்கு) அவ் வரத்தைக் கொடுத்து, ஆங்கு ஏன்று - அப்பொழுதே (அச் செய்கையை) மேற்கொண்டு, எடுத்த சிலையினன் ஆய் - கையிற் பிடித்த வில்லையுடையவனாய், இகல் புரிந்த - (அசுரர்களோடு) போர்செய்த, இவர் குலத்து ஓர் தோன்றலை - இக்குமாரர்கள் அவதரித்த வமிசத்திற்பிறந்த ஓரரசனை, பண்டு - முன்காலத்தில், விடை ஏறு ஆய்-ஏற்றின் வடிவமாய், சுமந்தான்உம்-(அப்பொழுது) சுமந்துநின்றவனும், இந்திரன்காண் - தேவராஜனுன அவ் விந்திரனேயாவன்; (எ-று.)

முன்னொருகாலத்திலே தேவர்க்கும் அசுரர்க்கும் கொடிய யுத்தமுண்டாக, அதில் மிகவும் வலியவரான அசுரர்களாலே தேவர்கள் வெல்லப்பட்டனர்: பிறகு தேவர் ஆபத்சகாயனுன ஸ்ரீமந்நாராயணனை ஆராதித்தார்கள்; அவ்வெம்பெருமான் பிர சன்னனுகி அவர்களைநோக்கி 'நான் பூமியில் இட்சுவாகுவின் மகன் சசாதனென்பவனுக்கு மகனுன புரஞ்சயன் என்னும் புரவலனது உருவத்திற் புகுந்து அவ்வசுரரைச் சங்கரிப்பேன்: நீவிர் அவ் வரசனை உங்களுக்குத் துணைக்கொள்ளுங்கள்' என்று நியமித்தார். தேவர்கள் அவ்வாறே புரஞ்சயனிடம் வந்து வேண்ட, அவன், தனக்குத் தேவேந்திரன் வாகனமாய்நிற்பின் அவன்மீதேறிப் போர்செய்து பகைவரை ஒழிப்பேனென்ருன்; தேவராசன் தடை சொல்லாது உடனே விருஷபரூபியாகநிற்க, பின்பு அப்புரஞ்சயன் அவ்வெருத்தின் முசுப்பின்மேல்ஏறி வீற்றிருந்து அசுரர்யாவரை யும் எளிதிற் சங்கரித்தான். இந்திரனை வாகனமாகக்கொண்ட தனுல் இந்திரவாகன னென்றும், எருதுவடிவான இந்திரனது ககுத்எனப்படுகிற முசுப்பின்மேல் ஏறிஇருந்ததனுல் ககுத்ஸ்த னென்றும் இவனுக்குப் பெயருண்டாயின; இவன் வமிசத்துப் பெயரால், இராமபிரான், காகுத்த னெனப்படுவான்.

'இகல் புரிந்த' என்றது - அவ்வசுரர்களை வீரத்தாலேயே இவன்வென்றமையைவிளக்கிற்று. பி-ம்:—[1] துமித்தென். [2] தருகிற்றீ

கொலெ்ன, தனக்கின்றருள்கொலென, தருகிற்றீயென்று, தனக்கின்றீகொலென. [3]கொடுத்தற்கு, கொடுத்தான். [4]புரிந்தார், புரிந்தான். [5]இந்திரனே தொல்லேருய்ச் சுமந்தானே. (722)

4.—பாற்கடல் கடைந்து அமுதளித்தவன்.

[1]அரசனவன் பின்ஞேரை யென்ஞலு மளப்பரிதால்
உரை[2]குறுக நிமிர்கீர்த்தி யிவர்குலத்தோ ருருவன்காண்
நரைதிரை[3]மூப் பிவை [4]மாற்றி யிந்திரனு [5]நந்தாமல்
குரைகடலை நெடுவரையாற் [6]கடைந்தமுது [7]கொடுத்தானும்.

(இ - ள்.) அரசன் அவன் பின்ஞேரை - அந்தக்ககுத்தமகாராசனது குலத்திற் பின்தோன்றிய அரசர்களை, அளப்பு-(இத்தன்மையரென்று) அளவிட்டுச்சொல்லுதல், என்ஞல்உம் அரிது-என்ஞலும் முடியாது; நரை-மயிர் வெளுத்தலும், திரை-உடம்பு தோல்சுருங்குதலும், மூப்பு-(இவற்றிற்குக் காரணமான) கிழத்தனமும், இவை-என்னுமிவற்றை, மாற்றி-ஒழித்து, இந்திரன்உம்-தேவேந்திரனும், (மற்றைத்தேவர்களும்), நந்தாமல் - மரணமடையாதபடி, குரை கடலை நெடு வரையால் கடைந்து அமுது கொடுத்தான்உம் - ஒலிக்கின்ற திருப்பாற்கடலைப் பெரிய (மந்தர) மலையைக் கொண்டு கடைந்து (அதிலிருந்து) அமிருதத்தை (எடுத்துத் தேவர்க்கு)க் கொடுத்தருளினவனும், உரை குறுக நிமிர் கீர்த்தி இவர் குலத்தோன் ஒருவன் காண்-(பாஷையிற்) சொற்கள் குறைவுபடும்படி அதிகமாகவுள்ள கீர்த்தியையுடைய இக்குமாரர்களது குலத்தில் அவதரித்த ஓரரசனே; (எ - று.)

இப்பாட்டிற்குறித்த அரசன் இன்ஞனென்பது விளங்கவில்லை; கையெழுத்துப்பிரதிகளில் இப்பாட்டையடுத்து 'நிமி' என்னும் பெயர் எழுதப்பட்டுள்ளது; ஆயினும் அதற்கு ஆதாரமும் வரலாற்று விவரமும் ஏற்படவில்லை; இங்ஙனமே இப்படலத்தில் இன்னும் இரண்டொன்று உண்டு; இவை விளங்கிஞல் வெளியிடப்படும். தேவர்களும் அசுரர்களும் திருமாலின் நியமனத்தால் அமிருதத்தைப்பெற்றுண்டு பிணிபசிமூப்பிறப்புத் துன்பங்களை ஒழித்து வாழும்பொருட்டுப் பாற்கடலைக் கடையத்தொடங்கினபொழுது அதற்கேற்ற ஆற்றலிலராய்க் கவலையுற்றுநிற்க, அக்காலத்து வாலியென்னும் வானரராஜன் சென்று அவர்களை விலக்கித் தாஞெருவஞகவே அப்பாம்பாகிய தாம்பின் வாலையுந் தலையையும் இரண்டு கைகளிலுங்கொண்டு சிரமமில்லாமல் எளிதில் வலியப் பிடித்திழுத்துக் கடைந்து காரியத்தை முடித்து அதனினின்றெழுந்த அமிருதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்ததாக ஒருகதை கூறப்பட்டுள்ளதுபோலப் பாற்கடல்கடைந்த அக்காலத்துச் சூரிய குலத்தரசன் சென்று உதவிபுரிந்து அமுதமளித்ததாக ஒரு கதையை எந்தநூலிலேயோ கண்டு ஆசிரியர் இவ்வாறு கூறியிருக்கவேண்டு மெனக் கருதப்படுகிறது. 'என்ஞலும்' என்ற உம்மை - உயர்வுசிறப்பு: இதஞல் விசுவாமித்திரன் நெடுங்காலம் பெருந்தவஞ்செய்து அரிதிற்பெற்ற தனது உணர்வின் உயர்ச்சியைத் தெரிவித்தான். என்ஞலும்-எவ்வகையாலும் என்பாருமுளர். 'உரை குறுக நிமிர் கீர்த்தி'

என்றது-இக்குமாரர்களது பெரும்புகழ் சொல்லுக்கு அடங்காது: இவர்கள் கீர்த்தியைக் கூறுதற்கு வேண்டிய வளவு சொற்கள் உலகத்திற் கிடையா வென்றவாறும்: இத்தொடரில் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் தொனிக்கும், 'இந்திரனும்' என்ற உம்மை-பிறதேவர்களைத் தழுவியதனால், எச்சப் பொருளதே;உயர்வு சிறப்பாகக்கொண்டால், தேவராசனுக்கும் பிழைப்புண்டாக அமுது கொடுத்தான் மனிதராச னென்ற சிறப்பு விளங்கும்: மனிதர்க்குத் தேவர் அருள்செய்தல் இயல்பேயன்றித் தேவர்க்கு மனிதர் அருளுதல் அரியதொன்றுமாறு காண்க. பி - ம்:—[1] அரசர். [2] குறுகி. [3] என்றிவை, மூப்பவை. [4] இன்றி, எய்தி. [5] வருந்தாமல். [6] குடைந்து. [7] கொடுத்தானே. (723)

5.—மாந்தாதா.

[1] கருதலரும் பெருங்[2] குணத்தோ [3] ரிவர் [4] முதலோர் கணக்கிறந்தோர்
திரிபுவன முழுதாண்டு சுடர்நேமி செல [5] நின்றோர்
பொருதுறைசேர் வேலினய் புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையி னீருண்ண வுல [6] காண்டோ னுளனொருவன்.

(இ - ள்.) பொருது உறை சேர் வேலினய் - போர்புரிந்து பின்புஉறையினிடஞ் சேர்கின்ற வேலாயுதத்தையுடைய சனக மகாராசனே ! சுடர் நேமி செல - ஒளியையுடைய் தமது ஆஜ்ஞா சக்கரம் (எங்குந் தடையில்லாமற்) செல்லும்படி, திரி புவனம் முழுது ஆண்டு நின்றோர் - மூன்றுலோகங்களையும் முழுவதும் அரசாண்டுநின்றவர்களும், கருதல் அரு பெரு குணத்தோர் - நினைப்பதற்குங் கூடாத (சீவகாருணியம் முதலிய) சிறந்த குணங்களையுடையவர்களுமாகிய, இவர் முதலோர் - இக்குமாரர்கள் குலத்து முன்னரசர்கள், கணக்கு இறந்தோர் - அளவற்றவர்கள்; (இவர்குலத்துள்), புலி போத்துஉம் புல்வாய்உம் ஒருதுறையில் நீர் உண்ண உலகு ஆண்டோன் - (இயற்கையிற் பகைமையுடைய) ஆண்புலிகளும் மான்களும் (அப்பகையின்றி) ஒருநீர்த்துறையிலேயே (வந்திறங்கி) நீர்பருகும்படி உலகத்தை அரசாண்ட அரசன், ஒருவன் உளன்—; (எ - று.)

புலிப்போத்தும் புல்வாயும் ஒருதுறையில் நீருண்ண-பெரியவை சிறியவற்றை நலியாதபடி என்றவாறும். அரசனாணையிடத்துத் தமக்குள்ள அச்சத்தால் எவையும் தம்மால் நலியத்தக்கவற்றையும் நலிந்தில வென அரசாட்சி நீதிமுறைமை விளங்கும். 'இங்ஙனம் அரசாண்டவன் மாந்தாதா' என்று கையெழுத்துப் பிரதிகளில் இப்பாட்டின்பக்கத்தி லெழுதியிருப்பதனால் தெரிகின்றது; கதையொன்றுங் காணப்படவில்லை. இவன் அரசாண்டகாலத்தில் எங்குஞ் சத்துவகுணம் தலையெடுத்து நின்றதனால் விவேகமில்லாத மிருகங்கள் முதலிய பிராணிகளுக்குக்கூட ஒன்றன்மேலொன்றுக்கு அன்பும் அருளுமுண்டாயினவேயன்றி, ரஜோகுண தமோகுண காரியங்களாகிய கொலை பகை அச்சம் முதலியன நிகழவில்லை யென்க. கருதலருமை கூறவே, சொல்லலருமை தானே விளங்கும். போத்து - ஆண்பாற்பெயர். "பெற்ற மெருமை புலி மரை புல்வாய்,

மற்றிவை யெல்லாம் போத்தெனப்படுமே'' என்றதனல், 'புலிப் போத்து' எனப்பட்டது, புல்வாய்-புல்லையுண்ணும் வாயை யுடைய தெனக் காரணப்பெயர்: வேற்றுமைத்தொகையன்மொழி. பொருது உறை சேர் வேலினய் - ''உறையோடும் நெடுவேலாய்'' என்பர் மேலும். உறை-படைக்கூடு. பி-ம்:—[1]கருதரிய. [2]குணத்தோன். [3]இவன், அவன். [4]பின்பு. [5]நின்றேன், நின்று. [6]ஆண்டானொருவன் காண். (724)

6 —முசுகுந்தன்.

[1]மறைமன்னு [2]மணிமுடியு மாரமும்வா ளொடு [3]மின்னப்
பொறைமன்னு வானவருந் தானவரும் [4]பொருமொருநாள்
விறன்மன்னர் தொழு[5]கழலா யிவர்குலத்தோன் விற்பிடித்த
அறமென்ன வொருதனியே திரிந்தமரா பதிகாத்தோன்.

(இ-ள்.) விறல் மன்னர் தொழு கழலாய் - வெற்றியையுடைய அரசர்கள் பலரும் வணங்குகிற பாதங்களை யுடையவனே! பொறை மன்னு வானவர்உம் - பொறுமைமிகுந்த தேவர்களும், தானவர்உம்-(பொறுமையில்லாத) அசுரர்களும், பொரும்-(முன்னே ஒருவரோடொருவர்) போர்செய்த, ஒருநாள் - ஒருகாலத்தில், இவர் குலத்தோன்-இக்குமாரர்களது குலத்தினனாகிய ஓரரசன், மறை மன்னு மணி முடிஉம்-வேதவிதிப்படி (அபிஷேகஞ்செய்யப்பட்டுப்) பொருந்தின (தனது) நவரத்தினகசிதமான கிரீடமும், ஆரம்உம் - ஹாரங்களும், வாளொடு - ஒளியுடனே, மின்ன - விளங்கும்படி, வில் பிடித்தஅறம் என்ன - கையில் வில்லேந்திவந்த தரும தேவதைபோல, ஒரு தனியே திரிந்து-தானொருவனாகவே (ஆயுதமும் கையுமாய் மேலுலகத்துச்சென்று) சஞ்சரித்து, அமராபதி காத்தோன் - (இந்திரனது) அமராவதிபட்டணத்தைக் காத்து நின்றான்; (எ-று.)

இங்ஙனம் தேவாசுரயுத்தத்திற் புகுந்து தேவர்களுக்கு உதவியாய் அசுரர்களை வென்ற வரலாறு சூரியவமிசத்தரசர்கள் பலர்க்கு நூல்களில் ஆங்காங்குக் கூறப்படினும், இங்குக்குறித்தவன் முசுகுந்தசக்கரவர்த்தி யெனத் தோன்றுகின்றது. இவன் பூலோகத்திலரசாண்டு வீற்றிருக்கையில், தேவலோகத்தில் அசுரர்கள் தேவர்களைச் சூழ்ந்து பெரும்போரியற்றிப் புறங்கொடுத்தோடும்படி துரத்தியடிக்க, இந்திராதிதேவர்கள் முன்நிற்கமாட்டாதவராய் இவனைச் சரணமடைந்து துதித்து வேண்ட, இவன் உடனே வானுலகத்திற்சென்று போர்செய்து அசுரர்களைக் கொன்று பகையொழித்துச் சுப்பிரமணியக்கடவுள் தேவசேனாபதியாய் வருகிறவரையிலும வானுலகத்தைக் காத்து இந்திரனது இளைப்பைத் தீர்த்திருந்தான். பினபு பல நாளாகத் தூக்கமில்லாமல் அலுத்திருநததனல் நெடுங்காலந் துயிலும்படி தேவர்களிடம் வரம் பெற்று மண்ணுலகத்துக்குவந்து ஒரு குகையிலே படுத்து நித்திரைசெய்திருந்து துயிலுணர்ந்தபொழுது ஸ்ரீகிருஷ்ணபகவானது சேவையைப் பெற்று அவனருளால் முத்தியுலகத்தைப் பெற்றான். வாள் - ஆயுதமுமாம். மறை - சிற்பநூலுமாம். வான

வர்க்கு 'பொறைமன்னு' என்னும் அடைமொழி கொடுத்ததற்கு ஏற்ப, தானவர்க்கு 'பொறையில்லாத' என்னும் அடைமொழி வருவிக்கப்பட்டது. விற்பிடித்த அறம் - இல்பொருளுவமை. அமராபதி—அமராவதீ: வடசொற்றிரிபு: தேவர்களுடையதென்பது பொருள். பி-ம்:—[1]நறை. [2]மலர். [3]நக்க. [4]பொருதநாள். [5]கழலான். (725)

7.—சிபிசக்கரவர்த்தி.

இன்னுயிர்க்கு மின்னுயிரா யிரு [1]நிலங்காத் தாரென்று
பொன்[2]னுயிர்க்குங் கழலவரை யாம்போலும் [3]புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கு நெடுவேலா யிவர்குலத்தோன் [4]மென்பறவை
மன் [5]னுயிர்க்குத் தன்னுயிரை மாருக [6]வழங்கினனால்.

(இ - ள்.) மின் உயிர்க்கும் நெடு வேலாய் - மின்னல்போன்ற ஒளிஉண்டாவதற்கு இடமான நீண்ட வேலையுடைய சனகனே! பொன் உயிர்க்கும் கழலவரை - விளங்குகிற வீரக்கழலையுடைய இக்குலத்தரசர்களை, இன் உயிர்க்குஉம் இன் உயிர் ஆய் இரு நிலம் காத்தார் என்று - (உலகத்திலுள்ள) இனிமையான உயிர்களெல்லாவற்றுக்கும் (தனித்தனி) இனிய உயிரை ஒத்திருந்து பெரிய பூலோகத்தை அரசாண்டார்க ளென்றுசொல்லி, புகழ்கிற்பாம்-புகழவல்லோம், யாம் போலும்-நாமே போலும்? [புகழவல்லேமல்லேம் யாம்என்றபடி]; இவர்குலத்தோன்-இக்குமாரர்களது குலத்தினனாகி அரசனொருத்தன், மெல் பறவை மன் உயிர்க்கு-மெல்லியதொரு பறவையினது நிலைபெற்ற உயிருக்கு, மாறு ஆக-ஈடாக, தன் உயிரை வழங்கினன்-தனது உயிரைக் கொடுத்தான்; (எ - று.)—ஆல்-அசை.

இதனாற் கூறப்பட்டவன், சிபிசக்கரவர்த்தி; இவனது சரித்திரம் கையடைப்படலத்திற் கூறப்பட்டது. இவன் நூறு அசுவமேதயாகம் புரிந்து நான்காமனுவந்தரத்தில் இந்திரனாக வீற்றிருந்தான். இன்னுயிர்க்கு மின்னுயிராய் என்றது-யாவருக்கும் ஜீவனாதாரமாயென்றபடியாம். பொன்னுயிர்த்தல்-பொன்னொளியைக் காலுதலுமாம். போலும் என்னும் ஒப்பில்போலி, எதிர்மறைப்பொருள் தந்தது. பி-ம்:—[1]நிலமுங்காத்தளித்த. [2]உரைக்குங். [3]புகல்கின்றும், புகழ்கின்றும். [4]மேற். [5]உயிர்க்கும். [6]வழங்கினன். (726)

8.—சாகரர்.

[1]இடரேற்ட்ட வினநெடிய வரையுருட்டி [2]யிவ்வுலகந்
[3]திடரேட்ட மெனக் [4]கிடக்கும் வகையிரங்கித் [5]தெவ்வேந்தர்
[6]உடரேட்ட நெடுவேலா யிவர்குலத்தோ ருவரிநீர்க்
கடரேட்டா ரெனின்வேறேர் கட்டுரையும் வேண்டுமோ.

(இ - ள்.) தெவ் வேந்தர் உடல் தோட்ட நெடு வேலாய் - பகைமையையுடைய அரசர்களது உடம்பைத் துளைத்த நீண்ட வேலாயுதத்தையுடைய அரசனே! இவர் குலத்தோர் - இக்குமாரர்களது வமிசத்து அரசர், இரங்கி-(தங்கள் தந்தையினது அசுவமேதயாகத்துக் குதிரை காணப்படாமற்போனதற்காக)மனவிரக்கமுற்று, நெடிய

வரை-பெரியமலைகளை, இடறு ஒட்டம் இனம் (என)-காலாலிடறத் தக்க தேங்காயோடுகளின் வகைகளைப் போல, உருட்டி-(அப்பாற்) புரட்டித்தள்ளி, இ உலகம்-இந்தப் பூலோகம், திடறு ஒட்டம்என கிடக்கும் வகை-திட்டாக மேடான இடமாக இருக்கும்படி, உவரி நீர் கடல் தோட்டார்-உப்புச்சுவையுடைய நீரையுடைய கடலை(த் தம் தம்வலிமையால்) தோண்டினார்கள், எனின்-என்றால், வேறு ஓர் கட்டு உரைஉம் வேண்டும்ஓ-(இக்குலத்தினர்பெருமைக்கு) வேறு எடுத்துச்சொல்ல வேண்டுவதொரு உறுதிமொழியும் வேண்டுமோ?

இதிற் கூறப்பட்டவர் சகரகுமாரர்கள்: இவர்கள் தோண்டின பள்ளமே பின்பு கங்கைமுதலிய நீர்களால் நிறைந்து கடலாயிற் றென்க. மூன்று நான்காமடிகளிலுள்ள தோட்ட, தோட்டார் என் பவை-தொட்ட, தொட்டார் என்பவற்றின் எதுகைநோக்கிய விகா ரங்கள். முதலடியில் ஓட்டம்-ஓடு என்பது டகரவொற்றிரட்டி அம் முச்சாரியைபெற்றபெயர். இரண்டாமடியில் ஓட்டம்-நீர் தங்காது ஓடிப்போவதற்குஉரிய இடமென்ற காரணத்தால், மேட்டை யுணர்த் திற்று; ஆகவே, திடரோட்டமென்பது-ஒருபொருட்பன்மொழியாம். இனி இதற்கு-தோண்டலளவைத்திடர் அதாவது குளம் முதலிய நீர்நிலைகளைத் தோண்டும்பொழுது அளவுதோன்ற வைப்பதொரு மேட்டுக்குறியென்றும், திடல்-மேடும், தோட்டம் - பள்ளமும் என் றும், முதலடியில் இடறு ஓட்ட எனப்பிரித்து-தடைகளொழிய வென்றும் பொருள் கூறுவாருமுளர். நான்கடியிலும் 'இடறொட்ட வினம், திடறொட்டமென, உடறொட்ட, கடறொட்டார்' எனக் குற் றெழுத்தாகவே பாடங்கொண்டாலும் இப்பொருள் செவ்விதாகவே யேற்படும். பி-ம்:—[1] இடறோட்டியெனும், இடறோட்டமென, இட றோட்டியினன். [2] இவ்வுலகின், இவ்வுலகை. [3] திடறோட்டுமென, திட றோட்டியென. [4] நிறுவித்தேன் விரிதார்த், கிடந்ததென விரங்காத், கிடந்ததென விரிந்தார், நிறுவித்தெவ்வேந்தர். [5] தேர்வேந்தர், சிரத்திஞெடு. [6] உடறோட்டு. (727)

9.—பகீரதசக்கரவர்த்தி.

தூநின்ற சுடர்வேலோ [1]யனந்தனே சொல்லானேல்
யானின்று[2] புகழ்ந் துரைத்தற் கெளிதோவே டவிழ்கொன்றைப்
பூநின்ற மவுலியையும் புக்களைந்த புனற்கங்கை
வானின்று கொணர்ந்தானு மிவர்குலத்தோர் மன்னவன்காண்.

(இ - ள்.) தூ நின்ற சுடர் வேலோய் - (பகைவரது) தசை பொருந்தி நின்ற ஒளியையுடைய வேலாயுதத்தையுடைய மன்ன வனே! அனந்தன்ஏ சொல்லான்ஏல்-(ஆயிரம்முகத்தையும் இரண்டா யிரம்நாவையுமுடைய) ஆதிசேஷனே (இவர்குலத்தினரது சிறப்பைச்) சொல்ல வல்லவனல்லனென்றால், யான் நின்று புகழ்ந்து உரைத் தற்கு எளிதுஓ-(இவர்கள் சிறப்பு ஒரு முகத்தையும்ஒரு நாக்கையு முடைய) யான் (தளர்ச்சியடையாது) நிலைநின்று புகழ்ந்து சொல்லு தற்கு எளியதோ? [அன்றென்றபடி]; ஏடு அவிழ் - இதழ்கள் விரி கின்ற, கொன்றை பூ-கொன்றைமரத்தின் மலர்கள், நின்ற-சூடப்

பெற்ற, மவுலியையஉம்-திருமுடியையுடைய சிவபிரானையும், புக்கு அளைந்த-வந்துபொருந்தின, புனல்-புண்ணிய தீர்த்தத்தையுடைய, கங்கை-கங்காநதியை, வான் நின்று - தேவலோகத்திலிருந்து, கொணர்ந்தான்உம் - (இவ்வுலகத்துக்குக்) கொண்டுவந்தவனும், இவர் குலத்து ஓர் மன்னவன் காண்-இக்குமாரரது குலத்திற்பிறந்த ஓரரசனேயாவன்; (எ-று.)

அனந்தன்-நித்தியன். யான், இன்று, என்றும் பதம்பிரிக்கலாம். மவுலியையும் என்ற உம்மை - உயர்வுசிறப்பு. முற்றுமுணர்ந்தவனாகிய சிவபிரானுக்குந் தூய்மை தரவல்லது கங்கா தீர்த்தமென்றதாம். கொணர்ந்தமன்னவன-பகீரதசக்கரவர்த்தி. பி - ம்:—[1] அனந்தனுக்குஞ் சொலற்கரிதேல், அனந்தனே சொல்வானாகில். [2] புகழ்ந்தேதத் தற்கெளிதே. (728)

10.—நூறு அசுவமேதயாகஞ் செய்தவன்.

கயற்கடல்சூ ழுலகெல்லாங் கைந்நெல்லிக் கனி [1] யாக்கி
இயற்கைநெறி முறையாலே யிந்திரற்கு மிட [2] ரியற்றி [வன்
முயற்கறையின் [3] மதிக்குடையா யிவர் [4] குலத்தோன் முன்னொரு
செயற்கரிய பெருவேள்வி யொருநூறுஞ் செய்தமைத்தான்.

(இ - ள்.) முயல் கறை இல் மதி குடையாய் - முசலென்று சொல்லப்படுகிற களங்கம் இல்லாத பூர்ணசந்திரமண்டலம்போல விளங்குகிற வெண்கொற்றக்குடையையுடையவனே! இவர் குலத்தோன் முன் ஒருவன் - இக்குமாரர்களது குலத்திலே முன்னே தோன்றினனொரு அரசன், கயல் கடல்சூழ் உலகு எலாம்-மீன்களையுடைய கடலினாற் சூழப்பட்டுள்ள நிலவுலக முழுவதையும், கை நெல்லி கனி ஆக்கி - உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல எளிதில் தன்கைவசப்படுத்தி, இந்திரற்குஉம் இடர் இயற்றி-தேவேந்திரனுக்கும் (அப்பதவியையிழப்பதாகிய) துன்பத்தையுண்டாக்கலுற்று, செயற்கு அரிய பெரு வேள்வி ஒரு நூறுஉம்-(பிறரால்) செய்வதற்கு அருமையான பெரிய ஒப்பற்ற நூறு அசுவமேதயாகங்களையும், இயற்கை நெறி முறையால்-சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள விதிமுறைமை சிறிதும் வழுவாமல், செய்து அமைத்தான் - செய்து முடித்தான்; (எ-று.)

இவ்வரசன் இன்னானென்று துணிந்து கூறக்கூடவில்லை; நகுஷன் என்ற ஓரரசன் நூறு அசுவமேதயாகஞ்செய்து முடித்துத் தேவேந்திரபதவியைப் பெற்றானென்று ஒருகதை பிரசித்தமாகவுண்டு; மகாபாரதத்தில் அவ்வரசனைச் சந்திரவமிசத்தானாகக் கூறப்பட்டுள்ளது; சூரியகுலத்திலும் நகுஷனென அப்பெயர் கொண்ட அரசனொருவனுண்டு. இப்பாட்டிற் குறிக்கப்பட்டவன் சகரசக்கரவர்த்தி யென்பாருமுளர். நிலவுலகத்தில் ஒருவன் நூறு அசுவமேதயாகஞ்செய்து முடித்தால் தேவலோகத்தில் அப்பொழுதுள்ள இந்திரனை அப்பதவியினின்று தள்ளிவிட்டு அம்மனிதனுக்கு இந்திரபதவியைக் கொடுப்பது மரபு ஆதலால் 'இந்திரற்குமிடரியற்றி' எனப்பட்டது. கயல் என்னும் ஒரு சாதி மீனின் சிறப்புப்பெயர், இங்கு நீர்வாழ்பொருள்களுக்கெல்லாம் உபலக்ஷணம். சந்திரனிடத்

துள்ள களங்கத்தை முயலென்றும் மானென்றும், மறுவென்றும், பூச்சாயையென்றும் இங்ஙனம் பலவாருகக் கூறுவது கவிசமயமாதலால், 'முயற்கறை' என்ருர்.வேதம் அபௌருஷேயமாதலால்,அதில் சொல்லிய நெறியை 'இயற்கைநெறி' என்ருரென்ப. பி-ம்:—[1] ஆக. [2] இயற்ற. [3] மதியுடையாய், மதிக்குடையான். [4] குலத்தோர். (729)

11.—இரகுமகாராஜன்.

[1] சந்திரனை வென்ருனு [2] முருத்திரனைச் சாய்த்தானும்
[3] துந்துவெனுந் தானவனைச் சுடுசரத்தாற் றுணித்தானும்
வந்தகுலத் திடை [4] வந்த ரகுவென்பான் வரிசிலையால்
இந்திரனை வென்றுதிசை யிருநான்குஞ் [5] செருவென்ருன்.

(இ - ள்.) சந்திரனை வென்ருன்உம் - சந்திரனைச் சயித்தானொரு அரசனும், உருத்திரனை சாய்த்தான்உம் - உருத்திர பகவானைத் தோற்கடித்தானொரு அரசனும், சுடு சரத்தால் துந்து எனும் தானவனை துணித்தான்உம் - (பகைவரை) எரிக்கவல்ல பாணத்தால் துந்துவென்னும் அசுரனைக்கொன்ருனொரு அரசனும், வந்த - பிறப்பதற்கு இடமுன, குலத்திடை - (இக்ஷுவாகுமாரர்களின்) குலத்திலே, வந்த - பிறந்த, ரகு என்பான் - இரகுவென்னும் மகாராசன், வரிசிலையால் - கட்டமைந்த வில்லினுல், இந்திரனை வென்று - தேவேந்திரனைச் சயித்து, திசை இரு நான்குஉம் - எட்டுத்திக்கிலுள்ளாரையும், செருவென்ருன்-போரில் வெற்றிகொண்டான்; (எ-று.)

* "சந்திரன் தனது குருவான பிருகஸ்பதியின் மனைவியாகிய தாரையைக் கூடி அவளை விடாதிருக்க, அதுகாரணமாய்த் தேவர்கள் குருவின்பக்கத்திலும் அசுரர்கள் சந்திரன்பக்கததிலுஞ் சேர்ந்து போர்புரிய, தேவர்கள் அவ்வசுரர்க்கு உடைந்து ஓடினர்; பின்பு குரு சூரியவமிசத்தாஞகிய திலீபமகாராசனை வேண்ட, அவன் சென்று அசுரர்களைக்கொன்று சந்திரனை வென்று 'சந்திரஜேதா' என்னும் பெயர்பூண்டாஞகலின், 'சந்திரனை வென்ருனும' என்றவன், திலீபன். பகீரதசக்கரவர்த்தி அசுவமேதஞ்செய்வதற்குப் பரியை விடுப்ப, ஆறுமுகன் அப்பரியைக் கவர்ந்து செல்ல, பகீரதன் சென்று தன்னை எதிர்த்த சிவனை வென்ருஞகலின், 'உருத்திரனைச் சாய்த்தானும்' என்றவன், பகீரதன்: இவ்வாறு கந்தபுராணம் சனத்குமாரசங்கிதையிற் கூறப்பட்டது."

சூரியகுலத்திற் பிறந்த குவலயாசுவனென்பவன், ஸ்ரீவிஷ்ணு தேஜோபலம் பொருந்தினவனுய், உதங்கமகரிஷிக்குப் பகைவனுயிருந்த துந்து என்கிற அசுரனைத் தன் இருபத்தோராயிரம் புத்திரரோடு கூடிச்சென்று கொன்றதனுல், 'துந்துமாரன்' என்கிற பெயரைப் படைத்தான்: இந்தத்துந்துவென்னும் அசுரன் கடலில் முழுகி மறைந்து மிகநெடிதாகப் பெருமூச்சுவிட்டு அக்காற்ருற் கடல்நீரையும் மணலையும் நிரம்ப வெளிவீசித் துயரிழைத்ததனுற் கொல்லப்பட்டானென்ப. ரகுமகாராஜன் இந்திரனுமுட்படும்படி திக்விஜயஞ்

* இது, திருவாளர் கவிதலம்-துரைசாமிமூப்பனுராற் செய்யப்பட்ட ஸ்ரீமத்கம்பராமாயண அருங்கவி விளக்கத்திற் கண்டது.

செய்தமை, உலகப்பிரசித்தம். [1]சந்திரனேயென்றாலும் என்றபாடத்துக்கு - விஷ்டராச்சுவனென்னுஞ் சூரியகுலத்தரசனது மகனாகிய யுவனாச்சுவ னென்க; சந்திரனது அமிசமாய்ப்பிறந்தவனாதலால் இவனுக்குச் சாந்திரனென்று ஒரு பெயர் உண்டு. [2]உருத்திரனைச் சாய்த்தானும் என்ற இடத்துச் சதுமுகனைச்சாய்த்தானும் எனவும், சதமகனைச்சாய்த்தானும் எனவும் பாடங்களுண்டு; அவற்றிற்கு - முறையே பிரமனைவென்றவ னென்றும், இந்திரனையழித்தவ னென்றும் பொருளாம். அவற்றிற்கும் நூல்களில் நோக்குமிடத்துக்கதைகள் கிடைக்கவுங்கூடும். ரகு - வடமொழி திரியாமல் நின்றது; "ராசமாபுரி" என்றதுபோல. இவன்பெயரால் இக்குலத்துக்கு 'ரகுகுலம்' என்றும், இக்குலத் துதித்த இராமபிரானுக்கு 'ராகவன' என்றும் பெயர்கள் பிரசித்தமாக வழங்குவதைக்கொண்டும், காளிதாசமகாகவி வடமொழியில் இவன் பெயரால் 'ரகுவம்சம்' என ஒருகாவியஞ் செய்திருத்தலைக் கொண்டும் இவ்வரசனது பெருமையை யுணர்க. பி - ம்:—[3]துந்துமியாந், துந்துபியாந். [4]வேந்தன். [5]செலுத்தினன்.

12.—அசமகாராசன்.

வில்லென்னு நெடுவரையால் வேந்தென்னுங் கடல்கலக்கி
எல்லென்னு மணிமுறுவ லிந்துமதி யெனுந்திருவை
அல்லென்னுந் [1]திருநிறத்த வரி [2]யென்ன [3]வசனென்பான்
மல்லென்னுந் திரள்புயத்துக் கணி [4]யென்ன [5]வைத்தானே.

(இ - ள்.) அசன் என்பான் - (இவர்குலத்தில் தோன்றிய) அஜனென்னும் மகாராஜன்,—வில் எனனும் நெடு வரையால் - (தனது) தனுவென்கினற பெரிய மந்தரமலையாகிய மத்தினால், வேந்து என்னும் கடல்-பகையரசர்களென்கிற பாற்கடலை, கலக்கி - கலங்கச்செய்து [கடைந்து என்றபடி], எல் என்னும் மணி முறுவல்-ஒளிவடிவமென்று சொல்லத்தக்க முத்தையொத்த பற்களையுடைய, இந்துமதி எனும் திருவை-இந்துமதியென்கிற இலக்குமி போன்றவளை, அல் எனனும் திரு நிறத்த அரி என்ன - இருளெனத்தக்க கரிய திருநிறத்தையுடைய திருமால் போல, மல் என்னும் திரள் புயத்துக்கு அணி என்ன வைத்தான்-மற்றொழிலின் வடிவமெனத்தக்க திரண்ட (தன்) தோள்களுக்கு ஒரு ஆபரணமாக அணிந்தான்; (எ-று.)

அசன் என்பதற்குப் பிரமனென்றும் ஒருபொருள் உள்ளதாதலால், முன்னே அரி மந்தரகிரியைக்கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து அதில் தோன்றிவிளங்கிய திருமகளைத் தன் திருமார்பில் வைத்துக்கொண்டதனை நோக்கி, அசன் தானும் அது போலவே வில்லாகிய மலையைக்கொண்டு பகைவேந்தராகிய கடலைக் கடைந்து அதில் தனக்குக்கிடைத்த இந்துமதியாகிய இலக்குமியைத் தன் தோளில் வைத்துக்கொண்டா னென, ஒருவகைக் கவிசாதுரியந் தோன்றக் கூறினர். வேந்தென்னுங்கடல் கலக்குதல்-இந்துமதியானவள் சுயம்வரகாலத்திற் பிறஅரசர்களை மதியாமல் அஜமகாராஜனை யுவந்து மாலைசூட்ட அதனைக்கண்டு பொறாமைகொண்டு திரண்டுசூழ்ந்து போர்விளைத்த அரசர்கள் கூட்டத்தை யழித்தல்.

நல்வினையுடையார்பாற்சென்று சேருமளவும் பலர்க்கும் பொதுவாயிருத்தலாலும் பேரழகுஉடைமையாலும் செல்வச்சிறப்பாலும், கன்னிகையாகிய இந்துமதிக்குத் திருமகள் உவமை. மல் - ஆயுதமின்றிக்கேஉடல்வலிமையாற் போர்செய்தல்; அத்தொழிலில் மிகப் பயின்று வலிமைகொண்டு திரண்டுருண்ட தோள்களை அத்தொழிலின்வடிவமெனக்குறித்தார். இச்செய்யுளில் உருவகவணி உவமையணியை அங்கமாகக் கொண்டு வந்தது. அணி முறுவல் எனப் பிரித்து - அழகிய புன்னகையென்றுங் கொள்ளலாம். திரள்புயத்துக்கு அணி யென்ன வைத்தான்என்பது-மணந்தான் என்ற பொருளைக் குறிப்பாலுணர்த்திற்று. இந்துமதியின் சுயம்வர வரலாற்றை இரகுவமிசகாவியத்திற் பரக்கக் காணலாம். பி-ம்:—[1] கரு, மணி. [2] அன்ன. [3] அயன். [4] ஆக. [5] வைத்தான்காண். (731)

13.—தசரதனும் அவன்புத்திரர் இவரென்பதும்.

அயன்புதல்வன் றயரதனை யறியாதா ரில்லையவன்
பயந்தகுலக் குமர[1] ரிவர் தமக்குள்ள [2] பரிசெல்லாம்
நயந்துரைத்துக் கரை[3] யேற நான்முகற்கு [4] மரிதாம் பல்
[5] இயந்துவைத்த கடைத்தலையா யானறிந்த படிகேளாய்.

(இ - ள்.) பல்-அநேகமான, இயம்-வாத்தியங்கள், துவைத்த - முழங்குதற்குஇடமான, கடைத்தலையாய்-தலைவாயிலையுடைய சனகராசனே! அயன புதல்வன்-(கீழ்க்கூறிய) அஜமகாராஜனது புத்திரனாகிய, தயரதனை-தசரதசக்கரவர்த்தியை, அறியாதார்-அறியாதவர்கள், இல்லை-(உலகத்தில்) ஒருவருமில்லை; அவன் பயந்த-(லோகப் பிரசித்தனான)அந்தத் தசரதசக்கரவர்த்தி பெற்ற, குலம் குமரர் இவர் தமக்கு-சிறந்தகுமாரர்களாகிய இவர்களுக்கு, உள்ள-இருக்கிற, பரிசு எல்லாம்-சிறப்புத்தன்மை முழுவதையும், நயந்து உரைத்து-விரும்பிக்கூறி, கரை ஏற - (இவர்களது புகழ்க்கடலின்) கரையைச் சேர்தற்கு, நான்முகற்குஉம் - நான்குமுகங்களையுடைய பிரமதேவனுக்கும், அரிது ஆம் - அரியதாகும்; யான் அறிந்தபடி கேளாய்-(ஆயினும் அதனை) நான் அறிந்திருக்கிற விதமாய் (ஒருவாறு சிறிது சொல்லக்) கேட்பாயாக; (எ - று.)

நான்குமுகங்களையுடைய பிரமதேவனுக்கும் ஒருவாறு உணர்த்தக்கூடுமேயன்றி முழுவதுமறிந்துகூற முடியாத இக்குமாரர்களது வரலாற்றை ஒரு முகமுடைய மனிதனாகிய யான் எங்ஙனம் முழுவதுங் கூறற்பாலேன்? அல்லேனாயினும், நீ கேட்டதனால் ஒரு படியாகக் கூறலுறுவே னென்று, ராம மகிமையினது வாசாமகோசரமான தன்மையை வெளியிட்டார். துவைத்த-இயல்பினால் வந்த காலவழுவமைதி. பி-ம்:—[1] இவர்தமை. [2] படியெல்லாம். [3] ஏறல், ஏற்ற. [4] அரிதாகும், அரிதாசர், ஏழரிசால். [5] இயைந்துரைத்த, இயந்துகைத்த. (732)

14.—இனி, இப்படலம் முடியுமளவும் தசரதபுத்திரர் வரலாறு: தசரதன் மகவின்றி வருந்துதல்.

[1] துனியின்றி யுயிர்[2] செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகை[3] வென்று படி[4] காப்போன்

தனு[5]வன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான்.

(இ - ள்.) துனி இன்றி உயிர் செல்ல-துன்பமில்லாமல் (உலகத்திலுள்ள) உயிர்கள்யாவும் வாழும்படி, சுடர் ஆழி படை வெய்யோன் பனி வென்றபடி என்ன பகை வென்று-விளங்குகிற (திருமாலினது) சக்கராயுதம்போன்ற சூரியன் பனியை (எளிதில் ஒழித்து) வெற்றிகொண்ட தன்மை போலப் பகையரசர்களை (அலட்சியமாக அழித்து) வெற்றிகொண்டு, படி காப்போன்-உலகத்தைக் காத்தருள்பவனும், தனு அன்றி துணை இல்லான்-(தன்) கைவில்லையேயல்லாமல் வேறு உதவியை(ப்போர்வெற்றிக்கு)வேண்டாதவனும், தருமத்தின் கவசத்தான் - தருமமாகிய கவசத்தையுடையவனும், மனுவென்ற நீதியான்-(தருமசாஸ்திரஞ்செய்தருளின) மனுச்சக்கரவர்த்தியையும் நீதிநெறியிற் செயித்தவனுமாகிய அந்தத்தசரதன், மகவு இன்றி வருந்துவான்-புத்திரபாக்கியமில்லாமல் மனவருத்தப்படுந் தன்மையனானான்; (எ-று.)

இருந்த இடமுந் தெரியாதபடி இவன் இளமையிலேயே பகையனைத்தையுந் தன்வில்லாற்கெடுத்தானென்க. சூரியன்-சக்கரவர்த்திக்கும்,பனி-பகையரசர்க்கும்,ஒளி-வில்லுக்கும்உவமை. 'துனியின்றியுயிர்செல்ல' 'படிகாப்போன்' என்பன-உபமான உபமேயம் இரண்டுக்கும் பொது. தனுவன்றித் துணையில்லான்-அசகாய சூரன். தருமத்தின் கவசத்தான் - அறமொன்றையே தன்னைக் காக்கும் அரணாகக் கருதிக் குறைவற நன்றாக ஓம்புவான். மனு என்ற நீதியான் எனப்பிரித்து - மனு இவனேயென்று சொல்லத்தக்க செங்கோன்முறைமை யுடையா னென்றுமாம். பி - ம்:—
[1] துனிவின்றி,பனியின்றி. [2] செய்ய. [3] வென்ற. [4] காத்தோன். [5] ஒன்றி.

15.—தசரதன் இருசியசிருங்கனாற் புதல்வரில்லாக்குறையை நீக்கக்கருதல்.

சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண்
[1]விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையாரை
முலைக்கோட்டு விலங்கென்[2]றங் குடனணுகி முன்[3]னின்ற
கலைக்கோட்டுப் [4]பெயர்முனியாற் றுயர்[5]நீங்கக் கருதினான்.

(இ - ள்.) சிலை கோடு நுதல்-விற்போல வளைதலைக்கொண்ட நெற்றியையும், குதலை செம் கனி வாய் - (குழந்தைகளின்) மழலைச்சொற்போலினிய சொற்களையே பேசுகிற சிவந்த கொவ்வைப் பழம்போன்ற அதரத்தையும், கரு நெடு கண் - கரிய நெடிய கண்களையும், விலைக்கு ஓட்டும் பேர் அல்குல் - விலைப்பொருளுக்குக் கொடுக்கின்ற பெரிய அல்குலையும், மின் நுடங்கும் இடையாரை - மின்னற்கொடிபோலத்துவள்கிற சிற்றிடையையுமுடைய வேசையரை, முலை கோடு விலங்கு என்று - தனங்களாகிய கொம்புகளையுடைய சில மிருகங்களென்று கருதி, அங்கு உடன் அணுகி - அவ்வாச்சிரமத்திடத்திலிருந்து அவ்விலைமாதர்களுடனே கூடிவந்து, முன்னின்ற-(உரோமபாதமகாராசனது) முன்னே எழுந்தருளி

நின்ற, கலைக்கோட்டுப் பெயர் முனியால் - கலைக்கோட்டுமுனிவனென்கிற பெயரையுடைய முனிவனைக்கொண்டு, துயர் நீங்க கருதினான் - (தசரதசக்கரவர்த்தி புத்திரரில்லாமையால்விளைந்த) துன்பத்தினின்று (தான்) நீங்கும்படி நினைத்தான்; (எ - று.)

இக்கலைக்கோட்டுமுனிவன் தான் தலையிற் கொம்புடையவனாதலால் மாதர்களை மார்பிற் கொம்புடையவராகக் கருதினான் போலும். கோட்டு நுதல்-இரண்டாம் வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்க தொகை; கோடு-வளைவு. பி-ம்:—[1] விலைக்கோட்டுப். [2] தொடர்ந்து. [3] வந்த. [4] திரு. [5] நீங்குகருத்தினான், நீங்கிக் கருதுவான். (734)

16.—தசரதன் இருசியசிருங்கனைப் புதல்வருண்டாக அருள்புரியவேண்டுதல்.

தார்காத்த நறுங்குஞ்சித் தனயர்களென் றவமின்மை
வார்காத்த வனமுலையார் மணி[1] வயிறு வாய்த்திலரால்
நீர்காத்த கடல் [2] காத்த நிலங்காத்தே [3] னென்னிற்பின்
பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான்.

(இ - ள்.) என் தவம் இன்மை - எனது (முற்பிறப்பிற்செய்த) நற்றவமில்லாமையால் தார் காத்த நறு குஞ்சி தனயர்கள் - பூமாலையை யணிகிற இயற்கைமணமுள்ள முடியையுடைய புத்திரர்கள், வார் காத்த வனம் முலையார் மணி வயிறு வாய்த்திலர் - கச்சையணிந்த அழகிய தனங்களையுடைய என்மனைவிமாரது அழகிய கருப்பத்தில் தோன்றினாரில்லை, ஆல் - ஆதலால், நீர் காத்த கடல் காத்த நிலம் காத்தேன் என்னின் பின் - நீர் நிறைந்த கடல் சூழ்ந்த நிலவுலகம்முழுவதையும் அரசாண்டுவந்த எனக்குப் பின்பு, பார் காத்தற்கு உரியாரை - இந்நிலவுலகத்தைப் பாதுகாப்பதற்கு உரிய நற்புத்திரர்களை, நீ பணி என்று - (நான் பெறும்படி) நீ அருள் செய்வாயாக என்று கூறி, அடி பணிந்தான் - (தசரதமகாராஜன் அக்கலைக்கோட்டுமகரிஷியின்) திருவடிகளில் வணங்கினான்; (எ-று.)—காத்தேன்-பெயர். பி-ம்:—[1] வயிற்றில்வந்திலரால். [2] புடைசூழ். [3] நின்றபின். (735)

17.—இருசியசிருங்கன் புத்திரரைத்தர வேள்விக்குரியவற்றை யமைக்கப் பணித்தல்.

அவ்வுரைகேட் [1] டம்முனியு மருள்சுரந்த வுவகையனாய்
இவ்வுலக [2] மன்றியே [3] யெவ்வுலகு [4] மினிதளிக்கும்
செவ்வியிளஞ் [5] சிறுவர்களைத் தருகின்றே னினித்தேவர்
வவ்விநுகர் பெருவேள்விக் குரியவெலாம் [6] வருகென்றான்.

(இ - ள்.) அ உரை கேட்டு-(தசரதனது) அந்த வார்த்தையைக் கேட்டு, அ முனிஉம் - அந்தருசியசிருங்கமுனிவனும், அருள் சுரந்த உவகையன் ஆய் - கருணையோடுகூடியெழுந்த களிப்பை யுடையவனாகி, (அவ்வரசனை நோக்கி), 'இ உலகம் அன்றிஏ-இந்தப் பூலோகமொன்றைமாத்திரமேயல்லாமல்,எ உலகுஉம்-எல்லாலோகங்களையும்,

இனிது அளிக்கும் - இனிமையாக (எளிதிற்) காத்திடும்படியான, செவ்வி இள சிறுவர்களை - அழகிய இளமையான குமாரர்களை, தருகின்றேன்-(உனக்கு யான் இப்பொழுது) கொடுத்திடுகிறேன்: இனி-, தேவர் வவ்வி நுகர் பெரு வேள்விக்கு உரிய எலாம் - தேவர்கள் (அவிசுகளைப்) பெற்று உண்பதற்கிடமான பெரியயாகத்தைச் செய்வதற்கு உரிய பொருள்கள் யாவும், வருக - (இங்கு) வந்துசேரக்கடவன,' என்றான்—; (எ-று.)

விரைவுந்தெளிவும்பற்றி 'தருகின்றேன்' என நிகழ்காலமாகக் கூறியது. 'எவ்வுலகு மினிதளிக்கும்' என்ற அடைமொழியால், காத்தற்றொழிற்குரிய கடவுளாகிய திருமாலின் அமிசமானவர்களென்பது தோன்றுகின்றது. பி - ம்:—[1]அம்முனியும்...உவகையினால், அருள்சுரந்தவுவகையனையருளமுனி. [2]மற்றை. [3]ஏழுலகுங். [4]காத்தருளும், காத்தளிக்கும். [5]குரிசிலரை. [6]வரியென்றான், வருகவென்றான். (736)

18.–இருசியசிருங்கன் வேள்வியை நடப்பிக்க, சுதையேந்தி வேள்வித்தீயினின்று பூதமொன்று தோன்றுதல்.

காதலரைத் தரும்வேள்விக் குரியவெலாங்[1]கடிதமைப்ப
[2]மாதவரிற் பெரியோனு மற்றதனை முற்றுவித்தான்
சோதி[3]மணிப் பொற்கலத்துச் சுதை[4]யனைய [5]வெண்சோறோர்
பூதகணத் தரசேந்தி[6]யனனின்றும் [7]புறப்பட்ட.

(இ - ள்.) (அவ்வாறே சக்கரவர்த்தியும்), காதலரை தரும் வேள்விக்கு உரிய எலாம் - புதல்வர்களைக் கொடுத்திடுவதான யாகத்துக்கு உரிய பொருள்களெல்லாவற்றையும், கடிது அமைப்ப-விரைவாக வருவித்துவைக்க, மற்று-பின்பு, மா தவரில் பெரியோன் உம்-மிக்க தவமுடைய முனிவர்களிற் சிறந்த கலைக்கோட்டு முனிவனும், அதனை முற்றுவித்தான்-அந்தவேள்வியைச் செய்து முடித்தான; அனல் நின்றுஉம்-அந்த ஓமாக்கினியினின்றும், ஓர்பூதம் கணத்து அரசு-பூதவினங்களுக்கு அரசு ஆன ஒருசிறந்த பூதமானது, சோதி மணி பொன் கலத்து - ஒளியையுடைய அழகிய பொனமயமான தட்டிலே, சுதை அனைய வெண் சோறு - அமிர்தத்தையொத்த வெண்ணிறமான உணவை [பாயசத்தை], ஏந்தி - எடுத்துக்கொண்டு, புறப்பட்ட(து)-வெளிப்பட்டது; (எ-று.) பி-ம்:- [1]கடிதமைத்தான். [2]மாதவரைப். [3]நிறப்பரிகலத்து. [4]அன்ன, என்ன. [5]வெண்சோறு, வண்சோறு. [6]அதினின்று, கனனின்று. [7]புறப்பட்டான். (737)

19.—தசரதன் அச்சுதையை மனைவியர்க்குக் கொடுத்தல்.

பொன்னின்மணிப் [1]பரிகலத்திற் புறப்பட்ட வின்னமுதைப்
பன்னுமறைப் பொரு[2]ளுணர்ந்த [3]பெரியோன்றன் பணியினால்
தன்னனைய நிறைகுணத்துத் தசரதனும் [4]வரன்முறையால்
நன்னுதலார் மூவருக்கு நாலுகூ றிட்[5]டளித்தான்.

(இ - ள்.) பொன்னின் மணி பரிகலத்தில் - பொன்னினாலாகிய அழகிய பாத்திரத்துடனே, புறப்பட்ட-(அக்கினியினின்று) வெளிப்பட்ட, இன் அமுதை - இனிய அந்த உணவை, பன்னு மறை பொருள் உணர்ந்த பெரியோன் தன் பணியினால் - சிறப்பித்துக் கூறப்படுகிற வேதங்களின் பொருள்களை யறிந்த (அறிவொழுக்கங்களிற்) பெரிய அக்கலைக்கோட்டு முனிவனது கட்டளையால், தன் அனைய நிறை குணத்து தசரதன்உம்-தன்னை (த்தானே) யொத்த [வேறு உவமைபெறாத] நிறைந்த நற்குணங்களையுடைய தசரதனும், வரல்முறையால் - கிரமப்படி, நல் நுதலார் மூவருக்கு (உம்)- அழகிய நெற்றியையுடைய (கௌசல்யை முதலிய) பட்ட மகிஷிகள் மூன்று பேருக்கும், நாலுகூறு இட்டு அளித்தான் - நாலுபங்காக்கிக் கொடுத்தான்; (எ-று.)

மூன்று பங்கை மூன்று பேருக்குங் கொடுத்து, பங்கிடும்பொழுது சிதறிவிழுந்தவற்றையுஞ் சுமத்திரைக்குக் கொடுத்ததாகக் கீழ்த் திருவவதாரப்படலத்திற் கூறப்பட்டுள்ளமையுங் காண்க. பி - ம்:—[1]பொற்கலத்திற். [2]தெரிந்த, தேர்ந்த. [3]மறையோன்றன்.[4] முறையாலே. [5]ஈந்தான். (738)

20.—கௌசலை இராமனைப் பெறுதல்.

விரி[1]ந்திடுதீ வினை [2]செய்த [3]வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த [4]வறஞ்செய்த [5]வறத்தாலும்
இருங்கடகக் [6]கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள் [7]பயந்தாள்.

(இ - ள்.) விரிந்திடு தீவினை செய்த - (உலகத்திற்) பரவிய பாவங்கள் பண்ணின, வெவ்விய தீவினையால்உம் - கொடியபாவத்தாலும், அரு - (அறிவதற்கு) அருமையான, கடை இல் - எல்லையில்லாத, மறை-வேதங்களில், அறைந்த-கூறப்பட்டுள்ள, அறம் - தருமங்கள், செய்த - பண்ணின, அறத்தால்உம் - தருமத்தாலும், செம் கனி வாய்-சிவந்த கொவ்வைப்பழம் போன்ற வாயையுடைய, கவுசலை என்பாள் - (தசரதன் மனைவியருள் மூத்தவளான) கௌசலியாதேவி யெனப்படுபவள், இரு கடகம் கரதலத்து - பெரிய கடகமென்னும் அணியையணிந்த கைகளினிடங்களையும், எழுது அரிய திரு மேனி - சித்திரத்திலெழுதுதற்கும் முடியாத அழகிய உடம்பையுமுடைய, இ கரு கடலை - கரிய கடல்போன்ற நிறமுடைய இந்த ராமனை, பயந்தாள் - பெற்றாள்; (எ - று.)

பாவமழியவும் புண்ணியம் வளரவும் இராமன் திருவவதரித்தானென்பார், 'தீவினைசெய்த தீவினையாலும் அறஞ்செய்த அறத்தாலும் பயந்தாள்' என்றார்; துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனங்களைச் செய்வதனால் பாவவிநாசமும் புண்ணிய அபிவிருத்தியும் உண்டாவன. 'தீவினை செய்த தீவினையாலும், அறஞ்செய்த அறத்தாலும்' என்ற இடத்துக் கவிநயம், அறிஞரால் மகிழற்பாலது. அரு கடையின் என எடுத்து - அறிதற்கு அருமையான (வேத) முடிவாகிய உபநிஷத்துக்களையுடைய என்றுமாம். கடல் -

உவமவாகுபெயர். பி-ம்:—[1] அடு. [2] பெயர, அகல. [3] மெய்ம்மைசெய்நல். [4] அருள்பெருகும். [5] தவத்தாலும். [6] தராதலத்தில், கரதலத்தின். [7] ஈன்ருள். (739)

21.—கைகேயி பரதனைப் பெறுதல்.

தள்ளரிய பெரு[1] நீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் [2] பெயரானை
எள்ளரிய குணத்தாலு மெழிலாலு [3] மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்.

(இ - ள்.) தள்ள அரிய - (அறிந்தவர்களால்) விலக்குவதற்குக்கூடாத, பெரு நீதி - சிறந்த நியாயங்களாகிய, தனி ஆறு - ஒப்பற்றபெரு நதிகள், புக - (தன்னிடத்து) வந்து சேர்தலால், மண்டும் - நிறைந்திருக்கிற, பள்ளம் எனும் - ஆழமாகிய கடலென்று சொல்லத்தக்க, தகையானை - நற்குணங்களையுடையவனும், எள்ள அரிய - (யாவராலும்) இகழ்வதற்குக்கூடாத, குணத்தால்உம் - நற்குணங்களாலும், எழிலால்உம் - அழகினாலும், இ இருந்த வள்ளலை ஏ - இங்குவந்து வீற்றிருக்கிற இந்த ஸ்ரீராமபிரானையே, அனையானை - ஒத்தவனுமாகிய, பரதன் எனும் பெயரானை - பரதனென்னும் பெயருள்ள குமாரனை, கேகயர்கோன் மகள் - கேகயதேசத்தரசனது மகளாகிய கைகேயி, பயந்தாள்-பெற்ருள்; (எ-று.)

தமக்குத் தாடகைமுதலியோரால் நிகழ்ந்த துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தந்ததனால், 'வள்ளல்' என்ருர். நீதியாறு புகமண்டும் பள்ளம் - யாற்று நீர் நிறைந்த கடல்போல் நீதிநிரம்பின அரசன். பி-ம்:—[1] வேள்வி. [2] பெரியோனை. [3] இவண், இவன். ()

22—சுமித்திரை லட்சுமணசத்துருக்கனரைப் பெறுதல்.

அருவலிய திறலினரா யறங்[1] கெடுக்கும் [2] விறலரக்கர்
வெருவருதிண் டிறலார்கள் வில்[3] லேந்து [4] மெனிற் [5] செம்பொற்
பருவரையு [6] நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்
இருவரையு [7] மிவ்விருவர்க் கிளையாளு மீன்றெடுத்தாள்.

(இ - ள்.) அரு வலிய திறலினர் ஆய் - (பிறரால் வெல்லுதற்கு) அருமையான வலிமையையுடைய வெற்றியையுடையவர்களாய், அறம் கெடுக்கும் - தருமத்தையழிக்கின்ற, விறல் - வீரத்தன்மையையுடைய, அரக்கர் - இராக்கதர்களெல்லோரும், வெருவரு - அஞ்சுதற்குக் காரணமான, திண் திறலார்கள்-மிக்கவலிமையுடையவர்களும், செம் பொன் பரு வரைஉம் - சிவந்த பொன்மயமான பருத்த மகாமேருமலையும், நெடு வெள்ளி பருப்பதம்உம் - உயர்ந்த வெள்ளிமயமான கைலாசமலையும், வில் ஏந்தும் எனின் - (கையில் தனித்தனி) வில்லையெடுத்து நிற்குமாயின், போல்வார்கள் - (அவற்றை) ஒப்பவர்களுமாகிய, இருவரைஉம் - (லட்சுமணன் சத்துருக்கனன் என்னும்) இரண்டு புத்திரர்களையும், இ இருவர்க்கு இளையாள்உம் - (கௌசலியை கைகேயி என்று கீழ்க்கூறிய இந்த)

இரண்டுமனைவியருக்கும் இளையவளாகிய சுமத்திரையும், ஈன்று எடுத்தாள்-பெற்றெடுத்தாள்; (எ - று.)

இலக்குமணனது நிறம் பொன்னிறமாதலாலும் சத்துருக்கனனது நிறம் வெண்ணிறமாதலாலும் இருவரும் வில்லேந்தும் வீரராதலாலும், 'வில்லேந்துமெனிற் செம்பொற்பருவரையு நெடு வெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்' என உவமை கூறினர்; இல்பொருளுவமை. இளையபெருமாளது நிறம் பொன்னிறமாதலைக் கீழ்த்திருவவதாரப்படலத்தில் "வடவரையுடன் வருசெயலென" என்றதனாலும், சத்துருக்கனுழ்வானது நிறம் வெண்மையாதலை "முத்துருக்கொண்டு செம்முளரி யலர்ந்தால்" என்றதனாலும் அறிக. திருவவதாரப் படலத்தில் 105-ஆஞ் செய்யுளில் சுமித்திரையைப் பட்டமகிஷியர் மூவருள் ஈற்றவளாகக் கம்பர் கருதினரென்பது, இங்கு 'இவ்விருவர்க்கிளையாளும்' என்றமையால் வலியுறுகின்றது. பி - ம்:—[1] கடந்த. [2] வலியவரை, அடலரக்கர். [3] எடுக்கும். [4] எழில். [5] மேருப். [6] தனி. [7] இருவர்க்கங்கு. (741)

23.—புதல்வரின் வளர்ச்சி.

தலையாய [1] பேருணர்விற் [2] கலைமகட்குத் தலைவராய்ச்
[3] சிலையாயுந் [4] தனுவேதந் தெவ்வரைப்போற் பணிசெய்யக்
கலையாழிக் கதிர்த்திங்க ளுதயத்திற் கலித்தோங்கும்
அலையாழி யெனவளர்ந்தார் மறைநான்கு [5] மனையார்கள்.

(இ - ள்.) மறை நான்கு உம் அனையார்கள் - நான்குவேதங்களையுமொத்த அக்குமாரர்கள் நால்வரும்,—தலை ஆய பேர் உணர்வின் - முக்கியமான விஷயங்களையெல்லா மறியவல்ல மூதறிவில், கலைமகட்கு தலைவர் ஆய்-சரசுவதிதேவிக்கும் மேம்பட்டவர்களாய்,- சிலை ஆயும் - வில்வித்தைத்திறத்தை யாராய்ந்து கூறுவதான, தனு வேதம் - தநுர்வேதமானது, தெவ்வரை போல் பணி செய்ய- (தங்கள்) பகைவர்கள் (தோற்றுவந்து தங்களிடம் குற்றேவல் செய்வது) போல (த் தங்களுக்கு)க் குற்றேவல் செய்யும்படி,—கலை ஆழி கதிர் திங்கள் உதயத்தில் கலித்து ஓங்கும் அலை ஆழி என - கலைகள் நிறைந்த வட்டவடிவமான ஒளியையுடைய பூர்ண சந்திரனது உதயகாலத்திலே ஒலித்துப்பொங்குகிற அலைகளையுடைய கடல்கள்போல, வளர்ந்தார்-வளர்ந்து வந்தார்கள்; (எ-று.)

திங்களுதயத்திற் கலித்தோங்கும் அலையாழிஎன்றதனால் தமது ஆசிரியன் முன்னிலையிலே தம்முடைய அறிவு ஆகிய அலைகள் பொங்கிக்காணக் கலைப்பயிற்சிபெற்று அப்புத்திரர்கள் வளர்ந்தன ரென்க. தலையாய பேருணர்வு - தத்துவஞானமென்னலாம். கலைமகட்குத் தலைவராய் - நான்குபுதல்வரும் சரசுவதிகொழுநன நான்குமுகங்களையுடைய பிரமதேவனையொத்து என்றுமுரைக்கலாம். மறைநான்கு மனையார்களென்றது - அறம்பொருளின்பம் வீடென்னும் நாற்பொருட்பயன்களையும் அளிக்குந்தன்மைய ரென்றவாறும். பி-ம்:—[1] பொருளுணர்வின், பெருவேள்விக். [2] கலைமகட்குந், தலைமகட்குந். [3] சிலையான, சிலையானை. [4] தேர்வேதம், தேர்வேந்தர், தனிவேந்தர். [5] வல்லார்கள். (742)

24.—புதல்வரின் வித்தியாப்பியாசம்.

திறையோடு மரசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றெசரதனும்
பொறையோடுந் [1]தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரேகாண்
உறையோடு நெடுவேலா யுபநயன விதிமுடித்து
மறை[2]யோடு வித்திவரை[3]வளர்த்தானும் வசிட்டன்காண்.

(இ - ள்.) 'உறை ஓடும் நெடு வேலாய் - (பகைவரில்லாமையால்)உறையிலேயே தங்குகிற நீண்ட வேலாயுதத்தையுடையவனே! (இக்குமாரர்கட்கு), திறையோடுஉம் அரசு இறைஞ்சும் - கப்பங்களுடனேவந்து எல்லா வரசர்களும் வணங்குதற்கிடமான, செறி கழல் கால்-நெருங்கின வீரக்கழலையணிந்த பாதங்களையுடைய, தெசரதன் ஆம் - தசரதசக்கரவர்த்தியாகிய, பொறையோடுஉம் தொடர் மனத்தான்-பொறுமைக்குணத்துடனே பொருந்தின மனத்தையுடையவனது, புதல்வர் - புத்திரர்கள், எனும் பெயர்ஏ காண் - என்கிறபெயரொன்று மாத்திரமே: உபநயனம் விதி முடித்து - (வேதவிதிப்படி செய்யவேண்டிய) உபநயனச்சடங்கை (இவர்களுக்குச்) செய்வித்து, மறைஓடுவித்து-வேதங்களை விரைவிற்பயிலும்படிசெய்வித்து, இவரை வளர்த்தான்உம் - இவர்களை வளர்த்தலையுஞ்செய்தவன், வசிட்டன்காண்-வசிட்டமா முனிவனே;(எ-று.)

பெறுதற்குக் காரணமானதுகொண்டு தசரதனைத் தந்தையென்பதன்றி, புதல்வர்க்கு இதங்களை நாடிச்செய்தல் தந்தையின் கடமையாதலாலும் அங்ஙனம் இந்தக்குமாரர்களின் நன்மையை நாடிச் சகலகலைகளிலும் வல்லவராகுமாறு வளர்த்ததனாலும், வசிட்டனே இவர்கட்குத் தந்தையெனத் தக்கானென்பதாம்; இவர்கட்கு ஞானத்தை யுண்டாக்கிவளர்த்த உண்மையான பிதா வசிட்டனே யென்றவாறு. நூல்களிற் பிரதானமாகிய வேதத்தைக் கூறியது, அதன் அங்கமும் உபாங்கமுமாகிய எல்லாக்கல்விகளுக்கும் உபலட்சணம். "வித்தையின் மூலமாக உண்டாக்கும்பிறவியே சிறந்தபிறவி" என்ற நூற்கொள்கையை இங்கு அறிக. பி - ம்:—
[1]நெடு. [2]ஓதுவித்து. [3]வளர்த்தவனே. (743)

25.—விசுவாமித்திரன் தன் வேள்விகாக்க இராம லட்சுமணரை யழைத்துப்போனமை.

ஈங்கிவரா லென்வேள்விக் கிடையூறு கடிதியற்றும்
தீங்குடைய [1]கொடியோரைக் கொல்விக்குஞ் சிந்தையனாய்ப்
பூங்கழலார்க் கொண்டுபோய் வனம்புக்கேன் புகாமுன்னம்
தாங்கரிய [2]பேராற்றற் றாடகையே தலைப்பட்டாள்.

(இ - ள்.) என் வேள்விக்கு - எனது யாகத்துக்கு, கடிது - விரைவாக, இடையூறு - தடைகளை, இயற்றும் - செய்கிற, தீங்கு உடைய - கொடுஞ்செயலையுடைய, கொடியோரை - தீக்குணமுள்ள இராக்கதர்களை, ஈங்குஇவரால்-இங்கேயுள்ள இவ்விராமலட்சுமணர்களைக்கொண்டு, கொல்விக்கும் - கொலை செய்விக்கவேண்டுமென்ற, சிந்தையன் ஆய் - கருத்தையுடையவனாகி, பூ கழலார் - பூப்போல்

மெல்லியபாதங்களையுடைய இக்குமாரர்களை, கொண்டுபோய்-(தசரதனிடத்திலிருந்து அழைத்துக்) கொண்டுசென்று, வனம் புக்கேன் - தபோவனத்தினுட் சேர்ந்தேன்: புகாமுன்னம் - சேர்தற்கு முன்பே [சேர்ந்தவுடனே என்றபடி], தாங்கு அரிய பேர் ஆற்றல் - (பிறராற்) பொறுப்பதற்குக்கூடாத மிக்க வலிமையையுடைய, தாடகைஏ - தாடகையென்னும் அரக்கியே, தலைப்பட்டாள் - முதலில் எதிர்த்து வந்தாள்; (எ - று.)

'பூங்கழலார்க்கொண்டுபோய் வனம்புக்கேன்' என்பதில், 'இவரது மெல்லிய அடிகளை நுதிபோற் பரல்பாயும் வனத்தில் நடக்கும்படி செய்தேனே!' என்றஇரக்கமும், 'பேராற்றற்றாடகையே தலைப்பட்டாள்' என்பதில், 'கன்னிப்போரிலேயேவெல்லப்படவேண்டியவர் இத்துணையாற்றல்படைத்தவராக இருக்கவேண்டுமா?' என்ற இரக்கமும் தோன்றும். பூங்கழலார் என்ற பெயர், சுட்டுப் பெயர்மாத்திரமாய் நின்றது. பி-ம்:—[1] அரக்கர்தமை. [2] போராற்றத்.

26.—இராமபிரான் தாடகைமீது எய்த அம்பு.

அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் [1]னீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கைய
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரனுருவி
மலையுருவி [2] மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி.

(இ - ள்.) ஐயா-அரசனே! அலை உருவம் - அலைகளின் வடிவமாகத்தோன்றுகிற, கடல் - கடல்போன்ற, உருவத்து - கரிய திருமேனிநிறத்தையுடைய, ஆண்தகைதன் - ஆண்மைக்குணமுள்ள இந்த ஸ்ரீராமனது, நீண்டு உயர்ந்த - நீட்சியுடையனவாயுயர்ந்துள்ள, நிலை உருவம் புயம் - நிலையான இயற்கையழகையுடைய தோள்களினது, வலியை-பலத்தை, நீ உருவ நோக்கு-நீ நன்றாக ஆராய்ந்து பார்ப்பாயாக; ஒரு வாளி-(இராமனது தோள்வலியாலெய்யப்பட்ட) அம்பு ஒன்றுதானே, உலை உருவம் கனல்உமிழ் கண் தாடகைதன் - உலைக்களத்திலேயுள்ள (செந்) நிறமான நெருப்பைச் சொரிகிற கண்களையுடைய தாடகையினது, உரன் உருவி-மார்பைத் துளைத்து, மலை உருவி - (அடுத்துநின்ற) மலைகளையுந் துளைத்து, மரம் உருவி-பலமரங்களையுந் துளைத்து, மண் உருவிற்று - (எதிர்நிற்கும் பொருளில்லாமையால்) பூமியையுந் துளைத்து அப்பாற் பாய்ந்தது; (எ - று.)

"வில்லுங் காண்பார்" என்று கீழ்க்கூறியதற்கு ஏற்ப, இங்கே இராமன்முன்னோர்பெருமையையயன்றி இவன்பெருமையையே கூறுகின்றான், விசுவாமித்திரன். இவனைச் சிறுபயலென்று அலட்சியமாகக் கருதாதே; இவனது ஒருவாளி செய்த செயலினால் இவன் வீரம் எத்தன்மையதென்று ஆராய்ந்துபாரென்கிறான், முனிவன். ஐயாஎன்பது-தான் கூறும் விஷயத்தில் அந்தச் சனகராசனை ஈடுபடுத்துமாறு அன்பு புலப்படுத்தும் விளி. அலை உருவு அக்கடலென்று பிரித்து உரைப்பினுமாம்; அக்கடல் - உலகறிசுட்டு. திரிபு என்னுஞ் சொல்லணி. கனல் - கோபாக்கினி. பி - ம்:—[1] அகன்று. [2] வானுருவி மண்ணுருவிற்று, மண்ணுருவிவானுருவிற்று. (745)

27.—தாடகையுடன் சுபாகுமாரீசரை ஸ்ரீராமன் வென்றபின் வேள்வி முடித்துத் தான் மிதிலைக்கு வந்தமை.

செக்கர்நிறத் தெரிகுஞ்சிச் சிரக்குவைகள் பொருப்பென்ன
உக்கனவோ முடிவில்லை யோரம்பி னெடுமரக்கி
மக்களிலங் கொருவன்போய் வான்புக்கான் மற்றையவன்
புக்க[1] விட மறிந்திலேன் போந்தனெனென் வினை [2]முடித்தே.

(இ - ள்.) செக்கர் நிறத்து - செவ்வானம்போன்ற நிறத்தைக் கொண்ட, எரி குஞ்சி - நெருப்புப்பற்றி யெரிகின்றாற்போன்ற செம் மயிர்களையுடைய, சிரம் குவைகள்-(எனது வேள்விக்கு இடையூறு இயற்றிய அரக்கர்களின்) தலைகளின் குவியல்கள், பொருப்பு என்ன உக்கனஓ - மலைகள்போல அறுபட்டுவிழுந்து கீழ்ச்சிதறியவற் றிற்கோர், முடிவு இல்லை - ஓர்எல்லையில்லை; அங்கு - அப்போது [அவ்விடத்தில்], அரக்கி மக்களில் ஒருவன் - அந்தத் தாடகையின் குமாரரிருவரு ளொருவனாய சுபாகு, ஓர் அம்பினொடுஉம்-(இவ்விராம பிரான்) அம்பொன்றை யெய்தமாத்திரத்தில், போய் வான் புக்கான்- இறந்துசென்று மேலுலகத்திற் சேர்ந்தான்; மற்றையவன்-மற்றொரு புத்திரனான மாரீசன், புக்க இடம் - (இவன் எய்த அம்பினாற்) போய் விழுந்த இடத்தை, அறிந்திலேன் - (யான்) அறிந்தேனில்லை; (இங் ஙனம் இடையூறு அகற்றப்பட்டபின்), என் வினை முடித்து - என் (யாக)காரியத்தைப் பூர்த்திசெய்து, போந்தனென்-(இங்கு)வந்தேன்; (எ - று.)—உவமையாகிய பொருப்பு-இந்திரனாலிறகறுப்புண்டு கீழ் வீழ்ந்தவை. பி - ம்:—[1] திசையுணர்ந்திலேன். [2] முடித்தேன். (746)

28.—அஸ்திரங்கள் இராமனுக்கு ஏவல்செய்யுந் தன்மை.

[1] ஆய்ந்தேற வுணரைய வயற்கேயு [2] மறிவரிய
[3] காய்ந்தேயிவ் வுலகனைத்துங் கடலோடு மலையோடும்
தீய்ந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
[4] ஈந்தேனு [5] மனமுட்க விவற்கேவல் [6] செய்குனவால்.

(இ - ள்.) ஐய-அரசனே! அயற்கு ஏஉம் அறிவுஅரிய-பிரம தேவனுக்கேயானாலும் அறிதற்கு முடியாத (இவ்விராமபிரானது) மகிமைகளை, ஆய்ந்துஏற உணர்-ஆராய்ந்து முழுவதும் அறிவா யாக; இ உலகு அனைத்துஉம்-இந்த உலகங்களையெல்லாம், கட லோடுஉம்-கடல்களுடனும், மலையோடுஉம்-மலைகளுடனும், காய்ந்து- எரிந்து, தீய்ந்து ஏற-கரிந்து போம்படி, சுடுகிற்கும்- எரிக்கவல்ல, படைக்கலங்கள்-ஆயுதங்கள் [அஸ்திரசஸ்திரங்கள்], செய் தவத் தால் ஈந்தேன்உம்-செய்த தவப்பயனாற் பெற்றுக் கொடுத்தயானும், மனம் உட்க-மனம் வெள்கும்படி, இவற்கு ஏவல் செய்குன-இவ்வி ராமபிரானுக்குக் குற்றேவல் செய்கின்றன; (எ-று.)

செய்தவத்தாலீந்தேன் என்றது-மிகுந்த தவத்தின் பயனா லொழிய இராமனுக்குப் படைக்கல மீயும் பெருமை எனக்குக்கிடைத் திராது என்னுங் கருத்தைப் புலப்படுத்தினவாறும். செய்குன-செய் குவன: விகாரம். ஈந்தேனும் மனமுட்க என்றது-தன்னிடத்திற் காட்டிலும் இராமனிடத்தில் அஸ்திரங்கள் மிக்க அன்பு கொண்டு

தொண்டுபூண் டொழுகினமையால். ஆல், ஏ-அசைகள். பி-ம்:—[1]ஆய்ந்தோர்க்குமுணர்வரிய. [2]உணர்வரிதாய், அறிவரிதா, அறியாத. [3]காய்ந்தேவில், காய்ந்தேயிங்கு. [4]ஈந்தேனுன். [5]மனமுட்காது, மனமுவப்ப. [6]செய்குநவால், செய்தனவால், செய்யுமால். (747)

29.—இராமனது மகிமையை இங்ஙனம் முனிவன் கூறிமுடித்தல்.

கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போது [1]நின்ற தெனப்[2]பொலிந்த பொலன்கழற்காற் பொடிகண்
காதலென்ற னுயிர்மேலு மிக்கரியோன் பாலுண்டால் [டாய்
ஈதிவன்றன் வரலாறும் புயவலியு [3]மெனவுரைத்தான்.

(இ - ள்.) இவன் - இவ்விராமனது, போது நின்றது என பொலிந்த-செந்தாமரைமலர் (வாடிவதங்குதலின்றி எப்போதும் ஒருபடியாகப் பொருந்தி) நின்றது என்னுமாறு விளங்குகிற, பொலன் கழல் கால்-பொன்னாலாகிய வீரக்கழலையணிந்த திருவடியின், பொடி-தூளியே, கோதமன் தன் பன்னிக்கு-கௌதம மகாமுனிவனது பத்தினியாகிய அகலிகைக்கு, முன்னை உரு கொடுத்தது கண்டாய்-(சாபவடிவத்தை யொழித்துப்) பழைய [நிஜ] வடிவத்தைத் தந்தருளியது காண்; என் தன்-எனக்கு, உயிர்மேல்உம்- (என்) உயிரினிடத்திலுள்ளதைக் காட்டிலும், இ கரியோன்பால் - கருநிறமுள்ள இந்த இராமனிடத்தில், காதல்-அன்பு, உண்டு - மிகுதியாகவுண்டு; இவன் தன் வரலாறுஉம்-இவ்விராகவபிரானது திவ்விய சரித்திரமும், புயல் வலிஉம்-புஜபலமும், ஈது-இதுவாம், என-என்று, உரைத்தான்-(கௌசிக முனிவன் ஜனகமகாராஜனுக்குத் தயரதன் புதல்வன் இராமனது தகைமையைக்) கூறி முடித்தான்;

இந்தப்பெருமானது கடையவயவமான திருவடியே பெருவியப்புறும்படி பெருமைபடைத்ததென்றால் இவனது திருமேனியின் பெருமை அளவிடற்குக்கூடுமோ? இங்கனிருத்தலால், இவன் மீது என்னுயிரினும் எனக்கு அன்பு மிகுதியாகவுள்ளது: இவன் வரலாறு இத்துணைப்பெருமை படைத்தது: நாம் இப்போது எதிர் பார்க்கும் இவனுடைய புயவலியும், கீழ்க்கூறியவாறு இவ்வளவு பெருமைபடைத்ததென்பதாம். அகலிகைக்கு என்னமல் கோதமன்தன் பன்னிக்கு முன்னையுருக்கொடுத்தது என்றது-பிரமன் அகலிகையைக் கோதமனுக்கு மனைவியாகக் கொடுத்தற்கு முன்னிருந்த புதிய பழிப்பற்ற கன்னியுருவத்தையே பாததூளி தந்தது என்ற கருத்தைப் புலப்படுத்து மென்பர். கண்டாய்-தேற்றப் பொருளுணர்த்தும் முன்னிலையிடைச்சொல். இராமன் என்னுஞ் சொல்லுக்கு-கருநிறமுடையவ னென்னும் பொருளுமொன்று உளதாதலால், 'கரியோன்' என்றார் பன்னி-பத்நீ: வடசொற்சிதைவு. வரலாறீது புயவலியீது எனத் தனித்தனிக் கூட்டுக; ஈது-இத்தன்மையானது;இவ்வளவு பெருமைபடைத்தது என்க. பி-ம்:—[1]வென்றது. [2]உரைத்த. [3]என்றிசைத்தான். (748)

குலமுறைகிளத்துபடலம் முற்றிற்று.

12—ஆவது கார்முகப்படலம்.

கார்முகத்தைப்பற்றிய படலம் என விரியும்: ஸ்ரீராமபிரான் சிவபிரானது வில்லை நாணேற்றத்தொடங்கி முறித்தமையைக் கூறும் பகுதியென்க. கார்முகம்-வில்: போர்செய்தலாகிய தொழிலுக்கு ஏற்றது என்பது பொருள்: வடமொழி.

வேறு.

1.—கன்னியாசுற்கமாகத் தான் சிவதநுசை வைத்திருப்பதைச் சனகமகாராசன் தெரிவித்தல்.

மாற்ற [1]மா றுரைப்பதென் மாய விற்குநான்
[2]தோற்றவா [3]றெணமனந் துளங்கு கின்றதால்
[4]நோற்றன ணங்கையு நொய்தி னையன்வில்
ஏற்றுமே லிடர்க்கட லேற்று மென்றனன்.

(இ - ள்) (இவ்வாறு விசுவாமித்திரன்கூற அப்போது சனகன் விசுவாமித்திரனை நோக்கி), 'மாறு மாற்றம் - (நுமது) மாற்றத்துக்குமாறுன வேறு ஒரு வார்த்தை, நான்—, உரைப்பது என் - சொல்வது யாதிருக்கின்றது? (ஆனல்), மாயம் விற்கு - வஞ்சனையமைந்த வில்லைக் கந்யாசுல்கமாக வைத்ததனுல், மனம் - (என்) மனம், தோற்ற ஆறு - முறிவுபட்ட வகையை, எண - எண்ணும் போது, துளங்குகின்றது - மிகவும் நடுங்குகின்றது; ஐயன்-அழகிய இந்தச்சிறுவன், நொய்தின்-விரைவாக, வில் ஏற்றும்ஏல் - (கந்யா சுல்கமாக வைத்துள்ள) சிவதநுசை (வளைத்து) நாணேற்றுவனேயானுல், இடர் கடல் ஏற்றும் - (என்னையும்) துக்கசாகரத்திலிருந்து (நீங்கக்) கரையேற்றினவனுவன்; நங்கைஉம்-(சீதையென்ற) எனது மகளும், நோற்றனள்-முற்பிறவியிற் செய்த தவப்பேற்றைப் பெற்றவளாவள்', என்றனன்-என்று கூறினுன்; (எ-று.)—ஆல்-ஈற்றசை; துயரத்தைக் குறிக்கும் இடைச்சொல்லுமாம்.

மிதிலைக்காட்சிப்படலத்தினீற்றில் 'வில்லுங் காண்பார்' என்று இந்த ராமலட்சுமணர்கள்வருகை வேள்வியைக் காண்பதோடு வில்லுங் காண்பதற்காக என்று விசுவாமித்திரன் கூறியதனுல், சனகன் 'இவர் வில்லுங்காண்பார் என்றுகூறி, இவருடைய குல வரலாற்றேடு புயவலிமையையும் கூறினீர்: உம்முடைய வார்த்தைக்கு மறுமாற்றம் சொல்வேனே? ஆனுல், கந்யா சுல்கமாக வைத்த இந்தவில்லைப்பற்றி வெகுகாலமாக இதுவரையில் எப்படிப்பட்ட வீரரும் ஒன்றுஞ்செய்யமாட்டாது போய்விட்டதனுல் இந்தவில்லும் நாணேற்றப்பட்டு என்மகள் சீதைக்கு விவாகமுமாகும் என்ற எண்ணமே நீங்கி என்மனம் முறிந்து கிடக்கின்றது. இப்போது கொணரப்போகின்ற சிவதநுசை இவ்வையன் நாணேற்றுவனேயானுல் அப்போது என்துயரும் நீங்கும்: இந்தச் சீதையும் நோற்றவளாவள்' என்று, தன்வருத்தத்தைத்தெரிவிக்கின்றனன் என்க. 'எவராலும் வளைக்கமுடியாது இருத்தல்பற்றி, இது வில் என்று பெயர்படைத்திருத்தல்மாத்திரமேயன்றி, உண்மையில் இது வில் அன்று' என்ற கருத்து அமைய

'மாயவில்' என்கின்றான்: "கைதவந்தனுவெனல் கனகக்குன்று" என வருதல் காண்க. விசுவாமித்திரன் 'வில்லும் காண்பார்' என்றுகூறி, இராமபிரானுடைய குலச்சிறப்போடு புயவலிமையையும் கூறியதுபற்றிச் சனகன் 'நொய்தின்வில் ஏற்றுமேல்' என்கின்றனன்: இனி, இராமனிடத்துப் பேரன்பினால் அப்பிரான் வலிந்து தொழில்செய்வதற்கு மனம்பொருத சனகன் 'நொய்தின்வில் ஏற்றுமேல்' என்றன னென்பர் ஒருசாரார். பி-ம்:—[1] யாதுரைப்பது. [2] தோற்றனன். [3] என. [4] நோற்றிலள். (749)

2.—சனகராசன் ஏவலாளரை யேவ, அவர்கள் வில்வைத்துள்ள இடத்தைநோக்கிச் செல்லுதல்.

என்றன [1] னேன்றுதன் னெதிர்நின் றுரையக்
குன்றுறழ் வரிசிலை [2] கொணர்மி னீண்டென
நன்றென [3] வணங்கினர் நால்வ ரோடினர்
பொன்றிணி கார்முகச் சாலை புக்கனர்.

(இ - ள்.) என்றனன்-என்று சொன்ன சனகராசன்,—ஏன்று - (அரசன் கட்டளையைச் செய்யவேணுமென்று) உடன்பட்டு, தன் எதிர் நின்றுரை-தனது எதிர்நின்ற ஏவலாளரை நோக்கி, குன்று உறழ் அ வரி சிலை ஈண்டு கொணர்மின் என - 'மலையையொத்த அந்தக்கட்டமைந்த (சிவ) தனுசை இங்கே கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட,—நால்வர்—, நன்று என வணங்கினர் - நல்லதென்று சொல்லி (அரசனை) வணங்கிவிட்டு, ஓடினர்-விரைந்து போய், பொன் திணி கார்முகம் சாலை புக்கனர்-பொற்கட்டமைந்த சிவதனுசு வைத்துள்ள இடத்துக்குச் சென்றார்; (எ - று.)

கன்னியாசுற்கமாகச் சிவதனுசை வைத்திருப்பதைத் தெரிவித்த சனகராசன், வில்லுங்காண்பாரென்று சொல்லி விசுவாமித்திரன் அவர்களின் புயவலிமையை மொழியவே, அவ்விராமலக்குமணர்க்குக்காட்டும்படி அங்கே அச்சிலையைக் கொண்டுவர ஏவலாளர்க்குக் கட்டளையிட, அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு நால்வர் அது வைத்திருக்குமிடம் நோக்கிச் சென்றனரென்க. நன்று என்பது-உடன்பட்டதைக் குறிப்பிக்கும். பி-ம்:—[1] ஏன்றதன், ஏன்று தான், என்றலும். [2] கொணருமீண்டெனு. [3] வணங்கியே.

இங்கே சிலபிரதிகளிற் காணப்படுவதொரு பாடல் வருமாறு:—

புக்கனர் சனகர்கோன் பொருவி [1] னீங்கடாம்
ஒக்கவே வில்லினை [2] யுரத் தடுத்தெடுத்
திக்கணத் தெய்துவீ ரென்ற னன்னென
மிக்கவ ரவ்வுரை விளம்பி னரரோ.

பி - ம்:—[1] நீர்கடாம். [2] உருத்து. (750)

3.—அந்தச் சிவதனுசைப் பலர் சுமந்துவருதல்.

உறுவலி [1] யானையை யொத்த [2] மேனியர்
செறிமயிர்க் கல்லெனத் திரண்ட தோளினர்

அறுபதி னுயிர ரளவி லாற்றலர்
தறிமடுத் திடையிடைத் தண்டிற் ருங்கினர்.

(இ - ள்.) (விற்சாலையிற்புக்க ஏவலாளர் அரசன் கட்டளையைத் தெரிவித்ததனால்) —உறு வலி யானையை ஒத்த மேனியர் - மிக்கவலிமையையுடைய யானையையொத்த திடசரீரத்தை யுடையவரும், கல் என திரண்ட மயிர் செறி தோளினர் - மலைபோலத் திரண்டு மயிர்நெருங்கிய தோள்களையுடையவரும், அளவு இல் ஆற்றலர் - அளவிடமுடியாத வல்லமையையுடையவர்களுமாகிய, அறுபதினுயிரர் - அறுபதினாயிரம் வீரர்கள், இடையிடை தறி மடுத்து - (அவ்வில்லின்) நடுவிடங்களில் தூண்களை வைத்து, தண்டில் - (அத்தூண்களோடு நெடுகக்கட்டிய) தண்டுகளிலே, தாங்கினர்-(தமதுதோள்களைக்கொடுத்துச்) சுமந்துவரலானார்கள்;

தநுசை இராமனுக்குக் காட்டுமாறு விசுவாமித்திரமுனிவன் கேட்டுக்கொண்டதனால், சனகமன்னவன் தனது மந்திரிமார்க்குக் கட்டளையிட, அன்னார் எட்டுச்சக்கரத்தைக்கொண்டதாய் அந்தச் சிவதநுசு வைக்கப்பட்டிருந்த இருப்புப்பெட்டியை ஐயாயிரவர் ஆட்களைக்கொண்டு இழுப்பித்துக் கொணர்ந்தனரென்று முதனூலிலுள்ளது. முதனூலுக்குஏற்ப, அறுபதினுயிரர்எனப்பிரித்து, பாதியாக அற்ற பதினுயிரர் அதாவது ஐயாயிரவரெனப் பொருள் கூறுவாரு முளர். பி-ம்:—[1]யானையினொத்த, அனைவருமொத்த, அனையவருருமுக். [2]காட்சியர். சில பிரதிகளில் இரண்டு மூன்றும் அடிகள் மாறிக்கிடக்கின்றன. (751)

4.—சிவதநுசு அங்கு வந்துசேர்தல்.

நெடுநில மகண்முது காற்ற நின்றுயர்
தடநிமிர் வடவரை தானு நாணுற
இடமிலை யுலகென வந்த தெங்கணும்
கடல்புரை திருநக ரிரைத்துக் காணவே.

(இ - ள்.) நெடு நிலம் மகள் முதுகு ஆற்ற - நீண்டபூமிதேவி (வெகுகாலமாக அந்தத் தநுசைத் தாங்கியிருந்ததனால் வலியெடுத்த தனது) முதுகின்நோவை யாற்றிக்கொள்ளவும்,— நின்று உயர் தடம் நிமிர் வட வரை தான்உம் நாண்உற - நிலைபெற்றோங்கிய பெருமைமிகுந்த மேருமலையும் (இவ்வில்லின் தோற்றத்தைக் கண்டு) வெட்கமடையவும், கடல் புரை திருநகர் இரைத்து காண-சமுத்திரத்தையொத்துப் பரந்துள்ள நகரத்தில் வாழும் மாந்தர் திரண்டு பேரிரைச்சல்செய்துகொண்டுவந்து பார்க்கும்படி, - உலகு எங்கண்உம் இடம் இலை என - உலகத்தில் எங்கும் வெற்றிடமில்லையென்று சொல்லும்படி [மிக்க இடத்தைத் தான் கவர்ந்துகொண்டு],வந்தது-(அந்தச் சிவதநுசு சுமக்கப்பட்டு) வந்தது; (எ - று.)

உலகத்தவர் திரண்டு ஆரவாரத்துடன் காணுமாறு பெருந் தோற்றத்துடன் அந்தச்சிவதனுசு ஆயிரக்கணக்கான பணியாளரால் தாங்கப்பட்டு வந்ததென்க. ஓரிடத்தில்தானே அவ்வில்லைக்

கப்பட்டிருந்ததனால், அதனைத் தாங்கி மிகவும் வருத்தப்பட்டிருந்த நிலமகளின் முதுகு, இப்போது அவ்விடத்தினின்று எடுத்துப் பணியாளராற் சுமந்துபோகப்பெற்றதனால் முதுகு ஆறலாயிற் றென்று முதலடியின்கருத்தை விரித்து உரைத்துக்கொள்க. முதலடிக்கு-சனங்கள் வில்லைச் சுமந்துகொண்டு போகையில் அவர்கள் கால் வைத்தபோது பாரத்தினால் வருந்தி, நீங்கிச் சென்றவிடத்து நிலமகள் முதுகாற்றுவ ளென்பாரு முளர். நகர் - நகரத்தவர்க்கு, ஆகுபெயர். (752)

5. சங்கொடு சக்கரந் தரித்த [1]செங்கைய
சிங்கவே [2]றல்லனே லிதனைத் தீண்டுவான்
[3]எங்குள [4]னொருவனின் [5]றேற்றி னிச்சிலை
மங்கைதன் றிருமணம் [6]வாழுமா லென்பார்.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'சங்கொடு சக்கரம் தரித்த செங்கைய-சங்குசக்கரங் களைத் தாங்கிய கையையுடைய, சிங்கம் ஏறு அல்லன்ஏல் - ஆண் சிங்கம்போன்ற திருமால் (நாணேற்றி) வளையாமற்போவானே யானால், இதனை - இந்தச் சிவதநுசை, தீண்டுவான் ஒருவன் - தொடுதற்குத் தான் தகுதியுள்ளவொருவன், எங்கு உளன் - (வேறு) எங்கேயுள்ளான்? இன்று - இன்றைத்தினம், (அத்திரு மால்வந்து), இ சிலை ஏற்றின் - இந்தவில்லை நாணேற்றி வளைப் பானானால், மங்கைதன் திரு மணம் - சீதாபிராட்டியின் விவாகம், வாழும் - வாழ்ச்சிபெறும்,' என்பார் - என்றுசொல்பவர்களும்,— (எ - று.)—ஆல் - தேற்றம்.

திருமாலைத்தவிர வேறொருவரால் இத்தநுசைத் தீண்டுத லென்பதும் முடியாதாகையால், அத்திருமால்வந்து இன்றுநாணே ற்றினால் சீதையின் திருமணம் பெருவாழ்வாக நடக்குமென்றன ரென்க; இப்போது விசுவாமித்திரமுனிவனோடு வந்துள்ளவன் திருமாலாயிருப்பின், இஃது அவனால் நாணேற்றப்பட்டுச் சீதை யின்மணம் (நாம் இதற்குமுன் எண்ணியிருந்ததுபோல இல்லையா காது) இனிதுநிறைவேறுமென்று கூறியவாறு. "என்றுமினி மணமுமில்லை யென்றிருந்தே மிவனேற்றின், நன்றுமலர்க்குழற் சீதை நலம்பழுதாகாதென்றான்" என்று மேல் சனகன் கூறுவதாக வருவதுங் காண்க. ஒருவன் நின்று என்றும் பிரிக்கலாம். பி - ம்:— [1]தானைய, கையுடைச், செங்கையைச். [2]அல்லனே. [3]எங்குள, எங் குளர். [4]ஒருவனே. [5]ஏற்றவேண்டுமே, ஏற்றுமிச்சிலை. [6]வாழத் தான், வாழுமாறு. (753)

6. கைதவந் தனு[1]வெனல் கனகக் குன்றென்பார்
எய்தவன் யாவனோ வேற்றிப் பண்டென்பார்
[2]செய்தவத் திசைமுகன் றீண்டி யன்றுதன்
மொய்தவப் பெருமையின் முயற்சி யாலென்பார்.

(இ - ள்.) (இதனை), தனு எனல் - வில்லென்று சொல்லுதல், கைதவம் - வஞ்சனைச்சொல்லே: (இது), கனகம் குன்று-பொன் மலை யாகிய மேருவாகும், என்பார் - என்று சொல்பவர்களும்,—அ திசை

முகன் - அந்தப்பிரமதேவன், செய்தது - (இதனை) இயற்றியது, தீண்டி அன்று-(தன் கையாற்) பரிசித்து அல்ல; (பின்னை எவ்வாறு இயற்றியதென்றால்),—தன் மொய் தவம் பெருமையின் முயற்சியால்-(தனது) நிறைந்த பெருமைபெற்ற தவத்தின் மகிமையினலாகும், என்பார் - என்று சொல்பவர்களும்,—(இதனை), பண்டுஏற்றி எய்தவன் யாவன்ஓ - முற்காலத்தில் நாணேற்றி யெய்தவன் எவனே! என்பார் - என்று கூறுபவர்களும்,— (எ - று.)

முதலடியில் தனுவினிடத்து அத்தன்மையைமறுத்து மேருவின் தன்மையை யேற்றிக்கூறியது - அவநுதியணியாம். 'இத்துணைப் பெரியதநுசைப் பிரமதேவன் தன்கையால் இயற்றவில்லை: தன் தவவலிமையின்மகிமையினலியற்றினன்' என்பது, இரண்டு மூன்றுமடிகளிற் கூறியபொருள். பின்னிரண்டடிகளுக்கு அன்று என்பதை இடைச்சொல்லாகக் கொண்டு, அன்று-முற்காலத்தில், திசைமுகன் தன் மொய்தவப்பெருமையின் முயற்சியினலே தீண்டிச்செய்தது என்பாருமென்றுமாம். இரண்டாமடி நான்காமடியாகச் சில ஏட்டுப்புத்தகங்களிற் காணப்படுகின்றது. பி - ம்:—[1] என, எனில். [2] செய்தவத், செய்தவன். சிலபிரதியில் இதன்பின் "இச்சிலை" (9) என்ற பாடல் உள்ளது. (754)

7\. [1] திண்ணெடு மேருவைத் [2] திரட்டிற் றோவென்பார்
வண்ணவான் கடல்பண்டு கடைந்த மத்தென்பார்
அண்ணல்வா ளரவினுக் கரச னேவென்பார்
[3] விண்ணிடு நெடியவில் வீழ்ந்த தோவென்பார்.

(இ - ள்.) (இந்தவில்),—திண் நெடு மேருவை - வலிய நெடிய மேருவை, திரட்டிற்றுஓ - திரட்டிச்செய்ததோ, என்பார் - என்பவர்களும், வண்ணம் வான் கடல் பண்டு கடைந்த மத்து என்பார் - அழகிய நீண்ட பாற்கடலை முன்பு கடைந்த மத்தாகிய மந்தரமலையே (இங்ஙனம் ஆயிற்று) என்று சொல்பவர்களும்,—அண்ணல் வாள் அரவினுக்கு அரசன்ஓ என்பார் - பெருமை பொருந்திய ஒளியுள்ள பாம்புகட்கு அரசனகிய ஆதிசேடன்தானே என்று கூறுபவர்களும்,—விண் இடு நெடிய வில் வீழ்ந்ததுஓ என்பார் - ஆகாயத்திலிடுகின்ற நீண்ட இந்திரதநுசு தவறி அங்குநின்று கீழே விழுந்துவிட்டதோ என்று சொல்பவர்களும்,—(எ - று.)

அந்தவில்லைக்கண்டவர்களிற் சிலர் 'மேருதான் திரண்டதோ!' என்றும், மற்றுஞ்சிலர் 'பாற்கடலைக்கடைந்தமந்தரமலை இங்ஙனமாயிற்றோ!' என்றும், பின்னுஞ்சிலர் 'ஆதிசேடனே இங்ஙனம் உருக்கொண்டுவந்ததோ!' என்றும், வேறுசிலர் 'வானவில் தவறி அங்குநின்று தரையில்வீழ்ந்ததோ!' என்றும் இவ்வாறு பலபடியாகப் புனைந்துகூறினரென்க. இரண்டுமூன்றுவது அடிகள் சில ஏட்டுப்பிரதிகளில் மாறிக்காணப்படுகின்றன. முதலிரண்டு தற்குறிப்பேற்றம் பாரத்தைப்பற்றி வந்தன என்றும், பின்னிரண்டும் வடிவு பற்றிவந்தன என்றும் அறிக. பி - ம்:—[1] திண்ணெனும். [2] திருத்திற்றோ, திருத்திற்றும். [3] விண்ணிடை. (755)

8. என்னிது [1]கொணர்கென [2]வியம்பி னுனென்பார்
மன்னவ ருளர்கொலோ மதி[3]கெட் டாரென்பார்
[4]முன்னையூழ் [5]வினையினுன் [6]முடிக்கி லாமென்பார்
கன்னியு மிச்சிலை காணு மோவென்பார்.

(இ - ள்.) இது கொணர்க என என் இயம்பினன் என்பார் - 'இந்தவில்லைக் கொண்டுவருக என்று எதற்காகச்சொன்னன் (இவ்வரசன்)?' என்று சொல்பவர்களும்,-மதி கெட்டார் மன்னவர் உளர் கொல்ஓ என்பார்-'(இதனைக் கன்னியாசுற்கமாகவைத்த இவனைப் போல) அறிவுகேடரான அரசர் வேறு எவரேனும் இருக்கின்றார்களோ?' என்றுசொல்பவர்களும்,—முன்னை ஊழ்வினையினல் முடிக்கில் ஆம் எனபார்-'முற்பிறவியிற்செய்துள்ள நல்வினையினல் ஒருகால் காரியம் கைகூடினற் கூடலாம்' என்று சொல்பவர்களும்,—கன்னிஉம் இ சிலை காணும் ஓ என்பார்-'சீதையாகிய கன்னிகையும் (பணயமான) இந்தவில்லைக் கண்டிருப்பளோ!' என்பவர்களும்,—

இந்தச்சிலையைவளைத்து நாணேற்றுதலென்பது செய்யமுடியாததொரு செயலாதலால், 'இது கொணர்கென என்னியம்பினன்?' என்றும், 'மன்னவ ருளர்கொலோ மதிகெட்டார்' என்றும் கூறலாயினர். இந்தச் சீதைக்கு மணம் ஆகித் தீரவேண்டுமென்று நல்விதிவலிமை யேற்பட்டாலன்றி இப்போது அரசன் குறித்துள்ள பணயம் முற்றுப்பெறுதென்பது, மூன்றுமடியின் பொருள். 'தன் மணத்துக்குப் பணயமான இந்த வில்லைக் கண்டால், சீதை இப்போது எந்த நிலையிலிருப்பாளோ? அவள் இதனைக் காணவில்லை போலும்' என்பது, நான்காமடியின் பொருள். பி-ம்:—[1]கொணர்கவென்று. [2]இயம்புவான். [3]கெட்டான். [4]முன்னையே, முன்னையின். [5]விதியினல். [6]முடிந்ததோ, முடிக்கலாம். (756)

9. இச்சிலை [1]யுதைத்தகோற் [2]கிலக்க மியாதென்பார்
[3]நச்சிலை நங்கைமே [4]னட்டும் வேந்தென்பார்
நிச்சய மெடுக்குங்கொ னேமி யானென்பார்
சிற்சிலர் [5]விதிசெய்த தீமை [6]தானென்பார்.

(இ - ள்.) இ சிலை-இந்தவில், உதைத்த-(தன்னிடத்திநின்று) வெளிப்படுத்திய, கோற்கு-அம்புக்கு, இலக்கம்-குறியாக வாய்வது, யாது - எது (உள்ளது)? என்பார் - என்று சொல்வார்களும்,—வேந்து-சனகராசன், ந சிலை-பெருமை பெற்றஇந்த வில்லை, நங்கை மேல்-நங்கையின் திறத்துக்காகவே,நாட்டும்-நிலைநிறுத்தியுள்ளான், என்பார்-என்று சொல்வார்களும்,—நேமியான்-சக்கராயுதத்தைத் தாங்கிய திருமால்போன்ற இந்த இராகவன், நிச்சயம் எடுக்கும் கொல் என்பார்-நிச்சயமாக இந்த வில்லையெடுத்து வளைப்பான? என்று சொல்வார்களும்,—சிற் சிலர்—, விதி செய்த-ஊழ்வினை விளைத்த, தீமைதான்-தீம்புதான், (எவ்வாறுயிருந்தது!), என்பார்-என்று வருந்துவார்களும் (ஆனர்;) (எ - று.)

இத்துணைப்பெரிதாகவுள்ள வில்லுக்கு ஏற்ற இலக்கு இவ்வுலகிலேயே யில்லையேயென்று சிலர்கூற, வேறுசிலர் 'இது

வளைத்து இலக்கின்மே லெய்வதற்காக அமைந்த வில் அன்று; சீதையின் விவாகத்திற்குப் பணயமாக இருக்கும்பொருட்டே அமைந்தது' என்று மாறுகூற, 'இந்த இராகவன் தவருது எடுப் பனே?' என்று சிலர்வருந்த, மற்றுஞ்சிலர் 'சீதையின் விவாகம் இனிது நடைபெற அதனைக் காணவேண்டுமென்று எதிர்பார்த் திருக்கிற நம்முடைய தீவினைப்பயனே இங்ஙனம் ஒருவில்லின்வடி வாக அமைந்துள்ளது' என்று வெறுத்துக்கூறலாயின ரென்க. இனி இரண்டாமடிக்கு - சனகராசன் சீதையின் விவாகத்துக்குச் சுல்கமாக இந்த வில்லை நாட்டினனே என்று சிலர் கூறலானரென் றும், மூன்ருமடிக்கு-நேமியான் தான் நிச்சயமாக இந்த வில்லை எடுப்பனே? என்றுங் கூறினுமாம். ந-உயர்வுகுறிக்கும் இடைச் சொல். பி-ம்:—[1] உதைத்தவற்கு. [2] இலக்கு. [3] நற். [4] நாட்டுவந்து. [5] இது, இவள். [6] ஆம். (757)

10.—வந்த வில்லைக் கண்ட மன்னவர் விதிர்விதிர்த்தல்.

மொய்த்தன [1] ரின்னண மொழிய மன்னன்முன்
உய்த்தனர் [2] நிலமுது குளுக்கிக் கீழுற
வைத்தனர் [3] வாங்குந [4] ரியாவ ரோவெனுக்
கைத்தலம் [5] விதிர்த்தனர் கண்ட வேந்தரே.

(இ - ள்.) மொய்த்தனர்-(அங்கு)நெருங்கிக்கூடியிருந்த மிதிலா நகரத்துச் சனங்கள், இன்னணம் மொழிய-கீழ்க்கூறியவாறு பலபடி யாகச் சொல்லிக்கொண்டிருக்க,—(அதனைச் சுமந்துவந்த பணி யாளர்), மன்னன் முன் உய்த்தனர் - சனகராசன் முன் கொண்டு போய், நிலம் முதுகு உளுக்கி கீழ்உறவைத்தனர்-நிலமகளின் முதுகு பக்கம் (அதன் சுமையைத் தாங்கமாட்டாமல்) நெளிந்துகுழிந்து போம்படி (பூமியின்மீது) அந்த வில்லை வைத்தார்கள்; கண்ட வேந் தர்-(அந்தவில்லைக்) கண்கூடாகப் பார்த்த (அப்போது அங்கிருந்த) அரசர்யாவரும், வாங்குநர் யாவர்ஓ என - '(இந்தவில்லை) வளைக்கப் போகின்றவர் யாவரோ? [எவராலும் வளைக்கமுடியாது]' என்று சொல்லி, (அந்த வில்லைத் தொடுவதற்கும் கூசி), கைத்தலம் விதிர்த்தனர் - கைந்நடுக்க மெடுத்தனர்; (எ-று.)

நகரத்தவர் இங்ஙனம் சொல்லாநிற்கச் சனகராசன்முன் அந்த வில்லைப் பணியாளர் வைக்க, அப்போது அங்கு வந்திருந்த அர சர்கள் அந்த வில்லைப்பார்த்து இவ்வில்லை வளைக்க எவராலாகு மென்று சொல்லிய வண்ணம் அவ்வில்லைத் தொடுதற்குங் கூசிக் கைந்நடுக்கங்கொண்டன ரென்பதாம். பி-ம்:—[1] இன்னன. [2] நில மகள். [3] வாங்கினர். [4] வளைப்பரோ. [5] விரித்தனர். (758)

11.—சதானந்தமுனிவன் கூறத் தொடங்குதல்.

போதக [1] மனையவன் பொலிவு நோக்கியவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கித்தன்
மாதினை நோக்குவான் [2] மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறன் மேயினன்.

(இ - ள்.) போதகம் அனையவன் பொலிவு நோக்கி - யானைக் கன்றை யொத்தவனாகிய ஸ்ரீராமனது அழகைக் கண்டு, (அவனுக்குத் தன்மகள் சீதையை விவாகஞ் செய்விக்கவேணுமென்று விரும்பி),வேதனை தருகின்ற அ வில்லை நோக்கி-(எவர்க்கும் வளைக்க வொண்ணாதபடி பெரு) வருத்தத்தைத் தருகின்ற அத்தநுசு (கன்னியாசுல்கமாக வைக்கப்பட்டிருப்பதனால் தன்விருப்பப்படி செய்யமுடியாமல் இடையூறாக) இருப்பதைப் பார்த்து, தன் மாதினை நோக்குவான் - (அந்தோ! கணவனாதற்கு உரியவன் வந்திருந்தும் மணம்முடிக்கமுடியாமல் இருக்கின்றதே! இவள் கன்னிகையாகவே மூப்பாளோ? என்று மனக்கவலையோடு) தன் மகளைப் பார்ப்பவனாகிய சனகராசனது, மனத்தை - (குழப்பமடைந்துள்ள) மனத்தை, நோக்கிய - உணர்ந்த, கோதமன் காதலன் - கௌதம ரிஷியின் புத்திரனாகிய சதானந்தமுனிவன், கூறல்மேயினான் - சொல்லத்தொடங்கினான்; (எ-று.)—அதனை மேலே காண்க.

இராமனது பேரழகையும், அவனுக்குத் தன் மகளை மணமகளாக்கலாமென்றால் கன்னியாசுல்கமாகத் தநுசுஒன்று இடையேயிருப்பதையும், தன்மகளின் மணப்பருவம் கழியப் பெறுவதையும் கண்டு சனகமன்னவன் மனந்தடுமாறிநிற்க, அம் மன்னனது புரோகிதனாகிய சதானந்தமுனிவன் விசுவாமித்திர முனிவனிடத்து ஒன்று கூறத்தொடங்கினனென்க. போதகம்-பத்து வயதுள்ள யானைக்கன்று. போதக மனையவன் பொலிவுநோக்கி என்பதில், அவ்விராமபிரான் சீதைக்கு ஏற்றகணவனென்று தோன்றினும் வில்லைவளைத்தலாகிய இவ்வரியதொழிலில் அப்பிரானையேவுவது அவனது சௌகுமாரியத்துக்குத் தகாதெனக் கருதினன் மன்னவனென்பதும் தோன்றும். இங்ஙனம் மன்னவன் தடுமாறுகையில், திருமாலின் அவதாரமூர்த்தியாகிய இப்பிரானால் இவ்வில்லை வளைத்தல் எளிதில் முடியுமென்று தேறிய சதானந்த முனிவன் வில்லின் வரலாற்றை முதலிற்கூறி இங்ஙனம் பெருமைபெற்ற இவ்வில்லை வளைத்தற்கு இவனே தக்கவனெனத் தான் தெளிந்தமையை ஈற்றில் தெரிவிக்கின்றன னென்க. வில்லின் வரலாற்றைச் சனகராசன் கூறுவதாக முதனூலி லுள்ளது. பி-ம்:—
[1] அனையவர். [2] மனத்தை நோக்குறு, மனத்துநோக்கிடு. (759)

12.—இதுமுதல் பதின்மூன்று-கவிகளால், வில் சீதை இவர்களின் வரலாற்றைச் சதாநந்தன்கூறி இராமன் இந்தவில்லை வளைக்கவேண்டுமெனல்.

இமையவில் வாங்கிய வீசன் பங்குறை
உமையினை [1]யிகழ்ந்தன னென்ன வோங்கிய
கமையறு [2]சினத்தனிக் கார்மு கங்கொளாச்
[3]சமையுறு [4]தக்கனார் வேள்வி சாரவே.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) இமையம் வில் வாங்கிய ஈசன் - மேருமலையை வில்லாக வளைத்த சிவபிரான், பங்கு - (தன்) இடப்பக்கத்திலே

உறை - வாழ்கின்ற, உமையினை-பார்வதிதேவியை, இகழ்ந்தனன் - (தந்தையாகிய தக்கன்) அவமதித்தான், என்ன - என்ற காரணத்தால், ஓங்கிய - பொங்கியெழுந்த, கமை அறு சினத்தன்-பொறுமையற்ற கோபத்தையுடையவனாய், இ கார்முகம் கொளா - இந்த வில்லை யெடுத்துக்கொண்டு, சமை உறு தக்கனார் வேள்வி சார - பொறுமைபொருந்திய தட்சபிரசாபதி யாகஞ்செய்யுமிடத்தை நோக்கிச் சேர,— (எ - று.)—''உக்கன பல்லொடு கரங்கள்'' என அடுத்த கவியோடு தொடரும்.

மலையரசா தலால் மேருவின்தொழிலை இமயத்துக்கு ஏற்றி, 'இமையவில்வாங்கிய ஈசன்' என்றார்: ''இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடையந்தணன்'' என்ற கலித்தொகையையும் காண்க: அன்றியும் மந்தரம் மேரு இமயம் கைலாசம் என்பன அபேதமாகக்கூறப்படுதலைத் தமிழ்நூல்களிற் காணலாம். இப்பாடலிற் கூறியசரிதை:— சிவபெருமான் தன்னை நோக்கித் தவம்புரிந்த சதியென்று பேர்படைத்த தட்சன் மகளைத் தானே கிட்டிப் பின்பு தட்சன் தாரை வார்த்துக் கொடுக்க மணம்புரிந்ததும் மறைந்துவிட்டுப் பிறகு அவனையறியாமல் அவளை மயக்கி அழைத்துக்கொண்டு போயினுகை, தட்சன், தன்னையும் தன் புதல்வியையும் பார்க்கக் கயிலைக்கு வந்தபோது, சிவபிரான் தன் கணங்களைக் கொண்டு அவனை அவமானப்படுத்தினன். அப்போது மகளாகிய தாட்சாயணியும் வந்து விசாரியாமலிருந்துவிட்டதனால், தட்சமுனிவன் மருமகனையும் மகளையும் அழையாது யாகஞ்செய்யத் தொடங்கினன். அங்ஙனம் அம்முனிவன் யாகஞ்செய்வதை நாரதனாலறிந்ததும், சதி சிவபிரானிடத்து அரிதில் அநுமதிபெற்றுத் தட்சமுனிவன் வேள்விசெய்யுமிடத்துக்கு ஆடம்பரத்தோடு வர, அவளைக்கண்ட தட்சன் 'உன்னை யார் வரச்சொன்னது? நான் உங்களைப் பார்க்க வந்தபோது உன் கணவனாகிய பித்தன் என்னை யவமதித்தானதலால், நான் அந்தச் சிவனுக்கு அவிர்ப்பாகங் கொடேன்: நீயும் என்னெதிரில் நிற்க வேண்டா' என்ன, சதிதேவி மனங்கொதித்து 'உன் யாகமும் நிறைவேறாமல் நீயும் நசிப்பாய்' என்று சபித்துவிட்டுத் திருக்கயிலை சார்ந்து சிவபிரானுக்குத் தன்கருத்தைத் தெரிவிக்க, தன் அமிசத்தினால் அந்தச்சிவன் வீரபத்திரக்கடவுளை யுண்டாக்கித் தக்கன் செய்யும்யாகத்தை யழிக்குமாறு செலுத்தினனென்பது. பி - ம்:— [1] இகழ்ந்தவாறு. [2] நுதல்விழி, சினத்தவன், சினத்தினிற். [3] சமைவற, சமைவுறு. [4] தக்கனல். இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. (760)

13. [1] உக்கன பல்லொடு [2] கரங்க [3] ளோடினர்
புக்கனர் வானவர் புகாத சூழல்கள்
தக்கனல் வேள்வியிற் றழலு மாறின
முக்கணெண் டோளவன் முனிவு மாறினன்.

(இ - ள்.) (அவ்வேள்விக்குவந்திருந்த தேவர்களிற் சிலருடைய), பல்லொடு கரங்கள்-பற்களும் கரங்களும், உக்கன-கீழே சிந்தின: (அன்றியும்), வானவர்-(அங்குவந்திருந்த) தேவர்கள், ஓடினர் - ஓடி, புகாத சூழல்கள் புக்கனர்-(அதுவரையிற்) புகுந்

திராத இடங்களிற் போய்ப் பதுங்கிக்கொண்டார்கள்; தக்கன் நல் வேள்வியில் தழல்உம் - தட்சபிரசாபதியின் யாகாக்கினிகளும், மாறின - அழிந்திட்டன: (இங்ஙனமெல்லாம் ஆனபின்பே), முக் கண் எண் தோளவன்-மூன்றுகண்களையும் எட்டுத்தோள்களையு முடைய சிவபிரான், முனிவு மாறினன்-(தன்) கோபந்தணிந்தான்;

தனது மனைவியை யவமதித்தகாரணத்தினுற் சினங்கொண்ட சிவபிரான் அவ்வேள்வியைநடத்தற்கு உதவிய தேவர்கள்மீதும் பெருஞ்சினங்கொண்டு அவர்களை நிலைகெட்டுஓடச்செய்து யாகாக் கினிகளையும் அழித்தபின்பே தன் சினந் தணிந்தன னென்க. பல் உக்கது, சூரியனுக்கு. கரம்-மற்றையுறுப்புக்கட்கும் உபலக்ஷணம். சிவபெருமான் தான் ஏவியனுப்பிய வீரபத்திரன் யாகசாலையிற் புகுந்து தேவர்முதலியோரைச் சின்னபின்னப்படுத்தி யாகத்தைத் தொமிசஞ்செய்த பின்பு தானே சதிதேவியோடு இடபாரூடனுய் வந்து அவள் வேண்டுகோளினுல் தன்சினம்நீங்கி யாகத்தில் இறந்துபோன தேவர்கள் முதலியோரைப் பிழைப்பித்து அருள் செய்தனனென்ப. காருகபத்தியம் ஆகவனீயம் தட்சிணுக்கினி என அக்கினி மூன்று ஆகையால், 'தழலுமாறின' என்று பன்மையாற் கூறினர்: 'ஆறின' என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1]உக்கனர். [2]கதிர்கள். [3]ஓடின, வீழ்ந்தனர். (761)

14. தாளுடை வரிசிலை சம்பு வும்பர்தந்
நாளுடை மையினவர் நடுக்க நோக்கியிக்
கோளுடை விடையனுன் குலத்துட் டோன்றிய
வாளுடை யுழவனுேர் மன்னன்பால் வைத்தான்.

(இ - ள்.) சம்பு-(தன்சினம்மாறிய) சிவபிரான்,— அவர் நடுக் கம் நோக்கி-(தான் எய்யாமற் கையில் வெறுமனே வில்லைவைத் திருந்தாலும்) அத்தேவர்கள் நடுங்குவதைப் பார்த்து, உம்பர் தம் நாள் உடைமையின்-தேவர்கள் இன்னும் தாம் வாழவேண்டிய ஆயுள்நாளை யுடையவரா யிருத்தலினுல், தாள் உடை வரி சிலை- வலியஅடித்தண்டையுடைய கட்டமைந்த அவ்வில்லை, இ கோள் உடை விடைஅனுன் குலத்துள் தோன்றிய - இந்த வலிமை கொண்ட இடபம்போன்றவனுகிற சனகராசனது குலத்திலே பிறந்த, வாள்உடை உழவன்-வாளாயுதத்தைக்கொண்டு போர்க் களத்தில் உழுபவனுன, ஓர் மன்னன்பால் - ஓரரசனிடத்தில், வைத்தான்-கொடுத்தான்; (எ - று.)

சிவபெருமான் சினமாறியபின்பும் இவ்வில்லைக் கையிற்கொண் டிருக்கையில் 'நம்மை ஒழித்துவிடுவானுே?' என்று வானவர் நடு நடுங்கிநிற்க, அதுகண்ட பரமசிவன் சனகராசனது குலத்துத் தோன்றிய பூர்வீகராசனுெருவனிடம் இதனை வைத்துப்போக, அது பரம்பரையாக இவ்வரசனுக்குக் கிடைத்த தென வில் வந்த வகையைக்கூறியவாறு. சிவபெருமான்வில்லைத் தந்தமன்னவன் பெயர் தேவராதனென்பது. கோபம்மாறாது இவ்வில்லைப் பின் னும் சிவபெருமான் வைத்திருப்பின் தேவர்கள் அழிந்திருப்ப ரென்பது, 'உம்பர் தந்நாளுடைமையின் ஓர்மன்னன்பால் வைத்

தான்' என்பதன் கருத்து. "வில்லேருழவர்" என்றற்போல 'வாளுடையுழவன்' என்றார். (762)

15. கார்முக வலியையான் கழறல் வேண்டுமோ
வார்[1]சடை யரனிகர் வரத நீயலால்
யாருள ரறிபவ [2]ரிவற்குத் தோன்றிய
தேர்முக வல்குலாள் செவ்வி கே[3]ளெனு.

(இ - ள்.) கார்முகம் வலியை யான் கழறல் வேண்டும் ஓ - இந்தவில்லின் வல்லமையை யான் எடுத்துச்சொல்லவேண்டுமோ? வார் சடை அரன் நிகர் வரத - நீண்ட சடைமுடியையுடையவனான அந்தச்சிவபிரானை யொத்த முனிவனே! நீ அலால் - நீயே யல்லாமல், அறிபவர் - (இதன் வலிமையை) உண்மையாக அறியக்கூடியவர், யார் உளர்-எவர் இருக்கின்றனர்? [எவருமில்லை]: இவற்கு - இந்தச்சனகமன்னனுக்கு, தோன்றிய-(புத்திரியாக) அவதரித்த, தேர் முகம் அல்குலாள் - தேர்த்தட்டுப்போன்ற அல்குலையுடையவளான சீதையின், செவ்வி-வரலாற்றை, கேள்-கேட்பாயாக, எனு - என்று சொல்லி,—(எ-று.)—இந்தச் செய்யுளிலுள்ள 'எனு' என்பது, "என்றான்" (24) என்ற முற்றைக் கொண்டு முடியும்.

'கார்முகவலியை யான் கழறல் வேண்டுமோ' என்றதன் கருத்து, அறுபதினாயிரவர் சுமந்துவர நேரே கண்டதனால் நுமக்கே தெரியுமென்பது. திரிமூர்த்தியருள் ஒருவனாகிய சிவபிரானையொத்த நுமக்கு இந்தச் சிவதநுசின் வல்லமை தெரியுமேயல்லது எம்போலியர்க்கு முழுவதும் அறிந்து சொல்லமுடியாதென்பது இரண்டு மூன்றாவதடிகளின் பொருள். இவ்வாறு வில்லின் வரலாற்றையும் உறுதித்தன்மையையும் கூறிய சதாநந்த முனிவன், அவ்வில்லை நாணேற்றியவற்கு மனைவியாதற்கு உரிய சீதையின் வரலாற்றைக் கூறத்தொடங்குகின்றனனென்க. [2]இதற்குத் தோன்றிய என்ற பாடத்திற்கு - குலத்து முன்னோர் வைத்துக்கொண்டிருந்த இந்தவில்லைக் கன்னியாசுல்கமாக வைத்துப் பயன்பெறுமாறு அவதரித்த என்று பொருள் காண்க. வரதன் - வரத்தைக் கொடுப்பவன்; இவன் அப்படிப்பட்டவனாதலைக் கீழ் வந்த இம்முனிவனது வரலாற்றா லறியலாம். இப்போது இங்ஙனம் விளித்தது - சீதையை மணந்துகொள்ளுதற்கு ஏற்ற கொழுநன் கிடைக்கவேணுமே யென்றிருக்கின்ற எங்கட்கு அவ்வரத்தைத் தர இராமபிரானை அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றாயென்ற பொருளைக் குறிப்பிக்கும்: ஆகவே; 'வரத' என்றது - கருத்துடையடைகொளி. பி-ம்:—[1]சடையனே. [2]அதற்கு. [3]என்றான்.

வேறு.

16. இரும்பனைய [1]கருநெடுங்கோட் [2]டிணையேற்றின் பணை[3]யேற்ற
பெரும்பியலிற் [4]பளிக்குநுகம் [5]பிணைத்ததனோ[6]டணைத்தீர்க்கும்
வரம்பின்மணிப் பொற்கலப்பை வயிரத்தின் கொழு[7]மடுத்திட்டு
உரம்[8]பொருவி [9]னிலம்வேள்விக் [10]கலகில்பல சாலுழுதேம்.

(இ - ள்.) வேள்விக்கு - வேள்வி செய்வதன்பொருட்டு (சசாலை யமைத்தற்காக)—இரும்பு அனைய கரு நெடு இணை கோடு-இரும்பை யொத்த [வலிய] பெரிய நீண்ட இரண்டுகொம்புகளையுடைய, ஏற்றின் - எருதின், பணை ஏற்ற பெரும் பியலில் - பருமை தங்கிய பெரிய பிடரியின்மேல், பளிங்கு நுகம் பிணைத்து-பளிங்கினாற்செய்த நுகத்தடியைப் பூட்டி, அதனோடு அணைத்து ஈர்க்கும்-அந்த நுகத் தடியோடு சேர்க்கப்பட்டு இழுத்துக்கொண்டுபோகப்படுகின்றதான, வரம்பு இல் மணி பொன் கலப்பை - எல்லையில்லாத (பல) இரத்தினங்கள் பதித்த பொற்கலப்பையில், வயிரத்தின் கொழு மடுத்திட்டு -வயிரத்தாற்செய்த கொழுவைச் சேர்த்து, உரம் பொருவு இல் - பலத்தினால் ஒப்பில்லாத[உழுதற்கு அரிதாகி உறுதியாயிருக்கின்ற], நிலம் - பூமியை, அலகு இல் பல சால் - அளவில்லாத பலசால், உழுதேம் - (நாங்கள்) உழுதோம்; (எ - று.)

வேள்விசெய்வதன்பொருட்டு நிலத்தை யுழுததை, இதனாற் கூறுகின்றான். அரசனை யுளப்படுத்தி, 'உழுதேம்' என்று பன்மையாற் கூறினான். பி-ம்:—[1]கருந்திரள். [2]இமில். [3]ஏற்றை. [4]பிணித்த, பிணிக்கும். [5]பணித்ததனோடு. [6]இணைத்து. [7]மடுப்ப. [8]பொருவு. [9]நிலமகளை. [10]அலகிறந்த. (764)

17. உழுகின்ற கொழுமுகத்தி னுதிக்கின்ற [1]கதிரினொளி
பொழிகின்ற புவிமடந்தை [2]யுருவெளிப்பட் டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு [3]மிழிந்தொதுங்கித்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்.

(இ - ள்.) உழுகின்ற கொழு முகத்தின் - உழுந்தொழிலைச் செய்கின்ற கொழுவின் முனையில்,-உதிக்கின்ற கதிரின் ஒளி பொழிகின்ற-உதயமாகின்ற சூரியன் போன்ற ஒளியை வெளிவீசுகிற, புவி மடந்தை உரு - பூமிதேவியின் திருவுருவம், வெளிப்பட்டு என - வெளிப்பட்டாற்போல,—புணரி எழுகின்றதெள்அமுதோடு எழுந்தவள்உம்-பாற்கடலிலிருந்துதோன்றினதெள்ளிய அமுதத்தோடு உடன் பிறந்தவளான இலக்குமியும், இழிந்து - (தன்னழகு) தாழ்வடைந்து,ஒதுங்கி-ஒதுங்கிநின்று, தொழுகின்ற-கைகூப்பிவணங்குகின்ற, நல் நலத்து - மிக்க அழகையுடைய, பெண் அரசி - பெண்களின் நாயகமாகிய இந்தச்சீதை, தோன்றினாள்—; (எ-று.)

கொழுமுகத்தின் தோன்றினாள் என்க. சீதையின் திருமேனி பொன்னிறமென்ப ராதலால், 'உதிக்கின்றகதிரினொளிபொழிகின்ற புவிமடந்தை யுருவெளிப்பட்டென' என்றார்: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இலக்குமியினும் பேரழகுபடைத்தவ ளென்பது, பின்னடிகளிற் கூறிய பொருள்: "தாமரையிருந்தவையல் சேடியாந்தரமுமல்லள்" என்பர், பின்னும். பி - ம்: —[1]கதிரொளிபோல். [2]திரு. [3]அழிந்தோங்கத், இழிந்தோங்கித், இழிந்தொதுங்கத். (765)

18. குணங்களையென் [1]கூறுவது கொம்பினைச் [2]சேர்ந்தவையுய்யப், பிணங்குவன பழகிவளைத் தவஞ்செய்து[3]பெற்றதுகாண், கணங்குழையாள் [4]தோன்றியபின் கதிர்வானிற் கங்கையெனும், அணங்கிழியப் பொலி[5]விழந்த வாறொத்தார் [6]வேறுள்ளார்.

(இ - ள்.) குணங்களை - (இந்த மாதின்) குணங்களைப்பற்றி, என் கூறுவது - என்னவென்று (யான்) சொல்லுவது? (என்னல் உள்ளபடியறிந்து சொல்லமுடியாது): (ஏனெனில்), அவை - அந்தக் குணங்களென்பன யாவும், கொம்பினை-கொம்புபோல் மெல்லியலான இச்சீதையை, சேர்ந்து - (தாம்) அடைந்து, உய்ய-நல்வாழ்வு பெறுமாறு, பிணங்குவன - (ஒன்றோடொன்று) மாறுபட்டு (என்னைக் கைக்கொள்ளவேணும் என்னைக் கைக்கொள்ளவேணும் என்று) மேல் விழுகின்றன; (இது நிற்க); அழகு - அழகு என்பதோ, தவம் செய்து - தவத்தைச்செய்து, இவளை பெற்றது-இவளை யடைந்திட்டது; கணம் குழையாள் - திரண்ட குழையென்னுங் காதணியைப் பூண்ட இந்தச் சீதை, தோன்றிய பின்-பூமியிலிருந்து வெளிப்பட்ட பிறகு, வேறு உள்ளார்-மற்றை மங்கையர் யாவரும், கங்கை எனும் அணங்கு கதிர் வானின் இழிய பொலிவு இழிந்த ஆறு - கங்கை யென்று சொல்லப்படுகின்ற தெய்வநதி சூரியனியங்குகின்ற வானத்திலிருந்து (இந்தப்பூமியில்) இறங்கி வந்ததனால் (தமது) அழகையிழந்த மற்றைநதிகளை, ஒத்தார் - போன்றார் [தமது பொலிவை யிழந்தனர்]; (எ - று.)

முதலிரண்டடிகளினால் இந்தச்சீதை நற்குணங்கட்கெல்லாம் இருப்பிடமானவளென்றும் பேரழகுபடைத்தவளென்றும் கூறி, இப்படிப்பட்ட சீதை தோன்றியபிறகு இவட்குமுன்னே குணங்களினாலும் அழகினாலும் எந்தமகளிரும் முன்நிற்கமாட்டாது பொலிவிழந்தமையை உவமைமுகத்தாற் பின்னடிகளால் விளக்கினார். 'கொம்பினைச்சேர்ந்து அவை யுய்யப் பிணங்குவன' என்றதனால், இவளைச் சேர்தலாலேயே அவற்றிற்குச் சிறப்பு என்பதும், அவை யாவும் இவளிடத்துச் செயற்கையாகவன்றி இயற்கையா யமைந்துள்ளன என்பதும் பெறப்படும். அழகு இவளைத்தவஞ்செய்து பெற்றது-உலகத்தில் மங்கையர் அழகைத் தவஞ்செய்து பெறுவர்: இவளோ அழகினால் தவஞ்செய்து பெறப்பட்டாளென்க: இங்குக் குணமும் அழகும் ஓரிடத்து இயைந்துநிற்கும் அருமையும் தோன்றும். பி - ம்:—[1]செப்புவது. [2]சேர்ந்தவர். [3]பெற்றன. [4]எழுந்ததற்பின். [5]அழிந்த. [6]வேறுற்றார். (766)

19. சித்திரமிங் கிது[1]வொப்ப தெங்குண்டு செய்வினையால்
வித்தகமும் விதிவசமும் [2]வெவ்வேறே புறங் [3]கிடப்ப
அத்திருவை யமரர் [4]குல [5]மாதரித்தா ரென [6]வறிஞ
இத்திருவை நிலவேந்த ரெல்லாரும்[7] காதலித்தார்.

(இ - ள்.) அறிஞ - புலவோனே! செய் வினையால் வித்தகம் உம்-(தாஞ்) செய்யவேண்டிய தொழிலினால்(காட்டவேண்டிய தநுர் வித்தையிலுள்ள) அறிவும், விதிவசம்உம்-ஊழ்வினையின் அதீனமும், வேறுவேறு ஏ புறம்-மிக வேறான இடத்திலே, கிடப்ப-இருக்கையில்,—அ திருவை குலம் அமரர் ஆதரித்தார் என - (திருப்பாற்கடலினின்று தோன்றிய) அந்த மகாலட்சுமியைக் கூட்டமாகத் திரண்ட தேவர்கள் விரும்பினதுபோல, இ திருவை-(எமக்குக் கிடைத்த) இந்தச்சீதையை, நிலம் வேந்தர்

எல்லாரும் - பூமிக்குத் தலைவரான அரசர் யாவரும், காதலித்தார் - விரும்பினார்கள்; இது ஒப்பது - இந்தச்செய்தியை ஒப்பதாகிய, சித்திரம் - ஆச்சரியம், இங்கு - இவ்வுலகத்தில், எங்கு உண்டு-எங்கேயுள்ளது? [எங்குமில்லை]; (எ - று.)

'சிவதநுசை வளைத்தவற்கே சீதை உரியவள்' என்று ஏற்படுத்தியிருக்கவும் இவளைப் பெறுதற்குரிய இராமபிரான் அவதரித்திருக்கவும், தம்மிடத்து அவ்வகைத் திறமைசற்றுமில்லாத மற்றை நிலவேந்தர்கள், ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்குஉரிய லட்சுமியைத் தேவர்கள் விரும்பினதுபோல் இச்சீதையை விரும்பினார்களே! இது என்ன ஆச்சரியம் என்க. சித்திரம்என்பதற்கு-ஏளனம்பற்றி நகைக்கக்கூறிய விஷயம் என்று கருத்துக் காணலாம். செய்வினையால் வித்தகம் - சிவதநுசைஎடுத்துவளைத்து நாணேற்றி அம்பு எய்யக்கூடிய திறமை. சித்திரம் இங்கு இது வொப்பது எங்கு உண்டு என்பதற்கு-இவ்விடத்திலுள்ள இந்தச்சீதையினுருவை ஒப்பதாகிய சித்திரம் எவ்விடத்திலுள்ளது? என்று கூறுவாருமுளர். பி-ம்:—[1] என்னத்தேதங்குண்டு, என்னத்தேம்புண்டு. [2] அவைவேறே. [3] கிடந்த. [4] குலத்து. [5] ஆதரித்தால். [6] அறிஞர். [7] ஆதரித்தார். (767)

20\. கலித்தானைக் கடலோடுங் [1] கைத்தானக் களிற்றரசர்
ஒலித்[2] தாழி யெனவந்து [3] மணமொழிந்தார்க் கெதி[4] ருடுத்த
புலித்தானைக் களிற்றுரிவைப் [5] போர்வையான் [6] போர்வில்லை
[7] வலித்தானே மங்கை[8] திரு மணத்தானென் றியாம்வலித்தேம்.

(இ - ள்.) கை - துதிக்கையையும், தானம் - மதஜலத்தையுமுடைய, களிறு - யானைபோன்ற, அரசர் - அரசர்கள், கலி தானை கடலோடும் - பேராரவாரத்தையுடைய சேனாசமுத்திரத்தோடு, ஆழி என ஒலித்து வந்து - கடல்போலப் பெருமுழக்கஞ்செய்து கொண்டுவந்து, மணம் மொழிந்தார்க்கு-மணத்தைக்குறித்துப் பேசினவர்கட்கு, எதிர் - மறுமொழியாக, புலி தானை உடுத்த களிறு உரிவை போர்வையான் போர் வில்லை-'புலித்தோலை ஆடையாகவுடுத்து யானைத்தோலைப் போர்வையாகக் கொண்டுள்ளவனாகிய சிவபெருமான் (தான் செய்த) போரி லுபயோகித்த வில்லை, வலித்தானே - (தன்) வலிமைகொண்டுவளைத்தவனே, மங்கை திருமணத்தான் - இந்தச்சீதையின் திருமணத்திற்கு மணமகனாதற்கு உரியவன்', என்று—, யாம்—,வலித்தேம்-உறுதியாகச் சொன்னோம்; (எ-று.)

சனகராசன் மகளைத் தமக்குத் தரவேண்டி ஆர்ப்பாடத்தோடு வந்துநின்ற அரசர்கட்கு நாங்கள் கொண்டுள்ள உறுதியைத்தெரிவித்தோமென்று சதானந்தமுனிவன் கூறுகின்றனன்.பி-ம்:-[1] கைத்தானை. [2] ஆளி. ஆனை. [3] மகண்மொழிந்தார்க்கு, மணமுரைத்தார்க்கு. [4] உருத்த. [5] போர்வையரன். [6] வரிவில்லை,வரிச்சிலையை,வார்சிலையை. [7] வலித்தானை. [8] மனம்வலித்தான். (768)

21\. வல்வில்லுக் காற்றார்கண் மாரவேள் [1] வளைகரும்பின்
மெல்வில்லுக் [2] காற்றாராய்த் [3] தாமெம்மை [4] விளிகுற்றார்

கல்வில்லோ [5]டுடன்வந்த கணங்குழையைக் [6]காதலித்துச்
சொல்வில்லா லுலகளிப்பாய் [7]போர்செய்யத் தொடங்கினர்.

(இ - ள்.) சொல் வில்லால் உலகு அளிப்பாய் - சொல்லாலும் வில்லாலும் உலகத்தவரைப் பாதுகாப்பவனே! வல் வில்லுக்கு ஆற்றார்கள்-(இந்த) வலியவில்லை வளைப்பதற்கு வலிமையற்ற அவ்வரசர்கள், மாரன் வேள் வளை கரும்பின் மெல் வில்லுக்கு ஆற்றார் ஆய்-மன்மதனது வளைந்த கரும்பாகிய மெல்லிய வில்லைத் தாங்குதற்கும் வலிமையற்றவராய்,—கல் வில்லோடு உடன் வந்த கணம் குழையை காதலித்து-மலைபோன்ற வில்லோடுவந்துள்ள [சிவதநுசுக்குப் பணையமான]திரண்டகுழையென்னுங் காதணியைப்பூண்ட சீதையை மிகவிரும்பி,—தாம்-அவ்வரசர்கள், எம்மை விளிகுற்றார் - எம்மை யழைத்து, போர் செய்ய தொடங்கினர்—; (எ-று)

'சிவதநுசைமுறித்தவர்க்கே சீதை யுரியவள்' என்று யாம் உறுதியாகச் சொல்லிவிட்டதனால் வந்த அரசர் வில்லைக் கொணருமாறு சொல்ல, தம்வேண்டுகோளின்படி கொணரப்பட்ட வில்லைத் தொட்டு அசைப்பதற்கும் அவர்கட்கு முடியாமற்போனமையால் அந்தச்சிவதநுசை வளைத்தற்கு வலியற்ற அவ்வரசர்கள், அந்தச்சீதையின்மீது மிக்கவிருப்பத்தினாலும் தாம் அவமானமடைந்ததனாலும் பெருஞ்சினங்கொண்டு யாவரும் ஒன்றுசேர்ந்து எம்முடன் போர்செய்யலானார்களென்பதாம். வரம் சாபம் என்பவற்றால் தம்விருப்பத்திற்கு இடனானார்க்கு அருள் புரிந்து, மாறானார்க்குத் தீங்குவிளைப்பவ ராதலால் விசுவாமித்திரனை 'சொல்வில்லா லுலகளிப்பாய்' என்றது. சொல்வில்லால் - சொல்லாகியவில்லால் என்றலும் உண்டு. பி-ம்:—[1]வான்கரும்பு, நன்கரும்பு. [2]ஆற்றார்கள். [3]தாமும்மனம், தாமேன்மை, தாமென்மை தாமெய்ம்மை. [4]விளிவுற்றார். [5]உலகளித்த, உலகீந்த. [6]தருகவென்று. [7]உயிர்நீப்பார். (769)

22. [1]இம்மன்னன் பெருஞ்சேனை [2]யீவதனை [3]மேற்கொண்ட
செம்மன்னர்[4]புகழ்வேட்ட பொருளேபோற் [5]றேய்ந்ததால்
பொம்மென்ன வண்[6]டலம்பும் புரிகுழலைக் [7]காதலித்த
அம்மன்னர் [8]சேனைதம தாசைபோ [9]லாயிற்றால்.

(இ - ள்.) இ மன்னன் பெரு சேனை - இந்தச்சனகமகாராசனது பெரிய சேனை, ஈவதனை மேற்கொண்ட செம் மன்னர்-கொடுக்குந்தொழிலை மேற்கொண்டுள்ள நேர்மைக்குணமுடைய அரசரின், புகழ் வேட்ட பொருளே போல்-புகழையே விரும்பியுள்ள செல்வம் போல, தேய்ந்தது-வரவரக்குறையலாயிற்று; (ஆயினும்), பொம் மென்ன வண்டு அலம்பும் புரி குழலை-பொம்மென்ற ஒலியுண்டாகுமாறு வண்டுகள் ஒலிக்கப்பெற்ற கடைகுழன்றுள்ள கூந்தலையுடைய சீதையை, காதலித்த-விரும்பிய, அ மன்னர் சேனை-அந்த அரசர்களின்சேனை, தமது ஆசை போல்-தமது விருப்பம் (பயனற்றது) போல, ஆயிற்று - (தாம் மேற்கொண்ட கருமம்)கைகூடாமற் போயிற்று; (எ-று.)

புகழை நாடிக் கொடைத்தொழிலை மிகுதியாகக்கொண்ட வேந்தரின் பொருள் வரவரக் குறைவுற்றாலும் பொலிவுபெறு வதைப்போலச் சனகராசனுடைய சேனை பலமன்னர்சேனைகளுடன் பொருவதால் வரவரக் குறைவுறினும் பெருமைபெற்று விளங்க, ஒன்றுசேர்ந்துபொரும் மன்னவர்களின் சேனை அவர்களாசை மேன்மேல் வளரினும் முடிவிலே சீதையைப்பெறுதலாகியபயனைப் பெறுதலின்றிப்போனதுபோல வெற்றியாகிய பயனைப்பெறவில்லை யென்பதாம். இனி, இச்செய்யுட்கு - பொருள்குறைவதுபோலச் சனகராசன்சேனை வரவரக்குறையலாயிற்று; சீதையைக்காதலித்த மன்னர்சேனை அவர்களாசை வளர்வதுபோல வளரலாயிற்றென்று கூறினுமாம். பி-ம்:—[1] எம்மன்னன், இம்மன்னர். [2] ஈவுதனை. [3] மேற் கொள்ளச். [4] பொருளேபோற்புகழ்வாய்ப்ப, புகழ் வேட்ட பொருளேபோற். [5] சிறந்ததால், தோய்ந்தற்றார், போயிற்றால். [6] அறையும். [7] காதலித்து. [8] பெருஞ்சேனை. [9] ஆயிற்றே. (770)

23. மற்காக்கும் மணிப்புயத்து மன்னனிவன் மழவிடையோன்
[1] விற்காக்கும் வாளமருண் மெலிகின்றா னெனவிரங்கி
எற்காக்கு முடிவிண்ணோர் படையீந்தா ரென[2] வேந்தர்
அற்காக்கை கூகையைக்கண் டஞ்சினவா மெனவகன்றார்.

(இ - ள்.) எல் காக்கும் முடி-ஒளியைக்கொண்ட கிரீடத்தை யணிந்த, விண்ணோர் - தேவர்கள், 'மல் காக்கும் மணி புயத்து மன்னன் இவன் - வலிமையை (த் தம்மிடத்தே) கொண்டிருக்கும் அழகிய புஜங்களையுடைய இந்தச் சனகராசன், மழ விடையோன் விற்கு - இளமையானவிடபத்தை வாகனமாகக்கொண்ட சிவ பிரானது வில்லை(க் கன்னிகையின் பணயமாக) வைத்ததற்காக, ஆக்கும்-செய்யப்படுகின்ற, வாள் அமருள்-கொடியபோரில், மெலி கின்றான் - (வரவரத்) தளர்ச்சியடைகின்றான்,' என - என்ற கார ணத்தினால், இரங்கி - இரக்கங்கொண்டு, படை - சதுரங்க சேனையை, ஈந்தார் என - கொடுத்தனராக,—(அதனையறிந்த), வேந்தர் - பகையரசர், அல் - இரவில், காக்கை - காக்கைகள், கூகையை - கோட்டானை, கண்டு-பார்த்து, அஞ்சின என-அஞ்சிய வற்றை யொப்ப, அகன்றார் - அஞ்சியோடினார்கள்; (எ - று.)

சனகமன்னவன்படை வரவரக் குறையவும் முடிவில் மாற்றார் வெற்றிபெறாமைக்குக் காரணங்கூறுகின்றது, இச்செய்யுள். பல அரசர் சேனைகளுடன் பொருகையில் அவர்களோடு பின்வாங்கா மல்நின்று பொரமுடியாதபடி சனகமன்னவன் சேனை குறைந்து வருவது கண்ட தேவர்கள் அஞ்சாது எதிர்நின்று பொரும்படி படையைத் தந்தனராக, அதனையறிந்த மாற்றரசர் 'இனி இவ்வர சனுடன் பொரமுடியாது' என்று அஞ்சியோடினரென்பதாம். மாற்றரசர்கள் ஓரியாண்டு மிதிலையை முற்றுகை செய்து பொருத தனால் சனகராசனுடைய படை வலி குறையத்தொடங்க, அப் போது அம்மன்னவன் மனவருத்தமடைந்து வானவர்களைத் தன் தவத்தினால் மகிழ்வடையச் செய்ய, மனமுவந்த அவ்விண்ணோர் சதுரங்க சேனைகளை அம்மன்னவனுக்குத் தர, எதிர்த்த மன்னவர்

யாவரும் அப்படைகளால் தாக்குண்டு நிலைகெட்டோடினரென முதனூலினாலறிக. ஆம்-அசை. பி-ம்:-[1]விற்காக்க. [2]வந்தார். (771)

24. அன்றுமுத லின்றளவு மாருமிந்தச் சிலை [1]யருகு
சென்றுமிலர் போ[2]யொளித்த தேர்வேந்தர் [3]திரிந்துமிலர்
என்றுமினி [4]மணமில்லை யென்றிருந்தே மிவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்றான்.

(இ - ள்.) அன்றுமுதல் இன்று அளவுஉம்—, ஆர்உம்-எந்த மன்னவரும், இந்த சிலை அருகு - இந்தச் சிவதனுசின் சமீபத்தில், சென்றுஉம் இலர் - போயுமிலர்; போய் ஒளித்த தேர் வேந்தர் - இரிந்தோடி யொளித்துக்கொண்ட தேர்வீரரான மன்னவர், திரிந்துஉம் இலர் - திரும்பிவந்தாருமில்லை; இனி—, என்றுஉம்-என்றைக்கும், மணம் - (சீதைக்கு) விவாகம், இல்லை—, என்று—, இருந்தேம்—; இவன் ஏற்றின் - இந்த இராமபிரான் (இந்தச்சிவதனுசை) நாணேற்றினானால், (அது) நன்று-நன்மையைத் தருவதாகும்; (அப்போது), மலர் குழல் சீதை - மலரையணிந்த கூந்தலையுடைய சீதையின், நலம் - அழகு, பழுது ஆகாது - வீணாகாது, என்றான்-என்று கூறி முடித்தான்; (எ-று.)

'ஐயன் வில்லேற்றுமே லிடர்க் கடலேற்றும், நோற்றனணங் கையும்' என்று சனகன் கூறியதை ஒட்டிச் சதாநந்தன்கூறி முடித்தனனென்க. பி - ம்:—[1]மருங்கு. [2]ஒளித்தார், ஒழிந்த. [3]வந்தும். [4]மணமுமிலை. (772)

25.—சதாநந்தமுனிவன்மொழிப்படி செய்யுமாறு விசுவாமித்திரமுனிவன் குறிப்பிக்க, இராமபிரான் இவ்வில்லை நோக்குதல்.

[1]நினைந்தமுனி பகர்ந்தவெலா நெறி [2]யுன்னி [3]யறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போ[4]ரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலு [5]மம் மாதவத்தோன்
[6]நினைந்தவெலா நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்.

(இ - ள்.) அ முனி - அந்தச்சதாநந்த முனிவன், நினைந்து - ஆலோசித்து, பகர்ந்த எலாம் - சொன்ன எல்லாவற்றையும், அறிவன்உம்-பேரறிவுடைய விசுவாமித்திரனும், நெறி உன்னி - முறையே ஆலோசித்து, (தான் சதாநந்தமுனிவன் கூறிய சொல்லுக்கு உடன்பட்டதைக் குறிப்பிக்குமாறு), சடை புனைந்த தன் முடி துளக்கி - சடையை யணியாகக்கொண்ட தனது தலையையசைத்து, போர் ஏற்றின் முகம் பார்த்தான் - போர்செய்ய வல்ல இடபம்போன்ற இராமபிரானது முகத்தை ('இவ்வில்லை நீ முறிப்பாயாக' என்ற கட்டளை பார்வையில் தோன்றுமாறு) பார்த்தான்; வனைந்த (து) அனைய திருமேனி வள்ளல்உம் - சித்திரத்திலெழுதினாற் போன்ற [பேரழகுபடைத்த] திருமேனியையுடைய உதாரகுணமுள்ள அவ்விராமபிரானும், அ மாதவத்தோன் நினைந்த எலாம் நினைந்து - பெருந்தவத்தையுடையவனான அந்த விசுவாமித்திரன்

எண்ணியதைதயெல்லாம் (தானும்) நினைந்து, (பிறகு), அந்தநெடுஞ் சிலையை நோக்கினன் - நீண்ட அந்த வில்லைப்பார்த்தான்; (எ-று.)

முடிதுளக்கியது - வில்லினது திண்மையைப்பற்றிய வியப் போடு சதாநந்த முனிவன் கூறியதை உடன்பட்டமையைத் தெரி விக்கும். மாதவத்தோன் நினைந்தவை - வந்தஇடத்தில் பெற்றோர் அநுமதியில்லாமல் மணந்துகொள்ளுதற்குஉரிய சுற்கத்தை வெல்லுமாறு ஓரிராசகுமாரனை யேவுவது முறையாகுமா என்பது முதலியனவென்னலாம். வனைந்தனைய - வனைந்ததனைய அல்லது வனைந்தாலனைய என்க. வில்லை நோக்கியது - இந்த வில்லை எந்த இடத்தில் எட்டிப்பிடித்து எடுக்கலாமென்ற ஆலோசனையினால். பி - ம்:—[1] நினைந்து. [2] உள்ளி. [3] அறிந்தவனும். [4] வேந்தின், ஏற்றை. [5] மாதவத்தோனுள், மாதவத்தோனும். [6] நினைந்ததனை. (773)

வேறு.

26.—இராமன் சிவதநுசு உள்ளஇடத்தை யணுக எழுதல்.

பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்
அழிந்தது வில்லென [1] விண்ணவ ரார்த்தார்
மொழிந்தன ராசிகண் முப்பகை வென்றார்.

(இ - ள்.) பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி - சொரிந்த நெய் யாகிய ஆகுதி வீழ்ந்த இடத்தினின்று, பொங்கி எழுந்த-கிளர்ந்து மேலெழுந்த, கொழு கனல் என்ன-நன்கு எரிகின்ற அக்கினிபோல, எழுந்தான்-(இராமபிரான் சிவதநுசு வைத்துள்ள இடம்நோக்கிச்) செல்லலானான்; (அப்போது), விண்ணவர்-தேவர்கள், (இவ்விராமன் வில்லைத் தவறாதுமுடிப்பனென்ற துணிவினால்), வில் அழிந்தது என - சிவதநுசு இற்றுப்போயிற்றென்று, ஆர்த்தார் - ஆரவாரஞ் செய்தார்கள்; முப்பகை வென்றார்-(காமம் வெகுளி மயக்கம் என்ற) மூன்று உட்பகையைவென்ற இருடியர், (இராமபிரானுக்கு), ஆசிகள்-வாழ்த்துக்களை, மொழிந்தனர்-கூறினார்கள்; (எ-று.)

ஆகுதி பெய்யப்பெறும் இடத்தினின்று கனல் கொழுந்து விட்டெரிவதுபோல, விசுவாமித்திரனது குறிப்புப்பார்வை மேல் விழப்பெற்ற ஸ்ரீராமன் வீரத்துடனெழலாயினனென உவமப் பொருத்தங் காண்க. ஓமாக்கினியுவமையால், தூய்மையும் பிரதாப மும் தொனிக்கும். காமம் முதலிய உட்பகையாறையும் காமம், வெகுளி, மயக்கம் என மூன்றாக அடக்கிக் கூறுதல், தமிழ்வழக்கு. பி - ம்:—[1] வானவர். (774)

27.—மங்கையரின் மனப்பாங்கு.

தூய தவங்க டொடங்கிய தொல்லோன்
[1] ஏயவன் [2] வல்வி [3] லிறுப்பதன் முன்னம்
[4] சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா
ஆயிரம் [5] வில்லை யனங்க னிறுத்தான்.

(இ - ள்.) தூய தவங்கள் தொடங்கிய தொல்லோன் ஏயவன் - பரிசுத்தமான தவங்களைச் செய்யும் பழையோனாகிய விசுவாமித்திர முனிவனாலேவப்பட்டவனான ஸ்ரீராமன், வல் வில் இறுப்பதன் முன்னம்-வலியவில்லை (வளைக்கும்படி கையிலெடுத்து)முறிப்பதற்கு முன்னமே, அனங்கன் - மன்மதன், சேய் இழை மங்கையர் சிந்தை தொறு எய்யா-செவ்விய ஆபரணங்களையணிந்த மாதர்களின் மனங்கள்தோறும் (மலரம்புகளை) எய்து, ஆயிரம் வில்லை-மிகப்பல விற்களை, இறுத்தான்-முறித்தான்; (எ-று.)

ஸ்ரீராமன் சிவதநுசைக் கையிலெடுப்பதற்குச் செல்லும்போது கண்ட மங்கையர் பலரும் மன்மதனதுமலர்க்கணைக்கு இலக்காயினரென்க. மன்மதனுக்குக் கரும்பு வில்லாதலாலும் ஒவ்வொருவர் நெஞ்சிலும் மன்மதன் பல அம்புகளை விடுதலாலும் இவ்விராமன் ஒருவில்லை இறுப்பதற்கு முன் மன்மதனது அவ்வில் பல எளிதில் முறிந்தன என்க. மன்மதன்கணைக்கு இலக்காயினரென்றமையால், இவர்கள் குலமாதரல்லர் போலும் என்பர் ஒருசாரார்: ஒருசாரார் சருவேசுவரனது திருவவதாரமான இராமபிரானிடத்துப் பக்தி பூண்டனரென்பதையே இது குறிக்குமென்பர். கீழ் 'வல் வில்' என வந்ததனால், ஆயிரம் மெல் வில்லையென்ப.பி-ம்:—[1]ஏயதன்,ஏயென. [2]அவ்வில். [3]எடுப்பதன். [4]சேயிணை. [5]வல்வில். (775)

28.—நான்குகவிகள்—ஸ்ரீராமனைக்கண்ட மாதர்கள் பலவாறு கூறுதலைத் தெரிவிக்கும்.

காணுநெடுஞ்சிலை கால்வலி தென்பார்
நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்
[1]பாணியி வன்படர் [2]செங்கை [3]படாதேல்
வாணுத [4]னங்கையும் [5]வாழ்வில ளென்பார்.

ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (சிலமாதர்),—காணும் நெடுஞ் சிலை கால் வலிது என்பார்-காணப்படுகின்ற நீண்ட இவ்வில் அடிவலிமையை யுடையதென்றுசொல்வார்; (சிலமாதர்),—நாண் உடை நங்கை-நாணத்தை (அணிகலமாக)க்கொண்ட பெண்ணாகிய சீதையின், நலம் கிளர் செங் கேழ் பாணி - அழகுவிளங்குகின்ற செந்நிறமுள்ள கையில், இவன் படர் செங் கை படாது ஏல்-இவ்விராமனது பரவியசெந்நிறமுள்ள கை படாமற்போனால் [இராமபிரான் சீதையைப் பாணிக்கிரகணஞ் செய்து கொள்ளாமற்போனால்], வாள் நுதல் நங்கைஉம் - ஒளியுள்ள நெற்றியையுடைய சீதையும், வாழ்வு இலள்-நல்வாழ்ச்சி பெறுதவளாவள், என்பார்—; (எ - று.)

இவை, சீதையினிடம் அன்புள்ள மகளிர் கூறுஞ் சொற்களென்க. நங்கையும் என்ற உம்மை-இராமனும் வாழ்விலனென்ற பொருளைக் காட்டுமென்னலாம். நங்கை வாழ்விலள் என்பதற்கு - சீதைமணமின்றிக் கன்னியாகவேயிருக்கவேண்டியவள்தானென்று கருத்துக்கொள்ள இடமுண்டு. பி - ம்:—[1]பாணியினன். [2]பாணி. [3]புகாதேல். [4]சீதையும, மங்கையும். [5]வாழலள். (776)

29. கரங்கள் [1]குவித்திரு கண்கள் பனிப்ப
இருங்களி றிச்சிலே யேற்றில னாயின்
நரந்த [2]நறைக்குழ னங்கையு நாமும்
முருங்கெரி யிற்புக மூழ்குது மென்பார்.

(இ - ள்.) (சிலமாதர்), கரங்கள் குவித்து-(தமது இரண்டு) கைகளையும்(இஷ்டதேவதைகளை நோக்கிக்)குவித்தவண்ணமிருந்து, இரு களிறு-பெரிய மதயானைபோன்ற இராமன், இ சிலை-இந்த வில்லை, இரு கண்கள் பனிப்ப-(எங்களுடைய) இரண்டு கண்களும் உவகைநீரைச் சொரியும்படி, ஏற்றிலன் ஆயின் - நாணேற்றாமற் போவானேயானால், நரந்தம் நறை குழல் நங்கைஉம் - கத்தூரியின்மணம் கமழ்கின்ற கூந்தலையுடைய பெண்ணாகிய சீதையும், நாம்உம்—, முருங்கு எரியில் - எரிக்குந் தன்மையுள்ள அக்கினியில், புக-(உடல்) அழுந்தும்படி, மூழ்குதும்-பிரவேசிப்போம், என்பார்—;

இவ்வில்லை இராமன் இறுக்காவிட்டால் சீதை கன்னிகையாகவே மூத்து இறக்கவேண்டிவருமாதலாலும், அவ்வாறு இறப்பதைவிட எரியிற்பாய்ந்து உயிர்விடுவதே நலமாதலாலும், நமது அன்பிற்கு உரிய நங்கை அவ்வாறு செய்ய நாமும் அவளுடன் எரிபுகுந் திறப்போமென்றனர் சிலமங்கையரென்க. முருங்கெரி—முருக்கெரி: மெலித்தல். மூன்றுமடி-முற்றுமோனை. பி-ம்:— [1]குவிந்து. [2]நறுந். (777)

30. வள்ளன் மணத்தை மகிழ்ந்தன னென்றால்
கொள்ளென [1]முன்பு கொடுப்பதை யல்லால்
[2]வெள்ள மணைத்தவன் வில்லை [3]யெடுத்திப்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்பார்.

(இ - ள்.) வள்ளல்-உதாரகுணமுடைய சனகராசன்,மணத்தை-(சீதையின்)விவாகத்தை(ச்செய்ய), மகிழ்ந்தனன் என்றால் - விரும்பியவனாக இருப்பானேயானால், (இந்த இராமபிரானைக் கண்டவுடனே), முன்பு-முதலில் தானே, கொள என கொடுப்பதை அல்லால்—'(இந்தச்சீதையை) மணந்து கொள்க' என்று (கன்னிகாதானஞ் செய்து) கொடுப்பதைச் செய்யாமல் விட்டிட்டு, வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து இ பிள்ளைமுன் இட்டது-கங்கைநீர்ப்பெருக்கை (த் தன்சடைமுடிமீது) சேர்ந்து நிற்கச்செய்தவனாகிய சிவபிரானது வில்லைக் கொணரச்சொல்லி(அதனைநாணேற்றி வளைக்குமாறு)இந்தச்சிறுவன் முன்னே வைத்தது, பேதைமை என்பார்-அறியாமைத்தனமென்பார், (சிலமாதர்); (எ - று.)

'சீதைக்கு விவாகமாக வேணுமென்ற எண்ணமிருந்தால், சனகராசன் தக்க வரன் வந்தபோது பாணிக்கிரகணஞ் செய்து தரவேணும்: அங்ஙன் செய்யாது சிவதநுசை வளைக்கவேணுமென்றதனால், ஒன்று சீதையின் விவாகத்திலாவது அம்மன்னவன் விருப்பமில்லாதவனாக இருக்கவேணும், ஒன்று மூடனாகவாவது இருக்கவேணும்' என்று சிலமங்கையர் கூறினாரென்க. [2]வெள்ளைமனத்தவன என்றபாடத்திற்கு - அறிவற்ற மனமுள்ள அந்தச்சனகனென்று பொருள். பி-ம்:—[1]முந்து. [3]எடுத்துப். (778)

31. ஞான முனிக்[1]கொரு நாணிலை யென்பார்
கோ[2]னிவ னிற்[3]கொடி யோனிலை யென்பார்
மானவ னிச்சிலை கால்வளை யானேல்
பீன [4]தனத்தவள் [5]பேறில ளென்பார்.

(இ - ள்.) ஞானம் முனிக்கு - தத்துவஞானமுள்ளவனாகிய விசுவாமித்திர முனிவனுக்கு, ஒரு நாண்-ஒப்பற்ற நாணம், இலை- இல்லை: (அதனால்தான் 'உலகத்தவர் நம்மைப்பற்றி யென்சொல்வார்களோ?' என்ற எண்ணம் சிறிதுமின்றி இந்தப்பெரியவில்லை நாணேற்றும்படி இந்தச்சிறுவனுக்கு அநுமதி தந்தான்), என்பார்- என்று (சிலமாதர்) கூறுவார்; கோன் இவனில்-(இந்தச்சிறுவனை வில்லை வளைக்குமாறு கூறிய) இந்த அரசனைக்காட்டிலும், கொடியோன்-கொடியவனொருத்தன், இலை என்பார்—; மானவன்-பெருமையை யுடையோனாகிய இந்த இராமன், இ சிலை - இந்தச்சிவதநுசை, கால் வளையான்ஏல்-இரண்டு முனைகளையும் வளையாமற் போவானேயானால், (அப்போது), பீனம் தனத்தவள்-பருத்த தனங்களையுடைய சீதை, பேறு இலள்-நல்வாழ்வை யிழந்தவளாவள், என்பார்—; (எ - று.)

ஞானமுனியென்பது - உலகநடையறியாதவ னென்ற குறிப்பு. மானம் - பெருமை: அதனையுடையவன் - மானவன்; இனி, மநுவென்பவன் மரபிலுதித்தவ னென்றலுமாம். பீனதனத்தவள் பேறில ளென்பதனால், இவள் கொங்கைகள் வாளாமூக்கவேண்டுவதே யென்று இரங்கியவாறு. பி-ம்:—[1]இது. [2]அவனிற். [3]கொடியார். [4]தனத்து, மனத்து. [5]பேறிலி, பேசிலாள். (779)

32.—இராமபிரான் வில்லினிடத்திற்கு நடத்தல்.

தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட வும்ப [1]ருவப்ப
மாக மடங்கலு [2]மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான்.

(இ - ள்.) தோகையர் - மயில்போன்றசாயலையுடைய மாதர், இன்னன சொல்லிட-இவைபோன்றவைகளைச் சொல்லிக்கொண்டிருக்கையில்,—நல்லோர் - சாதுஜனங்கள் [முனிவர்கள்], ஓகை விளம்பிட-சந்தோஷவார்த்தைகளைச் சொல்லவும், மாகம் அடங்கலும் உம்பர் உவப்ப - வானுலகம் முழுவதிலும் தேவர் மகிழ்ச்சியடையவும்,—(ஸ்ரீராமன்),-மால் விடைஉம் பொன் நாகம்உம் நாகம் உம் நாண - பெரிய இடபமும் பொன்மலையாகிய மேருவும் யானையும் வெள்கும்படி, நடந்தான் - (வில்லுள்ள இடத்தைநோக்கிச்) சென்றான்; (எ-று.)

கீழ் 26-ஆஞ் செய்யுளில் இராமபிரான் எழுந்ததை வருணித்த கவி, இந்தச்செய்யுளால் அப்பிரான் நடந்தமையை வருணிக்கின்றனர். நடக்கும்போதுள்ள இவனது பெருந்தோற்றத்தைக்கண்டு மேருமலையும், இவனைப்போலக் கம்பீரமாக நடக்கமுடியாமைபற்றி விடையும் யானையும் நாணின வென்க. நாகமென்பது - மலை யானை

என்ற இரு பொருளுமுடையது. மாகமடங்கலும் என்பதை மாகம் மடங்கலும் எனப்பிரித்து - மிகச்சிறந்த சிங்கமும் என்று உரைப்பினுமாம். 'மாகம்'—பெருவானம் என்று பொருளுள்ள இது, இலக்கணையால், சிறந்ததென்றபொருளது. பி-ம்:—[1] விரும்ப. [2] போர். ( )

33.—இராமபிரான் சிவதநுசை இலேசாக எடுத்தல்.

ஆடக [1] மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதை யெனும்பொற்
சூடக வால்வளை [2] சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலையி தென்ன வெடுத்தான்.

(இ - ள்.) மால் ஆடகம் வரை அன்னது தன்னை - பெரிய பொன்மலையையொத்ததாகிய அந்தச்சிவதநுசை,—'இது—,தேட அரு மா மணி சீதை எனும் பொன் சூடகம் வால் வளை சூட்டிட - தேடிப்பெறுதற்கு அருமையான சிறந்த இரத்தினம்போன்றவளும் சீதையெனப்படுபவளுமான பொன்னாற்செய்த சூடகமென்ற கையணியையும் வெண்ணிறச்சங்குவளையையுமுடையவளுக்குச் சூட்டும்பொருட்டு, நீட்டும்-நீட்டுதற்குஉரிய, ஏடு அவிழ்மாலை-இதழ்கள்மலர்கின்ற மாலையாகும்,' என்ன-என்று எண்ணுமாறு, [இலேசாக], எடுத்தான்—; (எ-று.)

இராமன் சிவதநுசையெடுத்தது சீதையைமணத்தற்குக் காரணமாவதால், அதனைச் சீதையைச் சூட்டுதற்கு நீட்டும் மாலை போலுமென்றார். தோற்றத்தாலன்றிச் சிவபிரானுக்கு வில்லாதலாலும், வில் மேருமலையை யொக்கும். பி-ம்:-[1] மாமலை. [2] சூடிய. (781)

34.—இராமபிரான் அவ்வில்லை முறித்ததனாற் பேரோசை தோன்றுதல்.

[1] தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
[2] கடுப்பினி லியாரு மறிந்திலர் [3] கையான்
எடுத்தது [4] கண்டன ரிற்றது கேட்டார்.

(இ - ள்.) தடுத்து இமையாமல் இருந்தவர் யார்உம் - (பார்ப்பதற்குத்) தடைசெய்வதனால் இமைத்தலைநிகழவொட்டாமற்செய்து [கண்களைக் கொட்டாமலேயிருந்து] பார்த்துக்கொண்டிருந்த சபையோர்எவரும், தாளில் மடுத்ததுஉம் - (ஸ்ரீராமன் தனது) பாதங்களால் (அவ்வில்லின்முனையை) மிதித்ததையும், நாண் நுதி வைத்ததுஉம்-நாணை மற்றொரு முனையில் வைத்ததையும், கடுப்பினில்-(செயலின்) வேகத்தால், நோக்கார்-காணமாட்டாதவராகி, அறிந்திலர்-அறியாதவராயினர்; (ஆயினும்), கையான் எடுத்தது-(இராமபிரான் தனது) கையினால் (அவ்வில்லை) எடுத்ததை, கண்டனர்—; இற்றது கேட்டார்-(அவ்வில்) முறிந்துபோனதனால் தோன்றிய பெருஞ்சத்தத்தைக் கேட்டார்கள்; (எ-று.)

'கண்ணைக்கொட்டினோமானால் இராமபிரான் வில்லையெடுத்து நாணேற்றுவதை எங்கே காணமற்போய்விடுவோமோ?' என்று

கண்கொட்டாது அங்குப் பார்த்திருந்தவர்களும் இராமன் வில்லை யெடுத்ததையும் உடனே அது முறிந்த சத்தத்தையும் கேட்டனரே யன்றி, அதனை நாணேற்றியதைக் காணமாட்டாதவ ராயின ரென்க. இதனால், ஸ்ரீராமனது விரைந்துதொழில்செய்யுந்திறமை வெளியாம். மிகச்சிறுவனாகிய ராமனுக்குப் பெருந்தோற்றத்துடனிருந்த சிவதநுசின் முனையை வளைக்க எவ்வாறு இயலுமென்ற சங்கைக்கு, இராமனதுதாள் ஒருமுனையிற் பட்டமாத்திரத்தில் அப்பிரானது மகிமையால் வில்லின் மற்றொருமுனை தானே வளைந்து வரலாயிற்றெனச் சமாதானம் கூறியுள்ளார். இமையாமல்தடுத்து என்று மாற்றி-(இமைக்கின்ற இமையை) இமைக்கவொட்டாமல் தடுத்து எனினுமாம். தாளின் மடுத்தல்-காலின் பெருவிரலாலழுத்துதல் என்பது, ஒருவருரை. இற்றது-இறுதலால் தோன்றிய ஒலிக்கு இலக்கணை. பி-ம்:—[1]எடுத்து. [2]கடுப்பினை. [3]கைவில். [4]கண்டிலர். (782)

வேறு.

35.—அப்பேரோசையினால் மூவுலகத்தும் தோன்றிய அச்சம்.

ஆரிடைப் புகுது நாமென் றமரர்கள் கமலத் தோன்றன்
பேருடை யண்ட கோளம் பிளந்த [1]தென் றேங்கி நைந்தார்
பாரிடை யுற்ற தன்மை பகர்வதென் பாரைத் தாங்கி
[2]வேரெனக் கிடந்த நாக மிடியென வெருவிற் றன்றே.

(இ - ள்.) (அவ்வில்முறிந்ததனாலுண்டான ஓசையைக்கேட்ட), அமரர்கள் - தேவர்கள், கமலத்தோன் தன் பேர் உடை அண்ட கோளம் பிளந்தது என்று ஏங்கி-பிரமதேவன்படைத்த பெருமை பெற்ற இவ்வண்டகோளமே பிளந்ததென்று கருதி ஏக்கங்கொண்டு, ஆர் இடை நாம் புகுதும் என்று-எவரிடத்தில் நாம் (இப்போது) அடைக்கலம்புகுவோமென்று மனத்தடுமாற்றங்கொண்டு, நைந்தார்-வருந்ினார்கள்; பாரிடை உற்ற தன்மை பகர்வது என்-(இங்ஙனம் மேலுலகத்திலுள்ளவரான தேவர்களே வருந்தினரானால்) இவ்வுலகத்தாரிடத்து நேர்ந்த தன்மையைப்பற்றி நாம் சொல்லவேண்டுவது என்ன இருக்கின்றது? பாரை தாங்கி-இந்தப் பூமியின் கீழிருந்து இதனைத் தாங்கிக்கொண்டு, வேர் என கிடந்த - (இப்பூமியின்) வேர் போலவிருக்கின்ற, நாகம்-ஆதிசேஷன், இடி என - இடி (தன்மீது) விழுகின்றதென்று, வெருவிற்று-அச்சமடைந்தது; (எ - று.)

அவ்வில் இற்றதனால்தோன்றிய ஓசை, சுவர்க்கம் பூமி பாதலம் என்னும் மூவுலகத்தார்க்கும் அச்சம்விளைத்தபடியை விளக்கினார். மேலும் கீழும் பட்டதன்மையைக் கூறியதனால், நடுவிலுள்ள பார் பட்டதன்மை கூறுமலே விளங்குமாகையால், 'பாரிடையுற்ற தன்மைபகர்வதென்' என்றார். கமலத்தோன் தன் பேருடையண்டம்-பிரமாண்டம். பி - ம்:—[1]ஆமென்று. [2]வேரிடை. (783)

36.—விண்ணவர் முதலியோரின் மகிழ்ச்சி.

பூமழை [1]சொரிந்தார் விண்ணோர் பொன்மழை[2]பொழிந்த மேகம்
[3]பாமமார் கடல்க ளெல்லாம் பன்மணி தூவி [4]யார்த்த

கோமுனிக் கணங்க ளெல்லாங்[5]கூறின வாசி கொற்ற
நாமவேற் [6]சனகற் கின்று நல்வினை பயந்த [7]தென்று.

(இ - ள்.) கொற்றம்-வெற்றியையும், நாமம் வேல்-(பகைவர்க்கு) அச்சந்தரும் வேலினையுமுடைய, சனகற்கு - சனகமகாராசனுக்கு, இன்று—, நல்வினை-(முற்பிறப்பிற்செய்த) புண்ணியம், பயந்தது - பயனையளித்தது, என்று-என்றுஎண்ணி, (அதனால்), விண்ணோர் - தேவர்கள், பூ மழை சொரிந்தார்-மலர்மழைபொழிந்தார்கள்; மேகம்-வானம், பொன் மழை பொழிந்த(து)—; பாமம் ஆர் கடல்கள் எல்லாம்-பரப்புப்பொருந்திய கடல்கள்யாவும், பல்மணி தூவி ஆர்த்த - பலவகையிரத்தினங்களைச்சிந்தி யாரவாரித்தன; கோ முனி கணங்கள் எல்லாம்-சிறந்த முனிவரின் கூட்டம் யாவும், ஆசி கூறின-வாழ்த்துமொழிகளைச் சொல்லின; (எ - று.)

இற்ற வோசையைக் கேட்டதும் விண்ணோர் முதலியோர் முதலில் துணுக்குற்றாராயினும், பின்னர் இராமபிரானால் சிவதநுசு இற்ற ஓசையென்று அறிந்து 'நாமவேற்சனகற்கு இன்று நல்வினை பயந்தது' என்று மகிழ்ந்து பூமழைபொழிதல் முதலியவற்றைச் செய்தன ரென்க. பொழிந்த=பொழிந்தது: இனி, பலவின்பால் முற்றுமாம். பாம் அம் ஆர் என்று பிரித்து பாம்-பரவிய, அம் ஆர் அழகுபொருந்திய என்றுமாம். பி - ம்:—[1]பொழிந்தார். [2]சொரிந்த. [3]பாமரு, பாமமாக். [4]ஆர்க்க. [5]கூறினர். [6]சனகனின்றென். [7]என்றான், என்பார், என்றார். (784)

37.—நகரத்தாரின் மகிழ்ச்சி.

மாலையு மிழையுஞ் சாந்துஞ் சுண்ணமும் வாச நெய்யும்
வேலைவெண் முத்தும் பொன்னுங் காசு [1]நுண் டுகிலும் வீசிப்
பால்வளை [2]யமிழ்த ளாய பல்லியந் துவைப்ப முந்நீர்
[3]ஓல்கிளர்ந் துவாவுற் றென்ன வொலிநகர் கிளர்ந்த தன்றே.

(இ - ள்.) நகர் - அந்தமிதிலாநகரமானது,—பால் வளை-வெண்ணிறமுள்ள சங்கமும், அமிழ்து அளாய பல் இயம் - அமுதத்தின் இனிமைகலந்த பலவகைவாச்சியங்களும், துவைப்ப - ஒலித்துக்கொண்டிருக்கையில்,—மாலைஉம் - மலர்மாலைகளையும், இழைஉம்-அணிகலங்களையும், சாந்துஉம் - சந்தனத்தையும், சுண்ணம்உம்-நறுமணப்பொடியையும், வாசம் நெய்உம் - நறுமணம் பொருந்திய புழுகையும், வேலை வெள் முத்துஉம் - சமுத்திரத்தில் தோன்றும் வெண்ணிற முத்தையும், பொன்உம் - ஸ்வர்ணத்தையும், காசுஉம்-இரத்தினங்களையும், நுண் துகில்உம்-நுண்ணிய ஆடைகளையும், வீசி-(ஒருவர்க்கொருவர்) வழங்கி,—உவா உற்று-பருவகாலம் வந்ததனால், முந்நீர் ஓல் கிளர்ந்து என்ன - கடல் ஆரவாரத்தால் மிகுந்தாற்போல, ஒலி கிளர்ந்தது—; (எ - று.) அன்றே ஈற்றசை.

இராமபிரான் சிவதநுசைமுறித்ததனால், இனிச் சீதாவிவாகம் நடக்கப் போகின்ற தென்ற பெருமகிழ்ச்சியால் மிதிலாநகரத்தவர் மாலை முதலியவற்றை வீசிப் பேராரவாரஞ்செய்தன ரென்க. வாச நெய்-நறுமணமுள்ள நெய்யென்பாருமுளர். கிளர்ந்து - கிளர்ந்தால் எச்சத்திரிபு: ஓல்-ஓலம்: கடைக்குறை. பி - ம்:—[1]வண். [2]வயிர்க ளார்ப்ப. [3]ஓலம்வந்து, ஓல்வளைந்து. (785)

38.—மாதரின் கொண்டாட்டம்.

[1] நல்லியன் மகர வீணைத் தேனுக நகையுந் தோடும்
[2] வில்லிட வாளும் [3] வீச [4] வேல்கிடந் தனைய நாட்டத்து
[5] எல்லியன் மதிய [6] மன்ன முகத்திய [7] ரெழிலி தோன்றச்
சொல்லிய பருவ நோக்குந் [8] தோகையி னாடி னரே.

(இ - ள்.) வேல் கிடந்து அனைய நாட்டத்து - வேற்படை தங்கினாற்போன்ற கண்களையும், எல் இயல் மதியம் அன்ன முகத்தியர் - இரவில் விளங்குகின்ற சந்திரன்போன்ற முகத்தையுமுடைய மங்கைமார்,—சொல்லிய பருவம்-(மேகம் வருமென்று) சொல்லப்பட்ட கார்ப்பருவத்தில், எழிலி தோன்ற-(வானத்தில்) மேகங்கள் காணப்பட, நோக்கும்-(அதனைக்) காண்கின்ற, தோகையின் - மயிலைப் போல,—நல் இயல் மகரம் வீணை தேன் உக-நல்லிலக்கணமமைந்த மகரயாழின் ஓசையாகிய தேன் சிந்தவும், நகைஉம் தோடுஉம்-முறுவலும் காதணியும், வில்இட (உம்) வாள்உம்வீச - (முறையே) ஒளியைப்பரப்பி வீசவும், ஆடினார்-ஆடினார்கள்; (எ-று.)

கார்ப்பருவத்தில் எழிலி தோன்றத் தோகை ஆடுவதுபோல் வில்லிறுத்த ஓசைகேட்டு மங்கையர் ஆடினரென்க. வில்லையும் வாளையும் வீசிக்கொண்டு மகளிராடினரென்ற பொருளும் இதில் தோன்றவைத்த நயம் காண்க. பல்லொளி இடைவிடாது தோன்றுவதை 'வில்லிட' என்றும், தோடு என்னும் காதணியினொளி விட்டு விட்டுப் பிரகாசித்தலை 'வாள்வீச' என்றும் கூறினர். சொல்லிய பருவம்-கணவர் மீண்டுவருவதாகச் சொல்லிய காலம் எனினுமாம்.
பி-ம்:—[1] நல்லியாழ். [2] வில்லிடை. [3] வீசி. [4] வெயில். [5] எல்லையின். [6] என்ன. [7] எழினி, எழிலில். [8] தோகையர். (786)

39.—மகிழ்ச்சியால் மாதர் புலவி நீங்குதலும், வறியவர் வேந்தன்செல்வத்தை வாரிக்கொள்ளலும்.

உண்ணற வருந்தி னாரிற் சிவந் [1] தொளிர் கருங்கண் மாதர்
புண்ணுறு புலவி [2] நீங்கக் கொழுநரைப் [3] புல்லிக் கொண்டார்
[4] வெண்ணிற மேக [5] மேன்மேல் விரிகடல் [6] பருகு மாபோல்
[7] மண்ணுறு வேந்தன் செல்வம் வறியவர் முகந்து கொண்டார்.

(இ - ள்.) உண் நறவு அருந்தினாரில்-(அறிவைக்) கொண்டு போய்விடுகின்ற கள்ளைக் குடித்தவர்போல, சிவந்து ஒளிர் கருகண்-செந்நிறங்கொண்டு விளங்குகின்ற(மையெழுதியதனாற்)கறுத்துள்ள கண்களையுடைய, மாதர்-மகளிர், புண் உறு-(மனம்) புண்பட்டுள்ள, புலவி - (தாம்கொண்ட)ஊடல், நீங்க - நீங்கியதனால், கொழுநரை (தமது) கணவரை, புல்லிக்கொண்டார்-தழுவிக் கொண்டார்கள்; மேல் மேல் விரி கடல்-மேலும் மேலும் (அலை) விரிகின்ற கடலிலே, வெள் நிறம் மேகம் பருகும் ஆ போல்-வெண்ணிற மேகம் (நீரைப்) பருகுவதுபோல, மண்ணுறு வேந்தன் செல்வம்-அழகிய [நியாய வழியாகச் சம்பாதித்துள்ள]சனகராசனது செல்வத்தை, வறியவர் - தரித்திரர், முகந்துகொண்டார்-(அரசன் கட்டளைப்படியே) வாரிக் கொண்டு செல்லலானார்; (எ - று.)

வில்லிறுத்த பேரோசை செவிப்படவே பேரச்சமடைந்த மாதர் தம்புலவி நீங்கிக் கணவரைத் தழுவிக்கொண்டனர்: இனி, பேரோசை செவிப்பட்டதனாற் சீதையின் மணம் நிகழப்போகின்ற தென்ற பெருமகிழ்ச்சியாற் புலவிகொண்ட மகளிரும் அப்புலவி நீங்கித் தம்கணவரைத் தழுவிக்கொண்டன ரென்பது முன்னிரண்டடியின் பொருள் எனினுமாம். உட்புறம் முழுவதுஞ் சிவந்து இமைப்பக்கம் கறுத்திருந்த கண்ணென்பார் 'சிவந்தொளிர் கருங்கண்மாதர்' என்றார். மகளிர்க்குப் புலவியினாற் கண்கள் சிவத்தல், இயல்பு. சிவந்தொளிர்கருங்கண்--முரண்டொடை. மண்ணுறுவேந்தன்-பூலோகவரசனுமாம். பி-ம்:-[1]ஒளிதருங். [2]நீக்கி, நீங்கி. [3]தழுவி. [4]விண்ணிறை. [5]எல்லாம், மெல்ல. [6]விழுங்கும். [7]மண்ணுறை, மண்ணிறை. (787)

40.—பலவகைப்பாடல்கள் ஆங்குநிகழ, வானவர் வியப்போடிருத்தல்.

[1]வயிரியர் மதுர கீதம் மங்கைய [2]ரமுத கீதம்
[3]செயிரியர் மகர யாழின் றேம்பிழி தெய்வ கீதம்
[4]பயிர்கிளை வேயின் கீத மென்றிவை பருகி [5]விண்ணோர்
[6]உயிருடை யுடம்பு மெல்லா மோவிய [7]மொப்ப நின்றார்.

(இ - ள்.) வயிரியர்-கூத்தர்களுடைய, மதுரம் கீதம் - இனிய பாடல்களும், மங்கையர் அமுதம் கீதம் - மடந்தையரின் இனிய பாடல்களும், செயிரியர் மகரயாழின் தேம் பிழி தெய்வம் கீதம் - நரம்புக்கருவியை வாசிப்பவரின் மகரயாழிலிருந்து தோன்றுகின்ற இனிமை சொட்டுகின்ற தெய்வத்தன்மையுள்ள பாடல்களும், வேயின் பயிர் கிளை கீதம் - புல்லாங்குழலொலிக்கிற பல்திறப்பாட்லும், என்ற இவை - என்ற இவற்றை, பருகி - செவியாரக்கேட்டு, விண்ணோர்-தேவர்கள், உயிர் உடை உடம்பு எல்லாம்உம்-உயிரையுடைய சரீரமுழுவதும், ஓவியம் ஒப்ப நின்றார் - சித்திரத்துக்குச் சமானமாக [அசைவற்று] நின்றார்கள்; (எ - று.)

'சீதையின் விவாகம் விரைவில் நிகழும்' என்ற பெருமகிழ்ச்சியால் பாணர் முதலியோரின் கீதம் நிகழ, அந்தப் பாடலின் இனிமையி லீடுபட்டு விண்ணவர் எழுதுசித்திரங்கள்போல நின்றன ரென்க. வேய் இன் கீதம் என்றும் பிரிக்கலாம். கிளை - ஏழுசுரங்களிலொன்றுமாம். பி - ம்:—[1]வயிரயாழ். [2]பாடன்முற்றச். [3]செயிரறு. [4]பயிரியர். [5]உண்ண. [6]உயிரிடை. [7]என்ன. (788)

41.—வானவமகளிர் ஆங்குவந்து மானுடமகளிரைத் தழுவிநிற்றல்.

ஐயன்வில் [1]லிறுத்த வாற்றல் காணிய வமரர் [2]நாட்டுத்
தையலா ரிழிந்து பாரின் மகளிரைத் தழுவிக் [3]கொண்டார்
செய்கையின் வடிவி [4]னாடல் [5]பாடலிற் றெளித றேற்றார்
மையரி [6]நெடுங்க ணோக்க மிமைத்தலு [7]மயங்கி நின்றார்.

(இ - ள்.) அமரர் நாட்டு தையலார் - விண்ணுலகத்து மடந்தையர்,—ஐயன் வில் இறுத்த ஆற்றல் காணிய - இராமபிரான் வில்லைமுறித்த வல்லமையைக் காணும்பொருட்டு, இழிந்து - (வானத்திலிருந்து பூமியின்மீது) இறங்கி, செய்கையின் வடிவின் ஆடல் பாடலின் தெளிதல் தேற்றார்-(செய்யுஞ்) செய்கையினாலும் வடிவத்தினாலும் ஆடல்பாடல்களினாலும் (தமக்கும் அந்தமண்ணுலகத்துமகளிர்க்கும்) வேறுபாடு உணரமுடியாதவர்களாகி, பாரின் மகளிரை - மண்ணுலகமடந்தையரை (வானுலகத்து மடந்தையரென்றே கருதி), தழுவிக்கொண்டார் - (உவகைமிகுதியால்) ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள்; (அப்போது அம்மடந்தையரின்), மை அரி நெடு நோக்கம் கண் - மையுண்டு செவ்வரி பரந்து நீண்ட பார்வையுள்ள கண்கள், இமைத்தலும் - இமை கொட்டினவுடனே, மயங்கிநின்றார் - (வானவமகளிர் கண்கொட்டு கின்றார்களே! இதுஎன்ன புதுமை!! என்று) பிரமித்து நின்றார்கள்;

வானத்தினின்று இறங்கிவந்த வானவமகளிர், செய்கை முதலியவற்றால் ஒத்திருந்தமைபற்றிப்பூவுலகத்து மடந்தையரைத் தம்மவரெனக்கருதி உவகைமிகுதியால் தழுவிக்கொண்டு, அம் மகளிர் கண்ணிமைத்தலும் திகைத்து நின்றனரென்க: மயக்கவணி. பி-ம்:—[1]எடுத்த. [2]நாட்டில். [3]நின்றார். [4]நாடிப், ஆடற். [5]தேவருந். [6]மலர்க்கணோக்கி, மலர்க்கணோவாது. [7]மயக்கந்தீர்ந்தார். (789)

42.—இரண்டு கவிகள்—அந்நகரத்தார் பேருவகைகொண்டு கூறியன.

தயரதன் புதல்வ னென்பார் தாமரைக் கண்ண னென்பார்
புய[1]லிவன் மேனி யென்பார் பூவையும் பொருவு மென்பார்
[2]மயலுடைத் துலக மென்பார் [3]மானுட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகுங் கடவுளே காணு மென்பார்.

(இ - ள்.) (அந்தநகரத்துச்சனங்களிற் சிலர்),—'(இவன்), தயரதன்புதல்வன்,—' என்பார் - என்றுகூறுவார்கள்; (சிலர்), தாமரைக்கண்ணன் என்பார் -'(இவன்) செந்தாமரைக்கண்ணனாகிய திருமாலே' என்பார்கள்; (சிலர்), இவன்மேனி புயல் என்பார் - 'இவனது திருமேனி காளமேகமே' என்பார்; பூவைஉம் பொருவும் என்பார் - (அன்றியும்) 'காயாம்பூவையும் ஒத்திருக்கும்' என்பார்கள்; (சிலர்), '(இவன்), மானுடன் அல்லன் - மனிதனல்லன்,' என்பார்—; (பின்னையாவனென்றால்),—கயல் பொரு கடலுள் வைகும் கடவுள்ஏ காணும் என்பார் - 'கயல்மீன்கள் (ஒன்றோடொன்று) பொருகின்ற திருப்பாற்கடலுள் தங்கிநிற்கின்ற திருமாலேயாவன்' என்பார்; மயல் உடைத்து உலகம் என்பார் - '(இவனை) மானுடனென்று சொல்லுகின்ற உலகத்தவர் அறியாமையையுடையவராவர்' என்பார்; (எ-று.)—பூவையும், உம்மை - இறந்ததுதழுவியது. பி-ம்:-[1]அவன்.[2]பயன். [3]மானிடன்,பாரினன். ()

43. நம்பியைக் [1]காண நங்கைக் காயிர நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்னதே [2]யால்

தம்பியைக் [3]காண்மினென்பார் தவமுடைத் துலகமென்பார்
[4]இம்பரிந் நகரிற் றந்த முனிவனை [5]யிறைஞ்சு மென்பார்.

(இ - ள்.) (மற்றுஞ்சிலர்),—'நம்பியை காண - ஸ்ரீராமனது வடிவழகைக் காண்பதற்கு, நங்கைக்கு - சீதாபிராட்டிக்கு, ஆயிரம் நயனம் - ஆயிரங் கண்கள், வேண்டும்—; கொம்பினை - கொம்பு போன்ற சீதையின்வடிவழகை, காணும் தோறும் - பார்க்கும்போதெல்லாம், குரிசிற்கும் - ஆண்களிற்சிறந்தவனான இராமபிரானுக்கும், அன்னதுவே - (ஆயிரங்கண்கள்வேண்டுமென்பது) அத்தன்மையதே; தம்பியை காண்மின் - (தமையனிருக்கட்டும்: அவனது) தம்பியான இவன் வடிவழகு (எவ்வாறுள்ளது?) அதனைக் காண்மின்கள், என்பார் - என்று சொல்வார்; உலகம் தவம் உடைத்து என்பார் - '(இப்படிப்பட்டபேரழகுள்ளவர்களைப்பெற்றதனால்) இந்தப்பூலோகம் தவஞ்செய்துள்ளது' என்பார்: (மற்றுஞ்சிலர்), 'இம்பர் இவ்வுலகில், இ நகரில்-இந்த மிதிலாபுரியில், தந்த - (இக்குமாரர்களை) அழைத்துவந்த, முனிவனை - விசுவாமித்திர முனிவனை, இறைஞ்சும் - (யாவரும்) கும்பிடுங்கள்,' என்பார்—;

நம்பிக்கு உவமை கூறாமையாலும், சீதையை 'கொம்பினை' என்று உவமைச்சொல்லாற் கூறி 'குரிசிற்கும் அன்னதே' என்று அவள் வடிவழகை அதிதேசத்தாற் கூறியதனாலும், சீதாபிராட்டியைவிட இராமபிரான் அழகுவிஞ்சியவனென்பது, பெறப்படும். இனி, 'காணுந்தோறும்' என்றமையால், சீதையின் ஒவ்வோருறுப்பும் கண்டு முடியாதவாறு பேரழகுபடைத்துள்ளதென்பது பெறப்படுமென்றும், அதுபற்றியே ஏற்றசொல் கிடையாது 'அன்னது' என்றாரென்றும் உரைப்பினும் அமையும்; 'வரம்பில்பேரழகினாள்' என்றார் முன்னரும். இப்படிப்பட்ட மஹாபுருஷர் தோன்றுவதற்குப் பூமிதேவின் நற்றவமே காரணமென்க. பேரழகுடைய அரசகுமாரர்களை இங்கு அழைத்துக்கொண்டுவந்தவரிடத்தில் நன்றிபாராட்டி வணங்கவேண்டுமென்றனர். பி - ம்:—[1]காணும். [2]ஆம். [3]காணீர், பாரீர். [4]இம்பரிலிணங்கித், இம்பரிவ்வுலகில். [5]இறைஞ்சீர். (791)

44.—கவிக்கூற்று: இனிச் சீதையின் செய்தி சொல்வோமெனல்.

இற்றிவ ணின்ன தாக மதியொடு மெல்லி [1]நீங்கப்
பெற்றுயிர் பின்னுங் காணு [2]மாசையாற் [3]சிறிது [4]பெற்ற
சிற்றிடைப் பெரிய கொங்கைச் சேயரிக் [5]கரிய வாட்கண்
பொற்றொடி மடந்தைக் கப்பா லுற்றது புகல [6]லுற்றும்.

(இ - ள்.) இவண் - இவ்விடத்தில் [இராசசபையில்], இற்று- இச்செய்தி, இனனது ஆக - இப்படியிருக்க, மதியொடும் - சந்திரனோடும், எல்லி - இரவு, நீங்கப் பெற்று - கழியப்பெற்று, உயிர் பின்னும் காணும் ஆசையால் - இராமபிரானை மறுபடியும் காண வேணுமென்கிற விருப்பினால், (உயிர்) சிறிது பெற்ற - உயிரைச் சிறிது பெற்றுள்ள, சிறு இடை பெரிய கொங்கை சேய் அரி கரிய

வாள் கண் பொன் தொடி மடந்தைக்கு - சிறுத்த இடையையும் பெருத்துள்ள தனங்களையும் செவ்வரிபெற்றுக் கறுத்த வாளாயுதம் போன்ற கண்களையும் பொன்னாற்செய்த தொடி யென்னும் வளையலையுமணிந்த பெண்ணாகியசீதைக்கு, அப்பால் - அவ்விடத்து [கன்னிமாடத்து], உற்றது-நேர்ந்ததை, புகலல் உற்றாம்—; (எ-று.)

இரவிற் சீதைவருந்தியதை மிதிலைக்காட்சிப்படலத்திற் காணலாம். சீதை வருந்தியவண்ணமிருக்கையில் பெருவேதனைக்குக் காரணமான சந்திரனும் இரவும் நீங்க, மீண்டும் இராமனைக்காணலா மென்ற ஓராசையால் போகுந் தருணத்ததான உயிர் சற்றுத் தங்கப் பெற்ற சீதைக்கு உற்றதை இனிக் கூறுவோமென்று கவி கூறுகின்றனர். சீதை ஸ்ரீராமனைத் தன்னுயிரென்றே கருதினளாதலால், 'உயிர்' என்றே கூறினர். ஆக - வியங்கோண்முற்றுமாம். மூன்றுமடியில் தொடைமுரண் காண்க. பி - ம்:—[1]நீங்கிப். [2]ஆசையின். [3]சிறிதும், பிறிது. [4]போற்ற. [5]நெடிய. [6]உற்றேன். (792)

45.—சீதை பளிக்குமாடத்து மற்றோர் மலரணையிற் சேர்தல்.

ஊசலா டுயிரி னோடு முருகுபூம் பள்ளி நீங்கிப்
[1]பாசிழை மகளிர் சூழப் [2]போயொரு பளிக்கு மாடக்
காசிரு மரையின் பொய்கைச் சந்திர காந்த மீன்ற
[3]சீதநீர் [4]தெளித்த மென்பூஞ் [5]சேக்கையை யரிதிற் சேர்ந்தாள்.

(இ - ள்.) (சீதாபிராட்டியானவள்),—ஊசல் ஆடு - போவதும் வருவதுமான நிலையிலுள்ள, உயிரினோடும்-பிராணனுடனே, உருகு பூ பள்ளி நீங்கி-(தன்னுடம்பு) உருகுதற்குக்காரணமான மலர்ப்படுக்கையை விட்டு, பசு இழை மகளிர் சூழ போய்-பசும்பொன்னாபரணங்களைப்பூண்ட மகளிர் சூழ்ந்துவர (அவ்விடத்தைவிட்டுப்) போய்,—காசு இல் தாமரையின் பொய்கை - குற்றமற்ற தாமரைத் தடாகத்தின கரையிலுள்ள, ஒரு பளிங்குமாடம் - ஒருபடிகத்தினாலியன்ற மாளிகையில், சந்திரகாந்தம்ஈன்ற சீதம்நீர் தெளித்த மெல பூ சேக்கையை - சந்திரகாந்தக்கற்கள் வெளிக் கான்ற குளிர்ந்தநீரைத் தெளித்த மெல்லியபூம்படுக்கையை, அரிதில் சேர்ந்தாள்—;(எ-று.)

முன்னிருந்த மலர்ப்பள்ளியை விட்டுச் சீதை தாமரைத் தடாகத்தின் கரையிலிருக்கும் ஒரு பளிக்குமாடத்தில் அமைத்துள்ள தாய் அத்தடாகக்கரையிற்பதித்த சந்திரகாந்தக்கற்கள் வெளிக்கக்குகின்ற குளிர்ந்தநீர் தெளிக்கப்பெற்ற மலர்ப்படுக்கையை மிகஅரிதிற் சேர்ந்தனளென்க. உருகுபள்ளி-தன்னுடலின் வெப்பத்தா லுருகுகின்ற படுக்கை யென்றுமாம். இனி, தாமரையின் பொய்கை - தாமரைப் பொய்கையினிடையே, பளிக்குமாடம் - பளிங்குமாளிகையிலமைத்த, சேக்கை எனினுமாம். சந்திரகாந்தம் - சந்திரனைக்கண்ட இடத்து நீரைக்காலுவதோர் கல் விசேடம். பளிக்கு-இனவன்றொடர். பி - ம்:—[1]பாசிழையவர்கள். [2]போயிடைப். [3]தேசுலாந், தேசுநீர். [4]அளிக்கும். [5]சேக்கைய தருகிற், சேக்கையினெய்திச். (793)

46.—ஒன்பது கவிகள்-பிரிவித்துயரால் சீதை பலவகையாக இரங்குவன.

பெண் [1]ணிவ [2]ணுற்ற தென்னும் பெருமையா லருமை [2]யான
வண்ணமு மிலைக ளாலே காட்டலால் வாட்டந் [4]தீர்ந்தேன்
[5]தண்ணறுங் கமலங் காளென் றளிர்நிற முண்ட [6]கண்ணி
னுண்ணிறங் [7]காட்டி னீரென் னுயிர்தர வுலோவி னீரே.

(இ - ள்.) தண் நறு கமலங்காள் - குளிர்ந்த நன்மணமுள்ள தாமரைக்கொடிகாள்! 'பெண் - ஒரு பெண்ணுக்கு, இவண் - இப்போது இவ்விடத்தில், உற்றது - (பிரிவுத்துயர்) நேர்ந்துள்ளது,' என்னும் - என்று கருதுகின்ற, பெருமையால் - பெருந்தன்மை (நுமக்கு) உண்டானதால், அருமை ஆனவண்ணம்உம்-(அவ்விராமபிரானது காணக்கிடைத்தற்கு) அரிய திருமேனி நிறத்தையும்,இலைகளாலே—, காட்டலால்-காட்டுவதால், வாட்டம் தீர்ந்தேன்-மனவாட்டந் தீரப்பெற்றேன்; (அன்றியும்), நீர்—, என் தளிர் நிறம் உண்ட- என்னுடைய தளிர்போன்ற அழகிய நிறத்தைக் கவர்ந்து சென்ற, கண்ணினுள் - (அவ்விராமபிரானது) திருக்கண்களிலுள்ள, நிறம் நிறத்தையும், காட்டினீர்-(உங்களது மலர்களாலே) காணச்செய்தீர்; (அங்கன்காணச் செய்தும்), என் உயிர் தர - எனது உயிராகிய இராமனைத் தருதற்கு, உலோவினீரே - பின்வாங்கினீரே! (இது என்ன காரணம்)? (எ - று.)

தாமரைப்பொய்கையை யடுத்த இடத்து அமைத்த பூஞ்சேக்கையைச் சேர்ந்த சீதை, அந்தப் பொய்கைத்தாமரைகளை நோக்கிக் கூறுகின்றாள்: தாமரையின் இலைகள் அவ்விராமனுடைய திருமேனிக்கு ஒப்பாக இருத்தலாலும் தாமரைமலர் அப்பிரானுடைய திருக்கண்கள்போலிருத்தலாலும், அப்போலிப்பொருளைக் கண்டு தான் சிறிது ஆறியிருக்க இடனேற்பட்டும், இராமபிரானைக் காணப்பெறாத குறையால், 'என்னுயிர்தர வுலோவினீரே' என்கிறாள். காணுமற்போனவற்றில் நிறத்தையும் கண்களையும் பொய்கை காட்டவே, முக்கியமான தன்னுயிரும் அங்கு இருக்கவேணுமென்று கருதியதனால், உயிரை ஏன் காட்டவில்லையென்று பொய்கையை வினவுகின்றாள்: இதனால், என்னுயிரையும் தரவேணுமென்று தான் வேண்டுவது குறிப்பிக்கப்படும். 'என்னுயிர்' என்றது, இராமனை. திருக்கண்கட்கு மலர் ஒப்பாவது பிரசித்தமாதலால், மலர்களால் என்பதைக் கூறாது 'கண்ணினுள் நிறம்காட்டினீர்' என்கிறாள். தான் அழகழிந்து உடல்முழுதும் பசலைபோர்க்கும்படி தனமனத்தை அவனுடைய கண்ணழகு கவர்ந்ததனால், 'தளிர்நிறமுண்ட கண்' என்றது. திருமாலின் திருமேனி நிறத்துக்கும் திருக்கண்கட்கும் தாமரையினிலையும் மலரும் உவமையாவதை, "மாயக்கூத்தா" என்ற பதிகப்பாசுரத்திலும் காண்க. இனி, வண்ணத்தை இலைகளாலே காட்டி வாட்டந்தவிர்த்த நீர், அத்திருக்கண்களின் அழகைக் காட்டினால்தான் ஆறியிருக்கலாமென்பாள், கண்ணினழகைப்பெறாத மலர்களைக்கொண்ட தாமரைக்கொடியை நோக்கி, 'கண்ணின் உள்நிறங்காட்டி என்னுயிர் தரவுலோவினீரே' என்று சீதை கூறுகின்றாளென்பாருமுளர்:

இப்பொருளில், சீதை தன்னுயிரையே என்னுயிரென்கின்றாள். இவண் உற்றது பெண் - இங்கேவந்ததுபெண், எனும் - என்று கருதுகிற என உரைத்தலும் ஒன்று. வண்ணமும், உம்மை - எச்சப்பொருளது. உலோவுதல்-உலோபகுணங்கொள்ளுதல். பி-ம்:—[1] அவண், இவள், [2] உற்றவாறுபேணியேகருமை. [3] ஆன்ற. [4] தீர்த்த. [5] தண்ணுறுங். [6] கண்ணன். [7] காட்டிநீரென். (794)

47\. நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும் [1] வாளி யூடுலாவு தூணியும்
வா[2] ணிலாவி [3] னூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாகினாவி காணலாகு [4] மேகொலாம்.

(இ - ள்.) (அந்த ஸ்ரீராமனுடைய தோளழகைக்கண்டு), நாண் உலாவு மேருவோடு - வெட்கங்கொள்கிற மேருமலைபோன்ற வில்லுடனே, நாண் உலாவு-(அவ்வில்லின்)நாணியில்உலாவுகின்ற, பாணிஉம் - திருக்கையும், தூண்உலாவு தோள்உம் - தூணை யொத்த தோள்களும், வாளி ஊடு உலாவு தூணிஉம் - அம்புகள் உட்புறத்திலே தங்கியுள்ள தூணீரமும், வாள் நிலாவின் நூல் உலாவு மாலை மார்புஉம்-ஒளி பொருந்திய நிலவைப்போன்ற பூணூல் அலைகின்ற வெற்றி மாலைசூடிய திருமார்பும், மீளஉம்காண லாகும் ஆகின்—, ஆவி காணல் ஆகும்-என்னுயிரைக் காண்ட லென்பது நேர்ந்ததாகும்; (எ-று.)

வில்லுங் கையுமாகியும், தூணியும் தோளுமாகியும், பூணூலும் மார்புமாகியும் உள்ளது, என்னுடைய ஆவி. அவ்வாறான ஆவியைக் காணின், அப்போதுதான் என்னாவியைக் கண்டதாகுமென்றவாறு; அவ்வாறான ஆவி மீளக் காணக்கிடையாதாயின் உயிரிழப்பேனென்று கூறியவாறாயிற்று. "கொங்கைமேல்...ஒரு நாள், தங்குமேலென்னாவி தங்கும்" என்ற ஸ்ரீ ஆண்டாள் பாசுரம் இங்கு நினைவுக்கு வருகிறது. சிவதநுசாக இருந்தமேருமலை அச்சிவதநுசைப் பரிசித்தமாத்திரத்தால் இறச்செய்த கையைக் கண்டால் நாணுமென்பார்ள், 'நாணுலாவு' என்று மேருவுக்கு அடைமொழி கொடுத்தாள். இனி, 'நாணுலாவுமேருவோடு-நாண்பூண்ட மேருவை யொத்த தனுசுடனே, நாண் - நாணிலும், உலாவு - செல்லுகின்ற, பாணிஉம் - கைகளும் என்றுமாம்: ஸ்ரீராமனது திருக்கைகளில் ஒன்று வில்லைப் பிடிக்க, மற்றொரு கை டங்காரத்தொனியை யெழுப்புமாறு வில்லின்நாணியிற் செல்லுமாதலால், 'மேருவோடு நாணுலாவுபாணி' எனப்பட்டது. தூணுலாவு, உலாவு - உவமவாசகம். உலாவு என்பது வெவ்வேறு பொருளில் வந்தது-சொற்பொருட்பின் வருநிலையணி. பி-ம்:—[1] வாளியோடு. [2] நிலாவு, நிலாவி. [3] ஊடுலாவு. [4] ஆகுமே. (795)

48\. விண்டலங் [1] கலந்திலங்கு திங்களோடு [2] மீதுசூழ்
வண்டலம் பலங்கறங்கு பங்கியோடும் வார்சிலைக் [ளாவியை
கொண்டலொன் றிரண்டுகண்ணின் மொண்டுகொண்டென்
உண்டதுண்டெ னெஞ்சினின்று முண்ட[3] தென்று முண்டரோ.

(இ - ள்.) விண் தலம் கலந்து இலங்கு -ஆகாயத்தினிடத்தைச் சேர்ந்து விளங்குகின்ற, திங்களோடுஉம் - சந்திரனோடும்,

மீது சூழ் வண்டு அலம்பு அலங்கல் தங்கு பங்கியோடுஉம்-(தேனை ப்பருக) மேலே மொய்க்கின்ற வண்டு ஒலிக்கின்ற மாலைகள் தங்கிய குஞ்சியோடுங்கூடிய, வார் சிலை கொண்டல் ஒன்று - நீண்ட வில் லைத்தரித்த மேகமொன்று, இரண்டு கண்ணின் - (தன்னுடைய) இரண்டு கண்களினால், என் ஆவியை மொண்டு கொண்டு - என் னுடைய உயிராகிய நீரை முகந்து, உண்டது உண்டு - பருகிவிட்ட தென்பது நிகழ்ந்தது துண்டு; அது-அந்தமேகம், என் நெஞ்சின்—, இன்றுஉம் உண்டு - (நீங்காமல்)இப்போதும் இருக்கின்றது; என்று உம் உண்டு - என்றைக்கும் தங்கியிருக்கும்; (எ-று.)

முகத்தை 'திங்கள்' என்றும், இராமபிரானை 'வார்சிலைக் கொண்டல்' என்றும் உருவகத்தாற் கூறினாள். 'ஆவி' என்று நீர் நிலைக்குப் பெயரிருத்தலால், 'கடலைப்பருகும் மேகம் பரந்த ஆவி யைக் கடலென்றுகருதி மொண்டுஉண்டது' என்று ஒரு தொனிப் பொருள் இங்குக்கூறுவர். மீது-திங்களாகிய முகத்துமீது எனினு மாம். பி-ம்:—[1]கிடந்து. [2]வீதி. [3]உண்டது, ஒன்றும். (796)

49. பஞ்சரங்கு தீயினாவி [1]பற்றநீடு கொற்ற[2]வில்
வெஞ்சரங்க ணெஞ் [3]சரங்க வெய்யகாம னெய்ய[4]வே
சஞ்சலங்க லந்தபோது தையலாரை யுய்யவந்து
அஞ்சலஞ்ச லென்கிலாத வாண்மை யென்னவாண்மையோ.

(இ - ள்.) வெய்ய காமன்-கொடுமையையுடைய மன்மதன், நீடு கொற்றம் வில் - நீண்ட வெற்றிபொருந்திய வில்லினால், வெம் சரங் கள்-கொடிய அம்புகளை, பஞ்சு அரங்கு தீயின் - பஞ்சையழிக்கின்ற அக்கினிபோல, ஆவி பற்ற - என்னுயிரைப்பற்றும்படி, நெஞ்சு அரங்க - (அவ்வுயிர் தங்கிய) மனத்து அழுந்த, எய்ய - பிரயோகித்த தால், சஞ்சலம் கலந்த - துன்பம் வந்தடைந்துள்ள, போது - இப் போது, உய்ய வந்து - (நான்) உயிர்பிழைக்கும்படி, (என்னருகே) வந்து, தையலாரை-(அவ்வாறு வருந்துகின்ற) பெண்பாலாகிய என் னைக்குறித்து, அஞ்சல் அஞ்சல் என்கிலாத - 'அஞ்சாதே! அஞ் அஞ்சாதே!!' என்றுசொல்லி அபயமளிக்கமாட்டாத, ஆண்மை—, என்ன ஆண்மைஓ - என்ன ஆண் தன்மையோ? (எ - று.)

'வருந்துகின்ற தையலாரை யணுகி அஞ்சலென்று அபய மளிப்பதே ஆண்மைக்கு அழகு ஆகையால், 'அங்ஙனஞ்செய்யாத இந்தராமனது ஆண்மை என்ன ஆண்மை!' என்று வெறுப் பினால் இயற்பழிக்கின்றனள், சீதை யென்க. நான்காமடியில் சேமலென்னனவனொருவன்'' என்ற நாச்சியார்திருமொழி நினை வுக்கு வருகின்றது. 'தையலாரை' என்று, சீதை, தன்னைப் படர்க்கைப்பன்மையாற் கூறுகின்றாள். பி-ம்:—[1]பற்றிநின்று, பற்றி யோடு. [2]வாய், வார். [3]இரங்க. [4]ஓர். இச்செய்யுள் ''இளைக்கலாத'' (50) என்றதன்பின் சிலபிரதிகளில். (797)

50. [1]இளைக்கலாத கொங்கைகா ளெழுந்துவிம்மி யென் [2]செய்தீர்
முளைக்கலா மதிக்கொழுந்து போலும்வாண் முகத்தினான்
[3]வளைக்கலாத விற்கையாளி வள்ளன்மார்பி னுள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் [4]செய்ம்மினே.

(இ - ள்.) இளைக்கலாத கொங்கைகாள்-இளையாமலிருக்கின்ற [மேன்மேற்பருக்கின்ற] தனங்களே! எழுந்து விம்மி-மேன்மே லெழுந்து பருத்து, என் செய்தீர்-என்ன காரியஞ்செய்தீர்? முளைக் கலா மதி கொழுந்து போலும் வாள் முகத்தினன் - (வானத்தில்) தோன்றுதலில்லாத [என்றும் ஒருபடியாயுள்ள] சந்திரனை யொத்த ஒளியுள்ள முகத்தையுடையவனும், வளைக்கலாத வில் கை ஆளி - (பிறரெவராலும்) வளைக்கமுடியாதபடி அரிதாயிருந்த சிவதநுசை (எடுத்து வளைத்துக்) கையாண்டவனுமாகிய, வள்ளல் - உதாரகுணம்படைத்த ஸ்ரீராமனுடைய, மார்பினுள்-, உற திளைக்கல் ஆகும் ஆகில்-இறுகத் தழுவுதல் (உங்கட்குக்) கைகூடும் வகை ஏற்படுமாயின், ஆன - (அதற்கு) ஏற்ற, செய்தவங்கள்-செய்யத்தக்க தவங்களை, செய்ம்மின்—; (எ - று.)

கொங்கை முளைத்தெழுவதன் பயன் அவன் மார்பகத்திற் புல்லப்பெறுதலேயாதலால், அந்தநிலை கிடைத்தற்கு ஏதேனும் உபாயம் இருப்பின் அதனைச் செய்யுங்கள்; அங்ஙனம் யாதுஞ் செய்யாது நீவிர் எழுந்து விம்முவதாற் பயனில்லை யென்று தனது பருத்தெழுந்த தனங்களை நோக்கிக் கூறுகின்றனள், சீதையென்க. முளை கலா மதி கொழுந்து என்று பிரித்து - இளஞ்சந்திரனை நெற்றிக்குஉவமை கூறினமைதனக் கொள்வாருமுளர். "கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர்குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யுந் தவந்தானென்" என்ற நாச்சியார்திருமொழியை நினைக்க. பி-ம்:—[1] இளைக்கலான. [2] செய்வீர். [3] வளைக்கலான. [4] செய்ம்மினோ, சேர்மினே. (798)

51. எங்குநின் றெழுந்ததிந்த விந்து வந்[1]தெ னெஞ்சுலா
அங்கி[2]யன் றனங்கனெய்த வம்பின்[3]வந்த சிந்தைநோய்
பொங்குகின்ற கொங்கைமேல் விடம்பொழிந்த தென்னினும்
கங்குல்வந்த [4]திங்களன் றகங்களங்க மில்லையே.

(இ - ள்.) என் நெஞ்சு உலா வந்து-என்மனத்திலே பவனிக்காக வந்து, அங்கு - அவ்விடத்துத்தானே, இயன்று - (அச்செயலுடன்) பொருந்தி, அனங்கன் - மன்மதன், எய்த - செலுத்திய, அம்பின் - அம்பினால், வந்த-தோன்றிய, சிந்தை நோய் - மனோவியாதி, பொங்குகின்ற - மிக்கு வெளித்தோன்றுகின்ற, கொங்கைமேல் - (என்) தனங்களின்மீது, விடம் பொழிந்தது-, என்னின்உம் - என்றாலும், (இது), கங்குல் வந்த திங்கள் அன்று-(நேற்று) இரவில் தோன்றி வருத்திய சந்திரனன்று; (ஏனெனில்), அகம் - (இதன்) மத்தியில், களங்கம் இல்லை—: இந்தஇந்து-இந்தச்சந்திரன், எங்கு நின்று—, எழுந்தது-தோன்றிற்றோ? (எ - று.)

உருவெளித்தோற்றத்தில் இராம்பிரானது முகசந்திரன் தோன்ற, சீதை 'இந்தச்சந்திரனும் நஞ்சுபொழிந்ததானாலும் நடுவிலே களங்கத்தைப் பெற்றிராமையால், இது நேற்றுஇரவில் தோன்றிய சந்திரனன்று; இந்தச்சந்திரன் இராக்காலமல்லாத இப்போது எவ்வாறு தோன்றிற்றோ!' என்று துயருறுகின்றனளென்க. காமவேதனையால் தனங்கள் வெதும்பித்தோன்றுத

லால், 'சிந்தை நோய் பொங்குகின்ற கொங்கை' எனப்பட்டது. பி-ம்:—[1]நெஞ்சுலாய், எனஞ்சுலா. [2]என்று. [3]வெந்த. [4]திங்களின்னகம், திங்களின்கணங். (799)

52. [1]அடர்ந்துவந் தனங்கனெஞ் [2]சழன்றுசிந்து மம்பெனும்
விடங் [3]குடைந்த மெய்யினின்று [4]வெந்திடா [5]தெழுந்துவெங்
கடந்துதைந்த காரியானை யன்னகாளை [6]தாளடைந்து
உடன்றொடர்ந்து [7]போனவாவி [8]வந்தவாவெ னுள்ளமே.

(இ - ள்.) உள்ளமே - (என்) மனமே! அனங்கன் - மன்மதன், நெஞ்சு அழன்று-மனங்கொதித்து [கோபித்து], அடர்ந்து வந்து - நெருங்கிவந்து, சிந்தும்-சொரிகிற, அம்பு எனும் விடம் - அம்பெனப்படுகின்ற விஷவெள்ளத்தில், குடைந்த - முழுகிய, மெய்யினின்று - உடம்பிலிருந்து, வெந்திடாது எழுந்து - வேகாது தப்புமாறு (அச்சத்தினால்) வெளிப்பட்டு, வெம் கடம் துதைந்த கார் யானை அன்ன காளை தாள் அடைந்து-உஷ்ணமான மதப்பெருக்கு நிறைந்த கறுத்த யானையையொத்த ஸ்ரீராமனது பாதங்களை(ச் சரணமாக) அடைந்து, உடன் தொடர்ந்துபோன - கூடத் தொடர்ந்து சென்ற, ஆவி - என்னுயிர், வந்த ஆ - மீண்டுவந்தவிதம், என் -என்னகாரணம்? (எ-று.)

பிரிவுத்துயரால் அறிவிழந்திருந்த சீதை சற்றுப்பிரஞ்ஞை வர, அதனால் துன்பவுணர்ச்சி தோன்றப்பெற்று, 'போனவுயிர் திரும்பிவராது' என்று உலகத்திற் பிரசித்தமா யிருக்க, அனங்கனெய்த அம்பால் வெந்த உடம்பிலிருந்து தான் வேகாதிருக்குமாறு தப்பியெழுந்த என்னுயிர் தொடர்ந்துசென்று விஷ்ணுபதத்தை [விஷ்ணுபதம் - ஸ்ரீராமன்திருவடி, வானுலகம் என்ற இருபொருளை யுடையது]ச் சரணமாக அடைந்தும், இப்போது அவத்தைபடுமாறு மீண்டுவந்ததே? இது என்ன வியப்பு!' என்று நெஞ்சோடு இரங்கிக் கூறுகின்றனளென்க. இராமபிரானோடு தன்னறிவு முதலியன சென்றதாகக் கீழ்வந்திருத்தல் காண்க. வந்த ஆ-வந்த காரணம் எனினுமாம். பி-ம்:—[1]அடங்க. [2]உழன்று. [3]குடைந்து. [4]வெந்திடைந்து. [5]அழுந்தவே, அழுந்தவெங். [6]காலடைந்து, காறொடர்ந்து, முன்னடந்து, பின்னடந்து. [7]போனதாவி. [8]உய்ந்தவாறு, வந்தவாறு, உயர்ந்தவாறு. (800)

53. விண்ணுளே யெழுந்தமேக [1]மார்பினூலின் மின்னொடிம்
மண்ணுளே யிழிந்ததென்ன வந்துபோன மைந்தனார்
எண்ணுளே [2]யிருந்தபோதும் [3]யாவரென்று [4]தேர்கிலேன்
கண்ணுளே [2]யிருந்தபோது மென்கொல் [5]காண்கிலாதவே.

(இ - ள்.)விண்ணுள் எழுந்த மேகம் - வானத்தில் தோன்றிய மேகமானது, மின்னொடு-மின்னலுடனே, இ மண்ணுள் இழிந்தது என்ன-இந்தப்பூமியிலே யிறங்கியுள்ளதென்று சொல்லும்படி, மார்பின் நூலின் - திருமார்பிலணிந்த முப்புரிநூலுடனே, வந்து - (கன்னிமாடத்தின் முன்பு என்கண் காண) வந்து, போன—, மைந்தனார்-குமாரர், எண்ணுள்-(என்) மனத்திற்குள், இருந்த போதும்—,

யாவர் என்று-(இவர்) யாரென்று, தேர்கிலேன்—: கண்ணுள் ஏ இருந்தபோதும்-(என்) கண்ணுக்கெதிரே காணப்பட்டாலும், காணகிலாத(து)-(இன்னாரென்று) அறிந்துகொள்ள முடியாமைக்குக் காரணம், என் கொல்-? (எ - று.)

சேய்மையிலுள்ள பொருளையும் காணவல்ல கண்ணினுள்ளேயிருப்பவரை இன்னாரென்று காணாமையும், காலத்தாலும் இடத்தாலும் சேய்மையானவற்றையும் அறியவல்ல மனம் தன்னுளளேயிருப்பவரை இன்னாரென்றுதெரிந்து கொள்ளமுடியாமையும் ஒரு வியப்பே என்றவாறு. 'எட்டாச்சேய்மையிலுளள பொருள் கிட்ட வந்து காட்சியளித்தது' என்ற கருத்து, முதலடியில் தோன்றுமென்ப. மின்னின் மார்பினூலினோடு என்று கூட்டியும் உரைப்பர்: அன்னார், மேகம் மண்ணுளே இழிந்தது-மேகம் பூமியிலே மானுட வடிவங்கொண்டு இழிந்ததென்பர். பூணூலைத்தரித்த இராமபிரானுக்கு மின்னோடுள்ள மேகம் உவமை. மிதிலாநகரின் வீதியிற் சென்றபோது இராமபிரானைக் கன்னிமாடத்திலிருந்து கண்ட சீதையின்மனத்திலே கண்டவண்ணமே அவ்வுரு பதிந்திருத்தலால், 'எண்ணுளே யிருந்தபோதும்' என்றும், இப்போதும் கண் முன்னே நிற்பதுபோல அவ்வுருத் தோன்றுவதால், 'கண்ணுள்ளேயிருந்தபோதும்' என்றும் கூறுகின்றாள். இனி, இராமபிரானை இன்னானென்று அறியவேணுமென்று ஆவல் கொண்ட சீதை அங்ஙனம் அறியலாகாமைக்கு வருந்திக் கூறுகின்றனளெனினுமாம். "இன்னாரென்றறியே, னன்னேயாழியொடும், பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை, யின்னாரென்றறியேன்" என்றது, இங்கு நோக்கத்தக்கது. பி-ம்:—[1]மேவுகின்ற. [2]எழுந்த. [3]யாவனென்று, யாவதென்று. [4]ஓர்கிலேன். [5]காணலாவதே. (801)

54. பெய்கடற் பிறந்தயல் [1]பெறற்கொணா மருந்து[2]பெற்று
ஐயபொற் [3]கலத்தொடங்கை [4]விட்டிருந்த [5]வாதர்போல்
மொய் [6]கிடக்கு மண்ணரோண் [7]முயங்கிடாது [8]முன்னமே
கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்ப தென்கொலோ.

(இ - ள்.) பெய் கடல் பிறந்து-(பலவளங்களையும்) தந்த திருப் பாற்கடலிலே தோன்றி, அயல் பெறற்கு ஒணா-வேற்றிடத்துப்பெற முடியாத, மருந்து-தேவாமிருதத்தை, பெற்று-(நல்வினைப் பயனால்) அடைந்தும், (அவ்வமிருதத்தை உடனேயுட்கொள்ளாமல்), ஐய பொன் கலத்தொடு-அழகிய பொற்கலத்தோடு, அம் கை விட்டிருந்த-அழகிய கையினின்று சோர விட்டிட்டிருந்த, ஆதர் போல்-மூடர்போல்,—மொய் கிடக்கும் அண்ணல் தோள்-வலிமை தங்கியிருக்கப்பெற்ற பெருமையிற்சிறந்த ஸ்ரீராமனது தோளை(க் காணப் பெற்றும்), முன்னம் ஏ முயங்கிடாது-(காணப்பெற்ற) அப்போதே தழுவிக்கொள்ளாமல், கைகடக்க-கை கழிந்து போகும்படி, விட்டிருந்து—, கட்டுரைப்பது-(இப்போது)பலமொழிகளைக் கட்டிக்கூறிப் புலம்புவது, என் கொல்-எதுக்கு? (எ-று.)

அமிருதம் கண்ணிற்பட்டால் உடனே அஃதுள்ளபொற்கலத்தோடு கைப்பற்றிஉண்பது முறையாயிருக்க, அங்ஙனஞ்செய்யாது

கைகழியவிட்ட மூடர்போல, கண்ணுல் நுகரும் அமுதமாகிய ஸ்ரீ ராமனைக் காணக்கிடைத்தபோது உடனே யான் தழுவிக்கொள்ளா மற் கைகழியவிட்டு இப்போது பல பேச்சுகளைச் சொல்லிப் புலம்பு வதிற் பயன்சிறிதுமில்லை யென்பதாம். ஆதர்-பசுப்போன்றவர்: அறி வில்லாதவர். (வஞ்சனையாற் பணையம்வென்ற கத்துருவினிடத்தில் அடிமைப்பட்டிருந்த விநதையானவள் தன் அடிமைத் தன்மையை விடுவிக்கத் தன்மகவான கருடனைக்கொண்டு அமிருதத்தைக் கத் துருவினிடம் கொடுக்க,அதனைப்பெற்றும் உண்ணுமல் நாகர் கலசத் தோடு கை விட்ட செய்தி, இங்குக் கருதத்தக்கது.)கீழ்ச்செய்யுளில் தன் திரிகரணங்களுள் கண்ணும் மனமும் தமசெயலைச் செய்யா மையைக்கூறி இரங்கிய சீதை, இங்குத் தன்மெய்யுறுப்பாகிய கை தன்செயலைச் செய்யாமைகுறித்து இரங்கிக்கூறுகின்றுள். பெய் கடல்-மழைபெய்யக் காரணமான கடலுமாம். பி-ம்:—[1]பிறக்கொணு. [2]போற்று. [3]கடத்தொடு. [4]வைத்திராத. [5]ஆறு, தன்மை. [6]கடக் கும். [7]முயங்கிடாத. [8]முந்தவே, முன்னமென். (802)

55.—கவிக்கூற்று.

என்று கொண்டு [1]ணைந்துநைந் திரங்கிவிம்மி [2]விம்மியே
பொன்றிணிந்த கொங்கைமங்கை யிடரின்மூழ்கு போழ்தின்வாய்
குன்ற [3]மொன்று சிலைமுறிந்த கொள்கை[4]கண்டு குளிர்மனத்து
ஒன்று [5]முண்கண் மதிமுகத் தொருத்திசெய்த துரைசெய்வாம்.

(இ - ள்.) பொன் திணிந்த கொங்கை மங்கை-தேமல் நெருங் கிய தனங்களுடைய சீதை, என்றுகொண்டு உள்நைந்து நைந்து - என்று (பலவாறு) சொல்லி மனம் மிகவும்நைந்து, இரங்கி-இரக்கங் கொண்டு, விம்மி விம்மி-அழுதழுது, இடரில் மூழ்கு போழ்தின் வாய்-துனபத்தில் அழுந்தும் பொழுதில்,— குளிர் மனத்து ஒன் றும்-குளிர்ந்த [உவந்த] மனத்தோடு கூடியவளும், உண் கண் மதி முகத்து-மையுண்ட கண்களையும் சந்திரனபோன்ற முகத்தையு முடையவளுமான, ஒருத்தி-ஒரு தோழி, குன்றம் ஒன்று சிலை முறிந்த கொள்கை-மலையை யொத்த சிவதநுசு முறிந்த செயலை, கண்டு—, செய்தது உரை செய்வாம்—; (எ-று.)—அதனை மேலே காண்க.

சீதை கீழ்க்கூறியவாறு பலபடி மனம் வருந்தி இரங்கிப்புலம் புகையில, சீதையின் சேடியொருத்தி சனகன் வேள்விச்சாலையில் ஸ்ரீராமன் சிவதநுசை யிறுத்ததை யறிந்துகொண்டு செய்ததை இனிச் சொல்வோமென்று கவிகூறுகின்றனர். 'கன்னியாசுல்கமாக வைத்திருந்த சிவதநுசு முறிக்கப்பட்டுச் சீதையின் விவாக காலம் வரப்போகிறதா?' என்று காத்திருந்தவட்கு அது நேர்பட்டது தெரிந்ததனல் அச்சேடி குளிர்மனத்தளாயினள். அந்தச் சேடியின் பெயர் மாலையென்பது, அடுத்த செய்யுளால் விளங்கும். என்று கொண்டு, கொண்டு-அசை.பி-ம்:-[1]நைந்து. [2]விம்மியப், விம்மியிப், ஏங்குமப். [3]அன்ன, என்ன. [4]கொண்டு. [5]ஒண். (803)

வேறு.

56.—சேடியொருத்தி சீதையுள்ளவிடம் வருதல்.

வடங்களுங் குழைகளும் வான வில்லிடத்
[1]தொடர்ந்து பூங்[2]குழல்களும் துகிலுஞ் சோர்தர
நுடங்கிய மின்னென நொய்தி னெய்தினாள்
நெடுந்தடங் கிடந்தகண் ணீல மாலையே.

(இ - ள்.) நெடு தடம் கிடந்த - பெரிய தடாகத்திற் கிடந்த, நீலம் கண் மாலை - கருங்குவளைமலர்போன்ற கண்களையுடைய மாலை யென்பவள்,—வடங்கள்உம் குழைகள்உம் - (தன்கழுத்திற்பூண்ட) ஆரங்களும் காதணிகளும், வான வில் இட - வானவில்லைப்போன்று பல நிறவொளிகளை விட்டு விட்டுவீசவும், தொடர்ந்து பூ குழல்கள் உம் துகில்உம் சோர்தர-ஒன்றோடொன்று சேர்ந்து மலரணிந்த கூந் தல்களும் ஆடையும் அவிழ்ந்து சரியவும்,—நுடங்கியமின்என- துவண்ட மின்னல்போல, நொய்தின் - விரைவாக, எய்தினாள் - வந் தாள்; (எ - று.)

சீதைக்குத் திருமணம் நடக்கும்படி ஸ்ரீராமன் வில்லிறுத்த மகிழ்ச்சியான செய்தியை விரைவில் தெரிவிக்கவேணுமென்று சேடி, சீதையிருக்குமிடத்துக்கு விரைந்துவந்தனளென்க. நீல மாலையென்று அச்சேடிக்குப் பெயருமாம். பி - ம்:—[1]தொடங்குபு, தொடர்ந்தபூங். [2]கலைகளுங்குழலும். (804)

57.—சீதை வந்தசேடியை மகிழ்ச்சிசெய்தி யென்னென்று வினவுதல்.

வந்தடி [1]வணங்கிலள் வழங்கு [2]மோதையள்
அந்தமி லுவகைய ளாடிப் பாடினள்
சிந்தையுண் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரி சொல்லெனத் தொழுது சொல்லுவாள்.

(இ - ள்.) (அந்தச்சேடி), வந்து அடி வணங்கிலள் - (வழக்கம் போல்) வந்ததும் அடிவணங்கினாளில்லை; வழங்கும் ஓதையள-ஆர வாரஞ்செய்பவளும், அந்தம இல் உவகையள் - எல்லையற்றமகிழ்ச்சி யையுடையவளுமாகி, ஆடி பாடினள் - நடனஞ்செய்து மங்கலகீதம் பாடலானாள்; (அதைக்கண்ட சீதை அவளைநோக்கி), 'சுந்தரி-அழ கியவளே! சிந்தையுள் மகிழ்ச்சிஉம் - மனத்திலுள்ளசந்தோஷத்தை யும், புகுந்த செய்கைஉம்-(அங்ஙனம்பெருமகிழச்சிக்குக்காரணமாக) நடந்துளள செயலையும், சொல் - சொலவாயாக,' என - என்று கேட்க,-(அந்தச்சேடி), தொழுது - (சீதையை) வணங்கி, சொல்லு வாள—; (எ-று.)—அதனை மேற காண்க.

தலைவியைக் கண்டவுடன் வணங்கவேண்டுவது முறைமையா யிருக்க, பெருமகிழ்ச்சியால் அவ்வாறு அந்தச்சேடி செய்யாமல் ஆடிப்பாடிக்கொண்டிருந்து, பிறகு சீதை கேட்கச் சொல்லலாயி னள். பி-ம்:—[1]வணங்கினள், விழுந்திலள், அணுகிலள். [2]ஓகையள்.

58 —நான்குகவிகள்-அந்தச்சேடி ஸ்ரீராமன் சிவதநுசையிறுத்த செய்தியைக் கூறியதைத் தெரிவிக்கும்.

கயரத துரக[1]மாக்[2]கடலன் கல்வியன்
தயரத னெனும்பெயர்த் தனிச்[3]சென் னேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
[4]மயல்விளை மதனற்கும் வடிவு[5]மேன்மையான்.

(இ - ள்.) கயம் ரதம் துரகம் மா கடலன் - யானை தேர் குதிரை இவை மிகுதியாகப்படைத்தவனும், கல்வியன் - பெருங்கல்வியாள னும், புயல் பொரு தட கையான் - (நீருள்ள இடம் இல்லாதஇடம் என்று பாராது) மேகம் மழை பொழிவதுபோல் (இன்னர் இனையா ரென்றுபாராது செல்வத்தைப்) பொழிகின்ற நீண்ட கையையுடைய வனுமான, தயரதன் எனும் பெயர் தனி செல் நேமியான் - தசரத னென்று பெயர்கொண்டு (உலகத்தைப் பொதுக்கடிந்து) தனிச் செங்கோல் செலுத்துகின்ற சக்கரவர்த்தியின், புதல்வன்-புத்திரன், பூ கணை மயல் விளை மதனற்குஉம் வடிவு மேன்மையான் - மலரம்பு களைக் கொண்டு காமமயக்கத்தை யுண்டாக்குகின்ற மன்மதனைக் காட்டிலும் வடிவழகையுடையவன் (ஒருவனுளன்); (எ - று.)— இதனால், தசரதசக்கரவர்த்தியென்று ஒருவன் உண்டு: அவனுக் குப் பேரழகுவாய்ந்த ஒரு புத்திரனுளனென்று கூறியவாறு.பி-ம்:— [1]ஆள். [2]கடந்த, கடவும். [3]செய், சொல். [4]மயறரு. [5]மேம்பட்டான்.

59. மராமர மிவையென [1]வளர்ந்த தோளினன்
அராவணை யமலனென் றயிர்க்கு மாற்றலான்
இராமனென் பதுபெய ரிளைய கோவொடும்
பராவரு [2]முனியொடும் பதிவந் தெய்தினன்.

(இ - ள்.) (அந்தக்குமாரன்),—இவை மராமரம் எனவளர்ந்த தோளினன் - இவை சாலவிருட்சம்போலுமென்று வளர்ச்சிபெற்ற தோள்களையுடையவன்; அரா அணை அமலன் என்று அயிர்க்கும் ஆற்றலான்-திருவனந்தாழ்வானாகிய படுக்கையிற்பள்ளிகொண்டிருக் கும் குற்றமற்ற கடவுளாகிய திருமால்தான் இங்ஙனம் திருவவதரித் தானோ? என்று கண்டவர் ஐயுறுகின்ற பெருவல்லமை படைத்த வன்; (அவனுக்கு), பெயர்—, இராமன் என்பது—; (அவன்) இளைய கோவொடுஉம்-தம்பியாகிய அரசகுமாரனுடனும், பராவு அரு முனி யொடுஉம்-துதித்தற்கு அருமையான மிக்க மகிமையையுடைய விசு வாமித்திர முனிவனுடனும், பதி - (நம்) நகரை, வந்து எய்தினன்- வந்து சேர்ந்தான்; (எ - று.)

தசரதகுமாரன் இராமனென்பான் தம்பியொடும் விசுவாமித்திர னுடனே இந்நகர்க்கு வந்தானென்க. இரண்டாமடி - முற்றுமோனை. பரா வரும் எனப்பிரித்தால் - யாவராலும் துதிக்கப்படுகின்ற என்க. பி - ம்:—[1]வலிய, மலிந்த. [2]முனியொடிப். (807)

60. பூணியன் மொய்ம்பினன் புனித னெய்தவில்
காணிய வந்தன னென்னக் காவலன்

ஆணையி னடைந்தவி லதனை யாண்டகை
[1]நாணினி தேற்றினு னடுங்கிற் றும்பரே.

(இ - ள்.) 'பூண் இயல் மொய்ம்பினன் - வலயங்களையணிந்த தோள்களையுடையவனான அக்குமாரன், புனிதன் எய்தவில் காணிய- பரிசுத்தமூர்த்தியாகிய சிவபெருமான் எய்த தனுசைக் காணும் பொருட்டு, வந்தனன்-வந்துள்ளான்', என்ன-என்று (விசுவாமித்திர முனிவன்) சொல்ல,—காவலன் - சனகராசனுடைய, ஆணையின் - கட்டளையினாலே, அடைந்த - (உடனே அங்கு) வந்து சேர்ந்த, வில் அதனை-அந்தவில்லை (வளைத்து), ஆண் தகை - ஆண்மைக்குண முள்ள அக்குமாரன், இனிது நாண் ஏற்றினான் - வெகு எளிதாக நாணேற்றினான்: உம்பர் - மேலுலகம், நடுங்கிற்று—; (எ - று.)

'வந்தார் வில்லுங்காண்பார்' என்று கீழ் மிதிலைக்காட்சிப்படலத் தில் விசுவாமித்திரன் கூறியதை யொட்டி, 'வில் காணியவந் தனனென்ன' என்று கூறுகின்றனன். உம்பர்-உம்மை தொக்கது. பி - ம்:—[1]நாணியின், நாணியை. (808)

61. மாத்திரை யளவிற்[1]ருண் மடுத்து முன்பயில்
[2]சூத்திர மிதுவெனத் தோளின் வாங்கினன்
[3]ஏத்தின ரிமையவ [4]ரிழிந்த பூமழை
[5]வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே.

(இ - ள்.) மாத்திரை அளவில் - ஒருநொடிப்போதில், தாள் மடுத்து - (அவ்வில்லின் ஒருபக்கத்து முனையைக்) காலால் மிதித் துக்கொண்டு, முன் பயில் சூத்திரம் இது என - முன்பழகின யந் திரம் இது என்று (கண்டவர்) கருதும்படி, தோளின் வாங்கினன் - (அவ்விராமன் தன்) தோள்வலிமையால் வளைத்திட்டான்; (அப் போது), இமையவர்-தேவர்கள், ஏத்தினர் - (அவ்விராமபிரானைப்) புகழ்ந்தார்கள்; பூ மழை - மலர்மாரி, இழிந்த(து)-(வானத்தினின்று) பொழிந்தது: (அவ்வில்), வேந்து அவை நடுக்குஉற - இராசசபை யினர் நடுநடுங்கும்படி, முறிந்து வீழ்ந்தது—; (எ-று.)

அவை-அவையோர்க்கு, ஆகுபெயர். பி-ம்:—[1]தாண்மடித்து, தாள்வளைத்து, தான்வலித்து, தான்வடித்து. [2]சூத்திரி. [3]ஏற்றி னன். [4]இழிந்து. [5]வேர்த்தவர். (809)

62.—சீதை சிறிது ஐயம் நீங்குதல்.

கோமுனி யுடன்வரு கொண்ட லென்றபின்
தாமரைக் கண்ணினு னென்ற தன்மையால்
ஆமவ னேகொலென் றைய [1]நீங்கினுள்
வாம[2]மே கலையிற வளர்ந்த தல்குலே.

(இ - ள்.) கோ முனியுடன் வரு கொண்டல் என்ற பின் - சிறந்த விசுவாமித்திரமுனிவனுடனே வந்த மேகம்போன்றவ னென்று கூறியபிறகு, தாமரைக்கண்ணினன் என்ற தன்மையால் - செந்தாமரைக்கண்ணனாகிய திருமாலைப்போன்ற ஆற்றலுடையவ னென்று சொல்லிய வகையினால், (சீதை), ஆம் அவன் ஏ கொல் என்ற ஐயம் நீங்கினாள் - '(என் காதலுக்கு) இடனாகிய அந்த ஆட

வனாக இருப்பனா?' என்ற சந்தேகம் (சிறிது) நீங்கப்பெற்றாள்; வாமம் மேகலை இற-அழகிய மேகலை யிற்றுப்போகும்படி, அல்குல் வளர்ந்தது - இடை பருத்தது; (எ - று.)

சீதை சேடியின்வார்த்தையால் வில்லிறுத்தவன் தான் கண்ட ஆடவனே யென்று துணிந்து மனத்திருந்த சங்கை சிறிது நீங்கின ளாக, அப்போது வேட்கையின் மிகுதியால் அல்குல் வளர்ந்த தென்க. பி-ம்:—[1]நீங்கிட, நீங்கவே. [2]மேகலையிலும், மேகலையினுள்.

63.—சீதையின் உறுதி.

[1]இல்லையே நுசுப்பென்பா ருண்டுண் டென்னவும்
[2]மெல்லியன் முலைகளும் [3]விம்ம விம்முவாள்
சொல்லிய [4]குறியினத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பனென் றகத்து [5]ளுன்னினாள்.

(இ - ள்.) நுசுப்பு இல்லை என்பார் - (இவட்கு) இடை இல்லவேயில்லை யென்றுசொல்பவர், (உடல்பூரித்த இப்போது இடையும் தோன்றுதலால்), உண்டுஉண்டு என்னஉம் - (இடை) இருக்கின்றது இருக்கின்றது என்று சொல்லவும்,—மெல் இயல் - சீதை, முலைகள்உம் விம்ம விம்முவாள் - தனங்களும் பருக்க(த்தா னும்) உடல் பூரிப்பவளாய்,—'சொல்லிய குறியின் - (இவள்) சொன்ன அடையாளங்களால், அவன் - வில்லைமுறித்தவன், அ தோன்றல்ஏ - (நான் கன்னிமாடத்திலிருந்து கண்டு காதலித்த) அந்த ஆடவனேயாவன்; அல்லன்ஏல்-(அப்படி அவனாக) இராமற் போனால், இறப்பன் - உயிரைவிட்டொழிப்பேன்', என்று—, அகத் துள்-(தன்) மனத்துக்குள், உன்னினாள்-உறுதிகொண்டாள்;

இனி, [1]இல்லையே நுசுப்பெனப்பாருண்டென்னவும் என்றபாடத் தைக்கொண்டு, சிலர் இடை இல்லையே என்று உறுதியாகச் சொல்லுகையில், உலகோர் உண்டு என்னுமாறு இடையேயன்றி முலையும் வளர்ந்ததென்பது முன்னிரண்டடியின் பொருள் என்பாரு முளர். முதல் உம்மை - இசைநிறை: இரண்டாவது - 'வளர்ந் ததல்குல்' என்றதைநோக்கிய இறந்ததுதழுவியஎச்சம். பி - ம்:— [2]மெல்லிய. [3]விம்மி. [4]குறியினால். [5]உள்ளினாள், உன்னுவாள்.

64.—சனகராசன் முனிவனிடத்துக் கூறத்தொடங்குதல்.

[1]ஆசையுற் றயர்பவ [2]ளன்ன ளாயினள்
பாசடைக் கமலத்தோன் படைத்த வில்லிறும்
ஓசையிற் பெரியதோ ருவகை [3]யெய்தியக்
கோசிகற் கொருமொழி சனகன் கூறுவான்.

(இ - ள்.) ஆசை உற்று-காதல் விஞ்சி, அயர்பவள் - வருந்து பவளாகிய சீதை, அன்னள் ஆயினள் - அவ்வாறான நிலையிலிருந் தனள்; (அதுநிற்க): சனகன் - சனகராசன்,—பாசு அடை கமலத் தோன் படைத்த வில் இறும் ஓசையின் - பசுமையான இலைகளைக் கொண்ட தாமரையின் மலரில் தங்குகின்றவனான பிரமதேவன்

நிருமித்த தநுசு இற்ற ஓசையைக் கேட்டதனால், பெரியது ஓர் உவகை எய்தி - மிக்கஒப்பற்ற மகிழ்ச்சியையடைந்து, அ கோசிகற்கு - அந்த விசுவாமித்திரனுக்கு, ஒரு மொழி கூறுவான்—; (எ-று.)—அதனை அடுத்த கவியிற் காண்க.

'வில்வளைத்தலென்பது நிகழுமா?' என்று ஏக்கங்கொண்டிருந்த சனகன் வில்லிறுத்த ஓசையைக் கேட்கவே பேருவகையெய்தினவனாய், இத்தொழில் நிகழ்வதற்குக்காரணமான விசுவாமித்திரனைநோக்கி ஒன்று கூறலாயினனென்க. பி-ம்:—[1] ஆசையால், ஆசையின். [2] என்னள். [3] எய்திய. (812)

65.—சனகராசன் கூறிய மொழி.

உரைசெயெம் பெருமவுன் புதல்வன் வேள்விதான்
விரைவினின் றொருபகன் முடித்தல் வேட்கையோ
முர[1]செறிந் ததிர்கழன் முழங்கு [2]தானையவ்
வரசையு [3]மிவ்வழி யழைத்தல் வேட்கையோ.

(இ - ள்.) எம் பெரும - எமது பெருமானே! உன் புதல்வன் வேள்வி தான் - உன்னாலழைத்துவரப்பெற்ற குமாரனது விவாகம், விரைவின் இன்று ஒரு பகல் முடித்தல் வேட்கையோ - காலதாமதமில்லாமல் இன்றைத்தினத்திலேயே செய்து தீரவேணுமென்று விருப்பமா? (அல்லது), முரசு எறிந்து-(செய்தி தெரிவிக்க எங்கும்) முரசமென்னும்பறையைச் சாற்றி, (பலரையும்வரவழைத்து), அதிர் கழல் முழங்கு தானை அ அரசைஉம் இ வழி அழைத்தல்-அதிர்கின்ற வீரக்கழலையும் கர்ச்சித்துக்கொண்டிருக்கின்ற சேனைகளையுமுடைய அந்தத்தசரதமன்னனையும் இந்தநகரத்துக்கு வரவழைத்து (அந்தச் சக்கரவர்த்தியின் அனுமதியின்மீது விவாகத்தை) நடத்துதல், வேட்கையோ-(நுமக்கு) விருபபமா? உரை செய்-(இவ்விரண்டில் எது விருப்பமென்று ஆலோசித்துச்) சொல்வாய்; (என்று சனகன் விசுவாமித்திரனை வினவினான்;) (எ - று.)

'இப்போதே விவாகத்தை நடத்தவேணுமா? அன்றி, நமக்கு வேண்டிய பலர்க்குஞ் செய்தி தெரிவித்துத் தசரதசக்கரவர்த்திக்கும் செய்தி தெரிவித்து அம்மன்னவனையும் வரவழைத்துப் பின் விவாகத்தை நடத்தவேணுமா? உமது விருப்பத்தைச் சொல்லுக' என்று சனகராசன் விசுவாமித்திரமுனிவனைக் கேட்கின்றனனென்க. பி - ம்:—[1] அறைந்து. [2] தானைய. [3] இவ்வுழி. (813)

66.—விசுவாமித்திரன் மொழிப்படி தசரதனுக்குச் சனகன் தூது அனுப்பல்.

மல்[1]வலா னவ்வுரை பகர மாதவன்
ஒல்லையி லவனும்வந் துறுத னன்[2]றென
எல்லையி [3]லுவகையா னியைந்த வாறெலாம்
[4]சொல்லுகென் றோலையுந் தூதும் போக்கினான்.

(இ - ள்.) மல் வலான் அ உரை பகர - மற்போரில் வல்லவனான சனகராசன் அவ்வார்த்தையைச் சொல்ல,—மா தவன் -

விசுவாமித்திரமுனிவன், ஒல்லையில் அவன்உம் வந்து உறுதல் நன்று என - விரைவில் அந்தத்தசரதனும் வந்து சேர்தல் நல்லதென்று (தன்கருத்தைத்) தெரிவிக்க,—எல்லை இல் உவகையான் -(இவ்வளவென்று) அளவிடமுடியாத மகிழ்ச்சியையுடைய சனகராசன்,—இயைந்த ஆறு எலாம சொல்லுக என்று-'நடந்த விவரங்களையெல்லாம் (போய்த் தசரதசக்கரவர்த்தியினிடஞ்) சொல்லுவீராக' என்று சொல்லி, ஓலைஉம் தூதுஉம் - திருமணப்பத்திரிகையையும் தூதுவரையும், போக்கினன்-அனுப்பினன்; (எ-று.)

"சுபஸ்யசீக்ரம்" என்றவாறு விவாகத்தை நாளோட்டாமல் விரைவிற் செய்யவேண்டுமென்பது முறையாமாயினும், பெற்றோரின் அநுமதியின்றி விவாகத்தை நடத்துவது முறையன்று என்று கருதிய விசுவாமித்திரன், 'ஒல்லையில் அவனும் வந்துறுதல் நன்று' என்ன, சனகராசனும் உடன்பட்டுத் தசரதனிடத்து மணவோலையைத்தருமாறு தூதுவரை யனுப்பினனென்க. பி-ம்:—[1]புயன். [2]என்றான். [3]உவகையின. [4]சொல்லும். (814)

கார்முகப்படலம் முற்றிற்று.

13—ஆவது எழுச்சிப்படலம்.

சனகராசனது தூதுவர் திருமணவோலை தரச் செய்தியுணர்ந்து தசரதன் தன்பரிவாரங்களோடு திருமணத்தின்பொருட்டு மிதிலை நகருக்கு எழுந்த செய்தியைக் கூறும் பிரிவு.

1.—சனகராசன்தூதர் தசரதசக்கரவர்த்தியி னரண்மனை வாயிலை யடைதல்.

கடுகிய தூதருங் [1]காலிற் காலிற்சென்று
[2]அடிகுரன் முரசதி ரயோத்தி யெய்தினர்
அடியிணை [3]தொழவிட [4]மின்றி [5]மன்னர்தம்
முடியொடு முடி[6]பொரு வாயின் முன்னினர்.

(இ - ள்.) (அவ்வாறு சனகமன்னவனா லனுப்பப்பட்டு),கடுகிய-விரைந்துபோக வெண்ணிய, தூதர்உம்-தூதர்களும், காலில்-(தமது) கால்வலியினால், காலின் சென்று-காற்றுப்போலவிரைந்துசென்று, அடி குரல் முரசு அதிர் அயோத்தி எய்தினர் - அடிக்கப்படுகின்ற பேரொலியையுடைய பேரிகைகள் முழங்குகின்ற அயோத்திமாநகரத்தை யடைந்தவர்களாய்,—அடி இணை தொழ இடம் இன்றி - அந்தச்சக்கரவர்த்தியினது பாதங்களைத் தொழும் பொருட்டு (உட்புக) இடங்கிடைக்காமையால், மன்னர் தம் முடியொடு முடி பொரு - அரசரது கிரீடத்தோடு கிரீடம் உராயப்பெற்ற, வாயில் - அரண்மனைவாயிலை, முன்னினர் - முற்பட்டு நின்றார்கள்; (எ-று.)— பி-ம:—[1]கடியகாலிற், காலின்முந்தச். [2]இடி. [3]தொழும். [4]அன்றி. [5]மன்னவர், மன்னர்கள். [6]புரை. (815)

2.—சென்ற தூதுவர் சக்கரவர்த்தியைக் கிட்டிச் செய்தி கூறுதல்.

முகந்தனர் திருவருண் முறையி [1]னெய்தினர்
திகழ்ந்தொளிர் கழலிணை தொழுது செல்வனைப்
புகழ்ந்தன ரரசநின் [2]புதல்வர் போயபின்
நிகழ்ந்ததை யிதுவெனு நெடிது கூறினர்.

(இ - ள்.) திருவருள் முகந்தனர் - (தம் வருகையை வாயில் காவலர்மூலமாகச் சக்கரவர்த்திக்கு அறிவித்து உள்ளேவருகவென்று குறிப்பிக்கும் சக்கரவர்த்தியின்) அருளப்பாட்டைப் பெற்றவராய, (அந்தச்சனகமன்னன் தூதர்),-முறையின் எய்தினர் - (அரசரிடத்துச் செல்லவேண்டிய) முறைப்படியே சென்று, திகழ்ந்து ஒளிர் கழல் இணை தொழுது-மிகவும் விளங்குகின்ற (அந்தச்சக்கரவர்த்தியின்) உபயபாதங்களை வணங்கி, செல்வனை புகழ்ந்தனர் - ஸ்ரீமானான அந்தத்தசரதசக்கரவர்த்தியைப் புகழ்ந்து, 'அரச-அரசே! நின் புதல்வர்-உனது புத்திரர், போயபின்-(விசுவாமித்திர முனிவனுடன்) சென்றபின்பு, நிகழ்ந்ததை - நிகழ்ந்த விசேஷமான செய்தி, இது-இதுவாகும்', எனு-என்று, நெடிது-விஸ்தாரமாக, கூறினர்-(இராம பிரான் கன்னியாசுல்கமான சிவதநுசைமுறித்த செய்தியைக்) கூறினர்கள்; (எ-று.)—நிகழ்ந்ததை, ஐ-சாரியை. பி-ம்:—[1]முன்னினர். [2]புதல்வன். (816)

3.-தூதுவர் ஓலை கொடுக்க, சக்கரவர்த்தி 'வாசிக்க' எனல்.

கூறிய தூதருங் கொணர்ந்த வோலையை
ஈறில்[1]வண் புகழினு யிதுவ தென்றனர்
வேறொரு [2]புலமகன் விரும்பி வாங்கினன்
மாறதிர் கழலினன் வாசி யென்றனன்.

(இ - ள்.) கூறிய தூதர்உம் - (இராமனது வீரச்செயலைக்) கூறிய தூதர்களும், கொணர்ந்த ஓலையை-(தாம்) கொண்டு வந்த திருமணப்பத்திரிகையைச் சுட்டி, 'ஈறு இல் வண் புகழினுய்-முடிவில்லாத செழித்த குணங்களையுடையவனே! அது - அந்தச்சனகராசன் கொடுத்த திருமுகம், இது-இதுவாகும்', என்றனர் - என்று சொல்லித் தமது அரசன் எழுதிய திருமுகத்தை) நீட்டினர்: வேறு ஒரு புலம் மகன - (அங்கேயுள்ள ஓலையைவாசிப்பதற்கு என்று) வேருக நியமிக்கப்பட்டிருந்த ஒரு அறிஞனவன், (சக்கரவர்த்தியின் கட்டளையினால்), விரும்பி வாங்கினன - மகிழ்ச்சியோடு (அந்த ஓலையை) வாங்கிக்கொண்டான்; மாறு அதிர் கழலினன்-(ஒன்றுக்கு ஒன்று) மாருக ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த சக்கரவர்த்தி, வாசி என்றனன்—; பி-ம்:—[1]வெண். [2]குலம். (817)

இங்குச் சில பிரதிகளிற் காணப்படும் பாடல்கள் வருமாறு:—

(1) [1]ஓது நீதியிற் கௌசிக மாமுனி யோலை, தாது சேர்தொடைத் தயரதன [2]காண்க [3]தற்பிரிந்த,போது கானிடைத் [4]தாடகை பொருப்பெனப [5]புகுந்து, வாது செய்துநின் திராகவன வாளியான்

மாண்டாள். பி-ம்:—[1] ஓத. [2] காண்கு, காண. [3] வந்தடுத்த. [4] பொருப் பெனத் தாடகை. [5] பொங்கி.

(2) சிறந்த [1] வேள்வியொன் [2] றமைத்தன னதுதனைச் சிதைக்க, இறந்த தாடகை புதல்வரா மிருவர்வந் [3] தெதிர்த்தார், [4] அறங்கொண் [5] மாலவன் வாளியா லொருவன்ற னாவி, குறைந்து போயின னொருவன்போய்க் [6] குரைகடல்குளித்தான். பி-ம்:— [1] வேள்வியின். [2] அமைந்தனன். [3] எய்தி. [4] மறங். [5] வெஞ்சிலை யிராகவன்...ஆவி, சிந்தனையிராகவன்வாளியாலாவி. [6] குனி.

(3) கூட [1] மேவுபே ரரக்கரை யிளையவன் கொன்று, நீடு வேள் வியுங் குறைபடா வகைநின்று நிரப்பிப், பாடல் மாமறைக்கௌத மன பன்னிசாபத்தை, ஆடல் [2] மாமலர்ச் சோலையி னிராகவ னகற்றி. பி-ம்:—[1] மேவுமோராக்கையை. [2] மாமதிற்.

(4) பொருவின் மாமதின் மிதிலையிற் புகுந்துபோ ரிராமன், மருவு வார்சிலை முறித்தபின் சனகன்மா மகளைத், தருவ தாமதற் கிசைந்தனன் தானிங்கு விரைவின், வருவ தாங்கெனும் வாசகம் கேட்டுள மகிழ்ந்தான்.

(5) பன்னு நான்மறை வசிட்டனும் பராவரு முனிக்கும்
அன்னை மார்க்குந்த னமைச்சர்க்குஞ் சோபன மறிவித்து
இன்ன வாசக வோலையங் கிட்டதூ தர்க்குச்
சொன்ன மாயிரங் கோடியுந் தூசுடன் கொடுத்தான்.

4.—அவ்வோலைச் செய்தியைக் கேட்டதும், தசரதனது தோள் பூரித்தல்.

இலைமுகப் [1] படத்தவ னெழுதிக் காட்டிய
தலைமகன் சிலைத்தொழில் செவியிற் சார்தலும்
நிலைமுக வலயங்க ணிமிர்ந்து [2] நீங்கிட
மலையென வளர்ந்தன வயிரத் தோள்களே.

(இ-ள்.) இலை முகம் படத்து - பனையோலையினிடமாகிய படத்தில், அவன் எழுதி காட்டிய - அந்தச்சனகராசன் எழுதிக் காணபித்த, தலைமகன சிலை தொழில் - (தனது) மூத்தமகனாகிய இராமனது வில்வித்தையின் தொழில்திறமை, செவியில் சார்தலும்- (தன்) காதிற் பட்டவுடனே,—(அந்தத்தசரத சக்கரவர்த்தியினது) வயிரம் தோள்கள் - வயிரம்போல மிகவும் உறுதியான தோள்கள்,- நிலை முகம் வலயங்கள் நிமிர்ந்து நீங்கிட - நிலையான இடத்தைக் கொண்ட தோள்வளைகள் வாய்விண்டு கழன்றுபோகும்படி, மலை எனவளர்ந்தன - மலைபோலப் பருத்து ஓங்கின; (எ - று.)

தனது மூத்த குமாரனது வீரச்செயலை வேறொருமன்னன் புகழ்ந்து எழுதியதைப் புலமகன் வாசித்துக்காட்ட, சக்கரவர்த்தி அதனைக் கேளவியுற்றுப் பெருமகிழ்ச்சியடைந்து தோள்பூரித்தன னென்க. பி-ம்:—[1] படைததவன், படத்தவர். [2] நீங்கின. (818)

5.—தசரதமன்னவன் மொழி.

வெற்றிவேன் மன்னவன் தக்கன் வேள்வியில்
கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்
முற்றவே [1]ழுலகையும் வென்ற மூரிவில்
இற்றபே [2]ரொலிகொலன் றிடித்த தீங்கென்ருன்.

(இ - ள்.) வெற்றி வேல் மன்னவன் - வெற்றியைத் தருகின்ற வேலாயுதத்தையுடைய தசரதசக்கரவர்த்தி,—'கற்றை வார் சடை முடி கணிச்சி வானவன் - தொகுதியான நீண்ட சடை முடியையும் மழுப்படையையுமுடைய கடவுளாகிய சிவபெருமான், தக்கன் வேள்வியில்-தட்சபிரசாபதியின யாகத்தை யழித்தபோது, ஏழ் உலகை முற்றஉம் வென்ற-ஏழுலகத்தவரையும முழுதும் வெல்வதற்குக் காரணமாயிருந்த, மூரி வில்-வலிமைபெற்ற வில், இற்ற-முறிந்ததனுலான, பேர் ஒலி கொல்-பேரோசைதானே, அனறு ஈங்கு இடித்தது-அன்றையதினம் ஒரு பெருஞ்சத்தம் இங்குக் கேட்டதே அது?' என்ருன-எனறு கூறினன்; (எ - று.)

தட்சன் யாகத்துக்குவந்திருந்த மேலேழுலகத்தில்வாழ்பவராய்ச் சிறந்த தேவர்யாவர்வலிமைகளும விஞ்சிய தாதலால,அவ்வில்லுக்கு 'முற்ற வேழுலகையும் வென்ற' எனறு அடைமொழி கொடுததது.
பி-ம்:—[1]உலகெலாம். [2]ஒலிகொலாம், ஒலிகொலோ. (819)

6.—சக்கரவர்த்தி வந்த தூதுவர்க்குப் பெருமகிழ்ச்சியால் அணிகலன் முதலியன அளித்தல்.

என்றுரைத் தெதிரெதி ரிடைவி டாதுநேர்
துன்றிய கணைகழற் றூதர் கொள்கெனப்
பொன்றிணி கலங்களுந் தூசும் போக்கினன்
குன்றென வுயரிய குவவுத் தோளினன்.

(இ - ள்.) குன்று என உயரிய குவவு தோளினன்-(பூரித்ததனல்) மலைபோலத் திரண்ட தோள்களையுடையவனன தசரத சக்கரவர்த்தி,—என்று எதிர் எதிர் உரைத்து - என்று (வசிட்டர் முதலாயினர்) முன்னிலையில் மறுமொழி சொல்லி,—நேர் துன்றிய கனை கழல் தூதர் கொள்க என - 'ஒன்ருேடொன்று ஒத்த ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த தூதுவர் பெற்றுக் கொள்ளட்டும்' என்று, பொன திணி கலன்களஉம-பொன்னுற் செய்யப்பட்ட அணிகலங்களையும், தூசுஉம் - ஆடைகளையும், இடைவிடாது போக்கினன்-இடைவிடாமல் மேன்மேலும் கொடுப்பித்தான்; (எ-று.)

தன் குமாரனது வீரச்செயலைக் கேட்ட பெருமகிழ்ச்சியால், தசரதன், தூதுவர்க்கு அணிகலம்முதலியன கொடுப்பித்தான். (820)

7.—சக்கரவர்த்தி தன்சேனை முதலியன முந்திச்செல்லும் படி பறைசாற்றுமாறு கட்டளையிடல்.

[1]வானவன் குலத்தெமர் [2]வரத்தி னல்வரும்
வேனில்வே ளிருந்தவம் மிதிலை நோக்கிநஞ்

சேனையு [3]மரசருஞ் செல்க முந்தென
ஆனைமே [4]லணிமுர [5]சறைகென் றேவினான்.

(இ - ள்.) 'வானவன் குலத்து எமர் வரத்தினால் - சூரியபகவானது குலத்துத் தோன்றிய எமது முன்னோர்கள் பெற்ற புண்ணியப் பயனாக, வரும் - தோன்றிய, வேனில் வேள் - வேனிலை நண்பனாகக் கொண்ட மனமதன் போன்ற இராமன், இருந்த - தங்கியிருக்கின்ற, அ மிதிலை நோக்கி-அந்த மிதிலாபட்டணததைக் குறித்து, 'நம்—, சேனை உம்—, அரசர் உம் - அரசகுமாரரும், முந்து - முன்னதாக, செல்க-செல்லட்டும,' என-என்று, ஆனை மேல்—, அணி முரசு - அழகிய பறையை, அறைக - (வள்ளுவர்) அறையட்டும், என்று—, ஏவினான் -(தசரதசக்கரவர்த்தி) கட்டளையிட்டான; (எ - று.)

யானைமேல் முரசேற்றி யறைந்து செய்தி தெரிவித்தல், மரபு. வேனில்வேள்-வசந்தகாலமன்மதனெனினுமாம். பி-ம்:—[1]வானவர் செய்தநல், மானவர்குலத்துமா, வானவர்குலத்துநல். [2]தவத்தினால். [3]மாதரும். [4]மணமுரசு. [5]அறைகவென்றனன். (821)

8.—வள்ளுவர் பறைசாற்றுதல்.

வாம்பரி [1]விரிதிரைக் [2]கடலை வள்ளுவன்
தேம்பொழி துழாய்முடிச் [3]செங்கண் [4]மாலவன்
ஆம்பரி சுலகெலா மளந்து கொண்டநாள்
சாம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினான்.

(இ - ள்.) தேம் பொழி துழாய் முடி-தேனைச்சொரிகின்ற திருத்துழாய்மாலையை முடியிலணிந்த, செங்கண் மாலவன்-புண்டரீகாட்சனாகிய திருமால், ஆம் பரிசு - தன்னதாகக் கொள்ளும் முறைமைக்கேற்ப, உலகு எலாம் அளந்து கொண்ட நாள்- சுவர்க்கம் மத்திமம் பாதாளம் என்ற) மூவுலகங்களையும் (தனது மூன்றடிகளால்)அளந்து கொண்ட காலத்தில், (அவ்வெற்றியை), சாம்புவன் - சாம்பவான், திரிந்து என - (பலமுறை) திரிந்து (பறையறைந்து) தெரிவித்தாற்போல, வாம் பரி விரி திரை கடலை - தாவுகின்ற குதிரைகளாகிய பரந்த திரைகளையுடைய (சேனா) சமுத்திரத்துக்கு, வள்ளுவன்—, திரிந்து—, சாற்றினான் - (முரசறைந்து) செய்திதெரிவித்தான்;

வள்ளுவன் ஆனைமேல் முரசேற்றி யறைந்து, இராமபிரானுடைய திருமணத்தின்பொருட்டுச் சேனையிலுள்ளார் முந்திச் செல்லுமாறு அரசன் கட்டளையிட்டிருப்பதைத் தெரிவித்தனனென்க. சேனையைக்கூறியது, அரசர்க்கும் உபலட்சணம். ஆம் பரிசு-தனது மூவடிக்குள் ஆகும்படி என்றுமாம். பி-ம்:—[1]விரிதரு, தருதிரை, திரைக்கடல். [2]உலகை. [3]செம்பொன். [4]வானவன். (822)

9.—அதுகேட்ட சேனையிலுள்ளார்யாவரும் களிப்பு மிகுதல்.

சாற்றிய முரசொலி செவியிற் சாருமுன்
கோற்றொடி மகளிருங் கோல மைந்தரும்
வேற்றரு குமரரும் வென்றி வேந்தரும்
காற்றெறி கடலெனக் களிப்பி னோங்கினார்.

(இ-ள்.) சாற்றிய முரசு ஒலி-அறைந்த பேரிகையின் பேரோசை, செவியில் சாரும் முன் - காதில் வீழ்வதற்குமுன்னம், கோல் தொடி மகளிர்உம்-அழகிய தொடியென்னும் வளையலையணிந்த மகளிரும், கோலம் மைந்தர்உம் - அழகிய ஆடவரும், வேல் தரு குமரர்உம் - வேலைச்செலுத்தவல்ல குமாரர்களும், வென்றி வேந்தர்உம்-வெற்றி பொருந்திய அரசரும், காற்று எறி கடல் என-காற்றினால் மோதப் படுகின்ற கடல்போல, களிப்பின் - பெருமகிழ்ச்சியால், ஓங்கினர் - பூரித்தார்கள்; (எ - று.)

சேனையைச்சேர்ந்தவர்யாவரும் முரசறைதலாற் செய்திதெரிந்து பெருமகிழ்ச்சியால் உடல்பூரித்தனரென்க. குமரரென்றது, காலாட் படை வீரரை. மைந்தர்என்றது, மகளிரின் கணவரை. இப்போது போருக்காக அன்றித் திருமணத்தின் பொருட்டுச் செல்வதால், சேனையைச்சேர்ந்த வீரர்கள் தம்மனைவியரோடும் சென்றனரெனக் கொள்ளலாம்: மகளிரும் மைந்தரும் சதுரங்கசேனைகட்குப் பணிசெய் வதற்காகவும் அமைந்துள்ளார். கோல்தொடி-திரண்ட தொடியுமாம். இந்தச்செய்யுள் சிலபிரதிகளி லில்லை. (823)

10.—சேனை யெழுதல்.

விடைபொரு நடையினான் சேனை [1]வெள்ளமோர்
[2]இடையிலை யுலகினி லென்ன வீண்டிய
கடையுக முடிவினி லெவையுங் [3]காற்படப்
புடைபெயர் கடலென வெழுந்து போயதே.

(இ-ள்.) 'உலகினில்—, ஓர் இடை-சிறிதிடமும், இலை-இல்லை,' என்ன - என்றுசொல்லுமாறு, ஈண்டிய - நெருங்கிய, விடை பொரு நடையினான் சேனை வெள்ளம் - இடபத்தையொத்த கம்பீரமான நடையையுடையவனாகிய தசரதசக்கரவர்த்தியின் சேனையின் கூட்ட மானது,—கடை யுகம் முடிவினில்-கடைசியாகவருகின்ற யுகாந்த காலத்தில், எவைஉம்-எல்லாப்பொருளும், கால்-பெருங்காற்றினால், பட-அழிந்துவிட, (அப்போது), புடை பெயர்-(தன்) இடத்தைவிட் டுப்பெயர்ந்துவந்த, கடல் என-சமுத்திரம்போல, எழுந்துபோயது- புடைபெயர்ந்துபோயிற்று; (எ-று.)

தசரதன்சேனை யுகாந்தகாலத்துப் பொங்கியெழும் கடல்போல எழுந்ததென்றார்; தன்மைத்தற்குறிபபேற்றவணி. யுகாந்தகாலத்துக் கடல்பொங்குதற்கு முன்னையநிலையை 'எவையுங் காற்படப் புடை பெயர்' என்றார். 'பிரளயகாலத்திலே முதன்முதலில் ஆதிசேஷ னுடைய ஆயிரமுகங்களினின்று பெரிய மூச்சுக்காற்றுஎழுந்து நெடுந்தூரம்வீசி உலகங்களையும உலகத்துள்ள பிராணிவர்க்கங் களையும் உலரச்செய்யும்: பின்பு காலாக்கினிருத்திரமூர்த்தியும் கட லிடையே யுள்ள வடவையும, உலகங்களையெல்லாம் எரிக்கும்; பிறகு அண்டகடாகத்திற்கு வெளியேயுள்ள தான பெரும்புறக் கடல்வெள்ளம் புகுந்து உலகங்களையெல்லாம் அழிக்கும்' என்பது நூற்கொள்கை. பி-ம்:—[1]வெள்ளமோ. [2]இடமிலை. [3]கால்பட. (824)

11.—தேர்யானைகளின் வருணனை.

சில்லிட முலகெனச் செறிந்த [1]தேர்கடாம்
புல்லிடு சுடரெனப் [2]பொலிந்த [3]வேந்தரால்
எல்லிடு கதிர்மணி யெறிக்கு மோடையால்
வில்லிடு முகிலெனப் பொலிந்த வேழமே.

(இ - ள்.) உலகு சில் இடம் என செறிந்த தேர்கள் தாம் - உலகமானது சொல்பமான இடத்தையேயுடையதென்று கூறும்படி மிகநெருங்கிய தேர்கள்,—வேந்தரால் - (தம்மீது ஏறியுள்ள) மன்னவரால், புல்லிடு சுடர்என - பொருந்திய சூரியரையுடையது போல, பொலிந்த - விளங்கின; வேழம் - யானைகள்,—எல் இடு கதிர் மணி எறிக்கும் ஓடையால் - ஒளிவீசுகின்ற கிரணங்களையுடைய இரத்தினங்கள் விளங்குகின்ற முகபடாத்தை யணிந்திருத்தலால், வில் இடும் முகில் என - வானவில்லிடப்பட்ட மேகம் போல, பொலிந்த-விளங்கின; (எ-று.)

தேர்மீதுஏறிய அரசர்க்குத் தேர்மீதுவிளங்குஞ் சூரியனும், பலவகை யிரத்தினங்களிழைத்துச்செய்யப்பட்ட ஓடையையணிந்த யானைகட்கு இந்திர வில்லோடு கூடிய முகிலும் ஒப்புமை. பி - ம்:— [1]தேர்களும். [2]பொலிந்து. [3]வேந்தர்கள். சிலபிரதிகளில், இது "நுடங்கிய" (13) என்றதன்பின். (825)

12.—குடைகொடிகளின் வருணனை.

கால்[1]விரிந் தெழுகுடை கணக்கி லோதிமம்
பால்[2]சிறை விரித்துவிண் பறப்ப போன்றன
மேல்[3]விரிந் தெழுகொடிப் [4]படலை விண்ணெலாந்
தோ[5]லுரிந் துகுவன போன்று [6]தோன்றுமால்.

(இ - ள்.) (அச்சேனையினிடையே பிடிக்கப்படுவனவாய்), கால் விரிந்துஎழு குடை-காம்பினின்று விரிந்துஓங்கியுள்ள குடைகள்,— கணக்குஇல் ஓதிமம்-அளவற்ற அன்னப்பறவைகள், பால் சிறை விரித்து - பால்போன்ற வெண்ணிறச் சிறகைப் பரப்பி, விண்- வானத்தில், பறப்ப - பறப்பவற்றை, போன்றன—: மேல் விரிந்து எழு கொடி படலை - வானத்தில் விரிந்தெழுகின்ற துவசங்களின் கூட்டம், விண் எலாம்—, தோல் உரிந்து உகுவன போன்று - தோலுரியப்பெற்றுச் சிந்துவனவொத்து, தோன்றும்—; (எ - று.)

பல வெண்ணிறக்குடைகள் பிடிக்கப்படுபவை - பல அன்னப் பறவைகள் தமது வெண்ணிறச்சிறகைவிரித்து வானத்துப் பறந்துபோவதையும், வெண்கொடியாடுபவை - வானம் தோலுரிக்க அவை அங்கு நின்று உகுவனவற்றையும் போலுமென்க; தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1]உயர், ஒளிர், எழு. [2]விரிந்தனவெனப், விரிந்ததுவெனப், விரிந்திடையிடை, விரிந்தனையன. [3]நிரைத்தன, நிரைத்தெழு. [4]படலம். [5]உரிதனையன. [6]தோன்றுமே. (826)

13.—யானைச்சேனைமீது வெண்கொடியாடலின் வருணனை.

நுடங்கிய துகிற்கொடி [1]நூழைக் கைம்மலைக்
கடங்கலுழ் சேனையைக் கடலி தாமென
இடம்பட வெங்கணு [2]மெழுந்த வெண்முகில்
தடம்புனல் பருகிடத் தாழ்வ [3]போன்றவே.

(இ - ள்.) நுடங்கிய துகில்கொடி - (யானைமீது பிடிக்கப்பட்டுத்) தொங்கி அசைகிற (வெண்ணிறத்) துகிற்கொடிகள்,—கடம் கலுழ் நூழை கைம் மலை சேனையை - மதமொழுகுகின்ற துளையுள்ள துதிக்கையையுடைய யானைச்சேனையை, இது கடல் ஆம் என - இது சமுத்திரமாகுமென்று மயங்கி, இடம் பட எங்கணும் எழுந்த வெள் முகில் - இடம் மறையும்படி (வானத்திலே) எம்மருங்கும் எழுந்தனவாகிய வெண்ணிறமேகங்கள், தட புனல் - மிக்க (கடலின்) நீரை, பருகிட—, தாழ்வ - இறங்குவனவற்றை, போன்ற-;

மதமொழுகுகின்ற யானைச்சேனை கடலை யொத்திருக்க, அவ்யானைச் சேனைமீது தொங்கியாடுகின்ற வெண்டுகிற்கொடிகள் அக்கடலின் நீரைப்பருகுமாறுவந்த வெண்மேகத்தைப் போலுமென்க: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இடம்பட - விசாலமாக எனினுமாம். பி·ம்:—[1] நுழையக். [2] எழுக, எழுந்து. [3] போன்றன. (827)

14.—சேனையிலுள்ளார் அணிந்த ஆபரணம் முதலியவற்றின் வருணனை.

இழையிடை யிளவெயி [1]லெறிக்கு மவ்வெயில்
தழை[2]யிடை நிழல்கெடத் [3]தவழு மத்தழை
மழையிடை [4]யெழில்கெட மலரு மம்மழை
குழைவுற முழங்கிடுங் குழாங்கொள் பேரியே.

(இ - ள்) இழை இடை - (அந்தச்சேனையிலுள்ளவர்பூண்ட) ஆபரணங்களினிடங்களிலிருந்து, இள வெயில் எறிக்கும் - இளவெயில் வீசும்; அ வெயில் - அந்த வெயில், தழை இடை நிழல் கெட-(அந்தச் சேனையிற்பிடிக்கப்படும்) பீலிக்குடைகளினிடத்துத் தோன்றும் நிழல் ஒழியும்படி, தவழும்-(எங்கும்) பரவும்: அ தழை- அந்தப்பீலிக்குடைகள், மழை இடை எழில் - மேகத்தினிடமுள்ள அழகு, கெட-ஒழிய, மலரும்-மலர்ந்துவிளங்கும்; அ மழை குழைவு உற - அந்தமேகம் தளர்ச்சியடையும்படி [அம்மேகத்திலிருந்து தோன்றும் இடியோசை தாழ்வடையும்படி], குழாம் கொள் பேரி- கூட்டமாக இருக்கின்ற பேரிகைகள், முழங்கிடும் - ஒலித்திடும்;

இழை இளவெயி லெறிக்க, அவ்வெயில் மயிற்பீலிக்குடைகளாலுண்டாகின்ற நிழலை யொழிக்க, அம்மயிற்பீலிக்குடைகள் மழையினெழில்கெடமலர்ந்து விளங்க, அம்மழை தளர்ச்சியடையுமாறு வானத்து இடியோசையினும் பேரொலியுண்டாகப் பேரிகை முழங்குமென்க. இனி தழையெனப்படும் பீலிக்குடை வெயிலை மறைத்து நிழலைச்செய்தலால் மழையெழிலைக் கெடச்செய்ததல்லாமல், பலவர்ணத்தைப் படைத்ததாலும் தோற்றத்தாலும்,

வானவில்லோடு கூடிய மேகத்தை யொத்து அம் மேகத்தை யெழில்கெடச் செய்யும்: இங்கிலையில் அத்தழையின் கீழிடையே யமைந்துள்ள பேரிகைகள் முழக்கப்பட்டு அம்மேகத்தைக் குழைவுறச் செய்யுமென்க. இந்தச்செய்யுளில் கீழ்க்கீழ்க் கூறியபொருளை விட்டிட்டு மேன்மேற்சொன்னபொருளைப் பற்றியது - ஏகாவளியணியாம். பி-ம்:—[1] எறிப்ப. [2] அடு, இட. [3] தருவும். [4] நிழல். (828)

15.—குதிரையிலும் யானையிலும் மகளிரூர்தலின் வருணனை.

[1] மன்மணிப் புரவிகண் மகளி ரூர்வன
அன்னமுந் தியதிரை யாறு போன்றன
பொன்னணி புணர்முலை புரிமென் [2] கூந்தலார்
மின்னென மடப்பிடி மேகம் போன்றவே.

(இ - ள்.) மகளிர் ஊர்வன - மகளிர் ஏறிக்கொண்டுசெல்வனவாகிய, மணி மன் புரவிகள் - கிங்கிணிமாலைபூண்ட குதிரைகள், அன்னம் உந்திய திரை ஆறு போன்றன - அன்னப்பறவைகளைத் தாங்கிச்செல்வனவாகிய அலைகளையுடைய யாற்றைப் போன்றன: பொன் அணி புணர் முலை புரி மென் கூந்தலார் - பொன்னுபரணங்களை யணிந்தவரும் (ஒன்றோடொன்று) சேர்ந்த தனங்களையும் முறுக்குபொருந்தியமெல்லிய கூந்தலையு முடையவருமான மகளிர், மின் என - மின்னல்போலத்தோன்ற, மடம்பிடி - (அவர்கள்ஏறிச்செல்கின்ற) இளம்பெண் யானைகள், மேகம் போன்ற—;

கிங்கிணியின்ஓசை அன்னத்தின் குரலையும், குதிரைகள் திரையையும், மகளிர் அன்னப்பறவையையும் போலுதலால், கிங்கிணிகள் சத்திக்க மகளிரேறிச்செல்லுங் குதிரைச்சேனைகள் அன்னமுந்திய திரையாற்றைப் போலுமென்றார்; மகளிராலேறிச் செல்லும் பெண்யானைத் தொகுதிகள் மினனலோடு கூடிய மழைப்படலம்போலும்: தற்குறிபேற்றவணி. பி-ம்:—[1] மன்னணி. [2] கூந்தலாள். (829)

16.—சேனைசெல்லும் வழிவருணனை.

இணை [1] யெடுத் திடையிடை [2] நெருக்க வேழையர்
துணை முலைக் குங்குமச் சுவடு மாடவர்
மணிவரைப் [3] புயங்களிற் சாந்து மாழ்கிமெல்
அணையெனப் பொலிந்ததக் கடல்செ லாறரோ.

(இ - ள்.) இடை இடை - (அந்தச்சேனைசெல்லும்) இடங்களிலெல்லாம், - (சனத்திரளமிகுதியால்), இணை எடுத்து - (ஒருவர்மீது ஒருவர்) படுதல்பொருந்தி, நெருக்க-நெருக்குதலால்,ஏழையர் துணை முலை குங்குமம் சுவடுஉம் - மங்கைமாரின் (ஒன்றோடொன்று) ஒத்த தனங்களிலணிந்த குங்குமக்குழம்பும், ஆடவர் மணி வரை புயங்களில் சாந்துஉம்-புருஷர்களுடைய அழகிய மலைபோன்ற தோள்களிற் பூசிய சந்தனக்குழம்பும், மாழ்கி (கீழே யுதிருமாறு) அழிந்துபோய், அ கடல் செல் ஆறு - அந்தச் சேனாசமுத்திரம் செல்கின்ற வழியானது, மெல் அணை என-(ஆடவரும் மங்கையரும் கலவி நிகழ்த்தும்) மெல்லிய படுக்கைபோல, பொலிந்தது—; (எ-று.)

செல்லும்வழிமுழுவதும் சனத்திரளின் நெருக்கத்தால் அந்தச்சேனையிலுள்ள ஆடவரும் மகளிரும ஒருவர்மீது ஒருவர் பட்டு நெருக்கவே, அந்தச்சேனையிற் செல்லும் மங்கைய ரணிந்திருந்த குங்குமக்குழம்பும் ஆடவரணிந்திருந்த சந்தனச்சேறும் ஆங்காஙகு உதிர்ந்துகிடக்க, அவ்விடங்கள் முழுதும் மங்கைமாரோடு ஆடவர் கலவிநிகழததிய அணைபோலத் தோனறிறறென்று வருணித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பொலிதல் - விளஙகுதல். அரோ - ஈற்றசை. பி - ம்:—[1] அடுத்து. [2] நெருக்கும், நெருக்கி. [3] புயத்து மென்சாந்துமாறுபோய், புயங்களிற் சாந்துமாகிமேல். (830)

17.—மகளிர் கொங்கைமீது முத்துமணிவடங்களை யணிந்திருத்தல்.

முத்தினுன் முழுநில [1] வெறிக்கு மொய்ம்மணிப்
பத்தியா லிளவெயில் பரப்பும் [2] பாகினுந்
தித்தியா நின்றசொற் சிவந்த வாய்ச்சியர்
[3] உத்தரா சங்கமிட் டொளிக்குங் [4] கூற்றமே.

(இ - ள்.) பாகின்உம் தித்தியாநின்ற சொல் சிவந்த வாய்ச்சியர்-பாகைக் காட்டிலும் இனிமைமிகுந்த பேச்சுக்களையுடைய செந்நிறவாயைப்பெற்றுள்ள மகளிருடைய, உத்தராசங்கம் இட்டு ஒளிக்கும்-மேலாடையிட்டு மறைத்துவைத்துள்ள, கூற்றம் - யமன்போல (ஆடவர்க்கு) மரணவேதனையையுண்டாக்குகின்ற தனங்கள், முத்தினுல் - முத்துவடத்தையணிந்துள்ளதனுல், முழு நிலவு எறிக்கும்-பூர்ணசந்திரனது ஒளியை வீசும்; மொய் மணி பத்தியால் - நெருக்கமாகப்பதித்துள்ள இரத்தினங்களின் தொகுதியையுடைய மணிவடங்களால், இள வெயில் பரப்பும்—; (எ - று.)

உத்தராஸங்கம் - மேலாடை; வடசொல். தனங்களை உருவகவகையால் 'கூற்றம்' என்றார். தனங்களிலணிந்த முத்துமணி வடங்களால் நிலவு வெயில் என்ற இரண்டும் ஒரேகாலத்தில் தோன்றுமென்ற நயம் கருதத்தக்கது. பி-ம்:—[1] விரிக்கும், முளைக்கும். [2] ஆகிலும், பண்புடன். [3] உத்தரீகத்தினில். [4] கூற்றையே. (831)

18.—மகளிர்பக்கத்து ஆடவர்செல்லுதல்.

வில்லினர் வாளினர் வெறித்த குஞ்சியர்
கல்லினைப் [1] பழித்துயர் [2] கனகத் தோளினர்
[3] வல்லியின் [4] மருங்கினர் மருங்கு மாப்பிடி
புல்லிய களிறென [5] மைந்தர் போயினர்.

(இ - ள்.) வெறித்த குஞ்சியர்-(மலர்மாலை முதலியவற்றை யணிதலால்) நறுமணம்வீசுகின்ற தலைமயிரினையுடையவரும், கல்லினை பழித்து உயர் கனகம் தோளினர் - மலையையும் (தமக்குஒப்பாகாதென்று) இகழ்ந்து மேம்பட்ட பொன்னணிகளைப்பூண்ட தோளினையுடையவருமாகிய, மைந்தர்-ஆடவர்,—வில்லினர் - வில்லையேந்தியவரும், வாளினர்-வாட்படையையேந்தியவருமாகி,—மா பிடி புல்லிய களிறு என - பெருமைபெற்றபெண்யானையைத்தழுவிச் செல்லும்

ஆண்யானைபோல,—வல்லியின் மருங்கினர் மருங்கு-கொடிபோன்ற இடையையுடைய மகளிரின்பக்கத்தில், போயினர்—; (எ-று.)

மகளிரின்சேனைக்குப் பாதுகாவலாக அவர்களையடுத்து வில்லும் வாளுமேந்தி மைந்தர் சென்றாரெனக் கருத்துக் காண்க. இனி, 'மாப்பிடிபுல்லிய களிறு' என வருவதனால், வல்லியின்மருங்கினர் என்றது - மனைவிமார்களையெனவும், மைந்தரென்றது - அவர்களது கணவரையெனவும் கொண்டு கூறுதலும் உண்டு. மடவார் பக்கத்தே செல்லும் ஆடவர்க்கு, பிடி புல்லிய களிறுஉவமை. வில்லினர், வாளினர் - குறிப்புமுற்றெச்சம். பி - ம்:—[1] அழித்து. [2] கலவைத். [3] வல்லியம். [4] மருங்குலார். [5] மாந்தர். (832)

19.—மகளிர்செல்லுஞ் சிவிகை வருணனை.

மன்றலம் புதுமலர் மழையிற் சூழ்ந்தெனத்
துன்றிருங் கூந்தலார் முகங்க டோன்றலால்
[1] ஒன்றலா முழுமதி [2] யூரு மானம்போற்
சென்றன [3] வாலவர் சிவிகை யீட்டமே.

(இ - ள்.) மன்றல் அம் புது மலர் மழையில் சூழ்ந்து என - நறுமணத்தையுடைய அழகிய புதியமலர்கள மேகத்திற்சூழ்ந்திருந்தாற்போல, துன்று - (மலர்கள்) நெருங்கிய, இரு கூந்தலார்-மிக்க கூந்தலையுடையமகளிரின், முகங்கள் தோன்றலால் - (மற்றைக் கைகால் முதலிய உறுப்புக்கள் தோன்றாமல்) முகங்கள்மாத்திரம் காணப்படுவதால்,—ஒன்று அலா முழு மதி - ஒன்றல்லாத [மிகப் பலவான] பூர்ணசந்திரன், ஊரும் - ஏறிச்செல்லுகின்ற, மானம் போல்-விமானங்களைப்போல, அவர் சிவிகை ஈட்டம் - அம்மகளிரேறிச்செல்லுகின்ற பல்லக்குகளிள் கூட்டங்கள், சென்றன—;

கூந்தலின்மேல் மலர்சூழ்ந்திருப்பது மழையில்மலர்சூழ்ந்திருப்பதுபோலுமென்க;இல்பொருளுவமை. சிவிகையில் தமதுமுகம்மாத்திரம் தெரிய முக்காடிட்டவணணம் மகளிர் ஊர்ந்து செல்வதால், அச்சிவிகைகள் பூர்ணசந்திரர்பலர் ஏறிச்செல்லும் விமானங்களைப் போலுமென்றார்; தற்குறிப்பேற்றவணி. இவர்கள் அரசமகளிர்போலும். மானம்-முதற்குறை. பி-ம்:—[1] ஒன்றியமுழு, ஒன்றலபல. [2] ஊர் விமானம். [3] தரளவான, தானவான். (833)

20.—யானைகளின் வருணனை.

மொய்திரைக் கடலென [1] முழங்கு மூக்குடைக்
கைகளிற் றிசைநிலைக் களிற்றை யாய்வன
மையலுற் [2] றிழிமத மழைய் ருமையால்
தொய்யலைக் கடந்[3] தில சூழி யானையே.

(இ - ள்.) சூழி யானை-முகபடாத்தையுடையயானைகள்,—இழி-பெருகுகின்ற, மதம் மழை-மதப்பெருக்கு, அருமையால்-நீங்காமையினால், தொய்யலை-(அம்மதமழையால் தோன்றிய) சேற்றினை, கடந்தில-கடந்து அப்பாற்செல்லமாட்டாதனவாகி, மையல் உற்று-மயக்

கத்தையடைந்து, மொய் திரை கடல் என முழங்கும் மூக்குஉடை கைகளின்-நெருங்கிய அலைகளையுடைய சமுத்திரமபோலப் பேரொலி செய்கின்ற நாசித்துவாரத்தை முனையிற் கொண்ட (தூக்கியசைக்கின்ற தமது)கைகளினாலே, திசை நிலைகளிற்றை-எட்டுத்திக்கிலும் நிலையாகநிற்றலையுடைய யானைகளை, ஆய்வன-(பொரத்) தேடுவன போலத் தோன்றுகின்றன; (எ-று.)

யானைகள் பேரொலி செய்தவண்ணம் மதச்சேற்றிலழுந்தி அப்பாற் போகமாட்டாமையால் மயங்கிக் கையைநீட்டித் துழாவுவது, திக்கஜங்களைப் பொருதற்காகத் தேடுவனபோன்றிருந்ததென்க; உயர்வுநவிற்சியணியை யங்கமாகக்கொண்டுவந்த தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1] முழங்கி. [2] அழி. [3] இயல். (834)

21.—குதிரை வருணனை.

சூருடை நிலையெனத் [1] தோய்ந்துந் தோய்கிலா
[2] வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்
தாரொடுஞ் சதியொடுந் தாவு மாயினும்
பாரிடை மிதிக்கில பரியின் [3] பந்தியே.

(இ - ள்.) பரியின் பந்தி-குதிரைகளின் கூட்டம்,—சூர் உடை நிலை என-தெய்வத்தின் தன்மைபோலவும்,—தோய்ந்துஉம் தோய் இலா வார் உடை வன(ப்பு) முலை மகளிர் சிந்தைபோல் - (வெளிநோக்கிற்கு) மிக்க அன்புற்றிருப்பதுபோற் காட்டியும் (அகத்தில்) அன்புகொள்ளாத கச்சையணிந்த அழகிய தனங்களையுடைய(விலை) மகளிரின் மனம்போலவும், தாரொடுஉம் சதியொடுஉம் தாவும் ஆயின்உம் - கிங்கிணிமாலை கணகணவென்று ஒலிப்பத் தாளவொற்றுக்கு ஏற்ப அடிவைத்துப் பாய்ந்துசெல்லுமாயினும், பாரிடை மிதிக்கில-பூமியில் மிதிக்கவில்லை; (எ - று.)

குதிரைகள் தாளவொற்றுக்குஇயைய அடிகளைவைத்துப் பாய்ந்து செல்லுமாயினும், பூமியில் அடிவைக்குங்காலத்தைவிடத் தாவிச்செல்லுகின்ற நேரமே மிகுதியாகஇருத்தலால், அவை பூமியை மிதிக்கும்வேளை காண்டற்கும் அரிதாயிற்றென்றவாறு. தாம் செல்லுகின்ற புவியில் குதிரைகளின் பாதம் படாமலிருப்ப, தற்குத் தேவதைகளின் பாதம் பூமியிற்பதியாமலிருப்பதையும் வேசியரதுமனம் ஒருவர்மீது அன்புகொள்ளாமலே செல்வதையும் உவமையாக்கூறினர். இனி, இப்பாடலுக்கு மகளிர்சிந்தைபோல் பரியின்பந்தி தாவுமாயினும், சூரின்நிலையெனப்பாரிடைமிதிக்கில என்றும் உரைப்பர். பி-ம்:—[1] தோய்ந்து. [2] வாரிடை. [3] வெள்ளமே. ()

22.—ஆடவரருகு ஊடல்கொண்ட மகளிர் தனியே செல்லுதல்.

ஊடிய மனத்தின ருருத நோக்கினர்
நீடிய வுயிர்ப்பினர் [1] நெரிந்த நெற்றியர்
தோடவிழ் [2] கோதையுந் துறந்த கூந்தலர்
ஆடவ ருயிரென வருகு போயினர்.

(இ-ள்.) ஊடிய மனத்தினர்-(தம்முடைய ஆடவர்மீது)பிணக்குக்கொண்ட மனத்தையுடையரான சில மகளிர்,—உருத நோக்கினர் - கண்பார்வையை (த் தம் கணவர்மீது) செலுத்தாதவரும், நீடிய உயிர்ப்பினர் - பெருமூச்செறிபவரும், நெரிந்த நெற்றியர்-(கோபத்தினால்) புருவம் நெரிந்தேறப்பெற்ற நெற்றியை யுடையவரும், தோடு அவிழ் கோதைஉம் துறந்த கூந்தலர் - இதழ்கள் மலர்ந்த மலர்மாலையையும் வெறுத்துக் கூந்தலில் அணியாமல்விட்டிருப்பவர்களுமாகி, ஆடவர் உயிர் என - அவ்வாடவரது உயிரே (இங்ஙனம் பெண்ணுருக்கொண்டதோ) என்று சொல்லுமாறு, அருகு-(அவ்வாடவரது) சமீபத்தில்தானே, போயினர்—; (எ - று.)

ஊடல்கொண்டமகளிரின் இயற்கையை முதல்மூன்றடிகளிற் கூறியது-தன்மைநவிற்சியணி. உருத - அன்பில்லாத, நோக்கினர் என்றுரு முளர். பி - ம்:—[1]நெறித்த. [2]மாமலர்தோய்ந்த. (836)

23.—யானைகள் செல்லுதல்.

மாறெனத் தடங்களைப் பொருது மாமரம்
ஊறுபட் [1]டிடவிடை [2]யொடித்துச் சாய்த்துராய்
ஆறெனச் [3]சென்றன வருவி பாய்கவுள்
தாறெனக் கன[4]லுகு தறுகண் யானையே.

(இ - ள்.) அருவி பாய் கவுள்-அருவிபோல மதம்பாய்கின்ற கதுப்பினையும், தாறு என கனல்உகு-இருப்புமுள்ளென்று சொல்ல (அச்சொல்லைக் கேட்டமாத்திரத்துக்)கோபாக்கினியைக்கக்குவனவுமான, தறுகண்-அஞ்சாமைக்குணமுள்ள, யானை-யானைகள்,—மாறு என-(தமக்கு) மாறானவை யென்று (மதமயக்கத்தால்) கருதி, தடங்களை பொருது - மலையடிப்பக்கங்களை மோதி [இருகரைகளையும் மோதி], மா மரம்-பெரியமரங்களை, ஊறு பட்டிட இடை ஒடித்து-முறியும்படி நடுநடுவே யொடித்தும், சாய்த்து-கீழேமுறித்துத்தளளியும், உராய்-(அம்மரங்களினமீது) உராய்ந்து கொண்டும், ஆறு என-ஓராறுசெல்வதுபோல, சென்றன—; (எ - று.)

தடங்களைப்பொருவதும் மரங்களை யூறுபட-ஒடிப்பதும் சாய்ப்பதும் உராய்வதும் யானைக்கும் ஆற்றுக்கும ஒத்திருத்தலால், யானை செல்வது ஆறு செல்வதுபோலு மென்றார். இனி 'தடங்களைப் பொருது' எனபதற்கு, சிலேடை வகையால் பொருளுரைக்காமல், தடங்களை-கரைகளை யென்றே கூறி, இரண்டற்கும் இயைக்கலுமாம்: பாகர் முதலியோர் தாறு என்றசொல்லைச்சொல்லினும் கண்களாற் கனலுமிழ்வன என்று யானைகளின் தன்மையைக் கூறினர். பி-ம்:—[1]இடையிடை. [2]ஒழியச்சாய்த்துராய், ஒடிச்சாய்த்துயர். [3]செல்வன. [4]உமிழ். (837)

24.—தசரதசக்கரவர்த்தியின் சேனைப்பெருக்கம்.

உழுந்திட விடமிலை யுலக மெங்கணும்
[1]அழுந்திய வுயிர்க்கெலா [2]மருட்கொம் பாயினன்
எழுந்தில னெழுந்திடைப் படருஞ் சேனையின்
கொழுந்துபோய்க் [3]கொடிமதின் மிதிலை கூடிற்றே.

(இ - ள்.) அழுந்திய உயிர்க்கு எலாம்-(துன்பத்துள்) ஆழ்ந்திருக்கின்ற பிராணிகளுக்கெல்லாம், அருள்-கருணைபுரிகின்ற, கொம்பு ஆயினன்-ஊன்றுகோல்போன்றிருப்பவனாகிய தசரதசக்கரவர்த்தி, எழுந்திலன்-(இன்னும் தனது இருக்கையைவிட்டு) எழுந்து புறப்படவில்லை: (அப்படியிருக்கையில்), உலகம் எங்கணும் உழுந்து இடஇடம் இலை-உலகத்தில் எங்கும் ஓர்உழுந்தைவைக்கவும் இடமில்லை (என்று சொல்லும்படி), எழுந்து-(அயோத்தியினின்று) புறப்பட்டு, இடை-(அயோத்திக்கும் மிதிலாபுரிக்கும்) இடையிலே, படரும்-செல்கின்ற, சேனையின் கொழுந்து-சேனையின் முன்னணியானது, போய்—, கொடி மதில் மிதிலை-கொடிகட்டியமதிலாற்சூழப்பெற்ற மிதிலாநகரத்தை, கூடிற்று—; (எ-று.)

தனது சேனைமுழுவதும் முன்செல்ல அதன் பின்னால் தான் புறப்படவேணுமென்ற கருத்தையுடைய தசரதசக்கரவர்த்தி இன்னும் புறப்படாமலிருக்கையிலே புறப்பட ஆரம்பித்த அவனுடைய சேனையின் முன்னணியானது, மிதிலாநகரத்தைச் சேர்ந்த தென்க; உயர்வுநவிற்சியணி. இதனால், சேனை முழுவதும் ஒரேகாலத்து எழுந்தால் அயோத்தியிலிருந்து மிதிலைவரையிலும் நின்றாலும் நிற்க இடம்போதாதென்க; இந்தச் செய்யுளில் உலகம் என்பது-அயோத்திக்கும் மிதிலைக்கும் இடையேயுள்ள பூமியின் பகுதியைக் காட்டும். அருட்கொம்பு - பற்றுக்கோடுமாம். அயோத்தியினின்று மிதிலைவரையிற்கூடிய சேனை ஒருபடர்கொடிபோலு மென்னுங் குறிப்புத்தோன்ற, 'படருஞ்சேனையின் கொழுந்து போய்க் கொடிமதின் மிதிலை கூடிற்று' என்றனர். சீதாராம விவாகத்தின் பொருட்டு நிகழும் எழுச்சியாதலின், எள்ளிட இடமின்றி என்னாது மங்களகரமாக உழுந்து கூறினரென்ப. பி-ம்:—[1] அழுந்தலின், அழுந்தலில். [2] கொழுகொம்பானவன். [3] நெடு. (838)

25.—பண்டியில்விளங்கிய மகளிரின்முகம்.

கண்டவர் மனங்[1] கள்கை [2] கோப்பக் [3] காதலின்
[4] வண்டிமிர் கோதையர் வதன [5] ராசியால்
[6] பண்டிகள் [7] பண்டிகள் [8] பரிசிற் செல்வன
புண்டரீ கத்தடம் [9] போவ போன்றவே.

(இ - ள்.) கண்டவர் மனங்கள் காதலின் கைகோப்ப - (தம்மைக்) கண்ட ஆடவரின் மனங்கள் ஆசையினாற் கவிந்துகொள்ள, பண்திகள் பரிசின் செல்வன-பூட்டப்பட்டு விளங்குகின்ற தன்மையோடு செல்கின்ற, பண்டிகள்—,—வண்டு இமிர் கோதையர் - வண்டுகள் ஒலிக்கப்பெற்ற மயிர்முடியையுடைய மகளிரது, வதனம் ராசியால்-முகங்களின் கூட்டங்களினால், புண்டரீகம் தடம்போவ - தாமரைமலரையுடைய தடாகங்கள்செல்வதை, போன்ற—; (எ-று.)

மகளிரையேற்றிச்செல்கின்ற பண்டிகள் - அம்மகளிரின் முகம் தாமரை போலுதலால், புண்டரீகத்தடம்போவபோலத்தோன்றினவென்றார்: தற்குறிப்பேற்றவணி பண் திகள்-அலங்காரம்விளங்குகின்ற, பண்டிகள் எனினுமாம். திகழென்பது மடக்கணிபற்றிளகரப்

போலி பெற்றுவந்தது. இனி, பண்டிகள் பண்டிகள்-பன்மைபற்றிய அடுக்கு எனினுமாம். பரிசின் செல்வன-(யாற்றுநீரிற்செல்லும்) ஓடம்போல அசையாதுசெல்வன என்றுமாம். கைகோப்ப-இலக்கணவழக்கு. பி-ம்:—[1]களி. [2]கொடுப்பக். [3]ஏறிய. [4]வண்டமர். [5]ராசிகள். [6]பண்டிய. [7]பண்டிய, பண்டிகழ், பாண்டியம், நிரைநிரை. [8]பரிவிற், பரிப்பிற். [9]பொய்கை, பூத்த. (839)

26.—பண்டியிற்செல்லுகின்ற ஒருமாதின் கடைக்கணோக்கம்.

[1]பாண்டிலின் [2]வைத்தவோர் பாவை தன்னெடும்
ஈண்டிய [3]வன்பின னேகு வானிடைக்
காண்டலு நோக்கிய கடைக்க ணஞ்சனம்
ஆண்டகைக் கினியதோ ரமுத [4]மாயதே.

(இ - ள்.) பாண்டிலின் வைத்த-பண்டியிலேற்றப்பட்டுள்ள, ஓர் பாவை-ஒருபெண், ஈண்டிய அன்பினன் - மிக்க அன்புடையவனாகி, தன்னோடும் ஏகுவான்-(பண்டியைப்பற்றியவண்ணம்) தன்னோடும் தொடர்ந்து ஓடிவருகின்ற இளையன்மீது, இடை காண்டலும் - வழியிடை(த் தன்) பார்வையைச் செலுத்தவும்,—நோக்கிய-(அவனைப்) பார்த்த, கடைக்கண்-அந்தக் கண்கடையினது, அஞ்சனம்-கருமை, ஆண்தகைக்கு-(அவ்வாறு அன்போடு அந்தப் பெண்ணால் பார்க்கப்பட்ட அந்த) ஆடவனுக்கு, இனியது-இனியதாகிய, ஓர் அமுதம்-, ஆயது—; (எ - று.)

ஓராடவன் ஒருத்தியைப் பண்டியிலேற்றிப் பின்பற்றி யோடிவர, அவன்மீது அம்மாது கடைக்கண்பார்வையைச் செலுத்த அம்மாதின் கடைக்கண் பார்வையை அவ்வாடவன் கண்டது அமிருதத்தையுண்டதுபோன்று அவனுக்கு நீண்டவழியோடிச் செல்வதனால்விளைந்த அயர்ப்புமுதலியவற்றைப் போக்கி இன்பம் விளைத்ததென்பதாம். அஞ்சனம்-கருமைக்கு, இலக்கணை. 'அஞ்சனம் அமுதமாயிற்றே! இதுஎன்!!' என்ற வியப்பு, இங்குத் தோன்றும். அஞ்சனம்-புதையலைக்காண உதவும் மை எனக்கொண்டு, கடைக்கணாகிய அஞ்சனமானது புதையல்போல உள்ளத்துக் கிடந்த அவளது காதலைப் புலப்படுத்த அது அந்த ஆடவனுக்கு அமுதமாயிற்று எனினுமாம். ஏகுவானிடைஎன எடுப்பினுமாம். பி - ம்:—[1]பாண்டிய, பாண்டியில். [2]வைத்ததோர், வயத்ததோர். [3]அன்பனாய், அன்பினோடு. [4]ஆயிற்றே. (840)

27.—மாதைப் பிரிந்து செல்லுகின்ற ஓராடவன்.

பிள்ளைமா னோக்கியைப் பிரிந்து [1]போகின்றான்
அள்ள[2]னீர் மருதவைப் பதனி [3]னன்னமாம்
புள்ளு [4]மென் றாமரைப் [5]பூவும் [6]நோக்கினான்
உள்ளமுந் [7]தானுநின் றூச [8]லாடினான்.

(இ - ள்.) பிள்ளை மான் நோக்கியை-இளமான்போன்ற கண்களையுடைய (தன்) மனைவியை, பிரிந்துபோகின்றான்-பிரிந்து செல்

இன்றவனுன ஓராடவன், அள்ளல் நீர் மருதம் வைப்பு அதனின் - சேற்றையும் நீரையுங்கொண்டுள்ள மருதநிலத்தில், அன்னம் ஆம் புள்உம் - அன்னப்பறவையையும், மெல் தாமரை பூஉம்-மெல்லிய தாமரைமலர்களையும், நோக்கினன்-பார்த்து, (அதனால் தன்மனைவியின்நடையும் பாதங்களும் நினைவுக்குவர), உள்ளம்உம் தான்உம் நின்று-மனமுந்தானுமாக இருந்து, ஊசல் ஆடினன்—; (எ-று.)

மருதநிலத்தில் தாமரைப்பூவையும் அன்னத்தையும்காணவே தன்மனைவியின் பாதமும் நடையழகும் தன்நினைவிற்கு வர, ஓராடவன், தன்னுடன் தன்மனைவிவர அவளது பாதங்களையும் நடையழகையும் தான் கண்டு மகிழ்தற்குமுடியாது போனமைபற்றி வருந்தினனென்க; இங்ஙன் உவமைப்பொருளைக்கண்டு உபமேயத்தை நினைப்பதாக வருவதும் - நினைப்பணி வகையே. சனத்திரளின் நெருக்கத்தால் உடன்வரமுடியாமல் தனிப்பட்ட ஆடவன் அன்னத்தையும் தாமரைமலரையும் பார்த்து முறையே அம்மனைவியினது நடையையும் பாதங்களின் மென்மையையும நினைந்து, 'மனைவி நடந்து கால்வருந்தின் ஆற்றுவார் யாவர்?' எனத் தன்னுள்ளம் வருந்தினனென்று கருத்துக்கூறலுமாம். பி - ம்:—[1]போகின்ருள். [2]நீள், மீன். [3]அன்னத்தின். [4]மாத், அத். [5]போதும். [6]நோக்கிநின்று. [7]தாமுமே. [8]ஆடுவான், ஆடினர். (841)

28.—இதுவும் அடுத்த கவியும்–சேனையின் வருணனை.

அங்கண் ஞாலத் தரசு [1]மிடைந்தவா
பொங்கு வெண்குடை சாமரை [2]போர்த்தலால்
கங்கை யாறு கடுத்தது காரெனச்
சங்கு பேரி [3]முழங்கிய [4]தானையே.

(இ - ள்.) சங்கு - சங்கவாத்தியமும், பேரி - பேரிகையும், கார் என முழங்கிய-மேகம் இடிப்பதுபோல (ப் பெருஞ்சத்தமுண்டாகும்படி) ஒலித்த, தானை - அச்சேனையானது,—பொங்கு வெள் குடை சாமரை போர்த்தலால் - விளங்குகின்ற வெண்ணிறக்குடைகளும் சாமரைகளும் நிரம்பப் பெற்றதால், கங்கையாறு - கங்காநதியை, கடுத்தது-ஒத்தது; அம் கண் - அழகியஇடமுள்ள, ஞாலத்து - பூமியில், அரசு - அரசசின்னங்கள், மிடைந்த - நெருங்கிய, ஆ - வகை, (என்னவியப்பு!!) (எ - று.)

சங்கமும் பேரிகையும் முழங்குகின்ற அந்தச்சேனையில் அரசசின்னங்களாகிய வெண்குடைகளும் வெண்சாமரங்களும் நெருங்கி எங்கும் ஒரே வெண்ணிறமாகக் காணப்பட்டதனால் அச்சேனை கங்காநதிபோலத் தோன்றிற்றென்பதாம்; இத்தன்மையைப் பாராட்டி 'ஞாலத்து அரசு மிடைந்தவா' என்ருர். கங்காநதி பேரொலியோடு வெண்ணிறத்தோற்றமுள்ளது. [1]மிடைதலால். [2]பூத்தலால். [3]தழங்கின. [4]யானையே, தாரையே. (842)

29. அமர [1]ரஞ்சொ லணங்கனை யாருயிர்
கவருங் கூர்[2]நுதிக் கண்ணெனுங் காலவேல்
குமரர் [3]நெஞ்சுட் [4]குளிப்ப [5]வழங்கலால்
சமர [6]பூமியு மொத்தது தானையே.

(இ - ள்.) தானை - அந்தச்சேனையானது,—அம் சொல் அமரர் அணங்கு அனையார் - இனியமொழியையுடையவரும் சிறந்த தேவ மங்கையரையொத்தவருமான மகளிர், உயிர் கவரும் கூர் நுதி கண் எனும் - (தமக்கு இலக்கானவருடைய) உயிரைக் கவர வல்ல கூரிய முனையையுடைய கண்ணென்று சொல்லப்படுகின்ற, காலன் வேல்- யமனுக்குஉரிய வேற்படையை, குமரர் நெஞ்சுள் - ஆடவரின் இதயத் தில், குளிப்ப வழங்கலால் - தைக்கும்படி ஏவுவதனால், சமரம் பூமி உம் - யுத்தகளத்தையும், ஒத்தது—; (எ - று.)

வேற்படையை இதயத்துக் குளிப்ப வழங்குதல், யுத்தகளத்து நிகழுந் தொழிலாம். கண்ணெனும்வேல் - உலகத்தில்கண்ணென்று தவருகவழங்கப்படுகின்றனவேயன்றி உண்மையில் அவை வேற் படையே யென்க: அபநுதியணி. பி-ம்:—[1] அஞ்சவ், அஞ்சும், அஞ்ச. [2] அயில். [3] நெஞ்சு. [4] களிப்ப. [5] அழுங்கலால். [6] பூமியை. (843)

30.—வீரர்களின் தோள்முதலியவை நெருங்குதல்.

தோண்[1]மி டைந்தன [2]தூண மிடைந்தென
[3]வாண்[4]மி டைந்தன [5]வான்மின் மிடைந்தெனத்
தாண்மி டைந்தன [6]தம்மி மிடைந்தென
ஆண்மி டைந்தன வாளி [7]மிடைந்தென.

(இ - ள்.) தூணம் மிடைந்து என-கற்றூண்கள் நெருங்கி யிருந் தாற்போல, தோள் மிடைந்தன-(வீரர்களின்) தோள்கள் நெருங்கின; வான் மின் மிடைந்து என - வானத்தில் மின்னல் நெருங்கியிருந் தாற்போல, வாள் மிடைந்தன-(அவர்களின்) வாட்படைகள் நெருங் கின; தம்மி மிடைந்து என - தாமரைமலர்நெருங்கினாற்போல, தாள் மிடைந்தன - (அவ்வீரர்களின்) பாதங்கள் நெருங்கின; ஆளி மிடைந்து என-சிங்கங்கள் நெருங்கினாற்போல, ஆள் மிடைந்தன - காலாட்படைகள் நெருங்கின; (எ-று.)

காலாட்படையிற்சேர்ந்தவர் விவேகம்நிரம்பாதவரா யிருப்ப ராதலால், அவர்களை அஃறிணையாக, 'ஆள்மிடைந்தன' என்றார்; 'ஆண்' என்றும் பிரிக்கலாம். தம்மி - தாமரையையுணர்த்துந் தெலுங்குச்சொல். [6] தம்மின் என்றபாடத்திற்கு - வீரர்கள் ஒருவ ரோடொருவர் கைகலந்தாற்போல், தாள் மிடைந்தன - அவர்கள் பாதங்களும் நெருங்கின என்க. உவமையணியும் சொற்பொருட்பின் வருநிலையும் சேர்ந்துவந்தன. பி-ம்:—[1] மிடைந்தென. [2] தூணிமிடைந் தன. [3] வேள். [4] மிடைந்திட. [5] மின்னின்வயங்கிட; மின்னுமயங்கிட. [6] தம்மினடந்தன. [7] மிடைந்தவே,மிடைந்தன. சிலபிரதிகளில் 'வாண் மிடைந்தன வாடவர்போதலால்' என்று இரண்டாமடி. (844)

31.—இனி, ஆறுசெய்யுள்களில்ஒவ்வொன்றும்—ஒவ்வொரு இளைஞனது செயல் கூறும்.

வார்கு லாமுலை வைத்தகண் வாங்கிடப்
பேர்கி லாது பிறங்கு முகத்தினன்
[1]தேர்கி லானெறி யந்தரிற் சென்றொரு
மூரி [2]மாமத யானையை முட்டினன்.

(இ - ள்.) (ஒருமாதின்), வார் குலாம் முலை - கச்சையணிந்த தனங்களில், வைத்த கண் - வைத்த கண்களை, வாங்கிட பேர்கிலாது [பேர்ந்துவாங்கிடாது] - (அவற்றை) விட்டு வாங்காமல், பிறங்கு - விளங்குகின்ற, முகத்தினன் - முகத்தையுடைய ஒருத்தன்,—நெறி தேர்கிலான் - (தான் செல்லவேண்டிய) வழியைக் காணமுடியாதவனாகி, அந்தரில் சென்று-குருடர்போலப்போய், ஒரு மூரி மா மதம் யானையை - ஒருவலிமையுள்ள பெரியமதயானையின் மீது, முட்டினான் - முட்டிக்கொண்டான்; (எ-று.)

கொங்கைகளில் அழுந்தின தன்கண்ணை மீட்க முடியாமையால், ஒருத்தன், போகும் வழியிலிருந்த ஒருமதயானையில் முட்டிக்கொண்டானென்க. கண் வேறொன்றிற் சென்றால் எதிரிலிருக்கும் பொருளுந் தெரியாதிருத்தல் இயற்கை. அந்தர் - வடசொல். பி-ம்:- [1]தேர்கலா. [2]மாமதயானையின், யானை முகத்தினை. (845)

32. சுழிகொள் [1]பாய்பரி துள்ளவொர் [2]தோகையாள்
[3]வழுவி வீழலுற் றாளையொர் [4]வள்ளறான்
எழுவி னீள்புயத் தாலெடுத் தேந்தினான்
[5]தழுவி நின்[6]றொழி யான் [7]றரை மேல்வையான்.

(இ - ள்.) சுழி கொள் - (நல்லிலக்கணமாகிய) சுழிகளமைந்த, பாய் பரி - பாய்ந்துசெல்லுந்தன்மையுள்ள (தானேறியிருந்த) குதிரை, துள்ள-துளளிப்பாய, ஒர் தோகையாள் வழுவி வீழல் உற்றாளை - மயில்போன்ற சாயலையுடையளாகித் தவறி (அந்தக் குதிரையினின்று) விழத்தொடங்கிய ஒருத்தியை, ஓர் வள்ளல் - உதாரகுணமுடைய ஒருத்தன், தான்—, எழுவின நீள் புயத்தால் எடுத்து ஏந்தினான் - இருப்புத்தூண்போன்ற நீண்ட கையினாலெடுத்துத் தாங்கியவனாய், தரைமேல் வையான்-பூமியில்விட்டிடாமல், தழுவி நின்று ஒழியான் - தழுவியவண்ணமே நின்றிட்டான்;

குதிரை துள்ளிப்பாய்ந்ததனால் அதன்மேலேறியிருந்த ஒருத்தி தவறிக் கீழ் விழத்தொடங்க, அப்போது அருகேயிருந்த ஆடவன் அவளைத் தனகையாற் பிடித்துக்கொண்டு தழுவிய வண்ணம் நின்றானேயொழியப் புவியின்மீது அவளை விட்டிலனென்பதாம். வள்ளல் - அம்மாதின் கணவன் எனக. பி - ம்:—[1]வாம. [2]இன்சொலாள, அஞ்சொலாள். [3]வழுவிலாமலுறறாளை. [4]காளைவந்து, வள்ளல்வந்து, மைநதன் வந்து, மைந்தனறான. [5]தழுவினின்று. [6]ஒழிந்தான. [7]தரைதான். (846)

33. [1]துணைத்த தாமரை நோவத் [2]தொடர்ந்தடர்
கணைக்க ருங்கணி னாளையொர் காளைதான்
பணைத்த வெம்முலைப் பாய்மத யானையை
[3]அணைக்க நங்கைக் ககலிட மில்லென்றான்.

(இ - ள.) துணைத்த தாமரை நோவ-இரண்டாகிய தாமரை மலர்கள [பாதஙகள்] நோகுமபடி, தொடாநது - பின்தொடர்ந்து (நடந்துவநது),-அடா - (தனனை) வருத்துகினற, கணை கரு கணி

ணுளை - அம்பையொத்த கருங்கண்ணையுடைய ஒருத்தியை (ப் பார்த்து), ஓர் காளை-ஒரு வாலிபன், 'நங்கைக்கு-இந்தப்பெண்ணின், பணைத்த வெம்முலை-பருத்த விரும்பத்தக்க தனங்களாகிய, மதம் பாய் யானையை - மதநீர்பெருகப்பெற்ற யானையை, அணைக்க-, அகல் இடம்-விசாலமான இடம் [மார்பாகிய இடம்], இல் என்றான்-;

ஒருவர்மார்பில் அடங்காதவாறு பருத்துள்ளது, இம்மங்கையின் தனங்களென்றவாறு. நடந்தவண்ணம் மதனநோய் தனக்குத்தோன்றும்படி தன் கண்களினாற் பார்ப்பவளென்பார் 'தாமரை நோவத் தொடர்ந்தடர் கணைக்கருங்கணிணுளை' என்றார். கணைக் கணிணுள் - உவமைத்தொகை. அகலிடம் - மார்பிடமாகிய அகன்ற இடமென்க: அகலம்என்ற சொல் கடைக்குறையாய் வந்தது. இச் செய்யுளில் உருவகவணி காண்க. தான்-அசை. பி-ம்:—[1] துணர்த்த. [2] தொடர்ந்துறும், தொடர்ந்தடை. [3] அணைத்து, அணைத்த. (847)

34. சுழியுங் குஞ்சி மிசைச்சுரும் பார்த்திடப்
பொழியு [1] மாமத யானையிற் போகின்றான்
கழிய கூரிய வென்றொரு காரிகை
விழியை நோக்கித்தன் வேலையு நோக்கினன்.

(இ - ள்) சுழியும் குஞ்சிமிசை-சுழிந்துள்ள (தனது) தலை மயிர்மேல், சுரும்பு-வண்டுகள், ஆர்த்திட-ஆரவாரிக்கும்படி, மா மதம் பொழியும் யானையின-மிக்கமதநீரைச்சொரிகின்ற யானைபோல, போகின்றான்-செல்பவனாகிய ஒருவாலிபன்,—ஒரு காரிகை விழியை-அழகிய ஒருபெண்ணின் கண்களை, கழிய கூரிய என்று நோக்கி - மிகவுங்கூர்மையானவை யென்றுபார்த்து, (அக்கண்களைப்போல் இவ்வேற்படைக்குக் கூர்மையிருக்கிறதாஎன்று பார்க்குமாறு) தன் வேலைஉம் நோக்கினன்-தன் வேற்படையையும் பார்த்தான்;

ஆர்த்திடப் போகின்றான் என்க: ஆர்த்திடஎன்பதை 'பொழியும்' என்பதனோடு இயைத்து - மதத்தை மத்தகத்தினின்று பொழிதலால் அங்குத் தோன்றிய குஞ்சிமிசைச் சுரும்பு ஆரவாரிக்குமென்னவுமாம். வீரர்கையிற்கொள்ளும் வேற்படையினும் அந்தமாதின்கண்கள் மிகக்கூரியனவென்க. அதனால், உயிரிற் பாய்ந்து துளைக்கும் இயல்பையுடைய கண்களைவிட, உடல்தசையில் மாத்திரம்பாய்ந்து துளைத்துச்செல்லும் வேல் இழிந்ததென்று அவ்வீரன் கருதியமை பெறப்படும். பி-ம்:—[1] மும். (848)

35. [1] தரங்க வார்குழற் றாமரைச் சீறடிக்
கருங்கண் [2] வாளுடை யாளையொர் காளைதான்
நெருங்கு பூண்முலை [3] நீள்வளைத் தோளினீர்
மருங்கு லெங்கு [4] மறந்துவைத் தீரென்றான்.

(இ - ள்.) தரங்கம் வார் குழல் - அலைபோலச் சுருண்டுநீண்ட கூந்தலையும், தாமரை சிறு அடி - தாமரைமலர்போன்ற சிறிய பாதங்களையும், வாள கருங கண - வாட்படைபோன்ற கருநிறமுள்ள கண்களையும், உடையாளை - உடையவளான ஒருமாதை, ஓர் காளை-ஒரு இளையவன், 'நெருங்கு பூண் முலை நீள் வளை தோளினீர்-

நெருங்கிய ஆபரணமணிந்த தனங்களையும் நீண்ட வளையலை யணிந்த தோள்களையு முடையவரே! (நீர்),—மருங்குல் - (நுமது) இடையை, எங்கு - எவ்விடத்து, மறந்து வைத்தீர் - மறந்துவைத் திட்டீர்?' என்றான்-என்றுவினவினன்; (எ-று.)—தான்-அசை.

அங்குச்சென்ற மாதுடன் உரையாடவிரும்பி இந்தஇளைஞன் இவ்வாறு வினவினன். இதனால், அந்தமங்கையின இடை கண் ணுக்குப் புலனாகாதவாறு அத்துணை நுண்மையாக வுள்ளதென்ற வாறு. பி-ம்:—[1] தரங்கு. [2] வார்குழலாளை. [3] நேர். [4] மறந்ததுநீர். (849)

36. கூற்றம் போலுங் கொலைக்கணி னா[1] லன்றி
மாற்றம் பேசுகி லாளையொர் [2] மைந்தனான்
[3] ஆற்று நீரிடை யங்[4] கைகை ளாலெடுத்து
ஏற்று வா[5] ருமை யாவர்[6] கொ லோவென்றான்.

(இ - ள்.) கூற்றம்போலும் - யமனைப்போல, கொலை - (தன் னிடத்து அகப்பட்டாரைக், கொல்லுந்தன்மையுள்ள, கணினால் அன்றி-கண்சாடையினாலல்லாமல், (வாயைத்திறந்து), மாற்றம் பேசுகிலாளை - பேச்சுப் பேசாத ஒருமங்கையை(ப் பார்த்து), ஒர் மைந்தன்-ஓராடவன்,—'ஆறு நீரிடை - (வழியேயுள்ள) ஆற்றின் நீரில், உமை-உம்மை, அம் கைகளால் எடுத்து-அழகிய கைகளா லெடுத்து, ஏற்றுவார்-(கரை) ஏற்றவல்லவர், யாவர்கொல் - யாவர் தாமோ?' என்றான்-என்றுவினவினன்; (எ-று.)—ஓ அசை.

யாற்றைக்கடக்கும்போது உம்மைக் கரையேற்றுவிக்க மைந் தன் வேணுமே; அப்போது எவரையாவது வாய்திறந்து கூப்பிட வேணுமே. இந்த மௌனவிரதம் அப்போது நீங்கியொழியாதோ என்று வினவியபடி: அன்றி, பேச்சுககு உரியவனல்லாதவன் தீண்டுதற்கு உரியவனாவனோ? என்று வினவியவாறுமாம். மைந்தன்-கணவனென்னலாம். தனது கைகளை அங்கையென்றான், அவளைததீண்டும் பேற்றைப் பெறுதலால். பி-ம்:—[1] ஒரு. [2] வள ளான். [3] ஆற்றின். [4] கையினால். [5] நமை. [6] கொலாம். (850)

37.—சேனையிலிருந்த ஒட்டகம்.

தள்ள ரும்[1] பரந் தாங்கிய வொட்டகம்
[2] தெள்ளு தேங்[3] குழை யாவையுந் தின்கில
உள்ள மென்னத் தம்வாயு [4] முலர்ந்தன
கள்ளுண் மாந்தரிற் கைப்பன தேடியே.

(இ - ள்.) தள்ள அரு - இறக்குவதற்கு அருமையான, பரம்- பெரும பாரத்தை, தாங்கிய - சுமந்துசென்ற, ஒட்டகம்—, தெள்ளு தேம் குழை யாவைஉம் - தெளிந்த இனிய தளிர்கள் எவற்றையும், தினகில - தின்னாதனவாய், கைப்பன தேடி - கைக்கின்றவேப்பிலை முதலியவறறைத தேடி, கள் உண் மாந்தரில்-களளைபபருகும் மைந் தர்போல, உளளம் எனன தம் வாய்உம் உலர்ந்தன - (தம) நெஞ்சு உலர்ந்தாற்போல வாயும் உலர்ந்தனவாயின; (எ - று.)

கள்ளைத்தவிர வேறு பால்முதலிய இன்சுவைப்பண்டம் எதையும் வேண்டாத கள்ளுண்மாந்தர் வேம்பின் இலைபோன்றவற்றையன்றி இன்சுவைத்தளிரெதையும் வேண்டாத ஒட்டகத்துக்கு, நெஞ்சும்வாயும் உலர்ந்துபோகப் பெறுதலிலும் உவமையாவர். முதலடியில் "The last straw that broke the camel's back' என்ற ஆங்கிலத்தொடர் வழக்கிலுள்ள ஒப்புமை காட்டியுள்ளது பெரிதும் போற்றத்தக்கது. பி - ம்:—[1]பொறை. [2]எள்ளருங், தெள்ளரும். [3]கழை, கரும்பு. [4]உலர்ந்தவால். (851)

38.—பப்பரர் பலபண்டங்களைக் காவிற் சுமந்து செல்லுதல்.

அரத்த நோக்கின [1]ரற்றிரண் மேனியர்
பரித்த காவினர் பப்பர ரேகினர்
திருத்து [2]கூடத்தைத் திண் [3]கணை யத்தொடும்
எருத்தி [4]னேந்திய மால்களி றென்னவே.

(இ - ள்.) அரத்தம் நோக்கினர் - செந்நிறக்கண்களையுடையவரும், அல் திரள் மேனியர் - இருள் திரண்டாற்போன்ற [கறுத்த] உடம்பையுடையவருமாகிய, பப்பரர் - பப்பரசாதியார்,—திருத்து கூடத்தை - (தம்மைத்) திருத்துதற்குஉரிய சம்மட்டியை, திண் கணையத்தொடுஉம்-வலிய கணைய மரத்தொடும், எருத்தின் ஏந்திய-(தமது) பிடரியினால் தாங்கிய, மால் களிறு என்ன - மதமயக்கங் கொண்ட யானைபோல, பரித்த காவினர்-காவுகொண்டு பாரத்தைச் சுமப்பவர்களாய், ஏகினர்-சென்றார்கள்; (எ - று.)

கணையத்தோடும் கூடத்தை எருத்திற் சுமந்த களிறு. பாரத்தைக் காவினாற்சுமக்கும் பப்பரர்க்கு ஏற்ற உவமையாம். [காவு= காவடி.] தாழ்குலத்தவரான இவர் பாரத்தைச் சுமக்கும்போது வருத்தந்தோன்றுமைக்காகக் கட்குடித்ததுபற்றி அவர் கண்கள் செந்நிறமாக இருத்தலால் 'அரத்த நோக்கினர்' என்றார். கணையம்-யானைகள் ஒன்றோடொன்று பிணங்கி முட்டாதபடி இடையே கிடத்தும் மரம். பி - ம்:—[1]அற்றிகழ், அத்தளிர். [2]கூடத்தில். [3]கணையை, களியை. [4]மாக்களிறேந்தியது, மால்களிறெய்தியது. ()

39.—மங்கைமார்களின் கண்கள்.

பித்த யானை பிணங்கிப் [1]பிடியிற்கை
[2]வைத்த மேலிருந் தஞ்சிய மங்கைமார்
எய்த்தி டுக்கணுற் றார்[3]புதைத் தார்க்கிரு
கைத்[4]த லங்களிற் கண்ண [5]டங் காமையே.

(இ - ள்.) பித்தம் யானை-வெறிபிடித்த ஓரியானை, பிணங்கி-மாறுபட்டு, பிடியில் கை வைத்த(து) - பெண்யானைமீது (தன்) கையை நீட்டிஇறது; (அப்போது), மேல இருந்து அஞ்சிய - அந்தப் பெண்யானையினமேல் ஏறியிருந்து அச்சமடைந்த, மங்கைமார் - மகளிரின், கண் புதைத்தார்க்கு - கண்களை மூடத்தொடங்கியவர்க்கு, இரு கைதலங்களில் - இரண்டு கைகளுக்குள், அடங்

காமை-(அந் தநீண்ட கண்கள்) அடங்காமையால், எய்த்து-(அவர்கள்) மனம் மெலிந்து, இடுக்கண் உற்றார்-வருத்தமடைந்தனர்; (எ - று.)

ஒருகளிறு வெறிகொண்டு அடங்காமல் பெண்யானைமீது தன் கையை நீட்டுதலும் பெண்யானையின் மேலேறியிருந்த மகளிர் அஞ்சினராக, 'இவர்களுடைய கண்களை மூடிவிட்டோமானால் அப்போது இவர்கள் அச்சங்கொள்ளார்' என்றுகருதி அம்மங்கைமாரின இருகண்களையும் சேடியர் மூடத்தொடங்கி அவர்கண்கள் கைகளினால்மூடமுடியாது அவற்றினும்பெரியனவாக இருந்ததனால் அச்சேடியர் மெலிந்து தளர்வாராயினரென்க. தம்கண்களைத் தாமே கைத்தலங்களால் மூடத்தொடங்கி எய்த்து இடுக்கணுற்றாரென்றலும் ஒன்று. பி-ம்:—[1]பிடிக்கரம். [2]வைத்து. [3]புதைத்தார். [4]தடங்களில். [5]அடங்காமலே. எற்றிக்கண் புதைத்தாரிசைத்தாரிரு என்று சிலபிரதிகளில் மூன்றாமடி. (853)

40.—சிந்தரும் மடவாருடன் செல்லுதல்.

வாம மேகலை யாரிடை வாலதி
பூமி தோய்பிடிச் சிந்தரும் போயினர்
காமர் தாமரை நாண்மலர்க் கானத்துள்
ஆமை மேல்வருந் [1]தேரையி னுயரோ.

(இ - ள்) காமர்-அழகிய, தாமரை நாள் மலர் கானத்துள் - தாமரையின் அன்றுபூத்த மலர்களின் தொகுதியுள், ஆமைமேல் வரு தேரையின் ஆய்-ஆமைமீது ஏறிவருகின்ற தேரைபோன்ற தோற்றத்தைப்பெற்றவராய், வாலதி பூமி தோய்-வால்கள் பூமியிற் படியப்பெற்ற, பிடி-பெண்யானைகளில், வாமம் மேகலையாரிடை-அழகியமேகலாபரணம்பூண்ட மடவாரோடு, சிந்தர்உம்—, போயினர் - சென்றார்; (எ - று.)

மகளிர் தாமரைமலர்த்தொகுதிபோல் விளங்க, அவர்களிடையேவருஞ் சிந்தர் தேரைபோலவும், பெண்யானைகள் ஆமைபோலவும் விளங்கும். சிந்தர்-மூன்றடியுயரமுள்ளவர். [குறளர் சிந்தர்களைச் சேவகராகவும் மெய்காப்பாளராகவும் அந்தப்புரத்தில் வைத்துக் கொள்வரெனக் கவிகள் கூறுவர்.] தேரையைச் சிந்துக்கு உவமையாகக் கூறுவதை "தேரைநடப்பனபோற்குறள்சிந்தினொ, டோரு நடந்தன" என்பதிலும்காண்க. வாலதி பூமியில் தோய்தல், உத்தம விலக்கணம். பி-ம்:—[1]தேரையதாமரோ, தேரையினுரையோ. (854)

41.—குதிரை ஒருமாதை மேற்கொண்டு ஓடுதல்.

இம்பர் [1]நாட்டின் றரமல்ல ளீங்[2]கிவள்
உபர் கோமகற் கென்கின்ற தொக்குமால்
கம்ப [3]மாவரக் கால்கள் வளைத்தொரு
கொம்[4]ப னாளைக்கொண் [5]டோடுங் குதிரையே.

(இ - ள்.) கம்பம் மா வர - கட்டுத்தறியிற் கட்டப்பட்டுள்ள யானை தொடர்ந்து வர, (அதற்கு அகப்படாமல்), கால்கள் வளைத்து -(தமது) கால்களை வளையவளையவைத்து, ஒரு கொம்பு அனாளை கொண்டு-பூங்கொம்புபோன்ற ஒருத்தியைச் சுமந்து கொண்டு,

ஓடும்-ஓடுகின்ற, குதிரை - குதிரையானது,—ஈங்கு-இங்கே, இம்பர் நாட்டின தரம் அல்லள் - இவ்வுலகத்திலே (வாழ்க்கைப்படுதற்கு) உரியவளல்லளாகிய, இவள்—,உம்பர் கோமகற்கு - தேவர்களின் அரசனான இந்திரனுக்கு, (உரியவள்), என்கினறது - என்றுகருதிச் செல்வதை, ஒக்கும்-ஒத்திருக்கும்; (எ-று.)

ஒருமாதையேற்றிக்கொண்டு குதிரை தாவிச்செல்கையில் வானத்திற் செல்வதுபோலத் தோன்றுவதனால், 'தேவர்களின் அரசனான இந்திரனுக்கு உரியவள் இவள்' என்று தேவேந்திரனிடம் அம்மாதை எடுத்துச்செல்வதுபோலுமென்றார்; தற்குறிப்பேற்றம். பி - ம்:—[1]நாட்டிற். [2]அவள். [3]மால்வரைக் காலே. [4]அனைரை. [5]ஓங்கும். இது,சிலபிரதிகளில்''குடையர்'' (43) என்பதன்பின். (855)

42.—மகளிரின் செலவு.

சந்த வார்குழல் [1]சோர்பவை [2]தாங்கலார்
சிந்து மேகலை சிந்தையுஞ் [3]செய்கலார்
எந்தை வில்லிறுத் தானெனு மின்[4]சொலை
மைந்தர் பேச மனங்களித் [5]தோடுவார்.

(இ - ள்.) (மடந்தைமார்), - எந்தை வில் இறுத்தான் எனும் இன் சொலை மைந்தர் பேச - 'எனது அப்பனாகியஸ்ரீராமன் சிவ தனுசை முறித்தான்' என்கிற இனியசொல்லை ஆடவர்சொல்ல, (அதனைக்கேட்டு), மனம் களித்து - மனம்மகிழ்ந்து,—சோர்பவை - அவிழ்வனவாகிய, சந்தம் வார் குழல்-அழகிய நீண்ட கூந்தலை, தாங்கலார்-(முடியுமாறு கைகளினால்) ஏந்திக் கொள்ளாதவர்களும், சிந்தும் மேகலை சிந்தைஉம் செய்கலார்-(அறுந்து)சிந்துகின்ற மேகலையின் கோவையை (ப்பொறுக்கியெடுக்குமாறு) எண்ணுதலுஞ் செய்யாதவர்களுமாகி, ஓடுவார்-(அப்பிரானது திருமணத்தைக் கருதி) விரைந்துசெல்பவரானார்கள்; (எ-று.)

தமது ஆடவர் சொல்லுகின்ற ஸ்ரீராமனதுபிரதாபம் களிப்பையூட்டத் திருமணத்தைக்காணவேணுமென்ற பேராதரத்தால் கூந்தல்சோர்தல்முதலியவற்றையும்கருதாது மகளிர் விரைந்து செல்லலாயினரென்க. சந்தம்-மயிர்ச்சாந்து என்று கொள்வாருமுளர். எந்தை - அன்புபற்றியகாலவழுவமைதி. பகவானுக்கும் அடியார்க்குமுள்ள பிதாபுத்ர சம்பந்தத்தினால் 'எந்தை' என்றனரென்று ஒருவர். பி - ம்:—[1]சோர்ந்தவை, சோர்ந்தது, சாய்பவை. [2]தாங்கலாச். [3]செல்கிலர். [4]சொலார், சொலான். [5]ஏங்குவார், ஏகுவார், ஆடுவார். (856)

43.—அந்தணர் செல்லுதல்.

குடையர் குண்டிகை [1]தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாற்றலர்
கடக ளிற்றையுங் காரிகை யாரையும்
அடைய [2]வஞ்சிய [3]வந்தணர் முந்தினர்.

(இ - ள்,) கடம் களிற்றைஉம் - மதயானையையும், காரிகையாரைஉம்-மகளிரையும், அடைய-சேர்ந்துசெல்வதற்கு, அஞ்சிய-

அச்சங்கொண்டுள்ள, அந்தணர்-பிராமணர்கள்,—குடையர் - குடை பிடித்தவர்களும், குண்டிகை தூக்கினர் - கமண்டலத்தை யேந்தியவர்களும், குந்திய நடையர் - தாவிச்செல்லும் அடிவைப்பையுடையவர்களும்,—நாசி புதைத்த கை நாற்றலர் - மூக்கிற் புதைய வைக்குந் தன்மையுள்ள கையைத் தொங்கவிடாதவர்களுமாகி, முந்தினர் - முற்பட்டு நடக்கலானார்கள்; (எ - று.)

ஸ்ரீராமனது திருமணத்தைக் காண அந்தணர் செல்வதை இதனாற்கூறுகின்றார். 'கடகளிறனையும் காரிகையாரையும் அடைய அஞ்சியவந்தணர்' என்றதனால், 'யானையினிடம் அணுகிச்செல்வதனால் என்ன தீங்குவிளையுமோ?' என்று அஞ்சுவதுபோலக் காரிகையாரை அணுகிச்செல்லவும் அஞ்சுபவர்களான அந்தணர் என்றபடி: இதனால், கடவுளையே மனனஞ்செய்பவர்களாய்ப் பற்றற்ற பெரியோர் அவரென்பது, பெறப்படும். வெளியே செல்லும்போது குடை முதலியன கொண்டுசெல்லவேண்டுமென்று தருமசாத்திரங் கூறும். 'தாம் நடக்கையில் தமது அடிவைப்பினால் தரையில் ஊர்ந்துசெல்லுஞ் சிறுபிராணிகட்கு ஏதேனும் ஊறு விளையுமோ?' என்றும், 'அசுத்திக்குக்காரணமான பண்டம் ஏதேனும் கீழே கிடக்குமோ?' என்றும், மிக்ககருத்தோடு அடியைத் தாவித்தாவி வைப்பவரென்பார் 'குந்தியநடையர்' என்றார். குந்துதல் - குதிக்கால்படாது நடத்தல். பிராணாயாமத்தைப் பல்கால்பயில்வதால் 'நாசிபுதைத்த கை' என்றார். கை இடைக்குக்கீழ்ப்பட்ட இடத்திற் படுமாயின் அசுத்தியாமென்று கையைத்தொங்கவிடாமல் தூக்கியவண்ணஞ்செல்கின்றனரென்பார் 'கைநாற்றலர்' என்றார். இனி, நாசிபுதைத்த கை நாற்றலர் என்பதற்கு - ஸ்ரீராமனது திருவுருவத்தைத் தமது உள்ளத்தேயிருத்தி ரேசகபூரககும்பகங்களைச் செய்துகொண்டே செல்கின்றனரென்பது பொருந்தாது; ஓரிடத்து இருந்தவண்ணமே பிராணாயாமஞ்செய்யவேண்டுமென்பது விதியாதலின். பி - ம்:—[1] தாங்கினர். [2] அஞ்சினர், அஞ்சியும். [3] வந்தனர். (857)

44.—நங்கைமார் செயல்.

நாறு பூங்குழ [1] னங்கையர் [2] கண்ணினீர்
[3] ஊர னேர்வந் [4] துருவு வெளிப்பட
மாறு [5] கொண்டனை வந்தனை [6] யாகில்வந்து
ஏறு தேரெனக் கைக ளிழிச்சுவார்.

(இ - ள்.) நாறு பூ குழல் நங்கையர் - மணக்கின்ற மலரையணிந்தகூந்தலையுடைய மங்கைமார், கண்ணின் -(தமது) கண்களில், நீர் ஊரன் உருவு - நீர்வளமுள்ள கோசலதேசாதிபதியான ஸ்ரீராமனது உருவம், நேர் வந்து வெளிப்பட - நேரேவந்து வெளிப்படுத்தோன்ற,—(இராமனே நேரேவந்துவிட்டதாகக் கருதி அவ்வுருவத்தைப்பார்த்து), 'மாறு கொண்டனை வந்தனை ஆகில்-(நீயே எம்மை) எதிர்கொண்டு வந்தாயானால், வந்து—, தேர் ஏறு -(இந்த) இரதத்தில் ஏறிக்கொள்,' என - என்றுசொல்லி, கைகள் இழிச்சுவார்-(தமது) கைகளைத்தாழ்த்திச்சாடை காட்டுவார்கள்; (எ-று.)

ஸ்ரீராமனைப்பற்றிய தியானத்துடனேயே செல்வதனுல் நங்கைமார் கண்கட்குப் பாவனைமிகுதியால் இராமபிரான் தம்மெதிரே வந்திருப்பதாகத் தோன்ற, அங்ஙனந்தோன்றிய உருவத்தை நோக்கி, 'நீயே எம்மை எதிர்கொண்டாயே: வந்து இத்தேரிலேறு' என்று தமதுகைகளைத் தாழ்த்தியழைக்கலாயின ரென்க. இனி இந்தச்செய்யுட்கு - மாதர்கள் தம்மோடு பிணங்கிச்சென்ற தமது கணவர்களுடைய உருவத்தை உருவெளிப்பாட்டிலே கண்டு உரைத்ததாகக் கூறுவாரு முளர்: இந்தப்பொருளில், மாறு கொண்டனை-மாறுபாடு கொண்டுபோயினை யென்க. பி-ம்:—[1] நங்கையொர். [2] கண் கணீர், கண்ணினின்று. [3] ஊறனோர், ஊறுநேர், ஊறுநீர். [4] உருவும். [5] கொண்டன. [6] ஆனவென்று, ஆனவந்து. (858)

45 —பேரொலியால் ஒருவர்பேசியது ஒருவர்க்குத் தெரியாமை.

குரைத்த தேருங் களிறுங் குதிரையும்
[1] நிரைத்த [2] வார்முர சுந் [3] நிமிர்ந் தெங்கணும்
இரைத்த பேரொலி [4] யாலிடை யாவரும்
உரைத்து ணர்ந்தில [5] ரூமரி னேகினர்.

(இ ள்.) குரைத்த-ஒலித்த, தேர்உம்-தேர்களும், களிறு உம்-யானைகளும், குதிரைஉம் - குதிரைகளும், நிரைத்த வார்முரசு உம்-வரிசையான நீண்ட முரசுவாத்தியமும, எங்கண்உம் நிமிர்ந்து இரைத்த பேர்ஒலியால் - எங்கும்மிகுந்து ஒலித்தபேரொலியினுல், இடை-அவ்விடத்திலே (செல்லுகின்ற), யாவர்உம்—,உரைத்(த)து உணர்ந்திலர் - (ஒருவர்) சொல்வதை (மற்றொருவர் இன்னதென்று) அறியமாட்டாதவராகி, ஊமரின் ஏகினர் - ஊமைகளைப்போல (ப் பேசாமற்) செல்லலாயினர்; (எ - று.)

தேர் முதலியனசெல்லுவதாலும் முரசங்கள் அடிக்கப்படுவதாலும் பேரொலி தோன்ற, அந்தப்பேரொலியில் ஒருவர் சொல்வது மற்றொருவர்க்குக் கேளாமையால் ஒருவரோடொருவர்பேசுவதை யொழித்து ஊமர்கள் செல்வதுபோல மௌனமாகச்செல்லலாயின ரென்பதாம். உரைத்து எனப்பிரித்து, உரைத்து உணர்ந்திலர்- (சாடையினுல் ஒருவர்கருத்தை யொருவர் அறிந்தனரேயன்றிப்) பேசித்தெரிந்துகொள்ளவில்லை யென்றுமாம். பி-ம்:—[1] நினைந்த. [2] வான். [3] திரைத்து, நெளிந்து, நிரைந்து, நிவந்து. [4] ஆயிடை. [5] உம்பரின். (859)

46.—செல்லும் மகளிர்குழுவின் வருணனை.

நுட்சி லம்பி [1] வனைந்தன நுண்டுகில்
கட்சி லம்பு கருங்[2] குழ லார்குழு
உட்சி லம்பு சிலம்ப வொதுங்கலால்
புட்சி லம்பிடு பொய்கையும் [3] போன்றதே.

(இ - ள்.) நுண் சிலம்பி வனைந்(த)து அன - நுண்ணிய சிலம்பிப்பூச்சி இழைத்த நூற்கூட்டை யொப்ப, நுண்-மிகவும்

மெல்லியவான, துகில் - ஆடைகளையணிந்த, கள் சிலம்பு கரு குழலார் - வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற கரியகூந்தலையுடைய மகளிரின், குழு - கூட்டம்,—சிலம்பு உள் சிலம்ப ஒதுங்கலால் - (தம் பாதங்களிலணிந்த) நூபுரங்கள் உள்ளிடுபரலால ஒலிக்க நடந்து செல்வதனுல், புள் சிலம்பிடு பொய்கையும் - பறவைகள ஒலிக்கின்ற தடாகத்தையும், போனறது—; (எ-று.)

குழலார்குழு, சிலம்பு சிலம்ப ஒதுங்கலால், புட்சிலம்பிடு பொய்கை போனற தென்க. இனி குழுஎன்பதனை ஒதுங்கலால் என்பதோடு இயைத்து, அதிகாரத்தான் 'தானை' என று எழுவாய் வருவித்து, முடிததலு மொன்று. சிலம்பிவனைந்தது நுண்டுகிலுக்கு உவமையாகக் கூறப்படுவதை "பவளக்கொமபு முழுமெய்யுஞ் சிலமபி வலந்ததுபோற் போாவை போர்தது" எனற சிந்தாமணியிலுங் காண்க. பி-ம்:—[1] அலர்ந்தன, வலந்தன, நிவந்தன. [2] குழன்மங்கைமார். [3] போனறவே. (860)

47.—ஆடவர்கண்கள் மகளிர்கண்களைக் கண்டு மகிழ்தல்.

தெண்டி ரைப்பர வைத்திரு வன்னவர்
நுண்டி ரைப்புரை நோக்கிய நோக்கினைக்
கண்டி ரைபபன வாடவர் [1] கண் களி
வண்டி ரைப்பன யானை மதங்களே.

(இ - ள்) தெள் திரை பரவை திரு அன்னவர் - தெள்ளிய அலைகளையுடைய திருப்பாறகடலிலிருந்து தோன்றிய இலக்குமியையொத்த மகளிர், நுண் திரை புரை நோக்கிய நோக்கினை - நுணணிய திரைச்சீலையின் துவாரத்தினுற் கண்ட பார்வையை, கண்டு—, ஆடவர் கண இரைப்பன - ஆண்மக்களுடையகண்கள் மகிழ்ந்துஆரவாரஞ் செய்யலாயின; யானை மதங்கள் (கண்டு)-ஆனைகளின் மதநீரைக் கண்டு, களி வண்டு - களிப்புள்ள வண்டுகள், இரைப்பன-(மகிழ்ச்சிகொண்டு) ஆரவாரஞ் செய்வன; (எ - று.)

மகளிர் தம்முடையமுகம் பிற ஆடவர்க்கு நன்குதெரியாதபடி முக்காடிட்டவண்ணம் செல்வதால், அங்ஙனஞ்செல்கின்ற மகளிர்களுடைய கண்கள் முகத்தைமூடிய ஆடையின் புரைவழியாக வெளிப்பட, அதனைக் கண்ட இளம்பருவமுள்ள ஆண் மக்களின் கண்கள் யானையின் மதநீரைக் காணப்பெற்ற வண்டுகள் போல் மகிழந்தனஎன்க. யானையின் மதநீரைக்கண்டு வண்டுகள் மகிழ்தலும், மகளிர்கண்களைக் கண்டு ஆடவரின்கண்கள் மகிழ்தலும் சேனையில்நிகழ்வன வாதலால், வர்ணியங்களான அவ்விரண்டனையும் தனித்தனி ஒன்றுபடக் கூறியது - தொடர்முழுதுவமையணியாம். இனி, அரசமகளிர் தம்மைச்சுற்றித் திரையிட்டுக் கொண்டு செல்வது மரபு ஆதலால், அங்ஙனம் செல்லுகையில் வழியையறியுமாறு திரைச்சீலையிலுள்ள புரைவழியாகக் காண்கின்றனரென்று கொள்ளலுமாம். பி - ம்:—[1] கண்களே, கண்கணீர். இதன்பின் "எண்ணுமாத்திரமும்"(50) என்றபாடல் சிலபிரதியில்.

48—நூபுரமும் குதிரையும் ஒலித்தல்.

உழைக லித்தன வென்ன வுயிர்த்துணை
நுழைக லிக்கருங் கண்ணியர் நூபுர
விழை[1]க லித்தன வின்னிய மாவெழு
மழை[2]க லித்தென வாசி[3]க லித்தவே.

(இ-ள்.) உயிர் துணை நுழை-ஆடவருயிரளவும் ஊடுருவிச் செல்கின்ற, கலி-வலியமைந்த, கரு கண்ணியர் - கரிய கண்களையுடையமாதரார் பூண்ட, நூபுரம் இழை - சிலம்பென்னும் அணிகள், உழை கலித்தன என்ன - உழையென்கிறசுரம் ஒலித்தாற்போல, கலித்தன - ஒலித்தன; (அங்ஙனம் ஒலித்தவற்றுக்கு), இன் இயம் ஆ - இனிய பக்கவாத்தியமாக, எழு மழை கலித்து என-(வானத்தில்)எழுகின்ற மேகம் இடித்தாற்போல, வாசிகலித்த-குதிரைகள் கனைத்தன; (எ-று)—நுழை கண் என்க.

ஒருவர்பாடுகையில் அதனைச் சிறப்பித்தற்காக மத்தளம்முதலிய வாச்சியங்கள் முழக்கப்படுவது, மரபு: அங்ஙனம் வாசிக்கப்படுபவை, பக்கவாச்சிய மெனப்படும். மாதர்காலணி ஏழிசைகளுள் உழையென்னும் இசைபோல ஒலிக்க, அவ்விசைக்குப் பக்கவாச்சியமாகுமாறு வாசிகள் கலித்தன வென்க. இனி, முதலிரண்டடிகட்கு, உழைகலித்தன என்ன - மான்கள்செருக்கியெழுந்தன என்று சொல்லும்படி (தோன்றுகின்ற), உயிர் துணை நுழை கலி கரு கண்ணியர் - ஆடவர்உயிர்வரையும் துளைத்துச்செல்லுகின்ற மதர்த்த கரிய கணகளையுடைய மகளிரென்றலும், [2]கலித்தன என்ற பாடத்திற்கு - நூபுரவிழை ஒலிக்க அதற்குப் பக்கவாச்சியமாக, மழை - மேகம், கலித்தன - ஒலித்தனஎன்றலுமாம். மூன்று நான்காமடிகளிரண்டிலும் [1]கலித்தென என்ற பாடத்திற்கு-நூபுரவிழைகலித்தாற்போலவும், இன்னியமாக [இன்னியமபோல] ஒலிககின்ற மழை கலித்தாற்போலவும், வாசி கலித்த என்க. எழுமழை-ஏழுமேகமுமாம். பி-ம்:—[3]கலித்ததே. (862)

49.—மகளிர்நோக்கினைச் சிலஆடவர் வியத்தல்.

மண்[1]க ளிப்ப [2]நடப்பவர் [3]வாணுதல்
[4]உண்க ளிக்கம லங்களி னுள்ளுறை
திண்க ளிச்[5]சிறு தும்பி யெனச்[6]சிலர்
கண்[7]க ளித்தன காமன் களிக்கவே.

(இ-ள்.) மண் களிப்ப நடப்பவர் - பூமிதேவி மனம்மகிழும்படி (மெல்லஅடிவைத்து) நடக்கின்ற மகளிரின், வாள் நுதல்-ஒளிபொருந்திய முகத்தை [முகத்திலுள்ள கண்களை] ப் பார்த்து), '(இவை), களி உண் கமலங்களினுள் - களிப்புக்கொண்ட [செழிப்புள்ள] தாமரைமலர்களினுள்ளே, உறை - தங்கிய, திண் களி சிறு தும்பி - வலிய களிப்புக்கொண்ட சிறிய வண்டுகள்', என - என்று கருதி, காமன் களிக்க சிலர் கண் களித்தன - மன்மதன் மகிழ்ச்சியடையுமாறு சிலஆடவரின் கண்கள் களிப்படைந்தன; (எ-று.)

சில ஆடவர்கண்கள், மகளிரின்கண்ணின் வனப்பில் ஈடுபட்டு, காதற்கடவுளான மன்மதன் மகிழும்படி, 'இவை தாமரைமலரினுள்ள வண்டுகளே!' என்று எண்ணிக் களித்துக்கிடந்தன என்பதாம். அம்மங்கைமார் அதிரநடவாமல் பூமேல்அடிவைப்பதுபோல மெல்லஅடிவைத்தலால், மண் களிப்பதாயிறறு. இனி, 'மண்களிப்ப நடப்பவர்' என்பதற்கு - இவர் என்மீது நடக்கப் பெற்றேனேயென்று மண்மகள் களிக்குமாறு அழகுவாய்ந்தவரென்பாருமுளர். நுதல் - முகத்திற்கு, இலக்கணை. இனி, இச் செய்யுட்கு - மகளிர்முகங்களை ஆடவர்கண்கள மிக்கவிருப்போடு நோக்கினதைக் கூறுவதாகப் பொருள்கொள்ளலுமாம்: மகளிர் நுதலாகிய கமலங்களிலே யுறைகின்ற தும்பிபோல ஆடவர்கருவிழிகள் மகிழ்ச்சிகொண்டு எழுந்துசென்றன என்க. மணகளிபப- பூமியிலுள்ளார்மகிழ என்றலும் ஒன்று. பி - ம்:—[1]களிக்க. [2]நடப்பவொர். [3]வாண்முகம். [4]ஒண். [5]செறி. [6]சில. [7]களிப்பன.(863)

50.—தூளிகள் நெருங்குதல்.

[1]எண்ணு மாத்திர மும்மரி [2]தாமிடை
வண்ண [3]மாத்துவர் வாய்க்கனி வாய்ச்சியர்
திண்ண [4]மாத்தொளிர் செவ்விள நீ[5]ரிழி
சுண்ண [6]மார்த்தன தூளியு [7]மார்த்தவே.

(இ - ள்.) எண்ணும் மாத்திரம்உம்-கருதலளவைக்கும், அரிது ஆம்-அரிதாகிய, இடை-இடையையும், வண்ணம் மா துவர் வாய்-அழகிய சிறந்த பவழம்போன்றவாயையும,கனி வாயச்சியர் முக்கனிச்சாறுபோன்ற [இனிய] சொல்லையுமுடையரான மாதராரின, திண்ணம் ஆத்து ஒளிர் - உறுதியாகக்கட்டபபட்டு விளஙகுகின்ற, செவ்விளநீர் - செவ்விளநீரையொத்த தனஙகளினினறு, இழி - உதிர்ந்த, சுண்ணம்-நறுமணப் பொடிகளும், ஆர்தன - (அவவிடமெல்லாம்) நிறைந்தன; தூளிஉம் -(செலலுஞ் சேனைகளாலெழுப்பப்பட்ட) தூசியும், ஆர்த்த—; (எ - று.)

முதலிரண்டடிகள், மகளிர்வருணனை.மடவாரின் நறுங்கலவைப் பொடியும் சேனைகளெழுப்பிய தூளியும் எங்கும் நிறைந்தன வென்க. சுண்ணம் தூளி என்ற இரண்டும் ஆர்த்தன என்ற ஒரு பொதுத் தன்மையைத் தனித்தனி பெற்றுவந்தது, தொடர்முழுதுவமையணியாம். எண்ணுமாத்திரமும் மரிதாமிடை-இடையுள்ளதென்று எண்ணுவதற்கும இயலாதவாறு அத்துணை நுண்ணிதாகவுள்ளது இடை யென்க: உயர்வுநவிற்சி. கனி - கொவ்வைப் பழம்போற் செந்நிறமான எனினுமாம். பி-ம:—[1]எண்ணம். [2]ஆயிடை. [3]ஆர்த்ததுவர்க், ஆத்ததுவர்க். [4]ஆர்த்து. [5]அழி. [6]ஆததன. [7]ஆத்தவே. ()

51.—சென்றவரின் பெருந்திரள்.

[1]சித்தி ரத்தடந் தேர்மைந்தர் [2]மங்கையர்
[3]உய்த்து ரைப்ப [4]நினைப்ப [5]வுலப்பிலர்
இத்தி றத்தின ரெத்தனை யோ[6]பலர்
மொய்த்தி ரைத்து வழிக்கொண்டு முன்னினர்.

(இ - ள்.) உய்த்து உரைப்ப நினைப்ப உலப்பு இலர் - ஊகித்துணர்ந்து சொல்வதற்கும் நினைத்தற்கும் முடியாதபடி அளவில்லாதவராகி, சித்திரம் தட தேர் மைந்தர் மங்கையர் - சித்திரவேலையமைந்த பெரிய தேரிற்சென்ற மைந்தரும் மங்கையருமாகிய, இறத்தினர் எத்தனையோ பலர் - இப்படிப்பட்டவர் எத்தனையோபலபேர், மொய்த்து - நெருங்கி, இரைத்து - பேராரவாரஞ்செய்து, வழிக்கொண்டு முன்னினார் - செல்லும்வழியைக் குறிக்கொண்டு முற்பட்டுச்சென்றார்கள்; (எ - று.)

கீழ்க்கூறியவாறு ஆடவரும் மகளிரும் பலப்பலவாகத்திரண்டு செல்லலாயினரென்க. பி-ம்:—[1] சித்திரப்புயமைந்தர் தேர், சித்திரப்புயத்தேர்..., சித்திரத்தடந்தோள்... [2] தெரிவையர். [3] உய்த்துரைப்பின். [4] நிரப்ப, நிரம்ப. [5] உரைக்கிலர், உணர்ப்பிலர். [6] பிறர். (865)

வேறு.

52.—எழுந்த தூளியின் வருணனை.

குசையுறு பரியுந் தேரும் வீரரும் குழுமி யெங்கும்
[1] விசையொடு [2] கடுகப் பொங்கி [3] வீங்கிய [4] தூளி [5] விம்மிப்
பசையுறு துளியின் றாரைப் பசுந்தொளை யடைத்த மேகம்
திசைதொறு நின்ற யானை மதத்தொளை [6] செம்மிற் றன்றே.

(இ - ள்.) குசை உறு பரிஉம் தேர்உம் வீரர்உம் - கடிவாளம் பூண்ட குதிரையும் தேரும் வீரர்களும், எங்குஉம் குழுமி - எவ்விடத்தும் கூடி, விசையொடு கடுக - வேகத்துடனே விரைந்துசெல்ல, (அதனால்), பொங்கி வீங்கிய - மிகவும் அதிகமாகமேலெழுந்த, தூளி - தூசியானது,—விம்மி - பெருகி,—மேகம் - மேகத்தின, பசை உறு துளியின் தாரை பசு தொளை - ஈரம் பொருந்திய நீர்த்துளியின் தாரைகள் (வெளிப்பட்டுவருவதற்கு உரிய) பசிய தொளைகளை, அடைத்த(து) - தூர்த்தது: (அன்றியும்), திசைதொறும் நின்ற யானை - (கிழக்குமுதலிய எட்டுத்) திக்குகளிலும் காவலாகிநிற்கின்ற திக்கஜங்களின, மதம் தொளை - மதநீர்வெளிப்பட்டுவருந் துவாரங்களையும், செம்மிற்று - தூர்த்துவிட்டது; (எ-று.)—அன்றே - ஈற்றசை, தேற்றமுமாம்.

குதிரை தேர் வீரர் ஆகிய எல்லாம் கூடி விரைந்து செல்வதனால், தூளிப்படலம் மிகுதியாகஎழுந்து வானத்திலும் எட்டுத்திசைகளிலும் பரவிற்றென்பதாம். தூளி மேகத்தின் பசையுறு துளியின்றாரைப் பசுந்தொளையையும் யானைமதத்தொளையையும் தூர்த்ததென்று கூறியது - உயர்வுநவிற்சியணி. பசுந்தொளை - ஈரமுள்ள தொளை. பி - ம்:—[1] விசைகொடு. [2] முடுகி, முடுக. [3] விளங்கிய. [4] வெள்ளம். [5] விம்ம. [6] செறிந்தது, செறித்த. (866)

53.—யானையின் மதநீர்ப்பெருக்கு.

கேடகத் தடக்கை யாலே கிளரொளி வாளும் [1] பற்றிச்
சூடகத் தளிர்க்கை மற்றைச் சுடர்மணித் தடக்கை பற்றி
ஆடகத் தோடை யானை [2] யழிமதத் திழுக்க லாற்றில்
பாடகக் காலி னாரைப் [3] பயப்பயக் கொண்டு போனார்.

(இ - ள்) (அங்குச்சென்ற வீரர்கள்),—கேடகம் தட கையால்ஏ-கேடகத்தைப்பற்றியுள்ள இடக்கையினால்தானே, கிளர் ஒளி வாள் உம் பற்றி - விளங்குகின்ற ஒளியையுடைய வாளையும் பிடித்துக்கொண்டு,—மற்றை சுடர் மணி தட கை-விளங்குகின்ற இரத்தினக் கடகங்களையணிந்த பெரிய மற்றொருகையினாலே[வலக்கையினாலே], பாடகம் காலினாரை-பாடகமணிந்த தாள்களையுடைய (தமது)மனைவிமாரை, சூடகம் தளிர் கை பற்றி-சூடகமென்னும் அணியையணிந்த தளிர்போன்ற கையைப்பிடித்துக்கொண்டு,— ஆடகத்து ஓடை யானை அழி மதத்து இழுக்கல் ஆற்றில் - பொன்னாலியன்ற நெற்றிப் பட்டத்தையணிந்த யானைகளின் பெருகுகின்ற மதததினாலுண்டாகிய வழுக்கலுள்ள வழியில், பய பய-மெல்ல, கொண்டுபோனார் - அழைத்துக்கொண்டு சென்றார்கள்; (எ-று.)

எழுவாய் வருவிக்க. யானைகள் மதநீரைமிகுதியாகச் சொரிவதனால் செல்லும்வழிகளெல்லாம் கெட்டுச் சேற்றுவழியாய்விட, அவ்வழியாக நடந்துசெல்ல இயலாமல் தம்மனைவியர் வருந்துகையில் இடக்கையில் கேடகத்தையும் வலக்கையில் வாளையும் ஏந்திச் சென்ற வீரர் இரண்டையும் இடக்கையில்தானே கொண்டு, வலக்கையால் தம் மனைவியரின் கையைப்பற்றி அவர்களை மெல்லநடத்திச் செல்லலாயின ரென்க. அழிதல் - பெருகுதல்: "அழியும்புனலஞ்சன மாநதியே" என்பது, சிந்தாமணி. பி - ம்:—[1]பற்ற. [2]இழிமதத்திழுகல். [3]பையக்கொண்டேகுவாரும். (867)

54.—நெய்தல்முதலியமலர்களைப் பறித்துத்தருமாறு மகளிர்கேட்டல்.

செய்களின் [1]மடுவி னன்னீர்ச் சிறைகளி னிறையப் பூத்த
நெய்தலுங் [2]குமுதப் பூவு நெகிழ்ந்தசெங் [3]கமலப் போதும்
கைகளு முகமும் வாயுங் கண்களுங் காட்டக் கண்டு
கொய்[4]திவை[5]தருதிரென்று கொழுநரைத்[6]தொழுகின்றாரால்.

(இ - ள்.) செய்களில் - வயல்களிலும், மடுவில்-மடுக்களிலும், நல் நீர் சிறைகளில்-நல்ல குளங்களிலும், நிறையபூத்த—, நெய்தல் உம்-நெய்தற் பூவும், குமுதம்பூவும்—, நெகிழ்ந்த செங் கமலம் போதும்உம்-மலர்ந்த செந்தாமரைமலர்களும், (ஆகியஇவை), (தம்முடைய), கைகள்உம்-கைகளையும், முகம்உம்-முகத்தையும், வாய் உம்-வாயையும், கண்கள்உம் - கண்களையும், காட்ட—, கண்டு - பார்த்து, 'இவை-இந்தநெய்தற்பூ முதலியவற்றை,கொய்து தருதிர்-பறித்துத்தருவீராக,' என்று—, கொழுநரை - (தமது) கணவரை, தொழுகின்றார்-வணங்கிக்கேட்பவரானார், (மகளிர்); (எ - று.)

எழுவாய் வருவிக்க. மகளிர் தமதுகண்கள் முதலியவற்றைப் போற் செய்கள் முதலியவற்றிலே விளங்கும் நெய்தல் முதலியவற்றைப் பறித்துத்தருமாறு தங்கணவரைக் கேட்டன ரென்க.நெய்தல் கண்களுக்கும், குமுதம் வாய்க்கும், கமலப்போது கை முகம் என்ற வற்றுக்கும் உவமையாம். நெய்தல் முதலியன உவமானங்களாகிய கண்கள் முதலியவற்றோடு மாறி இயைவது-எதிர்நிரனிறை நீரைக்

கட்டிவைத்திருத்தலால் குளத்தை 'நீர்ச்சிறை' என்ருர். [6]தொழு கின்ருரும் எனற பாடத்துக்கு - அங்கே யுளரென்று வருவித்து முடிக்க பி - ம்:—[1]நடுவில். [2]கமலபபோதும, கமலப்பூவும். [3]குழ தப். [4]அவை. [5]தருக. (868)

55.—யானை வந்ததென்று மகளிர் நிலைகெட்டு ஓடுதல்.

பந்தியம் புரவி நின்றும் பாரிடை [1]யிழிந்தோர் [2]வாசக்
குந்தள பாரஞ் சோரக் குலமணிக் கலன்கள் சிந்தச்
சந்தநுண் [3]டுகிலும் [4]வீழத் தளிர்க்கையா [5]லணைத்துச் சார
வந்தது வேழ மென்ன மயிலென விரியல் போவார்.

(இ - ள்.) பந்தி அம் புரவி நின்றுஉம் - சாலையில் கட்டுதற்கு உரிய அழகிய குதிரையிலிருந்து, பாரிடை இழிந்தோர் - பூமியி லிறங்கின மகளிர்,—வேழம் சார வந்தது என்ன - யானை அருகே வந்ததாக,—வாசம் குந்தளம் பாரம் சோர - நறுமணமுள்ள (தமது) கூந்தல்தொகுதி அவிழ்ந்துதொங்கவும், குலம் மணி கலன்கள் சிந்த - சிறந்த இரத்தினங்கள்பதித்த ஆபரணங்கள் கீழேவீழ்ந்திடவும்,—சந்தம் நுண் துகில்உம் வீழ தளிர் கையால் அணைத்து - அழகிய அரையாடையும் அவிழத்தொடங்க (அதனை மாத்திரம் தமது) தளிர்போன்ற கைகளால் (அவிழ்ந்துவிழ வொட்டாமல்) தழுவிக்கொண்டு, மயில் என—, இரியல்போவார்- நிலைகெட்டுச் செல்லலானுர்கள; (எ - று.)

குதிரையினின்றும் இறங்கின மகளிர் அருகே யானை வந்த தாக, அதுகண்டு அஞ்சி, தமதுகூந்தல்விரிந்ததையும் ஆபரணங் கள் சிந்துவதையும் பொருள்செய்யாது அரையாடையவிழ்ந்ததனுல் மானபங்கம் நேரிடப்போகிறதேயென்ற கருத்தினுல் அதனை மாத் திரம் அவிழ்ந்துவிழவொட்டாமற் கைகளால் தழுவிக்கொண்டு இருந்த இடத்தைவிட்டு மயில்களைப்போல நிலைகெட்டுஒடலாயின ரெனக. உவமையை அங்கமாகப்பெற்ற தன்மைநவிற்சியணி. பந்தி- வரிசையாகச்செல்லுகின்ற, புரவி என்னவுமாம். வந்தது என்ன - வந்துவிட்டதென்று பிறர்சொல்ல எனினுமாம். பி-ம்:—[1]இழிந்து. [2]பாகக். [3]கலைகள். [4]சோரத். [5]அணையச். (869)

56.—குடை முதலியவற்றின் மிகுதி.

குடையொடு களிறுந் தொங்கற் குழாங்களுங் கொடியின் காடும்
[1]இடையிடை மயங்கி யெங்கும் [2]வெளிக்கரந் திருளைச் செய்யப்
படைகளு முடியும் பூணும் [3]படர்வெயில் பரப்பிச் செல்ல
இடையொரு கணத்தி னுள்ளே யிரவுண்டு பகலு முண்டே.

(இ - ள்.) குடையொடு - குடைகளும், களிறுஉம் - யானை களும், தொங்கல் குழாங்கள்உம் - பீலிக்குஞ்சங்களின் தொகுதி களும், கொடியின காடுஉம் - கொடிகளின் தொகுதிகளும், இடை இடை மயங்கி - ஒன்ருேடொன்று கலந்து, எங்கும் வெளி கரந்து- எந்த இடத்திலும வெற்றிடமில்லாதவாறு மறைத்து, இருளை செய்ய - இருளையுண்டாக்கவும்,—படைகள்உம்-(வில் வாள் முதலிய)

படைக்கலங்களும், முடிஉம்-கிரீடங்களும், பூண்உம் - ஆபரணங்களும், படர் வெயில பரப்பி செல்ல - பரந்த வெயிலைப் பரப்பிக் கொண்டு போகவும்,—இடை - (அந்தச்சேனை தொகுதி செல்லும்) இடத்தில், ஒரு கணத்தினுள் - ஒருகணப் பொழுதினுள், இரவு உண்டு பகல்உம் உண்டு - இரவு உள்ளதாகப் பகலும் உள்ளதாயிற்று; (எ - று.)

களிறு, கரியபெரிய உடலனவாயிருத்தலால், இருளையுண்டாக்கும்: குடைமுதலியன, வெயிலைமறைத்து இருளையுண்டாக்குமென்க. குடை முதலியன இருளையுண்டாக்குதலாலும், படைக்கலம் முதலியன வெயிலையுண்டாக்குதலாலும், இரவும் பகலும் ஒரு கணப்பொழுதிலே யுண்டாயின. குடையொடு களிறு மேலே குடை பிடிக்கப்படுகிற களிறு என்னலாம். ஒன்றற்கு ஒன்று மாறுன இரண்டு நிகழ்ச்சிகள் ஏககாலத்தில் தோன்றியது கண்ட வியப்பினல் 'ஒரு கணத்தினுளளே இரவுண்டு பகலுமுண்டே' என்றார். பி - ம்:—[1]மிடைதலில் வயங்கித்தொங்கும். [2]வழி. [3]ஆரமும்பகலைச் செய்ய. (870)

57.—மகளிர்க்காக ஆடவர்திரள் விலகிவழிவிடுதல்.

முருக்கிதழ் முத்த மூரன் முறுவலார் முகங்க ளென்னுந்
திருக்கிளர் கமலப் போதிற் றீட்டின கிடந்த கூர்வாள்
நெருக்கிடை [1]யறுக்கு [2]நீர்க ணீங்குமி னீங்கு மென்றென்று
அருக்கனி லொளிரு மேனி யாடவ ரகலப் [3]போவார்.

(இ - ள்.) முருக்கு இதழ் - பலாசம்பூப்போன்ற வாயையும், முத்தம் மூரல் - முத்துக்கள்போன்ற பறகளையும், முறுவலார் - புன்சிரிப்பையுங்கொண்ட மாதரார்,—முகங்கள் என்னும் - (தம்முடைய) முகங்களென்று சொல்லப்படுகின்ற, திரு கிளர் கமலம் போதில்-அழகுவிளங்குகின்ற தாமரைமலரிலே, தீட்டின கிடந்த - தீட்டினவாய்த் தங்கியுள்ள, கூர் வாள் - கூரிய வாட்படைகள்,— நெருக்கு - (நீங்கள்) நெருங்கியுள்ளதை, இடைஅறுக்கும் - ஊடுருவிச்சென்றுபோக்கும்: (ஆதலால், 'ஆடவர்களே!) நீர்கள்—, நீங்குமின் நீங்கும்-விலகியிருங்கள் விலகியிருங்கள்',என்று என்று - என்று தெரிவித்தவண்ணம், அருக்கனில் ஒளிரும் மேனி ஆடவர் -சூரியனைப்போல விளங்குகின்ற உடம்புபடைத்த ஆடவர், அகல- விலகிவழிபட, போவார்—; (எ - று.)

திரளாகஇருக்கும் ஆடவர்மீது மகளிருடைய கண்களின் பார்வைவிழவும் அவர்கள் விலகியதை, 'எமது கண்கள் நுமது நெருக்கை யூடறுத்துச் செல்லும்' என்று குறிப்பிக்க விலகியதாகக் கற்பிததுக்கூறினர்; இனி, நெருக்கமாக இருந்த ஆடவர், மகளிர்வருவதைக் கண்டு தமதுபருவத்துக்குஏற்ப, 'இம்மகளிர் முககமலங்களிற் கூரியவாள் நமதுநெருக்கை யறுக்கும்: ஆதலால் விலகுங்கள' என்று பிறருக்குச்சொல்லியவண்ணம் யாவரும் விலகி வழிவிட்டன ரென்னலுமாம். 'நீர்' என்ற முன்னிலைப் பன்மை 'கள்' விகுதிபெற்றுவருவதை 'மேவித்தொழுதுய்ம்மினீர்

கள்'' என்ற நம்மாழ்வார் திருவாக்கிலுங் காண்க. நீங்குமினீங்கும் - அடுக்கு, விரைவுப்பொருளது: மின் உம் என்ற இரண்டும் ஏவற் பன்மைப்பொருளனவே யாதலால், நீங்குமினீங்கும் என்பது - அடுக்கே. என்றென்று-பன்முறைப்பொருளது. பி - ம்:—[1] உறுக்கும். [2] நீங்கள், நங்கை. [3] போனார். (871)

58.—மகளிர் போகமுடியாது நிற்கை.

நீந்தரு நெறியி [1] னுற்ற நெருக்கினாற் சுருக்குண் [2] டற்றுக்
காந்தின மணியு முத்துஞ் சிந்தின கலாபஞ் சூழ்ந்த
பாந்தளி னல்கு லார்தம் பரிபுரம் [3] புலம்பப் பைம்பொற்
பூந்தளி ருறைப்ப மாழ்கிப் போக்கரி தென்ன நிற்பார்.

(இ - ள்.) நீந்தஅரு-கடப்பதற்கு அருமையான, நெறியின் உற்ற-வழியிலே யுள்ள, நெருக்கினால் - (சன) நெருக்கத்தினால், சுருக்குண்டு அற்று - (கழுத்திலணிந்தமணிவடங்கள்) சுருக்கு வீழ்ந்து அற்றுப்போய், காந்தின மணிஉம் முத்துஉம்-ஒளிர்கின்ற இரத்தினங்களும் முத்துக்களும், சிந்தின - சிதறிக்கிடப்பவை,— கலாபம் சூழ்ந்த பாந்தளின் அல்குலார் - பதினாறுகோவையணி சூழப்பெற்றதும் பாம்பையொத்ததுமான இடையையுடையமகளிர், தம் பைம் பொன் பரிபுரம் புலம்ப பூந்தளிர் உறைப்ப- தாம் பூண்ட பசும்பொன்னினாலியன்ற நூபுரமும் (பாதங்கட்கு நேர்ந்த வருத்தத்தைக்கண்டு) புலம்புமாறு அழகிய தளிர்போன்ற பாதங்களிலே யுறுத்த, மாழ்கி - தடுமாறி, போக்கு-நடந்துசெல்லுவது, அரிது- இயலாது, என்ன-என்று, நிற்பார்—; (எ - று.)

நெருக்கினாற் சுருக்குண்டு முத்தாரமும் மணியாரமும் அற்றுச் சிந்த, அங்கன் அற்றுச் சிந்தின மணியும் முத்தும் தளிர்போல் மெல்லியபாதங்களில் உறைப்பதனால், அல்குலார் போக்குஅரிதென்று நிற்பவராயினா ரென்க. நடந்துசெல்லும்போது நூபுரம் ஒலிப்பது, அவர்கள் தளிர்ப்பாதங்களில் மணிமுத்துக்கள் உறைப்பதற்கு வருந்திப்புலம்புவதுபோலுமென்க; தற்குறிப்பேற்றம். உருவகமாகப் பாதங்களைத் தளிரென்றே கூறினார். பாந்தளினல்குலார் = ''அரவேரிடையார்'' என்றார், ஸ்ரீகுலசேகரப் பெருமாளும். பி-ம்:— [1] தந்த. [2] அற்ற. [3] அலம்பு, புலம்பும். (872)

59.—பண்டியிற் கட்டிய எருதுகள் வாச்சியவொலியால் அறுத்துக்கொண்டு செல்லுதல்.

கொற்ற[1] நல் லியங்களெங்கும் கொண்டலிற் றுவைப்பப்[2] பண்டிப்
[3] பெற்றவே றன்னம் புள்ளிற் பேதையர் [4] வெருவி நீங்க
முற்றுறு [5] பரங்க ளெல்லா முறைமுறை [6] பாசத் தோடும்
பற்றற [7] வீசி [8] யேகி யோகியிற் [9] பரிவு [10] தீர்ந்த.

(இ - ள்.) கொற்றம் நல் இயங்கள் - வெற்றிபொருந்திய சிறந்த வாச்சியங்கள், எங்கும்—, கொண்டலின் துவைப்ப - மேகம் இடிப்பதுபோலப் பேரொலிசெய்ய, (அதனால் மருட்சியடைந்த), பண்டி பெற்றம் ஏறு - பண்டிகளிற்கட்டிய சிறந்த எருதுகள்,

அன்னம் புள்ளின் பேதையர் வெருவி நீங்க - அன்னப்பறவைகள் போல் மகளிர் அஞ்சிநீங்காநிற்க, முற்று உறு பரங்கள் எல்லாம் - (தம்மீது) நிரம்பப் பொருந்திய சுமைக ளெல்லாம், முறைமுறை பாசத்தோடுஉம் - வரிசை வரிசையாக (அவற்றைக் கட்டிய) கயிறுகளோடும், பற்று அற வீசி - தொடர்பு இல்லாமல் அற்றுப் போக (அப்பண்டங்களைச்) சிதறிவிழச்செய்திட்டு, ஏகி - போய், யோகியின் - தவசியைப்போல, பரிவு தீர்ந்த - வருத்தம் நீங்கின;

பண்டங்களைப்பெய்து கட்டிய பண்டிகளிற் பூட்டப் பெற்ற எருதுகள், பலவாச்சியங்கள் பேரொலி செய்ததனால் வெருண்டு வணடியிற் பெய்த பொருள்களெல்லாம் கட்டற்று வீழும்படி தம் கட்டையும் அறுத்துக்கொண்டு மூர்க்கத்தனமாகச் சென்றனவென்பதாம். பாசம்நீங்குதல் பரிவுதீர்தல் என்ற இரண்டுதன்மைகளோடு பேதையர் வெருவி நீங்குதலாலும், யோகி, பெற்றவேற்றுக்கு உவமை. யோகிக்குப் பாசம்தீர்தல் - ஆசை யொழிதல்: பரிவுதீர்தல் - பிறவித்துயரம் நீங்குதல். எருத்துக்குப்பாசம் தீர்தல் - கட்டியகயிறு அற்றுப்போதல்: பரிவுதீர்தல் - சுமைத்துயரம் நீங்குதல். பெற்றவேற்றைக்கண்டு வெருவியோடுதல் போல யோகியரின் தவக்கனலைக்கண்டு மாதரார் வெருவியோடுதலும் உண்டு. பி - ம்:—[1]பல். [2]மண்டி. [3]பெற்றவென்று. [4]செவ்வி. [5]பரிகள், பாகர். [6]பந்தத்தோடும. [7]வீக்கிச். [8]செல்லும். [9]பிரிவு. [10]தீர்ந்தார், தீர்த்தார். (873)

60.—நீர்நிலையில் யானைகள் அமிழ்ந்து கரையேறாது நிற்றல்.

[1]காற்செறி வேகப் பாகர் கார்முக வுண்டை பாரா
வார்ச் [2]சிறைக் கொங்கை யன்ன [3]கும்பமு மருப்புங் [4]காணப்
[5]பாற்செறி கடலிற் றோன்றும் [6]பணைக்கைம்மால் யானை யென்ன
நீர்ச்சிறை பற்றி யேறா நின்றகுன் றனைய வேழம்.

(இ - ள்.) குன்று அனைய வேழம் - மலையையொத்த யானைகள்,—நீர்ச் சிறை பற்றி - நீர்நிலையைக்கண்டு, (அதிலிறங்கி), பாகர் கால் செறி வேகம் கார்முகம் உண்டை பாரா - (தம்) பாகரெறிந்த காற்றுப்போலும் பொருந்தியவேகத்தையுடைய வில்லுண்டையை இலட்சியஞ்செய்யாமல், வார் சிறை கொங்கை அன்ன கும்பம்உம் மருப்புஉம் காண - கச்சுக்களினுள்ளேயிருக்கின்ற தனங்களையொத்த (தமது) மத்தகமும் தந்தங்களும் வெளியேதெரியவும், பால் செறி கடலில் தோன்றும் பணை கை மால் யானை என்ன - பாற்கடலில்தோன்றிய பனைமரம்போலுந் துதிக்கையையுடைய பெரிய ஐராவதமென்ற யானைபோல(த் தோன்றிக்கொண்டு), ஏறா - கரையேறாமல், நின்ற—;

செல்லும்வழியில் நீர்நிலையைக் கண்டவுடன் அதிலிறங்கிய யானைகள், கரையேறுமாறு பாகர் வில்லுண்டையால் அடிக்கவும் அதனையும் இலட்சியஞ்செய்யாது தமதுமத்தகமும் தந்தங்களும் வெளித்தெரிய அந்தநீர்நிலையில் தானே துளைந்துகொண்டிருந்தன வெனக. பாற்கடலினின்று வெளியேறவிருந்த ஐராவதத்தை அந்த நீர்நிலையிற்கிடக்கும்யானைகட்கு உவமைகூறினர். வார்ச்சிறை -

கொங்கைக்கு இயற்கையடை. பி-ம்:—[1] கார்ச்,கார். [2] செறி, பொறை. [3] குங்குமமருப்புக். [4] காணு. [5] பார்ச்செறி. [6] பணை. (874)

61.—யாழ்வாசிப்பவர் குதிரைமீதேறிச் செல்லுதல்.

அறலியற் கூந்தற் கண்வா ளமுதுகு [1] குமுதச் செவ்வாய்
விறலிய ரோடு நல்யாழ்ச் செயிரியர் புரவி மேலார்
நறைசெவிப் [2] பெய்வ தென்ன [3] நைவள வமுதப் பாடல்
முறைமுறை [4] பகர்ந்து போனார் கின்னர மிதுன மொப்பார்.

(இ - ள்.) கின்னரம் மிதுனம் ஒப்பார் - கின்னரமிதுனங்களை யொப்பவராகிய, அறல் இயல் கூந்தல்-கருமணலையொத்த கூந்தலையும், வாள் கண் - வாள்போன்ற கண்களையும், அமுது உகு குமுதம் செவ்வாய்-அமுதம் சிந்துவதுபோன்ற(இன்சொற்களைச் சொல்லும்) செவ்வாம்பல்போன்ற செந்நிறவாயையுமுடையரான, விறலியரோடு-பாடினியருடனே, நல் யாழ் செயிரியர் - சிறந்த வீணைவாசித்தலில் வல்ல பாணர்கள், புரவி மேலார் - குதிரைமீது ஏறினவர்களாய்,— செவி நறை பெய்வது என்ன-காதுகளினுள்ளே தேனைச் சொரிவது போல, நைவளம் அமுதம் பாடல் - நைவளமென்றபண்ணோடுகூடிய இனிய பாடலை, முறை முறை பகர்ந்து - முறைபிறழாது பாடியவண்ணம், போனார்—; (எ-று.)

பாணர்கள் விறலியரோடு குதிரைமீதேறி, பாடவேண்டிய முறைப்படி இனிமையாகப்பாடிக்கொண்டு செல்லலாயின ரென்பதாம். உளளக்குறிப்புப்பற்றி உடலில்தோன்றும் வேறுபாடு'விறல்' எனப்படும்: அக்குறிப்புவெளிப்பட ஆடுபவள், விறலி: இச்சொல் பாண்மகள் என்ற பொருளிலும் வரும். நைவளம் - நட்டபாடை யென்னும் ராக மென்ப. [3] நனைவளர் மேகப் பாடல் முறைமுறை நணுகப்போனார் என்ற பாடம் குளிர்ச்சிமிக்க மேகராகக்குறிஞ்சிப் பாடல் முறைப்படி பொருந்தச் சென்றார்க ளென்று பொருள்படும்: இநதப் பாடத்திறகு - வெவ்விய கோடைக்காலத்துப்பாடினும் மேகங்களைக் கூட்டி மழைபெய்விக்கவல்ல தாதலால், 'நனைவளர் மேகப்பாடல்' என்றா ரெனக. கின்னரம் - ஒருதேவசாதி: இசையறிபறவை யென்றலு முண்டு. பி-ம்:—[1] குதலைச். [2] பெய்வார், பெயர்வது. [4] நணுகப், நூங்கிப். (875)

62.—யானைகளின் செலவு.

அருவி [1] பெய் வரையிற் பொங்கி யங்குச நிமிர வெங்கும்
[2] இரியலிற் [3] சனங்கள் சிந்து மிளங்களிச் [4] சிறுகண் யானை
[5] வரிசிறைத் தும்பி [6] வேரோர் வார்மதந் தோய்ந்து மாதர்
சுரிகுழற் [7] படிய [8] வேற்றின் பிடியொடுந் [9] தொடர்ந்து [10] செல்ப.

(இ - ள்.) அங்குசம் நிமிர - (பாகன்கையிலிருந்த) மாவெட்டி யோங்க, (அதுகண்டு), அருவி பெய் வரையின் பொங்கி - அருவி நீரைப்பொழிகின்ற மலைபோன்றதோற்றத்தோடு கிளர்ந்தெழுந்து, இரியலின் - நிலைகெட்டு ஓடுவதனால், எங்கும் சனங்கள் சிநதும்-எல்லாவிடத்தும் ஜநங்களைச்சிதறவடிக்கின்ற, இள களி சிறு கண் யானை-இளமையையும் மதக்களிப்பையும் சிறிய கண்களையுமுடைய

யானையினின்று, வரி சிறை தும்பி - இரேகைகளைக்கொண்ட சிறகுகளையுடைய வண்டுகள், வேறு ஓர் வார் மதம் தோய்ந்து - வேறொரு (யானையின்) பெருகுகின்ற மதநீரிற் படிந்து, மாதர் சுரி குழல் படிய - மாதரின் நெறிந்தகூந்தலிற் படியுமாறு, வேற்றின் பிடியோடுஉம் தொடர்ந்து செல்ப - வேறோர் பெண்யானையைத் தொடர்ந்து செல்வனவாயின; (எ - று.)

பாகர் அங்குசத்தை யோங்குவதனால் நிலைகெட்டுச் சனங்கள் சிதறும்படி ஓடலுற்ற யானை விரைந்துசெல்வதனால், அதனைவிட்டு வேற்றுயானை மதநீரிற் படிந்த வண்டுகள் அவ்யானைமத நீரினும் நறுமணம்மிக்கிருத்தலால் மாதராரின் கூந்தலிற் படியுமாறு அம் மகளிரேறிச்செலலும் வெவ்வேறு பெண்யானைகளைத் தொடர்ந்து செல்ல லாயின வென்பதாம். மகளிர்பெண்யானைமீது ஏறிச்செல்வரென்க. இனி இந்தச்செய்யுளில் மாதர் என்பதை எழுவாயாக்கி, சனங்களைச் சிந்தும் யானை இரியலின், (அதன்மீது மொய்த்த) தும்பிகள் வேறோர்வார்மதத்தில், தோய்ந்து - படியவிரும்பி, சுரி குழல் படிய - (தமது) சுரிந்துள்ளகுழலிற்படியுமாறு, பிடியொடுஉம் தொடர்ந்து செல்வார்களென்று பொருள் கூறினுமாம். பி - ம்:—[1]பாய். [2]இரிதர. [3]சினங்கள்சிந்தும், சனஙகள் சிந்த. [4]செங். [5]விரி. [6]வேறும் வார், மற்றோர்வீழ். [7]படிவ. [8]ஒற்றிப்பிடியையும், வெற்றிப்பிடியொடு. [9]துரந்து. [10]செல்வார். (876)

63.—அரசனின் நேயமங்கையர் புறப்படுதல்.

நிறைமதித் தோற்றங் கண்ட [1]நீனெடுங் [2]கடலி தென்ன
அறைபறை துவைப்பத் தேரு மானையு மாடன் மாவும்
[3]கறைகெழு வேற்க ணாரு மைந்தருங் [4]கவினி யொல்லை
நெறியிடைப் படர வேந்த னேயமங் கைய[5]ரெ ழுந்தார்.

(இ - ள்.) நிறை மதி - (பதினாறுகலைகளும்) நிரம்பிய சந்திரனது, தோற்றம் - உதயத்தை, கண்ட—, நீல் நெடுங் கடல் இது எனன - நீல நிறமுடைய பெரிய கடல்போலும் இது என்றுசொல்லும்படி, அறை பறை துவைப்ப - (குணில்கொண்டு) எறியப்படுகின்ற பறைகள் ஒலிக்கவும்,—ஆனைஉம—, தேர்உம்—, ஆடல் மாஉம் - ஆடுந்தன்மையுள்ள குதிரையும், கறை கெழு வேல் கணார்உம் - இரத்தக்கறைவிளங்குகின்ற வேற்படைபோன்ற கண்களையுடையவரான மகளிரும், மைந்தர்உம் - ஆடவரும், கவினி - அழகு பொருந்தக்கூடி, ஒல்லை - விரைவாக, நெறியிடை படர - வழியிற் செல்லவும்,—வேந்தன் நேயம் மங்கையர் - அரசனது அன்பிற்கு உரிய மங்கைமார், எழுந்தார் - புறப்பட்டார்; (எ-று.)

கடல் இதென்னப் படர வென்க. சதுரங்கசேனைகள் தமக்கு முன்னே செல்ல,அரசனது நேயமங்கையர் பிரயாணப்பட்டனரென்க. நேயமங்கையரென்பது - அரசனால்மணக்கப்பட்டு அவனது அன்பிற்கு உரியவரான மகளிர்யாவரையுங் காட்டும். பறையறைதலாற் பேராரவார முண்டாகப் பெரு மகிழ்ச்சியுடனே செல்கின்ற தேர் ஆனை முதலிய சதுரங்கங்கட்கு பூர்ணசந்திரனைக்கண்டு பேராரவாரத்

துடனே பொங்கியெழுங் கடலை உவமை கூறினர். தோற்கருவியாகிய பறை, மற்றைத்துளைக்கருவி முதலியவற்றிற்கும் உபலக்ஷணம். நீல் - கடைக்குறை. பி-ம்:—[1]நீணெடும். [2]கடலிற்ருகி. [3]விறல்கெழு. [4]கவினின், விரவி. [5]தாஞ்செல்வார். (877)

64 —கைகேசி சிவிகைமீது செல்லுதல்.

[1]பொய்கையங் [2]கமலக் கானிற் பொலிவதோ ரன்ன மென்னக்
கைகயர் வேந்தன் பாவை கணிகைய [3]ரணியி னீட்டம்
ஐயிரு நூறு [4]சூழ [5]வாய்மணிச் சிவிகை தன்மேல்
தெய்வமங் கையரு நாணத் தேனிசை முரலப் போனுள்.

(இ - ள்.) பொய்கை அம் கமலம் கானில் - தடாகத்தின் (மலர்ந்த) அழகிய தாமரைக்காட்டிலே, பொலிவது - விளங்குவதாகிய, ஓர் அன்னம் என்ன - அன்னப்பறவைபோல, கைகயர் வேந்தன் பாவை - கேகயவரசனது மகளாகிய கைகேயி, கணிகையர் அணியின் ஈட்டம் ஐ இரு நூறு சூழ-வேசைமங்கையரின் அணியணியாகவுள்ள ஆயிரக்கணக்கான கூட்டம் (தன்னைச்) சுற்றி நிற்கவும், தெய்வமங்கையர்உம் நாண - தேவலோகத்துமங்கையரும் (தனது சிறப்பைக்கண்டு) வெட்கமடையவும், தேன் இசை முரல - (மலர்களில் மொய்த்துள்ள) வண்டுகள் இன்னிசைபட ஒலிக்கவும், ஆய் மணி சிவிகைதன்மேல் - ஆராய்ந்து பதிக்கப்பெற்ற மணிகளாலியன்ற சிவிகையில், போனுள்—; (எ - று.)

தாமரைமலர்போன்ற கை கால் முதலிய உறுப்புக்களையுடைய கணிகையர்சூழச் செல்லும் கைகேயிக்கு, கமலககானிற் பொலியும் அன்னம் உவமை. தாசிஎன்பது - பணிப்பெண் வேசை என இருபொருளுடையது ஆதலால், பணிபபெண்கள் என்ற பொருளில் கணிகையர் என்று கூறினுரெனலாம். இனி, கைகேயியினிடத்து வெறுப்பினுல, 'கணிகையரீட்டம்சூழ' என்றது என்ப. பி-ம்:—[1]பொய்கையாம. [2]குமுதக். [3]ஈட்டமபொங்கி. [4]சூழ்ந்த. [5]வயமணிச்...மேல், மையறுமதிசூழ்வானின். இச்செய்யுள் சிலபிரதிகளி லிலலை. (878)

65.—கஞ்சுகமாக்கள் மாதரரைக் காத்துச் செல்லுதல்.

காரண மின்றி யேயுங் [1]கனலெழ விழிக்குங் கண்ணுர்
[2]வீரவேத் திரத்தார் [3]தாழ்ந்து விரிந்தகஞ் சுகத்து மெய்யார்
தாரணி புரவி மேலார் தலத்துளார் [4]சலித்த சொல்லார்
ஆரணங் கனைய மாத ரடிமுறை காத்துப போனுர்.

(இ-ள்.) காரணம் இன்றி ஏ உம் கனல் எழ விழிக்கும் கண்ணுர் - காரணமில்லாமலிருக்கையிலும நெருப்புப்பொறி மேற்கிளமப விழிக்குங் கண்களையுடையவரும், வீரம வேத்திரத்தார் - (தமது) வீரம் தோன்றுமாறு பிரப்பங்கோலைக் கையிறகொண்டிருபபவரும, தாழந்து விரிந்த கஞ்சுகத்து மெய்யார் - (பாதம் வரையில்) தொங்கிப் பரவியிருக்கின்ற சட்டையை (த் தம்) உடம்பிலணிந்துள்ளவருமான கஞ்சுகமாக்கள்,—தார் அணி புரவிமேலார்-

கிங்கிணிமாலையையணிந்த குதிரையின்மீது ஏறிவருபவரும், தலத்து உளார் - பூமியின்மீது நடந்துவருபவரும், சலித்த சொல்லார் - பிறர் மனஞ்சலித்தற்குக்காரணமான கடுஞ்சொல்லை யுடையவருமாகி, ஆர் அணங்கு அனைய - அரிய உருவமுள்ள தெய்வ மங்கையரையொத்த, மாதர் - மகளிரின், அடி - பாதங்களை, முறை - முறைப்படி, காத்துப்போனார்—; (எ-று.)

கனலெழவிழிக்குங் கண்முதலியவற்றையுடைய கஞ்சுகமாக்கள் குதிரைமீது இவர்ந்தும் தாள்களால்நடந்தும், அரசனது நேயமங்கையர் கைகேயி என்ற இவர்களைப் பாதுகாத்துச்சென்றனரென்க. இனி, இச்செய்யுளில் - கஞ்சுகமாக்கள் எனப்பட்டவர் மாதரரென்று உரைத்தலுமாம். மாதர் - கைகேயி என்றலும் ஒன்று. காரணமின்றிக் கனலுதல்-பிறர் அணுகாமலிருத்தற் பொருட்டு. சலித்த-கிளிமுதலியன தோற்றுப் பின்னிடுகின்ற, இன்சொல்லையுடையரான தாரணிபுரவிமேலாரும், தலத்துளாருமாகிய மாதர் என்றலும் ஆம். பி-ம்:—[1]கனலென. [2]வீரர். [3]கேள்விவிருதர், கேள்விவிருத்தர், தாழ்ந்துவிரித்த. [4]தடித்த, கதித்த, சலத்த, கலித்த.

கைகேசி சுமித்திரை கௌசலை யென்ற மூவர் சென்றதை முறையே தெரிவிப்பனவாகிய "பொய்கையங்கமலக்கானில்" (64), "விரிமணித்தார்கள்" (66), "வெள்ளெயிற்றிலவச்செவ்வாய்" (68) என்ற பாடல்கள் வரிசையாகவிருப்ப, அவற்றின்பின்னே "செங்கையின் மஞ்ஞை" (67), "காரணமின்றியேயும்" (65), "கூனொடுகுறளும்" (69) என்ற முறையிற் சிலபிரதிகள்; சிலபிரதிகளில், இது "விரிமணித்தார்கள்" (66) என்ற பாடலின்பின். (879)

66.—சுமித்திரை செல்லுதல்.

விரிமணித் தார்கள் பூண்ட [1]வேசரி வெரிநிற் றோன்றும்
[2]அரிமலர்த் தடங்க ணல்லா ராயிரத் திரட்டி சூழக்
குருமணிச் சிவிகை [3]தன்மேன் கொண்டலின் மின்னி தென்ன
இருவரைப் பயந்த நங்கை யாழிசை முரலப் போனாள்.

(இ-ள்.) விரி மணி தார்கள் பூண்ட-(ஒளி) விரிந்த கிங்கிணி மாலைகளைப் பூண்ட, வேசரி - கோவேறுகழுதையின், வெரிநில் - முதுகில், (ஏறி), தோன்றும் - காணப்படுகின்ற, அரி மலர் தட கண் நல்லார் - செவ்வரி பரந்துள்ளனவும் தாமரைமலரையொத்தனவுமாகிய பெரியகண்களையுடைய மகளிர், ஆயிரத்து இரட்டி சூழ-இரண்டாயிரவர் (தன்னைச்) சுற்றிலும்வர,—இருவரை பயந்த நங்கை - (இலக்குமணன் சத்துருக்கனன் என்ற) இரட்டைப்பிள்ளைகளைப்பெற்றவளான சுமித்திராதேவி, கொண்டலின் மின் இது என்ன-'நீர்கொண்ட மேகத்தில்தோன்றுகின்ற மின்னலாகும் இவ்வுருவம்' என்று கண்டோர் கருதும்படி, குரு மணி சிவிகை தன் மேல்-பருத்தநீலமணிகள் அழுத்திச்செய்யப்பட்டுள்ள சிவிகையின் மீது, யாழ இசை முரல-வீணைகானம்முழங்க, போனாள்—; (எ-று.)

நீலமணிச்சிவிகையிலிருக்குஞ் சுமித்திராதேவிக்கு கொண்டலில்தோன்றும் மின்னல், உவமை. சிவிகையிற் சுமித்திராதேவி செல்ல, இரண்டாயிரம்மங்கைமார் கோவேறுகழுதையின்மீதுஏறி அவளைச் சூழ்ந்து சென்றனரென்க. பி - ம்:—[1]வெல்பரி, வெல்கரி, வெங்கரி. [2]அருமணித். [3]மேல்வெண். ஒருபிரதியில் "கூனொடு"(69) என்பதன் பின் இது: இதன்பின் "துப்பினின்" (70) என்பது. (880)

67.—மகளிர் அந்தச் சுமித்திரையின் மருங்கு செல்லுதல்.

[1]செங்கையின் மஞ்ஞை யன்னஞ் சிறுகிளி பூவை பாவை
சங்குறை [2]கழித்த வன்ன சாமரை முதல தாங்கி
[3]இங்கல தெண்ணுங் காலிவ் வெழுதிரை வளாகந் தன்னில்
மங்கைய [4]ரில்லை யென்ன [5]மடந்தையர் மருங்கு போனார்.

(இ - ள்.) 'எண்ணுங்கால்-ஆலோசிக்குமிடத்து, இ எழுதிரை வளாகம் தன்னில் - இந்த ஏழுகடல்களாற்சூழப்பட்ட பூமண்டலத்துக்குள், இங்கு அலது-இவ்விடத்திலல்லாமல், மங்கையர்-மகளிர், இல்லை-வேறிடத்திலில்லை,' என்ன-என்று (கண்டவர்) கருதுமாறு (அவ்வளவு பெருந்திரளாக), மடந்தையர் - மகளிர்கள்,—செம் கையில்-(தமது) அழகிய கையில். மஞ்ஞை-மயிலும், அன்னம்-அன்னப் பறவையும், சிறு கிளி-சிறிய கிளியும், பூவை-நாகணவாய்ப் பறவையும், பாவை-பாவையும், சங்கு உறை கழித்த அன்ன சாமரை - சங்கத்தினை (அப்போதுதான்) உறையிலிருந்து எடுத்தாற்போன்ற [மிகவும் வெண்மைநிறமுள்ள] சாமரையும், முதல - முதலியவற்றையும், தாங்கி- தாங்கிக்கொண்டு, மருங்கு - (அந்தச் சுமித்திராதேவியின்) பக்கத்திலே, போனார்—; (எ - று.)

இதனால், ஆயிரத்திரட்டி நல்லார் சூழச் செல்லும் சுமித்திராதேவியின் பாங்கியர் மிகப்பலர் தமதுகைகளில் மயிற்பறவை முதலியவற்றைத் தாங்கிக்கொண்டு உடன்சென்றமையைக் கூறுகின்றார். திரை-கடலுக்கு, ஆகுபெயர். சிலபிரதிகளில் இந்தச்செய்யுள், கௌசல்யாதேவிசென்றமையைத் தெரிவிக்கின்ற "வெள்ளெயிற்று" (68) என்று தொடங்கும் பாடலுக்குப்பின்னே காணப்படுகின்றது. மஞ்ஞை முதலியன-இனிது பொழுதுகழிக்கக்கொள்ளும் பொருள்கள். பி-ம்:—[1]செங்கையால். [2]கழித்தது. [3]இங்கிதனெண்ணுங்காலமற்றெழுவளாகத்தெல்லை, இங்கல தெணணுங் கான்மறறெழுதிரைவளாகத்தெங்கும், [4]இல்லம். [5]மாதர்கள். (881)

68.—கௌசல்யாதேவி செல்லுதல்.

வெள்ளெயிற் றிலவச் செவ்வாய் முகத்தைவெண் [1]மதிய மென்று
கொள்ளையிற் [2]றிரளு மீன்கள் [3]குழுமிய வனைய [4]வூர்தி
தெள்ளரிப் [5]பாண்டி பாணிச் செயிரிய ரிசைத்தேன் சிந்த
வள்ளலைப் பயந்த நங்கை வானவர் வணங்கப் போனாள்.

(இ - ள்.) வெள் எயிறு - வெண்ணிறமுள்ள பற்களையும், இலவம் செவ்வாய்-இலவமபூப்போலுஞ் செந்நிறமுள்ள அதரத்தையுமுடைய, முகத்தை-(கௌசலாதேவியினுடைய) முகத்தை,

வெள் மதியம் என்று - வெள்ளைநிறமுள்ள சந்திரனென்றுகருதி, கொள்ளையில் திரளும் மீன்கள் குழுமிய அனைய - மிக்ககூட்டமாக வுள்ள நட்சத்திரங்கள் ஒருங்கே கூடினாற்போல, (பலமணிகள் பதிக்கப்பெற்றுள்ள), ஊர்தி - சிவிகையாகிய வாகனத்திலே,—வள்ளலை பயந்த நங்கை-(அடியார்க்கு) வரையாதுகொடுக்குந் தன்மையுள்ள ஸ்ரீராமனைப்பெற்ற மகளிரிற்சிறந்தவளான கௌசல்யாதேவி, தெள் அரி பாண்டி பாணி செயிரியர் - தெளிந்த வண்டுகளினிசையை யொத்த பாண்டி யென்னும் பண்ணோடுகூடிய இசைப்பாட்டில்வல்ல பாடகர், இசை தேன் சிந்த - இசையாகியதேனைச் சொரியவும், வானவர் வணங்க - தேவர்கள் (தன்னைக்கண்டு) வணங்கவும், போனாள்—; (எ - று.)

கௌசல்யாதேவியார் ஏறிச்சென்ற சிவிகையிற் பலமணிகளழுத்தியிருப்பதை, கவி, அந்தக் கௌசலையாரின் முகத்தைச் சந்திரனென்று மயங்கி வானத்திற்சிதறிக்கிடந்த நட்சத்திரங்கள் ஒருங்கு சேர்ந்து வந்ததை யொககுமென்றார்; மயக்கவணியை யங்கமாகக் கொண்டுவந்த தற்குறிப்பேற்றவணி. பிரதானபட்டமகிஷி செல்வதனால், செயிரியர் இசைப்பாட்டைப் பண்ணோடு பாடலாயினர். ஸ்ரீமகாவிஷ்ணுவை மகனாகப்பெற்றெடுத்த மாண்புடையவளாதலால், கௌசலையை, வானவர் வணங்கினர்: "சுற்றத்தார் தேவரோடுந் தொழ நின்ற கௌசலையை" என்று குகப்படலத்து வருவதுங் காண்க. பி-ம்:—[1]மதியிதென்ன. [2]திரள்வான், சுற்றும், சுற்றி. [3]குழுமியது. [4]ஆகி, சாற்றி. [5]பாண்டில். (882)

69.—கூனர்முதலியவரும் மகளிரும் கௌசலையைத் தொடர்ந்து செல்லல்.

கூனொடு குறளுஞ் சிந்துஞ் சிலதியர் குழாமுங் கொண்ட
பானிறப் புரவி [1]யன்னப் புள்ளெனப் பாரிற் செல்லத்
தேனொடு மிஞிறும் வண்டுந் தும்பியும் [2]பரந்த செய்ய
பூநிறை கூந்தன் மாதர் புடை[3]பிடி நடையிற் போனார்.

(இ - ள்.) கூனொடு-கூனர்களும், குறள்உம் - குறளரும், சிந்து உம் சிந்தரும், சிலதியர் குழாம்உம-தோழியர்கூட்டமும், கொண்ட-ஏறிய, பால் நிறம் புரவி - பால்போன்ற [வெள்ளிய] நிறத்தைக் கொண்ட குதிரைகள், அன்னம் புள் என - அன்னப் பறவைகள் போல, பாரில் செல்ல - பூமியில் நடந்துபோக,—தேனொடு - தேன் வண்டுகளும், மிஞிறுஉம - மிஞிறும், வண்டுஉம் - மறறைவண்டுகளும், தும்பிஉம்-தும்பியென்னும வண்டுகளும்,பரந்த-பரவியுள்ள, செய்ய பூ-அழகியமலர்கள், நிறை-நிறைந்துள்ள, கூந்தல்-மயிர்முடியையுடைய, மாதர் - மகளிர், புடை - பக்கங்களில், பிடி நடையில் போனார்-பெண்யானைபோன்ற நடையோடு சென்றார்கள்; (எ-று.)

கீழ்க்கவியிற் கௌசலாதேவி சென்றதைக் கூறிய கவி, இக்கவியில், அன்னாள் கூனர்முதலியவர் புரவிமீதேறி முன்னும் பின்னும் செல்ல, மகளிர் பலரும் கால்நடையாகப் பக்கத்திலுமாகச் சென்றவகையைக் கூறுகின்றார். தேன் முதலியவை வண்டின சாதி

பேதங்க ளாதலைச் சீவகசிந்தாமணியாலும், உரையாலும் உணர்க. பி-ம்:—[1] என்னப. [2] தொடர்ந்து செலல,பந்தர்செய்ய. [3] மடப்பிடியில், புடைநடையிற், நடைப்பிடியிற், புடையிடையிற். (883)

70.—மற்றும் பலமங்கையர் அந்தக்கௌசலையைத் தொடர்ந்து வாகனத்தின்மீதேறிச் செல்லுதல்.

துப்பினின் மணியிற் பொன்னிற் சுடர்மர கதத்தின் முத்தின்
ஒப்பற வமைத்த [1] வைய மோவியம் போல [2] வேறி
[3] முப்பதிற் றிரட்டிகொண்ட [4] வாயிர முகிழ்மென் கொங்கைச்
செப்பருந் திருவி னல்லார் [5] தெரிவையர் சூழப் போனார்.

(இ - ள்.) முகிழ் மெல் கொங்கை - (தாமரை) அரும்புபோன்ற மெல்லிய தனங்களையுடையவராகி, செப்ப அரு திருவின் நல்லார் - சொல்லுவதற்கு முடியாதபடி இலக்குமியினும் பேரழகுபடைத்தவரான, முப்பதிற்று இரட்டி ஆயிரம் கொண்ட - அறுபதினாயிர மென்னும் எண்ணைக் கொண்ட, தெரிவையர்-மகளிர்,—துப்பினின்-பவழங்களினாலும், மணியின்-இரத்தினங்களினாலும், பொன்னின்-சுவர்ணங்களினாலும், சுடர் மரகதத்தின் - ஒளிவிடுகின்ற மரகதங்களினாலும், முத்தின் - முத்துக்களினாலும், ஒப்பு அற அமைத்த-(தமக்கு) வேறுபொருள் ஒப்பற்றனவாகும்படி இயற்றப்பட்டுள்ள, வையம்-வண்டியில், ஓவியம் போல ஏறி-சித்திரப்பதுமையேறுவது போல ஏறி,—சூழ போனார்-(அந்தக் கௌசல்யாதேவியைச்)சூழ்ந்து சென்றார்கள், (எ-று.)

அறுபதினாயிரம் மங்கையர் பலவகை யரதனங்களினாலியன்ற ஆதனங்களமைத்த வண்டிகளிலேறிக்கொண்டு கௌசலாதேவியைச் சூழச்சென்றனரென்க. நவரத்தினங்களிற்சேர்ந்த பவழம் முதலியவற்றைத் தனியே எடுத்துக்கூறியிருத்தலால், 'மணி' என்றது - அவைகளொழிந்த மற்றையிரத்தினங்களைக் காட்டும். பி-ம்:—[1] தேரினோவியம்போல, பைம்பூணோவியம்புகழ, வையமோவியர்வருத்த. [2] ஏற்றி. [3] முப்பதின். [4] ஆயிரர். [5] தேர்மிசை. சிலபிரதிகளிற் காணப்படுஞ் செய்யுள்முறை வருமாறு:—"பொய்கை" (64), "விரிமணி" (66), "வெள்ளெயிற்று" (68) "காரணம்", (65), "செங்கையின்" (67), "துப்பினின்" (70), "கூனொடு" (69). (884)

71.—வசிட்டமுனிவன் செல்லுதல்.

[1] செவிவயி னமுதக் கேள்வி தெவிட்டினார் தேவர் நாவின்
அவிகையி னளிக்கு[2] நீரா[3] ராயிரத் திரட்டி சூழக்
கவிகையி னீழற் கற்பி னருந்ததி கணவன் [4] முத்துச்
சிவிகையி னன்ன மூருந் திசைமுக னென்னச் [5] சென்றான்.

(இ - ள்.) கற்பின் அருந்ததி கணவன்-(எல்லாமங்கையர்க்கும் உவமையாகின்ற) பதிவிரதாதருமத்தையுடைய அருந்ததீ தேவியின் கணவனான வசிட்டமுனிவன்,—செவி வயின் அமுதம் கேள்வி தெவிட்டினார் - (தமது) காதின்மூலமாக அமுதுபோலினிய நூற்

கேள்விகளைத் தெவிட்டுமாறு மிகுதியாக உட்கொண்டவரும், தேவர் நாவின் அவி கையின் அளிக்கும் நீரார்-தேவர்கள் (தமது) நாவினுற் சுவைக்கின்ற அவிசை (த் தமது) கைகளினுற் கொடுக்கின்ற தன்மையையுடையவர்களுமாகிய அந்தணர், ஆயிரத்து இரட்டி சூழ-இரண்டாயிரம்பேர் (தன்னைச்) சுற்றிவர,—கவிகையின் நீழல்-குடை நிழலிலே,—முத்து சிவிகையின் - முத்துக்கள பதித்துச்செய்யப்பட்ட பல்லக்கிலே, (ஏறி), அன்னன் ஊரும்திசைமுகன் என்ன - அன்னப்பறவையை வாகனமாகக்கொண்டு ஏறிச்செல்லுகின்ற பிரமதேவன்போல, சென்ருன்—; (எ - று.)

வெண்ணிறமுத்துப்பல்லக்கி லேறிச்செல்லுகின்ற பிரமகுமாரனை வசிட்டமுனிவனுக்கு, வெண்ணிறப்பறவையாகிய அன்னத்திலேறிச்செல்லும் பிரமதேவனை உவமை கூறினர். அங்ஙனஞ் செல்லுகின்ற வசிட்டமுனிவனை மிக்க நூற்கேளவியையுடைய பல இருடியர் சூழ்ந்துசென்றன ரென்க. பி-ம்:—[1] செவியினன். [2] நல்லார். [3] ஐயிருகோடி, ஆயிரகோடி. [4] வெள்ளைச், முத்தின். [5] போனுன். ()

72.—பரதசத்துருக்கனர் வசிட்டமுனிவன்பின்னே செல்லுதல்.

பொருகளி றிவுளி [1] பொற்றேர் பொலங்கழற் குமரர் [2] முந்நீர்
அருவரை [3] சூழ்ந்த தென்ன வருகு [4] முன் பின்னுஞ் செல்லத்
திருவளர் மார்பர் [5] தெய்வச் சிலையினர் [6] தேரர் வீரர்
இருவரு முனிபின் போன விருவரு மென்னப் [7] போனுர்.

(இ - ள்.) பொரு களிறு - போர்செய்தற்குரிய யானைகளும், இவுளி-குதிரைகளும், பொன் தேர்-அழகிய தேர்களும், பொலம் கழல் குமரர்-பொனனுலாகிய வீரக்கழலையணிந்தகாலாட்படைகளும், (ஆகிய இவைகள்), முந்நீர் அரு வரை சூழ்ந்தது என்ன - சமுத்திரமானது (அளத்தற்கு) அரிய மலையைச் சூழந்தது என்னும்படி, அருகு முன் பின்உம் செல்ல - (தம்முடைய) சமீபமாக முனபுறத்திலும்பினபுறத்திலும்நடந்தவண்ணமிருக்க,—திரு வளர்மார்பர்-ஜயலட்சுமி தங்கபபெற்ற மார்பையுடையவர்களும, தெய்வம் சிலையினர்-தெய்வப்படைகளை எய்யவல்ல அம்பையுடையவர்களும், தேரர் - அதிரதரும், வீரர்-மகாவீரர்களுமாகிய, இருவர்உம்-(பரதன் சத்துருக்கனன் என்ற) இவ்விருவரும, முனி பினபோன இருவர்உம் எனன-விசுவாமித்திரமுனிவனது பின்னேபோன(இராமன் இலக்குமணன் எனற) இருவருமபோல, போனுர்-(வசிட்டமுனிவன்பின்னே) போனுர்; (எ - று.)

வசிட்டமுனிவன் பின்னே செல்லுகின்ற பரதசத்துருக்கனர்கட்கு, விசுவாமித்திரமுனிவன் பின்னே சென்ற இராமலக்குமணர் உவமை. நால்வகைச்சேனைகட்குக் கடலும், பரதசத்துருக்கனர்கட்கு அருவரையும் உவமையாகும். பி - ம்:—[1] பொறபூண், பொற்ருேள். [2] முன்னர். [3] சார்ந்த. [4] பினமுன்னுஞ். [5] தெயவத்தேரினர். [6] சிலையின. [7] சென்ருர். (886)

73.—தசரதசக்கரவர்த்தி புறப்படுதல்.

நித்திய நியம முற்றி நேமியான் பாதஞ் சென்னி
வைத்தபின் மறைவல் லோர்க்கு வரப்பறு மணியும் பொன்னும்
பத்தியா னிரையும பாரும் [1]பரிவுட னல்கிப் போனன்
முத்தணி வயிரப் பூணுன் மங்கல [2]முகூர்த்த நன்னாள்.

(இ - ள்.) முத்து அணி வயிரம் பூணுன் - முத்துக்களினாலும் அழகிய வயிரக்கற்களினாலுமியன்ற ஆபரணங்களையணிந்தவனாகிய தசரதசக்கரவர்த்தி,—நித்தியம் நியமம் முற்றி-(தனது) நித்தியக் கடன்களை முடித்துவிட்டு, நேமியான் பாதம் சென்னி வைத்தபின்-சக்கராயுதத்தையுடையவனாகிய திருமாலின் திருப்பாதங்களை (த் தனது) முடியிலே வைத்தபின்பு [தனதுகுலதெய்வமாகிய திருமாலை வணங்கியபின்பு],— மறை வல்லோர்க்கு - அந்தணர்க்கு, வரம்பு அறு-எல்லையில்லாத, மணிஉம்-இரத்தினமும், பொன்உம்-சுவர்ணமும், பத்தி ஆன் நிரைஉம்-வரிசையாகவுள்ள பசுக்கூட்டமும், பார்உம்-பூமியும், (ஆகிய இவற்றை), பரிவுடன்-மனவுவப்போடு, நல்கி-தானஞ்செய்து, மங்கலம் முகூர்த்தம் நல் நாள்-மங்கலமான நல்லமுகூர்த்தநாளில், போனன்-புறப்பட்டான்; (எ-று.)

தசரதசக்கரவர்த்தி நித்தியக்கடன் முடித்துக் குலதேவதையை வணங்கிவிட்டு நல்ல நாளில் நல்லமுகூர்த்தத்தில் பொன் மணிமுதலியவற்றை அந்தணர்கட்கு உதகதாரைவார்த்துத் தானஞ்செய்து பின்பு மிதிலைக்குப் புறப்படலாயின ரென்க. நேமியான்-இட்சுவாகு மன்னவனுக்குப் பிரமதேவனால் அளிக்கப்பட்ட திருமால். பி - ம்:— [1]நீருடன். [2]முகிழ்த்த. (887)

74.—தசரதசக்கரவர்த்தியின் புறப்பாட்டுச் சிறப்பு.

இருபிறப் பாள ரெண்ணு யிரர்மணிக் [1]கலச மேந்தி
அருமறை வருக்க மோதி [2]யங்கைநீர் [3]தெளித்து [4]வாழ்த்த
[5]வரன்முறை வந்தார் கோடி [6]மங்கல மழலைச் [7]செவ்வாய்ப்
பருமணிக் [8]கலாபத் தார்பல் லாண்டிசை[9]பரவப் போனன்.

(இ - ள்.) இரு பிறப்பாளர் எண்ணுயிரர்-எண்ணுயிரம் அந்தணர்கள், மணி கலசம் ஏந்தி-இரத்தினகும்பங்களைக் கையிலேந்திக்கொண்டு, அரு மறை வருக்கம் ஓதி-உணர்தற்கரிய வேத மந்திரங்களின் தொகுதிகளை ஓதியவண்ணம், அங்கைநீர் தெளித்து வாழ்த்த-தம் அழகியகையால் மந்திரநீரைத் தெளித்துவாழ்த்தவும், மங்கலம் மழலை செவ்வாய் பரு மணி கலாபத்தார்-மங்களகரமான மழலைச்சொல்லைச்சொல்லுகின்ற செந்நிறவாயையும் பருத்த மணிகளை அழுத்திச்செய்யப்பட்ட மேகலாபரணத்தையுமுடையவர்களாகிய வரன் முறை வந்தார் கோடி - பரம்பரையாக அரசருக்குப் பல்லாண்டுபாடுங்குலத்திற் பிறந்தவர்களாகிய கோடிக்கணக்கான ஸ்திரீகள், பல்லாண்டு இசை பரவ-பல்லாண்டுபாடலைப் பாடிக்கொண்டுவரவும், போனன்—; (எ-று.)

தசரதசக்கரவர்த்தி செல்லும்போது அந்தணர் வேதமந்திரங்களைச் சொல்லி மந்திரநீராற் புரோட்சிக்க, மங்கையர் பலர் பல்லாண்டுபாடினரென்க. "பிறப்பினாற் சூத்திரனாகப்பிறந்தாலும் உபநயனகர்மத்தினால் த்விசனாகிறான்" என்றபடி அந்தணனுக்கு அந்தண்மை உபநயனத்தினால் வருமென்ற நூற்கொள்கைபற்றி, உபநயனத்திற்குமுன் ஒருபிறப்பும் உபநயனத்திற்குப்பின் ஞானப்பிறப்பாகிய மற்றொருபிறப்பும் ஆகிய இருபிறப்பு இருத்தலால், 'இருபிறப்பாளர்' என்றார்; இவ்விருபிறப்பும் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்ற மூன்று வருணத்தவர்க்கும் உளதாயினும் சிறப்பினால், இருபிறப்பாளரென்பது பிராமணரையே குறித்தது. பி-ம்:—[1]கன்னல். [2]அறுகுநீர். [3]அளித்து. [4]சூழ, வாழ்த்தி. [5]வருமுறை. [6]மங்கையர். [7]சொல்லார். [8]கலாபமார்ப்ப, கலாபத்தார்த்தம். [9]பாடி, பரவி. (888)

75.—பெருந்திரளான அரசர் திரண்டு தசரதசக்கரவர்த்தியை நெருங்குதல்.

[1]கண்டில னென்னை யென்பார் [2]கண்டன னென்னை யென்பார்
குண்டலம் வீழ்ந்த தென்பார் குறுகரி தினிச்சென் றென்பார்
உண்டுகொ லெழுச்சி யென்பா ரொலித்தது சங்க மென்பார்
மண்டல வேந்தர் வந்து [3]நெருங்கினர் மயங்கி மாதோ.

(இ - ள்.) சங்கம் ஒலித்தது என்பார் - (சிலர்) சங்கவாத்தியம் ஒலித்தது (இது என்னையோ?) என்பார்களும், எழுச்சி உண்டுகொல் என்பார் - (சிலர் அரசர்க்கரசன்) புறப்பாடு உளதுபோலுமென்பார்களுமாகி,—மண்டலம் வேந்தர் - பெருந்திரளான அரசர், மயங்கி வந்து-(ஒன்று) கூடிவந்து,—(சிலர்), என்னை கண்டிலன் என்பார்-என்னை (இந்தஇராசாதிராசன்) காணவில்லை யென்டாரும், என்னை கண்டனன் என்பார்-(சிலர்என்னைக்) கடாட்சித்தானென்பாரும், குண்டலம் வீழ்ந்தது என்பர் - (சிலர் எனது) குண்டலம் கீழ்வீழ்ந்திட்டதே யென்பாரும், இனி சென்று குறுக அரிது என்பார் (சிலர்) இனிப்போய் (அந்தமன்னர்மன்னவனைக்கிட்டுதல்) அருமையானதெனபாருமாகி, நெருங்கினர் - (தசரதசக்கரவர்த்தியைத் தொடர்ந்து) நெருங்கி நின்றார்கள்; (எ - று.)

தசரதசக்கரவர்த்தியினது புறப்பாட்டிற்காகச் சங்கவாத்தியம் முழங்குதலும், அந்தச் சக்கரவர்த்தியின சேவைக்காக அவ்வயோத்திமாநகரில் வந்து காத்திருந்த பெருந்திரளான அரசர்களிற் சிலர் சங்கவாச்சியத்தின் முழக்கத்திற்குக் காரணம் இன்னதென்று தெரியாது வினவ, அதன்காரணத்தை ஊகித்துணர்ந்த சிலமன்னவர் 'அரசனதுஎழுச்சி உளதுபோலும்' என்று மறுமொழிகூற, அப்பொழுது அம்மன்னவர்யாவரும் அரசனுடன் செல்லுமாறு உறுதிகொண்டு புறப்பட, அங்ஙனம் புறப்பட்ட விசையால் சில மன்னவர்களுடைய காதிலணியும் குண்டலங்கள் கீழ் வீழ்ந்திடவே, அதுகண்டு அவர்கள் 'குண்டலம் கீழ் வீழ்ந்திட்டதே' என்று சொல்லி அதனை எடுத்து அணிந்துகொண்டு

புறப்பட, அதற்குள் சக்கரவர்த்தி வெகுதூரஞ் சென்றுவிட்ட தனால் அவர்கள் 'இனிக்குறுகுதல் அரிதுபோலும்' என்று சொல்லிக்கொண்டே விரைந்துசெல்ல, முந்தியே புறப்பட்டுச் சக்கரவர்த்தியைச்சார்ந்த அரசர்கள் அவ்வரசர்க்கரசனது கடாட்ச த்திற்குப் பாத்திரமாகாததுகுறித்து வருந்திக்கொண்டும் அவ னது கடாட்சத்திற்குப் பாத்திரமான மனனவர் மகிழ்ச்சிகொண் டும் அப்போது நெருங்கலாயின ரென்க. [3]நெருங்கினர் மயங்க வென்பார் என்றபாடத்துக்கு, இந்தச்செய்யுளைச் சனங்கள் கூறிய கூற்றென்னவேண்டும்: அது சிறப்பின்று. பி-ம்:—[1]கண்டனன். [2]கண்டிலன். (889)

76.—தசரதன் சென்ற சிறப்பு.

பொற்றொடி மகளி ரூரும் பொலன்கொ[1]டார்ப் புரவி வெள்ளம்
[2]சுற்றுறு கமலம் பூத்த தொடுகடற் றிரையிற் செல்லக்
கொற்றவேன் மன்னர் செங்கைப் பங்கயக் குழாங்கள் [3]கூம்ப
மற்றொரு கதிரோ னென்ன மணிநெடுந் தேரிற் போனான்.

(இ - ள்.) பொன் தொடி மகளிர் ஊரும் - பொன்வளையல்களை யணிந்த மகளிர் ஏறிச்செல்லுகின்ற, பொலன் கொள் தார் புரவி வெள்ளம் - பொன்னாலியன்ற கிண்கிணிமாலையையணிந்த குதிரை களின் கூட்டம், சுற்று உறு கமலம் பூத்த தொடு கடல் திரையில் செல்ல-சுற்றிலும் பொருந்திய தாமரைமலர் மலரப்பெற்ற (சகரர்க ளால்) தோண்டப்பட்ட சமுத்திரத்தின் அலைகள்போலச் செல்லா நிற்க,—கொற்றம் வேல் மன்னர் செம் கை பங்கயம் குழாங்கள் கூம்ப - வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அரசர்களின் செந்நிறக்கைகளாகிய தாமரைக்கூட்டங்கள் குவியாநிற்க,—மற்று ஒரு கதிரோன் என்ன-வேறொருசூரியன் போல, மணி நெடு தேரில்- மணிகள் கட்டிய நீண்டதேரிலே, போனான் - ஏறிச்சென்றான், (தசரதன்); (எ-று.)

தாமரைமலர்களை மலர்விக்குஞ் சூரியனினும் வேறுபட்டுத் தாமரைமலர்களைக் குவிக்கும் ஒருசூரியன் இந்தச்சக்கரவர்த்திக்கு ஒப்பாவ னென்பார் 'செங்கைப் பங்கயக்குழாங்கள் கூம்ப மற்றொரு கதிரோன்என்ன' என்றார்; வேற்றுமையணி. மகளிரையுடைய புரவி வெள்ளம், கமலம்பூத்த கடலின் திரைக்கு உவமை. கமலம்பூத்த கடல்திரை—இல்பொருளுவமை. மகளிரது கை கால் முதலிய அவ யவங்கள் தாமரைமலரையும், புரவிகள் கடல் திரையையும ஒக்கும். செல்ல, கூம்ப, போனான் என்க. பி-ம்:—[1]தேர். [2]சுற்றுப, சுற்றவும், சுற்றவே. [3]கூப்ப. (890)

77.—அப்போதுஎழுந்த தூளியின் வருணனை.

ஆர்த்தது விசும்பை முட்டி [1]மீண்டகன் றிசைக [2]ளெங்கும்
போர்த்த[3]தங் கொருவர் தம்மை யொருவர்கட் புலங்கொ ளாமைத்
[4]தீர்த்தது [5]செறிந்த தோடித் திரைநெடுங் [6]கடலை யெல்லாம்
தூர்த்தது சகர ரோடு [7]பகைத்தெனத் தூளி வெள்ளம்.

(இ - ள்) தூளி வெள்ளம் - (அப்போது தசரதனுடன் சென்ற சதுரங்கமாகவுள்ள சேனையாலெழுப்பப்பட்ட) புழுதிகளின்தொகுதி, ஆர்த்தது-நிரம்பியதாய், விசும்பை முட்டி - ஆகாயத்தைத் தாக்கி, (மேலே செல்ல இடம்பெறுமையால்), மீண்டு-திரும்பி, அகல் திசைகள் எங்கும்-விசாலமான திக்குக்களிலெல்லாம், போர்த்தது-மூடிக் கொண்டது: அங்கு-, ஒருவர் தம்மை ஒருவர்கண் புலம் கொளாமை-ஒருவரை யொருவர் கண்களாற் பார்க்கமுடியாதபடி, தீர்த்தது-செய்துமுடித்தது: (பின்பு அது),செறிந்தது ஓடி-நெருங்கி விரைந்து சென்று, சகரரோடுபகைத்(த)துஎன-சகரபுத்திரர்களோடு பகைமை கொண்டதுபோல, திரை நெடு கடலை எல்லாம் - அலைகளையுடைய கடலையெல்லாம், தூர்த்தது-தூர்த்து விட்டது; (எ - று.)

சகரர்வெட்டிய கடலைத் தூர்த்ததனால், 'தூளிவெள்ளம்பகைத்தெனத் தூர்த்தது' என்றார், தூளிவெள்ளத்தின் மிகுதியை விளக்கக் கடலைத் தூர்த்ததாகக்கூறியது, தொடர்புயர்வுநவிற்சியணி. தூர்த்ததற்கு 'பகைத்தென' என்று காரணங் கற்பித்துக் கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1] அகன்பெருங். [2] எல்லாம். [3] தூளியார்த்தங்கு. [4] சேர்த்தது. [5] செறிந்தகோடி. [6] கடல்கள். [7] பகையென, பகைத்தன. (891)

78.—தசரதசக்கரவர்த்தி சென்ற வகை.

சங்கமும் பணையுங் கொம்புந் தாளமுங் காளத் தோடு
மங்கல பேரி செய்த பேரொலி மழையை யோட்டத்
தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் [1] சுடரை யோட்டத்
திங்கள்வெண் குடைகண் டோடத் தேவரு மருளச் சென்றான்.

(இ - ள்.) சங்கம்உம்-சங்கவாச்சியமும், பணைஉம் - வேய்ங் குழலும், கொம்புஉம்-ஊதுகொம்புகளும், தாளமும்—, காளத்தோடு-எக்காளமும், மங்கலம் பேரி - மங்கலத்தைத் தெரிவிக்கும் பேரிகையும், செய்த—, பேர் ஒலி - பெருஞ்சத்தமானது, மழையை-மேகத்தினின்றும் தோன்றும் இடியை, ஓட்ட-அடக்கவும்,— தொங்கல்உம்-பூத்தொங்கல்களும், குடைஉம்-குடைகளும், தோகை பிச்சம்உம்-மயில்தோகையாற்செய்த பிச்சமும், சுடரை ஓட்ட-சூரியனது வெயிலைத் தடுக்கவும், திங்கள் வெண்குடை கண்டு ஓட - சந்திரன் (ஆங்குப்பிடிக்கப்படுகின்ற) வெண்கொற்றக் குடையைக் கண்டு வெள்கி அப்பாற் செல்லவும், தேவர்உம் மருள சென்றான் - (தான் செல்லுஞ் சிறப்பைக்கண்டு) தேவர்களும் மனம் மருளும்படி (வெகுமேன்மையுடன்) போனான், (தசரதன்); (எ-று.)

இரவிலும் பகலிலுஞ் செல்லுதலால் 'சுடரைஓட்ட,' 'திங்கள் ஓட' என்றார். தசரதசக்கரவர்த்தி, சேனைகள் பின்தொடர ரிஷிகளோடுகூடப் புறப்பட்டு நான்குநாட்களில் வழிகடந்து ஐந்தாநாள் விதேகதேசத்தையடைந்தனனென்று முதனூலிற் கூறியுள்ளது. தொங்கல் முதலியன - அரசர்செல்லும்போது பிடிக்கப்படும் விருதுகள். பிச்சம் என்பது-மயில்தோகையிற் செய்த குடைக்குப் பேராயினும், வடிவவேற்றுமைபற்றி வேறாகவழங்கப்பட்டதென்ப. பி-ம்:—[1] வெயிலை. (892)

79 —பலவகை யோசைக ளெழுதல்.

[1]மந்திர கீத வோதை வலம்புரி முழங்கு மோதை
அந்தண ராசி யோதை யார்த்தெழு முரசி னோதை
[2]கந்துகொல் களிற்றி னோதை கடிகையர்[3]கவிதை யோதை
இந்திர [4]திருவன் [5]செல்ல வெழுந்தன திசைக [6]ளெல்லாம்.

(இ - ள்.) இந்திரன் திருவன் - இந்திரனது செல்வம்போன்ற செல்வத்தையுடைய தசரதசக்கரவர்த்தி, செல்ல-செல்லுகையில், மந்திரம் கீதம் ஓதை-(மங்களார்த்தமாக அந்தணர்களோதுகின்ற) வேதமந்திரங்களுடைய கானத்தினோசையும், வலம்புரி முழங்கும் ஓதை-வலம்புரிச்சங்கம் முழங்குகின்ற ஓசையும், அந்தணர் ஆசி ஓதை - அந்தணர்கள் வாழ்த்துகின்ற வாழ்த்தொலியும், ஆர்த்து எழுமுரசின் ஓதை-ஆரவாரித்தெழுகின்றமுரசவாத்தியத்தினோசையும், கந்து கொல் களிற்றின் ஓதை - கட்டுத்தறியைமுறிக்கின்ற யானைகளின பிளிறலும், கடிகையர் கவிதை ஓதை - (அரசனுக்கு நாழிகையையறிவிக்கின்ற) கடிகைமாக்களின் நாழிகை தெரிவிக்கும் பாடலினோசையும், (ஆகிய இவைகள்), திசைகள் எல்லாம் எழுந்தன-திக்குக்களிலெல்லா மெழுந்தன; (எ - று.)

பலவகையோசைகளெழுந்தமையைக் கூறினார். [1]'மந்தரகீத வோதை' என்ற பாடத்திற்கு-இனிய இசைப்பாட்டின் ஒலி என்க. "இந்திர திருவன்றன்னை யெதிர்கொள்வான்" என்பார், மேல்எதிர் கொள்படலத்தும். பி-ம்:—[2]கந்தடு. [3]கவியினோசை. [4]திருவிற். [5]செல்வம். [6]எங்கும். (893)

80.—தசரதசக்கரவர்த்தி சென்ற சிறப்பு.

நோக்கிய[1]திசைக டோறுந் தன்னையே நோக்கிச் [2]செல்லும்
வீக்கிய கழற்[3]கால்வேந்தர்[4]விரிந்தகைம் மலர்கள் [5]கூப்பத்
தாக்கிய களிறுந் தேரும் புரவியும் படைஞர் தாளும்
ஆக்கிய தூளி விண்ணு மண்ணுல காக்கப் போனான்.

(இ - ள்.) நோக்கிய திசைகள் தோறுஉம் - காண்கின்ற திக்குக்களிலெல்லாம், தன்னை நோக்கி செல்லும் கழல் வீக்கிய கால் வேந்தர்-('எப்போது இம்மன்னவர்மன்னவனது கடாட்சத்திற்குப் பாத்திரமாவோம்' என்ற கருத்துடன்) தன்னையே பார்த்துக் கொண்டு செல்லுகின்ற வீரக்கழலைக்கட்டிய பாதங்களையுடைய அரசர்கள், விரிந்த கை மலர்கள கூப்ப - (தனது பார்வைவிழுந் தொறும்) மலர்ந்த தாமரைமலர்போன்ற (தமது) கைகளைக் கூப்பவும்,—தாக்கிய களிறுஉம் தேர்உம்புரவிஉம் படைஞர் தாள்உம்- (ஒன்றோடொன்று) முட்டிச்செல்லுகின்ற யானைகளும் இரதங்களும் குதிரைகளும் காலாட்படைகளின் பாதங்களும், ஆக்கிய-மேலெழுப்பிய, தூளி-புழுதிகள், விண்உம்-வானத்தையும், மண்உலகு ஆக்க-இந்த லோகமபோல மண்மயமாகச்செய்யவும், போனான்—; (எ-று.)

தசரதமன்னவனது பார்வைவிழும்போதெல்லாம் அவனையே காண்கின்றமன்னவரின் கைகள் குவிகின்றனஎன்பது, முன்னிரண்

டடிகளிற்கூறிய விஷயம். 'தாள்' என்பதை, களிறுமுதலியவற்றோ டுங்கூட்டி யுரைப்பின், தேர்த்தாள் என்றது-தேர்ச்சக்கரத்தை யென்க. சக்கரம் தேர்நடத்தற்குத் தாள்போலும். பி-ம்:—[1] திசைக ளெல்லாம். [2] செல்ல. [3] கான் மன்னர். [4] விரித்த. [5] கூம்பத். (894)

81.—தசரதசக்கரவர்த்தியுடன் சென்ற சேனையின் மிகுதி.

வீரருங் களிறுந் தேரும் புரவியு [1] மிடைந்த சேனை
பேர்விட [2] மில்லை மற்றோ ருலகில்லை [3] பெயர்வ தாக
நீருடை யாடை யாளும் நெளித்தனண் முதுகை யென்றாற்
பார் [4] பொறை நீக்கி னானென் [5] றுரைப்பதெப் [6] பரிசு மன்னோ.

(இ - ள்) வீரர்உம் - காலாள்வீரரும், களிறுஉம் - யானையும், தேர்உம்—, புரவிஉம் - குதிரையும், (என்ற நால்வகையுறுப்பும்), மிடைந்த-நெருங்கியுள்ள, சேனை—,பெயர்வது ஆக-(இவ்விடத்தை விட்டு) அப்பாற் செல்வதென்றாலும், பேர்வு - நிலைபெயர்ந்து செல்லுதற்கு, இடம் இல்லை—; (ஏனென்றால்), மற்றுஓர்உலகு இல்லை - (அவைசெல்ல) வேறொருலகமில்லையன்றோ! நீர் உடை ஆடையாள்உம் - கடலை உடுத்தற்கு உரிய ஆடையாகக்கொண் டுள்ள பூமிதேவியும், (அந்தச்சதுரங்கசேனையின் பாரத்தைப் பொறுக்கமாட்டாமல்), முதுகை நெளித்தனள் - (தன்) முதுகை நெளியச்செய்தாள்:என்றால்—,(இந்தச்சக்கரவர்த்தி), பார்பொறை-பூமியின் சுமையை, நீக்கினான்-போக்கினான், என்று—,உரைப்பது-(அறிவுடையோர்) கூறுவது, எ பரிசு-எவ்வாறு? (எ - று.)

அப்போது தசரதசக்கரவர்த்தியுடன் புறப்பட்ட சதுரங்க சேனை பேர்வதற்கும் இடமில்லாதவாறு பூலோகமுழுவதும் நெருங்கி நின்றிட, அந்தப் பாரத்தைத் தாங்கமாட்டாது பூமிதேவி யும் தன்முதுகை நெளித்தனள்: ஆகையால், 'தசரதசக்கரவர்த்தி தன்னாட்சியாற் பூமிபாரத்தை நீக்கினா னென்பது எங்ஙனம் பொருந்தும்?' என்று தசரதசக்கரவர்த்தியைப் பழிப்பார்போன்று திரண்டசேனையின் மிகுதியை வருணித்தார்; தொடர்புயர்வுநவிற்சி யணியை அங்கமாகக்கொண்டுவந்த வஞ்சப்புகழ்ச்சியணி பி-ம்:— [1] மிடைந்து. [2] அன்றி. [3] பெயர்க்கலாகா. [4] முறைநோக்கினாள். [5] உரைத்தலும், உரைத்ததும். [6] பழுது, பரிது. (895)

82.—சேனையுடன் சக்கரவர்த்தி சந்திரசயிலத்தின் சாரலில் தங்குதல்.

இன்னண [1] மேகி மன்னன் யோசனை யிரண்டு சென்றான்
பொன் [2] வரை போலு [3] மிந்து சயிலத்தின் சாரல் புக்கான்
[4] மன்மதக் களிறும் மாதர் கொங்கையும் [5] மார னம்பும்
தென்வரைச் சாந்தும் [6] நாறுஞ் [7] சேனையு மிறுத்த தன்றே.

(இ - ள்.) மன்னன் - அரசர்க்கரசனாகிய தசரதசக்கரவர்த்தி, இன்னணம் - இவ்வகையாக, ஏகி-புறப்பட்டு, யோசனை இரண்டு சென்றான்-இரண்டுயோசனைதூரம் சென்றவனாகி, (பின்பு), பொன் வரைபோலும்-மேருமலையை யொத்த, இந்துசயிலத்தின - சந்திர

சைலமலையின், சர்ரல் - தாழ்வரையில், புக்கான் - புகுந்தான்; மன்மதன் களிறுஉம் - மன்மதனதுயானை யென்றுசொல்லப்படுகின்ற இரவை யொத்த[கறுத்த] மாதர்களின் கூந்தலும், மாதர் கொங்கைஉம் - மாதர்களது தனங்களும், (முறையே), மாரன் அம்புஉம் - மன்மதனது அம்புகளாகியமலர்களாலும், தென் வரை சாந்துஉம் - தெற்குத் திசையிலுள்ள பொதியமலையிலிருந்து தோன்றுகின்ற சந்தனத்தின் தேய்வையாலும், நாறும் - நறுமணம் வீசுதற்கு இடனாகவுள்ள, சேனைஉம் - அந்தச்சதுரங்கசேனையும், இறுத்தது - (அந்த மலையின் சாரலில்) தங்கிற்று; (எ-று.) அன்றே-ஈற்றசை.

சதுரங்கசேனை செல்லும்போது அதிலுள்ள வீரர் தமது மனைவியருடன் செல்லுகின்றனராதலால், அச்சேனைவீரரின் மங்கைமாரது கூந்தல் நறுமலராலும், கொங்கைகள் சந்தனக்கலவையாலும் நறுமணம்வீச, அந்தச்சேனை மலைச்சாரலில் தங்கிற்றென்றார். மன்மதனதுகளிறு கங்குலாகும்: இதனை "கருமபுசிலை...வேலை கடிமுரசங்கங்குல் களிறு" என்பதனாலும் அறிக. மகளிர் கூந்தலை உருவகமாக'மனமதக்களிறு'என்றார் பின்னிரண்டடிகளில் முறைநிரனிறை காண்க. பி-ம்:—[1]எய்தி. [2]மலை. [3]இந்தூண். [4]வன். [5]மாவின்பூவும். [6]நாறச். [7]சேனைசென்று. (896)

எழுச்சிப்படலம் முற்றிற்று.

14—ஆவது வரைக்காட்சிப்படலம்.

தசரதசக்கரவர்த்தியுடன்சென்ற சேனைகள் சந்திரசைலமென்னும் மலையைக் கண்டதைப் பற்றிக் கூறும் பகுதி யென்பது, பொருள். சிலபிரதிகளில் முதல் 30 பாடல்கள் சந்திரசயிலப்படலம் என்று காணப்பட, சிலபிரதிகளில் படலம் முழுதுக்குமே அப்பெயருள்ளது.

கம்பர் தாம் இயற்றும் இராமாயணத்திற் பெருங்காப்பியவிலக்கணம் அமையவேண்டுமென்ற கருத்தினால், தசரதனது யாத்திரையை வியாஜமாகக்கொண்டு, எழுச்சிப்படலம் என ஒன்றை அமைத்ததோடு அமையால், வரைக்காட்சி, பூக்கொய்தல், புனல்விளையாட்டு, உண்டாட்டு என்பவற்றைப் பற்றியும் தனித்தனியே படலங்கள் அமைத்துள்ளார்.

1.—சிலயானைகளை மரங்களிற் கட்டுதல்.

கோவை [1]யார்வட கொழுங்குவ [2]டொடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை [3]யனங்கன்மேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைசிலர் புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்துஞ் சந்தினும் பூட்டின [4]சிலமா.

(இ - ள்.) கோவை ஆர்- முத்துவடம் முதலியவை நிரம்ப அணியப்பெற்றுள்ளனவும், வட கொழுங் குவடு - வடதிசையிலே யுள்ள செழித்த மேருமலையும், ஒடிதர - (தமக்கு ஒப்பாகாமல்) தோற்றுப் போய்விடும்படி, நிவந்த - ஓங்கியனவும், ஆவி வேட்டன - (தமது காதலரின்) உயிரை (க் கொள்ளை கொள்ள) விரும்பியனவும், வரி சிலை அனங்கன் மேல் கொண்ட - கட்டமைந்த வில்லையுடைய மன்மதனைத் தம்மிடத்துக் கொண்டிருப்பனவுமாகிய, முலை - (தமது) கொங்கைகளை, பூவை வாய்ச்சியர்-நாகணவாய்ப்புள்ளின் சொல்லையொத்த இனிய சொல்லைச் சொல்லுகின்ற மடந்தையர், சிலர் புயத்தொடும் பூட்ட-சில ஆடவர்களுடைய புயங்களோடு அணைக்க,—கோவை ஆர் வடம் கொழு குவடு ஒடிதர நிவந்த-ஆகாயத்தையளாவிய ஆலமரத்தினது செழித்த கிளைகள் ஒடியும்படி ஓங்கியனவும், ஆவி வேட்டன-(தண்ணீர் பருகும்படி) தடாகத்தை விரும்பியனவும், வரி சிலை அனங்கன் மேல் கொண்ட - கட்டமைந்தவில்லையுடைய மன்மதன்போன்ற வீரனை(த் தம்)மீது கொண்டிருப்பனவுமான, சில மா - சிலயானைகள், தேவதாரத்துஉம் - தேவதாரமரங்களிலும், சந்தின் உம்-சந்தனமரங்களிலும், பூட்டின-கட்டப்பட்டன; (எ - று.)

அந்தச்சந்திரசைலமலையிலே யானைகளின்மீதிருந்த மகளிர் தம் கொங்கைகள் கணவரின் புயங்களிற்படுமாறு அவரைத் தழுவிய வண்ணம கீழிறங்க, பிறகு அவ்யானைகள் மரங்களிற் கட்டப்பட்டன வென்க. மலைச்சாரலிலிறங்கித் தங்குவதை வருணிக்கின்ற இவ்விடத்து மாதர்கள் யானையினின்று கணவரைத் தழுவிய வண்ணம் இறங்கியதும், யானைகள் தேவதாரம் சந்தனம் என்ற மரங்களிற்கட்டப்பட்டதும் என்ற இரண்டு முக்கியமான அமிசங்களைப்பற்றி வந்ததாகும் இந்தச் சிலேடையணி. கொங்கைக்கும் யானைக்கும் சிலேடையாகச்சொன்ன இதில், தேவதாரு சந்தனம் என்ற மரங்களில் யானைகள் பூட்டப்பட்டனபோல, மகளிராற் கொங்கைகள் ஆடவர்புயங்களிற் பூட்டப்பட்டன என்ற உவமை தொனிக்கும். கொங்கைகட்கு யானைகளும், புயங்கட்குக் கட்டுத் தறியாகவுதவும் மரங்களும் உவமை.

தனங்கள் தமது காதலர்க்குக் காமவேதனையை மிகுதியாக உண்டாக்குதலால், 'அனங்கன் மேற்கொண்ட' என்றும், 'ஆவி வேட்டன' என்றுங் கூறினர். முலைக்கு விசேடணமாம் போது, ஆவி வேட்டன என்பதற்கு-அகிற்புகையை விரும்பின என்றும், வரி சிலை அனங்கன் மேற்கொண்ட என்பதற்கு - கட்டமைந்த கரும்புவில்லையும் மன்மதனையும் தொய்யிலாக மேலேயெழுதப் பெற்றுள்ளன என்றும் கூறலாம். கோவை-முத்துச்சரம் முதலியன, 'வடக்கு' என்ற திசைப்பெயர் கொழுங்குவடு என்ற தொடரோடு புணர்கையில் ஈற்றுஉயிர்மெய்யும் ககரவொற்றும் கெட்டது, குவடு-மலையும், மரக்கிளையும். பூவை-அப்பறவையின சொல்லையும், வாய்ச்சியர் என்பதில் வாய்-வாயிலிருந்து வருஞ்சொல்லையும் காட்டும். பி-ம்:—[1] வார் வடக், வாருடைக். [2] ஒடிந்திட நிமிர்ந்த. [3] வெய்யன். [4] சினமா, சில தேர். (897)

2.—இதுமுதல் ஆறுகவிகள்—சிலயானைகளின் தன்மையைத் தெரிவிக்கும்.

நேரொ டுங்கலில் பகையினை நீதியால் வெல்லுஞ்
சோர்வி டம்[1]பெறு வுணர்வினன் சூழ்ச்சியே போலக்
[2]காரொ டுந்தொடர் [3]கவட்டெழின் மராமரக் [4]குவட்டை
வேரொ டுங்கொடு கிரியென நடந்ததோர் வேழம்.

(இ - ள்) ஓர் வேழம் - ஒருயானையானது,—நேர் ஒடுங்கல் இல்- நேராக அடங்குதலில்லாத, பகையினை-சத்துருவை, நீதியால் வெல்லும்-(அரச) தந்திரத்தினாற் சயிக்கின்ற, சோர்வு இடம் பெறு உணர்வினன்-தவறுதலுக்கு இடமில்லாதவாறு நல்லுணர்வை யுடைய அரசனது, சூழ்ச்சிஏபோல - ஆலோசனையைப் போல (ஆலோசனை யுள்ளதாய்),—காரொடுஉம் தொடர் கவடு-மேகமண்டலத்தையளாவு கின்ற கிளைகளையுடைய, எழில்-அழகுடைய, மராமரம் - (தான் கட் டுண்டுள்ள) மராமரத்தின், குவட்டை - அடிப்பகுதியை, வேரொடு உம் கொடு-வேரோடு பறித்துக்கொண்டு, கிரிஎன-மலைபோல, நடந் தது—; (எ - று.)

மராமரத்திற் கட்டப்பெற்ற மதயானையொன்று, அப்பாற் செல்லமுடியாமையால் அம்மரத்தையே வேரொடு பறித்துக் கொண்டு அப்பாற் சென்ற தென்பதாம். அவ்வாறு தந்திரமாகத் தான் கருதியதை வேழம் நிறைவேற்றியதற்கு, நேரேநின்று பொருது ஒடுக்கமுடியாத பகையரசரைத் தனது உணர்வின்வல்ல மையால் வெல்லும் மன்னவனது செயலை உவமை கூறினர். 'உணர் வினன் சூழ்ச்சியேபோல' என்று கூறப்பட்டிருப்பினும், சோர்விடம் பெறுச் சூழ்ச்சி யுணர்வினன்போல வேழம் நடந்தது என்று மாற் றிப் பொருளுரைக்க. குவடு - திரட்சி: திரண்டமரத்தின் பருத்த அரைக்கு, ஆகுபெயர். பி - ம்:—[1]படர. [2]வாரொடுங். [3]கவட்டொடு. [4]குவையை. (898)

3. திரண்ட தாணெடுஞ் செறிபணை மருதிடை [1]யொடியப்
[2]புரண்டு பின் [3]வரு முரலொடு போனவன் போல
உருண்டு காரெடர் பிறகிடு தறியொடு மொருங்கே
[4]இரண்டு மாமர மிடையிற நடந்ததோ ரியானை.

(இ - ள்) திரண்ட தாள் - திரண்டுள்ள அடிப்பாகத்தையும், நெடு செறி பணை - நீண்ட நெருங்கிய கிளைகளையுமுடைய, மருது- இரட்டை மருதமரங்கள், இடை ஒடிய - நடுவே முறிந்துவிழும்படி, புரண்டு பின் வரும்-புரண்டு(தன்) பின்னேவருகின்ற, உரலொடு—, போனவன் போல - (அந்த மருதமரங்களின் இடையே) போன கிருட்டிணபகவான்போல,—ஓர்யானை - ஒருயானையானது, உருண்டு கால் தொடர் பிறகிடு - உருண்டவண்ணம் பின்னங்காலைத் தொடர்ந்து பின்னேவருகிற, தறியொடுஉம் - கட்டுத்தறியோடும், ஒருங்கு இரண்டு மாமரம் இடைஇற-ஒருசேர இரண்டு மாமரங்கள் (தமமுடைய) நடுப்பாகம் முறிந்துவிழும்படி, நடந்தது-போயிற்று;

தன்னைக் கட்டியிருந்த கட்டுத்தறியைப் பேர்த்து இழுத்துக் கொண்டு விரைந்துசெல்லுகையில் அக்கட்டுத்தறி மோதியதனால் இரண்டு மாமரங்களை முறிந்துவிழும்படிசெய்த ஒருயானைக்கு, தன் தாயாற் கட்டப்பட்ட உரலை ஈர்த்துகொண்டு செல்லுகையில் அதனால்மோதப்பட்டு இரட்டை மருது முறிந்துவிழச்செய்த கிருஷ்ணபகவானை உவமைகூறினர்; உவமையணி. பி-ம்:—[1] அடையப. [2] புரண்டுலா. [3] வர. இரண்டமர். (899)

4. கதங்கொள் சீற்றத்தை யாற்றுவா னினியன கழறிப்
பதங்கொள் பாகனு மந்திரி யொத்தனன் பன்னூல்
[1] விதங்க ளாலவன் மெல்லென மெல்லென விளம்பும்
இதங்கள் கொள்கிலா [2] விறைவனை யொத்ததோ ரியானை.

(இ - ள்.) கதம் கொள் சீற்றத்தை - கறுக்கொள்ளுதற்குக் காரணமான கோபத்தை, ஆற்றுவான் - தணிக்கும்பொருட்டு, இனியன கழறி -(அவ்யானைக்கு) இதமான சொற்களைச் சொல்லி, பதம் கொள் - பக்குவமாக (அதனை) வசப்படுத்தப் பார்க்கின்ற, பாகனும்—, மந்திரி ஒத்தனன் - (மாறுனவழியிற் செல்லுகின்ற அரசனைத் தன் வசப்படுத்தப் பார்க்கின்ற) மந்திரியைப் போன்றனன்; (அப்போது அந்தப் பாகனது இன்சொற்களைக் கொள்ளாது வெறிகொண்ட), ஓர் யானை - யானையானது,—பல் நூல் விதங்களால்-பல சாஸ்திரங்களிற் கூறியுள்ள முறைமைக்கு ஏற்ப, அவன்-அந்தமந்திரி, மெல்லென மெல்லென விளம்பும் - (மன்னவனுடைய மனங்கொள்ளுமாறு) மெல்லமெல்லச் சொல்லுகின்ற, இதங்கள்-நன்மைபயக்குஞ் சொற்களை, கொள்கிலா-செவிகொடுத்துக்கேட்காத [மாறுனவழியிற் செல்லுகின்ற], இறைவனை - அரசனை, ஒத்தது—; (எ - று.)

பாகனுடைய இன்சொல்லைக் கேளாது மதவெறி கொண்ட யானைக்கு, மந்திரியின் இதச்சொல்லைக் கேளாது மாறுவழியில் நடக்கின்ற மன்னவன் உவமை. பி-ம்:—[1] விதங்களாவனயாவையும். [2] மன்னனை. (900)

5. மாறு [1] காண்கில தாய்நின்று மழையென முழங்குந்
[2] தாறு பாய்கரி வனகரி [3] தண்டத்தைத் தடவிப்
பாறு பின்செலக் காலெனச் செல்வது பண்டோர்
ஆறு போகிய வாறுபோ மாறு [4] போன் றதுவே.

(இ - ள்.) மாறு காண்கிலது ஆய் நின்று - (தன்னுடைய) பகையைக் காணப்பெறுமல் நின்று, மழை என முழங்கும் - மேகம் இடியிடிப்பதுபோல ஒலிக்கின்ற, தாறு பாய் கரி-இருப்புமுள்ளாற் குத்தப்பெற்ற (அந்தச் சேனையிலுள்ள) ஒரு யானையானது, வனம் கரி தண்டத்தை தடவி-காட்டியானைசென்ற வழியைப் பின்பற்றி, பாறு பின் செல-பருந்துகள் (தன்னைப்) பின்தொடர்ந்துவர, கால் என செல்வது-காற்றைப்போல விரைந்து செல்வது,— பண்டு ஓர் ஆறு போகிய ஆறு போம்-முன்பு ஓர்நதி சென்ற வழியே செல்லுகின்ற, ஆறு-ஆற்றை, போன்றது-ஒத்தது; (எ-று.)

தான் உள்ள இடத்திற்குச் சிறிது தூரத்திலே காட்டியானை சென்றதாக, மோப்பத்தினால் அதனையுணர்ந்த சேனையின் யானையொன்று வெறிகொண்டு தன்பகையான காட்டியானையை யடக்க விரும்பியும் காணப்பெருமையால் வீரிட்டு அந்தக்காட்டி யானை சென்றவழியைப் பின்பற்றிச்சென்ற தென்க; அவ்வாறு சென்ற யானைக்கு, ஓரியாறுசென்றவழியே வெள்ளப்பெருக்கினாற் கரைபுரண்டுவந்த மற்றோரியாறு செல்வதை உவமை கூறினார். வேற்றுப் புலத்து யானையின் மணம் பட்டால் மதவெறிகொள்ளுதல், யானையின் இயல்பு. அங்ஙனம் மதவெறிகொண்டு சேனையின யானை செல்லும்போது இடைவழியே கைக்கு அகப்பட்ட பிராணிகளைக் கொன்றுகொண்டே செல்வதனால், அவ்யானையின் பின்னே பாறுகள் செல்வனவாயின. தண்டம் என்பது நான்காவது உபாயத்தையும் யானைசெல்லும்வழியையும் காட்டுமென்பதை "தந்திரமுங் கரிசெல்வழியுந் தண்டம்" என்ற பிங்கலந்தையாலும் அறிக. [2] தாறு காய்கரிஎன்ற பாடம் - கட்டுத்தறியைக் கண்டு கோபிக்குந் தன்மையுள்ள யானையென்க. பி - ம்:—[1] காணுமதாய். [3] தடத்தையே. [4] சென்றதுவே. (901)

6. பாத்த யானையின் [1] பதங்களிற் படுமத நாறக்
காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப்
பூத்த [2] வேழிலம் பாலையைப் பொடிப்பொடி [3] யாகக்
காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு.

(இ - ள்.) பாத்த யானையின் பதங்களில் - (அணியணியாகப்) பிரித்துள்ள யானைகளைக்கட்டிய இடங்களில், படு - தோன்றுகின்ற, மதம் - மதநீரினது நாற்றம், நாற - (ஏழிலம்பாலைமரங்களிலிருந்து) வீசியதனால், (அதனைத் தாங்கமாட்டாமல்), ஓர் களிறு - ஒருயானையானது,—காத்த அங்குசம் நிமிர்ந்திட-(தன்னைமீறவொட்டாமல்) தடுக்கின்ற (பாகன்கையிலுள்ள) அங்குசமானது நிமிர்ந்து போய்விடும்படி, (மீறி), கால் பிடித்து ஓடி - (மதமணம்வந்த) வழியைப் பற்றிக்கொண்டு ஓடிப்போய், (அவ்வாறு மதமணம்வருவதற்குக் காரணமாயிருந்த), பூத்த ஏழிலம்பாலையை - பூப்பூத்துள்ள ஏழிலம்பாலைமரத்தை, பொடிபொடி ஆக - மிகச்சிறியதூளாகும்படி, காத்திரங்களால் - முன்னங்கால்களால், தலத்தொடும் தேய்த்தது - தரையோடுதேய்த்துவிட்டது; (எ-று.)

அந்தச் சேனை தங்கிய சந்திரசைலமென்றமலைச்சாரலில் ஏழிலம்பாலை மரத்தினிடத்திலிருந்து யானையின் மதமணம் போன்ற மணம் வீசியதாக, யானைக்கூடத்திலிருந்துள்ள யானைகளில் ஒன்று மோப்பத்தினால் அதனையுணர்ந்து மதவெறிகொண்டு பாகனுக்கு அடங்காமல் அங்குசமும் நிமிர்ந்திட மீறி மதமணம் வந்தவழியை நாடிச்சென்று அவ்வேழிலம்பாலை யுள்ளவிடத்தைச் சேர்ந்து அந்த மரத்தைப் பொடிபொடியாக ஆய்விடுமாறு தன் முன்னங்கால்களாற் பூமியில் தேய்த்ததென்பதாம். ஏழிலம்பாலை மரம் பூப்பூத்ததாயின் அது மதமணங்கமழுமென்பதும், அதனால் யானை மதவெறிகொண்டு, வேறோர்மதயானையைக்கண்டால் வெறி

கொண்டு அதனையடக்குவதுபோல் அம்மரத்தையழிக்கு மென்பதும் இங்கு உணரத்தக்கன. கால் - காற்றுமாம். பாத்த= பகுத்த. ஏழிலம்பாலை - ஏழிலைகளையுடையபாலை: இது, வடமொழியில் 'ஸப்தபர்ணீ' எனப்படும். "யாக்கையு முறுப்பும் யானைமுன்காலும்,...காத்திரமாகும்" என்ற நிகண்டினை அறிக. படுமதம் - மிக்கமதநாற்றமுமாம். கால் - இலக்கணையால், மதமணமெனினுமாம். பி-ம்:—[1] கதங்களிற். [2] ஏழிலைம்பாலையை, ஏழிலைப்பாலையை. [3] ஆக்கிக். (902)

7\. அலகில் [1]யானைக ளனேகமு [2]மவற்றிடை மிடைந்த
திலக வாணுதற் பிடிகளுங் குருளையுஞ் [3]செறிந்த
உலவை நீள்வனத் [4]தூதமே [5]யொத்தவவ் [6]வூதத்
தலைவ னே[7]யொத்துப் பொலிந்தது சந்திர சயிலம்.

(இ - ள்.) அலகு இல் யானைகள் அநேகம்உம்-(வலிமையில்) கணக்குக்குஉட்படாத [மிகவும் வலிமையுள்ள] ஆண்யானைகள்பலவும், அவற்றிடை மிடைந்த திலகம் வாள் நுதல் பிடிகள்உம் - அவ்யானைகளிடையே நெருங்கியுள்ள சிந்துரத்திலகந்தீட்டிய ஒள்ளியநெற்றியையுடைய பெண்யானைகளும், குருளை உம் - யானைக்கன்றுகளும்,செறிந்த-நெருங்கியிருந்தவை,—உலவை நீள்வனத்து- மரங்கள் மிகுதியாயுள்ள அவ்வனத்திலே, ஊதம்ஏ ஒத்த - (தாம்) யூதத்தையொத்திருந்தன; சந்திர சயிலம் - அந்தச் சந்திர சைலமானது,அ ஊதம் தலைவன் ஏ ஒத்து பொலிந்தது-அந்த யூதத்தின் பதியையொத்து விளங்கிற்று; (எ-று.)

அங்குத் தங்கிய ஆண்யானைகளும் பெண்யானைகளும் அவற்றின் கன்றுகளும் யூதமாக அமைய, அம்மலை யூதபதியைப் போன்று விளங்கிற்று என்றவாறு. யூதம் - காட்டிற் சஞ்சரிக்கும் யானைகளின்கூட்டம். இந்தவருணனையால், யூதங்கட்கும் யூதபதிக்கும் எத்துணைவேறுபாடு விளங்குமோ அம்மாத்திரமே அந்தச்சந்திரசயிலத்துக்கும் யானைகட்கும் வேற்றுமை தோன்றிற்றென்பது, பெறப்படும்: ஆகவே, அவ்யானைகள்யாவும் சிறுகுன்றுகளோடு வேறுபாடுதோன்ருவண்ணம் இருந்தன என்க. உலவை - மரம்: "மரமும் மரத்தின்கோடும் காற்றுமுலவை" என்பது, நிகண்டு. ஏகாரங்கள் - இசைநிறை: தேற்றமுமாம். ஊதம்=யூதம்: ஊதபதி=யூதபதி; யானையரசு. பி-ம்:—[1] ஆனைகள். [2] அவற்ருெடு. [3] செறிய. [4] ஊகமே. [5] ஒத்தன. [6] ஊகத். [7] எனப்.(903)

8.—மலைச்சாரலில் தேர் செல்லுதல்.

தெருண்ட [1]மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட [2]புன்மையை மாற்றுவ [3]ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்[4]துரைத் தோடி
இருண்ட கல்லையுங் [5]தந்நிற மாக்கிய விரதம்.

(இ - ள்.) 'தெருண்ட மேலவர் - தெளிந்த அறிவையுடைய பெரியோர், சிறியவர் சேரின்உம் - சிறியவரை(த் தாம் போய்ச்) சேர்ந்தாலும், மருண்ட அவர்தம் புன்மையை - புத்திமாருட்டங்

கொள்ளுதற்குக் காரணமான அவருடைய இழிகுணத்தை, மாற்றுவர் - போக்குவர், எனும் - என்று சொல்லுகின்ற, இது - இச்சொல், வழக்கே - முறைமையானதே: (ஏனெனின்,)—இரதம் - இரதங்கள்,—பொன் உருள் உருண்ட வாய் தொறுஉம் - பொன்னாலியன்ற சக்கரங்கள் உருண்டுசென்ற இடங்கள்தோறும், உரைத்து உரைத்து ஓடி - (பொன்னை) உரைத்தவண்ணம் ஓடிச் சென்று, இருண்ட கல்லேஉம் - கருநிறம்பொருந்திய பாருங்கற்களையும், தம் நிறம் ஆக்கிய - தம்முடைய பொன்னிறமாகவே செய்தன; (எ-று.)

தேரின் பொன்னிறவுருளை சென்றதனால், அங்குள்ள பாறைகள் பொன்னிறத்தை யடைந்தனவென்பதாம்; இக்கருத்தில், ஒரு பொருள் தன்னிறத்தைவிட்டு உயர்ந்த வேறொரு பொருளின் நிறத்தைப் பெற்றதாகக் கூறியது - பிறிதின்குணம்பெறலணியாம். பின்னிரண்டடியிற்கூறிய சிறப்புப்பொருள் முன்னிரண்டடியிற் கூறிய பொதுப்பொருளைச் சமர்த்தித்து நின்றது - வேற்றுப்பொருள்வைப்பணியாம். 'சேரினும்' என்ற எதிர்மறையும்மை, அவர் சேரார் என்ற பொருளைக் காட்டும்: இதனை, இழிவு சிறப்பாகக் கொள்ளலுமாம். மருண்டபுன்மை-மருட்சியினாலேற்பட்ட புன்மையும், வழக்கு-உலகவழக்குமாம். பி - ம்:—[1]மேலவர்ச்சிறியவர் சேரினும். [2]தன்மையை. [3]என்பது, எனுமது. [4]உரையோடி, உரைத்தோட. [5]தன்னிறம், பொன்னிறம். (904)

9.—யானைதேர்களிலிருந்து கீழிறங்கின மகளிரினருகே மயில்கள் சஞ்சரித்தலின் வருணனை.

கொவ்வை [1]நோக்கிய [2]வாய்களை யிந்திர கோபம்
[3]கவ்வி நோக்கின வென்றுகொல் [4]காட்டின மயில்கள்
நவ்வி நோக்கியர் நலங்கொண்மே கலை[5]பொலஞ் சாயற்
செவ்வி [6]நோக்கின திரிவன போல்வன திரிந்த.

(இ - ள்.) காட்டு இனம் மயில்கள் - காட்டில்வாழ்கின்ற கூட்டமான மயிற்பறவைகள்,—கொவ்வை நோக்கிய வாயகளை - கோவைப்பழத்தையொத்த [செந்நிறமாகவுள்ள] (மகளிரின்) வாய்களை, இந்திரகோபம் கவ்வி நோக்கின என்று கொல் - இந்திரகோபப்பூச்சிகளைக் கவ்வியிருந்தாற்போன்ற அழகையுடையன என்று நினைத்ததனால் தானோ, நலம் கொள் மேகலை - அழகைக் கொண்ட மேகலாபரணத்தைப் பூண்ட, நவ்விநோக்கியர் - மான் கண்கள்போன்ற கண்களைப் பெற்ற மகளிருடைய, பொலம் சாயல் செவ்வி - பொன்னையொத்த சாயலின் அழகை, நோக்கின திரிவன போல்வன - (எங்ஙனமுள்ளதென்று) பார்த்த வண்ணம் திரிவனபோல்வனவாகி, திரிந்த - திரிந்தன; (எ - று.)

மகளிரதுவாய்கள் இந்திரகோபமென்னும் பூச்சிகள் கவ்வினாற்போன்ற காட்சியை யுடையனவாயிருத்தல் கண்டு, மயில்கள், இவர்களின் சாயல் எங்ஙனமுள்ளன என்று நோக்குதலின் பொருட்டே திரிவனபோன்று திரிந்தனவென்றார்: காட்டில் இனம் இனமாக மயில்கள் திரிவதற்கு, கவி, ஒருகாரணங் கற்பித்துக்

கூறினது - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. மயில் மகளிர்க்குச் சாயலில் உவமைகூறப்படுவது வழக்கமாதலால், வாய்களைப் பற்றிக் கருதிய மயில்கள் சாயற்செவ்வியைக் கருத்தோடுநோக்கத் திரிந்தனவென்ருர். இனி வேறு ஒருசாரார்கூறும் உரை வருமாறு:—தாம் கவர வேண்டுமென்று கொவ்வைப்பழங் கருதியிருந்த மகளிரின்செவ்வாயினழகை இந்திரகோபமென்னும் பூச்சிகள கவர்ந்து பார்த்துக்கொண்டுள்ளன என்று காட்டிலுள்ள மயில்கள் கருதியதனால்தானே (அவ்விந்திரகோபங்களை உண்ணவிரும்பித் தாம் அதற்காகத் திரிவது தோன்ருவண்ணம்) அப்பெண்களின் சாயற் செவ்வியைப் பார்க்கத்திரிவனபோல் திரிந்தன என்பது. ஓசை யின்பம்நோக்கி, 'மேகலைபொலஞ்சாயல்' என இயல்பாயிற்று.

இனி, இச்செய்யுட்கு - (மகளிரின்) கோவைப்பழம்போன்ற வாய்களை (ப் பார்த்து) மயில்கள் இவ்வாய்கள் இந்திரகோபத்தைக் கவ்வியுள்ளதனல் இங்ஙனம் செந்நிறமாகத் தோன்றுகின்றன என்று கருதியதனல்தானே (தாமும் அவ்விந்திரகோபதைதக் கவ்விக்) காட்டியனவாய், பிறகு நவ்விநோக்கியரான அந்தமகளிரது மேகலையும் சாயலும் தம்கலாபத்தின் கண்களையும் சாயலையும் போலிருத்தலால் அவற்றைநோக்கித் திரிவனபோல்வனவாகித் திரிந்தன என்று உரைகூறலுமொன்று; இவ்வுரைக்கு-முன்னிரண்டடிகளிலும்-ஏதுத்தற்குறிபபேற்றவணி காணலாம். மழைக்காலத்து உண்டாவதனல், மழைக்கடவுளாகிய இந்திரனுற்காக்கப்படுவது என்னும்பொருள்பட, 'இந்திரகோபம்'என்ற பெயர் அந்தப்பூச்சிக்கு வந்தது: அப்பூச்சி மிக்கசெந்நிறமாக விருக்கும். பி - ம்:—[1]நோக்கியர். [2]வாய்தனை. [3]கௌவைநீக்கின. [4]காட்டிள மயில்கள். [5]பொலி. [6]நோக்கிய. (905)

10.-குதிரையினின்று இறங்கியமகளிர் மரநிழலில்தங்குதல்.

உய்க்கும் வாசிக [1]ளிழிந்திள வன்னத்தி னொதுங்கி
மெய்க்க லாபமுங் [2]குழைகளு மிழைகளும் [3]விளங்கத்
தொக்க மென்[4]மர நிழல்படத் துவன்றிய சூழல்
புக்க மங்கையர் பூத்தகொம் பாமெனப் பொலிந்தார்.

(இ - ள்.) உய்க்கும் வாசிகள் - செலுத்திய குதிரைகளினின்று, இழிந்து-இறங்கி, இள அன்னத்தின் ஒதுங்கி-இளவன்னங்கள்போல மெல்லநடந்து, தொக்க மெல் மரம நிழல் பட துவன்றிய சூழல் புக்க - அடர்ந்த மெல்லிய மரங்களின் நிழல்படும்படி யமைந்த இடத்திறபோய்ச் சேர்ந்த, மங்கையர்—, மெய் - (தமது) உடம்புகளில், கலாபம்உம்-இடையணிகளும், குழைகள்உம்-காதணிகளும், இழைகள்உம்-மற்றையாபரணங்களும், விளங்க - விளங்குவதனல், பூத்த கொம்பு ஆம் என-(மலர்கள் நிறையப்) பூத்துள்ள பூங்கொம்பு என்னும்படி, பொலிந்தார்-விளங்கினர்; (எ - று.)

குதிரைகளினின்று இறங்கி மரநிழலடர்ந்த இடத்தில் தங்கிய மகளிர் பல்வகையாபரணங்களைப் பூண்டிருத்தலாற் பூங்கொம்பு போலப் பொலிந்தனரென்க. பூங்கொடிகளும் தாம் படருமாறு மரத்

தின்கீழ்ச் செல்லும். கலாபம்-பதினாறுகோவையிடையணி. பி-ம்:—
[1] இழிந்தனரன்னத்தின், இழிந்துவந்திளவனத்து. [2] இழைகளுங் குழைகளும். [3] இலஙகத். ஒதுங்கித். [4] மலர். (906)

11.—வழிவந்தஇளைப்பினால் மங்கையர் பளிக்குப்பாறையில் துயிலுதல்.

தளங்கொ டாமரை யெனத்தளி ரடியினு முகத்தும்
வளங்கொண் மாலைவண் டலமர வழிவருந் தினராய்
விளங்கு தம்முருப் பளிங்கிடை வெளிப்பட வேறோர்
துளங்கு பாறையிற் றோழிய [1] ரயிர்த்திடத் [2] துயின்றார்.

(இ-ள்.) (சூழல்புக்கமங்கையர்),—வழி வருந்தினர் ஆய் - (வெகுதூரம் பிரயாணஞ்செய்ததனால் வருத்தமடைந்தவராய், வளம் கொள மாலை வண்டு-வளப்பமுள்ள [செழுமையுடன் வளர்ந்துள்ள] தொகுதியான வண்டுகள், தளம் கொள தாமரை என - இதழை நெருக்கமாகக்கொண்டுள்ள தாமரைமலராகக் கருதி, தளிர் அடியின உம - தளிரையொத்த (தமது)பாதங்களிலும், முகத்துஉம் - முகத்திலும், அலமர - சுழன்றுகொண்டிருக்க —விளங்கு தம் உரு-ஒளிர் கின்ற தமது உருவம, தோழியர் அயிர்ததிட - (தமது) தோழியர் (நமது தலைவியின உருவமோ என்று)ஐயங்கொள்ளும்படி, பளிங் கிடை-பளிக்குப பாறைகளில், வெளிப்பட - (பிரதிபிமபமாகத்) தோன்ற, வேறு ஓர் துளங்கு பாறையில்-வேறொருவிளங்குகின்ற பளிககுப்பாறையிலே. துயின்றார்-படுதது உறங்குவராயினார்;(எ-று.)

மஙகையர் வெகுதூரம் பயணம் வந்த இளைப்பினால் ஒரு பளிக்குப்பாறையிற படுதது உறங்கினா ரென்றவாறு. அப்போது அம்மஙகைமாரின அடிகளையும் முகத்தையும் கண்டு வண்டுக் கூட்டங்கள் தாமரைமலரென்று மயங்கி அவற்றில் மொய்க்கு மாறு சுழல்வனவாயின: அவ்வாறுபடுத்து உறங்குகையில் அவரது உருவம வேறொருபளிக்குப்பாறையிற் பிரதிபிம்பித்தலால் அந்தப் பிரதிபிம்பத்தையே தோழியர் ‘இது நமது தலைவியின் உருவமே’ என்று மயங்கினா ரென்க: மயக்கவணி. தோழியர் காண்கின்ற பளிங்கினும் மங்கைமார் துயின்ற பளிக்குப்பாறை வேறு ஆத லால், ‘வேறோர்துளங்குபாறையில்’ எனப்பட்டது. இனி, தோழியரயிர்த்திட வேறோர் தம்முருப் பளிங்கிடைவெளிப்படத் துளங்குபாறையில் துயின்றா ரென இயைத்து-மாதராருரு துயி லுந் துளங்குபாறையிலன்றிப் பளிக்குப்பாறையிலும் வெளிப்படுவ தால், உண்மையுருவம் இன்னதெனவறியாது தோழிமார் அயிர்த் திடத் துயின்றா ரெனினுமாம். வளம்-தேன்வளமுமாம். பி-ம்:—
[1] ஆமெனத். [2] துயின்று. (907)

12.—சிலமகளிர் சூழலிற் புகுதல்.

[1] பிடிபுக் காயிடை மின்னெடும் [2] பிறங்கிய மேகம்
படி [3] புக் காலெனப் படிதரப் பரிபுரம் புலம்பத்
துடி [4] புக் காவிடைத் திருமக டாமரை துறந்து
[5] குடி [6] புக் காலெனக் குடிபுக்கார் [7] கொடியன்ன மடவார்.

(இ - ள்.) மின்னொடுஉம் பிறங்கிய மேகம் - மின்னல்களோடும் விளங்கிய மேகங்கள், அ இடை - அந்தச் சந்திரசயிலமலைப் பக்கத்தில், படி புக்கால் என-பூமியிற் சேர்ந்தாறபோல, பிடி புக்கு படிதர-பெண்யானைகள் (ஆங்குச்) சேர்ந்து பூமியிற் படிந்து நிறக, (அவற்றின்மீது ஏறியிருந்த), கொடி அனன மடவார்-பூங்கொடியையொத்த (சில) மகளிர்,—(கீழிறங்கி),—துடி புக்கா இடை திருமகள் தாமரை துறந்து குடி புக்கால் என-உடுக்கை யென்னும்பறையும் உவமையாகப்பெறாத இடையையுடைய இலக்குமி (தனதுவாழிடமான) தாமரை மலரைவிட்டு (அங்குக்) குடிபுகுந்தாற்போல, பரிபுரம் புலமப (தமது தாள்களிலணிந்த) நூபுரம (கலீர்கலீரென்று) ஒலிக்க (நடந்து), குடி புக்கார்-(தங்குமாறு ஏறபடுத்திய விடுதியிற்) குடிபுகுந்தார்கள்;

பெண்யானைகளின் மீது ஏறிவந்த சிலமகளிர் அவை பூமியிற் படிந்திருக்க அவறறினின்று இறங்கிச்சென்று அங்கு ஓர்சூழலிற் குடிபுகுந்தனரென்க. மகளிரைத் தாஙகிய பிடிகட்கு, மினனலைத் தாங்கியமேகங்கள் உவமை. யானைபூமியிற்படிந்தபின் மகளிா இறங்குதல், இயல்பு. மகளிரில் ஒவ்வொருத்தரும் தனித்தனி திருமகளையொததிருந்தன ரென்க. மூன்றாமடியில், புக்கா = புகா: விரித்தல். [1]பிடிபுக்காவிடை என்று பாடங்கொண்டு, பிடிகள், புகாவிடை-பூவையுடைய சோலையிலே, படிதரஎன்று உரைத்து, பு பூஎனபதன் குறுக்க மென்பாரு முளர். பி-ம்:—[2]பிறந்தன. [3]உறறுமெனப [4]புக்காயிடை. [5]குடில். [6]புக்காளென. [7]கொடியிடை. (908)

வேறு.

13.—குதிரைகளைக் குதிரைச்சாலையிற் சேர்த்தல்.

[1]உண்ணமுத முந்தியெனை யோ[2]நகர் கொணர்ந்த
துண்ணெனு [3]முழக்கின துருக்கர்தர வந்த
மண்மகடன் மார்பினணி வன்னசர மென்னப்
[4]பண்ணியல் வயப்[5]பரிகள் [6]பந்தியி னிரைத்தார்.

(இ - ள்.) உண் அமுதம் உந்தி - உண்ணுதற்குஉரிய உணவுப் பொருள்களை யூட்டி, எனை ஓ நகர் கொணர்ந்த - எந்தெந்த நகரத்திலிருந்தோ கொண்டு வரப் பெற்றனவும், துண்ணெனும் முழக்கின-(கேட்பவர்) திடுக்கிடக்கூடிய சத்த முடையனவும், துருக்கர் தர வந்த-துருக்கர்கள் கொணர்ந்து வந்தனவுமான, பண் இயல் - அலங்காரமமைந்த, வய பரிகள்-வலிமைபொருந்திய குதிரைகளை, மண் மகள் தன் மார்பின் அணி வன்னசரம் என்ன - பூமிதேவியின் மார்பிலணிந்த பலரத்தினங்களையுடைய நவரத்தினஹாரம்போல, பந்தியின் - குதிரைச்சாலையில், நிரைத்தார் - ஒழுங்காகக் கட்டினார்கள்;

பலநிறங்களையுடைய குதிரைகள் வன்னசரம்போலும். துருக்கராற் காட்டிற் பிடிக்கப்பட்டுப் பலநகரங்களில் ஏற்றஉணவளித்து வளர்க்கப்பட்ட குதிரைகள் அங்கு வந்தன வென்க. [1]உண்ணமுத வுந்தியன வொண்ணகருறைந்த என்ற பாடத்துக்கு - (தேவர்கள்) உண்ணுதற்கு உரிய திருப்பாற்கடலிலே தோன்றியனவாய் ஒள்ளிய

நகரத்திலே யுறைந்தவை என்று பொருளாம்; அமுதவுந்தி - பாற்கடல். பி - ம்:—[2]நிரை. [3]முழக்கினர். [4]பண்ணுறு, பண்ணமை. [5]புரவி. [6]பந்திகள். (909)

14.—ஆங்காங்குத் தங்குவதற்குஏற்ப வசதிகளைப் பணியாளர் அமைத்தல்.

நீர்[1] திரை [2]நிரைத்தவென நீடிரை நிரைத்தார்
ஆர்கலி [2]நிரைத்தவென வாவண நிரைத்தார்
கார்நிரை யெனக்[3] களிறு காவிடை நிரைத்தார்
மாருத [2]நிரைத்தவென வாசிக ணிரைத்தார்.

(இ - ள்.) நீர் திரை நிரைத்த என-நீரலைகள் ஒழுங்காக நிறுத்தப்பட்டனவென்னும்படி, நீள் திரை நிரைத்தார்-நீண்ட திரைகளை (ஆங்காங்கு) ஒழுங்காகக் கட்டினார்கள்; ஆர்கலி நிரைத்த என-கடல்கள ஒழுங்காக அமைக்கப்பட்டன என்னும்படி, ஆவணம் - கடைத்தெருக்களை, நிரைத்தார்—; கார்நிரை என - மேகங்களின் வரிசையெனத்தோன்றுமாறு, களிறு-யானைகளை, கா இடை - சோலைகளினிடையே, நிரைத்தார்—; மாருதம் நிரைத்த என-காற்றுக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டன போல, வாசிகள் நிரைத்தார்-குதிரைகளை ஒழுங்குபடக்கட்டினார்; (எ-று.)

வந்தவர்கள் ஆங்காங்குவசிக்குமாறு திரைகளைக்கட்டியதும், வேண்டிய பொருள்களைக் கொள்ளுமாறு கடைகளை அமைத்ததுமன்றி, உடன்வந்த யானைகுதிரைகளையும் அவ்வவற்றிற்குத்தக்க தலங்களில் வரிசையாகக் கட்டினரென்பதாம். ஓசையின்பம் நோக்கி 'நீர்திரை' என இயல்பாயிற்று. ஆவணம=ஆபணம். விரைந்து செல்வதில், வாசிக்கு மாருதம் உவமை. பி-ம்:—[1]நிரை, நுரை, நதி. [2]நிரைத்தெதன. [3]பிடிகள். (910)

15.—முரசொலிமுதலியவற்றால் அரசன்தங்கிய இடத்தை உணர்தல்.

நடிக்குமயி [1]லென்னவரு நவ்வி[2] விழி யாரும்
வடிக்கு[3] மயில் வீரரு மயங்கினர் திரிந்தார்
இடிக்கு[4]முர சக்குரலி [5]னேங்குமுரல் சங்கின்
கொடிக் [6]களி னுணர்ந்தரசர் கோநக [7]ரடைந்தார்.

(இ - ள்.) நடிக்கும் மயில் என்ன வரும் - ஆடுந்தன்மையுள்ள மயில்போன்று வருகின்ற, நவ்வி விழியார்உம் - மான்பார்வை போன்ற பார்வையையுடைய மங்கைமாரும், வடிக்கும் அயில் வீரர்உம்-காய்ச்சியடித்துக் கூராக்கப்பட்ட வேலாயுதத்தையேந்திய வீரர்களும், மயங்கினர் திரிந்தார்-(தாம் புகவேண்டியஇடம் இன்னதென்று தெரியாமல்) மயங்கித்திரிந்து, (பின்பு), இடிக்கும் முரசம் குரலின - ஒலிக்கின்ற மங்களமுரசின் ஒலியாலும், ஏங்கும்முரல் சங்கின் - (ஊதுவதால்) ஒலிக்கின்றனவாய் இயற்கையொலியையுடைய மங்களச்சங்கினாலும், கொடிக்களின் - (ஏற்ற சின்னத்தை

யுடைய) கொடிகளாலும்,உணர்ந்து-(அரசன்மனை இதுதானென்று) தெரிந்துகொண்டு, அரசர் கோநகா-சக்கரவர்த்தி தங்கிய இடத்தை, அடைந்தார்—; (எ-று.)

ஆங்காங்குத் தங்கும்படி பலகூடாரங்கள் அமைக்கப்பட்டதனால் தசரதசக்கரவர்த்தி தங்கியஇடத்திற் போகவேணுமென்று கருதிய மங்கையரும் வீரரும் 'இதுதான் அரசன் தங்கிய மாடம்' என்று உணரமுடியாமல் மயங்கி அலைந்து, பிறகு முரசம் முதலிய சின்னங்களால் ஊகித்து உணர்ந்து அதனைச் சேர்ந்தன ரென்பதாம். பி-ம்:- [1]அன்னவரும். [2]அனையாரும். [3]வய. [4]முரசின். [5]எங்கும். [6]களிறினத்து, களிறிழிந்து. [7]அணைந்தார். (911)

16 —ஆடவர் மங்கைமார்மீது படிந்த தூசியைப் போக்குதல்.

[1]மிதிக்கநிமிர் தூளியின் [2]விளக்கமறு மெய்யைச்
சுதைக்கணுரை யைப்பொருவு தூசுகொடு [3]தூய்தா
[4]உதிர்த்தன ரிளங்குமர [5]ரோவியரி னோவம்
புதுக்கின ரெனத்தருண மங்கையர் பொலிந்தார்.

(இ-ள்.) மிதிக்க நிமிர் தூளியின்-(யானைமுதலியவை) செல்வதனால் மேலெழுந்த புழுதியினால், விளக்கம் அறு மெய்யை-(தமது மனைவிமாரின்) விளக்கம்நீங்கிய [அழகுமழுங்கிய] உடம்பை, இளகுமரர் - இளமையையுடைய (அம்மங்கைமாரின்) கணவர்,—சுதைக் கண் நுரையை பொருவு-பாலில்தோன்றுகின்ற நுரையையொத்த, தூசு கொடு-ஆடைகளைக்கொண்டு, தூய்து ஆ-சுத்தமாக [படிந்த தூசி நீங்கும்படி],உதிர்த்தனர்-போக்கினார்கள்; (அதனால்), தருணம் மங்கையர் - இளமையையுடைய மடந்தையர், ஓவியர் இன் ஓவம் புதுக்கினர் என-சித்திரக்காரர் அழகிய சித்திரத்தைப் புதுப்பித்தா ரென்னுமாறு, பொலிந்தார்-விளங்கினார்கள்; (எ - று.)

அங்குத் தங்கினபோது, கணவர்கள் தமதுமங்கையர்மீதுபடிந்திருந்த தூளியினத்தைத் தமது ஆடைகளாற் போக்க, அதனால் அம்மங்கையர் சித்திரக்காரரால் மாசுதீர்த்துப் புதுப்பிக்கப்பட்ட சித்திரம்போல விளங்கின ரென்க. [5]ஓவியரிலோவம் என்ற பாடத்துக்கு—ஓவியர் - சித்திரமெழுதுவோர், இல் ஓவம் - வீட்டிலெழுதிய சித்திரத்தை யென்க. பி - ம்:—[1]மதிகக, மதிக்கு. [2]மறைந்தமணி, மறைக்கமணி. [3]தூசை, தூளை. [4]உதிர்த்தலின். ()

17.—அரசகுமாரர் யானையினின்றிறங்கிப் படமாடஞ் சேர்தல்.

[1]தாளுயர் தடக்கிரி யிழிந்துதரை [2]சேரும்
கோளரியெ னக்[3]கரிகள் கொற்றவ ரிழிந்தார்
பாளைவிரி யொத்துலவு சாமரை படப்போய்
வா[4]ளெழ நிரைத்தபட மாடமவை புக்கார்.

(இ - ள்.) கொற்றவர் - (யானையை வாகனமாகக்கொண்ட) அரசகுமாரர்கள்,—தாள் உயர் தட கிரி இழிந்து-தாழ்வரை உயர்ந்

திருக்கப்பெற்ற பெரியமலையிலிருந்து இறங்கி, தரை சேரும் - பூமியைச் சேரும், கோள் அரிஎன - வலியசிங்கத்தைப்போல, கரிகள் இழிந்தார் - யானையினின்று கீழிறங்கியவராய்,—பாளை விரி ஒத்து உலவு - விரிந்தபாளைக்குச் சமானமாகி(த் தமது இருபுறங்களிலும்) அசைகின்ற, சாமரை பட-சாமரை வீசப்பெற, போய்—, வாள்எழ நிரைத்த - ஒளியெழும்படி ஒழுங்காக அமைத்த, படம் மாடம் அவை-கூடாரங்களில், புக்கார்-புகுந்தார்கள்; (எ - று.)

அரசகுமாரர்கள் யானையினின்று இறங்கி வெண்சாமரைகள் தமது இருபுறத்திலும் வீசப்பெறக் கூடாரங்களிற் புகுந்தன ரென்பதாம். யானைகளினின்று இறங்கிய கொற்றவர்க்கு, மலையினின்று இறங்கிய கோளரி உவமை. 'தாளுயர்' என்பதைக் கரிகட்கும் கூட்டிப் பொருளுரைக்க. படமாடத்திற்புகுங் கொற்றவர்க்கு மலையடிவாரத்தமைந்த குகையிற்புகும்அரி உவமையென்னலாம். 24-ஆஞ் செய்யுளை நோக்குக. பி-ம்:—[1] தாமுயர். [2] சாரும். [3] கரிகொள். [4] எழில், எழு, ஒளி. (913)

18.—படமாடத்தில் மகளிர்முகம் விளங்குதல்.

[1] தூசினொடு வெண்பட முடைக்குடில்க டோறும்
வாசநகை மங்கையர் [2] முகங்கண்மழை வானின்
[3] மாசின்மதி யின்கதிர் [4] வழங்குநிழ லெங்கும்
வீசுதிரை [5] வெண்புனல் [6] விழுங்கியது போலும்.

(இ - ள்.) வெண் தூசினோடு-வெண்ணிறமுள்ள ஆடைகளினாலியன்ற, படம் உடை குடில்கள்தோறும்-விருதுக்கொடியையுடைய கூடாரங்களிலெல்லாம், நகை வாசம் மங்கையர்-புனசிரிப்பையும் இயற்கைமணத்தையுமுடைய மகளிரின், முகங்கள்-,மழை வானில்-மேகங்கள் சஞ்சரிக்கின்ற ஆகாயத்திலேயுள்ள, மாசு இல் மதியின் கதிர் வழங்கும் நிழல்-குற்றமில்லாத சந்திரனுடைய ஒளி வீசுந்தன்மையுள்ள பிரதிபிம்பங்கள், எங்குஉம்-எல்லாவிடங்களிலும் [பல இடங்களிலும்], வீசு திரை வெண்புனல்-(சமுத்திரத்தினது) வீசப்படுகின்ற அலைகளின வெண்ணிறமுள்ள நீர், விழுங்கியது-தம்முட் கொண்டிருப்பதை, போலும்- ஒத்திருக்கும்; (எ-று.)

வெண்ணிறக்கூடாரங்களினுள்ளே மகளிர் முகங்கள் தோன்றுவது-கடலின் வெண்புனலில் ஒளிவீசுந்தன்மை யமைந்த சந்திரபிம்பங்கள் அமைந்திருப்பதுபோலு மென்றவாறு;தற்குறிப்பேற்றவணி. "கொடியும்...யானைமுகபடாமும் படமே" என்றதனால், படம் என்ற சொல்-துவசமென்னும் பொருளுமுள்ள தென்க. இனி, தூசினொடு என்பதற்கு - தூசிபடிந்த எனறேனும் (இடையிடையே) கயிறு கொண்டு கட்டிய என்றேனும் உரைத்து, படமுடைக்குடில்-துகிலினாலியன்ற கூடாரமெனினுமாம். பி-ம்:—[1] தூசினெடு, தூசிநெடு. [2] முகம்பொலிவ, முகங்கண்முகில். [3] காசின். [4] வயங்கு. [5] உந்திமன. [6] விளங்கியன, விழுங்கியன, விளங்கியது. (914)

19.—ஒருபுறம் புழுதியுடனே வரும் யானையின் வருணனை.

மண்ணுற [1]விழுந்துநெடு வானுற [2]வெழுந்து
கண்ணுதல் பொருந்தவரு கண்ணனின் வருங்கார்
உண்ணிற நறும் [3]பொடியை வீசியொரு பாகம்
வெண்ணிற நறும்பொடி புனைந்தமத வேழம்.

(இ - ள்.) மண் உற விழுந்து - புழுதி (தன்மீது) படியும்படி (பூமியில்) விழுந்து, நெடு வான் உற எழுந்து - நீண்டஆகாயத்திற் பொருந்தும்படி மேலெழுந்து, கார் நிறம் உண் நறு பொடியை - (தனது) கருநிறத்தை மறைக்கின்ற நறுமணமுள்ள புழுதியை, ஒரு பாகம் வீசி - ஒருபகுதியில்மாத்திரம் தள்ளிவிட்டு, (ஒருபாகம்) வெள் நிறம் நறு பொடி புனைந்த - ஒருபகுதியில்மாத்திரம வெண்ணிறமுள்ள நறியபொடியை யணிந்த, மதம வேழம - மதயானை யானது.—கண் நுதல் பொருந்த வரு-சிவபெருமான் தன்னுடைய வலப்பாகத்திலே, பொருந்திநிற்க வருகின்ற, கண்ணனின் - திருமால்போல, வரும்—; (எ - று.)

ஒருபாகத்திற்படிந்த வெண்புழுதி படிந்தபடியே யிருக்க, மற்றொருபகுதியிற் படிந்த வெண்புழுதியைத் தன் துதிக்கையால் துடைத்துவிட்டுக் கருநிறந்தோன்ற வருகின்ற யானைக்கு, வெண்ணிற விபூதியை யுடலெங்கும் பூசிய சிவபெருமானைத் தனதுவலப் பக்கத்திலே கொண்டு கார்நிறமேனியுடன் விளங்கும் திருமாலை யுவமை கூறினர்; தற்குறிப்பேற்றவணி. திருமால் தனவலப்பக்கத் திற் சிவபெருமானைக் கொண்டிருக்கின்றானென்பதை "வலத்தனன் றிரிபுரமெரித்தவன்" என்ற பெரியார்பாசுரத்தாலும் அறிக. இனி, அவ்யானை சங்கரநாராயணமூர்த்தியைப் போலு மென உரைப்பாருமுளர். வேழத்தினுயர்ச்சியை விளக்க, 'நெடுவானுற வெழுந்து' என்றார். பி-ம்:—[1]எழுந்து. [2]இழிந்து, இயங்கும், வழங்கும். [3]பொடியும். *(915)*

20.—குதிரைகள் படிந்த புழுதியை யுதறிவிட்டு நிற்றல்.

தீயவரொ டொன்றிய [1]திறத்தரு [2]நலத்தோர்
ஆயவரை [3]யந்நிலை யறிந்தனர் [4]துறந்தாங்கு
ஏயவரு நுண்பொடி படிந்துட [5]னெழுந்தொண்
பாய்பரி [6]விரைந்துதறி நின்றன [7]பரந்தே.

(இ - ள்.) தீயவரொடு ஒன்றிய - தீக்குணமுடையவரோடு (ஆராய்ச்சியில்லாமல்) நட்புக்கொண்ட, அருதிறத்து நலத்தோர் - அருமையான சாமர்த்தியத்துடன் கூடிய நல்லவர்கள், ஆயவரை- அந்தத் தீயவரை, அ நிலை - அந்த அளவிலே, அறிந்தனர் - (பழக்கத்தால் அவர் தீயகுணத்தை) அறிந்தவர்களாய், துறந்த ஆங்கு- கைவிட்டாற்போல, ஒள்பாய் பரி-ஒள்ளிய பாய்கின்ற குதிரைகள்,— ஏய அரு நுண் பொடி படிந்து-(தம்மீது) பொருந்த மிகவும் நுண்ணிய புழுதிமண்ணிலேபடிந்து, உடன் எழுந்து - உடனே எழுந்து, விரைந்து உதறி-விரைவாக உதறி விட்டு, பரந்து நின்றன - பரவியிருந்தன; (எ - று.)

அங்குவந்த குதிரைகள்புழுதியிலேபடிந்து பிறகு அந்தப் புழுதிகளையெல்லாம் உதறிவிட்டு நின்றமைக்கு, நற்குணமுடையோர் முதலிலே தீயவரோடு தாம் உணராமையால் நட்புச்செய்துவிட்டுப் பிறகு அவருடைய தீக்குணத்தைத் தாம் உணர்ந்தமையால் அவருடையநட்பை அறத்துறத்தலை யுவமை கூறினர்; உவமையணி. வழிவந்த இளைப்பைப் போக்குமாறு குதிரைகளைப் புழுதியிற் புரளவிடுதலும், புழுதியிற் புரண்ட குதிரைகள் அப்புழுதி உதிர்ந்துவிடுமாறு உடம்பை யுதறுதலும், இயல்பு. துறந்து = துறந்தால்: எச்சத்திரிபு. ஆங்கு - உவமவுருபு. பரி—பால்பகாவஃறிணைப்பெயர். பி - ம்:—[1] திறத்தொரு. [2] வலத்தோர். [3] உண்ணிலே. [4] துறந்தார். [5] எழுந்தே, எழுந்தோர். [6] எழுந்து. [7] பரிந்தே. (916)

21.—கட்டையறுத்துக்கொண்ட சில குதிரைகள் அடங்கிவருதல்.

மும்மை[1] புரி வன்கயிறு கொய்துசெயன் மொய்ம்பால்
தம்மையு முணர்ந்துதரை கண்டுவிரை கின்ற
அம்மையினொ [2] டிம்மையை யறிந்துநெறி [3] செல்லுஞ்
செம்மையவ ரென்ன [4] நனி சென்றன துரங்கம்.

(இ - ள்.) மும்மை புரி வல் கயிறு - (மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்று) மூவகையாகச் செய்யப்படுகின்ற வலிய பாசத்தை, கொய்து - அறுத்து [போக்கி], செயல் மொய்ம்பால் - (தாம்) செய்கின்ற யோகத்தின் வலிமையால், தம்மை உணர்ந்து - தமது [ஆத்மாவினது] சொரூபத்தை [ஆன்மா மலமற்றதென்றும் ஞானாநந்தமயமானதென்றும் கடவுளுக்கு அடிமை யென்றும்] தெரிந்து, (அதனோடு நில்லாமல்), தரைஉம் கண்டு - (தாம் செல்லவேண்டிய) நிலமாகிய மோட்சத்தின் தன்மையையும் உணர்ந்து, (அதனை யடையுமாறு) விரைகின்ற—, அம்மையினொடு இம்மையை அறிந்து நெறி செல்லும் - மறுமைப்பயனையும் இவ்வுலகப்பயனையுமுணர்ந்து நன்னெறிககட் செல்லுகின்ற, செம்மையவர் என்ன - நற்குணமுடைய யோகியரைப்போல,—துரங்கம் - குதிரைகள், மும்மை புரி வன் கயிறு கொய்து - (தம்மைக்கட்டிய) முபபுரியாக அமைந்த வலிய கயிற்றை யறுத்துக்கொண்டு, செயல்மொய்ம்பால்-(பாகனது) செயலின் வல்லமையால், தம்மைஉம் உணர்ந்து-தாம் செய்யவேண்டியவை இன்னவை யென்று அறிந்தனவாய், தரை கண்டு - (தாம் இருக்கவேண்டிய) இடத்தை யறிந்து, விரைகின்ற - விரைவைக் கொண்டனவாகி, நனி சென்றன-மிகவும் அடங்கித் திரும்பிவந்தன;

குதிரைகள் தாம் முதலிற் கயிற்றையறுத்துக்கொண்டு ஓடத் தொடங்கிப் பின்பு தம்மைச்செலுத்துகின்ற சாரதிகளின் வல்லமையால் தாம் செய்யவேண்டியன இன்னவென்பதையும் தாம் இருக்கவேண்டிய இடம் இன்னதென்பதையும் உணர்ந்து விரைந்துமீண்டுவந்தன; அவ்வாறு மீண்டுவந்த குதிரைகட்கு யோகியரை உவமைகூறினர்; சிலேடை மூலமாகவந்த உவமையணி. யோகியரைப்பற்றிக்கூறுகையில் மும்மைபுரி வன்கயிறு கொய்து

என்பதற்கு-ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்றுமலங்களை யும் அறுத்து என்றும், தரைகண்டு என்பதற்கு - இம்மண்ணுலக வாழ்வு நிலையற்ற தென்பதை யுணர்ந்துஎன்றும் உரைத்தலு மொன்று. பி - ம்:—[1]நெறிவன்கயிறுபற்றிநெறிமுன்னத், புரி வன்னமத மொய்களிறு மொய்ம்பாற், புரி...கொய்தநெறிமுன்னித், புரிவன்புரியமொய்களிறுகொய்யத். [2]இம்மையும். [3]முன்னிச். [4]நெறிசென்றனசெறிந்தே. (917)

22.—திரைச்சீலையினுள் மகளிர்கண்கள் பிறழ்ந்து விளங்குதல்.

விழுந்தபனி யன்னதிரை வீசுபுரை தோறும்
கழங்குபயின் மங்கையர் கருங்கண்மிளிர் கின்ற
தழங்கு[1]கழி [2]சிந்திய [3]தரம்பயி றரங்கத்து
எழுந்திடை பிறழ்ந்தொளிர் கொழுங்கயல்க ளென்ன.

(இ - ள்) கழி சிந்திய - கழியிலே போய்விழுமாறு, தரம் பயில் - மேன்மைபொருந்திய [உயர்ந்தெழுகின்ற], தழங்கு - ஒலிக் கின்ற, தரங்கத்து - அலைகளினின்று, எழுந்து - மேலெழுந்து, இடை - அவ்விடத்திலே, பிறழ்ந்து ஒளிர்-(தமதுஉடல்) பிறழ்ந்து விளங்குகின்ற, கொழு கயல்கள் என்ன - கொழுத்த கயல் மீன்களென்று சொல்லும்படி,—விழுந்த பனி அன்ன திரை வீசு புரைதோறும் - (ஆகாயத்தினின்று) விழுந்த பனியையொத்துத் தோன்றுகின்ற திரைச்சீலைகள் (காற்றினால்) மோதப்படுகின்ற இடங்களிலெல்லாம், கழங்கு பயில் மங்கையர் கருங் கண் - கழற் காயாடுகின்ற மடந்தையரின் கரிய கண்கள், மிளிர்கின்ற - பிறழ்ந்து விளங்குவனவாயின; (எ - று.)

காற்றினால் திரைச்சீலைகள் வீசியெறியப்படும்போது அங் குள்ள மடந்தைமாரின் கண்கள், அலைவீசும்போது ஆங்குஎழுந்து தோன்றுகின்ற கயல்மீன்கள்போலப் பிறழ்ந்துவிளங்கினவென்ப தாம்; தற்குறிப்பேற்றவுவமையணி. இந்தவருணனையில், அலைகின்ற திரைச்சீலைக்கும் அலைக்கும் உவமையென்க. வெண்ணிறத் திரைக்குப் பனி உவமையாதற்கு ஏற்கும். பி·ம்:—[1]துளி, தளி. [2]சிந்தைய. [3]சலம், கனம், தளம், கணம். (918)

23.—சிறிதுதோண்ட ஆற்றில் ஊற்றுநீர் தோன்றுதல்.

வெள்ளநெடு வாரி[1]யுற வீசி[2]யில வேனும்
கிள்ளவெழு கின்றபுனல் கேளிரின் விரும்பித்
தெள்ளுபுன லாறுசிறி தே[3]யுதவு கின்ற
உள்ளது மருதுதவு [4]வள்ளலையு மொத்த.

(இ - ள்.) தெள்ளு புனல் ஆறு - தெளிந்த நீரையுடைய நதி கள், வெள்ளம் நெடு வாரி உற வீசி இல ஏன்உம் - (தம்மிடத்து) வெள்ளமாகிய மிக்க நீர் பொருந்த (அவ்வெள்ளநீர்களை) வீசிக் கொண்டிராமற்போயினவாயினும், கிள்ள எழுகின்ற புனல்-தோண் டத்தோண்ட (ஊற்றாக)த் தோன்றுகின்ற நீரை, சிறிதுஏ உதவு

இன்ற-சிறிதுசிறிதாகவே உதவுவனவாயின;(அதனால், அவைகள்), (தான் மிக்க செல்வத்தோடு இருந்தகாலத்தில் வேண்டியவாறெல்லாம் கொடுத்துத் தன்செல்வம் வரண்டகாலத்திலும்), உள்ளது - (தன்னிடத்து) உள்ள பொருளை, மருது - (கொடுக்கமாட்டேன் என்று) மறுத்துச்சொல்லாமல், கேளிரின் விரும்பி - உறவினரை விரும்புவதுபோல (இரப்போரைக் கண்டால் அவரிடத்து) விருப்பங்கொண்டு, உதவும் - கொடுக்குந்தன்மையுள்ள, வள்ளலேஉம் - உதாரகுணமுள்ள கொடையாளியையும், ஒத்த—; (எ-று.)

வெள்ளநீர் இருந்த காலத்துப் பலர்க்கும் வேண்டியபடியெல்லாம் உதவி நீர்வற்றிய காலத்தும் தோண்டத்தோண்ட மெல்ல மெல்ல ஊற்றுநீரை உதவுகின்ற ஆறுகட்கு வள்ளலே உவமை கூறினர். உம்மை - இசைநிறை. வெள்ளமாகிய நெடுவாரியை, உறவீசி-(நீர்ப்பெருக்கு இருந்தகாலத்து) மிகுதியாக (உலகத்தார்க்கெல்லாம்) அளித்து என்றுமாம். இனி, புனல் ஆறுகள், நெடுவாரி வெள்ளம் உற-மிக்க நீர்வெள்ளம்பொருந்த, வீசி இலஏன்உம்- அலைகளையுடையனவாக இரர்விட்டாலும் எனினுமாம். "ஆற்றுப் பெருக்கற்று" என்ற செய்யுளில் இச்செய்யுட்கருத்து உள்ளது. பி-ம்:—[1] அற. [2] உள. [3] உதவுகின்றது. [4] வள்ளல்களை. (919)

24.—ஆடவர் படமாடங்களிற் புகுதல்.

துன்றிநெறி பங்கிக [1] டுளக்கி [2] யழ லோடும்
மின்றிரிவ வென்னமணி யாரமிளிர் மார்பர்
மன்றன்மண நாறுபட மாடநுழை கின்றூர்
குன்றின்முழை தோறுநுழை [3] கோளரிக ளொத்தார்.

(இ - ள்.) துன்றி - நெருங்கி, நெறி-நெறித்த, பங்கிகள் - தலைமயிர்களை, துளக்கி - அசைந்துவிளங்கச்செய்துகொண்டு,—அழலோடுஉம் மின் திரிவ என்ன - அக்கினியுடனே மின்னல்கள் திரிவன என்று சொல்லுமாறு, மணி ஆரம் மிளிர் - இரத்தினங்கள் பதித்த ஹாரங்கள் விளங்குகின்ற, மார்பர் - மார்பையுடைய வீரர்கள்,—மன்றல் மணம் நாறும் - புதுமணம் வீசுகின்ற, படம் மாடம் - (தம் தமக்கு உரிய) கூடாரங்களில், நுழைகின்றூர் - புகுகின்றவராய்,—குன்றில்-மலையிலே, முழை தோறும் நுழை - குகைகளிலே புகுகின்ற, கோள் அரிகள் - கொல்லுந் தன்மையுள்ள சிங்கங்களை, ஒத்தார்—; (எ-று.)

பங்கிகள் துளக்கி நுழைகின்று ரென்க. கூடாரங்களிற் புகுகின்ற வீரர்கட்கு, குகைகளிற் புகுகின்ற சிங்கம் உவமை. வீரர் நடந்து செல்லும்போது, அவர்கள் மார்புகளில் இரத்தினவாரங்கள் விளங்குவதை அங்கியும் மின்னலும் ஆங்குத்திரிவதுபோலுமென்றூர். மன்றன்மணம்-மீமிசைச்சொல்லுமாம். பி-ம்:—[1] துளங்க. [2] எழிலோடு. [3] கோளரியை. (920)

25.—யானைகள் நீரைக் கலக்குதல்.

நெருங்கயி [1] லெயிற்றணைய செம்மயிரி னெற்றிப்
பொருங்குலிக மப்பியன போர்மணி [2] க ளார்ப்பப்

பெருங்களி றலைப்புனல் கலக்குவன [3]பெட்குங்
கருங்கடல் கலக்குமது கைடவரை யொத்த.

(இ - ள்.) நெருங்கு அயில் எயிறு அனைய - நெருங்கியுள்ள வேலாயுதத்தையும் பற்களையும் ஒத்த [கூர்மையான], செம் மயிரின் - செந்நிறமுள்ள மயிரைக்கொண்ட, நெற்றி - நெற்றியிலே, பொரும்-(தமக்குத் தாமே) நிகரான [மிகச்சிவந்த], குலிகம் அப்பியன-இங்குலிகம் அப்பியுள்ளனவான, பெரு களிறு - பெரியயானைகள், போர் மணிகள் ஆர்ப்ப-(ஒன்றோடொன்று) மாறுபட்டனவாய் மணிகள் ஒலிக்க, அலை புனல் கலக்குவன - அலைகளையுடைய வெள்ளநீரைக் கலக்குபவை,—பெட்கும்-(யாவரும்) விரும்பிக்காண்கின்ற, கரு கடல் - கருநிறமுள்ள கடலை, கலக்கும்—, மது கைடவரை-மது கயிடபரென்கிற அசுரர்களை, ஒத்த - ஒத்தன; (எ - று.)

மணிகள் ஒலிக்குமாறுசென்று யானைகள் அலைபுனலைக் கலக்கின; அவ்வாறு கலக்கின யானைகட்குக் கடலைக்கலக்கிய மதுகயிடவரை உவமை கூறினர். ஒன்றோடொன்றுமாறுபட்டு ஒலிப்பதனால், 'போர்மணிகள்' என்றார். அயிலும் எயிறும் கூர்மையால், மயிர்க்கு உவமை. யானைநெற்றியில் அலங்காரமாக இங்குலிகத்தை அப்பியுள்ளா ரென்க. பி-ம்:-[1]எயிற்றநெறி, எயிற்றிணைய. [2]யதார்ப்பப், யதாரப், யதாரார். [3]பெட்டுப்.

மதுகைடவர் கடலைக் கலக்கிய வரலாறு:-முன்னர் மகாப்பிரளயம் நேர்ந்ததாகப் பின்பு திருமால் உலகங்களை முன்போலப் படைக்க விரும்பி நான்முகக்கடவுளைத் தனது நாபீகமலத்திற்படைத்து வேதங்களையும் அவனிடத்துக் கொடுக்க, அக்கடவுள் படைத்தல் தொழிலை நடத்த முயன்றுகொண்டிருக்கையில் முன்னமே திருமாலினிடத்தினின்று ரஜோகுணதமோகுணங்களை யுடையராய்த் தோன்றியிருந்த மது கைடபன் என்னும் அசுரரிருவரும் அங்குவந்து பிரமனைக்கண்டு அவனிடத்திருந்த வேதங்களையெல்லாம் பறித்துக்கொண்டு அந்தப்பிரளயக்கடலின் வடகிழக்குத்திசையாகப் பாதலத்தையடைந்தனராக, பிரமன் 'கண்ணிழந்தேன், பொருளிழந்தேன்' என்று மிகவும் துயருற்றுத் திருமாலைக் கிட்டித் துதித்துத் தனக்கு நேர்ந்த குறையைத் தீர்க்குமாறு வேண்ட, அத்திருமால் குதிரைமுகமுள்ள உருவத்தைக்கொண்டு உத்கீதமென்ற பண்ணை அந்தப்பிரளயப் பெருங்கடலெங்கும் முழங்கும்படி பாட, இனிய அவ்வோசை காதில்விழப்பெற்ற மது கைடபர்கள் வேதத்தை ஓர்புறத்தில் வைத்திட்டு அந்தக்கீதம் வந்தவழியே வர, அப்போது திருமால், அந்தவேதங்களையெல்லாம் மீட்டுப் பிரமனுக்கு ஹம்ஸரூபியாயிருந்து உபதேசித்தான்: கீதம் வந்தவழியைப் பற்றிக்கொண்டுவந்த அவ்வசுரர்கள் ஒருவரையும் அங்குக்காணாமையால் மீண்டும் தாம் வேதங்களை வைத்தவிடத்திற் போய்ப் பார்க்க, அங்கு அவ்வேதங்களைக் காணாமையால் அதனைக் கவர்ந்துபோனவர் யாரென்று அந்தப்பிரளயக்கடலில் தேடி, அங்கே திருமால் பள்ளிகொண்டு யோகநித்திரை செய்திருத்தலைக்கண்டு 'இவனே வேதங்களைக் கவர்ந்துகொண்டு சென்ற

வன்' என்று அறுதியிட்டு அப்பிரானோடு போர்புரியுமாறு துயி லெழுப்ப, அப்பிரான் அவர்களைச் சேமம்விசாரித்து 'உமக்கு வேண்டும் வரங்களைக் கேண்மின்' என்ன, அவர்கள், செருக்கின் மிகுதியால் 'உனக்கு வேண்டும் வரம் கேள்: தவறுமற் கொடுப் போம்' என்ன, திருமால் 'நீவிர் என்னாற் கொல்லப்படவேண்டும்' என்ன, அவர்கள் 'நாங்கள் பொய் சொல்லாதவர்களாதலால் அங்ஙனமே வரமளித்தோம்; எங்களாலேயே எங்கட்கு நாசம் விளைந்தது; பிரபுவே! வேறொன்றினாலும் மூடப்படாத இடத்தில் எங்கட்கு மரணம் உண்டாகுமாறு ஒருவரம் அளிக்க' என்ன, திருமால் அங்ஙனமே வரமளித்துத் தனதுதொடையே வேறொன் றினாலும் மூடப்படாத இடமென்று பார்த்து அங்கே அந்த மது கைடபர்களின் சிரசைவைத்துச் சக்கராயுதத்தாலறுத்தொழித் தன னென்பதாம். (921)

26.—மதயானைகள் நீர்நிலையைவிட்டு ஏறுமை.

[1]ஒக்கநெறி யுய்ப்பவ ருரைத்த [2]குறி கொள்ளா
[3]பக்கமின மொய்க்கய லலைக்கநனி பாரா
[4]மைக்கரி மதத்த [5]விலைமாதர் கலையல்குற்
புக்கவரை யொத்தன புனற்சிறைக ளேறு.

(இ - ள்.) ஒக்க-தகுதியாக, நெறி உய்ப்பவர் - நல்வழியிலே செலுத்தும் பாகர்கள், உரைத்த-தெரிவித்த, குறி-குறிப்புரைகளை, கொள்ளா-ஏற்றுக்கொள்ளாதனவும், பக்கம் - இருபக்கங்களிலும், இனம்-கூட்டமாக, மொய்-மொய்த்தலையுடைய, கயல்-கயல்மீன்கள், அலைக்க-வருத்தவும், நனி பாரா-சிறிதும் இலட்சியஞ்செய்யாதனவு மாய், புனல் சிறைகள் ஏறு - நீர்நிலைகளினின்று கரையேறுதன வான,—மதத்த - மதத்தையுடைய, மை கரி-கருநிறமுள்ள யானை கள்,—ஒக்க நெறி உய்ப்பவர் உரைத்த குறிகொள்ளா - தகுதியாக நல்வழியிலே செலுத்துகின்ற பெரியோர்கூறுங் கட்டுரைகளைக் கேளாமலும், பக்கம் - சுற்றத்தாரும், இனம் - நண்பரும், மொய்க் கு(ம்) அயல்-கூட்டமாகத்திரள்கின்ற அயலவரும், அலைக்க-இடித் துக்கூறவும், (அவற்றை), நனி பாரா - இலட்சியஞ்செய்யாமலும், விலைமாதர் கலை அல்குல் புக்கவரை-வேசியருடைய மேகலையணிந்த அல்குலிலே ஈடுபட்டு அழுந்தின காமுகரை, ஒத்தன—; (எ-று.)

நெறியுய்ப்பவரின்குறியைக் கொள்ளாமலும், பக்கம் இனம் மொய்க்கயல் அலைக்கவும் பாராமலும் சிறையில் அழுந்துவதனால், மதயானைக்குக் காமுகரை உவமை கூறினர். உபமானத்தோடு சேரும்போது மொய்க்கும் அயல் என்பது மொய்க்கயல் எனத் திரிந்ததாம். கலை = மேகலையென்பதன் திரிபு: இனி, கலை யல்குல்- சிறந்த ஆடையையணிந்த இடையையுடைய எனினுமாம். கொள்ளா, பாரா, ஏறு - பெயர். பி-ம்:—[1]ஒக்கமிசையுற்றவர். [2]குறி கொள்ளாப். [3]பக்கவினமொத்தயல். [4]கைக்கரி. [5]வரைமாதர், (922)

27.—சேனையோடு தசரதன் தங்கின இடத்தின் வருணனை.

துகிலிடை மடந்தையரொ டாடவர் துவன்றிப்
பகலிடைய வட்டிலின் மடுத்தெரி [1]பரப்பும்

அகலிடுகொ ழும்புகை [2]யழுங்கலின் முழங்கா
முகில்[3] படு நெடுங்கடலை யொத்துளதம் [4]மூதூர்.

(இ - ள்.) துகில் இடை மடந்தையரொடு - சிறந்த ஆடைகளை யணிந்த இடையையுடைய மகளிரோடு, ஆடவர்-புருஷர், துவன்றி-நெருங்கி, பகல் இடைய - சூரியனொளியும் மழுங்கும்படி, அட்டிலின் மடுத்த-மடைப்பள்ளியினின்று கொணர்ந்த, எரி-நெருப்பிலே, பரப்பும்-பரப்பிய, அகில்-அகில்கட்டைகளினின்று, இடு - உண்டாகிய, கொழு புகை-மிக்கபுகை, அழுங்கலின்-நெருங்குவதனால், முழங்கா-இடியிடித்தலில்லாத, முகில்-மேகங்கள், படு - தங்கப்பெற்ற, நெடு கடலை-நீண்ட சமுத்திரத்தை, அ முது ஊர்-(அவர்கள் தங்கிய) அந்தப்பழைய இடமானது, ஒத்துளது—; (எ - று.)

அகிற்புகை மிகுதியாகத் தங்கிய அவ்விடத்திற்கு, முழங்கா முகில்படுகடலை யுவமை கூறினர். இவ்வருணனையால், அவ்விடத்தின் பரப்பும், அவ்விடத்திலுள்ளார் எழுப்பிய அகிற்புகையின் மிகுதியும் விளங்கும். இனி, அட்டிலின் ...புகை என்பதற்கு—(சமைப்பதற்காக), அட்டிலில்-மடைப்பள்ளியிலே, மடுத்து - நெருப்பு மூட்டுதலால், எரிபரபபுகின்ற அகில்கட்டைகள் தருகின்ற கொழும்புகை என்றலும் ஒன்று. வட்டில்என்று பிரித்து-புகையிடுகின்ற வட்டில் போல்வடிவமுள்ள தூபமூட்டி யென்பாரு முளர். அந்தச் சேனையிலுள்ளார் தாம் தங்குவதற்காக அப்பொழுதுதான் ஏற்படுத்திய அந்த இடத்தை 'மூதூர்' என்றது - பழமையாய்த் தாம் வாழும் ஊரில் எவ்வகைச் சௌகரியங்கள கிடைக்குமோ அவ்வளவு சௌகரியமும் அங்கு அவர்கட்குக் கிடைத்துள்ளன வென்பதை விளக்க.
பி - ம்:—[1]பரக்க. [2]வழுங்கலின். [3]படி, சுடு. [4]முன்னீர். *(923)*

வேறு.

28.—சேனையிலுள்ள ஆடவர் மகளிரின் பேரழகு.

கமருறு பொருப்பின் [1]வாழும் விஞ்சையர் காண வந்தார்
தமரையு மறியார் நின்று திகைப்புறுந் தகைமை சான்ற
குமரரு மங்கை மாருங் குழுமலால் வழுவி விண்ணின்று
அமரர்நா டிழிந்த தென்னப் பொலிந்ததவ் வனீக வெள்ளம்.

(இ - ள்.) காண வந்தார்-(அவ்வனீக வெள்ளத்தைக்) காணவந்தவர்களான, கமர் உறு பொருப்பின் வாழும் - பிளப்புப் பொருந்திய மலையிலே வாழ்கின்ற, விஞ்சையர்-வித்தியாதரர்களும், தமரைஉம் அறியார் நின்று திகைப்பு உறும் - தம்மைச் சேர்ந்தவர்களையும் மறந்துநின்று திகைப்புறுதற்குக் காரணமான, தகைமை - அழகு, சான்ற-மிக்குள்ள, குமரர்உம்-குமாரர்களும், மங்கைமார்உம் - மகளிரும், குழுமலால்-கூடியிருத்தலால்,- அ அனீகம்வெள்ளம் - அந்தச் சேனையின் பெருக்கு, - அமரர் நாடு விண்நின்று வழுவி இழிந்தது என்ன-தேவலோகமே ஆகாயத்தினின்று தவறிக்கீழேயிறங்கினது போல, பொலிந்தது—; (எ - று.)

பேரழகுள்ளவ ரென்று பெயர் படைத்த வித்தியாதரரும் திகைத்துப் பார்க்கும்படி கட்டழகு வாய்ந்த மைந்தரும் மகளிரும்

குழுமிய அவ்வனீகவெள்ளம் திரண்டு தங்கிய அவ்விடம், தேவலோகமே இங்கேவந்து தங்கிற்றோ என்று கண்டவர் சங்கைகொள்ளும்படி யிருந்த தென்பதாம்: அந்தச் சேனையிலிருந்த ஆடவரும் மகளிரும் தெய்வலோகத்து ஆண் பெண்கள் போலப் பேரழகு வாய்ந்திருந்தனரே யன்றிச் சாதாரணமானுடர்போல இல்லை யென்றவாறு. மானுடசஞ்சார மில்லாத இடத்து இயங்குந் தன்மையுடையர் விஞ்சையரென்பார் 'கமருறு பொருப்பின் வாழும் விஞ்சையர்' என்றார். தமரையும் அறியார் என்பதற்கு-தம்மவரோடு அந்தச் சேனையிலுள்ளாரோடு வேற்றுமையை யுணரமாட்டாதவரா யென்றுமாம். பி - ம்:—[1] வந்த. (924)

29.—மகளிர் சஞ்சரித்தல்.

[1] வெயினிறங் குறையச் சோதி மின்னிழல் பரப்ப [2] முன்னம்
[3] துயிலுணர் [4] செவ்வி யாருந் துனியுறு முனிவி னுரும்
குயிலொடு [5] மினிது பேசிச் சிலம்பொடு மினிது கூவி
மயிலினந் [6] திரிவ வென்னத் திரிந்தனர் மகளி ரெல்லாம்.

(இ - ள்.) முன்னம் துயில் உணர் - (விழித்தெழுங்காலத்துக்குச் சற்று) முன்னமே உறக்கம்நீங்கிய, செவ்வியார்உம் - அழகு பொருந்தியவரும், துனி உறு முனிவினார்உம் - ஊடலாக அமைந்த கோபத்தையுடையவருமான, மகளிர் எல்லாம் - மகளிர்யாவரும்,—குயிலொடுஉம் இனிது பேசி - குயிலென்னும் பறவையுடனே இனிதாக உரையாடி, சிலம்பொடுஉம் இனிது கூவி - (தாம் நடக்கும்போது ஒலிக்கின்ற) சிலம்பென்னும் அணியுடனே இனிமையுண்டாக ஒலிசெய்து, வெயில் நிறம் குறைய-வெயிலின் நிறமும்(தமக்கு முன்னே) மழுங்கும்படி, சோதி - (அணிந்துள்ள ஆபரணங்களின்) ஒளி, மின் நிழல் பரப்ப - மின்னலையொத்த ஒளியைப் பரப்ப, மயில் இனம் திரிவ என்ன - (கண்டவர்) மயிற்பறவைகளின் கூட்டம் திரிகின்றனவென்று கருதுமாறு, திரிந்தனர்—; (எ - று.)

அம்மலையைச்சார்ந்த சோலைமுதலியவற்றின் வளங்கள் தம்மைக் கண்டோர்க்கு மனவெறுப்பையும் நீக்கிப் பெருங்களிப்பைத் தருமென்பார், கணவரோடுகலத்தலால் மனமகிழ்ச்சியுடனிருக்கும் மகளிருடனே கணவரோடு ஊடல்கொண்ட மகளிரையும் ஒருங்கு சேர்த்து 'மகளிரெல்லாம் பேசிக் கூவித் திரிந்தனர்' என்றார். அம்மகளிர் இனிதுகூவுகின்ற குயிலொடும் பேசி, தாம் நடக்கும்போது சிலம்புகள் ஒலிக்கவும் தாம்பூண்டஅணிகள் பேரொளிசெய்யவும் மயில்கள் உலாவுவதுபோல அங்கே உலாவலாயினரென்க. 'வெயினிறங் குறையச் சோதி மின்னிழல்பரப்ப முன்னாள், துயிலுணர் செவ்வியோரும்' என்று பாடமோதி, 'முன் நாள்-முன்நாளில், (கணவரோடு ஊடல்கொள்ளாது கலவியைச்செய்ததனால்), துயில்உணர்-(நித்திரைவரப்பெற்றுத் துயின்று பிறகு) கண்விழித்தெழுந்த, செவ்வியோர்உம்-அழகையுடையவரும், துனி உறு முனிவினோரும்-ஊடல்புரிந்து (கண்துயிலாத) மனவெறுப்பையடைந்தவருமாகிய, மகளிர் எல்லாம் - எல்லாமகளிரும் என்று உரைக்க, இனி, [2] முன்னுந்துயிலினர் செவ்வியாரும் துனியுறுமுனிவினோடும் என்ற

பாடத்துக்கு - மகளிர்கள் தாம் பள்ளியறையைச் சார்தற்கு முன்னமே தமது கணவர் வழிவந்த களைப்பால் உறங்கினராக, அவர்கள்மீது ஊடல்கொண்டவராய் அவர்கள் துயிலுணர்ந்த பிறகு தமதுஊடல் அவர்கட்குப் புலப்படுமாறு அவர்களோடுபேசாமல் அருகேயிருந்து என்க:சோதி-(மகளிரின் உடம்பின்) ஒளி எனலுமாம். சிலம்பொடும் கூவி என்பதற்கு - மலையோடும் இனிமையாகக்கூவி என்றுஉரைப்பாருமுளர். பி-ம்:—[1]வெயிலிறை. [3]துயிலறு. [4]செவ்வியோரும்...முனிவிஞேரும்.[5]இருந்து.[6]வருவது.

30.—ஆடவர் சஞ்சரித்தல்.

[1]தாளிணை கழல்க ளார்ப்பத் தாரிடை யளிக ளார்ப்ப
வாள்புடை யிலங்கச் செங்கேழ் மணியணி வலய[2]மின்னத்
தோளென வுயர்ந்த குன்றின் சூழல்க ளினிது நோக்கி
வாளரி [3]திரிவ வென்னத் திரிந்தனர் மைந்த ரெல்லாம்.

(இ-ள்.) மைந்தர் எல்லாம் - வீரகுணமுள்ளவரான ஆடவர் யாவரும்,—தாள் இணை கழல்கள் ஆர்ப்ப - (தமது) உபயபாதங்களில் வீரக்கழல்கள் ஆரவாரிக்கவும், தார் இடை அளிகள் ஆர்ப்ப - (தாம் அணிந்த) மலர்மாலைகளில் (அங்குள்ளதேனைப் பருகும்படி) வண்டுகள் ஆரவாரஞ்செய்து மொய்க்கவும், வாள்புடை இலங்க-வாளாயுதங்கள் (இடையின்) பக்கத்திற் பிரகாசிக்கவும், செங் கேழ் மணி அணி வலயம் மின்ன-செந்நிறமுள்ள அரதனங்கள் பதித்துச் செய்யப்பட்ட அழகிய தோள்வலயங்கள் விட்டுவிட்டுப் பிரகாசிக்கவும், தோள் என உயர்ந்த குன்றின் சூழல்கள் இனிது நோக்கி-(தமது) தோள்களைப்போல வுயர்ந்த அம்மலையின் சுற்றுப்பக்கங்களை நன்ருகப்பார்த்தவண்ணம், வாள் அரி திரிவ என்ன - கொடிய சிங்கங்கள் திரிவனபோல, திரிந்தனர்-உலாவலானார்கள்; (எ - று.)

ஆடவர் மலையின்சுற்றுப்பக்கங்களைக் காணுமாறு சஞ்சரிக்கலாயினரென்பதாம். மைந்தர்,ஆர்ப்ப,இலங்க,மின்ன, அரியென்னத் திரிந்தனரென்க:தோளெனவுயர்ந்தகுன்று-எதிர்நிலையணி. சிலபிரதிகளில் இந்தச்செய்யுளோடு சந்திரசயிலப்படலம் முற்றுப்பெறும். பி-ம்:—[1]தாளிடை. [2]மின்னும். [3]திரிவது, திரிந்தது. (926)

31.—கவிக்கூற்று.

சுற்றிய கடல்க ளெல்லாஞ் சுடர்மணிக் கனகக் குன்றைப்
பற்றிய [1]வளைந்த வென்னப் பரந்துவந் திறுத்த சேனை
கொற்றவர் தேவி மார்கண் மைந்தர்கள் கொம்ப ரனார்வந்து
[2]உற்றவர் காண லுற்ற [3]மலைநிலை யுரைத்து மன்றே.

(இ-ள்.) சுற்றிய கடல்கள் எல்லாம்-(பூமியை நாற்புறத்திலுஞ்) சூழ்ந்துகொண்டுள்ள கடல்கள்யாவும், சுடர் மணி கனகம் குன்றை-ஒளிவிடுகின்ற இரத்தினங்களையுடைய மேருபருவதத்தை, பற்றிய-கவர்ந்துகொள்ளும்பொருட்டு, வளைந்த என்ன-வளைந்துகொண்டன என்றுசொல்லும்படி, சேனை-அந்தச்சேனைகள், பரந்துவந்து-பரவிவந்து, இறுத்த - (அந்தச் சந்திரசைலத்தின்சாரலில்) தங்கின;

(அந்தச்சேனைகளிலுள்ள), கொற்றவர்-அரசர்களும், தேவிமார்கள்-(அவ்வரசரின்) மனைவியரும், மைந்தர்கள் - அரசகுமாரர்களும், கொம்பு அனார்-பூங்கொம்பையொத்த அரசகுமாரிகளுமாகிய, வந்து உற்றவர்-வந்துசேர்ந்தவர், காணல் உற்ற-காணுதற்குப்பொருந்திய, மலை - அந்தச்சந்திரசைலத்தின், நிலை-தன்மையை, உரைத்தும்-இனிச் சொல்லுவோம்; (எ-று.)

மலையினடியைச்சுற்றிச் சேனை தங்கியது, மேருமலையைக்கவருமாறு நாற்கடல்களும் வளைந்தன போலுமென்றார்; தற்குறிப்பேற்றவுவமையணி. அவ்வாறு தங்கிய ஆடவர் முதலியோர் காணலுற்ற மலையின் தன்மையைக் கூறுவோமென்று, கவி, பின்னிரண்டடிகளினால் மேற்சொல்லப்போவதைத் தெரிவித்தார். இதுமுதல் இறுதிவரையில் 47-பாடல்கள் வரைக்காட்சிப்படலம் என்று சிலபிரதியில்: "மலைநிலையுரைத்துமன்றே" என்று இதில் வருவதனால், இவ்வாறு வரைக்காட்சிப்படலம் இங்குத்தொடங்குவது பொருத்தமே. பி - ம்:—[1]வளைந்தது. [2]உற்றது. [3]வரை. (927)

32.—இதுமுதல்பதினான்குகவிகள் – சந்திரசைலத்தின் வருணனை.

பம்புதேன் மிஞிறு தும்பி பரந்திசை பாடி [1]யாடும்
உம்பர்வா னகத்து நின்ற வொளி[2] தரு தருவி னோங்கும்
கொம்புகள் [3]பணைக்கை நீட்டிக் குழையொடு [4]மொடித்துக் கோட்டுத்
தும்பிக ளுயிரே [5]யன்ன துணைமடப் பிடிக்கு நல்கும்.

(இ - ள்.) கோடு தும்பிகள்-தந்தங்களையுடைய ஆண்யானைகள், பம்பு தேன்-நெருங்கிய தேனில்மொய்க்கின்ற,மிஞிறு-மிஞிறுகளும், தும்பி - தும்பிகளும், பரந்து-பரவி, இசை பாடி - சங்கீதசுரங்களைப் பாடிக்கொண்டு, ஆடும்-ஆடுதற்கு இடமான, உம்பர் வானகத்து நின்ற ஒளிதரு தருவின் - மேலிடமாகிய வானுலகத்திலேயுள்ள ஒளிவிடுகின்ற கற்பகதருவினுடைய, ஓங்கும் கொம்புகள் - உயர்ந்த கிளைகளை, பணை கை நீட்டி - (தமது) பனைமரம்போன்ற கைகளை நீட்டி, குழையொடுஉம் ஒடித்து - தளிர்களோடும் முறித்து, உயிர்ஏ அன்ன துணை மடம் பிடிக்கு-உயிருக்குச் சமானமான (தமது) மடப்பத்தையுடைய பெண்யானைக்கு, நல்கும்-கொடுக்கும்; (எ-று.)

ஆண்யானை கற்பகதருவின் கிளைகளைத் தமது மடப்பிடிக்குக் கொடுக்குமென்ற இந்தத் தொடர்புயர்வுநவிற்சியணியில், இம்மலை மிகவோங்கியுள்ளதென்பதும் இங்கிருந்தபடியே சுவர்க்கசுகத்தையும் அநுபவித்தலாகுமென்பதும் பெறப்படும். தும்பியும் மிஞிறும், வண்டின் சாதிபேதம்; இதனை "இரங்கிசை மிஞிறொடு தும்பிதாதூத" என்னுங் கலித்தொகையாலு முணர்க. பி - ம்:—[1]ஆட. [2]வளர். [3]பணை. [4]எடுத்து. [5]என்ன. (928)

33. பண்மலர் பவளச் செவ்வாய்ப் பனிமலர்க் குவளை யன்ன
கண்[1]மலர்க் கொடிச்சி மார்க்குக் கணித்தொழில் புரியும் வேங்கை
உண்மலர் வெறுத்த தும்பி புதியதே [2]னுதவு நாகத்
தண்மலர ரென்று வானத் தாரகை தாவு மன்றே.

(இ - ள்.) பண் மலர் பவளம் செவ்வாய் - இராகங்கள் தோன்றுகின்ற பவழம்போன்ற செந்நிறவாயுடனே, பனி குவளை மலர் அன்ன கண் - குளிர்ந்த குவளைமலரையொத்த கண்களையும் பெற்ற, மலர் - முகத்தாமரையையுடைய, கொடிச்சிமார்க்கு - குறிஞ்சிநிலப்பெண்களுக்கு, கணி தொழில் புரியும் - சோதிடரின் தொழிலைச் செய்வதான, வேங்கை-வேங்கைமரத்தினது, உண் மலர் - (தேனை) உண்ட மலர்களின்மீது, வெறுத்த - வெறுப்புக் கொண்ட, தும்பி - வண்டுகள்,—புதிய தேன் உதவும் நாகம் தண் மலர் என்று-புதிய தேனைத்தருகின்ற சுரபுன்னைமரத்தின் குளிர்ந்த மலரென்று நினைத்து, வானம் தாரகை-ஆகாயத்தில் விளங்குகின்ற நட்சத்திரங்களின் மேல், தாவும் - தாவாநிற்கும்; (எ - று.)— அன்றே-ஈற்றசை; தேற்றமுமாம்.

மலரின்தேனையுண்டதனால் தேன்நீங்கிய அவ்வேங்கைமலரை வெறுத்த தும்பி, வானத்தில் விளங்குந் தாரகைகளைக் கண்டு அவற்றைச் சுரபுன்னை மலராக மயங்கி அவற்றின்மீது தாவுமென்றார்: மயக்கவணியை யங்கமாகக் கொண்டுவந்த தொடர்புயர்வு நவிற்சியணி. கணி-முகூர்த்தமறிவிப்போன். மௌகூர்த்திகன் 'இன்னகாலத்து இந்தத்தொழிலைச் செய்க'என்று விதிப்பதுபோல, வேங்கை தான் மலர்ந்து 'தினைப்புனங் கொய்க' என்று விதித்தலால், 'கணித்தொழில்புரியும் வேங்கை' என்றார்; இதனை "பொன் வேங்கை தினைப்புனங்கொய்கவென்று தாதிடங்கொண்டுபொன் வீசித் தன்கள்வாய் சொரியநின்று, சோதிடங்கொண்டிதெம்மைக் கெடுவித்தது தாமொழியே" என்ற திருக்கோவையாராலும் அறிக. பி - ம்:—[1]மலர். [2]உவந்து. (929)

34. மீனெனும் பிடிகளோடும் விளங்குவெண் மதிநல் வேழம்
கூனல்வான் கோடு நீட்டிக் குத்திடக் குமுறிப் பாயுந்
தேனுகு மடையை மாற்றிச் செந்திணைக் [1]குறவர் முந்தி
வானநீ ராறு பாய்ச்சி யைவனம் [2]வளர்ப்பர் மாதோ.

(இ - ள்.) மீன் எனும் பிடிகளோடுஉம் - நட்சத்திரங்களாகிய (தன்) பெண்யானைகளுடனே, விளங்கு - ஒளிர்கின்ற, வெண்மதி நல் வேழம் - வெண்ணிறமுள்ள சந்திரனாகிய சிறந்த யானை, கூன் நல் வான் கோடு நீட்டி குத்திட - வளைவாகிய அழகிய சிறந்த பிறை நுனியாகிய தந்தங்களின் நுனியைநீட்டி(த் தேனகூடுகளை)க் குத்தியதனால், (அவைகளினின்று), குமுறி பாயும்-பேரொலிசெய்து பாய்கின்ற, தேன்-தேனினது, உகு மடையை - பாய்கின்றமடையை, மாற்றி - மறித்து, செந்தினை குறவர் - செந்தினைக்கொல்லைகளையுடைய குறவர்கள், முந்தி-விரைந்து, வானம் ஆறு நீர் பாய்ச்சி- ஆகாசகங்காநதியின்நீரைப் பாயச்செய்து, ஐவனம் - மலைநெற்பயிரை, வளர்ப்பர்-வளரச்செய்வார்கள்; (எ - று.)—மாதோ-அசை.

பிறைச்சந்திரனது கோடுகளாற் குத்தப்பெற்ற தேன்கூடுகளினின்று தேன் பாய்ந்துகொண்டிருக்க, குறவர் அதனைமாற்றி, ஆகாசகங்காநதியின் நீரைத் தமதுஐவனநெற்பயிருக்குப் பாய்ச்சுவரென்றார்: இத்தொடர்புயர்வுநவிற்சியணியால், மலையின் ஓங்கிய

தன்மையும் மலைவளனும் பெறப்படும். யானை தனது கோடுகளால் இருல்முதலியவற்றைக் குத்துதல் இயல்பு. மதி முதலியவற்றை வேழம்முதலியனவாகக் கூறியது - உருவகவணி. மதிநல்வேழம் வான்கோடு நீட்டி - வானாகிய வேழமானது மதியின் கோடாகிய கோட்டால் நீட்டிக் குத்திட என்பாருமுளர். கோடு - பிறைக் கோடாகிய தந்தம். குறவர்க்குச் செந்திணைசிறத்தலின், அவரை 'செந்திணைக் குறவர்' என்றார். மடை - நீர்பாயும்படி வாய்க்கால் களில் அவ்வப்போது இடும் அணை. பி - ம்:—[1] குமிழி. [2] விளைப்பர்.

35. குப்புறற் கருமை யாலக் குலவரைச் சாரல் வைகி
ஒப்புறத் [1] துளங்கு கின்ற வுடுபதி யாடி யின்கண்
இப்புறத் தேயுங் காண்பார் குறத்திய [2] ரியைந்த கோலம்
அப்புறத் தேயுங் காண்பா ரரம்பைய [3] ரழகு மாதோ.

(இ - ள்.) (ஓங்கியுள்ள அந்தமலை), குப்புறற்கு அருமையால் - கடந்து செல்வதற்குக் கூடாதபடியினால், அ குலம் வரை சாரல் வைகி,- அந்தச்சிறந்த மலையின் தாழ்வரையில்தானே தங்கி, ஒப்பு உற துளங்குகின்ற-(இருபுறமும்) ஒருபடியாக விளங்குகின்ற, உடு பதி-சந்திரனாகிய, ஆடியின்கண் - கண்ணாடியிலே,—குறத்தியர்-, இயைந்த - (தமதுமனத்துக்குப்) பிடித்தபடி பூண்ட, கோலம் - அலங்காரத்தை, இ புறத்துஉம் - இந்தப்பக்கத்திலும் [பூலோகத் தின்பக்கத்திலும்], காண்பார்—; அரம்பையர் - (வானுலகத்துத்) தேவமாதர், அழகு - (தாம் புனைந்த) அலங்காரத்தை, அ புறத்து உம்- வானுலகத்துப்பக்கத்தும், காண்பார்—; (எ-று.)

சந்திரனை அப்பாற்செல்லவொட்டாது ஓங்கி இம்மலை தடுத்த லால், இமமலைச்சாரலில்தானே அந்தச்சந்திரன் தங்கினனாக, அம்மண்டலத்தின் ஒருபுறம் குறத்தியர் தமது கோலத்தைக் காணுமாறு உதவ, மற்றொருபுறம் வானுலகத்துமகளிர் தமது கோலத்தைக் காணுமாறு பயன்படுவதாயிற்றென்க; தொடர்புயர்வு நவிற்சியணி. உடுபதியாகிய ஆடி, நாம் காணும் கண்ணாடிபோல்வ தனறி இருபுறமும்பார்க்குமாறு அமைந்தது என்று வேற்றுமை யணி தோன்ற, 'ஒப்புறத்துளங்குகின்ற உடுபதி' என்றார். துளங்கு கின்ற - மாதர்முகத்துக்கு ஒப்பாகும் விஷயத்தில் நடுங்குகின்ற என்ற பொருளும் தோன்றும். கம்பர் வரைக்காட்சிக்காகத் தாம் கற்பித்த மலைக்குச் சந்திரசயிலமென்று பேரிட்ட காரணம் விளங் கும்படி, சந்திரன் சாரலில்தங்கும் சயிலம் என்று இங்குக்கூறுவது, கவனித்தற்குஉரியது. அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத் திரங்கட்கும் சந்திரன் கணவனென்பது நூற்கொள்கையாதலால், அவனை 'உடுபதி' என்றார். உடு-நட்சத்திரம்: பதி - கணவன். பி - ம்:—[1] துலங்குகின்ற. [2] இசைந்த. [3] இசைந்த or அசைந்த கோலம். (931)

36. உதி [1] யுறு துருத்தி யூது முலையுறு [2] தீயும் வாயின்
[3] அதிவிட நீரு நெய்யு [4] முண்கிலா தாவி யுண்ணும்
கொதி [5] நுனை வேற்கண் மாதர் குறத்தியர் நுதலி னோடு
மதியினை வாங்கி யொப்புக் காண்குவர் குறவர் [6] மன்னோ.

(இ - ள்.) உதி உறு - (காற்றுத்) தோன்றுதல் பொருந்திய, துருத்தி - உலைத்துருத்தியால், ஊதும் - ஊதப்படுகின்ற, உலை - (கொல்லனுடைய) உலைக்களத்திலே, உறு - மிகுதியாகப் பொருந்திய, தீஉம் - நெருப்பையும்,—வாயின் - அலகிலே, அதி விடம் நீர் உம்-மிக்க விஷநீரையும், நெய்உம்-நெய்யையும், உண்கிலாது-கொள்ளாமலே, ஆவி உண்ணும் - (காதலித்த ஆடவரது) உயிரைக் கொள்ளவல்ல, கொதிநுனை வேல்-கொதிக்கின்ற நுனையையுடைய வேலாயுதத்தையொத்த, கண்-கண்களையுடைய, மாதர் குறத்தியர்-அழகிய குறமகளிரது, நுதலினோடு-நெற்றியோடு, குறவர்-குறவர்கள், மதியினை வாங்கி - அந்தச்சந்திரனை யெடுத்து, ஒப்பு காண்குவர்-ஒப்புப் பார்ப்பார்கள்; (எ-று.)—மன்ஓ-ஈற்றசை.

குறவர் அருகேயிருக்கின்ற பிறைச்சந்திரனைப் பிடித்துத் தமது மனைவியரின் நெற்றியோடு சேரவைத்து இரண்டற்குமுள்ள ஒற்றுமையைக் காண்பரென்க; தொடர்புயர்வுநவிற்சியணி. நுதலுக்குப் பிறைச்சந்திரனே உவமைகூறப்படுதலால் மதியென்பது-இங்கே பிறைச்சந்திரனைக் காட்டும். மாதர் குறத்தியர்-மாதராகிய குறத்தியர் எனினுமாம். கூராக்கப்படுதற்காகக் கொல்லனுலைக்களத்திலே காய்ச்சியடிக்கப்படுதலும், துருப்பிடியாமலிருத்தற்காக நெய்பூசப்படுதலும், பாய்ச்சும்பொழுது தவறாமல் உயிரைக்கொல்லுதற்காக நஞ்சுதீற்றப்படுதலும் உடையதாகிப் பகைவரது உயிரை யுண்ணும்அந்த வேற்படை போல, இந்தக்கண்ணாகிய வேற்படை எந்தச்செயலையும் வேண்டாமலே ஆடவரதுஉயிரை யுண்ணவல்லதென்று, சாதாரண வேற்படையினும் வேறுபாடு தோன்ற, வேற்கண்ணுக்கு அடைமொழிகொடுத்தார்: வேற்றுமையணியை யங்கமாகக் கொண்டு வந்த திரிபணி: ஆவியையுண்ணுந் தொழிலைச்செய்யக் கண் வேலாகப் பரிணமித்ததாதலால், இது உருவகமன்று. பி-ம்:- [1] அறு. [2] தீயின். [3] அதில்விட, அதில்விடு. [4] உணர்கிலாது, உணர்ந்திலாது, [5] நுழை. [6] மாதோ. (932)

37. பேணுதற் [1] குரிய [2] மேகக் [3] குருளையம் பிடிக ளீன்ற
காணுதற் [4] கினிய வேழக் கன்றொடு களிக்கு முன்றில்
கோணுதற் [5] குரிய திங்கட் குழவியுங் குறவர் தங்கள்
வாணுதற் கொடிச்சி மாதர் மகவொடு தவழு மாதோ.

(இ - ள்.) அம் பிடிகள் ஈன்ற-அழகிய பெண்யானைகள் பெற்ற, காணுதற்கு இனிய—, வேழம் கன்றொடு-யானைக்கன்றுகளுடனே, முன்றில் - (சிறியகுடிசைகளின்) முன்னிடங்களிலே, பேணுதற்கு உரிய-விரும்புவதற்கு உரிய, மேகம் குருளை - சிறுமேகங்களும், களிக்கும்-மனமகிழ்ந்து விளையாடும்; (அன்றியும்), கோணுதற்கு உரிய திங்கள் குழவிஉம்-வளைந்திருக்குந் தன்மையைக்கொண்ட இளஞ்சந்திரனும், குறவர் தங்கள் வாள் நுதல் கொடிச்சி மாதர் மகவொடு-குறவர்களுடைய ஒளிபொருந்திய நெற்றியையுடைய (மனைவியராகிய) குறத்தியர்பெற்ற குழந்தைகளுடன், தவழும் - தவழாநிற்கும்; (எ - று.)

வேழக்கன்றொடு மேகக்குருளை களிக்குமெனவும், இளஞ்சந்திரனொடு குறத்தியர்மகவு தவழு மென்றுங் கூறினமையால், மலையி

ஞோங்கிய தன்மை பெறப்படும். ஓங்கியமலையில் வேழக்கன்றோடு சிறுமேகங்கள் இயங்குவதை வேழக்கன்றோடு மேகக்குருளை களிக்குமெனக் குறித்தார்: இங்ஙனேமேலும். [2]சீயக்குருளை என்றபாடம் - நிலத்தின் தன்மையால் இயற்கைப் பகையாயினவும் அப்பகைமையொழிந்து நட்புப்பூண்டு ஒழுகின வென்பதை விளக்கும்: ஆயினும், பின்னிரண்டடிகளைநோக்குமிடத்து, மேகக்குருளையென்ற பாடமே ஏற்கும். இனி, சீயக்குருளை பிடிகளீன்ற வேழக்கன்றொடு களிக்கும் முன்றிலிலே கொடிச்சிமாதர்மகவொடு திங்கட்குழவியும் தவழுமெனினுமமையும். குருளையென்ற ஒருசார் விலங்கின்பெயரை மேகத்துக்கு அமைத்தார்; "கார்மேகக்கன்றேபோல்" என்றார், ஸ்ரீ ஆண்டாளும். பி-ம்:—[1]அரிய. [2]கோலக். [3]குருளையும். [4]உரிய, அரிய. [5]இனிய. (933)

38. அஞ்சனக் கிரியி னன்ன வழிகவுள் யானை [1]கொன்ற
வெஞ்சினத் தரியின் றிண்காற் சுவட்டொடு விஞ்சை வேந்தர்
குஞ்சியந் தலத்து நீலக் குலமணி[2]த் தலத்து மாதர்
பஞ்சியங் கமலம் பூத்த பசுஞ்சுவ டுடைத்து [3]மன்னோ.

(இ - ள்.) (அம்மலையானது),—குலம் நீலம் மணி தலத்துஉம்- சிறந்த இந்திரநீலக்கற்களாலமைந்த தன்னிடத்தும், விஞ்சை வேந்தர் குஞ்சி அம் தலத்துஉம் - (தன்னிடத்துவாழ்கின்ற) வித்தியாதரவரசர்களுடைய அழகியமயிர்முடியுள்ள சிரத்தினிடத்திலும், (முறையே),—அஞ்சனம கிரியின் அன்ன அழி கவுள்யானை - மைம்மலையையொத்த (மதநீர்) இடையறுதொழுகப்பெற்ற கவுளையுடைய யானைகள், கொன்ற—, வெம் சினத்து அரியின்-கொடுங்கோபத்தையுடைய சிங்கத்தினது, திண் கால் சுவட்டொடு-வலியகால்கள் வைக்கப்பெற்றதனாலான தடங்களுடனே, மாதர் பஞ்சி அம் கமலம் பூத்த பசு சுவடு-மனைவிமார்களின் செம்பஞ்சு ஊட்டிய அழகியபாத கமலங்கள் படுதலாலுண்டாகிய ஈரமுள்ள சுவடுகளையும்,உடைத்து-உடையது; (எ-று.)

அம்மலையின் இடங்களெல்லாம் சிங்கங்கள் திரிந்ததனாலான சுவட்டுடன் விளங்க, அம்மலையில்தங்கியவித்தியாதரருடைய சிரங்கள் ஊடல்கொண்ட மனைவிமாரின் செம்பஞ்சினிறத்தோடு கூடிய பாதச்சுவட்டுடன் விளங்கு மென்பதாம். விஞ்சையர்சிரங்கள் பாதச்சுவட்டுடன் விளங்குவதற்குக்காரணம், ஊடலைக்கொண்ட மனைவிமாரை வணங்குகையில் அம்மாதர்கள் ஊடலின் மிகுதியால் அவ்விஞ்சையரைத் தமதுசெம்பஞ்சுஊட்டிய பாதகமலங்களால் உதைத்துத் தள்ளுவதனால் தோன்றியனவாகும். இவ்வருணனையால், சிங்கங்குலாவும் பெருமையையுடையது அம்மலையென்றும், வித்தியாதரரும் இன்பமனுபவித்தற்குரிய இடமென்றும் கூறியவாறாயிற்று. பி-ம்:—[1]பொன்ற. [2]இடத்து. [3]மாதோ. (934)

39. செங்கய லனைய நாட்டஞ் செவி[1]யுரு முறுவ [2]ரேன்ற
[3]பொங்கிருங் கூந்தல் [4]சோரா புருவங்க [5]ணெரியா பூவின்
அங்கையு மிடறுங் [6]கூட்டி நரம் [7]பளைந் தமுத மூறும்
மங்கையர் பாடல் கேட்டுக் கின்னர மயங்கு மாதோ.

(இ - ள்.) செங் கயல் அனைய நாட்டம் செவி உறு - அழகிய கயல்மீனையொத்த கண்கள் காதுவரையிற் சென்று சேராதனவும் [கண்விழிகள்சலியாதனவும்], முறுவல் தோன்ற - பல்லினொளி வெளித்தோன்றாதனவும், பொங்கு இரு கூந்தல் சோரா - மிகவுந் திரண்டுள்ள மயிர்முடி குலைந்துவிழாதனவும், புருவங்கள் நெரியா- புருவங்கள் வளைந்து தோன்றாதனவுமாக, பூவின் அம் கைஉம் மிடறுஉம் கூட்டி - தாமரைமலரையொத்த அகங்கையையும் குரலை யும் ஒருவழிப்படுத்தி, நரம்பு அளைந்து - நரம்பைத் துழாவி, (அத ஞல் உண்டாக்குகின்ற), அமுதம் ஊறும் - அமிருதம்போல இனி மையாத்தோன்றுகின்ற, மங்கையர் பாடல்-மடந்தையரின் பாடலை, கேட்டு—, கின்னரம் - கின்னரமும், மயங்கும் - திகைத்து நிற்கும்;

'அங்கையும் மிடறுங் கூட்டி நரம்பளைந்து' என்றது-மிடற்றுக் குரலுக்கு ஏற்பக் கைத்தொழில்புரிந்து நரம்பில் இன்னேசை யுண் டாக்கி யென்றபடி; 'கருங்கொடிப் புருவமேறா கயனெடுங் கண்ணு மாடா, அருங்கடி மிடறும் விம்மா வணிமணியெயிறுந் தோன்றா, இருங்கடற் பவளச்செவ்வாய் திறந்திவள் பாடினளோ, நரம்பொடு வீணைநாவி னவின்றதோ வென்று நைந்தார்'' என்ற சிந்தாமணிச் செய்யுளையும், அங்கு நச்சினார்க்கினியர் ''இது பதினெரு வகையி லும், உள்ளாளப்பாட்டுப் பாடுங்கால் இடைபிங்கலையை யியக்க மறுத்து, மூலாதார முதல் பிரமரந்திர மளவும் இயக்கமாக்கி நடுவு தொழில் வரப் பாடுதலென்றறிக'' என்று கூறி, ''கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா, பண்ணளவும் வாய்தோன்ற பற றெரியா-எண்ணிலிவை, கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்த ருவ, ருள்ளாளப் பாடலுணர்'' என்று மேற்கோள் காட்டியதையும் உணர்க. [1]உற, [2]தோன்ற, [4]சோர, [5]நெரிய என்று பாடமோதிப் பொருள் கூறுதலும் சிறவாது. கின்னரமென்பது - இசையின் குற் றங்களையும் குணங்களையும் அறியவல்லதாய் எப்போதும் ஆணும் பெண்ணுமாக இருக்கும் ஒருவகைப் பறவை யென்பர்: எப்போதும் ஆணும் பெண்ணுமாய்ச்சேர்ந்திருக்கும் இசையில் வல்ல தேவசாதி என்றலும் உண்டு. பி - ம்:—[1]உறு, உறும், புகா. [3]பொங்கிருட். [6]கூடி. [7]உளர்ந்து. (935)

40. கள்ளவிழ் கோதை மாதர் காதொடு[1]முறவு செய்யும்
கொள்ளைவாட் கண்ணி ஞர்தங் குங்குமக் [2]குழம்பு [3]தங்கும்
தெள்ளிய பளிங்குப் பாறைத் [4]தெளிசுனை [5]மணியிற் செய்த
வள்ளமு நறவு மென்ன வரம்பில [6]பொலியு [7]மன்னே.

(இ - ள்.) கள் அவிழ் கோதை - தேனைச் சொரிகின்ற மலர் மாலையை யணிந்த, மாதர் - அழகிய, காதொடுஉம் உறவு செய்யும் - காதுடனுறவுசெய்கின்ற, கொள்ளை வாள் கண்ணினர் தம்-(ஆடவ ருயிரைக்) கவரவல்ல வாள்போன்ற கண்களையுடைய மகளிரணிந்த, குங்குமம் குழம்பு-குங்குமச் சேறு, தங்கும்-தங்கப்பெற்ற, தெள்ளிய பளிங்கு பாறை தெளி சுனை-தெளிவான நிறத்தையுடைய பளிங் குப்பாறையினலியன்ற தெளிந்தசுனைகள், வரம்பு இல-மிகப்பல,— மணியில் செய்த வள்ளம்உம் நறவுஉம் என்ன - செம்மணியின

லியன்ற கிண்ணங்களும் கள்ளும் போல, பொலியும் - விளங்கா நிற்கும்; (எ - று.)

பளிக்குப்பாறைக்கரையைக்கொண்ட சுனையில் குங்குமக் குழம்பு தங்குவதனால் அப்பளிக்குப்பாறை செம்மணிபோல் தோன்ற, அக்குங்குமக்குழம்பு தங்குவதான நீர் நறவுபோலத் தோன்று மென்க: தற்குறிப்பேற்றவணி. குங்குமக்குழம்பையணிந்த மாதர் நீராடுவதனால், பளிக்குச் சுனையிற் குங்குமக்குழம்பு தங்கு மென்க. குங்குமக்குழம்பாற் பளிக்குப்பாறைக்குச் செம்மணியின் தன்மை நேர்ந்ததாகக் கூறியது, பிறிதின்குணம்பெறலணி. காதொடு முறவுசெய்யும்கண்-காதுவரையில் நீண்ட கண். [5]மணியிற்றேய்த்த என்ற பாடத்துக்கு, தேய்த்த - இழைக்கப்பட்ட என்க. பி - ம்:—[1]கழுமவிம்மும். [2]குழம்பை. [3]தங்கத், தங்கித். [4]தெளிசுதை, தெளிதர. [6]பொலிவ. [7]மாதோ. (936)

41. ஆடவ ராவி சோர வஞ்சன வாரி சோர
ஊடலிற் சிவந்த நாட்டத் [1]தும்பர்தம் மரம்பை மாதர்
[2]தோடவிழ் [3]கோதை நின்றுந் துறந்தமந் தார மாலை
[4]வாடல [5]நறவ ருது வயின்வயின் [6]வயங்கு மாதோ.

(இ - ள்.) ஆடவர் ஆவி சோர-(தமது) கணவரின் உயிர் வருந்தித் தளருமாறு, அஞ்சனம் வாரி சோர ஊடலில் சிவந்த - (தீட்டியுள்ள) மையுடனே கண்ணீர்பெருகியவண்ணமாகப் புலவியினாலே செந்நிறத்தையடைந்த, நாட்டத்து - கண்களையுடைய, உம்பர்தம் அரம்பை மாதர் - தேவர்களுடைய மங்கையர்கள், கோதை நின்று உம் துறந்த-(தமது) மயிர்முடியிலிருந்து கழற்றி யெறிந்த, தோடு அவிழ் மந்தாரம் மாலை - இதழ்கள் அலர்ந்த மந்தாரமலர்கொண்டு தொடுக்கப்பெற்ற மாலைகள்,—வாடல - வாடாதனவாகி, நறவு அருது-தேனும் நீங்காமல் [புதுமை யுடனே], வயின் வயின் - அந்தந்தவிடங்களிலே, வயங்கும்-விளங்காநிற்கும்; (எ - று.)

தேவமாதர்கள் ஊடல்கொண்டவராய்த் தங்கணவர்வருந்துமாறு சிவந்த கண்களினின்று கரைந்த மையுடனே கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு தமதுமயிர்முடியிலிருந்து கழற்றியெறிந்த மந்தாரமலர்மாலைகள், அந்தமலையிற் பலவிடங்களிலுங் காணப்படு மென்பதாம். தெய்வமலர்மாலை யாதலால், வாடாமலும் நறவு அருமலும் இருந்தன. இதனால், அந்தச்சந்திரசைலம் தேவலோகத்திற்கு அண்மையிலுள்ளதென்பது, பெறப்படும். பி - ம்:—[1]உம்பர்மாட்டு. [2]தோடலர். [3]குஞ்சி, குழலின். [4]வாடலின். [5]நறவருத. [6]இலங்கும். இது, சிலபிரதிகளில் அடுத்த பாடலுக்குப்பின். (937)

42. மாந்தளி ரனைய மேனிக் குறத்தியர் மாலை சூட்டிக்
[1]கூந்தலங் கமுகின் பாளை குழலினோ டொப்புக் [2]காண்பார்
ஏந்திழை யரம்பை மாத [3]ரெரிமணிக் கடகம் வாங்கிக்
காந்தளம் போதிற் பெய்து [4]கைகளோ டொப்புக் காண்பார்.

(இ - ள்.) மா தளிர் அனைய மேனி குறத்தியர் - மாந்தளிரை யொத்த உடல்நிறத்தோடுகூடிய குறப்பெண்கள், மாலை சூட்டி -

மலர்மாலையையணிவித்து, (பிறகு), கூந்தல் கமுகின்பாளை-கூந்தற் கமுகின் பாளைகளை, குழலினோடு-(தம்)கூந்தலோடு, ஒப்பு காண்பார்-உவமைகாண்பார்கள்: ஏந்து இழை அரம்பை மாதர்-தரித்த ஆபரணங்களையுடைய தெய்வ மகளிர், எரி மணி கடகம் வாங்கி-நெருப்புப் போலச் செந்நிறமாகவொளிவிடுகின்ற இரத்தினங்கள் பதித்த கடகமென்னும் அணியைக் கழற்றி, காந்தள் போதில் பெய்து-காந்தளின்மலர்களிலே யணிந்து, கைகளோடு-(தம்) கைகளுடனே, ஒப்பு காண்பார்- உவமைகாண்பார்கள்; (எ - று.)

குறத்தியர் கூந்தற்கமுகின் பாளைகளிலே மலர்மாலையை யணிந்து அவை தமது கூந்தலினோடு ஒப்பாவதைக் காண, தெய்வ மகளிர் தமதுகடகத்தை வாங்கிக் காந்தளிலேயணிந்து அம்மலர் தமது கைக்கு ஒப்பாவதைக் காண்பாராயின ரென்க. இதனால், மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் மகிழ்தற்கு, அம்மலை இடனாயுள்ள தெனக் கூறியவாறு. கூந்தலங் கமுகு, காந்தளம்போது, அம்-சாரியை. பி-ம்:—[1] கூந்தலின். [2] காண்ப. [3] எதிர். [4] கையினோடு. (938)

43\. சரம்பயில் சாப[1]மன்ன புருவங்க டம்மி[2]னாடா
[3]நரமபினோ டினிது பாடி நாடக மயிலோ[4]டாடும்
அரம்பையர் வெறுத்து நீத்த வவிர்மணிக் கோவை யாரம்
[5]மரம்பயில் கடுவன் பூண மந்திகண் டுவக்கு மாதோ.

(இ - ள்.) சரம் பயில் சாபம் அன்ன புருவங்கள் தம்மின் ஆடா-அம்பு பொருந்திய வில்லைப்போன்ற புருவங்களானவை தம்மிலே ஆடாமலிருக்க, நரம்பினோடு - யாழ்நரம்பினோடு (மாறுபடாமல்), இனிது பாடி-இனிமையாகபபாடி, மயிலோடு நாடகம் ஆடும்-மயில்களோடு (ஒப்ப) நடனமாடுகின்ற, அரம்பையர் - வானுலகமகளிர், வெறுத்து - (கணவர்மீது) வெறுப்பை [ஊடலை] உட்கொண்டு, நீத்த-கழற்றிஎறிந்த, அவிர்மணி கோவை - விளங்குகின்ற இரத்தினச்சரங்களையும், ஆரம்-முத்தாரங்களையும், மரம்பயில்-(ஆங்குள்ள) மரங்களிற்பழகுகின்ற, கடுவன் - ஆண்குரங்குகள், பூண - (தமக்கு) அணிய, மந்தி-பெண்குரங்குகள், கண்டு-, உவக்கும்-மகிழாநிற்கும்;

தேவமகளிர் ஊடல்கொண்டு கழற்றியெறிந்த இரத்தினமாலை முதலியவற்றை ஆண்குரங்குகள் பெண்குரங்குகட்குப் பூட்டினவாக, அதுகண்டு பெண்குரங்குகள் மகிழுமென்க. ஆண்குரங்குகள் தாமே பூணப் பெண்குரங்குகள் கண்டுமகிழுமென்றலும் ஒன்று. சரம்பயில் சாபம்-புருவத்திற்கு வடிவினாலும் தொழிலினாலும உவமம். புருவம் ஆடாமல் பாடுவது, பாடுவாரின் பாடற் சிறப்பைக் காட்டும். பி - ம்:—[1] என்னப். [2] ஆட, ஆடி. [3] நரம்பினின். [4] ஆடி. [5] வரம்பில.()

44\. [1]சாந்துயர் தடங்க டோறுந் தாதுரா கத்திற்[2] சார்ந்த
கூந்தலம் பிடிக ளெல்லாங் குங்கும [3]மணிந்த போலும்
காந்தின மணியின் சோதிக் கதிரொடுங் கலந்து [4]பூசச்
[5]சேந்துவா னகமெப் போதுஞ் செக்கரை யொக்கு[6]மன்றே.

(இ - ள்.) சாந்து உயர் தடங்கள் தோறும் - சந்தனமரங்கள் ஓங்கிவளரப்பெற்ற மலைச்சாரல்கள்தோறுமுள்ள, தாது ராகத்தின் -

காவிக்கற்களாலாகிய செந்நிறத்தோடு, சார்ந்த-பொருந்திய, கூந்தல் அம் பிடிகள் எல்லாம்-புறமயிரையுடைய அழகிய பெண்யானைகளெல்லாம், குங்குமம் அணிந்த போலும்-குங்குமக்குழம்பையணிந்தவற்றை யொத்திருக்கும்: காந்து இனம் மணியின் சோதி - ஒளிர்கின்ற தொகுதியான பதுமராகவிரத்தினங்களின் இயற்கைச்செந்நிறவொளியானது, கதிரொடுஉம் கலந்து பூச - (சாணைபிடித்தலாற் செயற்கையாகவுண்டாகின்ற) கிரணங்களோடுஞ் சேர்ந்து பூசுதலாலே, வான் அகம்-ஆகாயத்தினிடம், எப்போதும்—,சேந்து-செந்நிறமடைந்து, செக்கரை ஒக்கும்-செவ்வானத்தைபோலும்; (எ-று.)

காவிக்கற்களிற் சார்வதினாற் கருநிற யானைகள் குங்குமக்குழம்பு பூசப்பெற்றாற்போலத் தோன்று மென முன்னிரண்டடிகளிற் கூறினர். பதுமராகக்கற்களின் இயற்கையொளியுடனே செயற்கையொளியும் வானத்திற் சேர்தலால் வானம் எப்போதும் செவ்வானத்தை யொத்திருக்கு மென்பது, பின்னிரண்டடிகளிற் கூறிய பொருள். இங்ஙன் இருவிஷயங்களைக்கூறியது - பிடிகள் தாதுராகத்தாற் செந்நிறமடைந்ததும் வானகம் செந்நிறமணியாற் செக்கர்வானம்போன்றதும் தம்மிலொக்குமென்ற கருத்தைப் புலப்படுத்தும். பிறிதின்குணம்பெறலணியும் உவமையணியும் சேர்ந்து வந்தன. சோதிக்கதிர் என்பதற்கு - (மணியினது) பேரொளியாகத் தோன்றுகின்ற கிரணம் என்று உரைத்தலுமொன்று. தாது-காவிக்கல்; ராகம்-செந்நிறம். பி-ம்:—[1] சாய்ந்து. [2] சாய்ந்த. [3] அணிந்தவென்னக். [4] வீசச். [5] சேர்ந்து. [6] மன்னோ, மாதோ. *(940)*

45. நிலமகட் கணிக ளென்ன [1] நிரைகதிர் முத்தஞ் [2] சிந்தி
மலைமகள் கொழுநன் சென்னி [3] வந்துவீழ் கங்கை [4] மான
அலகில்பொன் னலம்பி [5] யோடி யாரஞ்சே ரருவி மாலை
உலகளந் தவன்றன் [6] மார்பி [7] னுத்தரீ கத்தை யொத்த.

(இ - ள்.) நிலம் மகட்கு - பூமிதேவிக்கு, அணிகள் என்ன - (இவை) ஆபரணமாகுமென்னுமாறு, நிரை கதிர் முத்தம் - வரிசையான கிரணங்களையுடைய முத்துக்களை, சிந்தி - சிதறி, மலைமகள் கொழுநன் சென்னி வந்து வீழ் கங்கை மான - பார்வதிதேவியின் கணவனான சிவனது முடியிலேவந்து வீழ்கின்ற கங்கையையொப்ப (வெண்ணிறங்கொண்டு), அலகு இல் பொன் அலம்பி ஓடி - அளவற்றபொன்னைக் கொழித்துக்கொண்டுபெருகி, ஆரம் சேர் - முத்துக்களுடன் சேர்ந்துள்ள, அருவி மாலை - மலையருவியின் வரிசை, உலகு அளந்தவன் தன் மார்பின் உத்தரீகத்தை - இவ்வுலகையளந்தருளின திருமாலின் மார்பிலணிந்த உத்தரீயத்தை, ஒத்த-;(எ-று.)

சந்திரசைலம் உலகளந்த நெடுமாலை யொத்திருக்க, அதில் பொன்னலம்பியோடி ஆரஞ்சேர் அருவிமாலை அந்தநெடுமால் மார்பிலணிந்த உத்தரீயத்தை யொக்கு மென்றார்; தற்குறிப்பேற்றவுவமையணி. அம்மலையருவிகள் பூமிதேவிக்கு அணியாகுமாறு முத்துக்களைச்சிந்துமென்று முதலடியிற் கூறினர். திருமால் பொற்பட்டாடையணிந்த மார்பில் முத்தாகாரம் பூண்டிருப்பனென்க.

பி-ம்:—[1]நிறை. [2]சிந்த. [3]வந்திழி. [4]போன்ற. [5]ஆரஞ்சேர்ந்து சோர், ஆரஞ்சேர்ந்துவீழ். ஆரஞ்சார்ந்துவீழ். [6]மார்பத்து. [7]உத்தரியத்தை. (941)

46.—இதுமுதல் ஏழுகவிகள்-சென்றோர், பலவகை நிகழ்ச்சிகளைக் காணுதலைத் தெரிவிக்கும்.

[1]கோடுலா நாகப் [2]போதோ டிலவங்க மலருங் [3]கூட்டிச்
சூடுவார் களிவண் [4]டோச்சித் தூநறுந் தேறல் [5]கொள்வார்
கேடிலா மகர யாழிற் கின்னர மிதுனம் பாடும்
பாடலா லூட னீங்கும் [6]பரிமுக மாக்கள் கண்டார்.

(இ-ள்.) கோடு உலாம் நாகம் போதோடு - கொம்புகளிற்பூத்துள்ள சுரபுன்னைமலர்களோடு, இலவங்கம் மலர்உம் கூட்டி - இலவங்கமலரையுஞ் சேர்த்து, சூடுவார் - அணிகின்றவர்களும், களி வண்டு ஓச்சி தூ நறு தேறல் கொள்வார் மதககளிப்புள்ள வண்டுகளையோட்டிவிட்டுப் பரிசுததமாய் நல்லகள்ளைப் பருகுபவர்களுமாகிய அங்குத்தங்கியவர்,—கேடு இலா மகரயாழின் - குற்றமற்ற மகரவீணைபோல, கினனரமிதுனம் பாடும் - இரட்டையாகவுள்ள கின்னரமென்னுந் தேவசாதிகள்பாடுகின்ற, பாடலால்-பாடலினாலே; ஊடல் நீங்கும்-(தாம் கொண்ட) புலவி நீங்கப்பெற்ற, பரிமுகம் மாக்கள்-குதிரை முகத்தையுடைய தெய்வமக்களை, கண்டார்—;

பூக்கொய்து சூடித் தேறலையுண்பவராய் அங்குத் தங்கிய சேனையைச் சார்ந்தவர்கள், கினனர மிதுனங்கள பாடுவதையும் அப்பாடலால் பரிமுகமாக்கள் ஊடல்நீங்குவதையுங் கணடனரென்பதாம். கின்னரம்-மானுடமுகததையும குதிரையினுடலையும் படைத்த தேவசாதி விசேடம். பரிமுக மாககள எனபது குதிரை முகத்தையும, மானுடவுடலையுப்படைத்ததோர்தேவசாதிவிசேடம. மேல், பூக்கொய்படலம உண்டாட்டுபபடலம எனறவற்றுககுத் தோற்றுவாயாக, 'நாகப்போதோடிலவங்கமலருஙகூட்டிச்சூடுவார் தூநறுநதேறலுண்பார்' என்றுரென்ப. பி-ம்:-[1]கோடிலா. [2]பூவோடு. [3]கூடிச். [4]ஓட்டி. [5]உண்பார். [6]பரிபுரமாதர், பரிமுகமாதர். (942)

47.பெருங் [1]களிப் புற்ற மைந்தர் பேரெழி லாகத் தோடு [மாடே
பொருந்துணைக் கொங்கை யன்ன பொருவில்கோங் கரும்பின்
மருங்கெனக் [2]குழையுங் கொம்பின் மடப்பெடை வண்டுந தங்கள்
கருங்குழற் களிக்கும் வண்டுங் கடிமணம [3]புணர்தல் கண்டார்.

(இ-ள்) பெரு களிப்பு உற்ற - மிக்க மகிழ்ச்சி பொருந்திய, மைந்தர் - இளமையுள்ள ஆடவருடைய, பேர் எழில் ஆகத்தோடு - மிக்க அழகையுடைய மார்பிலே, பொரும் - தாக்குகினற, துணை - இரட்டையாகிய, கொங்கை - தனஙகளை, அனை-ஒதத, பொருவு இல் - (வேறு) உவமையைப் பெறாத, கோஙகு அரும்பின மாடு - கோங்கரும்புகளினிடத்து,—மருங்கு என குழையும-(அம்மகளிரின்) இடையைப்போலத துவளகினற, கொம்பின - பூங்கொம்பில்வாழுந்தன்மைகொண்ட, மடம பெடை வணடுஉம-இளமையை

யுடைய பெண்வண்டுகளும், தங்கள் கருங் குழல் களிக்கும் வண்டு உம்- (தமது) கருமையாகிய கூந்தலிலே படிந்து களிக்கின்ற ஆண் வண்டுகளும், கடிமணம் புணர்தல்-புதுமணஞ் செய்துகொள்வதை யும், கண்டார்-பார்த்தார்கள்; (எ-று.)

தமது தனம்போன்ற கோங்கரும்பிலே பூங்கொம்பில்வாழ் பெண்வண்டுகளும் தமது கருங்குழலிற் படிந்த ஆண்வண்டுகளும் கடிமணம்புணர்வதை அங்குத்தங்கிய மகளிர் கண்டன ரெனக. இளமையையுடைய ஆடவர்க்கும் மகளிர்க்கும் இன்பப்பகுதி காணப்படுதல், இயல்பேயாம். பி-ம்:—[1]களிறேயும். [2]குழைக்கும். [3]புணருமாறே, புணரக்கண்டார். (943)

48. [1]படிகத்தின் றலமென் றெண்ணிப் படர்சுனை [2]முடுகிப் புக்க
சுடிகைபூங் கமல மன்ன சுடர்[3]மதி முகத்தி னூர்தம்
வடகத்தோ டுடுத்த[4]தூசை [5]மாசினீர் [6]நனைப்ப [7]வீசுஞ்
[8]கடகக்கை யெறிந்து [9]நோக்கிக் [10]கருங்கழல் வீரர் நக்கார்.

(இ-ள்) படர் சுனை-பரவிய நீர்ச்சுனையை, படிகத்தின் தலம் என்று எண்ணி - படிகக்கற்கள்படுத்த இடமென்று மாறுகக் கருதி, முடுகி புக்க - விரைவாகச் சென்ற, சுடிகை பூங் கமலம் சுடர் மதி அன்ன முகத்தினூர்தம - நுதலணியையணிந்த அழகிய தாமரை மலரையும் ஒளிவிடுகின்ற சந்திரனையுமொத்த முகத்தை யுடைய மகளிரின், வடகத்தோடு-மேலாடையோடு, உடுத்ததூசை - (அரையிற்கட்டிய) சேலையையும், மாசு இல்நீர் - கலக்கமற்ற [தெளிவான] நீர், நனைப்ப-நனைத்ததாக, நோக்கி-(அது) கண்டு, வீசும் கடகம் கை எறிந்து-வீசுகின்ற கடகம்பூண்ட (தமது) கைகளைக் கொட்டி, கரு கழல் வீரர்-பெரிய வீரககழலையணிந்த வீரர்கள், நக்கார்-சிரித்தார்கள்; (எ-று.)

மகளிர் சுனையுள்ள இடத்தைப் பளிக்குத்தலமென்று மாறுகக் கருதிச் சென்றதனால் தமது ஆடை நனையப்பெற்றனராக, அது கண்ட வீரர் கைகொட்டிச் சிரித்தன ரென்க. பளிங்குத்தலத்திற் கும் சுனைத்தலத்திற்கும் வேறுபாடு தோன்றாமையால் மாதர் மயங்கினர்: இங்ஙன மயங்கியவரைப் பார்த்துச் சிரிப்பது, உலக வியற்கையே. இங்கு மயக்கவணியும் பொதுவணியும் கலந்திருப் பது கலவையணியாம். பி-ம்:—[1]படிகத்தைப்புனல். [2]முடுக, முழுக. [3]மணி. [4]தூசு. [5]மாசிலா, மாசில. [6]நனைய. [7]கண்டு, நோக்கி. [8]கடகத்தை. [9]தம்மில். [10]கருங்குழல்வீழ, கனைகழல்வீரர். இச்செய்யுள ''அற்பகலாக்கும்'' (52) என்று தொடங்கும் பாடலுக் குப்பின் இருக்கலாம். (944)

49. பூவணை பலவுங் கண்டார் பொன்னரி மாலை கண்டார்
மேவருங் கோப மன்ன வெள்ளிலைத் தம்பல் கண்டார்
ஆவியி னினிய கொண்கர்ப் பிரிந்தறி [1]வழிந்த விஞ்சைப்
பாவையர் [2]வைகத் தீய்ந்த பல்லவ சயனங் கண்டார்.

(இ-ள்.) (அன்றியும்),— பூ அணை பலஉம் கண்டார் - மலர்ப்படுக்கை பலவற்றையும் கண்டார்; பொன்னரிமாலை கண்

டார்-(புலவியினாலோ அல்லது புணர்ச்சியினாலோ கீழ்விழுந்துள்ள) பொன்னரிமாலைகளைக் கண்டார்; மேவரும் கோபம் அன்ன - விருப்ப முண்டாகின்ற இந்திரகோபத்தையொத்த, வெள் இலை தம்பல் - வெற்றிலைத்தம்பலங்களை, கண்டார்—; ஆவியின் இனிய கொண்கர் பிரிந்து-தம்முயிரைக்காட்டிலும் இனியராகிய கணவரைப் பிரிந்து, அறிவு அழிந்த-மதியையிழந்த, விஞ்சைபப்பாவையர் - வித்தியாதர மகளிர், வைக-தங்குவதனால், தீய்ந்த - தீய்ந்துபோன, பல்லவம் சயனம் - தளிர்ப்படுக்கைகளையும், கண்டார்—; (எ-று.)

பூவணைமுதலியவற்றைத் தனித்தனியிடத்திலே கண்டன ரென்பது தோன்ற, தனித்தனி 'கண்டார்' என்றார். தம்பல்=தம்ப லம்; வெற்றிலை பாக்கு முதலியவற்றை மென்று உமிழ்ந்தது. கொண்கர்ப்பிரிந்து - இயல்பினவிகாரம். பி - ம்:—[1] இழந்த, இழிந்த. [2] வைகித். (945)

50\. பானலங் கண்க ளாடப் பவளவாய் முறுவ [1]லாடப்
பீனவெம் முலையி னிட்ட பெருவிலை யார மாடத்
தேன் முரன் றளகத் தாடத் திருமணிக் குழைக ளாட
வானவர் மகளி ராடும் வாசநா றூசல் கண்டார்.

(இ - ள்.) பானல் அம் கண்கள் ஆட - கருங்குவளைமலர் போன்ற கண்கள பிறழவும், பவளம் வாய் முறுவல் ஆட - பவளம் போன்ற (தமது) வாயிலே புன்சிரிப்புத் தோனறலும், பீனம் வெம் முலையின் இட்ட பெருவிலை ஆரம் ஆட-பருத்துள்ளனவும் (ஆடவர்) விரும்பு வனவுமான தனங்களிலே மிக்க விலைபெற்ற முத்தாரங்கள் அசைய வும், [2]தேன் அளகத்து முரன்று ஆட - தேன்வண்டுகள் கூந்தலிலே ஒலித்துக்கொண்டு சுழலவும், திரு மணி குழைகள் ஆட - சிறந்த இரத்தினங்கள்பதித்த குழையென்னுங் காதணி (செவிகளிலே) அசையவும், வானவர் மகளிர் ஆடும் - தெய்வமகளி ரேறியாடுகிற, வாசம் நாறு ஊசல்-பரிமளம்வீசுகின்ற ஊசல்களை, கண்டார்—;

தெய்வமக்ளிர் கண்கள்முதலியன ஆட ஊசலாடுவதையுஞ் சென்றவர் கண்டனரென்க. ஊசலாடுகிறஇயற்கையை வருணித் தது - தன்மைநவிற்சியணி. ஆடஎன்றசொல் ஒருபொருளில் பல முறை வந்தது - சொற்பொருட்பின்வருநிலை. பி - ம்:—[1] தோன்ற, காட்ட. (946)

51\. சுந்தர [1]வதன மாதர் துவரிதழ்ப் பவள வாயும்
அந்தமில் சுரும்புந் தேனும் மிஞிறுமுண் டல்குல் விற்கும்
பைந்தொடி மகளிர் [2]கைத்தோர் [3]பசையில்லை யென்ன [4]விட்ட
[5]மைந்தரி [6]னீத்த தீந்தேன் [7]வள்ளங்கள் பலவுங் கண்டார்.

(இ - ள்.) அல்குல் விற்கும் பைந்தொடி மகளிர் - (தமது) அல் குலை விலைக்கு விற்கின்ற பசும்பொன்னாற் செய்த தொடி யென்னும் அணியை யணிந்த விலைமகளிர், (உள்ள செல்வத்தை யெல்லாம் பறித்துக்கொண்ட பினபு), ஓர் பசை இல்லை என்ன - (இவனிடத் துச்) சிறிதும் பயனில்லையென்று கருதி, கைத்து - வெறுத்து, விட்ட-உபேட்சித்துவிட்ட, மைந்தரின - ஆடவரைப் போல,—சுந்

தரம் வதனம் மாதர் துவர் இதழ் பவளம் வாய்உம் - அழகிய முகத்தையுடைய மடந்தையரின் சிவந்த இதழோடு கூடிய பவழத்தையொத்த வாயும், அந்தம் இல் சுரும்புஉம தேனஉம மிஞிறுஉம் - எல்லையில்லாத [மிகப்பலவான] சுரும்பு முதலியனவும், உண்டு- குடித்து, நீத்த - கைவிட்டிட்ட, தீம் தேன் வளளங்கள் பலஉம்- இனிய நறவகக்கிண்ணங்களபலவற்றையும், கண்டார்—; (எ - று.)

மகளிரும் வண்டுச்சாதிகளும் இனிச் சிறிதும் பசையில்லை யென்னுமளவும பருகிய தேனகிண்ணங்கள் பல அங்குக் கிடப்பதைக் கண்டனரென்க. அவ்வாறு கிடக்கும் தேனவளளங்கட்கு, கையிற பொருளுளளவரையிலும் தம்மிடம் வைத்துக்கொண்டிருந்து இனி இவனிடத்திற பசையில்லையென்று உணர்ந்ததும் விலைமகளிரால் கைவிடப்படும் மைந்தரை உவமை கூறினர்; உவமையணி. வாயும் சுரும்பும் தேனும மிஞிறும உண்டு நீத்தவள்ளம் என இயையும். சுரும்பு முதலியன, வண்டின் சாதிபேதம். கைத்து- பொருள் எனினுமாம. பி - ம்:—[1]வான. [2]கைக்கோர். [3]பசையில. [4]நீத்த, ஈந்த. [5]மைந்தரும். [6]இயைந்த. [7]வாளங்கள். (947)

52. அற்பக [1]லாக்குஞ் சோதிப் பளிக்கறை யமளிப் பாங்கர்
மற்[2]பக மலர்ந்த திண்டோள் [3]வானவர் [4]மணந்த [5]கோல
[6]விற்பகை நுதலி ஞர்தங் கலவியின் வெறுத்து நீத்த
கற்பக மீன்ற மாலை கலனொடுங் [7]கிடப்ப கண்டார்.

(இ - ள்.) அல் பகல் ஆக்கும் சோதி-இரவையும் பகலாக்க வல்ல பேரொளியையுடைய, பளிங்கு அறை - பளிக்குப்பாறையினாலியன்ற, அமளி பாங்கர் - படுக்கையிலே, மல் பக மலர்ந்த - மற்றொழில் வேறிடத்திலில்லையாம்படி பரந்த, திண் தோள் - வலிய தோளகளையுடைய, வானவர்-தேவர்களால், மணந்த-கூடப்பெற்ற, கோலம-அழகிய, வில் பகை நுதலினர்-(தம்முடைய புருவங்களினால்) வில்லோடு பகைக்கின்ற நெற்றியையுடைய தெய்வ மகளிர், தம் கலவியின் - தமது புணர்ச்சிககாலத்தில், வெறுத்து நீத்த - வெறுப்புககொண்டு கழற்றியெறிந்த, கற்பகம் ஈன்ற மாலை - கற்பக தருககள தந்த மலர் மாலைகள், கலனொடுஉம்-அணிகலன்களோடும், கிடபப-வீழ்ந்துகிடப்பவற்றை, கண்டார்—; (எ-று.)

பளிக்குப்பாறையிலே தேவர்களாற் கூடப்பெற்ற தெய்வ மகளிர் அவ்வானவரை இறுகத் தழுவிக்கொள்வதற்கு இடையீடாயிருக்கின்றன என்று கருதித தாம அணிந்திருந்த கற்பக மலர் மாலைகளையும் கலனகளையும வெறுத்துக் களைந்தெறிந்தன ரென்க. இதனாலும், தேவர்களும இனபம நுகர்தற்கு இடனானது அம்மலை எனபதைப் பெறவைததார். பி - ம்:—[1]ஆகும. [2]பகல. [3]மண்ணவர். [4]மலர்ந்த. [5]கோலம. [6]விற்பக. [7]கிடப்பக. (948)

53. கையென மலர வேண்டி யரும்பிய காந்த ளேக்கிப்
பையர [1]விதுவென் றஞ்சிப் படைக்கண்கள் [2]புதைக்கின் றுரும்
நெய்[3]தவழ் வயிரப் பாறை நிழலிடைத் தோன்றும் [4]போதைக்
[5]கொய்திவை தருதி ரென்று கொழுநரைத் தொழுகின் றுரும்.

54\. பின்னங்க ளுகிரிற் செய்து பிண்டியந் [1]தளிர்கைக் கொண்ட
சின்னங்கண் முலையி னப்பித் தேமலர் கொய்கின் றாரும்
வன்னங்கள் பலவுந் தோன்ற மணி[2]யொளிர் [3]மலையி னில்லா
அன்னங்கள் [4]புகுந்த தென்ன வகன்சுனை குடைகின் றாரும்.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (53) கை என மலர வேண்டி அரும்பிய - (மகளிரின்) கை போல மலரவிரும்பி அரும்பாகவுள்ள, காந்தள் - காந்தளை [காந்தளின் அரும்பை], நோக்கி-பார்த்து, இது பை அரவு என்று அஞ்சி-இது படத்தையுடைய பாம்பு என்று கருதியதனால் அச்சங்கொண்டு, படை கணகள் - வேற்படைபோன்ற (தமது) கண்களை, புதைக்கின்றார்உம் - மூடிக்கொள்பவரும்,—நெய் தவழ் வயிரம் பாறை - நெய்ப்புக்குணம் பொருந்தியுள்ள வயிர ரத்தின மயமான பாறைகளின், நிழலிடை-ஒளியில், தோன்றும் - பிரதிபிம்பிக்கின்ற, போதை - மலரை, (உண்மையான மலரென்று மயங்கியதனால்), இவை கொய்து தருதிர் என்று கொழுநரை தொழுகின்றார்உம் - 'இந்தமலர்களைப் பறித்துத்தாருங்கள்' என்று (தமது) கணவரை வணங்கிக்கேட்பவரும், (54) பிண்டி அம் தளிர் - அசோகின் அழகியதளிர்களை, உகிரில்-(தமது) நகங்களினால், பின்னங்கள் செய்து-சிறுசிறு துண்டுகளாகக் கிள்ளி, கைக்கொண்ட - கையினாற்கொண்டனவாகிய, சின்னங்கள் - சிறுதகடு போலுள்ள அத்தளிர்த் துண்டங்களை, முலையின் அப்பி - (தம) முலையிலே அழகுபடப்பொருத்தி, தேன மலர்-தேனோடுகூடிய மலர்களை, கொய்கின்றார்உம் - பறிப்பவர்களும்,—வனனங்கள் பலஉம் தோன்ற - பலவகை வர்ணங்களும் தோன்றும்படி, மணி-நவரத்தினங்களும், ஒளிர் - விளங்குகின்ற, மலையின் - மலையிலே, நில்லா-நிலைபெற்றுவாழாத, அன்னங்கள் - அன்னப்பறவைகள், புகுந்த என்ன-(இப்போது)புகுந்தன என்று (காண்பவர்) கருதும்படி, அகல் சுனை-பரவிய சுனையிலே, குடைகின்றார்உம்-முழுகுபவரும (ஆயினர், அந்தச் சேனையிற்சென்ற மாதரார்); (எ-று.)

(53) காந்தள் மலர்ந்தால்கைபோன்றிருக்கு மென்க. காந்தள் அரும்பைப் பையரவாகவும், வயிரப்பாறையில் பிரதிபிம்பமாகத் தோன்றும் போதை உண்மையான போதாகவும் மகளிர் மயங்கினரெனக் கூறியது மயக்கவணியாம். பிரதிபிம்பமாகத்தோன்றிய மலரை உண்மையானமலரென்றே கருதினா ரென்றமைக்கு ஏற்ப, நெய் தவழ் வயிரப்பாறையைத் தெளிந்த நீர்நிறைந்த சுனையாகமயங்கினரெனவுங் கொள்க. பி - ம்:—[1]இவை, ஏ. [2]புடைக்கின்றாரும். [3]திரள். [4]பேதை. [5]கொய்துநீர்.

(54) தளிரிலைகளைக் கிள்ளிக் கயல்மீன் காமவல்லி முதலிய வடிவம்படக் கொங்கையில் அப்புதல், அலங்காரத்திற்காக. இங்ஙனம் மகளிர் செய்தல் பண்டைக்காலத்து வழக்கமாதலை "கொழுமடற் குமரிவாழைத் துகிற்சுருளகொண்டுதோன்றச், செழுமலர்க்காமவல்லி செருக்கயற்சிற்பமாகக், கழுமணிச் செம்பொனூழிக் கைவிரலுகிரிற்கிள்ளி, விழுமுலை சூட்டிநின்றார் விண்ணவர் மகளிரொத்

தார்'' என்ற சிந்தாமணியாலும் அறிக. மலர் கொய்தல் சுனைகுடைதல் என்பவற்றைச் செய்வாராயினர், சென்ற மாதரென்க. எழுவாய் பயனிலைகள் வருவித்து முடிக்கப்பட்டன. அன்னப்பறவை மருத நிலத்துக் கருபபொருளாதலால் 'மலையி னில்லா' என்றுருமாம். பிண்டியந்தளிரை உகிரில் சின்னங்கள் பின்னங்கள்செய்து என்று கூட்டி உரைததலுமொன்று. பி-ம்:—[1] தளிரில். [2] ஒளி. [3] குயிலினல்லார், மலையினில்லாது. [4] புகுந்தது. (949-950)

வேறு.

55.—ஒன்பது கவிகள்–மலையின் வருணனை.

[1] ஈனு மாழை யிளந்தளி ரேயொளி
ஈனு மாழை யிளந்தளி ரே[2] யிடை
மானும் வேழமு நாகமு மாதர்தோள்
மானும் வேழமு நாகமு மாடெலாம்.

(இ-ள்.) இடை-(அந்தமலையின) நடுப்பாகத்தில், (உள்ளது),—ஈனும்-தளிர்கின்ற, மாழை இளந் தளிர் ஏய்-மாமரத்தின் இளைய தளிரையொத்த, ஒளிஈனும்-ஒளிதருகின்ற, மாழை-பொன்னின், இளந் தளிர்ஏ-மெல்லிய தகடேயாம்; மாடுஎலாம்-(அம்மலையின்) பக்கங்களிலெல்லாம்,—மான்உம்—, வேழம்உம்-யானையும், நாகம்உம்-பாம்பும், மாதர் தோள் மானும்-மகளிரின் தோளை யொத்து (நெய்ப்பு பசுமை சுற்றுடைமை முதலிய)தனமையைக் கொண்ட, வேழம்உம்-மூங்கில்களும், நாகம்உம-சுரபுன்னைமரங்களும், (உள்ளன); (எ-று.)

பயனிலை, வருவித்து உரைக்கப்பட்டது. இது முதல் ஒன்பது கவிகளில், யமகமென்னுஞ் சொல்லணி அமைந்திருத்தல் காண்க: தமிழில் மடக்கு எனப்படும். (வடமொழியில் சிசுபாலவதம் முதலிய காவியங்களிலும வரைக்காடசி கூறுமிடத்து யமகமென்னுஞ் சொல்லணிபடக் கூறியிருப்பது, இங்கு நினைவிறகு வருகின்றது.) இப்பாடலுக்கு-மாமரத்தின்கீழ் மானும், மூங்கிலின்கீழ் யானைகளும், சுரபுன்னைமரததினகீழ நாகங்களும தங்கியுள்ளன என்று கருத்துக் கூறினருமுளர்; அன்னார் இடைமான்உம்—மாமரத்தினகீழும் (மான், ன்-சாரியை) என்பர். மாதர்தோள்மானும் வேழம்-எதிர்நிலையுவமையணி. பின்னிரண்டடிகட்கு-மானும், வேழமும், நாகமும [வானரங்களும] மாதர்தோள்மானும வேழமும், நாகமும்[சுரபுனனை மரங்களும்] உள்ளன என்று கூறுதலு முணடு. பி-ம்:—[1] ஈனும் வாழை. [2] ஒளி. சிலபிரதிகளில் இதன்பின ''புகலும்'' (58) என்ற பாடல். (951)

56. திமிர மாவுடற் [1] குங்குமச் [2] சேதகந்
திமிர மாவொடுஞ் சந்தொடுந் தேய்க்குமால்
[3] அமர மாதரை யொத்தொளி ரஞ்சொலார்
[3] அமர மாதரை யொத்ததவ் வானமே.

(இ-ள்.) திமிரம் மா-இருள்போன்ற கருநிறத்தையுடைய காட்டுப் பன்றிகள், உடல்-(தம்) உடலிலே, குங்குமம் சேதகம-(அங்குத் தங்கிய மாதரார் சேமித்துவைத்த) குங்குமக்குழம்பின்

சேறு, திமிர நிரம்பியதனல், (அச்சேறு போகுமாறு), மாவொடும் - மாமரத்திலும், சந்தொடும்-சந்தனமரததிலும், தேய்க்கும்-(தம் முடம்பை) உராயச்செய்யும; (அந்த இடத்தில்), அமர(ர்) மாதரை ஒத்துஒளிர் அம் சொலார்-தேவமாதரையொத்து விளங்குகின்ற அழகிய சொல்லையுடைய மகளிர், அமர - பொருந்தியிருத்தலால், மா தரை-அந்தப் பெரிய மலைப்பூமியானது. அ வானம ஏ ஒத்தது - (தேவமகளிர் தங்கப்பெற்ற) அந்தச்சுவர்க்கத்தையே யொத்து விளங்கிற்று; (எ-று.)

கரும் பன்றி தன்னுடலிற் குங்குமச்சேறு போக, மாமரத்திலும் சந்தனமரத்திலும் தேய்க்கும்: தேவமங்கையரையொத்த பெண்கள் அங்குவாழ்தலால், அம்மலை தேவலோகம்போன் றிருக்குமென்றவாறு. திமிரமா-சேனையிலுள்ள யானையென்றலு மொன்று. திமிர-உதிரஎனினுமாம். வானததின சிறப்புத்தோனற 'அவ்வானம்' என உலகறிசுட்டாற் கூறினர். மாவொடும சந்தொடும்-வேற்றுமைமயக்கம். பி-ம்:—[1]சந்தனச். [2]சேறகம், சேறகத். [3]அமரர். இந்தப்பாடலும் அடுத்தபாடலும், சிலபிரதிகளில் "துன்னரமபை" (59) என்பதனபின முறையே உள்ளன. (952)

57\. பேர வாவொடு மாசுணம் [1]பேரவே
பேர வாவொடு மாசுணம [2]பேரவே
ஆர வாரத்தி னோடு மருவியே
ஆர வாரத்தி னோடு மருவியே.

(இ-ள்) (இரையை விருப்பியதனல்), பேர் அவாவொடு-மிக்க ஆவலோடு, மாசுணம் பேர-பெருமபாமபுகள் (தமமிருபபிடம விட்டுச்) செல்வதனல், வே பேர-மூங்கில்கள் வேரற்றுவிழ, (அங்ஙனம் மூங்கில்கள் வேரற்று விழுவதுகண்டு அஞ்சியதனல்), ஆ ஒடு மா சுணம் பேர-(காட்டுப) பசுக்கள ஓடுவதனலான பெரும் புழுதிகள் பறக்கையில், அருவி-(அமமலையின) நீரருவிகள், ஆர - மிகவும், ஆரததினேடுஉம் மருவி-முத்துக்களோடு கலந்து, ஆரவாரத்தின்-பேரிரைச்சலோடு, ஓடும்-ஓடாநிற்கும்; (எ-று.)

ஒருபுறத்திற் புழுதிகள் பறக்க, மற்றொருபுறத்தில் அருவி ஓடாநிறகும் அம்மலையென, மலையின் சிறப்புக்கூறியவாறு; புழுதிகள் பறப்பதற்குக் காரணம்-மூங்கிற்பொதுமபி னிடையிலிருந்த மலைப்பாம்புகள் இரையை ஆவலோடுவிரும்பித் தம்மிடம்விட்டுச் செல்லுகையில் மூங்கில்கள் வேரற்று விழுந்தனவாக, அதைக் கண்ட காட்டுப்பசுக்கள வெருவியோடியமை. இனி, இச்செய்யுட்குச் சிறிது வேறுபடப் பொருள் கூறுவாருமுளர். முதலடியில் வே=வேய், தொகுத்தல். இரண்டம அடியில், ஆ ஒடு=ஆ ஓடு என்க. ஏகாரங்கள்-அசைநிலைகள். பி-ம்:—[1]பேரவேய். [2]பெருமால், பேதமால். (953)

58\. புகலும் வாளரிக் கண்ணியர் [1]பொற்புயம்
புகலும் வாளரிக் கண்ணியர் பூண்முலை
அகிலு மாரமு [2]மாரவங் கோங்குமே
அகிலு மாரமு [3]மாரவங் கோங்குமே.

(இ - ள்.) புகலும் வாள் அரிக்கு அண்ணியர் - சிறப்பித்துச் சொல்லுகின்ற வாள்போற் கொடிய சிங்கத்தையொத்த ஆடவர்களின், பொன் புயம்- அழகியதோள்களில், வாள் அரி கண்ணியர் - ஒளிபொருந்திச் செவ்வரிபரந்த கண்களையுடைய மடவாரின், பூண் முலை- ஆபரணமணிந்த தனங்கள், புகலும்-சேர்தலும்,—அகில்உம் - (அந்த முலைகளிலணிந்திருந்த) அகில்தேய்வையும், ஆரம்உம் - முத்துவடமும், ஆர-மிகவும், அங்கு-அப்புயங்களில், ஓங்கும் - சிறக்கும்; அகில்உம்-(புயத்திற்கு ஒப்பாகின்ற) அம்மலைகளினிடங்களிலும், ஆரம்உம்-சந்தனமரங்களும், மாரவம்உம்) - குங்குமமரமும், கோங்குஉம்-கோங்கிலவமரங்களும், (பொருந்தியிருக்கும்); (எ-று.)

மாதரார் தழுவுகையில் அவர்களணிந்த அகிலும் ஆரமும் ஆடவரது புயங்களிற்சேர்ந்து மிகச்சிறக்குமென்பது, முதல் மூன்றடிகளின் பொருள். இங்ஙனம் புயத்தை வருணித்து மலையினிடத்தை வருணித்ததனால், புயத்திற்கு மலையோடு ஒப்புமை பெறப்படும். அகில்- அகிலமென்ற வடசொல்லின் விகாரம்: பூமியென்று பொருளுள்ள இச்சொல், பூமியின் ஏகதேசமாகிய மலைப்பகுதியைச் சுட்டிறறென்க. இனி, முதலடியில் வாள் அரி கண்ணியர் என்றே பிரித்து - ஒளிபொருந்திய வண்டுகள்மொய்க்கின்ற மாலைசூடிய வீரரென்றும், ஒளிபொருந்திய பொன்னரிமாலை யணிந்தவரெனறும் உரைத்தலுமாம். மாரவம்-மரவமென்பதன் நீட்டல். ஈற்றடியிற் பயனிலை வருவிக்கப்பட்டது. இனி ஈற்றடியில் 'மே' என்று பிரித்து 'கொளவாருங் களவருநேர்' என்றவிடத்து 'நேர்வர்' என்பது 'நேர்' என்று வினையடிமாத்திரம் நின்றதுபோல, 'மேவும்' என்பது வினைப்பகுதிமாத்திரம் நினறதென உரைத்தலுமொன்று. ஏ-அசைநிலை. ஈற்றடிக்கு, அகில்உம் - அம்மலையினிடமெல்லாம், ஆரம்உம் - சந்தனமரங்களும், ஆர் - ஆத்திமரங்களும், அ-அந்த, அம- அழகிய, கோங்கும் மேவும் எனினுமாம். இங்ஙன் கூறுமிடத்து, அகில் = அகிலம், எல்லாம என்னும் பொருளினது. பி-ம்:—[1] தோளிணை. [2] ஆரவெங்கோங்குமே. (954)

59. துன்ன ரம்பை [1] நிரம்பிய [2] தொல்வரை
துன்ன ரம்பைய ரூருவிற் றோன்றுமால்
கின்ன ரம்பயில் கீதங்க [3] ளென்னலாம்
கிஞ்ன ரம்பயில் கின்றன [4] ரேழைமார்.

(இ - ள்.) தொல் வரை-பழைய அந்தமலையில், துன்னு அரம்பை-நெருங்கிமுளைத்துள்ள வாழைகள், நிரபபிய - நிரமபியவை —துன்னு (அங்கு) வந்த, அரம்பையர்-அமரமகளிரின், ஊருவின்-தொடைபோல, தோன்றும்—;(அங்கு),ஏழைமார்-மகளிர், இன்னரம் பயில்கீதங்கள் என்னல்ஆம - கின்னரமென்ற தேவசாதிகள் பழகிப்பாடுகின்ற பாடலென்று சொல்லத்தக்க (இன்னோசையையுடைய), கின்னரம்-யாழை, பயில்கின்றனர்-வாசிக்கின்றனர்;

மகளிரின் தொடைக்குப் பிரசித்தஉபமானமாகச் சொல்லப்படும் வாழையை இங்கு உபமேயமாகக்கொண்டு, அரம்பையரின்

ஊருவை அவ்வாழைக்கு உபமானமாகக் கூறியது-எதிர்நிலையுவமை யணி. கின்னரம் - யாழென்னுமல் வேறோரிசைக்கருவியென்றலு முண்டு. [3]என்னவாங் கின்னரம் என்ற பாடத்துக்கு, ஏழைமார் இன்னரம்பயில் கீதங்கள் என்ன, ஆங்கு - அவ்விடத்தில், இன் நரம்பு-யாழின் இனிய நரம்பை(த் தடவி வாசித்து), அயில்கின்ற னர்-(அவற்றினின்று தோன்றுகின்ற இனிய இசையை) அனுப விக்கின்றனரென்று பொருள் காணலாம். பி - ம்:—[1]நெருங்கிய. [2]சூழ்வரை. [3]என்னவே, என்னவாழ், என்னலாய்க், அன்னவாய்க், அன்னவாக். [4]ஏழையர். (955)

60. ஊறு மாகட [1]மாவுற வூங்கெலாம்
ஊறு மாகட மாமத வோடுமே
யாறு சேர்வன மாவரை யாடுமே
யாறு சேர்வன மாவரை யாடுமே.

(இ - ள்.) மா கடம்-பெரிய காட்டிலுள்ள, மா-மாமரங்கள், ஊறு உற-சேதமடையும்படி, ஊங்கு எலாம - அம்மலையினிடங்களி லெல்லாம், ஊறும் ஆ-மேன்மேற்சுரக்குமாறு, கடம் மா - யானை களின், மதம்-மதநீர்ப்பெருக்கு, ஓடும்-ஓடாநிற்கும்; (அந்தப்பெருக் கினால்), ஆறு சேர்-வழிகளில் திரண்ட, வனம்-காட்டிலுள்ள, ஆ- ஆச்சாமரமும், வரை-மூங்கிலும், ஆடும்-(வேர்பறிந்து) அசையா நிற்கும்; யாறு-அம்மலையாறுகளில், சேர்வன - (நீருண்ணுதற்குச்) செல்பவை, வரை யாடு உம்-மலையாடுகளும், மா - மற்றை மிருகங் களுமாம்; (எ - று.)—ஏகாரங்கள்-அசைநிலைகள்.

காட்டிலுள்ள மரங்கள் சேதமடையும்படி யானைமதங்கள் பாய் வதனால், ஆச்சாமுதலியன ஒருபுறத்தில் வேர்பறிந்து வீழாநிற்க, மற்றொருபுறத்தில் நீருண்ணுமாறு மலையாறுகளில் வரையாடு முதலிய காட்டுவிலங்குகள் செல்லுமென்பதாம. முன்னிரண்டடி களில் தொடர்புயர்வுநவிற்சியணி காண்க. 'கடமா' எனவே, யானை யாயிற்று. (கடம்-மதநீர்: மா-மிருகம்.) பி-ம்:—[1]மாவுடலூங்கெலாம், மாவுடலாங்கெலாம், மூடுமருங்கெலாம். (956)

61. கல்லி யங்கு கருங்[1]குற மங்கையர்
கல்லி யங்ககழ் காமர் கிழங் [2]கெடா
வல்லி யங்க ணெருங்கு மருங்கெலாம்
வல்லி யங்க ணெருங்கி மயங்குமே.

(இ - ள்.) கல் இயங்கு கருங் குறம் மங்கையர் - மலையில்வாழ் கின்ற கருநிறமுள்ள குறத்தியர், அங்கு-அம்மலையில், கல்லி அகழ்- வெட்டித்தோண்டி, காமர் கிழங்குஎடா-அழகிய கிழங்கை யெடுப் பதற்காக, வல்லியங்கள் நெருங்கு மருங்குஎலாம்-புலிகள் நெருங்கி வாழ்கின்ற மலைப்பக்கங்களிலெல்லாம், வல் இயங்கள்-வலிய பறை கள், நெருங்கி-மிகுந்து, மயங்கும்-ஒலிக்கும்; (எ - று.)

குறத்தியர் கிழங்கெடுக்கவேண்டிய பருவமென்று உணர்த்து வதற்காக மலைவாழுங் குறவர் பலவகைத் தோற்கருவிகளை முழக் குவரென்பதாம். கருமை-வலிமையுமாம். எடா-உடன்பாட்டுச்

சம்: எடுக்க என்னும்பொருளது· இனி, எடா - ஈறுகெட்ட எதிர் மறைவினையெச்சமெனக் கொண்டு, எடுக்கவொட்டாமல், மருங்கெலாம் வல்லியங்கள் நெருங்கும்: (பின்பு), வல்-வலிய, இயங்கள் நெருங்கியொலித்தலினால், (அவை) மயக்கமுற்றோடும் என்றலும் ஒன்று; அன்றி, எடா - எடுக்காத, வல்லி நெருங்கும் அம் கண் மருங்கு எலாம் - கொடிகள்நெருங்கிய அழகிய இடத்தையுடைய பக்கங்களிலெல்லாம், வல்லியங்கள் - புலிகள், நெருங்கி மயங்கு மென்று கூறுவாருமுளர். அகழ் - அகழ்ந்து: வினைப்பகுதி வினையெச்சப்பொருள்பட்டுவந்தது: 'வரிப்புனைப்பந்து' என்ற இடத்துப் போல. பி - ம்:—[1] குழல். [2] எடார். (957)

62. [1] கோளி பங்கய மூழ்கக் [2] குளிர்கயங்
கோளி பங்கய [3] மூழ்கக் குலைந்தவால்
ஆளி [4] பொங்கு [5] மரம்பையி ரோதியேய்
ஆளி [4] பொங்கு மரம்பைய ரோதியே.

(இ - ள்.) கோள் - வலிமையையுடைய, இபம் - யானைகள், கயம் - (அம்மலையிலுள்ள) கயத்தில், மூழ்க - மூழ்குவதனால், (அக்குளக்கரையிலுள்ள), குளிர் - குளிர்ச்சியைத்தருகின்ற, கய - பெரிய, கோளி - ஆலமரமும், (அக்குளத்திலுள்ள), பங்கயம் - தாமரையும், ஊழ்க குலைந்த - பதனழிந்துகெட்டன: ஆளி - சிங்கங்கள், பொங்கும் - உக்கிரங்கொண்டுஉலாவுகின்ற, மரம் பையிர் - மரங்கள் அடர்ந்துள்ள, ஓதி - அம்மலையில், ஏய் - தங்கிய, அரம்பையர் - தேவமாதருடைய, ஓதி - கூந்தலில், ஆளி - வண்டுகள், பொங்கும் - மகிழ்ச்சிகொண்டு தங்கும்; (எ - று.)—ஆல், ஏ - அசைகள்.

யானைகள் அம்மலையின் கயத்திலே துளைவதனால் அந்த நீர் நிலையிலுள்ள தாமரையும் அக்கயத்தின் கரையிலுள்ள கோளியாலமும் அழிந்தனவாக, ஒருசார் அரம்பையர் தங்குவதனால் அவர் கூந்தலிலுள்ள கற்பகமலரின் தேனைப்பருகி வண்டுகள் களித்து நிற்குமென்க. பூவாதே காய்க்கும் மரமென்று பொருள்படுவதான 'கோளி' என்னுஞ் சொல் 'குளிர்கய' என்ற அடைமொழி பெற்றுவந்ததனால் தனதுநிழலாற் குளிர்ச்சியைத் தரும் பெருமரமான ஆலமரத்தைக் காட்டிற்று. ஊழ்கஎன்ற செயவெனெச்சம் யமகம்நோக்கி, 'ஊழ்க' என விகாரப்பட்டு வந்ததென்க. மூன்றுமடியில் 'பயில்' என்ற வினைப்பகுதி 'பையிர்' என்று வந்தது. நான்காமடியில் ஆளி - அளிஎன்றதன் நீட்டல். ஓதியென்பது பெண்மயிர் மலை யென்னும் இரு பொருளிலும் வரு மென்பதை "மலையும் பெண்பான்மயிரும் பூசையும், ஓதினவன்பெயரு மோதி யென்றுரைப்பர்" என்ற நிகண்டுவினால் அறிக. இபம் - வடசொல். இபமும் [யானையும்] கயமும் [யானைக் கன்றும்] முழுக, கயம் கோளி பங்கயம் - குளத்தைவாழுமிடமாகக் கொண்ட தாமரை, மூழ்க-முழுவதும், குலைந்த என்று உரைப்பாருமுளர். பி-ம்:—[1] கோளில். [2] குழி. [3] எங்குங். [4] ஓங்கும். [5] அருவரையூடிழிந்து, அலங்கலினீடழிந்து. (958)

63. ஆக மாலைய மாகவு ளாள்பொலி
வாக [1]மாலை யுளாரென லாகுமால்
மேக மாலை [2]மிடைந்தன [3]மேலெலாம்
மேக மாலை [4]கிடந்தது கீழெலாம்.

(இ - ள்.) (அம்மலையில்), மேகம் மாலை - மேகங்களின் வரிசைகள், மேல்எலாம் - மேலிடம்முழுவதும், மிடைந்தன - நெருங்கினவாய், மேக - தங்கியிருக்க, கீழ்எலாம்-கீழிடங்களில், மாலை - மலர் மாலை, கிடந்தது—; (அதனால்), (அந்தமலையானது),—ஆகம் ஆலையம் ஆக உளாள் பொலி - (தன்) திருமேனியைக் கோயிலாகக் கொண்ட இலக்குமி விளங்குகின்ற, வாக - அழகையுடைய, மால் - திருமால், உளார் - தங்கியிருக்கின்றனர், எனல் - என்று சொல்லுவதற்கு, ஆகும் - பொருந்தும்; (எ - று.)—ஆல்—ஈற்றசை; தேற்றமுமாம். இரண்டாமடியில் 'மாலை' என்பதில், ஐகாரம் - சாரியை. 'ஆகமாலயமாகவுளாள்பொலி, வாகமாலெனதாகிய தம்மலை' என்றும் பாடமுண்டு.

அம்மலையின் மேற்புறத்திலெல்லாம் மேகங்கள் வரிசைவரிசையாகப் படிந்திருக்கக் கீழ்ப்புறத்தில் மலர்மாலை கிடத்தலால், அம்மலை பலரால் அருச்சிக்கப்பட்ட மலர்மாலையைப் பூண்ட கருநிறத் திருமால்போல விளங்கு மென்பதாம். நான்காமடியிலுள்ள மாலையென்பதற்கு - இலக்கணையாக மாலைக்காலத்துக் கதிரொளியெனக்கொண்டு, மேகமாலை திருமால்போலவும், அம்மேகமாலையின் அடிப்பகுதியிற்படும் மாலைக்கதிரொளி அத்திருமாலின் திருவரையிற் சாத்திய பீதாம்பரம்போலவுந் தோன்று மெனக் கருத்து உரைத்தலுமொன்று. ஆலையம்=ஆலயம்: யமகத்திற்காக, வந்தது. அழகு என்னும் பொருளுள்ள வாகுஎன்ற சொல் பெயரெச்சவிகுதி யேற்று 'வாக' என வந்தது: இது - குறிப்புப் பெயரெச்சம். மேக - மேவுஎன்பது வுகரங்கெட்டு, குச்சாரியையும் அகரவிகுதியும் பெற்றுவந்ததென்க. இனி, பொலிவுஆக எனப் பிரித்து - பொலிவுதோன்ற வீற்றிருத்தலால் என்றும், நான்காமடியில் மேகமாலை என்பதற்கு - முத்தக்காசு என்னும் புல்வரிசை என்றும், கம் - சிரசில், மே - பொருந்திய, மாலை - மலர்மாலை என்றும் உரைத்தாருமுளர். பி - ம்:—[1]மாலயரின் றெனலாகுமால், மாலயனின்றெனலாகுமால், மாலெனலாகிய தம்மலை. [2]மிடைந்தது. [3]கீழெலாம். [4]மிடைந்தது, மிடைந்தன. (959)

64.—சேனையில்வந்த மாதரும் மைந்தரும் அங்கு விளையாடுதல்.

பொங்கு தே[1]னுகர் பூமிஞி றுமென
எங்கு மாதரு மைந்தரு [2]மீண்டியத்
துங்க மால்வரைச் சூழல்க ளியாவையும்
தங்கி [3]நீங்கலர் தாமினி [4]தாடுவார்.

(இ - ள்.) பொங்கு - பெருகுகின்ற, தேன் நுகர் - தேனையுண்கின்ற, பூ - பூவில்மொய்க்கின்ற, மிஞிறு ஆம் என - வண்டு

கள்போல, எங்குஉம் - எல்லாப்பக்கங்களிலும், மாதர்உம் - மகளிரும், மைந்தர்உம் - ஆடவரும், ஈண்டி - நெருங்கி, அ துங்கம் மால் வரை சூழல்கள் யாவைஉம் தங்கி - ஓங்கிய பெரிய அம்மலையின் சாரல்களிலெல்லாம் வசித்து. நீங்கலர் - (அம்மலையைவிட்டுப்) பிரிய மனமில்லாதவராய், தாம்—, இனிது ஆடுவார்-இனிமையாக விளையாடலானார்கள்; (எ-று.)

வண்டுகள் மலர்களில் மொய்த்து ஆங்குள்ள தேனை நுகர்வது போல, மைந்தரும் அம்மலைச்சாரல்களிலெல்லாம் மொய்த்து, ஆங்காங்குள்ள வளங்களை நுகரலாயின ரென்பதாம். பி - ம்:—[1] நிமிர். [2] ஈண்டினார், ஈண்டிய. [3] நீங்கிலர். [4] ஆடினார். (960)

65.—சென்றவர் அம்மலைவளத்தில் ஈடுபட்டிருத்தல்.

[1] இறக்க மென்பதை [2] யெண்ணில ரெண்ணுங்கால்
[3] பிறக்கு மென்பதோர் பீழைய தாதலால்
துறக்க மெய்திய தூயவ ரேயென
மறக்க [4] கிற்றில ரன்னதன் மாண்பெலாம்.

(இ - ள்.) (அங்குத் தங்கிய ஆடவரும் மகளிரும்), 'இறக்கம் என்பதை - (அம்மலையைவிட்டு) இறங்குதலென்பதை, எண்ணுங்கால் - எண்ணினால், அது-அச்செயல், ஓர்-ஒப்பற்ற, பீழை - துன்பத்தை, பிறக்கும்-உண்டாக்கும்,' என்பது ஆதலால்-எனபதாகிய ஒருகாரணத்தால், எண்ணிலர் - (அம்மலையைவிட்டு இறஙகுவதை மனத்தினாலும்) நினையாதவரானார்கள்; (அன்றியும் அவர்கள்), துறக்கம் எய்திய தூயவர் என-விண்ணுலகவின்பத்தை நுகர்கின்ற பெரியவர்போல, அன்னதன்-அம்மலையின், மாண்பு எலாம் - வளங்களையெல்லாம், மறக்ககிற்றிலர்-மறக்கவியலாதவராயினர்; (எ - று.)

துறக்கம்புக்க பெரியோர் அதன்சிறப்பை யெண்ணுவதன்றி, வேறுஎதையும் மனத்தினாலும் கருதாதவாறுபோல, அம்மலையைச் சேர்ந்த மகளிரும் ஆடவரும அம்மலைவளததிலீடுபட்டிருந்ததன்றி அப்பாற்செல்லநினைக்கவு மில்லை யென்பதாம். பிறக்கும=பிறப்பிக்கும்: தன்வினை - பிறவினைப்பொருளது. பி - ம்:—[1] இறக்க. [2] எண்ணலரன்னது, எண்ணலரென்பது. [3] பிறக்கலன்னது, பிறக்கலன்னதோர், பிறக்கவென்பது. [4] கிற்கிலர். (961)

வேறு.

66 —அந்திக்கால வருணனை.

மஞ்சார் மலைவாரண மொத்தது வானி னோடும்
[1] வெஞ்சாயை யுடைக்கதி ரங்கதன் மீது பாயும்
பஞ்சா னனமொத்தது மற்றது பாய [2] வூறுஞ்
செஞ்சோரி யெனப்பொலி வுற்றது செக்கர் வானம்.

(இ - ள்.) மஞ்சு ஆர் மலை - மேகம்தங்கப்பெற்ற (அத்தமய) மலையானது, வாரணம் ஒத்தது - யானையைப் போன்றிருந்தது: வானின் ஓடும் வெம் சாயை உடை - ஆகாயத்தில் விரைந்துசெல்லு

இன்ற வெப்பமானகிரணங்களையுடைய, கதிர்-சூரியன், அதன்மீது-அந்தயானையின்மீது, பாயும்-பாய்கின்ற, பஞ்சானனம் ஒத்தது-சிங்கத்தையொத்தது; செக்கர் வானம்-செவ்வானமானது, அது பாய-அந்தச்சிங்கம் (யானையின்மீது) பாய்ந்ததனால், ஊறும் - சுரக்கின்ற, செஞ் சோரி என - செந்நிறமுள்ள இரத்தம்போல, பொலிவுற்றது - விளங்கிற்று; (எ - று.)—அங்கு, மற்று - அசைகள்.

அப்போது அந்திப்பொழுதாகவே, சூரியன் அத்தகிரியைச் சேரச் செவ்வானம் தோன்றியதை, ஒருயானையின்மீது சிங்கம் பாய்ந்ததனால் எங்குஞ் செந்நிறச்சோரி ஊறியதைப் போன்றதென வருணித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. மஞ்சார் மலை எனப் பொதுப்படக் கூறினரேனும் மேல் 'செக்கர்வானம்' எனவருவதனால், அத்தகிரியெனக் கொள்க. பஞ்சானனம் - பரந்தமுகமுள்ளதெனப் பொருள்படும் வடசொல். பி-ம்:—[1]செஞ். [2]ஏறும். (962)

67.—அவ்வந்திக்காலத்துச் சந்திரசைலத்தின் தோற்றம்.

திணியார் சினைமா மரமியாவையும் செக்கர் பாயத்
தணியாத நறுந்தளி [1]ரீன்றன [2]போன்று [3]தாழ
[4]அணியா ரொளிவந்து [5]நிரம்பலி [6]னங்க மெங்கும்
மணியா [7]லியன்றம் மலை [8]யொத்த[9]தவ் வாசில் குன்றம்.

(இ - ள்.) திணி ஆர் - வலிமைபொருந்திய, சினை - கிளைகளையுடைய, மா மரம் யாவைஉம் - பெரியமரங்களெல்லாம், செக்கர் பாய-செவ்வானத்தினொளி (தம்மீது) வீசுவதனால், தணியாத நறு தளிர் ஈன்றன போன்று தாழ-குறையாத சிறந்த தளிர்களைப் புதிதாக உண்டாக்கினாற்போன்று தழைந்துநிற்க,—அங்கம் எங்கும்-தன்னுடல்முழுவதும், அணி ஆர் ஒளி வந்து நிரம்பலின் - அழகுபொருந்திய அந்தச்செந்நிறவொளி வந்து நிறைதலினால், அ ஆசு இல் குன்றம்-குற்றமற்ற அந்தமலையானது, மணியால் இயன்ற மலை-செந்நிறமுள்ள இரத்தினங்களாலிழைக்கப்பட்டுள்ள மலையை, ஒத்தது—; (எ - று.)

செவ்வானம் வீசப்பெறுதலால் செந்தளிர் புதிதாக உண்டாகப்பெற்றாற்போன்ற மரங்கள் பலவும் கவிந்த அந்தச்சந்திரசைலம், செந்நிறமணிகொண்டு இழைக்கப்பட்டதுபோல் விளங்கிற்றென்பதாம்: தற்குறிபபேற்றவணி. அளக்கலாகாவளவு முதலிய மலைக்குரிய தன்மைகளிற் குறைவற்றதென்பார் 'ஆசில் குன்றம்' என்றார். பி - ம்:—[1]தந்தன. [2]போன்ற. [3]தாழ்வ, தாழா. [4]அணியா. [5]நிரமபின. [6]அங்குமிங்கும். [7]இயன்றமலை. [8]போன்றது, ஒத்தது. [9]மையில், அம்மையில். (963)

68.—சந்திரசைல வருணனை.

கண்ணுக் கினி[1]தாகி விளங்கிய காட்சியாலும்
எண்ணற் கரி[1]தாகி [2]யிலங்கு சிரங்களாலும்
வண்ணக் கொழுஞ்[3]சந் தனஞ்சேர்ந் ததுமார்[4]ப ணிந்த
அண்ணற் கரியோன்றனை யொத்ததவ் வாசில் குன்றம்.

(இ - ள்.) கண்ணுக்கு—, இனிது ஆகி விளங்கிய அழகுடையதாகித் தோன்றுகிற, காட்சியால்உம் - தோற்றப் பொலிவாலும், எண்ணற்கு அரிது ஆகி இலங்கு - எண்ணுதற்கு அரிதாகுமாறு [ஆயிரக்கணக்காக] விளங்குகிற, சிரங்களாலும் - முடிகளையுடைமையாலும், வண்ணம் சேர்ந்தது - அழகுசேர்ந்ததாகிய, கொழு - செழித்த, சந்தனம்-சந்தனத்தை, மார்பு அணிந்த - (தன்)மார்பிலேயணிந்த, அண்ணல் கரியோன்தனை - பெருமைபெற்ற திருமாலை, அ ஆசு இல் குன்றம் ஒத்தது—; (எ - று.)

கண்ணுக்கு இனிய காட்சியுடைமை, முடியாயிரமுடைமை, சந்தனத்தை மார்பிலேயணிந்தமை என்ற இத்தன்மைகளால் அந்தச்சந்திரசைலமலை திருமாலையொத்த தென்றார்.சிலேடை மூலமாக வந்த உவமையணி. மேலைப்பாடலில் சந்திரசைலத்தில் யாவரும் இரவில் தங்கினாரென்று கூறுவதற்காக அம்மலையை இங்கு வருணிக்கின்றனர். மலைக்குச் சிரம்-சிகரம்: சந்தனம்-சந்தனமரம்: மார்பு-நடுவிடம். [3]சந்தனச்சேதகம் என்ற பாடத்துக்கு - சந்தனக் குழம்பு என்று பொருளாம். பி - ம்:—[1]ஆக. [2]விளங்கு. [3]சந்தனஞ் சேர்த்தது. [4]அணிந்து. (964)

69.—தசரதருடன்வந்த ஆடவரும் மகளிரும் மலையில் தங்குதல்.

ஊனும் முயிரு மனையா ரொருவர்க் கொருவர்
தேனும் மிஞிறுஞ் [1]சிறுதும்பியும் பம்பி யார்ப்ப
யானை யினமும் பிடியும் மிகலாளி யேறும்
மானுங் [2]கலையும்மென மால்வரை வந்தி ழிந்தார்.

(இ - ள்.) ஒருவர்க்கு ஒருவர்-, ஊன்உம் உயிர்உம் அனையார் - உடம்பும் உயிரும்போல்பவராய் (நட்புக்கொண்ட) ஆடவரும் மகளிரும், யானை இனம்உம் பிடிஉம் - ஆண்யானையினமும் பெண்யானைகளும், இகல் ஆளி ஏறுஉம் - வலிமையுள்ள ஆண் சிங்கங்களும் (பெண்சிங்கங்களும்), மான்உம் கலைஉம் என - பெண்மான்களும் ஆண்மான்களும் போல, தேன்உம் மிஞிறும் சிறு தும்பிஉம்-தேன் முதலிய வண்டின் சாதிகள், பம்பி ஆரப்ப - நெருங்கி யாரவாரிக்க, மால் வரை - பெரியமலையின் அடிப்புறத்தில், வந்து இழிந்தார்-வந்து தங்கினார்கள்; (எ-று.)

ஒருவர்மீது ஒருவர் பேரன்புகொண்டு அங்குச் சேனையோடு வந்த ஆடவரும் மகளிரும், ஆனைமுதலியன போன்ற தோற்றத்தோடு தம்மலர்மாலைகளில் தேன்முதலிய வண்டுகள் நெருங்கி ஆரவாரிக்க அம்மலையினடிவாரத்தில் வந்து தங்கின ரென்பதாம். யானை பிடிஎனவும், மான் கலைஎனவும் வந்தவற்றிற்கு ஏற்ப. ஆளியேற்றைக் கூறினாரேனும் பெண்சிங்கத்தையும் கொள்க. பி-ம்:—[1]செறி. [2]மயிலும்மென. (965)

70.—இருள் பரத்தல்.

கால்வா னகத்[1]தேருடை [2]வெய்யவன் காய்க டுங்கண்
கோன்[3]மாய் கதிர்ப்புல்லுளைக் கொல்சினக் கோள ரிம்மா

மேல்பான் மலையிற் [4]புகவீங்கிருள் வே[5]றி ருந்த
மால்யானை யீட்டம் மெனவந்து [6]பரந்த தன்றே.

(இ - ள்.) வானகம் கால் தேர்உடை - ஆகாயத்திலேயுலாவுகின்ற ஒற்றைச்சக்கரத்தைக்கொண்ட தேரையுடைய, வெய்யவன் - சூரியனாகிய, காய் கடுங் கண் - (விழித்துப்பார்த்தலினாலேயே) எரிக்கவல்ல கொடிய கண்ணையும், கோல் மாய் கதிர் புல் உளை - (பிறரெறிகின்ற) அம்பு மறைந்துவிடுதற்கு இடனான கிரணங்களாகிய புல்லிய புறமயிரையுமுடைய, (கால் வால் நகத்து ஏர் உடை - தாளில் வெண்ணிறமாகிய நகத்தின் அழகையுடைய,) கொல் சினம் கோள் அரி மா-கொல்லவல்லசினத்தையும் மிடுக்கையுமுடைய சிங்கம், மேல் பால் மலையில் புக - மேற்குப்புறத்திலுள்ள அத்தகிரியிற் புகுந்ததனால்,—வீங்கு இருள் - மிக்கஇருளானது, வேறு இருந்த - வேறாகப்பதுங்கியிருந்த, மால் யானை ஈட்டம் என- பெரிய யானைகளின் கூட்டம்போல, வந்துபரந்தது வந்து பரவிற்று;

சிங்கம் வேறுமலையிற் சென்றுவிட்டால் பதுங்கியிருந்தயானைக் கூட்டம் பிறகு வெளிவருதல்போல, சூரியன் அத்தமிக்கவே, இருள் எங்கும் பரவிற்றென்பதாம். உருவகமும் உவமையும் சேர்ந்துவந்தன. வெய்யவனாகிய அரிமா என்க. வெய்யவனை அரிமாஎன்றதற்குஏற்ப அவனுடைய வெப்பத்தைக் காய்கடுங் கண்ணாகவும், அவனது கதிர்களை உளைமயிராகவும் உருவகஞ்செய்தார். கால்வானகத் தேருடை-சிலேடையுருவகம். [2]வெம்மையின் என்ற பாடத்திற்கு, கோள் - சூரியனாகிய, அரிமா என்க. அரிம்மா - விரித்தல். அன்றே- ஈற்றசை. பி - ம்:—[1]தேரொடும். [3]பாய். [4]படி, பட. [5]இயைந்த. [6]பரந்தமாதோ. (966)

71.—தீபமேற்றப்படுதல்.

மந்தார முந்து மகரந்த [1]மணங்கு லாவும்
அந்தா ரரசர்க் கரசன்ற னனீக வெள்ளம்
[2]நந்தா தொலிக்குந் நரலைப்பெரு வேலை யெல்லாம்
செந்தா மரைபூத்தெனத் தீப [3]மெடுத்த வன்றே.

(இ - ள்.) மந்தாரம் - மந்தாரமலரின், முந்து - முற்பட்டு வெளிவருகின்ற, மகரந்தம்-தேனின், மணம்—,குலாவும் - (எங்கும்) வீசப்பெற்ற, அம் தார் - அழகிய மாலையையணிந்த, அரசர்க்கு அரசன் தன்-தசரதசக்கரவர்த்தியின், அனீகம் வெள்ளம்-வெள்ளமென்னும் அளவையுடைய சேனையாகிய, நந்ாது ஒலிக்கும் - குறையாமலொலிக்கின்ற, நரலை - பேரொலியையுடைய, பெரு வேலைஎல்லாம்- பெருங்கடலினிடம்முழுதும், செந் தாமரை பூத்து என-செந்தாமரை மலர் பூத்தாற்போல, தீபம் எடுத்த - விளக்குகள் ஏற்றப்பட்டன;

சேனை தங்கியிருந்த இடம்முழுவதும் தீபங்கள் ஏற்றப்பட்டதனால், அது கடல்முழுதும் செந்தாமரைமலர் பூத்தாற்போலவிளங்கிற்றென்பதாம்: தற்குறிப்பேற்றவணி. சம்பராசுரனைவென்று இந்திரனுடன் ஓராசனத்தில் வீற்றிருந்தவனாதலால், தசரதசக்கரவர்த்தியை 'மந்தாரமுந்து ... அரசர்க்கரசன்' என்றார். பி-ம்:—[1]மணந்துலாவும். [2]நந்தானது. [3]எடுத்தது. (967)

72.—நட்சத்திரம் புடைசூழச் சந்திரன் விளங்குதல்.

[1] தண்ணற் கடலிற் [2] றளி [3] சிந்து தரங்க நீங்கி
விண்ணிற் சுடர்வெண் மதிவந்தது மீன்கள் சூழ
வண்ணக் கதிர்வெண் [4] ணிலவீன்றென [5] வாலு கத்தூடு
ஒண்ணித் திலமீன் ருெளிர்வால் வளையூர்வ தொத்தே.

(இ - ள்.) வண்ணம் கதிர் ஈன்ற - அழகிய வெண்ணிறக் கதிர்களையுண்டாக்கிய, வெண் நிலவு என—, (தோன்றுகின்ற), வாலுகத்தூடு-வெண்மணலினிடையிலே, ஒள் நித்திலம் ஈன்று ஒளிர்-நல்லநிறமுள்ள முத்துக்களைப்பெற்று விளங்குகின்ற, வால் வளை - வெண்ணிறமுள்ள சங்கம், ஊர்வது ஒத்து-சஞ்சரிப்பது போன்று, தண் நல் கடலில் - குளிர்ச்சிபொருந்திய அழகிய கடலிலே, தளி சிந்து-திவலையை வெளிவீசுகின்ற, தரங்கம்-அலைகளினின்று, நீங்கி-வெளிப்பட்டு, சுடர் வெள் மதி-ஒளிவீசுகிற வெண்ணிறமுள்ள சந்திரன், மீன்கள் சூழ-நட்சத்திரங்கள் (தன்னைச்) சுற்றிலுமிருக்க, விண்ணில் வந்தது-ஆகாயத்திலேவந்து விளங்குவதாயிற்று;

சமுத்திரத்தினின்று வெளிப்பட்டு ஆகாயத்தில் நிலவின் நடுவே நட்சத்திரங்கள் பிரகாசிக்கத்தோன்றும் சந்திரன், சமுத்திரத்தினின்று வெளிப்பட்டு வெண்மணலிலே முத்துக்கள் சூழ்ந்து விளங்க இடையேதோன்றும் வெண்ணிறச்சங்கை ஒத்ததென்பதாம்: தற்குறிப்பேற்றவணி. [1] தண்ணக்கடல் என்ற பாடத்திற்கு-தண்ணம் கடல் என்பதன் விகாரமெனக்கொண்டு உரைக்க. பி-ம்:- [2] தளிர். [3] நின்று. [4] நிலவீன்றன, நிலவின்றிரள், நிலவின்றிருள். [5] வாலுகத்தோடு. *(968)*

73.—அப்போது மகளிர்முகம் மகிழ்ச்சியால் விளங்குதல்.

மீனாறு வேலை யொருவெண்மதி யீனும் வேலை
[1] நோனா ததனை நுவலற்கருங் கோடி வெள்ளம்
வானா டியரிற் பொலிமாதர் முகங்க ளென்னும்
ஆனா மதியங் கண்மலர்ந்த [2] தனீக வேலை.

(இ - ள்.) மீன் நாறு வேலை-மச்சங்களின்புலால்நாற்றம் வீசப்பெற்றசமுத்திரமானது,—ஒரு வெள் மதி ஈனும் வேலை-வெண்ணிறமுள்ள ஒருசந்திரனைப் பெறுங் காலத்தில், அதனை நோனாது - அச்செயலைப்பொறுக்காமல்,-அனீகம் வேலை-சேனா சமுத்திரமானது,—வான் நாடியரின் பொலி - தேவலோகத்து மாதர்போல விளங்குகின்ற, மாதர் - மகளிருடைய, முகங்கள் என்னும் - முகங்களென்று சொல்லப்படுகிற, நுவலற்கு அரு கோடி வெள்ளம் - அளவிட்டுச் சொல்லமுடியாத கோடி வெள்ளக்கணக்கான [மிகப்பலவான], ஆனா மதியங்கள்-கலைகுறைதலில்லாத சந்திரர்களை, மலர்ந்தது-பெற்றது;

மீன்கடல் ஒருசந்திரனை யீன்றதுகண்டு பொறாமைகொண்டு சேனாசமுத்திரம் மாதரார்முகமென்ற பலசந்திரரைப்பெற்றதென்பதாம். முடைக்கடற்குப் படைக்கடல் பின்வாங்கவில்லையென்க.

அபநுதியணியை அங்கமாகக்கொண்டுவந்த ஏதுத்தற்குறிப்பேற்ற வணி. இயற்கையில் இராப்போதில் அந்தச்சேனையிலுள்ள மகளிர் முகசந்திரர்கள் விளங்குவதற்கு, கடல் ஒருசந்திரனை யீன்றதுகண்டு சேனைக்கடல் பொறாமை கொண்டதாகக் காரணங்கற்பித்துக்கூறியது காண்க. அனீகவேலைக்குச் சாதாரணவேலையினும் மேன்மை தோன்றுவதற்காக வேறுபாடுகூறியது - வேற்றுமையணி. பி-ம்:— [1]நோஞததானை. [2]அனீகவெள்ளம். (969)

74.—பலவகைச் சங்கீதவொலி.

மண்ணும் முழவின்ஞெலி மங்கையர் பாட லோதை
பண்ணுந் நரம்பிற் [1]பயிலாவிசைப் பாணி யோதை
கண்ணும்முடை வேயிசை கண்ணுள ராட [2]ரோறும்
விண்ணும் மருளும்படி விம்மி [3]யெழுந்த வன்றே.

(இ - ள்.) கண்ணுளர் - நாடகமாடுவோரின், ஆடல்தோறும் - ஆடுமிடங்களிலெல்லாம்,—மண்ணும் முழவின் ஒலி - மார்ச்சனை யமைந்த மத்தளத்தினோசையும், மங்கையர் பாடல் ஓதை - மாதர்களின் பாடலோசையும், பண்ணும் நரம்பின் பயிலா இசை-(பாடும் பண்ணுக்குஏற்ப) வீக்கப்படுகின்ற நரம்பினது பயிலாத [அபூர்வமான] இசையும், பாணி ஓதை-கைகளினால் தாளமிடுவதனாலான ஓசையும், கண் உடை - கணுக்களைக்கொண்ட, வேய்-புல்லாங்குழலின், இசை-ஓசையும், விண் உம் மருளும்படி-விண்ணுலகத்தவரும் திகைப்படையும்படி, விம்மி எழுந்த-மிகுதியாகத்தோன்றின; (எ-று.)

பண்ணல்:—பாடநினைத்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பு ஆன நரம்புகள் பெயருந்தன்மைமாத்திரையறிந்து வீக்குதல்; இது, இசைத்தொழிலெட்டனுள் ஒன்று. பாணி - பாட்டுமாம். கண்ணும், உம்-இசைநிறை. அன்றே-ஈற்றசை. பி-ம்:—[1]பகையாவியற், பயில்வாரிசைப். [2]ஓசை. [3]எழுந்தது. (970)

75.—மாதரலங்காரம்.

மணியின் [1]னணிநீக்கி வயங்கொளி முத்தம் வாங்கி
அணியும் முலையா ரகிலாவி புலர்த்து நல்லார்
தணியும் மதுமல்லிகைத் தாமம் வெறுத்து வாசந்
[2]திணியும் மிதழ்ப்[3]பித்திகைக் கத்திகை [4]சேர்த்து வாரும்.

(இ - ள்.) மணியின் அணி நீக்கி - இரத்தினங்களினாலியன்ற ஆபரணங்களைக் களைந்துவிட்டு, ஒளி வயங்கு - ஒளிவிளங்குகிற, முத்தம்-முத்தமாலையை, வாங்கி-(தமது தோழிமாரிடத்தினின்று) வாங்கி, அணியும் முலையார்-முலைமீது அணிபவரான, அகில் ஆவி புலர்த்தும் நல்லார் - அகிற்புகையால் கூந்தலையுலர்த்தும் மகளிர்,- தணியும் மது மல்லிகை தாமம் வெறுத்து-குளிர்ந்த தேனையுடைய மல்லிகைமாலையை வெறுப்புக்கொண்டு களைந்துவிட்டு, வாசம் திணியும் இதழ்-நறுமணம்நெருங்கிய இதழையுடைய, பித்திகை கத்திகை-கருமுகைமலர்மாலையை, சேர்த்துவார்-அணிவாராயினர்;

(எ-று.)—இறுதி உம்மை - இசைநிறை. இனி, 'சேர்த்துவாரே' என்றுபாடங்கொள்ளுதலும், வினைமுற்றுவருவித்தலுமாம்.

குளிர்ச்சிக்காக இரத்தினவாரத்தை நீக்கி முத்தாரத்தையணிந்து, அகிற்புகையாற் கூந்தலைப் புலர்த்தும் மகளிர் மல்லிகைமாலையை நீக்கிக் கருமுகைமாலையை அணிவாராயின ரென்க. கத்திகை-தொடைவிசேடம்: மலர்நெருங்கியமார்பின்மாலை யென்ப. பி-ம்:-[1]ஒளி. [2]நணியும். [3]செண்பகப்பித்திகை, பட்டிகைப்பத்திகை.

76.—அப்போது தோன்றிய பலவகையோதை.

புதுக்கொண்ட வேழம் பிணிப்போர் [1]புனைபாட லோதை
மதுக்கொண்ட [2]மாந்தர் மடவாரின் மிழற்று மோதை
பொதுப்பெண்டி ரல்குற் புனைமேகலைப் பூச லோதை
கதக்கொண்ட யானை [3]களியாற் களிக்கின்ற வோதை.

(இ - ள்.) (அந்தமலையினிடத்தில்), புது கொண்ட - புதுமையாகப் பிடித்துக்கொண்டுவந்த, வேழம் - யானைகள், பிணிப்போர் - கட்டுபவர், புனை - (தாம் பாடுமாறு இனிதாக) அமைத்த, பாடல்-பாடலின், ஓதை-ஓசையும், மதுகொண்ட மாந்தர் - மதுவையுண்ட ஆடவர், மடவாரின்-(தம்து) மனைவிமாரிடத்து, மிழற்றும் - (காமக்குறிப்புத்தோன்றுமாறு) பேசுகின்ற, ஓதை-பேச்சிஞேசையும்,— பொதுப்பெண்டிர்-வேசையர், அல்குல்-(தமது) இடையிலே, புனை - அலங்கரித்துக்கொண்டுள்ள, மேகலை-இடையணியின்,பூசல்-(காமப்) போரிலேயுண்டாகிய, ஓதை-ஓசையும், கதம் கொண்ட யானை - மதவெறிகொண்ட யானைகள், களியால்-மதக்களிப்பினுல், களிக்கின்ற - தம்முடல் தெரியாமற்செய்கின்ற, ஓதை-(வீரிடுகின்ற) ஓசையும்,— (எ-று.)—'அங்குளமூழ்ந்தன' என வருவித்து முடிக்க. புணைபாடல் என்ற பாடத்துக்கு - அந்தயானைகளைத் தளைக்கும்போது பாடும் பாடல் என்க. பி-ம்:—[1]புனலாடல். [2]மாதர். [3]கணியார். (972)

77.—கங்குல் கழிந்த வகை.

உண்ணு வமுதன்ன கலைப்பொரு [1]ளுள்ள துண்டும்
பெண்ணு ரமுதம் மனையார்மனத் தூடல் [2]பேர்த்தும்
[3]பண்ணூர்ந்த பாடல் செவிமாந்திப் [4]பயன்கொ ளாடல்
கண்ணு [5]னினிதுய்க்கவுங் கங்குல் கழிந்த தன்றே.

(இ - ள்.) உண்ணு - (வாயினுல்) உண்ணப்படாத, அமுது அன்ன - அமிருதத்தை யொத்த, கலை உள்ளது பொருள் - மதனநூலிற் கூறியுள்ள விஷயத்தை, உண்டுஉம் - நேரேயனுபவித்து உணர்தலாலும்,—பெண் ஆர் அமுதம் அனையார் - பெண்களுள் கிடைத்தற்குஅரிய அமிருதத்தை யொத்தவரான மாதரின், மனத்து - நெஞ்சில்தோன்றிய, ஊடல் - புலவியை, பேர்த்துஉம்- போக்குவதனுலும்,—பண் ஆர்ந்த பாடல் - இசைக்குப்பொருந்தின பாடல்களை, செவி மாந்தி-காதினுற் கேட்டு, பயன் கொள்-அப்பாட்டின்பொருளைக் கொண்ட, ஆடல்-நர்த்தனத்தை,கண்ணுல்-(தமது) கண்களினுல், இனிது துய்க்கவும் - நன்கு அனுபவித்தலினுலும்,

கங்குல்-அன்றிரவு, கழிந்தது-(அந்தச்சேனையிலிருந்த ஆடவர்க்கு) நீங்கியது; (எ-று.)

அந்தச்சேனையிலிருந்த சிலஆடவர் மதனநூலிற் கூறியபடி பலவகைக் கரணங்களால் இன்பத்தை யனுபவித்தும் சிலர்தமது மனைவிமாரின்புலவியைப் போக்கியும், சிலர்இனியசங்கீதங்களோடு நடிக்கும் ஆடலைக்கண்டும் பாடலைக்கேட்டும் களித்தும் அவ்விரவைக் கழித்தன ரென்பதாம். பாடலின் பயனைக்கொண்ட ஆடலாவது-பாடற்பொருளை அபிநயித்துக்காட்டும் அபிநயநாடகம். இனிதுய்க்க=இனிது துய்க்க: விகாரம். பி-ம்:—[1]உள்ளத்து. [2]போர்த்தும். [3]பண்ணுன. [4]பயன்கள். [5]நனி. (973)

வரைக்காட்சிப்படலம் முற்றிற்று.

15—ஆவது பூக்கொய் படலம்.

தசரதன் தன்சேனையோடு சோணையாற்றைச் சேர்ந்து அவ்வாற்றங்கரையிலிருந்த சோலையில்தங்கினனாக, உடன்சென்ற மகளிர் முதலியோர் அச்சோலையிற் பூப்பறித்தலைக் கூறும் பகுதி.

வேறு.

1.—சூரியோதய வருணனை.

மீனுடை யெயிற்றுக் கங்குற் கனகனை வெகுண்டு வெய்ய
கானுடைக் [1]கதிர்க ளென்னு மாயிரங் [2]கரங்க ளோச்சித்
தானுடை யுதய மென்னுந் தமனியத் தறியி னின்று
மானுட மடங்க லென்னத் தோன்றினன் வயங்கு வெய்யோன்.

(இ-ள்.) மீன் எயிறுஉடை-(வெண்மைநிறங்கொண்ட) நட்சத்திரங்களைக் கோர தந்தங்களாகவுடைய, கங்குல் கனகனை - கருநிறமுள்ள இரவாகிய இரணியனை, வெகுண்டு - கோபித்து,—கான் உடை வெய்ய கதிர்கள் என்னும் - தொகுதியைக்கொண்ட வெப்பமுள்ள கிரணங்களென்று சொல்லத்தக்க, ஆயிரம் கரங்கள் ஓச்சி - ஆயிரங்கைகளை வெளிக்காட்டிக்கொண்டு, தான் உடை உதயம் என்னும்-தான் தோன்றுமிடமாகக்கொண்டுள்ள உதயகிரியென்கின்ற, தமனியம் தறியின்நின்று - பொற்றூணிலிருந்து, மானுடம் மடங்கல் என்ன-நரசிங்கமூர்த்திபோல, வயங்கு வெய்யோன்-விளங்குகின்ற சூரியன், தோன்றினன்-உதயமானான்; (எ-று.)

கோரதந்தத்தையுடைய இரணியகசிபு என்னும் அசுரனைக் கொல்லுதற்காக நரசிங்கமூர்த்தி பல கைகளை வெளிக்காட்டிக்கொண்டுபொற்றூணினின்று தோன்றியதுபோல, சூரியபகவான் நட்சத்திரங்களுடன் விளங்கும் இருள்கொண்ட இரவை யொழிப்பதற்காகத் தனது ஆயிரங்கிரணங்களை வெளிநீட்டிக்கொண்டு உதய

கிரியினின்று தோன்றின னென்க; உருவகவணியை அங்கமாகக் கொண்டுவந்த உவமையணி. அசுரரைக் கருநிறமுள்ளவராகக் கூறுதல் மரபு ஆதலால், இருள்நிறைந்த கங்குலை அசுரனகக் கொண்டார். அசுரனது வெண்ணிறக் கோரப்பற்களுக்கு வெண்ணிறமீன்கள் உவமையாம். கான் - அடர்த்தியாதலை, "கானுடைக் கழனிச் செந்நெற்கதிர்" என்ற இடத்தும் காண்க. பி - ம்:—[1]நகங்கள். [2]கதிர்கள். (974)

2.—மன்னவன் சேனையுடன் சோணையாற்றையடைதல்.

முறையெலா [1]முடித்த பின்னர் மன்னனு [2]மூரித் தேர்மேல்
இறையெலாம் வணங்கப் போனு னெழுந்துடன் சேனை வெள்ளம்
குறையெலாஞ் சோலை யாகிக் குழியெலாங் கழுநீ ராகித்
துறையெலாங் கமல மான சோணையா றடைந்த தன்றே.

(இ - ள்.) முறைஎலாம் முடித்த பின்னர் - (தான்) செய்ய வேண்டிய நித்தியக்கடன்களையெல்லாம் செய்துமுடித்தபிறகு, மன்னன்உம் - தசரதசக்கரவர்த்தியும், மூரி தேர்மேல் - வலிய இரதத்தின்மீதேறி, இறைஎலாம் வணங்க - அரசரெல்லாரும் வணங்கி நிற்க, போனன் - புறப்பட்டான்: உடன் - அவனுடனே, எழுந்து - (தானும்) புறப்பட்டு, சேனை வெள்ளம் - சேனைத்தொகுதி,—குறை எலாம்-(தான் செல்லாத) மேட்டுத்திடர்களிலெல்லாம், சோலை ஆகி- சோலையையுடையதாகியும், குழி எலாம்-பள்ளம் வீழ்ந்த இடங்களிலெல்லாம், கழுநீர் ஆகி - செங்கழுநீர்க் கொடிகளையுடையதாகியும், துறைஎலாம் - நீர்த்துறைகளிலெல்லாம், கமலம் ஆன - தாமரைக் கொடிகளையுடையதுமான, சோணை ஆறு - சோணையென்னும் நதியை, அடைந்தது—; (எ-று.)

அரசன் பயணப்பட்டபோது உடனெழுந்துசென்ற சேனை வெள்ளம் சோணையாற்றையடைந்ததென்றதனல், அரசன் சோணையாற்றையடைந்தா னென்பது பெறப்படும். மன்னனும், உம் - எதிரதுதழுவியது. குறை - மணல்திடர். அன்றே-ஈற்றசை. பி - ம்:—[1]முடிதது மன்னர். [2]முடிவல்லோரில். (975)

3.—சூரியனுச்சியடைய, அரசர்முதலியோர் ஆங்குச்சோலை சேர்தல்.

அடைந்தவ [1]ணிறுத்த பின்ன ரருக்கனு மும்பர்ச் [2]சார
மடந்தையர் [3]குழாங்க ளோடு [4]மன்னரு மைந்தர் தாமும்
குடைந்துவண் டுறையு [5]மென்பூக் [6]கொய்தினி தாட [7]மைதீர்
தடங்களு மடுவுஞ் சூழ்ந்த தண்ணறுஞ் சோலை [8]சார்ந்தார்.

(இ - ள்.) அவண் - அந்தச்சோணையாற்றின் கரையிடத்தை, அடைந்து - சேர்ந்து, (சேனைவெள்ளமானது), இறுத்த பின்னர் - தங்கின பின்பு,—அருக்கன்உம் - சூரியனும், உம்பர் சார-ஆகாயத்தினுச்சியைச் சேர, மன்னர்உம் - அரசரும், மைந்தர்தாம்உம் - அரசகுமாரர்களும், மடந்தையர்குழாங்களோடு - (தம் தமது) மனைவிமாருடனே, வண்டு குடைந்து உறையும் மெல் பூ கொய்து இனிது

ஆட-வண்டுகள் கிண்டிக்கொண்டு தங்குகின்ற மெல்லிய மலர்களைக் கொய்து (நீரில்) இனிதாக விளையாடுமாறு, மை தீர் தடங்கள்உம் மடுஉம் சூழ்ந்த-குற்றமற்ற தடாகங்களும் மடுக்களும் சுற்றியிருக்கப்பெற்ற, தண் நறுஞ்சோலை-குளிர்ந்த நன்மணமுள்ள சோலையை, சார்ந்தார்—; (எ - று.)

உச்சிநேரத்தில் மன்னவரும் அரசகுமாரர்களும் மடந்தைமாரோடு மலர்கொய்து புனல்விளையாடுமாறு நீர்நிலைகள் சூழ்ந்துள்ள சோலைகளைச் சேர்ந்தன ரென்பதாம். அருக்கனும், உம்மை-எதிரது தழுவியது: மன்னரும் மைந்தர்தாமும், உம்மைகள் - எண்ணுப் பொருளோடு இறந்தது தழுவியன. மைந்தர் என்பது - மன்னரும் என்பதை யடுத்து நிற்றலால், மன்னவ குமரரைக் குறித்தது. 'மைதீர்' என்பது, தடங்கள் மடு என்ற இரண்டனோடும் இயையும்: தடங்கட்கும் மடுக்கட்கும் மைதீர்கை-ஆடவரும் மகளிரும் இறங்கியாடுதற்கு ஏற்றனவாகை. பி-ம்:—[1] இருந்த. [2] சேர்ந்தான். [3] குழாங்கடோறும். [4] மைந்தருமன்னர்தாமும். [5] தண். [6] கொய்துநீர். [7] நன்னீர்த். [8] புக்கார். (976)

4.—மாதர் சோலை சார, மயில்களும் அன்னங்களும் அப்பாற்போதல்.

திண்சிலை புருவ மாகச் சேயரிக் கருங்க ணம்பால்
புண் [1]சில செய்வ ரென்று போவன போன்ற மஞ்ஞை
[2]பண்சிலம் பளிக ளார்ப்ப நாணினற் [3]பறந்த போன்ற
ஒண்சிலம் [4]பார்ப்ப மாத ரொதுங்குதோ [5]றெதுங்கு மன்னம்.

(இ - ள்.) (மாதர்கள் சோலையிற் சென்றபோது அவர்களைக் கண்டு அப்பாற்சென்றனவான), மஞ்ஞை-மயில்கள், '(இந்த மடந்தைமார்), புருவம் திண் சிலை ஆக-(தமது) புருவங்கள் வலிய வில்லாக, சேய் அரி கருங் கண் அம்பால் - செவ்வரிபரந்த கரிய கண்களாகிய அம்புகளைக்கொண்டு, சில புண்செய்வர் - (நம்மிடத்துச்) சிலபுண்களை யுண்டாக்குவர்,' என்று - என்று நினைத்து, போவன போன்ற-(அப்பாற்) செல்வனவற்றை யொத்திருந்தன: மாதர்-அந்தமங்கையர், ஒள் சிலம்பு ஆர்ப்ப - அழகிய சிலம்பென்னுங் காலணிகள் ஒலிசெய்ய, ஒதுங்கு தோறு - நடக்கும்போதெல்லாம், பண் சிலம்பு அளிகள் ஆர்ப்ப - இராகத்தை யொலிக்கின்ற வண்டுகள் ஆரவாரித்து (மலர்களிலிருந்து) வெளிவரும்படி, ஒதுங்கும்-(மலருள்ள இடங்களிற்) பதுங்குவனவான, அன்னம்-அன்னப் பறவைகள்,—நாணினல்-(நடையழகில் அம்மடவார்க்குத் தோற்றதனாலுண்டான) வெட்கத்தினல்,பறந்த போன்ற-பறந்து (அப்பாற் பதுங்கச்) செல்வதனை யொத்திருந்தன; (எ-று.)

மாதர் நெருங்குவதைக் கண்டு மயில்களும் அன்னப்பறவைகளும் அப்பாற்போதலை, மயில்கள் 'தம்மைக் கண்ணம்புகளாற் புண்செய்வரோ?' என்ற அச்சத்தினற் பறந்து போவனவாகவும், அன்னப்பறவைகள் அம்மாதரது நடையழகுக்குத் தாம் தோற்ற நாணத்தாற் பறந்து பதுங்கப்போவனவாகவும் காரணங் கற்பித்துக்

கூறினர்: ஏதுத்தற்குறிப்பேற்றவணி. மயில்கள் சாயலால் மகளிரைச் சிறிது ஒத்தபோதிலும், அவர்களுடைய கண்ணழகு தமது பீலிக் கண்களுக்கு இல்லையாதல்பற்றி அம்மயில்கள்வருந்து மென்பதை, 'சிலை புருவமாகக் கண்ணம்பாற் புண்செய்வர்' என்று கருதியன வாகக் கூறினரென்னலாம். ஈற்றடிக்கு - ஒள்ளிய [அழகிய] சிலம் பென்னுங்காலணி ஒலிக்க மாதர் நடக்கும்போதெல்லாம் (அவ ரிடத்து நின்று நடையைக் கற்குமாறு) அன்னப்பறவைகள் (அம் மாதரார் பின்னே) நடந்துசெல்லுமென்று உரை கூறுக. பி - ம்:— [1]சிலர், சிலை. [3]பறந்துபோன. [4]அரற்ற. [5]ஒதுங்குகின்றார். [2]பண் சிலம் பணிவா யார்ப்ப நாணினற் பறந்த கிளளை என்றும் மூன்றாம் அடியிற்பாடம். (977)

5.—மாதர்கள் தோழியரோடும் ஆடுதலை நோக்குதல்.

செம்பொன்செய் சுருளுந் [1]தெய்வக் குழைகளுஞ் சேர்ந்து மின்னப்
பம்புதே னலம்ப [2]வொல்கிப் பண்ணையி [3]னாட னோக்கிக்
கொம்பொடுங் [4]கொடிய னாரைக் [5]குறித்தறிந் துணர்த றேற்றார்
வம்பவி ழலங்கன் [6]மார்பின் மைந்தரு மயங்கி நின்றார்.

(இ - ள்.) செம் பொன் செய் சுருள்உம் - செம்பொன்னினாற் செய்த ஓலையென்னுங் காதணிகளும், தெய்வம் குழைகள்உம்-தெய் வத்தன்மை யமைந்த குழையென்னுங் காதணிகளும், சேர்ந்து மின்ன-ஒன்றுசேர்ந்து மின்னவும்,—பம்பு தேன் அலம்ப-(தாம் சூடிய மாலைகளில்) நிரம்பமொய்த்துள்ள வண்டுகள் ஒலிக்கவும், ஒல்கி-அசைந்து, பண்ணையின் - தோழியர் கூட்டத்தோடு, ஆடல்-(மகளிர்) விளையாடுவதை, நோக்கி—, வம்பு அவிழ் அலங்கல் மார் பின் மைந்தர்உம்-மணம் விரிகின்ற மாலையையணிந்த மார்பை யுடைய ஆடவரும்,—கொடிஅனாரை - பூங்கொடிபோன்ற அந்த மகளிரை, கொம்பொடுஉம் குறித்து அறிந்து உணர்தல் தேற்றார்-பூங்கொம்புகளோடு (வேறுபாட்டை) ஊகித்துத்தெரிந்துகொண்டு (இவை பூங்கொம்பு இவர் மகளிர் என்று) பிரித்தறியமுடியாதவ ராய், மயங்கிநின்றார்—; (எ-று.)

செம்பொன்சுருளும் தெய்வக்குழைகளும் மின்னவும் தேன் ஒலிப்பவும் ஒல்கித் தோழியரோடு விளையாடும் மகளிர், சுருளும் குழைகளும் மின்னவும் தேனொலிப்பவும் காற்றினால் ஒல்கும் பூங் கொடிகள்போன்றிருத்தலால், பகுத்தறியுந்தன்மையுள்ள ஆடவ ராலும் 'இவை பூங்கொம்புகள், இவர்கள் மகளிர்' என்று பகுத் துணர்தல் முடியாதவாறாயிற்றென்பதாம். ஒப்புமைபற்றி வேறு பாடு அறியக்கூடாமையைக் கூறிய இது, மறைவணியாம். மகளிர் காதணியைத் தெய்வக்குழையென்றது-தெய்வத்தாலாக்கப்பட்டது போன்ற தொழிற்சிறப்பு உடைமையால். பூங்கொம்புகட்குச் செம் பொன்செய் சுருள்-செம்பொன்னாலியன்றனபோல் விளங்குவனவாய் மலராது குவிந்தநிலையிலிருக்குந் தளிர்: குழை-தளிர்: தேன்-மலரி லுள்ள மதுவைப் பருகுவதற்கு மொய்ப்பன: இவை - பூங்கொம்பு மகளிர்என்று இரண்டிடத்தும் உள்ளன. பண்ணையின்-மகளிர் கூட்

டம்போல எனினுமாம். பி - ம்:—[1]தேயக். [2]ஆகி, ஓங்கி. [3]ஆட. [4]கொடியினுரை. [5]குறிப்புணர்ந்தறிதல். [6]மாலே. (978)

6.—குயில்கள் நாணி யொடுங்குதல்.

பாசிழைப் பரவை யல்குல் பண்டரு கிளவி [1]தண்டேன்
மூசிய கூந்தன் மாதர் மொய்த்தபே ரமலே கேட்டுக்
கூசின வல்ல பேச நாணின குயில்க [2]ளெல்லாம்
வாசகம் வல்லார் முன்னின் றி[3]யாவர்வாய் திறக்க வல்லார்.

(இ - ள்.) குயில்கள் எல்லாம்—,—பசு இழை பரவை அல்குல்-பசும்பொன்னினுலியன்று மணிகள்பதித்துச்செய்த அணிகளைப் பூண்ட பரந்த அல்குலேயும், பண் தரு கிளவி - இராகமாக வெளிப் படுகின்ற பேச்சுக்களையும், தண் தேன் மூசிய கூந்தல் - குளிர்ச்சியாகிய (மலரிலுள்ள) தேன் பரவிய கூந்தலேயுமுடைய, மாதர் - மகளிர், மொய்த்த - நெருங்கிவந்த, பேர் அமலே - பேரொலியை, கேட்டு—, கூசின அல்ல - அச்சங்கொண்டதனுல் வாய்மூடினவல்ல; பேச நாணின - (அம்மகளிர்முன்) பேசுதற்கு வெள்கி வாய்மூடியிருந்தன: வாசகம் வல்லார் முன் நின்று - இனிமையாகப் பேசவல்லவர் முன் னிலேயிலிருந்துகொண்டு, வாய் திறக்க வல்லார் யாவர்—? (எ - று.)

அச்சோலேயில் இனிதுவாழ்ந்திருந்த குயில்கள், மாதர்கள் அங்கு நெருங்கிவந்தபோது உண்டான பேரொலி கேட்டு அஞ்சி வாய்மூடினவல்ல; அவர்கள் பேச்சி னினிமைக்குமுன் தமதுகுரல் சிறந்துதோன்ருது என்று நாணியே வாய்மூடின என்பதாம். குயில்கள் நாணங்கொண்டே வாய்மூடின என்று முதல் மூன்றடிகளிற் கூறிய சிறப்புப்பொருளை, 'இனிதாகப்பேசவல்லார் முன்னே எவரும் வாய்திறவார்' என்று ஈற்றடியிற்கூறிய பொதுப்பொருளாற் சமர்த்தித்தார்:இது-வேற்றுப்பொருள்வைப்பணி. யாவர் என்றவினு-எதிர்மறைப்பொருளைக் குறிக்கும். பி - ம்:—[1]திண். [2]உள்ள. [3]யாவரேவகுக்க. பாசிழைப் பரவையல்குற்பண்டரு கிளவித்தண்டேன் என்று பல பிரதிகளில் முதலடி. (979)

7.—மகளிர் மலர்பறிக்குமாறு கொம்புகளைத் தாழ்த்த, அம்மலர்க்கொம்புகள் பூச்சொரிந்தவண்ணம் தாழ்தல்.

[1]நஞ்சினுங் கொடிய நாட்ட [2]மமுதென நயந்து நோக்கிச்
செஞ்செவே கமலக் கையாற் றீண்டலு நீண்ட கொம்பர் [ருல்
தஞ்சிலம் [3]படியின் மென்பூச் [4]சொரிந்துடன் [5]ருழ்ந்த வென்
வஞ்சிபோன் மருங்கு லார்மாட் டியாவரே [6]வணங்க லாதார்.

(இ - ள்.) (மகளிர்),—நஞ்சின்உம் கொடிய நாட்டம் - விஷத்தைக்காட்டிலுங் கொடிய (தமது) கண்களைக்கொண்டு, அமுது என - (காண்பவர் இனிமைமாத்திரத்தால்) அமுதென்று கருதும்படி, நயந்து நோக்கி-விரும்பிப்பார்த்து, கமலம் கையால் - (தமது) தாமரை மலர்போன்ற கையினுல், செஞ்செவே தீண்டலும் - செவ்வனே [நன்ருகப்] பிடித்துத் தாழ்த்தியவுடனே, நீண்டகொம்பர் - நீண்டுவளர்ந்த பூங்கொம்புகள், தம் சிலம்புஅடியில் மெல் பூ

சொரிந்து-தம் [மகளிருடைய] சிலம்பணிந்த பாதங்களில் மென்மையான மலர்களைச்சொரிந்தவண்ணம், உடன் தாழ்ந்த - உடனே [தாமதமின்றித்] தாழ்ந்து நின்றன; என்றால்—,—வஞ்சி போல் மருங்குலார் மாட்டு-நீர்வஞ்சிக்கொடிபோல் (நுண்ணிய) இடையையுடைய மகளிரிடத்து, வணங்கலாதார் - வணங்காமல் நிற்பவர், யாவர்ஏ - யாவர்தாம்? [எவருமிலர்]; (எ-று.)

பார்க்கும்போது இனிமை தருவனவாயிருப்பினும் பிறகுமரண வேதனையை விளைக்குந்தன்மையன வாதலால், 'நஞ்சினும்கொடிய நாட்டம் அமுதெனநோக்கி' எனப்பட்டது. மகளிர் தமதுகையாற் பூங்கொம்புகளைத் தாழ்த்த அவைகளே மலர்களைச்சொரிந்தவண்ணம் தாழ்ந்தனவென்றால், உயர்திணைப்பொருளாகிய ஆடவர் அவர்களிடத்துத் தாழ்வ ரென்பது தானே பெறப்படுமென்றார். இங்ஙனம் ஒருபொருளைக் கைமுதிகநியாயத்தாற் பெறவைப்பது-தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. பி-ம்:—[1]நஞ்செனும். [2]அமுதினும், பிறந்தன. [3]அடியில், ஒடிய. [4]சொரிந்திடத். [5]தாழ்ந்தது. [6]வணங்கிலாதார், வளைகிலாதார். (980)

8.—இதுவும் அது.

அம்புயத் தணங்கி னன்னா ரம்மலர்க் கைக [1]டீண்ட
வம்[2]பிய லலங்கற் பங்கி வாளரி [3]மருளுங் [4]கோளார்
தம்புய வரைகள் வந்து [5]தாழ்வன தளிர்த்த மென்பூங்
கொம்புக [6]டாழு [7]மென்றல் [8]கூறலாந் தகைமைத் தொன்றோ.

(இ - ள்.) 'அம்புயத்து அணங்கின் அன்னார் - தாமரைமலரில் தங்குகின்ற தெய்வமகளாகிய இலக்குமியையொத்த அம்மகளிரின், அம் மலர் கைகள் தீண்ட-அழகிய தாமரைமலர்போன்ற கைகளால் தீண்டப்படுதலால், வம்பு இயல் அலங்கல் பங்கி வாள் அரி மருளும் கோளார் தம்-வாசனைபொருந்தியமலர்மாலையையணிந்த மயிர்முடியையும் வாள்போற்கொடிய சிங்கமும் மருட்சியடையும் வலிமைமையுங்கொண்ட ஆடவருடைய, புயம் வரைகள் - மலைபோன்ற தோள்கள், வந்து—, தாழ்வன - வணங்கிநிற்பனவாயின: (இவ்வாறாயின்), தளிர்த்த மெல் பூங் கொம்புகள்-தளிர்த்துள்ள மென்மையான மலர்களைக்கொண்ட பூங்கொம்புகள், தாழும் - (அம்மகளிர் கைப்படுவதனால்) தாழ்ந்து நிற்கும்', என்றல்-என்று பாராட்டுதல், கூறல்ஆம் தகைமைத்து ஒன்றுஓ - விசேடமாக எடுத்துக் கூற வேண்டியதொரு விஷயமோ? (எ-று.)

சிங்கம்போற் பெருவலிபடைத்த ஆடவரே மகளிர்கை தீண்டப்பெறுவதனால் வணங்கலாயின ரென்றால், மெல்லியபூங்கொம்புகள் தாழ்தல் விசேடமாகப் பாராட்டிச் சொல்லவேண்டியதொரு பொருளோ? அல்ல என்பதாம். இதுவும் - தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியே. கீழ்ச்செய்யுளில் ஓரறிவுயிராகியபூங்கொம்புகளும் மகளிர்கைப்பட்டதனால் வணங்குவனவாயின வென்றால் ஆறறிவுயிராகிய மக்கள் வணங்குதல் முறையே யென்று கூறிய கவி, பேராற்றல் படைத்த வீரரே மகளிர் கைதீண்ட வணங்கின

றென்றால், மெல்லிய பூங்கொடிகள் வணங்கியமைபற்றிப் பாராட்டிச் சொல்லவேண்டுமோ? என்று மாற்றிக் கூறிய நயம், பாராட்டத் தக்கது. கோளார் - தன்மையுடையவரெனக் கூறி, உடல்வலிமை கம்பீரநடை போர்க்கஞ்சாமை முதலிய தன்மைகளில் வீரர்க்குச் சிங்கம் உவமை என்று கொள்ளவுமாம். ஓகாரம் - எதிர்மறை. பி - ம்:—[1]நீட்ட. [2]அவிழ். [3]மருங்கு. [4]கேள்வர், கேளார். [5]தாழ்ந் தது. [6]தாழ்ந்த. [7]என்றால். [8]அதனிலைகூறற்பாற்றோ, அவர்நிலை கூறலாமே. (981)

9.—வண்டுகள் மகளிரிடத்து மொய்த்தல்.

நதியினுங் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய [1]மழலைத் தும்பி
அதிசய மெய்திப் புக்கு வீழ்ந்தன [2]வலைக்கப் போகா
புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்பபார்.

(இ - ள்.) மதி நுதல்-சந்திரன்போன்ற முகத்தைக்கொண்ட, வல்லி - மகளிராகிய பூங்கொடிகள், நதியின்உம் - ஆறுகளிலும், குளத்துஉம்-குளங்களிலும், பூவா - மலராத, நளினங்கள்-தாமரை மலர்களை, குவளையோடு-குவளைமலர்களுடனே, பூப்ப-(தம்மிடத்து) மலரச்செய்துநிற்க, நோக்கிய - (அதனைக்) கண்ட, மழலை தும்பி - இன்னோசையையுடைய வண்டுகள், அதிசயம் எய்தி - ஆச்சரி யத்தையடைந்து, புக்கு - புகுந்து, வீழ்ந்தன - மொய்த்தனவாய், அலைக்க போகா-(கைகளினால்) ஓட்டவும் போகாவாயின; புதுமை பார்ப்பார்-புதிய பொருளை நாடிநிற்பவர், புதியன கண்ட போழ்து - புதுமையான பொருளைக் கண்டபோது, விடுவரோ—? (எ - று.)

மதிநுதல்வல்லி - அர்த்தசந்திரன்போன்ற நெற்றியையுடைய பூங்கொடியென்று, சாதாரணமான கொடியினும் வேற்றுமை தோன்றக் கூறியவாறு. நளினங்கள் என்றது - முகங்களையும், குவளையென்றது-கண்களையும், வல்லியென்றது-மகளிரையும் காட் டும். மதிநுதல்வல்லி நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் பூத்த என்றது-வேற்றுமையணியுடன் வந்த உருவகநவிற்சியணி. நீரில் தோன்றும் தாமரைமலரையும் கருங்குவளைமலரையும் நீலப்பூங் கொடிகள் அபூர்வமாகப்பூத்தது கண்டு ஆச்சரியமடைந்த தும்பி கள் கைகளாலோச்சவும் அவற்றைவிட்டுவிலகாமல் தங்கின என்ற சிறப்புப் பொருளை, ஈற்றடியிற்கூறிய பொதுப்பொருள் சமர்த் தித்து நின்றது - வேற்றுப்பொருள்வைப்பணி. நிலத்துக் கொடிகள் நீர்ப்பூக்களைப் பூத்தலும், தாமரைப்பூவினுள்ளே குவளைப்பூ மலர்ந் திருத்தலும் அதிசயமெய்தக் காரணம். "மழலை வரிவண்டுகளிசை பாடும்," "மழலைவண்டுழலும்" என்ப வாதலால், 'மழலைத்தும்பி' என்றார். பி-ம்:—[1]மாலை. [2]அகல. (982)

10.—சிலபூங்கொம்புகள் வளைய, சில வளையாது நிற்றல்.

உலந்தரு வயிரத் [1]திண்டோ [2]ளொழுகி[3]வா ளொளிகொண் மே
மலர்ந்தபூந் தொடையான் மாலை மைந்தர்பான் மயிலி னன்னார் [னி
கலந்தவர் போல வொல்கி யொசிந்தன சிலகை [4]வாராப்
புலந்தவர் [5]போலநின்ற வுளசில பூத்த [6]கொம்பர்.

(இ - ள்.) உலம் தரு வயிரம் திண் தோள் ஒழுகி - திரண்ட கல்லையொத்து உறுதிபொருந்திய திண்ணிய தோள்கள் ஒழுங்காக அமையப்பெற்று, வாள் ஒளி கொள் - மிக்கவொளியைக்கொண்ட, மேனி-உடம்பையுடைய, மலர்ந்தபூதொடையல்மாலை மைந்தர்பால்-மலர்ந்த மலர்கொண்டுதொடுக்கப்பெற்ற மாலையையணிந்த ஆடவரிடத்தில், கலந்தவர் - கலந்தவரான, மயிலின் அன்னார்போல - மயிலையொத்த சாயலையுடைய மகளிர்போல, சில - சில கொடிகள், ஒல்கி ஒசிந்தன - மெலிந்து துவண்டன; சில பூத்த கொம்பர் - பூத்துள்ள சிலபூங்கொம்புகள், கை வாரா-கைக்கு எட்டாதனவாகி [வசப்படாமல்], புலந்தவர் போல நின்ற - ஊடல்கொண்டவர்போல (வளையாமல்) நேராகவே நின்றனவாய், உள-உள்ளன; (எ-று.)

கைக்கெட்டின கொம்புகள் வளைந்துநிற்க, கைக்கெட்டாதவை வளையாமல் நேராகவே நின்றன வென்க. அங்ஙனம் கைக்கு எட்டிய பூங்கொடிகட்கு ஆடவரோடு புணர்ந்த மகளிரையும், கைக்கெட்டாமல் நின்ற பூங்கொடிகட்கு ஆடவர்க்கு வசப்படாமற்புலவி கொண்டு மிறைத்து நிற்கும் மகளிரையும் உவமைகூறினர்: உவமையணி. வாளொளி - ஒருபொருட்பன்மொழி. பி-ம்:—[1]தோண்மேல். [2]ஒழுக, ஒழுகும், ஒழுங்கு. [3]வார்நறையின்மல்கும், வாளொழுகுமேனி, வாரொளிகொண்மேனி. [4]ஆரப், வாரா. [5]போலநின்று வளைகில். [6]கொம்பு. (983)

11.—மகளிர் பூங்கொடிகளை யலங்கரித்தல்.

பூவெலாங் [1]கொய்து கொள்ளப் [2]பொலிவில துவள நோக்கி
[3]யாவையாங் கணவர் கண்ணுக் கழகில விவையென் றெண்ணிக்
கோவையும் வடமு நாணுங் [4]குழைகளுங் குழையப் பூட்டிப்
பாவையர் பனிமென் கொம்பை நோக்கினர் பரிந்து நிற்பார்.

(இ - ள்) (மலர்நிறைந்தபோது அழகுபொருந்தியிருந்த பூங்கொம்புகள்),—பூ எலாம் கொய்து கொளள - (தாங்கள் அவற்றிலுள்ள) மலர்களையெல்லாம் பறித்துக்கொண்டதனால், பொலிவு இல அழகு இல துவள - (மலர்களில்லாமையால்) பொலிவிழந்து அழகில்லாதனவாகித் துவண்டு நிற்க, நோக்கி-(அங்ஙன் துவண்டு தோன்றுவதைப்) பார்த்து,—பாவையர்-சித்திரப் பதுமைபோன்ற மகளிர், 'இவை-இந்தப் பூங்கொம்புகள், கணவர் கண்ணுக்கு-கணவருடைய பார்வைக்கு, யாவை ஆம் - எவ்வாறு தோன்றும்? [இனிமையற்றனவாகவே தோன்றும்],' என்று எண்ணி-, (தாம் பூண்டிருந்த), கோதைஉம் - மணிமாலையையும், வடம்உம் - முத்து வடத்தையும், நாண்உம்-அரைவடத்தையும், குழைகள்உம்-காதணிகளையும், குழைய-(அவை) துவளும்படி, பூட்டி-அணிந்து, (பிறகு), பனி மெல் கொம்பை-குளிர்ந்த மெல்லிய அந்தப்பூங்கொம்பை, பரிந்து நோக்கினர்-விரும்பிப்பார்ப்பவராய், நிற்பார்—; (எ - று.)

'மலர்கள் பறிக்கப்பெற்றதனால் வாடித்தோன்றுகின்ற பூங்கொம்புகள் தம் கணவர்கண்ணுக்கு இனியனவாய்த்தோன்றுவே' என்று, மகளிர் தம் அணிகலங்களால் அவற்றை அலங்கரித்து

மகிழ்ந்து நோக்கின ரென்க. தாம் அழகு இழப்பதையும் நோக்காது கணவர் களிப்பையே முக்கியமாகக்கருதி அலங்கரித்தன ரென்றதனால், தம்நலங்கருதாத் தகைமையர் அம்மகளிரென்பதும், கணவர்கண்ணுக்கு இனிமையாகத் தோன்றுவதே தமதுகடமை யென்று கொண்டுள்ளாரென்பதும் இங்குப் பெறப்படும். ஆற்றுப் படலத்தில், கலங்களை வெறுத்த மகளிர் "பூவுதிர்கொம்பெனப் போயினர்" என்றது, இங்குக் கருதத்தக்கது. பி-ம்:—[1]பறித்து. [2]பொலிவுள. [3]யாவதாம். [4]பணிகளும். (984)

வேறு.

12.—மகளிர் கூந்தலில் வண்டுகள் மொய்த்தல்.

[1]துறும்போதினிற்[2] றேன்றுவைத் [3]துண்டுழ றும்பி [4]யீட்டம்
நறுங்கோதை யோடு [5]நனைசின்னமு நீத்த நல்லார்
வெறுங்கூந்தன் மொய்க்கின்றன [6]வேண்டல வேண்டு போதும்
உறும்போக [7]மேலோர் நலனுள்வழி யுண்ப ரன்றே.

(இ-ள்.) துறும் போதினில் - அடர்ந்துள்ள மலர்களில், துவைத்து - மிதித்து, தேன் உண்டு உழல் - தேனையுட்கொண்டு சஞ்சரிக்கின்ற, தும்பி ஈட்டம்-வண்டுகளின கூட்டம், நறு கோதை யோடு நனைசின்னமும் நீத்தநல்லார் - நறுமணமுள்ள மலர்மாலை யோடு தேனையுடைய விடுதிப் பூக்களையும் நீக்கிய மாதர்களுடைய, வெறு கூந்தல் - வெறுமையாகிய கூந்தலில், மொய்க்கின்றன - மொய்ப்பனவாயின; வேண்டு போதுஉம் வேண்டல - (தாம் இது வரையும்) விரும்பி (நுகர்ந்து) வந்த மலர்களையும் விரும்பினவல்ல; மேலோர்-பெரியோர், நலன் உள் வழி-நல்லகுணமுண்டான இடத்தில், உறும் போகம் - அடையத்தகக இன்பங்களையெல்லாம், உண்பர் அன்றே-அநுபவிப்பார்களல்லவோ? (எ-று.)

முன்பு பூங்கொம்பின் மலர்களில் மொய்த்து மதுவை நுகர்ந்திருந்த வண்டுகளின் கூட்டம் அங்கு மாதரார் வந்து மலர்களைப் பறித்தபோது அம்மலர்களைவிட்டு அம்மகளிரின் வெறுங்கூந்தலில் தானே மொய்ப்பனவாயின: மகளிரின் கூந்தல் மலர்முதலியன வற்றை நீத்து இருந்தும் அங்கே தும்பிகள் மொய்த்ததற்குக் காரணம், அக்கூந்தலில் இயற்கையாகவே மணமிருத்தலாம். 'மகளிரின் வெறுங் கூந்தலில் வண்டுகள் மொய்த்தன' என்ற சிறப்புப்பொருளை 'நலனுள்ளவிடத்துப் போகத்தை நுகர்தல் மேலோரியல்பு' என்ற ஈற்றடியிற் கூறிய பொதுப்பொருள் சமர்த்தித்து நின்றது; வேற்றுப்பொருள்வைப்பணி. சின்னம் - விடுபூ. பி-ம்:—[1]நறுந்தேனினில். [2]தேனவைத்து. [3]உண்டுறு. [4]எல்லாம். [5]நளிர். [6]வேண்டுழி, வேண்டில. [7]எல்லாம். (985)

13.—ஒருமடந்தையின் புலவி.

மெய்ப்போதி [1]னங்கைக் கணி[2]யன்னவள் [3]வெண்ப ளிங்கிற்
பொய்ப்போது [4]தாங்கிப் பொலிகின்றதன் மேனி நோக்கி
இப்பாவை யெங்கோற் குயிரன்னவ ளென்ன வுன்னிக்
கைப்போதி னேடுநெடுங் கண்பனி [5]கார நின்றாள்.

(இ - ள்.) மெய் - (தனது) உடம்பினழகினால், போதின் நங்கைக்கு மலர்மகளான இலக்குமிக்கு, அணி அன்னவள்-ஆபரணம் போன்றவளான ஒருத்தி, வெள் பளிங்கில் போது தாங்கி பொலிகின்ற தன் பொய் மேனி - வெண்மைநிறமுள்ள பளிக்குப்பாறையிலே (கையிலே) மலர்தாங்கியவண்ணம் விளங்குகின்ற தன்னுடைய பிரதிபிம்பமானஉடலை, நோக்கி-பார்த்து,—'இ பாவை - இந்தப்பெண், எம் கோற்கு உயிர் அன்னவள - எனதுகணவனுக்கு உயிர்போல அன்பிற்கிடனானவள்,' என்ன உன்னி - என்றுநினைத்து, நெடு கண் பனி கார - (தனது) நீண்டகண்களிலிருந்து நீர் பெருக, கை போதினோடு-கையில்தாங்கிய மலருடனே, நின்றாள்—; (எ-று.)

பளிங்கில் தன்மேனி தோன்ற அதனைத் தன்மனைவியினுண்மையுருவமென்றே கருதித் தன் கணவன் அன்புசெய்தலைக் கண்கூடாகக் கண்ட ஒருமாது, தன் கணவன் வேற்றுமாதினிடத்துக் காதல்கொண்டானென்று மாறாகக்கருதியதனால், துயரடைந்து கண்ணீருகுக்கலாயினளென்பதாம்: மயக்கவணி. இனி, தன்மேனி நிழலைக்கண்டு இங்கே வேறொருமாது இருக்கிறாளென்று மாறாகக் கருதிய ஒருமாது, 'இவளை நமகணவன் கண்டால் நம்மைவிட்டு இம்மங்கையையே யாதரிப்பனே!' என்று எண்ணிஅழுதனளெனக் கருத்துக்கூறுதலு மொன்று. பொய்மேனி என இயையும். கார = கால: இது திசைச்சொலென்கின்றனர். பி-ம்:—[1]மங்கைக்கு. [2]ஒப்பவள், ஆபவள். [3]மெய், மென். [4]வாங்கி. [5]சோர. (986)

14.—மற்றொரு மடந்தையின் வருத்தம்.

கோளுண்ட திங்கண் முகத்தாளொரு [1]கொம்பொர் மன்னன்
தோளுண்ட மாலை யொரு[2]தோகையைச் சூட்ட நோக்கித்
தாளுண்ட [3]கச்சிற் றிடையுண்ட [4]முலைக்கண் மீது
வாளுண்ட [5]கண்ணீர் மழையுண்டென வார நின்றாள்.

(இ - ள்.) கோள் உண்ட திங்கள் முகத்தாள் ஒருகொம்பு-மேகததாற் சூழப்பட்ட சந்திரனையொத்த முகத்தையுடையவளான ஒபபற்ற பூங்கொம்புபோன்ற ஒருத்தி,—ஓர் மன்னன் தோள் உண்ட மாலை ஒரு தோகையை சூட்ட-ஓரரசன் தன் தோளிலணிந்துள்ள மாலையைக் கழற்றி மயில்போலுஞ் சாயலையுடைய ஒருத்திக்கு [தன்மனைவிக்கு] அணிய, நோக்கி - (அதைக்) கண்டு, தாள் உண்ட கச்சு இற்று இடை உண்ட முலைக் கண்மீது - முடியமைந்த கச்சு அற்று இடையையும்முறியச்செய்தமுலையினுடையகண்களில், வாள் உண்ட கண் நீர் மழை உண்டு என வார - வாளாயுதத்தையொத்த கண்களிலிருந்து நீர் மழைபோலப் பெருக, நின்றாள்—;

ஓரடவன் தன்மனைவிக்கு மாலைசூட்டியதுகண்டு, வேறொருத்தி தன்கணவன் தனக்கு அவ்வாறு செய்யாமைகருதிப் புலம்பின ளென்க. இனி, ஒருமன்னவன் தன்மனைவியரிருவருள் ஒருத்திக்கு மாலைசூட்ட மற்றொருத்தி தனக்கு அவ்வாறு கணவன் செய்யாமல் உபேட்சித்ததுபற்றிப் பொறாதுவருந்தினாளென்னலுமாம். கூந்தல் சுற்றியிருக்கப்பெற்ற முகத்துக்கு, முகில்சூழ்ந்த மதி

யுவமை. கோள்-முகிலென்னும்பொருள தர்தலை, "கோளொடுகுளிர் மதி வந்துவீழ்ந்தென" என்ற சிந்தாமணியாலும் அறிக. கோள் உண்ட திங்கள் என்னுந்தொடர்க்கு-இராகுவினல் ஒருபுறம்பற்றப் பட்ட திங்கள் என்று உரைகூறி, மயிர்முடியை யொருபுறங் கொண்ட முகத்திற்கு - இராகுவினற்பற்றப்பட்ட முகம் உவமை யென்பாருமுளர். கோள்-ஒளியுமாம். வாளுண்ட, உண்ட - உவம வுருபு. பி-ம்:—[1]கொம்பு. [2]தோகையாற். [3]கச்சாற்றகையுண்ட. [4]முலைக்கணலி. [5]கண்ணின். (987)

15.—ஒருத்தி கணவன்மறைந்துநிற்க அலமருதல்.

மயில்போல் வருவாண் [1]மனங்காணிய காதன் மன்னன்
செயிர்தீர் மலர்க்காவினெர் மாதவிச் சூழல் சேரப்
பயில்வா ளிறைபண்டு பிரிந்தறி யாள்ப தைத்தாள்
உயிர்நாடி யொல்கும் முடல்போ லலமந் [2]துழன்ருள்.

(இ - ள்) காதல் மன்னன் - (தன் மனைவியிடத்து) ஆசை யுள்ள ஓரரசன், மயில் போல் வருவாள் மனம் காணிய - மயில் போன்ற சாயலோடுவருகின்ற (தன்) மனைவியின் மனநிலையை ஆராய்ந்தறியுமாறு, செயிர் தீர் மலர் காவின் ஒர் மாதவி சூழல் சேர-குற்றமற்ற அந்தபபூஞ்சோலையிலுள்ள ஒரு குருக்கத்திபடர்ந்த பந்தலிற் போய்ச்சேர்ந்திருக்க,—பயில்வாள் - (தன்கணவனோடு இடைவிடாது) பழகுபவளும், பண்டு இறை பிரிந்து அறியாள் - (இதற்கு) முன்பு (தன்) கணவனை ஒருபோதும்பிரிந்திராதவளு மான அவனுடைய மனைவி, பதைத்தாள - துடித்து, உயிர் நாடி ஒல்கும் உடல்போல் - (தனக்குஉரிய) உயிரைத் தேடிக்கொண்டு தளரும் உடம்புபோல், அலமந்து உழன்ருள - மனஞ் சுழன்று திரியலானள்; (எ - று.)

ஒரு மன்னவன் 'தான் பிரிந்தால் தன் மனைவி எவ்வாறு இருப் பாள்!' என்பதை யறியுமாறு ஒருமாதவிப்பந்தலில் மறைந்திருந் தனஞக, ஒருபோதும் கணவனைப் பிரிந்தறியாத அவள் அப்போது கணவனைத் தேடுபவளாய் உழன்றன ளென்க. திரிகின்றவட்கு உயிரை நாடித்திரியும் உடலை உவமை கூறியதால், அந்தமாது தன் கணவனை உயிர்ப்போலப் பாவித்திருந்தா ளென்பது பெறப்படும். சூழல்-கொடிவீடு: வடமொழில் 'லதாக்ருஹம்' எனப்படும். இறை- இரட்டுறமொழிதல். பி - ம்:—[1]மணம். [2]உழந்தாள். (988)

16.—ஊடியஒருத்தி தனக்குஎட்டாதமலரைப்பறித்துத் தருமாறு குயிலை வேண்டுதல்.

மைதாழ் கருங்கண்கள் சிவப்புற வந்து [1]தோன்ற
நெய்தாவும் வேலாளெடு நெஞ்சு புலந்து நின்ருள்
எய்தாது நின்றம் மலர்நோக்கி [2]யெனக்கி தீண்டக்
கொய்தீதி [3]யென்ருேர் குயிலைக்கரங் [4]கூப்பு கின்ருள்.

(இ - ள்.) மை தாழ் கருங்கண்கள்-மைதங்கிய கரிய கண்களில், சிவப்பு - செந்நிறம், உற வந்து தோன்ற - மிகவும் வந்துதோன்றும்

படி, நெய் தாவும் வேலானொடு நெஞ்சு புலந்து நின்றாள்-நெய் பூசப் பெற்ற வேலாயுதத்தையுடைய கணவனோடு மனத்திற் பிணக்குக் கொண்டிருந்த ஒருத்தி,—எய்தாது நின்ற மலர் நோக்கி-(தன் கைக்கு) எட்டாமலிருந்த மலரைப் பார்த்து, (அம்மலர்மீதுள்ள விருப்பத்தினால்), 'இது எனக்கு ஈண்ட கொய்து ஈதி - இம்மலர் எனக்குக் கிடைக்குமாறு பறித்துத்தருவாய்,' என்று-, ஓர் குயிலை-, கரம் கூப்புகின்றாள்—; (எ - று.)

தன் கணவனோடு பிணங்கியதனால் மலரைப்பறித்துத்தருமாறு குயிலை வேண்டினளென்க. தோன்றப் புலந்து என இயையும். நின்றம்மலர் - விரித்தல்: விகாரமின்றியும் படிப்பதுண்டு. பி-ம்:—[1]தோன்ற. [2]எற்கிதீண்டுக், என்கைகள் தீண்டா. [3]என்றே. [4]கூப்பினைாள். இது "மெய்ப்போதின்" (13) என்றதன்பின் இருப்பதன்றி, சில பிரதிகளில் "செம்மாந்த" (17) என்பதன்பின் காணப்படுகின்றது. (989)

17.—ஒரு மாதின் ஊடல்.

செம்மாந்த தெங்கின் னிளநீரையொர் செம்ம னோக்கி
அம்மாவிவை மங்கையர் [1]கொங்கையி னாய வென்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பன வென்றொ ரேழை
விம்மா வெதும்பா வெயரா[2]முகம் வெய்து யிர்த்தாள்.

(இ - ள்.) செம்மாந்த-ஓங்கிவளர்ந்த, தெங்கின்-தென்ன மரத்திலுள்ள, இள நீரை - இளநீர்க்காயை, ஓர் செம்மல்-ஒரு தலைவன், நோக்கி - பார்த்து, 'அம்மா - ஆச்சரியம்! இவை - இவ்விளநீர்கள், மங்கையர் கொங்கையின் ஆய-மகளிரின் தனங்கள்போலத் தோனறியுள்ளன,' என்ன - என்றுகூற,—(அதுகேட்ட), ஓர் ஏழை - ஒரு பேதைமைக்குணமுடைய பெண் [அவன் மனைவி], 'எ மாதர் கொங்கைக்கு இவை ஒப்பன-இவ்விளநீர்கள் எந்த மடவாள் கொங்கைக்கு ஒப்பாகுவன?' என்று-என றுசொல்லி, வெதும்பா-மனங்கொதித்து, விம்மா-அழுது, முகம் வெயரா - முகம் வெயர்த்து, வெய்து உயிர்த்தாள்—; (எ-று.)

'மங்கையர் கொங்கை' எனக் கணவன் பொதுப்படப் பன்மையாகக் கூறியதனால், தனது கணவன் தன்னிடத்தேயன்றிப் பிறமங்கையரிடத்தும் காதல்கொண்டுள்ளவனென்று, அவன்மனைவியாகிய மடந்தை புலந்து வருந்தினளென்க. பி - ம்:—[1]கொங்கைகளாகும். [2]மனம். (990)

18.—மற்றொருத்தியின் புலவி.

போரென்ன வீங்கும் பொருப்[1]பன்ன [2]பொலங்கொ டிண்டோள்
மாரன் னனையான் மலர்கொய்திருந் தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்பு தைப்ப
ஆரென்ன லோடும் மனலென்ன [3]வெதும்பு கின்றாள்.

(இ - ள்.) போர் என்ன வீங்கும் - போரென்று சொன்னமாத்திரத்திற் பூரிக்கின்றனவாய், பொருப்பு அன்ன - மலையையொத்தன

வான, பொலம் கொள் - அழகைக்கொண்ட, திண் தோள் - வலிய தோள்களையுடையவனும், மாரன் அனையான் - மன்மதனையொத்தவனுமான, மலர் கொய்து இருந்தானை - புஷ்பங்களைப்பறித்துக்கொண்டிருந்த (தன்) கணவனை,—கார் அன்ன கூந்தல் - மழையையொத்த கூந்தலையுடையவளாய், ஓர் குயில் அன்னவள் - குயிலையொத்த குரலையுடையவளான ஒருத்தி, வந்து - (நெருங்கி) வந்து, கண் புதைப்ப - கண்ணை மூடினளாக, (அப்போது அவன்), ஆர் என்னலோடும்-'(என்னைக் கண்ணைமூடியவர்) யாவர்?' என்று வினவியவுடனே, (அவள்), அனல் என்ன - நெருப்புப்போல, வெதும்புகின்றாள்-வெப்பமாக மூச்சுவிடுபவளானாள்; (எ-று.)

கண்ணை மூடியவுடனே 'தன்கண்ணை மூடியவள் இன்னாள்' என்று திண்ணமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய கணவன 'ஆர்'? என்று வினவியதனால், 'இவனிடத்து நம்மைப்போல விளையாடுவதற்குஉரிய மகளிர் பலர் இருக்கின்றனர்போலும்' என்று புலந்து வெய்துயிர்த்தனள். பி - ம்:—[1] என்னப். [2] வலங். [3] உயிர்த்தயிர்த்தாள், அயிர்த்துயிர்த்தாள். (991)

19.—ஒரு ஆடவனது செயல்.

[1] ஊற்றுர் நறைநாண் மலர்மாத ரொருங்கு வாசச்
சேற்றுல் விளையாத செந்தா மரைக்கைக [2] ணீட்டி
[3] ஏற்றுர்க் [4] குதவா ளிடையேந்தின னின்றொ ழிந்தான்
மாற்று [5] னுதவான் [6] கடு [7] வச்சையன் போலொர் மன்னன்.

(இ - ள்.) ஓர் மன்னன்-ஓர் அரசன்,—ஒருங்கு - ஒருசேர, சேற்றுல் விளையாத வாசம் செந்தாமரை கைகள்-சேற்றிலதோன்றுதனவான வாசனையுள்ள செந்தாமரைமலர்களையொத்த கைகளை,—நீட்டி, ஏற்றுர்மாதர்க்கு-(மலர்களை வேணுமென்று) கேட்ட(தனது) மனைவிமார்க்கு, நறை ஊற்று ஆர் நாள் மலர் - தேனூற்றுப்பொருந்திய அன்றுமலர்ந்த மலர்களை, உதவான் - கொடாமல், இடை ஏந்தினன்-(அவ்விருவர்க்கும்) நடுவே (தன் கையில்தானே) தாங்கினவனாகி, மாற்றுன் உதவான் கடு வச்சையன் போல்-(தன்னையடைந்து இரந்தவர்க்குக் கொடுக்க) மறுக்காமலுங் கொடாமலும் இருக்கின்றவனான கொடிய உலோபியைப்போல நின்றொழிந்தான்-நின்றிட்டான்; (எ-று.)—இரண்டாமடியில் 'விளையாச் செழுந்தாமரைக்' என்று பாடம் இருப்பின் ஓசைக்குச் சிறக்கும்.

'மாதரொருங்கு' என்றமையால், 'இருவர் மாதர்' எனப்பட்டது. தனது மனைவியர் இருவரும் ஒருசேரக் கேட்டதனால், தலைவன், தான்பறித்த மலர்களைச் சமமாகப்பகுத்து அவ்விருவர்க்குந் தந்தாலும் 'உன்னிடத்துச் சிறப்பாகக் காதல்வைத்துளளேனென்று இதுவரை இவன் கூறிவந்தது பொய்யே என்று கூறி இருவரும் புலப்பரே' என்று கருதியதனாலும், தராமற் போய்விட்டாலும் 'நம்மை இவன் அவமதித்தானென்று இருவரும் ஊடுவரே' என்று கருதியதனாலும் கொடுக்கவும் மறுக்கவும் மாட்டாமல் அவர்களிடையே வாளாநின்றான்: அவ்வாறுநின்ற கணவனுக்குக் கொடைப்பயனைக் கொள்ளவேணுமென்று ஒருசாருள்ள எணணத்தினல் ஏற்றுரை மறுக்காமலும் பணத்திலுள்ள பெருநசையாற்

பிறர்க்குக்கொடுக்க உடன்படாமலுமிருக்கும் உலோபியை யுவமை கூறினர். இரப்பவர்க்கு இல்லையென்று கூறிவிட்டால் ஏற்பவன் வேறோரிடத்துச்சென்று இரந்து பெறக்கூடு மாதலால் அதற்கும் இடமில்லாதவாறு மறுக்காமலும் கொடாமலுமிருக்கின்ற உலோபியை, 'கடுவச்சையன்' என்றார். பி-ம்:-[1] ஊற்று. [2] நீட்ட. [3] ஏற்றாரை. [4] நோக்க, நோக்கி, நோக்கான். [5] உதவா. [6] நெடு. [7] வச்சையர். (992)

20.—மாற்றவள்பேரைக் கணவன்கூற ஒருத்திகொண்ட வருத்தம்.

தைக்கின்ற வேனோக்கின டன்னுயி [1] ரன்ன மன்னன்
மைக்கொண்ட [2] கண்ணு [3] ளெதிர் மாற்றவள் பேர்வி ளம்ப
மெய்க்கொண்ட [4] மானந் [5] தலைக்கொண்டிட விம்மி மென்பூக்
கைக்கொண்டு [6] மோந்தா ளுயிர்ப்புண்டு [7] கரிந்த தன்றே.

(இ - ள்.) தன் உயிர் அன்ன மன்னன் - தனது உயிரையொத்தவனான தலைவன், மை கொண்ட கண்ணாள் எதிர் - மைதீட்டப்பெற்ற கண்களை யுடையவளான (தன்) மனைவியினெதிரே, மாற்றவள் பேர் விளம்ப-சக்களத்தியின்பேரைச் சொல்லினனாக, - தைக்கின்ற-(மார்பிலே) உருவுகின்ற, வேல் - வேற்படைபோன்ற, நோக்கினள் - கண்களையுடையவளான ஒருத்தி,—மெய் கொண்ட மானம் - உண்மையாகக்கொண்டுள்ள மானம, தலைக்கொண்டிட - தலையையெடுக்கவெட்டாமற்செய்ய, (அதனால்), விமமி - அழுது, மெல் பூ - மெல்லியமலரை, கைக்கொண்டு மோந்தாள் - (தன்) கையிலேகொண்டு மோந்தாள; (அப்போது அம்மங்கையின்), உயிர்ப்பு உண்டு - பெருமூச்சு வீசியதனால், கரிந்தது - (மோந்தபூ) கரிந்துபோயிற்று; (எ - று.)—அன்றே-ஈற்றசை.

ஒருமன்னவன் சோர்வினால் தன்னுடைய மனைவியொருத்தியினெதிர் மாற்றவள்பேரைச் சொல்லியழைத்தானாக, மிகவும் மானத்தைப் பாராட்டுபவளான அதுகேட்ட அம்மங்கை, பிறமாதர்முன் தான் அவமானமடைந்ததனால் தலையிறக்கங்கொண்டு கண்ணீர் விட்டுத் தன்நிலை பிறர்க்குத்தெரியாதிருக்கவேணு மென்ற கருத்தினால் தன்கையிற்கொண்ட பூவை மோந்தவண்ணம் குனிந்துநிற்க, அவளுடைய உள்ளத்துவெதுப்பினால் மோந்த அந்தமலர் கரிந்துபோயிற் றென்பதாம். அந்தமாது 'தன்னுயிரே இவன்' என்னுமாறு பேரன்பினளாயிருக்க அத்தலைவன் இம்மாதினிடத்து அவ்வாறில்லாமை மாற்றவள்பேரை விளம்பியதனால் பெறப்பட்டதுபற்றி, அத்தலைவிக்கு அவமானம் மிக்கதென்க. தலைக்கொண்டிட-மிகஎனினுமாம். பி-ம்:—[1] ஆன. [2] கண்ணான. [3] அவன், வர. [4] நாணங். [5] தலைக்கொண்டுவெதும்பி. [6] போந்தாள. [7] கரிந்த. (993)

21.—ஓரரசன் தனது தேவிமார்முன்னிலையில் திரிதல்.

திண்டே ரரசன் [1] னொருவன்குலத் [2] தேவி யர்தம்
ஒண்டா மரைவாண் முகத்துண்மிளி [3] ருண்க ணெல்லாம்
கண் [4] டா தரிப்பத் திரிவான்மதங் கவ்வி [5] யுண்ண
வண்டா தரிக்கத் திரிமா [6] மதயானை யொத்தான்.

(இ-ள்.) குலம் தேவியர்தம்-உயர்குலத்துப்பிறந்த (தன்) மனைவியரின், ஒள் தாமரைவாள்முகத்துள்-அழகிய தாமரைமலர்போன்ற ஒளி பொருந்திய முகங்களில், மிளிர்-விளங்குகின்ற, உண்கண் எல்லாம்-மையுண்டகண்கள்யாவும், கண்டு-(தனகட்ட ழகைப்) பார்த்து, ஆதரிப்ப - விருப்பங்கொள்ளும்படி, திரிவான்-திரிபவனாகிய, திண் தேர் அரசன் ஒருவன்-வலியதேரையுடைய ஓரரசன்,-மதம் கவ்வி உண்ண (தன்) மதநீரைக் கவ்வியுண்ணும்பொருட்டு, வண்டு ஆதரிக்க திரி-வண்டுகள் விரும்புமாறு திரிகின்ற, மா மதம் யானை-மிக்கமதங்கொண்டயானையை, ஒத்தான—; (எ-று.)

மதநீரையுண்ணும்பொருட்டு வண்டுகள் ஆதரிக்கும்படி திரிகின்ற மதயானை, கட்டழகைக் காணும்பொருட்டுத் தேவிமாரான மகளிரின்கண்கள் ஆதரிக்கும்படி திரிகின்ற அரசனுக்கு ஏற்ற உவமையாம்; உவமையணி. தேவியர் என்று கூறியதனால், இவன் பலமகளிரைமணந்துள்ளவனென்பது பெறப்படும். பி-ம்:—[1]குலத்தேமொழித். [2]தேவிமார்தம், தேவியர்கள். [3]ஒண்கணல்லார், ஒண்கணெல்லாம், கண்கடம்மால். [4]ஆதரிக்கத்திரிவான், ஆதரிக்கின்றதோர். [5]உண்ணும். [6]மதவானை. *(994)*

22.—ஒருமன்னவன்மீது அவன்தேவியர் இருவரும் புலத்தல்.

சந்திக் கலாவெண் மதிவா ணுதலா டனக்கும்
வந்திக்க லாகும் [1]மடவாட்கும் வகுத்து நல்கி
நிந்திக்க லாகா வுருவத்தின [2]னிற்க மென்பூச்
சிந்திக் [3]கலாபம் மயிலிற்கண் சிவந்து [4]போனார்.

(இ-ள்.) நிந்திக்கல் ஆகா உருவத்தினன் - பழிக்கத்தகாத உருவத்தையுடைய ஓரரசன்,—சந்தி கலா வெள் மதி வாள் நுதலாள் தனக்கும்-சந்தியாகாலத்தில் தோன்றுகின்ற சிலகலைகளை மாத்திரங்கொண்ட வெண்ணிறமுள்ள பிறைச்சந்திரன்போன்ற நெற்றியையுடைய (தனது) ஒருமனைவிக்கும், வந்திக்கல் ஆகும் மடவாட்கும்-(அழகிறகு உவமை கூறப்படுகிற மலர்மகளும்) வந்திக்கத்தக்க பேரழகியான மற்றொரு மனைவிக்கும், வகுத்து நல்கி நிற்க-(தான் கொய்த மலர்களைச் சரிசமமாகப்) பகிர்ந்து கொடுத்து நிற்கையில்,—(அவ்விருவரும்), மெல் பூ சிந்தி - (அவன் தந்த) மெல்லிய மலர்களைக் கீழேகொட்டிவிட்டு, கண் சிவந்து - (அவன் மீதுள்ள சினத்தினால்) கண்கள் சிவக்கப்பெற்று, கலாபம் மயிலின் - தோகையையுடையமயிலைப்போல, போனார் - (அவன்முன்நிற்க விருப்பமில்லாது அப்பாற்) போய்விட்டனர்; (எ - று.)

இதுவரையில் 'கணவன் என்மீதுதான் மிகுகாதல் கொண்டுள்ளான்' என்று கருதியிருந்த மகளிரிருவரும், அப்போது இருவரிடத்தும் சமனாகவுள்ளானென்பது தோன்றக் கொய்த மலர்களைச் சரிசமமாகக் கணவன் பகிர்ந்துகொடுக்கவே, தம்மிடத்துச் சிறப்பாகக் காதல்வையாமையையுணர்ந்து கண்கள் சிவந்திடச் சினந்து அவன் தந்த மலர்களையும் சிந்திவிட்டுப்போயினரென்க. இனி, 'மதிவாணு

தல்' என்றதனால்-இத்தலைவி அழகுபடைத்தவளென்றும், 'வந்திக் கலாகும்மடவாள்' என்றதனால - (அருந்ததிமுதலிய பதிவிரதைகளும் வணங்கத்தக்கவள என றும்கூறுவர் ஒருசாரார். [3]கலாபபயிற்கணகள் என்ற பாடத்துக்கு—மென பூ கலாபம் சிந்தி - (தலைவன் தந்த) மெல்லியமலரோடு (இருபத்தொருவடமுள்ள இடையணியாகிய) கலாபத்தையும் அறுத்துச் சிதறி, அயில் - வேற்படைபோன்ற, கண்கள் சிவந்துபோனரென்க. கலாமதி = கல்லாமதி, இளஞ்சந்திரன் என்றுரைப்பாருமுளர். பி - ம்:—[1]சுடர்வாட்கணினாட்கும், அவ்வாட்கணினாட்கும். [2]நின்றபோழ்து, நிற்பப்போது. [3]புதுப்பூவயிற்கண்கள். [4]போனாள். (995)

வேறு.

23.—இனி, பன்னிருகவிகள்-அப்போது பல்வகையினரான ஆடவரிடத்தும் மகளிரிடத்தும் நிகழ்ந்த நிகழ்ச்சி கூறும்.

வந்தெங் குந்[1]தன் மன்னுயி ரேயோ [2]பிறிதொன்றோ
கந்தந் [3]துன்றுஞ் சோர்குழல் [4]காணாள் [5]கலைபேணாள்
அந்தந் தோறு மற்றுகு முத்தம் மவை [6]பாராள்
சிந்துஞ் சந்தத் தேமலர் [7]தேடித் [8]திரிவாளும்.

(இ - ள்.) கந்தம் துன்றும் - இயற்கைமணம் நிரம்பியுள்ள, சோர்குழல்-அவிழ்ந்துள்ள கூந்தலை, காணாள் - கவனித்துப்பாராமலும் [முடிந்திடாமலும்], கலை பேணாள் - (அரையிலுடுத்த) ஆடை அவிழதலையும் பொருட்படுத்தாமலும், அந்தம் தோறும்அற்று உகும முத்தம் அவை பாராள்-(அந்தச்சோலையின்) எல்லைவரையிலும் முத்துச்சரங்கள் இற்றுச் சிதறிய முத்துக்களையும் மதியாமலும், (இவள் தேடுவது), தன் மன் உயிர்ஏ ஓ - தனது (உடம்பில்) தங்குந்தன்மையுள்ள உயிரைத்தானோ, (அன்றி), பிறிது ஒன்று ஓ-வேறுமுக்கியமானதொரு பொருளைத்தானோ, (என்று கண்டவர் கருதும்படி), எங்குஉம் வந்து-(அந்தச்சோலையின்) எல்லாவிடத்தும் வந்து, சிந்தும்சந்தம் தேன் மலர்தேடி-(தேனைச்)சிந்துவனவான அழகிய வாசனைபொருந்திய மலர்களை நாடி, திரிவாளும்-திரிபவளும்,—

அப்போது ஒருமடந்தை தனது குழல் சோர்வதையும் ஆடை குலைவதையும் முத்துமாலைகளிலிருந்து முத்துக்கள் சிந்துவதையும் கூடக் கவனியாமல், 'தன்உயிரையோ, அன்றி அதனினுஞ் சிறந்த வேறு ஒன்றனையோ இவள் தேடுகின்றனள்' என்று கண்டவர் கருதுமாறு மலர்களைத்தேடித்திரிபவளாயினளென்க. சிந்தும்-ஈழேசிந்தியஎன்பாருமுளர். பி-ம்:—[1]தம். [2]பிறிதேயோ. [3]தங்குஞ். [4]பேணாள், கண்ணான், காணார். [5]கலுழ்கின்றாள், குழல்பேணார். [6]பாரார். [7]நாடி. [8]திரிவாரும், திரிகின்றார். (996)

24. யாழொக் குஞ்சொற் பொன்னனை யாளோ ரிகன்மன்னன்
தாழத் தாழா டாழ்ந்த மனத்தா டளர்கின்றாள்
ஆழத் துள்ளுங் கள்ள [1]நினைப்பா ளவனின்ற
சூழற் கேதன் கிள்ளையை யேவித் [2]தொடர்வாளும்.

(இ - ள்.) யாழ்ஒக்கும்சொல்-யாழினிசையையொத்து இனிய சொல்லையுடைய, பொன் அனையாள் - திருமகளையொப்பவளான ஒருத்தி,—ஓர் இகல்மன்னன் - ஒப்பற்ற வலிமையையுடைய தன் கணவனான அரசன், தாழ-(தன்னை) வணங்கிநிற்கவும், தாழாள் - (முதலில் தான்) மனம் இளகாதவளாயிருந்து, (பின்பு அந்த மன்னவன் அப்பாற்சென்றுவிடவே), தாழ்ந்த மனத்தாள் - இளகின மனமுடையவளாய், தளர்கின்றாள்-(மிகவும்) தளர்ந்து, ஆழத்து உள்ளும் - ஆழ்ந்து எண்ணுகின்ற, கள்ளம் -வஞ்சகமான எண்ணத்தை, நினைப்பாள் - கொண்டவளாய்,—அவன் நின்ற சூழற்கு ஏ - அந்தக்கணவன் தங்கிநின்றஇடத்திற்கே, தன் கிள்ளையை ஏவி - தன்கிளிப்பிள்ளையை முந்துற அனுப்பி, (பிறகு), தொடர்வாள் உம் - (அதனை த)தொடர்பவள்போலச் செல்லுகின்றவளும்,—

கணவன் தன்னைவணங்கிநிற்கவும் ஒருத்தி ஊடலினால் அவனை மதியாதிருந்தனள். முகம்பெருமையால் அவன் அந்த இடத்தினின்றுவிலகிச்சென்றான். செல்லவே, பிறகு தான்மனமிளகித் தளர்ந்து 'ஒருகால் வேறொருமங்கையைத் தன் கணவன் சேர்ந்துவிடுவானோ?' என்ற எண்ணத்தையுங் கொண்டு, 'தானே கணவனை நாடிச்செலவது என்றால் அது தன் தலைமைக்கு இழுக்காம்' என்ற கருத்தினால் முதலில் தன்கிளியை அவனுள்ளவிடத்துக்குப்போக்கி, அக்கிள்ளையைத்தேடிச்செல்பவள்போலக் கணவனுள்ளவிடத்துக்கு அத்தலைவி தான் சென்றன ளென்பதாம். கணவன்மீது ஐயங்கொண்டனளென்பதை'ஆழத்துள்ளுங்கள்ள நினைப்பாள்' எனறார். ஆழத்துள்ளும் கள்ளம்நினைப்பாள் என்பதற்கு - கணவனைநாடிச் செல்வதென்று தான் கொண்ட கருத்து முகக்குறிப்பு முதலிய எவ்வகையாலும் வெளிப்படாதபடி தன் நெஞ்சிற்குளளேயே கிடக்குமாறு நினைப்பவளென்று கருத்துக் கொள்ளுதலும் ஒன்று. பி-ம்:— [1]மனத்தாலவன், மனத்தாளவன், நினைவாளவள், நினைப்பவவண். [2]தொடர்கின்றாள். (997)

25. அந்தா ராகத் தைங்கணை நூறு யிரமாகச்
சிந்தா நின்ற [1]சிந்தையி னான்செய் குவ[2]தோரான்
மந்தா ரங்கொண் [3]டீகுதி யோமா தவி[4]யென்றோர்
சந்தார் [5]கொங்கைத் [6]தார்குழலாள்பாற் [7]றளர்வானும்.

(இ - ள்.) அம் தார் ஆகத்து - அழகிய மலர்மாலையையணிந்த மார்பிலே, ஐங் கணை நூறுயிரம் ஆக - (மன்மதனுடைய) பஞ்சபாணங்கள் இலட்சக்கணக்காகவிழ,—(அதனால்), சிந்தாநின்ற சிந்தையினான் - சிந்துகின்ற மனத்தையுடையவனான ஒரு மன்னவன்,—செய்குவது ஓரான் - (தான்) செய்யவேண்டிய செயல் இன்னதென்று ஆராய்ந்தறியமாட்டாதவனாகி,'மாதவி-மாதவிக்கொடியே! மந்தாரம் கொண்டு ஈகுதிஓ - (நீ) மந்தாரமலரைப் பூத்துத் தரவல்லையோ?' என்று-என்றுசொல்லி, ஓர் சந்து ஆர்கொங்கை தார் குழலாள்பால்-சந்தனக்குழமபையணிந்த தனங்களையும் மலர்மாலைசூடிய கூந்தலையுமுடையவளான ஒருத்தி பொருட்டாக, தளர்வான உம் - மனம்வாடி நிற்பவனும்,—(எ-று.)

மன்மதனது மலர்க்கணைகளாலெய்யுண்ட ஓராடவன், தன்காதலி ஊடி நீங்கினமைபற்றித் தான் செய்குவதை யோராமையால் அந்தத் தார்குழலாள்பொருட்டாகத் தளர்ந்து, 'மாதவி! மந்தாரம் ஈகுதியோ?' என்று பித்தன்போலப் பிதற்றினனென்க. இவன் அங்ஙனம் பிதற்றினதற்குக் காரணம், மன்மதன் கணைக்கு இலக்கானமையென்பார் 'ஐங்கணை நூறாயிரமாகச் சிந்தாநின்ற சிந்தையினான்' என்றார். இதனால், அவ்வாடவனது உன்மதாவஸ்தையைக் கூறியவாறு. இனி, 'இவள் இதுவரையும் இன்முகத்தினளாய் இன்பந்தந்து இப்போது தன்னியற்கைமாறித் துன்பந்தராநின்றனள்; இது தகுமோ?' என்பதை யுணர்த்த, 'மாதவிக் கொடியே! நீ உன் இயற்கைப்பூவைப் பூவாது மந்தாரமலரைப் பூத்துத் தருவாயோ?' என்று கூறினானென மூன்றாமடிக்குக் கருத்துக்காணலுமாம்: அவ்வாடவன் மனைவியினிடத்துக் காதலாற் கூறுகின்றானே யன்றி அவளை யிழித்துச் சொல்லவேணுமென்னுங் கருத்திலனென்பதை விளக்க, கவி 'தார்குழலாள்பாற் றளர்வான்' என்றார். இனி, இப்பாடலுக்கு, மன்மதன் கணைக்கு இலக்கான ஆடவன் தனக்கு முகங்கொடாத மாதினிடத்துச் சென்று 'நீ இந்த மந்தாரமலரைப் பெற்றுக்கொண்டு உன்னிடத்திலுள்ள குருக்கத்திமலரைத் தருவாயா?' என்று இரந்துபின்னிற்றலென்னுந்துறைபடக் கேட்டதாகப் பொருள்காணலுமொன்று.

பி - ம்:—[1] சிந்தையினார், செய்கையினார், செய்கையினாற். [2] ஓரார். [3] ஏகுதிம்யா, ஈர்குவையோ. [4] என்ன. [5] தொங்கற். [6] தார்குழலார், தாழ்குழலாள், நன்னுதலாள். [7] தளர்வாரும். (998)

26. நாடிக்கொண்டாள் குற்ற [1] நயந்தாண் [2] முனிவாற்றாள்
ஊடிக் [3] காணக் காட்டு [4] நலத்தா [5] ளுடனில்லாள்
தேடித் தேடிச் [6] சேர்த்த [7] செழும்பூ நறுமாலை
சூடிச் சூடிக் கண்ணடி நோக்கித் [8] துவள்வாளும்.

(இ - ள்.) குற்றம் நயந்தாள் நாடி கொண்டாள்-(தன் கணவன் மீது) குற்றத்தை விரும்பித் தேடிக் கற்பித்துக்கொண்டு, முனிவு ஆற்றாள் - (அதனால்தோன்றிய) சினம் ஆறப்பெறாமல், ஊடி-(நேரே வந்த கணவன்மீது) ஊடல்கொண்டு, காண-(அதனைத் தன்கணவன்) காணுதலால், காட்டும்-தோன்றிய, நலத்தாள் - இன்பத்தையுடைய ஒருத்தி, உடன் - உடனே, நில்லாள் - (அந்தஊடியநிலையில்) நில்லாதவளாய்,—தேடி தேடி சேர்த்த செழு பூ - பலவிடங்களிலுஞ் சென்று தேடிச் சேர்த்த வளமான மலர்களைக் கொண்டு தொடுத்த, நறு மாலை-நறுமணமுள்ள மாலைகளை, சூடி சூடி-, கண்ணடி நோக்கி-கண்ணாடியிலே (இவ்வொப்பனை நன்கு அமைந்துள்ளதா? என்று) பார்த்து, துவள்வாள்உம்-(அதனை நுகர்வதற்குக் கணவன்வராமையால்) வாடுகின்றவளும்,—(எ - று.)

கணவன்மீது குற்றத்தை யேறிட்டு அவன்வந்தபோது ஊட, அக்கணவன் தனமனைவியிடத்து முகம்பெறாமையாற் சென்று விட்டானாக, பிறகு அவ்வூடல் தானாகவே தணிந்து தேடிச் சேர்த்த மலர்களைக்கொண்டு தொடுத்த மாலையைச் சூடிக் கண்ணாடியில் அழகு பார்த்து, தன்கணவன் தன்னொப்பனை கண்டு களிக்குமாறு

அப்போதுவராமையால் ஒருத்தி வாடுபவளாயின ளென்க. அடுக்கு இரண்டும், தொழிற்பன்மைகாட்டும். ஒருமுறை சூடி அப்போது கணவன்வராமையால் 'இது கணவனுக்கு இன்பம் பயக்கவில்லை போலும்; இதனைக்களைந்து பின்பு வேறுவகையாகத் தொடுத்துச் சூடுவது' என்று இவ்வாறு பலமுறை தொழில் நிகழ்ந்த தென்க. பி - ம்:—[1] நயந்தான். [2] முனிவாருள். [3] காட்டக்காணும். [4] நலத்தான். [5] உடனில்லான். [6] செய்த, சேர்ந்த. [7] நறும்பூஞ்செழு, நறும்பூஞ்செம். [8] துவள்வாரும். (999)

27\. மறலிக் [1] கூணும் வன்கதிர் வேலா [2] னிடையேவந்து
உறவிக் கோலம் [3] பெற்றிலெ னென்று லுடன்வாழ்விப்
பிறவிக் [4] கொல்லே னென்செய்வ திப்பே ரணி [5] யென்னு
விறலிக் கீவா ளொத்திழை யெல்லாம் [6] விடுவாளும்.

(இ - ள்.) 'மறலிக்கு ஊண் ஆம் - யமனுக்கு உணவுகிடைத்தற்குக் காரணமாகிய, வல் கதிர் வேலான் - வலிய ஒளியுள்ள வேலாயுதத்தையுடைய (என்) கணவன், இடையே வந்து உற-என்னிடம் வந்து பொருந்துமாறு, இ கோலம்-இந்த அலங்காரத்தை, பெற்றிலென்-பெற்றேனில்லை, 'என்றால் - என்பது நேர்படுதலால், இ பிறவிக்கு உடன் வாழ்வு ஒல்லேன்-இப்பிறவியில் இவ்வுடலுடன் வாழ்வதனை (இனி) உடன்படேன்; இ பேர் அணி என் செய்வது - இச்சிறந்த அலங்காரம் என்ன பயனைத் தருவது?' என்னு - என்று சொல்லி,—இழை எல்லாம் - (தன்) அணிகலனகளையெல்லாம், விறலிக்கு—, ஈவாள ஒத்து - ஈபவள்போன்று, விடுவாள்உம் - கழற்றி நீக்குபவளும்,—(எ - று.)

தன்னை அணிகலன்களாற் புனைந்துகொண்டு தன் கணவன் வருகையை நோக்கியவண்ணம் நெடுநேரம் இருந்தும் காரியவயத்தனாய்ப் பிரிந்துசென்ற கணவன் வந்து சேரப்பெறாமையால் நெஞ்சம்புண்பட்டுக் கவலுந் தலைவியொருத்தி 'கணவனை இவ்வலங்காரத்தோடு கூடப்பெறாவிடின் நான் இப்பிறவியில் இவ்வுடலோடு இருப்பது எற்றுக்கு?' என்று நொந்து தன் அணிகலன்களைக் கழற்றி, இறக்கத்துணிந்தவர் தமது அணிகலங்களைத் தமதுவிருப்பத்திற்கு இடனானவர்கையிற் கொடுப்பதுபோல் விறலி கையிற் கொடுத்துவிடுவாளாயின ளென்க. காரியவயத்தனாய்ச் சென்ற கணவன் கொடிய விலங்குகளால் ஊறுபடுவானல்லனென்பாள், அவனை, 'மறலிக்கு ஊணாம்வன்கதிர் வேலான்' என்றும், 'தான் அக்கணவனைப் புல்லுதற்கே அந்தக்கோலம் புனைந்தது; அஃது கூடாமற்போயின் கொண்ட கோலம் பயனற்றதாம்' என்பாள் 'வேலான் இடையே வந்துற இக்கோலம் பெற்றிலெனென்றா லுடன்வாழ்வு இப்பிறவிக்கொல்லேன்; என்செய்வதிப் பேரணி' என்றும் கூறினாள். பி - ம்:—[1] ஊட்டும்வன், ஊணுடுங். [2] உடனே. [3] பெற்றிலவென்றால், பெற்றிலதென்றால். [4] ஏலாது. [5] என்றோர். [6] விடுவாரும். (1000)

28\. [1] வம்பிற் பொங்குங் கொங்கை சுமக்கும் வலியின்றிக்
[2] கம்பிக் கின்ற நுண்ணிடை [3] நோவக் [4] கசிவாரும்

பைம்பொற் கிண்ணம் மெல்விர [5]ருங்கிப் [6]பயில்கின்ற
கொம்பிற் [7]கிள்ளைப் பிள்ளை யொளிப்பக் [8]குழைவாளும்.

(இ - ள்.) பயில்கின்ற கொம்பில் - நெருங்கியுள்ள பூங்கொம்பிலே, கிள்ளைப்பிள்ளை - (தான் வளர்த்த) கிளிப்பிள்ளை, ஒளிப்ப - ஒளிந்துகொள்ளவே, (அதைத் தேடியவண்ணம்), வம்பில் பொங்கும் கொங்கை-கச்சுக்கு அடங்காது வெளிப்பட்டுத்தோன்றுகின்ற தனங்களை, சுமக்கும்-பொறுக்கவல்ல, வலி-வல்லமை, இன்றி - இல்லாமல், கம்பிக்கின்ற-நடுங்குகின்ற, நுண் இடை-மெல்லிய இடை, நோவ-வருந்தும்படி,—கசிவு ஆரும் பைம் பொன் கிண்ணம் - இளகுந் தன்மைபொருந்திய பசும்பொன்னினாற் செய்த கிண்ணத்தை, மெல் விரல் தாங்கி - (தனது) மெல்லிய கைவிரல்களினால் தாங்கிக் கொண்டு, குழைவாள் உம்-ஒல்கியொசிந்து செல்பவளும்,—(எ-று.)

ஒருத்தி தன் கிளிப்பிள்ளை பூங்கொம்பில் மறைந்துகொண்டதனால் அதற்குப் பாலூட்டுமாறு பைம்பொற்கிண்ணத்தைக் கையிலேந்தியவண்ணம் அதனைத்தேடிக்கொண்டு தன்னிடை நோவ ஒல்கி யொசிந்து செல்வாளாயினளென்க. பயில்கின்ற கிள்ளைப் பிள்ளை கொம்பில் ஒளிப்ப என்று இயைத்து - பேச்சுப்பழகுகின்ற கிளிப்பிள்ளை பூங்கொம்பிலே யொளித்துக்கொள்ள எனினுமாம்.
பி-ம்:-[1]வம்பிற்கோங்கும. [2]கம்பிக்குந்தம், கம்பிக்குந்தன். [3]நோக்கிக். [4]கழிவாளும், கசிவாளும். [5]தாக்கி. [6]பயில்வாரும. [7]பிள்ளைக்கிள்ளை. [8]குழைவாரும். சிலபிரதியில் இது "பாகொக்கும்" (30) என்பதன் பின் உள்ளது. (1001)

29\. தன்னைக் கண்டாண் மென்னடை [1]கண்டா [2]டமரேபோல்
துன்னக் கண்டா டோழமை யென்று டுணை[3]யென்றாள்
உன்னைக் கண்டா ரெள்ளுவர் பொல்லா துடுநீயென்று
[4]அன்னக் கன்னிக் காடை யளிப்பா [5]னமைவாளும்.

(இ - ள்.) தன்னை கண்டாள்-அன்னத்தைக் கண்ட ஒருத்தி, மெல் நடை கண்டாள்-(அதனுடைய) மென்மையான நடையைக் கண்டு, தமர் ஏ போல் துன்ன கண்டாள் - (தன்னுடைய) உறவினர்போல (அது) நெருங்குவதையும் கண்டவளாய், தோழமை என்றாள்-(இது நம்மோடு) நட்புக்கு (வருகின்றது) என்று சொல்லி, துணை என்றாள் - (எனக்குத்) துணையாகுமென றுஞ் சொல்லியவளாய், (பிறகு அவ்வன்னத்தை நோக்கி), 'உன்னை கண்டார்—, எள்ளுவர் - (நீ ஆடையினறியிருத்தலால் உன்னைப்) பழிப்பார்கள்; பொல்லாது-(நீ இவ்வாறு ஆடையின்றியிருப்பது) அழகியதன்று; நீ உடு - நீ (இந்த ஆடையைத்) தரித்துக்கொள்வாய்,' என்று - என்றுசொல்லி, அன்னம் கன்னிக்கு-இளமையுள்ள அன்னப்பேட்டுக்கு, ஆடை அளிப்பான் - ஆடை கொடுக்கும்படி, அமைவாள் உம்-உடன்படுபவளும்,—(எ - று.)

ஒருத்தி தன்நடையோடொத்து மென்மையான நடையுடனே அருகேவந்த அன்னப்பேட்டைக் கண்டு தோழமைபூண்டு தன் தோழிமாரிடத்து அன்புசெலுத்துவதுபோல அன்புசெலுத்தி;

அதற்கு ஆடையளித்தன ளென்க. இது, அன்புபற்றிச்செய்த செயலாகும். தன்நடையோடொத்தலின், 'தன்னைக்கண்டாள்' என்றபடி. பி - ம்:—[1]கண்டார். [2]தமர்போல. [3]கண்டாள், கண்டார், என்றூர். [4]அந்நற். [5]அமைவாரும். (1002)

30. பாகொக் குஞ்சொன் [1]னுண்கலை யாடன் படரல்குல்
ஆகக் [2]கண்டோ [3]ராடர வாமென் றயனண்ணும்
தோகைக் கஞ்சிக் கொம்பி னொதுங்கித் துணரீன்ற
[4]சாகைத் [5]தன்கைக் கண்கள் [6]புதைத்துத் [7]தளர்வாளும்.

(இ - ள்.) பாகு ஒக்கும் சொல் - பாகையொத்த [மதுரமான] சொல்லையுடைய, நுண கலையாள - மெல்லிய ஆடையணிந்திருந்த ஒருத்தி, தன் படர் அல்குல் - தனது பரந்த அல்குலை, ஆக - கண்கூடாக, கண்டு - பார்த்து, '(இது), ஓர் ஆடு அரவு ஆம்-படமெடுத்து ஆடுகின்ற ஒருபாம்பை ஒக்கும்,' என்று - என்றுகருதி, (பாம்புககுப பகையாதலால்), அயல் நண ணும தோகைக்கு அஞ்சி-அருகே தங்கியிருந்த மயிறபறவையினிடத்து அச்சங்கொணடு, கொம்பின் ஒதுங்கி - பூங்கொம்பிலே பதுங்கி, (நாணத்தினால்), துணர் ஈன்ற சாகை தன் கை - பூங்கொத்துக்களையுணடாக்கின கிளையையொத்த தனது கைகளால், கண்கள புதைத்து - (தன்னுடைய)கண்களைமூடி, தளர்வாள்உம்-தளர்ச்சியடைபவளும்,-(எ-று.)

நுண்ணியகலை மூலமாகத் தனதுஅல்குல் தோன்ற அதனைக் கண்ட ஒருமாது, அவ்வல்குல் பாம்பின்படம்போல இருப்பது கண்டு பாம்பிற்குப் பகையாகிய மயில் அருகேநண்ணுதலால் அஞ்சி, அவ்விடம்விட்டுப் பூங்கொம்பில் ஒதுங்கித் தனது அல்குல் தோன்ற இருப்பதற்கு வெள்கித் தான் பிறருடைய முகத்தைப் பார்த்தற்கும் நாணித் தன்கைகளால் தனது கண்களை மூடிக் கொள்ளலாயின ளென்க. நாணம்மிக்கபோது பிறரைப்பார்க்க வெள்குபவர் தம்கண்களை மூடிக்கொள்ளுதல், இயல்பு. தன் படரல்குலைக் கண்கூடாகக் கண்டு, இது ஓர் ஆடரவாம் என்று கருதியதனல் அயலில் தங்கியிருந்த தோகைக்கு அஞ்சி என்றும்,அருகே நிறபாருடைய கண்களைத் தன்னைப்பார்க்க வொட்டாது மூடித் தளர்வாளென்றும் உரை கூறுவாருமுளர். சாகை-கைவிரலுமாம். பி - ம்:—[1]பைந்தொடியாடன். [2]கண்டோள். [3]ஆடரவே, ஆடரவம். [4]சாகத்திற். [5]தம். [6]புதைத்தே. [7]தளர்வாரும். (1003)

31. பொன்னே [1]தேனே பூமக ளேகா ணெனையென்னுத்
தன்னே [2]ரில்லா ளங்கொரு [3]கொய்பூந் தழை[4]மூழ்கி
இன்னே யென்னைக் காணுதி நீயென் றிகலித்தன்
நன்னீ லக்கண் கையின் மறைத்து [5]நகுவாளும்.

(இ - ள்.) தன்நேர்இல்லாள்-தன்னைஒப்பாரைப் பெருதஒருத்தி, 'பொன்னே-பொன் போலருமையானவளே! தேனே-தேன் போலினிமையானவளே! பூமகளே-இலக்குமிபோலப் பேரழகு படைத்தவளே! எனை காண் - (நான மறைந்துகொள்ளுகிறேன், நீ) என்னைக் கண்டு பிடிப்பாய்,' என்ன - என்று (தன் தோழியை நோக்கிச்) சொல்லி,

அங்கு-அந்தச்சோலையில், ஒரு கொய் பூ தழைமூழ்கி - கொய்வதற் குரிய [மிகவும் அடர்த்தியாகவுள்ள] ஒரு பூங் கொம்பின் தழையிலே மறைந்து,—(அவள் தன்னைக் கண்டுபிடிக்காமற்போன தறைல் மெல்ல வந்து), நீ இன்னே என்னை காணுதி - நீ இப்போது என்னைக் காண்பாய்,' என்று இகலி - என்று மாறுபட்டுச் சொல்லி, தன் - அவளுடைய, நல் நீலம் கண்-அழகிய கருங்குவளை மலர்போன்ற கண்களை, கையில் மறைத்து - (தன்) கையால்மூடி, நகுவாள்உம் - சிரிப்பவளும்,—(எ - று.)

ஒருத்தி, மறைந்துபிடிக்கும் விளையாட்டை யாடுபவளாய்த் தன் தோழியை விளித்து 'நான் மறைந்துகொள்ளுகிறேன், நீ கண்டுபிடி; பார்ப்போம்' என்று ஒரு அடர்ந்த பூங்கொம்பின் தழையில் மறைந்துநிற்க, அத்தோழியும் இவளுள்ள விடத்தைத்தேடிப் பிடிக்கமாட்டாதவளாக பிறகு மெல்ல அவளுடைய பின்புறமாக வந்து அவள் கண்களைத் தன் கைகளால் மூடி, 'இப்பொழுது கண்டு பிடிப்பாய்' என்று அவளைப் பரிகசித்துச் சொல்லினளென்க. இகலுதல்-விளையாட்டில் தனக்கு உள்ள வல்லமையை வியந்து கூறி மாறுபடுதல். [2]இல்லான்...[4]மூழ்க என்ற பாடத்திற்கு, தனக்கு ஒப்பா ரில்லாத பேரழகினனான தலைவன், பூந்தழையிலே, மூழ்க-மறைந்துநின்றானாக, தலைவி அவனுள்ள இடத்தைக் கண்டு பிடித்து, அவனோடு இகலித் தன் கையின் அவன் நீலக் கண்களை மறைத்து, இன்னே என்னைக் காணுதி என்று நகுவாளாயினளென்னலாம். நீலம் என்பது பண்பியைக் காட்டவல்ல சொல்லாதலால், நீலமலரைக் காட்டும்போதும் ஆகுபெயரென்ன வேண்டுவதில்லை. பொன்னே முதலிய மூன்று விளிகளும் - உவமவாகுபெயர்கள். பி - ம்:—[1]தேம்பூமகளேகாணென்புனை, தேனேபூமகளேகாணென. [3]கொய்யல். [5]நகுவாரும். (1004)

௩௨. வில்லிற் கோதை [1]நாணுற [2]மிக்கோ [3]னிகலங்கம்
புல்லிக் [4]கொண்ட தாமரை மென்பூ மலர்[5]தாங்கி
[6]அல்லிற் [7]கோதை மாதர் [8]முகப்பே ரரவிந்தச்
செல்வக் கானிற் செங்கதி ரென்னத் [9]திரிவானும்.

(இ - ள்.) மிக்கோன் - மேம்பாடுடையஒருத்தன், வில்லில்நாண் கோதை உற - (தன்) வில்லினுடைய நாணி (தன்) கைவிரற்கவசத்திற் பொருந்த, (ஒருகையில் வில்லைத் தாங்கிக்கொண்டும்), இகல் அங்கம்-வலிமையுள்ள (மற்றொரு) கையில்,புல்லி கொண்ட தாமரை மெல் பூ தாங்கி - பொருந்திய மெல்லிய தாமரைப்பூவைத் தாங்கிக் கொண்டும், அல்லின் கோதை மாதர் - இருள்போன்ற கூந்தலை யுடைய மாதரார்து, முகம் செல்வம் பேர் அரவிந்தம் மலர் கானில்-முகங்களாகிய வளமுள்ள பெரிய தாமரைமலர்க்காட்டில், செங்கதிர் என்ன - செந்நிறகிரணங்களையுடைய சூரியன்போல (மலர்ச்சியை யுண்டாக்கிக்கொண்டு), திரிவான்உம்-திரிபவனும்,—(எ - று.)

ஒருகையில் தன்வீரத்துக்கு அறிகுறியாக நாணேற்றிய வில்லையும் மற்றொருகையில் காதற்குறிப்புத்தோன்றத் தாமரைமலரையும் வைத்துக்கொண்டு, மகளிர் தன்னைக்கண்டு முகவிகாசமடையு

மாறு ஆடவனொருவன், திரிவானுயின னென்க. கோதை - வில் நாண் தாக்காது முன்னங்கையி லிடுங் கவசம். கதிரவனைக் கண்ட அரவிந்தமலர் மலருமியல்பின தென்பது, பின்னிரண்டடிகளிற் கருதத்தக்கது. [3]இலவங்கம் புல்லிக்கொண்ட என்றபாடத்துக்கு- இலவம்பஞ்சு போன்ற மென்மைத்தன்மை பொருந்தப்பெற்ற என் றேனும், (நறுமணமுண்டாகுமாறு) இலவங்கமலர் செருகப்பெற்ற என்றேனும் உரை கூறுவர். பி-ம்:-[1]நாணுறு. [2]மிக்கோர். [4]கொண் டார். [5]தாங்க. [6]அல்லிக். [7]கொம்பர். [8]முகம்போல், முகமாம். [9]திரிவாரும். (1005)

33. செய்யிற் [1]கொள்ளுந் [2]தெள்ளமு தச்செஞ் சிலை[3]யொன்று
கையிற் [4]பெய்யுங் காமனு நாணுங் கவினர்தம்
[5]மையற் பேதை மாதர் மிழற்று மழலைச்சொல்
தெய்வப் பாடல் [6]சொற்கலை யென்னத் [7]தெரிவாரும்.

(இ - ள்.) செய்யில் கொள்ளும் - வயலிலிருந்து வெட்டிக் கொள்ளப்படுகின்ற, தெள் அமுதம் செஞ் சிலை ஒன்று - தெளிவான [இனிமைமிக்க] இரசத்தோடுகூடிய கரும்பாகிய செந்நிறமுள்ள வில்லொன்றை, கையில் பெய்யும் - (தன்) கையிலே கொண்டுளள, காமன்உம் - மன்மதனும், நாணும் - வெள்குவதற்குக்காரணமான, கவினர்-அழகையுடைய ஆடவர்கள்,—மையல்-(கேட்டோர்க்குக்) காமமயக்கத்தை யுண்டாக்கவல்ல, பேதை தம் மாதர் மிழற்றும் மழலை சொல்-பேதைமைக்குணமுடைய தமது மனைவிமார் கூறு கின்ற மென்சொல்லாலாகிய, தெய்வம் பாடல் - தெய்வத்தன்மை யுள்ள பாடல்களை, சொல் கலை என்ன-பாராட்டிச் சொல்லப்படுதலை யுடையசாஸ்திரத்தைப் போல, தெரிவார்உம்-ஆராய்பவரும;(எ-று.)

கையிற் கரும்புவில்லையேந்திய மன்மதனும் நாணும் கட்டழகு வாய்ந்த ஆடவர் தமது மாதரார் கூறுகின்றனவாய்த் தேவகானம் போலினிய மழலைச்சொற்களைத் தாம் அவரிடத்துக்கொண்ட அன்பின்மிகுதியால் சாஸ்திரங்களை யாராய்வதுபோலப் பாராட்டி யாராயலாயின ரென்பதாம். ஈற்றடிக்கு, மாதர்மிழற்றும் மழலைச் சொல்லைத் தெய்வப்பாடலையும் சொற்சொரூபமான கலைகளையும் போல ஆராய்வாரும் என்றும், வேதமாகிய சொற்கலைபோல ஆராய்வாரும் என்றும் பொருள் காணலுமாம். பி-ம்:—[1]கொய் யுஞ். [2]செங்குமுதஞ். [3]என்றும், ஒன்றும். [4]பெய்யிற். [5]மெய்யில், மையிற். [6]சேர்கலையென்னத், தேர்தலையென்னத், தேர்குநராகித், சொற்கலைவேண்டித். [7]திரிவாரும். இது, சில பிரதிகளில் "சோலைத் தும்பி" (34) என்பதன்பின். (1006)

34. சோலைத் தும்பி மென்குழ [1]லாகத் தொடை [2]மேவும்
கோலைக் கொண்ட மன்மத வாயன் குறியுய்ப்ப
நீலத் [3]துண்கண் மங்கையர் சூழ [4]நிரையாவின்
மாலைப் போதின் மால்விடை [5]யென்ன வருவாரும்.

(இ - ள்.) சோலை - சோலைகளிலேயுள்ள, தும்பி-வண்டுகளி னொலி, மெல் குழல் ஆக-மெல்லிய இசையையுடைய புல்லாங்குழ

லோசையாக, - (மாலைக்காலத்தில்), தொடை மேவும் கோலை கொண்ட - தொடுத்தல்பொருந்திய அம்பைக்கொண்டுள்ள [நேர்மைபொருந்திய கொம்பைக் கையிலேகொண்ட], மன்மதன் ஆயன்-மன்மதனாகிய இடையன், குறி உய்ப்ப-(வீட்டிற்குத்திரும்பவேண்டுவதற்குஉரிய) அடையாளத்தை (க் குழலோசைமூலமாக)த் தெரிவிக்க, மாலை போதில் - மாலைக்காலத்திலே, நிரை ஆவின் மால் விடை என்ன-தொகுதியாகிய பசுக்களின் நடுவிலே பெரியவிடபங்கள் வருவதுபோல, நீலத்து உண்கண் மங்கையர் சூழ வருவார் உம்-கருங்குவளைமலர்போன்ற மையுண்டகண்களையுடைய மடந்தைமார் (தம்மைச்) சுற்றிலும்வர (அவர்கள் நடுவே) வருபவரும்,—(எ - று.)—''திரிவாளும்'' (23) என்பதுமுதல் ஒவ்வொரு செய்யுளிலுமுள்ள ''தொடர்வாளும்'' (24) முதலியவற்றை ஒன்று சேர்த்து 'ஆயினர்' என்று ஒருவினை வருவித்து முடிக்க.

மலர்கொய்து ஆடுகையில் மாலைக்காலம்வரச் சிலர் திரண்டு தாம் தங்கியஇடத்துக்குத் தமதுகணவருடன் திரும்பினமை இதனாற் கூறப்பட்டது. மாலைக்காலத்தில் இடையன் பசுக்கள் திரும்புவதற்குத் தன் குழலோசைகொண்டு குறிசெய்ததனால் ஆக்கள் யாவும் திரண்டு சூழ்ந்துவர அவற்றினிடையே விடபங்கள் வருவதுபோல, மாலைக்காலத்து மன்மதன் கோலைக்கொண்டுஎய்து 'நீங்கள் இன்பம் அனுபவிக்கவேண்டிய காலம் இது' என்று தெரிவிக்க, ஆங்காங்குப் பூக்கொய்யச்சென்ற சிலமடவார் திரண்டு தத்தமது கணவன்மார் நடுவேவர அவர்களைச்சூழ்ந்து தாம் தங்கிய இல்லத்தில் இன்பம் அனுபவிக்குமாறு வரலாயினரென்க; உருவகவணியை அங்கமாகக்கொண்டு வந்த உவமையணி. 'தொடைமேவுங் கோலைக்கொண்ட'என்றதொடரில், சிலேடை,உருவகத்திற்கு அங்கமாகவந்தது. குறி-குறிப்பிடமுமாம். ஆயனுக்குச்சேரும்போது, தொடைமேவும் கோல் என்பதற்கு - மலர்மாலைகொண்டு சுற்றியுள்ள கோல் என்றேனும், பலகிளைகளைச் சேர்த்துக்கட்டப்பட்ட கோல் என்றேனும் உரைப்ப. தும்பி, குழல் - அவற்றினின்று தோன்றும் ஒலிக்கு ஆகுபெயர். பி - ம்:—[1]ஊத. [2]எய்யும். [3]ஒண். [4]நிறை. [5]போல. (1007)

வேறு.

35.—மாதர்களின் அழகின் சிறப்பு.

ஊக்க முள்ளத் துடைய முனிவரால்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது [1]வல்லியிற்
பூக்[2]கொய் வாள்புரு வக்கடை [3]போதுமே.

(இ - ள்.) 'உள்ளத்து - மனத்தில், ஊக்கம் உடைய-(தவஞ் செய்வதில்) முயற்சியுள்ள, முனிவரால் - இருடியரால், காமன் கை வில்-மன்மதன் (தன்) கையிலேந்திய வில், காக்கல் ஆவது-காப்பதற்கு வல்லமையுள்ளது', எனும்-என்று (உலகத்திலே) சொல்லப்படுகின்ற, வாக்கு மாத்திரம் அல்லது - வாய்ச்சொல்மாத்திரம் பிரசித்தமாக இருக்கிறதே யன்றி, (உண்மையை நோக்குமிடத்து),

வல்லியில்-பூங்கொடிகளினின்று, பூ கொய்வாள் - பூப்பறிக்கின்ற ஒருமடந்தையின், புருவம் கடை-புருவத்தின் நுனியே, (அம்முனிவர்களின் ஆற்றலை யொழித்தற்கு), போதும்-அமையும்; (எ - று.)

'மன்மதன் ஆசைநோயுண்டாகுமாறு வில்லில் நாணியேற்றி அம்பெய்தற்குத் தம்மை இலக்குஆக்காமற் பாதுகாக்கும் வல்லமை முனிவர்கட்கு உண்டு' என்று உலகவார்த்தை மிகவும் பரவியிருந்தபோதிலும், அது சொல்லளவாக இருப்பதன்றித் தொழிலளவில் இல்லை; இது, மன்மதனது வில்லுக்கு உவமையாகின்ற பூக்கொய்த மடவாரின் புருவக்கடைக்கு இலக்கான முனிவரும் தம் மனத்தைக் கொள்ளைகொடுத்து ஆற்றலைத் தோற்றலினால் விளங்குமென்பதாம். ஊக்கம்-தாம் துறந்த காமவின்பம்முதலியவற்றிற்காக மனஞ்சலியாது நிற்கும் உறுதித்தன்மை. பற்றறத்துறந்த முனிவரும் மடவாரின்புருவக்கடைக்குத் தம்மாற்றலைத் தோற்பரென்ற இதனால், இல்வாழ்வாராகிய மன்னர் முதலியோர் அவர் திறத்து வேட்கை மிகக்கொள்வாராயின ரென்பதைப் பெறவைத்தார். சிலர் இன்பமனுபவிக்குமாறு திரும்பினரென்று கீழ்ச்செய்யுளிற் கூறியதை, இதனாற் சமர்த்தித்தவாறு. வில்காத்தல்-வில்லையெய்வதனால் விளையும்வேட்கைநோயைத் தடுத்தல். பி-ம்:—[1]வல்லியின். [2]கொய்வார் தம்புருவவிற், கொய்வாள் புருவக்கொடி. [3]போலுமே. *(1008)*

36.—இதுவும் அடுத்த கவியும்-பூப்பறிக்கும்போதும் ஆடவர் மனைவியர்மேற் காதல்கொண்டிருந்தமையைத் தெரிவிக்கும்.

நாறு பூங்குழ னன்னுதல் புன்னைமேல்
[1]ஏறி னான்மனத் தும்பர்சென் [2]றேறினாள்
[3]ஊறு ஞானத் துயர்ந்தவ [4]ராயினும்
வீறு சேர்முலை மாதரை [5]வெல்வரோ.

(இ - ள்.) புன்னைமேல் ஏறினான் மனத்து உம்பர்-புன்னைமரத்தின்மீது ஏறிய (தன்) கணவன் மனத்திலே, பூ நாறு குழல் நல் நுதல் - மலர்மணம் வீசுகின்ற கூந்தலையும் அழகியநெற்றியையுமுடைய ஒருத்தி, சென்று—, ஏறினாள் - சேர்ந்தாள்; (இது தக்கதே): ஊறு - மேன்மேல் தோன்றுகின்ற, ஞானத்து - அறிவினால், உயர்ந்தவர் ஆயின்உம்-மிகவும் மேன்மை பெற்றவராயிருந்த போதிலும், வீறு சேர் முலை மாதரை-பெருமைசேர்ந்த தனங்களையுடைய மகளிரை, வெல்வர்ஓ-வெல்லத்தக்கவரோ? (எ-று.)

மிகவும் ஞானத்தவராலும் பெண்ணாசை நீக்குவதற்கு அரியதென்றால், பூப்பறிப்பதற்கு ஏறிய ஓராடவன் தன்மனைவியிடத்துக் காதலால் அம்மனைவியைக் கருதியிருந்தானென்பதில் வியப்பில்லையென்றவாறு; முன்னிரண்டடிகளிற் கூறிய சிறப்புப்பொருளைப் பின்னிரண்டடிகள் சமர்த்தித்து நின்றன; இது - வேற்றுப்பொருள் வைப்பணியாம். கணவன் மனத்துஉம்பரேறுதல் - கணவனால் எப்

போதும் மனத்திற் கொள்ளப்படுதல். பி-ம்:—[1] ஏறினள், ஏறினர். [2] ஏறினன். [3] ஊறில், ஈறில். [4] என்னினும். [5] வெல்லுமே. (1009)

37. சினையின் மேலிருந் தா[1] னுருத் தேவரால்
வனைய வும் [2] மரி யாள்[3] வனப் பின்றலை
[4] நினைவு நோக்கமு [5] நீக்கலன் கைகளால்
நனையு நாண்[6] முறி யுங்கொய்து நல்கினான்.

(இ - ள்.) சினையின் மேல் இருந்தான் - பூங்கிளையின்மேலே யிருந்த கணவன்,—உரு தேவரால் வனைய உம் அரியாள் வனப்பின் தலை-தேவர்களாலும் எழுதமுடியாத உருவச்சிறப்பையுடையவளின் அழகில்தானே, நினைவு உம் நோக்கம் உம் நீக்கலன் - (தான் வைத்திருந்த) நினைப்பையும் கண்பார்வையையும் நீக்காதவனாய் [அவளுடைய அழகில் தானே கண்ணும் மனமுஞ்செல்லப்பெற்று], கைகளால் - (மலர்களைப்பறிக்கவேணுமென்று நீட்டிய) கைகளினாலே, நனை உம் நாள்முறி உம் கொய்து-பூவரும்புகளையும் புதிய தளிரையும் பறித்து, நல்கினான்-கொடுத்திட்டான்; (எ - று.)

ஒருவன் பூமரத்தின் கிளைமீது ஏறியும் கட்டழகியாகிய தன் காதலிமீதுள்ள காதலால் அவளையே நினைப்பதும் பார்ப்பதுமாக இருந்தபடியால், தான் பறிப்பவை இன்னவையென்று பாராமையால் கைந்நீட்டிப் பறிக்கத்தொடங்கிப் பூவுடன் அரும்புகளும் தளிர்களும கொய்தன னென்பதாம். நாள்முறி - நாட்பட்டதளிருமாம். பி - ம்:—[1] ஒரு. [2] அரியான், அரிதால், அறியா. [3] அவன்பின்றலை, தன்வனப்பினை. [4] நினையுமாத்திரை. [5] நீங்கலன். [6] மலருங். (1010)

38.—தன்மனைவியின் கோபத்தால் ஒருத்தன் தடுமாறுதல்.

வண்டு [1] வாழ்[2] குழ லாண்முக [3] நோக்கியோர்
தண்டு போற்புயத் தான்றடு மாறினான்
உண்டு[4] கோபமென் றுள்ளத் [5] துணர்ந்தவள்
தொண்டை வாயிற் றுடிப்[6] பொன்று [7] சொல்லவே.

(இ - ள்.) ஓர் தண்டுபோல் புயத்தான்-ஒப்பற்ற தண்டாயுதம் போன்ற தோளைப் பெற்றிருந்த ஒருத்தன்,—வண்டு வாழ்குழலாள் முகம் நோக்கி-வண்டுகள் தங்கப்பெற்ற கூந்தலையுடைய மனைவியின் முகத்தைப் பார்த்து, அவள் தொண்டை வாயில் துடிப்பு ஒன்று சொல்ல - அவளது ஆதொண்டைக்கனிபோற் சிவந்த வாயிலே தோன்றிய துடிப்பு ஒன்றும் தெரிவிக்கவே,-கோபம் உண்டு என்று உள்ளத்து உணர்ந்து - (இவளுக்குக்) கோபந்தோன்றியுள்ளதென்பதை மனத்தினாலறிந்து, (அதனை நீக்கும்வகைதெரியாமல்), தடுமாறினான்—; (எ - று.)

முயங்கும் வேட்கைகொண்ட ஒருத்தன், வாயுரையைப் பெறுவதன்பொருட்டுத் தன் மனைவியின் முகத்தையே பார்க்கையில் அன்னானுக்கு அவளது ஊடற்குறிப்புஒன்றும் தோன்றாதாக, அவள வாயில்தோன்றிய துடிப்பொன்றுமே அவளது சினத்தைத் தெரிவிக்க, அதனைத் தீர்க்கும்வகை தெரியாமல் தடுமாறின

னென்பதாம். 'தண்டுபோல்புயத்தான்' என்றதனல், அவன் தன் மாலையை வேறொருத்திக்குச் சூட்டி வறியதோளனுயுள்ளானென்பது பெறப்படுமென்றும், அங்ஙன்சூட்டியதே அவள் புலத்தற்குக் காரணமென்றும் கூறுவர். பி-ம்:—[1]வார். [2]குழலார். [3]வாடிடில், வாடிடத், வாட்டிடத். [4]கோபமும். [5]உணர்ந்தனன், உணர்த்து வாள். [6]என்று. [7]சொல்லுமே. (1011)

39.—யாவரும் புனல்விளையாட்டுக்குச் செல்ல எண்ணுதல்.

ஏயுந் தன்மைய ரிவ்விகை யாரெலாம்
தூய தண்[1] ணிழற் சோலைத் துறுமலர்
வேயுஞ் செய்கை வெறுத்தனர் வெண்டிரை
பாயுந் தீம்புனற் பண்ணைசென் றெய்தினர்.

(இ - ள்.) ஏயும் தன்மையர்-(கீழ்க்கூறியவாறு பூக்கொய்தலும் புலவிகொள்ளுதலும் முதலிய) செய்கையை மேற்கொண்டவரான, இ வகையார் எலாம் - இப்படிப்பட்ட ஆடவரும் மகளிரும், தூய தண் நிழல் சோலை - பரிசுத்தமான குளிர்ந்த நிழலைத் தருகின்ற சோலையிலே, துறு மலர் - நெருங்கியமலரை, வேயும் - (பறித்துச்) சூடுகின்ற, செய்கை-தொழிலை, (நெடுநேரஞ்செய்ததனல்), வெறுத்தனர்-வெறுப்புக்கொண்டவர்களாய், வெண் திரை பாயும் தீம்புனல் பண்ணை - வெண்ணிறமான அலைகள் பாயப்பெற்ற இனிய நீரில் விளையாடுவதிலே, சென்று - (மனம்) போனதனல், எய்தினர்-(அந் நீர்விளையாடலை) மேற்கொள்ளலானர்கள்; (எ - று.)

இதுகாறும் பூக்கொய்தலைக் கூறிவந்த கவி, இதனல் அடுத்த படலத்துக்குத் தோற்றுவாய் செய்தனர். பி - ம்:—[1]மலர், புனல். ( )

பூக்கொய்படலம் முற்றிற்று.

16—ஆவது புனல்விளையாட்டுப் படலம்.

பூக்கொய்த மகளிரும் ஆடவரும் நீர்நிலைகளில் விளையாட்டு நிகழ்த்தியமையைக் கூறும் பகுதி. நீர்விளையாட்டுப்படலம் என்று சில பிரதிகளில் இந்தப்படலத்திற்குப் பெயர் காணப்படுகின்றது.

வேறு.

1.—மகளிரும் ஆடவரும் நீர்நிலையை நோக்கிவருதல்.

புனைமலர்த் தடங்க ணேக்கிப் பூசல்வண் டார்த்துப் பொங்க
வினையறு துறக்க நாட்டு விண்ணவர் கணமு நாண
[1]அனகரு மணங்க ளுரு[2]மம்மலர்ச் சோலை நின்று
வனகரி பிடிகளோடு வருவன [3]வென்ன வந்தார்.

(இ - ள்.) அனகர்உம் - குற்றமற்றவரான ஆடவரும், அணங்கு அனார்உம் - தெய்வமகளிரையொத்த மகளிரும்,—வினை அறு துறக்கம் நாட்டு - குற்றமற்ற சுவர்க்கலோகத்திலுள்ள,

விண்ணவர் கணம்உம் நாண - தேவர்களின்கூட்டமும் (தம் முடைய அழகைக்கண்டு) வெட்கமடையவும், பூசல் வண்டு ஆர்த்து பொங்க - ஆரவாரஞ்செய்யுந் தன்மையுள்ள வண்டுகள் ஒலித்து எழவும்,—அ மலர் சோலை நின்று - அந்தப் பூஞ்சோலையிலிருந்து, புனை மலர் தடங்கள் நோக்கி-அலங்கரிக்கின்ற மலர்களைக் கொண்ட நீர்நிலைகளை நோக்கி,—வனம் கரி பிடிகளோடு வருவன என்ன-காட்டில் வாழுந்தன்மையனவான ஆண்யானைகள் (தமது) பெட்டை யோடு வருபவற்றையொப்ப, வந்தார்—; (எ-று.)

ஆடவரும் மகளிரும் நீர்நிலைகளை நோக்கிவருவது, ஆண்யானை கள் பெண்யானைகளுடன் வருவனபோன்றிருந்ததென்க. ஆடவரும் மகளிரும் வந்த விசையால் மலர்களில்மொய்த்திருந்த வண்டுகள் ஆர்த்துப்பொங்கின. வினை அறு துறக்க நாடு - தீவினைநீங்கிய சுவர்க்கலோகமெனினுமாம். துறக்கத்திற் சேர்பவரின் தொழிலாகிய வினையறுதலைத் துறக்கத்தின்மேலேற்றி, 'வினையறுதுறக்கநாடு' என்றார்; இடத்துநிகழ்பொருளை இடத்தின்மேலேற்றிக் கூறிய உப சாரவழக்கு. பி - ம்:—[1]நனைமலர்க் குழலார்மைந்தர். [2]நறு, அணி. [3]போல. (1013)

2 —மகளிர் விளையாடுமாறு நீரில் மூழ்கியதன் வருணனை.

அங்கவர் பண்ணை நன்னீ [1]ராடுவா னமைந்த தோற்றம்
கங்கைவார் சடையோ னன்ன மாமுனி கனல மேனாள்
[2]மங்கையர் [3]கூட்டத் தோடும் வானவர்க் கிறைவன் செல்வம்
[4]பொங்குபாற் கடலிற் செல்லுந் தோற்றமே போன்ற தன்றே.

(இ - ள்.) அங்கு-அந்தநீர்நிலையினிடத்து, அவர் - அந்த ஆட வரும் மகளிரும், நல் நீர் பண்ணை - நல்ல நீர்விளையாட்டை, ஆடுவான்-செய்வதற்கு, அமைந்த - பொருந்திய, தோற்றம் - காட்சியானது,—மேல் நாள்-முற்காலத்தில், கங்கை வார் சடையோன் அன்ன - கங்காநதி பெருகுதற்குக்காரணமான சடைமுடியையுடைய சிவ பிரானையொத்த, மா முனி - சிறந்த துருவாச முனிவன், கனல - கோபித்துச்சபித்ததனால், வானவர்க்கு இறைவன் செல்வம்-தேவர் கட்குத்தலைவனான இந்திரனது ஐசுவரியமெல்லாம், மங்கையர் கூட் டத்தோடுஉம் - தேவமாதராகிய அரம்பையரின் கூட்டத்துடனே, பொங்கு பாற்கடலில் செல்லும் - பலவளங்களும்மிகுந்த திருப்பாற் கடலிலே சென்றுசேர்கின்ற, தோற்றம் - காட்சியை, போன்றது—;

அணிகலங்களையணிந்தவராய்த் தேவமாதரையொத்த மடவார் நீரில்மூழ்கியது, துருவாசமுனிவனுடைய சாபத்தால் தேவேந் திரனது செல்வம் கடலிற்புக்கொளித்தபோது தேவமங்கையர் கூட் டம் பாற்கடலிற் புக்கொளித்ததைப் போலு மென்றவாறு; தற்குறிப் பேற்றவணி. 'அங்கவர்' என்பது-தத்ரபவந்த: என்ற வடசொல்லின் மொழிபெயர்ப்பான ஒரு சொல்லாகி, சிறந்தோ ரென்ற பொருளை யுணர்த்து மென்னலாம். கனல-காரணச்சொல், காரியப் பொருளில் வந்த உபசாரவழக்கு. பி - ம்:—[1]ஆடுமாறு. [2]மங்கைமார். [3]செல்வத் தோடும். [4]பொங்குமாகடலுள். (1014)

3.—மாதர்களின் கண்களும் முகங்களும்.

மையவாங் குவளை யெல்லா மாதர்கண் [1]மலர்கள் பூத்த
கையவா [2]முருவத் தார்தங் கண்மலர் குவளை பூத்த
செய்யதா மரைக ளெல்லாந் தெரிவையர் முகங்கள் பூத்த
தையலார் [3]முகங்கள் செய்ய தாமரை பூத்த வன்றே.

(இ - ள்.) மை அவாம் குவளை எல்லாம் - கருமைநிறம்பொருந்திய குவளைமலர்களெல்லாம், மாதர் கண் மலர்கள் பூத்த - அம்மடந்தைமாரின் கண்மலர்களைப்போலப் பூத்தன; உருவத்தார் தம் கை அவாம் கண்-உருவங்களையுடைய அம்மடந்தைமாரின் உள்ளங்கையொத்த கண்கள், மலர் குவளை பூத்த-மலர்ந்துள்ளகுவளைமலர்கள் போல விளங்கின; செய்ய தாமரைகள் எல்லாம்-செந்தாமரைமலர்களெல்லாம், தெரிவையர் முகங்கள் பூத்த-மடந்தையரின் முகங்களைப் போலப் பூத்தன; தையலார் முகங்கள் - அம்மாதர்களுடைய முகங்கள், செய்ய தாமரை பூத்த-செந்தாமரைமலர்போல விளங்கின;

குவளைமலர்கள் மடந்தைமாரின் கண்களைப்போல் தோன்ற மடந்தைமாரின் கண்கள் குவளைமலர்போலத் தோன்றின என்பது முன்னிரண்டடிகளிலும், தாமரைமலர்கள் மடந்தைமாரின் முகங்கள் போலிருக்க மடந்தைமாரின் முகங்கள் தாமரைமலர்கள்போல விளங்கின என்பது பின்னிரண்டடிகளிலும் கூறியபொருள்; இதில் உபமேய உபமானங்களை ஒன்றற்கொன்று உபமான உபமேயங்களாகச் சொல்லியது - உபமேயோபமாலங்காரம்; இதனைப் புகழ்பொருளுவமை யென்றும் இதரேதரமென்றுங் கூறுவர்; இங்ஙனங் கூறுவது, வேறே உபமானங்கள் கிடையா என்று தெரிவிப்பதன்மூலமாக வருணிக்கவேண்டிய கண் முதலியவற்றின் சிறப்பைத் தெரிவிக்கும். அவாம் = அவாவும். மகளிர்கண்கட்கு உள்ளங்கை உவமையாகக் கூறப்படுவதை "குடங்கைபோ லுண்கண்" என்பது முதலிய இடங்களிற் காண்க. கை அவாம்-(சாமுத்திரிகநூலிற் கூறியுள்ள) ஒழுங்கைக்கொண்டுள்ள என்றும், அன்றி, கைய ஆம் உருவத்தார்-சிறுமைக் குணத்தை [அகங்காரத்தை]யுடைய உருவங்களைக் கொண்ட மடந்தைமாரின் என்றும் உரை கூறுவர். பி-ம்:—[1]மலர்க் கண். [2]புயத்தார்தங்கண். [3]முகங்களெல்லாம். சிலபிரதிகளில் இது, "தேனகு" (8) என்பதன்பின். (1015)

4.—இனி எட்டுக்கவிகள்—ஒருதொடர்: மகளிரின் நீர்விளையாட்டுச்செயலை விவரிக்கும்.

தாளையேய் கமலத் தாளின் மார்புறத் தழுவு வாரும்
தோளையே பற்றி [1]வெற்றித் [2]திருவெனத் தோன்று வாரும்
[3]பாளையே [4]விரிந்த தென்னப் [5]பந்துநீ ருந்து வாரும்
வாளைமீ னுகள வஞ்சி மைந்தரைத் தழுவு வாரும்.

(இ - ள்.) தாளை ஏய் - நாளத்தைப்பொருந்திய, கமலத்தாளின் - தாமரைமலரில்வாழுந் திருமகளபோல, மார்பு உற தழுவுவார்உம் - (தமது கணவருடைய) மார்பகத்தை யழுந்தத் தழுவி நிற்பவரும்,—தோளை பற்றி - (தம் கணவருடைய) தோள்களையே

பிடித்துக்கொண்டு, வெற்றி திரு என தோன்றுவார்உம் - வெற்றிக்குஉரிய மகளைப்போலக் காணப்படுபவரும்,—பாளை விரிந்தது என்ன - பாளை விரிந்தாற்போல, பந்து நீர் உந்துவார்உம் - நீர் வீசுங்கருவியினின்று நீரை வீசுவாரும்,—வாளை மீன் உகள-வாளை மீன்கள் துள்ள, அஞ்சி பயந்து, மைந்தரை - (தமது) கணவரை, தழுவுவார்உம்- தழுவிக்கொள்பவரும்,—(எ-று.)

ஆழநீரில் கணவர்மார்பைத் தழுவிநின்ற மகளிர் திருப்பாற்கடலில் திருமாலின்மார்பைத் தழுவிய இலக்குமியையும், கணவர் தோளைப்பற்றிநின்ற மகளிர் வெற்றித்திருவையும் போல்வர். முதலடிக்கு, தாளைஏய்-(தமது)பாதங்களையொத்த, கமலம்-தாமரையை, தாளின்-(அம்மலரின்)நாளத்தில், மார்புஉற-(தமது)மார்பு பொருந்த, தழுவுவாரும் என்று பொருள்கூறுவாரும் உளர். நீரைப் பரவ இறைக்கும்போது பாளை மலர்ந்துநிற்பதுபோலத் தோன்றும். அஞ்சும் இயல்பினராதலால், வாளைமீன் அருகில் துள்ளவும் மகளிர் ஆடவரைத் தழுவினர். பி-ம்:—[1]ஏற்றி. [2]திருவுற.[3]பாளைவீ. [4]பரந்தது. [5]பரந்து. சிலபிரதியில், இது "வண்டுண" (5) என்பதன்பின். (1016)

5. வண்டுணக் கமழுஞ் சுண்ணம் வாசநெய் நானத் தோடும்
கொண்டெதிர் வீசு வாருங் கோதைகொண் டோச்சு வாரும்
தொண்டைவாய் [1]பெய்து [2]தூநீர் கொழுநர்மேற் [3]றூகின் றூரும்
புண்டரீ கக்[4]கை கூப்பிய புனல் [5]முகத் [6]திறைக்கின் றூரும்.

(இ - ள்.) வண்டு உண கமழும்-வண்டுகள் மேல்விழுந்து உண்ணும்படி நறுமணம்வீசுகின்ற, சுண்ணம் - வாசனைச் சுண்ணத்தை, வாசம் நெய் நானத்தோடுஉம் கொண்டு - நறுமணமுள்ள புழுகு தைலத்துடனே கஸ்தூரியையும்கொண்டு, எதிர் வீசுவார்உம்-எதிர்க்கெதிராகத் தூவுவாரும், கோதைகொண்டு ஓச்சுவார்உம்-மலர்மாலையைக்கொண்டு வீசுவாரும்,—தூ நீர்-பரிசுத்தமான நீரை, தொண்டை வாய் பெய்து - நீர்தூவுகருவிவகையின் வாயிலே சேர்த்து, கொழுநர்மேல்-(தமது)கணவர்மேல், தூகின்றூர் உம்-தூவுகின்றவரும்,—புண்டரீகம்கை கூப்பி-தாமரைமலர்போன்ற (தமது) கைகளை (ஒருசார்)குவித்து, புனல் - நீரை, முகத்து - முகத்திலே, இறைக்கின்றூர்உம் - சொரிகின்றவர்களும்,—(எ - று.)

புனல்விளையாட்டில் ஒருவர்மீதுஒருவர் சுண்ணம்முதலியவற்றைத்தூவி மாறுபடுதலும, இயற்கை. இதனை, "கண்ணிகொண்டெறியவஞ்சிக் காறளர்ந்தசைந்துசோர்வார், சுண்ணமுஞ்சாந்தும் வீழத் தொழுதனரிரந்து நிற்பா, ரொண்மலர்மாலையோச்சவொசிந்துகண்பிறழவொல்கி, வெண்ணெயிற் குழைந்துநிற்பார் வேற்கணூரயினூரே" என்ற சிந்தாமணியாலும் அறிக. தொண்டைவாய் - கோவைக்கனிபோன்ற தமதுவாயிலே என்பாரும் உளர். பி - ம்:— [1]பெய்த. [2]தூய்நீர். [3]தூரக்கின்றூரும், தூர்க்கின்றூரும். [4]கைகூட்டி, கையாலே. [5]முகந்து. [6]எறிகின்றூரும். சிலபிரதிகளில் ஈற்றடியிரண்டும் தம்முள் மாறியுள்ளன. (1017)

6. மின்னொத்த விடையி னாரும் [1]வேயொத்த தோளி னாரும்
சின்னத்தி னளக பந்தி திருமுக மறைப்ப [2]நீக்கி
அன்னத்தை[3]வருதி [4]யென்னோ டாடவென் றழைக்கின் றாரும்
பொன்னொத்த முலையின் வந்து பூவொற்ற வுளைகின் றாரும்.

(இ-ள்.) மின் ஒத்த இடையினார்உம் - மின்னலையொத்த இடையையுடையவரும், வேய் ஒத்த தோளினார்உம் - இளமூங்கிலை யொத்துள்ள தோளையுடையவருமாகிய சிலமகளிர்,—சின்னத்தின் அளகம் பந்தி திரு முகம் மறைப்ப - விடுபூவையணிந்த மயிர்த் தொகுதி (தமது) அழகிய முகத்தை (நீரில் மூழ்கியெழுந்திருக்கை யில்) மறைத்ததாக, நீக்கி - (அதனை) விலக்கி, அன்னத்தை என்னோடு ஆட வருதி என்று அழைக்கின்றார்உம் - (அருகில்வாழும்) அன்னப்பறவையைப்பார்த்து 'என்னோடு விளையாடுமாறு வருவாயாக' என்று அழைக்கின்றவரும், பொன் ஒத்த முலையின் பூ வந்து ஒற்ற - (சுணங்குபரந்திருத்தலாற்) பொன்னிறத்தைக்கொண்ட தனங்களின்மீது நீர்மலர்கள் வந்து பட, (அவற்றையும் தாங்கமாட்டாது), உளைகின்றார்உம்-வருந்துகின்றவர்களும் —(எ-று.)

புனல்விளையாட்டை நிகழ்த்துகையில் ஆங்குள்ள நீர்ப்பூக்கள் தனங்களின்மீதுபடினும் ஆற்றாதவரென, அம்மடந்தைமாரின் மென்மையை விளக்கியபடி. மகளிருடைய இடைமுதலிய உறுப்புக்களில் ஈடுபட்டுப் புனல்விளையாட்டயர்கின்ற ஆடவர்மொழியைத் தம்மொழியாகக் கொண்டு, கவி 'மின்னொத்த விடையினாரும் வேயொத்ததோளினாரும்' என்றார்; இங்ஙனம் அன்றி 'அம்மகளிரிற் சிலர் இடையொன்றுமே சிறந்தவர், சிலர் தோளொன்றுமே சிறந்தவர்' என்ற கருத்தினாற் கவி கூறினாரல்லர். வந்து - சொல் விழுக்காடு: அசையென்ப.பி-ம்:—'விடமொத்தவிழியினாரும், வெளியொத்தமருங்குலாரும். [2]நோக்கி. [3]வருக. [4]என்னை, எம்மோடு. ()

7. [1]பண்ணுளர் [2]பவளத் தொண்டை பங்கயம் பூத்த [3]தன்ன [னார்
வண்ண [4]வாய்க் குவளை யொண்கண் [5]மருங்கிலாக் கரும்பி னன்
உண்ணிறை கயலை நோக்கி யோடுநீர்த் தடங்கட் கெல்லாம்
கண்ணுள வாங்கொ லென்று கணவரை வினவு வாரும்.

(இ-ள்.) பண் உளர் - இசையைப் பயில்கின்ற, பவளம் தொண்டை பூத்தது பங்கயம் அன்ன-பவளத்தையும் கொவ்வைக் கனியையும மலர்ந்ததான தாமரையையும் ஒத்துள்ள, வண்ணம் வாய் - அழகியவாயையும், குவளை ஒண்கண் - கருங்குவளைமலர் போன்ற அழகிய கண்களையுமுடைய, மருங்கு இலா-இடையற்றவர் போன்றுள்ள [நுண்ணிய இடையைப்பெற்றுள்ள], கரும்பின் அன்னார் - கரும்பைப்போன்று (தங்கணவர்க்கு) இனிமைபயப்பவரான (சில) மாதர்கள்,—உள் நிறை கயலை நோக்கி - (தடாகத்தின்) உட்புறத்திலே நிறைய வாழ்கின்ற கயல்மீன்களைப் பார்த்து, ஓடும் நீர் தடங்கட்கு எல்லாம்-ஓடுந்தன்மையுள்ள நீரைக்கொண்ட தடாகங்களுக்கெல்லாம், (மனிதரைப்போல), கண் உள ஆம் கொல் என்று—, கணவரை-(தமது) கணவரை, வினவுவார்உம் - கேட்பவர்களும,—(எ-று.)

தடாகங்களில்உலவுங்கயல்மீன்களைப்பார்த்த மகளிர் அக்கயல் மீன்களைக் கண்களென்று எண்ணினராய் "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்பதற்குஏற்பத் தம்துபேதைமைக்குணந் தோன்றுமாறு, தம்கணவரை நோக்கி, 'நீர்த்தடங்கட்கெல்லாங் கண்ணுளகொல்' என்று வினவினரென்க. நீர்க்கு 'ஓடும்' என்ற அடைமொழி, அதன் இயற்கைத்தன்மையை விளக்கவென்க. பி - ம்:—[1]பண்ணுள. [2]பவளம். [3]என்ன. [4]வாட்குவளையொண், வாய்க்குவளைவாட். [5]மருங்கிலர். (1019)

8. [1]தேனகு [2]நறவ மாலை செறிகுழற் றெய்வ [3]மன்னாள்
தானுடைக் [4]கோல மேனி தடத்திடைத் தோன்ற நோக்கி
நா[5]னக நகுகின் றாளிந் நன்னுத றோழி யாமென்று
ஊனமில் [6]முலையி னார முளங்குளிர்ந்[7]துதவு வாளும்.

(இ - ள்.) தேன் நகும் நறவம் மாலை - வண்டுகள் மகிழ்வதற்குக் காரணமான தேனையுடைய மலர்மாலையை யணிந்த, செறிகுழல்- அடர்ந்த கூந்தலையுடைய, தெய்வம் அன்னாள்-தேவமகளை யொத்த ஓர்மங்கை, தான்உடை-தான்கொண்ட, கோலம் மேனி - அழகிய உடம்பு, தடத்திடை தோன்ற-தடாகத்தின் நீரில் பிரதிபிம்பித்துக் காணப்பட, நோக்கி - (அதனைப்)பார்த்து, (அவ்வுருவத்தை அங்கே வாழ்கின்ற ஒரு மடந்தையின் உருவமென்று நினைத்து), இ நல் நுதல் நான் நக நகுகின்றாள் தோழி ஆம் என்று-இங்கே காணப்படு கின்ற இந்த அழகிய நெற்றியையுடைய பெண் நான் சிரிக்கும்போது (தானும்) சிரிக்கின்றாளாதலால் என் தோழியாவளென்று சொல்லி, உளம் குளிர்ந்து- மனமுவந்து, ஊனம் இல் முலையின் ஆரம் - குற்ற மற்ற முலைமீதணிந்துள்ள முத்தாகாரத்தை, உதவுவாள்உம்-கொடுக் கின்றவளும்,—(எ - று.)

நீரில்தோன்றும் தனது பிரதிபிம்பத்தைக் கண்ட ஒருத்தி அவ் வுருவம் தான் சிரிக்கும்போது சிரித்தவண்ணம் நிற்பதாலும், நண்பர் மகிழ்ந்தபோது தாமும் மகிழ்ச்சிகொள்வது நட்புக்குஇலக் கணமாதலாலும், அந்தப் பிரதிபிம்பத்தை அங்ஙனமுள்ள தோழி யாகக்கொண்டு தனதுமுத்தாகாரத்தை அவ்வுருவத்துக்கு மன முவந்து உதவலாயினளென்க. பி-ம்:—[1]தேனுகு. [2]நறவு. [3]அன்னார். [4]கனகமேனி. [5]நகுகின்றநாளில். [6]விலையின். [7]உதவுவாரும். (1020)

9. குண்டலந் திருவில் வீசக் குலமணி யார மின்ன
விண் [1]டொடர் வரையின் வைகு மென்மயிற் [2]கணங்கள் [3]போல
[4]வண்டுழல் கோதை மாதர் மைந்தர்தம் வயிரத் திண்டோள்
தண்டுக டழுவு [5]மாசைப் புனற்கரை [6]சார்கின் றாரும்.

(இ - ள்.) வண்டுஉழல்-வண்டுகள் சுழல்வதற்குக்காரணமான, கோதை-மலர்மாலையையணிந்த, மாதர்-மகளிர்,-மைந்தர் தம் வயிரம் திண் தோள் தண்டுகள் தழுவும் ஆசை-(தம்)கணவருடைய உறுதி யான வலிய தண்டாயுதமபோன்ற தோள்களைத் தழுவவேணு மென்ற விருப்பத்தினால், விண் தொடர் வரையின் வைகும் மெல் மயில் கணங்கள் போல-வானத்தையளாவுகின்ற மலையிலேதங்கும்

தன்மையுள்ள மெல்லிய மயில்களின்கூட்டம் செல்வதுபோல,— குண்டலம் திரு வில் வீச-(தமது செவியிலணிந்த) குண்டலங்கள் அழகிய ஒளியை வீசவும்,சூலம் மணி ஆரம் மின்ன-சிறந்த முத்துக்களினாலியன்ற ஆரங்கள் (மார்பிற்) பிரகாசிக்கவும், புனல் கரை சார்கின்றார்உம்-நீர்நிலையின் கரையை நோக்கி நடந்து சேர்பவர்களும்,—

மாதர்கள் தமது கணவர் தோள்களைத் தழுவும் விருப்பாற் புனற்கரையிலுள்ள அவரை நோக்கி மயிற்கணங்கள செல்லுவது போல நடந்து சென்றனர்; அவ்வாறு செல்கையில், அவர்கள் செவியிலணிந்திருந்த குண்டலங்கள் வில்வீச, மார்பிலணிந்த ஆரங்கள் மின்னலாயின வென்க. 'வரையின்வைகும்' என்பது, மயிற்கணங்களுக்கு, இயற்கையடைமொழி. இனி, புனற்கரை மலைபோலுமென்றுகொண்டு, வரையின்வைகும் மயிற்கணங்கள் போலத் தோன்றுமாறு தங்கணவரின் தோளைத் தழுவும்படி புனற்கரையில் மகளிர் சேரலாயினரென்று கூறலுமாம். பி-ம்:—[1]தொடு. [2]கண்கள். [3]போலும். [4]வண்டுளர், வண்டுறை. [5]ஆசையார். [6]சார்கிலாரும், சார்குவாரும், (1021)

10. அங்கிடை யுற்ற குற்றம் யாவதென் றறித [1]றேற்றும்
செங்கய லனைய நாட்டஞ் சிவப்புறச் சீறிப் போன
[2]மங்கையோர் கமலச் சூழன் [3]மறைந்தனண் மறைய [4]மைந்[தன்
பங்கய முக[5]மென்[6]றோரா னையுற்றுப் [7]பார்க்கின் றானும்.

(இ - ள்.) அங்கு-அவ்விடத்து (நிகழ்ந்த புனல்விளையாட்டில்), இடை-நடுவே, உற்ற-(கணவனால்) நேர்ந்த, குற்றம்-தவறு, யாவது என்று - எது என்று, அறிதல் தேற்றும் - தெளிவாக அறியமாட்டோம்: (அங்ஙனமிருக்கையில்), செம் கயல் அனைய நாட்டம் - செவ்வரிபரந்த கயல்மீனையொத்த கண்கள்,சிவப்புஉற-முழுதுஞ் செந்நிறமாகும்படி, சீறி போன-சினங்கொண்டு சென்ற, மங்கை-ஒருபெண், ஓர் கமலம் சூழல்-தாமரைமலர் நிறைந்த ஓரிடத்தில், மறைந்தனள்-மறைந்திருந்தாள்; மறைய - (அங்ஙனம்) மறைந்திருந்தாளாக, மைந்தன்-(அவளுடைய) கணவன், பங்கயம் முகம் என்று ஓரான்-'(இது) தாமரை (இது நமது மனைவியின்) முகம்' என்று ஆராய்ந்து நிச்சயிக்க முடியாதவனாய், ஐயுற்று-ஐயங்கொண்டு, பார்க்கின்றானும்—,

ஒருமங்கை இன்னகாரணத்திற்காகச் சினந்தாளென்று எவராலுந் தெரிந்துகொள்ளமுடியாதபடி திடீரென்று சினங்கொண்டு தாமரை நிறையப் பூத்தஇடத்தில் மறைந்துநிற்க, அவளை நாடி ஆங்குச்சென்று கணவன் தன் மனைவியின் முகத்துக்கும் தாமரை மலர்க்கும் வேற்றுமை தெரியாமையால் தயங்கலாயினனென்க; மறைவணி. [4]'மாதர், பங்கயமுகமென்றோராதையுற்றுப்பார்க்கின்றாரும்' என்று பாடம் இருப்பின், இதுவும் மகளிரையே கூறியதாகி, முன்பின் பாடலோடு ஒத்துநிற்கும். பி-ம்:—[1]தேற்றாச், தேற்றாஞ். [2]மங்கையர். [3]மறைந்தனன். [5]அன்று. [6]ஓராது, உற்றோர். [7]பார்க்கின்றாரும், பார்க்கின்றானல். (1022)

11. பொற்றொடி தளிர்க்கைச் சங்கம் [1]வண்டொடு புலம்பி யார்ப்ப
[2]எற்றுநீர் குடையுந் தோறு [3]மேந்துபே ரல்கு னின்று

கற்றைமே கலைக ணீங்கிச் சீறடி கவ்வக் [4]காலிற்
சுற்றிய நாக [5]மென்று துணுக்கத்தாற் [6]றுடிக்கின் றாரும்.

(இ - ள்.) தளிர் கை பொன் தொடி சங்கம் - தளிர்போன்ற கைகளிலணிந்த பொன்னாலியன்ற தொடிகளும் சங்கவளையல்களும், வண்டொடு - (அணிந்துள்ள மலர்மாலைகளில் மொய்க்கின்ற) வண்டுகளுடனே, புலம்பி ஆர்ப்ப-மாறுபட்டு ஆரவாரிக்க, எற்றும் நீர் - அலைமோதுகின்ற நீரிலே, குடையும் தோறுஉம் - மூழ்கும் போதெல்லாம், ஏந்து பேர் அல்குனின்று - உயர்ந்த பெரிய நிதம்பங்களிலிருந்து, கற்றை மேகலைகள் நீங்கி - தொகுதியாகிய [பல கோவையாகவுள்ள] மேகலையென்ற இடையணிகள் நழுவி விழுந்து, சிறு அடி கவ்வ-(தமது) சிறிய பாதங்களைக் கதுவும்போது, காலில் சுற்றிய நாகம் என்று-(தமது) பாதங்களிற் சுற்றிக்கொண்ட பாம்பென்று கருதி, துணுக்கத்தால்-பேரச்சத்தினால், துடிக்கின்றார்உம்-நடுங்குகின்றவர்களும்,—(எ - று.)-நான்காம்பாடல்முதல் தழுவுவாரும் முதலியனவாக வந்த உம்மீற்று உயர்திணைச்சொற்களை இந்தப் பாடல்வரையிற் சேர்த்து, 'ஆயினார்' என ஒரு முடிபு கொடுக்க.

சிலமகளிர், தாம் நீரிற் குடைகையில் தமது இடையிலணிந்திருந்த மேகலைகள் நழுவிக் காலைக்கௌவத் தம்மைஅரவம் கவ்வியதென்று கருதிப் பேரச்சங்கொண்டு நடுங்கலாயினரென்க; மயக்கவணி. வண்டொடு-மற்றைப் பொன்வளைகளோடுஎனினுமாம். பி-ம்:- [1]விண்டொடு. [2]எற்றி. [3]எழுந்து. [4]காலைச். [5]என்ன. [6]துவள்கின்றாரும். (1023)

12.—மூன்றுகவிகள் – மகளிர் சூழநின்ற ஆண்மகன் வருணனை.

குடைந்துநீ ராடு மாதர் குழாம்புடை சூழ வாழித்
தடம்புயம் [1]பொலிய [2]வாண்டோர் தார்கெழு வேந்த னின்றான்
கடைந்தநா ளமிழ்தி னோடுங் கடலிடை வந்து தோன்றும்
மடந்தையர் [3]சூழ நின்ற மந்தரம் [4]போல [5]மாதோ.

(இ - ள்.) கடைந்த நாள் - (அமுதம் எழவேணுமென்று) கடைந்த காலத்தில், கடலிடை அமிழ்தினோடுஉம் வந்து தோன்றும்-திருப்பாற்கடலின் நடுவிலே அமிருதத்தோடுஎழுந்து தோன்றிய, மடந்தையர்-தேவமங்கையர், சூழ நின்ற-(தன்னைச்) சுற்றிலுமிருக்கலாங்கின்ற, மந்தரம் போல-மந்தர பருவதத்தைப்போல,— ஆண்டு-அவ்விடத்தில், ஆழி தடம் புயம் பொலிய-வட்டவடிவாகிய அங்கதத்தையணிந்த பெரிய புயங்கள் பொலிவு பெறுமாறு, தார் கெழு ஓர் வேந்தன்-மாலைவிளங்கப்பெற்ற ஓரரசன், நீர் குடைந்து ஆடும் மாதர் குழாம் புடை சூழ-நீரில்மூழ்கி விளையாடல் புரிகின்ற மகளிரின்கூட்டம் (தன்) பக்கமெல்லாம் சூழ்ந்துநிற்க, நின்றான்—; (எ-று.)

வாசுகியென்னுங் கடைகயிற்றினாற் சுற்றப்பட்ட மந்தரமலைக்கு அங்கதம்பூண்ட வேந்தனும், கடலிடைத் தோன்றி அம்மலையைச் சூழ்ந்துநின்ற தெய்வமகளிர்க்கு அவ்வேந்தனைச் சூழ்ந்துநின்ற

மானிடமகளிரும் உவமையாவர். ஆழி-வட்டவடிவமாகிய தோள் வளைக்கு ஆகுபெயர். 'வாழி' என எடுத்து அசையெனக் கூறலுமாம். பி - ம்:—[1]பெரிய. [2]வண்டோர், ஆங்கோர். [3]சூழல். [4]மலையும், போலும். [5]போன்றான். (1024)

13. தொடியுலாங் கமலச் செங்கை தூநகை [1]துவர்த்த செவ்வாய்க்
கொடியுலா [2]மருங்கு னல்லார் குழாத்தொரு [3]குரிசி னின்றான்
கடியுலாங் கமல வேலிக் கண்ணகன் [4]கானி யாற்றுப்
பிடியெலாஞ் சூழ நின்ற பெய்மத யானை யொத்தான்.

இ - ள்.) தொடி உலாம்-தொடியெனப்படும் வளையலையணிந்த, கமலம் செம் கை-தாமரைமலர்போன்ற அழகிய [அல்லது சிவந்த] கைகளையும், தூ நகை துவர்த்த செவ் வாய்-வெண்ணிறமமைந்த சிரிப்புடன் கூடிய மிகச்சிவந்த வாயையும், கொடி உலாம் மருங்குல்-படர்கொடியை யொத்த இடையையுமுடைய, நல்லார்-மகளிருடைய, குழாத்து-கூட்டத்திலே, நின்றான்-நின்றவனாகிய, ஒரு குரிசில்-ஒப்பற்ற அரசனொருவன்,—கடி உலாம் கமலம் வேலி-வாசனை வீசுகின்ற தாமரைக்கொடி வேலியாக அமையப்பெற்ற, கண் அகல் கான் யாற்று-இடமகன்ற காட்டாற்றிலே, பிடி எலாம் சூழ நின்ற-பெண்யானைகள் பலவும் (தன்னைச்) சூழ்ந்திருக்கத் (தான்) தனியேயுள்ள, மதம் பெய் யானை-மதமொழுகப்பெற்ற ஆண்யானையை, ஒத்தான்-போன்றான்; (எ-று.)

நீர்நிலையில் மகளிர் சூழநின்ற குரிசிலுக்கு, காட்டாற்றிலே பெண்யானைகள் சூழநின்ற ஆண்யானை உவமை யென்க. தூய்மையென்ற பற்களின் குணம் அப்பற்களின் தொழிலாகிய நகையின் மேலேற்றிக் கூறப்பட்டது. பி-ம்:—[1]துவர்ந்த. [2]மருங்குலார்தம். [3]தோன்றல், கொண்டல். [4]கான, கானே. (1025)

14. கானமா மயில்க ளெல்லாங் களிகெடக் களிக்குஞ் சாயல்
சோனைவார் குழலி னார்தங் [1]குழாத்தொரு தோன்ற னின்றான்
வானயா றதனை நண்ணி வயின்வயின் [2]வயங்கித் தோன்றும்
மீனெலாஞ் சூழ நின்ற விரிகதிர்த் திங்க ளொத்தான்.

(இ - ள்.) கானம் மா மயில்கள் எல்லாம்-காட்டில் வசிக்குந் தன்மையுள்ள மயில்கள் யாவும், களி கெட-(தமது) மதக்களிப்பு ஒழியும்படி, களிக்கும்-செருக்குவதற்குக்காரணமான, சாயல்-சாயலையுடைய, சோனை வார் குழலினார் தம்-இடைவிடாது மழை பொழிகின்ற காளமேகம்போன்ற நீண்ட கூந்தலையுடைய மகளிரின், குழாத்து-கூட்டத்தில், நின்றான்-நின்றவனாகிய, ஒரு தோன்றல்-ஓரரசன்,—வானம் யாறு அதனை நண்ணி-ஆகாய கங்காநதியைச் சார்ந்து, வயின் வயின் வயங்கி தோன்றும்-(அவ்வாகாய கங்காநதியின்) பலவிடங்களில் விளங்கித் தோன்றுகின்ற, மீன் எலாம் சூழ நின்ற-பல நட்சத்திரங்கள் சூழப்பெற்றுள்ள, விரிகதிர் திங்கள்-பரந்த கிரணங்களையுடைய சந்திரனை, ஒத்தான்—; (எ-று.)

பலமகளிர்சூழ நீர்நிலையில்நிற்கின்ற வேந்தனுக்கு - ஆகாய கங்காநதியைச் சார்ந்து அவ்விடத்துப் பலநட்சத்திரங்களசூழ

விளங்குஞ் சந்திரனை ஒப்பாகக் குறித்தார். சோனை-இடைவிடாது மழைபொழியுங் காளமேகம். வானயாறு என வந்ததனால், வயின் வயினென்பதற்கு அவ்யாற்றின் பலவிடங்களிலெனக. இம்மகளிரின் சாயல் மயில்களினும் விஞ்சியிருக்குமென்பது 'கானமாமயில்களெல்லாம் களிகெடக் களிக்குஞசாயல்' எனபதன கருத்து. பி-ம்:— [1]குழாத்திலோர். [2]விளங்கி, வைகி, வணங்கி. (1026)

15.—பலமகளிரிடையே சிறந்துதோன்றும் ஒருத்தியின் வருணனை.

[1]மேவலாந் தகைமைத் [2]தல்லால் [3]வேழவிற் றடக்கை வீரற்கு
ஏவெலாங் காட்டு கின்ற விணைநெடுங் [4]கண்ணொ ரேழை
பாவைமார் [5]பயந்த கோலப் பண்ணையிற் பொலிவாள் வண்ணப்
பூவெலா மலர்ந்த பொய்கைத் தாமரை பொலிவ தொத்தாள்.

(இ-ள்.) வேழம் வில் தட கை வீரற்கு - கரும்புவில்லைக் கொண்ட பெரிய கைகளையுடைய மகாவீரனாகிய மன்மதனுக்கு (உரிய), மேவல் ஆம் தகைமைத்து அல்லால்-விருப்பமாகிய குண மாத்திரமல்லாமல், ஏ எலாம்-அம்புகளெல்லாவறறையும், காட்டுகின்ற-தருகின்ற, இணை நெடு கண்-இரட்டையாகிய நீண்ட கண்களையுடைய, ஓர் ஏழை - மடந்தையொருத்தி, பாவைமார் பயந்த கோலம்-வண்ணமகளிர் அலங்கரித்த அழகிய அலங்காரத்தோடு கூடிய, பண்ணையில் - மகளிர்கூட்டத்திற்குள், பொலிவாள் - விளங்குபவளாய்,—வண்ணம் பூ எலாம் மலர்ந்த-அழகிய (குவளை நெய்தல் முதலிய) நீர்ப்பூக்கள் பலவும் மலர்ந்துள்ள, பொய்கை - தடாகத்திலே, தாமரை-தாமரைமலர், பொலிவது - விளங்குவதை, ஒத்தாள்—; (எ-று.)

ஆங்கு மகளிர்கூட்டத்துள் ஒருத்தி மிகச்சிறந்து விளங்கித் தோன்றியதற்கு, பொய்கையில் நீர்ப்பூக்கள் பலவற்றினிடையே தாமரைமலர் விளங்குவது உவமை. தம்முடைய வலையிற்பட்டவர்க்குக் காமத்தையுண்டாக்குவதனோடு நில்லாமல் மன்மதனுடைய பஞ்சபாணங்களின் செயலையெல்லாஞ் செய்யவல்ல கண்களையுடையா ளென்பார், 'மேவலாந்தகைமைத்தல்லால்..., ஏவெலாங் காட்டுகின்ற...கண்ணொரேழை' என்றார். மேவல்-காமம். வேழம்-கரும்பு. மன்மதனுக்கு அரவிந்தம்முதலிய ஐந்தும் அம்பென்பதை இரத்தினச்சுருக்கத்தா லறியலாம். மன்மதனை வீரனென்றது - தான் ஒருவனாகிக் கரும்புவில்லையும் மலரம்புகளையுங்கொண்டு அஞ்சாதநெஞ்சுபடைத்த பெருவீரரையும் வெல்லுதலா லென்க. பயத்தல் என்ற வினை - இலக்கணையால், அலஙகரித்தல்என்ற பொருளது. தகைமைத்து, து - பகுதிப்பொருள்விகுதி. தகைமைத்து என்பதன்பின் எதிரதுதழுவியஎச்சவும்மையும், ஏவெலாம் என்பதன்பின் இறந்ததுதழுவிய எச்சவும்மையும் விகாரத்தால் தொக்கன. பி-ம்:—[1]மேவலார். [2]அம்மா, அல்லா. [3]வேள்வியிற். [4]கண்ணார். [5]பயின்ற, பரந்த. (1027)

16.—நீரிடைத்தோன்றும் மகளிரின் முகம்.

மிடலுடைக் கொடிய வேலே [1]யென்னலாய்[2]மிளிர்வ வென்னச்
சுடர்முகத் துலாவு கண்ணு டோகையர் சூழ நின்றாள்
மடலுடைப் போது காட்டும் வளர்கொடி பலவுஞ் சூழக்
கடலிடைத் தோன்றும் மென்பூங் கற்பக[3]வல்லி யொத்தாள்.

(இ - ள்.) 'மிடல் உடை கொடிய வேல்ஏ என்னல் ஆய்-வலிமையையுடைய கொடிய வேற்படையேயாகும் என்று கருதும்படியாகி, மிளிர்வ - (இவை) விளங்குவன,' என்ன - என்று சொல்லுமாறு, சுடர் முகத்து உலாவு கண்ணாள்-விளங்குகின்ற முகத்திலே பிறழ்ந்து தோன்றுகின்ற கண்களையுடையவளாகி, தோகையர் சூழ நின்றாள்-மயில்போன்றசாயலையுடைய தோழிமாரால் சூழப்பெற்று நின்ற ஒருமாது,—மடல் உடை போது காட்டும் வளர் கொடி பல உம் சூழ - இதழ்களையுடைய மலர்களைத் தோற்றுவிப்பனவான வளருந்தன்மையுள்ள பலகொடிகளும் சூழ்ந்திருக்க, கடலிடை தோன்றும்-பாற்கடலிலிருந்து வெளிவந்த, மெல் பூ கற்பகவல்லி - மெல்லியமலர்களைக்கொண்ட காமவல்லியை, ஒத்தாள்—; (எ-று.)

ஆடவர்மார்பி லூடுருவிச்சென்று பெருவருத்தம் விளைத்தலாலும் தோற்றத்தாலும, வேற்படை, மடவார்கண்களுக்கு உவமையாகும். தோகையர் சூழ நின்றவளுக்கு, வளர்கொடி பலவுஞ்சூழ்ந்த காமவல்லி இல்பொருளுவமை. காமவலலி - கற்பக தருவின்மேற் படருங் கொடி யெனப. பி-ம்:-[1]மின்னின, எனனவாள். [2]மிளிர்வது. (1028)

17.—நீரில்மூழ்கிய ஒருமாதின் வருணனை.

தேரிடைக் கொண்ட வல்கு றெங்கிடைக் கொண்ட கொங்கை
யாரிடைச் [1]சென்றுங் [2]கொள்ளா வொண்குலா [3]வழகுங் கொண்
[4]வாருடைத் தனமீ தாட மூழ்கினாள் வதன மைதீர் [டாள்
நீரிடைத் தோன்றுந் திங்க ணிழலெனப் பொலிந்த தன்றே.

(இ - ள்.) தேர் இடை கொண்ட அல்குல் - தேரினிடத்தினின்றுகொண்ட அல்குலையும், தெங்கு இடை கொண்ட கொங்கை-தென்னமரத்திலிருந்துகொண்ட தனங்களையும், ஆரிடை சென்று உம் கொள்ளா ஒண் குலா அழகுஉம் - எவரிடத்திற்போனாலும் கொள்ளமுடியாத ஒண்மை விளங்குகின்ற அழகையும், கொண்டாள்-கொண்டவளும், வார் உடை தனம்-கச்சைப்பூண்ட தனங்கள், மீது ஆட-வெளியிலே தோன்றுமாறு, மூழ்கினாள - மூழ்கினவளுமாகிய ஒருபெண்ணின், வதனம் - முகமானது,—மை தீர் நீரிடை தோன்றும்-குற்றமற்ற நீரிலே தோன்றுகின்ற, திங்கள் நிழல்என - சந்திரனுடைய பிரதிபிம்பம்போல, பொலிந்தது - விளங்கிறறு;

தேர்த்தட்டுப்போன்ற அல்குலையும், இளநீர்க்காய்போன்ற தனங்களையும, எவர்க்கும் இல்லாப்பேரழகையும படைத்தவள் மூழ்கின மாதுஎன்பார், 'தேரிடைக்கொண்டவல்குல்... அழகுங்கொண்டாள்...மூழகினாள்' என்றார். நீருக்கு மை தீர்கை - கலக்கமின்றித்

தெளிவாயிருக்கை, அசையாதுநிற்கை முதலியன. பி - ம்:— [1]சென்று. [2]கொள்ளவொண்கிலா. [3]அழகு. [4]வாரிடைத்தனம், வாருடைத்தென, வாரிடைத்தென. (1029)

வேறு.

18.—வெள்ளம் பரவுகை.

மலைக டந்த புயன்கண் மடந்தைமார்
கலைக டந்தக லல்குல் [1]கடம்படு
முலைக டந்தமின் முந்தி [2]நெருங்கலால்
நிலைக டந்து [3]பரந்தது நீத்தமே.

(இ - ள்.) மலை கடந்த புயங்கள்-மலைகளையும்வென்று ஓங்கியுள்ள தோள்களும், கலை கடந்து அகல் மடந்தைமார் அல்குல்-வஸ்திரத்துக்குள் அடங்காமல் அகன்றுள்ள மடந்தைமாரின் அல்குலும், கடம் படு முலைகள் - குடத்தையொத்த (அம்மடந்தைமாரின்) தனங்களும், தந்தமில் முந்தி - ஒன்றேடொன்று இகலிமுற்பட்டு, நெருஙகலால் நெருங்குவதனல்,—நீத்தம் - வெள்ளம்,—நிலை கடந்து பரந்தது-தன்னிலையைக் கடந்து பரவலாயிற்று;

புயங்கள் முதலியவை நெருங்குதலால், வெள்ளம் நிலைகடந்து பரவலாயிற்றென்க. மற்றையவுறுப்புக்களினும் இம்மூன்றுஉறுப்புக்களும் திரண்டன ஆதலால், அத்தலைமைபற்றி 'இவற்றை நீத்தம் நிலைகடந்து பரத்தற்குக் காரணமாக்கிக் கூறினர். மகளிரினுறுப்புக்கள் படுதலால் ஆடவர் நிலைமாறுபடுதலை யடைகின்றனரென்ற குறிப்புப்பொருளும் தோன்றும். கடம் - வடசொல். மலைகடந்தபுயங்கள், ஆடவருடையவை. பி - ம்:—[1]கடாம்படு, கடாம்பட. [2]நெருக்கலால், நெருங்கிலா. [3]படர்ந்தது. (1030)

19.—மகளிராடும் பொய்கையின் வருணனை.

செய்ய வாய்[1]விளர்ப் பக்கண் சிவப்புற
[2]மெய்ய ராக மழியத் துகினெகத்
தொய்யின் மாமுலை மங்கையர் தோய்தலால்
பொய்கை காதற் [3]கொழுநரும் போன்றதே.

(இ-ள்.) செய்ய வாய் - (செம்பஞ்சுஊட்டுதல் முதலியவற்றாற்) செந்நிறமமைந்த வாய், விளர்ப்ப - வெண்ணிறத்தையடையவும், கண் சிவப்பு உற - கண்கள் செந்நிறத்தையடையவும், மெய் அராகம் அழிய - உடம்பிற்பூசிய சந்தனம் அழியவும், துகில் நெக - அரையாடை நழுவவும், தொய்யில் மா முலை மங்கையர்-தொய்யிலையணிந்த பருத்த முலையையுடைய மங்கைமார்,தோய்தலால் - படிதற்கு இடனுயிருத்தலினுல், பொய்கை—, காதல் கொழுநர்உம் - காதலோடு அணையப்படுங் கணவரையும், போன்றது—; (எ-று.)

கொழுநரைத் தோய்கையில், மகளிர்க்கு அதரபானத்தால் வாய் வெளுத்தலும் கண்சிவத்தலும் உடம்பிற்பூசிய சந்தனம் அழிதலும் துகில்நெகிழ்தலும் இயற்கை. சந்தனத்திற்கு அங்க

ராகமென்று பெயராதலால், அதனை 'மெய்யராகம்' என்றார். 'மெய்' என்று தனியும் எடுக்க. தொய்யில் - சந்தனம் குங்குமம் இவற்றாலெழுதுங் கோலம். பி - ம்:—[1]வெளுப்ப. [2]நெய். [3]கொழுநரைப். ()

20.—மகளிர்நீராடுதலினால் மீனும் கமழ்தல்.

ஆன தூயவ ரோ[1]டுட [2]னாடினார்
[3]ஞான நீரவ [4]ராகுவர் நன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு நாறின வேறினி வேண்டுமோ.

(இ - ள்.) ஆன தூயவரோடு - பரிசுத்தமான ஞானமுடையவரோடு, உடன் ஆடினார் - ஒருசேரவிருந்து பழகின சாதாரணமானவரும், நன்று - மிகவும், ஞானம் நீரவர் ஆகுவர் - ஞானகுணத்தையுடையவராவர்; (அதற்கு ஏற்ப), மீன்உம் - (மகளிர் ஆடிய பொய்கையில் வாழும்) மச்சமும்,—தேன்உம் நாவிஉம் தேக்கு அகில் ஆவிஉம் நாறின - தேன்மணமும் கஸ்தூரிமணமும் தேக்கின்புகையின்மணமும் அகிலின்புகைமணமும் வீசலாயின; வேறு இனி வேண்டும்ஓ-வேறோருதாரணமும் (இதற்குச்) சொல்லவேண்டுமோ?

நல்லவரோடுகூடியவர் அவருடைய நல்லகுணத்தைப்பெறுவரென்பதை விளக்க, புலால்நாற்றமுள்ள மீன்களும் நல்லாரோடு [மகளிரோடு] பழகுதலால் அவர்கூந்தலிலுள்ள தேன்முதலியவற்றின் மணத்தைப்பெற்றனவென்றார்; முதலிற் பொதுப்பொருளைக்கூறி, அதனாற் பொய்கைவாய் மீன்கள் மணங்கமழலாயின என்ற சிறப்புப்பொருளைச் சமர்த்தித்தார்; வேற்றுப்பொருள்வைப்பணி. பி - ம்:—[1]இனிது. [2]ஆடினால். [3]ஆன. [4]ஆகுதல், ஆகுக. *(1032)*

21.—ஆடவரும் மகளிரும் ஊடிய புனலின் வருணனை.

மிக்க வேந்தர்த மெய் [1]யழி சாந்தொடும்
புக்க மங்கையர் குங்குமம் [2]போர்த்தலால்
ஒக்க நீல முகிற்றலை யோடிய
செக்கர் வானக [3]மொத்ததத் தீம்புனல்.

(இ - ள்.) புக்க-(தன்னிடத்து) விளையாடுமாறு வந்த, மிக்க வேந்தர்தம்-பெருமைமிகுந்த தலைவருடைய, மெய்-உடம்பிலே (பூசப்பெற்று), அழி - அழிகப்பெற்ற, சாந்தொடுஉம் - செஞ்சந்தனக்குழம்போடு, மங்கையர் - மடந்தைமார் (அணிந்திருந்து அழிந்த), குஙகுமம்-குங்குமக்குழம்பும், போர்த்தலால் - (தனனிடத்து) நிரம்பியதனால்,—அ தீம் புனல் - (அவர்கள் விளையாடல் நிகழ்த்துகின்ற) அந்த இனியநீரவெள்ளம்,—நீலம் முகில்தலை-நீலநிறமுள்ள மேகத்தில், ஒககஓடிய - ஒருசேரப் பரவிய, செக்கர் வானகம் - செவ்வானத்தை, ஒத்தது—; (எ - று.)

கருநிறமாகத்தோன்றுகின்ற நீரில் செஞ்சந்தனச்சேறும் குங்குமக்குழமபும் கலந்ததனால், அந்நீர் கருநிறமுகிலிற் காணப்படுஞ் செவ்வானம்போன்றதென்பதாம்; தற்குறிப்பேற்றவுவமை. 'புக்க'

என்ற சொல் மத்திமதீபமாகி, 'வேந்தர், மங்கையர்' என்ற ஈரிடத்தும் இயையும். பி - ம்:—[1]வழி. [2]பூத்தலால். [3]ஒத்தது, போன்றது.

22.—பூசிய கலவை நீங்கப்பெற்ற மகளிரின் வருணனை.

காக துண்ட நறுங்கல வைக்களி
ஆக முண்ட தடங்கலு நீங்கலால்
[1]பாக டைந்த [2]பனிக்கனி வாய்ச்சியர்
வேக டஞ்செய் மணியென மின்னினர்.

(இ - ள்.) ஆகம் உண்டது-உடம்பிற்பூசிய, காகதுண்டம் நறு கலவை களி அடங்கலும்-அகிலோடுகூடிய நறுமணமுள்ள சந்தனச் சேறுயாவும், நீங்கலால் - (நீரில்விளையாடியதுபற்றி) அழிந்திட்டதனால்,—பாகு அடைந்த பனி கனி வாய்ச்சியர்-பாகின் தன்மை(யுள்ள இன்சொற்கள்) பொருந்திய குளிர்ந்த கோவைப்பழம்போன்ற வாயையுடைய மகளிர்,—வேடகம் செய் மணி என - சாணைபிடித்த இரத்தினம்போல,—மின்னினர் - விளங்கினர்; (எ - று.)

மகளிரின்பெருநலத்தை மறைத்துக்கொண்டிருந்த அகிற்கூட்டுச்சந்தனம் நீரா லழிந்ததனால், அம்மகளிர் சாணைபிடித்த இரத்தினம்போல விளங்கினரெனக. இதனால், அம்மகளிரின் இயற்கைப் பேரழகைப் பெறவைத்தார். பாகு - இன்சொல்லுக்கு, ஆகுபெயர். காகதுண்டம் - அகில்: வடசொல். 'பாகடர்த்த என்ற பாடத்திற்கு-பாகைப்பகைத்த என்று பொருள்கூறி, பனிக்கனி வாய்ச்சியர் - குளிர்ச்சியாகிய முக்கனிச்சாற்றின் சுவையமைந்த சொல்லையுடைய மாதர் என்றும், [1]பாகடர்ந்தஎன்ற பாடத்திற்கு-பாகின் இனிமைமிகுந்த, பனி - சொல்லையுடைய, கனிவாயச்சியர் என்றும் பொருள் கூறுவர். பன்னப்படுவதுபற்றி, பனி-சொல்லாகும்- பி-ம்:—[2]பணிக். (1034)

23.—ஒருத்தி, தான் ஒருவனதுதோளிலெழுதிய சந்தனக் கோலம் அவியச் சினத்தல்.

[1]பாய ரித்திற லான்பசுஞ் சாந்தினல்
தூய பொற்புயத் துப்பொதி தூக்குறி
மீய ரித்து[2]விளர்க்கவொர் மெல்லியல்
சேய ரிக்கருங் கண்கள் சிவந்தவே.

(இ - ள்.) பசுஞ் சாந்தினல் - ஈரமாயுள்ள சந்தனக் குழம்பு கொண்டு, பாய் அரி திறலான் - பாய்கின்ற சிங்கம்போன்ற வல்லமையைக்கொண்ட வீரனுடைய, தூய பொன் புயத்து - பரிசுத்தமான பொன்னுபரணங்களை யணிந்த தோள்களிலே, பொதி-எழுதிய, தூ குறி - தூய்மையான கோலத்தை, (நீர்வெள்ளம்), மீ அரித்து - மேலே பட்டு) அழித்தலாலே, விளர்க்க - (புயங்கள்) தொய்யிற் கோலம் நீங்கியனவாய்விட,—(அதுகண்ட), ஓர்மெல்லியல் - ஒரு பெண்ணின், சேய் அரி கருங் கண்கள் - செவ்வரிபரந்த பெரிய கண்கள், சிவந்த-செந்நிறத்தையடைந்தன; (எ - று.)

ஒருவீரனது தோளில் ஒருத்தி செஞ்சந்தனக் குழம்பு கொண்டு எழுதிய கோலம் நீர்விளையாடல் நிகழ்ந்தபோது நீர்வெள்ளத்தால் அழிந்ததாக, அழிந்தநிலையில் அவனை அம்மங்கை பார்த்து 'மற்றொருத்தியோடு புணர்ந்ததனால்தான் இவன் தோளில் யான் எழுதிய சந்தனக்கோலம் அழிந்தது' என்று ஊடல்கொண்டு அச்சினத்தினாற் கண்கள் சிவந்தனளென்க: தான் அன்போடு எழுதியதை அழியுமாறு செய்ததனாற் புலந்து கண் சிவந்தாளெனினுமாம். செஞ்சந்தனக்கோலம் நீங்கியதனால் தோள்கள் தனது வெண்ணிறத்தையடைய, வெண்ணிறக்கண்கள் செஞ்சந்தன மணிந்த அந்தத் தோள்களின் செந்நிறத்தைக் கொண்டன என்று மாற்றுநிலையணி தோன்றக் கூறிய நயம் பாராட்டத்தக்கது. பசுஞ் சாந்து, விளர்க்க என்ற இடங்களில் பசுமை வெண்மைகள் முறையே ஈரத்தையும், செம்மை நீங்கிய தன்மையையும் உணர்த்தும். ஈற்றடியில் முரண்டொடை காண்க. பி - ம்:—[1]பாய்பரி. [2]விளங்க, வெளுக்க. (*1035*)

24.—ஒருத்தியின் காமத்தாற் புனலுஞ் சுடுதல்.

[1]கதம்ப நாள்விரை கள்ளவிழ் தாதொடும்
ததும்பு பூந்திரைத் தண்புனல் சுட்டதால்
நிதம்ப பாரத்தொர் நேரிழை காமத்தால்
வெதும்பு வாளுடல் வெப்பம் [2]வெதுப்பவே.

(இ - ள்.) காமத்தால் வெதும்புவாள்-காமவேதனையால் வெப்பங் கொண்டவளும், நிதம்பம் பாரத்து ஓர் நேர்இழை - நிதம்பபாரத்தைக் கொண்டவளுமான அழகிய ஆபரணத்தையுடைய மடந்தையொருத்தியின், உடல் வெப்பம்-உடம்பின் தாபம், வெதுப்ப - சுட்டதனால்,—கதம்பம் - நறுமணப்பொடியைக் கொண்டனவும், நாள்-அன்றுமலர்ந்தனவும், விரை - மணத்தோடுகூடியனவுமாகி, கள் அவிழ-தேன் சிந்தப்பெற்று, தாதொடுஉம்ததும்பு-கேஸரங்களோடு நிரம்பியுள்ள, பூ-மலர்களைக்கொண்ட, திரை தண் புனல் - அலைகளோடு கூடிய (அப்புனல்விளையாட்டிற்கு உதவிய) குளிர்ந்த நீர்த்தடமும், சுட்டது-வெப்பங்கொண்டது; (எ-று.)—ஆல்-வியப்பைக் குறிக்கும்; ஒருத்தியின் காமத்தால் நீர்த்தடமே வெப்பமடைந்தமையை வியந்தவாறு.

தண்புனல் என்பதனீற்றிற் சிறப்பும்மை தொக்கது. நிதம்பம்-இடையின் பின்புறக்கீழ்ப்பக்கம். கதம்பம்-கலவைச் சாந்தும், நாள் விரை-புதிய வாசனைத் திரவியமுமாம். நேரிழை - அன்மொழித் தொகை. பி - ம்:—[1]கதம்பெய். [2]வெதும்பவே. (*1036*)

25.—ஒருவன் நீர்முகந்து ஒருத்தி கூந்தலில் எற்றுதல்.

[1]தைய லாளையொர் தாரணி தோளினான்
நெய்கொ ளோதியி னீர்முகந் தெற்றினான்
செய்ய தாமரைச் செல்வியைத் தீம்புனல்
கையி [2]னாட்டுங் களிற்றர சென்னவே.

(இ - ள்.) செய்ய தாமரை செல்வியை - செந்தாமரை மலரில் வீற்றிருக்குந் திருமகளை, கையின் - (தன்) கையினாலே, தீம் புனல்-

இனியநீரை (முகந்து), ஆட்டும்-நீராட்டுகின்ற, களிறு அரசுஎன்ன-சிறந்த யானைபோல,—ஓர் தார் அணி தோளினன் - ஒப்பற்ற மாலையையணிந்த தோள்களையுடைய ஓரரசன், (தன்கையினால்), நீர் முகந்து - நீரையள்ளியெடுத்து, தையலாளை - ஒரு பெண்ணினது, நெய் கொள் ஓதியில் - எண்ணெய்பூசிய கூந்தலிலே, எற்றினன் - வீசினன்; (எ - று.)

ஓரரசன் தன்கையினாலே நீரைமொண்டெடுத்து ஒருத்திக் கூந்தலிலே சொரிந்தது, யானையரசு தன் கையினாலே நீரைமொண்டு இலக்குமியை நீராட்டுவதுபோலும்; உவமையணி. கரிக்கரம் பொரு கையான் தாரணி தோளினன் என்பது பெறப்படும். தையலாளை-வேற்றுமைமயக்கம். பி-ம்:—[1]தையலாரை. [2]ஆரும், ஓட்டும்.(1037)

26.-தாமரைமலர்மீதிருந்த அன்னப்பறவையின் வருணனை.

சுளியு மென்னடை [1]தோற்க நடந்தவர்
[2]ஒளிகொள் சீறடி [3]யொப்பன வாமென
விளிவு தோன்ற மிதிப்பன [4]போன்றன
நளின மேறிய நாகிள வன்னமே.

(இ - ள்.) நளினம் ஏறிய - தாமரைமலர்மீது ஏறியிருந்த, நாகு இள அன்னம் - மிக்க இளமையுடைய அன்னப்பறவைகள்,—'சுளியும் - (நாம்) இகலிநடக்கின்ற, மெல் நடை - (நமது) மெல்லிய நடையையும், தோற்க - தோற்றுப்போம்படி [மிக அழகாக], நடந்தவர் - நடந்தமடந்தைமாரின், ஒளி கொள் சிறு அடி - ஒளியைக்கொண்ட சிறிய அடியை, ஒப்பன-(இவை) ஒத்திருப்பன,' என - என்று எண்ணியதனால், விளிவு தோன்ற-(தம் மனத்திலுள்ள) கோபம் தோன்றுமாறு, மிதிப்பன-(அத்தாமரைமலரை) மிதிப்பவற்றை, போன்றன-ஒத்திருந்தன; (எ - று.)—ஆம்-அசை.

தமக்குப் பகையான ஒருவனுக்குத் தீங்குசெய்ய இயலாவிட்டால் தம் மனத்துள்ள பகைக்கு மாற்றாக அவனைச் சேர்ந்தார்க்குத் தீங்கிழைக்கும் உலகவியற்கைக்கு ஏற்ப, தம்மை நடையழகால் வென்ற மகளிர்திறத்துத் தம்மாற் செய்யக்கூடியது யாதொன்றும் இல்லாமையால் அன்னப்பறவைகள் அம்மங்கையரின் பாதங்களையொத்த தாமரைமலர்களைத் தம்மனத்துச் சினந்தீர மிதித்தன போலுமென்று, தாமரை மலரின்மீது அன்னமிருப்பதை வருணித்தார்; தற்குறிப்பேற்றவணி: இவ்வணி, விறல்கோளணிக்கு அங்கமாக வந்தது; வலிமையுள்ள மாற்றானைச் சார்ந்தவரிடத்துத் தன் திறலைக் காட்டுவதாகக்கூறுவது - விறல்கோளணியினிலக்கணம். [2]அளிகொள் என்றபாடத்துக்கு-மென்மையைக்கொண்ட என்க. பி-ம்:—[1]தொக்க. [3]ஒத்தன. [4]போன்றுள. (1038)

27.—ஆடவரின் வேட்கை.

எரிந்த [1]சிந்தைய ரெத்தனை யென்கெனோ
[2]அரிந்த கூருகி ராலழி [3]சாந்து போய்த்
தெரிந்த கொங்கைகள் செவ்விய நூல்புடை
[4]வரிந்த பொற்கல சங்களை [5]மானவே.

(இ - ள்.) அழி சாந்து போய்-(நீரினால்) சந்தனம் அழிந்து போய், அரிந்த கூர் உகிரால்-அரிந்த கூரிய உகிரோடு [நகக்குறிகளோடு], தெரிந்த-காணப்பட்ட, கொங்கைகள்-ஸ்தநங்கள், செவ்விய நூல் புடை வரிந்த-அழகிய நூலைப் பக்கங்களிற் சுற்றியுள்ள, பொன் கலசங்களை மான-பொற்கலசங்களையொத்திருக்க, (அது கண்டு), எரிந்த சிந்தையர்-(மனத்திற்) காமவெப்பத்தைக்கொண்ட ஆடவர், எத்தனை என்கென்ஓ-எத்தனைபேரென்று எண்ணிச் சொல்ல (யான்) வல்லேனோ? (எ-று.)

மகளிர் புனல்விளையாடுகையில் தனங்களின்மீது பூசிய சந்தனம் யாவும் அழிய, நகக்குறிகளோடுகூடிய அவரது தனங்கள் நூல் சுற்றிய பொற்கலசங்கள்போலத் தோன்ற, அவற்றைக்கண்ட ஆடவர்க்குக் காமவேட்கை மிக, அதனால் வருந்திய ஆடவர் மிகப் பலரென்றவாறு. ஓகாரம்-இரக்கப்பொருளது. உகிரால், 'ஆல்'-உடனிகழ்ச்சிப்பொருளது. இனி, உகிரால் சாந்து அழிந்துபோகத் தெரியும் தேமலையுடைய தனம் என்று உரைப்பாருமுளர். பி-ம்:-
[1]சிந்தைகள். [2]விரிந்த. [3]சாந்தினால். [4]வரிந்தவங், வரிந்தவண்.
[5]மானுமே. (1039)

28.—ஒருத்தி தன்தோழியின் கண்சாடையாற் பேசுதல்.

தாழ நின்ற [1]ததைமலர்க் [2]கையினால்
ஆழி மன்[3]னொரு வன்னுரைத் தானது
வீழி யின்கனி வாயொரு மெல்லியல்
தோழி கண்ணிற் கடைக்[4]கணிற் சொல்லினாள்.

(இ - ள்.) ஆழி மன் ஒருவன்-ஆஜ்ஞாசக்கரத்தையுடைய மன்னவனொருவன், (தனது), தாழ நின்ற-மிகநீண்டுநின்ற, ததை மலர் கையினால்-இதழ்களடர்ந்த தாமரைபோன்ற கைச்சாடையினால், உரைத்தான்-செய்தியைக் குறிப்பித்தான்; அது-அதற்கு, வீழியின் கனி வாய் ஒரு மெல்லியல்-வீழிப்பழம்போன்ற வாயையுடைய ஒருத்தி, தோழி கண்ணில் கடைக்கணில் சொல்லினாள்-தோழியின் கண்மூலமாகக் கடைக்கண்சாடையினால் பதில் தெரிவித்தாள்; (எ-று.)

ஓரரசன் தன்வேட்கையைக்குறிப்பித்துத் தான் அம்மங்கையைக் கிட்டுதற்குரிய இடத்தையும் பொழுதையும் கைச்சாடையினால் வினவ, அம்மங்கையும் தன் தோழியைக்கொண்டு கடைக்கண் சாடையாக அவ்வரசனது வேண்டுகோட்கு மறுமொழி சொல்வித்தனளென்க. இம்மங்கை மறுமொழியுரைத்தது, தன்கடைக் கண்ணினாலன்று; தோழியின் கடைக்கண்மூலமாக என்பதற்கு 'தோழிகண்ணிற் கடைக்கணில்' என்றார். தோழிகண்ணில்-தோழி கண்ணுக்கு எனினுமாம். [3]ஒருவற்கு என்றபாடம்-ஒருபாங்கனுக்கு என்று பொருள்பட்டு, ஒருதலைவன் தன்கருத்தைக் கைச்சாடையாற் பாங்கனுக்குத தெரிவிக்க, அதுகண்ட குறிப்பறிந்த தலைவி அதற்கு உத்தரத்தைத் தன்தோழியின் கடைக்கண்மூலமாகத் தெரிவித்தாளென்று கருத்துப்பட்டுச் சிறக்கும். பி-ம்:—[1]ததை.
[2]கையினன். [4]கண்ணுஞ். (1040)

29.—நீராடுகையில் நீருள் மூழ்குந் தாமரைமலர் வருணனை.

தள்ளி யோடி யலைதடு மாறலால்
தெள்ளு [1] நீரின் [2] முழுகுசெந் தாமரை
புள்ளி மானனை யார்முகம் போல்கிலாது
[3] உள்ளி [4] ஞணி யொளிப்பன போன்றவே.

(இ - ள்.) தள்ளி-(தங்கிலையினின்று) தள்ளப்பட்டு, ஓடி-(கரையின்மீது) பரந்துசென்று, (மீண்டு), அலை தடுமாறலால்-(நீர்நிலையின்) அலைகள் தடுமாறுவதனால், தெள்ளு நீரில்-தெளிவாகவுள்ள (அந்தநீர்நிலையின்) புனலில், முழுகு-அமிழ்ந்துபோகின்ற, செந்தாமரை-செந்தாமரைமலர்கள்,—புள்ளி-பெருமைபெற்ற, மான் அனையார்-(மருண்டநோக்கினால்) மானையொத்தவராகிய மகளிரின், முகம் போல்கிலாது, முகத்தையொத்திருக்கமாட்டாமல், உள்ளின் நாணி-(தம்) மனதிற்குள் வெட்கங்கொண்டு, ஒளிப்பன-மறைவனவற்றை, போன்ற—; (எ - று.)

பலமகளிர் நீரில்குடைந்து ஆடுவதனால் அந்நீர்நிலை தன் அலைகள் கரையில் மோதுவதும் மீள்வதுமாகி இங்ஙனம் அலைவதனால் அந்நீர்நிலையில் முழுகிய தாமரைமலர்களை, கவி, அப்போது நீராடவந்த மகளிரின் முகத்தைக்கண்டு அவற்றிற்குத் தாம் ஒப்புமையாகமாட்டாமையால் நாணங்கொண்டு மறைவனவாகக் கற்பித்தார்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1] நீரிடை. [2] முழங்கு, மூழ்கு. [3] உள்ளம். [4] நாடி. (1041)

30.—நீராடல்நிகழ்த்திக் கரையேறி யாவரும் ஆடையாபரணங்களை யணிதல்.

இனைய [1] வெய்தி யிரும்புன லாடிய
[2] வனைக ருங்[3] கழன் [4] மைந்தரு மாதரும்
[5] அனைய நீர்வறி தாகவந்[6] தேறினர்
புனைந றுந்துகில் [7] பூணொடுந் தாங்கினர்.

(இ - ள்.) இனைய எய்தி-இப்படிப்பட்டநன்மைகளை யடைந்து, இரு புனல் ஆடிய - பெரிய (நீர்நிலையில்) விளையாட்டைநிகழ்த்திய, வனை கரு கழல் மைந்தர்உம்-பூண்ட பெரிய வீரக்கழலையுடைய ஆடவரும், மாதர்உம் - மகளிரும்,—அனைய நீர் வறிது ஆக - அந்த நீர்நிலை (தம்மைப் பிரிதலால்) வெறிச்சென்றுதோன்றுமாறு, வந்து - (அந்நீர்நிலையை) விட்டுவந்து, ஏறினர்-(கரைமீது) ஏறியவர்களாய், புனை - (தாம்) அணிதற்கு உரிய, நறு துகில்-நல்ல ஆடைகளை, பூணொடுஉம்-ஆபரணங்களோடும், தாங்கினர்-அணிந்துகொண்டார்;

நீர்விளையாடல் நிகழ்ந்தபின் யாவரும் கரையேறி ஆடையாபரணங்களை யணிந்தன ரென்க. 'தாங்கினர்' என்றதனால், அம்மகளிரின் மென்மைத்தன்மையும், உலகநடையை யொட்டி யொழுக வேண்டுமென்றே துகில் அணிகளைப்பூண்டன ரென்பதும், அவர்கள் அத்துகிலணிகளால் அலங்கரிக்க வேண்டாதபடி இயற்கையழகு

படைத்தவரென்பதும் பெறப்படும். பி-ம்:—[1] எய்தவரும். [2] அணை வரும.[3] குழல். [4] மாதருமைந்தரும. [5] இணைய.[6] எய்தினர். [7] பூவொடுந்.

31.—புனலாடிய ஆடவரையும் மகளிரையும் நீங்கிய நீர்நிலையின் வருணனை.

மேவி னர் [1] பிரிந் தாரந்த வீங்குநீர்
[2] தாவு தண்மதி தன்னொடுந் தாரகை
ஓவு வானமு முண்ணிறை தாமரைப்
பூவெ லாங்குடி [3] போனதும் [4] போன்றதே.

(இ-ள்.) மேவினர்-(அந்நீர்நிலையுள்) விரும்பி ஆடல் நிகழ்த்திய ஆடவரும் மகளிரும, பிரிந்தார்-(அந்நீர்நிலையைவிட்டுப்) பிரிந்துசென்றார்கள்; (அதனால்), அந்த வீங்கு நீர்-மிகுந்த நீரைக் கொண்ட அந்நீர்நிலை, தாவு தண்மதிதன்னொடுஉம் - தவழ்ந்து செல்லுகின்ற குளிர்ந்த சந்திரனுடனே, தாரகை-நட்சத்திரங்களும், ஓவு-நீங்கப்பெற்ற, வானம்உம் - ஆகாயத்தையும், உள் நிறை தாமரை பூ எலாம்-உள்ளே நிறைய மலர்ந்திருந்த தாமரை மலர்கள் யாவும், குடிபோனதுஉம்-நீங்கப்பெற்றதையும், போன்றது—;

தன்னிடத்து நீராடவந்த மகளிரும் ஆடவரும் தன்னைவிட்டு நீங்கியதால் அந்நீர்நிலை வறிதாகத் தோன்றிற்றென்று கீழ்ச்செய்யுளிற்கூறிய கவி, இங்கு அதனை உவமானமுகத்தால் விளக்கினர்; புனலாடவந்த ஆடவராலும் மகளிராலும் அலங்காரம் பெற்றிருந்த நீர்நிலை அவர்களை நீங்கியதனால், சந்திர நட்சத்திரங்களை நீங்கிய வானத்தையும், தாமரை மலர்களை நீங்கிய நீர்நிலையையும்போல வெறிதாகத் தோன்றியதென்பதாம். பி-ம்:—[1] பிரிந்தார்க்கு. [2] தாவினுண்மதி, தாவினமணி. [3] போனவும். [4] போன்றவே. (1043)

32.—சூரியாத்தமன வருணனை.

[1] மானி னோக்கியர் [2] மைந்தரொ டாடிய
ஆன நீர்விளை யாடலை நோக்கினன்
தானு மன்னது காதலித் தானென
மீன வேலையை வெய்யவ னெய்தினன்.

(இ-ள்.) மானின் நோக்கியர்-மான்போன்ற கண்பார்வையையுடைய மகளிர், மைந்தரொடு-ஆடவரோடு, ஆடிய-நிகழ்த்திய, ஆன-தக்க, நீர் விளையாடலை-புனல்விளையாட்டை, நோக்கினன்-கண்டுகொண்டிருந்தவனாகிய, வெய்யவன்-உஷ்ணகிரணனான சூரியன்,—தான்உம—, அன்னது-அவ்வாறு நீர்விளையாடலை, காதலித்தான் என-விரும்பினன் என்று தோன்றும்படி, மீனம் வேலையை-மீன்கள் நிரம்பியுள்ள கடலை, எய்தினன்-அடைந்தான்; (எ-று.)

மைந்தரும் மகளிரும் புனல்விளையாடியது கண்டிருந்த சூரியன் தானும் புனல் விளையாட விரும்பினன்போலக் கடலைச் சார்ந்தன னென்பதாம். சூரியன் அஸ்தமிக்குமாறு மேல்கடலினிடம் அடைந்தது குறித்து, கவி, இங்ஙனம் வருணித்தார்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1] மானினோக்கியோர். [2] மைந்தனொடு. (1044)

33—சந்திரோதய வருணனை.

ஆற்ற லின்மையி [1]னலழிந் தேயுந்தம்
வேற்று மன்னர்த மேல்வரும் வேந்தர்போல்
[2]ஏற்று மாதர் [3]முகங்களொ டெங்கணுந்
தோற்ற சந்திரன் மீளவுந் தோற்றினன்.

(இ - ள்.) ஆற்றல் இன்மையினல்-(தமக்கு எதிரரசை வெல்வதற்கு ஏற்ற) வலிமை யில்லாமையினல், அழிந்துஏஉம்-(தாம்) தோற்றுப் போயிருந்தும், தம் வேற்று மன்னர்தம மேல்-தமது மாற்றரசர்மீது, வரும்-(மீண்டும் போர்புரியும்படி) வருகின்ற, வேந்தர் போல்-அரசர்போலவே,—எங்கண் உம்-எல்லாவிடத்தும், மாதர் முகங்களொடு ஏற்று-மாதரார் முகத்தோடு எதிர்த்து நின்று, (அவற்றிற்குமுன்னே நிற்கமாட்டாமல்), தோற்ற-தோற்று மறைந்து போன, சந்திரன்—, மீளஉம—, தோற்றினன்-(அம்முகங்களோடு எதிர்க்குமாறு) உதயமானன்; (எ - று.)

சந்திரன் முன்னள் அஸ்தமித்ததற்குக் காரணம்-மடவார் முகங்கட்குத் தோற்றமையே யென்றும், இன்று மீண்டும் உதித்ததற்குக் காரணம் - அம்மடவார் முகங்களை யெதிர்ப்போமென்ற எணணமென்றும் கற்பித்துக் கூறியது - ஏதுத்தற்குறிப்பேற்றவணியாம்; இவ்வணிக்கு 'ஆற்றலின்மையினல் அழிந்தும் தமவேற்று மன்னர் மேல்வரும் வேந்தர்போல்' என்ற உவமையணி அங்கமாக வந்தது. பி - ம்:—[1] ஆழிவந்தேயுமவ். [2]ஏற்ற. [3]முகங்கள்கண்டு.

புனல்விளையாட்டுப்படலம் முற்றிற்று.

17.—ஆவது உண்டாட்டுப்படலம்.

தசரதனுடன் சென்ற சேனைகள் கள்ளுண்டு மகிழ்ந்து இன்பமனுபவித்ததைத் தெரிவிக்கும் பாகமென்பது பொருள். மாலைப் படலம் என்று சிலபிரதி.

வேறு.

1.—முதல் நான்குகவிகள்—நிலாப் பரத்தலின் வருணனை.

வெண் [1]ணிற நறைநிறை வெள்ள மென்னவும்
[2]பண்ணிறஞ் [3]செறிந்திடைப் பரந்த தென்னவும்
உண்ணிறை காமமிக் கொழுகிற் றென்னவும்
[4]தண்ணிறை நெடுநிலாத் தழைத்த தெங்குமே.

(இ - ள்.) வெள் நிறம் நறை நிறை வெள்ளம் என்னஉம்-வெண்மையான நிறத்தையுடைய கள்ளின் நிறைந்த வெள்ளம் போலவும், பண் நிறம் செறிந்து இடை பரந்தது என்னஉம்-இசையானது உருவத்தைப் பெற்று உலகத்திற் பரவியது போலவும், உள் நிறை காமம் மிக்கு ஒழுகிற்று என்னஉம் - (எல்லாப்பிராணிகளிடத்தும்) உட்புறத்துநிரம்பியுள்ள காமம்(உள்ளே அடக்கமுடி

யாதபடி) அதிகப்பட்டு வெளியிலே ஒழுகினாற்போலவும், தண் நிறை நெடு நிலா - குளிர்ச்சிநிறைந்த பெருநிலவானது, எங்கும்- எல்லாவிடத்தும், தழைத்தது-செழித்துநிரம்பியது; (எ - று.)

உலகெங்கும் நிலாப்பரவியது - வெண்ணிறமிகுதியாற் கள்ளின் வெள்ளம் பரவியதுபோலுமெனவும், இன்பமிகுதியால் பண் நிறஞ் சிறந்து பரவியதுபோலுமெனவும், ஆண்பெண்கட்குக் காதல் மிகுதலால் காமம்மிக்கொழுகியதுபோலுமெனவும் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. [2]பண்ணிறம் செறிந்த பால் என்ற பாடத் திற்கு-பண்ணின் தன்மை [இனிமை] மிக்குள்ள பால்என்க. பி-ம்:— [1]நிறத்தால், நிறநறு. [3]பொலிந்தபால். [4]தண்ணிறநெடு. (1046)

2. கலந்தவர்க் கினியதோர் கள்ளு மாய்ப்பிரிந்து
[1]உலந்தவர்க் குயிர்[2]சுடு விடமு மாயுடன்
புலந்தவர்க் [3]குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே.

(இ - ள்.) கலந்தவர்க்கு-(ஆண்பெண்களாகச்) சேர்ந்திருப்பவர் கட்கு, இனியது ஓர் கள்உம் ஆய் - (மனத்துக்கு) இனிமையை யுண்டாக்குகின்ற கள்போல மகிழ்ச்சிவிளைப்பதாகியும்,— பிரிந்து உலந்தவர்க்கு - பிரிந்து வருந்துபவர்க்கு, உயிர் சுடு விடம்உம் ஆய்- (உண்டாரது) உயிரை வாட்டுகின்ற நஞ்சு போல்வதாகியும், உடன் புலந்தவர்க்கு - கணவருடனே (ஊடலாற்) பிணங்கினவர்கட்கு, உதவி செய் புதிய தூதுஉம் ஆய்-(புலவியைப்போக்கிக் கூடுமாறு) உதவுகின்ற புதிய தூதுபோல்வதாகியுமுள்ள, நெடு நிலா-மிக்கநில வானது, மதனன் வேண்ட - மன்மதன் வேண்டிக்கொண்டதனால், மலர்ந்தது-(எங்கும்) பரவிற்று; (எ-று.)

கலந்தார்க்குக் காமவேட்கையோடு உற்சாகத்தை விளைத்த லாற் கள்ளையும், பிரிந்தார்க்கு உடலையேயன்றி உயிரையும் வெதுப் பும் வேதனையை விளைத்தலால் விடத்தையும், ஊடல்கொண்ட ஆடவர்மகளிர் என்ற இருவர்திறத்தும் ஒருபடிப்படத் தான் பட்டமாத்திரத்துப் புலவியை நீக்கிக் கூடுமாறு செய்தலால் தூதையும் போன்றது, நிலா: இருவரிடத்தும் ஒக்கநின்று காம வேட்கையைத் தூண்டுகின்ற நிலவின் தன்மை பிணக்கங்கொண் டாரிடத்துச்சென்று இங்கிதமாகப்பேசிக் கூட்டிவைக்குந் தூதுவ ரது தன்மையினும் வேறுபட்டிருத்தலால், புதியதூது' எனப்பட் டது. மதனனுக்கு உதவுதலால், 'மதனன்வேண்ட' என்றது. நிலவினிடத்துக் கள் முதலிய பொருள்களின் தன்மையை யேற்றிக் கூறியது - பலபடப்புனைவணியாம். பி-ம்:—[1]உலர்ந்தவர்க்கு. [2]தொ டர். [3]உறவு. (1047)

3. ஆறெலாங் கங்கையே யாய வாழி[1]தாம்
[2]கூறுபாற் கடலையே யொத்த குன்றெலாம்
ஈறிலான் [3]கயிலையே [4]யியைந்த வெண்ணினி
[5]வேறியாம் புகல்வது நிலவின் வீக்கமே.

(இ - ள்.) (நிலவு பரவிய தனால்),—ஆறு எலாம்-நதிகள்யாவும், கங்கை ஏ ஆய-கங்காநதியாகவே தோன்றின; ஆழி தாம் - சமுத்திரங்கள்யாவும், கூறு பாற்கடலை ஏ ஒத்த-(சிறப்பித்துச்) சொல்லப் படுகிற பாற்கடலையே போன்றன; குன்று எலாம் - மலைகள்யாவும், ஈறு இலான் கயிலை ஏ இயைந்த-இறுதியில்லாத கடவுளாகிய சிவ பெருமானது திருக்கைலாயமலையையே யொத்தன; நிலவின் வீக்கம்-நிலவின்மிகுதியைக்குறித்து, இனி—, வேறு-வேருக, யாம் புகல்வது என்—? (எ-று.)

வெண்ணிறநிலா மிகவும்பரந்ததனால், வெவ்வேறு நிறமுள்ள யமுனை சரசுவதி முதலிய நதிகள் யாவும் வெண்மைநிறம்பெற்று அவ்வாறுள்ள கங்கைபோலவும், உவர்க்கடல் முதலிய கடல்கள் யாவும் வெண்ணிறப் பாற்கடல் போலவும், மலைகள்யாவும் வெள்ளி மயமான கைலாசமலைபோலவும் வெண்ணிறமாகவிளங்கினவென்க: பிறிதின்குணம்பெறலணி. வெண்ணிறத்தோடு சிவன்முடிமேல் தங்குஞ் சந்திரனது ஒளியாகுஞ் சிறப்பையும் பெற்ற நிலவானது சாதாரணமான நதிகள் கடல்கள் மலைகள் என்ற இவற்றிற்பரந்து, வெண்ணிறத்தை யுண்டாக்கி, சிவபெருமான் முடியில் தங்குங் கங்கையையும், திருமால்வாழுந் திருப்பாற்கடலையும், சிவபெருமான் தங்குங் கைலைமலையையும் போன்று சிறப்புறுமாறு செய்ததென்று இதன் கருத்தை விரித்துரைப்பர். யுகாந்தகாலமளவும் நின்று சங்காரத் தொழிலை நடத்துங் கடவுளாதலால், சிவபிரானை 'ஈறிலான்' என்றார். கயிலையே-ஐயுருபுவிகாரத்தால்தொக்கது. கங்கையே முதலியவற்றில் ஏகாரம்-உயர்வுசிறப்பு. பி-ம்:—[1] தான். [2] ஊறு. [3] கயிலையை. [4] இயைந்தது. [5] வேறுநாம், வேறுநான். *(1048)*

4. எள்ளருந் திசைகளோ டியாரும் யாவையும்
கொள்ளை [1] வெண் ணிலவினாற் கோலங் [2] கோடலால்
வள்ளுறை வயிரவாண் மகர கேதனன்
வெள்ளணி [3] யொத்தது வேலை ஞாலமே.

(இ - ள்.) எள்ள அரு திசைகளோடு-பழிப்பில்லாத திக்குக்களுடனே, (அத்திக்குக்களிலுள்ள), யார்உம் யாவைஉம்-உயர்திணையான மானிடரும் அஃறிணையான மற்றைப்பொருள்களும், கொள்ளை வெள் நிலவினால்-மிகுதியாயுள்ள வெள்ளியநிலாவினாலே, கோலம் கோடலால்-வெண்ணிறத்தைப் பெறுதலால்,—வேலை ஞாலம்-கடலாற்சூழப்பட்ட இந்நிலவுலகம்,—வள் உறை வயிரம் வாள் மகர கேதனன் - தோலுறையிலேயிடப்படுகின்ற உறுதியாகிய வாளையுடைய மீனக்கொடியோனாகிய மன்மதனுடைய, வெள் அணி-பிறந்தநாளிலொப்பனையை(ப் பூண்டுள்ளதை), ஒத்தது—; (எ-று.)

உலகமுழுதுமுள்ள எல்லாப்பொருளின்மீதும் நிலாப்பெருக யாவும் வெண்மையாகத் தோன்றுவதனால், இந்தஞாலமே மன்மதன அப்போது தோன்றியதன் நிமித்தம், வெள்ளணியை யணிந்ததுபோலு மெனக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. பிறந்தநாளைக் கொண்டாடுகையில் வெள்ளணியணிதல் மரபு ஆதலையும், அவ்விராக்காலம் மன்மதன்தோன்றுதற்கு இடனாதலையும் அறிக.

இரவிலே, உலகத்துள்ள யாவரும் காமனாணைக்கு உட்பட்டு ஒழுகுவராயினரென்பது, இங்குத் தொனிக்கும். மகரகேதனன்-சுறாமீனைக் கொடியிற்கொண்டவன். பி - ம்:—[1]கொள். [2]கொண்டவால். [3]ஒத்ததவ். (1049)

5.—மகளிர் முத்துப்பந்தர் முதலிய இடத்துச் சேர்தல்.

தயங்கு [1]தா ரகைபுரை தரள [2]நீழலும்
இயங்கு [3]கார் மிடைந்த [4]கா வெழினிச் சூழலும்
கயங்கள்போன் றொளிர்பளிங் [5]கடுத்த கானமும்
[6]வயங்குபூம் பந்தரு மகளி ரெய்தினார்.

(இ - ள்.) தயங்கு தாரகை புரை தரளம் நீழல்உம்-விளங்குகின்ற நட்சத்திரங்களை யொத்த முத்துக்களினாலியன்ற பந்தர்களின் நிழலிலும், இயங்கு கார் மிடைந்த கா எழினி சூழல்உம்-(வானத்திற்) சஞ்சரிக்கின்ற மேகம் நெருங்கித் தங்குகின்ற சோலைகளாகிய இடுதிரைகளையுடைய இடங்களிலும், கயங்கள் போன்று ஒளிர் பளிங்கு அடுத்த கானம்உம்-கசங்களின் தெளிவான நீரைப்போல விளங்குகின்ற பளிக்கறைகள் பொருந்திய தோட்டங்களிலும், வயங்கு பூ பந்தர்உம்-விளங்குகின்ற மலர்ப்பந்தல்களிலும், மகளிர்—, எய்தினார் - போய்ச்சேர்ந்தார்கள; (எ - று.)

சோலைகள் தழைத்துப் பரந்திருத்தலால், அந்தக்காவை 'எழினிச்சூழல்' என்றார்; இனி, காவிலுள்ள எழினிச்சூழ லென்பாருமுளர். எழினிச்சூழல்-எழினிசூழ்ந்திருக்கப்பெற்ற இடம்: எழினி-கூடாரம் என்ப. கயம்-நீருள்ள மடு. பளிங்கை நீருக்கு உவமைகூறுவது, மரபு: "மணி நீர்க்கயம்," "ஈர்ந்து நுண்பளிங்கெனத் தெளிந்த வந்தணீர்" என்பன முதலிய காண்க. கயங்கள்-நீர்க்கு, இலக்கணை. கயங்கள் போன்றொளிர் பளிங்கு - எதிர்நிலையணி. பளிங்கு-பளிக்கறைக்கு, ஆகுபெயர்; பளிக்குப்பாறையுமாம். பி-ம்:- [1]தாமரை. [2]ப்பந்தலும். [3]தூண், கான். [4]தாள், தாழ், கால். [5]எடுத்த. [6]மயங்கு. (1050)

6.—மகளிர் கள்ளைப் பருகத் தொடங்குதல்.

பூக்கம ழோதியர் போது [1]பொங்கிய
சேக்கை[2]யின் விளைசெருச் செருக்குஞ் சிந்தையர்
ஆக்கிய வமிழ்தென [3]வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசு[4]நறை [5]மாந்தன் மேயினார்.

(இ-ள்.) பூ கமழ் ஓதியர்-மலர்கள் நறுமணம்வீசுகின்ற கூந்தலையுடையவரான மகளிர், போது பொங்கிய சேக்கையின்-மலர்கள் மிகுதியாகப் பரப்பப்பெற்ற படுக்கைகளிலே, விளை-தோன்றுகின்ற, செரு - கலவிப்போரிலே, செருக்கும் - களிக்கவேணுமெனகின்ற, சிந்தையர்-மனமுடையவர்களாய்,—ஆக்கிய அமிழ்து என-(திருப்பாற்கடலைக்கடைந்து) உண்டாக்கிய அமிர்தம்போல, அம் பொன் வள்ளத்து வாக்கிய பசு நறை-அழகியபொற்கிண்ணத்து வார்க்கப்பெற்ற புதிய மதுவை, மாந்தல்மேயினார் - பருகத் தொடங்கினார்கள்; (எ- று.)

மகளிர் மலர்ப்படுக்கையிற் கலவிப்போரிற் களிக்குமாறு மது வைப் பருகினா ரென்க. பி-ம்: [1]போக்கிய. [2]இன்பசி. [3]பைம். [4]நறு. [5]மாந்தர். (1051)

7.—இதுவும் அது.

[1]மீனுடை விசும்பினார் விஞ்சை நாட்டவர்
ஊனுடை யுடம்பினா ருருவ மொப்பிலார்
மானுடை நோக்கினார் வாயின் மாந்தினார்
தேனுடை மலரிடைத் தேன்பெய் தென்னவே.

(இ-ள்.) மீன் உடை விசும்பினார்-நட்சத்திரங்களைக்கொண்ட வானுலகத்துமகளிரும், விஞ்சை நாட்டவர்-வித்தியாதரமகளிரும், உருவம் ஒப்பு இலார்-(தமது) உருவத்துக்கு ஒப்பாகப்பெறாதவ ரான, ஊன்உடைஉடம்பினார்-மாமிசத்தினாலியன்ற உடம்புபடைத் தவரான, மான் உடை நோக்கினார்-மான் தோற்றுப்போவதற்குக் காரணமான கண்ணழகுபடைத்த அம்மகளிர்,—தேன் உடை மல ரிடை-வண்டுகள் மொய்க்கின்ற மலர்களினிடையே, தேன் பெய்து என்ன-தேனை வார்த்தாற்போல, வாயில் மாந்தினார்-(தமது) வாயில் மதுவைக்கொண்டு) பருகினார்கள்; (எ-று.)

பிறப்பினாலுயர்ந்த வானவமகளிர் விஞ்சைமகளிர் என்ற இவர் களினும் மதுவைப்பருகும் அம்மானுடமகளிர் அழகுவிஞ்சியவ ரென்பது, முதல்மூன்றடிகளிற்கூறிய பொருள். மகளிர் வாயிற் கொண்ட மது, மலரிற்பெய்த மதுவை யொக்கும். மதுக்கொண்ட மகளிரின் வாய்க்கு உவமையாகவேண்டி, மலருக்கு 'தேனுடை' என்று அடைமொழிகொடுத்தார். பி-ம்:—[1]வானுடை. (1052)

8.—ஒருத்தி மதுவைப்பருகுதலின் வருணனை.

உக்கபால் புரை [1]நிலா வுண்ட வள்ளமும்
[2]கைக்கொளின் னொளிபடச் சிவந்து [3]காட்டத்தன்
மைக்கணுஞ் சிவந்ததோர் மடந்தை வாய்[4]வழிப்
புக்கதே [5]னமிர்தமாய்ப் [6]பொலிந்த போன்றவே.

(இ-ள்.) உக்க பால் புரை நிலா-சிந்தியபாலையொத்த சந்திர கிரணம், உண்ட-படப்பெற்ற, வள்ளம்உம் -(நறவைக்கொண்ட) கிண்ணமும், கை கொள் இன் ஒளி பட -(அந்நறவைப்பருகுவதற் காகஎடுத்தவளுடைய)கை கொண்டுள்ள அழகியசெந்நிறவொளி படுதலால், சிவந்து காட்ட - செந்நிறமாகத்தோன்ற,—ஓர்மடந்தை வாய் வழி புக்க தேன்-ஒப்பற்ற அம்மடந்தையின் வாயிலே கொண்ட மது, அமிர்தம் ஆய் பொலிந்த போன்ற-அமிர்தமாக விளங்குவதை யொத்தது; (அப்போது அதனைப்பருகுதலால்), தன் மை கண் உம்-அம்மங்கையின் மையெழுதப்பெற்ற கண்ணும், சிவந்தது—;

ஒருத்தி மதுவைப்பருகுமாறு கிண்ணத்தைக் கையிற்கொள்ள, அவளது கைகளின் செவ்வொளியால் அந்தக்கள்ளையன்றிக் கள் ளைக்கொண்ட கிண்ணமும் செந்நிறவொளியாய்த்தோன்ற, அந்தக் கள் அம்மடந்தை வாயிற் புக்கபோது முன்னிருந்த செந்நிறம்நீங்கி

இயற்கைவெண்ணிறத்தைப்பெற்றது; அதனைக் கவி தேன் அமிர்தமாய்ப் பொலிந்ததுபோலு மென வருணிக்கின்றார். கையின் செந்நிறவொளியால் மது தேன்போலத்தோன்றி, மீண்டும் வெண்ணிறத்தையடைந்து அமுதத்தையொத்த தென்க; தொல்லுருப்பெறலணி. அங்ஙனமுள்ள கள்ளைப் பருகியதால் கள்ளுக்கு முனனிருந்த செந்நிறம் கண்ணிற் பாய்ந்தாற்போல அம்மங்கையின் கருங்கண்ணுஞ் சிவந்ததென்க. கள்ளுண்டார்க்குக் கண்கள் சிவத்தல், இயல்பு. பி - ம்:—[1] நரு. [2] கைக்கவின், கைக்கொள்வாள். [3] காட்டலால், காட்டித்தன். [4] மொழி. [5] அமிர்தவாய், அமுதவாய். [6] திரிந்த, பொலிந்து.

9.—உண்ட கள் காமத்தை மூட்டுதல்.

தாமமு நானமுந் [1] ததைந்த தண்ணகில்
தூம [2] முண் குழலிய ருண்ட தூநறை
ஓமவெங் குழி [3] யுகு நெய்யி [4] னுள்ளுறை
காமவெங் [5] கனலினைக் கனற்றிக் காட்டிற்றே.

(இ - ள்.) தாமம்உம் நானம்உம் ததைந்த-மாலையும் புழுகுநெய்யும் நிரம்பிய, தண்-குளிர்ந்த, அகில் தூமம் உண் குழலியர்-அகிற்புகை யூட்டப்பெற்ற கூந்தலையுடையமகளிர், உண்ட - பருகிய, தூ நறை-வெண்ணிறமுள்ள மது,—வெம் குழி உகு ஓமம் நெய்யின் - (கனல் நிரம்பிய) வெப்பத்தைக்கொண்ட குழியிலே சொரிந்த ஓம நெய் (அக்கனலை வளர்ப்பது) போல, உள் உறை வெம் காமம் கனலினை - உள்ளே பொருந்திய கொடிய காமாக்கினியை, கனற்றி காட்டிற்று-மூளச்செய்து வெளிக்காட்டிற்று; (எ - று.)

சொரியும்நெய் ஓமக்குழியிலுள்ள கனலை மூளச்செய்வதுபோல, மகளிர் தம்வாய்ப்பெய்த மது காமத்தை மிகுவித்த தென்க. தீயுள்ள குண்டமென்பார் 'வெங்குழி' என்றார். பி - ம்:—[1] ததைந்த, உளத்த. [2] மெல். [3] புகு, உறு. [4] உள்ளுறும். [4] கனலென. (1054)

வேறு.

10.—ஒருத்தி மதுவில் தோன்றுந் தன்னிழலைத் தோழியெனக் கருதுதல்.

[1] விடனெக்கு நெடிய [2] நோக்கி னமிழ்தொக்கு [3] மின்சொ லார்தம்
மடனொக்கு மடனு முண்டே வாணுத லொருத்தி [4] காணுத்
[5] தடனொக்கு [6] நிழலைப் பொன்செய் தண்ணறுந் தேறல் வள்ளத்து
உடனொக்க [7] வுவந்து நீயு முண்ணுதி தோழி யென்றாள்.

(இ - ள்.) வாள் நுதல் ஒருத்தி - ஒளிபொருந்திய நெற்றியைக் கொண்ட ஒருமடந்தை, தடன் ஒக்கும் நிழலை-பெருமைபொருந்திய (தனது) நிழலை, பொன் செய் தண நறு தேறல் வள்ளத்து காணு-பொன்னாற்செய்யப்பட்ட குளிர்ந்த மணமுள்ள கள்தெளிவையுடைய கிண்ணத்திலே கண்டு, 'தோழி - தோழியே! நீஉம்—, உடன ஒக்க உவந்து உண்ணுதி - எம்முடனே ஒத்திருந்து மகிழ்ந்து (தேறலை) உண்பாய்', எனறாள்-என்றுகூறினாள்; விடன ஒக்கும் நெடிய நோக்

கின் அமிழ்து ஒக்கும் இன் சொலார் தம்-விடத்தையொத்த [மரண வேதனையையுண்டாக்குகின்ற] நீண்ட கண்களையும் அமிழ்தத்தை யொத்து இனியனவாகவுள்ள சொற்களையுமுடைய மடந்தைமாரின், மடன் ஒக்கும் மடன்உம் - அறியாமையையொத்த அறியாமையும், உண்டுஏ-எங்கேனும் உள்ளதோ? (எ - று.)

மதுவினுள்ளேதோன்றும் அழகிய தன்னிழலை வேறொருத்தி அங்கு இருப்பதாக மயங்கி 'தோழி! நீயும் எம்முடன் ஒத்துக் களித் துண்க' என்றதனால், இம்மடவார்க்குஉள்ள மடமை எங்கும் இரா தென்கிறார். முதலிரண்டடிகளைப் பின்னடிகள் சமர்த்தித்துநின்றது, வேற்றுப்பொருள்வைப்பணி. பி - ம்:—[1] விடநோக்கின். [2] நோக்கு. [3] மென். [4] காணத், தான்றன். [5] சடன், சடம். [6] நிழலும் பொன்செய், நிழல்செய்கின்ற, நிழலைக்கண்டே. [7] நுகர்ந்தபோதே, நுகரநீயே, நுகர்தல்நீயே, நறவைநீயே, வந்தாய்நீயும, உவந்துநீயே. (1055)

11.-மதுவினுள் தன்முகந்தோன்ற மயங்கிய ஒருத்தி கூறல்.

[1] அச்சநுண் மருங்கு லாளோ [2] ரணங்கனு ளளக பந்தி
நச்சுவேற் கருங்கட் செவ்வாய் [3] நகைமுக [4] மதுவுட் டோன்றப்
பிச்சிநீ யென்செய் தாயிப் பெருநற விருக்க வாளா
எச்சிலை நுகர்தி யோவென் றெயிற்றரும் பிலங்க நக்காள்.

(இ - ள்.) அச்சம் நுண் மருங்குலாள்-(கண்டவர் இதுமுறிந்து போமோஎன்று) அஞ்சுவதற்குக் காரணமாகி [மிகநுண்ணியதாகி] யுள்ள இடையைக்கொண்டவளான,—ஓர் அணங்கு அனாள்-தெய் வப்பெண் போன்ற ஒருத்தி, அளகம் பநதி நஞ்சு வேல் கருங் கண் செவ் வாய் நகை முகம்-கூந்தலின் தொகுதியையும் விஷம்பூசிய வேற்படைபோன்ற கரியகண்களையும் செந்நிறவாயையுமுடைய சிரிப் போடுகூடிய(தன்) முகம், மதுவுள் தோன்ற - கள்ளினுள்ளே பிரதி பலிக்க, (வேறொருபெண் தான் பருகும்நறவைப்பருகுவதாகமயங்கி), (அந்தப் பிரதிபிம்பத்தைப்பார்த்து),—'பிச்சி-பித்தமபிடித்தவளே! நீ என் செய்தாய்-நீ என்ன காரியம் செய்தாய்? இ பெரு நறவு இருக்க- இதோ சாடியிலே மிகுதியாகக் கள்ளிருக்க, (அதனையெடுத் துப் பருகாமல்), வாளா-பயனில்லாமல் [நிரம்பப்பருக முடியாத வாறு], எச்சிலை நுகர்திஓ-(எனது)எச்சிலான இந்தக்கள்ளைப் பருகக் கடவாயோ?' என்று—, எயிறு அரும்பு இலங்க-பற்களாகிய முல்லை யரும்புகள் வெளித்தோன்றிவிளங்க, நக்காள்-சிரித்தாள்; (எ-று.)- நீ என் செய்தாய்-நீ செய்தகாரியம் தகுதியற்றதெனறபடி. பி-ம்:— [1] அச்சு. [2] அணங்கனார். [3] நளிர்முகம், தாமரை. [4] நறவுட், நடுவுட்.

12 —கிண்ணத்தில் நிலாவீச, நறவு நிறைந்திருப்பதாகக் கருதி ஒருத்தி பருகுமாறு வாய்வைத்துப் பின் நாணுதல்.

புறமெலா நகைசெய் தேசப் பொருவரு மேனி வேரோர்
மறமுலாங் கொலைவேற் கண்ணுண் மணியின்வள் ளததுவெள்
[1] நிறநிலாக் [2] கற்றை பாய [3] நிறைந்தது போன்று தோன்ற [ளை
[4] நறவென வதனை வாயின் [5] வைத்தன [6] ணுணுட் கொண்டாள்.

(இ - ள்.) பொரு அரு மேனி-ஒப்பற்ற உடம்பையும், வேறு ஓர் மறம் உலாம் கொலை வேல் கண்ணாள்-(எங்கும் இதுவரையுங் கண்டிராத) வேறொருவகையான [புதிய] கொடுமையுலாவுகின்றன வாய்க் கொலைத்தொழிலைச் செய்யும் வேற்படைபோன்றனவான கண்களையுமுடைய ஒருத்தி, மணியின் வள்ளத்து-(கள்ளையெடுத்துப்பருகுமாறு கையிற்கொண்ட) இரத்தினமயமான கிண்ணத்திலே, வெள்ளை நிறம் நிலா கற்றை பாய-வெண்ணிறமுள்ள நிலாத் தொகுதி பாய்வதனால், நிறைந்தது போன்று தோன்ற-(அந்த மணிக்கிண்ணம் மதுவினால்) நிறையப்பெற்றதுபோன்று காணப்பட, நறவு என-(மணிக்கிண்ணத்துவீழ்ந்த நிலவை) மதுவெனக் கருதி, புறம் எலாம் நகை செய்து ஏச-பக்கத்திலுள்ளவரெல்லாம் சிரித்துப் பரிகாசஞ்செய்யும்படி, அதனை வாயின் வைத்தனள்-(மதுவைப் பருகும்பொருட்டு) அந்தமணிக்கிண்ணத்தை(த் தன்) வாயிலே வைத்துக்கொண்டு, (மதுவானது சுவைக்குமாறுவாயிலே விழாமையால்),உள் நாண் கொண்டாள்-தன்னுள்ளே நாண மடைந்தாள்; (எ-று.)

வாயில் மதுவிழாமையாலும் பிறர்சிரித்து ஏசுவதனாலும் தான் ஏமாறியதற்கு நாணமடைந்தன ளென்க. பி-ம்:—[1]நிறம். [2]கதிர்கள். [3]நிறைந்தன. [4]நறையிலாததனை. [5]வைத்தனன். [6]நாணுக். (1057)

13.—ஒருத்தி பிரதிபிம்பித்த தன்கண்ணை வண்டென ஓச்சுதல்.

யாழ்க்கு[1]மின் [2]குழற்கு மின்ப [3]மளித்தன விவையா மென்னக்
கேட்கு[4]மென் [5]மழலைச் [6]சொல்லோர் கிஞ்சுகங் கிடந்த வாயாள்
தாட்கருங் குவளை [7]தோய்ந்த [8]தண்ணறைச் சாடி யுட்டன்
வாட்கணி னிழலைக் கண்டாள் வண்டென வோச்சு கின்றாள்.

(இ - ள்.) 'யாழ்க்குஉம்-வீணையினிசைக்கும், இன் குழற்குஉம்-இனியவேய்ங்குழலிசைக்கும், இன்பம்-(கேட்டற்கு) இனிமையாயிருத்தலை, இவை - இம்மழலைச்சொற்கள், அளித்தன-தந்தன,' என்ன-என்று சொல்லுமாறு, கேட்கும்-(இனியதாக) ஒலிக்கின்ற, மெல் மழலை சொல்-மெல்லிய மழலைச் சொற்களையுடைய, ஓர் கிஞ்சுகம் கிடந்த வாயாள்-முருக்கமலர்போன்ற வாயையுடையவளாகிய ஒருத்தி,—தாள் கருங் குவளை தோய்ந்த தண் நறை சாடியுள்-நாளத்தையுடைய கருங்குவளைமலர் இடப்பட்டுள்ள குளிர்ந்த கள்ளைப் பெய்துள்ள சாடியில், தன் வாள் கணின நிழலை கண்டாள்-தன்னுடைய வாட்படைபோன்ற கண்ணின் நிழலைப்பார்த்து, வண்டுஎன - (அதனை) வண்டென்று மயங்கி, ஓச்சுகின்றாள்-ஓட்டலானாள்; (எ - று.)

கட்சாடியுள் மணத்திற்காகத் தாமரை குவளைபோன்ற மலர்களையிட்டு வைத்தல், வழக்கமென்பர். அங்ஙனமே நறுச்சாடியுளிடப்பட்ட குவளைமலர்மீது தன் கண்ணினிழல் பாய, நறுச்சாடியிலிட்ட குவளையில் வண்டு மொய்ப்பதாக மயங்கி, ஒருத்தி ஓச்சத்

தொடங்கின ளென்பதாம்; மயக்கவணி. யாழ் வேய்ங்குழல் என்ற இசைக்கருவிகளோடு தன் குரலைச் சேர்த்துப் பாடுகையில் அவை மிகவும் இனியனவாகத் தோன்றுதலால், 'யாழ்க்கும் குழற்கும் மழலை இன்ப மளித்தன' என்றார். மழலை எக்காலத்திற்கும் கூறுப. ஆம்-அசை. பி-ம்:[1] —மெல். [2] குயிற்கும். [3] அருளின. [4] நன், இன். [5] குதலைச். [6] சொல்லாள். [7] தோற்கத். [8] தண்ணறச். (1058)

14.—ஒருத்தி கள்ளினுள்ளே தோன்றுஞ் சந்திரனுக்கு அறிவுறுத்துதல்.

களித்தகண் [1] மதர்ப்ப வாங்கோர் [2] கனங்குழை [3] கள்ளி னுள்ளால்
வெளிப்படு கின்ற காட்சி வெண்மதி நிழலை நோக்கி
அளித்தன னபயம் வானத் தரவினை யஞ்சி [4] நீவந்து
ஒளித்தனை [5] யஞ்ச லென்றுங் [6] கினியன [7] வுணர்த்து கின்றாள்.

(இ - ள்.) ஆங்கு-அவ்விடத்து, ஓர் கனங்குழை-பொன்னினாலியன்ற குழையென்னுங் காதணியையணிந்த ஒரு பெண், கள்ளின் உள்ளால்-கள்ளினுள்ளே, வெளிப்படுகின்ற-பிரதிபிம்பமாகத் தோன்றுகின்ற, காட்சி வெண்மதி-அழகையுடைய வெண்மைநிறமுள்ள சந்திரனது, நிழலை-பிரதிபிம்பத்தை, களித்த கண் மதர்ப்ப நோக்கி-மதக்களிப்புத்தோன்றுகின்றகண்கள் களிக்கும்படிபார்த்து, '(சந்திரனே!) நீ—, வானத்து அரவினை அஞ்சி-வானத்திலுள்ள இராகு என்னும் பாம்புக்குப் பயப்பட்டு, வந்து ஒளித்தனை-(இந்த மதுக்குள்ளே) வந்து ஒளித்திருக்கின்றாய்; (ஆகையால் யான் உனக்கு), அபயம் அளித்தனன்-அபயம் கொடுத்தேன்; அஞ்சல்-பயப்படாதே,' என்று, என்றுசொல்லி, இனியன-இனியசிலசொற்களை, உணர்த்துகின்றாள்-அறிவுறுத்துபவளானாள்; (எ - று.)

ஒருத்தி கள்ளுண்ட மயக்கத்தாற்சாடியிலுள்ள கள்ளினுள்ளே பிரதிபிம்பமாகத் தோன்றுஞ் சந்திரனை உண்மைச்சந்திரனே இராகுவுக்கு அஞ்சி அங்குஒளிந்திருப்பதாகக் கொண்டு அபயமளித்துச் சில உணர்த்தலானா ளென்க. உணர்த்துகின்றாளென்ற சொல்லி னாற்றலால், 'பிறருக்கு இன்னாதவற்றை ஒருவன் முற்பகலிற்செய்தால் அவ்வின்னாப்பயன் பிற்பகலில் தானே தீப்பயனை விளைக்கு மென்பதையும், இன்னா செய்யப்பட்டவரிடத்துச் சென்று குறையிரக்குங்காலமும் நேர்தல் கூடு மென்பதையும் உணராமல், யான் கணவனைப் பிரிந்த காலத்திலும் ஊடிய காலத்திலும் நீ வெவ்விய நிலாவை என்மீது வீசி வருத்தினாயன்றோ! அங்ஙனஞ்செய்த நீ வானத்து அரவுக்கு அஞ்சி எனதுமதுச்சாடியுள்ளே பதுங்குங் காலமும் வந்ததல்லவா? இனியாவது நீ முனபோற் செய்யாது நல்லொழுக்கத்தை மேற்கொள்க' என்று அறிவுறுத்தினாள் என்ற கருத்துத் தோன்றுமென்பர். ஆங்கு-அசை: இனி, என்ற ஆங்கு எனப்பிரித்து, என்ற ஆங்கு இனியன-என்றாற்போல் இனியசொற்களை யெனினுமாம். உள்ளால்-உட்புறத்தில்: உருபு மயக்கம். பி-ம்:- [1] மதப்ப. [2] கணங்குழை. [3] கண்ணினுள்ளாள், கன்னிவள்ளம். [4] வந்திங்கு. [5] நடுங்கல், ஆங்கொல். [6] இனையன. [7] உரைத்துநின்றாள்,

உரைக்கலுற்றாள், விளம்பலுற்றாள். இதன்பின் "கண்மணி" (17) (18) (19) (20) ஆம்பாடல்களும், பிறகு "அழிகின்ற" (15) "மின்னென" (16) என்ற பாடல்களும் சிலபிரதிகளில் உள்ளன. ()

15.—ஒருத்தி நிலவை மதுவென்று மயங்கிக் கிண்ணத்தில் ஏற்க முயலுதல்.

அழிகின்ற வறிவி னாலோ பேதைமை யாலோ [1]வாற்றிற்
சுழி[2]யொன்றி நின்ற தன்ன வுந்தியா [3]ளொருத்தி [4]செந்தேன்
பொழிகின்ற [5]பூவின் வேய்ந்த பந்தரைப் [6]புரைத்துக் கீழ்வந்து
[7]இழிகின்ற கொழுநி லாவை நறவென வள்ளத் தேற்றாள்.

(இ - ள்.) ஆற்றில் சுழி ஒன்றி நின்றது அன்ன-யாற்றுநீரில் தோன்றுகிற நீர்ச்சுழியானது ஓரிடத்தில் நிலைத்துநிற்பதை யொத்த, உந்தியாள்ஒருத்தி-நாபியையுடைய ஒருத்தி,—செந்தேன் பொழிகின்ற பூவின் வேய்ந்த பந்தரை புரைத்து கீழ் வந்து இழிகின்ற கொழு நிலாவை-செந்நிறத்தேனைப் பொழிகின்ற மலர்களால் வேயப்பெற்ற பந்தலைத் துளைத்துக்கொண்டு கீழே வந்து இறங்குகின்ற செழிப்புள்ள நிலாவை, அழிகின்ற அறிவினால் ஓ-(மது வுண்ட மயக்கத்தால்) கேடு அடைகின்ற அறிவைப் படைத்த காரணத்தினாலோ, பேதைமையால்ஓ-மடவார்க்குரிய பேதைமைக் குணத்தினாலோ, நறவு என-மதுவென்று மயங்கி, வள்ளத்து ஏற்றாள்-கிண்ணத்திலேற்கப்பார்த்தாள்; (எ - று.)

ஒருத்தி மலர்ப்பந்தலின்வழியாகக் கீழே வந்து இழிகின்ற நிலவை மதுவென்றுமயங்கிக் கிண்ணத்திலேற்கப் பார்த்தன ளென்க: மயக்கவணி. அங்ஙனம் அவள்மயங்கியதற்குக் காரணம்-மதுவுண்ட மயக்கமோ அல்லது மடவார்க்குரிய இயற்கைப்பேதைமைக்குணமோ எனக் கவி காரணம்கற்பிக்கின்றனர். அறிவினாலோ பேதைமையாலோ-அறிவினாலும் பேதைமையாலும் என ஓகாரங்கள் எண்ணுப்பொருளன என்பாருமுளர். சிலபிரதிகளில்'சுழிநின்ற [அல்லது] சுழிக்கின்ற தன்னவுந்தித் தோகையங்கொருத்தி செந்தேன்' என்று இரண்டாவது அடி. பி-ம்:—[1] ஆற்றுச். [2] ஒன்ற. [3] தூய. [4] சோர். [5] மலரின். [6] புதைத்துக், கிழித்துக். [7] இழைகின்ற... நிலாவை, அழிகின்ற நிலாவைநான்ற. (1060)

16.—ஒருத்தி மதுவுண்டமயக்கத்தாற் சொல்லுஞ் செயலுந் தடுமாறல்.

மின்னென நுடங்கு கின்ற மருங்குலா ளொருத்தி [1]வெள்ளை
இன்னமிழ் தனைய [2]வின்சொ [3]லிடைத்தடு மாறி [4]யென்னே
வன்னமே கலையை [5]நீக்கி மலர்த்தொடை யல்குல் சூழ்ந்தாள்
பொன்னரி [6]யாடை கொண்டு புரிகுழல் புனைய லுற்றாள்.

(இ - ள்.) மின் என நுடங்குகின்ற மருங்குலாள் ஒருத்தி-மின்னல்போல அசைகின்ற இடையையுடைய ஒருபெண்,—வெள்ளை இன் அமிழ்து அனைய இன் சொல் இடை தடுமாறி-வெண்மைநிறமுள்ள இனிய அமிர்தத்தையொத்த இனிய பேச்சு (பேசத்தொடங்

இக் கள்ளுண்ட மயக்கத்தால்) இடையில் குழறப்பெற்று, அல்குல் வன்னம் மேகலையை நீக்கி மலர் தொடை சூழ்ந்தாள்-(தனது) இடையில் (அணிந்திருந்த) அழகிய மேகலையென்னும் அணியைக் களைந்து விட்டு (அந்த இடத்தில்) மலர்கொண்டு தொடுக்கப்பெற்ற மலர் மாலையைச் சூழஇட்டாள்; (அன்றியும்), பொன் அரி ஆடைகொண்டு புரிகுழல் புனையல் உற்றாள்-பொன்னையரித்து நெய்துள்ள பொற் பட்டாடை கொண்டு நெறிப்புள்ள கூந்தலை அலங்கரிக்கத் தொடங்கினாள், என்னே—! (எ - று.)

ஒருத்தி பேசத்தொடங்கி மதுவுண்டமயக்கத்தால் இடையில் அப்பேச்சுக் குழறிப்போகப் பெற்றதுமல்லாமல், அணியவேண்டிய வற்றையும் இடம்மாறி அணியலாயின ளென்க. அல்குல்-இடை. பி-ம்:—[1] மெல்ல. [2] தீஞ், தன். [3] உரை. [4] ஏய்ந்த, இன்ப, அந்த. [5] நோக்கி. [6] மாலை. (1061)

17.—ஒருத்தி கள்ளில்தோன்றும் தன்முகத்தைச் சந்திரனென மயங்கல்.

கண்மணி வள்ளத் துள்ளே களிக்குந்தன் முகத்தை நோக்கி
[1] விண்மதி [2] மதுவி னாசை [3] வீழ்ந்ததென் றொருத்தி யுன்னி
உண்மகிழ் [4] துணைவ னோடு [5] ஊடுநாள் [6] வெம்மை [7] நீங்கித்
தண்மதி [8] யாதி யாகி றருவ[9] னிந் நறவை யென்றாள்.

(இ - ள்.) ஒருத்தி—, கள் மணி வள்ளத்து உள்ளே - கள்ளை யுடைய மணிகளையிழைத்துச் செய்யப்பட்ட கிண்ணத்துள்ளே, களிக்கும் தன்முகத்தைநோக்கி-மதர்த்துள்ள தன்முகம் (பிரதிபிம் பத்தைக்) கண்டு, விண் மதி மதுவின் ஆசை வீழ்ந்தது என்று உன்னி-வானத்துத்தோன்றுகின்ற சந்திரன் மதுவிலுள்ள ஆசை யினால் (கள்ளினுள்வந்து) கிடப்பதாகநினைத்து, (அச்சந்திரனை நோக்கி), 'உள் மகிழ் துணைவனோடுஉம் ஊடும் நாள் வெம்மை நீங்கி-மனம் மகிழ்தற்குக காரணமான கணவனோடு (நான்) ஊடல் கொள்ளும் காலத்து (உனது இயற்கைத்தன்மைக்குமாறாக) வெம் மையாக ஆகுந்தன்மையைநீங்கி, தண் மதி ஆதி-தட்பத்தை யுடைய சந்திரனுவாய், ஆகில்-அங்ஙன் இருப்பதாயிருந்தால், இ நறவை தருவன-இந்த மதுவை(ப் பருகும்படி நான் உனக்கு)த் தருவேன்,' என்றாள்—; (எ-று.)

மணிக்கிண்ணத்து மதுவினுள் தோன்றுந் தன்முகத்தை மது வினிடத்து விருப்பத்தாற் கிடக்குஞ் சந்திரன் என மயங்கி, ஊடல் நிலையில் தண்மதியாயிருப்பதாக உறுதிதந்தால் யான் இந்நறவைப் பருகவிடுவேனென்றாள். பிரதிபிம்பித்த தன்முகத்தைச் சந்திரனாக மயங்கியதை "குழைமுக மிடவயிற் கோட்டியேந்திய, அழல்நிறத் தேறலுண்மது கண்டு" என்று வருமிடத்துங் காண்க. பி-ம்:—[1] வண். [2] நறவின். [3] விளைந்தது, விழைந்தது. [4] கணவனோடும், துணைவரோடும். [5] ஊடினால். [6] எம்மை. [7] நோக்கி, நீக்கி. [8] ஆகில்யானும். [9] இன். (1062)

18.—ஒருத்தி வெறுங்கிண்ணத்தை வாயிதழில்வைத்துக் கொள்ளல்.

எள்ளொத்த கோல மூக்கி னேந்திழை யொருத்தி [1]முன்கை
தள்ளத்தண் ணறவை யெல்லாந் தவிசிடை யுகுத்துந் தேருள்
உள்ளத்தின் மயக்கந் தன்னா [2]லுட்புறத் துண்டென் [3]றெண்ணி
வள்ளத்தை [4]மறித்து [5]வாங்கி மணிநிற விதழின் வைத்தாள்.

(இ - ள்.) எள் ஒத்த கோலம் மூக்கின் ஏந்து இழை ஒருத்தி - எள்ளுப் பூப்போன்ற அழகியநாசியையுடைய அணிகலமபூண்ட ஒருத்தி,—முன் கை தள்ள தண் நறவை எல்லாம் தவிசு இடை உகுத்துஉம் தேருள் - முன்னங்கை நடுங்குவதனால் குளிர்ந்த மதுவையெல்லாம் (தன்) ஆசனத்திற் சிந்திவிட்டும் உணராதவளாய்,—உள்ளத்தில் மயக்கம்தன்னால் - மனத்திலுள்ள (மதுவுண்ட) மயக்கத்தினால், உள் புறத்து உண்டு என்று எண்ணி - (கிண்ணத்தின்) உட்புறத்திலே (மது) இருக்கின்றதென்று கருதி, வள்ளத்தை மறித்து வாங்கி - மதுக்கிண்ணத்தை மீண்டும் கையிற் கொண்டு, மணி நிறம் இதழின் வைத்தாள் - (அம்மதுவைப்பருகுமாறு அக்கிண்ணத்தைப்) பதுமராகமணி போன்ற செந்நிறமுள்ள அதரத்தில் வைத்துக்கொண்டாள்; (எ - று.)

கள்ளுண்டதனால் முன்னங்கை நடுங்கிற்று. [3]உப்புறத்து என்றபாடத்துக்கு, உ புறத்து உண்டென்றெண்ணி - (கிண்ணத்தின்) மேற்புறத்திலே மதுவுள்ளதென்று கருதி, வள்ளத்தை மறித்துவாங்கி - கிண்ணத்தைக் கீழ்மேலாகக்கொண்டு என்க.
பி-ம்:—[1]பூங். [2]உடற். [3]உன்னி. [4]மறித்தும். [5]நோக்கி. *(1063)*

19.—வண்டுகட்கு அஞ்சி ஒருத்தி மலரின்நாளத்தால் மதுப்பருகுதல்.

வான்[1]றுணைப் [2]பிரித லாற்று வண்டினம் வச்சை மாக்கள்
[3]ஏன்றமா நிதியம் வேட்ட விரவல ரென்ன [4]வார்ப்பத்
தேன்றரு கமலச் செவ்வாய் திறந்தன ணுகர நாணி
ஊன்றிய [5]கழுநீர் நாளத் தாளினு லொருத்தி யுண்டாள்.

(இ - ள்.) பிரிதல் ஆற்று வான் துணை வண்டு இனம் - பிரியமாட்டாமல் ஆகாயமளவும் மொய்த்துக்கொண்டுள்ள வண்டுகளின் கூட்டம்,—வச்சை மாக்கள் ஏன்ற மா நிதியம் வேட்ட இரவலர் என்ன - உலோபிகளிடத்துப் பொருந்திய பெருஞ் செல்வத்தை (ப் பெறும்பொருட்டு) விரும்பிவந்துள்ள யாசகர்கள்போல, ஆர்ப்ப - ஆரவாரித்துநிற்க,—ஒருத்தி—, தேன் தரு கமலம் செவ்வாய் திறந்தனள் நுகர நாணி - தேனைச் சொரிகின்ற தாமரைமலர் போன்ற (தனது) செந்நிறவாயைத் திறந்து மதுவைப் பருகுவதற்குக் கூசி, ஊன்றிய கழுநீர் நாளம் தாளினால் - கிண்ணத்திலூன்றவைத்த செங்கழுநீரின் உள்துளையுள்ள தண்டினால், உண்டாள்- பருகலானாள்; (எ- று.)

வண்டு மொய்ப்பதனால் வாயைத்திறந்து பருகினால் வண்டுகள் அங்கும் வந்து மொய்த்து ஆர்க்கக்கூடுமென்று கூசிச் செங்கழு

நீர்த்தண்டினுற் பருகலானு ளென்க. பி - ம்:—[1] தனே. [2] பிரியல். [3] ஏன்றவர், ஆன்றமா. [4] ஆன. [5] கழுநீர்த்தாளநாளத்தால். (1064)

20.—ஒருத்தி கள்ளுண்ண எண்ணுதொழிதல்.

புள்ளுறை கமல வாவிப் பொருகயல் வெருவி யோட
[1] வள்ளுறை [2] கழித்த [3] வாள்போல் [4] வசியுற [5] வயங்கு கண்ணுள்
கள்ளுறை [6] மலர்மென் கூந்தற் களி[7] யிள மஞ்ஞை யன்னுள்
உள்ளுறை [8] யன்ப னுண்ணு [9] னெனநற வுண்ண லெண்ணுள்.

(இ - ள்.) புள் உறை கமலம் வாவி பொரு கயல் வெருவி ஓட- நீர்ப்பறவைகள் வாழகின்ற தாமரைத்தடாகத்திலுள்ள (ஒன்றோ டொன்று) மோதுகின்ற கயல்மீன்கள் (ஒப்பாகாமல் தாம்) நிலை கெட்டு ஓடும்படி, வள் உறை கழித்த வாள் போல் வசிஉற வயங்கு- தோலாற்செய்த உறையினின்றும் உருவியெடுத்த வாட்படை போலக் கூர்மைமிக விளங்குகின்ற, கண்ணுள் - கண்களையுடைய வளும், கள் உறை மலர் மெல் கூந்தல் களி இள மஞ்ஞை அனனுள்- தேனை தங்கிய மலரையணிந்த மெல்லிய கூந்தலையுடைய களித்த இளமயிலை ஒப்பவளுமாகிய ஒருத்தி, உள் உறை அன்பன் உண்ணுன் என-(தனது) மனத்தினுள் (எப்போதும்) தங்குகின்ற (தனது) காதலன் (மதுவை) உண்ணுனென்ற காரணத்தினுல், நறவு உண்ணல் எண்ணுள்-(தானும்) மதுப்பருக எண்ணுதவளாயினுள்;

அறிவுமயங்காத ஒருத்தி, கள்ளுண்ணுக்கணவன் தன்மனத்து இருப்பதனுல், அவனுள்ள உள்ளதில் கள்ளுண்ணும் எண்ணத் திற்கும் இடங் கொடுக்காதவளாயின ளென்க: மதுப்பருகாத்தன் மையைக்கொண்ட கணவனையுடைய ஒருத்தி தானும் கணவ னுெழுக்கத்துக்குஏற்ப மதுப்பருகாதவளாயினளென்று கருத்து. இனி, அன்பன் தனது உள்ளத்தில் நீங்காதவனுயிருத்தலாலும் தான் மதுவைப்பருகின் மதுப்பருகும் பழக்கமில்லாத தனது உள் ளத்துள்ள அக்கணவன்மேல் தான் பருகும் அம்மது படுமாதலா லும் அஞ்சி மதுப்பருகாளாயினள் என்று கருத்துக் கொளவாரு முண்டு; 'நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல், அஞ்சுதும் வேபாக் கறிந்து' என்ற குறள் நினைவு கூர்க. உள்ளத்துள்ளகணவ னென்றது - தான் எப்பொழுதும் கணவனைச் சிந்தனையிற் கொண் டிருத்தலால். உண்ணுதல் என்னும்பொதுவினை, பருகுதல் என் னும் சிறப்புப்பொருளைத் தந்தது. பி-ம்:—[1] உள். [2] கழிந்த. [3] வாளில். [4] வசியற, வசியற்று, ஒளியுற்று, வரியுற, வசையற. [5] வழங்குங். [6] நெறி, நறை. [7] பயில். [8] கணவன். [9] என்றுன்னிநறவையுண்ணுள்.

வேறு.

21.—மூன்றுகவிகள்-மதுப்பருகியதாற் கண்சிவத்தல் முதலியன மாதர்க்குத் தோன்றியமை கூறும்.

[1] கூற்றுறழ் நயனங்கள் [2] சிவப்பக் [3] கூனுதல்
[4] ஏற்றிவா ளெயிறுக [5] ளதுக்கி [6] யின்றளிர்
மாற்றருங் கரதல [7] மறிக்கு மாதொரு
சீற்றமா மபிநயந் தெரிக்கின் ருரினே.

(இ - ள்.) ஒருமாது-ஒருத்தி,—சீற்றம் ஆம் அபிநயம்தெரிக்கின்றாரின்-வெகுளிக்கு உரிய அபிநயத்தைக் காட்டுபவர்போல, கூற்று உறழ் நயனங்கள் சிவப்ப-(தமக்கு இலக்கானார்க்கு மரண வேதனையை விளைத்தலால்) யமனை யொத்த கண்கள் செந்நிற மடையவும், கூன் நுதல் ஏற்றி-வளைவு நெற்றியில்தோன்றுமாறு (புருவங்களை நெரித்து) மேலேற்றி, வாள் எயிறுகள் அதுக்கி-ஒளி பொருந்திய பற்களைக் கடித்து, இன் தளிர் மாற்று அருகரதலம்-இனிய தளிரினழகை (த் தமக்குமுன்னே தலையெடுக்க வொட்டாதபடி) போக்குகின்ற அருமையான கைத்தலங்களை, மறிக்கும்-பின் முன்னாகத் திருப்பித் தட்டுவாள்; (எ - று.)

கண்சிவத்தல் முதலியன - கட்குடித்தோர்க்கும் வெகுட்சி கொண்டோர்க்குந் தோன்றுவன. "வெகுண்டோனவிநயம் விளம்புங்காலை, மடித்தவாயு மலர்ந்தமார்பும், துடித்தபுருவமுஞ் சுட்டிய விரலும், கன்றினவுள்ளமொடுகைப்புடைத்திடுதலு, மன்னநோக்கமொ டாய்ந்தனர்கொளலே" என்பது காண்க. பி-ம்:—[1]கூற்றுள. [2]சேப்பக். [3]கூர்நுதல். [4]ஏற்றலால். [5]துளக்கி. [6]ஈன். [7]மறிக்குமால்.

22. துடித்தவான் றுவரிதழ்த் தொண்டை தூநிலாக்
[1]கடித்த[2]வா லெயிறுக [3]ளதுக்கிக் [4]கண்களால்
[5]வடித்தவெங் [6]குருதிவேல் விழிக்கு மாதர்மெய்
[7]பொடித்தவேர் புறத்துகு [8]நறவம் [9]போன்றதே.

(இ - ள்.) துடித்த வான் துவர் இதழ் தொண்டை-துடிக்கின்ற மிக்க சிவப்புள்ள அதரமாகிய கொவ்வைக்கனியை, தூ நிலா கடித்த வால் எயிறுகள் அதுக்கி-வெண்ணிறமுள்ள நிலாவைக் கோபித்த வெள்ளிய பற்களாற் கடித்து, வடித்த வெம் குருதி வேல் கண்களால் விழிக்கும் - கூர்மையாக்கப்பெற்றுக் கொடிய (பகைவரின்) இரத்தந்தோயப்பெற்ற வேற்படைபோல (த் தன்) கண்களினால் விழித்துப்பார்க்கின்ற, மாதர்-ஒரு பெண்ணின், மெய் பொடித்த வேர் - உடம்பில்தோன்றிய வேர்வைநீர், புறத்து உகு நறவம் போன்றது-(உடம்பின்) வெளியே சிந்துகின்ற மதுவை யொத்தது; (எ-று.)

கள்ளுண்டார்க்கு உடல்வேர்த்தலும் உண்டு: அங்ஙனம் ஒருத்திக்கு உடம்புவெயர்த்ததனை, பருகிய மது உள்ளடங்காமல் வெளியே சிந்துகின்றதுபோலு மெனக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. வெகுண்டார்பால் தோன்றுஞ் செயல்கள் கள்ளுண்டாரிடத்தும் தோன்றுமென்பது, கீழ்ச் செய்யுளிலேயே பெறப்பட்டது. கடித்த =கடிந்த; விகாரம். பி - ம்:—[1]கடுத்த. [2]வாளெயிறுகள், வாளரவெயிறு. [3]எறிப்பக். [4]கண்களாம். [5]வடித்தருங், வடிக்கருங். [6]மாதர். [7]பொடித்ததோர். [8]நாணம். [9]போன்றவே. *(1067)*

23. கனித்திர ளிதழ் [1]பொதி செம்மை கண்புக
நினைப்பதொன் றுரைப்பதொன் [2]றுமொர் நேரிழை
தனித்[3]தட மரைமலர் [4]முகத்த [5]சாபமும்
[6]குனித்தது பனித்தது குழவித் திங்களே.

(இ - ள்.) கனி திரள் இதழ் பொதி செம்மை-கொவ்வைக்கனி போன்று திரண்ட அதரங்களில் நிரம்பியுள்ள செந்நிறம், கண் புக-கண்ணிற் சேர, நினைப்பது ஒன்று உரைப்பது ஒன்று ஆம் ஓர் நேர் இழை-(மனத்தில்) நினைப்பதொன்றும் (வாயினாற்) சொல்வது ஒன்றுமாகித் தடுமாறுகின்ற ஒரு பெண்ணினது, தனி தடம் மரை மலர் முகத்த சாபமஉம்-ஒபபற்ற தடாகத்தினின்று (அன்று பறித்த) தாமரைமலர்போன்ற முகத்திலுள்ள புருவமாகிய வில்லும், குனித்தது - வளைந்தது; குழவி திங்கள் (உம்)-(நெற்றியாகிய) பிறைச்சந்திரனும், பனித்தது-வெயர்த்தது; (எ-று.)

ஒருத்தி கண்சிவக்க உரைதடுமாறப் புருவம்வளைய நுதல் வியர்த்தனளென்க. புருவத்தைச் சாதியொருமையாகக்கொண்டு 'சாபம்குனித்தது' என்றார். [1]இதழ்மொழி செம்மைகண்புக என்ற பாடத்திற்கு-அதரங்களினின்று வெளிப்படுகின்ற செந்நிறம் கண் ணிற்சேர என்று பொருள். கண் செந்நிறமானதை, இதழ் செந் நிறத்தை மிகுதியாகச்சிந்துவதாற் சிவந்ததுபோலுமென்று குறித் தாரென்க. பின்னிரண்டடிகள், சினக்குறி தெரிப்பனவாம். குனித் தது = குனிந்தது. பி - ம்:—[2]ஆயொர். [3]சுடர்மரைமலர், தடத் தாமரை. [4]முகத்துச். [5]சாபங்கள். [6]குனித்தன, குனித்ததும்.(1068)

24.—மதுப்பருகுகை கொழுநர்கலவியை யொத்தல்.

இலவிதட் டுவர்விட [1]வெயிற்றுத் தேன்[2]வர
முலைமிசைக் கச்சொடு கலையு மூட்டற
[3]அலைகுழல் [4]சோர்தர வசதி [5]யாடலாற்
கலவிசெய் கொழுநருங் கள்ளு [6]மொத்தவே.

(இ - ள்.) இலவு இதழ்-இலவம்பூவையொத்த அதரமானது, துவர்விட - (தனக்குஉரிய) செந்நிறத்தை நீங்கவும், எயிறு தேன் வர-பற்களினின்று தேன்போன்ற நீர் பெருகிவரவும், முலைமிசை கச்சொடு-முலைமீதணிந்த கச்சுடனே, (அரைமீதணிந்த), கலைஉம்- ஆடையும், மூட்டு அற-முடிச்சு அவிழவும், அலை குழல் சோர்தர- அலையுந்தன்மையுள்ள கூந்தல் அவிழ்ந்துதொங்கவும், அசதி ஆட லால்-பரிகாசச்சிரிப்புத்தோன்றுவதனால், கொழுநர் செய் கலவி உம்-கணவர்செய்கின்ற கலவியும், கள்உம் ஒத்த-கள்ளும் ஒத்தன; (எ - று.)—முதலடியை இலவிதழ்துவர்விடஎன்றும் கூறுவது உண்டு.

வாயிதழ் செந்நிறம்மாறுதலும், வாய்ப்பற்களினின்று இன் சுவைநீர் தோன்றுதலும், கச்சும் கலையும் மூட்டறுதலும், குழல் சோர்தலும், அசதியாடுதலும் - கலவியிலும் மதுப்பருகுகையிலும் தோன்றுவனவாம். கலை-மேகலையுமாம். அசதி - ஹஸிதி: வட சொல்: சிரிப்புஎன்பதுபொருள். அசதியாடுதலென்பது பரிகாச மாகச்சிரித்தலென்றபொருளில் வருதலை "ஒறுக்கப்படுவாரிதி ரென்றங் கசதியாடி" என்ற இடத்துங் காண்க. இனி, அயவர் என்பது அசதியெனத் திரிந்துவந்ததாகக் கொள்ளின், அசதியா டலால்என்பதற்கு - உடல்தளர்ச்சியடைதலால் என்று பொருள்

காணலாம். இச்செய்யுள் ஏதுவுவமையணி. உண்டாட்டுப்படல மாதலால், கள்ளுக்குச் சிறப்புக் கொடுத்து 'கொழுநருங் கள்ளு மொத்த' என அஃறிணைமுடிபு கொடுத்தார். திணைவழுவமைதி. பி - ம்:—[1] எயிறு. [2] உக. [3] அலர். [4] சரிதர. [5] ஆட்டலால். [6] ஒத்ததே.

25.—ஒருத்தி கணவனிடத்துத் தூதனுப்புதல்.

கணை[1] கழற் [2] காமனுற் கலக்க முற்றதை
அனகனுக் கறிவியென் றறியப் [3] போக்குமோர்
இனமணிக் [4] கலையினு டோழி நீயுமென்
மனமெனத் [5] தாழ்தியோ வருதி யோவென்ருள்.

(இ - ள்.) 'கணை கழல் காமனுல் - ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த காமதேவனுல், கலக்கம் உற்றதை-(யான) கலக்கங் கொண் டிருப்பதை, அனகனுக்கு-குற்றமற்ற (என்) கணவனுக்கு, அறிவி- தெரிவிப்பாயாக,' என்று - என்று (தன்தோழியிடஞ்) சொல்லி, அறிய போக்கும் - (தன்நிலையைத் தன்கணவன்) தெரிந்துகொள் ளும்படி (தன்பாங்கியை) யனுப்பத்தொடங்கிய, ஓர் இனம் மணி கலையினுள் - கூட்டமாகிய இரத்தினங்கள் பதித்த மேகலையைப் பூண்ட ஒருதலைவி,—(தன்தோழியைப்பார்த்து), 'தோழி-தோழியே! நீ உம்—, என் மனம் என தாழ்தியோ-என்மனம்போல (அக்கணவனிட த்திலேயே) தங்குவாயோ? வருதியோ-(செய்திசொன்னவுடனே மீண்டு) வருவாயோ?' என்ருள்-என்று வினவினுள்; (எ - று.)

அனகன் - நாயகன்; பிரிவுத்துயரையறியாதவனென்ற குறிப் பினது. பிரிவுத்துயரையறிந்திருப்பின் என்னைத் துயருறவிடா னெனபதுகருத்து. பி - ம்:—[1] கடற். [2] கள்வனுல், கள்ளினுல். [3] போகும். [4] கலையினுய. [5] தாழ்த்தியோ. (1070)

26.—கணவனிடத்து ஒருத்தியின் தூது.

[1] மானமர் நோக்கியோர் [2] மதுகை வேந்தன்பால்
ஆனதன் பாங்கிய ராயி னுரெலாம்
போனவர் போனவர்த் [3] தொடரப் போக்கினுள்
தானுமங் [4] கவர்கள்பின் றமிய ளேகினுள்.

(இ - ள்.) மான் அமர் நோக்கி-மான்விரும்புகின்ற கண்ணழகை யுடைய ஒருத்தி,—ஓர் மதுகை வேந்தன்பால்-ஒப்பற்ற வலிமையை யுடைய (தன) கணவனிடத்தில், ஆன தன் பாங்கியர் ஆயினுர் எலாம் - (தனக்கு) அனுகூலமாகவுள்ள தன்தோழிமார்களாயுள்ள வரையெல்லாம், போனவா போனவர் தொடர போககினுள்-பின்னே சென்றவர்கள் (முன்னே) சென்றவரைத் தொடர்ந்து நிறக அனுப்பி விட்டாள்; (பின்னும் அக்கணவனிடம் அனுப்புவதற்குத் தோழி மார் இல்லாமையால்), தானஉம்—, அவர்கள பின - அந்தத்தோழி மார்யாவருக்கும் பின்னே, தமியள ஏகினுள் - தனிப்பட்டவளாய்ச் சென்ருள்; (எ - று.)—அங்கு - அசை; அப்போதுமாம்.

தோழிமார் யாவரும் கணவனிடத்துத் தூதாக அனுப்பப்பட்டு மீண்டுவராமையால், இறுதியில் தானே அக்கணவனுள்ள இடம்

நாடிச்சென்றுளென்க. தோழிமார்கள் திரும்பிவராமைக்குக் காரணம், அவர்கள் தாமும் அவனை நாடியமை. பி - ம்:—[1] மான்விழியொருத்தி. [2] மங்கை. [3] தொடர்ந்து. [4] அவர்பினே. இதன்பின் "மன்றனாறு" 28) என்பது, சிலபிரதியில். (1071)

27.—ஒருத்தி கணவன்பெயரையெல்லாஞ் சொல்லுங் கிளியை மகிழ்ந்து புல்லுதல்.

விரைசெய்பூஞ் [1] சேக்கையி னடுக்க மீமிசைக்
கரைசெயா வாசை[2] யங் கடலு ளாளொரு
பிரசமென் குதலையாள் கொழுநன் பேரெலாம்
உரைசெயுங் கிள்ளையை [3] யுவந்து [4] புல்லினாள்.

(இ - ள்.) விரை செய் பூ சேக்கையின் அடுக்கும் மீமிசை-மணம் வீசுகின்ற மலர்ப்படுக்கையின் அடுக்குகளிலே, கரை செயா ஆசை அம் கடல் உளாள்-கரைசெய்து தடுக்கமுடியாத காதலாகிய கடலில் மூழ்கியவளான, ஒரு பிரசம் என் குதலையாள் - தேனென்று சொல்லத்தக்க [மிக இனிய] குதலைச்சொற்களையுடைய ஒருத்தி, கொழுநன் பேர் எலாம் உரை செயும் கிள்ளையை - (தன்) கணவனது பேர்களையெல்லாம் (தான் கற்றபடியே) சொல்லுங் கிளியை, உவந்து புல்லினாள்-மனமகிழ்ந்து தழுவிக்கொண்டாள்; (எ - று.)

கணவன் பேரையெல்லாம் சொல்லக்கேட்டல் இனிமைபயத்தலால், அங்கன் கூறுங் கிளியை ஒருதலைவி புல்லினாளென்க. கணவன்பேர் எலாம்-கணவனுடைய இடுகுறிப்பெயரையேயன்றி எழில், குணம், ஆண்மை, வெற்றி முதலியவற்றினாலாகிய சிறப்புப்பெயர்களையுமெனறபடி. 'சீறினாள்' என்ற பாடம்-சிலகாலம் பிரிந்தார்க்குக் கணவன் பேரைக் கூறக்கேட்டலும் வருத்தம்மிகுவிக்கு மென்பது பற்றி: "உயிர்க்கது காலனென் றும்மை நானிரந்தேற்கு நீர், குயிற் பைதல்காள் கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்" என்றது காணக. பி - ம்:—[1] சேக்கையங்கெதப்பம, சேக்கையினறெப்பம், சேக்கையினடுக்கை, சேக்கையினடுத்த. [2] வெங். [3] உயிர்ததுட். [4] கூறினாள். இதுசிலபிரதியில் "மன்றனாறு" (28) என்றதன்பின. (1072)

28.—ஒருத்தி தன்கிளியை வெறுத்தல்.

மன்றனா றொருசிறை யிருந்தோர் வாணுதல்
தன்றுணைக் கிள்ளையைத் தழீஇயென் [1] னாவியை
இன்றுபோய்க் கொணர்கிலை யென்செய் வாயெனக்கு
அன்றிலோ டொத்தியென் றழுது சீறினாள்.

(இ - ள்.) ஓர் வாள் நுதல் - ஒருபெண், மன்றல் நாறு ஒரு சிறை இருந்து - மணம் வீசுகின்ற ஓரிடத்திலிருந்துகொண்டு, தன் துணை கிள்ளையை-தனக்குத் துணையாகவுள்ள கிளியை, தழீஇ-தழுவிக்கொண்டு, 'என் ஆவியை - எனது பிராணநாயகனை, இன்று போய் கொணர்கிலை-இன்றைக்குப் போய் அழைத்துவந்தாயில்லை: என் செய்வாய்-(எனக்கு வேறு) என்ன உதவியைச் செய்யப்போகிறாய்? [உன்னால் எனக்கு ஒருதவியுஞ் செய்யமுடியாது]; எனக்கு

அன்றிலோடு ஒத்தி - எனக்கு (நீ) அன்றிற் பறவையோடு ஒத்து(க் குரலினால்) வருத்தம் விளைக்கின்றாய்', என்று - என்று சொல்லி, அழுது-புலம்பி, சீறினாள்-சீற்றங்கொண்டாள்; (எ - று.)

அன்றிற்பறவை தன்குரலால் வருத்துதல்போலக் கிளியும் அவன்பெயரைப் பிரிந்தநிலையிற் பன்முறை சொல்லி வருத்தலால், 'எனக்கு அன்றிலோடோத்தி' என்றாள். அன்றிலென்பது, நெய் தல்நிலத்து வாழ்வதான ஒரு பறவை; இதைப்பற்றி மிதிலைக்காட் சிப் படலத்து 68-ஆம் பாடலிற் கூறப்பட்டது. பி - ம்:—[1]செய் தாய். இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. *(1073)*

29.—இளையாள்பெயரால் தன்னைக் கணவன் அழைக்க ஒருத்தி கொண்ட வருத்தம்.

வளைபயின் முன்கையோர் [1]மயில னுடனக்கு
[2]இளையவள் பெயரினைக் கொழுந னீதலும்
முளையெயி [3]றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தன கயற்க ணாலியே.

(இ - ள்.) கொழுநன்-(தன்) கணவன், இளையவள் பெயரினை-(தனக்கு) இளையாள் பெயரை, வளை பயில் முன் கை ஓர் மயிலனாள் தனக்கு-பொன்வளைகள் நெருங்கிய முன்னங்கைகளையுடைய மயில் போற் சாயலையுடைய மூத்தவளுக்கு, ஈதலும்-இட்டு அழைத்த லும், முளை எயிறு இலங்கிட-முளையையொத்த பற்கள் வெளி விளங்க, முறுவல் வந்தது-சிரிப்பு உண்டாயிற்று; கயல் கண்-கயல்மீன்போலுங் கண்களினின்று, ஆலி - நீர்த்துளிகள், களகள உதிர்ந்தன-களகள வென்று சிந்தின, (எ-று.)

கணவன் சோர்வினால் மாறாடி, இளையாள்பெயரைச் சொல்லி மூத்தாளான தன்னை யழைக்கவே, அம்மாதுக்கு 'இளையவள்மீது நீ வைத்த பெருங்காதலைக் கரந்தொழுகிய ஒழுக்கம் இப்போது புல னாயிற்று' என்று அவன்மீதுள்ள சினத்தினால் நகையும், பிறமாதி னிடத்துத் தன்கணவன் பேரன்புடையானென்பதைக் கருதிய தனு லான வருத்தத்தினால் கண்ணீரும் தோன்றின வென்க. பி-ம்:— [1]மயிலனாட்குத்தன். [2]இளையவர். [3]அலங்கிட. *(1074)*

30.—ஒருத்தன் மனைவியினூடலைத் தீர்க்க முயலுதல்.

[1]செற்றமுன் [2]புரிந்ததோர் செம்மல் வெம்மையால்
பற்றலு[3] மல்குலிற் பரந்த மேகலை
[4]அற்றுகு [5]மணியின்முன் பவனி சேர்ந்தன
பொற்றொடி யொருத்திகண் [6]பொருத முத்தமே.

(இ - ள்.) முன் செற்றம் புரிந்தது ஓர் செம்மல்-முன்னே குற்றத்தைச் செய்துள்ள ஓர் ஆண்மகன், வெம்மையால்-(தன் மனைவிகொண்டுள்ள ஊடலைத் தீர்க்கும்) விருப்பத்தினால், அல் குலில் பரந்த மேகலை பற்றலும்-இடையிற் பரக்கவணிந்த மேகலை யென்னும் அணியைக் கையினாற்) பிடித்தபோது, (அவள்விரைந்து

சென்றதனுல்), (அங்ஙனம் மேகலேயிற் பற்றப்பட்ட), பொன் தொடி ஒருத்தி-பொன்னினுலியன்ற தொடியென்னும் வளையலேயணிந்த அந்தமாதின், பொருத கண் முத்தம்-பொருது கண்ணுற் சொரிந்த முத்துப்போன்ற கண்ணீர்த்துளிகள், அற்று உகு மணியின் முன்பு-அறுபட்டுக் கீழேசிந்திய மேகலேமணிகட்கு முன்னே, அவனி சேர்ந்தன-பூமியில் விழுந்தன; (எ - று.)

செற்றம்புரிந்தது ஓர்செம்மல்-புரிந்ததாகிய செற்றத்தை யுடைய ஒரு செம்மலென்க. ஒருத்தியின் திறத்து முன்னர்த் தீங்கு இழைத்த ஒருமகன் அவளது ஊடலேத் தீர்க்கக்கருதி அவளணிந்த மேகலேயைப் பற்ற, அவள் பொருமற் கண்ணீர் சிந்தினளென்க. பற்றியதனுலறுபட்ட மணி சிந்தலுக்கு முன்னே, கண்ணீர் சிந்திய தாகக் கூறியது - மிகவுயர்வுநவிற்சியணி. [3]செற்றனளேக என்ற பாடத்திற்கு - சினந்தவளாய் விரைந்து செல்லுகையில் எனக. பி - ம்:—[1]செற்றமென். [2]புரிந்தது, புரிந்ததோ. [4]அற்றன. [5]மணியினம், முகத்தின்முன். [6]பொருத. (1075)

31.—இதுமுதல் இருபத்துநான்கு கவிகள் - மதுவுண்ட மகளிர் நிலேமையைத் தெரிவிப்பன.

தோடவிழ் கூந்தலா ளொருத்தி தோன்றலோடு
[1]ஊடுகெ னேவுயி [2]ருருகு நோய்கெடக்
[3]கூடுகெ னேவவன் குணங்கள் வீணேயில்
[4]பாடுகெ னேவெனப் பலவும் [5]பன்னினுள்.

(இ - ள்.) தோடு அவிழ் கூந்தலாள் ஒருத்தி-பூவிதழ்கள் மலரப்பெற்ற கூந்தலேயுடைய ஒருபெண், '(என்னுடைய கணவன் என்னிடத்துவருவானுனல்), தோன்றலோடு - (வந்த) அக்கணவனுடனே, ஊடுகென்ஓ-(பிரிந்து எனக்குநோய்செய்ததைக் குறித்துப்) பிணக்கங்கொள்ளக்கடவேனே? உயிர் உருகும் நோய்கெட கூடுகென் ஓ-(என்) உயிர் உருகுதற்குக் காரணமாகி (எனக்கு விளேந்துள்ள) காமநோய் ஒழியும்படி கலவிசெய்யக்கடவேனே? அவன் குணங்கள் வீணேயில் பாடுகென்ஓ-(அவனுக்கு மகிழ்ச்சியுண்டாகுமாறு) அவனது குணங்களே யாழிலிட்டுப் பாடக்கடவேனே? (யாதுசெய்யக்கடவேன்?)', என-என்று, பலஉம்-(தான் செய்யக்கடவ) பலவற்றையும் பற்றி, பன்னினுள் - (மனத்துள்) ஆராயலானுள்; (எ - று.)—பி-ம்:—[1]ஊடுகெனு. [2]உருகி, உருக்கு. [3]கூடுகெனு. [4]பாடுகெனு. [5]பண்ணினுள். (1076)

32. மாடகம் [1]பற்றிய மகர [2]வீணேதன்
தோடவிழ் மலர்க்கரஞ் சிவப்பத் தொட்டனள்
பாடின ளொருத்திதன் [3]பாங்கி மார்களோடு
[4]ஊடின துரைசெயா ளுள்ளத் [5]துள்ளதே.

(இ - ள்.) ஒருத்தி—, —ஊடினது-(தன்கணவனேடு தான்) ஊடல் கொண்டுள்ளதை, தன் பாங்கிமார்களோடு-தன் தோழிமார்களுடனே, உரை செய்யாள்-வாய்திறந்து சொல்லாதவளாய்,—

மரடகம் பற்றிய மகரவீணை-முறுக்காணியமைந்த மகரவீணையை, தன் தோடு அவிழ் மலர் கரம் சிவப்ப தொட்டனள்-இதழ்மலரப் பெற்ற தாமரைமலர்போன்ற தன் கை செந்நிறமடையும்படி தொட்டு, உள்ளத்து உள்ளது பாடினள்-(தன்) மனத்திலுள்ளதைப் பாடலின் மூலமாகத் தெரிவித்தாள்; (எ - று.)

'ஊடல்நிகழ்வதற்கு நிமித்தமான நாயகனுக்குத் தக்க மதி தோன்றுமாறு புரிக' என்று பாங்கிமாரிடத்து நேரே கூறுதற்கு நாணிக் குறிப்புணரவல்ல அன்னார்பொருட்டு இங்ஙனஞ் செய்தனள். இனி 'உள்ளத்துள்ளது' என்பதை உரைசெயாள என்பதனோடு இயைத்து, நாயகன் பிரிந்த குற்றத்தைப் பாங்கிமாரோடு உரைசெயில் அவர்கள் தன்னிடம்வைத்த அன்பு மிகுதியால் அவனைத் தூற்றுவா ரென்றஞ்சிப் பாடிப் போதுபோக்கினளென்று கருத்துக் காண்பாருமுளர். வீணையைத்தொடவும் மென்மையால் கரங்கள் சிவந்தன. பி-ம்:—[1]பற்றினள். [2]வீணையின். [3]பாங்குளார்களோடு. [4]ஊடினள். [5]உள்ளத்தே, உள்ளவே. (1077)

32. குழைத்த[1]பூங் கொம்பனை ளொருத்தி கூடலை
இழைத்தன[2]ளதுவவ ளிட்ட போதெல்லாம்
பிழைத்தலு மனங்கவேள்[3]பிழைப்பி [4]லம்பொடும்
உழைத்தன ளுயிர்த்தன ளுயிருண் [5]டென்னவே.

(இ - ள்.) குழைத்த பூ கொம்பு அனாள் ஒருத்தி - தளிர்த்த பூங்கொம்பை யொத்த ஒருபெண்,—(தன் நாயகன் வராமையால்), கூடலை இழைத்தனள்-கூடற்சுழிகளைக் கீறினாள்: அவள் இட்ட போது எலாம் - அவள் கீறியபோதெல்லாம், அது பிழைத்தலும் - அக்கூடற்சுழி கூடாமல் தவறிப்போதலும், உழைத்தனள் - வருந்தினவளாய்,—அனங்கன் வேள் பிழைப்பு இல் அம்பொடுஉம்-மன்மதனது குறிதவறுதலில்லாத மலரம்பு (தாக்குவதனால் அவற்று) டனே, உயிர் உண்டு என்ன உயிர்த்தனள் - உயிர் உண்டோ இல்லையோ என்று (ஐயுற்று இறுதியாக) உயிருண்டென்னுமாறு மூச்செறிந்தாள்; (எ-று.)

கூடலாவது - 'கணவனைக்கூடுதல்நேருமா?' என்பதைக் கண்களை மூடிக்கொண்டு மணலிலே வட்டமாகச் சுழித்தல் மூலமாக அறிவது. அங்ஙனம் சுழிக்கும்போது இருதலையும் பொருந்துமாயின் கணவனைக் கூடுதல் நேருமென்றும், பொருந்தாதாயின் நேராதென்றும் உணரப்படும். இதனை "தெள்ளியார்பலர் கைதொழுந்தேவனார், வள்ளன் மாலிருஞ்சோலைமணாளனார், பள்ளிகொள்ளுமிடத் தடிகொட்டிடக், கொள்ளுமாகினீ கூடிடுகூடலே" "செருவேலான், பொன்றுங்கணியகலம் புல்லப்பொருந்துமேற், குன்றுதுகூடு கெனக்கூறி முத்தவார்மணன்மே, லின்றுங்கணியிழையா ளாழியிழைத்தாளே" முதலிய இடங்களிலுங் காணலாம். அம்பொடு, ஒடு - இங்கே கருவிப்பொருளது. பி - ம்:—[1]மென். [2]அவ்வவள், அவளது, அவ்விடத்து. [3]பெய்த. [4]அம்பினால். [5]இல்லெனா. (1078)

34. [1]பந்தணி விரலினு ளொருத்தி [2]பையுளாள்
சுந்தர னொருவன்பாற் றூது போக்கினாள்
வந்தன னெனக்கடை யடைத்து மாற்றினாள்
சிந்தனை [3]தெரிந்திலஞ் சிவந்த நாட்டமே.

(இ - ள்.) பந்து அணி விரலினாள் ஒருத்தி - பந்தை அழகு செய்கின்ற விரலையுடைய ஒருத்தி, பையுளாள்,-பிரிவுதுயரத்தை மிகுதியாகக்கொண்டவளாய்,—சுந்தரன் ஒருவன்பால் - ஒப்பற்ற கட்டழகையுடைய கணவனிடத்து, தூது போக்கினாள் - (தன் தோழியைத்) தூது அனுப்பினவளாய், வந்தனன் என -(அக் கணவன்) வந்தானாக, - கடை அடைத்து மாற்றினாள் - (அவன் உள்ளே வரமுடியாதபடி) வாயிற்கதவைமூடித் தடுத்தாள்; சிந்தனை தெரிந்திலம் - (இங்ஙனம்செய்த அவளது எண்ணம் இன்ன தென்று யாம்) அறிந்திலோம்; நாட்டம் சிவந்த - (அவளது) கண்கள் சிவந்தன; (எ-று.)

தூதுவிடுத்தவள் 'தூதினாலன்றி விருப்பத்தால் நீ வந்தாயில்லை' என்று மீண்டும் ஊடிக் கதவை மூடினாளென்க; சிவந்த நாட்டம் என்றதனால், இக்கருத்து வெளியாம். 'கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள' எனறதும் காண்க. இவள் கைவிரல் கொண்டு பற்றுவதனால் பந்து அழகுபெறுவ தென்பார் 'பந்தணி விரலினாள்' எனறார். பி - ம்:—[1]பைந்தளிர். [2]பையுளால். [3]தெரிந்தில, தெரிகிலம். (1079)

35. உய்த்தபூம் [1]பள்ளியி னூட னீங்குவான்
சித்தமுண் [2]டொருத்திக்க தன்பன் றேர்கிலான்
பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து [3]போக்கினாள்
எத்தனை யிறந்தன கடிகை [4]யீண்டென்றாள்.

(இ - ள்.) ஒருத்திக்கு—, உய்த்த பூ பள்ளியின் - (பாங்கியால்) அமைக்கப்பட்ட மலர்ப்படுக்கையில், ஊடல் நீங்குவான் - (தான் கொண்ட) ஊடல் நீங்கும்படி, சித்தம் உண்டு - எண்ணமுண்டாயிற்று: அது-அதனை, அன்பன்-(அவளது) கணவன், தேர்கிலான்-அறியாதவனானான்; (அப்போது அம்மங்கை), பொய்த்தது ஓர் மூரியால்-பொய்யான ஒரு சோம்பல் முரிப்பினால், நிமிர்ந்து போக்கினாள் - (கைகால்களை) மிகவும் நிமிர்த்தவளாய், எத்தனை கடிகை ஈண்டு இறந்தன என்றாள்-இப்பொழுது எத்தனை நாழிகை கழிந்தன என்று வினவினாள்; (எ-று.)

ஒருத்தி ஊடல்நீங்கிக் கணவனைக் கூடவேணுமென்னும் விருப்பத்துடனே மலர்ப்படுக்கையிற்பொய்யுறக்கங் கொண்டிருக்க, அவள் கணவன் அதனையுணராது 'தீண்டின் சீறுவளோ?' என்று அஞ்சி வாளா அருகே கிடக்க, அவள் அனந்தலிற் சோம்பல்முரிப்பவள்போல் அபிநயித்துக் கைகால்கள் கணவன்மீது படவும் பேச இடமுண்டாகவும் அரைத்தூக்கத்தி லருகேயிருப்பவரை வினவுபவள்போல் 'இப்போது எத்தனை நாழிகை கழிந்தது?' என்று வினவினளென்க; இவ்வினாவில், 'காலத்தை இங்ஙன் வீணே

கழிப்பாருண்டோ?' என்று ஒருபொருள் தொனிப்பதும் காண்க. மூரி - சோம்பல்முரிப்பு. பி - ம்:—[1]பள்ளிநின்று. [2]ஒருத்திதன். [3]போக்குவாள். [4]இன்று. (1080)

36. விதைத்தமென் காதலின் [1]வித்து மெய்ந்நிறை
[2]இதைப் [3]புன [4]நனைத்திட [5]முளைத்த வேயெனப்
பதைத்தன [6]ளொருத்தன்மே லொருத்தி பஞ்சடி
உதைத்தலும் [7]பொடித்தன வுரோம ராசியே.

(இ - ள்.) ஒருத்தி-, பதைத்தனள்-(ஊடலாற்) பதைபதைத் தவளாகி, ஒருத்தன்மேல்-ஒப்பற்ற கணவன்மேல், பஞ்சு அடி உதைத்தலும்-செம்பஞ்சுஊட்டிய பாதங்களைக்கொண்டு உதைத்த வுடனே, நிறை மெய் இதை புனம்-(ஊடற்காரணமாகிய எரு) நிறைந்த உடம்பாகிய புதுக்கொல்லையில், நனைத்திட - (உதையா லுண்டாகிய இன்பமாகிய நீர்) நனைக்க, விதைத்த மென் காதலின் வித்து முளைத்த என-விதைக்கப்பட்ட மெல்லிய காதலாகிய விதை கள் முளைத்தன போல, உரோமராசி பொடித்தன-(உடலிலுள்ள) மயிர்க்குழாம் சிலிர்த்தன, (எ-று.)—ஏ-அசைகள்.

ஒருத்தி ஊடலினால் தன் கணவனை யுதைக்க, அவள்பாதம் தீண்டப்பெற்ற மகிழ்ச்சியால் அக்கணவனதுஉடலெங்கும் மயிர்ச் சிலிர்புத் தோன்றின வென்க. உரோமராசி பொடித்ததை, காதல் வித்து முளைத்ததுபோலும் எனக்குறித்தார்; உருவகவணியை யங்கமாகக்கொண்டுவந்த தற்குறிப்பேற்றவணி. ஐம்பொறிகளாலும் இன்பங்கள் விளையுமாதலின், காதல்வித்து முளைத்தவெனப்பன் மையாகக் கூறினர். பி-ம்:—[1]வியந்து வெஞ்சிறை. [2]முதைப். [3]புனை, புனல். [4]நனைத்தலின், நனைதலின், நாட்கிடை. [5]முளைத் ததே, முளைத்ததோ, குழைத்ததே. [6]ஒருவன். [7]பொடித்தது. ()

37. பொலிந்தவாண் [1]முகத்தினன் பொங்கித் [2]தன்னையும்
மலிந்தபே [3]ருவகையன் [4]மாற்று வேந்தரை
நலிந்தவா ளுழவனோர் நங்கை [5]கொங்கைபோய்
[6]மெலிந்தவா நோக்கித்தன் புயங்கள் வீங்கினன்.

(இ - ள்.) மாற்று வேந்தரை நலிந்த வாள் உழவன்-பகை யரசரை வருத்திய வாட்படையையுடைய ஒரு வீரன், ஓர் நங்கை கொங்கை போய் மெலிந்த ஆ நோக்கி-(தன் மனைவியாகிய) ஒப் பற்றபெண்ணினது தனங்கள் (தன் பிரிவினால்) மிகமெலிவடைந் ததைப் பார்த்து, பொங்கி - மனக்கிளர்ச்சியடைந்து, தன்னை உம் மலிந்த பேர் உவகையன்-தன்னையும்விஞ்சின பெருமகிழ்ச்சிபடைத் தவனும், வாள் பொலிந்த முகத்தினன்-ஒளி விளங்குகின்ற முகத் தையுடையவனுமாகி, தன் புயங்கள் வீங்கினன்-தன் தோள்கள் பூரிக்கப் பெற்றான்; (எ - று.)

மாற்றவரைத் தொலைக்கும் நிமித்தம் சிலநாள் பிரிந்திருந்த வீரனொருவன் தன்மனைவி பிரிவுத்துயரால் கொங்கை மெலியப் பெற்றிருத்தல்கண்டு தன்பாலுள்ள தாய அவளது காதலை மெச்சிப் புயங்கள் பூரிக்கப்பெற்றன னென்க. 'கொங்கை போய் மெலிந்தவா

நோக்கித் தன்புயங்கள் வீங்கினன்' என்றதொடரில், ஒருவர்வருந்த அதுகண்டு மற்றொருவர் பூரிக்கின்ற உலகவியற்கை வெளியாம். பி-ம்:—[1]முகத்தினுள். [2]தனனினும். [3]உவகையின், உவகையான். [4]மாற்றும். [5]கொங்கையை. [6]மெலிந்திடப் பொருதனன் விடியுந் தோறுமே. இது, சிலபிரதியில் "ஏய்ந்த" (38) என்றதன்பின். ()

38\. ஏய்ந்தபே ரெழிலினு னொருவ னெய்தினன்
வேய்ந்தபோ லெங்கணு [1]மனங்கன் வெங்கணை
[2]பாய்ந்தபூம் பள்ளியிற் படுத்த பல்லவம்
[3]தீய்ந்தன [4]நோக்கினன் [5]திகைக்குஞ் சிந்தையான்.

(இ-ள்.) ஏய்ந்த பேர் எழிலினன் ஒருவன் - பொருந்திய பேரழகையுடையானொருத்தன், எய்தினன்-(பிரிவுத்துயருறும தன் நாயகி இருக்குமிடத்தைச்) சேர்ந்து, அனங்கன் வெம் கணை எங்கண் உம் வேய்ந்த போல் பாய்ந்த பூ பள்ளியில் - மன்மதனது கொடிய அம்புகள் எங்கணும்பரவி மூடியுள்ளன போலப் பரவிய மலரின் படுக்கையில், படுத்த-பரப்பிய, பல்லவம்-தளிர்கள், தீய்ந்தன நோக்கினன் - தீய்ந்தவற்றைப் பார்த்தவனாய், திகைக்கும் சிந்தையான்-திகைப்படைந்த மனமுள்ளவனானான்; (எ - று.)

சைத்தியோபசாரமாகப் பாங்கிமார் மலர்ப்படுக்கையில் பல தளிர்கள் கொண்டு பரப்ப, அதிற்சாய்ந்த தலைவியின் காமவெப் பத்தால் அத்தளிர்களும் தீய்ந்துபோனதுகண்டு ஒருத்தன் திகைப் படைந்தனனென்க. ஆங்கு இருந்த மலர்ப்படுக்கை, மன்மதன் எய்த மலரம்புகள் அவ்விடமெங்கும் மூடினபோலு மென்பது, 'அனங்கன் வெங்கணை யெங்கணும் வேய்ந்தபோற் பாய்ந்த பூம் பள்ளி' என்பதன் கருத்து; இது தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]கண்டு. [2]பாய்ந்தெழு, பாய்ந்தொரு. [3]தீய்ந்தவா. [4]கண்டனன். [5]தளிர்க்குஞ், களிக்குஞ். பின்னிரண்டடியில் "பாய்ந்த பூம் பள்ளியைப் படுத்தொருத்தியைத், தோய்ந்தனன் களித்தனன் றொல்லை நூலினே" என்று பிரதிபேதம். (1083)

39\. ஊட்டிய [1]சாந்துவெந் துலரும் வெம்மையான்
நாட்டினை யளித்திநீ யென்று நல்லவர்
ஆட்டுநீர்க் கலசமே யென்ன [2]லானவோர்
வாட்டொழின் [3]மைந்தற்கோர் மங்கை கொங்கையே.

(இ-ள்.) ஊட்டிய சாந்து வெந்து உலரும் வெம்மையான் - அப் பப்பெற்ற சாந்து வெந்து உலர்வதற்கு ஏதுவாகிய வெம்மையோடு கூடிய, ஓர் மங்கை கொங்கை-ஒருபெண்ணினது தனம்,—ஓர் வாள் தொழில் மைந்தற்கு-வாட்படைகொண்டு செய்யும் போர்த்தொழி லில்வல்ல ஒருவீரனைக் குறித்து, நீ நாட்டினை அளித்தி என்று-'நீ தேசத்தைக் காப்பாயாக' என்றுசொல்லி, நல்லவர் ஆட்டு நீர் கலசம் என்னல் ஆன-பெரியோர் பட்டாபிஷேகஞ் செய்வதற்காக வைத்துள்ள பொறகலசம் போன்றன; (எ-று.)

பகையரசரைப் படைக்கலங்கொண்டு வென்று தன்னாட்டா, ரைப் பாதுகாத்தற்பொருட்டு நாயகன் போர்க்குச் சென்றதனால்

தான் அவனைப் பிரிந்து காமவெப்பத்தோடு வருந்தும் தனங்களை, கவி, போரில் பகைவென்றுவரும் வீரனை நீராட்டும்பொருட்டுப் பெரியோர் அமைத்துள்ள பொற்கலசங்கள்போலு மென்றார்: தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1] சாந்தம். [2] ஆனது. [3] மன்னற்கு.

40. பயிருறு கிண்கிணி பரந்த மேகலை
வயிர [1] வான் பூணவை வாங்கி [2] நீக்கினாள்
உயிருறு [3] தலைவன்பாற் போக வுன்னினாள்
செயிருறு திங்களைத் தீய [4] நோக்கினாள்.

(இ - ள்.) (ஒருத்தி),—உயிர் உறு தலைவன்பால் போக உன்னினாள்-உயிரையொத்த (தன்) கணவனிடத்துப் போய்ச்சேர நினைத்தவளாய், பயிர் உறு கிண்கிணி - ஒலித்தலைச்செய்கின்ற கிண்கிணியும், பரந்த மேகலை-பரவிய மேகலையும் (என்ற), வயிரம் வான் பூண் அவை-வயிரமணிகள்கொண்டு செய்யப்பட்ட அந்த ஆபரணங்களை,வாங்கி நீக்கினாள்-கழற்றிப் போக்கினவளாய், செயிர் உறு திங்களை-குற்றமுள்ள சந்திரனை, தீய-தீய்ந்துபோம்படி [உக்கிரமாக], நோக்கினாள் - விழித்துப்பார்த்தாள்; (எ-று.)

ஒருத்தி காமவேட்கை விஞ்சித் தன்கணவனுள்ளவிடம் தானே தேடிச்செல்லக்கருதியவளாய்ச் சிலம்பும் மேகலையும் அணிந்து சென்றால் அவற்றினொலியால் தன்னைப் பிறர் கவனிக்கக்கூடு மென்று கருதி அவற்றைக் கழற்றிவிட்டுச் செல்லத் தொடங்க, அப்பொழுது பிறருக்குப் புலப்படாவண்ணம் செல்லவேணு மென்றெண்ணி யிருந்த தனது போக்கிற்குத் தடையாகித் தன்பிரிவுத் துயருக்குக் காரணமாகுஞ் சந்திரன் நிலவை வீசியதனால் அவன் தீய்ந்துபோம்படி உக்கிரங்கொண்டு விழித்துப் பார்த்தனளென்க. பிரிவுத்துயரை விளைத்த சந்திரன் அதுதீரக் கணவனிடத்துச் செல்லவும் ஒட்டாது தடை செய்தலால் 'செயிருறு திங்கள்' எனப்பட்டான். பி - ம்:—[1] வான்பூணணி, வெண்பூணவை. [2] நோக்கினாள். [3] கணவன்பாற். [4] நோக்குவாள். *(1085)*

41. ஏலிமிவ் [1] வன்மையை யென்னென் றுன்னுதும்
ஆலைமென் [2] கரும்பிலா வொருவற் காங்கொரு
சோலைமென் குயிலனாள் சுற்றி வீக்கிய
மாலையை [3] நிமிர்ந்தில வயிரத் தோள்களே.

(இ - ள்.) ஆலை மென் கரும்பு இலா ஒருவற்கு-ஆலையிற் படுந் தன்மையுள்ள மெல்லிய கரும்பைக் கொள்ளாத ஒருவனுக்கு, ஆங்கு-அவ்விடத்தில், ஒரு சோலை மெல் குயில் அனாள் - சோலையிலுள்ள மெல்லிய குயில்போலுங் குரலையுடைய ஒருத்தி, சுற்றி வீக்கிய-சுற்றிக்கட்டிய, மாலையை—, வயிரம் தோள்கள் - வச்சிராயுதம்போலும் உறுதியையுடைய (அவனது) தோள்கள், நிமிர்ந்தில-மீறி நிமிரமாட்டிற்றில: ஏலும்-பொருந்திய, இ வன்மையை-இம்மாலையினது வன்மையை, என் என்று உன்னுதும்-என்னவென்று நினைத்துச் சொல்லக்கடவோம்? (எ - று.)

ஒருத்தி ஊடல்காரணமாக ஒருவனது தோள்களில் மலர் மாலை கொண்டு சுற்றிக்கட்ட, அவ்வீரனது தோள்கள் அக்கட்டை மீறிக்

கொண்டு நிமிரமாட்டாமற் போயின; இங்ஙன் வீரனுடைய தோள்களையும் நிமிரவொட்டாதபடி பூமாலை கட்டுவது என்ன ஆச்சரியம் என்று வியந்து கூறியவாறு; இங்குக்காரணம் கட்டுதற்றொழிலைச் செய்வதற்கு வன்மையற்றதாக இருக்கக் காரியம் பிறந்ததாகக் கூறியது—பிறிதாராய்ச்சியணியாம். அங்ஙனம் அவ்வீரன்தோள் மலர் மாலைக்குக் கட்டுண்டு நின்றது, அவள் மனத்தைத் தன்வயப்படுத்த வென்க. தன் கொங்கையைத் தழுவுதற்குரிய தோள்கள் தழுவாதிருந்த குற்றத்திற்காக அம்மாது கட்டினள் போலும். கரும்பிலா வொருவன்-கரும்புவில்லைப்பெறாத மன்மதன் போல்வான்; கரும்பு வில் இலாத குறையொன்றே என்றபடி. [2]கரும்பனுன் என்ற பாடத்திற்கு-பிரிந்து காம வெம்மையால் நொந்தன னென்பார் 'ஆலைமென் கரும்பனுன்' என்றும், அவன்பட்ட காமவிடாயை இவள்சொல் ஒருவாறு தணியா நின்றதென்பார் 'சோலைமென்குயிலனுள்' என்றும் கூறினரென்ப. பி-ம்:—[1]வண்மையை, இளமையை. [2]கரும்பெனும். [3]நிமிர்த்தில. (1086)

42. சோர்குழ லொருத்திதன் வருத்தஞ் [1]சொல்லுவான்
மாரனை நோக்கியோர் மாதை நோக்கினுள்
காரிகை யா[2]ளவள் கருத்தை நோக்கியோர்
வேரியந் [3]தெரியலான் வீடு நோக்கினுள்.

(இ - ள்.) சோர் குழல் ஒருத்தி - சோர்ந்த கூந்தலையுடைய ஒரு நங்கை, தன் வருத்தம்-தன்னுடைய வருத்தத்தை, சொல்லுவான்-சொல்லும்பொருட்டு, மாரனை நோக்கி -(சித்திரபடத்திலெழுதியிருந்த) மன்மதனைப்பார்த்து, ஓர் மாதை நோக்கினுள்-(தன) பாங்கியைப் பார்த்தாளாக,—காரிகையாள்-(இங்ஙனம் பார்க்கப்பட்ட) அப்பாங்கி, அவள் கருத்தை நோக்கி - அங்ஙனம் பார்த்தவளுடைய கருத்தையறிந்து, ஓர் வேரி அம் தெரியலான் - தேன் பெருகுகின்ற அழகியமாலையையணிந்த ஒப்பற்ற ஆடவனது, வீடு நோக்கினுள் - வீட்டைப் பார்த்தாள; (எ - று.)

மன்மதனது மலரம்புகளாலெய்யப்பட்டு வருந்தாநின்ற ஒரு பெண் தனது வருத்தத்தைத் தெரிவிக்கும் குறிப்போடு மாரனை நோக்கிப் பாங்கியையும் நோக்க, அவள் அக்கருத்தைத் தெரிந்து கொண்டு, 'நின்கணவன்பாற்சென்று அவனை அழைத்துவருவேன்' என்பதைக் குறிப்பாக உணர்த்துமாறு வேரியந்தொடையலான் வீட்டை நோக்கின ளென்க. இங்குப் பிறருணராதபடி குறிப்பினுலேயே ஒருவர்க்கொருவர் தெரிவித்தமையைக் கூறியது,நுட்பவணியின்பாற்படும். மனமதவடிவம் சித்திரபடத்திலெழுதப்பட்டிருந்ததென்க. பி-ம்:—[1]சொல்லுவாள். [2]அவன். [3]தொடையலான். இது, சிலபிரதிகளில் ''தொகுதரு'' (44) என்பதன்பின். (1087)

43. சினங்கெழு [1]வேற்கையோர் செம்மல் பாலொரு
[2]கனங்குழை மயிலனுள் [3]கடிது போயினுள்
மனங்குழை நறவமோ மாலை தான்கொலோ
அனங்கனே யார்கொலோ வழைத்த [4]தூதரே.

(இ - ள்.) சினம் கெழு வேல் கை ஓர் செம்மல்பால் - வெகுளி பொருந்திய வேலையேந்திய கையையுடைய ஓரரசனிடத்து, ஒரு கனம் குழை மயில் அனாள்-பொன்னாற்செய்தகுழையென்னுங் காதணியை யணிந்த மயில்போலுஞ் சாயலையுடைய ஒருத்தி, கடிது போயினாள்-விரைந்து செல்பவளானாள்: (அங்ஙனம் அவள் தானே செல்லுமாறு), அழைத்த தூதர்—, மனம் குழை நறவம் ஓ - மனத்தைக் குழையச்செய்யவல்ல மதுவோ, மாலை ஓ - இராப்பொழுதோ, அனங்கன் ஓ-மன்மதனோ, யார் கொல் ஓ-(இவற்றுள்) யாரோ? (அறியேன்); (எ-று.)—தான், கொல் - அசைகள்.

நறவம்முதலியவை, காதல்நோயை விளைவித்துக் கணவனைத் தேடிக்கொண்டு தானே கடிதுசெல்லும்படி மாதைத் தூண்டின வென்பது கருத்து. நறவமோ மாலையோ அனங்கனோ அழைத்த தூதர் யார்கொலோ - உயர்வினால்உயர்திணைமுடிபுஏற்ற திணைவழுவமைதி. பி-ம்:—[1] விற்கை, வாட்கை, அயிற்கை. [2] புனங். [3] கடிந்து. [4] தூதரோ. (1088)

44. தொகுதரு காதற்குத் தோற்ற சீற்றத்தோர்
வகிர்மதி நெற்றியாண் மழைக்க ணாலிவந்து
உகுதலு முற்றதெ னென்று கொற்றவன்
நகுதலு [1] நக்கன ணாணு [2] நீங்கினாள்.

(இ - ள்.) தொகுதரு காதற்கு - நிறைந்தகாதலுக்குமுன்னே, தோற்ற-தோற்றுப்போன, சீற்றத்து-வெகுளியையுடைய, ஓர்வகிர் மதி நெற்றியாள்-பிளவுபட்ட சந்திரனை [பிறைச்சந்திரனை] யொத்த நெற்றியுள்ள ஒருத்திக்கு, மழை கண் ஆலி வந்து உகுதலும்- (தனது பிரிவுத்துயர்தோன்ற) மழைபோலுங் குளிர்ந்த கண்களினின்று நீர்த்துளிவந்து சிந்துதலும், உற்றது என் என்று கொற்றவன் நகுதலும்-உனக்கு நேர்ந்தது என்னென்று வினவிய வண்ணம் (தன்) கணவன் சிரித்தவளவில், நக்கனள்-(தானும்)சிரித்தவளாய், நாணு நீங்கினாள்-நாணம் நீங்கப்பெற்றாள்; (எ-று.)

தன் கணவனிடத்து ஊடல்கொண்ட ஒருத்தி தன் காதல் மிகுதி சீற்றத்தைக் குறைத்துப் பிரிவுத்துயரை மிகுவித்ததனாற் கண்ணீரைச் சிந்தினளாக, அப்போது அவளுக்குக் கணவன் 'இங்ஙனம் புலம்புமாறு நினக்கு நேர்ந்தது என்னையோ?' என்று வினாவியவண்ணம் அவளது கருத்தை யறிந்தவனாய்ச் சிரிக்க, அம்மங்கையும் நாணம் நீங்கித் தானும் உடன்சிரிக்கலாயின ளென்க. பி-ம்—[1] நோக்கினள். [2] நீக்கினாள். (1089)

45. பொய்த்தலை மருங்குலா ளொருத்தி புல்லிய
[1] கைத்தல [2] நீக்கினள் [3] கருத்தி [4] னீக்கலள்
சித்திரம் [5] போன்றவச் செயலொர் தோன்றற்குச்
சத்திரம் மார்பிடைத் தைத்த தொத்ததே.

(இ - ள்.) பொய் தலை மருங்குலாள் ஒருத்தி - இல்லையாதலைத் தன்னிடத்தேகொண்ட [மிக நுண்ணிய] இடையையுடையஒருத்தி, கருத்தின் நீக்கலள்-(தன்) மனத்தினின்று (கணவனை) நீக்காதவ

ளாய், புல்லிய கை தலம் நீக்கினள்-(புறத்தே தன்கணவனைத்) தழுவிய கையையெடுத்து விட்டனள்; சித்திரம் போன்ற அ செயல்-விசித்திரத்தன்மையுள்ளதான அந்தச்செய்கையானது, ஓர் தோன்றற்கு - ஒரு ஆடவனுக்கு, சத்திரம் மார்பிடை தைத்தது ஒத்தது-ஆயுதம் மார்பிற்பொததியதுபோல் வருத்தியது; (எ-று.)

பிணங்குதற்கு உரிய காரணமின்றியும் மதுப்பருகிய மயக்கத்தால் மனப்பூர்வமாகவன்றிப் புல்லிய கையை ஒருத்தி நீக்கிவிட, அச்செயல் கணவனுக்கு மிகவும் வருத்தத்தை விளைத்த தென்க. கைத்தலம் நீக்கியமை கணவன் எதிர்பாராதிருக்கையில் நிகழ்ந்ததாதலால் அவன்வியப்படையும்படியாயிற்று என்பார், 'சித்திரம் போன்ற அச்செயல்' என்றார். ஒருசாரார் இரண்டாம் அடியில், 'கைத்தலம் நீக்கிலள் கருத்தினீக்கினள்' என்று படித்து-தன்னைத் தழுவின தலைவனுடைய கைகளை வெறுத்துத்தள்ளவும் இல்லை; ஆனால் எதிர்தழுவி விரும்பி அத்தலைவன் கைகளையேற்றுக்கொள்ளாது கருத்தில் நீக்கினாள்: விசித்திரமான இச்செயல், அத்தலைவனுக்கு வருத்தத்தை விளைத்தது எனப் பொருளுரைத்தனர். பொய்த்து - நுண்ணியதாய் எனினுமாம். பி - ம்:—[1] கைததலை. [2] நீத்தவன். [3] கருத்தை. [4] நோக்கினள், நீக்கிலன், நீக்கினள். [5] போன்றது. (*1090*)

46. மெல்லிய லொருத்தி[1] தான் விரும்புஞ் சேடியைப்
புல்லிய கையினள் போதி தூதெனச்
சொல்லுவா னுறு[2] முற [3] நாணிற் சொல்லலள்
எல்லையில் பொழுதெலா மிருந்து விம்மினாள்.

(இ - ள்.) மெல் இயல் ஒருத்தி - மெல்லியதன்மையையுடையவளான ஒருபெண், தான் விரும்பும் சேடியை - தன்விருப்பத்திற்கிடனான ஒருபாங்கியை, புல்லிய கையினள்-தழுவிய கையையுடையவளாய், தூது போதி என - தூது போவாயென்று, சொல்லுவான் உறும்-சொல்ல வருவாள்: உற - அங்ஙன் சொல்லவருமிடத்து, நாணில் சொல்லலள்-நாணம் தலையெடுப்பதாற் சொல்லமாட்டாள்: எல்லை இல் பொழுது எலாம் - அளவில்லாதகாலம் முழுதும், இருந்து-(இங்ஙனம் தூதுபோமாறு பாங்கியினிடம் சொல்லவருவதும் நாணத்தாற் சொல்லாது ஒழிவதுமாக) இருந்து, விம்மினாள்-(தன்மனத்திற்குள்ளேயே) அழுங்கினாள்; (எ-று.)

ஒருத்தி, தன்தோழியினிடத்து 'நீ தூதுபோவாய்' என்று சொல்லவருவதும் நாணத்தாற் சொல்லாதொழிவதுமாகவே இராக்காலத்தைப் போக்கினாளென்பதாம். தலைவியின் செயலிற்கு எல்லையில்லாமையைப் பொழுதின்மேலேற்றி, 'எல்லையில் பொழுது' என்றனர்: பிரிவுத்துயரால் பொழுது நெடிதாகத் தோன்றுவது பற்றிக் கூறினாருமாம். பி-ம்:-[1] தன். [2] உறு. [3] நாணும். சிலபிரதியில் சொல்லுதற்கிசைந்துபிணிச் சொல்லிடாள் என்று மூன்றாமடி.

47. ஊறுபே ரன்பினா ளொருத்தி [1] தன்னுயிர்
மாறிலாக் காதலன் [2] செயலை மற்றொரு

நாறுபூங் கோதைபா [3]னவில [4]நண்ணுவாள்
வேறு [5]வே றுளசில மொழிவி ளம்பினுள்.

(இ - ள்.) ஊறு பேர் அன்பினுள் ஒருத்தி - மேன்மேற் சுரக்கின்றபேரன்புடையாளொருபெண், தன் உயிர் மாறு இலா காதலன் - தனக்கு (நாயகியாகிய உயிரையின்றி) வேறோருயிரைப் பெறுதவனாகிய கணவனது, செயலை-(செய்த)பிழைச்செயலை, மற்று ஒரு நாறு பூ கோதைபால் நவில - நறுமணம் வீசுகின்ற மலர் மாலையை யணிந்தவேறொருத்தியினிடத்துச் சொல்லுவதற்கு, நண்ணுவாள் - பொருந்தியவளாய், (அப்போது நாணங்கொண்டு), வேறு வேறு உள சில மொழி-வெவ்வேறாகவுள்ள சில வார்த்தைகளை, விளம்பினுள்-;(எ - று.)—பி - ம்:—[1]ஆங்கொரு, அங்கொரு. [2]செலவை, செவ்வி. [3]சொல்ல. [4]நாணுவாள். [5]வேறுறச். (1092)

48. [1]கருத்தொரு தன்மைய துயிரு மொன்று [2]தம்
அருத்தியு[3]மத்துணை யாய [4]நீரினர்
ஒருத்தியு [5]மொருவனு முடலு [6]மொன்றெனப்
[7]பொருத்தின [8]ரிவரெனப் புல்லி னரரோ.

(இ - ள்.) கருத்து ஒருதன்மையது-(இவர்களுடைய) மனமும் ஒரே தன்மையுடையது: உயிர்உம் ஒன்று - (வெவ்வேறு உடலிற் பொருந்தியிருப்பினும் இவ்விருவருக்கும்) உயிரும் ஒன்றேயாம்; தம் அருத்திஉம் அ துணை ஆய நீரினர்-(ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள) தமது காதலும் (கருத்து முதலியனபோல) ஓரளவிற்பட்ட தன்மையுடையவரான, ஒருவன்உம் ஒருத்திஉம்-கணவனும் மனைவியுமாகிய அவ்விருவரும், இவர் உடல்உம் ஒன்று என பொருத்தினர் என-இவர்களிருவர்க்கும் உடலும் ஒன்றே என்னுமாறு (தம்மைச்) சேரவிட்டனரென்று (கண்டோர்) நினைக்கும்படி, புல்லினர்-(இருவருளரென்று தோன்றாதவாறு இறுகத்) தழுவிக்கொண்டார்கள்; (எ-று.)

இதுவரையில் கருத்து முதலியவற்றால் ஒருமித்த மனைவியும் கணவனுமாகிய இவர், 'இருவர்க்கும் உடலுமொன்றே' என்றும் கண்டோர் கருதுமாறு இறுகத்தழுவினரெனக. [1]உருத்தெரி தன்மையவுயிரும்ஒன்று என்ற பாடம்-காதலனுக்குக் காதலிஉருத்தெரி தன்மைய உயிரும் காதலிக்குக் காதலன் உருத்தெரி தன்மைய உயிருமாவர் ஆதலால், இவ்விருவரும் தமக்கு வேறே அருவவுயிரிருப்பதாகக் கருதா ரென்ற கருத்தைக் காட்டும்: "காணுமரபிற்றுயிரெனமொழிவோர்...பொய் மொழிந்தனரே, யாம் கண்டும்மே யரும் பெறலுயிரோ ... மழைக்கண்மாதர்ப் பணைப் பெருந்தோட்டே;" "ஈதோவந்து நின்றதெம்மன்னுயிரே" என்பன ஈண்டுக் காண்க. பி-ம்:—[2]தாம். [3]இத்துணை. [4]தன்மையால், நீர்மையாள். [5]ஒருத்தனுமுடம்பும். [6]ஒன்றிடப். [7]பொருத்துவர். [8]ஆமெனப்புல்லினரோ, விழிதொறும் பூசலின்கணே. (1093)

49. வெதிர்[1]பொரு தோளின ளொருத்தி வேந்தன்வந்து
எதிர்தலுந் தன்மன மெழுந்து முன்செல

[2]மதிமுகங் கதுமென [3]வணங்கி ஞ[4]ளது
[5]புதுமையா தலினவற் கச்சம் பூத்ததே.

(இ - ள்.) வெதிர் பொரு தோளினுள் ஒருத்தி - மூங்கிலை யொத்த தோளையுடைய ஒரு பெண், வேந்தன் வந்து எதிர்தலும்-(தன்) கணவன் வந்து எதிர்ப்பட்டவளவில், தன் மனம் எழுந்து முன் செல-(அவனிடத்து விருப்பத்தால்) தன்மனமானது (தன்னிடத்தைவிட்டுப்) புறப்பட்டு அவன்பாற் செல்லவும், மதிமுகம் கதுமென வணங்கினுள்-(தனது) மதிபோன்ற முகம் (அவனைக் கண்ணெடுத்துப் பாராமலிருக்குமாறு) விரைவாக வணங்கி நின்றுள்; அது புதுமை ஆதலின்-அவ்வாறு அவள் முகம் வணங்கநின்றது (இதுவரையில் அவளிடத்துக்) காணுதிருந்த செய லாதலால், அவற்கு அச்சம் பூத்தது-அக்கணவனுக்கு அச்சம் உண்டாயிற்று;

கணவனிடத்துத் தனக்கு விருப்பமுளதாகவும் அவன் காலம் நீட்டித்து வந்த குற்றம் பற்றிய சினத்தால் ஒருத்தி முகம்வணங்க நின்றுளாக,அதனுல் அவளது கணவன் அச்சமடைந்தன னென்க. இனி, ஒருசாரார், 'நீர் என்னைப் புறத்தே பிரிந்தீராயினும் என்னகத்தே சிறிதும் பிரிந்தீரில்லை, நானே உம்மைப் புறத்துப் பிரிந்ததுபோலவே உமது உள்ளிடத்தும் பிரிந்திட்டேன். ஆகவே, உம்மிடத்துச் சிறிதும் குற்றமின்று: குற்றவாளியான நான உம்மைக் காணவும் நாணுகின்றேன்' என்று மதிமுகங் கோட்டினுள் எனக் கூறுவர். பி -ம்:—[1]புரை. [2]கதிர். [3]வாங்கினுள். [4]அவள. [5]புதுமையாலதுவவற்கு, புதுமையோவிதுவென, புதுமையவிதுவென, புதுமையவாயினும். *(1094)*

50. துனிவரு நலத்தொடு சோர்கின் றுளொரு
குனி[1]வரு நுதலிக்குக் கொழிந னின்றியே
தனிவரு தோழியுந் [2]தாயை[3]யொத்தனள்
[4]இனியபூந் தென்றலு மிரவு மென்னவே.

(இ-ள்.) துனி வரு நலத்தொடு - ஊடலினுல் வருகின்ற இன்பத்தைக் கருதி, சோர்கின்றுள்-(தன் கணவன் வரும்போது அவனிடம் ஊடல்கொண்டு பின்பு) வருந்துகின்றவளாகிய, ஒரு குனிவரு நுதலிக்கு-வளைந்தநெற்றியையுடைய ஒருத்திக்கு,கொழுநன் இன்றிஏ-(தூதாகச்சென்றும்) கணவனை அழைத்துவராமல், தனிவரு தோழிஉம்-தனியே திரும்பிவந்த பாங்கியும், இனிய பூந்தென்றல்உம் இரவுஉம் என்ன-இனிதாகத்தோன்றுகின்ற அழகிய தென்றற்காற்றும் இராப்பொழுதும்போல, (வருத்தத்தை விளைப்பவளாயிருந்துநின்று), தாயை ஒத்தனள் - தாயைப்போலிடித்துக் கூறுபவளானுள்; (எ - று.)

கணவன் வந்தபோது அவனிடத்து ஊடல்கொண்டு அவன் போன பிறகு மிகவும்வாடி ஒருத்தி தன்தோழியைத் தூதனுப்பினளாக, அப்போது கணவன் இசைந்து வராமையால் கணவனில்லாக்காலத்துவரும் தென்றலும் இரவும்போலக் கணவனை அழைத்து வருகையின்றித் தனித்துவந்த அந்தத்தோழியைக் கண்டு தலைவி

மிகவும்வருந்த, அத்தோழி 'நீ இவ்வாறு சோர்தல் பெண்தன்மைக்குத் தக்கதன்று' என்று தாயைப்போல் அறிவு கொளுத்தி இடித்துக்கூறினளென்க. தலைவி விரும்பியபடி புரிபவளென்பார் "தோழியும்' என்றார்; உம்மை-உயர்வுசிறப்பு. 'இனிவருதென்றலும் என்ற பாடத்துக்கு - நின்னிலை கூறிக் கணவனைக் கொணர்வேன் எனத் தோழி சென்றிருக்கையில், தோழி வார்த்தையில் நம்பிக்கையினலுவந்திருந்த தலைவிக்கு இனிய வாயிருந்த தென்றலிரவுகள் தோழி இடித்துரைத்த பின்னர்த் துன்புறுத்துவன ஆதலால், இனிவருதென்றலு மிரவுமென்னவே என்றதென்க. பி-ம்:—[1] சிலை. [2] தாயும், தானும். [3] ஒன்றியே. [4] இனிதொருமயர்வு பெற்றுய்யுமென்னவே, இனியபூம்பள்ளியினியைந்திட்டாளரோ. (1095)

51. ஆக்கிய காதலா ளொருத்தி[1] யந்தியில்
தாக்கிய தெய்வமுண் டென்னுந்[2] தன்மையள்
நோக்கின ணின்றன [3]ணுவன்ற [4]தோர்கிலள்
போக்கின தூதினே டுணர்வும் போக்கினாள்.

(இ - ள்.) ஆக்கிய காதலாள் ஒருத்தி - (நாயகனுடைய குணம் செயல் முதலியவற்றால்) உண்டாக்கப்பட்ட காதலையுடையளான ஒருத்தி, அந்தியில் தாக்கிய தெய்வம் உண்டு என்னும் தன்மையள்-அந்திக்காலத்திலே தாக்குந் தன்மையுள்ள தெய்வம் தாக்கிற்றென்று சொல்லத்தக்க தன்மையடைந்தவளாய், நோக்கினள் நின்றனள்-(விழித்த கண் இமைக்காமல்) நிலையாணியிட்ட கண்ணோடு நிற்பவளும், நுவன்றது ஓர்கிலள்-(எதிர்நிற்பவர்) சொன்னது (இன்னதென்பதை) அறியும் வல்லமையற்றவளுமாகி, போக்கின தூதினோடு உணர்வும் போக்கினாள் - (தன்கணவனிடத்து) அனுப்பிய தூதினுடனே தன்னுணர்வையும்போக்கி விட்டாள்; (எ - று.)

தாக்கிய தெய்வம்- தாக்கணங்கு. கணவன்மீது காதல் விஞ்சிய ஒருத்தி தனது கணவனிடம் தூதுபோக்கி அத்தூது மீண்டுவருமளவும் பொறுத்திருக்கமாட்டாது உணர்வுஒழிந்து, தெய்வத்தால் தாக்கப்பட்டவள்போல், விழித்தகண் விழித்தவண்ணமே நின்று முன்னிற்பவர் சொல்வது இன்னதென்பதையும் அறியாதவளாயினளென்க. பி-ம்:—[1] காலையால். [2] தன்மையால். [3] நுவன்ற. [4] கேட்கிலள், கேள்வனில். (1096)

52. மறப்பிலள் கொழுநனை வரவு நோக்குவாள்
பிறப்பினெ டிறப்பெனப் பெயருஞ் [1]சிந்தையாள்
துறப்பரு முகிலிடைத் தோன்றும் மின்னெனப்
புறப்படும் [2]புகுமொரு பூத்த கொம்பனாள்.

(இ - ள்.) மறப்பிலள் கொழுநனை வரவு நோக்குவாள்-(தன்) கொழுநனை மறவாதவளாய்[எப்போதுஞ்சிந்திப்பவளாய்] (அவனது) வரவை யெதிர்பார்ப்பவளான, ஒரு பூத்த கொம்பு அனாள்-மலர்கள் அலரப்பெற்ற பூங்கொம்பு போன்ற ஒருத்தி,-பிறப்பினெடு இறப்பு என பெயரும் சிந்தையாள்-பிறப்பும் இறப்பும்போல (க்கணவன் வரு

வான் என்பதனால் மகிழ்ச்சியும் வாராமையால் வருத்தமும்) மாறி மாறி வரப்பெற்ற மனத்தையுடையவளாய், முகிலிடை தோன்றும் துறப்பு அரு மின் என-மேகத்தினிடையே காணப்படுவதால் (அதைவிட்டு) அப்பாற்படுத்துவதற்கு அரியதான மின்னல்போல, புறப்படும்-(கணவன்வருகையை நோக்கி வீட்டின்) வெளியே வந்து பார்ப்பாள்; புகும்-(அவன் வாராமையாலுண்டான வருத்தத்தினால் வீட்டினுள்) புகுந்து வருந்தி நிற்பாள்; (எ-று.)

கணவன் வந்தே தீருவானென்ற எண்ணத்தினால் மகிழ்ச்சியும், காரியாந்தரத்து மன மூன்றியவனாயின் வாரானே என்ற எண்ணத்தினால் வருத்தமும் மாறிமாறி வருதற்கு, மகப்பிறந்ததென்றால் மகிழ்ச்சியும் சுற்றம் இறந்ததென்றால் வருத்தமும் மாறிமாறி வரக் காரணமாகும் பிறப்பு இறப்புக்கள் உவமை. அங்ஙன் மகிழ்ச்சியும் துயரமும் மாறிமாறி வரப்பெற்றுத் தடுமாறுபவளாய் ஒரு தலைவி தன்னில்லத்தினின்று புறப்படுவதும் புகுவதுமாயினாளென்க. "வருவார் கொழுநரெனத் திறந்தும் வாரார் கொழுநரென வடைத்துந், திருகுங்குடுமிவிடியளவும் தேயுங் கபாடம்" என்றது, காண்க. பி-ம்: [1] சிந்தையால். [2] புகப்படப்புரையுணின்றதோ. (1097)

53. எழுதருங் கொங்கைமே லனங்க [1] னெய்தவம்பு
[2] உழுதவெம் புண்களில் வளைக்கை யொற்றினாள்
அழுதனள் சிரித்தன ளற்றஞ் [3] சொல்லினாள்
தொழுதன ளொருத்தியைத் தூது [4] வேண்டியே.

(இ-ள்.) (ஒருத்தி),—எழுது அரு கொங்கைமேல் அனங்கன் எய்த அம்பு உழுத வெம் புண்களில் - எழுதுவதற்கு அரிய [மிக அழகிய] தனங்களில் மன்மதன் எய்த அம்புகள் துளைத்ததனால் தோன்றியகொடிய புண்களில், வளை கை ஒற்றினாள்-வளையல்களையணிந்த (தன்) கைகளை (வைத்து வைத்து) ஒற்றியவளாய், அழுதனள்-(வருத்த மிகுதியால்) அழுதாள்; சிரித்தனள்-(தனக்கு நேர்ந்த நிலையைக் குறித்துச்) சிரித்து, அற்றம் சொல்லினாள்-(தன்) துன்பத்தைச் சொல்லினவளாய், ஒருத்தியை தூது வேண்டி தொழுதனள்-(தன்) பாங்கி யொருத்தியைத் (தன் கணவனிடத்துத்) தூது செல்லுமாறு வணங்கினள்; (எ-று.)

புண்ணுேவு மிகுகையிற் கையை வைத்து வைத்து ஒற்றுதல் இயல்பு. சிரிப்பு, தனக்கு நேர்ந்த எளிவரவு பற்றியது. பி-ம்:-[1] எய்யவும். [2] உழுதரும். [3] சொல்லலள். [4] வேண்டினாள், வேண்டுவாள். ()

54. ஆர்த்தியு முற்றது மறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையி னுணர்த்துதல் [1] மாசன் றேவெனா
வேர்த்தனள் வெதும்பினண் மெலிந்து [2] சாய்ந்தனள்
பார்த்தன [3] ளொருத்திதன் [4] பாங்க னாளையே.

(இ-ள்.) ஒருத்தி—,—'உற்றதுஉம் - (தனக்கு) நேர்ந்துள்ளதும் [பிரிந்த கணவனவராமல் தாமதிப்பதும்], ஆர்த்திஉம்-(அதனால் தனக்கு நேர்ந்துள்ள) வருத்தமும் ஆகிய, அற்றம்-(தன்) குறையை, அறிஞர்க்கு-(கண்கூடாகப் பார்ப்பதனால்) உணர்ந்திருப்

பவர்கட்கு, வார்த்தையின்-வாய்வார்த்தைமூலமாக, உணர்த்துதல்-தெரிவித்தல், மாசு அன்றோ - இழுக்கல்லவோ?' என - என்று கருதி, (தான் உற்றதையும் தன் ஆர்த்தியையும் பாஙகிக்கு வாய் விட்டுக் கூறாமல்), வேர்த்தனள்-உடல் வியர்த்து, வெதும்பினள்-மனம் வெதும்பி, மெலிந்து - மிகவாடி, சாய்ந்தனள்-(அணையிற்) சாய்ந்தவளாய், தன் பாஙகு அனளை பார்த்தனள் - (நீ இக்காலத்தில் கணவனை வருவித்தற்குரிய வகையை நாடாமல் இங்ஙனம் உபேட்சிப்பது தகுதியோ என்னுங் குறிப்புத் தோன்றத்) தன் பக்கத்திலுள்ள அந்தத் தோழியைப் பார்த்தாள்; (எ - று.)—பி - ம்:-[1]அரிதன்றோ மனம், வறிதன்றோவென, வறிதன்றோ வெனும். [2]சோர்ந்தனள். [3]ஒத்தனள். [4]பாங்கினளையே. (1099)

55.—மன்மதனுக்கு அப்போது களிப்பு உண்டாதல்.

தனங்களி னிளையவர் தம்மின் மும்மடி
கனங் [1]கன [2]மிடையிடைக் களிக்குங் கள்வனாய்
மனங்களி [3]னுழைந்தவர் [4]மாந்து [5]தேறலை
அனங்கனு [6]மருந்தின னாதல் [7]வேண்டுமால்.

(இ - ள்.) தனங்களின் இளையவர் தம்மின்-தனங்களையுடைய இளம் பெண்களைக்காட்டிலும், மும்மடி - மூன்று மடங்கு, கனம் கனம்-மிகவும் அதிகமாக, இடை இடை-அவ்வவ்விடங்களில், களிக்கும்-(மன்மதன்) களிப்புக்கொண்டு திரிவானானன்; (அங்ஙனம் அவன் திரிதற்குக்காரணம்), கள்வன் ஆய் - திருடன்போன்று (பிறருக்குத் தெரியாமல்), மனங்களில் நுழைந்து - (ஆங்குள்ள ஆடவர்மகளிர் என்ற இருதிறத்தாரின்) நெஞ்சினுள்ளே புகுந்து, அவர் மாந்து தேறலை-அவர்கள் பருகின கள்தெளிவை, அனங்கன் உம்-, அருந்தினன் ஆதல்வேண்டும்-பருகியிருத்தல் வேண்டும்;

மதுப்பருகின மயக்கத்தால் போர்வை விலகியதையும் உணராமல் தனங்கள் வெளித்தெரிய நிற்கின்ற மகளிரென்பார், 'தனங்களினிளையவர்' என்றார். இடையிடைஎன்றது-தரளநீழல், எழினிசூழல், பளிங்கடுத்தகானம், பூம்பந்தர் என்று இப்படலத்தில் ஐந்தாஞ்செய்யுளிற் கூறிய இடங்கள். இது, அநுமானாலங்காரம். பி-ம்:-[1]களி. [2]மடை. [3]நுழைதர. [4]அருந்தத். [5]தென்றலை. [6]நுகர்ந்தனன். [7]வேண்டுமே, வேண்டுமோ. (1100)

வேறு.

56.—இது முதல் பத்துக்கவிகள்—மதுவுண்ட ஆடவர்க்கும் மகளிர்க்கும் உண்டான கூடல்ஊடல் முதலியவற்றைத் தெரிவிக்கும்.

நறைகமழலங்கன் மாலை [1]நளிர்நறுங் குஞ்சி மைந்தர்
துறையறி கலவிச் செவ்வித் தோகையர் தூசு வீசி
நிறையக லல்குல் புல்குங் [2]கலை[3]பழித் தகல நீத்தார்
அறைபறை [4]யனைய நீரா ரருமறைக் காவ ரோதான்.

(இ-ள்.) நறை கமழ் அலங்கல் மாலே ஙளிர் நறு குஞ்சி மைந்தர்- தேன்மணம் வீசுகின்ற அசையுந்தன்மையுள்ள மலர்மாலேசூடிய குளிர்ந்த நறியகுடுமியையுடைய ஆடவர்கள்,—துறை அறி-கரண வகைகளே யறிந்த, கலவி செவ்வி தோகையர்-புணர்ச்சிக்குரிய பக்கு வத்தையுடைய மகளிரின், தூசு-ஆடைகளே,வீசி-அப்பால் எறிந்து விட்டு, (அவ்வளவோடு நில்லாமல்), நிறை அகல் அல்குல் புல்கும் கலே பழித்து அகல நீத்தார்-நிறைந்து அகன்ற அல்குலே நெருங்கிச் சூழ்ந்த மேகலேயென்னும் இடையணியையும் வெறுத்து அப்பா லெறிந்தார்கள்; (இது தக்கதே); அறை பறை அனைய நீரார் - ஒலிக் கின்ற பறைபோன்ற [எப்போதும் வாய்விட்டுக் கத்துந் தன்மையை யுடைய]வர்கள், அரு மறைக்கு ஆவர் ஓ - வெளிப்படுத்தற்குக் கூடாத இரகசியச்செயல் நிகழும்போது உடனிருக்கத்தக்கவர் களோ? [தக்கவரல்லரன்றோ?] (எ - று.)

ஆடவர் மகளிருடன் புணரும்போது அவர்களது ஆடையை நீத்தது முறையே: அம்மகளிரிடையிலணிந்த மேகலேயை நீத்தது என்னெனின், புணர்ச்சி நிகழும்போது அவ்வணிகலம் ஒலித்துப் பிறர்க்கு அச்செயலேப் புலப்படுத்துமென்று கருதியதனு லென்க. நான்காமடி மூன்ருமடியைச் சமர்த்தித்துநின்றது வேற்றுப்பொருள் வைப்பணி. இந்நூலாசிரியர், உவமை அணிகள் மூலமாகப் பல அரிய விஷயங்களே அறியுமாறு வைத்திருப்பது, மிகவும் பாராட் டத்தக்கது. பி - ம்:—[1]நளி. [2]கலன். [3]கழித்து. [4]அறையும். (1101)

57. பொன்னருங் [1]கலனுந் தூசும் புறத்துள துறத்தல் [2]வம்போ
நன்னுத லொருத்தி தன்பா லகத்துள நாணு நீத்தாள்
உன்னருந் துறவு பூண்ட [3]வுரனுடை யொருவ னேபோல்
தன்னேயுந் துறக்குந் தன்மை காமத்தே [4]தங்கிற் றன்றே.

(இ - ள்.) புறத்துஉள - (உடலின்) வெளிப்புறத்துள்ளனவா கிய, பொன் அரு கலன்உம்-பொன்னுலாகிய அழகிய மேகலாபரணத் தையும், தூசுஉம் - ஆடையையும், துறத்தல் - (ஒருத்தி) துறந்தா ளென்பது, வம்புஓ-புதுமையோ? நல்நுதல் ஒருத்தி - அழகிய நெற் றியையுடையஒருபெண், தன்பால் - தன்னிடத்து, அகத்துஉள நாண் உம்-உடலினுள்ளேயுள்ள நாணத்தையும், நீத்தாள்-விட்டிட் டாளே; உன்ன அரு துறவு பூண்ட உரன் உடை ஒருவன்போல்- (மனத்தினுல்) நினேப்பதற்கும் அருமையாயுள்ள துறவுத்தொழிலே மேற்கொண்ட மனவுறுதியையுடைய சந்நியாசியைப்போல, தன்னே உம் துறக்கும் தன்மை- தான் என்று சொல்லத்தக்கதையும் துறந்து விடக்கூடிய நிலேமை, கர்மத்துஏ தங்கிற்று அன்றே·காமத்தி னிடத்திலேயே தங்கியுள்ளதல்லவா? (எ - று.)

கலவி நிகழுமாறு ஒருத்தி ஆடையையும் மேகலேயையும் கழற்றி எறிந்து நாணமின்றிக் கிடந்தாளென்பதாம். மசடூஉக் குணங்களுள் மிகச்சிறந்த நாணத்தையே நீத்தவள் கலனேயுந் தூசையும் நீத்ததிற் புதுமையில்லே யென்பது, முன்னிரண்டடிக ளின் பொருள். இவ்வடிகள்-கைமுதிக நியாயம்பற்றி வந்ததனுல், தொடர்நிலேச்செய்யுட்பொருட்பேறணியாம். ஒருத்தி நாணத்தை

நீத்தாளென்ற சிறப்புப்பொருளைத் தன்னையே துறக்குந்தன்மை காமத்தே தங்கிற்றன்றே என்ற பொதுப்பொருள் கொண்டு சமர்த்தித்தது,—வேற்றுப்பொருள்வைப்பணியாம். சந்நியாசிக்குத் தன்னைத் துறத்தல் - தன்னுயிரினிடத்தும் பற்றின்றி யிருத்தல்; காமங்கொண்ட மகட்குத் தன்னைத் துறத்தல் - தானென்று சொல்லுமாறு மகடூஉக்குணங்களுட் சிறந்த நாணத்தைத் துறத்தல். இனி, ஈற்றடிக்கு—தன்னையேமறந்து அவசமாகிப்போகுந் தன்மை காமக்கலவியில் இருப்பது இயல்பேயன்றோ என்று உரைப்பாருமுளர். வம்போ, ஓ-எதிர்மறை. ஒருவனே, காமத்தே, ஏ-பிரிநிலை. பி-ம்:—[1]கலையும். [2]வம்பே, போதி. [3]உணர்நடை. [4]தயங்கும். (1102)

58. பொரு[1]வறு மதனன் போல்வா னொருவனும் பூவின் [2]மேலைத்
திருவினுக் குவமை [3]சால்வா ளொருத்தியுஞ் சேக்கைப் போரில்
ஒருவருக் கொருவர் தோலா ரொத்தன ருயிரு மொன்றே
[4]இருவர துணர்வு மொன்றே யென்றபோ தியாவர்[5]வெல்வார்.

(இ - ள்.) பொரு அறு மதனன் போல்வான் ஒருவன்உம் - (தனக்கு எவரையும்) ஒப்பாகப் பெறாதவனான மன்மதனுக்கு உவமை சொல்லத்தக்கவனாகிய ஆடவனொருத்தனும், பூவின்மேலை திருவினுக்கு உவமை சால்வாள் ஒருத்திஉம்-தாமரைமலர் மேலிருப்பவளாகிய இலக்குமிக்கு உவமையாதற்குஏற்ற மேன்மையையுடையவளாகிய ஒரு நங்கையும், சேக்கை போரில்-படுக்கையில் நிகழ்ந்த கலவிப் போரிலே, ஒருவருக்கு ஒருவர் தோலார் ஒத்தனர்-ஒருத்தர்க்கு ஒருத்தர் பின்னிடையாதவராய்ச் சமமாக விருந்தனர்; (இது தக்கதே); இருவரது உயிர்உம் ஒன்றுஏ உணர்வுஉம் ஒன்றுஏ என்ற போது-இவ்விருவருக்கும் உயிரும் உணர்ச்சியும் ஒன்றேயாக விருக்குமென்றால், யாவர்வெல்வார்—?—(எ - று.)

ஒருபொருள் தன்னைத்தானே வெல்லுதலென்பது நிகழ்தற்குரியதல்லாத செயலாதலால், யாக்கையால் அந்த மாதும் மகனும் வேறுபட்டுத் தோன்றினும், உயிரும் உணர்வும் ஒன்றேயான அவ்விருவரும் கலவிப்போரிலும் ஒத்திருந்தனரென்பதாம். ஒருவருக்கொருவர் தோலா ரொத்தனர் என்ற தொடரைப் பின்வரும் வாக்கியம் சாதித்துநின்றது - தொடர்நிலைச்செய்யுட்குறியணியாம். திருவினுக்கு உவமைசால்வா ளொன்று பின்வந்ததற்கு ஏற்ப, மதனன் போல்வானென்பதற்கு - மதனனுக்கு ஒப்பாகத் தக்கவனென்று பொருள் கூறப்பட்டது;இவை-எதிர்நிலையணி. இவற்றால் ஆடவனும் நங்கையும் மதனன் இலக்குமி இவர்களினும் விஞ்சிய எழிலை யுடையவ ரென்பது, பெறப்படும்; உபமேயத்தினும் உபமானம் சிறந்திருக்கவேணுமென்பது அணி நூலுடையார்கொள்கை. பி-ம்:-[1]அரு. [2]வேலைத், மேலத். [3]சொல்வாள், அன்னாள். [4]இருவர்தம். [5]வல்லார்.

59. கொள்ளைப்போர் வாட்கண் ணாளங் கொருத்தியோர் குமர னன்
[1]வள்ளற்று ரகலந் தன்னை மலர்க்கையாற் புதைப்ப நோக்கி[னன்
[2]உள்ளத்தா ருயிரன் னண்மே லுதைபடு மென்று [3]நீர்நும்
கள்ளத்தாற் [4]புதைத்தீ ரென்னு முன்னையிற் கனன்று மிக்காள்.

(இ - ள்.) கொள்ளை போர் வாள் கண்ணுள் ஒருத்தி - (உயிரைக்) கொள்ளை கொள்ளுதலையுடைய போரிற் பயில்கின்ற வாட்படைபோன்ற கண்களையுடைய ஒருத்தி,—அங்கு - அவ்விடத்து, (ஊடலினால் கணவன்மார்பிலே உதைக்கப்புகுந்தாளாக), ஓர் குமரன் அன்னான் வள்ளல் - முருகக்கடவுளையொத்தவனான [மிகஅழகிய] (அக்) கணவன், '(நமதுவலியமார்பிலுள்ள தார் அவளது அனிச்சப்பூப்போலும் மெல்லிய தாளிற் பட்டால் முட்போலப் பொத்துமே' என்ற கருத்தினால்), தார் அகலம்தன்னை மலர் கையால் புதைப்ப-மாலையையணிந்த (தனது) மார்பைத் தாமரைமலர்போன்ற கையால்மூட, நோக்கி - (அதனை அவள்) கண்டு,—உள்ளத்து ஆர் உயிர் அன்னாள்மேல் உதைபடும் என்று நீர் நும் கள்ளத்தால் புதைத்தீர் என்னா-'(நுமது) மனத்துக்குள்ளே பொருந்திய உயிர் போன்ற ஆசைநாயகியின்மேல் (என) உதைபடுமென்று அஞ்சி நீர் உமது வஞ்சனைக்குணத்தால் (மார்பைக் கையைக்கொண்டு) மூடுகின்றீர்' என்று சொல்லி, முன்னையில் கனன்று மிக்காள்-முன்னிலும் மிகவும் அதிகமாகச்சீறினாள்; (எ-று.)

ஒருத்தி தன்புருஷனது மார்பில் ஊடலா லுதைக்கப்போக, அவன் தன்மார்பிலிருக்கிற தார் அவள் காலில் உறுத்துமேயென்று இரக்கத்தினால் அவள் கால்படா முன்னமே கையினாலே மூடிக்கொண்டானாக, அது கண்டு அவள் 'உமது இதயத்திலிருக்கிற மாதின்மேல் உதைபடுமென்றன்றோ நீர் மூடிக்கொண்டீர்' என்று முன்னிலும் அதிகமாகச் சினந்து புலந்தாளென்க. இது-தகுதியின்மையணிவகையிற் சேர்ந்தது. [1]வள்ளத்தார் என்ற பாடத்துக்கு, வளம் என்பது வள்ளம் என விகாரம்பெற்று நின்றதென்க. பி-ம்:—[2]உள்ளத்தாள். [3]நீரின். [4]புதைத்தியென்னா, புதைத்ததீது.

60\. பா[1]லுள பவளச் செவ்வாய்ப் [2]பணைமுலை[3] நிகர்த்த மென்றோள்
வேலுள நோக்கி னாளோர் [4]மெல்லியல் வேலை [5]யன்ன
மாலுள சிந்தை [6]யானோர் [7]மழையுள [8]தடக்கை யாற்கு
மே[1]லுள வரம்பை மாத ரென்பதோர் விருப்பை யீந்தாள்.

(இ - ள்.) பால் உள பவளம் செவ் வாய் - பாலின் சுவையமைந்த பவளம்போன்ற செந்நிறமுள்ள வாயையும், பணை முலை-பருத்த தனங்களையும், நிகர்த்த மெல் தோள் - (ஒன்றையொன்று) ஒத்த மெல்லிய தோளகளையும், வேல் உள நோக்கினாள் - வேற்படையையொத்த கண்களையுமுடையவளான, ஓர் மெல்இயல்-மெல்லிய தன்மையையுடைய ஒருத்தி,—வேலை அன்ன மால் உள சிந்தையான் - கடலையொத்த காதலைக்கொண்ட நெஞ்சத்தையுடையவனாகிய, ஓர் மழை உள தட கையாற்கு - ஒப்பற்ற (கைம்மாறு கருதாது கொடுக்குந் தன்மையால்) மேகத்தையொத்த நீண்டகையையுடைய ஒருமகனுக்கு, மேல் உள அரம்பை மாதர் என்பது ஓர் விருப்பை - வானத்திலுள்ள அரம்பைமாது ஆவள் இவள் எனறு கருதுதற்கேற்ப ஒப்பற்ற விருப்பத்தை, ஈந்தாள்—; (எ - று.)

காரியப்பெயரைக் காரணப்பெயரால் உணர்த்தியதாகக் கொண்டு, விருப்பமென்பதற்கு-இன்பமென்று பொருளுரைப்பாரு

முளர். பி-ம்:—[1] உளர். [2] பல்வளை, பால்வளை. [3] பணைத்த. [4] மெல்லிய. [5] என்று. [6] ஆங்கோர். [7] மழையுளார், மழைவளர். [8] தடக்கையார்க்கு.

வேறு.

61. [1] புனத்துறை மயிலனாள் கொழுநன் பொய்யுரை
[2] நினைத்தனள் சீறுவா ளொருத்தி நீடிய
[3] சினத்தொடு [4] காதல்கள் [5] செய்த போரிடை
மனத்துறை காதலே வாகை கொண்டதே.

(இ - ள்) புனத்து உறை மயில்அனாள் - மலைக்கொல்லையில் வாழ்கின்ற மயிலையொத்தவளாகிய, கொழுநன் பொய் உரை நினைத்தனள்சீறுவாள் ஒருத்தி - கணவனது பொய்ம்மொழியை நினைத்துக் கோபிக்கின்றவளாகிய ஒருநங்கையினது, நீடிய சினத் தொடு காதல்கள் செய்த போரிடை - (மனத்திற் கொண்ட) மிக்க வெகுளியோடு காதல்கள்செய்த போரில், மனத்து உறை காதல்ஏ - (அவளது)மனத்தில் தங்கிய ஆசையே, வாகைகொண்டது வெற்றி பெற்றது; (எ - று.)

கணவன் முன்னர்ப் பொய்த்த காரணத்தாற் சினங்கொண்ட ஒருத்திக்கு மனத்திற் காதலும் மிகுதலினாலே கணவனோடுஊடிக் கூடாமலிருக்கவேணு மென்ற கருத்தோடு கூடவேணுமென்ற கருத்தும் மாறிமாறித்தோன்ற, முடிவில் ஊடலைவிட்டுக் கூடலானா ளென்பதாம். மூன்றுமடியில், [3] சினத்தினைக் காதலன் சேக்கைப் போரிடை என்ற பாடத்திற்கு—கணவனுடைய பொய்யுரையினால் மனத்திற் சினம்மூண்டு ஊடல்கொண்ட ஒருத்தி (கலவிப்போர்க்கு உரிய அத்தருணத்திற் காதல்விஞ்சியதனால்) மனத்திற்கொண்ட சீற்றத்தையும் மறந்து கணவனோடு கலவிக்கு இணங்கினளென்க, வென்றோர் வாகைமலரைச் சூடுவரென்பது தமிழர்மரபு ஆதலால், இங்கே வாகையென்ற சொல்-இலக்கணையால் வெற்றியையுணர்த் திற்று. பி - ம்:—புனத்துள. [2] நினைத்தன, நினைத்தது. [4] காதலன், காதலாள். [5] சேக்கைப். (1106)

62. கொலையுரு [1] வமைத்தெனக் கொடிய நாட்டத்தோர்
கலையுரு வல்குலாள் கணவற் [2] புல்குவாள்
சிலையுரு வழிதரச் [3] செறிந்த மார்பிற்றன்
முலையுரு வினவென [4] முதுகை நோக்கினாள்.

(இ - ள்.) கொலை உரு அமைத்துஎன கொடிய நாட்டத்து - கொலைத்தொழில் செய்யும்பொருளை உருவஞ்செய்து வைத்தாற் போன்ற மிகக்கொடிய கண்களையுடையவளும், ஓர் கலைஉருவு அல் குலாள் - கலையை உருவிப்புறப்படுகின்ற கடிதடத்தையுடையவளு மான ஒருத்தி, கணவன் புல்குவாள்-(தன்) கணவனை இறுகத் தழுவுபவளாய், சிலை உரு அழிதர செறிந்த மார்பில்-மலையும் (தன்) உருவம் தோற்கும்படி திண்ணியதாகவுள்ள (அக்கணவன்) மார் பில், தன்முலை உருவின என முதுகை நோக்கினாள்-தனது தனங் கள் ஊடுருவிச்சென்றனவோ என்று கருதி (அவனது) முதுகைப் பார்த்தாள்; (எ-று.)

மிகவும் இறுகப்புல்லினமையால் ஒருகால் தனது தனங்கள் கணவன்மார்பைத் துளைத்து அவனது முதுகின்புறத்து வந்தனவோ என்று அதனைப்பார்த்தாள்; தொடர்புயர்வுநவிற்சியணி. பி - ம்:—[1] அமைந்தன, அமைந்தெனக், அமைத்தன. [2] புல்லுவாள். [3] சிறந்த. [4] முதுகின். (1107)

63. குங்கும [1] முதிர்ந்தன கோதை சோர்ந்தன
சங்கின [2] முரன்றன கலையுஞ் [3] சாய்ந்தன
பொங்கின [4] சிலம்புகள் பூச லிட்டன
மங்கைய ரிளநல மைந்த ருண்ணவே.

(இ - ள்.) மங்கையர் இள நலம் மைந்தர் உண்ண-மாதர்களுடைய புதிய இன்பத்தை ஆடவரனுபவித்தலால்,— குங்குமம் உதிர்ந்தன - (அவர்கள் மார்பிலணிந்திருந்த) குங்குமத்தொய்யில்கள் உதிர்ந்தன; கோதை சோர்ந்தன - கூந்தல்கள் அவிழ்ந்தன; சங்கு இனம் முரன்றன-(கையிலணிந்த) சங்கவளையல்கள் ஆரவாரித்தன; கலை உம் சாய்ந்தன-மேகலைகளும் தளர்ந்தன; சிலம்புகள் பொங்கின பூசல் இட்டன-சிலம்பென்னுங் காலணிகள் மிகுந்து ஒலி செய்தன; (எ - று.)

மங்கையரின்நலம்-மங்கையருண்டாக்கிய புதிய இன்பம். இதனாற் புருடாயிதமென்னுங் கரணங் கூறியவாறுயிற்று; அதற்கேற்ப, குங்குமமுதிர்தல் கோதைசோர்தல் முதலியன கூறப்பட்டிருத்தல் காண்க. தன்மைநவிற்சியணி; அன்றியும், உதிர்தல் முதலிய பல செயல்கட்கு ஒருங்கு சேர்க்கைகூறியது, கூட்டவணியாம். பி-ம்:— [1] திமிர்ந்தன. [2] ஆர்த்தன. [3] சாற்றின. [4] சிலம்பொலி, சிலைமணி, சிலையொடு. (1108)

64. துனி [1] யுறு புலவியைக் காதல் சூழ்சுடர்
பனியெனத் [2] துடைத்தலும் [3] பதைக்குஞ் [4] சிந்தையாள்
புனை [5] யிழை யொருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு [6] நலத்தினுற் [7] கணவற் புல்லினுள்.

(இ - ள்.) காதல்-காமமானது, துனி உறு புலவியை-துயரம் மிகுதற்குக் காரணமான ஊடலை, சூழ் சுடர் பனி என துடைத்தலும்-சூழ்ந்த கிரணங்களையுடைய சூரியன் பனியைப் போக்குவது போலப் போக்குதலும்,—புனை இழை ஒரு மயில்-ஆபரணங்களையணிந்த மயில்போலுஞ் சாயலையுடைய ஒருத்தி, — பதைக்கும் சிந்தையாள்-பதறுகின்ற மனமுடையவளாய், பொய் உறங்குவாள்-பொய்யே யுறங்குபவளாகி, கனவு எனும் நலத்தினுல் கனவு என்கின்ற நல்ல உதவியினுல், கணவன் புல்லினுள்-கணவனைத் தழுவினுள்; (எ - று.)

ஊடல்கொண்ட ஒருத்தி காதல் விஞ்சியதனுல் மனத்திலுள்ள புலவி போய்விட, தானே கணவனைச்சென்று தழுவுதற்கு நாணிப் பொய்யுறக்கங்கொண்டு கனவில் அஞ்சினவள்போன்று அருகிலிருந்த கணவனைப் புல்லினளென்க. நாணமற்றுத் தானே கணவனைப் புல்லினுளென்று பிறர் ஏசாமலிருத்தற்குக் கனு மிகவும்

உதவியதனால், 'கனவெனும் நலத்தினால்' என்றார். சூழ்சுடர்-அன்மொழித்தொகை. பி - ம்:—[1] அறு. [2] துரத்தலும், துறத்தலும். [3] பணித்த. [4] சிந்தையால். [5] குழல், வினை. [6] சினத்தினால். [7] காதற். (1109)

65. வட்டவாண் [1] முகத்தொரு மயிலு மன்னனும்
கிட்டிய போ[2] துடல் [3] கிடைக்கப் புல்லினர்
விட்டிலர் கங்குலின் விடிவு கண்டிலர்
ஒட்டிய வுடல்[4] பிரிப் [5] புணர்கி லாமையால்.

(இ - ள்.) வட்டம் வாள் முகத்து ஒரு மயில்உம்-வட்டமாகிய ஒளி பொருந்திய முகத்தையுடைய மயில்போல்வா ளொருத்தியும், மன்னன்உம்- ஒரு புருஷனும், கிட்டியபோது - (ஒருவர்க்கொருவர்) நெருங்கியபோது, கிடைக்க-(இறுகத் தழுவுவதற்கு ஏற்ற தருணம்) வாய்த்ததனால், உடல்-(தமது) உடம்புகளினால், புல்லினர்-இறுகத் தழுவியவர்களாய்,— ஒட்டிய உடல்-ஐக்கியப்பட்ட (தமது) உடம்பை, பிரிப்பு-பிரிக்கும்வகையை, உணர்கிலாமையால்-அறிய மாட்டாமையால், விட்டிலர்-(தழுவிய கையை) விடாதவராயினர்; கங்குலின் விடிவு கண்டிலர்-இரவு விடிந்த தென்பதையும் அறியாதவராயினர்; (ஏ - று.)

பலநாளாகப் பிரிந்திருந்த மயிலனை யொருத்தியும் மன்னவனொருவனும் தருணம் வாய்த்ததனால் தழுவப் பொழுதுபுலரவும் பிரியமாட்டாராயின ரென்க. பி-ம்:[1] முகத்தருமன்னன்மைந்தரும். [2] உடன். [3] கிடக்கப், கிடந்து. [4] பிறிது. [5] ஒண்கிலாமையால். (1110)

66.—கங்குற்போது கலவியாற் கழிதல்.

அருங்களி மால்களி றனைய வீரர்க்கும்
கருங்குழன் மகளிர்க்குங் கலவிப் பூசலால்
நெருங்கிய வனமுலை சுமக்க [1] நேர்கலா
[2] மருங்குல்போற் றேய்ந்ததம் மாலைக் கங்குலே.

(இ - ள்.) அரு களி - (தணித்தற்கு) அரிய களிப்பினையுடைய, மால் களிறு அனைய வீரர்க்குஉம் - மதமயக்கங்கொண்ட ஆண்யானைகளை யொத்த வீரர்கட்கும், கரு குழல் மகளிர்க்குஉம்-கரிய கூந்தலையுடைய மாதர்கட்கும், கலவி பூசலால் - கலவிப் போரினை நிகழ்த்துவதனால், அ மாலை கங்குல் - மாலை யென்று வழங்கப்படுகின்ற அந்த இரவானது, நெருங்கிய வன முலை சுமக்க நேர்கலா மருங்குல் போல் - (ஒன்றோடொன்று) நெருங்கியுள்ள அழகிய தனங்களைச் சுமப்பதற்கு வல்லமையமைந்திராத (மாதர்களின்) இடையைப் போல, தேய்ந்தது-(வரவரக்) குறைந்தது;

கங்குற்போது கழிந்ததேயன்றி, வீரர்க்கும் மகளிர்க்கும் கலவிப்போரினால் நிகழ்ந்த இன்பம் கழிந்திலதென்றவாறு. மேற்கூறிய வேட்கைப் பெருக்கச் செயலெல்லாம் நிகழ்ந்ததற்கு இடனான பெருமையுடைமையால் 'அம்மாலைக் கங்குல்' என்று சுட்டினார். 'மாலைக்கங்குல்' என்ற ஒருபொருட்பன்மொழியும், சிறப்புக் கருதியே. பி - ம்:—[1] நேர்கிலா, நோக்கிலா. [2] மருங்கெனத். (1111)

67.—சந்திரனத்தமித்தலும், சூரியனுதித்தலும்.

கடை[1]யுற நன்னெறி காண்கி லாதவர்க்கு
இடையுறு திருவென விந்து [2]நந்தினன்
படர்திரைக் [3]கருங்கடற் பரமன் மார்பிடைச்
சுடர்[4]மணிக் கரசென விரவி தோன்றினன்.

(இ - ள்.) நல்நெறி-புண்ணியச்செய்ல்களை, கடை உற காண்கிலாதவர்க்கு - முடிவுபொருந்த [பூர்ணமாக]ச் செய்யாதவர்கட்கு, இடைஉறு திருஎன - நடுவே (சிலகாலம்) சேர்ந்த செல்வம்(அழிவது) போல, இந்து நந்தினன் - சந்திரன் அத்தமித்தான்; பரமன் மார்பிடை சுடர் மணிக்கு அரசு என - எல்லாக்கடவுளரினுஞ் சிறந்த முழுமுதற்கடவுளாகிய திருமாலின் திருமார்பிலே விளங்குகின்ற மணியரசு ஆகிய கௌஸ்துபவிரத்தினம் (தோன்றுவது) போல, படர் திரை கரு கடல்-பரவிய அலைகளையுடைய கரிய கடலிலே, இரவி-சூரியன், தோன்றினன்—; (எ - று.)

சொற்பமாகப் புண்ணியஞ்செய்பவர்க்கு அவர்செய்த நல்வினைக்கேற்பச் சிறிதுகாலஞ் செல்வந் தோனறிப் பின்பு போய்விடுதல் இயல்பு; அதனைச் சந்திரன் தோன்றி அத்தமித்ததற்கு உவமை கூறினர். கரிய கடலிலே சோதிமயமான சூரியன் தோன்றியதற்கு, கரியவனான திருமாலின் திருமார்பிலே கௌத்துபவிரத்தினம் விளங்குவது உவமையாம்: உவமையணி. பி-ம்:—[1]உறு [2]நந்திட. [3]பாற். [4]மணியாமென, மணியரசென. (1112)

உண்டாட்டுப்படலம் முற்றிற்று.

18.—ஆவது எதிர்கொள்படலம்.

சனகராசன் தனது பரிவாரங்களுடனேவந்து தசரதசக்கரவர்த்தியை எதிர்கொண்டு உபசரித்து அழைத்துப்போகின்ற செய்தியைக் கூறும் பாகம்: எதிர்கொள்ளுதல்-எதிரில்வந்து அளவளாவி உடன்கொண்டு செல்லல்; இது, மரியாதை. இவ்வெதிர்கோளில் இராமலட்சுமணர் தசரதனை யெதிர்ந்ததும் அடங்கு மென்பர். இது - எதிர்கோட்படலம் என்றும், எதிரெழுச்சிப்படலம் என்றும், எதிர்கொண்டபடலம் என்றும் பிரதிகளிற் காணப்படுகின்றது.

வேறு.

1.—தசரதன் சேனையுடன் கங்கையை யடைதல்.

அடாநெறி [1]யறைதல் [2]செல்லா வருமறை [3]யறைந்த நீதி
விடாநெறிப் புலமைச் செங்கோல் வெண்குடை வேந்தர் வேந்தன்
படாமுக [4]மலையிற் [5]றேன்றும் பருவ[6]மொத் தருவி [7]பல்கும்
கடா[8]நிறை யாறு பாயுங் கடலொடுங் கங்கை சேர்ந்தான்.

(இ - ள்.) அடா-(அந்த அந்த வருணங்களுக்கும் ஆச்சிரமங்களுக்கும்) பொருந்தாத, நெறி-ஒழுக்கவழிகளை, அறைதல்-கூறுந் தொழிலிலே, செல்லா-சிறிதும்போகாத, அரு மறை-(அறிதற்கு)

அருமையான வேதங்களிலே, அறைந்த-கூறப்பட்டுள்ள, நீதி-நியாயங்களை, விடா-நீங்கிநடவாத, நெறி-நல்லொழுக்கவழியையும், புலமை-தேர்ந்த அறிவையும், செம் கோல்-முறைபிறழாத அரசாட்சியையும், வெள் குடை-வெண்கொற்றக்குடையையு முடைய, வேந்தர் வேந்தன்-அரசர்களுக்கு அரசனான தசரதசக்கரவர்த்தி,— முகம் படாம் மலையில்-முகபடாத்தையுடைய மலைபோன்ற யானைகளிடத்தினின்று, தோன்றும்-உண்டாகின்ற, பருவம் ஒத்து அருவி பல்கும் - மழைக்காலத்தையொத்து அருவிகளாகப் பெருகுகிற, கடாம்-மதசலங்களாகிய நீர், நிறை-நிரம்பின, யாறு-நதிகள், பாயும்-(தன்னிடத்தே வந்து) பாயப்பெற்ற, கடலொடுஉம்-(சேனா) சமுத்திரத்துடனே, கங்கை-கங்காநதியின் கரையை, சேர்ந்தான்—;

மலையில் தோன்றி அருவியாகப் பெருகுகிற நதிகள் தன்னிடம் பாயப்பெற்ற கடல்போல, யானைகளினின்று தோன்றிப் பெருவெள்ளமாகப் பெருகுகிறமதநீர்த்தாரைகள் வந்து பரவும் சேனைக்கடலுடன் தசரதன் கங்கைக்கரையைச் சேர்ந்தானென்பதாம்; உருவகவணி. கடல்-உவமவாகுபெயர். கங்கை கடலிற் சேர்வதன்றி இங்கேகடல் கங்கையைச்சேர்ந்ததென ஒருவகைச் சாதுரியந் தோன்றக் கவி கூறினர். முகபடாத்தையுடைய மலையெனவே, யானையாயிற்று; இது பிறகுறிப்பு. பின்னடிகளில், 'படாமுகப் பணைக்கைநால்வாய்ப் பாகடுஞ்சிற்றத்துப்பிற்,கடாமதயானைச்சேனை, என்றும் பாடமுண்டு. பி- ம்:—[1]அறிதல். [2]செய்யா. [3]அமைந்த. [4]முகிலில். [5]தோன்றி, நின்றும். [6]உற்று. [7]மல்கும், நல்கும். [8]நெறி.

2.—சேனையிலுள்ளார் அந்தக்கங்கைநீரைப் பருகுதல்.

கப்புடை நாவி னாக ருலகமுங் கண்ணிற் றோன்றத்
துப்புடை மணலிற் [1]றாகிக் கங்கைநீர் [2]சுருங்கிக் காட்ட
அப்புடை யனீக வேலை [3]யகன்புனன் முகந்து மாந்த
உப்புடைக் கடலுந் தெண்ணீ ருண்ணசை [4]யுற்ற தன்றே.

(இ - ள்.) கப்பு உடை - இரண்டாகப் பிளவுபடுதலையுடைய, நாவின-நாக்கையுடைய, நாகர்-சர்ப்பசாதியாரது, உலகம்உம்-லோகமான பாதாளமும், கண்ணில் தோன்ற - கண்களுக்குத் தெரியுமாறு, துப்பு உடை மணலிற்று ஆகி-தூய்மையையுடைய மணலையுடையதாய்,கங்கை-கங்காநதி, நீர்சுருங்கிகாட்ட-தண்ணீர்குறைந்து தோன்றும்படி, அம்புஉடை அனீகம் வேலை அகல் புனல் முகந்து மாந்த-பாணம் முதலிய ஆயுதங்களையுடைய அச்சேனாசமுத்திரம் மிகுந்த அந்நதியின்நீரை எடுத்துப் பருகியதனால், உப்புஉடை கடல்உம்-உபபுத்தன்மையையுடைய உவர்நீர்க்கடலும், அன்று - அப்பொழுது, தெள் நீர் நசை உற்றது-தெளிவான (அக்கங்கையின்) நீரைப் பருகவேண்டு மென்கிற விருப்பத்தை யடைந்தது; (எ-று.)

பாதாளலோகம் வரையில் ஆழமுள்ளதாய் எப்பொழுதும் நீர்வெள்ளம் கடலிற் சென்றுசேருந் தன்மையதான பெரிய அக்கங்காநதியிலே தசரதசக்கரவர்த்தியினுடையசேனைகளிலுள்ளயானைகளும் குதிரைகளும் வீரர்களும் இறங்கித் தாம்தாம் விரைவாக வந்த

இளைப்பு நீங்கும்பொருட்டு அந்நீரை நிரம்பப் பருகவே, நதியில் நீர் குறைந்து மணல் தோன்றி அந்த ஆறு அப்பொழுது கடல்வரையிற்சென்று சேராதாயிற் றென்பதாம். எப்பொழுதும் இனிய கங்கைநீரைப் பருகிச் சுவையறிந்துள்ள கடல் அப்பொழுது அந்நீரைப்பெருமையால் நீர்வேட்கையுற்ற தென்றுர்: தொடர்புயர்வு நவிற்சியணி. கடலிற்செல்லுங் கங்கையை, சேனைக்கடல் வந்து சேர்ந்து அதனிடஞ்சேரவொட்டாமற் செய்ததென இதில்ஒருவகைச் சமத்காரந் தோன்றுதலுங் காண்க. கடல்தான் நீர்நிரம்பியதாயினும், உப்புச்சுவையுடைமையால், வேறு தண்ணீரை விரும்பவேண்டியதாயிற்று: இக்கருத்தைத் தருதலால், 'உப்புடை' என்பது - கருத்துடையடைமொழி; அதிலுள்ள நீர்வாழுயிர்களுக்கு ஆகுபெயராக உரைத்தலும் ஒன்று. நாகருலகமும், கடலும் என்ற உம்மைகள் - உயர்வுசிறப்பின. அம்பு- மற்றை ஆயுதங்களுக்கும் உபலக்ஷணம். சேனையைக் கடலாக உருவகப்படுத்தினதற் கேற்ப, அடைமொழியாகிய 'அப்புடை' என்பதற்கு - நீரையுடைய என்றுங் கொள்க; அப்பு-நீர்; வடசொல்.

தாயான விந்தை தன் சக்களத்தியான கத்துருவினிடத்து அடிமை பூண்டிருந்ததை ஒழிப்பதற்குக் கருடபகவான் தேவலோகத்திலிருந்து அருமையாகக்கொணர்ந்து வைத்த அமிருதகலசத்தினின்று சிந்தின அமுதத்தை நக்குகையில் அமுதகலசத்தைவைக்கும்போது பரப்பிய தருப்பைகளினுற் கீறுண்டு அக்கத்துருவின் மக்களான நாகங்களின் நாக்குகள் ஆதியிற் பிளவுபட்டனவெனபது, 'கப்புடை நாவின் நாகர்' என்ற இடத்து அறியவேண்டிய கதை. பி-ம்:—[1] தாக்கி. [2] சுருக்கி. [3] அகழ். [4] அறறது. (*1114*)

3.—கவிக்கூற்று: தசரதன் வந்துசேர்ந்ததும் ஜனகன்செய்ததைச் சொல்வோ மெனல்.

ஆண்டுநின் [1]றெழுந்து போகி யகன்[2]பணை மிதிலையென்னும்
ஈண்டு[3]நீர் நகரின் பாங்க ரிருநிலக் கிழவ னெய்தத்
தாண்டுமா புரவித் தானைத் தண்ணளிச் சனக னென்னுந்
தூண்[4]டரு வயிரத் தோளான் செய்தது சொல்ல லுற்ரும்.

(இ - ள்.) இரு நிலம் கிழவன் - பெரிய பூமிமுழுவதுக்கும்உரிய அரசனான தசரதன், ஆண்டு நின்று எழுந்து போகி - அக்கங்காநதியினிடத்தினின்றும் புறப்பட்டுச் சென்று, அகல் பணை மிதிலை என்னும்-விசாலமான கழனிகள் சூழ்ந்துள்ள மிதிலையென்று பெயர் கூறப்படுகிற, ஈண்டு நீர் நகரின்-மிகுந்த நீர்வளத்தையுடைய பட்டணத்தின், பாங்கர்-அருகிலே, எய்த-சேர்ந்தவளவிலே,— தாண்டும் மா புரவி தானை-பாய்ந்துசெல்லுகிற பெரிய [சிறந்த] குதிரைச் சேனைகளையும், தண் அளி-குளிர்ந்த கருணையையுமுடைய, சனகன் என்னும்-ஜனகனென்கிற, தூண் தரு வயிரம் தோளான்-தூண்களையொத்த உறுதியான தோள்களையுடைய சிறந்தஅரசன், செய்தது-செய்த காரியத்தை, சொல்லல் உற்ரும்-சொல்லுதற்குப் பொருந்தியுள்ளோம்; (எ - று.)

இழவன் - வயதுமுதிர்ந்தவனென்றுமாம்; இத்துணை பெரிய உலகில் அறுபதினாயிரம் ஆண்டு உயிர் வாழ்ந்து வயசினால் மூத்தவன் தசரதனை யொழிய வேறொருவன் இல்லையன்றே. தூண் தரு, தரு-உவமவுருபு. செய்தது - சாதியொருமை. பி - ம்:—[1] இழிந்து. [2] புனல். [3] நீள். [4] தரு. (*1115*)

4.—சனகராசன் தசரதசக்கரவர்த்தியை எதிர்கொள்ள எழுதல்.

வந்தன னரச னென்ன மனத்தெழு [1] முவகை பொங்கக்
[2] கந்தடு களிறும் தேரும் [3] கலினமாக் கடலுஞ் சூழச்
சந்திர னிரவி தன்னைச் சார்வதோர் தன்மை தோன்ற
இந்திர [4] திருவன் றன்னை யெதிர்கொள்வா னெழுந்து வந்தான்.

(இ - ள்.) (தசரத சக்கரவர்த்தி மிதிலாநகரியின் அருகில் வந்து சேர்ந்த செய்தியைத் தூதர்சொல்லக் கேட்டறிந்த சனகமகாராசன்), அரசன் வந்தனன் என்ன மனத்து எழும்உவகை பொங்க - தசரத மகாராசன் வந்து விட்டா னென்ற காரணத்தால் (தனது) மனத்திலே உண்டாகிற களிப்பு மிகாநிற்க, கந்து அடு களிறுஉம் தேர்உம் கலினம் மா கடல்உம் சூழ - கட்டுத்தறியை முறிக்கிற மதயானைகளும் தேர்களும் கடிவாளத்தையுடைய குதிரைகளாகிய கடல்களும் (தன்னைச்) சூழ்ந்துவர, சந்திரன் இரவி தன்னை சார்வது ஓர் தன்மை தோன்ற - சந்திரன் சூரியனை வந்தடைவதொரு விதத்தையொப்ப, இந்திரன் திருவன் தன்னை - தேவேந்திரனபோன்றசெல்வத்தையுடைய தசரதனை, எதிர்கொள்வான் - எதிர்கொள்ளும்பொருட்டு, எழுந்து வந்தான் - புறப்பட்டு வந்தான்; (எ-று.)

மதயானை கட்டுத்தறியை முறிப்பது, இயல்பு. ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படநின்ற குதிரையொழுங்கு, இடைவிடாத கடலினலையை ஒத்துப் பரவு மென்க. கலினமா - கடிவாளத்தையுடைய விலங்கு: எனவே, குதிரையாயிற்று, 'கலினமாக்கடல்' என்பதை உம்மைத்தொகையாகக் கொண்டு, குதிரைச்சேனையும் காலாட்சேனையுமென்றும் உரைக்கலாம்; உரைக்கவே, சதுரங்கசேனையும் அடங்கும். தசரதன் சூரியகுலத்தவனாதலும் சனகன் சந்திரகுலத்தவனாதலும் கருதத்தக்கன. சந்திரன் ஜநகனுக்கும், சூரியன் தசரதனுக்கும் உயர்வுதாழ்வையுணர்த்தும் உவமையாம். பி-ம்:—[1] உவகையோடும், உவகைபொங்கி. [2] கந்தடர். [3] கவனமாக். [4] தருவன். (*1116*)

5.—தசரதன்சேனை மிதிலையையடைய, சனகன்சேனை எதிர்கொள்ளுதல்.

கங்கைநீர் நாடன் சேனை மற்றுள கடல்க ளெல்லாம்
சங்கின மார்ப்ப வந்து சார்வன போலச் சாரப்
[1] பங்கயத் தணங்கைத் தந்த பாற்கட [2] லெதிர்வ தேபோல்
மங்கையைப் பயந்த [3] மன்னன் [4] சேனைவந் தெதிர்ந்த தன்றே.

(இ - ள்.) மற்றுஉள கடல்கள் எல்லாம்-(பாற்கடலையொழிந்த) வேறுளள கடல்கள்யாவும், சங்கு இனம் ஆர்ப்ப வந்து-சங்குகளின் கூட்டம் (தம்மிடத்திலே) ஆரவாரிக்கவந்து, சார்வன போல-(திருப் பாற்கடலை) அடைவன்போல, கங்கை நீர் நாடன் சேனை - கங்காநதி யினதுஜலம் பாயப்பெற்ற கோசலநாட்டைத் தங்குமிடமாகவுடைய தசரதனதுசேனைகள், சார - வந்துசேர, மங்கையை பயந்த மன்னன் சேனை - பெண்களிற் சிறந்த சீதாபிராட்டியை (த் தனது மகளாக)ப் பெற்ற சனகராசனதுசேனை, பங்கயத்து அணங்கை தந்த பாற்கடல் எதிர்வதேபோல்-தாமரைமலரில்வாழ்கின்ற பெண்களிற்சிறந்த திரு மகளைப்பெற்ற திருப்பாற்கடலானது (மற்றைக்கடல்களை) எதிர் கொள்வதுபோல, வந்து—, எதிர்ந்தது - (தசரதனது சேனைகளை) எதிர்கொண்டது; (எ-று.)

சனகராசன்சேனை தசரதன்சேனைகளை யெதிர்கொண்டது-திருப் பாற்கடல் மற்றைக்கடல்களை யெதிர்கொள்வதுபோலு மென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. பாற்கடலைச் சனகன்சேனைக்கும், மற்றைக் கடல்களைத் தசரதன்சேனைக்கும் உவமைகூறியதனால், தசரதமன்ன னுடைய சேனைகளின் மிகுதி பெறப்படும். 'கங்கை நீர்நாடன்' என்ற தனால், கோசலதேசத்தினது எல்லை கங்காநதி வரையிலும் என்று அறிக. இனி, கங்கை என்பதற்கு-சரயுஎன்றும் பொருள் கூறுவர்; அன்றியும், கங்கை என்பது-எல்லாநதிகளுக்கும் பொதுப்பெயராக வும் வழங்கும். மற்று உள கடல்கள் - உவர்நீர், கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், நன்னீர் என்னும் இவற்றின் மயமானவை. 'சங்கின மார்ப்ப' என்பதனை உபமேயத்துக்குங் கொள்க. சீதை இலக்குமியி னமிசமாதலால், மங்கையைப்பயந்த மன்னனுக்குப் பங்கயத்தணங் கைத் தந்த பாற்கடல் உவமைகூறப்பட்டது. இது, இப்படலத் துக்கு உயிர்நிலைப்பாட்டாகும். [4]வள நகர் எனின் - ஆகுபெயரால், நகரிலுள்ள சேனையென்னவேண்டும். பி - ம்:—[1]பங்கயத்திருவை, பங்கயத்தவளை, பங்கயத்தமிர்தை. [2]வருவதேபோல், எதிர்ப்ப போல. [3]வேந்தன். [4]வளர்நகர்வந்தது. (1117)

வேறு.

6.—தசரதமன்னவன்சேனையின் வருணனை.

இலை[1]குலா வயிலின னனிகமே ழென[2] வுலாய்
நிலைகுலா மகரநீர் நெடியமா கடலெலாம்
அலகின்மா களிறுதேர் புரவியா ளெனவிராய்
உலகெலா [3]நிமிர்வதே [4]பொருவுமோ ருவமையே.

(இ - ள்.) இலை குலாவு அயிலினன் - அரசிலைவடிவமாக விளங்குகிற (கூரிய) வேலாயுதத்தையுடைய தசரதசக்கரவர்த்தி யினது, அனிகம்-சேனைக்கு,—ஏழ் என உலாய்-ஏழு என்னும் எண் ணைக்கொண்டனவாகி, நிலை குலாம்-நிலைபெற்றுவிளங்குகிற, மகரம் நீர் நெடிய மா கடல் எலாம் - சுறாமீன்களையுடைய நீரோடு கூடிய நீண்ட அகன்ற கடல்கள்யாவும், அலகு இல் மா களிறு தேர் புரவி ஆள் என விராய்-அளவில்லாத பெரிய யானைகளும் தேர்களும் குதி

ரைகளும் காலாட்களும் என்னும் நான்குவகை வடிவுடன் கலந்து, உலகு எலாம் நிமிர்வதுஏ - உலகமுழுவதிலும் பொங்கிப் பரவி வருவதே, பொருவும் ஓர்.உவமை-தக்கதொரு உபமானமாம்; (எ - று.)

ஏழ்கடல்களும் கஜரததுரகபதாதியென்னும் நால்வகைப்படைகளின் வடிவத்தைக்கொண்டு உலகெங்கும் பரவினாற்போலச் சக்கரவர்த்தியினது சதுரங்கசேனைகள் பரவின என்பதாம்; இந்த வருணனையைத் தன்மைத்தற்குறிப்பேற்றவணி யென்டர். மகரம் - கடலில் மாத்திரமே வாழுந் தன்மையதான சுறவுமீன்; "கடல்வாழ் சுறவம்" என்றார், ஆசிரியர் தொல்காப்பியனார். இது கடலில்மாத்திரமே வாழ்வதாதல்பற்றி 'மகராலயம்' என்று கடலுக்கு ஒருபெயர். நெடியமா- ஒருபொருட்பன்மொழியுமாம். அயிலினான-சனகனுமாம். பி - ம்:— [1]குலாம். [2]உலாம். [3]நிமிர்வவே. [4]பொருவுபேர். (1118)

7.—சேனைகளிலுள்ள அரசசின்னங்களின் வருணனை.

தொங்கல்வெண் குடை [1]தொகைப் பிச்சமுட் படவிராய்
எங்கும்விண் புதைதரப் பகன்[2]மறைந் திரு[3]ளெழப்
பங்கயஞ் செய்யவும் வெளியவும் பலபடத்
தங்குதா மரையுடைத் [4]தானமே [5]போலுமே.

(இ - ள்.) தொங்கல் வெண் குடை - மாலைகளையுடைய வெண்கொற்றக்குடைகளும், தொகை பிச்சம் - தொகுதியான மயிற்பீலிக்குஞ்சங்களும், உட்பட - இவைமுதலிய [சாமரம் கொடி மகர தோரணம் என்னும் அரசசின்னங்கள்], விராய்-கலந்து, (அதனால்), எங்கும் விண் புதைதர-எவ்விடத்தும் ஆகாயம் மறைவதனால், பகல் மறைந்து இருள் எழ-சூரியனொளி மறைபட்டு இருளுண்டாக, (அச்சேனை), பங்கயம் செய்யஉம் வெளியஉம் பல பட தங்கு - தாமரைமலர்கள் செந்நிறத்தனவும் வெண்ணிறத்தனவுமாக அனேகந் தோன்றி மிகப் பொருந்திய, தாமரை உடை தானம்ஏ போலும் - தாமரைத் தாடகத்தையே ஒக்கும்; (எ - று.)

நிறவேறுபாடும் குளிர்ச்சியும் பற்றிய உவமை. முன்னே 'பங்கயம்' என வநததனால் 'தாமரையுடைத்தானம்' என்பது-வெறும் பெயர்மாத்திரையாய் நின்றது. தொங்கல் - குடையைச்சுற்றிலும் அழகாகத்தொங்கவிடப்பட்டுள்ள கொச்சுக்கள். பிச்சம் என்னும் மயில்தோகையின்பெயர் - அதனாலாகிய ஓர்வகை யலங்காரத்துக்குக் கருவியாகுபெயர். இனி, தொங்கல் மயிற்பீலிக்குஞ்ச மென்றும், பிச்சம்-மயிற்பீலிக்குடை யென்றும் உரைப்பாருமுளர். தொகை - அவ்வெண்குடைகளின் இனமாகிய செந்நிறக்குடைகளென்றும் உரைப்பர். பி - ம்:—[1]துவர்க்கவிகை. [2]மறைந்தன. [3]என, செய. [4]கானமே. [5]சாலுமே. (1119)

8.—தசரதமன்னவனது கொடிமுதலியன வெற்றித்திருவொடு விளங்கல்.

கொடியுளா [1]ளோதனிக் குடையுளா [1]ளோகுலப்
படியுளா [1]ளோகடற் படையுளா [1]ளோ[2]பகர்

மடியிலா வரசினுன் மார்புளா [1]ளோவளர்
முடியுளா ளோதெரிந் [3]துணா ர்கிலா முளரியாள்.

(இ - ள்.) முளரியாள் - செந்தாமரைமலரில் வாழ்கின்ற திருமகள்,—பகர்-சொல்லப்படுகிற, மடி இலா அரசினுன் - சோம்பலில்லாத அரசாட்சி முறைமையையுடைய சக்கரவர்த்தியினது, கொடி-துவசத்திலே, உளாள்ஓ-இருக்கின்றனளோ? தனி குடை உளாள் ஓ - ஒப்பற்ற ஒற்றை வெண்கொற்றக்குடையிலே இருக்கின்றனளோ? குலம் படி உளாள்ஓ-பரம்பரையாகவருகின்ற (அவனது) இராச்சியத்திலே யிருக்கின்றனளோ? கடல் படை உளாள்ஓ-கடல்போலப்பரந்த சேனையிடத்தே இருக்கின்றனளோ? மார்பு உளாள்ஓ-(அவனது) மார்பிலே வீற்றிருக்கின்றனளோ? வளர் முடி உளாளஓ - (அழகு) வளர்ந்த கிரீடத்தில் இருக்கின்றனளோ? தெரிந்து உணாகிலாம்-(இன்ன இடத்தாளென்று) ஆராய்ந்து (ஐயந்தீர) அறிகிறோமில்லை; (எ - று.)

இங்ஙனம் ஐயப்பொருள்படக் கூறினாலும், கொடிமுதல் முடியீருகச் சொல்லப்பட்ட அரசனதுபொருள்கள் ஒவ்வொன்றும் வெற்றித்திரு வீற்றிருக்குமிடமாக இருந்தன எனக்கருத்துக்கொள்க. இனி, ஓகாரங்கள் எண்ணுப்பொருளன எனினும் அமையும்: இவ்வாறு கொள்ளுமிடத்து, உணாகிலா முளரியாள் என்பது பெயரெச்சத்தொடராய், இத்தன்மையளென்று நூல்களாலாராய்ந்து உணரமுடியாத திருமகள் என்றுபொருள்படும். படி-பூமி. இனி, குலப்படி-பிறந்த அக்குலத்துக்குஉரிய நற்குணநற்செய்கைகளுமாம். பகர் என்பதை மடியென்பதனோடு கூட்டினால்-இழிவாகக் கூறப்படுகிற என்றும், அரசு என்பதனோடு கூட்டினால்-சிறப்பித்துக்கூறப்படுகிற எனறும் பொருளாம். "மடியிலாமன்னவனெய்து மடியளந்தான், றாஅய தெல்லா மொருங்கு" எனத் தெய்வப்புலவர் கூறியுள்ளபடி தசரதன் சோம்புதலென்னுந் தீக்குணத்தை முற்றுமொழித்துத் தன் மெய்ம்முயற்சியினாலேயே திக்குவிசயஞ்செய்து எல்லாவரசரையுங் கீழ்ப்படுத்தி நிலவுலகமுழுதும் அரசாண்டு சக்கரவர்த்தியான சிறப்புத் தோன்ற, 'பகர்மடியிலா வரசினுன்' என்றார். உத்தமவிலக்கணமமையப் பெற்றுள்ள மார்பிலே திருமகள் வீற்றிருக்கின்றன ளென்பது, சாமுத்திரிக நூலார் கொள்கை யாதலின் 'மார்புளாளோ' என்றது. முளரியாள்-வெற்றித்திரு. பி - ம்:—[1]ஒரு. [2]அதன். [3]உணர்கிலாள். சிலபிரதிகளில் 'மடியிலாவரசினுன் மார்பினிலுளாளொடும்' என்று மூன்றுமடி. (1120)

9.—பலவகை யொலிகளின் வருணனை.

வார்முகங் [1]கெழுவுகொங் கையர்கருங் [2]குழலின்வண்டு
ஏர்முழங் கரவமே ழிசை முழங் கரவமே
தேர்முழங் கரவம்[3]வெண் டிரைமுழங் கரவமே
கார்முழங் [4]கரவம்வெங் கரிமுழங் கரவமே.

(இ - ள்.) ஏழ் இசை முழங்கு அரவம்-(அச்சேனையிலுள்ள பலவகை வாத்தியங்கள்) எழுவகைப்பட்ட சுரங்களை ஒலிக்கின்ற

ஓசை,—வார் முகம் கெழுவு கொங்கையர்-கச்சினிடத்தில் நிறையப் பொருந்தின தனங்களையுடைய மகளிரது, கரு குழலின்-கருமையான கூந்தலிலே, வண்டு-வண்டுகள், ஏர் முழங்கு - அழகாகவொலிக்கின்ற, அரவம்ஏ - இசையையே ஒலிக்கும்; தேர் முழங்கு அரவம்-(அச்சேனையில்) தேர்கள் ஒலிக்கின்ற ஓசை,—வெள் திரை முழங்கு அரவம்ஏ-வெண்ணிறமான அலைகளையுடைய கடல்கள் ஒலிக்கின்ற ஆரவாரத்தையே ஒலிக்கும்; வெம் கரி முழங்கு அரவம் - பயங்கரமான யானைகள் பிளிறுகின்ற பேரோசை, கார் முழங்கு அரவம்ஏ-கார்காலத்து மேகங்கள் ஒலிக்கிற இடிமுழக்கத்தையே ஒலிக்கும்; (எ - று.)—மதயானைகளின் உடம்பு சூடுகொண்டிருக்குமாதலால், 'வெங்கரி' என்றுருமாம்: வெம்மை-வெப்பம். பி-ம்:—[1]கெழுமு. [2]குழலுள். [3]எண். [4]அரவமே. (1121)

10.—சேனை யெழுப்பிய தூளி.

சூழுமா கடல்களுந் [1]திடர்படத் துகடவழ்ந்து
ஏழுபா ரகமுமுற் றுளதெனற் கெளிதரோ
ஆழியா னுலகளந் தன்றுதாள் சென்றவப்
[2]பூழையூ டேபொடித் தப்புறம் [3]போயதே.

(இ - ள்.) துகள்-(அச்சேனை நடந்து செல்லுதலாற் பூமியிலிருந்து மேலெழுப்பப்பட்ட) தூளி,-சூழு மாகடல்கள்உம் திடர்பட-(உலகத்தைச்) சூழ்ந்துள்ள பெரிய கடல்களெல்லாமும் மேடாகும்படி, தவழ்ந்து-பரவிச்சென்று, ஏழு பார் அகம்உம் உற்று உளது எனற்கு-மேலேழுலகங்களினிடத்திலும் போய்ப் பொருந்தி நிரம்பியுள்ளதென்று சொல்வதற்கு, எளிதுஅரோ - மிகஎளியதேயாம்; (ஏனெனில்), ஆழியான்-சக்கராயுதத்தையுடைய திருமால், உலகு அளந்த அன்று-உலகங்களை அளவிட்ட அந்தக்காலத்தில், தாள் சென்ற-(அவனது) திருவடியொன்று (மேலேதுளைத்துச்) சென்ற, அ பூழை ஊடே-அந்த (அண்டகடாகத்து மேல்முகட்டுத்) துளைவழியிடையிலே, பொடித்து-நுழைந்து சென்று, அ புறம் போயது-(இவ்வண்டத்துக்கு) வெளியிடத்திலும் பரவிற்று; (எ - று.)

திரிவிக்கிரமனான திருமாலின் திருவடிபட்டுத் தொளையான வழியின்மூலம் அச்சேனையெழுப்பிய தூளி, அண்டத்து வெளியிலுஞ் சென்றதனால், இந்த ஏழுபார்முழுவதும் அது நிரம்பிற்றென்று கூறுவதற்குச் சிறிதுந் தடையில்லை யென்க. தொடர்நிலைச்செய்யுட்குறியணி. இனி, எளிதரோ என்பதை எளிதுஅர்ஓ என்று பிரித்து, அர் என்பதை அசையென்றேனும் எளிது என்னும் குற்றியலுகரத்தின்மீதுவந்த போலியென்றேனுங் கொண்டு, ஏழுதீவுகொண்ட இப்பாரகத்தில்தான் சேனையின் தூளி சூழ்ந்தது என்று சொல்லுதற்கு அது அவ்வளவு சொற்பமானதோ? அத்தூளி இவ்வண்டகடாகத்துக்கு அப்பாலும் பரவுமாறு மிக்கதன்றோ என்று உரைப்பினுமாம்: நாவலந்தீவுகளேழையும் உப்புக்கடல் முதலிய ஏழுகடல்கள சூழ்ந்துள்ளன என்பது புராணநூற்கொள்கை யாதலால், 'சூழுமாகடல்' எனப்பட்டது. முன்னைய பொருளில் நீரில் அண்டங்கள் மிதப்பன என்ற கொள்கைபற்றி,

'சூழுமாகடல்' என்றதென்க. பூழை-நீட்டல். பி-ம்:—[1] துகள்படத் திடர்படர்ந்து. [2] பூழையோடே. [3] போர்த்ததே. (1122)

11.—குடைகளும் அணிகலன்களும்.

மன்னெடுங் குடைமிடைந் [1] தடையவான் மறைதரத்
[2] துன்னிடுந் நிழல்வழங் கிருடுரப் [3] பெளிதரோ
[4] பொன்னிடும் [5] புவியிடும் [6] புனைமணிக் [7] கலனெலாம்
மின்னிடும் [8] வில்லிடும் [9] வெயிலிடுந் [10] நிலவிடும்.

(இ - ள்.) மன் நெடு குடை-(அச்சேனையிற்) பொருந்திய உயர்ந்த [நீண்ட பெரிய] குடைகள், மிடைந்து-நெருங்கி,(அதனால்), வான் அடைய மறைதர-ஆகாயம்முழுவதும் மறைவுபட, துன்னிடும்-(அங்கு) நிறைந்த, நிழல்-நிழலானது,வழங்கு-உண்டாக்கித்தருகிற, இருள்-இருளை, துரப்பு-ஒழித்தல், எளிது அரோ - எளியதேயாம்; (அது எங்ஙனமெனில்), புவி இடும் - அந்தப்பூமியிலுள்ளார் [சேனைகள்] அணிந்துள்ள, பொன் இடும்-பொன்னினாற் செய்யப்பட்ட, புனை-அழகிய, மணி-இரத்தினங்கள்பதிக்கப்பட்டுள்ள, கலன் எலாம் - ஆபரணங்கள்யாவும், மின் இடும் - மின்னலோடொத்த ஒளியை வீசும்; வில் இடும்-இந்திரவில்லோடொத்த ஒளியை வீசும்; வெயில் இடும்-வெயிலொத்த ஒளியை வீசும்: நிலவு இடும்-நிலவையொத்த ஒளியை வீசும்; (எ - று.)

அணிகளின்பேரொளியால் எளிதில் இருளொழிந்த தென்பது கருத்து. எளிதரோ என்பதற்கு-எளிதன்று என்று பொருளுரைத்து, புனை கலன் யாவும் மின்முதலியவற்றை வெளிக்காலுமாயினும் குடைவழங்கிருளைத்துரப்பது முடியாததாயிற்றென்னுங் கருத்துப்பட உரைப்பாருமுளர். மின் முதலியன, இரத்தினாபரணங்களின் பலநிறமுள்ள ஒளிவேறுபாட்டை யுணர்த்தும். புவி-சேனைக்கு இடவாகுபெயர். இனி, பொன்னிடும் என்பதற்கு-அழகு பொருந்திய என்றும், பொன்னாணயங்களையும் விலைகொடுத்துப் பெறுதற்குரிய என்றும்; புவியிடும் என்பதற்கு-பூமிமுழுவதையும் விலையாகக் கொடுத்தற்குரிய என்றும், சேனை செல்லும் பூமியிலே சிந்துகிற என்றும; புனை என்பதற்கு - அணிதற்குரியஎன்றும், மணி என்பதற்கு-அழகியஎன்றும் பொருளுரைக்கலாம். இந்திரவில் பலவகைநிறமுடையது. பி-ம்:—[1] அணைய. [2] துன்னிழறுரப்பவும். [3] அரிதரோ. [4] பொனனெடும். [5] முடிமுதற், பூணிடும். [6] புனையணி. [7] குலமெலாம். [8] வெயிலிடும். [9] வில்லிடும், அயிலிடும். [10] நிலவொடே. (1123)

12.—சனகமன்னவன் வரும் வழியின் வருணனை.

தாவின்மன் னவர்பிரான் வர [1] முரட் சனகனும்
ஏவருஞ் சிலையினா னெதிர்வருந் நெறியெலாம்
தூவுதண் சுண்ணமுங் கனகநுண் [2] டூளியும்
[3] பூவின்மென் ருதுகும் பொடியுமே [4] பொடியெலாம்.

(இ - ள்) தா இல் - குற்றமில்லாத, மன்னவர் பிரான் - அரசர்களுக்கரசனாகிய தசரதசக்கரவர்த்தி, வர - (தனதுநகரத்

திற்கு) வருகையில், முரண் சனகன் ஆம் - வலிமையையுடைய சனகனாகிய, ஏ வரும் சிலையினன் - அம்புகள் தொடுத்தற்குப் பொருந்தும் வில்லையுடைய சிறந்தவீரனான அரசன், எதிர் வரும்- எதிர்கொண்டுவருகிற, நெறி எலாம் - வழிமுழுவதிலும்,—தூவு தண் சுண்ணம்உம்-(மங்களகரமாக மேலே) தூவபபடுகிற குளிர்ந்த வாசனைப்பொடிகளும், கனகம் நுண் தூளிஉம் - (ஆபரணங்களி லிருந்து சிந்துகிற) நுட்பமான பொற்பொடிகளும், பூவின் மெல் தாது உகும பொடிஉம்ஏ மலர்களினின்று சிந்துகிற மெல்லிய மகரந்தப்பொடிகளும் ஆகிய இவையே, பொடி எலாம்-பலவகைத் தூளிகளாம்; (எ - று.)

செல்வச்சிறப்பைக் கூறியதனால், இது, வீறுகோளணி. ஏவு அரு சிலை எனப் பிரித்து-(வளைத்து அம்பு) தொடுத்தற்கு அருமையான வில் என்றுங் கொளளலாம். சுண்ணத்திற்குத் தண்மை- நாற்றவினிமை. பூ-அவர்கள் மாலையிலுள்ளன. பி - ம்:—[1]முடிச், அருள். [2]துள்ளியும. [3]பூவினுண். [4]புவி. (1124)

13 —வழியிலுள்ள சேறுகளின் தன்மை.

நறுவிரைத் தேனு [1]நா னமுநறுங் [2]குங்குமச்
செறியகிற் றேய்வையும் [3]மான்மதத் தேக்கரும்
வெறியுடைக் கலவையும் விரவு [4]சே றுற[5]மிகு
செறி [6]மதக் கலுழிபாய் சேறுமே [7]சேறெலாம்.

(இ - ள்.) நறு விரை தேன்உம் - நல்ல பரிமளத்தையுடைய [பூக்களினின்றுசிந்துகின்ற] மதுவும், நானம்உம்-(கூந்தலினின்று ஒழுகுகிற) கத்தூரிப்புழுகும், நறு குங்குமம் செறி அகில் தேய்வை உம்-நல்லவாசனையுடைய குங்குமப்பூவோடு கூடின அழுத்தமான அகிற்கட்டைத்தேய்வினாலாகிய குழம்பும், மான்மதம் தேக்கர்உம்- கஸ்தூரியின்பெருக்கமும், வெறி உடை கலவைஉம்-பரிமளத்தையு டைய பலவகை வாசனைப்பொருள்களும் கலந்த சந்தனமும், விரவு- சேர்தலாலுண்டாகின்ற, சேறு-சேறுகளுடனே, உற மிகு செறி மதம் கலுழி-மிகவும் அதிகமாகி நெருங்கிச்செல்லுகின்ற மதநீர்ப் பெருக்கு, பாய் - பாய்வதனாலுண்டான, சேறுஉம்ஏ-சேறுகளே, சேறு எலாம்-(அவ்வழியிலுளள) சேறுகள் யாவுமாம்; (எ - று.)

நானம் என்பதை ஸ்நாநம் என்னும் வடமொழியின் திரிபாகக் கொண்டு, நீராடுவதற்குரிய பூச்சுக்கள் என்றும் உரைக்கலாம். குங் குமம் எனத் தனியே யெடுத்து, குங்குமக்குழம்பு எனினுமாம். அகில் - சந்தனம்போலவாசனையுடையதொருமரம்; இது-முதிர்ந்து வைரம் பற்றின கள்ளிச்செடியினிடையி லுண்டாவதுமுண்டு. தேக் கர்-தேங்குஎன்னும் முதனிலை திரிந்த 'தேக்கு' என்ற தொழிற் பெயர், 'அர்பெறறு' நின்றது: நிறைவென்று பொருள். கலுழி- கலங்கனீர். பி-ம்:—[1]நாவியும். [2]குங்குமத்தெறி. [3]மானமதத் தெக் கரும். [4]செஞ்சாந்தமும்... [5]மிகச்,...மிகும். [6]மிகக். [7]யாறெலாம். ()

14.—நிழல்களின் தன்மை.

மன்றலங் [1]கோதையார் மணியினும் பொன்னினும்
சென்றுவந் துலவுமச் [2]சிதைவிலா [3]நிழலினேர்

[4]வென்றதிண் கொடியொடுந் [5]நெடுவிதா னமும்விராய்
நின்றவெண் குடைகளின் [6]நிழல்களே நிழலெலாம்.

(இ - ள்) மன்றல் அம் கோதையார் - நறுமணத்தையுடைய அழகிய கூந்தலையுடைய மகளிரது, மணியின் உம் - அரதனவணிகளினின்றும், பொன்னின் உம் பொனனுபரணங்களினின்றும், சென்று வந்து உலவும் - வெளித்தோன்றிவந்து விளங்குகிற, அ சிதைவு இலா நிழலின் ஏர் - அழிதலில்லாத அந்த ஒளிகளின் அழகை(த் தம் முட் கொண்டுள்ள), வென்ற திண் கொடியொடுஉம் - வெற்றிக்கு அறிகுறியான வலிய துவசங்களோடும், நெடு விதானம்உம் - உயர்ந்த மேற்கட்டிகளோடும், விராய் நின்ற - கலந்து நின்ற, வெள் குடைகளின் - வெண்கொற்றக்குடைகளினுடைய, நிழல்கள்ஏ - சாயைகள் தாமே, நிழல் எலாம் - (அவ்வழியிலுள்ள) நிழல்கள்யாவுமாம்; (எ - று.)

கொடி முதலியவற்றின் நிழல்கள் கோதையாரின் மணிபொன் இவற்றினாலாகிய அணிகலங்களினொளியைத் தம்முட்கொண்டு விளங்குகின்றன வென்பதாம். இனி, அச்சேனைகளின் மேலிடம் முழுவதிலும், குடைகளும் கொடிகளும் மேற்கட்டிகளும் பரவியுள்ளதனால், அவற்றின் நிழல்களே வெளித்தோன்றுகின்றன; அவற்றின்கீழுள்ள யானை குதிரை வீரர்முதலியவற்றின் நிழல்கள் தெரிவனவில்லை. ஆனால், அச்சேனைகளின் இடையேயுள்ள மகளிரது சிறந்த ஒளியையுடைய அணிகலங்களில் எல்லா நிழல்களும் பிரதிபலித்துப் பிரதிபிம்பமாகத்தோன்றும் என்று கூறுதலும் ஒன்று. மகளிர் - சேனைவீரர்களது மனைவிமாரும், அரசன் மனைவியின் பரிவாரங்களுமாவர். கோதையார் - வெற்றிப்பூமாலையையுடைய ஆடவருமாம். மணி, பொன் - கருவியாகுபெயர்கள்: மணியினும் பொனனினும் - மணிபொன் இவற்றாலியன்றுள்ள வாகனங்களினால் என்று உரைப்பாருமுளர். சென்று வந்து உலவுதல், அசைதலினாலாகும். நிழலின் நேர் எனப்பிரித்து - அந்நிழல்களோடு பொருந்தின என்றும் உரைக்கலாம்; அப்பொழுது கொடி என்பதனோடு இயையாமல் நிழல்கள் என்பதனோடு இயையும். பி-ம்:—[1]கோதைமார். [2]திசையெலாம், திசைகுலாம், சிலைவிலாம். [3]நிழலுநேர், நிழலதேர், நிழலதோ. [4]வென்றி. [5]நிழல். [6]நிழலுமே. (1126)

15.—தசரதசக்கரவர்த்தியின் சேனையிடம் சனகமன்னன் சேனைவந்து சேர்தல்.

மாறிலா மதுகையான் [1]வரு[2]பெருந் தானைமேல்
ஊறுபே ருவகையா னனிகம்வந் துற்றபோது
ஈறி[3]லோ தையினொடும் மெறிதிரைப் [4]பரவைமேல்
ஆறுபாய் கின்றதோ ரமலைபோ[5]லானதே.

(இ - ள்.) மாறு இலா மதுகையான் - ஒப்பில்லாதவலிமையையுடைய தசரதனது, வரு பெரு தானை மேல் - வருகின்ற பெரிய சேனையின் மேலே [சேனையைநோக்கி], ஊறு பேர் உவகையான் அனிகம் - மேன்மேற்பொங்குகின்ற பெருங்களிப்டையுடைய சனகனது சேனை, வந்து உற்ற போது - வந்துசேர்ந்த அப்பொழுது,

ஈறு இல் ஓதையினெடுஉம் எறி திரை பரவை மேல் - எல்லையில்லாத ஓசையுடனே வீசுகின்ற அலைகளையுடைய கடலின்மேலே, ஆறு பாய்கின்றது போல் ஓர் அமலை ஆனது-ஆறு பாய்கின்றதனாலுண்டாகிற ஓசைபோல ஒருபேராரவாரம் உளதாயிற்று;

மாறுஇலாமதுகை - (போர்முகத்தில்) மாறுபடுதலில்லாத வலிமை எனவுமாம்; பெருமையுஞ் சிறுமையுந்தோன்ற, உவமையிற் கடலும் நதியுங் கூறினர். பி-ம்:—[1]மகிழ். [2]பொருந். [3]ஓதையினுலாம், ஓதையினுலாய். [4]பரவைவாய், பரவையை. [5]ஆயதே. (1127)

16.—தசரதசக்கரவர்த்தியின் முன்பு சனகன் தேரில்வந்து சேர்தல்.

கந்தையே பொருகரிச் சனகனுங் [1]காதலோடு
உந்தவோ தரியதோர் [2]தன்மையோ டுலகுளோர்
தந்தையே யனையவத் தகவினன் முன்புதன்
சிந்தையே [3]பொருநெடுந் தேரின்வந் தெய்தினன்.

(இ - ள்.) கந்தை-கட்டுத்தறியை, பொரு-முறித்துத்தள்ளுகிற, கரி-யானைச்சேனையையுடைய, சனகன்உம்-சனகராசனும், காதலோடு உந்த-(தன்) ஆசையினால் முன்செலுத்தப்படுதலால், ஓது அரியது ஓர் தன்மையோடு-சொல்லி முடிப்பதற்குக்கூடாத ஒப்பற்ற (கீழ்வந்தசிறப்புத்) தன்மையுடனே, உலகு உளோர் தந்தை ஏ அனைய அ தகவினன் முன்பு-உலகத்திலேயுள்ளயாவர்க்கும் பிதாவையேயொத்த சிறப்பையுடைய அத்தசரதனது எதிரில், தன் சிந்தை ஏ பொரு நெடு தேரின்-தனது மனத்தையேயொத்த பெரிய தேரின்மேலே, வந்து எய்தினன்-வந்து சேர்ந்தான்; (எ-று.)

மக்களைத் தீயொழுக்கத்திற் செல்லவொட்டாது தண்டித்து நல்லொழுக்கத்திலேயே செலுத்தலால், 'உலகுளோர் தந்தையே யனைய வத்தகவினன்' என்றார். இது, பயனுவமை: இனி, "உலகோர் முந்தைத்தாய்தந்தையே" என்றபடி உலகோர்க்கெல்லாந் தந்தையான திருமாலுக்கும் தந்தையாயினதால், 'உலகுளோர் தந்தையே யனையவத்தகவினன்' எனறுரெனினுமாம். சிந்தையே பொருதேர் - மனம் நினைத்தமாத்திரத்தில் நினைத்தவிடத்தில் விரைந்துசென்று சேருதல்போல விரைந்துசெல்லுந் தேர்: இது, வினையுவமை. காதலோடு, ஓடு-கருத்தாப்பொருளது. தகவு-தகுந்த குணங்களுக்குத் தொழிலாகுபெயர். தாம் பன்னாள்பயின்றவையாய்த் தாம் கட்டப்பட்டுள்ளவை என்ற பொருளைத் தருதலால், கந்தையே என்றவிடத்து ஏ - சிறப்புப்பொருளது. பி - ம்:— [1]காதலே, காதலோர். [2]பெருமையோடு. [3]அனையவத்தேரியைந் தேறினன். இது, சில பிரதிகளில் "தழுவிநின்றவன்" (18) என்ற தன்பின் உள்ளது. (1128)

17.—சனகன் தேரினின்றிறங்கித் தசரதனைச் சார, அம்மன்னவன் சனகனைத் தழுவுதல்.

[1]எய்தவந் திருநெடுந் தேரிழிந் [2]தினியதன்
மொய்கொ[3]டிண் சேனைபின் னிற்கமுன் சேறலும்

கையின்வந் தேறெனக் கடிதின்வந் [4]தேறினன்
ஐயனும் முகமலர்ந் [5]தகமுறத் தழுவினன்.

(இ - ள்.) எய்த வந்து - (இங்ஙனம் சனகன் தசரதனது) அருகில் வந்து, இரு நெடு தேர் இழிந்து - (தான் ஏறியிருந்த) மிகப் பெரிய தேரினின்று இறங்கி, இனிய தன் மொய் கொள் திண் சேனை பின் நிற்க - அழகிய தனது அடர்த்தியைக்கொண்ட வலிய சேனை பின்னே நிற்க, முன் சேறலும் - முன்னே (தான்) சென்றவளவிலே,—கையின் வந்து ஏறு என - (தசரதன் தனது) கையை முன்னேகொடுத்து அதன்குறிப்பால் (இத்தேரின்மீது) ஏறுக என்று தெரிவிக்க, கடிதின் வந்து ஏறினன் - (சனகன் அங்ஙனமே) விரைவாக வந்து (அத்தேரின்மேல்) ஏறினன்; (அப்பொழுது), ஐயன் உம் - சிறந்த அரசனான தசரதனும், முகம் மலர்ந்து - முகமலர்ச்சிபெற்று, அகம் உற - (அம்மலர்ச்சி) மனத்திலும் பொருந்த, (சனகனை), தழுவினன்—; (எ - று.)

'நெஞ்சு' என்பதுபோல 'அகம்' என்னும் மனத்தின்பெயர் - தானியாகுபெயராய் மார்பையுணர்த்தியதெனக்கொண்டு, அகமுறத் தழுவினன்-மார்பிலேபொருந்தத் தழுவினன் என்றுமுரைக்கலாம். பி - ம்:—[1]எய்தலும், எய்தவத், எய்திவந்து. [2]இனைய. [3]வெஞ். [4]எய்தினன். [5]அழகுற. (1129)

18.—சனகனைச் சேமம் விசாரித்துத் தசரதன் மிதிலை சேர்தல்.

தழுவிநின் றவ[1]னிருங் கிளையையுந் தமரையும்
வழுவில்[2]சிந் தனையினன் [3]வரிசையின் னளவளாய்
எழுக[4]முந் துறவென [5]வினிதுவந் [6]தெய்தினன்
உழுவைமுந் தரியனு னெவரினும் [7]முயரினன்.

(இ - ள்.) உழுவை முந்து அரி அனன்-புலியினால் முன் வந்து எதிர்கொள்ளப்படுகிற சிங்கத்தை யொத்தவனும், எவரின் உம் உயரினன் - (உலகத்தில்) எல்லோரினுஞ் சிறந்துள்ளவனுமாகிய தசரதன,—தழுவி நின்று - (அங்ஙனம சனகனை) அணைத்து நின்று, அவன் - அச்சனகனது, இரு கிளையை உம் - பெரிய [மிகுந்த] பந்துவர்க்கத்தையும், தமரை உம் - (அவனைச்) சேர்ந்தவர்களான நண்பர்களையும், வழுவு இல் சிந்தனையினன் - குற்றமில்லாத எண்ணத்துடனே, வரிசையின் - முறைமையாக, அளவு அளாய் - க்ஷேமம் விசாரித்து, (அதன்பின்பு), முந்துற எழுக என - முன்னே செல்லுவாயாக என்றுகூறி, இனிது வந்து எய்தினன்-இனிமையாக (அச்சனகனோடுகூடவே மிதிலாநகரம்) வந்து சேர்ந்தான; (எ-று.)

இனி, தழுவிநின்றவன் என எடுத்து - தழுவிநின்றவனாகிய தசரதன எனப பெயராகவுங் கொள்ளலாம். இனி, பலபுலிகளினுஞ் சிறந்த சிங்கமொன்றுபோலப் பல அரசர்களினுஞ்சிறந்த சனகன தன்னைத் தழுவிநின்றவனாகிய தசரதனது பந்துமித்திரர்களை க்ஷேமம் விசாரித்து விரைவாகவரவேண்டுமென்று உபசாரமொழி கூறி இனிமையாக அவனுடன் கூடவே வந்துகொண்டிருந்தான்

என்றும் இச்செய்யுளுக்குப் பொருளுரைக்க இடமுண்டு. சேனைகளின் முனனே நிற்குந் தசரதனுக்கு, உழுவையுழந்து அரிஉவமையெனினுமாம். இனிது உவந்து எனப் பதமபிரித்துக் கூறலுமாம். வரிசை-மரியாதையுமாம். பி-ம்:—[1] அருங். [2] சிந்தனையினார். [3] வரிசைநின்று. [4] முந்துகவென, முந்துறவென. [5] இனிதுகந்து. [6] ஏவினன், ஏகினன். [7] உயரியான். *(1130)*

19.—இராமனும் தசரதனை வழியிலெதிர்கொள்ள வருதல்.

இன்னவா றிருவரும் மினியவா [1]றேகவத்
[2]துன்னுமா [3]நகரினின் றெதிர்[4]வரத் துன்னினான்
தன்னையே [5]யன்னயவன் றழலையே யனையவன்
பொன்னின்வார் சிலையிறப் புய[6]நிமிர்த் தருளினான்.

(இ-ள்.) இன்ன ஆறு - இந்தப்படி, இருவர்உம் - (தசரதன் சனகன என்னும) இரண்டுபேரும, இனிய ஆறு - இனிமையான விதமாய், ஏக - (மிதிலைக்குச்) செல்ல,—(அப்பொழுது), தன்னைஏ அனையவன் - (வேறு உவமை தனக்கு இல்லாமையால) தன்னையே ஒத்திருப்பவனும, தழலைஏ அனையவன பொன்னின் வார் சிலை இற புயம் நிமிர்த்து அருளினன - (தனனுடம்பின் நிறத்தால் சிவந்த) நெருப்பையே யொத்தவனாகிய உருத்திரமூர்த்தியின் பொன்னிறமான நீண்ட வில் ஒடியும்படி (தனது) தோளை உயர எடுத்தருளினவனுமாகிய இராமபிரான, - துன்னும மா அ நகரின் நின்று பொருந்தின பெரிய அந்த மிதிலாநகரத்தினின்று, எதிர்வர துன்னினன - (தன் தந்தையை) எதிர்கொண்டு அழைத்துவருதலைப் பொருந்தினன்; (எ - று.)

'இன்னவா றிருவரும் மினியவா றேக' என்பதுகொண்டு, இரண்டுபேரும் ஒரு ரதினமீதே சென்றன ரென்று தொனிப்பொருளுரைப்பர். தன்னையேயனையவன் — "தனனொப்பாரிலலப்பன்" என்பது, நம்மாழ்வார் பாசுரம். தழலையேயனையவன - "தழனிறவண்ணன்" என்றார், திருமங்கையாழ்வார். சிவபெருமானுக்குப் பொன்மயமான மேருமலை வில்லாக அமைந்ததெனப: ஆதலாலும, இராமபிரான் முறிததது சிவதனுசே யாதலாலும், அவவில் 'பொனனின் வார் சிலை' எனப்பட்டது. இனிய ஆறு - இனிய வழியிலுமாம். முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[1] எயத. [2] துனன. [3] நகரினவந்து. [4] கொள. [5] அனையவத். [6] நிமிர்ந்து. *(1131)*

20.—இராமன் எதிர்கொண்ட வகை.

தம்பியுந் தானுமத் தானை [1]மன் னவனகர்ப்
பம்புதிண் புரவியும் படைஞரும் புடைவரச்
செம்பொனிற் பசுமணித் தேரின்வந் தெய்தினான்
உம்பரும் [2]மிம்பரும் முரகருந் தொழவுளான்.

இ - ள்.) உம்பர்உம்-மேலுலகத்தவராகிய தேவர்களும், இம்பர் உம் - இந்நிலவுலகத்தவராகிய மனிதர்களும, உரகர்உம - கீழுலகத்தவராகிய நாகர்களும், (ஆக மூன்றுலோகத்துமன்னுயிர்களும),

தொழ-(தன்னை) வணங்க, உளான் - (யாவரினுஞ்) சிறந்துள்ளவனாகிய (திருமாலின் அமிசமான) இராமபிரான்,—பம்பு திண் புரவிஉம்- நெருங்கின வலிய குதிரைச்சேனையும், படைஞர்உம் - சேனைவீரர்களும், புடை வர-(தனது) பக்கங்களிலே சூழ்ந்துவர, அ தானை மன்னவன் நகர்-(பல) சேனைகளையுடைய சனகனது அந்த மிதிலாநகரத்தினின்று, தம்பிஉம் தான்உம் - தானும் (தன்) தம்பியுமாக, செம்பொனின் பசு மணி தேரின் - சிவந்த பொன்னினாற் செய்யப்பட்டுப் பசுநிறமான (மரகத) ரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ள தேரின்மேல் (ஏறி), வந்து எய்தினன் - (தாதையை எதிர்கொள்ள) வந்துசேர்ந்தான்; (எ - று.)

'இராமன் தானும் தம்பியும் வந்து எய்தினன்'- சிறப்புப்பற்றி வந்த பால்வழுவமைதி. இராமனுடனகூடவந்த குதிரைச்சேனையும் வீரர்களும் சனகனைச் சேர்ந்தவர்களே. மன்னவனெதிர் என்ற பாடத்திற்கு- தசரதனது எதிரிலே யென்று பொருள். செம்பொனின் பசுமணித்தேர் - முரண்டொடை. தம்பி-இங்கே, இலக்குமணன். பி-ம்:—[1] மன்வளநகர்ப், மன்னவருநற். [2] மணிதரும். இச்செய்யுள சில பிரதிகளிலில்லை. (1132)

21.—இராமலட்சுமணருடன் சென்ற சேனை.

யானையோ [1]பிடிகளோ இரதமோ விவுளியோ
ஆனபே [2]ருறையிலா நிறைவையா ரறிகுவார்
[3]தானையேர் சனகனே வலினெடுந் தாதைமுன்
போன[4]போ ருழவர்தம் புடைவரும் [5]படையினே.

(இ - ள்.) நெடு தாதை முன் போன போர் உழவர்தம்புடை- பெருமைக்குணமுடைய (தம) தந்தையான தசரதனது எதிரிலே சென்ற போர்த்தொழில்செய்வதில்வல்ல வீரரான இரமலட்சுமணரென்னும் இருவரது பக்கத்திலே, தானை ஏர் சனகன் ஏவலின் வரும்-சேனையினழகு பொருந்திய சனகனது கட்டளையினாலுடன் வருகின்ற, படையின்-சேனைகளில், யானைஓ-ஆண்யானைகளோ, பிடிகளஓ-பெண்யானைகளோ, இரதமஓ-தேர்களோ, இவுளிஓ - குதிரைகளோ, (இவற்றுள எவையோ மிக்குள்ளன)? ஆன பேர் உறை இலா நிறைவை-பொருந்தின பெரிய உறையென்னுங் குறிப்பிலக்கமிட்டும் எண்ணமுடியாத (அவ்யானை முதலியவறறின்) நிறைவை, யார் அறிகுவார்-அறிந்துகூற வல்லவர் யாவருளர்? [எவருமில்லை: ஒவ்வொரு வகையும அளவற்றிருந்தன என்றபடி]; (எ-று.)

உறை-ஓரிலக்கக்குறிப்பு; அதாவது-பொருள்களை எண்ணுங் காலத்து ஒவ்வொரு பெரிய எண்ணுக்கு ஒவ்வொன்று விழுக்காடு வைக்குங் குறி: "எணகுறிப்பெண்ணிப் பொலிந்துழி யிடுவதும்... உறையெனல" என்பது, நிகண்டு. பி-ம்:—[1] இரதமோவிவுளியோ பிடிகளோ. [2] உறையுளாம். [3] தானைவேள், தானைமுன, தானகை, தானையே. [4] ஆநாள்வரும, பேருழவர்தம், பேரிவர்கடம், பேரிருவர்தம். [5] புடையினே. (1133)

22.—இராமன் தசரதனை யணுகுதல்.

காவியுங் குவளையுங் கடிகொள்கா யாவுமொத்து
ஓவியஞ் [1]சவிகெடப் [2]பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் [3]சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்ன[4]வந் தரசன்மா [5]டணுகினான்.

(இ - ள்.) காவிஉம் - நீலோற்பலமலரையும், குவளைஉம்-கருங்குவளை மலரையும், கடி கொள் காயாஉம் - வாசனையைக்கொண்ட காயாம்பூவையும், ஒத்து-போன்று, ஓவியம் சவி கெட-சித்திரத்திலெழுதும் உருவமும் (தனது அழகிய வடிவத்தின்முன்) அழகு கெட்டதாகத்தோன்றும்படி, பொலிவது - விளங்குவதான, ஓர் உருவொடே-ஒப்பற்ற வடிவத்துடனே, தேவர்உம் தொழு கழல் - தேவர்களும் வணங்கும்படியான திருவடிகளையுமுடைய, சிறுவன்-(சக்கரவர்த்தி) திருமகனான ஸ்ரீராமன், முன் பிரிவது ஓர் ஆவி வந்து என்ன-முன்னே (தசரதனைவிட்டு) நீங்கினதொரு உயிர் (மீண்டும் அவனுடம்பில்) வந்துசேர்ந்தாற்போல, அரசன்மாடு வந்து அணுகினான்-தசரதசக்கரவர்த்தியினிடம் வந்துசேர்ந்தான்; (எ - று.)

விசுவாமித்திரன் தசரதனிடம் இராமனைக்கூட அனுப்பும்படி கேட்டபோதும், அங்ஙனமே அழைத்துக்கொண்டு போனபோதும் ஸ்ரீராமனுக்குத் தசரதனது உயிரையே உவமானமாகக் கூறிப்போந்த கவி, இங்கு இராமன் தசரதனை மீண்டடைந்ததற்கும் உயிர் உடம்பைவந்து அடைந்ததையே உவமை கூறினார். மனத்திற்கு அமைதியுண்டாகுமளவுங் கலைத்துக் கலைத்துச் சீர்திருத்தி மிக அழகியதாக எழுதக்கூடிய சித்திரவடிவமும் இராமபிரான் திருமேனியின் இயற்கைச்சௌந்தரியத்துக்கு முன்னே பயனற்றதாமென அழகு மிகுதியை வருணித்தார்: இதனால், சித்திரத்தில் எழுதலாகா உருவினன் இராமனென்பதும் போதரும்; "ஓவியத்தெழுதவொண்ணாவுருவத்தாய்" என்றான், அடிபட்ட வாலியும். 'தேவரும்' என்ற உம்மை-அவர்களது அறிவு ஆயுள் மேன்மை இவற்றின் மிகுதியாலான சிறப்பை விளக்கிற்று. உருவொடு, ஒடு-அடைமொழிப்பொருளது. பி-ம்:—[1]சுவை. [2]பொருவது. [3]திருவன. [4]தன். [5]ஆயினான். (1134)

23 -தனக்குப் பணிந்த இராமனைச் சக்கரவர்த்தி தழுவுதல்.

அனிகம்வந் தடிதொழக் [1]கடிதுசென் றரசர்கோன்
இனியபைங் கழல்பணிந் [2]தெழுதலுந் தழுவினான்
மனுவெனுந் தகையன்மார் பிடை [3]மறைந் தன[4]மலைத்
தனிநெடுஞ் [5]சிலையிறத் தவழ்[6]தடங் கிரிகளே.

(இ - ள்.) (இராமன்), அனிகம் வந்து அடி தொழ-(சக்கரவர்த்தியின்) சேனைகள்வந்து (தன்னுடைய) திருவடிகளை வணங்க, (பிறகு), கடிது சென்று-விரைவாகக் கிட்டி, அரசர் கோன் இனிய பைங் கழல் பணிந்து-தசரதசக்கரவர்த்தியினது (பார்ப்பதற்கு) இனிமையான பசும்பொன்னாற் செய்த வீரக்கழலையணிந்த பாதங்களை (த் தான்) வணங்கி, எழுதலும்-எழுந்திருந்தவளவிலே,—தழு

வினன்-(சக்கரவர்த்தி தனது திருக்குமாரனை) அணைத்துக் கொண்டான; (அப்பொழுது), மனு எனும் தகையன் மார்பிடை-ஆதிமனு சக்கரவர்த்தியென்று சொல்லத்தக்க சிறப்புத்தன்மையையுடைய தசரதனது மார்பிடையிலே, மலை தனி நெடு சிலை இற தவழ தட கிரிகள-மேருமலையாகிய ஒப்பற்ற பெரிய சிவவில் ஒடியும்படி முன் சென்ற பெரிய (இராமனது தோள்களாகிய)மலைகள், மறைந்தன—;

அனிகம்வந்து அடிதொழக் கடிதுசென்று-சனகனது சேனைகள் தன் பாதங்களை வணங்கிக்கொண்டு தன்னுடனேவரத் தான் விரைவாகச் சென்று என்றுமாம். மநு-இக்குலத்துக்கு ஆதியான வைவச்சுவதமனுவையாதல், மனுக்கள் பதினலவருள் முதல்வனை சுவாயம்புவமனுவையாதல் கொள்க; இவர் நீதியில், மிகச் சிறந்தவர். 'மார்பிடைத் தோள்கள் மறைந்தன' என்றதனல், பரந்தமார்புடைமை விளங்கும். மலையை முறித்த மலை என்று இராமனது திருத்தோளகளைக் குறித்த நயம் கருதத்தக்கது. கிரிகள - உவமையாகுபெயர். இப்பாடலுக்குப்பின் சிலபிரதிகளில் "காதலோ" (30) என்ற பாடல் காணப்படுகின்றது. பி - ம்:— [1]கடிதினவந்து. [2]எழுந்திறைஞ்சிடலு முன், எழுந்திறைஞ்சிடுதலும். [3]மறைந்தனன். [4]மழைத். [5]சிலையினில். [6]தடக்கையினன். சிலபிரதிகளில்'தனுவெனுங்கிரியிறத்தவழ்தடக்கையினன்' என்று நான்காமடி. (1135)

24.—இலட்சுமணன் வணங்க அவனைத் தசரதன் தழுவுதல்.

இளையபைங் குரிசில்வந் தடிபணிந் தெழுதலும்
தளை[1]வருந் தொடையன்மார் புற[2]வுறத் தழுவினன்
களைவருந் துயரறக் ககனமெண் டிசையெலாம்
விளைதரும் புகழினெனவரினும் [3]மேன்மையான்.

(இ - ள்.) களைவு அரு - (வேறொருவரால்) நீக்குவதற்கு அருமையான, துயர்-(சமபரன்முதலிய அசுரர்களால் உலகத்தார்க்கு நேர்ந்த) துன்பமுழுவதும், அற-நீங்கியதனல், ககனம் - ஆகாயத்திலும், எண திசை-எட்டுத்திககுக்களிலும், எலாம்-எல்லாவிடங்களிலும், விளைதரும்-பரவிய, புகழினன் கீர்த்தியையுடையவனும், எவரின்உம் மேனமையான்-எல்லோரினுஞ் சிறப்பையுடையவனுமாகிய அத்தசரத சக்கரவர்தது,—இளைய பைங்குரிசில் வந்து அடி பணிந்து எழுதலும்-பசும்பொன்னிறமான இளைய பெருமாள் வந்து (தனனுடைய) திருவடிகளை வணங்கி எழுந்தவளவிலே, தளை வரும் தொடையல் மார்பு உற-(பூக்களைக் கொணடு) கட்டுதல் பொருந்தின மாலையை யணிந்துள்ள (தனது) மார்பிலே பொருந்த, உற தழுவினன்-நன்ருக அணைத்துக்கொண்டான்; (எ - று.)

'பைங்குரிசில்' என்பதில், பசுமை-அழகுமாம். பை-படம்: ஆகுபெயராய்ப் பாம்பையுணர்ததியதாகக் கொணடால், ஆதிசேஷனது அமிசமான அரசகுமாரனென்று பொருளாம. தேவர்களுக்கு இடரியற்றிய சம்பரனைப பின்தொடர்ந்து அவன சென்ற உலகங்களிலெல்

லாம் உடன்சென்றதனால், ககனமெண்டிசையெலாம் தசரதன் புகழ் எளிதிலே விளைவதாயிற்று. தான் அரசுசெய்து வீற்றிருக்கிற பூலோகத்திலே புகழ்பரவுதல் எளியதேயாதலால் அதனைக் கூறுமல் பிறவிடங்களிற் பரவியதை முக்கியமாகக் கூறினர். களை வரும்துயர் அற விளை தரும் புகழினன் என்பதற்கு-பயிருக்குக் களைபோலப் புகழுக்கு விரோதமாய் எழுகிற பழியாகிய துன்பம் ஒழிய(த் தடையின்றி) விளைகிற புகழாகிய பயிரையுடையான் எனறும் உரைக்கலாம்; இவன் புகழைக் கேட்ட மாத்திரத்திலே பகைவரெல்லாம் அஞ்சிஒடுங்குதலால், நீங்குதற்கரிய பகைத்துன்பங் கெடும்படிவிளைகிற புகழை யுடையவனுமாம். இந்தச்செய்யுளும் அடுத்தசெய்யுளும் சில ஏட்டுப்பிரதிகளிலில்லை. சிலபிரதியில இச்செய்யுளின்பின் ''காதலோ'' (30) என்பது. பி - ம்:—[1] அரும். [2] மிகத். [3] மிகுதியான்.

25.—இராமன் தாயரைவணங்க அவர்பெருமகிழ்ச்சி கொளல்

கற்றைவார் சடையினுன் கைக்[1] கொளுந் தனுவிறக்
கொற்ற[2] நீள் புயநிமிர்த் தருளுமக் [3] குரிசில்பின்
பெற்ற[4] தா யரையுமப் பெற்றியிற் ருெழுதெழுந்து
உற்றபோ தவர்மனத் துவகை[5] யா ருரைசெய்வார்.

(இ - ள்.) கற்றை வார் சடையினன் - தொகுதியான நீண்ட சடையையுடைய சிவபிரான், கை கொளும்-கையிலே வைத்துக் கொண்டிருந்துள்ள, தனு - வில், இற - முறியும்படி, கொற்றம் நீள் புயம் நிமிர்த்தருளும் - வெற்றியையுடைய நீண்ட தோளை முன் செலுத்தியருளின, அ குரிசில் - பெருமையிற்சிறந்த அந்த ஸ்ரீராமபிரான், பின - பின்பு, பெற்ற தாயரைஉம்-(தன்னைப்)பெற்ற தாயாகிய கௌசலியை (அவளுக்கு இளைய) கைகேயி சுமித்திரை முதலிய (தசரதன்மனைவியரான தன்) தாய்மார்களையும், அ பெற்றியின் - (முனனே தசரதனை வணங்கின) அந்த முறைமையாகவே, தொழுது - நமஸ்கரித்து. எழுந்து உற்ற போது - எழுந்திருந்து (அவர்களருகிற்) பொருந்தினபொழுது, அவர் மனத்து-அவர்களது உளளத்தில் (உண்டான), உவகை-மகிழ்ச்சியை, உரை செய்வார் - (அளவிட்டு இவ்வளவினதென்று) சொல்லவல்லவர், யார்-யாவர் உளர்? (எ-று.)

தசரதனமனைவிமார்யாவரும் வெற்றித்திருவையடைந்த இராமனைக் கண்டமாத்திரத்திற் சொல்லி முடிக்கக்கூடாத கரையற்ற பரமானந்தமடைந்தார்க ளென்க. பி-ம்:-[1] கொள்மா. [2] நீள்புயச். [3] குரிசிலான். [4] தாய்தந்தையும் பெற்றியான். [5] என்று, என். சில பிரதிகளில் இச்செய்யுள் ''கோல்வரும்'' (28) என்றதன்பின்னும், சிலபிரதிகளில ''சான்றென'' (29) என்பதன் பின்னும். (1137)

26.—தன்னை வணங்கிய பரதனை இராமன் புல்லுதல்.

உன்னுபே ரன்புமிக் கொழுகியொத் [1] தொண்கணீர்
பன்னு[2] தா ரைகடரத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத் [3] துயிருறப் புல்லினுன்
தன்னையத் தாதைமுன் [4] தழுவினு னென்னவே.

(இ - ள்.) உன்னு - (எப்பொழுதும் இராமனையே நினைக்குந் தன்மையுள்ள, பேர் அன்பு - சிறந்த பக்தி, மிக்கு - (மனத்திலே) மிகுந்து, ஒழுகி ஒத்து - (அங்கு அடங்காமல் மேல்வழிந்து) பெருகினாற்போல, ஒள் கண் நீர் பன்னு தாரைகள் தர - ஒளிபொருந்திய கண்களின் நீர் அடர்ந்த தாரைகளாகப் பெருக, தொழுது - (தன்னை) நமஸ்கரித்து, எழும் - எழுந்த, பரதனை - பரதாழ்வானை, —(ஸ்ரீராமன்), அ தாதை தன்னை முன் தழுவினான் என்ன - அப்படிப்பட்ட சிறப்பையுடைய) தந்தையாகிய தசரதன் தன்னை முன்னே தழுவினான்போல, பொன்னின் மார்பு உற - பொன்னாபரணங்களையணிந்துள்ள (தன்) மார்பிலே அழுந்த, அணைத்து - அணைத்துக்கொண்டு, உயிர் உற - உயிரோடு பொருந்த, புல்லினான் - தழுவினான்; (எ-று.)

தக்க உவமை இன்மையின், தன்னைத் தாதை முன் தழுவியதையே உவமை கூறினார். "ஜ்யேஷ்டப்ராதா பித்ருஸம: [மூத்த சகோதரன் தந்தையோடொப்பான்]" என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. பொன் இன் மார்பு - திருமகளுக்கு இனிமையாகவுள்ள திருமார்புமாம். இனி, உயிருற - யாவர்க்கும் உயிரிடத்து உண்டாகும் அன்பு தனக்குப் பரதனிடம் உண்டாக என்க. பி ம்:— [1]உண். [2]தாமரையடித், தாமரைக்கழல், தாமரைகள்காத். [3]உயிரென. [4]தழுவினால். (1138)

27.—இலட்சுமணசத்துருக்கனர், ராமபரதர்களின் திருவடிகளை வணங்குதல்.

கரியவன் பின்பு [1]சென் றவனருங் காதலிற்
பெரியவன் றம்பியென் [2]றிணையதோர் [3]பெருமையப்
பொருவருங் [4]குமரர்தம் [5]புனைநறுங் குஞ்சியால்
இருவர்[6]பைங் கழலும்வந் திருவரும் வருடினார்.

(இ - ள்.) கரியவன் பின்பு சென்றவன் - கருநிறமுடைய ஸ்ரீராமனது பின்னே தொடர்ந்தவனான இலக்குமணனும், அரு காதலில் பெரியவன் தம்பி - (பிறராற்பெறுதற்கு) அருமையான ஸ்ரீராமபக்தியிலே மிக்கவனாகிய பரதனது பின்செல்லுந் தம்பியான சத்துருக்கனனும், என்ற இணையது ஓர் பெருமை - என்ற இத்தன்மையானதொரு ஒப்பற்ற மகிமையையுடைய, அ பொருவு அரு குமரர் இருவர் உம - ஒப்பில்லாத அந்தக்குமாரர்களிரண்டு பேரும், வந்து - (அருகில்) வந்து, தம் புனை நறு குஞ்சியால் - தமது அழகிய வாசனைவீசுகின்ற மயிர்முடியையுடைய சிரசினால், இருவர் பைங்கழல் உம வருடினார் (முறையே பரதன் இராமன் என்னும) இரண்டு பேர்களின் பசும்பொனாலாகிய வீரக்கழலையுடைய பாதங்களையும் வணங்கினார்கள்;

கரியவன்பின்னே சென்றவனான இலக்குமணன் பரதனையும் அருங்காதலிற பெரியவன தமபியான சததுருககனன் இராமனையும் வணஙகினா என்க. 'அடியை முடியால் வருடினார்' எனவே, எட்டுறுப்பும் நிலததிறபடியுமபடி வணங்கினாரெனருயிற்று. இளமைதொடஙகி இராமனை இலக்குமணனும் பரதனைச சததுருக்கனனும் விட்டுபபிரியாமல் மிககஙட்புககொணடொழுகினார்கள் எனக் கூறிப்

போந்தாராதலால், அதனைத்தழுவி, லட்சுமணசத்துருக்கனரை, 'கரியவன்பின்புசென்றவன்,' 'அருங்காதலிற் பெரியவன் தம்பி' என்ற பெயர்களாற் கூறினர். இதனால், இலக்குமணனது இராம கைங்கரியமும், பரதனது பகவத்பக்தியும், சத்துருக்கனனது பாகவத சேஷத்வமும் வெளியாகின்றன. குலம் கல்வி தூய்மை வாய்மை ஒழுக்கம் ஆற்றல் முதலியவற்றால், தோன்றும் பெருமைகள் யாவும் 'கரியவன் பின்பு சென்றவன், அருங் காதலிற் பெரியவன் தம்பி' என்னும் பெருமைக்கு ஒரு சிறிதும ஒப்பாகா ஆதலால் 'கரியவன் தம்பி...என்று இணையதோர் பெருமை' என்றும், அப்பெறுமை யொன்றுமே தமக்கு அமையுமென உணரும் பெருங் குணத்தின ராதலின் 'அப்பொருவருங் குமரர்' என்றும் கூறினரெனக. என்றிணைய து-தொகுத்தல். பி - ம்:—[1] சென்றவளரும். [2] அணையதோர். [3] பெருமையை. [4] குமரரும், குமரராம். [5] புகை, புணர். [6] பைங்கழலி னும். 'இருவருமிருவர் பைங்கழலினுஞ்சூடினர்' என்று சிலபிரதி யில் நான்காமடி. (1139)

28.—நான்கு குமாரர்களும் விளங்கிய வகை.

கோல்வருஞ் செம்மையுங் [1] குடைவருந் தண்மையும்
சால்[2] வருஞ் செல்வமென் [3] றுணர்பெருந் தாதை[4] போல்
[5] மேல்வருந் [6] தகைமையான் மிகவிளங் கினர்கடாம்
நால்வரும் [7] பொருவினன் [8] மறையெனுந் நடையினர்.

(இ - ள்.) 'கோல் வரும் செம்மைஉம்-அரசாட்சி முறைமையில் பொருந்தின நீதியும், குடை வரும் தண்மைஉம் - ஆளுகையிலே பொருந்தின குளிர்ந்த கருணையும், சால் வரும் செல்வம்-(தனக்கு) மிகப்பொருந்தின செல்வமாகும', என்று உணர் - என்று அறிந்து (தண்ணளியுடனே செங்கோல்) செலுததுகிற, பெரு - மகிமையை யுடைய, தாதைபோல்-(தங்கள்) தநதையான தசரதன போல, மேல் வரும் தகைமையான் - மேலாக வருகினற [சிறந்த] குணத்தோடு, பொருவு இல் நால் மறை எனும நடையினர் நாலவர்உம் - ஒப்பில் லாத நான்குவேதங்கள் நல்லொழுக்கமென்று கூறுவதை (த் தமது) ஒழுக்கமாகக் கொண்ட அந்த நானகு குமாரரும, தாம் மிக விளஙகி னார்கள்—; (எ - று.)

உலகத்தில் குமாரராற் சிறப்புறுந் தந்தையரும் தந்தையராற் சிறப்புறுங் குமாரரும பலருளராதல இயல்பன்றே: அங்ஙனமின்றி ஈண்டுத் தசரதனது பெருமைக்கு ஏறற குமாரர்களும் குமாரர்களது தகுதிக்கு ஏற்ற தந்தையுமாகி விளங்கினர்களெனபது கருத்தாம். கோல்வருஞ் செம்மை-ஒருபாற்கோடா நடுநிலைமை; தண்மை-அருளுக்குப் பண்பாகுபெயர். யாவருஞ் செல்வத்தையே விரும்பிப் பாது காப்பதுபோலத் தசரதன் செங்கோலையுந் தண்குடையையுமே பேணிபபோற்றுபவ னென்பது, முன்னடிகளின் பொருள்: பொரு வருவதாயிருந்தாலும் செங்கோல அருள இவை சிறிதும் தவறு படாதவ னெனறவாறு. பி-ம்:—[1] குடிவருந்தனமையும. [2] பெருஞ். [3] உணர்தரும். [4] தன். [5] பால். [6] தன்மையான். [7] பொருவினர். [8] மடை.

29.—தசரதன் தனதுசேனை முதலியவற்றை முற்கொண்டு செல்லுமாறு இராமனுக்குப் பணித்தல்.

சான்றெனத் தகையசெங் கோலினா னுயிர்கடாம்
ஈன்றநற் றாயெனக் கருதுபே ரருளினான்
ஆன்றவிச் செல்வ[1] மித் தனையு[2]மொய்த் தருகுறத்
தோன்றலை[3]க் கொண்டுமுற் செல்கெனச் சொல்லினான்.

(இ - ள்.) சான்று என தகைய செங்கோலினான் - (யாவர்க்கும்) சாட்சியென்று சொல்லத் தகுதியையுடைய செங்கோன்மையையுடையவனும், உயிர்கள் தாம் ஈன்ற நல் தாய் என கருது பேர் அருளினான் - எல்லாவுயிர்களும் தாம் தாம் தம்மைப்பெற்ற (அன்புள்ள) தாயென்று எண்ணும்படியான மிகுந்த கருணையையுடையவனுமாகிய அச்சக்கரவர்த்தி,—'ஆன்ற இ செல்வம் இ தனைஉம் மொய்த்து அருகு உற-நிறைந்த இந்தச்(சேனை குடை கொடி சாமரம் முதலிய) சிறப்புக்களிவ்வளவும நெருங்கி அருகிலே பொருந்த, கொண்டு முன் செல்க-அழைத்துக்கொண்டு முனனே செல்வாயாக', என-என்று, தோன்றலை - (ஸ்ரீராமனாகிய) குமாரனை நோக்கி, சொல்லினான்—; (எ-று.)

பகைவர் நண்பர் அயலார் என்னும் மூன்று திறத்தாரிடத்துஞ் சிறிதும்வேறுபாடின்றி நடுவுநிலை தவறாமல் நீதியுள்ளபடியேசொல்லியொழுகுதலால், 'சான்றெனத்தகைய செங்கோலினன' என்றார். "அரிசினத்தாலீன்றதா யகற்றிடினும் மற்றவள னருணினைந்தே யழுங்குழவியது" என றவாறு குழந்தை தன பெற்றதாய் தன்னைச் சினத்தால் அகற்றினாலும் அததாயிடத்து அன்பு கொண்டிருத்தல் இயல்பு ஆதலால், 'உயிர்கடாமீன்றநற்றாயெனக் கருது பேரருளினான்' எனக் கூறியது. பி-ம்:—[1] அத்தனையும். [2] ஒத்து. [3] தோனற, தோன்றல். சில பிரதிகளில் 'ஆனறவச்செல்வமொத்தவனுகந் தருகுற' என்று மூனறாமடியும், சிலபிரதிகளில், 'தோனறமுற் செல்கெனத் தாதையுஞ் சொல்லினான்' என்று நான்காமடியும் உள்ளன. *(1141)*

30.—அப்போது சேனை யடைந்த மகிழ்ச்சி.

காதலோ வறிகிலங் கரிகளைப் பொருவினார்
தீதிலா வுவகையுஞ் சிறிதரோ [1]பெரிதரோ
கோதைசூழ் குஞ்சியக் குமரர்வந் தெய்தலும்
[2]தாதையோ டொத்ததத் தானையின் றன்மையே.

(இ - ள்.) கரிகளை பொருவினார் - யானைகளை யொத்த அச்சேனை வீரர்களது, காதல் ஓ-(அந்தச் சக்கரவர்த்தியின குமாரர்களிடத்துள்ள) அன்பின் தன்மையையோ, அறிகிலம் - (இவ்வளவென்று வரையறுத்து) அறியமாட்டுகின்றோமில்லை; தீது இலா உவகை உம்-(அவ்வீரர்களுக்கு அக்காலத்து உண்டான) குற்றமில்லாத மகிழ்ச்சியும், சிறிது அரோ பெரிது அரோ-சிறியதோ பெரியதோ? (அதனையும் அறிகிறோமில்லை); (பின்னை யாம் அறிவதுதான் எதனையெனின்),-கோதை சூழ் குஞ்சி அ குமரர் வந்து எய்தலும்-

மாலைகளைச் சூடின மயிர்முடியையுடைய அந்தத்திருக்குமாரர்கள் வந்து சேர்ந்தவளவிலே, அ தானையின் தன்மை - அந்தச் சேனையினியல்பானது, தாதையோடு ஒத்தது - (இராமலட்சுமணர்களைக் கண்டமாத்திரத்தில்) தாதையான சக்கரவர்த்தியின் மகிழ்ச்சியோடு ஒத்தது; (எ - று.)

சேனைகளைக்கொண்டு செல்கவென்று தசரதன் கட்டளையிட்டவுடனே, முன்செல்லுமாறு ஸ்ரீராமன் தன் தம்பியரோடு சேனைகளைச் சார, இராமலட்சுமணரைக் கண்ட தசரதசேனையாரும் பரதசத்துருக்கனரைக் கண்ட சனகசேனையாரும் ஒருங்கு கொண்ட ஆனந்தத்தின் அளவை இச்செய்யுளாற் பொதுபபடக் கூறுகின்றார். கரிகளைப்பொருவினர் என்பது-முன்னும் பின்னும் இரண்டு வாக்கியங்களிலுஞ் சென்று கூடிநிற்றலால், மத்திமதீபம். தீதுளள உவமையை யொழித்தற்கு 'தீதிலாவுவமை' எனறது. காதலோ, ஓ-உயர்வுசிறப்பு. சிறிதரோ, பெரிதரோ—அரோ - ஐயப்பொருளை யுணர்த்திற்று. இனி, அர் சாரியையென்றலும், குற்றியலுகரப் போலியென்றலும் ஒன்று. பி -ம்:—[1]பிறிதரோ. [2]தாதையாதொத்தது என்றபாடத்திற்கு - ஆதலொத்ததென்பது ஆதொத்ததென நின்றதென்ப. (1142)

31.-தம்பியர்மருங்கு தொடர்ந்துவர, இராமன்தேரின்மேற் செல்லுதல்.

தொழுதிரண் டருகுமன்,புடையதம் பியர்தொடர்ந்து
அழிவில்[1]சிந் தையினுவந் தாடன்மா மிசைவரத்
தழுவு[2]சங் கொடுநெடும் பணைதழங் கிடவெழுந்து
எழுதருந் தகையதோர் தேரின்மே[3]லேகினன்.

(இ-ள்.) இரண்டு அருகுஉம் - (தனது) இருபக்கங்களிலும், அன்பு உடைய தம்பியர்-அனபையுடைய (இலக்குமணன் முதலிய) தமபிமார்மூவரும், தொழுது-வணங்கி, தொடர்ந்து-விடாதுநின்று, அழிவு இல சிந்தையின உவந்து - (என்றுந் தமையனார்திறத்தில் அனபு) அழிதலில்லாத மனத்திலே மகிழச்சிகொண்டு, ஆடல் மா மிசை-வெற்றியுடைய குதிரைகளின் மேலே, வர-ஏறிவரவும, தழுவு சங்கொடு நெடு பணை தழங்கிட - (கைகளால்) தழுவியெடுதது (வாயில்வைத்து) ஊதப்படுகிற [பெரிய] சங்கவாத்தியங்களுடனே பெரிய பேரிகைகள் முழங்கவும, எழுந்து - (இராமபிரான் தான்) புறப்பட்டு, எழுதரும் தகையது ஓர் தேரின் மேல் - உயர்ந்து நிற்கும் தனமையையுடையதொரு இரதத்தின்மேல் (ஏறி), ஏகினன் - சென்றான்; (எ-று.)

இலட்சுமணனும் தேரிலேகியதை உபலட்சணத்தாற்கொண்டு, பரதசத்துருக்கனாஆடல் மாமிசை இருமருங்குவர,இராமலட்சுமணர் தேரின்மீது ஏகினரென வுரைத்தலும ஒன்று. அழிவுஇலசிந்தை-தைரியமிலே அழிதலில்லாத மனமுமாம். ஆடல்மா - ஆடுந்தன்மையுள்ள குதிரையுமாம். தழுவு சங்கு - (பிறவாததியங்களினிசையோடு மாறுபடாமல் அதனைத் தன் இசையால்) தழுவுஞ் சங்கு என்று

மார். எழுது அரு எனப்பிரித்தும் உரைக்கலாம். பி-ம்—[1] சிந்தையி ஞெடும். [2] சங்குடன். [3] ஏறினன். (1143)

32.—இராமன் மிதிலைநகர் வீதியிலெய்துதல்.

பஞ்சிசூழ் மெல்லடிப் பாவைமார் [1] பண்ணைசூழ்
மஞ்சு[2] சூழ் நெடிய[3] மாளிகையின்வந் [4] திடைவிராய்
நஞ்சுசூழ் [5] விழிகள்பூ மழையின்மேல் [6] விழநடந்து
இஞ்சிசூழ் மிதிலைமா வீதிசென் றெய்தினன்.

(இ - ள்.) பஞ்சி சூழ் - செம்பஞ்சுக்குழம்பு நிரம்ப ஊட்டப்பட்டுள்ள, மெல் அடி - மென்மையான பாதங்களையுடைய, பாவைமார் - சித்திரப்பிரதிமை போலழகிய மகளிரின், பண்ணை - கூட்டங்கள், சூழ் மஞ்சு சூழ் நெடிய மாளிகையின் - (அவ்வூரிற்) சுற்றிலுமுள்ள மேகங்கள சூழ்ந்து தங்கப்பெற்ற உயர்ந்த உபரிகை வீடுகளினின்று, வந்து -, இடைவிராய் - வெளியிடங்களில் நெருங்கி நிறக, நஞ்சு சூழ் விழிகள் - விஷம் நிறைந்தாற் போன்ற (அவரது கரிய) கண்கள், பூ மழையின் - மலர்மழைபோல், மேல் விழ - (தன்) மேலே விழும்படி, (இராமபிரான்), நடந்து - சென்று, இஞ்சி சூழ் மிதிலை மா வீதி சென்று எய்தினன் - மதில்கள் சூழ்ந்துள்ள மிதிலா பட்டணத்திற் பெரிய வீதிகளிற் போய்ச்சேர்ந்தான; (எ-று.)

ஆடவர்பலர் வாழ்த்தித் தூவும் மலர்மாரியொடு வீட்டினுட் புறத்தினின்று வெளிப்புறம் வந்து நெருங்கிநின்ற மகளிரின் கண்பார்வைமாரியும் விழ, இராமபிரான் மிதிலாநகரின் வீதி சேர்ந்தன னென்பதாம். மஞ்சுசூழ் நெடியமாளிகை-தொடர்புயர்வுநவிற்சியணி. இதனல், மாளிகைகளின் உயர்வு தொனிக்கும். கண்ணின் இயற்கைக் கருநிறத்தையும், மைதீட்டுதலாலாகிய செயற்கைக்கரு நிறத்தையும், ஆடவர்க்கு ஆசைநோயை யுண்டாக்கி மயக்கந் தருந்தன்மையையும் பற்றி 'நஞ்சுசூழ்விழி' என்றது. 'பூமழையின் மேல் விழ' என்றதனல் - இம்மகளிர்கள் தாமே இராமனமேற் பூமழைபொழிந்தார்க ளென்பது பெறப்படுமெனவுமாம. கீழக்கவியில் 'தேரின் மேலேகினன்' என வந்ததனல், இக்கவியில் 'நடந்து' என்றது - 'சென்று' என்னும்பொருளை யுணர்ததிற்று. பண்ணை - கூட்டமென்னு மாத்திரையாய் நின்றது. மாளிகையின வந்து இடை விராய்-மாளிகையின் முன்புறத்து வந்து அவ்விடந்தோறும் பொருந்தியிருந்து என்று உரைப்பதும் ஒன்று. விராய்-விராவ. பி - ம்:-[1] பண்ணையின். [2] தோய். [3] மாளிகையினின்று. [4] அடி. [5] விழியின். [6] வழி. இதனேடு இப்படலம் சிலபிரதிகளில்முற்றும. (1144)

33.—அந்நகரத்துமாளிகைகளின் வருணனை.

சூடகந் துயல்வரக் கோதைசோர் தரமலர்ப்
பாடகம் பரதநூல் பகரவெங் கடகரிக்
[1] கோடரங் கிடவெழுங் குவிதடங் கொங்கையார்
ஆடரங் [2] கல்லவே யணியரங் [3] கயலெலாம்.

(இ - ள்.) அணி அரங்கு அயல் எலாம்-அழகிய (அந்நகரத்து வீதிகளிலுள்ள) மாளிகைகளின் இடமெல்லாம்,—சூடகம் துயல்வர-(தமது) கை வளைகள் அசையவும், கோதை சோர - கூந்தல் தளர்ந்து சரியவும், மலர் பாடகம் பரதம் நூல் பகர - செந்தாமரை மலர்போல் மெல்லிய பாதங்களிலணிந்த பாடகமென்னும் ஆபரணங்கள் நாட்டியசாஸ்திரத்திற் கூறப்பட்ட தாளவிதி முறைமையை(த் தம் ஒலியால்) வெளியிடவும், வெம் கடம கரி கோடு அரங்கிட எழும குவி தட கொங்கையார்-வெம்மையான மதத்தை யுடைய யானைகளின் தந்தங்கள் அழகுகெடும்படி மேலெழுந்து வளர்ந்த குவிந்த பெரிய தனங்களையுடைய மகளிர், ஆடு அரங்கு அல்ல-நர்த்தனஞ் செய்கின்ற நாட்டியசாலைகளல்ல; (எ-று.)

அந்நகரத்து மாளிகைகளின் தெருப் பக்கத்தில் மகளிர்கள் அழகாக அசைந்து நடந்து வந்து நிற்கின்ற ஒவ்வொரு இடமும், வளையசைதலினாலும் கோதை சோர்தலினாலும் பாடகமொலித்தலினாலும், நாட்டியசாஸ்திரத்திற் கூறிய உத்தமவிலக்கணம் முழுவதுமமைந்த இளமங்கையரினிடங்களான நாடகசாலை போலுதலால், அவற்றை 'ஆடரங்கு அல்ல' என்று மறுத்துக்கூறவேண்டுவதாயிற்று. கோதை - மாலையுமாம். 'பாடக மலர்' என மொழி மாற்றி, கால் பரத நூல் பகர எனறலுமாம். பாவம், ராகம், தாளம் என்னும் மொழிகளின் முதலெழுத்துக்கள் தொடர்ந்து ஒரு மொழியாகிய 'பரதம்' என்பது - அம்மூன்றையுமுடைய நாட்டியத்துக்குப் பெயராய் வழங்கிற்றென்று உரைப்பர். மலர்-உவமையாகுபெயர். இங்கே, நூல-காரணவாகுபெயர். அல்லவே யெனவெடுத்து-தேற்றமெனினுமாம். பி - ம்:—[1]கோடகங்கெடவெழுங், கோடகங்கோட்டுவங். [2]அல்லநேர், அல்லவேள். [3]அவணெலாம. இச்செய்யுள், சில பிரதிகளில், "பேதைமார்" (34) என்றதன்பின். (1145)

34.—கவிக்கூற்று: மகளிர் அடைந்த நிலையைக் கூறுவோமெனல்.

[1]பேதைமார் முதல்கடைப் பேரிளம் பெண்கடாம்
[2]ஏதியார் மாரவே [3]ளேவவந் தெய்தினர்
ஆதிவா னவர்பிரா னணுகலா லணிகொள் [4]கார்
ஓதியார் வீதிவா [5]யுற்றவா றுரைசெய்வாம்.

(இ - ள்) ஆதி-(யாவர்க்கும்) முதன்மையான, வானவர்பிரான்-தேவர்களெல்லாம முதல்தேவனாகும திருமாலின திருவவதாரமான ஸ்ரீராமபிரான், அணுகலால்-அருகில்வந்து சேர்தலால், பேதைமார் முதல-பேதைப்பருவத்தினர் முதலாக, பேரிளம் பெண்கள் கடை-பேரிளம பெண்பருவததினரிறுதியாக, ஏதி ஆர் மாரவேள் ஏவ வந்து எய்தினா-ஆயுதங்கள் நிரமபின மன்மதன் ஏவியதனால் வந்து சோநதவாகளான, அணி கொள கார்ஓதியார்-அழகைக்கொண்ட கரிய கூநதலையுடைய மாதர்கள்யாவரும, வீதிவாய் - (அந்நகரின் நெடுந) தெருககளிலே, உறற ஆறு அடைந்த நிலைமையை, உரை செயவாம-இனிச் சொல்லுவோம; (எ-று.)

இதனால், மேற்படலத்துக்குத் தோற்றுவாய் செய்தார். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனப்பெண்களின்பருவம் எழுவகைப்படும்; இப்பருவத்து வயதெல்லை-ஐந்து முதல் ஏழளவும் பேதை; எட்டு முதற் பதினொன்றளவும் பெதும்பை; பன்னிரண்டுமுதற் பதின்மூன்றளவும் மங்கை; பதினான்குமுதற் பத்தொன்பதளவும் மடந்தை; இருபது முதல் இருபத்தைந்தளவும் அரிவை; இருபத்தாறு முதல் முப்பத்தொன்றளவும் தெரிவை: முப்பத்திரண்டுமுதல் நாற்பதளவும் பேரிளம்பெண் எனக் காண்க. ஏதி-ஹேதி: வடமொழி. எல்லா வுயிர்களுக்குந் தலைவனான இராமபிரானிடத்தில் வேட்கைகொள்ளுதல் மகளிர் கற்புக்குக் குறைவுபாடாகா தென்பதை உய்த்துணர்க; இத்தன்மை தோன்றும் பொருட்டே 'ஆதி வானவர் பிரானனு கலால்' என்று ரென்ப. கார் ஓதி-மேகம்போலுங் கூந்தலுமாம். பி - ம்:—[1]பேதையார்முதலினோர். [2]ஏதிலா, ஏதியான. [3]எய்ய, எய்த. [4]தார், சார். [5]உற்றதியாம். (1146)

எதிர்கொள்படலம் முற்றிற்று.

19.—ஆவது உலாவியற்படலம்.

மிதிலாபட்டணத்து வீதியிலே இராமபிரான் உலாப்போ இன்ற காலத்து நிகழ்ந்ததைக் கூறும் பாகம். உலா-ஊர்கோலம். உலாவியருள்படலம் என்று சில பிரதிகளிலும், உலாவுபடலம் என்று சிலபிரதிகளிலும் இப்படலத்திற்குப் பெயர் எழுதப்பட்டுள்ளது.

வேறு.

1.—மகளிர் எங்கும் மொய்த்தல்.

மானினம் வருவ போன்றும் மயிலினந் திரிவ போன்றும்
மீனின [1]மிளிர்வ போன்றும் மின்னின [2]மிடைவ போன்றும்
தேனினஞ் [3]சிலம்பி [4]யார்ப்பச் [5]சிலம்பினம் புலம்ப வெங்கும்
பூநனை [6]கூந்தன் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.

(இ - ள்.) பூ நனை கூந்தல் மாதர் - (தேன் நிரம்பின) பூக்களைச் சூடுதலால் ஈரமாகியுள்ள கூந்தலையுடைய (அந்நகரத்து) மகளிர்கள் பலரும்,—மான் இனம் வருவ போன்றுஉம் - மான்களின் கூட்டங்கள் வருவனவற்றையொத்தும், மயில் இனம் திரிவ போன்று உம்-மயிற்பறவைகளின் கூட்டம் சஞ்சரிப்பனவற்றை யொத்தும், மீன் இனம் மிளிர்வ போன்றுஉம் - நட்சத்திரங்களின் கூட்டங்கள் விளங்குவனவற்றை யொத்தும், மின் இனம் மிடைவ போன்றுஉம்-மின்னல்களின் கூட்டங்கள் நெருங்குவனவற்றை யொத்தும், தேன் இனம் சிலம்பி ஆர்ப்ப-(தாம் அணிந்துள்ள பூமாலைகளில் மொய்த்துள்ள) வண்டுகளின கூட்டங்கள் ரீங்காரஞ்செய்து ஆரவாரிக்கவும், சிலம்பு இனம் புலம்ப-(கால்களில் அணிந்துள்ள) சிலம்பு என்னும் அணிகளும் அதன் இனமான பிற காலணிகளும் ஒலிக்கவும்,

எங்குடம்,—பொம்மென - விரைவாக, புகுந்து மொய்த்தார்-வந்து நெருங்கினர்கள்; (எ-று.)

"மயில்கண்டன்ன மடநடை மகளிர்" எனவும், "நடைமயிலே" எனவும் கூறியிருத்தலின், நடைக்கும் மயிலுவமை கொள்ளலாம். பொம்மென-விரைவுககுறிப்பு: ஒலிக்குறிபபுமாம். இச்செய்யுளில் உவமையணியும் தன்மைநவிற்சியணியும் சேர்ந்திருத்தலால், சேர்வையணி. பி - ம்:—[1]மிளிரவானின், மிளிரவ்வானின். [2]வீழ்வ. [3]பப்பி, புலம்பி. [4]ஏங்க. [5]நூபுரஞ்சிலம்பியேங்க. [6]கோதை. (1147)

2.—மகளிர் மொய்த்த வகை.

விரிந்துவீழ் கூந்தல் பாரார் மேகலை யற்ற நோக்கார்
சரிந்தபூந் துகில்க டாங்கா ரிடைதடு மாறத் தாழார்
நெருங்கினர் [1]நெருங்கிப் புக்கு நீங்குமி [2]னீங்கு மின்னென்று
அருங்கல மனைய மாதர் தேனுக [3]ரளியின் மொய்த்தார்.

(இ - ள்.) அரு கலம் அனைய மாதர் - (அந்நகரத்துக்குப்) பெறுதற்கரிய ஆபரணங்களையொத்து அழகுசெய்கிற அம்மகளிர்,— விரிந்து வீழ கூந்தல் பாரார் - (தாம் விரைந்து நடந்து செல்லுங் காலத்து) அவிழ்ந்து விழுந்த தங்கள் கூந்தலைக் கவனியாதவர்களும், மேகலை அற்ற நோக்கார் - (தத்தம்) மேகலாபரணங்கள் அறுந்துசிந்துவனவற்றை இலட்சியஞ் செய்யாதவர்களும், சரிந்த பூ துகில்கள தாங்கார்-அவிழ்ந்துதளர்கிற பூப்போல் மெல்லிய (தத்தம்) பட்டாடைகளை ஏந்தக்கருதாதவர்களும், இடைதடுமாற தாழார்-(தத்தம் நுண்ணிய) இடை நிலைகுலைதலையடைய (அதை நோக்கித்) தாமதியாதவர்களுமாகி, நெருங்கினர் - (இராமனது) அருகில் வந்தவர்களாய், நெருங்கி புக்கு - (தம்மில்) அடர்ந்து சென்று, நீங்குமின் நீங்குமின என்று - வழிவிட்டு விலகுங்கள் விலகுங்கள் என்று (ஒருவரையொருவர்) கூறிக்கொண்டு, தேன் நுகர் அளியின்-மதுவைப் பருகவருகிற வண்டுகள்போல, மொய்த்தார்-(மிக்க ஆசையோடு இராமனைச்) சூழ்ந்துகொண்டார்கள்;

இராமனைக் காணுதற்குச் செல்லுதலிலுள்ள பரபரப்பினால், மகளிர் அவிழ்ந்துவீழ கூந்தலைப் பாாத்தல முதலியன செய்யாராயின ரென்க. பூந்துகில்-பூக்களின் வடிவமாகச் சித்திரமமைக்கப் பட்டுள்ள சேலை என்றுமாம். அடுக்கு - விரைவுபபொருளது. பி-ம்:-[1]நெருங்க. [2]நீங்குமென்றென்று. [3]ஈயின். (1148)

3.—மூன்றுகவிகள்-இராமனைக் காணவந்த மகளிரின் தன்மை.

கண்ணினாற் காத லென்னும் பொருளையே [1]காண்கின் றேமிப்
பெண்ணினீர் மையினா லெய்தும் பயனின்று பெறுது மென்பார்
[2]மண்ணினீ [3]ருலந்து வான மழையற [4]வறந்த காலத்து
உண்ணுநீர் கண்டு வீழு முழைக்குலம் பலவு மொத்தார்.

(இ - ள்.) கண்ணினால்-(நமது) கண்களாலேயே, காதல் என்னும்பொருளை - ஆசையென்னும் பொருளின் வடிவத்தையே,

காண்கின்றோம்-(இங்கு இப்பொழுது) பார்க்கிறோம்; (ஆதலால்), இ பெண்ணின் நீர்மையினால் எய்தும் பயன்-இந்தப்பெண்பிறப்பின் தன்மையால் அடையும் பயனை, இன்று பெறுதும்-இன்றைய தினந்தான் பெறுவோம், என்பார்-என்று கருதுபவர்களாய்,—(இராமன் வருதல் கண்டு ஓடிவருகிற அம்மகளிர்), மண்ணில் நீர் உலந்து-பூமி முழுவதிலுந் தண்ணீர் வறண்டு, வானம் மழை அற வறந்த காலத்து-ஆகாயத்திற் செல்கிற மேகங்களின் மழையும் (பலநாளாக) இல்லாமற் காய்ந்துபோனகாலத்திலே, உண்ணும்நீர் கண்டு-பருகுதற்குரிய நல்ல நீரை (ஓரிடத்தில்) பார்த்து, வீழும்-(அதனைக் குடித்தற்கு) விரும்பி (அங்கு வந்து) சேர்கிற, உழை குலம் பலஉம்-மான் கூட்டங்கள் பலவற்றையும், ஒத்தார்-; (எ-று.)

மிகுந்த நீர்வேட்கையுடைய உயிர்களுக்கு அருமையாகக்கிடைக்கிற நல்ல நீரினிடத்து எவ்வளவு விருப்பு உண்டாகுமோ, அவ்வளவு மிகுந்த வேட்கை இராமபிரானிடத்து அம்மாதர்க்கெல்லாம் அப்போது உண்டாயிற்று என்பதாம். காதலென்பது கண்ணாற் காணக்கூடிய பொருள் அன்று: அங்ஙனன காதலே வடிவெடுத்தாற்போன்றது இராமன் திருமேனியென்க. அழகு நிரம்பின உத்தம புருஷனைக் கண்ணாரக்கண்டு களித்தலே பெண்பிறப்புப் படைத்ததற்குப் பயனென்றார். வைசேடிகர், பொருள் பண்பு முதலியவற்றை அறுவகைப்பொருளென்றாற்போல், இங்கே காதலாகிய குணம் பொருளெனப்பட்டது; "சினத்தைப் பொருளென்று கொண்டவன்" எனத் திருவள்ளுவனார் வெகுளியைப் பொருளாகக் கூறியவாறும் காண்க: பொருள் - பதார்த்தம். 'பெள்' என்னும் பகுதிக்கு-விரும்புதல் என்று பொருளாதலால், விரும்பப்படுந் தன்மைபற்றி, அது ஈறு திரிந்து 'பெண்' எனப் பெயராயிற்று; ஆளுந்தன்மைபற்றிய ஆள் என்பது ஆண் என ஈறு திரிந்து வழங்குமாறும் அறிக. உண்ணலென்பது பொதுவினையாயும் வருமாதலால், உண்ணுநீர் என்றார். பி-ம்:—[1]காண்கின்றோரும். [2]மண்ணும். [3]உலர்ந்து. [4]இறந்த. இச்செய்யுள், சில பிரதிகளில் 'பள்ளத்து' (4) என்றதன்பின். (1149)

4. பள்ளத்துப் [1]பாயு நன்னீ ரனையவர் பானல் பூத்த
[2]வெள்ளத்தும் பெரிய கண்ணார் மென்சிலம் [3]பலம்ப [4]மென்பூத்
தள்ளத்தம் மிடைகள் நோவத் தமை[5]வலித் [6]தவன்பாற் செல்லும்
உள்ளத்தைப் பிடித்து [7]நாமென் [8]றோடுகின் றாரு மொத்தார்.

(இ-ள்.) பள்ளத்து பாயும் நல் நீர் அனையவர் - பள்ளமான இடத்திலே பாயுந்தன்மையதான தெளிவான நீர்போல (யாவர் மனமும் வந்து விழுதற்கு இடமான ஸ்ரீராமமூர்த்தியினிடத்துச் சென்று விழுந்த சுத்தமான மனத்தின்) தன்மையை யுடையவர்களாகிய, பானல் பூத்த வெள்ளத்துஉம் பெரிய கண்ணார்-கருங்குவளைப் பூப்போல மலர்ந்துள்ளவையும் கடல்வெள்ளத்தினும் பெரிய வடிவமுடையவையுமாகிய கண்களையுடைய அம்மகளிர், — மெல் சிலம்பு அலம்ப-மெல்லிய சிலம்பென்னும் அணிகள் ஒலிக்கவும், மெல் பூ தள்ள-மென்மையான பூமாலைகள் (தமது உடம்பில) அசை

யவும், தம் இடைகள் நோவ-தங்களது நுண்ணிடைகள் (நடையின் விரைவால்) வருந்துதலை யடையவும், தமை வலித்து அவன்பால் செல்லும்-தம்மை(ப் பின்னேவர) இழுத்துக்கொண்டு அவனிடத்து (முன்) செல்கின்ற, உள்ளத்தை-(தமது) மனத்தை, நாம் பிடித்தும் எனறு-நாம் பிடிபபோம் என்று (அதனைத் தொடர்ந்து), ஓடுகின்றார்உம்-ஓடுகின்றவர்களையும், ஒத்தார்-ஒத்து (இராமனிடம்) விரைவாகச் சென்றார்கள்; (எ-று.)

இராமனைக் காணும்பொருட்டு மகளிர் மனோவேகமாகச் சென்றார்களென்பது, இக்கவியின் கருத்து. இது - தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இன்றியமையாத அந்தக்கரண மாதலால், மனத்தை அவசியந் தேடிப்பிடிக்க வேண்டியதாயிற்று. சிற்றின்பத்தைப் பள்ளமடையென்ப ஆதலால், 'பள்ளத்துப்பாயுநன்னீ ரனையவர்' என்றது. இராமன் கம்பீரமான தன்மையிற் கடல்போல்வான் என்று ஸ்ரீவால்மீகிபகவானும் கூறியுள்ளா ராதலால், பள்ளம் இராமனுக்கு உவமை கூறப்பட்டதென்பாருமுளர். வெள்ளத்தும் பெரியகண்-உத்தம இலக்கணப்படி கடலினும் பெரியனவாயுள்ள கண்கள்; இது-உயர்வுநவிற்சி. மென்சிலம்பு-காலில் உறுத்தாதபடி மென்மையாகச்செய்யப்பட்ட சிலம்பு; இனி ஓசையினிய சிலம்பும், சிறிய சிலம்பும், கண்ணுக்கினிய சிலம்பும் ஆகவுமாம். மென்பூத் தள்ள-மெல்லிய தாமரைமலர்போன்ற பாதங்கள் தள்ளாட எனறுமாம். பி-ம்:—[1]பரவு. [2]வெள்ளத்துப். [3]அலம்பு. [4]செங்கால், செங்கேழ். [5]வலிந்து. [6]அப்பாற். [7]என்ன. [8]ஒடுங்குகின்றவரும். *(1150)*

5. அரத்தமுண் டனைய மேனி [1]யகலிகைக் களித்த தாளும்
விரைக்[2] கருங் குழலிக் காக வில்லிற நிமிர்ந்து வீங்கும்
வரைத்தடந் தோளுங் [3]காண மறுகினின் [4]வீழு மாதர்
இரைத்துவந் [5]தமிழ்தின் மொய்க்கு மீயின மென்ன லானார்.

(இ-ள்.) அரத்தம் உண்டு அனைய மேனி அகலிகைக்கு அளித்த தாள்உம் - செந்நிறத்தையுட்கொண்டாற்போன்ற [செந்நிறமான] வடிவத்தையுடைய அகலிகை சாபவிமோசனம் பெறும்பொருட்டு அருளிய (இராமனது) திருவடிகளையும், விரை கரு குழலிக்கு ஆக வில் இற நிமிர்ந்து வீங்கும் வரை தட தோள்உம்-(இயற்கை செயற்கை) வாசனைகளையுடைய கரிய கூந்தலையுடைய சீதாபிராட்டியாரைப் பெறுவதற்காகச் சிவதநுசு ஒடியும்படி உயர்ந்து பூரித்த மலைபோன்ற பெரிய (அவனது) திருத்தோள்களையும், காண-பார்த்துக் களிப்பதற்கு, மறுகினின் வீழும்-அவ்விராசவீதியிலே வந்தடைகிற, மாதர்-மகளிர்கள்,—இரைத்து வந்து அமிழ்தின் மொய்க்கும் ஈ இனம் என்னல் ஆனார்-ஆரவாரஞ் செய்துகொண்டு வந்து அமிருதத்திலே மொய்க்கிற ஈக்களின கூட்டமென்று (உவமை) சொல்லும்படியானார்கள்; (எ-று.)

'வெல்லப்பானையில் ஈ மொய்க்கிறதுபோல' என்ற உலகவழக்குங் காண்க. ஈக்கள் இரைத்துவருதற்குக் காரணம் - இத்தகைய அமிர்தம் கிடைத்ததே என்னுங் களிப்பு. உபமானத்தில் 'இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கும்' என்றதனால், உபமேயத்தி

லும் மகளிர் வரும்பொழுது இராமனது வடிவழகையும் மகிமையையும் புகழ்ந்துகூறி வந்தார்கள் என்க. எத்தனை ஈக்கள் ஒருங்கே கூடி முழுவதையுந் தாமே பருகிவிடவேண்டுமென்று பேராசை தனித்தனிக்கொண்டு நுகர்ந்துநின்றாலும் அமிழ்தத்தின் சுவை குறைபடாததுபோல இவ்விராமாமிருதமும் எத்தனை மகளிர் ஒருங்குகூடிவந்து திருமேனியழகைக் கண்களாற் பருகக் கருதினாலும் முடிவுபோகாதென்று அறிக. இராமபிரான் சர்வாங்கசுந்தரனாலும், தாளினாற் சாபம் நீக்கியும் தோளினால் வில்லிறுத்தும் அகலிகை சீதை என்ற மாதரார்க்கு உதவியமைபற்றி, மாதர்கள், அவற்றைக்காண விரும்பித் திரண்டனரென்னலாம். பி-ம்:— [1] அகலிகைகளித்த. [2] குழல்சனகிக்காக. [3] காணுமறுகினர். [4] விழுந்து. [5] அமிர்தை. (1151)

6.—இராமபிரானை மகளிர் காணுதல்.

வீதிவாய்ச் செல்கின் றான்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே [1] வாவுமான் றேரிற் [2] செல்வான்
யாதினு [3] முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே
ஓதிய [4] பெயர்க்குத் தானே [5] யுறுபொரு ளுணர்த்தி விட்டான்.

(இ-ள்.) வீதிவாய் செல்கின்றான் போல் - (அந்நகரத்து) வீதியினிடத்திலே போகிறவன்போல, விழித்து இமையாதுநின்ற மாதரார் கண்களூடே - இமைத்தலுஞ் செய்யாமல் விழித்துக்கொண்டு நின்ற அம்மகளிரது கண்களிடத்திலே, வாவும மான் தேரில் செல்வான் - தாவிப்பாய்கின்ற குதிரைகளைப் பூட்டிய தேரின் மீது செல்பவனான அவ்விராமன்,—யாதின்உம் உயர்ந்தோர் - எல்லாப்பொருள்களினுஞ்சிறந்த பெரியோர்கள், - தன்னை -, கண்ணன் என்று ஓதிய பெயர்க்கு - கண்ணனென்று கூறியுள்ள திருநாமத்துக்கு, உறு பொருள் - தகுந்த பொருளை, தானே—, யாவர்க்குஉம் உணர்த்திவிட்டான் - எல்லோருக்கும் அறிவித்து விட்டான்;

கருநிறமுடைமையாலும், யாவர்மனத்தையும் கவர்ந்து இழுக்குந் தன்மையாலும், க்ருஷ்ணன் என்னும் வடமொழியின் திரிபாகக் கண்ணனென்று திருமாலுக்கு நூல்களிற் பெயர் வழங்கும்; இனித் தமிழ்மொழியாகவே (யாவரிடத்துங்) கண்ணோட்டமாகிய அருளையுடையவனென்றும், (யாவர்க்கும) கண்ணையொத்து அருமையாய் நிற்பவனென்றும பொருள்கள் படும்: இப்போது அத்திருநாமத்துக்கு, எல்லாமகளிருடைய கண்வழியிற் செல்லுதலாற் கண்ணன் என்று பொருள் சொல்லும்படியாயிற்று என்பதாம். கண்ணன் என்றசொல்லுக்கு இயல்பாகவுள்ள பொருளையொழித்து வேறொரு பொருளைக் கற்பித்துக்கூறிய இது, பிறிதினிலைநவிற்சியணி யெனப்படும். பெயர்ச்சொற்களுக்கு உறுப்பாற்றலான் மற்றொருபொருளைத் தந்து உரைப்பது, இதனிலக்கணம்; செல்கின்றானபோல என்றது - அவநுதியணி. கண்களை இமைத்தால் இமைக்கும அவ்வளவு காலம எமபெருமான் வடிவழகு காணப்படாமல் மறைபடுமாதலால், அவ்வடிவினிடத்துள்ள ஆர்வத்தால் வாவுமான்றேரிற் செல்லும் இராமபிரானைக் கண்ணிமையாது மாதரார் கண்டவண்ணம் நிற்பார

யினர். யாது சாதியொருமை. யாதினும்-எல்லா நூல்களிலும் என்று மாம். பி - ம்:—[1] மயங்கு. [2] போறுன. [3] உயர்ந்த. [4] பெயர்கருந். [5] உட்.

7.—கவிக்கூற்று.

எண்[1] கடந் [2] தலகி லா[3] தின் றேகுறு மிவன்றே ரென்று
[4] பெண்கடாந் தம்மி னொந்து பேதுறு கின்ற [5] காலை
மண்கடந் தமரர் வைகும் வான்கடந் தானைத் தான்றன்
கண்[6] கட வாது காத்த காரிகை பெரிய [7] ளேகாண்.

(இ - ள்) 'இவன் தேர் - இவ்விராமபிரானது இரதம், எண் கடந்து - மனோவேகத்தையும் மிக்கு, அலகு இலாது - (தன் விரை நடைக்கு ஒரு) அளவு இல்லாமல், இன்று ஏகுறும் - இப்பொழுது செல்லாநிற்கும்', என்று-என எண்ணியுங் கூறியும், பெண்கள் தாம்- (அந்நகரத்துப்) பெண்கள் யாவரும், தம்மில் நொந்து-தங்களுக்குள் வருந்தி, பேது உறுகின்ற காமவிகாரத்தை அடைகிற, காலை-சமயத் தில், மண் கடந்து - (முன் திரிவிக்கிரமாவதாரத்தில்) பூமியை விட்டு, அமரர் வைகும் வான் கடந்தானை-(உடனே) தேவர்கள் தங்கு கிற மேலுலகத்தையும் அளவிட்டவனான அவ்விராமனை, தான் தன் கண் கடவாது காத்த - தான் தனது கணகளை விட்டு நீங்கவொட் டாமற் பாதுகாத்துக்கொண்ட, காரிகை-அழகுடைய சிறந்தமகள், பெரியளஏ . காண் - (எல்லாமங்கையரினுஞ்) சிறந்தவளேயாவள்; (எ - று.)—ஏ - தேற்றம்: காண் - ஈற்றசை; காண் - தேற்றமாயின், ஏ - பிரிநிலை.

இங்ஙனம் கவி கூறினது - உலகத்து அழகையுடைய மகளிர் பலரும் தன்னை விரும்பிவந்தடையவும் அவர்களுள் ஒருத்தியி னிடத்தாயினுங் காதல் கொள்ளாத இராமபிரான் எப்பொழுதுந் தன்னைவிட்டு நீங்காமல் தன் கண்ணெதிரிலேயே காணப்பட்டு நிற்கும்படி அவனைக் கொழுநனாகக் கொள்ளப்போகிற ஜாநகீ தேவியின் சிறப்பை எடுத்து விளக்கிய தென்க: இனி இராம பிரான் தம்நோக்கத்தைவிட்டு அகலுங்காலத்துப் பலமகளிர் பிரிவாற்றுமையால் வருந்திநிற்க, அப்பொழுது மறைந்துசென்ற இராமனது திருமேனியழகை உருவெளித்தோற்றத்தாற் கண் ணெதிரிலே நீங்காமற் கண்டுநின்று முன்போலவே களிக்கின்ரு ளொருமகளைக் கற்பனைமுகத்தாற்சிறப்பித்ததென்று கொள்ளலும் ஒன்று. இம்மகளிரிடத்து இராமனுக்குக் காதலெழாமல் இவர்க ளுக்கு மாத்திரம் அவனிடத்து வேட்கையுண்டான ஒருதலைக்காம மாதலால் 'பெண்கள் தாம் தம்மில் நொந்து' எனப்பட்டது பேது - பேதம்; வடமொழி. எல்லாவுலகங்களையும் அளவிட்ட பெரியவனைத் தனது சிறியகண்களினுள்ளே அடக்குதல் அரியதொன்று. இங் ஙனம்;பெரியபொருள், ஒன்றுள் அடங்குவதாகக் கூறுவது,பெருமை யணி யெனப்படும். காதல்கொண்டவர் தாம் விரும்பிய பொருளைக் காண்பது நெடு நேரமாக இருப்பினும் அது ஒருகணம் போலத் தோன்றுதலை 'எண் கடந்தலகிலாது இன்று ஏகுறும்' என்ற மாதர் பேச்சால் தெரிவித்தார். பி-ம்:—[1] கிடந்து. [2] ஏகிலாது,அகல்கிலாது,

ஏகிலா. [3]என்றேகினுமிவன்றேரேகும். [4]பெண்கடன். [5]வேலை. [6]கடவாமல், கடந்தானை. [7]என்றார், எனபார். (1153)

8.—இராமபிரானிடத்து ஈடுபட்ட ஒருமங்கையின் வருணனை.

பயி[1]ரொன்று கலையுஞ் சங்கும் பழிப்பறு நலனும் [2]பண்பும்
செயிரின்றி யலர்ந்த பொற்புஞ் சிந்தையு முணர்வுந் தேசும்
வயிரஞ்செய் பூணு நாணு மடனுந் தன் [3]னிறையும் மற்றும்
உயிரொன்று மொழிய வெல்லா முகுத்தொரு தெரிவை நின்றாள்.

(இ - ள்.) (அம்மகளிர்களுள்), ஒருதெரிவை - (வேட்கைபிறந்த பருவமாகிய) தெரிவைப்பருவத்தையுடைய ஒருபெண், தன்-தனது, பயிர்-பயிரப்பு என்னும் பெணமைக்குணத்தையும், ஒன்று கலைஉம்-(உடலை விட்டுப் பிரியாது) பொருந்தின சேலையையும், சங்குஉம் - சங்கவளையல்களையும், பழிப்பு அறு நலன்உம் - நிந்திப்பதற்கு இடமில்லாத நற்செய்கையையும், பண்புஉம்-இயற்கைக் குணத்தையும், செயிர் இன்றி அலர்ந்த பொற்புஉம்-குற்றமில்லாமல் மிக்கு விளங்குகிற அழகையும், சிந்தைஉம்-மனத்தையும், உணர்வுஉம் - அறிவையும், தேசுஉம்-ஒளியையும், வயிரம் செய் பூண்உம்-வச்சிரமென்னும் இரத்தினங்களை யமைத்துச் செய்த ஆபரணங்களையும், நாண்உம் - இலச்சையையும், மடன்உம்-மடமைக்குணத்தையும், நிறைஉம்-மனவடக்கத்தையும, மற்றுஉம்-இன்னுமுள்ள அச்சம் முதலிய பெண்மைக் குணங்களையும, உயிர் ஒன்றுஉம் ஒழிய எல்லாம் - (இங்ஙனந்) தனனுடைய உயிரொன்றைத் தவிர எல்லாவற்றையும், உகுத்து நின்றாள் - சிந்தவிட்டு (த் தான் தனியே) நின்றாள்; (எ - று.)

இராமன் கண்பார்வையைவிட்டு மறைந்தமாத்திரத்தி லுண்டான சோர்வினால் ஒருத்திக்கு ஆடை தளர்ந்து விழுந்தது; உடம்பின் மெலிவாற் கைவளைக்ள கழன்றன; மனத்துயரத்தால் உடம்பின் அழகும் நாணம் மடம் பயிர்ப்பு முதலிய பெண்மைக் குணங்களும் பிறசெயற்கைக் குணங்களும் உடம்பினொளியும் ஒழிந்தன ; மனம மயங்கிற்று; அறிவு அழிந்தது; மனத்திலுண்டான வெறுப்பால் அணிகலன்கள் கழற்றி யெறியப்பட்டன ; இங்ஙனந் தன் வசமில்லாமல் உள்ளமும் உடம்புங் காம பரவசப்பட்டதனால், 'மனத்திலடக்கத்தக்கவை இன்னவை ; அங்ஙனம் அடக்கிவைக்கவேண்டாமல் வெளியிடத்தக்கவை இன்னவை' என்ற பகுப்பில்லாமல் மனத்துத்தோனறுவனவற்றையெல்லாம் வெளியிட்டுக் கூறும்படியாயிற்று: இவ்வாறு இவையனைத்தும் ஒழிந்ததைச் சிறிதும்உணராமல் திகைத்துநின்றாள், ஒருபருவம் முதிர்ந்த பெண் என்பதாம். நாணுவது - தகாதவற்றில் உள்ள மொடுங்குதல். பயிர்ப்பாவது-பரபுருஷனுடைய ஆடை முதலியன மேற்படுவதிலுண்டாகும் அருவருப்பு. நிறையாவது - மனத்து அடக்கற்பாலனவறறைப் பிறரறியாதபடி அடக்குதல். பயிரென்பதில், எண்ணும்மை-விகாரத்தால் தொக்கது. இனி, பயிரொன்று கலை என்பதற்கு - பயிர்ப்பென்னுங்குணம்போலப் பிரியாது

பொருந்திய ஆடையென்று உரைப்பாரும் உளர்; பயிர் என்பதைப் பயில் என்பதன் போலியெனக்கொண்டு, நீங்காமற்பொருந்தின ஒப்பற்ற ஆடையென்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]என்று. [2]பைம்பூண். [3]நிறைவும். இச்செய்யுள், சில பிரதியில் "குழையுரு" (9) என்பதன் பின். (1154)

9.—இதுவும் அது.

குழை[1]யுரு மிளிருங் கெண்டை கொண்டலி னுலி சிந்தத்
தழை[1]யுருக் கரும்பின் சாபத் தனங்கவேள் சரங்கள் [2]பாய
இழை[1]யுருப் புண்ண ருத விளமுலை யொருத்தி சோர்ந்து
மழை[1]யுரு[3]மின்னி னன்ன [4]மருங்குல்போ [5]னுடங்கி நின்றாள்.

(இ-ள்.) குழை-குழையென்னுங் காதணியின்மீது, உரு-பொருந்தி, மிளிரும்-பிறழ்ந்து விளங்குகிற, கெண்டை-கெண்டைமீன்கள் போன்ற கண்கள், கொண்டலின்-மேகம் (மழைநீர்த்துளிகளைப் பெய்தல்) போல, ஆலி சிந்த-கண்ணீர்த்துளிகளைப் பெருக விடாநிற்க,—தழைஉரு இன் கரும்பு சாபதது அனங்கன் வேள் சரங்கள் பாய-தழையில்லாத (சுவை) இனிய கரும்பாகிய வில்லையுடைய மன்மதனது அம்புகள் (தன்மேற்) பாய்ந்ததனால், இழை உரு புண் அருத-நூலினிழையும் இடையிலே நுழையுமபடி வெற்றிடமில்லாமல் புண்கள் (எங்கும்) நீங்காமல் நிறைந்திருக்கப் பெறற, இள முலை-இளமையான கொங்கைகளையுடைய, ஒருத்தி-ஒருமகள்,-சோர்ந்து-தளர்ந்து, மழைஉரு மின்னின் அன்ன மருங்குல்போல்-மேகத்தில் தோன்றுமல் (பூமியில் தோன்றுவதொரு) மின்னலை யொத்த (தனது) இடைபோலவே, நுடங்கி நின்றாள்-(உடம்பு முழுதும்) துவண்டு நின்றாள்; (எ-று.)

முன்னே இடைமாத்திரமே சுருங்கியிருந்தது, இப்பொழுது காதல் நோயால் உடம்புமுழுவதும் அங்ஙனமாயிற்று என்றார்; "மாலுற வருதலு மனமுமெய்யுந்தன், னூலுறு மருங்குல்போ னுடஙகுவாள்" என்றார், கீழ்மிதிலைக்காட்சிபபடலத்திலும். இடையிலிருந்த நுண்மை, உடம்பு முழுதுஞ் சென்றதாகக் கூறிய இது-முறையிற்படர்ச்சியணியின்பாறபடும. காதளவும் நீண்டு சென்று உலாவுங கண்க ளென்பார், 'குழையுரு மிளிருங் கெண்டை' என்றார். கெண்டை-உவமவாகுபெயர். கண்ணீர்சிந்துதலுக்கும் சோர்ந்து நுடங்கிநிற்றறகுங் காரணம்-இராமனைத் தனக்குத் தலைவனாகப் பெறறுக் கூடிக் களிக்க இயலாவிடினும் இன்னுஞ் சிறிது பொழுது கண்ணிறகண்டு களிப்பதறகுங்கூடாமல் அவன் விரைவில் மறைந்தமை. இழையுரு முலை-நடுவே நூலிழையும் நுழைய வொண்ணுத நெருங்கின முலை யென்றும் பொருள் கூறலாம். மழையுருமின-இல்பொருளுவமை. பி-ம்:—[1]அரு. [2]பாய்ந்த. [3]மின்னு முனனே. [4]மருங்கு. [5]நுடங்குகின்றாள். (1155)

10.—இராமபிரானை மகளிர்நோக்கியதைப்பற்றிய கவிக்கூற்று.

[1]பஞ்சணி விரலி னார்தம் படைநெடுங் கண்க ளெல்லாம்
செஞ்செவே யையன் மெய்யிற் கருமையைச் [2]சேர்ந்த வோதாம்

[3]மஞ்சன மேனி யான்றன் [4]மணிநிற மாத ரார்தம்
அஞ்சன நோக்கம் [5]பார்க்க விருண்டதோ [6]வறிகி லேமால்.

(இ - ள்.) பஞ்சு அணி விரலினர்தம் - செம்பஞ்சுக்குழம்பையணிந்த விரல்களையுடைய அம்மகளிர்களின், படை நெடு கண்கள் எல்லாம-வேலாயுதம் போன்ற பெரிய கண்கள்யாவும், தாம் ஐயன் மெய்யில் கருமையை செம்செவே சேர்ந்தஓ - தாங்கள் இராமனது மேனியிலுள்ள கருநிறத்தை மிகவும் நன்றாக அடைந்தனவோ? (அல்லது), மஞ்சு அன மேனியான் தன் மணி நிறம் - மேகத்தையொத்த திருமேனியையுடைய அவ்விராமனது அழகிய திரு நிறம், மாதரார்தம் அஞ்சனம் நோக்கம் பார்க்க இருண்டதுஓ - அமமகளிர்களது மைதீட்டிய கருங்கண்கள் பார்த்தலினாற் கறுபபடைந்ததோ? அறிகிலேம்-(இவ்விரண்டுள் ஒன்றை யாம் துணிவாக) அறிகின்றோமில்லை; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. இதனால், இராமனது திருமேனியின் மிக்க கருநிறமும், அம்மகளிர்களது கண்களின் மிக்ககருநிறமும் நன்கு உணர்த்தப்பட்டன. இங்ஙனங் கூறியதனால், பெண்கள் யாவரும் தத்தங் கண்கள் அவ்விராமனது உடம்பில் நன்குபதியுமாறு நன்றாக நோக்கினின்றார்களென்பது போதரும். பி-ம்:—[1]பஞ்சிவர். [2]சிறந்தவோ. [3]அஞ்சன. [4]அணி. [5]போக்க, போர்க்க. [6]அறிகிலோமே. (*1156*)

11 —ஒருத்தியின் மன்மதோபாலம்பனம்.

மாந்தளிர் [1]மேனி யாளோர் வாணுதன் மதன னெங்கும்
பூந்துணர் வாளி மாரி பொழிகின்ற பூச னோக்கி
வேந்தர்கோ னாணை நோக்கான் வீரன்வி லாண்மை பாரான்
ஏந்திழை யாரை யெய்வான் யாவனோ வொருவ னென்றாள்.

(இ - ள்.) மா தளிர் மேனியாள் - மாமரத்தின் தளிர்போலச் சிவந்த மெல்லிய உடம்பையுடையவளாகி, ஓர் வாள் நுதல் - ஒளியையுடைய நெற்றியையுடைய ஒரு பெண், மதனன் - மன்மதன், எங்கும் பூ துணர் வாளி மாரி பொழிகின்ற பூசல் நோக்கி-(தங்கள் மேல்) எவ்விடத்தும் பூங்கொத்துக்களாகிய அம்புமழையைச் சொரிகின்ற போரத்திறத்தைப் பார்த்து, 'வேந்தர் கோன் ஆணை நோக்கான் - தசரதசக்கரவர்த்தியினது ஆஜ்ஞையின் சிறப்பை மதியாதவனும், வீரன் வில் ஆண்மை பாரான் - சுத்தவீரனான இராமபிரானது விற்றொழில் திறமையையும் மதியாதவனும், ஏந்து இழையாரை எய்வான் - தரித்த ஆபரணங்களையுடைய (மெல்லிய) மகளிரை அம்பெய்து வருத்துபவனுமாகிய, ஒருவன் - இவ்வொருத்தன், யாவன்ஓ-யாரோ?' என்றாள்-என்று கூறினாள்; (எ-று.)

தசரதன் எளியாரை வலியார் வருத்தாது காக்குஞ் சக்கரவர்த்தியாதலால், அவ்வேந்தர்கோனாணைக்கு வில்வீரன் அஞ்சவேண்டும்: மகா வீரனான இராமனிருக்குமிடத்துத் தான் வில்லாளி என்று ஆண்மைபாராட்டி வருதல், எந்தவில்லாளிக்குந் தகாது. இவ்வாறு இருக்க, வேந்தர்கோனாணைக்கு அஞ்சுதலும்

வீரன் வில்லாண்மைக்கு நாணுதலு மில்லாமல், மெல்லியராய் அபலைகளெனப்படுகிற மகளிரை இரக்கமின்றி எய்து வருத்துதல் பெரியதோர் இழுக்கு ஆதலின், அச்சம் நாணம் அருள் இவை அற்ற இவன் எவனோ என்றுளென்க. தசரதன் சக்கரவர்த்தியாதலால், இவனை ஜனகராசனுடைய நகரத்திலுஞ் செல்லும். இனி வேந்தர்கோன்-ஜனகமகாராசனுமாம். பி-ம்:—[1] அணையமேனி. (1157)

12.—இதுமுதல் ஆறுகவிகள்-இராமனைக் காணச் சென்ற மாதர்களின் நிலைமையைக்கூறுவன.

[1]சொன்னலங் கடந்த காமச் சுவையையோ ருருவ மாக்கி
[2]இன்னலந் தெரிய [3]வல்லா னெழுதிய தென்ன நின்றாள்
பொன்னையும் பொருவு நீராள் புனைந்தன வெல்லாம் [4]போக்கித்
தன்னையுந் தாங்க லாதாள் துகி [5]லொன்றுந் [6]தாங்கி நின்றாள்.

(இ-ள்.) பொன்னைஉம் பொருவும் நீராள்-(எல்லா மகளிரினுஞ் சிறந்தவளாகக் கூறப்படுகிற) திருமகளையே ஒக்கும் அழகின் தன்மையுடையவளும், புனைந்தன எல்லாம் போக்கி-(தான்) அணிந்துள்ள (வளை முதலிய) ஆபரணங்களெல்லாவற்றையும் இழந்திட்டு, தன்னைஉம் தாங்கலாதாள்-தன் உடம்பையுந் (தான்) தாங்கும் வலிமையில்லாதவளுமாகி, துகில் ஒன்றுஉம் தாங்கி நின்றாள்-(சோர்வு மிக்கிருந்தும் மானம் மிக்கவளாதலால் தனது) ஆடையொன்றை மாத்திரமே (அவிழ்ந்து விழாதபடி) அருமையாகத் தரித்துநின்றவளாகிய ஒருமகள்,—இன் நலம்தெரியவல்லான்-(காண்டற்கு) இனிய சிறப்புமுழுவதையும் அறிந்து (சித்திரத்திலமைக்கவல்ல) ஓவியக்காரன்,, சொல் நலம் கடந்த காமம் சுவையை ஓர் உருவம் ஆக்கி-சொல்லையும் எல்லாவின்பங்களையுங் கடந்து நின்ற காமவின்பத்தையே ஒரு பெண் வடிவமாக அமைத்து, எழுதியது என்ன-எழுதின வடிவு இது என்னும்படி, நின்றாள்-; (எ-று.)

காமமாவது-ஒருகாலத்து ஒருபொருளால் ஐம்புலன்களும் அனுபவிக்கும் சிற்றின்பம்; அகத்து நிகழும் அவ்வின்பம் தான் பிறர்க்கு வெளிப்படையாக இத்தன்மையதென்று வாயாற்கூறுதற்கு அரியதொன்றாதலாலும், உலகத்துஉள்ள மற்றைப்பொருள்கள் பலவற்றாலு முண்டாகிற இன்பமெல்லாம் இவ்வின்பத்துக்கு முன் ஒரு பொருளாகத் தோன்றா ஆதலாலும் 'சொல்நலங் கடந்த காமச்சுவை' எனப்பட்டது. இனி, சொல் நலங்கள் தந்த எனப் பிரித்து இன்பநூல்களிற் கூறப்படுகிற நலங்களைத் தருகின்ற காமவின்பமென்றுங் கொள்ளலாம். இது-நவரசங்களுளொன்றாய்ச் சிருங்காரரசமெனச் சிறப்பித்துக் கூறப்படுதலால், 'காமச்சுவை' எனப்பட்டது. இன் நலம் தெரியவல்லான்-இன்பத்தின் நன்மைகளை அறியவல்லவனென்றும், கண்ணுக்கு இனியதாகிய அழகின் எல்லையை உணரவல்லவனென்றும் உரைக்கலாம். வேட்கை நோயால் வருந்துவார்க்கு உடன்பிறந்ததான உடம்பும் ஒரு பாரமாகத் தோன்றுமாதலின், 'தன்னையுந் தாங்கலாதாள்' என்றது. இது அடுத்த செய்யுளின்பின் சிலபிரதிகளில். பி-ம்:—[1]தொன்னயந் தொடர்ந்த. [2]இன்னயம். [3]வல்லார். [4]போக, போக்க. [5]ஒன்று. [6]தாங்கிக்கொண்டாள். (1158)

13. விற்றங்கு புருவ நெற்றி வெயர்வரப் பசலை [1]விம்மச்
சுற்றெங்கு மெறிப்ப வுள்ளஞ் சோரவோர் தோகை நின்றாள்[ணுள்
கொற்றஞ்செய் கொலைவே[2]லென்னக் கூற்றெனக் கொடிய[3] கண்
மற்றொன்றுங் காண்கி லாதா [4]டமியனோ வள்ள லென்றாள்.

(இ - ள்.) கொற்றம் செய் கொலை வேல் என்ன - வெற்றியை விளைக்கின்ற கொல்லுதற்றொழிலையுடைய வேலாயுதம் போலவும், கூற்று என - யமன் போலவும், கொடிய - கொடுந்தன்மையையுடைய, கண்ணாள் - கண்களையுடையவளாகிய, ஓர் தோகை - மயில்போலுஞ் சாயலையுடையாளொரு மகள், - வில் தங்கு புருவம் - வில்லின் தன்மை பொருந்தின [வளைவான] (தன்) புருவங்களிலும், நெற்றி - நெற்றியிலும், வெயர் வர - வேர்வைநீரொழுகவும், பசலை - பசுப்புநிறம், சுற்று எங்குஉம் - (தன்னுடம்பின்) சுற்றுப்புறம்முழுவதிலும், விம்ம எறிப்ப - மிகுதியாகப் பரவி விளங்கவும், உள்ளம் சோர - மனந்தளரவும், நின்றாள் - நின்றவளாய், மற்று ஒன்றுஉம் காண்கிலாதாள் - (தன்மனம் இராமனிடஞ் சேர்ந்ததனால் அவனையொழிய அவனுடன் சென்ற சேனை முதலிய) வேறொரு பொருளையும் பாராதவளாய், வள்ளல் தமியன்ஓ என்றாள் - இராமப்பிரபு தனியனாயுள்ளானோ? என்று (கூறி அவனது தனிமைக்குக்) கவன்றாள்; (எ - று.)

இங்கே 'வள்ளல்' என்றது - தாம் யாதொரு முயற்சியுஞ் செய்யாமலிருக்கவும் அவ்விராமபிரான் தானே தன்னருளால் வீதியில் வந்து தன்னழகை யாவருங் கண்ணாரக்கண்டு களித்திடும்படி கொடுத்தருளிய உபகாரத்தை நோக்கி. தமியனோ என்ற ஓகாரம் - வினாவகையால் இங்கே இரக்கத்தை யுணர்த்திற்று. மனம் ஒன்றினிடத்து ஊன்றப்பெற்றார்க்குப் பிறிதொரு பொருளும் கட்புலப்படா ததலால், 'மற்றொன்றுங்காண்கிலாதாள்' என்றது. 'தமியனோவள்ளல்' என ஆதரதேதோடு வினாவியது, தான் அருகிற் சென்று தழுவும் பொருட்டாகவுமாம். 'விற்றங்கு' என்னும் அடைமொழியை நெற்றிக்கும், 'கொற்றஞ் செய் கொலை' என்னும் அடைமொழியைக் கூற்றுக்குங் கூட்டலாம். நெற்றிவளைவுக்கும் வில் வளைவை உவமைகூறுவது உண்டு. பசலையாவது - விரும்பிய காதலனைச் சேரப்பெறாத துன்பத்தால் உளதாவதொரு நிறவேறுபாடு. பி-ம்:—[1]மின்ன. [2]அன்னகூர்நுதிக். [3]கண்ணால். [4]மதியனோ.

14. மைக்கருங் கூந்தல் செவ்வாய் வாணுத லொருத்தி யுள்ளம்
[1]நெக்கென வுருகு கின்றா ணெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன் [2]போகா வண்ணங் கண்ணெனும் புலங்கொள் [3]வா
சிக்கென [4]வடைத்தேன் றோழி சேருது மமளி யென்றாள். [யும்

(இ - ள்.) மை கரு கூந்தல் - அஞ்சனம்போலக் கருநிறமான கூந்தலையும், செவ் வாய் - செந்நிறமான அதரத்தையும், வாள் நுதல் - பிரகாசமான நெற்றியையுமுடைய, ஒருத்தி - ஒருபெண்,— உள்ளம் நெக்கென உருகுகின்றாள் - (இராமபிரான்திறத்தில் தனது) மனம் நெகிழ்ந்து உருகுகின்றவளாய், (தன்பாங்கியை நோக்கி), 'தோழி - தோழியே! வஞ்சன் - வஞ்சனையையுடைய அவ்வள்ளல், நெஞ்சிடை - (என்) மனத்தினுள்ளே, வந்து புக்கனன் - (கண்வழியாக)

வந்து உட்புகுந்து அகப்பட்டுக்கொண்டான்; போகாவண்ணம்-(அவன் இனி) நீங்கிப்போகாதபடி, கண் எனும் புலம் கொள் வாய்உம் - கண்ணென்கிற உறுப்பாகிற அவன்வந்த வழியையும், சிக்கென அடைத்தேன்-உறுதியாக(க்) கதவை மூடி அடைத்துவிட்டேன்; அமளி சேருதும்-(இனி அவனுடன் இன்பம் நுகர்தற்குப்) படுக்கையைச் சேர்வோம்', என்றாள்-என்று கூறினாள்;

காமப்பித்துக் கொண்ட ஒருத்தி, தன் கண்வழியாக இராமன் நெஞ்சம் புக்கதாகக் கொண்டு, கண்வழி நுழையுமோர் கள்வன் ஆதலால், அவன் வெளிச்செல்லாதபடி கண்ணெனும் புலங் கொள் வாயை அடைத்து, அதனைத் தோழியை அழைத்துக் கூறினாள். அங்ஙன் கூறினது, கண்களை முழுவதும் மூடிக்கொண்டு பார்வையில்லாமலிருக்கிற தன்னைக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு படுக்கையிற் சேர்த்து உதவிசெய்யவேண்டுமென்கிற நோக்கத்தால். அங்ஙனாயின், 'என்னை நீ அமளிசேர்ப்பி' எனக் கூறாமல் 'சேருதும் அமளி' என உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாகக் கூறினது, தான் அவள் என்னும் வேற்றுமையின்மையால் தனது இன்பத்தைத் தோழி தனக்கு நேர்ந்த இன்பமாகக் கருதுபவளாதலால். இனி, தோழியும், இராமனிடம் வேட்கைகொண்டவளாதலாலும், அவளுக்கு ஒரு ஆசையைக் காட்டினாலொழிய அவள் இச்சமயத்தில் வந்து தனக்கு உதவாளாதலாலும் இங்ஙனம் கூறினாளென்றுருமுளர்: இங்ஙனம் சக்களத்தியாக ஒருத்தியைக் கூட்டிக்கொள்ள உடன்படுதல் உலகத்தில் உண்டோ எனின்,— இவனை வெளிவிடாது தழுவுதற்கு வேறு உபாயம் இன்று என்னுங் கருத்தால் இங்ஙனங் கூறினாளென்ப. அன்றியும், காமப்பித்துக்கொண்டவரின் வார்த்தையில் இவ்வளவு ஆராய்ச்சி வேண்டா எனவும் கூறுப. கண்ணாகிய வாசலுக்கு இமை கதவாகும். தனது நாணம் முதலியவற்றைத் தனக்குத்தெரியாதபடி கவர்ந்துசென்றானென்ற எண்ணத்தாலும், ஒருகால் உள்ளத்தும் ஒருகால்வெளியிலும் ஒருகால் இரண்டிடத்துந் தோன்றிநின்றும் இன்பம்நுகர இடங்கொடாததனாலும், 'வஞ்சன்' என்றாள். கண்ணாற் கண்ட மாத்திரத்தில் மனத்தில் அவனுருவம் பதிந்து காதல் விளைத்தலால், கண்ணை நெஞ்சுக்கு வழியென்றது. சிக்கென-இறுக்கக்குறிப்பு. பி-ம்:—[1]நெக்கனள். [2]ஏகா. [3]வாயில். [4]அடைத்துந், அடைத்துத். (1160)

15\. தாக்கணங் [1]கனைய மேனி [2]தைத்தவேள் சரங்கள் பாராள்
வீக்கிய [3]கலையுந் தூசும் வேறுவே றுன தோராள்
ஆக்கிய பாவை யன்னா ளொருத்தியாண் டமலன் மேனி
[4]நோக்குறு வாரை யெல்லா மெரியெழ நோக்கு கின்றாள்.

(இ - ள்.) ஆக்கிய பாவை அன்னாள் ஒருத்தி - (அருமையாகச்) சித்திரிக்கப்பட்ட சித்திரப்பதுமையை யொத்தவளான ஒருமகள்,— தாக்கு அணங்கு அனைய மேனி-மோகினியென்னும் பெண் தெய்வத்தின் வடிவத்தையொத்த(தனது) உடம்பிலே, தைத்த-பாய்ந்த, வேள் சரங்கள் பாராள்-மன்மதபாணங்களையும் மதியாதவளாய்,

வீக்கிய கலேயும் தூசும் வேறு வேறு ஆனது ஓராள் - (தான்) இறுக அணிந்துள்ள மேகலேயும் இறுக உடுத்துள்ள ஆடையும் (தன்னுடம்பினின்று) வெவ்வேருகி நீங்கியதையும் அறியாதவளாய்,—ஆண்டு அமலன் மேனி நோக்குறுவாரை எல்லாம் - அவ்விடத்தில் [அப்பொழுது] குற்றமற்ற இராமபிரானது திருமேனியை அன்போடு பார்ப்பவர்களையெல்லாம், எரி எழ நோக்குகின்ருள்- (கண்களினின்று) கனற்பொறி புலப்படச் சினந்து நோக்குகின்றவளானுள்; (எ-று.)

அமலன்மேனியை நோக்குவாரை எரியெழநோக்கக் காரணம், தானொருத்தியே இராமனுக்குத் தக்கமனேவியெனக் கருதியவட்கு, தனக்குப் போட்டியாகி வருகின்ற மகளிரிடத்துஅழுக்காறு ஆகும். பி-ம்:—[1]அணேயாள். [2]தையல். [3]கலனும். [4]நோக்கி நின்ருரை, நோக்குகின்ருரை. (1161)

16. களிப்பன மதர்ப்ப நீண்டு [1]கதுப்பிணே யளப்ப [2]கள்ளம்
ஒளிப்பன [3]வெளிப்பட் [4]டோடப் பார்ப்பன சிவப்புள்[5]ளூற
[6]வெளுப்பன கறுப்ப வான வேற்கணு ளொருத்தி யுள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள் வெதுப்பொடு கோயில் புக்காள்.

(இ - ள்.) களிப்பன-(இயற்கையிற்) களிப்புத்தோன்றுவனவும், மதர்ப்ப - செழிப்பையுடையனவும், நீண்டு கதுப்பிணே அளப்ப-நீளமாய்ச்சென்று மயிர்முடியை அளந்திடுவனவும், கள்ளம் ஒளிப்பன- கள்ளக்கருத்தை (வெளிப்படுத்தாது சில சமயம்) மறைப்பனவும், வெளிப்பட்டு ஓட பார்ப்பன-(சில சமயம் ஒளித்துள்ளவை) வெளிப்பட்டுப் பரக்கச் சுத்தமாகப்பார்ப்பனவும், சிவப்பு உள் ஊற-(உத்தம விலக்கணமான சில ரேகைகளின்) சிவந்தநிறம் உள்ளே பொருந்த, வெளுப்பன - (சிலபாகம்) வெளுத்திருப்பவையும், கறுப்ப-(சில பாகம்) கறுத்திருப்பவையும், ஆன-ஆகிய, வேல் கணுள்-வேலாயுதம்போல் [நீண்டு நுனி கூரிய கொடிய] கண்களேயுடையவளான, ஒருத்தி-ஒருமகள், உள்ளம் குளிர்ப்பொடு காண வந்தாள்-குளிர்ந்த மனக்களிப்புடனே (இராமனேப்) பார்க்க வந்து, வெதுப்பொடு கோயில் புக்காள்-(கண்டபின் அவனிடம் காதல்கொண்டு அவனேச் சேரப்பெருமையாலாகிய) காமவெப்பத்துடனே (தன்) மாளிகையினுட் சென்ருள்; (எ-று.)

குளிர்ந்த [மகிழ்ந்த] மனத்துடன் இராமனேக் காணவந்த ஒருத்தி, காதலால் வெதும்பிய மனத்தோடு மாளிகையுட் சென்ருளென்பதாம். முதன் மூன்றடிகள், அத்தலைவியினுடைய கண்ணின் சிறப்பைத் தெரிவிப்பன. நீண்ட கதுப்பிணேயளப்ப-(காதுவரையிலும்) நீண்டு கூந்தலுள்ள இடத்தை அளக்கப்பார்ப்பன என்க: "கொண்டையுறு நீலவிழி" என்ருர், பிற்காலத்தாரும். வெளிப்பட்டு ஓடப்பார்ப்பன என்பதற்கு - விரைந்த நோக்கத்தால் வெளியே வந்து ஓடிப்போக வழிபார்ப்பவைபோன்றவையென்றும், உருவப்பார்ப்பன என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]களிப்பிணே. [2]கன்னம். [3]பழிப். [4]ஓடி. [5]ஊறி. [6]விளர்ப்புன. (1162)

17. கருங்குழற் பாரம் வார்கொள் கனமுலை கலைசூ ழல்குல்
நெருங்கின மறைப்ப வாண்டோர் நீக்கிடம் [1]பெருது விம்மும்
பெருந்தடங் கண்ணி காணும் பேரெழி லாசை தூண்ட
மருங்குலின் [2]வெளிக ளூடே வள்ளலை[3]நோக்கு கின்ருள்.

(இ - ள்.) (தனக்குமுன்னே வந்து நெருங்கியுள்ள பலமாதர் களின்), கருங் குழல் பாரம் - கருமையான கூந்தலின் தொகுதியும், வார் கொள் கனம் முலை-கச்சையணிந்த பருத்த [புடைபரந்த] தனங் களும், கலை சூழ் அல்குல் - மேகலாபரணம் சுற்றிலும் அணியப்பட் டுள்ள இடையும், நெருங்கின - நெருக்கமுற்றவையாய், மறைப்ப - (இராமன் திருமேனியை) மறைத்தலினால், ஆண்டு ஓர் நீக்கு இடம் பெருது-(அக்குழல் முதலியவையுள்ள) அந்த இடங்களிலே (பார்ப்ப தற்குரிய) வெற்றிடவழியொன்றையும் பெறமாட்டாமல், விம்மும் - விசனத்தையடைந்த, பெரு தட கண்ணி - மிகவும் பெரிய கண்களை யுடையாளொருமகள்,—பேர் எழில் காணும் ஆசை தூண்ட - (அவ் விராமனது) மிக்க அழகைப் பார்க்கவேண்டு மெனகிற விருப்பம் (தன்னை) ஏவுதலால், மருங்குலின் வெளிகள் ஊடே - (அம்மாதர் களின்) நுண்ணிய இடைகளுள்ள வெளியிடங்களிலே, வள்ளலை நோக்குகினருள்-இராமனைப் பார்க்கின்றவ ளானுள்; (எ - று.)

இராமபிரானழகைக் காணவிரும்பிய மாது அளகபாரம் முதலிய வற்றையுடையபிறமாதர்கள் முன்னின்று மறைத்தலால் இராமபிரா னழகைக் காண வேறுவழி காணுது அம்மாதர்களின் மருங்குலி னிடையேயுள்ள வெளிபபுறத்து மூலமாகக் கண்டாளென்க. ''அக லல்குல் தோள்கண்ணென மூவழிப் பெருகி, நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகி'' என்றபடி பருத்திருக்கவேண்டிய அவயவங்கள் பருத்தும் சிறுத்திருக்கவேண்டிய அவயவங்கள சிறுத்துமுள்ள அங்கமாதரது ஒப்பில்லாத உத்தமவிலக்கணம் இதனுல் உணர்த் தப்பட்டது. பி - ம்:—[1]பொருது. [2]வெளியினூடே. [3]நோக்கி னின்ருள். (1163)

18.—இராமன் உலாப்போன வீதிகளின் தன்மை.

வரிந்த [1]வா ளனங்கன் வாளி மனங் [2]கழன் றனவு மாதர்
[3]எரிந்தபூ [4]ணினமுங் கொங்கை வெயர்த்தபோ [5]திழிந்த சாந்தும்
சரிந்தமே கலையு முத்துஞ் சங்கமுந் தாழ்ந்த கூந்தல்
விரிந்தபூந் தொடையு மன்றி வெள்ளிடை யரிதவ் வீதி.

(இ - ள்.) வரிந்த - (தனது உடையின்மேற்) கட்டிய, வாள்- வாளாயுதத்தையுடைய, அனங்கன் - மனமதனது, வாளி - மலரம்பு கள், மனம் கழன்றனஉம் - (மகளிர்களது) நெஞ்சிலே தைத்து ஊடுருவி வெளிவிழுந்தவையும், மாதர் எரிந்த பூண் இனம்உம் - அம்மகளிர்களின் (விரகதாபம் மிக்க உடம்பிலே படுதலால்) தீந்து சிந்துகிற ஆபரணங்களின் கூட்டமும், கொங்கை வெயர்த்தபோது இழிந்த சாந்துஉம்-(அவர்கள்) தனங்கள் (காமநோயால்) வியர்வை யடைந்தபோது (அங்குநின்று) கரைந்தொழுகிய சந்தனமும், சரிந்த - (உடனே மிக இளைத்துப்போன அம்மகளிருடம்பினின்று) கழன்று கீழ்விழுந்த, மேகலைஉம-மேகலாபரணங்களும், முத்துஉம்-

முத்துமாலைகளும், சங்கம்உம் - சங்கு வளையல்களும், தாழ்ந்த கூந்தல் விரிந்த பூ தொடைஉம்-(அவர்களது) நீண்ட கூந்தல் தளர்ந்து அவிழ்தலால் (அதினின்று) வீழ்ந்த பூமாலைகளும், அன்றி - (என்னும் இவை எங்கும் கீழே இடைவிடாது கிடப்பனவே) அல்லாமல், அ வீதி-அந்த மிதிலா நகரத்து ராஜவீதிகளிலே, வெள் இடை அரிது - (கீழ்க்கூறிய இவற்றுள் ஒன்றுயினும் விழுந்திருக்கப் பெருத) வெற்றிடம் (அப்பொழுது) இல்லையாயிற்று; (எ-று.)

இதனல் எப்படிப்பட்ட மாதரும் ஈடுபடும்படியான பேரழகன் ஸ்ரீராமனென்பது தொனிக்கும். மாதர் என்பதைப் பிறவிடத்துங் கூட்டுக. எரிந்த-விளங்குகின்றஎனினுமாம். பி-ம்:—[1] தார், தாள். [2] கழன்றுகவும். [3] திரிந்த, இரிந்த, அரிந்த. [4] இளமென். [5] அழிந்த.

19.—இராமனைக் கண்ட மாதர் தாம் கண்ட கண்ட உறுப்பிலேயே மனம்பதிந்தமை.

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள் [1]கொண்ட கண்ணுர் யாரே [2]வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் [3]தன்ன னுருவுகண் டாரை [4]யொத்தார்.

(இ - ள்.) (அம்மகளிர்களுள்), தோள் கண்டார்-(இராமனது) தோளழகை (முந்தி)க் கண்டவர்கள், தோள்ஏ கண்டார்-(அத்தோள்களினழகுக்கு ஓரெல்லை இல்லாமையினல் அத்தோளைக் கண்ட கண் பிறிதொன்றிற் செல்லாமைபற்றி அத்) தோளழகையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்: தொடு கழல் கமலம் அன்ன தாள் கண்டார் - அணிந்த வீரக்கழலையுடைய தாமரைமலர்களை யொத்த (அவ்வெம்பெருமானது) திருவடிகளினழகை (முந்தி)ப் பார்த்தவர்கள், தாள்ஏ கண்டார்-(அவ்வாறு) அத்திருவடிகளையேபார்த்து நின்ருர்கள்; தட கை கண்டார்உம்-பெரிய திருக்கைகளினழகை (முந்தி)ப் பார்த்தவர்களும், அஃதுஏ-அங்ஙனமே: (அவற்றையே விடாது பார்த்துக்கொண்டிருந்தார்கள்): (ஆதலால்), வாள் கொண்ட கண்ணுர்-வாளை யொத்த கண்களையுடைய மகளிர்களுள், வடிவினை முடிய கண்டார் யார்ஏ - (அப்பிரானது) திருமேனியழகு முழுவதையும் பார்த்தவர் யாவருளர்? [எவரும் இல்லை]; (அங்ஙனம் கடவுளது சொரூபத்தை முழுவதும்பாராமல் ஒவ்வொரு பகுதியை மாத்திரம் பார்த்தவர்கள்), ஊழ் கொண்ட சமயத்து அன்னன் உருவு கண்டாரை ஒத்தார்-(தாம் தாம் தனித்தனி ஒவ்வொரு) முறைமையைக் கொண்ட மதங்கள் பலவற்றிலே கூறப்படுகிற அம்வெம்பெருமானது வடிவங்கள் பலவற்றினுள் ஒவ்வொரு வடிவத்தையே கண்ட ஒவ்வொரு மதத்தினரைப் போன்றனர்; (எ-று.)

இதனல், ஒவ்வொரு மதத்துக்கு உரிய தெய்வம் ஒவ்வொன்றும் ஒன்றுனபரமனது அங்கங்களேயா மென்பதும் கூறியதாயிற்று. ஒப்புயர்வற்ற இறைவனொருவன்தான் பலவகை மதங்களுக்கு உரிய பல தேவர்களின் வடிவமாகிநின்று அவ்வம்மதத்தினராற் பயபக்தி விசுவாசங்களுடனே செய்யப்படுகிற பூசைமுதலிய

வற்றைப் பெற்று அவ்வவர்க்கு நற்கதி அளிக்கிறு னென்பது, நூற்கொள்கை; "தொல்லையி னென்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப், பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே" எனக் கீழும் இவ்வுண்மைதோன்றக் கூறினர். "வணங்குந் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பாற், பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி யவையவைதோ, றணங்கும் பலபல வாக்கி நின் மூர்த்தி பரப்பிவைத்தாய்" என்றார், நம்மாழ்வாரும்; சமய தெய்வங்களுள் ஒன்றன்உருவத்தையாகிலும் முடிவுபோகக் காண்பது அரிதாதலின், அவ்வுபமானத்துக்கு ஏற்ப உபமேயத்தி லும் மகளிர் ஓருறுப்பினழகையும் முடியக் காணாராயின ரென்க. தாடகைவதம், அகலிகைசாபந்தீர்த்தல், சிவதனுசை முறித்தல் என்ற செயல்களை நிகழ்த்திய உறுப்புக்களை, முறையே கோவைப்படுத்திக் கவி கூறின ரென்ப. தோளைகண்டார் தாளை கண்டார் என்ற இடங்களில் ஏகாரத்தை வினவாக்கி, தோளையும் தாளையும் முழுதும் கண்டனரோ? எல்லையற்ற அழகின ஆதலால் அவற்றைக் காணவில்லை என உரைத்தலும் ஒன்று. கைவண்ணத்து மிக்க ஈடுபாட்டினால், 'கைகண்டாருமஃதே' என்று சுட்டி யொழிந்தார். வாள்கொண்ட, கொண்ட-உவமவுருபு. ஊழ்கொண்ட சமயம்-(ஒன்றோடொன்று) மாறுபாடுகொண்ட மத மெனினுமாம். இனி, நான்காமடிக்கு-எம்பெருமான் பெரிய விசுவரூபத்தைக் கொண்டுநின்ற அக்காலத்தில் அவ்வுருவத்தின் ஒவ்வொருபாகத்தையே கண்டவர்களை யொத்தார்க ளென்றுமாம். ஊழ்-பெருமை. பி-ம்:—[1] கண்ட. [2] அடியிணை. [3] அன்னர். [4] ஒத்தான். (1165)

வேறு.

20.—இராமனை ஒருத்தி உள்ளத்துக் கொண்டதைப்பற்றிய கவிக்கூற்று.

தையல் சிற்றிடை யாளொரு [1] தாழ்குழல்
உய்ய மற்றவ ளுள்ளத் தொடுங்கினன்
வைய முற்றும் வயிற்றி னடக்கிய
ஐய னிற்பெரி யா [2] ரினி யாவரே.

(இ - ள்) தையல்-அழகுடையவளும், சிறு இடையாள் - நுண்ணிய இடையையுடையவளுமாகிய, ஒரு தாழ் குழல் - தாழ்ந்த கூந்தலையுடையாளொருமகள், உய்ய - (வருந்தாமற்) பிழைத்திடும்படி, அவள் உள்ளத்து ஒடுங்கினன் - அவளதுமனத்திலே (இராமபிரான்) அடங்கியிருந்தான்; வையம் முற்றும் வயிற்றின் அடக்கிய - உலகமுழுவதையும (தன்) திருவயிற்றிலே (ஒருகாலத்து) அடக்கி வைத்த, ஐயனின்-தலைவனான அவ்வெம்பெருமானினும், பெரியார்-பெரியவர், இனி யாவர்-வேறு யாவருளர்? (எ - று.)

உலகங்களை யெல்லாம் தன் திருவயிற்றிலடக்கவல்ல பெரியவன் அணுரூபமான மனத்தில் இயற்கையருளால் அடங்கியிருந் தானென்க: பெரிய ஆதேயம் சிறிய ஆதாரத்தி லடங்கியதாகக் கூறியது-பெருமையணி. அடங்கியிருந்ததனாற் பெருமை விளங்கு

மென்பார் 'ஐயனிற் பெரியாரினி யாவரே' என்றார். தொடர்நிலைச் செய்யுட்குறியணி. மற்று-அசை. பி- ம்:—[1] தார். [2] உளர். (1166)

21.—இதுமுதல் பத்துக்கவிகள்-உலாச்சென்ற இராமனைக் கண்ட ஒவ்வொருத்தி பட்ட நிலையைத் தனித்தனிக்கூறும்.

அலம்பு [1] பாரக் குழலியொ ராயிழை
சிலம்பு [2] மேகலை யும்மொலி செய்திட
நலம்பெய் கொம்பி னடந்துவந் தெய்தினாள்
புலம்பு சேடியர் கைம்மிசைப் போயினாள்.

(இ - ள்.) அலம்பு பாரம் குழலி-(மிகுந்த பாரத்தால்) அசைகின்ற தொகுதியான கூந்தலையுடையவளாகிய, ஓர் ஆய் இழை-ஆராய்ந்தெடுத்தணிந்த ஆபரணங்களை யுடையா ளொருமகள், சிலம்புஉம் மேகலைஉம் ஒலிசெய்திட-(தனது) சிலம்பென்னுங் காலணியும் மேகலையென்னும் இடையணியும் ஒலித்தலைச் செயயும்படி, நலம்பெய் கொம்பின-அழகுமிகுந்த பூங் கொம்புபோல, நடந்து வந்து எய்தினாள்-(இராமனைக் காணுமபொருட்டு) நடந்துவந்து சேர்ந்தவள்,—(வந்த இடத்து இராமனழகைக்கண்டு காமுற்று அவன்பக்கல் கொண்ட விரகவேதனையாற் பரவசப்பட்டு), புலம்பு சேடியர் கைம்மிசை போயினாள்-(தன் வருத்தத்தைக்கணடு 'இவளுக்கு என்னாகுமோ?' என்று துயர்கிற) தோழிமாரின் கைகளின் மேலே சென்றாள்; (எ - று.)

தோழியர் இரண்டுபுறத்தும் கைகொடுத்துத் தாங்க அந்த ஆதாரத்தினால் ஒருத்தி போனா ளென்பதாம். அலம்பு-(பூக்களின் தேன்) ததும்புகிற என்றும், (வண்டுகள்) ஒலிககின்ற என்றும் கொள்ளலாம். புலம்புசேடியர்-இராமனைப்பிரியுமபடி தமக்கு நேர்ந்ததே என்று வருந்துகிறசேடியரென்பாருமுளர். பி - ம்:—[1] வார்ந்த. [2] பேரொலி மேகலை, மேகலைப பேரொலி. (1167)

22. அருப்பு மென்முலை யாளங்கொ ராயிழை
இருப்பு நெஞ்சினை [1] யேனுமொ ரேழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா
கருப்பு வில்லிறுத் தாட்கொண்டு காவென்றாள்.

(இ - ள்.) அங்கு - அவ்விடத்து [அல்லது அப்பொழுது], அரும்பு மெல் முலையாள் - (தாமரை அல்லது கோங்கின்) அரும்பு போன்ற மெல்லிய தனங்களை யுடையவளாகிய, ஓர் ஆய் இழை - ஆராய்ந்தணிந்த ஆபரணங்களையுடையாளொருமகள்,—(இராமனை நோக்கி), 'இரும்பு நெஞ்சினை ஏன்உம் - இரும்புபோல் வலிய மனத்தையுடையா யாயினும், ஓர் ஏழைக்கு ஆ-ஒரு இளம்பெண்ணுக்காக [சீதையைமணஞ்செய்யும் பொருட்டு], பொருப்பு வில்லை பொடி செய்த புண்ணியா - மேருமலையின் அமிசமான சிவதனுசை யொடித்தெறிந்த நல்வினையுடையவனே! கரும்பு வில் இறுத்து ஆள் கொண்டு கா - (மன்மதனது) கரும்பாகிய வில்லை ஒடித்து (என்னையும்) அடியவளாக [மனைவியாக] அங்கீகரித்துக் காத்தருள்க,' என்றாள்—; (எ - று.)

இராமன் செல்லும்போது கண்ட ஒருத்தி இங்ஙனம் முன்னிலைப்படுத்திக் கூறியது, இது. இனி, இராமன் சென்றபின்பு உருவெளிப்பாட்டால் இராமபிரான் தன் கண்ணெதிரே காணப்படுதலாற் கூறியதாகக் கொள்வாருமுளர். மன்மதனது மேனியை எரித்தழித்த ஆற்றலுடைய சிவபிரானது வில்லை ஒடித்தெரிந்தவனுக்கு அச்சிவனால் எளிதிலழிக்கப்பட்ட மன்மதனது வில்லையொடித்தல் அரியதொரு தொழிலாகாதென்பதும், மிகவலிய மலைவில்லைப் பொடிசெய்தவனுக்கு மிக எளிய கருப்புவில்லை முறித்தொழித்தல் எளிதே யென்பதும் தோன்ற, இங்ஙனங் கூறினாள். எந்த மகளிரிடத்தும் அருள்புரியாதவனாயின் உன்னை நான் நிர்ப்பந்திக்கச் சிறிதும் நியாயமிராது: அங்ஙனமின்றி, ஒருமகளுக்கு உதவினவனாதலால், மற்றொரு மகளான எனக்கும் உபகரித்தால் வருங் குற்றம் யாதோ என்பாள், 'பொருப்பு வில்லைப் பொடி செய்த புண்ணியா' என்று விளித்தாள்: கருத்துடையடைகொளியணி. அரும்பு, இரும்பு, கரும்பு என்பன-வன்றொடராயின. ஏழை-மடமைக்குணமுடையவள்: மெல்லியலாள். பின்மூன்றடிகளுக்குச் சிலபிரதிகளில் 'இருப்பு நெஞ்சினராயுமொரேழைக்காப், பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியர், கருப்புவில்லிறக்கற்றிலரோ வென்றாள்' என்று காணப்படுகின்ற பாடம், முன்னும் பின்னும் இராமபிரானைப் படர்க்கையாக வைத்துக் கூறியதற்கு ஏற்கும். பி- ம்:—[1]ஏயும். இச்செய்யுள் சில பிரதிகளிலில்லை. (1168)

23. மைத வழ்ந்த கருங்கணொர் வாணுதல்
செய்[1]த வன்றனித் தேர்மிசைச் சேறல்விட்டு
எய்த[2] வந்தெதிர் நின்றமை தானிது
கைத வங்கொல் கனவு[3]கொ லோவென்றாள்.

(இ - ள்.) மை தவழ்ந்த கரு கண்-மைநிரம்பத் தீட்டப்பட்டுள்ள (இயற்கையிற்) கரிய கண்களையுடைய, ஒர் வாள் நுதல்-ஒளியமைந்த நெற்றியையுடையாளொருமகள், 'செய் தவன்-செய்து முடித்துச் சித்திபெற்ற தவத்தையுடைய இவ்விராமன், தனி தேர் மிசை சேறல் விட்டு-ஒப்பற்ற இரதத்தின்மேலே செல்லுதலையொழிந்து, எய்த வந்து எதிர்நின்றமை இது-நெருக்கமாகவந்து என்கண்ணெதிரில் நின்றதாகிய இச்செய்கை, கைதவம் கொல்-மாயைதானோ? (அல்லது), கனவு கொல் - சொப்பனவுத்தைதானோ?' என்றாள்-என்றுகூறினாள்; (எ-று.)

இங்ஙனங் கூறியது உருவெளித்தோற்றத்தில் இராமனைக் காணுதலாலென்க. இத்தகைய பேரழகும் பெருமிதமும் முதலியன முறபிறப்புக்களிலாவது இப்பிறப்பிலாவது அரும்பெருந்தவம் புரிந்தார்க்கு அன்றிப் பிறர்க்கு எளிதிற் கிடைப்பனவல்ல வென்னுங் கருத்தால், 'செய்தவன்' என்றாள். செய் தவன்-தவஞ்செய்தவன்: இது வடமொழிநடை: 'வீதராக:' என்பதுபோல. இனி, செய்தவன-(என்னை இங்ஙனஞ்) செய்தவன் என்றுமாம். தனி-வேறொருவருந் துணையில்லாமல் என்றுங்கொள்ளலாம்; இங்ஙனங் கூறுதல், புருஷோத்தமனான இராமபிரானொருவனையொழிய

அவன் புடையிற்செல்லும் பலருந் தன்கண்ணில் ஒருபொருளாகப் புலப்படாததனு லென்க. பி-ம்:—[1] தவர். [2] வந்துநின்ருனு மெய் தாதது. [3] கோலாம். (1169)

24. மாதொ ருத்தி மனத்தினை யல்லதோர்
தூது பெற்றில [1] ளின்னுயிர் சோர்கின்ருள்
போத ரிக்கட் பொலன்குழைப் பூண்முலைச்
சீதை யெத்தவஞ் செய்தன ளோவென்ருள்.

(இ-ள்.) மாது ஒருத்தி-ஒரு மகள், மனத்தினை அல்லது ஓர் தூது பெற்றிலள்-(தன்) மனத்தைத்தவிர (இராமனிடம் செலுத்த) வேருெரு தூதையும் பெருதவளாய், இன் உயிர் சோர்கின்ருள்-(இராமவிரகத்தால் தனது) இனிமையான உயிர் தளர்ந்தொழியப் பெறுகிறவள்,—'போது - தாமரைமலர்போன்ற, அரி-(சிவந்த) இரேகைபரவிய, கண்-கண்களையும், பொலன் குழை-பொன்னலாகிற குழையென்னுங் காதணிகளையும், பூண் முலை-ஆபரணங்களையணிந்த தனங்களையுமுடைய, சீதை - சானகிப் பிராட்டி, எ தவம் செய்தனள்ஒ-(இவ்விராமனை மணந்துகொள்ள) என்ன பெருந்தவத்தைச் செய்தாள்கொல்லோ?' என்ருள்; (எ-று.)

யாதொரு தூதுமின்றிச் சீதை இராமனைப் பெற்றதனுல், அது எத்தவத்தின்பயனே என வியக்கவேண்டியதாயிற்று. 'செய்தனள்' என இறந்தகாலத்தாற் கூறியதனுல், முன் பல பிறப்புக்களிலுஞ்செய்துள்ள தவங்களெல்லாம் இவ்வொருபிறப்பிலேவந்து பலித்தன ஆதல்வேண்டுமென்பதாம். சீதை செய்த தவம் இன்னதென்று தெரிந்தால் யானும் அதனையேசெய்து இவனைக் கூடுவேனென்பது, உட்கோள். சீதையின் கண்கள இராமனழகைக் கண்டு களிக்குமாறும், அவள் காதுகள் அவனுடைய இன்சொல்லைக் கேட்டுமகிழுமாறும், அவள்கொங்கைகள் அவனுடம்பை அணைந்து பூரிக்குமாறும் இங்ஙனம் பயன்படுவனவாமென்ற கருத்தால் 'போதரிக்கட் பொலனகுழைப் பூண்முலை' என்று அடைமொழி கொடுத்தாள். 'செய்தனளோ' எனற ஓகாரத்தால், அரிய தவத்தைவருந்திச் செய்தற்கு ஏலாதது பிராட்டி திருமேனியின் மென்மைத்தனமைஎன இரங்கியவாறுமாம். ''நெஞ்சை யொளித்தொரு வஞசக மில்லை,'' ''ஆரிருக்கிலுமென்னஞ்சமல்லதொரு வஞ்சமற்ற துணையில்லை'' என்ப வாதலால், மனத்தினையல்லதோர் தூதுபெற்றில ளாயினள்; அன்றியும், எல்லா மகளிரும் இவள் போலவே இராமவாஞ்சைகொண்டுளளா ராதலால், தூதுசெல்ல ஒருத்தியும் அமைந்தில ளென்க. பி-ம்:—[1] நின்று. இச்செய்யுள் சில பிரதியிலில்லை. (1170)

25. பழு[1] தி லாவொரு பாவையன் னுள்பதைத்து
அழுது வெய்துயிர்த் தன்புடைத் தோழியைத்
தொழுது சோர்ந்தயர் வாளிந்தத் தோன்றலை
எழுத'லாங்கொலிம் மன்மத னுலென்ருள்.

(இ-ள்.) பழுதுஇலா ஒருபாவை அன்னுள்-(எந்த உறுப்பிலும் இலக்கணக) குறறம் (சிறிதும்) இல்லாத சித்திரப்பிரதிமை

யொன்றை (அழகில்) ஒத்தவளொருமகள், பதைத்து - (இராம விரகத்தால்) துடித்து, அழுது-சோகித்து, வெய்து உயிர்த்து-வெப்பமுடையதாகப் பெருமூச்சுவிட்டு, சோர்ந்து-தளர்ந்து, அயர்வாள்-வருந்துபவளாய், அன்பு உடை-(தன்னிடத்தில்) அன்புடையவளும் (தன்னுடைய) அன்புக்கு இடனானவளுமான, தோழியை-(தனது)உயிர்த்தோழியொருத்தியை நோக்கி, தொழுது-கை கூப்பி வணங்கி, இந்த தோன்றலை-இந்த இராமனை, இ மனமதனால்-இந்த மன்மதனைக் கொண்டு, எழுதல் ஆம் கொல்-(சித்திரத்தில்) எழுதுதல் ஆகுமோ?' என்றாள்-என்று வினவினாள்; (எ-று.)

பேரழகனான இராமனைத் தேர் விரைந்துகொண்டு செல்வதால் பதைத்தும், இனி அவ்வழகனைக்காண இயலாதே என்ற கருத்தால் அழுதும், 'இவ்வழகனைக் கணவனாய்ப்பெற்றுத் தழுவும்பேறு எனக்கு இல்லையே!' என்று கவன்று வெய்துயிர்த்தும், தான் வேண்டியவதையெல்லாம் வேண்டியபடி செய்துவருந் தோழியை நோக்கி, 'இவ்வழகனைத் தழுவுமாறு ஏதேனும் உபாயம் செய்வாய்' என்று தொழுதும், அது பெறுதற்கு ஆகாமையறிந்து சோர்ந்தும், 'இவ்வழகனை ஓர்படத்தில் தீட்டிக் கண்ணாரக் கண்டு வேட்கை தீர்வோம்' எனக் கருதி அதுமுடியாமையின் அயர்ந்தும் நின்ற தலைவி, 'இவ்விராமன்முன் நிற்க நாணி ஒளிந்து நின்று, இவன் சென்றபின் என்போன்ற மெல்லியலாரிடத்துத் தன்னாண்மையைக்காட்டும் மன்மதனால்தானும் எழுதரிய திருமேனியழகையுடைய இவ்வழகனை நம்மனப்படத்தில் இவனுடைய வடிவழகுமுற்றும் ஒருசேர எழுதி வைக்க இயலுமோ? இயலாதே!' என்பாள், 'இந்தத் தோன்றலை இம் மன்மதனால் எழுதலாங்கொல்?' என்கிறாள். இராமபிரானை இடைவிடாது மனத்திலே வைக்கச்செய்வது காதற்கடவுளான மன்மதனாலே நிகழ்வதால் மன்மதனைத் சித்திரமெழுதுவோனாகக் கருதுமாறாயிற்று. தன் கருத்துக்கு ஒத்த தலைவனான இராமனை நேரில் தழுவி ஆனந்தமடையக்கூடாவிடினும் அவனது திருமேனியுருவத்தைச் சித்திரத்தில் எழுதுவித்து அதனைக் கண்டாயினும் களித்து உய்ந்திருக்கக்கருதினாளொரு தலைமகள், அதற்கு ஏற்ற சித்திரக்காரனான மன்மதனைக் கொண்டு எழுதுவித்தற்குத் தக்க முயற்சி செய்யுந் தருணத்தில் தனதுதேகம் மிகவும் பரவசப்படுதலினால், தோழியை அத்தொழிலை நிறைவேற்றும்படி வேண்டினாளென்பாருமுளர். எழுதல் = எழுதுவித்தல். காரிய கௌரவத்தால், தன்னினும் இழிந்த தோழியைத் தொழுதாள். இனி, தொழுது-(இராமனைக் குறித்துத் திக்குநோக்கித்) தண்டன்சமர்ப்பித்து என்றுமாம். தோழியைநோக்கி 'இந்தத்தோன்றலை மன்மதனால் எழுதலாங் கொல்' என்றதற்கு-நம்மால் வரையறுத்தறியப்பட்ட அழகையுடைய மன்மதனால் இராமனது எல்லையற்ற சௌந்தரியத்தையுடைய திருமேனி எழுதவொண்ணாது: அவ்வல்லமையில்லாதவன் என்னை ஏன் மையல்கொள்ளச்செய்தான்? என்பது கருத்தாகவுமாம். பி-ம்:—[1] இலாது. [2] ஆகும்கொல். இது, சில பிரதியில் "வண்ணவாய்" (26) என்பதன்பின். (1171)

26. வண்ண [1]வாயொரு வாணுதன் [2]மானிடற்கு
எண்ணுங் கா[3]லிவ் விலக்கண மெய்திட
ஒண்ணு மோ[4]வி துணர்த்துகின் றே[5]னிவன்
கண்ண னே[6]யிது [7]கண்டிரும் பின்னென்ருள்.

(இ - ள்.) வண்ணம் வாய்-அழகிய வாயையுடைய, ஒரு வாள் நுதல்-ஒள்ளிய நெற்றியையுடையாளொரு மகள்,--(பிறரைநோக்கி), 'எண்ணும்கால்-ஆராயுமிடத்து, மானிடற்கு-மனிதனொருவனுக்கு, இ இலக்கணம் - இப்படிப்பட்ட வடிவழகையுடைய உத்தமலட்சணம், எய்திட ஒண்ணும்ஓ-பொருந்தக்கூடியதோ? [அன்றென்றபடி]; இவன் கண்ணன் ஏ-இவன் திருமாலேயாவன்; இது உணர்த்துகின்றேன்-இந்த விஷயத்தை(இப்பொழுது அனுமானப் பிரமாணத்தாற் கண்டு உங்களுக்குத்) தெரிவிக்கின்றேன்; இது-இதன் உண்மையை, பின் கண்டிரும்-(நீங்கள்) பின்பு ஆராய்ந்தறிவீர்', என்ருள்-என்று கூறினாள்; (எ - று.)

மானிடர்க்கு இவ்விலக்கண மெய்திடவொண்ணாமை, பிரதியட்சப் பிரமாணத்தால் அறியப்பட்டது; அதுகொண்டு அனுமிக்கப்பட்டது, இவன் கண்ணனேயென்பது. அவ்வனுமானத்தைப் பிறர்க்குத் தெளிவுபெற உணர்த்துகின்ருளென்க. ஏ-தேற்றத்தோடு பிரிநிலை. இவ்வாய்வார்த்தை மற்றையெல்லோர்வார்த்தையினும் மிக அழகிதாயிருத்தலால், இவளுக்கு 'வண்ணவாய்' என்ற அடைமொழியைக் கவி கொடுத்தார். பி - ம்:-[1]வாள்பெரு, வாள்பொரு. [2]மானிடர்க்கு. [3]அவ். [4]என்று, ஒன்று. [5]மலர்க். [6]இவன். [7]கண்டிடும். (1172)

27. கனக நூபுரங் கைவளை யோடுக
[1]மனனெ கும்படி வாடியொர் வாணுதல்
அனக னிந்நக ரெய்திய [2]தாதியிற்
[3]சனகன் [4]செய்த தவப் [5]பய ஞலென்ருள்.

(இ - ள்.) ஓர் வாள் நுதல் - ஒள்ளிய நெற்றியை யுடையாளொரு மகள்,—கனகம் நூபுரம்-(தனது) பொன்மயமான காற்சிலம்புகளும், கைவளையோடு - கையிலணிந்த வளைகளும், உக - (உடம்பு இளைத்ததனால்) கழன்று விழவும், மனன் நெகும்படி - நெஞ்சம நெகிழ்ந்துருகவும், வாடி-வாட்டமடைந்து, 'அனகன் இநகர் எய்தியது-குற்றமற்றவனை இவ்விராமபிரான் இந்த மிதிலா பட்டணத்தையடைந்தது, ஆதியில் சனகன் செய்த தவம் பயனால்-இச்சனகராசன் முன்செய்திருந்த தவத்தின் பயனாலே யாகும்,' என்ருள்-என்று கூறினாள்; (எ-று.)

இராமன்வந்த இடம் சனகராசதானி யாதலாலும், இவனால் மணஞ் செய்யப்படும பிராட்டி சனகன்மகளாதலாலும், 'அனகனிந் நகரெய்தியது சனகன்செய்த தவப்பயனால்'என்றது. இத்தொடரில் தந்தையெனனும் பொருளுமுடைய சனகன் என்பது—இங்குச் சீதையின் பிதா என்று பொருள்பட்டு, நம்முடைய பிதாக்கள் [முன்னோர்] செய்த தவத்தால் இராமன் இங்கு வராமையால் அன்னவன்

நம்மை மணக்கவரவில்லை என்ற தொனிப்பொருளுங் காட்டும். [3] சனகர் என்றபாடத்துக்கு, இவ்விராமன் வருகைக்கு ஏற்றகாரணமாகக் கூடியது ஒருவன் செய்த தவத்தின்பயனோ வென்னுங்கருத்தால், சனகர் எனப் பன்மையாகக் கூறினதாகக்கொள்க; சனகர்-விதேக வமிசத்தவர்; உயர்வுப்பன்மையுமாம். பி - ம்:—[1] அகம். [2] ஆதலின். [4] எய்து. [5] பயனும். (1173)

28. நனி[1]வ ருந்தி நலங்குடி [2]போயிடப்
பனிவ ருங்கணோர் பாசிழை யல்குலாள்
முனிவ ருங்குல மன்னரு [3]மொய்ப்பறத்
தனிவ ருங்கொல் கனவின் றலையென்றுள்.

(இ - ள்.) பனி வரும் கண்-நீர்த்துளிபெருகுகின்ற கண்களையும், ஓர் பாசு இழை அல்குலாள் - பசும்பொன்னாலாகிய (மேகலை முதலிய) ஆபரணங்கள் சூழ்ந்த இடையையுமுடையாளொருமகள்,- நலம் குடி போயிட-(தன்) அழகுமுழுவதும் (இவ்வளவு நாளாயத் தான்) குடியிருந்த [வசித்த] இடமான தன்னுடம்பை விட்டு நீங்கிப்போகும்படி, நனிவருந்தி - (இராமனிடத்துக்காதலால்) மிக வருத்தமுற்று, '(இவ்வள்ளல்), முனிவர்உம் குலம் மன்னர்உம் மொய்ப்பு அற-பலமுனிவர்களும் உயர்குலத்திலே தோன்றிய பல அரசர்களும் (இப்பொழுது சூழ்ந்திருத்தல் போலச்) சூழ்தலில்லாமல், கனவின் தலை-(என்னுடைய)கனவிடத்து, தனி வரும் கொல்-தனியாய்வருவானோ?' என்றுள்-என்றுகூறினாள்; (எ-று.)

யான் நினைக்கிறபடி தனியேவந்தால் அவனை நான் வலியத் தழுவி மகிழ்வேனென்பது, குறிப்பெச்சம். கனவிலாயினும் அப்பிரானது ஆலிங்கனத்துக்கு விரும்பினாள்: இதனால், அவளது காதன்மிகுதி நன்கு விளங்கும். பாசிழை-பசுநிறப் பட்டாடையுமாம். பி - ம்:—[1] வருந்து. [2] போய்விடப். [3] மொய்ம்பறத், மொய்ப்புறத். (1174)

29. புனங்கொள் கார்மயில்[1]போலுமொர் [2]பொற்கொடி
மனங்கொள் காதன் மறைத்தலை யெண்ணினாள்
[3]அனங்க வேள [4]தறிந்தன னற்றந்தான்
மனங்கள் போல முகமு [5]மறைக்குமே.

(இ - ள்.) புனம் கொள் கார் மயில் போலும்-காட்டினிடத்தைத் (தனக்குத்) தங்குமிடமாகக் கொண்டு வசிக்கிற கார் காலத்துக் களிக்கும் மயிலையொப்பவளாகிய, ஓர் பொன் கொடி - பொன்னாலாகிய பூங்கொடிபோல்வா ளொருத்தி, மனம் கொள் காதல் மறைத்தலை எண்ணினாள் - (இராமன்விஷயத்தில் தன்) மனத்திலே கொண்ட ஆசையை வெளித்தோன்றாமல் அகத்தே மறைத்து வைத்தலைக்கருதினாள்; அனங்க வேள்-மன்மதகுமாரன், அது அறிந்தனன்-அம்மறைபொருளை அறிந்திட்டான்; (எங்ஙனெனின்), அற்றம்தான் மனங்கள்போல முகம்உம் மறைக்கும் ஏ - இரகசியப் பொருளை மனங்கள்போல முகங்களும் மறைப்பனவாமோ? (எ-று.)

இராமனிடம் காதல்கொண்டதை ஒருத்தி மறைக்கத்தொடங்கினாளாயினும், அவள் முகக்குறிப்பால் அதனை அறிந்து மன்மதன் அவளை வருத்தத்தொடங்கினா னென்பதாம். "முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங், காயினுந் தான்முந் துறும்", "முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி, யுற்ற துணர்வார்ப் பெறின்" என்பவற்றிற்கு ஏற்ப, 'அற்றந்தான் மனங்கள் போல முகமு மறைக்குமே' எனப்பட்டது. பின்வாக்கியத்திற் கூறிய பொருள் முன்வாக்கியத்திற் கூறிய பொருளை விளக்கியது - தொடர்நிலைச் செய்யுட்குறியணியாம். அனங்கவேள் என்றது-அங்கமில்லாதவனாகி மனத்திலே தோன்றுபவ னென்ற குறிப்பினது. இராமனது காளமேகம்போன்ற கரியதிருமேனியைக் கண்டு களித்ததனால், இவளுக்குக் கார்காலத்துக் களிக்கும் மயில் உவமிக்கப்பட்டதென்க. கார்காலத்து மயில்களித்தல், இயல்பு. ஏ-எதிர்மறை. பி - ம்:—[1]போல்வதோர், போலியொர், போலவோர். [2]பொற்றொடி. [3]அனங்கனன்னது. [4]அறிந்திலன். [5]மறைக்குமோ, மறையுமே, மறையுமோ. (1175)

30. இணைநெடுங்[1]க ணொ[2]ரிந்து முகத்திபூ
வணைய[3] ணைந்திடி யுண்ட வராவெனப்
[4]புணர்ந லங்கிளர் கொங்கை புழுங்கிட
உணர்[5]வழுங்க [6]வுயிர்த்தன ளாவியே.

(இ - ள்.) இணை நெடு கண்-(தம்மில் ஒன்றோடொன்றொத்த) இரண்டு நீண்ட கண்களையுடைய, ஓர் இந்துமுகத்தி - சந்திரனையொத்த முகத்தை யுடையாளொருமகள்,—(இராமனைக் கண்டு காமவிகாரங்கொண்டு தளர்ந்துநிற்கவும் இருக்கவும் மாட்டாமல்), பூ அணை அணைந்து-மலர்களைக்கொண்டு பரப்பப்பட்ட படுக்கையைச் சேர்ந்து, இடி உண்ட அரா என-இடியோசையைக் கேட்ட பாம்புபோல, புணர் நலம் கிளர் கொங்கை புழுங்கிட - (ஒன்றோடொன்று) நெருங்கிய அழகுமிக்குவிளங்குகின்ற (தனது) தனங்கள் வியர்க்கவும், உணர்வு அழுங்க-அறிவு கெடவும், ஆவி உயிர்த்தனள்-பெருமூச்செறிந்து கொண்டிருந்தாள்: (எ-று.)

இடியோசையைக் கேட்ட மாத்திரத்திற் பாம்பு மிக அஞ்சி அழியுமென்பது, நூற்றுணிபு. பி - ம்:—[1]கணின். [2]ஏந்திழையேந்து. [3]அடைந்து, புகுந்து. [4]புணை. [5]அழுங்கி. [6]உகுத்தனள், உருத்தனள். (1176)

31.—நங்கைமார் வருந்துவதுகுறித்து இரங்கிய கவியின் கூற்று.

ஆம்ப[1] லொத்தமு தூறுசெவ் வாய்ச்சியர்
தாம்ப தைத்துயி ருட்டடு மாறுவார்
தேம்பு சிற்றிடைச் சீதையைப் போற்சிறிது
ஏம்பல் [2]பெற்றில [3]ரெங்ஙன முய்வரே.

(இ - ள்.) ஆம்பல் ஒத்து - செவ்வாம்பல்மலரைப் போன்று, அமுது ஊறு-அமிருதம்போன்ற இனிமைசுரத்தற்கு இடமான,

செவ் வாய்ச்சியர்-சிவந்த அதரத்தையுடைய அம்மகளிர்பலரும்,— தாம் பதைத்து-தாம் (தனித்தனி இராமவாஞ்சையால் மனமும் உடம்பும்) துடித்து, உள் உயிர் தடுமாறுவார் - உடம்பினுள்ளே உயிர் நிலைகலங்குதலை யடைபவராஞர்கள்; தேம்பு சிறு இடை - (மற்றை யவயவங்களின் பாரத்தால்) வருந்துகிற (இயற்கையிற்) சிறிய இடையையுடைய, சீதையை போல் - சானகிப்பிராட்டியைப் போல, ஏம்பல்-மகிழ்தற்குக் காரணத்தை, சிறிது பெற்றிலர்-சிறிதும்பெருத இவர்கள், எங்ஙனம் உய்வர்—? (எ-று.)

இது, தொடர்நிலைச்செய்யுட்குறியணியின்பாற்படும். இராமபிரான் சிவதநுசை முறித்ததனுல் தனக்குக்கொழுநனுவானென்ற தெளிவு உண்டானதனுல், சீதையால் மகிழ்ந்து பிழைத்திருக்கலாயிற்று; இம்மகளிர்களுக்கு அப்படிப்பட்ட ஆறுதலொன்று மில்லாமையால், பிழைத்தல் அரிதா மெனபதாம். ஏம்பல்-காரியம், காரணமாக உபசரிக்கப்பட்டது. பி - ம்:—[1]உற்று. [2]உற்றிலர். [3]எங்ஙன் முயங்குவார், எங்ஙனமுய்குவார். (1177)

32.—ஒருத்தியின் இரக்கமொழி.

வேர்த்து மேனி தளர்ந்துயிர் விம்மலோடு
ஆர்த்தி யுற்ற மடந்தைய ராரையும்
தீர்த்த [1]னித்தனை சிந்தையிற் செங்கணில்
பார்த்தி லா[2] னுட் பரிவில னோ[3]வென்ருள்.

(இ-ள்) (இராமனிடத்திற் காதல்கொண்டு அதனுல் ஒருமகள்), 'மேனி வேர்தது - உடம்பு வியர்வையடைந்து, உயிர் தளர்ந்து- உயிர் நிலைகுலையப்பெற்று, விமமலோடு-துயரத்துடனே, ஆர்ததி உற்ற-வருந்துதல்மிக்க, மடந்தையர் ஆரைஉம்-மகளி ரெவரையும், தீர்த்தன்-பரிசுத்தனுன இவ்விராமன், செம் கணின சிந்தையின் இத்தனை பார்த்திலான்-(தனது) சிவந்த திருக்கண்களால் சிறிதும் காதலோடு நோக்கினுனுமில்லை (தனது) திருவுள்ளத்தாற் சிறிதேனும் கருதினுனு மில்லை; உள் பரிவு இலனஓ-(அப்பிரான்) மனத்தில் அனபு (சிறிதும்) இல்லாதவனோ?' என்ருள—; (எ - று.)

ஏகபத்நீவிரதமுடையவனுதலால் இராமன் மடந்தையராரையும் சிந்தையிற் செங்கணிற் பார்த்தில னுயினுன்; இதுபற்றியே, இவனை 'தீர்த்தன்' என்றது. கண்ணுற்கண்டபின்பு மனத்தாலாசைப்படுதல் முறைமையாயினும், கண்ணின் காட்சிச்செய்கைக்கு அகத்துறுப்பாகிய கருத்தின நிகழ்ச்சி காரணமாதலால், அதனை முன்வைத்து, 'சிந்தையிற செங்கணிற் பார்த்திலான்' என்றது. தன்பாற் காதல் கொண்டவரைத் தான் காதலியாமை சிறிதும் அன்பில்லாமையென்ற கருத்தால், 'உள்பரிவிலனோ' என்ருள். இனி, போன செய்யுளையும் இச்செய்யுளையும் ஒரு தொடராககி, ஒருததி இரங்கிக் கூறியதாக உரைப்பினும் அமையும். பி - ம்:—[1]எட்டுணை, நிந்தனை, இத்தனிச். [2]உட்பரிவிலவோ, உட்பரிவிலனே. [3]என்ருர். (1178)

33.—மடவார் பலரும் காமங் கொண்ட நிலை.

வையம் பற்றிய மங்கைய ரெண்ணிலர்
ஐயன் பொற்புக் களவிலை யாதலால்

எய்யும் பொற்சிலை [1]மாரனு மென்[2]செய்வான்
கையம் பற்றுடை வாளினுங் கைவைத்தான்.

(இ - ள்.) வையம் பற்றிய மங்கையர் எண் இலர் - அந்நகரத்தினிடத்திற் பொருந்தின மாதர்களோ அளவில்லாதவர்கள்; ஐயன் பொற்புக்கு அளவு இலை - இராமனது சௌந்தரியத்துக்கோ ஓர் எல்லையில்லை; ஆதலால் - ஆகையால், எய்யும் பொன் சிலை மாரன் உம் - (அம்மாதர்களின்மேல்) அம்பெய்கிற அழகிய வில்லையுடைய மன்மதனும், என் செய்வான் - யாதுசெய்வான்? கை அம்பு அற்று - (தன்) கையிலுள்ள மலரம்புகளெல்லாம் ஒழிந்துபோய், (அதனால்), உடைவாளின்உம் கை வைத்தான் - (தனது இடையுடையின் மேல் இறுக்கிக்கட்டப்பட்டுள்ள) உடைவாளையும் எடுத்து (அம்மாதர் மேலெறிதற்பொருட்டு) அதிலும் கைவைத்தான்; (எ - று.)

இராமனது அளவற்றசௌந்தரியத்தில் ஈடுபட்டுக் காமநோய் கொள்ளாத மகளிர் அங்குஇல்லையாயின ரென்பதாம். ஈற்றடி - மன்மதனது கையோயாத போர்த்திறத்தை உணர்த்திற்று. வையம் - பூமி. இனி வையம்பற்றிய மங்கையர் என்பதற்கு-(இராமனைக்காணுமாறு அவன்) தேரைச் சூழ்ந்து தடுத்த மகளிரென்று உரைகூறலுமாம். போர்முதலிய பெருந்தொழிலொன்றை இடைவிடாது செய்பவர் தொழில்செய்யுங் காலத்துக் கைவழுக்குற்றால் மணலைக் கைக்கொண்டு திமிர்ந்து அவ்வழுக்குதலை ஒழித்துப் பின்பு தமது தொழில் செய்யும் இயல்பின்படி, மலரம்புகளிலுள்ள தேன் வழிதலாற் கைவழுக்குற்ற மன்மதன் அம்மலரம்பை யொழித்துத் தனது உடைவாளாகிய தாழம்பூவின் பராகத்தைத் திமிர்தற்கு அதிற் கை வைத்ததாக இச்செய்யுளுக்குச் சிறப்புப் பொருள் கூறுவர். பி-ம்:— [1]மாரனை. [2]செய்தான். (1179)

34.—மண்ணுலகத்து மாதரன்றி விண்ணுலகத்து மாதரும் இராமனிடத்துக்காதல் கொண்டமையைக் கூறுங் கவிக்கூற்று.

நான வார்குழ னாரிய ரோடலால்
வேனல் வேளொடு மேலுறை வார்களோடு
ஆன பூச லறிந்தில மம்புபோய்
வான நாடியர் மார்பினுந் தைத்தவே.

(இ - ள்.) நானம் வார் குழல் நாரியரோடு அலால் - கஸ்தூரிப் புழுகையணிந்த நீண்ட கூந்தலையுடைய (அந்நகரத்து) மகளிரோடு (மன்மதனுக்கு நடந்த போரையே) அல்லாமல், வேனல் வேளொடு மேல் உறைவார்களோடு ஆன பூசல் அறிந்திலம் - வசந்தகாலத்துக்குரிய மன்மதனுக்கு மேலுலகத்தில் வாழ்கிற தெய்வப்பெண்களோடு நடந்த போரை (விவரித்துச் சொல்ல) அறிந்தோமில்லை; (ஆயினும்), அம்பு போய் வானம் நாடியர் மார்பின்உம் தைத்த - மன்மதபாணங்கள் சென்று ஆகாயத்துள்ள சுவர்க்கலோகத்தை இடமாகவுடைய தெய்வப்பெண்களது மார்புகளிலும் பாய்ந்தன - ; (எ - று.)

மானிடர் தன்மையை யறிந்திருத்தல்பற்றி இராமபிரான் உலாச் செல்கையில் இம்மண்ணுலகத்து மங்கையர் பட்ட பாட்டைத் தம்மால் ஒருவாறு விவரித்துக்கூற இயன்றது: அங்ஙனம் தேவமாதர்களின் மனநிலையை யறிந்து கூறுதல் மானுடரான தமக்கு இயலாததுபற்றி, வானுலகத்து மங்கையரும் மன்மத பாணத்துக்கு இலக்காயினரென்று இவ்வளவுசொல்ல இயலுமே யல்லது மற்றைப்படி அவர்கள் பட்ட பாட்டைத் தம்மாற் சொல்ல இயலாதென்பார், 'மேலுறைவார்களோ டான பூசலறிந்திலம்' என்றார். இராமபிரான் இங்ஙனம் உலாப்போதலைத் தேவமாதர் களும் ஆகாயத்திலேவந்து கண்டு அவனிடத்துக் காதல் கொண்டார்களென்பதாம். மன்மதனுக்கு வசந்தகாலத்திலே போர்த்தொழிலில் ஊக்கம் மிகுதியாக உண்டாவதுபற்றி அவன் அப்போது யாவரையும் மிக்க காம வருத்தமடையச்செய்தலால், 'வேனல்வேள்' எனப்பட்டான்; இங்கே, வேனல்-இளவேனில். வேளொடு-உருபுமயக்கம். (1180)

35.—ஒருத்தி இராமனைப் பழித்தல்.

[1] மருண்ம யங்கு மடந்தையர் மாட்டொரு
பொருண யந்திலன் போகின்ற தேயிவன்
கருணை யென்பது கண்டறி யான்பெரும்
[2] பருண தன்கொல் படுகொலை [3] யானென்றாள்.

இ-ள்.) 'மருள் மயங்கும் மடந்தையர்மாட்டு-(தன் விஷயத்தில்) மோகத்தால் மயங்குகிற மகளிரெவரிடத்தும், ஒருபொருள் நயந்திலன் - ஒருபொருளையும் விரும்பிப்பெறாதவனாய், போகின்றதுஏ - (இவன் இங்ஙனஞ்) செல்லுவது தகுதியோ? இவன் கருணை என்பது கண்டு அறியான்-இவன அருளென்னுங் குணத்தின் தன்மையைச் சிறிதும் அனுபவித்தறிகிறானில்லை; பெரு பருணதன் கொல்-(மகளிரைச் சிறிதும் விரும்பாத இவன் காமமொழித்த) சிறந்த தத்துவஞானியோ? (சீதாவிவாகத்தின் பொருட்டுச் செல்கின்றதனால் அப்படிப்பட்டவனல்லன்போலும்; பின்னை எவ்வகையான் எனின்), படு கொலையான்-கொடிய கொலைத் தொழிலைச் செய்பவனாதல்கூடும்,' என்றாள்-என்று கூறினாள், (ஒருத்தி); (எ-று.)

இவன் தன்பக்கல் காதல்கொண்ட மாதரிடத்து எதையும் விரும்பாமற்போகின்றானே! இவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்க வில்லையே! இவன் கருணையற்றவனோ? இனி ஞானியென்போமெனின், சீதையை ஏன் விரும்பினான்? இவன் மற்றை மாதரிடம் படுகொலைக்காரனவன் என்று இராமனை ஒருத்தி பழித்தாளென்க. மடந்தையர்களுடைய உடல் உயிர் செல்வம் முதலிய பொருள்கள் பலவற்றுள இவன் எதைக்கேட்டாலும் அவர்கள் கொடுத்தற்குச் சித்தராயிருத்தல்தோன்ற, 'மடந்தையர்மாட்டொருபொருள் நயந்திலன்' எனறது. ஒருபொருள் - அவர்களது காட்சி வடிவம் அவயவம் பேச்சு முதலிய ஒன்றையும் என்றுமாம். 'போகின்றதே', ஏகாரம் - ஓசைவேறுபட்டால் அது தகுதியன்

றென்பதை விளக்கும். பெரும் பருணதன் கொல்-வயது முதிர்ந்த நிலைமையுடையானே என்றும் உரைக்கலாம். பருணதன் = பரிணதன்; பக்குவதசை யடைந்தவன். பெண்கொலை பெரும்பாவ மாதலால், 'படுகொலை' எனப்பட்டது. பி-ம்:—[1] மருணயந்த. [2] பரிணதன். [3] காணென்றார். (1181)

36.—ஆறுகவிகள்-பின்னும் ஒவ்வொருத்தி பட்ட தன்மை கூறும்.

தொய்யில் வெய்ய முலைத்[1] துடி போலிடை
[2] நையு நொய்ய மருங்குலொர் நங்கை[3] தான்
கையு மெய்யு [4] மறிந்திலள் கண்டவர்
உய்யு [5] முய்யு மெனத்தளர்ந் [6] தோய்வுற்றாள்.

(இ - ள்.) தொய்யில் - சந்தனக்கோலத்தைக் கொண்ட, வெய்ய - வெப்பத்தையுடைய, முலை - தனங்களையும், துடி போல் இடை நையும் நொய்ய மருங்குல் - உடுக்கைபோல் (மேலுங்கீழும் அகன்று) நடுவுசிறுத்துள்ள மென்மையான இடையையுமுடைய, ஓர் நங்கை - பெண்களிற்சிறந்தவ ளொருத்தி, கைஉம் மெய்உம் அறிந்திலள் -(காமமயக்கத்தால் தான் நடக்கவேண்டிய) ஒழுக்கத்தையும் தன்னுடம்பின் தன்மையையும் அறியாதவளாய், கண்டவர் உய்யும் உய்யும் என -(தன்நிலைமையைப்) பார்த்த பிறர் (தன்னைப்பற்றி 'இவள்) பிழைத்திடுவாள் பிழைத்திடுவாள்' என்று (ஒருவரோடு ஒருவர் தைரியங்) கூறும்படி, தளர்ந்து - (மனமும் உடம்பும்) தளர்ச்சியடைந்து, ஓய்வு உற்றாள்-அழிதலை யடைந்தாள்; (எ - று,)

உய்யுமுய்யும்-அடுக்கு, தேற்றப்பொருளது: இவள் நிலையைப் பார்த்துப் பலர் உய்யாளென்று கூற, சிலர் உய்யும் என்றுகூறினரென்க. இனி ஓசைவேறுபட்டால், உய்யுமோ உய்யுமோவென்று ஐயப்படும்படி யென்று உரைப்பினும் அமையும். தான் - அசை. பி-ம்—[1] தடி. [2] நையநொய்தின்வருந்தி. [3] தன். [4] உணர்ந்திலள். [5] உய்யாள். [6] ஓய்கின்றாள். (1182)

37. பூக வூசல் [1] புரிபவர் போலொரு
[2] பாகின் மென்மொழி தன்மலர்ப் பாதங்கள்
சேகு [3] சேர்தரச் சேவகன் றேரின்பின்
[4] ஏகு மீளு மிதென்செய்த [5] வாறரோ.

(இ - ள்.) ஒரு பாகு இன் மெல் மொழி - (கருப்பஞ்சாற்றின்) பாகுபோல் இனிய மென்மையான பேச்சுக்களை யுடையா ளொருமகள்,—பூகம் ஊசல் புரிபவர் போல்-பாக்குமரத்திற் பூட்டப்பட்ட ஊஞ்சலில் விரும்பியாடுபவர்போல், தன் மலர் பாதங்கள் சேகு சேர்தர-தனது தாமரைப்பூப்போல் மெல்லிய கால்கள் காய்ப்பை அடையும்படி, சேவகன் தேரின் பின் ஏகும்-சுத்தவீரனான இராமனது இரதத்தின்பின்னே (பலகால்) செல்லுபவளானாள்; மீளும்-(உடனே) திரும்பிவருபவளானாள்; இது என் செய்த ஆறு-இது யாது செய்தவிம்? (எ-று.)—அரோ-ஈற்றசை; வியப்புமாம.

சேவகன் பின்னேசென்றது, அவனைத்தழுவவேண்டுமென்று எழுந்த காதல்மிகுதியால்: பின்பு மீண்டது, இடையிலே தோன்றிய நாணத்தாலும் அங்ஙனந் தழுவமுடியாதென்ற கருத்தினாலுமென்க. இங்ஙனம் அவள் பலமுறை புரிந்தாளென்பது 'பூகவூசல் புரிபவர்போல்' என்ற உவமையாற் பெறப்படும். இதனால், ஒருத்தியின் காமநோயாலாகிய தடுமாற்றத்தின் காரியம் இதுவென்று கூறியவாறும். "கர்சறு பவளச் செங்காய் மரகதக் கமுகு பூண்ட, ஊசலின் மகளிர் மைந்தர் சிந்தையோ டுலவக் கண்டார்" என்ற கவியாலும், பூஞ்சோலைகளிற் பாக்குமரத்தில் ஊஞ்சல் கட்டப்படுவது மரபாதலையும், மனத்தடுமாற்றத்துக்கு ஊசலாட்டம் உவமை கூறப்படுவதையும் அறிக. நாவுக்கினிய பாகுபோலக் காதுக்கினிய செஞ்சொலென்க. அடிமைத்தொழில் செய்பவனென்று பொருளுள்ள வடமொழித்திரிபாகிய சேவகனென்பது-காவலாளனுக்குப் பெயராய் வழங்கி, வீரனென்னும் பொருளுணர்த்திற்று. பி-ம்:— [1]பயில்வர். [2]பாகுபோன்மொழியாள். [3]தோய்தர, சோர்தர. [4]ஏகுழீஇயும். [5]ஆகொலோ. (1183)

38. பெருத்த காதலிற் பேதுறு மாதரின்
ஒருத்தி மற்றங் கொருத்தியை நோக்கியென்
கருத்து [1]மவ்வழிக் கண்டதுண் டோவென்றாள்
அருத்தி யுற்றபி னாணமுண் டாகுமோ.

(இ - ள்.) பெருத்த காதலின்-(வரம்புகடந்து) மிகுந்த வேட்கையினால், பேது உறும்-மதிமயக்கமடைந்த, மாதரின் - அம்மகளிர்களுக்குள்ளே, ஒருத்தி-ஒருமகள், அங்கு - அவ்விடத்து [அப்பொழுது], மற்று ஒருத்தியை நோக்கி-வேறு ஒருமகளைப் பார்த்து, அ வழி என் கருத்துஉம் கண்டது உண்டுஓ என்றாள்-'(நீங்கள் சென்ற) அவ்விடத்தில் (இராமபிரானது வடிவத்தை மாத்திரமேயன்றி) எனது மனத்தையும் பார்த்தது உண்டோ?' என்று வினவினாள்; அருத்தி உற்ற பின் நாணம் உண்டு ஆகும்ஓ-ஆசைமிகுந்த பின்பு வெட்கம் (அங்கு) உள்ளதாமோ? [உள்ளதாகாதென்றபடி;] (எ - று.)

'ஆசைவெட்கமறியாது' ஆதலால், இங்ஙனம் வெட்கமின்றி வினாவினாளென்பதாம். இது-வேற்றுப்பொருள்வைப்பணி. இச்செய்யுளில் முதன்மூன்றடிகளிற்கூறிய சிறப்புப்பொருளை நான்காமடியிற்கூறிய பொதுப்பொருள் சமர்த்தித்து நிற்றல் காண்க. பரமாணுரூபமாய்க் கட்புலப்படாத நெஞ்சத்தை 'கண்ட துண்டோ' என வினவியது, காதற்பித்தினால். பி-ம்:—[1]இவ்வழி. (1184)

39. நங்கை யங்கொரு [1]பொன்னயந் தாருயத்
தங்க ளின்னுயி ருங்கொடுத் தார்தமர்
எங்க ளின்னுயி ரெங்களுக் கீகலா
வெங்க [2]ணெங்கன் விளைந்த திவற்கென்றாள்.

(இ - ள்.) அங்கு - அவ்விடத்து [அப்பொழுது], நங்கை ஒரு பொன் - பெண்களிற் சிறந்தவளான இலக்குமிபோன்றவளொரு

ருத்தி,—' தமர் - (இவ்விராமனது) குலத்தினர், நயந்தார் உய தங்கள் இன் உயிர்உம் கொடுத்தார்-(தம்மை) விரும்பிச் சரணமடைந்தவர்கள் பிழைத்திடும்படி தங்களது இனிய உயிரையும் (அவர்க்குத்) தானஞ் செய்துள்ளார்கள்; (அங்ஙனமிருக்க), எங்கள் இன் உயிர் எங்களுக்கு ஈகலா வெம் கண் - எங்களுக்கு உரிமையான இனிய உயிர்களையே எங்களுக்குக் கொடுத்திடாத கொடுந்தன்மை, இவற்கு-இவ்விராகவமூர்த்திக்கு, எங்ஙன் விளைந்தது - எவ்வகையால் உண்டாயிற்றோ?' என்றாள் - என்று வினவினாள்;

இந்தராமன் இவன் முன்னோர்போலத் தன்னுயிரை எமக்காகக் கொடுக்கவேண்டா; எங்களுயிரையாவது எங்கட்கு உரித்தாகுமாறு தரலாகாதா? என்கிறாள். இவர்களுயிரைத் தருவது - இவர்களுடைய காதலைத் தணித்தலாலாகுவது. நயந்தாருய்யத் தங்களின்னுயிருங் கொடுத்தார்-சிபிசக்கரவர்த்தி முதலியோர். 'குலத்திலில்லாத குணம் கொண்டாலும் வராது' என்ற பழமொழியைத் தழுவி, வமிசபரம்பரையிலில்லாத கொடுமையுண்டாதற்கு வழி யாதோ வென்கிறாள். தங்களின்னுயிரைத் தமக்கீகலா வெங்கண்மை இராமனிடத்து இருப்பதாக இவள் கூறினது, காமநோய்மிக்க தம்மைப்போன்ற மகளிர்பலரது மனமும் இராமன் பின்னேயே நீங்கிப்போய் மீண்டு வாராது மரணவேதனைப் படுதலாலென்க. பொன்-பொன்போலருமையானவளென்றும் உரைப்பர். பி - ம்:—[1]புண்ணியந்துய்யவை. [2]எங்கண், எங்கு. (1185)

40. நாமத் தாலழி வாளொரு நன்னுதல்
[1]சேமத் தார்வில் லிறுத்தது தேருங்கால்
[2]தூமத் தார்குழற் றுமொழித் தோகைபால்
காமத் தாலன்று கல்வியி னாலென்றாள்.

(இ - ள்.) நாமத்தால் அழிவாள் - (காமதாபத்தாலுண்டான) அச்சத்தால் நிலைகுலைபவளான, ஒரு நல் நுதல் - அழகிய நெற்றியையுடையாளொருமகள்,—'சேமத்து ஆர் வில் இறுத்தது தேருங்கால் - (ஆயுதசாலையிலே) போற்றிவைக்கப்பட்டிருந்த சிவதனுசை (இவ்விராமன்) முறித்ததன் காரணத்தை ஆலோசிக்குமிடத்து, தூமத்து ஆர் குழல் தூ மொழி தோகைபால் காமத்தால் அன்று-அகிற்புகையிலே பொருந்தின கூந்தலையும் சுத்தமான பேச்சையு முடைய மயில்போலுஞ் சாயலுள்ள சீதையினிடத்து விருப்பத்தினாலன்றுபோலும்? கல்வியினால்-(தனது) விற்றொழில் திறமையைக் காட்டும் பொருட்டினாற் போலும்', என்றாள்-என்று சொன்னாள்; (எ - று.)

வில்லையொடித்தது அம்மங்கையினிடத்துக் காமத்தினாலேயேயாகுமானால், வலியவந்து சேர்கிற இம்மகளிர்களிலும் சிலரையேனும் இவன் காதலிக்கக்கூடும்; அஃது இல்லாமையால் அது பயிற்சித்திறமையை விளக்குங் கருத்தாலேயே என்று ஊகித்தாளென்க. சேமம்-காவலுள்ளவிடம். தூமத்து ஆர் குழல் - புகையூட்டிய கூந்தல்; புகையையொத்த [கருநிறமான] கூந்தல் என்றும் உரைக்கலாம். நாமத்தால் அழிவாள் என்பதற்கு-(இராம

னென்னும்) திருநாமத்தின் பொருளுக்கு ஏற்ப அவன் திறத்திலே காதற்களிப்புக்கொண்டு மனமழிபவ ளென்றும் உரைப்பர். பி-ம்:—[1]சேமத்தால், சேமத்தாம். [2]தூமத்தாழ். (1186)

41\. ஆர முந்துகி லுங்கல னியாவையும்
சோர வின்னுயிர் [1]சோருமொர் சோர்குழல்
கோர வில்லி [2]முனேயெனைக் [3]கொல்கின்றான்
மார வேளின் வலியவர் [4]யாரென்றாள்.

(இ - ள்.) ஆரம்உம் - முத்துமாலையும், துகில்உம்-சேலையும், கலன்யாவைஉம்-மற்றை யாபரணங்களெல்லாமும், சோர - (தன்னுடம்பிலிருந்து) தளர்ந்துவிழ, இன் உயிர் சோரும் - இனிமையான (தன்) உயிருந் தளர்ந்துவிழுமநிலைமையையடைந்த, ஓர் சோர்குழல்-தளர்ந்த கூந்தலையுடையா ளொருமகள், 'கோரம் வில்லி முனே எனை கொல்கின்றான்-பயங்கரமான வில்லையேந்திய இவ் விராமனது முன்னிலையிலேயே (மன்மதன் அஞ்சாதுநின்று வில் வளைத்து அம்பெய்து வருத்தி) என்னைக் கொலலுகிறான்: மாரவேளின் வலியவர் யார் - இந்த மன்மதன்போல வலிமையுடையார் (உலகத்தில் வேறு) யாவர் (உளர்)? என்றாள்-என்று கூறினாள்;

மன்மதன் மகளிரை அம்பெய்து வருத்துதற்கு ஆதாரம் இராமனழகு ஆதலால், இப்பெருவீரவில்லியினமுன் அவன்வில் வன்மை சென்றதென்று அவனைப் பாராட்டுகின்றாள். சோர்குழல்-அவிழ்த்துவிட்டால் நிலமட்டில் தாழ்ந்துதொங்குங் கூந்தல்; (கண்ட ஆடவர்க்கு மதிச்) சோர்வை யுண்டாக்குங் கூந்தலுமாம். கோரவில்லி என்பதற்கு - அச்சம் விளைக்கும் அரனது வில்லை முறித்தவனென்றும் உரைப்ப. பி - ம்:—[1]சோர. [2]முனனே. [3]கொல்கின்ற. [4]யாவரோ. (1187)

42.—இராமபிரான்·சபாமண்டபத்தைச் சேர்தல்.

மாத ரின்னண [1]மொய்த்திட வள்ளல்போய்க்
கோதில் சிந்தை [2]வசிட்டனுங் கோசிக
வேத பாரனு மேவிய மண்டபம்
[3]ஏதி [4]மன்னர் குழாத்தொடு மெய்தினான்.

(இ - ள்.) மாதர் - பலபருவத்து மகளிரும், இன்னணம் மொய்த்திட - இவ்வாறு வந்து (தனனையடைந்து) நெருங்க, வள்ளல்-இராமபிரான்,—போய்-சென்று, கோது இல் சிந்தை வசிட்டன்உம்-குற்றமில்லாத மனத்தையுடைய வசிஷ்டமகாமுனிவனும், கோசிக வேதபாரன்உம்-கௌசிக முனிவனென்கிற வேததின் கரையை யறிந்தவனும், மேவிய-வந்து வீற்றிருக்கின்ற மண்டபம்-சபாமண்டபத்தை, ஏதிமன்னர் குழாத்தொடுஉம் - படைக்கலங்களைக்கொண்ட அரசர்களது கூட்டத்துடனே, எய்தினான் - அடைந்தான்; (எ-று.)

உலாச்சென்ற ராமன் வசிட்ட விசுவாமித்திரர் வீற்றிருந்த மண்டபத்தே மன்னர் குழாத்தோடு எய்தினா னென்பதாம். சிந்

டைக்குக்கோதின்மை-தீக்குணமொன்றுமில்லாமை: இனி, கோது-தவத்துக்கு மாறான கூடாவொழுக்கமுமாம். பாரன் - பாரகன் விகாரம். பாரம்-அக்கரை; வேதத்தின் முடிவான வேதாந்தப் பொருளை யறிந்தவன் விசுவாமித்திரனென்க. பி-ம்:—[1]எய்திட. [2]வயிட்டனும். [3]ஏதில். [4]மாதர். (1188)

43.-இராமபிரான் வசிட்ட விசுவாமித்திரரை வணங்குதல்.

திருவி ஞயகன் மின்றிரிந் தாலெனத்
[1]துருவின் மாமணி யாரந் துயல்வரப்
பருவ மேகம் [2]படிந்தது போற்படிந்து
இருவர் தாளு முறையி னிறைஞ்சினன்.

(இ - ள்.) திருவின் நாயகன்-இலக்குமிகொழுநனை ஸ்ரீராமன், மின் திரிந்தால் என-மின்னல் (இடம்விட்டுப் பெயர்ந்து) உலாவினாற்போல, துருவு இன் மா மணி ஆரம் துயல்வர-தேடியெடுத்துப் பதித்த இனிய சிறந்த இரத்தினவாரங்கள் (தன்மார்பில்) அசைந்து புரளும்படி, பருவம் மேகம் படிந்தது போல்-கார்காலத்து (நீர் கொண்ட கரிய) மேகம் (பூமியிலே வந்து) படிந்தாற்போல, படிந்து-கீழே தாழ்ந்து, இருவர் தாள் உம்-(வசிட்டன் விசுவாமித்திரன் என்னும்) இரண்டுபேரின் திருவடிகளையும், முறையின்-முறையே, இறைஞ்சினன்-வணங்கினன்; (எ-று.)

முன்னே குலகுருவான வசிட்டனை நமஸ்கரித்து, இராமன், பின்பு அஸ்திரசஸ்திர வித்தையில் தனக்கு ஆசிரியனாகிய கௌசிகனை நமஸ்கரித்தா னென்க. எல்லாச் செல்வங்களுக்கும் உரிய தலைவனானவன் இங்ஙனம் முனிவர்களைத் தண்டன் சமர்ப்பித்தா னென்ற இதில், எம்பெருமானது பரத்துவத்தோடு அவதாரத்துக்கு ஏற்பக் கொண்ட சௌலப்பியமும் விளங்கும். 'படிந்து இறைஞ்சினன்'-எட்டுறுப்பும் நிலத்தில் தோயத் தீர்க்கதண்டனிட்டானென்க. சீதாகலியாணஞ் சமீபித்திருத்தலால் 'திருவினாயகன்' என்ற பெயராற் கூறினர். துருவுதல்-தேடுதல். இனி துருவுதல்-துளைபடுதல் என்றுமாம். துரு-குற்றம் எனினுமாம். துரு-பொன்னுலாகிய, வில்-ஒளியையுடைய என்று உரைத்தலும் ஒன்று. முறையின்-நூல்களிற் கூறியவிதி முறைப்படி எனனலுமாம். பி-ம்:—[1]துருவு. [2]படிவது, படிவடி. (1189)

44.—முனிவர்களாசியுடன் இராமன் தம்பியரோடு ஆசனத்து அமர்தல்.

[1]இறைஞ்ச [2]வன்னவ ரேத்தின ரேவவோர்
நிறைஞ்ச பூந்தவி சேறி நிழற்கள்போல்
புறஞ்செய் தம்பிய ருட்பொலிந் தானரோ
அறஞ்செய் [3]காவற் [4]கயோத்தியிற் றோன்றினன்.

(இ - ள்.) அறம் செய் காவற்கு அயோத்தியில் தோன்றினன்-தருமத்தை (அழியாதபடி) காத்தல் செய்வதற்காகவே திருவயோத்தி நகரத்திலே திருவவதரித்தவனான ஸ்ரீராமன்,-இறைஞ்ச

•(தான் இங்ஙனம் வசிட்ட கௌசிகரை) வணங்க, அன்னவர் ஏத்தினர் ஏவ-(உடனே) அவர்கள் வாழ்த்தி (இவ்வாசனத்தில் வீற்றிரு என்று) நியமிக்க, ஓர் நிறைஞ்ச பூ தவிசு ஏறி-(அங்ஙனமே தான்) ஒப்பற்ற (அழகு) நிறைந்த பூப்போல் விசித்திர வேலை செய்யப்பட்டுள்ள ஆசனமொன்றின்மேல் ஏறியிருந்து, நிழற்கள் போல் புறஞ்செய் தம்பியருள் பொலிந்தான்-(தனது) சாயைகள் போல (த்தன்னைவிடாமல் தொடர்ந்து தனபக்கங்களிலே யிருந்து தன் திருமேனிக்குக்) காவல்செய்கிற (தன்) தம்பிமார் மூவர்களிடையிலே விளங்கினான்; (எ - று.)

துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டே திருமால் ஆதியஞ் சோதியுருவை யங்குப்போல் இங்கு வைத்துப் பிறந்தானென்பதும், எம்பெருமானது திருவவதாரம இச்சாமாத்திரத்தாலுண்டாவதன்றிக் கரும சம்பந்தத்தாலாகுவதன் றெனபதும் இதிற் பெறப்படும். ஈற்றடியில், செய் என்னும முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது. நிறைஞ்ச=நிறைந்த: போலி. நிறைஞச-(சிற்பவித்தை) நிரம்பின என்று உரைத்தால், பூந்தவிசு - அழகிய ஆதனமெனக் கொள்ளலாம். புறஞ்செய்தல் - புறந்தருதல், போற்றல்; அழகுசெய்தலுமாம்; "புறஞ்செய் மேகலை" எனக் கோலங்காண்படலத்து வருதலுங் காண்க. இச்செய்யுள சிலபிரதியிலில்லை; சிலபிரதியில் இந்தச் செய்யுளோடு இப்படலம் முடிகின்றது. பி-ம்:— [1]இறைஞ்சி. [2]மன்னவர். [3]நாவற்கு. [4]அயோத்தியுள். (1190)

45.—தசரதசக்கரவர்த்தி அந்த மண்டபத்தைத் தமரோடுஞ் சார்தல்.

ஆன மாமணி மண்டப மன்னது
தானை [1]மன்னன் றமரொடுஞ் சார்ந்தனன்
மீனெ லாந் [2]தன பின் [3]வர வெண்மதி
வானி லாவுற வந்தது [4]மானவே.

(இ - ள்.) (அதன்பின்பு), மீன் எலாம் தன பின் வர - எல்லா நட்சத்திரங்களும் தன்னுடைய பினனே வர, வெள் மதி-வெண்மை நிறமுடைய சநதிரன், வான் நிலாவுற வந்தது-ஆகாயம் விளங்கும்படி (அங்கு) வந்து சேர்ந்ததை, மான-ஒக்கும்படி, தானை மன்னன்-சேனைகளையுடைய தசரத சக்கரவர்த்தி,—தமரொடுஉம்-தன் சுற்றத்தாருடனே, ஆன மா மணி மண்டபம் அன்னது - பொருந்தின சிறந்த இரத்தினங்களையுடைய அந்த மண்டபத்தை, சார்ந்தனன் - அடைந்தான்; (எ-று.)

ஒளியையுடைய விண்மீன்களுக்குத் தலைவனான சந்திரன்-க்ஷத்திரிய தேஜஸையுடைய மன்னவர்களெல்லாந் தலைவனான தசரதனுக்கும், சந்திரன் பின்செல்லும் நட்சத்திரங்கள - தசரதன் பினவரும் அரச குலத்தார்க்கும், அகன்ற வானம்-பரந்த மணடபத்துக்கும் உவமையாம். உபமானத்தில் 'வான்நிலாவுற' என்றதனால் அம்மண்டபம் பொலிவுற்றதெனபது, தொனிக்கும். அன்னது ஆனமாமணிமணடபம - அத்தன்மையதாகச் சிறந்த (ஸ்ரீவைகுண்ட நகரத்

ஆதி) திருமாமணி மண்டபத்தை யொத்த மண்டபம் என்றுமாம். பரமபதத்தில் திருமாலின் அத்தாணி மண்டபத்துக்குத் திருமாமணி மண்டபமென்று பெயர். பி - ம்:—[1]வேந்தன். [2]அதின, வர. [3]வரும். [4]போன்றதே, போலவே. (1191)

46.—தசரதன் ஆசனத்து அமர்தல்.

வந்து[1] மாதவர் பாதம் வணங்கிமேல்
சிந்து தேமலர்[2] மாரி[3] சிறந்திட
அந்த ணாளர்க ளாசியொ டாசனம்
இந்தி ரன்[4]முக நாணுற வேறினன்.

(இ - ள்.) (சக்கரவர்த்தி), வந்து - அவ்வாறு வந்து, மா தவர் பாதம் வணங்கி-சிறந்த தவத்தையுடைய வசிட்ட கௌசிக முனிவர்களது திருவடிகளை நமஸ்கரித்து, மேல் சிந்து தேன் மலர் மாரி சிறந்திட-(தன) மேலே (பலராலுஞ்) சொரியப்படுகிற தேனையுடைய பூக்களின் மழை மிகாநிற்க, அந்தணாளர்கள் ஆசியொடு - பிராமணர்களாற் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களுடனே [பிராமணரிடம் ஆசீர்வாதங்களையும் பெற்று], ஆசனம் - (தனக்குரிய) ஆசனத்தை, இந்திரன் முகம் நாண் உற-தேவேந்திரனும் (கம்பீரத்தன்மை முதலியவற்றில் ஒப்பாகாமையால்) முகங்கவிழ்ந்து வெட்கமடையும்படி, ஏறினன் - ஏறிவீற்றிருந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]வானவர். [2]ஆசி. [3]சொரிந்திட. [4]முதல். (1192)

47,48,49.—மூன்றுகவிகள்—ஒருதொடர்; பலதேசத்து மன்னவரும் வந்து சேர்ந்தமையைத் தெரிவிக்கும்.

47. கங்கர் கொங்கர் கலிங்கர் [1]குலிங்கர்கள்
[2]சிங்க ளாதிபர் சேரலர் தென்னவர்
[3]அங்கர் சீனர் குலிந்த ரவந்திகர்
வங்கர் மாளவர் சோளர் [4]மராடரே.

48. மான மாகதர் மச்சர் மிலேச்சர்கள்
[1]ஏனை [2]வீர விலாடர் [3]விதர்ப்பர்கள்
[4]சீனர் [5]தெங்கணர் [6]செஞ்சகர் [7]சோமகர்
[8]சோன கேசர் துருக்கர் குருக்களே.

49. ஏதி யாதவ [1]ரேழ்திறற் கொங்கணர்
சேதி [2]ராசர் தெலுங்கர் கருநடர்
ஆதி வானங் கவித்த வவனிவாழ்
சோதி நீண்முடி மன்னருந் துன்னினர்.

(இ - ள்.) (47) கங்கர் - கங்கதேசத்தரசர்களும், கொங்கர் - கொங்குநாட்டரசர்களும், கலிங்கர்-கலிங்கதேசத்தரசர்களும், குலிங்கர்கள் - குலிங்கதேசத்தரசர்களும், சிங்கள அதிபர்-சிங்களதேசத்தரசர்களும, சேரலர் - சேரநாட்டரசர்களும், தென்னவர் - தென்னாடாகிய பாண்டியநாட்டின் அரசர்களும், அங்கர் - அங்கதேசத்தரசர்களும், சீனர்-சீனதேசத்தரசர்களும், குலிந்தர் - குலிந்ததேசத்தர

சர்களும், அவந்திகர் - அவந்திதேசத்தரசர்களும், வங்கர் - வங்க தேசத்தரசர்களும், மாளவர் - மாளவதேசத்தரசர்களும், சோளர் - சோழநாட்டரசர்களும், மராடர் - மராடதேசத்தரசர்களும், (48) மானம்-பெருமையையுடைய, மாகதர்-மகததேசத்தரசர்களும், மச்சர்-மத்ஸ்யதேசத்தரசர்களும், மிலேச்சர்கள் - மிலேச்சதேசத்தரசர்களும், ஏனை வீரம் இலாடர் - மற்றுமுள்ள வீரமமைந்த இலாட தேசத்தரசர்களும், விதர்ப்பர்கள் - விதர்ப்பதேசத்தரசர்களும், சீனர்-மகாசீன தேசத்தரசர்களும், தெங்கணர் - தெங்கண தேசத்தரசர்களும், செம் சகர்-செம்மையான சகநாட்டரசர்களும், சோமகர் -சோமகதேசத்தரசர்களும், சோனகசர் - சோனகநாட்டரசர்களும், துருக்கர் - துருஷ்கதேசத்தரசர்களும், குருக்கள-குருநாட்டரசர்களும் (49) ஏதி- ஆயுதங்களையுடைய, யாதவர்-யதுகுலத்து அரசர்களும், ஏழ திறல் கொங்கணர்-ஏழுபகுப்பையுடைய கொங்கண தேசத்தரசர்களும், சேதி ராசர்-சேதிதேசத்தரசர்களும், தெலுங்கர்-தெலுங்கதேசத்தரசர்களும், கருநடர் - கன்னடதேசத்தரசர்களும், (இவ்வாறு), ஆதி வானம் கவித்த அவனி வாழ் சோதி நீள முடிமன்னர்உம்-(பஞ்சபூதங்களுள்) முதலதாய் (மற்றைநான்கு பூதங்களுக்குங்) காரணமான ஆகாயத்தாற் கவியப்பட்டுள்ள பூமி முழுவதிலும் வாழ்கிற ஒளியையுடைய நீண்டகிரீடத்தையுடைய அரசர்கள் பலரும், துன்னினர்-(அம்மண்டபத்தில் வந்து) நெருங்கினார்கள்; (எ-று.)

47-சேரலர் என்பதன் ஒருமை, சேரலன்: சேரலன் = கேரளன்: ஈறுகெட்டு 'சேரல்' எனவும் வழங்கும். சேரல்-சேரனென்பதன் திரிபென்பர் ஒருசாரார். இச்செய்யுளில் உம்மை தொக்குவந்தன வெல்லாம், பெயர்ச்செவ்வெணெனப்படும். இக்கவியில் அடைமொழியில்லாமை ஒரு அழகாம். பி - ம்:—[1] தெலுங்கர்கள். [2] சிங்களாதியர். [3] அங்கராசர்குலிங்கரவந்திகர். [4] விராடரே.

48-சீனசோனகதேசங்களிலுள்ள இச்சாதியார், வசிட்டனை யெதிரிட்ட விசுவாமித்திரசேனையாரை அழிக்கும்பொருட்டு அப்பொழுது வெகுளிகொண்ட காமதேனுவினால் தன்னுடம்பின்மயிர் சிலிர்த்தவற்றினின்றுஉண்டாக்கப்பட்டவரென்பதைக் கீழ்மிதிலைக் காட்சிப்படலத்திற் கூறியதனால் அறிக. மிலேச்சர், சகர் என்பவரும் இத்திறத்தினரேயாவரென்பது பிறநூலால் விளங்கும். மீன்கள் எங்கும் நிரம்பும்படி நீர்வளத்தை மிகுதியாக வுடைமையின், மச்சமென்பது காரணப்பெயர்போலும். கீழ்க்கவியில் 'சீனர்' என்று வந்ததனால் இங்கே சீனரென்பதற்குப்பொருள், மகாசீனரென்று உரைக்கப்பட்டது; சீனம், மகாசீனம் என்பன வேறு வேறு நாடுகளாதல் வடநூலால் விளங்கும். இனி, இச்செய்யுளில், [4] சேனர் என்ற பாடத்துக்கு - சூரசேனதேசத்தரசர் என்று உரைக்கவேண்டும்; சேனர்-முதற்குறை விகாரம். தெங்கணம் என்பதைத் தக்ஷிணமென்னும் வடமொழியின் திரிபாகக் கொண்டால், தெங்கணர் - தென்னாடுகளின் அரசர்களென்று பொருளாம். சோமகமென்பது, குலத்தின் பெயராக வழங்கும். சோனகேசர் - வடமொழிப்புணர்ச்சி.

சந்திரகுலத்திற் பிரசித்தனு யிருந்த குரு என்னும் அரசன் காரண மாக அத்தேயம் குருநாடெனப்படும். பி - ம்:—[1]மான. [2]வீரராட்டர், வீரரிலாடர். [3]விராடர்கள். [5]சிங்குனர், செங்குணர். [6]சிந்துகர், சிஞ் சையர். [7]கேகயர். [8]சோனர். இச்செய்யுள் சிலபிரதிகளி லில்லை.

49 - கீழிரண்டு கவிகளிலும் இக்கவியிலும் அரசர்களைப் பன் மையாற் கூறினது, அவரவர்கள் தத்தஞ் சுற்றத்தாருடனே வந் துள்ளாரென்பதை விளக்கும்பொருட் டெனக. யாதவர் - யதுவின் வமிசத்தார்; யதுவென்பவன் - சந்திரகுலத்தில் யயாதியென்னும் அரசனது குமாரன்; பூரு என்பவனது உடன்பிறந்தவன். ஏழ்திறற் கொங்கணர் - "கொங்கணமேழுநீங்கி" என்பர், ஆறுசெல்படலத் தும். இனி, ஏழ் திறற் கொங்கணர் என்பதற்கு-அகங்காரமின்மை, தானம், விரதம், சினேகம், நல்லுணர்வு, பொறுமை, உற்சாகம் என் னும் ஏழு புண்ணியவகைகளையுடைய கொங்கண ரென்று உரைப் பாருமுளர். இங்கு வராத அரசர் எவருமில்லை யென்பார் 'வானங் கவித்த அவனிவாழ் மன்னரும்... துன்னினர்' என்றார்: உம்மை- முற்றுப்பொருளது. பி - ம்: —[1]ஏழுவகை. [2]ராசர்கன்னடர் சேண் விளங்கு, ராசருமுட்படச் சேண்விளங்கு, ராசர் தெலுங்கர்களுட் பட. (1193, 1194, 1195)

50.—சக்கரவர்த்தியின் பக்கங்களில் வீசுஞ் சாமரையின் வருணனை.

தீங் [1]க ரும்பினுந் தித்திக்கு [2]மின்சொலார்
தாங்கு சாமரை மாடு தயங்குவ
ஓங்கி யோங்கி வளர்ந்துயர் [3]சீர்த்தியின்
பூங்கொ ழுந்து [4]பொலிவன போன்றவே.

(இ - ள்.) தீம் கரும்பின்உம் தித்திக்கும் இன் சொலார்-இனிப் பான கருப்பஞ்சாறறைக் காட்டிலும் மிக இனிதாயுள்ள பேச்சுக்களை யுடைய மகளிர், தாங்கு-வீசுகிற, சாமரை - சாமரங்கள், மாடு தயங் குவ - (தசரதசக்கரவர்த்தியின்) பக்கங்களிலே விளங்குபவை, - ஓங்கி ஓங்கி வளர்ந்து உயர் சீர்த்தியின் பூ கொழுந்து பொலிவன போன்ற-மேலுலகங்களெல்லாவற்றிலுஞ் சென்று பரவி(மற்றையெல் லோர் புகழினும்) மேம்பட்டுள்ள (அத்தசரதனது) மிகுபுகழாகிய பெருமரத்தின் அழகான இளந்தளிர்கள் விளங்குவனவற்றை ஒத் திருந்தன; (எ-று.)

சொல்வடிவமாகவுள்ள கீர்த்திக்கு உருவமில்லையாயினும் அதனை உருவமுடையதுபோல வெண்ணிறமுடையதென்று வரு ணித்தல் கவிமரபு ஆதலால், வெண்சாமரங்களை இங்ஙனம் வரு ணித்தார்; தற்குறிப்பேற்றவணி. சீர்த்தி-மிகுபுகழ். 'பூங்கொழுந்து' எனவருவதனல், சீர்த்தி மரமாகக் கொள்ளப்பட்டது. ஓங்கி யோங்கி - அடுக்குத்தொடர். ஓங்கிவளர்ந்துயர் - ஒருபொருட்பன்மொழி. பி - ம்:—[1]கரும்பினில். [2]மென். [3]கீர்த்தியின். [4]படர்வன, பொடிப் பன. (1196)

51.—தசரதனுக்கு மகளிர் பல்லாண்டு பாடுதல்.

சுழலும் வண்டு மிஞிறுஞ் சுரும்புஞ்சூழ்ந்து
உழலும் [1]வாச [2]மதுமல ரோதியர்
[3]குழலி னோடுறக் கூறுபல் லாண் [4]டொலி
மழலை யாழிசை [5]யோடு [6]மலிந்தவே.

(இ - ள்.) சுழலும் - சுழன்றுமொய்க்குந் தன்மையையுடைய, வண்டுஉம் - வண்டுகளும், மிஞிறுஉம் - மிஞிறுஉம், சுரும்புஉம் - சுரும்புகளும், சூழ்ந்து உழலும - சுற்றிக்கொண்டு திரிதற்கிடமான, வாசம் - நறுமணத்தையும், மது மலர் - தேனையுடைய பூக்களையுமுடைய, ஓதியர் - கூந்தலையுடைய மகளிர்கள், குழலினோடு உறு - வேய்ங்குழலினோசையோடு பொருந்த, கூறு - (தசரத சக்கரவர்த்தியின்பொருட்டுச்) சொல்லிப்பாடுகின்ற, பல்லாண்டு ஒலி - பல்லாண்டிேனசைகள், மழலை யாழ் இசையோடு மலிந்த - (அம்மகளிரது) குதலைச் சொல்லோடொத்த வீணையின் கீதங்களுடனே மிக்கன;

கண்டத்தொனியும் கருவியோசையும் வேறுபாடு தோன்றாதபடி சிறக்கப்பாடுங் கீதமென்பது தோன்ற 'குழலினோடு...யாழிசையோடு மலிந்த' என்றார். பல்லாண்டு - இன்னும் பல வருஷங்கள் இவ்வுலகத்தில் உய்ந்து வாழ்ந்திடவேண்டுமென்று பாடும் வாழ்த்துப்பாட்டு. மகளிர் பல்லாண்டு பாடுதலை 'பண்ணேர் மொழியாரைக் கூவிமுளையட்டிப் பல்லாண்டு கூறுவித்தேன்'' என்ற பெரியார் வாக்கினாலும் அறிக. இம்மாதர், தசரதனுடைய பரிவாரங்கள். பி - ம்:—[1] தும்பியும். [2] பம்பறல், அம்புறல். [3] குழலினாமுறக், குழலினாறுறக். [4] இசை. [5] ஓட. [6] மலைந்தவே. (1197)

52.—தசரதனுடைய வெண்குடையின் வருணனை.

வெங்க [1]ணானையி னன்றனி வெண்குடை
திங்க டங்கள் குலக்கொடிச் சீதையாம்
[2]மங்கை மாமணங் காணிய வந்தருள்
[3]பொங்கி [4]யோங்கித் [5]தழைப்பது போன்றதே.

(இ - ள்.) வெம் கண் - கொடுந்தன்மைதோன்றும் (பயங்கரமான) கண்களையுடைய, ஆனையினன் - யானைச்சேனையையுடைய சக்கரவர்த்தியினது, தனி வெண் குடை - ஒப்பற்ற வெண்கொற்றக் குடையானது,—திங்கள் - சந்திரன், தங்கள் குலம் கொடி சீதை ஆம் மங்கை மா மணம் காணிய வந்து - தங்கள்வமிசத்திலே தோன்றின பூங்கொடிபோல்மெல்லிய சீதையாகிய மகளின் சிறந்த திருக்கலியாணப் பெருவிழாவைக் கண்டுகளிப்பதற்காக (இங்கே) வந்து, அருள் பொங்கி ஓங்கி தழைப்பது - கருணை மிகுந்து உயர்ந்து பூரித்து விளங்குவதை, போன்றது—; (எ - று.) தற்குறிப்பேற்றம்.

இதனால், சீதை அவதரித்து வளர்ந்த சனகவமிசம் சந்திரகுலம் என்றதாயிற்று. தங்கள் என்ற பன்மை, தன்பரம்பரையாரை உளப்படுத்தல் கருதினது. பி-ம்:—[1] ஆனையனன். [2] மங்கை

யாள், மங்கை தன். [3]பொங்க, பொங்கு. [4]சோதி, பொங்கி. [5]தழைப்பன போன்றவே. (1198)

53.—தசரதனது சேனை நெருக்கத்தின் வருணனை.

ஊடு பேர்விட மின்றியொன் றும்வகை
நீடு மாகடற் றானை நெருங்கலால்
ஆடன் மா[1] மத வானைச்[2]சனகர்கோன்
நாடெ லாமொரு நன்னக ராயதே.

(இ - ள்.) ஊடு பேர்வு இடம் இன்றி - (தாந்தாம் இருந்த) இடத்தினின்று நிலைபெயர்ந்து நீங்கிச் செல்லுதற்குரிய வெற்றிடைவெளி சிறிதும் இல்லாதபடி, ஒன்று ஆம் வகை - ஒரு தன்மைத்தாய் ஒருங்குகூடும்படி, நீடு மா கடல் தானை நெருஙகலால்- உயர்ந்த பெரியகடல்போற்பரந்த (சக்கரவர்த்தியின்) சேனை (அந்நாட்டினிடம் முழுவதும்) நெருக்கமாகப் பரவி யிருந்ததனால்,— ஆடல் மா மதம் ஆனை சனகர்கோன் நாடு எலாம்-வெற்றிவலிமையையுடைய பெரிய மதயானைச் சேனையையுடைய சனககுலத்தார்க்குத் தலைவனான அந்தச் சனகமகாராசனது விதேகதேசத்தினிடமெல்லாம், ஒரு நல் நகர் ஆயது-(ஜநநெருக்கம்மிக்க) அழகிய பட்டணமொன்றைப் போலவே யிருந்தது; (எ-று.)—நாடுமுழுதும் ஒரேநகரென்னுமாறு சேனை நெருங்கிற்றென்க.பி-ம்:—[1]களியானை. [2]சனகன்றன். (1199)

54.—சனகன் யாவரையும் உபசரித்த வகை.

[1]ஒழிந்த வென்னினி யொண்ணுத் றாதைதன்
பொழிந்த காத றொடரப் பொருளெலாம்
அழிந்து[2] வந்து கொண் டாடலி னன்புதான்
இழிந்து ளார்க்கு மிராமற்கு மொத்ததே.

(இ - ள்.) ஒள் நுதல் தாதை-பிரகாசமான நெற்றியையுடைய சீதையின் தந்தையான சனகமகாராசன், தன் பொழிந்த காதல் தொடர-தனது வரம்புகடந்து மிகுந்த ஆசை பொருந்த, பொருள் எலாம் அழிந்து - தனது செல்வ முழுவதையுஞ் சொரிந்து, உவந்து - மகிழ்ச்சிகொண்டு, கொண்டாடலின் - நன்குமதித்துப் பாராட்டின விஷயத்தில், அன்பு-(அந்தச்சனகமகாராசனிடத்து) அன்பு, இழிந்து உளார்க்குஉம்-தாழ்ந்த சனங்களுக்கும், இராமற்கு உம்-ஸ்ரீராமசந்திரமூர்த்திக்கும், ஒத்தது - சமமாகவே யிருந்தது; இனி ஒழிந்த என-இதற்குமேல் மற்றுங் கூறவேண்டுவனவாய் மிச்சமாகவுள்ளன யாவை? (எ-று.)

சனகன் சீதையின் திருமணத்தைக் கொண்டாடியதனால் இராமனுக்கு எவ்வளவு அன்பு உண்டாயிற்றோ அவ்வளவு அன்பு இழிந்துளாருமுளபட எல்லோர்கும் அவன் திறத்தில் உண்டாயிற்று என்றவாறு. ஒழிந்த-பெயர். அழிதல்-சொரிதலென்னும் பொருளதாதலை, "அழியும் மதுமாலையார்" என்ற இடத்துக்கு

நச்சினார்க்கினியர் கூறிய உரையாலும் அறிக. இனி, தனது ஒப்புயர்வற்ற மருமகனான இராமனுக்கு எவ்வளவு அன்புடனே தகுந்த உபசாரங்களைச் சனகன் செய்தானோ அவ்வளவு அன்புடனே உபசாரங்களை அந்தக் கலியாணத்துக்கு வந்த மகாராசர்கள் முதலாக அடிமைப்பரிவாரங்களீறாக யாவருக்கும் சிறிதும் பட்சபாதமின்றிச் சனகன் செய்திட்டானென்ற கருத்துப்படப்பொருள் கூறினுமாம். ஞானசீலங்களில் மிகச் சிறந்த இராசவிருடிகளாகிய சனககுலத்தாருள் எம்பெருமானுக்குப் பெண்ணை வளர்த்துக் கொடுத்துப் பெரும் புகழடைந்த பரமபாக்கியவான் இவனேயாதலால், அச்சிறப்புத் தோன்ற, இவனை 'ஒண்ணுதற்றாதை' என்றது. பின்வரும் வாக்கியமொன்றனாலேயே சனகனது அன்பு முழுவதுஞ் செவ்விதாக உணர்த்தப்படுதலின், 'ஒழிந்த வென்னினி' என்றார். இழிந்துளாரை முன்னும் இராமனை அதன் பின்னுமாக வைத்துள்ளதனால், இராமனினும் மற்றைமாந்தரை அவ்விராசன் மிகுதியாக உபசரித்தானென்பதும் ஒருவாறு தோன்றும். மூன்றாமடியில், வந்து என்று பிரித்து-எதிர்கொண்டு வந்து என்றுமாம். பி-ம்:—[1] ஒழிந்தது. [2] செய்துகொண்டு, சிந்தை கொண்டு, கொண்டுடன். (1200)

இந்த உலாவியற்படலத்திற் கூறிய உலா, இக்காலத்து ஜாநவாஸம் என்றும் எதிர்க்கொலு என்றும் மாப்பிள்ளையழைப்பு என்றும் வழங்குவதாகிய விவாகத்திற்கு முந்தி மணமகனை ஊர்வலஞ்செய்வித்தலைக் குறிக்குமெனக: "வாரணமாயிரஞ் சூழ வலஞ்செய்து நாரணநம்பி நடக்கின்றான்" என்று திருமணத்துக்குமுன்பு உலா வருவதனை ஆண்டாள் அருளிச்செய்திருத்தலுங் காண்க. இந்த உலாவியற்படலமும் கம்பர் கற்பனாசக்தியால் அமைத்ததேயாகும்.

உலாவியற்படலம் முற்றிற்று.

20.—ஆவது கோலங்காண்படலம்.

சீதாபிராட்டியாருக்கு அவருடைய தோழிமார் பலவகை அலங்காரங்களைச்செய்கிற செய்தியைக் கூறும் பாகம். கோலம் - அலங்கரிப்பு: காணல்-செய்தல். இங்குக் கோலங்கண்டது நிச்சய தாம்பூலமென்னுஞ் சடங்கை நிகழ்த்தும்பொருட்டெனக; இவ்விஷயம் இப்படலத்து 40, 41-ஆம் பாடல்களால் விளங்கும். எதிர்கொள்படலம் தவிர, வரைக்காட்சிப்படலம் முதல் கோலங்காண் படலம் வரையிலுமுள்ள படலங்கள் பெருங்காப்பிய விலக்கணம் அமைவதற்காகக் கம்பரால் தமது கற்பனா சக்திகொண்டு அமைக்கப்பட்டனவாகும். சிசுபாலவதம் கிராதார்ச்சுநீயம் முதலிய வடமொழிக் காவியங்களிலும் அவ்வந்நூலாசிரியர் இங்ஙனே யமைத்துள்ளனர்.

வேறு.

1.—வசிட்டன் சீதையை யழைத்துவரச் சனகனிடம் கூறல்.

[1]தேவியர் [2]மருங்கு சூழ விந்திர னிருக்கை [3]சேர்ந்த
ஓவிய முயிர்பெற் [4]றென்ன [5]வுவந்தர சிருந்த காலைத்
தாவில்வெண் கவிகைச் செங்கோற் சனகனை யினிது நோக்கி
மாவிய னோக்கி னாளைக் கொணர்கென வசிட்டன் சொன்னான்.

(இ - ள்.) ஓவியம் உயிர் பெற்று என்ன-சித்திரப்பிரதிமைகள் உயிரைப்பெற்று இருந்தாற்போல, தேவியர் மருங்கு சூழ-(தனது) மனைவிமார்பலர் பக்கங்களிலே சூழ்ந்துநிற்க, இருக்கை சேர்ந்த இந்திரன் (என்ன)-(தான் அரசு) வீற்றிருக்குஞ்சிங்காதனத்தை யடைந்த தேவேந்திரன்போல, அரசு-தசரதசக்கரவர்த்தி, உவந்து இருந்த காலை-(அம்மண்டபத்திற் சீரிய சிங்காதனத்திலே) மகிழ்ச்சியோடு வீற்றிருந்த சமயத்தில்,—வசிட்டன்-வசிஷ்டமகாமுனிவன், தா இல் வெண் கவிகை-குற்றமில்லாத வெண் கொற்றக் குடையையும், செம் கோல்-நீதி தவறாத அரசாட்சியையுமுடைய, சனகனை-சனகமகாராசனை, இனிது நோக்கி-இனிமையாகப் பார்த்து, மா இயல் நோக்கினாளை கொணர்க என-மாவடுப்போன்ற வடிவையுடைய கண்களையுடைய சானகியை அழைத்து வருவாயாக வென்று, சொன்னான்-நியமித்தருளினான்; (எ-று.)

இந்திரன் இருக்கைசேர்தல்-தசரதன் ஆசனத்து வீற்றிருத்தற்கு உவமை. ஓவிய முயிர்பெற்றென்ன-இல்பொருளுவமை. தசரத சக்கரவர்த்தியின்மனைவிமார் அறுபதினாயிரவ ரென்று கம்பரும் வாணியன்றாதனும் கூறியுள்ளார்; வடமொழிநூல்கள் சிலவற்றில் முந்நூற்றறுபதுபேரென்று கூறப்பட்டுள்ளது இனி, முன்னிரண்டடிகட்கு-இந்திரனது இருப்பிடஞ் சார்ந்துள்ள சித்திரப்பதுமைகள் உயிர்பெற்றாற்போலத் தனது தேவிமார்கள் பக்கங்களிலே சூழத் தசரதன் மகிழ்ந்து வீற்றிருந்தபொழுது என்றும், இந்திரனது சிங்காசனத்தை யடைந்துள்ள தொரு சித்திரப்பாவை தேவிமார் தன்மருங்கிலே சூழ்ந்துநிற்க உயிரைப்பெற்று வீற்றிருந்தாற்போல அரசன் தனக்குரியதோர் ஆசனத்திலே மௌனியாய்த் தேவியர் சூழ வீற்றிருந்த வளவிலே என்றும் கொள்வாரும் உளர். மா-மாவடுவுக்கு முதலாகுபெயர். மா இயல் நோக்கினாள்-மானின் தன்மைபோன்ற விழியின் தன்மையையுடையவ ளென்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]தேவியல், [2]யாருஞ். [3]செய்த. [4]அன்ன. [5]உவந்தனன். *(1201)*

2.—சனகனேவிய மாதரார் சீதையையழைத்துவருமாறு சென்று தாதியரிடஞ் சொல்லுதல்.

உரைசெயத் தொழுத கைய னுவந்தவுள் ளத்தன் பெண்ணுக்கு
அரசியைத் தருதி ரீண்டென் றுயிழை யவரை யேவக்
கரை [1]செயற் கரிய காதல் கடாவிடக் கடிது சென்றார்
பிரசமொத் தினிய சொல்லார் பேதைதா தியரிற் சொன்னார்.

(இ - ள்.) உரை செய-(இவ்வாறு வசிட்டன்) கூறியருள, (அதுகேட்டுச் சனகன்), தொழுத கையன்-கூப்பிவணங்கின கைகளையுடையவனாய், உவந்த உள்ளத்தன்-மகிழ்ந்த மனத்தையுடையவனாய், பெண்ணுக்கு அரசியை ஈண்டு தருதிர் என்று-'பெண்களுக்கெல்லாந் தலைவியான சீதையை இங்கே அழைத்து வாருங்கள்' என்று, ஆய் இழையவரை ஏவ - ஆராய்ந்தெடுத்தணிந்த ஆபரணங்களையுடைய சிலமாதர்களைக்கட்டளையிட,—பிரசம் ஒத்து இனிய சொல்லார்-தேனினையொத்து இனிப்பான சொற்களையுடைய அம்மாதர்கள்,—கரை செயற்கு அரிய காதல் கடாவிட-அளவிடுவதற்கு அருமையான (சீதைபக்கலுள்ள) அன்பு தூண்டுதலால், கடிது சென்றார்-விரைவாகப் போனவர்களாய், பேதை தாதியரின் சொன்னார்-இளம்பெண்ணான அந்தச் சீதையின் தோழிமார்களிடஞ் (செய்தியைச்) சொன்னார்கள்; (எ - று.)—தாதி - தாஸீ: அடிமைத்தொழில்செய்பவளென்று பொருள். பி - ம்:—[1]செயல். (1202)

3.—தோழிமார் சீதையை யலங்கரிக்கலானமை.

[1]அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென [2]வமைக்குமாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்
இமிழ்[3]திரைப் பரவை [4]ஞால மேழைமை யுடைத்து [5]மாதோ.

(இ - ள்.) (அச்சீதையின் தோழிமார்கள்);—அமிழ் இமை துணைகள் கண்ணுக்கு அணி என அமைக்கும் ஆ போல்-(கண்கள்) மறைதற்குக் காரணமான (மேலிமை கீழிமை என்னும்) இரண்டு இமைகளும் அக்கண்களுக்கு அழகென்றும் (கடவுளால் இயற்கையில்) அமைக்கப்பட்டிருக்கும்விதம் போல, உமிழ் சுடர் கலன்கள் நங்கை உருவினை மறைப்பது ஓரார்-வீசுகின்ற ஒளியையுடைய ஆபரணங்கள் பிராட்டியின் (அழகிய) வடிவத்தை மறைக்குமே யென்னுந் தன்மையை ஆராயாதவர்களாய்,—அமிழ்தினை சுவை செய்து என்ன-(இயற்கையிலே மிகுந்த இன்சுவையுடைய) தேவாமிருதத்துக்கு(ச் சர்க்கரை கற்கண்டு முதலியவற்றைக் கொண்டு புதிதாக) உருசியமைக்கத்தொடங்கினாற்போல, அழகினுக்கு அழகு செய்தார்-(இயற்கையிலே மிகுந்த) அழகையுடையதொரு பொருளுக்கு (ஆபரணம் முதலியவற்றாற் புதிதாக ஓர்) அழகுசெய்யத்தொடங்கினார்கள்; இமிழ் திரை பரவை ஞாலம் ஏழைமை உடைத்து-ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த நிலவுலகத்து உள்ள ஜனங்கள் (இங்ஙனம்) அறியாமையையே யுடையவர்கள்; (எ - று.)—மாது, ஓ-ஈற்றசைகள்.

இது-வேற்றுப்பொருள்வைப்பணி; இறுதியடி-பொதுப்பொருள்: மற்றை மூன்றடிகள்-சிறப்புப்பொருள். இவ்வணி-இங்கே உவமையைத் தனக்கு அங்கமாகக்கொண்டு வந்தது. அழகிய கண்களை மறைப்பனவாயினும் இமைகளைக் கண்களுக்கு அழகுசெய்வன வென்று கருதுதல்போல, இயற்கையிலழகிய பிராட்டியின் வடிவத்தை மறைப்பனவாயினும் ஆபரணங்களை அவ்வடிவத்துக்கு

அழகுசெய்வனவாகக் கருதினது, சிற்றறிவுடைய மாந்தரியற்கை யென்பதாம். அழகினுக்கு அழகு செய்தல் இன்றியமையாததன் றென்றபடி; "யாரே, யழகுக்கழகுசெய்வார்" என்றார் பின்னோரும். சொல்லின் தன்மையால், 'ஞால மேழைமை யுடைத்து' என்று அஃறிணை யொருமையாற் கூறப்பட்டது. இயற்கையழகோடு செயற்கையழகுங் கூடி அழகின்மேல் அழகாதற்பொருட்டு இங்ஙனஞ் செய்தன ரென்பதை விளக்க, 'அமிழ்தினைச்சுவைசெய்தென்ன' என்றார். பி-ம்:—[1] தமிழ். [2] தழைக்கும், தயங்கும். [3] சுடர், [4] ஞாலத்து. [5] மண்ணே. (1203)

4.—சீதையின் கூந்தலில் மாலைசூட்டுதல்.

கண்ணன்றன் [1]னிறந்தன் னுள்ளக் கருத்தினை நிறைத்து மீதிட்டு
உண்[2]ணின்றுங் கொடிக ளோடி யுலகெங்கும் பரந்த [3]தன்ன
வண்ணஞ்செய் கூந்தற் பார வலயத்து [4]மழையிற் றோன்றும்
விண்ணின்ற மதியின் மென்பூஞ் சிகழிகைக் கோதை வேய்ந்தார்.

(இ-ள்.) கண்ணன் தன் நிறம்-திருமாலின் கரிய திருநிறம், தன் உள்ளம் கருத்தினை நிறைத்து - பிராட்டியினது மனததின் எண்ணத்தை நிரப்பி, மீது இட்டு - மேலிட்டு, உள் நின்றும் கொடிகள் ஓடி-அவ்விடத்திினின்றுங் கொடிகளாகப் படர்ந்து, உலகு எங்கும் பரந்தது அன்ன-உலகமுழுவதும் பரவியது போல, வண்ணம் செய் கூந்தல் பாரம் வலயத்து - அழகைச்செய்கின்ற தலைமயிர்த்தொகுதி வட்டத்திலே, மழையில் தோன்றும் விண் நின்ற மதியின்-மேகத்தினிடையிலே தோன்றுகிற (கிரணங்கள்) விரியநின்ற சந்திரன்போல, மெல் பூ சிகழிகை கோதை - மென்மையான பூக்களால் தொடுக்கப்பட்ட சிகழிகையென்னும் மாலையை, (பிராட்டிக்குத் தோழிமார்), வேய்ந்தார்-சூட்டினார்கள்; (எ-று.)

சீதை திருமாலை எப்பேர்தும் எண்ணமிட்டுக் கொண்டிருந்ததலால் கண்ணனநிறம் 'தன்னுள்ளக்கருத்தினை நிறைத்து' என்றார். 'உலகெங்கும் பரந்ததன்ன' என்றது, இக்கூந்தல் பரவக்கூடிய அவ்வளவு நீண்ட தன்மையுடையது என்றவாறும். கூந்தல் பின்னிச் சுருண்ட வடிவமாக முடிக்கப்பட்டுள்ளதனால், 'கூந்தற் பார வலயம்' எனப்பட்டது. 'கண்ணன் றன்னிறம்...உலகெங்கும் பரந்த தன்ன வண்ணஞ் செய் கூந்தற்பாரம்'-தன்மைத்தற்குறிபபேற்றவணி. கூந்தலுக்கு மேகமும், மாலைக்குச் சந்திரனும் உவமை. சிகழிகை - ஒருவகை மாலை. விண்ணின்ற - விள்ள நின்ற என்பதன் தொகுத்தல்; இனி, விண் நின்ற - இயற்கை குறித்த அடைமொழியெனலுமாம். பி-ம்:—[1] நிறத்தின். [2] நின்ற. [3] என்ன. [4] மழையுள். (1204)

5.—சுட்டி பூட்டு என்னும் அணிகளை யணிதல்.

விதியது வகையால் வான [1]மீனினம் [2]பிறையை வந்து
கதுவுறு கின்ற தென்னக் [3]கொழுந்தணி களுலத் தூக்கி
மதியினை[4]த் தந்த மேக [5]மருங்குநா வளைப்ப தென்னப்
பொதியிரு ளளக பந்தி [6]பூட்டிய பூட்டு [7]மிட்டார்.

(இ-ள்.) விதியது வகையால்-ஊழ்வினையினது தன்மையினால், வானம் மீன் இனம் - ஆகாயத்திலேயுள்ள நட்சத்திரங்களின் கூட்டம், வந்து — பிறையை கதுவுஉறுகின்றது என்ன-பிறைச் சந்திரனைக் கவ்விக் கொள்கிற விதம்போல, கொழுந்துஅணி-சுட்டி யென்னும் அணியை, கஞல-(தனது ஒளி) நிறையும்படி, தூக்கி-கட்டி, - மதியினை தந்த மேகம் மருங்கு நா வளைப்பது என்ன - சந்திரனாகிய கன்றைப் பெற்ற மேகமாகிய தாய் (அதனை நக்கும்பொருட்டு அதை நோக்கி) வெளிப்புறத்திலே நாக்கை வளைத்து நீட்ட விடுவது போல, பொதி இருள் அளகபந்தி பூட்டிய பூட்டுஉம் இட்டார்-நெருங்கிநிறைந்த இருள்போன்ற முன்நெற்றிமயிரிணெழுங்கிலே பூட்டுதற்குஉரிய பூட்டுஎன்னும் ஆபரணத்தையும் (தோழிமார்) அணிந்தார்கள்; (எ-று.)

நெற்றியின்மீது மயிரினின்று தொங்கவிடப்பட்டுள்ள சுட்டி-வானமீனினம் பிறையைவந்து கதுவுகின்றது போலும். கொழுந்து-வயிரமணிகளினாலியன்ற சுட்டி; வேறோரணியுமாம். பின்னடியிற் கூறிய பூட்டு என்றது-தலைக்கோலத்தின் [தலைசாமானின்] உறுப்பாய் நெற்றிக்குமீது வட்டமாய்க் கட்டப்படும் ஓர் ஆபரணத்தைக் குறிப்பதுபோலும். மதியினைத் தந்தது எனவே, மேகம் தாயாயிற்று. [3]கொழுந்தொளி என்ற பாடத்திற்கு - ஒளிக்கொழுந்து என்றுமாற்றி, கொழுந்து கஞலப் பூட்டு தூக்கியிட்டாரென்று, சுட்டி கட்டியதையே இக்கவிகூறுமெனலாம். இப்பொருளில், பூட்டு-சுட்டியாம். "கருங்கொண்மூவாய் திறந்த மின்னு" என்றாற்போல, 'மதியினைத் தந்தமேகம்' எனத் தோற்றமாத்திரத்தால் உவமை கூறினார். பி-ம்:—[1]மீனினம், மீதுறு. [2]பிறையே வந்து, பிறையின் மீது. [4]நக்க. [5]மருங்குற. [6]பூட்டுவ. [7]விட்டார். (1205)

6.—குழையை யணிதல்.

வெள்ளத்தின் [1]சடிலத் தான்றன் [2]வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னாவி சோரத் தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்ற காளை யல்லன்கொ லாங்கொலென்பாள்
உள்ளத்தி னூச [3]லாடுங் குழைநிழ [4]லுமிழ விட்டார்.

(இ-ள்.) வெள்ளத்தின் சடிலத்தான் தன்-கங்கைநீர் வெள்ளத்தைத் தரித்த சடையையுடைய சிவபிரானது, வெம் சிலை-பயங்கரமான வில்லை, இறுத்த-ஒடித்த, வீரன்-வீரனானவன், தன் ஆவி தள்ள-தனது உயிர்நிலை தடுமாறவும், சோர-(தன்னுடம்பு) தளரவும், தனி பெரு பெண்மை தன்னை அள்ளிக்கொண்டு - ஒப்பற்ற சிறந்த தனது பெண் தன்மையான நிறையை (சில நாட்களின் முன்) கவர்ந்தெடுத்துக்கொண்டு, அகன்ற-அப்பாற்சென்ற, காளை அல்லன் கொல்-இளையவனல்லனோ? ஆம் கொல்-(அவ்விளையவன்) தானேயோ? என்பாள்-என்று ஐயப்படுபவளான பிராட்டியினது, உள்ளத்தின்-மனம் (அலைவது) போல, ஊசல் ஆடும்-அசைகின்ற, குழை-குழையென்னுங் காதணிகளை, நிழல் உமிழ-ஒளி வீசும்படி, இட்டார்-(அச்சீதையின் காதுகளிலே தோழிமார்) தரிப்பித்தார்கள்; (எ - று.)

குழை அசைந்து ஒளிவிடுந் தன்மைய தாதலால், அதற்கு, 'சிலை யிறுத்தவன் உள்ளத்தைக் கவர்ந்தவனே, அல்லனோ'? என்று சஞ்சலப்படும் சீதையினுள்ளத்தையே உவமையாக்கினர். சானகி இராமனை ஒருகால் வீதியிலே கண்டு காதல்கொண்டு நிலை குலைந்ததைக் கீழ் மிதிலைக்காட்சிப்படலத்தில் "சிந்தையு நிறையு மெய்ந்நலனும் பின்செல, மைந்தனு முனியொடு மறையப்போயினன்" என்றது முதலியவற்றாலும், ஒரு வீரன் சிவவில்லை ஒடித்தானென்ற செய்தியைக் கேட்ட மாத்திரமே யன்றிப் பிராட்டி இன்னானென்று காணாமையால் ஐயங்கொண்டுள்ளா ளென்பதை "அவனல்லனே லிறப்பனென்றகத்து ளுன்னினாள்" என்றதனாலும் அறிக. பெண்மை-கட்கினியதாம் அமைதித்தன்மைஎனவுரு முளர். பி-ம்:—[1] சூட்டத்தான். [2] வியனருள்பெற்ற. [3] ஆட. [4] ஊசல். இது சில பிரதியில் அடுத்த பாடலின்பின். (1206)

7.—கழுத்துக்கு அணியணிதல்.

கோனணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்து
ஈனமில் கலன்க டம்மி லியைவன வணிதல் செய்தார்
மானணி நோக்கி னார்த மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தானணி [1]யான போது தனக்கணி யாது மாதோ.

(இ-ள்.) கோன் அணி சங்கம் வந்து குடியிருந்து அனைய - (யாவர்க்குந்) தலைவனான திருமால் தரித்துள்ள (பாஞ்சசனியமென்னுஞ்) சங்கமானது (இங்கே) வந்து குடியிருந்தாற்போன்ற, கண்டத்து-(பிராட்டியின) கழுத்திலே, ஈனம் இல் கலன்கள் தம்மில் இயைவன - குற்றமற்ற ஆபரணங்களிற் பொருந்துவனவற்றை, அணிதல் செய்தார் - அணிந்தார்கள்; மான் அணி நோக்கினார் தம் மங்கலம் கழுத்துக்கு எல்லாம் - மான்பார்வையை யொத்த பார்வையையுடைய (உலகத்து) மகளிரெல்லோரது மங்கலநாணோடுகூடிய கண்டங்களுக்கெல்லாம், தான்-பிராட்டி, அணி ஆன போது - (ஒப்பற்ற) அலங்காரமாயிருக்கும்போது, தனக்கு அணி யாது-தன் கண்டத்துக்கு ஏற்ற அணியாவது யாதோ? எதுவுமில்லை;

இயற்கையில் மிக்கவழகுடைய பிராட்டியின் கழுத்துக்கு அழகைத்தருஞ் சிறப்புடைய ஆபரணம் ஒன்றும் உலகததில் இல்லையாயினும், தோழிமார் உலகவழக்கப்படி குற்றமற்ற அணிகலன்களிற் பொருத்தமானவற்றைத் தேடி அதிலணிந்திட்டார்களென்பதாம். மாதோ-ஈற்றசை. சீதை இலக்குமியினவதாரமாதலாலும், மகளிரணியும் மாங்கலியமென்பது இலக்குமியினமிசமாகி அதற்குஏற்ப இலக்குமியின் பெயராகிய திரு எனபதையே பெயராகக் கொணடிருத்தலாலும் 'மானணி நோக்கினார் தம் மங்கலக்கழுத்துக்கெல்லாம் தான அணியானபோது தனக்கு அணியாது?' என்றார். சாதாரண சங்கம் உவமையாதற்கு ஏலாமையால், கோனணிசங்கத்தை யுவமை கூறினர். சங்கம் - கண்டத்துக்கு, வளைந்தவடிவத்தாலும் வழுவழுப்பாலும் இரேகையுடைமையாலும் உவமை. பி-ம்:—[1] என்ற. (1207)

8.—ஆரமணிதல்.

கோணிலா வான் மீன்க ளியைவன கோத்த தென்கோ
வாணிலா [1]வய்ங்கு செவ்வி வளர்பிறை [2]வகிர்ந்த தென்கோ
நாணிலா நகையி [3]னின்ற நளிர்நிலாத் தவழ்ந்த தென்கோ
பூணிலா முலைமே லார [4]முத்தையான் புகல்வ தென்னே.

(இ-ள்.) பூண் நிலாம் முலைமேல் ஆரம் முத்தை-ஆபரணங்கள் விளங்குதற்குக் காரணமான (அப்பிராட்டியின்) தனங்களின்மேல் (அப்பொழுது தோழிமார் தரித்த) முத்துமாலையை,—கோண் இலா-(தத்தமக்கு உரிய சஞ்சாரத்தில்) தவறுதலில்லாத, வானம் மீன்கள் - ஆகாயத்துவிளங்கும் நட்சத்திரங்களுள், இயைவன-(ஒன்றற்கொன்று இனமாகப்) பொருந்தின சிலவற்றை, கோத்தது - ஒருங்கு சேர்த்துக் கோவைப்படுத்தின வடமாகும் (இது), என்கு ஓ - என்று சொல்வேனோ? வாள் நிலா வயங்கு செவ்வி - (இயற்கையில்) ஒளியையுடைய (தன்) கிரணத்தோடுகூடி விளங்கும் அழகிய தோற்றத்தையுடைய, வளர் பிறை - (கலைகள் நிரம்பி) வளருந்தன்மையுள்ள சந்திரனை, வகிர்ந்தது-பிளந்து கூறுபடுத்தின பாகமாகும் (இது), என்கு ஓ - என்று சொல்வேனோ? நாணில் ஆம் நகையில் நின்ற - இலச்சையுடனே கூடின (தனது) புன்சிரிப்பிற் பொருந்திய, நளிர் நிலா - குளிர்ந்த சந்திரகாந்திபோன்ற காந்தி, தவழ்ந்தது-சுற்றுப் பக்கங்களிற்பரவியதாகும் (இது), என்கு ஓ - என்று சொல்வேனோ? யான் புகல்வது என் ஓ-நான் என்னவென்று வருணித்துச் சொல்லுவது? (எ-று.)

சீதையணிந்த முத்துவடம் நட்சத்திரங்களைக் கொண்டு கோத்தமாலையையும், இளம்பிறையையும், பரந்த பற்களினொளியையும் ஒத்திருந்த தென்பது கருத்து. கோண் இலா - கோணுதலில்லாமல் இயைவனவான வானமீன்களை யெனினுமாம். பலஅரசரும் சக்கரவர்த்தியும் வசிட்டர்முதலிய முனிவர்களும் வில்லிறுத்த வீரனும் ஆகிய ஆண்மக்கள் நிறைந்த சபையில் திருமணத்திற்குச் செல்லவேண்டுதலின், நாணத்தோடு நகை பிராட்டிக்குத் தோன்றிற்று. 'என்கோ'-தற்குறிப்பேற்றவுருபு; இது, வியப்புப் பொருளுந் தோன்ற நின்றது. என்கு-என்பேன்; தன்மைமுற்று: இனி, என்கோ-என்கவோ என்பதன் விகாரமுமாம். பி-ம்:—[1]வந்த, நிமிர்ந்த. [2]வதிந்தது. [3]நின்றோர். [4]முத்தய்யாம. (1208)

9.—அணியப்பெற்ற ஆரம் விளங்குவதன் வருணனை.

மொய்கொள் [1]சீ றடியைச் சேர்ந்த [2]முளரிக்குஞ் செம்மை யீந்த
தையலா [3]ளமிழ்த மேனி தயங்கொளி தழுவிக் கொள்ள
வெய்யபூண் முலையிற்[4]சேர்ந்த வெண் [5]முத்தஞ் சிவந்த வென்றால்
[6]செய்யவர்ச் சேர்ந்து ளாருஞ் [7]செய்யராய்த் திகழ்வ ரன்றே.

(இ - ள்.) மொய் கொள் - (செம்மைநிறத்தில் எமக்கு ஒப்பாக மாட்டீர்களென்று) போரைச் செய்கின்ற, சிறு அடியை - சிறிய

(த்னது) பாதங்களை, சேர்ந்த -(ஒப்பாகாமையால் தோற்றுச்) சரண மடைந்த, முளரிக்கும்-செந்தாமரைமலர்களுக்கும், செம்மை ஈந்த-செந்நிறத்தைக் கொடுத்த, தையலாள் - அழகையுடைய பிராட்டியினது, அமிழ்தம் மேனி - அமிருதம்போ லருமையான செந்நிறத் திருமேனியிலே, தயங்கு-விளங்குகிற, ஒளி - செந்நிறவொளி, தழுவிக்கொள்ள-(தம்மேல்வந்து) பொருந்துதலால், வெய்ய பூண் முலையில் சேர்ந்த வெள் முத்தம் சிவந்த - விருப்பத்தைத்தருகிற ஆபரணங்களையணிந்த தனங்களிலே பொருந்தின வெண்ணிறமான முத்துக்களும் செந்நிறமடைந்தன: என்றால்-(இது எங்ஙனம் பொருந்தும்?) என்றால், செய்யவர் சேர்ந்துளார்உம் செய்யர் ஆய் திகழ்வர் அன்றே-செம்மைக்குண முள்ளவர்களைச் சேர்ந்துள்ளவர்களும் செம்மைக்குணமுள்ளவர்களாய் விளங்குவார்களன்றோ?

தன் தாள் படும்படி தான் வீற்றிருத்தலால் செம்மை பெறுமாறுள்ள பதுமத்தில் வீற்றிருக்கிற இலக்குமியினமிசமான சீதையின் திருமேனியொளி தழுவுதலாலே மார்பிலாரமும் செந்நிறமாகத் தோன்றிற்றென்பதாம்: பிறிதின்குணம் பெறலணி. பிராட்டியின் திருநிறம் அப்பொழுது உருக்கிய மாற்றுயர்ந்த பொன்னின் வருணத்தை ஒத்திருக்கு மென்க. முதல் மூன்றடிகளிற்கூறிய சிறப்புப் பொருளை ஈற்றடி சமர்த்தித்து நின்றது - வேற்றுப்பொருள் வைப்பணி. செம்மை—சிலேடை: குணம் நிறம் என்ற இவற்றைக் காட்டும். உபமானத்திற் செம்மை நற்குணத்துக்கும், உபமேயத்திற் செம்மை-சிவந்த நிறத்துக்குமாம்; இங்ஙனம் பண்புமாத்திரத்தால்ஒத்தலை ''புறங்குன்றி கண்டனைய ரேனும்'' என்னுந் திருக்குறளிலுங் காண்க. மகளிர்பாதம் சிறுத்திருத்தல், உத்தம விலக்கணம். மொய்-போர். பி - ம்:—[1] சீரடி. [2] முளரிக்குச். [3] பவளமேனி. [4] பெய்த. [5] முத்துஞ்சிவந்தமெய்யில். [6] செய்யரை. [7] செய்யவாய். (1209)

10.—தோள்கட்கு அணிகலன்களை யணிதல்.

கொமையுற வீங்கு கின்ற குலிகச்செப் பனைய கொங்கைச்
சுமையுற நுடங்கு கின்ற நுசுப்பினாள் பூண்[1] பெய் தோளுக்கு
இமை[2] யுற விமைக்குஞ் செங்கே ழினமணி முத்தி னோடும்
அமை[3] யுற வமைவ துண்டா மாகினும் பாகு மன்றே.

(இ - ள்.) கொமை உற-திரட்சி பொருந்த, வீங்குகின்ற-மேன்மேற் பூரிக்கிற, குலிகம் செப்பு அனைய கொங்கை-இங்குலிகக் கலசங்களையொத்த தனங்களின், சுமை உற-பாரம் மிகுதலால், நுடங்குகின்ற-(மேன்மேல்) துவளுகின்ற, நுசுப்பினாள்-இடையையுடைய பிராட்டியினது, பூண் பெய் தோளுக்கு-(ஏற்ற) ஆபரணங்களை யணிந்த தோள்களுக்கு, இமைஉற இமைக்கும்-(பார்ப்பவர் கண்கள் ஒளிமிகுதியைக் கண்டு கூச்சமடைந்து) இமைமூடுதல் செய்யும்படி விளங்குகிற, செம் கேழ் இனம் மணி முத்தினோடுஉம்-சிவந்த ஒளியையுடைய கூட்டமான பதுமராகக்கற்களோடும் முத்துக்களோடும், உற அமைவது - மிகுதியாகப் பொருந்துவதான,

அமை உண்டு ஆம் ஆகின்-மூங்கில் உண்டாகுமானால், (அதுவே), ஒப்பு ஆகும்-சமானமாகும்; (எ-று.)—அன்றே-தேற்றம்.

மூங்கில் பல [1]இரத்தினங்களோடும் முத்துக்களோடுங் கூடி விளங்கினால் அப்பொழுது அரதனாபரணங்களையும் முத்தாபரணங்களையும் அணிந்த பிராட்டியின் தோளுக்கு அது உவமையாமென்றவாறு: இவ்வாறு கூறுவது - உய்த்துணர்வணி. இதனால், தோளுக்கு உவமைப்பொருளுலகத்திலில்லையென்பது, பெறப்படும். இங்ஙனம் தோளை வருணிப்பதுபோலக் கூறியிருப்பினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, தோளில் பதுமராகம் முத்து இவைகளாலியன்ற அணிகளைப் பூட்டினரென்பதையே கருத்தாகக் கொள்க. கொமை-வட்டமென்பாருமுளர். மிகச்சிவந்த குலிகச் செப்பு-மிகச்சிவந்த பிராட்டியின் தனங்களுக்கு, வடிவத்தாலும் நிறத்தாலும் உவமை. பி -ம்:—[1]செய். [2]அற. [3]இடை. (1210)

11.—கையிற் கடகமணிதல்.

தளையவிழ் கோதை யோதிச் சானகி தளிர்க்கை யென்னும்
முளரிக ளிராமன் செங்கை முறைமையிற் றீண்ட [1]நோற்ற
அளியன கங்குற் போதுங் குவியல வாகு மென்றாங்கு
இளவெயில் சுற்றி யன்ன வெரிமணிக் கடக [2]மிட்டார்.

(இ - ள்.) 'தளை அவிழ் - (மலர்கள்) முறுக்குவிரிதற்கு இடமான, கோதை - பூமாலையைச்சூடிய, ஓதி-கூந்தலையுடைய, சானகி-சீதாபிராட்டியினது, தளிர் கைஎனனும்-தளிர்களபோல் மெல்லிய கைகளென்கிற, முளரிகள் - செந்தாமரை மலர்கள், இராமன் செம் கை-இராமபிரானது சிவந்த கைகளால், முறைமையின்-சாத்திர முறைமைப்படி, தீண்ட - தொடப்படுவதற்கு, நோற்ற - தவஞ்செய்துள்ளன; அளியன-(இவை யாவராலும்) அன்பு பாராட்டத்தக்க தன்மையையுடையன; கங்குல் போதுஉம் குவியல ஆகும்-இராத்திரி காலத்திலும் குவியாதனவாயிருக்கும்,' என்று எனறு கருதி, ஆங்கு-அக்கைகளிலே, இள வெயில் சுற்றி அன்ன-இளவெயிலைச் சூழக்கட்டினாற்போன்று விளங்குகிற, எரி மணி கடகம்-பதுமராக மணிகள் பதித்துள்ள கடகமென்னும் ஆபரணங்களை, இட்டார்-(தோழிமார்) இட்டார்கள்; (எ-று.)

இரவில் வெயிலில்லாமையால் முளரிகள் குவியும்: சானகியின் தளிர்க்கைம்முளரியோ குவியாஎன்பதைக் குறிப்பிக்க, இரவிலும் வெயிலொளிபட இளவெயிலைச் சூழக்கட்டினாற்போன்று கடகம் இட்டா ரென்றனர். மிகச் சிறந்த தவப்பயன் இருந்தாலன்றி ஒருமகளுக்கு இராமபாணிக்கிரகணம் நேராதாதலால், 'நோற்ற' எனறது. கையென்னும் முளரிகள்-அபநுதியணி. கையை முளரியாகக் கூறியது-உருவகவணி. முளரிகள் இராமனைச் செங்கை தீண்ட நோற்ற எனற சேர்க்கையால், ராமதிவாகரனது கிரணங்கள் தீண்டிட மலர்ந்திடுமாறு அம்முளரிகள் நோற்றுள்ளன என்பது தொனிக்கும். பி-ம்:—[1]பெற்ற. [2]வேய்ந்தார், சேர்த்தார். (1211)

12.—கொங்கையில் தொய்யி லெழுதுதல்.

சில்லிய லோதி கொங்கைத் திரண்மணிக் கனகச் செப்பில்
வல்லியு மனங்கன் வில்லும் மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய னெறியிற் பார்க்கும் பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற விடையினுக் கிடுக்கண் செய்தார்.

(இ - ள்.) சில் இயல் ஓதி - சிலவகைகளாகவகுத்து அலங்கரிக்கப்படுகிற கூந்தலையுடைய சானகியினது, கொங்கை-தனங்களாகிய, மணிதிரள் கனகம்செப்பில்-நீலமணியொன்றை (அடியிலே) பதிக்கப்பட்டுள்ள திரண்ட பொன்மயமான இரண்டு செப்புக்களை வைத்தாற் போன்ற தனங்களிலே, வல்லிஉம்-பூங்கொடியையும், அனங்கன் வில்உம-மன்மதனது வில்லான கரும்பையும், மான் மதம் சாந்தின தீட்டி - கஸ்தூரி சேர்ந்த சந்தனக்குழம்பினாலே எழுதி, பல் இயல் நெறியின பார்க்கும் பரம்பொருள என்ன - பல வகைப்பட்ட சமயங்களாற் பார்க்கப்படுகின்ற (எல்லாப்பொருள்களினும்) மேம்பட்ட பொருளான கடவுளின் வடிவம் (உண்டென்றும் இல்லை யென்றும் எல்லோர்க்கும் சந்தேகிக்கப்பட்டு நிற்றல்) போல,—யார்க்குஉம் இல்லை உணடு என்ன நினறஇடையினுக்கு-உண்டோ இல்லையோ என்று யாவர்க்கும் ஐயமுணடாம்படி நிற்கின்ற (அப்பிராட்டியின்) சிறுமெல்லிடைக்கு, இடுக்கண் செய்தார்-(அத்தொயயிற்பாரத்தால்)வருத்தத்தை விளைத்தார்கள், (எ - று.)

கடவுளின் வடிவம் எதிரிற் புலப்படாமையால் அஞ்ஞானிகள் 'இல்லை' எனவும், ஆஸ்திகரல்லாத சிலரால் காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுளின் உண்மை அநுமானப் பிரமாணத்தாலும் சான்றோரால் நித்தியமாய் அபௌருஷேயமான வேத பிரமாணத்தினாலும அறியப்படுதலின் 'உண்டு' எனவும் கூறப்படும்; அதுபோலவே, மிக நுண்ணிய இடையின் வடிவம கட்புலப்படாமையால் 'இல்லை' என்றும, பலநூல்களினாலும் மேலுங்கீழுமுள்ள கொங்கை கூந்தல் அல்குல் முதலிய காணப்படுகிற அவயவங்களின் உண்மைகொணடு அனுமானப்பிரமாணத்தாலும் அறிய வேண்டுதலால் 'உணடு' எனவுங கூறப்படுமெனக. பரமபொருள - பரமாத்துமா; பல்லியநெறி-த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம முதலிய பலமதங்களிலும் கூறப்படுகிற முறைமை, யுக்திவாதம் முதலியன. சில்லியலோதி - அன்மொழித்தொகை: முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என இஙஙனம் சில பகுபபுக்களாகக் கூந்தல அலங்கரிக்கப்படுதலால், 'சில்லியலோதி' எனப்பட்டது; இனி, குளிர்ச்சி பொருந்திய கூந்தலென்றும், மென்மைத்தனமை பொருந்திய கூந்தலெனறுமாம; சில்-ஒருவகை ஆபரணமென்றுங் கூறுவர். மணி - கொஙகையின் கருங்கண்ணுக்கும், பொறசெப்பு - செய்ய கொங்கைக்கும உவமை. யார்க்கும, நானகனுருபு-கருத்தாப்பொருளது: இலககணககொத்துக் காணக. ()

13.—இடையில் மேகலையும் தாரகைச்சும்மையும் அணிதல்.

நிறஞ்செய் கோசிக நுண்டுசு நீவிநீ வாத வல்குல்
புறஞ்செய் [1]மேகலையுந் தாழத் தாரகைச் சும்மை பூட்டித்

திறஞ்செய் காசீன்ற சோதி பேதைசே யொளியிற் [2]றீர்ந்த
கறங்குபு திரியத் [3]தாமுங் கண்விளக் [4]கற்று நின்றார்.

(இ - ள்.) திறம் செய்-வருணவொளியைச் செய்கின்ற, கோசிகம் நுண் தூசு நீவி-பட்டாகிய நுட்பமான [மிகமெல்லிய] ஆடையின் கொய்சகத்தை, நீவாத-நீங்காத, அல்குல் புறம் - இடைக்கு, செய் மேகலேஉம் - (அழகு) செய்கின்ற மேகலாபரணத்தையும், தாழ - அதன்கீழ்ப்பட, தாரகைச்சும்மை-தாரகைச்சும்மை யென்னும மணிவடத்தொகுதியையும், பூட்டி-(தோழிமார்) அணிந்து,—திறம் செய் காசு ஈன்ற சோதி-(அவ்வாபரணங்களின்) பல்வகைப்பட்ட இரத்தினங்கள் வெளிவிட்ட ஒளிகள், பேதை சேய் ஒளியின் தீர்ந்த கறங்குபு திரிய-இளம்பெண்ணாகிய அச்சீதையினது சிவந்த தேககாந்தியினின்றும் வேறுபட்டனவாய் (நாற்புறத்திலுஞ்) சுழன்று உலாவ, தாம்உம்-(அலங்காரஞ்செய்த) தாமும், கண் விளக்குஅற்று நின்றார்-(அவ்வொளிமிகுதியைககண்டு) கண்களின் ஒளியை இழந்து நின்றார்கள்; (எ - று.)

தோழிமார் அணிவித்த அணிகலங்கள், அணிவித்த அவருடைய கண்களை கூசுமாறு பேரொளி செய்தன எனக. தூசும, நீவியை நீவாத அல்குலைப புறஞ்செய்கின்ற தாரகைச்சுமமையும் தாழ என்று இயைத்தலும் ஒன்று. தாரகைச்சுமமை - நட்சத்திரத் தொகுதிபோலும் முத்துககூட்டததாலாகியதொரு ஆபரணம். பேதை சேயொளியில தீர்ந்த என்பதற்கு - பிராட்டியின சிவந்த ஒளிமிகுதியால் ஆபரணகாந்திகள் அவவிடமவிட்டு நீங்கினவாய் என்றும் உரைப்பர். பி - ம்:—[1]மேகலையின்பாரத். [2]சேர்தகி. [3]யாரும். [4]உற்று. (*1213*)

14.—பாதங்களிற் சிலம்பு அணிதல்.

[1]ஐயவா மனிச்சப் போதி[2]னதிகமு நொய்ய வாடல்
பையர வல்கு லாடன் [3]பஞ்சின்றிப் பழுத்த [4]பாதம்
செய்யபூங் கமல [5]மன்னச் சேர்த்திய சிலமபு சால
நொய்யவே நொய்ய [6]வென்றோ பலபட நுவல்வ தம்மா.

(இ - ள்.) ஆடல் பை அரவு அல்குலாள்தன் - ஆடுதலையுடைய பாம்பின் படத்தையொத்த அல்குலையுடைய பிராட்டியினது, பஞ்சு இன்றி பழுத்த - செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்படாமலே சிவந்துள்ளனவாகிய, பாதம்-திருவடிகள், ஐய ஆம் அனிச்சம் போதின்-(எல்லாமலர்களினும் மிகவும்) மெல்லியனவாகிய அனிச்சமலர்களைக் காட்டிலும், அதிகம்உம் நொய்ய-மிகவும் மெல்லியன: செய்ய பூ கமலம் மன்ன - செந்தாமரை மலர்போன்ற அப்பாதங்களைப் பொருந்த, சேர்த்திய - (தோழிமார்களால்) இடப்பட்ட, சிலம்பு - சிலம்பென்னுங் காலணிகள், பல பட நுவல்வது - பல்படிப்பட (அடிக்கடி) ஒலிப்பது,—சால நொய்யஏ நொய்யஎனறு ஓ - (அத்திருவடிகள்) மிகவும் மெல்லியனவேயாம் மெல்லியனவேயாம் என்று தானோ? அம்மா-ஆச்சரியம்; (எ - று.)- சிலம்பணியின் ஒலியைக் காலின் மிக்கமென்மையைக் கூறுவதாக வருணித்தது—தற்குறிப்பேற்றவணி. பாதங்களைக் கமலமென்றும் உருவகத்தாற்

கூறினர். பி - ம்:—[1] ஐயவாங். [2] அதிமுகம். [3] பஞ்சினிற். [4] பர.தச் [5] மின்னச். [6] அன்றோ, என்றே. (1214)

15.—கண்கட்குத் தோழிமார் மையிடுதல்.

[1] நஞ்சிடை யமிழ்தங் கூட்டி நாட்டங்க ளான வென்னச்
செஞ்செவே நீண்டு [2] மீண்டு சேயரி சிதறித் தீய
வஞ்சமுங் களவு மின்றி மழையென மதர்த்த கண்கள்
அஞ்சன நிறமோ வண்ணல் வண்ணமோ [3] வறித றேற்றும்.

(இ - ள்) 'நஞ்சு இடை அமிழ்தம் கூட்டி - விஷத்தை இடையிலே வைத்துச் சுற்றிலும் அமிருதத்தைப் பெய்து, (அதனால்), நாட்டங்கள் ஆன - (பிராட்டியின்) கண்கள் அமைந்தன!' என்ன - என்று சொல்லும்படியிருந்து, செம்செவே நீண்டு - கோணலின்றி நேராக (நெடுந்தூரம காதளவும்) நீண்டு சென்று, மீண்டு - (அப்பால் இடமில்லாமையால் திரும்பிவந்து, சேய் அரி சிதறி - (உத்தம விலக்கணமாகிய) சிவந்த இரேகைகள் சில சிந்தப்பெற்று, தீய வஞ்சம்உம் களவுஉம் இன்றி-கொடிய வஞ்சனையும் கள்ளத்தனமும் இல்லாமல், மழை என-மழைபோலக்குளிர்ந்த தன்மையுடையனவாய்), மதர்த்த-செழிப்புக்கொண்டு வளர்ந்த, கண்கள் - (பிராட்டியின்) கண்களில், (அப்பொழுதுபொருந்தினது), அஞ்சனம் நிறம் ஓ - (இடப்பட்ட) மையின் கருநிறந்தானோ? அண்ணல் வண்ணம் ஓ-இராமபிரானது திருமேனின் கருநிறந்தானோ? அறிதல் தேற்றும்-தெளிய அறிகினறிலேம்; (எ-று.)

இராமபிரானொருவனிடத்தி லொழிய மற்றையெவரிடத்தும் பொதுநோக்கமேயன்றிக் காதற்சிறப்பு நோக்கம் இல்லாமையால், 'தீய வஞ்சமுங் களவு மின்றி' எனப்பட்டது. கன்னிமாடத்துச் சீதை இராமபிரானது திருமேனியைக் கண்ட காட்சியை (ஆண்டு "அண்ணலு நோக்கினனவளு நோக்கினாள்" என்றுகூறிய ஆசிரியர் அதனை) நினைப்பூட்ட 'அண்ணல் வண்ணமோ' என்றது. நஞ்சும் அமிருதமும் சேர்த்துச் சொல்லப்படுதலால், அவை-பாற்கடலிற் பிறந்த ஆலகாலவிஷமும், தேவாமிருதமுமாம். "அமிழ்தினின் விளர்த்துள நஞ்சினிற் கருகி மையரி சிதறி மைதோய்ந்து கமலமென் மலரை வனம்புகுத்தியவேற்கண்ணிணை" என்றார் பிறரும். நஞ்சு-கண்ணின் கருவிழிக்கும், அமிழ்து-அதன் சுற்றுப்புறத்து வெண்ணிறப் பரப்புக்கும் உவமையாம். பிராட்டியின்கண்களில் அஞ்சனந் தீட்டியதை ஐயத்தற்குறிப்பேற்றத்தால் வருணிக்றனர். பி-ம்:—[1] நஞ்சினோடு. [2] நீண்டு. [3] அறிகிலேமால். (1215)

16.—நெற்றியில் திலகமிடுதல்.

மொய் [1] வளர் குவளை பூத்த முளரியின் முளைத்த முந்நாள்
மெய்வளர் மதியி னுப்பண் மீனுண்டே [2] லனைய தேய்ப்ப
வையக மடந்தை மார்க்கும் நாகர்கோ தையர்க்கும் வானத்
தெய்வமங் கையர்க்கு [3] மெல்லாந் திலதத்தைத் திலதஞ் [4] செய்தார்.

(இ - ள்.) மொய் வளர் - (இதழ்கள்) நெருங்கிச் செழிப்பாய் வளர்ந்த, குவளை-(இரண்டு) நீலோற்பலமலர்கள், பூத்த - (தன்னி

டத்தே) பூக்கப்பெற்ற, முளரியின்-ஒரு செந்தாமரைமலரினிடத்தே, முளைத்த - உதித்து விளங்குகிற, மெய் வளர் முந்நாள் மதியின் நாப்பண் - (நாள்தோறுங் கலைகள் கூடி) உடம்புவளருந்தன்மை யையுடைய மூன்றாநாட் பிறைச்சந்திரனது நடுவிலே, மீன உண்டு ஏல்-நட்சத்திரமொன்று உண்டாயிருக்குமானால், அனையது ஏய்ப்ப-அதனை ஒக்கும்படி, வையகம் மடந்தைமார்க்குஉம் நாகர் கோதையர்க்குஉம் வானம் தெய்வம் மங்கையர்க்குஉம் எல்லாம் திலதத்தை - (நடுவுலகமாகிய) பூலோகத்திலே யுள்ள மனிதப் பெண்களுக்கும் (கீழுலகமாகிய) பாதாளலோகத்திலேயுள்ள நாக கன்னிகைகட்கும் (மேலுலகமாகிய) சுவர்க்கத்திலேயுள்ள தேவதாஸ்திரீகளுக்கும் இங்ஙனம் மூன்று லோகங்களிலுமுள்ள பெண்களெல்லோர்க்கும் திலகம்போலச் சிறந்த பிராட்டியை, திலதம் செய்தார் - (தோழிமார் நெற்றியில்) திலகமிட்டு அலங்கரித் தார்கள்; (எ - று.)

உய்த்துணர்வணி மூலமாகவந்த தன்மைத்தற்குறிப்பேற்றவணி. கருங்குவளை கண்களுக்கும், செந்தாமரைமலர் - முகமண்டலத் துக்கும், மூன்றாம் பிறைச்சந்திரன் திருநெற்றிக்கும், பிறையின் மத்தியிலே விளங்குவதொரு நட்சத்திரம் - அந்நெற்றியினடுவிலே நூதனமாக இடப்பட்ட பளபள என்றிருக்குந் திலகப்பொட்டுக்கும் ஒபபு. திலகம் நெற்றிக்கு அழகு செய்வது போலப் பிராட்டி பெண்களுக்கெல்லாம் அழகை விளைப்பவளென்க. திலகமில்லாத நெற்றி அழகுடையதாகாதவாறுபோலப் பிராட்டியொருத்தி பிறவா ளாயின் பெண்பால்வகைக்கே உலகத்துப் பெருமையின்றா மென்ப தாம். முந்நாள-திருதியை. 'திலதத்தைத் திலதஞ்செய்தார்' என்றதனால், இவர்கள் செய்த அலங்காரமெல்லாம் பிராட்டி திறத்தில் இன்றியமையாதனவல்ல என்றவாறும். பி-ம்:—[1]வளை. [2]அன்னது. [3]மேலாம். [4]சேர்த்தார். (*1216*)

17.—பலவகைப் பூக்களைச் சூட்டி யலங்கரித்தல்.

சின்னப்பூச் [1]செருகு மென்பூச் [2]சேகரப் போது [3]கோதில்
கன்னப்[4] பூக் கஞல மீது கற்பகக் கொழுந்து [5]மான
மின்னப்பூஞ் சுரும்பும் வண்டு மிஞிறுந்தும் பிகளும் [6]பம்பப்
புன்னைப்பூந் தாது மானும் பொற்பொடி யப்பி விட்டார்.

(இ-ள்) பூ சுரும்புஉம் வண்டுஉம் மிஞிறுஉம் தும்பிகள்உம் பம்ப-அழகிய சுரும்புகளும் வண்டுகளும் மிஞிறுகளும் தும்பிகளும் நெருங்கி மொய்க்குமாறு, சின்னம் பூ-விடுபூவும், செருகும் மெல்பூ-(தலைமயிர்ப் பின்னலின் இடையிலே) செருகத்தக்க மெல்லிய பூவும், சேகரம் போது - தலைமயிர் முடிமேலே சூடுதற்குரிய மாலை யாகிய பூவும், கோது இல் கன்னம் பூ - குற்றமில்லாத காது களிலே வைத்திடுதற்குரிய பூவும், (என்னுமிவற்றை), கஞல-(அங் கங்கு) நிறைந்து விளங்கும்படி, (அவ்வவற்றை அணிதற்குரிய இடங்களிலே அணிந்து), மீது-(அவற்றின்) மேலே, கற்பகம் கொழுந்து மான - (அம்மலர்கள் பொன்னிறமான) கற்பகவிருட் சத்தின் இளந்தளிர்களை ஒக்கும்படி, மின்ன-விளக்கமுண்டாக,

புன்னை பூ தாது மானும் பொன் பொடி-புன்னைமலர்களின் மகரந்தப்பொடிகளை ஒக்கின்ற பொற்பொடிகளை, (கைகளாலெடுத்து), அப்பிவிட்டார்—; (எ-று.)

சின்னப்பூ என்பதற்கு-இடையிடையே கிள்ளிக்கிள்ளி விசித்திரவேலைப்பாடு அமைக்கப்பட்ட பூ என்றும், அடையாளப்பூ என்றும் உரைப்பர். சேகரம்-தலையணி; வடசொல். கன்னப்பூ என்பதற்கு - கபோலங்களில் ஒட்டி யணிதற்குரிய அணி யென்று உரைப்பாருமுளர். பொற்பொடிக்கு, புன்னைப்பூந்தாது நிறத்தாலுவமை. அலங்கரித்து முடிந்தமைதோன்ற, 'அப்பிவிட்டார்' என்றது. 'காவில்வாழ்பவர்நால்வருளர்' என்றுதொடங்கிச் சிந்தாமணியில் வண்டில் நால்வகைச்சாதி கூறப்பட்டுள்ளன: அங்குத் தேன் என்றுகூறியதை இங்கு 'தும்பி' என்றார். பி-ம்:—[1]செருக்கு. [2]செக்கர்ப்பூம். [3]காதிற். [4]பூங்கஞ்சமீது. [5]யாவும். [6]பம்பும், ஆர்ப்பப். (*1217*)

18.—சீதைக்கு அணிகளை யணிந்தபின் தோழியர் இரட்சை செய்தல்.

நெய்வளர் [1]விளக்க மாட்டி நீரொடு பூவுந் தூவித்
தெய்வமும் பராவி வேத [2]பாரகர்க் கீந்து செம்பொன்
ஐயவி [3]நுதலிற் சேர்த்தி [4]யாய்நிற வயினி [5]சுற்றிக்
[6]கைவளர் [7]மயில னுளை வலஞ்செய்து காப்பு மிட்டார்.

(இ-ள்.) (இங்ஙனம் அலங்கரித்த அத்தோழிமார் பிராட்டிக்குத் திருஷ்டி தோஷபரிகாரத்தின்பொருட்டு), நெய் வளர் விளக்கம் ஆட்டி-நெய்யைக் கருவியாகக் கொண்டுவளர்க்கப்பட்ட தீபத்தைச் சுற்றிக்காட்டி, நீரொடு பூஉம் தூவி-சுத்த தீர்த்தத்துடனே பூக்களையும் (பலியாக) முன் இறைத்து, தெய்வம்உம் பராவி - இஷ்ட தேவதைகளைக் குறித்துப் பிரார்த்தனையுஞ்செய்து, வேதபாரகர்க்கு செம்பொன் ஈந்து - வேதங்களைக் கரைகண்டறிந்த பிராமணர்களுக்குச் சிவந்த பொன்னுணயங்களைத் தானஞ்செய்து, ஐயவி நுதலில் சேர்த்தி - சிறுவெண்கடுகின் பொடிகளை நெற்றியிலே தரிப்பித்து, ஆய் நிறம் அயினி சுற்றி-ஆராய்ந்தெடுத்த செந்நிறத்தையுடைய ஆலத்திநீரைச் சுழற்றி, கைவளர் மயில் அனுளை வலம்செய்து-கைகளினாலே எடுத்து வளர்க்கப்பட்ட மயிற்பறவையைப்போன்ற சாயலையுடைய (தம்மாலெடுத்து வளர்க்கப்பட்ட) பிராட்டியை வலப்புறத்தாற் சூழ்ந்து வந்து, காப்புஉம் இட்டார் - (வேறுவிதமான) இரட்சாபந்தனத்தையுஞ் செய்தார்கள்; (எ - று.)

விளக்கம் மாட்டி-விளக்கையேற்றி என்பாருமுளர். அயினி - சோறு; அதனோடுகூடிய மஞ்சள்நீருக்கு ஆகுபெயர். வலம்செய்து சுற்றி என இயைத்து - ஆலத்திநீரைப் பிரதட்சிணமாகச்சுற்றி என்று உரைப்பாருமுளர். காப்பு இடுதல் - ஆலத்திநீரைக் கைவிரலால் தொட்டு நெறறியில் இரட்சையாக இடுதலுமாம. காப்பு - விபூதிக்காப்புமாம்; அவையெல்லாம், கண்ணெச்சில் கழித்தற்கு உபயோகிப்பன. பி - ம்:—[1]விளக்கு. [2]பாரர்க்குச் செம்பொனல்கி. [3]அறுகிற். [4]வானிற. [5]சூட்டி, பூட்டி. [6]கைவளை. [7]மயிலினுளை. ()

19.—வண்ணமகளிர் சீதையினழகைக் கண்டு காமுறுதல்.

கஞ்சத்துக் களிக்கு [1]மின்றேன் கவர்ந்து[2]ணும் வண்டுபோல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா மருளினு ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் [3]தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யன்றோ.

(இ - ள்.) கஞ்சத்து - தாமரைமலரிலிருந்து, களிக்கும் இன் தேன் கவர்ந்து-களிப்பைவிளைத்தற்குக்காரணமான இனிமையான தேனைக் கொள்ளைகொண்டு, உணும் - பருகுகின்ற, வண்டு போல- வண்டுகள் போல, (அவ்வண்ணமாதர்கள்), அம் சொற்கள் கிள்ளைக்கு எல்லாம் அருளினுள் அழகை மாந்தி - அழகிய சொற்களைக் கிளிகளுக்கெல்லாங் கற்பித்தருளிய அப்பிராட்டியினது அழகைப் பருகி, (அதனால் அவளிடத்து உண்டான காதலால்), தம சொற்கள் குழறி - தங்கள் தங்களது (இயற்கையான) பேச்சுக்கள குளறி, தத்தம் தகை தடுமாறி நின்றார்- தங்கள் தங்களது (நாணம் முதலிய) இயற்கைக்குணம் மாறுபட்டுநின்றார்கள்: மஞ்சர்க்குஉம மாதரார்க்கு உம் - (உலகத்தில்) ஆடவர்களுக்கும் மகளிர்களுக்கும், மனம் என்பது—, ஒன்றுஏ அனறுஓ-ஒரு தன்மையதேயாமன்றோ; (எ-று.)

இயற்கையழகுடனே செயற்கையழகுங்கூடி விளங்கிய அப்பிராட்டியின் அளவுக்கு விஞ்சின சௌந்தரியத்தைக் கண்ணாற்பருகிக்களித்து, வண்ணமகளிர் அப்பிராட்டியினிடத்துக் காதல்கொண்டாரென்பதாம். முதல் மூன்றடிகளிற்கூறிய சிறப்புப் பொருளின் மீது 'மகளிர் மகளிரைக்கண்டு காதல் கொள்ளுவது என்பது நிகழுமோ?' என்று ஓரையந் தோன்ற, ஆடவர்க்கும மகளிர்க்கும மனமென்பது ஒருதன்மைத்தேயாமென்று ஈற்றடியிற்பொதுப்பொருளால் அந்த ஐயப்பாடுநீங்கச் சமர்த்தித்துக் கூறினார்: வேற்றுப் பொருள்வைப்பணி. (கம்பர் பிராட்டியினழகை இங்குக் கூறியவை மிகவும் பாராட்டற்குரியது.) இக்கருத்துததோன்றவே மிதிலைக் காட்சிப்படலத்தில் "கண்களிற்காணவே களிப்புநல்கலான், மங்கையர்க் கினியதோர் மருந்து மாயவள்" என்றார். "பெண்டிரு மாண்மை வெஃகிப் பேதுறுமுலையினாள்", "வடிவு நோக்கி, ஆண விருப்புற்று நின்று ரவ்வளைத் தோளினாரே" எனச் சிந்தாமணி நூலார் கூறிய வாறுங் காண்க. கொஞ்சுகிற கிளிமொழியினும் இனியமொழியாளென்பார்,'சொற்கள் கிள்ளைக்கெல்லா மருளினாள்' என்றார். பி-ம்:—
[1]மென். [2]உண்ட. [3]நிலை. (1219)

20.—இதுவும் அது.

இழைகுலா முலையி னாளை யிடையுவா மதியி னோக்கி
மழைகுலா [1]வோதி நல்லார் களிமயக் [2]குற்று நின்றார் [தது
உழைகுலா நயனத் தார்மாட் டொன்றென்றே விரும்பற் கொத
அழகெலா [3]மொருங்கே [4]கண்டால் யாவரே யாற்ற வல்லார்.

(இ - ள்.) மழை குலாவு ஓதி நல்லார் - மேகம்போல(க் கறுத்த நிறத்தனவாய்) விளங்குகிற கூந்தலையுடைய அழகிய தோழிப்

பெண்கள், இழைகுலாம் முலையினளை-(தம்மிலணியப்பெற்ற) ஆபரணங்கள் விளங்குவதற்குக் காரணமான தனங்களையுடைய அச்சானகிப்பிராட்டியை, இடையுவா மதியின் நோக்கி-பௌர்ணமி திதியில் தோன்றுகிற சந்திரனைப்போலப் பார்த்து, களி மயக்கு உற்று நின்றார்-களிப்பினலாகிற மயக்கத்தை அடைந்து நின்றார்கள்; உழைகுலாம் நயனத்தார் மாட்டு-(உலகத்திலுள்ள) மான விழிபோல விளங்குகிற கண்களையுடைய பெண்களிடத்தெல்லாம், ஒன்று ஒன்றுஎ விரும்பற்கு ஒத்தது-ஒவ்வொரு அவயவமே மிகுதியாய் விரும்புதற்கு ஏற்ற கட்டழகையுடையதாயிருக்கும்; (அப்படியிருக்க), அழகு எலாம் ஒருங்குஎ கண்டால்-(உலகததிலே யுள்ள) எல்லாவழகுகளையும் ஓரிடத்திலே பார்த்தால், ஆற்ற வல்லார் யாவர்ஏ-(அதனிடத்துக் காதல்கொள்ளாமல்) பொறுத்திருக்கவல்லவர் யாவருளர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

பிராட்டி சர்வாங்கசுந்தரியாதலால், அவளைக் கண்ட மாத்திரத்தில் மகளிருங் காதல்கொண்டுநின்றார்களென்பது கருத்து. இது-தொடர்நிலைச்செய்யுட்குறியணி. இடைப்பிறவரல் போலுள்ள மூன்ருவது அடியான வாக்கியம், உலகத்து மற்றமாதரைச் சீதையைப்போலக் காதலியாமைக்குக் காரணம் காட்டுவதாகும். ஒன்றொன்றே-குணம் செய்கை வடிவு நடை சாயல் முதலியவற்றில் ஒவ்வொன்றுதானே யென்றும் உரைப்பர். பி-ம்:-[1]உலக மெல்லாம். [2]உற்றதன்றே. [3]ஒருங்கு. [4]கொண்டால். (1220)

21.—சீதையின் வருணனை.

சங்கங்கை யுடைமை யாலுந் தாமரைக் [1]கோயி லாலும்
எங்கெங்கும் பரந்து [2]வெவ்வே [3]றுள்ளத்தி னெழுதிற் றென்ன
அங்கங்கே தோன்ற லாலு மருந்ததி யனைய கற்பின்
நங்கையு நம்பி [4]யொத்தா ளினிப் [5]புகல்வ தென்னே.

(இ-ள்.) சங்கு அம் கை உடைமையால்உம் - (ஸ்ரீபாஞ்சசன்னியமென்னுஞ்) திருச்சங்கை அழகிய (இடத்) திருக்கையிலே கொண்டிருத்தலாலும் [சங்கவளையல்களை அழகிய கைகளிலே யுடைத்தாயிருக்குந்தன்மையாலும்], தாமரை கோயிலால்உம் - தியானிப்பவர்களது இருதய கமலத்தை(த் தனக்கு) வாழிடமாகக் கொண்டிருத்தலாலும் [செந்தாமரைமலரைத் தனக்குத் தங்குமிடமாகப் பெற்றிருத்தலாலும்], எங்கு எங்குஉம் பரந்து-எல்லா விடங்களிலும் பரவி, வெவ் வேறு-தனித்தனியாக, உள்ளத்தின் எழுதிற்று என்ன-(அவரவர்) மனத்திலெழுதியதுபோல, அங்கு அங்குஏ தோன்றலால்உம் - அவ்வவ்விடங்களிலே காணப்படுதலாலும், அருந்ததி அனைய கற்பின் நங்கைஉம்-அருந்ததிதேவியையொத்த பதிவிரதாதருமத்தையுடைய பெண்களிற்சிறந்த பிராட்டியும், நம்பி ஒத்தாள-ஆடவரிற்சிறந்த இராமபிரானைப்போன்றாள்; இனி நாம் புகல்வது என்ஓ-இனிமேல் (இதனினும் வேருகப்பிராட்டிக்கு) நாம் சொல்லக்கூடிய உபமானப்பொருள் யாதோ? (எ-று.)

சிலேடைபற்றிவந்த உவமையணி. சங்கம் என்றும் பிரிக்கலாம். தாமரைக்கோயிலாலும் என்பதற்கு-தாமரைமலர் வடிவாகக்

கோடிட்டு எழுதப்படுகிற யந்திரத்தில் மந்திரபலத்தால் வந்துஎழுந்தருளுந தன்மையாலும் என்றும் உரைக்கலாம். எம்பெருமானுககு எங்கெங்கும் பரந்து வெவ்வேறுள்ளத்தினெழுதிற்றெனன அங்கங்கே தோன்றல்-எங்கு முளனாகுகையாகிற சர்வாந்தர்யாமித்வத்தால்; பிராட்டிக்கு இங்ஙனமாதல, இயற்கையழகின் மிகுதியோடு செயற்கையழகின்மிகுதியும் உடைமைபற்றி யாவர் மனத்திலும் பதிந்திருத்தலால். ஒப்புயர்வில்லாத பிராட்டிக்கு அருந்ததியை உவமைகூறியது, கற்பென்னுங்குணமொன்றுக்கு மாத்திரமே யென்று அறிக; அன்றியும், அவளுடைய கொழுநனது குலகுருவினமனைவியாதல்பற்றி ஒழுக்கத்துக்கு உவமைகூறினாரெனினுமாம். மகளிரில் உவமையில்லாமையால் புருஷோத்தமனையே உவமைகூறினார்; இங்ஙனம் பிராட்டிக்குப் பிரானை உவமை கூறியதனால், தலைமகனுக்கும் தலைமகளுக்கும் அழகு குணம் செயல் முதலிய சிறப்புக்களனைத்திலும் உள்ள ஒப்புமை உணர்த்தப்படுகிறது: இதனால், சீதாராமரது சேர்க்கை மிகவும் பொருத்தமானதெனபதை விளக்கியவாறு. பி-ம்:—[1]கண்ணதாலும. [2]பல்வேறு. [3]உள்ளத்தும். [4]ஒத்தால். [5]பகர்வதென்னே. (1221)

22.—தோழிமார் சீதையைச் சூழ்ந்து செல்லுதல்.

பரந்தமே கலையுங் கோத்த பாதசா லகமு நாகச்
சிரஞ்செய்நூ புரமும் வண்டுஞ் சிலம்பொடு [1]சிலம்பி [2]யார்ப்பப்
புரந்தரன் கோற்கீ [3]ழானோ ரரம்பையர் புடைசூழ்ந் [4]தென்ன
வரம்பறு [5]மழலைத் தீஞ்சொன் மடந்தையர் தொடர்ந்து சூழ்ந்தார்.

(இ - ள்.) பரந்த - பரவின, மேகலைஉம் - மேகலையென்னும் இடையணியும், கோத்த-கோக்கப்பட்ட,பாதசாலகம்உம்- பாதஜாலமென்னுங் காலணியும்,நாகம் சிரம்செய் - பாம்பின் தலைவடிவாக முகப்பு அமைக்கப்பட்ட, நூபுரம்உம்-நூபுரமென்னுங்காலணியும், வண்டுஉம்-கைவளையல்களும, சிலம்பொடு-சிலம்பென்னுங்காலணியும், சிலம்பி ஆர்ப்ப-ஒலித்து ஆரவாரிக்கும்படி, புரந்தரன கோல் கீழ் ஆனோர் அரம்பையர் புடை சூழ்ந்து என்ன - தேவேந்திரனது அரசாளுகையின் கீழ்ப்பட்டவர்களாகிய அரம்பை முதலிய தெய்வப்பெணகள் பக்கஙகளிலே சூழ்நதுநின்றாறபோல, வரம்பு அறு தீம் மழலை சொல் மடந்தையர் - அளவிறநதவர்களும் ஒலியினிய குதலைச்சொறகளை யுடையவர்களுமாகிய தோழிப்பெண்கள் பலர், தொடர்ந்து சூழ்ந்தார்-(பிராட்டியின்பக்கங்களில்) இடைவிடாது சூழ்ந்து சென்றார்கள்; (எ-று.)

பாதசாலகம், நூபுரம், சிலம்பு இம்மூன்றும் - காலணியின் பேதங்கள்: தோழிமார் அழகில் அரம்பையரையொப்பாரெனவே, தலைவியினது அழகின்சிறபபுத் தானே விளங்கும். அரம்பையர்க்கு 'புரந்தரன கோறகீழானோர் என்ற அவசியமில்லாத அடைமொழியைக் கொடுத்தது, உபமேயமாகிய தோழிமார் இந்திரனுக்கு ஒப்பான சனகமகாராசனுக்குக்கீழ்ப்பட்டவரென்ற சிறப்பைவிளக்கும் பொருட்டெனக. வண்டு-அணிந்த பூ மாலைகளில் மொய்க்கினற அறுகாற்பறவைகளுமாம். சிலபிரதிகளில் 'புரந்தரன் றனக்குற்

ருளே யரம்பையர் புடைசூழ்ந்தென்ன' என்று மூன்றாமடி; இந்தப் பாடத்தில், புரந்தரன் தனக்கு உற்றாள் - இந்திராணி யென்க. பி- ம்:—[1] புலம்பி. [2] ஆட. [3] வானாட்டு, ஆணை. [4] அன்ன. [5] சும்மை.

23.—சீதை நடந்துசெல்லுதற் சிறப்பு.

சிந்தொடு குறளுங் கூனுஞ் சிலதியர் குழாமுந் [1] தெற்றி
வந்தடி வணங்கிச் [2] சுற்ற மணியணி விதான நீழல் [ன
இந்து [3] வின் கொழுந்து [4] விண்மீ னினத்தொடும் [5] வருவ தென்
நந்தலில் விளக்க [6] மன்ன நங்கையு நடக்க லுற்றாள்.

(இ - ள்.) சிந்தொடு-சிந்தர்களும், குறள்உம் - குறளர்களும், கூன்உம்-கூனர்களும், சிலதியர் குழாம்உம்-தோழிமார் கூட்டங்களும், தெற்றி வந்து-(ஒருவர்முன் ஒருவராய்) நெருங்கி வந்து, அடி வணங்கி-(பிராட்டியின) திருவடிகளை நமஸ்கரித்து, சுற்ற - சூழ்ந்துநிற்க, மணி அணி விதானம் நீழல் - இரத்தினங்களாலலங்கரிக்கப்பட்ட மேற்கட்டியினது நிழலிலே, இந்துவின் கொழுந்து விண் மீன் இனத்தொடுஉம் வருவது என்ன - இளஞ் சந்திரன் நட்சத்திரக்கூட்டத்துடனேவருவதுபோல, நந்தல் இல் விளக்கம் அன்ன நங்கைஉம் - அழிதலில்லாத தீபத்தையொத்த (மேனியொளியையுடைய) பெண்களிற்சிறந்த பிராட்டியும், நடக்கல் உற்றாள்-(சபாமண்டபத்தைநோக்கி) நடந்துசெல்லத் தொடங்கினாள்;

பிறைச்சந்திரன்-இளம்பருவமுடைய சீதைக்கும், விண் மீனினம்-தோழிமார் கூட்டத்துக்கும் உவமை. எண்ணெய் திரி முதலியவைகளைக் கொண்டு அமைத்து ஏற்றப்பட்ட விளக்குப் போலாது, இயற்கையில் விளங்குந் தீவிகை போன்றவள் சீதை யென்பது 'நந்தலில் விளக்க மன்ன நங்கை' என்பதன் பொருள். நந்தல் இல்-(எஞ்ஞான்றும்) தூண்டுதல்வேண்டாத என்றுமாம்; செயற்கையழகை வேண்டாத வடிவத்துக்கு உவமை. குறள், சிந்து, கூன்-இவை சொல்லால் அஃறிணையாயினும் ஆகுபெயர்ப் பொருளால் உயர்திணையாம். குறள்-உறுப்புக்குறை எட்டனுள் ஒன்று; சிந்தும் அதில் அடங்கும். மணி அணி-இரத்தினங்களிழைத்த காம்புகள் பொருந்தினஎன்றுமாம். பி-ம்:—[1] செற்றி. [2] சுற்றி. [3] வந்திழிந்து. [4] வெண். [5] மலர்வது. [6] உற்ற. (1223)

வேறு.

24.—நான்கு கவிகள் - சீதைசெல்லுதலின் வருணனை.

வல்லியை யுயிர்த்தநில மங்கையிவள் பாதம்
மெல்லிய வுறைக்குமென வஞ்சிவெளி யெங்கும்
பல்லவ [1] மலர்த்தொகை பரப்பின ளெனத்தன்
[2] நல்லணி மணிச்சுடர் [3] தவழ்ந்திட நடந்தாள்.

(இ - ள்.) வல்லியை உயிர்த்த நிலம் மங்கை-பூங்கொடி போன்ற (மெல்லிய அழகிய) சீதாபிராட்டியைப் பெற்ற பூமிதேவி, 'இவள் மெல்லிய பாதம்-இவளது மிகமென்மையனவான திரு

வடிகள், (வெறுந்தரையில் நடந்தால்), உறைக்கும்-(தரை) உறுத்தி வருத்தக்கூடும,' என அஞ்சி என்றுகருதிப் பயந்து, வெளிஎங்கு உம் பல்லவம் மலர் தொகை பரப்பினள் என-(இவள் நடந்து செல்லும்) வெளியிடமுழுவதிலும் (மென்மையான) தளிர்களின் தொகுதியையும் பூக்களின் தொகுதியையும் பரப்பிவைத்துள்ளா ளென்று சொல்லும்படி, தன் நல் அணி மணி சுடர் தவழந்திட-தனது சிறந்த ஆபரணங்களிலுள்ள இரத்தினங்களின் ஒளி முன்னே பரவிச்செல்ல, (பிராட்டி), நடந்தாள்—; (எ-று.)

நடந்து செல்லும்போது சீதாதேவி அணிந்திருந்த அணி கலன்களினின்றும் பலவகை இரத்தினங்களினொளிகளும் பரவு வதை, 'சீதையின் மெல்லிய அடிகள வெறுந்தரையில் நடந்தால் தரை யுறைக்குமே' யென்று தாயான நிலமங்கை பல்லவமலர்த் தொகையைப் பரப்பினள் என்றார்: தற்குறிப்பேற்றவணி. சீதையை வல்லியென்ற சொல்லாற் குறித்த நயந்தோன்ற 'வல்லியை யுயிர்த்த நிலமங்கை' என்றார்; தரையிலே கொடி தோன்றுதல் இயல்பாதல் காண்க. பி-ம்—[1] மலர்ச்சுடர். [2] நல்லடி. [3] தழைந்திட. (1224)

25. தொழுந்தகைய மென்னடை தொலைந்துகளி யன்னம்
[1] எழுந்திடை விழுந்[2] தயர்வ தென்னவய லெங்கும்
கொழுந்துடைய சாமரை குலாவவொர் கலாவம்
[3] வழங்கநிழன் மின்னவரு மஞ்ஞையென வந்தாள்.

(இ-ள்.) களி அன்னம்-(தன்னோடொப்ப நடக்கக் கருதி உடன் வந்த) களிப்பையுடைய அன்னப்பறவைகள், தொழும் தகைய மெல் நடை தொலைந்து-(யாவராலும்) வணங்கத்தக்க (சிறந்த) மென்மையான (தனது) நடைக்குத் தோற்று, இடை விழுந்து எழுந்து அயர்வது எனன-இடையிடையே கீழவிழுந்தும் (மீண்டும அரிதின்) எழுந்தும் (மீண்டும் விழுந்தும்) வருநதுவது போல், கொழுந்து உடைய சாமரை அயல் எங்கும் குலாவ-இளைய ஒளியையுடைய சாமரங்கள் (தனது) இரண்டுபக்கங்களிலெல்லாம் விளங்க,—ஒர் கலாவம் நிழல் வழங்க மின்னவரும் மஞ்ஞை என-ஒப்பற்ற கலாபமானது ஒளியைக் கொடுக்க விளக்கமுண்டாக நடந்து வருகிற மயில்போல, வந்தாள்-(சீதாபிராட்டி) வந்தாள்;

வீசப்படுஞ் சாமரைகள், நடையழகுக்குத்தோற்ற அன்னங் கள் ஓடிப்போக எழுந்து, அச்சத்தால் ஓடமாட்டாமல் இடைவிழுந் தும் மீண்டும் எழுநதும் இங்ஙன் அயர்வதனை யொக்குமெனக்குறித் தார்; தற்குறிப்பேற்றவணி. மஞ்ஞை கலாவம்[=தோகை]ஒளிவழங்க வருவதுபோலச் சீதையும் கலாவம்[=இடையணி] ஒளிவழங்க வந் தனளென்க: சிலேடையை யங்கமாகக் கொண்டுவந்த உவமையணி. பி-ம்:—[1] விழுந்திடையெழுந்து. [2] உயர்வது, அயர்வ, உயர்வ. [3] வழங்கநிலம், வழங்கிநிலம். (1225)

26. மண்முத லனைத்துலகின் [1] மங்கையருளெல்லாம்
கண்[2] மணி யெனத்தகைய கன்னியெழில் [3] காண

அண்ணன்மர பிற்சுட [4]ருத்தியொடு தானவ்
விண்ணிழிவ [5]தொப்பதொர் விதானநிழல் வந்தாள்.

(இ-ள்.) மண் முதல்-பூலோகம் முதலிய, அனைத்து உலகின்-எல்லா வுலகங்களிலுமுள்ள, மங்கையருள் எல்லாம்-இளம் பெண்களெல்லோருள்ளும், கண்மணி என தகைய-கண்ணின் இடையிலுள்ள கருமணிபோல அருமையாகச் சிறந்தவள் (இவள்) என்று சொல்லத்தக்க, கன்னி-கலியாணமாகாத இளம் பெண்ணான பிராட்டியின், எழில்-அழகை, காண-(நேரிற்) பார்க்கும் பொருட்டு, அண்ணல் மரபின சுடர்-(இவளுக்குக் கொழுநனாகும்) இராமபிரானது திருக்குலத்துக்கு ஆதிபுருஷனான சூரியன், அருததியொடு-மிக்க விருப்பத்துடனே, தான் அ விண் இழிவது-தான் அந்த ஆகாயத்தினின்று இறங்கிவருவதை, ஒப்பது - ஒத்திருக்குந் தன்மையுள்ள தான [மிக அதிகமான ஒளியையுடைய], ஓர் விதானம் நிழல்-ஒரு மேற்கட்டியின் நிழலிலே, (பிராட்டி) வந்தாள்—;

தனது குலத்துப்பேரனானவனுக்கு மனைவியாகுபவளது அழகைக் காண விருப்பமுண்டாவது அக்குலத்து மூத்தோர்க்கு இயற்கையாதல் பற்றி, அவ்வியற்கையை இங்குச் சூரியன்மேல் ஏறறிக் கூறினர்; தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]மங்கையர்கள், மங்கையுளர். [2]ஒளி, நிழல். [3]காணு. [4]அருந்ததியெனத்தான், அருத்திதொடரத்தான், அருந்ததிதொடாத. [5]ஒத்தது. *(1226)*

27. கற்றைவிரி [1]பொற்சுடர் [2]பயிற்றுறு கலாபம்
சுற்றுமணி [3]புக்கவிழை [4]மிக்கிடை [5]துவன்றி
விற்றவழ [6]வாணிமிர மெய் [7]யணிகண் மின்னச்
சிற்றிடை நுடங்கவொளிர் சீறடி பெயர்த்தாள்.

(இ-ள்.) கற்றை விரி-தொகுதியாக விரிந்த, பொன் சுடர் பயிற்றுறு - பொன்னொளி அடர்ந்திருக்கப்பெற்ற, கலாபம் - பதினாறு கோவையணியும், சுற்றுஉம-(தன் இடைக்குச்) சுற்றிலும், மணி புக்க இழை - இரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ள மற்றுமுள்ள ஆபரணங்களும், மிக்கு மிகுந்து, வில் தவழ-(அவற்றின) ஒளி (எங்கும்) பரவாநிற்க, இடை துவன்றி-நடுவிலே நெருங்கி, வாள் நிமிர - (தனது) உடலொளி விளங்கவும், மெய் அணிகள் மின்ன-(தனது) திருமேனியிலணிந்துள்ள ஆபரணங்கள் விளங்கவும், சிறு இடை நுடங்க - (இயற்கையிலேயே) மிக நுண்ணியதான (தனது) இடை (அணிகலங்களின பாரத்தாலும் நடக்கிற இளைப்பாலும) துவளவும், ஒளிர் சிறு அடி பெயர்ததாள்-விளங்குகிற சிறிய (தனது) பாதங்களை எடுத்துவைத்து நடந்தாள்; (எ-று.)

இனி, [1]பொற்கடை மயிர்த்துறுகலாபம் என்ற பாடத்துக்கு-பொற்சுடரையுடைய நுனிமயிர்கள்போன்ற நுண்ணொளிகள் பொருந்தியுள்ள கலாபமென்னும் பதினெட்டுக்கோவையிடையணி என்க. சுற்றும் மணிபுக்க இழை என்பதற்கு - அந்தக்கலாபமென்ற அரைவடத்தினமேற் சூழவணிந்த மணிகளிழைத்த தாரகைச்சும்மையென்னும் அணியும, இடை மிக்கு துவன்றி - இடையின்கண் மிகுந்து நிறைவதினால்,வில் தவழ-விட்டுவிட்டெறிகும்

ஒளி பரவவும், வாள் நிமிர - வெயில்போன்ற காந்தி மிகுதியாக எறியாநிற்க, மெய் அணிகள் மின்ன-மற்றும்மேனியில் ஆபரணங்கள் மின்னவும் என்றும் உரைப்ப சீதாபிராட்டி வந்தபோது மெய்க்காவலாக வில்லும் வாளும் உடன்வந்தன என்ற பொருளும் தோன்றுமாறு 'விற்றவழ வாணிமிர' என்று சொற்றொடரமைத்தமை பாராட்டத்தக்கது. பி - ம்:—[1]பொற்பிடை. [2]மயிர்த்துறு. [3]புக்கநிரை, புக்குநிரை. [4]ஒக்கவிழை. [5]சுற்றி, சுற்ற. [6]வாண்மிளிர. [7]ஒளிகள். (1227)

28 —சீதை மண்டபத்தை யடைதல்.

பொன்னினொளி [1]பூவின்வெறி [2]சாந்து [3]பொதி சீதம்
மின்னி [4]னிழ லன்னவடன் [5]மேனியொளி மான
அன்னமு மரம்பையரு மாரமிர்து நாண
மன்னவை யிருந்தமணி மண்டப மடைந்தாள்.

(இ - ள்.) அன்னவள்-அப்பிராட்டி,—தன் மேனி ஒளி-தனது (இயற்கையான) தேககாந்தியை, பொன்னின் ஒளி - பொன்னில் (இயற்கையாகவுள்ள) காந்தியும், பூவின் வெறி - பூவினிடத்து (இயற்கையாகவுள்ள) நறுமணமும், சாந்து பொதி சீதம் -சந்தனத்தினிடத்தில் (இயறகையாகப்) பொருந்தியுள்ள குளிர்ச்சியும், மின்னின் நிழல் - மின்னலில் (இயற்கையாயுளள) பளபளப்பும், மான - ஒத்துவிளங்கவும்,—அன்னம்உம்-(தன நடைக்குத்தோற்று) அன்னப்பறவையும், அரம்பையர்உம் - (தன் அழகுக்குத்தோற்றுத்) தெய்வப் பெண்களும், ஆர்அமிர்துஉம் - (தன இனிமைகுத் தோற்று) அருமையான தேவாமிருதமும், நாண-வெளகவும்,—மன் அவை இருந்த மணி மண்டபம் அடைந்தாள்-இராசசபை வீற்றிருந்த இரத்தினகசிதமான அந்த மண்டபத்தை வந்தடைந்தாள்;

இயற்கையாக அமைந்துள்ள பொன்னின் ஒளியும் மலரின் நறுமணமும் சாந்தின் தண்மையும் மின்னலினொண்மையும் என்ற இவையாவும் பிராட்டியினிடம் இயற்கையாயமைந்துள்ள காந்தி முதலியவறறை யொத்திருக்குமென்க; எதிர்நிலையணி. பொன்னினொளி முதலியவற்றைப பிராட்டியின் மேனியொளி முதலியவை மானும் என்பதிற் சிறப்பின்மை காண்க. ஒளி என்பது-இலக்கணையால், இங்கே சிறப்புற விளங்கும் காந்தி முதலிய நான்கையும் காட்டும். மேனியொளி என்றது - வெறி முதலியவற்றிற்கு உபலட்சணமுமாம். இனி, (தான் அணிந்த) ஆபரணங்களிலுள்ள பொன்னின் ஒளியும் (தான் சூடியுள்ள) பூக்களிலுள்ள நறுமணமும் (தான் பூசியுளள) சந்தனத்தின தண்மையும் மின்னலொளிபோன்ற (தனது) உடலொளியும் (வேறு ஒப்புமையில்லாமையால்) ஒன்றையொனறு ஒத்து எங்கும் நிரமப என்று உரைப்பினும் அமையும். அமிருதம் நாணுதல் - கண்ணுக்கு இனியதாகிய மென்மையோடு தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமல் தடுக்குந் தன்மையிலும், அமிருதத்துககு அருமை-பெறுதற்குஅருமையோடு தன்சுவை முழுவதையுந் தெவிட்டுதலில்லாமல் நுகர்ந்து முடித்தற்கு அருமையிலுமென்க. அன்ன அடல் மேனியொளி எனப்பிரித்து-இந்நான்கையும்

ஒத்த சிறப்புடைய (தனது) உடம்பினொளி என்றுமாம். பி-ம்:— [1]மின்ன. [2]சந்து. [3]பொழி. [4]எழில், ஒளி. [5]மேனியது. (1228)

29.—ஆடவரும் மகளிரும் சீதையின் திருமேனியழகைக் கண்கொட்டாது காணுதல்.

சமைத்த [1]வரை யின்மைமறை தானுமென லாமச்
சுமைத்திரண் முலைத்தெரிவை தூய்வடிவு கண்டார்
அமைத்திரள்கொ டோளியரு மாடவரு மெல்லாம்
இமைத்திலருயிர்த்திலர்கள் சித்திர மெனத்தாம்.

(இ-ள்.) சமைத்தவரை இன்மை-(தன்னை) உண்டாக்கினவரெவரையும் உடைத்தாகாமையால், மறை தான் உம் எனல் ஆம்-வேதவடிவமதாமென்று சொல்லத்தக்க, அ சுமை திரள் முலை தெரிவை-பாரமான திரண்ட தனங்களையுடைய அப்பிராட்டியினது, தூய் வடிவு-பரிசுத்தமான திருமேனியை, கண்டார் பார்த்தவர்களாய்,—அமை திரள கொள் தோளியர்உம்-இளமூங்கில் போன்ற திரட்சியைகொண்ட தோள்களையுடைய மாதர்களும், ஆடவர்உம்-புருஷர்களும், எல்லாம்-எல்லோரும்,—(மிக ஆச்சரியமுற்றுஅதனால் திகைப்படைந்தவர்களாய்), சித்திரம் என-சித்திரப்பிரதிமைகள்போல, இமைத்திலர்-(கண்ணை) இமைத்தல் செய்யாதவர்களும், உயிர்த்திலர்கள்-உயிரோடுகூடியிருப்பதன் காரியமாகிய செய்கையற்றவர்களு மானார்கள்; (எ-று.)

உலகமாதாவான சீதாபிராட்டியின்பக்கலில் தாயென்ற காரணம்பற்றி, அன்னாளது பேரழகைக் கண்ட ஆடவர்களின் மனம் தன்னை அறியாமலே காதலென்ற பேச்சேயின்றி வியப்படைந்து திகைத்து நிற்க, பெண்டிரும் தாம் பெண்டிரென்ற காரணத்தாலேயே அன்னவள் திறத்து வியப்பினால் திகைப்படைய, இருபாலாரும் எழுதுசித்திரம்போல் அசைவற்றுக் கண்கொட்டாது பிராட்டியின் பேரழகைப் பார்த்துநின்றன ரென்க. பிரமனால் படைக்கப்படாமல் பூமியிலிருந்து தானே தோன்றிய சீதாபிராட்டிக்கு அபௌருஷேயமான வேதம் உவமை. வேதம் கடவுளால் ஆதியில் வெளியிடப்பட்டது மாத்திரமேயன்றி ஒருவராலும் உண்டாககப்படாமல் நித்தியமான தன்மையதாம்; பிராட்டியும் ஜனகனால் எடுத்து வளர்க்கப்பட்டது மாத்திரமேயன்றி ஒருவருடைய கருப்பத்திலிருந்து உண்டாகாதவளாய்த் தனது விருப்புமாத்திரத்தாற் பூமியில் தோன்றிக் காணப்பட்டவளாவள். இதனால் படைத்தற் கடவுளாற் படைக்கப்பட்ட பிறமாதர்க்கு, கிரந்தகர்த்தாக்களாற் செய்யப்பட்ட பிற நூல்கள் உவமையென்பது பெறப்படு மென்க. பி-ம்:—[1]மறை. (1229)

30.—இராமன் சீதாபிராட்டியைக் கண்டு களித்தல்.

அன்னவளை யல்லளென வாமென வயிர்ப்பான்
கன்னி யமிழ்தத்தை யெதிர்கண்ட கடல்வண்ணன்
உன்னுயிர் நிலைப்பதொ [1]ருத்தியொ டுழைத்தாண்டு
இன்னமிழ் தெழக்களிகொ ளிந்திரனை யொத்தான்.

(இ-ள்.) கன்னி அமிழ்தத்தை எதிர்கண்ட-அமிருதமயமான தொரு கன்னிகைபோன்ற சீதாபிராட்டியின் அழகிய வடிவத்தை எதிரிலே பார்த்த, கடல் வண்ணன்-கடல்போலுங் கருநிறத்தை யுடைய இராமபிரான்,— அன்னவளை-(தனக்கு மனைவியாகப்போகிற) அந்தச் சனகராசகுமாரியை, அல்லள் என - (தான் கன்னிமாடத் தின் மேலே முன் கண்டு காதல்கொண்ட) அம்மங்கையல்லளோ என்றும், ஆம் என-(அம்மங்கையே) ஆவளோ என்றும், அயிர்ப் பான்-சந்தேகித்து வருபவனாய், — (பிறகு அம்மகளேயாவளென்று அறிந்து ஐய மொழிந்ததனா லுண்டான பெருமகிழ்ச்சியால்), உன்னு உயிர் நிலைப்பது ஓர் அருததியொடு-(தன்னுடம்பை விட்டு) மேலெழுகின்ற உயிர் (அவ்வாறு எழாமல்) நிலைதிருக்கவேண்டு மென்பதொரு விருப்பத்தோடு, உழைத்து-(பாற்கடல் கடையும் முயற்சியிலே) மிக வருந்தி, ஆண்டு இன அமிழ்து எழு களிகொள் இந்திரனை-அவ்விடததிலிருந்து இனிமையான அமிருதம் உண் டாகக் (கண்டு) களிப்பைக்கொணட தேவேந்திரனை, ஒத்தான்- போன்றான்; (எ-று.)

கீழ்க்கூறியவாறுள்ள சீதை அம்மண்டபத்துக்கு வருமுன் 'வில்லை முறித்ததனாற் பெறப்பட்டவள நம்மால் முன்னர்க் கன்னி மாடத்துக் காணப்பட்டவளோ? வேறொருத்தியோ?' என்று பேரையங் கொண்ட இராமன், அமிருதமயமான அச்சீதையை நேரே கண்டபோது, தன்னுயிர் நிலைக்கவேணுமென்று அமிருதத் தைப் பெற்ற தேவேந்திரனை யொத்தானென்க. கன்னியமிழ்து என்பதை-கன்னியர் சமூகமான பாற்கடலில் தோன்றிய அமிழ் தான சீதை என விரிப்பர். இராமனுக்கு இந்திரன்-கருமை நிறத் தாலும், தேவர்க்குத் தலைமைபூணுதலாலும, அரக்கரையழிக்கமுய லுதலாலும்; சீதைக்கு அமிருதம்-யாவராலும் விரும்பப்படுதலா லும், முன் பாற்கடலில் தோன்றியதனாலும், இன்பம் பயத்தலாலும் உவமை. பி-ம்:—[1] தன்மையின். (1230)

31.—இராமனுக்குச் சீதையைக் கண்டதனாலாய வியப்பு.

[1] நறத்துறை முதிர்ச்சி[2] யுறு நல்[3] லமுது பில்குற்று
அறத்தின்விளை வொத்துமுக டுந்தி[4] யருகுய்க்கும்
[5] நிறத்துவ ரிதழ்க்குயி னினைப்பினிடை யல்லால்
புறத்து[6] முள தோவென மனத்தொடு புகன்றான்.

இ - ள்.) 'நறத்து உறை - தேனினிடத்தே தங்குகின்ற, முதிர்ச்சி உறு-முதிர்ந்த, நல் அமுது-சிறந்த தேவாமிருதத்தை, பில்குற்று-துளித்து, அறத்தின் விளைவு ஒத்து-(செய்த) புண்ணி யத்தின் விளைபயனாற்போன்று, முகடு உந்தி அருகு உய்க்கும்- (அக்கன்னியாமாடத்தின்) மேலிடத்தினின்றுகொணர்ந்து இங்கே செலுத்தப்பட்ட, துவர் நிறம் இதழ் குயில்-செந்நிறத்தையுடைய அதரத்தைக்கொண்ட குயிலின் குரல்போன்ற இன்குரலுள்ள மங்கை, நினைபபினிடை அல்லால்-(என்) மனத்தினுளளேயல்லா மல், புறத்துஉம்-வெளியிலும், உள துஓ-இருக்கின்றனளோ?' என-

என்று, மனத்தொடு புகன்றான்-(இராமன் தன்) மனத்தினுடனே சொன்னான்; (எ-று.)—இங்ஙனங் கருதினானென்றபடி.

சீதை மண்டபத்து எதிரே வரக்கண்ட இராமன் 'கன்னிமாடத்தைவிட்டு என்னகத்துள்ளே குடிபுகுந்தவள் என்னகத்தேயன்றிப் புறத்தேயும் உள்ளாளே?' என்று மனத்துக் கருதினான். இங்ஙனம் அருமையான பொருள் நல்வினைமுதிர்ச்சியாலன்றிப் பிறிதொன்றாற் பெறுதல் இன்றெனக் கருதினான். இதனால், இராமன சீதையைக் கன்னிமாடத்துக் கண்டதுமுதல் எப்பொழுதும் அவளையே மனத்திற்கொண்டுள்ள தன்மை விளங்கும். "பானிலத்துறையுந் தீந்தேனனையவாயமிர்தமுற" என்றாற்போல, 'நறத்துறை முதிர்ச்சியுறு நல்லமுது பில்குற்று' என்றார். நறத்து-நற என்பது அத்துச்சாரியை பெற்றுவந்தது. முன்பு கன்னிமாடத்தின்மீது கண்ட சீதையை அருகே கண்டதனால், 'முகடுந்தியருகுய்க்குங் குயில்' என்றது. குயில்-உவமையாகுபெயர். பி-ம்:—[1]நறைத். [2]உற. [3]அமுதமுல்குற்று. [4]அமுதூறும். [5]நிறைத். [6]உளளோர், உளவோ, உளரோ. சிலபிரதியில் இதன்பின் "நைவளநவிற்று" (34) என்பது. (1231)

32.—வசிட்டமுனிவனது மகிழ்ச்சி.

எங்கள்செய் [1]தவத்தினி னிராமனென [2]வந்தான்
சங்கினொடு சக்கர முடைத்தனி முதற்பேர்
அங்கணர சாதலினவ் வல்லிமலர் புல்லும்
மங்கையிவ ளாமென வசிட்டன் மகிழ்வுற்றான்.

(இ-ள்.) (அப்பிராட்டியைக் கண்டு), வசிட்டன்-வசிட்டமகாமுனிவன், 'எங்கள் செய் தவத்தினின் - யானும் என்போன்ற முனிவர்களும் செய்துள்ள தவத்தின் பயனால், இராமன் என வந்தான்-ஸ்ரீராமனாகத் திருவவதரித்தவன், சங்கினொடு சக்கரம் உடை தனி முதல் பேர் அம் கண் அரசு ஆதலின் - சங்கம் சக்கரம் என்னுந் திவ்வியாயுதங்களையுடைய ஒப்பற்ற முதற்கடவுளாகிய பெரிய அழகிய திருக்கண்களையுடைய யாவர்க்குந் தலைவனான ஸ்ரீ மகாவிஷ்ணுவேயாதலால், அ அல்லிமலர் புல்லும் மங்கை இவள் ஆம் - செந்தாமரைமலரைத் தங்குமிடமாகக்கொண்டு அதிற் பொருந்திய ஸ்ரீமகாலட்சுமியே இவளாவள்', என - என்று கருதி, மகிழ்வு உற்றான்-மகிழ்ச்சி மிகப்பெற்றான்; (எ-று.)

முனிவர்பிரானாகிய வசிட்டன் ஞானக்கண்ணுடையனாதலால் இங்ஙனம் உண்மையையறிந்தான். தண்டகாரணியத்தில் வசிப்பவர்களான முனிவர்கள் அரக்கர்களாலுண்டான வருத்தங்களை ஒழிக்கும்பொருட்டுத் திருமாலைக் குறித்துச் செய்த தவத்தின் பயனாகவே இவ்வவதாரம் நிகழ்ந்ததாதலின், 'எங்கள் செய்தவம்' என உளப்பாட்டுத்தன்மை கொடுத்துக்கூறப்பட்டது. யாவர்க்கும் முதல்வரான திரிமூர்த்திகளுள்ளுந் தலைவனாதலின், 'தனிமுதல்' எனப்பட்டான். அல்லி-தாமரை; "அல்லிமாதர்" "அல்லிசேரணங்கு". பி-ம்:—[1]தவத்தினிது. [2]வந்த, வந்தோன். (1232)

33.—சீதையை மணாட்டுப் பெண்ணாகப் பெறுதற்குத் தசரதன் மகிழ்தல்.

துன்றுபுரி [1]கோதையெழில் கண்டுலகு சூழ்வந்து
ஒன்றுபுரி கோலொடு தனித்திகிரி யுய்ப்பான்
என்றுமுல கேழுமர [2]செய்தியுள னேனும்
இன்றுதிரு வெய்தியது [3]வென்வயம தென்றான்.

(இ-ள்.) உலகு சூழ் வந்து-உலக முழுவதிலுஞ்சுற்றிவந்து, ஒன்று புரி-(பகை நொதுமல் நட்பு என்னும் முத்திறத்தாரிடத்தும்) ஒரே தன்மையாகப் பொருந்தின, கோலொடு-செங்கோலுடனே, தனி திகிரி-தனிமையான ஆஜ்ஞாசக்கரத்தையும், உய்ப்பான்-செலுத்துபவனான தசரதசக்கரவர்த்தி, துன்றுபுரி கோதை எழில் கண்டு-அடர்ந்த நெறித்த கூந்தல்மயிரையுடைய சீதையினது அழகைப்பார்த்து, 'என்றுஉம் உலகு ஏழ்உம் அரசு எய்தி உளன் என்உம்-எப்பொழுதும் ஏழுலகங்களிலும் அரசாட்சியை (யான்) அடைந்துள்ளேனாயினும், இன்று-இப்பொழுதுதான், எனவயமது-என் வசத்ததாக, திரு-செல்வததிறகு உரிய தெய்வம், எய்தியது-கிட்டியது,' என்றான்-என்று கருதினான்; (எ - று.)

சகலலோக சாம்ராச்சியம் தனக்கு முன்னமே தொடங்கி இருந்ததாயினும், இத்தகைய நல்லிலக்கணமுடையாளை மணாட்டுப் பெண்ணாகப் பெற்ற பிறகே எல்லாச் செல்வமும் தன்வபததவாகுமெனக் கருதினனென்பதாம். உலகேழ்-ஏழுதீவுகளுமாம். உளன-தனமையொருமைக் குறிப்புமுற்று; "உளனு வெனனுயிரையுண்டு" என்றவிடத்துப்போல. எனறான என்பதை, என தான! என்று பிரிக்கவுமாம். பி-ம்:—[1]தோகை. [2]எய்திடினுமன்னும். [3]இதென்னவயமென்றான், எமக்கெனநினைத்தான், என்வசமிதெனறான்.

34.—தசரதன் முதலிய சிலர் தவிர ஏனையோர் சீதையைக் கைகூப்பித் தொழுதல்.

நைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும்
வையநுகர் [1]கொற்றவனு மாதவரு மல்லார்
கைகடலை புக்கன [2]கருத்துளது மெல்லாம்
தெய்வமென வுற்றவுடல் சிந்தைவச மன்றே.

(இ-ள்.) நைவளம் நவிற்றும் மொழி - நைவளமென்னுங் குறிஞ்சியாழ்ப்பண்ணின் வகையை யொபபப் பேசுகினற இன் சொறகளையுடைய அப்பிராட்டி, நண்ண வரலோடுஉம்-சமீபமாக வந்தமாத்திரத்திலே, வையம் நுகர் கொற்றவன்உம் மாதவர்உம் அல்லார்-பூலோகத்தை (அரசாண்டு) அனுபவிக்கிற வெற்றியையுடைய தசரதசக்கரவர்த்தியும் மிக்கதவத்தையுடைய (வசிட்டன் விசுவாமித்திரன் முதலிய) முனிவர்களும் அல்லாதவர்களின், கைகள-கைகளெல்லாம, தலைபுக்கன-(அவளை வணங்குவதற்கு) அவரவர் தலையின்மீது (தன்னியல்பிலே சென்று) சேர்ந்தன; (ஏனெனில்,) கருத்து - (யாவரது) மனமும், உளதுஉம் எல்லாம்-மற்று

முள்ள (புத்தி முதலிய) அந்தக்கரணங்களெல்லாமும், தெய்வம் எனஉற்ற - (அவளைத்) தெய்வமென்றே கருதின; உடல் சிந்தை வசம் அன்றோ-உடம்பு (எண்ணுந்தன்மையுள்ள)" மனத்தின் வசப் பட்டதன்றோ? (எ-று.)

தொடர்நிலைச்செய்யுட்குறியணி. யாவரும்பிராட்டியைத் தெய்வ மென்றே கருதியதனற் கைகூப்பி வணங்கினர்களென்பதாம். அங்ஙனம் வணங்குதலில் மாதவரை யொழித்தது, அவர்கள் குரு மார்களாதலால். சீதை வணங்குதற்கு உரியவர் தவிர மற்றை யோர் யாவரும் சீதையை வணங்கினரென்க. வையநுகர் கொற்ற வன் என்றதில் - இரட்டுற மொழிதலால், ஜனகனும இராமனும் அடங்குவர்; வையநுகர் கொற்றவன் எனபதற்கு - எல்லாவுலகங் களையும் (பிரளயகாலத்தில்) உணடருளுகின்ற இராமபிரான் என் றும் பொருள் கொள்ளப்படும். கைகளிரணடையுந் தலைமேல் வைத்து வணங்குதல், திரியங்கநமஸ்காரமாம். உளதுமெல்லாம்- ஒருமைப்பனமைமயக்கம். பி - ம்:—[1]கொற்றவரும். [2]கருத்துளகம்.

35.—வணங்கவேண்டியவரை வணங்கிச் சீதை தந்தையருகில் தங்குதல்.

[1]மாதவனை முற்கொள வணங்கி [2]நெடு மன்னன்
பாத [3]மலர் கைதொழுது கண்கள்பனி சோரும்
தாதையரு கிட்டதவி சிற்றனி யிருந்தாள்
போதினை வெறுத்தரசர் பொன்மனை புகுந்தாள்.

(இ - ள்.) போதினை வெறுத்து-(தனக்கு இயற்கையில் வாழு மிடமான) செந்தாமரைமலரை வெறுப்பினல் நீங்கி, அரசர் பொன மனை புகுந்தாள் - ஜனககுலத்தரசனது அழகிய மாளிகையிலே வந்துசேர்ந்த திருமகளின அவதாரமான அப்பிராட்டி,—மாதவனை முன் கொள வணங்கி-சிறந்த தவத்தையுடைய (வசிட்ட) முனிவனை முன்னே நமஸ்கரித்து, நெடு மன்னன பாதம் மலர் கைதொழுது - (பின்பு)யாவரினுஞ் சிறந்த அரசனாகிய தசரதசக்கரவர்த்தியினது தாமரைமலர்போலுந் தாளகளை நமஸ்கரித்து, கண்கள் பனிசோரும் தாதை அருகு இட்ட தவிசில் கண்களினின்று ஆனந்தக்கண்ணீர் சொரிபவனான தன் தந்தையினது சமீபத்திலே இடப்பட்டதொரு ஆசனத்திலே, தனி இருந்தாள் - தனித்து வீற்றிருந்தாள்; (எ-று.)

திருமால் தனது பரத்துவநிலையைத் துறந்து மறந்து சக்கர வர்த்தி குமாரனாகி மனிதநிலைமையை ஏற்றிருத்தறகு ஏற்ப, பிராட் டியும் மானுடமகளின் வடிவங்கொணடு அவதரித்து வளர்தலால், ராஜ கன்னிகைக்குரிய முறைப்படியே முற்பட வசிட்டமுனிவனை வணங்கிப் பிற்படத் தனது மாமனைத் தொழுதனளென்க. முள் ளரையுடைமை, சேற்றிறபயிலுதல், இரவிலே குவிதல், மழை பனிக்காலங்களில் வாடுதல் முதலிய தாமரைமலர்க்குஉள்ள குற் றஙகளொன்றும சனகன் திருமாளிகைக்கு இல்லை யென்பார், தாமரைமலர்மாளிகை வெறுத்துச் சனகனரணமனைக்குத் திரு மகள் விருப்பத்தோடு வந்ததாகக் கூறினர்; இதனுல் சனகமகா

ராஜன் திருமாளிகை பிராட்டிக்குத் தாமரைமலரினும் திருவுள்ளத்துக்கு மிகப்பாங்காகி மிகமிருதுவான இடமாமென்பது விளங்கும். தான் அருமையாய் வளர்த்துவந்த மகளைப்பிரியும் காலம் அணுகுவது கருதிச் சனகன்கண்கள் பனிசோரலாயின என்றலும் ஒன்று.
பி - ம்:—[1]மாதவரை. [2]முடி. [3]மலரைத். (1235)

36.—சீதையினழகுகண்ட விசுவாமித்திரனது வியப்புமொழி.

அச்சென [1]நினைத்தமுத லந்தண [2]னினைந்தான்
பச்சைமலை யொத்த படிவத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண் [3]மலர் நங்கையிவ ளென்றால்
இச்சிலை கிடக்கமலை யேழையு மிறானோ.

(இ - ள்.) அச்சு என நினைத்த முதல் அந்தணன் - உலகத்தாரால் மாதிரிப்படி என்று நினைக்கப்பெற்ற சிறப்பையுடைய அந்தணனான விசுவாமித்திரமுனிவன், 'இவள்-(வில்லை முறித்தற்குப் பரிசு ஆகிற) இம்மங்கை, - நஞ்சு உடை - (உள்ளே) விஷத்தன்மையையுடைய, வடி கண் - மாவடுவின் பிளவு போன்ற கண்களையுடைய, மலர் நங்கை - தாமரையில் வாழும் இலக்குமியாவள், என்றால்—, (இவளிடத்திலுண்டாகும் காதல் மிகுதியினால்), பச்சை மலை ஒத்த படிவத்து அடல் இராமன்-பசுமை நிறத்தையுடையதொரு மலையையொத்த வடிவத்தையுடைய வலிமையோடு கூடிய இராமபிரான், இ சிலை கிடக்க மலை ஏழைஉம் இறான்ஓ - இந்த மேருமலையாகிய ஒரு வில் இருக்கட்டும் ஏழுமலைகளையும் வேண்டுமென்றாலும் முறிக்க மாட்டானோ?' (என்று), நினைந்தான் - (வியப்புடன்) எண்ணினான்;

என்று என ஒருசொல் வருவிக்க. தான் க்ஷத்திரியனாய்ப் பிறந்து தனது தவவொழுக்கத்தால் மேன்மைபெற்றவனாதலால் விசுவாமித்திரன், 'அச்சென நினைத்த முதலந்தணன்' எனப்பட்டான். இனி, அச்சென நினைத்த முதலந்தணன்-(சீதையை அழகிற் சிறந்த மாதரனைவர்க்கும்) அச்சுப்போல்வாளென்று எண்ணிய விசுவாமித்திரன் என்றலும் ஒன்று; இவ்வுரையில், அச்சு - மூலரூபம்: பிறமாதருடைய அழகுககு எல்லாம் ஆதாரமான அழகுடையவள் எனக. "மலர் புல்லும மங்கையிவளாம்" என்று வசிட்டமுனிவனும், "இன்று திருவெய்தியதெனக்கு" என்று தசரதனும், "மலர்நங்கையிவள்" என்று விசுவாமித்திரனும் ஆக மூவரும் சீதையை இலக்குமியாகக் கருதியமையைக் கம்பர் வெளியிட்டுள்ளாரென்க. இனி, அச்சு-தேரிற் சக்கரங் கோக்கும் மரம்; அது கீழேயிருந்து பெரியதேரைத் தாங்கிநிற்றல்போலப் பெரிய சூரியகுலத்துககுச் செய்தற்குரிய அரிய காரியங்களை எளிதிற்செய்து முடித்து அதனைத் தாங்குதலால், வசிட்டமுனிவன் அச்சென நினைத்தமுதலந்தணன் எனப்பட்டானென்பாருமுளர். இராமனுடைய வடிவத்துக்கு மலை, அழித்தற்கு அருமையும், கம்பீரதன்மையும், நெடுந்தூரத்தாராலும் அறியப்படுதலும் பற்றி உவமை. கிடக்க என்பது, அலட்சியமாய்ச் சொன்ன வார்த்தை; எளிமையை யுணர்த்துகின்றது.

மலையேழ்-ஸப்தகுலபருவதங்கள். இனி, இத்தகைய அழகிய பெண் தன்னை மணஞ்செய்துகொள்ளுவனென்றால். இவ்விராமனொருவன் இருக்கட்டும்; இந்த வில்லாகிய மலையை ஒருவலியில்லாதவனும் முறியானோ? என்று உரைகூறுதல் சிறவாது. 'அச்சிலையுணர்ந்த முதலந்தணனினைத்தான், பச்சிலையை யொத்தபடிவத் தடலிராம, னச்சிலையயிற்கண் மலர்ங்கை' என்று முதன்மூன்றடிகளிற் பாடங் காணப்படுகின்றது. பி-ம்:—[1]நினைந்த. [2]இருந்தான். [3]மடநங்கை.

37.—சீதை இராமனைக்கடைக்கண்ணாற்கண்டு ஐயம்நீங்குதல்.

[1]எய்யவில் வளைத்தது [2]மிறுத்தது [3]முரைத்தும்
[4]மெய்விளை விடத்து முதலையம் விடலுற்றாள்
ஐயனை [5]யகத்து வடிவேயல புறத்தும்
கைவளை [6]திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள்.

(இ-ள்.) எய்ய - (அம்பை) எய்தற்கு உபயோகமாம்படி, வில் வளைத்ததுஉம் - (இராமபிரான்) சிவதநுசை வளைக்கத் தொடங்கியதையும், இறுத்ததுஉம் - (அதனை) ஒடித்துவிட்டதையும், உரைத்துஉம்-(பலர்) சொல்லக் கேட்டதாலும், மெய் விளைவு இடத்து- உண்மைப் பொருள் முடிவாகத் தெரிதலால், முதல் ஐயம - (இங்ஙனம் முறித்தவன முனனே என்னாற்கன்னியா மாடத்திலிருந்து காணப்பட்டவனோ, அல்லனோ? என்று) பழமையாக உண்டாகியுள்ள சந்தேகத்தை, விடல் உற்றாள்-ஒழிக்கத் தொடங்கின சானகிப்பிராட்டி,—ஐயனை-அவ்விராமனை, அகத்து வடிவுஎ அல-(தன்) மனதிலே நிலைபெற்ற வடிவத்தால் (முன்னே தான் பார்த்திருந்தது) மாத்திரமேயல்லாமல், புறத்துஉம்-வெளியிலும், கைவளை திருத்துபு-கைகளில் அணிந்துள்ள வளையல்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கி, (அந்த வியாஜத்தால்), கடைக்கணின் உணர்ந்தாள்- கடைக்கண்ணாலே (எதிரிற்) பார்த்தறிந்தாள்; (எ-று.)

முன்னர் இராமபிரான் இலக்குமணனுடனே கௌசிகமுனிவன்பின் மிதிலாநகரத்துவீதியிற் செல்லும்பொழுது அவனது வடிவழகைப் பார்த்து அவனை இன்னானென்று அறியாமலே அவனிடத்து மிகுந்த காதல்கொண்ட சீதை, பின்பு ஒரு வீரனான ராசகுமாரன வில்லையெடுத்து வளைத்து முறித்தானென்ற செய்தியைப பலர் சொல்லக்கேட்டு, அதுமுதல், அவ்வீரன் முன் தன்னாற் காணப்பட்டவனாயிருக்கலாமென்று ஊகங்கொண்டும் அவன் தானோ அல்லனோ என்று ஐயப்பட்டு நின்றவளாகி, தான் சபாமண்டபத்தில் வந்தபோது வசிட்டர் முதலிய பலர் சொல்வதைக் கேள்வியுற்று அந்த ஐயத்தை விட்டாள். பிறகு அச்சீதை நாணத்தாற் கவிழ்ந்து நிலத்தை நோக்கிநின்ற தன் கண்பார்வையைத் தன் கைவளையல்களை முறைப்படுத்துகிறதென்கிற வியாஜத்தாற் புறத்தே செல்லவிட்டு இராமனை நேரிற்பார்த்துச் சிலநாளாய்த் தன் மனத்துள்ள அவ்வடிவமும் இப்பொழுது இங்கே காணப்படுகிற இவ்வடிவமும் ஒன்றேயாமென்று அறிந்து, ஐயம்நீங்கி, ஆனந்தமடையலுற்றாளென்பதாம். அநுமானம் சப்தம் என்ற பிரமாணங்

களால், கன்னிமாடத்திலிருந்து கண்டவனும் வில்முறித்தவனும் ஒருவனே என்று உணர்ந்தவள், பிரதியட்ச பிரமாணத்தால் உண்மையைத் தெளிந்தாளென்க. 'அகத்துவடிவேயல' என்றதனால் எப்பொழுதும் பிராட்டி இராமனையே கருதியிருந்தனளென்பது, பெறப்படும். 30-ஆஞ்செய்யுளில், தான் வில்லை முறித்ததனாற் பெற்ற பரிசு சீதையேயென்று இராமபிரான் தெளிந்தமையைக் கூறிய கவி, இங்குச் சீதாபிராட்டி தெளிந்தமையைக் கூறினர். பி - ம்:—[1] எய்வினைவிலிற்றதும், எய்வளவிலிற்றதும், எய்வினை விலேற்றதும். [2] எடுத்ததும். [3] உணர்ந்தும். [4] உய்வினையிடத்து. [5] அகத்தினுளவெய்யவர். [6] திறத்தினள். (1237)

38.—சீதை இராமனைக் கண்டு உடல்பூரித்தல்.

கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை [1] கண்ணப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
அருங்[2] கல னணங்கரசி யாரமிழ் தனைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துட [3] றடித்தாள்.

(இ - ள்.) கரு நெடு கடைக்கண் - இயற்கையிற்கருமையான நீண்ட (தனது) கண்ணின் கடையினது, ஒளி-பார்க்குமொளியாகிய, யாறு-நதியானது, நிறை-(அழகாகியநீர்) நிரம்பின, கண்ணன் பெரு கடலின்-ஸ்ரீராமபிரானாகிய பெரிய கடலிலே, மண்ட-நெருங்கிப் பாய்வதனால் [இராமனை நேரிற் கண்ணாரக்கண்டதனால்], உயிர் பெற்று-(வில்லை முறித்தவன் முன்னே தன்னாற் காணப்பட்ட கட்டழகுடையவனோ அல்லனோ என்ற ஐயத்தால் உடம்பினின்று நீங்கியும் நின்றும் ஊசலாடுகிற) உயிரை (அந்தஐயமொழிந்ததனால் உடம்பில்) நிலைக்கப்பெற்று, இனிது உயிர்க்கும்-(முன்னே வெய்தாக விடப்பட்டு வந்த பெருமூச்சு ஒழிந்து இப்பொழுது களிப்பால்) இனிமையாக மூச்சுவிடுகிற, அரு கலன் அணங்கு அரசி-(பிறர்க்குப் பெறுதற்கு) அருமையான ஆபரணங்களை யணிந்துள்ள சிறப்புடைமகளிர் யாவர்க்குந் தலைவியான அச்சீதை,—(மகிழ்ச்சி மிகுதியால்), ஆர் அமிழ்து அனைத்துஉம் ஒருங்கு உடன் அருந்தினரை ஒத்து-பெறுதற்கு அருமையான (தாம் பெற்ற) அமிருத முழுவதையும் (வேறொருவருக்கில்லாமல் தாமே) விரைவில் உண்டவரைப் போன்று, உடல்—, தடித்தாள்-பூரித்தாள்; (எ-று.)

'உடம்பு பூரித்தாள்' என்றுற் போதாதென்று கொண்டு, கவி, பெருந்திரளாகி மிகப் பலரான தேவர்கள் பகிர்ந்துஉண்ட அமிருதம் முழுவதையும் வேறொருவருக்குத் தராது தாமே உண்டவரைப் போலப் பேரானந்தத்தால உடம்புதடித்தாள் சீதை யென்கிறார். உடம்பு பருத்தல், மிக்ககளிப்பாலுண்டாகும் மெய்ப்பாடு. கண்ணப் பெருங்கடல்-உயர்திணையீறு விகாரம். கண்ணனுக்குப் பெருங் கடலை உவமைகூறினதனால், அழகுக்கு அளவில்லாமை போதரும். பெருங்கடல் - பெரும்புறக்கடல். அருங்கலன்-கற்புமாம். பி-ம்:—[1] கண்ணாள். [2] கலமனங்கசர மற்றமை பிழைத்துத்-தருங்கலிடை பெற்றனளே, கலம்***அற்றன***பெற்றவரை. [3] தளிர்த்தாள், தழைத்தாள். (1238)

39.—சீதை துயரம் நீங்கிப் பேராநந்த மடைதல்.

கணங்குழை கருத்திலுறை கள்வனென [1]லானுன்
வணங்குவி லிறுத்தவ னெனத்துயர் மறந்தாள்
அணங்குறு [2]மவிஞ்சைகெட விஞ்சையி னகம்பாடு
உணர்ந் [3]தறிவு [4]முற்றுபய னுற்றவரை யொத்தாள்.

(இ-ள்.) கணம் குழை-பலவாய்த்திரண்ட குழையென்னுங் காதணியையுடைய சீதாபிராட்டி,- 'கருத்தில்உறைகள்வன்எனல் ஆனுன்-(கன்னிமாடத்திலிருந்து கண்டநாள் முதல் தன்) மனத்தினுள்ளே பொருந்தின வஞ்சனையுடையா னென்று சொல்லுதற்கேற்ற தலைமகனதானே, வணங்கு வில் இறுத்தவன்-வளையுந் தன்மையுள்ள சிவதனுசை முறித்தவனுவன்,' என-என்று (ஐயந்திர) அறிந்து, துயர்மறந்தாள-(முன்னே தான் கொண்டுள்ள சந்தேகத்தாலாகிய) துன்பத்தை மறந்தவளாய்,-அணங்கு உறும் அவிஞ்சை கெட விஞ்சையின் அகம்பாடு உணர்ந்து-பிறவித்துன்பம் பொருந்துவதற்குக்காரணமான அவிச்சையென்கிற அஞ்ஞானம் கெட விச்சையென்கிற தத்துவஞானத்தால் மனத்திலுள்ள பரம்பொருளின் தன்மையைக் (கட்புலப்படக்) கண்டறிந்து, அறிவு முற்று பயன் உற்றவரை-அவ்வறிவு முதிர்வதனுலாகிற பிரயோசனமாகிய முத்தியுலகத்து நிரதிசயவானந்தத்தை யடைந்தவரை, ஒத்தாள்—;

தத்துவ ஞானம் கைவரப்பெற்றவர் பிறவித்துயர் நீங்கி ஜீவன்முக்தரெனப்பட்டு, கடவுளின் தியானத்தினுலான பேரின்பத்திலாழ்ந்திருப்பராதலால், அன்னவர்-ஐயத்துயர் நீங்கி இராமபிரானை மனததுக்கொண்டு பெருமகிழ்ச்சிக் கடலி லாழ்ந்திருக்குஞ் சீதாபிராட்டிக்கு உவமையாவர். 'கள்வனெனலானுன்' என்றது, அவன் நெருங்கி உட்புகுந்து அருநிறையையும் பெண்மையையும் உருக்கி உயிரொடும் உண்டுபோனதால். அவிஞ்சை, விஞ்சை - அவித்யா, வித்யா: வடமொழித் திரிபு. அகம்பாடு-மனத்தில் தோன்றும வடிவம்: கடவுள் தானேயெனத்தோன்றுதலென்று உரைப்பாருமுளர்.
பி-ம்:—[1] ஆமவ். [2] அவ்விச்சை, அவ்விஞ்சை. [3] அறவும். [4] முற்ற பயன். (1239)

40.—'விவாகம் என்று?' எனக் கௌசிகனைத் தசரதன்வினவுதல்.

[1] சொல்லுயர் களிற்றரசர் கோமக னிருந்தான்
கல்விகரை [2]யுற்றமுனி கௌசிகனை மேலோய்
வல்லிபொரு சிற்றிடை மடந்தைமண நாளாம்
[3] எல்லையி னலத்தபக லென்றுரைசெய் கென்றுன்.

(இ-ள்.) சொல் உயர்-கீர்த்திமிக்க, களிறு அரசர்கோமகன் - யானைச் சேனையையுடைய அரசர்களுக்கு அரசனுன தசரதசக்கரவாத்தி, இருந்தான் - (அம்மண்டபததிற் சிங்காதனத்தில்) வீற்றிருந்தவன,—கல்வி கரை உற்ற முனி கௌசிகனை - படிப்பாகிற கடலைக் கண்டறிந்த முனிவனுன விசுவாமிததிரனைப் பார்த்து, 'மேலோய் - மேனமைக் குணமுடையவனே! வல்லி பொரு சிறு

இடை மடந்தை மணம் நாள் ஆம் -பூங்கொடியை யொத்த நுண்ணிய இடையையுடைய மகளிரிற் சிறந்த சானகியினது கலியாணத்துக்கு உரிய நாளாகிய, எல்லை இல் நலத்த பகல் - அளவில்லாத நன்மையையுடையதினம், என்று - எந்தத்தினம்? உரை செய்க-சொல்லியருள்க,' என்றான்-என்று வினவினான்; (எ-று.)

உலகத்தில் ஒவ்வொரு ஆண்பெண்ணின் கலியாணமும் அவ்விருவரது சுற்றத்தார் நண்பர் முதலிய சிலர்க்கே மகிழ்ச்சி விளைப்பதாம்; அங்ஙனமன்றி இச்சீதாராம விவாகமோ உலகத்துயிர்களெல்லோர்க்கும் மிக்க களிப்பை விளைக்குமென்பதுபற்றி, 'எல்லையினலத்தபகல்' எனப்பட்டது. இராவணாதிராட்சச சங்காரமூலரூபமான உலகத்து இதர நன்மைக்கெல்லாம் சீதாவிவாகம் பரம்பரையாக ஏதுவாதல் பற்றி, தசரதன்வாயில் 'எல்லையினலத்த பகல்' என்று வந்ததாகக்கொள்ளவுமாம். தசரதசக்கரவர்த்தி வந்து சேர்ந்தபோது அவனை எதிர்கொண்ட ஜனகன் மணநிச்சயச் சடங்கை நாளை செய்வோமென்று சொல்லி விடைபெற்றுச் சென்று தூதர்மூலமாகத் தன் தம்பியாகிய யுதாசித்தை வரவழைத்த பின்பு, மறுநாளில், புரோகிதன் முதலியவரோடு தசரதனை வருமாறு சுதாமனென்னும் மந்திரியை யனுப்பி வரவழைக்க, புரோகிதர் முதலோர் சூழவந்த தசரதன் 'வசிட்ட முனிவர் என் வமிச முறையைச் சொல்லுவர்' என்ன, அங்ஙனமே அம்முனிவன் குலமுறையைச் சொல்லி, 'இப்படிப்பட்ட வமிசத்திற் பிறந்த குமாரர்க்கு உமது புதல்வியரைக் கொடுத்தல் தகும்' என்ன, ஜனகன் தன்குலமுறையைத் தானே சொல்லித் தன் புதல்வியரை இராமலட்சுமணர்க்குக் கொடுப்பதாக உடன்பட, விசுவாமித்திரன் 'உமது தம்பியின்புதல்வியரைப் பரதசத்துருக்கினருக்கு அளிக்க வேண்டும்' என்ன, ஜனகன் அதற்கும் சம்மதித்து, 'நாளைக்கு அடுத்த தினமான பங்குனியுத்தரத்தினன்று நால்வருக்கும் விவாகம் நடக்கட்டும்' எனக் கூறினனென்று முதனூலிலுள்ளது. கோலம்புனைந்து சீதையை வருவித்த விஷயம், அங்குக் கூறப்படவில்லை. நிச்சயச் சடங்கு நடந்தது விவாகத் தினத்திற்கு முந்திய தினத்துக்கும் முந்தியதினமாகிய மகநட்சத்திரத்தினன்று என்பதும் முதனூலாலறியலாம். கல்வி கரையுற்றவன்-வித்தியாபாரங்கதன். பி-ம்:—[1] கொல். [2] அற்ற. [3] எல்லைநலமுற்ற. (1240)

41.—கௌசிகன் 'திருமணம் நாளைக்கு' என்று மறுமொழி கூறுதல்.

வாளையுக ளக் [1] கயல்கள் [2] வாவுமதின் மேதி
மூளைமுது கைக் [3] கிழிய மூரிய வரான்மீன்
பாளைவிரி யக்குதிகொள் பண்ணைவள நாடா
நாளை [4] யென வுற்றபக னற்றவ னுரைத்தான்.

(இ - ள்.) 'வாளை உகள - வாளையென்னும் பெருமீன்கள் துள்ளிக் குதித்தலாலும், கயல்கள் வாவுமதின்-கயலென்னுஞ் சிறுமீன்கள் தாவிப் பாய்வதனாலும், மேதி மூளை முதுகை கிழிய-எரு

மைகளினது மூளைகளும் முதுகுகளும் முறையே இழிபட, மூரிய வரால் மீன்-வலிமையையுடைய (நடுத்தரமான) வராலென்னும் மீன்கள், பாளை விரிய-(பக்கங்களிலேயுள்ள கமுகு தெங்கு முதலிய மரங்களின்) பாளைகள் விரியும்படி, குதிகொள்-குதித்தலைக் கொண்ட, பண்ணை வளம்-கழனிகளின் வளங்களையுடைய, நாடா-கோசலநாட்டையுடைய அரசனே! உற்ற பகல்-(கலியாணத்துக்குப்) பொருந்தின நாள், நாளை-நாளைத்தினம்,' என-என்று, நல்தவன்-சிறந்த தவத்தையுடைய கௌசிகமுனிவன், உரைத்தான்—;

இதனால், நாளை வதுவை மணமென்று நாளிட்டமை கூறப்பட்டது. வாளை முதலிய மீன்களும் எருமைகளும் மிகுந்த நீர்வளத்தையுடைய மருதநிலத்து வாழ்வனவாம். இனி, கிழிய-கிழிக்க எனக்கொண்டு, வாளைகள் தாம் குதித்தலால் எருமைகளின் மூளைகளையும் கயல்கள் தாம் குதித்தலால் எருமைகளின் முதுகுகளையும் கிழிக்க என்றும் உரைக்கலாம். இனி, கயல்கள் வாவுமதற்கும் வரால் மீன் குதிப்பதற்கும் வாளைகள் உகளுதல் காரணமாக உரைக்கவுமாம். பி-ம்:—[1]கயல்கொள். [2]வாவிபடி. [3]கதுவ. [4]மணமுற்றதென. சிலபிரதிகளில் இச்செய்யுளோடு இப்படலம் முடிகின்றது.

42.—தசரதன் தன் மாளிகை சேர்தல்.

சொற்றபொழு தத்தரசர் [1]கைதொழு தெழத்தன்
ஒற்றைவயி ரச்சுரிகொள் சங்கினொலி பொங்கப்
பொற்றட முடிப்புது வெயிற்பொழி தரப்போய்
[2]நற்றவ ரனுச்சைகொடு நன்மனை [3]புகுந்தான்.

(இ-ள்.) சொற்ற பொழுதத்து-(இங்ஙனம் கௌசிகன்) சொன்னபொழுது,-(தசரதன்), அரசர் கைதொழுது எழ-மற்றையரசரெல்லோரும் எழுந்திருந்து கைகூப்பி அஞ்சலிசெய்து (தன்னை) வணங்கவும், தன் ஒற்றை வயிரம் சுரி கொள் சங்கின் ஒலி பொங்க-தனக்கு உரியதான ஒப்பற்ற வச்சிர ரத்தினப்பூணணிந்த உட்சுழிதலைக்கொண்ட வெற்றிச்சங்கத்தினது ஓசை மிகவும், பொன் தட முடி புது வெயில் பொழிதர - பொன்னினாலாகிய (தனது) பெரிய கிரீடத்தினது இளஞ்சூரியகிரணம் போன்ற ஒளி பாய்ந்து விளங்கவும்,—நல் தவர் அனுச்சை கொடு - சிறந்த முனிவர்களின் அநுமதியைப் பெற்றுக்கொண்டு, போய்-சென்று, நல் மனை புகுந்தான்-(தனக்குரிய) சிறந்த மாளிகையினுட் சேர்ந்தான்;

எம்பெருமானை மகனாகப்படைத்த சக்கரவர்த்தி தங்குமிடமாதற்கு ஏற்ற பாக்கிய முடைமையின் 'நன்மனை; என்றார்' இம்மனை, மிதிலையிற் சனகனால் தசரதன்பொருட்டு அமைக்கப்பட்டது. பி-ம்:—[1]கைதொழவெழுந்தான். [2]நற்றவனுமிச்சையொடு, நற்றவரநுச்சையொடு, நற்றபனனுச்சிதொடு. [3]அடைந்தான். (1242)

43.—யாவரும் செல்லச் சூரியன் அத்தமித்தல்.

அன்னமரி திற்பிரிய வண்ணலு [1]மகன்றப்
பொன்னினெடு மாட[2]வரை புக்கனன் மணிப்பூண்

மன்னவர் பிரிந்தனர்கள் மாதவர்கள் போனர்
மின்னுசுட [3]ராதவனு மேருவின் மறைந்தான்.

(இ-ள்.) அன்னம் - அன்னப்பேடைபோன்ற சீதாபிராட்டி, அரிதின் பிரிய - (இராமனைவிட்டுப் பிரிய மனமில்லாமல்) அருமையாகப் பிரிந்து செல்ல,—அண்ணல்உம்-இராமபிரானும், அகன்று - (அங்ஙனமே சீதையை விட்டுப்பிரிய மனமில்லாமல் அரிதிற் பிரிந்து அம்மண்டபத்தைவிட்டு) நீங்கி, அ பொன்னின் நெடு மாடம்வரை புக்கனன்-பொன்னினாலாகிய உயர்ந்த அந்த மாளிகையாகிற மலையினுள்ளே சென்று சேர்ந்தான்; மணி பூண் மன்னவர் - இரத்தினாபரணங்களையணிந்துள்ள அரசர்களெல்லோரும், பிரிந்தனர்கள் - தனித்தனி பிரிந்து (அவரவரிடத்துக்குச்) சென்றார்கள்; மாதவர்கள்-பெருந்தவமுடைய முனிவர்களும், போனர் - சென்றார்கள்; மின்னு சுடர் ஆதவன்உம் - விளங்குகின்ற ஒளிக்குத்தலைவனான சூரியனும், மேருவில் மறைந்தான்-(பொன்மயமான) மகாமேருகிரியிலே மறைந்துசென்றான்; (எ-று.)

தசரதனும் இராமனும் முதலியோர் தந்தமக்கு உரிய இடத்துச் சென்ற அதனைநோக்கி, சூரியன் தானும், தனக்குரியதோரிடத்திற் செல்லக்கருதினான்போலப் பொனமயமான மேருகிரியிலே சென்று மறைந்தா னென்பதாம். முதலடியிறுதியிலுள்ள அகரச்சுட்டு, இராமலட்சுமணர்க்கும் விசுவாமித்திரனுக்கும் ஜனகன் இடமாகக் கொடுத்த மாளிகையைக் குறித்ததென்று கொள்ளலாம். மேரு - வடசொல்; இது, பூமத்தியிலிருப்பதொரு மலையென்று புராணங்கூறும். ககோளசாஸ்திர ரீதியாலுண்டாகிற சூரியன் முதலியோரது சஞ்சாரத்தையும் உதய அஸ்தமனங்களையும், மேருகிரியைப் பிரதட்சிணம் செய்வதாகவும் கீழகடலில் உதயகிரியிலே தோன்றி மேல்கடலில் அஸ்தமனகிரியிலே மறைவதாகவுங் கூறுதல், கவிமரபு. மேரு-அத்தகிரி யெனினுமாம். பி-ம்:— [1]அகனறோர். [2]மனை. [3]நாயகனும். *(1243)*

கோலங்காண்படலம் முற்றிற்று.

21.—ஆவது கடிமணப்படலம்.

இராமன் முதலியோரது சிறப்பான கலியாணத்தையுணர்த்தும் பாகம். பின்னே 'மணம்' என வந்ததனால், முன்னே 'கடி' என்றது-விவாகத்தையுணர்த்தாமற் சிறப்பையுணர்த்திற்று. கடிமணம்-புதுமையான மணமுமாம்.

1.—சனகனது உபசாரத்தினால் யாவரும் மகிழ்ந்திருத்தல்.

இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது பேணக்
கடம்படு களிற்றரச ராதியிடை கண்டோர்
தடம்படு [1]புயத்தசிறு [2]தம்பியர்கள் [3]காறும்
உடம்பொடு துறக்கநக ருற்றவரை யொத்தார்.

(இ - ள்.) இடம் படு புகழ் - விரிந்த புகழையுடைய, சனகர் கோன் - சனகராசன், இனிது பேண - இனிமையாக உபசரித்தலி னால், கடம் படு களிறு அரசர் ஆதி-மதநீரொழுகுகின்ற ஆண் யானைச்சேனையையுடைய அரசர்கள் முதலாக, தட படு புயத்த சிறு தம்பியர்கள் காறுஉம் - பெருமைபொருந்தின தோள்களை யுடைய (ஒவ்வொரு அரசகுலத்திலுஞ்) சிறிய தம்பிமார்கள்வரையி லும், இடை கண்டோர்-நடுவிலே காணப்பட்டவர்களெல்லோரும், உடம்பொடு துறக்கம் நகர் உற்றவரை - (இந்த) உடம்புடனே சுவர்க்கலோகத்து இராசதானியான அமராவதிநகரத்தை யடைந் தவர்களை, ஒத்தார்கள்—; (எ-று.)

தேவலோகத்தில் அமிருதமுண்ணுதலாலும் பிறவாற்றாலும் அடையும் அளவில்லாத மகிழ்ச்சியை, இவ்வுலகில் மிதிலாநகரத் தில் சனகமன்னவன்செய்த உபசாரங்களால் எல்லோரும் அடைந் தார்களென்பதாம். இடம்படு-மிகப்பெரிதான என்றுமாம்; இச் சொல் "இடம்படமெய்ஞ்ஞானங்கற்பினும்" என்னும நாலடியாரி லும் இப்பொருளில் வருதல் காண்க. 'இடைகண்டோர்' என்ற தில், அமைச்சர் சேனைத்தலைவர் முனிவர் முதலியோரை அடக்க வேண்டும். இனி, இச்செய்யுளுக்கு, அரசர் ஆதி - தசரதர் முத லாக, இடைகண்டோர் - இடையிலுள்ள இராம பரதர்களும், சிறு தம்பியர்கள் காறும்-இறுதித்தம்பிமாரான இலட்சுமணசத்துருக் கனரும் என்று உரைப்பாரும் உளர். "தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅது, அதன் பயமெய்திய அளவைமான" என உடம்பொடு சுவர்க்கமெய்துதலாகிய இவ்வுவமை, வேறிடத்தும் வந்திருத்தல் காண்க. பி-ம்:—[1] திறத்த, திருத்து. [2] தம்முயிர்கள். [3] தாமும்.

2.—சீதையின் நிலைமை.

தேடரு நலத்தபுன லாசை [1] தெற லுற்றார்
மாடொர்தட முற்றதனை யெய்தும் [2] வகை [3] காணார்
ஈடழி வுறத் [4] தளர்வொ டேமுறுவ ரன்றே
ஆடக [5] வளைக்குயிலு மந்நிலைய ளானாள்.

(இ - ள்.) தேடு அரு நலத்த புனல்-தேடிப்பெறுதற்கு அரு மையான நல்ல தண்ணீரிடத்து (உண்டான), ஆசை - விருப்பத் தால் [தாகத்தால்], தெறல்உற்றார்-வருத்தப்பட்டுதலையடைந்தவர், மாடுஒர் தடம்உற்று - பக்கத்திலே ஒருகுளம் (தெய்வகதியால்) நேரப்பெற்றும், அதனை எய்தும் வகை காணார்-(அக்குளத்தினுள் ளிடத்தே இறங்கிப்பருகுதற்குஉரிய) அததண்ணீரை அடையும் வழியைக் காணாதவரானால், ஈடு அழிவு உற-(தம்) வலிமை முழுவ தும் அழிதலையடைய, தளர்வொடு- தளர்ச்சியுடனே, ஏம்உறுவர் அன்றே - கலக்கத்தையடைவார்களன்றோ? ஆடகம் வளை குயில் உம்-பொன்னாலாகிய வளையல்களையணிந்த குயில்போல் இன்குரலை யுடைய சானகிப்பிராட்டியும், (அபபொழுது), அ நிலையள ஆனாள்- அந்தத் தன்மையையுடையவளானாள்; (எ-று.)

தேடிப்பெறுதற்கரிய பலவகைநன்மைகளையுடைய கொழுநனை அனுபவிக்கவேண்டுமென்று எழுகிற காதலைத் தணிப்பதற்குஉரிய மருந்தாகிய இராமபிரானை அருகிற் காணப்பெற்றும் அவனை அப்பொழுதே அடைந்து அனுபவிக்கும்வழி இல்லாமையால், பிராட்டி, தனது நாணம் நிறை முதலியவற்றின் வலிமையழியத் தளர்ச்சியோடு கலங்குபவளானா ளென்பதாம்; உவமையணி. ஏம்-ஏமம்: ஏமம்-மயக்கமும், பித்தும், மூர்ச்சையுமாம். 'தயரதன் பெற்றமரதகமணித் தடத்தினையே' என்றார் பெரியாரும். பி-ம்:—[1]தெறவெய்தார். [2]வழி. [3]காணாது. [4]தமரொடு. [5]மடக். (1245)

வேறு.

3.—ஒன்பதுகவிகள்–காமவேதனைகொண்ட பிராட்டி தன் மனத்திலே நினைத்தவற்றையுஞ் சொன்னவற்றையுங் கூறும்.

உரவே துமிலா [1]ருயிரீர் துமெனாக்
கரவே புரிவா ருளரோ கதிரோன்
வரவே யெனையா ளுடையான் வருமே
இரவே கொடியாய் விடியா யெனுமால்.

(இ - ள்.) இரவே-இராத்திரியே! கொடியாய்-(நீ) கொடுந் தன்மையையுடையாய்; 'உரவு ஏதும் இலார்-வலிமை சிறிதுமில்லாதவர்களது, உயிர்-உயிரை, ஈர்தும்-அறுத்திடுவோம்,' எனா-என்று வீரவாதஞ்செய்து, கரவுஏ புரிவார்-வஞ்சனையையே செய்பவர்கள், உளர்ஓ-(உலகத்தில்) இருக்கின்றார்களோ? [இல்லை, நீ மாத்திரமே அங்ஙனஞ்செய்கிறா யெனறபடி]; கதிரோன் வரஏ எனை ஆள் உடையான் வரும்ஏ-(நாளைச்) சூரியனுதித்த மாத்திரத்தில் என்னையடிமையாகவுடைய இராமபிரான் (எனனருகில்) வந்தருள்வானே: விடியாய்-(அங்ஙனம் அவன்வரும்படி நீ) பொழுது விடிவாயாக, எனும்-என்று கூறுவாள், (சானகி); (எ-று.)—ஆல்-அசை.

காமநோய் பகலினும் இரவில் மிகுதல் இயல்பு; அன்றியும் ஓரிராத்திரிப்பொழுதே விரகவேதனையுற்றார்க்குப் பலயுககாலம் போல நீட்டித்துத் தோன்றும்: ஆதலின், இங்ஙனம் இரங்கிக் கூற வேண்டியதாயிற்று; இது-கேளாதது கேட்பதுபோலச் சொல்லப் பட்ட மரபுவழுவமைதி. 'நாளை யுதயத்தில் என்னுடைய தலைவன் வந்திடுவான்; அவனில்லாதகாலத்தில் என்னை அநீதியாய் வருத்துகிற உன்னை அவன் வந்தால் தண்டித்துவிடுவான்; அதற்குள் நீ விரைவில் மறைந்துபோ' என்ற கருத்தையும் இச் செய்யுளிற் காண்க. உரவுஏதுமிலார் -மெல்லியலார்: அபலைகளென்று வடமொழியிற் பெண்களுக்கு ஒரு பெயர். உலகத்தில் எவ்வளவு கொடுமையுடையவர்களும, தம்மோடொத்தவரும் தம்மிலும்மிக்கவருமாகிய வலியாருடன எதிர்த்து அவரை அழிக்கத் தொடங்குவரே யன்றித் தம்மினுங் கீழ்ப்பட்ட வலியில்லாதவரை அழிக்க மாட்டார்கள்; அன்றியும், பெரும்பாவமாகிய பெண்கொலையையும் புரியமாட்டார்கள் என்பாள், இங்ஙனங்கூறினாள். 'கரவே புரிவார்'

என்றது; தன்னை வருத்துகிறவழி இன்னதென்று தெரியாதபடி இராத்திரிப்பொழுது வருத்துதலால். [1]உயிரீதுமெனு என்ற பாடத்துக்கு - வலிசிறிதுமில்லாதவரது உயிரைமாத்திரம் அவர்க்குக் கொடுத்திடுவோம் என்று முதலிலே உறுதிமொழி கூறி ஆசை காட்டிப் பின்பு அங்ஙனங்கொடாது உலோபஞ்செய்பவர் இல்லையென்க. 'கொடியாய்' என்பதில்-(என்போலியரை வருத்தக்) கொடி கட்டி வந்தவனே! என்ற பொருளுந் தொனிக்கும். (1246)

4. கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே [1]வருவாய் மனனே
பெருநா ளுடனே [2]பிரியா [3]துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ.

ஒன்பது கவிகள்-ஒருதொடர்.

(இ-ள்.) மனனே-(என்) மனமே! கரு நாயிறு போல்பவர்-கருமை நிறத்தையுடையதொரு சூரியனை ஒப்பவராகிய இராமபிரானது, காலொடு - திருவடியுடனே, போய்-(நீ இன்று விடாது தொடர்ந்து) சென்று, வரும் நாள்-(அவர் மீளவும்) வருகிற நாளிலே, அயல்ஏ வருவாய்-அருகிலேயே வருவதாயிருக்கிறாய்; பெரு நாள் உடனஏ பிரியாது உழலவாய்-அநேக நாளாக [நானபிறந்தநாள் முதல்] (என்னைவிட்டு) நீங்காமல் என்னோடு கூடவே சஞ்சரித்து வருந்தனமையையுடையவனே! ஒருநாள் தரியாது ஒழிவார் உளர்ஓ-(நினைத்தபலனைப் பெறுங் காலஞ சமீபித்திருக்கையில்) ஒருதினம் பொறுததிருக்காமல் விட்டுநீஙகுபவர் (உலகத்தில் உன்னையொழிய வேறு எவராயினும்) உளரோ; (எ - று.)

இவ்வளவு காலமாக என்னுடன்கூடவே நீ பழகியிருந்து நான் என் காதலுக்கு இடனுன புருஷனை நாளையதினம் அடைந்து களிப்பதாயிருககையில இன்று நீ எனனைவிட்டு நீங்குதல் தகாது என்பதாம். 'கருநாயிறு' என இல்பொருளுவமை கூறியதனல், உலகத்து உள்ள பொருளகளுள் ஒன்றும இப்புருடோத்தமனுக்கு ஒப்பாகாமை, பெறப்படும. 'போல்பவர்காலொடுபோய்' என்றதனுல், பிராட்டிக்கு இராமபாதாரவிந்தங்களிலுள்ள பக்தி வெளியிடப்பட்டது. "அடிவருந்தப் போனவன்" என்றுள், மிதிலைக்காட்சிப் படலததிலும் திருவடியிடத்திடுபாட்டால்; "மனமும் ஓடி எம்பெருமான திருவடிக் கீழணைய' என்ருர் கவிகன்றியும். ஈற்றிரண்டடிகளுக்கு-பலநாள் அவருடனே பிரியாமற்கூடியிருக்குந் தன்மை நாளை நேர்வதாயிருக்கையில் ஒருநாளைப்பொழுது பொருமல் நீங்கலாமோ எனக் கருத்துக்கொளளினும் அமையும். காலொடு-அவர் சென்ற வழியோடு என்றுமாம். பி-ம்:—[1]வருமாய். [2]பிறிதாய். [3]ஒழிவாய். (1247)

5. [1]கனையேழ் கடல்போல் [2]கருநா ழிகைதான்
வினையேன் [3]வினையால் [4]விடியா [5]விடினீ
[6]தனியே பறவாய் [7]தகவே துமிலாய்
பனைமே லுறைவாய் பழி[8]பூ ணுதியோ.

(இ - ள்.) பனை மேல் உறைவாய் - பனைமரத்தின் மேலிருக்கின்ற அன்றிற்பறவையே! கனை ஏழ் கடல் போல் - ஒலிக்கின்ற ஏழுகடல்களைபோல (மிகப்பெரிய), கரு நாழிகை - இரவு, வினையேன் வினையால் (இராமபிரானைக்கூடி வாழவேண்டுமென்னும்) முயற்சியையுடைய எனது தீவினைப்பயனால், விடியாவிடின் - விடியாமற் போனால், [விடியாது நீட்டிக்கிற இக்காலத்திலே யென்றபடி], நீ—, தகவு ஏதுஉம் இலாய்-நீதியென்பது சிறிதும் இல்லாமல், தனியே பறவாய்-(உன் துணையைப் பிரிந்து) தனித்துப் பறந்து, பழி பூணுதி ஓ - (என்னைக் கொல்லுதலாலாகிற) பழியை ஏற்றுக் கொள்ளுகிருயோ? (எ - று.)—தான்-அசை.

இப்பாட்டு, தலைவனைக் கூடாது வருந்துஞ் சீதை அன்றிலைக் குறித்து இரங்கியது. உலகத்தில் ஒருவர் மற்றொருவரை வெல்ல வேண்டின் அவர் துணைவரோடு கூடிநின்று வாழ்ந்திருக்குங் காலத்தில் இவருந் துணைவரோடு கூடிச்சென்று நேரிற்பொருது அழிப்பது நியாயம்; அங்ஙனமன்றி எவர்க்குந்தெரியாமல் இருளிலே தனியே இருக்கிறவரை ஒருவர் தனியேவந்து கொன்று விட்டுப் போவது தகுதியன்று என்பாள், 'தகவேதுமிலாய்' எனக் கூறினாள். கருநாழிகை-அன்மொழித்தொகை. பறவாய்-பறவையேயென விளியுமாம். அன்றிற்பறவையைப் பனைமரத்தில் வாழ்வதாகவே கவிகள் பலவிடத்துங் கூறுவர். நனியேழ்கடல்போல் வருநாழிகைதான் என்று சில பிரதிகளில் முதலடி. பி - ம்:—[1] நனை. [2] வரு. [3] வினையாய். [4] விடியாய். [5] விடனீ, விடுநீ. [6] தனியொர், தனியோ. [7] ஓர் தயாவிலையே, தகவோதுயிலாய். [8] பூணுதியே, காணுதியே. (1248)

6. அயில்வே லனல் [1] கால் வனவா [2] நிழலாய்
வெயிலே [3] யெனநீ விரிவாய் நிலவே
[4] செயிரே துமிலா ருட [5] றேய் வுறுவார்
உயிர்கோ ளுறுவா ருளரோ வுரையாய்.

(இ - ள்.) அயில் வேல் - கூர்மையையுடைய வேலாயுதத்தின் கொடுமையையும், அனல் - நெருப்பின் வெப்பத்தையும், கால்வன ஆம்-வெளிவீசுவனவான, நிழல் ஆய் - ஒளிகளென்னும் பொருள்களாய், வெயில்ஏ என - (சுடுந்தன்மையால்) வெயிலே போல, விரிவாய்-(எங்கும்) பரவுந்தன்மையை யுடையையாகிய, நிலவே - சந்திரகாந்தியே! செயிர் ஏதுஉம் இலார் - குற்றஞ் சிறிதும் இல்லாதவர்களும், உடல் தேய்வு உறுவார் - தம்முடம்பு (நாளுக்கு நாள்) மெலிவையடையும் மெல்லியலாருமாகியவர்களது, உயிர்-உயிரை, கோள் உறுவார் - (உடம்பினின்று) கைக்கொள்ளுந் தொழிலைப் பொருந்துபவர், உளர்ஓ - (இவ்வுலகில் உன்னையொழிய வேறொருவர்) இருக்கின்றனரோ? நீ உரையாய்—; (எ - று.)

தனக்கு யாதொரு குற்றமும் புரியாதவளும் இயற்கையில் அபலையும் இப்பொழுது இராமனிடத்துக் காதலால் நாளுககுநாள் மெலிபவளுமான எனது உயிரை நீ மரணவேதனைப்படுததுதல் சிறிதுந் தகாது என்பதாம். வலிமை சிறிதும் இல்லாமல்தமமுடம்பு நாள்தோறும் இளைத்துவருபவர் அதறகுப் பரிகாரமொன்றுந் தேடா

மல் பிறரைக் கொல்லமுயலும் உறுதி உலகத்தில் உண்டோ? சொல் என்றும் உரைக்கலாமு; சந்திரன் தேய்பிறைக் காலங்களில் நாடோறும் ஒவ்வொருகலை குறைந்து காணப்படுதலினால், அவனை 'உடல் தேய்வுறுவார்' என்றது. பி - ம்:—[1]காலகல்வான், கால்வனவாள், கால்வனவாய். [2]நிழலாம், நிழலால். [3]எனவே. [4]செயல். [5]தேய்வுறுவாய். (1249)

7. மன்றல் குளிர்வா சம்வயங் கனல்வாய்
மின் [1]றொத்து [2]நிலா நகைவீழ் மலயக்
குன்றிற் குலமா முழையிற் குடிவாழ்
தென்றற் புலியே [3]யுயிர் தேடுதியோ.

(இ - ள்.) மன்றல் குளிர் வாசம் வயங்கு - பரிமளத்துக்கும் குளிர்ச்சிக்கும் இடமாக விளங்குகிற, அனல் வாய்-வெப்பம்வீசும் வாயையுடைய, மின் தொத்து நிலா நகை-ஒளியின் தொகுதிவடிவமான சந்திரகாந்தியாகிய பற்களோடுகூடிய, வீழ் - (கூடியுள்ளவர்களால்) விரும்பப்படுகிற, மலயம் குன்றில் குலம் மா முழையில் குடி வாழ்-பொதியமலையிலே சிறந்த பெரிய குகையிலே நிலையாக வாழ்கிற, தென்றல் புலியே-தென்றற்காற்றாகிய புலியே! உயிர் தேடுதிஓ-(நீ) என்னுயிரை (இரையாக)த் தேடுகிறாயோ? (எ-று.)

கொடுமைபற்றித் தென்றலைப் புலியாக உருவகப்படுத்தினதற்கு ஏற்ப, வாயும் பல்லும் கூறப்பட்டன. வயங்கு, வாய், நகை, வீழ், வாழ் இவை-தென்றலுக்கு அடைமொழி. காற்றுக்கு வாய் - அதன் முதல்வருகை. பிறர்க்குக் குளிர்ந்திருத்தலால் 'குளிர் வாசம்' என்றும், தனக்கு வெய்யதாயிருத்தலால் 'அனல்வாய்' என்றும், தன்னைத் தென்றல் வருத்துதற்கு நிலா உதவியாயிருத்தலால் 'நிலாநகை' என்றும், கூடியவரால் விரும்பப்படுதலால் 'வீழ்' என்றும், தனக்கு மிக்க அச்சத்தை விளைத்துவருத்தலால் 'புலி' என்றும் கூறப்பட்டது. புலிக்கு மலைக்குகையில் வாழ்தல் இயல்பு ஆதலின், 'மலயக்குன்றிற் குலமாமுழையிற் குடிவாழ் தென்றற்புலி' என்றார். மலயமலை, தென்திசையிற் பாண்டிய நாட்டிலுள்ளது. வாசம் - வாழிடம்; வடசொல். மன்றல் வாசம் என ஒரு பொருட்பன்மொழியாகக் கொண்டு, மிக்கமணமெனினுமாம். பி-ம்:—[1]தொக்க, தொத்தி. [2]நிலாவிலுமவீழமலைக். [3]இரை. (1250)

8. தெருவே திரிவா ரொருசே வகனார்
இருபோ தும்விடா ரிதுவென் னைகொலாம்
கருமா முகில்போல் பவர்கன் னியர்பால்
வருவா ருளரோ குலமன் னவரே.

(இ - ள்.) தெருவே திரிவார்-வீதியிலே சஞ்சரிப்பவரும், கருமா முகில் போல்பவர்-கரிய அழகிய காளமேகம்போல்பவருமாகிய, ஒரு சேவகனார் - ஒப்பற்ற வீரரொருவர் [இராமபிரான்], இரு போதும் விடார்-(பகல் இரவு) என்னும் இரண்டு பொழுதிலும் (என்னை)விடுகின்றாரில்லை; இது என்னை கொல் ஆம்-இதுஎன்ன முறைமையாம்? குலம் மன்னவர்-உயர்குலத்தில் தோன்றிய அரசர்களுள், கன்னியர் பால் வருவார் - கலியாணமாகாத இளம்பெண்களிடம் வருபவர், உளர்ஓ-(உலகத்தில்) உண்டோ? (எ-று.)

என்றது, உருவெளித் தோற்றத்தால் இராமன் எப்பொழுதுஞ் சீதைக்குக் கட்புலப்படுவதுபற்றி, மணந்துகொள்வதற்கு முனனம் விலகிநில்லாது கன்னிகைப் பெண்ணிடம் வருவது முறையோ என்கிருள் பிராட்டி யென்க. 'தெருவேதிரிவார்' என்றது, முன்பு கௌசிகமுனிவன்பின்னே இராசவீதியில் நடந்து சென்றபொழுது தான் அவ்விராமபிரானைக் கண்டு காதல் கொண்டதனுலும், பின்பு எல்லாமகளிர்க்கும் வேட்கை விஞ்சும்படி வீதியில் உலாப்போந்ததனுலும். (1251)

9. தெருளா வினைதீ யவர் [1]சே ரலர்தோள்
[2]அருளா [3]நெறியோ டுமவா வதுவோ
[4]கருளார் [5]கடலோ கரை [6]காண் பரிதால்
[7]இருளா னதுதா னெனையூ ழிகொலாம்.

(இ - ள்.) தெருளா-(எவராலும்) தெளிந்து நம்புவதற்குக் கூடாத, வினை-(பெண்களின் மனத்தைக் கொளளை கொள்ளுதல் முதலிய) தொழில்களில், தீயவர்-கொடியவராகிய அப்புருஷோத்தமனுர், அருளா நெறியோடுஉம்-(என் பக்கல்) கருணை செய்யாத வழியுடனே, சேரலர்-(என்னைவந்து) கூடாதவராயுள்ளார்; தோள-(அப்படிப்பட்டவருடைய) தோள்களை, அவாவதுஓ-(யான்) விரும்புவது தகுதியோ? (அன்றென்றபடி); கருள் ஆர் கடல் ஓ-கருமைநிறம் மிகுந்த சமுத்திரமோ, கரை காண்பு அரிது-எல்லைகாணுதல் கூடாதது; இருளானது தான் - இராக்காலமொன்று தான்,—எனை ஊழி கொல் ஆம்-எத்தனை யுககாலமோ? (எ-று.)

இது-இரவைக் குறித்து இரங்கியது. கரைகாணவொண்ணுதபடி கடல்போல மிகவும் பரநதிருத்தல்பற்றி, இருளையே 'கருளார் கடலோ கரை காண்பு அரிது' எனகிருள். கருளார் கடல் என்பது, கடலையே காட்டு மென்ருருமுளர். கடலும் காமோத்தீபகப்பொருள்களுள் ஒன்று. வினை தீயவர் சேரலர் என்பதில், கொடுந்தொழிலையுடைய பாவிகளுக்கு அணுகப்படாதவர் என்ற பொருளும் தொனிக்கும். அருளா நெறி-அருள்செய்யாத வழியிலே, அவா ஓடுமதுஓ - ஆசை விரைந்துசெல்வது பயன்படுமோ? என்றும் உரையிடலாம். இருள்-இரவுக்கு ஆகுபெயர். [1]சேர்நரகோ எனற பாடத்துக்கு - இருளானது, தெருளா - நல்லறிவில்லாத, வினை தீயவர் [தீயவினையவர்] சேர்கின்ற நரகமோ? அருளாத அவ்விராமனதுவழிபிற்செல்லும் ஆசையோ? கடலோ? ஊழிக்காலமோ? என்னை? கரை காண அரிதாயிருக்கிறதே! என்று இரவைக் குறித்து இரங்கியதாக உரைக்க. பி-ம்:—[2]அருளான். [3]நெறியாவருளாயதுமே. [4]கருவார். [5]கடலோர். [6]காணரிதாய், காணரிதால். [7]இருளாமிது. (1252)

10. பண்ணே வொழியா பகலோ புகுதா
தெண்ணே தவிரா விரவோ விடியா
துண் [1]ணே வொழியா வுயிரோ வகலா
கண்ணே துயிலா விதுவோ கடனே.

(இ - ள்.) பண்ஓ ஒழியா - இசைகளோ அடங்குகின்றன வில்லை; பகல்ஓ புகுதாது-பகற்பொழுதோ (விரைவில்) வருகின்ற தில்லை; எண்ஓ தவிரா-எண்ணங்களோ நீங்குகின்றனவில்லை; இரவுஓ விடியாது-இராத்திரியோ விடிகிறதில்லை; உள் நோவு (ஓ) ஒழியா-மனவருத்தங்களோ தவிர்கின்றனவில்லை, உயிர்ஓ அகலா-(என்) உயிர்களோ (உடம்பை விட்டு) நீங்குகின்றனவில்லை; கண் ஓ துயிலா-கண்களோ தூங்குகின்றனவில்லை; இதுஓ கடன்ஏ - இங்ஙனம் வருந்துவதா எனது கடமை? (எ-று.) பி-ம்:—[1]நோய்.

இதுவும், இராப்பொழுது குறித்து இரங்கியதே. - ஓகாரங்கள் - இரக்கங் குறிக்கும்; சிறப்புமாம். புணர்ந்தார்க்குக் களிப்புத்தருவ தாகிய கீதம் தணந்தார்க்குத் தவிப்பைத் தருவதாம். பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் எனப் பிராணவாயுக் கள் ஐந்து ஆதலால், 'உயிரோவகலா' எனப் பன்மையாற் கூறியது. இனி அகலா = அகலாது என்பதன் தொகுத்தலுமாம். (1253)

11. இடையே வளைசோ ரவெழுந் துவிழுந்து
அட[1]லேய் மதனன் சரமஞ் சினையோ
உடலோய் வுறநா ளுமுறங் கலையால்
கடலே யுரைநீ யுமொர்கன் னிகொலாம்.

(இ - ள்.) கடலே-சமுத்திரமே! (நீ), இடைஏ வளை சோர-உன்னிடத்தினின்றும் வளைகள் விழும்படி, எழுந்து விழுந்து-(முன்னே) எழுந்திருந்து (உடனே அங்ஙனமெழுந்திருக்க வலியில் லாமற்) கீழ்விழுந்து, உடல் ஓய்வு உற-உடம்பு தளர்ச்சியையடைய, நாள்உம்-தினந்தோறும், உறங்கலை - (இராக்காலத்திலு முட்பட என் போலவே சிறிதும்) தூங்குகிறாயில்லை: ஆல்-ஆதலால், நீ உம் ஓர் கன்னிகொல் ஆம்-(என்னைப்போல) நீயும் கலியாணமாகாத ஒரு பெண்ணோ? அடல் ஏய் மதனன் சரம் அஞ்சினைஓ-கொல்லும் வலிமை பொருந்தின மன்மதனது பாணத்துக்குப் பயந்தாயோ? உரை—; (எ-று.)

இக்கவியை "காமுற்ற கையறவோ டெல்லே யிராப்பகல், நீ முற்றக் கண்டுயிலாய் நெஞ்சுருகி யேங்குதியால், தீமுற்றத் தென் னிலங்கை யூட்டினான் தாள் நயந்த, யாமுற்ற துற்றாயோ வாழிகனை கடலே" என்னுந் திருவாய்மொழிப்பாசுரத்தோடு ஒப்பிடுக. எம் பெருமானையணைந்து புணரவேண்டுமென்று காதல் கொண்ட சீதை அது பெறுமையால் மிகக்கொடிய பிரிந்தார்படும் வேதனை யைக்கொண்டு ஆற்றாமையாற் கடலைநோக்கி இரங்கிக் கூறியது, இது. இரங்கல்-நெய்தல்நிலத்து உரிப்பொருளாதலால், அந்நிலத் துப்பொருளாகிய கடலைக் குறித்து இரங்கினதாகக்கூறுவது, கவி மரபு.கடலுக்கு வளைசோர்தல்-வெள்ளியசங்குகள்சிந்துதல்:எழுந்து விழுதல்-அலைகள் மேலெழுந்து மடங்கிக் கீழ் விழுதல்; உடல் ஓய் வுறுதல்-அதனுடம்பாகிய நீர் தள்ளாடுதல்: உறங்காமை-அல்லும் பகலும் ஒழியாது அலைந்துகொண்டும் ஒலித்துக்கொண்டும் இருத் தல் என்றும்; பிராட்டிக்கு வளை சோர்தல் - கையிலணிந்த வெள் ளிய (சங்குவளைகள்) உடம்புமெலிதலாற் கழன்று விழுதல்:

எழுந்து விழுதல் - எழுந்திருக்கமுயன்று அது மாட்டாமற் கீழே விழுந்திடுதல்; உடல் ஓய்வுறுதல்-உடம்பில் வலியொழிதல்; உறங்காமை - வேதனைமிகுதியால் இரவு முழுவதிலுங்கூட நித்திரை பெறாமை என்றும் இருவகையாகப் பொருள் கொள்க. இது கடலுக்குந் தலைமகளுக்குஞ் சிலேடையாக உவமை கூறினதனால் சிலேடையுவமையணி. இடையே-இராமனைத் தழுவுதற்கு இடையிலுள்ள பொழுதிலே யென்றும் பொருள்கொள்ளலாம். மன்மதன் எல்லா வுயிர்களையுந் தன் வசப்படுத்தும் பேராற்றலுடையவனாதலால், 'அடலேய் மதனன்' எனப்பட்டான். 'நீயும்' என்ற உம்மை, என்போல என இறந்தது தழுவிய எச்சப்பொருள் காட்டுவதோடு, மன்மதனுக்கு உதவியாய் அவனுக்குப் பேரிகையெனப்படுகிற நீயும் என உயர்வுசிறப்புப்பொருளையும் உணர்த்தும்; முதிய பெரிய நீயுமென்றுமாம். இச்செய்யுளின் பின்னிரண்டடிகளின் கருத்து, "நீங்காமாயை" என்று தொடங்கும் மிதிலைக்காட்சிப் பாடலிலும் உள்ளது. பி - ம்:—[1]சேர். (1254)

12.—கவிக்கூற்று: பிராட்டி இங்ஙனம் வருந்துகையில் இராமன் நினைந்ததைச் சொல்வோமெனல்.

எனவின் னனபன் னியிருந் [1]துளைவாள்
துனி[2]யுன் னி[3]நலங் கொடு[4]சோர் வுறுகால்
மனைதன் னில்[5]வயங் குறும்[6]வை கிருள்வாய்
அனகன் [7]னினைகின் றனயா மறைவாம்.

(இ - ள்.) என-என்று, இன்னன பன்னி - இத்தன்மையனவான வார்த்தைகளைப் பலதரமுமெடுத்துச்சொல்லி, இருந்து - படுக்கைகொள்ளாமலிருந்துகொண்டு, உளைவாள்-(பிராட்டி) வருந்துபவளாய், துனி உன்னி - (தனக்குநேர்ந்த) துன்பத்தையே கருதி, நலம் கொடு - (தன்பெண்மைக்குஉரிய நாணம்முதலிய) நற்குணங்களையும் (விடமாட்டாமல் உறுதியாகக்) கொண்டு, சோர்வு உறு - தளர்ச்சிமிகுகிற, கால் - அவ்விராக்காலத்திலே, மனைதன்னில் - (தனது) திருமாளிகையிலே, வயங்குறும் வைகு இருள்வாய் - நிறைந்துகாணப்படுகிற நிலைபெற்ற இருளிலே, அனகன் - குற்றமற்றவனான இராமபிரான், நினைகின்றன-(மனத்திற்) கருதிக்கூறுவனவற்றை, யாம்-நாம், அறைவாம்-இனிக்கூறுவோம; (எ-று.)— பி-ம்:—[1]இளையாள், இனைவாள். [2]முன்னி, உன்னு. [3]அலங்கொடு. [4]சோர்வுறுவாள், சோர்வுறுநாள். [5]வயங்கிருள், மயங்கினள், மயங்குறு. [6]வைகுறுபோது. [7]நினைகின்றதை. (1255)

13.—இதுமுதல் ஆறுகவிகள்-இராமன் மனத்து நினைவனவற்றைக் கூறும்.

முன்கண் டுமுடிப் பருவேட் கையினால்
என்கண் [1]டுணைகொண் டிதயத் தெழுதிப்
பின்[2]கண் டுமொர்பெண் கரைகண் டிலெனால்
மின்கண் [3]டவரெங் கறிவார் [4]வினையே.

(இ - ள்.) முன் கண்டு-முன்னே (ஒருகால் அம்மங்கையைக் கன்னியாமாடத்திலே) பார்த்து, முடிப்பு அரு வேட்கையினால் - முடிப்பதற்கு முடியாத [எல்லையற்ற] பெருங்காதலால், என் கண் துணை கொண்டு-எனது இரண்டு கண்களாகிய எழுதுகோல்களைக் கொண்டு, இதயத்து எழுதி - என்மனத்திலே (அவளது அழகிய வடிவத்தை நிலைப்பட நன்றாக) எழுதிவைத்து, பின் கண்டும் - (அதுமாத்திரமேயன்றிப்) பின்பு(இன்று) நேரிலே பார்த்தும், ஓர் பெண் கரை கண்டிலென் - அந்த ஒப்பற்ற பெண்ணினது அழகாகிய கடலைக் கரைகண்டறிந்தேனில்லை;(ஏனெனில்), மின் கண்டவர் எங்கு வினை அறிவார்-மின்னலை (அருகிலே கண்ணெதிரிலே) கண்டவர்கள் (அவ்வொளிமிகுதியால் தாம் திகைப்பதேயல்லாமல்) எங்ஙனம் பிறதொழில்களை அறிவார்கள்? (எ-று.)—ஏழுகவிகள் - ஒருதொடர்.

இயற்கையிலே மின்னலைப்போல மிக்க வொளியோடு கூடி விளங்குகிற சீதையை இருதரம் கண்டும் எப்பொழுதும் கருதியுமிருந்தும் யான் திகைப்பை யடைந்தேனே யன்றி அப்பெண்வடிவத்தினழகி னெல்லையை யறிந்தேனில்லை யென்றவாறு. பெண் - பெண்ணின் அழகுக்கு ஆகுபெயர். 'எழுதி' என்றதனால் கண் துணையை எழுதுகோலாகவும், இதயத்தைச் சித்திரந் தீட்டும் பலகையாகவுங் கொள்க. 'கரை கண்டிலென்' என்றதனால், அழகு கடலாகக் கொள்ளப்பட்டது. இச்செய்யுள், எடுத்துக்காட்டுவமையணியாம். ஆல்-இரக்கம்: நானென்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1] துணையோடு, துணைகண்டு. [2] கண்டதொர். [3] அழிவாருளரோ. [4] விளைவே. இது சிலபிரதியில் "திருவே" (14) என்பதன்பின்.

14. திருவே யனையாண் முகமே [1] தெரியின்
கருவே கனியே விளைகா மவிதைக்கு
எருவே மதியே [2] யிதுவென் [3] செய்தவா
ஒருவே னொடுநீ யுறவா கலையோ.

(இ - ள்.) திருவே அனையாள் முகமே - இலக்குமியேபோன்ற சீதையினது முகமண்டலம்போன்றவனே! தெரியின்-ஆலோசிக்குமிடத்து, கருவே கனியே விளை காமம் விதைக்கு எருவே-காய்களையும் பழங்களையுமுண்டாக்குகிற காமமாகிய விதை செழித்துவளர்தற்கு முக்கிய உதவியாய் எருவையொத்திருப்பவனே! மதியே - சந்திரனே! இது என் செய்த ஆ - இது என்னகாரியஞ் செய்த வகை? ஒருவேனொடு நீ உறவு ஆகலை ஓ-(இஷ்டமான மங்கையைப் பெற்றுக் கூடாமல் தனித்துள்ளவனாகிய) ஒருத்தனை என்னோடு நீ நண்பாகமாட்டாயோ? (எ-று.)

துணையின்றித் தனிப்பட்டவர்க்குத் துணைநின்று உதவித் துயர்தீர்த்தல் உலகத்தில் அருளுடையார் யாவர்க்கும் இயல்பு: அங்ஙனிருக்க, நீ அங்ஙனந் தனிப்பட்ட எனக்குத் துணையாய் நின்று துயர்தீர்க்காவிடினும் சமயம் பார்த்துப் பகைமைபூண்டு என்னைவருத்துதலுஞ்செய்கிற இது அடாது என்றபடி. முதலில் சந்திரனை 'திருவேயனையாண் முகமே' எனக் கூறி விளித்தது,

தனக்கு அப்பிராட்டியின் திருமுகமண்டலத்தினிடத்து மிகுதியாக வுள்ள விருப்பை வெளியிடுவதோடு, சந்திரனுக்கு மிக்க சிறப்பா மெனக் கருதியதுந் தோன்ற நிற்கும்; இனி, சந்திரன் பிராட்டியின் முகத்துக்கு ஒத்ததாகி எதிரிலேநின்று மேன்மேல் ஆசையை விளைத்துத் தன்னை மிகவருத்துதலாலுமாம். அன்றி, சந்திரனை முதலிற் சீதையின் முகமென்றே மயங்கி, 'திருவேயனையாண் முகமே' என்று விளித்தானுமாம். சேராவிடத்து நுகர்தற்கு உரிய தல்லாத காயின் தன்மையையும், சேரக்கூடினவிடத்து நுகர் வார்க்கு மிகவும் இனிமைசெய்யுங் கனியின் தன்மையையும் விளைத்தலால், 'கருவே கனியே விளை காமவிதை' எனபபட்டது; "காமங், கனியுங் கருக்காயு மற்று" என்பர், திருவள்ளுவனாரும். 'காமவிதைக்கு எருவே' என்றது, பயிரை மிகச்செழிப்பாக எரு வளர்த்தல்போலச் சந்திரன் காமநோயை விருத்திசெய்தலால். இனி, விளை காமவிதைக்கு - விளையுந்தன்மையதான காமமாகிய விதைக்கு, கருவே-உற்பத்திக்காரணமே! எருவே - துணைக்கார ணமே! கனியே-அதன் காரியமே! என்றும் உரையிடலாம்; சந்தி ரன் ஆதியில் காமமுண்டாதற்குக் காரணமாதலும், பின்னர் அது வளர்தற்குக் கருவியாதலும், அதனின்பத்தை நுகர்வார்க்குக் களிப்பை விளைத்தலுங் காண்க. நீ சானகியின் முகத்தையொத்து அதற்கு உறவாகி அது என்னை வருத்துவதுபோலவே வருத்து கிறாய் என்றும், இங்ஙனம் அவளுக்கு உதவியாகி என்னை வருத்து கிற நீ எனக்குச் சற்று உறவாய் நின்றால் நானும் அவளை வருந் தும்படிவைத்து விரைவிற் கூடுவேனே என்றும் இப்பொருள்கள் 'ஒருவேனொடு நீயுறவாகலையோ' என்ற இறுதியடியில் தோன்றும். ஆராயாது சாதாரணமாக நோக்குங்காலத்து அவள்முகம் மாத்தி ரமே என்னை வருத்துவதென்று தோன்றுகின்றது: உய்த்து நோக் கினாலோ நீயும் உடனின்று கொடுமைவிளைத்தல் உணரப்படு மென்பான் 'தெரியின்' என்றான். இது-குளிர்ச்சியுடைய நீ வெப் பஞ்செய்வது. இனி, 'ஒருவேனொடு நீ யுறவாகலையோ, இது என் செய்தவா' என்பதற்கு-சீதையின்முகம் போன்ற நீ அவளிடத்துக் காதல் கொண்ட என்னொருவனோடு உறவாகித் தண்ணிலவு எறித்து என்னுள்ளத்தைக் குளிர்ப்பிக்க வேண்டாவோ? நீ அங்ஙன் உறவாகாது நின்று அழல்வீசிக் கொளுத்தி வருத்துவது என்செய்தவாறு என்றுமாம். சந்திரன் செய்யும் கொடுமையை வெளியிட்டு வாயா லெடுத்துக் கூறி விவரித்தற்குக் கூசி 'இது என்செய்தவா' என்கிறான். பி-ம்:—[1] உயிரின். [2] இரு. [3] செயலோ.

15. கழி[1]யா வுயிருந் தியகா ரிகைதன்
விழிபோ லவளர்ந் தது[2]வீ கிலதால்
அழிபோ ரிறைவன் படவஞ் சியவன்
பழிபோ லவளர்ந் ததுபா யிருளே.

(இ - ள்.) பாய் இருள்-(உலகமெங்கும்) பரவிய இருளானது, —கழியா உயிர் உந்திய-(வேறு எவற்றாலும் என்னுடலினின்று) நீங்காத (எனது) உயிரை வெளித்தள்ளும்பொருட்டு, காரிகை தன் விழிபோல-கட்டழகுடைய சீதையினது கண்கள் (வரையறை

யின்றி வளர்ந்திருத்தல்)போல, வளர்ந்தது - (அளவில்லாமல்) வளர்ந்துள்ளது; வீகிலது - குறையுந் தன்மையதன்று; (அன்றியும்), இறைவன் அழி போர் பட அஞ்சியவன் பழி போல வளர்ந்தது-(பலநாளாகத் தனக்குப் பொருள் முதலிய பல வுதவிகளைச் செய்து தன்னைக் காத்துவந்த) தலைவன் அழிதற்கிடமான போரிலே (பகைவரால்) இறந்துபோக (அவனுக்கு உதவிசெய்யாமல் தன்னுயிரைப் பாதுகாத்தற்பொருட்டுப்) பயந்தோடிப்போன ஒருசேனைவீரனது பழி அளவின்றிவளர்தல்போல (மேன்மேலும்) வளர்ந்தது; (எ - று.)—ஆல்-அசை.

பிரிந்தார்க்கு நீட்டித்துத் தோன்றும் இயற்கைப்படியே ஸ்ரீராமபிரானுக்கு அவ்விரவு நீட்டித்துத் தோன்ற, 'அந்தக் கட்டழகியின் விழிபோல இரவு அளவுபடாது வளர்ந்துகொண்டிருக்கின்றதே!' என்று வருந்துகின்றான்; உவமையணி. "கடலினும் பெரிய கண்கள்" ஆதலால், காரிகைதன் விழி உவமைகூறப்பட்டது. இந்த மகாகவி, இங்கு, தலைவனான அரசனைச் சமயத்துக் கைவிட்டுச் செல்லும் வீரர்க்குப் பெரும்பழி தோன்றும் என்ற நீதியை வெளியிட்டார். கழியா-(உடம்பினின்று) கழித்து என்றும், உயிர்உந்திய-உயிரைத்தள்ளிய என்றும் கொள்ளலாம். பி-ம்:—[1]போயற. [2]வீகிலவால், வீயலதால். (1258)

16. [1]நினையா யொருகா னெடிதோ நெறிதான்
வினவா தவர்பால் விடைகொண் டிலையோ
புனமா னனையா ரொடுபோ யினவென்
மனனே யெனைநீ யுமறந் தனையோ.

(இ - ள்.) புனம் மான் அனையாரொடு-வனத்திலே (தன் விருப்பின்படி திரிகின்ற) பெண்மானை (விழியின் பார்வையிலே) ஒத்துள்ள அந்நங்கைமாருடனே, போயின-சென்ற, என் மனனே-! ஒரு கால் நினையாய்-(அவர் பின்தொடர்ந்து கூடவே சென்ற நீ என்னை) ஒருதரமும் நினைக்கின்றாயுமில்லை; (அப்படி நினையாமைக்குக் காரணம்), நெறி தான் நெடிதுஓ-(நீ சென்றுள்ள இடத்தின்) வழிதான் வெகு தூரத்திலுள்ளதோ? (அன்றி), வினவாதவர்பால் விடை கொண்டிலைஓ-(நீ யார்? ஏன் இங்குவந்தாய்? என்றுகூட உன்னைக்) கேளாத அவரிடத்திலிருந்து (இவ்வாறு நீ) மீளாமலிருப்பையோ? (அல்லாக்கால்), எனை நீயும் மறந்தனையோ—? (எ-று.)

'நீயும்' என்ற உம்மை - அக்கன்னிகை மறந்துவிட்டதுமாத்திரமேயல்லாமல் என்ற பொருளோடு, உற்றதுணையாய்க் கணப்பொழுதும் விட்டுநீங்குதற்குக் கூடாத நீயும்என உயர்வுசிறப்புப் பொருளையும் உணர்த்தும். நினையாய் ஒருகால் என்பதற்கு-ஒரு தரம் என்னை நீ நினைக்கவாவதுவேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம்; அவளிடஞ்சென்று கூடிக் கலந்துள்ள நீ என்னை ஒருகால் நினைத்தாலும், எனக்குப் பெருமகிழ்வு தோன்றுமென்பதாம். வினவாதவர்பால் விடைகொண்டிலையோ-அன்புடன யோக க்ஷேமங்களை உசாவுதல் செய்யாதவரிடம் உடனே விடைபெற்று விட்டு வரவேண்டியதாக இருப்ப நீங்காமலிருப்பாயோ! இங்ஙனங்

கூடவே தொடர்ந்து திரியும் பித்தர் உன்னையொழிய வேறு எவரும் உலகத்தில் இல்லை.யென்றபடி. அவர்பால் வினவாது விடை கொண்டிலையோ எனப் பிரித்து, அவரிடம்-உத்தரவு கேளாமல் அவரைவிட்டு மீண்டு வாராயோ? என்றுமாம். நெடிதோ நெறி தான் - அணுமாத்திரையாய் நினைத்தமாத்திரத்தில் எவ்வளவு தூரத்திலுள்ள பொருளையுஞ் சென்று சேரத்தக்க உனக்கு இது ஒருதூரமன்றென்றபடி. பி - ம்:—[1] நினையாது, நினையா. (1259)

17. தன்னோக் [1]கெரிகா [2]றகைவா ளரவின்
பன்னோக் கினதென் பது [3]பண் டுகொலாம்
என்னோக் கினுநெஞ் சினுமென் றுமுளார்
மென் [4]னோக் கினதே கடு [5]வல் விடமே.

(இ - ள்.) 'கடு வல் விடம் - மிகவுங்கொடிய வலிமையை யுடைய விஷமானது,—தன் நோக்கு எரி கால் தகை வாள் அரவின் பல் நோக்கினது-தனது கண்களினின்று நெருப்புப்பொறியை யுமிழ்கிற (கோபத்) தன்மையையுடைய வாளபோறகொடிய பாம்பினது பல்லை இடமாகக்கருதி அங்குள்ளது,' என்பது-என்கிற விஷயம், பண்டு கொல் ஆம் - இதற்கு முன்பு போலும்; (இப் பொழுதோ அக்கொடிய விஷம்), என் நோக்கின்உம் நெஞ்சின்உம் என்றும் உளார் மெல் நோக்கினதுஏ-எனது கண்பார்வையிலும் (எனது) மனத்திலும் எப்பொழுதும் நீங்காது உள்ளவராகிய அந்நங் கையாரது மெல்லிய பார்வையி னிடத்ததேயாம்; (எ-று.)

அக்கண்ணின் பார்வை தனக்குக் காதல்நோயை விளைத்து மரணவேதனைசெய்தலால், இராமபிரான் இங்ஙனம் கூறுகின்றனன். அரவின் பற்களில் விடமுள்ளது என்பதனை 'பண்டு கொலாம்' என்றதனாற் குறிப்பாக மறுத்து, அதனை 'நோக்கினும் நெஞ்சினு முளார் மெனனோக்கினதே' என்று தான் விரும்பிய மாதரது மென்னோக்கிலுள்ளதாக ஏற்றிக் கூறியது-அபநுதியணி. நோக்கின் உளாதல் - உருவெளிப்பாட்டிற்காணுதலால். நெஞ்சின் உளா தல் - எப்பொழுதும் இடைவிடாது அவளையே சிந்தித்தலால். மெல்நோக்கு-பொதுநோக்கன்றிக்கே குறிப்புநோக்கு. பி-ம்:—[1] அல. [2] தகை. [3] பண்பு. [4] நோக்கினதோ, நோக்கினவே. [5] வெல், வெவ்.

18. [1]கல்லார் மலர்சூழ் [2]கழிவார் பொழிலோடு
எல்லா முள[3]வா யினுமென் மனமோ
[4]சொல்லா ரமுதின் சுவையோ டினிதா
[5]மெல்லோ தியர்தாம் விளையா டிடமே.

(இ - ள்.) கல்-மலையிடங்களும், ஆர் மலர் சூழ் கழி-(தேன்) நிறைந்த பூக்கள் சுற்றிலுமிருக்கப்பெற்ற கழிக்கரையிடங்களும், வார் பொழிலோடு-நீண்ட சோலையிடங்களும், எல்லாம் - மற்றும் பல இடங்களும், உள ஆயின்உம்-(உலகத்தில் தனக்குச் சொந்த மாக) உள்ளனவானாலும், சொல் ஆர் அமுதின் சுவையோடு இனிது ஆம் எல் ஓதியர் தாம் விளையாடு இடம்-(பேசுஞ) சொற்கள் பெறு தற்கரிய அமுதத்தினது சுவையினும் இனியனவாகப் பெற்ற ஒளி

யையுடைய கூந்தலையுடைய அந்நங்கைமார் தாம் விளையாடுதற்கு உரிய இடம், என் மனம்ஓ-எனது மனந்தானே? (எ-று.)

இங்ஙனம் கூறினது-எப்பொழுதும் தனது மனத்திலே பெருமாட்டி உறைந்து விளையாடுதலா லென்க. இனி, கல்லார் என்பதை - கல்லாரமென்பதன் விகாரமெனக் கொண்டு, செங்கழுநீர்மலர்கள் நிறைந்த கழியென்றுமாம். [2]களிவார் பொழில் என்ற பாடத்துக்கு-களிப்பைத் தருகிற பெரிய சோலையென்க. [5]மெல் ஓதியர் எனப் பிரிப்பினுமாம். பி-ம்:—[1] வல்லோர்புனைமாளிகை வல்லோரணைமாளிகை. [3] ஆயின. [4]கல்லோவெனுநெஞ்சொருகன்னியராம். [5]செல். இது சில பிரதிகளிலில்லை. (1261)

வேறு.

19.—நாளை திருமணமென்று முரசு அறையுமாறு சனகன் கட்டளையிடுதல்.

[1]வானவர் பெருமானும் மனநினை வினனாகத்
[2]தேனகு குழலாடன் றிருமண வினைநாளைப்
பூநகு[3]மணிவாசம் புனைநக [4]ரணிவீரென்று
ஆனையின் மிசை [5]யானை [6]யணிமுர [7]சறைவித்தான்.

(இ-ள்.) வானவர் பெருமான்உம் - தேவர்களுக்கு ஆதிதேவனான திருமாலின் திருவவதாரமூர்த்தியாகிய ஸ்ரீராமபிரானும், மனம் நினைவினன் ஆக - மனத்திலே (இங்ஙனங) கருதியுள்ளவனாக,—(அன்றையிராத்திரியின் கடையாமத்தில் சனகராசன்), 'தேன் நகு குழலாள்தன் திருமணம் வினை - வண்டுகள் மகிழ்தற்இடமான கூந்தலையுடைய சீதையினது திருக்கல்யாண மகோத்ஸவம், நாளை-நாளைக்காகும்: (அதன்பொருட்டு) பூ-பூக்களாலும், நகு மணி-விளங்குகின்ற இரத்தினங்களாலும், வாசம - சீலைகளாலும், புனை நகர்-இயற்கையிலே அழகிதான அந்த மிதிலாபட்டணத்தை, அணிவீர்-(புதிதாக) அலங்கரிப்பீர்கள்,' என்று - என்றுசொல்லி, ஆணை-(தனது) கட்டளையை, ஆனையின் மிசை-யானையின் மேலே வைத்த, அணி முரசு-அழகியபேரிகை மூலமாக, அறைவித்தான் - (வள்ளுவரைக்கொண்டு) அடிப்பித்துத் தெரிவித்தான்; (எ-று.)

வள்ளுவர் யானைமீது முரசேற்றியறைந்து அரசனாணையைத் தெரிவித்தல், மரபு. வண்டுகள் மகிழ்தல்-கூந்தலிலுள்ள இயற்கைத் தெய்வமணத்தை மோந்து உட்கொள்ளுதலாலும், கூந்தலிற் சூடப்பட்டுள்ள மலர்களின் தேனைப் பருகுதலாலும். இனி, தேன் நகு-(மலர்களின்) மது விளங்குகிற என்றும் உரைக்கலாம். வாசம் - வாசனைப்பண்டமுமாம். பி - ம்:—[1]மானவர். [2]தேனமர், தேனவிழ். [3]மலர். [4]அணிவார். [5]யாணர், ஆன. [6]மணி, மணம். [7]அறைகென்றான். (1262)

20.—அந்நகரத்தவர் நகரத்தை யலங்கரிக்க இரவுகழிதல்.

முரசறை தலுமான முதியரு மிளையோரும்
விரைசெறி குழலாரும் [1]விரவினர் விரைகின்றார்
உரைசெறி [2]கிளையோடு முவகையி [3]னுயர்கின்றார்
கரை [4]செறி வரிதாகு மிரவொரு கரைகண்டார்.

(இ - ள்.) முரசு அறைதலும் - (அரசன் கட்டளைப்படியே வள்ளுவர்கள்) பேரிகை மூலமாகச் செய்தியறிவித்தவுடனே, மானம் முதியாரும்-பெருமையையுடைய வயது முதிர்ந்தவரும், இளையோர் உம்-வயசிற் சிறியவரும், விரை செறி குழலார்உம்-வாசனைமிகுந்த கூந்தலையுடைய மகளிரும், (ஆக அந்நகரத்தவரெல்லாரும்), விரவினர்-(தம்மிற்) கூடினவர்களாய், விரைகின்றார்-(நகரை அலங்கரிப்பதற்குத்) துரிதப்படுவார்களாகி, உரைசெறி கிளையோடுஉம்-(தம்மோடு மனங்கலந்து) பேசுதல் மிக்க உறவினர்களுடனே, உவகையின் உயர்கின்றார் - (சீதாகல்யாணத்தைக் குறித்து உண்டான) களிப்பினால் மிகுந்தவர்களா, கரை செறிவு அரிது ஆகும் இரவு ஒரு கரை கண்டார்-கரைசேர்தற்கு அருமையான அவ்விராத்திரியாகிய கடலினின்று ஒரு கரையை அடைந்தார்கள்; (எ-று.)

முரசறைந்துசெய்தி தெரிவித்ததும், அந்நகரிலுள்ள வயது முதிர்ந்தவர் இளையரான ஆடவர் மாதரார் என்ற யாவரும், ஒன்று சேர்ந்து விரைவாக மிகமகிழ்வோடு, தம்மினத்தாருடனே நகரையலங்கரிக்கலானார். அக்காலை இராப்பொழுது கழிந்து சூரியோதய காலம் சமீபித்தது என்பதாம். ஒருவரையொருவர் சிலநாளாக விரும்பி உடன்கூடி மணப்பதாக விருக்கிற சீதாராமர்க்கு அவ் விராத்திரிப்பொழுது நீட்டித்தல் போல, அததிருமணத்தைக் கண்டு மகிழ்வதாக இருக்கிற அந்நகரத்துச் சனங்களுக்கும் அவ் விரவு நீட்டித்ததாகத் தோன்றுமாதலால், 'விரவினர் விரைகின்றார் கரைசெறி வரிதாகு மிரவொரு கரைகண்டார்' என்றது. உரைசெறி கிளை-குசலம் விசாரித்தல்மிகுந்த உறவினர் என்றும், புகழ்மிகுந்த சுற்றத்தார் என்றும் கொள்ளலாம. 'கரை' என்பதற்கு ஏற்ப, இரவு 'கடல்' எனப்பட்டது. பி-ம்:—[1] விரைவினர். [2] களியோடும். [3] உயர்வாரும், அயர்வாரும். [4] செயல். (1263)

21.—சூரியோதய வருணனை.

[1] அஞ்சன வொளியானு மலர்மிசை யுறைவாளும்
எஞ்சலின் மணநாளைப் [2] புணர்குவ ரெனலோடும்
செஞ்சுட ரிருள் [3] சீறித் தினகர னொருதேர்மேன்
[4] மஞ்சனை யணிகோலங் காணிய வெனவந்தான்.

(இ - ள்.) 'அஞ்சனம் ஒளியான்உம்-மைபோற்கரிய திருமேனி நிறத்தையுடைய திருமாலின் அமிசமான இராமபிரானும, அலர் மிசை உறைவாள்உம்-தாமரைப்பூவின்மேலே வாழ்கின்ற திருமகளின் அமிசமான சீதாதேவியும், நாளை-நாளைக்கு, எஞ்சல்இல் மணம் புணர்குவர்- ஒருவாற்றானும) குறைவில்லாத திருமணஞ்செய்து கூடுவார்கள்,' எனலோடும்-என்று (முரசறைந்து வள்ளுவர் செய்தி) தெரிவித்தவளவிலே,—தினகரன்-சூரியன், மஞ்சனை-(தனது) வமிசகுமாரனான ஸ்ரீராமபிரானுடைய, அணிகோலம்-அழகிய திருக்கலியாணக்கோலக் காட்சியை, காணிய என-பார்த்தற்கு (வந்தவன்) போல, செம் சுடர் இருள் சீறி-சிவந்த (தனது) கிரணங்களால் இருளைச் சினந்துகொண்டு, ஒரு தேர்மேல்-ஓரிரததின் மேல், வந்தான்-உதித்தான்; (எ-று.)

சூரியன் இயற்கையாக உதித்ததற்கு, தனது வமிசபரம்பரையில் தோன்றின இராமனது கலியாணத்தைப் பார்ப்பதற்கு வந்ததாகக் காரணங்கற்பித்துக் கூறினர்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. தன் உதயத்துக்குத் தடையாயிருந்ததனல் இருளைச் சீறினன. [3]சீறி என்ற பாடத்தைக்கொண்டு, இருளாகிய திரையைத்தளளி என்று கூறலும் ஒன்று. ஒரு தேர்-ஒற்றைத்தனியாழியோடு கூடிய ஏழ் புரவிபூண்ட இரதம். பி-ம்:—[1]மஞ்சன. [2]புரிகுவர். [4]மஞ்சனவணி. (1264)

22.—இதுமுதற் பதினறுகவிகள் – ஒருதொடர்: அந்நகரத்தவரின் செய்கையைக் கூறுவன.

தோரண நடுவாருந் தூணுறை பொதிவாரும்
பூரண குடமெங்கும் [1]புனைதுகில் புனைவாரும்
காரணி நெடுமாடங் கதிர்மணி யணிவாரும்
ஆரண மறைவாணர்க் [2]கின்னமு [3]தடுவாரும்.

(இ - ள்.) (அந்த மிதிலாபட்டணத்திலே அப்பொழுது) தோரணம் நடுவார்உம்-தோரணங்களை நாட்டுபவர்களும், தூண் உறை பொதிவார்உம்-கம்பங்களுக்கெல்லாம் (சித்திரித்த பட்டுச்சீலைகளாகிய) உறைகளையிட்டு மூடி அலங்காரஞ் செய்பவர்களும், பூரண குடம் எங்கும் புனை துகில் புனைவார்உம்-பூரண கும்பங்கள் வைத்து எங்கும் அவற்றின் (மேலே) அழகிய ஆடையை அணிபவர்களும், கார் அணி நெடு மாடம் கதிர்மணி அணிவார்உம்-மேகங்கள்வந்து பொருந்தப்பெற்ற உயர்ந்த உபரிகைவீடுகளை ஒளியையுடைய இரத்தினங்களையிழைத்த கவசங்களையிட்டு அலங்கரிப்பவர்களும், ஆரணம் மறைவாணர்க்கு இன் அமுது அடுவார்உம்-வேதங்களிற்கூறப்பட்ட இரகசியப்பொருள்களை யெல்லாம் அறிந்துவாழ்கின்ற [சிறந்த] அந்தணர்களை உண்பித்தற்பொருட்டு இனிமையான அமிருதம் போன்ற உணவுகளைச் சமைபபவர்களும்;

பூரணகும்பத்தின் மேற்புறத்துச்சுற்றிலும் சந்தனம் அக்ஷதை இவற்றை அப்புதலும் நூல் சுற்றுதலும் ஆடை அணிதலும் மாவிலைக் கொத்து தேங்காய் இவற்றை வாய்ப்புறத்து வைத்தலும், மரபு. நெடுமாடங் கதிர்மணியணிதல்-உபரிகைகளின் மேல் இரத்தின கலசங்களை அமைத்தலுமாம். இரண்டாமடிக்கு-எங்கும் பூரணகும்பங்களையும் அழகிய கொடிச்சீலைகளையும் அழகிதாக அமைப்பவரும் என்றும் கொள்ளததகும். பி - ம்:—[1]பொலிதரனிவாரும், புனைதுகில்வனைவாரும். [2]அமுதினிது. [3]அருளவாரும், அமைவாரும். (1265)

23. அன்னமென் னடையாரும் மழவிடை யனையாரும்
கன்னிநன் னகர்வாழை கமுகொடு நடுவாரும்
[1]பன்னரு நிரைமுத்தம் பரியன தெரிவாரும்
பொன்னணி யணிவாரும் மணியணி புனைவாரும்.

(இ - ள்.) அன்னம் மெல் நடையார்உம்-(அந்நகரத்திலுள்ள) அன்னப்பறவையின் நடைபோல அழகிய மந்தகதியையுடைய மகளிரும்

ளிர்களும், மழவிடை அனையார்உம்-இளமையான காளை [எருது] களின் நடையைப்போன்ற கம்பீரமான நடையையுடைய ஆடவர் களும், கன்னி நல் நகர்-அழியாமையையுடைய அழகிய அந்தப் பட்டணத்திலெங்கும், வாழை கமுகொடு நடுவார்உம்-வாழைமரங் களையும பாக்குமரங்களையும் கொண்டுவந்து நாட்டுபவர்களும், பன்ன அரு நிரை முத்தம் பரியன தெரிவார்உம்-சிறப்பித்துச் சொல்லி முடித்தற்குக்கூடாத [மிகச்சிறந்த] கூட்டமான முத்துக் களுள் பருத்துள்ளவற்றை ஆராய்ந்தெடுத்து அணிந்து கொள்ப வாகளும், பொன் அணி அணிவார்உம்-பொன்னினாலாகிய ஆபர ணங்களையெல்லாம்எடுத்து அணிந்துகொள்பவர்களும், மணி அணி புனைவார்உம்-இரத்தினங்கள் பதித்துள்ளனவாகிய ஆபரணங்களை யெல்லாம் எடுத்து அணிந்துகொள்பவர்களும்,- (எ-று.)

வாழை கமுகொடு நடுதல், மழவிடையனையார்செயல்:மற்றவை அன்னமென்னடையார்செயல். கன்னி நன்னகர்-பிராட்டிவாழுஞ் சிறந்த நகரமென்றுமாம். அன்னம் என்நடையார் எனறும் பிரிக்க லாம். பி-ம்:—[1] இன்னிசைதெரிவாருமிளமுலையவரோடும். *(1266)*

24. சந்தன மகிறுநுஞ் [1] சந்தொடு தெருவெங்கும்
சிந்தினர் திரிவாருஞ் [2] செழுமலர் [3] சொரிவாரும்
இந்திர தனு [4] நாணு மெரிமணி நிரை [5] மாடத்து
அந்தமில் விலையாரக் [6] கோவைக ளணிவாரும்.

(இ - ள்.) நாறும்-நறுமணம் வீசுகின்ற, சந்தனம் - சந்தனக் குழம்பையும, அகில் சந்தொடு-அகிற்கட்டைத் தேய்வைக்குழம்பை யும், தெரு எங்கும்-வீதிகளிலெல்லாம், சிந்தினர் திரிவார்உம் - சிந் திக்கொணடேதிரிபவர்களும், செழு மலர் சொரிவார்உம் - சிறநத மலர்களை (வீதிகளிலெல்லாம்) பெய்பவர்களும், இந்திர தனுநாணும் எரி மணி நிரை மாடத்து-(பலநிறங்களையுடைய) இநதிரவில் வெட் கப்படுமபடியான (பலவகை நிறமாக) விளங்குகிற இரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ள வரிசையாகிய உபரிகைவீடுகளில், அந்தம்இல் விலை ஆரம் கோவைகள் - அளவில்லாத விலையையுடைய முததுவடங்களை, அணிவார்உம்-அலங்காரமாகத் தொங்கவிடுபவர்களும்— (எ-று.)—பி - ம்:-[1] சாந்தொடு. [2] தேமலர். [3] புனைவாரும். [4] காண. [5] மாதர். [6] கோவைகொடு. *(1267)*

25. தளங்கிளர் மணி [1] காலத் தவழ்சுட [2] ருமிழ்தீபம்
[3] இளங்குளிர் [4] முளையார்நற் பாலிகை யினமெங்கும்
விளிம்புபொன் [5] வகைநாற வெயிலொடு நிலவீனும்
பளிங்குடை யுயர்திண்ணை பத்தியின் [6] வைப்பாரும்.

(இ - ள்.) விளிம்பு பொன் வகை நாற - ஓரங்களிலெல்லாம் (அமைககப்பட்ட)பொன்னின் வகைகள் விளங்க, வெயிலொடுநிலவு ஈனும் - (அவறறின) சூரியகாநதிக்கு ஒப்பான செந்நிறக் காநதி யுடனே (தான்) சந்திரகாநதிக்கு ஒப்பான வெணணிறககாந்தியை வீசுகிற, பளிங்கு உடை உயர் திணணை பத்தியின - ஸ்படிகக் கற் கள் படுககப்பட்டுள்ள உயர்நத திணணைகளின் வரிசைகளிலே,

தளம் கிளர் மணி கால-கனமாய்விளங்குகிற இரத்தினங்கள் வெளி வீசுவதால், தவழ்-பரவுகின்ற, சுடர் உமிழ் தீபம-ஒளி வெளிப்படுகிற இரத்தின தீபங்களேயும், குளிர் இள முளே ஆர் நல்பாலிகை இனம்-குளிர்ந்த இளமையான விதைமுளேகள் பொருந்தின நல்ல பாலிகைக் கிண்ணங்களின் வகைகளேயும், எங்கும்-(அந்நகரத்தில்) எவ்விடத்திலும், வைப்பார்உம்—; (எ-று.)

தீபங்களேயும் பாலிகைகளேயும் மர்தரார் திண்ணேயில் வைப்பாராயினரென்க. சுடர் என்பது - மணித்தீபத்தையும், உமிழ்தீபம் என்பது-தீவிளக்குக்களேயும் உணர்த்துமெனினுமாம். முதலடிக்கு, தளம் கிளர்-அடித்தலத்திலே பொருந்திய, மணி, தவழ சுடர்காலுமாறு ஒளியையுமிழகின்ற தீப மென்றுமாம். பி-ம்:—[1]மானத். [2]இமிழ். [3]விளங்கொளிர். [4]முளேயானற, முளேயாநற். [5]நிரை, விரை. [6]அமைப்பாரும். (1268)

26. மந்தர மணிமாட முன்றிலின் வயினெங்கும்
[1]அந்தமி லொளிர்முத்தி [2]னகனிரை [3]யொளிவீச
[4]இந்திர னெடு[5]வானம் [6]மீனலர் குவதென்னப்
பந்தரி னிழல் [7]வீசப் படர்வெயில் கடிவாரும்.

(இ - ள்.) இந்திரன் நெடு வானம் - தேவேந்திரனது ஆளுகைக்கு உட்பட்ட பெரிய ஆகாயம், மீன் அலர்குவது எனன - நட்சத்திரங்களினல் விளங்கிஞற போல, மந்தரம் மணி மாடம் - மந்தர மலே போனற [மிகப்பெரிய] அழகிய வீடுகளின், முன்றிலின் - முன்புறத்தினது, வயின் எங்கும - இடம் முழுவதிலும், அந்தம் இல் ஒளிா முததின் அகல் நிரை ஒளி வீச-அளவில்லாத விளங்குந்தனமையனவான முத்துக்களின பெரிய கூட்டங்கள் ஒளியைவீசா நிற்க, பந்தரின் நிழல்வீச-(முத்திஞலலங்கரிததுச்செயத) அந்தப்பந்தலின்சாயை பரவுதலிஞல், படர் வெயில கடிவார்உம் - (எஙகும்) பரவுகிற வெயிலேத் தடுப்பவர்களும்,—(எ - று.)

வெயில்விழாதபடி முத்துபந்த ரிட்டன ரென்க. நெடுவானத்தை உவமை கூறியதஞல், பந்தர் பசுமையர்னதென்பது பெறபபடு மென்பர். பி-ம்:-[1]நந்தலி லொளி. [2]நகைநிறை, நகைபுரை, நகையுறை. [3]ஒளிநாணும், ஒளிநாற, ஒளிநாறி, யுகநாளின். [4]அந்தர நெடு. [5]வானின, வான்மீன். [6]இவணிலகுவதென்ன, அலர்குவதென்னப்பூம், மின்னெனவலதெனன. [7]வீசி. (1269)

27. வயிரமி ஞெளியீனும் மரகத [1]மணிவேதிச்
செயி [2]ரற வொளிர்தீபஞ் சிலதியர் கொணர்வாரும்
வெயில் [3]விர வியபொன்னின் மிடைகொடி மதி[4]தோயும்
எயி [5]லினி னடுவாரு மகிலெரி யிடுவாரும்.

(இ - ள்.) வயிரம் - வச்சிரரத்தினங்கள், மின் ஒளி ஈனும் - விளங்குகிற ஒளியை(ச் சுற்றிலும) வீசப்பெற்ற, மரகதம் மணி வேதி - மரகதமெனனும் பச்சைரததினங்கள் பதிக்கப்பபட்டுள்ள மேடைகளிலே,செயிா அற ஒளிர் தீபம்-குற்றமில்லாது விளங்குகிற விளக்குகளே, சிலதியர்-வேலேக்காரிகள், கொணர்வார்உம்-கொண்டு

வந்து வைப்பவர்களும், வெயில் விரவிய பொன்னின் மிடைகொடி-சூரியகாந்திக்குச் சமானமான காந்தி பொருந்திய [சிறந்த] பொன்னினாலாகியகாமபோடுகூடிய கொடிகளை, மதி தோயும எயிலினில் - சந்திரமண்டலத்தைத் யளாவிய [மிகவுயர்ந்த] மதில்களினமேலே, நடுவார்உம்-நாட்டுப்வர்களும், அகில் எரி இடுவார்உய-(எங்கும்) அகிற்கட்டைகளைத் தீயிலிட்டுப் புகைப்பவர்களும,—(எ - று.) வயிரம் இன் ஒளி என்றும் பிரிக்கலாம். பொன்னின மிடை கொடியை நட்டவர், சிலதியரின கணவரென்பர் ஒருசாரார். பி - ம்:—[1]ஒளிர். [2]அறும். [3]விரிமிளிர். [4]தோய. [5]வயினணிவாரும். இது சில பிரதிகளிலில்லை; சில பிரதிகளில் "கலவைகள்" (29) எனபதன் பின உளளது. (1270)

28. பண்டியி[1]னிறைவாசப் [2]பனிமலர் கொணர்வாரும்
[3]தண்டலை யிலையோடு கனிபல தருவாரும்
[4]குண்டலம் [5]வெயில்வீசக் குரவைகள் புரிவாரும்
[6]உண்டைகொண் மதவேழத் தோடைக ளணிவாரும்.

(இ - ள்.) பண்டியில்-வண்டிகளிலே, நிறை வாசம் பனி மலர் கொணர்வார்உம்-நிறைந்தவாசனையையுடைய குளிர்ந்தமலர்களைக் கொண்டுவருபவர்களும், தணடலை இலையோடு கனி பல தருவார் உம்-சோலைகளிலேயுள்ள (வாழை முதலிய) இலைகளையும (பல வகைப்) பழஙகளையுங் கொணடுவருபவர்களும், குணடலம வெயில் வீச குரவைகள் புரிவார்உம - (தங்களது) குண்டலமெனனுங் காதணிகள் வெயில்போன்ற ஒளியை வீசுமபடி குரவைக் கூததுக் களை(ப் பல காலும்) ஆடுபவர்களும, - உணடை கொள மதம் வேழத்து ஓடைகள் அணிவார்உம - உணவுத்திரளையை உட்கொணட மதயானைகளின் நெற்றியில் பட்டஙகளை அணிபவரும்,—

சூட்டிக் கொள்வதற்கும் விருந்திடுதற்கும், மலர் இலை கனிகளைப் பண்டியிற் கொணர்ந்தனர்; இலை - வெற்றிலையுமாம். 'மணநிலை மலர்பெய்து மறுகும் பண்டியும்' என்றது சிந்தாமணி. குரவை-கைகோத்தாடல். உண்டைகொள் வேழம் - வில்லாலெறிகின்ற உண்டையடியைக் கொண்ட யானை என்பாரு முளர். தண்டலை-அன்மொழித்தொகை. பி - ம்:—[1]வருவாரும். [2]பணி. [3]கண்டியல். [4]கண்டலம். [5]ஒளி, எரி. [6]உண்டையின். (1271)

29. கலவைகள் புனைவாருங் [1]கலைநல தெரிவாரும்
மலர்குழன் [2]மலைவாரும் மதி[3]முக மணியாடித்
திலதமு னிடுவாருஞ் சிகழிகை [4]யணிவாரும்
இலவிதழ் பொலிகோல மெழில்பெற விடுவாரும்.

(இ - ள்.) கலவைகள் - கலவைச் சந்தனங்களை, புனைவார்உம்-பூசிக் கொள்பவர்களும், கலை நல - நல்ல ஆடைகளை, தெரிவார் உம் - ஆராய்ந்தெடுத்து உடுத்துக் கொளபவர்களும், மலர் - மலர்களை, குழல் - கூந்தலிலே, மலைவார்உம் - சூட்டிக்கொள்பவர்களும், மணி ஆடி முன் - அழகிய கணணாடியின முன்னிலையிலே, மதி முகம் - சந்திரனபோன்ற (தமது) முகததிலே, திலதம் இடு

வார்உம்- திலகத்தை இட்டுக்கொள்பவர்களும், சிகறிகை-சிகழிகை யென்னும் ஒருவகை மாலையை, அணிவார்உம்- தரித்துக்கொளபவர் களும், இலவு இதழ் - இலவம்பூப்போலச் சிவந்த (தங்கள்) அதரத் திலே, பொலி கோலம்-(அது) விளங்குதற்குக் காரணமான அழகிய செந்நிறக்கோலத்தை, எழில்பெற - அழகுபொருந்த, இடுவார்உம் - தரித்துக் கொள்பவர்களும,—(எ - று.)—இவை யெல்லாம் மாதர் செயல்.

மணி - பளிங்குமாம். ஈற்றடிக்கு - செம்பஞ்சுக்குழம்பின் கோல த்தை அழகுபெற த் தமதுபாதங்களில்) இடுபவர்களு மெனவும் உரைக்கலாம. பி-ம்:—[1] கலனல, கலைநலங், கனலனல். [2] மிலைவாரும். [3] முகமதில், முகமலர். [4] தெரிவாரும், தெரிகோலம். இச்செய்யுள சில பிரதியி லில்லை. (1272)

30. தப்பின மணிகாசுஞ் சங்கமு [1] மயிலன்னர்
ஒப்பனை புரி [2] போது மூடலி னுகுபோதும்
துப்புற [3] மிளவாசச் சுண்ணமு முதிர் [4] தாதும்
குப்பைக ளெனவாரிக் கொண்டனர் களைவாரும்.

(இ - ள்.) மயில் அன்னர் - மயிற்பறவையையொத்த சாயலை யுடைய மகளிர், ஒப்பனை புரி போதுஉம்-அலங்காரஞ்செய்து கொள் ளுகிற பொழுதிலும், ஊடலின் உகு போதுஉம-(கொழுநரோடு) ஊடு தல் கொள்ளுதலால் வெறுத்துஎறிகிற பொழுதிலும, தபபின - (அணிகளினின்று) நீங்கிக் கீழுதிர்ந்தனவான, மணி - முத்துக்களை யும், காசுஉம் - மற்றும் பலவகை யிரத்தினஙகளையும், சங்கமஉம் - சங்கவளையல்களையும, துப்பு உறழ் இளவாசம் சுண்ணம்உம் - பவ ழத்தையொத்துச் சிவந்த மென்மையான வாசனையையுடைய கந்தப் பொடிகளையும், உதிர் தாதுஉம் - சிந்துந்தன்மையனவான பூந்துகள் களையும், குப்பைகள் என - குப்பைகளாக, வாரி கொண்டனர் களை வார்உம் - குவியலாகத் திரட்டி எடுத்துக் கொண்டுபோய் (வீடுகளி னின்றும் அப்பால் எறிந்து) நீக்குபவர்களும்,—(எ - று.)—இது, பணிமகளிர் செய்கை.

அந்நகரத்தில் யாவரும் பெருஞ் செல்வவான்களாதலால் விழுந் தவற்றை விரும்பியெடுக்கும் வறியவர் எவரும் இலராதல் பறறி 'மணிகாசும் குப்பைகளென வாரிக களைவாரும்' எனறூர். குப்பை யின் தன்மையே இதுவானல், ஆபரணம் முதலியவற்றின் தனமை எப்படிப்பட்டதோ என ஊகித்துக்கொளக. மணி - இரத்தினப் பொதுப்பெயரும், காசு-பொனபெயருமாகலாம். சங்கம் - கருவியாகு பெயர். ஒப்பனை புரிபோது என்பதறகு-ஒப்பனை புரிந்து மிஞசிய மல ரென்றலு மொன்று. ஊடலின் உகுபோதும் என்பதற்கு - ஊடற் காலத்திற் சிநதின மலர்களையும் எனறுமாம். பி - ம்:—[1] வெயின் மானர். [2] போதத்து. [3] நிற, நிறை. [4] தோறும். (1273)

31. மன்னவர் வருவாரும் மறையவர் நிறைவாரும்
இன்னிசை மணியாழி னிசைமது நுகர்வாரும்
சென்னியர் [1] திரிவாருஞ் சிலதியர் [2] செறிவாரும்
கன்னலின் [3] மணவேலைக் கடிகைக டெரிவாரும்.

(இ - ள்.) மன்னவர் வருவார்உம்-அரசர்கள் வந்து சேர்பவர் களும், மறையவர் நிறைவார்உம் - பிராமணர்கள் வந்து நிறைபவர் களும், இன் இசை மணியாழின் இசை மது நுகர்வார்உம் (காதுக்கு) இனிய ஸ்வரங்களையுடைய அழகிய வீணையின் கீதமாகிய மதுவை (செவியாகிய வாயால்) உட்கொள்ளுபவர்களும், சென்னியர் திரி வார்உம்-பாணர் (எங்குஞ்) சஞ்சரிப்பவர்களும, சிலதியர் செறிவார் உம்-பரிசாரிகைப் பெண்கள் (எங்கும்) நெருங்கிவந்து கூடுபவர் களும், கன்னலின் மணம் வேலை சடிகைகள் தெரிவார்உம்-நாழிகை வட்டிலாகிய கருவியைக்கொண்டு சீதாகலியாணச் சடங்கு நடப்ப தற்கு ஏற்பட்டிருக்கும் நாழிகைகளை ஆராய்பவர்களும்,—(எ-று.)

மதுபானம் பரவசப்படுத்திக் களிப்பைத் தருவதுபோலச் சங் கீதமும மனத்துக்கு மிகககளிப்பை விளைத்தலால், 'இசைமது' எனப்பட்டது. சென்னி - தலை; யாவராலுஞ் சிரமேற்கொண்டு நன்குமதிக்கத்தக்கவர் எனப் பாணர்க்கு ஏதுப்பெயர்போலும். சிலதியர்செறிதல், பலர்க்குங் குறறேவல் தொழில் செய்தற் கென்க. பி-ம்:—[1]செறிவாரும். [2]தெரிவாரும். [3]மணி. மூன்று நான்காமடிகள் சில பிரதிகளில் மாறியுளளன. *(1274)*

32. [1]கணிகையர் தொகுவாருங் கலைபல பயில்வாரும்
[2]பணியணி யினமுத்தம [3]பலவித நிலமன்னர்
அணிநெடு முடியொன்றொன் [4]றறைதலி னுகுமம்பொன்
மணிமலை [5]தொகமன்னன் [6]வாயிலின் மிடைவாரும்.

(இ - ள்.) கணிகையர்-விலைமாதர்கள், தொகுவார்உம்-திரளா கக் கூடுபவர்களும, கலை பல பயில்வார்உம்-பலவகைப்பட்ட [அறு பத்துநாலுவகையாகவுள்ள] கலைதொழில்களிற் பழகுபவர்களும், பலவிதம் நிலம மன்னர்-அனேகவகைப்பட்ட தேசங்களின் அரசர் கள், பணி அணி இனம் முத்தம்-(தத்தம) ஆபரணங்களிற்பொருந் தின கூட்டமான முத்துக்கள் (சிந்துகிறவையும), அணி நெடு முடி ஒன்று ஒன்று அறைதலின் உகும அம் பொன் மணி-அழகிய நீண்ட (தமதமது) கிரீடங்கள் ஒன்றோடொன்று தாக்குதலாற் சிந்துகிற அழகிய பொனகளும் இரத்தினங்களும, மலை தொக- முத்துமலைகளும் பொன்மலைகளும் இரத்தினமலைகளும் போலக் குவிந்து கிடககும்படியாக, மனனன் வாயிலில-சனகமகாராசனது அரண்மனைவாயிலிலே, மிடைவார்உம்-நெருஙகுபவர்களும்,—

நர்த்தனம் முதலிய கலைவல்ல கணிகையரும் பல தேசத்து மன்னவரும் அங்கு நெருங்கியிருந்தன ரென்க. பி - ம்:—[1]கணிதர் கள். [2]பணிபணியெனலோடும, பணியணியெனவோடும். [3]பலபல விரு, பலபலவித. [4]அறைதலுமுகுபொன்னின். [5]தொடுவாயின், தொகுவாயின், என மன்னன். [6]மறையவர்வருவாரும். *(1275)*

33. கேடகம் வெயில்வீசக் கிளரயி னிலவீனக்
கோடுயர் நெடுவிஞ்சைக் குஞ்சர [1]மதுபோல
ஆடவர் [2]திரிவாரு மரிவையர் களி [3]கூரும்
நாடக நவில்வாருந் நகையுயிர் கவர்வாரும்.

(இ - ள்.) கேடகம்-(தமது இடக்கையிலே பிடித்த) கேடக மென்னும் ஆயுதவிசேடம், வெயில் வீச-வெயில்போன்ற ஒளியை எறிக்கவும், கிளர் அயில்-(தமது வலக்கையிலே) விளங்குகின்ற கூர்மையுடைய வாளாயுதம், நிலவு ஈன - நிலாப்போன்ற ஒளியை வீசவும், கோடு உயர் நெடு விஞ்சை குஞ்சரம் அது போல-(தனது) தந்தங்கள் உயர்ந்திருக்கப்பெற்ற மிக்க போர்க் கல்வித் திறத்தை யுடைய யானைபோல, ஆடவர் திரிவார்உம்-புருஷர்கள் (கம்பீரமாகச்) சஞ்சரிப்பவர்களும்,—அரிவையர்-பெண்கள், களி கூரும் நாடகம் நவில்வார்உம்-களிப்புமிகுதற்குஇடமான நர்த்தனங்களை அடிப் பழகுபவர்களும், நகை உயிர் கவர்வார்உம்-(தமது) புன்சிரிப்பினால் (ஆடவர்களின்) உயிரைக் கொள்ளை கொள்பவர்களும், —(எ-று.)— அயில்-வேலுமாம். பி - ம்:—[1] அதன்மீதே. [2] வருவாரும். [3] கூர.

34. கதிர்மணி யொளிகாலக் [1] கவர்பொரு [2] டெரியாவாறு
எதிர் [3] சுடர் தர [4] மின்னுற் றெழுதலி னிமையோரும்
மதுவிரி குழலாரும் [5] மதிலுடை நெடு [6] வானம்
அதுவிது வென [7] வோரா [8] தலமரலு றுவாரும்.

(இ - ள்.) கதிர் மணி ஒளி கால-விளங்குகின்ற இரத்தினங்கள் ஒளியை வீசுதலால், கவர் பொருள் தெரியா ஆறு-கண்ணுக்குப் புலனாதற்குரிய பொருள்கள் கட்புலப்படாதவகை, எதிர்சுடர் தர-எதிரொளி பிரதிபலிக்கும்படி, மின் உற்று எழுதலின்-(அந்நகர முழுவதிலும்) காந்தி நிறைந்து பரவியிருத்தலால், இமையோர் உம்-தேவர்களும், மது விரி குழலார்உம்-(பூக்களின்) தேன் பெருகுதற்கு இடமான கூந்தலையுடைய (தெய்வப்) பெண்களும், மதில் உடை நெடு வானம் அது இது என ஓராது மதில்களையுடைய பெரிய (தங்களுக்குரிய பொன்மயமான) தேவலோகம் அதுவோ இதுவோ என்று அறியமாட்டாமல், அலமரல் உறுவார்உம-மனச் சுழற்சியையடைபவர்களும்; (எ-று.)

இது - இந்நகரத்துத் தேவர்கட்கு நேர்ந்த செயலைக்கூறும் இடைபபிறவரல். எங்கும பொன்னொளி வீசுதலால் மிதிலாநகரம் பொன்னகரமபோன்றது எனறதாம. அது, இது-விண்ணுலகமும், மிதிலையும. கவர்தல் - கட்புலனாதல். பி - ம்:—[1] கலை, கரை. [2] வெளியாவேறு. [3] எதிர்தர, எதிர்சுடர், தரவொளி, சுடரது. [4] விம்முற்று. [5] அகிலுடை. [6] நாகம். [7] ஓரார். [8] ஐயுறவருவாரும்.

35. தேர்மிசை வருவாருஞ் சிவிகையில் வருவாரும்
ஊர்தியில் வருவாரு [1] மொளிமணி நிரையோடைக்
கார்மிசை வருவாருங் [2] கரிணியில் வருவாரும்
பார்மிசை வருவாரும் பண்டியில் வருவாரும்.

(இ - ள்.) தேர்மிசை வருவார்உம் - தேர்களின்மேல் வருபவர்களும், சிவிகையில் வருவார்உம்-பல்லக்குகளின்மேல் வருபவர்களும், ஊர்தியில் வருவார்உம்-(இங்குக்கூறப்படாத பிற) வாகனங்களின்மேல் வருபவர்களும், ஒளி மணி நிரை ஓடை கார்மிசை வருவார்உம்-பிரகாசத்தையுடைய இரத்தினங்களின் கூட்டம்பதிக்கப்

பட்டுள்ள நெற்றிப்பட்டத்தை யணிந்த மேகம்போறக்கரிய ஆண் யானைகளின்மேல் வருபவர்களும், கரிணியில் வருவார்உம் - பெண் யானைகளின்மேல் வருபவர்களும், பார்மிசை வருவார்உம - பூமியின் மேல் நடந்துவருபவர்களும், பண்டியில் வருவார்உம்-பண்டிகளின் மேல் வருபவர்களும்,—(எ-று.)

இச்செய்யுளில் குதிரை கூறப்படாமையால், ஊர்தி-குதிரை யென்னலாம். ஒளி மணிநிரையோடைக்கார் - யானை: பிறகுறிப்பு. கரிணி-கரி என்பதன் பெண்பால்: பின்னே 'கரிணி' என வருவத ஞல்-'கார்' என்றது ஆண்யானையை. பிம்:—[1] ஒளிர். [2] கற்கியில். ()

36. முத்தணி யணிவாரும் மணியணி [1] முனிவாரும்
பத்தியி [2] னிமிர்செம்பொற் பல்கலன் மகிழ்வாரும்
[3] தொத்துறு தொழின்மாலை [4] சுரிகுழ லணிவாரும்
சித்திர [5] நிரை [6] தோயுஞ் செந்துகில் புனைவாரும்.

(இ-ள்.) முத்து அணி அணிவார்உம் - முத்தாபரணங்களைப் (புதிதாகப்) பூண்பவர்களும், மணி அணி முனிவார்உம் - (முன்னே அணிந்துள்ள) இரத்தினுபரணங்களை வெறுத்து நீக்குபவர்களும், பத்தியின் நிமிர் செம்பொன் பல் கலன் மகிழ்வார்உம் - ஒழுங்காக உயர்ந்த செம்பொன்னுலாகிய பலவகையாபரணங்களை மகிழ்ந்து அணிபவர்களும், தொத்து உறு தொழில் மாலை சுரி குழல் அணி வார்உம் - பூங்கொத்துப்பொருந்திய விசித்திர வேலைப்பாடு அமைந்தமாலையைக் கடைகுழன்ற கூந்தல்மயிரிலே சூடுபவர்க ளும், சித்திரம் நிரை தோயும் செந்துகில் புனைவார்உம-சித்திர வேலைகளின் ஒழுங்கு அமைந்த செந்நிறப்பட்டாடையை உடுப்பவர் களும்,—(எ-று.) சில பிரதிகளில் மூன்றுநான்காமடிகள் மாறிக் கிடக்கின்றன. பி-ம்:—[1] புனைவாரும். [2] அணி. [3] சுற்றுறு. [4] சுருள் குழல், தூசுகள். [5] நிறை. [6] தெய்வச். *(1279)*

37. விடநிகர் விழியாரு [1] மமுதெனு மொழியாரும்
கிடைபுரை யிதழாருங் கிளர்நகை [2] வெளியாரும்
தடமுலை பெரியாருந் தனியிடை சிறியாரும்
[3] பெடையன நடையாரும் பிடியென வருவாரும்.

(இ-ள்.) விடம் நிகர் விழியார்உம்-விஷத்தையொத்த கண் களையுடையவர்களும், அமுது எனும் மொழியார்உம் - அமிருத மென்று சொல்லத்தக்க இன்சொறகளையுடையவர்களும், கிடை புரை இதழார்உம் - செஞ்சடையையொத்த அதரத்தையுடையவர் களும், கிளர் நகை வெளியார்உம் - விளங்குகின்ற புனசிரிப்பின் வெள்ளொளியையுடையவர்களும், தட முலை பெரியார்உம்-விசால மான தனங்கள் பருத்துள்ளவர்களும், தனி இடை சிறியார்உம்-ஒப் பற்ற இடை சிறுத்துள்ளவர்களும, பெடை அனம் நடையார்உம்- அன்னப்பேடையின் நடையைப்போன்ற நடையையுடையவர்களும், பிடி என வருவார்உம்-பெண்யானைகள்போல நடந்துவருபவர்களும், (நகரமாந்தர் ஆயினர்); (எ-று.)

சில செய்யுள் ஆடவரையும் சில மகளிரையும் காட்டுதலால், பொதுவாக 'நகரமாந்தர் ஆயினர்' என வருவித்துமுடிக்கப்பட்டது. நான்கடிகளிலும் முரண்தொடை காண்க. பி-ம்:—[1] அமுதன விழியாரும். [2] இனியாரும், ஒளியாரும். [3] பிடியெனவருவாரும் பெடையென நடையாரும். (1280)

38.—பல செல்வமும் நிறைந்து அம்மணநாள் சிறத்தல்.

உண்ணிறை நிமிர்செல்வ மொரு[1] துறை[2] செலவென்றும்
[3] கண்ணுற லரிதென்றுங் [4] கருதுத லரிதம்மா
[5] எண்ணுறு சுடர்வானத் திந்திரன் முடி [6] சூடும்
மண்ணுறு திருநாளே யொத்ததம் மணநாளே.

(இ - ள்.) உள் நிறை நிமிர் செல்வம் - அந்தமிதிலாநகரத்தினுள்ளே (அப்பொழுது)நிறைந்த சிறந்த செல்வம் (முழுவதையும்), ஒரு துறை செல-(வேறு) ஓரிடத்திற் பொருந்த, கண் உறல்-கண்களால் நோக்குதல், என்றுஉம்-எப்பொழுதும், அரிது-அருமையையுடையதாம்: கருதுதல்-(அவற்றை ஒருசேர மனத்தால்) எண்ணுதலும், என்றுஉம-எப்பொழுதும், அரிது-அருமையையுடையதே; அம்மா - ஆச்சரியம்! அ மணம நாள - அந்தக் கலியாணதினம்,—எண்ணுறு சுடர் வானத்து - (யாவராலும்) நன்குமதிக்கப்படுகிற ஒளியையுடைய தேவலோகத்திலே, இநதிரன் முடி சூடும்-தேவேந்திரன் கிரீடத்தைச்சூடுகின்ற, மண்ணுறு - அலங்காரமமைந்த, திருநாளே-சிறந்ததினத்தையே, ஒத்தது—; (எ-று.)

ஒருதுறை செல - ஒருமுடிவுபொருந்த என்றலும் ஒன்று. கருதுதலரிது - அதுவேகாரியமாய் நினைக்கவேண்டுமென்றாலும் நினைத்துப்பார்க்க முடிவது அரியதாம். பி-ம்:—[1] முறை. [2] சொல. [3] கண்ணிற. [4] கருதுறல். [5] எண்ணுற, எண்ணிடை. [6] சூட. (1281)

வேறு.

39.—தசரதன் கலியாணமண்டபத்தை யடைதல்.

கரைதெரி வரியது கனகம் வேய்ந்தது
வரையென வுயர்ந்தது மணியிற் செய்தது
நிரைவளை மணவினை [1] நிரப்பு மண்டபம்
அரசர்த மரசனு மணுகன் மேயினன்.

(இ - ள்.) கரை தெரிவு அரியது - (நீளம் அகலம் முதலியவற்றின்) எல்லை அறிதற்கு அருமையானதும், கனகம் வேய்ந்தது - பொற்றகடுகளால் மேலேமூடப்பட்டுள்ளதும், வரை என உயர்ந்தது-மலைபோல உயர்ந்துள்ளதும், மணியின் செய்தது - இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்டதுமாகிய, நிரை வளை மணம் வினை நிரப்பும் மண்டபம்-ஒழுங்காகிய (பல) வளையல்களையுடைய சீதையினது கலியாணகாரியத்துக்குரிய பொருள்களை நிரப்பிவைத்துள்ள மண்டபத்தை, அரசர்தம் அரசன்உம் - அரசர்களுக்கு அரசனான தசரதனும், அணுகல் மேயினன் - அடைதலைப்பொருந்தினன்;—(எ - று.)—நிரைவளை-அன்மொழித்தொகை. பி - ம்;—[1] நிரம்பு.

40.—தசரதன் ஏகின விதம்.

வெண்குடை யிளநிலா [1] விரிக்க மின்னெனக்
கண்குடை [2] யினமணி வெயிலுங் கான்றிடப்
பண்குடைட் வண்டினம் [3] பாட வாடன்மா
மண்குடை தூளிவிண் மறைப்ப வேகினான்.

(இ - ள்.) வெண் குடை - வெண்கொற்றக்குடைகள், இள நிலா விரிக்க-இளமையான சந்திரகாந்திபோன்ற காந்தியை வீசவும்,—மின் என - மின்னல்போல, கண் குடை-(பார்ப்பவர்களது) கண்களைக்குடைந்துகூசச்செய்கிற, இனம் அணி - கூட்டமான ஆபரணங்கள், வெயில்உம் கான்றிட - (நிலாவையேயன்றி) வெயிலுக்கு ஒப்பான ஒளியையும் வீசவும்,—குடை வண்டு இனம்- (மாலைகளின் பூக்களிலே) குடைந்துமொய்க்குந் தன்மையனவான வண்டுகளின் கூட்டங்கள், பண்பாட-கீதம்பாடவும்,—ஆடல் மா- வெற்றியையுடைய குதிரைகள், மண் குடை-பூமியை(க் கால்களினால்) அழுத்துதலாலுண்டாகிற, தூளி-புழுதிகள, விண் மறைப்ப- ஆகாயததை மறைக்கவும், ஏகினான் - (தசரதன்) சென்றான்; (எ-று.)—பி-ம்:—[1] விரிக்கும். [2] மணியிள, மணியினம். [3] பாடி.

41.—அப்போது முரசம் முதலியன ஆர்த்தல்.

மங்கல [1] முரசின மழையி னார்த்தன
சங்குகண் முரன்றன தாரை [2] போரெனப்
பொங்கின மறையவர் புகலு நான்மறை
கங்குலி [3] னொலிக்கு [4] மா கடலும் [5] போன்றவே.

(இ - ள்.) (அப்பொழுது), மங்கலம் முரசு இனம்-மங்களகரமான பேரிகைகளின கூட்டம், மழையின் ஆர்த்தன-மேககர்ச்சனை போல ஒலித்தன; சங்குகள் - சங்கவாத்தியங்கள, முரன்றன-ஒலித்தன; தாரை-தாரையென்னும் ஊதுகருவிகள், போர் என பொங்கின-யுத்தத்தில்ஒலிப்பனபோல மிக்கொலித்தன; மறையவர் புகலும்-பிராமணர்கள் எடுத்துச் சொல்லுகிற, நால் மறை-நான்கு வேதங்கள், கங்குலின் ஒலிக்கும் மா கடல்உம்போன்ற-இராத்திரி காலத்தில் மிக்கொலிக்கிற பெரிய கடலின் ஓசையையும் ஒத்தன;

மங்கலமுரசு, கொடைமுரசு, வெற்றிமுரசு என முரசு மூவகைப் படுதலின், இங்கு 'மங்கலமுரசினம்' என்றார். போரென-அநுகரண வொலியென்பாரும் உளர். பி - ம்:—[1] பேரிகை. [2] பொமபின, பொம்மென. [3] ஆர்க்கும். [4] அக். [5] ஒத்தவே. சிலபிரதிகளில், இது, "எண்டவ" (46) என்பதன்பின். (1284)

42.—சேனைகளும் மன்னவரும் அத்தசரதனுடன் வருதல்.

பரந்ததேர் களிறு [1] பாய் புரவி பண்ணையில்
தரந்தர [2] நடந்தன தானை வேந்தனை
நிரந்தரந் தொழுதெழு நேமி மன்னவர்
புரந்தரன் [3] புடைவரு மமரர் [4] போன்றனர்.

(இ-ள்.) பரந்த-பரவின, தேர் - இரதங்களும், களிறு-யானை களும், பாய் புரவி - பாய்ந்துசெல்லுந்தன்மையனவான குதிரை களும், பண்ணையின் - கூட்டங்கூட்டமாய், தரம் தரம் - இனம் இனமாக, நடந்தன-சென்றன; தானை வேந்தனை-சேனையையுடைய தசரதசக்கரவர்த்தியை, நிரந்தரம்-இடைவிடாமல் [எப்பொழுதும்], தொழுது எழும்-வணங்கியெழுகின்ற, நேமிமன்னவர்-ஆஜ்ஞாசக் கரத்தையுடைய அரசர்கள், புரந்தரன் புடைவரும் அமரர் போன் றனர்-இந்திரனது பக்கங்களிலே வருகிற தேவர்களை ஒத்தார்கள்; (எ-று.)—பண்ணை - சிறப்புப்பெயர், பொதுப்பொருளை யுணர்த் திற்று. பி-ம்:—[1]மாபுரவி, பாய்பரியின். [2]நடந்தது. [3]உடன். [4]போன்றதே. (1285)

43.—யாவரும் ஆசனத்து அமர்தல்.

அணையவன் மண்டப மணுகி யம்பொனின்
புனைமணி யாதனம் பொலியத் தோன்றினன்
[1]முனைவரு மன்னரு முறையி [2]னேறினர்
சனகனுந் தன்கிளை தழுவ வேறினன்.

(இ-ள்.) அணையவன் - அத்தன்மையனாய்வந்த தசரதசக்கர வர்த்தி,—மண்டபம் அணுகி - விவாகமண்டபத்தையடைந்து, (அங்கு), அம் பொனின் புனை மணி ஆதனம்-அழகிய பொன்னினா லமைத்து இரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ள ஆசனத்திலே, பொலிய-(அவ்வாசனம்) விளங்கும்படி, தோன்றினன்-ஏறி வீற்றி ருந்தான்; முனைவர்உம்-முனிவர்களும், மன்னர்உம்-அரசர்களும், முறையின்-(அவரவர்க்குரிய) முறைமைப்படி, ஏறினர்-(தத்தம் தகுதிக்குஏற்ற ஆசனங்களில்) ஏறி வீற்றிருந்தார்கள்; சனகன் உம்-சனகராசனும, தன் கிளை தழுவ-தனது பந்துவர்க்கஞ் சூழ்ந்து நிற்க, ஏறினன்-(ஓர் ஆசனத்தில) ஏறி வீற்றிருந்தான்; (எ-று.)— பி-ம்:—[1]முனிவரும். [2]எய்தினர். (1286)

44.—இதுமுதல் மூன்று கவிகள்-மண்டபத்தின் வருணனை.

மன்னரு முனிவரும் வானு ளோர்களும்
அன்னமென் னடையணங் கனைய மாதரும்
துன்னினர் [1]துவன்றலிற் சுடர்கள் சூழ்வரும்
பொன்[2]மலை [3]யொத்ததப் பொருவில் கூடமே.

(இ-ள்.) மன்னர்உம்-அரசர்களும், முனிவர்உம் - முனிவர் களும், வான் உளோர்கள்உம்-மேலுலகத்துள்ள தேவர்களும், அன் னம் மெல் நடை அணங்கு அனைய மாதர்உம்-அன்னப்பறவையின் நடைபோல் மென்மையான நடையையுடைய திருமகளையொத்த மாதர்களும், துன்னினர் துவன்றலின்-நெருங்கிவந்து நிறைதலால், —அ பொருவு இல் கூடம்-(வேறு) ஒப்புமையில்லாத அந்தக் கலி யாணமண்டபமானது,—(அப்போது), சுடர்கள் சூழ் வரும் பொன் மலை ஒத்தது-(சூரியன்முதலிய) எல்லாவொளிகளாலும் வலஞ் செய்துவரப்பெறும் பொன்மயமான மேருமலையை ஒத்தது;

கூடத்துக்கு-மேருவும், அதில் எங்கும்நிறைந்த மன்னராதியோர்க்கு - சுடர்களும் உவமை. தேவாதிதேவனாகிய திருமால் தேவர்களுக்குப்பகைவரான அரக்கரை அழித்தற்பொருட்டு அவர்களவேண்டுகோளால் திருவவதரித்துத் திருமகளை மணம்புணர்தலால், தேவர்களும் அத்திருமணத்துக்குவந்தனர். பி-ம்:—[1] துவன்றினர். [2] வரை. [3] ஒத்தது. (1287)

45. புயலுள மின்னுள பொருவின் மீனுள
இயன்மணி யினமுள [1] சுடரி ரண்டுள
மயன்முதற் றிருத்திய மணி[2] செய் மண்டபம்
அயன்முதற் றிருத்திய வண்ட [3] மொத்ததே.

(இ - ள்.) மயன்-மயனென்னும் அசுரத்தச்சனால், முதல்-ஆதிகாலத்திலே, திருத்திய-திருத்தமாக அமைக்கப்பட்டுள்ள, மணி செய் மண்டபம் - இரத்தினங்களைப்பதித்துச் செய்யப்பட்ட அம்மண்டபத்திலே, புயல் உள-(அப்பொழுது கைம்மாறுகருதாமலீயுந்தன்மையுள்ள ஆடவர்பலர் வந்து கூடியுள்ளதனால்) மேகங்கள் உள்ளன; மின் உள-(ஒளிய மெல்லிய உடம்பையுடைய மகளிர் பலர் வந்துகூடியுள்ளதனால்) மின்னல்கள் உள்ளன; பொரு இல் மீன் உள-(பிரதான அரசர்கள்பலர் வந்துகூடியுள்ளதனால்) ஒப்பில்லாத நட்சத்திரங்கள் உள்ளன; இயல் மணி இனம்உள-(அவர்களது பரிசனவருக்கங்கள் பல வந்துகூடியுள்ளதனால்) ஒழுங்கான தாரகைகளின் இனங்கள் உள்ளன; சுடர் இரண்டுஉள-(தசரதனும் சனகனும் வந்து கூடியுள்ளதனால்) சூரியசந்திரமண்டலங்கள் உள்ளன; (ஆதலால் அம்மண்டபம்), அயன் முதல் திருத்திய அண்டம் ஒத்தது-(மேகங்களையும் மின்னல்களையும் நட்சத்திரங்களையும் தாரகைகளையும் சூரியசந்திரர்களையும் தன்னிடத்தில் உடையதாகப்) பிரமதேவனால் ஆதிகாலத்தில் அழகாகப் படைக்கப்பட்ட அண்டகோளத்தை ஒத்திருந்தது; (எ - று.)

நக்ஷத்திரங்கள்-அசுவினிமுதலிய இருபத்தேழும், தாரகை-பிற அளவிறந்த நட்சத்திரங்களுமாம். இரத்தினம்போல அழகும் விளக்கமும் உடையனவாக வானத்திலே விளங்குதலால், தாரகைகள் 'மணியினம்' எனப்பட்டன. இனி, இவை சூரியசந்திரரொழிந்த மற்றையேழுகிரகங்களென்றுமாம். "சந்திர னிரவி தன்னைச் சார்வதோர் தகைமைதோன்ற, இந்திர திருவன்றன்னை யெதிர்கொள்வானெழுந்து போந்தான்" எனக் கீழ் எதிர்கொள்படலத்திலும் சனக தசரதர்க்கு முறையே சந்திரசூரியரை உவமை கூறிப்போந்தவாறு உணர்க. வள்ளல்கள் முதலியோரைப் புயல் முதலியனவாக உவமைமுகத்தாற் கூறினர். புயல், மின் என்றது - இராமனையுஞ் சீதையையுமென உரைக்கலாகாது; இச்சமயத்தில் அவர் அம்மண்டபத்தில் வந்திலராதலால். இனி, புயல்-மகளிர் கூந்தல், மின் - அவர்களிடை, மீன்-விழி, மணியினம் - ஆபரணம் எனக்கொண்டு பொருளுரைப்பாருமுளர். இம்மண்டபம் மேகம் மின்னல் முதலியவற்றை அளாவி ஓங்கியுயர்ந்துள்ளதாதலால், இங்ஙனம் கூறப்பட்டதென்று உரைத்தலும் ஒன்று. பொரு வில் மீன் எனப்

பிரித்து-மாறுபடுகிற ஒளியையுடையனவான மீனெனவுங்கொள்ளலாம். புயல் உள மின் என எடுத்து, மேகத்திலுள்ள மின்னலென்றுமாம். பி - ம்:—[1]சுடருமீன்றன, சுடருமீண்டுள, சுடருமீன்றுள. [2]கொள். [3]போன்றதே. (1288)

46. எண்டவ முனிவரு [1]மிறைவர் யாவரும்
அண்டரும் பிறரும்புக் கடங்கிற் ருதலின்
[2]மண்டபம் வையமும் வானும் வாய்மடுத்து
உண்டவன் மணியணி யுதர [3]மொத்ததே.

(இ - ள்.) எண்-(யாவராலும்) நன்கு மதிக்கத்தக்க, தவம் - தவத்தையுடைய, முனிவர்உம்- (வசிட்டன் கௌசிகன் முதலிய) இருடிகளும், இறைவர் யாவர்உம் - (தசரதன் சனகன் முதலிய) அரசர்களெல்லோரும், அண்டர்உம்-தேவர்களும், பிறர்உம் - மற்றையோரும், புக்கு அடங்கிற்று-வந்துசேர்ந்து (தன்னிடத்தில்) அடங்கப்பெற்றுள்ளது, (அம்மணடபம); ஆதலின,—மண்டபம் - அந்த மண்டபமானது,—வையம்உம் வான்உம வாய்மடுத்து உண்டவன் - மண்ணுலகமும் விண்ணுலகமு முட்பட அண்டமுழுவதையும் (பிரளயகாலத்திலே) தன் திருவாயிலேயிட்டு உட்கொணடருளிய திருமாலினது, மணி அணி உதரம்-நீலமணியினிறமுள்ள அழகிய திருவயிற்றை, ஒத்தது—; (எ-று.)

கீழ் நகரப்படலத்தில் "ஊழியி னிறுதி யுறையுளோ" என உவமை கூறியவாற்றை இங்கே உணர்க. சிலபிரதிகளில், இது அடுத்தபாடலுக்குப்பின். மணியணியுதரத்தோடு சேரும்போது, இறைவர் - பிரமன் சிவன் என்ற தலைவர்களென்க. அண்டங்கள் யாவும் வாய்மடுத்து உண்டவனென்பார், அவற்றிற்குக் காரணமாகிய பஞ்சபூதங்களுள் வையமும் வானமுமாகிய கடையும் முதலும் எடுத்துக்கூறினர். பி - ம்:—[1]அரசர். [2]அண்டமும் வானமுமண்ணும், மண்டபம்வானமுமண்ணும். [3]போன்றதே, போலுமே.

47.—கவிக்கூற்று.

தராதல முதலுல கனைத்துந் தள்ளுற
விராவின [1]குவிந்தன விளம்ப வேண்டுமோ
அராவணை[2]துறந்துபோந் தயோத்தி [3]யெய்திய
இராகவன் [4]செய்தியை [5]யியம்பு வாமரோ.

(இ - ள்.) தராதலம் முதல் - பூலோகம் முதலான, உலகு அனைத்துஉம்-எல்லாலோகததுச்சனஙகளும, தள்ளுற - (சீதாராம விவாகத்தைத் தாம் தாம் பார்ககவேணடுமென்று தனித்தனி எழுந்த ஆசை தம்மைத்) தூண்டிச் செலுததலால், விராவின குவிநதன-(ஒன்ரூடொனறு) நெருஙகினவாய(அம்மண்டபத்தில்) வந்து கூடின; (எனருல்), விளம்ப வேண்டுப்ஓ-(அதனைத் தனித் தனி எடுத்துச்) சொல்லவேண்டுமோ? [வேணடாவென்றபடி]; அரா அணை துறந்து போந்து - ஆதிசேஷனுகியசயனத்தை நீஙகி வந்து, அயோத்தி எய்திய-அயோததியெனனும் நகரததில் அவதரித்த, இராகவன - ஸ்ரீராமபிரானது, செயதியை—,இயம்புவாம்-(இனிக்) கூறத்தொடஙகுவோம்; (எ-று.)—அரோ-ஈற்றசை.

அந்த இடத்து எல்லா வுலகத்தவரும் திருமணத்தைத் தரிசிக்கவந்தனர்; அங்ஙனம் வந்ததைப்பற்றித் தனித்தனிச் சொல்ல வேண்டுவது அவசியமில்லையாதலால் அதனையொழித்து, இனி இராமன் செய்தியைச்சொல்லுவோமென்பதாம். தள்ளுற தள்ளாட எனினுமாம். பி - ம்:—[1]குவிந்துழி. [2]பாழ்பட, துறந்துபோய். [3]நண்ணிய. [4]செய்கையை. [5]விளமபுவாம். (1290)

48, 49, 50.—இம்மூன்றுகவிகள் - குளகம்: இராமபிரான் நீராடித் திருமண் தரித்துக் குலதெய்வத்தை வணங்குதலைக் கூறும்.

48. [1]சங்கினந் தவழ்கட லேழிற் [2]றந்தன
சிங்கலி [3]லருமறை [4]தெரிந்த [5]தீர்த்தங்கள்
[6]கங்கையே [7]முதலிய கலந்த நீரினல்
மங்கல மஞ்சன மரபி [8]னாடியே.

49. என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்
[1]நின்ற [2]பே ரிருளினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் [3]சேர்த்திடு
தன்றிரு நாமத்தைத் தானும் சாத்தியே.

50. கோதறு தவத்துத் [1]தன் குலத்து ளோர்தொழும்
ஆதியஞ் [2]சோதியை யடிவ ணங்கினான்
கா [3]தியல் [4]கயல்விழிக் கன்னி மார்களை
வேதியர்க் கருமறை விதியி னல்கியே.

(இ - ள்.) (48) சங்கு இனம்-சங்குகளின் கூட்டங்கள், தவழ்-(தம்மிடத்திலே) தவழப்பெற்ற, கடல் ஏழின் - ஏழுகடல்களினின்றும், தந்தன-கொணர்ந்துவந்து கொடுக்கப்பட்டனவாகிய, தீர்த்தங்கள்-தீர்த்தங்களினாலும், சிங்கல் இல் அரு மறை தெரிந்த - அழிதலில்லாத [நித்தியமான] அறிதற்கரிய வேதங்களில் ஆராய்ந்து சிறப்பித்துக்கூறப்பட்ட, கங்கை ஏ முதலிய கலந்த நீரினால்-கங்காநதிமுதலியவற்றிற் பொருந்தின தீர்த்தங்களினாலும், மரபின்-சாஸ்திர விதிப்படி, மங்கலம் மஞ்சனம் ஆடி-(இராமபிரான் தான்) மங்கலஸ்நானஞ்செய்து,—(49) என்றுஉம் - எப்பொழுதும், நான் முகன்முதல் யார்உம்-பிரமதேவன் முதலாகவுள்ள உயர்திணையோரெல்லோரையும், யாவைஉம் - மற்றை அஃறிணைப் பிராணிவருக்கமனைத்தையும், நின்றபேர் இருளினை நீக்கி - (அவ்வவ்வுயிரைவிடாது சூழ்ந்து) நின்ற (கருமமாகிய) பெரிய இருளை ஒழித்து; நீள் நெறி சென்று மீளா குறி சேர - நெடுந்தூரமாகிய வழியிலே போய் மீளாத உலகமாகிய பரமபதத்தினிடத்தை யடையும்படி, சேர்த்திடு - (அவ்வுயிர்களை அங்குச்) சேர்க்கவல்ல, தன திரு நாமத்தை-தனக்குஉரிய திருமண்காப்புக்குறியை, தான்உம்சாத்தி-(அப்பொழுது இராமபிரான்) தானுந் தரித்து,—(50) காது இயல்-காதுவரையிலும் பொருந்துகிற [மிகநீண்ட], கயல் விழி - கயல் மீன்போற் பிறழ்கின்ற கண்களையுடைய, கன்னிமார்களை-கன்னிப் பெண்களை, வேதியர்க்கு-வேதம்வல்ல அந்தணர்க்கு, அரு மறை

விதியின் - அறிதற்கரிய வேதத்திற் கூறிய விதிப்படி, நல்கி - கொடுத்து, கோது அறு தவத்து தன் குலத்துளோர் தொழும் ஆதி அம் சோதியை - குற்றமற்ற தவமுடைமையினாலே தனது குலத்திலுள்ள அரசர்களெல்லோரும் வணங்கி வருகிற [தனது குலதெய்வமான] முதன்மையான அழகிய ஒளியையுடைய ஸ்ரீரங்க நாதனை, அடி வணங்கினான் - திருவடிகளை நமஸ்கரித்தான்; (எ-று.)

48:—பி - ம்:—[1]சங்கொடும், சங்குகள். [2]தந்தவும். [3]எழுமுறை, நான்மறை. [4]சிறந்த. [5]தீர்த்தமும். [6]கங்கையின். [7]முதலவும். [8]ஆடினான், ஆட்டினான்.

49:—தன்னை நெற்றியிலே தரித்த பிராணிகளனைத்தையும் இறுதியிற் கருமமொழித்து மீளுதலில்லாத முத்தியைப் பெறுவிப்பது திருமண்காப்பென்னும் ஊர்த்துவபுண்ட்ரமென்க. நீணெறி - மோட்சத்திற்குச் செல்லும்படியான அர்ச்சிராதிமார்க்கம். நின்ற பேரருள் - அழியாதுநின்ற மூலப்பிரகிருதியுமாம். மேல் நோக்கி உயர்ந்து செல்லுந் தோற்றத்தையுடைய திருமண்காப்பு, எல்லாப் பதவிகளிலும் மேம்பட்டு உயர்ந்துள்ள முத்தியைத் தான் கொடுத்தற்கு அறிகுறியாமென்பர். சுவர்க்கம் முதலிய பதவிகளை அடைந்தவர்களபோலச் சிலகாலம் இன்பம் நுகர்ந்து பின்பு மீண்டும இவ்வுலகத்தில் இறங்கிவருதல் முத்திபெற்றவர்க்கு இல்லையாமாதலால், 'மீளாக்குறி' என்று அதற்கு ஒருபெயர் கூறினார். தன் திருநாமம் - விஷ்ணுசமய சம்பந்தத்துக்கு அறிகுறியாக அணியப்படும் நாமம். உலகத்தில் எல்லோர்க்கும் குரு சிஷ்யக்கிரமத்தை இத்தன்மைத்தென்று தெரிவித்தற்பொருட்டுத் திருமால் தானே பதரிகாச்சிரமத்தில் நாராயணனென்னும் குரு நரனென்னும் மாணாக்கனுக்குத் தத்துவ முபதேசிப்பதாக இரண்டு வடிவுகொண்டு நின்றதுபோலவும், தவம் செய்யும்விதம் இத்தகையதென்று உணர்த்தும்பொருட்டு விஷ்ணு வாமனரூபியாய்ச் சித்தாச்சிரமத்தில் தவஞ் செய்திருந்தது போலவும், யாவருந் திருமண்காப்பை யணிந்து உய்யுநெறியை அறிவிக்குமபொருட்டு இராமன் தன் திருநாமத்தைத் தானுஞ் சாத்தினானென்க. இங்ஙனம் கூறியதனால், கம்பர் திருமண்காப்புத்தரிக்கும் வைணவசமயத்தவராதல் பெறப்படும். இனி இச்செய்யுளுக்கு - தனது அழகிய திருப்பெயரைத் தான் சொல்லி என்று உரை கூறுவாருமுளர்; 'கேசவாயநம:' என்று தொடங்கித் திருமாலினது துவாதச நாமங்களையே முறையே சொல்லிய வண்ணம் பன்னிரண்டிடத்துத் திருமண்காப்புத்தரித்தல் விதியாதலறிக. அவ்வுரைக்கு 'சாற்றி' எனப் பாடங்கொள்ள வேண்டும். இச்செய்யுள - சில பிரதிகளில் 66-ஆவது செய்யுளாகவும், சிலபிரதிகளில் 67-ஆவது செய்யுளாகவுங் காணப்படுகின்றது; இது, சில பிரதிகளிலில்லை. பி - ம்:—[1]நின்று. [2]பேரருளினை, பேரிருவினை. [3]சேர்த்திய, சேர்த்துறும்.

50.—இச்செய்யுளில், முதலிரண்டடி - இராமன் குலதெய்வந் தொழுதலையும், பின்னிரண்டடி - கன்னிகாதானஞ் செய்தலையுங் கூறின. பிரணவாகாரமான ஸ்ரீரங்கவிமானத்தி லெழுந்தருளிய

ஸ்ரீரங்கநாதனே, இட்சுவாகுமுதல் இராமபிரானீருகவுள்ள சூரியகுல வரச ரெல்லோர்க்குங் குல தெய்வமாகி விளங்கினன்: அம்வெம் பெருமானே, இச்செய்யுளில் 'ஆதியஞ்சோதி' எனக் குறிக்கப் பட்டவன். தசரதன் தான் மிதிலைக்கு வரும்போது ஸ்ரீரங்கநாத னையும் உடன் எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்தானென்றுவது, ஸ்ரீராமன் ஸ்ரீரங்கநாதனைத் தன் மனத்தினால் தியானித்துவணங்கி னனென்றுவது கொள்க. ஆதியஞ்சோதி-தனது அவதாரத்துக்கு முதன்மையான ஒளிவடிவம். பி-ம்:—[1]தம். [2]சுடரினை, டரமனை. [3]இகல். இயங்கு. [4]அயில். (1293)

51.—இனி, பதினெட்டுக் கவிகள் - ஸ்ரீராமன் கோலம் புனைந்ததைக் கூறும்.

[1]அழிவரு தவத்தினே டறத்தை யாக்குவான்
ஒழிவருங் கருணையோ ருருவு [2]கொண்டென
எழுதரு வடிவுகொண் டிருண்ட மேகத்தைத்
தழுவிய நிலவெனக் கலவை [3]சாத்தியே.

இதுமுதல் ஐந்து கவிகள்-குளகம்

(இ-ள்.) அழி வரு - (தன்னைக்காப்பவரில்லாமையால் இரா வணன் முதலிய இராக்கதரால்) அழிந்துவருகின்ற, தவத்தினோடு- தவத்தையும், அறத்தைஉம் - தருமத்தையும், ஆக்குவான்-மீண் டும்வளர்த்திடுவதற்கு, ஒழிவு அருங் கருணை-நீங்குதலில்லாத [கட வுளுக்கு இயற்கையான] அருளானது, ஓர் உருவுகொண்டு என - ஒரு மனிதவடிவத்தை எடுத்தாற்போல, எழுது அரு வடிவு கொண்டு-(சித்திரத்தில்) எழுதுதற்குங்கூடாத [மிக அழகிய] வடி வத்தைப்பெற்று, இருண்ட - கருத்த நிறத்ததான, மேகத்தை—, தழுவிய நிலவு என - தழுவுகிற வெண்ணிலாவைப்போல, கலவை சாத்தி-கலவைச்சந்தனத்தை எடுத்துத் தரித்து.—(எ - று.)

இதனால், கலவைச்சாந்து அணிந்தமை கூறப்படுகின்றது. எம் பெருமானது திருமேனியை நோக்கினமாத்திரத்திலே அவனது இயற்கைக்கருணையின்மிகுதி தோன்றுதலால், 'கருணையோருருவு கொண்டென' எனப்பட்டது. 'அழிவரு தவத்தினோ டறத்தை யாக்குவான்' என்றது - துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டே திருவவதாரமாதலால். முன்னே 'தவம்' என வந்த தனால், பின்னே அறம்என்றது-அஃதொழிந்தபிறவற்றை. அழிவு அரு-அழிதற்குத்தகாத என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]அழி வருந். [2]கொண்டன. [3]சாத்தினன். (1294)

52. மங்கல முழுநிலா மலர்ந்த திங்களைப்
[1]பொங்கிருங் கருங்கடல் பூத்த தாமெனச்
செங்கிடைச் சிகழிகைச் செம்பொன் [2]மாலையும்
தொங்கலுந் துயல்வரச் சுழியஞ் [3]சூடியே.

(இ-ள்.) மங்கலம் - மங்கலமான [அழகிதான], முழு நிலா- பூரணமான (தனது) கலைகளோடு (கூடி), மலர்ந்த-விளங்குகின்ற, திங்களை-சந்திரமண்டலத்தை, பொங்கு இரு கரு கடல் பூத்தது

ஆம் என-(நீர்) பொங்குந் தன்மையதான பெரிய கரியகடல் (தன்னிடத்திலே) பூக்கப்பெற்றது போலு மென்று உவமைகூறும்படி, செம் இடை சிகழிகை - சிவந்த இடையென்னுஞ்சடையினால் தொடுத்த மாலையும், செம் பொன் மாலை உம்-சிவந்த பொன்னினாற் செய்யப்பட்ட மாலையும், தொங்கல்உம் - பூமாலையும், துயல்வர - அசையாநிற்கையில், சுழியம் சூடி-சுழியமென்ற அணிகலத்தை முடியிலே தரித்து,—(எ-று.)

இதனால், சுழியமென்ற அணிகலன் அணிந்தமை கூறப்படுகின்றது. பொங்கிருங்கருங்கடல்-அசைகிற பெரிய திருக்குழற்றொகுதி முடிக்கும்,முழுநிலாமலர்ந்ததிங்கள்-அம்மயிர்முடியில் விளங்குவதாகி வயிரமணிகளாலியன்ற சுழியமென்ற அணிகலத்துக்கும் ஒப்பு. சூழியம் என்று, மகளிர் உச்சிகொண்டையில் அணிவதாக ஓர் அணிகலன் திருவிளையாடற்புராணம் முதலியவற்றில்வந்துள்ளது. அச்சொல்லே சுழியம் என்று ஒருகால் குறுக்கல் விகாரம் பெற்று வந்திருக்கலாம். அந்தச்சுழியம்என்ற அணிகலனையடுத்துச் சிகழிகையும் செம்பொன்மாலையும் பூத்தொங்கலும் அசையா நிற்கு மென்க. பி-ம்:—[1]பொங்கிய, பொங்கிருள். [2]மவுலியும். [3]சூட்டிய, சூடினன். *(1295)*

53. ஏதமி லிருகுழை யிரவு நன்பகற்
காதல்கண் டுணர்ந்தன கதிருந் திங்களும்
சீதைதன் கருத்தினைச் செவியி னுள்ளுறத்
தூது[1]வந் துரைப்பன போன்று தோன்றவே.

(இ-ள்.) இரவு-இராத்திரிகாலத்திலும், நல் பகல் - விளக்கமுடைய பகற்காலத்திலும், காதல் கண்டு உணர்ந்தன - (பிராட்டிபடுகிற) காதல் நோயைப் (பிரதியட்சமாகப்) பார்த்து அறிந்தவையாகிய, கதிர்உம்-சூரியனும், திங்கள்உம்-சந்திரனும், தூது வந்து - தூதாகவந்து, செவியின் உள் உற-(இராமனது) காதுகளினுள்ளே பொருந்தும்படி, சீதை தன் கருத்தினை - அச்சீதையினது எண்ணத்தை, உரைப்பன போன்று - சொல்வனவற்றை ஒதது, ஏதம் இல் இரு குழை-குற்றமில்லாத இரண்டுகுண்டலங்கள், தோன்ற-(தன் காதுகளிலே) விளங்க,—(எ-று.)—பி-ம்:—[1]சென்று.

இதனால், குண்டலம் அணிந்தமை கூறப்படுகின்றது. இரு காதுகளிலும் குண்டலந் திகழ்வது, சூரியசந்திரர் சீதையின் கருத்தினை இரகசியமாய்ச் சொல்லுதற்குஇராமனதுசெவியை வந்தடைந்திருப்பதுபோலு மென்றார்; தன்மைத்தற்குறிபபேற்றவணி. இரவு பகல்களை வைத்த முறைமைக்கு ஏற்பத திங்களும கதிரும என நிறுத்தாதது, எதிர்நிரனிறைப்பொருள்கோள். குண்டலத்துக்குச் சூரியசந்திரர் வட்டவடிவாலும் மிக்கஒளியாலும் உவமம். *(1296)*

54. கார்[1]விடக் கறையுடைக் கணிச்சி வானவன்
வார்சடைப் புடையினோர் மதி[2]மிலைச்சத்தான்
சூர்சுடர்க் [3]குலமெலாஞ் சூடி னானென
வீரபட் டத்தொடு திலத மின்னவே.

(இ - ள்.) கார் விடம் கறை உடை-கருநிறத்ததான விஷத்தின் கருநிறத்தை(க் கண்டத்திலே)யுடைய, கணிச்சி வானவன்-மழுவெனனும் படையையுடைய தேவனாகிய சிவன், வார் சடைபுடையின்-(தனது) நீண்ட சடையின் மேலிடத்திலே, ஓர் மதி மிலேச்ச - ஒற்றைக்கலையிளஞ்சந்திரனென்றைச் சூடியருள, (அது கண்டு இகலி), சூர் சுடர் குலம் எலாம் தான் சூடினான் என - தெய்வத்தன்மையுள்ள (சூரியன் அக்கினி முதலிய) ஒளிகளின் இனங்களையெல்லாந் தான தலைமேல்தரித்துள்ளவன்போல, வீரபட்டத்தொடு திலதம் மின்ன-(நெற்றியின் மேலிடத்து அணியும) வீரபட்டிகையெனனும் ஆபரணமும் திலகமெனனும் ஆபரணமும் விளங்க,—(எ - று.)

இதனால், வீரபட்டமும், திலகமும் அணிந்தமை கூறப்படுகின்றது. சிவபிரான் மதியென்னுஞ் சுடரை (ஒரு கிரகத்தை) அணிவது கண்டு அவனொடு இகலி மற்றை வானத்துத்தோன்றுஞ் சுடர்களை யெல்லாம் [மற்றைக் கிரகங்களையும] தான் சூடினான்போல வீரபட்டம் திலகம் என்பவற்றை இராமன அணிநது விளங்கினானென்பதாம்; தற்குறிப்பேற்றம். சூர்-தெய்வம். வீரபட்டம் வெற்றியுடை வீரர் அதற்கு அறிகுறியாக நெற்றிமேலணியும் பொன் தகடு. திலதம் - இங்கே, நெற்றிக்குறிப்பொட்டனறு: சுட்டி யென்று திவாகரம். பி - ம்:—[1] நிறக், [2] மிலேச்சினான. மிலேச்சித்தான், [3] குழு. (*1297*)

55. சக்கரத் தயல்வருஞ் சங்க மாமென
[1] மிக்கணி கழுத்தணி தரள வெண்கொடி
[2] மொய்க்குமென குழலினாண் முறுவ லுள்ளுறப்
[3] புக்கன [4] நிறைத்துமெய் [5] பொடித்த போன்றவே.

(இ - ள்.) சக்கரத்து அயல் வரும் சங்கம் ஆம் என-(திருமாலின் சுதரிசனமெனனுஞ்) சக்கராயுதத்தின் அருகிலே வருகிற (பாஞ்சசன்னியமென்னுஞ்) சங்கமாம் (இது) என்று உவமைகூறும் படி, மிக்கு அணி-(தனது திருமுகமண்டலத்தின் கீழே) மிக அழகியதாய் விளங்குகிற, கழுத்து-கண்டத்திலே, அணி- தரித்த, தரளம் வெள் கொடி-கொடிபோன்ற வெண்ணிறமான முத்துமாலைகள், மொய்க்கும் மெல் குழலினாள் முறுவல்-அடர்ந்த மெல்லிய கூந்தலையுடைய சீதையினது புனசிரிப்புக்கள், உள் உற புக்கன -(தன) மனத்திலே பொருந்தப புகுந்தனவாய், நிறைத்து-(அவ்வுள்ளிடம் முழுவதையும்) நிரப்பி, மெய் பொடித்த-(அங்கு அடங்காமல் தனது) திருமேனியின்மேலே வெளிப்பட்டுத் தோன்றியவற்றை, போன்ற—; (எ-று.)

இதனால்,முத்துமாலையணிந்தமை கூறப்படுகின்றது. பல் சிறிது வெளித்தோன்றும் வெண்ணிறமான சீதையின் புன்சிரிப்பின் ஒளிகள் இராமன் உடம்பின்மேற் பரவினாற்போன்றன முத்துமாலைகளெனக; தற்குறிப்பேற்றவுவமையணி. சக்கரம்-முகத்துக்கும்,சங்கம் - கண்டத்துககும், ஒளியும் வடிவுமபற்றிய உவமை. பி-ம்:—[1] மிக்கொளிர். [2] மொய்க்கருங். [3] புக்கென. [4] நிறைந்துமேல். [5] பொடிப்ப.

56. பந்திசெய் வயிரங்கள் பொறியிற் பாடுற
அந்தமில் சுடர் [1]மணி யழலிற் றோன்றலால்
சுந்தரத் தோளணி வலயந் தொல்லைநாள்
மந்தரஞ் சுற்றிய [2]வரவை மானுமே.

(இ - ள்.) பந்தி செய் - ஒழுங்காகப் பதிக்கப்பட்டுள்ள, வயிரங்கள் - வச்சிரரத்தினங்கள், பொறியின் - (பாம்பின்படப்) புள்ளிகள் போல, பாடுஉற - ஒளி பொருந்த, அந்தம் இல் சுடர் மணி - எல்லையில்லாத செந்நிறமாய் விளங்குகின்ற மாணிக்கங்கள், அழலின் - அக்கினிபோல [செந்நிறமாக], தோன்றலால் - காணப்படுதலினால், சுந்தரம் தோள் அணி வலயம் - அழகிய தோள்களில் அணிந்த (தோள்) வளைகள், தொல்லை நாள்-முன்னொருகாலத்திலே [பாற்கடல் கடைந்த காலத்தில்], மந்தரம் சுற்றிய அரவை மானும்-(மத்தாகிய) மந்தரகிரியைச் சுற்றிநின்ற கடைகயிறாகிய (வாசுகி யென்னும் பாம்பை) ஒக்கும்; (எ - று.)

இதனால் தோள்வளையணிந்தமை கூறப்படுகின்றது. தோளுக்கு மந்தரமும், அதைச் சூழ்ந்துள்ள கேயூரமென்னும் ஆபரணத்துக்கு - மந்தரத்தைச் சூழ்ந்த வாசுகியும் ஒப்பாம்; தற்குறிபபேற்றம். கடைகயிறான வாசுகிக்குச் சிரத்தில் மாணிக்கம் அமைந்திருத்தல் கருதி, இந்தத் தோளவளையின் ஒருபுறத்து மேலே சுடர்மணி அழலில்தோன்றுதலைக் கூறினாரென்பாருமுளர். பந்திசெய் என்பதைச் சுடர்மணியோடுங் கூட்டுக. பாடு - பாடம்; பளபளப்பு. பி - ம்:—
[1]ஒளியழல. [2]அரவம். (1299)

57. கோவையின் பெருவட முத்தங் கோத்தன
காவல்செய் தடக்கையி னடுவட் காந்துவ
மூவகை யுலகிற்கு முதல்வ னாமென
ஏவரும் பெருங்குறி யிட்ட [1]போன்றவே.

(இ - ள்.) முத்தம் கோத்தன - முத்துக்களைக் கோத்திட்டனவாகிய, கோவை இன் பெருவடம்-ஒழுங்கானகண்ணுக்கினியபெரிய வடங்கள், காவல் செய் தட கையின நடுவண் - (பகைவரையழித்து எல்லா வுயிர்களையுங) காத்தல் செய்கிற பெரிய கைகளின் நடுவிடத்திலே, காந்துவ - (அணியப்பட்டு) விளங்குபவை,—மூவகை உலகிற்குஉம் முதல்வன் ஆம் என - மூன்றுவகை லோகங்களுக்கும் அநாதியான தலைவன் இராமபிரானேயாவ னென்று, ஏ வரும்- உயர்ச்சி பொருந்திய, பெருகுறி-பெரிய அடையாளம், இட்ட-இட்டவற்றை, போனற - ஒத்தன; (எ-று.)

இதனால், வாகுவலயத்தின் கீழே கைகளிற்கட்டப்படும் முத்துக்குஞ்சங்களை யணிந்தமை கூறப்படுகின்றது. கோவைவடம் மூன்று ஆதலால், இங்ஙனங் கூறினார்போலும். உலகம் பதினன்காயிருக்க 'மூவகையுலகு' என்றது, மேல் கீழ் நடு என்கிற நோக்கததாலெனக. ஏவரும் - எல்லாருமென்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]போலுமே.

58. மாண்டபொன் மணியணி வலயம் வந்தெதிர்
வேண்டினர்க் குதவுவான் [1]விரும்பிக் கற்பகம்

ஈண்டுதன் கொம்பிடை யீன்ற தாமெனக்
காண்டகு தடக்கையிற் கடக மின்னவே.

இதுமுதல் நான்கு கவிகள் - குளகம்.

(இ-ள்.) கற்பகம் - கல்பக விருட்சமானது, எதிர் வந்து வேண்டினர்க்கு உதவுவான் விரும்பி-(தன) எதிரிலே வந்து விரும்பிக் கேட்டவர்களுக்குக் கொடுக்க விருப்பங்கொண்டு, மாண்ட பொன் மணி அணி வலயம்-மாட்சிமைப்பட்ட [சிறந்த] பொன்னினாலும் இரத்தினங்களாலும் ஆகிய அழகிய வளைகளை, ஈண்டு தன் கொம்பிடை - செழித்துவளர்கிற (தனது) பூங்கொம்பிலே, ஈன்றது ஆம் என - உண்டாக்கி வைத்தாற்போல, காண் தகு தட கையில் - (யாவராலும் விரும்பி இடைவிடாது) காணத்தக்க [மிக்க அழகிய] பெரிய [இராமபிரானது) திருக்கையிலே, கடகம் மின்ன - கடகமென்னுங் கைவளைகள் விளங்க,—(எ - று.)

இதனால், கடகம் பூண்டமை கூறப்படுகின்றது. கடகத்தையணிந்தமையைக் கூறக் கருதிய கவி, அதனை நேரே கூறாது 'கடக மின்ன' என்றது - வலயமணிந்த தோள்களில் மனஞ் சென்றதனால் அதைக் குறிப்பிக்க, கற்பகம் மணியணிவலயம் ஈண்டு தன் கொம்பு இடை யீன்றதா மென எனக்கூறி, தோள்வளையோடு சேர்ந்த கை அப்பிரானது மேனியினிருபுறத்திலும் தோன்றியதைக் கூறினரென்ப. உலாவியற் படலத்தும் தோள்களை முற்கூறியமை காண்க. இக்கவிஞர் தோள்களைப் பலவிடத்தும் முற்படப் பேசுவது காணலாம். கற்பகம் - இராமனுக்கும், அதன்கொம்பு கைக்கும் உவமை. பி - ம்:—[1]வேண்டி. (1301)

59. [1]தேனுடை மலர்மகள் [2]திளைக்கும் மார்பினில்
தானிடை விளங்கிய [3]தகையி னாரந்தான்
மீனெடு சுடர்விட விளங்கு [4]மேகத்து
வானிடு வில்லென வயங்கிக் காட்டவே.

(இ - ள்.) தேன் உடை மலர் மகள் - தேனினையுடைய பூக்களிற் சிறந்த செந்தாமரைமலரில்வாழ்கிற திருமகள், திளைக்கும் - இடைவிடாது பயிலுதற்கிடமான, மார்பினில் - (இராமபிரானது) திருமார்பிலே, இடை - நடுவிலே, விளங்கிய-விளங்குகிற, தகையின் ஆரம்-அழகையுடைய (பலவகையிரத்தினமும் பதித்த) ஆரமானது, மீனெடு சுடர் விட விளங்கும் மேகத்து - மின்னலால் ஒளியுண்டாக விளங்குகிற மேகத்தினிடையிலே, வான் இடு வில் என - ஆகாயத்திலே காணப்படுகிற இந்திரவில்போல, வயங்கி காட்ட - விளங்கித் தோன்ற,—(எ - று.)—தான்-அசை.

இதனால், மார்பில் பலவண்ணமணி வடமணிந்தமை கூறப்படுகிறது. திருமகள் விளங்குந் திருமாலின் கரியமார்பு - ஆகாயத்தில் மின்னல் விளங்குங் காளமேகத்துக்கும், மார்பிலணிந்த பன்னிறவிரத்தினமாலை - மேகத்துத் தோன்றும் பன்னிற வானவில்லுக்கும் உபமேயமாம். 'மின' என்பது எதுகை நோக்கி 'மீன்' என ஆயிற்று. பி - ம்:—[1]தேனுகு. [2]தெரிக்கும். [3]தகவில். [4]மேகத்தின்.

60. நணுகவு [1]நிமிரவு நடக்கு [2]ஞானத்தர்
[3]உணர்வினி [4]னொளிதிக ழுத்த ரீயந்தான்
[5]தணிவருங் [6]கருணை தன் கழுத்திற் சாத்திய
மணியுமிழ் கதிரென மார்பிற் றேன்றவே.

(இ - ள்.) நணுகஉம் - (ஒரு பொருளை விரும்பிச்சேரவேண்டு மென்றாற்) சேரவும், நிமிரஉம்-(ஒருபொருளை விட்டுநீங்கி) அப்பாற் (செல்லவேண்டு மென்றாற்) செல்லவும், நடக்கும் - சுவாதீனமாகி யொழுகுகின்ற, ஞானத்தர் - தத்துவ ஞானத்தையுடையவர்களது, உணர்வினின -(குற்றமற்ற) தூய அறிவுபோல, ஒளி திகழ் -(இயற்கையிலே) ஒளி கூடிவிளங்குகிற, உத்தரீயம்-உத்தரீயமானது,—தணிவு அரு கருணை-அடங்குதலில்லாது மேன்மேற பெருகுகிற அருளின் வடிவமானது, தன கழுததில் சாத்திய-தனது கண்டத்திலே தரித்த, மணி உமிழ் கதிர் என-முத்துவடமவீசிய ஒளிபோல, மார்பில் தோன்ற - (தனது) மார்பிலே விளங்க [வெண்பட்டுஉத்தரீயத்தைஇராமபிரான் தானமேலே தரித்துஎன்றபடி],—

இதனால், வெண்பட்டு மேலாடை யணிந்தமை கூறப்படுகின்றது. உத்தரீயம்-மேலாடை: வடசொல். (இதற்கு எதிர்மொழி,அந்தரீயம்; அது-உள்ளாடை.) நணுகவுநிமிரவு நடக்கு ஞானததர் என பதற்கு - தன்னில் அடங்கியிருககவும அடங்காது வரிந்திருக்கவும் பொருந்திய சிறந்த ஞானமுடையவரென்று பொருளுரைப்பாருமுளர். தத்துவஞானம - மெய்யுணர்வு; அதாவது - பிறபபு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீதவையங்களாலன்றி உண்மையால் அறிதல். கீழ் 51 - ஆங்கவியில் "ஒழிவருங்கருணையோருருவுகொண்டென" என்றாராதலின், இங்கே ஸ்ரீராமனை 'தணிவருங் கருணை' என்றார். கதிர் உமிழ் மணிஎன மொழிமாற்றியும் உரைக்கலாம். பி - ம்:—[1]அரியதால், அரியதாய். [2]ஞானத்தான். [3]உணர்வென. [4]ஒளிர்தனி, ஒளிர்தரும். [5]கணி. [6]கலனென.

61. மேவருஞ் [1]சுடரென விளங்கு மார்பினூல்
ஏவருந் தெரிந்தினி [2]துணர்மி னீண்டெனத்
தேவரு முனிவருந் [3]தெரிக்க லாமுதல்
மூவருந் [4]தானென முடித்த தொத்ததே.

(இ - ள்.) மேவு அரு சுடர் என - (மிக்க ஒளியுடைமைபற்றி எவராலும் அருகில்) வநது சேர்தற்குக் கூடாத (சூரிய சந்திர அக்கினியராகிய) முச்சுடர்கள போல, விளங்கும்-பிரகாசிக்கிற, மார்பின் நூல்-திருமார்பிலணியும் பூணூலானது, தேவர்உம் முனிவர் உம் தெரிக்கலா முதல் மூவர்உம தான் என-தேவர்களும் முனிவர்களும் (இன்னதென்று) அறிவித்தல் கூடாத முதனமையான திரிமூர்த்திகளின் சொரூபமும் தானேயா மென்று, ஈண்டு எவர்உம் தெரிந்து இனிது உணர்மின் என-இவ்விடத்தில் எல்லோரும் ஆராய்ந்து இனிமையாக அறியுங்களென்று, முடித்தது ஒத்தது-(அதற்கு அறிகுறியாக) மூன்று ஒன்றாய் முடியபபட்டதைஒத்தது;

மூன்று வட்ங்கள் கூடினதாய்ப் பிரமமுடி பொருந்தினதாய்ப் பிரமசரிய வாச்சிரமத்திற்கு ஏற்ப அணிந்த ஒற்றைப்பூணூலை இங்ஙு

னம் வருணித்தார். பி-ம்:—[1] சுடரொளி. [2] உணரும். [3] தெரிக்கிலா.
[4] தானெனுமுத்தம், தானெனமுடிந்தது. (1304)

62. சுற்று[1] நீடமனியச் சோதி பொங்கமேல்
ஒற்றைமா மணியுமி ழுதர பந்தனம்
மற்றுமோ [2]ரண்ட மு மயனும் வந்தெழப்
பொற்றடந் தாமரை [3]பூத்த [4]போன்றதே.

(இ - ள்.) சுற்றுஉம்-சுற்றுப்புறங்களிலெல்லாம், நீள் தமனியம் சோதி பொங்க-மிக்க பொன்னின் ஒளி விளங்க, மேல் ஒற்றை மா மணி உமிழ்-மேலே ஒன்றாகிய பெரிய இரத்தினம் ஒளி வீசுதற்கு இடமான, உதர பந்தனம்-உதரபந்தனமென்னும் அணியானது,—மற்றுஉம் ஓர் அண்டம்உம் அயன்உம் வந்து எழ-(இவ்வண்டங்களேயன்றி) வேறும் ஓர் அண்டகோளமும் அதற்குரியானொரு பிரமனும் (தன்னிடத்திலே) வந்து தோன்றும்படி, பொன் தட தாமரை பூத்த(து) போன்றது-பொன்மயமானதொரு பெரிய தாமரைமலரை (எம்பெருமான் திருநாபி) மலர்ந்ததை ஒத்தது;

இதனால், உதரபந்தனம் அணிந்தமை கூறப்படுகின்றது. உதரபந்தனம் - அரையாடை நழுவி விழாதபடி வயிற்றின்மீது அணியும் ஓரணியாம். இராமபிரான் அவ்வணியையணிந்தது திருநாபி வேறோர் அயனும் அண்டமுந்தோன்றும் ஒருதாமரையைப் பூத்ததுபோல் விளங்கிற்றென்றார்: தற்குறிப்பேற்றவணி. பொற்றாமரையென்றமையின் 'மற்றுமோரண்டமு மயனும' என்றது. சுற்று நீடமனியச் சோதியை அண்டகோளமாகவும், ஒற்றைமாமணியொளியைப் பிரமதேவனாகவுங் கருதினர்போலும். கடவுள் தனது சங்கற்பத்தினாற் படைத்த அண்டம் பொன்னிறமானதென்று நூல்கள் கூறுவது, இங்குக் கருதத்தக்கது. பி-ம்:—[1] நீடணிமணி. [2] அண்டமோடு. [3] பூப்பது, பூத்தது. [4] ஒத்ததே. (1305)

63. மண்ணுறு சுடர்மணி வயங்கித் தோன்றிய
கண்ணுறு கருங்கட லதனைக் கைவளர்
தண்ணிறப் பாற்கட றழீஇய தாமென
வெண்ணிறப் பட்டொளி [1]விளங்கச் சாத்தியே.

இது முதல் ஆறுகவிகள் - குளகம்.

(இ - ள்.) மண் உறு சுடர் மணி வயங்கி தோன்றிய - சாணைபிடிக்கப்பட்டு விளங்குகின்ற ஒளியையுடைய இரத்தினங்கள் விளங்கிக்காணப்படுதற்கிடமான, கண் உறு கருங் கடல் அதனை-பெருமைமிகுந்த கரிய கடலை, கை வளர் தண் நிறம் பால் கடல்-(அலைகளாகிய) கைகள் வளரப்பெற்ற குளிர்ந்த நிறத்தையுடைய திருப்பாற்கடலானது, தழீஇயது ஆம் என-தழுவியதாகும் (இது) என்று சொல்லும்படி, வெள் நிறம பட்டு-வெண்மை நிறத்தையுடைய பட்டாடையை, ஒளி விளங்க-ஒளி விளங்கும்படி, சாத்தி-(திருவரையிலே) தரித்து [உடுத்தென்றபடி],—(எ-று.)

இதனால், அரையில் வெண்பட்டாடை யணிந்தமை கூறப்படுகிறது. மணிவயங்கு கருங்கடல் - பலவகை இரத்தின அணி

களைப் பூண்ட இராமனுக்கும், பாற்கடல் - வெண்ணிறப்பட்டுக்கும் ஒப்பு; தற்குறிப்பேற்றவணி. கை-பக்கமும், நிறம் - குணமுமாம். கண்ணுறு-எல்லாவிடத்திலும்பொருந்தியஎன்றும், யாவர் கண்ணிலும்படுகிற என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]வயங்கச். (1306)

64. சலம்வரு தரளமுந் தயங்கு நீலமும்
அலம்வரு நிழலுமி ழம்பொற் கச்சினல்
குலம்வரு கனகவான் குன்றை நின்றுடன்
வலம்வரு கதிரென வாளும் வீக்கியே.

(இ - ள்.) சலம் வரு தரளம்உம் - கடல்நீரிலே தோன்றிய முத்துக்களும், தயங்கு நீலம்உம் - விளங்குகிறநீலரத்தினங்களும், அலம் வரு நிழல்உமிழ் - மிகுதிபொருந்திய ஒளியை வீசுதற்கிடமான, அம் பொன் கச்சினல்-அழகிய பொன்னினலாகிய இடையணியினல், குலம் வரு கனகம் வான் குன்றை நின்று உடன் வலம் வரு கதிர் என - சிறப்புப்பொருந்திய பொன்மயமான பெரிய மேரு மலையைச் சேர் வலம்வந்து நிற்கின்ற சூரியனைபோல, வாள் உம்வீக்கி-உடைவாளென்னும் ஆயுதத்தையும்(இடையிலே) கட்டி;

இதனல், உடைவாளை முத்தும் நீலமணியும்பதித்த பொற்கச்சினற் கட்டியமை கூறப்படுகினறது. எம்பெருமானுடைய திவ்வியாயுதங்கள்யாவும் பகைவரோடு பொருங்காலத்து ஆயுதமாகவும், அன்பர்க்கு அழகையும் ஆனந்தத்தையுஞ் செய்து ஆபரணமாகவும் விளங்குமென்பது நூற்றுணிபு: ஆதலால், உடைவாளை ஆபரணமாக இங்குக் கூறினர். எம்பெருமானதுதிருமேனி கருநிறத்ததாயினும் அணிகளினெளியாற் பொன்னிறத்ததாய் விளங்கலின், கனக வான்குன்று அதற்கு உவமைகூறப்பட்டது: "திருமாலுருவொக்கும் மேரு" என்பது, நம்மாழ்வார்பாசுரம். கனகக்குன்று - திருவரைக்கும், கதிர்-உடைவாளுக்கும் உவமை. நின்று வலம்வரு-வலம்வந்துநின்று எனப் பிரித்துக்கூறப்பட்டது. சலம் வரு தரளம்-(நீலரத்தினவொளியோடு) மாறுபடுதல்பொருந்தின முத்து என்றுமாம். அலம்-போதுமென்னும் பொருளதான வடமொழியிடைச்சொல்; இங்கு, மிகுதிப்பொருளது. (1307)

65. முகைவிரி சுடரொளி முத்தின் பத்திவான்
தொகைவிரி பட்டிகைச் சுடருஞ் சுற்றிடத்
தகையுடை வாளெனுந் தயங்கு வெய்யவன்
நகையிள வெயிலெனத் தொங்க லூற்றியே.

(இ - ள்.) முகை விரி-அரும்பிப் பரவுகிற, சுடர் ஒளி - பிரகாசமான கிரணததையுடைய, முத்தின் பத்தி வான் தொகை-முத்துக்களினுடைய வரிசைகளின் மிகுந்த தொகுதிகளாலாகி, விரி-விரிதத, பட்டிகை-அரைப்பட்டிகையென்னும் ஆபரணத்தினது, சுடர்உம் - வெண்மையான ஒளியும், சுற்றிட-சுறறிலுஞ்சூழ்ந்து பொருந்தநிற்கையில்,- தகை உடை வாள் எனும் - அழகையுடைய உடைவாளாகிய, தயங்கு வெய்யவன் - விளங்குகிற சூரியனது, நகை - ஒளி, இள வெயில் என - இளமையான வெயில் போலத்

தோன்றும்படி, தொங்கல் காற்றி - தொங்குவதாகிய இரத்தின மாலையை (அவ்வாளின் அருகில்) தொங்கவிட்டு,—(எ-று.)

இதனால், அரைப்பட்டிகையணிந்தமையும், வாளின்பக்கத்து மணிமாலை தொங்கவிட்டமையும் கூறப்படுகின்றன. முகை விரி - முகைத்து விரிகின்ற. முகை-கூட்டமென்னலுமொன்று. (1308)

66. காசொடு [1] கண்ணிழல் கஞலக் கைவினை
[2] ஏசறு கிம்புரி யெயிறு வெண்ணிலா
வீசலின் மகரவாய் விளங்கு [3] மின்னென
ஆசையை யொளிகளா லளந்து காட்டவே.

(இ - ள்.) காசொடு-இரத்தினங்களினொளியுடனே, கண் நிழல்-(பார்ப்பவர்) கண்களின் ஒளியும், கஞல - (தன்னிடம் பொருந்தி) மிகுந்து நிரம்பும்படி, கை வினை ஏசு அறு - கைகளாற் செய்யப்படுகிற விசித்திர வேலைப்பாட்டிலே குற்றமில்லாத, கிம்புரி-கிம்புரியென்னும் ஆபரணமானது, எயிறு வெள் நிலா வீசலின - (தன) எயிற்றிலிருந்து வெண்ணிறமான சந்திரகாந்தி போன்ற ஒளியை வீசுதலால், மகரவாய்-அந்தக் கிம்புரி, விளங்கும் மின் என - பிரகாசிக்கிற மின்னல்போல, ஆசையை ஒளிகளால் அளந்து காட்ட-திக்குகளின் எல்லையை (இவ்வளவினதென்று தனது) கிரணங்களால் அளவிட்டுக் காண்பிக்கவும்;—(எ-று.)

இதனால், குறங்குசெறியென்னும் ஆபரணம் அணிந்தமை கூறப்படுகினறது. குறங்கு செறி-துடையிற் பொருந்துவது. சுறுமீனினது அங்காந்த வாயின் வடிவமாகச் செய்து அமைக்கப்படுதலின், இது மகரவாயெனவும்படும். "ஒளி திகழ்ந்து, மாழை கொண் மணிமகரங் கௌவி வீற்றிருந்தனவே" என்ற சிந்தாமணியுங் காண்க. கிம்புரி-மகரவாயென்னும் பொருளதாதலை, நெடுநல்வாடையில் "கிம்புரிப்பகுவாயம்பணம்" என்றவிடத்து "மகரவாயாகப் பகுத்த வாயினையுடைய பந்தல்' என்றதனாலு முணர்க. (குறங்கு செறியென்பது-மகளிர் தொடையில் அணிவதாகச் சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய பழைய நூல்களில் வந்துள்ளது. மகரவாய் என்று மகளிர் முகத்துக்குமேலே முடியில் அணியும் அணியாகவும் பண்டை நூல்களில் வந்துள்ளது.) எயிறு வெணணிலா வீசுவது, அவ்வெயிற்றிலிருந்து முத்துச்சரம் தொங்கவிடப்படுதலா லென்பர். இனி, கிபபுரி-மகரவாயின் ஓருறுப்புமாம். அன்றி, கிம்புரி யெயிறு-(கீழ்க்கூறிய உடைவாளினது) பூணுக அமைந்த யானைத் தந்தம் எனறு கொண்டு, அது வெண்ணிலாவை வீசுதலால், மகர வாய் விளஙகும் மின எ்ன-கடலிலே விளங்கும்மின்னல்போல என்றுமாம். கிம்புரியினது அங்காந்தவாயினிடததிலேயுள்ள பற்களின் வெள்ளொளி மகரமீனினது வாயிலே மின்னல் விளங்கினாற் போலவிருக்கு மென்று கூறலுமுண்டு. ஆசையை யொளிகளா லளந்துகாட்டல்-திக்குகளின் எல்லை எவ்வளவுதூரம் உண்டோ அவ்வளவு தூரமுந் தனது ஒளி பரவிச்செல்லுதல். காண்பவர் வேட்கை எவ்வளவோ அவ்வளவும் ஒளிசென்று பரவினவென

ஈற்றடிக்குத் தொனிப்பொருள் கொள்ளலுமாம். பி-ம்:—[1] தண்ணிழல. [2] ஏசலில். [3] வாண்முகம். (1309)

67. இனிப்பரந் துலகினை யளப்ப தெங்கெனத்
தனித்தனித் தடுப்பன போலுஞ் [1] சால்பின
நுனிப்பரு நுண்வினைச் சிலம்பு நோன்கழல்
[2] பனிப்பருந் தாமரைப் பாதம் பற்றவே.

(இ-ள்.) பரந்து உலகினை அளப்பது இனி எங்கு என - பரந்த வடிவமுடையனவாகி (இத்திருவடிகள்) உலகங்களை அளவிடுதல் இனிமேல் எப்படி ஆகுவது? (பார்ப்போம்) என்று கருதியுங் கூறியும், தனி தனி தடுப்பனபோலும் சால்பின-தனியே தனியே தடைசெய்வன போன்ற தகுதியுடையனவாய், நுனிப்பு அரு நுண் வினை சிலம்பு நோன் கழல்-(இத்தன்மைத்தென்று) ஆராய்ந்தறிதற்கு முடியாத நுட்பமான செய்தொழிலையுடைய சிலம்பென்னும் ஆபரணமும் வலிய வீரக்கழலும், பனி பரு தாமரை பாதம் பற்ற-குளிர்ந்த பருத்த [பெரிய] செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை (ச் சுற்றிலும்) பொருந்தவும்,—(எ-று.)

இதனால், சிலம்பும் கழலும் அணிந்தமை கூறப்படுகின்றது. சீர்பாதங்களைச் சுற்றிலுஞ் சூழ்ந்துள்ளனவற்றை, அவற்றின் வளர்ச்சியைத் துணிந்து தடுப்பனவாகக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. இனி-தமமாற் சுற்றிலும் அழுந்தப்பற்றப்பட்டபின்புஎன்றபடி. பனிப்பு அரு எனப் பிரித்து-(சரணமடைந்த அடியவர் பிறவிப் பெருந்துயர்க்கு) அஞ்சிநடுங்குதல்வேண்டாத என்றுமாம். சிலம்பு-ஒலிக்கிற, கழலெனினுமாம். பி-ம்:—[1] சார்பின. [2] பனிப்புறும். ()

68. [1] இன்னண [2] மொளிர்தர விமைய வர்க்கெலாம்
தன்னையே [3] யனையதோர் கோலந் தாங்கினான்
பன்னக மணிவிளக் கழலும் பாயலுள்
அன்னவர் தவத்தினா [4] லனந்த [5] னீங்கினான்.

(இ-ள்.) மணி விளக்கு அழலும்-(தனது) மாணிக்கங்களாகிய தீபங்கள் ஒளிவிளங்கப்பெற்ற, பன்னகம் - ஆதிசேஷனாகிய, பாயலுள்-சயனத்தினிடத்திலே, அனந்தல்-யோகநித்திரை கொள்ளுதலை; அன்னவர் தவத்தினால்-அத்தேவர்கள் செய்த தவத்தின் பயனால், நீங்கினான்-ஒழிந்துநின்ற திருமாலின் அம்சமான இராமபிரான்,—இன்னணம்-இவ்வாறு, ஒளிர்தர-விளங்கும்படி, இமையவர்க்கு எலாம்-தேவகாரிய நிமித்தமாய், தன்னை ஏ அனையது ஓர் கோலம் தாங்கினான்-(வேறு ஒப்பு இல்லாமையால்) தன்னையே தான் ஒப்பதான அலங்காரத்தைத்தரித்தான்; (எ-று.)

சீதாகலியாணம் இராவணசங்காரத்துக்குத் தான் நேரேகாரணமாகாதாயினும் பரம்பரையாகக் காரணமாதலால், 'இமையவர்க்கெலாம்' எனப்பட்டது. இமையவர்க்கெலாந் தன்னையே யனையது எனக்கூட்டி-தேவர்களுக்கெல்லாந் தலைமை பூண்டிருக்கிற தன்னையேபோல எல்லா அலங்காரங்களுக்குந் தலைமைபூண்டு நிற்பதோர் அலங்காரத்தை என்று உரைப்பாருமுளர். "மணிவிளக்காம***

திருமாற்கு அரவு' எனப் பெரியாரும் பணித்துள்ள தனுல்,' பன்னக மண விளக்கழலும் பாயலுள்' எனப்பட்டது. தேவர்களின் வேண்டு கோளால் அரக்கரையழிப்பதன் பொருட்டுப் பாற்கடலுட் பாம்பணை யிற் பள்ளிகொள்ளுதலை யொழித்துவிட்டு இராமனைத் திருவவ தரித்துள்ளா னென்பது,' பின்னிரண்டடியின் கருத்து. அத்திரு வனந்தாழ்வான் தானே இங்கு இலக்குமணனாய்த் திருவவதரித்து இராமனைக் கணப்பொழுதும் விட்டுப் பிரியாமல் சகலவிதகைங் கரியங்களுஞ் செய்து உடன்பொருந்தி நிற்பதனால், 'பன்னக நீங்கினன்' என்னமல், 'பன்னகப் பாயலுளனந்தனீங்கினன்' என்றார். பி - ம்:—[1] இன்னன. [2] ஒளிதர, பொலிதர, மொழிதர. [3] ஒப்பது. [4] அனந்தர். [5] நீக்கினன். இது சில பிரதியில் "முப்பரம்" (69) என்பதன்பின். (1311)

69.—இராமபிரான் கொண்ட கோலத்தின் தன்மை.

முப்பரம் [1] பொருளிற்குண் முதலை மூலத்தை
இப்பரந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
அப்பனை யப்பினு [2] ளமிழ்தந் தன்னையே
ஒப்பனை யொபபனை யுரைக்க [3] வொண்ணுமோ.

(இ-ள்.) மு பரம் பொருளிற்குள் - (மற்றையெல்லாப்பொருள் களினும் மேம்பட்ட திருமால் பிரமன் சிவன் என்னுந் திரிமூர்த்தி களாகிய) மூன்று பரமபொருள்களுள், முதலை-(பிரமன் சிவன் என்னும் மற்றையிரு பொருள்களுக்கும்) முதல்வனாய் நிற்பவனும், மூலத்தை-(இவ்வுலகங்கட்கெல்லாம்) ஆதிகாரணமானவனும், இ பரம் துடைத்தவர் எய்தும இன்பத்தை-இவ்வுலகத்துச் செய்கை களின் சம்பந்தத்தைத் துறந்தவர்கள் (பரமபதத்திற் சென்று) அடைகிற நிரதிசயப்பேரானந்தமயனானவனும், அப்பனை - (யாவர் க்கும்) தந்தையாகுபவனும், அப்பினுள் அமிழ்தந் தன்னை ஒப் பனை - பாற்கடலிற் பொருந்திய தேவாமிருதத்தையே (தனக்கு) உவமையாகவுடையவனுமாகிய (திருமாலின அமிசமான) இராம பிரான் செய்துகொண்ட, ஒப்பனை - அலங்காரத்தைக்குறித்து, உரைக்க ஒணணும்ஓ-(இத்தன்மைத்தென்று) எடுத்துச்சொல்ல முடியுமோ? [முடியாதென்றபடி] (எ - று.)

"முப்பரம் பொருளுக்கு முதல்வன்" என்றார், திருவவதாரப் படலத்தும். 'முப்பரம பொருளிற்குண் முதலை' என்றது-மூவர்க் கும் முதலாம் பொருள் வேறுஉண்டென்று கூறுந் துரீயப்பிரம வாதத்தை ஒழித்தற்கு. அமிழ்தந்தன்னையே ஒபபன்-நாவுக்கு இனிய அமிருதம்போல எல்லாக்கரணங்களுக்கும் இனிய கடவு ளென்றபடி. திருமால் பாற்கடலிற் பள்ளிகொண்டு வாழ்பவனாதலால், 'அப்பினுளமிழ்தம்' என்றது. ஒப்பனை என்னுஞ் சொல் இரண்டனுள், முந்தினது-ஒப்பன் என்பதன் இரண்டாம் வேற் றுமை; பிந்தினது-திரிபில பெயர். பரம், வியூகம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமித்வம் என்னும் எம்பெருமானது ஐவகை நிலைகளுள் பரமபதத்தில் நிற்கும பரத்துவம் 'இப்பரந்துடைத்தவ ரெய்துமின்பத்தை' என்றதனாலும், படைத்தல் காததல் அழித்

தல் தொழில்களுக்கு முறையே உரிய சங்கர்ஷணன் அநிருத்தன் பிரத்தியுமநன் என்னும் மூவரோடு அவர்களுக்கு முதன்மை பூணும் வாசுதேவனுமாகிப் பாற்கடலிலே நிற்கும் வியூகநிலை 'முப்பரம் பொருளிற்குண் முதலே மூலத்தை' என்றதனாலும், எல்லாப் பொருள்களினுள்ளுங் கரந்துறைகிற அந்தர்யாமித்துவமும் அவதாரவடிவாய் நிற்கும் விபவநிலைமையும் 'அப்பினுளமிழ்தந் தன்னையே யொப்பனை' என்றதனாலும், 'செப்பார் திண்வரைசூழ் திருவேங்கட மாமலை யென், அப்பா'' என்றபடி திருவேங்கடம் முதலிய திருப்பதிகளுள் விக்கிரகவடிவமாய் நிற்கும் அர்ச்சையின் நிலை 'அப்பன்' என்றதனாலும் கூறப்பட்டனவென்ப. ஒப்பன் என்றது-விசேடியமாதலின், விபவாவதாரமுணர்த்தும். பரத்துவம் முதலிய ஐவகைநிலைகளை முறையே கூறாமல் மாறிக் கூறியது, அப்பிரானது அழகைப் பேசப் புக்கபோது வாய்குளறித் தடுமாறிய தனாலென்ப. 'ஒப்பனை ஒப்பனையை உரைக்க' என்று இரண்டு செயப்படுபொருள்வந்தன; ஒப்பனது ஒப்பனையையென்று ஆறனுருபாகவிரித்தல், தமிழ் நடை. பி-ம்:—[1] பொருளிற்கும். [2] அமுதை. [3] ஒண்ணுமே, வேண்டுமோ. (1312)

70.—இராமபிரான் தானஞ்செய்துவிட்டுத் தேர்மீது ஏறுதல்.

பல்பதி னாயிரம் பசுவும் பைம்பொனும்
எல்லையி [1]னிலனொடு மணிகள் யாவையும்
[2] நல்லவர்க் குதவின னவிலு நான்மறைச்
செல்வர்கள் [3] வழுத்துறத் [4] தேர்வந் தேறினன்.

(இ - ள்.) (பின்பு), பல் பதினாயிரம் பசுஉம் - பல பதினாயிரக் கணக்குள்ள பசுக்களையும், பைம்பொன் உம் - பசும்பொன்னையும், எல்லை இல் நிலனொடு-வரம்பில்லாத நிலங்களையும், மணிகள் யாவையும்-நவரத்தினங்களையும், நல்லவர்க்கு-நல்லொழுக்கமுடைய அந்தணர்களுக்கு, உதவினன் - தானஞ்செய்தவனாகி, (ஸ்ரீராமன்), நவிலும் நால் மறை செல்வர்கள் வழுத்து உற-(சிறப்பாக) எடுத்துச் சொல்லப்படுகிற நான்குவேதங்களையே செல்வமாகவுடைய அவ்வந்தணர் துதிக்க, தேர் வந்து ஏறினன்—; (எ-று.)

இதனால், இராமபிரான் செய்த கோதானமும், சுவர்ணதானமும், பூதானமும், இரத்தின தானமும் கூறப்பட்டன. நல்லவர்-சற்பாத்திரம். வழுத்துற-ஆசிசொல்லஎனினுமாம். ''ப்ராஹ்மணாநாம் தநம் வேத:'' என்ப ஆதலால், 'நான்மறைச்செல்வர்கள்' என்றது. பி - ம்:—[1] அவனியும். [2] நல்லவர்க்கோக்கியநோக்கின், நல்லவர்க்காக்கியே நோக்கும். [3] வாழ்த்துறத். [4] தேரொன்று. (1313)

71.—இருகவிகள் – இராமபிரானேறிய தேரின் வருணனை.

பொற்றிர [1] ளச்சது வெள்ளிச் சில்லிபுக்கு
உற்றது வயிரத்தி [2] னுற்ற தட்டது
[3] சுற்றுறு நவமணி சுடருந் [4] தோற்றத்தது
ஒற்றையா ழிக் [5] கதிர்த் தேரொ [6] டொத்ததே.

(இ - ள்.) பொன் திரள் அச்சது - பொன்னாலாகிய திரண்ட அச்சையுடையதும், வெள்ளி சில்லி புக்கு உற்றது - வெள்ளியினாலாகிய சக்கரங்கள் தகுதியாய்ப் பொருந்தப்பெற்றதும், வயிரத்தின் உற்ற தட்டது-வச்சிர ரத்தினத்தாற் செய்யப்பட்டுப் பொருந்தின தட்டையுடையதும், சுற்று உறு நவ மணி சுடரும் தோற்றத்தது-சுற்றிலும் பொருந்திய நவரத்தினங்கள் (நெடுந்தூரத்தளவும்) விளங்குகிற காட்சியையுடையதுமாகிய அவ்விராமனதேர், ஒற்றை ஆழி கதிர் தேரொடு ஒத்தது-ஒற்றைச் சக்கரத்தையுடைய சூரியனது இரதத்தோடு ஒத்து விளங்கிற்று; (எ - று.)

சூரியன்தேர்-ஒளிக்கும், சலியாது விரைந்துசெல்லுதற்கும், எம்பெருமான் எழுந்தருளியிருக்கும இடமாவதறகும் உவமை. பி-ம்:—[1] அச்சுருள். [2] ஊற்றத். [3] சுற்றுவ. [4] தோற்றததால். [5] தனி. [6] ஒப்பதே, ஒப்பவே. (1314)

72. நூல்[1] வருந் தகையன நுனிக்கு [2] நோன்மைய
சால்பெருஞ் செவ்விய தரும [3] மாதிய
நாலையு [4] மணையன புரவி நான்கொரு
பாலமை [5] யுணர்ந்தவன் பக்கம் பூண்டவே.

(இ - ள்.) நூல் - அசுவசாஸ்திரங்களிலே, வரும்-கூறப்பட்டு வருகிற, தகையன - உத்தமவிலக்கணங்களுடையனவும், நுனிக்கும்-கூர்ந்தறிதற்கு ஏற்ற, நோன்மைய-வல்லமையையுடையனவும், சால் பெரு செவ்விய - நிரம்பின பேரழகையுடையனவும், தருமம் ஆதிய நாலைஉம் அணையன-அறம் முதலிய நான்கு புருஷார்த்தங்களையும் போன்று (யாவராலும் அடைய) விரும்பப்படுபவையுமாகிய, புரவி நான்கு-நான்கு குதிரைகள், ஒரு பாலமை உணர்ந்தவன் பக்கம் பூண்ட-(உலகவியறகையை) ஒப்பற்றபான்மையால் [ஐயந்திரிபற] அறிந்த ஸ்ரீராமனுக்குஉரிய தேரிலே பூட்டப்பட்டுள்ளன;

பாலமையுணர்ந்தவன் பக்கம்பூண்ட என்பதற்கு-கோல் கொள்ளும் முறைமையையுணர்ந்தவனது கருத்தை ஏற்றுக்கொண்டன என்றும் உரைக்கலாம். நான்குவகைப்புருஷார்த்தங்களையும் (தன்னையடைபவர்க்குத்) தருமாறு தன் வசத்து வைத்துக்கொண்டிருப்பவனென்ற குறிப்புத் தோன்ற, 'தருமமாதிய நாலையு மணையன புரவிபூண்டன' என்றார். பாலமை=பான்மை: 'வளமை' என்றாற்போல இடையே அகரம் பெற்றுவந்தது. பி-ம்:—[1] தருந். [2] தன்மைய, தன்மையை. [3] ஆதியாம். [4] அணையவப். [5] உணர்ந்தன. (1315)

73.—பரதன் தேரோட்டவும் இலக்குமண சத்துருக்கனர் சாமரை வீசவும் இராமன் தேரிற் சென்றமை.

[1] அணையதோர் [2] தேரினி [3] லருண னின்றெனப்
பனிவரு மலர்க்[4] கணப் பரதன் கோல்கொளக்
குனிசிலைப் [5] தம்பியின் கூட வேணையன்
இனியபொற் கவரிகா [6] லியக்க வேகினன்.

(இ - ள்.) அணையது ஓர் தேரினில் - அத்தன்மையதொரு தேரின்மேலே, அருணன் நின்றுஎன-(சூரியனது தேர்ப்பாகனாகிய)

அருணனென்பவன் நின்றாற்போல, பனி வரும் மலர் கண் அ பரதன் - ஆனந்தக்கண்ணீர் ததும்புகின்ற (தேன்நிறைந்த) செந்தாமரைமலரைபோன்ற கண்களையுடைய அந்தப் பரதன், கோல் கொள - (முன்னே சாரதியாய்நின்று குதிரைசெலுத்துங்) கோலைக் கையிலேகொள்ளவும்,—குனி சிலை தம்பி - வளைத்தற்குரிய வில்லை யுடைய தம்பியான இலக்குமணனும், பின் கூட ஏனையன் - அவனுடன்கூட மற்றொருதம்பியான சத்துருக்கனனும், இனிய பொன கவரி கால் இயக்க-கண்ணுக்கினிய பொற்காம்பு அமைந்த சாமரங்களைக்காற்றுண்டாக வீசவும், ஏகினன் - (இராமபிரான்) சென்றான்;

கீழ்ச் சூரியன்தேரை உவமை கூறினதற்கு ஏற்ப, தேர்ப்பாகனுக்குச் சூரியனதேர்ப்பாகனை உவமைகூறினார். அருணன் - காசியபமுனிவனது மனைவிமார்களுள் விநதையென்பவளது மூத்த குமாரன்; கருடபகவானது தமையன்: இவன் இடைக்குக் கீழப்பட்ட உறுப்பொன்றுமில்லாதவன்; அருணன் என்பதற்குச் செந்நிறமுடையான் என்பதுபொருள். தம்பி பின்கூட - இலக்குமணன் பின்னேநின்று திருமேனிக்காவல் செய்யவும், ஏனையன் இனிய பொன் கவரி காவல் இயக்க-சத்துருக்கனன் குளிர்ந்த அழகிய சாமரைகளை வீசவும் என்று உரைக்கவும் இடமுண்டு. குனி சிலைத் தம்பி என்றது - இராமபிரானது திருமேனிக்காவலில் தனக்குள்ள ஊக்கமிகுதியால், பகையில்லாவிடத்தும் எப்பொழுதும் வில்லை வளைத்துக் கையிற்பிடித்துநிற்குந் தகுதியையுடையான என்றபடி. பி - ம்:— [1] அணையதேர். [2] அதன்மிசை, தேர்மிசை. [3] ஐயனினறனன், ஐயனேறினன். [4] கணன். [5] தம்பியர்கூடவெய்திநின்று, தம்பியரிருவருங்குழைந்து, தம்பியர்கூடவேனையர், தம்பியர்கூடவேலையின. [6] இசைக்க. (1316)

74.–இராமபிரானழகை யாவருங்கண்கொட்டாது பார்த்தல்.

அமைவரு மேனியா னழகி னாயதோ
[1] கமையுறு மனத்தினாற் [2] கருத வந்ததோ
[3] சமைவுற வறிந்திலந் தக்க தாகுக
[4] இமையவ ராயினா ரிங்கு ளாருமே.

(இ - ள்.) அமைவு அரு மேனியான் - (பிறருக்கு) அமைதல் அருமையான சிறந்த திருமேனியையுடைய ஸ்ரீராமனது, அழகின்- (மிகுந்த) அழகினாலே, ஆயதுஓ - ஆகியதோ? கமை உறு மனத்தினால் கருத - பொறுமைபொருந்தின (தம்) மனத்தால் (அவ்விராமனழகையே) நினைக்க அதனால், வந்ததுஓ-வந்ததிலைமையோ? சமைவு உற அறிந்திலம் - (இவ்விரண்டிலொன்றைத்) தகுதி பொருந்த அறிந்தோமில்லை; தக்கது ஆகுக-(இவ்விரண்டினுள்) தகுந்தது எதுவோ அது காரணமாகுக; (அதன் காரியம்யாதெனில்), இங்கு உளார்உம் இமையவர் ஆயினார்-(இராமனைக்கண்ட) இந்நிலவுலகத்திலேயுள்ள மனிதர்களும (கண்ணிமையாமையால்) தேவர்களைப் போன்றனர்; (எ - று.)

இங்குள்ள மானுடர் யாவரும் கண்கொட்டாது ஸ்ரீராமனைத் தரிசிப்பாராயினரெனபதாம். மிகவழகியதொரு பொருளைக் கண்

ணாற் காணுமிடத்தும் யாதாயினு மொருபொருளையே மனத்தி லொன்றி யுயத்துநோக்குமிடத்தும கண்ணிமையாமை, மாந்தரியல்பு. தியானிக்கும்போது மனச்சஞ்சலமின்றி மனம் அடங்கி நிறகவேண்டுமாதலால் 'கமையுறு மனத்தினுற் கருத' என்றுர். இரண்டாமடிக்கு - எப்பொழுதும இராமதியானஞ் செய்வதனுல் தேவத்தன்மை இம்மனிதாக்கு வந்துகிடைத்ததோ என்றும் பொருளகொளளலாம். பி - ம்:—[1]கமைவுரு. [2]கவ. [3]சமையுற வந்திலன்றக்கதியாதென, சமையுற... தக்கநாட்டங்கள், சமையுற... தந்தநாட்டங்கள். [4]இமையிலர். (1317)

75.—தேவர்கள் ஆனந்தக் கூத்தாடுதல்.

வரம்[1]பறு [2]முலகினை வலிந்து [3]மாய்வின்றித்
திரம்பயி லரக்கர்தம் வருக்கந் [4]தேய்வின்று
நிரம்பிய தெனக்கொடு நிறைந்த [5]தேவரும்
அரம்பையர் குழாத்தொடு [6]மாடன் மேயினுர்.

(இ - ள்.) 'வரம்பு அறும் உலகினை வலிந்து-எல்லையில்லாத உலகங்களெல்லாவற்றையும வருத்தி, மாய்வு இன்றி-(தாம்) அழித லில்லாமல், திரம் பயில்-நிலைபெறுபொருந்திய, அரக்கர் தம் வருக்கம்-இராக்கதரதுகூட்டம், தேய்வு-அழிவையடைதல், இன்று நிரம்பியது-இன்றைததினமே நிறைவேறிற்று,' என கொடு-என்று (மனத்திலே) எண்ணிககொண்டு, நிறைந்த தேவர்உம்-(அங்கு வானத்திலேவந்து) நிரம்பின தேவர்களெல்லோரும், அரம்பையர் குழாதலொடுஉம் - அரம்பைமுதலிய தேவமாதர்களின் கூட்டத் துடனே, ஆடல் மேயினுர்-ஆனந்தக் கூத்தாடுதல் பொருந்தி னுர்கள்; (எ-று.)

சீதாகலியாணம் இராக்கதசங்காரத்துக்குப் பரம்பரையான ஏதுவாவதனுல், அதனை மனக்கண்ணுல் நோககியுணர்ந்த தேவர் கள தேவமாதருடனே மகிழ்ச்சியினுல் கூத்தாடுபவராயின ரென்க. நிரம்பியது-விரைவுந் தெளிவும் பற்றிய காலவழுவமைதி. தேவ ரும்-உயர்வுசிறப்போடு இறந்தது தழுவிய எச்சப் பொருள்பட நின்றது; இதனுல், நிலவுலகத்து ஆடவரும் மகளிரும் ஆடல் மேயினு ரென்பதும் பெறப்படும. பி-ம்:—[1]பெறு. [2]உலகினின் வளர்ந்து. [3]தேய்வின்றி. [4]தேய்வுற. [5]தேயரும். [6]மாடம். (1318)

76.—இரு கவிகள்-அந்நகரத்து மகளிரின் களிப்புச்செயல்.

[1]சொரிந்தனர் [2]மலர்மழை சுண்ணந் [3]தூவினர்
விரிந்தொளிர் காசுபொன் [4]றூசு வீசினர்
பரிந்தன [5]ரழகினைப் [6]பருகி னுர்கொலாம்
[7]தெரிந்திலந் [8]திருநகர் மகளிர் செய்கையே.

(இ - ள்.) (அந்நகரத்து மகளிர்யாவரும்), மலர் மழை சொரிந் தனர் புஷ்பவருஷங்களைப் பெய்தார்கள்; சுண்ணம் தூவினர்-வாசனைப் பொடிகளை (மேலே) தூவினுர்கள; விரிந்து ஒளிர-(ஒளி) பரவி விளங்கப்பெற்ற, காசு-இரத்தினங்களையும், பொன்-சுவர்ணங்களை

யும், தூசு-ஆடைகளையும், வீசினர்-(யாவர்க்கும் மகிழ்ச்சியாற்) கொடுத்தார்கள்; (இதற்குக் காரணம்), அழகினை பருகினர் கொல் ஆம்-(இராமனது) சௌந்தரியத்தை விரும்பிக் குடித்தார்கள் போலும்; திரு நகர் மகளிர் செய்கை தெரிந்திலம்-அழகிய அந்நகரத்திலுள்ள மாதர்களது (இத்தன்மைய) செய்கைகளுக்கு (இதையன்றி வேறு) காரணத்தை அறிந்தோமில்லை; (எ-று.)

இராமபிரானது திருமேனியழகை ஆர்வத்தோடு பருகிய தனாலான களிப்பு, மலர்மழைசொரிதல் முதலியவற்றை மகளிர்க்கு விளைத்த தென்பதாம். பி-ம்:—[1]சொரிந்தன. [2]பூ. [3]தூவின. [4]தூசும். [5]அழகனை. [6]பருகுகின்றார்க்கெலாம். [7]தெரிந்திலர், தெரிந்தில. [8]அந்நகர். (1319)

77. வள்ளலை நோக்கிய மகளிர் மேனியின்
எள்ளரும் [1]பூணெலா மிரிய நிற்கின்றார்
உள்ளன [2]யாவையு முதவிப் [3]பூண்டவும்
[4]கொள்ளையிற் [5]கொள்கெனக் கொடுக்கின் றா[6]ரினே.

(இ-ள்.) உள்ளன யாவைஉம் உதவி (தம்பால்) உள்ள பொருள்களெல்லாவற்றையுந் தானஞ் செய்துவிட்டு, பூண்டஉம்-(தாம்) அணிந்துள்ள ஆபரணங்களையும், கொள்ளையின் கொள்க என-'மிகுதியாகக் கொள்வீர்களாக' என்று (பெறுபவரை நோக்கிக்) கூறி, கொடுக்கின்றாரின் - கொடுப்பவர்கள்போல,—வள்ளலை நோக்கிய மகளிர்-இராமனைப் பார்த்த பெண்கள் யாவரும், மேனியின் எள்ள அரு பூண் எலாம் இரிய நிற்கின்றார்-(இராமனிடத்துண்டான வேட்கைமிகுதிபற்றி உடம்பு இளைத்தலால்தமது)உடம்பிலே யுள்ள பழிபபற்ற ஆபரணங்களெல்லாம் கழன்றுவிழ நின்றார்கள்;

இராமனது திருமேனியைக்கண்ட களிப்பினால் காசு பொன் தூசு முதலிய வீசிய மகளிர் காமவேட்கையால் தம்மேனியிலுள்ள அணிகலங்களையும் சிந்துவதுபற்றி, அம்மாதர்கட்குத் தம் கையிலுள்ளன எல்லாம் கொடுத்துத் தமமீது அணிந்துள்ள அணிகலங்களையுந் தரும் வள்ளலை யுவமை கூறினார்: உவமையணி. கொள்ளையிற் கொள்கஎன கொடுக்கின்றாரின - வழியிற் செல்லுகையில் கொள்ளையடிப்பவர் பறிக்கவந்தால் அவர்கட்கு அஞ்சி 'கொள்க' என்று தமமுடைய பொருள்களை யெல்லாம் கொளளை கொடுக்கின்றவர்போல என்றுங் கொளளலாம். பி-ம்:—[1]பூணினம், பூணினார். [2]வறியவர்க்கு. [3]பூணவும். [4]கொள்ளென. [5]கொள்ளையிற், கொள்ளென. [6]ஒத்தார். (1320)

வேறு.

78.—இராமன் மணமண்டபத்தைச் சார்தல்.

எஞ்சலி லுலகத் துள்ள வெறிபடை [1]யரச வெள்ளம்
குஞ்சரக் [2]குழாத்திற் சுற்றக் [3]கொற்றவ னிருந்த கூடம்
வெஞ்சினத் தனுவ லானு மேருமால் [4]வரையிற் சேருஞ்
செஞ்சுடர்க் கடவு ளென்னத் [5]தேரிடைச் சென்று [6]சேர்ந்தான்.

(இ-ள்.) எஞ்சல் இல் உலகத்து உள்ள - குறைவில்லாத பூலோகத்திலேயுள்ள, எறி படை அரசர் வெள்ளம்-வீசுகிற ஆயு

தங்களையுடைய அரசர்களின் கூட்டம், குஞ்சரம் சூழாத்தின் - யானைகளின் கூட்டம்போல, சுற்ற-சுற்றிலுமிருக்க,—கொற்றவன் - வெற்றியையுடைய தசர தசக்கரவர்த்தி, இருந்த - வீற்றிருக்கப் பெற்ற, கூடம்-அந்தக் கலியாண மண்டபத்தை, வெம்சினம் தனு வலான்உம்-(பகைவர்மீது) கொடிய கோபத்தையுடைய வில்லின் தொழிலிலே வல்ல ஸ்ரீராமனும், மால் மேரு வரையில் சேரும் செம் சுடர் கடவுள் என்ன-பெரியமகாமேருகிரியிலே போய்ச்சேருகிற சிவந்த கிரணங்களையுடைய சூரியபகவான்போல, தேரிடை சென்று - தேரின்மேலே போய், சேர்ந்தான்—; (எ-று.)

இராமனேறிய தேருக்குச் சூரியனது ஒற்றையாழித் தேரையும், அத்தேரின் பாகனுக்குச் சூரியசாரதியாகிய அருணனையும் உவமையாகக் கூறிய கவி, மண்டபத்திற்சேரும் தேர்வீரனான ஸ்ரீராமனுக்கு மேருவைச் சேரும் சூரியனை உவமையாகக் கூறிய ஒற்றுமை நோக்கத்தக்கது. சூரியகுலத்துக்குத் தலைவனாகிய இராமபிரானுக்கு அக்குலத்து ஆதிபுருஷனாகிய சூரியனையே உவமையாகப் பலவிடத்துங் கூறிப்போவர். வெள்ளம்-ஓர் பெருந் தொகையுமாம். இராமபிரானை நினைக்கும்போது கையும் வில்லுமாயே தோன்றுதலால், 'வெஞ்சினத்தனுவலான்' என்று இராமனுக்கு ஓர்பெயர் கூறினர். ஸ்ரீராமன் துஷ்டநிக்கிரகபூர்வகமாகச் சிஷ்டபரிபாலனத்திற்காகவே திருவவதரித்தவனென்பது தோன்ற, திருக்கோயில்களில் கையும் வில்லுமாகவே ஸ்ரீராமவிக்கிரக பிரதிஷ்டை செய்வதும் காணத்தக்கது. பி - ம்:—[1] அரசர். [2] குழுவிற்றிருக்க. [3] கோதவன். [4] வரையைச்சூழ்ந்த. [5] தேரின்மேல். [6] சேர்ந்தார். (1321)

79.—இதுவும், அடுத்த கவியும்-குளகம்: இராமபிரான் மண்டபத்தைச் சார்ந்தபோது சீதை ஆங்குவருதலைக் கூறும்.

இரதமாண் டிழிந்த [1]பின்ன ரிருமருங் கிரண்டு கையும்
பரதனு மிளைய கோவும் பரிந்தன ரேந்தப் பைந்தார்
வரதனு மெய்தி மைதீர் [2]மாதவர்த் தொழுது நீதி
விரதமெய்த் தாதை பாதம் வணங்கிமா டிருந்த வேலை.

(இ - ள்.) பை தார் வரதன்உம் - பசுமையான பூமாலையையுடைய வேண்டுவார் வேண்டும் வரங்களை யருள்பவனான ஸ்ரீராமபிரானும், ஆண்டு இரதம் இழிந்த பின்னர்-அவ்விடத்திலே தேரினின்று இறங்கின பின்பு, இருமருங்கு இரண்டு கைஉம் பரதன்உம் இளைய கோஉம் பரிந்தனர் ஏந்த இரண்டு பக்கங்களிலும் (தனது) இரண்டு திருக்கைகளையும் பரதனும் (அவனுக்கு) இளைய அரசகுமாரனான இலக்குமணனும் அன்புகொண்டு (தம் கைகளால்) ஏந்தாநிற்க, எய்தி-(அம்மண்டபத்தை) அடைந்து, மை தீர் மாதவர் தொழுது-குற்றமில்லாத பெருந்தவத்தையுடைய (வசிட்டன் கௌசிகன் முதலிய)முனிவர்களை வணங்கி, நீதி விரதம் மெய் தாதை பாதம் வணங்கி - (முறைமை தவறாது) நீதி செலுத்துதலையே

முக்கிய விரதமாகக் கொண்டுள்ள சத்தியகுணத்தையுடைய தனது தந்தையான தசரதனது திருவடிகளையும் வணங்கி, மாடு இருந்த வேலை - (அத்தந்தையினது) பக்கத்திலே வீற்றிருந்த பொழுதில்,—(எ-று.)—சீதாபிராட்டி வந்தாள் என மேலைக்கவியோடு இயையும்.

பைந்தார் - வெற்றிப்பூமாலையும் திருத்துழாய்மாலையுமாம். கைகளைக் கைகளால் ஏந்துதல்-கைலாகு கொடுத்தல்; இது-ஒருவகை உபசாரம். பி - ம்:—[1]பின்னையிருவரும். [2]மாதவற்றொழுது.

80. சிலையுடைக் கயல்வாட் டிங்க [1]ளேந்தியோர் செம்பொற் கொம்பர், முலை[2]யிடை முகிழ்ப்பத் [3]தேர்மேன் [4]முன்றிசை முளைத்த தன்னாள், அலைகடற் பிறந்து பின்னை யவனியிற் றோன்றி மீள, மலையிடை [5]யுதிக்கின் றாள்போன் மண்டப மதனில் வந்தாள்.

(இ - ள்) ஓர் செம்பொன் கொம்பர்-சிவந்த பொன்மயமான ஒரு பூங்கொம்பு, சிலை உடை-வில்லை மேற்புறத்திலேயுடைய, கயல்-(இரண்டு) கயல் மீன்களை யிடையிலே பெற்ற, வாள்-ஒளியையுடைய, திங்கள்-பூர்ண சந்திரமண்டலமொன்றை, ஏந்தி-(தான் மேலே) தரித்து, இடை-அந்தச் சந்திரனிடையிலே, முலை முகிழ்ப்ப -முல்லையரும்பு சிறிதுமலர, தேர்மேல் முன் திசை முளைத்தது - தேரின்மேலே கிழக்குத்திக்கிலே தோன்றியதனை, அன்னாள்- போன்றவளான சானகி,—அலை கடல் பிறந்து - அலைகள் அலைதற்கிடமான திருபாற்கடலிலே (முன்னே திருமகளாகத்) தோன்றி, பின்னை அவனியில் தோன்றி-பின்பு பூமியிலே (சீதையாக) அவதரித்து, மீள மலையிடை உதிக்கின்றாள் போல்-மீண்டும் ஒருமலையினிடத்தே பிறக்கிறவள்போல, மண்டபம்அதனில் வந்தாள்-அம் மண்டபத்தில் வந்து சேர்ந்தாள்; (எ-று.)

இராமபிரான் மண்டபத்திலே வந்து வீற்றிருந்தபோது, சீதாபிராட்டி அம்மண்டபம்வந்து சேர்ந்தாளென்பதாம். சீதாபிராட்டிக்கு நேரே உவமானப்பொருள் அமைத்தற்கு இல்லாமையால் "சிலையுடை ... அன்னாள்," என இல்பொருளுவமை கொண்டு அன்னாளை வருணித்துக் கூறினார். பூங்கொம்பு-மேனிக்கும், வில்- புருவத்துக்கும், கயல்-கண்ணுக்கும், திங்கள்-முகத்துக்கும், முல்லை முகிழ்த்தல்-முகத்தில் புன்சிரிப்புத் தோன்றுதற்கும உவமையாம். சீதையின் முகத்தில் புன்சிரிப்புக் கூறியது, சிரித்தமுகமாயிருப்பதே நல்லிலக்கண மாதலால்: இனி, ஸ்ரீராமனை மணக்கப்போகின்றோமென்ற மனமகிழ்ச்சியினாலாகியது என்றலும் ஒன்று. செய்யுளாதலால், முல்லை யென்பது, தொகுத்தல் விகாரம்பெற்று 'முலை' என வந்தது. இனி, புருவம் கண் முகம் என்பவற்றை உவமைச் சொல்லாற் கூறிய கவி, கொங்கையை முலையென்று கூறினாரெனில் எடுப்பழிவு என்னும் குற்றமாமாதலாலும், முலையிடை முகிழ்ப்ப என்று தொழில் நிகழ்ச்சியைக் கூறுவதாலும், புன்சிரிப்புத் தோனறியதையே கூறினாரென்று கொள்வதன்றி, கொங்கை தோன்றியிருப்பதைக் கூறினாரென்றல் பொருந்தாது. பாற்கடற் பாயலு ளனந்தர் நீங்கினான் கோலந்தாங்கி மண்டபத்து வந்து

யெய்தினளென்று ஸ்ரீராமபிரான் திருவவதரித்துச்சீதையை மணக்க வந்தமையைக் கூறிய கவி, அதற்கு ஏற்பவே, திருமகள் பாற்கடலினின்று அவனிபோந்து மண்டபத்தெய்தினளென்கிற விஷயத்தை நயம்படக் கூறியுள்ளார். 'தேர்மேல் முன் திசை முளைத்தது' என்றது, சூரியன் முதலிய சுடர்கள் தேரின்மீது கீழ்த்திசையிலே உதிக்கும் மரபுபற்றி. 'முன்திசைமுளைத்ததன்னாள் மண்டபமதனில் வந்தாள்' என்றதனால், கிழக்கு நோக்கிய மண்டபத்துச் சீதைவந்தாளென்பது பெறப்படுமென்பர் ஒரு சாரார். பி - ம்:— [1]ஏந்தியே. [2]உடை. [3]தேரின். [4]மின்மிசை, மின்னென்று, மின்னிடை, மீமிசை. [5]புகுகின்றாள். (1323)

81.—வானவர் அந்த மணநாளைக் கொண்டாடுதல்.

நன்றிவா னவரெலா [1]மிருந்த நம்பியைத்
துன்றிருங் கருங்கட றுவைப்பத்[2]தோன் றிய
மன்றலங் [3]கோதையாண் மாலை சூட்டிய
அன்றினு [4]மின்றுடைத் தழகென் றாரரோ.

(இ - ள்) நன்றி - செய்ந்நன்றியறிதலையுடைய, வானவர் எலாம்-தேவர்களெல்லோரும்,—இருந்த நம்பியை-(அங்கு) வீற்றிருந்த இராமபிரானை நோக்கி,—'துன்று இரு கரு கடல் துவைப்ப தோன்றிய மன்றல் அம் கோதையாள் மாலை சூட்டிய அன்றின் உம்-நிறைந்த பெரிய கரிய பாற்கடலைக் கடைதலால் (அங்குப்) பிறந்த வாசனையையுடைய அழகிய கூந்தலையுடைய திருமகள் (திருமாலுக்கு) மணமாலை சூட்டின அந்நாளைக்காட்டிலும், இன்று அழகு உடைத்து-இந்த நாள் (மிக்க) அழகியது,' என்றார்-என்று (தமமிற்) கூறினார்கள்; (எ - று.)—இன்று மாலைசூட்டுவது துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனத்தின்பொருட்டே யாவதென்றகாரணத்தால், நன்றிபாராட்டும் வானவர் கொண்டாடினரென்க. பி - ம்:— [1]இருந்து. [2]தோன்றியிம். [3]கோதையார். [4]இனறழகுடைத்து. ()

82.—கவிக்கூற்று: கலியாணச்சிறப்பைக் கூறமுடியாதெனல்.

ஒலிகட லுலகினி லும்பர் நாகரில்
பொலிவது மற்றிவள் பொற்பென் றா[1]லிவள்
மலிதரு மணம்படு திருவை வாயினன்
மெலிதரு [2]முணர்வினே னென்வி ளம்புகேன்.

(இ - ள்) 'ஒலி கடல் உலகினில்-ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட பூலோகத்திலுள்ளாரது அழகுகளைக் காட்டிலும், உம்பர் (இல்)-மேலுலகத்துள்ள தேவர்களது அழகுகளைக்காட்டிலும், நாகரில் - (கீழுலகத்துள்ள) நாகரது அழகுகளைக் காட்டிலும், இவள் பொற்பு-இச்சீதையினது அழகு, பொலிவது-மிக்குவிளங்குவது', என்றால்—, இவள-இவளது, மலிதரு-நிறைந்த, மணம் படு-கலியாண காலத்திலுண்டாகிய, திருவை-விபவத்தை, மெலிதரும் உணர்வினேன நான்-சிற்றறிவுடைய யான், வாயின் என் விளம்புகேன்-(எனது) வாயால் என்னவென்று சொல்லி முடிக்கவல்லேன்?

ஒன்றை நன்ருகத் தான் உணர்ந்தாலொழியப் பிறர்க்கு வாயாற்சொல்லி விளக்குத லரிதாதலின், 'மெலிதருமுணர்வினே னென் விளம்புகேன்?' என்ருர்; எனவே, வாக்கிற்கும் அறிவிற்கும் எட்டாதது, சீதாகலியாணச்சிறப் பென்றதாம். வாயின் என வேண்டாது கூறினது, வாய் பெற்ற பலனைப்பெற வழியில்லையே என்ற குறையைக்குறிப்பிப்பதோடு, எதனையுங் கூற விரைகிற அதனது இயல்பையும் விளக்கும். இவளது அழகே உலகத்துப்பெண்பால்வகை முழுவதிலும் பொருந்துவதென்ற நூற்கொள்கை, முதலிரண்டடியிற் குறிப்பிக்கப்பட்டது. மூவுலகத்துப் பொருள்களிலுள்ள அழகுகளெல்லாம் இலக்குமியினமிசமே என்று கருத்துக்காணினுமாம். [2]உணர்வினன் விளம்புகேனரோ என்ற பாடத்துக்கு அரோ என்றது ஓ என்னும் இடைச்சொல்லின் பொருளில் வந்ததென்றேனும், 'அர்' அசை எனக்கொண்டேனும் உரைப்பர். வாயினுன் என்றும் பிரிக்கலாம். பி-ம்:—[1]இனி. (1325)

83.—இந்திரன் முதலிய தேவர் கலியாணச் சிறப்பைக் காணத் தேவிமாரோடு வானத்து வருதல்.

இந்திரன் சசியொடு மெய்தி ஞ[1]னிளஞ்
சந்திர மௌலி[2]யுந் தைய லாளுடன்
வந்தனன் மலரயன் [3]வாக்கி ளுளுடன்
அந்தரம் [4]புகுந்தன [5]னழகு காணவே.

(இ-ள்.) அழகு காண - (பெருமாள் பிராட்டி இவர்களது திருமணக் கோலத்தின்) அழகைச் சேவிக்கும்பொருட்டு,—அந்தரம - ஆகாயத்திலே, இந்திரன் சசியொடுஉம் எய்தினன்-இந்திரன் இந்திராணியுடனே வந்து சேர்ந்தான்; இள சந்திர மௌலிஉம் தையலாளுடன் வந்தனன் - பிறையை முடியிலணிந்த சிவனும் (தன) மனைவியான உமாதேவியுடனே வந்து சேர்ந்தான்; மலர் அயன் வாக்கிளுளுடன் புகுந்தனன் - தாமரைமலரில் வாழ்கிற பிரமன் (தன்மனைவியான) கலைமகளுடனே வந்துசேர்ந்தான்; (எ - று.)—பி - ம்:—[1]னிகர். [2]தன் பாகத்தாளொடும். [3]வாக்கினுளொடும். [4]புகுந்தனர். [5]அழகுஞ்சூழந்தனர். (1326)

84.—விவாகச் சடங்குக்கு உரியஉபகரணங்களைக்கொண்டு வசிட்டன் அந்தணருடன் வருதல்.

நீந்தருங் கடலென நிறைந்த வேதியர்
தோய்ந்தநூன் மார்பினர் சுற்றத் தொன்னெறி
வாய்ந்தநல் வேள்விக்கு வசிட்டன் [1]மையற
[2]ஏய்ந்தன [3]கலப்பையோ டினிதி னெய்தினுன்.

(இ - ள்.) நூல் தோய்ந்த மார்பினர் - முப்புரிநூலைப்பூண்ட மார்பினையுடையவர்களும், நிறைந்த வேதியர் - நிரமபின வேதம் வல்லவருமாகிய அந்தணர்கள், நீந்து அரு கடல் என - கடப்பதற்கு அரிய கடல்போல [மிகப் பலர்], சுற்ற - சுற்றிலும்வர,—வசிட்டன் - வசிட்டமகாமுனிவன், தொல் நெறி வாய்ந்த நல் வேள்

விக்கு - பழமையான முறைப்படி பொருந்தின சிறந்த கலியாணச் சடங்கை நடத்துதற்கு, மை அற ஏய்ந்தன கலப்பையோடு - குற்றமில்லாமல் (சாஸ்திரவிதிப்படி) பொருந்தினவான உபகரணங்களுடனே, இனிதின் எய்தினன் - மகிழ்ச்சியுடனே வந்து சேர்ந்தான்; (எ - று.)—பி-ம்—:[1]மெய்யுற. [2]ஏய்ந்தநற். [3]தருப்பையோடு, தருப்பைகொண்டு. (1327)

85.—வசிட்டன் திருமணச் சடங்குக்கு ஆயத்தஞ்செய்தல்.

[1]தண்டுலம் [2]விரித்தனன் றருப்பை [3]சாத்தினன்
மண்டலம் விதிமுறை வகுத்து [4]மென்மலர்
கொண் [5]டவை சொரிந்தெரி குழும [6]மூட்டினன்
[7]பண்டுள மறைநெறி[8]பரவிச் செய்தனன்.

(இ - ள்.) (வசிட்டமகாமுனிவன்),—தண்டுலம் விரித்தனன் - அரிசியைக் கீழேபரப்பி, தருப்பை சாத்தினன்-தருப்பைகளை (உரிய இடங்களில்) அமைத்து, மண்டலம் விதி முறை வகுத்து -(அக்கினி வைத்தற்குரிய) வட்டமான இடத்தை வேதவிதியின் ஒழுங்கின்படியே ஏற்படுத்தி, மெல் மலர் கொண்டு அவை சொரிந்து - மென்மையான பூக்களைக் கொணர்ந்து அவற்றைச் சுற்றிலுந் தூவி, எரி குழும மூட்டினன் - ஓமாக்கினியைக் குவிந்தெரியும்படி வளர்த்து, பண்டு உள மறை நெறி பரவி - அநாதியாகவுள்ள வேத மந்திரங்களை முறைப்படி கூறி, செய்தனன் - (அத்திருக்கலியாணச்சடங்கைச்) செய்தான்; (எ-று.)

தண்டுலம் - அரிசி; என்றது, அக்ஷதையை: வடசொல். இனி, [1]தண்டிலம் எனப் பாடங்கொண்டு, ஸ்தண்டில மென்னும் வடசொல்லின் திரிபாய், மண லென்று பொருளுரைத்தல் சிறப்பாம். சீவகசிந்தாமணியில் இலக்கணையாரிலம்பகத்தில் ''தருமணல் தருப்பை யார்ந்த சமிதையிம் மூன்றினானும், விரிமலரணிந்த கோலவேதிகையியற்றி'' என்றது முதலாகக்கூறியவற்றையும், அங்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'தண்டிலமாவது-அக்கினியைப் பிரதிஷ்டிக்குமிடத்தே சதுரமாகப் பரப்புகின்ற மணல்' என்றது முதலாகக் கூறியவற்றையும் இங்கே அறிக. இனி, வேதிகையில் அக்கினியைப் பிரதிஷ்டிப்பதற்குமுன்பு தண்டிலத்தைக் கற்பித்து அட்சதையிட்டு மேற்கே தொடங்கிக் கிழக்கே முடியுமாறு தெற்கில் விளிம்பிலும் நடுவிலும் வடக்கில் விளிம்பிலும், தெற்கே தொடங்கி வடக்கே முடியுமாறு மேற்கில் விளிம்பிலும் நடுவிலும் கிழக்கில் விளிம்பிலும் தருப்பைகளாற் கீறுகின்ற கீற்றுகளையும், தண்டிலத்திலே அக்கினியைப் பிரதிஷ்டித்துத் தருப்பைகளை நான்கு விளிம்பிலுஞ் சூழவைத்தலையும் பிறகாரியங்களையும் குறைவறச் செய்தான என்னலாம். நாற்புறத்தும் வைக்கப்படுந் தருப்பம், பரிஸ்தரணமெனப்படும். இராமன் முதலியோரின் நன்மையின்பொருட்டு வசிட்டன் ஓமஞ்செய்ததைக் கூறுவது இது எனக் கொள்ளலுமொன்று. பி-ம்:—[2]விரித்துநற். [3]சாத்தியே. [4]வெண். [5]அழல். [6]மூட்டினர். [7]பண்டைய. [8]பரிவின். (1328)

86.—சீதையும் இராமனும் மணத்தவிசில் ஏறியிருத்தல்.

மன்றலின் வந்து [1]மணத்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனு மார்வத்து
இன்றுணை யன்னமு மெய்தி யிருந்தார்
ஒன்றிய போகமும் யோகமு மொத்தார்.

(இ - ள்.) மன்றலின் வந்து - கலியாணத்தின் பொருட்டு வந்து, மணம் தவிசு ஏறி - அக்கலியாணத்துக்குரிய ஆசனத்திலேறி, வென்றி நெடு தகை வீரன்உம் - வெற்றியையும் பெருமைக் குணத்தையுமுடைய வீரனான ஸ்ரீராமனும், ஆர்வத்து இன் துணை அன்னம்உம் - (அவ்விராமனிடத்து) அன்பையுடைய இனிய துணையாகிய நடையாலன்னத்தையொத்த சீதையும், எய்தி இருந்தார் - நெருக்கமாய் வீற்றிருந்தவர்கள்,—ஒன்றிய போகம்உம் யோகம்உம் ஒத்தார் - (ஒன்றோடொன்று) நெருக்கமாய்ப்பொருந்தின பேரின்பத்தையும் (அதற்குஉபாயமான) யோகநிலையையும் (முறையே) ஒத்திருந்தார்; (எ-று.)

இராமன் போகத்தையும் சீதை யோகத்தையும் ஒத்தார் என முறையே தொடர்ந்து பொருள்படுதலால், முறைநிரனிறைப்பொருள்கோள். "வேயு மாருத பூமே லிருப்பாள் வினை தீர்க்குமே" என்றபடி பிராட்டி புருஷகாரமாக எம்பெருமானையடைந்து பேறுபெறுதல் முறைமை யாதலின், உபேயமான போகத்தை இராமனுக்கும் உபாயமான யோகத்தைப் பிராட்டிக்கும் உவமை கூறினார்; இங்ஙனம் உவமை கூறினதனால், பரத்துவ விஷயத்திலே பெருமாளுக்கும் பிராட்டிக்கு முள்ள வேறுபாடு தெற்றென விளங்கும். போகமும் யோகமும - இன்பத்தையும் அத்ருஷ்டத்தையும் என்றும் உரைப்பர். மார்வத்து என்று எடுத்து - திருமாலின திருமார்பில் வசிக்குமியல்புள்ள இலக்குமியினமிசமான சீதையும் என்று உரைத்தலும் ஒன்று. மனைவியென்பவள் இல்வாழ்வான் செய்யுங் கடமைகட்கெல்லாம் உடனிருந்து உதவவேண்டுதலின், 'இன்துணையன்னம்' என்றது. பி-ம்:—[1]மணித், மலர்த். *(1329)*

87.—சனகன் இராமனுக்குச் சீதையைத் தாரைவார்த்துக் கொடுத்தல்.

கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்மென நீயென்
மாமக [1]டன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்.

(இ - ள்.) கோ மகன் முன் - தசரத சக்கரவர்த்தியினது திருக்குமாரனான ஸ்ரீராமனுக்கு எதிரே (நின்று), சனகன்-சநகமகாராசன், 'நீ—, பொருள்உம் பூமகள்உம் என-பரம்பொருளாகிய திருமாலும் தாமரைமலரில் வாழும் திருமகளும் போல,என் மா மகள் தன்னொடு- எனது அழகிய மகளான சீதையுடனே, மன்னுதி - நிலைபெற்று வாழ்க,' என்னா-என்று கூறி, குளிர் நல் நீர் - குளிர்ந்த நல்ல ஜலத்தை(த் தாரை வார்த்து), தாமரை அன்ன தட கையின் - செந்தா

ம்ரை மலரையொத்த பெரிய (அவ்விராமனது) வலத்திருக்கையிலே, ஈந்தான் - கொடுத்தான்; (எ-று.)

பூமகளும் பொருளும்மென நீயென்மா மகடன்னொடு மன்னுதி - எதிர்நிரனிறைப்பொருள்கோள். சீதைக்குத் திருமகளையும் இராமனுக்குத் திருமாலையும் உவமைகூறியது, அவதார நிலையில் வேறுபட்டுத் தோன்றுதலால். 'பூமகள்' என்பதில், இரட்டுறமொழிதலால், பூமிதேவியென்னும் பொருளுந் தோன்றும்; "வாயு மணிவியர் பூமங்கையர்களெம்பிராற்கு" என்றார், பிறரும். இனி, பூமகளும் பொருளும்மென என்பதற்கு - பூமிதேவியும் (அதிலிருக்கும் பயிர் முதலிய) செல்வமும் ஒன்றையொன்று விடாதவாறு போல என்றும், இலக்குமி செல்லுமிட மெல்லாம் செல்வம் நிரம்புதல்போல என்றும் உரைப்பாருமுளர். பி-ம்:—[1] தன்னுடன். (1330)

88 —அப்போது வாழ்த்தொலி முதலியன ஒலித்தல்.

அந்தண ராசி யருங்கல [1]மன்னார்
தந்தபல் லாண்[2]டிசை தார்முடி மன்னர்
வந்தணை [3]நாவலர் வாழ்த்தொலி போல
முந்திய [4]சங்க [5]முழங்கின மாதோ.

(இ - ள்.) (சனகன் சீதாபிராட்டியை இராமனுக்குப் பாணிக்கிரகணஞ் செய்யுமாறு கன்னிகாதானஞ் செய்தபொழுது), அந்தணர் ஆசி - பிராமணர்களது ஆசீர்வாதவொலியும், அரு கலம் அன்னார் தந்த பல்லாண்டு இசை - (உலகத்துக்கு) அருமையான ஆபரணங்களை யொத்து அழகுசெய்கின்ற மகளிர் பல்லாண்டு பாடுகிற ஓசையும், தார் முடி மன்னர் வந்தணை நாவலர் வாழ்த்து ஒலி-பூமாலையையணிந்த மயிர்முடியையுடைய அரசர்களும் வணங்குதற்குரிய வித்துவானகள் வாழ்த்துகின்ற ஓசையும், போல - (என்னும் இவை) போல, முந்திய சங்கம் - சிறந்த சங்கவாத்தியங்களும், முழங்கின - ஆரவாரித்தன; (எ-று.)

அரசரையும் பணியுமாறு செய்யவல்லவர் நாவல ரென்பார் 'மன்னர் வந்தணை நாவலர்' என்றார்; இனி, மன்னர் வந்தணை கூறுகிற ஒலியுமென்றுமாம். கீழ்க்கூறிய பிரகிருதமாகிய அந்தணராசி முதலியவற்றையே (பிரகிருதமாகிய) சங்கவொலிக்கு உவமை யாக்கினார். மாதோ-ஈற்றசை. பி - ம்:—[1] மின்னார். [2] ஒலி. [3] மாதவர், வானவர். [4] பேரி. [5] முழங்கொலி. (1331)

89.—தேவர் முதலியோர் பூமாரி முதலியன பொழிதல்.

வானவர் பூமழை மன்னவர் பொற்பூ
ஏனையர் தூவு மிலங்கொளி முத்தம்
[1]தானகு [2]நாண்மல ரென்றிவை தம்மான்
மீனகு வானின் விளங்கிய [3]திப்பார்.

(இ - ள்.) வானவர் பூ மழை-தேவர்கள் சொரிந்த (கற்பக) மலர் மாரியும், மன்னவர் பொன் பூ - அரசர்கள் சொரிந்த பொன்னாலாகிய

மலர்களும், ஏனையர் தூவும் - மற்றையோர் சொரிகிற, இலங்கு ஒளி முத்தம்-விளங்குகிறஒளியையுடைய முத்துக்களும், தான் நகு நாள் மலர் - தானுக மலர்ந்த பூக்களும், என்ற இவை தம்மால் - என்ற இவைகளால், இ பார்-இந்தப் பூமியானது, மீன் நகு வானின்-நக்ஷத்திரங்களால் விளங்குகிற ஆகாயம்போல், விளங்கியது - பிரகாசித்தது; (எ- று.)

பூமழைமுதலியன தூவியதும, பெருமகிழ்ச்சியாலாகும். 'ஏனையர்தூவும்' என்பதை 'நாண்மலர்' என்பதற்குங் கூட்டுக. தன்மைத் தற்குறிப்பேற்றவணி. பி-ம்:—[1] தானுகு, தானகை. [2] மா. [3] இப்பால்.

90.—இராமன் சீதையைப் பாணிக்கிரகணஞ் செய்தல்.

வெய்ய கனற்றலை வீரனு [1]மந்நாள்
மையறு மந்திர [2]முற்றும் வழங்கா
நெய்யமை யாவுதி யாவையு [3]நேர்ந்தான்
தைய றளிர்க்கை தடக்கை பிடித்தான்.

(இ - ள்.) வீரன்உம்-சுத்தவீரனான இராமனும், அ நாள் - அப்பொழுது, மை அறு மந்திரம் முற்றுஉம் வழங்கா-குற்றமற்ற மந்திரம் முழுவதையுங் கூறி, வெய்ய கனல்தலை - வெவ்விய அக்கினியினிடத்திலே, நெய் அமை ஆவுதி யாவைஉம் நேர்ந்தான்-நெய்யினாலமைந்த ஆகுதிகளெல்லாவற்றையும் முறைப்படி பெய்து, தையல் தளிர் கை தட கை பிடித்தான் - அழகிய சானகியினது தளிர்போல் மெல்லிய கையை(த் தனது) பெரிய திருக்கையாற் பிடித்தான்;

[2] மும்மை என்ற பாடத்திற்கு, மந்திரத்தை யுச்சரித்து நெய்யை மும்முறை மண்ணி யெனக; "நெய்யை முனைமுதிர் தருப்பை தன்னுன், மந்திரித்தமையமுக்கான் மண்ணி" எனபது சிந்தாமணி. பி-ம்:—[1] அன்னுன். [3] நேர்ந்தே. சில பிரதியில் 'தையலோடண்ணறளிர்க்கை பிடித்தான்' என்று நான்காமடி. (1333)

91.—சீதை இராமனுடன் தீவலம் வருதல்.

இடம்படு தோளவ [1]னேடியை வேள்வி
தொடங்கிய வெங்கனல் சூழ்வரு [2]போதின்
மடம்படு [3]சிந்தையள் மாறு பிறப்பின்
உடம்புயி ரைத்தொடர் கின்றதை [4]யொத்தாள்.

(இ - ள்.) இயை வேள்வி தொடங்கிய-(அந்தச் சமயத்துக்குப்) பொருத்தமான ஓமம் முதலிய வைதிகச் செய்கைகளைச் செய்யத் தொடங்கின இடமபடு தோளவனேடு-விசாலம் பொருந்தின தோள்களையுடைய இராமனுடனே, வெம் கனல் சூழ்வருபோதின் - வெவ்விய அக்கினியை வலம்வருகிற பொழுதிலே,(அவனைப் பின்தொடர்கிற), மடம்படு சிந்தையள-(பெணகளுக்குஉரிய) பேதைமைக் குணம் இயல்பிலே யமைந்த மனத்தையுடைய சீதை, மாறு பிறப்பின் உடம்பு உயிரை தொடர்கின்றதை - மாறிவரு மியற்கையையுடைய பிறப்புக்களிலே (உயிர் உடம்பைத் தொடர்கிற மரபையொழித்து) உடம்பு உயிரைத் தொடருமாயின் அதனை, ஒத்தாள்—;

இல்பொருளுவமை. ஒப்பற்ற பிராட்டிக்கு அபூதோபமானமே கூறுதற்கு ஏற்றதாம். தொடங்கிய என்னும் பெயரெச்சம், தோளவனென்னும் முடிக்குஞ் சொல்லுக்குப் பின் வந்தது, செய்யுளாதலின். இனி, தொடங்கிய என்பதை எதிர்காலவினையெச்சமாகக்கொண்டு, இயை வேள்வி தொடங்குகையிலே இடம்படுதோளவனோடு வெங்கனல் சூழ்வருபோதி லென்றலுமாம்; உடம்பு - சீதைக்கும், உயிர் - பிராணநாயகனான இராமனுக்கும் உவமை. பி-ம்:—[1] ஓடிய. [2] போழ்தின். [3] சிந்தையன். [4] ஒத்தான். (1334)

92.—சீதை தீவலம்வந்தபின் அம்மி மிதித்து அருந்ததி காணுதல்.

வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
[1] பொலம்புரி நூலவர் [2] செய்பொருண் முற்றி
இலங்கொளி யம்மி மிதித் [3] தெதிர் நின்ற
கலங்கலில் கற்பி னருந்ததி [4] கண்டாள்.

(இ - ள்.) பொலம் புரி நூலவர்-அழகிய முப்புரிநூலாலமைந்த காப்புநாணைபூண்ட அந்த இராமனும சீதையும், தீயை வலங்கொடு வந்து வணங்கினர் - ஓமாக்கினியைப் பிரதட்சிணஞ் செய்துவந்து நமஸ்கரித்து, செய் பொருள் முற்றி-மற்றுஞ் செய்யத்தக்க சடங்குகளையும செய்து முடிக்க, (பிறகு சீதை), - இலங்கு ஒளி அம்மி மிதித்து-விளங்குகின்ற ஒளியையுடைய அம்மிக்கல்லைக் காலால் மிதித்து, எதிர் நின்ற கலங்கல் இல் கற்பின் அருந்ததி கண்டாள-எதிரிலே நின்ற கலங்குதலில்லாத கற்புநிலையையுடைய அருந்ததீ நட்சத்திரத்தைப் பார்த்தாள்; (எ-று.)

தீயை வலங்கொடு வணங்கின ரென்றது, இருவர்க்கு முள்ள தொழில். செய்பொருள் முற்றியென்றது, இராமனுக்கு உரியது. இலஙகொளி யம்மிமிதித்து என்பதும், எதிர்நின்ற கலங்கலில் கற்பினருந்ததி கண்டாள எனபதும்—இராமபிரான் செய்விக்கச் சீதை செய்தற்கு உரியன. செய்பொருள-மந்திர பூர்வமாகச் செய்யும் ஓமாதிகள். [1] பொலம்பொரி செய்வன என்ற பாடம், இலாசவோமஞ் செய்ததைக் குறிக்கும். அம்மி மிதித்தல் அசுமாரோபணமெனப்படும். கலியாண காலத்தில் மணமகளது பாதத்தைப் பிடித்து மணமகன் அம்மியில் வைப்பது, கல்லின் தன்மையைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டிக் கற்புநிலைமையை வலியுறுத்தறகென்பர்; கொழுநன் மனைவிக்கு அருந்ததியைக் காட்டுதலும், கற்பின் நிலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே யென்க.

அருந்ததி என்பவள், வசிட்ட முனிவனுடைய மனைவி; கற்புடையார் பலரினும் இவளுக்கு மேன்மை யென்னையெனின், நட்சத்திர நிலையிலுங் கணவனைப் பிரியா திருக்கை; வசிட்டன் நேரேவந்திருத்தலால், அருந்ததியும் நட்சத்திரரூபமாகவன்றி நேரே வந்துள்ளாளென்பது தோன்ற 'எதிர்நின்ற வருந்ததி' என்றனரென்பர். பொலம்புரி நூலவர்-அந்தணர் என்றுகொண்டு, இப்பாடலுக்கு எழுவாய் வருவிப்பாரு முளர். [4] கண்டார் என்ற பாடத்திற்கு-

பூவும் மணமும் போலச் சீதாராமர்கள் ஒற்றுமைப்பட்டிருத்தலால் 'அம்மிமிதித்து அருந்ததி கண்டார்' என்ற தென்ப. பி-ம்:— [2]புரிதொழில். [3]எதிர்கின்ற, எதிர்நின்று. (1335)

93.—இராமன் பெரியோரை வணங்கிச் சீதையோடு தன்மாளிகை புகுதல்.

மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார்
முற்றிய மாதவர் தாள்முறை [1]சூடிக்
கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்
[2]பொற்றொடி கைக்கொடு [3]நன்மனை [4]புக்கான்.

(இ - ள்.) (ஸ்ரீராமபிரான்), — மற்றுஉள செய்வன செய்து- இன்னுஞ் செய்யத் தக்கனவாகவுள்ள சடங்குகளை யெல்லாஞ் செய்துமுடித்து, மகிழ்ந்தார் முற்றிய மாதவர் தாள் முறை சூடி- (தனது விவாகத்தைக்கண்டு) மகிழ்ச்சி கொண்டவர்களாகிய (வசிட்டன் விசுவாமித்திரன் முதலிய) பெருந்தவமுடைய முனிவர்களின் திருவடிகளை முறைமைப்படி தலைக்கணியாக அணிந்து [சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு], கொற்றவனை கழல் கும்பிடலோடும்-வெற்றியையுடைய(தன் தந்தையான) தசரதசக்கரவர்த்தியையும் பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்தவுடனே, பொற்றொடி கை கொடு நல் மனை புக்கான்-பொன்னலாகிய தொடியென்னும் வளையையுடைய சீதையின் கையைப் பிடித்துக்கொண்டு நல்ல (தன்) மாளிகையினுட் சென்றான்; (எ-று.)

கலியாணமானவுடனே மணமகன் மணமகளோடு தனது இல்லஞ்சேர்ந்து சிலசடங்கை முடிக்கவேண்டுமென்பது நூன்மரபாதலின், 'நன்மனைபுக்கான்' என்றார்; அங்ஙனஞ் செய்யப்படுஞ் சடங்கை 'ப்ரவிஶ்யஹோமம்' என்ப. அருந்ததிகாட்டுதல், ப்ரவிஶ்ய ஹோமத்துக்குப் பின்னர் நிகழ்வதாகும். மகிழ்ந்தாரென்பதை முற்றுகக் கொண்டால், சீதாராமர்கள் எழுவாயாவர். பி-ம்:— [1]சூட்டி. [2]பொற்றொடியை. [3]தம்மனை. [4]புக்கார். (1336)

94.—பலவகை மங்கலவொலி.

ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
ஆர்த்தன [1]நான்மறை யார்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை யார்த்தன பல்லாண்டு
ஆர்த்தன வண்டின மார்த்தன [2]வேலை.

(இ-ள்.) (அப்பொழுது), பேரிகள்-மங்கலபேரிகை வாத்தியங்கள், ஆர்த்தன-ஆரவாரஞ்செய்தன; சங்கம்-சங்கவாத்தியங்கள், ஆர்த்தன—; நால் மறை-நான்கு வேதங்கள், ஆர்த்தன—; வானோர்-தேவர்கள், ஆர்த்தனர்-(ஆனந்தத்தால்) ஆரவாரித்தார்கள்; பல் கலை-அநேகமான நூல்கள், ஆர்த்தன—; பல்லாண்டு-மகளிர் பல்லாண்டு பாடுகிற இசைகள், ஆர்த்தன—; வண்டு இனம்-(பூமாலைகளில் மொய்க்கிற) வண்டுகளின் கூட்டம், ஆர்த்தன—, வேலை-கடல்களும், ஆர்த்தன—; (எ-று.)

உலகமுழுவதுக்கும் நன்மையைவிளைப்பனவாகி மகிழ்ச்சிக்குக் காரணமான செயல்கள் நிகழும்பொழுது ஒருநல்நிமித்தமாகக் கடல்கள் ஆரவாரிக்குமெனவருணிப்பது கவிமரபாதலால், 'ஆர்த் தனவேலை' என்றார்; இனி, ஆர்த்தனவேலை என்பதற்கு-(முழங்கின) கீழ்க்கூறிய பேரி முதலியனவெல்லாம் ஆரவாரிக்கின்ற கடல்களைப் போன்றன என்றும் உரைகொள்ளலாம். மனுமுதலிய தருமநூல் களிற் கூறப்பட்டுள்ள அறநெறிகளினின்று தவறினவர்களைத் தண்டித்து அவ்வொழுக்கவழி வழுவாதாரைக் காத்தருளும் இராம பிரானது திருமணத்தகுதியை நோக்கி அக்கலைகள் மகிழ்ந்து இரைத்தனவாகக் கூறுவார், 'ஆர்த்தன பல்கலை' என்றார்; சொற் பொருட்பின்வருநிலையணி. பி-ம்:—[1] நாமமறை. [2] அண்டம். (1337)

95.—இதுவும், அடுத்தகவியும்-ஒருதொடர்; இராமனும் சீதையும், கைகேயி முதலிய மூவரையும் வணங்குதல்.

[1]கேகய மாமகள் [2]கேழ்கிளர் பாதந்
தாயினு மன்பொடு தாழ்ந்து [3]வணங்கா
ஆயத னன்னை யடித்துணை [4]சூடித்
தூய சுமித்திரை தாடொழ லோடும்.

(இ - ள்.) (இராமன்), கேகயன் மா மகள் கேழ் கிளர் பாதம்-கேகயராசனது சிறந்த குமாரியான கைகேயியினது ஒளிமிகுந்த திருவடிகளை, தாயின்உம் அன்பொடு தாழ்ந்து வணங்கா-(தனது) பெற்ற தாயான கௌசலியாதேவியினிடத்து வைத்துள்ள அன்பைக்காட்டிலும் மிகுந்த அன்புடனே (முனனே) சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, (பின்பு), ஆய தன் அன்னை அடி துணை சூடி-பொருந்தின தனது தாயான கௌசலியையினது இணையடிகளைத் தலைக்கணியாகக்கொண்டு வணங்கி, (அதன் பின்பு), தூய சுமித்திரை தாள் தொழலோடும்-மனத்தூய்மையையுடைய சுமித்திராதேவியினது திருவடிகளை நமஸ்கரித்தவளவிலே,—(எ-று.)

கௌசலியைக்கு இராமனிடத்திற்காட்டிற் பரதனிடத்திலும் கைகேயிக்குப் பரதனிடத்திற்காட்டில் இராமனிடத்திலும் இயல் பிலே அன்புமிகுதி என்று மேல் அயோத்தியாகாண்டத்தில் விளக்குபவர், அதற்கு ஏற்ப, இங்கே இராமனுக்குக் கௌசலியையிடத்திற்காட்டிற் கைகேயியிடத்தில் அன்புமிகுதி யென்றும், அதனால், அவளை முந்தி இராமன் வணங்கினனென்றுங் கூறினர்; பிதிருவாக்கிய பரிபாலனத்தையே முக்கிய விரதமாகக்கொள்ளுந் தகுதியையுடைய இராமன் அத்தந்தையான தசரதனது உள்ளத்துக்கு மிகப் பாங்கான இளையதேவியினிடம் தாம் மிகுந்த அன்பையுடையனாதல் இயல்பேயாம். இராமபிரான் அவதரித்த நாள் தொடங்கி என்றும் ஒரே சீராய்த் தன்மகனான இலட்சுமணன் இராமனுக்குப் பணிவிடை செய்தலையே உவப்பவளென்பதைக் குறிப்பிக்க 'தூயசுமித்திரை' என்றார். பி-ம்:—[1] கேகயன். [2] கேழிரு. [3] வணங்கி. [4] சூட்டி. (1338)

96. அன்னமு மன்னவ ரம்பொன் மலர்த்தாள்
சென்னி புனைந்தனள் சிந்தை [1]யுவந்தார்

கன்னி யருந்ததி காரிகை [2]காணு
நன் மக னுக்[3]கிவ ணல்லணி யென்றார்.

(இ - ள்.) அன்னம்உம்-(நடையில்) அன்னப்பேடுபோன்ற சானகியும், அன்னவர்-அத்தேவிமார் மூவரது, அம் பொன் மலர் தாள்-அழகியபொன்போலருமையான திருவடித்தாமரை மலர்களை, சென்னி புனைந்தனள்-தலைக்கு அணியாகக்கொண்டு வணங்கினாள்; (அப்பொழுது அவர்கள்), சிந்தை உவந்தார்-மனம் மகிழ்ந்தவர்களாய், கன்னி அருந்ததி காரிகை காணு-கற்பழிவில்லாத அருந்ததி போன்ற அழகிய மங்கையாகிய சீதையைப் பார்த்து, 'இவள் நல் மகனுக்கு நல் அணி-இந்தச்சீதை (நமது) சிறந்த குமாரனான இராமசந்திரனுக்கு நல்ல ஆபரணம்போல்வாள்,' என்றார்-என்று கூறினார்கள்; (எ-று.)

பிள்ளைக்குஏற்ற பெண் ணென்பார், 'நன்மகனுக்கிவள் நல்லணி' என்றார். மூன்றாமடிக்கு 'கன்னி-கற்பழிவில்லாத, அருந்ததி-அருந்ததியும், காரிகை-கட்டழகுடைய இச் சீதையை,(நல்லொழுக்கத்திற்கு ஓர் இலக்கியமாக), காணு-காணுமாறு' என்று உரைப்பாரும் உளர். பி - ம்:—[1]மகிழ்ந்தார். [2]நாண, காண. [3]ஒரு. ()

97.—சீதையைப்பற்றிக் கைகேயி முதலியோரின் கொண்டாட்ட மொழி.

[1]சங்கு வளைக்குயி லைத்தழீஇ நின்றார்
அங்கண னுக்குரி யாருள ராவார்
பெண்க ளினிப்பிற [2]ராருள ரென்றார்
கண்கள் களிப்ப மனங்கள் களிப்பார்.

(இ - ள்.) (அத்தேவிமார்கள்),—சங்கு வளை குயிலை-சங்கினாலாகிய வளையையணிந்த குயில்போலின்குரலையுடைய சானகியை, தழீஇ நின்றார்-தழுவிநின்றவர்களாய், அம் கணனுக்கு உரியார் உளர் ஆவார் பெணகள் இனி பிறர் ஆர் உளர்-அழகிய திருக்கண்களையுடைய இராமனுக்கு உரிய மனைவியராதற்கேற்றவர்களான பெண்கள் இவளையொழிய வேறு யார் இருக்கிறார்கள? [எவருமிலரென்றபடி], என்றார்-என்று சொல்லி, கண்கள் களிப்ப மனங்கள் களிப்பார்-(இவளைக் காண்டலால் தமது) கண்கள் களிப்படைய (இவளை மருமகளாகப் பெற்றதனால்) தங்கள் மனங்களும் களிப்படைபவரானார்கள்; (எ - று.)

[1]சங்கவளை என்ற பாடத்திற்கு-கூட்டமாகிய வளை யென்றுமாம்; "இனவளை," "நிரைவளை" என்றாற் போல. பி - ம்:—[2]எங்கு. *(1340)*

98.—கைகேயிமுதலியோர் தம்மருமகளுக்குப் பொன்முதலிய ஈதல்.

[1]எண்ணில கோடிபொ னெல்லையில் கோடி
[2]வண்ண வருங் [3]கல மங்கையர் வெள்ளம்
கண்ணக [4]னொடொடு [5]காசுயர் தூசும்
பெண்ணி னணங்[6]கனை யாள்பெறு கென்றார்.

(இ - ள்.) (மேலும்), 'எண் இல கோடி பொன் - அளவில்லாத கோடிக்கணக்கான பொற்காசுகளையும், எல்லை இல் கோடி வண்ணம் அரு கலம் - அளவில்லாத கோடிக்கணக்கான அழகிய (கிடைத்தற்கு) அரிய ஆபரணங்களையும், மங்கையர் வெள்ளம் - (பரிவாரத்துக்குரிய) பெண்களின் கூட்டத்தையும், கண் அகல் நாடொடு - இடமகன்ற (சில) தேயங்களையும், காசு உயர் தூசுஉம் - விலைமிக்க பட்டாடைகளையும், பெண்ணின் அணங்கு அனையாள் - பெண்களுக்குத் தெய்வம்போலச் சிறந்த சானகி, பெறுக-பெறுவாளாக', என்றார்-என்று கூறிக்கொடுத்தார், (கைகேயிமுதலியோர்.)

மணமகள் வணங்கும்போது பொன்முதலியன ஈதல், மரபு. காசு - இரத்தினங்களையும், உயர்தூசும் - சிறந்த சேலைகளையும் என்றுமாம். பி - ம்:—[1] எண்ணமில், எண்ணிய. [2] வண்ணம். [3] கலை, கலன். [4] நாடுயர். [5] காசொடு. [6] அனையாய், இனையாள். (1341)

99.—இராமன் மனைவியோடு பாயலில் தங்கியிருத்தல்.

நூற்கட லன்னவர் சொற்கட னோக்கி
மாற்கட [1] லன்ன மனத்தவ ளோடும்
[2] கார்க்கட லொப்பதொர் கருணைக் கடல்பண்டைப்
பாற்கட [3] லன்னதொர் [4] பாய லணைந்தான்.

(இ - ள்.) கார் கடல் ஒப்பது - கருநிறமுள்ள கடல்போல்வதான, ஓர் கருணை கடல் - அருள்வெள்ளத்துக்குத் தங்குமிடமான ஒப்பற்ற இராமமூர்த்தி,—நூல் கடல் அன்னவர் சொல் கடன் நோக்கி - (நீர்நிரம்பின) கடல்போலச் சாஸ்திரங்கள் நிரம்பின பெரியோர்களது (தருமசாஸ்திரங்களிற் கூறியுள்ள) சொற்களின் முறைமையை நோக்கி [முறைமைப்படி], மால் கடல் அன்ன மனத்தவளோடுஉம் - (தன்பக்கலுண்டான) வேட்கைக்குக் கடல் போன்ற மனத்தையுடைய சீதையுடனே, பண்டை பால் கடல் அன்னது ஓர் பாயல் அணைந்தான் - பழமையாகத் தான் பள்ளி கொள்ளும் பாற்கடலிலேயுள்ள ஆதிசேஷனை யொத்ததொரு சிறந்த திருப்பள்ளிமெத்தையைச் சேர்ந்தான்; (எ-று.)

இது, ஸமாவேசநமென்ற சடங்கைக் குறிக்கு மென்பர். ஸமாவேசநம் - மனைவியுடனிருத்தல். ப்ரவிஶ்யஹோமம் ஆன பின்பு ஶேஷஹோமம் முடியுமளவும் நான்கு நாளும் மணமகன் மனைவியுடனிருக்கவேண்டுமென்பது, அறநூலறிந்தோர் சொல் என்பார், 'நூற்கடலன்னவர் சொற்கடனோக்கி—பாயலணைந்தான்' என்றார். சிந்தாமணி நளவெண்பா முதலிய நூல்களிற்போல மனைவியுடன் கூடியிருந்ததனையே கூறுமெனக் கொள்வாருமுளர். பி - ம்:—[1] பொங்கு. [2] கார்கடல். [3] ஒப்பதொர், போல்வதொர். [4] பள்ளி. (1342)

100.—பங்குனியுத்தரத்தில் சீதாவிவாகம் வசிட்டனால் நடத்தல்.

பங்குனி யுத்தர [1] மான பகற்போது
[2] அங்க ணிருக்கினி லாயிர நாமச்

சிங்க மணத்தொழில் செய்த திறத்தான்
மங்கல வங்கி [3]வசிட்டன் [4]வளர்த்தான்.

(இ - ள்.) பங்குனி உத்தரம் ஆன பகல் போது-பங்குனி மாசத்து உத்திரநட்சத்திரம்கூடியுள்ள அன்றைய தினத்திலே, அங்கண்-அவ்விடத்திலே, ஆயிரம் நாமம் சிங்கம் - ஆயிரந்திரு நாமங்களையுடைய சிங்கம்போற் சிறந்த ராமபிரான், மணமதொழில் செய்த திறத்தால் - விவாகச் சடங்கைச் செய்த முறைமைக்கு ஏற்ப, வசிட்டன்-வசிட்ட மகாமுனிவன், இருக்கினில்-வேதவிதிப் படி, மங்கலம் அங்கி-மங்களகரமான ஓமாக்கினியை, வளர்த்தான்-;

இராமபிரான் திருமணச்சடங்கு பங்குனியுத்தரநாளில் நடந்ததாக, அந்த விவாகத்திற் செய்ய வேண்டிய அக்கினி காரியங்களையெல்லாம் வசிட்ட முனிவன் குறைவின்றிச் செய்துமுடித்தன னென்பதாம். (உத்தர) பல்குநீ நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணமியை யுடைமையால், இம்மாதத்துக்குப் பால்குநமென்று பெயர்: அது பங்குனி எனத் திரிந்தது. இருக்கினிற்சொல்லிய ஆயிரநாமமுமாம்; இருக்கினில் மணத்தொழில் செய்த வென்றும் இயைக்கலாம். பி - ம்:—[1] அன்ன. [2] அங்க. [3] வதிட்டன். [4] வகுத்தான். (1343)

101.—இராமனுடைய தம்பிமாரும் ஊர்மிளை முதலியோர்களை மணஞ்செய்து கொள்ளுமாறு ஜநகராசன் ஏற்பாடுசெய்தல்.

வள்ள றனக்கிளை யோர்க டமக்கும்
எள்ளலில் கொற்றவ [1]னெம்பி யளித்த
அள்ளன் மலர்த்திரு வன்னவர் தம்மைக்
கொள்ளு மெனத்தம ரோடு குறித்தான்.

(இ - ள்.) எள்ளல் இல் கொற்றவன் - பழிப்பு இல்லாத வெற்றியையுடைய சனகன், 'எம்பி-என் பின்பிறந்தவனான தம்பி, அளித்த - பெற்ற, அள்ளல் மலர் திரு அன்னவர் தம்மை - சேற்றிலுண்டாகிற செந்தாமரை மலரில் வாழ்கிற திருமகளைப்போன்ற மகளிரையும், கொள்ளும்-விவாகஞ்செய்து கொள்ளுங்கள்,' என - என்று, வள்ளல் தனக்கு இளையோர்கள் தமக்குஉம்-வரையாதருளுந்தன்மையுள்ள இராமபிரானது தம்பிமார்க்கும், தமரோடு - (தசரதசக்கரவர்த்தி முதலிய) உறவினர்களுடனே, குறித்தான்- மணம்பேசி நிச்சயித்தான்; (எ-று.)

தமர்-சம்பந்திகள். சிவவில்லை முறித்துச் சீதையை மணஞ் செய்தருளிய உபகாரத்தை நோக்கி, இங்கே 'வள்ளல்' என்றார். இளையோர்கள் - லக்ஷ்மணபரதசத்துருக்கனர். சீதையை வளர்த்த பின்பு சனகனுக்குப் பிறந்த பெண், ஊர்மிளை. அவனது தம்பி குசத்துவச னென்பது, மேற்கவியால் விளங்கும்; அவனது பெண்கள் - மாண்டவி சுருதகீர்த்தி என இவர். சுருங்கச்சொல்லலால் சேர்த்துக் கூறினர். [1]யானபின் என்ற பாடம் - யானும என் தம்பியும் எனப் பொருள்படும். அள்ளல்மலர் என்றது, பங்கஜ மென்னும் வடமொழிப்பெயரின் பொருள்பற்றி. இச்செய்யுள் சில பிரதிகளி லில்லை. (1344)

102.—ஊர்மிளை முதலிய மூவரை இலக்குமணன் முதலிய மூவரும் மணந்துகொள்ளுதல்.

கொய்ந்நிறை [1]தாரன் குசத்துவ சப்பேர்
நெய்ந்[2]நிறை வேலவன் [3]மங்கையர் நேர்ந்தார்
மைந்நிறை [4]கண்ணியர் வானுறை நீரார்
மெய்ந்நிறை [5]மூவரை மூவரும் வேட்டார்.

(இ - ள்.) கொய்நிறை தாரன் (பூக்களைக்) கொய்து தொடுத்து நிறைந்த மாலையையுடைய சனகனும், குசத்துவசன் பேர் நெய் நிறை வேலவன்-குசத்துவசனென்னும் பெயருடைய [சிறந்த] நெய் நிரம்பப் பூசப்பட்டுள்ள வேலாயுதத்தையுடைய (அவன் தம்பியான) அரசனும், (ஆகிய இவர்களது), மங்கையர்-பெண்களும், நேர்ந்தார்-(குலம் குணம் செயல் வடிவம் அறிவு முதலியவற்றில்) தமக்கு ஏற்றவர்களும், மை நிறை கண்ணியர்-மை நிரம்பத் தீட்டப்பட்ட கண்களையுடையவர்களும், வான் உறை நீரார்-தேவலோகத்தில் வசிக்கின்ற (தெய்வமகளிர்களின்) தன்மையையுடையவர்களும் ஆகிய; மெய் நிறை மூவரை-பருவம் நிரம்பின மூன்று மகளிரையும், மூவர் உம்-(லக்ஷ்மண பரதசத்துருக்கனரென்னும்) மூன்று பேரும், வேட்டார்-திருமணஞ்செய்துகொண்டார்கள்; (எ - று.)

மெய்ந்நிறை மூவர் - உண்மையொழுக்கத்தையும் நிறையென்னும் பெண்மைக் குணத்தையுமுடைய மூவருமாம். நேர்ந்தார் - சனகனால் மணமக்களாகுமாறு ஒப்புக்கொள்ளப்பட்டவரெனினுமாம். லக்ஷ்மணன் ஊர்மிளையையும், பரதன் மாண்டவியையும், சத்துருக்கனன் சுருதகீர்த்தியையும் பங்குனியுத்தரத்தினன்றே மணம் புரிந்தனரென்க. கொய்ந்நிறைதாரன் எனறது-கீழ்ச்செய்யுளில் 'எள்ளலில்கொற்றவன்' என்றதை நோக்கிய சுட்டு. இதனைக் குசத்துவசனுக்கு அடைமொழியாக்கியுரைத்தால், மூவரும் குசத்துவசனமகளிரென்னவேண்டும். ஸாங்காசியமென்ற நகரததிறகு அதிபதியான சுதந்வாவென்பவன் சிவவில்லையும் சீதையையும் தனக்குத் தந்துவிடுமாறு தூதர்மூலம் சொல்லியனுப்பி, ஜனகன் மறுத்ததனால் மிதிலையின்மேல் படையெடுத்து முற்றுகை செய்ய, ஜனகராசன் அவனை உயிரொழித்து அந்தச் சாங்காசிய நகரத்துக்குத் தன் தம்பியாகிய குசத்துவசனை அரசனுக்கிவைத்தனனென்பது, முதனூலாற் பெறப்படும். மைந் நிறை கண்ணியர்-கரியவண்டுகள் மொய்க்கும் மாலையுடையாரென்றுமாம். மெய் - இலக்கணையாற் பருவத்தை யுணர்த்திற்று. பி-ம்:—[1]தார்க்குசத்துவசப்பேர். [2]நிற வேலவன். [3]மங்கையைநேர்ந்தான். [4]கண்ணினர், கன்னியர். [5]மூவரும்வேட்கையின்வேட்டார். நான்கடிகளிலும் கொய்நிறை என்றாற் போல நகரவொற்றில்லாமலே சில பிரதிகளில். (1345)

103.—சனகராசன் செய்த தியாகம்.

வேட்டவர் வேட்டபின் வேந்தனு மேனுள்
கூட்டிய சீர்த்தி கொடுத்தில னல்லால்
ஈட்டிய மெய்ப்பொரு [1]ளுள்ளன வெல்லாம்
வேட்டவர் [2]வேட்டவை [3]வேண்டள [4]வீந்தான்.

(இ - ள்.) அவர் - அவர்களெல்லோரும், வேட்டு-(ஒருவரை யொருவர்) விரும்பி, வேட்டபின்-மணஞ்செய்துகொண்ட பின்பு, வேந்தன் உம்-சனகமகாராசனும், மேல் நாள் கூடிய சீர்த்தி கொடுத்திலன் அல்லால்-முன்னே பலவருஷகாலமாகச் சேர்த்துவைத்த (தனது) மிகுந்த கீர்த்தியொன்றைமாத்திரமே (பிறர்க்குக்) கொடுத்தானில்லையேயல்லாமல், ஈட்டிய மெய் பொருள் உள்ளன எல்லாம்-(தன்னால் வெகுகாலமாகச்) சேர்க்கப்பட்டுள்ள(பொன் மணி ஆடை ஆபரணம் முதலான பலவகை) வடிவமுடைய பொருள்கள் யாவை உள்ளனவோ அவையெல்லாவற்றையும், வேட்டவர்-விரும்பினவர், வேட்டவை- விரும்பினவைகளை, வேண்டு அளவு-வேண்டுமளவு, ஈந்தான்—; (எ - று.)

சீர்த்தி-மிகுபுகழ். 'சீர்த்திகொடுத்திலன்' என்றதனால், இத்தகைய சிறந்தபுகழ் உலகத்தில் வேறு எவர்க்கும் இல்லை யென்றும், அப்புகழ் இவ்வகைத தானத்தால் ஒப்புயர்வற வளர்ந்ததென்றும் கூறியவாறும். மெய்ப்பொருள்-அழிவுபடாத செல்வமுமாம். வேந்தனும், உம்மை-கதைப் போக்குப்பற்றி வந்தது.பி-ம்:— [1]ஆயுளது, யாவுள. [2]வேட்டவர். [3]வேட்டன. [4]ஈய்ந்தார். (*1346*)

104.—கவிக்கூற்று. தசரதன் சிலநாள் வசிட்டர் முதலியவரோடு தங்கியபின் நிகழ்ந்ததைச் சொல்வோமெனல்.

ஈந்தள வில்லதொ ரின்ப [1]நுகர்ந்தான்
ஆய்ந்துணர் கேள்வி யருந்தவ ரோடும்
[2]வேந்தனு [3]மந்நகர் [4]வைகினன் மெள்ளத்
தேய்ந்தன நாள்சில செய்த துரைப்பாம்.

(இ - ள்.) வேந்தன்உம்-தசரதசக்கரவர்த்தியும்,—ஈந்து-(அவ்வாறு) தானஞ்செய்து, அளவு இல்லது ஒர் இன்பம் நுகர்ந்தான்-அளவில்லாத ஒப்பற்றதொரு இன்பத்தை அனுபவித்து, ஆய்ந்து உணர் கேள்வி அரு தவரோடுஉம்-ஆராய்ந்தறிந்த நூற்கேள்விகளையும் அருமையான தவத்தையுமுடைய முனிவர்களுடனே, அ நகர் வைகினன்-அந்த மிதிலாநகரத்திலே வாழ்ந்திருந்தான்; (இப்படியிருக்க), சில நாள் மெள்ள தேய்ந்தன-சில தினங்கள் மெல்லக் கழிந்தன; செய்தது உரைப்பாம்-(அதன்) பின்பு செய்ததை மேற் கூறுவோம்; (எ-று.)—அதனை மேலிற்படலத்திற் காண்க.

அருந்தவரோடும் என்ற எச்சவும்மை, மக்கள் முதலியவரோடும் என்றதையும் காட்டும். மெல்லத்தேய்ந்தன-மகிழ்ச்சியின் மேலீட்டால் நாள்கள் கழிவது தெரியாதபடி கழிந்தன என்க. பி-ம்:— [1]நுகர்ந்தே, நுகர்ந்தார். [2]வேந்தொடு. [3]மன்னகர், மன்னவர். [4]வைகினர், வைகின. (*1347*)

கடிமணப்படலம் முற்றிற்று.

22—ஆவது பரசுராமப்படலம்.

தசரதன் குமாரர்களுடனும் மற்றுஞ் சுற்றம் பரிவாரம் சேனை முதலியவற்றுடனும் மிதிலையினின்று மீண்டு அயோத்திக்கு வருகையில் வலியவந்து எதிர்த்த பரசுராமனை ஸ்ரீராமன் வெற்றி கொண்ட செய்தியைக் கூறும் பாகம். பரசு-கோடாலியென்னும் ஆயுதம். வில்லையும் கலப்பையையும் ஆயுதமாகவுடைய தசரத ராமபலராமர்களிலும் வேறுபாடுவிளங்க, 'பரசுராமன்' எனப்பெயர். (இவன், விஷ்ணுவின் ஆருவது திருவவதாரம்; இவன், ஆவேசாவதாரம்; ஸ்ரீராமகிருஷ்ணவதாரங்கள் போல அமிசாவதாரமன்று; அதுபற்றியே இவனிடதது ஆவேசித்திருந்த சக்தி அமிசாவதாரமான ரகுராமனுற் கவர்ந்து கொள்ளப்பட்டது. இவன் ஏழுசிரஞ்சீவிகளுள் ஒருவன்: மற்றையவர்-அசுவத்தாமா, பலிசக்கரவர்த்தி, வியாசன, அநுமான், விபீஷணன், கிருபன் என்பவர்.) இட்சுவாகு வமிசத்தவனை ரேணு என்னும் அரசனது மகள் ரேணுகையென்பவளிடம் குசிகவமிசத்து விசுவாமித்திரனது உடன்பிறந்தவளான கௌசிகை யென்பவளுடைய குமாரனுகிய ஜமதக்கினி முனிவனுக்குப்பிறந்தவன், இவன். இவன், பிராமணகுமாரனுயினும், கோபம் தாபம் போர்வெற்றி பலபராக்கிரமம் முதலிய க்ஷத்திரியாசாரமுடையவனனது, தன்னுற்பத்திக்கு ஏதுவான சருவினது பேதத்தாலெனக் காண்க. [சரு - மந்திரபூர்வகமாக நிருமிக்கப்பட்ட ஒருவகைச்சோறு.) சில பிரதிகளில் இநதப் படலத்திற்கு, சிலைக்கோட்படலம் என்று பெயர்.

வேறு.

1.—இராமபிரானும் சீதையும் அங்குப்போகம் நுகர, விசுவாமித்திரன் தவஞ்செய்யச் செல்லுதல்.

தா[1]னுவதொர் வகையேநனி சனகன் [2]றரு தையலும்
நானுவித [3]முறுபோகமு [4]நுகர்கின்றவந் நாள்வாய்
ஆனுமறை நெறி [5]யாசிகள் முனிகோசிக னருளிப்
போனுன்வட திசைவாயுயர் பொன்மால்வரை புக்கான்.

(இ-ள்.) சனகன் தரு தையல்உம் - சனகராசன் வளர்த்த பெண்ணான சீதையும், தான்-இராமனும், ஆவது ஓர் வகைஏ-தக்க வகையாக, நனி-நன்ருய், நானுவிதம உறு போகம்உம்-பலவகையாய் மிக்க சுகங்களையெல்லாம், நுகர்கின்ற-அநுபவிக்கின்ற, அ நாள்வாய்-அந்தக்காலத்திலே, முனி கோசிகன் - விசுவாமித்திர முனிவன்,—ஆனு மறை நெறி ஆசிகள் அருளி-அழிதலில்லாத [நித்தியமான] வேதங்களிற் கூறிய முறைப்படி (அவர்களுக்கு) ஆசீர்வாதங்களை அருளோடு செய்துவிட்டு, போனுன்-சென்று, வடதிசைவாய் உயர் பொன் மால் வரை-வடக்குத்திக்கிலே உயர்ந்து விளங்குகிற அழகிய பெரிய இமயமலையிலே, புக்கான்-(தவஞ்செய்தற்பொருட்டுச்) சேர்ந்தான்; (எ-று.)

சீதாராமர் இனிதுபோகம் நுகர்கின்ற காலத்து இருவருமான சேர்த்தியிலே இவர்கட்கு வாழ்த்துக் கூறிவிட்டு விடைபெற்று விசுவாமித்திரமுனிவன் தவம் செய்யுமாறு இமயமலைக்குச் சென்ரு

னென்பதாம். இதனால், மேற் பரசுராமன் சினந்துவந்து எதிர்க்கும் பொழுது கௌசிகன் அருகிலில்லையென அறிக. தான் ஆவது ஓர் வகையே என்பதற்கு-(தனக்குத் தானே உவமையாகுவதொரு வழியினால் என்றும்,(கருமவசத்தாலல்லாமல் இச்சாமாத்திரத்தால்) தானே இங்ஙனந் திருவவதரித்த வித்துக்கு ஏற்ப என்றும் உரைப்பாருமுளர். இவ்வாறு உரைக்குமிடத்துப் போகத்திற்கு முக்கியமானவள் சீதையே யாதலால் அத்தலைமைபற்றி அன்னாளையே கூறினரென்க; உம்மையால் இராமனைத் தழுவவேண்டும்: இனி, இராமன் தான் தகுந்ததொரு முறைமையால் சீதையையும் பலவகை யின்பங்களையும் அநுபவிக்கிற பொழுது என உரைத்தலும் ஒன்று. பி - ம்:—[1] ஆயது. [2] தருசெயலும், தருதயலும், குயிலுடனே. [3] வரு. [4] நுகர்கின்றன, நுகர்கின்றகன், உறுகின்றவர். [5] மாதவ. (1348)

2.—தசரதசக்கரவர்த்தி ஊர்க்கு மீண்டு செல்லுமாறு யாவருடனும் பிரயாணமாதல்.

அப்போதினின் முடிமன்னவ [1] னணிமாநகர் செலவே
[2] இப்போதுந மனிகந்துணை யெழுகென்றினி [3] திசையாக்
கைப்போதக நிகர்காவலர் குழுவந்தடி [4] கதுவ
ஒப்போதரு தேர்மீதினி லினிதேறின னுரவோன்.

(இ - ள்.) அ போதினில்-அந்நாட்களிலேஒருநாள், உரவோன்-எல்லாவலிமைகளையுமுடையவனாகிய, முடிமன்னவன் - கிரீடத்தையணிந்துள்ள தசரத சக்கரவர்த்தி, 'அணி மா நகர் செல-அழகிய பெரிய அயோத்திமாநகரத்துக்கு (மீண்டு) செல்லும் பொருட்டு, இப்போது-இப்பொழுது, நம் அனிகம்-நமது சேனை, துணை எழுக-நம்முடன்கூடப் பிரயாணம் புறப்படுக,' என்று—,இனிது இசையா-இனிமையாகக் கூறி, (சனகனிடம் விடை பெற்றுக்கொண்டு), கை போதகம் நிகர் காவலர் குழு வந்து அடி கதுவ-துதிக்கையையுடைய யானையைப்போன்ற அரசர்களின் கூட்டம் வந்து (தனது) பாதங்களை வணங்கி நெருங்கிச் சூழ்ந்துவர, ஒப்பு ஓது அரு தேர் மீதினில் இனிது ஏறினன்-உவமை சொல்லுவதற்கு முடியாததொரு இரதத்தின்மேல் இனிமையாக ஏறினான்; (எ-று.)

அனிகம் துணை - சேனையும் மற்றும் உடன்வரும் உறவினராதியோரும் என்றுமாம். பி - ம்:—[1] நனி. [2] இப்பேர்நமதனிகந்தனை, இப்போநகரனிகந்தனை, இப்போநமரனிகந்தனை. [3] உரையார். [4] தழுவ. (1349)

3.—தசரதன் அயோத்திக்குச்செல்லும்வழியிற் சேர்தல்.

தன்மக்களு மருமக்களு நனிதன்கழ றழுவ
மன்மக்களு [1] மயன்மக்களும் வயின்மொய்த்திட மிதிலைத்
தொன்மக்களும் [2] மனமுக்குயிர் பிரிவென்பதோர் துயரின்
வன்மைக்கடல் புகவுய்ப்பதொர் வழி [3] புக்கனன் [4] மறவோன்.

(இ - ள்.) மறவோன் - எல்லா வலிமைகளையுமுடைய தசரதன்,- தன் மக்கள்உம் மருமக்கள்உம் தன் கழல் நனி தழுவ - தனது குமாரர்கள் நால்வரும் மருகிமார் நால்வரும் தனது பாதங்களை நன்றாகவணங்கி உடன்வரவும், மன் மக்கள்உம் அயல் மக்கள்உம் வயின் மொய்த்திட - இராசகுமாரர்களும் மற்றை முனிவர் முதலியோரும் பக்கங்களிலே நெருங்கி வரவும், மிதிலை தொல்மக்கள்உம் - மிதிலாநகரத்தில்நெடுங்காலமாக வாழ்கின்ற சனங்களெல்லோரும், மனம் உக்கு உயிர் பிரிவு என்பது ஓர் துயரின் வன்மை கடல் புக - (தம்மைப் பிரிதலால்) மனம் நெகிழ்ந்து உயிர் உடம்பைவிட்டுப் பிரியுந் துன்பமெனத் தக்கதொரு துன்பமாகிய வலியகடலையடையவும், உய்ப்பது ஒர்வழி புக்கனன்-(மிதிலையினின்று அயோத்திக்குச்) செலுத்துவதொரு வழியை யடைந்தான் ; (எ-று.)

மருமக்கள் - மருமகளென்பதன்பன்மை. தசரதனும் அவனது குமாரர்களும் மிதிலாநகரத்தவர்களுக்குப் புதியவராயிருந்தும் நகரத்தவர்மிக்க அன்பு கொண்டார்களாதலால், தசரதராதியோர் பிரிவுக்கு மிகவருந்தினரென்க. எல்லாச் சனங்களுக்குந் தம்தம் உயிரினிடத்திலுள்ள அவ்வளவு அன்பு தசரதராதியோரிடத்து உளதாயிற்றென்பதாம். பி - ம்:—[1] வயின்மொய்த்திடமதில்சூழ்தரு. [2] மனமிக்குயர், மனமுக்கயல், மயன்மிக்குயர், மனமிக்குயிர். [3] சென்றனன். [4] உரவோன். (1350)

4.—ஸ்ரீராமன் தேவியோடும் தம்பிமாரோடும் செல்லுதல்.

முன்னேநெடு முடிமன்னவன் முறையிற்செல மிதிலை
நன்மாநக ருறைவார்மனம் [1] நனிபின்செல நடுவே
தன்னேர்புரை தருதம்பியர் தழுவிச்செல [2] மழைவாழ்
[3] மின்னேபுரை யிடையாளொடு மினிதேகினன் [4] வீரன்.

(இ - ள்.) நெடுமுடி மன்னவன் - பெரிய கிரீடத்தை யணிந்த தசரதசக்கரவர்த்தி, முறையின் - (தனக்குஉரிய) முறைப்படி, முன்னே செல - முன்னே போகவும், மிதிலை நல் மா நகர் உறைவார் மனம் - அழகிய பெரிய மிதிலாநகரத்தில் வாழுஞ் சனங்களது மனம், நனி பின் செல - (தன்) பின்னே மிகுதியாகவரவும், நடுவே—, தன் நேர் புரை தரு தம்பியர் தழுவி செல - தன்னை நேராகவொத்த தம்பிமார் தழுவிவர, மழை வாழ் மின் ஏ புரை இடையாளொடுஉம் - மேகத்திலே வாழ்கிற மின்னலையே யொத்த இடையையுடைய சானகியுடனே, வீரன் - மகாவீரனான ஸ்ரீராமன், இனிது ஏகினன் - இனிமையாகச் சென்றான் ; (எ-று.)

இராமபிரான் செல்வதுபற்றி அந்நகரத்தவர் அந்த இராமனைப்பற்றியே கருதியவண்ணம் இருந்தனரென்பது, 'மா நகருறைவார்மனம் நனிபின் செல' என்பதன் கருத்து. தன்நேர்புரை தருதம்பியர் - தன்னைத்தானேயொத்த தம்பிமார்; தன் ஏர் எனப் பிரித்து - தனது அழகையொத்த என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1] அவை. [2] மழைவாய், மழையின். [3] மின்னேயெனும், மின்னேர்புரை. [4] உரவோன். (1351)

5.—தசரதன் அபசகுனமாவது கண்டு வழியிடை நிற்றல்.

ஏகும்மள வையின் [1]வந்தன வலமும்மயி லிடமும்
காகம்முத லியமுந்திய தடை [2]செய்வன [3]கண்டான்
[4]நாகம்மன னிடையிங்குள திடையூறென [5]நடவான்
[6]மாகம்மணி யணிதேரொடு நின்றானெறி [7]வந்தான்.

(இ - ள்.) ஏகும் அளவையின் - (இங்ஙனஞ்) செல்லுஞ் சமயத்தில், மயில் (முதலிய) - மயில் முதலிய சில பறவைகள், வலம் உம் வந்தன - (தாம் சுபசகுனமாக) வலப்பக்கமாகவும் வந்தன; காகம் முதலிய - காகம் முதலான சில பறவைகள், இடம் உம் - (தீய சகுனமாக) இடப்பக்கமாகவும், முந்திய - முற்பட்டுச் செல்வனவாகி, தடைசெய்வன - தடை செய்வனவாயின; (இவற்றை), கண்டான் - பார்த்தவனாகிய, நாகம் அனன் - (கம்பீரமான தன்மையால்) யானையைப் போன்ற தசரதசக்கரவர்த்தி, இங்கு இடையூறு உளது என - இவ்வழியிலே தடைஇருக்கிறதென்று கருதி, நடவான் - அப்பாற் செல்லாதவனாய், நெறி வந்தான்-வழியில்வந்தவன், மாகம் அணி அணி தேரொடுஉம் நின்றான் - பெரிய ஆகாயத்தை அளாவிய [மிகவுயர்ந்த] அழகிய (தனது) தேருடனே நின்றுவிட்டான்; (எ-று.)

வலியன், கருடன், காடை, கழுகு, ஆந்தை,உடும்பு,கீரி,குரங்கு இவை இடமாதல் - உத்தமம். நாரை, விச்சுளி, காக்கை, செம்போத்து, கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணன், புள்ளிமான், புனுகுபூனை, புலி, நரி இவை வலமாதல் உத்தமம். இவை மாறி, வலமும இடமுமானால், சகுனத்தடையாகும். சகுனத்தடை தோன்றியதனால் சக்கரவர்த்தி அஞ்சிமேலேநடவாதவனாயினானென்க. முந்திய தடை என எடுத்து, மிகுந்த தடையென்றும் உரைப்பர். நாகம் மனன் - (சலியாத) மலைபோன்ற அரசன் என்றுமாம். மனன் - மன்னன்: தொகுத்தல். பி - ம்:—[1]வந்தெதிர். [2]செய்வரக். [3]கண்டே. [4]நாகம்மன நடையான். [5]அறியா. [6]ஆகும். [7]சென்றான். (1352)

6.—சக்கரவர்த்தி ஓர் நிமித்திகனை வினவ, அவன் இடையூறுவந்து கழியுமெனல்.

நின்றேநெறி யுணர்வானொரு நினைவாளனை யழையா
நன்றோபழு துளதோ [1]நடு வுரைநீநய மென்னக்
குன்றேபுரை தோளானெதிர் புள்ளின்குறி [2]கொள்வான்
இன்றேவரு மிடையூ [3]றது நன்றாய்விடு [4]மென்றான்.

(இ - ள்.) (சக்கரவர்த்தி), நின்று - (இவ்வாறுபிரயாணத்தை நிறுத்தி) நின்று, நெறி உணர்வான் ஒரு நினைவு ஆளனை அழையா -(சகுனசாஸ்திரங்களின்) முறைமையை அறிபவனொரு ஆராய்ச்சியுள்ள நிமித்திகனை அழைத்து, 'நன்று ஓ - (இச்சகுனத்தாலுண்டாகும் பயன) நல்லதுதானோ? பழுது உளதுஓ - (இதனாலுண்டாகும்) தீங்கு உள்ளதோ? நீ—,நயம் - விளைவை, நடு - நடுவுநிலைமையுடனே [மாற்றிக்கூறுதலில்லாமலென்றபடி], உரை - சொல்வாய்,'

என்ன-என்று வினவ,—குன்றே புரை தோளான் எதிர் - மலையை யேயொத்த தோள்களையுடைய அச்சக்கரவர்த்தியினெதிரிலே, புள்ளின் குறி கொள்வான் - பறவைகளின் நிமித்தங்களை அறியுந் தன்மையனான அந்நிமித்திகன், 'இடையூறு இன்றுஏ வரும்-இப் பொழுதே தடை உளதாம்; அது நன்றாய்விடும்-அது (முடிவிலே) நல்லதாகிவிடும்,' என்றான்—; (எ-று.)

காகம் முதலியன இடமானதனால் இடையூறு வருமென்றும், மயில் முதலியன வலமானதனால் அது நன்மையாய் முடியு மென்றும் நிமித்திகன் கூறினனென்க. அங்ஙனம் உடனே பரசுராமன் வந்து தடைசெய்வதும், அவனை ஸ்ரீராமன் வெற்றிகொள்வதும் காண்க. வசிட்ட முனிவனே நிமித்தத்தின் தன்மைகளை யறிந்து இங்ஙனம் கூறினதாக முதனூலி லுள்ளது. பி-ம்:—[1]நயமுரைநீ நடு. [2]கொள்வோன். [3]உடன். [4]என்றாள். (1353)

7.—இனி, ஒன்பதுகவிகள்—பரசுராமன்வருகை தெரிவிக்கும்.

என்னும் [1]மள வினில்வானக மிருள் [2]கீறிட [3]வொளியாய்
மின்னும்படி புடைவீசிய சடையான் [4]மழுவுடையான்
பொன்னின்மலை வருகின்றது போல்வானனல் கால்வான்
உன்னுந் [5]தழல் விழியானுரு மதிர்கின்றதொ [6]ருரையான்.

பன்னிரண்டு கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) என்னும் அளவினில்-என்று (நிமித்திகன்) சொல் லுமளவிலே, வான் அகம் இருள் கீறிட-ஆகாயத்தினிடத்தே பொருந்துகிற இருள் சிதைந்தொழியும்படி, ஒளி ஆய் மின்னும்படி புடை வீசிய-ஒளிசெய்து விளங்குமாறு பக்கங்களிற் பரவிவீசுகிற, சடையான்-சடையையுடையவனும், மழு உடையான்-கோடாலிப் படையையுடையவனும், பொனனின் மலை வருகின்றது போல் வான்-பொன்மயமான மகாமேருகிரி நடந்துவருகின்றதனை ஒப்ப வனும், அனல் கால்வான்- தனது மேனியினின்றும் சுவாசத்தி னின்றும்) நெருப்பை யுமிழ்பவனும், உன்னும் தழல் விழியான்- (கண்டவர் யாவராலும் இதுஎன்! என்று சங்கித்துக்) கருதத்தக்க நெருப்பையுமிழுங் கண்களையுடையவனும், உரும் அதிர்கின்றது ஓர் உரையான்-இடிபோல் முழங்கும் ஒப்பற்ற சொல்லை யுடைய வனும்,—(எ-று.)

இவையெல்லாம். மேல்வரும் பரசுராமனுக்கு அடைமொழி. அந்தப்பரசுராமன் பெருஞ்சினத்தோடு வந்தமையைத் தெரிவிக்க, சடைவீசுதல் அனல்காலுதல் தழல்விழித்தல் உரையதிர்தல் இங்குக் கூறப்பட்டன; மேற் செய்யுளகளிலும் அவனது பெருஞ் சினச் செயல் சொல்லப்படும். இச்செய்யுளில் 'என்னும்மளவி னில்' என்பது, மேல் பதினேந்தாஞ்செய்யுளில் 'மழுவாளவன் வந்தான்' என்பதோடு இயையும். இப்பாடல்முதல் வருவனவாகிய 'சடையான்' முதலியன, 'மழுவாளவன்' என்பதற்கு அடைமொழி களாம். 9, 10, 11 பாடல்கள்-இடைப்பிறவரல்கள்; அவற்றிலுள்ள 'கருத' (9), 'புகைய,' 'திரிய', 'படர' (10), 'ஒப்ப' (11) என்ற வினை

யெச்சங்களும் 'மழுவாளவன் வந்தான்' என்பதனையே கொண்டு முடியும். பி-ம்:—[1] அளவையின். [2] கீறிடு, கீறிடும், நின்றது. [3] வெளியான், வெளியாய். [4] மிடன் மழுவான். [5] சுடர். [6] மொழியான். (1354)

8. கம்பித்தலை யெறிநீருறு கலமொத்துல குலையத்
தம்பித்துயர் திசையானைக டளரக்கடல் சலியா
வெம்பித் [1] திரி தரவானவர் வெருவுற்றிரி தரவோர்
செம்பொற்சிலை [2] தெறியாவயின் முகவாளிக டெரிவான்.

(இ - ள்.) அலை எறி நீர் உறு கலம் ஒத்து-அலைகளை வீசுகின்ற கடல் நீரினிடையிலே அகப்பட்டுக்கொண்ட மரக்கலத்தைப் போன்று, உலகு கம்பித்து உலைய-உலகங்களும் உலகத்திலுள்ள சராசரவருக்கங்களும் நடுங்கி நிலைகெடும்படியாகவும், தம்பித்து உயர் திசை யானைகள் தளர-(எட்டுத்திக்கிலும்) தூண்களை யொத்து(க்கீழிருந்து பூமியைத் தாங்குகிற) சிறந்த திக்கஜங்களும் தளர்ச்சியடையவும், கடல் சலியா வெம்பி திரிதர-கடல் பொங்கிக் கொதித்து நிலைவேறுபடவும், வானவர் வெருவுற்று இரிதர-மேல் உலகத்துள்ள தேவர்களும்பயம்மிகுந்து இடம் விட்டோடவும், ஓர் செம்பொன் சிலைதெறியா அயில் முகம் வாளிகள் தெரிவான்-செம்பொன்மயமானதொருவில்லை (வளைத்து நாணேற்றித்) தெறித்துக் கூர்மையையுடைய நுனியையுடைய பாணங்களை ஆராய்ந்தெடுப்பவனும்,—(எ - று.)

இச்செய்யுளில் முதல் மூன்றடிகளிற் கூறிய செயல்களெல்லாம், பரசுராமன் வில்லைவளைத்து அம்புதொடுக்குமாறு நாணியைக் கைவிரலால் தெறிப்பதிலுண்டாகிற ஒலியின் அதிர்ச்சியால் நிகழ்வன. நாணியைத் தெறித்தல், தான் பொருதற்குச் சித்தமாக இருத்தலைத் தெரிவிக்கும். தம்பித்து திக்பிரமைகொண்டு; அசைவற்றுநின்று என்றுமாம். செம்பொற்சிலை - பொன்போலருமையான வில் என்றுமாம். பி - ம்:—[1] திரிதரு. [2] குனியா, தரியா. (1355)

9. விண் [1] கீழுற வென்றோபடி மேல்கீழுற வென்றோ
எண் [2] கீறிய வுயிர்யாவையும் [3] யமன் [4] வாயிட வென்றோ
புண் கீறிய குருதிப்புனல் [5] பொழிகின்றன [6] புரையக்
கண் கீறிய [7] கனலான் [8] முனி வியாதென்றயல் [9] கருத.

(இ - ள்.) புண் கீறிய குருதி புனல் பொழிகின்றன புரைய - புண்வாய்விட்டுவருகிற இரத்தமாகிய செந்நீர் சொரிகின்றவற்றை யொக்கும்படி, கண் கீறிய கனலான் - கண்களினின்று வெளிப்படுகிற கோபாக்கினியையுடைய அவ்வந்தண வீரனது, முனிவு - பெருங்கோபத்திற்குக் காரணம், விண் கீழ் உற என்றோ-சுவர்க்கலோகம் பூமியில்வந்து விழுந்திடவேண்டுமென்று தானோ? படி மேல் கீழ் உறஎன்றோ - பூலோகம் ஆகாயத்தின்மேற்சென்று பொருந்தவேண்டுமென்று தானோ? எண் கீறிய உயிர் யாவைஉம் யமன் வாய்இட என்றோ - கணக்கையொழித்த [அளவற்ற]பிராணிகளெல்லாவற்றையும் (சங்காரத்தொழில் புரிபவனை) யமனது வாயிலே போகடவேண்டுமென்று தானோ? யாது - (இவற்றுள்)

எதுவோ? என்று—, அயல் - அயலிலுள்ளவரெல்லாரும், கருத- எண்ணமிடவும்,—(ஏ - று.)

பரசுராமனது பெருஞ் சினத்தைக் கண்டவர்கள், 'இவன் சீற்றத்திற்குக் காரணம்-விண்ணும் மண்ணும் நிலைமாறவோ, உயிர்கள் ஒழியவோ, என்னேயோ!' என்று கருதலாயினர். பின்னிரண்டடிகளில், தன்மைத்தற்குறிப்பேற்றவணி காண்க. மேல்கீழுற-கீழ் மேலாகப் பொருந்த; கவிழ எனினுமாம். எண்கீறிய - (பிரமனுல் அல்லது சித்திரகுத்தனுல்) கணக்கிலெழுதப்படுகிற என்றும் கொள்ளலாம். இதனுல், பரசுராமனது பெருங்கோபமும் பேராற்றலும் விளக்கப்பட்டன. பி - ம்:—[1]கீளுற. [2]கூறிய. [3]நமன். [4]வாய்விட. [5]பொழிகின்றனன். [6]புலரக். [7]அனலன். [8]முனிவேது. [9]கருதேம், கருத்தே. (1356)

10. போரின்மிசை யெழுகின்றதோர் [1]மழுவின்சிகை [2]புகையத்
தேரின்மிசை மலைசூழ்வரு கதிருந் [3]திசை திரிய
நீரின்மிசை [4]வடவைக்கன னெடுவானுற முடுகிப்
பாரின்மிசை வருகின்றதோர் படிவெஞ்சுடர் படர.

(இ - ள்.) போரின்மிசை எழுகின்றது ஓர் மழுவின் - போரே தொழிலாக அதன்மேல் எழாநிற்குந் தன்மையுள்ளதொரு ஒப்பற்ற கோடாலிப்படையினது, சிகை-கொழுந்து [பரசாயுதத்தின் நுனியினின்று எழுகிற அக்கினிச்சுவாலை], புகைய - புகையவும்,—தேரின் மிசை மலை சூழ்வரு கதிர்உம் திசை திரிய-(தனது ஏழ்புரவிபூண்ட ஒற்றைத் தனியாழித்) தேரின் மேலேறி (ஆகாய மார்க்கததிலே) மகாமேருகிரியை (நாள்தோறும்) வலஞ்செய்து வருகிற சூரியனும் (தனது உக்கிரத்தன்மையை நோக்கி அஞ்சி நடுங்கித்) திக்குத்தடுமாறிச்செல்லவும்,—நீரின்மிசை வடவை கனல் நெடு வான் உற முடுகி பாரின் மிசை வருகின்றது ஓர் படி - கடல் நீரினிடையே மேலெழுந்துதோன்றுந்தன்மையதான படபாமுகாக்கினி ஆகாயத்தையளாவ ஓங்கி விரைந்து வளர்ந்தெழுந்து பூமியின் மேலே வருகின்றதொருவிதம் போல, வெம் சுடர் படர-(தனது உடலினின்று) வெவ்விய ஒளி [தேஜசு] வெளிப் பரவவும்,—(எ று.)

'கடலிடையே யிருந்து கொழுந்துவிட்டெரியும் வடவைக்கனல் பூமியினிடையே வந்ததோ!' என்னுமாறு சீற்றத்துடன் வருகின்ற பரசுராமனுடைய உடலினின்று ஓரொளிஉலகிற்பரவலாயிற்றென்க; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]முனிவின், முனிவன். [2]புதைய. [3]திசையிரிய, திசைவிரிய, திரைவிரிய. [4]வட வெங்கனனோர். (1357)

11. பாழிப்புய முயர்திக்கிடை யடையப்புடை [1]படரும்
சூழிச்சடை முடிவிண்டொட வயல்வெண்மதி [2]தோற்ற
ஆழிப்[3]புன லெரிகானில மாகாயமு [4]மழியும்
ஊழிக்கடை [5]முடிவிற்[6]றிரி யுமைகேள்வண [7]யொப்ப.

(இ - ள்.) பாழி புயம்-வலிமையையுடைய (தனது) தோள்கள், உயர் திக்கிடை அடைய-உயர்ந்த திக்குக்களின் எல்லையிடையிலே

சென்று பரவவும், புடை படரும் சடை முடி சூழி - பக்கங்களிலெல்லாம் பரவிய தன்மையையுடைய சடையோடு கூடிய மயிர் முடியினது உச்சி, விண் தொட - ஆகாயத்தையளாவவும், வெள்மதி - வெண்ணிறமுள்ள சந்திரன், அயல் தோற்ற - (தனது) அருகிலே தோன்றவும், ஆழி புனல் எரி கால் நிலம் ஆகாயம்உம் அழியும் ஊழி கடைமுடிவில் - கடல்வடிவமான நீரும் அக்கினியும் காற்றும் பூமியும் வானமும் (என்னும் பஞ்சபூதங்களும்) அழிவதான கற்பத்தின் அந்தகாலத்திலே, திரி நடமாடுகிற, உமைகேள்வனை - உமாதேவி கொழுநனான உருத்திரமூர்த்தியை, ஒப்ப - (தான்) ஒத்திருக்கவும்,—(எ - று.)

சர்வசங்காரகாலத்தில் நடனஞ் செய்யும் உருத்திரமூர்த்தி அடங்காது அளவிறந்த பெருஞ் சீற்றத்திலும் பல்லுயிரையும் பதைக்கக்கொல்லுங்கொடுமையிலும் தோற்றத்திலும் பரசுராமனுக்கு உவமை. புயம் திக்கையடைதலும், சடை விண்தொடுதலும், அயல் வெண்மதி தோன்றுதலும் - இருவர்க்கும் ஒத்தல் காண்க. சிவபெருமானுக்குச் சடையினயலிலே வெண்மதி தோன்றும்: பரசுராமனுக்கோ முகத்திலே வெண்மதி நிலாப்போல் வெகுளிநகை தோன்றுமென்க. இச்செய்யுளில் இவனுக்கு உமைகேள்வனை உவமை கூறினதற்கு, கீழ்ச்செய்யுளில் 'மழுவின் சிகை புகைய,' 'திசை திரிய,' 'வெஞ்சுடர்படர' என்றவற்றையும் காரணமாகக் கொள்ளலாம். சூழி - உச்சி; இது சடைமுடிச்சூழியென மாற்றப்பட்டது. ஐம்பெரும் பூதங்களைச் செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார். பி-ம்:—[1] படர. [2] தொத்த. [3] பொருபுனலே முதல், பெரும்புனலே முதல், புனல் புவிகாலனல். [4] அழிய. [5] உருளிற். [6] தனி. [7] ஒப்பான். (1358)

12. அயிர் [1] சுற்றிய கடன்மாநில மடையத்தனிப் படரும்
செயிர் [1] சுற்றிய [2] படையானடன் மறமன்னவர் திலதன்
உயி [3] ருற்றதொர் [4] மரமாமென வோராயிர முயர்தோள்
[5] வயிரப்பணை துணியத் [6] தொடு [7] வடிவாய்மழு வுடையான்.

(இ ள்.) அயிர் - மணல்களோடுகூடி, சுற்றிய - (நாற்புறத்துஞ்) சூழ்ந்துள்ள, கடல் - கடலிடையேயுள்ள, மாநிலம் அடைய - பெரிய பூலோகம் முழுவதிலும், தனி படரும் - ஒப்பில்லாமற் பரவுந் தன்மையுள்ள, செயிர் சுற்றிய படையான் - வலிமை மிகுந்த சேனையையுடையவனும்,—அடல் மறம் மன்னவர் திலதன் - பலபராக்கிரமங்களையுடைய அரசர்களுக்கெல்லாம் அழகு செய்யுந்திலகம்போலச் சிறந்தவனுமாகிய கார்த்தவீரியார்ச்சுனன், உயிர் உற்றது ஓர் மரம் ஆம் என - உயிரோடுகூடிப் பொருந்தியதொரு பெருமரத்தையொத்துநிற்க, ஓர் ஆயிரம் உயர் தோள வயிரம்பணை - (அவ்வருச்சுனனது) ஓர் ஆயிரக் கணக்கான உயர்ந்ததோள்களாகிய வைரம் பற்றின கிளைகளெல்லாம், துணிய - வெட்டுப்படும்படி, தொடு - (கையால்) ஓங்கியெடுத்து வீசின, வடி வாய் மழு உடையான் - கூர்மையான நுனியையுடைய பரசு வென்னும் ஆயுதத்தையுடையவனும்,—(எ - று.)

இச்செய்யுளில் பரசுராமனது மிக்கசேனையும் அவனது படைக்கலத்தின் சிறப்பும் கூறப்பட்டன. செயிர்-கோபம்: அடல்-வெற்றி, மறம்-கோபம் என்றுமாம். சந்திரவமிசத்திற் பிறந்த யயாதிமகாராசனது மூத்தகுமாரனும் யதுவின் குலத்தவனாகிய கிருதவீரியனது குமாரனான கார்த்தவீரியார்ச்சுனன் அத்திரி குமாரனாய் விளங்குகிற நாராயணமிசமான தத்தாத்திரேயமகா முனிவனை ஆராதித்து அவனுடைய அனுக்கிரகத்தினால் ஆயிரந் தோள்களுடைமை, போரில்வெற்றி, பூமியை முறைப்படி காத்தல், பகைவர்களால் அவமானப்படாமை, சகல லோகங்களுங் கொண்டாடும் மகாபுருஷனால் மரணம் முதலிய வரங்களைப் பெற்று, பல வேள்விகளையும் இயற்றி, தனதுமரபில் தோன்றின மகிஷ்மானென்னும் அரசனால் உண்டாக்கப்பட்ட மாகிஷ்மதிபட்டணத்தைப் பலகாலம் அரசாண்டுவரும்போது, ஒருகால் தான் நருமதையாற்றிற் சலக்கிரீடை செய்துகொண்டு மதுபானத்தால் மதித்திருக்கையில், திக்குவிசயஞ்செய்து வருகிற இராவணன் தன்னை எதிர்க்கக்கண்டு அவனைத் தனது ஆற்றலால் எளிதிற் கட்டித் தனது பட்டணத்திற்கொண்டுபோய்ச் சிறைச்சாலையில் வைத்து, பின்பு அவனது மூதாதையாகிய புலஸ்திய மகாமுனிவனது வேண்டுகோளால் அவனைச் சிறைவிடுத்து, அம்முனிவனருளால் 'ராவணஜித்' என்கிற பெரும்பெயரைப் பெற்றான். இவன் ஒரு காலத்தில சேனையுடனே வனத்திற்சென்று வேட்டையாடிவந்து இப்பரசுராமனது தந்தையான ஜமதக்கினிமுனிவனுடைய ஆச்சிரமத்தை யடைந்து முனிவனநுமதியால் அங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகையில் ஓமதேனு முனிவனுக்குப் பல வளங்களையும் எளிதிற் சுரந்தளித்தலைக் கண்டதனால் அதனிடம் ஆசைகொண்டு அப்பசுவை அம்முனிவனனுமதி யில்லாமற் பலாத்காரமாகக் கவர்ந்துபோக, அதனை அறிந்த இப்பார்க்கவராமன் பெருங்கோபங் கொண்டு ஆயுதங்களுடனே சென்று கார்த்தவீரியார்ச்சுனனுடன் போர்செய்து அவனைப் பதினொரு அட்சௌகிணிசேனையுடனே நிலைகுலைத்து அவனது ஆயிரந்தோள்களையும் தலையையும் தனது கோடாலிப்படையால் வெட்டிவீழ்த்தி வெற்றிகொண்டானென்பது, வரலாறு. பி-ம்:—[1] துற்றிய. [2] படையாருடன். [3] குற்றதோர், துற்றதோர். [4] மறமா. [5] வயிரக்கிரி. [6] தெறும். [7] வடிவாள், மடியா. (1359)

13. நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னவர் குலமும்
கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் [1] கவரா
இருபத்தொரு படிகா[2] லெழு கடலொத்தலை [3] யெறியும்
குருதிப்[4] புன லதனிற்புக முழுகித்தனிக் குடைவான்.

(இ - ள்.) நிருபர்க்கு-அரசர்களுக்கு, ஒரு பழி-ஒப்பற்ற பழியொன்று, பற்றிட - பொருந்துதலால், நிலம்மன்னவர்குலம்உம்-பூலோகத்திலுள்ள அரசர்களது கூட்டமுழுவதும், கரு அற்றிட-வேரற்றொழியும்படி, இருபது ஒரு படி கால் - இருபத்தொருதலைமுறை,மழுவாள் கொடு-(தனது) மழுவாயுதத்தைக்கொண்டு, உயிர் கவரா-(அவ்வரசர்களது) உயிரை (உடம்பினின்று) எடுத்துவிட்டு [கொன்று என்றபடி], களை கட்டு-(இங்ஙனம் பூமியிலுள்ள) களை

களைப் பறித்து, எழுகடல் ஒத்து அலை எறியும் குருதிபுனல் அதனில் - பொங்கியெழுகிற கடலைப்போன்று அலைவீசுகிற அவர்களிரத்தவெள்ளத்தில், புக-(தன்னுடம்பு) அமிழும்படி, முழுகி-மூழ்கி, தனி-தனியே, குடைவான்-நீராடுபவனும்,—(எ-று.)

இதனால், க்ஷத்திரியகுலம் முழுவதன்மீதே பரசுராமன் சீற்றங்கொண்டபடியைக் கூறுகிறார். பரசுராமன் கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்றதும், அவனது குமாரர்கள் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று நிச்சயித்துப் பரசுராமனில்லாத சமயம்பார்த்துப் பர்ணசாலையினுட் சென்று அவனது தந்தையாரைத் தலைதுணித்துப் போக, பின்புவந்த பரசுராமன் அதனை யறிந்து பெருஞ்சினங்கொண்டு சென்று அவ்வருச்சுனகுமாரர்களையும் உலகத்திலுள்ள செருக்குக்கொண்ட அரசர்கள் பலரையும் அழித்தொழித்துச் சகல க்ஷத்திரியவமிச விநாசகாரணனாயின னென்பது வரலாறு. ஜமதக்கினிமுனிவனது தலையைக் கார்த்தவீரியார்ச்சுனகுமாரர் துணித்திட்டபோது அம்முனிவன் மனைவியான ரேணுகாதேவி இருபத்தொருமுறை தன்மார்பி லடித்துக்கொண்டு புலம்பினது பற்றி அரசர்களை இருபத்தொருதலைமுறை பரசுராமன் ஒழித்திட்டானென்றும்; பரசுராமன் தான் முதலில் வீரவாதமாகப் பிரதிக்கினை செய்தபடி அவ்வரசர்களது இரத்தவெள்ளத்தால் ஸ்யமந்த பஞ்சகமென்று ஐந்துதடாகங்களை யேற்படுத்தி அவற்றில் தந்தைக்குத் தருப்பணஞ் செய்திட்டானென்றும் பாகவத சரிதம். கார்த்தவீரியார்ச்சுனன்குமாரர்கள் 'எம் தந்தையைக் கொன்ற பரசுராமனது 'தந்தை' என்று ஜமதக்கினி முனிவனைக் கொல்ல, அரசச் செருக்காலான அச்செயலால் நிருபர்க்கே பழி பற்றுவதாயிற்றென்க. ஒருபழி-நிரபராதியான முனிவனைக் கொன்றது. பயிர் வளர்ச்சிக்குத் தடையான களைகளைப் பறித்தல் நன்மையாமாறு போல அறநெறியொழுக்கத்துக்குத் தடையாகுங் கொடியவரை யொழித்தல் நன்மையேயாமென்பார், 'களைகட்டு' என்றார். எழுகடல்-ஏழுகடலென்றும், காலெழு கடலென எடுத்து - காற்றினாற் கிளர்ந்தெழுங்கடலென்றுமாம். பி - ம்:—[1]களைவான். [2]உமிழ். [3]பெருகும். [4]குரைபுனலில். (1360)

14\. கமையொப்பதோர் தவமுஞ்சுடு கனலொப்பதோர் சினமும்
சமையப்பெரி துடையா[1]னெதிர் [2]தளர்வுற்றிடை தவிரும்
அமையத்துயர் பறவைக்கினி தாரும்வகை சீருச்
[3]சிமயக்கிரி யுருவத்தனி வடி [4]வாளிக டெரிவான்.

(இ - ள்.) கமை-பொறுமை என்னுஞ் சிறந்த குணத்தின் வடிவத்தையே, ஒப்பது-ஒத்திருப்பதான, ஓர் தவம்உம்-ஒப்பற்றதொருதவத்தையும், சுடு கனல்-(இயற்கையிற்) சுடுந்தன்மையுள்ள அக்கினியை, ஒப்பது-ஒத்துக்கொடியதாயிருப்பதான, ஓர் சினம் உம்-ஒப்பற்றதொரு கோபத்தையும், பெரிது-மிகுதியாக, சமைய-(தன்னிடத்தே) பொருந்த, உடையான் - உடையவனும், எதிர் தளர்வுற்று இடை தவிரும் அமையத்து - தன்னெதிரிலே தளர்ச்சியடைந்து (முருகக்கடவுள்) நடுவிலே விட்டுநீங்குஞ் சமயத்திலே,

சிளு-(தான்) சீற்றங்கொண்டு, உயர் பறவைக்கு இனிது ஆறு ஆம் வகை-(வானத்தில்) உயரப் பறந்துசெல்லுகிற பட்சிகளுக்கு இனிமையானவழியாகும்படி, சிமயம் கிரி-சிகரத்தையுடைய (கிரௌஞ்ச) பருவதத்தை, உருவ-துளைத்து ஊடுருவிச்செல்லுமாறு, தனி வடி வாளிகள்-ஒப்பற்ற் கூர்மையையுடைய அம்புகளை, தெரிவான்-ஆராய்ந்தெடுத்தெய்யுந்தன்மையுடையவனும்,—

இதனால், பரசுராமனிடம் தவமும் அதற்கு மாறான சினமும் இருத்தலோடு சினச்செயலை வெளிக்காட்டுவதற்கு ஏற்ற பராக்கிரமமு மிருத்தலைக் கூறுகின்றார். பரசுராமனும் சுப்பிரமணியனும் பரமசிவனிடம் வில்முதலிய ஆயுதப்பயிற்சியைச் செய்து முடித்த பின்பு இவர்களுள் உயர்வுதாழ்வு அறியும் பொருட்டுச் சிவபிரான் உமாதேவியின் முன்னிலையிலே இவர்களுக்குக் கிரௌஞ்சமலையைச் சுட்டிக்காட்டி 'இதனைத் துளைத்திடுக' என்று நியமிக்க, முன்னர் முருகமூர்த்தி அம்புகளைத்தொடுத்து அதனைத் துளைக்க மாட்டாமற்போகவே, பரசுராமன் பராக்கிரமத்தோடு அம்பெய்து அதனைத் துளையிட்டுக் காட்ட, அதன்பின் முருகக்கடவுள் வேலாயுதத்தை வீசியெறிந்து அம்மலையைப் பிளந்திட்டன னென்றும், மிகப்பெரிய கிரௌஞ்சமலைக்குத் தென்திசையிலுள்ள அன்னப் பறவைகள் அத்தேயங்களில் மழைபனிக்காலங்களில் தமக்கு இனிய வாசஸ்தலமான தாமரைமலர்கள் நிலைகுலையும்பொழுது அவ்விடங்களை விட்டுப்புறப்பட்டுக் கிரௌஞ்சமலையிற் பரசுராமனாலுண்டாக்கப்பட்ட துவாரத்தின் வழியாகப் பறந்து சென்று இமயமலைப்பிராந்தத்திலுள்ள மானசசரசை யடைந்து சிலகாலம் அங்கு வாழ்ந்திருந்து பின்பு அவ்வழியாகவே மீண்டும் இப்பால் வருகின்றன வென்றும் வரலாறு காண்க. இனி, கமை...உடையானெதிர் என்பதற்கு-(தோலாடையும் சடைமுடியும் முதலிய) தவவேஷத்தையுங் கடுங்கோபத்தையுமுடைய சிவபிரானது சன்னிதானத்திலென்றுமாம். பி-ம்:—[1] நடை. [2] தளருற்றிடைதவிரும், தரலுற்றிடைதளரும், தள்ளுற்றிடைதளரும், தள்ளுற்றிறத் தளரும். [3] இமையக். [4] வாளிகொடெய்வான். (1361)

15\. சையம்[1] புக நிமிரக்கட றழுவும்படி சமைவான்
[2] மையின்னுயர் மலைநூறிய மழுவாளவன் வந்தான்
ஐயன்றனை [3] யரிதிற்றரு மரசன்னது கண்டான்
வெய்யன்வர நிபமென்னைகொ லெனவெய்துறு [4] மெல்லை.

(இ-ள்.) சையம்-(மேலோங்கியுயர்ந்துள்ள) மலைகள், புக-(நிலத்தினுள்) அடங்கிச்செல்வதனால், கடல்-கடல்கள், நிமிர தழுவும்படி-மேற்பொங்கியெழுமாறு, சமைவான்-முயல்பவனாகிய, மையின் உயர் மலை நூறிய மழுவாளவன்-மேகங்களையுடைத்தாய் உயர்ந்துள்ள (கிரௌஞ்ச) கிரியை அழித்திட்ட கோடாலிப்படையையுடைய பரசுராமன், வந்தான்-(இவர்களுக்கு எதிரில் அருகில்) வந்து சேர்ந்தான்; ஐயன் தனை அரிதின் தரும் அரசன்-(யாவர்க்குந்) தலைவனான ஸ்ரீராமபிரானை அருமையாக(த் தனக்குமகனாக)ப் பெற்ற தசரதசக்கரவர்த்தி, அது கண்டான்-அதனைப்பார்த்து, வெய்யன்

வர நிபம் என்னைகொல் என - கொடியவனான இவன் (இங்கு இப்பொழுது எதிரில்) வந்திடுதற்குக் காரணம் யாதோ என்று கருதி, வெய்துறும் எல்லை -கொடியவருத்தத்தை அடையுஞ் சமயத்தில்,-

மலைகள் பூமியின்கீழே புகுமாறும் கடல் பூமியின்மீது நிமிர்ந்து செல்லுமாறும், இந்தப் பரசுராமன் கோபாவேசத்தோடு அதிரத் தாள்களை வைத்தனனென்று உயர்வுநவிற்சியணியாற் கூறினர். 'சையம்புகநிமிரக் கடல்தழுவும்படி சமைவான்' என்பதற்கு - பரசுராமன் தான் வென்ற பூலோகம்முழுவதையும் காசியபமுனிவனுக்குத் தானஞ்செய்துவிட, பின்னொருகாலத்தில் அம்முனிவன் பரசுராமனைக் கருவபங்கஞ்செய்யும்பொருட்டு 'எனக்குத் தானஞ்செய்திட்ட இடத்திலே நீ வசித்திருத்தல் தகுதியோ?' என்ன, உடனே பரசுராமன் வருணனனுமதியின்மேற் சையமலையினின்று கோடாலிப்படையை வீசியெறிந்து அது விழுந்த அவ்வளவு இடத்தைக் கடல் ஒதுங்கி அப்பாற்சென்று தனக்கென்று அளிக்கப்பெற்று அங்குத் தங்குபவனானனென்னும் வரலாறு பற்றி, (தனக்குமுன்பு வாழுமிடமாயிருந்த) மகேந்திரமலையினின்று செல்லத் தென்கடலோடு மேல்கடல் அப்பாற்படப்போம்படி செய்பவனென்றும் உரைகூறலாம்: அவ்விடம், பரசுராமக்ஷேத்திரமெனப்படும். மையின்னுயர் மலை நூறிய என்பது, கீழ்க்கவியின் அநுவாதம். இவனது ஆற்றலை நன்கு விளக்குதற்கு மீண்டுங்கூறியதென்க. மையின்னுயர்மலை - மேகமண்டலத்தையளாவிய மலையுமாம். மழு ஆளவன் என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1]புடை. [2]மையின்று. [3]அருண்மன்னவனும் மன்னது. [4]எல்லை, வேலை. (1362)

16.—சினந்துவரும் பரசுராமனை இராமன் 'இவன் யாரோ?' எனல்.

பொங்கும்படை யிரியக்கிளர் [1]புருவங்கடை நெரிய
[2]வெங்கண்[3]பொறி சிதறக்[4]கடி துருமேறென [5]விடையாச்
சிங்கம்மென வுயர்தேர்வரு குமரன்னெதிர் சென்றான்
அங்கண்ணர சவனும்மிவ னாரோவெனு மளவில்.

(இ - ள்.) பொங்கும் - மகிழ்ந்துசெல்லுகின்ற, படை - (தசரதனது) சேனைகள், இரிய-பயந்தோடும்படி, (பரசுராமன்), கிளர் புருவம் கடை நெரிய - விளங்குகின்ற (தன்) புருவங்கள் நுனியிலே நெரிப்படையவும், வெம் கண் பொறி சிதற - பயங்கரமான கண்கள் நெருப்புப்பொறிகளைச் சிந்தவும், கடிது -விரைவாக, உரும் ஏறுஎன- பேரிடிபோல, விடையா-பெருங்கோபங்கொண்டு, சிங்கம் என உயர் தேர் வரு குமரன் எதிர் சென்றான்-சிங்கம்போலக் கம்பீரமாக உயர்ந்த தேரின்மீது வருகின்ற சக்கரவர்த்திதிருக்குமாரனான இராமபிரானது எதிரிலே போனான்; (அப்பொழுது), அம் கண் அரசு அவன்உம் - அழகிய திருக்கண்களையுடைய யாவர்க்குந் தலைவனான இராமனும், இவன் ஆர்ஓ எனும் அளவில்-,(எ - று.)—அரசன் அடிமேல்உற விழலும் என்க.

புருவங் கடைநெரிதலும் கண்பொறிசிந்துதலும், கோபக்குறி. அங்ஙன் கோபக்குறிகாட்டவே, தசரதன்படை இரிவதாயிற்று.

விடை ஆ என இருசொல்லாகக்கொண்டு, சிங்கத்தின்முன் விருஷபஞ் செல்லுவதையொத்து என்றுமாம். சிங்கவுவமையைப் பரசுராமனுக்குக் கொள்ளலு மொன்று. பி-ம்:—[1] புருவக். [2] எங்கும். [3] பொடி. [4] கடை. [5] இடியா. (1363)

17.—பரசுராமன் இராமனெதிர்நின்று இவை கூறுதல்.

அரசன்னவ [1] னிடைவந்தினி தாராதனை புரிவான்
விரைசெய்முடி படிமேலுற வடிமே[2] லுற [3] விழலும்
கரைசென்றில [4] னணையானெடு [5] முடிவின்கனல்[6] கால்வான்
முரசின்குரல் படவீரன தெதிர்[7] நின்றிவை [8] மொழிவான்.

(இ - ள்.) அரசன் - தசரதசக்கரவர்த்தி, அவன் இடை வந்து- அப்பரசுராமனிடத்திலேவந்து, இனிது ஆராதனை புரிவான் - இனிமையாக (அவனுக்கு) அதிதிபூசை செய்பவனாய், விரை செய் முடி படிமேல் உற - (பூமாலை) நறுமணம் வீசுதற்கிடமான (தனது) சிரசு பூமியிலே பொருந்தும்படி, அடி மேல் - (அப்பரசுராமனது) திருவடிகளிலே, உற விழலும்-நன்றாக விழுந்து தண்டன்ஸமர்ப்பித்தஅளவிலும்,—அனையான் - அப்பரசுராமன், கரை சென்றிலன் - (தனது கோபமாகிய கடலுக்கு) ஒருகரையையடையாமல் [சினஞ்சிறிதுந் தணியாதவனாயென்றபடி], நெடு முடிவின் கனல் கால்வான்-பெரிய கல்பாந்தகாலத்துத் தீயை வெளிவீசுபவனாய்,—முரசின் குரல் பட- முரசத்தினது முழக்கத்துக்கு ஒப்பான தொனியுண்டாக, வீரனது எதிர் நின்று - சுத்தவீரனான இராமனது எதிரில் நின்று, இவை மொழிவான் - இவ்வார்த்தைகளைக் கூறுபவனானான்; (எ - று.)— அதனை மேலிற் காண்க.

தசரதன் பரசுராமனைச் சாந்தப்படுத்த அவனை ஆராதனைபுரிதற்கு அப்பரசுராமனது திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்குதலும் அப்பரசுராமன் கோபம் சிறிதும் அடங்காது அதிர்குரலுடனே பின் வருமாறு இராமபிரானை நோக்கிப் பேசலாயினனென்க. கரைஎன்பதற்கு ஏற்ப, கோபக்கடலென வருவிக்கப்பட்டது. புரிவான்- செய்யும்பொருட்டென்றுமாம். பி-ம்:—[1] இடையே புகுந்து. [2] விழ. [3] வினவும், விழவும். [4] அனையானெடும். [5] முடிவின்றனல். [6] கனல்வான். [7] சென்றிவை. [8] மொழியும். (1364)

18.—பரசுராமன் 'உன்தோள்வலியைச் சோதிக்கவந்தேன்' எனல்.

இற்றோடிய சிலையின்றிற மறிவென்னினி யானுன்
பொற்றோள்வலி நிலைசோதனை [1] புரிவானசை யுடையேன்
செற்றோடிய திரடோளுறு தினவுஞ்சிறி துடையேன்
மற்றோர்பொரு ளில[2] திங்கிதென் வரவென்றன னுரவோன்.

(இ - ள்.) யான்—, இற்று ஓடிய சிலையின் திறம் அறிவென்- (முன்னமே)முறிந்தொழிந்துள்ள (நீ முறித்த சிவனுடைய) வில்லின் தன்மையை அறிவேன்; இனி உன் பொன் தோள் வலி நிலை சோதனை புரிவான் நசைஉடையேன்-இப்பொழுது உனது பொன்னாபரணங்களை யணிந்த தோளினது வலிமையின் தன்மையை

ஆராய்ச்சி செய்ய விருப்பை யுடையேன்; செற்று-(அரசர்களை) அழித்து, ஓடிய-மேம்பட்ட, திரள் தோள்-திரண்டதோள்களில், உறு-பொருந்தின, தினவும்—, சிறிது உடையேன்—; இங்கு என் வரவு இது-இவ்விடம் எனது வருகைக்குக்காரணம் (உன் தோள் வலியைப் பரீட்சித்து என்தோளின் தினவைச் சிறிது தீர்த்துக் கொள்ளவேண்டுமென்கிற) இதுவேயாம்; மற்று ஓர் பொருள் இலது-வேறு ஒருகாரணமுமில்லை; (எ-று.)

உன் பொற்றோள் என்றது-உனதுதோள் கண்ணுக்கு அழகிதாகி ஒழுங்காக அமைந்ததுமாத்திரமேயன்றித் திறமையுடையதன்று என்ற குறிப்பினது. தினவு-போர் எங்கேனும் நேரிடுமோ என்று நாடுந் தன்மை. செற்றோடிய-பகைவர்களை யழித்துப் பல காலங் கழியப்பெற்ற என்றவாறுமாம். 'இற்றோடியசிலையின்திறமறிவன்' என்றதனால், சிவவில்லை முறித்துவிட்டேனென்று செருக்குக்கொள்ளாதே யென்றதாம். பி-ம்:—[1]புரிவானிலை. [2]ஏதென, இங்கிதன். (1365)

19.—தசரதன் பரசுராமனிடம் அபயந்தர வேண்டுதல்.

அவனன்னது பகரும்மள வையின்மன்னவ [1]னயர்வான்
புவனம்முழு வதும்வென்றொரு முனிவற்கருள் புரிவாய்
சிவனும்[2]மய னரியும்[3]மலர் சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன தபயம்[4]மினி யென்றான்.

(இ - ள்.) அவன்-அந்தப்பரசுராமன், அன்னது-(கீழ்க்கூறிய) அவ்வார்த்தையை, பகரும் அளவையின் - (ஸ்ரீராமனை நோக்கிச்) சொல்லுஞ் சமயத்தில்,—மன்னவன் - தசரதசக்கரவர்த்தி, அயர்வான்-மனந்தளர்பவனாய், (பரசுராமனை நோக்கி), 'புவனம் முழுவதுஉம்-பூலோகம்முழுவதையும், வென்று - (எல்லா அரசர்களையும் அழித்துச்) சயித்து (த் தன்னதாக்கிக் கொண்டு), ஒரு முனிவற்கு-ஒப்பற்ற காசியபனென்னும் முனிவனுக்கு, அருள் புரிவாய்-கருணைகொண்டு தானஞ்செய்திட்டவனே! சிவன்உம் அயன் அரிஉம்-சிவன் பிரமன் விஷ்ணு என்னுந்திரிமூர்த்திகளும், அலர்-(உனக்கு ஒரு) பொருளல்லர்; (என்றால்), சிறு மானிடர் பொருள்ஓ-அற்பர்களாகிய மனிதர்கள் (உனக்கு) ஒரு பொருளாகுவரோ? [ஆகாரென்றபடி]; இவன்உம்-இந்தராமசந்திரனும், எனது உயிர் உம்-என்னுடைய பிராணனும், இனி-இப்பொழுது,உனது அபயம்-உனது அடைக்கலப்பொருள்,' என்றான்-என்று துதித்துக் கூறினான்; (எ-று.)

பூமிமுழுவதையுந் தானஞ்செய்திட்ட நீ எங்களுக்கு இந்த அபயப்பிரதானஞ்செயல்வேண்டு மென்பதாம். தனது உயிரினுஞ் சிறந்தவன் இராமனென்றும் தன்னுயிர் உளதாவது இராமன் உளனானபின்பே யென்றும் கருத்துக்கள் விளங்க, 'எனதுயிரும்' என்பதற்கு முன் 'இவனும்' என்றான். அபயம்-வடசொல்; பயப்படாதே யென்றுசொல்லிக் காக்கத்தக்க வஸ்துஎன்று பொருள். இங்கே, திருமாலும் பரசுராமனுக்கு நேராகா னெனக் கூறினது,

தோத்திரமாதலின். சிறுமானிடர்-சின்னஞ்சிறுபல்பிணிச் சிற்றறிவினர்; திரிமூர்த்திகளிற் சேர்ந்தவரல்லாத இவ்விளம்பிராயமுள்ள மக்கள்.
பி-ம்—[1] அறைவான். [2] அரியயனும். [3] நிகர். [4] இனிது. (1366)

20.—நான்குகலிகள்.— இராமன்மீதுசினங்கொண்டு அழியாது விட்டிடப் பலபடியாகத் தசரதன் வேண்டுதல்.

விளிவார்விளி வதுதீவினை [1]விழைவாருழை [2]யன்றே
களியா[3]லிவ [4]னயர்கின்றன வுளவோகன லுமிழும்
ஒளிவாய்மழு[5]வுடையாய்பொர [6]வுரியாரிடை யல்லால்
[7]எளியாரிடை வலியார்வலி யென்னாகுவ [8]தென்றான்.

(இ - ள்.) 'கனல் உமிழும்-நெருப்பைச் சிதறுகிற, ஒளி வாய் மழு உடையாய்-ஒளியமைந்த மழுவென்னும்படையை யுடையவனே! விளிவார் விளிவது-(ஒருவர்) இறத்தற்கு உரியவராய் இறப்பது, தீவினை விழைவாருழை அன்றே-கொடியபாவச்செய்கைகளை விரும்பிச்செய்யுங் கொடியவர்களிடமன்றோ? [நல்வினைகளையே விரும்பிச் செய்பவனான உன்னிடம் நாங்கள் கொலையுண்பதுண்டோ என்றவாறு]; இவன் களியால் அயர்கின்றன உளஓ-இந்த இராமசந்திரன் (செல்வம் கல்வி பலம் அதிகாரம்முதலிய காரணங்களினாற் செருக்குக்கொண்டு) அக்களிப்பினால் அறிவு சோர்ந்து (உன்திறத்திற்) செய்த அபசாரங்கள் (யாவையாயினும்) உள்ளனவோ? (சொல்): பொர உரியாரிடை அல்லால்-போர் செய்தற்கு உரிய வலியவர்களிடத்திலேயல்லாமல், எளியாரிடை - வலியற்ற எளியவர்களிடம், வலியார் வலி என் ஆகுவது-வலிமையுடையாரது வலிமை யாது பயன்படுவதாம்?' என்றான்-என்று (தசரதன் பரசுராமனை நோக்கிக்) கூறினான்; (எ-று.)

எளியவரை வலியவர் எதிர்ப்பது புகழைத் தராத பயனற்ற தொழிலென்பதாம். இனி, முதலடிக்கு -(உன்னால்) இறக்கத்தக்கவர் இறப்பது (உனக்குக்) கொடுந்தொழிலை விரும்பிச்செய்தவருளன்றோ ஆகவேண்டுவது? எனவும் உரையிடலாம். அயர்கின்றன- உனக்குச்செய்யவேண்டும் உபசாரங்களில் மறந்திட்டனவென்றபடி.
பி - ம்:—[1] விழையாருழை. [2] அன்றே. [3] இவண். [4] அயர்கின்றவும், ஆகின்றன. [5] உடையான். [6] உரியார்களொடு, உரியாருழை. [7] எளியாருழை, எளியார்களை. [8] என்னு, என்னோ. (1367)

21. நனிமாதவ முடையா [1]யிது [2]பிடிநீயென [3]நல்கும்
தனி[4]நாயக முலகேழையு முடையாயிது [5]தவிராய்
[6]பனிவார்கடல் புடைசூழ்படி நரபாலரை [7]யருளா
முனிவாறினை முனிகின்றது முறையோவென [8]மொழிவான்.

(இ - ள்.) 'நனி மா தவம் உடையாய் - மிகுதியாகப் பெருந்தவத்தை யுடையவனே! நீ இது பிடி-நீ இந்தப் பூமிதானத்தை யேற்றுக்கொள்' என-என்று கூறி, நல்கும்-(காசியபமுனிவனுக்குக்) கொடுத்திட்ட, உலகு ஏழைஉம்-ஏழு தீவுகளின் வடிவமாகவுள்ள பூலோகம் முழுவதையும், தனி நாயகம் உடையாய்-(ஒப்புயர்வற்றுத்) தனியே

யரசாளும் உரிமையைப்பெற்றிருந்தவனே! இது தவிராய் - (எம்மைக்கோபித்து அழித்தலாகிய) இச்செய்கையை நீங்கியருள்வாய்; பனி வார் கடல் புடை சூழ் படி - குளிர்ச்சியாயுள்ள நீண்ட கடலினால் நாற்புறத்துஞ் சூழப்பட்டுள்ள பூலோகத்தில்வாழ்கிற, நர பாலரை-மனிதர்களைக் காப்பவரான(என்போன்றசில) அரசர்களை, அருளா-கருணைசெய்து, முனிவு ஆறினை-(முன்னே க்ஷத்திரியர்மீது கொண்ட) கோபம் தணிந்தாய்; (அப்படிப்பட்ட நீ), முனிகின்றது - (மறுபடி) கோபிக்கிற இது, முறைஓ - நீதியாமோ? என - என்று கூறி, மொழிவான் - (மற்றுஞ் சில வார்த்தைகளைப் பரசுராமனை நோக்கித் தசரதன்) கூறுபவனானான்; (எ-று.)—அதனை மேலிரண்டு கவிகளிற் காண்க.

முன்னம் எம்போலியர்மீது அருள்புரிந்து உயிர்ப்பிச்சையளித்து மண்ணுலகையெல்லாம் கொடுத்திட்ட வள்ளன்மையுடைய நீ இப்போதும் அந்நிலைமாறாமல் எங்களுக்குஉயிரைக்கொடுத்தலாகாதோ என்றுவேண்டியவாறு. படி-பூமி. 'நனிமாதவ்முடையாய்' என்றது-காசியபனை நோக்கிப் பரசுராமன் கூறிய விளி. பரசுராமனை நோக்கித் தசரதன் விளித்ததாகக் கொள்ளினுந் தவறாகாது. நரபாலரையருளா - அரசர்கள் திறத்தில் கருணைகொண்டு: கொல்லாமல் என்றபடி. பி-ம்:—[1] அது. [2] பணி. [3] நல்கா. [4] நாயக. [5] தவிர்வாய். [6] பனிவாய். [7] அருளான். [8] மொழியாய், மொழியா, மொழிவாய். ()

22. புறனின்றவ ரிகழும்படி நடுவின்றலை [1] புணராத்
[2] திறனின்றுயர் வலி[3] யென்னதொ [4] ரறனின்றரு செயலோ
அறனின்றத னிலைநின்றுயர் புகழொன்றுவ தன்றோ
மறனென்பது [5] மறவோயிது [6] வலியென்பது வலியோ.

இரண்டு கவிகள்-ஒரு தொடர்.

(இ - ள்.) புறன் நின்றவர்-பக்கங்களிலே நின்றவர் (யாவரும்), இகழும்படி-இகழ்ச்சிசெய்யும்படி, நடுவின் தலை புணரா திறன் நின்று-நடுவுநிலைமையிலே பொருந்தாத வகையிலே நின்று, உயர்-உயர்ச்சிபெற்ற, வலி - வலிமை, என் - யாதுபயனுள்ளதாம்? [ஒரு பயனுமில்லாததென்றபடி]; அது-அவ்வலிமை, ஓர் அறனின் தரு செயல்ஓ - தருமவழியாகவந்ததொரு செய்கையாகுமோ? [ஆகாதென்றபடி]; அறன் நின்றதன் நிலை நின்று - (உலகத்தில்) நிலைபெற்றதான் தருமநெறியினது நிலைமையிலே பொருந்திநின்று, உயர் புகழ் ஒன்றுவது அன்றோ - சிறந்தகீர்த்தியைப் பொருந்துவதல்லவோ, மறன் என்பது - வலிமையென்று சிறப்பித்துக் கூறப்படுவது? மறவோய் - பலபராக்கிரமங்களையுடையவனே! இது - (சரணமடைகிற எம்மையழிக்கத் தொடங்குகிற தருமவழியல்லாத) இச்செய்கை, வலி என்பது வலிஓ - வலிமையென்று சிறப்பித்துக் கூறப்படுவதொரு வலிமையாகுமோ? (எ-று.)

எத்துணைக்குற்றஞ் செய்தவராயினும் தம்மைச் சரணமடைவராயின் அவரைக் காத்தருளவேண்டும்; இது தருமசாஸ்திரத்திற் கூறப்பட்டுப் புகழையுண்டாக்குவதாகிப்பெரியோர் பலரது அனுஷ்

டானத்திலும் வந்த நடுவுநிலைமையாம்; வீரமெனப்படுவது, அறத்திற்கு மாறுபடாமல் திறமையைக் காட்டிப் புகழைப் பெறுவதே; எதிர்த்துப்போர்செய்யமாட்டாது அஞ்சியடைக்கலம்புகுந்தவரை ஆதரியாதுவிடுதல், வீரமெனப்படாமல் புகழையும்புண்ணியத்தையும் ஒழித்துப் பழியையும் பாவத்தையுமே பரவச்செய்யும்; ஆதலால், உயிரளிக்கும்படி உன்னை வேண்டுகிற எம்மை உபேட்சிக்கலாகாது என்பதாம். பிம்:—[1] புணர. [2] அறன். [3] என்பது. [4] அறிவின்றகு. [5] மறமோவது, மறமோவிது, மறமோவினி. [6] மறையென்பது மதியாய். (1369)

23. சலத்தோடியை விலனென்மக னணையானுயிர் [1] தபுமேல்
உலத்தோடெதிர் தோளாயென துறவோடுயி [2] ருகுவேன்
[3] நிலத்தோடுயர் [4] கதிவா [5] னுற நெடியாயுன தடியேன்
குலத்தோடற முடியேலிது குறைகொண்டனெ னென்றான்.

(இ - ள்.) என் மகன்-எனது புத்திரன், சலத்தோடு இயைவு இலன்-(உன்னிடத்தில்) பகைமையோடு பொருந்தினவனல்லன்; அனையான் உயிர் தபும்ஏல்-அவனது உயிர் (உடம்பைவிட்டு) ஒழியுமாயின், உலத்தோடு எதிர் தோளாய்-திரண்ட கற்றூணோடு ஒத்த தோள்களையுடையவனே! (யான்), எனது உறவோடு-என்னுடைய சுற்றத்தாருடனும், நிலத்தோடு-(எனது) நாட்டாருடனும், உயர் கதி வான் உற-உயர்ந்த பதவியான விண்ணுலகத்தை யடையும்படி, உயிர் உகுவேன்-உயிரொழிவேன் [இறந்திடுவேன்]; நெடியாய் - பெருமைக்குணமுடையவனே! உனது அடியேன்-உன்னுடைய அடியவனாகிய யான், குலத்தோடு அற-இனத்தோடுஒழிந்து போம்படி, முடியேல்-(எம்மை) அழித்திடாதே; இது குறைகொண்டனென் - இவ்வேண்டுகோளை உன்னிடஞ் செய்துகொண்டேன், என்றான்-என்று (தசரதன் பரசுராமனை நோக்கிக்) கூறினான்;

'நான் உன்னிடம் அருள்கொண்டு பொருதுகொல்லாது விட்டதுஉண்டு. இப்போது உன்மகன்மீதன்றோ சினத்தோடு வந்துள்ளேன்' என்று பரசுராமன் மறுமொழி கூறாமலிருந்தான். அதனால், 'நீ சினங்கொள்ளுமாறு இராமன் குற்றஞ்செய்பவனல்லன்: மேலும் அவ்விராமனுக்கு இடையூறு உண்டாயின், யான் இனத்தோடு இறந்துபடுவேன்' என்று தசரதன் கூறிக் குறைவேண்டுகின்றான். சலத்தோடு இயைவிலன்-உனது கோபத்துக்கு ஏற்ற தகுதியில்லாதவ னென்றுமாம். பி - ம்:—[1] தருமேல். [2] உகுமால், அகலா, அகல்வேன். [3] கலத்தோடு. [4] கதிர். [5] உறும். (1370)

24.—தன் வேண்டுகோளைப் பொருட்படுத்தாது இராமனிடத்துப் பரசுராமன் செல்லக்கண்டு தசரதன் மூர்ச்சித்தல்.

என்றவடி விழுவானையு மிகழாவெரி விழியாப்
பொன்னார் [1] கலை [2] யணிவானெதிர் புகுவானிலை [3] யுணராத்
தன்னாலொரு செயலின்மையை நினையாவுயிர் [4] தளரா
மின்னாலயர் வுறும்வாளர வென [5] வெய்துற லுற்றான்.

(இ - ள்.) என்று-என்று சொல்லிப் பிரார்த்தித்து, அடி விழுவானை உம்-(தன்) பாதங்களில் விழுந்து வணங்குகிற தசரதனையும், இகழா-ஒரு பொருளாகமதியாமல், எரி விழியா-நெருப்புப்புறப்பட விழித்துப்பார்த்து, பொன் ஆர் கலை அணிவான் எதிர்-பொன்னினாலாகிய ஆடையை [பீதாம்பரத்தைத்] தரித்துள்ளவனான ஸ்ரீராமனது எதிரிலே, புகுவான்-செல்பவனான பரசுராமனது, நிலை-கொடிய நிலைமையை, உணரா-(தசரதன்) கண்டறிந்து, தன்னால் ஒரு செயல் இன்மையை நினையா -(இதற்கு எதிராகத்) தன்னாற் செய்யத்தக்கதொரு தொழிலில்லாமையை நினைத்து, உயிர் தளரா-(தனது) உயிர் தளர்ச்சியடையப்பெற்று, மின்னால் அயர்வு உறும் வாள் அரவு என-(இடியுடனெழுகிற) மின்னலைநோக்கித் தளர்ச்சியடைகிற கொடிய நாகம்போல, வெய்துஉறல் உற்றான் - கொடுந் துன்பத்தை யடைதலை [மூர்ச்சித்தலை]ப் பொருந்தினான்; (எ - று.) —பி-ம்:—[1] சிலை. [2] உரவோன். [3] உணரத். [4] அழியா. [5] வெந்துறல். ()

25.—இராமனைக்கிட்டிய பரசுராமன் சிவதநுசின் வரலாற்றைக் கூறலுறுதல்.

மானம் [1]முடை முடிமன்னவன் [2]மதி [3]சோர்வுறன் மதியான்
தானந்நிலை [4]யுறுவா [5]னுறு வினையுண்டது [6]தவிரான்
[7]ஆனம்முடை யுமையண்ணலை யந்நா [8]ளுறு சிலைதான்
ஊனம்முள ததன் [9]மேனிலை [10]கேணீயென [11]வுரைப்பான்.

(இ - ள்.) (பரசுராமன்,) - மானம்உடை முடிமன்னவன்-மானத்தையே முக்கியமாகக்கொண்ட கிரீடாதிபதியான தசரதன், மதி சோர்வு உறல்-(மூர்ச்சித்து) அறிவையிழத்தலை, மதியான்-கருத்திற்கொள்ளாதவனாய், அ நிலை தான் உறுவான் உறு வினை உண்டது தவிரான்-(மதிசோர்வுறுதலாகிய) அந்த நிலைமையைத் தான் (விரைவில்) அடைவதற்குப் பொருந்தின ஊழ்வினை (தன்னைச்) சூழ்ந்துகொண்டதை விலக்கும்வகையற்றவனாய், (ஸ்ரீராமனை நோக்கி), 'ஆனம் உடை உமை அண்ணலை-டக்கை என்னும் வாத்தியத்தையுடைய உமாதேவி கொழுநனான சிவபிரானை, அ நாள் உறு-அக்காலத்திலே [முன்காலத்திலே] பொருந்தின, சிலை-வில்லானது, ஊனம் உளது-வலிக்குறை வுடையது: (அதனால் அதனைநீ முறித்திட்டாய்;) அதன் மேல் நிலை-அவ்வில்லினது பழையவரலாற்றினிலைமையை, 'நீ கேள்—', என-என்று கூறி, உரைப்பான்-சொல்லுபவனானான்; (எ-று.)—அதனை, மேல் ஆறுகவிகளிற் காண்க.

தான் விரைவில் மதி சோரப்போவதற்கு ஏற்ற ஊழ்வினை அண்டவே, பரசுராமன் தசரதனது நிலையைச் சிறிதும் மதியாது இராமனை நோக்கி 'நீ சொத்தை வில்லை முறித்தாய்' என்று அவ் வில்லின் வரலாற்றைக் கூறத்தொடங்கலானானென்க. மானம் - பெருமைகுறைபடாமை. ஆனம்-ஆனகம் என்னும் வடமொழியின் விகாரம்; நானம் எனப் பதம் பிரித்தால்-கங்காநதி வெள்ளமாம். உண்டு அது எனப்பிரித்தும் உரைக்கலாம். பி - ம்:—[1] மணி.

[2]நிலை. [3]சோரவும். [4]அறிவான். [5]ஒருநிலை. [6]தவிராது. [7]ஆனம் முறையிலன், ஆனம்முறைமையின், ஞானம்முறுமுமை. [8]இறு. [9]மெய்ந்நிலை, மெய்ந்நெறி. [10]கேளென்றுரை. [11]புரிவான். புகல்வான். (1372)

26.—இதுமுதல் ஆறுகவிகள் – சிவதநுசின் வரலாறு.

ஒருகால்வரு கதிராமென வொளிகால்வன வுலையா
வருகார்தவழ் வடமேருவின் வலிசால்வன [1]வையம்
அருகாவினை புரிவா[2]னுள னவனு [3]லமை வனதாம்
இருகார்முக முளயாவையு மேலாதன [4]மேனுள்.

(இ - ள்.) ஒரு கால் வரு கதிர் ஆம் என-'ஒற்றைச்சக்கரத்தை யுடைய தேரின்மீது வருகிற சூரியமண்டலமாகும் இவை' என்று சொல்லும்படி, ஒளி கால்வன-ஒளியை வீசுவனவும், உலையா-(எளிதில்) அழிக்கப்படாதனவும், வரு கார் தவழ் வட மேருவின் வலி சால்வன-(ஆகாயத்தே) சஞ்சரித்துவருகிற மேகங்கள் தவழ் தற்கு இடமான வடதிசைக்கணுள்ள மகாமேருமலையினது வலிமை பொருந்துவனவும், வையம் அருகா வினை புரிவான் உளன அவனுல் அமைவன - நிலவுலகத்தார்க்கு நணுகிப்பார்ப்பதற்கும் முடியாத (தெய்வத்தன்மையுள்ள) சிற்பநிர்மாணத்தொழிலைச் செய்பவனுன விசுவகருமனுற் செய்யப்பட்டமைந்தனவும், யாவைஉம் ஏலாதன-எவற்றையும் (தமக்கு உவமையாகப்) பொருந்தாதனவுமாகிய, இரு கார்முகம்-இரண்டு விற்கள், மேல் நாள்-முற்காலத்தில், உள - உள்ளன; (எ - று.)

மிகச்சிறந்த இரண்டு தநுசுகளை விசுவகர்மன்நிருமித்தன னென்றவாறு. அருகுதல்-குறைதலுமாம். தாம்-அசை. பி-ம்:— [1]மேனுள், மன்னே. [2]உளவயனுல். [3]அமைவனவாம். [4]வையம், என்றான். (1373)

வேறு.

27. ஒன்றினை யுமையாள் கேள்வ னுவந்தனன் மற்றை யொன்றை
நின்றுல களந்த நேமி [1]நெடியவ னங்கை கொண்டான்
[2]என்றிது வுணர்ந்த விண்ணே ரிரண்டினும் [3]வன்மையெய்தும்
[4]வென்றிய தியாவ தென்று விரிஞ்சனை வினவ [5]வந்நாள்.

இதுவும் மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) (அவ்விரண்டுவிற்களுள்), ஒன்றினை - ஒருவில்லை, உமையாள் கேள்வன்-உமாபதியான உருத்திரமூர்த்தி, உவந்தனன்-விரும்பியெடுத்துக்கொண்டான்; மற்றை ஒன்றை-மற்றொருவில்லை, நின்று உலகு அளந்த நேமி நெடியவன் - திரிவிக்கிரமனுய்நின்று உலகங்களையளவிட்ட சக்கராயுதத்தை யேந்திய யாவரினும் பெரிய திருமால், அம் கை கொண்டான் - (தனது) அழகிய கையில் எடுத் துக்கொண்டான், என்ற இது உணர்ந்த-என்ற இச்செய்தியை அறிந்த, விண்ணேர்-தேவர்கள், இரண்டின்உம் வன்மை எய்தும் வென்றியது யாவது என்று-இவ்விரண்டுவிற்களுள்ளும் வலிமையா லடையும்வெற்றியையுடையது எந்தவில்லாகுமென்று, விரிஞ்சனை

வினவ - பிரமனைக்கேட்க, அந்நாள் - அக்காலத்தில்,—(எ-று.)— அவன் 'அமர்மூட்டி விட்டான்' என மேற்கவியோ டியையும்.

அவ்விரண்டுவிற்களையும் விட்டுணுவும் சிவனும் கைக்கொண்டாராக, 'இவ்விருவிற்களுள்வலியது எது?' என்று வினவுகிற வியாஜத்தால் தேவர்கள் அச்சமயத்து இவ்விருவருள் மேம்பட்டவர் யாவரென்று பிரமனை வினவினரென்க. பி-ம்:—[1]நெடியமானெறியில். [2]என்றவை. [3]வலிதியாது, மேன்மையாவும், மேன்மையெய்தும், மேன்மைசாலும். [4]வென்றியரரோவென்ன. [5]அன்னான். (1374)

28. சீரிது தேவர் தங்கள் சிந்தனை யென்ப துன்னி
வேரியங் கமலத் தோனும் [1]விளைவதோர் [2]வினையந் தன்னால்
யாரினு முயர்ந்த மூலத் தொருவரா மிருவர் தம்மை
மூரிவெஞ் சிலைமே லிட்டு மொய்யமர் மூட்டி விட்டான்.

(இ-ள்.) வேரி அம் கமலத்தோன்உம்-நறுமணத்தையுடைய அழகிய தாமரைமலரில் வாழ்கின்ற பிரமதேவனும், தேவர் தங்கள் சிந்தனை சீரிது என்பது உன்னி - (இவ்வகையாராய்ச்சி செய்யக் கருதுகிற) தேவர்களின் எண்ணம் சிறப்புடையதென்று நினைத்து, விளைவது ஓர் வினையந்தன்னால்-பயன்விளைதற்கு உரியதான உபாயத்தினால் [தந்திரமாக என்றபடி], யாரின்உம் உயர்ந்த மூலத்து ஒருவர் ஆம் இருவர் தம்மை - யாரினுஞ்சிறந்த ஒப்பற்ற முதற்கடவுளரென்னப்படுகிற அரி அரனென்னும் இருமூர்த்திகளை, மூரி வெம் சிலை மேல் இட்டு - வலிமையையுடைய விற்களை வியாஜம் வைத்து, மொய் அமர் மூட்டிவிட்டான் - (ஒருவரோடொருவர்) வலியபோரைச்செய்யுமாறு தூண்டிவிட்டான்; (எ-று.)—பி-ம்:— [1]இயைவது. [2]வினயம், இயைவு. (1375)

29. இருவரு மிரண்டு வில்லு [1]மேற்றின ருலக மேழும்
வெருவரத் திசைகள் [2]பேர வெங்கனல் பொங்க மேன்மேல்
செருமலை கின்ற போழ்திற் றிரிபுர மெரித்த தேவன்
வரிசிலை யிற்ற தாக [3]மற்றவன் முனிந்து மன்னோ.

இதுவும் மேற்கவியும் - குளகம்.

(இ-ள்.) இருவர்உம்-(அரி அரன் என்னும்) இரண்டுபேரும், இரண்டு வில்உம் ஏற்றினர்-இரண்டுவிற்களையும் நாணேற்றி, உலகம் ஏழ்உம் வெருவர - ஈரேழுலகங்களும் அச்சமடையவும், திசைகள் பேர - திக்குகள் நிலைதடுமாறவும், வெம் கனல் பொங்க - வெவ்விய கோபாக்கினிமேலெழவும், மேல்மேல்-மேலேமேலே, செரு மலைகின்ற போழ்தில்-(ஒருவரோடொருவர்) போர்செய்கிற சமயத்திலே, திரிபுரம் எரித்த தேவன் வரி சிலை இற்றது ஆக - மூன்றுபட்டணங்களை யெரித்தொழித்த சிவபிரானது கட்டமைந்தவில் சிறிதுமுறிபட்டதாய்விட, மற்று-பின்பு, அவன் - அப்பரமசிவன், முனிந்து-கோபங்கொண்டு,—(எ-று.) —'மீட்டும் போர்தொடங்கும்வேலை' என மேற்கவியி லியையும். இரண்டு ஏழொடுங் கூட்டப்பட்டது. மன்ஓ-ஈற்றசைகள். பி-ம்:—[1]ஏந்தினர். [2]பொங்க. [3]மற்றவர். (1376)

30. மீட்டும்போர் தொடங்கும் வேலை விண்ணவர் விலக்க வல்வில்
நீட்டினன் றேவர் கோன்கை நெற்றியிற் கண்ணன் [1] வெற்றி
காட்டிய கரிய மாலுங் [2] கார்முக மதனைப் பாரில்
ஈட்டிய தவத்தின் மிக்க [3] விரிசிகற் கீந்து போனான்.

(இ - ள்.) மீட்டும் போர் தொடங்கும் வேலை-(உருத்திரமூர்த்தி) மறுபடியும் போரைச் செய்யத்தொடங்குமளவில், விண்ணவர் - தேவர்கள், விலக்க-(போரை) விலக்கிவிட, நெற்றியில் கண்ணன் - நெற்றியில் (நெருப்பு) விழியையுடைய சிவன், வல் வில்-வலிய(அந்தத் தனது) வில்லை, தேவர்கோன் கை நீட்டினன்-தேவர்களுக்கரசனை இந்திரனது கையிலே கொடுத்திட்டான்; வெற்றி காட்டிய கரிய மால்உம் - வெற்றியை (இப்பொழுது) வெளிக்குக்காண்பித்த கருநிறமுடைய திருமாலும், கார்முகம் அதனை - (தனது) வில்லை, பாரில் ஈட்டிய தவத்தின்மிக்க இரிசிகற்கு-நிலவுலகத்திலே (தான்) செய்துசேர்த்த தவத்தாற் சிறந்தஇரிசிகனென்னும் முனிவனுக்கு, ஈந்துபோனான் - கொடுத்துவிட்டுச் சென்றான்; (எ - று.)

'வல்வில்' என்றது - முன்னே வலிமையுடையதாயிருந்த வில் என்றபடி; அன்றி, அறுபதினாயிரம்பேர்கூடி அருமையாக எடுத்து வரத்தக்கதும் இராமபிரானொருவனையொழியப் பிறரால்எடுக்கவும் வளைக்கவும் முடியாததுமான வலிமையுடையவில் என்றபடியுமாம்; இகழ்ச்சியாகவுமாம். இங்கே 'நெற்றியிற் கண்ணன்' என்றது, நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணும் அப்பொழுது பயனற்றதாயிற்றென்னுங் கருத்தை விளக்குதற்கு; இவ்வரலாறு கூறுகிற இடத்தில் ஸ்ரீவால்மீகிராமாயணத்தில் ''த்ரிலோசந:'' என்று உபயோகித்திருப்பதும், ஸ்ரீகோவிந்தராஜரென்ற வ்யாக்யாதா அங்கு 'த்ருதீய லோசநமும் நிரர்த்தமாகச்செய்யப்பட்டது' என விசேடவுரை அருளிச்செய்திருத்தலும் காண்க. அன்றியும், இந்தப்போரில் ஸ்ரீமகாவிஷ்ணுவினது உங்காரத்தால் சிவனும் சிவவில்லும் பங்கஞ்செய்யப்பட்டனவென்று ஸ்ரீராமாயணத்திற் கூறப்பட்டுள்ள கருத்தை விளக்குவார், 'வெற்றி காட்டிய கரிய மால்' என்றாரென உணர்க. இதனால், கீழ்க்கவியில் 'வரிசிலையிற்றதாக மற்றவன் முனிந்து' என்பதற்கு - மற்றவன்முனிந்து வரிசிலையிற்றதாக என மாற்றி - மற்றையவனாகிய திருமால் கோபித்தலாற் சிவனதுவில்முறிபட என உரைத்தல் முதனூலொடு பொருந்தும். திருமால் மேம்பட்டவனென்று விளங்கியதனால், மீண்டும்போரைத்தொடங்கவொட்டாது விண்ணோர் விலக்கினர்.

கீழ்க் கார்முகப்படலத்தில், சிவபிரான் இவ்வில்லையெடுத்துக்கொண்டு தக்கன்வேள்வியைச்சார்ந்து அதனை அழித்தபின்புஜனககுலத்துத் தேவராதனென்னும் அரசனிடம் வில்லைவைத்திட்டானெனக் கூறியதனோடு இது பொருந்துமாறு என்னையெனின்,— விசுவகருமனால் நிருமிக்கப்பட்ட வில்லிரண்டினுள் ஒன்றைத் திருமால் திருவுள்ளமுவந்து எடுத்துக்கொள்ள, மற்றொன்றைத்தேவர் வேண்டுகோளாற் சிவபிரான் எடுத்துச்சென்று அதனுதவியால் திரிபுரசங்காரஞ்செய்தபின் தக்கன்வேள்வியைத்தகர்த்துப்பின்

னர்த் தக்கன் வேள்விமுடிவில் தேவர்கருத்தாற் பிரமன் தூண்டி விடச் சிவவிஷ்ணுக்களது யுத்தம் நடந்ததென்றும்; அதனிறுதியில் வில்லைச்சிவன் இந்திரன்மூலமாகச் சனககுலத்தரசனிடம்வைத் திட்டானென்றும் உய்த்துணர்ந்துகொள்க. தேவாதிதேவனை திருமால் இங்ஙனந் தேவர்கள் தூண்டப் போர்செய்திட்டது, இச் சாமாத்திரத்தாற் செய்ததொருதிருவிளையாடலாமெனக் காண்க: இவ்வரலாற்றால், சிவவில்லைக்காட்டிலும் விஷ்ணுவில்லுக்கும் சிவனைக்காட்டிலும் விஷ்ணுவுக்கும் உள்ள ஏற்றம் பரசுராமனால் விளக்கிக் கூறப்பட்டவாறு நோக்குக. இரிசிகன்-பரசுராமனது தந்தையான ஜமதக்கினிமுனிவனது பிதா; 'பாரிலீட்டிய தவத்தின் மிக்க' என்னும் அடைமொழியை இரிசிகனுக்குக் கொடுத்தது, விஷ்ணுவினால் தன்னிடம் வில்லை வைத்திடுதற்கு ஏற்றதவமுடையானிவனென்றற்கு. பி - ம்:—[1]வீரம். [2]கார்முகந்தன்னை. [3]இருடிகட்கு. (1377)

31. [1]இரிசிக னெந்தைக் கீய வெந்தையு [2]மெனக்குத் தந்த
வரிசிலை [3]யிதுநீ நொய்தின் வாங்குதி யாயின் [4]மைந்த
[5]குரிசில்க [6]ணின்னொ டொபபா ரில்லையான் குறித்த போரும்
புரிகிலெ னின்னொ டின்னம் புகல்வது கேட்டி [7]யென்றான்.

(இ - ள்.) இரிசிகன்-அந்த ருசீகமுனிவன், எந்தைக்கு-எனது தந்தையான ஜமதக்கினிமகாமுனிவனுக்கு, ஈய-கொடுக்க, எந்தை உம் - என் தந்தையான அந்தச்சமதக்கினியும், எனக்கு தந்த - எனக்குக் கொடுத்தருளிய, வரி சிலை - கட்டமைந்த வில்லாகிய, இது - இதனை, மைந்த - சிறுவனே! நீ—, நொய்தின் வாங்குதி ஆயின் - எளிதில் எடுத்து வளைப்பாயாயின், நின்னொடு ஒப்பார் குரிசில்கள் இல்லை - உன்னுடன் ஒப்பவரான அரசர் (உலகத்தில் எவரும்) இலர்; யான் குறிதத போர்உம் புரிகிலென் - நான் (உன்னுடன் இப்பொழுது செய்வதாக) நினைத்துள்ள போரையுஞ் செய்யாதொழிவேன்; நின்னொடு இன்னம் புகல்வது கேட்டி - உன்னுடன் இன்னமும் (நான்) சொல்வதை (நீ கருத்தோடு) கேட்பாயாக, என்றான்-என்று (ரகுராமனை நோக்கிப் பிருகுராமன் பின்னும்) கூறலானான்; (எ - று.)—அதனை அடுத்த மூன்றுகவிகளிற் காண்க. பி - ம்:—[1]இருடிகள். [2]எனக்கே. [3]இதனை, வல்லை. [4]மன்னர்,மன்ன. [5]குரிசிலே, குரிசிலும். [6]நின்னைப்போல்வார். [7]போலாம். (1378)

32.—இதுமுதல் மூன்று கவிகள்-குளகம்; பரசுராமன் தான்வந்த காரணத்தைக் கூறுதலைத் தெரிவிக்கும்.

ஊனவில் லிறுத்த மொய்ம்பை [1]நோக்குவ தூக்க மன்றால்
மானவ மற்றுங் கேளாய் வழிப்பகை [2]யுடைய னும்பால்
ஈனமி லெந்தை சீற்ற நீக்கினா னென்ன முன்னோர்
தானவ னனைய மன்னன் கொல்லயான் [3]சலித்து மன்னோ.

(இ - ள்.) ஊனம் வில் இறுத்த மொய்ம்பை நோக்குவது - (முன்னமே) பழுதுபட்டுக்கிடந்ததொரு சிவவில்லை நீ முறித்திட்ட வலிமையை(ப் பெரியதாக)க் கருதிமதிப்பது, ஊக்கம் அன்று-

சிறப்பாகாது; மானவ - (வைவச்சுவத) மனுவினது குலத்தவனே! மற்றும் கேளாய்-இன்னமும் (நான் சொல்லுவதைக்) கேட்பாயாக; நும்பால் வழி பகை உடையன் - (க்ஷத்திரியர்களாகிய) உங்களிடத்துப் பழமையாகப் பகைமையுடையேன்; (ஏனெனில்), முன் - முன்னொருகாலத்திலே, ஓர் தானவன் அனைய மன்னன்-தனுகுலத்தவனான அசுரனை யொத்த [கொடுந்தன்மையுடைய ஓரரசன்],ஈனம் இல் எந்தை சீற்றம் நீக்கினன் என்ன - குற்றமற்ற எனது தந்தை 'கோபத்தை யொழித்தவன்' என்று கருதியுங்கூறியும், கொல்ல - (என் தந்தையைக்) கொன்றுவிட, யான் - நான், சலித்து-கோபங் கொண்டு,—(எ - று.) —'வேந்தையெல்லாங்களைகட்டு' என மேற் கவியோடு தொடரும்.

மன்னன்-கார்த்தவீரியார்ச்சுன னென்றுவது, அவன் மக்களுளொருவனென்றுவது கொள்க. கார்த்தவீரியனே ஜமதக்கினியைக் கொன்றதாகவுஞ் சில நூல் கூறும். சலித்து - பிதிருசோகத்தால் மனம் நிலைகலங்கி வருந்தி யெனவுமாம். இனி, மானவ என்பதற்கு-மனிதர் தலைவனே! என்றும், யானென்னும் அபிமானமுடையானே! என்றும் உரை கொள்ளலாம். ஈனமிலெந்தை - நிரபராதியான ஜமதக்கினி. ஆல், மன்னோ-ஈற்றசைகள். பி - ம்:—[1]நோக்குமீது, நோக்குமது. [2]உடையதும்பால். [3]சலித்துமென்றான், சலித்துமேனாள். (1379)

33. மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை யெல்லாம்
[1]மேவெழு மழுவின் வாயால் வேரறக்[2]களைகட் டன்னார்
தூவெழு குருதி வெள்ளத் துறையிடை முறையி னெந்தைக்கு
ஆவன கடன்க ணேர்ந்தே னருஞ்சின மடக்கிப் [3]போந்தேன்.

(இ - ள்.) மூ எழு முறைமை - இருபத்தொருதலைமுறை, பாரில் முடி உடை வேந்தை எல்லாம் - நிலவுலகத்திலுள்ள கிரீடத்தையுடைய அரசர்களையெல்லாம், மேவு எழு மழுவின் வாயால் - விரும்பியெழுகிற கோடாலியென்னும்படையினது கூர் நுனியினால், வேர் அற-வேரொடு அற்றுப்போம்படி, களை கட்டு-(பயிர்க்குக் களை பறித்தல்போலத் துஷ்ட) நிக்கிரகஞ் செய்து, அன்னார்-அவ்வரசர்களது,தூ எழு குருதி வெள்ளம் துறையிடை-தசையினின்று பெருகுகின்ற இரத்தநீர்வெள்ளத்தினாலான நீர்த்துறையிலே, முறையின்-(வேத) விதிப்படி, எந்தைக்கு ஆவன கடனகள் நேர்ந்தேன்-எனது தந்தைக்குச் செய்யவேண்டுவனவான நீர்க்கடன்களைச் செய்து முடித்தேன்; (அதுமுதல்), அருசினம் அடக்கி போந்தேன்-(தடுப்பதற்கு அரிய) (எனது) கோபத்தை அடக்கிவந்துள்ளேன்; (எ-று.) —வேரற-இஷ்டஜநபந்துவர்க்கமெல்லாம் அழிய.கடன்கள்-ஜலதருப்பணங்கள். குருதி வெள்ளத்துறை - சியமந்தபஞ்சகம். பி-ம்:—[1]வேவெழு, மேவழு. [2]களைந்திட்டு. [3]நின்றேன். (1380)

34. உலகெலா முனிவற் கீந்தே னுறுபகை [1]யொடுக்கிப் போந்தேன், அலகின்மா தவங்கள் [2]செய்தோ ரருவரை யிருந்தே னண்டைச், சிலையைநீ யிறுத்த வோசை செவியுறச் சீறி வந்தேன், மலைகுவென் [3]வல்லை யாயின் [4]வாங்குதி [5]தனுவை யென்றான்.

(இ - ள்.) உலகு எலாம் - (என்னால் வெல்லப்பட்ட) பூலோகம் முழுவதையும், முனிவற்கு - காசியபமகாமுனிவனுக்கு, ஈந்தேன் - தானஞ்செய்தேன்; உறு பகை ஒடுக்கி போந்தேன் - மிக்கபகைவர்களையெல்லாம் ஒடுங்கச்செய்து வந்தேன்; அலகு இல் மா தவங்கள் செய்து-அளவில்லாத பெரிய தவங்களை இயற்றி, வண்ணம், ஓர் அரு வரை இருந்தேன்-அருமையான மகேந்திரமலையிலே தங்கியிருந்தேன்; நீ சிலையை இறுத்த ஓசை-நீ சிவவில்லை முறித்திட்டதனாலாகிய ஒலி, ஆண்டை-அவ்விடத்து, செவி உற-காதுகளிலேபட [கேட்டதனால்], சீறி வந்தேன் - கோபங்கொண்டு (இங்கு) வந்தேன்; வல்லை ஆயின்-(நீ) வலிமையுடையையாவையானால், மலைகுவென்-(உன்னுடன்) போர்செய்வேன்; தனுவை வாங்குதி-(இந்த) வில்லை வளைத்திடு, என்றான்-என்று(பரசுராமன்)கூறினான்;

நான் பொறுமைக்குணத்தை மேற்கொண்டேனென்றாலும் எனது வில்லாசிரியரின்வில்லை முறித்த செருக்குள்ள அரசகுமரனென்பதைக் கருதவே, பழம் பகை மனத்திலிருந்து மூளச் சீறிவந்துள்ளேன். நீ வல்லமை யுடையையாயின் இந்த வில்லை வளைப்பாயென்று சொல்லி அந்தப் பரசுராமன் தன்னிடத்திலிருந்த வில்லை நீட்டினனென்க. உறுபகையொடுக்கிப் போந்தேன் என்பதற்கு-(காமம் கோபம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும்) மிக்க பெரிய உட்பகையாறையும் அடங்கச் செய்து வந்தேன் என்றும் உரைக்கலாம். ஆண்டை-அம்மிதிலையில் என்றுஉரைப்பாருமுளர். பி-ம்:—[1] அடக்கிப் போனேன். [2] செய்தேன். [3] நல்லை. [4] வாங்கிடுத். [5] வில்லை. (1381)

35.—ஸ்ரீராமன் 'வில்லைத்தருக' என்று வாங்கிவளைத்துப் பரசுராமனை நோக்கிச் சொல்லுதல்.

என்றன னென்ன நின்ற விராமனு முறுவ லெய்தி
[1] நன்றொளிர் முகத்த னாகி நாரணன் வலியி னாண்ட [டான்
வென்றிவிற் [2] றருக வென்னக் கொடுத்தனன் வீரன் [3] கொண்
துன்றிருஞ் சடையோ னஞ்சத் தோளுற வாங்கிச் சொல்லும்.

(இ - ள்.) என்றனன்-என்று (இவ்வாறு பரசுராமன்) கூறினான்; என்ன - என்றுசொல்ல, நின்ற இராமன் உம்-(எதிரில்)நின்ற ஸ்ரீராமனும், முறுவல் எய்தி-புன்சிரிப்பையடைந்து, நன்று ஒளிர் முகத்தன் ஆகி-நன்றாகவிளங்குகின்ற திருமுகமண்டலத்தையுடையவனாய், நாரணன் வலியின் ஆண்ட வென்றி வில்-திருமால் வலிமையினால் எடுத்துப்பயின்ற வெற்றியைத்தருவதான அவ்வில்லை, தருக-[என்னிடம் இப்பொழுது) கொடுத்திடுவாய், என்ன-என்று கூற, கொடுத்தனன் - (பரசுராமன்) கொடுத்திட்டான்: வீரன் - சுத்த வீரனான ஸ்ரீராமன், கொண்டான் - (அவ் வில்லை வாங்கிக் கையிற்) கொண்டவனாகி, துன்று இரு சடையோன் அஞ்ச - நெருங்கிய பெரிய சடையினையுடைய அப்பரசுராமன் அஞ்சுமபடி, தோள் உற வாங்கி-(அத்தனுசைத் தன்) தோள்வலிமைபொருந்த வளைத்து, சொல்லும்-பரசுராமனை நோக்கிச் (சிலவார்த்தை) சொல்பவனானான்; (எ-று.)—அதனை மேற்காண்க.

'நாரணன்வலியினுண்டவென்றிவில் தருக' என்றதனால், 'திருமாலுக்கு உரிய வில் இதுகாறும் அவனது ஆவேசாவதாரமான உன்னிடத்திருந்தது; இனி அதனை அவனது அமிசாவதாரமான என்னிடந் தந்துவிடு' என்றும்; 'அவ்வில் திருமாலிடம் இருக்கையில் சிவனையும் சிவவில்லையும் வென்றது. உன்னிடத்திருக்கையில் பல அரசர்களையும் அவர்கள் படைக்கலங்களையும் வெனறிட்டது; அதை என்னிடத்துக் கொடுத்திடுவையானால், அது உடனே உன்னையும் உனது ஆற்றலையும் வென்றுவிடும்' என்றும் கூறியவாறும். வென்றிவில்-சிவவில்லைக்காட்டிலும் மேம்பட்ட வில்; தன்னைக் கையிலெடுத்துப்பிடிப்பார் யாவராயினும் அவர்க்கு வெற்றிவிளைக்குஞ் சிறப்பையுடைய தனுசு. இங்குப் பரசுராமனை 'துன்றிருஞ் சடையோன்' என்று குறித்ததனால் அவ்வில் முன் திருமால் கையிலிருக்கையிலே சடைமுடியையுடைய சிவபிரான் அதற்கு அஞ்சினது போல இப்பொழுது ஸ்ரீராமன்கையி லிருக்கையில் அச்சிவனது மாணக்கனாகிய சடைமுடியுடைய பரசுராமன் அஞ்சினனென்பது தோனறும். இங்கே, முறுவல்-வீரத்தெழுந்த வெகுளிநகை. மனத்துள்ள தைரியவொளி முகத்தின் மூலமாக வெளிவிளங்குவதென்பார், 'நன்றொளிர் முகத்தனாகி' என்றார். பி - ம்:—[1] நின்றொளிர்...நெடியமால். [2] தருதி. [3] கொண்டத். (1382)

36.—ஸ்ரீராமன் 'இவ்வில்லிற்கு இலக்கு ஆவது யாது?' என்று வினவுதல்.

பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென் றாலும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்ல [1] லாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் [2] கிலக்க மாவ தியம்புதி விரைவி னென்றான்.

(இ - ள்.) 'பூதலத்து அரசை எல்லாம் - பூலோகத்திலுள்ள அரசகுலத்தார் யாவரையும், பொன்றுவித்தனை என்றால்உம் - (முன்பு) அழியச்செய்திட்டாயாயினும், நீ—, வேதவித்து ஆய மேலோன் மைந்தன்-வேதங்களை அறிந்திட்டவனான மேன்மையையுடைய ஜமதக்கினிமகாமுனிவனது புத்திரன்;(அன்றியும்), விரதம் பூண்டாய்-தவவேஷத்தை மேற்கொண்டுள்ளாய்; ஆதலின்-ஆகையால், கொல்லல் ஆகாது-(உன்னைக்) கொல்லுதல் கூடாது: (ஆயினும்), அம்பு இது பிழைப்பது அன்று-(என்கைவில்லில் வைக்கப்பட்ட) இவ்வம்பு (கொடுமைவிளைக்காமல்) தவறுவதன்று; ஆல் - ஆதலால், இதற்கு இலக்கம் ஆவது யாது - இவ்வம்புக்கு (இப்பொழுது) குறிப்பொருளாவது எது? விரைவின் இயம்புதி-துரிதத்திற் சொல்லுவாய்' என்றான் - என்று (தசரதராமன் பரசுராமனை நோக்கி) வினவினான்; (எ-று.)

க்ஷத்திரியவமிசத்தைப் பெரும்பான்மையும் வேரறுத்திட்ட உன்னை வதைத்துப் பழிக்குப்பழிவாங்கவேண்டுவ தாயினும், நீ வேதியன்மகனும் தவவொழுக்கமுடையனுமாதல்பற்றிஉன்னைஉயிரொழியாது விடக்கருதுகிறே னென்றான். வேதவித் - வடசொல்.

இவனை வேதவித்தென்றது, வேதவித்தாய மேலோன் மைந்தன் என்றது-அந்தண குலத்துதித்த இவனதுஒழுக்கம்வேதவிதிக்குச் சிறிதும் ஒத்ததன்றென்னுங் கருத்தைக் குறிப்பதற்கு 'மேலோன் மைந்தன்' என்றது-முதன்மையான பிராமணஜாதியிற் பிறந்துக்ஷத்திரியஜாதியாசாரத்தைக்கொண்டவனாதலால். விரைவின் - எனது அம்பு வில்லினின்றும் வெளிப்பட்டு உனக்கு அபாயத்தை உண்டாக்கும் முன்னமே என்றபடி. பி-ம்:—[1] ஆகா. [2] இலக்கின்றின்னே.

வேறு.

37.—இதுவும் மேற்கவியும் – பரசுராமன் ஸ்ரீராமனைத் துதிப்பன.

நீதியாய் [1]முனிந்திட னீயிங் கியாவர்க்கும்
[2] ஆதியா னறிந்தனெ னல்ங்க னேமியாய்!
[3] வேதியா விறுவதே யன்றி [4]வெண்மதிப்
பாதியான் பிடித்தவில் [5]பற்றப் போதுமோ.

மூன்று கவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) நீதியாய்- நியாயவழியையுடையவனே! முனிந்திடல்- (நீ என்னிடத்தில்) கோபங்கொள்ளாதே; நீ இங்கு யாவர்க்குஉம் ஆதி-நீ இவ்வுலகங்களிலெல்லோர்க்கும் முதல்வனாவாய்; யான் அறிந்தனென்-நான் (அவ்வுண்மையை இப்பொழுதே பிரதியட்சமாக அனுபவித்து) அறிந்தேன்: அலங்கல் நேமியாய் - (திருத்துழாய்) மாலையையணியுஞ் சக்கராயுதத்தைக் கொண்ட திருமாலினமிசமானவனே! வெள் மதி பாதியான் பிடித்த வில் - வெண்மையான சந்திரனது துண்டத்தைத் தரித்துள்ள பரமசிவன் (முன்பு கையிற்)பற்றிய வில்லானது, வேதியா இறுவதுஏ அன்றி - வேறு வேறாய் முறிபடுவதேயல்லாமல், பற்ற போதும் ஓ - பேராற்றலுடைய உனதுகையிற் பிடித்தற்கும் போதுவதோ? (எ - று.)

நீதி ஆய்-நியாயவழியை ஆராய்ந்தறி என்றும், ஆதியானென ஒரு சொல்லாக்கொண்டு - முதற்றலைவனென்றும் உரைத்தலுமொன்று. வேதியா-பேதியா; பேதம் என்னும் வடசொல்லடியாப் பிறந்த உடன்பாட்டிறந்தகால வினையெச்சம். இனி வேதியா-வேதங்களாற் புகழப்படுபவனே! என விளியாக்கினுமமையும். திருமாலினது அமிசமல்லாத மற்றவரால் இதனைக் கையிற் பிடித்தல் முடியுமோ என்று ஈற்றடிக்குப் பொருள் காணலாம். பி-ம்:—[1] முனிந்திடேல். [2] ஆதியாய். [3] வேதியாயிறுவதே, ஓதியாயிறுவதே, ஓதியாவுறுவதே. [4] உன்னொரு. [5] பாரம், பாற்றம். (1384)

38. பொன்னுடை வனைகழற் பொலங்கொ [1]டாளினாய்
மின்னுடை நேமியா னாதன் [2]மெய்ம்மையால்
என்[3]னுள [4]துலகினுக் கிடுக்கண் யான்றந்த
உன்னுடை வில்லுமுன் னுரத்துக் [5]கீடன்றால்.

(இ - ள்.) பொன் உடை வனை கழல் - பொன்னாற் செய்யப்பட்டுள்ள அலங்கரிக்குந்தன்மையுடைய வீரக்கழலையும், பொலம்-அழகையும், கொள் - கொண்ட, தாளினாய் - பாதங்களையுடையவனே! (நீ), மின் உடை நேமியான் ஆதல் - ஒளியையுடைய சக்கராயுதத்தைக் கொண்ட திருமாலாகவே யிருப்பது, மெய்ம்மை - உண்மையாம்: ஆல்-ஆதலால், உலகினுக்கு - (உன்னைக்காவலனாகப்பெற்ற இந்த) உலகத்துக்கு, இடுக்கண் - (அரக்கர் முதலியோரால் உளதாகும்) துன்பம், என் உளது - (இனி) யாது உள்ளது? [ஒன்றுமில்லை] யான் தந்த உன்னுடை வில்உம்-நான் தந்த உனது வில்லும், உன் உரத்துக்கு ஈடு அன்று - உனது வலிமைக்கு ஏற்றதாகாது; (எ-று.)

'பொலங்கொடாளினாய் என்னுளது உலகினுக்கிடுக்கண்' என்றதனால், உன் திருவடியைப்பற்றின உலகோர் அகலிகைபோல உய்வதல்லாமல் இடுக்கணெய்தாரென்று உணர்த்தியவாறு. பொன் உடை-பொன்னைத் தனக்கு முதற்காரணமாகவுடைய என்றபடி. பொலம் கொள்-பொன்னாலாகிய பிற ஆபரணங்களையுங் கொண்ட என்றுமாம். உன்னுடைவில்-திருமாலினது தனுசு என்றபடி; இப்பொழுது உன்னுடையதாகிவிட்ட வில் எனினுமாம். மின் உடை நேமி என்பதற்கு-பிறஒளிகளையெல்லாம் (தன்னொளியால்) அழிக்குந்தன்மையுள்ள திருவாழி யென்னலுமாம். ஆல் - தேற்றம்.
பி-ம்:—[1]தோளினாய், தாரினாய், தேரினாய். [2]மெய்ம்மையே. [3]உடைத்து. [4]உலகினி. [5]ஈண்டென்றான், ஈடென்றான். (1385)

39.—பரசுராமனது தவவலிமை இராமன் வளைத்தவில்லின் அம்புக்கு இலக்காகுதல்.

எய்தவம் பிடைபழு தெய்தி டாமலென்
செய்தவ மியாவையுஞ் [1]சிதைக்க வேயெனக்
[2]கையவ ணெகிழ்தலுங் கணையுஞ் [3]சென்றவன்
[4]மையறு தவமெலாம் [5]வாரி மீண்டதே.

(இ - ள்.) 'எய்த அம்பு - (உன்னாலிப்பொழுது) எய்யப்படுகிற பாணமானது, இடை பழுது எய்திடாமல்-இடையிலே பழுதுபடாதபடி, என் செய் தவம் யாவைஉம் சிதைக்க-யான்செய்துள்ள தவங்களெல்லாவற்றையும் அழிக்கக்கடவது,' என-என்று (பரசுராமன்) கூற, அவண் கை நெகிழ்தலும் - அப்பொழுது (ஸ்ரீராமனது) கை சிறிது தளர்ந்தவளவிலே, கணை உம்-அம்பும், சென்று-(வில்லினின்றுவிரைந்து) போய், அவன் மை அறு தவம் எலாம் வாரி-அப்பரசுராமனது குற்றமற்ற தவம் முழுவதையும் வாரிக் கவர்ந்து கொண்டு, மீண்டது—; (எ-று.)—ஏகாரங்கள்-அசை.

இராமபிரான் வில்லைவளைத்ததும் பரசுராமனை நோக்கி, 'உனது தாள்களுக்கு உள்ள நடக்கும வல்லமையையோ, ஒப்பில்லாத தவத்தினாற் சம்பாதித்துள்ள நல்லுலகங்களையோ, இவற்றில் எதை இதற்கு இலக்கு ஆக்குவது? உனக்கு விருப்பமானதைச் சொல்'

என்ன, பரசுராமன் 'நான் மனோவேகமாக மகேந்திரமலைக்குச் செல்ல வேண்டி யிருத்தலால், என் தவத்தினாற் சம்பாதித்த உலகங்களையே இலக்கு ஆக்குக' என்று கேட்டுக்கொள்ள, அங்ஙனமே இராமன் தன் அம்புக்குப் பரசுராமனது தவத்தை இலக்காக்கினனென்று முதனூலாலுணர்க. ஆகவே, இங்குத் 'தவம்' என்றது-நல்லுலகங்களைப் பெறுவதற்குக் காரணமாகிய தவப்பயனை. இதனால், அருவத்தையும் இலக்காகக்கொள்ளவல்லது இராமபாணமென்று அறிக. பி- ம்:—[1] சிதைக்குமோர், சிதைக்கப்போகு. [2] கையவணெகிழ்த்தலும்,கையவணெகிழ்த்தனன்,கையவனெகிழ்தலும். [3] சென்றவம். [4] மெய்யுறு. [5] கொண்டு. சிலபிரதியில் 'எய்தவுன் படையது வெய்துருமலென', 'எய்த...எய்தலாமென்று' என்று முதலடி.

40.—பரசுராமன் விடைபெற்றுச் செல்லுதல்.

எண்ணிய பொருளெலா மினிது முற்றுக
மண்ணிய மணிநிற [1] வண்ண வண்டுழாய்க்
கண்ணிய யாவர்க்குங் களைக ணாகிய
புண்ணிய விடையெனத் தொழுது போயினான்.

(இ - ள்.) (அப்பொழுது பரசுராமன் ஸ்ரீராமனை நோக்கி), 'மண்ணிய மணி நிறம் வண்ண-சுத்தஞ்செய்யப்பட்ட நீலமணியினது நிறம்போன்ற திருமேனிநிறத்தையுடையவனே! வண் துழாய் கண்ணிய-அழகிய திருத்துழாய்மாலையை யுடையவனே! யாவர்க்கு உம் களைகண் ஆகிய புண்ணிய - எல்லோர்க்கும் புகலிடமாகிற பரிசுத்தகுணமுடையவனே! எண்ணிய பொருள் எலாம் இனிது முற்றுக-(நீ)நினைத்த கருமங்கள்யாவும் இனிமையாக[எளிதில்]முடியக்கடவன; விடை - (எனக்கு இப்பொழுது) விடையளிப்பாயாக,' என-என்று கூறி, தொழுது-வணங்கி, போயினான்—; (எ-று.)

"நீ துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்திற்கே திருவவதரித்துள்ளதனால் அச்செயல் இனிது நிறைவேறுக' என்று வாழ்த்துக் கூறி விடைபெற்றுச் சென்றான் பரசுராமனென்க. புண்ணிய - நல்வினையின் வடிவுபோன்றவனே! என்றுமாம். பி-ம்:—[1] வண்ணன்.

41.—ஸ்ரீராமன் தசரதனைச் சார்ந்து தொழுது துயர்நீங்கச் செய்தல்.

அழிந்தவன் போனபி [1] னமல னையுணர்வு
[2] ஒழிந்துதன் னுயிருலைந் துருகு [3] தாதையைப்
[4] பொழிந்தபே ரன்பினாற் [5] றொழுது முன்புபுக்கு
[6] இழிந்தவான் றுயர்க்கடற் [7] கரைநின் றேற்றினான்.

(இ - ள்.) அவன்-அப்பரசுராமன், அழிந்துபோன பின்-தோற்றுப் போய்விட்டபின்பு, அமலன்-குற்றமற்ற ஸ்ரீராமன்,—ஐ உணர்வு ஒழிந்து தன் உயிர் உலைந்து உருகு தாதையை-(பரசுராமனிடத்துப பயத்தினால்)ஐம்புலவுணர்ச்சியையும் நீங்கித் தன் உயிர் வருந்தி [மூர்ச்சித்து]த் தளர்கின்ற (தன்) தந்தையான தசரதனை,

பொழிந்தபேர் அன்பினுல் - வெளிப்படுகின்ற மிக்க அன்பினுல், தொழுது-வணங்கி, முன்பு புக்கு-அவன் கண்ணெதிரே சென்று, இழிந்த வான் துயர் கடல் நின்று கரை ஏற்றினுன் - (அவன்) இறங்கி அமிழ்ந்திருந்த பெரிய துக்கசாகரத்தினின்று (அவனைக்) கரையேறச் செய்திட்டான்; (எ-று.)

இங்ஙன் பரசுராமனை வெற்றிகொண்டு அனுப்பிய ஸ்ரீராமன் தன் தந்தையின் மனத்துயரத்தையொழித்து அவனைக் களிப்படைவித்தானென்பதாம். அழிந்தவன் என ஒரு பெயராக எடுக்கவுமாம். பரசுராமனுலுண்டான பீடை ஒழிந்தவுடனே தசரதராமன் கிரகணத்தினின்றுவிடுபட்ட சந்திரசூரியர் போலக் குறைவற மிக விளங்கினு னென்பார், இங்கே 'அமலன்' என்ருர். ஐயுணர்வு - செல்லும் புலன்களின்வேறுபாட்டால் ஐந்தாகிய உணர்வு; அது, மனம்எனினுமாம்: இதனை "ஐயுணர் வெய்தியக்கண்ணும்பய மின்றே" என்னுந் திருக்குறளின் பரிமேலழகருரையாலும் அறிக. பரசுராமன் புறப்பட்டுப்போனபின் இராமன் அந்தவில்லை வருணனிடங்கொடுத்திட்டு வசிட்டன்முதலிய இருடியரைவணங்கிவிட்டு, பரசுராமன் வந்ததனுல் திகைப்படைந்திருந்த தசரதனையணுகி, 'பரசுராமன் போனுன்; இனி அயோத்திக்குச்செல்லலாம்' எனன, தசரதன் புதல்வனைக் கட்டியணைத்து உச்சிமோந்து உடம்பெல்லாம் மயிர்க்கூச்சுண்டாகப்பேரானந்தமடைந்து தானும் தன் புதல்வரும் மறுபிறவி பிறந்தனராக வெண்ணினு னென்று முதனூலிற் கூறியுள்ளது. பி - ம்:—[1]அமலனையுற. [2]ஒழிந்தனன். [3]தந்தையை. [4]மொழிந்தபேர், பொழிந்ததோர். [5]தொழுதுமன்புகக், தொழுது புக்கனன். [6]கழிந்த. [7]கரையிலேறினுன். (1388)

42.—தசரதன் களிப்புக்கடலு ளாழ்தல்.

வெளிப்படு முணர்வினன் [1]விழும [2]நீங்கியே
தளிர்ப்புறு மதகரித் தானை யா[3]னிடைக்
குளிப்பருந் துயர்க்கடற் கோடு [4]கண்டவன்
[5]களிப்பெனுங் கரையிலாக் கடலு [6]ளாழ்ந்தனன்.

(இ - ள்.) வெளிப்படும் உணர்வினன் - (முன்னே அழிந்து போன) அறிவு (மீண்டுந்) தோன்றிவிளங்கப்பெற்றவனுய், விழுமம் நீங்கி-துன்பம் ஒழிந்து, தளிர்ப்பு உறும்-மனவெழுச்சியையடைகிற, மதகரி தானையான்-மதம்பிடித்தயானைச்சேனையையுடைய தசரதன், இடை குளிப்பு அரு துயர் கடல் கோடு கண்டவன் - இடையிலே (மூழ்குவதற்கு) அருமையான துன்பமாகிற பெருங்கடலின் எல்லையைக் கண்டறிந்தவன், (பின்பு), களிப்பு எனும் கரை இலா கடலுள் ஆழ்ந்தனன்-களிப்பென்கிறகரையில்லாத கடலினிடையே மூழ்கினுன்; (எ-று.)

தசரதன் மிக்க துன்பந்தணிந்து பேரானந்தமடைந்தானென்பதாம். முதலடிக்கு-உடம்பைவிட்டு வெளியே சென்றிருந்த உயிரினுணர்ச்சியையுடையவன் அத்துன்பந்தணிந்து என்றும் உரைக்கலாம். பரசுராமன் வந்து மீளும் எல்லைக்குள் ஸ்ரீராமனிடத்துப்

பொங்கும் பரிவினாலே 'இவனுக்கு என்ன தீங்குவிளையுமோ!' என்று துன்பக்கடலுளாழ்ந்து உணர்வொடுங்கிய தசரதன் இராமன் பெற்ற வெற்றித்திருவைக் காணவே கரையேறினான்; ஆயினும், பெருங்களிப்புக் கடலுளாழ்ந்தான். தசரதனுடைய துயர்க்கு எல்லையேற்பட்டது, களிப்புக்கோ எல்லையில்லையென்றவாறு. ஒரு கடலை யரிதிற் கரையேறினவன் கரையில்லாக் கடலுளாழ்ந்திட்டானென்று கூறிய நயங் காண்க. பி-ம்:—[1] விம்மி, விம்மல். [2] நீங்கினன். [3] இடர்க். [4] கொண்டவன். [5] களிப்பெருங். [6] தாழ்ந்தனன். (1389)

43.—தசரதன் உச்சிமோந்து ஆனந்தக்கண்ணீருகுத்தல்.

[1] பரிவறு [2] சிந்தையப் பரசு ராமன்கை
வரிசிலை வாங்கியோர் வசையை [3] நல்கிய
ஒருவனைத் தழுவிநின் றுச்சி [4] மோந்துதன்
அருவியங் கண்ணெனுங் கலச மாட்டினான்.

(இ-ள்.) பரிவு அறு சிந்தை-அன்பு சிறிதுமில்லாத மனத்தையுடைய, அ பரசுராமன் - அந்தப்பரசுராமனது, கை - கையிலிருந்த, வரி சிலை - கட்டமைந்த வில்லை, வாங்கி - (அவனிடத்தினின்று) வாங்கிக்கொண்டு, ஓர் வசையை நல்கிய-ஒப்பற்றபழிப்பை (அவனுக்கு)க்கொடுத்திட்ட, ஒருவனை - ஒப்பற்ற ஸ்ரீராமபிரானை, (தசரதன்), தழுவிநின்று - (தன்) கையாலணைத்துநின்று, உச்சி மோந்து-(அவனது) உச்சியைத் (தான்) மோந்திட்டு; தன் அம் கண் அருவி எனும் கலசம் ஆட்டினான்-தனது அழகிய கண்களினின்று வெளிப்படுகிற ஆனந்தக்கண்ணீர்ப்பெருக்காகிற கும்பதீர்த்தங்களால் (அவனை) நீராட்டலானான்; (எ-று.)

இச்செய்யுளின் இரண்டாம் அடி-ஒன்றைக்கொடுத்து ஒரு பொருளை மாற்றிக்கொண்டதாகக் கூறினமையால், பரிவர்த்தனையென்னும் மாற்றுநிலையணியாம். கலசம்-சிறுபாத்திரத்தில் வைக்கப்பட்ட சுத்தமான தீர்த்தத்துக்கு ஆகுபெயர். தந்தை மகனைத் தழுவுங்காலத்துத் தந்தையின் ஆனந்தக்கண்ணீர் மைந்தனுடலின் மீது வழிந்ததை மைந்தனுக்குத் தந்தை மங்கலஸ்நானஞ் செய்வதாகக் குறித்தார். பி-ம்:—[1] பரிவுறு. [2] சிந்தனை. [3] நீக்கிய. [4] மோந்தனன். (1390)

44.—தசரதனது உள்ள நிகழ்ச்சி.

பொய்ம்மையில் சிறுமையிற் புரிந்த வாண்டொழில்
மும்மையி னுலகினான் முடிக்க லாவதோ
[1] மெய்ம்மையிச் சிறுவனே வினை [2] செய் தோர்களுக்கு
இம்மையு மறுமையு மீயு மென்றனன்.

(இ - ள்.) 'சிறுமையில்-இளம்பிராயத்திலே, பொய்ம்மை இல்-வஞ்சனை (சிறிதும்) இல்லாமல், புரிந்த-(இக்குமாரன்) செய்து முடித்த, ஆண்தொழில்-ஆண்மைக்கு உரிய பராக்கிரமச்செய்கை, மும்மையின் உலகினால் முடிக்கல் ஆவதுஓ-மூன்று உலகங்களிலுள்ளாராலும் (ஒருங்குகூடியாயினுஞ்)செய்து முடித்தற்குக்கூடி

யதோ? [அன்றென்றபடி]; இச்சிறுவன்ஐ - இவ்விளங்குமாரனே, வினை செய்தோர்களுக்கு-நல்வினை தீவினைகளைச் செய்திட்டபிராணிகளுக்கு, இம்மைஉம் மறுமைஉம் ஈயும்-(அவரவர்வினைக்கேற்ப) இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் அளித்தருளும்:மெய்ம்மை-(இது) உண்மை,' என்றன்ன்-என்று (தசரதன்) கருதினன்;

மூவுலகமும் ஒன்று சேரினும் செய்தற்கு அரிய தொழிலை இவன் இளமையிலேயே செய்ததனால், இவன் பகவானுடைய அமிசமெனத் தசரதன் உண்மை கருதினன். பிர:—[1]மெய்ம்மையிலுறுவதே. [2]செய்தார்க்கும். (1391)

45.—ஸ்ரீராமன் விஷ்ணுவில்லை வருணதேவன்கையிற் கொடுத்திட்டுச் சேனை முதலியவற்றோடு அயோத்தி சேர்தல்.

பூமழை பொழிந்தனர் புகுந்த [1]தேவருள்
வாமவேல் [2]வருணனை மான வெஞ்சிலை
சேமியென் [3]றுதவித்தன் சேனை யார்த்தெழ
நாமநீ ரயோத்திமா [4]நகர நண்ணினன்.

(இ - ள்.) (அப்பொழுது), பூமழை பொழிந்தனர் - புஷ்பவர்ஷத்தைச் சொரிந்தவர்களாய், புகுந்த-(அங்கு அருகில்) வந்துசேர்ந்த, தேவருள்-தேவர்களுள்ளே, வாமம் வேல் வருணனை-அழகிய வேலாயுதத்தையுடைய வருணதேவனைப்பார்த்து, (ஸ்ரீராமன்), மானம் வெம் சிலை சேமி என்று-'பெருமையையும் கொடுமையையுமுடைய இவ்வில்லை (நீ நன்றாகக்) காப்பாற்றிவைப்பாய்' என்று கூறி, உதவி-(அவ்விஷ்ணுவில்லை அவனிடத்தே)கொடுத்துவிட்டு, தன் சேனை ஆர்த்து எழ-தனது சேனைகள் ஆரவாரஞ் செய்துகொண்டு கூடவே பிரயாணப்பட்டுவர, நாமம் நீர் அயோத்திமா நகரம் நண்ணினன்-பிரசித்தமான நீர்வளமுள்ள அயோத்திமா நகரைச் சென்றடைந்தான்; (எ-று.)

இவ்வில்லை வருணன் பின்பு கரன் முதலிய ராக்ஷசர்களின் வதத்திற்கு உதவும் பொருட்டு அகத்தியமகாமுனிவன் மூலமாக ஸ்ரீராமனுக்குக் கொணர்ந்து கொடுப்பது, ஆரணியகாண்டத்தில் அறிவிக்கப்படும். நாமநீர் - (பகைவர்க்கு) அச்சத்தைத் தருகின்ற (அகழி) நீருமாம். பி-ம்:—[1]தேவர்கள். வருணன்கை. [3]உதவினன். [4]நகரை. (1392)

46.—இதுவும் அடுத்த கவியும்-தசரதன் பரதனை நோக்கி மாதாமகன் விருப்பின்படி கேகயநாட்டிற்குச் சென்றுவர அநுமதி தருதல்.

நண்ணின ரின்பத்து வைகு நாளிடை
மண்ணுறு [1]முரசினம் வயங்கு [2]தானையான்

[3] அண்ணலைப் பரதனை நோக்கி யாண்டகை
எண்ணருந் தகைய [4] தோர் பொருளி யம்புவான்.

(இ - ள்.) நண்ணினர்-(யாவரும் அயோத்தியை) அடைந்தவர்களாய், இன்பத்து வைகும் நாளிடை-இன்பத்திலே தங்கியிருக்கும்பொழுதில், (ஒருநாள்) ஆண் தகை-ஆண்மைக்குணமுள்ளவனும், மண் உறு முரசு இனம் வயங்கு தானையான் அண்ணல்-மார்ச்சனையமைந்த பேரிகை வாத்தியங்களின் கூட்டம் விளங்குதற்கிடமான சேனையையுடையனான தசரதன், அப்பரதனைநோக்கி—, எண் அரு தகையது ஓர் பொருள் இயம்புவான்-(யாவராலும்) நன்குமதிக்கத்தக்க அருமையான தன்மையுடையதொரு விஷயத்தைக் கூறுபவனானான்; (எ-று.)—அது மேற்கவியில் வரும்.

மார்ச்சனை-வாத்தியங்களில் அடிக்கப்படுமிடத்தைத் தகுதியாக அமைத்தல். 'அப்பரதன்' என்பதிற்சுட்டு, இராம பக்தியிற் சிறந்தவனென்பதை உணர்த்தும். பி-ம்:—[1] முரசொலி, முரசிடை. [2] தானையவ். [3] அண்ணலே. [4] பேரருளியம்பினன். *(1393)*

47. [1] ஆணை நினதுமூ தாதை யையநிற்
காணிய [2] விழைவதோர் கருத்த னாதலால்
கேணியில் வளைமுரல் கேக யம் [3] புகப்
[4] பூணொளிர் [5] மார்பநீ போதி யென்றனன்.

(இ - ள்.) 'ஐய-ஐயனே! ஆணை -(தன் நாட்டிற் செலுத்தும்) ஆஜ்ஞையையுடைய, நினதுமூதாதை-உன்னுடையமூதாதையான கேகயதேசாதிபதி, நின் காணிய விழைவது ஓர் கருத்தன்-உன்னைப்பார்க்கவிரும்புவதோரெண்ணத்தையுடையவன்: ஆதலால்-ஆகையினால், பூண் ஒளிர் மார்ப-ஆபரணங்கள் விளங்குதற்குக் காரணமான மார்பையுடையவனே! கேணியில் வளை முரல் கேகயம் புக-குளங்களிலே சங்குகள் ஒலித்தற்கிடமான (நீர்வளத்தையுடைய) கேகயதேசத்தை அடைதற்கு, நீ போதி-நீசெல்லுவாய்,' என்றனன்-என்று (தசரதன் பரதனை நோக்கிக்) கட்டளையிட்டான்;

பரதனைப் பார்க்கவிரும்பிய தனது தந்தையான கேகயராசனது கட்டளையால் யுதாசித்து அயோததி சேர்ந்து தசரதன் முதலியோர் ஸீதாகல்யாணத்தின்பொருட்டு மிதிலை சென்றிருப்பதையறிந்து இராமன் முதலியோர்க்குச் சமாவர்த்தனமென்ற சடங்கு நடந்த அன்றைத்தினமே மிதிலையைவந்து சேர்ந்தனனென்றும், அது முதல் பரதனையழைத்துச் செல்வதற்காகக் காத்திருந்தனனென்றும் முதனூலால் அறிக.

மூதாதை-பாட்டன்; என்றது, பரதனுக்கு மாதாமகனை. கேணி - நீர்நிலைக்கெல்லாம் உபலக்ஷணம்; சிறுகுளத்தைக்கேணியென்பது, அருவாநாட்டிலிருந்து வந்து வழங்கிய திசைச்சொல். பி-ம்:—[1] ஆணைநின்றனமுது, ஆணையினின்முது. [2] விரைவதொர். [3] புகழ்ப். [4] பூணியல். [5] மொய்ம்பினாய், மார்பினாய். *(1394)*

48.—இராமபிரானை வணங்கிவிட்டுப் பரதன் கேகய நாட்டிற்குப் புறப்படுதல்.

ஏவலு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்
ஆவியங் கவனல தில்லை யாதலால்
[1]ஓவலி [2]லுயிர்பிரிந் துடல்சென் றென்னவே.

(இ - ள்.) ஏவலும் - (சக்கரவர்த்தி) கட்டளையிட்டவளவிலே (பரதாழ்வான்), இறைஞ்சி போய்-(தந்தையை) வணங்கிச்சென்று, இராமன் சே அடி பூவினை-ஸ்ரீராமபிரானது சிவந்த திருவடித் தாமரைமலர்களை, சென்னியில் புனைந்து-(தன்) தலையின்மேற் கொண்டு சூடி வணங்கி, அங்கு அவன் அலது ஆவி இல்லை ஆதலால்-அவ்விடத்திலுள்ள அந்த ஸ்ரீராமனையல்லது (தனக்கு வேறு) உயிர் இல்லையாகையால், ஓவல் இல் உயிர் பிரிந்துஉடல் சென்று என்ன-(ஒருபொழுதும்) நீங்குதற்குத்தகாத உயிரை விட்டுப் பிரிந்துஉடம்பு தனியே சென்றாற்போல, போயினான்-(இராமனைவிட்டுச்) சென்றான்; (எ-று.)

'உயிர் பிரிந்து உடல் சென்றென்ன' என்றது-இல்பொருளுவமை; தற்குறிப்பேற்ற மென்னலாம். உடம்பு-பரதனுக்கும, உயிர்-இராமனுக்கும் ஒப்பு. பரதனுக்கு எல்லாச்சிறந்தபொருளும் இராமனே யாதலை, மேல் அயோத்தியாகாண்டத்தில் பரதன் "எந்தையும் யாயுமெம்பிரானு மெம்முனும், அந்தமில்பெருங் குணத்திராம னாதலால், வந்தனையவன்கழல் வைத்தபோதலாற், சிந்தை வெங்கொடுந்துயர்தீர்கலா தென்றான்" என்பதனாலும் அறிக. அங்கு-அப்பொழுது எனவுமாம். உயிர்பிரிந்து-உயிர் பிரியப்பெற்று என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]ஏவலில். [2]உடல்... உயிர். (1395)

49.—யுதாசித்து தன்னருகுவரத் தம்பியோடும் பரதன் கேகயநாட்டைச் சேர்தல்.

[1]உளைவிரி புரவித்தே [2]ருதாசித் தென்றெனும்
வளைமுரல் [3]தானையான் மருங்கு [4]போதப்போய்
இளையவன் றன்னொடு மேழு நாளிடை
[5]நளிர்புனற் கேகய [6]நாடு [7]நண்ணினான்.

(இ - ள்.) உளை விரி-பிடரிமயிர்கள் பரவப்பெற்ற, புரவி-குதிரைகளையும், தேர்-தேர்களையுமுடைய, உதாசித்து என்று எனும-யுதாஜித்தென்று சிறப்பித்து எண்ணப்படுகிற, வளை முரல் தானையான்-சங்கவர்த்தியங்கள் முழங்குதற்கிடமான சேனையையுடைய அரசன், மருங்கு போத-(தன்) அருகில் வர, இளையவன் தன்னொடும்-தம்பியான சத்துருக்கனனுடனே, போய்—, ஏழு நாளிடை - ஏழுநாட்களிலே, நளிர் புனல் கேகயம் நாடு நண்ணினான்-குளிர்ந்த நீர்வளத்தையுடைய கேகயதேசத்தை(ப் பரதன்) அடைந்தான்;

'இளையவன் தன்னொடும் நண்ணினான்' என்றதனால், கைகேயியின் தந்தை சத்துருக்கனனைக் காணவேண்டுமென்னும் கருத்தைச் சிறிதும் உடையனல்லனாயிருக்கையிலும், சத்துருக்கனன், யுதாசித்தினாலாவது பரதனாலாவது அழைக்கவும்படாமலே, தந்தைதாய் தமையன் முதலியோரது கட்டளையு மில்லாமலே, பரதன்பக்கல் தனக்கு இயற்கையாகவுள்ள பக்தியைத் தவிர வேறுகாரணமில்லாமல், வடிவத்தை நிழல் விடாது தொடர்ந்து செல்லுதல்போல அப்பரதனுடனே அவனது அங்கமாய்ச்சென்றனனென்ற பொருள்புலப்படும். 'யுதாசித்துமருங்குபோத' என்றதனால், பரதனது மாமனையே சத்துருக்கனன் தனக்கும்மாமனாகக் கருதினனென்பதும் 'கேகயநாடு நண்ணினான்' என்றதனால், பரதனுக்கு விருப்பமான இடமே தனக்கும்விருப்பமான இடமெனக்கருதினனென்பதும் பெறப்படும். பாகவதர்க்குஉத்தேசியமான தலமே முமுட்சுக்களுக்கு உத்தேசியமான தலமாமென்பதை இதனால்அறிக. 'கதைநிகழ்ச்சிவகையாலும் சொற்போக்கினாலும் சிறந்த தத்துவப்பொருள்களைக் குறிப்பாலுணர்த்திக்கொண்டுபோதல் உத்தம காவிய விலக்கணமாம்' என்ற முறைமைப்படி, இம்மகாகாவியத்தில் இங்கே இங்ஙனஞ் சத்துருக்கனனது செய்தியைக் கூறியதனால், 'பகவத்கடாக்ஷம் பெற்றுச் சிறந்த பதவியடையவேண்டுவராயின், பாகவதபாரதந்திரியமுடையவராகுக' எனக் குறிப்பா லுபதேசிக்கப்பட்டவாற்றை உணர்க. தமது சிறுமையின் எல்லையையும் எம்பெருமானது பெருமையின் எல்லையையும் உய்த்துணர்ந்து பகவானைத் தாம் நேரிலடைந்து அடிமை பூணுதல் அரிதெனக்கருதிப் பாகவதர்க்குத் தொண்டு செய்யவேண்டுதல் நூல்முறைமை யாதலின், சத்துருக்கனன் இராமனைத்தொடராது பரதனைத் தொடர்ந்தான். இதனால், லக்ஷ்மணன் பரதன் மற்றும் அயோத்தியிலுள்ள ஜனங்கள் என்னும் அனைவரைக்காட்டிலும் சத்துருக்கனனுக்கு உள்ளபாகவத சேஷத்வம்[அடியார்க்கு அடியனாகை] ஆகிய சிறப்பு விளங்கும். அயோத்தியிலாயின் இராமபக்தனான பரதனுக்குமற்றும் பலர்கைங்கர்யஞ்செய்தல் கூடும்: அவன் செல்லுங் கேகயநாட்டிலாயின் தானொருவனே பரதகைங்கரியஞ் செய்யலாமெனக் கருதிப் பேரானந்தத்தோடு சென்றனனென்க.

இராம்பிரானிடத்து விசேஷபக்தியையுடையனாகி அவனையலது உயிரிலனாகிய பரதன் பிதிருவாக்கிய பரிபாலனத்தின்பொருட்டு இராமனைப் பிரிந்துகேகயஞ்சேர்ந்து எங்ஙனம்வாழ்ந்தனனென்னின்-இராமனதுபேரபிமானத்துக்கு விஷயமான சத்துருக்கனனதுசேர்க்கையாலேயே யென்க; இக்கருத்து விளங்குவான் வேண்டியன்றே, 'இளையவன் மூத்தவனொடுங் கேகய நண்ணினான்' என்னாது 'இளையவன் றன்னொடும் மூத்தவன் கேகய நண்ணினான்' எனக் கவிச் சக்கரவர்த்தியான கம்பர் கூறினது: இராமனைப் பிரிந்த தனது உயிர் வாழ்க்கையின் பொருட்டே பரதன் அவ்விராமனது திருவுள்ளத்துக்கு மிகப்பாங்கான சத்துருக்கனனை உடனழைத்துச்சென்றனனென்க. இதனால், பரதன் ராமசத்துருக்கனர்களைக்காட்டிலுஞ் சிறப்பாகத் தனது மாமனைக் கொள்ளாமை காண்க.

உதாசித்து வடசொற்றிரிபு; யுதாஜித் என்பதற்கு - போரால் (பகைவரை) வெல்பவனென்று பொருள். உளே - தலையாட்டமென்ற ஆபரணமுமாம். பி-ம்:—[1]உளவயப். [2]உதையசித்தெனும். [3]சேனையான். [4]போக. [5]நளி. [6]நகரம். [7]நண்ணினர். (1396)

50.—கவிக்கூற்று: மேற்காண்டத்துக்குத் தோற்றுவாய்.

ஆனவன் போனபின் னரசர் கோமகன்
ஊனமில் [1]பேரர [2]சுய்க்குநா ளிடை
வானவர் செய்தமா தவமுண் டாதலான்
[3]மேனனி நிகழ்ந்தன விளம்பு வாமரோ.

(இ - ள்.) ஆனவன் போன பின் - அப்பரதன் சென்றபின்பு, அரசர் கோமகன் - இராசாதிராசனான தசரதன், ஊனம் இல் பேர் அரசு உய்க்கும் நாளிடை - குற்றமில்லாத பெரிய அரசாட்சியைச் செலுத்திக்கொண்டிருக்குங்காலத்தில், வானவர் செய்த மா தவம் உண்டு ஆதலால்-தேவர்கள் (ராவணுதிராக்ஷசசங்காரத்தின் பொருட்டுச்)செய்துள்ள பெருந்தவம் உள்ளதாதலால், மேல் நனி நிகழ்ந்தன-பின்பு மிகுதியாக நடந்த செய்திகளை, விளம்புவாம் - (இனி மேற்காண்டத்திற்) கூறுவோம்; (எ-று.)

மேல்நனி நிகழ்ந்தன-தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யச்சித்தனதும், மந்தரை கலகத்தால் மனந்திரிந்த கைகேயியால் அது தடைப்பட்டதும், இராமன் வனவாசஞ்செய்ய நேர்ந்ததும் முதலியன. ஊனமில் பேரரசு-வருணாச்சிரமதருமங்கள் வழுவாமலும் எளியார் வலியாரால் நலிவுபடாமலும் நிகழுஞ் சகலலோக சாமிராச்சியம். பி-ம்:—[1]பார். [2]உவக்கும், இயக்கும். [3]மேனிகழ் பொருளினி, மேனனிநிகழ்ந்தது. (1397)

பரசுராமப்படலம் முற்றிற்று.

பாலகாண்டம் முற்றுப்பெற்றது.

அநுபந்தம்.

அயோத்திமா நகரத்தின் அழகில் ஈடுபட்டு, அதன் மதிலையும், அகழியையும் விரிவாய் வருணித்தபின் கம்பர் கோபுரத்தைக்காண்கிறார். அதைக் கேவலம் அசையாப்பொருளாகிய பூமியின்மேல் அமைத்த கட்டடமாக அவர் காணவில்லை. உயிர்த்து எழுந்த பூமகளுக்கே ஓர் முடிசூட்டியதுபோல் அவர் அந்தக்கோபுரத்தைக் காண்கிறார். அந்தமௌலியானது சிற்பசாஸ்திரங்களின் முறைமைக்குப் பொருந்த ஆலோசித்து அமைக்கப்பட்டதாம். நக்கீரரும் 'ஐவேறு வகையின் செய்வினைமுற்றியமுடி'' என்றார். அதையே கம்பர் ''நூல் ஊழ் உறக்குறித்து அமைத்த'' து என்றார். திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர்கண்ட உரையிலிருந்தும், பிறவுரைகளிலிருந்தும் இந்த ஐந்து உருவங்கள் முறையே தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி எனப்பெயர்கொண்டனவென்று அறிந்தோம். இவை ஒவ்வொன்றையும் நுணுக்கமாகக் கம்பர் வர்ணித்துக்காட்டுகிறார். இராமாயணக் கவி எழுதுகிறாரோ, அல்லது சிற்பிகளுக்குப் பயன்படுமாறு ஓர் தொழில்நூல் ஆக்குகிறாரோ என்று ஐயுறுமாறு நுட்ப விளக்கத்துடன் கவி அமைத்திருக்கிறார்.

முதற்பகுதி 'தாமம்' எனப்படும். தாமந் என்ற ஒரு வடமொழிச்சொல்லே 'தாமம்' எனத் திரிந்தது. பூக்கள், அல்லது பொன், அல்லது மணிகளால் செய்த சூடிகை அதாவது தலையணியைக் குறிக்கும். ஆங்கிலத்தில் Chaplet எனப்படும். இதே முடியின் வாயாகும். (நவரத்தினக்) கற்களைச் செதுக்கி அடுக்கி, பளிங்குக் கற்களை அறுத்து விளிம்பு கட்டி, மேலே ஒளி வீசப் பசும்பொன் தகட்டைப் பதித்துச் செய்யப்பட்டிருக்குமெனக் கம்பர்,

> கல்லடித்து அடுக்கிவாய் பளிங்குஅரிந்து கட்டிமீது
> எல்இடப் பசும்பொன் வைத்து இலங்கு(ம்)......

எனத் தெள்ளிய தமிழில் விரித்துரைக்கிறார்.

அதன் மேலுள்ள உறுப்புக்கு 'முகுடம்' என்று பெயர். இது மகுடம் என்ற ஒருவடமொழிச்சொல்; ஆங்கிலத்தில் Tiara எனப் பொருள் கொள்ளும். பொதுவாக முடிக்கும், சிறப்பாக மணிகள் நிறைந்து விளங்கும் ஓர் உறுப்புக்கும் இப்பெயர் வழங்கப்படுகிறது. மேலே சொன்ன பொன்தகட்டின்மேல் பல்வகை இரத்தினங்களின் கூட்டம் வானவில் போட்டாற்போல ஒளிவீசும்படி யிழைக்கப்பட்டிருக்கும் என்று இவ்வுறுப்பைக் கம்பர் நமக்குச் சித்திரித்துக்காட்டுகிறார். இந்த மணித்திரளை நக்கீரரும் ''முரண் மிகுதிருமணி'' என்றார். இப்படியாக மணிகள் இழைக்கப்பெற்ற பொன் தகட்டினாலான சுவரின்மேல் வெள்ளியினாலாகிய பெரிய × கைம்மரங்களைப் பொருந்தும்படி யிருக்க வைத்து, அதாவது

× கைம்மரம் = வீட்டின் பாய்ச்சுமரம். சுவரின்மேல் படுக்கையாகக்கிடத்தி அதன்மேல் குத்துக்கால்களை வைக்க உதவும் உத்திரம் அல்லது விட்டம்.

தளப்படுத்தி, வச்சிர ரத்தினத் தூண்களை அவற்றின் மேலே நாட்டி வைக்கப்பட்டிருக்குமென்று ஓவியம் தீட்டிக் காட்டுகிறார். இப்போது தாமம் முகுடம் என்ற இரண்டு உறுப்புக்களின் வருணனையைக் கேளுங்கள்:

கல்லடித்து அடுக்கிவாய் பளிங்குஅரிந்து[1] கட்டிமீது
எல்இடப்[2] பசும்பொன்வைத்து இலங்குபன் மணிக்குலம்
வில்இடக் குயிற்றி[3] வாள்விரிக்க வெள்ளி மாமரம்
[4] புல்இடக் கிடத்திவச் சிரத்தகால் பொருத்தி(யே).

மூன்றும் உறுப்பு பதுமம்: இதுவும் வடசொல்: தாமரை யெனப்பொருள்படும். தூண்களின் மேற்பாகத்தில் அமைக்கப் பட்டிருக்கும் தாங்குகட்டை அல்லது சுமையடைக் கட்டை. இது, தாமரை மலர்போல் உருவம் படைத்து விளங்குதல் யாரும் அறிந்ததே. அது காரணம்பற்றியே இதற்குப் பதுமம் எனப் பெயர் வழங்குகிறது. தமிழில் போது என்றால் மலர்எனப் பொதுப் பொருளும், தாமரை எனச் சிறப்புப் பொருளும் தரும். போதிகை யென்றால் தூண்களின் உச்சியிலுள்ள தாங்கு கட்டைகளுக்குப் பெயர். பச்சை யிரத்தினங்களினால் செய்யப்பட்டு விளங்குகின்ற போதிகைக் கட்டைகளின் மேல் விளங்குகின்ற இரத்தினங்களின் கூட்டத்தால் செய்யப்பட்ட நீண்டசிங்க வடிவங்கள் வரிசையாய் நிறுத்தப்பட்டிருக்கின்றன: இந்தச் சிங்கங்கள் கோமேதகத்தால் செய்த கைம்மரத்தைத் தம் சிரசால்தாங்கி நிற்கின்றன. இவ்வாறுகச் சிற்பநூலின் விதிகளை நுட்பமாய் விளக்கி முடியை உறுப் புறுப்பாய் வர்ணிக்கிறார்:—

மரகதத்து இலங்கு போதி கைத் தலத்து வச்சிரம்
புரைதபுத்து[5] அடுக்கிமீது பொன்குயிற்றி மின்குலாம்
நிரைமணிக் குலத்தின் ஆளி[6] நீள் வகுத்த ஓளி[7] மேல்
விரவு கைத் தலத்தின் உய்த்த மேதகத்தின் மீது (அரோ).

பலம்மணிக் கற்களாலும், பளிங்காலும் கட்டப்பட்ட அடியின்மேல்
பொற்சுவர் எழுப்பி
மணிகளை வானவில்போல் விளங்கப் பதித்து
வெள்ளியால் கைம்மரம் கிடத்தி
அதன்மேல் வச்சிரத்தூண்கள் பொருத்தி
மரகதத் தாங்கு கட்டைகள் அமைத்து
அவற்றின்மேல் வச்சிரக் கற்கள் அடுக்கி
மேலே பொன் தகடுகள் பதித்து
அவற்றின்மேல் மணிகளால் செய்த நீண்ட சிங்க
வரிசைகள் நிறுத்தி
அவைகளின் தலைகளின்மேல் கோமேதகத்தால் செய்த
கைம்மரம் கிடத்தப்பட்டிருக்கிறது.

---

[1] அரிந்து = வேண்டிய அளவிற்கும் வடிவத்திற்கும் ஒப்ப அறுத்து.

[2] எல்இட = ஒளிவீசும்படி. [3] குயிற்றி = இழைத்து.

[4] புல்இட = மேலே பொருந்தும்படி.

[5] புரை தபுத்து = குற்றம்நீக்கி. [6] ஆளி = சிங்கம். [7] ஓளி = வரிசை.

நான்காவது உறுப்பு கோடகம். இதுவும் வடசொல். கோடகம் என்றால் ஏதேனும் ஒரு பொருளின்உச்சி:எவ்விதம் ஒருகட்டடத் துக்கு மண்டபம் உச்சியோ, அப்படிஇது: ஆங்கிலத்தில் இதற்கு "The ornamental curves of a crown" எனப் பொருள் கொடுக்கப் பட்டுள்ளது. இதுவரையில் அடியிலுள்ள குறுக்களவு குன்றாமல், நேராக எழும்பிவந்த முடியானது இப்போது குவிகிறது: ஆயினும் உள்ளே இடம் விசாலமாயிருக்கிறது. கம்பர் அயோத்திமாநக ரத்தின் கோபுரத்தை முடிக்கு ஒப்பிட்டு வருணனைசெய்தலால் இடவிசாலத்தைக் குறிப்பிடக் கருதி, மேல் ஏழு உலகத்தவர் யாவர்க்கும்(தனித்தனித்தங்குவதற்கு)ஏழு விசாலமான இடங்களை ஏற்படுத்தியது போல (ஏழுநிலைகள் அமைய) இருக்கிறதென் கிறார். இந்த இடத்தை உள்ளடக்கி மேலே செம்பொன்னின் தகட் டால் முழுவதும் மூடப்பட்டிருக்கிறது இந்த நான்காம் உறுப்பு:

> ஏழ் பொழிற்கும் ஏழ்நிலத் தலஞ்சமைத்தது என்ன நூல்
> ஊழ் உறக் குறித்து அமைத்த உம்பர்[1] செம்பொன்வேய்ந்து

விளங்குகிறது கோடகம் என்ற உறுப்பு. "நூல் ஊழ் உறக் குறித்து அமைத்த" என்றார். சிற்ப சாஸ்திரங்களின் முறைமைக் குப் பொருந்த ஆலோசித்து அமைக்கப்பட்டிருக்கிறது என்று வற்புறுத்துகிறார்.

'கிம்புரி' என்பது ஐந்தாவதும், சிகரமுமான உறுப்பு. இது வடசொல்லினின்று வந்தபெயர். ஆங்கிலத்தில், "The ornamental Boss or knob of a crown" எனப் பொருள்படும். பூண்முடி யுறுப்பு என்பதுபொருள். இதுவே முடியின் உச்சி: மேலுலகத் திலே சென்று சூழ்கின்ற ஒளியையுடைய சிகரத்திலே சிறந்த மாணிக்கத்தாலாகிய கலசம் விளங்கப்பெறுகிறது. இப்படியாக முடிபோல் கோபுரங்கள் அமைக்கப்பட்டதால், பூமியாகிய இளம் பெண்ணை முடிசூட்டி அலங்கரித்தாற்போல அவைவிளங்கின வென்று கம்பர் முடிக்கிறார்.

> ஏழ் பொழிற்கும் ஏழ்நிலத் தலஞ்சமைத்தது என்னநூல்
> ஊழ் உறக்குறித்து அமைத்த உம்பர் செம்பொன் வேய்ந்துமீச்
> சூழ்சுடர்ச் சிரத்துநன் மணித்தசும்பு தோன்றலால்
> வாழ்நிலக் குலக்கொழுந்தை மௌலி சூட்டி அன்னவே.

எனப் பாட்டிற்கும் முடிசூட்டுகிறார்.

இவ்விதமாக ஐவேறு உருவையும் விளக்கி இம்மூன்று பாடல்களும் அமைந்திருக்கும் பொருத்தம் கண்டு இன்புறுக.

---

[1] உம்பர்—மேலே.

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
20	15	மூடியாத	முடியாத
39	31	மூதலிய	முதலிய
94	44	கொள்.	கொள்க.
99	28	குளமாகி	குளகமாகி
106	20	யுடைய	யுமுடைய
198	40	-ம்:—பி	பி-ம்:
224	28	மூலமாகச்	மூலமாகக்
233	14	துயம்	துயரம்
,,	24	பணி	பனி
289	35	தீயெனனக்	தீயெனக்
344	29	முனியதிெர்	முனியெதிர்
369	19	து)ச்	துச்)
377	27	முறைபப்	முறைப்
389	19	யயக்கு	மயக்கு
390	14	சபாங்	சாபங்
411	30	மெவி	செவி
477	36	மனத்திடுக்	மனந்திடுக்
480	35	வோரீஇ	வெரீஇ
507	25	விரை	விசை
557	16	தவத்தவள்	தனத்தவள்
617	21	ரோடுந்	ரொடுந்
626	30	அமையால்	அமையாமல்
701	9	விகை	வகை
714	13	குளிந்த	குளிர்ந்த
,,	14	வேடகம்	வேகடம்
736	12	அடுக்கும்	அடுக்கம்
743	30	ஏலிமிவ்	ஏலுமிவ்
745	33	நிணைக்கு	நினக்கு
748	26	கொழிந	கொழுந
772	26	இரமலட்சு	இராமலட்சு
777	10	பெறுமை	பெருமை
830	21	திருமேனின்	திருமேனியின்
894	4	மலரைபோன்ற	மலரைப்போன்ற
898	22	திருபாற்கடலி	திருப்பாற்கடலி

மற்றும் பிழைகள் காணப்படினும் திருத்திக்கொள்ளவும்.

பாலகாண்டத்து

அரும்பதவகராதிமுதலியன. *

அஃது-அப்படியென்பாரு முளர், திருவ-135
அகத்தியன் கடலை மொண்டு பருகிய கதை, தாடகை-30
அகம்பாடுணர்தல், கோலங்-39
அகலிடம்-மார்பு, பரந்த இடம்: எழு-33
அகலியை சாபம் நீங்கி முன்னை நிலையடைதற்கு உபமானம், அகலி-71
அகவிருள், காப்பு-5
அகவிரை நறுமலர், திருவ-85
அகழ்-அகழி, மிதிலை-22 [-60
அகழ்தல் - தோண்டுதல், வரைக்
அகழி சேனையையொத்தல், நகர-19
அகழியிற் பங்கயமிருத்தலின் வருணனை, நகர-16
அகழியின் வருணனை, மிதி-22
அகன்கிடங்கைச்சூழ்கிடந்தசோலை × ஆழியைச் சூழ்கிடந்த இருட்பிழம்பு, நகர-21
அகன் புனல், நகர-61
அகில்-அகருமரம், மலையினிடம்: வரைக்-58
அகில்படுமூதூர் × முகில்படு கடல், வரைக்-27 [-24
அகிற்சந்து-அகிற்றேய்வை, கடிம
அகிற்றேய்வை, எதிர்-13
அங்கணன், கடிம-97
அங்கதன், திருவ-26
அங்கம்-சரீரம், தாடகை-2
அங்கி = அக்கி: கடி-100
அச்ச நுண்மருங்குலாள், உண்-11
அச்சம்பூத்தது, உண்-49
அச்சென நினைத்தவந்தணன், கோலங்-36
அட்டர்-அசடர், திருவ-76
அசதி-சிரிப்பு, சோர்வு, உண்-24
அசமஞ்சன், அகலி-34
அசன்[அயன்]பகைக்கடல் கலக்கி இந்துமதியென்னும் திருவைப் பெற்றது, குலமு-12
அசனி-இடி, திருவ-26, தாடகை-34, வேள்வி-43, அகலி-15
அசுணம், தற்சி-7
அசுவமேதம் ஓராண்டு நடந்தது, திருவ-84
அஞ்ச-தோல்வியடைய, கையடை
அஞ்சலஞ்சல், கார்மு-49 [-4
அஞ்சனக்கருமுகில், திருவ-103
அஞ்சன நோக்கம், உலா-10
அஞ்சனம்-மை, வரைக்-38
அஞ்சனம் அமுதமாதல், எழுச்-26
அஞ்சனவொளியான், கடிம-21
அஞ்சினர்-தோற்றவர், தாடகை-7
அஞ்சு-பஞ்சபூதங்கள், காப்பு-2
அஞ்சுமான், அகலி-34
அட்டில்-மடைப்பள்ளி, நாட்டு-24, 26. வரைக்-27 [உலா-20
அடக்கம் பெரியோர்க்குரியது,
அடங்கலும்-முற்றும், தாடகை-50
அடல்-வலிமை, கடிம-11
அடவி-காடு, மிதி-14
அடாநெறி யறைதல்செல்லா வருமறை, எதிர்-1
அடிகதுவ-பாதங்களை வணங்கிச் சூழ்ந்துவர, பாசு-2
அடிகள், மிதி-157
அடிகுரல் முரசு, திருவ-75
அடிமையில் கிடைத்தல்-அடிமையிலமர்தல், அகலி-26
அடியிணை தொழ இடமின்றி மன்னர்தம் முடியொடு முடிபொருவாயில், எழுச்-1
அடுக்கம், உண்-17: அடுக்கல், ஆற்று-13: அடைதூண்: அகலி-21

---

* இங்குக் காட்டப்படுபவை - படலப்பெயரின் முதற்குறிப்பும் படலச்செய்யுள்களினெண்ணும்.

அண்டகூடம்-அண்டமுகடு, அண்டத்தொகுதி, அகலி-14
அண்டகோளகை-அண்டகடாகம், அகலி-5
அண்டம்-தேவருலகம், மிதி-28
அண்டர்-தேவர், வேள்வி-48,மிதி-134 [26
அண்ணல் மரபின்சுடர், கோலன்-
அண்ணியர் - போன்றவர், வரைக்
அண்மி, திருவ-61 [-58
அணங்கு-மோகினி, தெய்வப்பெண், திருமகள்; தாடகை-27, அகலி-76, கார்மு-18, துன்பம். கோல-39
அணிதல்-அலங்கரித்தல், பரசு-6
அணியும்-நிறைந்த, ஆற்று-7
அணை-கரை, மிதி-11: படுக்கை, எழுச்-16
அத்தகுமரபு, திருவ-87
அத்தன்-பிதா, மிதி-124
அத்திரம் இராமனுக்கு அடிமையாதல், வேள்வி-3
அதிசயம்-வியப்பு, திருவ-16, பூக்கொய்-9
அதிவிடநீருநெய்யுமுண்கிலாவேற்கண், வரைக்-36 [-52
அந்தகன்புரத்திலுய்த்தல், வேள்வி
அந்தணர்கடல்போல் மிகுதியாய் வருதல், கடிம-84
அந்தணர்மறையோதி அறுகுநீர் தெளித்து வாழ்த்தல்:எழுச்-74
அந்தணர் விருந்தோடு உண்டல், நாட்டுப்-22
அந்தணன், வேள்வி-25
அந்தணாளர், திருவ-94
அந்தணாளர்களாசி, உலா-45
அந்தம்-எல்லை, பூக்-23
அந்தர்-குருடர், எழுச்-31
அந்தரதலம்-வானம், கையடை-4
அந்தரதுந்துபி, திருவ-67
அந்தரம்-வானம், நாக-3: வேறுபாடு, தாடகை-57 [-62
அந்திமாலை காலனைப்போலும்,மிதி
அந்திமாலையை நோக்கி வருந்துதல், மிதி-64, 66

அந்தியிற்றுக்கிய தெய்வம், உண்-51 [-66
அந்தியை அரவாக உருவகம், மிதி
அநங்கன், தாடகை-1, அநங்கன் நெஞ்சிலுள்ளான், கார்மு-51
அப்பினுளமிழ்தாந் தன்னையொப்பனை, கடிம-69
அப்புடையனீகவேலை, எதிர்-2
அப்புமாரி, ஆற்று-14
அபயம், உண்-14, பரசு-19
அபிநவகவிநாதன், கம்பர். தனி
அம்சுமான், அகலி-34
அம்பரீடன்-நரமேதஞ் செய்யச் சுநச்சேபனைவாங்கிய அயோத்தி மன்னன், மிதி-120
அம்புதசாலம், மிதி-90
அம்புயத்தணங்கு-மலர்மகள், பூக்
அம்புழுதபுண், உண்-53 [-8
அம்ம, திருவ-44
அம்மிமிதித்தல், கடிம-92
அம்மை, வரைக்-21
அமர்தல்-விரும்புதல், உண்-26
அமரகண்டகர், திருவ-8
அமரர்இராமனைத்தொழுதுவாழ்த்துதல், வேள்வி-55
அமரர்நாடு விண்ணில் இருந்ததென்ன அனீகவெள்ளம் பொலிதல், வரைக்-28
அமரரணங்கு-தெய்வப்பெண்,எழு
அமராபதி, குல-6 [-29
அமராவதி அளகை இவற்றிற்குப் பின் அயோத்திபடைத்தது, நகர-4
அமலன் மேனிநோக்குவாரையெரியெழநோக்குதல்,உலா-15
அமலை-ஒளி, நாட்டு-22, எதிர்-15
அமளி-படுக்கை, வரைக்-52
அமிர்தம்-பால், அகலி-13,உணவு, மிதி-93, 95
அமிர்தமேனி, கோலங்-9
அமிர்தளாய பல்லியம், கார்மு-37
அமிர்துகுகுதலை, திருவ-125
அமிர்தினைச்சுவை செய்தல், கோலங்-3
அமிழ்தெழக்களிகொள் இந்திரன்

Xசீதையைக் கண்ட இராமன், கோலங்-30 [-10
அமிழ்தொக்குமின்சொல், உண்
அமிழிமைத் துணைகள், கோலங்-3
அமுதம்-சாறு, அகலி-67
அமுதருண்டி, நாட்டு-22
அமுதவுந்தி-பாற்கடல், வரைக்-13
அமுதவேழிசை, திருவ-107
அமுதின் சுவையோடினிதாஞ் சொல், கடிம-18
அமுது-குழந்தைகளின் வாயினின்று ஒழுகும் நீர், நாட்டு-58
அமை-மூங்கில், கோலங்-10
அமைச்சர், திருவ-56
அமைத்திரள் கொள் தோளியர், கோலங்-29
அயமகம், அகலி-35
அயர்தல்-சோர்தல், பாசு-19, *20*
அயன், காப்பு-6
அயன்Xவசிட்டன், திருவ-1
அயன் திருத்திய அண்டம், கடிம-
அயனூர், நகர-4 [45
அயிர்-கண்டசர்க்கரை, நாட்டு-55, சந்தேகம், நகர - 29. மணல், பாசு-12 [யடை-*1*
அயிர்த்தல் - சந்தேகித்தல், கை
அயிர்முதலியன இடம் மாறுதல்X உயிர்கள் பல்கதியிற் பிறத்தல், நாட்டுப்-55
அயிராவதம், அகலி-13
அயில், நாட்டு - 14, நகர - *4*, 12, வேல், நகர-60: வரைக் - 15, கூர்மை, திருவ-65, கடிம-6
அயில்நிலவீனுதல், கடிம-33
அயினிசுற்றுதல், கோலங்-17
அயினிநீர்-ஆலத்திநீர், மிதி-51
அயுதர்-பதினாயிரவர், அகலி 34
அயோத்தி, உலா-44
அயோத்தி பரமபதத்திலுள்ளாரும் இழிவதற்கு விரும்புவது,நகர-1
அயோத்தி மாந்தர் பொழுதுபோக்கும் வகை, நகர-66, 69
அயோத்தியாள், நகர-11
அயோத்தியாளின் நிழல் x சூரிய மண்டலம், நகர-11
அயோத்தியின்சிறப்பு, கையடை-*1*
அயோத்தி யெல்லா நகரத்தினும் மேம்பட்டது, நகர-*5*, *6*
அயோத்தியைப் படைத்தற்குப் பழக அளகை முதலியனபடைத்தது, நகர-*4*
அரங்கப் பாஞ்சுடர், குல-2
அரங்கு-நடனசாலை, நாட்டு - *14*, நகர-46, மிதி-*9*: மாளிகையினிடம், எதிர்-38
அரங்குதல்-அழுந்துதல், அழிதல், கார்மு-49, குல-*2*
அரசமனையைக் கொடிகள் முதலியவற்றாலுணர்தல், வரைக்-15
அரசர்க்கு அந்தணன் உதவுதல் கூடாது, மிதி-96
அரசர்க்குச் செல்வம், செங்கோலும் குடையும்: எதிர்-28
அரசர்தமரசன், கடிம-*39*
அரசாதி தம்பியர்கள் காறும், கடிம-1
அரசவன்னம், நாட்டு-*14*
அரசன் உயிரெலா முறையும் உடம்பு, அரசி-10
அரசன் தாய் தவம் சேய் நேர்ய் மருந்து அறிவு இவற்றை யொத்தல், அரசி-4
அரசிளங்குமரனேயாகல்வேண்டும் மிதி-58
அரத்தம்-செந்நிறம், எழுச் - 38, உலா-*5*
அரந்தின்னுதல்-அரத்தா லராவப் படுதல், திருவ-65
அரந்தை-துன்பம், அகலி-51
அரம்பை - ஓர்தேவமாது, திருவ - 107, மிதி-2, வரைக்-62
அரம்பையர் நீத்த ஆரத்தை மந்தி பூணுதல், வரைக்-48
அரம்பையர் புடைசூழ்ந்தாற்போல் மடந்தையர்சூழ்தல், கோலங்-22
அரமடந்தையர், அகலி-18
அரவம்-ஒலி; வேள்வி-4, 5
அரவிரேக்கெரிகாலுதல், கடிம -
அரன், அரா, காப்பு-6 [*17*
அரர்கம்-பூசுவது: புனல்-19

ஒருங்குவ = ஒருக்குவ, அழிப்பன: நகா-46 "உரமொருங்கியது": (யுத்த)
ஒருத்திகணவன்செயலைச்சொல்ல நாணிவேறுமொழிபேசல், உண் -47
ஒருத்தி கழுநீர்நாளத்தால் நறவை யுண்ணுதல், உண்-19
ஒருத்தி கொற்றவன்நக நாணுநீங் குதல், உண்-44
ஒருத்தி சிலம்பொலிப்பவந்துசேடி யர்கைம்மிசைப்போதல், உலா-21 [உலா-24
ஒருத்தி சீதையைப் பாராட்டுதல்,
ஒருத்திநாணினால் சேடியைத்தூது போக்காமை, உண்-46
ஒருத்திபாங்கியரைத்தூதுபோக்கித் தானும்செல்லுதல், உண்-26
ஒருத்தியின் உருவெளிப்பாடு, உலா-23
ஒருபகல்-பிரளயகாலம், திருவ-103
ஒருபகிர்-ஒரு பகுதி, திருவ-88
ஒருவெள்ளம் பலவிடத்தும்பலபெ யரையடைதல், ஆற்று-19
ஒல்கி, பூக்-10
ஒல்லுதல்-உடன்படல், மிதி-114
ஒல்லென-ஒலிக்குறிப்பு, வேள்-46
ஒல்லையில்-விரைவாக, கார்மு-66
ஒழிப்பணி, நாட்டு-40
ஒழுக்கம் குலஞ்சுரக்கும், நாட்-38
ஒளிக்கும்-மறைக்கும், எழுச்-17
ஒளிர, நகா-57
ஒற்கம்-வறுமை, மிதி-122
ஒற்றர், திருவ-58
ஒன்றிற் பெருவிருப்புவைத்தவர் அருகிலுள்ள வேறொன்றையுங் காணார், உலா-13
ஒன்னலர், திருவ-91
ஓகை-உவகை, மிதி-83 [-136
ஓங்கினான்-மனம்பூரித்தான், மிதி
ஓங்குதல்-எழுதல், மிதி-138
ஓச்சுதல், உண்-13
ஓசனை, திருவ-39 [டு-3, தற்சி-4
ஓசையின்பரியாயச்சொற்கள், நாட்
ஓட்டம்-ஓடு, மேடு: குல-8
ஓடதி, அகலி-21 [மிதி-101
ஓடு, கருவிப்பொருளில்வருதல்,
ஓடுவித்தல்-விரைவிற் பயில்வித் தல், குலமு-24
ஓடை, திருவ-109, கடிம-28
ஓடைக்கார்-யானை, கடிம-35
ஓடைவேழம் × வில்லிடும்மேகம், எ
ஓதம்-கடல், மிதி-63 [ழுச்சி-11
ஓதி-மலைப்பக்கம், கூந்தல், வரைக்-62, புனல்-25, கோலங்-11
ஓதிமப்பெடை, மிதி-78
ஓதிமம்-அன்னம், திருவ-89,
ஓம்பிட, திருவ-92 [எழுச்-12
ஓமவெங்குழியுகுநெய் x உண்டநரு
ஓல்-ஆரவாரம், கார்மு-37 [உண்-9
ஓலை-திருமணப்பத்திரிகை, கார்மு
ஓவம், வரைக்-16 [66
ஓவலிலுயிர், பாசு-48
ஓவியஞ்சவிகெடப்பொலிவதொர் உரு, எதிர்-22
ஓவியப்பாவை, மிதி-39
ஓவியப்புரு, நகா-23
ஓவியம், எழுச்-70
ஓவியம் ஒப்புநின்றார், கார்மு-40
ஓவியர் ஓவம்புதுக்குதல் × குமரர் மகளிரின் மெய்த்தூசு போக்குத ல், வரைக்-16
ஓவியமுயிர்பெற்றென்ன, கோல-1
ஓவியவெழிலுடையொருவன், திரு
ஓவுதல்-நீங்குதல், புனல்-31 [வ124
ஓளி-வரிசை, நகா-25, மிதி-22
ககனம்-ஆகாயம், திருவ-46, மிதி-133, எதிர்-52
ககுத்ஸ்தன், குல-3 உலா-47-49
கங்கர்முதலிய பலதேயத்தார்,
கங்குல்-இருளுக்கு இலக்கணை, எழு ச்சி, 82 × ஊழி, மிதி-155
கங்குல்கழிந்தவகை, வரைக்-77
கங்குலாசன், மிதி-148
கங்குலினொலிக்குங் கடல் × மறை
கங்குற்கணகன், பூக்-1 [கடிம-41
கங்கை, எதிர்-5
கங்கை சிவன்முடியது, குல-9
கங்கைத்தீம்புனலுடன் - இராமன் தாடகை-67: எதிர்-5

கணிகையரீட்டம்சூழ்ந்த கேகை
யர் பாவை, எழுச்-64
கமலச்சரண், கையடை-5 [-3
கமலத்தறங்கொளுண்மலர், அகலி
கமலம்பூத்த கடல்திரைXமகளிரு
ரும் புரவிவெள்ளம், எழுச்-26
கமலமேவிய சரோருகன், திருவ-5
கமை, நகர-3, கடிம-74, பரசு-14
கமையாள்-பொறுமையுடையவள்,
கய-பெருமை, வரைக்-62 [மிதி-25
கயம், வேள்வி-35
கயாததுரகமாக்கடலன், கார்மு-58
கயல்பொருகடல்-பாற்கடல்,
கார்-42
கயலினுல் தடங்கட்குக் கண்ணுண்
டோவென வினவுதல், புனல்-7
கர்க்கடகம், திருவ-101; காகமலம்,
திருவ-11, காந்தை, அகலி-51
கரம்-கை, கிரணம்: மிதி-61, பூக்-1
கரம்பு, நாட்டுப்-2, கரவேபுரிவார்,
கரா, நகரப்-19 [கடிம-3
கரி-யானை, தாடகை-11
கரிணி-பெண்யானை, கடிம-35
கரி புனற்சிறையேருவாய் விலைமா
தர் கலையல்குல்புக்கவரையொத்
தல், வரைக்-26
கரிமதம்வேங்கைநாறுதல், நகர-58
கரியதாங்கனகம்-இரும்பு மிதி-111
கரியரவம் x காரரவம்: எதிர்-9
கரியவன்-திருமால், மிதி-141,
வேள்வி-38, எதிர்-27
கரியிழிகொற்றவர்Xவரையிழிகோ
ளரி, வரைக்-17 [புனல்-30
கரு-இளம்பிஞ்சு, கடிம-14: பெரிய,
கருங்கடல்-பாற்கடல், மிதி-33
கருங்கடல்பூத்ததிங்கள்நிலாXகுழற்
றெருகுதியிற்றரித்த மாலை, கடிம
கருஞாயிறுபோல்பவர், கடிம-4[-52
கருணைக்கடல்-கருணைவடிவு, கடிம-
99, 51
கருத்திலுறை கள்வன், கோலங்-39
கருத்து முதலிய ஒத்த தம்பதிகள்
உடலுமொன்றெனத் தழுவுதல்
கருத்துமுற்றுதல்-மனம் [உண்-48
திருத்தியாதல், அர-5

கருநாழிகை-இரவு, கடிம-5
கருநெருப்பி னிடையே யெழுந்த
வெண்ணெருப்புXஇரவிற்றேன்
றிய சந்திரன், மிதி-76 [145
கருப்புச்சிலையான்-மன்மதன், மிதி-
கரும்பினில் தித்திக்குஞ் சொலார்,
உலா-50, கரும்பில்தேன்கூடு,
கரும்புவில், கார்மு-21 [நாட்-2
கரும்பையுஞ் சுவை கைப்பித்த குத
லையர், அகலி-10
கருமுகில் தாமரைக்காடுபூத்துஇரு
சுடரை யிருபுறத்தேந்திச் செம்
பொற் குன்றின்மேல் வருதல்,
திருவ-12 [தாடகை-51
கருவறுத்தல்-வேரோடு அறுத்தல்,
கருவி-மேகம், மிதி-133
கருள்-கருநிறம், கடிம-9
கரை-எல்லை, அகலி-41, கடிம-39
கரை காப்பவர் பறைசாற்றுதல்,
ஆற்று-18: கரைசெயலரியது,
திருவ-137 [-20
கரைசெறிவு அரிதாகுமிரவும், கடிம
கரைசேர்ந்தமகளிர் x வரையின்வை
குமென்மயிற்கணங்கள், புனல்-9
கரையெறியா தலைகடல் X கோபம்
தன்னுள் அடங்கப்பெற்ற முனி
வன், திருவ-50
கல்லாப்புல்லர்க்கு நல்லோர் சொ
ன்ன பொருள்போதல், தாடகை
கல்வி, வரைக்-61 [-71
கல்விகரையுற்ற முனி, கோலங்-40
கல்லில்லோடுடன்வந்தகனங்குழை
கலக்கடை, நகர-58 [கார்மு-21
கலப்பை-கருவிகள், திருவ-83, கார்
மு-16, கடிம-84
கலம்-மரக்கலம், நாட்டு-38
கலவிப்பூசல், உண்-66
கலவிப்போரி னெசிந்த மகளிரே
போற் புலவியிற் பார்த்த கோதை
கிடத்தல், மிதி-8
கலவியில் வாய் செம்மைநீங்குதல்
குங்கும முதிர்தல் முதலியன
தோன்றுதல், உண்-24, 63
கலவை, மிதி-94
கலவைக்களி, மிதி-80

கலவைப்புனைசாந்து, மிதி-149
கலன்கள் நங்கையுருவினைமறைத்தல், கோலங்-23,
கலாபம், எழுச்-74, வரைக் - 10, உலா-27, கோலங்-25, பூக்-22, எழுச்-58
கலி-வலிமை, மதர்ப்பு, எழுச்-48
கலிங்கநுண்ணூல்வடகம், மிதி-17
கலித்தல்-ஒலித்தல், எழுச்-48
கலித்தானைக்கடல், கார்மு-20
கலினம்-கடிவாளம், அகலி-2
கலுழ்தல்-ஒழுகுதல், எழுச்-13
கலுழன்Xமேரு: திருவ-12; மிதி-129
கலை-வித்தை, நாட்டு-48, மிதி-6: சாஸ்திரம், நகரப்-62: பகுப்பு, ஒருவகைமான்: திருவ-32: உவமவுருபு, மிதி-6: பிறைச்சந்திரன், மேகலை, மிதி-44 வஸ்திரம், பூக்-23
கலைக்கோட்டுமுனி, குலமு-5
கலைப்பொருளுண்ணு வுணர்வுபோலுதல், வரைக்-77
கலைமகட்குத் தலைவர், குல-23
கலைமறைமுனிவன், மிதி-97, 104
கலையாழிக்கதிர்த்திங்கள், குலமு-23
கலையுருவல்குலாள், உண்-62
கலையூர்கன்னி, நகர-9
கலைவாழ்மதி, நாட்டு-44
கவ்வை-காரியம், திருவ-62: துயரம், திருவ-65, மிதி-123
கவண்கல், நகர-12
கவர்-பிளவு, வேள்வி-47
கவனவேகம், வேள்வி-21
கவிகை-குடை, எழுச்-71
கவிதை, காப்பு-8
கவிநீத்தம், ஆற்று-9
கவியரங்கேற்றுதல், காப்-72
கவியின்பம், மிதி-23
கவின்-அழகு, திருவ-46
கவினுதல், எழுச்-63 [வேள்-7
கவுசாம்பி - குசாம்பன் நகரம்,
கவுள், எழுச்-23
கழகம், நாட்டு-48
கழங்குபயின் மங்கையர், வரைக்-22
கழல், நகர-65, திருவ-34
கழலொடு தேரோவிதாரொலிமாறுகொள்ளுதல், நகர-65
கழனிப்போரோடு நிகர்வன பொலன் வரை, நாட்டு-46
கழனிவருணனை, அகலி-65
கழிப்ப - மிகுவன: அகலி-65:
கழிய-மிகவும், எழுச்-34
கழுதின்தேர்-பேய்த்தேர், தாடகை-13
கழுந்தர், காப்பு-9
கழுந்து-உறுதி, தனுர்த்தண்டம், தேய்வு, திருவ-58
கழுந்தோடுஞ்சிலை, திருவ-58
கழுநீராற்செங்நெல்வளர்தல், நாட்
களை-புனர்பூசம், திருவ-109 [டு-25
கள்-வண்டு, எழுச்-46 [-24
கள்கலவியைப்போலுதல், உண்
கள்வாரிலாமையாற் பொருட் காவலில்லை, நகர-73
கள்ளிபிளத்தல் பேய்உடல்பிளந்தமை யொக்கும், தாடகை-8
கள்ளியின்தாய் - கள்ளியின் அடிமரம், தாடகை-8 [தாடகை-8
கள்ளியினின்று அகில் பிறக்கும்,
கள்ளுண்ட களிப்பு மறைக்கினும் வெளிப்படும், மிதி-15
கள்ளுண்ட மாதின் உடல் வியர்த்தல், உண்-22
கள்ளுண்டவர் களித்தல், உண்-55
கள்ளுண்டாருக்குக் கண் சிவத்தல் முதலியன, உண்-23
கள்ளைப்பெய்தவாய்Xதேன்பெய்தமலர், உண்-7
களகளவுதிர்தல், உண்-29
களபம், திருவ-117
களம்-கழுத்து, திருவ-7 [-45
களனமர்கடுவெனக்கருகி, திருவ
களிப்பினேங்குபவர்க்குக் காற்றெறிகடல் உவமை, எழுச்-9
களிப்பு-மயக்கம், திருவ-47
களிமயக்கு, கோலங்-20
களிற்றுவருணனை, வரைக்-25
களிறு கால்வெட்டுங் குழியைச் சுண்ணம் தூர்த்தல், நகா-44
களிறுXகார்நிரை, வரைக்-14

களிறு பிரசமுண்ணல், நகர-54
களிறு புனல்கலக்குதல் x மதுகை
டபர்கடல்கலக்குதல்,வரைக்-25
களைகண், பாசு-40
களைவருந்துயர், எதிர்-24
கற்பகக்கொழுந்து, கோலங் 17
கற்பகநாடு - தேவலோகம், கைய
கற்பகம், நகர-23,அகலி-8 [டை-1
கற்பகவல்லி, புனல்-16 [24
கற்பித்தவனேசிறந்ததந்தை,குல-
கற்பினால்மாரி, நகர-59
கற்புடைமகளிர் சிந்தைதூய்மைக்கு
உவமை, வேள்வி-16
கற்றலத்தினோடுசலத்தினைவேற்று
மையுணராமுடியாமை, நகர-20
கறங்குதல்-சுழலல், ஒலித்தல்,
தாடகை-62, அகலி-3-
கறுத்த-கோபித்த, கையடை-14
கறுப்பு-சினம், நாட்டு-16
கறைத்தருகளன்-சிவன், மிதி-118
கறைமிடற்றிறை, திருவ-13
கன்னப்பூ, கோலங் 17
கன்னல்-நாழிகைவட்டில், கடிம-31
கன்னலின்கரும்பு, மிதி-145
கன்னிதானம், காப்பு-18 [82
கன்னிநன்னகர்-கன்னிமாடம், மிதி
கன்னிப்போர், தாடகை-75
கன்னிமாடத்திற் கண்டவளா அல்
லளாஎனஅயிர்த்தல்,கோலங்-30
கன்னிமாடம், மிதி-23 [-59
கன்னிமாமதிலெறிந்தகுமரன்,மிதி
கன்னியமிர்து, கோலங்-30
கன்னியால்குல்தடம்காப்புடையது
கன்னியருந்ததி,கடிம-96 [நகர-14
கனக்கரியான்-மேகம்போற்கரியவ
கனகமாரி, திருவ-94[ன்,வேள்வி-
கனத்திடையுருமு, நகர-12 [27
கனம், உண்-55
கனல், கையடை-11, அகலி-14
கனல் X பொற்கால், தாடகை-14
கனலரசு இருந்த காடு-பாலை: தாட
கை-12
கனலொப்பதோர் சினம், பரசு-14
கனவுகொல், உலா-23 [உண்-64
கனவெனு நலத்தினாற் புல்லுதல்-

கனற்றுதல், உண்-9
கனற்றுறை, மிதி-113
கனைகழற்கர்மன், உண்-25
காக்கை கூகையைக்கண்டு அல்லில்
அஞ்சுதல், யார்மு-23
காகதுண்டம்-அகில், புனல்-22
காகம்முதலிய இடம்வருதல், பாசு
காகளம், திருவ-57 [-5
காசிபன், அகலி-4,28:காசிபன்அதி
தியவர்கட்குத் திருமால் வாமன
னாகத்தோன்றினன்,வேள்வி-21
காசிபன் சுராசுரர் முதலியோரைப்
படைத்தவன்; விபண்டகனது
தந்தை, திருவ-31
காசினி, திருவ-27
காசு-இரத்தினம், கார்மு-37,கடிம-
30, மிதி, 111, கோலங்-13 [41
காணிய-காணும்பொருட்டு, கார்மு-
காத்தல் - அணிதல், நிறைதல்,
அளித்தல்: குலமு-16
காத்தற்குக் கண்ணினைக்காக்கின்ற
இமை உவமை, வேள்வி-41
காத்திரம்-முன்னங்கால், வரைக்-6
காதல், எதிர்-27
காதல்கடாவிட, கோலங்-2 [-27
காதலிற் பெரியவன்-பரதன், எதிர்
காதலென்னும்பொருள், உலா-4
காதற்சலதி, மிதி-106
காதி-குசநாபன்புதல்வன், வேள்-
காதிசெம்மல், அகலி-84 [11
காதொடு குழைபொரு கயற்கண்.
மிதி-46 [-40
காதொடுமுறவுசெய்யுங்கண்,வரை
காந்தட்போதில்கடகத்தைப் பெய்
துகைகளோடு ஒப்புக்காணுதல்,
வரைக்-42 [-53
காந்தள் கையென மலர்தல்,வரைக்
காந்தளைப் பையரவென வஞ்சுதல்,
காப்பிடுதல்,கோலங்-8 [வரைக்-53
காம்பு-மூங்கில், நாட்டு-35
காமச்சுவையையுருவமாக்கி வல்லா
ரெழுதிய தென்ன நின்றவள்,
உலா-12
காமசரம் மனத்தைக் கலக்குதல் X
தயிரைமத்துக்கலக்குதல்,மிதி-3

காமநோய் எங்கும் பரந்தற்குப் பாலுறுபிறை உவமை, மிதி-41
காமம், அகலி-76
காமம் கருவும்கனியும், கடிம-14
காமமும் வெகுளியும் கைத்தெழு கோமுனி, திருவ-47
காமவனலால்வெதும்புகின்ற சீதை × எரியால் வாடும்மலரும்,வேடனாலடியுண்ட மயிலும்; மிதி-49
காமவிதைக்கு எரு, கடிம-14
காமவெகுளி, கையடை-10
காமவெங்கனல், உண்-9
காமவேட்கை, மிதி-60
காமவேதனையாற் புலம்பல், கடிம
காமர், திருவ-88 [-11
காமன், தாடகை-2, 27
காமனும் நாணுங் கவினர், பூக்-33
காமனு மிரதியுங் கலந்தகாட்சி, தாடகை-27
காமுகர், நாட்டுப்-5
காயம்-ஆகாயம், மிதி-67
கார்க்கடல், கடிம-99 [ட்டு-25
கார்களென்ன வருங் கருமேதி, நா
கார்த்தவீரியன் தோள்களைவெட்டியவன் பரசுராமன், பரசு-12
கார்முகம்-வில்,மிதி-101,கார்மு-2 15, பரசு-26
கார்முகவுண்டை, எழுச்-60
கார்வா வலர்பயிர் × திரும்பிய புதல்வரைக் கண்ட நகரத்து மாந்தர், திருவ-131
கார்விடம், கடிம-54
கார-வெளிவிட, பூக்-13
காரணக்குறி, தாடகை-2
காரணக்குடையான், காப்பு-10
காரணமின்றியுங் கனலெழ விழிக்குங் கண், எழுச்-65
காரிகை, கடிம-96
காரொடுந்தொடர்கவடு, வரைக்-2
காரோதியர்-மகளிர், எதிர்-34
கால்-காற்று,நாட்டு-35,தாடகை-9 எழுச்-60,தாள்,வாய்க்கால்:நாட்டு-70, அகலி-1: தூண்,நகர-24, காம்பு, எழுச்-12, சக்கரம்,பரசு-
கால்பொர, கையடை-22 [26

கால்மடுத்தல்-காற்றினால் மோதப்படுதல், நாட்டு-61
கால்வானகத்தேருடை வெய்யவன், வரைக்-70
கால்வைத்தவிடத்து நிலம் புக்குக் கீழ்வீழ்தல், தாடகை-47
காலடி-தூணின் அடிப்பகுதி: பூமிக்குள் புதையுண்ட அடிப்படை என்பாருமுளர், நகரப்-31
காலம்-வருஷம், அகலி-47
காலமாரி, நாட்டு-59
காலன்கருநிறமுள்ளவன், அகலி
காலுண்டசேறு, நாட்டு-13 [-31
காலுதல்-கக்குதல், நகர-60
காலைச்சந்தியில் கீழைத்திசையில் செந்நிறந்தோன்றுதல்,மிதி-151
காவதம், வேள்வி-4
காவல்-காத்தல்,இரட்சாபந்தனம்:
காவி-குவளை, எதிர்-22 [கடிம-57
காளம், எழுச்-78
காளிசூலாயுதமேந்துதல், நகர-6
காளியன்கதை, ஆற்று-5
காளைவீரர்-காளைப் பருவமுள்ள வீரர், வேள்வி-42
கான்-காடு, திருவ-20: தொகுதி;
கான்றன, திருவ-45 [பூக்-1
கானம்-பாட்டு, திருவ-57 [-14
கானல் × பளிக்குப்பீடம், தாடகை
கானலின் வருணனை, தாடகை-13
கானுடைக்கதிர், பூக்-1
கிஞ்சுகம், உண்-13
கிடக்க-அலட்சியத்தைக் காட்டுஞ் சொல், கோலம்-36
கிடங்கின் வருணனை, தாடகை-15
கிடங்கு × வேலை, நகர-15
கிடை-நெட்டி, மிதி-14
கிடைபுரை யிதழார், கடிம-37
கிண்கிணி முதலியன நீக்கினாட்குக் கணவனிடஞ் செல்லமுடியாது திங்கள் பகையாதல், உண்-40
கிம்புரி-ஓராபரணம், கடிம-65
கியாதி, தாடகை-59
கிராதர்-வேடர்,-மிதி-114
கிரிகள் × தோள், எதிர்-23 [-7
கிரிவிரசம்-வசுவின்நகரம், வேள்வி

கிரௌஞ்சகிரியை அன்னஞ்செல்லும்படி துளைத்தல், பரசு-14
கிள்ளுதல்-தோண்டுதல், வரைக்-
கிள்ளை, நகர-48, பூக்-48 [23
கிள்ளைக்கெல்லா மஞ்சொற்களருளினுள், கோலங்-19
கிள்ளைப்பிள்ளை, பூக்-28
கிளப்பு-சொல்லுதல், தாடகை-42
கிளை-இனம், ஓர் பண், வீணையின் ஓர் நரம்புமாம்: நகர-61
கிளைதழுவுதல்-பந்துக்கள் சூழ்ந்திருத்தல், கடிம-43
கின்னரம், நகர-61, வரைக்-39, 59
கின்னரமிதுனம், எழுச்-61, வரைக்
கீதம்பாடுமிடங்கள், மிதி-12 [-46
கீர்த்தியின் கொழுந்து × சாமரை, கீர்த்திவெண்ணிறம், உலா-50
கீறிய-வெளிப்பட்ட, கடந்த: பரசு-9
குங்குமச்சுவடு, அகலி-66, எழுச்சி -16
குங்குமக்குழம்புதங்கும் பாறைச்சுனை மணி × வள்ளமும் நறவும்: வ
குசத்துவசன், கடிம-102 [ரைக்-40
குசநாபன், வேள்வி-7
குசன் என்பவன் பிரமனுக்குப் புத்திரன், குசனுக்கு நால்வர் புதல்வர், குசன் = குசாம்பன், வேள்-6, 7
குசை-கடிவாளம், எழுச்-52
குஞ்சி-நாட்டு17, குலமு-16, எழுச்சி-18, குஞ்சி × இந்திரநீலம்,
குட்டிமம், நகரப்-39 [மிதி-56
குடங்கை-உள்ளங்கை, அகலி-57
குடில்-சிறுவீடு, வரைக்-18
குடுமி-உச்சி, திருவ-8 [ச்-12
குடைகொடிகளின் வருணனை, எழு
குடைபவர், நாட்டு-43 [டம், அரசி-9
குடைமதிக்குவிண்மதியினும்விசே
குடையும் அணிகலனும் சேனையில் நிறைந்திருத்தல், எதிர்-11
குடைவருணனை, உலா-52
குண்டிகை-ஜலபாத்திரம், கமண்டலம்: எழுச்-43, திருவ-72
குண்டையூர்தி-சிவன், மிதி-134
குணித்தல், திருவ-37, மிதி-127
குதித்தல்-மகிழ்தல், அகலி-58
குதிரைசுழன்றுஓடுவது × குயவன் மட்கலத்திகிரி, மிதி-13
குதிரைவருணனை, வரைக்-13
குதைவரிச்சிலைநுதல், நகர-49
குதைவரிசிலை, மிதி-120 [ச்-55
குந்தளபாரம்-மயிர்த்தொகுதி, எழு
குத்திய நடை, எழுச்-43
குப்புறல்-கடந்துசெல்லுதல், வரை
குப்பை, நகர-126 [க்-35
குமதிப்பெயராள், தாடகை-60
குமரர், நகர-57 [17
குமரர் பூவின் மெல்லியர், தடகை-
குயில்கள் மகளிர்முன் பேச நாணுதல், பூக்-6
குயிலுதல்-நெருங்குதல், மிதி-131
குயிற்றி, நகர-24
குரம்-குளம்பு, செய்கரை: நகர-57,
குரப்பு, நகர-2, மிதி-10 [மிதி-151
குரவர்-முன்னோர், அகலி-48
குரவை, கடிம-28. குரிசிலர், பரசு-
குரு, கையடை-16 [31
குருகைநாதன், காப்பு-1
குருதிபரவியது × அந்திவானம் தொடக்கற்றுவீழ்ந்தது, தாடகை
குருந்தமொசித்தது, ஆற்று-15 [-74
குரும்பைகொங்கைக்கு உவமை, நக
குருமணிச்சிவிகை, எழுச்-66 [ர-10
குருவிக்குழாம் மின்மினியென மணிகளைக்கூட்டிற் சேர்த்தல், நாட்டு-27
குருளை-யானைக்கன்று, வரைக்-7 (அன்றியும், கோலக்குருளை மேகக் குருளைஎன வந்துள்ளன)
குரைகழல், காப்-1 [வரைக்-37
குறைத்ததேர், எழுச்-45
குலக்குன்று, கையடை-8
குலத்துளோர் தொழுமாதியஞ் சோதி, கடிம-50
குலப்படி - பரம்பரையாய் வரும் இராச்சியம், எதிர்-8
குலம்-கூட்டம், நகர-22: சிறப்பு, வரைக்-35, குலமு-18
குலம் ஒழுக்கத்தைத்தரும், நாட்-
குலாவுதல், எதிர்-6 [38

கொழு, கார்மு-16, 17
கொழுங்குவடு, வரைக்-1
கொழுந்து, கோலங்-5: கொடி, திருவ-74 [25
கொழுந்துடைய சாமரை,கோலங்-
கொழுந்தோடிப்படர் கீர்த்தி, திருவ-59
கொழுநரோடுபுணர்தல் × பொய்கை படிதல், புனல்-19
கொழுநன் இளையவள் பெயரைச் சொல்லஒருத்திமுறுவல்செய்து கண்ணீருகுத்தல், உண்-29
கொள்கை-தன்மை, நகர-34
கொள்வாரிலாமைப் பொருட்காவலில்லை,நகர-73 [று,வேள்வி-29
கொள்ளுதல்தீது கொடுப்பது நன்
கொள்ளை-மிகுதி, நாட்டு-2,54, நகர-34,உண்-4: கவர்கை, வரைக்-40
கொள்ளைப்போர்வாட்கண், உண்-
கொளுகொம்பு, திருவ-74 [59
கொற்கொள்வேல், மிதி-96
கொற்றவன்-வெற்றியை யுடையவன், கையடை-16
கொன்-பெருமை, மிதிலை-31
கொன்றைக்குழல், நாட்டு-34
கொன்றைப்பூ நின்றமவுலி-சிவன், குலமு-9
கோ-ஒலிக்குறிப்பு, மிதி-26: பசு, மிதி-95: ஆகாயம், வரைக்-1
கோகிலம், நாட்டு-49
கோங்கு, வரைக்-58
கோசலத்தின் சிறப்பு, ஆற்று-1
கோசலநாடு அழியாதது, நாட்-61
கோசிகம்-பட்டு, கோலங்-13
கோடரங்கிடவெழுங்கொங்கைஎதி
கோடி-திரள், நகர-35 [ர்-13
கோடு-கரை, பரசு-42: கொம்பு: கோடுதல்-வளைதல், குல-15
கோணிலாவானமீன், கோலங்-38
கோணுதல்-வளைதல், வரைக்-38
கோணெறி, நாட்டு-30
கோதமன்,கோதமன்காதலன்-சதாநந்தன்,மிதி-86, 138,கார்மு-11
கோதமன்றன் பன்னி,குலமு-92
கோதென்றுண்டிலவள்,தாடகை-55
கோதை-மலர்மாலை, எழுச்சி-22, பூக்-12: விறற்கவசம், கூந்தல், பூக்-32
கோதை சூழ்குஞ்சி, எதிர்-30
கோபம்-இந்திரகோபம்,வரைக்-49
கோபுரசித்திர வருணனை, நகர-22
கோபுரவாயில் வருணனை,நகர-23
கோமதி-ஓர் நதி, வேள்வி-5
கோமருமகன் - அரசர்வழித்தோன்றல், மிதி-127
கோமுனி-ராஜரிஷி,வேள்வி-49
கோரவில்லி, உலா-41
கோல்-அம்பு, கார்மு-9
கோல்கொளல், கடிம-73
கோல்வருஞ்செம்மை, எதிர்-28
கோலம்-அழகு, எழுச்-9
கோலும், அகலி-47 [ன்,அரசி-1
கோலுலகேழினுஞ் செல்லநின்ற
கோவின்-கோவென்னு மாரவாரத்தோடு, மிதி-26
கோவை - முத்துவடம், ஒழுங்கு, வரைக்-1, கடிம-24, 57
கோவை நகர், நகர-59
கோள்-வலிமை, கார்மு-14,பூக்-8, வரைக்-62, கிரகம், திருவ-108, மிதி-117, முகில், இராகு ஒளி, பூக்-14
கோளி-பூவாதே காய்க்கும் மரம்: கொண்டிருப்பது:வரைக்-62,[14
கோளுண்டதிங்கள்முகத்தாள்,பூக்-
கோனணிசங்கங்குடியிருந்தனைய கண்டம், கோலங்-7
கோணிகர்குடி, நகர-34
கௌசலை, திருவ-88
கௌசிகி-விசுவாமித்திரனுடன்பிறந்தவள், வேள்வி-12
சக்கரத்தயல்வருஞ் சங்கமெனுங் கழுத்து, கடிம-55
சக்கரவாளகிரி, அரசி-7
சகரசக்கரவர்த்தி, குல-10
சகரன், அகலி-33
சங்கவளைக்குயில், கடிம-97
சங்குறைகரத்துத் தனிச்சிலைதரித்தான், தாடகை-45

சங்குறைகழித்தவன்ன சாமரை, எழுச்-97
சஞ்சலம்-துன்பம், கார்மு-49
சடன்-உடல், உண்-10
சடைப்பழுவம் - காடுபோலடர்ந்த சடை, அகலி-32
சடையப்பன், காப்பு-5
சடையன், வேள்வி-1
சடையன்புகழ்பாவியதுபோல் சந்திரன்நிலவுபாவியது, மிதி-73
சடையிருள்கீறிடஒளிவீசுதல், பாசு
சத்தானகுணம், திருவ-35 [-7
சத்திரம்-ஆயுதம், உண்-45
சத்துருக்கன்வெண்ணிறமானவன், திருவ-122, குலமு-22
சதகோடிமின் சேவிக்க, மிதி-31
சதமகன்-இந்திரன், அகலி-15
சதாநந்தன்-அகலிகையின்குமாரன் மிதி-84, 87
சதி - தாளவொத்துக்கேற்பவைக்கும் அடிவைப்பு, அகலி-12: எழுச்-21
சதியைச் சதங்கையும் புரவித்தாரும் வகுத்தல், நகர-52
சதுக்கம்-நாற்சந்தி, திருவ-114
சதுமுகன்-சதுர்முகன், திருவ-32
சந்தக்கா, நாட்டு-2 [42
சந்தம்-மயிர்ச்சாந்து, அழகு:எழுச்-
சந்திக்கலா வெண்மதிவாணுதலாள், பூக்-22
சந்திரகாந்தம், நகர-30 [45
சந்திரகாந்தமீன்றசீதநீர், கார்மு-
சந்திரசைலத்துக் காட்சி, வரைக்-32-45
சந்திரசைலம் யூதபதிபோலுதல், வரை-7: திருமால்போலுதல், வரை-68
சந்திரமௌலி, கடிம-83
சந்திரவதனம், மிதி-56
சந்திரன்Xஅமுதம் நிறைந்த பொற்கலசம், மிதி-70, அகலி-21
சந்திரன் கடலிற்பூத்த வெண்டாமரை போலுதல்; மிதி-71
சந்திரன்கொடிபடுதலால்தேய்தல், நகர-38

சந்திரன் சங்கத்தையும்மீன்கள் நித்திலத்தையும்போலுதல், வரை-72
சந்திரன் நிலவை உலகெங்கும் பொழிதல் X கொத்தன் சுதையால் புதுப்பித்தல், மிதி-74
சந்திரன்றோய் கோயில், மிதி-156
சந்திரனமிசன் யுவனாசுவன், குல-11
சந்திரனிடத்து நிலாக்கற்றை விரிதல் X வெண்கும்பத்துக் கமுகம் பாளை விரிதல், மிதி-72 [மு-11
சந்திரனைவென்றவன் திலீபன், குல
சந்திராதித்தர் திரிவதற்குக் காரணம், ககர-3 [தல், குலமு-23
சந்திரோதயத்துக் கடல்பொங்கு
சந்திரோதயவருணனை, மிதி-70,71
புனல்-33 [77, கடிம-14
சந்திரோபாலம்பனம், மிதி-76,
சந்து-சந்தனமரம், வரைக்-1
சம்பரன், கையடை-8
சம்பு, கார்மு-14 [ப்பு-7
சம்புஉமைசெவிசாற்றுநாமம், கா
சமரபூமி-போர்க்களம், எழுச்-29
சமித்தது-அழிந்தது, திருவ-90
சமீரணன்-வாயு, வேள்வி-10
சமை-பொறுமை, கார்-12
சமைத்தல்-அமைத்தல், திருவ-114
சமைத்தவரையில்லாமறை, கோல-29
சமைவு-நிகழ்ந்தது, திருவ-51: பொருத்தம், கடிம-74
சயிலகோபன், திருவ-105
சரண், தற்சி-1, சரணம்-இரட்சகம், மிதி-116
சரம்-அம்பு, அகலி-77 [43
சரம்பயில்சாபம் x புருவம், வரை-
சரம்பெய்தூணிXகணைக்கால்: அகலி-10
சரயு, வேள்வி-5 [று-12
சரயுநதி தாய்முலையொத்தது, ஆற்
சரயுப்பெருக்குக்கு இரவிகுலத்து வேந்தரொழுக்கு உபமானம், ஆற்று-12
சரயுபலகாலினோடுதல், நாட்டு-50

சுகேது-தாடகையின் தந்தை; தாட
சுட்டி, மிதி-148 [கை-22
சுடர்-சூரியன், எழுச்-11
சுடர்க்கடவுள் - அக்கினி தேவன்,
தாடகை-5
சுடர்தவழ்தல் பல்லவம்பரப்பியது
போலும், கோலங்-24
சுடரென விளங்கும்நூல், கடிம-61
சுடரோன்-சூரியன், திருவ-57
சுடிகை-நெற்றிச் சுட்டி,வரைக்-48
சுடுசரமனையசொல், அகலி-78
சுடுசுரம்-எரிகின்ற பாலைவனம், தா
டகை-4 [44
சுண்ணம்-வாசனைப்பொடி, நகர-
சுண்ணமுந்தாதுங்குப்பை, கடிம
-30
சுதை-சுண்ணும்பு, பால், அமுதம்:
நாட்டு-45, நகர-27, திருவ-86,
மிதி-20, 74, வரைக்-16 [55
சுந்தரவில்லி - ஸ்ரீராமன்,வேள்வி-
சுந்தரன், உண்-34 [தாடகை-26
சுந்தன் தாடகையின் கணவன்,
சுபாகு, தாடகை-28
சும்புளித்தல்-கூசுதல், மிதி-132
சும்மை-ஒலி, நகர-61
சுமதி, அகலி-34
சுமந்திரன், திருவ-56, அகலி-47
சுமாலி, தாடகை-36
சுமித்திரை, திருவ-90-91
சுரத்தின் வெம்மையின் வருணனை,
தாடகை-19
சுரபி, அகலி-18, மிதி-93
சுரம்-பாலை, மிதி-11, தாடகை-17
சுராசுரர், அகலி-21
சுரிகுழல், கடிம-36
சுரிவளை, நாட்டு-35
சுருக்குண்ணுதல், எழுச்-58
சுருங்கச்சொல்லலணி, நாட்டு-4
சுருதி, திருவ-77
சுருதிநூல், மிதி-100 [திருவ-83
சுருதிமுறை சாய்வறத்திருத்தி,
சுருதியன்ன மாதவன், மிதி-156
சுரும்பு வண்டு முதலியன, கோலங்
சுருள்-ஓலைச்சுருள், பூக்-5 [-17
சுவடு, வரைக்-38

சுழலிடு கூந்தல்-பனிச்சை,மிதி-43
சுழன்றோடுங் குதிரை × குயவன்
திகிரி, மிதி-18
சுழிகொள்பரி, எழுச்-32
சுழிதல்-சுழித்துமுடித்தல், எழுச்-
சுழியம்-மயிர்முடி, கடிம-52 [34
சுளிதல்-கோபித்தல், புனல்-26
சுறுக்குண்டேறுதல் - கூர்மையாய்
உடம்பில் தைத்தல், மிதி-50
சுனையைப் படிகத்தின்றலமென்று
எண்ணல், வரைக்-48
சூட்டுவாரணம், நாட்டு-27
சூடகம்-தாடகை-41, கார்மு-33,
எழுச்-53, எதிர்-33
சூத்திரம்-யந்திரம், கார்மு-61
சூர்-துர்க்கை,தாடகை-9:தெய்வம்
கடிம-54 [எழுச்-21
சூர்நிலை - தெய்வத்தின் தன்மை,
சூரியன் அத்தமிக்கஇருள்பரத்தல்,
வரைக்-70
சூரியாத்தமன வருணனை,அகலி-2:
மிதி-61, புனல்-2, கோலங்-43
சூரியோதயகாலத்தில் தாமரை
மலர்தலியல்பு, எழுச்-76
சூரியோதய வருணனை, மிதி-150,
சூல், நாட்டு-34 [கடிம-24
சூழ்ச்சி, நகர-11, திருவ-48,
வரைக்-2
சூழல்-இடம், சுற்றுப்பக்கம், மிதி-
122, 136: வரைக்-10, 30, 64:
பூக்-15
சூழி - முகபடாம்: கையடை-23,
மிதி-156, எழுச்-20: உச்சி,
பரசு-11
சூளி-பிரமதத்தன் தந்தை,வேள்வி
சூளிகை,நகர-64 [-10
செக்கர், குல-27, புனல்-21
செங்கிடைச்சிகழிகை, கடிம-52
செஞ்செவே, தாடகை-7,உலா-10
செண்டு, நகர-68
செந்தாமரை-வெண்டாமரை விரா
விய தானம் × பிச்சம் முதலிய
விராவிய படை, எதிர்-7
செந்துவர், நகர-69
செந்நெல், நாட்டு-26

தினகரன், கடிம-21
தினவுறுந்தோள், அரசி-12
தீத்தொழில் - கொடுந்தொழில், வேள்வி-42
தீதா, திருவ-29 [கடிம-27
தீபத்தைச் சிலதியர் கொணர்தல்,
தீயவரை யறிந்தநிலையில்நலத்தார் துறத்தல், வரைக்-20
தீர்த்தங்களை எழ்கடலினும் கங்கை முதலியவற்றினும் கொணர்ந்து ஆட்டுதல், கடிம-48
தீர்த்தன, திருவ-116, உலா-32
தீவலம் வருதல், கடிம-91
தீவினை செய்த தீவினை,குலமு-20
துகிற்கொடி முகிலால் நனைந்து அகிற்புகையால் புலர்தல்,மிதி-4
துங்கம்-உயர்ச்சி: வரைக்-64 [41
துண்ணென, தாடகை-53,அகலி-
துணர், பூக்-30, துணர்த்த-பூங்கொத்தினலமைந்த,வேள்வி-53
துணை, பாசு-2, துணைத்த-இரட்டையான, எழுச்-33 [52
துதைத்தல்-நெருங்குதல், கார்மு-
துந்துவைத் துணித்தவன் குவலயாசுவன், குலமு-11
துப்பு-வலிமை, மிதி-99, பவழம், எழுச்-70. தூய்மை, எதிர்-2
துப்புறழ்வாசச்சுண்ணம், கடிம-30
தும்பி-யானை, வண்டு, நாட்டு-14 மிதி-11, எழுச்-62, வரைக்-32
தும்பி தாரகையை நாகத்தண்மலரென்று தாவுதல், வரைக்-33
தும்பி பனைக்கையை நீட்டி உம்பர் தருவின் குழையை யொடித்துப் பிடிக்கு நல்குதல், வரைக்-32
துய்-பஞ்சு, நகர-31
துய்த்தல்-நுகர்தல், மிதி-94
துய்யன-வெளியிடத்தன, நகர-31
துயல்வரல், உலா-43
துரங்கம், நகர-19, வேள்வி-11
துரங்கம்சென்ற வருணனை, வரைக்-21
துரு•குற்றம், பொன்: உலா-43
துருவுதல் - தேடுதல், துளைத்தல், நாட்டு-60, மிதி-126, உலா-43
துருவை-செம்மறியாடு, நாட்டு-31
துலை-தராசு, திருவ-64
துவர்-பவழம், செந்நிறம், நாட்டு-43, வேள்வி-8, எழுச்-50
துவன்றி-நெருங்கி, மிதி-4
துவைத்தல்-ஒலித்தல், எழுச்-59
துவைப்ப-கடைய, கடிம-81
துள்ளி-துளி: இனி, தூங்கிய மாங்கனியைத் துள்ளி[ஆமை]கொள்வன என்றலும் ஒன்று: துள்ளி-துலீ, வடசொல்: நாட்டு-32
துளையொலி, நகரம்-61
துற்றுதல், திருவ-61
துறக்கம்-சுவர்க்கம், நகர-5, மிதி-115, வரைக்-65
துறப்பு-அப்பாற்படுத்தல்,உண்-52
துறுதல்-நெருங்குதல், பூக்-12
துறை-நீர்த்துறை, நகர-65, ஒரேயிடம் அல்லது ஒரு முடிவு, கடிம-38-கரை, அகலி-67.பல வகை, தற்சி-8, உண்-56
துறையெலாங்கமலம், பூக்-2
துன்றுதல்-நெருங்குதல், வரைக்-
துன்றுபுரிகோதை,கோலங்-33[59
துன்னலர்-பகைவர், வேள்வி-28
துன்னினர் - நண்பர், உறவினர்: வேள்வி-28
துனி-கோபம்,பிரபஞ்சத்துயர்:திருவ-66, துன்பம், குல-14. துயர், கடிம-12, ஊடல், உண்-50, வரைக்-29
துனியுறுபுலவி,உண்-64[அகலி-13
துனைவலம்-விரைகின்ற வலிமை
தூ-தசை, குலமு-9,பரிசுத்தமான,
தூக்கு-உறி, எழுச்-43 [திருவ-77
தூக்குறி-தூய்மையான கோலம்,
தூங்க-ஒலிக்க, மிதி-9 [புனல்-23
தூங்கிய-தாங்கிய, நாட்டு-33
தூசு தூளி, ஆடை, கயிறு, திருவ-38, வரைக்-16, 18,கோலங்-13
தூசுக்குடிலில் மங்கையர் முகம் பொலிதல்×மதியின்நிழல் புனலில் விளங்குதல், வரைக்-18
தூசு சுதைக்கணுரையைப்பொருவுதல், வரைக்-16

நேமியினோர்-சச்கரவர்த்திகள், அர
நேமிவான் சுடர், நகர-41 [சி-42
நேயமங்கையர்-, எழுச்-63
நேர்செறுநர், நாட்டு-53
நேர்தல், மிதி-112
நேரொடுங்காத பகையை நீதியால் வெல்லுதல், வரைக்-2
நையநொய்யும்மருங்குல், உலா-36
நையல்-வருந்தாதே, அகலி-46
நைவளநவிற்றுமொழி,கோலங்-34
நைவளம்-ஓரிராகம், எழுச்-61
நொடி-கணப்போது, திருவ-18
நொய்தின் எழும்போது குழல்களும் துகிலும்சோர்தல், கார்மு -56
நொய்தினெய்யசொல், தற்சி-5
நோக்கு-குறிப்பறிகை, தாடகை-18,அழகு,கண்பார்வை,கோலங்
பஃறலைப்பாந்தள், திருவ-106 [-1
பகடு-யானை, அகலி-13 [நகரப்-36
பகலிடுமின்Xகொடியிலுள்ளசூலம்,
பகழி-அம்பு, வேள்வி-46
பகற்கதிர்-சூரியன், மிதி-3
பகிரதன்-அகலி-43, குல-9
பகீரதி, அகலி-61
பகைப்புலன்களைந்து, நகர-6
பங்கயத்தகானம், நகர-16
பங்கயத்தணங்கைத்தந்த பாற்கடலெதிர்வ,எதிர்-5[தல்,புனல்-10
பங்கயத்தைமுகமென்று மயங்கு
பங்கயம், நகர-19 [நாட்டு-23
பங்கயவாண்முகத்துருவவுண்கணே
பங்கி x தீயெரி, திருவ-86, மயிர், வேள்வி-47,கார்மு-48, வரைக்-24, பூக்-8 [ணம், கடிம-100
பங்குனியுத்தரத்திற் சீதாகலியா
பச்சைத்தேரை, நாட்டு-13 [-36
பச்சைமலையொத்தபடிவம், கோல
பச்சைமா எழு, கையடை-23
பசலை, உலா-13
பசுந்தேறல்பாம்புநான்றெனப்பாய்தல், நாட்டு-35
பசும்பொற்பள்ளி, நாட்டு-8
பசை-ஈரம், பற்று, தாடகை-5, 15
பஞ்சடி, உண்-36
பஞ்சணி விரலினர், உலா-10
பஞ்சரங்குழீ, கார்மு-49
பஞ்சானனம், வரைக்-66
பஞ்சி, நகரப் 10
பஞ்சியங்கமலம், வரைக்-38 [ங்-14
பஞ்சின்றிப்பழுத்தபாதம், கோல
பட்டம்-நீர்நிலை, நெற்றிப்பட்டம்: நாட்டு-25, அகலி-65
பட்டிகை-அரைக்கச்சை, கடிம-65
பட்டிமண்டபம், நகர-62
படப்பை, நாட்டுப்-26
படம்-கொடி, வரைக்-18
படமாடத்து வாளெழுநிரைத்தல், வரைக்-17.படமாடம்,வரைக்-24
படர்-துன்பம், அகலி-83
படலை-தொகுதி, எழுச்-12
படி-பூமி, தாடகை-6
படிகமாலை, காப்பு-3
படிதல்-தாழ்தல், உலா-43
படிவளர்குழி, நாட்டு-21
படீஇ-மூழ்கி, திருவ-83
படுத்தல்-தாக்குதல், நாட்டு-5
படுதல்-தங்குதல், தோன்றுதல், நாட்டு-5. படுமதம்-மிக்கமதம், வரை-6
படை-போர், ஆயுதம்: திருவ-113, எழுச்-56
படைக்கலங்கள் செய்தவத்தால் இவற்கேவல்செய்குந,குலமு-28
படைக்கலம்Xவறுமை நோய்க்கு மருந்தன சடையன்சொல்,வேள்வி-1, படைக்கலம் முதலிய பயிலுதல், திருவ-127
பண்-இசைப்பாட்டு இனிமை,பூட்டு அலங்காரம், நகர-52, உண்-1, எழுச்-25, வரைக்-13,கடிம-10
பண்குடைவண்டு, கடிம-40
பண்டிகளிற் செல்லும் கோதையர் வதனராசி, எழுச்-25 [-28
பண்டியில் மலர்கொணர்தல்,கடிம
பண்ணல்-இசைக்கலைத் தொழிலெட்டனுள் ஒன்று, வரைக்-14
பண்ணவன், திருவ-4
பண்ணை-வயல், நாட்டு-13: விளையாட்டு, நகர-44:மகளிர்கூட்டம்,

பாண்டில்-ஊர்தி, எழுச்-26: தா
ளம், அகலி-12, எழுச்-68
பாணர் பாடல்மகளிரை யெழுப்பு
தல், நாட்டு-8
பாணி-கை, கார்மு-28, தாளம்,
நகர-52, வரைக்-74: பாட்டு,
மிதி-12, எழுச்-68
பாணிக்கிரகணம், கடிம-90
பாணிமுதலியன காணலாகுமா
யின் ஆவிகாணலாகும், கார்மு-
பாத்தயானை, வரைக்-6 [47
பாதகவிருள், மிதி-63
பாதசாலகம், கோலங்-22
பாதலம், அகலி-37
பாதவம், தாடகை-30
பாதளத்து அராவின்மணி கமர்
வழியாகஒளிவிடும், தாடகை-10
பாதிமாமதி சூடிய,மிதி-135
பாதைகள்-மரக்கலங்கள், மார்க்கங்
கள், நாட்டு-35
பாந்தள், திருவ-33, எழுச்-58
பாம்புநான்றெனப் பாய்பசுந்தே
றல், நாட்டு-35
பாமம்-பரப்பு, அரசி-7, கார்மு-36
பார்-பாறையானநிலம், நகரப்-17
பார்த்திபன்,பார்த்திவன்-அரசன்,
மிதி-97, அகலி-43
பார்ப்பு-பார்வை, அகலி-65
பார்விசும்புகளில் திருமால் பேரே
படிக்கப்படுகின்றது,வேள்வி-17
பாரகர்-கரைகண்டோர், மிதி-135
பாரின் வேரெனக் கிடந்தநாகம்,
கார்மு-35
பால்புரை நிலா, உண்-8 [-72
பாலமை-பான்மை, தன்மை; கடிம
பாலால்செந்நெல்வளர்தல், நாட்டு
ப்-25
பாலின் நுரை வெண்பட்டுக்குஉவ
மை, நாட்டு-45 [60
பாலுள பவளச் செவ்வாய், உண்-
பாலுறுபிரை காமநோய் எங்கும்
பரத்தலில் உவமை, மிதி-41
பாலூட்டுவார் செங்கை குவிதல்X
நிலாவுறப் பங்கயங்குவிதல்,
நாட்டு-58

பாலைநிலவருணனை,தாடகை-5-16
பாவமீண்டியோர் பெண்ணுருக்
கொண்டது, தாடகை-22
பாவிற்றிலை, வேள்வி-36
பாவேப்ரயோகம், மிதி-98 [பூக்-11
பாவையர்-மகளிர், கையடை-61,
பாழி-பெருமை, கையடை-23
பாளை, நாட்டு-24: பாளைதந்த மது
வை வாளை பருகுதல், நாட்-24
பாளைத்தேன், நாட்-9
பாளை விரியொத்துலவு சாமரை,
. வரைக்-17 [-99
பாற்கடலன்னதொர் பாயல்,கடிம
பாறு-பருந்து, வரைக்-5
பான்மை, நகர-4, தாடகை 23
பான்மைபோக்கி, வேள்வி-57
பானல்-நீலோற்பலம், வரைக்-50,
பானு, ஆற்று-3 [உலா-4
பிங்கலை-வலமூக்கால் வருஞ்சுவா
சம், மிதி-130 [ச்-78
பிச்சம்-பீலிக்குடை விசேடம்,எழு
பிச்சம் முதலியனவிராவியபடைX
செய்யவும்வெளியவுமான தாம
ரையுடைத் தானம், எதிர்-7
பிச்சி, உண்-11
பிடி, மிதி-77
பிடிபுல்லிய களிறுXமடவார்மருங்
கு செல்லும் ஆடவர், எழுச்-18
பிடி மகளிரையிறக்குவதற்குப் படி
யிற்படிதல் x மின்னொடுபிறங்
கியமேகம்படிபுகுதல்,வரைக்-12
பிடிமேல்வருஞ்சிந்தர்Xஆமைமேல்
வருந் தேரை, எழுச்-40
பிடியெலாஞ் சூழநின்றயானைXநல்
லார் குழாத்துநின்ற குரிசில்,
புனல்-13 [-86
பிண்டம்-சோற்றுத்திரளை, திருவ
பிண்டித்தளிரைப் பின்னங்கள்
செய்துமுலையினப்புதல், வரைக்
-54 [25
பிணங்குதல்-மாறுபடுதல், அகலி-
பிணி-கட்டு, மிதி-97
பிணை-விலங்கின்பெண்,நாட்டு-41
பித்தயானை-வெறியானை, எழு-39
பித்திகை-சிறுசண்பகம்,வரைக்-75

பிதாமகன்-பிரமன், திருவ-25
பிதிர்தல்-பொடியாதல், சிந்துதல், திருவ-70, 92; அகலி-53
பியல்-பிடர், கார்மு-16
பிரசம் - மதநீர், நகர-54; தேன், மிதி-128, கோலங்-2
பிரசமென்குதலை, உண்-26
பிரமகுமாரன்-வசிட்டன், மிதி-110
பிரமசாரி வருணனை, வேள்வி-22
பிரமதத்தன்-குசநாபன்மகளிர் நூற்றுவரை மணஞ்செய்துகொண்டவன், வேள்வி-10
பிராட்டியின் கண்களின் வருணனை, மிதி-32
பிரிந்தஒருத்தி பேச்சு, உண்-31
பிரிந்தவள் கடலைநோக்கித் தன்னைப்போலுமெனல், மிதி-76, கடிம-11
பிரிந்தவர் கூடினுற் பேசவேண்டுமோ, மிதி-38
பிரிந்த விஞ்சைப்பாவையர் வைகுதலால் பல்லவந் தீதல், வரைக்
பிருகு, தாடகை-59 [-49
பிருது, குலமு-1
பில்குற்று-துளித்து, கோலங்-31
பிலம்-இரத்தினந்தோன்றுங் கனி, நாட்டு-38, குகை, தாடகை-47
பிலவாயள், தாடகை-48
பிழி-தேன், நாட்டு-4
பிழைப்பு-தவறுதல், உண்-33
பிள்ளைமான்-இளமான், எழுச்-27
பிறகிடுதல்-பின்னுதல், வரைக்-3
பிறங்கடை-வழித்தோன்றல், தாடகை-62 [9, 41
பிறங்கல்-மலை, திருவ-70, அகலி-
பிறங்குதல்-விளங்குதல், எழுச்-31
பிறந்துடை நலம், மிதி-59
பிறப்பினேடிறப்பெனப் பெயருஞ் சிந்தை, உண்-52 [ங-9
பிறிதின்குணம்பெறலணி, கோல
பிறைநுதலார், நாட்டு-36 [டு-37
பிறைமுகத்தலைக்கொடுவாள், நாட்
பிறையெனு நுதலவள், மிதி-40
பின்ற-பின்னிட, மிதி-26 [க்-50
பீனம்-பருத்தது, கார்மு-32, வரை

புகர்முகப்பகழி, தாடகை-72
புகல்-சரணம், திருவ - 30, கையடை-7, மிதி-118
புகலிடம், நகர-6
புகழ்-புகழ்பெற்றகுலம், திருவ-64
புகழ் பூணவிடச்சிறந்தது, நகர-13
புகழைவிரும்பக் கொடையைமேற்கொள்பவரின் செல்வம் குறைவுறினும் பொலிவு பெறுதல்,
புகழருமறை, திருவ-123[கார்மு-22
புகைந்து-கோபித்து, தாடகை 68
புடவி, காப்-20
புடை-பக்கம், மிதி-95
புடைத்து-அடித்து, தாடகை-37
புடைபெயர்வன, நாட்டு-42
புடைவிசித்து, கையடை-19
புண்களிற் கையொற்றுதல், உண்-
புண்டரீகத்தடம், எழுச்-25 [53
புண்டரீகம்-தாமரை, அகலி-5
புண்டரீகம் மலர்தலின் வருணனை, மிதி-152
புண்டரீகன்-பிரமன், மிதி-134
புண்ணிய, பரசு-40
புண்ணியம் புரிந்தோர் துறக்கம் புகுவர், நகரப்-5
புண்ணியமிலார்க்குத் திரு இடையில் நந்துதல், உண்-67
புணர்த்தல் - ஆலோசித்துச் செய்தல், திருவ-47
புணர்ப்பு-சூழ்ச்சி, திருவ-49, அகலி-27 [17
புணரி-கடல், ஆற்று-11, கார்மு-
புத்திரர்பிறந்தபோது செய்தியாகங்கள், திருவ-112-114
புத்திரனைப்பெற்றேர் புத்தென்னும் நரகத்தையடையார், திருவ-35
புதல்வர்களின் வாழ்ச்சியின் பொருட்டு இஷ்டதேவதையை நகரத்தவர் தாழ்தல், திருவ-132
புதல்வர் பிறந்தபோது புனல்படிதலும் வித்தொடுபொருளீதலும், திருவ-111
புதல்வரெனும்பெயரேகாண் வளர்த்தானும் வசிட்டனே, குல-2

வனைதல்-தரித்தல், அகலி-9, 13
வனைந்த, நகர-33
வனைந்தனைய திருமேனி, கார்மு-25
வாக்கினாள்-சரஸ்வதி, கடிம-83
வாக்கு, நாட்டு-57
வாக்குதல்-வார்த்தல், ஆற்றுப்-10
வாகு-கை, வரைக்-63
வாகை, தற்சி-12
வாகைகொள்ளுதல்-வெற்றிகொள்ளுதல், உண்-61
வாங்கரும்பாதநான்கு, நாட்டு-1
வாங்கியதுயருடை மன்னர் மன்னன், திருவ-99
வாங்குதல்-வளைத்தல், கார்மு-10; எடுத்தல், எழுச்-31
வாசகம் வல்லார்முன் வாய்திறக்க வல்லார் யார், பூக்-6
வாசநகை மங்கையர், வரைக்-18
வாசநெய்-புழுகு, கார்மு-37
வாசம்-சீலை, வாசனை, இடம், மிதி-80, கடிம-19
வாசவன்-இந்திரன், திருவ-104, அகலி-29
வாசி-குதிரை, அகலி-36, எழுச்-48, வரை-10
வாசிகணிரைத்தல் X மாருத நிரைத்தல், வரை-14
வாசுகி கடைகயிறு, அகலி-21
வாடை-தென்றல், மிதி-66
வாணிலாமுறுவல்-ஒளிநிலாவுகின்ற புன்சிரிப்பு, மிதி-143
வர்மமேகலையார், எழுச்-40
வாமவேல், பாசு-45
வாய்ப்பெய்து, தாடகை-64
வாய்வழிப்புக்கதேன் நிலவால்அமுதம்போலுதல், உண்-8
வாயில் மதிள் என்ற இவற்றின் ஒக்கத்தின் வருணனை, நகர-74
வார்-கச்சு, குலமு-16, எழுச்-21; நீட்சி, எழுச்-4
வார்த்தை-சொல், உண்-54
வாரணப்போர், நாட்டு-16
வாரணம், தாடகை-2
வாரணம் தாட்டுணையாற் சிய்த்தல், நாட்டு-27
வாரி-யானை யகப்படுத்துமிடம், நாட்டு-32; கடல், ஆற்று-3
வாரிக்கு விலைமாதரும் வணிகமாக்களும் வானவில்லும் உவமை, ஆற்று-6, 7, 9
வாலதி-வால், எழுச்-40
வாலி, திருவ-26 [வரைக்-75
வாலுகம் x நிலாப்பரந்த வானம்,
வாலுணர்வு-தத்துவஞானம், தாட
வாலுளைப்புரவி, நகர-68 [கை-3
வாவி, நகரப்-69 [கார்மு-38
வாள்-ஒரு தன்மையாக வீசும் ஒளி,
வாள் x சூரியன், கடிம-64
வாள் சுற்றுதல் X உணர்வு புலன்களிற் சுற்றுதல், மிதி-19
வாள் தண்டு முதலிய படைக்கலங்கள், நகர-12
வாளரம்-ஒருவகையரம், மிதி-14
வாளாற்பகைவேலையைக் காய்ந்தே கடந்தான், அரசி-5
வாளி-வட்டமாயோடுதல், மிதி-13; அம்பு, குலமு-26
வாளின் பக்கத்துத் தொங்கவிட்ட மணிமாலை, கடிம-65
வாளுடையுழவன், கார்மு-14
வாளை, நாட்டு-24
வான்செய்தவேல், திருவ-1
வான்பிலிற்றும்-மழை பெய்யும், திருவ-36
வான்மழை, தாடகை-7
வான்மீகி, காப்பு-10, நாட்டு-1
வான்வழங்காதாக-மழை பெய்யாமற் போக, திருவ-36
வானங்கவித்தவனி, உலா-49
வானதி, அகலி-48
வானநாடியர், உலா-34
வானரங்கள், திருவ-20
வானலர்குவதுபோலும் முத்துப்பந்தர், கடிம-26
வானவமகளிர் மண்ணுலகமடந்தையரைத் தம்மவரெனத் தழுவுதல், கார்மு-41 [-19
வானவர்பெருமான்-இராமன், கடி
வானவன்-வானிற்சஞ்சரிக்குங்கடவுளான சூரியன், எழுச்-7

செய்யுண் முதற்குறிப்பகராதி

இதன்டியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. நரசிம்மன், (வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் குமாரர்) வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பெனி, 17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்ற விலாசத்திற் கிடைக்கும்:-

வை. மு. கோ. பதிப்புகள்.

கம்பராமாயணம்:—

பாலகாண்டம்	உரையுடன்	...	9—00
அயோத்தியா காண்டம்	,,	...	9—00
ஆரண்ய காண்டம்	,,	...	9—00
கிட்கிந்தா காண்டம்	,,	...	9—00
சுந்தர காண்டம்	,,	...	9—00
யுத்த காண்டம் 1-வது வால்யூம்	,,	...	9—00
,, 2-வது ,,	,,	...	10—00
உத்தர காண்டம்	,,		(அச்சில்)

வில்லி பாரதம்:—

ஆதிபருவம்	உரையுடன்	...	4—50
சபாபருவம்	,,	...	4—50
ஆரண்ய பருவம்	,,	...	4—50
விராட பருவம்	,,	...	2—50
உத்தியோக பருவம்	,,	...	4—50
வீட்டும துரோண கன்ன பருவங்கள்	,,	...	9—00
சல்லிய சௌப்திக பருவங்கள்	,,	...	3—00
கன்ன பருவம் மட்டும்	,,	...	3—00

திருக்குறள்:—

மூன்றுபாலும் (புதிய பதிப்பு)		...	10—00
அறத்துப்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும்		...	3—00
பொருட்பாலும் காமத்துப்பாலும்	,,	...	6—00

(பரிமேலழகருரைக்கு எழுதியுள்ள குறிப்புரைகள் கற்போர்க்குப் பரிமேலழகரின் உரைக்கருத்துக்களை ஐயந் திரிபுஅற விளக்குவதோடு அவர்களைச் சிறந்த புலவராக்கும்.)

பத்துப்பாட்டு - ஆராய்ச்சியுரையுடன் ... 8—50

(இவ்வுரை நச்சினார்க்கினியருரை நயத்தைத் தெளிவுறுத்துவதுடன் கற்போர்க்கு ஆராய்ச்சித் திறனையும் ஊக்குவிக்கும்.)

பத்துப்பாட்டில் தனியே கிடைக்கும் பகுதிகள்:—

திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையுடன் ... 0-
பட்டினப்பாலை „ ... 0-
பொருநராற்றுப்படை „ ... 0-

தண்டியலங்காரம்:—

தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் சொல்லணியியல் முழுவதும்) மூலம், பழைய வுரை, குறிப்புரையுடன் ... 3-

அஷ்டப்ரபந்தம் - உரையுடன்

திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை (ஒரே பகுதியில்) ... 5-

திருவரங்கத்துமாலை, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, ஸ்ரீரங்கநாயகரூசல் முதலி யன (ஒரே பகுதியில்) ... 6

இதர புத்தகங்கள்:—

திருப்பாவை தமிழ்நடை உரையுடன் ... 0
வள்ளியம்மை திருமணப்படலம் „ ... 0
உதயணன் சரிதை „ ... 0
சந்திராபீடசரிதம் „ ...
நன்னூற்காண்டிகையுரை „ ...
சடகோபரந்தாதி „ ...
மதுரைக்கலம்பகம் „ ...
அழகர்கலம்பகம் „ ...
திருக்கருவைவெண்பா அந்தாதி „ ...
குமுதவல்லி திருமங்கைமன்னன் „ ...
முதுமொழிக்காஞ்சி „ ...
ஆழ்வார்கள் சரித்திரம், பட்டர் வைபவம், பிள்ளை லோகாசாரியர் வைபவம் ...
சரசுவதி யந்தாதி „ ...
ஏரெழுபது „ (
நாலடியார் „ (

சிலப்பதிகாரம்:—

அடைக்கலக்காதை உரையுடன் ... (
காட்சிக்காதையும் கால்கோட்காதையும் „ ... (

மணிமேகலை:—

பாத்திரம்பெற்ற காதை உரையுடன் ... (
மலர்வனம்புக்க காதை „ ...